



# தமிழரசு

சனவரி 1. 1973

விலை 40 காசு






# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் கவலை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்வீஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.



5-
208/55


அனைவர்க்கும்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
உரித்தாகுக!


JL
V211m,N70
N73:3
69588




# ஊராட்சி வளர்ச்சியில் [illegible] தொண்டு

நாட்டில் பல்வேறு முனைகளில் பணியாற்றும் உங்களையெல்லாம் சென்னைக்கு அழைத்து இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இரண்டு நாள் விடுமுறையும் தந்து, 'வாருங்கள் உங்களது கோரிக்கைகளைத் தாருங்கள்' என்று சொல்லுகின்ற அரசை முதல் முதலாக இப்போதுதான் நீங்கள் பார்க்கின்றீர்கள்.

தொந்தரவு தந்தாலும் பரவாயில்லை என்று யாரும் அழைக்க மாட்டார்கள். ஆனால், 'கோரிக்கைகளைத் தாருங்கள்' என்று கேட்டு உங்களை அழைத்திருக்கிறோம். இந்த வகையில் இந்த முதல்மாநில மாநாடு மிகச் சிறப்புற இங்கேநடைபெறுகிறது.

நண்பர்கள் ஆற்றிய உரைகளை நானும் நாவலரும் கேட்டோம். எத்தனை எழுச்சிமிக்க உரைகள்! எத்தனை உணர்ச்சி மிக்க உரைகள்!

நேற்றும், இன்றும் சென்னையில் பல்வேறு காட்சிகளை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். நானும் ஆங்காங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றபோது நீங்கள் வந்த பேருந்துகளையெல்லாம் பார்த்தேன். சென்னையில் என்னென்ன பார்க்க வேண்டுமோ அதையெல்லாம் பார்த்திருக்கிறீர்கள். கடற்கரையென்ன! அங்கே கவின்மிகு சிலைகளென்ன! வங்கக் கடற்கரையில் துயில் கொள்ளும் அண்ணனின் கல்லறையென்ன! அண்ணா சாலையென்ன! இப்படிப் பல்வேறு காட்சிகளைக் கண்டிருக்கிறீர்கள்.

நானும் நாவலரும் வெளி நாடுகளுக்குச் சென்ற போதெல்லாம் அங்கே இருக்கின்ற கண்ணையும், கருத்தையும் கவர்கின்ற காட்சிகளைக் காணும் போதெல்லாம்—'ஆகா, அற்புதம்' என்று உணர்ச்சிவயப்படாமல் இப்படிப்பட்ட எழிலும், ஏற்றமும், வசதியும் வாய்ப்பும் நம்முடைய நாட்டிலும் ஏற்பட வேண்டும் என்ற உணர்ச்சிதான் எங்களுக்கு ஏற்பட்டது.

அதுபோல—

சென்னைக்கு வந்திருக்கின்ற ஊர் வளர்ச்சித் துறைப் பணியாளர்களாகிய நீங்கள், இன்று பார்த்த சென்னையின் வளர்ச்சியைப் போலச் சிற்றூர்களும் கால்பங்காவது—அரைக்கால் பங்காவது—வீசம் பகுதி அளவாவது வளர்ச்சி பெற வேண்டும் என்கிற எண்ணத்தைப் பெற்றிட வேண்டும்.

மிகுந்த பரிவுணர்ச்சியோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்கள்தான் ஒரு நாட்டின் முதுகெலும்புகள், நாடி நரம்புகள்; ஊற்றெடுக்கும் இரத்தப் பிரவாகங்கள் தான் ஊராட்சிப் பணியாளர்கள்.

சின்னஞ் சிறு கிராமங்களிலே இருந்து கொண்டு, நீங்கள் தருகின்ற கடும் உழைப்புத்தான்—நகரங்களுக்குக் கிடைக்கிறது.

கிராமங்களின் நாகரிகச் சந்திப்புக்கள்தான் நகரங்களாகக் காட்சியளிக்கின்றன.

உங்கள் கடமை மிகப் பெரியது: உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணும் அளவுக்கு உங்கள் உழைப்பல்லவோ காரணமாக இருந்தது என்று நாவலர் அவர்கள் பாராட்டிய போது, உங்கள் உழைப்புக்குக் கிடைத்த அந்தப் பாராட்டை நீங்கள் கையொலி செய்து உற்சாகமாக வரவேற்றீர்கள். அதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்.

ஊர் வளர்ச்சிப் பணிகளுக்காக இந்த அரசு எந்த அளவுக்குத் தொகை ஒதுக்கியிருக்கிறது—உயர்த்தியிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

1966—67-ல் ஒதுக்கிய தொகை ரூ. 47 கோடியே 7 இலட்சம்.

1967—68-ல் ரூ. 52 கோடியே 70 இலட்சம்.

1968—69-ல் ரூ. 52 கோடியே 62 இலட்சம்.

1969—70-ல் ரூ 59 கோடியே 16 இலட்சம்.

1970—71-ல் ரூ. 65 கோடியே 26 இலட்சம்.

1971—72-ல் ரூ. 72 கோடியே 7 இலட்சம்.

1972—73-ல் ரூ. 77 கோடியே 14 இலட்சம்.

1956—67-ல் 47 கோடி ரூபாயாக இருந்தது— இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 77 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

எவ்வளவோ வளர்ச்சிப் பணிகளுக்கு நீங்கள் காரணமாக இருந்திருக்கிறீர்கள்.

இருந்தும், இன்னும் பல சிற்றூர்களும், பேரூர்களும் வளரவில்லையே என்ற ஏக்கம் உங்களைப்போலவே எங்களுக்கும் இருக்கிறது.

கிராமப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தீவிரத் திட்டத்தின் மூலம் தரவேண்டும் என்பது அரசின் கொள்கை.

அதற்காக, 40 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வாரியத்தை அமைத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

4,551 ஊர்களில் நிலையான தண்ணீர் ஆதாரம் இல்லை என்று தெரிகிறது.

12,858 ஊர்கள், சிற்றூர்களில் தற்போதுள்ள நீர் ஆதாரங்கள் வலுப்படுத்த வேண்டியுள்ளது.



நோய் பரவும் தன்மை உள்ள, ஏறத்தாழ 2,059 ஊர்கள், சிற்றூர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

இந்த மூன்று வகையிலும் குடிநீர் வழங்க ரூ. 40 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தேவைகள் அனைத்தும் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் பொறுப்பில் நீங்கள் தான் இருக்கிறீர்கள்.

மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சியை அமைத்த போது, இந்த அரசு தீட்டி வந்த திட்டங்கள் அனைத்தும் பின்தங்கிய-தாழ்த்தப்பட்ட கிராமப்புறங்களிலே வாழ்கின்ற-ஏழை எளிய பாட்டாளி மக்களின் வாழ்வை மையமாக வைத்துத்தான் தீட்டப்படும்—தீட்டப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.

அந்தத் திட்டங்களையெல்லாம் திறம்படச் செய்து முடிக்கும் செயல் மறவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்து முடிக்கும் கட்டுப்பாடு நமக்குண்டு.

பல தொடக்கப் பள்ளிகளுக்கு இன்னும் கட்டடங்கள் கட்டப்படாத நிலைமை இருந்து வருகின்றது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 13 கோடி ரூபாய் கடனுகப் பெற்று 7,377 தொடக்கப் பள்ளிகளுக்கும், 1,112 உயர்தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டத் திட்டமிட்டிருக்கிறோம்.

கிராமப் புறங்களைப் புனிதத் தலங்களாக்க இப்படிப் பட்ட திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

"நாங்கள் வைத்த கோரிக்கைகள் என்ன ஆயிற்று?" என்ற கேள்வி உங்கள் உள்ளத்தில் இல்லாமல் இல்லை. அதைப் புரிந்து கொள்ளும் சக்தி எங்களுக்கும் இல்லாமல் இல்லை.

பல கோரிக்கைகளைப் பற்றி நானும் நாவலரும் அதிகாரிகளும் ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். உங்கள் சார்பில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்தால் இது ஊர் வளர்ச்சிப் பணியாளர்கள் மாநாடா? ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாநாடா என்ற சந்தேகமே எனக்கு ஏற்படுகின்றது.

உங்களின் சில கோரிக்கைகளை இங்கேயே நிறைவேற்ற முன் வந்திருக்கிறோம்.

ஃ மாவட்ட ரீதியில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழ் உள்ள துறைகள் எப்படி இயங்க வேண்டும் என்ற கோரிக்கை, கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. நிருவாகச் சீர்திருத்தக் குழுவினரோடு யோசனை செய்து இதை எப்படி நிறைவேற்றுவது என்பது பிறகு முடிவு செய்யப்படும்.

ஃ ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

ஃ கல்வி, மருத்துவ வசதிகள், பண்டிகை முன்பணம், போன்றவற்றில் அரசு அலுவலர்களுக்குள்ள நன்மைகளை ஊராட்சி ஒன்றிய ஊழியர்களும் ஏற்கெனவே பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். ஓய்வு ஊதியம், பெறும் சலுகை மட்டுமே ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு இன்னும் விரிவாக்கப் படவில்லை. இந்த வேண்டுகோளையும் அரசு ஆய்வு செய்தது. ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு மட்டுமின்றிப், பேருராட்சி, ஊராட்சி, நகரிய அலுவலர்களுக்கும் கூட அரசு அலுவலர்களுக்குரிய ஓய்வு ஊதிய நன்மைகளை விரிவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஃ இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள ஊதிய விகிதம் மற்ற நன்மைகளின் குறைகளை அரசு நியமித்த ஒருவர் குழு ஆய்வு செய்தது.

இக்குழு சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றின் விளைவாக ஊராட்சி வளர்ச்சி அலுவலர் (எக்ஸ்டென்சன் ஆபீசர்) மற்றும் மேலாளர்களின் (மானேஜர்) ஊதிய விகிதங்கள் உயர்த்தப்படுகின்றன.

ஃ ஊராட்சி வளர்ச்சி அலுவலர்களின் ஊதியம் 225—450 ஆக இருந்தது.

மேலாளர்களின் ஊதியம் 300—10—350—15—500 ஆக இருந்தது.

இரண்டு ஊதியங்களையும் ஒரே சமனுக்கி வளர்ச்சி அலுவலர்களுக்கும், மேலாளர்களுக்கும், ஊதிய விகிதங்கள் ரூ. ரூ. 300—15—420—20—500 என்ற வகையில்உயர்த்தப்பட்டுள்ளது.

ஃ முதல்நிலைப் பேரூராட்சி நிருவாக அலுவலர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் சிறப்பு ஊதியம் வழங்கவும்—இரண்டாம் நிலைப் பேரூராட்சி நிருவாக அலுவலர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் சிறப்பு ஊதியம் வழங்கவும் குழு செய்த பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது.

ஃ மகப்பேறு உதவியாளர்களுக்கும், தையல் ஆசிரியைகளுக்கும் ரூ. 20 பயணப்படி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஃ ஊராட்சி ஒன்றியங்கள் பேரூராட்சிகளில் பணியாற்றும் அலுவலகப் பணியாளர்களும் மேற்பார்வைப்படி, மூன்று பேர் கண்காணிப்புப் புரிவோருக்கு ரூ. 10 ஆகவும் மூன்று பேருக்கு மேல் கண்காணிப்பவருக்கு ரூ. 15 ஆகவும் தருவதற்கு ஆணையிடப்படுகிறது.

ஃ சமூக நல ஊழியர்களில் தகுதி உள்ளவருக்கு வயது விதிகளைத் தளர்த்தி இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளர்களாக உயர்வளிக்கப்படுகிறது.

ஃ ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கெஜட் பதிவு உள்ளவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்களது மற்றக் கோரிக்கைகள் ஆய்வில் இருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர்

[சென்னையில் நடைபெற்ற ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்களின் முதல் மாநாட்டில்17—12—1972-ல் ஆற்றிய உரை]

# வெள்ள நிவாரணத் திட்டம்

வெள்ள நிவாரணப் பணிக்கு ஏறத்தாழ 25 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் உடனடியாக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், போர்க்கால நடவடிக்கைகள்போல, வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகப் பல்வேறு வகையில் உதவியளிக்கத் திட்டமிட்டிருப்பது பற்றியும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 19—12—1972ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிற்குப் பின் செய்தியாளர்களிடம்கூறினார்கள். மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது !

'மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் பற்றி விவாதிக்கப்பட்டது.

சேதமடைந்த சிறிய நீர்ப்பாசனக் குளங்கள்—1,382, பொதுப்பணித் துறைக் குளங்கள்1,524, சேதமுற்ற வீடுகள் 1 இலட்சத்து 70 ஆயிரம், இறந்தவர்கள் 81 பேர், அனாதையாக விடப்பட்ட குழந்தைகள் 5, கால் நடைச் சேதம் ஏறத்தாழ 3 ஆயிரம்.

ஏற்கெனவே அறிவித்திருக்கிற நிவாரண வேலைகளுக்கான தொகை ரூ 1 கோடியும், இன்றைக்கு அடுத்த தவணையாக ரூ 3 கோடியும் சேர்த்து மொத்தம் 4 கோடி ரூபாய் உடனடி நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தந்துள்ள தகவலின்படி தமிழ் நாடு முழுவதிலுமுள்ள வெள்ள நிவாரணப் பணிக்கு ரூ 25 கோடி தேவைப்படுகிறது.

இன்று அறிவிக்கப்பட்டுள்ள ரூ 4 கோடிக்கான செலவு வகைகள் பின்வருமாறு:—

வீடிழந்தோருக்கு இப்பொழுது அரசு நிவாரண உதவியை அதிகப்படுத்துவது என்று எடுத்த முடிவுக்கிணங்க தலா, ரூ. 80வீதம் சுமார் 1 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கு ரூ. 1 கோடியே 40 இலட்சம்; பொதுப்பணித்துறைக்குளங்களைச் செப்பனிட ரூ 1 கோடி; நெடுஞ்சாலைத் துறை, ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியச் சாலைகளைச் செப்பனிட ரூ 1 கோடி; நகராட்சிச் சாலைகளைச் செப்பனிட ரூ 30 இலட்சம்; சிறிய நீர்ப்பாசனக் குளங்களைச் செப்பனிட ரூ 30 இலட்சம்; ஆக மொத்தம் ரூ 4 கோடிக்கான செலவு இது,

இவை தவிர தக்காவிக் கடன் கால்நடைகளை இழந்தோருக்கு, வீடுகளை இழந்த ஏழைகளுக்குத் தலா ரூ 250க்கு மேற்படாமல்.

மண் மேடிட்டுவிட்ட நிலங்களை, புல்டோசர்களின் உதவியால் இலாகா மூலம் சீர்படுத்திக் கொடுக்கப்படும். அதற்கு ஆகின்ற செலவில் 25 சதவிகிதத்தை அரசு மானியமாக வழங்கும்.

பம்ப் செட் இழந்தவர்களுக்கு மீண்டும் பம்ப் செட் வாங்க மத்திய காலத் தவணையில், கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும். இது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளுக்கும் பொருந்தும்.

வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் குறுகிய காலக் கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றுவதற்கு ரிசர்வ் வங்கியிடம் உடனடியாகத் தொடர்பு கொள்ளப்படும். வெள்ளத்தால் முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு இந்த ஆண்டுக்குரிய நிலவரி, தண்ணீர்த் தீர்வை, லோக்கல் செஸ், சர்சார்ஜ் ஆகியவை ரத்து செய்யப்படும். ஏற்கெனவே அறிவித்தவாறு வெள்ளத்தில் குடும்பத்தில் தலைவரை இழந்த 37 குடும்பங்களுக்கு, தலா ரூ. 2000 வீதம் நிதி உதவி அளிக்கப்படும். குடும்பத் தலைவரல்லாத மற்றவர்கள் இறந்துள்ள 44 குடும்பங்களுக்கு ரூ 500 முதல் ரூ. 1,000 வரை நிதி உதவி வழங்கப்படும். அனாதைகளாகிவிட்ட 5 குழந்தைகளில் 4 குழந்தைகளின் வளர்ப்பு, கல்வி, போன்ற அனைத்துப் பொறுப்புகளையும் கோவில்களில் நடைபெறும் அன்பு இல்லங்களில் ஏற்றுக் கொள்ள அறநிலையத் துறை வாயிலாக வகை செய்யப்படும்.'

வெள்ளத்தால் பாதிக்கப்படாத மாவட்டங்களிலே, பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண நிதியாக முதலமைச்சர் நிதிக்குப் பொருட்களாகவும் பணமாகவும் நன்கொடைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த நிவாரணப் பணியில் சென்னை நகரிலுள்ள மாணவர்கள் ஈடுபட்டிருப்பதை முதலமைச்சர் பாராட்டியதோடு மற்றும் பல இடங்களில் சமூகப் பணிக் கழகச் சார்பில் மாணவர்கள் நிவாரணப் பணிகளில் நேரடியாக ஈடுபட முன்வந்திருப்பதையும் வரவேற்றார்.

வெள்ளப் பகுதிகளில் மாணவர்களும்—சீரணித் தொண்டர்களும் இளைஞர் அணியினரும் மற்றும் பொதுப் பணி மன்றங்களில் உள்ளவர்களும் மக்களுக்குத் தேவையானவைகளைச் செய்ய முந்திக் கொள்ளவேண்டுமென்று முதல்வர் கேட்டுக் கொண்டார்.

கடற்கரையோரப் பகுதிகளில் வாழுகின்ற குடிசை வாழ் மக்களுக்கு அடிக்கடி இதுபோன்ற தொந்தரவுகள் ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுக்கத் தமிழ் நாடு முழுவதுமுள்ள கடற்கரையோரங்களில் உள்ள குடிசைகளை மாற்றிக் குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதற்கு விரைவில் ஒரு திட்டம் தயாரித்து, அது தமிழ் நாடு முழுவதும் அமல்படுத்தப்படுமென்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

**வெள்ளப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு நிவாரணத் திட்டங்களைத் துவக்கிட முதல்வர் 1972 டிசம்பர்த் திங்களில்**

**23-ஆம் நாள் தென் ஆர்க்காடு**

**30-ஆம் நாள் சேலம், கோவை**

**31-ஆம் நாள் தஞ்சை**

**ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்திருக்கின்றார்கள்.**

**இந்த விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.**









சுற்றுலா வளர்ச்சியில் சமீப காலமாகத் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நமது நாட்டில் இரண்டாவது திட்டக் காலத்தில் இருந்தே சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. என்றாலும், சுற்றுலாவை ஒரு இலாபகரமான தொழிலாக மேற்கொள்ளலாம் என்பதும் அதன் வளர்ச்சியில் நாட்டிற்குப் பல வகைகளில் பயன் உண்டு என்பதும் மெல்ல மெல்ல இப்போது தான் உணரப்பட்டு வருகிறது.

சுற்றுலா இன்று உலகிலேயே எண்ணெய் உற்பத்தித் தொழிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது மிகப் பெரிய தொழிலாக விளங்குகிறது. மிகச் சிறிய சுவிட்சர்லாந்து போன்ற பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, சுற்றுலாத் தொழிலை நம்பியே இருக்கிறது. அந்நாடுகள் இத்தொழில் ஒன்றின் மூலமே கோடிக்கணக்கான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கின்றன. சுற்றுலாத் தொழிலின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணர்ந்த தமிழக அரசு தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி முன்னேற்றம் கண்டுள்ளது. இன்னும் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் பல உள்ளன.

சுற்றுலா என்ற கோட்பாடு அண்மைக் காலத்தில் தோன்றிய ஒன்றாக இருந்தாலும், மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே இப்பழக்கம் இருந்து வந்திருக்கிறது. முற்காலத்தில் போக்குவரத்து வசதி இல்லாததால் சுற்றுலா பெரும் அளவில் நடக்கவில்லை. அப்போதும் சரி, இப்போதும் சரி, நோக்கம் ஒன்றுதான். புதியன கற்க வேண்டும், புதியன பார்க்க வேண்டும் என்ற வேட்கை மனித சமுதாயத்திற்குள்ள இயற்கையான வேட்கை. பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்த்துப் புதியன கற்று வந்த மனிதர்கள் சுமந்து வந்த அ ப வங்கள், கலையுணர்வோடு வெளிப்பட்டபோது இயற்கை எழிலை ஏற்றமுறச் சித்திரிக்கும் இலக்கியங்கள் பிறந்தன; ஓவியங்கள் விரிந்தன; சிற்பங்கள் எழுந்தன. அப்படிப்பட்ட இலக்கியங்கள் தமிழகமெங்கும் பரவிக் கிடக்கின்றன. அவை தமிழர் நாகரிகத்தின் தொன்மையைச் சாகா வரம் பெற்ற சான்றுகளாக விளக்குகின்றன.

''இயற்கை எழிலைக் காண்பதிலே தனிச்சுவை இருக்கிறது. அது உள்ளத்திற்குத் தூய்மை தரவல்லது என்பதை மலைவளம், கானின் கவர்ச்சி ஆகியவற்றைக் காணும் போது நிச்சயமாக உணர முடிகிறது''.

''வெயில் நுழைபு அறியா<br>குயில் நுழை பொதும்பர்!''<br>வேண்டுமா ?<br>''கொம்பர்த் தும்பி<br>குழல்இசை காட்ட<br>பொங்கர்வண்டு நல்யாழ் செய்ய<br>வரிக்குயில் பாட, மாமயில் ஆடும்<br>விரைப் பூம்பந்தர்''<br>காண வேண்டுமா?<br>அப்படிப்பட்ட இடங்கள்<br>தமிழகத்தில் உண்டு.<br>கண்ணைக் கவரும் ஓவியங்கள்,<br>கருத்தைக் கவரும் சிற்பங்கள்,<br>களிப்பூட்டும் கைவினைப்<br>பொருள்கள் வேண்டுமா ?

அவை தமிழகத்தில் நிறைய உண்டு. தமிழகமெங்கும் ஆங்காங்கு வானோங்கி நிற்கும் கோபுரங்கள், நமது பெருமைக்குச் சான்று பகருகின்றன.

புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்வதே முற்காலத்தில் சுற்றுலாவின் முக்கிய நோக்கமாக இருந்தது ; இப்போதும் அந்த நோக்கம் இருக்கிறது. அதோடு இன்னும் பல்வேறு காரணங்களும் இப்போது சேர்ந்துவிட்டது.

சமூகப் பொருளாதார வளர்ச்சி காரணமாகவும், தொழிற் சாலைகள் வளர்ச்சி காரணமாகவும், மக்கள் இடம் மாற வேண்டியிருக்கிறது. குறிப்பாக நகர்ப்புறங்களை நாடுகின்றனர். இயற்கைச் சூழலை விட்டுச் செயற்கைச் சூழலில் மனிதன் இயந்திரத்தோடு இயந்திரமாக வாழ்கிறான். அவனுக்கு ஓய்வு வேண்டும்.

இயற்கைக் காட்சிகள் நிறைந்த எழில்மிகு சென்னை, மாமல்லபுரம், கோவளம், எண்ணூர், கூடலூர், மணப்பாடு, திருச்செந்தூர், கன்னியாகுமரி கடற்கரைகள், குற்றாலம், ஒகனேக்கல், பாபநாசம் நீர்வீழ்ச்சி போன்ற இடங்கள்; உதகை, கோடைக்கானல், ஏர்க்காடு போன்ற மலைப்புற இடங்கள் ஓய்விற்கும், நிம்மதிக்கும் உகந்த இடங்களாகும்.

கலை நுகர்வோர்கள், அறிவு நாடி வருபவர்கள், இயற்கை எழிலைக்காண்பவர்கள், வியாபார நோக்கத்தோடு வருபவர்கள், இப்படி எத்தனையோ வகைகள்.

தமிழகத்தில் சென்னை, காஞ்சி தில்லை, தஞ்சை, மதுரை, திருச்சி, இராமேசுவரம் போன்ற இடங்களில் உள்ள தொன்மை வாய்ந்த கோயில்கள், சரித்திரப் புகழ் பெற்றவை. சென்னை, மாமல்லபுரம், காஞ்சி, வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் இருக்கும் ஓவியங்கள், சிற்பங்கள், உற்பத்தியாகும் கவின்மிகு கைவினைப் பொருள்கள் வரும் பயணிகளுக்குத் தெவிட்டாத விருந்தாகும்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகள் நம் நாட்டின் எழில்காண வருவதால், நமது பண்பாட்டை உலகறிய வழி ஏற்படுகிறது.





வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகளுக்கு இன்றியமையாத தேவை சுத்தமான உணவு, தூய்மையான சுற்றுப் புறங்கள். இவற்றை நல்ல ஓட்டல்கள் அமைப்பதன் மூலம் உண்டாக்க முடியும். எனவே, ஓட்டல் தொழிலுக்கு ஊக்கமூட்ட மைய அரசும், தமிழக அரசும், பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி முதலீட்டுக் கழகம், ஓட்டல் தொழில் துவங்க நிதி உதவி அளிக்கிறது. தமிழக அரசு ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் அமைக்க இரண்டு இடங்களைச் சென்னையில் ஒதுக்கியிருக்கிறது. சாலை வழித் தங்கும் விடுதிகள் இரண்டிற்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சியை விரைவுப்படுத்தத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒன்றை ரூபாய் 50 இலட்சம் மூலதனத்தோடு தமிழக அரசு நிறுவியுள்ளது. இதுவரை ரூபாய் 30 இலட்சம் இக் கழகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இக் கழகம் சுற்றுப் பயண முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் சுற்றுலா மாளிகைகள் அமைத்து, சுற்றுப் பயணிகளுக்கு வசதி செய்து தருகிறது. இதுவரை அரசு நடத்தி வந்த சுற்றுலா மாளிகைகளை இக்கழகம் எடுத்துக்கொண்டு, அவற்றைஇலாபகரமாக நடத்தி வருகிறது. உதகை, திருச்சி, மதுரை, கோடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள மாளிகைகளை விரிவு படுத்திக் கணிசமான அளவு வசதி அளிப்பது தவிர, ஒகனேக்கல், கூனூர், குற்றாலம், மாமல்லை ஆகிய இடங்களில் புதிய மாளிகைகள் கட்டப்பட இருக்கின்றன. ஏர்க்காட்டில் புதிய மாளிகை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மாவட்டத்தின் மைய இடங்களிலும் பிற முக்கிய இடங்களிலும், சுற்றுலா மாளிகைகள் கட்டவும், இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுற்றுலா இடங்களை மேம்படுத்துகையில் சாலைகளை நல்ல முறையில் பராமரித்து வருதல், கண்கவர் எழில்மிகு இடங்களைச் சரியாகப் பேணி வருதல் சுற்றுப் புறத்தைத் தரமான சுகாதார நிலையில் வைத்திருத்தல், நல்ல குடிநீர் வசதி செய்தல் ஆகியவை மிகமிக முக்கியமான திட்டங்களாகும்.

இராமேசுவரத்தில் மைய அரசு ஒரு சுற்றுலா மாளிகை



[illegible] கட்ட இருக்கிறது. இ[illegible] வேண்டிய [illegible] த[illegible] அரசு [illegible] [illegible] மையம், கா[illegible] இடங்களைக் கண்[illegible] சுற்றுப் பயணப் [illegible]து. சென்னை[illegible] [illegible]யத் திலிருந்து [illegible] [illegible]மும் கிளம்புகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி காண மாவட்டச் சுற்றுலாக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறது. தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு அடுத்து வரும் பத்து ஆண்டுகளுக்கான அடங்கல் திட்டம்தயாரிப்பதும், பல்வேறு இடங்களைச் சுற்றுலா இடங்களாக மேம்படுத்துவதற்கான முன்னுரிமை அளிப்பதும் இக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

உதகை ஏரியை அழகு படுத்தவும், முதுமலை வன விலங்குகள் சரணாலயத்தைப் பேணிக் காக்கவும், மாமல்லபுரத்தை அழகு படுத்தவும் திட்டங்கள் இருக்கின்றன.

மாமல்லபுரத்தில் ஒலி, ஒளித் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. சென்னையில் தமிழகத்தில் உள்ள கோயில்கள் சிற்பங்கள் முதலியவற்றை மெழுகில் செய்து, அரும் பொருட்காட்சி சாலை ஒன்றை அமைக்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்னை நகருக்கே அழகு சேர்க்கும் கூவம் சீரமைப்புத் திட்டமும் முடிவடைந்து வருகிறது. இளைஞர் விடுதி ஒன்றும் சென்னையில் கட்டப்பட்டு வருகிறது. இவை மேற்கொண்டுள்ள திட்டங்களில் சில.



நான்காவது திட்டக் காலத்தில் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக மாநில அரசு ரூ. 26.25 இலட்சமும், மைய அரசு ரூ. 218.5 இலட்சமும் ஒதுக்கி இருக்கின்றன.

மாநிலத் திட்டக் குழுவும், தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி காணத் தீவிர ஆய்வு நடத்தி வருகிறது.

இப்படிப் பல்வேறு ஆக்கப் பணிகளில் சுற்றுலா வளர்ச்சிக்காக நாம் ஈடுபட்டிருக்கும் அதே நேரத்தில், மைய அரசு வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகள் தமிழகம் காணப்பெரும் அளவில் வர ஆவன செய்ய வேண்டும். முக்கியமாகச் சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்தி அகில உலக விமானங்கள் சென்னை வழியாகச் செல்ல ஆவன செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் மேற்கொண்டுள்ள திட்டங்களின் முழுப் பயனையும் பெறமுடியும்.

இப்படிப் பலவகைகளில் நாட்டிற்கு வளம் சேர்க்கும் சுற்றுலாத் தொழில்—ஓட்டல் தொழில், போக்கு வரத்துத் தொழில், கைவினைத் தொழில் போன்ற பல தொழில்கள் வளர வழி ஏற்படுகிறது. வெளிநாட்டுச் செலாவணியும் கிடைக்கிறது.

எனவே, ஒரு சில மணி நேரத்தில் முற்றிலும் புதிய சூழ்நிலையில் வந்து இறங்கி, ஒரு சிலநாட்களே இருக்கும் வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகளுக்கு அவர்களது தேவையறிந்து அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். நமது கலாச்சாரம், பண்பாடு, அவற்றின் அடிப்படைத் தத்துவம், சமூகப் பழக்க வழக்கங்கள், மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றைச் சிறப்பாக விளக்க வேண்டும். அப்போதுதான் திரும்பச் செல்லும்போது நமது நாட்டின் பண்பாட்டுத் தூதுவர்களாக அவர்கள் செல்வார்கள். சுருங்கச் சொன்னால், 'அந்நியர்களாக வந்தவர்களை நண்பர்களாக' அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் நமது முன்னோர்கள் நமக்களித்த 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்,' என்ற உயர்ந்த பண்பாட்டை மெய்ப்பித்தவர்களாவோம். நம்மில் எல்லாருக்கும் சுற்றுலா வளர்ச்சியில் பங்குண்டு. அதை எல்லாரும் சிறப்புறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(18-10-1972 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை)

# பாட்டுக்கொரு புலவன்

— இளங்கோ —



மூடுபனி வார்த்தைகளால் முனகி டாத
முண்டாசுப் புலவோன்;நம் விடுத லைக்குச்
சூடுளத்தில் ஏற்படுத்திச் சொரணை ஏற்றித்
தோள்தட்டி முண்டாவைக் காட்டி யோன்:தன்
பாடுதுறைக் கலையாலே குழந்தை கட்கும்
பழத்தமிழில் கனியமுது படைத்தோன் ; இந்த
நாடுநகர் குலுங்கிடப்பூக் காடு தந்தோன் :
நறுந்திலகம் வைத்தபெரு மீசைக் காரன் !

மொழிபலவும் படித்தறிந்தும், தமிழன் னைக்கே
முச்சுதனைச் சேர்த்திருந்தான் ; வையத் துள்ள
பழிபடாத கலையனைத்தும் கொணர்ந்த போதும்,
பரிமளிக்க வேண்டும்நந் திறமே என்றான் :
விழிபழுது நேர்ந்தோரைப் 'போபோ' என்றான் :
வீட்டுமொழி பயிலாரை வெறுத்தான் ; இந்நாள்
எழிலுடைய தமிழரசை எண்ணித் தானே
இயன்றவரை திட்டங்கள் சொல்லிப் போனான் ?

எடுத்தாள எதைமறந்தான் ? இயல்ஒவ் வொன்றும்
இதயத்தின் உணர்ச்சிகளின் உச்சக் கட்டம் :
படுத்தாலும் வேதாந்தப் பாட்டுக் குள்ளும்
பார்போற்றும் விஞ்ஞானப் புதுமை சொன்னான்:
தடுத்தாலும் வறுமையிலும் 'இமைசோ ராமை,
தமிழ்க்கவிதை, பொதுப்பணியென் தொழிலாம்' என்றான்!
கொடுத்தாள மறந்தாலும் குறைபட் டானா ?
குறிக்கோளே உயிரென்ற வீரன் அன்னான்.

பாரதியே ! அடிமைவிலங் கொடிக்க வந்த
பாவுக்கே அதிபதியே ! தாச னுக்குச்
சாரதியே ! சமதருமத் தத்து வத்தின்
சாறினிக்கச் செய்தவனே ! சரித்தி ரத்தில்
பேரெழுதும் கவியரசே ! கண்ணீர் விட்டே
பெற்றெடுத்த அரசுரிமை பறிபோ காமல்
ஊரதிர வைப்போம்நின் அடிச்சு வட்டில் !
ஒற்றுமையைக் காப்போம்நின் ஆணை யின்கீழ் !





இந்தியப் பெரு நாட்டிலேயே தமிழ்நாடு தனக்கெனத் தனியொரு இடத்தைப்பெற்றுள்ள மாநிலமாகும். வளர்ச்சித் திட்டங்களை வகையாகச் செயல்படுத்தி இலக்கு மீறிய வெற்றிகளை வெவ்வேறு துறைகளில் ஈட்டி வருவது தமிழ்நாடு.

தாழ்த்தப்பட்ட மக்களின்—பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியூட்டவேண்டும்—அனைவரும் வாழ்க்கையில் உயர்ந்திட வேண்டும் என்ற அடிப்படையில் தொலைநோக்குத் திட்டம் வகுத்துச் செயல்பட எண்ணிய தமிழ்நாடு அரசு, இந்தியாவிலேயே மாநில மட்டத்தில், தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் திட்டக்குழு ஒன்றினை அமைத்தது. பல்வேறு துறை அறிஞர்களைக் கொண்ட இத்திட்டக்குழு பன்னிரண்டு ஆண்டுக் காலத் தொலைநோக்குத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாட்டிற்கென வகுத்தளித்துள்ளது.

# வெற்றிநடை போடும் தமிழகம்

எஸ். முத்துராமலிங்கம்

வெவ்வேறு துறைகளில் ஏற்படவேண்டிய வளர்ச்சிகள் குறித்துக் கூறியுள்ள தமிழ்நாடு திட்டக் குழுவினர், அனைத்திற்கும் அடிப்படையான குடும்ப நலத் திட்டம் குறித்தும் கூறியுள்ளனர். மொத்த இந்தியாவில் பிறப்பு விகிதம் 1000-க்கு 39 என இருக்க, தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் 1000-க்கு 32 என்றுள்ளது. இது 1972-ஆம் ஆண்டின் நிலை. இந்தப் பிறப்பு விகிதத்தை 1978-79-ல் 1000க்கு 25 என்றும், 1983-84-ல் 1000க்கு 22 என்றும் குறைத்திடவேண்டுமென்பது தமிழ்நாடு திட்டக்குழுவினர் தந்துள்ள இலக்காகும்.

திட்டக் குழுவினரின் கணிப்புப்படி 1000 பேர்களில் 135 தம்பதியர் இளமையான— குழந்தை பெற மிகுதியான—வாய்ப்பைப் பெற்றுள்ளவர்கள். இவர்களில் 22.4 பேர் குடும்ப நல அறுவைச் சிகிச்சையினாலோ, அல்லது கருத்தடை வளையம் பொருத்துதல், வழக்கமான கருத்தடை முறைகளைப் பின்பற்றுதல் போன்றவற்றினாலோ, குழந்தைபெறும் வாய்ப்பிலிருந்து காக்கப்பட்டுள்ளார்கள். திட்டக் குழுவினரின் நோக்கத்திற்கேற்ப 1979-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பிறப்பு விகிதத்தை 1000-க்கு 25 என ஆக்க வேண்டுமானால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்கள் இப்போது 1,000-க்கு 4 பேர் என்றிருப்பது, 9 பேர் எனவும், கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வோர் 1000-க்கு 1.4 பேர் என்றிருப்பது 3 பேர் எனவும், வழக்கமான கருத்தடை முறைகளைப் பின்பற்றுவோர் 1000-க்கு 1.7 பேர் என்றிருப்பது 15 பேர் எனவும் உயரவேண்டும். மேலும் 1972-ஆம் ஆண்டு வரை தமிழ் நாட்டில் 12 இலட்சம் அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. தொலை நோக்குத் திட்டத்தில் நிர்ணயித்துள்ள பிறப்பு விகித இலக்கை எட்ட வேண்டுமானால், 1979-ஆம் ஆண்டிற்குள் 24இலட்சம்அறுவைச்சிகிச்சைகள் செய்து முடித்தாக வேண்டும்.

தொலை நோக்குத் திட்டவரைவு அறுதியிட்டுக் கூறும் இந்த இலக்கை எட்டிட அரும்பாடுபட்டுத் தமிழ்நாடு அரசு நிறைவேற்ற முனையும்.

## இந்தியாவின் வழிகாட்டி

தேசியக் குடும்ப நலத்திட்ட வரலாற்றில் தமிழ்நாட்டிற்குச் சிறப்பானதொரு இடமுண்டு. கடந்த காலத்தில் இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி தேசிய விருதுகளைத் தொடர்ந்து பெற்ற பெருமையும் அதற்குண்டு. சிறப்பாகச் சென்ற ஆண்டு நடந்த முனைப்பு இயக்கத்தின் போது தஞ்சை மாவட்டம் நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தந்தைமார்களுக்கு இலவச உணவு அளித்து, அவர்களை அங்கு இருக்கச் செய்து, கண்ணுங்கருத்துமாகக் கவனித்து, தொல்லை ஏதுமின்றி அவர்களை வீட்டிற்கு அனுப்பியது. நல்வாழ்வு நிலையங்கள் அமைத்துச் செயல்பட்ட காரணத்தால், கடந்த ஆண்டு நடந்த இரண்டு முனைப்பு இயக்கங்களிலும் இலக்கு மீறிய வெற்றியை ஈட்டியது தஞ்சை மாவட்டம். இம்முறையைத் 'தஞ்சை மாவட்டப் பாணி' எனக்கூறிப் பாராட்டி ஏற்றுக்கொண்ட இந்திய அரசு, கடந்த நவம்பர்த் திங்கள் 1, 2 தேதிகளில் ஐதராபாத் நகரில் நடந்த குடும்ப நலக் கூட்டத்தில் பரிசு ஒன்றினை வழங்கித் தமிழ்நாட்டைப் பாராட்டியுள்ளது. மேலும் இவ்வாண்டு நாடெங்கும் நடத்தப்படும் முனைப்பு இயக்கம் 'தஞ்சை மாவட்டப் பாணி'யைப் பின்பற்றி நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து நடத்தப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. அந்த வகையில் இந்தியாவிற்கே வழிகாட்டுவதாக அமைந்துள்ளது தமிழகம்.

## அறுவைச் சிகிச்சைக்காகும் செலவு ரூ. 110

இம்முறைப்படி முனைப்பு இயக்கம் நடத்தி அறுவைச் சிகிச்சை ஒன்று செய்து முடிக்க ஆகும் செலவு ரூ. 110 ஆகும். இதில் நூறு ரூபாயை இந்திய அரசு தருகிறது. தந்தைமார்களை ஊக்குவித்து அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்குவோருக்கான 'ஊக்குவிப்போர் தொகை ரூ. 10-ஐ (ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும்) தமிழ்நாடு அரசு தன் நிதியிலிருந்து வழங்குகிறது. ஆக மொத்தம் ரூ. 110. இதில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தந்தைக்கு ரூ. 60 ஊக்கத் தொகையாகவும் ரூ. 10 மருந்தினச் செலவுக்காகவும், நல்வாழ்வு நிலையம் அமைத்தல், விளம்பரம் போன்றவற்றிற்காக ரூ. 30-ம், ஊக்குவிப்போர் தொகையாக ரூ. 10-ம் வழங்கப்படுகிறது.

## இலக்கு

இவ்வாண்டு 1972-73-ல், தமிழ்நாடு முதன்முதலாக ஆறு மாவட்டங்களில், தஞ்சை மாவட்ட முறையைப் பின்பற்றி நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து முனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்தியது. இந்த ஆறு மாவட்டங்களும் சேர்ந்து மொத்தம் 1,20,000 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்திட வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயித்தது. இந்த இலக்கின்படி முனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்திய செங்கற்பட்டு மாவட்டம் 16,000 தந்தைமார்களுக்கும், கோவை மாவட்டம் 18,000 தந்தைமார்களுக்கும், வட ஆர்க்காடு மாவட்டம் 21,000 தந்தைமார்

களுக்கும், திருநெல்வேலி மாவட்டம் 25,000 தந்தைமார்களுக்கும் திருச்சி மாவட்டம் 25,000 தந்தைமார்களுக்கும், இராமநாதபுர மாவட்டம் 15,000 தந்தைமார்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்து முடிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டது.

**விளம்பர இயக்கம்**

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடிப் பார்வையில் முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டது. உள்ளாட்சித் துறையினரும், வருவாய்த் துறையினரும், நல்வாழ்வு, குடும்ப நலத் துறையினரும் ஒருங்கிணைந்து, மிகுந்த ஒத்துழைப்புடன் சிறந்த முறையில் முனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்தினர். ஊழியர்களுக்கும் தந்தைமார்களுக்கும் உற்சாகமூட்ட வேண்டிப்

கலந்து கொண்டு, சிறு குடும்ப நெறியின் இன்றியமையாமை குறித்து வலியுறுத்திப் பேசினர். படக் காட்சிகள், கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள், வில்லுப்பாட்டு போன்றவற்றின் மூலம் குடும்ப நலக் கருத்துக்கள் மக்களிடையே பரப்பப்பட்டன. வண்ண வண்ணச் சுவரொட்டிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர், மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர், ஆகியோரின் உரைகள் நூல் வடிவிலும், மாண்புமிகு பேராசிரியரின் வேண்டுகோள் துண்டு வெளியீடாகவும் மக்களிடையே வழங்கப்பட்டன. இவ்விளம்பர இயக்கத்தின் பயனாகச் சேவை இயக்கத்தின்போது, மக்கள் தாங்களாகவே அறுவைச் சிகிச்சைசெய்து



25—9—1972-ஆம் நாள் வேலூரில் நடைபெற்ற குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத் துவக்க விழாவில் முதல்வர் கலைஞர் உரையாற்றுகிறார்

பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிசுத் திட்டங்களை செயல்படுத்தினர். சேவை இயக்கம் ( Service Period ) தொடங்குவதற்கு முன்னர், குடும்பநல விளம்பர அலுவலர்களால் மிகுந்த முனைப்போடு செயல்படுத்தப்பட்டது. பிற மாவட்டக் குடும்ப நல விளம்பர அலுவலரும், தமிழ்நாடு அரசு மக்கள் தொடர்பு அலுவலர்களும், இந்திய அரசு கள விளம்பரத் துறையைச் சார்ந்தோரும், அவர்களுக்குத் துணையாகச் செயல்பட்டனர். மக்கள் தலைவர்கள், சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் முனைப்பு இயக்கம் தொடர்பாக நடந்த பொதுக் கூட்டங்களில்

கொள்ள முன்வரக்கூடிய நிலை உருவானது.

**முஸ்லீம்-கிறிந்துவ மக்களின் பேராதரவு**

இம் முனைப்பு இயக்கக் காலத்தில் வட ஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள துலுக்கப்பாளையம் என்ற கிராமத்தைச் சார்ந்த முப்பது முஸ்லீம் தந்தைமார்கள், அவர்களது மௌலியின் ஒப்புதலோடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். சிறப்பாக அந்த மௌலி பக்ஷிசாகிப், தானே முன்வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். அதே போல் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்கப்பட்டிருந்த நல்வாழ்வு நிலையத்தில்அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட ஹனிப் சாகிப் தன்

ஊர் மௌலியின் ஒப்புதலோடு அறுவைச்சிகிச்சை செய்துகொண்டுள்ளார். திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் 80-க்கும் மேற்பட்ட முஸ்லிம் தந்தைமார்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார்கள்.

திருச்சி மாவட்டம் வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் துணைத் தலைவர்-கத்தோலிக்கக் கிறித்துவர் திரு சாமிநாதன், தன் இன மக்களிடையே இத்திட்டம் பற்றி எடுத்துரைத்து, அளவான குடும்பத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். அதன் பயனாக அவரது கிராமம் கருங்குளத்தைச் சேர்ந்த 20 கத்தோலிக்கத் தந்தைமார்கள் முன்வந்து அறுவைச் சிகிச்சைசெய்துகொண்டார்கள். அவரது பணிக்குத் துணையாக, இவ்வொன்றியத்திலுள்ள முகவனூர் ஊராட்சி உறுப்பினர்-கத்தோலிக்கக் கிறித்துவர் திரு அந்தோணிசாமி தானே அறுவைச்சிகிச்சைசெய்து கொண்டார். இவரது உடன்பிறப்பும் மைத்துனரும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு உடல் நலத்தோடு இருந்து வருகிறார்கள். இதே போல் செங்கற்பட்டு கோவை இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்களும், கிறித்துவர்களும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள். இதிலிருந்து குடும்பநலத் திட்டத்திற்கு மதமோ அல்லது கோட்பாடுகளோ—பழக்க வழக்கங்களோ தடையாக இல்லை என்பதும், இந்து, முஸ்லிம், கிறித்துவ மக்கள் அனைவரும் இத்திட்டத்தை விரும்பி ஏற்று வருகிறார்கள் என்பதும் தெளிவு.

**சிறு விவசாயத் திட்டம்**

வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம், புதுப்பாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில், இந்திய அரசின் நிதி உதவியோடு, தமிழ்நாடு அரசு சிறு விவசாயத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறை மூலம் நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணை வைக்க, சேங்கன்று வாங்க, ஆடு வாங்க, விவசாயம் செய்ய ஆகியவற்றிற்காகக் கடன் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி ரூ. 1,000 கடன் பெற விரும்பினால், ரூ. 50 பங்குத் தொகையாக முன்பணம் கட்ட வேண்டும். இரண்டு மூன்று குழந்தைகள் உள்ள இளம் தந்தைமார்கள் முனைப்பு இயக்கக் காலத்தில் செங்கம் ஊராட்சி ஒன்றிய நல்வாழ்வு நிலையத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு ஊக்கத் தொகையாக ரூ. 60 பெறுகின்றனர். இதிலிருந்து ரூ. 50ஐ

பங்குத் தொகையாக ஆரம்பத்திலேயே கட்டிச் சிறு விவசாயத் திட்டத்தின் கீழ் ரூ. 1,000 கடன் பெற்றனர். இப்படி நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் நிரந்தரக் கருத்தடை மூலம் சிறு குடும்ப நெறி ஏற்றதோடு தங்கள் முதிர்கால வாழ்வுக்கும் வழிவகுத்துக் கொண்டனர்.

**கோவை நகராட்சியின் சாதனை**

பொதுவாக நகராட்சிகள் குடும்ப நலத்திட்டப் பணிகளில் அவ்வளவு ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனால் அந்த நிலையை இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தில் கோவை நகராட்சி நீக்கிவிட்டது. கோவை நகராட்சி தலைவர் முஸ்லிம் இனத்தைச் சார்ந்த திரு. சுக்கூர் அவர்களின் துணையோடு, கத்தோலிக்கக்கிறித்துவரான இந்நகராட்சி ஆணையாளர் திரு ஜான் அலெக்சாண்டர் தன் அரும்பணியால், நகராட்சி ஊழியர்களின் துணையோடு, பெருஞ்சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவர் புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய இடங்களில் நகராட்சி ஆணையாளராகப் பணியாற்றிய போது, சிறந்த முறையில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தியதற்காகப் பரிசுகள் பெற்றவர்.

கோவை நகராட்சியின் தாய்-சேய் நிலையங்களில் நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, ஊழியர்களுக்குப் பரிசுத் திட்டம் ஒன்றினை அறிவித்து, 'அரிமா' சங்கங்களின் துணையோடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களுக்குப் 'பிளாஸ்டிக்' பைகளைப் பரிசாக வழங்கிப் பல முனைகளிலும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும், ஊட்டி முனைப்பு இயக்கக் காலத்தில் 3,125 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்துள்ளார் இந் நகராட்சி ஆணையாளர். நகராட்சிகள் என்ற அளவில் எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டிலே மட்டுமல்லாது இந்தியாவிலேயே, முனைப்பு இயக்கத்தில் அதிகமான தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த நகராட்சியாகக் கோவை நகராட்சி இருக்கக்கூடும். இந் நகராட்சிக்குத் தேசியப் பரிசு கூட எதிர் பார்க்கப்படுகிறது.

**மதுக்கரை சிமெண்ட் ஆலையின் பணி**

கோவை நகர் அருகே அமைந்துள்ள மதுக்கரை ஏ. சி. சி. சிமெண்ட் ஆலையினர் தங்கள் தொழிலாளர்களிடையே குடும்ப நலத்திட்டத்தின் அவசியத்தைக் கூறி, 'சிறு குடும்ப நெறியே சீர்பெருகும் வழி' என்பதை உணர்த்தி வருகின்றனர். தொழிலாளர்களுக்கென நடத்தப்படும் மருத்துவமனை மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். இரண்டு குழந்தைகளோடு அறுவைச்சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு ரூ. 300-ம் மூன்று குழந்தைகளோடு அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவருக்கு ரூ. 200-ம் நான்கு அலலது அதற்குமேல் குழந்தைகள் உள்ளவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் ரூ. 100-ம் ஊக்கத் தொகையாக அளிக்கின்றனர்.

ஊக்கத் தொகையோடு கூட அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களுக்கு, மூன்று நாட்கள் வரையிலும் தாய்மார்களுக்கு 7 முதல் 15 நாட்கள் வரையிலும் மருத்துவரின் பரிந்துரைக்கேற்ப விடுப்பு அளிக்கிறார்கள். இம்முனைப்பு இயக்கக் காலத்தில் இவ்வாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கிட்டத்தட்ட ஐம்பது பேர். அரிசிப்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு, அரசு அளித்த ஊக்கத் தொகையோடு கூட ஆலையினர் அளித்த ஊக்கத் தொகையையும் பெற்று இன்புற்றனர். குடும்ப நலத் திட்டத்தை மிகுந்த ஆர்வத்தோடு செயல்படுத்தி வரும் இவ்வாலையினர் அரசிடமிருந்து மான்யம் எதையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

செங்கை மாவட்ட குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தைக் காஞ்சியில் துவக்கி வைத்து கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்
அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு
அவர்கள் உதவித் தொகை வழங்கும் காட்சி



**ஆளுநர், அமைச்சர்கள் பங்கேற்பு**

வட ஆர்க்காடு மாவட்ட முனைப்பு இயக்கத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், செங்கற்பட்டு மாவட்ட முனைப்பு இயக்கத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் திருச்சி மாவட்டம் துறையூர் நல்வாழ்வு நிலையத்திற்கு வருகை தந்து, தந்தைமார்களுடன் உரையாடி, நலம் விசாரித்து, அனைவருக்கும் ஆப்பிள் பழம் வழங்கிப் பாராட்டிச் சென்றார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் இம் மாவட்டத்திலுள்ள மண்ணச்சநல்லூர் நல்வாழ்வு நிலையத்திற்கு வருகை தந்து, தந்தைமார்களுக்கு வேட்டி, துண்டு வழங்கிச் சென்றனர்.

**நிபுணர் குழுவின் பாராட்டு**

இந்த ஆறு மாவட்டங்களில் முனைப்பு இயக்கம் நடந்த

காலத்தில், தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறைச் செயலாளர் திரு. கே. ஏ. அம்பாசங்கர் தலைமையில் நல்வாழ்வு நிலையங்களுக்கு நிபுணர் குழு ஒன்று வருகை தந்தது. இக் குழுவில், இந்திய அரசு, குடும்ப நலத்துறையின் திட்ட இயக்குநர் டாக்டர் சீல், குஜராத் மாநில மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை, இயக்குநர் டாக்டர் தக்கூர், புள்ளி விவர நிபுணர்கள் ஆகியோர் இருந்தனர். இந்நிபுணர் குழு செங்கற்பட்டு, திருச்சி, இராமநாதபுர மாவட்டங்களில் உள்ள நல்வாழ்வு நிலையங்களுக்கு வருகை தந்தது.

மேலும் இந்திய அரசு குடும்ப நலத் துறையின் உதவிக் கமிஷனராகப் பணியாற்றும் டாக்டர் சர்மா, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள நல்வாழ்வு நிலையங்களுக்கு வருகை தந்தார்.

இந்த இரு குழுக்களுமே தமிழகத்தில் முனைப்பு இயக்கம் நடத்தப்படும் முறை, நல்வாழ்வு நிலையங்கள் செயல்படும் விதம் ஆகியவற்றை வெகுவாகப் பாராட்டிச் சென்றன.

### வெற்றி !

இவ்வாண்டு முதன் முதலாக முனைப்பு இயக்கம் செயல் படுத்தப்பட்ட ஆறு மாவட்டங்களிலும் 1,27,367 தந்தைமார்களும் அறுவைச் சிகிச்சை செய்து முடித்து, 1,20,000 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென இந்திய அரசு தந்த இலக்கையும் மீறி வெற்றி ஏற்படுத்தியுள்ளது தமிழ்நாடு. இது 106 விழுக்காடு அளவு வெற்றியாகும்.

செங்கற்பட்டு மாவட்டம், 32,420 (202·65 சதவிகிதம்), தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சையளித்து, ஆறு மாவட்டங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கோவை மாவட்டம் 21,702 (120.5 சதவிகிதம்), தந்தைமார்களுக்கும், திருச்சி, மாவட்டம் 25,008 (100.0 சதவிகிதம்) தந்தைமார்களுக்கும், வட ஆர்க்காடு மாவட்டம் 15,677 (74.7 சதவிகிதம்), தந்தைமார்களுக்கும், திருநெல்வேலி மாவட்டம் 21,878 (87.5 சதவிகிதம்) தந்தைமார்களுக்கும், இராமநாதபுர மாவட்டம் 10,682 (71.2 சதவிகிதம்) தந்தைமார்களுக்கும், அறுவைச் சிகிச்சை செய்து வெற்றிபெற்றுள்ளன.



தந்தைமார்களின் பொழுது போக்கிற்காக வைக்கப்பட்டிருந்த கேரம் போர்டில் வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் விளையாடுவதை நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் கவனிக்கிறார்கள்.

### தென்ஆர்க்காடு — தஞ்சை சேலம்—மதுரை

இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தை முதன் முதலாக ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தி வெற்றிபெற்றது தமிழ்நாடு அரசு. இப்போது தென் ஆர்க்காடு தஞ்சை, சேலம், மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் முனைப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டம் 18,000 தந்தைமார்களுக்கும், தஞ்சை மாவட்டம் 30,000 தந்தைமார்களுக்கும், சேலம் மாவட்டம் 15,000 தந்தைமார்களுக்கும், மதுரை மாவட்டம் 20,000 தந்தைமார்களுக்குமாக மொத்தம் 83,000 தந்தைமார்களுக்கு முனைப்பு இயக்கக் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்துமுடிக்க வேண்டுமென்பது இந்திய அரசினர் நிர்ணயித்துள்ள இலக்காகும்.

தென்ஆர்க்காடு, தஞ்சை, சேலம் ஆகிய மாவட்டங்களில் நவம்பர்த் திங்களில் விளம்பர இயக்கம் செயல்படுத்தப்பட்டு டிசம்பரில் சேவை இயக்கம் நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்டம் விளம்பர இயக்கத்தை 1973-சனவரித் திங்களில் நடத்தி, பிப்ரவரியில் சேவை இயக்கத்தை நடத்தவிருக்கிறது. அன்மையில் தமிழகத்தில் நிகழ்ந்துவிட்ட வேண்டாத புயலும், வெள்ளமும் வளர்ச்சிப் பணிகளை வெகுவாகப் பாதித்து விட்டன. புயல் ஓய வேண்டும், வெள்ளம் வற்றிட வேண்டும். மக்கள் மனத்தில் உள்ள அச்சம் நீங்கி, இயல்பான காரியங்களில் அவர்கள் ஈடுபட வேண்டும் என விழைந்தது தமிழக அரசு. வந்த புயலும் வெள்ளமும் சேதத்தை விளைவித்து விட்டன என்றாலும் கதிரவனைக் கண்ட பனி போல் ஆகி விட்டது.

குடும்ப நல முனைப்பு இயக்கம் இம் மாவட்டங்களில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. தஞ்சை மாவட்டம், 11—12—1972-ஆம் நாள் வரை 11,525 தந்தைமார்களுக்கும், சேலம் மாவட்டம் 12-12-72 ஆம் நாள் வரை 4,098 தந்தைமார்களுக்கும், தென் ஆர்க்காடு மாவட்டம் 6—12—1972 ஆம் நாள் வரை 1,601 தந்தைமார்களுக்கும், அறுவைச் சிகிச்சை செய்து, வெற்றி முனை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இடையில் ஏற்பட்ட சில தொல்லைகளைக் கண்டு துவளாது, முனைப்பு இயக்கக் காலத்திற்குள் இந்நான்கு மாவட்டங்களும் அளப்பரிய வெற்றியை ஈட்டும். இந்தியாவிலேயே தமிழ்நாடு தனக்கெனச் சிறப்பானதொரு இடத்தைப் பெற்று வெற்றி நடை போடும் !



# கல்வெட்டுக் காட்டும் கல்விச் சாலைகள்

— மா. சந்திரமூர்த்தி —

ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்னும் பின்னும், தமிழகத்தில் உள்ள பெருங்கோயில்களில் கல்விச் சாலைகள் இருந்து வந்துள்ளன. அச்சாலைகளை அரசர்களும், அரசமாதேவிகளும் பெருநிலக் கிழார்களும் நிறுவி அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். அங்கே ஆயிரமாயிரம் மாணவர்கள் கல்வி கற்றனர். அவர்களுக்குப் போதிக்க ஆசிரியப் பெருமக்கள் இருந்தனர். கோயில்களில் மட்டுமன்றி அக்கோயில் மண்டபங்களிலும், தாழ்வாரங்களிலும், திருச்சுற்றுகளிலும் கல்விச் சாலைகள் நடத்தப் பெற்றன. இவற்றைத் ' திருச்சுற்றுலைக் கல்லூரி ' எனக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. கிராமங்களில் நிழல் தரும் மரங்களின் கீழேயும் வகுப்பு நடத்தப் பெற்றன. அவை யாவும் குருகுலத்தின் பிரிவாகக் கருதப் பெற்றன. அவ்வாசிரியர்களுக்கும், அங்கே படிக்கும் மாணவர்களுக்கும் கிராமப் பொதுச் சொத்துக்களிலிருந்து தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பெற்றன. (17/1920) அவ்வாசிரியர்களுக்கு அரசர்கள் நிலமும், கொடையும் அளித்துள்ளனர், கல்விச்சாலையில் மாணவர்கள் பல்வேறுபட்ட கல்வி முறைகளைப் பாங்குறப் பயின்றனர் எனக் கல்வெட்டுகள் விரித்துக் கூறும்.

## காஞ்சிக் கல்லூரி (கி.பி. 400—600)

' கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர் ' என அப்பர் பாடும் அம்மாநகரில் மாபெரும் கல்விச்சாலை ஒன்று இருந்தது. இக் கல்விச்சாலை காஞ்சி கைலாயநாதர் கோயிலை ஒட்டிக் ' கடிகை' என்ற பெயருடன் புகழ் மிகுந்து பணியாற்றி வந்தது. கி.பி. 3—4—ஆம் நூற்றாண்டில் (கி.பி. 350) இக் கல்விச் சாலை தோற்றுவிக்கப் பெற்றது என வரலாற்று ஆசிரியர் கணிப்பர். கி.பி. 3, 4-ஆம் நூற்றாண்டுகளில் இப் பகுதியை ஆண்ட சத்தியசேனன் என்ற மன்னனிடமிருந்து கந்த சிஷ்யன் என்பான் இக்கடிகையைக் கைப்பற்றினான் என அறிகிறோம். எனவே, இதன் தொன்மையும் பெருமையும் நன்கு விளங்கும்.

வேற்று நாட்டு வேந்தர்களும், இக்கல்லூரியில் படிக்க வந்தனர் எனின் இதன் பெருமையை நன்கு அறியலாம். கதம்பர் குல மன்னன் மயூரசர்மன் என்பான் இக் கல்லூரியில் (கடிகையில்) படித்து வந்தான் எனத் தாலகுண்டாக் கல்வெட்டுகள் கூறும். எனவே பிற மாநிலங்களிலிருந்தும் பலர் இங்குக் கல்வி கற்க வந்தனர் என்றும், படித்துப் புகழ் எய்தினர் என்றும் அறிகிறோம். இக் கல்லூரியில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் கல்வி கற்றனர். இவர்களுக்கு நான்கு வேதங்களும், அங்கங்களும், நியாயம், மீமாம்சை போன்ற தத்துவங்களும், இலக்கணங்களும், வில்வித்தை இன்னபிற படைப் பயிற்சி முறைகளும் முறைப்படிப் போதிக்கப் பெற்றன. சமந்த பத்திரர், பூஜ்ய பாதர், முதலிய சமணச் சமய ஆசிரியர்களும் பெரும் புலவர்களும் ஆகிய பெருமக்கள் இங்கு வந்தனர் எனின் இக்கல்லூரி மதுரைத் தமிழ்ச் சங்கம் போல் அனைவருக்கும் பொதுக் கடிகையாக இருந்தது என ஆராய்ச்சியாளர் கூறுவர். இக்கடிகையில் பேசுதல் அக்காலத்தில் சிறந்ததெனக் கருதியதனால் பல நாட்டாரும் இங்கு வந்து சென்றனர். இப்பகுதியில் இருந்து தர்மபாலர் என்பார் நாளந்தாப் பல்கலைக் கழகம் சென்றார். அங்கே பேராசிரியராகவும், துணை வேந்தராகவும் அவர் திகழ்ந்தார்.

கதம்பர் குல மன்னன் பல்லவ வேந்தனால் இக்கடிகையில் இருந்து விரட்டப்பட்டான் என அறிதலின், அக்கடிகை பல்லவ மன்னனின் பார்வையில் இருந்தது என்பது தேற்றம். இப் பல்லவ வேந்தர்களில் பலர் சிறந்த ஆர்வம் கொண்டு அக் கல்லூரியின் ஆக்கத்திற்குப் பாடுபட்டு வழிவகை செய்தனர்.

## பாகூர் கல்லூரி (கி. பி. 800—900)

பல்லவர் காலத்தில் பாகூரில் ஒரு கல்லூரி இருந்தது. இப் பாகூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பாதிரிப் புலியூருக்கும்—புதுவைக்கும் இடையில் அமைந்துள்ள சிற்றூர் ஆகும். இக்கல்லூரியில் உள்ள மாணவர்கள் 14 கலைகளையும் கசடறக் கற்றனர். 4 வேதங்கள், 6 அங்கங்கள், தரும சாத்திரம், தத்துவம், மருத்துவம், படைப் பயிற்சி இன்ன பிற 18 வகை வித்தைகளையும் அறிந்திருந்தனர். இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் யாவும் மறையவரே ஆவர். அவர்களுக்குக் கல்வி கற்பித்தவர்களும், மாணவர்களைப் பார்வையிட்டவர்களும் மறையவரே ஆவர்.

இக் கல்லூரி செவ்வனே நடைபெறக் கி.பி. 860-ல் நிருபதுங்க வர்மன் ஆட்சியில் பாகூர் அருகில் உள்ள 3 கிராமங்கள் மார்த்தாண்டன் என்ற அதிகாரியால் அளிக்கப்பட்டன. அவையாவன, சேட்டுப்பாக்கம், விளாங் காட்டங் கடுவனூர், இடைப்புனைச் சேரி என்பனவாகும். எனவே பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்ற மற்றுமொரு கல்லூரி இருந்ததாக அறிகிறோம். இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோளிங்க மலை மீதுள்ள கடிகைக்கு மானியம் அளிக்கப்பட்டதாகத் திருவல்லம் கல்வெட்டுக் குறிக்கிறது.

## எண்ணாயிரம் கல்லூரி (கி. பி. 1100)

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள எண்ணாயிரத்தில் இராசேந்திர சோழன் காலத்தில் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) ஒரு கல்விச் சாலை இருந்தது. அங்கு மொத்தம் 340 மாணவர்கள் கல்வி கற்றனர். அவர்களில் 270 மாணவர்கள் பொதுக் கல்வியும், 70 மாணவர்கள் சிறப்புக் கல்வியும் பயின்றனர். அக்கல்விச் சாலையில் 14 ஆசிரியர்கள் இருந்தனர் என அவ்வூர்க் கல்வெட்டு அறிவிக்கின்றது. (333/1917) இதில் பொதுக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 6 நாழி நெல்லும், சிறப்புக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 10 நாழி நெல்லும். கொடுக்கப் பெற்றது. எனவே இச்சாலையில் இளநிலை, முதுநிலை வகுப்புப் பயிலும் மாணவர்கள் இருந்தனர் என அறிகிறோம். இம்மாணவர்களுக்கு இலக்கணமும், தத்துவங்களும் கற்பிக்கப் பெற்றன.

## திருப்புவனி கல்லூரி (கி. பி. 1100—1200)

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் புதுவைக்கு அண்மையில் உள்ள திருப்புவனியில் ஒரு கல்லூரி இருந்தது. இக் கல்லூரி, இராசாதிராசன் (கி.பி. 1048) காலத்தில் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது. இக்கல்லூரி இவ்வூர் திருமால் கோயிலைச் சார்ந்து அமைக்கப்பட்டிருந்தது. அங்கே 260 மாணவர்கள் படித்தனர். அவர்களுக்குப் போதிக்க 12 ஆசிரியர்கள் இருந்தனர். இவ்வரிய செய்திகளைச் சோழப் பெருமன்னன் இராசாதிராசன் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

## திருவொற்றியூர் கல்விச்சாலை (கி.பி. 1200)

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் திருவொற்றியூரில் மகாபாரதம், சிவபுராணம் இன்ன பிற இதிகாசத் தத்துவங்களை விளக்கும் பகுதிகள் இருந்தன. அக்கோயில் மண்டபங்களில் இலக்கணம் வக்கணிக்கும் மண்டபம் ஒன்றும் இருந்தது. இத்தகைய கல்வியை எடுத்துரைக்கவும், எத்திசையும் பரப்பவும் நிலக்கொடை பல கொடுக்கப் பெற்றதை அவ்வூர்க் கோயில் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

அம்பலத் தாடும் ஆடவல்லானின் தில்லையம்பதியில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் சேக்கிழார் பெருமானால் திருத்தொண்டர் புராணம் இயற்றப் பெற்றது. காஞ்சியில் கந்த புராணம் இயற்றப் பெற்றது. இவ்வாறு இறைவன் புகழ் பாடும் இசைப் பாடல்கள் இயற்றவும் இக்கோயில் மண்டபங்கள் பயன்பட்டு வந்துள்ளன.

## தஞ்சைக் கல்விச்சாலை (கி.பி. 1200)

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தஞ்சை மாவட்டத்தில் திருவிடைக் கழியில் உள்ள கல்வெட்டு ஒன்று மலபார் மாநிலத்தில் இருந்து வந்து வேதம் கற்ற மாணவர்களுக்கு அவ்வூரில் இலவச உணவு அளித்தது பற்றிய அரிய செய்தியை அறிவிக்கிறது. எனவே, இப்பகுதியில் இருந்து இயங்கி வந்த ஒரு கல்விச் சாலையைப் பற்றியும் அறிய முடிகிறது. இன்னும், வெம்பற்றூர், கச்சூர் முதலிய ஊர்களிலும் கல்விச் சாலைகள் இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன (293—1908).

கலை பரப்பும் கல்விச் சாலைகள் மட்டுமன்றிச் சமயத்தைப் பரப்பும் கல்விச் சாலைகள் இருந்தன. இங்கே தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலிய இசைப் பாடல்களின் துணைக் கொண்டு இன்னிசை பாடி இறைவனைத் துதித்துச் சைவத்தையும், வைணவத்தையும் பரப்பினர். தேவாரம் ஓதுவதற்குக் கோயில்களில் இருந்த இடம் தேவாரச் சுற்றுக் கல்லூரி எனப்பட்டது.



இதுகாறும் கூறியவற்றால் அக்காலத்தில் அடிப்படைக் கல்வி மட்டுமன்றிப் பல்கலை பயிலும் கல்லூரிகளிலும் இருந்தன என்றும் அவை யாவும் பெருங்கோயில்களிலும், மடங்களிலும், மண்டபங்களிலும் அமைந்திருந்தன என்றும், அவை ' திருச்சுற்றுலைக் கல்லூரி ' என அழைக்கப்பெற்றது என்றும், அங்கே கல்வி பயின்ற மாணவர்களுக்கும், போதித்த ஆசிரியர்களுக்கும் உணவு, உடை, உறைவிடம் முதலியன அளிக்கப் பெற்றன என்றும், விழாக் காலங்களில் ஆசிரியர்களுக்குப் பொன்னும் கொடையும் அளிக்கப்பெற்றன என்றும், அக்காலத்தில் கோயில்கள் கல்வியும், கலையும், சமயமும் போதிக்கும் கலைக் கூடமாக விளங்கியது என்றும் நாம் தெள்ளிதில் உணரலாம்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில், இரண்டாவது இலவசக் கண் சிகிச்சை முகாம், திருவண்ணாமலையில் உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் பொதுப்பணி அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் டிசம்பர் 24-ஆம் நாள் துவக்கி வைத்துள்ளார்கள்.

# தமிழரசு

சந்தா

| | |
|---|---|
| ஓர் ஆண்டு | ரு. 10 00 |
| அரையாண்டு | ரு 5 00 |
| தனி இதழ் | 40 காசு. |

விவரங்களுக்கு :

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

## வெண்பாப் போட்டி - 50

ஈற்றடி : வாயார என்றுமே வாழ்த்து.

முடிவு நாள் : 17–1–1973.

பரிசு : ஓராண்டு 'தமிழரசு'

அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.




விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR I C CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA





### 47. 'ஆண்டு' எனத் தொடங்கி 'அன்பு' என முடித்தல்

ஆண்டு முதிர்ந்ததன் அன்னையைப் பல்லுதிர
வீண்மகன் செய்திட்ட விம்புமறந்(து)—ஆண்டுவந்த
தையலிடம் தன்மகனின் கைவலுவைச் சொன்னளாம்
ஐயகோ! என்னேதாய் அன்பு.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

ஆண்டுகள் ஓடுவதை ஆருயிரே எண்ணுயோ?
தூண்டிற் புழுவாய்த் துடிக்கின்றேன்!—காண்டிலேயோ?
வேண்டி விரைந்தமனம் வேறெங்குச் சென்றதோ?
ஆண்டுவர வேண்டும்உன் அன்பு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

ஆண்டுக்கொன் ருக அடுத்தடுத்துப் பெற்றிடல்
பூண்டிட்டால் என்னகும் பூவுலகில்?—யாண்டும்
வறுமை நிறையும்; வளமும் குறையும்
அருமை அடைந்துவிடும் அன்பு.

—புலவர் மா. முத்துச்சாமி, பி.ஏ.,பி.டி. சாத்தனூர்,

ஆண்டு பதினெட்டே ஆகின்ற தேன்சிட்டே!
ஈண்டுநான் உன்னையெண்ணி ஏங்கிடுதல்—காண்டிலேயோ?
எட்டிநின்று பார்த்துமனம் இன்புறுதல் எத்தனைநாள்?
அட்டியின்றித் தந்திடுவாய் அன்பு.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

ஆண்டு முடிவுக்குள் ஆரணங்கே வந்திடுவேன் !
மீண்டும் இனிப்பிரியேன் வேல்விழியே!—வீண்கவலை
வேண்டாம் ! விடைகொடு, மெய்ந்நெறியை விட்டகலா
ஆண்டகையர் மாற்றிடார் அன்பு.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

ஆண்டு வரும்நாளில் அண்டும் வறுமையினைத்
தோண்டிப் புதைத்திடுவார் தொல்லுகில்—நீண்டிருக்கும்
மாட்சிபெறுங் கொள்கையெலாம் மண்ணில் நிறைவேறி
ஆட்சிசெய வேண்டும்நல் லன்பு !

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

ஆண்டு பலகடந்தும் அத்தான் வரவில்லை;
யாண்டும் அவர்நினைவால் ஏங்குகின்றேன்;—ஏன்தோழி !
நன்ரு அவர்செய்கை ? நானே துடிக்கின்றேன்;
கொன்ருரேர் கொண்டநல் அன்பு!

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

ஆண்டு பலவாக ஆய்ந்தே அறிஞரெலாம்
ஈண்டு நமக்குரைத்த இன்னுரைகள்—தோண்டுகின்ற
நீரூற்ருய் நின்றிடுமே நீளுலகு வாழ்ந்திடுமே
ஆரறிவார் அன்னவர்தம் அன்பு.

—எஸ். பார்வதியம்மாள், அருப்புக்கோட்டை.

ஆண்டு முடிவினிலே அன்னைத் தமிழகத்தில்
தூண்டிய வன்முறையால் துன்பமே;—வேண்டாம்
பகையுள்ளம்; பாசமுடன் பல்லோரும் வாழ
அகமகிழ்ந் தூட்டிடுவீர் அன்பு.

—ப. திருவேங்கடம், பொன்மலை.

ஆண்டுவந்த அந்நியரின் ஆட்சியினை மாற்றிட்ட
மாண்புடைநாம் மாநிலத்தின் மன்னரன்ருே?—ஆண்டகையே
அன்பென்னும் ஒன்றிருப்பின், ஆயுதங்கள் தேவையில்லை
வன்படையை வென்றுவிடும் அன்பு.

—அ. சுப்பிரமணியம், கல்லுக்கட்டு.

# வெண்பாப் போட்டி

ஆண்டு முதிர்ந்தும் அருநரையில் தான்வீழ்ந்தும்
நீண்ட பிணியுற்றும் நீள்நெருப்பாய்த்—தீண்டரிய
இன்னல் பலவுற்றும் இன்மகவுக் கிவ்வுலகில்
அன்னைபோல் யார்தருவார் அன்பு?

—புலவர் நா. கருணாநிதி, வங்கனூர்.

ஆண்டு பலவாக அன்பால் எடுத்துரைத்தும்
வேண்டும் நலனே விளைந்திலதால்—மீண்டும்
எடுத்துரைக்கின் என்ஆம்? இடித்துரைக்கின் என்ஆம்?
அடித்துத் திருத்துவதே அன்பு.

—சி. பி. அரங்கநாதன், சென்னை-34.

ஆண்டுக் கொருநாள் அமரராம் நேருவை
மீண்டும் நினைத்தால் மிகநன்று—நீண்டநாள்
வாழ்ந்திடும் பாரத மக்களெல்லாம் கொண்டாட
ஆழ்ந்து செலுத்தினர் அன்பு.

—நெ. குமாரசாமி. கோரிக்கடவு.

ஆண்டுபல வாய்ப்பிசிர் ஆந்தையார் தம்தலையில்
காண்பதற்கே யில்லைநரை; கார்குழலாய்!—யாண்டுமவர்
வாழ்க்கைத் துணைவியரும், வாய்த்திட்ட ஏவலரும்
ஆழ்ந்தேற்ற ஒற்றதுகாண் அன்பு.

—புலவர் எ. மாணிக்கம், விசூர்.

ஆண்டிருப தாகா அழகுப் பருவநிலா;
பாண்டியனின் நன்முத்துப் பல்வரிசை;—நீண்டகுழல்;
தித்திக்கும் வாய்என்பார் தேன்என்பார் காதலியை!
அத்தனைக்கும் காரணமோ அன்பு.

—சி. செள. கருப்பன், திருச்சி-15.

ஆண்டைந்து திட்டமாம் ஐந்தாம்நல் திட்டத்தால்
யாண்டுமே 'தன்னிறைவால்' ஏற்றமுற—ஈண்டுநாம்
நாளும் கொளுமுயற்சி நன்மை விளைக்குமேல்
ஆளுமே நன்மையெலாம் அன்பு.

—இரா. தியாகராசன், சுத்திரிப்புலம்.

ஆண்டு புகழடைந்தார் ஆயிரம்பேர், அன்பாலே
ஆண்டுப் புகழடைந்தார் ஓர்சிலரே—வேண்டும்
பொருள்கொடுத்து வாழ்ந்தான் புலவர்க்குப் பாரி
அருள்வாழி வாழியவன் அன்பு!

—சு. கிருட்டிணன், திருப்பூர்.

ஆண்டுபதி னேழிருக்கும் ஆண்கள் மனமழிந்தார்
கண்மறந்தார் பெண்ணால் உறக்கத்தில்—காண்பரிய
நல்லமைதி காண்பமெனில் நல்லுறக்கம் கண்ணிவில்லை
அல்லலைத் தீர்க்குமவன் அன்பு.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

ஆண்டு பலவாக அன்புடன் இல்லறத்தைப்
பூண்டே புவிபோற்ற வாழ்ந்தாலும்—மாண்புடைய
மக்கள் மொழியால் மனம்மகிழ்வு கொள்வதன்றோ
எக்காலும் ஏத்துகின்ற அன்பு!

—புலவர் அ. சுந்தரேசன், சுந்தரம்பள்ளி.

ஆண்டெடன்னைச் சோலையிலே ஆரத் தழுவியவன்
தூண்டிச் சுவைத்திரு தோள்பற்ற—மீண்டும்
வருவானோ? இன்ப மழையில் நனைய
அருள்வானோ என்றனுக் கன்பு?

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., சென்னை-25.

ஆண்டாண்டாய்ப் பாலூற்றி அன்பாய் வளர்த்தாலும்
தீண்டும் கருநாகம் தேன்தருமோ!—வேண்டாக்
கடும்பெயில் நெஞ்சம் கனிவதெந்நாள்? மானுக்(கு)
அடுபுலிதான் காட்டுமோ அன்பு.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

ஆண்டாண்டுக் காலம் அழுகின்ற ஏழைக்கு
வேண்டுமடி நல்லுணவு! வேறு ''விழி''—பூண்டிடவே
கண்ணுக் கிலவசமாய்க் கண்சிகிச்சை செய்கலைஞர்
அண்ணனவர் தந்திடுவார் அன்பு.

—பழ. சிங்கர்ரம், வீராமதி.

ஆண்டுக் கொருபிள்ளை யாயிங்கே பெற்றுவரின்
மாண்டாலும் கொள்ளாது மண்ணுலகு—வேண்டாமே
என்றைக்கும் பிள்ளை இரண்டேதான் போதுமென்றால்
அன்றைக்குத் தான்கிடைக்கும் அன்பு.

—சிங்காரம், கீழச்சிவல்பட்டி.

ஆண்டுகள் எத்தனையோ ஆனாலும் என்நினைவில்
யாண்டும் வளர்கொடியே வாழ்கின்றாய்—வேண்டுகிறேன்
உன்மடியில் நாள்முடிய ஓர்முறைநான் கண்மலர
என்மனத்தில் ஏங்கிடுமோர் அன்பு.

—நெ. கு. சூரியநாராயணன், எம்.ஏ.,பி.டி., சென்னை-28

ஆண்டுப் பொருளீட்டி அன்பேயான் செப்பியநாள்
மீண்டிடுவேன் என்றார்சொல் மெய்யிலையே—தூண்டிற்
புழுவானேன் தோழி! பொருளாசை கொண்டார்க்(கு)
அழுவானேன் பேதையென் அன்பு.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

ஆண்டு பலவாக அல்லலின்றி வாழ்தற்கும்
நீண்டபல திட்ட நன்மைக்கும்—ஈண்டுக்
குடும்பநலத் திட்டங் கொண்டிருவர் பெற்றே
அடுத்துத் செலுத்துவீர் அன்பு.

—புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

# வெண்பாப் போட்டி

ஆண்டவன்தன் பக்தரிடம், ஆள்பவர்தம் மக்களிடம்
பூண்டுள்ள அன்பினிலும் பூமியிலே—மாண்புடைத்து!
தன்னிகரில் லாதவொன்றாய்த் தான்பெற்ற பிள்ளையிடம்
அன்னையவள் காட்டுகின்ற அன்பு.

—சி. மு. சிவலிங்கம், மதுரை.

ஆண்டு முழுதும் அயரா துழைத்திடுவோம்
வேண்டும் பொருளை விளைத்திடுவோம்—தீண்டுகிற
ஏழ்மைக்குத் தீயிடுவோம் இன்புற்ற நம்நெஞ்சில்
ஆழ்கடலாய்ப் பொங்கட்டும் அன்பு.

—பெ. தியாகராசன், குன்னம்.

ஆண்டுபல சென்றும் அழியாத காவியமே!
ஈண்டதற்கும் உண்டோ இணையுந்தான்—யாண்டும்
கமழும் செழுந்தமிழ்க் கம்பன் மகன்மேல்
அமரா வதிவைத்த அன்பு.

—எம். ஆறுமுகம், பி.எஸ்சி.,பி.டி., அரும்பாவூர்.

ஆண்டுக்கொன் றாக அடுக்கடுக்காய்ப் பெற்றெடுத்தால்
தூண்டிற் புழுவாய்த் துடிதுடித்தே—மாண்டிடுவோம்
யாருக்கும் பிள்ளை இரண்டிருந்தால் இல்லறத்தில்
ஆறாய்ப் பெருகாதோ அன்பு!

—சுந்தரம், வெண்பாவூர்.

ஆண்டு பலவாய் அழகான இல்லறத்தை
ஆண்டிடுவான் என்றும் அவனன்றோ?—மீண்டுலகில்
தன்னலமே நோக்காத் தகுதிக் கிலக்கணமாம்
அன்னையின் அன்பேநல் அன்பு!

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

ஆண்டு பிறக்கும் அணிநாளில் நாமுந்தான்
ஈண்டு வழங்குவோம் இன்மொழிகள்—யாண்டுந்தான்!
வாழ்கின்ற மக்கள் வளமாக வாழ்ந்திடவும்
ஆழ்ந்தின்று வாழ்த்துவதும் அன்பு.

—ப. குப்புசாமி, பொன்மலை.

ஆண்டு பலவுமுனை ஆதரித்து வந்தாரைப்
பூண்டோ டழிக்கப் புகுஞ்செயலால்—மாண்பென்?
மயக்கமிதை நீவிடுத்து மாப்புகழை நாட்ட
அயரா து காட்டிடுவாய் அன்பு.

—புலவர் நகரத்தரசு, நகரம்.

ஆண்டு பலவாக ஆறாக் கடும்பகையைத்
தோண்டிப் புதைத்துத் துயர்களைந்து—யாண்டும்
உறவுக்குக் கைகொடுத் துண்மைநெறி காட்டி
அறங்காக்கச் செய்வதுதான் அன்பு.

—பொ. பூங்குன்றன், அரவக்குறிச்சி.

ஆண்டில் இளையோரும் ஆன்ற பெரியோரும்
பூண்ட பெருவாழ்வில் போற்றுவகை—தூண்டுகின்ற
நல்லன செய்து நலம்பெறக் காண்பதுவே
அல்லலை நீக்குகின்ற அன்பு

—ஆர். கிருஷ்ணவேணி, புதுப்பட்டு.

ஆண்டுக் கொருமுறைதான் ஆண்டவனை ஆர்வமுடன்
வேண்டுதல் செய்ய விழைந்திடினும்—தீண்டும்
களங்கம் களைந்துய்யக் காத்திடுமே! கர்த்தர்
அளவில் அருட்கலந்த அன்பு.

—சாமு. இராசமாணிக்கம், எம். ஏ., பெங்களூர்.

ஆண்டுபல வாளுலும் அண்ணலைத் தான்மறக்க
ஈண்டுள்ளோ ராலே இயன்றிடுமோ—தூண்டா
மணிவிளக்கா யென்றைக்கும் மாண்புடனே நெஞ்சில்
அணிசெய்யு மேயவரின் அன்பு.

—அ. காந்தி, பி.எஸ்சி., பி.டி., தேவத்தூர்.

ஆண்டுப் புகழீட்டி, அன்னைத் தமிழ்நாட்டின்
மாண்ட பழம்பெரும் மன்னரெல்லாம்—தூண்டா
மணிவிளக்காய் ஏடுகளில் மங்காமல் வாழ,
அணிகலனாய்ப் பூண்டிருந்தார் அன்பு.

—ப. அ. இசுமாயில், மேலப்பாளையம்.

''ஆண்டுறையும் நம்மத்தான் அன்புருவம் நம்நெஞ்சில்
ஈண்டுலவ லென்னிந்தை?'' என்றுயிர்த்து,—''நாண்பெறற்கே
எந்நொடியும் ஏங்குதல்தான்!'' என்றுணர்வேன்! நன்னுளாம்
அந்நாள்; வளர்களம் அன்பு.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

ஆண்டுபதி னாறிருக்கும் அத்தைமகள், என்மனத்தைத்
தூண்டில் விழியாலே தொட்டிழுத்தாள்—ஈண்டி
விரும்பி யணைக்க விலகியோடி னாள்பின்;
அரும்பியதோ மெய்க்காதல் அன்பு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், குமாரபாளையம்.

ஆண்டுக்கொருபிள்ளை! ஐயகோ! வேண்டாவே!
தூண்டு தசைவேட்கைத் துயரொழிப்பீர்—வேண்டிடுவன்
யாண்டும் வளமுறவும், யாக்கை நலமுறவும்,
பூண்டிடுவீர் உள்ளத்தில் அன்பு.

—மா. முத்துச்சாமி, பலப்பாடி.

ஆண்டுபல வாளுலும் ஆன்றோரின் பேரன்பு
மாண்புற ஓங்கிடுமே மாநிலத்தில்—ஈண்டு
மடைமை சிறுமையொடு மாசுபிணி நீங்க
அடைந்திடுக நல்லியல்பால் அன்பு.

—பழ. கந்தசாமி, பி.ஏ.,பி.டி., சத்திரப்பட்டி.




# உண்மையின் சந்நிதி

6

சோம. மகாதேவன்

## ஒட்டுதல் உறவாகட்டும்

பொழுதடைந்து கொண்டிருந்தது.

நீண்டவொரு பெருமூச்சோடு, எழுந்து மீண்டும் வாசலுக்கு வந்தார் வேலாயுதம்.

தோப்பு வீட்டின் முன்பாக வெட்டிக் கூட்டம்தான் கூடி இருக்கிறது.

இன்னும் மதுரையிலிருந்து உருட்டி முத்தையாவும் அவரது பரிவாரங்களும் வந்து சேரவில்லை. பிற்பகல் மூன்று மணிக்கே அங்கிருந்து • புறப்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது.

இன்னும் வரவில்லையே!

நேரம் செல்லச் செல்ல வேலாயுதத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை. அங்கிருந்தே, கரை நெடுக வண்டிப்பாதையைக் கண்ணோட்டமாகப் பார்த்துவிட்டு, திரும்பிச் சென்று அறைக்குள்ளே நாற்காலியில் அமர்ந்தார்.

மனம் உளைந்தது.

பொன்னையா போய்விட்டதில் வருத்தம் சிறிதளவு இருந்தாலும், நினைத்ததை முடித்து விடலாம் என்பதில் நிம்மதியும் இருக்கிறது. இருந்தவரையில், அடிப்படையில் கொடுத்த வாக்கு மூலத்துக்கு வில்லங்கம் ஏற்படுத்தாமல், சொன்ன வாக்கைக் காப்பாற்றியே கண்ணை மூடி விட்டவனுக்கு எப்படி நன்றி சொல்ல முடியும்?

அடிதடி வழக்கு, கொலை வழக்காகக் கனத்து விட்டபிறகு, இனி பாண்டியன் எப்படித்தான் தப்பிவிடப் போகிறான்? கம்பிக்குள்ளே நிற்கும் போதே அவன் திமிர் ஒடுங்கப் போகிறது. இங்கே ஊருக்குள்ளே இருப்பவர்களையெல்லாம் மனிதப் பிறவியாக மதிக்காமல், பெண்ணைச் சிறையெடுத்துச் சென்றவனும் துணைக்குப் போய்விடும்போது, அடுத்து ஊருக்குள்ளே எந்தச் சந்தடியும் இருக்காது.

இந்தப் பரபரப்பான சூழ்நிலையில், முத்தையா மாமனைப் பார்த்து அவரோடு உட்கார்ந்து பேசாத வரையிலும் மனசுக்கு நிம்மதி ஏற்படுமா?

நாச்சிமுத்து அவசரமாக உள்ளே நுழைந்து, "அவங்க.... வந்திட்டாங்க" என்று சொல்லி நின்றான்.

வேலாயுதம் பரபரப்புடன் எழுந்து வாசலுக்கு வந்தார்.

கரைவழியாகப் பத்துப்பேர்களுக்கு மேல் வந்துகொண்டிருந்தார்கள். முத்தையா மாமா கையில் தடியோடு முந்தி வர, அவருக்குப் பின்னால் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு சடையனும் வந்து கொண்டிருந்தான். இங்கே, வைகைக் கரையில் தான் பொன்னையாவின் தகனக் கிரியைகளை நடத்தி வைத்து விட்டு வருவது போலிருந்தது, அவர்கள் நடந்து வந்த விதம்.

நெருங்கி, முற்றத்துக்கு வந்து விட்ட பிறகுதான் தலைநிமிர்ந்து பார்த்தார் முத்தையா. அவரது முகத்திலும் கவலை தோய்ந்திருந்தது.

வேலாயுதமும், துக்கம் நிரம்பி வழிவதைப் போன்று, ஒன்றும் பேசாமலே திரும்பி வீட்டிற்குள் நடந்தார்.

முத்தையாவின் குறிப்பை அறிந்து, சடையனைத் தவிர, மற்றவர்கள் வாசலிலேயே நின்று விட்டனர்.

முன்னால் சென்ற வேலாயுதம், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, ஏறிட்டுப் பார்த்து, 'உட்காரு சடையா' என்றார்.

சடையன் சற்றுத் தள்ளித் தூரோரமாக உட்கார்ந்துகொண்டான்.

"இங்கே ஊரே ஒரே பரபரப்பா இருக்கு. உடனே இங்கேயே கொண்டாந்து, சிறப்பா வைகைக் கரையிலே அடக்கம் செய்திருக்கலாம். நீங்களும் அவசரப்பட்டு அங்கேயே காரியத்தை முடிச்சிட்டிங்க" என்றார் வேலாயுதம்.

"நாலு பேருக்கு மத்தியிலே, கழுத்துக் கொடுத்தவ, அங்கேயே நடத்தணும்னு சொல்றப்ப, நாம குறுக்கே எதுவும் பேச முடியுமா? அதிலே கொஞ்சம் தாமதம் ஆனதுனாலேதான், சடையன் கடைசியா, பிறந்தவன் முகத்தையாவது பார்க்க முடிஞ்சது" என்று சொல்லிப் பக்கமாக உட்கார்ந்து கொண்டு, சடையனைத் திரும்பிப் பார்த்தார் முத்தையா.

சடையன் திரும்பிப் பார்த்தான். விழிகள் தெறித்து விழுவது போலச் சிவந்திருந்தன.

" வெளியிலே வந்ததும் உனக்குக்கண்ணாலத்தைப் பண்ணி வைக்கப் போறேன்னு கடுதாசி போட்டிருந்தானே சடையன்! நான் வந்து நிக்கிறதுக்குள்ளே, அதட்டிக் கூடப் பேசத்தெரியாதவனை அடிச்சுக் கொன்னு போட்டாங்களே! அந்தப் பாவிக ரெத்தத்தைக் குடிச்சாத்தானே இந்த நெஞ்சு ஆறப் போகுது", என்று வெறியோடு சொல்லித் தரையில் உள்ளங்கைகளால் அடித்தான் சடையன்.

உருட்டி முத்தையா எழுந்து அவனுக்குப் பக்கமாக வந்தார்.

"இனிமே, அழுதாலும் அடிச்சுக்கிட்டாலும் போன உயிர் திரும்பப் போகுதா? இந்த நேரத்திலே நீ தான் மனசைக் கட்டுப்படுத்திக்கணும். நாங்க எதுக்கு இருக்கோம். நடக்கிறது கொலை வழக்கு. இன்னம் எவ்வளவோ இருக்கு" என்றார் அவனுக்கு ஆறுதலாக.

வேலாயுதமும் முகத்தையோ, கண்களையோ துடைத்துக்கொண்டார்.

''பொன்னையாவைப் போல இன்னொருத்தன் உருத்தானவன் இருக்கப்போறானா? அவனுக்குக் கடைசியிலே இப்படியொரு முடிவு கிடைச்சிருக்கு'' என்றார் தழுதழுத்த குரலில்.

தரையில் அடித்த கையை எடுக்காமல், அப்படியே கவிழ்ந்தவாறு குமுறலைக் கொட்டினான் சடையன்.

''என்னோட சரித்திரம் இந்த ஊருக்குத்தான் தெரியாதா? அவர்களைப் பழி வாங்காத வரைக்கும் நான் கண்ணைத்தான் மூடுவனா?'' என்றான் ஆங்காரத்தோடு.

முத்தையா, அவனுக்கு முன்னால் குந்திட்டு உட்கார்ந்து, அவன் தலையில் பரிவோடு கையை வைத்துச் சொன்னார்.

''உன் நெஞ்சு என்ன பாடு படும். நீ நினைச்சா என்ன நடக்கும்ங்கிறது எங்களுக்குத் தெரியாதா சடையா? ஆனா- இப்ப அவசரப்பட்டு எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதுவே நமக்குக் கெடுதலா முடியும். பொன்னையா தெளிவா வாக்குமூலம் கொடுத்திருக்கான். சட்டம் இருக்கு. இதிலேயும் தப்பி வர்றப்ப, அதுக்கு மேலே பார்த்துக்கலாம்'' என்றார்.

''அவனுக்கு அலுப்பு மாமா. சடையா....எந்திரிச்சு....வாசல் பக்கம் கிடக்கு பாரு கட்டில் அதிலே படுத்திரு. கொஞ்ச நேரத்திலே எல்லாருமா வீட்டுக்குப் போகலாம்'' என்றார் வேலாயுதம்.

சடையன் மெதுவாக எழுந்தான்.

''என் கையைத்தான் கட்டிப் போடுறிங்களே. நானெங்கே இங்க தங்கப் போறேன்; திரும்பியும் போகணும் போலத்தான் இருக்கு'', என்று சொல்லிக்கொண்டே வாசலை நோக்கி நடந்தான் சடையன்.

ஒன்றும் பேசாமலே சடையனைப் பின் தொடர்ந்து சென்றார் முத்தையா. சடையன் முற்றத்தில் கிடந்த கட்டிலில் படுத்துவிட்டதைக் கண்டு, ஒரு திருப்தியுடன், சுற்றிலும் அங்கே யார் யார் இருக்கிறார்கள் என்பதையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பியும் வந்து; ''இவனைக் கட்டி மேய்க்கிறது, ஒரு புலியைப் பக்கத்திலே வச்சிருக்கிறது மாதிரித்தான். இப்பவும் அந்த வேகம் இவனை விட்டுப் போகலையே!'' என்று சொல்லிக்கொண்டே நாற்காலியை வேலாயுதத்துக்குப் பக்கமாக இழுத்துப் போட்டு உட்கார்ந்தார் முத்தையா.

''சிவந்தியை இங்கேயே கூட்டியாருவிங்க; நேரடியா நாலும் நாலுவார்த்தை சொல்லலாம்னு நினைச்சிருந்தேன்'' என்று ஆரம்பித்தார் வேலாயுதம்.

''பொன்னையாவை உத்தேசித்து, அவளுக்கு எதையாவது செய்யணும்ங்கிற அபிப்பிராயம் இருந்தாலும் அதைப் பின்னாலே வச்சுக்கலாம். இப்ப ... ... ... இந்தப் போக்கிலேயே அவனை விட்டுப் பிடிக்க வேண்டியதுதான். மேலே ரெண்டு சாட்சிகளைப் போட்டு, பையனைக் கோர்ட்டிலே நிக்க வச்சு, நாலு கேள்வியிலே சிரிப்பாய் சிரிக்க வைக்கணும்'' என்றார் முத்தையா மெதுவான குரலில்.

''அப்ப—, அவனுக்கும் அவளுக்கும் ஏற்கெனவே தொடர்பு உண்டுன்னு நினைக்கிறிங்களா மாமா?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்டார் வேலாயுதம்.

முத்தையா சிரித்தார்.

அடிப்படையில் இரண்டு பேருமே சேர்ந்து கட்டிவிட்ட கதைதான் இது. திரும்பத் திரும்ப அழுத்திச் சொல்லும் போது, 'மெய்' போன்ற தோற்றமே ஏற்பட்டு விடுகிறது.

''இப்ப ஏற்பட்டிருக்கிற நெருக்கத்தைப் பார்க்கும்போது நாம கணிச்சதும் ஓரளவுக்கு உண்மையின்னே தோணுது'' என்று சொல்லி மேலும் ஒரு பூச்சுக் கொடுத்தார் முத்தையா.

''இதைப்பத்தியும் சடையன் கிட்டச் சொன்னிங்களா?'' என்று கிசுகிசுத்தார் வேலாயுதம்.

''இதை அவனே தெரிஞ்சுக்கட்டும். பின்னாலே நமக்குச் சாதகமாக அவனைத் திருப்பிக்கலாம். இந்த வழக்கு முடியிற மட்டும், முக்கியமாக, சடையன் நம்ம கைக்குள்ளே இருக்கணும். அது உன் பொறுப்பு'' என்றார் முத்தையா.

''அதை நான் பார்த்துக்கிறேன். அப்பப்ப தட்டிக் கொடுத்து அவனுக்குத் தீனி போட்டுக்கிட்டிருந்தாப் போதும்.''



''இன்னம் ரெண்டு வாரத்திலே வழக்கு விசாரணை ஆரம்பமாயிடும். குற்றம் சாட்டப்பட்டவன் ஜாமீனிலே இருக்கிறதுனாலே, தனது செல்வாக்கைப் பயன் படுத்தி, வழக்கிலே தனக்கு எதிரான சாட்சிகளைப் பயமுறுத்துறதா காரணம் காட்டி, பாண்டியனை ஊருக்கு உள்ளே வர விடாமல் செய்யிறதுக்கும் தகுந்த ஏற்பாடு செய்திட்டு வந்திருக்கேன்'' என்று மேலும் சொன்னார் முத்தையா.

வேலாயுதத்தின் முகம் மலர்ந்தது.

''இவன் ஊருக்குள்ளே இருந்தாலும் நமக்கு ஆபத்துத்தான். இத்தனை சிக்கல்லே மாட்டி இருக்கிறப்பவே, அந்தத் திமிரான பார்வையும், ஏளனப் பேச்சும் அவனைவிட்டு நீங்கலையே! என்னைத்தான் ஊரை விட்டே விரட்டப் போறானாம். சொல்லி இருக்கான். நீங்க சொன்ன மாதிரி, குழிக்குள்ளே விழுந்தப்புறம் தான் சொன்னபடி கேட்கப் போறான்'' என்றார் வேலாயுதம் ஆத்திரத்தோடு.

''கேட்கிறதாவது! சொல்லிக்காமலே போயிருவான். அதுக்கு என்னென்ன செய்யணுமோ அதையெல்லாம் செய்தாச்சு. நிச்சயமா தண்டனைக்குத் தப்ப முடியாதுன்னு வக்கீலும் தெளிவாச் சொல்லிட்டாரு'' என்றார் முத்தையா உறுதியாக.

''முன்னாலே நின்னுட்டோம். எடுத்த காரியம் நல்லபடியா முடியணும்'' என்று சொல்லி நிறுத்தினார் வேலாயுதம்.

''இதிலே தோல்வியின்னு ஏற்பட்டுப் போனா, அப்புறம் ரெண்டு பேருக்குமே ஊருக்குள்ளே குடியிருப்பில்லேங்கிறதை நல்லாப் புரிஞ்சுக்கிட்டுத்தான் இதிலே அடியெடுத்து வச்சிருக்கேன். நம்ம பிடி நழுவாது'' என்றார் முத்தையா உடலைக் குலுக்கிக் கொண்டு.

''இனிமே ... ... ... நீங்க வேறே நான் வேறேயா?'' என்று சொல்லிப் பூரித்துப்போனார் வேலாயுதம்.

முத்தையாவும் இந்தப் பிடியை விடவில்லை.

''நம்ம ரெண்டு பேரும், இந்த அளவுக்கு எதிலேயும் கூட்டுச் சேர்ந்ததும் இல்லையே'' என்றார் சிரித்துக்கொண்டு.

வேலாயுதம் திரும்பிப் பார்த்தார். இந்தக் ''கூட்டு'' என்ற சொல் அவர் நினைவில் தனியாக நின்றது. அவர் வாய் திறக்கும் முன்னதாக, முத்தையாவே மேலும் தொடர்ந்தார்.

''இவ்வளவு நாளும் உன் மேலே பாசத்தோட, ஒட்டுதலா உயிரையும் பொருட்படுத்தாமல், எத்தனையோ காரியங்களுக்கு உறுதுணையா இருந்திருக்கேன். இப்பவும் இருக்கேன்'' என்றார் உருக்கமாக.

''நானும் எதையும் மறக்கலே மாமா. பேர் சொல்ற மாதிரி ஒரு நல்லது செய்யணும்னுதான்



நானும் முடிவு செய்து வச்சிருக்கேன். இதுக்கு முன்னுலே எதையும் கணக்குப் பார்த்தா நாம் பழகியிருக்கோம்!'' என்று கேட்டார் வேலாயுதம்.

''இதையெல்லாம் நினைச்சுத்தான் சொல்றேன் மாப்பிள்ளை. நமக்குள்ளே இருக்கிற இந்த ஒட்டுதலை உறவாக்கிப் போடணும்ன்னு தோணுது. இது போதும். இந்த உயிருள்ள மட்டும் உனக்கு ஒத்தாசையாக இருப்பேன்'' என்று சற்று அவசரத்துடனே சொன்னுர் முத்தையா.

வேலாயுதத்துக்குச் சட்டென்று புரியவில்லை.

''என்ன மாமா சொல்றிங்க'' என்று கேட்டார் தணிந்த குரலில்.

''எப்பவும் ரெண்டு பேரும் இப்படியே இருக்கணும்ங்கிற ஆர்வத்தோட தான் சொல்றேன் வேலாயுதம். என் பேத்திப் பெண் பூமயிலை நம்ம நடேசனுக்குக் கட்டி வச்சுப் போடலாம். பின் கட்டத்துக்கு நானும் தெம்பா இருப்பேன். சொத்து சுகம் இல்லையின்னுலும் என் குடும்பம் மரியாதையானது'' என்று சொல்லி ஆவலோடு வேலாயுதத்தின் முகத்தைப் பார்த்தார் முத்தையா.

இதை இவ்வளவு வெளிப்படையாகக் கேட்டு விட்ட அதிர்ச்சியில் உள்ளுக்குள்ளே புழுங்கினுலும், மேலோட்டமாகச் சிரித்துக் கொண்டார் வேலாயுதம்.

தகப்பனுர் காலத்தில், இங்கே களத்துக் கங்காணத்துக்குச் செல்லும் ஆள்ாக இருந்தவர் முத்தையா மாமா. இப்படியொரு சம்பந்தம் செய்யலாமென்று இதற்கு முன்னுல் தோன்றவேயில்லையே.

பிடி இருக்கிறது. மாமா துணிந்து கேட்டு விட்டார். இந்தப் பாதையில் அடியெடுத்து வைத்து, இவ்வளவு தூரம் கைகோத்து வழி நடந்து விட்ட பிறகு, நினைத்ததை எட்டிப் பிடிக்கும் முன்னதாக, இருவருக்குமிடையே சீறல் விழலாமா?

பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்த முத்தையா, ''என்ன மாப்பிள்ளை—நான் ! மௌனம்

விட்டுக் கேட்டதிலே தப்பா எடுத்துக் கிட்டியா ?'' என்று கேட்டு இடையிலே நுழைந்தார்.

''எனக்கும் இப்படியொரு கருத்து இருந்திச்சு மாமா'' என்ருர் வேலாயுதம் சுருக்கமாக.

முத்தையாவின் முகம் மலர்ந்தது.

''நீயே இதைச் சொல்லி இருக்கணும். மனசுக்குள்ளே வச்சுக்கிட்டே இருந்திருக்கே. அவசரப்பட்டு நான் முந்திக்கிட்டேன்'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டார் முத்தையா.

வேலாயுதமும் சிரித்தார்.

''சீக்கிரத்திலே ஒரு நிச்சயம்ன்னு நடத்திக் கிட்டா எனக்கொரு நிம்மதியாய்ப் போகும்'' என்று சிரிப்பைத் தொடர்ந்து ஒரு முத்திரையைக் குத்தினுர் வேலாயுதம்.

## அடுத்த இதழில்

**சென்னை வானொலி நிலையமும் தமிழ்நாடு அரசு குடும்பநலத்துறையும் சென்னை நகரிலும் புறநகர்ப்பகுதியிலும் உள்ள மகளிர் மன்றங்களுக்காக 'நலவழிக்கல்வி' என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கம், மகளிர் மன்றங்கள் தொடர்ந்து நடத்துவதற்கான ஒரு முன்னேடிக் கருத்தரங்கம் ஆகும். இதைப்பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.**

''நடேசனையும் கேட்டுக்கிட்டு முடிவு செய்யலாம்'' என்ருர் வேலாயுதம்.

''கேளு. அவனை இதுக்கு மேலேயும் கட்டுப்பாடு இல்லாம விடுறது நமக்குக் கெடுதல். நம்ம தண்ணுக்குப் பின்னுலே அவனும் நல்லா இருக்கணும். அதையும் யோசிச்சுப் பாரு'' என்று சொல்லி மேலும் அழுத்திஞர் முத்தையா.

''எனக்கும் இது கவலையாத்தான் இருக்கு'' என்ற வேலாயுதம் சுற்றிலும் பார்த்துவிட்டு,

''பேசிக்கிட்டே இருந்திட்டோம்' பொழுதும் இருட்டிப் போச்சு' அப்பப் போகலாமா ? வண்டி வரலே நடந்தேதான் போகணும்'' என்று சொல்லி விட்டு எழுந்தார்.

''அது சரி—இங்கே இருக்கிற நடப்பைப்பற்றிச் சொல்லலையே! பெரியவர் எப்படி இருக்கார்? இப்ப, பொன்னையா செத்துப் போன அதிர்ச்சி போதுமே'' என்பதைச் சொல்லிவிட்டு முத்தையாவும் எழுந்தார்.

''செய்தியைச் சொன்னப்ப கலங்கித்தான் 'போயிட்டார். எங்கேயாவது கண் காணுத இடத்திலே தனியாகப் போய் இருக்கணும்ன்னு துடிச்சுக்கிட்டிருக்கார்'' என்ருர் வேலாயுதம் நின்றவாறே.

''இந்த நேரத்திலே பெரியவரைத் தனியாகக் கொண்டு போய் இருத்தி வைக்கிறதே நல்லது. இடையிலே அவரை நினைக்கிறப்ப எனக்கே திகிலாத்தான் இருக்கு. இறங்கிட்டோம்; முழுசாப் பார்த்துப் போடவேண்டியதுதான்'' என்று ஊட்டம் கொடுத்தார் முத்தையா.

''அதான் ரெண்டு நாளையிலே வைத்தியம் பாக்குறதுக்கு வெளியூர் போறதா இருக்கோம்'' என்று சொல்லிவிட்டு மாமா பின் தொடர வாசலை நோக்கி நடந்தார் வேலாயுதம்.

அப்போதுதான், அரிகேன் விளக்கை ஏற்றி எடுத்துக் கொண்டு வாசலுக்கு' வந்தான் நாச்சிமுத்து.

விளக்கு வெளிச்சத்தில் கட்டில் காலியாகக் கிடப்பதுதான் முதலில் பட்டது முத்தையாவுக்கு.

''கட்டிலிலே சடையன் படுத்திருந்தானே. எங்கேடா ?'' என்று கேட்டார் பதட்டத்துடன்.

''சடையனு........உள்ளே உக்காந்து பேசிக்கிட்டிருக்கிறதா நினைச்சிருந்தேன். அவன் இங்கே இல்லையே'' என்ருன் நாச்சிமுத்து, விளக்கைத் தூக்கிப் பிடித்துப் பார்த்து.

''போடா மடையா..... அவன் இங்கதான் படுத்திருந்தான்'' என்று கோபத்தோடு சொல்லிக்கொண்டு படிகளில் இறங்கினுர் வேலாயுதம்..

(வளரும்)





பண்டை மக்களின் அரும்படைப்புகள், சின்னங்கள், மண்ணியல், கல்வெட்டுகள், செப்பேடுகள், படிமங்கள், திமிங்கிலத்திலிருந்து பட்டுப் பூச்சிவரை உயிரினங்களின் உடல் வடிவங்கள் கெடாமல் பாதுகாக்கப்படும் நேர்த்தி - ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், ம[illegible]ப்பு அனைவரையும் கவரும் [illegible] பெரும் அம்சங்கள் அனைத்[illegible] அமைப்புத்[illegible] கட்டடத்தில் கொ[illegible] காட்சி ஆகும். அரசினர் அரும் பொ[illegible]

சென்னை எழும்[illegible] காட்சிச்சாலை எ[illegible]யே 'செத்[illegible] சாமான்ய மக்[illegible] பெயருட[illegible] காலேஜ்' என்ற [illegible] விளங்கும் அரசினர் அரு[illegible] காட்சி அகத்தின் பல்[illegible] துறை[illegible]யும் குறித்துச் சிறப்புக் கட்டுரைகளைத் தொகுத்துத் தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

69588 அரும் பொருட் பெயரோடும்

# அரசினர் அரும் பொருட் காட்சி அகம்

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசினர் அரும் பொருட் காட்சியகத்தின் தொல்லியல் பிரிவு ஒரு வகையில் தனிச் சிறப்புக் கொண்டது. ஏனெனில், நிலவியல் பொருட்களுடன் தான் இக்காட்சியகமே தொடங்கப்பட்டது. இலண்டனிலிருந்த ஆசியச்சங்கம் என்பதன் கிளையாகிய சென்னை இலக்கியச் சங்கம் 1828-ஆம் ஆண்டில் சென்னையில் பொருளாதார நிலவியல் காட்சி சாலை ஒன்றைத் தொடங்க விரும்பி நிலவியல் மண்ணியல், புவியியல் அரும் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கியது. ஆனல், முறையான காட்சியகத்துக்கு வேண்டிய நிதி வசதி, இடவசதி ஆகியன கிடைக்காததால், அரும்பொருட் காட்சியகம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளும் படியாக அரசாங்கத்தை அச்சங்கம் கேட்டுக் கொண்டது.

## கோட்டையில் தொடக்கம்

கனி வளங்கள் குறித்து நாட்டினரிடையே அக்கறை ஏற்படுத்து வதற்காக மட்டுமின்றி வேளாண்மை, மண் பண்பாடு ஆகியவை கருதியும் சிறிய அளவில் பொருட்காட்சிச் சாலை ஒன்றைத் தொடங்கும் படி, மேஜர் ஜெனரல் டபிள்யூ. கல்லன் 1843-ல் அரசினருக்கு யோசனை கூறினர். ஜெனரல் கல்லன், சென்னை இலக்கியச் சங்கச் செயலாளர் இவர்களிடையே நடந்த கடிதப் போக்குவரத்தின் விளைவாக, சென்னையில் மத்திய அரும் பொருட்காட்சி அகம் ஒன்றை அமைக்கப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி இயக்குநர்கள் 1846-ல் இசைவு தந்தனர். அன்று ஆளுநர் மாளிகைப் பணியில் உதவி சர்ஜனைப் பணியாற்றி வந்த எட்வர்டு கிரீன் பெல்ஃபர் 1850-ல் பொருட் காட்சியகம் அமைக்க முன் வந்தார். 1851-ஆம் ஆண்டில் அதுவரை திரட்டிய நில வியல் காட்சிப் பொருட்களைக் கொண்டு சென்னை செயிண்ட் சார்ஜ் கோட்டையில் மத்திய அரும் பொருட் காட்சி அகம் தொடங்கப் பெற்றது. அந்தக் காட்சிச் சாலை அமைத்திருந்த மேல் தளம் காட்சிப் பொருட்களின் சுமையால் சேதமடைந்ததாலும் அறைகளில் இட நெரிசலை முன்னிட்டும் 1854ஆம் ஆண்டில் பொருட் காட்சிச் சாலை பாந்தியன் சாலையில் உள்ள கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. அப்போது அக் கட்டடம் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலமாக இருந்து வந்தது.

நில வியல் பொருட்களுடன் ஏற்பட்ட இக் காட்சியகம் பின்னர் தொல்லியல், மானிடவியல், வரலாற்று முற்காலம், தாவரத் துறை, விலங்கியல் உயிரியல் துறை முதலியவைகளைக் கொண்டு விரிவடைந்தது. பின்னால் ஏற்பட்ட மற்றத் துறைகளுக்கெல்லாம் தனித் தனிக் காப்பாளர்கள் (கியூரேட்டர்கள்) நியமிக்கப்பட்டனர் என்றாலும் காட்சிச் சாலை எதனை முதலாவதாக வைத்துத் துவக்கப் பட்டதோ அந்த நிலவியல் துறைக்கு 1961-ல் தான் தனிக் காப்பாளர் வரும் நிலை ஏற்பட்டது. அதற்கு முன்னால் நிலஇயல் பிரிவை, தாவரப் பிரிவு காப்பாளர் கவனித்து வந்தார். தனிக்காப்பாளர் ஏற்பட்ட பின்பு நிலவியல்பிரிவு, காட்சிப் பொருட்கள், நல்ல முறையில் தொகுக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே நிலவியல் காட்சிச் சாலைகளில் சிறந்த ஒன்றாக விளங்குகிறது. இப்பிரிவு மேம்படுத்தப்பட்டுப் இடவசதியும் வருவோர் தாராளமான முறையில் பார்க்க நடமாட முடிகின்றது.

### ஐந்து பிரிவுகள்:

இக் கூடத்தில் பொருட்கள் 5 காட்சிப் பிரிவாகத் தொகுத்து வரிசை படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. அவை: (1) பொது நிலவியல்; (2) பாறைகள், (3) கனிப் பொருட்கள், (4) கால ஓட்டத்தில் மண்ணடியில் இறுகிக் கல் போல் இறுகிவிட்ட தாவரங்கள் விலங்கினப் பொருட்கள் ( Fossils ) (5) பொருளாதார நிலவியல் ஆகியன ஆகும். பொருளாதார நிலவியல் காட்சிப் பொருட்கள் —கனிப்பொருட்கள், இரத்தினக் கற்கள் போன்றவை— தனிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன.

காட்சிப் பொருட்களில், பல்வேறு தரப்பினர் மனத்தையும் கவர்பவை எரி நட்சத்திரக் கற்கள், உலகக் கோளத்தின் உள் படிமங்கள் அமைந்திருக்கும் முறையைப் பிளாஸ்டர் மாதிரியில் காட்டியிருப்பது; மணல் பாறைக் கற்கள், சிவப்பு நிறக் கற்கள், படிகக் கற்கள் ஆகியன ஆகும். வரலாற்று முற்காலத்தைச் சேர்ந்த அரிய விலங்குகளின் மாதிரிப் படங்கள், யானை மற்றும் இதர விலங்குகளின் எலும்புகள் கல்போல இறுகிய நிலையில் இருக்கும் காட்சிப் பொருட்களும் குறிப்பிடத் தக்கவை.

பொருளாதார நிலவியல் கூடத்தில் தங்கத் துகள் உள்ள பாறைப் பகுதிகள், மைகா நிலக்கரி, கதிரியக்கப் பொருட்கள், வெப்பம் தாங்கிக் கற்கள் இரத்தினக் கற்கள், கட்டடக்கல் வகைகள், களி மண்ணில் பல்வேறு வகைகள், வர்ணங்கள் செய்வதற்கு உதவும் கற்கள் மெருகேற்றிக் கற்கள் முதலியவை குறிப்பிடத் தக்கன ஆகும். இந்தப் பொருளாதார நிலவியல் கூடத்தின் பொருட்களிலிருந்து தான் மக்கள் நிலவியல் ஆய்வுப் பணிகளை நல்ல முறையில் அறிந்து கொள்ள முடிகின்றது. 'பாசில்' பொருட்கள் பல திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்றவை. ஆராய்ச்சியாளர்களுக்கும், குறிப்பிட்டுக் கேட்பவர்களுக்கும் காண்பிக்கப்படும். சில முக்கிய வகை காட்சிப் பொருட்கள் தனியாக ( Reserve Collections) வைக்கப்பட்டுள்ளன.

நிலவியல் காட்சிப் பொருட்களைப் பாதுகாக்கும் பணியுடன், இப்பிரிவு சம்பந்தப்பட்ட காப்பாளர், தனிப் பொருட்காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்கிறார். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் செயல்முறை விளக்கம் சொல்லுகிறார். ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்ற மக்களுக்கும் வேண்டிய உதவிகள் செய்கிறார். இவ்வகைப் பொருட்களை மேலும் சேகரிக்கப் பயணம் செல்வதும் இவரது பணியாகும். இப்பகுதியுடன் இணைந்த ஆய்வுக் கூடம் ஒன்றும் உண்டு.

காட்சிப் பொருட்களை இன்னும் நவீன முறையில் பார்வைக்கு வைப்பதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிலவியல் கால அளவு அட்டவணை ஒன்றும் தனிப் பேழையில் வைக்கப் படும்.

இந்தியாவிலுள்ள மாநில அரும்பொருட் காட்சியகங்களில் மிகவும் பெரியது, முந்தியது சென்னை அரசினர் அரும் பொருட் காட்சியகமேயாகும். 1851-ல் தொடங்கப்பட்ட ஆர்வம் மிகக் கொண்ட இயக்குநர்களின் அரும்பணியால் இது படிப்படியாக வளர்ந்துள்ளது. தொடக்கத்தில் மண்ணியல் பற்றி மட்டுமே அமைந்திருந்தது. பிறகு, புதைபொருள், இன இயல், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நிலை, இயற்கை வரலாறு ஆகிய அனைத்தும் இடம் பெற்றது. இக் காட்சியகத்தின் முதல் பொறுப்பு அலுவலராக இருந்த சர்ஜன் எட்வர்ட் க்ரீன் பால் போர் என்பவர், ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையான அரும்பொருட்களைச் சேர்க்கும் பணியினை விரைவு படுத்தினார்.

புதுக்கோட்டை மாநிலம் சென்னையோடு சேர்க்கப்பட்ட பிறகு புதுக்கோட்டை அரும் பொருட் காட்சியரங்குக்கும் சென்னை காட்சியகங்களுக்கும் பொதுவான நிருவாக இணைப்பு ஏற்பட்டது. அது முதல், காட்சியகங்களை எல்லாம் இணைக்கும் பணி தொடங்கியது.

நூற்றாண்டுக் காலமாகக் கல்விப் பணிக்குப் பெரிதும் பயன்பட்டுவந்த இக் காட்சியரங்கம் 1951-ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழா கொண்டாடியது. இவ்விழாவினை அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் பண்டித நேரு 27—11—1951-ல் தொடங்கி வைத்தார். அப்போது தேசியக்கலைக் கூடமும் திறக்கப் பட்டது.

சென்னை அரும்பொருட் காட்சியரங்கம் பல்வேறு துறைகளைக் கொண்ட ஒரு பன்னூக்குக் காட்சியரங்காகும். அங்கு கலை — புதை பொருள், மானிடவியல், விலங்கியல், நாணயங்கள், தாவரவியல், மண்ணியல் ஆகிய பல்வேறு பிரிவுகள் உள்ளன. அத்துடன், அரும் பொருட்களை அழியாது காத்திட உதவும் இரசாயன சோதனைக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் அத் துறையில் தேர்ச்சி பெற்ற ஒருவர் காப்பாளராக அமர்த்தப்பட்டுள்ளனர். சிறுவர்களுக்கு உதவிடும் வகையில் கல்வி வளர்ச்சிக்கு உதவும் சிறந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தென்னகத்தின் பண்டைய வரலாறு, பண்பாடு, இயற்கை வரலாறு ஆகியவற்றுக்கு ஆதார வரலாறு உள்ள சின்னங்கள் ஏராளமாக உள்ளன. இச்சின்னங்களில் சில பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.



### ஆராய்ச்சி வெளியீடுகள்

இக்காட்சியகத்தின் தலைசிறந்த பணி ஆராய்ச்சிக்குத் துணைபுரிவதாகும். இங்குள்ள பல்வேறு பிரிவுகளில் நிகழ்ந்த ஆராய்ச்சிகள் நூல் வடிவிலும், இக் காட்சியகத்தின் செய்தி இதழிலும் வெளியிடப்பட்டு, பிற நாட்டுக் கல்வி நிபுணர்களின் பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது. இவ்வெளியீடுகளைப் பெற்றுக் கொண்டு அவற்றுக்கு ஈடாகத் தமது வெளியீடுகளை வெளிநாட்டார் அனுப்பும் அளவுக்கு அரிய ஆய்வுக் கருத்துக்களை இக்காட்சியகத்தின் வெளியீடுகள் கொண்டுள்ளன. இயற்கை வரலாறு, புதைபொருளாராய்ச்சி ஆகியவை பற்றி அறிய உண்மைகளைக் கொண்ட வெளியீட்டுத் தொடர்களைத் தந்த பெருமை இக் காட்சியகத்துக்கு உண்டு. இந்த

ஆராய்ச்சி வெளியீடுகளைத் தவிர, காட்சியகத்தில் புதிதாகச் சேர்க்கப்படுகின்றவற்றின் விவரத்தையும், கல்விப் பணிக்காக இக்காட்சியகம் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் பற்றியும் ஆண்டுக்கு இரண்டு முறை துணை வெளியீடுகளும் வெளியிடப்படுகின்றன.

### காட்சியகத்தின் அண்மைக் கால வளர்ச்சி.

இந்தியா முழுவதும் அரும்பொருட் காட்சியகங்களை வளர்க்க வேண்டும் எனத் திட்டமிட்டுத் தற்காலத்திற்கு ஏற்றபடிச் சீரமைக்க அண்மையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, அரசின் நிதியுதவியுடன் இக்காட்சியகம் விரிவாக்கப்பட்டது. காட்சியகங்களுக்குரிய தற்கால புதிய கருவிகளும், அமைப்புகளும் இணைக்கப்பட்டன. ஒளியமைப்பின் மூலம் காட்சியரங்கு எழில் பெற்றது ; காட்சியும் பொலிவு பெற்றது. வெண்கலப் பொருட்களின் பிரிவு, இயற்கை வரலாற்றுப் பிரிவு, இரசாயன சோதனைக் கூடம் ஆகியவை விரிவுபடுத்தப்பட்டன. இப் பகுதிகளை 1963-ஆம் ஆண்டு செப்டம்பரில் அன்றையத் தமிழக ஆளுநர் விஷ்ணுராம் மேதி திறந்து வைத்தார். இக்காட்சியகத்தின் வளர்ச்சியில் அது ஒரு புதிய கட்டம். மிக அண்மைக் காலத்தில் புத்தர் சம்பந்தப்பட்ட பழம் பொருட்களும், தபால் தலைகளின் பகுதியும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இத் தபால் தலைப் பிரிவில் பல நாடுகளைச் சார்ந்த 43,000 தபால் தலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

### பொது மக்களுக்கான வசதி

இக்காட்சியரங்கும் தேசிய கலைப் பொருட் காட்சியரங்கும் நாள்தோறும் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். வெள்ளிக்கிழமை தோறும் விடுமுறை. இக்காட்சியரங்கிற்குச் செல்லக் கட்டணம் இல்லை. காட்சிப் பொருட்களைப் பற்றி விளக்கம் தருவதற்கு, இலவசமாகவே உதவிட இவ்வேளைகளில் பணியாளர் இருப்பார்கள். காலை 10 மணி, 12 மணி, மாலை 2 மணி, 4 மணி ஆகிய வேளைகளில் இவர்கள் இருப்பார்கள். குறிப்பாக மாணவர்கள் இவர்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.



கடப்பையில் கிடைத்த செம்மறியாட்டின் உருவம்.

இங்கிருக்கும் காட்சிப் பொருட்களை ஆராய்ச்சியாளர்கள் படமெடுக்க விரும்பினால், அவர்கள் இயக்குநரிடம் அனுமதி கோரிக் குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும். அனுமதி கிடைத்த பிறகு படமெடுத்துக் கொள்ளலாம். அலுவலகத்தில் அனுமதி கோர வேண்டிய விண்ணப்பப்பாரம் கிடைக்கும்.



ஆதிச்சநல்லூரில் கிடைத்த—வெண்கலத்தால் ஆகிய பெண் உருவம்.

இக்காட்சியகம் வெளியிட்டுள்ள புத்தகங்கள், படங்கள் எல்லாம் நுழைவாயிலில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. காட்சியரங்கில் உள்ள கையெழுத்துப் படிகள், பத்திரங்கள் போன்றவற்றைப் படம் பிடித்து ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்வி ஆய்வகங்களுக்கும் தந்து உதவிடுவதற்காக புகைப்படக் குழு ஒன்றும் இக்காட்சியகத்தில் உள்ளது.

கலை நிகழ்ச்சிகளுக்காக ஓர் கலையரங்கமும் இங்கே உள்ளது. அது "மியூசியம் தியேட்டர்" என்று பெயர் பெற்று மக்களுக்கு அறிமுகமாகியுள்ளது. அரசினர் நடத்துகின்ற கலை நிகழ்ச்சிகள், கல்வித் தொடர்பான விரிவுரைகள், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துவதற்காகவே அமைக்கப்பட்டது.

அரசின் அனுமதியுடன், அரசின் விதிமுறைகளுக்கேற்ப நடக்கின்ற பிற கலை, கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் வாடகைக்கு விடப்படுவதும் உண்டு.

இங்குள்ள நூற்றாண்டுக் காட்சி மண்டபமும் விரிவுரை, கலை நிகழ்ச்சிகளுக்காக வாடகைக்கு விடப்படுகிறது.



31

சென்னை அரும்பொருட்காட்சியகத்தில் உள்ள தொல்லியல் பிரிவு, இந்நாட்டையும் அயல் நாடுகளையும் சேர்ந்த வல்லுநர்கள், மாணவர்கள் மற்ற மக்கள் அனைவரையும் கவரக்கூடியதாகும். இந்தக் காட்சிச்சாலை முதன்முதலில் 1851-ல் நிலவியல் பொருட் பிரிவுடன் தான் தொடங்கப்பட்டது என்றாலும் அலுவலர்கள் அவ்வப்போது தொல்பொருள் சின்னங்களையும் திரட்டி வந்தனர்.

அரும்பொருட் காட்சி முதல் அலுவலர் டாக்டர் எட்வர்டு பால்ஃபோர் பின்னர் மூன்றாவது அலுவலர் டாக்டர் ஜார்ஜ் பிடி இவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகப் புகழ்வாய்ந்த அமராவதி சிலைச் செல்வங்களைக் கொண்டு வரச் செய்து, காட்சிச் சாலைக்குப் பெருமை தேடித் தந்தனர். டாக்டர் ஜார்ஜ் பிடி காலத்தில் செப்பேடுகள் பல சேகரிக்கப்பட்டன.

டாக்டர் ஜெ.ஆர். ஹெடர்சன் பொறுப்பேற்றிருந்த காலத்தில் தொல்பொருள் உதவியாளர் பதவி ஏற்படுத்தப்பட்டு திரு ஆர். சீனிவாசராகவன் என்பார் அப்பதவியில் நியமிக்கப்பட்டார். பண்டை நாணயங்கள் சேகரிப்புப் பிரிவுக்கும் அவர் பொறுப்பு வகித்தார். 1920-லிருந்து 1940வரை டாக்டர் கிரேவ்லி காட்சிச் சாலையின் கண்காணிப்பாளராகப் பொறுப்பு வகித்த காலத்தில் ஏற்கெனவே சேகரிக்கப்பட்டிருந்த கற்சிலைகள், செப்புச் சிலைகள், ஓவியங்கள் முதலியன முறையாகத் தொகுத்து வைக்கப்பட்டு, ஆராயப்பட்டன. டாக்டர் கிரேவ்லி தலைமையில் தொல்பொருள் பிரிவு கியூரேட்டராக திரு சி. சிவராமமூர்த்தி இருந்த சமயம் சிலைகள், செப்பேடுகள் முதலியன கால வாரியாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டன. புகழ்வாய்ந்த காவேரிப்பாக்கம் சிலைச் சிற்பங்கள் பெரும் இடர்ப்பாடுகளுக் கிடையே கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.




### சேகரித்த முறை :

தொல்லியல் பொருட்களைச் சேகரித்தல், பாதுகாத்தல், காட்சிக்கு வைத்தல், வரலாற்றுக் காலத் தொல்பொருட்களை முறைப்படி வரிசைப்படுத்தல் ஆகியன இப்பிரிவின் முக்கியப் பணிகளாகும். இதில் நாணயங்கள் சம்பந்தப்பட்ட பகுதியைத் தனி அலுவலர் கவனிக்கிறார். பூமிக் கடியில் கிடைத்து எடுக்கப்பட்டவை, அரும்பொருட்களைப் பரிமாறிக் கொள்ளும் முறை, நீண்டகால அடிப்படையில் கடனாகப் பெறுதல், நன்கொடையாகப் பெறுதல், விலை கொடுத்து வாங்குதல் ஆகிய வகைகளில் காட்சிப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

இப்பொருட்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன:—

1. கற் சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள் :

2. கல்வெட்டுகள், செப்பேடுகள்.

3. கட்டடக் கட்டுமானக் கலை அழகுடன் கிடைத்துள்ள பொருட்கள்.

4. பல்வேறு பாணியில் அமைந்த ஓவியங்கள்.

5. மரச்சிற்ப வேலைப்பாடுகள், தக்கை மாதிரிகள், உலோகப் பொருட்கள், வார்ப்படங்கள்.

காட்சிப் பொருட்களில் மிகப் பெரும்பாலானவை கல், உலோகச் சிற்பங்கள், படிமங்கள் ஆகியவை ஆகும். கல்வெட்டுகள், செப்பேடுகள், கட்டடக் கலை அழகுள்ள பொருட்கள், பூமிக்கடியிலிருந்து எடுக்கப்பட்டுப் பெறப்பட்டவை; அல்லது நன்கொடையாகக் கிடைத்தவை.




தொல்லியல் பிரிவை இந்து, பௌத்த, சமணச் சிற்பப் பகுதிகள் என்றும் ஓவியப் பகுதி என்றும் செப்புப் படிமங்கள் பகுதி என்றும் பிரிக்கலாம்.

தமிழ்நாட்டுச் சிற்பங்களின் நிலை, ஆந்திரச் சிற்பங்களின் கால வளர்ச்சி நிலை இதில் காண்பிக்கப்பட்டுள்ளன. பல்லவர் பிரிவில் உள்ள விஷ்ணுவின் சிலையும் கொம்பு கொண்ட வாயிற் காவலன் சிலையும் மிக நேர்த்தியானவை. பல்லவர் காலத்துச் சங்கநிதி, பதுமநிதி சிற்பங்களும் குறிப்பிடத் தக்கவை.

**பிச்சாண்டார் கோயில் :**

சிதைந்து உள்ள முருகன் சிலை சோழர் காலத் தொடக்கத்தைக் குறிக்கும். சோழர் காலப் பிரிவில் உள்ள அழகிய பிச்சாடனர் சிலை, பிச்சாண்டார் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். திருச்சின்னம் பூண்டியிலிருந்து கொண்டு வரப்பட்ட அர்த்தநாரீசுவரர், சிலை தென்னகத்துச் சிற்பக் கலையின் ஓர் அரிய படைப்பு. கொடும்பாளூர் திரிபுராந்தகர் ; திரிபுர சுந்தரி சிலைகள் வெண்மையான கல்வில் அழகிய வேலைப்பாடு உடையவை. திரிபுர சுந்தரியின் சிலை குறிப்பிடத்தக்க ஒன்று. சத்திய மங்கலம் விஷ்ணுவின் சிலை, சப்த மாதர்கள், காவிரிப் பாக்கத்துத் தட்சிணாமூர்த்தி, மாமல்லபுரத்து அர்த்தநாரீசுவரர் முதலியன பல்லவர் காலத்தவை.

அமராவதி சிற்ப அறைப் பகுதியில் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட மிகப் பெரிய புத்தர் சிலை, கூவம் புத்தர் சிலை, அமராவதி ஸ்தூபத்தின் மாதிரி வடிவம் ஆகியவை முக்கியமானவை. அமராவதி சிற்பங்களிலிருந்து அக்காலத்தின் சமூக நிலை குறித்துப் பல குறிப்புகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

சமணத் துறவிகளின் சிலைகள், தானவுலப்படு என்ற இடத்தில் சிதைந்த கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டவை. இவை ராஷ்டிரகூடர் காலத்தவை. மைசூரிலிருந்து கொண்டு வரப்பட்ட சமணத் துறவிகள் சிலை, தூத்துக்குடியிலிருந்து கொண்டு வரப்பட்ட மகாவீரர் சிலை இப்பகுதியில் குறிப்பிடத் தக்கவை. சென்னை அரும்பொருட் காட்சியகத்தின் ஒரு தனிச் சிறப்பு உலோகப் படிமங்கள் சிற்பங்கள் மட்டும், இங்கு 1,500க்கு மேல் இடம் பெற்றிருக்கின்றன என்பதாகும்.



எண்ணிக்கையில் மட்டுமன்றித் தரத்திலும் இவை மதிப்பு மிக்கவை. நடுகல், வீரக்கல், சதிக்கல், பாம்புக்கல் ஆகியனவும் காட்சிப் பொருள்களில் இடம் பெற்றுள்ளன.

**100 கல்வெட்டுக்கள்**

அரும்பொருட் காட்சியகத்தில் சுமார் 100 கல் வெட்டுகள் உள்ளன. பிரமி, வட்டெழுத்து, நகரி, தெலுங்கு, தமிழ், கன்னட எழுத்துக்கள் கொண்ட கல்வெட்டுகள் இவை. காஞ்சிபுரம், கீழ முதுகூர், வீரசோழபுரம், முதலிய இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட கல்வெட்டுகள் இதில் உள்ளடங்கும்.

பல்லவர், சோழர், பாண்டியர், கீழைச் சாளுக்கியர் முதலிய பல்வேறு வம்சா வழியினர் காலங்களில் பொறித்துத் தரப்பட்ட 375க்கு மேற்பட்ட செப்பேடுகள், பொருட்காட்சியகத்தில் உள்ளவ. முதலாம் இராசேந்திரரின் திருவாலங்காட்டுச் செப்பேடு மிக முக்கியமான ஒன்று. முத்திரையிட்ட கெட்டியான வளையத்திலுள் 31 செப்பேடுகள் கோக்கப்பட்டுள்ளன. கூரம் செப்பேடுகள், காசக்குடிச் செப்பேடுகள். தண்டன் தோட்டம், சிவகாசிச் செப்பேடுகள் முதலியன வரலாற்றுக் கண்ணோட்டத்தில் முக்கியமானவை.

**மரவேலைப்பாடுகள்**

இப்பிரிவில் 500-க்கு மேற்பட்ட ஓவியங்கள் உள்ளன. தஞ்சாவூர்ப்பாணி, தக்காணப் பாணி, இராசபுதனப்பாணி, மொகலாயப்பாணி, ஓவியங்கள் அவை. அண்மைக் கால ஓவியங்களும் இப்போது சேர்க்கப் பட்டுள்ளன.

மரச்சிற்பங்கள், சிதைந்த தேரின் சிற்பப் பகுதிகள், தந்த உலோக வேலைப்பாடுகள் அடங்கிய காட்சிப் பொருட்களில் மரவேலைப்பாட்டுப் பொருட்கள் மட்டும் ஆயிரத்துக்கு மேல் இருக்கும். செங்கற்பட்டு மாவட்டம் கோயம்பேடு, இராமநாதபுர மாவட்டம் திருவாடானை, மற்றும் தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலிருந்து இந்து அறநிலைய நிர்வாகத் துறையின் ஒத்துழைப்புடன் மரவேலைப்பாட்டுப் பொருட்கள், படிமங்கள் பெறப்பட்டன. பயன்படுத்தப்படாத தேர்களிலிருந்தும், உருச் சிதைந்து ஏலத்தில் விடும் நிலையில் உள்ள தேர்ப் பகுதிகளிலிருந்தும் அவை எடுக்கப் பெற்றன. கல், உலோகம், ஆகியவைகளில் காணப் பெறாத பலவகைப் படிமங்கள், இந்த மரவேலைப்பாடுகளில் உள்ளன. மரச் சிற்ப வேலைப்பாடுகளுக்குத் தனிப்பிரிவு ஏற்படுத்துவது குறித்துப் பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

தொல்லியல் பகுதியின் கலைப் பொருட்கள் என்ற வகையில் கிளை விளக்கு, தஞ்சாவூர், கலை வேலைப்பாடு வடிவத்தட்டு முதலியன குறிப்பிடத் தக்கவை. தொல்லியல் பிரிவில் சேகரிக்கப்பட்ட மொத்தப் பொருட்கள் சுமார் பத்தாயிரம், இவற்றில் மூன்றில் ஒரு பகுதிதான் இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. மற்றவை ஆராய்ச்சிகளுக்கும், சிறப்புப் பொருட்காட்சி நேரங்களிலும் பயன்படுத்தப் படுகின்றன. தொல்பொருட் கலைச்செல்வம் குறித்து மாநிலமும் நாமும் பெருமை அடையலாம்.

வி. என். சீனிவாச தேசிகன்.

(கியூரேட்டர், தொல்லியல் பிரிவு.)

**ஒரு வேண்டுகோள்**

வெளியிட முடியாதவைகளைத் திருப்பி அனுப்புவதற்கு இயலா திருப்பதால், 'தமிழரசு'க்கு கதை, கட்டுரை, கவிதைகள் அனுப்புவோர் அருள்கூர்ந்து பிரதி எடுத்துக்கொண்டு அனுப்பவும்.

# கல்விப் பணிகள்

பழங்காலத்திலேயே அரும்பொருட்காட்சி நிலையங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. பழமையான, அழகான பொருள்களை அந்நிலையங்கள் தம்மகத்தே கொண்டிருந்தன. அவை மக்களுக்கு வியப்பையும், கவர்ச்சியையும் தருவனவாக மட்டுமே இருந்தன. அவற்றைப் பேணிக் காத்தவர்கள் அக்காட்சி நிலையங்களின் தன்மையையும், நோக்கத்தையும் பிற்காலத்தில் பல்வகையில் மாற்றிவிட்டனர். காட்சிச் சாலையைப் பார்ப்பவர்களுக்கு அறிவுக்குவிருந்தாகவும், கலையழகு காட்டுவதாகவும், வரலாற்று வளர்ச்சியை விளக்குவதாகவும் அமையுமாறு அமைத்தனர். இக்காலத்தில் அரும் பொருட்காட்சி நிலையங்கள் சீரிய கல்விக் கருவூலங்களாக இயங்கி வருகின்றன. அந்த நிலையங்களின் பொருள்கள் கலையை வளர்க்கின்றன. மக்களின் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. அவர்தம் சிந்தனையையும் சுடர்விடச் செய்கின்றன.

இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டே, சென்னையிலுள்ள அரசினர் அரும்பொருட் காட்சி நிலையத்தில் கல்விப் பணிப் பகுதி, 1971 மார்ச் மாதம் முதல் தொடங்கப் பெற்றது. இப்பகுதி தொடங்குவதற்கு முன்பே கல்வி வளர்க்கும் வேறு பணிகளையும் இக்காட்சி நிலையம் மேற்கொண்டிருந்தது. காட்சிப் பொருள்களை விளக்கும் பணிகளும், காட்சிப் பொருள் அமைப்புப் பயிற்சி வகுப்புகளும், சிறப்புப் பொருட்காட்சிகளும் அவ்வப் போது இங்கு நிகழ்ந்து வந்துள்ளன. இப்பணிகளை நடத்துவதில், இந்தியக் காட்சி நிலையங்களில் சென்னை நிலையமே முன்னணியில் நின்று வந்திருக்கிறது. இப்பணிகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் காட்சி நிலையத்தை மேலும் மக்களுக்குப் பயன்படுமாறு செய்வதே கல்வியதிகாரியின் நோக்கமாகும்.

பொருட்காட்சி நிலையத்தின் கல்விப் பணி இருவகைப்படும். ஒன்று:—பள்ளிச் சிறுவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும், அவர்களுடைய கல்விக்குத் துணையாக இக்காட்சி நிலையங்கள் அமைந்து, அவர்களது கல்வி, கலை ஆர்வத்தை மேலும் வளர்த்தல். மற்றொன்று:— பொது மக்களுக்கு அறிவை வளர்க்கும் வகையில் இந்நிலையங்கள் இயங்குதல் வேண்டும். இவை தவிர, ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், அரும்பொருட்காட்சி இயலைக் கற்போருக்கும் இந்நிலையம் உதவியாக இருக்க வேண்டும்.

முதலில் குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவதற்கு இக்கருவூலம், பள்ளிகளுடன் தொடர்பு கொள்கின்றது. கருவூலப் பொருட்களைக் காண்பதற்கு மாணவர்களை அணி அணியாக அனுப்புமாறு பள்ளிகளைக் கேட்டுக் கொள்கின்றது. பார்க்க வருகின்ற மாணவர்களுக்குக் காட்சி நிலையத்திலுள்ள பிலிம் (திரைப்படம்) கருவூலத்திலிருந்து திரைப்படங்களும் அவ்வப்போது காட்டுவதுண்டு. ஆண்டு தோறும் குழந்தைகள் கலைப் போட்டி ஒன்றும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் போட்டி 1972 பிப்ரவரியில் நடந்தது. அரும்பொருட் கருவூலத்தின் காட்சிப் பொருள் விளக்கம் அடங்கிய கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. கருவூலத்திலுள்ள பொருள்களை விளக்கும் விரிவுரைகள் மாதந்தோறும் நிகழ்த்தப்படுகின்றன. இது பொது மக்களுக்கு மட்டுமன்றி, மாணவர்களுக்கும் பயன் படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும் இரண்டாவது பணிக்குக் காட்சிப் பொருள் விளக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். படக் காட்சி, சொற்பொழிவுகள், சிறப்புக் காட்சிகள், ஆகியவையும் நடைபெறுகின்றன. விளக்குநர்கள் இலவசமாகவே வருவோரை வழி நடத்தி, அவர்கட்கு விவரமும் விளக்கமும் தருவார்கள். பார்வையாளர்களை ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்று அங்குள்ள பொருட்களை அவர்கட்கு விளக்குவார்கள். இப்பணியை வேண்டுவோர் குறிப்பிட்ட நேரத்தில் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அன்றியும் சிறப்புப் பொருட்காட்சிகளும் அவ்வப்போது நடை பெறுவதுண்டு. அப்போது ஒரு சில பகுதிகளிலுள்ள பொருள்களைப் பற்றி தனியான விளக்கவுரைகள் வழங்கப்படுகின்றன. இதனால் ஒரு சில பொருள்கள் அல்லது ஒரே வகையான பொருள்களே சிறப்பாக விளக்கம் பெற முடிகின்றது. அப்போது, தொல்பொருட்களையோ, கல் பொருட்களையோ எவ்வாறு காத்துக் காப்பாற்ற வேண்டும் என்று மக்கள் தெரிந்து கொள்ள முடிகின்றது. தொல் பொருள் நிரப்பி வைக்கப் பட்டுள்ள முன் மண்டபத்தில் எளிதில் மக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கு பெறும்படி இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தொகுப்புப் பொருள் காட்சியும் சில நாட்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதில் கருவூலத்தின் எல்லாப் பகுதிகளும் பங்கு கொள்ளும். இதனால் அவை தம்மிடையே உள்ள தொடர்பு விளங்க ஏதுவாகின்றது. 'குடிப்பதற்கு நீர்', 'ஆடைகள்', 'அணிகள்', என்ற தலைப்பில் இந்தத் தொகுப்புக் கண்காட்சிகள் நடைபெற்றன. மனிதனின் எழுத்து முயற்சியை விளக்கும் 'மனிதன் கையேடு' என்ற தலைப்பில் இந்நிகழ்ச்சி 1972 பிப்ரவரியில் நிகழ்ந்தது.

கடந்த அரை ஆண்டில் திரட்டப்பட்ட பொருட்களைப் பற்றியும், அடுத்த அரையாண்டில் நிகழவிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் விளக்கும் அரையாண்டு செய்திக் கடிதம் ஒன்றும் வெளியிடப் படுகின்றது. வேண்டுவோர்க்கு இது வழங்கப்படுகின்றது. பொருட் காட்சிக் கருவூலம் அமைப்புப் பற்றிய சொற்பொழிவு மாதந்தோறும் நிகழ்கின்றது. இதில் பொது மக்களும் கலந்து கொள்ளலாம். ஒளிப்படங்களுடன், திரைப்படங்களும் காட்டப்பட்டுக் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன. மேலும், மாதந்தோறும் கல்வித் திரைப்படக் காட்சியும் நடத்தப்படுகின்றன. இதற்கும் பொது மக்களும் அனுமதிக்கப் படுகின்றனர். கல்வி இயக்குநர் அலுவலகத்திலுள்ள திரைப் படக் கருவூலத்திலிருந்தும் வெளிநாட்டுத் தூதரகங்களிலிருந்தும், படங்கள் இதற்காகத் தருவிக்கப் படுகின்றன. எல்லாத் தரத்திலுமுள்ள பொது மக்களுக்கும் இசைவான படங்கள் இக்காட்சியில் இடம் பெறு









# ராஜாஜி மறைவு
## இரங்கற் செய்திகள்

### குடியரசுத் தலைவர் :

ராஜாஜிக்கு அதிக வயது ஆன போதிலும் கூட, அண்மைக் காலம் வரை நாட்டின் நலனுக்காக, தேசப் பிரச்சினைகள், சர்வதேசப் பிரச்சினைகள் பற்றிய தமது கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்துரைத்து வந்துள்ளார். தமது கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவிக்கும் நுட்பமான ஆற்றல் படைத்திருந்த ராஜாஜி எடுத்துக் கொண்ட பல பிரச்சினைகள் அவரது கருத்தை ஏற்றுக் கொள்ளாதவராக இருக்கக்கூடியவர்களது கவனத்தைக் கூடக் கவர்வதாக இருந்தன.

### தலைமை அமைச்சர் :

ராஜாஜி பேச்சுத்திறன், அவரது கவர்ச்சிகரமான தோற்றம் ஆகியவற்றில் பலருக்குச் சொந்த அனுபவங்களிருக்கும். அவரது நடை, இலக்கியச் சுவை ததும்பக்கூடியது. வலிமையும், எளிமையும் கலந்த நடையாக இருந்தது. அவரது சொற்களில் அனுபவமும், விவேகமும் நிரம்பியிருந்தன.

ராஜாஜி நீண்ட, முழு வாழ்க்கையை அனுபவித்தவர். கடைசிவரை அவரது சிந்தனை தெளிவுடனிருந்தது. 90 வயதுக்கு மேலும் அவர் சுறுசுறுப்புடன் இயங்கி வந்தார். நாட்டிலும், உலகிலும் நடந்துவரும் சம்பவங்களனைத்திலும் அவர் அக்கறை காட்டிவந்தார்.

### ஆளுநர் :

ராஜாஜியின் புத்திக் கூர்மைக்கு இணையாகச் சிலரே இருக்க முடியும். மனித உள்ளத்தினை ஆழ்ந்து ஆராய்ந்து அறியும் திறமை படைத்தவர்.

புலமையும், ராஜதந்திரமும் ஒருங்கே அமையப் பெற்றவர் ராஜாஜி. அவரது பெருந்தன்மை தலைவர் என்ற முறையில் மனிதர்களையும், பிரச்னைகளையும் அனுதாபத்துடன் புரிந்துகொள்ளும் ஆற்றல், அவரது தேச பக்தி, நேர்மை ஆகியவை அநேக தலைமுறைகளுக்குச் சிறந்த படிப்பினைகளாக விளங்கும். அவர் எப்போதும் வலுவூட்டும் சக்தியாக இருந்தார்.

### முதல்வர் :

ராஜாஜி மறைவு குறித்துத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்தி வெளியிட்ட போது அவர் கண்கள் கலங்கின. குரல் தழுதழுத்தது. மேலும் பேசமுடியாத நிலையில் தமது இரங்கல் செய்தியை எழுதிக் கொடுத்தார்.

"அரசியலைக் கடந்து அன்பு காட்டிய ஒரு உள்ளத்தை நாம் இழந்துவிட்டோம். தேசத்தின் தலைசிறந்த மூத்த தலைவர்களில் ஒருவர் தீபஸ்தம்பம் சாய்ந்தது போலச் சாய்ந்துவிட்டார்; அரசாங்க முறைப்படி உரிய சடங்குகள் அனைத்தும் உண்டு. மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மதுக்கடைகள் அனைத்தும் நாளை மூடப்படும்; நாளை ஒருநாள் தேசிய விடுமுறையாக விடப்படும். ஒருவாரகாலத்திற்குத் துக்கம் மேற்கொள்ளப்படும்'' என்று தமது இரங்கற் செய்தியில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

**முன் பக்கத்தில் ராஜாஜி**

1 பேரறிஞர் அண்ணாவுடன்,

2 முதல்வர் கலைஞருடன்,

3 முதல்வரிடம் தாமிர பத்திரம் விருது பெறுதல்,

4 பொதுத் தேர்தலின்போது வாக்களித்தல்,

5, 6, 7 குடியரசுத் தலைவர், ஆளுநர், முதல்வர் ஆகியோர் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செய்கின்றனர்,

8 இறுதி யாத்திரை.





ஸ்ரீரங்கப்பட்டணம் பதக்கம்

கின்றன. பொது மக்களும் இப்படக் காட்சியில் மிக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

ஒரு சில காட்சி மேடைகளிலுள்ள ஒரு பகுதியை மட்டும் தனியாக விளக்கும் அட்டைகளை வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் அவற்றைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள முடியும். இவ்வட்டைகளில் படங்களுடன், எளிதாகப் புரிந்து கொள்ளும் நடையில் விளக்கமும் இருக்கும். இதன் மூலம் படிப்பவர்கள் மேலும் மேலும் ஆர்வம் கொண்டு பொருள்களைக் காண மீண்டும் மீண்டும் வருவர்.

காட்சியகத்தின் கல்விப் பகுதியின் கீழ் ஒரு திரைப் படக் கருவூலமும், இரவல் காட்சிப் பொருள்கள் பகுதியும் அமைந்துள்ளன. கல்வி நிலையங்கள் இவற்றை இரவலாகப் பெற்று, மாணவச் சிறுவர்களுக்கு விளக்கிக் காட்டலாம்.

சினிமாப் படங்களின் பெயர்களடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இது எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் அனுப்பப்படும். கண்காட்சிக் கருவூலத்திலுள்ள, தொல் இயல், நாணய இயல், உயிரியல், தாவர இயல், புவி இயல் முதலான துறைப் பொருள்களை விளக்குவதற்கு இந்த இரவல் காட்சிப் பொருள்கள் பயன்படும்.

மாணவர்களும், பொது மக்களும் பயன் பெறுவதோடன்றிப் புலவர்களும் தொழில் வல்லார்களும் காட்சிப் பொருள் கருவூலத்தால் பயனடைவார்கள். ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் கருவூலப்பொருள்களைப் பயன்படுத்த எல்லா வசதிகளும் செய்து தரப்படும். அவ்வாறு ஆராய்ச்சி நடத்திப் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியாவில் இதுவே முன்னணியிலுள்ள பொருட்காட்சிக் கருவூலம்; எல்லாத் துறையும் நிரம்பப் பெற்ற நிலையமும் இதுவே. ஆதலின் கண்காட்சிக் கருவூலம் பற்றிப் புலமை பெற விரும்புவோர்க்குப் பயிற்சி நிலையமாகவும் இது இயங்கி வருகின்றது. கல்வி இயக்குநரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளியாசிரியர்களுக்குக் கோடைக்காலத்தில் கண்காட்சிக் கருவூலம் பற்றிய நுணுக்கங்களை இந்நிலையம் கற்றுத் தருகின்றது. பல நிறுவனங்களால் அனுப்பப்பட்ட பயிற்சியாளர்களுக்கும், பள்ளியாசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கும் பணி, இக் கருவூலத்தின் கல்வியாசிரியரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. கல்விப் பகுதியுடன் நுண்பிலிம் பதிவேட்டுப் பகுதியும் இணைக்கப்பட்டிருக்கின்றது. இது ஆராய்ச்சியாளர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் எளிதில் பயன்பட்டு வருகின்றது. குறைந்த செலவில், அவர்கள் புத்தகங்கள், ஏடுகளைப் பதிவு செய்து கொண்டு போகின்றார்கள்.



ஸ்ரீரங்கப்பட்டணம் பதக்கம்

இது மிகவும் அடக்கமான ஆரம்ப நிலையே ஆகும். செல்லச் செல்ல அத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு இதன் பயன் நன்கு தெரியும். அரும் பொருட்காட்சி நிலையத்தின் அருமை பெருமையை மக்கள் உணரும்போது, இக்கல்விப் பகுதியின் பணியும் தெளிவாக உணரப்படும். இக்கருவூலம் எய்த வேண்டிய சீரிய உயர் நிலையை அடைய, கல்விப் பகுதி தன் பங்கை விரைந்து நிறைவேற்றும்.

என். ஹரிநாரா[illegible]
(கல்வி அலுவலர்)

அரும்பொருட் காட்சி பகுதியில் உள்ள சிற்பங்கள் இரசாயனக் கூடத்தின் உதவியால் அவ்வப்போது சுத்தம் செய்யப்படுகின்றன.



அன்பளிப்பாகவும், நன்கொடையாகவும், இங்குப் பணியாற்றுவோர் பயணம் செய்து திரட்டியும், அரிதிற் பெறப்பட்ட சில பொருட்களைக் கொண்டு 1851-ஆம் ஆண்டு முதலே உயிரியல் பகுதியானது இயங்கி வருகின்றது. சிப்பிகள், மீன்கள் பறவைகள், புழுக்கள், முதலியன பிற காட்சிக் கருவூலங்களிலிருந்து, மாற்றுப்பொருள்களாகப் பெறப்பட்டன.

அறுபது அடி நீளமுள்ள திமிங்கிலத்தின் எலும்புக்கூடு வாங்கப்பட்டுப், பத்திரப்படுத்தப் பட்டு மிகவும் நுட்பமாக எலும்புக்




கூடு மேடையில் தொங்கவிடப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சிக் கருவூலத்தின் சிறப்பு அதிகாரியாக இருந்த டாக்டர் எட்வேர்டு கிரீன் பால் பேர் என்பவர் சோதனைக்காகச் சில வனவிலங்குகளைக் கருவூலத் தோட்டத்தில் வைத்து வளர்த்தார். இது பொது மக்களின் ஆர்வத்தை மிகவும் கவர்ந்தது. 1856-ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் சென்னைக் கருவூலத்தில் 360 விலங்குகளைக் கொண்ட உயிரியல் தோட்டம் இருந்தது. 1863-ல் மாநகராட்சி இந்த உயிரியல் தோட்டத்தை எடுத்துக் கொண்டு, இப்போதுள்ள 'பீப்பிள்ஸ் பார்க்' என்னும் இடத்தில் அதைக் கொண்டு போய் வைத்தது.

உயிரியல் பகுதியில் பணியாற்றுவோரின் 120 ஆண்டுக் கால அயராத உழைப்பினால் இன்றுள்ள நிலைக்கு உயிரியல் மேடை உருவாயிற்று. கடந்த இருபது ஆண்டுகளில் இப்பகுதி நன்கு விரிந்து நிரம்பியுள்ளது. இப்பகுதியிலுள்ள அடுக்குகள் 12 ஆகப் பெருகித், தொல் பொருள் பகுதியின் சிற்ப மேடைகளுக்கு அருகிலுள்ள கீழ்த்தளத்திலும், முதல் தளத்திலும் விரிவடைந்திருக்கின்றது. இப்பகுதியை மெதுவாகச் சுற்றி வந்து பார்த்தால் நல்ல படிப்பினையாகவும், பொழுது போக்காகவும் இருக்கும். இயற்கையின் விந்தைப் பொருள்களைக் காணும் வாய்ப்பும் கிட்டும். நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் பற்றிய அறிவு நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

இங்கேயுள்ள எல்லாப் பொருள்களிலும் புகழ் பெற்றது அறுபது அடி நீளமுள்ள திமிங்கிலத்தின் எலும்புக் கூடே ஆகும். இது மிகவும் விலை மதிப்புள்ளது. இது மண்டபத்தின் மையக் கூரையிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. இத்தகைய திமிங்கிலங்கள் வங்கக் கடலிலும், அரபுக் கடலிலுந்தான் காணப்படுகின்றன. இதற்குத் துடைப்பம் போன்ற பகுதிகள் அதன் வாயின் இரு பக்கங்களிலும் இருக்கின்றன. இவற்றின் உதவியால் அது சிறிய மீன்கள், நண்டுகள் நத்தைகள் போன்ற சிறிய உயிர் இனங்களை உணவாக உட்கொண்டு, பெரியவற்றை வடிகட்டி வெளியேற்றி விடுகின்றது. இத்தகைய திமிங்கிலங்கள் 150 அடிநீளம் வரை வளர்கின்றன. உயிர்வாழும் விலங்கினங்களில் பெரியது இதுவே யாகும்.

இதே மேடையில் மற்றொரு மூலையில் பற்களையுடைய ஒரு திமிங்கிலத்தின் தலை எலும்பு வைக்கப்பட்டிருக்கின்றது. அதன் தலை மிகப் பெரியது. அது அதன் உடலில் மூன்றில் ஒரு பங்கு நீளம் உடையது. அதனுள் திரவமான கொழுப்பு மிகுதியாக இருக்கும்; இந்தக் கொழுப்பு மிகவும் விலை மதிப்புடையது. மேலும் இந்திய யானையின் எலும்புக் கூடும் மிக நுட்பமாக இணைக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. குதிரையின் எலும்புக்கூடும், மனித எலும்புக்கூடும் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு, அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகள் பார்ப்பவர்க்குப் புலனாகுமாறு செய்யப் பட்டிருக்கின்றது. இன்னும் பற்களுடைய மண்டையோடுகள், கண்ணாடிக் கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. புல், தழைகளை, உண்ணும் விலங்குகள், ஊன் தின்னும் விலங்குகள், மீனினங்கள் ஆகியவற்றின் வடிவங்களின் அமைப்பை இவை விளக்குகின்றன.

எலும்புக் கூட்டுப் பகுதியை அடுத்து, முதுகெலும்புடைய விலங்குகளின் பாய்ச்சல் நிலையை விளக்கும் பல பொருள்களைக் காணலாம். பறக்கும் நிலையைப் பறவைகளே அடைந்துள்ளன என்றாலும், பிற உயிரினங்களும் ஓரளவு பாய்ந்து செல்லும் தன்மையுடையனவே. முதுகெலும்புடைய மீன்கள், தவளைகள், அணில்கள், பாம்புகள் பறக்காவிடினும் பறப்பதற்கு இணையாகப் பாயும் வலிமை கொண்டவை. கடல் நீரின் மேல், வான வெளியில் பாய்ந்து இயங்கும் மீன் வகைகள் இம் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன. இம்மீன்களின் மார்பு, இடுப்பு எலும்புகள் விரிந்து வானில் பாய்ந்து செல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளன.



சில சமயங்களில் மிகவும் உயரமாகப் பறந்து அவை கப்பல்களின் மேல் தளத்தில் சென்று விழுந்து விடுகின்றன. இது போன்றே பறக்கும் தவளை, பல்லி, வௌவால் ஆகியவைகளின் எலும்பு உருவங்கள், பறக்கும் நிலையில் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. வானில் மிக உயரத்தில் பறக்கின்ற வெள்ளை நிறக் கழுகின் உடல், அதன் சிறகுகள் விரித்த நிலையில் இம்மேடையில் வைக்கப்பட்டுள்ளன. இன்னும் சிறு சிறு பிராணிகளின் வண்ண வேறுபாடு, பால் வேறுபாடு, சுற்றுப்புற வேறுபாடு ஆகியவை விளங்குமாறு அவற்றின் உடல்கள் பொருத்தப் பட்டுள்ளன.

பிற நாடுகளிலிருந்தும் பல பொருள்கள் இக்காட்சிப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மனிதக் குரங்கு (ஒராங் குட்டான்), கங்காரு, மலேயாத் தபீர், பெரிய வாத்து, மரங் கொத்திப் பறவை, நெருப்புக் கோழி அதன் முட்டை, வெளி நாட்டுக் கடல்களிலுள்ள சிப்பிகள் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

இப்பகுதியின் பின் மேடையில் கூர்ந்து பார்க்கும் மனிதக் குரங்கு பார்வையாளர்களை வரவேற்கின்றது. இக்குரங்கு போர்னியோ, சுமத்திராவின் அடர்ந்த காடுகளில் வாழ்கின்றது. அதன் நீண்ட கைகள் மரத்துக்கு மரம் எளிதில் தாவ ஏதுவாக உள்ளது. ஆஸ்திரேலியக் கங்காரு தாவரப் பட்சிணியாகும்; பெண் கங்காருவின் வயிற்றில் ஒரு பை இருக்கின்றது. அந்தப் பையில் தனது இளம் குட்டியை அது வைத்து வளர்க்கின்றது; அதன் முன் கைகள் உண்பதற்கும், ஊட்டுவதற்குமே பயன்படுகின்றன. பின் கால்களால் விரைவாகத் தாவி ஓடிச் செல்கின்றது. வாத்துப் போன்ற வாயுடைய பிராணியும், எலும்பு உண்ணும் பிராணியும் பழங் காலத்தைச் சேர்ந்த பாலூட்டிகளாகும் ஆனால், அவை குட்டி போடுவதில்லை. முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பவை. நெருப்புக் கோழி மிகப் பெரிய பறவை; ஆனாலும் பறக்க முடியாது. காசோரி என்ற பெரிய பறவை ஆஸ்திரேலியாவில் வாழ்கின்றது. நெருப்புக் கோழி ஆப்பிரிக்கப் பறவை. உலகத்தில் மிகப் பெரிய பறவையும் இதுவே. மிகவும் விரைவாக ஓடும் பறவையும் இதுவே. இதன் முட்டையும் ஏனைய எல்லா முட்டைகளையும் விட மிகப் பெரியது.

ஊர்ந்து செலலும் உயிரினங்கள் அடங்கிய மேடையில் எல்லாரையும் கவர்வது தோல் ஆமைதான். இதன் மேல் தோடு மென்மையாகத் தோல் போன்றிருக்கின்றது. தோட்டின் மீது பொதுவாகக் காணப்படும் செதில்கள் இதில் இல்லை. இது 8 முதல் பத்து அடி நீளம் வரை வளர்கின்றது. இந்திய நாட்டின் ஊர்ந்து செல்லும் உயிர் இனத்தில் பல்வேறு அளவில் முதலைகள் உள்ளன. எட்டடி முதல் பத்தடி வரை நீளமுள்ள முதலைகள் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. இரண்டு நவீனக் கண்ணாடிப் பெட்டிகளில் தென்னிந்தியப் பாம்பு வகைகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் நிறங்கள், கொஞ்சமும் மாறு வகையில் கண்ணாடிப் பேழைகளில் அடைக்கப் பட்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட கிலுக்குப் பாம்பு ஒன்றும் கண்ணாடிக் குவளையில் வைக்கப்பட்டிருக்கின்றது. அதன் வால் நுனியில் ஓசையெழுப்பும் கிலுகிலுப்பை இருக்கிறது. அதிலிருந்து எழும் ஓசை வறட்சிக் காலத்தில் பெரிதாகவும் குளிர் காலத்தில் மெல்லியதாகவும் இருக்கும். இதன் உதவியால் அது தன் பகைப் பிராணிகளைத் துரத்திவிடுகின்றது. சில சமயங்களில் அதன் ஓசை செவிடுபடும்படியாக இருக்கும். மற்றும் ஊர்வன வைக்கப்பட்டுள்ள மேடையின் மேற்குப் புறத்தில் தவளைகளும், தேரைகளும் காணப்படுகின்றன. பெரிய தவளை ஒன்று பாம்பை விழுங்கும் நிலையில் கண்ணாடிக் குவளையில் அமைக்கப் பட்டிருக்கின்றது. பாம்பு போன்ற உருவமுடைய கண்ணில்லாப் புழுக்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. அவை பாம்பைப் போல் உருவம் கொண்டிருந்தாலும் தவளை, தேரை இனத்தைச் சேர்ந்தவையே.

பல பறவைகள், இரு கண்ணாடி அடுக்குகளில் அடைந்து கிடக்கின்றன. அவற்றுள் ஒரு கண்ணாடி அடுக்கு அண்மையில் புதுமையாக்கப்பட்டுள்ளது. அதனுள் பறவைகள் வகைப்படுத்தப்பட்டு நிறுத்தப் பட்டுள்ளன. பச்சைநிறப் பின்னணியில், ஒளி பொருந்திய கண்ணாடிப் பேழைகளில் அவை வைக்கப்பட்டுள்ளன. சில பறவைகள் அவைகளின் இயற்கைச் சூழ்நிலையில் பெட்டிகளில் இருக்கின்றன. தோகையை விரித்தாடும் மயில், மணல் கூட்டில் அடைகாக்கும் நாரை, மர உச்சியில் குஞ்சுகளைக் காத்து நிற்கும் கொக்கு, கடற்கரையில் உலாவரும் கடற் பறவை, காட்டுப் புதரிடையே மறைந்து திரியும் காட்டுக் கோழி, உயர்ந்த மலைப் பொந்தின் வெளியே தலையை நீட்டிக் கொண்டிருக்கும் ஆந்தை, கூடுகளைப் பின்னிக் கட்டும் தூக்கணாங் குருவி, வெள்ளை மயில், இயற்கைச் சூழ்நிலையில் நிற்கும் பெரிய கொக்கு, பெரிய மரங் கொத்தி முதலியன பார்வையாளர்களை மிகவும் கவர்வனவாகும். பலவிதமான முட்டைகளும் இங்குச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அவை பல வண்ணங்களில் உள்ளன. சாய்ந்த பெட்டியினுள் அவை இருக்கின்றன. அன்றியும் ஒவ்வொரு பறவையின் அருகில் அதன் முட்டையும் வைக்கப்பட்டுள்ளது.

> காலம் முறைகளை மாற்றுமே தவிர மனப் போக்கையும் உணர்ச்சியையும் மாற்றி விடாது.
>
> —பேரறிஞர் அண்ணா

பாலூட்டி வளர்க்கும் உயிரினங்கள் தனியே இருக்கின்றன. ஆப்பிரிக்கச் சிங்கம், தனியாக ஒரு பேழையில் அடைப்பட்டுக் கிடக்கின்றது. சிறுத்தை உயிருடனிருப்பது போல் அமர்ந்திருக்கின்றது. காட்டுப் பன்றி எழுந்து நிற்கின்றது. மான்களும், குட்டிகளும் மிரண்டு பார்க்கின்றன. கருங்குரங்கு, வாலில்லாக் குரங்கு, நீர் நாய், நீர்ச் சிங்கம், பறக்கும் அணில்கள், காட்டு அணில், முள்ளம் பன்றி, காட்டு வௌவால் ஆகியவையும் உயிருடையவை போல் காட்சி தருகின்றன. பாலூட்டி வளர்க்கும் பிராணிகளில் வௌவால் மட்டுமே நெடுந்தூரம் பறக்கக் கூடியது. பறக்கும் அணில் என்ற பெயருடன் மரத்தின் மீது ஏறுவது போல் தெரிகிறதே, அந்தப் பிராணிதன் கால்களின் இடையேயுள்ள அகன்ற தோல் முறத்தால் தாவிச் செல்லுமே தவிரப் பறக்காது.

இனி மீன் அறைக்கு வருவோம். இது முதல் தளத்தில் இருக்கின்றது. இங்குப் பல வகையான மீன்கள் உள்ளன. என்றாலும் மேல் முகட்டிலிருந்து தொங்கும் திமிங்கிலமே மக்களைப் பெரிதும் கவர்கின்றது. இதுவே மீனினத்தில் மிகப் பெரியது. ஐம்பது அடி நீளம் கூட இருக்கும்.

ஆனால், இங்கு வைக்கப்பட்டிருப்பது 21 அடி நீளம் கொண்டதே; 1889-ஆம் ஆண்டில் சென்னையில் இது பிடிக்கப்பட்டது. கடலில் வாழும் ஒரு வகை உயிரினத்தையே இது உணவாகக் கொள்கின்றது. அந்த உணவைத் தேடி இது அலைந்து வாழ்கின்றது. பெரிய சுரு மீன், சுவரில் தொங்கும் மீன் வகைகள், வான் மீன், அதனுடைய எலும்புக்கூடு, பாம்பு மீன், உணவு மீன் முதலானவை பார்க்கத் தக்கவை. முதுகெலும்பு இல்லாத உயிரிணங்களில் பவழப்புழு, மரப் பவழப்புழு, கூடைப் புழு, குவளைப் புழு, ஜெல்லி மீன், முத்துச் சிப்பி ஆகியவை கடலுக்கடியில் காணப்படுவது போல் வைக்கப்பட்டுள்ளன. முத்துச் சிப்பியிலிருந்து முத்து எவ்வாறு தோன்றி வளர்கின்றது என்பதை விளக்கும் காட்சி, கூடை போன்ற பல வண்ணச் சிப்பிகள், சங்குகள், அரிதாகக் கிடைக்கும் வலம்புரிச் சங்கு, பல நிறங்களில் நண்டுகள், அந்தமான் தீவுகளிலுள்ள தேங்காய் நண்டு; கொடுவாள் போன்ற கையுடைய அசுர நண்டுகள், நட்சத்திர மீன்கள், கடல் தாமரைகள், கடற் புழுக்கள், யாவும் அறிவிற்கும் கண்ணுக்கும் விருந்தாகும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளன.

அடுக்குப் பரண்களில் வைக்கப்பட்டுள்ள உயிரினங்கள் தவிர, மேலும் திரட்டப்பட்ட உயிரினங்களும் தனியாக, இப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. காட்சிக்காக வைக்கப்பட்ட பொருள்கள் கெட்டுப் போனால் அவற்றிற்குப் பதிலாக இவை வைக்கப்படுகின்றன. அதோடு உயிரினங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்த வல்லுநர்களுக்கும், மாணவர்களுக்கும் போதிய வசதியளிக்கப்படுகின்றது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றும் உதவியாளர்களுக்கு இங்கே பயிற்சியளிக்கப்படுகின்றது. கோடைப் பயிற்சியின் போது விரிவுரைகளும் செய்முறை வகுப்புகளும் இங்கு நிகழ்கின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கும் வேண்டும் போதும் இத்தகைய வகுப்புகள் நடைபெறுகின்றன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடை பெறும் பொருட்காட்சிகளில், உயிரினப் பகுதியில் பொருள்களை வகைப்படுத்துதலிலும் உதவியளிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்பொருட்காட்சி கருவூலத்தில், விளக்கவுரையும் அவ்வப் போது தரப்படுகின்றது. இப்பகுதியின் பாதுகாப்பாளர், சிறப்பு ஆராய்ச்சியும் மேற்கொள்கின்றார். இவையாவும் உயிரியல் பிரிவின் கல்விப் பணியாகும்.

ஜி. கேசவராம்,
(உயிரியல் பகுதிக் காப்பாளர்)

* * *


# கவனிக்க!



## அரசாங்கத் துறையினர்கள்

ஜீப் உறைகள், வேன் உறைகள். தார்பாலின்கள், ஜீப் & லாரி குஷன்கள், "யூ" ஃபோம் அடைக்கப்பட்ட தரமான சிறந்த ஃபோம்டெக்ஸ் ரெக்ஸின் கொண்டு தயாரிக்கப்பட்ட கார் குஷன் உறைகள் போன்றவை அநேக டிசையின்களில் குறைந்த விலையில் கிடைக்கும்.



எல்லா விதமான சீட் உறை போடும் வேலைகளும் கவனிக்கப்படும். அல்லது லேபர் காண்ட்ராக்ட் அடிப்படையிலும் செய்யப்படும்.

சிறுதொழில் நிறுவனத்தில் எண் M.S.(S) SFI/24/231-1/0361 Rr-ன் கீழ் தேதி 7—1—1972 படி நாங்கள் பதிவு செய்துள்ளோம்.

வர்த்தக விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

# கித்கோஸ்

19-C/8, உட்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு,
சென்னை-2. போன்: 812318

RAE


# ? ? ? ? ? ? ? ? ? ? கேளுங்கள் கொடுக்கப்படும்

**வினா:**—அண்மையில் பெய்த பெருமழையினால் எங்கள் தாளடி நெல் பாழாகிப் பெரும் நட்டம் ஏற்பட்டு விட்டது. உடன் எந்த ரகத்தைப் பயிரிடலாம்? தண்ணீர் இறைக்க வசதி உள்ளது. குறுகிய கால வயதுடைய ரகமாகக் கூறுங்கள். இதற்குரிய பதிலை அடுத்து வரும் ஜனவரி 1, 1973 'தமிழரசு' இதழிலேயே விளக்கவும். (இதுபோன்ற கேள்வியைப் பலர் கேட்டுள்ளனர்).

—வி. கண்ணன்,
மகாமகம் குளத் தெரு,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை:**—பெரும் மழையின் காரணமாகத் தங்கள் தாளடி நெல் பாழாகி விட்டதென்று குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் உடனடியாக 'அன்ன பூர்ணா'(கல்ச்சர்-28)என்ற ரகத்தைப் பயிரிட்டுப் பயனடையலாம். இதன் வயது 95 நாட்களே. இதற்குக் குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் ரகங்கள், தற்பொழுது கிடைக்காது. தங்களுக்குத் தண்ணீர் வசதி இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளதால், மார்கழி மாதம் வரை இந்த ரகத்தைப் பயிரிடலாம். இதை நாற்றுவிட்டும் நடவு செய்யலாம் அல்லது நேரடியாகவும் விதைக்கலாம். தண்ணீர் வசதி உள்ளோர் அனைவரும் இதே பரிந்துரையைப் பின்பற்றலாம். ஒரு ஏக்கருக்கு 35 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும்.

ஒரு ஏக்கரில் விதைப்பதற்கு 32 கிலோ விதை தேவை. விதைத்த 10 நாட்கள் வரை, சேறு காயாமல் தேவையான போது தண்ணீர் விட்டு (தொழி நாற்றங்காலைப்போல்) வடித்து விடவேண்டும். விதைத்த 20-வது நாள், 40-வது நாள் ஆக இரு முறை மேலுரம் இட வேண்டும். ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 27 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும்.

அன்னபூர்ணாவின் அரிசி சிவப்பாக இருக்கும். இவ்வகை அரிசியைக் கேரள மாநிலத்தினரும், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்ட மக்களும் விரும்பி வாங்குகின்றார்கள். எனவே, இந்த ரகத்தை நீங்கள் துணிந்து பயிரிடலாம். இந்த ரகத்தைத் தஞ்சை மாவட்டத்தில் பெரும் பரப்பில் சாகுபடி செய்ய, வேளாண்மைத் துறையினர் பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால், இதுபற்றி உங்கள் ஊராட்சிஒன்றியத்துணைவேளாண்மை அலுவலரையோ அல்லது கிராமச் சேவகரையோ அடிக்கடி கலந்து ஆலோசனை பெற்று அவர்கள் கூறும் சாகுபடி முறைகளைத் தவறாமல் செய்து ஏக்கருக்கு 45 கலம் நெல் மகசூல் பெறலாம்.

**வினா:**—மாசிப் பட்டத்திற்கு ஏற்ற சிறந்த பருத்தி ரகம் எது?

—ஆர். தியாகராசன்,
திருப்பூர் (அஞ்சல்),
கோவை மாவட்டம்.

**விடை:**—மாசிப் பட்டத்திற்கு ஏற்ற சிறந்த பருத்தி ரகமாக எம். சி. யு. 4 விளங்குகிறது. இது ஏக்கருக்கு 8 முதல் 10குவிண்டால் பருத்தி மகசூல் கொடுக்கிறது. இந்த ரகத்தைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடியுமாதலின், விற்பனைக் கூடங்களில் இந்த ரகம் நல்ல விலைக்குப் போகிறது. எனவே மாசிப்பட்டத்தில் எம். சி. யு. 4 ரகப் பருத்தியைப் பயிரிடுவதே சிறந்தது.

**வினா:**—பிப்ரவரி-மார்ச்சு மாதத்தில் இறைவையில் எச்.பி. 3 கம்பு பயிரிடலாமா? ஏக்கருக்கு எவ்வளவு விதையை நிலத்தில் நாற்று விட வேண்டும்?

—மு. அருணாசலம்,
பெரம்பலூர்,
திருச்சி மாவட்டம்.

**விடை:**—பிப்ரவரி-மார்ச்சு மாதங்களில் எச்.பி. 3 கம்பு ரகத்தை இறைவையில் பயிரிடலாம். ஒரு ஏக்கர் எச்.பி. 3 கம்பு பயிரிட 1 கிலோ விதையை, 3 செண்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும்.

**வினா:**—எங்கள் கிராமத்தில் ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய நெற்பயிர்களுக்குச் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் கொள்ளைநோய் தாக்கியுள்ளது. நாங்கள் சின்னமனூர் துணை வேளாண்மை அலுவலர் அவர்களின் ஆலோசனைப்படி மூன்றுதடவை'பாரத்தியான்-டைத்தேன், டெம்க்ரான் டைத்தேன், பாரத்தியான்-டைத்தேன் மருந்து அடித்தும் இந்தக் கொள்ளைநோய் தாக்கியுள்ளது. ஆகையால் எங்கள் கிராமத்தில் இந்த நோய் வராமல் தடுக்க என்ன மருந்து அடிக்கவேண்டும்?

—இராமநாதன்,
அமைப்பாளர்,
உழவர் ஆய்வு மன்றம்,
சின்னமனூர்,
மதுரை மாவட்டம்.

**விடை:**—'கொள்ளை நோய்' (Blast) என்பது ஒரு வகைப் பூஞ்சாளத்தால் ஏற்படுகிறது. இந்நோயைத் தடுப்பதற்குக்குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட மருந்தினைத் தெளிப்பதே சிறந்தது. தங்கள் துணை வேளாண்மை அலுவலர் பொதுவாகப் பூச்சிகளும், நோய்களும் வராமல் தடுப்பதற்கான முன் தடுப்பாகவே, பூச்சி மருந்துகளையும், பூஞ்சாள மருந்துகளையும் கலந்து (தாங்கள் கூறியுள்ளபடி) 3 முறை தெளிக்கச் சொல்லியிருப்பார். அப்படித் தெளித்தும் கொள்ளை நோய் வந்து தாக்கியுள்ளதென்றால், பாரத்தியான், டெமக்ரான் போன்ற பூச்சி மருந்துகளையும், டைத்தேனையும் கலந்து தெளிப்பதால் பயன்படாது. கொள்ளை நோயைக் கட்டுப்படுத்த, பின் கண்ட அளவில் பூஞ்சாள மருந்துகளைத் தெளிப்பதே மிகவும் சிறந்தது.

'ஹைனோசான்' (Hinosan) மருந்தில் ஏக்கருக்கு 300 மில்லி லிட்டர் அல்லது டைத்தேன் மருந்தில் 400 கிராம் எடுத்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளித்தால் கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தலாம். செரசான்—சுண்ணாம்புக் கலவைத் தூளை ஏக்கருக்கு 6 முதல் 10 கிலோவரை தூவியும் கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தலாம். குமான் அல்லது சிராம் என்ற மருந்தில் 200 கிராம் வீதம் எடுத்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தும் கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தலாம்.

கொள்ளை நோய் தங்கள் கிராமத்தில் தொடர்ந்து தோன்றிவருவதால், இதைத் தடுக்க நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக ஒரு தடவையும், நடவு செய்த பிறகு 15 முதலில் 20 நாட்களுக்குள் இரண்டாம் தடவையும் தொண்டைக் கதிர் தருணத்தில் மூன்றும் தடவையும் ஆக 3 முறை தவருமல் மேற்கூறிய மருந்துகளில் ஒன்றைத் தெளிக்க வேண்டும். பூச்சி மருந்துகளுடன் பூஞ்சாள மருந்தைக் கலந்து தெளித்தாலும் மேலே குறிப்பிட்டுள்ள மருந்துகளின் அளவு குறையாமல், பரிந்துரைக்கப் பட்ட அளவிலேயே தெளிக்க வேண்டும்.

கொள்ளைநோயை ஏற்படுத்தும் பூஞ்சாளம் 'புல்' பூண்டுகளிலும் வாழுமாதலின் வரப்புகளில் உள்ள புல் பூண்டுகளிலும் மருந்து தெளித்தல் வேண்டும். மணிச்சத்து, சாம்பல் சத்து போடாமலோ அல்லது குறைவாகவோ போட்டு தழைச்சத்தை மட்டும் குறிப்பிட்ட அளவிலோ அல்லது அதிகமாகவோ இட்டால் கொள்ளை நோய் பரவுவதற்கு ஏதுவாகும். எனவே, வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் அளவில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகளை இடவேண்டும். கொள்ளை நோய் தாக்கிய நெற்பயிர்களிலிருந்து கிடைத்த தானியங்களை விதைக்காகப் பயன்படுத்தக் கூடாது. அவ்விதைகளையே பயன்படுத்துவதெனில் வெந்நீர் சிகிச்சை செய்து பின்பு, முளைக்கச் செய்வதே சிறந்தது. வெந்நீர்ச் சிகிச்சை சிரமமான செயலாதலின் வேளாண்மைத் துறையிலிருந்து புதிதாக விதைகளை வாங்கி நாற்று விடுவதே சிறந்தது.

**வினு**—மேச்சேரி, கீழக்கரிசல் போன்ற மிகுபயன் (வீரிய) ஆடுகள் வளர்க்க விரும்புகின்ருேம். அவை எங்குக் கிடைக்கும்? பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது? 'கோ—1' பப்பாளி விதை எங்குக் கிடைக்கும்?

ப. இரேணுகாதேவி,
12, விநாயகர் பாளையம்
தரங்கம்பாடி, தஞ்சாவூர்
மாவட்டம்.

**விடை**—'மேச்சேரி' இன ஆடுகளை, சின்னச்சேலம், ஓசூர், ஆகிய இடங்களில் உள்ள ஆட்டுப் பண்ணைகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். 'கீழக்கரிசல்' இன ஆடுகளைச் செட்டிநாடு, ஆட்டுப் பண்ணையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். உயர்ந்த இன ஆட்டுக் கடாக்களைக் கொண்டு சாதாரண இன ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்காகக் கால்நடைப் பராமரிப்புத் துறை ஆட்டுக்கடாக்களை மட்டுமே விற்பனை செய்கின்றன. உங்களுக்குத் தேவையான ஆட்டுக் கடாக்களைப் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் கால்நடை விரிவாக்க அலுவலர் அவர்களையோ அல்லது ஆணையாளரையோ அணுகி, விவரம் கேளுங்கள்.

'கோ-1' பப்பாளி விதை பெறக் கீழ்க்கண்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

பேராசிரியர்,
தோட்டக்கலைப் பிரிவு,
தமிழ்நாடு வேளாண்மைக்
கழகம், கோயம்புத்தூர்—3.

**வினு**.—எனக்குத் தொல் பொருள் ஆராய்ச்சிகளில் மிகுந்த ஆர்வம் உள்ளது. அதை முறைப்படிக் கற்க யாரிடம் தொடர்பு கொள்ள வேண்டும்?

ஆர். இளங்கோவன்,
45, பெருமாள் கோயில்
தெரு, கள்ளக்குறிச்சி,
தென்ஞர்க்காடு மாவட்டம்.

**விடை**—தொல் பொருள் ஆராய்ச்சியில் குறுகிய காலப் பயிற்சி தமிழ்நாடு அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையால் நடத்தப்பெறுகிறது. அப் பயிற்சியில் தாங்களும் பங்கு பெறுதல்நல்லது. தொல்பொருள் ஆராய்ச்சியில் பயிற்சி பெறப் பின்கண்டுள்ள முகவரிக்கு எழுதி விவரம் தெரிந்து கொள்ளலாம்.

திரு நாகசாமி,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை
3/4, தெற்கு கரைச்சாலை,
மந்தைவெளி, சென்னை—28.




**வினு**.—துணி வெளுக்கச் சோப்பு இங்கே' என்ற கட்டுரையில் பல விளக்கங்களைத்தெரிந்து கொண்டேன். ஆனுலும் மூலப் பொருள்கள், சோப்பு அறுக்கும் மெசின், முத்திரையிடும் மெசின் ஆகியவைகளை வாங்குவதற்குரிய முகவரிகளைக் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் வெளியிட்டு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். 'தமிழரசு' சேவை என் போன்றவர்களுக்கு அதிகம் தேவையாதலின் கீழ்க் கண்டுள்ள கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள்.

(1) சோப்பு அறுக்க மிசின் எங்கு வாங்கலாம் ?

(2) சோப்பின் மேல் முத்திரை போடும் மெசினை எங்கு வாங்கலாம்.?

(2) சோப்புக்குத் தேவையான மூலப்பொருள்களை எங்கு வாங்கலாம் ? முகவரி தெரிவிக்கவும்.

—அ. நாகூர் பிச்சை,
சைல்ஸ் சோப் ஒர்க்ஸ்
மதுக்கூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை**—சோப்பு அறுக்கும் இயந்திரத்தைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ், கிண்டி, சென்னை 32-ல் செயல்படும் தச்சுக் கருமாரத் தொழிற் கூடத்தில் வாங்கலாம்.

சோப்பின் மேல் முத்திரை போடும் இயந்திரத்தைப் பின் கண்ட முகவரியில் வாங்கலாம்.

''பிரெஸ்டு மெட்டல்
புராடெக்ட்ஸ் ''
1/143, வால்டாக்ஸ் ரோடு,
சென்னை.

சோப்பு செய்வதற்குத் தேவையான மூலப் பொருள்களைக் கீழ்க்கண்டுள்ள முகவரிகளில் பெறலாம்:—

எண்ணெய்—உங்கள் ஊரிலேயே கிடைக்கும்.

சிலிகேட்—மரகதம் சிலிகேட் இண்டஸ்ட்ரீஸ், சென்னை-21.

காஸ்டிக் சோடா — மேட்டூர் கெமிக்கல்ஸ், மேட்டூர்.

ரோசின்—மண்டல விற்பனை நிலையம், ஈரோடு.

விறகு—உங்கள் ஊரிலேயே கிடைக்கும்.






சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிறுநீரகப் பிரிவு, திறக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இதனைத் திறந்து வைத்துள்ளார்.

சிறுநீரக, கருவக நோய்ப் பிரிவில் செவ்வாய் வியாழன் ஆகிய இரண்டு நாட்களிலும் நோயாளிகளைச்சோதித்துச்சேர்த்துக் கொள்கிருர்கள். சிகிச்சையளித்த பிறகு ஓராண்டுக்கும் மேலாக அவர்களது உடல் நல முன்னேற்றத்தைக் கவனித்து வருகின்றனர்.

சிறுநீரகம், கருவகம் ஆகியவற்றில் ஏற்படும் உருக்கி நோய், மலட்டுத் தன்மை, சிறுவர்களுக்கும், பெரியோருக்கும் சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் தடை போன்ற பல்வேறு நோய்களை எளிய அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்துகின்றனர்.

இச் சிறுநீரகப் பிரிவின் முதல்வராகப் பணியாற்றும் டாக்டர் டி. ஜகதீசன், எம்.பி.பி.எஸ்., எம்.சி.எச்., ஆஸ்திரேலியாவுக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெற்றவர். கொழும்புத் திட்டத்தின்கீழ் சிறப்புப் பட்டம் பெற்றவர். பிரிட்டிஷ் சிறுநீரக மருத்துவர் கழகத்தின் உறுப்பினராகவும் இருக்கிருர். அவரது குழுவில் டாக்டர்கள் எ. எம். சத்தியநாராயணு, என். ராமமூர்த்தி, ஆர். என். சுஜீர், ஏ. ஜெயமணி, சம்பந்தம் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

1971–72ஆம் ஆண்டில் 1,100 நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. அதில் 800 பேருக்கு அறுவைச் சிகிச்சையளிக்கப்பட்டது.

சிறுநீர்ப்பையின் தொடக்கத்தில் அதனைச் சுற்றியுள்ள ஒரு சுரப்பி பெரிதாகி விடுவதால் பலர் தொல்லைக்கு ஆளாகின்றனர். பொறுப்பும் புகழும் வளமை கொண்டு வாழ வேண்டிய 40 வயது முதல் 50 வயது வரை உள்ள கால கட்டத்தில் இந் நோய் வருகிறது.

சிறுநீர்ப்பையில் கல் வளர்வது சரியான சத்துணவு பெற முடியாத ஏழைகளுக்குத் தான் அதிகம் என்று டாக்டர் ஜகதீசன் கருதுகிருர். அவரது கருத்துக்கள் இங்கே கட்டுரையாக ஆக்கம் பெற்றிருக்கிறது.

சிறுநீரக அமைப்பும் (Urological System) நல்லின்ப நல்வாழ்வுக்கு நலம் சேர்க்கும் உடற்கூறுகளில் ஒன்ருகும். உடலின் வேறு சில முக்கிய உறுப்புக்களைப் போலவே இதுவும் இன்றியமையாதது.

சிறுநீரகத்

தாலோ ஏற்படலாம். வீக்கம் ஏற்பட்டு அதைத் தொடக்கத்திலேயே கண்டுபிடித்துக் குணப்படுத்தாவிட்டால் மரணம் நேரலாம்.

சிறுநீரக நோய் பற்றி அதிக அக்கறை காட்டப்படுகிறது. ஏனென்ருல் வாழ்வின் வசந்தத்தில் இருப்போர்க்குச் சிறுநீர்ப் பையிலிருந்து சிறுநீர்ப் பாதை (Tract) தொடங்கும் பகுதியில் வளையம் போன்று சுற்றியிருக்கும் சுரப்பி பெரிதாகி அவர்கள் அல்லற்படும் நிலை அதிகமாக இருக்கிறது. இப் படிப்பட்டவர்களுக்கு இரவில் படுக்கையிலேயே சிறுநீர் கழிந்து விடுவது உண்டு. இந்த அறிகுறி ஏற்பட்டால் உடனே கவனிக்க வேண்டும். மேலும் சில அடையாளங்கள் ஏற்படும் வரை காலங்கடத்தக் கூடாது. அதேபோல பெண்களுக்கும் எரிச்சலுடன் அடிக்கடி சிறுநீர் கழிவதும் உண்டு.

தொடரில் ஏதாவது ஒரு பகுதியில் கோளாறு ஏற்பட்டால் இரண்டு சிறுநீரகங்களுமே (Kidneys) பாதிக்கப்படலாம். அக் கோளாறு முற்றி விட்டால் உயிருக்கே ஆபத்து. சிறுநீர்ப் போக்கு வழியிலிருந்து திடீரென வலியுடனே வலி இல்லாமலோ இரத்தம் வடியத் தொடங்கி நோயாளியை அச்சுறுத்தும். இந்த இரத்தக் கசிவு சிறுநீர்ப் பையில் கல் உருவாகி விடுவதாலோ, வீக்கம் ஏற்படுவ

பாதையைச் சுற்றியுள்ள சுரப்பியில் ஏற்படுகிற நோயினுல் இது உண்டாகிறது. சிறுநீர்ப் பாதை சுருங்கி விடுவதால் தொல்லை ஏற்படுவதுண்டு.

நான்கு அல்லது ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் படுக்கையில் சிறுநீர் கழித்தால் அதைக் கவனிக்காமல் விட்டு விடக் கூடாது. சிறுநீர்ப் பாதையில் அல்லது சிறுநீர்ப் பையின் கீழ்வாயில் ஏதாவது தடுப்பு ஏற்பட்டிருக்கிறதா என்று கண்டுபிடிக்க வேண்டும்.



**ஸ்டான்லி மருத்துவ மனையின் சிறுநீரகப் பிரிவிலுள்ள ஒரு கருவியை மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பார்வையிடுகிறுர்கள்.**

**சிறுநீரகப் பாதையில் தடைகளாக வளரும் தசைப்பகுதியைநீக்கும் கருவி இது. உடலை அறுக்காமலே, சிறுநீர்ப் பாதைவழியாகவே இக் கருவியைச் செலுத்தி தடையாக வளரும் தசைகளை நீக்கமுடியும். விலை உயர்ந்த இக்கருவியைக் கையாளத் திறமைமிக்க மருத்துவர் தேவை. செயற்கைச் சிறுநீர்ப்பையினுள் இக் கருவி இயங்கும் முறையை அமைச்சருக்கு விளக்கிக் காட்டுகிறுர் டாக்டர் ஜகநீசன்.**

சிறுநீரகத்தில் கோளாறு ஏற்பட்டுச் சிறுநீர்ப் பாதையில் தடை ஏற்படும்போது சிறுநீரகத்தை நீக்க வேண்டியது வரும். ஆனுல் சிறுநீரகமே இல்லாமல் இருப்பதைவிட அதன் பகுதியாவது உடலில் இருப்பது நல்லது. ஆகவே பிளாஸ்டிக் அறுவை மேற்கொள்ளப்படுகிறது. உலகெங்கும் இந்த அறுவை முறை பரவலாகச் செய்யப்படுகிறது.

நல்ல உணவையும், உடல் நலத்தையும் பேணும் உறுதிகளையும் நாம் பெற்றுக் கொண்டாலும், கருவக-சிறுநீரகத் தொடரில் உருக்கி நோய் வருவது வழக்கம். இந் நோய்வந்தநும் அவசரப்பட்டு அறுவை மூலம் அப்பகுதியை நீக்கி விடும் முயற்சியை மேற் கொண்டு விடக்கூடாது. ஓராண்டு அல்லது ஒன்றரை ஆண்டுக் காலச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்தலாம் அல்லது மிகச் சிறிய அறுவை மூலம் குணப்படுத்தலாம்.

சிறுநீர்ப் பையில் கல் உருவாவது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவாக ஏற்படுகிற நோயாகும். கல் உருவாக்கும் தன்மை சில உடல்களில் தனிப்பட இருந்தாலும் நமது மாநிலத்தில் சில மாவட்டங்களில்இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. அதற்கு அம் மாவட்டங்களில் குடிநீரில் உள்ள சில இயற்கைக் குணங்கள் எனக் கருதப்படுகிறது. இது பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி உருவாகும் கல்லை அறுவை மூலம் நீக்கியோ தானுக வெளி வரும்போதோ எடுத்து அதில் என்னென்ன இயற் பொருட்கள் கலந்துள்ளன என்பதைக் கண்டறிந்தால் அது மீண்டும் ஏற்படாமல் தடுக்கலாம்.

மக்கள் தொகை பெருகி வரும் இக்காலத்தில் கூடப் பிள்ளைப் பேறு இல்லையே என்று ஏங்குகிற நிலையும் சிலருக்கு ஏற்படுகிறது. பிள்ளைப் பேறின்மை மனிதன் தோன்றிய காலந் தொட்டு இருந்து வருகிறது. ஆகவே பிள்ளைப் பேற்றுக்காக மந்திரத்தையும் மாயாஜால வித்தைகளையும் நம்பி மக்கள் ஏமாந்து வந்திருக்கின்றனர். பிள்ளைப் பேறில்லாத மலட்டுத் தன்மை பெண்களுக்கு மட்டுமே இருப்பதாக நினைத்துப் பெண்களை மட்டுமே மருத்துவமனைக்கு அனுப்புகின்றனர். மருந்து சாப்பிட்டு மாற்றம் பெற முயல்கின்றனர். ஆண்கள் தான் அந்நிலையில் அதிகமாக இருக்கிறுர்கள் என்பதை இன்று கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பிள்ளைப் பேறின்மைக்குப் பெண் மட்டும் பொறுப்பென்று தட்டிக் கழித்து விடக்கூடாது. பிள்ளைப் பேறு இல்லாத ஆண்களையும் சோதித்துச் சிகிச்சையளிக்கப் படுகிறது. அத்நுடன் அறுவை மூலம் கருத்தடை செய்து கொண்ட ஆண்களுக்குக் கருத்தரிக்கும் சக்தியை மீண்டும் பெற்றிடச் செய்ய முடிகிறது.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, அது இயங்காவிட்டால் நோயாளி மரணமடைய நேரிடும். இப்படிப்பட்ட நோயாளிகளை வேறெுரு சிறுநீரகத்தை இணைப்பது மூலம் காப்பாற்ற முடியும். இம்முறை நம் நாட்டில் வெற்றி பெற வேண்டுமானுல், பழுதின்றித் தொடர்ந்து இயங்கக்கூடிய செயற்கைச் சிறுநீரகம் (Artificial Kidney) தேவை. அதை இயக்குவதற்கு வெளிநாடுகளில் பயிற்சி பெற்று வந்திருக்கும் மருத்துவர்களின் திறமையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சிறுநீரகத் தொடர்பு பற்றிய நோய்களின் ஆராய்ச்சியும், சிகிச்சையும் பால் நோய் வல்லுநர்களிடமே (Venerialogist ) இருந்து வந்தது. ஆனுல் இப்போது அது சிறுநீரக மருத்துவ வல்லுநர்களிடம் பிரித்து ஒப்படைக்கப்பட்டு விட்டது.



# பயிர்களைக் காப்போம்! பசிப்பிணி போக்குவோம்!

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்று பைந்தமிழ் மொழியின் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றுன மணிமேகலை கூறுகிறது. உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் அரும்பணியில் தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் மனமுவந்து ஈடுபட்டுள்ளார்கள்.

பெருகிவருகின்ற மக்கள் தொகைக்குத் தேவையான ஊட்டச் சத்துள்ள உணவுப் பொருள்களையும், வளர்ந்து வரும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற குறிக்கோளுடன், தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களுக்குத் தேவையான ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அளித்து வருகிறது.

நாட்டு மக்களின் நன்மைக்காகவும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் ஓயாது உழைத்து வரும் உழவர் பெருமக்களுக்கு எதிராகப் பூச்சிகளும், நோய்களும், நுண்ணுயிர்களும் (பேக்டீரியா), நுண்ணிய அங்ககக் கிருமிகளும் (வைரஸ்), புல்லுருவிகளும் (பூக்கும் செடிகள்), விலங்கினங்களும் இடையறாத தொல்லைகளைக் கொடுத்து வருகின்றன. சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமானுல் உழவர் பெருமக்களின் உழைப்பைப் பாழ்படுத்தும் முக்கிய எதிரிகளாகப் பூச்சிகளும், நோய்களும் விளங்குகின்றன.

'' வயல் '' என்னும் போர்க்களத்திலே, '' உற்பத்திப் பெருக்கம் '' என்னும் வெற்றியைக் காண, '' உழவர்கள் '' என்னும் படைவீரர்கள் ஒரு மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்றுல் மிகையல்ல !

ஆம் ! பூச்சிகள், நோய்கள் என்னும் பயிர் அழிக்கும் பகைவர்களுடன் போராடி வருகின்றுர்கள்.

ஆனுல், இந்தப் போராட்டம்வெற்றி தோல்வி காணமுடியாத நெடுநாளைய போராட்டமாகவே இருந்து வருகிறது !

பூச்சிகள், நோய்கள் என்ற பகைவர்களால் இந்திய உழவர் பெருமக்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் கொஞ்ச நஞ்சமல்ல ! நினைத்தாலே நெஞ்சம் வேதனைக்குள்ளாகிறது !

* இன்றுள்ள நிலையில் ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு தானியங்களைப் பூச்சிகளும், நோய்களும் நட்டப்படுத்துகின்றன.

* மொத்த விளைச்சலில் 10 முதல் 20 சத அளவைப் பூச்சிகளும், நோய்களும் பாழ்படுத்துகின்றன. இவ்வாறு பூச்சிகளாலும், நோய்களாலும் ஏற்படும் சேதத்தை 10 சதம் என்று குறைந்த அளவிலேயே கணக்கிட்டாலும், ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 80 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் நட்டமாகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

* நமது நாட்டில் உள்ள எலிகள் மட்டும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 2½ இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களைத் தின்பதோடல்லாமல், பயிர்களைச் சேதப் படுத்தி நாசம் செய்கின்றன.

எனவே, பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்தினுல் ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு தானியங்களைச் சேதமடையாமல் காப்பாற்றி, நமது நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அந்த 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள 80 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களைக் கொண்டு சமநிலை உணவுத் திட்டப்படி ஒருவருக்கு ஒரு நாளைக்கு 515 கிராம் உணவு தானியங்கள் என்ற அடிப்படையில் உணவு வழங்கினுல், 4,25,53,191 பேர்களுக்கு (வயது வந்தவர்கள்) ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பசிப்பிணி போக்க இயலும். எனவே பல மாநிலங்களில் உணவுப் பற்றுக்குறை நிலவும் இந்நேரத்தில், பூச்சிகள், நோய்களின் தாக்குதலில் இருந்து பயிர்களைப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

பூச்சிகளாலும், நோய்களாலும், எலிகளாலும் இத்தகைய மாபெரும் நட்டம் ஏற்படும் என்று எண்ணியே, இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர் '' ஏரினும் நன்றும் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு '' என்று பயிர்ப் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.



இதிலிருந்து உழுது, பரம்படித்து, நாற்று நட்டு, தண்ணீர்ப் பாய்ச்சி, களையெடுத்து விட்டால் மட்டும் பயிர் விளைந்து விடாது என்பதும், பூச்சிகள், நோய்கள், எலி முதலிய விலங்குகள் ஆகியவைகளின் தாக்குதலால் பாதிக்கப்படாதிருக்கப் பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பதும் புலனுகின்றன.

நமக்கு சிறு அளவில் தலைவலி வந்தாலும், உடனே மருந்துகளை நாடுகிறோம் ; மருத்துவர்களைத் தேடி ஓடுகின்றோம்! ஆனால், உண்ண உணவையும், உடுக்க உடையையும், இன்னபிறவற்றையும் கொடுக்கும் பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் தாக்கினால், நம்மில் பலர் வாளாயிருந்து விடுகின்றோம்.

பூச்சிகளும், நோய்களும் தோன்றி பயிர்களைத் தாக்குவதற்கு முன்பாகவே, தடுப்பு முறையாக ( Prophylactive Measures ) மருந்து தெளிக்குமாறு வேளாண்மைத் துறையினர் கூறி வந்தாலும், பூச்சிகளும், நோய்களும், தோன்றிய பின் மருந்து தெளித்துக் கொள்ளலாம் என்று வாளாயிருந்துவிட்டு, பயிர்களைத் தாக்கிய பின்பு அவைகளைப் போக்க முடியாமல் அவதிப்படும் உழவர்கள் பலர் உள்ளனர்.

இத்தகைய உழவர் பெருமக்களும் " வருமுன் காப்பதே, வந்தபின் காப்பதிலும் மேல் " (Prevention is better than cure) என்ற பழமொழிக் கேற்ப, பூச்சிகளும், நோய்களும் தாக்கினாலும், தாக்காவிட்டாலும் குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட பக்குவத்தில், பயிர்ப் பாதுகாப்புப் பணிகளைச் செய்வதே உழவர்களின் உயர்விற்கும், நாட்டின் செழிப்பிற்கும் துணை செய்யும்.

இதுவரை கூறியவைகளிலிருந்து உழவர் பெருமக்கள் பயிர்ப் பாதுகாப்பின் இன்றியமையாமையை உணர்ந்து கொண்டிருக்க முடியும் என்று நம்புகின்றோம்.

அடுத்து, உழவர்களின் பகைவர்களாக உள்ள பூச்சிகள், நோய்கள், எலிகள் ஆகியவற்றின் சக்தியையும் புரிந்து கொள்ள வேண்டும். மற்றெல்லாவற்றையும் விட பூச்சிகளே பெருமளவில் தீங்கு விளைவிப்பதால் பூச்சிகளைப்பற்றி முதலில் புரிந்து கொள்ள வேண்டும். போரில் பகைவர்கள் கூரிய கத்தியும், கவசமும், கொண்டு போரிடுவதுபோல், இயற்கையிலேயே பல தடுப்பு சாதனங்களைப் பூச்சிகள் பெற்றுள்ளன. எனவேதான், பூச்சிகள் தந்திரமாகவும், வெகு சாமர்த்தியமாகவும் உழவர்களுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றன. ஆகவே, பூச்சிகளைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளுங்கள்



## பூச்சிகளைப்பற்றி புரிந்துகொள்ளுங்கள்

குறுகிய காலத்தில் பெருமளவில் இனப் பெருக்கம் செய்யும் சக்தியைப் பூச்சிகள் கொண்டிருப்பதால் உழவர் பெருமக்கள் மேற்கொள்ளும் எல்லா பயிர்ப்பாதுகாப்பு முயற்சிகளையும் வீணாக்கிவிடுகின்றன. உழவர்களின் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தப்பி ஒரு பூச்சி உயிர் வாழ்ந்துவிட்டாலும், அது விரைவில் பல்லாயிரக் கணக்கான பூச்சிகளை உற்பத்தி செய்து விடுகிறது. இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டு நிலக்கடலையில் தோன்றும் சிவப்பு கம்பளிப் பூச்சியாகும்.

ஒரு சில பூச்சி இனங்கள் ஒரே நாளில், பல மைல் தூரம், கடந்து செல்லும் சக்தியையும் பெற்றிருப்பதால், (வெட்டுக்கிளி போன்றவை) வழி நெடுகக் காணப்படும் பயிர்களை அழித்துக் கொண்டே சென்று விடுகின்றன. போர் முனையில் தோற்று ஓடுகின்றவர்கள் வழியில் காணும் பொருட்களையெல்லாம் சேதப் படுத்திச் செல்வது போல் பூச்சிகளும் செய்துவிடுகின்றன.

" உழவர்கள் " என்னும் போர் வீரர்களின் தாக்குதலிலிருந்து தப்பிக்க, " பூச்சிகள் " என்னும் " பகைவர்கள் " ' புற்று ' என்னும் ' கோட்டைகள் ' அமைத்து, அவைகளில் புகுந்து கொள்கின்றன.

சிலப் பூச்சிகள் மறைவிடங்களில் மறைந்து வாழ்வதுடன், திருடர்கள் பகலில் மறைந்து இருந்து, இரவில் வெளிவந்து திருடுவது போல், பகலில் மண்ணிற்குள் சென்று மறைந்து



இருந்து விட்டு, இரவில் வெளியே வந்து பயிர்களைத் தாக்குகின்றன.

சில பூச்சிகள் கண்களுக்குப் புலப்படாத அளவுக்கு மிகவும் நுண்ணியதாக இருப்பதால், உழவர்களின் கண்களுக்குப் புலப்படாமல் பயிர்களில் வாழ்ந்து, பயிர்களின் சாற்றினை உறிஞ்சி, பயிர்களைத் தாக்கிவிடுகின்றன.

உயர்விளைச்சல் ரகங்கள் தோன்றிய பின்பு அதிக அளவில் உரமிடப்படுவதாலும், பல பயிர் செய்யப்படுவதாலும், முறையே பூச்சிகள் தோன்றவும், தொடர்ந்து உயிர் வாழவும் வழி பிறந்துள்ளது. இவ்வாறு பல்வேறு இயற்கை அனுகூலங்களைப் பெற்றுள்ள பூச்சி



கள் பின்கண்டுள்ள முறைகளில் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றன.

1. பயிர்களின் இலை (தோகை), தண்டு, காய், பழம் ஆகியவைகளைச் சுவைத்து உண்கின்றன.

2. பயிர்களின் இலை, தண்டு, இளம் மொட்டுகள், பழங்கள் ஆகியவைகளில் உள்ள சாற்றினை உறிஞ்சி விடுகின்றன.

3. குறுத்துப் புழு போன்றவை பயிர்களின் பாகங்களைத் துளைத்து நாசம் செய்துவிடுவிடுகின்றன.

4. கறையான் போன்றவை பயிர்களின் வேர்களைத் துளைத்து சாகடிக்கின்றன.



5. சில பூச்சிகள், உணவிற்காகப் பயிர்களைத் தாக்குவதுடன், பல விரோதிப் பூச்சிகளைச் சுமந்து வந்து பயிர்களில் புகுத்திவிடுகின்றன.

6. பூஞ்சாள நோய், வைரஸ் நோய் ஆகியவைகளைப் பரப்பும் கிருமிகளையும் பூச்சிகள் சுமந்து வந்து பயிர்களில் பரவச் செய்கின்றன.

7. ஒரு சில பூச்சிகள் உணவிற்காகப் பயிர்களைத் தாக்காவிட்டாலும், தங்குமிடம் தேடி அலையும்பொழுது பயிர்களின் விரோதிகளைப் பரப்பி நாசம் விளைவிக்கின்றன.

மேற்கூறிய வகைகளில் பொதுவாகப் பூச்சிகள் சேதம் விளைவிக்கின்றன. ஆனால் ஒவ்வொரு வகைப் பூச்சியும் ஒவ்வொரு வகையில் சேதம் விளைவிக்கின்றன. சில வகைப் பூச்சிகள் புழுப் பருவத்தில் (இளமைப் பருவம்) மட்டுமே தீங்கிழைக்



கின்றன. சில வகைப் பூச்சிகள் முதிர்ந்த பருவத்தில் ( Adult Stage ) மட்டுமே சேதம் ஏற்படுத்துகின்றன. சில வகைப் பூச்சிகள் இளமைப் பருவம், முதிர்ந்த பருவம் ஆகிய இரு பருவத்திலும் பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்துகின்றன. பல்வேறு வகைப் பூச்சிகளால் ஏற்படும் சேதம் பின்கண்டுள்ளபடி அமைந்துள்ளன.

### பூச்சிகள் விளைவிக்கும் சேதத்தின் வகை.

**புழுக்கள்:**— வண்ண வண்ண இறக்கைகளுடன்பகலிலே பறந்து திரியும் எண்ணற்ற வண்ணத்துப் பூச்சிகள், இரவிலே பறந்து திரியும் அந்துப் பூச்சிகள், ஈக்கள், வண்டுகள் ஆகியவற்றின் இளமைப்பருவம் புழு உருவில் உள்ளது. (முதிர்ந்த பூச்சிகள் இனவிருத்தி மட்டுமே செய்கின்றன. அவைகளால் நேரடியாகப் பயிர்களுக்குப் பெருந்தீங்கு ஏற்படுவதில்லை). இளம்பருவப் புழுக்கள் இலையைச் சுரண்டியும், கடித்தும், குருத்தினுள் புகுந்து கொண்டும், குருத்தை அரித்தும் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றன. சிவப்புக் கம்பளிப் புழு நிலக்கடலையைப் பெருமளவில் தாக்கக்கூடியது.



**பேன்கள் :**—இளம் குஞ்சுகளுக்கு இறக்கை இருக்காது. முதிர்ந்த பேன்கள் இறக்கையுடன் இருப்பதுடன், பறந்து செல்லக்கூடியவை. இவ்விரு வகையுமே பயிர்களின் சாற்றை உறிஞ்சி தீங்கிழைக்கின்றன.

**தத்துப்பூச்சிகள்:**— தத்தி தத்தி, குதித்துச் சென்று, இலை, தண்டு முதலிய வற்றின் சாற்றை உறிஞ்சி விடுகின்றன. இவைகளின் இளங் குஞ்சுகள் ஊர்ந்து சென்று பயிர்களின் சாற்றை உறிஞ்சி விடுகின்றன.

**மாவுப் பூச்சிகள்:**—இவைகள் வெண்மையாகவும், சிறு சிறு முட்டை போன்றும், மாவு போன்ற ஒருவகைப் பொருளால் மூடப்பட்டும் காணப்படும். இவைகளால் பறக்க முடியாது. ஆயினும் நீரில் மிதந்தும், ஊர்ந்தும் செல்லக்கூடியவை. இவை பயிர்களின் சாற்றை உறிஞ்சி, சாகடிக்கின்றன.



**நாவாய்ப் பூச்சிகள்:**—இறக்கையுடன் கூடிய நாவாய்ப் பூச்சிகள் பறந்து சென்று பயிர்களின் சாற்றை உறிஞ்சி விடுகின்றன. அதுவும் குறிப்பாக கதிர்களில் பால் பிடித்து தானிய மணிகள் உருவாகும் பருவத்தில்நாவாய்ப் பூச்சிகள் பெருமளவில் தாக்கி பாலை உறிஞ்சி, பதராக்கி விடுகின்றன.

**வெட்டுக் கிளிகள்:**— இவை தாவிச் செல்லக்கூடியவை. இவை கூட்டங் கூட்டமாக இடம்விட்டு இடம் சென்று தீங்குவிளைவிக்கும். இளம் வெட்டுக் கிளிகளும், முதிர்ந்த வெட்டுக்கிளிகளும் பயிர்களின் தோகையைக் கடித்து பெருமளவில் தேசம் விளைவிக்கக் கூடியவை.

**சிலந்திப் பூச்சி:**—இவை மஞ்சள் நிறமாகவும், கூட்டங் கூட்டமாகவும் இலைகளின் அடிப்பாகத்தில் காணப்படும். இச்சிலந்திப் பூச்சிகள் இலைகளின் பசுமையான பாகத்தைச் சுரண்டி சாப்பிட்டு விடுவதால் பயிர்களின் தோகைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

மேற் கூறிய வகைகளில் பூச்சிகள் சேதம் விளைவிப்பதால், பூச்சிகளின் தாக்குதலிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற, பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

பயிர்ப் பாதுகாப்பில் ' இயற்கை முறை', 'செயற்கை முறை' என இருவகைகள் உள்ளன. மனித முயற்சியின்றி, காலநிலை (சிதோஷ்ணம்), பகைப் பூச்சிகள் முதலியவற்றால் இயற்கையிலேயே பயிர்ப்பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதுவே ' இயற்கை முறை ' என்று கூறப்படுகிறது. பருவ மாறுபாடு, தீவிர சாகுபடித் திட்டம், உயர் விளைச்சல். ரகங்களைப் பெரும் பரப்பில் பயிரிடுதல், அதன் காரணமாக பெருமளவில் தழைச்சத்து உரங்களை மட்டும் (மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களைத் தேவைக்கேற்ப இடாமல்) பயன்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக இயற்கையின் சமநிலை கெட்டுவிட்டதால், பயிர்களின் முதல்பகைவர்களான பூச்சிகளின் பலம் ஓங்கிவிட்டது. இவ்வாறு பூச்சிகள் பெருகுவதை இயற்கையே காலப் போக்கில் கட்டுப்படுத்தி விடும். ஆனால் அதுவரை நாம் வாளாயிருந்தால், நாட்டின் தேவைக்கேற்ற அளவில் உற்பத்தி கிடைக்காது ! எனவே, இயற்கையே பூச்சிகளைக் கட்டுப்படுத்திவிடும் என்று நாம் காத்திருக்கக் கூடாது : உடனடி

51


# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'

தபால் பெட்டி எண் : 226.

தொலைபேசி எண் : 20367, 20368, 20369

டெலக்ஸ் எண் : எம். எஸ். 7225.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

**வட்டி விகிதங்கள்**

| | | |
|---|---|---|
| நடப்புக் கணக்குகள் | .. (வருடத்திற்கு) | $\frac{1}{2}$% |
| சேமிப்புக் கணக்குகள் | .. | 4% |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்குகள் : ரூ. 1,000-ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

| | |
|---|---|
| 15 நாட்கள் .. | 2% |
| 46 நாட்கள் .. | 3% |

நிரந்தரக் கணக்குகள் : ரூ. 100-ம் அதற்கு மேலும்

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்கள் .. | $4\frac{3}{4}$% | 24 மாதங்கள் .. | $6\frac{3}{4}$% |
| 6 மாதங்கள் .. | $5\frac{1}{4}$% | 36 மாதங்கள் .. | $7\frac{1}{4}$% |
| 12 மாதங்கள் .. | $6\frac{1}{4}$% | 60 மாதங்கள் .. | $7\frac{1}{2}$% |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதைவிட $\frac{1}{2}$% கூடுதல் வட்டி தரப்படும்.

தொடர் கணக்குகள்

| மாதத் தவணை | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

கிளைகள் :—மயிலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர், காந்திநகர், ஷெனாய் நகர், கெல்லீஸ், சாந்தோம், கிரீன்வேஸ் ரோடு, மயிலாப்பூர்–குளம், அண்ணாசாலை (காமதேனு), சாஸ்திரி நகர், அசோக் நகர், அண்ணா நகர், அண்ணாசாலை (அண்ணா சிலை), ஜவஹர் நகர், நுங்கம்பாக்கம், பெஸன்ட் நகர்.

ஆர். கனகசபை, தலைவர்

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, அலுவல் தலைவர்.

டி. வர்தமானன், செயலர்




யாக செயற்கை முறைகளை மேற்கொண்டு பூச்சிகளைக் கட்டுப் படுத்த வேண்டும்.

பயிர்ப்பூச்சிகளை அழிக்கவும், அவைகள் வராமல் தடுக்கவும் பின் கண்ட செயற்கை முறைகளை முறையாகவும், காலத்திலும் கடைபிடிக்க வேண்டும்.

(1) பூச்சிகளைப் பிடித்து அழித்தல் (Mechanical Control).

(2) பகைப்பூச்சிகளை உற்பத்திசெய்து, வெளியே விடுவதன் மூலம் பூச்சிகளை அழித்தல் (Biological Control).

(3) இரசாயன மருந்துகள் மூலம் பூச்சிகளை அழித்தல் (Chemical Control).

(4) ஒரே விதமான பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்யாமல் மாற்றி, மாற்றி, வெவ்வேறு பயிர்களைச் சாகுபடி செய்தல், பயிரிடாமல் நிலத்தைத் தரிசாகப் போட்டுவிடுதல், வரப்புகளில் பூச்சிகள் தங்கியிருக்காமல் புற்களை அகற்றித் தூய்மையாக வைத்திருத்தல் போன்ற சாகுபடி முறைகளின் மூலம் பூச்சிகளை அழித்தல் (Cultural Control).

(5) குறிப்பிட்ட பயிர்களைக் குறிப்பிட்ட காலம் வரை பயிரிடக் கூடாது என்றும், கட்டாயமாக எல்லா இடங்களிலும் மருந்து தெளிக்க வேண்டும் என்றும் அரசாங்கமே சட்டம் இயற்றி பூச்சிகள் தோன்றுவதைத் தடுத்தல் (Legal Control).

மேற்கூறிய முறைகளில், இரசாயன மருந்துகள் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்துவதே எல்லாராலும் எளிதில் மேற்கொள்ளக்கூடியதாக அமைந்திருப்பதுடன் விரைவாகப் பலன் தரக்கூடிய சிறந்த முறையாக விளங்குகிறது.

## காவல்துறை பெற்ற பரிசு

**காவல்துறை அதிகாரிகளின் திறமை, தீரம் ஆகியவற்றைச் சோதிக்கும் 16–ஆவது அனைத் திந்தியப் போட்டியில், தமிழ் நாடு காவல் துறையினர் இந்த ஆண்டும் 'களத்திறன் முதன்மை' (சாம்பியன்சிப்) கேடயத்தைப் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டுக் காவல் துறையினர் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக 'சாம்பியன்சிப்' பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.**



பூச்சிகளைப் பிடித்து வளர்த்து அவைகளின் நடவடிக்கைகளை நன்கு ஆராய்ந்த பிறகே, அவைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய பல பூச்சிக் கொல்லிகள் கண்டு பிடிக்கப் படுகின்றன. பூச்சிக் கொல்லிகள் பின்கண்ட வகைகளில் பூச்சிகளுக்கு நஞ்சாக அமைகின்றன (அவைகளுக்கான எடுத்துக்காட்டுகளும் கொடுக்கப் பட்டுள்ளன).

(1) நேரடியாகத் தொட்டாலே தீங்கிழைக்கும்நஞ்சு (Contact poison)—கந்தகம்.

(2) வயிற்று நஞ்சு (Stomach poison)— 'சிங் பாஸ்பைடு'.

(3) பூச்சிகளினுடையதோல் மூலமாகவும், சுவாசிப்பதன் மூலமாகவும் மூச்சைத் திணற வைக்கும் நஞ்சு (Respiratory poison)—பாரத்தியான்.

(4) நச்சுப் புகையை வெளி விடும் நஞ்சு (Fumigant poison) —நூவான்.

(5) பயிர்களில் ஊடுருவி, பயிர்ச்சாறுடன் இரண்டறக் கலந்து நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று பூச்சிகளை அழிக்கும் நஞ்சு (Systemic poison) —'மெட்டாசிஸ் டாக்ஸ்'.

பொதுவாகப் பயிர்களைக் கடித்துச் சுவைத்து உண்ணும் பூச்சிகளுக்கு வயிற்று நஞ்சு மருந்துகளையும், பயிர்களின் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளுக்கு மூச்சைத் திணற வைக்கும் நஞ்சுகளையும், பயிர்களின் உள்ளே புகுந்து கொண்டு நாசம் செய்யும் பூச்சிகளுக்கு நச்சுப் புகையை வெளிவிடும் நஞ்சுகளையும் பயன்படுத்த வேண்டும்.



பூச்சிக் கொல்லிகளில் சில நேரடியாகத் தூவுவதற்கு ஏற்றதாகவும், பல தண்ணீரில் கலந்து தெளிப்பதற்கு ஏற்றதாகவும், உள்ளன. தற்பொழுது சில பூச்சிக் கொல்லிகள் குருணை வடிவில் உள்ளன. அவைகளை வயலில் தூவி, தண்ணீர் பாய்ச்சி, 3 நாட்கள் வரை அத் தண்ணீர் வெளியேறிவிடாமல் தடுத்து நிறுத்திவிட வேண்டும். அத் தண்ணீரைப் பயிர்கள் உறிஞ்சும் பொழுது, பயிரிலுள்ள பூச்சிகள் இறந்து விடுகின்றன.

தூவும் மருந்துகளை ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் தூவுதல் சிறந்தது.

தெளிக்கும் மருந்துகளைத் தகுந்த அளவு தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். கலக்க வேண்டிய தண்ணீரின் அளவு, தெளிப்பானைப் பொருத்ததேயாகும். சாதாரண கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் தேவையான மருந்தைக்



கலந்து தெளிக்க வேண்டும், விசைத் தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்க ஒரு ஏக்கருக்குத் தேவையான அளவு மருந்தை 40 முதல் 60 லிட்டர் தண்ணீரில் கலந்தால் போதுமானது. தெளிப்பானைப் பொருத்துத் தண்ணீரின் அளவு மாறுபடுமே தவிர மருந்தின் அளவு மாறுபடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பல்வேறு பெயர்களுடன், பல்வேறு பூச்சிக் கொல்லிகள் விற்பனையாவதால், அவைகளில் எதை, எந்த அளவில் பூச்சிக்கு, தூவுவது அல்லது தெளிப்பது என்று அறியாமல் உழவர் பெரு மக்கள் சங்கடப்படுகின்றார்கள். உழவர் பெரு மக்களின் சங்கடங்களைப் போக்கவே, தற்பொழுது விற்பனையாகிவரும் முக்கியப் பூச்சிக் கொல்லிகளையும், அவைகளை எந்தெந்தப் பூச்சிகளுக்கு, என்ன அளவில் தெளிக்க வேண்டும் என்பதையும் கீழே கண்டுள்ள அட்டவணைகளில் விளக்கப்பட்டுள்ளன.

## பழக்கத்திலுள்ள சில முக்கியப் பூச்சிக்கொல்லிகளின் பயன்கள்

### 1. தெளிக்கும் மருந்துகள்

| வரிசை எண். | மருந்தின் பெயர் (வாணிகப் பெயர்கள்.) | கட்டுப்படுத்தும் பூச்சிகள். | ஒரு ஏக்கருக்குத் தேவையான மருந்தின் அளவு (மில்லி லிட்டர்) | ஒரு ஏக்கர் தெளிப்பதற்கு கலக்க வேண்டிய தண்ணீரின் அளவு (லிட்டர்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பாரத்தியான் (பாலிடால், பாரமர், எகாடாக்ஸ், பாரத்தியான்.) | குருத்துப்புழு, படைப்புழு, சூரைப் பூச்சி, புகையான் பூச்சி, ஆனைக் கொம்பன், கம்பளிப் பூச்சி, மாவுப் பூச்சி, அசுவணி. | 200 | 200 |
| 2. | என்ட்ரின் (என்ட்ரின், என்டரக்ஸ்) | குருத்துப்புழு, பச்சைத் தத்துப்பூச்சி, நெற்பேன், தோகை வெட்டும் புழு, தண்டு துளைக்கும் புழு, காய்ப்புழு, அசுவணி. | 400 | 200 |
| 3. | பெனிட்ரோதயான் (சுமதியான்) | நெற்பயிரில் தோன்றும் எல்லரப் பூச்சிகளுக்கும் ஏற்றது. | 250 | 200 |
| 4. | என்டோசல்பான்(தையோடான்) | எல்லாப் பூச்சிகளுக்கும் ஏற்றது. | 300 | 200 |
| 5. | பாஸ்பாமிடான் (டெமக்ரான்). | ஷை | 110 | 200 |
| 6. | டைமிதியோட் (ரோகார்) .. | குருத்துப்பூச்சி, தத்துப்பூச்சி, குறிப்பாகச் சிவப்புப்பேன். | 250 | 200 |
| 7. | டி.டி.டீ. 50சதம் நீரில் கரையும் தூள். | இலை சுருட்டும் பூழு, சுருள் பூச்சி, தென்னை கருந்தலைப்புழு, மா மரத்துப் பூச்சி. | 1 கிலோ | 200 |
| 8. | பி.எச்.சி. 50 சதம் நீரில் கரையும் தூள். | வேர் அசுவணி, தண்டு துளைப்பான், சிவப்பு கம்பளிப் பூச்சி, தென்னை வண்டு, கரையான். | $1\frac{1}{2}$ கிலோ | 200 |
| 9. | கார்பரில் 50 சதம் (செவின்) .. .. | குருத்துப்புழு, காய்கறிப் பயிர்களில் காணும் பூச்சிகள், தத்துப் பூச்சிகள், காய்களைத் துளைக்கும் புழு. | 1 கிலோ | 200 |

### 2. தூவும் மருந்துகள்

| வரிசை எண். | மருந்தின் பெயர். | கட்டுப்படுத்தும் பூச்சிகள். | தூவுவதற்கு ஏக்கருக்குத் தேவைப்படும் அளவு (கிலோ). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பி. எச். சி. 10 சதத்தூள் .. | வெள்ளைத் தத்துப் பூச்சி, நெற்பேன், இலையைத் தின்னும் பூச்சிகள், புகையான் (பல்காரிட்), கதிர் நாவாய்ப் பூச்சிகள். | 10 |
| 2. | டி. டி. டீ. 5 சதத்தூள் .. | பச்சைத் தத்துப் பூச்சி, படைப்புழு, வெட்டுப் புழு, புள்ளி வண்டுகள், சுருள்பூச்சி. | 10 |
| 3. | லிண்டேன் 0.65 சதத்தூள் .. | காய்கறிப் பயிர்களிலும், பூச்செடிகளிலும் காணப்படும் பூச்சிகள். | 7 |
| 4. | கார்பரில் 10 சதம்(செவின்) .. | காய்களைத் துளைக்கும் புழுக்கள், இலைகளைத் தின்னும் புழுக்கள், வண்டுகள், தத்துப்பூச்சிகள். | 7 |

### 3. குருணைகள்

57

| வரிசை எண். | மருந்தின் பெயர். | கட்டுப்படுத்தும் பூச்சிகள். | பயன்படுத்தும் முறை. | ஏக்கருக்குத் தேவைப் படும் அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | எண்ட்ரில் 2 சதம். | நெல் மற்றும் சோளப் பயிர்களின் குருத்துப் புழுக்கள். | பாசன நீரில் கலக்க வேண்டும் அல்லது செடியில் தூவவேண்டும். | 4 முதல் 6 கிலோ. |
| 2. | டயாசினன் 5 சதம். | நெல் குருத்துப் புழு, ஆனைக் கொம்பன், மற்றும் இதரப் பூச்சிகள். | பயிர்களைச் சுற்றிலும் மண்ணில் தூவிக் கொத்தி விட வேண்டும். | 12 கிலோ. |
| 3. | போரேட் 10 சதம் (திமெட்.) | சோளத் தண்டு ஈ, சோளத் தண்டுப் புழு. | விதைப்பதற்கு முன்பு படைச்சாலில் ஒரு மீட்டர் நீளத்திற்கு 1·5 கிராம் வீதம் தூவவேண்டும். | 6 கிலோ. |
| 4. | ஃப்ருமின் 5 சதம் (சால்விரெக்ஸ்.) | உண்ணிகள், இலைப் பேன்கள், தத்துப் பூச்சிகள், சோளக் குருத்துப் பூச்சிகள். | விதைப்பதற்கு முன்பு படைச்சாலில் ஒரு மீட்டர் நீளத்திற்கு 3 கிராம் வீதம் தூவவேண்டும். | 12 கிலோ. |

குறிப்பிட்ட பூச்சிக்கு, குறிப்பிட்ட பூச்சிக் கொல்லியைக் குறிப்பிட்ட அடர்த்தியில் தெளிக்குமாறு வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கின்றனர். உதாரணமாக நெல் குருத்துப் பூச்சிக்கு 0·05 சத பாரத்தியான் அல்லது 0·04 சத என்ட்ரின் தெளிக்குமாறு கூறப்படுகிறது. இதுபற்றி தெளிவு ஏற்படுத்தவே, கீழ்க்கண்ட அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

### அடர்த்திற்கேற்ப, பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவும் தண்ணீரின் அளவும்

| வரிசை எண். | மருந்தின் பெயர். | தெளிப்பதற்குத் தேவைப்படும் மருந்துக் கலவையின் அடர்த்தி (சதவீதம்). | மருந்தின் அளவு. | மருந்துக் கலவைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் தண்ணீர் அளவு (லிட்டர்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பாரத்தியான் 50 சதவீதம் இ.சி. | 0·025 | 100 மி.லி. | 200 |
| | | 0·05 | 100 மி.லி. | 100 |
| 2. | பாலிடால் இ. 605 .. .. | 0·025 | 100 மி.லி. | 200 |
| | | 0·05 | 100 மி.லி. | 100 |
| 3. | என்ட்ரின் 50 சதவீதம் இ.சி. | 0·02 | 100 மி.லி. | 100 |
| | | 0·04 | 200 மி.லி. | 100 |
| 4. | பி. எச்.சி. 50 சதவீதம் .. | 0·05 | 1 கிலோ. | 110 |
| | | 0·1 | 2 கிலோ. | 110 |
| 5. | லிண்டேன் 6·5 சதவீதம் .. | 0·05 | 1 கிலோ. | 110 |
| | | 0·1 | 2 கிலோ. | 110 |
| 6. | டி.டி.டீ. 50 சதவீதம் .. | 0·1 | 1 கிலோ. | 500 |
| | | 0·2 | 2 கிலோ. | 500 |
| 7. | டயல்ட்ரின் 50 சதவீதம் .. | 0·1 | 1 கிலோ. | 500 |
| 8. | டயல்ட்ரின் 18 சதவீதம் .. | 0·02 | 100 மி.லி. | 100 |
| 9. | தயோமிடான் (எகாடின்) .. | 0·08 | 80 மி.லி. | 80 |
| | | 0·1 | 100 மி.லி. | 100 |
| 10. | பாஸ்போமிடான் (டெமக்ரான்) | 0·025 | 25 மி.லி. | 100 |
| 11. | கார்பரில் (செவின்) 50 சதவீதம் | 0·1 | 1 கிலோ. | 500 |
| 12. | மாலத்தியான் 50 சதவீதம் இ.சி. | 0·1 | 200 மி.லி. | 100 |
| 13. | மிதைல் டிமோடான் (மெட்டா சிஸ்டாக்ஸ்). | 0·1 | 100 மி.லி. | 100 |
| 14. | கார்போ பினுதியான் (ட்ரைதியான் 20 சதவீதம் இ.சி. | 0·6 | 300 மி.லி. | 100 |
| 15. | நீரில் கரையும் கந்தகம் .. | .. | 1 கிலோ. | 500 |
| 16. | ரோகார் .. .. | 0·5 | 100 மி.லி. | 200 |

மேலே அட்டவணைகளில் கூறப்பட்டுள்ளபடி பூச்சிகளுக்கு ஏற்ற மருந்தை, பரிந்துரைக்கப்பட்ட அளவில் தெளித்தல் அல்லது தூவுதலே பூச்சிகளைக் கட்டுப்படுத்தி மகசூலைப் பெருக்குவதற்குரிய நல் வழியாகும். எனவே, பயிர்ப்பாதுகாப்புப் பணிகளை உடனடியாக மேற்கொண்டு, பயன் அடையுமாறு தமிழ்நாடு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர்.எம்.







# ஒளி ஏற்றுவோம்!

"அடுப்பைப் பற்ற வைக்கணும், தீப் பெட்டியைக் காணோமே!" என்று அம்மா அடுக்களையிலிருந்து வெளியே வந்தாள்.

"தீப்பெட்டிதானே? அண்ணா வைத்திருப்பார். நேற்றே உன்னிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்..." என்றாள் திலகம்.

"என்ன? தீப் பெட்டியை உன் அண்ணன் வைத்திருக்கிறானா? அவனென்ன தீப் பெட்டிக் கடையா வைத்திருக்கிறான்? காஃபி போடத் தீப் பெட்டியைத் தேடுறேன், கிண்டலா பண்றே?" என்று அம்மா சிறிது கோபமாகக் கேட்டாள்.

"கிண்டல் இல்லேம்மா, உண்மையைத்தான் அவள் சொன்னாள். இந்தாங்க உங்களுக்குத் தேவையான தீப்பெட்டி" என்று தன்னறையிலிருந்து வெளியே வந்த குமார் ஒரு 'டஜன்' தீப் பெட்டிகளை அம்மாவிடம்கொடுத்தான்.

"ஏதுடா இத்தனை பெட்டி? எங்கே வாங்கினே?"

"நேற்று திருத்தணிக்குப் போனேன் இல்லே. அங்கே வாங்கி வந்தேன். விலை கூட மலிவு!" என்று குமார் சொன்னதும், அவன் தங்கை திலகம் அதை ஆமோதித்தாள். அவளும் அவனுடன் திருத்தணிக்குச் சென்றிருந்தாள்.

குமாரின் அம்மா அந்தத் தீப் பெட்டிகளில் ஒன்றை எடுத்துப் பார்த்தாள்; அது அழகாகவும், அதில் தீக்குச்சிகள் நிறைந்தும் இருந்தது. உடனே ஒரு குச்சியை எடுத்துப் பற்ற வைத்தாள். அது மிக்க ஒளியுடன் எரிவதைக் கண்டாள்.

"இந்தத் தீக்குச்சி மிக நன்றாக எரிகிறதே! பெட்டியின் மேல் வி.ஐ.பி. என்று போட்டிருக்கிறதே! இவையெல்லாம் என்ன?" என்று ஆவலாகக் கேட்டாள் அம்மா.

"மணி ஐந்தாகப் போகிறது. முதலில் காஃபி போட்டுத் தாருங்கள்! பிறகு கதை பேசுவோம்..." என்றான் குமார். அவன் அம்மாவும் காஃபி போட அவசரமாக அடுக்களைக்குள் நுழைந்தாள்.

மாலை மணி ஆறு.

திலகம் குத்து விளக்கை ஏற்றி விட்டுக் கூடத்துக்கு வந்தாள். குமாரும், அவள் அம்மாவும் கூடத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் வந்து அமர்ந்தனர்.

"வி.ஐ.பி. என்றால் கிராமத் தொழிற் பொருட்கள் (Village Industries Products) என்று பொருள்" என்றான் குமார்.

"ஆமாம், திருத்தணிக்கு வேலை விஷயமாகத் தானே போனாய்? அங்கு எப்படித் தீப் பெட்டியைப் பிடித்தாய்?" என்று அம்மா கேட்டாள்.

அதற்குக் குமார் "அங்கே ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை இருப்பது முன்பே எனக்குத் தெரியும். எப்படியும் அதைப் பார்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். நேற்றுதான் அதற்கு வாய்ப்புக் கிடைத்தது" என்றான். உடனே திலகம், "ஆமாம் அம்மா, அண்ணா கூட நானும் போய்ப்பார்த்தேன். என்னைப்



## முதன் முதலில்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தியாவிற்குத் தேவையான தீப் பெட்டிகள் சுவீடனிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. 1914-ஆம் ஆண்டில், 2,160 மில்லியன் தீப்பெட்டிகள் இறக்குமதி ஆயின. அப்போதைய ஆங்கில அரசு அதிகமான சுங்கவரி விதித்தது. அதனால், சுவீடன் நாட்டுத் தீப்பெட்டி நிறுவனம், இந்தியாவுக்குத் தீப்பெட்டிகளை அனுப்புவதைக் கைவிட, இந்தியாவிலேயே தீப்பெட்டித் தொழிலைத் துவக்குவது நல்லதென்று முடிவு செய்து, பம்பாய் அருகில் உள்ள அம்பர்நாத் என்ற ஊரில் 1924-ஆம் ஆண்டு ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையைத் துவக்கியது. இந்தியாவில் உருவான முதல் தீப்பெட்டித் தொழிற்சாலை இதுதான். 1929-ஆம் ஆண்டு வாக்கில், சென்னையிலும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எழுந்தன.

போலப் பல பெண்கள் அங்கே வேலை செய்கிறார்கள் !'' என்றாள் உற்சாகமாக.

'ஆக்கவும், அழிக்கவும் வல்ல இந்தத் தீக்குச்சிகள் அன்றாடம் தேவைப்படும் மிக இன்றியமையாத பொருளாகும். ஆனால், இதைச் செய்யும் விதத்தைத்தான் ஒருவரும் தெரிந்துகொள்ள முன் வருவதில்லை ! நாம் எத்தனையோ பொருள்களை உபயோகிக்கிறோம் ; அவற்றைப் பற்றிக் கேள்விப்படுகிறோம் ; அவைகளெல்லாம் எங்கு, எப்படி உருவாகி வருகின்றன என்று தெரிந்து கொண்டால் பொது அறிவு வளருமல்லவா ? '' என்று குமார் சொன்னதும், அவன் அம்மா அதற்கு,''ஆமாம், ஆமாம்!'' என்று தலையாட்டினாள். குமார் மேலும் சொல்ல ஆரம்பித்தான் :—

''கதர்-கிராமத் தொழில்கள் பலவற்றில் தீப்பெட்டித் தொழிற் கூடமும் ஒன்று. ஏழை எளிய மக்களுக்கு வேலை கொடுக்கும் வகையில் இதைப் போன்ற பல தொழில்கள் இன்னும் பல இடங்களில் செயற்பட்டு வருகின்றன. திருத்தணியிலுள்ள இத் தொழிற்கூடம் 1970-ஆம் ஆண்டு முதல் மிக நன்றாக இயங்கி வருகிறது'' என்றான்.

''இங்கு நிறையப் பெண்கள் வேலை செய்கிறார்கள். பல பெண்கள் தங்கள் வீட்டிலிருந்து கொண்டே தீப்பெட்டிகளைச் செய்து இங்கு அனுப்புகிறார்கள். இதனால் அவர்களுக்கு வேலையும், கணிசமான வருமானமும் கிடைக்கிறது '' என்றாள் திலகம்.

''அப்படியா ? இந்தத் தீக்குச்சியை எப்படிச் செய்கிறார்கள் ? அதைக் கொஞ்சம் சொல்லுங்களேன். . .'' என்று ஆவலாகக் கேட்டாள் குமாரின் அம்மா.

''முதலில் தீக்குச்சிகள் செய்யத் தேவையான மூலப்பொருள்கள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். பஞ்சு மரப்பட்டை, மட்டி மரம், நீலக் காகிதம், மைதா, பொட்டாசியம் குளோரைடு, சல்பர், மாங்கனிஸ் டை ஆக்சைடு, அயர்ன் ஆக்சைடு, கிளாஸ் பவுடர், ரோசின், பொட்டாசியம் டை க்ரோமைட், பிசின், நீர், மெழுகு ஆகியவையாகும்'' என்று குமார் சொன்னதும் அவன் அம்மா, '' பஞ்சும், மரப்பட்டையும், மட்டி மரமும் எதற்கு ?'' என்று கேட்டாள்.

அதற்குக் குமார், ''பஞ்சு—மரப்பட்டை தீப்பெட்டிகள் செய்யவும், மட்டி என்ற ஒருவகை மிருதுவான மரம் தீக்குச்சிகள் செய்யவும் பயன்படுகிறது. நீலக் காகிதமும், மைதாவும், பெட்டிகள் செய்யவும், மேற்சொன்ன மருந்துகளெல்லாம் தீக்குச்சியின் முனையிலுள்ள மருந்துக்கும் பயன்படுகின்றன'' என்றான்.

''இதே மருந்து, பெட்டியின் ஓரத்திலும் பூசப்படுகிறதா ?'' என்று குமாரின் அம்மா கேட்டாள்.

''இல்லை. அதற்குச் சிவப்புப் பாஸ்பரஸ், ஆண்டிமனி சல்பைட், கிளாஸ் பவுடர், பிசின் முதலியன தேவைப்படுகிறது.'' என்று சொல்லிவிட்டுக் குமார் திலகத்தைப் பார்த்து, ''முதலில் இங்கே என்ன





பெட்டிகள் உருவாகின்றன



வெறும் குச்சிகள் மரச்சட்டங்களில் பொருத்தப்படுகின்றன



கருவியின் உதவியால் மருந்து கலக்கப்படுகிறது



குச்சிகள் மருந்தில் தோய்த்து எடுக்கப் படுகின்றன



தீக்குச்சிகள் பெட்டிகளில் நிரப்பப் படுகின்றன



பெட்டியின் ஓரத்தில் மருந்து பூசப் படுகிறது

செய்கிறார்கள் என்று சொல் பார்க்கலாம் ?'' என்று கேட்டான்.

'' முதலில் வெறும் பெட்டிகளைத்தான் செய்கிறார்கள். அடுத்து, குச்சிகளை மரச் சட்டத்தில் வரிசையாகப் பொருத்துகிறார்கள். ஒரு வரிசைக்கு ஐம்பது குச்சிகள் இருக்கும். பிறகு, குச்சிகள் பொருத்தப்பட்ட மரச்சட்டத்தை, உருகிக் கொண்டிருக்கும் மெழுகில் அழுத்தி எடுக்கின்றார்கள். . . '' என்று திலகம் சொன்னதும், '' நன்றாக நினைவு வைத்திருக்கிறாயே !'' என்று அவளைப் பாராட்டிய குமார் தொடர்ந்து மேலும் சொன்னான்.

''மெழுகில் குச்சிகளை அமுக்கி எடுத்ததும், மருந்து நிறைந்த நீண்ட இரும்புத் தட்டில் இந்தக் குச்சிகள் நன்றாகத் தோய்த்து எடுக்கப்படுகின்றன. அப்போது, மரச்சட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள எல்லாக் குச்சிகளின் முனையிலும் ஒரே சீராக மருந்து ஒட்டிக் கொள்கிறது. பிறகு இந்தக் குச்சிகள் மரச் சட்டங்களோடு காய வைக்கப்படுகின்றன. இதற்கு மூன்று மணி நேரம் ஆகும் !''

'' பிறகு, மரச் சட்டத்திலிருந்து காய்ந்த குச்சிகள் எடுக்கப்பட்டுப் பெட்டிகளில் அடைக்கப்படுகின்றன. குச்சிகள் அடைக்கப்பட்ட பெட்டிகளை மரச் சட்டத்தில், பெட்டியின் ஓரப் பகுதி தெரியும்படி வரிசை வரிசையாகப் பொருத்திவைத்து, மருந்துக் குழம்பைப்பிரசினால் பூசி விடுவார்கள். இது ஒரு மணி நேரத்தில் காய்ந்துவிடும். பிறகு 'லேபிள்' ஒட்டப்பட்டு, டஜன் கணக்கில் 'கட்டுகள் ஆக்கப்படுகின்றன'' என்றாள் திலகம்.

உடனே குமாரின் அம்மா, '' மெழுகில் குச்சிகளைத் தோய்த்து எடுப்பதேன் ?'' என்று கேட்டாள்.

''வெறும் குச்சிகள் எளிதில் எரியாது. குச்சிகளில் மெழுகு ஏற்றினால்தான் அவை எளிதாக நின்று எரியும் ''.

''இந்தக் குச்சிகளை இங்கேயே தயாரிக்கிறார்களா ?''—குமாரின் அம்மா கேட்டாள்.

'' இல்லை. மருந்து தடவாத இந்த வெறும் குச்சிகள், மைசூரிலுள்ள தார்வாரிலிருந்து அனுப்பப்படுகின்றன'' என்றான் குமார்.

''ஒரு தீப்பெட்டி என்ன விலை ஆகிறது ?'' என்றாள் அம்மா.

'' மற்றத் தீப்பெட்டிகளைக் காட்டிலும் இதன் விலை குறைவானதுதான். ஐம்பது குச்சிகள் நிறைந்த ஒரு தீப்பெட்டியின் விலை ஐந்தே காசுகள்தான்! குறைந்த விலையில் நல்ல தரமானப் பொருட்களை வழங்குதல், கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் முதலியன கதர் கிராமத் தொழிலின் நோக்கமாகும்'' என்றான் குமார்.

'' இங்கு எத்தனை பெண்கள் வேலை செய்கிறார்கள் ? அவர்கள் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் ?'' என்ற அம்மாவின் கேள்விக்குத் திலகம், '' இத்தொழிற் கூடத்தில் 40 முதல் 50 பெண்கள் பணி புரிகின்றனர். இவர்களுக்கு மாதம் சுமார் ரூ. 40-லிருந்து ரூ. 60 வரை வருமானம் கிடைக்கிறது '' என்றாள்.

''இதே போலத் தமிழ் நாட்டில் திருநெல்வேலி, தருமபுரி, திருச்சி, சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும் தீப்பெட்டி உற்பத்திக் கூடங்கள் இயங்கி வருகின்றன ?'' என்றான் குமார்.

உடனே அவன் அம்மா, ''ஒரு நாளைக்கு இங்கு எவ்வளவு தீப்பெட்டிகள் தயாரிக்கின்றனர்? அவை எங்கெல்லாம் அனுப்பப் படுகின்றன ?'' என்று கேட்டாள்.

அதற்குத் நிலகம் பதில் சொன்னாள் : '' இங்கு ஒரு நாளைக்கு 25 குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. இவை காதி விற்பனை நிலையங்கள், மருந்துவ மனைகள், சிறைச் சாலைகள். நகர மன்றங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.''

தீப்பெட்டிகள் கட்டுகள் ஆக்கப்படுகின்றன



'' இவை மட்டுமா ? இந்தத் தீப்பெட்டிகள், பம்பாய் கதர்-கிராமத் தொழிற் குழுவின் முயற்சியினால், நமது பாது காப்புப் படையினருக்குப் பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இது வரை 10 ஆயிரம் குரோஸ் தீப்பெட்டிகள் அனுப்பப்பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் 80 ஆயிரம் ரூபாய்!'' என்றான் குமார்.

''1971–72-ஆம் ஆண்டில் ரூ. 21,700 மதிப்புள்ள தீப்பெட்டிகள் விற்பனையாகியுள்ளன என்றால் இதன் தரத்தினை மக்கள் வெகுவாக வரவேற்கின்றனர் என்று தானே பொருள்'' என்றாள் திலகம்.

'' ஒரு சிறிய தீப்பெட்டிக்குள் இத்தனை இரகசியம் அடங்கியிருக்கிறதே!'' என்று வியந்தாள் குமாரின் அம்மா.

'' ஏழை எளியவரின் உள்ளங்களிலும், நம் அனைவரின் இல்லங்களிலும் ஒளியேற்றிடும் வண்ணம் தீப்பெட்டித் தொழில் நிகழ்ந்து வருவதைப்பார்க்கிறோம். இது போன்ற எண்ணற்ற கிராமத் தொழில்களுக்கு நல்ல ஆதரவு கொடுப்பதன் மூலம், அந்தத் தொழில்கள் வளர்ந்து வளம் பெறுவதற்கு நாம் வழிவகை செய்தவர்களாவோம் !'' என்று பெருமிதத்துடன் கூறினான் குமார்.

—பி.வி.ஜி.


**காலக் கண்ணாடி**



**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**

SPB


# தீப்பெட்டியின் கதை

நெருப்பு! இது மனிதனின் அரிய சொத்தாகும். செயற்கையாக நெருப்பை உண்டாக்கும் வழியை ஆதி காலந் தொட்டு மனிதன் முயன்று கண்டான். கட்டையோடு கட்டையை உராய்த்தும், 'சக்கி முக்கி'க் கல்லாலும் தீயை உண்டாக்கினான். நூற்றாண்டுகள் பலவாக இவ்வாறு இரண்டு வழிகளால்தான் நெருப்பைக் கண்டான். நெருப்பை உருவாக்கியது பற்றி முதன் முதலாக எகிப்து வரலாற்றில் கி.மு. 4000-ல் குறிப்புக் காணப்படுகிறது. அதில், ஒரு வில், நெருப்புக் குச்சி ஆகியவை பற்றிய விவரம் தரப்பட்டுள்ளது. ஏறத்தாழ கி.மு. 2000-ல் தீயும்-விறகும் என்னும் பொருள் படும்படியாக 'ஜெபில்' என்னும் பெயருடன் ஒரு பாபிலோனிய தெய்வத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

ஆனால், 1669-ஆம் ஆண்டில் ஜெர்மானிய வேதியல் நிபுணர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்ட 'பாஸ்பரஸ்' தான், இன்று எளிதாக நெருப்பினை உண்டாக்கும் அரிய சாதனமாகிய தீப்பெட்டி உருவாக முதற் காரணமாகும். 1680-ஆம் ஆண்டில் இராபர்ட் பாய்ல் என்பவர் 'சல்பர்' தடவிய ஒரு குச்சியால், 'சல்பர்' தடவிய ஒரு தாளில் உராய்த்தால் நெருப்பு உருவாகும் என்பதைக் கண்டார். ஆனால் அதைச் செயற்படுத்துவதில் ஒருதொல்லை இருந்தது. அந்த முறையில் நெருப்பு எளிதில் தானாகவே பற்றிக் கொள்ளும் நிலை இருந்தது. தானாகப் பற்றிக்கொள்ளாமல் நெருப்பைத் தடுப்பதற்கு அதிகப் பணச் செலவு தேவைப்பட்டது. ஆகவே, அந்த முறை செயற்பட முடியவில்லை.

காற்றுப் பட்டவுடன் பாஸ்பரஸ் பற்றிக் கொள்ளும் என்கிற உண்மை தெரிந்ததால், 1780-ஆம் ஆண்டில் பிரான்சில் பாஸ்பரஸ் மெழுகுவத்தி கண்டுபிடிக்கப்பட்டது. மெழுகு நூல் அல்லது தாள் இவற்றின் நுனியில் பாஸ்பரஸ் தடவி ஒரு கண்ணாடிக் குழாயில் வைத்து அடைக்கப்படும். அந்தக் குழாய் திறக்கப்பட்டுக் காற்றுப் பட்டவுடன் பாஸ்பரஸ் எரியத் தொடங்கி விடும். இப்படி, பாஸ்பரஸ், சல்பர் ஆயிவற்றின் உதவியால் நெருப்பை உண்டு பண்ணும் பல முறைகள் கண்டு பிடிக்கப்பட்டன.



தீக்குச்சி மூலம் தீ உண்டாக்கும் முறை 1827-ஆம் ஆண்டு ஆங்கில வேதியல் நிபுணராகிய ஜான்வாக்கர் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் குச்சிகள் மூன்று அங்குல நீளமிருந்தன. அவற்றின் நுனியில் ஆண்டிமனி சல்பைட், பொட்டாசியம் குளோரேட், 'அரபிக் கோந்து' ( Gum Arabic ) ஸ்டார்ச் ஆகியவை தடவப்பட்டிருந்தன. அவற்றில் ஏதாவது சிறிது உராய்ந்தாலும் தீப்பொறி பறப்பதும், கொஞ்சம் வெடித்து விடுவதும் உண்டு.

அவ்வகையானதீப்பெட்டியைத் தயாரித்தோர், தீப்பெட்டியின் மேல் 'இத் தீக்குச்சி எரியும் போது வரும் வாயுவை உட்கொண்டுவிடக் கூடாது' என்று எச்சரிக்கை விட்டனர். அது எரியும் போது வரும் நெடி மிகவும் ஆபத்தானது. 1831-ஆம் ஆண்டில், பிரெஞ்சு நாட்டவரான டாக்டர் சார்லஸ் சௌரியா என்பவர் பாஸ்பரசுக்குப் பதிலாக 'சல்பைட்' பயன் படுத்தினார், இது உலகெங்கும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், அதில் கிளம்பிய நாற்றம் உடலைக் கெடுத்துச் சிலரை முடமாக்கியது ; சிலரைக் கொன்றது ; பல நோயை உண்டாக்கியது.

அதன் பிறகு காஹென், சேவின் என்ற இரண்டு பேர், பாஸ்பரசை, நச்சு நீக்கிப் பயன் படுத்தினர். அதனால் அவர்களுக்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் 1898-ஆம்ஆண்டில் விற்பனை உரிமை அளிக்கப்பட்டது. இந்த முறை அந்தந்தத் தட்ப வெப்ப நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளப் பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் புதுப் புது வகையான தீப்பெட்டிகள் விற்பனைக்கு வரலாயின. 'ப்ரோமதீயன்' தீக்குச்சி என்றொரு வகை வந்தது. ஊசி மருந்து அடைக்கப்பட்டுள்ளது போன்ற சிறிய கண்ணாடிக் குமிழ் ஒன்றுக்குள் 'சல்ப்யூரிக்' அமிலத்தை அடைத்து, அக்குமிழின் மேலே பொட்டாசியம் குளோரைட், சர்க்கரை, பிசின் ஆகியவை தடவப்பட்டு அதன் மேல் ஒரு தாளும் ஒட்டப்பட்டிருக்கும். பல்லால் கடித்துக் குமிழினை உடைக்க வேண்டும். உடனே தாளில் தீப்பிடிக்கும்.

குடிப் பழக்கம் உள்ளவர்க்குத் தனியாக ஒரு தீக்குச்சி தயாரிக்கப்பட்டது. இதைப் பயன்படுத்தும் போது விரலில் தீப்பட்டுக் கருகிவிடாதபடி பாதுகாப்பான முறையில் அது செய்யப் பட்டிருந்தது. அதைப் பற்ற வைத்தால் ஒரு நுனியில் தொடங்கும் தீ, மறு நுனிக்கு வருவதற்குள் தானாக அணைந்துவிடும். ஆகவே பயன் படுத்துவோரின் விரலைக் குச்சியின் நெருப்பு நெருங்காது.

1845-ஆம் ஆண்டில் 'அமார்பஸ் பாஸ்பரஸ்' கண்டு பிடிக்கப் பட்டது. அதன் பயனாக இன்றையப் பாதுகாப்பான தீக்குச்சி ( Safety Matches ) கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் குச்சியில் இரசாயனக் கலவையில் ஒரு பகுதிதான் நுனியில்உள்ளது. 'அமார்பஸ் பாஸ்பேட்' தீப்பெட்டியின் பக்கங்களில் தான் தடவப் படுகிறது. தீப் பெட்டியின் மேல் உராய்ந்தால் தான் குச்சியில் தீப்பற்றும். மற்றப்படி, தீ தானாக உருவாகாது. சுவீடன் நாட்டைச் சார்ந்த ஜே.ஈ. லண்ட்ஸ்டார்ம் என்பவர் இந்த வகையை 1855-ல் கண்டுபிடித்தார். இதுதான் இன்று உலகெங்கும் உள்ள தீக்குச்சியாகும்!



# புதிய வாழ்வு



கோ.கண்ணன்

அந்தப் பசுமை, குளிர்ச்சிக் கண்ணாடி இல்லாமலேயே கண்ணுக்குக் குளுமையைத் தந்தது. கிணற்று மேட்டில் நின்ற கருப்பையா பசுமை விளையாடும் வயல்வெளியை ஒரு அரைவட்டக்கோணத்தில்சுற்றிப் பார்த்துவிட்டு, வீரம் சுரக்கும் தன் கொடுவாள் மீசையின் நுனியை, மடித்த தன் நடு விரலால் இருமுறை மேல் நோக்கித் தட்டி விட்டுக்கொண்டார். அந்த வயல்வெளி பூராவுமே தன் ஒருவனுடைய உழைப்பினால் சிரித்துப் பொங்குகின்றது என்பதை நினைக்கும் போது அவருடைய நெஞ்சு தானாகவே மேலே எறித் தாழ்ந்தது.

கொய்யா மரத்தடியில் நின்றிருந்த தன் மனைவி செல்லம்மாவை அவர் ஏறிட்டு நோக்கினார். ''ஏ புள்ளே! இங்கே வா''. பக்கத்தில் வந்துநின்ற செல்லம்மாவிடம், தன் உழைப்பின் மகிமையை விளக்குவதுபோல் வயல்வெளி முழுவதையும் ஆட்காட்டி விரலால் சுட்டிக் காட்டினார். ஆண்மையின் இலக்கணமாக நிற்கின்ற இந்த வீரனுக்குத் தன்னால் ஒரு வாரிசைத் தர இயலவில்லையே என்ற ஏக்கம் அவள் கண்களில் பளிச்சிட்டது. ''என்ன இருந்து என்னங்க.... ஒரு மவனைப் பெத்து, ஆளாக்கி, அவனையும் உங்களாட்டம் வயலுக்கு அனுப்ப முடியலையே'' என்று பெருமூச்சு விட்டாள். ''போடி பயித்தியம்.... குழந்தையாம் குழந்தை! பெத்தாத்தான் குழந்தையா — இதோ பாரு வளந்து நிக்குதே வாழைமரம் அது ஒரு குழந்தெ—கதிரு முத்தித் தள்ளாடப் போற நெல்லு வயல் பூராவுமே நிறஞ்ச குழந்தைங்க தான் — கண்ணு மூக்குன்னு குழந்தையெ வளர்க்கறதவிடக் கரும்பு, நெல்லுன்னு பயிரை வளர்த்தா, நாட்டுக்கு நல்லது, நமக்கும் நல்லது'' என்று நிறைவோடு குறிப்பிட்டார் கருப்பையா.

அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்த பக்கத்துக் காட்டுக்காரனான தானப்பன், கருப்பையாவுக்குப் பக்கத்தில் வந்து நின்று, அவருடைய வயல் செழிப்பைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு விட்டு ''பெரியண்ணே! நீங்க ஒத்தையிலே உழைச்சு இவ்வளவு நல்லா வயலெ வெச்சிருக்கீங்க. நான் பாருங்க, இந்த மூணு மக்கமாரோட சேந்து உழைச்சும் கூட உங்க அளவுக்கு வெள்ளையைக் காண முடியலியே'' என்று ஏக்கத்தோடு கூறினான்.

தொடர்ந்து மேலும், ''உங்களுக்கென்ன, உங்க வயல்தான் உங்க கொழந்தே'' என்றான். இதைக் கேட்டுப் பரவசப்பட்ட கருப்பையா, ஓரக் கண்ணால் தன் மனைவியைப் பெருமை பொங்கப் பார்த்தார். மடித்த அவருடைய நடுவிரல் மீசை நுனியை இருமுறை மேல் நோக்கித் தட்டிவிட்டது.

* * *

நன்கு உழைத்து, நிறைந்த விளைவைக் காணும் உழவர் பெருமக்களுக்கு அரசாங்கம் தந்து ஊக்கமூட்டும் பரிசை, ஏதாவது ஒரு பயிர் மேல் வைத்துக் கருப்பையா ஆண்டு தோறும் பெற்றுவந்தார். அதனால் கிராமச் சேவகரான அருளப்பன் அவருக்கு நல்ல பழக்கமானார். அவருடைய உதவியால் தான், அரசாங்கம் பசுமைப் புரட்சித் திட்டத்தில் தரும் எல்லாச் சலுகைகளையும் பெற்றுப் புதிய முறையில் பயிர்களை விளைவிக்கலானார். பக்கத்துக் காட்டுக் காரர்களுக்குப் பொறாமை ஏற்படுகிற அளவுக்கு அவருடைய உழைப்பு செழித்தது.

ஒரு நாள், வேலங்குச்சியால் பல் விளக்கிக் கொண்டு கிணற்று மேட்டில் நின்று கொண்டிருந்த கருப்பையா, ''ஐயோ! ஐயோ'' என்ற அலறலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். பக்கத்து வீட்டு செவத்தாயியை, ஒரு முரட்டுக் காளை கொம்பைத் தாழ்த்திக் கொண்டு விரட்டிக்கொண்டு வந்தது. வேலங்குச்சியைத் தூக்கி எறிந்துவிட்டுப் பாய்ந்த கருப்பையா, அதன் இரு கொம்புகளையும் பற்றிக்கொள்ள, காளை பாய்ந்து ஓட, தலைகீழாகச் சிரசாசனம் செய்வது போல், கொம்பில் ஊன்றிய கைகளுடன் அவர், காளைக்குமேல் காணப்பட்டார்; என்றாலும் பிடித்த பிடியை விடவில்லை. அவருக்கு வயது ஐம்பது என்று அந்த நிலையில் சொன்னால் யாரும் நம்பவே மாட்டார்கள். காளை முரண்டு பிடித்துச் சுற்றிச் சுற்றிப் பாய்ந்தது. உடம்மை வளைந்து நிலத்தில் காலூன்றிய கருப்பையா, இரண்டு கொம்புகளையும், எதிரெதிர்ப் பக்கங்களில் அழுத்தித் தலையை வேகமாகக் குலுக்கினார். பெரும் போராட்டத்திற்குப் பின்பு, வாயில் நுரை தள்ளக் காளை தளர்ந்து விழுந்தது, அதுவரை அக்கம் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் கருப்பையாவின் அருகில் ஓடிவந்துநின்றுகொண்டனர். முதுமையிலும் பூரித்துக் கிளர்ந்தெழுந்த ஆண்மை மிக்க அவருடைய தோற்றம், அவர்களுக்கு ஒரு மலைப்பாகவே இருந்தது. அவரையும் அறியாமலே அவருடைய நடுவிரல் மடிந்து மீசை நுனியை இரு முறை மேல் நோக்கித் தட்டி விட்டது.

* * *

''இத்தனை நாள் நமக்குத் தெரியாமல் இந்தச் செடி எப்படி வயலில் களையாக வளர்ந்து நிற்கிறது?'' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்ட கருப்பையா, செல்லம்மாவை உரக்க அழைத்தார். ''ஏ புள்ளே! இங்கெ இருக்குதே இந்த முள்ளுச்செடி, இத ஏன் இத்தனை நாளா உட்டு வெச்சிருக்கே?'' அவள் பக்கத்தில் வந்து சொன்னாள், ''இது லெவுச் செடியாம். இதனுடைய தண்டுலெ விஷப்பால் இருக்குமாம். அதனால்தான் புடுங்கறதுக்குப் பயப்பட்டுக்கிட்டு உட்டுட்டேன்''. ஏதோ பகைவனைப் பார்ப்பதுபோல் அந்தச் செடியைப் பார்த்த கருப்பையா சரேலென்று கருக்கரிவாளைத் தன் இடுப்பிலிருந்து உருவினார். உடனே செல்லம்மா, 'என்னங்க, உங்க முரட்டுத்தனத்தை அந்தச் செடிகிட்டத்தான் காண்பிக்கணுமா? ஏதாவது ஆயிடப்போவுது' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே குனிந்து, ஒரே வீச்சாகச் செடியைத் துண்டித்தார். அதே சமயம் தண்டிலிருந்து பீறிட்ட விஷப்பால் அவர் முகத்தில் அடித்துக் கண்களில் தெறித்தது. அப்படியே அரிவாளைப் போட்டு விட்டு முகத்தைப் பொத்திக் கொண்டு ''ஐயோ எரியுதே, எரியுதே, கண்ணு எரியுதே'' என்று துடி துடித்தார் கருப்பையா.

கண் இமைகளிலும், முகத்திலும் ஏற்பட்ட புண்களைவிடக் கண்ணில் பால் பட்டதால் ஏற்பட்ட எரிச்சலை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. வந்து பார்த்த நாட்டு வைத்தியர், சாதாரணமாகப் புண்ணுக்குக் கட்டுவதுபோல் பச்சிலையை அரைத்துக் கண்களின் மேல் அப்பிக் கட்டுபோட்டுவிட்டு ''எட்டு நாள் கழிச்சுதான் கட்டை அவுக்கணும்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். எட்டு நாட்களுக்குக் கண்ணை விழிக்காமல், வயலைப் பார்க்காமல், தன்னால் எப்படி இருக்க முடியும் என்று எண்ணிப் பார்க்கவே அவரால் முடியவில்லை.

மறுநாள் காலையில், ''இன்னிக்கி வயலுக்குத் தண்ணி கட்டற முறையில்லே'' என்று மம்பட்டியைத் தூக்கிய கருப்பையாவை, ''என்னங்க கண்ணுக் கட்டோட எப்பிடித் தண்ணி கட்டறது'' என்று கூறித் தடுத்தாள் செல்லம்மா. ''போடி—கட்டெ அவுத்து எறியப் போறேன்'' என்று கையைக் கட்டருகே கொண்டு சென்ற கருப்பையாவின் கால்களைக் கட்டிக் கொண்டு கெஞ்சித் தடுத்து நிறுத்துவதற்குள் போதுமென்றாகிவிட்டது செல்லம்மாவிற்கு. ''ஐயோ! இன்னிக்குத் தண்ணி கட்டாமப் போனா பயிரெல்லாம் வாடிடுமே.... பிறகு காஞ்சிடுமே'' என்று துடித்தார். ''பரவால்லீங்க! என்ன பண்றது......இந்தப் பட்டம் தப்பனுக்கூட, நம்ம வூட்டுலே வேண்டிய தானியம் சேத்து வச்சிருக்கேன். உங்க கண்ணு நல்லானா போதும். அடுத்த பட்டம் வெளவு செஞ்சிக்கலாம்.'' என்று சமாதானப்படுத்தினாள். செல்லம்மா.

எட்டாம் நாள் வைத்தியர் வந்தார்.

''என்னப்பா கட்டெ அவுக்கலாமா?''

''சீக்கிரமா அவுத்து எறிங்க. நான் போயி வயலெப் பாக்கணும்'' வைத்தியர் கட்டை அவிழ்த்தார். அடுத்த கணம் கருப்பையா இடிஇடிப்பதுபோலக் கத்தினார். ''ஐயோ செல்லம்மா, கண்ணு தெரியலியே—வைத்தியரய்யா, எதுக்கால இருக்கிறது ஒண்ணுமே விளங்கலியே நான் என்ன பண்ணுட்டும்..? வயலெ எப்படிப் பாத்துக்கறது? எனக்கு ஒரு மவன் இருந்தாலும் வயலெப் பாத்துக்குவான். இப்ப யாரு வந்து பாத்துக்குவா?'' என்று அலறினார் கருப்பையா. ''என்னாலெ முடிஞ்சதெ நான் பண்ணிட்டேன். இனிமேல வேணும்னா டவுனுக்குப் போயி பெரிய—கண் டாக்டராத்தான் பாக்கணும்'' என்று சொல்லி விட்டு நழுவினார் வைத்தியர்.

டவுனுக்குப் போறது—டாக்டரப் பாக்கறது—ஆஸ்பத்திரியிலெ தங்கறது—அங்கெ செலவு—மருந்துச் செலவு இதையெல்லாம் நினைத்துப்பார்த்து, ஒரு ஐநூறுவது வேணுமே என்று சொல்லிக்கொண்ட கருப்பையா, பணமில்லாக் குறையால் தளர்ந்து உட்கார்ந்துவிட்டார்.



அவரால் வயலைவிட்டு வீட்டிலிருக்க முடியவில்லை. தடுமாறியபடியே வயலுக்குச் சென்று, வரப்பில் நெடுக கோல் ஊன்றிய வண்ணம் நடந்து கொண்டாவது இருப்பார். அன்றைக்கு எதிரில், ஒரு கன்றுக் குட்டி, வரப்பில் வேகமாக வந்து கொண்டிருந்தது. பின்னாலேயே

ஓடிவந்த தானப்பன், ''பெரியண்ணே ஒதுங்கிக்கிங்க...... கன்னுக்குட்டி ஓடியாருது'' என்று சொல்லிக் கொண்டே வந்தான். கோலே எறிந்துவிட்டுக் கன்றைப் பிடிக்கக் கையை முன் பக்கமாக நீட்டிக்கொண்டு தடுமாறிய கருப்பையாவைத் தள்ளிவிட்டுக் கன்றுக் குட்டி ஓடியது . . . வயலில் போய் விழுந்தார் கருப்பையா. பழக்க தோஷத்தால், அவருடைய, நடுவிரல் மடிந்து மீசை நுனியை இருமுறை மேல்நோக்கித் தட்டி விட்டது.

ஓடிவந்த தானப்பன் அவரைத் தூக்கி, நிறுத்தினுன். ''என் நெலமையெ பாத்தியா தானப்பா—கண் இருந்தப்போ முரட்டுக் காளேயையே அனுவசியமா அடக்கினேன். இப்ப கண் தெரியலே . . . ஒரு கன்னுக் குட்டிகூட என்னெத் தள்ளி விட்டுடிச்சே'' என்று கண்களில் நீர்வழியக் கூறினுர். பொருமைக் கண்களோடு மூப்பனுரைப் பார்த்துப் பழக்கப்பட்ட தானப்பன், இப்போது பரிதாபத்தோடு அவரைப் பார்த்துவிட்டுக் கீழே கிடந்த கோலே எடுத்து, அவர் கையில் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

மறுநாள் நடுப்பகல் கொய்யா மரத்தடியில் உட்கார்ந்து முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்த கருப்பையாவிடம் வந்து நின்ருள் செல்லம்மா.

''விசயம் தெரியுமா உங்களுக்கு ....செவிடனூர் பொன்னப்பன் ....''

''யாரு ....நாலஞ்சி வருசமா கண் தெரியாமல் கிடக்கருனே அந்தக் கிழவனு?''

ஆமா—அவரு மவன் பட்டாளத்திலே இருந்து வந்திருக்கு; கிழவனெ டவுனுக்கு கூட்டிக்கிட்டுப் போயி, கண் ஆப்பரேசன் பண்ணிக்கிட்டு வந்துதாம். இப்ப கிழவன் கண்ணுடி போட்டுக்கிட்டு உத்து உத்துப் பாக்குருனும்?''

''நமக்கு ஒரு மகன் இருந்திருந்தா என்னேக் கூட இப்படிச் செஞ்சிருப்பானில்லே- அதானெ சொல்ல வந்தே'' என்று கண்களில் நீர் மல்கக் கூறிவிட்டு, மனைவியின் கையில் கண்களேப் புதைத்துக் கொண்டு சின்னக் குழந்தை மாதிரித் தேம்பித் தேம்பி அழுதார் கருப்பையா.

* * *

''என்னு பெரியவரே சவுக்கியமா? ஒரு மாசம் லீவுலே போயிட்டேன். அதான் இந்தப் பக்கமே வரலே'' என்று கூறிக்கொண்டே வந்த கிராமச் சேவகர் அருளப்பன், கருப்பையாவின் பக்கத்திலே வந்ததும் திடுக்கிட்டுப் பதைபதைத்துப் போனுர்.

''கண் அவிஞ்சுப் போச்சே சாரு....— கோல் ஊனுமலே நடக்கற தெம்பு உடம்பிலே இருந்தும், கண் தெரியாமப் போயி கோல் ஊனவேண்டி வந்துட்டதே சாரு'' என்று நாத்தழுதழுக்கக் கூறினுர் கருப்பையா. ''ஏன் இப்படி ஆச்சு?'' என்று கேட்ட அருளப்பனிடம் நடந்த செய்திகளேக் கூறினுர் கருப்பையா.

''என்ன பெரியவரே, இத்தினி நாளா கவனிக்காம விடலாமா? டவுனுக்குப் போயி ஆப்பரேசன் செஞ்சிக்கிட்டிருக்கிறது தானே?'' என்று கேட்டார் அருளப்பன். ''நான் என்னு பண்ணுவேன் சாரு? அதுக்கு ஆவற செலவுக்கு ஒண்ணு கொஞ்சம் நிலத்தெ விக்கணும். இல்லேன்னு மாடுகன்னே விக்கணும்......— என் கொழந்தெ மாதிரி வளத்துட்டு, விக்கற துக்கு என் மனசு இடம் தரலியே'' என்று வேதனேயோடு கூறினுர் கருப்பையா.

''நீங்க நிலத்தையோ, மாட்டையோ விக்காமயே உங்களுக்குக் கண் ஆப்பரேசன் செய்ய ஒரு வழி பொறந்திருக்குது பெரியவரே—.... நம்ம மாநிலத்தின் முதல் அமைச்சர், ஏழைங்களுக்குக் கண் ஆப்பரேசன் செய்ய ஒரு வழி செங்சிருக்கார். அதுப்படி இந்தப் பகுதியிலே வர்ற மாசம் 14-ஆம் தேதி பெரிய பெரிய டாக்டருங்க வருவாங்க.... செலவே இல்லாம ஆப்பரேசன் செய்வாங்க........ அதுக்கு வேண்டிய ஒத்தாசையெ நான் பண்றேன். தைரியமா இருங்க'' என்று கூறிவிட்டுச் சென்ருர் அருளப்பன்.

கண்சிகிச்சை முகாமிற்கு அருளப்பரின் உதவியோடு வந்த கருப்பையாவுக்கு எல்லாம் நல்லபடி நடந்தது. அவர் வாங்கிய உழவுப் பரிசுகளேப் பற்றிக் கிராமச் சேவகர் டாக்டர்களிடம் குறிப்பிட்டதால், டாக்டர்கள் அவருக்குக் கண் சிகிச்சை செய்வதையே ஒரு பெருமையாகக் கருதிச் செயல்பட்டனர். இழந்த கண்களே மீண்டும் பெற்ற கருப்பையா கண்ணுடி அணிந்துகொண்டு கிராமத்திற்குத் திரும்பினுர்.

கிணற்று மேட்டில் நின்று கொண்டிருந்த கருப்பையாவிடம் வந்த தானப்பன், ''பரவாயில்லேயே........கண் வந்துட்டதா?'' என்று கேட்டான். ''செவிடனூர் கிழவன் பொன்னப்பனுக்கு மவனுலெ கண் கெடச்சுது. எனக்கு யாரோ ஒரு புண்ணியவானுலே கண் கெடச்சுது. இதுக்குக் காரணமாயிருந்த அந்தப் புண்ணியவானே நான் நேரிலேகூட பாத்தது கிடையாது....ஆனு, அவராலெ என் கண் குணமாயிட்டுது. அவரு எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்........ என்னேக் கூட்டிக்கிட்டுப் போயி உதவி செஞ்ச கிராமச் சேவகர் ஐயா, டாக்டருங்க எல்லாரும் நல்லா இருக்கணும்'' என்று மனம் நிறைய வாழ்த்திய கருப்பையாவிடம் விடை பெற்றுக் கொண்டு சென்ருன் தானப்பன்.

கருப்பையா வயல்வெளியை ஓர் அரை வட்டக் கோணத்தில் சுற்றிப் பார்த்தார். மண் திட்டுகளாகக் காட்சி அளித்தது வயல்வெளி. ''இன்னும் ரெண்டே மாசத்துலெ இந்த வயலெ பழையபடி பச்சப் பசேலுன்னு ஆக்கிக் காட்றேன்'' என்று தனக்குள் கூறிக்கொண்டார் கருப்பையா. மனத்தில் நம்பிக்கை பாய்ந்ததும், அவருடைய நடுவிரல் மடிந்து மீசைநுனியை இருமுறை மேல் நோக்கித் தட்டிவிட்டது; அத்துடன் மூக்குக் கண்ணுடியையும் சரிசெய்தது.

கருப்பையா கம்பீரத்தோடு மனேவியை அழைத்தார். ''ஏ புள்ளே! அந்த மமிட்டியைக் கொண்டா - வயல்லெ இறங்கறேன்''.

செல்லம்மா மமிட்டியோடு வந்து கொண்டிருந்தாள். வயல் குழந்தைக்குப் பச்சை சட்டை போடும் புதிய வேகத்துடன் வயலில் காலூன்றினுர் கருப்பையா.



# வேலையின்றி இருப்போரின் வேதனை தீர்ந்து வருகிறது

பொறியியல் பட்டம் அல்லது 'டிப்ளமா' அல்லது தொழில் நுட்பப் பயிற்சி பெற்றிருந்தும் வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களின் வேதனையைத் தீர்ப்பதற்காக, வேலை பழக்கும் சிறப்புப் பயிற்சித் திட்டம் (Special Apprenticeship Programme) ஒன்றை, இந்திய அரசின் முழு நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு அண்மையில் துவக்கியது. இத் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் 600 பொறியியல் பட்டதாரிகளுக்கும், 1,000 டிப்ளமா தாரர்களுக்கும், 1,000 தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலேஞர்களுக்கும் (Crafteman) இரண்டு ஆண்டுக்காலப் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது. இத் திட்டத்திற்கு 47 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்குத் தேவையான முழுநிதியையும் இந்திய அரசு வழங்கிட முன் வந்துள்ளது.

இத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் வேலே வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் இதுவரை (6–12–1972 வரை) 503 பொறியியல் பட்டதாரிகளும், 762 டிப்ளமா தாரர்களும் 874 தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலேஞர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வேலே பழகும் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு திங்கள் தோறும் கீழ்க்கண்டுள்ளவாறு உதவித் தொகை (Stipend) வழங்கப் பெறும்.

பட்டதாரிகள்—ரூபாய் 250
டிப்ளமாதாரர்கள்—ரூபாய் 150.

சென்னே நகரில் பயிற்சி பெறும், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலேஞர்கள்—ரூபாய் 90 முதல் 110 வரை.

பிற இடங்களில் பயிற்சி பெறும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலேஞர்கள்—ரூபாய் 80 முதல் 100 வரை.

இவ்வளவு குறுகிய காலத்திலேயே, தொழில் நுட்பத் தகுதி பெற்றிருந்தும் வேலே வாய்ப்புப் பெருதிருந்த 2,134 பேர்களுக்கு வேலே பழகும் வாய்ப்பையும், உதவித் தொகை பெறும் வாய்ப்பையும் கொடுத்துள்ளது மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

வேலே வாய்ப்பின்றி இருக்கும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலேஞர்களுக்கு வட்டி இல்லாக் கடன் கொடுத்து உதவும் திட்டத்தைச் (Interest—Freeloan assistance Scheme unemployed craftsman) செயல்படுத்துவதிலும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டம் முதலில், ரூபாய் 1,000 மதிப்புள்ள கருவிகளேயும், தளவாடங்களேயும், வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் கொடுக்க வகை செய்தது. பிறகு இத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு வட்டியில்லாக் கடனுகை, வழங்கும் தொகை 1,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடனுகை வழங்க ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர்த் திங்களில் துவக்கப்பட்ட இத் திட்டத்தின் கீழ், கடன் உதவி கோரி 1,000 பேர்கள் மனுச் செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 630 மனுதாரர்கள் கடன் உதவி பெற வேளாண்மை மற்றும் பயிற்சித் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 193 பேர்களுக்கு—அவரவர் துவங்கவிருக்கும் தொழிலுக்குத் தேவையான—1,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையான மதிப்புள்ள கருவிகளும், தளவாடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

உடல் ஊனமுற்ருேருக்குப் பயிற்சி அளித்து, மறு வாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக வேலே வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் திட்டப்படி 22,300 ரூபாய் செலவில் புத்தகம் 'பைண்ட்' செய்யும் நிலேயம் ஒன்றை (A book binding Unit) கிண்டியிலுள்ள தொழிற் பயிற்சி நிலேயத்தில் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. அந் நிலேயத்தில் துவக்கத்தில் உடல் ஊனமுற்ற 16 பேர்களுக்குப் புத்தகங்களேப் 'பைண்ட்' செய்வது பற்றிய பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெறுகின்றவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் 25 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். ஆறு மாத காலப் பயிற்சிக்குப் பிறகு, அவர்களுக்குத்தேர்வு நடத்தப்படும். அந் தேர்வில் வெற்றி பெற்றவர்கள், அரசினர் அச்சுக்கூடத்தில் பணியாளர்களாக நியமிக்கப் படுவார்கள்.

இவ்வாறு பயன்மிகு திட்டங்களே நிறைவேற்றிக் குறிப்பிடத் தகுந்த சாதனைகளே ஏற்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு!




கயற்கண்ணி — நப்பின்னை! சங்கத் தமிழ் முழங்குகின்ற தமிழகத்துச் சோலையிலே இரு மயில்கள்! இணைந்திருந்து இன்பங் கூறுகின்ற இசைக் குயிலினங்கள்! மூத்தவள் முத்தெடுத்துக் கோத்தது போல் சிரிப்புக்காரி—முழுநிலவு காட்டுகின்ற முகத்துக்காரி! மொண்டு தரும் சுவையனைத்தும் உண்டு களிப்பதற்கு உலகினிலே யாருக்கு வாய்ப்போ என்று ஊர் பேசும்; உவகை சிந்தும் பவள இதழ் கண்டு.

கற்கண்டு இன்னொருத்தி—வயதினிலே இளைய தோழி! தங்கம் மேனி......குணத்தினிலே கொஞ்சம் "கூனி"!

ஓடையிலே—குளிர் தென்றல் மிதக்கின்ற மேடையிலே—அருவியோரத்து அழகுக் காவின் வாடையிலே—அவ்விருவர் ஆடிப் பாடிச் சோடிப் புள்ளெனவே பறந்திடுவர்! காண்போர், தம்மை மறந்திடுவர்!

கிரேக்கத்து எழிலாரும் யவனத்துப் பெருமகளும்—தமிழகத்துக் கரையோரம் இவர்களைக் கண்டதனால் மறுமூச்சு வாங்குவதற்கும் மறந்து போனார்—தலை குனிந்தார்—நிலை குலைந்தார்..........

தென்னகத்துச் சந்தனத்தை வாங்குவதற்கும், மலைப்பாம்பு—மயில்—மிளகு—ஏற்றிச் செல்வதற்கும்—யானைத் தந்தத்தை நாவாயில் அடுக்கிப் போவதற்கும் வெளிநாட்டு வாணிபக் கோமான்கள் வரும்போது கயற்கண்ணி—நப்பின்னை இருவரையும் கண்டு விட்டால், "கிரேக்கத்தை, யவனத்தைப் பண்ட மாற்று செய்து கொள்வோம்; இந்தக் கிள்ளைகளைத் தந்திடுவீர்" எனக் கேட்பார் என்று கூறிக் கிழட்டுப் பெண்டிரெல்லாம் அவர் தம் அழகுக் கீர்த்தி தன்னை வியந்துரைப்பார்!

வாய்ச் செம்புட்கள் தங்குவதற்கு இதயக் கூண்டுதனைப் பெற்றிருக்கும் ஆடவர்தாம் யாரோ—எந்த ஊரோ—என்ன பேரோ—எனப் பேசி விளக்குறி முகங் காட்டிக் கலைந்தார் அவ்வூரார்!

"கயற்கண்ணி, நப்பின்னை தோழிதானே—நப்பின்னை நமதருந் தங்கைதானே—இவள் மூலம் முயன்று பார்த்தால் அந்தத் தித்திக்கும் செந்தேனை யார் கொள்வார்; நம்மையன்றி?" என எண்ணி உழைக் கலானான், மணி வேலன்! மாணிக்கச் சிற்பத்தின் அண்ணன்; மான், புலி, வேழம் கொல்வதையே தொழிலாய்க் கொண்ட பெருவீரன்!

நல்ல தருணம் வாய்க்கின்றபோதெல்லாம் கயற்கண்ணி காதினிலே அண்ணனது அழகு ஆற்றல் வலிவை யெல்லாம் அளந்தளந்து சலித்து விட்டாள் நப்பின்னை!

துடிக்கின்ற அண்ணனிடம் ஓர் நாள், "தொட்டவுடன் துவளுகின்ற தோகையல்ல கயற்கண்ணி! முயற்கொம்பே அவளிடத்தில் காதல் எதிர்பார்க்கும் வேலை யென்பேன்; எதற்கும் புலி கொன்று நகம் கொண்டு வருவாய்!......புலி நகத்தாலி கட்டும் போர்க்குடி மகனுக்கு ஒப்புவாய் என்று அவள் மனத்தை மாற்றுகின்றேன். அதுவும் முழுஉறுதி அல்ல அண்ணா!" என மொழிந்து காட்டுக்கு அனுப்பி வைத்தாள்!

* * *

ஓர் நிலவுக் காலந்தன்னில் விடிவெள்ளி தோன்றும் மட்டும் தோழிதனைக் காணோமென்று தேடி வந்தாள் நப்பின்னை! கடற்கரையின் வெண் மணலில் தனி நடந்து வருகின்ற கயற்கண்ணி விழி யெல்லாம் வெண் சிவப்பாய் இருத்தல் கண்டாள்........விளக்கமேதுப் தேவையில்லை; புரிந்து கொண்டாள் விவரமெல்லாம்!............

"என் அண்ணன் உனக்காகப் புலிநகம் கொண்டு வரப் போனான்—இன்னும் வரவில்லை" யென்று சொன்னாள்.

"வரவேண்டாம்; வந்தாலும் எனக்கு அதைத் தர வேண்டாம் — வாழ்க்கைக்குத் துணையொன்றை நாடி விட்டேன்".

—மொழிந்தவாறு கழுத்தினிலே ஆடுகின்ற முத்தாரம் எடுத்து முத்தம் தந்தாள்!........

"முத்துக் கொடுத்து முத்தம் பெற்றாளோ? முட்டாள் நீ ஏமாந்து விட்டாய்! தமிழ் வீரம் காட்டுகின்ற செயல்புரிந்து புலி நகத்தைப் புதுப் பரிசாய்த் தந்து மணம் புரியும் வழக்கத்தை மாற்றி விட்டாய்—மறத்தியல்ல!" எனக் கடிந்தாள்!

புன்னகையைத் தவழவிட்டுக் கயற்கண்ணி, பொன்னுதிரும் வார்த்தைகளால் பதில் சொன்னாள்!.....................

"அடி தோழி! அவசரப் படாதே!..............ஒளிமுத்து என்கின்ற உயர் வீரன்—உத்தமன்!.........என் உள்ளங் கவர்ந்தான்—மறத்தி நான்—அதனால் மாவீரர்!........புலி நகம் பரிசாக வேண்டுமென்றேன்! புதுவகைப் பரிசு தருவேன் என்றான்—முத்தெடுத்து அளித்திட்டான் — என்னையும் சேர்த்தெடுத்து அணைத்திட்டான்!..................."

"கடையினிலே ஒரு முத்து, ஒளிமுத்து வாங்கித் தருவதற்கும், காட்டகத்தில் புலி வேட்டை ஆடுவதற்கும் வித்தியாசம் நிரம்ப இருக்குடி தோழி!..........."

"கடையினிலே அல்ல; என் கண் எதிரே கடல் நடுவே குதித்தான்..........பின்னர் முத்துச் சிப்பிகளோடு உதித்தான்!

அடுத்த இதழுடன்

இலவச இணைப்பு

**நல்வாழ்வு**

**பொங்கிட....**

"இதோ, நானுந்தான் நேற்றிரவு வாழ்வுக்குத் துணை கண்டேன்!......... புலி வேட்டைப் புலியொருவன்......நம்பியெனும் நல்லோன் நகமொன்று பரிசளித்தான். நான் அவனுக்கானேன்!"

"பரிசுக்கும், பாராட்டும் வீரத்துக்கு மட்டும் பாவையர்கள் பறிகொடுக்க வேண்டுமோ, உள்ளம்!....... பண்போடு—அழகோடு — பராக்கிரமத்தோடு—மணவாளன் வருவதினிலே மரபுக்கு மாசு வருமோ பெண்ணே? கடையினிலே முத்தெடுத்துத் தந்தார் என்கின்றாய் என் கணவன். காட்டினிலே புலிகொன்று வந்தான் உன் கணவன் என்று யார் கண்டார்?"

"நம்பிக்கையில்லை யென்னாதே! நம்பி அவர் பெயர்!"

"இந்த மலருக்குத் தும்பி! அதனால் புகழ்ச்சியுரை!"

"வார்த்தை நீள வேண்டாம்—வாழ்த்துகின்றேன் — வருகின்றேன்—என் வீரர் காத்திருப்பார்!"




நப்பின்னை நன்முகம் கோணிப் போய் விட்டாள் அதைவிட்டு!

"பித்துப் பெண்! இவள் அண்ணன் இருபுலியை ஒன்றாய்க் கொல்வான்—ஆயின் என்?.... அவன் பண்பு பதத்தை வீட்டில் கேட்டால் தெரியும்!" முணு முணுத்துச் சென்றாள் கயற்கண்ணி!

* * *

அண்ணனுக்குக் கயற்கண்ணி வாய்க்கவில்லை யென்கிற சீற்றமுடன் வீடு வந்த நப்பின்னை, மணிவேலன் மனமுடைந்து இருப்பதையும் கண்டு விட்டாள். மன்னிப்புக் கேட்டு நின்றாள்.

"இனியென்ன; போகட்டும்; இலவு காத்த கிளியானேன்" எனச் சொல்லி எழுந்து சென்றான் மணி வேலன்!

"என்ன அண்ணா—எனக்கோர் துணைவன் தேடி விட்டேன்!....... இதோ பார். அவன் கொன்ற புலி நகம்"! எனத் தந்தாள்.....ஆர்வமுடன்!

"யார் அவன்?" என்றான் ஆசையுடன்!

"நம்பி," என்றாள்.

"அவனா?...... அவன் கொன்றானா புலியை?....நான் கயற்கண்ணிக்காகக் கொன்ற புலி நகத்தையன்றோ நம்பிக்குக் கொடுத்தேன், அவள் மணச் சேதி கேட்ட பிறகு!"

—எனச் சொல்லிச் சிரித்தான் வேலன்!

வீரனை மணந்ததாய் எண்ணியிருந்த அத்தோழி, வீழ்ந்துவிட்டாள் பூமிதனில் மூர்ச்சித்து!

நயவஞ்சகன்தான் அந்த நம்பி என்ற சேதி அதன் பிறகு கேள்விப்பட்டாள்; ஆவிதனைக் கடலுக்கு அர்ப்பணித்தாள்! மறத்தியானாள்!

## என்ன பெயர் வைக்கலாம்?

சிலப்பதிகாரத்தில் சுருங்கை (கரந்து படை) என்னுஞ் சொல் கீழே மறைவாகச் செல்லும் பாதையைக் குறிக்க வழங்கப் படுகிறது. ஆகவே, அதனைச் Sub-way என்பதற்கிணையான பெயராகப் பயன் படுத்தலாம்.

மாடம் என்னுஞ்சொல் மேல்நிலை என னும் பொருளில் மாடக்கோவில், மாட வீடு என்றெல்லாம் ஆளப்படுதலைப் போல் மாடச்சாலை என்றும் ஆளப்படலாம். இதனை ஜெமினி அருகே அமைக்கப் பெறும் Fly-overக்கு இணையாகப் பயன்படுத்த லாம். அதனை மேம்பாலம் என்பது தவறானது; Over-bridge என்பதற்கே அது பொருந்தும்.

இவ்வாறு மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர் மா. நன்னன் நமது கருத்தைத் தெரிவிக்கிறார்.



# சட்டமன்றம் தந்த தகவல்கள்

குமார்....

**தமிழகச் சட்டமன்றம் டிசம்பர் திங்கள் 2-ஆம் நாளிலிருந்து 15-ஆம் நாள் வரை கூடியபோது நிகழ்ந்த நடவடிக்கைகளில் கிடைத்த சுவையான சில புள்ளி விவரங்கள்.**

தமிழகத்திலுள்ள 90 நகராட்சிகளில் குடிநீர் வசதி செய்யாதவை 10 தான் உள்ளன. அந்த அளவுக்கு நாம் முன்னேறி வருகிறோம். அதுபோலவே, கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் தீவிரத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

* திருமணத்தை அதிகச் செலவு இல்லாமல் சிக்கனமாக நடத்திக் காட்ட முன்வரவேண்டும். 1971—72-ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களுக்குத்திருமணக் கடனாக ரூ. 2 இலட்சத்து11 ஆயிரம் வழங்கப்பட்டது.

* இளைஞர் அணியில், பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்போது 288பெண் தொண்டர்கள் இவ்வணியில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே ஒரு மாதப் பயிற்சி என்றிருந்தது, 2 மாதப் பயிற்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி முடிந்ததும் அவர்கள் 2 ஆண்டுகள் அங்குப் பணியாற்ற வேண்டும். அவர்கள் பவானி சாகரிலும், சென்னை சமூக நலப் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சி பெறுகிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இம்மாதிரியான 'இளைஞர் அணி' இல்லை. கேரள அரசு இதுபற்றி நம்மிடம் தகவல் கேட்டிருக்கிறது.

* சென்னை நகரில் 1,234 கை ரிக்ஷாக்கள் இப்போது இருக்கின்றன. இவற்றில் தொழிலாளர்களுக்குச் சொந்தமானது 46. மற்றவர்களுக்குச் சொந்தமானது 1,197. 1965-ஆம் ஆண்டில் 3,469 கை ரிக்ஷாக்கள் இருந்தன. கை ரிக்ஷாக்களைப் படிப்படியாகக் குறைத்து, அவற்றுக்குப் பதிலாகச் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் வேலை நடந்து வருகிறது.

* 1970—71-ஆம் ஆண்டில் 13 ஆயிரத்து 60 கிராமங்களில், 27 ஆயிரத்து 857 வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் மொத்தம் 16 ஆயிரத்து 940 வருமானமுள்ள கிராமங்களும், 41 ஆயிரத்து 890 சிறு கிராமங்களும் இருக்கின்றன. எல்லாக் கிராமங்களுக்கும் வானொலிப் பெட்டிகள் கிடைக்கவும், ஆண்டுக்கு 5 ஆயிரம் பெட்டிகள் கொடுக்கவும் 5 இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கப்படுகிறது. மீதிப் பணத்தை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

* விளையாட்டுப் பயிற்சி வகுப்புகளை மாணவர்களுக்குக் கட்டாயமாக்குவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. பள்ளிகளிலேயே சிறந்த 10 விளையாட்டு வீரர்களுக்குத் தலா ரூ. 150 வீதமும், அதேபோல் 10 மாணவிகளுக்கு ரூ. 150 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரிகளிலும் 10 ஆண்கள் 10 பெண்களுக்குத் தலா ரூ. 300 வீதமும், மாணவர்கள் அல்லாத சிறந்த விளையாட்டு வீரர்கள் 10 ஆண்கள், 10 பெண்களுக்குத் தலா ரூ. 300 வீதமும் ஊக்கப் படுத்துவதற்காக வழங்கப்படுகிறது.

* தமிழ்நாட்டில் 1972—73-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் எண்ணிக்கையில் மொத்தம் 78 இடங்களில் கோவில்களின் சார்பில் திருமண மண்டபங்கள் கட்டப்படவிருக்கின்றன.

சென்னை-1, செங்கற்பட்டு-2 தென் ஆர்க்காடு-2, வட ஆர்க்காடு-4, கோவை-18, ஊட்டி-1, சேலம்-4, தர்மபுரி-1, திருச்சி-10 மதுரை-10, இராமநாதபுரம்-2, நெல்லை-5, தஞ்சாவூர்-18.

* சென்னை மாநகராட்சி உறுப்பினர்களின்எண்ணிக்கையை 150 ஆக உயர்த்த வழி செய்யும் திருத்தமசோதா ஒன்றுதமிழ்நாடு மேலவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த வகையில் சென்னை மாநகராட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 120-லிருந்து 150-ஆக உயரும்.

* மாநகராட்சிஉறுப்பினர்களில் 12 பேர் கட்டாயமாக அரிசன உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்றிருப்பதை 15 ஆகவும், 6 பெண்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பதை எட்டாகவும் உயர்த்தத் திருத்த மசோதா வகை செய்கிறது.







சோழ நாட்டைச் சோழ மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் அரண்மனையில் நிறையப் புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் செந்தமிழில் பற்பல பாடல்களைப் பாடிப் புகழ் பெற்றவர்கள். அத்தகைய புலவர்களுக்கு ஒரு சோதனைக் காலம் வந்தது. ஒரு நாள் சோழ மன்னன் புலவர்களைப் பார்த்து, ''நீங்கள் அனைவரும் நாளைக் காலைக்குள் நான்கு கோடிப் பாடலகள் பாட வேண்டும்!'' என்று கட்டளையிட்டுச் சென்றான்.

புலவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பொழுது விடிவதற்குள் நான்கு கோடிப் பாடல்களை எப்படிப் பாடுவது என்று அவர்கள் விழித்தார்கள். எல்லாப் புலவர்களும் ஒன்று கூடித் தீவிரமாகச் சிந்தித்தார்கள். அப்போது ஔவையார் அரண்மனைக்கு வந்தார். புலவர்கள் எல்லாம் ஒன்று கூடிப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். ''புலவர்களே! ஏன் வருத்தமாகக் காணப்படுகிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள் மன்னர் இட்ட கட்டளையைக் கூறினார்கள். அதைக் கேட்ட ஔவையார் ''நான்கு கோடிப் பாடல்கள்தானே? இதோ இப்போதே பாடுகிறேன்!'' என்றார். புலவர்களுக் கெல்லாம் ஒரே வியப்பாக இருந்தது. அவர்கள் அனைவரும் ஔவையாரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஔவையாரோ பாட ஆரம்பித்து விட்டார்!

மதியாதார் முற்றம்
மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்!

உண்ணீர் உண் ணீரென்றே
ஊட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்!

கோடி கொடுத்தும்
குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்!

கோடானு கோடி
கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்!

என்று 'கோடி' எனும் வார்த்தை நான்கு முறை வரும்படி, நான்கு விதமான பொருளுடன் பாடி அந்தப் பாட்டைப் புலவர்களிடம் தந்தார். புலவர்கள் பாட்டைப் பெற்றுக் கொண்டார்கள்.

மறுநாள் காலை புலவர்கள் அரசனை அணுகிப் பாடலைக் கொடுத்தனர். அரசன் அந்தப் பாடலைப் படித்துப் பார்த்தான். புலவர்கள் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தனர். அரசனது முகம் மலர்ந்தது. புலவர்களைப் பார்த்து, ''புலவர் என்றால் நீங்களன்றோ புலவர்கள்!'' என்று பாராட்டினான். புலவர்கள் அனைவரும் மகிழ்வெய்தி அரசனை வணங்கிச் சென்றனர். நமது மானத்தைக் காப்பாற்றிய ஔவையார் எங்கே என்று, அவர் இருக்கும் இடம் தேடிச் சென்று அவரை நன்றியுடன் வணங்கினர் புலவர்கள்.




புலவர் சி. துரைசுவாமி

அறிவில்லா மூர்க்கருடன் உறவு வேண்டாம்.
ஆணவப்பேய் பிடித்தே அழிய வேண்டாம்.
இன்பமென்று பழிவினைகள் செய்ய வேண்டாம்.
ஈனத்தொழில் புரிந்துலகில் வாழ வேண்டாம்.
உண்மைக்கு மாறாக நடக்க வேண்டாம்.
ஊதாரிச் செலவில் பொருள்அழிக்க வேண்டாம்.
எவ்விடத்தும் ஏமாற்றிப் பிழைக்க வேண்டாம்.
ஏழைகளைத் துன்புறுத்தி வாழ வேண்டாம்.
ஐம்புலனை அடக்காமல் இருக்க வேண்டாம்.
ஒற்றுமையைச் சீர்குலைக்க முயல வேண்டாம்.
ஓடும்நதி நிலைகாணு திறங்க வேண்டாம்.
ஔடதத்தின் உயர்வறியா திருக்க வேண்டாம்.
கல்விதனைப் பயிலாமல் இருக்க வேண்டாம்.
காணுமல் பொய்ச்சாட்சி சொல்ல வேண்டாம்.
கிட்டாத பொருள்நத்தி ஏங்க வேண்டாம்.
கீழ்ப்படிந்து நடப்பதற்கு மறுக்க வேண்டாம்.
குடிகெடுக்கத் தீயவருடன் கூட வேண்டாம்.
கூடுகின்ற நல்லவரைப் பிரிய வேண்டாம்.
கெடுங்காலை மதிமயங்கித் திரிய வேண்டாம்.
கேண்மைக்கு ஊனம்வர நடக்க வேண்டாம்.
கைவலியால் பிறஉயிரைக் கொல்ல வேண்டாம்.
கொடுமைசெய்து பிறர்துடிக்க மகிழ வேண்டாம்.
கோடிதனம் படைப்பின்நிலை அழிய வேண்டாம்.
சக்தியுள்ள மனநிலையைப் பழிக்க வேண்டாம்.
சாதிமத பேதங்கொண்டு வாழ வேண்டாம்.
சிற்றினத்தின் புகழ்ந்துரையை மதிக்க வேண்டாம்:
சீர்திருத்தி நலம்புரிய அஞ்ச வேண்டாம்.
சுடுசொல்லால் பிறர்வருந்தப் பேச வேண்டாம்.
சூதருடன் கூடிமனம் மகிழ வேண்டாம்.
செய்கின்ற கடமைதனை மறக்க வேண்டாம்.
சேவைசெய்து பொருளீட்ட மலைக்க வேண்டாம்.
சொந்தமென்று பகைவருடன் சேர வேண்டாம்.
சோதனைகள் வருங்காலம் கலங்க வேண்டாம்.
சௌந்தரம் எனப்பாம்பை அணைக்க வேண்டாம்.
ஞயந்துரைக்கும் கயவருடன் பழக வேண்டாம்.
ஞாபகத்தின் சக்தியென்றும் இழக்க வேண்டாம்.
தன்மானம் இழக்கப்புவி வாழ வேண்டாம்.
தாய்தந்தை அறிவுரையைத் தட்ட வேண்டாம்.
தினந்தோறும் குளிக்காமல் உண்ண வேண்டாம்.
தீமொழியை நாவாலே துதிக்க வேண்டாம்.
துறந்தவரை மறந்தேனும் தூற்ற வேண்டாம்.
தூக்கத்தை மிதமிஞ்சிக் கொள்ள வேண்டாம்.
தெளியாமல் புதுவழியில் இறங்க வேண்டாம்.
தேருமல் நட்பாடத் துணிய வேண்டாம்.
தைரியத்தை ஒருபோதும் இழக்க வேண்டாம்.
தொழிலின்றி வாழ்நாளைப் போக்க வேண்டாம்.
தோய்ந்தபணிக் கிடையில்மனம் மலைக்கவேண்டாம்.
நம்பிக்கைத் துரோகமது செய்ய வேண்டாம்.
நாணயத்தை ஒருபோதும் இழக்க வேண்டாம்.
நிலையாமை சதமெனவே நினைக்க வேண்டாம்.
நீதியில்லாத் தீர்ப்புக்களைக் கூற வேண்டாம்.
நுட்பங்கண்டு வாழாமல் இருக்க வேண்டாம்.
நூதனத்தின் உண்மைகளை மறுக்க வேண்டாம்.
நெஞ்சமதில் துயரமுற்றே அலைய வேண்டாம்.
நேர்மைக்குக் கேடெதுவும் செய்ய வேண்டாம்.
நைந்தவரைத் தாழ்வாகக் கருத வேண்டாம்.
நொடிந்தாலும் பிறர்நோகச் செய்ய வேண்டாம்.
நோயினுக்கு இடங்கொடுத்து மகிழ வேண்டாம்.
பயனில்லா மரம்போன்று வாழ வேண்டாம்.
பால்போன்று கள்ளுண்டு மகிழ வேண்டாம்.
பிச்சையொரு பிழைப்பென்று கருத வேண்டாம்.
பீதிதரும் செயலில்மனம் பொருத வேண்டாம்.
புத்திக்குச் சத்துருவைத் தேட வேண்டாம்.
பூரியர்போல் இருந்துமனம் களிக்க வேண்டாம்.
பெருமைக்கு இழுக்கென்றும் தேட வேண்டாம்.
பேராசை பிடித்தெதிலும் மோத வேண்டாம்.
பைத்தியத்தைப் பரிகாசம் பண்ண வேண்டாம்.
பொறுமையின் பலம்சிறிதாய் நினைக்க வேண்டாம்.
போர்க்களத்தில் உறவுமுறை பார்க்க வேண்டாம்.
மடமைதனைப்பழமையென்று போற்றவேண்டாம்
மாற்றாரைப் பகைவரென்று தூற்ற வேண்டாம்.
மித்திரர்போல் புறம்பேசிப் பகைக்க வேண்டாம்.
மீண்டும்புவி பிறப்பதைநீ நம்ப வேண்டாம்.
முடியாத வினைதொடங்க முயல வேண்டாம்.
மூடருள் பகைவளர்க்கத் துணிய வேண்டாம்.
மெத்தெனவே ஈட்டுங்கால் இருக்க வேண்டாம்.
மேன்மைதரும் நிலைவருங்கால் வெறுக்க வேண்டாம்
மையல்கொண்டு தீதில்மனம் செலுத்த வேண்டாம்.
மொழிவதிலே இனிமையின்றிப் பேச வேண்டாம்.
மோசம்புரிந் தெப்பொருளும் சேர்க்க வேண்டாம்.
மௌனத்தால் ஏய்த்துலகில் வாழ வேண்டாம்.
வரவுக்கு மேற்செலவு செய்ய வேண்டாம்.
வாழ்வோரைக் கெடுத்துலகில் வாழ வேண்டாம்.
விதியென்று சோம்பலுடன் இருக்க வேண்டாம்.
வீரத்தை மெலிந்தவிடம் காட்ட வேண்டாம்.
வெற்றிக்கு மதம்பிடித்தே அலைய வேண்டாம்.
வேட்கைக்குப் பலிதந்து மகிழ வேண்டாம்.
வையம்போல் வாழாமல் இருக்க வேண்டாம்.
வௌவாலாய் உலகிடையில் வாழ வேண்டாம்.

இந்தியக் கலைப் பொருட்களை யெல்லாம் கண்டுகளித்து இந்தியக் கலையின் மேம்பாட்டினைப் பொது மக்கள் உணர்ந்து மகிழ வதற்குத் தக்க வாய்ப்பளிப்பதே தேசியக் கலைக் கூடத்தின் நோக்கமாகும். இச் சீரிய நோக்குடன் 1951-ஆம் ஆண்டு விக்டோரியா நினைவு மண்டபத்தில் இந்தக் கலைக்கூடம் அமைக்கப்பட்டது. இக்கலைக் கூடத்திற்குத் தேசியக் கலைக்கூடம் என்ற பெயரைச் சூட்ட வேண்டுமென்று கூறியவர் அன்றையத் தமிழக ஆளுநராக இருந்த பவநகர் மாகாராஜா ஆவார். இதில் இடம் பெற்றுள்ளவை பெரும்பாலும் தென்னிந்திய, மொகலாய, இராஜபுத்திர கலைகளைச் சார்ந்த வண்ண ஓவியங்களே ஆகும்.

இக்கலைக்கூடம், 1961-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாளில், சென்னை அரசின் அரும்பொருட்காட்சியகத்தின் நூற்றாண்டு விழாவினையொட்டி, அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் பண்டித நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சில வெண்கலக் கலைப் பொருட்கள், தந்தத்தாலான கலைப் பொருட்கள், மரப் பொருட்கள், பல் வேறு ஓவியப் பிரிவுகளிலிருந்தும் பெற்ற ஓவியங்கள் ஆகியவற்றை மட்டுமே ஆரம்பத்தில் கொண்டிருந்த இக் கலைக் கூடம் காலப்போக்கில் கலைப் பொருட்களை விலைக்கு வாங்கிச் சேகரித்து விரிவடைந்தது. இக் கலைக் கூடத்தை விரிவு படுத்துவதற்கு 1951-ல் ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டது.

இங்குக் காணப்படும் பொருட்கள் வரலாற்றுக் கால அடிப்படையில் அடுக்கப்படவில்லை. ஆனாலும், அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன.

முதலாவது அறையில் ரவி வர்மாவின் ஓவியங்களும், அவரைப் பின்பற்றி வரும் ஓவியப், பிரிவின் வண்ண ஓவியங்களும் காட்சியளிக்கின்றன. அடுத்து, முஸ்லிம் மன்னர்களின் படை வரிசை நடந்து செல்லும் எடுப்பான காட்சியை இரண்டு பெரிய ஓவியங்கள் எழிலுறக் காட்டி நிற்கின்றன. அதனை அடுத்து ரவிவர்மாவின் ஓவியத் திறனுக்கு ஓர் ஒப்பற்ற சான்றாகச் சகுந்தலையின் ஓவியத் தோற்றம் உயிர் பெற்று நிற்கிறது.

இரண்டாவது அறையில் கோயில் தேர்களிலிருக்கும் மரப் பொம்மைகளில் தெரிந்தெடுக்கப் பட்டவை வைக்கப்பட்டுள்ளன;

பெரு மண்டபத்தில் காட்சியளிப்பவை பெரும்பாலும் ஓவியங்களும், வெண்கலப் பொருட்களுந்தாம். இம்மண்டபத்தின் இடப் பக்கத்தில் தென்னகத்தின் பழங்கால ஓவியங்களும், வலப்புறத்தில் தற்கால ஓவியங்களும் வைக்கப்பட்டுள்ளன. வட இந்தியக் கலைப் பொருட்கள் சாய்வுக் காட்சிப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. திருவாலங்காடு நடராசர் வெண்கலச் சிலைகளின் சிறப்புச் சின்னங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக வைக்கப்பட்டுள்ளது.

தற்கால ஓவியங்களும், வெண்கலப் பொருட்களும் மூன்றாவது அறையில் காட்சியளிக்கின்றன. தொடர்ந்து பெருகிவரும் இன்றையக் கலைப் பொருட்களை வைப்பதற்காகப் பின் பக்க அறையிலிருக்கும் முதல் மாடியில் மேலும் ஒரு கூடம் திறக்கப்பட்டுள்ளது. அவ்வப் போது கிடைக்கும் பொருட்களை வைப்பதற்காக இக்கூடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்கால ஓவியப் பகுதியில் டி.பி. ராய் சௌத்ரி, எல். முனுசாமி, நரசிம்ம மூர்த்தி, கோடூர் இராமமூர்த்தி ஆகியோரின் ஓவியங்கள் பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன.

## விவசாயத் தொழிலாளருக்கு வீட்டுமனை உரிமை

1971-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 19-ஆம் நாளுக்கு முன்பிருந்து வாடகைக்கோ, மனைபெற்றுக் குடியிருப்பு நடத்தும் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடியிருக்கும் மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிடும் வகையில் தமிழக அரசு; முதலாவதாகத் தஞ்சை மாவட்டத்தில் 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15-ஆம் நாள் முதல் அமல்படுத்தி அதனால் 1,57,265 பேரைப் பயனடையச் செய்தது.

இதே திட்டத்தை அரசு 1972-ஆம்ஆண்டு டிசம்பர்த் திங்கள் 10-ஆம் நாள் முதல் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, தருமபுரி, சேலம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் விரிவுப்படுத்தியுள்ளது. சேலம், இராமநாதபுர மாவட்டங்களில் முறையே ஏர்க்காடு, இராசபாளைய துணை வட்டங்கள் நீங்கலாக இந்தத் திட்டம் அமலாகிறது.

ஏழு மாவட்டங்களிலுமுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள் தவிர மற்ற இடங்களில் இது அமல்படுத்தப்படுவதால் விவசாயிகளுக்கும்,விவசாயத் தொழிலாளர்களுமாக ஏறத்தாழ 24,600 பேருக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாகக் குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப் படுகின்றன.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.



# தித்திக்கும் பொங்கலுக்கு எத்தனைதான் புது மகிழ்ச்சி!

*இன்றே வாங்குங்கள்*

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

**ரூ. 1,00,000** (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.



குலுக்கல் நாள்

**10-1-1973**

பரிசு சீட்டு ஒன்றின் விலை
ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி,
மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9,

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.







# அரசு - மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடு களைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்**
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** - வலிவும் வளப்பும் வாய்ந்தது

AC-16







தழைத்துக் குலுங்கும் தண் மலர்ப் பொழில். ஆங்கு மழைக் கூந்தற்காரி—பேரழகி யொருத்தி அவள் இடைக்குப் பொன் வேய்ந்த துகில் பூண்டு நிற்கின் றாள், அணைக்கும் காதலனை அழைக்கும் கண்கொண்டு! கன் னங்களில் தேன் மொண்டு! கிள்ளை அவள் பெயர். பல், முல்லை; இதழ், சர்க்கரை வில்லை.

அவனோ, தமிழழகன். இளவணி கன். பருவமயில் ஆடுதற்கு முகில் கூட்டும் கண்ணுடை யான். வளரும் மலைத் தோளு டையான். வளவன் பெயரால்.

அவன், விற்காட்டும் புருவத் தாளை—தற்காத்துத் தற்கொண் டான் பேணுகின்ற கற்புக்கருவத் தாளை—சந்திக்க வருகின்றான்; பத்திக்கு முந்துகின்ற பசிகாரன் வேகத்தில்.

கனிமரங்கள் தலைநாணும்—அவள் எழில் தருவாய் நிற்கின்ற காட்சி கண்டு; வந்து விட்டான் வளவனென்ற சேதி தன்னை அங்கிருக்கும் சருகுகளின் சல சலப்பால் அறிந்து கொண்டாள். ''அத்தான்'' என்பதற்குள் அணைத்துவிட்டான் பின்னிருந்து; கொத்தாக இன்பம்—குலை குலை யாய்ச் சுவை மொழிகள்—காதல் அலை முழங்கும் இரு கடல்கள்—பெருவிருந்து—நீண்ட மௌனம். விடியற் பற வைகளின் பண்கேட்டு விழித் தெழுந்தார்.

''நீலவிழி நெருப்பாகச் சிவந்த தடி என் கண்ணே'' என அவன் கூற, ''ஆமத்தான்! அங்கென்ன வாழ்கிறது?'' எனச் சொல்லி மீண்டும் தழுவுகின்றாள்.

''இனி நாம் இதுபோல் ஆடிப் பாடிட இருபத்துத் திங்கள் ஆகும் பெண்ணே—நாளை மறு நாள் ரோம் நகரம் போகின் றேன் கண்ணே.''

''கட்டழகா! கடலலையில் கட்டு மரம் போலத் தவிப்பதற்கோ பிறந்தேன்? இல்லை—இந்தப் பயணத்தைத் தவிர்ப்பதற்குத் துணிந்தேன்.''

''தடை வேண்டாம்—தணல் வேண்டாம் உன் விழியில். புனல் கடந்து ஒளிமுத்து விற் றால், மடை திறந்த வெள்ளம் போல் பொற்காசு குவியும். தமிழர் வளத்தைத் தரணி அறி யும். விடை கொடு பாவாய்—அத்துடன் விருந்தளிக்கும் உன் இதழ்க் கடையை இங்குக் கொடு.''

''முத்துச் சுமை யேற்றிக் கத்து கடல் கீறிச் செல்கை யிலே, குத்து விளக்கொன்றை இங்குச் செத்து மடிய விட்டுச் செல்கின்றோம்........ என நினைப்பீரா அத்தான்?''

''நினைக்க மாட்டேன் நேரி ழையே........உனை மறந் தன்றோ நினைப்பதற்கு.''

''களவொழுக்கம் புகுந்து விட்டோம்—நாளை மறந்து விட் டால் நில நடுக்கம் என் வாழ் வில் இதை உணர்வீர்.''

''மூச்சு வாங்குவதற்கும், விடு வதற்கும் நினைப்பை வைத்துக் கொள்வதில்லை, என் உயிர் மூச்சே! ஏதேதோ எண்ணாதே. நீயின்றி நானில்லை, நிலவின்றி வானில்லை.''

''விண் மீன்கள் படையெடுத் தால்?''

''புலால் உண்ணேன்.''

''ரோம் நாடு அழகிகள் வாழ் தேன் கூடாமே.''

''அங்கு, நானோர் முடவனா யிருப்பேன். கொம்புத்தேன் தமிழகத்தில் உண்டென்று உன் கொய்யா இதழ் நினைத்து உறங் குவேன். கற்பனையில் உண்ணு வேன்.''

''வெளிநாட்டுக் கனியொன் றைச் சுவைப்போமே யென எண்ணி விட்டால்........?''

''அணிலா நான் ? பலகனி சுவைக்கும் பண்பில்லை எனக்கு''

''பரத்தையர் நட்பு, குற்ற மில்லையெனக் கொண்டு விட் டால்..........?''

''தமிழர் பண்பு இன்று அஃதேயெனினும் நான் விதி விலக்கு; வீண் ஐயத்தை நீ விலக்கு.''

பிறகு பேச்சில்லை. இருபது திங்கள் பிரிவுக்கும் சேர்த்தளித் தார்கள் ஒருவருக்கொருவர் இன் பச் சுவையை. பாலைவனப் பய ணம் போகும் ஒட்டகம் போல, இருபது திங்கட்கு இன்பத்தை மூட்டை கட்ட இடந்தரவில் லையே இயற்கையென வருந்தி நின்றார். பின் பிரிந்தார், நன் றாக விடிந்து விட்டதால்.

* * *

தென்பாண்டிக் கடல் முத்தை முதுகிற் சுமந்து தமிழகத்து நாவாய் ஒன்று ரோம் நோக்கிப் போகும் காட்சி. அதன் தளத் தினிலே வளவன் நின்று, உளத் தினிலே மூண்டுவிட்ட காதல் தீயால் கிள்ளையை எண்ணிச் சிறு பிள்ளைபோல் அழுதான். ''ஏன் சோகம்?'' என்று ஒரு தேன் குரல் கேட்டுத் திரும்பி னான். கிள்ளையினும் கவின் மிக்காள். கீழ்வானத்துச் சூரி யன் போல் கன்னங் கொண் டாள். உடலெடுப்பாய்த் தோன்றுகின்ற உடையமைப்பு; காதலுக்கு வாவென்று தூது விடும் கண்ணின் கடை அழைப்பு; விற்புருவம்; அதன் மேலே விண்மீன்கள் போலே ஒளிர்கின்ற புள்ளிக் கூட்டம்; கார் கூந்தல்—கட்டி முடிந்திருக் கும் காட்சிக்கு இரண்டு நாட் கள்—இருபது ஆட்களுக்குமேல் பிடித்திருக்கும்.

தாமரை மலர் மீது வண் டொன்று அமர்ந்தது போல், அவள் முகம்மீது ஓர் அழகுப் பரு. இன்ப உரு.

யாரென்றான், ரோமென்றாள்; பெயர் கேட்டான். 'லெஜியா, பெருவணிகன் மார்க்கசின் பேத்தி'—தகவல் தந்தாள். காதல் அகவல் பாடும் அவள் விழி கண்டான். புரிந்து கொண் டான், அவள் நெஞ்சம்.

''மயில், மிளகு, முத்துத் தரும் தமிழகம்—எனக்கு மையல் தீர்க்கும் அழகனையும் அளித்தது'' என்றாள். ''அவன் யார்?'' அவன் கேட்டான். துணிச்சல்காரி, அவன் தோள் சாய்ந்து ''நீர்தான்'' என் றாள். ''கடல் நீர் கரிக்குமம்மா'' எனக் கேலி பேசி அகன்று விட்டான். ''பருகுதற்குத் தேவையில்லை, என் இதயப் படகு மிதப்பதற்குத் தேவை'' யென்றாள். ''பாய் கட்டிப் படகு நீ ..........காற்ற டித்த பக்கமெல்லாம் செல் லாதே......கற்புச் சுக்கானை ஒழுங்காய்ப் பிடி'' யென்றான். ''காற்றும் நீர்......படகும் நீர்........பாய்மரமும் நீர் ......சுந்தரத் திருப்பம் தரும் சுக்கானும் நீர்...... இந்த ஓடம் ஊர்கின்ற கடலும் நீர்.............

''கடலும் நீர்தான்.''

''என் கண்களிலும் அது தான்.''

''கவனித்தேன்...... விழி நீரில் என்னை மிதக்க விடாதே—

விடுவித்து விடு தங்கையே என்னை.''

''தங்கை யென்றா அழைக் கின்றீர்...........?''

''திகைப்பானேன். தமிழகத் தின் பெருமைசார் பண்பு தாயே அது.''

''ஆண்டவன் அளித்த அழ கிற்கு நீங்கள் தரும் மதிப்பு இது தானா?''

''ஆண்டவனை அளித்தார் களே, அவர்களையே தமிழகம் மதிப்பதில்லை.''

''அழகைக் கூட அப்படித் தானா?''

''இல்லை........ ரோமாணி யரைப் போல், தமிழர் அழ கிற்கு அடிமை யாவதில்லை, அழகை வியப்போம்—வளர்ப் போம்—மதிப்போம்— இவ்வ ளவும் எங்கள் நாகரிக இலக்க ணத்திலிருந்து சிறிதும் நழுவா மல்.''

''என் ஆசை வெறும் கனவு தானா?''

''வருந்துகிறேன். என்னை முன்பே இன்னொருத்திக்கு ஒப்ப டைத்து விட்டேன், லெஜியா.''

''யார் அந்தக் கொடுத்து வைத்த கோகிலம்?''

''கிள்ளை அவள் பெயர்.''

''அவள் வாழ்க—இதோ என் அன்பின் அடையாளமாக அவ ளுக்கு இந்த முத்து மாலையை அணிவிப்பீர்களா?''

''ஆகட்டும்.''

''அவளை நான் மதிக்கிறேன்; அவள் பெரும் பேறு பெற்றவள். கற்புடைய கட்டழகனைப் பெற்ற அந்த நல்லாள் வாழ்ந் திடுக. வளவர் கோமானே.... தங்கள் அன்பு நினைவாக எனக்கு ஏதாவது..........''

''இதோ.......... இதயத் தூய்மையை வெளிப்படுத்தும் பரிசு........ இந்த முத்துக் கணையாழியை அணிந்து கொள். ..........இது தங்கைக்கு அண்ணன் தரும் அணிகலன் ..........''

இருபத்துத் திங்கள் கழிந் தன. ஒரு திங்கள் வான் நீங் கிச் சோலையிலே வந்ததுவோ எனத் தக்க காட்சி; கிள்ளை நிற்கின்றாள், இன்பக் கொல்லை யிலே, அத்தானின் அன்புத் தொல்லையிலே அகப்பட்டுக் களிக்க! 'முத்தம் பெறுவதற்கு



முன்பாகக் கரம் ஏனோ கன்னத்தைத் தடவுகிறது? சந்தம் வரும் திக்கெல்லாம் ஏனோ கண் நோக்குத் தாவுகிறது? எனை மீட்ட வரும் யாழரசன் எங்கே யென்று இதய வீணை ஏனோ தவிக்கிறது? ஏனோ தாபம் தவிக்கிறது? கருகிப் போகும் முன்னாலே பயிர்க்கு மழை போலவே-உருகிச் சாகும் உளிபடாச் சிலை முன்பு ஒளித் தமிழன் வந்துவிட்டான். ''அத்தான்'' என்றாள். இதழ்ப்போர்; முழவின்றி, முன் அறிவிப்பின்றி, முடிவுமின்றித் தொடங்கிற்று; இடையிடையே சொல் முத்து.

'வாணிபம் எவ்வாறெ'ன்றாள். ''மிகவளம்'' என்றான். 'மின் வெட்டுக்காரிகள் யாராவது?.. ..........என இழுத்தாள். ''யாருமில்லை'' யென்று கூறி, ''ஆரம் ஒன்று கொண்டு வந்தேன்; அணிந்து கொள்'' என எடுத்தான்.

''ஏது இது?''

''ரோம் நகர வேலைப்பாடு.. ......தமிழ் நாட்டு முத்து.''

''யார் அளித்தார்?''

''ஒருத்தி தந்தாள் உனக்காக'

''அவள்?''

''என் தங்கை போல .... ரோம் நாட்டுக்காரி.''

''உண்மைதானா?''

''உன் மீது ஆணையாக .... ......ஒளிர்பூங் கொம்பே : உன் கழுத்தை இங்குத் தந்திடு.''

''அத்தான் ........ இந்த முத்துக் கணையாழி கண்டீரோ?''

எனக் கேட்டாள் கிள்ளை. கண்டுவிட்டு வியப்படைந்தான் மணப்பிள்ளை.

''யாரளித்தார் எனக் கேட்பீர்? ஒரு தமிழன்—உயர் தமிழன் தந்தார்.''

''யார் அந்தத் தமிழன்?''

''எனக்கு அண்ணன் போல',

''உண்மையா?''

''ஆமாம் ....... லெஜியாவுக்கு அவர் அண்ணன் ....''

''லெஜியா—நீயே தாய் ..?''

''அத்தான் ......நானே தான் லெஜியா''

''கிள்ளை. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்பதை மறந்தனையோ? ''

''மறக்கவில்லை ...... விதி விலக்கு எனக்கு மட்டும்.''

சிரித்தான் அவன் .... அவள் கழுத்தில் முத்தாரம் அணிவித்தான். அவள் சிரிப்பு முத்தாரம் தந்தாள். பின்னர் இரவெல்லாம் முத்தாரம் தொடுத்தார் இருவருமே.





# சூரியகாந்தி எண்ணெய்

சூரியகாந்தி எண்ணெய்யில் எளிதில் செரிக்கப் படக்கூடிய உடல் நலத்திற்கு ஏற்ற கொழுப்புச் சத்து உள்ளது. உயிர்ச் சத்து 'ஏ, பி, டி, கே, (vitamin A, B, D, K) ஆகியவை சூரியகாந்தி எண்ணெய்யில் அடங்கியுள்ளன.

சூரிய காந்தி எண்ணெய் இரத்த அழுத்தம் (Blood Pressure), இருதய நோய் (Heart attack) ஆகிய நோய்களினால் அவதியுறுவோர்க்கு மிகவும் ஏற்றதாகும். சூரிய காந்தி எண்ணெய் தமனிகளில் தடிப்பு ஏற்படுவதைத் (Arteriosclerosis) (இரத்த அழுத்தம் ஏற்படுவதற்குரிய மூலகாரணம்) தடுக்கிறது.

சூரிய காந்தி எண்ணெய் நீரிழிவு (Diabetes), இருமல், நுரையீரல் கோளாறு (சுவாசக்கோளாறு),வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல இயற்கை மருந்தாக அமைகிறது.

சூரிய காந்தி எண்ணெய் நோய் பரப்பும் நுண்ணுயிர்களை (Bacteria) அழிக்க வல்லது. எனவே அன்றாட உணவில் சூரிய காந்தி எண்ணெய்யைப் பயன்படுத்துவது மிகவும் சிறந்தது.

சூரிய காந்தி எண்ணெய் விரைவில் உலரக் கூடிய தாகையால் வார்னிஷ் பெயிண்டு, சோப்பு முதலியன தயாரிக்கவும், மற்றும் கம்பளித் தொழிற்சாலைகளிலும், மரத்தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.






"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது!" என்ற பழமொழியை உயர் விளைச்சல் ரகங்கள் பொய்யாக்கி விட்டன. அத்தகைய உயர் விளைச்சல் ரகங்களில் அதிக மகசூல் அளிப்பது 'அதிசய நெல்' எனப்படும் ஐ.ஆர். 8 ரகமாகும். அதற்கு அடுத்தபடியாக அதிக மகசூல் கொடுப்பது 'அதிசயக் கிச்சலி' எனப்படும் ஐ. ஆர். 20 ரகமாகும். ஆனால், ஐ. ஆர். 8 ரகத்தைவிட ஐ. ஆர். 20 ரகம் கீழ்க்கண்ட சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளது.

* கிச்சலி அரிசி போல் ஐ.ஆர். 20. அரிசி சன்னமாக உள்ளது.
* ஐ. ஆர். 20 அரிசி எல்லாராலும் விரும்பி உண்ணப்படுகிறது.
* ஐ.ஆர். 20 ரகம், ஐ.ஆர். ரகத்தைவிடப் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது.
* ஐ. ஆர். 20 நெல்லும், அரிசியும் விற்பனைக் கூடங்களில் அதிக விலைக்கு விற்பனையாகின்றன.

இத்தகைய அருங் குணங்களைப் பெற்றிருப்பதால், இந்த ஆண்டில் டிசம்பர் 15 முதல் மே வரையான நவரைப் பருவத்தில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் 3,07,000 ஏக்கரில் ஐ. ஆர். 20 நெல் ரகத்தைக் கடும் விரைவு பின் பருவத் திட்டத்தின்கீழ் சாகுபடி செய்யத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை முயன்று வருகிறது. அது போலவே ஐ. ஆர். 8 நெல் ரகத்தையும் மேற்கூறிய 3 மாவட்டங்களிலும் கடும் விரைவு பின்பருவத் திட்டத்தின் கீழ் 2,39,000 ஏக்கரில் பயிரிட வேளாண்மைத் துறை ஆவன செய்து வருகிறது.

மற்ற மாவட்டங்களிலும் தண்ணீர் வசதி உள்ள இடங்களிலெல்லாம் சனவரித்திங்களில் ஐ. ஆர். 8, ஐ. ஆர்.20 நெல் ரகங்களைப் பயிரிட்டு நல்ல மகசூல் எடுக்க இயலும்.

கடந்த சில ஆண்டுகளின் நவரைப் பட்டங்களில் ஐ. ஆர். 8 நெல் ஏக்கருக்கு 3,500 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது. அதுபோலவே ஐ. ஆர். 20 நெல் ஏக்கருக்கு 3,000 கிலோ வரை மகசூல் அளித்துள்ளது. எனவே கீழ்க்கண்டுள்ள சாகுபடிக் குறிப்புகளைப் பொங்கல் பரிசாக 'தமிழரசு' இதழ் சார்பில் அளிக்கின்றோம்.

அதிசய நெல் ஐ. ஆர். 8

அதிசயக் கிச்சலி ஐ. ஆர். 20

### சாகுபடிக் குறிப்புகள்.

பருவம்.—நவரைப் பருவத்தில் (டிசம்பர் 15 முதல் மே வரை) சாகுபடி செய்யலாம்.

### வயது.

ஐ. ஆர். 8: 135 நாட்கள், ஐ. ஆர். 20: 125 முதல் 135 நாட்கள்.

### விதையளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ (14 படி) விதையை நாற்று விட வேண்டும்.

### விதை நேர்த்தி

நோய் தாக்குவதை முன் கூட்டியே தடுக்க 18 கிலோ விதையுடன் 36 கிராம் (1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்துவீதம்) 'அக்ரசான் அல்லது 'செரசான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' அல்லது 'டில்லக்ஸ்' அல்லது 'காப்டான்' மருந்தைக் கலக்க வேண்டும்.

### நாற்றங்கால் அளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 செண்ட் பரப்பளவில் நாற்று விட வேண்டும்.

### நாற்றங்கால் தயாரித்தல்

நாற்றங்காலை நன்கு உழுது, 12 செண்ட் நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு அல்லது 1 வண்டி பசுந்தழை போடவும்.

பசுந்தழை போட்டிருந்தால், மறுபடியும் நாற்றங்காலை 2 முறை உழுது, பரம்படித்து 8 அடி அகலத்திற்கு ஒரு வாய்க்கால் வீதம் அமைத்து 8 அடி அகல மேடைப் பாத்திகள் அமைக்க வேண்டும்.

எட்டு அடி அகலமும், 54 அடி நீளமும் கொண்ட செண்ட் நாற்றங்கால் அமைப்பது சிறந்தது.

நாற்றங்காலின் நான்கு ஓரங்களிலும் வாய்க்கால் அமைத்து, மேடைப் பாத்திகளை நன்றாகச் சமப்படுத்தி மூன்றுங் கொம்பு விதைகளைச் செண்டிற்கு 1 1/2 கிலோ வீதம் எடுத்துக்கொண்டு, ஒரே சீராக விதைக்கவும்.

நாற்றுவிட்ட 3-ஆம் நாள் முளைநீர்விட்டு வடிக்கவும்.

அதன் பின் தேவையான பொழுது தண்ணீர்விட்டு வடிய விடவும். தண்ணீர் தேங்கி நின்றால் முளைகள் அழுகி விடக் கூடும்.

நாற்று நன்கு முளைத்து, வளர்ந்த பிறகு ஒரு வாரம் அல்லது 10 நாள் கழித்து இலேசாக நாற்றங்காலில் தண்ணீர் தேங்கலாம்.

### நாற்றங்காலுக்கு மேலுரம்

நாற்று விட்ட 14-ஆம் நாள்—அதாவது நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்கள் முன்பாக —12 செண்ட் நாற்றங்காலுக்கு 10 கிலோ யூரியா அல்லது 22 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாகத் தூவி விட வேண்டும்.



### நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்.

நாற்று விட்ட 17-ஆம் நாள் 12 செண்ட் நாற்றங்காலுக்கு, 6 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 15 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 12 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

### நாற்றுப் பறித்தல்

நாற்று விட்ட 24-ஆம் நாள் நாற்றுகளைப் பறிக்க வேண்டும்

நாற்றுகளைப் பறிக்கும் பொழுது வேர்கள் அறுந்து விடாமல் மிகவும் கவனமாகப் பறிக்க வேண்டும்.

நாற்றுகளைப் பறித்த அன்றே நட்டுவிட வேண்டும்.

நாற்றுகளை முடிகளாகக் கட்ட நாற்றுகளையே வளைத்துக் கட்டக் கூடாது. அவ்வாறு செய்தால் நாற்றுகள் முறிந்துவிடக் கூடும். எனவே, தாள் வைக்கோல் கொண்டு நாற்று முடிகளைக்கட்ட வேண்டும்.

நாற்று முடிகளின் வேர் பாகத்தைக் கையில் பிடித்துக் கொண்டு நாற்றின் மேல் பகுதியை மட்டும் மருந்துக் கலவையில் நனைத்து எடுத்து நடவு செய்வது நல்லது. இவ்வாறு செய்ய 25 லிட்டர் தண்ணீரில் 12½ மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 25 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 62 கிராம் குமான் அல்லது 125 கிராம் டைத்தேன் மருந்தையும், கலந்து, அக்கலவையில் நாற்றுகளின் மேற் பகுதியை மட்டும் நனைத்து எடுத்துப் பிறகு நடவு செய்ய வேண்டும்.

### நடவு வயல் தயாரித்தல்

நாற்று விட்ட 14-ஆம் நாளில் நடவு வயலை உழவு செய்யத் தொடங்கலாம்.

நடவு வயலை இரும்புக்கலப்பையால் 3 முறை உழவு செய்ய வேண்டும்.

'கேஜ்வீல்' எனப்படும் கூண்டுச் சக்கரம் இணைத்த டிராக்டரைப் பயன்படுத்தினால், நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக 2 முறை உழுது, பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்தவும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது 2,300 கிலோ பசுந்தழை இட வேண்டும்.



கூடுமானவரை 10 நாட்களுக்கு மேற்பட்ட பழைய சேற்றில் நடவு செய்யக்கூடாது.

### அடியுரம்

நாற்று விட்ட 22 அல்லது 23-ஆவது நாளில், நடவு வயலில் கடைசி உழவு செய்யவும். கடைசி உழவின்போதுஏக்கருக்கு 45 கிலோ தழைச் சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவில் சத்துக் கிடைக்க 100 கிலோ யூரியா அல்லது 225 கிலோ அமோனியம் சல்பேட் 220 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ மியூரியேட் ஆப்பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 200 கிலோவையும், யூரியா 24 கிலோவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 235 கிலோவையும், 22 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

16 : 16 : 16 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 220 கிலோவையும், 22 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

16 : 20 : 0 கூட்டு உரத்தில் 175 கிலோவையும், 37 கிலோ யூரியாவையும், 60 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக இட வேண்டும்.

### நடவு செய்தல்

நாற்று விட்ட 24-வது நாளில், நாற்றுகளைப் பறித்து அன்றே நடவு செய்து விட வேண்டும். இதனால் விரைவில் பச்சை கட்டும்.

கூடுமானவரை நாற்றுகளை வரிசை வரிசையாக நடவு செய்வது சிறந்தது.

களிமண் பாங்கான நிலமெனில் வரிசைக்கு வரிசை 6 அங்குலமும், வரிசையில் பயிர் குத்துக்குக் குத்து (in-between 2 hills) 4 அங்குலமும் இடைவெளி விட்டு நடவு செய்யவும்.

மணற்பாங்கான நிலமெனில் வரிசைக்கு வரிசை 4 அங்குலமும், வரிசையில் பயிர் குத்துக்குக் குத்து, 4 அங்குலமும் இடைவெளி விட்டு நடவு செய்யவும்.

### நடவு செய்த 1 முதல் 14 நாட்கள் வரை

நாற்று நட்டது முதல் 14 நாட்களில் பயிர்களில் புதியவேர் உற்பத்தியாகி, பயிர்கள் பச்சை கட்டுகின்றன. இக்காலத்தில் உருட்டுத் தண்ணீர் கட்ட வேண்டும். அதிக அளவு தண்ணீர் கட்டக் கூடாது.

### நடவு செய்த 15-வது நாள்

வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு முதல்முறை களை எடுக்க வேண்டும். வரிசை வரிசையாக நடவு செய்திருந்தால் 'இன்டர்கல்ட்டிவேட்டர்' எனப்படும் இடை உழவுக் கருவியால் பயிர் வரிசைகளுக்கு இடையிலுள்ள மண்ணைக் கிளறிவிட்டுக் களை எடுக்கவும். களை இல்லாவிட்டாலும் இவ்வாறு கிளறி விடுவதால், தூர் ஏராளமாகக் கிளைக்கும். வரிசையில் உள்ள பயிர்களுக்கு இடையில் உள்ள களைகளைக் கைகளால் எடுக்கவும்.

சாதாரண முறையில் நடவு செய்திருந்தாலும் கைகளால் கிளறிவிட்டுக் களைகளை எடுக்கவும்.

முதல் முறை மருந்து தெளிக்க வேண்டும். 200 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 1 கிலோ கார்பரில் 50 சதம்அல்லது 1 லிட்டர் 'ஹிலியோடாக்ஸ்' அல்லது 800 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்ட் கோம்பி' பூச்சி மருந்தையும், 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' பூஞ்சாள மருந்தையும், 200 மில்லி லிட்டர் (10 மண்ணெண்ணெய் டின் அளவு)

தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் (Hand Operated Sprayer) தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் (Power Sprayer) கொண்டு மருந்து தெளிப்பதாய் இருந்தால் மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் (3 மண்ணெண்ணெய் டின் அளவு) கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 15 முதல் 30 நாட்கள் வரை

நடவு செய்த 15 முதல் 30 நாட்களில் தூர்கள் கிளைக்கத் துவங்கும். இக் காலத்தில் நடவு வயலில் 2 அங்குலம் (2 முதல் 3 விரற் கடை அளவு) தண்ணீர் கட்ட வேண்டும்.

நடவு செய்த 21-வது நாள்

முதல் முறையாக மேலுரம் இடவேண்டும். ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவை மேலுரமாகப் பயிர் வரிசைகளுக்கு இடையில் தூவ வேண்டும்.

நடவு செய்த 30-வது நாள்

நடவு செய்த 15-ஆம் நாள் தெளித்தது போலவே இரண்டாம் தடவையாக மருந்து தெளிக்க வேண்டும். 200 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 1 கிலோ கார்பரில் 50 சதம் அல்லது 1 லிட்டர் 'ஹிலியோடாக்ஸ்' அல்லது 800 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்ட்' கோம்பி பூச்சி மருந்தையும், 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' பூஞ்சாள மருந்தையும் 200 லிட்டர் (10 மண்ணெண்ணெய் டின் அளவு) தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் கொண்டு மருந்து தெளிப்பதாய் இருந்தால் மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் (3 மண்ணெண்ணெய் டின் அளவு ) கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 31 முதல் 35 நாட்கள் வரை.

இக்காலத்தில் களிப்பான நிலங்களிலுள்ள தண்ணீரை வடித்து விட வேண்டும். நிலம் ஈரமாய் இருக்க வேண்டும். ஆனால், வெடிக்கவிடக் கூடாது.

மணற்பாங்கான நிலங்களில் நிலம் நனையும் அளவிற்குத் தண்ணீர் கட்டினால் போதுமானது.

இருவகை நிலங்களிலும் மயிரிழைக்குப் பெரியதாக வெடிப்புகள் ஏற்படவிடக் கூடாது.

இவ்வாறு செய்வதனால் தூர்கள் அதிகமாகக் கிளைக்கும்.

நடவு செய்த 36 முதல் 45 நாட்கள் வரை

இச்சமயத்தில் வயலில் 2 முதல் 4 அங்குல அளவிற்குத் (3 முதல் 7 விரற் கடை அளவிற்கு) தண்ணீர் கட்ட வேண்டும்.

நடவு செய்த 40-வது நாள்

இரண்டாம் முறையாக நடவு செய்த 15-ஆம் நாள் செய்தது போலவே களை எடுக்கவும்.

நடவு செய்த 45-வது நாள்

மூன்றும் முறையாக மருந்து தெளிக்க வேண்டும். நடவு செய்த 15-வது நாளில் தெளித்தது போலவே தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 46 முதல் 50 நாட்கள் வரை

தூர் கிளைக்கும் உச்ச அளவுக் காலம் முடிந்து சூல் ஏற்படும் காலம். எனவே, இக்காலத்தில் 31 முதல் 35 நாட்கள் வரையான காலத்தில் செய்தது போலத் தண்ணீரை வடிய விடவும்.



நடவு செய்த 55-வது நாள்

இரண்டாம் முறையாக (சூல் கட்டத்தில்) மேலுரமிட வேண்டும். ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவை மேலுரமாகத் தூவவேண்டும். நடவு செய்த 63-வது நாளுக்குள் இரண்டாம் முறையாக மேலுரமிட்டு விட வேண்டும்.

மேலுரமிட்ட பின், 200 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 1 கிலோ கார்பரில் 50 சதம் பூச்சி மருந்தையும், 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' மருந்தையும், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் மூலம் மருந்து தெளிப்பதனால், மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 75-வது நாள்

நெற் பூக்களில் பால் பிடிக்கும் சமயத்தில் நாவாய்ப் பூச்சியின் தாக்குதலைத் தடுக்க ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டீ. 5 சதத்தூளையும் கலந்து தூவான் மூலம் தூவுதல் வேண்டும். தூவான் கிடைக்கா விட்டால் மருந்தைக் கோணிப் பையில் இட்டு, கட்டிவிட்டு நன்கு குலுக்கலாம் அல்லது கையாலேயே தூவலாம்.

நடவு செய்த 105 முதல் 111 நாட்கள் வரை

நடவு செய்த 105 முதல் 111 நாட்களுக்குள் அறுவடை செய்யலாம்.

**வேண்டுகோள்**

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டால் ஐ.ஆர்.8 நெல் ரகத்தின் மூலம் ஏக்கருக்கு 3,500 கிலோவுக்குக் குறையாமலும், ஐ.ஆர். 20 நெல் ரகத்தின் மூலம் ஏக்கருக்கு 3,000 கிலோவுக்குக் குறையாமலும் மகசூல் எடுக்க முடியும். எனவே, மேற்கூறிய சாகுபடிக் குறிப்புகளைப் பொங்கற் பரிசாக ஏற்றுப் பயனடையுமாறு தமிழ்நாட்டின் உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

—ஆர். எம்.



# அட்டை சொல்லும் கட்டுரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சி, வகை வகையான பட்டாடைகளுக்கும் மட்டில்லாப் புகழ் பெற்றது என்பதை உலகம் அறியும்.

சின்னஞ் சிறு கைகள் உருவாக்கும் சித்திரச் சேலைகள் பல, கண்ணைக் கவரும் வண்ணம் காட்சியளிப்பதை இங்கே காணலாம் .

ஏழை, எளிய மக்களால் நேர்த்தியாக நெய்யப்படும் பட்டுத் துணிகளுக்கு, இன்று நாடு நகரங்களிலெல்லாம் நல்ல வரவேற்பிருப்பதை நாமறிவோம்.

இந்த வரவேற்புக் கெல்லாம் காரணம், அதன் தரம் தான் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில், காஞ்சியில் இயங்கிவரும் கதர்ப்பட்டு உற்பத்திக் கூடத்தின் உள்ளே சென்றால்—

செந்தாமரை
சித்திரகலா
சசிகலா
வனமோகினி
மகேசுவரி

என்ற பெயர்களில்—பட்டுப் புடைவைகளைப் பார்க்கலாம் :




கதர் உடுத்துவோரின் தேவையை நிறைவேற்றும் நோக்குடன் முதல் பட்டு உற்பத்திக் கூடம் 1956-ல் கும்பகோணத்தில் துவக்கி வைக்கப் பட்டது. பின்னர் மூன்று ஆண்டுகளுக்குள் காஞ்சிபுரம், ஒசூர் மற்றும் ஆரணி ஆகிய இடங்களில் பட்டு உற்பத்திக் கூடங்கள் துவக்கப்பட்டன.

எவருமே வெளியிடாத புதிய 'டிசைன்'களில், பல்வேறு வண்ணங்களில் சரிகை வேலைப்பாடுகள் அமைந்த புடைவைகள், பாவாடைகள், வேட்டிகள், பொன்னாடைகள் முதலியன இங்கே சிறப்பாகத் தயாரிக்கப் படுகின்றன.

காஞ்சிபுரப் பகுதியிலுள்ள 150 நெசவாளர்கள் இந்த உற்பத்திக் கூடத்தினால் வருவாய் பெற்று வருகிறார்கள். குறிப்பாகத் தமிழகத்திலுள்ள 15 இடங்களில் கதர்ப்பட்டுத் தொழிலினால் ஏறத்தாழ 4,000 பேர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

முதலில் 25 விழுக்காடுகள் கூடப் பட்டு உற்பத்தி செய்ய இயலாததைக் கண்ட இத்துறை, இதன் தேவையை மேலும் அதிகரிக்கத் தமிழகத்தின் பல பகுதிகளில் பட்டு உற்பத்தி நிலையங்களைத் துவக்கி உற்பத்தியில் மும்முரம் காட்டியது. இன்று செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தஞ்சை, சேலம், தருமபுரி, திருச்சி, மதுரை, நெல்லை, முகவை, கோவை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 15 பட்டு உற்பத்தி நிலையங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

கும்பகோணத்திலுள்ள பட்டு உற்பத்தி நிலையம், புடைவைகள், சட்டைத் துணிகள், துண்டுகள், வேட்டிகள், சிறிய சிறிய பாவாடைத் துணிகள் முதலியன உற்பத்தி செய்வதில் தனிச் சிறப்புப் பெற்றுள்ளது.

சேலத்திலுள்ள பட்டு உற்பத்தி நிலையம், நல்ல கவர்ச்சியான 'பார்டர்கள்' அமைந்த தர்மாவரம் வகைச் சேலைகளைத் தயாரிப்பதில் திறம் பெற்றுள்ளது.

ஆரணியிலுள்ள நிலையம் கவர்ச்சியான—மலிவான—மெல்லிய பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்வதில் புகழ் பெற்றுள்ளது.

மற்ற உற்பத்தி நிலையங்கள் உள்ள நரிக்கால்பட்டி (மதுரை), கண்மலியம் பட்டி (கோவை), விரவ நல்லூர் (திருச்சி), திருச்சி, திருவில்லிபுத்தூர் (இராமநாதபுரம்), ஒசூர் (தருமபுரி), வாலாசாப்பேட்டை (வட ஆர்க்காடு) ஆகிய இடங்களில் பட்டாலான சட்டைத் துணிகள் மட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

"ஏழை எளிய மக்கள் வாழ வழிகோலும் வகையில் நாமனைவரும் கதர் வாங்கி உடுத்திட முன்வரவேண்டும்" என்று முதல்வர் கலைஞர் அவர்கள் தம் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

"பெருத்த முதலீடுகள் தேவைப்படாத இந்தக் கதர்த் திட்டத்தை மாசறு பொன்னாய், வலம்புரி முத்தாய், நித்தம் நினைந்து வணங்கப்படுகின்ற தமிழ்த்தாய் பெற்றெடுத்த தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் மனமுவந்து ஏற்றுச் சாதனைகளைக் காட்டியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து இந்த அரசு இந்தக் கதர்த்திட்டத்தை வளர்த்து வருகின்றது என்பதை இந்த நாடு அறியும்."

'' நமது உடம்பைப் போர்த்துக் கொண்டிருக்கின்ற கதர், நம்மையறியாமலே இந்த நாட்டு ஏழை எளிய நூற்பாளர்கள் நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்கின்றது. கண்ணொளியும், வாழ்வொளியும் வழங்குகின்றது என்பதை அறிவீர்கள். இந்த நல்ல திட்டத்தை ஆதரிப்பது நாட்டு மக்களுடைய கடமை ஆகும். அண்ணல் காந்தி அடிகளின் திட்டங்கள் காலத்தால் அழியாதவை. சாகாவரம் பெற்றவை. இந்தக் கதர்த் திட்டம் மேன்மேலும் வளர்ந்து ஓங்கிட அனைத்துக் கட்சியாளரும் , நாட்டு மக்களும் இக் கதரை வாங்கி அணிய விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன் ''.

பளபளப்பான பட்டுத் துணிகளை அணிந்து கலகலப்பாகக் காட்சியளிக்கும் நாம், அந்தப் பட்டுத் துணிகள் எப்படித் தயாராகின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா ?

பட்டு நூல் — இது பெங்களூரிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. இந்த நூலுக்குக் 'கோரா' என்று பெயர். தரவாரியாகக் கிலோ கணக்கில் இது வாங்கப்படுகிறது. ஒரு கிலோ பட்டு நூலின் விலை ரூ. 170.

மைசூர் மாநிலத்தில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலைப் பெருக்கிட 19 புதிய திட்டங்கள் செயலாக்கப்படவிருக்கின்றன. உணவுத் தாவரங்கள், பட்டுப் புழு வளர்ப்பு, விதை விநியோக நிறுவனம், விற்பனைக் கூட்டுறவு ஆராய்ச்சிப் பயிற்சி முதலியவை சம்பந்தப்பட்ட இத் திட்டங்களுக்காக மைய அரசு 1972-73-ஆம் ஆண்டிற்கு 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது, இத் தொழில் இந்தியா வெங்கும் வளர்வதற்கு வழிகோலுவதாகும்.



முதலில், பட்டு நூலை, எத்தனை இழை தேவையோ அத்தனை இழைக்கு இராட்டினத்தில் சுற்றிக் கொள்கிறார்கள். பிறகு அவ் விழையை இன்னொரு இராட்டினத்தில் பொருத்தி முறுக்கேற்றுகிறார்கள். முறுக்கேற்றிய நூல் நன்றாகத் தண்ணீரில் அலசிக்கழுவப்படுகிறது. பிறகு எந்த வண்ணம் தேவையோ அந்த வண்ணத்தைக் கொதிக்கின்ற நீரிலே பதமாகக் கலக்கிப்பட்டு நூலைத் தோய்த்து எடுக்கிறார்கள். இந்த வேலையை நல்ல அனுபவமுள்ளவர்களே செய்கின்றனர்.

நூலுக்குச் சாயமேற்றியதும் அதனை நன்றாக உலரவைத்து, நெசவாளர்களுக்குத் தரப்படுகிறது. அதன் பிறகுதான் நெசவாளரின் கைவண்ணம் பட்டுப் பட்டுப் பளிச்சிடுகிறது.



புதிய புதிய 'டிசைன்'களில் அவ்வப்போது இங்குப் பட்டுத் துணிகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வருகின்றன. பல்வேறு வண்ணங்களில் சரிகை இழை கலந்த அந்தத் துணிகளைப் பார்த்துவிட்டால், துணிந்து வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் வந்துவிடும் !

இங்கே பற்பல புதுமையான 'டிசைன்'களை உருவாக்கிக் கொடுக்க ஓர் ஓவியர் இருக்கிறார். இவரது கற்பனையில் வடிவெடுக்கும் சித்திரங்கள் எண்ணற்றவை, எண்ணத்தை ஈர்ப்பவை. அவர் வரைந்து கொடுக்கும் அழகிய மலர்கள், கோடுகள், கட்டங்கள் முதலியன கவர்ச்சியானவை. அவை 'கிராப்' ((Graph)) அமைப்பில் மீண்டும் வரையப்பெற்று நெசவாளருக்குத் தரப்படுகிறது. நெசவாளர் அந்த டிசைனைத் தறிக்கு மேலேவைத்து, அதோடு பல நூலிழைகளைக் கட்டித் தொங்கவிடுகிறார். துணியை நெய்யும்போது, இந்த நூல்களை அவ்வப்போது இழுத்துக் கொள்கிறார். நெசவாளரின் கைத்திறமையால் டிசைனும் நெய்யப்பட்டு விடுகிறது ! இந்த அரிய காட்சியை நேரில் கண்டே மகிழ வேண்டும் !

பட்டுப் புடைவைகளில் ஒளி விடும் சரிகையைப் பார்க்கிறோம். இந்தச் சரிகைதான் புடைவைக்கு மேன்மேலும் மெருகேற்றுகிறது. இது எங்கிருந்து நமக்குக் கிடைக்கிறது ?



குசராத் மாநிலத்திலுள்ள சூரத்திலிருந்து இது தருவிக்கப்படுகிறது. இப்போது காஞ்சியிலேயே ஒரு சரிகைத் தொழிற்சாலை இயங்கப் போவதை நாமறிவோம். இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்கி விட்டால், நாம் சரிகையின் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டாமல்லவா ?

சூரத்திலிருந்து தருவிக்கப்படும் இந்தச் சரிகை, 'மார்க்' என்ற கணக்கில் வாங்கப்படுகிறது. 'மார்க்' என்பது எட்டுத் திரிகளைக் கொண்டது. எட்டுத் திரிகளின் மொத்த எடை ஏறத்தாழ 250 கிராம். ஒவ்வொரு திரியும் குறைந்தது 2,000 மீட்டர் இருக்கும். எனவே, ஒரு ''மார்க்'' அதாவது 250 கிராம் சரிகையின் நீளம் ஏறத்தாழ 20,000 மீட்டர். 250 கிராம் சரிகையின் தற்போதைய விலை ரூ. 185.

இந்தச் சரிகை இழையைப் பாவாக இராட்டினத்தில் சுற்றிக் கொள்வார்கள். பட்டுச் சேலைகளில் உள்ள பார்டரில் சரிகையினால் டிசைன் போடுவதற்குச் சரிகை 18 கெஜம் அல்லது 36 கெஜம் நீளத்திற்குப் பாவாகத் தயாரிக்கப்பட வேண்டும். அதனால் இந்த இராட்டினத்தைச் 'சரிகைப் பாவு இராட்டினம்' என்று கூறுவர் !

சரிகை இப்படித்தான் தயாராகிறது : பட்டு நூலில் சுத்தமான வெள்ளி இழை இடைவெளி இல்லாமல் சுற்றப்பட்டு, அதன் மேல் பொன் மெருகு ஏற்றப்படுகிறது. ஒரு சரிகையில் தங்கம் 0.55 சதவீதமும், வெள்ளி 71.40 சதவீதமும், பட்டு 28.05 சதவீதமும் கலந்திருக்கும்.

இப்படிப் பட்டு நூலும், சரிகையும் தரம்பார்த்துத் தயாரிக்கப்படுவதால் கதர்ப் பட்டுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்து வருகிறது.

இதோ, சில புள்ளி விவரங்கள்! 1 புடைவை நெய்ய 450 கிராம் பதனப் படுத்தப்பட்ட பட்டு நூல் தேவைப்படுகிறது. சரிகை 40 கிராமிலிருந்து 150 கிராம் வரை டிசைனைப் பொறுத்துச் சேர்க்கப்படுகிறது. ஒரு பட்டுப் புடைவை தயாரிக்கச் சுமார் 15 நாட்கள் ஆகின்றன. ஒரு புடைவையின் விலை ரூ. 100-லிருந்து ரூ. 500 வரைக்கும் இருக்கும். ஏன், 1,000 ரூபாய்க்குக் கூடப் புடைவை கிடைக்கும், 'ஆர்டர்' கொடுத்தால் !

இங்குத் தயாரிக்கப்படும் காந்தியடிகள், வள்ளுவர், அறிஞர் அண்ணா, முதல்வர் கலைஞர் ஆகியோரின் உருவம் பதித்த பொன்னாடைகள் சட்டம் போட்டுப் படமாக மாட்டி வைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டு நூல் சரிகை உருவ அமைப்பின் விலை ரூ. 60.

கலையழகு மிக்க பொன்னாடைகளும் இங்கே ஏராளமுண்டு. இங்குத் தயாரிக்கப் பெற்ற எழில் கொஞ்சும் எடுப்பான பொன்னாடைகள் அரசி எலிசபெத் அம்மையார், மலேசியப் பிரதமர் துங்கு அப்துல்ரகிமான், அமெரிக்க மருத்துவ நிபுணர் டாக்டர் மில்லர், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஆகியோருக்கு வழங்கப் பெற்று, அவர்களின் மனமுவந்த பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றன என்றால், அவற்றை உருவாக்கிய தமிழ்நாட்டு நெசவாளரின் கைத்திறமையை நாம் பாராட்டாமலிருக்க முடியாது.

கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தன்னிரகற்ற இலாபத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பது எது தெரியுமா ? பட்டு உற்பத்திப் பிரிவுதான் !

1956 அக்டோபர் முதல் 1972 அக்டோபர் வரை நாலரைக் கோடி ரூபாய்க்குப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1,63,638 கிலோ கிராம் கச்சாப் பட்டு ரூ. 1,83,94,458 அளவுக்கும், 7,215 கிலோ கிராம் சரிகை ரூ. 46,82,813 மதிப்புள்ள அளவுக்கும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1956-57-ல் கதர்ப் பட்டில் கிடைத்த இலாபம் ரூ. 18,357 ; 1971-72-ல் கிடைத்த இலாபமோ ரூபாய் 12,06,801.

இந்த வகையில் இந்தியாவிலேயே அதிக அளவு கதர்ப் பட்டினை உற்பத்தி செய்யும் தகுதி பெற்ற ஒரே தனி அமைப்பாகத் 'தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்' திகழ்கிறது என்பதை நாம் பெருமையுடன் சொல்ல வேண்டும்.

'பட்டாடைகளை விலை கொடுத்து நம்மால் வாங்க முடியுமா ?' என்று கேட்போருக்கு, '' ஏன் முடியாது ? தாராளமாக வாங்கலாம் ! '' என்று சொல்லும் வகையில், பொங்கல், தீபாவளி ஆகிய விழாக் காலங்களில் பத்து சதவீதத் தள்ளுபடியில் பட்டுத் துணிகள் விற்கப்படுகின்றன. சாதாரண நாட்களில் அதிக விலை கொடுத்து வாங்குவதை விட இந்தச் சமயங்களில் எவ்வளவோ அதன் விலை குறைகின்றது. நடுத்தர மக்களும் பட்டாடைகளை அணிந்து பூரிக்கும்






வகையில், நல்ல வாய்ப்பினைத் தந்து உதவுகிறது கதர் கிராமத் தொழில் வாரியம். அரசுப் பணிகளில் உள்ளவர்களுக்குத் தவணை முறையில் துணிகளை வழங்கி அவர்கள் குடும்பத்துடன் குதூகலிக்கவும் இது வகை செய்கிறது.

கதராடைகள், கதர்ப்பட்டுத் துணிகள் முதலியன வாங்குவதன் மூலம், எண்ணற்ற நெசவாளர் குடும்பங்களை நாம் காப்பாற்றியவர்களாகிறோம்.

அதே சமயத்தில், கலப்படமில்லாத நல்ல தரமான மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணிகிறோம் என்ற மன நிறைவும் நமக்கு ஏற்படுகிறது.

விழாக் காலங்களில் பட்டினை அணிந்து மட்டில்லா மகிழ்ச்சியில் திளைத்திடக் கதர்ப் பட்டினை வாங்கிடுவோம்! கை வண்ணம் மிளிரப் பாடுபடும் நெசவாளரின் கண்ணீரைத் துடைத்திடுவோம்!

—பி.வி.ஜி.

## மிளகாய் பயிருக்கு எவ்வளவு உரமிட வேண்டும்?

வேளாண்மையில் அதிக வருவாய் பெற்றிட உகந்த அளவு உரமிடுவது இன்றியமையாதது. வாணிகப் பயிர்களில் ஒன்றான மிளகாயும் அதிக உரமேற்று நல்ல பலன் தரவல்லது.

மிளகாய்க்கு இட வேண்டிய தழைச்சத்து அளவு பற்றி, கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 'கே. 1' (K.1) மிளகாய் ரகத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஒரு எக்டேருக்கு 40, 60, 80, 100, 120 கிலோ தழைச்சத்து என்ற அளவில் இடப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில், 120 கிலோ தழைச்சத்து உரமிட்ட பயிர், எக்டேருக்கு 6,339 கிலோ பச்சை மிளகாய் மகசூல் கொடுத்துள்ளது, இதனால் எக்டேருக்கு நிகர இலாபமாக ரூபாய் 1,360/- கிடைத்துள்ளது.

தழைச்சத்தைத் தவணைகளாக இடுவது பற்றிச் செய்த ஆராய்ச்சியில், தழைச்சத்தை மூன்று சம பாகமாகப் பிரித்துக் கொண்டு, முறையே நடவு செய்த 50-ஆம் நாள், 70-ஆம் நாள், 90-ஆம் நாள் இடுவது நல்ல பலனைத் தந்துள்ளது.

'கே-1' வகை மிளகாய்க்கு எக்டேருக்கு 120 கிலோ தழைச்சத்தை மூன்று சம பாகங்களாகப் பிரித்துக் கொண்டு மிளகாய் நடவு செய்த 50-வது, 70-வது, 90-வது நாட்களில் இடவேண்டும். இவ்வாறு உரமிட்டால் எக்டேருக்கு 63 குவிண்டால் பச்சை மிளகாய் மகசூல் பெறலாம். இதனால், எக்டேருக்கு நிகர இலாபம் ரூபாய் 1,360 பெற இயலும்.

[ தகவல் : கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ஆராய்ச்சி), திருச்சிராப்பள்ளி—18 ]




## இறுதி மூச்சில் எழுதிய கடிதம்

"மதுரையிலேயிருந்து வந்திருந்த வக்கீல் குமாஸ்தாவை வழி அனுப்பிவிட்டு, அந்தப் பாண்டியனும் லிங்கமும் போறுங்க பாத்தீங்களா?"

"அந்த அப்பாவிப்பய பொன்னையாவை அடிச்சிக் கொன்னு போட்டு, அவன் பெண்சாதியையும் இழுத்துவச்சுக்கிட்டு நிற்கிறதைப் பார்த்துச் சந்தி சிரிக்கிறப்போ, இவன் கொஞ்சமானும் குலுங்குறுனு? பாருங்களேன்."

"ஆச்சு..........அடுத்து முடியப் போற கட்டம் தான். இன்னும் நாலு நாளைக்குள்ளே கண்டிசன் பெயில்ன்னு ஆகிப் போகும். அப்புறம் இந்தத் தலைவரும், அவனுக்குத் துணையா நிக்கிறவனுகளும் ஊருக்குள்ளே தலைகாட்ட முடியாது. எல்லாமே அடங்கிப் போகும்."

"மரண வாக்குமூலம் உறுதியாயிட்ட பிறகு, தண்டனைக்குத் தப்ப முடியுமா? உருட்டி முத்தையா அடியெடுத்து வச்சிருக்கும் போது, கடைசிவரைக்கும் உருட்டிட்டுத்தான் திரும்புவாரு."

"இவ்வளவுக்கு வம்பு வழக்குன்னு வந்திட்ட பிறகும், அந்தக் கட்டிக் கழிச்சவளை விட்டுப் பிரியாம இருக்கானே அந்த லிங்கம். இடையிலே அழுதழுது அந்தக் கிழவி போய்ச் சேரப் போகுது."

"போகட்டும். மூக்கு அடைக்குது—பொடி இருந்தா குடுக்கிறீயா?"

"உங்கிட்ட கேட்கலாம்ன்னு வாயெடுத்தேன். நீயே கேட்டுட்டே. மட்டை மத்தியானமே காலி."

இரவு பத்து மணிக்கு மேலிருக்கும்.

ஊராட்சி அலுவலகத்தின் வாசற் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது.

முன் அறையில் மேசையின் முன்பாகப் பாண்டியனும் லிங்கமும் எதிரெதிரே அமர்ந்திருக்கிறார்கள். முன்னால் கவிழ்ந்து, ஒரு புத்தகத்தின் மீது டேபிள் வெயிட்டைச் சுற்றிவிட்டு, அதைப் பார்த்துக்கொண்டே, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருக்கிறான் பாண்டியன்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த லிங்கம் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

"யோசனைக்கு மத்தியிலே ஒரு புன்னகையும் நெளியுதே? கனவுக் காட்சியா?" என்று கேட்டான்.

பாண்டியன் ஏறிட்டுப் பார்த்தான்.

"போராட்டங்களுக்கு மத்தியிலே, நின்று இளைப்பாற ஒரு நிழலும் வேணுமில்லையா? இல்லையின்னு நெஞ்சு கூடேறிப் போகும்" என்றான் அதே புன்னகையோடு.

"காலையிலிருந்து பாட்டி தெம்பா இருக்காங்களே. நீ என்ன சொன்னே நானும் இல்லாத போது?".

"லிங்கமும்-அரசியும் இந்த ஊருக்கே ஒரு எடுத்துக் காட்டாக நீடூழிக் காலம் வாழப் போறுங்க. என்னோட லட்சியமே இது தான். பாட்டி உங்க பேரனுக்கு எந்த ஆபத்தும் வராம என்னாலே காப்பாத்த முடியும். எல்லாத்தையும் மீறி தண்டனைன்னு கிடைச்சா அதை நானே முழுசா ஏத்துக்கிறேன்னு சொன்னேன்" என்றான் பாண்டியன்.

"உடனே பாட்டி சரியின்னு சொல்லிட்டாங்களாக்கும்" என்று இடையிலே குறுக்கிட்டான் லிங்கம்.

"அப்படிச் சொல்லுவாங்களா? நானும் ஒரு பேரனில்லையா? எப்படியோ கூடுமான வரையிலும் தைரியம் சொல்லியிருக்கேன் பாட்டிக்கு" என்றான் பாண்டியன்.

"அடுத்து நிபந்தனை, ஜாமீன்னு ஆகி, ரெண்டு பேருமே ஊரைவிட்டுப் போகும் போதுதான், பாட்டியும் நமக்கொரு பிரச்சினையா இருக்கப் போறுங்க" என்றான் லிங்கம் பெருமூச்சோடு.

"அதுக்குள்ளே, உருட்டி முத்தையாவே நேரிலே வந்து பாட்டியிடம் உண்மையைச் சொல்லணும். அப்பத்தான் பாட்டிக்கு நிம்மதி யாகும்" என்றான் பாண்டியன் ஏறிட்டுப் பார்த்து.

"ரொம்ப லேசாச் சொல்லிட்டியே. இந்த ஒரு வாரத்திலே அது நடக்குமா?" என்று கேட்டான் லிங்கம்.

"நடக்குமான்னு திகைச்சு நிக்கிறதைவிட, முயற்சி செய்யலாமே. சித்தப்பாவுக்குள்ளேயும், உருட்டி முத்தையாவுக்குள்ளேயும் தான் உண்மை அடங்கி இருக்கு. நாம நினைச்சபடியே இடையிலே புகையவும் ஆரம்பிச்சிருக்கு. நடக்கப் போறது சர்க்கார் வழக்கா இருந்தாலும், முடிவு நம்ம ஊருக்குள்ளே தான் இருக்கு" என்றான் பாண்டியன் அமைதியாகவே.

"இப்ப அந்தச் சடையனும் வந்திருக்கானே."

"அவனும் சரியான நேரத்திலே வந்திருக்கான்."

"சடையனும் விடுதலையாகி, சரியா பொன்னையா கன்னை முடிஞதுக்கப்புறம் வந்து நிக்கிறதை வச்சு, அவனே

பொன்னையாவை அடிச்சிருக்கலாம். இப்ப அவன் ஊருக்குள்ளே போடுறதெல்லாம் நாடகம்ன்னு குருவையா சொல்றாரு'' என்றான் லிங்கம்.

''வழக்கை வேணும்ன்னா இப்படியும் திருப்பலாம். ஆனா, இதை உறுதியாகவும் சொல்ல முடியாது. எப்படியும் சடையனை நம்ம பக்கம் இழுத்துக் கீழே அணைக்க முடியுமா? அவனைச் சுயமாகச் சிந்திக்க வைக்கணும். யார் யாருடைய நலனுக்காகவோ, நீட்டின இடத்திலே பாயுறதுக்கு நீ மிருகமில்லே; மனிதன்னு சுட்டிக் காட்டணும். சடையனைத் திருப்ப முடியும்ன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு'' என்று பாண்டியன் சொல்லி வந்தபோது,

விடணும். நாளைக்கு மறுநாள், களத்து மேட்டு வேலை முடியப் போகும். நாளைக்கு இரவிலேயே, சிவந்தி களத்து மேட்டுக் குடிசையைக் காலி செய்திட்டு, மைக்கேல் வீட்டுக்குப் பக்கமாகக் குடிபோகப்போனா. இது சடையனை எதிர்பாராமலே நடக்கப் போகுது. அவன் உச்சக் கட்டத்துக்கே போவான். அந்த நேரத்திலே அவனைச்




கணும்'' என்று சொன்னான் பாண்டியன்.

''அவன் வெறிபிடிச்சவன். அன்னிக்கே ஐயனு அவன் மேலே பாய இருந்தான்''.

''வெறி பிடிச்சவனை, அன்பாலே, அவனோட அறிவைத் தூண்டி விடுறதுனாலே தான் அடக்கமுடியும், நீயைக்கொண்டே

''நிதானமா போறதுக்கும் நமக்கு நேரமில்லையே. இந்த அவசரத்திலே எப்படித்தான் சடையனை உன் போக்குக்குத் திருப்பப் போறியோ?'' என்று கேட்டான் லிங்கம்.

'' சிவந்தி புத்திசாலிப் பொண்ணு. தைரியமானவளும் கூட, அவளைச் சே ...... சடையனோட அறிவைத் தூண்டி

சந்திக்கப் போறோம்'' என்றான் பாண்டியன்.

'' சிவந்தியிடம் இவ்வளவு நம்பிக்கையா உனக்கு? '' என்று வியப்போடு கேட்டான் லிங்கம்.

'' இப்ப.... நாலு நாளா சிவந்திக்குப் பக்கத்தில் டெப்சியை வச்சிருக்கேன். சடையன் கிட்ட எப்படி நடந்துக்கணும், என்ன பேசணும்ங்கிறது ஒத்தி



கையாகவே நடந்துக்கிட்டிருக்கு. சடையனை வச்சு, உருட்டி முத்தையாவுக்கு ஊட்டத்தைக் கொடுத்தே உண்மையைக் கக்க வைக்கலாம். எதுவுமே ஊரைத் தாண்டிப் போகாது '' என்று மேலும் சொன்னான் பாண்டியன்.

'' காலையிலே மைக்கேல் வீட்டுக்கும் போயிருந்தியாமே? '' என்று புன்னகையோடு கேட்டான் லிங்கம்.

'' எனக்காக நீ போயிருக்க வேண்டியது முறைப்படி நானே போகும்படி யாச்சு. மைக்கேலையும், அந்த அம்மாளையும் பார்த்தேன். தலைக்கு மேலே கொலை வழக்கை வச்சுக்கிட்டு, இவ்வளவு அமைதியாக இருக்கேன்னு,



அவங்களுக்கு ஒரே ஆச்சரியம். இப்ப கல்யாணப் பேச்சு வேண்டாம். வழக்கு முடியட்டும்ன்னு சொல்லியிருக்காங்க '' என்றான் பாண்டியன்.

'' சரி...... அடுத்து நடக்கப் போறதிலே என் பங்கு என்ன ?''

'' கவலை இல்லாம பாட்டிக்குப் பக்கத்திலேயே இரு. அரசிக்கும் ஆறுதல் சொல்லு. சித்தப்பா....ஒரு பொய்யை மறைக்க, ஊரறிய, ஒன்பது பொய் சொல்லிட்டாரு. அவர் சாயம் வெளுக்கும் போது, அப்புறம் ஊருக்குள்ளே ஏளனமோ, எதிர்ப்போ இருக்கவே இருக்காது ''.

அப்போது தெருவோடு பலர் நடந்துவரும் சந்தடியும், வாசற் கதவைத் தட்டுவதும் கேட்டது.

பாண்டியனும், லிங்கமும் பரபரப்போடு முன் பக்கம் வந்து கதவைத் திறந்தார்கள்.

கையிலொரு அரிக்கன் விளக்கைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஊராட்சி உறுப்பினர் அம்பலம் நின்று கொண்டிருந்தார்.

அவனோடு இன்னும் ஐந்தாறு கிராமத்து ஆட்கள், அவர்களுக்கு மத்தியிலே, வேலாயுதத்தின் தனித் திருமகன், ஆட்கள். அவர்களுக்கு நிமிராமல் நின்று கொண்டிருந்தான்.

சற்றுத் தயங்கினாலும், வெளியிலேயே நின்று பேச விரும்பாமல், ''உள்ளே வாங்க'' என்று சொல்லிவிட்டு லிங்கத்தோடு திரும்பினான் பாண்டியன்.

நடேசனையும் உள்ளே தள்ளிக் கொண்டுவந்து பாண்டியனுக்கு முன்பாக நிறுத்தி விட்டு, ஆங்காரத்தை அடக்கிக் கொண்டிருக்கும் குரலில் சொன்னான் அம்பலம்.

'' ஆனா உருத்தெரியாமல் போகும்படியா நடக்க இருந்திச்சு. இருக்கிற நிலைமையிலே, புதுசா இப்படி ஒண்ணு முளைக்க வேண்டாம்ன்னு, கிராமத்தையே கையமத்தி, இந்த மைனரை இங்கே கூட்டியாந்திருக்கேன் '' என்றான் அம்பலம்.

பாண்டியன் நடேசனைத் திரும்பிப் பார்த்தான். அவன் குனிந்த தலை நிமிரவில்லை.

நடந்திருப்பது என்னவென்று ஓரளவு புரிந்தாலும் '' என்னா நடந்திச்சு? '' என்று கேட்டான் பாண்டியன்.

'' நம்ம செங்கானோட பேத்திப் பொண்ணு, நீலகிரி காபித் தோட்டத்திலே இருந்தது. இங்கே தாத்தா வீட்டுக்கு வந்து முழுசா ரெண்டு மாசங் கூட ஆகலே, அதுக்குள்ளே இந்தக் காளையோட கண்ணு பட்டிருச்சு. ஊரு விட்டு ஊரு வந்து, துணிஞ்சு இறங்கிட்டாரு. கையும் மெய்யுமா பிடிபட்டுப் போனாரு. நான்தான் குறுக்கே விழுந்து, ஆளை உருப்படியா இங்கே கொண்டாந்திருக்கேன் '' என்றான் அம்பலம்.

'' நாங்களும் மானம் ஈனத்தோட குடியிருக்கணும். இதுக்கொரு வழி பண்ணுங்க '' என்றான் கூட்டத்தோடு வந்திருந்த இளவட்டங்களிலே ஒருவன்.

பாண்டியன் நிதானமாகச் சொன்னான்.

'' இந்த அளவுக்கு நடந்தும், அமைதியோட இங்கே வந்தது உங்க பெருந்தன்மையைக் குறிக்குது. நடேசன் என் தம்பி. இவனைக் கண்டிக்கவும், வழி காட்டவும் எனக்குப் பொறுப்பு இருக்கு. இதை நானே ஒரு முடிவுக்குக் கொண்டு வாரேன் '' என்றான்.

'' அப்ப நாங்க வாரோம். ரெண்டுங் கெட்டான் நேரமா இருக்கு. ஊரிலேயும் போய்ச் சொல்லணும். '' என்று சொல்லிப் புறப்பட்டான் அம்பலம்.

'' அந்தப் பொண்ணுக்கும் எந்த ஆபத்தும் வராமப் பார்த்துக்குங்க '' என்றான் பாண்டியன்.

'' சரிதாங்க. உங்களை நம்பித்தான் ஒப்படைச்சிட்டுப் போறோம்'' என்று இறுதியாகச் சொல்லிவிட்டு வந்தவர்கள் போய்விட்டார்கள்.

பாண்டியன் திரும்பினான்.

லிங்கமும் நடேசனும் அருகருகே தான் நின்று கொண்டிருந்தார்கள். ஆனால், இவனுக்கும் நடே

னுக்குமிடையே எவ்வளவு வேறுபாடுகள்?

லிங்கம் பாண்டியனைப் பார்த்து உதட்டளவில் சிரித்தான்.

சம்பந்தக்காரன் சிரிக்க மாட்டானா ?

" இது-அண்ணன் தம்பிக்குள்ளே பேசிக்க வேண்டிய பேச்சு: நீ மச்சினன். பக்கத்திலே நின்னு சிரிச்சா, தம்பி-சொல்ல வேண்டியதைச் சொல்ல வெட்கப்பட மாட்டானா ?'' என்று கேட்டான் பாண்டியன்.

" அண்ணனும் தம்பியுமாத்தான் பேசுங்க — நானும் போறேன். இருந்தாலும் அல்லும் பகலும் இதிலேயே நீச்சடிக்கக் கூடாது '' என்ற லிங்கமும் புறப்பட்டு விட்டான்.

பாண்டியன் வாசல்வரை சென்று ஏதோ சொல்லியனுப்பி விட்டுத் திரும்பி வந்தான். நடேசனுக்குப் பக்கமாக, மேசையில் சாய்ந்தவாறு நின்று கொண்டு அவன் ஏறிட்டுப் பார்த்தான்.

காண்போர் கண்கவர உடுத்திக் கொள்வதில் தம்பி கெட்டிக்காரன். மனிதனைப் பிறந்து விட்ட மண்ணிலே என்ன நடக்கிறது என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றியெல்லாம் திரும்பியே பார்க்காத, அதற்கென்று தன்னை அலட்டிக் கொள்ளாத கவலையற்ற பிறவி.

இன்றைக்கு, இந்தக் குளிர்ந்த நேரத்திலும் வேர்வையில் சட்டை நனைந்து, விம்மியவனைகத் தலைகுனிந்து, எப்படியோ நிற்கிறான்.

" இதையே இறுதியா வச்சுக்கலாமா?'' என்று கேட்டான் பாண்டியன்.

நடேசன் ஏறிட்டுப் பார்த்ததான்.

முகம் வாடித்தான் இருக்கிறது.

என்றைக்குமே பாண்டியனோடு ஒட்டுதலாக இருந்ததில்லை. இன்றைக்கு எப்படியோ அல்லவா சிக்கிக் கொண்டு, இப்படி வந்து நிற்கும்படியாகி விட்டது.

'' எப்படியும் நீ ஒரு முடிவுக்கு வந்துதான் ஆகணும். இல்லையின்னா கிராமமே திரண்டு வந்து நிக்கப் போகுது? '' என்றான் பாண்டியன் மேலும்.

'' என்ன முடிவுக்கு ?'' என்று வேறு பக்கமாகப் பார்த்துக் கொண்டே கேட்டான் நடேசன்.

'' நாலு பேருக்கு முன்னாலே தலை குனிஞ்சு நிக்கிறியே.... இதுக்குத்தான் ஒரு முடிவு வேண்டாமா ? மனிதனாப் பிறந்ததுக்கு என்ன அறிகுறிதான் இருக்கு உங்கிட்ட? இந்த வகையிலே சித்தப்பாவும் உன்னைக் கண்டிக்க முடியாது. ஏன்னா,

இந்த வயசிலேயும், இந்தப் பாதையிலே, அவரே உனக்கு முன்னோடியா இருக்காரு. அதுக்குத் தனியாவே ஒரு தோப்பு இருக்கு '' என்று சற்றுக் கடுமையாகச் சொன்னான் பாண்டியன்.

நடேசன் வாய் திறக்கவில்லை. இன்றைக்கு ஏற்பட்ட அனுபவம் அவனுக்குப் புதியது. உடலும்—உள்ளமும் சோர்வாக இருந்தது.

''என்ன முடிவு சொல்லேன்?'' என்று மேலும் கேட்டான் பாண்டியன்.

### பொங்கல் திருநாள்

“நாம் உழைப்புக்கு மதிப்புத் தரவேண்டும். உலகத்தில் மற்ற நாடுகளில் உழைப்பவர்களுக்கு மதிப்புக் கிடைக்கிறது. ஆனால், இந்த நாட்டில் உழைப்பவனுக்கு மதிப்புக் கிடைப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும். ஏனெனில், ஒரு நாட்டின் உழைப்பின் பலனைக் கொண்டுதான், அந்த நாடு மற்றவர்களால் மதிக்கப்படும். ஆகவே, உழைப்பவனுக்கு மதிப்புத் தரும் நாள் வரவேண்டும். பொங்கல் திருநாள் உழைப்புக்கு மதிப்புத் தருகின்ற நாளாக மாற வேண்டும்.”

நடேசன் திகைப்புடனே திரும்பினான்.

'' எதையும் நானா எப்படிச் செய்யறது?'' என்றான் பயத்துடன்.

' நீயே முடிவெடுத்து ஊரைக் கடந்து போகும் போது, மற்றவங்க அனுமதியைக் கேட்கலையே! உன்னோட வேட்டைக்கும் ஒரு எல்லை இருக்கணுமில்லையா ?''.

நடேசன் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த பாண்டியன், சற்றுக் கழித்து.—

'' மனிதனுக்கு மட்டும்தான் பகுத்தறிவு இருக்கு. சித்தப்பா தலைவரா இருந்த நாளையிலே, நீயே கதாநாயகனா நின்னு நடத்தி வச்சதை, இதுக்குள்ளே மறந்திருக்க மாட்டே. நீ விரிச்ச வலையிலே விழுந்து, கண்டதும் கொண்டதும் ஊமை கண்ட கனவாகி, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், தன்னையே எரிச்சுக் கிட்டாளே ஒருத்தி, அவளைப் பற்றி நினைவு இருக்கா ?'' என்று முகம் பார்த்துக் கேட்டான் பாண்டியன்.

நடேசன் கண்களைப் பாதி மூடிய நிலையிலிருந்தான். இமையோரங்களிலே நீர் கோத்திருப்பது போலவும் தெரிந்தான்.

பாண்டியன் மேலும் தொடர்ந்தான்.

'' நம்ம குடும்பத்தோட அதிகாரப் பலத்துக்குப் பணிஞ்சு, அந்தச் சோக வரலாறு வெளியே தெரியாம அமுங்கிப் போச்சு : அந்தப் பொண்ணு இறுதி மூச்சிலே எழுதி வச்சிட்டுப் போன கடிதம் காலம் கடந்து என் கையிலே கிடைச்சது. அதைப் பல தடவை படிச்சு நான் கண்ணீர் விட்டிருக்கேன். மனிதத் தன்மையோட நீயும் அதைப் படிச்சுப் பாரு ', என்ற பாண்டியன் திரும்பிச் சென்று, சற்றுத் தள்ளியிருந்த பீரோவைத் திறந்து, புத்தகங்களுக்கிடையேயிருந்த ஒரு கவரைத் தேடியெடுத்துக் கொண்டு திரும்பினான்.

நடேசன் நின்றிருந்த இடம் காலியாக இருந்தது.

வாசற் கதவு திறந்து கிடந்தது.

(வளரும்)











"என்றும் புலராது யாணர் நாட் செல்கினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்" விளங்கும் முப்பாலைப் பற்றி எப்பாலும் போற்றும் சீத்தலைச் சாத்தனுர் என்னும் புலவர் பெருந்தகை இப்படிக் கூறுகிருர்:

மும்மலையும் முந்நாடும்
முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும்
முக்கொடியும்—மும்மாவுந்
தாமுடைய மன்னர்
தடமுடிமேற் ருரன்றே
பாமுறைதேர் வள்ளுவன்
முப்பால்

புலவர் சொன்ன அந்த 'மூன்று'களைப் பார்ப்போம் :

மும்மலை : கொல்லிமலை, நேரிமலை, பொதியமலை.

முந்நாடு : குடநாடு, புனனுடு, தென்னுடு.

முந்நதி : பொருநை, காவிரி, வையை.

முப்பதி : கருவூர், உறையூர், மதுரை.

மும்முரசு : மங்கல முரசு, வெற்றி முரசு, கொடை முரசு.

முத்தமிழ் : இயல், இசை, நாடகம்.

முக்கொடி : வில், புலி, மீன்.

மும்மா (மூன்று குதிரைகள்) : கனவட்டம், பாடலம், கோரம்.

இந்த மூவகைகளையும் தாம் முறையேயுடைய சேர, சோழ, பாண்டியரெனும் மூன்று மன்னர்களின் பெரிய முடிகளின்மேல் கொள்ளப்பட்ட மாலை அன்றே முப்பால் !

ஆம். இத்தகு சிறப்பு மிக்க மூன்று பால்களையுடைய முப்பாலாம் திருக்குறளில், 'மூன்று' கருத்துக்கள் வரும்படியான குறளை, திருவள்ளுவர் நிறையச் சேர்த்துள்ளார் : மும்மணிகளாக விளங்கும் அந்தக் குறட்பாக்களைப் படித்துப் பயன் பெறுவோம்.

## துன்பத்தின் காரணம்

துன்பத்துக்குக் காரணம் என்ன ?

இதற்கு வள்ளுவர் மூன்று விரலைக் காட்டி, ஆசை, சினம், அறியாமை என்று ஆணித்தரமாகச் சொல்கிருர்

ஆசை மனிதனை அலைக்கழித்துச் செல்லாக் காசாக்கி விடுவதை நாம் அன்ருடம் பார்க்கிருேம். ஆசை, அதிலும் பேராசை மனிதனையே அழித்து விடுகிறது. ஆசைக்கு அடிமைப்பட்டால் அடித்தளமே ஆட்டங் கொடுக்கும் என்பதை மக்கள் உணர வேண்டும்.

அடுத்து மனிதனுேடு பலமாக ஒட்டிக் கொண்டிருக்கும் 'சினம்' அதாவது கோபம். 'கோபத்தில் மனிதனது பகுத்தறிவு நீங்கிவிடுகிறது' என்று இராமகிருஷ்ணர் சொன்னதுதான் எத்துணை உண்மை· பகுத்தறிவு போகும் அளவுக்குக் கோபக் குணம் ஒருவனிடம் குடிகொண்டிருக்கிறதென்ருல், அந்தக் குணம் மனிதனுக்குத் தேவைதானு ? அதனுல் அவன் அடையப் போகும் பலன்தான் என்ன ?

மூன்ருவதாக மனிதனை விடாமல் பற்றிக் கொண்டிருப்பது அறியாமை. இந்த அறியாமை பெற்றெடுத்த அருங்குழவிதான் மூட நம்பிக்கை என்று இங்கர்சால் கூறுகிருர். மூட நம்பிக்கையின் பிறப்பிடமே அறியாமைதான் என்பது அவர் கருத்து—இன்று அறிந்தவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட பகுத்தறிவுக் கருத்துங் கூட. இத்தகைய 'அறியாமை' அறியாமல்கூட மனிதனைப் பற்றிவிடக் கூடாது என்பதுதான் வள்ளுவர் விருப்பம்.

ஆசை, சினம், அறியாமை இம்மூன்றும் நோய்க்கு இணையாகும். இந்த நோயிலிருந்து விடுதலை அடைபவனுக்குத் துன்பமே வருவதில்லை என்கிருர் வள்ளுவர். அதாவது துன்பத்துக்குக் காரணமே இந்த மூன்றுதான் என்கிருர் அவர்.

காமம் வெகுளி
மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.
(360)

## முன்னேற வழி என்ன ?

வாழ்க்கையில் முன்னேற வழி என்ன ? இந்த வினுவுக்கு வள்ளுவர் மூன்று குற்றங்களைக் களைய வேண்டும் என்கிருர். அவை என்ன ?

'கற்றது கைமண்ணளவு. கல்லாதது உலகளவு' என்பதை உணர்ந்தவர்கள் எவ்வளவுதான் கற்றவர்களாயிருந்தாலும் செருக்கே இல்லாமல் இருப்பார்கள். செருக்கு, மனிதன் கழுத்தை அறுக்கும் அரிவாள். அறிவால் அந்தச் செருக்கைக் கீழே இறக்கிவிட்டால் சிறக்க வாழலாமே இப்பூமியில்.

சினம். இதைப் பற்றி மேலே கூறினேம். சிறுமை. இதனையே பிரித்துப் படித்தால் சிறு + மை என்று வரும். தும்பைப் பூப் போன்ற வெள்ளை உடையில் சிறு மை பட்டுவிட்டால் எவ்வளவு பெரிது படுத்தி, அழகைக் குறைத்துக் காட்டுகிறது? அதைப் போலத் தான் மனிதனிடத்தில் 'சிறுமை' என்னும் சிறு கறை பட்டு விட்டால், அவன் சமுதாயத்தில் சிறக்க முடியாமல் ஊர் சிரிக்க வாழ வேண்டியிருக்கிறது.

செருக்குஞ் சினமும்
சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.
(431)

## கவனம் ! கவனம் !

மன்னவனுனுலும் சரி, மாடுகள் ஓட்டும் சின்னவனுனுலும் சரி, 'இதோ நான் கூறும் மூன்று கருத்துக்களையும் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்' என்று வள்ளுவர் கனிவாகக் கூறுகின்ருர். அவை :

(1) ஈயாத் தன்மை, (2) பெருமையற்ற மானம், (3) அளவுக்கு மீறிய மகிழ்ச்சி என்கிருர் அவர். எச்சிற் கையினுல்கூடக் காக்கையை ஓட்டாத உலோபிகளைப் பார்க்கிருேம் நாம். வாழ்வதன் நோக்கமே ஒருவருக் கொருவர் உதவி செய்வதுதான். இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் தான், மனிதன் மனிதத் தன்மையோடு இருக்கிருன் என்று பொருள். ஈயாத் தன்மையானது, மனிதத் தன்மையிலிருந்து அவனைப் பிரித்து விடுகிறது. ஆகவே, 'ஓ' மனிதர்களே! நீங்கள் 'மனிதனுக

வாழுங்கள்' என்று வள்ளுவர் அறைகூவல் விடுகிறார்.

மானமில்லாமல் வாழ்வதும் இத்தகையதே. மனிதன் என்று சொன்னால் அவனுக்கு மானம் இருக்க வேண்டாமா? இதனை வலியுறுத்தவே, மானத்துக்கு ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் வகுத்துள்ளார். 'மக்கள் தம் நிலையிலிருந்து தவறி நடந்த பொழுது, தலையினின்று நீங்கிய மயிரைப் போல இகழப் படுவார்கள்' என்று குறிக்கிறது குறள். எனவே, ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரி மான் போன்று மானம் உடையவர்களாகத் திகழ வேண்டும் என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதனை உணர்ந்தே, விருந்தும் மருந்தும் மூன்று வேளை என்று முன்னோர்கள் பகுத்து வைத்தனர். குடும்ப மகிழ்ச்சியும் இத்தகையதே. இன்பமும் சரி, துன்பமும் சரி அதனை அனுபவிப்பதில் அளவு வேண்டும். இரண்டுமே அளவுக்கு மீறினால் உயிருக்கே ஆபத்தாகக் கூட முடியும். அளவு கடந்த மகிழ்ச்சியில் திளைத்தவர்களும், துன்பத்தில் மூழ்கியவர்களும், அகால மரணமடையும் செய்திகளைப் பத்திரிகைகளில் படித்திருக்கிறோமல்லவா?

ஆகவே வள்ளுவர், ஈயாக் குணம், மானமற்ற தன்மை, அளவுக்கு மீறிய மகிழ்ச்சி— இந்த மூன்றும் குற்றங்களாகும் என்கிறார்

இவறலும் மாண்பிறந்த
மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. (432)

**ஆள்பவர்க்கு வேண்டும் பண்புகள்**

நாட்டை ஆள்பவருக்கு இருக்க வேண்டிய மூன்று பண்புகள் என்னென்ன? இதனை வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறும் போது, அந்தப் பண்புகள் நாட்டை ஆள்பவருக்கு மட்டுமல்ல, நமக்கும், நானில மக்களுக்கும் நல்லுரையாக விளங்குகிறது.

(1) தூங்காமை (2) கல்வி (3) துணிவுடைமை.

'இவை மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவருக்கு' என்கிறார் அவர். 'முயற்சி திருவினை யாக்கு' மாதலால் சோம்பல் இல்லாதவனாகவும், 'கேடில் விழுச் செல்வம் கல்வி' யாதலால் சிறந்த கல்விமானாகவும், வெற்றிக்குத் 'துணிவே துணை' யாதலால் துணிவுடையவனாகவும் மன்னன் இருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

அமைச்சரின் தன்மைகள் என்னென்ன?

செயலுக்குரிய கருவி, ஏற்ற காலம், செய்யும் முறைமை இந்த மூன்றையும் சிறப்புடன் தேர்ந்து செய்ய வல்லவன் தான் அமைச்சன்.

கருவியும் காலமும்
செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. (631)

**தூது செல்லவோ?**

அன்பு அறிவு ஆராய்ந்த சொல் வன்மை தூது உரைப்பார்க்கு இன்றி யமையாத மூன்று (682) என்றார்.

அன்பு, நல்ல அறிவு, எதையும் ஆராய்ந்து சொல்லும் சொல்வன்மை இந்த மூன்றும் தூது உரைப்பவருக்கு வேண்டும் குணங்களாகும். இதே அதிகாரத்தில் இன்னொரு குறளில், இயற்கையான அறிவு, காண்பவர் விரும்புகின்ற தோற்றப் பொலிவு, தாம் கற்ற படிப்பினை இம்மூன்றும் தூதுவர்க்குச் சிறப்பாகும் என்கிறார். மேலும் அவர், நல்ல ஒழுக்கமும், சுற்றமும், துணிவும் உடையவனாக அவன் விளங்குதல் வேண்டும் என்கிறார்.

**இதுவே பொன்னாடு**

எது நாடு?

இந்த வினாவுக்குப் பதில் 'நாடு' என்னும் அதிகாரத்தில் இருக்கிறது. ஒரு நாட்டின் இலக்கணம் என்ன என்பதைக் கூறும் போது, வள்ளுவர்,

தள்ளா விளையுளும்
தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (731)

என்கிறார். நல்ல விளை நிலங்களும், அறம் உணர்ந்த சான்றோரும், கேடில்லாத செல்வரும் ஒருங்கே சேர்ந்திருப்பது தான் நாடாகும்; நாட்டுக்கு அழகாகும். மேலும் அவர் கூறும் போது—



பசியில்லாத நாடு, பிணியில்லாத நாடு, பகை இல்லாத நாடு—இதுவே பொன்னாடு என்கிறார்.

உறுபசியும் ஓவாப்
பிணியும் செறுபகை ம்
சேரா தியல்வது நா (734)

**வள்ளுவர் ஒரு மருத் வர்**

வள்ளுவரை ஒரு மருத்துவர் என்று கூறலாம். இல்லாவிட்டால், 'மருந்து' என்னும் அதிகாரத்தை அவர் எழுதியிருப்பாரா?

உணவோ, உறக்கமோ எதுவானாலும் தம் உடம்பின் அளவிற்கு மிகுந்தாலும், குறைந்தாலும், வாதம், பித்தம், கவம் ஆகிய மூன்று நோயும் வருமாம்.

மிகினும் குறையினும்
நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. (941)

**மேலோர் யார்?**

மேலோர் யார்? பணம் படைத்தவரா? சொத்து சுகம் உள்ளவரா? வள்ளுவர் கூறும் மேலோர் இவரல்ல!

ஒழுக்கமும் வாய்மையும்
நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (952)

என்கிறார் அவர். ஒழுக்கம், மெய்மை, நாணம் இந்த மூன்று தன்மைகளால் தவறாது நல்வழியில் நடப்பவரே மேலோர் என்பது வள்ளுவரின் மேலான கருத்து.

இவ்வாறாக நாம் திருக்குறளென்னும் கடலிலே மூழ்கும்போது, மூன்று மூன்று முத்துக்களாக எத்தனையோ முத்துக்களை எடுத்து மகிழலாம். அத்தனை முத்துக்களையும் எடுத்து ஆரமாகத் தொடுத்துக் கழுத்திலே அணிய முடியுமா என்ன?



# வெண்பாப் போட்டி

## 48. 'நன்றி' எனத்தொடங்கி 'நன்று' எனமுடித்தல்

● நன்றி முதற்சீராய் நன்றுநேர் பாய்க்கொண்ட
இன்பத் தமிழ்ப்பா இயற்றுக—என்றால்
முடியும் செயலா? முதுபா வலராய்
நடியா திருப்பதே நன்று.
—சு. மாரியம்மாள், முதலிப்பட்டி.

நன்றி மறவேல்; நலிந்தோர்க் குதவிசெய்;
குன்றுக்கும் நெஞ்சுறுதி கொண்டுழைநீ—என்றெல்லாம்
நான்பிறர்க்குச் சொல்லும் நயவுரையால் யாதுபயன்?
நான்வாழ்ந்து காட்டுதலே நன்று.
—சி. செள. கருப்பன், திருச்சி-15.

நன்றிசொல வேண்டாவோ? நல்லுழைப்பில் நாளெல்லாம்,
ஒன்றிவிடும் ஏரின் உழவருக்கே!—என்றுமிங்கே
தெள்ளமுதப் பொங்கல் திருநாளில் நாமந்த
நல்லவரை வாழ்த்திடுவோம் நன்று.
—வே இளம் ரிதி தாரமங்கலம்

நன்றிப் பெருக்குடனே நானிலத்தோர் வாழ்த்துரைக்கப்
பொன்றாப் பணிசெய்தோர் போலுழைத்துக்—குன்றாத
பேர்பெறுவீர் மாணவரே! பின்னிவரும் போராட்டம்
சீர்குலையச் செய்திடுவீர் நன்று.
—இளங்கோ அலங்குளம்.

நன்றி மறப்பாரை, நம்பித் தெளியாரை,
நன்றியில் செல்வம் நயப்பாரை.—ஒன்றிநிதம்
கூடிக் கெடுப்பாரைக் குற்றமிகக் கொண்டவரை
நாடித் திரியாமை நன்று.
—கே எஸ். பை ராச . கம்பம்.

நன்றி மறப்போர், நயவஞ்சம் கொண்டலைவோர்,
வென்றி முடிக்கா வினையாளர்;—மன்றுள்
கடப்பாடு கொன்றவர், கொள்கை மறந்த
அடங்கலரை நீக்குவதே நன்று.
—புலவர் சாமி. வரதராசன், கலலணை.

நன்றி மறவாமை; நாணுடைமை தீயவற்றில்;
இன்றி யமையாமை இல்லாமை;—என்றுமே
தீமை நினையாமை; தீயருடன் சேராமை
நாமினிதாய் ஏற்றிடுவோம் நன்று.
—வீர. முருகேசன், எம்.ஏ.,பி.டி. தருமபுரி.

நன்றிக்கு வித்தான ஞாயிறுக்கும் நன்மழைக்கும்
கன்றுக்கும் கன்னியர்க்கும் காட்டுகின்ற—நன்றியன்றோ
பொன்னார்தைப் பொங்கல்; புவிபுரக்கும் நல்லுழவர்
நன்னாளைக் கொண்டாடல் நன்று
—புலவர் அ வே. காசிநாதன், கோடாலிக் கருப்பூர்.

நன்றி மறந்து நல்வாழ்வு வாழ்வோர்கள்
என்றும் பிறந்தென்ன வாழ்ந்தென்ன—இன்றுலகில்
வாயில்லா ஓர்பிறவி என்றாலும் நன்றிமிகு
நாயாய்ப் பிறத்தலே நன்று.
—சு. வீர சகரன், மாயூரம்.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்
சு. மாரியம்மாள்,
ஆசிரியை,
எஸ்.ஏ.வி. சாலா நடுநிலை பள்ளி,
முதலிப்பட்டி சங்கரலிங்கபுரம் (வழி)

நன்றியதைக் கொன்றூர்க்கு நானிலத்தில் வாழ்வுண்டோ
என்றும் இடருற்றே ஏங்கிடுவார்—தின்றிட்ட
கூழுக்காய்க் கன்னன் கொடுத்தான் உயிரதனை
நாளும் நினைத்திடுதல் நன்று.

—செல்வி முத்துலட்சுமி, நாகர்கோவில்.

நன்றி மறந்தவர் நல்லாசான் ஏசுவையே
கொன்றூர் சிலுவையின் மேலறைந்தே—அன்றவரை
மன்னிக்க வேண்டிய மாதவன்போல் நாம்பிறரை
மன்னிக்க வேண்டுவதே நன்று.

—புலவர் இ. சூசைமாணிக்கம், சிறுகுடி.

நன்றிகொன்று நானிலத்தில் நல்லபெயர் பூண்டவரார்
சென்றிடறிப் பற்றலாமோ தீநெறியை—என்றும்
நெடிய மரபதனை நேர்மையுடன் காக்க
நடுநிலை நிற்றலே நன்று.

—ப. திருவேங்கடம், பொன்மலை.

நன்றிக் கடனெங்கள் நல்லுடலின் செங்குருதி!
நன்று பலசெய்யும் நல்லரசே!—என்றும்நீ
வாழ்வாய் ! எமைநன்கு வாழ்விப்பாய் ! நாளெல்லாம்
தாழ்வில்லாத் தன்மையுடன் நன்று.

—வே. குருநாதன், மதுரை-2.

நன்றி எனப்படுதல் நத்திப் பிழைப்பதுவோ ?
சென்று திசைமாறின் செல்வியர்—அன்றே
இடித்துரைப்பர் ; இன்னலினை இன்னமுதம் என்பார்
படும்துயரில் பங்குபெறல் நன்று.

—திருமதி த. மரகதம், ஆலம்பட்டு.

நன்றி புணர்விற்கு நாயொரு சான்றெனின்
ஒன்றிய அன்பிற் குதாரணம்—அன்றிலாம்
முன்னைய நூல்கள் மொழிந்தபடி இல்வாழ்வில்
நன்மக்கட் செல்வமே நன்று.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

நன்றி எனும்வித்து நன்மைப் பயிராகிக்
குன்றுப் புகழைக் குவித்திடுமால்—இன்றுமுதல்
அல்லல் தவிர்க்கவும் ஆக்கம் பெருக்கவும்
நல்லுதவி நாம்செய்தல் நன்று.

—சு. முத்துக்கருப்பன், நகரம்.

நன்றி மறவாது நாம்பிறந்த நாடுகாக்க
முன்னின்ற வீர மறவர்க்கு—இன்றுநாம்
தாமாகச் சிந்தித்துத் தக்க உதவிகளை
நாமாகச் செய்வதே நன்று.

—வே. குமாரசாமி, கோரிக்கடவு.

நன்றி பலசெய்து நாள்தோறும் தாம்உயர
அன்றுமுதல் அன்புசெய்த நெஞ்சத்தை—இன்று
நிலைகுலையச் செய்திடுவோர் நற்கபிலர் பாரி
தலைநட்பைத் தாம்நினைத்தல் நன்று.

—சி. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

நன்றிது வென்றென்னை நாடியபோ தெக்குறையும்
இன்றிநான் தந்தேன் இருமழலை—இன்றோ
பொங்கிவரும் ஆசைக்குப் போடுகின்றாய் முக்கோணம்
நங்காய் உனக்கிதுவோ நன்று?

—முத்து. சாந்தகுமார், மதுரை-21.

நன்றிக் கடன்செய்ய வேண்டாவோ நாமெல்லாம் ?
தன்றுயரைப் பார்க்காமல் தன்னுழைப்பால்—இன்றுலகை
வாழவைக்கும் பட்டாளி வர்க்கத்தை நல்லபடி
ஞாலத்தில் மேலேற்றல் நன்று.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21.

நன்றிக்கு நன்றிசெய் ! நாடோறும் செந்தமிழே
வென்றுயரும் வண்ணம் வினையாற்று!—குன்றனைய
தோளுயர்த்தி ஏழைக்குத் தொண்டுசெய் ! சோம்பாது
நாளும் உழைத்திடுதல் நன்று.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

நன்றி மறவாமல் நாடோறும் நீருற்றி
அன்று வளர்த்தோர்க்கே ஆர்வமுடன்—குன்று
இளநீரை என்று மினிதே கொடுக்கும்
வளர்தெங்கு போல்வாழ்தல் நன்று

—தி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

நன்றி மகனென்று செய்வான் நமக்கென்று
அன்றன்னை ஈந்தாள் அவனியிலே—இன்றுநமை
மானத்தின் எல்லையிலும் மார்போ டணைக்கும்தாய்
நானிலத்தில் வாழ்கவே நன்று.

—நா. சவுண்டையா, மேலைச் சிவபுரி.

நன்றி மறவாது நாம்போற்றுங் கால்நடைக்கு
இன்றேபோல் என்றும் உணவளித்தே —ஒன்றிடுவோம்
பொங்கல் படைப்போம் பொலிவாகப் புத்துணர்வால்
தங்குடியை நாட்டுவோம் நன்று.

—புலவர் அ. ஆறுமுகம், எம். ஏ., பி.டி. திருச்சி-20.

நன்றி உடையோனும் நானிருப்பேன் என்வெண்பா
இன்றேனும் வந்திருந்தால் இவ்விதழில்—ஒன்றேனும்
காணமல் துஞ்சாவென் கண்கள் தொடர்ந்தெழுத
நானும் முயன்றிடுவேன் நன்று.

—பாலையூர் சுந்தரம், வேப்பந்தட்டை.

" நன்றி மறப்பது நன்றன்று ", வள்ளுவனின்
குன்று மொழியதனைக் கூர்ந்தறிவீர் !—தன்மானச்
செந்தமிழர் வாழ்விற்கே நல்வளத்தைச் சேர்த்திடுவீர் !
நந்தமிழர்க் கஃதொன்றே நன்று!

—பொற்செழியன், மேட்டுப்பாளையம்.

நன்றி உணர்வோடு நந்தமிழ் நாடுயர
என்றும் உழைப்பவர் ஏழைகள்—இன்னலுறும்
பாட்டாளி ஏற்றமுறப் பக்குவமாய்ப் பல்தொழிலும்
நாட்டுடைமை யாக்குவதே நன்று.

—சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

நன்றி மறந்திடுவார் ; நாளும் விதிஎன்பார் ;
மன்றினில் வீணே மறுத்துரைப்பார் ;—என்றுமே
பாட்டாளிக் கூட்டம் பழித்துரைப்பார் இந்நால்வர்
நாட்டில் வளர்வாரோ நன்று ?

—தமிழமுதன், மதுரை-21.

நன்றி மறப்பது நன்றன் றெனவுரைக்குந்
தென்தமிழ் வேதத் திருக்குறளை—யென்றென்றும்
சிந்தை தனிற்போற்றிச் சீர்சால் தமிழரசை
நந்தமிழர் பேணிடுதல் நன்று.

—வித்துவான் நா. சிவராம முத்துக்குமாரவேல், தேனி.

நன்றி பகர்கின்றோம் நன்னிலமே ! செங்கதிரே !
சென்று வயலுழுத மாடுகளே—இன்றிந்தப்
பொங்கற் புதுநாள்போல் பூத்துத் தமிழுளம்
தங்கித் தழைத்திடுக நன்று!

—சோ. சு. யுவராசன், அரக்கோணம்.

நன்றி மறவாமை நட்டார் வெகுளாமை
கன்றி யினத்தாரைக் காயாமை—ஒன்றிய
துன்பம் பலவரினும் தூய்மை அகலாமை
அன்றே அறிஞர்க்கு நன்று.

—முருகு. சுவாமிநாதன், குடந்தை.

நன்றிக்கு நாயினைப்போல் நன்னடைக் (கு) ஏறுபோல்
வென்றிக்கு வீரமிகு வேங்கைபோல்—என்றும்
அடக்கத்தில் ஆமைபோல் வையத்து வாழ்ந்து
நடப்பதுவே இப்புவியில் நன்று.

—புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

நன்றி மறப்பவர் ; நற்றமிழைத் தூற்றுபவர் ;
என்றும் பெரியார்சொல் எள்ளுபவர் ;—சென்றுழைத்துக்
கைப்பொருள் தேடாக் கடைக்குணத்தர் ஆகியோர்
நட்பை விலக்குதலே நன்று.

—மா. கா. குருசாமி, அபிராமம்.

நன்றிக்குக் கொண்டாடும் நல்லவிழா தைத்திருநாள்
என்றைக்கும் இத்தமிழன் ஏற்றிடுவான்—குன்றனைய
தோள்தட்டிக் கொம்பிருகைச் சேர்த்திடுவான் காளையதன்
நாள்சுட்டி ஆடிடுவான் நன்று.

—புலவர் கே. மு. இருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

நன்றிந்த நாடாண்ட நம்மறிஞர் அண்ணாவின்
பொன்னுரையைப் போற்றிப் புகழ்படைத்தார்—இன்றைக்கும்
அன்புள்ள செல்வன் அரிசனத்துப் பெண்மணக்கப்
பண்புள்ளம் பாராட்டும் நன்று.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

நன்றிக் கடனாக நல்லோர் வழியேக
இன்றென் பணியே இசைவாக—என்றுமே
நன்றும் பணிதல் நனிசிறக்கும் நல்லொழுக்கம்
நன்றே தமிழ்மொழி நன்று.

—தங்க. வேதபுரி, செய்யாறு.

நன்றி இருந்தாலேன் ஞாலத்தில் போராட்டம்
ஒன்றி இருந்தாலேன் ஊர்வம்பு—முன்றிலிலே
தாயே துடித்தழத் தன்னலம்பார்ப் பாரினும்
நாயேநீ எவ்வளவோ நன்று.

—இரா. பன்னீர்ச்செல்வம், திருத்துறைப்பூண்டி.






# முதல்வர் கலைஞர் தரும் பொங்கற் புதுநாள் செய்தி



வறட்சி வாட்டிய போதிலும், உளந்தள ராது, உயர் விளைச்சல் தரும் தானிய வகைகளைப் பெரும் பரப்பில் பயிரிட்டு, அதன் பயனை அனுபவிக்கவிருக்கின்ற நேரத்தில்—கைக்கு எட்டியது வாய்க்கு எட்டும் தறுவாயில் தட்டிப் பறிப்பதைப் போல்—வெள்ளம் ஏற்பட்டு வெகுவாகச் சேதம் விளைவித்துவிட்டது. இயற்கை தரும் இன்னல்களுக்கு எதிராக, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க விடாமுயற்சியுடன் பாடுபட்டு வரும் தமிழ்நாடு உழவர் பெருமக்களுக்கு என் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, "மேழி பிடிக்கும் கை; மேதினி ஆளும் கை" என்ற நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு வகையிலும் முயன்று வருகிறது. எனவேதான், உழவர் திரு பொங்கல் திருநாளை கொண்டாட இன்றையத் தமிழ் நாளாகக் கொண்டாட இன்றையத் தமிழ் நாடு அரசு முன்வந்துள்ளது.

உழவர் திருநாளாம் பொங்கலன்று உழவர் பெருமக்கள் அனைவரும், "ஒரு [illegible] தானியம் விளைந்த இடத்தில் இரு [illegible] னியம் விளைப்பேன்; ஒரு கதிர் [illegible] த்தில் பலகதிர் விளைப்பேன்; விளைந்த [illegible] விளைந்த இடத்தில் இரு ஒரு போ[illegible] பேன்; இருபோகம் விளைந்த போகம் [illegible] ப்போகம் விளைப்பேன்" இடத்தில் [illegible] என்ற உறுதி எடுத்துக் கொள்ள வேண் டும் என்[illegible] கேட்டுக் கொள்கின்றேன். அதே [illegible] தில் உங்கள் முயற்சிக்குத் தமிழ்நாடு அரசு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கத் தவறாது என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் 4.82 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் நெல் வகைகளையும், கோயம்புத்தூர்,





சேலம், தருமபுரி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 4.13 இலட்சம் ஏக்கரில் இறவைச் சிறுதானியங்களையும், தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 6.10 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைகளையும் கடும் விரைவு 'ரபி' பின்பருவம் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு ஆவன செய்துள்ளது. இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் உழவர் பெருமக்களுக்கு வேண்டிய விதை, இரசாயன உரம், பூச்சி பூஞ்சாண மருந்துகள், கடன் உதவி ஆகியவைகளைத் தேவையான அளவில் தேவையான பொழுது வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாகக் கூடுதலாக 1 இலட்சம் டன் அரிசியும், 50,000 டன் சிறுதானியங்களும் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபோலவே மற்ற மாவட்டங்களிலும் தண்ணீர் வசதி உள்ள இடங்களில் எல்லாம் உயர் விளைச்சல் தரும் தானிய வகைகளைச் சாகுபடி செய்யவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம், சிறு தீவிர வேளாண்மை பகுதித் திட்டம், சிறுநிலக் கிழார் மேம்பாட்டுத் திட்டம், பலபயிர்த் திட்டம், உயர்விளைச்சல் திட்டம், வாணிகப் பயிர்ப்பெருக்கத் திட்டம் என்பன போன்ற பல திட்டங்கள் உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே செயல் படுத்தப் படுகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிலவரியைத் தள்ளுபடி செய்யவும், கடன் தவணை வசூலை ஒத்திப் போடவும், உழவர் பெருமக்களுக்குத் தேவையான கடன் உதவிகளைச் செய்யவும், துண்டிக்கப்பட்ட மின்சார இணைப்புகளை உடனுக்குடன் சரிசெய்யவும், பாதைகளையும், பாலங்களையும் உடனுக்குடன் செப்பனிடவும் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வெள்ள நிவாரணப் பணிகள் போர்க்கால பணிகளைப் போல் விரைந்து நடைபெற்று வருகின்றன.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதற்கொப்ப, பசிப்பிணி மருத்துவர்களாக விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறுக என இப்பொங்கல் திருநாளில் வாழ்த்துகின்றேன்.



# எப்படிப் பொறுப்பேன்?





**கவியரசு முடியரசன்**

இருளும் ஒளியும் காண்பேன்—உலகின்
இயல்பெனும் மனநிலை பூண்பேன்
வறுமையும் வளமும் கண்டால்—மனித
வாழ்வில் எப்படிப் பொறுப்பேன்?

மருதமும் பாலையும் உண்டு—பொறுப்பேன்
மண்ணின் இயல்பெனக் கொண்டு
உரியவன் எளியவன் இருத்தல்—இயல்பென்
றுரைத்தால் எப்படிப் பொறுப்பேன்?

நடமலை சமதரை இருக்கும்—அது
தரைதனில் இயல்பென இருப்பேன்
குடிலுடன் மாளிகை இருப்பின்—மனம்
குமுறு தெப்படி யிருக்கும்?

பூவும் பிஞ்சும் மடியும்—அது
பூமியில் இயல்பென முடியும்
சாவும் இளமையைத் தொடரின்—மனம்
சாந்தியில் எப்படிப் படியும்?

மலர்தனிற் பனிநீர் குந்தும்—அது
மனமகிழ் அழகினைச் சிந்தும்
உலரிய விழிநீர் சிந்தின்—என்
உளமோ கடலெனப் பொங்கும்.

விரித்திடும் தோகைக் கண்கள்—காணின்
விளைத்திடும் என்மனம் பண்கள்
தரித்திடும் ஆடையிற் கண்கள்—காணின்
தலைக்கொளும் ஆயிரம் புண்கள்.

முழுமதி வடிவம் குறையும்—அது
மூன்றும் பிறையாய் மறையும்
உழுபவன் வடிவம் குறையின்—என்
உள்ளம் கனலாய்ப் புகையும்

பசியும் நலிவும் மிகுத்தால்—மனம்
பாயும் புலியாய்ச் செருக்கும்
இசையா வுலகம் படைப்பின்—இதை
எப்படி என்மனம் பொறுக்கும்?



# விழிநீர் துடைத்த தமிழரசு

கவிஞர் சாமிபழனியப்பன்

உயிர்கட்கே உற்றதோர் உயிராய் நின்றே
உலகினையே காத்தளிக்கும் தண்மை மிக்க
உயர்கருணை வெள்ளத்தால் இவ்வை யத்தின்
உயிர்களினைப் புரக்கின்ற அருளின் ஊற்றே!
பெயலளிக்கும் பேரன்பே! தாயே! நீயேன்
பேய்க்கோலம் கொள்கின்றாய்? தாய்மை மாறிச்
செயிர்பகைநீ கொண்டிட்டால் உலகில் உன்றன்
சேய்கள்நிலை என்னாகும்? சிந்தித் துப்பார்!

ஏரிகளைக் குளங்களைநீ பாழ்ப டுத்தி
எழில்சேர்க்கும் ஆறுகளின் கரையு டைத்துச்
சீரான கழனிகளின் விளைவ ழித்துச்
சிற்றூர்கள் பலவற்றைச் சிதைத்தொ ழித்து
ஊரெங்கும் ஏழையரின் குடிசை மற்றும்
உதவுகிற கால்நடைகள் பள்ளிக் கூடம்
சீரான நல்வாழ்வு மனைகள் யாவும்
சிதைந்துபடச் செய்தாயே! நியாயந் தானோ?

வானகமே உனக்கேனோ இவ்வா றான
வளர்பகைகள்? பொல்லாத வெறியாட் டங்கள்!
வானுயர்பே ரவதியினைத் தாங்கொ ணாமல்
மனநொந்து வாழ்விழந்த மக்கட் கூட்டம்
வானத்து மழைபோலக் கொட்டித் தீர்த்த
மாளாத கண்ணீரை—கண்ணீர் வெள்ளக்
கானினைநீ கண்ணாரக் கண்டும் சற்றும்
கழிவிரக்கம் கொண்டிலையே! ஐயோ பொல்லாய்!

'என்னுடலில் உயிர்தங்கி நிற்கும் மட்டும்
ஏழைகளின் வாழ்வுக்கும் இந்த நாட்டின்
நன்மைக்கும் உழைத்திடநான் தவறேன்' என்னும்
நல்லதோர் உறுதிபெற் றுழைக்கும் எங்கள்
இன்னுயிராம் அருந்தலைவர் தமிழ்நாட் டுள்ள
இனங்காக்கும் முதலமைச்சர் கலைஞர் உன்றன்
வன்செயலைக் கண்டுமனம் நொந்தே கண்ணீர்
வடித்திட்டார்: விரைந்தோடி உதவி செய்தார்!



விடிழந்தோர்க் குதவுவதை இரும டங்காய்
விரிவாக்கி உதவிடவும் கடன்கள் பெற்று
வீடுகட்டிக் கொள்வதற்கும் அரிச ணங்கள்
விடுகட்ட மூங்கில்களைப் பெறுவ தற்கும்
ஆடைதரும் நெசவாளர் கருவி வாங்க
அன்பளிப்பாய் ஒருநூறு பெறுவ தற்கும்
கேடுகளைக் களைந்திடவும் ஆணை யிட்டார்!
கேடுற்றோர் வாழ்வுபெற் றுயர்கின் றாரே!

வெள்ளத்தால் முற்றழிந்த நிலங்க ளுக்கு
வரிவிதிப்பை விலக்கிடவே ஆணை யிட்டார்!
வெள்ளத்தால் கரையிழந்த ஆறு கட்கு
மீண்டும்நற் கரையெடுத்து விரிக்கின் றார்கள்;
பள்ளிகளை ஏரிகளைச் சாலை மற்றும்
பழுதடைந்த குளங்களினைப் புதுப்பித் திங்கே
வெள்ளத்தின் பாதிப்புச் சுவடே காணா
வகைசெய்யத் திட்டமிட்டுப் பணிமேற் கொண்டார்.

குடும்பத்துத் தலைமகனை இழந்தே வாடும்
குடும்பத்திற் கிரண்டாயி ரம்ரூ பாயும்
குடும்பத்தின் மற்றவர்கள் இறந்தி ருந்தால்
கொள்உதவி ஓராயி ரம்வ ரைக்கும்
கொடுத்திடவும் பெற்றோரை இழந்து விட்ட
குழந்தைகளை அன்பில்லம் சேர்ப்ப தற்கும்
விடுத்துள்ள தமிழரசின் ஆணை கண்டு
விரிமனத்தர் மனமுவந்து போற்று கின்றார்!



# நான் வெளிச்சம்

புலவர் மு.சிக்கந்தர்

அண்டத்தின் கண்கள்நான் ; உலகை யாளும்
ஆதவனின் மைந்தன்நான் ; செம்பா கற்காய்க்
கொண்டையுடன் விளங்குகின்ற சேவற் கோழி
கூவிடுமுன் எழுகின்ற வெள்ளி மீனில்,
தண்டமிழப் பாட்டாளி வியர்வை முத்தில்,
தளிருறங்கும் பனித்துளியில், வைரக் கல்லில்,
விண்டுரைக்க முடியாமல் குடியி ருப்பேன்.
வெட்டவெளிக் கெட்டாத பெட்ட கம்நான்.

ஒற்றைத்தேர் மேலேறிக் குதிரை யேழில்
உலகைவலம் வருகின்றேன் என்ப தற்குக்
கற்றறிந்தோர் விளக்கமென்ன ? வெண்பெட் டிக்குள்
கண்கவரும் எழுவண்ணப் பட்டுண் டென்று
சொற்றமிழால் கூறுங்கள் ! வான வில்லைச்
சுட்டிவந்தால் காட்டுங்கள் ! வெள்ளை யுள்ளும்
உற்றறிந்தால் உள்ளிருப்பை அறிவோம் என்ற
உண்மையினை விள்ளுங்கள் ! இன்னும் சொல்வேன்.

சத்திரத்தில் நானிருப்பேன் ; விண்ணில் மாநட்
சத்திரத்தில் நானிருப்பேன் ; வெற்றி டத்தில்
புத்தர்சிலை போலிருப்பேன் ; ஏழை வாழ்வைப்
புதுப்பிப்பார் நெஞ்சத்தில் குடியி ருப்பேன் ;
எத்தரில்லம் அலங்கரிப்பேன் ; என்னும், அன்னார்
இதயத்தில் சிறையிருக்க விரும்ப மாட்டேன்.
அத்தின்றிப் பலாப்பழம்போல் என்னை எண்ணி
அண்டுகின்ற ஈக்கூட்டச் சிறகொ டிப்பேன் !

ஒலிசெல்ல முடியாத கண்ணு டிக்குள்
ஊடுருவிப் பாய்கின்ற என்னைப் போன்று
விழியில்லா மக்கள்தம் உள்ள மெல்லாம்
விழிப்படையக் கல்வியெனும் விழியைத் தாரீர் !
நிலவில்லா நேரத்தில் 'விளக்கை' ஏற்றி
நெளியிருட்டை முடிந்தமட்டும் விரட்டு தல்போல்
நிலமில்லா ஏழைக்கோ வறுமை வாழ்வில்
நிலவாமல் முடிந்தமட்டும் உதவு வீரே !





# செம்மையே நிறைப்பாள்!

புலவர் தமிழ்ப்பித்தன்

மார்கழித் திங்கள் நீங்கி
மணங்கவர் 'தை'யாள் வந்தாள் !
யார்தடுத் தாலும் நில்லா
அருள்மிகு நெஞ்சங் கொண்டாள்
வேர்பெறு புவியின் வாழ்வில்
விளைபயன் உறையச் செய்வாள் !
சீர்மிகத் தருவாள் ; பொங்கும்
செம்மையே நிறைப்பாள் அன்பாய் !

உழவரின் நெஞ்சி லெல்லாம்
உவகையே உலவச் செய்வாள் :
பழகிடும் உழவு மாட்டின்
பயன்களை எடுத்துச் சொல்வாள் !
அழகினை எங்கும் தேக்கி
அகம்முகம் மலரச் செய்வாள் !
முழங்கிடும் முழக்கில் எல்லாம்
புத்துணர்(வு) ஈவாள் அன்னாள் !

வறுமையை ஓடச் செய்தே
வளமையை மகிழ்வாய்ச் சேர்ப்பாள்
சிறுமைகள் களைவாள் ; தூய
செயல்களை நிறைப்பாள் ; மக்கள்
'பொறுமையின் பரிசே' என்று
புகன்றிடும் வகையில் இங்கே
அறுவடைப் பயிர்கள் சேர்ப்பாள் !
அன்னையின் வடிவாய் நிற்பாள் !

கன்னலும் மணிச்செந் நெல்லும்
கவினுறப் படைப்பாள் ; வீட்டுச்
சன்னலின் ஓர மெல்லாம்
சரித்திரம் சமைப்பாள் ; மின்னும்
சின்னவர், இளைஞர், மூத்தோர்
சிந்தையில் இன்ப வெள்ளம்
பின்னிடச் செய்வாள்; நாளும்
பெருகிடச் செய்வாள் மெய்யாய் !

தலைவியைப் பிரிந்து சென்றும்
தண்கடல் தாண்டி வாழ்ந்தும்
உலையினைப் போலும் உள்ளம்
உளைந்திடும் தலைவர் எல்லாம்
அலையினும் விரைவாய் வந்தே
அன்புடன் இல்லம் நாடும்
நிலையினைத் தோற்றம் செய்தே
நிம்மதி சேர்ப்பாள் வாழ்க !



# நல்லவை தொடர்வோம்

மாட்சிமிகு தமிழரசு மலர்ந்த பின்னே
மாநிலத்தில் சாதனைகள் மிகுந்த தம்மா!
ஆட்சிமொழி தமிழ், அனைத்தும் தமிழே ஆக
அரியதொரு வரலாறு காணு கின்றோம்;
காட்சிகளே நிலையான சாட்சி கள்தாம்!
கடுவேக மின்இணைப்பால் இருளி னின்றும்
மீட்சியுற்றோம்; விளையுளிலே நிறைவு பெற்றோம்;
வேளாண்மைத் திறத்தாலே விருதும் பெற்றோம்!

அரிசிவகை பெருகிடவே குவியும் வண்ணம்
அரும்பசுமைப் புரட்சியினை நாமே செய்தோம்!
பரிசெனவே புன்செய்க்கும், நன்செய் என்னில்
பதினறு மாவுக்கும் வரிவி லக்காம்!
வரிசையுடன் விவசாயத் தொழிலா ளர்க்கு
வாகான வீட்டுமனை நிலப்பட் டாக்கள்
சரிசமமாய் வழங்கியவை ஆறு லட்சம்;
சரித்திரத்தில் ஐந்தாண்டில் இவைபோல் உண்டோ?

காடான மேடான நிலப்ப ரப்பைக்
கணக்கின்றிப் பிணைத்தஉச்ச வரம்பு தன்னைக்
கோடாமல் ஆராய்ந்த தீந்த ஆட்சி;
கொடுமைதனை விலக்கியதே பெரும்பு ரட்சி!
மூடாமல் ஆலைகளை இயக்கு தற்கு
முனைகின்ற முயற்சியெலாங் கொஞ்சந் தானோ?
வாடாமல் தொழிலாளி மக்கள் வாழ
வாரியள்ளிக் கொடுத்தோமே எட்டு லட்சம்!

தாய்ப்பாச உணர்வோடிம் மாநி லத்தைத்
தமிழ்நாடென் றழைக்கின்றோம்; தியாகி கட்கும்
காப்பாக நிதிவசதி உதவு கின்றோம்;
களைத்திருந்த ஊழியர்க்குச் சேவையைச் சாய்த்தே
மூப்பான இரகசியக் குறிப்பொ ழித்தோம்.
முகிழ்த்திட்ட மகிழ்ச்சிவெள்ளம் அடங்கு முன்னே
கோப்பாக முப்பத்து நான்கு கோடி
கூடுதலாய் ஊதியத்திற் கொடுத்தோம் அன்றோ?

அறங்காவல் பொறுப்பினிலே அரிச னங்கள்
அர்ச்சகராய்ப் பதவிபெறச் சட்டம் செய்தோம்;
உறங்காதெட் டரைக்கோடிப் பொருளொ துக்கி
உள்துறையைத் துறையினிலும் இவர்முன் னேறப்
புறங்காணும் குறிப்பிட்ட உயர்ந்த வகுப்பும்;
புதுப்புதிதாய்த் தொழிற்பயிற்சி நிலையம் வைத்தோம்;
திறங்காணும் தேர்வுதனை எழுது தற்கே
தேவையுள்ள தனிப்பயிற்சி வகுப்புத் தந்தோம்!

மாணவர்கள் விடுதிபல ஏற்ப டுத்தி
வான்புகழ்க் "காந்திநீதி" வழங்கு கின்றோம்;
மோனையெனப் புகுமுகத்தில் முன்நிற் போர்க்கு
முழுநூறு திங்களுக்குத் தருகின் றோமே!
கேணிதனைத் தோண்ட, உழும் மாடு வாங்கக்
கிடைக்கின்ற தொகை, உதவி யாவும் யாரால்?
ஏணியென நிமிர்ந்துநிற்கும் மாடி வீட்டில்
இடங்கிடைக்கும் என்றவரே நினைத்த துண்டா?

பிற்பட்டோர் நலங்காணத் தனிய மைச்சும்
பிறபயனும் விரைந்தெய்தக் குழுவ மைத்தோம்;
முற்பட்டே தொழில்துறையின் மேன்மை ஓங்க
முனைப்புடனே வட்டியிலாக் கடன ளித்தோம்;
அற்புதமாய் முடிதிருத்து வோரும், ஆடை
அழுக்கெடுப்போர் தாமும்கைக் கருவி பெற்றார்!
சொற்பமெனக் கருதாமல் மான வர்தாம்
சுழற்கடலில் படகோட்ட வழிவ குத்தோம்.

வருவாயில் மூன்றிலொரு பாகம் கல்வி
வளர்வதற்கே செலவழிக்கும் நிலைமை இன்று;
பெருவாரி யானவர்கள் கற்கு மாறு
பெருகிவளர் புகுமுகமும் இலவ சந்தான்!
திருவாரும் கோவில்கள் ஏழு கோடி
திரட்டுகின்ற குழுவுடன் வழிபாட் டிற்கோ
உருவான நறுந்தமிழாம்; பிணிய கற்றும்
உயர்வான மருந்தகமாம் அருமை அன்றோ!

கவிஞர் கருணானந்தம்

குடிசைகளைக் கோபுரம்போல் மாற்று கின்றோம் ;
குடிநீரும் வடிகாலும் கொண்டு வந்தோம் ;
படிப்பதற்கே இருமொழிகள் போதும் என்றோம் ;
பார்வைதரும் கண்முகாம்கள் நடாத்து கின்றோம் ;
துடிக்கின்ற தொழுநோயர் மறுவாழ் வில்லம்—
சுவையான சத்துணவுத் திட்டம் கண்டோம் !
படித்தவர்க்காம் இளைஞரணி யோடு, மெத்தப்
பயனுள்ள சீரணியும் சிறக்கச் செய்தோம் !

கோச்சோழன் கண்டமனு நீதித் திட்டம்
குக்கிராமம் வரையிந்நாள் குடியே றிற்றே !
ஆச்சரியப் படுமாறு சிற்றூர் எல்லாம்
அண்மைவரும் பேரிணைப்புச் சாலை யாலே !
மூச்சடக்கி மூழ்கியருஞ் சங்கெ டுப்போர்
முதன்முதலாய் முழுவுரிமை பெற்ற தெங்கே ?
சீச்சியென் றொதுக்காமல் தோளி ணைக்கும்
சீர்திருத்த மணச்சட்டம் வந்த திங்கே !

பேருந்தை நாட்டுடைமை ஆக்கு கின்றோம் ;
பேணிடுமா நிலத்திட்டக் குழுவ மைத்தோம் ;
சீருந்த விடாதவட்டிக் கடனால் தேய்ந்து
தேன்பிழந்தோர் வலிவுறவே உரமுந் தந்தோம் ;
யாருந்தம் பண்ணையாளை வெளியேற் றாமல்
ஏற்பாடு. கூலிக்குச் சட்டம் போட்டோம் !
ஊரெங்கும் சுற்றுலாவை நாடு வோர்க்கும்
உதவுமொரு வாரியமும் புதிதாய்க் கண்டோம் !

ஆசிரியர், பொறியாளர் வேலை வாய்ப்பும் ;
அரக்கோணம் சேலமிரும் பாலை யோடு,
பேசுந்தூத் துக்குடியில் பெரிய திட்டம் !
பிணியகற்றக் கூவஞ்சீ ரமைப்பும், அண்ணா
வீசுபுகழ்ச் சதுக்கமங்கே நீச்சல் வாவி,
வெற்றிபெற்ற குடும்பநல முனைப்பி யக்கம் ;
நாசியின்மேல் விரல்வைத்து வியக்கு மாறு
நாடுவாழ நல்லனவே தொடர்வோம்; வாழ்வோம் !





# வெள்ளம் விளைத்ததோ வேதனை - அரசு



# விரைந்து உதவியது சாதனை



ஏழை, எளிய, சாமானிய மக்களின் வாழ்வில் வளம் கூட்டிடத் தமிழ்நாடு அரசு அயராது உழைத்துவருகிறது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயலும் தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு எத்தனை முட்டுக்கட்டைகள் ! பழுத்த மரத்தில் தான் கல்லடி விழும் என்பதுபோல், பாமர மக்களின் பாதுகாவலனாக விளங்கும் தமிழ்நாடு அரசுக்கு எத்தனைத் தொல்லைகள் !

தொல்லைகளைக் கண்டு துவண்டுவிடாத தமிழ்நாடு அரசு, மக்களின் துயர் துடைக்கும் பணியையே மூச்சாகக் கொண்டு செயலாற்றி வருகிறது என்பது, இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தால் தெரியும் !

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!" என்பதற்கொப்ப, உணவு அளித்து உயிர்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் 75 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்யப் பல்வேறு வகையிலும் முயற்சி எடுத்துக் கொண்டது. ஆனால், தமிழ்நாடு அரசின் பெரு முயற்சிக்கு எதிராக, வேளாண்மை உற்பத்தியைச் சீர்குலைக்கும் இரட்டைப் பிறவிகளான வறட்சியும், வெள்ளமும் தோன்றின. இந்த இரட்டைப் பிறவிகளுடன் "புயல்" என்னும் கொடியவனும் சேர்ந்து கொண்டான். இயற்கையின் கோரக் கரங்களான வறட்சி, வெள்ளம், புயல் ஆகிய மூன்றும் தமிழகத்தின் குரல்வளையை இந்த ஆண்டு நெரிக்க முயன்றன. இக்கோரக் கரங்களின் பிடியிலிருந்து தமிழகத்தைக் காப்பாற்றத் தமிழ்நாடு அரசு தன் கடமையைச் செவ்வனே செய்துள்ளது என்றால் மிகையாகாது.



இந்த ஆண்டில் தென் மேற்குப் பருவமழை (ஜூன் முதல் செப்டம்பர் வரையான காலத்தில் வீசும் காற்றினால் ஏற்படும் பருவமழை) முன் கூட்டியே துவங்கிய போதிலும், வழக்கமாகப் பெய்யும் அளவுக்குப் பெய்யாமலும், பெய்த மழையும் எங்கும் ஒரே சீராகப் பெய்யாமல் முறையற்று அங்கும் இங்குமாகப் பெய்து விட்டும் போய்விட்டது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டின் பெரும் பகுதியை வறட்சி வாட்டியது. அப்பகுதிகளில் உழவர் பெருமக்கள் சாகுபடி செய்ய முடியாமல் பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளானார்கள். கிடைத்த மழையைக் கொண்டு சாகுபடியைத் துவக்கியவர்களும், பிற்பகுதியிலும் மழையின்மையால் எதிர்பார்த்த அளவுக்கு மகசூல் பெறாமல் ஏமாந்தனர்.

நாட்டு மக்களின் வாட்டம் போக்குவதையே குறிக்கோளாகக் கொண்ட தமிழ்நாடு அரசு 600 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வறட்சி நிவாரணத் திட்டம் தீட்டியது. இந்திய அரசின் ஆய்வுக்குழு, வறட்சியின் கொடுமைக்குள்ளான தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களைப் பார்வையிட்டது. அக்குழுவின் பரிந்துரைக்கேற்ப இந்திய அரசு, 150 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக வழங்கியது. தமிழ்நாடு அரசு வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்தது.



நல்ல காலமாக அக்டோபர், நவம்பர் திங்களில் பருவம் தமிழ்நாட்டிற்கு வாய்ப்பாக அமைந்தது. வடகிழக்குப் பருவ மழையினால் (அக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலத்தில் வீசும் காற்றினால் ஏற்படும் மழை), வழக்கத்திற்கும் அதிகமான மழை நவம்பர் திங்களுக்குள்ளாகவே தமிழ் நாட்டிற்குக் கிடைத்தது. இதன் பயனாய், நீர்த் தேக்கங்களெல்லாம் நிரம்பின; ஆற்றுப் பாசனங்களின் கீழும், ஏரிப் பாசனங்களின் கீழும் சாகுபடி வேலைகள் தீவிரமடைந்தன.

வறட்சியின் கொடுமை நீங்கிய நிம்மதியில் பெருமூச்சு விட்டு விட்டுப் பொதுவாக மக்களும், குறிப்பாக உழவர் பெருமக்களும் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த நேரத்திலே, பேரிடியென வந்தது ஒரு செய்தி '

"தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் இருந்து கிழக்கு-தென்கிழக்கு மூலையில் 650 கிலோ மீட்டர் தொலைவில் வங்காள விரிகுடாவில் குறைந்த அழுத்தப் பகுதி (Low pressure area) தோன்றியுள்ளது!" என்ற கொடிய செய்தியை வானிலை ஆராய்ச்சித் துறையினர் முன்கூட்டியே தெரிவித்தனர்.

'புயல் உருவாகிறது!' என்ற செய்தி கிடைத்த உடனேயே தமிழ்நாடு அரசு, கடற்கரை ஓரத்தில் வசிப்பவர்களையும், தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஆவன செய்தது. கடற்கரை ஓரத்தில் உள்ள மாவட்ட அலுவலர்கள் இப்பணியினைச் சிறப்புறச் செய்தனர்.

ஆறாம் தேதி அன்று காலை 5 மணியளவில் கடலூருக்கருகில், தமிழகத்தைக் கொலைக் களமாக்க வேண்டுமென்ற கொடிய வெறியுடன் புயல் கரையைக் கடந்தது. அப்புயல் தன்னுடைய கோரத் தாண்டவத்திற்குத் துணையாகக் கொட்டும் மழையையும், குலைநடுங்க வைக்கும் குளிர் காற்றையும் அழைத்து வந்தது.

மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது! வானமே இடிந்து விட்டதோ என்ற அளவுக்குப் பெருமழை கொட்டியது! சென்னை முதல் வேதாரண்யம் வரையான கடற்கரைப் பகுதி டிசம்பர் 6, 7 நாட்களில், இதுவரை காணாத மழையைப் பெற்றது.

குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏராளமான மரங்களும், மின்சாரக் கம்பங்களும், தந்திக் கம்பங்களும் புயலுக்கு அடிபணிந்தன. பெருமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் ஏராளமான ஏரிகளை உடைத்துச் சாலைகளையும், புகைவண்டிப் பாதையையும் பாழ்படுத்தியது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கடற்கரை ஓரப்பகுதிகளில் டிசம்பர் 6-ம் நாள் எந்த விதப் போக்குவரத்தும் நடைபெறவில்லை.

இவ்வாறு பெரும் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தின் நாச வேலை காரணமாகத் தமிழ் நாட்டில் 81 பேர் இறந்தனர்; பல்லாயிரக் கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன; அரசுக்கும், பொது மக்களுக்கும் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் பாழாயின.

அப்பப்பா! வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை நினைத்தாலே நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது. ஆயினும் அவைகளை ஈண்டு மாவட்ட வாரியாகக் கூறவேண்டியது கடமையாக உள்ளது.





113





## தென்னார்க்காடு

கடந்த நூறாண்டுக் காலத்தில் இத்தகைய வெள்ளம் ஏற்பட்டதில்லை என்று புள்ளி விவரங்கள் மட்டுமல்ல, பல முதியவர்களும் கூறுகிறார்கள். இம்மாவட்டத்திலுள்ள 2,203 கிராமங்களில், 1,057 கிராமங்கள் வெள்ளத்தால் பாழாகியுள்ளன. இம்மாவட்டத்தில் 110 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட திருக்கோவிலூர் அணை, முழு அளவில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. பெண்ணையாற்று வெள்ளம் தேசிய நெடுஞ்சாலையில் அரசூர் என்ற இடத்தில் இருந்த பாலத்தைப் பாழ்படுத்திவிட்டதுடன், அருகில் திருச்சி—விழுப்புரம் கார்டு வழியிலுள்ள புகை வண்டிப் பாதையில் பாலத்தை முழு அளவில் அடித்துச் சென்றுவிட்டது. மணிமுத்தாறு, கோமுகியாறு, வெள்ளாறு, பரவனாறு, மலட்டாறு, கெடிலம் முதலிய இதர ஆற்று வெள்ளங்களும் தென்னார்க்காடு மாவட்டத்தை வெள்ளக் காடாக்கின. தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி, 5 முதல் 6 அடி தண்ணீரில் 4 நாள் காலத்திற்கு மூழ்கியிருந்தது.





தென்னார்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சேதம் ஏற்பட்டுள்ளது.

| | |
|---|---|
| உயிரிழந்தவர்கள் ... ... | 26 |
| உயிரிழந்த கால்நடைகள் ... ... | 458 |
| சேதமடைந்த வீடுகள் ... ... | 88,000 |

### பாழான பயிர்களின் பரப்பும், மதிப்பும்

| | பரப்பு (ஏக்கர்) | மதிப்பு (இலட்சம் ரூபாய்) |
|---|---|---|
| நெல் ... ... ... | 1,00,000 | 160·00 |
| வாழை ... ... ... | 1,000 | 40·00 |
| கரும்பு ... ... ... | 350 | 9·45 |
| வெற்றிலை ... ... ... | 300 | 4·50 |
| துவரை ... ... | 10,000 | 10.00 |
| | 1,11,650 | 223·95 |



### வெள்ளத்தினால் ஏற்பட்ட இதர சேதமும், அவைகளைப் பழுது பார்ப்பதற்குத் தேவையான தொகையும்

| | சேதமடைந்த எண்ணிக்கை | பழுது பார்க்கத் தேவைப்படும் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| பொதுப்பணித்துறை ஏரிகள் ... | 504 | 2,46,50,000 |
| சிறிய நீர்ப்பாசன ஏரிகள் ... | 465 | 41,53,000 |
| நெடுஞ்சாலைகள் ... ... | 169 | 1,33,64,000 |
| ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற, நகராட்சிச் சாலைகள் | 1,280 | 1,38,81,000 |
| பொதுக் கட்டடங்கள் ... ... | 733 | 40,48,000 |
| மின்சார அமைப்புகளுக்குப் பழுது பார்த்தல் முதலிய இதர பணிகள் | ... | 11,68,000 |
| பழுது பார்த்துச் செப்பனிடத் தேவைப்படும் தொகை | | 6 12 64·000 |

## தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, மன்னார்குடி ஆகிய வட்டங்கள் பெருஞ்சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. இம் மாவட்டத்தில் வெள்ளத்தினுல் 8 பேர்கள் உயிரிழந்துள்ளனர்; 46 கால் நடைகள் இறந்துள்ளன; 10,000 வீடுகள் சேதமடைந்துள்ளன; 83,450 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள 83·45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளன. இம் மாவட்டததில் உடைப்பெடுத்த வாய்க்கால்களையும், ஏரிகளையும் செப்பனிடவும், சாலைகளைப் பராமரிக்கவும், பொதுக் கட்டடங்களைப் பழுது பார்க்கவும், இதர வெள்ள நிவாரணப் பணிகளுக்காகவும் ரூபாய் 4,96,94,000 தேவைப்படுகிறது.

## கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் பவானி ஆற்று வெள்ளமே பெருஞ்சேதம் விளைவித்துள்ளது. பவானி நகரத்திற்குச் செல்ல, பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தின் இரு ஓரத்தையும் பவானி ஆற்றின் வெள்ளம் உடைத்துள்ளதுடன், பவானி நகரின் பெரும் பகுதியை மூழ்கடித்துக் காவிரியாற்றில் கலந்துள்ளது. இம்மாவட்டத்தில் வெள்ளத்தினுல் 9 பேர் உயிரிழந்துள்ளனர்; 2,000 கால் நடைகள மடிந்துள்ளன; 63,870 ஏககரில் பயிராகியிருந்த 243·82 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பயிர்கள் பாழாகியுள்ளன; 16,000 வீடுகள் சேதமடைந்துள்ளன. இம்மாவட்ட ஏரிகளிலும், சாலைகளிலும் ஏற்பட்டுள்ள உடைப்புகளை அடைத்துச் செப்பனிடவும், இதர பணிகளுக்காகவும் ரூபாய் 2,09,34,000 தேவைப் படுகிறது.

## சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதி சேலம் நகரமும், ஆத்தூர் நகரமும், சுற்றியுள்ள கிராமங்களுமேயாகும். இம்மாவட்டத்தில் வெள்ளத்தினுல் 6 பேர்கள் உயிரிழந்தனர்; 500 கால்நடைகள் மாண்டன; 7,700 வீடுகள் பாழடைந்தன; 11,390 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 93·35 இலட்சம் மதிப்புள்ள பயிர்கள் பாழடைந்தன. இம்மாவட்டததில் ஏரிகளையும், சாலைகளையும் பழுதுபார்க்கவும், இதர நிவாரணப் பணிகளுக்காகவும் ரூபாய் 1,51,14,000 தேவைப்படுகிறது.

## வட ஆர்க்காடு

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணையிலிருந்து டிசம்பர் 8, 9 நாட்களில் 24 மணி நேரத்தில் திறந்துவிடப்பட்ட தண்ணீரின் அளவு, சாத்தனூர் அணையின் கொள்ளளவை விட 3½ மடங்காகும். இவ்வாறு திறந்து விடப்படாதிருந்தால், சாத்தனூர் அணை என்னவாகியிருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. டிசம்பர் 7, 8 நாட்களில் பெய்த 12 முதல் 15 அங்குல மழையே இப்பெரு வெள்ளத்திற்குக் காரணமாகும். சாத்தனூர் அணைக்குக் கீழே பெண்ணையாற்றங் கரையில் உள்ள 20 கிராமங்கள் பெரும் சேதமடைந்து, ஏறத்தாழ ஒரு வார காலத்திற்கு எவ்வித தொடர்பும் இன்றி வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தன. இம்மாவட்டத்தில் 6 பேர் உயிரிழந்தனர்; 58 கால்நடைகள் மாண்டன; 3,000 வீடுகள் சேதமடைந்தன; 14·22 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 3,620 ஏக்கர் நெல் பயிர்கள் பாழாகியுள்ளன.



இம்மாவட்ட ஏரிகளையும் சாலைகளையும் சீர் செய்யவும், இதர வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ரூபாய் 73,39,000 தேவைப்படுகிறது.

## செங்கற்பட்டு மாவட்டம்

பாலாற்றில் பெரும்பாலும் எப்பொழுதும் வெள்ளம் வராது என்பார்கள்! ஆனல், அந்த ஆற்றிலும் அண்மையில் டிசம்பரில் பெய்த பெரு மழையினுல் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதிலிருந்தே, வெள்ளத்தின் தாக்குதலை வெளிப்படையாக உணர முடிந்துள்ளது. இம்மாவட்டத்தில், வெள்ளம் பெரும்பாலான ஏரிகளை உடைத்துப் பாழ்படுத்தியுள்ளது. இம் மாவட்டத்தில் வெள்ளத்தினுல் ஒருவர் உயிரிழந்துள்ளார்; ஆனல், 39 கால்நடைகள் மாண்டுள்ளன; மற்றும் 5,000 வீடுகள் பாழடைந்துள்ளன. 2,085 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த ரூபாய் 12·51 இலட்சம் மதிப்புள்ள நெற்பயிர்வகைகள் பாழாகியுள்ளன. இம் மாவட்டத்தில் ஏரிகளையும் சாலைகளையும் செப்பனிட ரூபாய் 81,40,000 தேவைப்படும்.

## தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டத்தில் பெய்த பெரும் மழையினுல் பல சிறிய பாசன ஏரிகள் உடைந்து, பல இடங்களில் சாலைகளும் பழுதடைந்துள்ளன. இம்மாவட்டத்தில் வெள்ளத்தினுல் 4 பேர்கள் உயிரிழந்தனர்; 44 கால்நடைகள் மாண்டன; 825 வீடுகள் சேதமடைந்தன; 2,900 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த ரூபாய் 17·15 இலட்சம் மதிப்புள்ள பயிர்கள் பாழாகிவிட்டன. இம்மாவட்டச் சாலைகளையும், ஏரிகளையும், பொதுக்கட்டடங்களையும் பழுது பார்க்க ரூபாய் 33,00,000 தேவைப்படுகிறது.

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வெள்ளச் சேதம் குணசேகரம், இலால்குடி [illegible] ஆகிய 2 இடங்களிலே நிகழ்ந்துள்ளன; இம்மாவட்டத்தில் வெள்ளத்தினுல் 6 பேர்கள் உயிரிழந்தனர்; 6 கால் நடைகள் மாண்டன; 4,000 வீடுகள் சேதமடைந்தன; 9,600 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த ரூபாய் 41.60 இலட்சம் மதிப்புள்ள நெல்லும், சோளமும், மிளகாயும் பாழாகியுள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட சாலைகளையும், ஏரிகளையும் செப்பனிட ரூபாய் 53,80,000 தேவைப்படுகிறது.

## நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் பெய்த இடைவிடாத அடைமழையின் காரணமாகப் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு, சாலைகள் பழுது பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் இம்மழையினுல் 15 பேர் உயிரிழந்தனர்; 9 கால்நடைகள் மாண்டன; 51 வீடுகள் இடிந்தன; நீலகிரி மாவட்டத்திலுள்ள சாலைகளைச் செப்பனிட 20,06,000 ரூபாய் தேவைப்படுகிறது.

## சென்னை மாவட்டம்

பெருமழையின் காரணமாகச் சென்னை நகரின் தாழ்வான பகுதிகளில் எல்லாம் வெள்ளம் தேங்கி நின்றது. இம்மழையின்போது 3 பேர் உயிரிழந்தனர்; 5 கால்நடைகள் மாண்டன; 35,000 வீடுகள் பாழாகின. சென்னை நகரச் சாலைகளில் பல இடங்கள் பழுதடைந்துள்ளன. இவைகளைச் செப்பனிட ரூபாய் 51,50,000 தேவைப் படுகிறது.



புதுதில்லியில் திட்டக் குழுவினரைச் சந்தித்த முதலமைச்சர் கலைஞர் அவர்களும், தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்களும் சந்தித்த பொழுது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேத விவரங்களைத் தெரிவித்தனர்

## மாநில அளவில் ஏற்பட்ட சேதம்

டிசம்பர் 2-ஆம் நாள் தோன்றி, டிசம்பர் 6-ஆம் நாள் காரைக்கால் அருகே கரையைக் கடந்த புயலாலும், அதையொட்டிப் பெய்த பெருமழையாலும், அதன் காரணமாகத் தோன்றிய வெள்ளத்தாலும், இது வரை கூறியவற்றுல், தமிழ் நாடெங்கும் வெள்ளத்தில் மூழ்கியதாலும், வீடுகள் இடிந்து விழுந்ததாலும், மரங்கள் விழுந்ததாலும், மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து மின்சாரம் பாய்ந்ததாலும் 81 பேர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 39 பேர்கள் வயது வந்தவர்கள்; அவர்களே அவர்களது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தவர்களாவார்கள்.

ஆயிரக் கணக்கான கால்நடைகள் பெருமழையால் இறந்ததுடன், வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவ்வாறு சேதமடைந்த கால்நடைகளையும் அவற்றின் மதிப்பையும் கணக்கிடக் காலம் அதிகம் ஆகும்.

தமிழ்நாடெங்கும் 1,70,000 வீடுகள் பாழடைந்துள்ளன. பெண்ணையாறு, கெடிலம் ஆறு ஆகியவற்றின் கரையிலிருந்த சில குக்கிராமங்கள் முழு அளவில் நாசமடைந்துள்ளன.

டிசம்பர் 12-ஆம் நாள் வரை, வெள்ளம் வடியாதிருந்ததன் காரணமாகத் தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ஏறத்தாழ ஒரு வார காலத்திற்கு வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தனர்.

சாத்தனூர், பவானி சாகர் ஆகிய இரு பெரிய நீர்த்தேக்கங்களும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டாலும், திருக்கோவிலூருக்கு அருகில் பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்

டிருந்த அணை முழு அளவில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. அதுபோலவே கள்ளக்குறிச்சிக்கு அருகில் கெடிலம் ஆற்றில் கட்டப்பட்டிருந்த அணையும் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பாழடைந்துள்ளது. 1,524 பெரிய பாசன ஏரிகளிலும், 1,387 சிறிய நீர்ப் பாசன ஏரிகளிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளன.

ஏரிகள் உடைந்ததன் காரணமாகச் சாலைகளிலும், தொடர் வண்டிப் பாதைகளிலும் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் புகுந்ததால் 5 நாட்கள் வரை, சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

தமிழ்நாடெங்கும் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் சொல்லுந்தரமன்று! 40,765 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் முழு அளவில் பாழாகிவிட்டன. 2,47,800 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்களில் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு நாசம் விளைந்துள்ளது.

ஆறுகளில் பெருக்கெடுத்து வந்த வெள்ளம், 4,000 ஏக்கர் நல்ல வளமான சாகுபடி நிலங்களில் மணலைக் குவித்துள்ளது. மணல் மேடுகளை அகற்றினல் அன்றி, அந்நிலங்களில் சாகுபடி செய்வதென்பது எளிதல்ல. பல உழவர் பெருமக்களுடைய எண்ணெய் இயந்திரங்களும், மோட்டார்களும் மணலில் புதைந்தும், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டும் சேதமடைந்துள்ளன.

### உடனடி நிவாரணங்கள்

வருவாய், காவல், பொதுப் பணி, தீயணைப்பு ஆகிய துறைகளைச் சேர்ந்த மாவட்ட அலுவலர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ்; ஒன்றுபட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான உடனடி நிவாரணப் பணிகளைச் செய்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கி, வெளியேற முடியாத நிலையில் இருந்த மக்களைக் காப்பாற்றுவதில் ஆயுதப்படைக் காவலாளர்களும், தீயணைப்புப்படையினரும் அரும்பணியாற்றியுள்ளனர்.

சுற்றிலும் வெள்ளத்தால் சூழப்பட்டு, உயிர் பிழைப்போமா என்று ஏங்கிய நிலையில் இருந்த மக்களைக் காப்பாற்றும் பணியில் இந்தியக் கடற்படையினர் ஆற்றியுள்ள சேவை மிகவும் குறிப்பிடத் தக்கது. அவர்கள், ஹெலிகாப்டர்களை வைத்துக் கொண்டு தென்ஞர்க்காடு மாவட்டத்தில் 4,319 மக்களைக் காப்பாற்றியுள்ளது மிகவும் பாராட்டிற் குரிய சேவையாகும்.

வீட்டையும், உடைமைகளையும் இழந்து வாடியவர்களையெல்லாம் பள்ளிக்கூடம், அலுவலகங்கள் போன்ற பொது இடங்களில் தங்கச் செய்து, வெள்ளம் வடியும் வரை அவர்களுக்கு இலவச உணவும் அளிக்கப்பட்டு வந்துள்ளது. தனியார் சிலரும் மனமுவந்து உதவி வந்துள்ளனர்.

வீடிழந்த குடும்பத்தினர் அனைவருக்கும், உடனடியாகக் குடும்பத்திற்கு ரூபாய் 80 வீதம் பண உதவி செய்யப்பட்டுள்ளது. முன்பெல்லாம் இவ்வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 40 மட்டுமே கொடுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனல், இன்றைய அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 80 வீதம் உதவித் தொகை வழங்கியுள்ளது. இவ்வகையில், 1,70,000 குடும்பங்களுக்கு உதவிப் பணம் வழங்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களில் 88,000 குடும்பத்தினர் தென்ஞர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

பொதுப்பணித் துறையும், ஊராட்சி ஒன்றியங்களும் தங்கள் பணியாளர்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டு குறுகிய காலத்திலேயே மணல் மூட்டைகளை அடுக்கி, வளைவான அணைகளை ( Ring—bunds ) ஏற்படுத்தி, உடைப்பெடுத்த ஏரிகளைத் தற்காலிகமாக அடைத்துள்ளனர்.

நெடுஞ்சாலைத் துறையினர் 3 முதல் 4 நாட்களிலேயே தற்காலிகச் சீரமைப்புப் பணிகளின் மூலமாக எல்லா முக்கியச் சாலைகளிலும் போக்குவரத்து நடைபெறச் செய்து விட்டனர்.

தென் இரயில்வே துறையினர் ஒரே வாரத்தில் தொடர் வண்டிப் போக்குவரத்து நடைபெறச் செய்தது வியப்பிற்கும், பாராட்டுக்கும் உரிய செயலாகும்.

வெள்ளம் வடிந்தது! வேதனை சற்றுக் குறைந்தது! போக்குவரத்துத் தொடர்ந்தது! வெள்ளச் சேத விவரங்களையும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமளிக்கத் தேவையான தொகையையும், புயலும் வெள்ளமும் ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலைமைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கொண்டு வருவதற்குத் தேவையான தொகையையும் கணக்கிடும் பணி தொடர்ந்தது!

### வெள்ள நிவாரணப் பணிகள்

சேதங்களும், தேவையான நிதியும் திட்டவட்டமாகக் கணக்கிடப்பட்டபின் பல்வேறு துறைகளாலும் தீட்டப்பெற்ற செயல் திட்டங்கள் 19—12—1972 அன்று சென்னையிலே நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டிலே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் விவாதிக்கப்பட்டன. விரிவான விவாதங்களுக்குப்பிறகு, வெள்ள நிவாரணத் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது. அந்தத் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன :

1. உழைத்துச் சம்பாதித்துக் குடும்பத்தைக்காப்பாற்றக் கூடியவர் வெள்ளத்தினல் இறந்திருந்தால், அத்தகைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2,000 பண உதவி அளிக்கப்படும். மற்றவர்கள் வெள்ளத்தினல் இறந்திருந்தால், அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 500 முதல் 1,000 வரை பண உதவி செய்யப்படும்.

2. உடைந்த ஏரிகளையெல்லாம் உடனடியாகச் செப்பனிட்டு, 1973 தென் மேற்குப் பருவ மழையினல் கிடைக்கும் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்குத் தகுந்த வகையில் வைத்திருக்க வேண்டும்.

3. வெள்ளத்திற்கு முன்பிருந்த நல்ல நிலைமையில் எல்லாச் சாலைகளும் செப்பனிடப்படும்.

4. பள்ளிக்கூடம் போன்ற பொதுக்கட்டடங்கள் உடனடியாகச் செப்பனிடப்படும்.

5. வெள்ளத்தினல் பயிர்களை இழந்த உழவர் பெருமக்கள் உடனடியாகப் புதிய பயிர் செய்யவும், மணல் மூடிய நிலங்களிலிருந்து மணலை அகற்றிச் சாகுபடிக்குத் தக்க நிலமாகச் செய்யவும் உடனடிக் கடன் உதவி தேவைப்படுகிறது. முடிந்த வரையில் அவர்களுக்கு வேண்டிய கடன் உதவிகள் கூட்டுறவு வங்கிகளின் மூலம் அளிக்கப்படும். கூட்டுறவுக் கடன் பெற முடியாத நிலையில் உள்ளவர்களுக்குத் தமிழ்நாடு அரசே நேரடியாகக் கடன் வழங்கிடும். மணலை அகற்றுவதற்கு ஆகும் மொத்தச் செலவு அனைத்தையும் தமிழ்நாடு அரசே மானியமாகக் கொடுத்து உதவும்.

6. வீடிழந்தவர்களில் பெரும்பாலோர் குடிசை வாழ் மக்களேயாவர். அவர்கள் தங்களுடைய வீட்டைக் கட்டிக் கொள்ளக் கூட்டுறவு நிதியைப் பயன் படுத்தக் கூடிய நிலையில் இருக்க மாட்டார்கள். தற்பொழுது வீடிழந்த குடும்பம் ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்படும் ரூபாய் 80, அவர்கள் மீண்டும் வீடு கட்டிக் கொள்வதற்குப் போதாது. எனவே, வீடு கட்டிக் கொள்ளக் கடன் உதவி வேண்டும் குடும்பத்தினர்களுக்கு ரூபாய் 250-க்கு மேற்படாமல் தமிழ்நாடு அரசு கடன் கொடுத்து உதவவும் திட்டமிட்டுள்ளது.

7. பயிர்களை இழந்த உழவர் பெருமக்கள் 1973 மார்ச்சுத் திங்கள் இடைப்பகுதியில் அறுவடைக்கு வந்து விடக்கூடிய குறுகிய காலப் பயிர்களைப் புதிதாகச் சாகுபடி செய்வதற்குத் தேவையான புதிய விதைகளை வழங்க வேண்டும். அத்தகைய விதைகளை இலவசமாகவோ அல்லது மானிய விலையிலோ வழங்க வேண்டும்.

8. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலங்களுக்குரிய நிலவரி, நீர்வரி, உள்ளூர் வரி, உள்ளூர் வரியின் மேல் விதிக்கப்படும் கூடுதல் வரி ( Surcharge ) ஆகியவைகளைத் தள்ளுபடி செய்ய (நியாயமான கோரிக்கையாக இருந்தால்) உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட திட்டங்களுக்கு ரூபாய் 24·58 கோடி செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு முடிந்த உடனேயே, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 4 கோடி ரூபாய் செலவிடத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது. அதன் பின் உழவர்களுக்குத் தக்காவிக் கடன் வழங்க ரூபாய் 50 இலட்சமும், மணல் மூடிய நிலங்களைச் சீர்திருத்த ரூபாய் 50 இலட்சமும் செலவிடத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது.

வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிடும் முதற் கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் 23—12—1972 அன்று தென்ஞர்க்காடு மாவட்டத்தைப் பார்வையிட்டார்கள். அவருடன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களும் வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டனர்.

விழுப்புரம் அருகில் பெண்ணையாற்றங் கரையில் உள்ள பிடாகம் என்ற ஊரில் முதல்வர் அவர்கள் வெள்ள நிவாரணப் பணிகளைத் துவக்கி வைத்து, வெள்ளத்தால் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கும், வீடிழந்தவர்களுக்கும் பணமும், துணியும் கொடுத்து உரையாற்றினர்.

அதன்பின் குச்சிப்பாளையம் என்ற இடத்தில் ஏற்பட்டிருந்த சேதங்களையும், அரசூர் என்ற இடத்தில் தேசிய நெடுஞ்சாலையில் பாலம் சேதமுற்றிருந்ததையும் முதல்வர் பார்வையிட்டார். பிறகு பண்ணுருட்டிக்கு அருகில் உள்ள திருவாமூரில் மலட்டாற்றினல் பாழாகிய நிலங்களைப் பார்வையிட்டார். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 2,000 வீதம் நிதி வழங்கினர். திருவாமூரில் உள்ள நிலங்களில் மணல் மேடிட்டிருப்பதை, புல்டோசர் கொண்டு சீர்திருத்தும் பணியைத் துவக்கி வைத்தார். அதன்பின் மாலை 2 மணி அளவில் கண்டரக் கோட்டை அருகே பெண்ணையாற்றைப் பார்வையிட்டார்.

> **சில தகவல்கள்**
>
> * சேலம் நகரில் ஓடும் திருமணிமுத்தாறில் தண்ணீர் நிரம்பி ஓடும் என்றே வெள்ளம் வருமென்றே யாரும் நினைத்ததே இல்லை.
>
> * சேலம் மாவட்டத்தில் ஓடும் வசிஷ்ட நதியை, சிலர் பேராறு என்று சொல்கிறார்கள். இந்த ஆற்றில் தலைவாசலில் உள்ள பாலம் நடுவில் உள்ள தூண் வெள்ளத்தின் வேகத்தால் கீழே அமுங்கியுள்ளதால் போக்குவரத்துக்குப் பயனற்றதாக இருந்தாலும் நவீன பாலம் போன்று ஒரு மாதிரியாகக் காட்சியளிக்கிறது!

அன்று மாலை கடலூரில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மக்கள் பிரதிநிதிகளான சட்ட மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரின் கருத்தறிந்தபின், வெள்ள நிவாரணப் பணிகளைப் போர்க்காலப் பணி போல் விரைவாகவும், வெகு திறமையாகவும் செய்யுமாறு, வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் வெள்ள நிவாரணத்திற்கு இந்திய அரசு உடனடியாக 50 இலட்சம் ரூபாய் நிதி வழங்கச் சம்மதம் தெரிவித்ததுடன், ஆய்வுக்குழுவையும் அனுப்ப ஒப்புக் கொண்டது.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டுப் பரிந்துரை செய்யத் திட்டக்குழு ஆலோசகர் திரு சி. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் தமிழகம் வந்த ஆய்வுக்குழு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை டிசம்பர் 29, 30, 31 நாட்களில் பார்வையிட்டுச் சென்றது.

முதல்வர் கலைஞர் அவர்கள் இரண்டாவது கட்டமாகக் கோவை, சேலம், தஞ்சாவூர் மாவட்ட வெள்ள நிவாரணப் பணிகளை டிசம்பர் 30, 31 ஆகிய நாட்களில் பார்வையிட்டார்.

### கோவை மாவட்டத்தில்

முன்னரே மேற்கொண்டிருக்க வேண்டிய இந்தச் சுற்றுப் பயண நிகழ்ச்சி மூதறிஞர் ராஜாஜி மறைவினல் ஒத்திவைக்கப்பட்டு டிசம்பர் 30-ஆம் நாள் துவங்கியது.

முதல்வர் அவர்களுடன் இந்தச் சுற்றுப் பயணத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், பிற்பட்டோர் நலத்துறைஅமைச்சர் க. இராசாராம் அவர்கள், அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டப் பேரவை, சட்டமன்ற மேலவை நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனையோரும் கலந்துகொண்டனர். முதலில் பவானிக்கு முதல்வர் அவர்கள் சென்றார்கள்.

பவானி ஆற்றில் பவானியிலிருந்து ஜம்பை வரை கட்டப்படும் வெள்ளத் தடுப்புச் சுவர்ப் பணியை முதல்வர் தொடங்கி வைத்தார்கள். பவானியில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் முதல்வர் கலைஞர் அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள்.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பவானி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.எம். ராஜா பவானிப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகளை விவ




ரித்து அரசு செய்ய வேண்டிய உதவிகளை எடுத்துரைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சாமிநாதன் அவர்களும் வெள்ளச் சேதங்களை விளக்கினார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்கள், வீடுமிழந்தவர்கள், கால்நடைகளை இழந்தவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு அரசு அளிக்கும் உதவித் தொகையான ரூ. 2,000, ரூ. 1,000, ரூ. 250 ஆகிய தொகைகளை முதல்வர் வழங்கினார்கள்.

முடி திருத்தும் தொழிலாளர்களுக்குத் தேவையான கருவிகளையும், சலவைத் தொழிலாளர்களுக்குத் தேவையான கருவிகளையும் முதல்வர் வழங்கினார். தீயணைப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் வெள்ளம் வந்தபோது ஆற்றிய வீரப் பணிகளுக்காகவும் பரிசுகள் வழங்கப்பட்டன.

தாம்பரம் கிறித்தவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பவானியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தொண்டாற்ற வந்துள்ளனர். தொண்டுள்ளம் படைத்த அந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவர்—தியாக உள்ளத்தோடு இருந்த இளம்கொழுந்து—ஜேம்ஸ் டேனியல் என்ற மாணவர்—பி.எஸ்.ஸி வகுப்பில் படித்துவரும் அந்த மாணவர்—தன் கடமைகளை நிறைவேற்றிவிட்டு ஆற்றில் குளிக்கச் சென்றவர் ஆற்றுச் சுழலில் அடித்துச் செல்லப்பட்டார். மறுநாள் வரை எவ்வளவு தேடியும் அவரது சடலம் கிடைக்கவில்லை.

இந்தச் சோகச் செய்தியைத் தெரிவித்த முதல்வர் அவர்கள், ஜேம்ஸ் டேனியலின் தந்தை ஒரு இராணுவ வீரர் என்றும் அந்தத் தியாகக் குடும்பத்தின் தொண்டுள்ளத்திற்கு நாம் என்ன உதவி செய்தாலும் ஈடாகாது; எனினும் முதலமைச்சர் நிதியிலிருந்து ரூபாய் ஐயாயிரம் அளிப்பதாகவும் அறிவித்தார்கள்.

பவானியிலிருந்து ஜம்பை வரை வெள்ளத் தடுப்புச் சுவரெழுப்பிப் பவானி முதல் கோபி வரை பவானி ஆற்றின் கரை உயர்த்தப்படும் என்பதை அறிவித்த முதல்வர் அவர்கள், பவானியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளிக்குப் பதிலாக ரூபாய் ஐந்து இலட்சம் செலவில் புதிய பள்ளிக்கூடம் கட்டிக்கொள்ளவும், பழைய உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைச் செப்பனிட்டுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறிவித்தார்கள்.

### சேலம் மாவட்டத்தில்

சேலம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சேலம் நகரப் பகுதிகளையும், ஆத்தூர், தலைவாசல் பகுதிகளையும் முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்கள். அமைச்சர்கள் சாதிக் பாட்சா, க. இராசாராம் ஆகியோர் உடன் வந்தனர்.

சேலம் நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பணியாற்றுவதை முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்றார்கள். சேலம் கூட்டத்தில் இதனைப் பாராட்டிய முதல்வர் கலைஞர் அவர்கள், “சேலம் மாவட்டம், கோவை மாவட்டத்தின் பவானி பகுதிகளில், தொழில் கருவிகளை இழந்த ஐயாயிரம் நெசவாளர்களுக்கு அரசுச் சார்பில் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 அளிக்கப்படும்” என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பு, சற்றும் எதிர்பாரா வகையில் அறிவிக்கப்பட்டதும் கூடியிருந்த மக்கள் குதூகலித்தனர்.

> **குடிசை மாற்று வாரியம் போன்று**
>
> சென்னை நகரில் குடிசை மாற்று வாரியம் அமைத்திருக்கும் குடிசைகளை நல்ல கல் கட்டடங்களாக மாற்றி அமைத்து வருகிறோம்: அதுபோன்று. ஒரு கால வரையறைக்குள் வெள்ளத்தாலும் மழையாலும் பாதிக்கப்படும் இடங்களில்-முதலில் கடற்கரையோரப் பகுதிகளில் இந்தக் குடிசைகளை மாற்றிக் கல் கட்டடங்களாக்கிட ஓர் அமைப்பு ஏற்படுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.
>
> (தஞ்சையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் முதல்வர் அவர்கள் கூறிய தகவல்)

சேலம் மாவட்டத்திலும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணத் தொகையை முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

### தஞ்சை மாவட்டத்தில்

தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் கலைஞர் அவர்கள் டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாள் பார்வையிட்டார்கள். முதல்வர் அவர்களுடன் பொதுப் பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாமினி ஆற்றில் உடைப்பு ஏற்பட்டுள்ள பெருக வாழ்ந்தான் பகுதிகள், முத்துப்பேட்டை அருகில் உள்ள ராமன் கோட்டகம் புதுக் கோட்டகம், ஒரத்தநாடு தொகுதியிலுள்ள பெரிய கோட்டை ஆகிய பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள். மாலையில் தஞ்சையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அரசு விரைந்து அளித்துவரும் உதவிகளைப் பாராட்டினார்கள்.

உணவுஅமைச்சர்,வேளாண்மை அமைச்சர், பொதுப் பணித்துறை அமைச்சர், முதல்வர் கலைஞர் ஆகியோர் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரித்தார்கள்.

வெள்ள நிவாரணப் பணிகளுக்காக இந்திய அரசிடம் நிதி உதவி பெறுவதற்காகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1—1—1973 அன்று டெல்லிக்குச் சென்றார்கள்.

இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களிடமும், நிதி அமைச்சர் அவர்களிடமும் வெள்ளச் சேதத்தை விரிவாக விளக்கினார்கள். தமிழகம் வந்த ஆய்வுக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் மைய அரசு உதவி அளிக்கும் என்று அவர்களும் உறுதி கூறினார்கள். வெள்ள நிவாரணப் பணிகள் போர்க்காலப் பணிகளைப் போல் வெகு வேகமாகவும் வெகு திறமையாகவும், நடந்து வருகின்றன. நாட்டு மக்களின் வாட்டம் போக்குவதையே குறிக்கோளாகக்கொண்டு செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுக்கு உங்கள் ஒத்துழைப்பையும் நல்கும் முகத்தான், உங்களால் ஆன நிதி உதவி செய்ய முன்வர வேண்டும் என்று வேண்டுகிறோம்.

“மக்கள் பணியே மகேசன் பணி”

# கண் சிகிச்சை முகாம் நிதி



# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| முந்திய இதழின்படி | 40,39,287 | 79 |
| **22—11—1972.** | | |
| கௌரவச் செயலாளர், பெரம்பூர் யுனைடெட் கிளப், சென்னை-11. | 100 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், இராமநாதபுரம். | 225 | 00 |
| ஷை | 2,353 | 00 |
| மாவட்ட வேளாண்மை அதிகாரி (கரும்பு வளர்ச்சி), கடலூர்-1. | 36 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் இருப்பு, சேலம். | 1,080 | 00 |
| **24—11—1972.** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 150 | 00 |
| முதல்வர், அரசினர் மகளிர் கல்லூரி கும்பகோணம். | 330 | 00 |
| **25—11—1972.** | | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 477 | 00 |
| திரு ஆர். எம். இராமநாதன், 107, வயி. வீர. தெரு, காரைக்குடி-1. | 11 | 00 |
| **27—11—1972.** | | |
| துணைச் செயலாளர், அசோசியேட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட், பம்பாய்-20. | 5,000 | 00 |
| மேலாளர், சென்னை அரசுப் பேருந்துத் துறை ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம் லிமிடெட், சென்னை-2. | 100 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர் | 278 | 00 |
| செயலாளர், வத்திராயிருப்பு கூட்டுறவு பால் வழங்கு சங்கம் லிமிடெட். | 25 | 00 |

| | ரூ. | காசு. |
|---|---|---|
| **28—11—1972.** | | |
| உதவி இயக்குநர், மீன்துறை, கடலூர்-3. | 1,000 | 00 |
| ஆணையர், பால் உற்பத்தித் துறை, பால் பண்ணை அபிவிருத்தித் துறை, மாதவரம், சென்னை-51. | 50 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 100 | 00 |
| **30—11—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், திருநெல்வேலி. | 71,735 | 30 |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர். | 650 | 00 |
| ஷை | 10 | 00 |
| செயலாளர், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட், K. 708 உதகமண்டலம். | 100 | 00 |
| நிருவாக இயக்குநர், மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், மேலூர். | 1,500 | 00 |
| கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை-கிராமப் பணி) திண்டுக்கல், மதுரை மாவட்டம். | 15 | 00 |
| **1—12—1972.** | | |
| செயலாளர், பள்ளிகொண்டா கூட்டுறவு அர்பன் வங்கி லிமிடெட், பள்ளிகொண்டா. | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி. | 5 | 00 |
| **4—12—1972.** | | |
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவர், சென்னை-1. | 640 | 00 |
| கூட்டுறவுத் துணைப் பதிவாளர், செங்கற்பட்டு. | 151 | 00 |
| **6—12—1972.** | | |
| நிருவாக இயக்குநர், தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை, லிமிடெட், அலங்காநல்லூர், மதுரை மாவட்டம். | 1,001 | 00 |

| | ரூ. | காசு. |
|---|---|---|
| **7—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், இராமநாதபுரம். | 2,480 | 50 |
| முதல்வர், அரசினர் கலைக் கல்லூரி, கரூர். | 54 | 00 |
| **8—12—1972.** | | |
| செயலாளர், கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு பால் வழங்கு சங்கம், எண் 2946, நாகர்கோயில். | 101 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு, | 14,875 | 25 |
| **12—12—1972.** | | |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் இருப்பு, சேலம் . | 400 | 00 |
| ஆணையர், அறநிலையத் துறை, சென்னை. | 1,000 | 00 |
| **13—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி. | 7,718 | 00 |
| **14—12—1972.** | | |
| இயக்குநர், கருவூலத்துறை, சென்னை | 3,824 | 10 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 1,622 | 00 |
| நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.), தூத்துக்குடிக் கோட்டம். | 450 | 00 |


## தமிழரசு

**சந்தா**

ஓர் ஆண்டு ரூ. 10.00

அரையாண்டு ரூ. 5.00

தனி இதழ் 40 காசு.

**விவரங்களுக்கு :**

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.


| | ரூ. | காசு. |
|---|---|---|
| **15—12—1972** | | |
| துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், தூத்துக்குடி. | 100 | 00 |
| ஷை | 475 | 00 |
| **18—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், வட ஆர்க்காடு. | 93,793 | 00 |
| திரு ஜே. சாமுவேல்அதிக், மாவட்டத் தலைமைக் கல்வி அலுவலர், இராமநாதபுரம். | 223 | 00 |
| **19—12—1972.** | | |
| மாவட்ட வேளாண்மை அலுவலர், (கரும்பு வளர்ச்சி), தென் ஆர்க்காடு. | 10 | 00 |
| நிருவாக இயக்குநர், திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், வட ஆர்க்காடு. | 501 | 00 |
| **20—12—1972.** | | |
| செயலாளர், தமிழ்நாடு தலைமைக் கணக்காளர் அலுவலகக் கூட்டுறவு நாணயச் சங்கம் லிமிடெட். | 150 | 00 |
| திரு கே. மாசிலாமணி, துணைத் தலைவர், கலைஞர் கருணாநிதி மன்றம், 120-வது வட்டம், சென்னை-32. | 5 | 00 |
| 1972 நவம்பர் வரை வட்டியின் வாயிலாக. | 38,127 | 85 |
| **22—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர். | 1,125 | 00 |
| **27—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், திருநெல்வேலி. | 10,677 | 00 |
| நெய்வேலித் தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம், நெய்வேலி. | 101 | 00 |
| நெய்வேலியில் 23—12—1972 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் வாயிலாக. | 86 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 36,847 | 00 |
| மாவட்டப் பதிவாளர் தஞ்சை | 149 | 15 |
| ஷை | 140 | 50 |
| நிருவாகப் பொறியாளர், தூத்துக்குடி | 675 | 00 |
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவர், சென்னை-1. | 770 | 0 |
| நிருவாக இயக்குநர், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தென் ஆர்க்காடு மாவட்டம். | 5,000 | 0 |
| முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சென்னை-15. | 144 | 0 |
| **மொத்தம்** | **43,48,084** | **9** |




### கோழி வளர்ப்பு

நான் எஸ். எஸ். எல். சி. தேறிய மாணவன். மிகவும் ஏழை. வேலை கிடைக்காததால் வீட்டில் இருக்கின்றேன். கோழிப் பண்ணை அமைக்க விரும்புகின்றேன். கோழிப்பண்ணை அமைக்கத் தமிழக அரசு மானியம் வழங்குகிறதா? எந்தத் துறையின் மூலம் வழங்குகிறது? மானியம் பெற யாருக்கு மனுச் செய்ய வேண்டும்? அரசு மூலம் மானியம் பெற்றுக் கோழிப் பண்ணை அமைத்து வாழ்க்கையில் வளம் பெற விரும்பும் இந்த ஏழைக்கு மானியம் பெறும் வழிகள் அனைத்தையும் தெளிவாக வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—ஆர். தேவராஜ்

அரும்பாக்கம் அஞ்சல்,
ஆற்காடு வட்டம்,
வடஆர்க்காடு மாவட்டம்.

*தற்பொழுது கோழிப் பண்ணை அமைக்கத் தனிப்பட்டவர்களுக்கு மானியம் வழங்கப் படவில்லை. 'ஸ்டேட் பாங்கு', 'பாங்க் ஆப் பரோடா', 'இந்தியன் பாங்கு', 'இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு', 'கனரா பாங்கு', 'பேங் ஆப் இந்தியா' போன்ற வங்கிகள் கோழிப்பண்ணை அமைப்பதற்குக் கடன் கொடுத்து உதவுகின்றன. எனவே, உங்கள் பகுதியில் உள்ள வங்கியில் இதுபற்றி விசாரிக்கவும். தனிப்பட்ட ஒருவராக இம்முயற்சியில் ஈடுபடுவதைக் காட்டிலும், உங்களைப் போன்று, படித்து விட்டு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் இருக்கும் பல நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டுறவு முறையில் கோழிப் பண்ணை அமைப்பது சிறந்தது. 'கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்' அமைக்க உங்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் அவர்களையும், உங்கள் அருகாமையில் உள்ள உதவிக் கால்நடை மருத்துவரையும் கலந்தாலோசியுங்கள்.*

### தொழில்

பணகுடியைச் சார்ந்துள்ள மலையில், இஞ்சிப்புல் (Ginger grass) என்னும் ஒருவகைப் புல் கிடைக்கிறது. இதிலிருந்து எடுக்கப்படும் சாறு (எண்ணெய்) கொச்சித் துறைமுகம் வழியாகப் பல வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நாட்டிற்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிறது. பணகுடி உழவர் விவாதக் குழுவினர் சார்பாக, எண்ணெய் தயாரிக்கும் தொழிற் கூடம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம். இதனால் விவசாய வேலையின்றி இருக்கும் பல நூறுபேர் வேலை வாய்ப்புப் பெறுவர் (மகளிரும் கூட). அத்தகைய புல்லை அறுத்து எடுத்து உபயோகிக்க அரசினர் அனுமதி தேவையா? அப்படியானால் எந்தத் துறை அதிகாரி மூலமாகப் பெறுவது? விளக்கம் தரும்படியாக விண்ணப்பிக்கிறோம்?

—முகமது அலி,
கன்வீனர்,
உழவர் விவாதக் குழு,
பணகுடி, நெல்லை மாவட்டம்.

*இஞ்சிப் புல்லிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் நீலகிரித் தைலம் ( Eucalyptus Oil ) போன்ற முக்கிய எண்ணெய் ( Essential Oils ) வகையைச் சார்ந்ததாகும். பணகுடியைச் சார்ந்துள்ள மலையில் இருக்கும் இஞ்சிப்புல்லை அறுத்து எடுக்க அரசினர் அனுமதி தேவை. பணகுடி மலைப்பகுதி அநேகமாக வனத்துறைக்குச் ( Forest Department ) சொந்தமானதாக இருக்கும் என்று எண்ணுகிறோம். எனவே, இதுபற்றி உங்கள் பகுதியில் உள்ள வனச்சரக அலுவலர் அல்லது மாவட்ட வனத்துறை அலுவலரிடம் கலந்தாலோசிப்பது நல்லது. தொழிற்சாலை தொடங்க, தொழில் வணிகத் துறை (Industries and Commerce Department) அனுமதியும் பெற வேண்டும். எனவே, உங்கள் பகுதியில் உள்ள "உதவி இயக்குநர், தொழில் வணிகத் துறை" ( Assistant Director, Industries and commerce Department ) அவர்களைக் கலந்தாலோசிப்பது சிறந்தது.*




தமிழ்நாடு அரசு, 1972-73-ம் ஆண்டில் 72,000 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும், 54,000 ஏக்கர் வனத்துறை நிலங்களையும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நில ஒப்படை செய்து கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

—முதல்வர் கலைஞர்

*(தமிழ்நாடு சட்ட மேலவையில் 14—12—1972 அன்று குறிப்பிட்டது.)*

### தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கடன் உதவி

ஒரு ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் உள்ளவர்களுக்கு (தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டிலும்) ஆழ் இணறு வெட்டிக் கொள்ள கடன் பெற விரும்பினால், விண்ணப்பிக்கலாம் என்ற அரிசன நல இயக்குநர் அவர்களது, அறிவிப்பின் படி தஞ்சை அரிசன நல அலுவலருக்கு விண்ணப்பித்தேன். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அவர்கள் வந்து நிலத்தைப் பார்வையிட்டார். எனது நிலம் கூட்டுப் பட்டாவாக (Joint Batta) உள்ளது. ஆகையால், எனக்குக் கடன் வழங்கத் தடை ஏற்படுமா? பட்டா பிரித்துக் கொள்ள வழி முறை என்ன?

—க. சண்முகம்,
வடகுடி (அஞ்சல்,)
தஞ்சை மாவட்டம்.

*தங்கள் நிலம் கூட்டுப் பட்டாவாக இருப்பதால், கூட்டுப் பட்டாதாரர் தாங்கள் கடன் வாங்குவதில் தமக்குத் தடை இல்லை என்று வாக்கு மூலம் அல்லது எழுதிக் கொடுத்தால், கடன் பெற இயலும்.*

125

இதுபற்றி உங்கள் வருவாய் ஆய்வாளரைக் (Revenue Inspector) கலந்தாலோசியுங்கள்.

பட்டா பிரித்துக் கொள்ள 'ஜமாபந்தி' நடக்கும் போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அல்லது கோட்டாட்சித் தலைவருக்கு மனுக் கொடுக்கலாம். அல்லது தங்கள் ஊருக்கு மனு நீதித் திட்டத்தின்கீழ் அலுவலர்கள் குறை கேட்க வரும்போதும் மனுச் செய்து கொள்ளலாம்.

### அகதிகள் மறு வாழ்வு

நாங்கள் 1964-ஆம் ஆண்டின் சிரிமாவோ — சாஸ்திரி (இலங்கை—இந்தியா) ஒப்பந்தப்படி, 1971-ஆம் ஆண்டு சூன் மாதம் இந்தியாவிற்கு வந்தோம். நான் கேட்ட இடத்தில் நிலம் கிடைக்காததால் வியாபாரம் செய்ய உதவிப் பணம் கேட்டு விண்ணப்பித்தேன். வீடு கட்டிக் கொள்ள இடமும், பணமும் கேட்டு விண்ணப்பித்தேன். இதுபற்றி, தாசில்தார், கோட்டாட்சித் தலைவர் (R. D. O,), கலெக்டர் ஆகியோருக்கும் விண்ணப்பித்தேன். நாங்கள் இந்தியாவிற்கு வந்து சுமார் 16 மாதங்கள் ஆகிறது. இதுவரையிலும், வீடு இல்லாமல் வேறு ஒருவருடைய மாட்டுக் கொட்டகையில் குடி இருக்கின்றோம். நாங்கள் மொத்தம் 9 பேர். கொண்டு வந்த பணம் எல்லாவற்றையும் செலவழித்து விட்டும், நகைகளை ஈடுவைத்து விட்டும், பெரும் கஷ்டப்படுகிறோம். எங்களுக்கு வாழ்வளிக்க அரசாங்கம் முன் வருமா? இதற்கு மேல் நான் யாரை நாடுவது? யாரிடம் எனது குறைகளைத் தெரிவிப்பது தயவு செய்து உங்களால் எனக்கு விமோசனம் கிடைக்க உதவி புரியும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். உங்கள் விவரத்தை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். (கடிதம் முழுவதும் வெளியிடப் படவில்லை)

—வி.ஏ. செல்லையா,

சிலோன் அகதி,
மருங்கூர் கிராமம்,
விருத்தாசலம் (வட்டம்),
தென்ஆர்க்காடு மாவட்டம்.

தங்கள் நிலை கேட்டு மிகவும் வருந்துகின்றோம். தாங்கள் உடன் உதவிபெற முடியாமைக்கு என்ன காரணம் என்பதை நாங்கள் தெரிவிக்கும் நிலையில் இல்லை. தாங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள படி 'அகதிகளுக்குத் தமிழ்நாடு அரசு என்னென்ன உதவி செய்கிறது? அவைகளைப் பெற என்ன செய்ய வேண்டும்?'' என்பன போன்ற விவரங்களைத் தான் நாங்கள் வெளியிட இயலுமே தவிர, நாங்களே நேரிடையாக உங்களுக்கு உதவ இயலாது. எனவே, உங்கள் குறைகளைக் குறிப்பிட்டு எழுதி எடுத்துக் கொண்டு போய், மாதத்தின் முதல் திங்கட்கிழமை அன்று (ஒவ்வொரு மாதத்தின் முதல் திங்கட்கிழமையன்று மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்களை நேரில் பெற்றுக் கொள்ளும் வழக்கம் உள்ளது) மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கொடுத்துக் கஷ்டத்தை விளக்கிக் கூறுங்கள். அவர் அதன்பின் உடன் ஆவன செய்வார். அது போலவே, மாதத்தின் முதல் திங்கட் கிழமையன்று கோட்டாட்சித் தலைவரையும் நீங்கள் சந்தித்து மனுக் கொடுக்கவும். அவைகளின் நகலைப் பின்கண்ட முகவரிக்கு அனுப்பி வைப்பதும் நல்லது.

இயக்குநர்,
அகதிகள் மறுவாழ்வுத் துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

தாங்கள் மனந்தளராமல் மேற் கண்ட முறையில் நேரில் சந்தித்து, கஷ்டத்தையும் குறைகளையும் கூறி மனுக் கொடுத்தால் விரைவில் வெற்றி கிடைக்கும் என்பது உறுதி. —ஆர்.எம்.

## நெல்லுக்கு ஒரு புது நோய்

முதன் முதலில் குமரி மாவட்டத்தில் சிறிய அளவில் ''குள்ளப்புல் வைரஸ்'' (Grassy Stunt) என்னும் நோய் நெற் பயிரைத் தாக்கியது. இந் நோய் தாக்கிய பயிர்களில் தூர்கள் அதிக அளவில் கிளைக்கும்; இலைப் பரப்பு குறுகி மஞ்சள் அல்லது பசுமை கலந்த மஞ்சள் நிறமாக மாறிவிடும். இலைகளில் கரும் புள்ளிகள் நிறையக் காணப்படும். நோய் வாய்ப்பட்ட பயிரில் கதிர்கள் மிகச் சிறியதாகி, மணிகள் பழுப்பு நிறமடைந்து பதராகி விடும்.

''மாநிறப் புகையான்'' (Brown Fulgorids) என்னும் பூச்சிகளால் இந் நோய் பரவுகிறது. எனவே, இந் நோயைக் கட்டுப்படுத்த முதலில் இந்தத் தத்துப் பூச்சிகளை ஒழிக்க வேண்டும்.

### தடுப்பு முறைகள்

(1) தாக்கிய பயிரிலிருந்து மற்றப் பயிர்களுக்கும் நோய் பரவுமாதலால் தாக்குண்ட பயிர்களைத் தீயிட்டு எரித்துவிட வேண்டும்.

(2) நோய் பரவிய இடங்களிலிருந்து எக்காரணங்கள் கொண்டும் நாற்றுகளை மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது.

### பயிர் பாதுகாப்பு முறைகள்

''மாநிறப் புகையான்'' பூச்சிகள் பயிரின் அடிப் பாகத்தில் இருந்துகொண்டு சேதம் விளைவிக்கின்றன. எனவே, எந்தத் தடுப்பு நடவடிக்கைஎடுத்தாலும், அது பயிரின் அடிப் பாகத்தை அடைந்தால்தான் நல்ல பலன் கிட்டும். மருந்து தெளிக்கு முன் வயலிலிருந்து தண்ணீரை நன்கு வடித்துவிட்டால் மருந்தின் வீரியம் அதிக நாட்களுக்கு இருந்து நல்ல பலன் அளிக்கும். கீழ்க்கண்டுள்ள முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். 10 சதம் கார்பரில் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும்.

அல்லது

0.1 சத கார்பரில் (400 கிராம் கார்பரில் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும்.

அல்லது

10 சத 'போரேட்' குருணைகளை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் இடவும்.

அல்லது

5 சத 'டையசினான்' குருணைகளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் இடவும். குருணைகளை நடவு செய்த 15-ஆம் நாள் ஒரு முறையும், 40-ஆம் நாள் ஒரு முறையும் ஆக இரு முறை இட்டால் நல்ல பலன் தரும்.

(நகல்: கூடுதல் வேளாண்மை இயக்குநர் [ஆராய்ச்சி], திருச்சிராப்பள்ளி-18)





''தக்கைக் கல் பற்றி நீண்ட நெடுங்காலமாகப் பேசப்பட்டு வந்தாலும் அதனைத் தயாரிக்கும் தொழிற்சாலை முறையாக வெற்றி பெற்று, வேறு பல பகுதிகளுக்கும் அந்தக் கல் அறிமுகப்படுத்தப்பட்டு, வீட்டுத் தேவையை எளிதாக முடித்து வைக்கும் திட்டத்தை இப்போது பெற்றுள்ளோம். இந்தத் தொழிற்சாலையிலே தயாராகும் கற்கள் வெளியே சென்று நல்ல வீடுகளாக-கட்டடங்களாக மாற வேண்டும்.'' என்ற தம் ஆவலை முதல்வர் கலைஞர் அவர்கள் எண்ணூரில் அமைந்துள்ள தக்கைக் கல் தொழிற் சாலையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் வெளியிட்டார்.

டிசம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் நடந்த இந்தத் தொடக்க விழா, போலந்து நாட்டுத் தூதுவர், அதிகாரிகள் முன்னிலையில் சீரும் சிறப்புமாக நடந்தது. இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழும் இந்தத் தக்கைக் கல் (செல்கிரீட்) தொழிற்சாலை ரூ. 3 கோடியே 65 இலட்சம் முதலீட்டில் தமிழக வீட்டு வசதி வாரியத்தினரால் நிறுவப்பட்டுள்ளது. 1969-ஆம் ஆண்டில் துவக்கப் பெற்ற இது 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கட்டடக் கலையில் புதுமையைப் புகுத்தும் நோக்கோடு மேலை நாட்டினர் கண்டுபிடித்த சாதனம் தான் 'செல்கிரீட்' என்னும் தக்கைக் கல். சிக்கனத்துக்குச் சிறந்த கல்லான இது, இன்று மேலை நாடுகளில் வானளாவிய கட்டடங்களாகவும், எழில் மிகுந்த இல்லங்களாகவும் காட்சியளிக்கின்றது.

இந்தப் புதிய கட்டடக் கற்களைக் கொண்டு போலந்து, ரஷ்யா, ஜெர்மனி, ஸ்வீடன், நார்வே போன்ற கிழக்கு-வடக்கு ஐரோப்பிய நாடுகளிலும், மெக்சிகோ, பிரேசில், எகிப்து போன்ற ஆப்பிரிக்க-அமெரிக்க நாடுகளிலும் இன்று கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் அருமை பெருமை உணர்ந்த அந்நாட்டவர், இந்தக் கல்லால் கட்டப்படும் கட்டடங்களையே பெரிதும் விரும்புகின்றனராம்!

மணல், சுண்ணாம்பு, சிமெண்டு அலுமினியத்தூள் ஆகிய பொருட்களைக் கொண்டு தக்கைக் கற்கள் தயாரிக்கப்படுகின்றன. பதின்மூன்று செங்கற்களுக்கு இணையானது ஒரு தக்கைக் கல். இது நீரிலே மிதக்கக் கூடியது என்றாலும் இறுதிவரை உறுதி வாய்ந்த கல்லாகும்.

இன்று தமிழகத்தில் உருவாகும் பெருமைபெற்ற இந்தத் தொழிற்சாலை, நாளை இந்தியாவில் பெரும் புரட்சியை உண்டாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

செங்கற்களைவிட இந்தச் செல்கிரீட் (தக்கைக் கல்) பலவிதங்களில் சிறந்தது. இந்தக் கல், செங்கல்லின் எடையில் மூன்றில் ஒரு பங்கேயானாலும் மிகவும் உறுதி வாய்ந்தது. இதனால் கட்டப்படும் கட்டடங்கள் வெப்பத்தையும் குளிரையும் தாங்கி உட்புறம் ஒரே சீரான நிலையில் வைத்திருக்கும். ஒலியைத் தாங்கும் சக்தியும் இக்கல்லுக்கு உண்டு. வெடிப்பும் வராது.

தக்கைக் கற்கள் இலேசாக இருப்பதால் அதிக ஆழத்துக்கு அடித்தளம் போடத் தேவையில்லை. ஒரு வீடு கட்டத் தேவைப்படும் தக்கைக் கற்களின் அளவு, செங்கற்களைவிடக் குறைவாக இருப்பதால் செலவும் ஓரளவு குறையும். ஆகவே, கொத்தனாரின் வேலைத் திறனை இரட்டிப்பாக்கிச் சிற்றாளின் வேலைத் திறனை மும்மடங்காக்கிக் கட்டட அடிப்படையின் அகலத்தைக் குறைக்க உதவுகிறது. இந்தக் கல்லில் ஆணி அடிக்கலாம்; துருகித் துளையிடலாம்; தேவையான அளவுக்கு அறுத்தும் கொள்ளலாம். இப்படி எல்லா வகைக்கும் உகந்தது இந்த உறுதி வாய்ந்த தக்கைக் கல்!

போலந்து நாட்டின் அறிவு நுட்பமும், தமிழ் நாட்டுப் பொறியாளர்களின் திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்ட இந்தத்

தொழிற்சாலையில், நவீன தானியங்கி இயந்திரங்கள் பலவும் பொருத்தப்பட்டுள்ளன. 21.6 மீட்டர் உயரமுள்ள 'சிலோ' என்னும் கொள்கலன், மூலப் பொருட்களைச் சேர்த்து வைக்க உதவி செய்கிறது. மற்றும் மூலப் பொருட்களை அரைத்திட, மூலப் பொருட்களைத் தண்ணீர் விட்டுக் கலக்கிட, அலுமினியத் தூளைக் கலந்திட, கற்களைத் தேவைக் கேற்ப அறுத்திட இங்கு வகை வகையான இயந்திரங்கள் இயங்குகின்றன; இவை, கற்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் பணியை எளிதாக முடிக்கின்றன.



தக்கைக்கல் தொழிற்சாலையை முதல்வர் கலைஞர் துவக்கிவைக்கிறார்

பச்சைச் செங்கற்களை நெருப்பிலிட்டுச் 'சூளை' போடுகிறோமல்லவா? ஆனால், இந்த வெண்மையான தக்கைக் கற்கள் நீராவியின் மூலம் சுடப்பட்டுக் கெட்டியாக்கப்படுகின்றன. இதற்காக எண்ணெய் டாங்குகள் போலப் பெரிய பெரிய உருளை வடிவான அமைப்புகள் இங்கே இருக்கின்றன. உருளையினுள் இந்தக் கற்கள் அடுக்கி வைக்கப்பட்டு எந்த நெருப்பும், புகையுமில்லாமல் கெட்டியாக்கப்படுவதை இங்கே காணலாம்.

தற்போது இத்தொழிற்சாலை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய இல்லங்கள் கட்டுவதற்குத் தக்க, தக்கைக் கற்களை வழங்கி வருகிறது. மேலும் அரசுக் கட்டடங்கள், மாநகராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்தக் கற்கள் பயன்படுத்தப்படும்.

"இந்தக் கற்கள் செங்கற்களைவிட மலிவானவையா?"

இந்த வினா பலருக்கு எழக்கூடும். அதற்கு விடை:

"தக்கைக் கல்லின் விலை செங்கல் விலைக்குச் சமமாக இருக்கும் என்று சொன்னார்கள். விலை மலிவாக வேண்டுமானால் தக்கைக் கல் தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மணலோடு நீற்றுச் சாம்பலைக் கலந்து மலிவான விலையில் தக்கைக் கல் தயாரிக்கலாம் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது" என்ற முதல்வர் கலைஞர் அவர்கள், அதற்கான வழியையும் விளக்குகிறார்:

"எண்ணூர் அனல் மின் நிலையத்தின் கழிவுப் பொருளாகக் கடலில் தள்ளப்படும் நீற்றுச் சாம்பலை இந்தத் தொழிற்சாலைக்குக் கொண்டு வருவதன் மூலம் மலிவு விலையில் தக்கைக் கல் தயாரிக்க முடியும்."

"நாள் ஒன்றுக்கு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 800 டன் நீற்றுச் சாம்பல் கிடைக்கிறது. தக்கைக் கல் தொழிற்சாலை தற்போது நாள் ஒன்றுக்கு 300 டன் நீற்றுச் சாம்பலைத்தான் பயன்படுத்துகிறது. மீதியுள்ள 500 டன் நீற்றுச் சாம்பலையும் பயன்படுத்தி, அதன் சக்தியை அதிகப்படுத்தும் அளவுக்கு எதிர்காலத்தில் இந்தத் தொழிற்சாலை விரிவடையும். அந்த வாய்ப்பைப் பெற மேலும் 81 இலட்சம் ரூபாய் செலவாகும். மொத்தத்தில் நாலரைக் கோடி ரூபாய் செலவில்தான் இத்தொழிற்சாலை முழுமை அடையும். மத்திய அரசு உதவியுடன் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடவில்லை" என்ற முதல்வர், இத் தொழில் வளருவதற்கான ஒரு வேண்டுகோளையும் விடுத்தார்!







அசோக் நகரில் தக்கைக் கல்லால் கட்டப்பட்டுள்ள கட்டடம்.

"தமிழக வீட்டு வசதி வாரியத்திற்கு மத்திய அரசு வழங்கும் கடன் தொகையை, 15 ஆண்டுக் காலத் தவணை முறையில் 5 சதவீத வட்டியுடன் மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியுள்ளது. தவணை முறையை 30 ஆண்டுக் காலமாகவும், வட்டி சதவீதத்தை ½ சதவீதமாகவும் குறைத்துக் கடன் வழங்கவேண்டும். இதன் மூலம், இது போன்ற தொழிற்சாலைகளை மேலும் பல பகுதிகளில் அமைக்க முடியும். இந்தக் கோரிக்கையை மத்திய அரசினர் செவி மடுத்து நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்."

இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு ஒன்றரைக் கோடித் தக்கைக் கற்களைத் தயாரிக்கும் என்றும், அதனைக் கொண்டு சென்னை செங்கற்பட்டு மாவட்டங்களில் மட்டும் 11 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்றும் விழாவுக்குத் தலைமை வகித்த வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் கூறியதைக் குறிப்பிட வேண்டும்.



கலைஞர் கருணாநிதி நகரில் தக்கைக் கல்லால் கட்டப்பட்டுள்ள வளைவு.

தற்போது ஏறக்குறைய 300 தொழிலாளர்கள் இத் தொழிற்சாலையில் வேலை வாய்ப்புப்பெற்றுள்ளனர். மேலும், பலருக்கு வேலை வாய்ப்பினை நல்கிடும் அளவுக்கு இத் தொழிலகம் வளர்ந்து, பிற மாநிலத்தவர்க்கு வழி காட்டியாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பசுமைப் புரட்சியின் மூலம் உணவுப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்து வரும் தமிழக அரசு வீட்டு வசதிகளைப் பெருக்கத் தீவிரமாக முனைந்துள்ளது. ஒவ்வொருவரும் சொந்த வீடு பெறுவதற்கு இத்தொழிற்சாலை தக்க உதவி செய்யும் என்பது திண்ணம்.

வளரும் தமிழகத்திற்கு வளம் கூட்ட வந்திருக்கும் எண்ணூர் தக்கைக் கல் தொழிற்சாலையை எண்ணமெல்லாம் இனிக்க நல்வரவு கூறி வரவேற்போம்!

நல்லாதரவு தருவோம்!

—இளி

## வெண்பாப் போட்டி-51

ஈற்றடி : கண்ணின் மணியனையான் காண்

முடிவு நாள் : 1—2—1973

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

(வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

"தமிழரசு" அலுவலகம்,

அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.




பண்படுத்தப்பட்ட வீட்டு மனைகளைப் பொது மக்களுக்கு வழங்குவதிலும், வீடுகள் கட்டித் தருவதிலும் தலையாய நிறுவனமாகிய வீட்டு வசதி வாரியம். பணிபுரியத் தொடங்கி, 1972 ஏப்ரலுடன், பத்து ஆண்டுகள் முடிவடைகின்றன. எனவே, இந்த 10 ஆண்டுக் காலமாக வீட்டு வசதி வாரியம் செய்துள்ள பணிகள்-சாதனைகள் இங்கு விவரிக்கப்படுகின்றன. (10 ஆண்டுகளுக்கு முன், 15 ஆண்டுகள் C. I. T. நகர அபிவிருத்திக் கழகம் இப்பணியைச் செய்து வந்தது.)

வாரியம், சென்னை நகரிலும், திருச்சி, கோவை, மதுரை, சேலம், வேலூர் இங்கெல்லாம் கிளைகள் அமைத்து இயங்கி வருகின்றது. இதுவரை சென்னையிலும், மாவட்டங்களிலும் புறநகர்களை அமைப்பதற்காக 3 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலம் ஆர்ஜிதம் செய்துள்ளது. 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீட்டு மனைகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு முடிய ரூ. 1,575 இலட்சம் நிலம் வாங்குவதற்காகவும், வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டு சென்னையில் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கப் பகுதியில் 130 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 506 மனைகள் வழங்கப்பட்டன. 120 ஏக்கர் பரப்புள்ள திருச்சி புறநகர்ப் பகுதியில், நம் மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளன்று, 1972-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி ''டாக்டர் கலைஞர் கருணாநிதி நகர்'' துவக்கப்பட்டு, இதுகாறும் சுமார் 700 மனைகள் வழங்கப்பட்டுள்ளன. சேலத்தில் 158 ஏக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கிறது. அவை 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வீட்டு மனைகளாக அளிக்கப்படவிருக்கின்றன. சென்னைக்கு அருகேயுள்ள திருவான்மியூரில் 90 ஏக்கருக்கான நிலம் விரைவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, வீட்டு மனைகளாக மாற்றப்படும். ஆர்க்காடு சாலையையும், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையையும் இணைக்கும் வகையில் நெடுஞ்சாலையொன்றும், அதனையொட்டி புறநகரமும் அமைப்பதற்கு நில ஆர்ஜித வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. அரும்பாக்கத்தைச் சுற்றி 100 ஏக்கர் நிலத்தைக் கையகம் செய்து வீட்டு மனைகளாகச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டும் அடிப்படையில் ரூ. 360.32 இலட்சம் மதிப்புள்ள 4,750 வீடுகள், இதுவரை கட்டி முடிக்கப்பட்டன. இந்த ஆண்டும் ரூ. 100 இலட்சம் மதிப்பில் 800 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு ரூ. 587.36 இலட்சம் மதிப்புள்ள 2,825 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நலனைக் கருதி, ரூ. 570.25 இலட்சம் செலவில் 6,725 வீடுகள் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டுள்ளன. மேலும், 802 குடியிருப்புகள் இவ்வாண்டு கட்டப்பட்டு வருகின்றன. நீதி, மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கான 400 வீடுகளில், 300 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ள 100 வீடுகளும் இந்த ஆண்டுக்குள் முடிவுறும். இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் மாவட்ட நீதிபதிகள், சென்னை நகர நீதிபதிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், வணிகவரி துணை ஆணையாளர் ஆகியவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 38.39 இலட்சம் மதிப்பில் 462 குடியிருப்புகள் மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

1970-ல் குடிசைப் பகுதி மாற்று வாரியம் தோன்றுவதற்கு முன்பு, சென்னை மாநகரில் 75 குடிசைப் பகுதிகளை அகற்றி உறுதியான வீடுகளைக் கட்டித்தர வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ. 885.41 இலட்சம் செலவாகியது. மாவட்டத் தலைநகர்களான சேலம், கோவை, தஞ்சை, திருச்சி, கடலூர் ஆகிய இடங்களில் குடிசைப்பகுதிகளை மாற்றி அமைப்பதற்காகச் சுமார் ரூ. 3 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ. 35 இலட்சம் செலவில் 1,000 குடியிருப்புகள் சேலம், கோவை, மதுரை, கடலூர் முதலிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னை நகரில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் வியக்கத்தக்க வகையில் பணியாற்றி வருகிறது என்பது கண்கூடு. இவ்வாரியத்தின் சிறப்பான பணி நாடெங்கும் பாராட்டப்பட்டு வருகிறது என நினைக்கும் போது தமிழ்நாட்டைச் சார்ந்த நாம் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைகிறோம். இவ்வாரியம் 4,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளைச் சென்ற ஆண்டில் ரூ. 3 கோடி செலவில் கட்டி முடித்துள்ளது. 1972-ஆம் ஆண்டில் 8,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் கட்டப்பட்டு வழங்கப்படும் தறுவாயில் உள்ளன.

1970–71-ஆம் ஆண்டில் வீட்டு மனைகளைப் பண்படுத்தவும், வீடுகளைக் கட்டவும், வீட்டு வசதி வாரியம் மொத்தமாக ரூ. 740·85 இலட்சம் செலவிட்டது. இந்த ஆண்டும் இதே மதிப்பீட்டின் அளவில் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

### ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் திட்டம்

நாளுக்கு ஒரு ரூபாய் நயமாய்ச்
சேர்த்தால் ஐந்தாண்டு முடி
வில் அழகான வீடு!

சிண்டிகேட் வங்கியின் ஆதரவு, ஒத்துழைப்புடன் குறைந்தது தினம் ஒரு ரூபாய் வீதம் சேமிப்பவர்கட்கு, 5-வது ஆண்டு முடிவில் வீடுகள் கட்டித்தரும் திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் சேகரிக்கப்பட்ட இத்தொகையானது அந்நபரின் கணக்கில் வரவு வைக்கப்படும். இவ்வாறு சேர்க்கப்பட்ட முதலும், அதற்கான 5 சதவீத வட்டியும் வீட்டு வசதி வாரியத்திடம் சிண்டிகேட் வங்கி 5-வது ஆண்டு இறுதியில் இத்தொகைக்கு நான்கு மடங்கு தொகையை முன்பணமாகத் தரும். அதைக் கொண்டு சேமிப்புத் தொகையின் 4 மடங்கு மதிப்புள்ள வீடு, சேமித்தவர்க்குக் கொடுக்கப்படும். பிறகு 10 அல்லது 12 ஆண்டுகளில் மிகுந்த தொகையை அவர் முன்போல் ஒவ்வொரு நாளும் சேமித்துத் திருப்பிக் கொடுத்து விடலாம்.

சுமார் 2,500 நபர்கள் இரண்டு மாதத்திற்குள் இத்திட்டத்தில் சேருவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இதுவரை சுமார் 800 விண்ணப்பதாரர்கள் பணம் செலுத்தத் தொடங்கிவிட்டனர்.

| | |
|---|---|
| சென்னை நகரில் | 410 |
| திருச்சி மாவட்டத்தில் | 123 |
| கோவை மாவட்டத்தில் | 174 |
| ஏனைய மாவட்டங்களில் | 93 |
| ஆக மொத்தம் | 800 |

இது வரை பதிவு செய்யப்பட்ட நபர்களிடமிருந்து திரட்டப்படும் தொகை சுமார் 5 இலட்சம் ரூபாய் ஆகும். பணம் செலுத்த வருபவர்களுடன் கலந்து ஆலோசித்து, ஏற்கெனவே வாரியத்திடம் கைவசமில்லாத பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிராமப் பகுதிகளில் நிலமில்லாத தொழிலாளர்களுக்கு மனையுரிமை அளிக்க மாநிலங்கள் சட்டம் நிறைவேற்றினால் அம்மாநிலங்களில் உபரியாக உள்ள எளிய விவசாயக் குடும்பங்களுக்கு மனை வாங்கி, பண்படுத்தி இலவசமாக வழங்க, பணம் தர மத்திய அரசு முன்வந்துள்ளது. இச்சலுகையையொட்டி ரூ. 80·29 இலட்சம் செலவில் 33,592 வீட்டு மனைகள், நிலமில்லாத கிராமத் தொழிலாளர்களுக்கு அளிப்பதற்கான திட்டம் மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் 548 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கும், வீட்டு மனைகளை அபிவிருத்தி செய்வதற்கும் ரூ. 75.51 இலட்சம் அனுமதித்துள்ளது. நிலம் கையகம் செய்யப் போதிய சிப்பந்திகள் நியமிக்கப்பட்டு இதற்கான வேலை துவக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்குள் இத்திட்டம் முடிவடைந்து ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும்.

மேலே விவரித்த திட்டங்கள் அனைத்தும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப் போதிய நிதி இன்றியமையாதது. வசதி இயல்பாகப் பெறப்படும் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக வாரியம், இவ்வாண்டு ரூ. 3 கோடி பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்பத் திட்டமிட்டுள்ளது.

வீட்டு வசதி வாரியத் திட்டங்களுக்கு ஆயுள்காப்புக் கழகம் கடனுதவி அளிக்க உதவி அளித்துள்ளது. இதற்காக ஆயுள் காப்புக் கழகம் வீட்டு வசதி வாரியத்துடன் இணைந்து புதுத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளது. பாலிசிதாரர்கள் அவர்களுடைய வீட்டைக் கட்டிக் கொள்வதற்குக் கடனளித்து வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொள்ளக் கழகம் அனுமதிக்கும். பயனடைவோரிடமிருந்து பிரிமியமும் கடன் தவணைத்தொகை ஆயுள்காப்புக் கழகத்தின் சார்பாக வாரியம் வசூலிக்கும். இத்திட்டத்தில் பங்கு கொள்பவர்களுக்கு (அல்லது அவர்களுடைய சந்ததியருக்கு) வீடு கிடைக்கும். அதே தருணத்தில் ஆயுள்காப்பும் அளிக்கப்படுகிறது. இரு கருத்துக்கள் கொண்ட இத் திட்டம் மக்களின் பேராதரவைப் பெறும் என்பது நிச்சயம். மத்திய அரசு இதற்கு விரைவில் அனுமதி வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வீட்டு வசதி புறநகர் அபிவிருத்தி கார்ப்பரேஷன் (Housing and Urban Development Corporation) கொரட்டூர் புறநகர்ப் பகுதிக்காக ரூ. 2.386 கோடியும் கலைஞர் கருணாநிதி நகர், அண்ணா நகர், கோட்டூர்புரம், சென்னியம்மன் கோயில் ஆகிய நான்கு பகுதிகளுக்கும் மொத்தமாக ரூ. 6.25 கோடி கடனுதவியாக அளித்துள்ளது. கொரட்டூர் திட்டத்தில் 1,508 வீட்டு மனைகள் பலதரப்பட்ட வருவாய்உடையோருக்குவழங்கப்படவிருக்கின்றது. இந்த ஆண்டு 280 வீடுகள் கட்டப்படும். மற்றப் பகுதிகளில் அபிவிருத்திப் பணி நடந்து வருகிறது. 3,733 வீட்டு மனைகளில் குடியிருப்புகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.




கட்டடங்களை விரைவாகவும் குறைந்த செலவிலும் கட்டுவதற்கு அடிப்படையான கட்டடப் பொருட்கள் நியாயமான விலைக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வேண்டும். இதற்காக ஹட்கோ ( HUDCO ) நிதி உதவியுடன் செங்கல், பளிங்கு ஓடுகள், குழாய்கள், மரச்சாமான்கள் முதலியவைகளை வாரியமே தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### திருப்பு முனை

'பாட்டுக்கொரு புலவன்' கவிதை மூலம் மகாகவி பாரதியாரைப் புதிய கோணத்தில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் இளங்கோ! இது கவிஞர் ஆனந்தம் அவர்களின் பாணி. இலக்கியத்தில் நல்ல திருப்புமுனை. இதுபோன்ற கவிதைகள் தொடர்ந்து வெளிவர வேண்டுகிறேன்.

—புலவர் பூங்கோதை, சித்திரையூர்.

### தமிழ் வள்ளல்

ஊராட்சி வளர்ச்சி ஊழியர்கட்கு வழக்கம்போல் இப்போதும் வாரி வழங்கியுள்ளது தமிழக அரசு. பொறுத்திருந்தோம்; பயன் பெற்ரும். இன்று அள்ளித்தரும் வள்ளல் தமிழரசே!

—வே. விஜயலட்சுமி, மதுரை–1.

### பார்த்தேன்! ரசித்தேன்!

''தமிழரசு'' நாட்காட்டியைப் பார்த்தேன்! பன்முறை ரசித்தேன்! அறையில் மாட்டியுள்ளேன்! தமிழரசுக்கு எனது நன்றி.

—சி. வேங்கப்பன், பூவிருந்தவல்லி.

### ராஜாதி........ராஜாஜி

எந்த இதழும் அமரர் ராஜாஜியின் படத்தை ஆப்செட்டில் அழகாக அச்சிடவில்லை. ஆனுல், தமிழரசு இதழ் எல்லாவற்றையும் வென்று ராஜாதி ராஜாவாகி விட்டது. படத்தைத் தனியாக எடுத்துக் கண்ணுடி போட்டுவிட்டேன்.

—மா. கோமளா, சென்னை-2.

### தோழி, வாழி!

முதல்வர் எழுதிய 'தோழி' எத்தனை தரம் படித்தாலும் திகட்டவே இல்லை; தமிழினிமை.. ஆகா! நாவில் நீர் ஊறிக்கொண்டே உள்ளது. இது வெறும் தேனலைகள் அல்ல, பெரும் செந்தேன் கடல்.

—இரா. பார்வதி, சிவகங்கை.

### நிமிர்ந்தெழுந்தேன்!

அரும் பொருட்காட்சி அகத்துக்கு இவ்வளவு பெரிய வரலாரு? ஏ, அப்பா! ஏதோ, சரித்திரப் புத்தகத்தைப் படிப்பது போன்ற சுவை, விறுவிறுப்பு, உணர்ச்சிகள் கண்டேன். அதை அலட்சியப் படுத்தியிருந்த என்னைத் துடித்தெழச் செய்து விட்டது தங்கள் கட்டுரை.

—ஆர். செல்வராஜன், நாமக்கல்.

# மகளிர் பகுதி

# குழந்தைகளின் நோய்த்தடுப்பு முறை

நாட்டிலுள்ள மகளிர் மன்றங்கள் நல்லமுறையில் பயனுள்ள வகையில் செயல்படுவதற்கு முன்னேடியாக, அகில இந்திய வானெலியின் சென்னை வானெலி நிலையம் நலவழிக் கல்வி-குடும்ப நலத்திட்டம் பற்றிய ஒரு கருத்தரங்கத்தை நடத்தியது.

அதில் நாற்பதுக்கு மேற்பட்ட மகளிர் மன்றத்தைச் சேர்ந்த தாய்மார்கள், மருத்துவத்துறை வல்லுநர்கள், மருத்துவத்துறை அலுவலர்கள், அரசுப் பணியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கம் போன்று மகளிர் மன்றங்களும் தனித் தனியாகக் கருத்தரங்கங்களை நடத்தலாம்.

சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய இயக்குநரும், குழந்தைகள் மருத்துவமனைக் கண்காணிப்பாளருமான திரு வ. பாலகோபால் ராஜு அவர்கள் கருத்தரங்கில் முதல்நாள் ஆற்றிய உரை மிகச் சிறந்ததாக இருந்தது. குழந்தைகளுக்கு வரும் நோய்களைப் பற்றி அவர் எடுத்துரைத்த விவரம் தாய்மார்களுக்கும் மிகவும் பயனுள்ளதாகும். அந்த உரையில் மிக முக்கியமான பகுதிகள் வருமாறு :

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கண்டு பெரிதும் நடுங்கும் சிலர், இவ்வளவு குழந்தைகள் இருக்கையில், அவர்களில் சிலர் இறப்பதால் என்ன நஷ்டம் என்று கேட்கலாம். இந்த எண்ணப் போக்குச் சரியல்ல.

நம் நாட்டுக் குழந்தைகளின் உடல் நலக் குறைவிற்கும், இறப்பிற்கும் முதற் காரணம் சத்துணவுக் குறைவே. இத்துடன் கிருமி நோய்களும் சேர்ந்து கொள்கின்றன. சத்துணவுக் குறைவினுல்தான் சாதாரணக் கிருமிநோய்களையும் தடுக்கும் சக்தி நம் குழந்தைகளிடம் இல்லை.

நோயுற்ற குழந்தைகள் இறப்பதால் மற்ற திடமான குழந்தைகளுக்கு நன்மைதானே என்று விவாதிக்கலாம். சுமார் நூறு குழந்தைகள் டைஃபாய்டு சுரத்தால் இறந்தால், அவர்கள் மட்டும்தான் அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அர்த்தமல்ல. குறைந்தது ஐயாயிரம் குழந்தைகளாவது டைஃபாய்டு ஜுரம் வந்து அவதிப்பட்டிருப்பார்கள். வெகுநாட்களுக்கு நலங்கெட்டும் இருந்திருப்பார்கள்.

மற்றும் நமக்குத் தெரியாமலேயே ஆயிரக்கணக்கான குழந்தைகள் டைஃபாய்டு கிருமியைச் சுமந்து கொண்டு சமூகத்தில் உலவிக் கொண்டிருப்பார்கள். சில காலம் பொறுத்து அவர்களே அந்நோயின் பின்விளைவுகளால் கடுமையாகப் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, சமூகத்திலும் அந்நோயை நிரந்தரமாகப் பரப்பிக் கொண்டிருப்பார்கள். இந்த விளைவுகள் எல்லாவற்றையும் நாம் டைஃபாய்டு நோயைத் தடுப்பதன் மூலம் தடுத்துவிடலாம். எனவே, நோய்த் தடுப்பு முறை இன்றியமையாததாகிறது.

ஒவ்வொரு குழந்தையும் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், நோய்க் கிருமியால் பாதிக்கப்படுகிறது. மிருகங்களின் மூலமோ, மனிதர்களின் மூலமோ பரவும் வியாதிக்குத் தொத்துநோய் என்று பெயர்.

Bacteria எனப்படும் நுண் கிருமிகளும், Virus எனப்படும் அணுக்கிருமிகளும் நம் உடலில் புகுந்து, குறிப்பிட்ட சில இடங்களில் பெருகி இந் நோய்களை விளைவிக்கின்றன. இந்நோயின் தீவிரம், நோய்க் கிருமிகளின் தனித்தன்மையையும், அவைகளின் எண்ணிக்கையையும் மட்டுமின்றி உடலின் நோயை எதிர்க்கும் சக்தியின் அளவையும் பொறுத்துள்ளது. உடலின் இந்த எதிர்க்கும் சக்திக்கு Immunity என்று பெயர்.

இந்த எதிர்ப்புச் சக்தி, இயற்கையாகவோ, அல்லது செயற்கையாகவோ புகுத்தப் பட்டதாக இருக்கலாம். இயற்கையான தடுப்புச் சக்தி (Natural Immunity) என்பது முறையான சத்துணவு, திடமான உடல், வயது, சுற்றுப்புறச் சூழ்நிலை, இவற்றைப் பொறுத்துள்ளது.

இச்சக்தியில் ஓரளவு, குழந்தைக்குத் தாயின் கருவிலிருக்கும்போது நஞ்சு மூலமாகவும், பிறகு தாய்ப்பால் மூலமாகவும் கிடைக்கிறது.

உதாரணமாகப் பெரும்பான்மையான சிசுக்களுக்கு இயற்கையிலேயே, தட்டம்மை, சின்னம்மை, பெரியம்மை, பொன்னுக்கு வீங்கி, இளம்பிள்ளை வாதம், போன்ற நோய்களைத் தடுக்கும் சக்தி இருக்கிறது. தாயிடமிருந்து பெற்ற இந்தச் சக்தி முதல் ஐந்தாறு மாதங்கள் வரை இருக்கும்.

ஒருவன் கிருமிகளாலோ, அவை உற்பத்தி செய்யும் விஷப் பொருட்களாலோ தாக்கப்படும் போது அவனுக்குச் செயற்கையான தடுப்புச் சக்தி உண்டாகிறது. இதுவே, அவன் இயற்கையாகக் குணம் அடையக் காரணம். இந்தத் தடுப்புச் சக்திப் பொருள்கள் அவன் இரத்தத்தில் தங்கி, அவன் பிற்காலத்தில் அதே நோயினுல் பாதிக்கப் படாமல் தடுக்கிறது. அண்மைக் காலம் வரை இந்த ஒரு முறையே நோய் வராமல் தடுக்கக் காரணமாயிருந்தது.

ஆனுல், தற்போது நவீன மருத்துவ முறையில், தடுப்பு ஊசிகளைப் பயன்படுத்தி, செயற்

கையாக நோயை எதிர்க்கும் சக்தியை (Immunity) அடையலாம்.

தடுப்பு ஊசிகள் என்பவை, ஒரு நோயினல் பாதிக்கப்படாமல், அந்நோயை எதிர்க்கும் சக்தியை, (antibodies எனப்படுவதை) உடலில் உண்டாக்கக் கூடியவையாகும்.

சில தடுப்பு முறைகள் (Vaccines) உயிருள்ள நோய்க் கிருமிகளைக் கொண்டவை. உதாரணமாகப் பெரியம்மை, இளம்பிள்ளை வாதத் தடுப்பு முறை. இந்த உயிருள்ள கிருமிகள் உடலில் செலுத்தப்படுமுன் ஆய்வுக்கூடத்தில் சில மாற்றங்கள் செய்யப்படுகின்றன. அதன் மூலம் இவை நோயின் தீங்கைக் கொடுக்காமல், தடுப்புச் சக்தியை மட்டும் கொடுக்கின்றன.

மற்றும் சில தடுப்பு முறைகள் (Vaccines) கொல்லப்பட்ட கிருமிகளைக் கொண்டவை. உதாரணமாக, டைஃபாய்டு தடுப்பு ஊசியைச் சொல்லலாம். இவை கொல்லப்பட்டு இருந்தாலும் தடுக்கும் சக்தியைக் கொடுக்கும் தன்மை உடையன.

சில கிருமிகள் உற்பத்தி செய்யும் விஷப் பொருட்களுக்கும், தடுப்புச்சக்தி (அதாவது antibody-ஐ), உண்டுபண்ணும் தன்மை இருக்கிறது. இவைகளுக்கு உதாரணமாக டிப்தீரியா, டெடனஸ் தடுப்பு ஊசிகளைக் கூறலாம். இந்த இரண்டு வியாதிகளும், கிருமிகள் உண்டாக்கும் விஷப் பொருட்களால் வருகிறது. டாக்சின் (Toxin) என்னும் விஷப் பொருட்கள் ஆய்வுக் கூடத்தில் (Laboratory-யில்) தீங்கற்ற பொருட்களாக மாற்றப்படுகின்றன. இவை உற்பத்தி செய்யும் antibody-ஐ anti-toxin என்கிறோம்.

இயற்கையாக நோயினல் கிடைக்கும் எதிர்ப்புச் சக்தியைப் போல இந்தச் செயற்கை எதிர்ப்புச் சக்தி நிரந்தரமல்ல. எனவே, இதை அடிக்கடி தடுப்பு ஊசிகள் மூலம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் தற்பொழுது குழந்தைகளைப் பாதிக்கும் தொத்து வியாதிகளில் தடுப்பு ஊசிகளினல் சுலபமாகத் தடுக்கக் கூடிய வியாதிகளில் முக்கியமானவை எட்டு வியாதிகள். அவைகள்:—

1. உருக்கி நோய் T.B. எனப்படும் Tuberculosis
2. தொண்டை அழற்சி நோய் அதாவது Diptheria
3. ஜன்னி Tetanus
4. கக்குவான் இருமல் ( Whooping cough )
5. இளம்பிள்ளை வாதம் ( Poliomyelitis ).
6. தட்டம்மை (Measles).
7. டைபாய்டு.
8. காலரா.

சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் பெரியம்மைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பேன். நம் மாநில அரசும், மத்திய அரசும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக அந்நோயைக் காண்பது இப்போது அரிதாகிவிட்டது. தற்போதுள்ள தீவிரமான அம்மைத் தடுப்பு முறை இங்கே தொடர்ந்து அமலில் இருந்தால் இந்நிலைமை நீடிக்கும்.

குழந்தை பிறந்த சில நாட்களிலேயே அம்மை, முதல் தடுப்பு ஊசியைப் ( Primary Vaccination ) போடுவது சிறந்த முறை. இல்லாவிடில், பிறந்த சில மாதங்களுக்குள் இந்தத் தடுப்பு ஊசியைப்போட்டு விட வேண்டும். பிறகு 6 வயது வரை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் பிறகு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையும் போடுவது சிறந்தது ஆகும்.

நமது நாட்டில் உள்ள தொத்து நோய்களின் மிகத் தலையாய பிரச்சினை உருக்கி நோய் அல்லது T.B. எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப் படி தமிழ் நாட்டுச் சேரிப் பகுதிகளில் உருக்கி நோயால் பீடிக்கப்பட்டவர்கள் 6 வயதுக் குட்பட்ட குழந்தைகள் 25 சதவிகிதமும், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 4 சதவிகிதமும் இருக்கிறார்கள்.

உருக்கி நோயைத் தடுப்பது அவ்வளவு எளிதல்ல. ஆனல் சிசுப் பருவத்தில் B. C. G. தடுப்பு ஊசி முறையால் இந் நோயைத் தடுப்பதில் பெருமளவில் வெற்றி காணலாம். நமது அரசு, எல்லாத் தாய்சேய் நல விடுதிகளிலும், மாநகராட்சி மருத்துவ மனைகளிலும், பிறந்த குழந்தைகளுக்கு அம்மைத் தடுப்பு ஊசியுடன், B.C.G. தடுப்பு ஊசியினையும் போட்டு வருகிறது. இதுவரை தமிழ் நாட்டில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு B. C. G. தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

இதற்கடுத்தபடியாகக் குழந்தைகளைக் கடுமையாகத் தாக்கக் கூடிய நோய்கள், Diphtheria, Tetanus, Whooping Cough (கக்குவான்) என்பவை.

சத்துணவுக் குறைவுள்ள குழந்தைகளுக்கு இந்த நோய்கள் வந்தால் உயிருக்கு பெரும் ஆபத்து நேரலாம். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கான குழந்தைகள் இந்த நோய்களால் இறக்கின்றனர்.

மேற்கூறிய மூன்று நோய்களையும் தடுக்கவல்ல தடுப்பு ஊசிகளையும் தனித்தனியே போடமுடியுமாயினும், மூன்றையும் சேர்ந்து மும்முனைத் தடுப்பு ஊசியாக ( Triple Antigen ) தற்போது போடப்படுகிறது. நம்மரசு இந்த ஊசிகளை எல்லா அரசாங்க மருத்துவ மனைகளிலும், (ஆரம்ப சுகாதார நிலையம் உள்பட) போடும் வசதியைச் செய்திருக்கிறது. இந்த ஊசிகளை, சென்னை மாநகராட்சி மருத்துவ நிலையங்களிலும் போட்டுக் கொள்ளலாம்.

இந்த ஊசியில் முன்பு கூறிய முறையில் தயாரிக்கப்பட்ட (Diphtheria Toxoid,TetanusToxoid) என்று சொல்லப்பட்ட கக்குவான், இருமல் கிருமிகள் ஆகியவை அடங்கியுள்ளன.

இந்த மும்முனைத் தடுப்பு ஊசி ( Triple Antigen ) குழந்தை பிறந்த 2-வது மாதத்தில் இருந்து 5 வயது வரை கொடுக்கலாம். முதலில் இந்த ஊசியை 4 அல்லது 6 வார இடைவெளியில் மூன்று முறை கொடுக்க வேண்டும். முதல் ஊசியை 2-வது மாதத்தில் கொடுத்தால், இரண்டாவது ஊசியை மூன்றாவது மாதத்திலும், மூன்றாவது ஊசியை 4-வது மாதத்திலும் கொடுக்க வேண்டும். அதன் பிறகு ஒரு வருடங் கழித்து ஒரு முறையும் ( First Booster ) 4—5 வயதில் மற்றொரு முறையும் கொடுக்க வேண்டும்.

இந்த மும்முனைத் தடுப்பு ஊசியை 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குக் கொடுப்பது நல்லதல்ல. ஏனெனில், இதில் உள்ள கக்குவான் கிருமிகள், இவ்வயதிற்கு மேல், மூளையைப் பாதிக்கலாம். ஆனல், அவசியம் ஏற்பட்டால் மற்ற இரு நோய்களையும் (டிப்தீரியாவும், டெடனஸும்) தடுக்கும் ஊசிகளைத் தனித்தனியாகவோ, சேர்த்தோ கொடுக்கலாம். இதை மறுபடியும் 14 வயதில் ஒரு முறை கொடுப்பது



சிறந்தது. அதன்பிறகு 10 ஆண்டுகட்கு ஒரு முறை Tetanus Toxoid கொடுத்து வருவது அவசியமும் சிறந்ததும் ஆகும்.

குழந்தைகளுக்கு ஒவ்வொரு முறை காயம் ஏற்படும்போதும் Tetanus Toxoid கொடுக்கவேண்டுமா என்று பெற்றோர்க்கு ஐயம் ஏற்படலாம். காயம் ஆழமானதாகவும், பெரியதாகவும் இல்லாதிருந்தால், கடந்த 5—6 ஆண்டுகளில் இதைப் போட்டிருந்தால், இந்த ஊசியைப் போடவேண்டிய அவசியமில்லை. Tetanus பற்றித் தெரிந்தவர்களுக்குச் சில விஷயங்கள். Tetanus என்னும் நோய் தடுப்பு ஊசி போடாத குழந்தைகளுக்கு எவ்வளவுக்கு ஆபத்து விளையக் கூடும். இந் நோய் மண்ணிலிருக்கும் ஒரு வகையான கிருமியினல் ஏற்படுகிறது. மண்ணில் வீரியமில்லாத இந்தக் கிருமி உடலில் புகுந்தவுடன் பெருகி, அதிகச் சக்திவாய்ந்த விஷப் பொருட்களை உண்டாக்குகிறது. இந்த விஷப் பொருள்கள் தசைகளைச் செயலற்றுப் போகச் செய்வதுடன், தசைகளை இறுக்கியும், வலிப்பும் உண்டாக்கச் செய்கின்றன.

வீட்டின் பின்புறமோ அல்லது புழுதி படிந்த சாலைகளிலோ சிறிய காயம் ஏற்பட்டாலும், (Tetanus) வியாதி வர வாய்ப்பு இருக்கிறது. எனவே, தடுப்பு ஊசி தவறாமல் போட்டுக் கொள்ளுவதன் மூலமே இதைத் தடுக்கமுடியும். பிறந்த குழந்தையின் தொப்புள் கொடியை அறுப்பதற்குச் சுத்தமில்லாத கத்தியை உபயோகிப்பதனலும், தொப்புள் கொடியை கட்டுவதற்குச் சுத்தமில்லாத நூலை உபயோகிப்பதாலும் அநேகக் குழந்தைகளுக்கு Tetanus வருகிறது.

கர்ப்பிணிகளுக்குக் கர்ப்ப காலத்தின் பிற்பகுதியில் இந்தத் தடுப்பு ஊசி போடுவதாலும், சுத்தமான கருவிகளைப் பிரசவச் சமயத்தின் போது உபயோகிப்பதாலும், இந்நோயைத் தடுக்கலாம். குழந்தைகளுக்கு நெடுநாளையக் காதுச் சீழ் நோயாலும் (Tetanus) வரும்.

Diptheria என்னும் நோய் சாதாரணமாகத் தொண்டைப் புண் மாதிரி ஆரம்பிக்கிறது. பிறகு தொண்டை அடைப்பு, இருதயம், நரம்பு முதலியன பாதிக்கப்படக் கூடும். இதனல் நூற்றுக் கணக்கான குழந்தைகள் தங்கள் உயிரை இழக்கிறார்கள். சில திடமானவர்களிடம் இந்த நோய்க் கிருமிகள், வியாதி உண்டாக்காமல் உடம்பில் இருப்பதுண்டு. வியாதி இல்லாமல் இருக்கும் இவர்களிடமிருந்து தடுப்பு ஊசி போடாத குழந்தைகளுக்கு வியாதி பரவக்கூடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

கக்குவான் இருமலைப் பற்றி எல்லாருக்கும் தெரிந்து இருக்கும். கக்குவான் இருமல், பிறந்தகுழந்தைகளையும், சின்னஞ் சிறிய குழந்தைகளையும் மிகக் கடுமையாகத் தாக்கும். ஏனெனில் இந்நோய் பெரிய குழந்தைகளைப் பாதித்தால், அது நீண்ட நாள் இருப்பதோடு, அவர்களுக்கு உருக்கி நோய் இருந்தால் அதை அதிகப்படுத்தவும் செய்கிறது.

# நல வழிக் கல்விக் கருத்தரங்கம்
## ஒரு
# முன்னோடிக் கருத்தரங்கம்

135

அடுத்து முக்கியத்துவம் பெறுவது இளம்பிள்ளைவாதம் தடுப்பு முறையாகும். Virus எனப்படும் அணுக்கிருமிகளால் உண்டாகும் இந்நோய் கை, கால்களில் வாதம் உண்டாக்குவதுடன், மூளை போன்ற முக்கிய உறுப்புகளையும் தாக்குகிறது. இது டைபாய்டு சுரத்தைப் போலவே, உமிழ் நீர், சிறுநீர், மலம் முதலியவற்றின் மூலம் பிறருக்குப் பரவுகிறது. எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவ விடுதியில் மட்டும், ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக் கணக்கான குழந்தைகள் இளம்பிள்ளை வாதத்தினால் கை, கால் செயலற்றுப் போய் வருகின்றனர். இந்த நோய், குழந்தைகளைப் பாதித்தால் அவர்களில் ஒரு சதவிகிதம் தான் கை, கால் செயலற்று இருக்கின்றனர். இதிலிருந்து நமது சமுதாயத்தில் இந்த நோய் எவ்வளவு ஆரம் பரவியிருக்கிறகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

எல்லாக் குழந்தைகட்கும், வாய் மூலமாகக் கொடுக்கப்படும் போலியோ தடுப்பு மருந்து மிக இன்றியமையாததாகும். இந்த மருந்தை எந்த வயதிலும் கொடுக்கலாம். ஆனால் மும்முனைத் தடுப்பு ஊசிபோடும் சமயத்தில் இதையும் கொடுத்து விட்டால் சௌகரியமாக இருக்கும். அதாவது Triple Antigen போலவே மாதம் ஒரு முறை இடைவெளியில் கொடுக்கவேண்டும். ஆனால் 3 முறை கொடுப்பதைவிட 5 முறை கொடுத்தால் இன்னும் நல்லது. 4—வது முறையாக, 3—வது முறை கொடுத்ததில் இருந்து 6—மாதம் கழித்தும், 5-வது முறையாக இதிலிருந்து 2 மாதம் கழித்தும் கொடுக்க வேண்டும்.

போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதில் சில முன்னெச்சரிக்கைகள்.

1. ஜலதோஷம் போன்ற அணுக்கிருமிகளால் வருகின்ற நோய்கள் குழந்தைகளுக்கு இருக்கும்போது இம் மருந்தைக் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் பயனிருக்காது.

2. இம்மருந்தைக் கொடுப்பதற்குச் சில மணி நேரங்கள் முன்னும், பின்னும் தாய்ப்பால் கொடுக்கக் கூடாது. ஏனெனில் தாய்ப்பாலில் உள்ள Antibody இம்மருந்தின் சக்தியைக் குறைத்து விடுகிறது.

அடுத்து வருவது தட்டம்மை ( Measles ). இதுவும் கக்குவான் இருமலைப் போல் உருக்கு நோய் இருந்தால் அதை அதிகப் படுத்தும். அண்மைக் காலத்தில் தட்டம்மைக்கும் தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் நமது நாட்டிற்கு அம்மருந்து உபயோகத்திற்கு வரும்.

டைபாய்டு சுரம் தடுப்பு முறையும் (T. A. B. தடுப்பு ஊசி) குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. T. A. B. 4 வார இடைவெளியில் 11-வது மாதத்திலும் 12-வது மாதத்திலும் கொடுக்கப்படுகிறது. இதன் பிறகு ஒன்பது முதல் 3 ஆண்டு இடைவெளியில் திரும்பவும் கொடுக்கலாம். காலராத் தடுப்பு ஊசி, நாட்டில் காலரா பரவியிருக்கும் சமயத்தில் போடப்படுகிறது. இம் மருந்தை 6 மாதக் குழந்தையிலிருந்து எல்லா வயதினருக்கும் போடலாம்.

சுருங்கக் கூறின், B.C.G. யும் பெரியம்மைத் தடுப்பு ஊசியும், குழந்தை பிறந்தவுடன் மும்முனைத் தடுப்பு ஊசி 2-வது 3-வது 4-வது மாதங்களில் இத்துடன் வாய் மூலம் கொடுக்கும் போலியோ தடுப்பு மருந்து 3 தடவை 4-வது, 5-வது போலியோ தடுப்பு மருந்து 10-வது 12-வது மாதத்தில் பிறகு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை.

முதலாவது, இரண்டாவது பூஸ்டர், Triple Antigen அதாவது மும்முனைத் தடுப்பு ஊசி $1\frac{1}{2}$ வயதிலும் 4—5 வயதிலும், T. A. B. டைபாய்டு தடுப்பு ஊசி 11-வது மாதத்திலும் பிறகு 12-வது மாதத்திலும் மறுபடி. ஒன்றிலிருந்து 3 ஆண்டுக்கு ஒரு முறை.

இந்தக் கருத்துக்களைத் தெரிவித்த டாக்டர் பாலகோபால் ராஜு தாய்மார்களுக்கு ஏற்பட்ட ஐயங்களையும் அகற்றினார்.

மொத்தத்தில் வானொலி நிலையம் நடத்திய கருத்தரங்கம் மகளிர் மன்றங்களுக்கு வழிகாட்டியான ஒரு கருத்தரங்கமாகும்.

— அஞ்சறை



# நவரைத் திட்டம்



“அட என்னங்க அண்ணாச்சி பொன்னான விளக்கம் சொல்லுவேன் புரிஞ்சிக்குங்க........”

என்று ஆரம்பித்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சி, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள நந்திவரம் என்ற கிராமத்தில் கடந்த 20—12—72 அன்று திரண்டிருந்த ஆயிரக் கணக்கான உழவர் பெருமக்களின் உள்ளத்தைக் கவர்ந்து, ‘உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளையே இனிப்பயிரிடுவது!’ என்ற உறுதியை ஏற்படுத்தியது. இந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைக் ‘கடும் விரைவு பின்பருவத் திட்டம்’ ( Emergency Rabi Programme ) என்னும் நவரைத் திட்டத் துவக்க விழாவையொட்டி, நந்திவரத்திலே தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை ஏற்பாடு செய்திருந்தது.

உழவர் பெருமக்கள் நவீன சாகுபடி முறைகளை மேற்கொண்டு, உயர்விளைச்சல் தரும் வகைகளைப் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்கி நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்ல சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவும், அதிக உற்பத்தியின் காரணமாக அதிக வருவாய் பெற்று வாழ வேண்டுமென்பதற்காகவும், புது மாதிரி வில்லுப்பாட்டு நிகழ்ச்சி—சினிமாவில் உள்ளது போல் இசைக் கருவிகளையெல்லாம் வைத்துக் கொண்டு—நந்திவரத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வில்லுப்பாட்டினால் உழவர் பெருமக்கள் உயர் விளைச்சல் நெல் ரகங்களைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்றார்கள்.

வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குப் பின்னர், கடும் விரைவு பின்பருவத் திட்டத் துவக்க விழா நிகழ்ச்சி, மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு ரகுநாத ரெட்டியார் வரவேற்பு உரையாற்றினார்.

வேளாண்மைத் துறைச் செயலாளர் அவர்கள் கடும் விரைவு பின்பருவத் திட்டத்தைப் பற்றி விளக்கிப் பேசினார்.

செங்கற்பட்டு சட்டப் பேரவை உறுப்பினர் திரு விசுவநாதன் அவர்கள் ‘‘பசுமைப் புரட்சியின் மூலம் எல்லாருக்கும் உணவு கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காகவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப்புரட்சித் திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் முதல் திட்டமாக எடுத்துக் கொண்டார்’’ என்று குறிப்பிட்டு விட்டு, ‘‘இந்திட்டத்தில் உழவர் பெருமக்கள் அனைவரும் பங்கு கொண்டு பயன்பெற வேண்டும்’’ என்று வேண்டுகோள் விடுத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் கடும் விரைவு பின் பருவத் திட்டத்தைத் துவக்கிவைத்து உரையாற்றினார்கள். இந்த விழாவையொட்டி ஏற்பாடு செய்திருந்த வேளாண்மைக் கருத்துக் காட்சியையும் திறந்து வைத்தார்.

இந்தகைய விளம்பர விழாக்கள் டிசம்பர் 20 முதல் சனவரி 15 வரை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பல இடங்களில் நடைபெற்றுள்ளன.

## நவரைத் திட்டம் ஏன் ?

இந்த ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்துவிட்டதால், தமிழ்நாட்டில் பல பகுதிகளில் வறட்சி நிலவியது. அதனால் பல உழவர்கள் சாகுபடி செய்ய முடியாமல் வாடினர். கிடைத்த மழையைக் கொண்டு சாகுபடி செய்தவர்களும், போதிய மழை இல்லாததால் நல்ல மகசூல் பெற இயலவில்லை.

வடகிழக்குப் பருவ மழை அக்டோபர், நவம்பர்த் திங்களில் நன்கு பெய்ததால், நீர்நிலைகளிலெல்லாம் தண்ணீர் நிறைந்தன. உழவர் பெருமக்கள் வெகு ஆர்வத்துடன் சாகுபடி வேலைகளை மேற்கொண்டனர். ஆனால் டிசம்பர்த் திங்களில் ஏற்பட்ட புயலும், பெரும் மழையும், தமிழ்நாட்டின் பெரும்பகுதியை வெள்ளக் காடாக்கிப் பலரது உயிரையும், ஆயிரக் கணக்கான கால்நடைகளின் உயிரையும் அழித்துவிட்டதுடன், விளை பயிர்களை அழித்தும், நிலங்களில் மணலைக் குவித்தும் பாழ்படுத்திவிட்டன. இதனால் உழவர்பெருமக்களின் உழைப்புப் பாழாகிவிட்டது.

தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததனால் மட்டும், இந்த ஆண்டின் மொத்த உணவுதானிய உற்பத்தியில் ஏறத்தாழ 2·54 இலட்சம் டன் அளவுக்குக் குறைவு ஏற்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் 34,295 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த உணவுதானியப் பயிர்கள் முழுஅளவில் பாழடைந்துள்ளதாலும், 1,87,300 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த உணவு தானியப் பயிர்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதாலும், மேலும் உணவு தானிய உற்பத்தியில் குறைவு ஏற்படக்கூடும் என்பது உறுதியாகிறது.

இவ்வாறு வறட்சியினாலும், வெள்ளத்தினாலும் ஏற்படக்கூடிய உணவு தானிய உற்பத்திக் குறைவை ஈடுகட்டவே, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை கடும் விரைவு பின்பருவத் திட்டத்தைத் தீட்டித் தமிழ்நாடு அரசின் அனுமதியுடன் செயல்படுத்தத் துவங்கியுள்ளது.

## நவரைத் திட்டம் என்றால் என்ன ?

நவரைப் பருவம் என்பது குறிப்பாகச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் வழக்கத்தில் உள்ளது. இப்பருவம் இந்த மாவட்டங்களில் டிசம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் துவங்கி, மே திங்கள் வரை நீடிக்கும். மற்ற மாவட்டங்களை விட இம்மூன்று மாவட்டங்களிலும் உள்ள ஏரிகளில் வட கிழக்குப் பருவ மழையினால் தண்ணீர் தேங்குவதாலேயே இம் மாவட்டங்களில் நெடுங்காலமாக நவரைப் பருவத்தில் நெல்சாகுபடி செய்யப்பட்டு வந்துள்ளது.

செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 1970-71-ஆம்

[illegible]
5.53 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அதில் 2.82 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8, மற்றும் அதிலிருந்து உருவான ரகங்களும், 1.89 இலட்சம் ஏக்கரில் கோ. 29 முதலிய இதர உயர்விளைச்சல் நெல் ரகங்களும், 0.87 இலட்சம் ஏக்கரில் சாதாரண நெல் வகைகளும் அடங்கியிருந்தன.

ஐ. ஆர். 8 ரகமும், கோ. 29 ரகமும் உயர்விளைச்சல் ரகங்களே என்றாலும், இவ்விரண்டு ரகங்களுக்கும் உள்ள மகசூல் வேறுபாடு குறிப்பிடத் தகுந்த அளவில் உள்ளது. கடந்த ஆண்டுகளில் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 நெல் ரகங்கள் ஏக்கருக்குச் சராசரியாக 2 மெட்ரிக் டன் மகசூல் கொடுத்துள்ளது. ஆனல், அதே நேரத்தில் கோ. 29 நெல் ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1.2 முதல் 1.4 மெட்ரிக் டன் மகசூலே கொடுத்துள்ளது. எனவே, இந்த ஆண்டு நவரைப் பட்டத்தில் கோ. 29 ரகத்திற்குப் பதிலாக ஐ. ஆர். 8, ஐ. ஆர் 20 ஆகிய நெல் ரகங்களைக் கடும் விரைவு பின்பருவத்தின் கிழ் பயிரிடுமாறு உழவர்பெருமக்களுக்கு வேளாண்மைத் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நவரைத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்னுர்க்காடு மாவட்டங்களில் உறுதியான நீர்ப் பாசன வசதியுள்ள இடங்களில பின் கண்டுள்ளவாறு உயர் விளைச்சல் ரகங்கள் சாகுபடி செய்யப்படும்.

| மாவட்டம். | உயர்விளைச்சல் ரகங்கள் சாகுபடி செய்யப்படவிருக்கும் பரப்பு. (இலட்சம் ஏக்கர்). |
|---|---|
| செங்கற்பட்டு .. | 1.97 |
| வட ஆர்க்காடு .. | 1.83 |
| தென் ஆர்க்காடு .. | 1.02 |
| மொத்தம் | 4.82 |

நவரைத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20', 'காஞ்சி', 'காவேரி', 'ரத்ன' ஆகிய ரகங்கள் பின் கண்டுள்ள பரப்பளவில் பயிரிடப்படும்.

செங்கற்பட்டு மாவட்டம்

| ரகம் | பரப்பு. (ஏக்கர்) |
|---|---|
| ஐ. ஆர். 8 .. .. | 91,000 |
| ஐ. ஆர் 20 .. | 96,000 |
| ஜெயா .. .. | 10,000 |
| மொத்தம் | 1,97,000 |


நந்திவரத்தில் நடைபெற்ற வேளாண்மைக் கருத்துக் காட்சியை வேளாண்மை அமைச்சரும் [illegible] உணவு அமைச்சரும் பார்வையிடுகின்றனர்

வட ஆர்க்காடு மாவட்டம்.

| ரகம். | பரப்பு. (ஏக்கர்) |
|---|---|
| ஐ. ஆர் 8 .. .. | 1,11,000 |
| ஐ. ஆர் 20 .. | 72,000 |
| ஜெயா .. .. | 10,000 |
| மொத்தம்.. | 1,93,000 |

தென் ஆர்க்காடு மாவட்டம்

| ரகம் | பரப்பு. (ஏக்கர்) |
|---|---|
| ஐ. ஆர். 8 .. | 37,000 |
| ஐ. ஆர். 20 .. | 43,000 |
| ஜெயா .. .. | 3,000 |
| காஞ்சி .. .. | 5,000 |
| காவேரி .. | 5,000 |
| ரத்ன .. .. | 9,000 |
| மொத்தம் .. | 1,02,000 |

## திட்ட விளம்பரம்

மேற்கூறிய பரப்பளவில் நவரைப் பருவத்தில் உயர் விளைச்சல் நெல் ரகங்களைச் சாகுபடி செய்யச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னுர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள 97 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 10 கிராமங்களில் — நந்திவரத்தில் நடந்ததைப் போல்— விழா நடத்தப்பட்டுள்ளது. அவ்விழாவில் இத் திட்டம் பற்றி விளக்கி, உழவர் பெருமக்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கு கொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டி விடப்பட்டுள்ளது. மேலும் அவ் விழாவில் சொற்பொழிவு, வேளாண்மைப் பொருட் காட்சி, செயல்முறை விளக்கம், வேளாண்மைப் படக் காட்சி, சினிமா சிலேடு போன்றவற்றின் மூலம் உழவர் பெருமக்களுக்கு இத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டதுடன், நவீன சாகுபடி முறைகள் பற்றிய தெளிவான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய விழாவினை ஏற்படுத்த ஒவ்வொரு விழாவிற்கும் 150 ரூபாய் வீதம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் 1,500 வீதம் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இவ் விழாவிற்கு, ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 முதலிய ரகங்களைப் பயிரிடக் கூடிய எல்லா உழவர் பெருமக்களும் அழைக்கப்பட்டனர்.

டிசம்பர் 15-ஆம் நாளுக்குப் பிறகு இம்மூன்று மாவட்டங்களிலும் உள்ள எல்லாச் சாலைகளிலும், முக்கியமான இடங்களிலும் ஐ. ஆர். 8, ஐ. ஆர் 20 ஆகிய ரகங்களைப் பயிரிடத் தூண்டக் கூடிய விளம்பர அட்டைகள் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு 10 விளம்பர அட்டைகள் வீதம் தொங்கவிடப்பட்டிருந்தன. சனவரித் திங்கள் இரண்டாம் வாரத்தில் அடியுரம் இடவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் விளம்பர அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அதுபோலவே பிப்ரவரி முதல் வாரத்தில் மேல் உரம் இடுவது பற்றிய விளம்பர அட்டைகள் மூன்று மாவட்டத்திலும் தொங்கவிடப்படும்.

இத்திட்டம் பற்றியும், சாகுபடி முறைகள் பற்றியும், வானெலி, பத்திரிகைகள், துண்டு வெளியீடுகள், சிறுபுத்தகங்கள் மூலமாக அவ்வப்பொழுது உழவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

## தேவைப் பொருட்கள்

நவரைத் திட்டத்தில் பங்கு பெறும் எல்லா உழவர்களுக்கும் தேவையான விதைகளையும், பூச்சி பூஞ்சாள மருந்துகளையும் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது. 4.82 இலட்சம் ஏக்கருக்கும் தேவையான இரசாயன உரங்களைத் தேவையான பொழுது, தேவையான அளவில் கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக வழங்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்துள்ளது. அடி உரமிட 17: 17: 17 அல்லது 16: 16: 16 அல்லது 15: 15: 15: அல்லது 16 : 20 : 0 (பொட்டாஷ் உரத்துடன்) போன்ற காம்ப்ளக்ஸ் உரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலுரமிட யூரியா வழங்கப்படும்.

வேளாண்மைத் துறையிலுள்ள எல்லா தூவான்களும் தெளிப்பான்களும் பழுது பார்க்கப்பட்டு, பயிர்ப் பாதுகாப்புப் பணிகளுக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள ஒரு விளக்கிக் காட்டும் கண்காணிக்கு(மேஸ்திரி) தூவான்களையும், தெளிப்பான்களையும், பழுது பார்த்துச் செப்பனிடுவது பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. துவான்கள், தெளிப்பான்கள் பழுது பார்ப்பதற்கான பெட்டி கருவிகள் அடங்கிய வாங்கவும், உதிரிப் பாகங்கள் வாங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


வேளாண்மை அமைச்சர் [illegible]


உணவு அமைச்சர் தென்னங்கன்று நடுகிறார்

## கடன் உதவி

நவரைத் திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி செய்யவிருக்கும் உழவர்களுக்கு 1,150 இலட்சம் ரூபாய் குறுகிய காலக் கடன் உதவி தேவைப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கடன் உதவியைக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும், வணிக வங்கிகளும் வழங்கிட முன்வந்துள்ளன.

இத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக இந்திய அரசு 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இத் தொகையை உழவர்கள் விதை, இரசாயன உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்து ஆகியவைகளை வாங்குவதற்காக ஏக்கருக்கு ரூ. 250 வீதம், ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் வழங்கப்பட்டுவருகிறது.

## இறைவைச் சிறுதானியச் சாகுபடித் திட்டம்

கடும் விரைவு பின்பருவத் திட்டத்தின் இரண்டாவது அங்கமாகக் கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 103 ஊராட்சி ஒன்றியங்களில் 'சி. எஸ். எச். 1', 'சி. எஸ். எச். 3', 'சொர்ணு', 'கோ. 18', 'கே. 4', 'கோ. 12', 'கோ. 4' ஆகிய சோள ரகங்களையும், 'எச். பி. 1' 'எச். பி. 3', 'எச். பி. 4' ஆகிய கம்பு ரகங்களையும், 'கோ. 7', 'கோ. 8', 'சாரதா' 'கே 2' ஆகிய கேழ்வரகு ரகங்களையும் சனவரி 15 முதல் மார்ச்சு முடிய உள்ள காலத்தில் இறைவையாகப் பயிரிடத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை தீவிரமாகச் செயலாற்றி வருகிறது. மேற்கூறிய 6 மாவட்டங்களிலும் பின்கண்டுள்ள பரப்பளவில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம். | பரப்பு. (ஏக்கர்). |
|---|---|
| கோயம்புத்தூர் .. | 1,50,000 |
| சேலம் .. .. | 60,000 |
| மதுரை .. .. | 67,500 |
| திருச்சி .. .. | 65,000 |
| திருநெல்வேலி .. | 52,000 |
| தருமபுரி .. .. | 19,000 |
| | 4,13,500 |

இப்பரப்பளவில் இறைவைச் சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவை கீழ்க்கண்ட அளவில் பயிரிடப்படும்.

| | |
|---|---|
| இறைவைச் சோளம். | 2,14,250 |
| இறைவைக் கம்பு. | 91,750 |
| இறைவைக் கேழ்வரகு | 1,07,500 |
| மொத்தம் | 4,13,500 |

இறைவைச் சிறுதானியங்களை மேற்கண்ட பரப்பில் பயிரிடுவதற்கு நெல்லிற்குக் குறிப்பிட்டது போலவே விளம்பரத் திட்டமும், விதை, உரம், மருந்துகள், கடன்தொகை முதலிய தேவைப் பொருட்கள் வழங்கும் திட்டமும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்திய அரசு ஒதுக்கியுள்ள 30 இலட்சம் ரூபாயை ஏக்கருக்கு ரூபாய் 100 வீதம், ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக உழவர் பெருமக்களுக்கு வழங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

### பருப்பு உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்

கடும் விரைவு பின் பருவத் திட்டத்தின் மூன்றுவது அங்கமாக, தஞ்சை மாவட்டத்திலும், சிதம்பரம் வட்டத்திலும் நெல் வயல்களில் உளுந்து, பச்சைப் பயறு ஆகிய பருப்பு வகைப் பயிர்களைப் பின்கண்ட பரப்பளவில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

| | (இலட்சம் ஏக்கர்) |
|---|---|
| தஞ்சை மாவட்டம் | 5.5 |
| சிதம்பரம் வட்டம் | 0.6 |
| மொத்தம் | 6.1 |

பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்காக மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்தில் ஈடுபடவிருக்கும் உழவர் பெருமக்களுக்கும் தமிழ்நாடு அரசு பல உதவிகளைச் செய்யவிருக்கிறது.

இவ்வாறு பல்வேறு வகையிலும் கடும் விரைவு பின் பருவத் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு உதவி வருவதால், இத்திட்டத்தின் மூலம் வழக்கமாகக் கிடைப்பதற்கும் மேலாக உணவு தானியம் பெருமளவில் உற்பத்தியாகும் என்று உறுதியாக நம்பலாம். இத்திட்டத்தின் மூலம் உழவர்களின் வருவாய் உயர்ந்து, வாழ்வு வளம் பெறும் என்பதிலும் ஐயமில்லை.

— ஆர். எம்.






பதிவு எண். M. 8676


நல்லது கேட்கின் நலமுறச் சொல்லே
இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!
எல்லாச்
சிற்றூர்களுக்கும்
சாலை
இணைப்புகள்!
திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!
அடுத்த குழந்தை இப்போது
இரண்டுக்குப் பிறகு எப்போதும்
குடும்ப நலத்துறை தமிழ் நாடு அரசு.


40 காசு
1-2-73




# சிறு தொழிலுக்கோர் உறுதுணை......எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

**L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**

P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.




# வரிவிதிப்புக் கொள்கையில் மாற்றம் தேவை!

தேசிய வளர்ச்சிக் குழுவின் முன் வைக்கப்பட்டுள்ள ஐந்தாவது திட்டத்திற்கான வடிவமைப்புக் குறித்து, தமிழகத்தின் கருத்தினை இங்கு எடுத்துக் கூறக் கிடைத்திட்ட வாய்ப்பினை ஒரு நல்வாய்ப்பாகக் கருதுகிறேன். இந்த ஐந்தாவது திட்ட நடவடிக்கை குறித்து, சென்ற 1972 மே மாதத்தில் அளிக்கப்பட்ட அறிக்கையில் காணப்பட்ட கொள்கை வரைவுகளை விரிந்த முறையில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

திட்ட வரைவு பற்றி இப்போதைய அறிக்கையில் ஓரளவு விரிவான விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இந்த அறிக்கையினைத் தயாரிப்பதில் நுட்ப ரீதியான செயல்முறைகள் தக்க வகையில் கையாளப்பட்டுள்ளன.

ரூ. 51,000 கோடிக்கான திட்டம் ஒன்றை வகுப்பது முதல் நடவடிக்கைதான். இத்திட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கையை நாம் சிரமைத்தாலன்றி மறுபடியும் நம்மைத் தோல்விதான் எதிர்கொள்ளும். திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் திட்டம் சம்பந்தமாக அடிப்படையாகத் தேவைப்படும், உருக்கு, சிமிண்ட், உரம், மற்றும் மின்சாரம் ஆகியவை பற்றாக்குறை காரணமாகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது நமது கடந்த கால அனுபவம். இந்தப் பற்றாக்குறை நமது திட்டங்களையே குலைத்திருக்கின்றது.

எடுத்துக் காட்டாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்குவது ஒரு தேசிய இலட்சியமாகும். இது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனினும் இப்போதுள்ள சிறிய தொழிற்சாலைகளுக்குக் கிடைக்க வேண்டிய அளவு மூலப் பொருட்களும், மின்சக்தியும் கிடைக்குமானால் அந்தத் தொழிற்சாலைகளிலேயே அதிக வேலை வாய்ப்பினை உண்டாக்க முடியும் என்ற கருத்து, பெரும்பாலும் ஏற்கப்படாமலே உள்ளது.

மூலப் பொருள்கள் தக்கபடி கிடைக்காத காரணத்தால் நாட்டில் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுக் கிடக்கின்றன. உருக்குச் சேமிப்புப் பற்றிப் பேசப்பட்டு வருகிறது. ஆனால், உண்மையான நடைமுறைக்கு அது எப்போது வரும் என்பதுதான் தெரியவில்லை.

உருக்கைப் பொறுத்தவரையில் தனியார் துறைக்கு அது ஏராளமாகக் கிடைக்கின்றது. ஆனால், அத்தியாவசியமான பொதுத்துறைக்கு அது கிடைப்பதில்லை.

இரசாயன உரம் கிடைப்பது (கட்டுப்பாட்டு விலையில்) கடினமாக இருக்கின்றது. ஆனால், வெளிச் சந்தையில் அதே உரம் அதிக விலையில் விற்கப்படுகிறது.

இம்மாதிரி நெருக்கடியான நிலைமைகளையெல்லாம் நாம் திருத்தியாக வேண்டும். இலட்சியத் தன்மைகள் வாய்ந்ததொரு ஐந்தாவது திட்டத்தின் குறிக்கோளை நோக்கி நாம் அடி எடுத்து வைக்குமுன் இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைந்தெறிய வேண்டும். நமது மிச்சத் தேவைகளை—அவசியம் ஏற்படுமானால் நீண்ட கால ஏற்பாட்டின் அடிப்படையில் வெளிநாடுகளிலிருந்து வாங்குவதற்குக் கூட ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.

குறிப்பாக மின்சாரத் திட்டங்கள் மோசமான அளவில் தாமதம் அடைந்துள்ளன. இது விவசாயத்தையும், மற்றத் தொழில்களையும் பாதித்துள்ளது. எனவே, ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றிமுடிப்பதில் உயர்ந்தபட்ச முதன்மை காட்ட வேண்டும். இத் திட்டத்திற்குத் தேவைப்படும் சாதனங்களில் இங்கே உற்பத்தி செய்ய முடியாதவற்றை — அவசியமானால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகூட நிறைவேற்ற வேண்டும். இந்த வகையில் மின்சார வாரியங்கள் தங்களுக்குத் தேவையான நிதியை வங்கிகள் மூலம் பெற அனுமதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் நிதி நிறுவனங்களிடம் கூடுதல் கடன்களை எழுப்பும் வகையிலும் மின்சார வாரியங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

நம் முன் உள்ள இந்த அறிக்கையில் வேலையில்லா நிலைமையைப் போக்குவது பற்றியும், வறுமையை ஒழிப்பது பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது.

சில அம்சங்களில் இந்த இரண்டுமே ஒரே நடவடிக்கை மூலம் அகற்றப்படக் கூடியவை. இந்த வகையில் நமது திட்டங்களில் பல, உண்மையாகவே ஏழ்மையில் உள்ளவர்களுக்குப் பயன்படவில்லை. ஆனால், வசதி பெற்ற வட்டாரத்திற்கே பயனளித்துள்ளன என்பதை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுகூட, கீழ் மட்டத்திலுள்ள 30 சதவீத மக்களின் சராசரி நபர்வாரி வருவாய் ரூ. 37 ஆகவே இருக்கும்—1971–72-ன் விலைகளின் அடிப்படையில் இந்த அளவிலேயே வருமானம் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. வறுமையின் எல்லைக்கோட்டுக்குக் கீழ், பெரிய அளவில் உள்ள இந்த மக்களின் நிலைபற்றித்தான் நாம் முதலில் கவனம் செலுத்த வேண்டும்.

இவர்களுக்கு அதிக அளவில் வேலையும், வாய்ப்புக்களும், அளிக்கும் வகையிம் நாம் தேசிய மட்டத்தில் தக்கதொரு முடிவினை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் தற்போது அதிக அளவில் வசதிகளோடு விளங்கும் சில வட்டாரத்தினரின் வசதிகள் குறைவாகவே இருந்தால்கூட இம்மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொண்டேயாக வேண்டும். இது விலைக்கொள்கை, மற்றும் ஊதியக் கொள்கையோடு சம்பந்தப்பட்டது.

நாட்டு மக்களில் ஊழியர்களாக உள்ள சில பகுதியினர் உட்பட அதிக வசதி படைத்த வட்டாரத்தினர் கூடுதலான நன்மைகளைத் தொடர்ந்து பெற்று வரும் அதே நேரத்தில் நமது மக்களில் பெரும்பான்மை



# வறுமையை அகற்றும் திட்டங்களுக்கு முதலிடம்!

யினர் மிக மிகக் குறைந்த வருவாயோடு அதிக வறுமையில் கிடக்கின்றனர். இவ்வாறு வளர்ந்து வரும் வேறுபாடுகள் போக்கப்பட வேண்டும்.

உற்பத்தியில் கிடைக்கக்கூடிய இலாபத்திற்கும் ஊதியஉயர்வுக்குமிடையே தொடர்பு இருக்க வேண்டிய அவசியத்தை இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது. இதை நாம் தொடர்ந்துசெய்து முடிக்கும் வரையில் பண வீக்கம் தொடர்ந்து இருந்து வரத்தான் செய்யும்.

பொதுவாக உற்பத்தி மூலம் கிடைக்கக்கூடிய இலாபம் ஒரு சிறிய வட்டாரத்தினருக்கு மட்டுமே போய்ச்சேரும் வகையில் நமது தற்போதையக் கொள்கைகள் தொடர்ந்து இருக்கும் வரையில் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளிலிருந்து நம் நாடு தப்ப முடியாது.

கிராமப் பகுதிகளையுடைய குறைந்த பட்சத் தேவைகளை நிறைவேற்றும் திட்டத்துக்கான நிர்வாக ஏற்பாடுகள் இன்னின்னவை என்று முழுமையாக இந்த அறிக்கையில் கூறப்படவில்லை. நாட்டின் பிற்பட்ட திட்டுகளாக உள்ள பகுதிகள் அனைத்தையும், ஒப்புக் கொள்ளப்பட்ட தேசிய வளர்ச்சி அளவை எய்திடச் செய்ய வேண்டுமென்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். இந்த இலக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் இவற்றுக்கான நிதியானது நிதிக்குழு மூலம் மாநிலங்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டுமேயன்றி மத்தியத் திட்டப் பணிகள் என்ற உருவில் இவை வரக் கூடாது. மாநில அரசுகள் கவனிக்க வேண்டியவைகளை அமல் செய்வதற்கென்று மத்திய அரசிலே தனி வேறு அமைப்பு ஒன்று இருப்பதென்பது கூடாது என்பதே எங்கள் கருத்தாகும்.

மாநிலங்களின் சேவையைக் கண்டறிய அரசியல் சட்டத்தின் கீழ் நிதிக்குழு நிறுவப்பட்டுள்ளது. திட்டத்திற்கு உட்பட்ட ஒதுக்கீடுகள் என்றும், உட்படாத ஒதுக்கீடுகள் என்றும் காட்டப்படுகிற வேறுபாடு, குழப்புவதாக இருக்கிறது. எனவே இது கைவிடப்பட வேண்டும். மாநிலங்களின் எல்லாத் தேவைகளும், திட்டத்துக்கு உட்பட்டவற்றுக்கும் திட்டத்துக்கு உட்படாதவற்றுக்கும் குறைந்தபட்சத் திட்டத் தேவைகளுக்குமான நிதி ஆகியவை குறித்து நிதிக்குழு திட்டக் குழுவிடம் கலந்து பரிசீலிக்க வேண்டும். இந்த அடிப்படையிலே நிதிக்குழு மாநிலங்கள் பெற வேண்டிய வருவாய் நிலைகளை வகுத்துப் பரிந்துரை செய்ய வேண்டும். இந்த ஏற்பாடு ஒன்றே மாநிலங்களின் அத்தியாவசியத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை அவை சுதந்தரமாக வகுத்திடத் துணை புரிவதாக இருக்கும். இத்தகைய சீர்திருத்தம் ஒன்றே, குவிந்திருக்கும் அதிகாரத்தைப் பரவலாக்கும் கொள்கையைப் பொருள் உள்ளதாக ஆக்கிடும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலங்களுக்குக் கிடைக்கக் கூடிய திட்ட உதவி ரூ. 3,500 கோடி அளவு மட்டுமே என்று முற்றுப் புள்ளி வைத்து விட்டுக் கிட்டத்தட்ட அதே அளவு பெருந்தொகையைப் பல்வேறு மத்திய அமைச்சகங்கள், மத்தியத் திட்டப் பணிகள் என்பதாகச் செலவிட்டுள்ளன. இதன் விளைவாகப் பல்வேறு துறைகளில் மாநில அரசின் கொள்கைகள் மத்திய அரசுத் துறையினரால் கட்டுப்படுத்தப்பட்டன.

நம் அரசியலமைப்புச் சட்டத்தினை உருவாக்கியவர்கள் கருதிய நிதி ஏற்பாடுகளுக்கு முற்றிலும் புறம்பானதாக இது இருக்கிறது. கல்வி, விவசாயம், சுகாதாரம் ஆகிய துறைகளில் இப்படி மத்திய அரசுத் துறைகளது திட்டப் பணிகளின் வளர்ச்சி ஏற்படுவது முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். இவற்றுக்காகக் கிடைக்கிற நிதியை மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளித்திடும் பொறுப்பை மத்திய அரசானது நிதிக்குழுவினிடமும் திட்டக் குழுவினிடமும் விட்டு விடவேண்டும்.

ஒவ்வொரு மாநிலமும் குறைந்தது ஒரு குறிப்பிட்ட அளவேனும் முன்னேறி விட வேண்டுமென்ற திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளதால் மானிய உதவிக்கான அளவை விதி மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் எண்ணுகிறோம். குறைந்தபட்ச முன்னேற்றத்தேவைத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலத்தின் தேவைகளும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டான பிறகு வரி வாய்ப்புகளைப் பிரித்தளிப்பதிலோ மத்திய மானியப் பங்கிலோ அதற்கென்று தனிச் சலுகை காட்டிடத் தேவையில்லை.



பெரும் முதலீட்டுத் திட்டங்களுக்காக வென்று மாநிலங்களுக் குள்ளான வளர்ச்சி வங்கி ஒன்று அமைவதை நாங்கள் விரும்புகிறோம். மாநிலங்களில் குடிநீர் வழங்கு திட்டங்கள், மின் திட்டங்கள், தொழில் [வளர்ச்சித்

திட்டங்கள் ஆகியவற்றுக்கு இந்த வங்கி உதவிட வேண்டும். இந்த வங்கியானது திட்டக் குழுவின் மேற்பார்வையில் இயங்கிட வேண்டும். ஆனால், இந்த வங்கியில் மாநில அரசின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

பெரு நகரங்களின் சீரான வளர்ச்சிக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று கருதுகிறேன். பெரு நகரங்களில் குடிநீர் வழங்கு திட்டங்கள், குடிசை மாற்றுத் திட்டங்கள், சாலை வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஐந்தாவது திட்டத்தில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மக்கட் பெருக்கத்தைத் தடுத்தாக வேண்டிய முக்கியத்துவம் இந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆயினும்; இதில் அரசியல் காரணங்களும், பொருளாதாரக் காரணங்களும் உள்ளடங்கியுள்ளன. சில மாநிலங்களில் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்படுகிற அளவுக்கு அவை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை இழந்து விடுகின்றன. மத்திய உதவியும் குறைகிறது. இதே போலச் சமயங்களுக்கிடையே வேறுபாடுகளும் தலை காட்டுகின்றன. இந்த அம்சங்களையெல்லாம் நீக்கிடத் தக்க புதிய கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

தொழில் உற்பத்தியின் விகிதாசாரம் பற்றி இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. கடந்த சில ஆண்டுகளில் புதிய முதலீடுகள் குறைந்து கொண்டே வந்துள்ளன. பெரிய தொழில் நிறுவனங்களைப் பற்றியும் கூட்டுத் தொழில் பற்றியும் நமது கொள்கை இன்னது என்று நாம் அறிவித்திட வேண்டும். இது பற்றி நாம் பரிசீலிக்கிற இந்நேரம், தொழில் வளர்ச்சியில் தொழில் முதலீட்டு வாரியங்கள் வகிக்கக் கூடிய முக்கியப் பங்கினைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். பெரும் பெரும் தொழில்களை நடத்தும் நிறுவனங்களிடையே உற்சாகம் குன்றியுள்ளதால் தொழில் முதலீட்டு வாரியங்களே புதிய தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திட முடியும். இத்தகைய வாரியங்களை நாம் ஊக்குவித்திட வேண்டும். நிதியளவிலும், தேவையான அளவுக்கு மத்திய முதலீட்டு நிறுவனங்கள் மாநில முதலீட்டு வாரியங்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

1972 மே மாதத்தில் தேசிய வளர்ச்சிக் குழுவில் நான் பேசிய நேரத்தில் அந்நியத் தொழில் நுணுக்க உதவியை நாடுவதில் பயனை நாட்டமாகக் கொண்டதோர் அணுகுமுறை வேண்டினேன். இரசாயன உரம், பெட்ரோலியப் பொருளுற்பத்தித் துறைகளில் இத்தகைய அணுகுதல் இருக்கக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டின் பொருளாதாரத்துக்கும், நாட்டிற்கும் முக்கியத்துவமிக்க மற்றொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தற்போதைய வரி விதிப்பு அமைப்பின் காரணமாகப் பெருமளவு பணம் கணக்குக்கு வராமல் போகிறது. வருமான வரியானது அளவை மீறியிருப்பது சமநீதிச் சமுதாய அமைப்புக்கு ஒத்ததாக இருக்கலாம். ஆனால், இது தனியாரின் செயலூக்கத்தைக் கெடுப்பதாகவும் உள்ளது. ஏகபோக ஆதிக்கப் பெரு முதலாளித்துவத்தை அகற்றிடுவது நம் கொள்கை என்றாலும், ஒரு கலப்புப் பொருளாதாரத்தில் தாங்களும் சேமித்துப் பிறருக்கும் வேலை வாய்ப்புக்களை அளித்திடக்கூடிய நடுத்தர வர்க்கத்தை நாம் ஒழித்து விடக் கூடாது. சேமித்து முதலீடு செய்யக் கூடியவர்களை வளர்த்தாலன்றி நம்மால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட முடியாது. இந்தக் கருத்தின் அடிப்படையில் சேமித்திடக் கூடியவர்களான நடுத்தர வர்க்கத்தினரை மேலும் மேலும் வருவாய் தேடும்படியாக ஊக்குவித்திட வேண்டும். இந்தப் பாதையில் நாம் துணிந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும். தற்போது இந்த மக்கள், முறையான வழிகளில் வருவாய் தேடியும், தேடிய வருவாயை முதலீடு செய்யவும் தேவையான ஊக்கம் அவர்களுக்கு இல்லை. வரி ஏய்ப்புகளால் நாட்டின் பொது நிதிக்கு இழப்பு ஏற்படுவதோடு ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கின்றன. இந்த அளவுக்கு நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய சேமிப்புப் பாதிக்கப்பட்டுக் குறைகின்றது. இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கிற நேரத்தில் நாம் சித்தாந்தத்தின் பிடியில் சிக்கிவிடக் கூடாது. ஒரு யோசனை கூறிட நான் விரும்புகிறேன். நடுத்தர வருவாய் உள்ளவர்கள், தொழில் வல்லுநர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருவாய் தேடுவார்களானால் அவர்கள் அரசினர் கடன் பத்திரங்களிலோ அல்லது பிற்பட்ட பகுதிகளில் தொழில்களிலோ முதலீடு செய்ய முற்படுவார்களேயானால் வரிச் சலுகை அளிக்கலாம். இவ்வாறு செய்யப்படுமானால் வரி ஏய்ப்புச் செய்வதில் ஆர்வம் குறையும். வரிகளைப் பற்றி விசாரணைக் குழுவினிடம் இந்த அம்சத்தையும் ஆராயும்படிக் கூறலாம்.

வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் நம்முடைய பிரதானப் பிரச்சினைகளாகும். முடிவெடுக்க முடியாமல் நவிப்பதும் வெற்றுத் தீவிர வாதங்களும் இவற்றுக்கான தீர்வு காண நமக்கு உதவிட மாட்டா. இந் நாட்டிலிருந்து வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்திடப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களது அரசு எடுக்கும் எல்லாச் சமதர்ம முடிவுகளிலும் எங்களது முழு நிறைவான ஒத்துழைப்பும் இருக்குமென்பதைத் தமிழ்நாடு அரசின் சார்பில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சிகளுக்கப்பாற்பட்ட - பிராந்திய எல்லைகளைக் கடந்த தேசியப் பிரச்சினைகளாக இந்தப் பிரச்சினைகளை நாம் கருத வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**19-1-73 அன்று டில்லியில் கூடிய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.**

## சமதர்மப் பணிகளுக்குத் துணை நிற்போம்!





# மின்வெட்டு ஏன்?

நீர் மின்திட்ட வளர்ச்சியிலும், மின்சாரத்தைப் பயன்படுத்துதலிலும் மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. அது மட்டுமல்ல; மின் உற்பத்தியிலும், மின்சாரத்தைப் பயன்படுத்துதலிலும் தமிழகம் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது. கிராம மின் வசதித் திட்டம் தமிழகத்தில் அநேகமாக நிறைவு பெற்றுவிட்டது. எஞ்சியுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் 1973-க்குள்ளாக மின் வசதி அளிக்கப்பட்டுவிடும். வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பதில் தமிழகம்தான் முதலிடம் பெறுகிறது.

மின் துறையில் வளர்ச்சித் திட்டங்கள்பெருவாரியான அளவில் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டும், சில தவிர்க்க முடியாத காரணங்களினால், தமிழகத்தின் மின்சாரத் தேவையை முழுமையான அளவுக்கு நிறைவு செய்ய முடியாமல், மின்சார வெட்டு ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. பெரும் மழைதான் இப்பொழுது பெய்துள்ளதே, அதற்குப் பிறகும் மின்சார வெட்டு ஏன் நீடிக்கிறது என்ற ஐயப்பாடு எழாமல் இல்லை. தமிழகத்தில் பெரும் மழை பெய்தது, உண்மைதான். ஆனால், இந்த மழை, தமிழகத்தில் முக்கிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் பெய்யவில்லை. குந்தா, பைக்காரா போன்ற மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் மழை இல்லை. தென் மேற்குப் பருவ மழை இவ்வாண்டு பொய்த்து விட்டது. இதனால் நீலகிரி மலைப் பகுதிகளிலும் மற்றப் பகுதிகளிலும் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர்க் கொள்ளளவு வெகுவாகக் குறைந்து விட்டது. அதனால் மின் உற்பத்தி குறைந்து விட்டது.

தமிழகத்தில் மின் வெட்டு ஏற்பட முக்கியக் காரணங்கள்:—

(1) தென் மேற்குப் பருவ மழை பொய்த்து விட்டது.

(2) நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் மின்சாரத்தின் அளவு வெகுவாகக் குறைந்து விட்டது.

(3) ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாடு இப்பொழுது அதிகமான அளவில் மின்சாரத்தை வாங்க முடியவில்லை. அந்த மாநிலங்களிலேயே மின்சாரப் பற்றுக் குறை இருப்பதால் அவை தமிழகத்திற்குத் தேவைப்படும் மின்சாரத்தை வழங்க இயலாத நிலையில் உள்ளன.

(4) தமிழ்நாட்டில் மின்சாரத்தைப்பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும், மின்சாரத்தின் தேவையும் கணிசமான அளவுக்குப் பெருகிக்கொண்டே போவது.

தென்மேற்குப் பருவ மழை இவ்வாண்டு வெகுவாகப் பொய்த்து விட்டது. அதனால் மின் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களில் நீர்க் கொள்ளளவு வெகுவாகக்குறைந்து விட்டது. கடந்த ஆண்டு இருந்த கொள்ளளவு 1695 மிலியன் யூனிட்டுகள். அதற்கு முந்தைய ஆண்டு 876 மிலியன் யூனிட்டுகள். ஆனால் 1–10–1972-ல் உள்ள அளவு 536 மிலியன் யூனிட்டுகள்தான். மழை இல்லாத காரணத்தினால் இந்தக் குறைவு ஏற்பட்டுள்ளது.

நெய்வேலியிலிருந்து நமக்குக் கிடைக்கும் மின்சாரமும் வெகுவாகக் குறைந்துவிட்டது. நெய்வேலி அனல் மின் நிலையத்தின் மொத்த நிறுவனத்திறன் 600 மெகவாட்டுகள். இந்த நிலையத்தில் ஆண்டொன்றுக்குச் சுமார் 3,500 மிலியன் யூனிட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். அவர்கள் பயன்படுத்தியது போக, தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவேண்டியது ஓராண்டுக்கு 3,000 மிலியன் யூனிட்டுகள். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த அளவு கிடைப்பதில்லை. கிடைக்கின்ற மின்சாரத்தின் அளவு குறைந்து கொண்டே போகிறது.

1969–70-ல் கிடைத்தது 1952 மிலியன் யூனிட்டுகள்.

1970–71-ல் கிடைத்தது 1521 மிலியன் யூனிட்டுகள்.

1971–72-ல் கிடைத்தது 1922 மிலியன் யூனிட்டுகள்.

1972–73-ல் கிடைக்கக்கூடியது 1620 மிலியன் யூனிட்டுகள்தான்.

ஆக, ஆண்டொன்றுக்கு நெய்வேலியிலிருந்து நமக்குக் கிடைக்காமல் போகும் மின்சாரத்தின் அளவு 1,000 த்திலிருந்து 1,500 மிலியன் யூனிட்டுகள்வரை ஆகியுள்ளது. நெய்வேலியில் மின் உற்பத்திக்குறை தமிழ்நாட்டில் பிரம்மாண்டமான அளவில் மின்சாரப் பற்றுக் குறையை ஏற்படுத்தியுள்ளது.

அண்டை மாநிலங்களிலிருந்தும் மின்சாரத்தைக் கணிசமான அளவு நாம் வாங்க முடியவில்லை. அந்தந்த மாநிலங்களில் உள்ள கட்டுப்பாட்டின் காரணமாக, நாம் அவர்களிடமிருந்து பெறும் மின்சாரத்தின் அளவும் குறைந்து விட்டது.



தமிழ்நாடு வாங்கிய மின்சாரத்தின் அளவு

| | 1969–70 | 1970–71 | 1971–72 | 1972–73 |
|---|---|---|---|---|
| கேரளத்திலிருந்து | 303 மெ.வா. | 335 மெ.வா. | 336 மெ.வா. | 252 மெ.வா. |
| மைசூரிலிருந்து | 206 மெ.வா. | 724 மெ.வா. | 3 மெ.வா. | ஒன்றுமில்லை. |
| | 509 | 1,059 | 339 | 252 |

1971–72-லும் அண்டை மாநிலங்களிலிருந்து பெறப்படும் மின்சக்தி அளவு குறைவாக இருந்தாலும், தென்மேற்குப் பருவமழை இருந்ததால் நமது நீர்த்தேக்கங்களில் கொள்ளளவு திருப்திகரமாக இருந்தது. அதனால், மின்சாரப் பற்றுக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள முடிந்தது. ஆனால், இந்த ஆண்டுப் பருவக் காலத்திலோ 27–6–1972-ல் நமது நீர்த் தேக்கங்களில் 168·5 மிலியன் யூனிட்டுகள் கொள்ளளவுதான் இருந்தது. தொடர்ந்து கொள்ளளவு குறைந்து கொண்டே போய், இன்றைய நிலையில் மிகவும் குறைந்து விட்டது.

அத்துடன் மின்சாரம் உபயோகப்படுத்தப்படும் அளவும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது.

பயன்படுத்தப்பட்ட மின்சாரம் (மிலியன் யூனிட்டுகள்).

| | 1970 | | 1971 | | 1972 | |
|---|---|---|---|---|---|---|
| ஜுன் .. .. | 511 | 11% | 557 | 7·8% | 596 | 8% |
| ஜூலை .. .. | 515 | 10·8% | 563 | 9·3% | 627 | 11·4% |
| ஆகஸ்ட் .. | 491 | 11·2% | 542 | 10·4% | 629 | 16% |
| செப்டம்பர் .. | 509 | 9·9% | 552 | 8·5% | 607 | 10% |

ஆக, மின்சாரத்தின் தேவை பெருகிக் கொண்டே போகின்ற அதே நேரத்தில்; நீர்த்தேக்கங்களில் கொள்ளளவுக் குறைவு, நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரம் குறைந்து போனது, அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கும் மின்சார அளவு குறைந்து போனது, இவையெல்லாம் சேர்ந்து இன்றைய மின்சாரப் பற்றுக்குறையை உருவாக்கியுள்ளன. கடந்த ஆண்டு தமிழகத்து நீர்த்தேக்கங்களில் இருந்த கொள்ளளவில், இந்த ஆண்டு உள்ள கொள்ளளவு 35 சதவிகிதம்தான். இப்படிப்பட்ட தவிர்க்க முடியாத காரணங்களினால்தான் மின்சார வெட்டு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியான நிலையில், மின்சாரத்தை வீணாக்கக் கூடாது. ஆடம்பரத்திற்கும் அலங்காரத்திற்கும் வீணாக்கப்படும் ஒவ்வொரு யூனிட் மின்சாரமும், நாட்டின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் அடிப்படைகளான தொழில் வளர்ச்சிக்கும் வேளாண்மை வளர்ச்சிக்கும் மிகவும் அவசியம் தேவைப்படுகிற ஒன்று என்பதை ஒவ்வொரு குடிமகனும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆடம்பரங்களுக்கும், விழாக்களுக்கும் அலங்காரங்களுக்கும் எவ்வளவு சிக்கன முறையில் மின்சாரத்தைக் கையாள வேண்டுமோ, அவ்வளவு சிக்கனமாகக் கையாள வேண்டும். எல்லாரையும் பாதிக்கின்ற பொதுப் பிரச்சினை இது. ஆகவே ஒவ்வொருவருக்கும் இதில் பங்கு உண்டு. சிக்கனமாக மின்சாரத்தை உபயோகப்படுத்த வேண்டும். எத்தனையோ பயனுள்ள காரியங்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. வீண் ஆடம்பரங்களுக்கும் அலங்காரங்களுக்கும் மின்சாரத்தை வீணாக்காதீர்கள். ஓரளவு நெருக்கடியைச் சமாளிக்கத் தொழிலதிபர்கள் சொந்தமாக டீசல் உற்பத்திக் கருவிகளைப் பயன்படுத்தலாம். இவற்றைப் பயன்படுத்த விரும்புவோர் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவியைப் பெறலாம்.

மொத்தத்தில் இன்று ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றுக்குறையை ஒரு பொதுப் பிரச்சினையாகக் கருதிப் போர்க்கால முறையில்-அந்த அடிப்படையில் இதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, செயல்பட்டோமேயானால் நிச்சயமாக இந்த நெருக்கடியை வெகு விரைவில் போக்கிக்கொள்ள நம்மால் முடியும். அனைவரும் தங்கள் மேலான ஒத்துழைப்பினை நல்க வேண்டுமென மின்வாரியம் கேட்டுக் கொள்கிறது.

—வ.ச.

## விளக்கமும் வேண்டுகோளும்






# ஒருமைப்பாட்டுக்கு ஓர் உயர்ந்த திட்டம்

கல்வி நிலையங்கள், அறிவுக் கண்களைத் திறந்து விடும் ஆலயங்கள். அந்த ஆலயங்களில்தான் அநேக அற்புத நிகழ்ச்சிகள் உருவாகின்றன. பெற்றோரின் அரவணைப்பிலே சிலகாலம் இருந்து, மழலை பேசி, அவர்களை மகிழ்வூட்டி வாழும் பிஞ்சுக் குழந்தைகள், பெற்றோரை மறந்து, எதிர்காலக் கடமை வீரர்களாக மாறுவதற்கு அனுப்பப்படும் பயிற்சி நிலையம்தான் பள்ளிக்கூடம்.

செல்வத்திலே பிறந்த சிறாராக இருந்தாலும், வறுமைச் சேற்றிலே நெளிகின்ற சிறுவர்களாக இருந்தாலும் அறிவாலயத்தில் அனைவரும் ஒன்றே! எழுத்தறிவிக்கும் ஆசிரியன் என்னும் இறைவனின் முன்னே எல்லாரும் சமமே!

சீருடை அணிந்து, சித்தத்தில் ஒருமைப்பாட்டு உணர்வுடன் நாள்தோறும் பள்ளிக்கு வந்து செல்லும் சிறுவர் சிறுமியரிடையேதான் எவ்வளவு அன்பு, எவ்வளவு ஆர்வம், எவ்வளவு ஒற்றுமை!

உயர்ந்தவர், தாழ்ந்தவர்; பணக்காரர், ஏழை என்ற வேற்றுமைகள் பள்ளிப்பருவத்துக் குழந்தைகளிடம் பரவுவது கிடையாது. பாடும் பறவைகளாக—ஆடும் மயில்களாகத் திரியும் இளம் மாணவர் உலகத்திற்கு எந்தத் தொல்லையும் கிடையாது. ஒட்டடை போக்கி, வெள்ளையடிக்கப் பெற்ற—பொங்கற் காலத்து இல்லங்களைப் போல, என்றும் சுத்தமாக—மாசு மருவற்றுப் பொலிவு பெற்று விளங்கும் உள்ளங்களுக்குச் சொந்தக்காரர்கள் பள்ளி மாணவர்கள்.

எனவேதான், இரக்கக் குணமும், இளம் உணர்வும் கொண்ட மாணவச் செல்வங்களிடம் உயர்ந்த நோக்கங்களையும், ஒருமைப்பாட்டு உணர்வையும் எளிதில் புகுத்த முடிகிறது.

பள்ளிப்பருவத்தைத் தாண்டிய பின் அவர்களில் சிலர் கல்விப் பயணத்தைத் தொடரும் வாய்ப்புப் பெறுகிறார்கள்; மிகப் பலர் வாழ்க்கைப் பாதையை நாடிச் செல்கிறார்கள். அதனால்தான், எந்த ஒரு திட்டத்தையும் பள்ளிப் பருவத்திலேயே அறிமுகம் செய்வது தேவையாகி விடுகிறது.

ஆத்திசூடியையும், கொன்றை வேந்தனையும், நீதிநெறி விளக்கத்தையும், மூதுரையையும் கல்லூரிகள் எடுத்துச் சொல்வதில்லை. அடிப்படைக் கல்வி நிலையங்களே சொல்லித் தந்து விடுகின்றன.

ஈசாப் நீதிக் கதைகளையும், பஞ்சதந்திரக் கதைகளையும் கல்லூரிகள் சந்திக்க வாய்ப்பில்லை. அவை, பள்ளிகளிலேயே உலா வருகின்றன.

எனவேதான், வளரும் பயிர்களின் வாழ்வு செழிக்க உதவும் பருவமழை போலப் பள்ளி மாணவர்கள் நலம் பெறுவதற்குப் பயன்படும் திட்டங்களை உருவாக்கும் அரசு, அந்தத் திட்டங்களைப் பள்ளிகளிலேயே அமல் செய்கின்றது.

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வலியுறுத்தும் வகையில்—தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு பெருக வேண்டும் என்ற கருத்தில்—மத்திய அரசின் கல்வித்துறை நிறுவனமான தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு (National Council of Educational Research and Training) ஒரு புதிய திட்டத்தை 1969-ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கிச் செயலாற்றி வருகிறது.

பள்ளி மாணவர்களின் உள்ளங்களில் தேசிய ஒருமைப்பாட்டுணர்வினை ஊட்டுவதற்காக, அனைத்து மாநில மாணவர், ஆசிரியர் முகாம்களை (Inter-State–Student–Teacher Camps) உருவாக்கிப் பதினைந்து நாட்கள் பள்ளி மாணவ–மாணவியர்கள் கலந்து பழகுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தி வருகிறது மத்திய அரசின் கல்வித்துறை.

இதுவரை தமிழ்நாட்டில் மாணவருக்கெனக் கோயம்புத்தூரில் ஒரு மாணவர் முகாம் ( Boys Camp ) நடைபெற்றிருக்கிறது. அதன் பிறகு அண்மையில் 1972 டிசம்பர் 22-ஆம் நாள் முதல், 1973 சனவரி 4-ஆம் நாள் முடிய மாணவியருக்கான முகாம் ( Girls Camp ) சென்னை வேப்பேரியிலுள்ள பெண்டிங்க் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதைத் தவிர, இந்த ஆண்டில், இந்தியாவில் இன்னும் 5 முகாம்கள் நடைபெற்றிருக்கிறன.

குசராத், அஸ்ஸாம், கேரளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் மாணவர் முகாம்களும், இமாசலப் பிரதேசத்தில் மகளிர் முகாமும் நடைபெற்றிருக்கின்றன. குசராத்தில் நடைபெற்ற முகாமில், தமிழ்நாட்டு மாணவர்கள் கலந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு, ஆடவர் மகளிர் இருவரும் பங்கு பெறும் கலப்பு முகாம் (Mixed Camp) டெல்லியில் ஆய்வுக்காக உருவாக்கப்பட்டிருக்கிறது. டெல்லி, பஞ்சாப், மராட்டியம், ஜம்மு-காஷ்மீர், மேற்கு வங்கம், இராஜஸ்தானம், குசராத், கேரளம் ஆகிய

மாநிலங்களைச் சார்ந்த மாணவர்களும் மாணவியரும் பங்கு பெறும் இந்த முகாம் வெற்றி பெற்றால், எதிர்காலத்தில் இது போன்ற கலப்பு முகாம்கள் அதிகம் உருவாகலாம்.

சென்னையில் நடைபெற்ற மகளிர் முகாமில் அஸ்ஸாம், இமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ் நாடு ஆகிய 5 மாநிலங்களைச் சேர்ந்த மாணவியர் பங்கு பெற்றனர்.

ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் 3 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றன. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 5 மாணவியர் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். 14 வயதுக்கு மேலும், 16 வயதுக்கு மேற்படாமலும் உள்ள மாணவியர்தாம் இந்த முகாமில் கலந்து கொள்ள முடியும் என்பதால், ஒரு மாநிலத்துக்கு 15 மாணவியர் வீதம் ஐந்து மாநிலங்களைச் சேர்ந்த 75 மாணவியர் இந்த முகாமில் கலந்து கொண்டார்கள். பள்ளிக்கு ஓர் ஆசிரியை வீதம் 15 ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

இந்த முகாம்களில் மாணவியர்கள் பல அலுவலாளர்



களின் உரைகளைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றார்கள். புது டில்லியிலுள்ள ஐ.எஸ்.சி. தேர்வுக்குத் தேர்வுக்குழுவின் செயலாளர், தமிழ்நாடு, பாண்டிச்சேரி, மைசூர் ஆகிய மாநிலங்களின்

கள ஆலோசகர் ( Field Adviser ) ஆகியோர் மாணவியருக்கு உரையாற்றியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

மாணவியர் இந்த முகாமுக்கு வந்தவுடன் அவர்களுக்கு ஒரு தேர்வு வைக்கப்படுகிறது. அது முன் தேர்வு ( Pre-Test ) என்று வழங்கப்படுகிறது. பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு தேர்வு வைக்கப்படுகிறது. அது Post Test என்று வழங்கப்படுகிறது. அதன் பிறகு முகாம் முடிவடைவதற்கு முன்னர் Evaluation Test என்று ஒரு தேர்வு வைக்கப்படுகிறது. இந்தத் தேர்வில் கேட்கப்படும் வினாக்கள், உளநூலின் அடிப்படையில் உருவானவை. அந்தக் கேள்விகளில் ஒரு சில :

இந்த முகாமில் எந்த மாணவியுடன் நீ நன்கு பழகினாய் ?

அந்த மாணவியின் எந்தச் சிறப்பம்சம் உன்னைக் கவர்ந்தது ?

இது போன்ற வினாக்கள் கேள்வித் தாளில் இருக்கும். முகாமில் கலந்து கொள்ளும் மாணவியர் இவற்றிற்குப் பதில் எழுத வேண்டும். விடைத் தாள்கள் டெல்லியில் உள்ள கல்வி அமைச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கே அவை திருத்தப்படுகின்றன. விடை எழுதியவர்களுக்கு அந்த விடைத் தாள்கள் அனுப்பப்படுவதில்லை.





ஆனால், மாணவியரின் உள்ளங்களையும், அவர்கள் ஒருமைப்பாட்டு உணர்ச்சியில் எந்த அளவுக்குப் பக்குவப்பட்டு வருகிறார்கள் என்பதையும் இந்தத் தேர்வினால் அறிந்து கொள்ள முடிகிறது

இந்த முகாம்களுக்கு ஆகின்ற செலவு, மத்திய அரசினால் கொடுக்கப்படுகிறது. மாணவியரின் உணவுச் செலவு, தங்கும் இடச் செலவு, பயணச் செலவு ஆகிய அனைத்தையும் கொடுத்துக் கைச் செலவுக்காக ஒவ்வொருவருக்கும் 15 ரூபாயும் கொடுக்கிறார்கள்.

இந்த முகாமில் மாணவியருக்கு நாள்தோறும் திரைப்படக்காட்சிகள் நடைபெற்றன. திரைப்படம் என்றால், புகழ்பெற்ற நட்சத்திரங்கள் மின்னிவரும் படங்களல்ல ; வெளிநாட்டு மக்களின் வாழ்க்கையை எடுத்துரைக்கும் செய்திப் படங்கள். அவை படங்கள் மட்டுமல்ல—பாடங்களாகவும் திகழ்ந்தன. ஜப்பான் ஜெர்மனி, ஆகிய நாட்டுக் குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோரைப்பற்றிய செய்திப் படங்கள் காண்பிக்கப்பட்ட போது, முகாமில் கலந்து கொண்ட மாணவியர் மிகமிக ஆர்வத்துடன் ரசித்துப் பார்த்தனர்.

மாணவியர், மாமல்லபுரம், காஞ்சி, வேடந்தாங்கல், சென்னைத் துறைமுகம், ஆகிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தச் சுற்றுலா, அவர்களை மிகவும் கவர்ந்து விட்டது. வட இந்தியாவிலுள்ள அஸ்ஸாம், இமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஆகிய மூன்று மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த மாணவியர் கடலைப் பார்த்தது கிடையாது. கப்பலைப் பார்த்ததும் கிடையாது. அதனால் துறைமுகத்தையும், கப்பலையும் பார்க்க நேர்ந்த போது அவர்களின் அகமகிழ்வுக்கு அளவே இல்லை. கடல் தண்ணீர் கால்களிலே பட்டபோது ஒரு சில மாணவியர்க்கு மெய்சிலிர்ப்பே ஏற்பட்டு விட்டதாம்.

கடற்கரையில் பெருமதிப்புடன் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்ச்சான்றோர்களின் சிலைகள், வெளி மாநிலத்து மாணவியரின் அகங்களிலே புதிய சிந்தனையை உருவாக்கியிருக்கின்றன. அவை எவருடைய சிலைகள் என்பதை அந்த மாணவியர் நுணுகி நுணுகிக் கேட்டுத் தெரிந்து கொண்டார்களாம்.

கற்புக்கரசி கண்ணகியின் சிலையைப் பார்த்துக் கர்நாடக மாணவி ஒருவர் கேட்டார்,

'' கண்ணகி கடலைப் பார்த்து நிற்காமல் நகரத்தைப் பார்த்து நிற்கிறாளே, ஏன்? ''—என்று

'' கண்ணகி சிலை மட்டுமல்ல, மற்ற அனைவரின் சிலைகளும் நகரத்தைத்தான் நோக்குகின்றன. கடலை நோக்கவில்லை. காரணம், நகரத்து மக்கள் பார்ப்பதற்குத்தான் இந்தச் சிலைகள் உருவாகியுள்ளனவே தவிரக் கடல்நீர் பார்ப்பதற்காக அல்ல ''—பெண்டிங்க் மகளிர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியையும் அனைத்து—மாநில—மாணவியர்— ஆசிரியர் முகாமின் கௌரவ இயக்குநருமான திலகவதி பால் இப்படிப் பதில் தந்தபின், கர்நாடக மாணவி தெளிவடைந்திருக்கிறார்.

அஸ்ஸாம், உத்தரப்பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலத்தைச் சேர்ந்த மாணவியரும், மிகுந்த அக்கறை காட்டிச் சிலைகளைப் பற்றி அறிந்து கொண்டார்கள்.

மாணவியர், ஆளுநர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். தமிழக ஆளுநர் மேதகு கே.கே.ஷா அவர்கள் மாணவியரை மிகுந்த அன்பு காட்டி வரவேற்றார். அனைவருக்கும் தேநீர் விருந்தளித்தார். மாணவியரைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார்.

மாணவியர்கள் இந்த முகாம் நடைபெற்ற போது உருவாக்கிய கைத்திறன் பொருள்கள் இந்தப் பள்ளியில் ஒரு கண்காட்சியாகவே வைக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. காண்பவர் கண்களையும், கருத்தையும் கவரும் வண்ணம் அந்தக் கண்காட்சி அமைந்திருந்தது.

இந்த முகாமின் நோக்கம்—மாணவியர் ஒருமைப்பாடு உணர்வில் சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான் ! அதாவது மற்றவர்களோடு, மனந்திறந்து பழக வேண்டும் —சங்கோஜமோ, ஒதுங்கிச் செல்லுதலோ கூடாது ; ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாது உள்ளன்போடு வாழவேண்டும் என்பது இந்த ஒருமைப்பாட்டின் பொருள்.

அதனால்தான் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு மாணவி, மிகவும் உரிமையுடன் தனது தேவைகளைக் கேட்டிருக்கிறார்.

'' சாப்பாட்டிற்கு எனக்குக் கடல்மீன் வேண்டும் ''—இப்படிக் கேட்டாராம் அந்த மாணவி. உடனே கடல்மீன் வாங்கி வரப்பட்டு, சமையல்





செய்யப்பட்டு, அந்த மாணவிக்குக் கொடுக்கப்பட்டதாம். இங்கே ஓர் உண்மையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். வேறொரு மாநிலத்துக்கு வந்திருக்கிறோம்—அதிலும் ஒரு முகாமுக்கு வந்திருக்கிறோம் என்ற எண்ணம் இல்லாமல் தனது வீட்டிலே கேட்கின்ற பாவனையில் மனந்திறந்து, தனது தேவையை ஒரு மாணவி கேட்டிருக்கிறார் என்றால், அதற்குக் காரணம் என்ன? இந்த இடம் அயல் இடம் என்ற உணர்வு அந்த மாணவிக்குத் தோன்றாததற்கு என்ன காரணம்? தமிழ்நாட்டவரின் சிறந்த விருந்தோம்பும் பண்புதான்.

அது மட்டுமல்ல, வெளி மாநிலத்து மாணவியர்—அதிலும் குறிப்பாக வடபுலத்தைச் சேர்ந்தவர்கள்—நமது அரிசிச் சோற்றைச் சாப்பிடுவதற்கு முதலில் சிரமப் பட்டிருக்கிறார்கள். பிறகு, இரண்டு, மூன்று நாட்களுக்குள் எளிதில் பழகிவிட்டார்கள். அரிசிச் சோற்றைப் பல ஆண்டுகளாகச் சாப்பிடுபவர்களைப் போல அவர்கள் மாறிவிட்டார்கள். ஒருமைப்பாடு, உணர்வில் மட்டுமல்ல—உணவிலும் ஏற்பட வேண்டும் என்ற கொள்கைக்கு, அந்த மாணவியர்கள் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள்.

இந்த முகாமில், மாணவியர் நடத்திய கலை நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தகுந்தவை—பாராட்டத்தகுந்தவை.

அஸ்ஸாம் மாநிலத்து மாணவியரின் கிராமிய நடனம், இமாசலப் பிரதேசத்து மாணவியரின் கிராமிய நடனம், உத்தரப் பிரதேசத்து மாணவியரின் 'இது எனது இந்தியா' என்ற நடனம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கத் தவறவில்லை. நாட்டுப் பற்றினை எடுத்துரைக்கும் வகையில் கர்நாடக மாணவியர் ஆடிய நடனம் சிறப்பாக இருந்தது. இன்றைய விஞ்ஞான அறிவினைப் போற்றிப் பாராட்டத்தக்க வகையில் பெண்டிங்க் மகளிர் பள்ளி மாணவியர், ''நிலாவில் இறங்குதல்'' என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்திக் காண்பித்தார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னணி ஒலியும் ஒளி அமைப்பும் குறிப்பிடத்தக்க விதத்தில் அமைந்திருந்தன.

முகாமின் இறுதிநாள் விழாவில் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முகாமின் பணி பற்றியும், முகாமினால் ஏற்படும் பயன்பற்றியும், வரலாற்றுப் பின்னணியில் எடுத்துரைத்தார். மிகப் பழங்காலத்திலேயே வட இந்தியாவிலிருந்து தமிழகத்துக்கு வந்திருந்து காஞ்சியில் இருந்த பல்கலைக் கழகத்தில் பயின்ற செய்தியைச் சுட்டிக்காட்டி, ஒருமைப் பாட்டுணர்வில் தமிழகம் முன்னணியில் இருந்த செய்தியை எடுத்துரைத்தார்கள்.

சனவரி மாதம் 5-ஆம் நாள்.

அனைத்து மாநில—மாணவியர் தங்களது மாநிலங்களை நோக்கிப் புறப்படும் நாள்!

புகைவண்டி நிலையத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு—மாணவியரின் கண்கள் குளமாகிவிட்டன. குரல் தழுதழுக்கத் தொடங்கிவிட்டது. தமிழ்நாட்டிற்கு வந்து பதினைந்து நாட்கள் பழகியதற்குள் அன்புப் பிணைப்பு—பாச உணர்வு அவர்களை ஈர்த்துவிட்டது. பல்லாண்டுகளாகப் பழகியவர்களை விட்டுச் செல்வது போன்ற ஏக்க உணர்வு அந்த மாணவியருக்கு ஏற்பட்டுவிட்டது. பிரியா விடை பெற்றுச் சென்றனர். மாணவியர் மட்டுமல்ல—ஆசிரியைகளே அந்த நிலைக்கு ஆளாகிவிட்டனர். அஸ்ஸாம், இமாசலப் பிரதேசம், ஆகிய மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியைகள்—வாய் விட்டே அழுதுவிட்டனராம். இனிமேல் என்று, எப்போது சந்திக்கப் போகிறோம் என்ற ஏக்கம்—அன்புடன் பழகியவர்களை விட்டுச் செல்கிறோம் என்ற வேதனை—இவைதாம் அவர்களுக்குக் கலக்கத்தையும் கண்ணீரையும் வரவழைத்துவிட்டன.

விதை விழும் நிலத்தைப் பொறுத்துத்தான் விளைச்சல் இருக்கும் என்பார்கள். தமிழ் நிலம் நல்ல நிலம். எனவேதான் இங்கே அன்புப் பயிர் செழித்து வளர்கிறது. இங்கு வந்து செல்வோரை அந்தப் பயிர் கவர்கிறது. ஒருமைப் பாட்டு உணர்வு தமிழ்நிலத்திற்கு எப்போதும் உண்டு என்பதைத்தான் மற்ற மாநிலத்து மாணவியரின் 'பிரியாவிடைக் காட்சி உறுதிப் படுத்தியிருக்கிறது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மண்ணில் ஒலித்த அமுதவாக்கு—உயர்ந்த நோக்கு இன்று பல நாட்டவராலும் போற்றிப் புகழப்படுகிறது—ஏற்றுப் பெருமைப்படுத்தப் படுகிறது என்பதை எண்ணும் போது நமது சிந்தை எல்லாம் தேனாய்ப் பாய்கிறது—அது நியாயந்தானே!







செண்டை விழி. கருவண்டு நிகர் கூந்தல். குங்கும வண்ணத்தில் குறுநகையைச் சிந்துகின்ற அந்தி வானத்துச் சிவப்பெல்லாம் அவள் இதழில்! ...... கன்னத்தில்! தாங்குமோ அன்றித் தளர்ந்து வளையுமோ என்றெண்ணத் தோன்றும் வகையிலே இடையழகும். இளமைப் பேரழகும் போட்டியிடும், பொற்பாவை அலைதோறும் அலைதோறும் வருகின்ற நுரை போல, அவள் உதிர்க்கின்ற சொல்லில் எல்லாம் சுவை மணக்கும் தேன் துளிகள். நிலம் நோகும் என அஞ்சும் அவள் நெஞ்சம் நடையழகில் தெளிவாகும். சிப்பியிலே முத்து விளைகின்ற உண்மையினைப் பொய்யாக்கும் அவள் சிரிக்கின்ற போது தெரிகின்ற நிலவின் ஒளி! யாழினிலே, குழலினிலே இனிய இசைதான் எழும் என்போர், மறைந்திருந்து அவள் பாட்டைக் கேட்டு ''யார் சொன்னார்; யாழ் குழலின் பாட்டும் உண்டு'' எனக் கருத்தை மாற்றிக் கொள்வார்.

அவன் பெற்ற பேறே அரும் பேறு என வாழ்த்தியது அவனைப் பெற்றவனை உலகம். ''உனைப் பெற்றவரை வணங்குகிறேன் தமிழே! உயிரே! ஓவியமே' உனைப் பிரிந்து ஒரு கணமும் நில்லாது என்றன் கூடு'' என உறுதி எடுத்துக் கொண்டு அருகிருந்தான். இலக்கியத்து எழிலெல்லாம், காவியத்துச் சுவையெல்லாம் அவளோடு வாழ்வதிலே காண்கின்றோமே எனப் பெருமை கொண்டிருந்தான்!

அத்தகையோன் எப்படித்தான் அவளைப் பிரிந்தான் என்று ஊரெல்லாம் வியப்பினிலே மூழ்கிவிட, அவள் விழிகள் நீரூற்றாய் மாறிவிட, நிலைமை யொன்று உருவாகித் தனியானாள்.

'' தேனமுதம் தெவிட்டியதோ வானமுத வதனத்தை மறந்

## தேனலைகள்

தானோ? ஏன் கிளியே! உனக்கிந்த இன்னல்?'' என்று ஊர்ப் பெண்கள் கேள்வி போட்டார்.

''உள்ளத்தை ஒப்படைத்தேன். உயிர் மூச்சு அவரென்றே எண்ணிக் கிடந்தேன். பனித் துளியால் சுகம் பெற்ற மலர்மீது பாலைவனக் கடுங் காற்று வீசுமென்று நினைக்கவில்லை. இரு கிழமை அவள் உள்ளம் நிலையாக இருக்கவில்லை. அதனை அவர் பேச்சாலே உணர்ந்து கொண்டேன். இப்படியாகுமென்று அப்போது தெரியாது தோழி.'' என அழுதாள் தமிழ்ப்பாவை.

''கலங்காதே, கண்ணீர் சிந்தாதே! வழியொன்று சொல்லுகின்றேன் கேள்! ஆற்றுக்குத் தென் புறத்தில் அழகான சோலையிடை யிருக்கின்ற புத்தரது கோயிலுக்குச் சென்று, குறை சொல்லி முறையிட்டால் கொழுநன் திரும்பிடுவான் நிற்காதே போ'' என்றாள் உயிர்த் தோழி.

அங்ஙனமே அவள் சென்றாள். ''அருள் வடிவே! அன்பின் பிழம்பே! செயற்கரிய செய்திட்ட சித்தார்த்தப் பெருமானே! போதி நிழலாலே உலகுக்குக் குளிர் தந்தாய்! இன்று உன் நிழலால் என் துயரம் போக்கிடுவாய்! அழகரசன்; என் ஆளன்; உயிர்த் துணைவன், 'பிரிவு' எனும் வேதனையைத் தர மாட்டேன் எனச் சொன்ன என் அத்தான், அவரில்லை என்னிடத்தில் இப்போது! எங்குற்றார்? ஏன் சென்றார்? என்ற சேதி தெரியாது இவ்வேழைக்கு! தூயவனே! என் துன்பம் துடைத்திடுவாய்; காசினியோர் வாழ்வதற்கு வழி சொன்ன பெரியவனே! கருணைக் கடலே! அலைக் கரத்தால் வறண்ட கரையை நீ நனைத்து விடு! என் மனத்தை மகிழவைப்பாய்'' என அழுதாள், தொழுதாள். விளக்கேற்றி வைத்து விழி நீரைச் சிலைமுன்பு சிந்தி நின்றாள். சிலை பேசிற்று. கண் மூடிக் கொண்டு அதைக் கேட்டாள்,

''பெண்பாவாய், கணவன் பிரிந்துவிட்ட கவலைதனை என்னிடத்தில் உரைக்க வந்தாய். என்னே மதி உனக்கு! அழகுமனையாட்டி-அவளருகே உறங்குகின்ற அருமைச் செல்வம் - இருவரையும் ஏங்கவிட்டு ''அன்பு'' போதிக்கத் துறவு பூண்டவன் நான். அவனிக்கு நான் தந்த படிப்பினையோ, அன்பு....அன்பு

முதல்வர் கலைஞர்

: அன்பு'.... ஆனாலும், அந்த அன்புதனை எனை நம்பி வாழ்ந்திட்ட துணைவியிடம், அவள் பெற்ற பிள்ளையிடம் காட்டாமல் வெளிவந்தவன் நான். கணவனைப் பிரிந்த உன் கவலையைப் புரிந்து கொள்ளும் சத்தி எனக்கில்லை.

''போ-போ!''

குரல் கேட்டாள். ''அய்யோ பகவானே!'' என அழுதாள்.

சிரிப்பொலி கேட்டது. விழி திறந்தாள். சிலைக்குப் பின்னிருந்து அவள் கணவன் வந்திட்டான்.

அத்தான் எனப் பாய்ந்தாள்.

அணைத்தபடி, ''ஆருயிரே! விளையாடிப் பார்த்தேன் உன்னோடு—அதற்குள் நீ வேதனை உருவாகி விட்டாயே; வா வா போவோம்'' என்றான்.

''சித்தார்த்தன் அருள்'' என்றாள்.

''அவர் அருளியது உலகை வாழ்விக்கும் உயர் கொள்கை. உன்னையும் என்னையும் சேர்த்து வைக்க—உலகோரின் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் காணிக்கைக் கூலி பெற அவரில்லை.; அந்தோ அவரைக் கடவுளாக ஆக்கிவிட்டார்—தீமை! தீமை!!'' என்றான்.

''பின்னர் பேசியது யார்?'' என்றாள்.

''சிலையல்ல; நானே!'' என்றான்.

தழுவிக் கொண்டார்.





# சொக்கவைக்கும் தமிழ்நாடு

சேல் குதிக்கும் மலர்ச் சோலை. தேன் குதிக்கும் நான்கு திக்கும் என்று கூறப்பட்டிருப்பது மொழியின் அழகுக்கு மட்டுமல்ல; தமிழ் நிலத்தின் எழிலுக்கும் முற்றிலும் பொருத்தம்தான். எரிமலை இல்லை, அருவி உண்டு; பாலைவனம் இல்லை, சோலை எங்கும்! தமிழ்நாடு இப்படியல்லவா இருக்கிறது! காண்போரைச் சொக்கவைக்கிறது!

அதோ காவிரி! இதோ தாமிரபரணி! இந்த ஆற்றோரங்களிலே வளர்ந்த பண்பாடு எத்தகையது? இதோ உழவர்! இதோ கற்றுணர்ந்த பெரியோர்கள்! சிற்றறிவினரின் செயல் கண்டு வருந்தித் தலை குனிந்து விடுவது போலச் செந்நெல் கதிர்கள், பழமுதிர்ச் சோலைகள், வானை துள்ளும் வாவிகள்! சுருக்கமாகச் சொன்னால்—

பச்சை மாமலைகள்!

பாங்கான காட்சிகள்!

பாடும் அருவிகள்!

பயமற்ற மிருகங்கள்!

ஓங்கி வளர்ந்த மரங்கள்!

தேக்கங்கள்!

தேனாறுகள்!

இவை தமிழகத்தின் எழிலுக்கு எடுத்துக் காட்டுகள்.

# எண்ணெய் வளம்

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே!

உப்பு இருந்தும் சுவையற்ற பண்டம்?

அதுவும் சில சமயங்களில் குப்பைத் தொட்டியை நாடுவதுண்டு.

எந்த உணவுக்கும், பண்டத்துக்கும், இனிப்பு வகைக்கும் மிக முக்கியமாகத் தேவைப்படுவது எண்ணெய்தானே?

எண்ணெயற்ற பண்டம் எள்ளளவும் சுவைப்பதில்லை; அப்படியே அதை உண்டாலும் மன நிறைவு ஏற்படுவதில்லை.

உணவு வகைக்கு மிக இன்றியமையாத பொருளாகத் திகழும் கடலை எண்ணெய், தேங்காயெண்ணெய், நெய், டால்டா போன்ற வகைகளுள் நல்லெண்ணெய்யும் ஒன்று என்பது நமக்குத் தெரியும்.

நல்ல பாம்பு என்கிறோம்; அது உண்மையில் 'நல்ல' பாம்புதானா?

நல்ல எண்ணெய் என்கிறோம்; அது உண்மையில் 'நல்ல' எண்ணெய்தானா?

இதைக் கண்டுபிடித்து நல்லெண்ணெய் மிக நல்ல எண்ணெய்தான் என்று உத்தரவாதம் தருகிறது 'அக்மார்க்' முத்திரை.

நல்லெண்ணெய், கெட்ட எண்ணெய்யாக மாறுவது, நல்லெண்ணம் இல்லாதவர்கள் செய்யும் கலப்படத்தினால்தானே?

'அக்மார்க்' முத்திரையோடு கலப்படமில்லாத, நல்ல தரமான எண்ணெய்களைத் தயாரிக்கத் தமிழகத்தின் சில பகுதிகளில் எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று காஞ்சியிலுள்ள எண்ணெய் உற்பத்தியாளர், சோப்புத் தொழிலாளர் கூட்டுறவுக் குடிசைத் தொழிற்சங்கம்.

இந்தச் சங்கம் 1956-ல் துவக்கப்பட்டது. தற்போது பதினாறு அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்களின் பங்குத் தொகை ரூ. 8,735. ஐந்து இயக்குநர்களின் நிருவாகத்தில் இது சிறப்பாக இயங்கி வருகிறது.

இந்தச் சங்கத்திற்குத் தேவையான உதவிகளைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அளித்திருக்கிறது. மூலதனக் கடன், பங்குத் தொகைக் கடன் ஆகியவற்றுடன், அலுவலகக் கட்டடம் கட்டவும், தொழிற்கூடம், கிடங்கு கட்டவும் கடனும் மானியமும் தந்து உதவியுள்ளது கதர் வாரியம். சங்கத்தின் எல்லாவித முன்னேற்றத்திற்கும் கை கொடுத்து ஆதரவு தருகிறது இந்த வாரியம்.

இந்தக் கூட்டுறவுச் சங்கம், சங்க அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்கள் சொந்தமாகச் செக்கும் மாடுகளும் வாங்கக் கடனுதவி புரிகிறது; அந்தக் கடனைத் தவணை முறையில் பெற்றுப் பிறகு அவர்களுக்கே செக்கையும், மாடுகளையும் சொந்தமாக்குகிறது.

மாட்டுச் செக்கினால் எண்ணெய் தயாரிப்பது வேலையில் மந்த நிலைமை உண்டாக்குவதால், இப்போது மின்சாரத்தினால் இயங்கும் செக்குகளை அமைத்து வருகிறார்கள். இந்த உற்பத்திக் கூடத்தில் ஒரு மின் செக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இது புதுமையானது; தனியார் எண்ணெய் உற்பத்தியாளர்களிடம் இல்லாதது. சோலாப்பூரில் தயாரான இது, மதுரை, கன்னியாகுமரி எண்ணெய் உற்பத்திக் கூடங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. இந்த மின் செக்கின் விலை ரூ. 3,000.

பிற எண்ணெய் உற்பத்தியாளர்களிடம், ரோட்டரி, பிண்டோ செக்குகள் இருக்கின்றன. இவை இங்குள்ள மின் செக்கை விட விலை உயர்ந்தவை. இங்குள்ள உற்பத்திக் கூடத்தில் மாட்டுச் செக்குகள் பத்து உள்ளன. மின் செக்குகள் வெற்றிகரமாக நடப்பதால், மற்ற கூட்டுறவு எண்ணெய் உற்பத்திக் கூடங்களிலும் இவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின் செக்கினால் என்ன பயன்?

மாட்டுச் செக்கைவிட, மின் செக்கில் விரைவாக எண்ணெய் பிழிய முடிகிறது; எண்ணெய் கூடுதலாகக் கிடைக்கிறது; மாடுகளைப் பராமரிப்பதில் ஏற்படும் தொல்லைகளிலிருந்து விடுபட முடிகிறது; மாட்டுச் செக்கை ஓட்ட மூன்று பேர் தேவை; ஆனால், இதற்கு ஓர் ஆள் போதும்; மேலும், மின்செக்குக்கு ஆகும் மூலதனச் செலவு, ரோட்டரி, பிண்டோ செக்குகளுக்கு ஆகும் மூலதனச் செலவைவிட மிகக் குறைவு. மாட்டுச் செக்கில் ஒரு மூட்டை எள்ளை அரைக்க 13 மணி நேரமாகும்; மின் செக்கில் இந்த அளவு எள்ளை அரைக்க 8 மணி நேரமாகிறது.

எள் வித்துக்களைக் காய வைக்கப் பரந்த இடமும், உற்பத்தியாகும் எண்ணெய்களைப் பத்திரப்படுத்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனி அறையும் இருக்கிறது. ஆகவே, தயாரான பொருள்கள் வெளியே போக வாய்ப்பில்லை;

அதனால் கலப்படத்துக்கும் வழியில்லை.

நல்ல சுத்தமான நல்லெண்ணெய் என்று வேளாண்மைத் துறையினரால் 'அக்மார்க்' முத்திரையிடப்பட்ட பிறகே விற்பனைக்கு வெளியே கொண்டு போகப் படுகின்றது.

இங்கே உற்பத்தியாகும் நல்லெண்ணெய் அரசு சம்பந்தப்பட்ட துறைகளுக்கும், விடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. காதி விற்பனை நிலையங்களில் இந்தச் சுத்தமான எண்ணெய் விற்கப்படுகிறது. பிண்ணாக்குகள் அவ்வப்போது உள்ளூரிலேயே விற்கப்பட்டு விடுகின்றன. ஒரு நாளைக்குச் சராசரி 200 கிலோ நல்லெண்ணெய் இங்கே உற்பத்தியாகிறது. 1971–72-ஆம் ஆண்டில் 1,63,870 கிலோ எண்ணெய் ரூ. 4,17,700-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவர் திரு பி. கோபால். இவர் தற்போது மாட்டுச் செக்கை ஓட்டி வருகிறார். இவர் என்ன சொல்கிறார். தெரியுமா ?

''நான் பத்தாண்டுகளாக இந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன். இந்தத் தொழில் என் பரம்பரைத் தொழில். என்னுடைய தந்தையும், அண்ணனும் இதே தொழில்தான் செய்கின்றனர். ஒரு நாளைக்கு ஒரு மூட்டை எள் அரைத்துக் கொடுக்கிறேன். இதில் சுமார் 70 கிலோ எண்ணெய் கிடைக்கிறது. ஒரு நாளைக்கு எனக்கு ரூ. 11·50 வருமானம் கிடைக்கிறது. இதில் மாட்டுத் தீவனம், உதவி ஆளுக்கான கூலி ரூ. 6 போக மீதி எனக்குக் கிடைக்கிறது. இந்த மாடுகளையும், செக்கையும் நான் வாங்குவதற்காகச் சங்கம் எனக்கு ரூ. 600 கடன் தந்துள்ளது. இப்போது இவை எனக்கே சொந்தமாகிவிட்டன.

''தனியாரிடம் போய் வேலை செய்தால் இந்த வசதிகள் எனக்குக் கிடைத்திருக்குமா ? கூலி வேலை செய்கிறோம் என்ற உணர்வுதான் வருமே தவிரச் சொந்தமான ஒரு வேலை செய்கிறோம் என்ற மன நிறைவு ஏற்படுவதில்லை. இப்போது மின் செக்கை இயக்கவும் கற்றுக் கொண்டேன் '' என்று மன நிறைவோடு கூறுகிறார் இவர்.



### ஏற்றுமதியாகும் தமிழகப் பொருள்கள்

அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேசன் தமிழகத்திலிருந்துவெளிநாடுகளுக்குபுதிய பொருள் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. கொய்னு உப்பே அப்புதிய பொருளாகும். வர்த்தகக் கார்ப்பரேசன் அரசாங்கக் காட்டு வனத்துறை மூலம் இந்த ஏற்றுமதிக்கு வழி செய்துள்ளது. வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகின்ற தமிழ் நாட்டின் மற்றொரு பொருள் மாம்பழச் சாறுகும்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓர் அங்கமாகச் சோப்பு உற்பத்தியும் நடைபெறுகிறது. இதற்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உதவி புரிந்துள்ளது. 'காஞ்சி பார்' என்ற பெயரில் இந்தச் சோப்புக்கள் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதற்கிணங்கச் சிறப்பாக இயங்கிவரும் இந்தக் கூட்டுறவுச் சங்கம், மக்கள் நலனில் அக்கறை கொண்டு தரமான பொருள்களை வழங்குவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை நாம் பாராட்ட வேண்டும்.

—பி.வி.ஜி.

# மூங்கில் செல்வம்

'மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே'

என்பது, தமிழகத்தில் நீண்ட நெடு நாட்களாக வழங்கிவரக் கூடிய-ஓர் அருமையான 'ஏற்றப் பாட்டு!'

இன்று பலவகையிலும் மூங்கில் நமக்குப் பயன்படுகிறது. நீளமாகவும், உறுதியாகவும் வளர்ந்து நமக்குப் பயன்படுகிற மூங்கிலை நாம், பொதுவாக மரம் என்றே வழங்கினாலும் மூங்கில் என்பது மரமே அல்ல என்பார் தாவர நூலார். அப்படியானால், மூங்கில் எந்த இனத்தைச் சேர்ந்தது? அது, ஒற்றை விதையிலைத் தாவர வகையைச் சேர்ந்த ஒருவகைப் 'புல்'லேயாகும். உலகிலேயே மிகவும் உயரமாக ஓங்கி வளர்ந்துள்ள புல், மூங்கில் தான்.

நாம், காடுகளிலும், மலைச் சரிவுகளிலும், ஆற்றோரங்களிலும், பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் மூங்கில் புதர்களைக் காணலாம். அமைதி நிலவும் நேரத்தில், நாம் மூங்கிற் புதரின் அருகிற் போய்ச் சற்று உன்னிப்பாகச் செவி கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தால் 'மொற மொற' வென்னும் ஒருவகையான விந்தை ஒலியைக் கேட்கலாம். அவ்வொலி, இளம் மூங்கிற் கன்று கிளைத்து, முகிழ்த்து வளரும்போது எழுகின்ற ஒலியே தவிர வேறெதுவுமல்ல. மூங்கிற் புதர் சூழ்ந்த தரையின் வேரடி மண்ணிலிருந்து மூங்கிற் குருத்து வளரும்போது இந்த விந்தையொலி உண்டாகிறது. மூங்கிற் கன்றுகள், ஒரு மணிக்கு 38-லிருந்து 40 மில்லி மீட்டர் வரை வளரக் கூடியது என்றால், நமது வியப்பு மேலும் பன்மடங்கு அதிகமாகும். நல்ல வளர்ச்சிப் பருவத்தில், மூங்கில், ஒருநாளில் சுமார் 900 செ.மீ. வரை கூட வளரும். இத்தகைய வேகமான—விந்தையான வளர்ச்சி வேறெந்தத் தாவரத்திற்கும் இல்லை என்பார் தாவர இயல் வல்லுநர்கள்.

மூங்கில், ஓங்கி வளர்வதில் மட்டுமின்றிப் பக்க வாட்டில் பெருத்து வளர்வதும் மிகவேகமான வளர்ச்சியேயாகும். மூங்கிலின் வேர்கள் மண்ணில் இறங்குவதும் அப்படித்தான். மிக மிக வேகமாக வேர் மண்ணுக்குள் இறங்கும். ஒரு மூங்கிற் புதரில் நூற்றுக் கணக்கான மூங்கில்களைக் காணலாம். மண்ணுக்கு அடியில் தரையில் நேர்க்கோடு மட்டத்தில் பரவும் அந்த வேர்கள் புதரிலிருந்து 20 மீட்டருக்கு அப்பாலும் செல்லக் கூடியன.

பொதுவாக, மூங்கிற் காடுகளை வளமிக்க பகுதி என்றும், வறண்ட காட்டுப் பகுதி என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். நீரோடைகளின் கரைகளையடுத்தும், செம்மையான வடிகால் இல்லாத பள்ளத்தாக்குப் பகுதிகளையடுத்தும் காணப்படுகின்ற ஈரப்பசைக் காடுகளில் மூங்கில் அடர்த்தியாக வளரும். தமிழகத்தில் கோவை மாவட்டம் ஆனைமலைச் சரிவுகளிலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் இத்தகைய ஈரப்பசைக் காடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

அடுத்து, இலையுதிர் காட்டுப் பகுதிகளில் காணப்படும் புதர்களில் மூங்கில்கள் 60 அடிக்கும் உயரமாக வளரும். இவ்வகைக் காடுகள் மங்களூர் போன்ற இடங்களில் உள்ளன.

உலகில் எத்தனை வகையான மூங்கில்கள் இருக்கின்றன என்பது இதுகாறும் சரியாகக் கணக்கிடப்படவில்லை. 200 முதல் 700 வரை இருக்கலாம் என்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மூங்கிலின் அளவும் பலதரப்பட்டவையேயாகும். சில மூங்கில்கள் 30 மீட்டர் உயரம் வளரும். சில மூங்கில்களின் குறுக்களவு 30 செ. மீ. இருக்கும்.

இந்தியாவில் மட்டுமின்றி, தெற்கு சீனா, தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும் மூங்கில்கள் பெருமளவில் வளர்கின்றன. ஜப்பானில் அழகான சில மூங்கில் வகைகள் உள்ளன. ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மடகாஸ்கர் ஆகியவைகளிலும் மூங்கில்கள் சிறு அளவில் வளர்கின்றன.

மூங்கில்களிலும் ஆண் மூங்கில் பெண் மூங்கில் என இரு பிரிவுகளுண்டு. பொதுவாகக் கூடை முடைதல், தட்டி பின்னுதல், நாற்காலிகள் கட்டில்கள் செய்தல், பந்தல்களுக்குத் தூண்கள்-உத்தரங்கள் போடுதல், வீட்டுக்கு வேண்டிய பல்வேறு பொருள்களும், விளையாட்டுச் சாமான்களும் செய்தல் முதலிய பல்வேறு தொழில்களுக்கும் மூங்கில்கள் பயன்படுகின்றன. அஸ்ஸாமில் வீடுகள் கட்ட மூங்கிலைப் பெரும் அளவில் பயன்படுத்துகின்றனர். வலுவேற்றப்பட்ட சிமெண்ட், கான்கிரீட் கட்டுமான வேலைகளுக்கு மாற்று ஏற்பாடாக மூங்கிலைப் பயன்படுத்தலாமா என்று பொறியாளர்கள் முயற்சி செய்கின்றனர். காகிதத் தொழிலுக்கு மூங்கில் கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது. ஏரியல் குச்சிகள், கழிகள், மீன் தூண்டில்கள் முதலியவற்றிற்கும் மூங்கில் பயன்படுகிறது. இன்றைய விஞ்ஞான உலகில் மின்கலங்கள் செய்ய மூங்கில் கரி பெரிதும் பயன்படுகிறது.

மூங்கில்கள் ஆண்டு தோறும் பூப்பதில்லை; 15—30—48—60 அல்லது 120 ஆண்டுகளுக்கு ஒருமுறையே பூக்கும். அப்படிப் பூக்கும் போது புதரில் உள்ள எல்லா மூங்கில்களிலிருந்தும் ஒரே சமயத்தில் மலர்கள் மலரும். இப்படி மலர்வது, அந்த மூங்கிலின் ஆயுள் முடிவைக் காட்டும். ஆம். பூப்பூத்துவிட்டால், அந்த மூங்கில் மிக விரைவில் பட்டுப் போகும்.

மூங்கிலில் ஒரு வகையான அரிசியும் விளைகிறது. இன்றும் மலைவாழ்வோர் பலர் இந்த மூங்கில் அரிசியைச் சமைத்து உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்கள் அனைவரும் நல்ல உடல் நலத்தோடும், வலுவோடும் விளங்குகிறார்கள். நாம் சாதாரணமாகப் பயன்படுத்துகிற அரிசியில் உள்ளதைவிட அதிகப்படியான புரதச் சத்தும், நமக்குத் தேவையான பிற சத்துக்களும் மூங்கில் அரிசியில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

'சிறியிலை வெதிரின்
நெல்விளை யும்மே!'

என்னும் கபிலரின் பாடல் வரி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மூங்கில் அரிசி உணவாகப் பயன்பட்டு வந்த உண்மையை நமக்கு உணர்த்துகிறது. உழவர் உழாமல்-பரம்படிக்காமல்—என்? பாடின்றிப் பயன்விளைக்கும் இந்த மூங்கில் அரிசி, நாம் பத்திரப்படுத்தித் தேவையான போது பயன்படுத்திக் கொள்ளத் தக்க ஒரு நல்ல சத்துணவாகும்.

மூங்கில் நமக்கு நல்லுணவாக-சத்துணவாக அரிசியை மட்டும்தான் தருகிறதா? இளம் முளைப்பும் தருகிறது. ஆம். மூங்கிலின் மெல் இளங் கன்றுன அந்த முளைப்பையும் நாம் சமைத்துக் கறியாகப் பயன்படுத்தலாம். உருளைக் கிழங்கு, மீன் ஆகியவற்றுடன் கலந்தும் சமைத்து உண்ணலாம். இவ்விளங் கன்றுகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஊறுகாய் போட்டும், சர்க்கரைப் பாகில் ஊறவைத்தும் சாப்பிடலாம். உப்பாவது, சர்க்கரையாவது சேர்த்துப் பல்வகைப் பண்டங்கள் தயாரிக்கலாம். இவற்றிலிருந்து ஒருவகை மதுவும் தயாரிக்கப்படுகிறது. இந்த இளங்கன்றுகளைப் பச்சையாக மட்டும் உண்ணக் கூடாது.

மூங்கிலுக் குள்ளே ஒருவகையான வெள்ளைப் பொடி உள்ளது. இந்திய மருத்துவ முறையில் தயாரிக்கப்படும் மருந்து சிலவற்றில் இந்த வெள்ளைப்பொடி பயன்படுத்தப்படுகிறது.

மூங்கிலின் சிற்றிலையை மாடு, குதிரை, யானை முதலியவற்றிற்கு நல்ல தீவனமாகப் பயன்படுத்தலாம்.

இன்று சீனர்களுடைய வாழ்வில் மூங்கில் முக்கிய இடம் வகிக்கிறது. அவர்களின் நாகரிகமே 'மூங்கில் நாகரிகம்' என்று வழங்கப்படுகிறது. சோவியத்து ரஷ்யாவை இரும்புத் திரை நாடு என்று குறிப்பிடுவது போல, சீனாவை 'மூங்கில்திரை நாடு' என்றே வழங்கலாம்.

நமக்குப் பலவகையாலும் பயன்படுகிற மூங்கிற் செல்வத்தைப் பெருக்குவதன் மூலம், இந்த நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதோடு, சத்துணவுப் பெருக்கத்திற்கும் வழி செய்தவர்களாகலாம். மூங்கிற் செல்வம், பாங்குற வளரப் பாடுபடுவோமாக.

—சாமி. பழ


## தமிழ்நாடு இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவு இணையம் XNC 744
## சென்னை-4

(தொடக்கம் : 19—1—1972)

| | | |
|---|---|---|
| பதிவாகியுள்ள இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்கள் | .. | 2030 |
| இதுவரை வகுத்துள்ள திட்டங்களின் மதிப்பீடு | .. .. | ரூ. 7·68 கோடி |
| அனுமதித்துள்ள கடன் தொகை (30—11—1972 வரை) | .. | ரூ. 2 கோடி |

சின்னஞ்சிறு நிலப்பரப்பும் நீர்வளம் பெற்று மேம்பாடுற்று மூன்று போகம் விளைச்சல் கொடுக்கச் செய்து பசுமைப் புரட்சியின் வெற்றிக்குத் துணை செய்வதே எமது பணி.

சிறிய விவசாயிகளின் மேம்பாட்டிற்கு உறுதுணையாகவுள்ளது இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம். சிறிய விவசாயிகளின் நிலங்களுக்கு நீர்வளம் சேர்ப்பதோடு, விதை, உரம், பூச்சி மருந்து முதலியன விநியோகித்து பயிர்க்கடன் வழங்கி தீவிர சாகுபடிக்கு உதவி செய்வதே இக்கழகத்தின் நோக்கம். தானியங்களை நல்ல விலைக்கு விற்பதிலும் இது சேவை செய்கிறது. இவ்விதக் கூட்டுறவுக் கழகங்கள் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அமைப்பித்து அவை செவ்வனே செயல்படுமாறு செய்வதே தமிழ்நாடு இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவு இணையத்தின் முக்கிய நோக்கம்.

தமிழ்நாட்டின் எல்லாச் சிறு விவசாயிகளும் இவ்விணையத்தின் மூலம் பயன்பெற்று மேம்பாடு பெறுவார்களாக.

**திரு சிவ. தபேந்திரன், பி.ஏ.,** இணைப் பதிவாளர்/செயலாளர்.
**திரு வே. இரத்தினவேலு,** துணைப் பெருந்தலைவர்.
**திரு எஸ். எம். இருட்டிணன்,** தலைவர்.

இயக்குநர்கள் : திரு மணலூர் எஸ். இராமநாதன், தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்,
திரு மாதூர் தம்பிதுரை,
திரு வேலம் தம்பிதாசன்.




# கொய்தவை

### சென்னையில் ஒரு ராடார் நிலையம்!

சென்னைக் கடற்கரையையொட்டியுள்ள துறைமுக அலுவலகத்தின் ஐந்தாவது மாடியில், கடலில் புயல் உருவாவதை முன்னதாக அறிவிக்கும் புயல் எச்சரிக்கை நிலையம் (ராடார் நிலையம்) ஒன்று ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படும் நுட்பம் வாய்ந்த ராடார்களுக்கு இணையாகச் சென்னை ராடார் நிலையம் இருக்கும். இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்காக, ராடார் கருவியை ஜப்பான் நாடு வழங்கி இருக்கிறது.

இந்த நிலையம், சென்னையைச் சுற்றி 500 கிலோ மீட்டர் வரை எங்காவது புயல் உருவானால் அதனை முன்னதாகத் தெரிவிக்கும் சக்தி வாய்ந்தது. 500 மீட்டர் தொலைவில் மையம்கொண்டு இருக்கும் புயல் நகர்ந்து கரையைக் கடக்க 2 நாட்கள் ஆகும். ஆனால், இந்த கருவி மூலம் புயல் வருகிறது என்று 2 நாட்களுக்கு முன்பாகவே மக்களை எச்சரிக்கை செய்ய முடியும்!

புயல் எச்சரிக்கைக்கு இது பயன்படுவதுடன், நிலத்தில் எவ்வளவு மழை பெய்துள்ளது என்பதையும் இது காட்டும். இதனால் எந்த ஆற்றில் எப்போது வெள்ளம் என்பதையும் முன்கூட்டியே அறிய முடியும்!

அமெரிக்கா, வானிலை ஆராய்ச்சியில் இன்னும் ஒருபடி மேலே போய் இருக்கிறது. அவர்கள் புயல் தோன்றியதும், ராடார் கருவியில் அந்த இடத்தைக் கண்டு பிடித்து, கடலில் புயல் இருக்கும் இடத்துக்கே விமானத்தில் சென்று வானிலை ஆராய்ச்சி செய்கிறார்கள்; உயிரையும் பொருட்படுத்தாமல், இதற்கென்று தயாரிக்கப்படும் தனிரக விமானங்களில் சென்று இந்த ஆராய்ச்சி நடத்தப்படுகிறது.

இதே போல இந்தியாவிலும் கடலில் புயல் இருக்கும் இடத்துக்குச் சென்று ஆராயும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இது அமலாக்கப்படலாம். இந்தியாவில் விசாகப்பட்டினத்தில் மட்டும்தான் ஒரு ராடார் நிலையம் இருக்கிறது; சென்னை நிலையம் இரண்டாவதாகும். காரைக்கால், மசூலிப்பட்டணம், கோவா, பம்பாய் ஆகிய இடங்களில் 1974-ஆம் ஆண்டில் ராடார் நிலையங்கள் அமைக்கப்படும்.

### ஓர் அரிய ஆராய்ச்சி !

தென் இந்தியாவிலுள்ள சில நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களின் இனப் பெருக்கம் பற்றிய ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை மதுரைப் பல்கலைக் கழகம் தொடங்கியுள்ளது.

மீனவங்களைச் சிறந்த முறையில் நடத்துதல், இறுதியில் மீனவர்களுக்கு ஏராளமாக மீன் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றிற்கு மதுரை விஞ்ஞானிகள் திரட்டும் விவரங்கள் இதற்கு வழிகோலும். மதுரைப் பல்கலைக் கழகத்தின் உயிரியல் பிரிவுத் தலைவரின் தலைமையில் விஞ்ஞானிகளின் குழு ஒன்று, இப் புதிய ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்கிறது. சுற்றுச் சூழ்நிலைக்கும், ஏரித் தண்ணீரில் வாழும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்று குழுவினர் ஆராய்வார்கள். இந்த ஏரிகளில் தாவரங்களும், உயிரினங்களும் எவ்வாறு வாழ்கின்றன; எவ்வழிகளில் எல்லாம் அவற்றின் உற்பத்தித் திறன் கட்டுப்படுத்தப்படுகிறது என்று அறிவது ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

### இந்த ஆராய்ச்சிக்கு மதுரையை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்?

சுற்று வட்டத்திலுள்ள நீர் நிலைகளில் தண்ணீரின் வெப்பம் ஒரே சீராக (ஏறத்தாழ 30 டிகிரி சென்ட்டி கிரேடு) இருக்கிறது; மேலும், பகல் நேரமும் ஆண்டு முழுவதும் ஒரு சீராக (ஏறத்தாழ 12 மணி நேரம்) இருக்கிறது. இவ்விரு இயல்புகளுக்கும், நீர்வாழ் உயிரினங்களின் இனப் பெருக்கத்துக்கும் பெரிதும் தொடர்பு உண்டு. இவை இரண்டும் மாறுமல் நிலையாக இருப்பதால், இது போன்ற உயிரியல் ஆராய்ச்சியை ஒழுங்குபடுத்தி நடத்துவது எளிதாகும். இந்த ஐந்தாண்டு ஆராய்ச்சித் திட்டத்தை நடத்தும் செலவுக்காக, மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு அமெரிக்க அரசு ரூ. 9,33,000 நன்கொடை வழங்கியுள்ளது.

### தென் மாநிலங்களில் குடும்பநல முன்னேற்றம்

1972-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முடிய தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர், புதுவை, இலட்சத் தீவுகள் ஆகியவற்றில் 35·78 இலட்சத்திற்கும் அதிகமான கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் 12·42 இலட்சம் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் இவ்விரு மாநிலங்களும் முதல் இடம் பெறுகின்றன.

1965-ல் இத்திட்டம் துவங்கப்பட்டது முதல் சூலைத் திங்கள் முடிய 8·79 இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் கருத்தடைச் சாதனங்களின் உபயோகத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த வகையில் முதல் இடம் பெறும் மைசூர், கேரளம் மாநிலங்களில் 2·63 இலட்சம், 2·41 இலட்சம் கருத்தடைச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தென் மாநிலங்களில் 1972—73-ஆம் ஆண்டு மொத்தம் 13·99 இலட்சம் குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் செய்வதற்கும், 2·03 இலட்சம் பேருக்குக் கருத்தடைச் சாதனங்கள் பொருத்துவதற்கும் திட்டமிடப்பட்டது.

ஒரு நீண்ட கால அதாவது இரண்டு மாதக் குடும்பநல இயக்கம் ஒன்று தமிழ்நாடு, ஆந்திரம் மாநிலங்களின் மாவட்டங்கள் சிலவற்றில் அண்மையில் நடத்தப்பட்டது. இவ்வியக்கத்தின் இரண்டாவது கட்டம் விரைவிலேயே இவ்விரு மாநிலங்களிலும் துவக்கப்படும்.

—பி.வி.தி.

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'
தபால் பெட்டி எண் : 226.

தொலைபேசி எண் :
20367, 20368, 20369
டெலக்ஸ் எண் : எம். எஸ். 7225

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

### வட்டி விகிதங்கள்

| | | |
|---|---|---|
| நடப்புக் கணக்குகள் | .. (வருடத்திற்கு) | ½% |
| சேமிப்புக் கணக்குகள் | .. | 4% |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்குகள் : ரூ. 1,000-ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

| | | |
|---|---|---|
| 15 நாட்கள் | — | 2% |
| 45 நாட்கள் | — | 3 |

நிரந்தரக் கணக்குகள் : ரூ. 100-ம் அதற்கு மேலும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 91 நாட்கள் | — | 4¾% | 24 மாதங்கள் | .. | 6¾% |
| 6 மாதங்கள் | .. | 5¼% | 35 மாதங்கள் | .. | 7¼% |
| 12 மாதங்கள் | .. | 6¼% | 60 மாதங்கள் | .. | 7½% |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி தரப்படும்.

தொடர் கணக்குகள்

| மாதத் தவணை | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் | ரூ. 62 | 128·50 | 201 | 218 | 362·50 | 452 | 548·50 |

கிளைகள் :—மயிலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர், காந்திநகர், ஷெனாய் நகர், கெல்லீஸ், சாந்தோம், கிரீன்வேஸ் ரோடு, மயிலாப்பூர்-குளம், அண்ணாசாலை (காமதேனு), சாஸ்திரி நகர், அசோக் நகர், அண்ணா நகர், அண்ணாசாலை (அண்ணா சிலை), ஜவஹர் நகர், நுங்கம்பாக்கம், பெஸண்ட் நகர்.

ஆர். கனகசபை, தலைவர்.
குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, துணைத் தலைவர்.
டி. வர்தமானன், செயலர்.






# அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் தவளைகள்!

தமிழ்நாட்டில் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக் கூடிய பொருள்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன! அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் அப்பொருள்களுடன், அண்மைக் காலத்தில் இருவகைத் தவளைகளும் சேர்ந்துள்ளன!

தவளைகள் மனித இனத்திற்குத் தீங்கிழைப்பவை அல்ல! ஆனால், அவைகள் மழைக்காலத்தில், இரவு நேரங்களில், பலத்த ஒலியெழுப்பி, இரவின் அமைதியைக் குலைத்துவிடக் கூடியவை!

தவளைகளைக் கண்டுவிட்டால் அவைகளை அடித்து, அவைகள் துடித்துச் சாவதைக் கண்டு மகிழ்வதிலே சிறுவர்களுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி!

சேற்றில் வாழ்வதால், தவளைகளை நாம் ஒரு காலத்தில் தொடுவதற்கும் அருவெறுப்புடன், அருவருக்கத் தக்க ஒரு அற்ப உயிராகக் கருதி வந்தோம்!

அந்தக் காலம் மாறிவிட்டது! நேற்றுவரை யாருக்கும் எந்த வகையிலும் பயன்தராத அற்பப் பொருள்களாகவோ அல்லது உயிர்களாகவோ இருந்தவை, இன்று தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல, நாட்டிற்கே, ஏன் மனித சமுதாயத்திற்கே நலம் பயக்கும் பொருள்களாகவோ அல்லது உயிர்களாகவோ மாற்றம் பெற்றுள்ளன! காலம் செய்யும் கோலம் எடுத்தியம்பவொண்ணாதது. காலம் செய்யும் கோலத்திற்கோர் எடுத்துக்காட்டாக, ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றதாக தவளைகள் விளங்குகின்றன!

அண்மைக் காலத்தில் இரு இந்தியத் தவளை வகைகள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன! அவ்வகைத் தவளைகளின் கால்கள் பெருமளவில் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், குறுகிய காலத்தில் பெரும் புகழ் பெற்றுள்ளன!

'கிரீன் பிராக்' (Rana hexatactyla) என்னும் பச்சைத் தவளை வகையும், 'இண்டியன் புல் பிராக்' (Rana tigrina) என்னும் 'இந்தியக் காளைத் தவளை' வகையுமே பெரும் புகழ் பெற்றுள்ளன! இவ்விரு இந்தியத் தவளை வகையும் உண்பதற்கு ஏற்றவை. இவைகள் குறிப்பிடத் தகுந்த ஏற்றுமதி வாய்ப்பினைப் பெற்றுள்ளன. கொச்சி, கோவா மங்களூர், ஆகிய இடங்கள் இவ்வகைத் தவளைகளை ஏற்றுமதி செய்யும் முக்கிய இடங்களாக விளங்குகின்றன.



இந்தியக் காளைத்தவளை.

முன்பெல்லாம் ரோம் நாட்டினர் ஐரோப்பிய வகையைச் சேர்ந்த உண்ணத் தகுந்த தவளையின் (Rana esculenta) பின் கால்களையே பெரிதும் விரும்பி உண்டனர். முதன் முதலாகப் பிரான்சு நாட்டில் தோன்றிய, தவளைகளின் கால்களை உண்ணும் ஆர்வத்தின் அடிப்படையான பழக்கம் (Fancy), நாளடைவில் இங்கிலாந்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பரவிவிட்டது.

தவளைக் கறி, எளிதில் கிடைக்கக் கூடிய மாமிசப் புரதச் சத்து நிறைந்ததாக விளங்குகிறது. தவளைக் கறி, கோழிக்கறியைப்போல் இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

தவளையில், சதைப்பிடிப்பான பின்கால்கள் மட்டுமே உண்பதற்கு ஏற்றதாம்! மேல் நாடுகளில் ஒருவருக்கு நல்ல உணவு படைக்க, 15 முதல் 20 தவளைகள் தேவைப்படுகின்றனவாம்.

'இந்தியக் காளைத் தவளை' என்று கூறப்படுவதற்கு அவ்வகைத் தவளைகளின் உருவமும், அவைகள் எழுப்பும் ஒலியின் வலிமையும், அவைகள் இந்தியாவெங்கும் காணப்படுவதுமே காரணமாகும்.

'பச்சைத் தவளைகள்' இந்தியக் காளைத்தவளைகளைவிடக் குறைந்த பருமன் உள்ளவை. ஆனால், இவை நமது குளங்களில் அடர்த்தியாக வளர்ந்துள்ள நீர்த் தாவரங்களுக்கு இடையிலும், தென் இந்தியாவிலும், வங்காளத்திலும் நிறைந்துள்ள சதுப்பு நிலப்பகுதிகளிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. பச்சைத் தவளைகள் உயிராக இருக்கும் பொழுது இலைப்பச்சை நிறத்தில் காணப்படும். இதிலிருந்தே இவைகளை எளிதில் இனம் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு பச்சை நிறத்தில் உள்ளதனாலேயே களைச் செடிகள் நிறைந்த குளங்களில், பச்சைத் தவளைகள் மறைந்து வாழ்கின்றன.

பச்சைத் தவளைகளை இரையுடன் கூடிய தூண்டில் மூலமாக பிடிக்கப்படுகிறது; அல்லது வலையின் மூலம் பெருமளவில் பிடிக்கப்படுகிறது. ஆனால், இந்தியக் காளைத் தவளைகளைப் பிடிப்பது எளிதல்ல! ஏனெனில், இவ்வகைத் தவளைகள் நீரோடைகளிலும், வாய்க்கால்களிலும், அடிப்பகுதி பாறையாகவோ அல்லது மண




லாகவோ உள்ள குளங்களிலும் காணப்படுவதில்லை.

இந்தியக் காளைத் தவளைகள் தனிமையை விரும்பக் கூடியவை; பெரும்பாலும் வெளிச்சத்திற்கு வருவதற்கு வெட்கப்படக் கூடியவை; பகல் நேரத்தில் மணிக் கணக்காகப் புதர்களின் கீழேயோ அல்லது தண்ணீருக்கு அருகில் மண்ணில் உள்ள குழியான வெற்றிடங்களிலோ தங்கியிருக்கக் கூடியவை; இரவில் மட்டுமே சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவை; மழைக்காலங்களில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குவதுடன், இனப் பெருக்கம்செய்வதற்காகக் கூட்டமாகத் திரளுகின்றன. இவ்வகைத் தவளைகளை இரவு நேரத்தில் 'பேட்டரி' விளக்கு கொண்டு திடீரென ஒளி ஏற்படுத்தி, எளிதில் பிடிக்கலாம். திடீரெனத் தோன்றும் வெளிச்சத்தினுல் இவ்வகைத் தவளைகள் திகைப் புற்றுப் பயத்துடன் நகராமல் அப்படியே இருக்கின்றன. அந் நிலையில், அவைகளைப் பிடித்து, டின்களில் அல்லது கோணிகளில் போடப்படுகின்றன.

இவ்விருவகைத் தவளைகளும் எப்பொழுதும், எதையாவது தின்று கொண்டிருக்கக்கூடியவை; உயிராக உள்ள எல்லாவற்றையும் அல்லது பழக்கப்பட்டவைகளையும் தின்னக் கூடியவை; பல்வேறு வகையான பூச்சிகளையும், முக்கியமாக 'Beetles' எனப்படும் வண்டுகளையும், புழுக்களையும், நீர்வாழ் உயிரினங்களையும், மீன்களையும் உண்ணக் கூடியவை; சிறு தவளைகளையும் தின்று வாழக் கூடியவை.

தற்பொழுது, உண்ணத் தக்க தவளை வகைகளைப் பிடித்துப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யப் படுகிறது. குளிர்பதனப் பெட்டியில் வைத்திருந்து, பின்பு டின்களில் அடைக்கப்படக் கூடிய பதப்படுத்தப்பட்ட உணவாகச் செய்ய, முன்பெல்லாம் தவளைகளின் பின் கால்களைவெட்டிப் பிறகு தவளைகள் அணு அணுவாகத் துடித்துச் சாகடிக்கப்பட்டன. இவ்வாறு தவளைகள் துடித்துச் சாவதையும், இரத்தம் வடிவதையும் காண்டது மனத்திற்கு மிகவும் வேதனை தரக்கூடியதாக இருந்ததால், தவளைகளைக் கொல்லப் புதிய முறை கண்டு பிடிக்கப்பட்டது. இப்புதிய முறையில் உயிருடன் கூடிய தவளைகள் 10 சத உப்பு நீரில் ( Brine solution ) அமிழ்த்தப்படுகின்றன. இதனுல் தவளைகள் அறிவியல் அடிப் படையில் மயக்கம் அடைகின்றன. உப்பு நீரில் தவளைகள் உயிர் வாழ முடியாததலின், கொடிய வலியின்றி மெதுவாக இறந்துவிடுகின்றன.

நமது நாட்டில் இன்னும் தவளைகளை உண்ணும் பழக்கம் ஏற்படவில்லையாயினும், தவளையின் கால்களை ஏற்றுமதி செய்வதனுல் நமது நாட்டிற்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், நாம் தவளைகளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்ருல் மிகையாகாது!

ஒரு பக்கம் மக்கள் தொகைப் பெருக்கமும், மறு பக்கம் உணவு உற்பத்திப் பற்ருக் குறையும் பயமுறுத்தி வருவதால், இந்தியர்கள் தங்கள் உணவில் தவளைகளையும் சேர்த்துக் கொள்ளக் கூடிய காலம் வெகு தொலைவில் இல்லை என்று உறுதியாக நம்பலாம்.

ஒரு காலத்தில் ஒன்றுக்கும் உதவாததாகக் கருதப்பட்ட, அருவருக்கத்தக்கதாகக் கருதப்பட்ட தவளைகள், இன்று நாடு நலம் பெறுவதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை அள்ளித் தருவதுடன், பலருக்கு வேலை வாய்ப்பளித்துப் பிழைக்கும் வழியையும் காட்டியுள்ளது. விரைவில் 'தவளைப் பண்ணைகள், நாடெங்கும் ஏற்பட்டாலும் வியப்பில்லை! எனவே, ''தவளைகள் வாழ்க ! வளர்க !'' என வாழ்த்துவோம்.

தகவல் : டி. எஸ். என். மூர்த்தி

கட்டுரையாக்கம் : ஆர். எம்.

## முதலாவது உலர் துறை

நம் நாட்டின் முதலாவது கடற்படை உலர் துறைக்கான கட்டுமான அலுவல்கள் விசாகப்பட்டினத்தில் துவங்கியுள்ளன. இது இந்தியாவிலேயே மிகப் பெரிய துறையாக இருக்கும். கிழக்குக் கடலோரத்தில் வரும் கப்பல்களைப் பழுது பார்க்கும் வசதி இங்கே இருக்கும். 80 ஆயிரம் டன் எடையளவுள்ள கப்பல்கள் இங்கு வந்து செல்லமுடியும். இதை நாலாண்டுகளில் அமைத்து விடுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்குச் சுமார் 10 கோடி ரூபாய் செலவாகும்.

## முன்னேறும் தீவு

அந்தமான் தீவுகளிலுள்ள கார் நிக்கோபார் தீவு, வெகு வேகமாக முன்னேறி வருகிறது. அங்கே இப்போது அமைக்கப் பட்டுள்ள மருத்துவமனை ஒன்றில் 74 பேர் தங்கிச் சிகிச்சைப் பெறமுடியும். அதில் எக்ஸ்ரே கருவிகளும், சிகிச்சைக்கான தனி வசதிகளும் உள்ளன. இரண்டு அறுவைச் சிகிச்சைக்கான தனி வசதிகளும் உள்ளன. இரண்டு மகப்பேறு மருத்துவ நிலையங்களும், இரு மருத்துவ நிலையங்களும் இருக்கின்றன.

அந்தத் தீவின் தலைமை இடத்தில் குழாய் மூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு விமான நிலையமும், இரண்டு மின்சார நிலையங்களும் இங்கு இருக்கின்றன.






# வருவாய் பெருகிட வளர்ப்போம் சுற்றுலா

## முதல்வர் கலைஞர்

பொங்கல் கொண்டாடும் இந்த நல்ல நாளில் சுற்றுலா வாரியத் தலைவரும், நிர்வாக இயக்குநரும், [illegible] சுற்றுலாத் துறை அதிகாரிகளும், இணைந்து நின்று பொங்கல் வாரத்தைச் சுற்றுலா வாரமாகக் கொண்டாட முடிவு எடுத்தது போற்றுதற்குரிய, பாராட்டத் தகுந்த செயலாகும்.

ஆண்டுக்கு ஒரு முறை வரும் பொங்கல் விழாவினைச் சுற்றுலா வாரமாகக் கொண்டாடப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதன் தொடக்க விழாவே நேர்த்தியாகவும், கவர்ச்சியாகவும் அமைந்துள்ளது.

சென்னை நகரத்திலும் கிராமியச் சூழ்நிலையை உருவாக்கிக் காட்டிட முடியும் என்ற வகையில் கிராமியச் சூழ்நிலையின் இயற்கை அழகு, நெற்களத்தையும், களத்தின் அருகே கதிர் அடிக்கும் உழவர் பெருமக்களையும், அந்த உழவர் பெருமக்கள் ஓய்வு பெறும் உறைவிடத்தையும், ஒய்யாரமாக ஆடிப்பாடும் அழகு மங்கையரின் வாயிலிருந்து கிளம்பும் இசையையும், தமிழினத்தின் பொருள் நயம் காட்டுகின்ற அளவுக்கு— வெளிநாட்டினரும் கண்டு களித்துப் பாராட்டுகின்ற அளவுக்கு அருமையான காட்சியாக அமைந்திருந்தது.

கிராமியச் சூழ்நிலையைப் பார்த்த போது எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

நான் அமெரிக்கா சென்றிருந்தபோது ஆர்லந்தோ நகரில் அமெரிக்கர்கள் ஒரு விழாவைக் கொண்டாடினார்கள். தனியார் நிறுவனத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த விழாவில் தனிச் சிறப்பு விருந்தினராக நான் கலந்து கொண்டேன். அவர்கள் கேட்டுக் கொண்டபடி நான் நமது நாட்டுத் தேசிய உடையான வேட்டி - சட்டையுடன் தான் சென்றிருந்தேன்.

செவ்விந்தியர்கள் கிராமத்திற்குச் சென்றுவிட்டோமோ என்று எண்ணும் வகையில், 200 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் வாழ்ந்த செவ்விந்தியர்களின் கிராமியச் சூழ்நிலையைத் தத்ரூபமாக அவர்கள் செய்து காட்டி இருந்தார்கள்.

ஆற்றங்கரையோரத்தில் மரங்கள், வீடுகளிலே அகல் விளக்குகள்-மினி விளக்குகள்-பழங்காலப் படகுகள் காட்சி அளித்தன. அமெரிக்கர்கள் செவ்விந்தியர் உடையிலே காட்சி தந்தனர். செவ்விந்தியர் நாகரிகத்திற்கு ஏற்ப எங்களுக்கு உணவு பரிமாறப்பட்டது.

அது போன்ற ஒரு கிராம நிகழ்ச்சியினை இங்கே சுற்றுலாத் துறையினர் செய்து காட்டிய போது எனக்கு அந்த நினைவு வந்தது. அதற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த ஆண்டு பொங்கல் விழாக் கொண்டாடப்படும் போது சென்னையைப் போன்ற ஒரு நகருக்கு வெளிநாட்டினரை வரவழைத்து நேரு ஸ்டேடியத்தில் கிராமியச் சூழ்நிலை ஒன்றை உருவாக்கி, நடனங்கள், கிராமிய நிகழ்ச்சி, இசை, கலை நிகழ்ச்சி போன்றவை சித்திரித்துக் காட்டப்படுமேயானால் அது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

சுற்றுலாத் துறை மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க முடியும். நமக்கு முன்னே இருந்தவர்கள் சுற்றுலாவைப் பற்றிக் கவலைப்படவில்லை. இன்றோ சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சுற்றுலா-சுற்றுதல். இது பலருக்குப் பிடிக்கவில்லை. ஊர் சுற்றுகிறான் என்பார்கள் பெற்றோர்கள், பிடிக்காத பையனை. தவருன காரியங்களுக்கு ஊர் சுற்றினுல் தவறுதான். ஊர்-உலகம்-நாடு-சுற்றுவதால் நாகரிகம் கற்று, அறிவுக்குத் தெளிவு ஏற்படுகிறது. சுற்றுலா வளர்ச்சியினுல் பொருளாதாரம் நல்ல முறையில் உயர்வடைகிறது.

சின்னஞ்சிறு நாடுகள் சுற்றுலாத் துறை மூலம் வருமானத்தை அதிகரிக்கிறது. மக்கள் தொகையில், பரப்பளவில் குறைவான சுவிட்சர்லாந்து நாட்டில் சுற்றுலாத் துறை மூலம் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் வருமானம்தான் அமெரிக்காவின் சுற்றுலா வருமானம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இத்தாலி நாட்டின் சுற்றுலா வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 500-ல் இருந்து 600 கோடி ரூபாய் வரையில் ஆகும்.

அனைத்துலகச் சுற்றுலாக் கணக்கெடுப்பின்படி 1980-ஆம் ஆண்டில் 44 கோடிச் சுற்றுலாப் பயணிகள் 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்வார்கள் என்றும், அதில் 10 சதவீதத்தினர் இந்தியாவுக்கு வந்தால் இந்தியாவின் சுற்றுலா வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 400 கோடி ரூபாய் உயரும் என்றும் கூறுவதால், அதில் ஒருபகுதியினர் தமிழ்நாட்டுக்கு வந்தால் இங்கேயும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்பதையும் நாம் உணராமல் இருக்க முடியாது.

**பயண நூலின் பெருமை**

**தமிழில் பயண நூல்கள் அதிகமாக எழுதப்பட வேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று அந்தந்த இடங்களைப் பற்றி அதிகமாக எழுத வேண்டும். அப்பொழுதுதான் அந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடம் எழும்.**

**—அறிஞர் அண்ணா**

சுற்றுலாத் துறைக்கு அதிகப் பணம் செலவு செய்யத் தமிழக அரசு முன் வந்துள்ளது. கலை, கலாச்சாரம், புராதனச் சின்னம் ஆகியவற்றையும், இசை, கருவி, பண்பாடு, நாகரிகம், சரித்திரம் ஆகியவற்றையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் ஆற்றல் படைத்தது சுற்றுலாத் துறை. இதன் மூலம் பொருளாதாரத் துறை மேம்பாடு அடைய முடியும்.

சுற்றுலாத் துறைக்கு மத்திய அரசு ஒதுக்கிடும் தொகை குறைவு. இதனால் மத்திய அரசு சுற்றுலாத் துறை கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

ஒவ்வொரு மாநிலமும் போட்டி போட்டுக் கொண்டு சுற்றுலாத் துறையை வளர்க்கப் பாடுபடுகின்றது. தமிழகச் சுற்றுலாத் துறைக்குத் தமிழக அரசின் சார்பில் ஒரு கணிசமான தொகையை அளிக்க நான் தயாராக உள்ளேன்.

சுற்றுலாத் துறை விழாக்கள் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதனை உணர்ந்து இது போன்ற விழாக்களை மாமல்லபுரம், திருச்சி, தஞ்சை ஆகிய நகரங்களில் தொடர்ந்து நடத்த இருக்கிறார்கள். சுற்றுலாத் துறையை வளர்க்கத் தமிழக அரசு எடுக்கும் முயற்சிகளுக்குப் பொது மக்களும் ஆதரவு தர வேண்டும்.

பொங்கல் விழாவில் மட்டுமல்ல. ஒவ்வொரு நாளிலும் தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளைக் கன்னியாகுமரி, தஞ்சை, மதுரை, திருமலை நாயக்கர் மகால், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும்.

நமது நாட்டின் கலைகள், சிற்பங்கள், ஓவியங்கள், புராதனச் சின்னங்கள் ஆகியவை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்குமேயானால் அவர்கள் நம் நாட்டுக்கு வருவதில் அக்கறை கொள்வார்கள்.

அந்த முயற்சியில் ஈடுபட வேண்டிய மத்திய அரசுச் சுற்றுலாத் துறை தாராள மனப்பான்மையுடன், இது சிறிய மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கிற விவகாரம் என்று கருதி—இந்தத் துறைக்கு அதிகப் பணம் ஒதுக்குவதன் மூலம்-இந்தியப் பொருளாதாரத்தில் மகத்தான வளர்ச்சியைக் காணமுடியும்.

**—14-1-73 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற சுற்றுலா வார விழாவைத் துவக்கிவைத்து ஆற்றிய உரை.**






# சுற்றுலாப் பயணிகள் பண்பாட்டுத் தூதுவர்கள்!





**பொ**ங்கற் புதுநாள், தமிழர் நம் உள்ளமெல்லாம் பூரித்திடும் பொன்னாள். நாற்றெடுத்து நட்டபயிர் விளையும்போது சேற்றிலே பாடுபட்டோன் நெஞ்சம் பொங்கும் இன்பநாள்.

பழையன கழித்துப் புதியன கூட்டி இல்லங்கள் தோறும் எழிலூட்டிப் புத்தாடை அணிந்து புத்தரிசிப் பொங்கலிட்டுப் பொங்கலோ, பொங்கலென்று இல்லமெல்லாம் இன்பம் பொங்கும் நாள்.

தமிழ்ச் சமுதாயத்தின் விருந்தோம்பும் பண்பினை உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்ற தன்மையில் அமைந்துள்ளதோர் அற்புதத் திருவிழா.

உழவர் பெருமக்கள் பாடுபட்ட பலனை ஒன்று சேர்த்து, பலன் காணப் பாடுபட்டோர்களையும் சேர்த்து உறுதுணை நின்ற அனைவருக்கும் நன்றி கூறிப் பண்பினை வெளிப்படுத்திடும் பண்பட்ட நாள்.

இவ்விழாவின் போது வரும் விருந்தினர்களை இருகரம் கூப்பி இன்முகத்தோடு வரவேற்று விருந்தோம்பி அனுப்பும் காட்சியை நாம் இல்லங்கள் தோறும் காணலாம்.

இத்தகைய தமிழர்களின் தனிச்சிறப்பு மிக்க பொங்கல் விழாவின் போது அண்டை அயல்நாடுகளில் இருந்து தமிழகத்தின் பண்டைச் சிறப்பு, பண்பாடு, கலைகள், சிற்பத் திறன்மிக்க கோயில்கள், அவற்றின் நெடிதுயர்ந்து நிற்கும் கோபுரங்கள், சரித்திரச் சிறப்பு மிக்க இடங்கள், கவின்மிகு கடற்கரைகள் ஆகியவற்றைக் கண்டு களித்துச் செல்லவரும் உல்லாசப்பயணிகள் நமது சிறப்பு மிக்க விருந்தினர்கள் அன்றோ? அவர்களை அகமும் முகமும் மலர வரவேற்று விருந்தோம்பி அனுப்புவது நமது கடமையல்லவா?

தமிழகம், உலக அரங்கில் நல்லபடி விளம்பரம் பெறவில்லை. தற்போதுதான் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1971-ஆம் ஆண்டு நம் இந்திய நாட்டிற்கு 3,00,995 வெளிநாட்டுப் பயணிகள் வந்தனர், அவர்களில் 38,074 பேர்கள் தமிழகத்திற்கு வந்திருந்தனர். ஆண்டு வாரியாக வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையைப் பார்ப்போமேயானால் அது கூடிக்கொண்டே வருவதைக்காணலாம்.

1980-ஆம் ஆண்டில் குறைந்தது பத்து இலட்சம் பேர்களாவது இந்தியாவிற்கு வருவார்கள் என இந்தியப் பேரரசு கருதுகிறது. அவர்களில் சுமார் ஒன்றரை இலட்சம் பேராவது தமிழ்நாட்டிற்கு வருதல் கூடும். நாம் தற்போது எடுத்துக்கொள்ளும் முயற்சிகளின் விளைவாக 1980-ஆம் ஆண்டு குறைந்தது மூன்று லட்சம் வெளிநாட்டுப் பயணிகளையாவது இங்குக் கொண்டு வந்து சேர்த்திட இயலும்.

ஏனெனில், வெளிநாடுகளில் இந்தியா என்றால் காஷ்மீர், இந்தியா என்றால் ஆக்ரா என்ற நிலையோடு இருந்த மாயை அகன்று தமிழ்நாடு தலை தூக்கி வருகிறது.

தமிழக அரசு பொங்கல் விழாவின்போது வரும் வெளிநாட்டுப் பயணிகளைச் சிறப்பிக்கும் நோக்குடன் ஆண்டு தோறும்பொங்கல் விழாவை, சுற்றுலா விழாவாகக் கொண்டாடுவது என்று முடிவு செய்து அதன்படி 1971-ஆம் ஆண்டிலிருந்து இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சுற்றுலா விழா, பொங்கற் புதுநாளிலிருந்து சனவரித்திங்கள் 21-ஆம் நாள் வரை தமிழகத்தில் சென்னை, தஞ்சை, திருச்சி, மாமல்லபுரம், இராமேசுவரம், மதுரை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கொண்டாடச் சுற்றுலாத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.




சென்னை மாநகரில் உள்ள இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நட்சத்திர ஒட்டல்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு நாள் வெளிநாட்டுப் பயணிகளை உபசரிக்கவும், அவர்களுக்காகக் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யவும் முன்வந்துள்ளன. இப்பொங்கல் சுற்றுலா விழாவை ஒட்டி, சென்னையில் ஓவியக் கண்காட்சியும், மாமல்லபுரத்தில் உள்ள புலிக்குகையில் பல்லவர்கள் காலத்தில் நடைபெற்றது போலக் கலைநிகழ்ச்சியும், மதுரையில் மஞ்சு விரட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ்விழாவை நடத்துவதன் நோக்கம் தமிழகம் தனது விருந்தோம்பும் பண்பினால் எண்ணற்ற வெளிநாட்டுப்பயணிகளை வரவேற்க வேண்டும் என்பதுதான்.

சுற்றுலா உலகிலேயே இன்று பெரிய தொழிலாக வளர்ந்துவிட்டது. அன்றாடம் இயந்திர நாகரிகத்தில் சுழன்று, சுழன்று சலித்துப்போய் அவற்றிலிருந்து விடுபட்டு ஆண்டில் சிலநாட்களாவது எங்காவது சென்று இயற்கை அளிக்கும் அமைதியான சூழ்நிலையில் ஓய்வு பெற்று நிம்மதியாக இருந்துவிட்டு வர வேண்டும் என்ற வேட்கை அண்மைக் காலமாக மேலைநாட்டினரிடையே அதிகரித்துள்ளது. புதியன காணவேண்டும் என்னும் பொழுது போக்கிற்காகவும், இன்னும் பல்வேறு காரணங்களுக்காகவும், எண்ணிறந்தோர் தினந்தோறும் சுற்றுலாப் பயணம் மேற்கொள்கின்றனர். இவையாவும் சுற்றுலாத் தொழிலின் வேகமான வளர்ச்சிக்கு முக்கியக் காரணங்களாகும்.

இத்தாலி, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, போன்ற சிறுநாடுகள் சுற்றுலாத் தொழில் ஒன்றின் மூலமாகவே கோடிக் கணக்கான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்து அதன் மூலமாகப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் கண்டுவருகின்றன.

உதாரணமாகக் கூறவேண்டுமானால், ஸ்பெயின் நாட்டினைக் கூறலாம். ஸ்பெயின் நாட்டின் மக்கள்தொகை மூன்று கோடி.

அந்த நாடு இந்த ஆண்டு எதிர் பார்க்கும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மூன்றரைக் கோடி. எப்பேர்ப்பட்ட வளர்ச்சி என்பதனை எண்ணிப்பாருங்கள். ஒருகணம் மனக்கண் முன் நிறுத்திப் பாருங்கள்.

ஆசிய நாடுகளில் ஜப்பான் ஏராளமான மக்களை ஈர்க்கின்றது. காரணம் அந்த மக்கள் அவ்வளவு சிறப்பாகச் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுகின்றனர். எனது பயணத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றினையே குறிப்பிட விரும்புகிறேன். நானும் எனது நாடாளு மன்ற நண்பர்களும் டோக்கியோ நகரத்தைச் சென்றடைந்தபோது மாலை நான்கு மணி. அங்குள்ள நண்பர் ஒருவருக்கு அறிமுகக் கடிதம் கொண்டுபோயிருந்தேன். அவரது அலுவலகம் ஐந்து மணிவரை தான் இயங்கும். நாங்கள் தங்க ஒய். எம். சி. ஏவில் இடம் ஏற்பாடாகியிருந்தது. நான் எனது பொருட்களையெல்லாம் அறையில் போட்டவுடன், நண்பர் உள்ள அலுவலகம் போக வேண்டும். நேரமோ மிகவும் குறைவு. எனக்கோ ஜப்பானிய மொழி தெரியாது. ஆங்கிலம் தெரிந்த ஒருவரிடம் விசாரிக்க எண்ணினேன். ஒரு மாணவர் அங்கு நின்றிருந்தார். அவரிடத்தில் உரையாடினேன். அவருக்கு ஆங்கிலம் தெரிந்த காரணத்தால் பழகுவது எளிதாயிற்று.

நண்பரின் விலாசத்தை அவரிடம் காண்பித்தேன். ஜப்பானில் ஒரு சிறந்த பழக்கம். எந்த இடத்திற்கு யாரிடம் வழி கேட்டாலும், உடனடியாக ஒரு காகிதத்தை எடுத்து, அந்த இடத்திற்கு இப்படித்தான் போக வேண்டும் என்று படம் போட்டுக் காட்டிவிடுவார்கள். மாணவத் தோழர் அதேபோல் படம் போட்டுக் காட்டினார். நான் விரைவாகப் போக வேண்டும், உடன் வந்து உதவமுடியுமா? என்றேன். காலமின்மையைச் சுட்டிக் காட்டினேன். சற்றும் தயங்காமல் என்னை டிராமில் ஏற்றினார். டிராமில் ஏறிய பிறகுதான் எனக்கு, என்னிடமுள்ள வெளிநாட்டு நாணயத்தை ஜப்பான் நாட்டு யென் நாணயமாக மாற்றாதது நினைவு வந்தது. என் நிலையைப் புரிந்துகொண்ட மாணவத்தோழர், சில்லறையைத் தானே எடுத்துக் கொடுத்து டிக்கெட்டும் வாங்கினார். நான் நண்பரை அவரது அலுவலக நேரம் முடிவதற்குள் சந்தித்து விட்டேன். மீண்டும் ஒய். எம். சி. ஏ. விற்கு வந்து, என்னிடம் இருந்த நாணயத்தை மாற்றி, அம்மாணவத் தோழரிடம்,



## அடுத்த இதழிலிருந்து

**ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் பற்றிய செய்திகள் தொடர்ந்து இடம்பெறும்.**

டிக்கெட் பணத்தை அளித்தேன். அவர் காட்டிய அன்பு இன்னமும் என்னுள்ளத்தில் பசுமையாக உள்ளது. அப்படிப்பட்ட தன்மைகள் நம் நாட்டிலும் பரவிட வேண்டும் என விரும்புகிறேன். ஒரு முறை வந்தவர், மறுமுறையும் வரும் வண்ணம் நாம் அன்போடு நடந்து கொள்ளவேண்டும்.

அன்பால், பண்பால், நட்பால் வெளிநாட்டுப் பயணிகளை உபசரிப்பதோடு நின்றுவிடுவது மட்டும் நல்லதல்ல. நம் நாட்டின் எழிற்சிற்பங்கள், சரித்திரச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள புகழ்மிக்க இடங்கள், சிற்பக் கலைக்கூடங்களாகத் திகழும் கோயில்கள், இயற்கை தந்த செல்வங்களான மலை வளம், கடற்கரை போன்ற இடங்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அவற்றின் தன்மை மாறாமல் வைத்திருக்க வேண்டும். மாறாக நமது பொறுப்பற்ற போக்கினாலும், சுய நலத்தாலும் கோட்டைகள் பாழடிக்கப்பட்டால், சிற்பங்கள் சிதைவுற்றால், காடுகள் அழிவுற்றால், காலத்தினால் சிறப்பெய்திநின்ற அவைகள் யாவும் சிறப்பற்றுப் போய், சுற்றுலா வளர்ச்சி பாதிக்கப்படும்.

இப்படிப்பட்ட இடங்களைச் சுத்தமாக நல்ல முறையில் வைத்திருப்பதோடு மட்டும் இல்லாமல், அவற்றைக் காண வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தொல்லைகள் ஏதும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். வெளிநாட்டவர் வந்தால், அவர்கள் பின்னால் பிச்சைக் காரர்களும், சிறு பொருள் விற்பனையாளர்களும் கூட்டமாகச் சென்று கொடுக்கும் தொல்லைகளை நாம் தினந்தோறும் கண்கூடாகக் காண்கிறோம்.

பத்திரிகைகளிலும் படிக்கிறோம். வழிகாட்டுகிறேன் என்று ஏமாற்றுபவர்கள் வேறு! ஓயாத தொல்லைகளை அனுபவிக்கவா வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றார்கள்? இப்படிப்பட்ட அனுபவம் நேர்ந்தால் மறுபடியும் அவர்கள் வருவார்களா? எனவே, இத்தகைய தொல்லைகளைக் கொடுப்பது யாராக இருந்தாலும் அதனைப் பார்க்கும் எவரும் அவற்றைத் தடுக்க வேண்டும். திரும்பிச் செல்லும் இவர்கள் இவற்றைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லமாட்டார்களா? இதனால் நமது நாட்டின் பெருமை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நாம் எல்லாரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரயில்வே நிலையங்கள், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், பல்வேறு அரசாங்கத் துறைகள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் சுற்றுலா இடங்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்களை அணுகும்போது இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

சுற்றுலா வளர்ச்சிக்காக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. ஆனால், அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் மட்டும் போதாது. பொது மக்களின் ஒத்துழைப்பு முழு அளவில் தேவை. அப்போது தான் தமிழகத்தில் சுற்றுலாத் துறை வளரும். பொருளாதாரம் மேன்மையடையும். நமக்கு மிகவும் தேவையான வெளி நாட்டுச் செலாவணியும் கிடைக்கும். நமது நாட்டின் அருமை உலகெங்கும் பரவும். தாழ்ந்து கிடந்த நமது பெருமை உயர்வு பெறும். சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகள் நமது பண்பாட்டுத் தூதுவர்கள். நாளையிலிருந்து நடைபெறும் பொங்கல் சுற்றுலா விழாவின் போது நாம் நமது உயர்ந்த பண்புகளை எடுத்துக் காட்டும் முயற்சியில் பணிபோடும், இனிய முகத்தோடும் சுற்றுலா வெளிநாட்டுப் பயணிகளை வரவேற்று நண்பர்களாக அனுப்பி வைப்பது நம் எல்லாருடைய கடமையாகும்.

இதற்காகத் தமிழ்நாட்டின் பெருமக்களாகிய உங்களனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

(13—1—73 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை).









செல்வி காஞ்சனா, செல்வி கௌரி சகோதரிகளின் பேரணி நாட்டியமும் தரங்கமும், விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் கவர்ந்தது குறிப்பிடத் தக்கது





சுற்றுலா வார விழாவின் முதல் நாளான 14-1-1973 அன்று முதல் பயணியாக சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கிய இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஆலிவர் பேட்டர்சன் என்பவருக்குத் தஞ்சாவூர்த் தட்டு பரிசு தருகிறார் முதல்வர் கலைஞர்



சுற்றுலா வார விழாவின் தொடக்க விழாவுக்கு வருகை புரிந்திருந்த சில வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்



வெளிநாட்டாரைக் கவரும் தந்தத்தாலான சிற்பங்கள்



மாமல்லபுரத்தின் அருகேயுள்ள புலிக்குகை



கோலவண்டு யாழ்செய்யும் குற்றாலத் தண்ணருவியின் வெள்ளமும் அதில் குளித்தின்பம் பெறும் மக்கள் வெள்ளமும்



உதகமண்டல ஏரியில் உல்லாசப் படகுப் பயணம்



கதிரவன் எழும் காட்சியைக் கண்ணுக்கு விருந்தாக்கும் கன்னியாகுமரிக் கடற்கரை



சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற ஒகேனக்கல் அருவி

# 24 வது குடியரசுநாள் விழா

## சென்னை 26-1-73

குடியரசு நாள் இன்று! சென்னை மாநகரில்
தமிழக அரசின் பல்வேறு துறையினர்
நடத்திக் காட்டிய அணிவகுப்புக்களை
இன்று காலை பல லட்சம் மக்கள்,
கடற்கரையில் கண்டு களித்தனர்.
காந்தியடிகள் சிலைக்கருகே தொடங்கி
[illegible] வரையில் மக்கள்
வெள்ளம். இந்த தொடர்ந்த
அணிவகுப்பு. ராணுவத்தினர், காவல்
துறையினர், மாணவர்கள், அரசின்
சேவை இலாகாவினர், அணிவகுப்பில்
பங்குபெற்றனர்.
தமிழகத்தின் தொன்மை மிகுந்த
கலைக்காட்சிகளைத் தாங்கிய
அழகு மிகு வண்டிகளின் ஊர்வலம்
கிராமியக் கும்மி கோலாட்டம்,
காவடி, கரகம், புலியாட்டம்,
நாட்டிய இசை, நடனம் போன்ற
கலை நிகழ்ச்சிகள், தமிழகத்
திருநாட்டின் லட்சோப லட்சம்
மக்களிடையே புத்துணர்ச்சியை
ஊட்டும் வண்ணம் அமைந்தன.







இன்று நேரும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை
நேரில் பார்த்தேன்! மக்களாட்சித் தத்துவத்
தின் மாண்பினைக் காக்கும் பொறுப்பு
ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்கிறது.
அந்நாட்டின் ஒருமைப்பாடு என்பது இன்
றைய வகையில் மக்கள் படிப்பறிவு அந்
நாட்டைப் பற்றிய அக்கறை என்பதில்.
வளம் பெற்றது அந்நாடு என
வாழும் ஒற்றைச் சுதந்திர நாட்டில்
அமைதியை ஒப்பற்ற கொள்கை
நேர்மையான பாதையையும் வழியுறுத்
தாம் இருக்க வேண்டும்.
மக்களாட்சி முறை, மக்களுக்குப் பல
உரிமைகள் வழங்குகிறது.
அந்த உரிமைகள், கட்டாயக் கல்வி
பெறும் மக்களாட்சி முறையை
அறிந்திருப்பது இருக்க, அந்த உரிமை
களுக்கு சில வரம்புகளை கட்டுப்
பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.
மக்களாட்சியைப் பெண்களுக்கோ
உரிமைப்பட்டுள்ளன. ஆண்கள்
பெண்கள், சாதிகள், மொழிகள்
வேறுபாடின்றி அனைவருக்கும்
சமத்துவம் அளிக்கிற உரிமை
வழங்கப்பட்ட, இந்த
சுதந்திரப் பெண்களுக்கும் நாம்
மதிக்கின்றோம். இதுதான் ஜனநாயகத்
தின் சிறப்பு. என் கருத்துக்கிணங்க

ஒற்றைக் கொடி போல், இப்போ
பெண்மணிகளை அனுமதிப்பதற்கு
வேண், புறக்கணித்து விடுவேன் —
என்று கூறுகிற மக்கள் ஜனநாயக
வாதிகளாக முடியாது. அதே போல்
பிறப்பெண்மணிகளை மதிக்கின்றோம்
பற்றிய கருத்துக்களை போல் சுதந்திர
நிலை, நாள் நிலை புறக்கணிக்கப்பட
வேண்டும் ஜனநாயகத்தைப் பற்றிய உணர்
வில்லை.
இதை இதைக் குறிக்கும் அமைப்புகள்
சுதந்திர தினத்தின் போது, அந்த சுதந்திர
ஜனநாயக உரிமையில்
நேர்மைப்பட்ட முறையில் தான், அந்த சுதந்திர
தினத்தில் வேறு இந்த சுதந்திர
நாடு ஜனநாயக முறையில் பல
கட்சிகள் இருக்கின்றன. இந்தக்
கட்சிகளின் பல்வேறு கொள்கைகள்
கூட ஒன்றுக்கொன்று மாறுபட்ட
போதும். இவர்களுடைய நாட்டு
இதயம் புரிந்து கொண்டு போராடும்
மக்களாட்சிக் கொள்கைக்கு உரிய
மேலும் நாட்டு-பெண்களுக்கு உரிமை
தருவோம்.
பெண்களுக்குத் தந்தை காந்தி
-யின் ஒப்பற்ற? இந்த காந்தி
யின் நாட்டுப்பற்றுக்குப் பெண்களே




உலகக் குவது? இந்தக் கொடியின்
நேர்மையோடு இருந்து நம்
இதயம் எடை கொண்டேன்.
சுதந்திர நாட்டுக்குரிய ஒரு பெரும்
நாடும், காந்தியின் தியாக
சுதந்திரமே! அந்த அந்தக்
காந்தியின் ஒரு பெரும் இந்தியா
தான் தலைமை என்கிறோம்,
நிலை அறிவியல், இலக்கியம்,
இசைத்துறையில் நாட்டுப் பெருமை
சுதந்திரக் கோட்பாடுகள் இருக்கும்
பொருந்தியதாய் இருக்கும்.




செலுத்தக் கொள்கையின் ஒற்றுமை
கொடியை சுதந்திரக் கொடியின்
உச்சியிலே பறக்கும் உறுதியுடன்
வேண்டும்.
வையத்தலைமை இந்தக் கொடியின்
கொடியே உச்சியில் ஒற்றுமைக்
கொடி காட்டட்டும். ஒன்றினால்
நாடு நாடு - தொழில்துறையில்,
பொருளாதாரத்துறையில், அறிவியல்
துறையில் முன்னேற்ற வேட்கை
பெருகட்டும்.
பெருமையும், ஒட்டுமொத்த
நல்லோர் சுதந்திரம் போல

[illegible]



[illegible]



[illegible]





[illegible]

[illegible]





[illegible]





(18)

[illegible]



[illegible]









குடியரசு - இரண்டாவது கட்டம் -

இந்தியக் குடியரசின்
பொறுப்புக்களை, ஏனைய
மாநிலங்களும் ஏற்று
செயல்பட அதிகாரத்தை இந்தியப்
பெருநாட்டின் ஒருமைப்பாடு

மூன்றாவது கட்டம் -

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு
மூன்று கட்டங்களே முடிவான
கட்டங்களல்ல!

மேலும் பல கட்டங்கள் தேவைப்
படும். ஒவ்வொரு கட்டத்திலும்
ஒற்றுமை - ஒருமைப்பாடு -
காத்து; உறுதியுடன் வெற்றிகளைக்
குவிப்போம் என்று இந்தக்
குடியரசு நாளில் சபதம்
எடுத்துக் கொள்வோம்.

வணக்கம்.

[signature]

(முதல்வரின் வானொலி உரை. 26-1-73)



கன்னியாகுமரிக் கடலில் உள்ள பாறையில் கட்டப்பட்டுள்ள விவேகாநந்தர் நினைவு மண்டபம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் தனிச் சிறப்புக் கொண்டது





நாயக்க மன்னர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்கிவரும், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை



திருமலை நாயக்கர்

மற்றொரு தோற்றம்



கன்னியாகுமரிக் கடற்கரையில் அண்ணல் காந்தியடிகளின் நினைவுக்காக எழுப்பப் பெற்றுள்ள காந்தி மண்டபம்





பிறநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வியப்பை விருந்தாக்கும் மாமல்ல புரத்துச் சிற்பங்கள்



வேடந்தாங்கலில் சரண்புகுந்து பறந்து மகிழும் வெளிநாட்டுப் பறவைகள்



கொடைக்கானல் மலைக்கு எழிலூட்டும் ஒய்யுதிர் வெள்ளருவி (Silver Cascade)






# கல்லெல்லாம் கதை சொல்லும் கடல் மல்லையில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை நாளும் காணலாம்



# வற்றாத ஊற்று!



சுற்றுலாத் துறை என்பது தொழில் துறையை விட, அதிக வருமானம் தரத்தக்க வலிவுள்ள துறையாகும். சுற்றுலாத் துறைக்குச் செலவிடப்படுகிற பணம் அந்த நாட்டு மக்களுடைய—அரசுடைய வருமானத்தை நான்கு மடங்காகப் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றத்தை உண்டாக்குவதாக இருந்து வருகிறது.

உலகில் பல நாடுகள், குறிப்பாக ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள் பெரும்பாலும் சுற்றுலாத்துறை வருமானத்தின் மூலமே நல்ல பலனை இன்று அனுபவித்து வருகின்றன.

ஒரு நாட்டின் சுற்றுலாத் துறைக்குப் பயணிகளைக் கவர்ந்திடப் புராதனச் சின்னங்கள், சிற்பங்கள், எழில்மிகு நீர் வீழ்ச்சிகள், வனப்பு மிக்க மலைத் தொடர்கள், கடலோரப் பகுதிகள் மிகமிக முக்கியமாகத் தேவைப்படுவதோடு, அந்த நாட்டின் ஏற்ற தட்ப வெப்ப நிலையும், வரலாற்றுச் சிறப்பும் இருந்திடல் வேண்டும்.

இந்த அடிப்படையில், இந்தியத் துணைக்கண்டத்தில் பல் வேறு கலை, மொழி, நாகரிகக் கலாச்சாரத் தொடர்புடைய புராதனச் சின்னங்கள், சிற்பங்கள் நிறைய இருக்கின்றன. குறிப்பாகத் தமிழ் நாட்டில் மிகத் தொன்மையான, பல் லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய, திராவிட நாகரிகத்தை விளக்கிடும் புராதனச் சின்னங்களும், சிற்பங்களும், கோயில்களும், கட்டடங்களும் மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கின்றன. அவை மட்டுமல்லாது தமிழ்நாட்டின் மூன்று பக்கங்களும் கடல் சூழ்ந்து இயற்கையான—உலகிலேயே சிறந்தவையாகக் கருதப்படும்—கடற்கரைகளும், குற்றாலம், சுருளி, ஒகேனக்கல் நீர் வீழ்ச்சிகளும், உதகை, கோடை, ஏர்க்காடு போன்ற மலைவாழ் நிலையங்களும், முதுமலை, ஆனைமலை, முண்டன் துறை (நெல்லை) வனவிலங்கு இல்லங்களும், வேடந்தாங்கல், கோடிக்கரை பறவைச் சரணாலயங்களும், அதிகக் குளிரோ, அதிக வெப்பமோ இல்லாத தன்மையான தட்ப வெப்ப நிலையும் தமிழகத்தில் நிறைந்திருக்கின்றன.



சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு ஏ.வி.பி. ஆசைத்தம்பி

இத்தகைய சிறப்பு மிக்க இந்தியத் துணைக்கண்டத்திற்கு 1971-ஆம் ஆண்டு 3,00,995 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்ததாகவும், அவர்கள் மூலம் இந்தியாவுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 40 கோடி என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த மூன்று இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளில், தமிழ்நாட்டுக்கு 38,074 வெளிநாட்டுப் பயணிகள் மட்டும் வருகை தந்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு இந்தியாவில் இருக்கிற சிறப்பு அம்சங்களைப் போல், உலகில் வேறுநாடுகளில் கிடையாது. என்றாலும் மற்ற நாடுகளுக்கு இதே 1971-ஆம் ஆண்டு அதிகப்பயணிகள் சென்றிருப்பதாகவும், அதன் மூலம் நம்மை விடப்பன்மடங்குஅதிகவருமானம் அந்நாடுகளுக்குக் கிடைத்திருப்பதாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து இந்தியாவில் என்னதான் சிறப்புகள் இருந்தாலும், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏதோ சில குறைகள் இருப்பதால்தான் அதிகமாக வரவேண்டிய சுற்றுலாப் பயணிகள் வராமலிருக்கின்றனர் என்ற உண்மை தெரிகிறது.

இந்தியாவில் சுற்றுலாப் பயணிகள் தங்க வசதியான ஓட்டல்களும், போக்கு வரத்து (கார், விமானம்) வசதிகளும் சரிவரச் செய்துகொடுக்கப்பட்டுப் போதிய விளம்பரமும் உலகில் செய்தால் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கும் அதிகமாக வருவார்கள் என்பதை உணர்ந்து, இன்று இந்திய அரசாங்கம் தானே நவீன ஓட்டல்களை அமைப்பதிலும், இதர மாநிலங்களை அவ்வாறு கட்டத் தூண்டுவதிலும், விமானப் போக்கு வரத்தை விரிவாக்குவதிலும் ஈடுபட்டுள்ளது.

1966 வரை தமிழகத்தில் சென்னை நகரில் ஓரிரண்டு நட்சத்திர ஓட்டல்கள் மட்டுமே இருந்தன. தமிழகத்தில் அரசுத் துறையில் திருச்சி, மதுரை, உதகை ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே சுற்றுலா மாளிகைகள் இருந்தன.

1971-ல் சுற்றுலாத் துறையின் முக்கியத்துவத்தைத் தமிழக அரசு உணர்ந்து இதற்கென்று தனி அமைச்சகத்தையும், தனிக் கழகம் ஒன்றையும் அமைத்துச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய முனைந்தது. இதன் பலனாகக் கன்னியாகுமரி, திருச்செந்தூர், குன்னூர், கொடைக்கானல், ஏர்க்காடு போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள் பயணிகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுலா மாளிகையில் வெளிநாட்டுப் பயணிகளும் தங்கத் தக்க வசதிகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன. ஒரு மாதத்திற்குள், சுற்றுலா மாளிகையிலுள்ள ஒவ்வொரு அறையிலும் தொலை பேசியும், இசைக் கருவியும் அமைக்கப்படுவதோடு அவர்கள் உபயோகத்திற்கு ஒரு துண்டும், சோப்பும், அதிகாலையில் காபியும் வழங்கப்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் 100 பயணிகள் தங்கத் தக்க அளவுக்குச் சுற்றுலா மாளிகை கட்டும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. இவை தவிர, மகாபலிபுரம், ஒகேனக்கல், ஒசூர், சிதம்பரம், இராமேசுவரம், தூத்துக்குடி, குற்றாலம் ஆகிய இடங்களிலும் சுற்றுலா மாளிகைகள் கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் மூன்றாண்டுகளுக்குள் நிச்சயம் கட்டி முடிக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத் தலைநகரான சென்னையில் இந்திய அரசு உதவியோடும், தமிழக அரசு உதவியோடும் இந்த ஆண்டிற்குள்ளேயே சில நட்சத்திர ஓட்டல்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்குள் தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஓட்டல்கள் முழுவதும் பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு இடைஞ்சலாக உள்ள பிச்சைக்காரர்கள் தொல்லையும், நீக்கப்படுவதற்கு மூன்றாண்டுகளுக்குள் தமிழகத்தில் பிச்சைக்காரர்களே இல்லை என்ற நிலையில் தமிழக அரசின் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடும்.

சுற்றுலாப் பயணிகள் தமிழ் நாட்டின் சிறப்புகளை ஆங்காங்கே பார்த்து மகிழ்ந்திட வசதிமிக்க சொகுசுப் பேருந்துகள் நான்கு தற்போது இந்திய அரசாலும், தமிழக அரசாலும் விடப்படுகின்றன; மூன்றாண்டுகளுக்குள் மாவட்டத்திற்கு மாவட்டம் திறமையான வழிகாட்டிகளுடன் இவை இயங்க ஆரம்பித்துவிடும்.

மொத்தத்தில் இந்தியாவுக்குக் குறிப்பாகத் தமிழகத்திற்குச் சுற்றுலாத் துறை இறைக்க இறைக்க வற்றாத ஊற்றாகத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!


தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ. 10
அரை ஆண்டு ரூ. 5
தனிப்பிரதி 40 காசு

நிருவாகி:
தமிழரசு அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை-2



## சர்வதேசத் தேவைக்கான இணைப்பு ரயில் பெட்டிகள்

உலகின் பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலைகளில் ஒன்றான இணைப்புத் தொழிற்சாலை (Integral Coach Factory) ஆண்டு தோறும் 700-க்கு மேற்பட்ட பல ரக ரயில் பெட்டிகளைத் தயாரித்து வருகின்றது.

கடந்த 17 ஆண்டுகளாக I. C. F. தயார் செய்த ரயில் பெட்டிகள் நம் நாட்டு ரயில் பாதைகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுது I. C. F. ரயில் பெட்டிகள் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பர்மாவிற்கு 66 போகிகளும், தாய்லாந்துக்கு 45 போகிகளும், தாய்வானுக்கு 100 போகிகளும், மேலும் தாய்வானுக்கு 113 பிரயாணி ரயில் பெட்டிகளும் ஏற்றுமதியாகியுள்ளன.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை
(இந்திய ரயில்வே நிர்வாகத்தின் ஓர் பிரிவு)
சென்னை.




181



# சுற்றுலாச் சென்று சிறைவு நூல் தந்தவர்

தமிழகத்திலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், பல்வேறு வெளிநாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்து 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் நன்னோக்கத்துடன் தாம் பெற்ற அனுபவங்களைச் சுவைபடத் தொகுத்து நூலாக வடித்துத் தந்தோர் ஏராளம். அந்நூற்கள், இனிப் பயணம் செய்வோருக்குப் பயன்படுவதோடு, பல்வேறு செய்திகளை-நாடுகளின் பழக்கவழக்கங்களைப்—பண்பாடுகளை—நாகரிகங்களை அறிந்து கொள்ளவும் பெரிதும் உதவும். அவ்வாறு பயன்படும் வகையில் பயண நூற்கள் தந்தோர் பெயர்களையும், அவர்கள் ஆக்கித்தந்த நூல்களின் பெயர்களையும், ஓரளவு இங்கே தொகுத்துத் தந்திருக்கிறோம். இந்தப் பட்டியல் முழுமையானதோ, முற்ற முடிந்ததோ அன்று என்பதை நினைவிற் கொண்டு, பட்டியலைக் காணுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

யான் கண்ட இலங்கை—டாக்டர் மு. வரதராசனார்.

எனது இலங்கைச் செலவு—திரு. வி. க.

கடலின் கண்முத்து அல்லது யான் கண்ட இலங்கை—சி. எம். இராமச்சந்திரன்.

இலங்கையில் ஒருவாரம்—கல்கி.

எழிலார் இலங்கை—ப. மீ. சுந்தரம்.

அமெரிக்கப் பயண நினைவலைகள்—மேரி மாசிலாமணி.

அமெரிக்காவைப் பார்—சோமலெ.

அமெரிக்காவில்—கே. எம். ஜார்ஜ்.

அமெரிக்காவைப்பார்—எஸ். எஸ். மாரிசாமி.

அதிசய நாடு அமெரிக்கா—எஸ். ஆர். சண்முகம்.

நான் கண்ட ஜெர்மனி—மேரி மாசிலாமணி.

கிழக்கு ஜெர்மனியில் சில நாட்கள்—எச். ஆர். அய்யர்.

நான் கண்ட ஜெர்மன்—ஜி. டி. நாயுடு.

புதிய ஜெர்மனி—எஸ் சங்கரன்.

நான் கண்ட மலேயா—கா. இராமநாதன்.

மலேயா முதல் கனடா வரை—ஏ. கே. செட்டியார்.

மலேசியாவில் ஒருமாதம்—ம. பொ. சிவஞானம்.

சிங்கப்பூர் வழிகாட்டி—சொ. ஐ. துரை.

தென்கிழக்கு ஆசியாவில்—க. இராசாராம்.

அக்கரைச் சீமையில்—சோமு.

உலகம் சுற்றிய தமிழன்—சோமலெ.

உலகநாடுகள்—சோமலெ.

உலகத் தமிழ்—நெ. து. சுந்தரவடிவேலு.

ஒன்றே உலகம்—தனிநாயக அடிகள்.

உலகப் பயணம்—கே. பி. எஸ். மேனன்.

உலகம் சுற்றினேன்—சி. சுப்பிரமணியம்.

நான் கண்ட வெளிநாட்டுக்காட்சிகள்—சோமலெ.

என் பிரயாண நினைவுகள்—சோமலெ.

பிரயாணம் ஒரு கலை—சோமலெ.

பிரயாணக் கட்டுரைகள்—ஏ. கே. செட்டியார்.

பிரயாண நினைவுகள்—க. அருணாசலம்.

பிரயாண இலக்கியம்—நீரா. சீனிவாசன்.

ஜீவன் லீலா—கா. கா. கலேல்கார்.

தென்னாட்டு மலையூர்கள்—எம். எஸ் கல்யாணசுந்தரம்.

மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்—கோ. சிவபாதசுந்தரம்.

புத்தர் அடிச்சுவட்டில்—கோ. சிவபாதசுந்தரம்.

தமிழ்நாடு பயணக் கட்டுரைகள்—ஏ. கே. செட்டியார்.

உதயசூரியன்—தி. ஜானகிராமன்.

புன்னகை பூத்த நாடு—எம். ஆர். பாலகிருஷ்ணன்.

செல்வம் கொழிக்கும் சீமை—கலையன்பன்.

பிரிட்டனில் கண்ட புதுமைகள்—அருண்.

ஐரோப்பாவில் ஐந்து நாட்கள்—கலையன்பன்.

அங்கும் இங்கும்—நெ. து. சுந்தரவடிவேலு.

வால்காவிருந்து—சா. கணேசன்.

மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை—ம. பொ. சிவஞானம்.

நான் கண்ட சோவியத் ஒன்றியம்—நெ. து. சுந்தரவடிவேலு.

லண்டன் முதல் மாஸ்கோ வரை—வ. ஈஸ்வரமூர்த்தி.

சோஷலிச நாட்டில் ஜனநாயகத் தலைவர் ஆர். வெங்கட்ராமன்.

நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்—அ. திருமலைமுத்துச்சாமி.

நான்கண்ட எகிப்து—கே. சீனிவாசன்.

இதயம் பேசுகிறது—மணியன்.

நான் சென்ற சில நாடுகள்—சி. சுப்பிரமணியம்.

கால்நடையில் 28 ஆயிரம் மைல்கள்—டி. கே. இராசகோபால்.

வடஇந்திய யாத்திரை—பகீரதன்.

ஜப்பான் செலவு—தி. மாணிக்கவாசகம்.

ஜப்பானில் சில நாட்கள்—சு. இராமசாமி நாயுடு.

நான் கண்ட ஜப்பான்—சு. இராமசாமிநாயுடு.

வேங்கடம் முதல் குமரி வரை—தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.

உல்லாசப் பிரயாணம்—ஆற்றலரசு.

நடந்தாய் வாழி காவேரி—சிட்டி-ஜானகிராமன்.

இமயத்தின் எல்லையில்—எம். எஸ். பி. சண்முகம்.

காஷ்மீர்—என். ஆர். வெங்கட்ராமன்.

காஷ்மீரைக் காண்போம்—அ. வேதாசலம்.

திருக்கயிலாய யாத்திரை—சுவாமி சித்பவானந்தா.

கயிலை அழைக்கிறது—என். வி. அனந்தராமன்.

நேபாளமும் கேதாரமும்—ந. ச. மீனாட்சிசுந்தரம்.

நேபாளம்—கே. சீனிவாசன்.

நமது தலைநகரம்—சோமலெ.

பாரத யாத்திரை—புரவலன்.

காசியாத்திரை விளக்கம்—சபாபதிசுவாமிகள்.

நான்கண்ட நவசீனு—கே. வைகுந்தவாசன்.

நான் கண்ட செஞ்சீனம்—பிரஜாக்திஷோர் சாஸ்திரி.

புதிய சீனு—எஸ். சந்திரசேகர்.

எழுவர் நாங்கள்—கோவைக் கிழார்.

நான்கண்ட திபெத்—ஹென்றிச் ஹேரர்.

பல்கேரிய நினைவுகள்—அனந்தநம்பியார்.

ஆஸ்திரேலியாவில் சில நாட்கள்—சு. இராமசாமிநாயுடு.

நான்கண்ட ஆஸ்திரேலியா—சு. இராமசாமி நாயுடு.

ஆப்பிரிக்கா—எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்.

கண்டறியாதன கண்டேன்—கி. வா. ஜகந்நாதன்.

கருங்கடலும் கலைக்கடலும் (அச்சில்)—தி. ஜானகிராமன்.

இனியவை இருபது (அச்சில்)—டாக்டர் கலைஞர்.




## விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



## அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR I C CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

DSIC/1813TMA


# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வினா:** எங்கள் கிணறு 27 அடிக்குக் கீழ் பாறையாகப் போய் விட்டது. அதன் கீழ் 8½ அடி ஏகமாக வெட்டியும் அதன் கீழ் 9 அடி 'போரிங்' போட்டும் தண்ணீரில்லை. இதற்குக் கீழே வெட்ட வசதியில்லை. 8½ அடி வெட்டுவதற்கே வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ரூபாய் 2,000 கடன் பெற்றுள்ளோம். வெவ்வேறு ஊரிலிருந்து நீரோட்டம் பார்ப்பதற்காகக் கூட்டி வந்த 3 நபரும் எங்கள் நிலத்திலேயே மேற்குப் புறத்தில் (தற்போதைய கிணற்றிலிருந்து 200 அடி தள்ளி) 7 முதல் 10 கெஜத்திற்குள் நல்ல ஊற்று உள்ளதாகவும், தற்போதைய கிணற்றில் இன்னும் எவ்வளவு ஆழம் வெட்டினாலும் பயனில்லை என்றும் கூறிவிட்டார்கள். ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத மூவரும் ஒரே இடத்தையே குறிப்பிட்டுள்ளார்கள்! எனவே, அதில் குழாய்க் கிணறு அமைக்கலாமா? அதற்கு அரசு கடன் கொடுத்து உதவுமா? நிலத்தடி நீரைக் கண்டு கொள்ள நவீன கருவியுள்ளதா? யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? தயவு செய்துவிளக்கமான பதிலளித்துப் படித்து விவசாயத்தில் இறங்கியுள்ள என் போன்றவர்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—துரை முருகேசன்,
நவீன விவசாய முன்னேற்றக்குழு,
மாவுத்தன்பட்டி,
நிலக்கோட்டை வட்டம்,
மதுரை மாவட்டம்.

**விடை:** தங்களுடைய கேள்வி மிகவும் சிக்கலானது. நீரோட்டம் பார்த்தவர்கள் மூவரும் குறிப்பிட்ட இடத்தில், தாங்கள் குழாய்க் கிணறு அமைக்கலாம் என்றோ அல்லது அமைக்கக் கூடாது என்றோ நாங்கள் கூறக் கூடாது. ஏனெனில், நீரோட்டம் பார்ப்பவர்களின் பேச்சைக் கேட்டுக் கெட்டவர்களும் உண்டு; முன்னேறியவர்களும் உண்டு! எனவே, இது பற்றி நீங்களே முடிவு செய்துகொள்வது நல்லது. உங்களுடைய கேள்விக்கு நேரடியான பதில் அளிக்க முடியாமைக்கு வருந்துவதுடன், அறிவியல் அடிப்படையான நீரோட்டம் பார்க்கும்முறையினை மேற்கொண்டு இது பற்றி முடிவு செய்யுங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிலத்தின் கீழேயுள்ள நீரைப் பற்றிய முழுவிவரமும் அறிந்து கொள்வதற்குத் தற்பொழுது 'கம்ப்யூட்டர்' என்னும் கருவிகள் பயன் படுத்தப் படுகின்றன. இக்கம்ப்யூட்டர்களைக் கொண்டு எந்த இடத்தில், எத்தனை அடி ஆழத்தில், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்பதை அறிய முடியும்.

பூண்டி என்ற இடத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் திரு பி. குமாரசாமி அவர்கள் கண்டுபிடித்துள்ள "Direct Simulation Anlog Computor" என்னும் கருவியைக் கொண்டு நிலத்தின் அடியில் 3 மைல் ஆழம் வரையில்—நிலத்தைத் தோண்டியோ அல்லது துளையிட்டோ பார்க்காமல்—தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டு பிடிக்க இயலும்!

மேற்கூறப்பட்ட கருவிகளைப் பயன்படுத்திச் சோதனை செய்து பார்த்து தண்ணீர் கிடைக்கும் என்பது உறுதியான பிறகு, குழாய்க் கிணறு அமைப்பதே சிறந்தது. உங்களைப்போன்ற பலருக்கு இவ்வகையில் உதவி செய்யவே, தமிழ்நாடு அரசு இன்றையத் நிலநீர் ஆய்வுக்கெனத் தனித் துறையை 1970-ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. அத்துறையினர் தமிழ் நாடெங்கும் நிலநீர் பற்றிய ஆய்வினைத் மேற்கொண்டுள்ளனர். அவ்வாய்வு முடிந்தவுடன் எந்தெந்தப் பகுதியில் எத்தனை அடி ஆழத்தில், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்பதெல்லாம் திட்டவட்டமாகத் தெரியும். எனினும், தாங்கள் உடன் 'கம்ப்யூட்டர்' கருவிக் கொண்டு சோதனை செய்து பார்க்க விரும்பினால், உங்கள் அருகாமையில் உள்ள உதவி வேளாண்மைப் பொறியாளர் அவர்களின் உதவியை நாடலாம். அல்லது பின்கண்டவர்களிடமிருந்து தாங்கள் இது பற்றிய உதவியைக் கேட்கலாம்.

திரு எஸ். பஞ்சநாதன்,
இயக்குநர்,
நிலநீர் ஆய்வுத்துறை,
10-ஏ, தண்டபாணித் தெரு,
தியாகராயநகர்,
சென்னை-17.

திரு பி. குமாரசாமி,
இயக்குநர்,
நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையம்,
பூண்டி (அஞ்சல்),
திருவள்ளூர் (வழி)
செங்கற்பட்டு மாவட்டம்.

அடுத்து, முன்பு வாங்கிய கடன் முழுவதையும் திருப்பிக் கட்டுவதற்குள், புதிய கடனைப் பொதுவாகப் பெறமுடியாதென்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே, பழைய கடன் முழுவதையும் திருப்பிக் கட்டிவிட்டு, தாங்கள் புதிதாகக் கடன் பெற முயற்சி செய்யவும்.

குழாய்க் கிணறு அமைக்க உங்கள் பகுதியிலுள்ள நிலவள வங்கியிலிருந்து நீங்கள் கடன் பெறமுடியும். அவ்வாறு கடன் கோரும் போது, கூட்டுறவுத் துறையில் உள்ள பொறியாளர்கள் தாங்கள் குறிப்பிடும் இடத்தில் குழாய்க் கிணறு அமைப்பது சாத்தியமாக் இருக்குமா என்பதை ஆராய்ந்து, நிலநீர் ஆய்வுத் துறையினரின் ஆலோசனையையும் பெற்ற பிறகே, கடன் அனுமதிக்கப் பரிந்துரை செய்வார்கள். தாங்கள் நிலத்தில் குழாய்க் கிணறு அமைப்பது சாத்தியமில்லை என்றால், கடன் கொடுக்க மாட்டார்கள். எனவே, நிலவள வங்கி மூலம் குழாய்க் கிணறு அமைக்கக் கடன் பெற முயற்சிப்பதே சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வினா:** எங்கள் பகுதியில் தற்பொழுது அதிகப் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்பட்டுள்ளது. சூரிய காந்தி விதையும், அதன் மற்றப் பாகங்களும் என்னென்ன தொழில்களுக்கு உதவும்?

சூரிய காந்தி பிண்ணாக்கை மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாமா?

—வ. ர. ஐயப்பன், பி.ஏ.
அமைப்பாளர்,
உழவர் ஆய்வு மன்றம்,
சுக்காம்பட்டி,
மதுரை மாவட்டம்.

**விடை:** சூரிய காந்தி விதை பின் கண்ட தொழில்களுக்கு உதவும்.

1. வார்னிஷ், பெயிண்டுகள், சோப்பு முதலியன செய்யும் தொழில்களுக்கு உதவும்.

2. கம்பளி தயாரிக்கும் தொழில்களுக்கும், மரச்சாமான்கள் தயாரிக்கும் தொழிலுக்கும் உதவும்.

3. கால்நடை மற்றும் கோழிகளுக்கான தீவனம் உற்பத்தி செய்யும் தொழிலுக்குப் பயன்படும்.

4. எண்ணெய் எடுத்து 'வனஸ்பதி' செய்யும் தொழிலுக்குப பெரிதும் உதவும்.

5. மருந்துப் பொருள்கள் செய்யும் தொழில்களுக்கும் பயன்படும்.

சூரிய காந்தி விதை மேற்கண்ட தொழில்களுக்கு உதவுவதுடன், இரத்த அழுத்தம், இருதய நோய், நீரிழிவு போன்ற நோய்களினால் அவதியுறுவோர்க்கு மிகவும் ஏற்றதாகவும், அன்றாட வாழ்வில் பயன்படுத்துவதற்கு ஏற்ற எண்ணெய்யாகவும் உதவக்கூடியது. சூரிய காந்தி எண்ணெய்யில் உயிர்ச் சத்துக்கள் 'ஏ', 'பி', 'டி', 'கே' ஆகியவை உள்ளதால் உடல் நலத்திற்கு ஏற்றது. சூரிய காந்தியினுடைய விதைகளின் மேல் தோலை அகற்றிவிட்டு, நிலக்கடலைப் பயறுகளை வறுப்பது போல் வறுத்து, உப்பு, மசாலா பொடியெல்லாம் கலந்து நேரடியாக உண்ணலாம். சூரிய காந்தி விதையில் உள்ள பருப்பினைக்கொண்டு 'முந்திரி அல்வா' போன்ற அல்வா செய்யவும் பயன்படுத்தலாம். சூரியகாந்தி விதையில் உள்ள பருப்பில் புரதச் சத்து மிகுந்துள்ளதால் உடல் நலத்திற்கு நல்லது.

சூரிய காந்திப் பூவிலிருந்து மஞ்சள் நிறச் சாயம் தயாரிக்கலாம்.



சூரிய காந்தி விதைகளை நீக்கிய பின், பூக்களிலுள்ள சதைப்பிடிப்பான பாகத்தை நேரடியாக மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்தலாம் அல்லது 'சைலோ' முறையில் பதப்படுத்தி வைத்துக்கொண்டு பின்பு தேவையான பொழுது தீவனமாக உபயோகிக்கலாம்.

சூரிய காந்தி செடிகளைக் காகிதம் தயாரிக்கப் பயன்படுத்தலாம். அல்லது காயவைத்து விறகாகவும் பயன்படுத்தலாம்.

சூரிய காந்தி பயிர் செய்தால், வயலில் தேன் கூடுகள் (பெட்டிகள்) அமைத்துத் தேன் சேகரிக்கலாம்.

சூரிய காந்தி பிண்ணாக்கில் பின் கண்ட சத்துக்கள் உள்ளன.

| | சதவீதம். |
|---|---|
| தழைச்சத்து | 4·2 |
| மணிச்சத்து | 2·3 |
| சாம்பல் சத்து | 1·4 |
| புரதச் சத்து | 26·3 |
| கொழுப்பு | 3·1 |
| சுண்ணாம்புச் சத்து | 1·5 |

எனவே சூரிய காந்தி பிண்ணாக்கைக் கால்நடை மற்றும் கோழிகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.

**வினா.**—அவரைக் கொடியில் அசுவணிப் பூச்சிகள் தாக்காமல் இருக்கத் தற்காப்புக்கு என்ன செய்யலாம்? அசுவணிப் பூச்சிகள் தோன்றித் தாக்க ஆரம்பித்த பிறகு அவைகளை ஒழிக்க என்ன செய்யவேண்டும்?

—எஸ் ராசுப் பிள்ளை,
கண்டித் தெரு,
சீரங்கம் (அஞ்சல்),
திருச்சி மாவட்டம்.

**விடை.**—அவரைக் கொடியில் அசுவணிப் பூச்சிகள் தாக்காமலிருக்கப் பதினைந்து நாளைக்கு ஒரு முறை வீதம் தொடர்ந்து பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி.டி.டீ. 5 சதத் தூளையும் சம அளவில் கலந்து தூவி வரவேண்டும். இக்கலவையை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவுதல் சிறந்தது. அல்லது கார்பரில் (செவின்) 10 சதத் தூளையும் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம்.

அசுவணிப் பூச்சிகள் தாக்கும் பொழுது அவைகளை ஒழிக்க ஏக்கருக்கு 400 மில்லி லிட்டர் மாலத்தியான் 50 சத இ.சி. மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து அல்லது 400 கிராம் கார்பரில் (செவின்) 50 சத நனையும் தூளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான்



மூலம் தெளிக்கவும். இதுபோல் 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிப்பது சிறந்தது.

**வினா.**—'சோயாபீன்ஸ்' என்பதும் மார்க்கெட்டுகளில் வழங்கும் பீன்சும் ஒன்றா அல்லது வேறா? அவை எங்கே கிடைக்கும்? ஏட்டளவில் போடாமல், செயல்படும் அளவில் தெரிவிக்கவும்.

—கோ. ஜெயராமன்,
உதவி ஆசிரியர்,
பஞ்சாயத்து யூனியன்
இளையோர் ஆதாரப்
பள்ளி, புத்திரக் கவுண்
டன் பாளையம், சேலம்
மாவட்டம்.

**விடை.**—'சோயாபீன்ஸ்' என்பது வேறு; மார்க்கெட்டுகளில் விற்பனையாகும் 'பீன்ஸ்' வேறு. 'சோயாபீன்ஸ்' விதைகள் அல்லது 'மாவு' மளிகைக் கடைகளில் விற்பனையாகின்றன. 'பீன்சு' என்பது காய்கறியாகவே விற்பனை செய்யப்படுகின்றன. 'சோயாபீன்ஸ்' நமது நாட்டிற்கு ஏற்றதாக இருப்பதாலும், அதை நாம் இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் இருப்பதாலும், அதன் பயன்களைக் கருதியும் தான், 'சோயா பீன்ஸ்' பற்றிய விரிவான விளக்கங்களை 'தமிழரசு' இதழில் வெளியிட்டோம். அக்கட்டுரையிலேயே விதை எங்கே கிடைக்கும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு வந்த, 'தமிழரசு' இதழ்களிலும் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் விடையளிக்கப்பட்டுள்ளது. அவைகளைப் படிக்காமல், ஏட்டளவில் போட்டு விட்டதாகக் குறை கூறியுள்ளீர்கள். சோயா மொச்சை விதை வேண்டுமெனில் உங்கள் வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் உதவியை நாடுங்கள் அல்லது பின்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

'தகவல் தொடர்பு நிலைய
விற்பனைக் கூடம், தமிழ்
நாடு வேளாண்மைப் பல்
கலைக் கழகம், கோயம்
புத்தூர்-3.



சோயா மொச்சை கோவை மாவட்டத்திற்கு மிகவும் ஏற்றதென்று 'தமிழரசு' இதழில் குறிப்பிட்டதால், கோவை மாவட்ட உழவர் பெருமக்கள் பலர் சோயாபீன்ஸ் பயிரிட்டுள்ளார்கள் என்று ஆதாரப் பூர்வமாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. எனவே, ஏட்டளவில் போட்டுவிட்டுப் போவதல்ல 'தமிழரசு' என்பதையும், செயல்படும் அளவில் உள்ளதையும், செயல் படுத்தப்படும் திட்டங்களையும் தெரிவிப்பதே 'தமிழரசு' என்பதையும் உங்களுக்கு வலியுறுத்த விரும்புகின்றோம். இது போன்ற முறையற்ற வார்த்தைகளை ஆசிரியராகப் பணியாற்றும் தாங்கள் கூறுவது முறையல்ல, என்பதையும் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

**வினா.**—'தமிழரசு' டிசம்பர் 1-ஆம் தேதி இதழில் 'கோ-1 பப்பாளி' பற்றி விவரிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டு பப்பாளித் தோட்டம் வைக்க உற்சாகம் ஏற்பட்டு விட்டது. பப்பாளி விதைகள் அல்லது செடிகள் எங்கு வாங்காலம் என்பதைத் தயவு செய்து தெரிவிக்கவும்.

—சையத் மகமூத்,
11, பூந்தோட்டம்,
விழுப்புரம்,
தென்னார்க்காடு மாவட்டம்.



**விடை.**—கோ-1 பப்பாளி விதைகளையோ அல்லது கன்றுகளையோ கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பழத் தோட்டத்திலிருந்து நேரடியாகப் வாங்கிக் கொள்ளலாம். அல்லது பின் கண்ட முகவரிக்கு எழுதி, விலை விவரம், முன்பணம் அனுப்ப வேண்டியது பற்றிய விவரமெல்லாம் கேட்டறிந்து பின்பு பணம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

பேராசிரியர், தோட்டக்கலைப்
பிரிவு, தமிழ்நாடு
வேளாண்மைப் பல்கலைக்
கழகம், கோயம்புத்
தூர்-3.

**வினா.**—நான் 50 செண்ட் நிலத்தில் எள் விதைக்க நினைக்கின்றேன். எனவே, மாசிப் (பிப்ரவரி) பட்டத்தில் கருப்பு எள் விதைக்க எந்த ரக எள் விதைக்கலாம்? விதைக்கும் காலம், தண்ணீர் விடுவது, உரம் இடுதல், களை எடுத்தல், பயிர்ப் பாதுகாப்புப் போன்ற எல்லாச் சாகுபடி முறைகளையும் தயவு செய்து விளக்கமாகக் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கின்றேன். மேலும், எல்லா வகைப் புன்செய் தானிய சாகுபடி முறைகளும் அடங்கிய புத்தகம் எனக்குத் தேவை. எங்குக் கிடைக்கும்? முகவரி கூறவும்.

—வி. ஜெயராம்,
பி.எம். புதுப்பட்டி,
கட்டங்குடி அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**விடை.**—மாசிப் பட்டத்தில் இறைவையாகச் சாகுபடி செய்ய 'டி.எம்.வி. 3' என்ற எள் ரகம் மிகவும் சிறந்தது. இந்த ரகத்தை டிசம்பர் முதல் மார்ச்சு வரையான காலத்தில் இறைவையில் பயிரிடலாம். மணற்பாங்கான வண்டல், செம்மண், மற்றும் கரு வண்டல் மண் இந்த ரகத்திற்கு மிகவும் ஏற்றது.

'டி. எம்.வி. 3' எள் பயிரிட நிலத்தை இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை உழுதல் நல்லது. கடைசி உழவில் ஏக்கருக்கு 9 14 கிலோ தழைச்சத்து, 9 கிலோ கிலோ மணிச்சத்து, சாம்பல் சத்துக் கொடுக்க வல்ல இரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக்கள் கிடைக்க ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா, 87 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும்.



கடைசி உழவின்போது ஏக்கருக்கு 2 கிலோ வீதம் மாங்கனீசு சல்பேட் தூவுவதால், எள் மகசூல் பெருகும்.

ஒரு ஏக்கருக்கு 2½ கிலோ விதையை விதைக்க வேண்டும். விதைக்கு விதை 1 அடி இடைவெளி இருக்குமாறு விதைத்தல் நல்லது.

விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மூன்றாவது நாளில் முளைநீர் விட வேண்டும். பிறகு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் பாய்ச்சவும்.

விதைத்த 10-வது நாள் முதல் முறையாகக் கும்பல்கும்பல்களாக இருக்கும் எள் செடிகளைக் கலைத்துவிட்டு, செடிக்குச் செடி 1 அடி இடைவெளி இருக்குமாறு செய்ய வேண்டும். விதைத்த 20-வது நாள் முதல் களை எடுப்பையும், இரண்டாவது முறை செடி கலைப்பதையும் மேற்கொள்ள வேண்டும். தேவையானால் விதைத்த 35-வது நாளுக்குள் இரண்டாம் முறை களை எடுக்கவும்.

எள் செடிகளின் குருத்தினைத் தாக்கும் கொண்டைப் புழு, காய்களைத் துளைக்கும் புழு ஆகியவைகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 100 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 கிராம் டி.டி.டீ. 50 சத நனையும் தூளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, விதைத்த 4-வது வாரம் முதல் 15 நாடிகளுக்கு ஒரு முறை வீதம் 3 முறை தெளிக்கலாம்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டால் எள்ளில் நல்ல மகசூல் எடுத்துப் பெரும் இலாபம் பெறலாம்.

தாங்கள் கேட்டுள்ளதுபோல், எல்லா வகைப் புன்செய் தானியங்களின் சாகுபடி முறைகளும் அடங்கிய புத்தகம் எதுவும் விற்பனைக்குக் கிடைக்காது. வேளாண்

மைத் துறையினர் ஒவ்வொரு பயிரைப் பற்றியும் தனியே துண்டு வெளியீடுகள் கொடுப்பார்கள். அவைகளைத் தொகுத்துப் படித்துப் பயன் பெறலாம். 'தமிழரசு' இதழிலும், வானொலியிலும் அவ்வப்பொழுது இது பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தொடர்ந்து 'தமிழரசு' இதழைப் படித்தும், வானொலியைக் கேட்டும் வந்தால் புன்செய் தானிய சாகுபடி முறைகளை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம்.

**வினா.**—கிராமப்புற விவசாயிகளிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் சுலபமான முறையில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் மாதம் 30 ரூபாய் சேமிக்கச் செய்து, நீண்டகாலத் தவணை முறையில் வீடுகட்டிக் கொடுத்து உதவி செய்ய அரசு முன்வந்திருப்பதாகவும், அநேக வங்கிகள் மூலமாக இவ்வாறு சேமிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். எந்தெந்த வங்கிகள் அத்தகைய உதவி செய்ய முன் வந்துள்ளன? கிராமப்புறங்களிலுள்ளவர்களுக்கும் அவ்வுதவி கிடைக்குமா என்பதைத் தயவு செய்து தெரியப்படுத்தவும்.

—வி. ஏ. செல்லையா,
மருங்கூர் கிராமம்,
காவனூர் அஞ்சல்,
ஸ்ரீமுஷ்ணம் (வழி),
விருத்தாசலம் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.




**விடை.**—ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் சேமிப்பவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 5 ஆண்டு முடிவில் அழகான வீடு கொடுக்க ஆவன செய்து வருகிறது. 'சின்டிகேட்' வங்கியின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இத்திட்டம் செயல்படத் துவங்கியுள்ளது. 'சின்டிகேட்' வங்கி மட்டுமே இத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் நாள்தோறும் தவறால் சேமித்து வந்தால், ஒவ்வொரு மாதக் கடைசியிலும் சேமித்த தொகையை, சேமிப்பவரின் கணக்கில் 'சின்டிகேட்' வங்கி வரவு வைக்கும். இவ்வாறு 5 ஆண்டுக்காலம் சேமித்த தொகையையும், அதற்கான 5 சத வட்டியையும் சேர்த்துக் கணக்கிட்டு, அதைப் போல் நான்கு மடங்கு தொகையை முன் பணமாகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் 5-வது ஆண்டு இறுதியில் 'சின்டிகேட்' வங்கி கொடுக்கும்.

அத் தொகை மதிப்புக்குரிய—சேமிப்புத் தொகையைப் போல் 4 மடங்கு தொகை மதிப்புள்ள—வீட்டைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சேமித்தவருக்குக் கொடுக்கும். பிறகு 10 அல்லது 12 ஆண்டுக் காலம் வரை, மீதித் தொகையைச் செலுத்தும் முகத்தான், முன்போலவே, ஒவ்வொரு நாளும் ஒரு ரூபாய் வீதம் 'சின்டிகேட்' வங்கி உதவியுடன் சேமித்து வரவேண்டும்.

இத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. எனவே, உங்கள் ஊருக்கு அருகில் 'சின்டிகேட்' வங்கி இருப்பின் அங்கே சென்று இத் திட்டத்தில் சேர மனுக் கொடுக்கலாம்.

—ஆர். எம்.


**காலக் கண்ணாடி**



**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**






# வெண்பாப் போட்டி

## 49. நிலத்தை நிறைத்ததே நெல்

மார்கழிக்குப் பெண்ணாக வந்தாளே தைமங்கை
சீர்கொழிக்கச் செய்தாள் செகத்தினில்—ஏர்கொண்
டுலகுக் குணவளிப்போ னுள்ளம் மகிழ
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. சண்முகானந்தம், பி.எஸ்ஸி., பி.டி., தே. காளிபாளையம்.

போர்க்களத்தில் வீரர் புகழ்த்தலை காண்டல்போல்
கார்கால முத்தின் கவினழகாய்ச்—சீரார்
நலத்தைக் குவிக்கின்ற நல்மணியாய்ப் பாரில்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பி. சி. அசலல்லி, அரக்கோணம்.

தக்க கலையறிவுந் தண்புகழும் நற்பேறும்
மிக்க குணநலனும் வேய்ந்திலகு—மக்கள்
பலத்தைக் குறைக்கும் பசிப்பிணியைப் போக்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கண. சீனிவாசன், மதுரை-1.

சொல்லுக்கோ ரண்ணேபோல் தோன்றுபுகழ் நெல்லுக்கு
வல்ல கருணை வாய்த்ததே—நல்ல
மலைத்தலைய காவிரிபாய் மல்குபுகழ்த் தஞ்சை
நிலத்தை நிறைத்ததே நெல்.

—தி. உதயகுமார், தூத்துக்குடி.

புள்ளி ஞெலியில் பொழுதினைக் கண்டுழவன்
பள்ளியின் நீங்கிப் பழஞ்சோற்றை—அள்ளிக்
கலத்திலிட் டேகிவயற் காட்டி லுழைக்க
நிலத்தை நிறைத்ததே நெல்!

—வசந்தன், சுவால்பேட்டை.

மேகமெனும் தேன்கூட்டை மின்னலெனும் அம்புதான்
வேகமுடன் தாக்க விழுந்ததுளி—தாகம்
விலக்க வருங்கால் விரைந்ததனால் நஞ்சை
நிலத்தை நிறைத்ததே நெல்.

—அரங்க. முத்துமணி, கீழப்பழுவூர்.

வேளாண் மகவை விரைவாய்த் தமிழரசு
தாளாண் சிறப்போடு தாலாட்ட—மாளாப்
பலத்தால் உரத்தால் பசுமைப் புரட்சி
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., திருச்சி-20.

உழைப்பின் சிரிப்பேபோல் ஊக்கத்தின் புன்னகைபோல்
பிழைப்பின் உறுபொருளாம் பேருணவாய்—கழனித்
தலமெல்லாம் புத்தொளியைத் தான்வீசும் பொன்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

சிவ. கிருட்டிணன், கானியூர்.

பாலை நிலந்திருத்திப், பற்றுக் குறைநீக்கிச்,
சோலைக் கவின்கொழிக்கும் சூழ்பசுமைக் —கோல
நிலத்துப் புரட்சியினால் நெற்கழனி, இம்மா
நிலத்தை நிறைத்ததே நெல்!

—எழில் வேந்தன், சென்னை.28.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
திரு ப. சண்முகானந்தம், பி.எஸ்ஸி., பி.டி.,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
தேவம்பாடி காளிபாளையம்,
கோவை மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

திங்கள் முகமுடையாள் தென்னாட்டுத் தைப்பெண்ணாள்
பொங்கலிட நற்கழனி போந்தக்கால்—மங்கை
நலத்திலும் என்றன் நலங்குறைவோ வென்றே
நிலத்தை நிறைத்ததே நெல்.

—இரத்தின. மாணிக்கம், கொம்பேரிபட்டி

பொன்றுப் பசுமைப் புரட்சிக்கே வித்திட்டார்
நன்றுய்நம் நாடாள்வோர் ! நாயகியே !—என்றன்
உளத்தை நிறைத்திடும் உன் புன்னகைபோல் எங்கும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சி. மு. சிவலிங்கம், ஐ.எம்.எஸ்.ஸி., மதுரை-21.

பாளை வெடித்தாற்போல் பற்காட்டி நிற்கையிலே
ஆளை மருட்டுதடி அன்பரசி—நாளை
மலர்சூட்டி உன்னை மணந்திடவே தையில்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—மெய். அருண்மொழியன், கல்பூண்டி.

ஊட்டமிகு வித்தளித்தும் ஊக்கும் உரம்தந்தும்
வேட்டையிடும் பூச்சிகளை வேரறுத்தும்—நாட்டில்
நலங்குவியப் பாடுபட்ட நல்லரசால் இன்று
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

பொன்னிக் கருணைப் புதுப்புது நெல்மணிகள்
இன்னும் பலவாக எத்தனையோ—உன்னி
வளத்தைப் பெருக்க வயலில் விதைத்தோம்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ஆ. இராசரெத்தினம், பி.எஸ்ஸி., பி.டி., தாமரங்கோட்டை.

பைந்தமிழ்சால் நாட்டில் பசுமைப் புரட்சியினால்
ஐந்திணையும் நல்வளங்கள் ஆர்ப்பரிக்க—நைந்தோர்
கலங்கலமாய்க் கண்டுமுதல் கண்டுவக்க என்றும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர். நா. தண்டபாணி, பூங்குடி.

வான்மழை பெய்து வளரும் பயிர்செழித்துக்
கூன்நிமிர்ந்து வாழக் குறைநீக்கும்—சான்றாய்
விளைவு மலிந்து வியப்புடன் உய்ய
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

உழுது வயல்குழப்பி ஓங்குவிதை நாற்றைப்
பழுதின்றி நட்டிட்டார் பாங்காய்ப்—பொழுதும்
நலமாம் எருவிட்டே நன்னீரும் பாய்ச்ச
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. சுப்புசாமி, பொன்மலை.

ஆற்றைத் தடுத்தும், அழகார் குளந்தொட்டும் ;
ஊற்றுக் குழாய்க்கிணற்றை ஊடமைத்தும் ;—சாற்றும்
நலஞ்சார்ந்த நீர்வளத்தை நம்மரசு பேண ;
நிலத்தை நிறைத்ததே நெல்.

—வித்துவான் நா. சிவராமமூர்த்துக்குமரவேல், தேனி.

ஐயாரெட் டென்னும் அதிசய நெல்லுடனே,
ஐயா ரிருபதையும் ஆய்ந்தெடுத்தே—வையம்
நலத்தைப் பெறவிதைக்க நாட்டினிலே நன்செய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—குமரகுருபரபாண்டியன், தேனி.

கங்கையும் காவிரியும் ஒன்றாகும் காட்சிகண்டேன்
வங்கக் கடலுமதை வாழ்த்தியதே—எங்கும்
புலர்ந்ததுநல் வாழ்வு புதுவளங்க ளோடு
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பகவதி அம்மாள், சென்னை-5.

கழனியிலே கால பெலாங்கிட(து) ஆடி
உழன்றே உணவுநமக்(கு) ஊட்டும்—உழவர்
குலத்தைக் குதூகலமாய்க் கூடிவாழ வைக்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—இரா. இராமகிருட்டிணன், [illegible]

திக்கெட்டும் போற்றுகின்ற தீந்தமிழர், ஆட்சியிலே
நிற்கட்டும் நேராக, நீள்கவென —மக்கள்
குலத்தை மகிழ்விக்கக் கோலமிடும் வண்ண
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பூங்குழலி, பொருளூர்.

வாட்டும் பசிப்பிணி வாராது காத்திடவும்
நாட்டின் வளமெல்லாம் நாடோறும் - கூட்டி,
நலமான செல்வத்தை நல்லுழைப்பால் ஊட்ட,
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் கே. மு. கிருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

# வெண்பாப் போட்டி

புலத்தில் பொழிந்த மழையும் , குறிஞ்சி
நிலத்தில் உருண்ட புனலும்,—பலநாள்
கலத்தை நிறைத்த சுரபி தனைப்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சேவரையன், கடையநல்லூர்.

போட்டி கண்டவர் :

பொம்மை உரமிட்டால் பொங்கி விளைகருணை
இம்மையில் யாதுபயன் ஈயுமோ ?—செம்மைப்

போட்டி அளித்தவர் :

புலத்தினைப் போற்றுவார் போற்றக் களத்து
நிலத்தை நிறைத்ததே நெல்.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

இல்லோரின் வாழ்வில் இருளைக் களைந்திடவே
நல்லோர் வகுத்திட்ட நற்செயலால்—வல்லார்
புலத்தை நிறைக்கும் புலவோரின் நூல்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர். வை. கண்ணையன், அருப்புக்கோட்டை.

பொன்னி கரிகாலன் பூம்புகார்க் கண்ணகி
அன்னை எனக்காக்கும் ஐயாரெட்—டின்னும்
நலத்தை மிகத்தருமோர் நற்கருணை வந்து
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் எஸ். திருநாவுக்கரசு, தூத்துக்குடி.

தையை வரவேற்றுத் தண்டமிழர் இல்லமெலாம்
தையலர்கள் பொங்கலிடும் தைநாளில்—தையின்
வளங்கண் டுழவர் மகிழ்ந்தாடும் வண்ணம்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கு. பாரதஜோதி, பி.எஸ்ஸி., பி.டி., திருமங்கலம்.

கட்டுக் கலமும், கதிருழக்கும் நெற்காணக்
கட்டி எடுத்துவந்த கட்டெல்லாம்—தட்டக்
கலங்கலமாய்ச் சேர்ந்து, கதிரடிக்கும் மேட்டு
நிலத்தை நிறைத்ததே நெல்.

—க. ச. சூசை, சம்பு குட்டப்பட்டி.

காலமகள் பெற்றெடுத்த காவிரித்தாய் தண்ணளியால்
ஓலமிடும் பஞ்சத்தை ஓட்டிடவே—சோழ
வளநாடு சோறுடைத்தாய் மாண்புறவே எங்கும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

மாட்டினொடு போட்டியிடும் மாசற்ற பேருழைப்பால்
நாட்டினர்க்குச் சோறளிக்கும் நல்லுழவர்—கூட்டம்
பலத்தை மிகத்தேக்கிப் பாடுபட்ட தாலே
நிலத்தை நிறைத்ததே நெல்.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

உழைக்கும் திறம்பெற்றேம் ; ஓங்குநிலம் அற்றேம் ;
பிழைக்கும் வழியுமற்றேம் ! பீடு—தழைக்குங்
கலைத்தமிழ்க்கு ஆள்வோர் கனிந்தெமக்கே ஈந்த
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பா. ஐ. முகம்மது அலி, சென்னை-39.

கஞ்சிக் கலயத்தை நூலிடையில் ஏந்திவரும்
அஞ்சுகத்தைப் போற்றுதல்போல் ஆருயிராய்—'நஞ்சை'த்
தலத்தை உழுகுலத்தார் தாங்கும் தவத்தால்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் திருஞானசம்பந்தன், பி. ஏ., திருச்சி.

மண்உடையக் கொத்தி மாடுழவே சேருகி
எண்ணரிய துன்புறினும் ஏற்றபயன்—கண்டே
நிலத்தாய்தான் புன்னகைக்கும் நித்திலப்பல் போன்றே
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கோதை. இரகுபதி, பாத்திமா நகர்.

தேங்கிப் பசிக்கொடுமை தீய்த்த வறுமைதனை
நீங்கும் படிக்குணர்த்த நேர்மையினால்—ஓங்கி
வலுத்த பசும்புரட்சி ஏழை உழவன்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. செல்லபாண்டியன், கிருஷ்ணகிரி அணை.

காலந் தவறுக் கடமை, உழைப்பாகி
மேலோர் பெருக்கை மிகுப்பதொடு—பாலாய்
நலத்தை, வளத்தை, வளர்க்கின்ற நன்செய்
நிலத்தை, நிறைத்ததே நெல்.

—புலவர் சீரான், கோம்பை.

குளத்தை நிறைத்தது கொண்டல் ; வயலின்
வளத்தை நிறைத்தது வண்டல் ;—தளரா
நலத்தை நிறைத்திடும் நல்லுழவர் தாளால்,
நிலத்தை நிறைத்ததே நெல்.

—வித்துவான் இலெ. சி. குப்புசாமி, கோவிந்தாபுரம் கிராமம்.

# வெண்பாப் போட்டி

காற்றுல் கடும்பேய் மழையால் கடும்பனியால்
சேற்றுல் எதிலும் சிதறியதால்—நாற்றுல்
நலத்தோடு செய்வித்த நற்கழனி எங்கும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ஏ. பெரியசாமி, பரந்துங்குளம்.

கல்லா லடிக்குங் கயவரே காழ்ப்பினுல்
சொல்லாலு முள்ளத்தைச் சுட்டாலும் - இல்லார்
குலத்தை உயர்த்துங் குணமுடையோர் போல
நிலத்தை நிறைத்ததே நெல்.

—தி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

காலை இளம்பரிதி காட்சி யளிக்குமுன்
ஓலைக் குடிசை உழவர்கள் - காளை
களைப்பூட்டி ஏருழக் கண்டபலன் காணீர்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—வை. இரத்தினசாமி, தேந்தாகுடி வடக்கு.

மண்ணில் முகம்விழித்து மாடுகட்டி ஏர்உழுது
கண்ணுய் இருந்து கவனித்து - வண்ணக்
கலத்தை நிறைக்கும் கவளம் தருவோர்
நிலத்தை நிறைந்ததே நெல்.

—மு. தேவராசன், மதுரை-10.

காலமழை கண்டு கழனி தனையுழுது
சீலமுடன் சீரியன செய்தபின் - கோலக்
குலமகள் கண்ணகியின் குன்றுப் புகழ்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேறையூர்.

பார்மகிழக் கார்பொழியப் பார்த்திருந்த ஏர்உழவர்
நீர்பெருக்கி நன்னிலத்தே நெல்விதைக்க - ஏர்ப்பின்
உலகு சுழன்றுவரும் உண்மை விளங்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டி.

கருமுகில்கள் நீர்சொரிய, கண்மாய்கள் விம்ம,
எருதுகளோ ஏரிழுக்க, என்றும் - விரும்பிக்
கலப்பைப் பிடித்துலகைக் காப்போர்தம் நன்செய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—செ. சி. இளந்திரையன், செல்லியம்பாளையம்.

நெற்றி வியர்வை நிலத்தின்கண் சிந்தி;ஏர்
பற்றி உழும்நல்ல பாட்டாளி - சற்றும்
தளராது தன்னுழைப்பைத் தந்திடக்காண் ; குன்றுய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—அ. பு. செயராமன், அரக்கோணம்

நல்ல கருணைவாய் நாடுபுகழ் பத்மாவாய்
வல்லார்கள் கண்டஐ யாறெட்டாய்—நல்லார்
உளத்தை நிறைத்திட்ட உண்மைத்தை நாளில்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ம. சக்குபாய், உடுமலை.

நெல்விதையில் ஒன்றும், நிலத்தில்ஓர் அங்குலமும்
இல்லை பயனென்றுல், இந்நாட்டின்—செல்வ
நலமழியும் ; மானம் நலியும் எனஉழைத்தேன் ;
நிலத்தை நிறைத்ததே நெல்.

—அரிமதி தென்னகன், குபவர்பாளையர்.

உழுதுவிதை பாவி உயிர்போற் கதிரைப்
பழுதின்றிக் காத்த பயனுல் - முழுதும்
கலத்தை நிறைத்துக் கலங்காமல் உண்ண
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கதி. பழநியப்பன், பேராம்.

ஊற்றுய் அறிவுதர வூருலகைத் தான்நிறைந்த
நூற்றுக் கணக்கான நூல்அதுபோல் - சோற்றுக்
கலத்தை நிறைத்துக் கடும்பசியைத் தீர்க்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

நெஞ்சம் கவர்ந்தான் நிலமுழுதான்! வஞ்சிமகள்
கஞ்சிக் கலயம் சுமந்திட்டாள் - பஞ்சம்
அலறியோடத் தைநாளில் ஆடையாய்நிர் வாண
நிலத்தை நிறைத்ததே நெல்.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

கார்த்திகையில் பெய்த கவின்மழையால் இட்டபயிர்
மார்கழியில் ஓங்கி வளம்பெற்றே - நீர்மை
நிலத்துடனே தைப்பொங்கல் நன்னுளில் நன்செய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—உ. தாமோதரன், சென்னை-7.

வாட்டும் வறுமைப்பேய் வையகத்தை விட்டகலத்
தீட்டிடுவோம் சாகுபடித் திட்டங்கள்; - நாட்டின்
நலம்பேணி நல்கிடும்; நல்லுழைப்பால் நஞ்சை
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

பொன்னி பொருநை புரண்டோடித் தண்டமிழர்
நன்னுட்டிற் பாய்ந்து நலம்பயக்கத் - தென்னுடு
உலகிற் சிறந்தே உயர்ந்திடவே குன்றுமல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் ந. புவியரசு, களக்காடு.



தமிழக மாவட்டங்களில் எத்தனையோ நற்பணிகள், சீர்திருத்தங்கள், வளர்ச்சிப் பணிகள் முதலியன நடந்த வண்ணமுள்ளன. ஒரு மாவட்டத்தில் என்ன நடக்கின்றன என்பதைப் பிற மாவட்டத்தினரும், பொதுவாகப் பொதுமக்களும் தெரிந்து கொள்வது வளர்ச்சிப் பணிக்கு மேலும் வித்திடுமல்லவா? இதனை விளக்குகிறது இந்தப் பக்கம்.

## தருமபுரி மாவட்டத்தின் தொழில் வளப்பெருக்கம்

தருமபுரி மாவட்டத்தின் தொழில் வளப் பெருக்கத்தைத் துரிதப்படுத்துவதற்கு மாபெரும் முயற்சி தேவைப்படும் என்று சென்னையிலுள்ள மத்திய அரசு சிறுதொழில்கள் சேவை நிலையத்தின் ஆய்வுக்குழு ஒன்று கருத்துத் தெரிவித்திருக்கிறது. நம் நாட்டில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று 8 மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் தருமபுரியும் ஒன்று. இந்த மாவட்டத்தில் தொழில் துவக்குவதற்கு நிதி நிறுவனங்கள், சலுகை முறையில் நிதியுதவி வழங்கும்.

எண்ணெய் விதைகளிலிருந்து எண்ணெய் எடுப்பது, புளியங்கொட்டையிலிருந்து புளியங்கொட்டை மாவு, டார்டாரிக் அமிலம் ஆகியவை எடுப்பது, கொப்பரை, கொட்டாங்கச்சி மாவு, தேங்காய் நார்க் கயிறு தயாரிப்பது, மரவள்ளிக் கிழங்கிலிருந்து குளுக்கோஸ், டெக்ஸ்டிரின் தயாரிப்பது, பழங்களைப் பக்குவப்படுத்துவது, மாட்டுத் தீவனம் தயாரிப்பது போன்ற 25 சிறுதொழில்களைத் தருமபுரி மாவட்டத்தில் துவக்குவதற்கு வாய்ப்பிருப்பதாக அறிக்கை கூறுகிறது.

பெங்களூரிலும் அதைச் சுற்றியும் உள்ள அரசுத்துறை நிறுவனங்களுக்கு வேண்டிய தொழிற் பொருள்களைத் தயாரிப்பதற்கென ஒசூரில் சிறுதொழில்களைத் துவக்கலாம் என்றும் அறிக்கை யோசனை கூறியிருக்கிறது.

சேலம் எஃகு ஆலை அமைக்கப்படும்போதும் அமைக்கப்பட்ட பிறகும் எத்தகைய பொருள்கள் தேவைப்படும் என்பதையும் அறிக்கை குறிப்பிடுகிறது. ஏற்றுமதி வாய்ப்புள்ள மெருகூட்டிய கிரானைட் கற்களைத் தயாரிக்கலாம் என்பது குழுவின் மற்றொரு யோசனையாகும். அலுமினியப் பாத்திரங்கள், மேசை நாற்காலிகள் தயாரிப்பு நிலையங்கள், டிராக்டர் பழுதுபார்க்கும் நிலையங்கள் போன்றவற்றைத் துவக்கலாம் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் 42 பொருள்கள் தயாரிப்புக்கான 'மாதிரித் திட்டங்கள்' அடங்கியுள்ளன. பெரும்பாலான தொழில்களுக்கு 29 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வரை மொத்த முதலீடு தேவைப்படும். இது சாதாரண சிறுதொழில் முனைவர்களின் வசதிக்கு உட்பட்டது தான். உதாரணமாகக் குளுக்கோஸ் திரவம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கு நிலத்துக்கும் - கட்டடத்துக்குமாக 20 ஆயிரம் ரூபாயும், இயந்திரச் சாதனங்களுக்கு 53 ஆயிரம் ரூபாயும், அலுவல்களுக்கு 63,500 ரூபாயுமாக மொத்தம் ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். கிரானைட் கற்கள் தயாரிப்பதற்கு மொத்தம் 80,000 ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். இப்படிப் பல தொழில்களுக்கு ஆகும் முதலீட்டுச் செலவு, அலுவல் செலவு கிடைக்கக் கூடிய இலாபம் போன்றவற்றை அறிக்கையில் விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

* * *

## அகதிகள் அகம் மகிழ்ந்திட..!

மதுரை மாவட்டம் முழுவதிலும் 346 இலட்ச ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு 6,086 டன் யூரியா உரமும், 1,644 டன் அமோனியா சல்பேட் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 2,755 டன் யூரியா உரமும், 306 டன் அமோனியா சல்பேட் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

பர்மா அகதிகளுக்குத் தொழிற் கடனாக 77 குடும்பங்கள் பயன் பெறும் அளவில் ரூ. 5,90,210-ம் வீட்டுக் கடனாக 422 குடும்பங்கள் பயன் பெறும் அளவில் ரூ. 12,72,815-ம் வழங்கப்படுகிறது. இலங்கை அகதிகளுக்குத் தொழிற் கடனாக ரூ. 4,64,900-ம், வீடு கட்டும் கடனாக 26 குடும்பங்களுக்கு ரூ. 7,75,000-ம் வழங்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பழனி வட்டம், நெய்க்காரன்பட்டிக் கருகில் பெருமாள் புதூர் சாலை மேம்பாட்டிற்குத் தமிழ்நாடு அரசு 3 இலட்ச ரூபாயினை ஒதுக்கீடு செய்துள்ளது.

* * *

## முதியோர் கல்வி பெருகிட...

மதுரைக் கிழக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 43,760 வசூல் செய்யப்பட்டுள்ளது. சீரணித் திட்டத்தின் கீழ் இரண்டு திறந்த வெளி அரங்கம் கட்டவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இளைஞர் அணியால் முதியோர் கல்வித் திட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. வாலி பால், சடுகுடு விளையாட்டுப் பயிற்சி நடத்தியும், கிராம மக்களை ஊக்குவித்து வருகிறது இளைஞர் அணி. பொய்யகரைப் பட்டியிலுள்ள கோழிப் பண்ணை நல்ல முறையில் இயங்கி வருவதைக் குறிப்பிட வேண்டும்.

* * *

## மாணவரின் மகத்தான பணி

டிசம்பர் 30-ஆம் நாளன்று திருச்சி திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூத்தப்பாரில் தேசிய மாணவர் பணிப் படையினரின் (என்.எஸ்.சி.) சாலை செப்பனிடும் பணி நிறைவு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் வெள்ள நிவாரணப் பணியாற்றிய எல்லா மாணவர்களுக்கும் அன்பளிப்பாகக் கோட்டாட்சித் தலைவர் திருக்குறளை வழங்கினர்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்!

தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் அதிக வருவாய் பெற்று வளமான வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல புதிய பயன்மிகு ரகங்களையும், கருவிகளையும், சாகுபடி முறைகளையும் கண்டு பிடித்து வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச்சார்ந்த 'தகவல் தொடர்பு நிலையம்', அப்புதிய பயன்மிகு கண்டு பிடிப்புகளை அவ்வப் பொழுது வெளியிட்டு வருகின்-றது.

உழவர் பெருமக்களின் நல் வாழ்வில் நாட்டம் கொண்டுள்ள 'தமிழரசு', தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகளைத் தொகுத்து உழவர் உலகத்திற்கு அவ்வப்பொழுது பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. அண்மையில் கிடைக்கப் பெற்ற புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய செய்தியைத் தொகுத்து, வேளாண்மை உற்பத்தியை விரைந்து பெருக்கிட ஓயாது உழைத்து வரும் உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகக் கீழே படைத்துள்ளோம். உழவர் பெருமக்கள் அவைகளைப் படித்துப் பயன் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

## சாமந்திச் செடிகளில் விரைந்தும் நிறைந்தும் மலர்கள் தோன்றச் செய்வது எப்படி?

சாமந்தி, மனத்தைக் கவரும் மலராக மட்டுமல்ல, மலிவான விலையில் கிடைக்கும் மலராகவும் விளங்குகிறது! தற்பொழுது சாமந்திப் பூக்கள் தமிழ்நாடு எங்கும் ஒரே நேரத்தில் அறு

வடை செய்யப்பட்டு விற்பனைக்கு வருவதால், விற்பனைக் கூடங்களில் சாமந்தி மலர்கள் விற்பனையாகாமல் தேக்க நிலையடைந்து விடுகின்றன. இதன் காரணமாகச் சாமந்தி மலர்களைக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஒரு பருவத்தையொட்டிப் பயிராகும் பயிராகச் ( Seasonal Crop ) சாமந்தி இருப்பதாலேயே, சாமந்திப் பூக்களை மலிவான விலைக்கு விற்பனை செய்யவேண்டி நேரிடுகிறது. இதற்கு இயற்கையும் ஒரு காரணமாக உள்ளது.

அதிக இரவு நேரம் உள்ள நாட்கள் (Longer night days) சாமந்திச் செடிகளில் மொட்டுகள் தோன்ற ஏதுவாக உள்ளன. எனவே, தமிழ்நாட்டில் சாமந்திக் கன்றுகளை 'மே' அல்லது, 'ஜூன்' திங்களில் நடவு செய்ய வேண்டியுள்ளது. சாமந்திக் கன்றுகளின் நடவு ஒரு குறுகியகால வரையறைக்குள் செய்யப்பட வேண்டியிருப்பதால், ஒரே காலத்தில் நிறையச் சாமந்திப் பூக்கள் விற்பனைக்குத் தயாராகி விடுகின்றன.



இயற்கையே இந்நிலைமை ஏற்படக் காரணமாக இருப்பதால் இயற்கைக்கு எதிராகச் செயற்கை முறைகளால், குறுகிய காலத்தில் கிடைக்கும் சாமந்திப் பூக்களைப் பரவலாக அதிக நாட்களுக்குக் கிடைக்கச் செய்து, விற்பனைக் கூடங்களில் சாமந்திப் பூக்களுக்குத் தேக்கமில்லாமல், விற்பனை செய்ய வழிசெய்யும் பொருட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த ஆராய்ச்சியில் செயற்கை முறையில், சாமந்திச் செடிகளுக்கு இரவில் வெளிச்சம் அளிப்பதன் மூலமும், 'ஜிப்ரலிக் அமிலம்' என்னும் திரவத்தைத் தண்ணீருடன் கலந்து தெளிப்பதன் மூலமும், ஏறத்தாழ ஒரு மாத காலம் முன்னதாகவே சாமந்திச் செடிகளிலிருந்து பூக்களைப் பெற இயலும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செயற்கை வெளிச்சம் கொடுக்கப்பட்ட செடிகள் 24 நாட்கள் முன்னதாகவும், 'ஜிப்ரலிக் அமிலம்' தெளிக்கப் பெற்ற செடிகள் 33 நாட்கள் முன்னதாகவும் பூக்கள் கொடுத்துள்ளன. அச்சோதனையின் விவரம் கீழே விளக்கப்பட்டுள்ளது.

சாமந்திச் செடிகளில் மூன்று வெவ்வேறு நிலையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சோதனைக்கு 3 பாத்திகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒரே நாளில் அவைகளில் சாமந்திக் கன்றுகள் நடப்பட்டன.

ஒரு பாத்தியில் இருந்த செடிகளுக்கு, நடவு செய்த 30-வது நாள் முதல், இரவில் செயற்கையாக வெளிச்சம் அளிக்கப்பட்டது.

மற்றொரு பாத்தியில் இருந்த செடிகளுக்கு நடவு செய்த 30வது நாள் முதல், 15 நாட்களுக்கு ஒரு முறை விதம் 3 முறை 'ஜிப்ரலிக் அமிலம்' தெளிக்கப்-பட்டது. இவ்வாறு தெளிக்க 10 இலட்சம் பங்கு தண்ணீரில் 400 பங்கு 'ஜிப்ரலிக் அமிலம்' விதம் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்கப்பட்டது.

மூன்றாவது பாத்தியில் உள்ள செடிகளில் எந்தவித முறையும் மேற் கொள்ளப்படாமல், வழக்கத்தில் உள்ள சாகுபடி முறையே மேற்கொள்ளப்பட்டுத் தடுப்புத் தளையாக (Control plot) அமைக்கப்பட்டது. இச்சோதனைகளில் பின்கண்ட 3 உண்மைகள் தெரிய வந்துள்ளன.

| நடவு செய்த நாளில் இருந்து முதல் பூ தோன்ற ஆகிய காலம் | நாட்கள். |
|---|---|
| எந்தவித முறையும் மேற் கொள்ளாத தடுப்புத் தளையில் உள்ள செடிகளில் முதல் பூ தோன்ற ஆகிய காலம் | 128 |
| இரவில் வெளிச்சம் பெற்ற செடிகளில், முதல் பூ தோன்ற ஆகிய காலம். | 104 |
| ''ஜிப்ரலிக் அமிலம்'' தெளிக்கப் பெற்ற செடிகளில் முதல் பூ தோன்ற ஆகியகாலம் | 95 |

| பூக்கள் பூத்த மொத்த நாட்கள் | |
|---|---|
| தடுப்புத் தளை | 93 |
| வெளிச்சம் பெற்ற தளை | 116 |
| 'ஜிப்ரலிக் அமிலம்' தெளி '' ஜிப்ரலிக் அமிலம் '' தெளித்த தளை | 128 |



| ஒருசெடியில் மலர்ந்த பூக்கள் | பூக்களின் எண்ணிக்கை |
|---|---|
| தடுப்புத் தளைச்செடி | 21 |
| வெளிச்சம் பெற்ற தளைச் செடி | 33 |
| '' ஜிப்ரலிக் அமிலம் '' தெளித்த தளைச் செடி | 45 |

மேற்கூறிய விவரங்களிலிருந்து சாமந்திச் செடிகளுக்கு ''ஜிப்ரலிக் அமிலம்'' தெளிப்பதால் வழக்கத்தில் உள்ள சாகுபடி முறையினுல் பூக்கள் கிடைப்பதைவிட 33 நாட்கள் முன்னதாகச் சாமந்திப் பூக்கள் பெற முடிவதுடன், அதிகப்படியாக 35 நாட்களுக்குப் பூக்கள் பெற முடிகிறது. மேலும், ஒவ்வொரு செடியிலும் 24 பூக்கள் அதிகமாகப் பெற முடிவதால், அதிக மகசூல் எடுக்க முடியும் என்பதும் தெளிவாகியுள்ளது.

இவ்வாறு செய்தால், அதிக நாட்கள் சாமந்தி மலர்களை விற்பனைக் கூடங்களில் விற்க முடியும். அத்துடன், ஒரே சமயத்தில் சாமந்திப் பூக்கள் விற்பனைக்கு வந்து, விற்பனையில் தேக்க நிலை ஏற்படுவதையும் தடுக்க இயலுகிறது. இதனுல் சாமந்தி பயிரிடும் உழவர்பெருமக்களுக்கு அதிக இலாபம் கிடைக்கும் என்பது உறுதியாகின்றது.

## புதிய வீரிய மாவகை !

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பெரியகுளம் பழ ஆராய்ச்சி நிலையம் ''2/9'' என்ற புதிய வீரிய மா வகையை உருவாக்கியுள்ளது. இது 'சின்னச் சுவர்ணரேகா' என்னும் வகையையும், நீலம் வகையையும் இனக்கலப்பு செய்து கண்டு பிடிக்கப்பட்டதாகும்.

செம்மண் கலந்த வடிகால் வசதியுள்ள குறுமண் நிலம் இதற்கு உகந்தது.

இப்புதிய மா வகையை 40 அடிக்கு 40 அடி இடைவெளியில் சதுர முறையில் நட வேண்டும். 3 அடிக்கு 3 அடி என்ற அளவில் குழி வெட்டி அதில் தொழு உரத்தையும், மேல் மண்ணையும் மாற்றி, மாற்றி நிரப்பி ஒரு ஆண்டு ஒட்டுகளைச் சூலை-செப்டம்பர், திங்களில் நடலாம்.

குழியின் நடுவில் இந்தப் புதிய வகை மா பதியத்தை நட்டு, மண் அணைத்து நீர்



ஊற்ற வேண்டும். பதியத்தின் அடிப்பாகத்திலிருந்து வரும் சிம்புகளை ஒடித்துவிட வேண்டும். தேவையானபோது களையெடுத்து செப்டம்பர் திங்களில் இரு முறை உழவு செய்வது சாலச் சிறந்தது. இம்மாவகை காய்க்க ஆரம்பிப்பதற்கு முன்பு மாந்தோப்பின் இடைவெளிகளில், குறுகிய காலப் பயிர்களான காய்கறிகளைப் பயிரிடலாம்.

ஓர் ஆண்டு வயதுள்ள மாஞ் செடிக்கு 20 கிலோ தொழு உரம் இடவும். 227 கிராம் (1/2 பவுண்டு) தழைச்சத்து, 454 கிராம் (1 பவுண்டு) தழைச் சத்து, 681 (கிராம் $1\frac{1}{2}$ பவுண்டு) தழைச்சத்து ஆகியவற்றைக் முறையே 2 ஆண்டு, 3 ஆண்டு, 4-5 ஆண்டுச் செடிகளுக்கு அம்மோனியம் சல்பேட் வடிவத்தில் முறையே இட வேண்டும். இந்த இரசாயன உரத்தை, மரத்தைச் சுற்றி வட்ட வடிவத்தில் பள்ளம் தோண்டிப் போட்டு மூட வேண்டும்.

இப்புதிய மா வகை நட்ட 5-வது ஆண்டில் பலன் கொடுக்கும். அதற்கு முன்பு விடும் பூக்களை ஒடித்துவிட வேண்டும். டிசம்பர்-சனவரித் திங்களில் பூப் பூத்து, சூன் திங்களில் பலன் கொடுக்கும். இம்மாவகை, சில சமயம் கார்ப்பட்டமான பிப்ரவரியிலும் காய்க்க வல்லது.

12 ஆண்டு வயதுள்ள ஒரு மரம் சராசரியாக கவர்ச்சியான சுவைமிக்க 600 பழங்களைக் கொடுக்க வல்லது. இந்த வகை மாவிற்கு உள்ள ஒரு சிறப்புக் குணம் என்னவென்றுல், உள்ளூரில் பயிரிடப்படும் நீலம் ரகத்தைவிட 30 சதம் அதிக விளைச்சல் அளிக்க வல்லது.

## பருத்தியில் புதிய வாடல்நோய் !

பருத்தி பயிரிடப்படும் பகுதிகளில் கோவை மாவட்டம் முதன்மை வாய்ந்தது. அதிலும்

சிறப்பாகக் கோவை வட்டம், பருத்தி தீவிர வேளாண்மை முறைகளைக் கையாளுவதில் தலை சிறந்தது. மாசிப் பட்டத்தில் பயிரிடப்படும் கம்போடியா—உகண்டா ரகப் பருத்தியில் கோவை மாநகரத்தை அடுத்த வட்டாரங்களில் ஒரு புதியவாடல் நோய் ஒன்று மிக வேகமாகப் பரவி வருகிறது. இந்நோய் 1968-ஆம் ஆண்டில் கோவைக் கருகே கத்தரிச் செடியிலும், பருத்திச் செடியிலும் முதன் முதலாகத் தோன்றியது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆண்டு சர்க்கார் சாமக்குளம், பெரியநாய்க்கன் பாளையம், பேரூர், சூலூர், சுல்தான்-பேட்டை ஆகிய வட்டாரங்களில் இந்த நோய் தற்போது வெகுவாகப் பரவியுள்ளது. இந்த நிலை நீடித்தால், பருத்திச் சாகுபடியில் விளைச்சல் வெகுவாகக் குறைவதுடன், உழவர்களுக்குப் பெரும் நட்டமும் ஏற்படும்.

இந்த நோயானது 'வெர்ட்டிசீலியம் டாலியே' என்னும் பூசணத்தால் உண்டாகிறது. குளிர் பிரதேசத்தில் பரவும் இந்நோய், கோவை மாவட்டத்தில் இந்த மாதிரி வெப்பநிலை உள்ள நவம்பர்—சனவரி மாதங்களில் பரவ ஆரம்பித்துள்ளது. இந்தப் பூசணத்தின், வித்துக்கள் மண்ணில் பல்லாண்டுகள் (சுமார் 15 ஆண்டுகள்) வீரியத்துடன் இருந்து இனவிருத்தி செய்ய வல்லது. மண்ணிலுள்ள பூசண வித்தானது வேர் மூலம் உட்சென்று, செடியைத் தாக்கித் திசுக்களுக்கு ஊட்டம் செல்வதைத் தடுப்பதால் செடி வாட ஆரம்பிக்கும்.

முதலில் கீழ் இலைகளில் தோன்றி மேற் பகுதி இலைகளுக்குப் பரவி வெளுத்து, மஞ்சள் நிறமாகக் காணப்படும். இலைக்காம்புகள் கீழ் நோக்கித் தொங்குவதுடன், நரம்புகளின் இடையே உள்ள இலைப்பரப்பு காய ஆரம்பித்து, பின்பு இலைகளின் ஓரங்களும் காய்ந்துவிடும். கடைசியாக இலைகள் உதிர்ந்து வெறும் கிளைகள் மாத்திரம் நிற்கும். பின் செடிகள் உலர்ந்து விடும். இலை நிறம் மாற ஆரம்பித்தவுடன் சப்பையும், பூவும், இளங்காயும் உதிர ஆரம்பிக்கும். இம்மாதிரி உலர்ந்த செடியின் தண்டைப் பிளந்து பார்த்தால் மேல் நோக்கி வரும் தண்டில் கருஞ் சிவப்புக் கோடுகள் காணப்படும். இந்த நோய் பெரும்பாலும் மூன்று அல்லது நான்கு மாதப் பயிரைத் தாக்கிச் சேதம் செய்யவல்லது. சாதாரணமாக இந்த நோய் உள்ள பூமியில் 5 முதல் 10 சதவிகிதச் செடிகள் பாதிக்கப் படும். நோய் மிகுதியாக உள்ள இடங்களில் 80 சதவிகிதம்வரை செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நோய் குளிர்கால வெப்ப நிலையான 12-20 டிகிரி சென்டிகிரேடில் நன்கு பரவும். இதன் வித்துக்கள் இலைக்காம்பிலும், தண்டுகளிலும் தோன்றும். இது தவிரப் பூசண நூலிழைகளிலான 'மைக்ரோகிளிரோஷ்யா' செடிகளின் தண்டுகளிலும், இலைகளிலும் உண்டாகிறது. இந்தப் பூசன வித்துக்களும், 'மைக்ரோஸ் கிளிரோஷ்யாக்' களும் மண்ணில் விழுந்து, முளைத்து அவைகளினால் பருத்திச் செடியின் வேர்ப் பாகம் பாதிக்கப்பட்டு இந் நோய் உண்டாகிறது.

இந்நோயைக் கட்டுப்படுத்துவது சிரமம். எனினும், இதற்கான தடுப்பு முறைகளுக்கான ஆராய்ச்சியைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நோய் இயல் துறை மேற்கொண்டுள்ளது. இந்நோயைத் தடுக்கச் சிறந்த முறையைக் கண்டறியும் வரை, உழவர் பெரு மக்கள் கீழ்க்கண்ட முறைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடுமையாகத் தாக்கப்பட்ட நிலங்களில் மேற்கொள்ள வேண்டிய முறைகள்

1. நோய் தாக்கிய நிலத்தைத் தனிமைப் படுத்தி, பருத்திக்குப் பதில் கம்பு, சோளம் போன்ற மாற்றுப் பயிர்களைப் பயிரிட வேண்டும்.

2. விதைகளை 'அக்ரசான்' போன்ற மருந்துடன் கலக்கி விதைப்பதுடன், விதைகளுக்குக் கந்தக அமில சிகிச்சை செய்வது சாலச் சிறந்தது.

3. இந்த நோய் தாக்காத 'சுஜாதா' ரகப் பருத்தியைப் பயிரிடலாம்.

4. களர் நிலத்தில் இந்நோய் அதிகம் பரவுவதால், இம்மாதிரி நிலத்தில் பயிரிடாமல் தவிர்த்தல் வேண்டும்.

5. இவை பயிரிடப்படும் நிலத்துக் கருகில் கத்தரி, தக்காளி போன்றவைகளைப் பயிரிடக் கூடாது.

6. நோய் தாக்கிய செடிகளிலிருந்து கிடைத்த விதைகளை உபயோகிக்கக் கூடாது.

நோய் தாக்கிய நிலத்தில் கையாள வேண்டிய முறைகள்

1. அதிகமாக நீர்ப்பாய்ச்சாமல் இருப்பதும், நீரை நன்றாக வடிப்பதும் சிறந்த முறைகள்.

2. யூரியா போன்ற தழைச் சத்து உரங்களை போடக் கூடாது.

## பெருகிவரும் சுற்றுலாப் பயணிகள்

சென்ற ஆண்டு மட்டும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வெளிநாட்டிலிருந்து, தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் எப்படிக் கணக்கிடப்படுகிறார்கள் தெரியுமா? ரயிலில் வருபவர்கள் கணக்கெடுக்கப்படுவதில்லை. விமானங்களில் பயணம் செய்தவர்கள்தான் கணக்கு எடுக்கப் பட்டிருக்கிறார்கள். ரயிலில் பயணம் செய்து வந்தவர்களையும் கணக்கெடுத்தால் இன்னும் அதிகம் இருக்கலாம்.

* * *

ஸ்பெயின் நாட்டில் வாழும் மக்களின் தொகை 3 கோடி. சென்ற ஆண்டு அங்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 3½ கோடி.






# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்

## 18. சென்று வருவோம்

மதுரையிலிருந்து நீண்டு மேலாக ஓடிக்கிடக்கும் நாகமலைக் காட்டின் வடபக்கத்து அடிவாரத்தை ஒட்டியே செல்லும் சாலை தொன்று தொட்டது. வைகையின் படுகையைப் பார்த்துக் கொண்டே, அந்தப் பசுமையில் மூழ்கிவிடும்போது, உள்ளத்திலும் உடலிலுமே ஒரு புத்துணர்வு ஏற்படத்தான் செய்கிறது.

நான் இறங்க வேண்டிய இடத்தைச் சொல்லி, வண்டியை நிறுத்தினார் கண்டக்டர்.

நினைவுகளிலிருந்து விடுபட்டவனாக, அவசரத்துடன் கீழிறங்கி நின்று சுற்றிலும் பார்த்தேன். இடையிலே எத்தனையோ மாதங்களாகி விட்டன, நான் இந்த இடத்தை விட்டுப் பிரிந்து சென்று. அந்தக் கிராமத்தில், ஏன் அந்த வட்டாரத்தில் வாழும் அனைத்துக் குடும்பங்களையும் அறிந்தவன்—அவர்களின் நலனுக்காக, அவர்களின் மத்தியிலே பல ஆண்டுகள் வாழ்ந்து, பணியாற்றியவன் நான்.

எதிரே, குறுக்கு வசமாக நீண்டு கிடக்கும் வைகையின் மணல் படுகை, அடுத்து, முல்லைக் காலுக்கும் அப்பால், தூரத்துக் காட்சியாகத் தெரிகிறது கிராமம்.

நான் அங்கிருந்து வரும் பொழுது, எது எப்படி முடியும் என்பதை நிர்ணயிக்க முடியாதபடி, கிராமமே இரண்டாகப் பிரிந்து, ஒரு பரபரப்பில் மூழ்கி இருந்தது. இன்றைய நிலைமை என்னவோ?

கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

பாண்டியன்மீது தூக்கி வைத்திருந்த கொலை வழக்கு எப்படி முடிந்தது? தகப்பனும் மகனும் ஒன்று சேர்ந்தார்களா? அந்த வாயாடிப் பெண் டெய்சியின் கனவுகள் நனவாயிற்றா? பாண்டியனையும்—லிங்கத்தையும் கம்பிக்குள் தள்ளாமல் விடுவதில்லையென வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்களே வேலாயுதமும், உருட்டி முத்தையாவும், அவர்களின் திட்டம் என்னவாயிற்று? என்பன போன்ற கேள்விகள் என்னுள்ளே ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து, நீர்க்குமிழிகளாக உடைந்து போகின்றன. எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் என்னை இங்கே உந்தித் தள்ளியிருக்கிறது.

இன்னும் சற்று நேரத்தில் எல்லாமே தெரிந்துவிடும்.

ஆற்றின் குறுமணலில் பாதங்கள் பதிந்து, சற்று நின்றபோது, பின்பக்கமிருந்து யாரோ குரல் கொடுப்பது கேட்டது.

நான் திரும்பிப் பார்த்தேன்.

கையில் ஒரு பையோடு குருவையா வந்து கொண்டிருந்தார்.

முதன்முதலாக, பொறுப்பான ஆளாக, அதிலும் இப்படியொரு தனிமையில் குருவையாவைச் சந்தித்து விட்டதில் எனக்குப் பெருமகிழ்வு உண்டாயிற்று.

அவரை எதிர் நோக்கித் திரும்பி நின்றேன்.

"ஐயா........ இப்பத்தான் வர்றிங்களா? சுகம் தானுங்களா? ஒரேயடியா எங்க ஊரை மறந்திட்டிங்களே" என்று சொல்லிக் கொண்டே நெருங்கி வந்தார் குருவையா.

"நல்ல சுகம். எல்லோரையும் பார்த்து விட்டுப்போகத் தான் வந்துகிட்டிருக்கேன்!" என்றேன் நான்.

"குருவித் துறையிலே ஒரு கல்யாணம். போயிட்டுத் திரும்புகிறேன். வாங்க பேசிக்கிட்டே போவோம்" என்றார் குருவையா.

இருவரும் மணற் பரப்பிலே நடந்தோம்.

"அந்த வழக்கு இன்னும் முடியலையா?" என்று கேட்டேன் நான்.

குருவையா நடந்துகொண்டே என்னைத் திரும்பிப் பார்த்தார். அவர் முகக்குறியிலிருப்பது சோகமா அல்லது மகிழ்வா என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

"அதுக்குப் பிறகு நடந்தது எதுவுமே தெரியாதுங்களா உங்களுக்கு?" என்று கேட்டார் குருவையா.

"அதான் கண்ணுக்கு மறைந்தாலே ஆளையே மறந்து போறிங்களே?" என்றேன் நான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. நேத்துக்கூடத் தோப்பிலே உங்க பேச்சைத்தான் பேசிக்கிட்டிருந்தோம்" என்றார் குருவையா சாவதானமாக.

எனக்குப் பொறுக்கவில்லை. கிராமத்திற்குள் நுழைவதற்கு முன்பாக நடந்தவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

"எதை உங்ககிட்ட முதல்லே கேட்கிறதுன்னு புரியலை. நீங்களே தொடர்ச்சியா சொல்லுங்க" என்றேன் நான் அவசரத்துடன்.

"வழக்கை அவ்வளவு கச்சிதமா சோடிச்சிருந்ததைப்

பார்த்து ஆரம்பத்திலேயிருந்து எனக்குத் திகைப்பாத்தான் இருந்திச்சு. ஆனா, பாண்டியன் கடைசி வரைக்கும் சிரிச்சுக்கிட்டுத்தான் இருந்தான்'' என்று சொல்லிக்கொண்டே நடந்தார் குருவையா.

'' இப்பப் பாண்டியன் சிரிக்கலையா? வழக்கு நடந்துக்கிட்டுத்தான் இருக்கா?'' என்று கேட்டேன் ஆத்திரத்துடன்.

குருவையா சொன்னார்.

'' வழக்கு—ஊரைக் கடந்து வெளியே போகலையே. அதுக்குள்ளே உண்மை இன்னதுன்னு வெளியாகிப் போச்சு. வேலாயுதமும், உருட்டி முத்தையாவும் ஒரு ஒப்பந்தம் செய்துக்கிட்டுத்தான் இந்தக் காரியத்திலே இறங்கி இருக்காங்க. மைனர் நடேசனுக்காவது தன் பேத்தியைக் கட்டி வச்சுப் போடணும்ன்னு தவிப்பு முத்தையாவுக்கு. வேலாயுதமும் இதுக்கு ஒப்புக் கொண்டிருக்கார். இடையிலே நடேசன் ஒரேயடியா தலையைக் குலுக்கி இருக்கான். முத்தையாவோட எண்ணம் கைகூடுறதாத் தெரியலே. இதுவே ரெண்டு பேருக்கும் மத்தியிலே புகைஞ்சு தகராறு ஆரம்பமாகியிருக்கு. பிறகு நிபந்தனை ஜாமீன்னு ஆகி, மறுநாள் பொழுது விடிய, பாண்டியனும் லிங்கமும் ஊரைவிட்டே போக வேண்டிய கட்டம். சுத்துப்பட்டி பூராவுமே ஊருக்குள்ளே வந்து சேர்ந்திருக்கு. 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டே'ன்னு வேலாயுதத்துக்கும் முத்தையாவுக்கும் வாக்குவாதம் நடந்து, குழப்பத்திலே தவிச்சுப்போய் ராத்திரி பத்து மணிக்கு மேலே வீட்டுக்கு வந்திருக்கார் முத்தையா. அந்த நேரத்திலே சடையன் வேறே வந்து. '' பொழுது விடியிறதுக்குள்ளே உண்மையைச் சொல்லுங்க'' அப்படின்னு அதட்டியிருக்கான். கொஞ்ச நேரத்துக்குள்ளே குருபாதமும் முத்தையாவைக் கூப்பிட்டு வரசொல்லி ஐயனுவை அனுப்பியிருக்காரு. எல்லாரும் சேர்ந்து வர்றதைப் பார்த்து முத்தையா மிரண்டு போயிட்டார். சொல்ல வேண்டியதை நெஞ்சுக்குள்ளே புதைச்சு வச்சிருக்கவும் தைரியம் இல்லாம, உயிரோட இருந்தா எப்படியும் சொல்லித்தானே ஆகணும்ங்கிற நடுக்கத்திலே செத்துப்போறதே மேலுங்கிற முடிவுக்கு வந்திட்டார் முத்தையா.




'' செத்தே போயிட்டாரா?'' என்று கேட்டேன் நான் அனுதாபத்துடன்.

குருவையா சிரித்தார். தொடர்ந்து சொன்னார்.

'' இப்படி ஏதாவது நடக்கும்ன்னு எதிர்பார்த்துத்தான்—பாண்டியன், நான், எல்லாருமே முத்தையாவோட வீட்டுக்குப் போனோம். அவர் இருந்த அறைக்கதவு உள்பக்கமா பூட்டியிருந்துச்சு. வழக்குச் சம்பந்தமா வந்திருந்த போலீசார் கூடக் கூடவே இருந்தாங்க. தட்டினதுக்குக் கதவு திறக்கலே. தாமதிக்காம கதவை உடைச்சு உள்ளே நுழைஞ்சோம். முத்தையா வாயெல்லாம் நுரை தள்ளி மயங்கிக் கிடந்தாரு. நல்லகாலம் டாக்டரும் தற்செயலா வந்திருந்தாரு. செத்துப் போவோம்ன்னு நினைச்சு, மரண வாக்கு மூலமாவேதான் நடந்த உண்மையைச் சொன்னாரு'' என்று சொல்லி நிறுத்தினார் குருவையா.

'' பொன்னையாவை அடிச்சது அவர்தானையா?''

'' அவர் அடிச்சிருந்தா அவரே வழக்கைக் கொண்டு போயிருப்பாரா? நடந்ததே வேறே. அந்தச் சம்பவம் நடந்ததுக்கு முதல் நாள் களத்து மேட்டிலே பாண்டியனுக்கும், பொன்னையாவுக்கும் தகராறு நடந்திருக்கு. மறுநாளும் இந்தக் கொதிப்பிலே இருந்திருக்கான் பொன்னையா. வேலாயுதமும் முத்தையாவும் பொன்னையா வண்டியோட்டத் தோப்புக்குப் போயிருக்காங்க. எதிர்முகமா வந்துக்கிட்டிருந்த பாண்டி, லிங்கத்தோட தகராறு நடத்திருக்கு. '' உனக்கு நாள் குறிக்கப் போறேன்''னு சபதம் போட்டிருக்கார் முத்தையா. இந்தக் கொதிப்போட அவரும் வேலாயுதமும் தோப்பிலே போய் இறங்கி இருக்காங்க. பொன்னையா வண்டியை அவிழ்த்து விட்டு மாடுகளுக்கு வைக்கோல் போட்டிருக்கான். அந்தக் காளைகளிலே ஒண்ணு புதுசாச் சந்தையிலே இருந்து வாங்கியாந்தது. கடுமையா பாயும். கரையடியிலே தகராறு நடந்தப்ப, லிங்கம் அந்தக் காளையோட மூக்குக்கயிற்றைப் பிடிச்சுத்தானே வண்டியை நிறுத்தியிருக்கான். அந்த வெறியிலே நின்ன காளை, பொன்னையா தன்னை மறந்து நெருங்கி வரவும், பாய்ந்து முட்டித் தள்ளியிருக்கு. சத்தம் கேட்டு, வேலாயுதமும் முத்தையாவும் ஓடி வந்திருக்காங்க. அந்தச் சமயத்திலே தோப்புக்குள்ளேயும் வேறே யாரும் இல்லே. நெஞ்சிலே ஊமைக் காயமா குத்துப்பட்டு அரை குறையா மயங்கிக் கிடந்தவனை வீட்டுக்குள்ளே தூக்கிட்டுப் போயிருக்காங்க. அப்பத்தான் முத்தையாவுக்கு இப்படியொரு யோசனை தோன்றியிருக்கு. பொன்னையா கிட்ட, 'நீ எப்படியும் பிழைச்சுக்குவே. எவ்வளவு செலவானாலும் நாங்க பாத்துக்குறோம். இதை வச்சுப் பாண்டியனைப் பழி வாங்கிப் போடலாம். நாங்க சொல்ற மாதிரி வாக்குமூலம் சொல்லு. செலவெல்லாம் போக மூவாயிரம் தாரோ'ம்ன்னு சொல்லி வற்புறுத்தி இருக்காங்க. பொன்னையாவும் அப்பப் பாண்டியன் மேலே இருந்த கோபத்திலே ஒத்துக்கிட்டிருக்கான். இருந்த விரோதத்திலே வேலாயுதமும் முத்தையாவோட பேச்சிலே மயங்கிட்டாரு'' என்றார் குருவையா.

'' முத்தையா என்ன ஆனார்?''

'' செத்துப் போவோம்ன்னு நினைச்சுத்தான் முத்தையா எல்லாத்தையும் ஒத்துக்கிட்டாரு. ஆனா, டாக்டருங்க அந்த நல்ல மனுசனைச் சாகவிடலே. எப்படியோ பிழைக்க வைச்சிட்டாங்க. பொய்ச் சாட்சி சொன்னதுக்கும், தற்கொலை செய்ய முயற்சி செய்த குற்றத்துக்கும் இப்பத் தண்டனை அனுபவிச்சுக்கிட்டிருக்காரு''

'' வேலாயுதம்?''

'' ஆத்திரத்திலே கொலையே செய்திடலாம். ஆனா. அண்ணன் மகன் மேலேயே பழியைச் சுமத்தி, ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லி, அது நாடறிய வெட்ட வெளிச்சமாகும்போது, அவன், இருந்தும், செத்தவன் தானே. அன்னிக்கிப் போனவர் தான் வேலாயுதம், திரும்பி ஊருக்குள்ளே வரலே. மதுரையிலேயே இருக்காரு. பெரியவருக்கு வேலாயுதத்துக்கிட்ட அப்படியொரு நம்பிக்கை இருந்திச்சு. முத்தையாவோட வாக்குமூலத்தைப் பக்கத்திலே இருந்து கேட்டு, எல்லாமே பொய்யின்னு அறிந்தப்பவே குருபாதம் துடிச்சுப் போயிட்டாரு. மகனைக் கட்டித் தழுவிக்கிட்டாரு. இப்பப் பாண்டியன் சொல்றதுதான் அவருக்கு வேத வாக்கு!'' என்றார் குருவையா.

நிம்மதியாக மூச்சு வாங்க.. நான் சற்று நின்றேன்.

நடந்தது இதுவாக இருக்கும்போது என்ன பாடுபடுத்தி விட்டார்கள்? உருட்டி முத்தையாவுக்கு இதுவே தொழிலாக இருந்தது. ஆனால், வேலாயுதம் எப்படித்தான் இப்படியொரு கெடுமதிக்கு உள்ளானார்.

நீண்ட பெருமூச்சு உடலைக் குலுக்கக் குருவையாவைத் தொடர்ந்து நடந்தேன்.

'' இப்பவும் ஒரு நல்ல நேரத்திலேதான் நீங்க வந்திருக்கிங்க. பெரிய வீட்டிலே இப்ப ஒரு சுபகாரியம் நடக்கப் போகுது. அதை நினைச்சுத்தான் நான் அவசரமாகத் திரும்பிக்கிட்டிருக்கேன்'', என்று சொல்லிச் சற்று வேகமாக அடியெடுத்து வைத்தார் குருவையா.

'' எது......கல்யாணமா? '' என்று கேட்டேன் ஆவலுடன்.

'' கல்யாணம் நடந்துதான் நாலு மாசமாகுதே. ஒரு வீட்டுக் காரியம்ன்னு இல்லாம, இந்த வட்டாரமே கூடி நின்னுல்ல பாண்டியனோடே கல்யாணம் நடந்திச்சு. நீங்க இல்லாத குறைதான் பெருங் குறை'' என்றார் குருவையா.

'' பொண்ணு யாரு?'' என்று சிரிக்காமலேயே கேட்டேன்.

## வெண்பாப் போட்டி-52

ஈற்றடி : மிகைநாடி மிக்ககொளல் மேல்

முடிவு நாள் : 15-2-1973.

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

குருவையா சிரித்தார்.

" தெரிஞ்சுக்கிட்டே கேட்குறிங்களே? நம்ம மைக்கேல் மக டெய்சிதான் " என்றார்.

பேச்சு மயக்கத்திலே முல்லைக் கால்வாயை நெருங்கிக் கொண்டிருந்தோம்.

" எதுக்கே யாரு வர்றது கவனிச்சிங்களா ?" என்று கேட்டார் குருவையா.

" யாரு...... சடையனா ?" என்றேன் வியப்புடன்.

முடியை ஒட்ட வெட்டியிருந்தான். நடை, உடை, பாவனை எல்லாமே மாறி இருந்தது.

" ஆளு இப்பத் தங்கக் கம்பியாயிட்டான். பெரிய வீட்டு நஞ்சையிலேதான் ரெண்டு ஏக்கர் உழவடை செய்யிறான். இந்தப் போகம் நட்டிருக்கான் " என்றார் குருவையா.

அதற்குள் சடையனும் நெருங்கி வந்து விட்டான்.

" ஐயா வாங்க!" என்ற வரவேற்போடு வணங்கவும் செய்தான். தோளிலே மண்வெட்டி தொங்கிக் கொண்டிருந்தது. சடையன் என்றால் அழுத பிள்ளை வாய் மூடுமே!

நான் வியப்போடு பார்த்தேன்.

" என்னங்க பாக்கிறிங்க. கடைசியிலே அந்த உருட்டிக் கிழவன் போட்ட முடிச்சு, எனக்கும் ஒரு திருப்பமாப் போச்சுங்க. இதுவரைக்கும் எல்லாரும் வெட்டுக் குத்துன்னுதான் எங்கிட்ட பேசிக்கிட்டிருந்தாங்க. தம்பி பாண்டியன்தான் கத்தியைக் கீழே போட்டுட்டு, கலப்பையைத் தூக்குன்னு எனக்குச் சொல்லிக் கொடுத்தாரு " என்றான் சடையன்.

கேட்பதற்கே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது.

" வாய்க்கால் வரைக்கும் போயிட்டு வாரேங்க " என்று சொல்லிவிட்டுச் சடையன் சென்றதும், நாங்களும் மேலே நடந்தோம்.

முந்தாலம்மன் கோவில் சுற்றுமதில் தெரிந்தது. தென்பக்கம் அம்மன் கோவில் கிணறு. பக்கத்திலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டிகட்டும் வேலை பாதிக்கு மேல் முடிந்திருக்கிறது.

நான் வியப்புடன் நின்றேன்.

குருவையா சொன்னார்.

" அடுத்த மாதம் வேலை தீர்ந்து போகும். தொட்டியையும் கட்டி முடிச்சு, ஊருக்குள்ளேயும் குழாய் போட்டு, பூராச் செலவையுமே தானே ஏத்துக்கிட்டு, பஞ்சாயத்துக்கு ஒப்படைச்சுப் போடுறேன்னு சொல்லிட்டாரு குருபாதம் ", என்ற குருவையா, சற்றுத் தள்ளி மந்தையிலே, போய்க்கொண்டிருந்த ஒரு பெண்ணைச் சுட்டிக் காட்டி, " யாருன்னு தெரியுதா ? " என்று கேட்டார்.

நான் திரும்பிப் பார்த்தேன்.

தலையில் பசும்புல் கட்டோடு, இடுப்பிலே குழந்தையையும் இடுக்கிக்கொண்டு, கையிலே ஒரு வெள்ளாட்டையும் பிடித்தவாறு, சென்று கொண்டிருந்தாள் அவள். எனக்கு முகம் தெரியவில்லை.

என் திகைப்பைக் கண்டு குருவையா சொன்னார்.

" நம்ம சிவந்திதான். ரொம்ப வைராக்கியமான பொண்ணு!" என்றார்.

### ஆனைமலையில் மிகப் பெரிய வனவிலங்குக் காப்பகம்

கோவை மாவட்டம் ஆனைமலையில் 900 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உருவாகியுள்ள வனவிலங்குகள் காப்பகம், முதுமலை வனவிலங்குகள் காப்பகத்தையடுத்த மிகப் பெரிய காப்பகமாகும். இங்கு பல்வேறு வனவிலங்குகளும், பல்வகைப் பறவைகளும், ஊர்வனவும் உள்ளன.

இந்த ஆனைமலைத் தொடர்ப் பகுதியில் ஏராளமான ஆறுகளும் நீர்ப்பாசனத் திட்டங்களும் உள்ளன. இப்பகுதி வனமாக்கப்பட்டால், இது இந்தியாவிலேயே சிறந்த வனவிலங்குக் காப்பகமாகவும், மகிழ்வுப் பயணத்திற்குகந்த இடமாகவும் விளங்கும். தமிழ்நாடு அரசு, ரூ. 10 இலட்சம் செலவு மதிப்பீட்டில் இதற்கான திட்டத்தை உருவாக்கி, நடப்பு ஆண்டிற்கு ரூ. 1 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

இங்கு சோலையாறு அணையில் உல்லாசப் படகு விடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

" சடையன் கட்டிக்கப் போறதா சொல்லிக்கிட்டிருந்தானே !" என்று கேட்டேன் நான்.

" சிவந்தி ஒரு மனசுக்காரி. புருசன் நினைவுக்கு ஒரு பிள்ளை இருக்கு ; இவனை வளத்து ஆளாக்கினாப்போதும். இனிமே தாலி கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டு, தனியாத்தான் உழைக்கிறா" என்றார் குருவையா.

மெதுவாக நடந்தேன்.

" எட்டி நடங்க. இப்பப் பெரியவர் வீட்டிலே, அரசிக்கு வளைகாப்புப் போடுறாங்க. இதுக்காவது நீங்க பொறுத்தமா வந்திருக்கிங்க " என்று சொல்லி முந்தி நடந்தார் குருவையா.

• • •

குருபாதத்தின் வீட்டு வாசலில் அறிந்தவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தபோது, குரல் கேட்டுக் குருபாதமே எழுந்து வாசலுக்கு வந்து விட்டார்.

" வாங்க ....வாங்க...... இந்த நல்ல நாளன்னிக்காவது வந்திங்களே...." என்று சொல்லி உள்ளே அழைத்துச் சென்றார்.

திண்ணையில் கூடி இருந்தவர்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டு, குருபாதத்தின் முன்பாக உட்கார்ந்தேன்.

இன்றைக்குத்தான் இவர் முகத்தில் பொலிவையும், அந்தக் கம்பீரத்தையும் காண முடிகிறது.

" நீங்களும் போன பிறகு இங்கே என்னென்னமோ எதிர்பாராததெல்லாம் நடந்து போச்சு. குருவையா சொல்லியிருப்பாரே !" என்றார் குருபாதம்.

" நல்லதையே நினைக்கும் போது, அதுக்கு அழிவே இருக்காது " என்றேன் நான் பொதுப்படையாக.

" ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளே வாழ்ந்தே பழகிப்போனவங்களுக்கு, கால மாறுதலுக்குத் தக்கபடி புதுசா எதையும் ஏத்துக்கிறதுக்கு மனப்பக்குவம் வேண்டியிருக்கு. ஏதோ ஒரு ஆத்திரத்திலே அதை இழந்து நான் குழம்பிப் போயிருந்தேன். உண்மை இன்னதுன்னு தெரிஞ்சதுக்கப்புறம் தெளிவும் வந்திருக்குப் பாருங்க. இப்ப எல்லாமே பாண்டியன் பொறுப்புத்தான். எதையெதையோ துணிச்சலா செய்து கிட்டே போறான் " என்றார் குருபாதம்.

" நேற்று நடந்ததையும், இப்ப நடக்கிறதையும் நினைக்கிறப்ப மனசுக்கு எவ்வளவோ ஆறுதலா இருக்கு " என்றேன் நான் என்னை மறந்து.

" கடைசி கடைசியின்னு— நானும் நடுங்கிப் போயிட்டேனே. ஆனா பாண்டியனுக்கு அந்தச் சிரிப்பு மாறலையே, கலங்கலையே " என்று ரசித்துச் சொன்னார் குருவையா.

" அது அவன் பிறவி. எப்பவுமே இப்படித்தான் " என்றார் குருபாதம் பெருமிதத்துடன்.

அப்போது வீட்டிற்குள்ளிருந்து ஐயனு வந்தான்.

குருபாதம் திரும்பிப் பார்த்தார். முகத்திலே சிரிப்புப் படர்ந்தது.

" இவனுக்கும் வர்ற மாசம் கல்யாணம் முடியப்போகுது. பொண்ணு யாரு தெரியுமா ? உருட்டி முத்தையாவோட பேத்தி. அடிக்கொருதரம் இவனைக் குலம் கோத்திரம் தெரியாத பயல்னு பேசுவாரு " என்றார்.

நான் சிரித்தேன். ஐயனுவுக்கு வெட்கம் வந்துவிட்டது.

" உங்களை அம்மா கூப்பிடுறாங்க " என்றான் வந்து நின்றதை நினைத்து.

" போங்க, அரசிக்கு வாழ்த்துச் சொல்லுங்க " என்றார். குருபாதம்.

நான் எழுந்து உள்ளே சென்றேன்.

மையப் பட்டகசாலை முழுவதிலும் பெண்கள் நிறைந்து நிற்கிறார்கள்.

சிவகாமியம்மாள் பச்சைப் பட்டுடுத்தி முன்னால் நிற்பது தெரிகிறது. வலது பக்கம் நிற்பது அரசியா ? பொன்னிறமாகப் பூத்துக் குலுங்கி நிற்கும் மாங்கன்றைப் போல, உள்ளும் புறமும் பூரித்து, புன்னகைத்துத் தலை குனிந்து நிற்கிறாள். கை நிறைய வளையல்கள் குலுங்குகின்றன. தாழம்பூ தைத்த பின்னல் முன் பக்கம் சரிந்து, அவள் கையிலே விழுந்து புரளுகிறது.

### சீனநாட்டுச் சுற்றுலாப் பயணி

கி.பி. 640-ல் சீன நாட்டிலிருந்து யுவான் சுவாங் என்பவர் தமிழ் நாட்டுக்குச் சுற்றுலா வந்திருக்கிறார். பாண்டிய நாட்டைப் பற்றிய செய்திகளையும், சோழ நாட்டைப் பற்றிய செய்திகளையும் அவர் தமது குறிப்புகளின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். பின்பு, நரசிம்ம வர்ம பல்லவரின் ஆட்சிக் காலத்திலும் யுவான் சுவாங் தமிழகத்திற்குச் சுற்றுலா வந்திருப்பதாக வரலாறு தெரிவிக்கிறது.

அவரது குறிப்புகளால் அக்காலத்திய தமிழ் நாட்டின் ஆட்சி முறைகள்—இயற்கை அமைப்பு — மக்களின் வாழ்க்கை முறை ஆகியவை தெளிவாகத் தெரிகின்றன.

ஒரு நாள், இவள், பதினாறும் நிறையாத பேதையாக, பொட்டிழந்து, பூவிழந்து, வெள்ளையுடுத்தி, இதே இடத்தில், கண் கலங்கி நின்ற கோலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

என் மெய் சிலிர்க்கிறது.

சிவகாமியம்மாள், குனிந்து பொங்கிவரும் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மகளைத் திரும்பிப் பார்த்த போது, அரசி முன்னால் வந்து மண்டியிட்டு என்னை வணங்குகிறாள்.

" பெருவாழ்வு வாழ்வாயம்மா " என்று ஆசியளிக்கிறேன்.

அதற்குள் பாண்டியனும், அவனுக்குப் பின்னால் லிங்கமும் வந்து விட்டார்கள்.

" நீங்க வந்திருக்கிறதைச் சொன்னதுமே ஓடியாரேன் " என்கிறான் பாண்டியன் சிறுவனைப் போல.

" எங்களையெல்லாம் மறந்திட்டிங்களே " என்று குறைப்பட்டுக் கொள்கிறான் லிங்கம்.

" நினைத்தது நிறைவோடு முடிந்தது. இனி என்றும் இந்தக் கிராமத்துக்கு எந்தக் குறைவும் வராது " என்கிறேன் நான்.

பின்னால் மறைந்து நின்ற டெய்சியை முன்னால் இழுத்து விடுகிறான் பாண்டியன்.

டெய்சி நாணத்தினால் முகம் சிவந்து தலைகுனிந்து நிற்கிறாள்.

" சார்...... டெய்சி வாயாடிப் பொண்ணுன்னு சொல்லுவிங்களே. இப்பப் பாருங்க. நாலு வார்த்தை பேசுறதுக்கு ரெண்டு நாழிகையாகுது " என்று சொல்லிச் சிரிக்கிறாள் அரசி.

" தம்பி நடேசனுக்கும் எனக்கும் ஒரே நாளிலேதான் கல்யாணம் நடந்திச்சு. அந்தச் சகுந்தலையைப் பார்க்கலையே நீங்க. அம்மாவுக்குப் பக்கத்திலே முகத்தை முதுகுப்பக்கம் திருப்பிக்கிட்டு நிக்கிதே அந்தச் சகுந்தலைதான் பிடிச்ச பிடியிலே மைனர் தம்பிக்கு மாலை போட்டது " என்கிறான் பாண்டியன்.

நான் அவளைப் பார்க்கிறேன்.

சகுந்தலை பெயருக்கேற்ற அழகிதான். குடிசையிலே பிறந்தவள், பெரிய வீட்டு மருமகளாகி, ஒளி விளக்காக நிற்கிறாள்.

நினைவு வந்து " நடேசன் எங்கே " என்று கேட்கிறேன் நான்.

" பழையபடி விளையாடப் போயிட்டானோ என்னமோ ? " என்கிறான் பாண்டியன் சகுந்தலையைப் பார்த்தபடி.

" இல்லே, அவர் இப்பச் சீட்டாடப் போறதே இல்லையே. வயலுக்குப் போயிருக்கார் " என்கிறாள் அந்தச் சகுந்தலை தன்னை மறந்த படபடப்புடன்.

சிரிப்பொலி அந்த இடத்தையே நிறைக்கிறது.

தனித்தனியாக அல்லாமல், எல்லாரையும் பார்க்கிறேன்.

அன்புள்ளம் கொண்டவர்களை மீண்டும் பிரிந்து செல்வதை நினைக்கும்போது, கண்களில் நீர் திரையிடுகிறது.

கரம் குவித்து விடை பெறுகிறேன்.

[முற்றும்]

# இன்னும் ஓர் ஆலயம்



புதுக்கோட்டை அன்று புதுமைப் பொலிவோடு விளங்கியது. சாலைகளில் வரவேற்பு வளைவுகள், தோரணங்கள், இன்னபிற. தமிழக முதல்வருக்கு வரவேற்பளிக்கும் வகையில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் அனைத்தும் மக்கள் தங்கள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பிறந்த அன்பின் அடையாளமாகத்தான் அமைந்திருந்தன. அதுமட்டுமா? ஏழை எளிய மக்களின் உள்ளத் துடிப்பறிந்து அவர்கள் துயர் துடைக்கப்பட வேண்டும்—அவர்களது வாழ்வில் இன்பஞ் சேர்க்க வேண்டும்—ஒளி உண்டாக்க வேண்டும்—'வெந்ததைத் தின்போம், விதி வந்தால்-சாவோம்' என்ற சலிப்புணர்வோடு அவர்களை வாழ விடக்கூடாது—உற்சாகமும், ஊக்கமும் மகிழ்ச்சியும் நிரம்பியது வாழ்வு; தொய்வும் சோர்வும் கொள்ளத் தேவையில்லை—தெம்போடும் தெளிவோடும் அவர்களது வாழ்வு அமைய வேண்டும்—அதற்கான வழி வகைகளைக் காண வேண்டும் என்ற அடிப்படையில், பந்தயக் குதிரையை விட வேகமாகச் சுழன்று சுழன்று பணியாற்றி வருகிறது தமிழ்நாடு அரசு; பற்பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் மூலம்.

இதற்காக நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1971-ஆம் ஆண்டு தான் விடுத்த பிறந்த நாள் செய்தியில்,'......நமது தமிழக அரசு ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லாத அளவுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பணியாற்றிவருகின்றது என்பதை அனைவரும் அறிவர். அதற்காக விடுதிகள் அமைக்கப்பட்டு ஆங்குப் பிச்சைக்காரர்களுக்குத் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப் பெரிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள், அமைத்து, அவர்களை வீதியில் அலையவிடாமல் அந்த விடுதிகளில் சேர்த்து, வியாதிக்குச் சிகிச்சையளிப்பதோடு, வேலைகள் கற்றுக் கொடுக்கும் பயிற்சியும் தரப்பட இருக்கிறது. அந்த விடுதிகளிலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதற்கெனத் திரட்டப்படும் நிதிதான் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி எனக் கூறி '.....பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு அரசு எடுக்கும் அரிய முயற்சிக்குத் தமிழகத்தார் அனைவரின் பங்கும் இருந்திடல் வேண்டும். அது ஒன்றே இந்த ஆண்டு பிறந்த நாளில் நான் கேட்கும் பிச்சையாகும், என வேண்டினார். தமிழகத்துப் பெருமக்களும் வாரி வழங்கினார்கள்.

அரசும், 'பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி' க்காகச் சிறப்புச் பரிசுச்சீட்டுத் திட்டம் ஒன்றை நடத்தி அதன் மூலமும் நிதி சேர்த்தது. இப்படிப்பட்ட பெரு முயற்சிக்குப் பின்னே, பரனூர், உளுந்தூர்பேட்டை, பருகூர் ஆகிய இடங்களில் மூன்று இல்லங்கள் திறக்கப்பட்டுச் செயல்பட்டுவருகின்றன. நான்காவதாக, புதுக்கோட்டை மச்சுவாடியில் கட்டி முடிக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தைத் திறந்து வைக்க வந்த மாண்புமிகு முதல்வருக்கு—பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களுக்குச் சென்று அங்குள்ள மனித தெய்வங்களோடு அளவளாவி வருவதைப் புனிதப் பயணமாகக் கருதும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு 'வருக! வருக!!' என வரவேற்புக் கூறும் முகந்தான், புதுக்கோட்டை புதுப் பொலிவோடு விளங்கியது.

புதுக்கோட்டை மச்சுவாடியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள 'தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்' புதுக்கோலம் கொண்ட மங்கல அணிகலன்கள் பல பூண்ட அழகு மிக்க மணப் பெண் போலக் காட்சி தந்தது. அகில உலக விமானத்தளம் இரவு நேரத்தில் பல வண்ணமின்மினி விளக்குகளோடு எவ்வளவு அலங்காரமாகக் காட்சி தருமோ அத்தகைய எழில் மிக்க காட்சியைத்தந்தது அந்த மறுவாழ்வு இல்லம். அதன் திறப்பு விழாதான் 7—1—1973-ல் நடந்தேறியது. அதோ, மாண்புமிகு முதல்வரும் விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்களும், அரிசன நலத்துறை அமைச்சர் மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களும் வந்து விட்டார்கள். மறுவாழ்வு இல்லத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு, மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்த விழா மேடைக்கு வந்து சேர்ந்தனர் அமைச்சர் பெருமக்கள். பிச்சைக்காரர்களிடமும் அக்கறை கொண்டு அரசு விழா நடத்துகிறது என்றால் அதுவோர்புதுமை விழாத்தானே!

## நோக்கம்

இப்படிப்பட்ட மறுவாழ்வு இல்லங்கள் திறக்கப்படுவதன் நோக்கம் என்ன? பிச்சையெடுத்து வாழும் நிலையை இந்த நாட்டிலிருந்து ஒழிக்க வேண்டும். அதன் முதல் திட்டமாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு என மறுவாழ்வு இல்லங்கள் அமைக்க வேண்டுமென்று 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அதன்படி பத்து மறுவாழ்வு இல்லங்களை அமைக்க அரசு ஆணை பிறப்பித்தது. செங்கற்பட்டு மாவட்டம் பரனூரிலும், தென் ஆர்க்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டையிலும், தர்மபுரி மாவட்டம் பர்கூரிலும் இவ்வில்லங்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டுச் செயல்படுகின்றன. திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை மச்சுவாடியில் அமைந்துள்ள நான்காவது மறுவாழ்வு இல்லத்தின் திறப்பு விழாதான் அண்மையில் நடைபெற்றது. வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலும், தஞ்சை மாவட்டம் மனையேறி பட்டியிலும், கோவை மாவட்டம் வின்னப்பள்ளியிலும், சேலம் மாவட்டம் தேவியக்குறிச்சியிலும், தர்மபுரி மாவட்டம் செல்லியம்பட்டியிலும், மதுரை மாவட்டம் புதுப்பட்டியிலுமாக ஆறு மறுவாழ்வு இல்லங்கள் இவ்வாண்டு பிப்ரவரி மாத இறுதிக்குள் திறக்கப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு மறுவாழ்வு இல்லத்திலும் 500 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருப்பர். அவர்களை முறையாகப் பராமரித்து, சிகிச்சையளித்து, மறுவாழ்வு பெறச் செய்வது இவ்வில்லங்களின் பொறுப்பாகும். தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மருத்துவத் தேவைகளும் இங்கு நிறைவு செய்யப்படுகின்றன. மிகக் குறைந்த முதலீட்டுடன் சிறுதொழில் நடத்தும் முறையில் நடத்தப்படும் தொழில்களில் இந்த இல்லங்களில் குடியேறியோர் ஈடுபடுத்தப்பட்டு, உடல் உழைப்பு, கடும் முயற்சி ஆகியவற்றுக்குப் பின்னர் பல்வேறு வகையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தங்கள் வாழ்வைச் சுயமரியாதையுடன் நடத்த அவரவர் அறிந்த தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இறுதியாகச் சமுதாயத்தில் மீண்டும் பிச்சை எடுக்கும் நிலையிலேயே அவர்கள் விடப்படாமல், தங்கள் சொந்தக் காலிலேயே நிற்கும் நிலை உருவாக்கப்படுகிறது.

## கட்டட அமைப்பு

ஒவ்வொரு மறுவாழ்வு இல்லமும் பிச்சைக்காரர்களுக்கென நான்கு கட்டடங்களைக் (4Blocks) கொண்டிலங்கும். ஒவ்வொரு கட்டடத்திலும் (Block) 125 பேர் தங்க முடியும். இக்கட்டடங்களின் தரைப் பகுதிகள் சிறு சிறு அறைகளாகத் தடுக்கப்பட்டு அங்கெல்லாம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தங்கள் குடும்பத்தோடு வாழ அனுமதிக்கப்படுகின்றனர்.

இவை தவிர, இவ்வில்லங்களில் தனிச் சமையலறையும், 10 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனையும், ஆய்வுக் கூடம் ஒன்றும், அறுவைச் சிகிச்சைக் கூடம் ஒன்றும், நிர்வாகப் பகுதி ஒன்றும், அவசியமான அலுவலர்கள் குடியிருப்பதற்கான வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட அனைத்துத் தேவைகளையும் உள்ளடக்கிய சிற்றூராகவே இவை திகழ்கின்றன. மேலும் இங்குள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் விவசாயம் செய்ய, கோழி வளர்க்க, தோட்ட வேலை நடத்தத் தேவையான நிலமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



தொழுநோய்த் திருநிகளை துண் உருப்பெருக்கியின் வாயிலாக வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் பார்வையிடல்.



தொழுநோயாளிகளுக்கெனவே உருவாகியுள்ள காலனியை முதல்வர் கலைஞர் அவர்களும் வேளாண்மை அமைச்சரும் பார்வையிடுகிறார்கள்.

## வசதிகள்

இங்குத் தங்குவோருக்கு உணவு உடை, உறையுள், சிகிச்சை ஆகிய அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. தொழு நோய்க்கென்று பொதுவாகச் சிகிச்சையளித்தாலும், அவர்களுக்குள்ள வேறு நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு அவற்றிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். அவசியப்பட்டால் இவ்வில்லங்களில் உள்ள மருத்துவப் பகுதியில் வைத்துச் சிகிச்சையளிக்கப்படுகின்றனர்.

பெரியவர்களுக்கு ரூ. 1-50-க்கு மேல் போகாத அளவிலும், குழந்தைகளுக்கு ரூ. 0-75-க்கு மேல் போகாத அளவிலும் நாள் தோறும் உணவு அளிக்கப்படுகிறது. தேசிய விழாக்களின் போதும், மறுவாழ்வு இல்ல ஆண்டு விழாவின் போதும் இவர்களுக்குச் சிறந்த முறையில் விருந்து அளிக்கப்படும். தேங்காய் எண்ணெய்யும், சோப்பும் கூட இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆண்களுக்கு, சட்டை, வேட்டி, துண்டு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டும், பெண்களுக்குச் சேலை, பாவாடை, ரவிக்கை, துண்டு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் படுக்கப் பாய், தலையணை, அலுமினியத் தட்டு, குவளை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இந்த இல்லங்களில் தங்கும் எல்லா நோயாளிகளுக்கும் சிறப்பு வசதியுடன் கூடிய காலணிகள் கொடுக்கப்படுகின்றன. நோயின் கொடுமையால் கைவிரல்களை இழந்து விட்டவர்களுக்குப் பல் துலக்கப் பற்பொடியும், பிரசும் கொடுக்கப்படுகிறது. பருகூரில் அமைக்கப்பட்டுள்ள மறுவாழ்வு இல்லத்தில் இருப்பவர்களுக்கு அப்பகுதியில் உள்ள கடுங்குளிர் காரணமாக அவர்களுக்குக் கம்பளிப் போர்வை வழங்கப்பட்டுள்ளது.

**அறுவைச் சிகிச்சைக்குள்ளாக** வேண்டிய நிலையில் உள்ள தொழு நோயாளிகள் தர்மபுரி அல்லது போளம்பாக்கத்திலுள்ள தொழு நோய் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அங்கு இவர்களுக்கு, மாநிலத் தொழு நோய் அலுவலராகப் பணியாற்றும் மருத்துவரோ, தொழு நோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களின் சிறப்பு அலுவலராகப் பணியாற்றும் மருத்துவரோ அறுவைச் சிகிச்சை செய்வர்.

இந்த இல்லங்களில் வந்து சேருவோர் கல்வி அறிவு பெறுவதற்காக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. முதியோர் கல்விப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர்களது பொழுது போக்கிற்காக விளையாட்டு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. திரைப்படக் காட்சிகளும், இசைப்போட்டிகளும் நடத்தப்படும். நீதிநெறிகளையும், ஒழுங்கினையும் வலியுறுத்தும் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும். இவர்களது குழந்தைகள் மறுவாழ்வு இல்லங்களுக்கு அண்மையில் உள்ள அனாதை இல்லங்களில் சேர்க்கப்பட்டு இயன்றவரை கல்வியும் அளிக்கப்படுகின்றனர்.

### மறுவாழ்வு நடவடிக்கைகள்

இந்த இல்லங்களில் அனு



தொழுநோயாளி ஒருவர் பாய் பின்னுகிறார்.

மதிக்கப்பட்ட தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இங்கு இவர்களுக்குப் பல்வேறுபட்ட தொழில்களில் அளிக்கப்படும் பயிற்சியின் மூலமும், பயனுள்ள வகையில் இவர்களது நடைமுறையை ஆக்குவதன் மூலமும் இந்நோக்கம் ஈடேறுகிறது. முக்கியமாகப் பாய் பின்னுதல், காலணி தைத்தல், தையற்கலை, கோழிவளர்த்தல், தோட்டக் கலை ஆகியவற்றில்தான் இவ்வில்லங்களிலுள்ளோர் ஈடுபடுத்தப்படுகின்றனர். இப்பணிகளில் ஈடுபடுவோர் கைகளில் புண் ஏற்படாமல் இருக்க ரப்பர் உறைகள் போட்டுக் கொள்கின்றனர். இவர்கள் ஆற்றும் பணிக்கு ஏற்ப, வாரத்திற்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை கூலியாகக் கொடுக்கப்படுகிறது. எந்தப் பணியிலும் ஈடுபட முடியாத ஒவ்வொரு நோயாளியும் சொந்தத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக வாரத்திற்கு ஒரு முறை 25 காசுகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள தொழு நோய்ப் பிச்சைக்காரர் வாழ்வு இல்லங்கள் அனைத்தும் மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநரின் நேரடி நிர்வாகத்தில் செயல்படுகின்றன. அவருக்குத் துணையாகச் சிறப்பு அலுவலர் ஒருவர் பணியாற்றுகிறார். ஒவ்வொரு இல்லமும் கோட்டாட்சித் தலைவர் (R.D.O.) தகுதியில் உள்ள மேலாளர் ஒருவரின் கீழ் இயங்குகின்றது. முழுநேர மருத்துவர் ஒருவரும் அவருக்குத் துணையாக மருத்துவப் பணியாளர்களும் இங்குப் பணியாற்றுகின்றனர்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் "நான் கேட்கும் பிச்சை" என்ற தலைப்பில், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி தாருங்கள் என வேண்டுகோள் விடுத்ததும், ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வாரி வழங்கிய தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்கள், தங்கள் தங்கள் பிறந்த நாளின்போதும், அவரவர் குடும்ப விழாக்களின் போதும், மனித தெய்வங்கள் வாழும் இந்த மறுவாழ்வு இல்லங்கள்-இளங்குழவியின் தளர் நடைபோடும் இவ்வில்லங்கள், தங்கு தடையில்லாமல், தளர்ச்சி ஏதுமில்லாமல் வெற்றிநடைபோடப் பொருளுதவியும், பிறஉதவிகளும் நல்கிட முன்வர வேண்டும்.

—எஸ். முத்துராமலிங்கம்.








# சுற்றுலாப் பெருமை



1972-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, முந்திய ஆண்டினை விட அதிகம் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

1972-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை குறைந்திருந்ததற்குக் காரணம், இந்திய-பாகிஸ்தான் போரும், வங்க நாட்டுச் சிக்கலும்தான்.

1972-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் வரை இந்தியாவுக்கு 3,10,357 சுற்றுலாப் பயணிகள் வந்திருக்கின்றனர். 1971-ஆம் ஆண்டில் நவம்பர்த் திங்கள் வரை 2,84,736 சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தார்கள். 1973-ஆம் ஆண்டு இறுதியில் சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 3,25,000 ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டான 1973-74-ல் திட்டக் குறியளவான ( Target ) 4 இலட்சத்தை உறுதியாக எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாடுகளில் செய்யப்படும் விரிவான விளம்பரங்களின் உதவியினாலும், உள்நாட்டில் விரிவுபடுத்தப்பெற்ற சுற்றுலாத் தலங்களாலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்தியாவில் அதிகமாகியுள்ளது.

* * *

1973 ஏப்ரல் திங்கள் முதல், இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வழியாக அமெரிக்கா செல்லும் ஏர் இந்தியாவின் போயிங் 747 விமானப் போக்குவரத்தினை வாரத்துக்கு எட்டுமுறை ஆக்கிட ஏர் இந்தியா நிறுவனம் முடிவு [illegible] (தற்போது [illegible] செயல்படுகிறது)

நான்காவது திட்டக் காலத்தில் இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனம் எட்டுப் புதிய நிலையங்களைத் தனது அமைப்பில் இணைத்துள்ளது. இவை : நாஸிக், ராய்ப்பூர், ஜோத்பூர், முஜஃபர்பூர், திமாபூர் திருப்பதி, கயா, குவாலியர் முதலியவை ஆகும்.

* *

திருப்பதியில் விமானப் போக்கு வரத்து அண்மையில் துவக்கப்பெற்றது. 7—11—72ல் ஐதராபாத்திலிருந்து திருப்பதிக்குச் செல்லும் விமானப் போக்குவரத்தினை மத்திய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் கரன்சிங் துவக்கி வைத்தார்.

நாள்தோறும் ஐதராபாத்திலிருந்து பிற்பகல் 3-10 மணிக்கு விமானம் புறப்பட்டு மாலை 4-35 மணிக்குத் திருப்பதியை அடைகிறது. அங்கிருந்து மாலை 5-00 மணிக்குப் புறப்பட்டு 6-25 மணிக்கு ஐதராபாத்தை அடைகிறது.

சென்னையிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் விமானப் போக்குவரத்தினைத் தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் நவம்பர் 10-ஆம் நாள் துவக்கி வைத்தார்கள்.

நாள்தோறும் சென்னையிலிருந்து காலை 6 மணிக்கு விமானம் புறப்பட்டு, 6-30 மணிக்குத் திருப்பதி போய்ச் சேர்கிறது. 20 நிமிடங்கள் கழித்துப் புறப்பட்டு, 8-15 மணிக்கு ஐதராபாத்தை அடைகிறது. ஐதராபாத்திலிருந்து 9-30 மணிக்குப்





புறப்பட்டு, 10-55-க்குத் திருப்பதியை அடைகிறது. அங்கிருந்து 20 நிமிடம் கழித்து 11-15-க்குப் புறப்பட்டு, 11-45 மணிக்குச் சென்னை வந்து சேர்கிறது.

பெங்களூரிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் விமானப் போக்குவரத்து நவம்பர் 12 முதல் தொடங்கியது.

பெங்களூரிலிருந்து காலை 7-15 மணிக்குப் புறப்படும் விமானம் 8 மணிக்குத் திருப்பதியை அடைகிறது. திருப்பதியிலிருந்து 8-20 மணிக்குப் புறப்பட்டு 9-05 மணிக்குப் பெங்களூர் போய்ச் சேர்கிறது.

திருப்பதி விமானப் போக்குவரத்து ஏற்பட்டது எண்ணற்ற சுற்றுலாப் பயணிகளுக்கு மிகுந்த வசதியை உருவாக்கியிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து நமது தென் பகுதிகளுக்கு வருகை புரிகின்ற பல நூற்றுக் கணக்கானவர்கள் திருப்பதிக்கு விமானப் போக்குவரத்தில்லாததால் அல்லல்பட்டு திருப்பதிக்குப் போகாமல் திரும்பிப் போயிருக்கிறார்கள். அத்தகையவர்களின் மனக்கவலை தற்போது ஓரளவு நீங்கி விட்டது என்றே சொல்லலாம். அதிலும் குறிப்பாகச் சென்னையிலிருந்து திருப்பதி செல்ல எண்ணுகின்றவர்கள் அரைமணி நேரத்தில் ரூபாய் 34 செலவில் திருப்பதியை அடைய முடிவது மிகப் பெரும் வசதி நிறைந்த நிகழ்ச்சி.

வெளிநாட்டுச் சுற்றுலாக்காரர்களைக் கவரவேண்டும் என்ற கருத்துடன் உருவாக்கப்பட்டுள்ள திருப்பதி விமான நிலையம் ரூ 56 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது 45 பேர் பயணம் செய்யும் ஆவ்ரோ ரக விமானங்கள்தான் திருப்பதிக்கு வருகின்றன. விரைவில் 115 பயணிகள் பயணம் செய்யும் போயிங் ரக விமானங்கள் இறங்குவதற்குரிய வசதிகள் செய்யப்படும்.



## சான்றோர் மறைந்தார்

அனைத்திந்திய முஸ்லீம் லீக் தலைவர் சங்கைக்குரிய செயத் அப்துர் ரகுமான் பஃபக்கி தங்கல் மறைவுச் செய்தி, அனைத்திந்திய இஸ்லாமிய சமுதாயத்தினரை மட்டுமல்ல-தமிழகத்தையும் ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

பஃபக்கி தங்கல், அண்மையில் புனித ஹஜ் யாத்திரை சென்று, மெக்காவில் பக்ரீத் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடிவிட்டு, சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாத்துக்கு வந்தார். அங்கு 18-1-73 இரவு திடீரென நோய்வாய்ப்பட்டு, அந்நோயினின்றும் மீளாமலேயே மறுநாட் காலை 2 மணி அளவில் இயற்கையெய்தினார்.

பஃபக்கி தங்கல், கேரளமாநிலத்தைச் சேர்ந்தவரானாலும், உன்னதமான தொண்டினால் அவர் முஸ்லீம் சமுதாயம் முழுவதுக்குமே சொந்தமாகி விட்டார். முஸ்லீம் சமுதாயத்திற்கு அவர் ஆற்றியுள்ள அரும்பணிகள் ஓங்கிய இமயத்தின் உயர்ந்த மணிமுடி போல என்றும் நின்று நிலவும்.

## தமிழக முதல்வரின் இரங்கற் செய்தி

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பஃபக்கி தங்கல் மறைவுச் செய்தியறிந்து கொடுத்துள்ள இரங்கற் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழக மக்களுக்குக்-குறிப்பாக முஸ்லீம் சமூகத்தார்க்கு -அவரது மறைவு பேரிழப்பாகும்; அவர் மிகுந்த பண்பாடு உள்ளவர்; அடக்கம் மிக்கவர்; நிலை குலையா நெஞ்சினர்."

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சு எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2

கண்கவர் வண்ணங்களில், எண்ணில் அடங்கா டிசைன்களில், சகாய விலையில், காஞ்சீபுரம் பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க சிறந்த இடம்

கோ-ஆப்டெக்ஸ்

குறளகம், தி. நகர், லஸ், மற்றும் காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி




வெற்றி குவிப்போம்!
இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
முதல் பரிசு:
ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)
முதல் மற்றும், இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும் பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.
மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.
குலுக்கல் நாள் :
12-2-1973
பரிசு சீட்டு ஒன்றின் விலை
ரூ. 1/-தான்
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.


தமிழரசு
பிப் 16.1973
40 காசு
21 FEB 1973

# அரசு-மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

TIDCO

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்**

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது**

AC-16







# தமிழரசு

மலர். 3 இதழ். 16


## தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவை-2-2-1973 ஆளுநர் அவர்களின் உரை

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே!

சட்ட மன்றத்தின் இக் கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இராஜாஜி என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் காலஞ்சென்றது, பொதுவாக இந்தியா முழுவதுக்கும், குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்ட பேரிழப்பு என்பதை முதற்கண் குறிப்பிடுவது என் கடமையெனக் கருதுகிறேன். நண்பராய், நல் ஆசிரியராய், தான் கொண்ட கருத்தினைத் துணிந்துரைக்கும் வித்தகராய், சிந்தனை மேதையாய், விடுதலைப் போராட்டத்தின் பெரும் சக்தியாய், இம் மாநில முதலமைச்சராய் விளங்கிய அந்த மூதறிஞரின் மறைவு அளவிடற்கரிய நட்டமாகும். ஆண்டுகள் பல கடந்திடினும், அவரைப் போன்ற ஒருவரை நம்மிடைக் காண்பதரிது. இந்த மாநிலத்தில், அவர் காலத்தில் வாழும் பேறு பெற்றோம் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

கடந்த ஆண்டில் அளவுக்கு அதிகமாகவே இயற்கையின் சீற்றத்துக்கு இம் மாநிலம் ஆட்பட வேண்டி வந்தது. தென் மேற்குப் பருவ மழைக் குறைவால் வறட்சி ஏற்படுமோ என்று நாம் அஞ்ச வேண்டி வந்தது. மாநிலத்தின் பற்பல பகுதிகளிலும் பருவ மழை காலந் தாழ்த்திப் பெய்ததால் ஏராளமான பரப்பளவில் வேர்க்கடலைப் பயிர் பெரிதும் நாசமடைந்தது. பல மாவட்டங்களில் குடி தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. உடனடியாக, ரூ. 1.25 கோடி செலவில் துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்தது. வடகிழக்குப் பருவ மழை பொழிந்ததால், வறட்சியின் வடுக்கள் மறைந்து நிலைமை சீராயிற்று. இத் துன்பத்தின் சுவடு மறைந்தவுடன், பெரும் புயல் அடித்தது. இப்புயல் காரணமாக, தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நீலகிரி, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தருமபுரி, சேலம், சென்னை ஆகிய மாவட்டங்களில் சாலைகள், வீடுகள், பாசன அணைகள், வயல்கள் ஆகியவற்றிற்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. 1,80,000 குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்தன; 28,000 ஏக்கர் பரப்பில் விளைந்த பயிர் முழுதும் நாசமாயிற்று; 1,70,000 ஏக்கர் பரப்பில் பயிர் ஓரளவு நாசமடைந்தது. இக் கொடும் புயலின் காரணமாக ரூ. 40 கோடி அளவுக்கு விரயம் ஏற்பட்டிருப்பதாக நாம் மதிப்பிட்டுள்ளோம். நிவாரணப் பணிக்காக ரூ. 25 கோடி அளவில் கடனுகவும், மானியமாகவும் வழங்குமாறு மத்திய அரசை வேண்டியுள்ளோம். பாசனப் பணிகளைச் செப்பனிடவும், சாலைகளைச் சீரமைக்கவும், மணல் மேடிட்ட நிலங்களை மீண்டும் விளை நிலங்களாக்கவும், பாழான வீடுகளைப் புதுப்பித்துக் கட்டிக் கொள்ளவும், நமது உழவர்களுக்கு உறுபொருள் கொடுக்கவும் இத் தொகையினை நாம் பயன்படுத்திக்கொள்வோம். துயர் தணிப்புப் பணிகளுக்குச் செலவிடுவதற்கென, தமிழ்நாடு அரசினர் மத்திய அரசின் நிதி உதவியை எதிர்பார்த்து ரூ. 5 கோடி அனுமதித்தனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உதவி செய்ய அரசு நிர்வாகத்தினர் அனைவரும் அயராது சலியாது ஆற்றிய பணிக்காக நாம் அவர்களைப்பாராட்ட வேண்டும். இங்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்பதை நேரில் கண்டு மதிப்பிடுவதற்காக, மத்திய அரசு அதிகாரிகள் இங்கு வந்தனர். அவர்கள் நேரில் மதிப்பிட்ட பின்னர் தங்கள் அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், மத்திய அரசு தாராளமாக நிதி உதவி செய்யுமெ[illegible] பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

நமது வேளாண்மை நிலைமை மன நிறைவளிப்பதாக இரு[illegible] போதிலும், வெள்ளமும் வறட்சியும் நமது முன்னேற்ற வே[illegible]தைக் குறைத்துள்ளன. எனவே, நமது தேவை போக உபரி[illegible]யுள்ள தானியங்கள் எவ்வளவு இருக்கும் என்பதை நாம் கவ[illegible]முடன் மதிப்பிட வேண்டும். விற்பனையாகத்தக்க உபரி தானி[illegible] இருப்பில் போதிய அளவு அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதுதான் இதில் நாம் கையாளும் அணுகு முறையாகும். அப்போதுதான், வணிகத்தின் தாறுமாறான போக்கு உணவு தானிய பங்கீட்டைப்பாதிக்காது. அப்படிஇருந்தால்தான்

தொடர்ச்சி...

RR 995/2 D. 21 FEB 1973 1740-55

# சமதர்மத் திட்டங்களுக்கு முன்னோடிகளாவோம்!

சமுதாயத்தில் ஏழை எளியவர்களின் பயனுக்கென உணவு தானியங்களைப் பங்கிட்டுக் கொடுக்கவும், இந்த ஆண்டு மத்திய அரசுக்கு அரிசி கொடுப்பதாக நாம் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றவும் போதுமான அரிசி இருப்பு நம்மிடம் இருக்கும். இக் குறிக்கோள் நிறைவேறும் வண்ணம் வணிகரிடமிருந்து 20 சத வீதம் அரிசி கொள்முதல் செய்ய அரசு திட்டமிட்டு, நிறைவேற்றி வருகிறது.

மாநில அரசின் முயற்சிகளால் மட்டுமல்லாது மத்திய நிதி, வரி விதிப்புக் கொள்கைகளின் உதவியுடன் மட்டுமே விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

நிலையான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு வேளாண்மை உற்பத்தி உயர்வு அடிப்படையாகும். வேளாண்மை உற்பத்தி உயர்வுக்கு உறுதியான பாசன வசதியும், உரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் வேண்டும். உரங்கள் கிடைப்பது மிகவும் பற்றாக்குறையாக இருந்து வந்துள்ளது. நமக்கு 1972–73-ல் 2.74 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் தேவையிருக்க, 1.30 இலட்சம் டன் உரம் மட்டுமே கிடைத்துள்ளது. 1971–72-ல் நமக்கு 2.14 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் கிடைத்தது என்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். உள்நாட்டில் உர உற்பத்தியைப் பெருக்கவும், கூடுதல் அளவு உர இறக்குமதிக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்பாடு செய்யவும், உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை நாம் கேட்டுள்ளோம்.

மாநிலத்தின் நீர் வளங்கள், பெரும்பாலும், முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் அண்மையில், ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, நாம் இன்னும் சிறந்த முறையில் நமது பாசன ஏற்பாடுகளைப் பேண வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. நமது பாசன வசதிகளை நாம் சீரமைக்கவும், காலத்திற் கேற்றவாறு மாற்றியமைக்கவும் வேண்டும். இத் தொடர்பில் காவிரிப் பாசன ஏற்பாட்டைக் காலத்திற் கேற்றவாறு மாற்றியமைக்க இந்திய அரசு மூலம், உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரும் நமது செயற் குறிப்புகள் குறித்து இந்திய அரசு விரைந்து முடிவெடுக்குமென நம்புகிறோம்.

நீர் வளத்தையும், மற்ற இயற்கை வளங்களையும் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் வட்டார அடிப்படையில் அமைந்திருக்க வேண்டுமேயல்லாது ஒரு மாநிலத்தின் எல்லைக்குள் அமைத்துவிட முடியாது. மைசூர் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், ஆகிய மாநிலங்கள் ஒருங்கிணைந்து இந்த வட்டாரத்தில், கிடைக்கும் நீர் வளத்தைப் பயன்படுத்துவதற்காகத் திட்டமிட வேண்டும். இந்த நான்கு மாநிலங்களின் நீர்வளம், மின் சக்தி, மற்றும் இதர வளங்களைப் பயன்படுத்துவதற்காக மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைப்பது குறித்து இம் மாநிலங்கள் சிந்திக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் இம் மாநிலத்தில், மின் சக்தி பற்றாக்குறை ஏற்பட்டதன் விளைவாக, தொழில் துறையும், வேளாண்மைத் துறையும் பாதிக்கப்பட்டன. தென் மேற்குப் பருவ மழை குறிப்பாக நீர்கோள் பகுதிகளில் பெய்யாமற் பொய்த்தது. இதன் விளைவாக, நமது மாநிலத்திலும், அண்டை மாநிலங்களிலும், உள்ள மின் சக்தி உற்பத்தி நீர்த் தேக்கங்களில், நீர் மட்டம் பெரிதும் குறைந்தது. ஏனைய மாநிலங்கள் வழங்கிய மின் சக்தியும் நிறுத்தப்பட்டுவிட்டதால், மின் சக்திப் பற்றாக்குறை நிலை மிகக் கடுமையாகியது. இதே சமயத்தில் பல்வேறு காரணங்களால் நெய்வேலியில் மின் சக்தி உற்பத்தியளவும் பெரிதும் குறைந்திட நேர்ந்ததால், நமது இன்னல்கள் பெருகின. இதன் காரணமாக, நாம் மின் வெட்டு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு, அதனால் நமது பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மின்சக்தி பற்றாக்குறை உலகமெங்கும் காணப்படும் நிலையேயாகும். சமீபத்தில் ஏற்பட்ட மின் வெட்டு மறுமுறையும் ஏற்படா வண்ணம், நாம் முன்கூட்டியே திட்டமிட வேண்டும். உடனடியாக, நெய்வேலி மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இது குறித்து மத்திய அரசிடம் நாம் செய்துள்ள முறையீடுகள் பயன் தந்துள்ளன.

நொடித்த பஞ்சாலைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதைப் பொறுத்தவரை, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 9,961 தொழிலாளர் பணிபுரியும் பதின்மூன்று ஆலைகளை இதுவரை எடுத்துக் கொண்டுள்ளது. இதில், அண்மையில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆறு ஆலைகளும் அடங்கும். இவை, விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஏழு ஆலைகளில், ஐந்து ஆலைகள் தற்போது ஆதாயத்தில் செயல்படுகின்றன.

வேளாண்மை, தொழில் துறைகளில் எவ்வளவோ செய்திருந்த போதிலும், வேலையில்லாப்பிரச்சினையும், வறுமையும் நம்மை எதிர் நோக்கி இருப்பது அனைத்திந்தியப் பிரச்சினையாகும். எனினும் நம்மால் முடிந்ததை நாம் செய்து வருகிறோம். ரூ. 2 கோடி செலவிலான கிராம வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டம், ரூ. 3 கோடி செலவிலான இளைஞர் அணித் திட்டம், ரூ. 1·31 கோடி செலவிலான வறட்சியால் பீடிக்கப்படும் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம்; பொறியாளர்கள் தொழிற் பயிற்சித் திட்டம், தொழிலாளர்கள் கடனுதவித் திட்டம் ஆகிய திட்டங்கள் உட்பட, மொத்தம் சுமார் ரூ.10 கோடி செலவிலான திட்டங்களை நாம் தொடங்கியுள்ளோம்.

1972–73-ஆம் ஆண்டுத் திட்டம் சுமார் ரூ. 115 கோடி என்ற அளவில் வரையறுக்கப் பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டிற்கான திட்டம் திட்டமிட்டபடி நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சருக்கும் திட்ட ஆணைக் குழுவிற்குமிடையே நடந்த விவாதங்களின் பயனாக, 1973–74-ஆம் ஆண்டிற்கான திட்டத்திற்கு ரூ. 120 கோடி வரையறுக்கப்பட்டுள்ளது. இதையும் சேர்த்து, நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம், மத்திய திட்ட ஆணைக்குழு ஏற்கெனவே ஏற்பளித்த தொகையான ரூ. 519 கோடிக்கு மாறாக, ரூ. 534 கோடியாக ஆகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு நிதி வசதிகள் அளிப்பதில், நிதி ஆணைக் குழுவே தலையாய இடம் பெற வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளோம். தேசிய வளர்ச்சி மன்றம் பரிந்துரைத்துள்ள குறைந்தபட்சத் தேவைத் திட்டம் உட்பட, எல்லாத் திட்டச் செலவுகட்கும், திட்டத்தின் பாற்படாத செலவுகளுக்குமான நிதிஉதவி பற்றி நிதி ஆணைக் குழு, திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும் என்பது நமது கொள்கையாகும். மாநிலங்களின் தேவைகளனைத்தையும் ஒரு சேர நோக்கி, மத்திய வரிகளிலிருந்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படும் முறையையும், மத்திய அரசு மானியங்கள் வழங்கும் முறையையும், நிதி ஆணைக் குழுவே பரிந்துரைக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்ட மானியங்கள் எந்த அடிப்படையில் வழங்கப் பட வேண்டும் என்று நிதி ஆணைக் குழு வரையறுத்துச் சொல்ல வேண்டும்; திட்டக் குழு அவ் வரையறைக்குட்பட்டு ஆண்டுக்கு ஆண்டு செயல்பட வேண்டும்.



வறுமை, வேலையின்மை ஆகிய வற்றை ஒழித்து, சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதையே முக்கியக் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டுள்ளோம். அடுத்த பத்தாண்டுகளுக்கு மாநிலத்திற்கான நீண்ட காலத் திட்டமொன்றை வகுப்பதற்காக மாநிலத் திட்டக் குழுவொன்றை அமைத்துள்ளோம். மாநிலத் திட்டக் குழுவால் வகுக்கப் பட்டுள்ள வரைவுத் திட்டத்தின் நகல் ஒன்று சட்ட மன்றத்திலும் மக்கள் முன்னிலையிலும் வைக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நீண்ட காலத் திட்டம் (ஐந்தாவது, ஆருவது திட்டங்களைக் கொண்டது) சம்பந்தப்பட்ட விரிவான திட்டங்கள் தயாரிப்பதில், மாநிலத் திட்டக்குழு தற்சமயம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தேவையான மூலப் பொருட்கள், மின்சாரம் ஆகியவை தங்கு தடையில்லாமல் கிடைக்க வழி செய்யப்படுவதே, திட்டங்களை வெற்றியுடன் செயல்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும் என்று மாண்புமிகு முதலமைச்சர் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூறியிருப்பதை இங்குக் குறிப்பிடவிரும்புகிறேன். சேமித்து, முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், வரிவிதிப்பு முறையை மாற்றியமைப்பதை ஆராய்வதற்கு வரி விசாரணைக்குழு ஒன்றைஅமைக்க வேண்டுமென்று அவர் அக் கூட்டத்தில் கூறியதையும் குறிப்பிட விரும்புகின்றேன். எல்லாருமே வேலை வாய்ப்புக்காக அரசாங்கத்தை எதிர்பார்த்திருப்பது நல்லது அல்ல : உடனடிச் சாத்தியமும் அல்ல. எனவே, சேமித்து, தொழிலில் முதலீடு செய்ய மத்தியதர வர்க்கத் தொழில் முனைவர்கள் பலர் உருவாக வேண்டும். அத்தகையோர்கள் அவ்வாறு செயல்பட, தக்க சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே, வருமான வரி அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார். இந்தக் கருத்தை ஏற்பதன் மூலம் வரி ஏய்ப்பைத் தவிர்க்கவும், கறுப்புப் பண நடமாட்டத்தைத் தடுக்கவும் வழி வகை காணமுடியும்.



வரும் கூட்டத் தொடரில் ஆலோசிக்கப்பட வேண்டிய முக்கியமான சட்ட வரைவுகளில் ஒன்று, பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவது பற்றியதாகும். இம் மாநிலத்திலுள்ள பேருந்துப் போக்குவரத்து முழுவதையும் படிப்படியாக நாட்டுடைமை ஆக்குவதென்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது உங்கள் அனைவருக்கும் தெரியும். இது இம்மாநிலம் சமதர்மப் பாதையில் கண்டு வரும் மற்றொரு முன்னேற்றமாகும். இப் பேரவை இந்த நடவடிக்கையை வரவேற்குமென நான் நம்புகிறேன்.

சமதர்ம ஜனநாயகம் நல்ல வகையில் மலர வேண்டுமானால் நாம் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும். நாட்டிலே நலிந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான பாமர மக்களுக்கு அவர்களது நிலையினை நல்ல வகையில் புரிந்துகொண்டு, அவர்களுக்காக அயராது, சலியாது பணிபுரியும் சக்திகளுக்கு நமது ஒத்துழைப்பை நல்குவதிலும், அந்த நோக்கங்களுக்காக உறுதியுடன் பாடுபடுவதிலும் நாம் முன்னோடிகளாக இருப்போமேயானால், நமது சந்ததியினர் அனைவரும் நம்மைப் போற்றிப் புகழ்வார்கள்.

[2–2–1973-ல் நடைபெற்ற சட்ட மன்றக் கூட்டவையில் ஆளுநர் ஆற்றிய உரையின் சிலபகுதிகள்.]



# கனவு நனவாகியது

கூவம் சீரமைப்புப் பணிகள் நிறைவுற்று, அதனுடைய எழிலார்ந்த கரைகளைக் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்று, உல்லாசப் படகுகளை ஓடவிடுகின்ற இந்த இனிய நாளில், எனக்கு 1967-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் மாலை நேரம் நினைவுக்கு வராமல் இல்லை.

அந்த நாள் மாலை நேரத்தில்தான், இதே பகுதியில் எங்களை ஆளாக்கிய தலைவர் பேரறிஞர் அண்ணாஅவர்கள் இந்தத் திட்டத்திற்கான தொடக்க விழாவினை நடத்தி வைத்தார்கள். அப்போது அவர்கள் சொன்னார்கள், ''கூவம் சீரமைப்புத் திட்டத்தை இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேயே சேர்க்க வேண்டும் என்று பொதுப்பணி அமைச்சர் தம்பி கருணாநிதி துளைத்து எடுத்துவிட்டார். ஆகவேதான், இந்தத் திட்டத்தை எவ்வளவோ நிதி நெருக்கடிக்கு இடையிலேயும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேயே இணைத்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

அந்த நாளில் அண்ணா அவர்களுடைய வாழ்த்துக்களோடு—பாராட்டுகளோடு — தொடங்கிய இந்தத் திட்டம், எவ்வளவோ எதிர்ப்புக்கிடையிலேயும் அடுக்கடுக்காக வந்த நிலைமைகளைச் சமாளித்துச் சிறப்புற நிறைவேறி இருக்கிறது.

மேல்நாடுகளில் அந்த நாட்டினுடைய தலைநகரங்களை அழகுபடுத்துவதிலே முதலிடத்தைப் பெறுவதும், அந்தத் தலைநகரங்களை அழகு படுத்துவதும் இடையே கிழித்துக்கொண்டு ஓடுகிற ஆறுகள்தான். அந்த ஆறுகளின் வனப்பும், அதிலே ஓடிக் கொண்டிருக்கிற உல்லாசப்படகுகளும், அந்தப் படகு சவாரிக்காக வருகின்ற சுற்றுலாப் பயணிகளும், நகரத்தை எழில் படுத்துவது மட்டுமல்ல. நகரத்தின் பொருளாதாரத்தைச் சுற்றுலாத் துறையின் மூலமாக ஓரளவுக்கு உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டின் தலைநகரமான சென்னை நகரில் கூவம் நதியைச் சீரமைக்க வேண்டும் என்ற ஆர்வம் பல ஆண்டுக் காலமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், அந்த ஆர்வத்தைச் செயல் படுத்துகின்ற திட்ட முயற்சிகள் 1967-க்குப் பிறகுதான் தொடங்கப் பெற்றன. செங்கற்பட்டு மாவட்டத்திலே உற்பத்தியாகிக் கிட்டத்தட்ட 41 மைல் ஓடுகின்ற கூவம் ஆறு, பல்வேறு அசுத்த வடிகால்கள், வந்து இதிலே கலந்த காரணத்தினாலும் சென்னை மாநகரில் உள்ள அசுத்தப் பொருள்களையெல்லாம் சுமந்து செல்லுகின்ற நதியாக இது ஆக்கப்பட்டதாலும், கூவம் கெட்டு விட்டது என்று சொன்னார்கள்.

கூவம் ஆறு சீரமைப்புப் பணிகள் மூன்று கட்டமாக நடைபெற்று உள்ளன.

முதல் கட்டமாக 35 அடி அகலமுள்ள இரு கண் கொண்ட மதகும், மணல்வாரி இயந்திரத்தைப் பொருந்துவதற்காகச் சுமார் 250 அடி நீளமுள்ள ஜெட்டி ஒன்றைக் கட்டுவதற்கும், மதிப்பீட்டுச் செலவு 66 இலட்சம் ஆகியிருக்கிறது. இது முதல் கட்டம்.

இரண்டாம் கட்டம் சேத்துப்பட்டு இருப்புப் பாதைப் பாலத்திலிருந்து, நேப்பியர் பாலம் வரையிலான ஐந்து மைல் இரண்டு பர்லாங் தொலைவுள்ள பகுதி, வடபிரிவில் ஒரு மைல் ஒரு பர்லாங் தூரப் பகுதி இவற்றை வாய்க்காலாக வகைப்படுத்தி, கரைகளின் சரிவுகளைச் சிமிண்ட் கற்காரைப் பகுதிகளால் பதித்து, ஆற்றின் கரை ஓரத்திலே 10 அடி அகல நடைபாதைகள் அமைத்து ஏழு படகுத்துறைகள், ஒரு படகுக் குழாம் கட்டுவதற்கு 2-ஆம் கட்ட வேலையாகத்தான், 1கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

படகுகளை விடுகிற உல்லாசப் பொழுது போக்கிற்குச் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி அளிக்கிற காரியம் மாத்திரமல்லாமல் இந்த அரசு படகுகளை மிதக்க விடுகிற அதே நேரத்தில் பாட்டாளி மக்களையும் மறந்து விடுகிற அரசு அல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாகவும், கூவம் நதி ஓரத்திலே வாழ்ந்து கொண்டிருந்த 941 குடிசை வாழ் மக்களுக்கு ஏறத்தாழ 12 இலட்சம் ரூபாய் செலவில் தீப்பற்றாத வீடுகளைக் கூவம் நதியின் கரை ஓரத்திலே அரசின் சார்பில் கட்டிக்கொடுத்திருக்கிறோம். இவ்வளவுக்கும் சேர்த்து 2 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. சுற்றுலாப் பயணிகளின் மூலம் இந்தத் தொகை நமக்குக் கிடைக்க வேண்டும்.

கூடுமான வரையில் நம்முடைய நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளை நாம் கவர வேண்டும் என்பது ஒருபுறம். அதே நேரத்தில் நம்முடைய நாட்டில் இருக்கின்ற மக்களே கூட வெளிநாட்டில் அது இருக்கிறது இது இருக்கிறது என்று சொல்லுகின்ற நேரத்தில், அவைகளைப் போய்ப் பார்க்க முடியாதவர்கள் அவைகளை இங்கேயே பார்க்க வேண்டும் என்று எண்ணுகிற போது, வசதி வாய்ப்பற்றவர்களுக்கு, இந்தத் துறையின் மூலமாக ஓரளவு வசதியை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஆனால், மத்திய அரசிலேயே சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை மிகக் குறைவாக இருக்கிறது.

அந்தக் காரணத்தினாலேதான் நாம் சுற்றுலாத் துறையை மத்திய அரசுத் துறையோடு இணைத்துக் கொண்டிருப்பதால் நாம் அதிகமாகச் செலவு செய்திட வழி வகை இல்லாமல் இருக்கிறது.

ஆனாலும், மாநில அரசைப் பொறுத்தவரை தமிழ்நாட்டிலே சுற்றுலாத்துறை எல்லா வகையிலும் வளர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகின்றோம்.

நண்பர் இராசாராம் அவர்களுடைய பொறுப்பிலும் ஆசைத்தம்பி அவர்களின் தலைமையிலும் இயங்குகின்ற அந்த வாரியம் கடந்த சில மாதங்களில் சுற்றுலாத்துறை மூலமாக நல்ல பல காரியங்களைச் சாதித்திருக்கின்றது. அண்மையில் கொண்டாடப்பட்ட பொங்கல் விழா—எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு மிகச் சிறப்பாகவும், வெளிநாட்டுக்காரர்களைக் கவரத் தக்க வகையிலும் அமைந்திருந்ததை நாம் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

கூவம் நதி வேலையைப் பொறுத்த வரையில் அதை நாம் முடித்து விட்டோம் என்றாலும், சென்னை மாநகரத்தை மற்றொரு ஆறு பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது; சுகாதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பெயர் பக்கிங்காம். அதையும் நாம் சீர்திருத்தவேண்டும் என்கின்ற ஓர் எண்ணம் நீண்டபல நாட்களாகவே இருந்துவருகிறது. அது பற்றியும் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.



கூவம் நதியினுடைய இரு கரைகளிலும், இன்னும் அழகான சோலைகளை நாம் உருவாக்க வேண்டும். இந்தச் சீரமைப்புக்குப் பிறகு இருகரைகளிலும் உள்ள நிலங்கள் எல்லாம், அதிக விலைக்குப் போகின்றன. தனியார் நிலங்களானாலும் அங்கே கட்டடங்களைக் கட்டிக் கொள்வதற்கு நிறையப்பேர் முந்துகின்றார்கள். காரணம் வெகு விரைவில் நிறையப் படகுகள் போகத் தக்க இடமாக இது மாறிவிடும் என்ற நம்பிக்கையேயாகும்.

இங்கு நமது அறிஞர் அண்ணா அவர்கள் கண் துயிலும் சதுக்கத்திற்கு அருகாமையில் நீச்சல் குளமொன்றும், ஆழ நீச்சல் குளமொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், மரங்களும் பூங்காக்களும் வளர்ந்து விடுமேயானால் இன்னும் ஐந்தாண்டுக் காலத்தில்—பத்தாண்டுக் காலத்தில் வெளி நாடுகளில் ஓடிக் கொண்டிருக்கிற நதிகளையெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு அழகினை நிச்சயமாகப் பெறும்.

நல்ல காரியங்களைச் செய்கின்ற நேரத்தில் சிலபேர் பாராட்டுகிறார்கள். இராசாராம் நொந்த உள்ளத்தோடு சொன்னார், யாரும் பாராட்ட மறுக்கிறார்களே என்று— அதேநேரத்தில் பெண் உள்ளம்—கனிவான உள்ளம்—தாய் உள்ளம் — களங்கமற்ற உள்ளம் என்பதற்கு அடையாளமாக அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ''நல்லவைகளை நான் பாராட்டுவேன், இதையும் நிச்சயமாகப் பாராட்டுவேன்'' என்று சொன்னது, நம்மைப் பார்த்துச் சொன்னது அல்ல. 'ஏன் பாராட்டினீர்கள் என்று கேட்பவர்களைப் பார்த்து, நல்லவைகளை நான் பாராட்டியேதான் தீருவேன் என்று சொல்வதைப் போல, அழுத்தம் திருத்தமான குரலில் அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

நல்ல உள்ளங்களிலே இருந்து வருகின்ற பாராட்டுக்கள் இது போன்ற நல்ல காரியங்களை இந்த அரசு செய்வதற்கு உறுதுணையாக இருக்கும்—ஊக்கமளிக்கும் என்ற நிறைந்த நம்பிக்கை இருக்கிறது.

இந்த அருமையான திட்டத்தை என்னுடைய அருமை நண்பர் பொதுப் பணித்துறை அமைச்சர் சாதிக்பாட்சா அவர்களும், அரசு அதிகாரிகளும் இவைகளை ஒழுங்காகவும் சீராகவும் செம்மையாகவும் செய்வதில் தங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்தியிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட மூவாயிரம் தொழிலாளர்கள் — கிராமப் புறத்து மக்கள்—கூவம் நதியிலே வந்து வேலை செய்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர் வர்க்கத்தையும் நான் பாராட்டுகின்றேன். அல்லும் பகலும் பாடுபட்ட அந்தப் பாட்டாளி நண்பர்களுக்கெல்லாம் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அந்தப் பாட்டாளித் தோழர்களுக்குத் தந்திருக்கின்ற ஊதியம் பெரிது அல்ல. நாம் அவர்களை மனதாரப் பாராட்டுகிறோம்—நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்தத் திட்டத்தைப்போன்று பல்வேறு திட்டங்கள் நாட்டிலே நடைபெறுவதற்கு, ஏற்ற வகையில் மக்களின் அன்பான ஆதரவு இந்த அரசுக்கு என்றென்றும் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**முதல்வர் கலைஞர்**

**(கூவம் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ள படகு குழாம், உல்லாசப் படகு ஓட்டம் ஆகியவற்றைத் தொடங்கிவைத்து முதல்வர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஏனைய செய்திகள் வண்ணப் பக்கங்களில்.)**

# இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு மைய வங்கி



இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு மைய வங்கி தமிழ்நாட்டில்தான் உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பெருமையைப் பெற்றிருப்பது கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி.

1970–71-ஆம் ஆண்டில் இந்தியாவில் சிறந்த கூட்டுறவு வங்கியாக முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி. 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இந்தப் பெருமையைப் பெற்றுள்ளது. இவ்வாண்டும் (1972–73) இந்தியாவில் சிறந்த கூட்டுறவு மைய வங்கியாக கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கியே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் வங்கித் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் முதன்முதலாகச் செய்த மாறுதல் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் இணையாமலிருந்த விவசாயக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் இணைக்கப் பட்டன என்கிறார் இந்த வங்கியின் தலைவர் திரு கோ. சி. மணி, எம்.எல்.சி.

வங்கியின் சிறப்பான வெற்றிக்கு ஆற்றிய பணிகள் பற்றி அவர் தெரிவித்தவை வருமாறு:

வசூல் பணிகள் தீவிரமாக்கப்பட்டன. புதிய முறையில் அலுவலர்கள் கூட்டம் கூட்டப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டு வசூல் முனைப்பு இயக்கம் தொடங்கப்பட்டது.

எல்லாக் குத்தகை விவசாயிகளுக்கும் எல்லாப் பருவத்திலும், குறிப்பாகப் பணப் பயிர்களுக்கும் கடன் வழங்கும் முறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

நெல் சாகுபடிக்குத்தான் கடன் வழங்கப்படும் என்ற முறையை மாற்றிக் கரும்பு, பருத்தி, காய்கறிகள், வாழை, நிலக்கடலை, புகையிலை ஆகியவற்றைப் பயிரிடக் கடன் வழங்கப்பட்டது.

விவசாயிகளுக்கு வழங்கும் ரொக்கப் பகுதி ரூ. 125 ஆக உயர்த்தப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் உர விற்பனையை அதிகரிக்க, உர மொத்த விற்பனையாளரிடம் கழிவு பெற்று—விற்பனையாளர்களான நாணயச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டது. இதனால் விற்பனையாளர்களான நாணயச் சங்கங்கள் இலாபம் அடைந்தன.

உர விற்பனை அதிகரிப்புக்காக செயலாளர்களுக்கு ஊக்க போனஸ் அளிக்கப்பட்டது.



இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு மைய வங்கிக்கான பரிசைத் தமிழக கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் மகாராஷ்டிர மாநிலக் கூட்டுறவு அமைச்சர் திரு மொஹிடே அவர்கள் வங்கித் தலைவர் திரு கோ. சி. மணி, எம். எல். சி., அவர்களுக்கு அளிக்கிறார்.



கூட்டுறவு நாணயச் சங்கங்களைக் கட்டாயமாக காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மாலை 3 மணி முதல் இரவு 7 மணி வரையும் திறந்து வைத்திருக்க வேண்டும் என்ற கொள்கை தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிறைவு பெற ஆய்வாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் இப்பொழுது 70 சதவீதக் கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிறைவு கொள்ளும் வகையில் பணியாற்றி வருகின்றன.

முன்பு ஏறத்தாழ ரூபாய் இரண்டு கோடி அளவில்தான் கடன் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது ரூபாய் ஐந்து கோடிக்கு அதிகமாகக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதிக அளவில் இப்படிக் கடன் வழங்குவதன் மூலம் பசுமைப் புரட்சிக்கு உறுதுணையாகக் கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி பணியாற்றி வருகின்றது.




சிறந்த கூட்டுறவு மைய வங்கி எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறது?

தேசியக் கூட்டுறவு ஒன்றியம் என்ற அமைப்பு புதுடெல்லியில் உள்ளது. எல்லா மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களையும் அழைத்து ஒவ்வொரு கூட்டுறவு மைய வங்கிகளின் தணிக்கைக் கணக்குகளையும் தகுதிகளையும் ஆராய்ந்து முடிவு செய்கிறது.

சிறந்த கூட்டுறவு வங்கியாக இருக்க என்ன தகுதி வேண்டும்?

கடன் பாக்கியில் 99.2 சதவீதம் வசூல் செய்திருக்க வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தச் சாதனையைச் செய்து இந்தியாவில் சிறந்த கூட்டுறவு மத்திய வங்கியாகக் கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கி திகழ்கிறது.

16-2—2ள

வேறு எங்கும் இல்லாத வகையிலும் கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி சிட்-பண்ட் சட்டப்படி பல குரூப்களில் ஏலச் சீட்டுகளை நடத்துகிறது.

அலுவலக அலுவலாளர்களுக்கும் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மொத்தத்தில் வங்கி அலுவலாளர்களுக்கு 1 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. பயன் நுகர்வோர் கடன் மூலமும் சீட்டு நடத்தப்படுகிறது.

இந்த இதழுடன் இலவச இணைப்பு உண்டு. விவரம் 60-ஆம் பக்கத்தில்.

தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் மட்டுமே இரண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன.

கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கியின் கிளைகள் கும்பகோணம், மாயூரம், சீர்காழி, பாபநாசம், நன்னிலம், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி ஆகிய வட்டங்களில் உள்ளன. கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கியின் உறுப்பினராக 264 சங்கங்கள் இயங்கி வருகின்றன. மொத்தத்தில் கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி மற்ற வங்கிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது என்று கூறலாம். வைரவிழாக் கொண்டாடும் இந்த வழிகாட்டும் வங்கியை அனைவரும் வாழ்த்திப் பாராட்டுவோம்.

—மா.

# இதோ உங்கள் இதயம்



நாகரிகம் வளர்ந்துள்ள தற்காலத்தில் ஒருவருடைய இருதயத்தைப் பற்றியும்அது இறைவை உறுப்பாகச்செயல்படும் சிறப்பையும் அறிந்து கொள்வது கடினமல்ல. உடலிலுள்ள எல்லாப் பாகங்களுக்கும் குருதியை அனுப்புவது இருதயத்தினுடைய தலையாய கடமையாகும்.

இருதயத்தின் செயல் திறனை ஒருவர் அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். அதனல் ஒருவர் தன்னுடைய இருதயத்தின் செயல் திறனிற்கு ஒப்ப சீரான வாழ்க்கை வாழலாம். நீண்ட காலத்திற்கு இடையூறு இன்னலோ இல்லாத அளவிற்கு ஒருவருக்குத் துணை செய்யும் இருதயத்திற்கு உடல் மற்றும் மூளைத் தொல்லைகள் பாரமாக அமைந்து விடும். பிணியால் பாதிக்கப்பட்ட இருதயத்தைக் கொண்டவரால்கூட, அவர் தன்னுடைய இருதயத்தின் உண்மை நிலைமையை அறிந்திருந்தால் சீரான நடைமுறை வாழ்க்கை வாழ முடியும்.

தலைக்கு மேலே ஆபத்தாகத் தொங்கிக் கொண்டிருக்கும் டேமாக்ளீலின் கத்தியைப்போல் எப்போதும் இருதய நோய் ஆபத்தோடு இணைந்துள்ளது ; ஒருவருடைய வாழ்க்கைக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியது என்று நினைப்பது தவறானதாகும். இதுபோன்ற கருத்து, அரைகுறைப் புலமை பெற்றவர்களாலும், தவறான மருத்துவர்களாலும் உருவாக்கப்பட்டு விடுகிறது. செய்தித் தாள்களில் வெளிவருவதைப் போல் இதுபோன்ற தவறான கருத்து பலவித இறப்புகளுக்குக் காரணமாகி விடுகின்றன. இதுபோன்றவைகளை இருதய நோய்த் துறையில் புலமை பெற்றவர்கள் சரியான விளக்கம் கொடுத்துக் களைய வேண்டும்.

இருதய நோய் உள்ளவர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்து கொண்டு சமுதாயத்தில் நடமாட முடியாதவர்கள் என்பது சரியானதல்ல. மூச்சுத் திணறல், கால்கள் வீக்கம், இருமல் போன்றவை இருதய நோய்க்கான அறிகுறிகள். அவைகளே இருதய நோய்களல்ல. இவைகளால் ஒருவன் படுத்த படுக்கையில் இருக்க வேண்டும் என்ற கருத்தும் முறையானதல்ல.

மேலே குறிப்பிடப்பட்ட இருதய நோய் அறிகுறிகள் இருதய நோயின் முற்றிய நிலையில் ஏற்படுபவை. முறையான மருத்துவத்தால் அவை போன்ற சிக்கல்களையும் நீக்க முடியும். தங்களுடைய இருதயத்தின் நிலைமை அதனுடைய செயல் திறன் ஆகியவை குறித்து அறிந்து புரிந்து கொள்வதன் மூலம் முற்றிய இருதய நோயாளிகள் கூட நல்ல சீரான வாழ்க்கையை நல்ல உடல் நலத்தோடு வாழ முடியும்.

வாழ்க்கையின் பலவிதப் பருவத்தில் ஏற்படும் பலவகையான இருதய நோய்கள் உண்டு. உடலின் மற்ற உறுப்புகளைப் பாதிக்கும் நோய்கள் இருதயத்தையும் பாதிப்பதுண்டு. அதனல் இருதய நோய் ஆபத்தானது என்ற பய உணர்ச்சி பொது மக்கள் மனத்தில் எழும்புவது அவசியமற்றது. அத்தகைய உணர்வு பலவித நரம்புத்தொடர்பான நோய்களுக்குக் காரணமாகி விடுகின்றன.

**பேராசிரியர்**

**டாக்டர் கே. ராமச்சந்திரா**



சில நேரங்களில் உடலில் ஏற்படும் நோய்களின் சிக்கலால் இருதயம் பாதிக்கப்படுகிறது. அத்தகைய நோய்களால் ஒருவர் இறந்து விடுவதில்லை. ஆனல், அவைகளால் ஏற்படும் இருதய நோய் வாழ்க்கையைப் பாதித்து விடுகிறது.

எளிதில் கண்டு கொள்ளக் கூடிய தொற்று வியாதிகளால் தாயின் கர்ப்பப் பையிலேயே ஒருவருக்கு இருதய நோய் ஏற்படலாம். காலப் போக்கில் அந் நோய் வளர்ச்சி அடையலாம். வாழ்க்கையின் பிற்காலத்தில் ஏற்படும் இருதய நோய்களும் உண்டு. நரம்புத் தொடர்பான இருதய நோய்கள், அதிக உணர்வு சம்பந்தமான இருதய நோய்கள், நீரிழிவால் ஏற்படும் இருதய நோய்கள் போன்றவை அத்தகைய இருதயப் பிணிகளில் சில. குழந்தைப் பருவம், இளமைப் பருவம், வயோதிகப் பருவம் போன்ற வாழ்க்கைப் பருவங்களில் ஏற்படும் இருதய நோய்களைப் பற்றி அறிந்து கொள்ள ஒருவர் தன்னுடைய இருதயத்தைப் பற்றிப் புரிந்து கொள்வது இன்றியமையாதது.

அதிக உள்ளுணர்வால், நீரிழிவால் பாதிக்கப்பட்ட இருதய நோயாளிகள் தங்கள் இருதயம் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு தேர்ச்சி பெற்ற மருத்துவரின் முறையான ஆலோசனையோடு குறைந்த அளவு மருந்தை உட்கொண்டு ஆரோக்கியமான வாழ்வு வாழமுடியும்.

ஒருவர் தனது வயது, சமுதாய நிலைமை ஆகியவைகள் எப்படி இருப்பினும் அடிக்கடி தன்னுடைய உடல் நிலையைப் பரிசோதித்துக் கொள்வதுபோலவே இருதயத்தையும் அப்படிச்செய்து கொள்வது தேவையானது. தற்காலத்தில் ஒருமுறை இருதய நோயாகத் தோன்றியது எப்போதும் அப்படியே இருக்கவேண்டும் என்ற கட்டாய நியதி இல்லை. அறுவைச் சிகிச்சையின் முன்னேற்றம், உடல் நிலைமை, இருதய நிலைமை ஆகியவைகளை அறிந்து கொள்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் போன்றவைகள் மேற்கூறிய கருத்தை மாற்றி விட்டது.

இருதய நோயால் பிணிக்கப்பட்டவர்கள் தொடக்ககாலத்திலேயே அதைப் பற்றித் தெரிந்து கொண்டு முறைப்படி வாழின் மேலும் சீர்பெற்ற செம்மையான வீரமான வாழ்க்கை வாழ முடியும் என்பதை நான் கூறுவேன்,

# உலகிலே கிளிகள்



## டி. என். சுகி சுப்பிரமணியன்

### 1. மடி நிறையப் பணம் - மனம் நிறைய உல்லாசம்

நல்லதை நினைக்கின்ற மனமும், நினைத்ததை முடிக்கின்ற துணிவும் சேர்ந்திருந்தால் வாழ்க்கை என்றும் வெற்றிமயமாகவேதான் இருக்கும்.

நல்லதை நினைக்கின்ற மனம் ராதைக்கு இருந்தது ; நினைத்ததை முடிக்கின்ற துணிவு மணிவாசகனுக்கு இருந்தது. இரண்டும் இணைந்திருக்க வேண்டுமென்ற ஆவல் பாண்டித் துரைக்கு இருந்தது.

ராதை, மணிவாசகனின் மாமன் மகள். முறைப் பெண்.

பாண்டித்துரை, மணிவாசகனின் தாய்மாமன் ; தாய்வழி உறவு, தந்தைவழி உறவு என்று அவனது உறவுகளிலெல்லாம் எஞ்சி நிற்கும் ஒரே மனிதர் அவர் மட்டும்தான். 'தங்கை மகன்' என்ற உறவிலும், தன் மகளை மணக்கப் போகிறவன் என்ற நம்பிக்கையிலும், மணிவாசகனின் ஒளிமயமான எதிர் காலத்திற்கு அவரே உத்தரவாதமாக இருந்தார். இருந்தார் என்ன? இப்போதும் அதே எண்ணத்தோடுதான் இருக்கிறார்........!

அறைவாசலில் அழைப்புமணி கிணுகிணுக்கிறது. வந்து நிற்பவள் ராதை. மகளாக இருந்தாலும் மரியாதைக்கு மரியாதை கொடுக்கத் தெரிந்தவள். எனவேதான், மணியை அழுத்திக் தன் வரவைத் தெரிவித்துவிட்டு உள்ளே வருகிறாள்.

'' அப்பா ''

'' ஐ நூறு ரூபாய் — இந்தாம்மா '' என்கிறார் பாண்டித் துரை.

'' கண்டேன் சீதையை'ங்கிறதைப் போலக் காவியநயம் இருக்கப்பா உங்க பேச்சிலே? எவ்வளவு ரூபாய் தரப் போறீங்களோன்னு சஸ்பென்ஸ் வைக்காமல், ' ஐநூறு ரூபாய்— இதோன்னு ' கொடுக்கிறீங்களே .........நீங்க பல்லாண்டு வாழணும்! பலநூறு கொடுக்கணும் '' என்று கூறிச் சிரித்தப்படியே வாங்குகிறாள் ; வண்ணப் பட்டாம் பூச்சி போல் சிறகடித்துப் பறக்கிறாள்.

சன்னல் திரையை விலக்கிக் கொண்டு கீழே கூடத்தைப் பார்க்கிறார் பாண்டித்துரை.

சென்ட்ரல்—எழும்பூர் ரயில் நிலைய மேடை இடம் மாறித் தம் வீட்டுக் கூடத்திற்குள் வந்துவிட்டதோ என்று பிரமித்துப் போகிறார்.

பெரிய தோல்பெட்டி அதன் மேல் சிப்புக் கண்ணாடி சோப்பு— வைத்துக்கொள்ளும் சிறுபெட்டி- பத்திரிகைகள் புத்தகங்களை எடுத்துச் செல்ல சிறு பை ஒன்று, நான்குகோப்பைபிடிக்கும் பெரிய பிளாஸ்க் ஒன்று ............இன்னும் மறந்து போன பொருட்கள் ஏதேனும் இருக்குமோ என்னவோ.....

பாண்டித்துரை தமக்குள் சிரித்துக் கொண்டார். இத்தனை பொருட்களிலே ராதைக்குத் தேவையான — அல்லது ராதைக்குச் சொந்தமான— பொருள் என ஏதேனும் உண்டா என்று பார்க்கிறார்.

கண்ணுக்குப் புலப்படும் பொருளாக எதுவும் இல்லை. ஆனல், அங்கிருந்த ஒவ்வொன்றிலும் ராதையின் இதயம் கலந்திருக்கிறது. அவள் பார்வை பட்ட இடத்திலெல்லாம் பரிவும் கனிவும் படர்ந்திருக்கின்றன.

மணிவாசகன் சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டு படிப்பவன். தன் கல்லூரி நண்பர்களுடன் அவன் செல்லவிருக்கும் உல்லாசப் பயணத்திற்கான ஏற்பாடுகளைத்தான் அத்தனை அக்கறையாகப் பார்த்துப் பார்த்துச் செய்து வைத்திருக்கிறாள் ராதை.

நிலைக்கண்ணாடி முன் நின்று கொண்டிருக்கும் மணிவாசகன் கைக்குட்டையில் பவுடரைத் தூவி மடித்து வைத்துக் கொண்டே கடிகாரத்தைப் பார்க்கிறான்.

'' மணி ஏழு! அடேங்கப்பா ........காலந்தான் மனிதனை வெரட்டுதே தவிர, மனிதன் காலத்தை வெரட்டறதாகவும் தெரியலே, வெல்லறதாகவும் தெரியலே !'' என்று முணுமுணுத்துக் கொள்கிறான்.

'' என்ன தெரியலே உங்களுக்கு? எல்லாம் தெரிஞ்சவர் எங்க அத்தான்னு நான் ரொம்பவும் பெருமைப்பட்டுக்கிட்டிருக்கேன். என்னவோ ' தெரியலே'ன்னு நீங்க குறைப் படறயாதிரி தோணுதே....''

என்று படபடப்பாகப் பொரிந்தபடியே மாடியிலிருந்து இறங்கி வருகிருள் ராதை.

''பணப்பை எங்கே வச்சேன்னு தெரியலே...... அதைத்தான் தேடிக்கிட்டிருந்தேன்......''

'' பையும் பணமும் எங்கிட்டே இருக்கு அத்தான்.... என்று கூறிவிட்டு ஒரு விஞடி அவன் பதிலே எதிர்பார்த்து நிறுத்துகிருள்.

மணிவாசகனிடமிருந்து மறுமொழி இல்லே.

'' பணம் வேணும்னு— கேளுங்கள், கொடுக்கப்படும் '' என்கிருள் ராதை.

'' கேட்டுத்தான் வாங்கணுங்கிற அவசியமோ கேட்டாத்தான் கிடைக்கும்'ங்கிற நிலேமையோ என் வாழ்க்கையிலே என்னேக்குமே இருக்கக் கூடாது...... இதுதான் என் கொள்கை.... நான் நினேச்சா, உடனே அது —மறுவிஞடி— என் கைக்கு வந்தாகணும் — வரலே 'ன்னு கேட்சுமாட்டேன், கெஞ்சமாட்டேன்—ஆனு வரவழைப்பேன் !''

மணிவாசகத்தின் குரல் துடிப்பும் கொள்கைப் பிடிப்பும் பற்றி ராதை நன்ருகவே அறிவாள். தன்னுடைய அடுத்த வார்த்தை சற்று மாற்றுக் குறைவாக ஒலித்தாலும்— அல்லது ஒலிப்பதாக அவன் நினேத்து விட்டாலும்— தாட்பூட்டென்று பெட்டி படுக்கைகளேத் தூக்கி எறிந்து விடுவான். பயணத்தை ரத்துச் செய்து விடுவான் என்பதும் அவளுக்குத் தெரியும்.

பணப் பையை அவன்கையில் கொடுத்துப் பெரிய கும்பிடாகப் போடுகிருள்.

பணம் கையில் வந்து விழுந்ததும் மணிவாசகனின் கோபம் —கொஞ்சம் தணிகிறது. குரல் கொஞ்சம் குளுமை கொள்ளுகிறது.

'' எவ்வளவு இருக்கு ?''

'' எவ்வளவோ இருக்கு.... நமக்குள்ளே எதுக்கு அத்தான் அந்தக் கணக்கெல்லாம் ?''

'' நமக்குள்ளே எவ்வளவோ இருக்கட்டும். இந்தப் பையிலே எவ்வளவு பணம் இருக்கு....? அது எனக்குத் தெரிஞ்சாகணும். ''

'' அறுநூறு.''

'' மாமாகிட்டே நாஞூறுதானே நான் கேட்டேன்.''

'' அப்பா ஐநூறு கொடுத்தாங்க. ஏதோ என்ஞல் முடிஞ்சதையும் போட்டுக் கொடுத்திருக்கிறேன்.''

மணி வாசகன் முகம் மேலும் மலர்கிறது.

'' அட ஊட்டிக்கு போறீங்க.... ஊர் ஊராப் போறீங்க.. ஒரு பூ.... ஒரு புடவை.... ஒரு ஜோடி புதுதினுசு வளேயல்'னு எங்கேயாவது எதையாவது பார்த்தா, எனக்காக வாங்கிட்டு வரணும்னு உங்களுக்கு ஆசை வராதா ?

'' வராது.''

ஏறிட்டுப் பார்த்தாள் ராதை.

'' நிச்சயமாக வராது.''. என்ருன் மணிவாசக்ன்.

—ரோஜா இதழை முள்ளால் கீறுகிற விளேயாட்டு ; இது மணிவாசகனுக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு....

ராதைக்கும் போலியாகக் கோபம் கொள்ளத் தெரிந்திருக்கிறதே.

'' அதைச் சொல்லுங்க ! வீட்டை விட்டு வெளியிலே இறங்கின உடனே என்னே மறந்திடறதுதானே உங்களுக்குப் பழக்கம்........! நான் ஒரு பைத்தியக்காரி. சதா உங்களே நெனேச்சுகிட்ருக்கிற மாதிரி, நீங்களும் என்னேயே நெனேச்சுக் கிட்டிருப்பீங்க'ன்னு நான் நம்பறேன் பாருங்க...... சரி சரி, நேரமாச்சு புறப்படுங்க...... எங்கே உங்க நண்பர் ரோமியோ வரலேயா இன்னும் ?''

'' மணி ஏழுதானே ஆகுது ?''

'' அட அநியாயமே...... மணி எட்டு...... என்று ராதை கூறியதும் அவசர அவசரமாக மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைக் கவனிக்கிருன் மணிவாசகன்.

'' மணி ஏழுதான் ராதா !''

'' இனிமே ஏழுமணி நாளேக்குத்தான் வரும்....உங்க கடிகாரம் ஓட்டைக் கடிகாரம். இதோ பாருங்க.... மணி எட்டு '' என்று தன்னுடைய கடிகாரத்தைக் கழற்றித் தருகிருள் ராதை.

'' சை....ஊருக்குப் புறப்படற நேரத்தில் கடிகாரம்

தற்போது நாட்டிலுள்ள மொத்த மருத்துவ மனேகளில் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமாக படுக்கைகள் இருக்கின்றன. இந்த எண்ணிக்கை 1974-ஆம் ஆண்டுக்குள் 2 லட்சத்து 80 ஆயிரமாக உயர வேண்டும் என்பது குறியெல்லே யாகும்.

தற்போது 96 மருத்துவ மனேகள் ஒவ்வொன்றிலும் 500 அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் படுக்கைகள் உள்ளன.

இத்தகைய மருத்துவ மனேகள் மேற்கு வங்காளம், மராட்டியம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

தமிழ்நாடு, மைசூர், கேரளா ஆகிய ஒவ்வொரு மாநிலத்திலும் இதுபோன்று 8 மருத்துவ மனேகளும், மத்திய நிருவாகப் பகுதியான புதுதில்லியில் 7 மருத்துவ மனேகளும் உள்ளன.

ரிப்பேர் பண்ண ஏது நேரம்.. சனியன் '' என்று சபித்துக் கொண்டே தன் கடிகாரத்தைக் கழற்றி மேசையில் வீசி எறிகிருன் மணிவாசகன்.

'' கடிகாரம் நின்னுபோனு பிரயாணமே நின்னுபோகுமா என்ன....? என்று செல்லமாகக் கடிந்து கொள்கிருள் ராதை.

' நின்று போனதைத் தொடர வைக்கத்தான் நீ இருக்கியேம்மா !' என்று நெஞ்சுக்குள் தம் மகளே வாழ்த்திக் கொள்கிருர் பாண்டித்துரை.

தாய்—தகப்பனே இழந்து பாதியில் படிப்பை நிறுத்தக் கூடிய சூழ்நிலேயில், மணிவாசகன் பரிதவித்த போது ராதையின் பிடிவாதமும், தியாகமும் தான் அவனுடைய மேல் படிப்புக்குக் காரணமாக இருந்தவை. இந்த உண்மை மாமன் நெஞ்சுக்கும் தெரியும், மருமகன் நெஞ்சுக்கும் தெரியும்......! தன் கடிகாரத்தைச் சரிபார்த்து அவனிடம் கொடுக்கிருள் ராதை..... விழிகளில் நீர் திரையிட அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிருர் பாண்டித்துரை.

'' பெரிய டயல் கடிகாரம் கட்டற நாகரிகம் பெண்களிடம் வந்ததுக்கு இன்னேக்குத்தான் உண்மையான பலன் ஏற்பட்டிருக்கு......!'' என்று அவசரம் அவசரமாகக் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டு புறப்படுகிருன் மணிவாசகம்.

வாசலில் காரின் ஹாரன் ஒலி.

'' உங்க நண்பர் ரோமியோ வந்திட்டார் !''.

'' ஹாய்.. ஹாய்.. ஹாய்!'' என்று ஒருவகை ஓலத்தோடு வந்து நிற்கிருன் ரோமியோ. மணிவாசகத்தின் வகுப்புத் தோழன். அவனுடைய நாகரிக மொழிக்கும், நடையுடைகளுக்கும் தெரிந்த வரையில் 'ஹாய்' 'ஹாய்தான் ' பணிவும், மரியாதையும் கலந்த ஒருவகை வணக்கம்.

வந்து நின்றவன், மணிவாசகனின் பயணப் பொருட்களே ஒருமுறை கண்ணுல் வட்டம் சுற்றுகிருன்.

'' அப்பனே மணிவாசகம் ! நீ ஒருவாரம் சுற்றுலா போறியா, இல்லே ஒரேயடியா தனிக்குடித்தனம் போறியா......ஏன்டா ......உன் ஒருத்தனுக்கு எத்தனே பெட்டிகள்....எத்தனே பொடிப்பொடி உருப்படிகள் !''

'' அடேய் ரோமியோ.... எல்லாம் அவசியமான சாமான்கள்'னு ராதைதான் எடுத்து வச்சிருக்கா........ ''



'' மணி....நீ ஒரு வாலிபன், தானே......அதுவும் கல்லூரி மாணவன் தானே....? வெளியூர் பிரயாணம்ஞ எப்படி இருக்கணும் தெரியுமா......? தெரிஞ்சுக்கோ...... அந்த நாள்ளில் ' அல்லாடி ' ஹைகோர்ட்டுக்கு வந்த மாதிரி இருக்கணும் —— —— எல்லாம் பாயின்ட்ஸ்சும் தலைக்குள்ளே கொண்டு வந்தமாதிரி இருக்கணும். லா புக்ஸும், ரெபரன்ஸும் லாரியிலே வருதுன்னு சொல்ற மாதிரி இருக்கக் கூடாது, தெரியுமா? பிரயாணத்துக்குந் தேவை....''

'' லா பாயின்ட்ஸ் உள்ள மூளை மாதிரி, பணம் நிறைஞ்ச பை ஒண்ணே ஒண்ணுதான் பயணத்துக்குந் தேவை.'' என்று இடைமறிக்கிறாள் ராதை.

'' யெஸ், யுவர் ஆனர் '' என அதை ஆமோதிக்கிறான் ரோமியோ.

மணிவாசகன் சீப்பை எடுத்துச் சிறிய பையின் ஜிப்பைப் பிரித்துத் திணித்துவிட்டுப் புறப்படுகிறான். இவ்வளவு நேரம் ரோமியோ பேசினதெல்லாம் யாருக்காகவோ என்ற அலட்சியம் அவனுக்கு....அது அவனுக்குப் பிறவிக்குணம்.

பெட்டியைப் பூட்டிவிட்டு, சாவியை மணிவாசகனின் கையில் கொடுக்கிறாள் ராதை.

'' புறப்படலாம் '' என்பது பொருள்.

'' நாங்க போகப் போற ஊர்களின் விவரம். தங்கப் போற விலாசம் எல்லாம்—'' என மணிவாசகன் பேச ஆரம்பிப்பதற்குள், ராதை குறுக்கிட்டாள். எல்லாம் அப்பா டயரியிலே சரிவரக் குறிச்சு வச்சுகிட்டேன். நிகழ்ச்சியிலே ஏதாவது மாற்றம் இருக்குமானு உடனுக்குடனே தெரிவிச்சுடுங்க.

'' மாற்றம் இருந்தா தெரிவிக்கலாம். ஏமாற்றம் இருந்தாலும் தெரிவிக்கணுமோ ?'' இது ரோமியோ.

'' எங்க அத்தான் இது வரைக்கும் என்னைக்குமே எந்த விஷயத்திலேயும் ஏமாந்தது கிடையாது ரோமியோ அவர்களே!' என்கிறாள் ராதை.

'' இனிமேலேயும் ஏமாறப் போறதில்லே'ன்னு அடிச்சு சொல்லு ராதா !'' என்கிறான் மணிவாசகம்.

'' அடடா, மகிழ்ச்சியா பொறப்படுற நேரத்தில் ஏன் இப்படிரெண்டுபேரும் கடுமையா எங்கிட்ட சண்டைக்கு வர்றீங்க..'' என்று பயந்த—பயந்தவன்போல் நடித்த—ரோமியோ நிலைமையைச் சமாளிப்பதற்காக, '' நாங்கள்ளாம் மகிழ்ச்சியாப் போப்போறோமே.. செல்வி ராதா, எங்க கூட வரணும்னு உங்களுக்கு ஒரு ஆசை ஏற்படவில்லையே ?'' என்று கேட்டு வைத்தான். ஏதாவது பேசித் தொலைக்க வேண்டுமே.. இல்லாவிட்டால் ம்ந்தையக் கேள்வியின் கனம் அவன் முதுகில் வழிநெடுக இறங்கிய வண்ணம் இருக்கும். மணிவாசகனின் கைவண்ணம் அப்படிப் பட்டதாயிற்றே......!

'' திருவாளர் ரோமியோ.... என்ன அசட்டுத்தனமான கேள்வி ஐயா உங்களுக்கு'ன்னு...... ! நீங்கள்ளாம் சட்டக் கல்லூரி நண்பர்களோட போறீங்க. நானும் உங்களோட படிச்சிருந்தா நீங்க கேக்கறதுக்கு முன்னாலேயே பொறப்பட்டு நிப்பேன்......!'' என்கிறாள் ராதை.

'' நீங்களே எங்களோட படிச்சிருக்கலாம், இந்த முரடனுக்குப் பதிலா !'' என்று முணு முணுக்கிறான் ரோமியோ.

' இந்த முரடனுக்குப் பதிலாக !' என்ற அவனது கருத்தை ஆதரித்தோ மறுத்தோ அவள் என்ன பேசினாலும் ஆபத்து வரும்.

அவள் சட்டப்படிப்பு படிக்கப் போயிருந்தால், மணிவாசகனுக்கு அந்த வாய்ப்பு நழுவிப் போயிருந்திருக்குமே.... !

குடும்பம் அன்றிருந்த சூழ்நிலை அப்படி......

நடுத்தரவர்க்கம் ; தொழில் பழைய பேப்பர் விற்பனை. பாண்டித்துரை தம் சக்திக்கு மிஞ்சியே ராதையையும்,மணிவாசகத்தையும் பட்டப்படிப்பு வரை படிக்க வைத்துவிட்டார். மேற்கொண்டு சட்டப்படிப்புப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை இருவர் மனத்துள்ளும் துளிர்விட்டபோது ! பாண்டித்துரை சற்றே தளர்ந்துதான் போனார்.

மணிவாசகனின் ஆவல், திறமை இரண்டையும் மதித்தவள் ராதை. அவள் சட்டக் கல்லூரிப் படிப்பிலிருந்து விலகி நின்றாள். மணிவாசகன் இதோ இன்று சட்டக் கல்லூரி மாணவன். நாளை முதல் அவன் வழக்கறிஞன்.

நினைக்க நினைக்க அவர் நெஞ்சம் இனித்தது. அவரைவிட அவள் மனமோ! அவன் உயர்விலே—அவன் திறமையிலே, பெருமையும், பெருமிதமும் கொள்ளும் வகையிலே உயர்ந்து கோபுரமாய் நின்றது.

'' பட்டமும் சட்டமும் அவனுக்குச் சொந்தம், அவனே தனக்குச் சொந்தம் ' என்ற உறவும், உரிமையும் கற்பித்த அமைதி காரணமாகத் தன் படிப்பைத் தியாகம் செய்து மணிவாசகனின் வளமான வாழ்வுக்கு வழி செய்து கொடுத்திருக்கிறாள் ராதை........

வெண்பாப் போட்டி-53.

ஈற்றடி : வாய்மை வழுவாமை மாண்பு

முடிவு நாள் : 1—3—1973.

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



சட்டக் கல்லூரி மாணவனாக உல்லாசப் பயணம் புறப்படும் நேரத்தில், மணிவாசகனுக்கு அவளுடைய தியாகம் நினைவுக்கு வந்து உறுத்தக் கூடாதே என்று பரிதவித்தாள் ராதை. இந்த அத்தான் வேதாளம் முருங்கை மரத்தைத் தேட ஆரம்பித்தால் விடிய விடியச் சமாதானம் செய்தாலும் பலனில்லாமலேயே போய்விடும்.

பயணத்திற்கு நேரமாகி விட்டதே என்று பரபரப்புக் காட்டி நிலைமையைச் சமாளிக்கிறாள் ராதை.

மணிவாசகனும் ரோமியோவும் வண்டியில் ஏறப் போகும் சமயம்.

தொலைபேசி மணி கிணுகிணுக்கின்றது.

ராதைதான் எடுக்கிறாள்.

'' ஹலோ..யெஸ்.. இப்பத்தான் புறப்பட்டுப் போறாங்க....கூப்பிடணுமா.... ஒரு நிமிஷம் இருங்க.... பார்க்கறேன்....'' என்றவள் வாசலுக்கு விரைந்து வந்து அத்தான் உங்களுக்கு போன் !'' என அழைக்கிறாள்.

'' நீயே கேளேன் ராதா.. வாசல் வரைக்கும் வந்தாச்சே....'' என அலுத்துக் கொள்கிறான் மணிவாசகன்.

ஓட்டமாக ஓடிவந்து மீண்டும் தொலைபேசியில் பேசுகிறாள் ராதை.

'' ஹலோ.... அவர் வண்டியிலே ஏறி உட்கார்ந்திட்டார். நீங்க எங்கிட்ட சொல்லலாம்னு சொல்லுங்க...... விஷயத்தை மட்டும் அவர்கிட்ட நானே ஓடிப்போய்ச் சொல்லிடறேன்....நானு......நான் அவரோட கசின்......''

தொலைபேசியின் மறு முனையிலிருந்து வரும் குரலை முகத்தில் புன்சிரிப்புடன் செவிமடுக்கிறாள் ராதை.

'' சரி.. இவ்வளவுதானே.. நானே சொல்லிடறேன்...... ஸ்டேஷனுக்குத்தான் வந்துகிட்டிருக்கார்..நன்றி....''

தொலைபேசியை வைத்துவிட்டு ஒரே மூச்சில் வாசலுக்கு ஓடி வருகிறாள் ராதை.

'' சென்ட்ரல் நிலையத்திலேர்ந்து உங்க நண்பர் பூபதி பேசினார்......நீங்க போற அதே வண்டியிலே.... அதே பெட்டியிலே மருத்துவக் கல்லூரி மாணவிகளும் உதகைக்கு வராங்களாம் ................ இந்த நல்ல சேதியை உடனே உங்ககிட்டே சொல்லச் சொன்னார். உங்களைச் சீக்கிரமாப் பொறப்பட்டு வரவும் சொன்னார். ம்....இன்னும் என்ன தாமதம்....? போய்ட்டு வாங்க சீக்கிரம் '' என்கிறாள் ராதை.

ரோமியோ ஆடிப்போய் வாடகை வண்டியில் உட்கார்ந்திருக்கிறான்.

ராதையின் முகத்தில் முன்னைப் போலவே பூரிப்பு...... முன்னைப் போலவே பொலிவு.. புன்சிரிப்பு....தன்னை மணக்கவிருக்கும் வாலிபனை எப்படி இவ்வளவு உற்சாகத்தோடு, ' கல் லூ ரி மாணவிகளோடு மகிழ்ச்சிகரமாகப் போய்வா !' என வழியனுப்ப முடிகிறது அவளால் ?

வண்டி புறப்படுகிறது.

மணிவாசகத்தின் மடிநிறையப் பணம். மனம் நிறைய உல்லாசம்.

## 2. இங்கிருந்த குழந்தை எங்கே ?

'காடு வரை பிள்ளை' என்று பிள்ளைகளின் பாசத்திற்கு இலக்கணம் வருத்துப் போனார்கள். ஆனால், காணாமல் போன பிள்ளையைத் தேடிப் பெற்றவர்களின் பாசம் காவல் நிலையம் வரை கூட வரவில்லையே என்ற அதிசயத்தில் அதிர்ச்சியடைந்து நிற்கிறார் காவலர் 505.

ஒரு வயதுக் குழந்தை ஓயாமல் அழுது கொண்டிருக்கிறது. இடம், உதகை ஊரெல்லையை அடுத்த காவல் நிலையம்: நேரமோ நள்ளிரவு. அழுகிற குழந்தையைச் சமாதானம் செய்ய முடியாமல் திண்டாடுகிறவர்கள் கடமையும் பொறுப்பும் மிக்க காவலர்கள் இருவர். இத்தனைக்கும் இருவர் வீட்டிலும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என்பதாக நிறையப்பேர் உண்டு!

பனியின் கொடுமையும், இரவின் தனிமையும் அவர்கள் உடலுக்குப் பழகிப் போயிருந்தது. ஆனால், பச்சிளம் குழந்தையின் பசியும் அழுகையும் அவர்கள் நெஞ்சுக்குப் பாரமாக இருந்தது..

காவலர் 505, முரட்டுக் குரலில் தாலாட்டுப் பாடிப் பார்க்கிறார். 606, தம்மிடமிருந்த ஊதலைக் குழந்தையிடம் கொடுத்து ஊதச் சொல்லிப் பார்க்கிறார். பனிக் கொடுமையோடு ஊதலின் 'சில்'லென்னும் குளுமையும் படவே குழந்தை இன்னும் வீல் வீலென்று அழத் தொடங்குகிறது.

''அழுவக் கூடாதுடா பயலே ..அழுதா திருடன் வந்து புடிச்சிட்டு போய்டுவான்!'' என்று மிரட்டுகிறார் 505.

''தெளிவு இருக்கா உமக்கு? காவல் நிலையத்திலே மெரட்டற பேச்சா இது..திருடன் வருவானுமில்லே?'' என்று சிடுசிடுக்கிறார் 606.

துப்பாக்கியை விளையாட்டுப் பொருளாக நினைக்கட்டும் என்று குழந்தையின் கையில் கொடுக்கிறார் 505.

''நீ துப்பாக்கியைக் காட்டினா அது பீரங்கி மாதிரி அழுகை பிடிக்கும்;வெளையாடக் கொடுக்க வேறே எதுவுமே அகப்படலையா..?'' என்று மேலும் கடுகடுத்தபடியே குழந்தையை வாங்கித் தம் தோளில் சார்த்திக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடைபோடுகிறார் 606.

505, அவர் பின்னாலேயே நடை நடந்து தமக்குத் தெரிந்த ஒரே தாலாட்டை மீண்டும் பாடத் தொடங்குகிறார்.

'' நீ பாடாதேய்யா.. உன் பாட்டைக் கேட்டா, எனக்கே அழலாம் போல வருது..பாடாதே..''

''பாடுவேன்!''

''பாடு, ஆனா பயமுறுத்தாதே!

சேச், சேச், சே, இப்படியா பொறுப்பில்லாம நடந்துக்குவாங்க பிள்ளையைப் பெத்தவங்க.. பச்சைப்புள்ளை.. ஒரு வயசு ஒண்ணரை வயசு கூட இருக்காது.. காணாமப் போச்சே'ன்னு கவலை இருக்காதா? இவ்வளவு நேரம் புகார் குடுக்க பதறிக்கிட்டு ஓடி வந்திருக்க வேணும்? என்னதான் புள்ளை வளர்க்கிறாங்களோ.. கொஞ்சங் கூடப் பாசம் பச்சாதாபம் இல்லாம..சே..!''

''இது அவசர யுகம்; பிரசவ அறையோடே பெத்த பாசம்

அறுந்து போயிடற அவசர யுகம் தம்பீ இது '' புள்ளையும் அதை நெனேச்சுத்தான் அழுது பொலம்புதோ என்னவோ..'' என அலுத்துக் கொள்கிறார் 606.

ஊதலும் தாலாட்டும் தவிர வேறு விளையாட்டுப் பொருள்கள் ஏதும் கிடைக்காத இடம்; கிடைக்க முடியாத நேரம்.

மலர்க் கண்காட்சி நடைபெறும் இடத்திற்குச் சற்றுத் தள்ளி மலைப்பாதையில் விசும்பலும் கண்ணீருமாக உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை மிகவும் பொறுப்போடு எடுத்து வந்தவர் காவலர் 505. இது வரை அதன் பெற்றோர் வராமல் இருப்பது குறித்து வேதனைப்படுகிறார். வேலை நேரத்து வேதனை மட்டுமல்ல. பாசம்—தாய்ப்பாசம் — இப்படியும் வற்றிப் பாழ்பட்டுப் போய் விடுமா என்ற பரிதாபமும் சேர்ந்ததாலேயே அவருக்கு இவ்வளவு வேதனை...

இருளை, இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு குழந்தையின் அழுகை வீறிடுகிறது. அவர்களின் சமாதானம்— செல்லக் கொஞ்சல்கள்— தாலாட்டு விளையாட்டு அனைத்திற்குமாகப் 'பெப்பே' காட்டிவிட்டு மேலும் அழுகிறது குழந்தை.....

ஏட்டய்யா வருகிறார்.

கூடவே இரைச்சலும் வருகிறது.

வந்து நிற்பவள்—**கற்பகம்.**

''அட வுடுங்கய்யா வழியை. என் அறைக்கு எனக்கு வழி தெரியும்....தள்ளி நில்லுங்க' என்றபடியே நேரே ''லாக்-அப்'' அறையினுள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொள்கிறாள் கற்பகம்.

நள்ளிரவில் கைதாகி விடியற் காலை விடுதலை பெற்றுப் போகும் வாடிக்கை நபர் அவள்!

'' ஏன்யா ........குழந்தை அழுகை ஒயலையா இன்னும். பெத்தவங்க வந்தாங்களா வரலையா இன்னும் ? ''

'' வரலே ஏட்டய்யா.. ''

'' எங்கிட்ட கொண்டாங்கய்யா இப்படி '' என்கிறார் தலைமைக் காவலர்.

'' ஆமா .... எங்களாலேயே அழுகையை நிறுத்த முடியலையாம்.... '' என்று முணுமுணுத்துக் கொள்கிறார் 606. '' ஏட்டய்யா ''வுக்குப் பிள்ளை இல்லை என்பதுபற்றிச் சிலநேரம் இரக்கம்; சிலநேரம் இளக்காரம்.

505 ரிஜிஸ்டரைப் பிரித்து வைத்துக் கொண்டு '' ரைட்டர் இன்னைக்கு லீவு.... ஏட்டய்யா அந்தப் பொம்பளைக் கேசு..? '' என்று விசாரிக்கிறார்.

'' வழக்கம் போலத்தான்! '' என்று கூறிவிட்டுப் பரிதாபமாகச் சிரிக்கிறார் ஏட்டய்யா.

'' ஏம்மா கற்பகம்........ காரணத்தை மாத்தி எழுத என்னைக்காவது ஒரு சான்ஸ் குடேன். இதையே எழுதி எழுதி எங்களுக்கே கை கூசுது....'' என்று பரிவிரக்கத்துடன் கூறுகிறார் 505.

'' எனக்கு ஒடம்போ மனசோ எதுவும் கூசலே.... அப்புறம்?... என்று எதிர் வெட்டு வெட்டுகிறாள் கற்பகம்.

வீல் வீலென்று அலறித் தீர்க்கிறது குழந்தை.

'' நீங்களும் எவ்வளவு நேரமாத்தான் போராடறீங்க.... உங்களாலே ஒரு நிமிஷம் சிரிக்க வைக்க முடியலையே? ம்.... புள்ளையைக் கொண்டாங்கய்யா இப்படி '' என்று கை நீட்டுகிறாள் கற்பகம்.

'' கொடுக்கலாமுங்களா ஏட்டய்யா? ''

'' கொடு....கொடு........ இந்தாம்மா வெளியில வந்து புள்ளையை வாங்கு.... இல்லேன்னு புள்ளையை லாக்-அப்புலே வச்சிருக்கிறதா எங்க மேலேயே கேசு வரும் ''

'' கதவைத் தொறந்து விடலாமுங்களா ?'' எனச் சந்தேகத்தோடு கேட்கிறார் 606.

அழுகிற குழந்தை அவள் கைக்கு வருகிறது.

அந்த அணைப்பில், அவள் காட்டும் அன்பில் பெண்மை இருக்கிறது........தாலாட்டுப் பாடும் அவள் குரலில் தாய்மையின் பரிவும் இருக்கிறது....

'' அட.... இவ கை பட்டவுடனே 'கப்புன்னு' அடங்கிப் போயிடுச்சே புள்ளை.... '' என அதிசயப்படுகிறார் 606.

'' பின்னே....நீ மெரட்டின உடனே அடங்கிப் போய்டுமா..? பொம்பளைக்கும், போலீசுக்கும் வித்தியாசமில்லையா ? '' என்று பூரிப்புடன் குழந்தையை அணைத்துக் கொள்கிறாள்.

அழுத குழந்தையும் அவளோடு சேர்ந்து சிரிக்கிறது.

'' ஏன்டா கண்ணு அழுதே, இவ்வளவு நேரம்? பசிக்குதாடா ராஜா....எங்கண்ணுல்லே....வாடா எங்கண்ணு'' என்று கொஞ்சுகிறாள்.....

'' பசி நேரம்னு நாம என்ன பண்ணமுடியும் கற்பகம்...... பெத்தவ வந்துதான் சமாளிக்கணும்.... '' என்கிறார் 505.

'' இதைப் பெத்தவ வந்து தான் குழந்தைப் பசியைத் தீக்கணும்....நானும் பெத்தவ தான் '' என்றவளின் கண்கள் பனிக்கின்றன. விழிகளை மறைத்த நீர்த்திரைக்கு அப்பால் வீட்டுக்குள் பசியால் துடிதுடிக்க வீறிடும் தன் குழந்தையின் நினைவு படருகின்றது....

விம்மித் தணிகிறது மார்பு.

விசும்பலை நிறுத்துகிறது குழந்தை.

அவள் மடிநிறையச் சுமந்திருக்கும் இந்தக் குழந்தையின் பசி அடங்கிவிட்டது; ஆனால், மனம் நிறையச் சுமந்திருக்கும் சொந்தக் குழந்தையின் பசி, பாலுக்காக அழும் பரிதாபம் எப்போது, எப்படி அடங்க முடியும்?

கற்பகமும் அந்தப் புதிய குழந்தையும் தாயும் மகனுமாகக் காவல் நிலையத்தில் அன்றிரவுப் பொழுதைக் கழிக்கிறார்கள்.

விடிகின்ற நேரத்தில்—

இருவரில் ஒருவர் அந்த இடத்தில் இல்லை!

'' ஏம்மா........புள்ளை எங்கே? '' என்கிறார் ஏட்டய்யா....

கற்பகம் பதறுகிறாள்.

'' அதைத்தான் நானும் கேக்கறேன்....எங்கேய்யா புள்ளை?''

காவல் நிலையத்தில் களவு போன குழந்தை எங்கே போயிருக்கும்? யார் எடுத்துப் போயிருப்பார்கள்?

(வளரும்)



# தமிழியல் ஆராய்ச்சி நிலையம்

**''தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்''**

என்றார் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார். 'தமிழோசை' என்று அவர் குறிப்பிட்டது தமிழ் மொழியின் வெறும் ஒலி வடிவை மட்டுமல்ல—தமிழ் இலக்கியம், தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் யாவற்றையும் உள்ளடக்கிய 'தமிழோசை'யையும் இணைத்தே கூறியதாகக் கொள்வதுதான் மிகப் பொருத்தமானது. இவ்வகையில் பெரிதும் அக்கறையும் ஆர்வமும்கொண்டு, ஒல்லும் வகையெல்லாம் செயல்பட்டு வருகிற நமது தமிழ்நாடு அரசின் உறுதுணையோடும், ஆதரவோடும் அண்மையில் (18-1-73) சென்னை மாநிலக் கல்லூரியில் 'உயர் தமிழியல் ஆராய்ச்சி நிலையம்' துவக்கப்பட்டது போற்றத்தக்க செய்தியாகும்.

**நோக்கங்கள்**

பொதுவாக, பழந்தமிழ் இலக்கியங்களையும், பழந்தமிழ் நாகரிகத்தையும் மறுமலர்ச்சி பெறச் செய்தல்.

தற்கால இலக்கியங்களின் வரிசையில் வெளிவந்துள்ள மறுமலர்ச்சி இலக்கியங்களை ஆய்தல்.

சமுதாய விழிப்பு, தமிழ் மொழிப் பாதுகாப்பு இயக்கம் போன்ற விட்டுப்போன துறைகளில் ஆய்வு நடத்தல்.

மொழியியலில் (Dialectologics) கிளை மொழிகளை முதன்மையாக எடுத்து, அவற்றை அறிவியல் அடிப்படையில் ஆய்தல்.

தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத பிற மொழியாளர்களுக்குக் கடிதப் போக்குவரத்து மூலமும், நேரடியாகவும் தமிழ் மொழியைக் கற்பித்தல் (இதில் வெளிநாட்டினரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்).

என்கிற பல்வேறு நோக்கங்களையும் உள்ளடக்கியே, தமிழக அரசின் பேராதரவோடு இந்த உயர் தமிழியல் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டுள்ளது.

பள்ளியிறுதி வகுப்புப்(S.S.L.C.) படித்து முடித்தவர்களுக்கு இங்கு மூன்று மாதப் படிப்புச் சான்றிதழ் வகுப்பு ஒன்றும் நடத்தப்பட இருக்கிறது. இதில் தமிழரல்லாத பிற மொழியினர்க்குத் தமிழில் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுக்கப் படும்.

அடுத்து, இளங்கலை (B.A.) முதுகலை (M.A.) படித்த தமிழரல்லாத மற்றவர்களுக்கு ஓராண்டுக் காலத்திற்கு 'டிப்ளமா கோர்ஸ்' நடத்தப்படும். இதில் அவர்களுக்குத் தமிழ் இலக்கியப் பயிற்சியும், தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதும் பயிற்சியும் அளிக்கப்படும்.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் திறனாய்வு முறைப்படி, பல்வேறு பல்கலைக் கழகத் தமிழறிஞர்களை அழைத்து ஆய்வுரைகளை நிகழ்த்தவும், அவற்றையெல்லாம் தொகுத்து எழுத்து வடிவில் தரவும் இதற்கெனத் 'தமிழியல்' என்னும் பெயரில் ஆராய்ச்சி இதழ் ஒன்று வெளியிடவும், இது காறும் வெளி வராமல் இருக்கிற சுவடிகள்—கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்துத் தகுதியுடையவைகளை வெளியிட வகை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர்களைக் கொண்ட குழுக்கள் அமைத்துக் 'குழு ஆராய்ச்சி' (Institutional Research) நடத்தவும், வகை செய்யப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தில் ஐந்து ஆராய்ச்சி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுவர்: பிஎச்.டி., எம்.லிட். முதலிய ஆய்வுப் படிப்பை இவர்கள் முடிக்கும் வரை (மூன்றாண்டுகள்) இவர்களுக்குத் தமிழக அரசு அனுமதித்துள்ள உதவித் தொகை வழங்கப்படும். இங்கு, பிஎச்.டி., ஆய்வுக்குச் சேர விரும்புவோர் 40 வயதுக்கு மிகாதவர்களாக இருத்தல் வேண்டும். **அவர்கள் தமிழ் முதுகலைத் தேர்வில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவர்களில், ஆய்வுத் துறையில் முன் அனுபவம் உடையோருக்கு முதன்மை தரப்படும்.**

ஆராய்ச்சி நிலையத்திற்கெனத் தனி நூலகம் ஒன்று, மாநிலக் கல்லூரியில் நிறுவப்பட இருக்கிறது. இந்த நூல் நிலையத்தை நிறுவத் தமிழக அரசு முதல் ஆண்டுக்கு ரூ. 5 ஆயிரம் அனுமதித்துள்ளது. தொடர்ந்து ஆண்டு தோறும் ஆயிரம் ரூபாய்க்கு, ஆராய்ச்சிக்குதவும் நூல்கள் வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திராவிட மொழியியலுக்குத் திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு நிலையமும், மொழியியலுக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு நிலையமும் ஏற்கெனவே உள்ளன. இவை இரண்டும் பல்கலைக் கழகத் துணைக் குழுவின் ஆதரவில் இயங்குபவை. ஆனால், தமிழியல் ஆராய்ச்சிக்கென இப்போதுதான் தென்னகத்தில் முதன்முதலாக ஓர் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. மேலும், அரசின் ஆதரவில் தொடங்கப்பட்டுள்ள முதல் ஆராய்ச்சி நிலையம் இதுதான். இந்த நிலையத்தைமதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தொடங்கி வைத்தார். நிலையத்தின் நோக்கத்தையும், செயல் முறைத் திட்டங்களையும் நிலைய இயக்குநர் டாக்டர் மெ. சுந்தரம் விளக்கினார். டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, இந்த ஆராய்ச்சி நிலையம் எப்படிச் செயல்பட வேண்டும்? எத்தகைய நெறி முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று விளக்கும் வகையில் 'ஆராய்ச்சி ஆற்றுப்படை'யுரை (Key Note Address) நிகழ்த்தினார்.

திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத் துணைவேந்தர், திரு பி. ஜெகநாத ரெட்டி, அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு ஆதிநாராயணு, தமிழ்ப் பேராசிரியர்கள் டாக்டர் வ. சுப. மாணிக்கனார், டாக்டர் என். சுப்பு ரெட்டியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொடக்கத்தில் மாநிலக் கல்லூரி முதல்வர் திரு ஜே. இராமச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார். மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் திரு மா. நன்னன் நன்றிகூற விழா நிறைவெய்தியது.

—**சாமிபழ.**

## GOVERNMENT OF TAMIL NADU PUBLICATIONS

The following publications are available for sale at Government Publications Depot, 166, Annasalai, Madras-2.

| *Serial number and Name of the Publications.* | *Price.* RS. | P. |
|---|---|---|
| 1 Biennial Civil Medical List of Gazetted Officers of Tamil Nadu. Corrected up to 1st January 1968. | 8 | 75 |
| 2 தாய்மையும் குழந்தை நலமும் .. | 1 | 65 |
| 3 Revised Syllabuses on Commercial Subjects Lower and Higher Grade Examinations. | 0 | 65 |
| 4 Reply to Memoranda presented to the President of India. | 3 | 00 |
| 5 இந்தியக் குடியரசுத் தலைவரிடம் அளிக்கப் பட்ட மகஜர்களுக்கு பதில். | 3 | 00 |
| 6 State Rules to Regulate the grant of Advances to Government Servants for Buildings, etc., Houses. | 0 | 40 |
| 7 அண்ணா மலர்—பிப்ரவரி 69. .. | 1 | 00 |
| 8 ANNA MALAR February 1969 (English) | 1 | 00 |
| 9 கிராமங்களின் அகரவரிசைப் பட்டி .. | 11 | 10 |
| 10 Portrait of Present Chief Minister .. | 1 | 00 |
| 11 List of Recognised High and other Special Schools. Corrected up to 31st March 1970. | 5 | 30 |
| 12 Law Lexicon A to Z .. .. .. | 9 | 00 |
| 13 Quarterly List of Gazetted Officers corrected up to 1st April 1970. | 2 | 00 |
| 14 Tamil Nadu An Economic Appraisal Part I and II, 1972. | 15 | 00 |
| 15 Tamil Nadu Co-operative Manual .. | 17 | 50 |
| 16 Tamil Nadu Loans (Takkavi) Manual .. | 9 | 10 |
| 17 Tamil Nadu Market Committee's Accounts Manual —Volume I. | 25 | 90 |
| 18 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம், 1952. | 2 | 90 |
| 19 Hand Book of Economic Entomology for South India. | 13 | 75 |
| 20 Classified Catalogue of Tamil Printed Books with Introductory Notices—Complied by John Murdoch. | 11 | 50 |
| 21 Silver Jubilee Commemoratoin Seminar Papers—Tamil Nadu Statistics. | 9 | 70 |
| 22 A Handbook of Some South Indian Weeds. | 7 | 00 |
| 23 Noi Illa Neri—Siddha Text Boox Series (Tamil). | 6 | 62 |
| 24 Glossary of Administrative Terms (English —Tamil). | 5 | 10 |
| 25 Season and Crop Report of Tamil Nadu (1968–69). | 3 | 35 |
| 26 Statistical Hand Book of Tamil Nadu, 1970. | 2 | 00 |
| 27 Hygiene and Preventive Medicine—Tamil | 0 | 87 |
| 28 Midwifery for Village Vaidya—Tamil .. | 0 | 87 |
| 29 Centre—State Relations Inquiry Committee by P. V. Rajamannar—English. | 5 | 00 |
| 30 மைய மாநில உறவு ஆய்வுக்குழு அறிக்கை —தமிழ். | 5 | 00 |
| 31 Teachers Service Register for Aided Secondary Schools. | 1 | 90 |
| 32 Grant-in-Aid Code .. .. .. | 1 | 45 |
| 33 Irrigation Manual—by Ellis .. .. | 5 | 60 |

### REDUCED PRICE PUBLICATIONS

| | RS. | P. |
|---|---|---|
| 1 A Monograph on Madras Bananas .. | 2 | 46 |
| 2 A Monograph on South Indian Mangoes. | 1 | 96 |
| 3 Techno-Economic Survey of Madras .. | 2 | 50 |
| 4 Food and Agricultural in Madras State.. | 0 | 50 |
| 5 Practical Botany .. .. .. .. | 0 | 50 |

Bonafide Booksellers of standing may apply for Agency for selling Government Books in Municipal Towns. 25 per cent Discount is allowed for agents. Packing and Postage extra.

*Director of Stationery and Printing, Madras.*



# அகதிகள் மறுவாழ்வுக்கு ஆற்றும் பணிகள்!

உழைத்துப் பிழைப்பவர் இந்தியர்! அவர்களில் குறிப்பாகத் தமிழர்கள் பிறர் உடல் உழைப்பில், பிறர் பொருளில் உண்டு வாழ விரும்பாதவர்கள் என்பது உலகறிந்த உண்மை! உழைக்காமல் உண்டு வாழ்வதை இழுக்காக நினைப்பவர் தமிழர்! 'உழைத்துப் பிழைப்பதே உயர்வுக்கு வழி!' என்பதைப் பழந்தமிழ் நூல்கள் அவர்களுக்குப் பறை சாற்றிக் கொண்டிருந்தன! அதையொட்டியே "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு!" என்ற பழமொழி ஏற்பட்டது!

ஆனால் அந்தோ! அந்த நிலை மாறியது! அடுக்கடுக்காக அந்நியர் ஆட்சி என்னும் தொல்லைகளால் அல்லல்பட்ட தமிழர்கள், ஆங்கிலேயர் ஆட்சியில் பிழைக்க வழி தேடிக் கள்ளத் தோணி ஏறியும், கட்டு மரம் கட்டிக் கொண்டும் கடல் கடந்து கடாரத்திற்கும், இலங்கைக்கும் சென்றனர். அங்கே, தங்கள் நெற்றி வியர்வையை நிலத்திலே பாய்ச்சி, எலும்பை வளைத்துக் குருதியைக் கொட்டிக் காட்டைத் திருத்திப் பொன் விளையும் பூமியாக்கித் தாமும் பிழைத்ததுடன், தமக்குப் புகலிடம் அளித்த நாட்டையும் செழிப்பாக்கி வளம் கொழிக்கச் செய்தனர். உழைப்பிற்குக் கொண்டு கிடைத்த கூலியைக் ஓரளவுக்கு தங்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டு வாழ்ந்ததுடன், கூலியில் ஒரு பகுதியை மீதப்படுத்தி, அதில் ஒரு பகுதியைத் தம்மை நம்பித் தமிழகத்திலே காத்திருக்கும் தமது குடும்பத்தினருக்கும் அனுப்பி வைத்தார்கள். நாளடைவில் புகுந்த இடம்—பிழைக்க இடம் தந்த நாடு—என்பதை மறந்து, தாம் பிறந்த நாடாகவே கடாரத்தையும், இலங்கையையும் கருதித் தங்கள் குடும்பத்தையும் அழைத்துச் சென்று, அவர்களையும் உழைக்கச் செய்து அந்த நாடுகளின் வளர்ச்சிக்கு உதவினார்கள் அவர்கள் குடும்பமும் செழித்தது! அந்த நாடுகளும் செழித்தன!

பர்மா நாட்டுப் பொருளாதார அமைப்புகளின் பல்வேறு பிரிவுகள் நாட்டுடைமையாக்கப்பட்டதனாலும், இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவும், பர்மாவிலும் இலங்கையிலும் நெடுங்காலமாக வாழ்ந்து வந்த இலட்சக் கணக்கான இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்குத் திரும்ப வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளானார்கள்.

தன் நிதி நிலைக்கு ஏற்பத் தன்னால் முடிந்த அளவில் உடனுக்குடன் அகதிகள் மறுவாழ்விற்கான பணிகளைச் செய்து, அகதிகளின் தாயாக விளங்கி வருகிறது, தமிழ்நாடு அரசு! அகதிகள் மறு வாழ்விற்காக ஆற்றிடும் பணிகளில் ஒரு சிலவற்றை ஈண்டு விளக்கியுள்ளோம்!

பர்மாவிலிருந்து மட்டும் முன்பே 1,20,612 பேர்கள் அகதிகளாகத் திரும்பியுள்ளார்கள். இன்னும் பலர் அங்கிருந்து அகதிகளாகத் திரும்பியுள்ளார்கள்! இன்னும் பலர் அங்கிருந்து அகதிகளாகத் திரும்பி வரவிருக்கிறார்கள்! ஆக மொத்தம் பர்மாவிலிருந்து மட்டும் ஏறத்தாழ 2,00,000 அகதிகள் இந்தியா திரும்புவார்கள் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து 15 ஆண்டுகளில் ஏறத்தாழ 5,25,000 இந்திய மக்கள், இந்தியாவிற்கு அகதிகளாகத் திரும்புவார்கள். இவர்களில் ஏறத்தாழ 2 இலட்சம் பேர்கள், 1971-ஆம் ஆண்டு முதல் 2 ஆண்டுக் காலத்திற்குள்

கும்முடிப்பூண்டியில் தமிழக அரசின் உதவியுடன் பர்மா அகதிகள் நடத்தும் ஐஸ் (பனிக்கட்டி) தயாரிப்பு நிலையம்



இந்தியாவிற்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வரை இலங்கையிலிருந்து 65,859 அகதிகள் திரும்பியுள்ளனர்.

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வரும் அகதிகளின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க 'வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம் (Employment Liaison Office) சென்னையில் அமைக்கப்பட்டது. இந்த,வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம்' தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும், உதவி இயக்குநர் ஒருவரின் பொறுப்பின் கீழும் 22—8—1966 முதல் செயலாற்றி வருகிறது. இவ்வலுவலகத்தின் முக்கியப் பணி தமிழ்நாட்டிற்குத் திரும்பி வரும் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்து மறுவாழ்வு அளிக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதேயாகும். மாநிலத்தில் உள்ள முக்கிய வேலை கொடுக்கும் நிறுவனத்தினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு,வேலை பார்க்க ஆளின்றி, காலியாக உள்ள பொறுப்புக்களுக்கு அகதிகளை அமர்த்துமாறு வேண்டுவதுடன், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்தி ஒருங்கிணைத்து, விரைவாகத் தகுந்த வேலைகளில் அகதிகளை அமர்த்துவதும் 'வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம்' ஆற்றும் பணிகளாகும்.

பர்மா அகதிகளில் 18,490 பேர்களும், இலங்கை அகதிகளில் 5,604 பேர்களும் வேலை வேண்டி, வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் உதவியை நாடினர். அவர்களில்—1966-ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 1972-வரையான காலத்தில்—1,823 பர்மா அகதிகளும்,496 இலங்கை அகதிகளும் வேலை வாய்ப்புப் பெற்றனர். வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு ஏடுகளில் கண்டுள்ளபடி 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இறுதியில், 1,826 பர்மா அகதிகளும், 3,192 இலங்கை அகதிகளும் வேலை பெறுமல் இருந்துள்ளனர். மைய, மாநில அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளை வரவேற்றுத் தற்காலிக உதவிகளைச் செய்வதற்காக, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கக்கூடிய 2 உதவி வேலைவாய்ப்பு அலுவலகங்களை (Sub Employment Office) மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது. மண்டபத்தில் உள்ள உதவி வேலை வாய்ப்பு அலுவலகம், இராமேச்வரம் துறைமுகத்தில் வந்திறங்கும் இலங்கை அகதிகளை வரவேற்பதற்காக 5—1—1971 முதல் செயலாற்றி வருகிறது. இதுவரை 1,607 அகதிகள் இவ்வலுவலகத்தின் உதவியை நாடியுள்ளனர்.

அகதிகளுக்கு வெகு விரைவில் மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக, பல்வேறு துறைகளில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதிகளைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சி பெறுபவரின் இடங்களில் 5 சத அளவை அகதிகளுக்காகத் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது. பயிற்சிக் காலத்தில், விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் அகதிகளுக்குத் திங்களுக்கு ரூபாய் 55 வீதமும், விடுதியில் தங்காமல் பெற்றோருடன் தங்கியிருந்து கொண்டு பயிற்சி பெறும் அகதிகளுக்குத் திங்கள் தோறும் ரூபாய் 15 வீதமும் உதவித் தொகை ( Stipend ) வழங்கப்படுகிறது. 1966 முதல் 1972 வரையான ஆண்டுகளில் இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து வந்த 308 அகதிகள் தமிழ்நாட்டில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

இலங்கை, பர்மா அகதிகளுக்கும், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கும் ( Migrants ), பல்வேறு தொழிலில் பயிற்சி அளிப்பதற்கெனத் தனியே ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தை, மத்திய மாநிலத்தில் உள்ள 'மானு' என்ற இடத்தில் இந்திய அரசு நடத்தி வருகிறது. இதன் மூலம் அகதிகள் வேலை பெறுவதற்கான வாய்ப்புகள் பெருகுவதுடன், அவர்களே சொந்தமாகவே தொழில் நிலையங்களை (Self Employment) ஏற்படுத்திக் கொள்ளவும் வழி பிறக்கின்றது. இப்பயிற்சி நிலையத்திற்குத் தமிழ்நாட்டிலிருந்து அகதிகள் 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்நிலையத்தில், இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 359 அகதிகள்

கும்முடிப்பூண்டி அருகில் உள்ள முண்டியம்மன் நகர் தையல் பயிற்சிக் கூடத்தில் அகதிப் பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள்







பயிற்சி பெற்றுள்ளனர். தற்பொழுது 180 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மண்ணை நகர்த்தும் பெரும் இயந்திரங்களை ( Heavy Earth Moving Equipments ) இயக்குவதில் அகதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மைய நீர், விசை ஆய்வுக்குழு (Central Water and Power Commission ) இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 'கோட்டா' ( Kota ) என்ற இடத்திலும், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 'நங்கல்' என்ற இடத்திலும் தொழிற் பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறது. இதுவரை 'நங்கல்' பயிற்சி நிலையத்தில் 12 அகதிகளும், 'கோட்டா' பயிற்சி நிலையத்தில் 17.அகதிகளும் ஓராண்டுப் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பு, அந்த அகதிகளுக்கு நெய்வேலி நிலக்கரித் தொழிற்சாலையில் மூன்று மாத 'முன் பயிற்சி' அளிக்கப்பட்டது. தற்பொழுது 'கோட்டா' தொழிற் பயிற்சிக் கூடத்தில் 10 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தமிழக அரசின் உதவியுடன் பர்மா அகதிகள் பாடியநல்லூரில் நடத்தும் நேதாஜி மர அறுவைத் தொழிற்கூடம்



மத்திய மாநிலத்தில் உள்ள புத்னி ( Budni ) என்ற இடத்திலும், 'கிசார்' என்ற இடத்திலும் உள்ள டிராக்டர் பயிற்சி மற்றும் சோதனைக் கூடங்களில் ( Tractor Training and Tosting Station ) பண்ணை இயந்திரங்களைப் பயன்படுத்துதல், டிராக்டர் பழுது பார்த்தல் ஆகிய பயிற்சி 3 திங்கள் காலத்திற்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு பயிற்சிக் காலத்திலும் 5 இடங்கள் தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கென ஒதுக்கப்படுகின்றன. இவ்விரு பயிற்சி நிலையங்களிலும் 1970–71-ஆம் ஆண்டில் 10 அகதிகள் பயிற்சி பெற்றுள்ளனர். தற்சமயம் 4 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.



அகதிப் பயிற்சியாளர்கள் திருச்செந்தூர்கூட்டுறவு நூற்பாலையில் வேலை செய்கின்றனர்

கஸ்தினூபூர் என்ற இடத்தில் உள்ள 'மதன் தொழிற்சாலை நூற்பு ஆலை', இலங்கை, பர்மா அகதிகளுக்குப் பல்வேறு வேலை வாய்ப்புகளை அளிக்க முன் வந்துள்ளது. இதுவரை தமிழ்நாட்டிலிருந்து 166 அகதிகள் மதன் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கறிம் நகர் ( நாசரேத்), திருவில்லிபுத்தூர், நெல்லூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகளும்—நூற்பதிலும் நெய்வதிலும் அனுபவம் உள்ள அகதிகளுக்கு—வேலை வாய்ப்புஅளிக்க முன்வந்துள்ளன. 1970-ஆம் ஆண்டில் 60 அகதிகள் 'ராம கூடம்' என்ற இடத்தில் உள்ள 'அன்தர்கோன்' நூற்பு ஆலைகளுக்கு — தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளில் 3 திங்கள் முன் பயிற்சி அளித்த பிறகு—அனுப்பப்பட்டனர்.

'நாசரேத்' என்னும் இடத்தில் உள்ள திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும் இந்திய அரசுக்கும் அண்மையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 50 அகதிகளைத் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் வேலைக்கு அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த நூற்பாலைக்கு அகதிகளை அனுப்ப ஆவன செய்யப்பட்டு வருகிறது. அண்மையில் கொதிகலன்களைப் பார்வையிடும் பயிற்சி, சமையற்கலை தொழில் நுட்பக் கல்லூரியில் சமையற் கலைப் பயிற்சி, உணவுப்பொருள்களைப் பதப்படுத்திப் பாதுகாத்து வைத்திருத்தல் பற்றிய பயிற்சி, சென்னை 18-ல் உள்ள சிமெண்ட் பணிக் கழகத்தில் 'கான்கிரீட்' தொழில் நுட்பம் பற்றிய குறுகிய காலப் பயிற்சி போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 50 அகதிகளுக்குப் பயிற்சி அளிக்க இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் அனுமதி அளித்துள்ளன.

இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து அகதிகளாகத்திரும்பி வந்துள்ளவர்களுக்கு இத்தகைய பயிற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் நோக்கம், தொழில் திறமை தேவையற்ற வேலைகளுக்கு ( Unskilled Jobs ) மட்டுமே தகுதியுள்ள அகதிகளைத் தொழில் நுட்பப் பயிற்சிபெற்ற தொழிற் கலைஞர்களாக (Craftsmen ) மாற்றி அமைப்பதேயாகும்.

அகதிகள் மறுவாழ்வுப் பிரச்சினை 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆக' வளர்ந்து வருகிறது! மறுவாழ்வு அளிப்பதை விரைவாகவும், செம்மையாகவும் செய்ய வேண்டியுள்ளது. எனவே, நமது உடன் பிறப்புகளான அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் ஆர்வம் கொண்டோர் அனைவரும், மனிதாபிமானத்தோடு அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

# எண்ணிலடங்கா வண்ண வண்ணப் பாம்புகள்

கொடிய நஞ்சுடைய பாம்புகளைப் பலர் பார்த்திருக்கலாம் அல்லது அவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் எவ்வகையிலும், எவருக்கும் தீங்கிழைக்காத வண்ணப் பாம்புகளைப் பலர் பார்த்திருக்க முடியாது அல்லது அவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க முடியாது. பொதுவாக, பாம்புகள் யாரும் நடமாட்டமில்லாத இடங்களில் உள்ள கற்கள் அல்லது மரக் கட்டைகளின் கீழே மறைந்து வாழ்கின்றன என்று நம்பப் படுகிறது.

ஒரு பெரிய கல்லை நகர்த்தினாலோ அல்லது புரட்டினாலோ உயிருக்குத் தீங்கிழைக்க வல்ல நாகப்பாம்பு படம் எடுத்துக்கொண்டு எழும் அல்லது விரியன் பாம்பு ''உஷ்'' என்று சீறி எழும் என்பதைப்பலர் அறிய மாட்டார்கள். நம்மில் சிலருக்கு மட்டுமே, தமிழ்நாடு, கேரளா, மைசூர் ஆகிய மாநில மலைகளில் உள்ள கற்களின் கீழும், மரங்களடர்ந்த காடுகளிலும் யாருக்கும் தீங்கிழைக்காத வண்ணப் பாம்புகள் வாழ்கின்றன என்பது தெரியும்.

இவ்வண்ணப் பாம்புகள் சொரசொரப்பான வால் உடையவை ( Rough Tails ) என்று கூறப்படுகிறது. ஏனெனில், இவைகளின் வால் முள்போன்ற கவசத்துடன் முடிவடைந்து தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. புழுப் போன்ற இப் பாம்புகள் எப்பொழுதும் சிறியவையாகவே காணப்படுகின்றன. இப்பாம்புகள் வெளிச்சத்திற்கு வருவதற்கு விரும்பாமல், முனை கூராகவும் அடி பருமனாகவும் உள்ள மூக்கினால் மண்ணில் வளை தோண்டிக்கொண்டு மறைந்து வாழ்கின்றன. இவ்வகைப் பாம்புகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரங்களில் எண்ணற்று வாழ்கின்றன.

இவ்வகைப் பாம்புகளைக் காண விரும்பினால், மலை அடிவாரத்தில் ஈரக் கசிவாய் உள்ள பகுதியில் உள்ள ஒரு கல்லைப் புரட்டினால் போதும் அங்கே அமைதியாகவும், தீங்கிழைக்க முயலாமலும் உள்ள வண்ணப் பாம்புகளைப் காணலாம் ! தொட்டுத் தூக்கினாலும் அல்லது அவைகளைத் துன்புறுத்தினாலும் கூட, அப்பாம்புகள் கடிக்க முயல்வதில்லை ! அவைகளைக் கையினால் எடுத்தால், நம்முடைய விரல்களைச் சுற்றிக் கொள்கின்றன ! அதே நிலையில், நெடுந்தூரத்திற்கு எடுத்துச் செல்வதை அப் பாம்புகள் விரும்புகின்றன !

வளை தோண்டி வாழும் இவ்வகைப் பாம்புகள் மிகவும் பளப்பளப்பான வண்ணங்களில் உள்ளன. இவ்வண்ண அமைப்பு, மறைந்து வாழும் அப்பாம்புகளில் வாழ்க்கைக்குத் தேவையில்லாத ஓர் அமைப்பாகும். அவைகள் பொதுவாகச் சிவப்பு, ஆரஞ்சு அல்லது மஞ்சள் நிறங்களில் காணப்படுகின்றன ; சில கருப்பான வடிவங்களினால், வானவில் போன்ற வண்ணங்காட்டுகின்றன.

அவ்வண்ணப் பாம்புகள் பூச்சிகள், புழுக்கள், 'லார்வா' எனப்படும் புழுக்கள் ஆகியவைகளை உண்டு வாழ்கின்றன. அப்பாம்புகள் ஒரே நேரத்தில் 3 முதல் 8 வரையான குட்டிகளை உற்பத்தி செய்கின்றன.

கடல் மட்டத்தை விட மிகவும் உயரமான இடங்களில் மரக் கட்டை அல்லது கற்களின் கீழே மறைந்து வாழ்வதால் இவ்வகைப் பாம்புகள் அரும் பிறவிகளாகக் கருதப்படுகின்றன. பெரும் மழையின் போது இப்பாம்புகள் மலைத் தோட்டங்களுக்கு வந்துவிடுகின்றன; மலைச் சாலைகளிலும் காணப்படுகின்றன.



இத்தகைய வண்ணப் பாம்புகள் தென் இந்தியாவிலும், இலங்கையிலும் மட்டுமே காணப்படுவதால், இவைகளை நமது விலைமதிப்புள்ள செல்வமாகக் கருதலாம் ! விரைவில் இவை வெளி நாட்டினரின் கவனத்தைக் கவர்ந்து, அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தரக் கூடும் !

தகவல் : 4. எஸ். என். மூர்த்தி
கட்டுரையாக்கம் : ஆர். எம்.





# பெரும் மகசூலுக்கு இறைவைச் சோளம்!

வறட்சியினாலும், வெள்ளத்தினாலும் இந்த ஆண்டில் தமிழ் நாட்டின் உணவு தானிய உற்பத்தி குறைந்துவிடுமாதலின், அக்குறைவை ஈடுகட்ட, தமிழ் நாட்டில் 'கடும் விரைவுப் பின் பருவத்திட்டம்' ( Emergency Rabi Programme ) செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ், தை, மாசி திங்கள்களில் 2,14,250 ஏக்கரில் இறைவைச் சோளம் பயிரிடத் தமிழ்நாடு வேளாண்மைத்துறை விரைந்து பணியாற்றி வருகிறது.

கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய 6 மாவட்டங்களிலும் கீழ்க் கண்டுள்ளவாறு இறைவைச் சோளம் பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம்

| | ஏக்கர். |
|---|---|
| கோ. 18 சோளம் | 67,300 |
| சி. எஸ். எச். 1 சோளம். | 200 |
| மொத்தம் | 67,500 |

சேலம் மாவட்டம்

| | |
|---|---|
| கோ. 18. சோளம் | 20,380 |
| சி. எஸ். எச். 1 சோளம். | 870 |
| மொத்தம் | 21,250 |

தருமபுரி மாவட்டம்

| | |
|---|---|
| கோ. 18 சோளம் | 3,550 |
| சி. எஸ். எச். 3 சோளம். | 450 |
| மொத்தம் | 4,000 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| | ஏக்கர். |
|---|---|
| கோ. 18. சோளம் | 16,500 |
| கோ. 4. சோளம் | 10,500 |
| 'சொர்ணு' சோளம் | 5,500 |
| மொத்தம் | 32,500 |

மதுரை மாவட்டம்

| | |
|---|---|
| கே. 4. சோளம் | 17,500 |
| கோ. 12. சோளம் | 17,500 |
| சி. எஸ். எச். 1 சோளம் | 6,874 |
| சி. எஸ்.எச். 3 சோளம் | 2,500 |
| 'சொர்ணு' சோளம் | 5,626 |
| மொத்தம் | 50,000 |

திருநெல்வேலி மாவட்டம்

| | |
|---|---|
| கே. 4. சோளம் | 33,825 |
| சி. எஸ்.எச். 1 சோளம் | 4,450 |
| சி. எஸ்.எச். 3. சோளம் | 725 |
| மொத்தம் | 39,000 |

ரகங்களின் வாரியாகப் பார்க்கப் போனால், மேற்கூறிய 6 மாவட்டங்களிலும் பின் கண்டவாறு பயிர்செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

| ரகம். | ஏக்கர். |
|---|---|
| கோ. 18 சோளம் | 1,07,730 |
| கே. 4. சோளம் | 51,325 |
| கோ. 12. சோளம் | 17,500 |
| சி.எஸ்.எச். 1 சோளம் | 11,324 |
| சொர்ணு சோளம் | 11,126 |
| கோ. 4. சோளம் | 10,500 |
| சி.எஸ். எச். 3. சோளம் | 4,745 |
| மொத்தம் | 2,14,250 |

மேற்கண்டுள்ள பரப்பளவில் சோள ரகங்களை இறைவையாகப் பயிரிடவிருக்கும் உழவர் பெருமக்களுக்குத் தேவையான விதைகளையும், இரசாயன உரங்களையும், பூச்சிப் பூஞ்சாள மருந்துகளையும், கடன் உதவிகளையும் வழங்க வேளாண்மைத் துறை, கூட்டுறவுத்துறை, மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் ஆவன செய்து வருகின்றன.

அரசு அளிக்கும் உதவிகளைப் பயன்படுத்தி, உழவர் பெருமக்கள் பெரும் மகசூல் பெற்று அதிக இலாபம் அடைந்து வளமாகவாழவேண்டுமென்பதற்காக, உழவர் பெருமக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட தமிழரசு இதழ் கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளை வழங்கியுள்ளது.

### சாகுபடிக் குறிப்புகள்

பருவம்:—இறைவைச் சோளம் பயிரிடத் தை முதல் வைகாசித் திங்கள் வரையான (சனவரி முதல் மே வரை) பருவம் மிகவும் ஏற்றது.

ரகங்கள் : — இறைவையாகப் பயிரிட சி.எஸ்.எச். 3, சொர்ணு, கோ. 18, கோ. 12, கோ. 4, கே. 4 ஆகிய ரகங்கள் ஏற்றவை. ஆனால், அவைகளின் வயதும், மகசூல் அளிக்கும் திறனும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டுள்ளன. எனவே, வயதிற்கேற்பவும், மகசூல் அளிக்கும் திறனுக்கு ஏற்பவும், மேலே மாவட்ட வாரியாகப்

# ஓடுகிற ஆறு எப்போதும் ஓடிக்கொண்டே இருக்குமா?



ஓடும் நதியின் திசை திரும்பலாம். வெள்ளப் பெருக்கால் கரை உடையலாம். தண்ணீரே வற்றிப் போனாலும் போகலாம். வாழ்க்கையும் அப்படித்தான். ஆற்றில் அணைகள் கட்டுவதைப் போல, வாழ்வில் ஏற்படக்கூடிய திருப்பங்களைச் சமாளிக்க, உங்கள் குடும்பத்திற்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க ஒரு முழு ஆயுள் என்டோமென்ட் பாலிசி (Whole Life Endowment Policy) எடுங்கள். மிகச்சிறிய பிரீமியங்கள் கட்டி மிகப்பெரிய காப்புத் தொகையை அடைவதற்கு இப்பாலிசிதான் சிறந்தது. மூன்றுவித முழு ஆயுள் அஷ்யூரன்ஸ் பாலிசிகள் உள்ளன. விவரங்கள் அறிய அருகிலுள்ள ஆயுள் இன்சூரன்சு அலுவலகம் அல்லது ஆயுள் இன்சூரன்சு முகவரிடம் விசாரியுங்கள்.

**ஆயுள் இன்சூரன்சு போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை**




பரிந்துரைக்கப் பட்டுள்ளதற்கு ஏற்பவும் உங்களுக்கு ஏற்ற ரகத்தைக் கீழ்க்கண்டவைகளி லிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

### வயது

| ரகம். | நாட்கள். |
|---|---|
| சி.எஸ்.எச். 1 | 90 |
| சி.எஸ்.எச். 3 | 105 முதல் 115. |
| சொர்ணு | 90 முதல் 95. |
| கோ. 18 (ரசகேசரி) | 95 முதல் 100. |
| கோ. 12 (மொட்டை வெள்ளை). | 85 முதல் 90. |
| கோ. 4 (செஞ்சோளம்). | 85 முதல் 90. |
| கே. 4 (ரச வெள்ளை). | 85 |

### மகசூல் அளிக்கும் திறன்

| ரகம். | 1 ஏக்கரில் விளையும் தானியம் (கிலோ). |
|---|---|
| சி.எஸ்.எச். 1 | 2,500 |
| சி.எஸ்.எச். 3 | 2,500 |
| சொர்ணு | 2,500 |
| கோ. 18 | 1,500 |
| கோ. 12 | 1,300 |
| கோ. 4 | 1,000 |
| கே. 4 | 2,000 |

### விதை அளவு

ஒவ்வொரு ஏக்கரிலும் கீழே பரிந்துரைக்கப்பட்ட அளவில் விதைகளை விதைக்க வேண்டும்.

| | கிலோ. |
|---|---|
| சி.எஸ்.எச். 1 | 4 |
| சி.எஸ்.எச். 3 | 6 |
| சொர்ணு | 6 |
| கோ. 18 | 7 |
| கோ. 12 | 7 |
| கோ. 4 | 7 |
| கே. 4 | 4 |

வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் விதைகளை வாங்கிப் பயன்படுத்துவதே பெரும் மகசூலுக்கு வழிகோலும். குறிப்பாக சி.எஸ்.எச்.1, சி.எஸ்.எச். 3 ஆகியவைகளைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு முறையும் சான்றிதழ் பெற்ற புது விதைகளையே விதைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். மற்ற ரகச் சோள விதைகள் உங்களிடம் இருப்பின் அவைகளை மருந்துகளுடன் கலந்த பிறகு விதைப்பதே சிறந்தது.

விதைகளை மருந்துடன் கலக்குதல்:—'அக்ரசான்', 'டீ.எம்.டி.டி', 'கேப்டான்' போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் விதம் விதையுடன் கலக்க வேண்டும். மருந்து கலப்பதற்கு, விதை கலக்கும் கருவியை உபயோகிப்பது சிறந்தது.

நிலம் தயாரித்தல்:— இரும்புக் கலப்பையால் நிலத்தை 4 தடவை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 15 முதல் 20 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு போட்டு மேலும் ஒரு தடவை உழுதுவிட வேண்டும். பிறகு நிலத்தில் சி.எஸ். எச். 1., சி.எஸ். எச். 3, கே. 4 ரகங்களுக்கு $1\frac{1}{2}$ அடி இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். மற்ற ரகங்களுக்கு 1 அடி இடைவெளியில் பார்கள் அமைப்பது போதுமானது.

அடி உரம் இடுதல்:—சி.எஸ். எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு, கே. 4 ஆகிய ரகங்களுக்கு அடியுரமாக ஏக்கருக்குப் பின் கண்டுள்ள அளவு சத்துக்களை அளிக்க வேண்டும்.

| | கிலோ. |
|---|---|
| தழைச்சத்து | 18 |
| மணிச் சத்து | 18 |
| சாம்பல் சத்து | 18 |

இந்த அளவு சத்துக் கிடைக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 112 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். அல்லது ஏக்கருக்கு 125 கிலோ 14 : 14 : 14 காம்ப்ளெக்ஸ் அல்லது 120 கிலோ 15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் அல்லது 110 கிலோ 17 : 17:17 காம்ப்ளெக்ஸ் அல்லது 200 கிலோ 9 : 9 : 9 கலப்பு உரத்தை அடியுரமாக இடவேண்டும். அல்லது 38 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் உரத்தையும், 25 கிலோ யூரியாவையும், 30 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக இடவேண்டும்.

கோ. 18, கோ. 12, கோ. 4 ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்து கிடைக்க ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். அல்லது 10 : 10 : 0 கலப்பு உரத்தில் 140 கிலோவை அடியுரமாகப் போட வேண்டும்.

மேற்கூறிய உரங்களைப் பார்களின் ஒரு பக்கச் சரிவின் கீழ்ப் பாகத்தில் வரிசையாகப் போட்டு இலேசாக மண்ணால் மூடவேண்டும்.

விதைத்தல்:—சி.எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களை விதைப்பதற்கு முன்னால் பார் வரிசைகளுக்கு இடையே 1 மீட்டர் நீளத்திற்கு 1.5 கிராம் 'திமெட்' 10 சதம் அல்லது போரேட் 10 சத குருணைகளைத் தூவ வேண்டும். இவ்வாறு தூவ ஏக்கருக்கு 15 கிலோ தேவைப்படும். மற்ற ரகங்களுக்கு இவ்வாறு தூவுதல் அவசியமல்ல.

பிறகு பார்களின் சரிவில் உரமிட்ட வரிசைக்கு 3 அங்குலத்திற்கு மேல், 6 அங்குல இடை



வெளியில் இரண்டிரண்டு விதைகளாக 1 அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். விதைத்த உடன் பார்களின் இடையே தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்த 3-ஆம் நாள்:—முளை நீர் பாய்ச்சவும் பிறகு மண்ணின் தன்மைக் கேற்ப 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்த 7-ஆம் நாள்:—சி. எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களில் தண்டு ஈ தாக்குவதைத் தடுக்க ஏக்கருக்கு 150 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தையும், 100 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' மருந்தையும், 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்கவும். மற்ற ரகங்களுக்கு இது தேவை இல்லை.

விதைத்த 15-ஆம் நாள்:— எல்லா ரகங்களுக்கும் மேற்கூறியவாறு தெளிப்பது நல்லது.

விதைத்த 21-ஆம் நாள்.—களை எடுக்கவும். வரிசையில் 6 அங்குலத்திற்கு 1 பயிர் வீதம் விட்டுவிட்டு, மற்றப் பயிர்களை நீக்கிவிட வேண்டும். வீரியமாக வளர்ந்துள்ள பயிர்களை மட்டும் விட்டுவிட்டு, மற்றவைகளை அகற்றுதல் சிறந்தது.

சி.எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களில் குறுத்துப் பூச்சிகளின் தாக்குதலைத் தடுக்க ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 'என்ட்ரின்' 2 சதக் குறுணைகளைச் சோளப் பயிரின் குறுத்துகளில் போடவேண்டும்.

விதைத்த 30-ஆம் நாள்:—சி. எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு, கே. 4 ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து அளிக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா உரத்தை மேல் உரமாக இட வேண்டும்.

மற்ற ரகங்களுக்கு மேலுரமாக ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவைப் போட வேண்டும்.

மேல் உரம் இட பயிர் வரிசைகளுக்கு நடுவில், இரசாயன உரங்களைப் போட்டு மண்ணைக் கிளறி விட வேண்டும். மேல் உரமிட்ட உடன் தண்ணீர் பாய்ச்சவும்.

விதைத்த 36-ஆம் நாள்:—சி. எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களுக்கு மட்டும் 'என்ட்ரின்' 2 சதக் குருணைகளை ஏக்கருக்கு 4 கிலோ வீதம் பயிரின் குறுத்துக்களில் இட வேண்டும். இதனுல் குறுத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

விதைத்த 45-ஆம் நாள்:— எல்லா ரகங்களுக்கும் ஏக்கருக்கு ஒரு கிலோ நனையும் கந்தகத்தை 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால், உண்ணிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும்.

விதைத்த 55 முதல் 60 நாட்கள்:—இப்பருவத்தில் பூக்கள் தோன்றும். பூக்கள் தோன்றியவுடன் 'கால்மிட்ஜ்' தாக்குதலைத் தடுக்க, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் கார்பரில் 10 சதத் தூளைத் தூவி விட வேண்டும். இவ்வாறு மருந்து தூவுவதால் கதிர்ப் புழுக்களும், வண்டுகளும் கட்டுப்படுத்தப்படும்.

விதைத்த 65 முதல் 70 நாட்கள்:—இப்பருவத்தில் கதிரில் பால் பிடித்து, மணிகள் உருவாகும். இச்சமயத்தில் கதிர் நாவாய்ப் பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 கிலோ டி.டி.டீ. 5 சதத் தூளையும், 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும் கலந்து தூவிவிட வேண்டும்.

அறுவடை :— விதைத்த 85 முதல் 90 நாட்களில் கே. 4, கோ. 4, கோ. 12, சி.எஸ்.எச். 1, ஆகிய ரகங்கள் அறுவடைக்கு வந்து விடும். சொர்ணு விதைத்த 90 முதல் 95 நாட்களில் அறுவடைக்கு வரும். சி.எஸ்.எச். 3 ரகம் விதைத்த 105 முதல் 115 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். நன்கு முற்றிய கதிர்களை அறுக்கவும்.

மறுதாம்புப் பயிர்:—சி.எஸ். எச். 1, சொர்ணு ஆகிய இரண்டு ரகங்களையும் மறுதாம்புப் பயிராகச் (கட்டைப் பயிர்) சாகுபடி செய்யலாம். சில தேசீய நிருபணப் பாத்திகளில், இவ்விரு ரகங்களும் முதல் பயிரைவிட மறுதாம்புப் பயிரில் அதிக மகசூல் கொடுத்துள்ளன. மேலும் மறுதாம்புப் பயிர் 75 முதல் 80 நாட்களிலேயே அறுவடைக்கு வந்துவிடுவதாலும், அடியுரம் இடாமல், 2 முறை மேலுரம் இட்டு நல்ல மகசூல் எடுக்க முடிவதாலும் சாகுபடிச் செலவு குறைகிறது. எனவே, இவ்விரு ரகங்களையும் பயிரிடும் உழவர் பெருமக்கள், சோளத் தட்டைகளைத் தரை மட்டத்திற்கு வெட்டிவிட்டு, உடன் தண்ணீர் பாய்ச்சி மறுதாம்புப் பயிர்கள் தோன்றச் செய்யலாம்.

சோளத் தட்டையை வெட்டிய 5-ஆம் நாள், நிலத்தை நன்ருகக் கொத்திவிட்டு, 8-ஆம் நாள் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டுத் தண்ணீர் பாய்ச்சவும். பிறகு மண் வகைக்கேற்ப 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினுல் போதுமானது. தட்டை வெட்டிய 15-ஆம் நாள் ஒவ்வொரு பயிர்க் குத்திலும் 3 வீரியமான பயிர்களை மட்டும் விட்டுவிட்டு மற்றவைகளைக் கிள்ளி எறிந்துவிட்டு, ஏக்கருக்கு 6 கிலோ 'என்ட்ரின்' 2 சதக் குறுணைகளைப் பயிரின் குறுத்தில் போடவும். 25-ஆம் நாள் மறுமுறை களை எடுக்கவும். 28-ஆம் நாள் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவை, பயிர்க் குத்துகளைச் சுற்றிலும் போட்டுத் தண்ணீர் பாய்ச்சவும். பிறகு முதல் பயிருக்குக் கூறியது போல், பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் மேற் கொள்ளவும். இவ்வாறு செய்வதால் ஏக்கருக்கு 2,500 கிலோ மகசூல் குறைந்த செலவில் பெற முடியும்.

மூன்று போகம்:—சி.எஸ்.எச். 1, சொர்ணு ஆகிய ரகங்களை சனவரி 15 முதல் பயிர் செய்யத் துவங்கி இருந்தால், ஒரே ஆண்டில் பின்கண்டவாறு மூன்று போகம் சாகுபடி செய்யலாம்.

முதல் போகம்—ஜனவரி 15 முதல் ஏப்ரல் 15 வரை (தை முதல் பங்குனி வரை) —சோளம் முதல் பயிர்.

இரண்டாம் போகம்-ஏப்ரல் 15 முதல் சூலை 15 வரை (சித்திரை முதல் ஆனிவரை) —சோளம் மறுதாம்புப் பயிர்.

மூன்ரும் போகம்—ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் 31 வரை (ஆவணி முதல் மார்கழி வரை) —ஐ.ஆர். 8 நெல்.

எனவே மேற்கூறிய சாகுபடிக் குறிப்புகளைப் பயன்படுத்தி இறைவைச் சோளம் பயிரிட்டு பெரும் மகசூல் பெறுமாறும், பெரும் இலாபம் அடையுமாறும் உழவர் பெருமக்களை கேட்டுக் கொள்கின்ருேம்.

—ஆர். எம்.





# தங்கப் பதக்கம் தந்தது கரும்பு

தமிழ்நாடு அரசு, 'பயிர் மகசூல் போட்டி'த் திட்டத்தின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் உழவர் பெருமக்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள உயரிய சாகுபடி முறைகளை உழவர் பெருமக்கள் மேற்கொள்ளச் செய்து வருகிறது. தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை உணவு தானியப் பயிர்களுக்கும், கரும்புக்கும் மகசூல் போட்டியைத் தனித் தனியே நடத்தி வருகிறது.

1969-70-ஆம் ஆண்டில் நடைபெற்ற கரும்பு மகசூல் போட்டியில் மாநிலப் பரிசு பெற்ற திரு என். மதார்கான் சாயபு அவர்களுக்கும், மற்றும் 1969—70, 1970—71-ஆம் ஆண்டுகளில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப்பகுதியில் நடைபெற்ற கரும்பு மகசூல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், அன்று 20—12—1972 அன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள நந்திவரத்தில் நடைபெற்ற கடும்விரைவு பின்பருவத் திட்டதுவக்க விழாவின்போது மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் பரிசு வழங்கினுர்.

அந்த விழாவில் மாநில முதற் பரிசாகத் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற தென்னுர்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், துலுக்கா நத்தம் கிராமத்தைச் சார்ந்த திரு என். மதார்கான் அவர்களைத் 'தமிழரசு' இதழின் சார்பில் பேட்டி காணப்பட்டது. பேட்டியின்போது அவர் அளித்த பதில்கள் கரும்புச் சாகுபடியில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குப் பயன்தருவதாக இருப்பதால், அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

''கரும்பு மகசூல் போட்டியில் மாநிலப் பரிசு பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றுள்ளீர்களே! ஏக்கருக்கு எவ்வளவு ம[illegible] எடுத்தீர்கள்? என்ன ர[illegible] பயிரிட்டீர்கள்?''

''ஒரு ஏக்கரில் 9[illegible] டன் 465 கிலோ கரும்பு விளைவித்தேன். கோ. 658 என்ற க[illegible] ரகம் பயிரிட்டிருந்தேன்.''

''இப்பதான் முத[illegible]முத[illegible]க பரிசு வாங்கியுள்[illegible] அல்லது முன்பே ஏதேனு[illegible]பரிசு பெற்றுள்ளீர்களா?''

''கரும்பு மகசூல் போட்டியில் 1965—66-ஆம் ஆண்டிலேயே நான் ஏக்கருக்கு 83 டன் 210 கிலோ கரும்பு விளைவித்து நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப்பகுதிப் பரிசு, 1969—70-ஆம் ஆண்டிலும் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதிப் பரிசு ஆக இரண்டு பரிசு முன்பே பெற்றுள்ளேன்''.

''கரும்புச் சாகுபடியில் நீண்ட நாள் பழக்கம் தங்களுக்கு உண்டா?''

''ஆமாங்க! தென்னுர்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், துலுக்கா நத்தம் கிராமத்தில் சுமார் 30 ஆண்டுக் காலமாக 10 ஏக்கருக்குக் குறையாமல் ஆண்டு தோறும் நான் கரும்புச் சாகுபடி செய்து வருகின்றேன். ஆண்டுதோறும் ஏக்கருக்கு 50 முதல் 55 டன் வரை சராசரியாகக் கரும்பு மகசூல் எடுத்து வந்துள்ளேன்''

''மாநிலக் கரும்பு மகசூல் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தங்களுக்கு எப்படி ஏற்பட்டது?''

''முன்பே 2 தடவை பரிசு வாங்கியுள்ளதால், மாநிலப் போட்டியிலும் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. அந்த ஆர்வம் ஏற்பட மூலக் காரணம் வேளாண்மைத் துறையினரே! 1969—70-ஆம் ஆண்டுப் போட்டியில் என்னைக் கலந்துக் கொள்ளும்படி வளவனூர் துணை வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வந்தார். அவருடைய அறிவுரையின்படி நான், கரும்பு மகசூல் போட்டியில் கலந்துகொள்ள என் பெயரை அவரிடம் பதிவு செய்து கொண்டு, என் நிலம் சர்வே எண். 225-1ல் உள்ள 1.74 ஏக்கரில் 50 சென்ட் நிலத்தில் தனிக்கவனம் செலுத்திக் கரும்புச் சாகுபடி செய்தேன். [illegible]தில் தான் எனக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.''

''வி[illegible] கரும்பு எங்கு வாங்கினீர்கள்[illegible]''

''நெல்லிக்[illegible]குப்பம் சர்க்கரை ஆலையின[illegible] எ[illegible]க்கு வெந்நீரில் பதப்படு[illegible]கோ. 658 விதைக் கரணைக[illegible]காடுத்தனர். அவைகளை என் [illegible]லில் நட்டு நாற்றுக் கரும்புச் [illegible]குபடி செய்தேன். [illegible]றா[illegible]லில் இருந்த 7 மாத [illegible]ள வீரியமான நோய் தாக்காத விதைக் கரும்பிலிருந்து விதைக் கரணைகளைத் தயாரித்தேன். ஏக்கருக்கு 25,000 விதைக் கரணைகள் வீதம் நடவு செய்தேன்''.

''நிலம் தயாரித்து நட்டது பற்றியும் கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன்''




''என்னுடைய நிலம் இலே சான களியும் மணலும் கலந்தது. கரும்புச் சாகுபடிக்கு முன்பு கேழ்வரகு நடவு செய்திருந்தேன். கேழ்வரகு அறுவடைக்கு முன்பே அந்த நிலத்தில் அவுரி விதைத்திருந்தேன். கேழ்வரகு அறுவடையான பிறகு, அந்த நிலத்தில் இருந்த அவுரியை அப்படியே என் டிராக்டரைக் கொண்டு 5 முறை உழவு செய்தேன். பிறகு 10 அங்குல ஆழமுள்ள பார்களை 3 அடி இடைவெளியில் அமைத்தேன். கரையான்கள் வெட்டுவதைத் தடுக்க, பார்களில் ஏக்கருக்கு 15 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளை தூவி விட்டேன். அதன்பின் ஏக்கருக்கு 100 கிலோ, 'பாமாபாஸ்' உரத்தைப் பார்களின் அடியில் இட்டு, மண்ணைக் கிளறி விட்டேன். 7—1—1969 அன்று விதைக் கரணைகளை 'அகலால்' மருந்துக் கலவையில் நனைத்து எடுத்துக் கொண்டு, பார்களின் அடியில் (படைச்சால்) விதைக் கரணைகளை வரிசையாக ஒன்றன் பின் ஒன்ருக ஏற்றி வைத்து ஒரு அங்குல மண் மேலே மூடும்படி நட்டு அன்றே தண்ணீர் பாய்ச்சினேன். பிறகு வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினேன். நடவு செய்த 25-ஆம் நாள் பார்களை மண் வெட்டியால் கொத்திவிட்டுப் பயிரின் ஒரமாக உள்ள களைகளையும் களைக் கொட்டால் அகற்றினேன்''.

''மேல் உரம் போட்டீர்களா? எவ்வளவு போட்டீர்கள்?''

''களையெடுத்த 35-ம் நாள் கழித்து அதாவது நடவு செய்த 60-ஆம் நாள் ஏக்கருக்கு 400 கிலோ 10-ஆம் நெம்பர் கலப்பு உரம் வைத்துச் சிறிதளவு மண்ணுல் மூடித் தண்ணீர் பாய்ச்சினேன். அதன்பின் 45 நாள் கழித்து அதாவது கரும்பு நடவு செய்த 105-வது நாளில் இரண்டாவது முறையாக மண் வெட்டியால் கொத்திவிட்டுக் களையெடுத்தேன். பிறகு 5 நாள் கழித்து அதாவது கரும்பு நடவு செய்த 110-ஆம் நாள் ஏக்கருக்கு 400 கிலோ வீதம் 10-ஆம் நெம்பர் கலப்பு உரம் இட்டு, மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்சினேன். பிறகு 10 நாள் கழித்துக் கரும்பின் அடியில் உள்ள காய்ந்த தோகைகளையும், பூச்சி-பூஞ்சாளம் தாக்கியுள்ள பயிர்களையும் அகற்றினேன். மேலும் ஒரு வாரம் கழித்து ஏக்கருக்கு 15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் உரம் 100 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 100 கிலோ, 10-ஆம் நெம்பர் கலப்பு உரம் 100 கிலோ ஆகிய மூன்றையும் கலந்து கரும்புக் குத்துக்களைச் சுற்றிலும் இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விட்டேன். ஆக மொத்தம் 3 முறை மேலுரம் இட்டேன்''.

''அப்புறம் கரும்புக்கு என்ன செய்தீர்கள்? மருந்து தெளிக்கவில்லையா?''

''கரும்பு நடவு செய்த 6-ஆவது மாதத்தில், 2-ஆம் தடவையாகக் காய்ந்த தோகைகளைக் கரும்பிலிருந்து நீக்கி எடுத்துவிட்டு, கரும்பு சாயாமல் இருக்க தோகைகளைப் பின்னி விட்டம் கட்டினேன். 6 மாதத்திற்குப் பிறகு மழைக்காலம் தவிர மற்றக் காலங்களில் 10 நாட்களுக்கு . ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினேன். என் கரும்புக்கு நான் மருந்து தெளிக்கவில்லைங்க''.

''ஏன்?''

குடிசைவாழ் ஏழை மக்களுக்காகவே குடிசைப் பகுதி மாற்று வாரியம் வீடுகளைக் கட்டி வருகிறது. இதுவரை 4,590 குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு விட்டன. பாதி கட்டிய நிலையில் இருப்பவை 11,296 குடியிருப்புகள் ஆகும். திட்டமிடப்பட்டிருப்பது 85 பகுதிகளில் 28,000 குடியிருப்புகள் ஆகும்.

(சட்டமன்றத்தில் முதல்வர் டாக்டர் கலைஞர்.)

''என் கரும்பில் எந்த விதமான பூச்சிக்களோ, நோய்களோ தோன்றவில்லை. அதனுல், மருந்து தெளிக்காமலே விட்டு விட்டேன்.''

''உங்கள் கரும்புக்கு இப்படியெல்லாம் செய்யணும் என்று யார் கூறியது. ?''

''வளவனூர் துணைவேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்களும், அவருடைய அலுவலகத்தைச் சேர்ந்த வேளாண்மை உதவியாளரும், செயல் விளக்கக் கண்காணியும் (மேஸ்திரி) அடிக்கடி என் கரும்பைப் பார்வையிட்டு, அதிக மகசூல் பெறுவதற்கான ஆலோசனைகளைக் கூறி ஊக்கப்படுத்தினுர்கள். கடலூரில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்களும், நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த கரும்பு கண்காணிப்பாளர் அவர்களும் அடிக்கடி என் கரும்பைப் பார்வையிட்டு என்னை ஊக்கப் படுத்தினுர்கள். இவர்களெல்லாம் என்னை ஊக்கப்படுத்தியதனுலேயே, நான் மாநிலப் பரிசு பெற முடிந்தது.''

''அறுவடை எப்போது நடந்தது?''

1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் வேளாண்மைத்துறை அலுவலர்கள் முன்னிலையில் கரும்பை வெட்டி கணக்கிடப்பெற்றது. ஏக்கருக்கு 97 டன் 465 கிலோ மகசூல் விளைந்துள்ளதாக அறிவித்தார்கள். அந்த அளவு மகசூல் எடுத்ததனுலேயே எனக்கு முதவில் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதியின் மண்டலப் (பிராந்திய) பரிசு கிடைத்தது. அதற்குச்சான்றிதழும், வெள்ளிக் கோப்பையும் கொடுத்தனர். பிறகு இப்பொழுது அந்த மகசூலுக்கே மாநிலப்பரிசும் கிடைத்துள்ளது. எனக்குத் தங்கப் பதக்கமும், சான்றிதழும் கொடுத்துள்ளனர்''.

''வேறு ஏதேனும் சொல்கின்றீர்களா?''

''பல உழவர் பெருமக்கள் ஏக்கருக்கு 30 டன் கரும்பு கூட விளைவிக்க முடிவதில்லை! நான் அவர்களை விட 3 மடங்கிற்கும் மேல் மகசூல் எடுத்துள்ளதாலும், அதனுல்மாநிலப் பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்றுள்ளதாலும், நாட்டிற்கு என் கடமையைச் செய்துள்ளதாக எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன், என்னைப் போல் மற்ற உழவர்களும் ஊக்கத்துடன் கரும்பு பயிரிட்டால் அவர்களும் பரிசு பெற முடியும்; அத்துடன் அவர்களுக்கும் அதிக வருவாய் கிடைக்கும்; அதனுல் நிகர இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும் எனவே உழவர்கள் வாழ்வு உயரவும், நாடு செழிக்கவும், வேளாண்மைத் துறையினரின் சொல் கேட்டு, அவர்கள் கூறும் முறையில் சாகுபடி செய்ய உழவர் பெருமக்கள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்வதுடன், என்னை ஊக்குவித்த வேளாண்மைத் துறையினருக்கும், ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

(கரும்பு மகசூல் போட்டியில் மாநிலப் பரிசு பெற்ற உழவர் பெருமகன் அளித்த பேட்டி.)

ஆர். எம்.








"கூவம் நதியின் மிசை நிலவினிலே
கொஞ்சு தமிழ் இளைஞர் கூட்டத்துடனே
பாவலர் தமிழினில் பாட்டி சைத்தே
படகுகள் ஓட்டிவிளை யாடி வருவோம்!"



# நனவாகிய காட்சி

சென்னை நகர் கூவம் ஆறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் படகுக் குழாம், உல்லாசப் படகு ஓட்டம் ஆகியவற்றைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிப்ரவரித் திங்கள் 4-ஆம் நாள் துவக்கி வைத்தார்கள்.

விழாவிற்குப் பொதுப் பணித்துறை அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள் தலைமை வகித்தார்கள் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள், சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், சென்னை நகர மேயர் திரு. ஆறுமுகம் அவர்கள் ஆகியோர் விழாவில் உரையாற்றினார்கள்.



## 1878 முதல் கூவம் சீரமைப்புப் பற்றிப் பேசப்பட்டு வந்தாலும் 1967 செப்டம்பரில் திட்டம் தொடங்கப்பட்டுக் கனவை நனவாக்கியது நமது அரசு



# பாராட்டினார்கள்!

சென்னை நகரின் அழகை மேம்படுத்தும் நோக்குடன் கூவம் சீரமைப்புச் செய்யப்பட்டிருப்பது கண்டு உள்ளாட்சித்துறை அமைச்சர் என்ற முறையில் பெருமையடைகிறேன்.

கூவத்தைப் பழித்துக் கூறி வந்தோம்—அது கூவத்தின் குற்றமல்ல!

ஏனென்றால் காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த போதும் கூவத்தில் தான் குளித்து—தனது வேட்டியைத் துவைத்துக் கொண்டு செல்வாராம்.

குளிக்கிற அளவுக்கு, சிறந்த முறையில் இருந்த கூவத்தைக் கெடுத்தவர்கள் அதற்குப் பிறகு வந்தவர்கள் தான்! 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று சொல்வார்கள். உலக நாகரிகமே ஆற்றங்கரையில்தான் ஆரம்பமாகியிருக்கின்றது. மக்களும் ஆற்றங்கரைகளில்தான் குடியேறி இருக்கிறார்கள்.

சென்னையில் இருக்கிற மண்ணடிப் பகுதியிலேயும் முன்பு 'ஆறு ஓடிக் கடலில் கலந்திருக்கிறது. அந்த ஆற்றைப் பின்னர் மண்ணை அடித்து அடித்து அடைத்தால் தான் அந்தப் பகுதிக்கு மண்ணடி என்று பெயரிடப்பட்டது.

கடலழகு - ஆற்றின் அழகு போன்ற இயற்கை அழகுகளோடும் சென்னை மாநகரம் அமைந்திருக்கிறது.

அழகான-அகன்ற மணற்பரப்புக் கொண்ட நீண்ட கடற்கரை சென்னையில்தான் இருக்கிறது.

உலகத்திலேயே அழகான முதல் கடற்கரை ரியோடி ஜெனிரோ. அதற்கு அடுத்த இடத்தில் சென்னை கடற்கரைதான் இருக்கிறது.

**மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர்**

சென்னையில் கூவம் சீரமைக்கப்பட்டு விட்ட பிறகு இனிமேல் மேலை நாடுகளிலே இருக்கின்ற ரைன், தேம்ஸ் நதிகளில் கண்ட காட்சிகளை இங்கேயும் காண முடியும்.

சில நாட்களுக்கு முன்பு கூவத்தில் படகிலேறி--நானும் அமைச்சர் சாதிக்பாட்சாவும் சென்றோம். சேத்துப்பட்டில் ஓரிடத்திலிருந்து பார்த்தபோது ஒரு பக்கம் மின்சார ரயில்களும் இன்னொரு பக்கம் கார்களும், ஆற்றில் படகுகளுமாகச் செல்கின்ற காட்சி—ரைன் நதியைப் போல ரைன் நதியை மிஞ்சக் கூடிய விதத்தில் இருந்தது.

இந்தக் காட்சிகளை இப்படிப்பட்ட சாதனையை வெளி நாட்டுக்காரன் யாராவது வந்து பாராட்டினால் உடனே நம்முடைய நாட்டுக்காரர்கள் பாராட்டுவார்கள். அந்த அளவுக்கு நம்மவர்களிடம் பெருந்தன்மை இருக்கிறது.

தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பேறாகத் தான் கலைஞர் நமக்கு முதலமைச்சராகக் கிடைத்திருக்கிறார். அவர் கலைஞராக இருப்பதால்தான் எல்லாவற்றிலும் கலை வண்ணம் இருக்கிறது.

கிழக்கு ஜெர்மன் நாட்டில் 1278 படகுத்துறைகள் இருக்கின்றன. இதனால் ஏராளமான அன்னியச் செலாவணி அந்த நாட்டுக்குக் கிடைக்கிறது.

காஷ்மீரில் ஜீலம் நதியிலும் படகுகளினாலேயே நிறைய அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

கூவம் நதிச் சீரமைப்பினால் படகுகள் விடுவதால் அன்னியச் செலாவணி மத்திய அரசுக்கும் கிடைக்க வாய்ப்பேற்படுகிறது.

**மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர் திரு. இராசாராம்**

நாற்றம் எடுத்த கூவத்தை மணம் கொழிக்கும் ஆறாக மாற்றிய பெருமை முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும்.

ஒரு நூற்றாண்டுக் காலமாகத் திட்டமிடப்பட்டு, நிறைவேற்றப்படாமல் இருந்த கூவம் சீரமைப்புத் திட்டத்தைக் கலைஞர் அவர்கள் அண்ணாவின் அனுமதி பெற்று நிறைவேற்றினார். பார்ப்பதற்கு எழிலோடு விளங்கும் கூவம் ஆற்றின் நீளம் 41 மைல் ஆகும். காஞ்சீபுரம் வட்டத்திலிருந்து கடற்கரை வரை இது நீண்டு இருக்கிறது. அமைந்தகரையில் இருந்து பாம்பு போல வளைந்து நெளிந்திருக்கிறது.

ஒரு நாடகத்தில் எம தர்பார் காட்சியில் கள்ள மார்க்கட்காரனுக்கு எமதர்மன் தரும் தண்டனை என்ன தெரியுமா? 'அவனைக் கூவம் ஆற்றில் கொண்டுபோய்த் தள்ளு' என்று எமன் கட்டளை இடுகிறான்.

கூவம் ஆற்றின் பெருமை அந்த அளவுக்கு அன்று இருந்தது என்பது எல்லாருக்கும் தெரியும்.

கூவம் சீரமைப்புப் பணி சாதாரணக் காரியமல்ல. உச்ச கட்டத்தில் மூவாயிரம் தொழிலாளர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். பொதுப் பணித்துறை நிறைவேற்றிய இந்தத் திட்டத்தைச் சுற்றுலாத்துறை நிர்வகிக்க இருக்கிறது.

**மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா**

# படைப்பே! ஒரு வேண்டுகோள்!



வானத்தைத் துளைக்கின்ற கட்ட டங்கள்
வளர்ந்திருக்கும் ' நியூயார்க் 'கைக் காண்ப தெந்நாள் ?
மோனத்துக் கற்பனையை இன்ப ஊற்றில்
மூழ்கடிக்கும் ' ஆலந் 'தைக் காண்ப தெந்நாள் ?
போனபல வரலாற்றுச் சுவட்டை ஏந்தும்
புகழ்மிக்க ' ரோம் 'நகரைக் காண்ப தெந்நாள் ?
' சீன 'த்தை, ' சப்பா 'னை, ' சுவீடன் ' நாட்டைச்
' சேர்மனி 'யை, ' எகிப் 'தையெலாம் காண்ப தெந்நாள் ?

நான்குசுவர் வீட்டுக்குள் அடைந்தி ருப்போன்
' நாங்கூழின் புழு 'வைப்போல் இருந்தே சாவான்!
தான்பிறந்த ஊரைமட்டும் தெரிந்து கொண்டோன்
' தவளை 'யைப்போல் வாழ்ந்திருந்து மறைந்தே போவான் !
நான்கெல்லை கூடுகின்ற தனது நாட்டை
நன்கறிந்தோன் 'மான் 'போலே இருந்தே மாள்வான்!
வான்போர்த்த உலகமெலாம் சென்றே கண்டோன்
வையகத்தில் அறிவாலே நிறைந்து நிற்பான் !

' ஏட 'னிலே, ' சைபிரிய ' மண்ணி லெங்கோ
இருந்துவரும் பறவையெலாம் கூட, எங்கள்
' வேடந்தாங் கல்ஏரி ' வந்து தங்கி
விவாதிக்கும் ஐ. நா. போல் கூடக் கண்டோம் !
நாடுவிட்டு நாடுவந்து காணு தற்கு
நாணூறு ' விசாக்கள் ' ஏன் வாங்க வேண்டும் ?
கூடுவிட்டுப் பாய்கின்ற வித்தை தன்னைக்
கூறிவைக்கக் கூடாதா எங்க ளுக்கே !

மாமியாரின் ஊரைமட்டும் தெரிந்து வைத்தோன்
மாமேதை யாவானோ ? வட்டி சேர்த்துச்
சேமித்து வைத்திருப்போன் போகும் போது
செல்வமெலாம் உடனெடுத்துச் செல்வ துண்டா ?
பூமியெனும் கோளத்தின் வேலைப் பாட்டைப்
பொலிவுகளை எழில்குலுங்கும் காட்சி யெல்லாம்
யாம்காணப் படைப்பே !நீ எங்க ளுக்கே
' இறக்கை 'களைத் தவறாமல் படைக்க வேண்டும் !



அண்டமென்ற பேரமைப்பில் கோள மெல்லாம்
ஆடிவரும் ' பந்துக 'ளே யன்றோ ? ' ஆறு
கண்ட 'முன்ன இவ்வுலகம் சிற்று ருண்டை !
காட்சியெலாம் படைத்திட்ட படைப்பே ! நீ ஏன்
உண்டான வையகத்தைக் கடல்க ளாலே
உடைத்திங்கே தனித்தனியாய்ப் பிரித்து விட்டாய் ?
' அண்டார்ட்டிக் கடும்பனி 'யோ ஓர்பக் கத்தில் !
' ஆப்பிரிக்கக் கொடும்பாலை ' மறுபக் கத்தில் !

இவ்வளவும் படைத்திட்ட படைப்பே ! நெஞ்சில்
ஈ விரக்கம் உனக்குண்டா ? மண்ண கத்தின்
அவ்வளவு மனிதர்களும் பேசு தற்கே
அழகியஓர் பொதுமொழிஏன் படைக்க வில்லை ?
எவ்வளவு தொலைநாட்டில் இருந்த போதும்
இருக்கின்ற பசுவுக்கும், பறவை கட்கும்
செவ்வையுடன் ஓர்மொழியைப் படைத்தாய் ! ஆனால்
சீர்மனிதன் பேசபல மொழிஏன் கண்டாய் ?

குடைபோன்ற வானத்தைப் படைத்தாய் : அங்கே
குண்டலங்கள் தொங்குதல்போல் மீன்ப டைத்தாய்:
வடைபோன்ற நிலவையங்கே நீந்த விட்டாய் :
வண்ணவண்ண முகிலாடை நெய்து தந்தாய் :
இடையினிலே இவ்வளவேன் தூரம் வைத்தாய் ?
என்றைக்கோ நாங்களங்கே உலவப் போவோம் ?
மடப்படைப்பே ! எங்களுக்கேன் நூறே ஆண்டை
வாழ்வயதாய்ப் படைத்திட்டாய் ? நீதி தானோ ?

பறவைகளாய் எமையெல்லாம் படைத்தி ருந்தால்
பார்முழுதும் சுற்றிவர வேலி உண்டா ?
சிறகற்ற மீனாகப் பிறந்தால் கூட,
சீர்க்கடல்கள் சுற்றிவரச் சிக்கல் ஏது ?
திறமையிலாப் பாழ்படைப்பே ! மனிதன் செல்லத்
தேயமெலாம் ' தடைகள் ' ஏன் ? ' சீன ' நாட்டில்
பிறப்பதிகம் : ' ஆஸ்திரேலிய ' நாட்டில் மட்டும்
பேசுகின்ற மனிதரினம் குறைவாம் : ஏன், ஏன் ?



கவிஞர்
கா. வேழவேந்தன்



# அம்மாப்பேட்டையில் டெலிவிஷன் படப்பிடிப்பு

குடும்பநல முனைப்பு இயக்கத்தைக் குறிக்கும் வரவேற்பு வளைவுகள்; தெருவெங்கும் வண்ணச் சுவரொட்டிகள்; வட்டாரத்திற்கு ஒரு நல்வாழ்வு நிலையம்; அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன் வருவோருக்குக் கோலாகலமான வரவேற்பு; உரிய வசதிகள், தங்கும் விடுதி; நல்ல சத்துள்ள உணவு; மருத்துவர்களின் தனிக் கவனிப்பு.

திருமணம் நடைபெறுகிறதோ என்று எண்ணும் வகையில் ஒவ்வொரு நல்வாழ்வு நிலையத்திலும் விழாக் கோலம் பூண்டு, மக்கள் கூடுகிறார்கள். வண்டிகளிலும் ஊர்திகளிலும் பெரியவர்கள் நல்வாழ்வு நிலையத்தை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றனர்.

இந்தக் கோலமிகு காட்சி தஞ்சை மாவட்டத்தில் முன்றுவது குடும்ப நல முனைப்பு இயக்கத்தையொட்டி ஊர்தோறும் நடைபெற்ற காட்சியாகும். 1972 நவம்பர் 21ல் தொடங்கி, 1973 சனவரி 15ல் முடிவு பெற்ற இயக்கம், 56 நாட்களில் 40,000க்கு மேற்பட்டோர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பயனடைந்துள்ளனர் என்ற நற்செய்தியை நாட்டிற்குத் தந்து, தனிப்புகழ் பெற்றுள்ளது.

இந்த முனைப்பு இயக்க நடவடிக்கைகளைப் படம் பிடிக்க வேண்டும் என்ற ஆசையோடு டாக்டர் பின்னெல்லி என்னும் இத்தாலி நாட்டுக்காரர் தம் டெலிவிஷன் குழுவினருடன் டிசம்பர் 22ஆம் நாள் தஞ்சை வந்தது குறிப்பிடத் தக்க செய்தியாகும். அவர்கள் தஞ்சைக்கு அருகில் உள்ள அம்மாப்பேட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு திருமண மண்டபம் நல்வாழ்வு நிலையமாக மாற்றப்பட்டிருந்தது. வரவேற்பு வளைவையும், தோரணங்களையும் பார்த்து, இத்தாலி நாட்டுக்காரர்கள் குடும்ப நலத் திட்டப் பணி மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் நடைபெறுகிறது என்று பாராட்டினர்.

தாரை தப்பட்டை ஒலிக்க, கொம்புகள் முழங்க, ஒரு மாட்டு வண்டியில் சிலர் நல்வாழ்வு நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அதைப் பின் தொடர்ந்து சாரை சாரையாக வண்டிகள், அரசாங்க வாகனங்கள் வந்து நின்று கொண்டிருந்தன. அறுவைச் சிகிச்சைக்காகச் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து ஆடவர்கள் வந்துகொண்டிருந்த அந்தக் காட்சியைக் கண்டு வியந்தனர்.



நல்வாழ்வு நிலைய வாயிலில் அறுவைச் சிகிச்சைக்குப் பெயரைப் பதிவு செய்வதற்காக ஒரு பெரிய அணி நின்று கொண்டிருந்தது. டாக்டர் பின்னெல்லி அவர்கள், காலை 9 மணியிலிருந்து 1 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகளைப் படம் பிடித்தார்கள். மக்கள் வண்டிகளில் வருவது, வரிசையாக நின்று பெயர்களைப் பதிவு செய்வது, டாக்டர்கள் வரவேற்பது, மருத்துவப் பரிசோதனை, அறுவைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை செய்துகொண்டோருக்காக நடைபெற்ற பரிசுக் குலுக்கல், பரிசுப் பொருள்களான சைக்கிள், ரேடியோ, எவர்சில்வர் பாத்திரங்கள், அறுவைச் சிகிச்சை செய்துகொண்டோரை மகிழ்விக்க நடைபெற்ற வில்லுப் பாட்டு நிகழ்ச்சி அனைத்தையும் அந்தக் குழுவினர் படம் பிடித்தனர்.



"முத்துக் கூத்தன் பாட்டைக் கேட்கவந்த இத்தாலி நாட்டுக்காரருக்கு வணக்கம்",

என்று முத்துக் கூத்தன் பாட, அதை அந்த வில்லோசையையும், அதை ஒட்டி அந்தக் குழுவினரின் தலையாட்டத்தையும் கண்டு, படப்பிடிப்புக் குழுவினர் மகிழ்ச்சியால் கூத்தாடினர்.

இத்தாலி நாட்டு டெலிவிஷன் குழுத் தலைவர் டாக்டர் பின்னெல்லி பார்வையாளர் குறிப்பேட்டில் எழுதிச் சென்ற வரிகள்:

"Family Planning is one of the most urgent and important needs for the contemporary Society. The population bomb is a dramatic danger for all the humanity what you are doing here in India, must be an example for all the countries of the World.

Thanking you what you have shown to us today."

இத்தாலி நாட்டு டெலிவிஷன் குழுவினரின் இந்தப் பாராட்டு, நாம் ஆற்றும் அரும்பணிக்கு எடுத்துக்காட்டாக—அடையாளமாக விளங்குகிறது.

—வெ. இராசசேகரன்



# கூவம் மணக்கிறது!



*முன்னாள் அமைச்சர்*
*திருமதி*
## ஜோதி வெங்கடாசலம்

கூவம் நதி நல்ல முறையில் சீரமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற நல்ல பணிகள் நடைபெறுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இப் பணியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறேன்.

நல்லது செய்வதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

கலைஞர் கருணாநிதியின் தயவால் கூவம்நதியில் நாற்றமும் மாறியிருக்கிறது. இதிலே எனக்குக் கொஞ்சம் பொறாமைதான். ஏனென்றால் பூர்வீகமாகச் சென்னையிலிருக்கும் என்னைப் போன்றவர்களால் முடியாததைச் சோழ நாட்டுக்காரரான கலைஞர் வந்து முடித்திருக்கிறார்.

பாரதி பாடினான்—சிந்து நதியின் மிசை நிலவினிலே, சேரநன் னாட்டிளம் பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்தே, தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்' என்று பாடினார். இன்று "கூவம் நதியின் மிசை பொழுதினிலே சோழ நன்னாட்டிளம் தலைவருடனே" என்று பாடிச் செல்ல இருக்கிறோம்.

பாரதி கங்கையைத்தான் பாடினான்; அந்தக் கவி உள்ளம் கொண்டவரால் இபபோது கூவம் மாற்றப்பட்டிருக்கிறது.

கலைஞர் — பொதுப்பணித்துறை அமைச்சராகச் சொற்ப காலம் தான் இருந்தார். ஆனால் அப்போதே கூவம் சீரமைப்புக்காகத் திட்டமிட்டார். அண்ணாவின் ஆதரவைப் பெற்று நடை முறைக்குக் கொண்டுவந்தார்.

மாஸ்கோ நதியையும் பாரிஸ் நதியையும் வளப்படுத்துவது பெரிய காரியமல்ல; ஏனென்றால் அவற்றில் போதிய ஆழம்—போதிய அகலம் இருந்தன. இந்தக் கூவத்தில் ஆழத்தையும் அகலத்தையும் உண்டாக்கி நாற்றத்தைப் போக்கி அற்புதத்தைச் செய்திருக்கிறார் கலைஞர்.

கடற்கரையில் இப்போதுதான் அறிஞர்கள் ஆன்ம ஞானிகள் ஆகியோரின் சிலைகள் இருக்கின்றன. கடற்கரைப் பகுதி என்றால் மீனவர்களும் குடிசைகளும் ஆரோக்கியக் குறைவும்தான் இருக்கும். ஆனால் கலைஞர் ஆட்சியில் குடிசைகளையெல்லாம் மாடிகளாக்கிச் சென்னைக் கடற்கரையையே சிறப்பிக்கச் செய்திருக்கிறார்.






## ஒரே சமயத்தில் இரட்டை நன்மை!

எங்கள் வங்கியில்

**தவணை வைப்புத் தொகை (FIXED DEPOSIT)**

போட்டு வைப்பதால்

எப்படியா ?

முதலில்....போடுபவருக்கு இலாபம்

ஓர் ஆண்டுக்கு வட்டி 7%

ஓர் ஆண்டுக்கு மேல்—
இரண்டு ஆண்டுவரை வட்டி 7½%

இந்த உச்ச விகிதம் இங்குக் கிடைக்கும்
தனிச் சலுகை

அடுத்து, நாட்டுக்கும் நன்மை......ஏனெனில் இந்தத்

**தவணை வைப்புத் தொகை (FIXED DEPOSIT)**

பசுமைப் புரட்சிப் பணிகளுக்குப் பற்றுக்கோடு.

தனக்கும் நன்மை,
நாட்டுக்கும் நன்மை.

ஆகவே....
மாநில நிலவள வங்கியிலும்
அதன் மாவட்டக் கிளைகளிலும்
தவணை வைப்புத் தொகை (FIXED DEPOSIT)
போடுங்கள்..........
வளத்துக்கு வழிகோலுங்கள்.

மற்ற விவரங்களுக்கு :

**தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி**
32, லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை-4.

பி. எஸ். முத்துச்செல்வன், M.L.A.
துணைத் தலைவர்.

மு. சண்முகம், M.L.A.
தலைவர்.



# கேளுங்கள் கொடுக்கப்படும்

இ.சி. 39821 என்ற ரக சோயா மொச்சை தமிழ்நாட்டில் நன்ருக விளையும் என்று கூறி இருக்கின்றீர்கள். தஞ்சை மாவட்டத்தில் நன்ருக விளையுமா? இவ்விதையும் சாகுபடிக் குறிப்பும் எங்குக்கிடைக்கும்? ஒரு கிலோ விலை என்ன? என்று குறிப்பிடவும். சோயா மொச்சையின் பயன்களையும் அறிந்தேன். இந்த நல்ல விஷயங்களை வெளியிடும் தமிழரசுக்கு என் நன்றி.

—ஆர். கிருஷ்ணன்,
எஸ். கோட்டைக்காடு,
ஒரத்தநாடு வட்டம்,
தஞ்சை மாவட்டம்.

பொதுவாகத் தமிழ்நாட்டிற்கு இ.சி. 39821 என்ற தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த சோயா மொச்சை ரகம் ஏற்றதாக அமைந்துள்ளது. ஆனல், இந்த ரகம் கோவை மாவட்டத்திற்கு மிகவும் ஏற்றதாக விளங்குகிறது. குடுமியான் மலைக்கு அருகில் உள்ள 'அண்ணுபண்ணை' யில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளிலிருந்து திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்கும் இ.சி. 39821 ரகம் ஏற்றதாக இருக்கும் என்பது



புலனுகியுள்ளது. 23–1–1972 அன்று அண்ணு பண்ணையில் 18 சோயா மொச்சை ரகங்கள் விதைத்துச் சோதனை செய்யப்பட்டதில், இ.சி. 39821 ரகமே மற்ற ரகங்களைவிட ஏற்றது என்பது தெளிவாகியுள்ளது. இது பற்றிய சோதனைகள் மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனினும், தங்களுக்கு ஆர்வம் இருப்பின், உங்கள் நிலத்தில், ஒரு சென்ட் (54 அடி நீளம், 8 அடி அகலம்) பரப்பில் மட்டும் பிப்ரவரி–மார்ச்சுத் திங்களில் இ.சி. 39821 ரக சோயா மொச்சையை இறைவையாகப் பயிரிட்டுப் பார்க்கலாம். இந்த ரக விதையும், நுண்ணுயிர் ராசியும் (பாக்டீரியல் கல்ச்சர்) பெற, உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் அவர்களின் உதவியை நாடவும். அல்லது தஞ்சாவூர் கீழ இராஜ வீதியில், இளைய ராணி அரண்மனையில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலகத்தில் விசாரிக்கவும். இ.சி. 39821 ரக சோயா மொச்சையின் சாகுபடிக் குறிப்பு மிகவும் விளக்கமாக 1–10–1972 தேதி 'தமிழரசு' இதழில் பக்கம் 43-ல் வெளியிடப்பட்டுள்ளது. தயவு செய்து அதைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த ரக சோயா மொச்சை, தங்களுக்கு மேற்கூறிய அலுவலகங்களின் மூலம் கிடைக்கவில்லை எனில், கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் எழுதி, விலைவிவரம் கேட்டு முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தகவல் தொடர்பு நிலைய விற்பனை
நிலையம், தமிழ்நாடு வேளாண்
மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

அண்ணு பண்ணையில் இருந்தும் அநேகமாக இந்த ரக விதைகள் விற்பனைக்குக் கிடைக்கக் கூடும். முயற்சி செய்து பாருங்கள். முதலில் சோதனையாகப் பயிரிட்டுப் பார்த்துவிட்டு நல்ல மகசூல் கிடைத்தால், பிறகு பெருமளவில் பயிர் செய்வதே நல்லது.

மாசிப் பட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற சிறந்த கொத்து நிலக்கடலை ரகம் எது? அதன் சாகுபடி விவரங்களைத் தயவு செய்து விளக்கவும்.

—ஆர். இராமசாமி,
கள்ளக்குறிச்சி.
தென்னுர்க்காடு மாவட்டம்.

'டி. எம். வி. 7' (திண்டிவனம்–7) என்னும் கொத்து நிலக்கடலை ரகம் மாசிப் பட்டத்தில் இறைவையாகப் பயிரிடுவதற்கு மிகவும் சிறந்ததாகும். இதன் வயது 105 நாட்கள். இந்த ரகம் வண்டல் மண், செம்மண், கரும் வண்டல் மண் போன்ற மென்மையான மண்வகைகளுக்கு மிகவும் ஏற்றது. இந்த ரகத்தைப் பயிரிட நிலத்தை இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை நன்கு உழவேண்டும்.

அடியுரமாக ஏக்கருக்குப் 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இட்டு மண்ணுடன் கலக்குமாறு உழுதுவிட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 9 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து, 27 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க 45 கிலோ அமோனியம் சல்பேட், 112.5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 46 கிலோ மூயூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். அல்லது 4 : 8 : 12 என்ற கலப்பு உரத்தில் 225 கிலோவை இடவேண்டும்.




விதைப்பதற்கு முன்பு அல்லது பின்பு ஏக்கருக்கு 3 குடுவை நுண் உயிர் கலவையை மணல் அல்லது மரத் தூளுடன் கலந்து நிலத்தில் தூவி விடவும்.

ஏக்கருக்கு 50 கிலோ கடலைப் பயறு விதைகளை 125 கிராம் 'கேப்டான்' மருந்துடன் கலந்து 9 அங்குலம் × 6 அங்குலம் இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைத்த உடன் தண்ணீர் விடவும். மூன்ருவது நாளில் முளை நீர் விடவும். பிறகு 12 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சவும்.



விதைத்த 15 நாட்களுக்குப் பிறகு ஏக்கருக்கு 7 கிலோ வெண்காரம் (Borax) 80 கிலோ ஜிப்சம் ஆகியவைகளை இடவேண்டும்.

விதைத்து 20 முதல் 25 நாட்களுக்குள் முதல்முறை களை எடுத்து, ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி லிட்டர் 'எண்ட்ரின்' மருந்துடன் அரை கிலோ 'தாமிரப் பூசனக் கொல்லி' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

விதைத்த 35 முதல் 45 நாட்களுக்குள் இரண்டாம் முறை களை எடுத்து மண் அணைக்க வேண்டும். விதைத்த 45-வது நாட்களுக்குப் பிறகு நிலத்தைக் கொத்திவிடக்கூடாது. விதைத்த 50 முதல் 55 நாட்களுக்குள் இரண்டாம் முறை மேற்கூறிய வாறு சாகுபடி முறைகளை மேற்கொண்டால், ஏக்கருக்கு 20 மூட்டைக்குக் குறையாமல் (800 கிலோ) மகசூல் எடுக்க முடியும்.

நெல் அறுவடைக்குப் பின், அந்தத் நஞ்சை நிலத்தில் என்ன பருத்தி பயிரிடலாம்? அதற்கு அடியுரம் எவ்வளவு இடவேண்டும்? விதைப்பதற்கு ஏக்கருக்கு எவ்வளவு விதை வேண்டும்? எப்படி விதைப்பது என்று விவரம் கூறவும்.

—எஸ். முத்துவேல்,
லால்குடி,
திருச்சி மாவட்டம்.

நெல் அறுவடைக்குப் பின் பருத்தி பயிரிட விரும்பினுல், 'பி.ஆர்.எஸ். 72' என்ற பருத்தியைப் பயிரிடுதல் சிறந்தது! இதன் வயது 120 முதல் 130 நாட்களாகும். ஏக்கருக்கு 700 கிலோவுக்குக் குறையாமல் பருத்தி மகசூல் அளிக்க வல்ல ரகம் இது.

நெல் அறுவடைக்குப் பிறகு வயலில் உள்ள ஈரத்தைப் பயன்படுத்தி இந்த ரகம் விதைக்கப்படுவதால், அடியுரம் இடவேண்டியதில்லை. நிலம் மெழுகுப் பதமாக இருக்கும் நிலையில், வரிசைக்கு வரிசை ஒன்றரை அடியும் வரிசையில் குழிக்குக் குழி 9 அங்குலமும் இடைவெளிவிட்டு விதைகளை ஊன்ற ஏக்கருக்கு 9 கிலோ விதை தேவைப்படும். கூர்மையான குச்சியைக் கொண்டு மண்ணில் அரைஅங்குல ஆழத்தில் குழி ஏற்படுத்தி அதில் 2 அல்லது 3 விதைகள் வீதம் போட்டு ஈர மணல் கொண்டு குழியை நிரப்பி மூடுதல் நல்லது. இவ்வாறு செய்வதால் விதைகள் நன்கு முளைக்கும்.



பருத்தி விதை ஊன்றிய 21-வது நாள் களை எடுத்து, ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச் சத்து, 14 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இந்த அளவு உரமிட ஏக்கருக்கு 30 கிலோ டை அமோனியம் பாஸ்பேட், 20 கிலோ யூரியா, 24 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை இடவேண்டும். இரசாயன உரங்களைப் பருத்திச் செடியிலிருந்து 2 அங்குலம் தள்ளிவரிசையாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும். பிறகு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 40-வது நாள் இரண்டாம் முறை களை எடுத்து ஏக்கருக்கு 31 கிலோ யூரியாவை பருத்திச் செடியிலிருந்து 2 அங்குலம் தள்ளி ஒரு பக்கத்தில் வரிசையாக இட்டு மண் அணைத்துத்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வேளாண்மைத் துறையினர் கூறும் முறையில் விதைத்த 15, 25, 40, 55, 70, 85, 100-வது நாட்களில் மருந்து தெளிக்க வேண்டும்.

என்னுடைய தகப்பனார் கடந்த 25 ஆண்டுகளாக இராணுவத்தில் பணிபுரிந்தார். அவர் தற்பொழுது ரிட்டையர் ஆகிவிட்டார். அவர் ரிட்டையர் ஆகிச் சுமார் 7 ஆண்டுகளாகின்றன. எங்களுக்கு நிலம் தருவதாகக் கூறினுர்கள். ஆனுல், இதுவரை கிடைக்கவில்லை. நாங்கள் நிலம் பெறுவது எவ்வாறு என்ற விவரங்களைக் கூறினுல் நன்றியுள்ளவனுக இருப்பேன். நாங்கள் துன்பத்தால் மிகவும் கஷ்டப்படுகிறோம்.

—கே. செல்வராஜ்,
15, வியாபாரச் செட்டித் தெரு,
கூறைநாடு, மாயூரம்.

தமிழ் நாடு அரசின் ஆணை எண் : 2417, நிலவரித் துறை, நாள் 30–7–1970-ன்படி, நிலப்பட்டா கேட்டு மனுச் செய்பவர்களுக்குக் கீழே வரிசையில் கண்டுள்ளபடி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவருகிறது.

(1) இராணுவத்தில் பணியாற்றி உயிரிழந்த அல்லது ஊனமடைந்தவர்களின் குடும்பம்.

(2) நிலமற்ற ஏழை அரிசனங்கள்.

(3) தீவிர இராணுவப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்.

(4) முன்னுள் படை வீரர்கள்.

(5) பர்மா, இலங்கை அகதிகள்.

(6) தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி வேலை இழந்த பொற் கொல்லர்கள்.

(7) நிலமில்லாத இதர ஏழை மக்கள்.

எனவே, முன்னுள் படை வீரரான தங்கள் தந்தைக்கும் நிலம் கிடைக்கும். தங்கள் தந்தை இதுவரை நிலப்பட்டா கேட்டு மனுச் செய்தாரா? இல்லையா என்பதைக் குறிப்பிடவில்லை. இதுவரை நிலப்பட்டாக் கேட்டு மனு அனுப்பவில்லையாஞல், தங்கள் தந்தை இராணுவத்தில் பணியாற்றியுள்ளது பற்றிய விவரங்களை எல்லாம் குறிப்பிட்டு, நிலப்பட்டா கோரி, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உடன் மனு அனுப்புங்கள். முன்பே மனு அனுப்பியும் இதுவரை நிலப்பட்டா கிடைக்காதிருக்குமாஞல், தங்கள் மாவட்ட



முன்னுள் முப்படை வீரர் வாரியத்தின் ( District Soldier's Sailor's and Airman's Board) தலைவராகப் பணியாற்றும் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து, மனுக் கொடுப்பது நல்லது. தங்கள் மாவட்ட முப்படை வீரர் வாரியத்தின் செயலாளர் அவர்களையும் நேரில் சந்தித்து விவரம் கூறி, அல்லது மனு அனுப்பி உதவி கோரலாம். செயலாளர் அவர்களைக் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

முன்னுள் படைவீரர் நிலையம்,
முத்துக் குமார மூப்பனுர் சாலை'
(தலைமை அஞ்சலகத்திற்கு
எதிரில்), தஞ்சாவூர்—1.

259

# வளம் நிறைந்த வருங்காலம்!



அவனுக்காக
சேமித்து வைக்க
இன்றே வாங்குங்கள்
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

முதல் பரிசு: **ரூ. 1,00,000**
(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**குலுக்கல் நாள் 12-3-1973**
**பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்**

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.





# நிலத்தில் கண்கூடாகக் கண்ட பயன்கள் நிரூபித்துள்ளன

## ஆம்பிதியான் 500-ஈ

தண்டு துளைப்பான்கள், இலைத்தாவிகள், புகையான்கள் மற்றும் உங்கள் நெற்பயிருக்குப் பாதகமான இதர பூச்சிகளை ஆம்பிதியான் ப்ராட் ஸ்பெக்ட்ரம் பூச்சிக் கொல்லியினால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும் என்பதை.

பல நாடுகளில் சோதிக்கப்பட்டுள்ள **ஆம்பிதியான்** செழுமை-யான, லாபகரமான நெற்பயிர் விளைச்சலுக்கு வழி செய்யும் தலைசிறந்த பூச்சிக்கொல்லி.

மிகத்திறன் வாய்ந்த, ப்ராட் ஸ்பெக்ட்ரம் (அகண்டு பரவிச்செயல் புரியும்) பூச்சிக்கொல்லியான **ஆம்பிதியான்**, ஒழிப்பதற்கு மிகக் கடினமான பூச்சிகளையும் திறமையாகக் கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்த பூச்சிக்கொல்லிச் செயல் கொண்டது.

பெரும்பாலான ஆர்கானோஃபாஸ்ஃபேட் பூச்சிக் கொல்லிகளை விட அதிக நேரம் பயிர்களில் தங்கிச் செயல் புரியும் தன்மை கொண்ட **ஆம்பிதியான்** சிக்கனத்துடன் இணைந்த பத்திரத் தன்மையை உறுதி செய்கிறது.




**விவசாயப் பிரிவு,**
**ஸயனமைட் இந்தியா லிமிடெட்**
த.பெ எண் 9109, பம்பாய்-25.

CYANAMID

SISTA'S-CI-481 Tam



# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## • சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை,

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு






# அழகு சிரிக்கும் மெழுகுப் பதுமைகள்

எழிலன்





லண்டன் மாநகருக்கு வரும் எவரும் மெல்போர்ன் வீதியிலுள்ள அந்தப் பெரிய கட்டடத்திற்குள் நுழைந்து பார்க்கத்தவறுவதேயில்லை. உள்ளேசென்று வந்தவர்கள் அங்குக் கண்டவற்றை வாழ்நாள் முழுவதும் மறப்பதுமில்லை. மற்றவர்களிடம் சொல்லத் தவறுவதுமில்லை. அந்தக் கட்டடத்தில் தான் புகழ் பெற்ற மேடம் டூஸட்டின் (Madam Tossaud's) மெழுகுப் பதுமைகள் காட்சியளிக்கின்றன. நிற்பவை மெழுகுப் பதுமைகள்தான். உண்மை உருவங்கள் இல்லையென்பதை அதன் அருகில் எழுதி வைத்திருப்பதைக் கொண்டு தான் உணர முடிகிறது. அவ்வளவு இயற்கையான வடிவம்.

முதலில் நுழைந்தவுடன் காண்பது கிராண்ட் ஹால் (Grand Hall) என்றழைக்கப்படும் புகழ் பெற்றவர்களின் அறை. உலகப் புகழ் பெற்ற உருவங்கள் உள்ள இங்கு முதலிடத்தைப் பெற்றிருப்பது இன்றைய இங்கிலாந்தின் அமைச்சரவை. இதன் சிறப்புப் பகுதி என்னவென்றால் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப் பட்டால், அவர்களது உருவங்கள் உடனடியாக இடம் பெற்றுவிடும். அதை யடுத்து இன்றைய அரசக் குடும்பம். இராணியின் அந்தச் சிரித்த முகம்—அரசிக்கான உடைகள்—அரசியை நேரில் சந்தித்த நிறைவு உண்டாகிறது. அருகில் புதிதாக அமைக்கப்பட்ட இளவரசர் சார்லசின் உருவம். அதைத் தொடர்ந்து வரலாற்றுப் புகழ் பெற்ற இங்கிலாந்து அமைச்சர்களான அட்லி, மாக்மில்லன், சர்ச்சில் ஆகியோர் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார்கள். சர்ச்சில்—அவரது கையிலுள்ள சுருட்டு நுனியில் நெருப்புக் கனன்று கொண்டிருப்பதைக் கூடப் பார்க்க முடிகிறது. இதே வரிசையில், நேரு, கென்னடி ஆகியவர்களோடு, ஜாக்குலின் கருப்பு முகத்திரையிட்டுக் கணவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளும் காட்சி இடம் பெற்றிருக்கிறது. முதன் முதலில் விண்வெளியில் நடந்த ருஷ்யர் காகரின், அமெரிக்கர் கிளன் ஆகியோர் இடம் பெற்றிருக்கும் இப் பகுதியில் விரைவில் வரவிருப்பவர்கள் 'அப்போலோ 17' வீரர்கள். அந்த அறையில் இறுதியில் ஒரு பெஞ்சில் வயதான கிழவி தனக்குக் கொடுக்கப் பட்டுள்ள கைடு புத்தகத்தை நழுவ விட்டுவிட்டு அசதியில் உறங்கிக் கொண்டிருக்கிறார். அவள் புத்தகத்தை எடுத்துத் தட்டி எழுப்ப முயலுகிறோம். அருகிலுள்ள காவலாளி சிரிக்கிறான். அப்பொழுதுதான் உணருகிறோம் அதுவும் பதுமை தான் என்பதை.

அடுத்த அறையில் மார்க்ட்வைன், டிக்கன்ஸ், டூமாய் போன்ற ஆசிரியர்கள் படைத்த அழியாக் காவியங்களின் முக்கியக் காட்சிகள் (Tableaux) இடம் பெற்றுள்ளன. இங்கு எல்லாவற்றையும் விட அனைவரையும் கவரக் கூடியது "தூங்கும் அழகியும் குள்ளர்களும்" தான். அங்கு அந்த அழகி மூச்சு விடுவதைக் கூட நாம் பார்க்க முடிகிறது.

அடுத்த கூடம் 'வாழும் கதாநாயகர்கள்' என்றழைக்கப்படுகிறது. இங்குச் செய்தித் தாள்களில் பிரபலமாக அடிபடுபவர்களின் உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதில் சோபியா லாரன், எலிஸபெத் டெய்லர், அவரது கணவர் ரிச்சர்ட் பாட்டன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இப்பொழுது காட்சியளிப்பவர்கள் பீட்டில்ஸ் இசை மேதைகள். அவர்கள் வாயசைவுடன், இசையையும்கேட்கிறோம். தினசரி பாடும் பாடல்களும் மாறுமாம். அதே அறையில் கடந்த ஆறு தலைமுறை அரச குடும்பத்தினர் வீற்றிருக்கின்றனர். அடேயப்பா அவர்கள் ஆடை ஆபரணங்களில்தான் எவ்வளவு ஆடம்பரம்!

தொடர்ந்து டிரிபால்கர் யுத்தம் நடந்த இடத்திற்குச் செல்கிறோம். ஆம்! இரண்டடுக்குக் கொண்ட நெல்சனின் கொடிக் கப்பலான (H.M.S. Victory) வெற்றியை அப்படியே நிர்மாணித்திருக்கிறார்கள். இதற்கான செலவு 50,000 பவுன்கள். (நெல்சன் உபயோகித்த உண்மையான கப்பலின் மதிப்பைப் போல இரு மடங்கு!) கப்பலின் உள்ளே நுழைகிறோம். வாத்தியங்கள் போர் ஒலி எழுப்புகின்றன. பீரங்கிகள் வெடிக்கின்றன. ஏதேதோ ஓசைகள், வீரர்கள் இங்குமங்கும் ஓடுகின்றனர். கப்பலோடு கப்பல் மோதும் ஓசை. நெருப்புப்பற்றி எரிகிறது. மாலுமிகளின் மரண ஓலம். —ஒரே புகை; சற்று நேரத்திற்குப் பின்னர் கப்பலின் இரண்டாம் தளத்தில் அடிபட்டுக் கிடக்கும் நெரிசலைக் காண்கிறோம்.

பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியவற்றின் படபடக்கும் கொடிகள் பறக்கின்றன. இறுதியாக, சர்ச் மணியின் ஒலியும் (இறந்த அரசருக்கான) வெற்றி ஊதலின் இசையும் இணைந்து கேட்கிறது. "காட்சி முடிந்தது. அடுத்த பகுதிக்குப் போகலாம்" என அறிவிக்கிறார்கள். மெய் சிலிர்த்து நின்ற நாம் நினைவிற்கு வருகிறோம். ஒலி, ஒளி நிகழ்த்திய அற்புதத்தை எண்ணி வியந்தபடி அடுத்துள்ள கொடுமைகளின் கூடத்திற்குள் (Chamber of Horror) நுழைகிறோம். நுழைந்தவுடன் ஒரு காவலாளியைப் பார்க்கிறோம். "இவர் இங்கு 50 ஆண்டுகள் திறம்படப் பணியாற்றினார்; தனது மறைவிற்குப் பின்னர் தனது உருவம் இங்கு இடம் பெற வேண்டும் என்று விரும்பினார். அதனால் நிறுத்தப்பட்டிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். வியக்கிறோம். இருந்தாலும் அந்தக் கண்கள் நம்மையே பார்த்துக்கொண்டிருப்பதுபோல ஒரு பிரமை உண்டாகிறது. உள்ளே உலகின் பல்வேறு கொடுமைகளை அப்படியே சித்திரித்திருக்கிறார்கள். அவற்றில் பயங்கரமாகக் காட்சியளிப்பது புரட்சியின் பிறப்பான— 'கில்லட்டின்' இயந்திரம்தான். வெட்டப்பட்ட தலைகளுடன் வெட்டும் பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும் ரத்தக் கறை நமக்கு அருவருப்பைத் தருகிறது. உலகின் பயங்கரங்களை நிகழ்த்தியவர்கள் என்ற வரிசையில் பலர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

கோட்சேயைக் காணும். ஆஸ் வால்ட் உருவமிருக்கிறது.

இந்தச் சிலைகளை எப்படி அப் படியே இயற்கையாக இவர்க ளால் செய்ய முடிகிறது? 1835-ல் சாதாரணமாகத் துவக்கப் பட்டுப் பெருமளவில் வளர்ந் திருக்கும் இந்த நிறுவனத்தின் அனுபவமே காரணம். ஒவ் வொரு சிலையையும் செய்ய 700 முதல் 1,000 பவுன் வரை செலவழிக்கப்படுகிறது. மூன்று மாதம்—ஓவியர், புகைப்படக் கலை ஞர், சிற்பி, பொம்மை செய் பவர் இவர்களின் கடும் உழைப்பு ஒவ்வொரு சிலைக்குப் பின்னும் நிற்கிறது. பெரும் பாலும் உரு வமாகச் செய்யப்படுபவர்கள் ஸ்டூடியோவிற்கு வந்து விடுவார் கள். வர முடியாதவர்களா யிருந்தால், பல்வேறு கோணங் களில் அவரது படம் எடுக்கப் படுகிறது. அவரது கை, கால் அங்கங்களைக் கவனித்து வர நிறு வனத்திலிருந்து கலைஞர் ஒருவர் அனுப்பப்படுகிறார். அளவுகள் எடுக்கப்படுகின்றன. முதலில் களிமண்ணில் அச்சுக்கள் தயா ரிக்கப்படுகின்றன. இவை பிளாஸ்டர் ஆஃப் பாரிஸில் கெட் டிப்படுத்தப்பட்ட பின்னர் மெழுகு ஊற்றப்படுகிறது. மெழுகு இறுகிய பின் அச்சு பிரிக்கப்பட்டுச் சிலை தயாரா கிறது. புருவங்களுக்கு அணி லின் வால் பயன்படுத்தப்படு கிறது. தலை மயிர்—மனிதத் தலை மயிரே—ஒவ்வொன்றாகத் தைக் கப்படுகிறது. இதற்கான விசே டத் தேர்ச்சி பெற்ற பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கண் கள் கண்ணாடியை உருக்கி அந் தந்த உருவத்திற்கேற்ப விசேட மாகத் தயாரிக்கப்படுகின்றன. உடை விஷயத்தில் மிகுந்த அக் கறை எடுத்துக் கொள்ளப்படு கிறது. ஒவ்வோர் உருவத்திற் கும் உண்மையில் யார் அவர் களுடைய உடையைத் தைக்கிறார் களோ அவர்களின் மூலமே ஏற் பாடு செய்கிறார்கள். உதாரண மாக, டிகால் அவர்களின் உரு வம் அமைக்கிறார்கள் என்றால் அவருடைய தையற்காரர் அழைக்கப்படுகிறார்.

இப்படி, காலம் மாற மாறக் காட்சிகளில் புதுமை நிறைந்து கொண்டேயிருக்கும் இந்த அரிய காட்சியை, தனது வெளி நாட் டுப் பயணத்தின் போது கண்ட மாண்புமிகு அமைச்சர் ராசாராம் அவர்கள், இது போன்று தமிழ் நாட்டிலும் ஒன்று அமைத்து அதன் மூலம் சுற்றுலாப் பயணி களைக் கவரலாம் என்று கருதி னார். அவரது ஆர்வத்தின் பய னாக விளைந்த முயற்சிகளின் பயன் விரைவில் இத்தகைய கண்காட்சி ஒன்று தமிழகத்தில் அமைய விருக்கிறது. இதன் தொடர் பாக இலண்டனிலிருந்து வந்து தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்து திரும்பியிருக்கும் திரு எம். ஹெர்பட் (Mr. M. Herbert) என்ற நிபுணர் அரசுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க விருக்கிறார். திரு ஹெர்பட் இலண்டன் கண் காட்சியில் இயக்குநர்களில் ஒரு வர். திருச்சி, மதுரை, சிதம்பரம் போன்ற இடங்களில் பல கலைஞர் களைச் சந்தித்த இவர் சொல்வது " மெழுகுப் பதுமைகள் வார்ப் பதில் ஒப்பற்ற கலைத் திறன் கொண்ட கலைஞர்கள் பலரைச் சந்தித்தேன்; இவர்கள் உதவி யுடன் நிச்சயமாக இத்தகைய கண்காட்சி ஒன்றை வெற்றிகர மாக நிறுவ முடியும்."

நமக்கு இலக்கியம் வழங்கிய ஈடில்லாக் காட்சிகளையும், வர லாற்றின் மூலம் காலம் கற்பித்த வற்றையும், அழகிய மெழுகுப் பதுமைகளாகக் காணும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை.

## அண்ணா கண்ட எழில் தோற்றம்



கூவம் ஆற்றைச் சீரமைக் கின்ற திட்டம் சென்னையை எழில் நகராக்கும். மற்ற நகரங்களிலெல்லாம் இத் தகைய இயற்கை வசதியை- அதாவது நகருக்கு மத்தியில் ஆறு ஓடுவதை-பெரும் வாய்ப்பாகக் கருதுகிறார்கள்.

தேம்ஸ் நதிக்கு லண்டன் மாநகர மக்கள் அளித்துள்ள முக்கியத்தும் பற்றி-அங்குப் போய் வந்தவர்கள் சொல் லவும், படித்தும் அறிந் திருக்கிறேன். உல்லாச மாக உலாவரத்தக்கப் பூங் காற்று வீசுகின்ற பூங்காக் கள் நிரம்பிய கரைகளை அந்த ஆறு பெற்றிருக்கின் றது. அப்படிப் பட்ட இயற்கை அழகைக்கொண்ட இந்த நதி சென்னை நகரி னுள் ஊடுருவிப் பாய்கி றது.

பார்க்கிற வெளிநாட்டா ரெல்லாம் இப்படி ஓர் ஆறு இந்த ஊரில் இருந்ததா? என்று கேட்கும்படியாக இந்தத் திட்டம் அமைய வேண்டும். பாங்காக் நகரில் கடை வீதிக்கு நடுவே ஒரு வாய்க்கால் வாயைப்பிளந்து கொண்டிருக்கிறது. அதில் வேண்டும்போது மட்டும் கடல் நீரை விட்டு, அலங் காரப் படகுகளில் வியா பாரம் நடத்துகிறார்கள். வியாபார நேரம் முடிந்த தும் தண்ணீரை வடியச் செய்கிறார்கள், இப்படி அங் கெல்லாம் இயற்கை வளத்தை அழகுபடுத்தவும், பயன்படுத்தவும் செய்கிறார் கள்.

அதைப் போல எழிலும் பயனும் ஒருசேர அமைந்த சீரிய திட்டம் கூவம் சீர மைப்புத் திட்டம். இத்திட் டத்தை நிறைவேற்றி சென் னையைச் சிங்காரத் திருநக ராக்குவது நமது கடமை.

(19—9—1967 அன்று கூவம் சீரமைப்புத் திட்டத் தைத் துவக்கிவைத்து பேரறி ஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.)



## வெண்பாப் போட்டி

### 50. வாயார என்றுமே வாழ்த்து

'முன்னதி தெய்வ'த்தை 'மூட'வெள்ளம் கொண்டுசெல்ல
கண்மணிகள் தேம்பிக் கதறியழ—அன்னவர்க்குத்
தாயாகி அன்புடன் 'தத்தெடுத்த' நல்லரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

'நான்' அகந்தை மாய்த்தொழித்து, 'நாம்' பொதுமை போங்கிடத்
தென்கலைத் தொண்டாற்றும் செம்மல்கள்—வான்மழைத்
தாய்போல்வர் தாரணிக்கு; தாம்பெறுவர் மக்களிடம்
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

நோய்தொடிகள் தொற்றாது நோன்பு பலவிருந்தே
ஆய்கலைகள் தோற்றுவித்தும் அன்பூட்டித்—தோயுநலச்
சேய்வாழச் செந்நீரைச் சேர்த்தியும் தாய்மாரை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் பூங்குழலி, பொருளூர்.

"வெள்ளக் கொடுமையினால் விடிழந்தோம்' என்றழுத
வள்ளி மயிலே! கவலையில்லை—அள்ளியள்ளித்
தாயாகித் தந்து துயர்தணித்த நம்மரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், திருச்சி-4.

சேயாகப் பெற்றெடுத்துச் சீராட்டி ஆளாக்க
ஓயாத துன்பம் உவந்தேற்கும்—தாயமனத்
தாயாராம் தெய்வத்தின் தாள்பணிந்து நெஞ்சிருத்தி
வாயார என்றுமே வாழ்த்து.

—நெற்குப்பை கஜி. கணேசன், காரைக்குடி-1.

பஞ்சம் அறுப்போம்! பசியொழிப்போம்! பார்மிசை
வெஞ்சமர் போக்கிநாம் வெற்றிகொள்வோம்—துஞ்சவரும்
நோயோ துயரோ நுழையாத பொன்னுலை
வாயார என்றுமே வாழ்த்து!

—சிவ. இருட்டிணன், கனியூர்.

ஓராண்டு கூட உடல்தழுவி வாழாமல்
சீராண்ட நற்கணவன் சென்றிட்டான்—நார்ஆனுள்
தேயாத ஒளியத்தைத் தேர்ந்தொருவன் கைப்பிடித்தான்
வாயார என்றுமே வாழ்த்து!

— புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

தாய்மொழியைத் தாயகத்தைத் தம்முயிர்போல் பேணியவர்
காய்மலராய் ஆகாமல் கனியமாய்—ஆய்குழலே!
மாயா வரலாற்றில் வாழ்கின்ற அண்ணாவை
வாயார என்றுமே வாழ்த்து.

—எழில்வேந்தன், சென்னை-28.

நாட்டில் உழைத்துழைத்து நைந்திடும் மக்களின்
வாட்டமதை நீக்கிடவே மாண்பாகக்—கூட்டோடு
தாயதத் தொண்டையே சோர்வின்றிச் செய்பவரை
வாயார என்றுமே வாழ்த்து.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு வி. ஆர். துரை,
கவிநாயக்கன்பட்டி (அஞ்சல்),
(வழி) திருப்பத்தூர்,
வ. ஆ. மாவட்டம்.

அற்றூர்க்கும் வாழ்வுதரும் அண்ணாவின் நற்கொள்கை
பெற்றிருக்கும் ஆட்சிதனைப் பெற்றோமே—பொற்றொடியே !
தாய்போலக் காக்கும் தமிழரசை நெஞ்சார
வாயார என்றுமே வாழ்த்து.

—அமராவதியான், அரக்கோணம்.

மூலே முடுக்கெல்லாம் முன்னோர் இலக்கியத்தின்
ஓலை திரட்டி உயர்பதிப்பு—வேலையினை
ஓயாது செய்த உவேசா பெரியாரை
வாயார என்றுமே வாழ்த்து.

—விசாலாட்சி, மதுரை–11.

தாயாகத் தோன்றித் தரணியே போற்றுகின்ற
சேயாக மாற்றச் செயல்புரிந்தும்—சேயிழைபூண்
நாயகியாய் வந்து நலம்பொழியும் பெண்குலத்தை
வாயார என்றுமே வாழ்த்து.

—வித்துவான் சா. மு. இராசமாணிக்கம், பெங்களூர்–5.

தாயைத் தமிழைத் தகைசான்ற தாய்நாட்டைத்
தூய உளங்கொண்ட தொண்டரை—நேயமுடன்
நாய்போலும் நன்றி மறவாத நல்லோரை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் ந. புவியரசு, களக்காடு.

நாட்டின் நலம்பேணும் நல்லோரை ; வள்ளுவன்சீர்
ஏட்டின் வழிநடக்கும் ஏந்தலை ;—வீட்டின்கண்
வீயா விருந்தோம்பும் இல்லறத்தோர் தம்மையே
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் அ. சுந்தரேசன், சுந்தரம்பள்ளி.

வன்முறையைத் தூண்டிடும் வஞ்சகர் கூட்டத்தைப்
பன்முறைகள் வேண்டியதும் பண்பாகும்—அன்னையவள்
சேயாகப் பெற்றெடுத்த செந்தமிழ்க் காவலனை
வாயார என்றுமே வாழ்த்து.

—இரா. பெரியசாமி, அருப்புக்கோட்டை.

ஓங்கி வளர்ந்த உயர்தனிச் செம்மொழிகாண்
பாங்கி னுயர்ந்தநம் பைந்தமிழே !—தேங்குசுவை
தேயாச் செழுந்தமிழைத் தேமதுரத் தாய்மொழியை
வாயார என்றுமே வாழ்த்து.

—கா. பி. தங்கவேலன், ஆமூர்.

மக்கள் உணவுபெற மல்கிடும் நோயகல
சிக்கலைப் போக்கிச் செழுமையுற—எக்கணமும்
ஓயாது நாட்டிற் குழைத்திடும் உத்தமரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பழ. கந்தசாமி, சத்திரப்பட்டி.

உன்னால் முடியாத ஒன்றை உலகுய்யப்
பன்னாளும் செய்வாரைப் பார்த்திட்டால்—அன்னாரைத்
தாயாக எண்ணித் தலைதாழ நீவணங்கி
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

பாடுபடும் நல்லுழவர் பாட்டாளி பல்கலைஞர்
நாடுதனைப் பேணிடும் நல்வீரர்—பீடுடைய
தாயார் தமிழ்ப்புலவர் தக்கார் இவர்களை நீ
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் முத்து. சண்முகன், சிறுகுடி.

பட்டா வழங்குகின்ற பண்புள்ள ஆட்சியைக்
கட்டாயம் கண்போலக் காப்பதுடன்—கெட்டழியும்
தீயா ருடன்சேர்ந்து செய்ந்நன்றி கொல்லாமல்
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

தன்னலமே நோக்காது தாரணியில் வாழுயிர்கள்
நன்மை பெறயெண்ணி நாளும்வாழ்—பொன்மனமார்
தூய அறிஞரை தோழ!நீ பின்பற்றி
வாயார என்றுமே வாழ்த்து.

—முருகவேள் நம்பி, உலகம்பட்டி.

கல்வி புகட்டும் கனிவான ஆசிரியர்
பல்தொழில் செய்கின்ற பாட்டாளி—நல்லுணவுக்
கோயாது உழைக்கும் உழவர்இம் மூவரையும்
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் இ. சூசைமாணிக்கம், சிறுகுடி.

நோயாளி மக்களுக்கும், நொந்துகெட்ட ஏழைகட்கும்,
தூயவராம் தொல்குடி மக்களுக்கும்—நேயமுடன்
தாயாகி என்றென்றும் தொண்டாற்றும் தக்காரை
வாயார என்றுமே வாழ்த்து.

—ஆ. செல்லபாண்டியன், அருகாவூர்.

மானுக்கு நீருண்டு மேலோர்கள் போற்றுகின்ற
வானுக்கு மதியுண்டு வையத்தில்,—ஊனுருகும்
ஓயாத் தொழுநோயர்க் குற்ற அரசுண்டு
வாயார என்றுமே வாழ்த்து.

—எஸ். திருநாவுக்கரசு, தூத்துக்குடி–2.

தன்னுயிர்க்கும் மேலாகத் தாய்த்தமிழை எண்ணித்தம்
இன்னுயிரைச் செந்தீக் கிரைகொடுத்தார்—மன்னுலகில்
மாயாப் புகழ்பெற்ற மாத்தமிழ் ஏறுகளை
வாயார என்றுமே வாழ்த்து.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

நல்லரசு நாடுகின்ற நன்மைமிகு திட்டமுடன்
பல்வளமும் பாங்குற ஏருழவும்—சொல்லவந்தே
ஆய்ந்தறிய நற்பணிகள் ஆற்றும் தமிழரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—பொ. வெற்றிவேலன், புன்னாக்கவுண்டன்புதூர்.

சூழும் வறுமையும் சுற்றிவரும் பொய்ம்மையும்
பாழும் மடமையும் பஞ்சிலாகும்—வீழவே
ஓயாது மக்கட் குழைக்கின்ற உத்தமரை
வாயார என்றுமே வாழ்த்து.

—சரஸ்வதி மணாளன், மயிலாப்பூர்.

கள்ளமில்லா நெஞ்சம் கடமைவழு வாப்பண்பு
தெள்ளுதமிழ் ஆற்றலொடு தீரமிகும்—உள்ளத்தால்
ஓயா(து) உழைக்கும் உயர்குணம் கொண்டவரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பா. பா. சோமநாதன், பட்டினப்பாக்கம்.

வான்புகழ் நாட்டிய வள்ளுவனார் பாப்படி
ஈன்ற பொழுதினும்தாய் இன்புறச்—சான்றோனாய்
மாயிரு ஞாலத்தில் வாழ்பவனே வான்மதியே
வாயார என்றுமே வாழ்த்து.

—த. வான்மதி, முதலிப்பட்டி.

நாளுக் கொருவேளை நல்ல உணவின்றிக்
காலைமுதல் மாலைவரை காய்வெயிலில்—நாளெல்லாம்
ஓயா துழைக்கும் உழவர்கள் வாழ்கவென்று
வாயார என்றுமே வாழ்த்து.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி.

தந்தை மொழியாய்த் தரணியில் மாந்தர்தம்
சொத்தைப் பெருக்கமனச் சுத்தமின்றி—நித்தமும்
பேயாய் அலைதல் பெரும்பிழை என்றவரை
வாயார என்றுமே வாழ்த்து.

—சு. தருமன், மேலாண்மறைநாடு.

இன்பம் அடைதற்கே ஏங்கும் மனமே !உன்
துன்பம் ஒழிதற்குச் சொல்லுகின்றேன்—அன்பார்ந்த
தூயார்கள் போற்றுகின்ற தொன்மைத் தமிழ்த்தாயை
வாயார என்றுமே வாழ்த்து.

—நா. திருநாவுக்கரசு, மேலச்சிவபுரி.

வெள்ளக் கொடுமையால் வீடிழந்த மக்கட்கே
அள்ளிக் கொடுத்தன்பால் ஆதரித்துக்—கிள்ளையே !
ஓயாமல் தொண்டாற்றும் ஒப்பிலா நம்மரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

நாடும் மொழியும் நலமுற, ஏழைதன்
கேடும் வறுமையும் கெட்டொழியப்—பாடுபட்டு
ஓயா துழைக்கின்ற உத்தமரைப் பாராட்டி
வாயார என்றுமே வாழ்த்து.

—இரா. நாகலிங்கம், வயலோகம்.

265

நெஞ்சொடியப் பாடுபட்டும் நீங்கா வறுமையினால்
பஞ்சையராய் வாழ்வதுவோ பாருலகில் ?—வஞ்சமிலாத்
தாயாம் சமதருமத் தத்துவத்தை வென்தோழா
வாயார என்றுமே வாழ்த்து.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

சொன்னசொல் மாறுதார் சூதறிய மாட்டாதார்
அன்னமிட்டுக் காக்கும் அருங்குணத்தார்—தன்னுயிரைத்
தாய்நாட்டிற் கொப்படைக்கும் தக்கார்கள் யாவரையும்
வாயார என்றுமே வாழ்த்து.

—ச. வைத்திலிங்கம், சித்தாய்மூர்.

நெடுநேரம் ஆளதனால் நேரிழையுன் நெஞ்சம்
கடுங்கோபம் கொள்ளுவதோ ? கண்ணே !—நடுநின்றே
ஓயாது மாணவர்க்கே உழைக்குமிவ் வாசானை
வாயார என்றுமே வாழ்த்து.

—சி. திருநாவுக்கரசு, மணக்குடி.

நாட்டாலே காவியத்தை ஆக்கிடும் பாவலர்க்கும்
பாட்டுக்குச் சேவைசெயும் நல்லார்க்கும்—நாட்டமுடன்
ஓயா(து) உழைத்திடுவிஞ் ஞானிக்குஞ் செப்புக
வாயார என்றுமே வாழ்த்து.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

பசியென்று வந்தார்க்குப் பாலமுதம் தந்தே
கசிந்துருகும் நன்மனத்தால் கண்ணே—புசியென்று
வையாது வாய்நிறைய வார்ப்பாரை இவ்வுலகில்
வாயார என்றுமே வாழ்த்து.

—அருணை பூவனா. தினதயாள், திருவண்ணாமலை.

நாட்டின் நலம்நாடி நாட்டமுடன் தம்முயிரை
வீட்டி விடுதலையை வெற்றியுடன்—ஈட்டியநல்
தாய்போலும் சான்றோரைத் தாரணியே நீநினைந்து
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர்.

ஓயா துழைக்கின்ற உத்தமரை, நாளெல்லாம்
தேயா மனம்படைத்த தெள்ளியரை—வையாதே !
சேயாக நாமிருக்கச் செய்கின்ற அன்னுரை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

ஏழைசொல் அம்பலம் ஏறிற்றே, இந்நாளில் !
வாழ இடம்கேட்டு வாழ்கின்றார்—ஏழைக்கே
தூயதோர் தொண்டாற்றும் சொந்தத் தமிழரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—மலை. மா. ஆறுமுகம், படப்பை.

நாட்டின் விடுதலைக்கு நாளும் உழைத்தவர்கள்
கேட்டைக் களையக் கிளர்ந்தெழுந்தோர்—வாட்டமுடன்
சாயும் மனிதகுலம் தானுயரச் செய்தோரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பெ. தியாகராசன், குன்னம்.

பட்டங்கள் தேறிப் பலர்போற்ற வாழ்கின்றோம் !
குட்டும் பிரம்படியும் கொஞ்சமா—பட்டிருப்போம் ?
ஓயா தரிச்சுவடி ஓதியஅவ் வாசானை
வாயார என்றுமே வாழ்த்து.

—என். சுந்தரம், வெண்பாவூர்.

முக்கழகம் கண்டுவந்து முத்தமிழைப் பாடிநின்ற
முக்கடலை ஆண்டுவந்த மூவேந்தை—முக்கனியை,
வாயூறும் முப்பாலை, வான்புகழ்சேர் தாயகத்தை,
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் பூங்குன்றன், பொருளூர்.

ஈன்றாளை மற்றும் இடுக்கண் களைந்தோரைச்
சான்றோனாய் ஆக்கிய தந்தையை,—ஆன்றமைந்த
தூயபேர் ஆசானைத் தொண்டாற்றும் மாந்தரை
வாயார என்றுமே வாழ்த்து.

—ப. குப்புசாமி, திருச்சி-4.

தன்னுயிரைத் தந்தேனும் தான்பெற்ற செல்வத்தை
இன்பமுற வைக்கும் இதயமுள்ள—அன்புநிறைத்
தாயாரைப் பேணித் தணியாத பாசமுடன்
வாயார என்றுமே வாழ்த்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

இன்பத்தைத் தந்திடுவாள் இன்னமுதும் ஊட்டிடுவாள்
துன்பத்தில் ஆறுதலைச் சொல்லிடுவாள்—அன்பினால்
ஓயா துழைத்திடுவாள் நன்மனைவி அன்னவளை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் செந்தமிழ்க்கிழார், குமாரபாளையம்.

ஆல்போல் தழைத்தே அறுகுபோல் வேரோடிப்
பால்போல் மனத்தைப் படைத்தார் !செங்—கோல்கொண்டார்
தேயாத வானிலவு ! செந்தமிழர் நல்வாழ்வை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் செ. பெ. கோவிந்தசாமி, குன்றைவலம்.

சிங்கத் தமிழா ! சிறப்புணர்த்தும் நூல்பலவும்
தங்க மொழியாலே தாமளித்துப்—பங்கமின்றித்
ஓயாத நற்றொண்டால் ஓங்குபுகழ் கொண்டாரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பசுமலை வீர. முருகேசன், தருமபுரி.

என்னை அடிக்க எலும்பொடியும் ; என்மகன்கை
இன்னும் இருக்கும் இரும்பாக ;—என்னென்பேன்
'ஓயா துழைப்'பென் றுளமுருகும் தந்தைக்கு
வாயார என்றுமே வாழ்த்து.

—சி. பி. அரங்கநாதன், நுங்கம்பாக்கம்.



# தமிழகம் முழுதும் நிலநீர் ஆய்வுப் பணிகள்

நிலத்தினடியில் உள்ள நீர் வளங்களைப் பயன்படுத்துவதற்கு முறையான, அடிப்படையான, விரிவான, அறிவியல் ரீதியான ஆய்வுகளை மேற் கொள்வதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே சிறப்பிடம் வகிக்கின்றது. ஐ.நா. சபையில் வளர்ச்சித் திட்டங்களின் கீழ் இப்பணியை மேற்கொண்ட மாநிலங்களில் தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது.

ஐ.நா. வல்லுநர்களின் மேற்பார்வையில் இப்பணிகளில் நவீன முறைகளையும், உத்திகளையும் கையாள்வதில் மாநிலம் அடைந்துள்ள முன்னேற்றம், உலகின் மிக முன்னேற்றமடைந்த நாடுகளின் பணிகளுக்கு நிகரானது ஆகும்.

மாநிலத்தில் 1966-லிருந்து 1972 வரையில் நான்கு தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் ( Sedimentary areas ) விஞ்ஞானப் பூர்வமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நிலத் தினடி நீர் வளங்கள் இருப்பதைக் காட்டும் கூறுகள் கண்டு பிடிக்கப்பட்டு, அவற்றின் பரப்பு, ஆழம் ஆகியவை குறிக்கப் பட்டுள்ளன.

தமிழக நிலநீர் இயக்கம் தனது நிருவாகத்தில் ஒன்பது பொறி யியல் பகுதிகளைக் கொண்டுள்ளது. மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் ஆய்வுப் பணிகளை இது மேற்கொண்டுள்ளது.

மாநிலத்தின் நிலத்தடி நீர்வளத்தை விஞ்ஞான பூர்வ முறை யில் கண்டுபிடித்துக் கணக்கிடுவதற்கென ரூ. 11 கோடி செலவாகும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, நிதி உதவிக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழகம் நீர் வளத்தில் பற்றாக் குறையான மாநிலம். ஆற்று நீர் வளங்கள் அநேகமாக அனைத்தையும் இங்குப்பயன்படுத்தியாகி விட்டது. மாநிலத்தில் சராசரி ஒரு நபருக்குக் கிடைக்கும் நீர் வசதியின் அளவு 0·02 மில்லியன் கன அடி. அனைத்திந்தியாவில் இந்தச் சராசரி 0·14 மில்லியன் கன அடியாக உள்ளது.

மாநிலத்தில் சாகுபடி செய்யப்படும் மொத்த நிலப்பரப்பு 73·81 இலட்சம் ஹெக்டேர். சாகுபடி நிலம் நிகரப்பரப்பு 61·65 இலட்சம் ஹெக்டேர். இதில் பாசன வசதி உள்ள நிலம் 25·9 இலட்சம் ஹெக்டேர்தான். அதாவது பயிராகும் நிகர நிலப்பரப்பில் 42 சத விகிதம் தான் பாசன வசதி பெற்றுள்ளது. பாசன வசதி பெற்றுள்ள 25·9 இலட்சம் ஹெக்டேரில் 69 சத விகித நிலங்கள் கால்வாய்ப் பாசனமும், 31 சதவிகித நிலங்கள் பாசனக் கிணறு, குழாய்க் கிணறு முதலியன மூலமும் இவ் வசதி பெற்றுள்ளன. பயிராகும் நிலங்களில் கணிசமான அளவு நிலங்கள் பாசன வசதியை எதிர் நோக்கி நிற்கின்றன. சரியான மழை இல்லாவிட்டால் ஏரிப் பாசனப் பகுதிகள் வறண்டு விடும். பருவ மழை தவறி விடுகின்ற நிலையும், உரிய காலத்தில் மழை பெய்யாத நிலையும் இருந்து வருகின்றது. இவை அனைத்துக்கும் ஈடு கொடுக்கக் கூடிய ஒரு வழி, நிலத்தினடியில் உள்ள நீரைப் பயன்படுத்துவதேயாகும்.

நீர் வளத்தில் பற்றாக்குறையான நிலைமை இருந்தும் பசுமைப் புரட்சியில் மாநிலம் எடுத்துக் காட்டான வெற்றி கண்டிருக்கிறது என்றால், வேறு திருந்திய முறைகளுடன், குறைந்த நீர் வளத்தை மதி நுட்பத்துடன் பயன்படுத்தியதும் அதற்கு முக்கியக் காரணம் ஆகும். பசுமைப் புரட்சியில் அடுத்த கட்டமாக மிகு பசுமைப் புரட்சி, பசுமைமயப் புரட்சி ஆகியவைகளைக் காண வேண்டியவர்களாக இருக்கின்றோம். தொழில் தேவைகளுக்கும், மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் அதிகமான அளவில் நீர் வேண்டியிருக்கிறது.

## நீர் கிடைக்கும் வழிகள்

பொதுவாக நீர் வளம் கிடைப்பதற்குரிய வழிகள் நான்கு. அவை : ஆறுகள், ஏரிகள், ஓடைகள் முதலியவற்றில் உள்ள நீர், இதனை மேற்பரப்பு நீர் எனலாம். இரண்டாவது நிலத்தடி நீர்; மூன்றாவது கடல் நீர். நான்காவது நீர்த் துளிகள் கொண்ட மேகம்.

கடல் நீரைப் பயன்படுத்துவது என்றால் அதன் உப்பை அகற்றியாக வேண்டும். மேகம் வேண்டும் போது மழையாகப் பொழிய வேண்டுமென்றால் செயற்கை முறையில் மழை பெய்விக்கச் செய்ய வேண்டும். இவை பொருளாதார ரீதியில் கட்டுபடியாகக் கூடிய செயல் முறைகள் ஆவதற்கு இன்னும் எவ்வளவோ காலமும், தொழில் நுட்ப முன்னேற்றமும் ஏற்பட்டாக வேண்டும். எனவே, இப்போதைக்கு மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் இவை இரண்டும்தான் நமக்கு உள்ள வழிகள். இவற்றுள் மேற்பரப்பு நீர் வளங்களில் 94 சத விகிதம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, நீர் வளத்தைப் பெருக்க எஞ்சி உள்ள ஒரே வழி நிலத்தடி

நீரைப் பயன் படுத்துவதுதான். தூய நீர் வளத்தில் 97 சத விகிதம் நிலத்தின் அடியில் தான் உள்ளது. ஓடைகள், ஏரிகள் போன்றவைகளில் உள்ள நீர் வளம் 3 சதவிகிதம்தான். ஆனல், நிலத்தடி நீர்வளம் முழுவதையும் பயன்படுத்துவது என்பது இயலாது. நிலவியல் கூறுபாடுகள் காரணமாக, ஒரு குறிப்பிட்ட சதவிகித நீரைத்தான் விசையேற்றங்கள் மூலம் கொண்டு வர முடியும்.

### 11 இலட்சம் கிணறுகள்

நில நீரைப் பயன்படுத்துவதில் தமிழகத்தில் ஏற்கெனவே 11 இலட்சம் கிணறுகள் இருக்கின்றன. விவசாயத்துக்கும் மற்றும் பல்வேறு தேவைகளுக்கும் இவை பயன்பட்டு வருகின்றன. மிகுந்த அளவில் நீரை எடுத்துக் கொண்டே இருப்பதால் பல பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் ஆண்டுக்கு ஆண்டு கீழே போய்க் கொண்டிருக்கிறது. எனவே, மாநிலத்தில் கிடைக்கக் கூடிய நில நீர் வளத்தை மிகுந்த அளவு செழுமை காணும் வண்ணம் பயன்படுத்திக் கொள்வதற்கு முறையான ஆய்வு அவசியமாகின்றது.

நிலத்தடி நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழக அரசு, 1970 நவம்பரிலேயே நிலநீர் இயக்கத்தை ஏற்படுத்தியது. மேற்கொண்டு பொருளாதார மேம்பாட்டுக்காக, மாநிலத்தின் நீர் வளம் முழுவதையும் முறையாக ஆய்வு செய்ய வேண்டும் என்பதே இந்த அமைப்பை ஏற்படுத்தியதன் நோக்கமாகும்.




ஒன்பது பொறியியல் கோட்டங்களைக் கொண்டு இந்த இயக்கம், ஒன்பது மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. மாநிலத்தில் கடந்த 50 ஆண்டுகளில் பெய்த மழை அளவு பற்றிய குறிப்புகள் தயாரிக்கப் பட்டுள்ளன. இதனைக் கொண்டு, நிலத்தடி நீர் வளத்தைக் கணக்கிட இயலும். தட்ப வெப்ப நிலை, புழுக்க நிலை, காற்றுவேகம், வெய்யில் காயும் நேரம் ஆகிய குறிப்புகளும் தயாரிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் நீராழிகள் (Water Sheds) தெரிந்தெடுக்கப்பட்டு. ஓடிவிடும் நீர், ஆவியாகப் போய் விடும் நீர் அளவு, இதர இழப்புகள் ஆகியவை சளைக் கணிக்கக் கருவிகள் பொருத்தப் பட்டுள்ளன.



### ஆய்வுக் கிணறுகள்

ஆய்வுக்காக மாநிலம் முழுதிலுமாக 1,620 கிணறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நீர் மட்ட ஏற்ற இறக்க நிலைகள் குறித்து மாதந்தோறும் கணக்கெடுக்கப்படுகிறது. நீரின் தன்மை குறித்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஆய்வு செய்யப்படுகிறது. நிலத்தடி நீர் சுரவை வரைபடங்களைத் தயாரிப்பதற்கு, இந்த அளவீடுகள் இன்றியமையாதவை ஆகும். நில இயல், மண்-பாதைப் படிவ அமைப்புகள் ஆகியனவும் ஆராயப் படுகின்றன. இதுவரை 250 ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு, அதன் முடிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

நிலநீர் இயக்கத்தின் மற்ற சாதனைகளும் குறிப்பிடத் தக்கவை. விவசாய மறு நிதிக் கழகம், அனைத்து நாடுகள் வளர்ச்சிச் சங்கத் திட்டம் ஆகியவற்றின் பணிகளில், நிலநீர் இயக்கம் தரும் தொழில் நுட்பக் கருத்துக்கள் அடிப்படை ஆதாரமாகக் கொள்ளப் படுகின்றன. மாநில நில வள வங்கி தான் மேற்கொள்ளும் திட்டங்களின் சாத்தியக் கூறுகள் குறித்து இந்த இயக்கத்தின் கருத்துக்களைக் கோரி வருகின்றது.

### இயந்திரக் குடைவுத் திட்டம்

நிலத்தடி நீர் வளங்களை ஆராய்ந்தறிவதற்காக, மாநிலம் முழுதுக்குமாக இயந்திரக் குடைவுத் திட்டம் (Drilling Programme) தயாரிக்கப் பட்டுள்ளது. ஆய்வு முறையில் 360 இடங்களில் இயந்திரக் குடைவுத் துளைகள் போடப் படும். இதுவரை 69 இடங்களில் இயந்திரக் குடைவுத் துளையிடும் வேலை நிறைவு பெற்றுள்ளது. சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையப் பகுதியில் நீர் ஆய்வுக்காக 250 துளைகள் போடப்பட்டன. நில நீர் ஆய்வு பற்றிய முக்கியமான பணியோடு, அரசு நிறுவனங்கள் அரசுச் சார்பு நிறுவனங்கள் பலவும், தங்கள் நீர் வசதித் திட்டங்களில் சிக்கல்களைத் தீர்க்க, இந்த இயக்கத்தின் உதவியை நாடுகின்றன. முடிந்த அளவு அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, உதவி அளிக்கப்பட்டது.

நிலத்தடி நீரைப் பயன் படுத்துவதில், அணைகள், தேக்கங்கள் கட்டுவது போன்ற பெரிய செலவிலான திட்டங்கள் தேவைப்படுவது இல்லை. நிலத்தடிநீர் ஆவியாகப் போய், சேதம் ஏற்படுவது குறைவு என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

### நிலவியல் அமைப்பு

நில நீர் ஆய்வக் கண்ணோட்டத்தில் தமிழகத்தின் நில இயல் அமைப்பை இரண்டு பெரும் பகுப்புகளாகப் பிரித்துக் கொள்ளலாம். 1. கரையோரச் சமவெளிகள், 2. மேற்கு மலையோரப் பகுதிகள். மேற்குப் பகுதியில் உள்ள பெரும்பான்மையான நிலம், அடியில் பாறைகளைக் கொண்டது.

மாநிலத்தின் தட்ப வெப்ப நிலையைப் பொறுத்த வரை பொதுவாக உயர்ந்த அளவு வெப்பம் 43 சென்டிகிரேடுக்கு மேல் போவதில்லை. குறைந்த அளவு தட்ப நிலை 180 சென்டிகிரேடுக்குக் கீழே இறங்குவதில்லை. ஜூனிலிருந்து செப்டம்பர் வரை தென் மேற்குப் பருவக் காற்று மூலமும் அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை வட கிழக்குப் பருவக் காற்று மூலமும் மாநிலம் மழைபெறுகின்றது. மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகள் வடகிழக்குப் பருவக் காற்று மூலம் மழை பெறுகின்றன. மாநிலம் முழுவதிலுமாக சராசரி மழை அளவு 945 மில்லி மீட்டர். இதில் கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் 500 லிருந்து 1,000 மில்லி மீட்டர் வரை குறைந்த அளவு மழையே பெறுகின்றன. நீலகிரி மாவட்டம் 1,750 மில்லி மீட்டர் வரை மழை பெறுகின்றது. ஒரு ஆண்டில் மழை பெய்யும் மொத்த நாட்கள் சுமார் 50.

### அடி நீர் வளத்தின் அளவு

இந்திய நாடு முழுவதிலும், தமிழகப் பகுதியிலும் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீர் வளங்கள் குறித்துச் சில குறிப்புகள் தயாரிக்கப் பெற்றுள்ளன. மண் கூறுபாடுகளுக்கு ஏற்ப, மழை நீர் ஈரம் ஊடுருவி உள்ளே செல்லக் கூடிய அளவுகளை அனுமானித்து இது மதிப்பிடப்பட்டது. இந்திய நாடு முழுதிலுமாக மேலே எடுத்துக் கொண்டு வரப்படக்கூடிய நிலத்தடி நீரின் அளவு ஆண்டுக்கு சுமார் 3,000 இலட்சம் ஏக்கர் அடி என்று டாக்டர் கே.எல். ராவ், கணக்கிட்டிருக்கிறார். டாக்டர் கே.வி. ராகவராவ், டி.எஸ். ராஜு மற்றும் வி. ரமேசன் ஆகியோர் இதனை ஆண்டுக்கு 2,130 இலட்சம் ஏக்கர் அடி என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் தற்சமயம் 11 இலட்சத்துக்கு மேற்பட்ட கிணறுகளும் சில ஆயிரம் குழாய்க் கிணறுகளும் ஆண்டுக்கு 70 இலட்சம் ஏக்கர் அடி நீரைத் தந்து வருகின்றன. மாநிலத்

தில் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீர் வளம் 120 இலட்சம் ஏக்கர் அடி என்பது மிகைப்படுத்தப் படாத சாதாரண மதிப்பீடு ஆகும். மாவட்ட வாரியாக பாசனக் கிணறுகள், மின்சார பம்பு செட்டு வசதி உள்ள கிணறுகள் விவரம் தனி அட்டவணையிலும் படத்திலும் தரப் பட்டுள்ளன.

### நிலநீர் விதிகள்

விவசாயத்துக்காகவும், மற்றத் தொழில் தேவைகளுக்காகவும் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இந்த நீர் வளத்தைச் சரியான முறையிலும் வகையாகவும் பயன்படுத்த நில நீர் குறித்துச் சட்டம் இயற்றுவதும் அவசியமாகிறது. அப்படிச் சட்டமியற்றும் போது கீழ்க்கண்ட அம்சங்கள் கவனிக்கப்பெறும்.

கிணறுகளின் நீர் ஒன்றிலிருந்து மற்றொன்றில் சுரந்து வடிந்துவிடா வண்ணம், கிணறுகளுக்கிடையே போதிய இடைவெளி விடுதல்.

மிகுந்த அளவில் நீரைப் பயன்படுத்திவிடாமல், விசையேற்றத்தின் மூலம் நீர் இறைக்கும் நேரம், நீர் அளவு ஆகியவைகளுக்கு நேர வரையறைகள் விதித்தல்.

தூய நீர், தூய்மையற்ற நீர் கலப்படம் ஏற்பட்டு விடா வண்ணம், கிணற்றுக் கட்டுமானங்கள் ஒழுங்கான முறையில் அமைத்தல்.

கழிவு நீர் கலப்படத்தைத் தடுக்கக் கழிவு நீர்ப் போக்கினைக் கட்டுப்படுத்தல் ;

இவ்வகையில் சட்டம் இயற்று முன், மக்கள் இதன் முக்கியத்துவத்தை உணரும்படி செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் மற்றொன்றையும் மனத்தில் கொள்ள வேண்டும். பெய்யும் மழை, நிலத்தின் ஈர ஈர்ப்புச் சக்தி மண்-கல், படிவங்களின் அமைப்பு, படுகைப் பகுதிகள் ஆகியவைகளுக்கு ஏற்பத்தான் பெரும்பாலும் நிலத்தின் அடி நீர் வளமும் நீர் சுரவையும் நீர்க்கால்களும் அமையும். மற்றப்படி பாதாள கங்கையோ அள்ள அள்ளக் குறையாத கடலோ நிலத்தின் அடியில் இருப்பதாகக் கருதலாகாது. நிலத்தினடியில் நீர் நிறையத் தான் உள்ளது. ஆனால் வரம்புக்கு உட்பட்டதே. நில நீர்ப் பணியில் விஞ்ஞானப் பூர்வ அணுகு முறைகள் முக்கியமானவை. ஆய்வுப் பணிகள் மிக இன்றியமையாதவை .

இ. க. ரா.

### தமிழ்நாட்டில் பாசனக் கிணறுகள் பற்றிய விவரம்

| மாவட்டம். | | மொத்தம் உள்ள கிணறுகள். | மின்சார பம்புசெட்டு வசதி பெற்றவை. | மின்சார பம்பு செட்டு வசதி இல்லாதவை. |
|---|---|---|---|---|
| செங்கற்பட்டு | .. | 67,363 | 50,973 | 16,390 |
| கோயம்புத்தூர் | .. | 146,831 | 107,461 | 39,370 |
| தருமபுரி | .. | 40,689 | 19,433 | 21,256 |
| கன்னியாகுமரி | .. | 700 | 655 | 5 |
| மதுரை .. | .. | 135,473 | 58,807 | 76,666 |
| வட ஆர்க்காடு | .. | 246,052 | 108,275 | 137,777 |
| இராமநாதபுரம் | .. | 39,975 | 26,545 | 13,430 |
| நீலகிரி .. | .. | 182 | 163 | 19 |
| சேலம் .. | .. | 159,897 | 70,244 | 89,653 |
| தென் ஆர்க்காடு | | 130,657 | 59,512 | 71,145 |
| தஞ்சாவூர் .. | .. | 35,676 | 8,087 | 27,589 |
| திருச்சிராப்பள்ளி | .. | 134,302 | 47,741 | 86,561 |
| திருநெல்வேலி | .. | 58,844 | 36,617 | 22,128 |
| மொத்தம் | .. | 1,196,641 | 594,612 | 6,02,029 |

### மின்னொளி பெறும் கிராமங்கள்

மத்திய கிராம மின்வசதிக் கழகத்தின் 17-வது திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படத் துவங்கும். இதன் மூலம் அணிகரன் சத்திரத் தொகுதி, சீர்காழி வட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த 41 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்படும். இத்திட்டம் 5 ஆண்டுகளில் அமல் நடத்தப்படும். இதன் மூலம் நீர்ப்பாசனத்துக்குத் தேவையான 550 பம்பு செட்டுகளை இயக்குவதற்கான மின்சக்தி, 64 சிறு தொழில்கள் நடைபெறுவதற்கான மின்சாரம், 1,770 வீதி விளக்குகள் எரிவதற்குத் தேவையான மின்சக்தி ஆகியவை கிடைப்பதுடன் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களின் உபயோகத்திற்காக 4,500 மின்சார இணைப்புகளும் வழங்கப்படும்.

கிராம மின் வசதிக் கழகம், தஞ்சாவூர் மின்வசதித் திட்டத்திற்குச் சுமார் 24 இலட்சம் ரூபாய் கடனுதவி அளிக்கும்.

இக்கழகம் இதுவரை 9·2 கோடி ரூபாய் கடனுதவி வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டங்கள் யாவும் முடிவுற்றால் 200-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு மின்வசதியுடன், 33,000 விவசாயப் பம்புகள் இயங்கும். 435 சிறு தொழிலுக்கான மின்சாரம் கிடைக்கும். மேலும், 11,000 வீதி விளக்குகள் எரியத் தொடங்குவதுடன், வீடுகள் வணிக நிலையங்கள் ஆகியவற்றின் உபயோகத்திற்காக 66,000 மின்சார இணைப்புகளும் வழங்கப்படும்.



கணித மேதை இராமானுசத்தின் கையெழுத்துப் பிரதியைக் காண வேண்டுமா ?

ஆனந்தரங்கம் பிள்ளை அவர்களின் நாட்குறிப்பைப் படிக்க வேண்டுமா ?

1671-இல் எழுதப்பட்ட மார்க்கோ போலோவின் ' கீழ்த்திசை வரலாறு ' என்னும் நூலைப் படித்து மகிழ வேண்டுமா ?

எல்லாவற்றுக்கும் சென்னைப் பல்கலைக் கழக நூலகம் நம்மை அன்புடன் அழைக்கிறது !

அலைகடலோரத்தில்—அறிஞர் அண்ணா சதுக்கத்தின் எதிரில்—அழகுற அமைந்து ஓர் அறிவாலயமாகத் திகழ்கிறது இந்த நூலகம்.

1907-ஆம் ஆண்டில் துவக்கப் பெற்ற இந்த நூலகம் வளர்ந்ததே ஒரு சுவையான கதை போல் இருக்கிறது.

திரு வில்லியம் கிரிஃபீத் அவர்கள், 1897 செப்டம்பர் 9-ஆம் நாள் தன் உயில் மூலம் ரூ. 25,619-ஐ நன்கொடையாக இந்தப் பல்கலைக் கழகத்துக்கு அளித்தார். இது நூலகம் உருப் பெறக் கருவாக அமைந்தது.

சென்னைப் பல்கலைக் கழகம் 1903-இல் அரசின் அனுமதி பெற்று, அந்தத் தொகையைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த நூலகத்தை அமைப்பதற்குச் செலவிடத் தீர்மானித்தது. 1907-இல் இந்திய அரசு பல்கலைப் படிப்பிற்காக, சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சிறப்புப் பொருளுதவி அளித்தது. இத் தொகையிலிருந்து பல்கலைக் கழக ஆட்சிக்குழு, இலட்சம் ரூபாயை நூலகத்தை வளப் படுத்துவதற்கு மாநில அரசின் அனுமதி பெற்று ஒதுக்கியது. அதே ஆண்டில் பல்கலைக் கழகம் தன் கட்டண நிதியிலிருந்து நூலகத்தைப் பேணிக் காப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 6,000 கொடுக்கத் தீர்மானித்தது. இவ்வாறு பல நிதிகளின் உதவியால் சென்னைப் பல்கலைக் கழக நூலகம் உருவானது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நூலகம் அமைப்பதற்கு இடமில்லாததால், முதலில் கன்னிமாரா நூலகத்தில் இதனை அமைத்தனர். நூலகம் படிப்படியாக வளர்ந்தது ; படிப்போரின் எண்ணிக்கையும் உயர்ந்தது. இதனால், நூலகம் தனிக் கட்டடத்தில் அமைக்கப்பட




வேண்டிய அவசியம் ஏற்பட்டது. குறிப்பாக உயர் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருக்கும் மிகுதியான மாணவர்களுக்குத் தக்க வசதி செய்து தர வேண்டும் என்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

ஆகவே, அங்குள்ள நூலகத்தைப் பல்கலைக் கழகச் செனட் மண்டபத்தில் தற்காலிகமாக அமைக்க ஆட்சிக்குழு தீர்மானித்தது. இது 1928-இல் நிறைவேறியது. 1912-இல் நூலகத்திற்கெனக் கட்டடம் கட்டச் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு முயற்சி எடுத்த நேரத்தில், முதல் உலகப் போர் தொடங்கியது. இதனால் கட்டடப் பொருள்கள் கிடைப்பது கடினமாக இருந்ததால் முயற்சி பலனளிக்கவில்லை. பிறகு 1930-ஆம் ஆண்டில் மீண்டும் திட்டங்கள் தீட்டப்பட்டு அதன் பலனாகப் பல்கலைக் கழக நூலகத்திற்கெனத் தனிக் கட்டடம் எழுந்தது. 1936-ஆம் ஆண்டு செப்டம்பர் 3-ஆம் நாள் நூலகம் புதிய கட்டடத்தில் அமைந்து, இன்றளவும் அறிவு விருந்து படைத்து வருகிறது.



கல்லூரி மாணவர்கள், பட்ட தாரிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக் கெல்லாம் தக்க விதத்தில் பயன்பட்டு வரும் இந்நூலகத்தில், பல்வேறு துறைகள் பற்றிய நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. முதலில், இந்நூலகத்தில் நூல்கள் எப்படிச் சேகரிக்கப்பட்டு வந்தன தெரியுமா ?

தொடக்கத்தில் அரசு இலவசமாகத் தந்த அரசினர் வெளியீடுகள், அறிக்கைகள், கைப் புத்தகங்களைத் தவிர, பிரிட்டனில் உள்ள அபர்டீன் பல்கலைக் கழகம் போன்ற அயலக நிறுவனங்கள் வழங்கிய நூல்களும் இருந்தன. இதற்குப் பிறகு பல்கலைக் கழகத்திற்கு மூன்று முக்கியப் புத்தகத் தொகுதிகள் சேர்ந்தன. அவை : 1. பதினெட்டம் நூற்றுண்டின் இறுதியும், பத்தாம் நூற்றுண்டின் தொடக்கமுமான குழப்பக் காலத்தில், தொல்பொருள் ஆய்வாளரான கர்னல் மெக்கன்சி சேகரித்த பல ஏட்டுச் சுவடிகள் ; 2. கிழக்கு இந்தியக் கம்பெனியில் பணி புரிந்த சி. பி. பிரெளவுன் என்ற புகழ் பெற்ற தெலுங்கு மொழி அறிஞரின் தொகுப்பு ; 3. கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்ட பிறகு கம்பெனி இல்லத்திலிருந்து வந்த நூல்கள்.

இப்படிப் படிப்படியாக வளர்ந்து, இன்று 3,07,000 நூல்கள் உள்ள மிகச் சிறந்த நூலகமாக இது திகழ்கிறது. தொடக்கக் காலத்தில் ஓராண்டிற்கு 1,000-க்குக் குறைவான நூல்களைச் சேகரித்து வந்த இந் நூலகம், கடந்த மூன்று ஆண்டுகளாக 12,000-க்கும் மேற்பட்ட நூல்களைச் சேர்த்துக் கொண்டு வருகின்றது.

பரந்த இடத்தில் அமைதி நிறைந்த சூழலில் அழகாய்க் காட்சியளிக்கும் இந்த நூலகத்தில் நல்ல வெளிச்சமும், காற்ருேட்டமும், உட்கார்ந்து படிக்க, எழுத நல்ல வசதிகள் இருக்கின்றன. படிக்கும் அறையின் ஆரம்பத்தில் சுமார் 3,000 குறிப்புதவி நூல்கள் (கலைக் களஞ்சியம் முதலியன) வைக்கப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் சுமார் 120 வாசகர்கள் அமர்ந்து படிக்கப் போதுமான இருக்கைகள் இங்கே போடப் பட்டுள்ளன.

நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்தும் பொருள் வரிசையாகவும், அகர வரிசையாகவும் நூற்பட்டி தயாரிக்கப்பட்டு







வைக்கப்பட்டுள்ளது. இது வன்றித் தமிழ் நூல்களுக்கென ஒரு தனி நூற்பட்டியும் தமிழிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவுக் களஞ்சியமாக விளங்கும் இங்கே, இலக்கண, இலக்கியக் கலைப் பகுதி நூல்களும், அறிவியல் நூல்களும் அழகுற அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமா ? பழைய ஏடுகள் அனைத்தும் பொருள் வாரியாக, ஆண்டு வாரியாகப் பிரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. புத்தக அறையின் ஒரு பகுதி, அரசினர் இழைக்கலைக்









கையெழுத்து நூலகத்தின் ஓலைச் சுவடிகள் நூலகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும் இந்த நூலகத்திற்கு விடுமுறையே கிடையாது. ஆம், எந்த நாள் வந்தாலும் இது திறந்தே இருக்கும். அறிவுக் கண்களை—மனக் கதவுகளைத் திறக்கும் திறவு கோலாகத் திகழும் இது, திறந்தே இருப்பதில் வியப்பென்ன இருக்க முடியும் ?

புத்தக அறைக்கு நாள்தோறும் 350-க்கும் மேற்பட்ட வாசகர்கள் ஆர்வமுடன் வருகை தருகின்றனர். அவர்களுக்குக் குறிப்புதவி செய்வதற்கென்று பயிற்சி பெற்ற அலுவலர்களும், ஆராய்ச்சி மாணவர்களுக்கு நூற்ருெகை முதலியவைகளைத் தொகுத்துத் தந்திடப் பயிற்சி பெற்ற இரு நூலடைவாளர்களும் ( Bibliographers ) இங்கே தக்க உதவிகள் செய்து வருகின்றனர்.

நூல்களைத் தவிர, பல்வேறு நாள், வார, திங்கள், திங்களிருமுறை, காலாண்டு, அரையாண்டு இதழ்களும் இங்கு வரவழைக்கப்படுகின்றன. இதற்கென ஒரு தனி அறையே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரே நேரத்தில் 60 வாசகர்கள் அமர்ந்து படிக்க வசதியுள்ள இந்த அறையில் 1,660 இதழ்கள் பொருள் வாரியாகப் பிரிக்கப் பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவை பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பெருந்துணை புரிவனவாக விளங்குகின்றன.

இப்பிரிவில் 1910-ஆம் ஆண்டிலிருந்து ‘ இந்து ’, ‘ மெயில் ’, நாளேடுகளும், 1940-ஆம் ஆண்டிலிருந்து ‘ இந்தியன் எக்ஸ்பிரஸ் ’ நாளேடும், 1832-ஆம் ஆண்டிலிருந்து ‘ போர்ட் செயிண்ட் ஜார்ஜ் ’ பதிவேடுகளும் நன்கு ‘ கட்டடம் ’ செய்யப்பெற்று வைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் புத்தகத்திற்கு ஒதுக்கப்படும் தொகையில் எழுபது சதவிகிதம் பல்வேறு இதழ்களுக்காகச் செலவிடப்படுகிறது. இரசாயனப் பிரிவில் குறிப்பாக ‘ கெமிகல் ‘ அப்ட்ஸ்ராக்ட்ஸ் ’ என்ற ஒரு தலைப்பிற்கு மட்டும் ஆண்டுக்கு ரூ. 14,452·50 சந்தா செலுத்தப்படுகிறது என்றுல், இந் நூலகம், படிப்போரின் தேவையை எத்தனை அக்கறையோடு கவனிக்கிறது என்பது தெரிகிறதல்லவா ?

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழும் இந்நூலகத்தில், நூல்களை இப்படித்தான் தேர்வு செய்கிறுர்கள்.

ஆண்டுதோறும் ஆட்சிக்குழு, மத்திய நூலகத்திற்கும், துறை நூலகத்திற்கும் தேவையான நிதியை ஒதுக்குகிறது. பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைத் தலைவர்களும், ஆட்சிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பட்ட சில கல்லூரிப் பேராசிரியர்களும், நூலகர் அவ்வப் போது தயாரிக்கும் பட்டியலின் துணைகொண்டு, நூல்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மேலும்,

மத்திய நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்கள் பரிந்துரை செய்யும் நூல்களையும், நூலகரே வாங்குவதற்கென ஆட்சிக்குழு ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டுதோறும் ஒதுக்குகிறது.

ஆகவே, மத்திய நூலகத்திற்கும், துறை நூலகத்திற்கும் நூல்களைப் பரிந்துரை செய்வது அத்துறைத் தலைவர்களின் சிறப்புப் பொறுப்பென்றால், நூல்களைத் தக்க இடத்தில், தக்க நேரத்தில் வாங்குவதும், பகுப்பு முறை செய்து பட்டி தயாரிப்பதும், முடிவில் துறை நூலகங்களுக்கு அனுப்புவதும் நூலகரின் பெரும் பொறுப்பாகும்.

இவ்வாண்டு 'ஆட்சிக் குழு, மத்திய, துறை நூலகங்களுக்கு நூல்களும், இதழ்களும், வாங்குவதற்கென ரூ. 4,59,000 வழங்கியுள்ளது. இத் தொகையில் ரூ. 1,97,045 நூல்களுக்காகவும், ரூ. 2,61,955 இதழ்களுக்காகவும்ஒதுக்கப்பட்டுள்ளது.

கிடைத்தற் கரிய பழைய நூலோ அல்லது அந்த நூலின் ஒரு பகுதியோ ஒருவருக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது. அதற்கு என்ன செய்வது ?

உள்ளூர்வாசி என்றால் நூலகத்திற்கே வந்து குறிப்பெடுத்துக் கொள்ளலாம் ; வெளிநாட்டினர் என்றால், இதற்கெனச் செலவு செய்து கொண்டு வர முடியுமா ? அவர் அங்கிருந்தே அந்நூலைப் பெறுவதற்கான ஒரு வழி இருக்கிறது. 'மைக்ரோ பிலிம்' இதற்குப் பெருந்துணை புரிகிறது. இந்த வசதி இங்கே இருப்பதால் ஆராய்ச்சியாளர்கள் நூல்தேடி அலையும் தொல்லையிலிருந்து விடுபட முடிகிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, இலங்கை, மலேசியா முதலிய மேலை நாடுகளிலுள்ள கல்விக் கழகங்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இங்குள்ள 'மைக்ரோ பிலிம்' பிரிவு, குறைந்த கட்டணத்தில் படமெடுத்து அனுப்புகிறது. கிழிந்த நிலையிலுள்ள நூல்களை மட்டுமின்றி, ஒரு நூலகத்தையே கூட இந்த மைக்ரோ பிலிமில் அடக்கிவிடும் அளவுக்கு விஞ்ஞானம் இன்று வளர்ந்திருக்கிறது.

இத்தனை வசதியும், வாய்ப்புமுள்ள இந்நூலகத்தில் சேரக் கட்டணமுண்டா ? படிக்கும் ஆர்வமுள்ளவர் எவரும் இங்கே வந்து படிக்க முடியுமா ?

**இந்த வினாக்களுக்கு விடை : முதலில் இதில் உறுப்பினராகச் சேரக் கட்டணமில்லை ; இரண்டாவது இந்நூலகத்தைப் பயன்படுத்த விரும்புவோர் பட்டதாரியாக இருக்க வேண்டும்.**

பல்கலைக் கழக ஆணையுரிமை உறுப்பினர்களும், பல்கலைக் கழகக் கல்லூரி, மற்றும் பல்கலைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களின் ஆசிரியர்களும், புலவர்களும், பல்கலைக் கழக நுழைவு உரிமை பெற்றவர்களும் இந்நூலகத்திலுள்ள புத்தகங்களைப் படிக்கலாம்.

இப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்லூரி மாணவர்களும், பட்டதாரிகளும் இந்நூலகத்தில் உறுப்பினராகச் சேரலாம். இந்தச் சலுகை, மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப்பிடிப்பிற்குப் பயிலும் மாணவர்களுக்கும் இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் நூல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பினால் ரூ. 30, ரூ. 50 என்று வைப்புத் தொகை கட்டவேண்டும். மற்றும் வெளியூர்களில் இருப்பவர்கள் கூட இந்நூலகத்தில் சில விதிகளுக்குட்பட்டு உறுப்பினர்களாகி அஞ்சல் மூலம் நூற்களைப் பெற வசதி இருக்கிறது.

> காலத்துக்கு ஒத்த கருத்துக்களையே நூல்களில் பொறிக்க வேண்டும். பழைய ஏடுகளை, பழைய கருவிகளை மியூசியத்திலே பார்வையிடுகிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அக்கருத்தை அப்படியே மனத்தில் பதிய விடுவதில்லையே ! அதைப் போலவே பழைய கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால் அவற்றை நாம் கைக்கொள்ளுதல் கூடாது.
>
> எதிர்கால உலகம் விஞ்ஞானிகளைப் பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை விருத்தி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு புத்தக சாலையை அமைக்க வேண்டும்.
>
> — பேரறிஞர் அண்ணா

அறிவாலயமாகத் திகழும் இந்நூலகத்தில் எம்.லிட்., பி.எச்டி. போன்ற ஆராய்ச்சிப் பட்டங்களுக்கான ஆராய்ச்சிநூல்களும் பெருமளவு இங்கே சேமிக்கப்பட்டு வருகின்றன. தற்போது சுமார் 3,424 ஆராய்ச்சி நூல்கள் இங்கே இருக்கின்றன.

இந்நூலகத்தில் அவ்வப்போது சேர்க்கப்படும் நூல்கள் என்னென்ன என்பதை எப்படி அறிந்து கொள்வது ? அதற்காகத் திங்களிதழ் ஒன்று 1971-லிருந்து வெளியிடப்பட்டு வருகிறது. இந்த இதழில் மத்திய, துறை நூலகங்களில் சேர்க்கப்படும் நூல்களின் விவரங்கள் குறிக்கப்படுகின்றன. இந்த வெளியீடு பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும், சென்னையிலுள்ள கல்லூரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

கவின்மிகுந்த கருத்தரங்குகளுக்கும் இங்குக் குறைவில்லை. கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு 'நூற்றொகை' ஒன்றும் வழங்கப்படுகிறது. இது நூலகத்திலுள்ள நூல்களின் தொகுப்பாகும். அண்மையில் ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்தரத் தக்க வகையில் 'ஷேக்ஸ்பியர் நூற்றொகுப்பு' ஒன்று வெளியிடப்பட்டுள்ளதைக் குறிப்பிட வேண்டும்.

இந்த நூலகத்தில் 'நூலக நற்சான்றிதழ்ப் பயிற்சி' ஒன்றும் மிகச் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வருகிறது. 1929-ஆம் ஆண்டு முதல் நடந்து வரும் இந்தப் பயிற்சியில் ஆண்டொன்றிற்கு 40 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் இன்று கல்லூரி, பள்ளி மற்றும் பொது நூலகங்களில் பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரியில் படித்துக் கொண்டே பயிற்சி பெற்றுப் பொருளீட்டும் வகையில், இன்னொரு அரிய திட்டத்தையும் இந்நூலகம் வகுத்திருக்கிறது. சென்னைக் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்கள், அரசு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் துணையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டு, நூலகத்தில் பணிபுரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதனால் அவர்களின் படிப்புக்குச் சிறிதும் இடையூறு ஏற்படுவதில்லை. காலையில் கல்லூரிக்குச் செல்லும் முன்னும், மாலையில் கல்லூரி முடிந்த பின்னும், விடுமுறை நாட்களில் கூடுதலாகச் சில மணி நேரமும் அவர்கள் பணிபுரிகின்றனர். மாதந்தோறும் அவர்கள் ஆற்றிய பணிகளுக்கேற்ப ரூ. 40 முதல் ரூ. 50 வரை ஊதியம் அளிக்கப்படுகிறது. இந்த நல்ல திட்டத்தினால் ஒவ்வொரு மாதமும் 20 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனால், இதுவரை 216 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காகப் பல்கலைக் கழகம் ஆண்டு தோறும் ஏழாயிரம் ரூபாய் ஒதுக்கி ஏழை மாணவர்களை ஊக்குவிக்கின்றது.

ஆண்டுதோறும் தேசிய நூலக வாரத்தையொட்டி நவம்பர்த் திங்களில் நூலக விழா இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாவின் போது, கருத்தரங்கு, சொற்பொழிவு, புத்தகக் கண்காட்சி ஆகியவை பயன்தரத்தக்க வகையில் நடத்தப்படுகின்றன.

இந்தப் புத்தகக் கண்காட்சியில் சென்னையிலுள்ள பதிப்பகங்களும், அரசினர் கீழ்க்கலைக் கையெழுத்து நூலகங்களும் பங்கு கொண்டு சிறப்பிக்கின்றன.

நல்ல பல திட்டங்களைத் தன்னகத்தே கொண்டு, செயற்கரிய செயல்களைச் செய்துவரும் பல்கலைக் கழகம் இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் வெளியிடுகின்றது. பல்கலைக் கழக எல்லைக் குள்ளிருக்கும் முக்கிய நகரங்களிலுள்ள கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் திருச்சி, கோவை ஆகிய இடங்களில் சென்னைப் பல்கலைக் கழக விரிவு நூலகங்கள் துவக்கப்படவிருக்கின்றன. இதற்குப் பல்கலைக் கழக மானியக்குழு உதவி செய்கிறது.

1849-ஆம் ஆண்டில் வெளியிட்ட 'பால கணிதம்' 1865-இல் வெளியிட்ட இந்தியாவிலுள்ள கால்நடைகளில் நோய்களைப் பற்றிய குறிப்புகள், எல். டி. சாமிக்கண்ணு எழுதிய 'இந்திய நாள்நடை முறைக் குறிப்பு', எஸ்.எப். க்ரீன் எழுதிய 'கெமிஸ்தம்', போன்ற மிகப் பழைய நூல்களுடன், பழம்பெரும் நூலகமாகத் திகழும் சென்னைப் பல்கலைக் கழக நூலகம், கருத்துக் கருவூலமாக—கலைக் கோயிலாகக் காட்சியளிக்கிறது என்றால் அதில் என்னளவும் ஐயமில்லை !

—பி.வி.ஜி.

# மாவட்டங்களிலிருந்து

## மதுரை மாவட்டத்தில்

இம்மாவட்டத்தில் தரிசு நிலங்களை ஏழை மக்களுக்கு அளிக்கும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 21 ஆயிரம் ஏக்கர் நிலம் அளிக்கக் குறியீடு செய்யப்பட்டுள்ளதை வரும் மூன்று மாதங்களில் நிறைவேற்றப்படும். இதில் நிலப் பட்டா 10 ஆயிரத்து 853 ஏக்கரும், வீட்டு மனைப்பட்டா 11 ஆயிரம் ஏக்கரும் ஆகும்.

சிறு விவசாயிகள் மேம்பாடு அடைய 158 சிறுவிவசாயிகளுக்கு 8 ஆயிரம் உயர் வீரிய வகைக் கோழிகள் அளிக்கப்பட்டன. மதுரைக் கடுத்த கப்பலூரில் அமைந்த கோழி பொரிக்கும் நிலையத்தில் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ 5 இலட்சம் செலவில் தீவன உற்பத்தி நிறுவனம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

ஆண்டிப்பட்டிப் பகுதியில் கண்டமனூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு நிலமல்லாதாருக்கு வழங்கவிருக்கும் 18 ஆயிரம் ஏக்கரில் இதுவரை 12 ஆயிரம் ஏக்கர் ஏழைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 7 ஆயிரம் ஏக்கர் நிலம் நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்குத் தயாராக உள்ளது. எனவே, நிலமற்ற ஏழைகள் கோரிக்கை விடுத்தால் அந்நிலம் அவர்களுக்கு அளிக்கப்படும்.

இம்மாவட்டத்தில் 4 கோட்டங்களில் 66 கூட்டுறவு இறைவைச் சங்கங்களுக்கு வழங்க 60 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து ஐந்நூறு ஏக்கர் பயன்பெறும் அளவில் 554 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேலும், எல்லாக் கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 5 ஆயிரம் 'பம்ப்செட்டு' களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் வட்டார வளர்ச்சிப் பணிகள் பற்றிய விவரம் வருமாறு :

மதுரை கிழக்கு: தீவிர விவசாயத் திட்டத்தின்கீழ் 'காவேரி' 100 கிலோ விதை விவசாயத்திற்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. ஐ. ஆர். 20-ல் 2-ஆம் தர விதைகள் 13 டன்னும், '[illegible]' 10 டன்னும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரை மேற்கு: இவ்வட்டாரத்தில் பொதும்பு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய [illegible] பள்ளிக்குக் கூடுதலாக ரூ. 22,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்று பொதுமக்கள் நன்கொடையால் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

மேலூர் : ஆய்வுத் திங்களில் ரூ. 1,466.60 பெறுமானமுள்ள [illegible] தளவாடச் சாமான்கள் இவ்வட்டாரத்திலுள்ள தச்சுக் கொல்லுக் கூடத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த வட்டாரத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 23 நபர்கள் அறுவைச் சிகிச்சை செய்துள்ளார்கள்.

வாடிப்பட்டி : கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் இவ்வட்டாரத்தில் 156 பேர்கள் அறுவைச் சிகிச்சை பெற்றுக் கண்ணொளி பெற்றுள்ளார்கள். கள்ளிக்குடியில் 174 பேரும், * திலக் கோட்டையில் 166 பேரும் கண்ணொளி பெற்றுள்ளனர்.

சாணார்பட்டி : இந்த வட்டாரத்தில் கொசுவபட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் நோயாளிகளின் இருப்பிடம் ஒன்று, சீரணித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது.

உத்தமபாளையம்: தமிழ்நாடு பரிசுத் திட்டத்தின் கீழ் ஓர் உயர் ஆரம்பப் பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. நிவாரணத் திட்டத்தின் கீழ், குடிநீர்க் கிணறு ஆழப்படுத்தும் வேலையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அரசு அலுவலகங்களுக்கும் சார்புடைய நிறுவனங்களுக்கும் வாங்கும் மரச் சாமான்களை கதர் கிராமத் தொழில் - நிறுவனங்களிலிருந்தும் தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் தொழிற்கூடங்களிலிருந்தும் ஒப்பந்தப் புள்ளியில்லாமல் வாங்கலாம் என்று தமிழ்நாடு அரசு நிதித்துறைக் குறிப்பாணை ஒன்றில் விளக்கியுள்ளது. அந்தந் தொழிற்கூடங்களில் ஒன்றுதான் இது....

# நாகரிக மரச் சாமான்களுக்கு

அது ஒரே ஒரு மரத்தொழிற்சாலைதான். ஆனால், அமைந்துள்ள இடமோ ஒரு தொழிற்பேட்டை போன்று உள்ளது. ஆமாம், ஏறத்தாழ பத்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையைப் பார்ப்பதும் தொழிற்பேட்டை ஒன்றைப் பார்ப்பது போலத்தான். அவ்வளவு பெரிதாக அமைக்கப்பட்டிருக்கிறது இந்தத் தொழிற்சாலை.

சென்னை நகரின் வடக்குப் பகுதியில் தொழிற்சாலைகள் அதிகமாகவுள்ள திருவொற்றியூரில் அமைந்து உள்ளது ரீட் கூட்டுறவு மரவேலைத் தொழிற்சாலை.

ஏறத்தாழ இருபத்தேழு ஆண்டுகளாக இயங்கிவரும் இந்தக் கூட்டுறவு மரத் தொழிற்சாலையில் கிடைக்காத பொருள்களே இல்லை—நவீன வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவிதமான மரச் சாமான்களையும் இங்கே செய்கிறார்கள்.

இந்தக் கூட்டுறவு நிறுவனம் முன்னாள் இராணுவ அதிகாரியான கர்னல் டி. எம். ரீட், என்பவரின் பெரும் முயற்சியால் 30–5–1946-ல் பதிவு செய்யப்பட்டு 3–6–1946 அன்று முதல் தனது பணியைத் தொடங்கியது. தற்சமயம் இச் சங்கத்தின் பங்கு மூலதனம் ரூ. 5,224 ஆகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 59.

முன்னாள் இராணுவ வீரர்களுக்காகவே ரீட் கூட்டுறவு மரவேலைத் தொழிற்சாலை தொடங்கப்பெற்றது. நாளடைவில் தச்சு வேலை தெரிந்த பொது மக்களுக்கும் இது வேலைவாய்ப்புக் கொடுக்கின்றது.

நடுவில் பொந்து உள்ள செங்கல், மற்றும் மரப்பெட்டிகளும் ஆரம்ப காலத்தில் செய்யப்பட்டுப் படிப்படியாக மரச் சாமான்கள் செய்வதில் தனது பணியைத் தொடர்ந்து, அரசினர் அலுவலகங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்து வந்தது. மேலும், தனது வியாபாரத்தைப் பெருக்கும் பொருட்டு 1969-ஆம் ஆண்டு முதற்கொண்டு வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் தேவையான நவீன மரச்சாமான்களும் செய்ய ஆரம்பித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக நகரத்தின் பல்வேறு பகுதிகளுக்கும்சென்று, ஆங்காங்குத் தேவையான நவீன வேலைப்பாடுகள் கொண்ட மரச் சாமான்கள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

கோட்டையிலுள்ள தலைமைச் செயலகம், மைய மின் ஆய்வுக் கூடம் காக்கலூர், காவேரி கூட்டுறவு சிறப்பங்காடி, பாண்டிச்சேரி ஜிப்மர், சென்னை காதி கிராமக் கைத்தொழில் வாரியம் ஆகிய நிறுவனங்களில் உள்ள அலுவலகங்களுக்கும் தேவையான தடுப்பு வேலைகளையும், காட்சிப் பெட்டி வேலைகளையும் பிளைவுட் மற்றும் சன்மைக்கா முதலிய பொருள்களைக் கொண்டு புதிய முறையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கும் மரச் சாமான்கள் வழங்கியுள்ளது.

மேலும் வருவாய்த்துறை, கிராம வளர்ச்சித்துறை, சென்னைத் துறைமுகம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், குறளகம் ஆகிய நிறுவனங்களுக்குத் தேவையான தடுப்புச் சாதனங்கள், காட்சிப் பெட்டிகள் மற்றும் அந்த அலுவலக மரச் சாமான்கள் தொடர்ந்து தயார் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.



அரசினர் கலைக் கல்லூரிகள் (வட சென்னை மகளிர் கலைக் கல்லூரி. அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரிகள், நந்தனம், அண்ணுசாலை) இராணி மேரி கல்லூரி ஆகியவற்றிற்குப் பரிசோதனைக் கூடத்திற்குத் தேவையான மேசைகள், பிளைவுட் மற்றும் சன்மைக்கா முதலியவற்றைக் கொண்டு புதுமையான முறையில் தயார் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. அந்த நிறுவனங்களுக்கு அலுவலக மரச் சாமான்களும் தொடர்ந்து தயார் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. காக்களூர் மைய மின் ஆய்வுக் கூடத்திற்கும் பரிசோதனைக்கூடத்திற்குத் தேவையான மேசைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

1970-ஆம் ஆண்டு சங்கம் அடைந்த இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு 26 சதவீதமும், உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு 10 சதவீதமும், அலுவலகச் சிப்பந்திகளுக்கும் மேலாளர் அவர்களுக்கும் 16 சதவீதமும், 1969–70-ஆம் ஆண்டுக்கான இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு 14 சதவீதமும் உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு 7½ சதவீதமும், அலுவலகச் சிப்பந்திகளுக்குமீ மேலாளருக்கும் 8⅓ சதவீதமும், 1968-69-ஆம் ஆண்டு சங்கம் அடைந்த இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு 13 சதவீதமும் உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு 6½ சதவீதமும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் மேலாளருக்கும் 8.1/3 சதவீதமும் பூரிப்பூதியம் வழங்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டு சங்கம் அடைந்த இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு 15½ சதவீதமும், உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு 11 சதவீதமும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் மேலாளருக்கும் 12½ சதவீதமும் வழங்கப்பட்டது. மற்றும் ஆண்டுதோறும் சங்கத்தின் தொழிலாளர்களுக்கும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் சீருடையும் வழங்கப்படுகின்றது.

சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் பொதுநல நிதியில் இருந்து மூக்குக் கண்ணுடி வாங்குவதற்கும் அவர்களின் குழந்தைகளின் பள்ளிப் படிப்பிற்காக ஆண்டுதோறும் புத்தகங்கள் வாங்குவதற்கும் பணம் வழங்கப்படுகின்றது. வைப்பு நிதி மற்றும் இ.எஸ்.ஐ. முதலிய வசதிகளும் வழங்கப்படுகின்றது.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 10.86 ஏக்கர் நிலம் சொந்தமாகப் பெற்றிருக்கின்றது. இச் சங்கம் 10 அலுவலகப் பணியாளர்களுக்கும், 33 தொழிலாளர்களுக்கும், தொழிலாளர்களிடம் பணிபுரியும் உதவித் தொழிலாளர்கள் 15 பேர்களுக்கும், ஆக 58 பேர்களுக்குத் தற்சமயம் வேலை வழங்கி வருகின்றது. இச் சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலைக்குத் தேவையான மரப்பலகைகளையும் மரத் துண்டுகளையும் சங்கத்தில் உள்ள இயந்திரம் மூலமாகவே இழைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள தச்சு வேலைக் கூட்டுறவுச் சங்கங்களில், இச் சங்கமே முதன்மையானதாகவும் பெரிய அளவிலும் சிறப்பான முறையிலும் நடைபெற்று வருகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட ரூபாய் மதிப்புள்ள பொருட்களை ரீட் கூட்டுறவு மரத் தொழிற்சாலை விற்பனை செய்துள்ளது.

நல்ல இலாபத்துடன் இயங்கி வரும் இந்தத் தொழிற்சாலையைத் தொழில் வணிகத்துறை மிகவிரைவில் மேலும் நன்கு விரிவுப்படுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. அப்படி விரிவுபடுத்திஞல் மேலும் ரீட் கூட்டுறவு மரவேலைத் தொழிற்சாலையின் மூலம் பல நன்மைகளை நாம் பெறமுடியும்.

—மான்


கேட்டு வாங்குங்கள்
இந்த இதழுடன்
இலவச இணைப்பு
நிலை விளக்கம்




# பார்த்தோம் படித்தோம்





### முத்தான உரை

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் முதல்வர் ஆற்றிய முத்தான உரை படித்தேன். உரிமைக் குரல் கொடுத்த முதல் முதல்வர் நம் கலைஞர் அவர்களே! அவர் கூறிய திட்டங்களை அனைத்து மாநிலங்களும் ஏற்றும் கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

—க. பாண்டியன், நாகை.

### நயத்தக்க நாகரிகம்!

கடல் மீன் வேண்டும் என்று அடம் பிடித்த உத்தரப் பிரதேச மாணவியின் மனம் கோணுமல் நிறைவேற்றிய ஆசிரியைகள் பாராட்டுக்குரியவர்கள். அந்த விருந்தோம்பற் பண்பு இந்தத் தமிழ் மண்ணுக்கே உரியதென்பதில் ஐயமில்லை. அது என்றும் நின்று நிலவும்! இதுவே தமிழர்களின் நயத்தக்க நாகரிகம்.

—அ. சகுந்தலை, திருச்சி-10.

### இராமியத்திற்குப் பாராட்டு!

திரு சோம மகாதேவன் அவர்கள் இராமிய சூழ்நிலைகளைக் கொண்டே 'உண்மையின் சந்நிதி' தொடர்கதையினை முடித்துள்ளார். படித்த வாசகர்கள் எல்லாரையும் 'உண்மையின் சந்நிதிக்கு' அழைத்துச்சென்று விட்டார்.

—வே. விஜயலட்சுமி, மதுரை-1.

### அப்பலோ வேகம்!

'உண்மையின் சந்நிதி' தொடர்கதை திடீரென்று முடிந்து விட்டதே! உண்மையை இவ்வளவு சீக்கிரம் சந்நிதிக்குக் கொண்டு வந்து விட்டீர்களே! எதிர்பார்த்த முடிவுதான்! ஆனுல், வேகம் தான் அப்பலோவையும் தாண்டிவிட்டது.

—கு. லீலா, மணியக்காரன்பட்டி.

### பட உலா!

தமிழ்நாட்டில் நேரில் சென்று காணவேண்டிய முக்கியமான இடங்களைத் ''தமிழகம் அழைக்கிறது'' என்ற தலைப்பில் தந்துள்ளீர்கள். தொடர்ந்து முக்கியமான இடங்களின் படங்களைத் 'தமிழரசு' இதழில் வெளியிட்டு எங்கள் ஆவலைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தா. சீனிவாசன், செங்கை.

### மினி! மினி!

மின்மினி கவிதையில் வரலாறு, புராணம், விஞ்ஞானம், பகுத்தறிவு, அத்தனையும் இழைத்துக் கொடுத்திருக்கிறுர் புலவர் பொன்னிவளவன். ''புதுத்திரி, எண்ணெய், மின்சாரம் இல்லாத் தன் சார விளக்கு'' என்று மின்மினியைக் கூறிடும் வரிகள் பரவசத்தில் ஆழ்த்துகின்றன.

—அறவாழி, சென்னை-7.






# கல்லும் மாம்பழமும்







**1970**-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், முப்பதாம் நாள் !

ஷில்லாங்கில் உள்ள ஓர் இராணுவ அதிகாரியின் வீடு. வீட்டுக்குப் பின்புறம் ஓர் அழகான தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் மரம், செடி கொடிகளும், அழகான பல வண்ண மலர்களும் நிறைந்திருந்தன. அந்தத் தோட்டம் அனைவரையும் கவரும் வண்ணம் காட்சியளித்தது.

ஒரு நாள் ஒரு சிறுமி, அந்தத் தோட்டத்தின் அழகில் மயங்கி, அங்கே சென்ருள். அவளுக்கு ஒன்பது வயது இருக்கும். பச்சைப் பசேலென்ற மரஞ்செடி கொடிகளும், மணம் வீசும் அழகிய மலர்களும் அவளைப் பரவசத்தில் ஆழ்த்தின.

தோட்டத்திலே சென்ற அவள் தனக்கு விருப்பமான மலர்களையெல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள். சில மலர்களைப் பறித்துத் தன் கூந்தலில் செருகிக் கொண்டு துள்ளிக் குதித்தாள்.

இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டாள், இராணுவ அதிகாரியின் மனைவி. தாம் சிரமப்பட்டு வளர்த்த செடி கொடிகளை, வண்ணப் பூக்களைக் கண்ணுக்கெதிரிலேயே ஒருத்தி வந்து பறித்துச் சேதப்படுத்துகிருளே என்று கொதிப்படைந்தாளோ என்னவோ, அவசர அவசரமாக வீட்டுக்குள்ளே ஓடினுள். தன் கணவரின் கைத் துப்பாக்கியைத் தேடி எடுத்து வந்தாள். தோட்டத்தில் மலர்களின் மத்தியில் மனத்தைப் பறிகொடுத்து நின்ற அந்தச் சிறுமியைப் பார்த்துச் சுட்டாள். துப்பாக்கியிலிருந்து ரவைகள் விரைந்து சென்று அந்தச் சிறுமியின் உடலைத் துளைத்தன. சிறுமி அதே இடத்தில் கீழே விழுந்து இறந்தாள் !

பாவம் ! ஒரு சிறியமலரைப் பறித்ததற்காக, அந்தச்சிறுமிக்கு இவ்வளவு பெரியதண்டனை !

இந்தக் கொடுமையான செய்தியைக் கேட்ட, சிறுமியின் பெற்ருேர்கள் கதறித்துடித்தனர்.

சட்டம் சும்மா விடுமா ? உடனே போலீசார், அந்த அதிகாரியின் மனைவியைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்தனர். இது பத்திரிகையில் வந்த செய்தி.

தம்பி, தங்கைகளே !

இந்தச் சம்பவத்திலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிருேம் ?

எந்தக் காரியத்தை நாம் செய்தாலும் அதை நன்ருக ஆராய்ந்து பொறுமையாகச் செய்ய வேண்டும் ; அவசரப்பட்டு, ஆராயாமல் செய்யப்படும் காரியங்கள் எல்லாம் கெட்ட பெயரையே உண்டாக்கும்.

இதே போலப் பண்டைக்காலத்திலும் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அந்த விந்தையான சம்பவம் என்ன தெரியுமா ?

பண்டைக் காலத்தில் நன்னன் என்ற மன்னன் ஒருவன் இருந்தான். அவன் அரண்மனைக்குப் பக்கத்தில் ஓர் அழகிய பூஞ்சோலை இருந்தது. கண்ணைக் கவரும் அழகான மலர்களும், மரங்களும் அங்கே இருந்தன. நாள்தோறும் பழங்களைத் தின்பதற்காகப் பல வகைப் பறவைகள் அங்கே வந்த வண்ணமிருக்கும். வெய்யிற் காலத்தில் அந்தச் சோலைக்குள் சென்றுவிட்டால் போதும், ஒரே குளிர்ச்சியாக இருக்கும், கண்ணுக்குக் கவர்ச்சியாகவும் இருக்கும்.

அந்தப் பூஞ்சோலையில் ஒரு பெரிய மா மரம் இருந்தது. அந்தமரத்தில் நிறைய மாங்காய்களும், மாம்பழங்களும் இருந்தன. அந்தப் பக்கமாக வந்த ஒரு சிறுமி இதைப் பார்த்தாள். எப்படியாவது அந்தப்பழத்தைத் தின்ன வேண்டும் என்று ஆசைப் பட்டாள். ஆனால், அவள் ஆசை நிறைவேறுமா ? அரண்மனைக்கு உள்ளே இருக்கிற மரத்தில் பழம் பறித்தால் காவலர்கள் சும்மா இருப்பார்களா ?

மரத்தை ஒட்டி ஒரு நீரோடை இருந்தது. கோடை வெய்யில் கொளுத்தியதால், அந்தச் சிறுமி அந்த நீரோடையில் குளிக்க விரும்பினுள். அவள் குளித்துக் கொண்டிருக்கும் போது மரத்திலிருந்து ஒரு பழம் தண்ணீரில் விழுந்தது. உடனே சிறுமி, பாய்ந்து அந்தப் பழத்தை எடுத்துக் கடித்துத் தின்ருள். பழம் மிகவும் இனிப்பாக இருந்தது.

சிறுமி பழம் தின்பதை அரண்மனைக் காவலாளி ஒருவன் பார்த்துவிட்டான். உடனே அவன் சிறுமியிடம் ஓடி வந்தான். 'எப்படி இந்தப் பழத்தைச் சாப்பிடலாம் ?'' என்று மிரட்டிக் கேட்டான்.

அதற்குச் சிறுமி, "நீரோடைப் யில் தானே பழம் மிதந்து வந்தது ? நான் மரத்திலிருந்து இதைப் பறிக்கவில்லையே !'' என்ருள்.

உடனே காவலாளி ''எங்கள் மரத்திலிருந்துதானே பழம் விழுந்தது ? அதை நீ எப்படிச் சாப்பிடலாம் ?'' என்று கூறிக் கொண்டே சிறுமியைப் பிடித்து இழுத்து அரசனிடம் கொண்டு சென்ருன்.

அந்த அரசனே நடந்தவைகளை அறிந்து, 'சிறுமிதானே விட்டுவிடு பாவம் !' என்று சொல்லவில்லை. அதற்கு மாருக, "இந்தச் சிறுமியைக் கொன்றுவிடுங்கள் !'' என்று அவசரப்பட்டுக் கட்டளையிட்டான்.

'மரத்தில் இருந்து விழுந்த பழத்தைத்தானே இந்தச் சிறுமி தின்ருள் ? அவளுக்கா இக்கதி வரவேண்டும் ?' என்று பலர் பேசிக் கொண்டார்கள். பாவம் ஒன்றுமறியாத இந்தச் சிறுமி மரண தண்டனை அடைந்த செய்தி பெற்ருேர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் அலறிப் புடைத்துக் கொண்டு அரண்மனைக்கு ஓடி வந்தார்கள். தன் பெண்ணுக்கு அளித்த நியாயமற்ற தண்டனையைக் கேட்டு அழுதார்கள் ; துடித்தார்கள். அவளை விடுதலை செய்யும்படிக் கெஞ்சினுர்கள்.

" அரசே ! எங்களுடைய பெண் மிகவும் சிறியவள். ஒன்பது வயதுதான் ஆகிறது. அவள் தவறு செய்திருந்தால் இந்தத் தடவை மட்டும் தயவு செய்து மன்னித்துவிடுங்கள். வேண்டுமானுல் அவள் செய்த தவற்றுக்காக ஒன்பதுக்கு ஒன்பது எண்பத்தோரு யானைகளும், அவள் எடை அளவு பொன்னும் தருகிருேம். அவளைமட்டும் விட்டு விடுங்கள் !'' என்று மனம் உருகும்படிக் கெஞ்சிக் கேட்டு அழுதார்கள். ஆனுல் அந்தக் கல் மனம் படைத்த மன்னவனே அதற்குச் செவி சாய்க்கவே இல்லை !

பிறகு அந்தச் சிறுமியை மாம்பழம் தின்றதற்காகக் கொன்று விட்டார்கள் !

ஒரு சமயம் ஒளவையார் இவனது அரண்மனைக்கு வந்தார். அவரது பெருமையை அறியாத இந்த மன்னன் அவரை வரவேற்காமல் ஆணவமாக இருந்தான். அதைக் கண்ட ஒளவையார் மிகவும் மனம் கொதித்தார். சில நாளில் வேற்று நாட்டு அரசன் ஒருவன் படையெடுத்து வந்து நன்னனைக் கொன்று, அவன் நாட்டைக் கைப்பற்றினுன்.

பிள்ளைகளே ! நாம் எப்போதும் ஆணவம் கொள்ளக் கூடாது. 'ஆணவம் கொள்ளின் அழிவு தொடரும்' என்பதை மறந்து விடாதீர்கள் !

> சிறுவர் பகுதியில் புதிய படக்கதை
>
> விவரம்
>
> அடுத்த இதழில்




அளவாய் உண்டு வளமாய் வாழ்வாய்
ஆள்வினை ஒன்றே வாழ்வினை உயர்த்தும்
இன்னிலை வேண்டின் நன்னெறி நடப்பாய்
ஈப்போல் சேர்த்துப் பூப்போல் வாழ்க
உண்மை சொல்லும் திண்மை பெறுவாய்
ஊனம் இல்லா மானம் வேண்டும்
எத்தொழி லேனும் கைத்தொழில் செய்வாய்
ஏற்ற மிக்க தோற்றங் கொள்வாய்
ஐய மின்றி மெய்யே புகழ்தரும்
ஒத்தது புரிதல் மெத்தவும் நலமாம்
ஓயா உழைப்பே தேயாச் செல்வம்
ஔவை நல்வழி செவ்வை யாகும்
கண்ணியம் தன்னை எண்ணியே செல்க
காலம் தாழ்த்தாச் சீலம் போற்று
கிழங்கைக் குறைத்துப் பழங்கள் மிகத்தின்
கீழா நெல்லி காமா லைக்குண்
குடலின் தூய்மை உடலின் மேன்மை
கூவிளம் உண்டால் மேவிடும் நலமே
கெட்டவர் நட்பை விட்டிடல் வேண்டும்
கேள்வி ஞானம் வாழ்வின் துணையாம்
கைகளை நம்பிச் செய்தொழில் தொடங்கு
கொன்றை வேந்தன் என்றும் கற்பாய்
கோடியே வரினும் கோடுதல் வேண்டா
சளிக்குத் தூதுளை அளிக்கு மருந்தாம்
சாலை விதியை நாளும் கடைப்பிடி
சிந்தையை மணக்கும் சந்தன மாக்கு
சீர்திருந் திப்பின் ஊர்தி ருத்துவாய்
சுக்கு வயிற்றுச் சிக்கலைத் தீர்க்கும்
சூது விரும்பின் தீது நெருங்கும்
செந்நெல் குவிந்தால் இன்னல் தீரும்
சேர்ந்து வாழ்தல் தேர்ந்த முறைமை
சொல்லைக் காத்தால் தொல்லை இல்லை
சோம்பும் போதே கூம்பும் வாழ்வு
தலைபோ றலும் நிலைதா ழாதே
தாயகம் காக்க மாயவும் துணிவாய்
திடமாய் நின்று கடமை ஆற்று
தீவினை புரிந்தால் சாவது நெருங்கும்
துடிப்பை என்றும் படிப்பில் காட்டு
தூய தமிழைத் தாயாய்ப் போற்று
தென்னை போலுயர் தன்மையாய் நன்றிசெய்
தேடிநல் லாரைக் கூடிப் பழகு
தைத்திரு நாளே மெய்த்திரு நாளாம்
தொண்டு செய்தால் உண்டு நன்மை
தோட்டம் வளர்க்க நாட்டங் கொள்வாய்
நகைமுகம் கொண்டால் பகைமுகம் இல்லை
நாடு சிறந்தால் வீடு சிறக்கும்
நிந்தனை இன்றிச் சந்ததம் வாழ்க
நீணில மெல்லாம் வாணிகம் செய்க
நுனிப்புல் மேயும் மனத்தை மாற்று
நூற்பொருள் எண்ணிப் பார்ப்பது நன்று
நெய்மிக உண்டால் உய்வ தருமை
நைதல் நீங்கச் செய்தல் வேண்டும்
நொச்சியால் தடிமன் நிச்சயம் நீங்கும்
நோதலை வெல்லும் சாதனை புரிவாய்
பசித்த பின்பே புசித்தல் நன்றாம்
பாங்குடன் சுற்றம் தாங்குதல் முறையாம்
பில்லி சூனியம் எல்லாம் பொய்யே
பீடு பெறவே பாடு படுவாய்
புகையிலை வகையைப் பகையென வெறுப்பாய்
பூசனை வேண்டா மாசினை அகற்று
பெரியார் கூறும் அறிவே துணையாம்
பேதைமை இல்லா மேதையாய் வாழ்வாய்
பைய உண்ணுதல் மெய்யாய் நலமாம்
பொதுமை மலரப் புதுமை புரிவாய்
போர்வெறி தன்னைப் பார்தனில் போக்கு
மண்ணை உழுதால் பொன்னைப் பெறலாம்
மாலையில் நடப்பது சாலவும் நன்று
மிளகாய் குறைத்து மிளகைச் சேர்த்துண்
மீட்டும் வீணைப் பாட்டுப் பழகு
முருங்கைக் கீரை நிரம்பத் தின்பாய்
மூடப் பழக்கம் ஓடச் செய்வாய்
மென்மை மிகுந்த தன்மை வேண்டும்
மேன்மை யான ஆண்மை அழகு
மைந்துடன் வாழ்வில் நைந்தவர் துயர்களை
மொழிநூல் பயின்று வழிநூல் செய்க
மோதும் இடரை மோதி வெல்க
வள்ளுவன் சொல்லைத் தள்ளி விடாதே
வாக்குண் டாமதை நோக்கெந் நாளும்
விருந்தினர் பேணும் பெருங்குணம் கொள்வாய்
வீர நெஞ்சில் ஈரமும் வேண்டும்
வெற்றிலைப் பழக்கம் குற்றமே ஆகும்
வேளாண் மைசெயத் தாளாண் மைகொள்.



ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.




நாடும் நாமும்......
நம் நல்வாழ்வை நாடும் திட்டங்களுக்கே
நமது அரசு முதலிடம் தருகிறது!
பசுமைப்புரட்சி மூலம்
உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று
இந்தியாவில் முதலிடம் வகிக்கிறோம்.
சமதர்மத் திட்டங்களைச் செயல்படுத்துவதில்
நமது அரசு முன்னணியில் திகழ்கிறது!
பன்னிரண்டு ஆண்டுத் தொலை நோக்குத் திட்டத்தின் கீழ்
புதுவாழ்வு மலர அரும் பெரும் முயற்சிகள்!
இந்தப் பணிகளுக்கு
வலுமிக்க அடித்தளம் அமைய
நாம் செய்யும் கைம்மாறுதான்
அளவான குடும்பம்!
நாட்டின் முன்னேற்றத்தின் அடையாளம்
திட்டமிட்ட குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு
தமிழரசு

# தமிழரசு



# செய்திச் சித்திரம்


தினக்கூலி அடிப்படையில்
பணிபுரியும் மின்வாரியத்
தொழிலாளர்கள் 9000 பேர்,
உடனடியாக நிரந்தரமாக்கப்படுவர்.
மின்வாரிய ஊழியர்களுக்கு
அடுத்த ஆண்டு முதல்
வீட்டு வசதித் திட்டம்
செயல்படும்


பள்ளி மாணவர்களுக்கு
இலவச வைத்தியப்
பரிசோதனைத் திட்டம்
முதன் முதலாக,
செங்கற்பட்டு மாவட்டத்தில்
உள்ள காஞ்சிபுரத்தில்
துவக்கப்பட்டுள்ளது.


ஒரு கோடி ரூபாய்
முதலீட்டில் பால் பவுடர்
தொழிற்சாலை ஒன்றினை
மதுரையில் நிறுவ
இருக்கிறது தமிழ்நாடு அரசு.
அரசு பால்பவுடர் தொழிற்சாலை-மதுரை
சாமி


பிச்சைக்காரர்
மறுவாழ்வு இல்லம்
மனையேரிப் பட்டி
தஞ்சை மாவட்டத்தில்
மனையேரிப்பட்டியில் 10 இலட்ச
ரூபாய் செலவில் தொழுநோ
பிச்சைக்காரர்களுக்கு
மறுவாழ்வு இல்லத்தை
17-2-1973-ல் முதல்வர்
கலைஞர் அவர்கள்
திறந்து வைத்தார்கள்


அரிசி ஆலைகளுக்கும்
மாவு ஆலைகளுக்கும்
மின்வெட்டு 75 சத
விகிதத்திலிருந்து
25 சத விகிதமாகக்
குறைக்கப்படும் என்று
முதல்வர் கலைஞர்
அறிவித்திருக்கிறார்.
25%


நலத்துறை
பல்லாண்டுக் காலமாக
நிரந்தரம் செய்யப்படாமல்
பணியாற்றி வந்த சுமார்
1500 நலத்துறை
ஆய்வாளர்கள் நிரந்தரமாக்கப்
படுவதற்குரிய ஆணையைத்
தமிழ்நாடு அரசு
பிறப்பித்துள்ளது.
சாமி

# சமுதாயத்திற்கு வாழ்வு தரும் பணி

## முதல்வர் கலைஞர்

இன்று நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்புப் பிரச்சினை இருக்கிறது.

வேலை வாய்ப்புப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு மாநில அரசு தன் அதிகாரத்திற்கும்—நிதி ஆதாரத்திற்கும் உட்பட்டு, எவ்வளவு முயற்சி செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு இந்த அரசு முயற்சி செய்து வருகிறது. மருத்துவத்துறைக்கு அரசு ஆண்டுக்காண்டு எவ்வளவு செலவு செய்கிறது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

மருத்துவக் கல்லூரி சம்பந்தப்பட்ட கருவிகள் வாங்கிடச் சென்ற ஆண்டு 100 இலட்சம் ரூபாயும், இந்த ஆண்டு 110 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது.

நமது தமிழ்நாட்டிலுள்ள 8 மருத்துவக் கல்லூரிகளில் 8,000 பேர் படிக்கிறார்கள். ஆண்டு தோறும் பட்டம் பெறுகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தேறியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பட்டம் பெறுகிறவர்களின் தொகை அதிகமாகுமே தவிரக் குறையாது. இவர்களின் பிரச்சினைக்குத் தக்கது செய்ய வேண்டியது அரசின் கடமை. ஆனால் அந்தக் கடமையை நிறைவேற்ற அரசுக்குள்ள பொறுப்பையும்— சங்கடங்களையும் அனைவரும் உணர்ந்து, ஒத்துழைக்க வேண்டும்.

மருந்தியல் துறையில் பட்டம் பெற்றவர்கள், பல் மருத்துவத் துறை மாணவர்கள் ஆகியோரின் வேலை வாய்ப்பைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினை அலட்சியப்படுத்தப் படக்கூடியதல்ல— ஆனால் இதனை எந்த அளவு நீக்கலாம் என்பதற்கு, அரசுக்கு அவகாசம் தர வேண்டும்.

பல் மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவர்களுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்துப் பார்த்தோம். கூடுமான வரை, இன்றுள்ள நிதி நிலைமையைப் பொறுத்து 40 படுக்கைகளும்— அதற்கு மேலும் இருக்கின்ற மருத்துவ மனைகளில் இந்த வேலைப்பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

அதைப் போலவே, மருந்தியல் துறையில் பட்டம் பெற்றவர்களின் கோரிக்கையைப் பொறுத்து சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனை—மதுரை எர்ஸ்கின் அரசு மருத்துவ மனை ஆகியவற்றில் மருந்து தயாரிக்கும் பணி துவங்கினால் ஓரளவு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இதனை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பணி துவங்கியதும் சென்னை—மதுரை மருத்துவ மனைகளில் மருந்தியல் மாணவர்களை அரசு ஈடுபடுத்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ நண்பர்கள் தங்களது கடமையைச் செய்ய முன்வந்து அமைதியாகப் பிரச்சினையை அணுகினால் நல்ல நடவடிக்கைகளை அரசு எடுக்க முடியும்.

தனிப்பட்டவர்களிடையே ஏற்படும் மாச்சரியங்கள்—காழ்ப்புகள் காரணமாக வேண்டத் தகாத விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்துவிடுகின்றன.

அரசு இன்னின்ன செய்ய வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டு, அரசு அது சம்பந்தமாக என்னென்ன செய்கிறது என்பதைப் பற்றியும் காத்திருந்து பார்க்காமல் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பிரச்சினைக்கே கொஞ்சமும் சம்பந்தமில்லாத பொதுமக்கள் பாதிக்கப்பட்டுவிடுகிறார்கள்.

ஒரு மாணவருக்கும் கடைநிலை ஊழியர் ஒருவருக்கும் தகராறு என்றால் அது தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் கடைநிலை ஊழியர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட தகராறு என்று கருதிவிடக்கூடாது.

ஒரு ஆசிரியருக்கும்—போலீஸ்காரருக்கும், தகராறு வந்தால் அது தமிழகம் முழுவதுமுள்ள ஆசிரியர்—போலீஸ்காரர் தகராறு அல்ல.

சமுதாயத்திற்கு வாழ்வு தரக்கூடிய ஒளியை ஏற்படுத்தக்கூடிய பணியைப் பட்டிதொட்டி எங்கும் செய்ய இருக்கின்ற உங்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன்.

[சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற மருத்துவக் கல்லூரிப் புதிய பட்டதாரிகளுக்கு வரவேற்பு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]



# கதர்-கைத்தொழில் பொருட்களில் எத்தனை எத்தனை வளர்ச்சி இங்கே!

சந்த்—

காந்தியடிகள் கனவை நனவாக்கும் பணிகளில் தமிழ்நாடு என்றும் முன்னணியில் திகழ்கிறது.

அந்தப் பணியின் சிறப்பை எடுத்துக் காட்டுவது போல அமைந்திருந்தது கடந்த 13-2-73 அன்று சென்னையில் அரசினர் தோட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்ட கதர் இயக்கப் பொன் விழாப் பொருட்காட்சி.

முதலில் பொருட்காட்சியைச் சுற்றி வருவோம்.

அரசினர் தோட்டத்தில் ராஜாஜி மன்றத்திற்குச் செல்லும் தலைவாயில் வழியாகச் செல்கிறோம். நமது வலப் பக்கம் அண்ணல் காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும் காந்தி இல்லத்தின் வெளிப்புறம் இருக்கிறது.

கோவைச் சிறையில் கப்பலோட்டிய தமிழன் வீர சிதம்பரனார் இழுத்த செக்கு.

அதற்குப் பக்கத்தில் புதிதாக இன்னொரு செக்கு—கதர் இயக்கப் பொன்விழாப் பொருட்காட்சி, தொடக்கமாக நம் கண்களில் படுகிறது.

நாட்டுச் செக்கு—ஆனால் விசைச் செக்கு இது.

கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கு அடையாளமாகத் திகழ்கிறது. மாட்டுச் செலவைக் குறைத்து—நல்ல நயமான எண்ணெய் கிடைக்க வழி வகுக்கிறது.

இடப் பக்கம் பொருட்காட்சி அங்காடிகள் வரிசையாக அமைந்துள்ளன.

முதலில் உள்ள கடை—கைவண்ணப் பொருட்களின் களஞ்சியமாகத் திகழும் குறளகத்தின் ஒரு பகுதி.

சிறப்புக்குக் கேட்க வேண்டுமா ?

தமிழகத்தின் சிறப்பை எடுத்துக் காட்டும் கைவினைப் பொருட்கள் ஏராளம்.

இரண்டாவதாக இருப்பது செங்கற்பட்டு மாவட்டம் செவ்வாய்ப்பேட்டை 7 மண்பாண்டத் தொழிற்கூடத்தைச் சேர்ந்த கடை.

மண்பாண்டங்களிலே தான் எத்தனை வகை. எத்தனை விதம்.

ஒரு புதிய பானை குளிர் சாதனப் பானை, மூடியுள்ள இந்தப் பானையில் ஒரு வாரத்திற்குக் காய்கறிகள், முட்டைகள் போன்றவை கெடாமல் வைத்திருக்கலாம். அடியில் உள்ள அடுக்கில் மட்டும் இரண்டு நாளைக்கு ஒருமுறை நீரை மாற்றலாம். கொள்ளை மலிவு; விலை ரூபாய் 4.42 தான். இது ஏழைகளின் '' ஃபிரிஜிடைர்''.

கண்ணைக் கவரும் இன்னொன்று—மாஜிக் ஜாடி.

மண்ணால் ஆகிய இந்த ஜாடியின் அடிப்புறத்தில் தண்ணீர் ஊற்றி நிரப்பலாம். ஆனால், நாம் தலைகீழாகக் கவிழ்த்தால் கீழே தண்ணீர் ஊற்றாது. சாய்த்தால் அதன் வாய் வழியாகத் தண்ணீர் ஊற்றும். ரூபாய் 5, 7 ஆகிய விலைகளில் மாஜிக் ஜாடி கிடைக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் அருகிலுள்ள வண்டிப் பாளையத்திலிருந்து செய்து வந்த பொம்மைகள் உள்ளன.

அடுத்து மோகனாம்பாள் மோல்டிங் ஒர்க்ஸ்—காகிதப் பொம்மைகள். ஆளுயரப் பொம்மைகள் கண்ணைக் கவர்கின்றன.

தாயும் குழந்தையும், வள்ளுவர் போன்றவை மறக்க முடியாதவை.

பார்ப்பவர்களில் ஒருவர் கேட்கிறார் ''இந்தப் பொம்மைகள் எவ்வளவு காலம் இந்த அழகுடன் இருக்கும்?''

''எவ்வளவு காலம் பாதுகாப்பாக நாம் வைத்திருக்கிறோமோ அவ்வளவு காலம் இருக்கும்''—இது பதில்.

அடுத்து நம்மைக் கவர்ந்து இழுப்பது தோல் பொருட்கள் அங்காடி. எல்லாவிதமான தோல் பொருட்கள்—பலவகையில், நவீன நாகரிகங்களுக்கு ஏற்ற வகையில் காலணிகள், பெட்டிகள்.

சென்னை பெரியமேடு, வேலூர் மதுரை, திண்டுக்கல் ஆகிய இடங்களிலிருந்து வந்த தோல் பொருட்கள்.

அடுத்தது காஞ்சிபுரம் மண் பொம்மைக் கடை. இங்கே 25 காசு முதல் 125 ரூபாய் வரை விலையுள்ள பொம்மைகள் உள்ளன. காண்போர் அனைவரையும் கவரத்தக்க இந்த மண்பொம்மைகள் மிகமிக அழகானவை.

அடுத்துள்ளது திருக்கழுக்குன்றத்திலுள்ள 'கோபுரம்' சோப்புப் பிரிவு. திருத்தணியில் உள்ள வி. ஐ. பி. தீக்குச்சிப் பிரிவு.

பார்த்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் உரக்கச் சொல்கிறார். ''இதைப் பற்றியெல்லாம் விவரமா தமிழரசிலே போட்டிருக்கிறாங்க.... நான் படிச்சிருக்கேன்....''

''ஆமாம், விசைச் செக்குப் பற்றியும் போட்டிருந்தாங்க.... நல்லா விவரமா இருந்தது..''

அடுத்து, தேனீ வளர்ப்பு....

உண்மையிலேயே அங்கே தேனீ வளர்ப்பு நடைபெற்றது.




... தேனை ... [illegible] தொடங்குகிறது.

மண்பானையில் தேனீ வளர்ப்பது முதல் தேனீப் பெட்டிகள் பலவற்றையும் வைத்திருக்கிறார்கள். தேனீக்கு எதிரிகள் எவை என்பதையும் அங்கே புரிய வைத்திருக்கிறார்கள். இராணித் தேனீயை வளர்ப்பது முதல் எல்லா விவரங்களையும் இங்கே நாம் தெரிந்து கொள்ளலாம்.

அங்கே தேன்களின் பல வகைகள். பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. எத்தனை வகைத் தேன்கள்.

கம்புத்தேன்
காரைப் பூத்தேன்
குறிஞ்சிப் பூத்தேன்
மாம் பூத்தேன்
வாதமடக்கிப் பூத்தேன்
நொச்சிப் பூத்தேன்
பேய் எள்ளுத் தேன்
மிளகாய்ப்பூத் தேன்
தென்னம்பூத் தேன்
மக்காச் சோளத்தேன்
வாழைப் பூத்தேன்
சந்தனப் பூத்தேன்
எட்டி மரத்தேன்
ஓரன் கொடிப் பூத்தேன்
புல்தடுக்கிப் பூத்தேன்
பருத்திப் பூத்தேன்
புங்கப் பூத்தேன்
வேப்பம் பூத்தேன்

இப்படிப் பல வகையான தேன்களை அங்கே காணமுடிகிறது.

அடுத்து இருப்பது திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டி அருகிலுள்ள [illegible] கொல்லர் பட்டறைப் பிரிவு.



இங்கே லைசென்ஸ் பட்டைகள் போன்ற சிறிய சிறிய பொருள்கள் தயாராகின்றன.

அடுத்து, [illegible] தச்சுப் பட்டறைப் பிரிவில் செய்த மரச் சாமான்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

நவீன வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா நாகரிகப் பொருள்களையும் இங்கே காணலாம். வெளியில் விற்கும் மரச் சாமான்களைவிட மலிவாகவே உள்ளது.

அடுத்து மரப் பொம்மைகள் கடை.

சிறிய சந்தன யானையின் விலை [illegible] ரூபாய் தான்.

இதோ செங்கற்பட்டு மாவட்டப் பனைப்பொருள் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் பல கடைகள், பனை ஓலைப் பொருளிலிருந்து பனைமட்டை, நார் முதலிய பொருள்களைப் பயன்படுத்திப் பல விதப் பொருட்கள்.

எந்த நேரத்திலும் பதநீர் கிடைக்கும் கடை.

கோவை மாவட்டம் திருப்பூர் அருகிலுள்ள [illegible] பிரிவு அமைந்துள்ள பகுதி. [illegible] விசைத் தறியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விளக்குகிறது.

கோவை அவிநாசியில் அமைக்கப்பட்டிருக்கும் [illegible] பிரிவின் பகுதி. [illegible] தோற்றங்களில் பலவிதமான [illegible] போர்வைகள் உள்ளன.

அடுத்து இருப்பது கத்தாழை நார்ப்பகுதி.

திருநெல்வேலி காருண்யபுரத்திலுள்ள கத்தாழை நார்ப் பிரிவில் செய்யும் பணிகளைச் செய்து காட்டுகிறார்கள்.

[illegible] ஆயிரம் மூலதனம் இருந்தால் போதும். இது போன்ற பிரிவுகளைத் தொடங்கலாம்.

கத்தாழை நாரில் செய்யப்படும் கயிறுகளை வாங்கி வெளிநாடுகளில் தோல் ஏற்றுமதி செய்பவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். சென்னை பெரியமேட்டிலுள்ள தோல் பொருட்கள் ஏற்றுமதிக் கிடங்குகள்



இந்தக் கத்தாழைக் கயிற்றைப் பயன்படுத்துகின்றன.

கத்தாழை நாரினால் தடுக்குகள், மிதியடிகள் இப்படிப் பல பொருட்கள் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன.

[illegible] பழச்சாறுப்பிரிவில் [illegible] பழரசங்கள், பழக்குழம்பு முதலியன கிடைக்கின்றன.

கதர்த் துணி அங்காடிகள்.

இவைகளைத் தாண்டினால் இறுதியில் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.

அங்கே தேன் சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் உண்டு என்பதை அச்சிட்டுத் தருகிறார்கள். மலிவான விலையில் சுத்தமான தேனையும் விற்கிறார்கள். அதுமட்டுமல்ல, தேன் சர்பத் விற்கிறார்கள்.

பொருட்காட்சியைச் சுற்றி வந்த களைப்பு நீங்குகிறது.

தமிழகத்தில் கதர்—கிராம கைத்தொழில்கள்வளர்ந்து இருக்கும் விதம் நம் நெஞ்சை நிறைக்கிறது.

சென்னை மாநகர மக்கள், இப் பொருட் காட்சியைக் கண்டு பயன்பெற வாய்ப்பளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிக் கொண்டு செல்கிறார்கள்.

நமக்குப் பெருமையாக இருக்கிறது.

இந்தப் பெருமைஅனைத்துக்கும் காரணம் யார்?

நமது அரசு—அரசின் சார்பில் இயங்கிவரும்—

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்,

கதர், சோப்புத் தயாரித்தல், தீப்பெட்டித் தயாரித்தல், தோல் பொருள்கள் தயாரித்தல், தச்சுக்கொல்லுப் பொருள்களைத் தயாரித்தல், கரும்பு வெல்லம்—பழுப்புச் சர்க்கரைத் தயாரித்தல், எண்ணெய் தயாரித்தல், கைக்குத்தலரிசி தயாரித்தல், தேனீ வளர்த்தல், மண் பாண்டம் செய்தல், கைக் காகிதம் தயாரித்தல், சுண்ணாம்பு தயாரித்தல், பழம் பதம் படுத்தும் தொழில், சாண எரிவாயு, பிரம்பு மூங்கில் பொருள்கள் தயாரித்தல், அலுமினியப் பொருள்கள் தயாரித்தல், நார்த் தொழில் ஆகிய தொழில்களுக்கு ஊக்கம் அளித்து வளர்ந்து வருகிறது.

கதர்த் திட்டத்தைத் தமிழ் நாடு அரசு, அகில இந்தியாவிலேயே முதல் முறையாக 1947-ஆம் ஆண்டு அரசுத் துறை மூலமும் மற்றவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் செயல்படுத்தி வருகின்றது.

அகில இந்திய கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழு மானியமாகவும், கடனாகவும் நிதி வசதி அளிக்கின்றது. தமிழ் நாடு அரசும் நிதி வசதியளிக்கிறது. இவைகளைக் கொண்டும், வாரியத்தின் நிதியைக் கொண்டும், மேற்சொன்ன கிராமத் தொழில்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் கிராமியத் தொழிலாளர்களுக்குக் கருவிகள் வாங்க மான்யமாகவும், கடனாகவும், மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்குத் தொகைகள் கடன், மூலதனக் கடன் போன்ற நிதி வசதிகளும் அளிக்கப்பட்டு உற்பத்தியைப் பெருக்கித் தன்னிறைவு பெற உதவி செய்யப்படுகிறது.

இத்தொழில்களில் முன்னேற்றம் காண நவீன நுட்பங்களை உபயோகப்படுத்தி இதில் ஈடுபட்டுள்ளோரின் கவனத்தைச் சீரிய முறையில் திருத்தி மறுமலர்ச்சி காண ஆவன செய்யப்படுகிறது. எடுத்துக் காட்டாகப் பண்டைக்காலத்திலிருந்து உபயோகித்து வரும் நாட்டுச் செக்கினை மாற்றிக் குறைந்த மூலதனத்தில் நாட்டுச் செக்கைவிட அதிக அளவு வருவாய் தரக் கூடிய வகையில் விசைச் செக்குகள் உருவாக்கப்படுகிறது. (மேலும் கிராமியத் தொழிலாளர்களுக்குத் தொழில் நுண்ணறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.) அதே போன்று கதர் உற்பத்தியில் கைராட்டைக்குப் பதிலாக 12 கதிர்களுடன் இயங்கும் அம்பர் ராட்டைகளும், அதற்கு மேலும் விசையுடன் இயங்கும் நூற்பு ராட்டைகளும், தறிகளும் புழக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ளன. சாயமிடுதல் மற்றும் அச்சிடுதல் முதலியவைகளில்கூட நவீன முறை கையாளப்பட்டு வருகிறது. இதன் பயனாகக் கதர் கிராமத் தொழிலில் மக்கள் மறுமலர்ச்சி கண்டு பயனடைந்து வருகிறார்கள்.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆதரவில் நடைபெறும் சிறு தொழில்கள்**

கதர்
கரும்பு வெல்லம்
பழுப்புச் சர்க்கரை
பனைத் தொழில்
எண்ணெத் தொழில்
கைக் குத்தல் அரிசி
தேனீ வளர்த்தல்
மண்பாண்டத் தொழில்
உண்ணு எண்ணை
சோப்புத் தயாரித்தல்
தோல் தொழில்
தச்சு-கொல்லுத் தொழில்
கைக் காகிதம் தயாரித்தல்
சுண்ணாம்புத் தொழில்
தீப்பெட்டித் தொழில்
நார்த் தொழில்
பழம் பதனிடும் தொழில்
சாண எரி வாயு
பிரம்பு மூங்கில் தொழில்
அலுமினியப் பாத்திரம்

தமிழ்நாட்டில் கதர்த்தொழில் ஒரு கதிரிலிருந்து 12 கதிர் ராட்டைவரை மாற்றம் கண்டு தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெருமாநல்லூர் என்ற இடத்தில் இயந்திர விசைச் சக்தி மூலம் இயங்கிவரும் கிராமிய நெசவு-மையம், சுமார் 42 பேருக்கு வேலை கொடுத்து வருகிறது. இதே போன்று 375 நிலையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

தமிழ் நாட்டில், வாரியத்தின் சார்பில், ஆண்டொன்றுக்குசுமார் ரூ. 2·50 கோடி மதிப்புள்ள கதர் பருத்தி ரகங்கள், புதிய இனுககள் கண்ணைக்கவரும் ரகங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் ஆங்காங்குள்ள 15 நிலையங்கள் மூலம் கதர்ப்பட்டு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 65 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பருத்தி மற்றும் பட்டு ரகங்கள் எல்லாம் பொது மக்களுக்கு எல்லாக்காலங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. தீபாவளி, மற்றும் பொங்கலில் எல்லாக் கதர் ரகங்களுக்கும் 10 சதவிகிதம் சிறப்புத்தள்ளுபடியும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சிறப்புத் தள்ளுபடி காலத்தில் மட்டும் சுமார் ரூ. 262 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருப்பது பெருமைப் படத்தக்குரியது. தமிழ் நாட்டில் இத்தொழிலின் மூலம் சுமார் ரூ. 1·18 கோடி கூலியாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

கிராமத் தொழில்களில் மட்டும் 325 வாரிய அலகுகளும் 2,420 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் ஈடுபட்டிருக்கின்றன. கிராமத் தொழில் உற்பத்தி மதிப்பு சுமார் ரூ. 7 கோடி ஆகும். ஆண்டு விற்பனை மதிப்பு ரூ 8 கோடி ஆகும். கிராமத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் 4 இலட்சம் கிராமியத் தொழிலாளர்களுக்கு சுமார் 3·10 கோடி ஊதியம் ஆண்டொன்றுக்கு அளிக்கப்படுகிறது. இவைகளில் முக்கியமானது, பனை குளிர்பான வகைத் திட்டம், மற்றும் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தல், நார்த் தொழில் அலகுகள் முதலியவை. உற்பத்தியாகும் பொருட்கள் கதர் விற்பனை நிலையங்கள் மற்றும் நகரங்களிலுள்ள கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் செய்திகள், அண்ணாவின் கனவை நமது அரசு நனவாக்கி வருவதன் அடையாளமே ஆகும்.

—மா.

# கதர் இயக்கப் பொன் விழாப் பொருட்காட்சி




பன்னிரண்டு கதிர் ராட்டை






# தொழுநோய் நீங்கிடத் தொண்டுகள் புரிவோம்!

தொழு நோய்த் தடுப்பு வாரத்தை நாடெங்கும் நடத்திவரும் இந்நாட்களிலேனும், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அந்நோய் பற்றி அறிந்திட வேண்டும்.

தொழுநோய் உடலை உருக்குலைத்துக் குறையுண்டாக்கும் குட்ட நோய் ஆகும். தொன்மையான காலந்தொட்டு இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும், பலவகைகளிலும் மக்களை இந்நோய் கொடுமைக்கு ஆளாக்கி வருகிறது.

தொழு நோய் கொண்டோர் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், அச்சந்தரும் தோற்றத்துடனும் காணப்படுவதாலேயே இந்நோய் பற்றிய அறிவு பெருத மக்கள் அவர்களை ஒதுக்கி வைக்கவும், வெறுக்கவும் தலைப்படுகின்றனர். மக்கள் இந்நோயைப் பற்றி அறிவார்களாளுல் நோயுடையோரை வெறுக்கக் காரணமில்லை; புறக்கணிக்கவும் மாட்டார்கள். மற்ற நோயாளிகளிடம் காட்டும் பரிவும், இரக்கமும் இந்நோயாளிகளிடமும் காண்பிக்க மக்கள் முன் வருவார்கள்.

இந்தியாவில் ஏறத்தாழ 31 இலட்சம் மக்கள் இந்நோயினுல் பாதிக்கப்பட்டு உள்ளனர். தமிழ் நாட்டில் மட்டும்—வாழ்கின்ற 411 இலட்சம் மக்களில் ஏழரை இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தொழுநோயால் துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆட்பட்டுள்ளனர். அவர்களது குடும்பமும் இதனுல் பாதிக்கப்படும் நிலையிலேயே இன்றுள்ளது.

'மனித குலப்பணியே மகேசன் பணி' என்ற உள்ளங்கொண்ட உத்தமர்களான பாதிரிமார்களும், மேல்நாட்டுச் சமய, சமூகத் தொண்டர்களுமே இவர்தம் நிலைக்கு இரங்கி, இவர்கட்கென்றே தொண்டு பூண்டு பல்வேறு மருத்துவ நிலையங்களையும், இவர்களை வாழவைக்கும் இல்லங்களையும் தொடங்கி நடத்த முன் வந்தனர். இந்தியாவில் அவர்களது திருப்பணியே முதலில் தொடங்கப்பட்டது. தொழு நோயாளிகட்கும் 'வாழ்வு உண்டு' என்னும் உண்மையை நிலை நாட்டிய பெருமை அவர்கட்கே உரியது.

இந்திய மக்களில் மிகச் சிலரே இப்பணியில் ஆர்வம் காட்டினர். அந்நிலையில் உத்தமர் காந்தியடிகளின் உள்ளத்தில் இந்நோயாளிகளின் நிலை பற்றிய சிந்தனை பிறந்தது. அவரது பெரிய உள்ளத்தில், கடவுளைப் பற்றிய உணர்வு முழுமை பெற்றது, இந்தச் சிந்தனையினுலேதான் என்று கூறலாம். அவரது உள்ளம் இவர்களது துயரத்தை எண்ணி உருகியது. அவர்கட்கு ஆற்றும் பணியிலே தனது மனச்சான்று அகிம்சைக் கொள்கையின் வழியில் ஒரு நிறைவு காண்பதை உணர்ந்தார். உலகத்தாருக்கும் உரைத்தார். தம் நாட்டவர், தமது உடன் பிறப்புகள் தொழுநோயினுல் துன்பப்படுவது கண்டும் அவர்களுக்குத் தொண்டு செய்ய, அவர்கட்கு வாழ்வளிக்க முற்படாமல் விலகி நிற்பதும், வெறுப்பதும், பிறரது உடலில் காணப்படும் குட்ட நோயை விடக் கடுமையான குட்ட நோய் தம்முடைய மனத்துக்கு ஏற்பட்டுள்ளதைக் காட்டுவதாகும் என்று எடுத்துக் காட்டினுர்.



மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர்—

## க. அன்பழகன்

எனவேதான், நமது மக்கள் தொழு நோயாளிகளிடம் பரிவு காட்டும் மனப்பக்குவத்தைப் பெற முடியாதவாறு, அவர்களிடம் நிரம்பியுள்ள அறியாமையும், அச்சமும் விலக- அவர்களிடம் இந்நோய் பற்றிய அறிவுத் தெளிவும் கருணையும் உண்டாக - கடமை உணர்வு பிறக்க-இந்நோய் பற்றிய அறிவைப் பரப்புவது அரசின் கடமையாகிறது.

'அறிவுடையார் எல்லாம் உடையார்-அறிவிலார் என்னுடையரேனும் இலர்' என்னும் குறள் இதற்கு முற்றும் பொருந்தும். தொழுநோய் பற்றிய அறிவுடையார் தாம் அந்நோய்க்கு ஆளாகாது தடுத்துக் கொள்வதேயன்றிப் பிறருக்கும் அந்நோய் பற்றாது தடுக்கும் வல்லமை உடையாரும் ஆவர். இதனை அறியாதார் தாம் பிறருக்கு உதவ இயலாதவராவதன்றித் தாமே அந்த நோய்க்கு ஆட்பட்டு அல்லலுற்றுத் துன்புறவும் நேரிடலாம் அன்றே!

தொழு நோய் தீராத வியாதி என்றே விதியால் வந்த வினையென்றே எண்ணி, நம் மக்கள் வாளா இருந்து விடுகிறார்கள். முறையான மருத்துவத்தினுலே குணப்படுத்தக் கூடிய நோய் தான் குட்டநோய் என்று அழைக்கப்படும் தொழு நோய்.

இந்த வியாதியை மதியாலும், மருத்துவத்தாலும் வெல்லலாம். தமிழக மக்கள் தொகைக்கணிப்புப்படி ஆயிரம் பேர்களில் பத்தொன்பது பேர் இந்நோய் கண்டு இன்னலுறுகின்றனர்.

தொழுநோய் ஒரு குடும்பத்தில் பரம்பரையாக வரக் கூடிய நோய் அல்ல. நோய்

உள்ளவர்களிடமிருந்து அவர்களுடைய குழந்தைகளைப் பிரித்துத் தனியாக வளர்த்தால், அக்குழந்தைகளுக்குத் தொழுநோய் வருவதற்கு வாய்ப்பில்லை. தொழுநோய் மேக நோய் போன்றதுமல்ல. ஆண்-பெண் உறவால் இந்நோய் பரவுவதாகவோ, நோயுள்ள கணவனிடமிருந்து மனைவிக்கோ, நோயுள்ள மனைவியிடமிருந்து கணவனுக்கோ இத்தொழுநோய் பரவும் என்றோ கூறக் காரணமில்லை.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னர், தொழுநோய்களின் துயர் துடைக்கும் பணியைத் தனியார் நிறுவனங்கள்—குறிப்பாகக் கிறித்துவப் பாதிரியார் சங்கங்களே ஏற்றுக் கொண்டிருந்தன. கோக்ரேன் என்பவர் தமிழ்நாட்டில் தொழுநோய் தீர்க்கும் பணியைத் தொடங்கினர்.

1935-ஆம் ஆண்டில் அவர் பொலம்பாக்கத்தில் நிறுவிய நிலையமே பின்னர் 'பெல்ஜியத் தொழுநோய் நிலைய'மாக டாக்டர் ஹெமரிஜிக் அவர்களால் 1955-ல் அமைக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரிகளில் தொழுநோய்த்துறைகள் துவக்கப்படுவதற்கு அவரது பணி அடிப்படையாய் அமைந்தது.

இந்தியா விடுதலையடைந்த பிறகு, நம் நாட்டு மக்கள் நலத்தோடு வாழ்வதற்கான வழிவகைகளை வகுப்பதில் மத்திய அரசும், மாநில அரசுகளும் ஈடுபட்டுத் திட்டங்கள் தீட்டி வருகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேசியத் தொழுநோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் தொழுநோயாளிகள் சிகிச்சை பெற்றனர். 2-வது திட்டக் காலத்தில் அரசாங்க உதவி பெறும் தொழுநோய் நிலையங்கள் 11 நிறுவப்பட்டன. இத்திட்ட இறுதியில் 11 இலட்சத்து இருபதாயிரம் நோயாளிகள் சிகிச்சையளிக்கப்பட்டனர். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்தான் நமது அரசு மாநிலத் தொழுநோய் அலுவலர் ஒருவரை நியமித்துப் பயிற்சி நிலையங்கள் பல திறக்க ஏற்பாடு செய்தது.

பொலம்பாக்கம் பெல்ஜியத் தொழுநோய் நிலையத்தை அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. 1972–73-ஆம் ஆண்டுகளில் 10 தொழுநோய் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 196 இலட்ச மக்கள் கண்காணிக்கப்படுவார்கள். நகர்ப்புறங்களில், குறிப்பாகச் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில், 8 இலட்சம் பேர்களைப் பரிசோதிக்க ஜெர்மன் தொழுநோய் தீர்க்கும் சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

இந்த நோயினை அகற்றிவிடவும், அழித்துவிடவும், அரசினர் நிலையங்களும், தனியார் நிலையங்களும் பணிபுரிந்து வருகின்றன. தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் 28 பெரிய மருத்துவ நிலையங்களும், 122 சிறிய நிலையங்களும் ஓர் ஆராய்ச்சி நிலையமும் அரசினரால் நடத்தப்பட்டு வருகின்றன. தனியாரால் 32 நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் 281 இலட்சம் மக்கள் கிராமத்தில் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் 138 இலட்சம் மக்கள் வாழும் பகுதியில் தொழுநோய்த் தடுப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறப்பாகச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு பூராவும் கவனிக்கப்பட்டு வருகின்றன. திருச்சி, சேலம், மதுரை, ஆகிய மாவட்டங்களில் ஓரிரு தாலுக்காக்களைத் தவிர மற்ற இடங்களில், நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விரைவில் எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத்தில் உள்ள மக்களும் அரசினர் தொழுநோய் நிலையங்களால் கண்காணிக்கப்பட்டு வர முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் நாட்டில் தொழுநோயினால் கைகால் ஊனமுற்றோரின் எண்ணிக்கை சுமார் 50,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில், 5,000 பேர் இன்று இரந்துண்போராக மாறியுள்ளனர். தொழுநோயாளிகள் எப்படிப் பிச்சைக்காரர்களாக மாறுகின்றனர் என்பது பற்றி ஆராயப்பட்டது.

தொடக்கக் காலத்தில் நோயினைக் கண்டு அறியாமல், நோய் முற்றிய பிறகு தொழுநோய் விடுதியில் சேர்ந்து, பல காலம் அங்கே தங்கள் வாழ்நாளைக் கழித்து வெளியேறும் தொழுநோயாளிகள்தாம் பிச்சைக்காரர்களாக மாறுகின்றார்கள். உறவினர்களிடம் இருந்து நீண்ட காலம் பிரிந்து வாழ்வதனால் குடும்பத்தாரின் தொடர்பு இல்லாமல் போய் விடுகிறது. இவர்கள் குணமடைந்து திரும்பும் போது உறவினர்களும், அவர்களைத் தங்களுடன் தங்கி வாழ அனுமதிப்பதில்லை.

இதற்கு மாறாக வீட்டிலேயே தங்கிச் சிகிச்சை பெறுகின்ற தொழுநோயாளிகள் பிச்சைக்காரர்களாக மாறுவதில்லை. பொலம்பாக்கம் நிலையத்தில் சுமார் 15,000 நோயாளிகளுக்கு அவர்களது கிராமங்களுக்கு அருகில் சென்று மருத்துவ வசதி அளித்து வந்ததில், 5 நபர்கள் தான் பிச்சைக்காரர்களாக மாறியிருக்கின்றனர்.

இந்த நோயாளிகளிடம் பரிவும் பாசமும், காட்டாது வெறுத்து ஒதுக்கியதால் அவர்கள் வாழ்க்கையை நடத்த வேறு எந்த வழியும் இன்றிப் பிச்சை எடுக்கும் தொழிலை மேற்கொண்டனர்.

நமது தமிழக அரசு தொழுநோயால் பாதிக்கப்பட்டோர் பிரச்சினைகளை அனுதாபத்தோடு அணுகி ஆவன செய்து வருகின்றது. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குக் கிடைத்த பெரும் பேறாக அமைந்திருப்பதை நாடு நன்கறியும். அவர்களுக்கென்று இருக்கை ஏற்பாடும் சிறு சிகிச்சை பெறுவதோடு, தொழில் செய்து பழக வாய்ப்பும் கிடைப்பதற்கு நமது அரசு வழி செய்கின்றது.

தொழு நோய்ப் பிச்சைக்காரர்களின் துயர் துடைப்பதில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகம்தான் முன்னோடியாகவும் முன் மாதிரியாகவும் திகழ்கின்றது. தமிழகத்தில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கென 10 பராமரிப்பு இல்லங்கள் எழ இருக்கின்றன. ஏற்கெனவே 4 இல்லங்கள் அமைக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கிவிட்டன.

தொழு நோய் எப்படிப் பரவுகிறது என்பதை உறுதியாகக் கூற இயலாதெனினும், தொற்றும்வகைத் தொழுநோயாளியோடு நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து நெருங்கி இருந்தால் இந்நோய் பரவ வாய்ப்புள்ளது. கிருமிகள் உடலில் நுழைந்து, வளர்ந்து நோயின் அறிகுறிகளை வெளிப்படுத்தும் காலத்தைத் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூற இயலாதென்ற போதிலும், தொற்று ஏற்பட்டு மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் நோயின் அறிகுறிகளைப் பலரிடம் காண முடிகிறது.

டாப்சோன், தயோசெமி கார்ப்பசோன் முதலிய மருந்துகள் மூலம் தொழுநோயினைக் குணப்படுத்திவிடலாம். தொழுநோயினின்றும் முழுதும் விடுபெறத் துவக்கத்திலேயே நோயினைக் கண்டறிந்து, முறையான மருத்துவம் செய்து வருதல் வேண்டும். தொழுநோய் கண்டவர்கள் தங்கள் கவனக் குறைவால் கால்களையும், கரங்களையும் வீணாக இழந்து வருகின்றனர். உணர்ச்சி இழந்துவிடும் அவர் தம் கால்களையும், கரங்களையும், விரல்களையும் காக்க முடியும் என்பதைக் கூடச் சில நோயாளிகள் அறியவில்லை.

உணர்ச்சி இல்லாத தன்மையால் தங்கள் உறுப்புக்களை நெருப்பில் சுட்டுவிடவும், சூடான வெந்நீரைத் தொட்டு வேக வைத்துக்கொள்ளவும், புண் ஏற்பட்டால் அதைப் பொருட்படுத்தாதிருக்கவும் நேரிடுவதால் தொழு நோயாளிகள் தமக்கே பெருந்தீங்கு செய்து கொள்ளுகின்றனர். சூடான பொருள்களைத் தொடும் போது, சுடு காயங்கள் ஏற்படுகின்றன.

இக்காயங்கள் சீழ்பிடித்து, விரல் எலும்புகள் பாதிக்கப்பட்டு இற்றுப் போய் விரல்கள் குறைந்து விடுகின்றன. மருத்துவர்கள் நோயாளிகளைக் கவனத்துடன் கண்காணித்தால் இத்தகைய உறுப்புக் குறைவுகளைத் தவிர்க்கலாம். அறுவைச் சிகிச்சை மூலமும் இவற்றைச் சீர் செய்யலாம்.

ஆண்டுதோறும் தொழுநோய் எதிர்ப்பு நாள் சனவரித் திங்கள் 30-ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் தொழுநோய் பற்றிய உண்மைகளை மக்களுக்கு உணர்த்துவதற்காக ஆங்காங்கே திரைப்படங்கள் வாயிலாகவும், பொருட்காட்சிகள் மூலமாகவும், கூட்டங்கள் வாயிலாகவும், ஆக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக, கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பெரும் அளவில் மக்களனைவரையும், மருத்துவப் பரிசோதனை செய்து, நோயுள்ளதா என்பதைக் கண்டறிதலும், கிராமப் புறங்களில் வாழும் மக்களிடம் நேரில் சென்று அணுகி, நோய் தீர்க்கும் மருந்துகள் வழங்குதலும் தொழுநோய்த் தடுப்புத் திட்டத்தின் பயன்கள்.

நோயாளி தனது குடும்பத்தினருடனேயே தங்கியிருந்து அவர்களுக்கும் உதவியாக இருக்கலாம். தான் கற்றறிந்த தொழிலினைத் தொடர்ந்து செய்யலாம். சமூக விலக்கு இன்றி வீடு தேடிவரும் சிகிச்சையின் முழுப்பலனையும் பெற்று, நோயாளி தன் குடும்பத்தை விட்டுப் பிரியாமலும், தொழிலைக் கைவிடாமலும், இருந்து 'மறுவாழ்வு' பெற்று நன்கு வாழலாம்.

தொடக்கத்திலேயே நோயினைக் கண்டறிதல் வேண்டும். யாருக்கேனும் நோய் இருப்பதாகத் தெரிந்தால் தான் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகிலிருக்கும் நிலையத்தில்முறையான சிகிச்சை பெறச்செய்யவேண்டும். இப்போதையத் தலைமுறையினர் ஒழுங்காகச் சிகிச்சை செய்து கொண்டால் தான் வரும் தலைமுறையை நாம் காப்பாற்றலாம்.

தொழுநோய் நமது நாட்டிலிருந்து அறவே நீங்குகின்ற நாளே நன்னாள். அந்நோயும், பிற நோயும் இல்லாமல் மக்களெல்லாம் வாழ அறிவும்-ஆற்றலும் பெறுவதே நமது அரசின் குறிக்கோள்.

[வானொலி உரை—8-2-1973]




இந்திய அஞ்சல்-தந்தி இலாகா ஒவ்வொரு நாளும் 1 கோடியே 80 இலட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் பொருட்களையும், 1 இலட்சத்து 60 ஆயிரம் தந்திகளையும் அனுப்பி வைக்கிறது.

இது தவிர, நாள்தோறும் 60 இலட்சம் உள்ளூர் தொலைபேசிக் கால்களையும், 2 இலட்சத்து 60 ஆயிரம் டிரங்க்கால்களையும் கவனித்துக்கொள்கிறது.

நாடு விடுதலையடைந்த சமயத்தில் இந்தியாவில் 20 ஆயிரம் அஞ்சல் நிலையங்கள் மட்டுமே இருந்தன. இன்று நாட்டில் 1 இலட்சத்து 12 ஆயிரம் அஞ்சல் நிலையங்கள் உள்ளன. அதாவது, இன்று 5 ஆயிரம் மக்களுக்கு ஓர் அஞ்சல் நிலையம் விதம் உள்ளது. 25 ஆண்டுகளுக்கு முன்பு 16 ஆயிரம் பேருக்கு ஒரு அஞ்சல் நிலையம் என்ற விகிதத்திலேயே இருந்தது. நாட்டின் மக்கள் தொகை 80 சதவிகிதம் அதிகரித்திருந்தும் கூட இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த 25 ஆண்டுகளில் ஆண்டுதோறும் அஞ்சல் அலுவலகங்கள் அனுப்பி வைக்கும் அஞ்சல் பொருட்களின் எண்ணிக்கை 230 கோடியிலிருந்து 667 கோடியாக, அதாவது மும்மடங்கு அதிகரித்திருக்கிறது.

நாட்டில் மொத்தமுள்ள அஞ்சல் நிலையங்களில் 90 சதவிகிதம் கிராமப் பகுதிகளில் உள்ளன. 10 சதவிகிதம் மட்டுமே நகரங்களில் அமைந்திருக்கின்றன. நாடு விடுதலையடைந்த சமயத்தில் சுமார் 150 சதுர கிலோ மீட்டர் பகுதிக்கு ஒரு அஞ்சல் நிலையம் விதம் இருந்தது. இன்று 30 சதுர கிலோ மீட்டர் பகுதிக்கு ஒரு அஞ்சல் நிலையம் விதம் உள்ளது. இந்தியாவில் மொத்தம் சுமார் 6 இலட்சம் கிராமங்கள் உள்ளன. இவற்றுள் 55 சதவிகித கிராமங்களுக்கு நாள் தோறும் அஞ்சல் பட்டுவாடா செய்யப்படுகிறது.

1947–48-ல் இந்நாட்டில் மொத்தம் 3 ஆயிரத்து 324 தந்தி அலுவலகங்கள் மட்டுமே இருந்தன. இன்று இந்த எண்ணிக்கை 16 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. ஆண்டுதோறும் அனுப்பப்படும் தந்திகளின் எண்ணிக்கை 2 கோடியே 70 இலட்சத்திலிருந்து, 5 கோடியே 80 இலட்சமாக அதிகரித்திருக்கிறது.







# உலகில் இரண்டு

## 3. தாவும் குதிரைகளும் தங்கரதக் குழந்தைகளும்.

உயரே போகப் போக வெம்மை குறையும்; தண்மை நிறையும். உயரத்தில் இருக்கும் ஊருக்கு மட்டுமல்ல; உயரத் துடிக்கும் உள்ளங்களுக்கும் இது பொருந்தும்.

ஊட்டியில்—

அதிகாலை நேரத்துக் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் பச்சைப் பசிய புல்வெளியில் ஆணும் பெண்ணுமாக வண்ண வண்ண உடையில் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அதிகாலை என்றால் மணி ஏழு ஏழரையைத் தாண்டிய காலைப் பொழுது. கதிரவனின் முதற் கிரணங்களுக்காகக் காத்துநின்ற பனித்துளிகள், கல்லூரி மாணவ மணிகளின் காலடிபட்டுக் கதி மோட்சம் பெற்றுக் கொண்டிருந்த காலைப் பொழுது—

குதிரைக்காரக் கோவிந்தன் நிரம்பவும் உற்சாகமாக ஓடியாடித் திரிந்து கொண்டிருக்கிறான். சவாரிக் குதிரை என்றுபெருமைப்படக்கூடிய ரகத்திலே நாலும், குதிரை என்ற பெயரோடு கூடிய ரகத்திலே நாலைந்துமாக, வைத்துக் கொண்டு, "ஊட்டியின் சீசனை" விலை பண்ணிக் கொண்டிருக்கும் காலம் இது. பயணிகளின் பணப்பை—பரபரப்பு — இரண்டிற்கும் முடிச்சுப் போட்டு, தன் பணப்பையைப் பரபரப்பாக நிரப்பும் நேரம்........

நர்மதா—மருத்துவக் கல்லூரி மாணவி நர்மதா — கைகளைக் குறுக்காகக் கட்டியபடி பூஞ்செடிகளின் வரிசையை ஒட்டி நடைபழகிக் கொண்டிருக்கிறாள். காலைப் பனியின் குளுமையும் மலரின் மென்மையும் எந்நேரமும் அவள் முகத்தில் குடிகொண்டிருக்கும். அப்படிப்பட்ட முகத்தில் இன்று வழக்கத்திற்கு மாறாகச் சிடுசிடுப்பு. அவள் கொண்ட பிடிவாதத்தின் பிரதிபலிப்பு. ஆனால் அவளைப் பொறுத்தவரையில் கோபம் கூட ஒரு தனியான அழகைத்தான் தந்து கொண்டிருக்கிறது.

குதிரைக்காரக் கோவிந்தன் இரண்டு விநாடிகளுக்கு ஒரு முறை, "இதோ........ ரெண்டு நிமிஷத்திலே தந்திடறேனுங்க........" என்று பாவலாக் காட்டியபடியே மற்றப் பயணிகளைக் கவனிக்க ஓடிக் கொண்டிருக்கிறான். அவன் தொழில் நுணுக்கம் தெரிந்தவன்!

நர்மதையின் கோபத்துக்குக் காரணமிருக்கிறது.

முதல் நாள் மாலை—

மறுநாள் குதிரைச்சவாரி செய்வதற்காகக் கோவிந்தனிடம் முன்பணம் கட்டவேண்டிய நேரம். ஓய்வாக நிறுத்தி வைத்திருந்த குதிரைகளை ஒவ்வொன்றாகப் பார்த்துவிட்டு, மிகவும் ஆசையுடன் வெள்ளைக் குதிரை ஒன்றைத் தனக்கெனத் தேர்ந்தெடுத்து அதற்கான முன்பணத்தையும் கொடுத்திருக்கிறாள் நர்மதா.

காலையில்—குதிரைச் சவாரிக்கேற்றவாறு உடம்பைப் பிடிக்கின்ற லாவகமான உடையணிந்து வந்து நின்றால்—

அவள் கேட்டிருந்த குதிரை அவளுக்குத் தரப்படவில்லை.... அதுதான் போகட்டும், சட்டக் கல்லூரி மாணவன் மணிவாசகனுக்காவது அதனைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம் அல்லவா......!

இரண்டு தினங்களுக்கு முன்னால் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உரசலோடு ஆரம்பித்த அவர்களின் சந்திப்பு இன்னும் சடபுடாக்குச்சி மாதிரி சீறலில் தான் வளர்ந்து கொண்டிருக்கிறது. அவளைச் சந்தித்துச் சீண்டுவதற்கும் அவள் சினந்து முகம் சிவப்பதைக் கண்டு கை கொட்டிச் சிரிப்பதற்குமாகவே மணிவாசகனும் அவனுடைய நண்பர் குழாமும் நேரத்தை ஒதுக்கிக் கொண்டிருக்கின்றனர் போலும்......!

மேட்டுப் பாங்கான ஓட்டலின் புல்வெளியில் நின்றபடி, குதிரை போன பாதையையே பார்த்துப் பொருமிக் கொண்டிருக்கிறாள் நர்மதா. கண்ணுக்கினிய காலைக் கதிரவனோ, பனியில் குளித்துப் பசுமையில் மலரும் பூக்குவியல்களோ அவள் மனத்திற்கு இதத்தைத் தரவில்லை.......... ! முன்பணம் கொடுத்திருப்பவள் அவள்; அதென்ன குதிரைக்காரக்கோவிந்தன் தன் இஷ்டத்திற்கு இன்னொருவனுக்குக் குதிரையை எடுத்துக் கொடுப்பது? என்ற கோபம், நேரம் ஆக ஆக அதி[illegible]க் கொண்டே வருகிறது. [illegible] மென்மைக்கு விழுந்த [illegible] இது. அவள் நேர்மைக் [illegible]நியாயத்துக்கும் விழுந்த அ[illegible] இது........ என்றவாறு அவள் சீறுகிறாள்.

குதிரைக்காரக் கோவிந்தன் கடியாரத்தைப் பார்த்தபடி "மணி எட்டு மேடம்...... இப்போ வந்திடும் அந்தக் குதிரை...... நீங்க எடுத்துக்கலாம்" என்று சொல்லி முடிப்பதற்குள் சோர்வேயறியாத வெள்ளைக் குதிரை அமைதியாக வந்து நிற்கிறது. குதிரைக்கு இருக்க வேண்டிய முரட்டுத்தனமும் துள்ளலும் மணிவாசகன் உருவத்தில் குதிரையின்மேல் குடியிருக்கின்றனவே........

"பையா"....!

"ஐயா"

"அந்த அம்மா இன்னும் இந்தக் குதிரைக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறார்களா?"

"ஆமா சார்,"

"ஐயோ பாவம். இன்னும் ஒரு மணி நேரம் காத்துக் கொண்டு நிற்கட்டும்—நிற்க வேண்டாம், அவர்கள் உட்காருவதற்கு ஒரு நாற்காலியோ சோபாவோ கொண்டு வந்து போடு" என்று கேலி பேசி விட்டுக் குதிரையின் லகானை இறுக்குகிறான் மணிவாசகன்.

குதிரை கனைக்கிறது.

நாலுகால் பாய்ச்சலில் புறப்படத் தயார் என்று பொருள்.

நர்மதாவின் பிடிவாதம் அவள் பெண்மைக்கும் மீறியதாகப் போய்விடுகிறது.

"மிஸ்டர், இறங்குங்கள் கீழே"

"ஏனாம்?"

"நான் சவாரி போக வேண்டும். அதுவும் இந்தக் குதிரையில்தான் போகவேண்டும்.

"ஹெ ஹ் ஹே ன் னா ம்—என்று அலட்சியமாகச் சிரித்து விட்டுக் குதிரையைத் தட்டுகிறான். மீண்டும் குதிரை சிலிர்க்கிறது.

நர்மதாவுக்கு வந்ததே ஆத்திரம்......

கோவிந்தன் கையிலிருந்த குச்சியை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு குதிரையின் லகானைப் பிடித்து இழுக்கிறாள். மணிவாசகனின் பிடி இறுகுகிறது.

"மிஸ்டர்.... நான் முன்பணம் கொடுத்திருக்கிறேன்".

> **வெற்றி கிடைக்கும் வழி**
>
> அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.
>
> —பேறிஞர் அண்ணா

"முழுப் பணமும் நான் கொடுத்தாயிற்று மேடம்!" என்கிறான் மணிவாசகன்.

"எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறான் கோவிந்தன்".

"குதிரையையே எனக்குக் கொடுத்து விட்டானே!"

"ஆண்கள் எல்லாருமே அநியாயக்கார வர்க்கம்!"

"பெண்கள் பிடிவாதத்தின் மொத்த உருவம்!"

"பெண்ணைக் கிள்ளுக்கீரையாக நினைத்த காலம் மலையேறி விட்டது மிஸ்டர்....! பெண்ணும் ஆணுக்குச் சமமாகப் படிக்கிறாள்....உழைக்கிறாள்.. ....உத்தியோகம் செய்கிறாள்..

"எத்தனை இருந்தாலும் ஆண்களிடம் அடங்கி நடக்க வேண்டியவள் பெண்"

"ஆண்மைக்கு அடங்கி நடக்கலாம். ஆனால் ஆண் வர்க்கத்திற்கு நாங்கள் அடங்கி நடப்போம் என்று நினைப்பதோ, அடங்கி நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதோ முட்டாள்தனம். ஆணுக்குப் பெண் அடிமை என்று எந்தச் சட்டத்திலும் எழுதி வைக்கவில்லை"

"அது எழுதாச் சட்டம், அம்மணி"

"எழுதின சட்டத்தைக் கரைத்துக் குடித்துக் கரையேறும் வழியைப் பாருங்கள் வக்கீல் சார்......! எழுதாச் சட்டத்திற்கு இலக்கணம் பேச வந்துவிட்டீர்கள்; இங்கிதம் தெரியாத மனிதர்"

"பெண்மையின் இலக்கணம் தான் இவ்விடத்தில் இல்லையே.. பேச்சின் இலக்கணமாவது தெரிந்திருக்கும் என்று நினைத்தேன்......"

"நாங்கள் பெண்மையின் இலக்கியம்"

"எதிர்காலம்தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும்"

அடுத்த வார்த்தைக்காகக் காத்து நிற்காமல் குதிரையைத் தட்டிக் கொடுக்கிறான் மணிவாசகன்.

"புறப்படலாமா?" என்று பொருள்.

"கோவிந்தா!" என்று சீறுகிறாள் நர்மதா.

"கோவிந்தா! கோவிந்தா!" என்று சிரிக்கிறான் மணிவாசகன்.

கோவிந்தன் பாடு திண்டாட்டம்!

"வெள்ளை—சமாதானத்தின் சின்னம்...... நீங்க இரண்டு பேரும் வெள்ளைக் குதிரைக்காகச் சண்டை பிடிக்கிறீங்களே.... வேணும்னா ரெண்டுபேருமே அந்தக் குதிரையிலே ஒன்னா சவாரி போங்க......"

—கோவிந்தன் சொல்லி முடிக்கவில்லை. மணிவாசகன் நர்மதாவின் காதருகே குனிந்து "போவோமா?" என்று கேட்கிறான்.



சாமி...

"யு......யு......" என்று கோபத்தால் படபடக்க முகம் சிவக்க மணிவாசகனைப் பார்த்துச் சீறுகிறாள் நர்மதா.

நிலைமை விபரீதமாகப் போய்விடப் போகிறதே என்ற பயம் கோவிந்தனுக்கு.

"வெள்ளைக் குதிரை உங்க ரெண்டுபேருக்குமே கிடைக்காது சார். வெரி சாரி......எங்க சின்ன முதலாளி வர்றாரு.... இனிமேஅவர் எடுத்துக்கிட்டு போய்டுவாரு...." என்று, தூரத்தே வரும் ஓர் இளைஞனைச் சுட்டிக்காட்டிப் பரபரப்பாகக் கூறுகிறான் கோவிந்தன்.

முதலாளியின் கோபத்துக்குக் கோவிந்தன் ஆளாகக் கூடாதே என்ற இரக்கம் நர்மதாவுக்கு.

முதலாளிக்கு துரோகம் செய்யத் தூண்டுவது முறையல்ல என்ற நியாய உணர்வு மணிவாசகனுக்கு.

இருவருமே வெள்ளைக் குதிரையைக் கோவிந்தனிடம் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கி நிற்கிறார்கள்.

சவாரி போயிருந்த நல்ல குதிரைகள் இரண்டு, சொல்லி வைத்த மாதிரி ஜோடியாக வந்து நிற்கின்றன.

"ஜோடிக் குதிரை சார்.... ஜோடியாகவே எடுத்துக்கிட்டுப் போங்க.." என்று அவர்கள்

பக்கம் நிறுத்தி விட்டு, வெள்ளைக் குதிரையை இழுத்துக் கொண்டு வேகமாகப் போகிருன் கோவிந்தன். வேறெங்கே, லாயத்தை நோக்கித்தான்!

லாவகமாகத் தாவி ஏறி உட்காருகிருன் மணிவாசகன். நர்மதாவுக்குக் குதிரையேற்றம் தெரியுமோ என்னவோ...... /

" மே ஐ ஹெல்ப் யு மேடம்" என்கிருன்.

" நோ—தாங்க்ஸ் "

" குதிரை இடக்கு பண்ணி விடப் போகிறது ".

" இது ஜாதிக் குதிரை...... சண்டித்தனம் பண்ண இதுவும் உங்களைப்போல சட்டக்கல்லூரியிலயா படிக்கிறது?"

" உங்கள் படிப்புக்கும் பேச்சுக்கும் சம்பந்தமே இல்லையே.. டாக்டர்? பேச்சைக் குறைக்க வேண்டும் ".

" வக்கீல் நியாயமாக நடக்க வேண்டும். "

—வாதம் வாக்குவாதமாகிறது.

" எப்ப நடக்கணும், எப்ப ஓடணும்'னு இவங்களுக்குத் தெரியாட்டாலும் என் குதிரைகளுக்கு நல்லாத் தெரியும்.... அங்கே பாருங்க.... ஜோடிக் குதிரைகள் கலகலன்னு காத்தாப் பறக்கத் தொடங்கிடுச்சு " என்றபடியே அந்தக் குதிரைகள் போகின்ற பாதையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிருன் கோவிந்தன்.

பசிய தரை....பச்சைப்புல் மெத்தை ...... பார்க்குமிடமெல்லாம் பச்சைத் தோரணங்கள்........பசுமையான காட்சிகள் ........ இயற்கையின் எழிலை ரசித்தபடியே நர்மதாவும் மணிவாசகனும் உதகையை வலம் வருகிருர்கள். சில்லென்ற காலைப்பனியின் குளுமையை, அவர்கள் பேச்சிலிருக்கும் சுதசுதப்பு ஆற்றி ஆற்றி இலேசாக்குகிறது.

குதிரையேற்றம் பழகுகிறவர்கள், பழகியதைப் பிறருக்குத் தெரிவிக்க நினைப்பவர்கள் என்று வரும் பயணிகளைச் சுமந்து சுமந்து ஓடி ஓடிப் பழக்கப்பட்ட சவாரிக் குதிரைகள் இரண்டும் தாம் பழகிய பாதையிலே தடம் பிடித்து ஓடிக் கொண்டிருக்கின்றன......ஊட்டிக்கு வருபவர்களுக்குத் தனியாக வழிகாட்டிகள் தேவையில்லை! ஒவ்வொரு குதிரையுமே வழிகாட்டியின் பணியைத்தான் செய்கின்றது.

பந்தய மைதானத்தைக் கடந்து ஏரிக்கரைக்குப் போகும் பாதையில் குதிரைகளின் ஓட்டம் வானத்தில் மேக மூட்டம். குபீரென மங்கல் வெளிச்சத்தில் ஊட்டியின் ஒளியை மாற்றிக் காட்டுகிற ரசவாதம். பேச்சுக்குப் பேச்சு ஈடு கொடுத்தும் எதிர்வெட்டு வெட்டியும் பயணத்தை இன்பமயமானதாக்கியபடி வரும் இளம் உள்ளங்கள்..........

ஏரிக்கரைக்கு மேற்புறமாக மரங்களினூடே போய்க் கொண்டிருக்கிருர்கள் நர்மதாவும் மணிவாசகனும்....மலைப் பாதையின் மறுபக்கத்தில் சிலீர் என்ற தண்மையுடன் தேங்கிக் கிடக்கும் சின்னஞ்சிறு சுனையின் அமைதியான அழகை ரசித்தபடியே இருவரும் வந்து கொண்டிருக்கிருர்கள்.

திடீரென்று இருவருமே குதிரைகளை நிறுத்துகிருர்கள்.

ஒற்றையடிப் பாதை வழியே ஓரடி ஈரடியாய்த் தத்திவரும் தங்கரதம் போல் தளிர்நடை நடந்துவரும் குழந்தை, சுனையின் கரையில் வந்து நிற்கின்றதே!



ஐயோ அடுத்த அடி எடுத்து வைத்தால், குழந்தையின் கதி..

குதிரையை விட்டிறங்கிக் குபீரென்று பாய்ந்து சென்று குழந்தையைப் பிடிக்கிருள் நர்மதா. அதற்குள் லாவகமாக அந்தக் குழந்தையை மேலே தூக்கி விடுகிருன் மணிவாசகன்.

" நல்லவேளை....ஆண்டவன் காப்பாற்றினுன், " என்று நிம்மதியாகக் கூறுகிருள் நர்மதா.

" எம் பேரு ஆண்டவன் இல்லே, மணிவாசகன். "

குழந்தையை ஆளுக்கொரு பக்கமாகப் பிடித்திருந்தவர்கள், ஓரிரு விநாடிகள்வரை பிடியை விடவில்லை, நேருக்கு நேர் நின்று பார்த்த விழிகளின் வழியாக இருவரின் நெஞ்சங்களும் தெரிகின்றன. இதயங்கள் பேசும், ரகசியங்களை இருவருமே துல்லியமாக உணருகின்றனர்.

ஏறிச்சிறி வந்து கொண்டிருந்த இரண்டு இதயங்களுக்கு மத்தியில் இந்தச் சின்னஞ்சிறு குழந்தை ஒரு பாலம்.

பெண்ணின் பிடிவாதமும் ஆணின் ஆணவமும் அந்த இடத்தில் தலைதூக்கவில்லை. பெண்ணின் இதயத்தில் தாய்மையும் ஆணின் இதயத்தில் அன்பும் இடம் பெறுகின்றன.

" ஊட்டியில் உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கின்ற விவரம் தெரியாதே........" எனக்கு இதுவரையில் தெரி என்கிருள் நர்மதா. மணிவாசகனைக் கேலி செய்யும் நோக்கில் பிறந்த கேள்விதான்.... இருந்தாலும், ஒருவேளை அவனுக்கு மணமாகியிருக்குமோ என்ற சந்தேகம், அவனுடைய மறுமொழியால் தீரலாமே என்ற எண்ணம் அவளுக்கு இருந்தது.

" என்னுடைய குழந்தையா? .........நான் கட்டைப் பிரம்மச்சாரி அம்மணி....இருந்தாலும் ஒருவகையில் .உங்கள் சந்தேகத்தைக் கண்டு எனக்கு மகிழ்ச்சிதான்.

" என்ன ?"

" என் மகனை எப்படியும் ஊட்டியில் தான் படிக்க வைக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன். நீங்கள் முன்கூட்டியே அதைக் கூறிவிட்டீர்கள்....அது எப்படி?"

" என் மனத்திலும் அதே தீர்மானம்தான்....

" அதாவது என் மகனை ஊட்டியில் படிக்க வைக்க வேண்டுமென்ற தீர்மானம்—"

" ஐயய்யோ........ இல்லையில்லை....—அதாவது எனக்குக் கல்யாணமாகி இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு பிறக்கப்போகும் என்மகனைப் பற்றித்தான் குறிப்பிட்டேன்....."

" இல்லை நீங்கள் சொன்னது என் குழந்தையைத்தான்...."

" இல்லை என் குழந்தை....

" இல்லவே இல்லை.... என் குழந்தைதான்.........."

—இருவரும் மாறி மாறி 'என் குழந்தை' 'என் குழந்தை' என்று சண்டை



போட்டுக் கொண்டிருந்த சமயம் நாலைந்து பேராக அந்த இடத்திற்கு ஓடி வருகிருர்கள்.

இருவர் கையிலும் இருக்கும் குழந்தை இருவரில் யாருடையது என்பதைத் தீர்த்து வைக்கத் தான் விரைந்து வருகிருர்கள்.

## 4. படிப்பு முடிந்தது, பதவி வந்தது.

எந்த வெற்றிக்கும் நம்பிக்கை தான் அடிப்படை; உழைப்பிலே நம்பிக்கை வைப்ப தன் மூலம் தன் உயர்விலும் நம்பிக்கை வைத்திருந்தார் பாண்டித்துரை.

உழைத்தார்; உயர்ந்து நிற்கிருர்.

இத்தனைக்கும் அவர் பழைய பேப்பர் வியாபாரி. ஒரு காலத்தில் தெருத்தெருவாக அலைந்து பழைய காகிதங்களைச் சேகரித்தவர் பாண்டித்துரை. சுடும் வெய்யிலிலும் கனத்த மழையிலும் தெருவில் இறங்கி நடந்து நடந்து தேடித் தேடிச் சேகரித்த காகிதங்கள் அவர் பையிலும், கசப்பான அனுபவங்கள் அவர் நெஞ்சிலுமாக நிறைந்திருந்தன. இன்று அவை இரண்டுந்தாம் அவருடைய வாழ்வுக்கும் வசதிக்கும் உரமாக அவரை உயர்த்தியிருக்கின்றன.

தம் தங்கை மகன் மணிவாசகனின்மீது— அவனுடைய ஒளிமயமான எதிர்காலத்தின் மீது—அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. பள்ளிப் பருவம் தொட்டு மணிவாசகனின் செயல்கள் ஒவ்வொன்றும் அவருக்கு அவன் மீதிருந்த நம்பிக்கையை வளர்த்த வண்ணமே இருந்தன.........

எட்டாம் வகுப்பு படித்த சமயம், கார் விபத்தில் பெற்றோரை இழந்து கதிகலங்கி நின்ற மணிவாசகனைக் கருணையுடன் அரவணைத்துத் தம் வீட்டுக்குக் கூட்டி வந்திருந்தார். ஏதோ முடிந்த வரையில் உதவி செய்து அவனை எஸ்.எஸ்.எல்.சி.வரை படிக்க வைத்து விட்டால் பிறகு அவனுடைய பாட்டை அவனுகவே பார்த்துக் கொள்ளட்டும் என்று படிக்க வைத்தார். படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பாதியும், படிப்புப் பட்டம் இல்லாவிட்டால் தன் எதிர்காலத்தில் ஒளிகாண முடியாது என்ற பயம் பாதியுமாக மணிவாசகனும் படிப்பைத் தொடர்ந்தான்.

தகுந்த ஆதரவும் அரவணைப்பும் இல்லாததால், அவனுடைய கல்வி ஆர்வமும் வேகமும் தடைப்பட்டு விடக் கூடாதே என்ற நல்லுணர்வோடு தம் சக்திக்கும் மீறிக் கல்லூரிப் படிப்புக்கும் வழி செய்து கொடுத்தவர் பாண்டித்துரை.

பட்டப் படிப்பு முடியும்; உடனே ஏதாவது ஒரு வேலையில் அமருவான்; தம்மையும் தம் மகளையும் உட்கார வைத்துச் சோறு போடுவான் என்ற நினைப்பில் அவர் மணிவாசகனுக்கு ஆதரவு தரவில்லை. வாழத்துடிக்கும் ஓர் இளைஞனுக்கு வசதிகளையும், வாய்ப்புகளையும் சீராக்கித்தர வேண்டும் என்ற ஒரே நல்ல நோக்கந்தான் அவர் செய்து வந்த—செய்துவரும்— அத்தனை உதவிகளுக்கும் அடிப்படைக் காரணம்...............

சட்டக் கல்லூரியில் சேர வேண்டும் என்று அவன் விருப்பம் தெரிவித்தபோது கூட நிதிநிலைமையைத் தம் மகள் ராதையிடம் மட்டுந்தான் கூறியிருந்தார் பாண்டித்துரை. தான் படிக்க வேண்டும், வக்கீலாக வேண்டுமென்ற ஆசையைத் தியாகம் செய்தாள் ராதை. தியாகம் செய்வாள் என்ற நம்பிக்கை பாண்டித்துரைக்கு இருந்ததே.. ..

இன்று மணிவாசகன் சட்டக் கல்லூரி மாணவன்.

நாளையே அவன் சட்ட நிபுணன். வழக்கறிஞன்.

கல்வித்திறன், கலகலப்பாகப் பழகும் முறை, வாய்ப்புக்களை வலுவான வகையில் பயன்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியம் எல்லாமாகச் சேர்ந்து அவனை முதல்தர வழக்கறிஞுக உயர்த்தும் என்று ஏற்கெனவே புள்ளி போட்டுத்தான் வைத்திருக்கிருர் பாண்டித்துரை.

அவர் நம்பிக்கை வீண் போகவில்லை.

இதோ—

மணிவாசகனைத் தம்முடைய ஆலையின் சட்ட ஆலோசகனுகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள 'செண்பகா மில்ஸ்'சின் முதலாளி முத்தையா வாக்களித்திருக்கிருர்.............

முத்தையாவுக்கும் பாண்டித்துரைக்கும் நெடுநாளைய நட்புறவு உண்டு. பணக்குறுக்கீடு இல்லாத அளவுக்கு அன்பால் விளைந்த மன நெருக்கம் உண்டு. நட்புக்குப் பணத்தை விலையாகவோ வேலியாகவோ வைத்துக்கொள்ளாமல் பள்ளிப் பருவத்திலிருந்தே பழகியவர்கள். பாசம் கொண்டவர்கள்.

" நீ சொன்னுல் உன் மருமகன் தட்டமாட்டான் என்று நான் நம்புகிறேன் பாண்டித்துரை........" என்கிருர் முத்தையா.

" தட்டமாட்டான் என்று நான் நம்பலாம். ஆனுல், தட்டக்கூடாது என்ற கண்டிப்புச் செய்யவோ கட்டளையிடவோ எனக்கு உரிமையில்லை ".

" நீதானே அவனைப் படிக்க வைக்கிருய்? "

" அவன் அறிஞனுக வேண்டுமென்பதற்காக!........"

" அவனுக்காகச் செலவழிக்கிருய் "

" அவனிடம் இல்லையே என்பதற்காக! "

" உன்னிடம் அவன் நன்றியோடு நடந்து கொள்ள வேண்டுமல்லவா? "

" நன்றியை அவனுடைய உழைப்பில், அவனுடைய முன்னேற்றத்தில் அவனுடைய வெற்றிகளில்தான் நான் பார்க்க ஆசைப்படுகிறேன்........என் வார்த்தைக்குப் பணிவதிலோ எனக்குப் பதில் உதவி செய்வதிலோ அவன் நன்றி செலுத்த வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.........."

" நீ விசித்திரமான ஆளப்பா.... ..அதிருக்கட்டும், என்னுடைய ஆலையின் சட்ட ஆலோசகனுக அவன் வரச் சம்மதிப்பாளு? மறுப்பாளு?



" தன்னுடைய எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளத் தெரிந்தவன்.

309

மணிவாசகன். படிப்பு முடிவதற்குள் பதவியும், பணமும் தரநீயே அவனைத் தேடி வந்திருக்கிறாய்.....அதைப் பயன்படுத்திக் கொள்ள அவனுக்குக் கசக்கிறதா என்ன? வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாதவன் வாழ்க்கையில் எந்நாளும் முன்னேறவே முடியாது! ''

''இருந்தாலும் இந்தக் காலத்துப் பிள்ளைகளின் போக்கு நமக்குப் புரிவதில்லையே!''

''பாண்டித்துரை ....! நான் தனியாகத் தொழில் நடத்த விரும்புகிறேன். ஒரு கம்பெனியின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க என்னால் முடியாது என்று அவன் மறுத்துவிட்டால்.......... ''

'' கம்பெனியின் சட்டதிட்டங்களை வரையறை செய்யவும் அது சம்பந்தமான பிரச்சினைகளை ஆராயவும்தானே மணிவாசகனைச் சட்ட ஆலோசகனாகத் தேர்ந்தெடுக்கப் போகிறாய்....? இதிலே அவன் முகம் சுளிக்கக் கூடிய விஷயம் என்ன இருந்துவிடப்போகிறது ? ''

'' இத்தனை நாள் குடும்ப நண்பன் என்ற முறையில் என்னோடு பழக்கம் உண்டு.... இனிமேல் முதலாளி என்ற வகையில் முன்னைப் போல் என்னிடம் பழக முடியுமோ, முடியாதோ என்ற சங்கடத்தில்'' என்று அவர் முடிப்பதற்குள் பாண்டித்துரை குறுக்கிடுகிறார்.

'' உன்னிடம் வேலைக்கு வந்து சேரட்டும். என்னிடம் காட்டுகிற பணிவையும் மரியாதையையும் விட உன்னிடம் பல மடங்கு அதிகமாகவே பணிவோடு நடந்து கொள்வான்; விசுவாசமாகவும் இருப்பான் ''

'' அவனுடைய தொழில் சுதந்தரத்தில்கூட நான் குறுக்கிடப்போவதில்லை என்ற உத்தரவாதத்தையும் என் சார்பில் நீயே கூறிவிடலாம். அவன் தனியாகத் தொழில் நடத்தட்டும் ; என் கம்பெனியிலும் சட்ட ஆலோசகனாகப் பணிபுரியட்டும். ''

'' சம்மதம் தர வேண்டியவனும் பணி செய்யப் போகிறவனும் நானல்லன். முத்தையா......என் மருமகனிடம் பேச வேண்டியதை எல்லாம் என்னிடமே பேசித் தீர்த்து விடுகிறாயே. ஊட்டிக்குப் போன பிள்ளை வந்து சேரட்டும். ஒழுங்காக இந்த வருடப் பரீட்சையில் தேறட்டும்....... பிறகு நீயாயிற்று, உன் கம்பெனி வக்கீலாயிற்று !''

உதகமண்டலத்துக்கு உல்லாசப் பயணம் போயிருக்கும் ஓர் இளைஞனின் எதிர்காலத்தை உருவாக்குவது பற்றி இங்கே இரண்டு கிழடுகள் மிகவும் அக்கறையாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றன........

'' அப்பா...... சாப்பாடு தயார் '' என்று அறிவிப்புச் செய்தபடியே அறைக்குள் வருகிறாள் ராதை. அவளோடு, முத்தையாவின் செல்லமகள் செண்பகமும், '' எனக்குப் பசிக்கிறது, சீக்கிரம் வாங்கள் அப்பா '' என்று சிணுங்கிக் கொண்டே வந்து நிற்கிறாள்.

'' பிரமாதமான விருந்தா இன்றைக்கு ? ஏனம்மா ராதா, உன் கைவண்ணம் உன் ' ஸ்பெஷல் அயிட்டம்'— உருளைக் கிழங்கு பால்கறி உன்டல்லவா '' என்று கேட்டபடியே எழுகிறார் முத்தையா.

'' மன்னிக்கணும் மாமா.... அத்தான் வீட்டில் சாப்பிடாத நாட்களில் நான் பால்கறி பண்ணுவதில்லை.... '' என்று அமைதியாகக் கூறுகிறாள் ராதை.

'' இருக்கிற பால்கறியை எதிரே வைத்துக் கொண்டு இல்லாத அத்தானை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கக் கூடாதல்லவா? அதனால் தான் இன்றைக்குப் பால்கறி இல்லை'' என்று அதற்கு விளக்கமும் கொடுத்துவிட்டு ராதையைத் தரதரவென இழுத்தபடி மாடியிலிருந்து இறங்கிப் போகிறாள் செண்பகம்.

சிறகடித்துச்செல்லும் இரண்டு சிட்டுக்களையும் பார்த்தவாறே படியிறங்கும் முத்தையா, '' உன் மகள் கல்யாணச் சாப்பாடு எப்போதப்பா போடப் போகிறாய்? '' என்று கேட்கிறார் பாண்டித்துரையிடம்.

'' என் மருமகனைத்தான் கேட்க வேண்டும்! ''

'' அடப்பாவி........உன் மகளுக்குத் திருமணநாளை நிச்சயிக்கக் கூட உனக்கு உரிமையில்லையா......? அதற்கும் உன் அழகான மருமகன்— உன் மாப்பிள்ளையிடம் தான் உத்தரவு கேட்க வேண்டுமா ?''

'' அதிலே என்ன தவறு இருக்கிறது? அவனுடைய எதிர்காலத்தை அவனே நிர்ணயித்துக் கொள்ளட்டும்.

'' காலம் யாருக்காகவும் காத்து நிற்பதில்லை அப்பனே.. கன்னிப் பெண்ணின் கனவுகளுக்கும் ஓர் எல்லை உண்டு..''

'' இருக்கட்டும்.... இணைந்த நீரை ஆற்றுவெள்ளம் அடித்துக் கொண்டா போய்விடப் போகிறது........? என்று சமாதானம் கூறிச் சிரிக்கிறார் பாண்டித்துரை.

ஆற்றுவெள்ளம் அங்கே திசைமாறி ஓடத் தொடங்கியிருக்கின்ற உண்மை அவருக்கு இன்னும் தெரியவில்லை...... பாவம்........ !

நண்பர்கள் இருவரும் சாப்பிட உட்காருகிறார்கள். தோழியர் இருவரும் பரிமாறத் தொடங்குகிறார்கள்.

தொலைபேசி மணி, கிணுகிணுக்கிறது.

ராதைதான் எடுக்கிறாள். '' அப்பா...... உங்களுக்குத் தான்........ ஊட்டியிலிருந்து ட்ரங்கால் '' என்கிறாள் ராதை.

(வளரும்)



**ஒலிபெருக்கிக்குப் புதிய சலுகை.**

பொதுக்கூட்டம், திருமணம், மற்றும் பொது இடங்களில் ஒலி பெருக்கி வைப்பதற்கு ரூ. 3 கட்டி உரிமம் (License) வாங்க வேண்டும் என்றிருந்த ஆணையை மாற்றி; இனிமேல் உரிமப் பணம் கட்ட வேண்டியதில்லை என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.





# வேலை வாய்ப்பளிக்கும் வி.ஐ.பி.



சாலையோரத்திலே உட்கார்ந்து கொண்டு, போவோர் வருவோரின் கால்களைக் 'கண்ணோட்டம்' விடும் செருப்புத் தைக்கும் தொழிலாளியைப் பார்க்கிறோம்.

கால் வயிற்றுக் கஞ்சிக்காகக் காலணி பழுது பார்க்கும் அந்தத் தொழிலாளி, காலமெல்லாம் கண்ணீர் சிந்தும் நிலையையும் பார்க்கிறோம்.

இந்த நிலையை மாற்றியமைத்து, அவன் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்குகிறது வி.ஐ.பி.! அதாவது கிராமத் தொழில் பொருட்கள் (Village Industries Products).

தொழிலாளரின் திறமையை, கலை நுணுக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பளித்து ஆதரவு தருகிறது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

கண்ணாடிப் பெட்டிகளிலே காட்சியளிக்கும் கண்ணைக் கவரும் வண்ண வண்ணக் காலணிகளைப் பார்த்து விட்டால் அத்தனையும் வாங்கி அணிந்து கொள்ள வேண்டுமென்று தோன்றும்.

காலத்துக் கேற்ற நவீனக் காலணிகளை உருவாக்கும் உற்பத்திக் கூடங்கள் பல இன்று கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் சிறப்பாக இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் பதின்மூன்று காலணி உற்பத்திக் கூடங்கள் இயங்கி, சுமார், 150 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகின்றன. மேலும், இத்தொழில் வளம் பெற்றுத் திகழ்வதற்கான வாய்ப்பிருப்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். அப்போது இன்னும் கூடுதலான பேருக்கு வேலை வாய்ப்பிருக்கும் அல்லவா?

தரமான, கவர்ச்சியான காலணிகள், தோல் பொருட்களைக் கலையழகோடு தயாரித்து மலிவான விலைக்கு விற்பதால் இவற்றுக்குத் தமிழகத்தில் நல்ல ஆதரவு இருந்து வருகிறது.

காஞ்சி மாநகரில் ஓர் உற்பத்திக் கூடமாக இயங்கி வரும் காலணி தயாரிக்கும் தொழிலில், பத்துத் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள். நாள்தோறும் கூலி பெறும் இவர்கள் சராசரியாக மாதம் ரூ. 250 பெறுகிறார்கள்.

காஞ்சியில் உள்ள இந்தக் காலணி அலகு, முதலில் 1967—68-ஆம் ஆண்டில் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குடியாத்தம் நகரில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது. பிறகு இது, காஞ்சிபுரத்திலும் 1971 முதல் ஆரம்பிக்கப்பட்டு நன்கு இயங்கி வருகிறது.

இந்த உற்பத்திக் கூடத்தில் மாதம் சுமார் 500 முதல் 600 இணைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது, உற்பத்தியில் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

1971-72-ஆம் ஆண்டு ரூ. 31 ஆயிரமும், 1972—73 அக்டோபர் முடிய ரூ. 28,215-ம் இதன் உற்பத்தி மதிப்பாக இருந்து வருகிறது.

இங்கு உற்பத்தியாகும் காலணிகள் யாவும் கதர் கிராம வாரியத்தைச் சேர்ந்த எல்லாக் கதர் விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுவதுடன் சென்னைக் கதர் அங்காடி மூலமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டுகளில் விற்பனை விவரம் வருமாறு: 1971—72-ல் ரூ. 20,685.51, 1972—73 அக்டோபர் முடிய ரூ. 13,929.73.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர்ப்பட்டு, பனைத்தொழில், சோப்பு போன்ற பல்வேறு தொழில்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்துத் தொழில் வளம் பெருக்கி வருகிறது; பல்வேறு கிராமத் தொழில்களில் திறம் மிகப் பெற்றத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களை வாழ வைக்கிறது; தமிழ்நாட்டின் கைத்தொழில் நுணுக்கத்தைஉலகறியச்செய்யும் மேலான பணியையும் செய்து தமிழர் தம் பெருமையை உயர்த்துகிறது.

மக்களுக்குத் தரமான பொருட்களை வழங்கும் நோக்கோடு தமிழக முழுவதும் இயங்கி வரும் காலணி போன்ற பல்வேறு தொழில்கள், மேலும் மேலும் வளர்ந்து வளம் பெற நல்லாதரவு நல்குவோம் !






# கேளுங்கள் கொடுக்கப்படும்

கதிர் நாவாய்ப் பூச்சியினால், சென்ற ஆண்டு என் நெல் வயலில் சேதம் ஏற்பட்டது. பூப் பூத்த பிறகு மருந்து தெளிக்கக் கூடாது என்று நான் இருந்து விட்டேன். பிறகுதான் மருந்து தூவலாம் என்று சொன்னார்கள். எனவே, இந்த ஆண்டிலும் அவ்வாறு கதிர் நாவாய்ப் பூச்சிகள் தோன்றக் கூடுமாதலின், அதைத் தடுப்பதற்குரிய மருந்தையும் அதன் அளவையும் தெரிவிக்கவும்.

—வி. சிங்காரம்,
ஆத்தூர்,
சேலம் மாவட்டம்.

கதிர்களில் பால் பிடிக்கும் சமயத்தில் கதிர் நாவாய்ப் பூச்சிகள் தோன்றக் கூடும். அவைகளைக் கட்டுப் படுத்த இரண்டு முறை, 3 அல்லது 4 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவான் மூலம் தூவுதல் சிறந்தது.

* * *

கிழக்கு இராமநாதபுரத்தில் எங்களுக்கு 7½ ஏக்கர் நிலம் உள்ளது. அவை மானாவாரிக் காடுகள். கிணறு தோண்ட விரும்புவதால் அதற்குரிய வழிமுறைகளை அறிய விரும்புகின்றேன். எவ்வளவு கடன் வாங்கலாம்? எப்படி வாங்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

கூ. செல்வராஜ்,
366, முடங்கியார் ரோடு,
இராசபாளையம் (அஞ்சல்),
இராமநாதபுர மாவட்டம்.

தாங்கள் புதிதாகக் கிணறு தோண்ட, உங்கள் பகுதியில் உள்ள நிலவள வங்கியில் கடன் பெறலாம். உங்களுக்குள்ள சொத்து மதிப்பின் பேரில், கடன் வழங்கப்படும். கிணறு தோண்டி, பம்புசெட் அமைக்க 12 ஆண்டுக் கால நீண்ட காலக் கடன் வழங்கப் படுகிறது. இக்கடன் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் விவரம் கேட்டுக் கொண்டு



நிலவள வங்கிக்கு மனுச் செய்யவும். கிணறு வெட்ட எவ்வளவு தொகை வேண்டும் என்று நீங்கள் குறிப்பிட்டு, ஊராட்சி ஒன்றியப் பொறியாளடமிருந்து மதிப்பீடும் ( Estimate ) பெற்று அனுப்பி வைத்தால் சட்டவரையறைக்கு உட்பட்டு, நிலவள வங்கி கடன் வழங்கும். இக்கடன் மனுத் தயாரிப்பதற்கு உங்கள் கிராமச் சேவகரின் உதவியை நாடலாம். நிலவள வங்கி உங்கள் பகுதியில் இல்லாவிட்டால், நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளிலும் கிணறு தோண்டக் கடன் பெறலாம்.

* * *

நான் அரிசன இனத்தைச் சார்ந்தவன். எஸ். எஸ். எல். சி. வரை படித்து உள்ளேன். மேலும் பண்ணைப் பயிற்சி பெற்றுள்ளேன். எனக்கு A. D. Condition நிலம் சுமார் 10 ஏக்கர் உள்ளது. நான் கோழிப் பண்ணை வைக்க விரும்புகின்றேன். இந்த நிலத்தின் மேல் 'பாங்க்' கடன் கொடுக்குமா? அப்படிக் கொடுத்தால் நான் சொந்தத் தொழில் நடத்தலாம் என்று விரும்புகின்றேன். உடனே எனக்கு அறிவிக்கவும்.

—எஸ்.கே.ஆர். மாரிமுத்து,
சிக்க அவேரிப் பல்லி,
ஜவுளிகிரி,
பேளாலம் (அஞ்சல்),
தென்கனிக் கோட்டை வட்டம்

பொதுவாகக் கண்டிஷன் நிலங்களின் பேரில் கடன் கொடுப்பது இல்லை. ஆனால், தாங்கள் கடனைத் திருப்பி அடைப்பீர்கள், நாணயமானவர்கள் என்று வங்கி அலுவலர்கள் நம்பினால், தங்களுக்கு வேறு யாரேனும் ஜாமீன் கொடுத்தால், வேறு சொத்து மதிப்பும் இருக்குமானால், வங்கி அலுவலர்கள் கடன் அனுமதிக்கக்கூடும். இதுபற்றி, நீங்கள் வங்கியில் கேட்பதே சிறந்தது. தங்களுக்கு வங்கிக் கடன் கிடைக்காதென்றால் அரிசன நலத்துறை மூலம் பால்மாடு வாங்கக் கடன் பெற முயற்சி செய்யலாம். தாங்கள் பெற்றுள்ள பயிற்சியும் இதற்கு உதவும். பால்மாடுகளை வைத்துப் பராமரித்துப் பயன்அடைந்த பிறகு, அதில் மீதப்படுத்தி நீங்களே சொந்தமாகவே கோழிப் பண்ணை அமைத்துப் பயன்பெறலாம்.

* * *

பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஒரு கிராமத்தில் மாவுமில் அமைப்பதற்கும், ரோட்டரி ஆயில் மில் வைப்பதற்கும் லைசென்ஸ் யாரிடம் வாங்க வேண்டும்? இந்த இரண்டு தொழிலுக்கும் லைசென்ஸ் உண்டா? இல்லையா? லைசென்ஸ் வாங்கவேண்டியிருந்தால் யாருக்கு விண்ணப்பம் செய்யவேண்டும்? எங்கள் ஊரில் மின்சாரம் உள்ளது. முழு விவரம் தெரிவித்தால் வசதியாக இருக்கும்.

—எஸ். இராமையா,
ஸ்ரீராம பவனம்,
சிலைமான்,
மதுரை.

ஊராட்சி மன்றத்திற்கு உட்பட்ட கிராமத்தில் மாவு ஆலை அல்லது நெல் அரைக்கும் ஆலை அல்லது, 'ரோட்டரி' எண்ணெய் ஆலை அமைப்பதற்கு உரிமம் (லைசென்ஸ்) வாங்க வேண்டும். உரிமம் பெறுவதற்கு முன் ஆலை அமைக்க அந்த ஊராட்சி மன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும். அடுத்து, தங்கள் தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரம் பெற, தங்கள் பகுதியில் உள்ள மின்வாரிய அலுவலக அனுமதியைப் பெறவேண்டும். ஊராட்சி மன்ற அனுமதியையும், தங்கள் மனுவையும், ஆலையின் வரைபடம் ஆகியவைகளையும் அந்த ஊராட்சி மன்றம் அடங்கியுள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதுபோலவே மாவட்ட நல்வாழ்வு அலுவலர்

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

**19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண் 226,**
**சென்னை—600001.**

தந்தி : " அர்பாங்க் " தொலை பேசி எண் : 20367, 28068.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

| வட்டி விகிதங்கள். | (வருடத்திற்கு%) |
|---|---|
| நடப்புக் கணக்கு .. | வட்டி இல்லை |
| சேமிப்புக் கணக்கு .. .. | 4.00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்கு—ரூ. 1000-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை .. .. | 2·00 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை .. .. | 3·00 |

நிரந்தர கணக்கு—

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக .. .. | 4·25 |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்குக் குறைவாக .. .. | 4·75 |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்குக் குறைவாக .. .. | 5·25 |
| 1 வருடத்திலிருந்து 2 வருடங்களுக்குக் குறைவாக .. .. | 6·00 |
| 2 வருடங்களிலிருந்து 3 வருடங்கள் வரை .. .. | 6·50 |
| 3 வருடங்களுக்கு மேல் 5 வருடங்கள் வரை .. .. | 7·00 |
| 5 வருடங்களுக்கு மேல் .. .. | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்தர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு

| | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை, தலைவர்.
குடவாசல் சி. இருட்டிணமூர்த்தி, துணைத்தலைவர்.
டி. வர்த்தமானன், செயலர்.


( District Health Officer ) அவர்களுக்கும், தொழிற்சாலை ஆய்வாளர் ( Inspector of Factories ) அவர்களுக்கும் தனித்தனியே மனுவையும், ஆலையின் வரைபடத்தையும் ( Blue Print ) அனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில், தாங்கள், ஆலை



அமைக்க அனுமதி கொடுக்கப்பட்டால், பிறகு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஊராட்சி ஒன்றிய அனுமதியின் நகலையும் வைத்து, தங்கள் மனுவை மாவட்ட நல்வாழ்வு அலுவலர் அவர்களுக்கும், தொழிற்சாலை ஆய்வாளருக்கும் அனுப்பி வைப்பார். மாவட்ட நல்வாழ்வு அலுவலரும், தொழிற்சாலை ஆய்வாளரும், தாங்கள் ஆலை துவங்க இருக்கும் இடத்தையும், சுற்றுப் புறங்களையும் பார்வையிட்டுப் பிறகு அனுமதி வழங்குவார்கள். அந்த அனுமதிகள் கிடைத்த பின், ஊராட்சி ஒன்றியத்தின் உரிமம் பெற வேண்டும். இவ்வாறு தொழிற்சாலை துவங்கவும், உரிமம் பெறவும், உங்கள் கிராமச் சேவகர், உங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் வளர்ச்சி அலுவலர் ( Extension Officer for Industries ) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆகியோர் தங்களுக்கு உதவ முன் வருவார்கள். அவர்களிடம் இதுபற்றிக் கலந்து கொண்டு, பிறகு மேற்கொண்டு முயற்சி செய்யுங்கள். அதுவே நல்லது.

* * *

நமது அரசின், நிலமில்லாதவர்க்கு நிலம் வழங்கும் சிறந்த திட்டத்தின் கீழ் எனக்கு, எனது ஊருக்கருகில் 4 ஏக்கர் 20 சென்ட் வழங்கப் பட்டுள்ளது. அந்நிலத்தைச் சீர்திருத்தப் போதிய, பண வசதியின்றி உள்ளேன். மேற்படி நிலத்தைச் சீர்திருத்திட எந்த வங்கியில் அல்லது அரசு 'டிபார்ட்மெண்டில்' எப்படிக் கடன் பெறுவது என்பதை வெளியிட வேண்டுகின்றேன்.

—சி. ஆரோக்கியசாமி,
கம்பூர் (அஞ்சல்),
மேலூர் (வட்டம்),
மதுரை மாவட்டம்.

அரசு உங்களுக்கு நிலம் கொடுத்துள்ளது. இனிமேல் அதைச் சீர்திருத்திப் பயிரிட்டுப் பயனடைய வேண்டியது உங்கள் பொறுப்பேயாகும். நிலத்தைக் கொடுத்த அரசிடமிருந்து பணவசதியையும் எதிர் பார்க்கக் கூடாது. நீங்களே உழைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக நிலத்தைத் திருத்திப் பயிரிட்டு முன்னேறலாம். மானாவாரியாக எச்.பி.3. கம்பு பயிரிட்டு அதைக் கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற இயலும்! மதுரை மாவட்டத்தில் சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதற்குரிய தலைமை அலுவலகம் மதுரையில் உள்ளது. அங்குச் சென்று கடன் உதவி பற்றி விசாரிக்கவும்.

* * *

குடியாத்தம் அருகில் என்னுடைய 2ஏக்கர்நிலத்தில் சுமார்125மாங்கன்றுகள் நட்டுள்ளேன். ஆனால் 5ஆண்டுகள் ஆகியும் இன்னும் நன்குவளரவில்லை. போன ஆண்டு ஒரே ஒரு மரத்தில் மட்டும் 3 அல்லது 4 காய்கள் காய்த்தன. தயவு செய்து மரங்கள் வளர வழி சொல்லுங்கள்.

மாங்கன்றுகள் நல்ல தரமான தாய் மரங்களில் இருந்து ஒட்டு முறை மூலம் தயாரிக்கப்பட்ட ஒட்டு மாங்கன்றுகள் எனில், 3 அல்லது 4 ஆண்டுகளிலேயே காய்ப்பதற்குத் தொடங்கிவிடும். ஆனால், ஒட்டு மாமரங்கள் நீண்ட காலத்திற்கு, நிறையப் பலன் கொடுக்க வேண்டுமென்பதற்காக, ஒட்டு மாங்கன்றுகளை நட்ட 5 ஆண்டுகள் முடியும் வரை காய்ப்பதற்கு விடக் கூடாது. தாங்கள் நட்டுள்ள மாங்கன்றுகள் நல்ல தரமானவையாக இருப்பின், இதுவரை காய்க்காமல் இருந்தது நல்லதே. நீங்கள் இதுவரை இரசாயன உரமிடாதிருந்ததால், தங்கள் மாங்கன்றுகள் வளர்ச்சியிலும் காய்ப்பதிலும் பின்தங்கி விட்டிருக்கும். எனவே தங்கள் வயலில் உள்ள 5 வயதுடைய மாங்கன்றுகளுக்குப் பின்கண்டவாறு இரசாயன உரமிட்டால் நல்ல வளர்ச்சியும், காய்ப்பும் ஏற்படக் கூடும்.



ஒவ்வொரு மாங்கன்றுக்கும்
இட வேண்டிய உர அளவு

| | கிலோ. |
|---|---|
| மக்கிய தொழு எரு .. | 30 |
| அமோனியம் சல்பேட். | 2·5 |
| எலும்புத்தூள் ... | 3·0 |
| சூப்பர் பாஸ்பேட் .. | 1·5 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ். | 1·5 |

மேற்குறிப்பிட்ட உரங்களை ஜூன் மாதத்தில் இடவேண்டும். மாங்கன்றுகள் வளர்ச்சியின்றிச் சிறியதாக இருந்தால் மாங்கன்றினைச் சுற்றி 2 அடி தூரத்தில் 6 அங்குல ஆழமும், 6 அங்குல அகலமும் உள்ள வட்டமான குழி தோண்டி அதில் மேற்கூறிய உரங்களை இட்டு மண்ணால் மூட வேண்டும். மாங்கன்றுகள் வளர்ந்து கிளைகளுடன் காணப்படின், மாங்கன்றினைச் சுற்றிலும் கிளைகள் வளர்ந்துள்ள தூரத்தில் வட்டமாக 6 அங்குல ஆழமும், 6 அங்குல அகலமும் உள்ள குழி தோண்டி அதில் உரங்களை இட்டு மண்ணால் மூட வேண்டும். உரமிட்ட பிறகு மாங்கன்றுகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு உரமிடுவதால் தங்களுடைய மாங்கன்றுகள் நல்ல வளர்ச்சி அடைவதுடன் காய்க்கத் தொடங்கும். பிறகு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 5 கிலோ மக்கிய தொழு உரம், 0·5 கிலோ அமோனியம் சல்பேட், 0·5 கிலோ எலும்புத் தூள், 0·25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 0·25 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை இட்டு வர வேண்டும். இதனால் மாங்கன்றுகள் வளர்ச்சி பெற்று நிறையக் காய்க்கும்.

—ஆர்.எம்.



## வருந்துகிறோம் !

இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவு கொண்ட முத்துத் தமிழுக்கு நாடகக் கலையின் வாயிலாகத் தொண்டு செய்த முத்தமிழ்க் கலா வித்துவ ரத்தின ஔவை திரு டி.கே. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் பிப்ரவரித் திங்கள் 15-ஆம் நாளில் இயற்கை எய்தினார்கள்.

தமது ஆறுவது வயதிலேயே நாடகத்தில் நடிக்கத் தொடங்கிய திரு டி. கே. சண்முகம் அவர்கள், தமது அறுபத்தொன்றுவது வயது வரை நடித்துக் கொண்டிருந்தார்—சாரீரம் கெடாமல் பாடிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகக் கலையைப் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். அவரது ஆராய்ச்சிச் சொற்பொழிவுத் தொகுப்பு நூலாகிய 'நாடகக் கலை' சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., பி.எஸ்சி. வகுப்புகளுக்கு 1972-ஆம் ஆண்டு துணைப் பாட நூலாக வைக்கப்பட்டிருப்பது, அவரது எழுத்துக்குச் சிறப்புச் சேர்த்த செய்தியாகும்.

இத்தனை சிறப்புக்குரிய திரு டி. கே. சண்முகம் அவர்களின் இழப்புக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2
ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

ASIC/IBI3THA




# நாட்டு வளம் மக்கள் நலம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

'இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வ தஃதொப்ப தில்'

என்ற குறள் மொழிக்கொப்பத் தடைக்கற்களைக் கடந்து, நாட்டு வளம்—மக்கள் நலம்—இவையே நம் குறிக்கோள் எனப் பயணம் நடத்தியவாறு சமதர்ம மணங் கமழ் சமுதாயத்தை அமைத்திட அண்ணா வழியில் அயராது பணி புரியும் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையைப் பேரவையின் சார்பில் தமிழ் மக்களின் திருமுன் வைத்து அவர்களின் அன்பு ஆதரவை என்றும் போல் இன்றும் வேண்டி நிற்கிறேன்.

1972—73-ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும், 1973—74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும், இவண் வழங்கிட விழைகிறேன்.

உதட்டின் வெளியீடுகளாக மட்டும் சமதர்மத் திட்டங்கள் அமையாமல், செயலின் வடிவங்களாகவும் அவை ஒளிவிட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு நிறைந்த அக்கறையுண்டு. அவசரக் கோலம் அலங்கோலமாகிவிடும் என்பதையும் கருத்தில் கொண்டு, படிப்படியாக—ஆனால் உறுதியாகச் சமதர்மக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம். அறிவிக்கப்பட்ட சமதர்மத் திட்டங்கள்—சட்டங்கள் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், மேலும் நாம் மேற்கொள்ள இருக்கிற அடுத்த கட்ட சமதர்மத் திட்டங்களையும் —இந்த நிதிநிலை அறிக்கை கோடிட்டுக் காட்டுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியுடைமைகளைத் தேசிய உடைமைகளாக்குவதால் தனியார் ஆதிக்கம் இளைக்க வைக்கப்படுகிறது என்றாலும், தேசிய உடைமையாக்கப்பட்ட அந்தத் தனியார் உடைமைகள், தரித்திர நாராயணர்களாய்த் திரியும் வசதியற்ற இலட்சோப இலட்சம்






அடித்தளத்து மக்களை வாழ வைக்கப் போதுமானவையல்ல என்பதை மறந்திடலாகாது. வேலை வாய்ப்புகளின் வாயிலாக, வறுமையை வெளியேற்றுவதன் வாயிலாக அனைவரையும் வாழ வைக்கலாம்—வசதிகளைத் தரலாம் என்பது இன்பமான நம்பிக்கைதான் எனினும், அந்த நம்பிக்கை விளிம்பை அடைய, இடையில் உள்ள தொலைவை எண்ணிப் பார்த்து, அதற்குள்ளாகக் காலம் கடத்தாமல், ஏழை எளியோர்க்கு, இரப்போர்க்கு, குருகுடிசை வாழ்வோர்க்கு, குருடாகி விட்டோர்க்கு, வீட்டுமனை இல்லாதோர்க்கு, விவசாயத் தொழிலாளர்க்கு, நம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம். அவர்தம் வாழ்த்துக்களை, ஊக்கமாகக் கொண்டு தொடர்ந்து தொண்டாற்றுகின்றோம்.

இந்த முதல் உதவி மட்டும் போதாது— முழுமையானதும் நிலையானதுமான உதவி, சமுதாயத்திற்குத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்தே திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அந்தத் திட்டங்கள் பற்றிய கண்ணோட்டமும், அவைகளை மாநில அரசுகள் நிறைவேற்றிட இன்றுள்ள மத்திய-மாநிலத் தொடர்புகள் எவ்வாறெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.



அதற்கு முன்பு, நமது மாநில வரவு-செலவுகளை முதலில் அறிந்து கொள்வது பொருத்தமானது.

### 1973—74 வரவு-செலவுத் திட்டம்

1972—73-ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் மிகுதி 1·80 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திருத்த மதிப்பீட்டின்படி வருவாய்க் கணக்கில் வரவு 441·04 கோடி ரூபாயாகவும், செலவு 439·24 கோடி ரூபாயாகவும் இருக்கும். மன்றத்தில் வைக்கப்படும் 1973—74-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின்

படி, வருவாய்க் கணக்கில் வரவு 465·56 கோடி ரூபாயாக இருக்குமென்றும், செலவு 465·07 கோடி ரூபாயாக இருக்குமென்றும், வருவாய்க் கணக்கில் மிகுதி 49 இலட்சம் ரூபாயாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1973–74-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு 465·07 கோடி ரூபாயாகும். இதில் 41·47 கோடி ரூபாய் திட்ட நிதி ஒதுக்கீடு. திட்டச் செலவு என்பது மொத்தச் செலவில் ஒரு சிறு பகுதியே என்பதைச் சுட்டிக்காட்டவே இந்த விளக்கம் அளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கல்விக்கான திட்டச் செலவு 11·78 கோடி ரூபாய் அளவில் அமைந்துள்ளது என நாம் குறிப்பிடும் பொழுது, கல்வி குறித்த நமது மொத்த நிதி ஒதுக்கீடு 97·23 கோடி ரூபாய் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

அவைமுன் வைக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளில் 1973–74-ஆம் ஆண்டிலாகும் மூலதனச் செலவு 37·97 கோடி ரூபாய். மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை 53·07 கோடி ரூபாய். இதர கடன்களும், முன் பணங்களும் 11·50 கோடி ரூபாய் ஆகியவைகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

1973–74-ஆம் ஆண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வேகம், 1973–74-ஆம் ஆண்டின் நம் வளர்ச்சிப் பணிகளின் வேகத்தை அடித்தளமாகக் கொள்ளும். எனவே, 1973–74-ல் அதற்கென ஒதுக்கப்படும் நிதியளவு தனிச் சிறப்பைப் பெறுகிறது. 1969–70-ல் 87·45 கோடி ரூபாய் அளவுக்கும், 1970–71-ல் 97·50 கோடி ரூபாய் அளவுக்கும், 1971–72-ல் 114·07 கோடி ரூபாய் அளவுக்குமாகப் படிப்படியாக நம் வளர்ச்சித் திட்டங்களின் வேகத்தை உயர்த்தியுள்ளோம். ஐந்தாண்டுக் காலத்தில் இம்மாநில வளர்ச்சித் திட்டங்களுக்காக, 575 கோடி ரூபாயாவது செலவிடப்பட வேண்டுமென மத்திய அரசிடம் நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளிலான திட்டச் செலவு 299 கோடி ரூபாயாகும். எனவே, நடப்பு ஆண்டில் 125 கோடி ரூபாயும், 1973–74-ல் 150 கோடி ரூபாயும் செலவாகும் திட்டங்களைத் தீட்டி அனுப்பினோம்.

நமது திட்டங்களின் அளவைக் குறித்தும் நமது பொதுவான நிதிநிலை குறித்தும் மத்தியத் திட்ட ஆணைக் குழுவுடனும், திட்ட அமைச்சருடனும் சென்ற திங்கள் நான் விவாதம் நடத்தினேன். அதன் விளைவாகத் திட்டச் செலவு, நடப்பு ஆண்டில் 116 கோடி ரூபாயாகவும், அடுத்த ஆண்டு 120 கோடி ரூபாயாகவும் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும் நமது மாநிலத்தின் திட்டத் தேவைகளை மனத்தில்கொண்டு, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, நடப்பாண்டுத் திட்டத்திற்கு 120·27 கோடி ரூபாயும், அடுத்தாண்டுத் திட்டத்திற்கு 126·44 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளோம். மாநில அரசு எடுத்த இத்துணை முயற்சிகளுக்கும் பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு 546 கோடி ரூபாயாகத்தான் இருக்கும். இது, திட்ட ஆணைக்குழு முதலில் அறிவித்த தொகையாகிய 519 கோடி ரூபாயை விட ஓரளவு கூடுதலாக இருக்கிறதெனினும், நாம் முடிவாகக் கேட்ட 575 கோடி ரூபாயை விடக் குறைவு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

## திட்ட நிதி உதவி

இதற்குக் காரணம், நான்காவது திட்டக் காலத்திற்கு மத்திய அரசு நமக்கு அளிக்க இருந்த 250 கோடி ரூபாய்க்குப் பதிலாக 202 கோடி ரூபாயாகக் குறைத்து அளித்ததுதான். மாநிலங்களுக்கு மத்திய அரசு திட்ட நிதி உதவி அளிப்பதில், தமிழ்நாட்டின் பங்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10·8 சத விகிதமாகத் தொடங்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சத விகிதமாக மாறி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7·4 சத விகிதமாகக் குறைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4·7 சத விகிதமாகத் தேய்ந்து விட்ட நிலை, மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப் போக்கைத்தான் காட்டுகிறது.

இந்திய நாட்டின் மக்கள் தொகையில் தமிழ் நாட்டின் மக்கள் தொகை 7·5 சத விகிதம் என்பதைக் கருத்தில் கொண்டு, வரும் ஐந்தாண்டுத் திட்டத்திலாவது பழைய நிலை தொடராமல், நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதைத் தமிழ் நாட்டு மக்களின் சார்பாக வற்புறுத்திக் கூறுகிறேன்.

## நிதி ஆணைக்குழு

மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெறவழி வகுப்பதில் நிதி ஆணைக் குழுவே தலையாய இடம் பெற வேண்டும். இத்தகைய ஏற்பாடே நிதி

மத்திய திட்ட அமைச்சருடன் விவாதம்








317

ஆதாரங்களைப் பல்வேறு மாநிலங்களுக்குப் பிரித்தளிப்பதில், நியாயமாகவும், உறுதியாகவும் செயல்பட ஏற்புடையதாகும். முந்தைய நிதி ஆணைக்குழு அடிப்படையாகக் கொண்ட பல குறியீடுகள் அனுபவ ரீதியில் ஒத்து வராத தன்மையை நிதி ஆணைக்குழுவுக்கு நமது அரசு சுட்டிக்காட்டியுள்ளதோடு, அதை மாற்றி அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது. மாநிலங்களின் திட்டப் பணிகளின் தேவை, திட்டத்தின்பாற்படாத ஏனைய பணிகளின் தேவை இரண்டையும் நிதி ஆணைக் குழுவே ஒருசேரக் கருதிப் பார்க்க வேண்டும் என்பதும் நமது கருத்தாகும். பின் தங்கிய மாநிலங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதோடு, பிற மாநிலங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் இந்த அரசு தொடர்ந்து எடுத்துக் கூறி வருகிற முறையீடாகும். மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள வேளாண்மை, கல்வி, நல்வாழ்வு முதலிய துறைகளிலும் மத்திய அரசு,மேல் உரிமை ஏற்கும் பழக்கம் நிற்க வேண்டுமென நாம் கூறியுள்ளோம். இத்துறைகளுக்குச் செலவிட வேண்டிய தொகை முழுதுமே நிதி ஆணைக் குழு வாயிலாக மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்றும், மாநிலங்களுக்கு வரி வருவாயைப் பிரித்துக் கொடுப்பதற்கான அடிப்படை விரிவாக்கப்பட வேண்டுமென்றும், வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற கூட்டு நிறுவனவரி (Corporation Tax) மாநிலங்களுக்குப் பங்கீட்டுக் கொடுக்கும் வரிவருவாய்த் தொகுதிக்குள் அடங்கவேண்டுமென்றும், ஆயத்தீர்வையில் மாநிலங்கள் பெறுகிற பங்கு 50 சத விகிதமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், இத்தகைய மாற்றங்களின் மூலமே மாநிலங்களின் நிதிநிலை, நிச்சயமற்ற தன்மையிலிருந்து விடுபட முடியுமென்றும், நிதி ஆணைக்குழுவிடம் நமது அரசு எடுத்துக் கூறியிருக்கிறது.

## இயற்கையின் கொடுமையும், ஏற்ற நடவடிக்கையும்.

வெள்ளத்தாலும் புயலாலும் ஏற்பட்ட சீர் குலைவு எவ்வளவு என்பதை நேரில் கண்டு மதிப்பிட்ட மத்திய அரசுக் குழுவினர், தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டியதோடு, சீரமைப்புப் பணிகளுக்காக வழங்கிய பரிந்துரை அறிக்கையை மத்திய அரசு ஏற்று 14·25 கோடி ரூபாய் அளித்திட முன் வந்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். இது போன்ற இயற்கையின் கொடுமைகளைத் தணிக்கும் பணிகளை மேற்கொள்ள அந்தந்த மாநிலத் திட்டங்களிலேயே தொகை ஒதுக்கப்படுதல் வேண்டுமென்பதே என் கருத்து. கடந்த பத்தாண்டுகளில் அந்தந்த மாநிலத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம், வறட்சி ஆகிய அனுபவ அடிப்படையில் எதிர்காலத் தேவைகளை முன்கூட்டியே மதிப்பிட்டுத் திட்டத்தில் தக்க தொகையினைச் சேர்த்திட வேண்டும். இவ்வாறு செய்தால் எந்த மாநிலத்தில் இது போன்ற துயர் தணிப்புப் பணிகள் தேவைப்படுகிறதோ, அந்த மாநிலம் ஏற்கெனவே அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையினைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள இயலும்.

## வேளாண்மை வளர்ச்சி

உணவு தானிய உற்பத்தி 1971–72-ல் 70·45 இலட்சம் டன். 1972–73-ல் அந்த அளவு 72·02 இலட்சம் டன்னுக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இயற்கையின் ஒத்துழையாமைக் கிடையிலேயும் வேளாண்மைத் துறையில் நாம் பெற்றுள்ள இந்த வளர்ச்சி மகிழத் தக்கதாகும். துண்டு நிலங்களையும் விட்டுவிடாமல் அங்கெல்லாம் இயன்ற அளவு பயிரிடும் பொருட்டு, சம்பாப் பருவத்தில் அவசரக் காலத் திட்டம் ஒன்றை இந்த அரசு விரிந்த அளவில் மேற்கொண்டது. அதன் கீழ், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் 4·82 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெல்லும், பல்வேறு மாவட்டங்களில் 4·13 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சிறு தானியங்களும், 6·10 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைகளும் விளைவிக்க முனைந்துள்ளோம். மற்றும் 2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சூரிய காந்திச் செடி வளர்க்கப்படும்.

மேற்கண்ட முயற்சிகளின் காரணமாக மாநில அரசு தன்னால் இயன்ற அளவுக்குப் பயறு போன்ற தானிய வகைகளையும், எண்ணெய் வித்துக்களையும் அதிகமாக விளைவித்து அவைகளின் விலையேற்றங்களைக் குறைக்க முடியுமென்று நம்புகிறது. உழவனின் ஊக்கமும் அரசின் ஆர்வமும் ஒன்றிக் கலந்து வேளாண்மை வளர்ச்சிக்கான விரைவுப் பணிகள் நிறைவேறும் இந்த வேளையில், அதனை மேலும் உற்சாகப் படுத்துகின்ற அளவுக்கு உரம் வழங்குதலில் மத்திய அரசின் முழு ஒத்துழைப்பைத் தமிழ்நாடு எதிர்பார்க்கிறது. 1972–73-ல் நமக்குத் தேவைப்படும் உரம் நைட்ரஜன் கணக்கில் 2·74 இலட்சம் டன். ஆனால், இது வரை நைட்ரஜன் கணக்கில் 1·30 இலட்சம் டன்னுக்குத்தான் மத்திய அரசின் ஒதுக்கீடு நமக்குக் கிடைத்துள்ளது. மத்திய வேளாண்மை அமைச்சர் அண்மையில் இங்கு வந்திருந்த போது நமது மாநிலத்தின் உணவு தானிய தன்னிறைவுக்கும் அதற்கும் மேலாக

# சமதர்ம மணங்கமழும் 1973-74 நிதி நிலை அறிக்கை

ஓரளவு அண்டை மாநிலங்களின் தேவைக்கு வழங்கவும், நம் வேளாண்மையைப் பெருக்கிட மத்திய அரசு தட்டின்றி உரமும், தாராள நிதி உதவியும் செய்திட வேண்டுமென்று கேட்டுள்ளோம். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நமது வேளாண்மைப் பணிகள் தொடருகின்றன.

1973–74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 22·36 கோடி ரூபாய் வேளாண்மை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மைக்காக மின் இணைப்புக் கொடுத்ததில் மின்சார வாரியத்துக்கு ஓர் ஆண்டுக்கு ஏற்படும் இழப்பு 14 கோடி ரூபாயாகும். அதில் பெரும்பகுதியை ஈடு செய்வதற்கு மின்சார வாரியத்துக்கு, 1972–73 திருந்த மதிப்பீட்டில் 1971–72, 1972–73 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்காக 17·8 கோடி ரூபாயும், 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 8·2 கோடி ரூபாயும் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுவது, அவை முன் வைத்துள்ள மதிப்பீடுகளில் அடங்கும். வேளாண்மைக்காக அரசு செலவிடும் தொகைகளைக்கணக்கில் எடுக்கும் பொழுது, பாசனப் பணிகளைப் பேணி வருவதற்காக நாம் செலவு செய்யும் 15·55 கோடி ரூபாயையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். பாசனக் கட்டணமாக நமக்குக் கிடைப்பது 3·66 கோடி ரூபாய் மட்டுமே யாகும். புதிய பாசன வேலைகளை மேற்கொள்ளுவதற்காக இவ்வாண்டுக்கு 12·23 கோடி ரூபாயும், மறு ஆண்டுக்கு 12·44 கோடி ரூபாயும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆக, பல்வேறு கணக்குகளில் வேளாண்மையின் வளர்ச்சிக்கென அரசு 55 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்க முன்வந்துள்ளது என்பது தெளிவாகும். இதற்கு மேலாகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வேளாண்மைக் கடன் வழங்கி வருகிறோம். நடப்பாண்டில் (1972–73) டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை, நீண்ட காலக் கடனாகவும், நடுத்தரக் காலக் கடனாகவும், குறுகிய காலக் கடனாகவும் 57·27 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். ஆண்டின் எஞ்சிய பகுதியில் மேற்கொண்டும் இவ்வகையில் 40 கோடி ரூபாய் கடன் வழங்கப்படும். 1973–74-ல் குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்ட காலக் கடனாக 100 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கப்படும்.

### கால்நடை வளர்ப்பு

"கால் நடை வளர்ப்பு, என்பதன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 4·31 கோடி ரூபாயாக இருந்தது. இது 1972–73 திருந்த மதிப்பீட்டில் 4·89 கோடி ரூபாயாகவும், 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 5·17 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. 1973–74-ல் 5 மையக் கிராம வட்டாரங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளோம். தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டத்தை 1973–74-ல் 15 இலட்சம் ரூபாய் செலவில் சைதாப்பேட்டை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மேற்கொள்வதெனவும் முடிவு செய்துள்ளோம். மேலும், 1973–74-ல் 25 கால்நடை மருந்தகங்கள் புதிதாக 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

### மக்கள் நல்வாழ்வும், மருந்துவப் பணிகளும்

குடும்ப நலத் திட்டம் உட்பட மக்கள் நல்வாழ்வுக்கான மருந்துவப் பணிகள் திட்டத்திற்காக 1972–73-ல் 38·91 கோடி ரூபாய் செலவிட்டு வருகிறோம். அடுத்த ஆண்டில் 41·17 கோடி ரூபாய் இதற்கெனச் செலவிடத் திட்டமிட்டுள்ளோம். 1972–73, 1973–74 ஆகிய இரு ஆண்டுகளில், 61 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மாநில அரசு நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வரப்படும்.

கரூரிலும், வாணியம்பாடியிலும் 24 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகள், சென்னை அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர்-சிறார் மருத்துவ மனையில் 30 படுக்கைகள், கோயம்புத்தூரில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள், திருநெல்வேலியில் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 147 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவுகளைக் கட்டுதல், 5 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், 6 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் இதயத் துடிப்புப் பதியும் மின் இயந்திரம் அமைத்தல், 10 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் ஊடு கதிர்ப் (X-Ray) பிரிவுகளை ஏற்படுத்தல் ஆகியவை, வரும் ஆண்டில் நிறைவேற்றப்படவிருக்கிற சில புதிய திட்டங்களாகும்.

மேலும், நமது அரசு நாட்டு மருத்துவ முறைக்கும் ஊக்கம் அளிக்கிறது. அரும்பாக்கத்தில் அறிஞர் அண்ணா அரசினர் நாட்டு மருத்துவ மனையில் 25 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவு கட்டுதல், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் பத்தில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்குதல் ஆகியவற்றை இத்துறை பற்றிய பணிகளில் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

கண்ணொளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் சூன் திங்கள் முதல் இதுவரையில் எளிய சுமார் 35,000 ஏழை கிராமப்புற மக்களுக்குக் கண் அறுவை சிகிச்சை செய்து இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோய் தீர்க்கும் மருத்துவமனைகள் இணைக்கப்பட்டு அவர்களுக்கு ஏற்ற சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டுக்குள் மொத்தம் 10 மறுவாழ்வு இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுச் சுமார் 5,000 தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கான பணிகள் தொடங்கிவிடும்.





### கல்வித் துறை

நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி கல்வித் துறைக்கே உரியதாக இருந்து வருகிறது. 1966-67-ல் வருவாய்க் கணக்கில் கல்விக்கு 43·86 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்க, இத்தொகை 1972–73 திருத்த மதிப்பீட்டில் 95·82 கோடி ரூபாயாகவும், 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 97·23 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. தொடக்கக் கல்விக்கு ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் செலவை அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து கொள்ளும் முறையினை அரசு மாற்றியமைத்துள்ளது, உறுப்பினர்கள் அனைவருக்கும் உவகை ஊட்டும். இவ்வகையில், 1971–72-ஆம் ஆண்டில் 32·12 கோடி ரூபாய் மட்டுமே அரசு கொடுத்திருக்க, இத்தொகை 1972–73 திருத்த மதிப்பீட்டில் 35·95 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. வேறு துறைகளின் கீழ், அதாவது மருத்துவக் கல்வி, அரிசன நலப் பள்ளிகள், வேளாண்மைக் கல்வி ஆகியவற்றில் கல்விக்காகச் செலவிடும் தொகையையும் சேர்த்துக் கொண்டால், 1973–74-ஆம் ஆண்டில் மொத்தக் கல்விச் செலவு 108·5 கோடி ரூபாயாகும். வருவாய்க் கணக்கில் கல்விச் செலவின் சத விதம் 24-க்கு மேல் இருக்கும். 1966-67-ல் நம் மாநிலத்தில் கல்லூரிகளின் எண்ணிக்கை 105-ஆக இருந்து 1972–73-ல் 176-ஆக உயர்ந்துள்ளது. உயர் கல்வியில் இந்த அரசாங்கம் எடுத்துள்ள உருவான நடவடிக்கைகளுக்குச் சிறந்த சான்றாகும்.

கல்விபெறுவதற்குச்சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் வாய்ப்புகளை விரிவாக்கும் அதே நேரத்தில், கல்வியின் தரங்கள் தேய்ந்து விடாமல் பராமரித்துப் பாதுகாக்கும் பணி இன்று நம்மை எதிர்கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், பள்ளிகளில் நாம் அளித்துவரும் பயிற்சியின் தரத்தை உயர்த்தும் பொருட்டுப் பள்ளிப்பாடத் திட்டங்களில் மாறுதல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, அறிவியல் பாடங்களில், தொடக்கக் கட்டத்திலிருந்தே, மாணவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் தொண்டு சிறக்கும் வகையில், ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன. தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப்போலவே ஒத்த ஊதிய விகிதங்களும், ஓய்வூதியம் போன்ற சலுகைகளும் அளிக்க முன்வந்துள்ள மாநிலங்களில் தமிழகம் தலையாயது என்பதில் நாம் பெருமை கொள்கிறோம். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்கள் எல்லாக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.



கல்விப்பயிற்சிக்கால அளவைப் பற்றி நாட்டிலே பற்பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், பட்டம் பெறுவதற்கு 15 ஆண்டுகள் பயிற்சி அடிப்படையாக அமைய வேண்டும் என்ற கருத்துக்கு அனைத்து இந்தியாவிலும் ஒருமித்த ஆதரவு கிட்டியுள்ளது. தமிழகத்தில் இப்போது வழங்கும் முறைப்படி இப்பதினைந்து ஆண்டுப் பயிற்சிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. கல்லூரி மட்டத்தில் ஓராண்டு புகுமுக வகுப்புத் தொடர வேண்டுமா, அல்லது அதற்குப் பதிலாக இரண்டு ஆண்டுகள் இடைநிலை வகுப்பை மீண்டும் கொண்டுவர வேண்டுமா, அதைத் தொடர்ந்து பட்ட வகுப்பு இரண்டு ஆண்டுகளாக இருக்க வேண்டுமா, அல்லது மூன்று ஆண்டுகளாக இருக்க வேண்டுமா, என்பன போன்ற பிரச்சினைகளைப் பற்றிக் கல்வி நிபுணர்களின் வட்டாரங்களில் வெவ்வேறு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கல்லூரிப் பயிற்சி இப்பொழுது உள்ளது போல் நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமா, அல்லது ஐந்து ஆண்டுகளாக உயர்த்தப்படவேண்டுமா என்பதில் நாம் ஒரு முடிவு எடுத்த பின்புதான், அதையொட்டிப் பள்ளிப் பயிற்சி இப்பொழுது உள்ளதுபோல் 11 ஆண்டுகளாகத்தொடர்ந்து இருக்கலாமா அல்லது 10 ஆண்டுகளாகக் குறைக்கப்பட வேண்டுமா என்ற முடிவு செய்ய வேண்டியிருக்கும். கல்லூரிப் படிப்புக் கால அளவு குறித்து நம் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும் தங்கள் முடிவான கருத்தைத் தெரிவித்த பின்பு, அந்த அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது.

அயல்நாடுகளில் பயிற்சி பெற்றுப் பணியாற்றிவரும் நம் நாட்டு நிபுணர்கள், தமிழகத்திற்கு ஓராண்டாகிலும் வந்து அவர்கள் பெற்ற அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு அளிக்கும் முறையில் "தமிழ்நாடு உயர்பணி உதவித் தொகைத் திட்டம்" ஒன்று செயல்படுத்தப்படும் என்று

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கை உரையில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அயல் நாடுகளிலுள்ள நம்முடைய நிபுணர்கள் பலருடன் தொடர்பு கொண்டுள்ளோம். வரும் ஆண்டில் ஒருசிலராவது தமிழகக் கல்லூரிகளிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என நம்புகின்றேன்.

கல்விக்காக அரசும் சமுதாயமும் செய்து வரும் மூலதனச் செலவையும், ஆர்வமான முயற்சிகளையும், மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வதுதான் அவர்களுடைய எதிர்காலத்திற்கும், நாட்டினுடைய எதிர்காலத்திற்கும் உகந்தது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. அமைதியாகவும் ஆர்வத்துடனும், மாணவர்கள் கல்விப் பயிற்சி பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலையை அமைத்துத் தருவது எதிர்காலத் தலைமுறையினரின் நலனில் அக்கறை கொண்ட அனைவருடைய பொறுப்புமாகும். கல்விக்குச் சிறிதும் தொடர்பில்லாத பல பிரச்சினைகளைக் குறித்து மாணவர்களிடையே பதட்ட நிலையை உருவாக்கும் முயற்சிகள் ஆங்காங்கு மேற்கொள்ளப்படுவதைக் கண்டு நான் மிகுந்த வேதனை கொள்கிறேன். கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில், அனைவரும் அரசுடன் இதில் ஒத்துழைத்து, மாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்வுக்குச் செம்மையான அடித்தளம் அமைத்துக்கொள்ள உத்தரவாதம் வேண்டுமென்று நான் மிகுந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த அடிப்படையில் தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் நலனைக் காக்கவும், கல்வித் தரம் வளமடையச் செய்யவும், உரிய நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்வதே, அரசின் கொள்கையாக இருக்கும்.

## மின் சக்தி

தமிழ் நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறன் கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 500 மெகாவாட் அளவு உயர்த்தப்பட்டுள்ளது. ஆயினும், மின் வெட்டின் காரணமாக இந்தியாவில் பல மாநிலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதைப் போலவே, நம்முடைய மாநிலமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடிக்கான காரணங்களை மன்றம் நன்கறியும். நீர் மின் நிலையங்களையே நம்பியிராமல், அனல், அணுமின் நிலையங்களை அமைக்கவும், இருப்பவைகளை விரிவுபடுத்தவும் மத்திய அரசிடம் மாநில அரசு பலமுறை வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மின் உற்பத்திக்காக மாநில அரசு வகுத்துள்ள சிறிய திட்டங்களுக்குக் கூட நீண்ட காலமாக மத்திய அரசின் அனுமதிக்குக் காத்திருக்க வேண்டிய நிலைமை தவிர்க்க முடியாததாகிவிட்டது. தொழில் வளரும் வேகத்திற்கு ஏற்ப அதனை முந்திக்கொண்டு மின் வசதி பெருகியாக வேண்டும். ஆனால், 1983–84-ல் தமிழ் நாட்டின் மின்சாரம் 3,000 மெகாவாட் அளவுக்குப் பற்றாக்குறை இருக்கக்கூடும் என்பதைக் கணக்கிட்டு நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம். அதனை அலட்சியப்படுத்தாமல், நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற நெய்வேலி இரண்டா



வது சுரங்கம், கல்பாக்கம் அணு மின் நிலைய விரிவாக்கம், தூத்துக்குடியில் அணு மின் நிலையம், மேட்டூரிலும் தூத்துக்குடியிலும் அனல் மின் நிலையங்கள், ஹொகனக்கல் நீர் மின் நிலையம் ஆகியவை செயல்பட மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 200 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள காடம்பாறை நீர் மின் வசதித் திட்டத்தை மத்திய அரசின் அனுமதிக்காக 1971-ல் நம் அரசு அனுப்பியது. இதற்கு 1973 பிப்ரவரியில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்கிடையே மின் வெட்டினால் எழுந்துள்ள இன்னல்களை விரைந்து பரிசீலித்து விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருப்பதோடு, மேலும் தேவைப்படுகிற நடவடிக்கைகளை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஒரு பொதுப் பிரச்சினையாகக் கருதிக் கட்சிச் சார்பற்ற முறையில் அனைவரும் அரசுடன் ஒத்துழைத்தால் எழுந்துள்ள சிக்கல்களை எளிதாகத் தீர்ப்பதற்கு இயலும் என்பதையும் வேண்டுகோளாக விடுக்கிறேன்.

## கைத்தறி

நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்குக்காக, வருவாய்க் கணக்கில் 1972–73ல் 1·52கோடி ரூபாயும், 1973–74-ல் 1·94 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்காகக் கடன் கணக்கில் கைத்தறித் துணி விற்பனை செய்ததால் ஏற்பட்ட பணத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காகத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு வட்டியில்லா வழிவகை முன்பணமாக 1·5 கோடி ரூபாய் அரசு கொடுத்துள்ளது. இந்த உதவியைப் பயன்படுத்தி இவ்வாண்டு தலைமைச் சங்கம் தொடக்கச் சங்கங்களிடமிருந்து 8·10 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள் முதல் செய்ய முடிந்தது. 1966–67-ல் 3·25 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளையே கொள் முதல் செய்திருந்தது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

வேட்டிகள், புடைவைகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள், சமுக்காளங்கள் இவற்றினைக் கைத்தறிக்கென்றே ஒதுக்கி வைக்குமாறும், சுலபமாகச் செயற்படுத்தத் தக்க வகையில் இது பற்றிய விதிகளை எளிதாக்குமாறும் மத்திய அரசை நாம் வற்புறுத்தியுள்ளோம். இவ்வகையில் மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்காதது வருந்தத்தக்கது.

மற்றொரு முக்கியமான பிரச்சினை, தறிகளுக்கு நூல் வழங்குவது பற்றியதாகும். கூட்டுறவு அமைப்பின் கீழ் வரும் தறிகளுக்கு நூற்பு ஆலைகள் மூலம் நியாயமான விலையில் நூல் வழங்கி வருகிறோம். அதைப் போலக் கூட்டுறவு அமைப்புக்கு அப்பாற்பட்ட கைத்தறிகளுக்கும் நியாயமான விலையில் நூல் வழங்க வேண்டியது இன்றியமையாததாகும். அதற்குத் தமிழகத்திலுள்ள நூற்பாலைகளிலிருந்து மாநில அரசு மூலம் நூல் வழங்க, தக்க அதிகாரங்களை மாநில அரசுக்குத் தரவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுள்ளோம். இதைப் பற்றி மத்திய அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலை எதிர் நோக்கிய பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றிற்கு ஏற்புடைய தீர்வுகளை எடுத்துக் கூறுவதற்காக, திரு. க. சந்தானம் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழுவொன்றை நியமித்துள்ளோம். கைத்தறித் தொழிலில் தொழிலாளருக்கு ஊதியங்களை நிர்ணயிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவதற்காக ஊதிய ஆய்வுக் குழு ஒன்றையும் நியமித்துள்ளோம். இந்த இரண்டு குழுக்களின் அறிக்கைகளைப் பெற்று, அவைகளின் பரிந்துரைகளை ஆய்ந்து, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

## தொழில் வளர்ச்சி

உரிமம் கிடைக்கப் பெற்றுள்ள நைலான், சோடியம் ஹைட்ரோ சல்பைட், டயர், பி.சி.டி., போன்ற தொழில்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சிறு தொழில்களுக்காகத் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) வாயிலாக 3·56 கோடி ரூபாய்க்கு மூலப் பொருள்களும், இயந்திரங்கள் வாங்குவதற்கும் தொழிற்கூடங்கள் கட்டுவதற்குமாக 1·80 கோடி ரூபாய் கடனும் நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இவை 8·50 கோடி ரூபாயாக உயரும். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மூலமாக 6·52 கோடி ரூபாய் மூலதனம் உள்ள தொழில்களுக்கு 1·06 கோடி ரூபாய் அளவுக்குக் கடனும், பங்குத் தொகையுமாக உதவி அளிக்க இந்த அரசு முன்வந்துள்ளது. இவ்விரண்டு நிறுவனங்களும் அண்மையில் இந்த அரசினால் நிறுவப்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகின்றன என்பதை மன்றம் நன்கறியும். அரசே நடத்தும் சிறு தொழில்களை நிர்வகிக்கும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (TANSI) உற்பத்தி அளவு 1966–67-ல் 4·79 கோடி ரூபாயாக இருந்ததற்கும் மாறாக, மின்சாரப் பற்றாக் குறையுள்ள



நடப்பாண்டில் 7 கோடி ரூபாய் அளவை எட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. அடுத்தாண்டில் இது 9 கோடி ரூபாயாக உயரும்.

மாநில அரசு புதிய பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்து வருகிறது என்றாலும், சேலம் உருக்காலை தவிரத் தமிழ்நாட்டிலே மத்திய அரசுத் துறைத்தொழில் திட்டம் எதுவுமே நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை எனலாம். 1972–73-ல் இந்தியா முழுவதற்குமாக மத்திய அரசு 686 கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் துறைகளில் முதலீடு செய்துள்ளதாகத் தெரிகிறது. இதில் 20 கோடி ரூபாய் மட்டுமே, இம் மாநிலத்தில் நடப்பாண்டில் செய்யப்படும் முதலீடு. பாதுகாப்புக்குத் தேவையாகும் பொருள்களையும் வேறு தொழிற் சாதனங்களையும் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பான இடம் தமிழ்நாடு என்பது தெளிவாகும். கீழ்க் காணும் பெருந் தொழில்களைத் தமிழ் நாட்டில் அமைத்திட மத்திய அரசின் அனுமதியை வேண்டியுள்ளோம். அந்தத் தொழில்களாவன :—

தூத்துக்குடியில் தொழில்களுக்கான எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை (52 கோடி ரூபாய்),



மணலியில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலைகள் (80 கோடி ரூபாய்), பாலிஸ்டர் சுருள் தொழிற்சாலை (13 கோடி ரூபாய்), சேலத்தில் வெப்பந் தாங்கிக் கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை (10 கோடி ரூபாய்). காவிரி கழிமுகப் பகுதியில் எண்ணெய் தேடும் பணியை மேற்கொள்ள மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

இத்தொடர்பில் மற்றொன்றையும் குறிப்பிட விழைகிறேன். சேது சமுத்திரத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே வேண்டி வருகிறோம். இத்திட்டத்தை நிறைவேற்றுவது அவசரமும் அவசியமும் ஆகும். நம் நாட்டின் மேற்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து கிழக்குக் கரையோரப் பகுதிகளுக்குச் செல்வதற்கு ஆகும் பயண நேரம் இதனால் பெரிதும் குறையும். இது, நாட்டின் பாதுகாப்பிற்கும், கடலோர வாணிபத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனை ஐந்தாவது திட்டக் காலத்திலாவது மேற்கொள்ள வேண்டுமென மத்திய அரசை நான் வேண்டிக் கொள்கிறேன். இது தவிர, தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுள்ளோம்.

## வேலை வாய்ப்பு

ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருப்பது போல், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்குச் சிறப்புத் திட்டங்களை 10 கோடி ரூபாய் செலவில் நாம் தொடங்கி வைத்துள்ளோம். 3 கோடி

ரூபாய் செலவில் கிராமப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம், 3 கோடி ரூபாய் செலவில் கிராமப்புறச் சாலை அமைப்புத் திட்டம், 61 இலட்சம் ரூபாய் செலவில் இளைஞர் அணித் திட்டம், 1·31 கோடி ரூபாய் செலவில் வறட்சிப் பாதிப்புப் பகுதித் திட்டம், 47 இலட்சம் ரூபாய் செலவில் பொறியியல் பட்டதாரிகளுக்கும், சான்றிதழ் பெற்றவர்களுக்கும் தொழில் பழகும் சிறப்புத் திட்டம், கைப்பணியாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்குதல், 25 இலட்சம் ரூபாய் செலவில் ஆசிரியர்கள் தொழில் பழகும் திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

மேலும், படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களின் பிரச்சினையை மனத்திற்கொண்டு ஒரு விரிவான சிறப்புத் திட்டத்தை வகுத்துள்ளோம். 15 கோடி



ரூபாய் அளவில் ஆண்டுக்குச் செலவு செய்து, வேலை வாய்ப்புக்கள் அளிப்பதற்காக மாநில அரசு தயாரித்துள்ள இத்திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, விரைவில் செயல்படுத்த முடியுமென நம்புகிறோம்.

## கிராம முன்னேற்றம்

1,500 மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களையும் இடையே உள்ள ஊர்களையும் முக்கியச் சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகள் அமைப்புத் திட்டம் ஒன்றைக் கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நான் வெளியிட்டேன். இவ்வகையில் 19 கோடி ரூபாய் அளவில் தீட்டப்பட்ட திட்டத்தின்கீழ், 1972–73-ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். இப் பணிக்கென 1973–74-ஆம் ஆண்டிலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி கல்வி-நிதி விசாரணைக் குழு செய்த பரிந்துரைகளின் அடிப்படையில், வளர்ச்சி வட்டாரங்களின் வகைப்பாடு மாற்றி அமைக்கப்பட்டு, அதற்கேற்ப ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்குக் கொடுக்கப்படத்தக்க ஊரகத் தீர்வை மேல்வரி இணை மானிய விதங்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 1973–74-ல் ஊராட்சி ஒன்றியங்கள் 5·25 கோடி ரூபாய் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நகர் முன்னேற்றம்

நகர்ப்புற- நாட்டுப்புற திட்டமிடுவதற்கான சட்ட வரைவு, சட்டமாக ஆகிவிட்டதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இச்சட்டத்தின்கீழ், நகர்ப்புற–நாட்டுப்புற திட்ட அமைப்பு அதிகார மன்றங்களை அமைத்திடுவது குறித்து அரசு ஆழ்ந்து ஆலோசித்து வருகிறது. இப்பணிக்கென இம்மாநிலம் எட்டு வட்டாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான வட்டாரத் திட்டங்கள் தீட்டும் பணி நிறைவெய்தும் நிலையிலுள்ளது. வட்டாரத் திட்டங்களுடன், நகரப் பகுதிகள் ஒழுங்கு முறையுடன் வளர்ச்சியுறுவதற்காகப் பெருந்திட்டங்களும் விரிவான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார அமைப்பை(Metropolitan Development Authority) அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னை மாநகரின் பிரச்சினைகள் மேலும் பெருகி விடாமல் இருப்பதற்காகச் சென்னையிலிருந்து சுமார் 30 கல் தொலைவில் எல்லா வசதிகளும் நிறைந்த துணை நகரங்களைத் தோற்றுவிப்பது இவ்வமைப்பின் நோக்கங்களில் ஒன்றாகும். இத் திட்டத்தினை அரசு முதற்கண் செங்கற்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூருக்கு அருகில் நிறைவேற்றுவதென முடிவெடுத்துள்ளது. இத் துணைநகர், மறைந்த தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளின் நினைவாக 'மறைமலைநகர்' என அழைக்கப்படும். இதற்கான தொடக்க முயற்சியை மேற்கொள்வதற்காக 1973–74 -ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி

1973–74-ஆம் ஆண்டுத் திட்டத்தில் வீட்டு வசதிக்கென 7·08 கோடி ரூபாய் செலவிடப்படும். மேலும் வங்கிகளிடம் இருந்து அதிக நிதி வசதி பெற்று நடுத்தர வகுப்பினருக்கும் குறைந்த வருமானம் உள்ளவர்கட்கும் பயன்படத்தக்க வகையில் ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது திருச்சி, சேலம், இராமநாதபுர மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மத்திய கூட்டுறவு வீடு அடமானச் சங்கமும் வீட்டு வசதிக்கான கடன்களை அதிகரித்து வருகிறது. இதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கூடுதல் வசதிகளைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## குடிசை மாற்று வாரியம்

நகர்ப்புறக் குடிசை மாற்றும் திட்டத்திற்காக நாம் 1972–73-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தோம். 1972–73-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 6·5 கோடி ரூபாயும், 1973–74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 6·5 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளோம்.

நடப்பாண்டில் 4,500 குடியிருப்புகளும், வரும் ஆண்டில் மேலும் 4,500 குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்படும் என எதிர்







பார்க்கப்படுகிறது. மேலும், குடிசைப் பகுதிகளுக்குச் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

## குடிநீர், வடிகால் வசதி வாரியம்

1969–70-ல் குடிநீர், வடிகால் வசதி வாரியம் அமைத்ததிலிருந்து சென்னை மாநகராட்சிக்கும், ஏனைய நகராட்சிகளுக்கும் குடிநீர் வசதி அளிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறோம்.

சென்னைக்குப் போதிய அளவில் நீர் கொண்டு வருவதற்கான மாபெரும் திட்டமாகிய வீராணம் திட்டம் 1974-ல் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969–70-லிருந்து நடப்பாண்டு முடிய, 84 புதிய நகரக் குடிநீர் வசதித் திட்டங்கள் ஏற்கப்பட்டுள்ளன. 43 திட்டங்கள் முடிவடைந்துள்ளன. மேலும், 25 திட்டங்கள் இந்த ஆண்டிலே முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். இதன் பயனாக 99 நகராட்சிகளில், 80 நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிடைத்துள்ளது. மேலும் 10 நகராட்சிகளுக்கான திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய 9 நகராட்சிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

ஆறு ஆண்டுக் காலத்தில், சுமார் ரூ. 40 கோடிச் செலவில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தருவதற்கான திட்டமொன்றைக் குடிநீர் வடிகால் வசதி வாரியம் வகுத்துள்ளது. முதற்கட்டமாக, 100 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வாண்டு 220 கிராமங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டு இத் திட்டத்தின் கீழ் 200 இலட்சம் ரூபாய் செலவில் 450 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும். இவையன்றி, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 1·46 கோடி ரூபாயும் ஐக்கியநாடு குழந்தைகள் விரைவுநல நிதித் (UNICEF) திட்டத்தின்கீழ் 50 இலட்சம் ரூபாயும் அடுத்த ஆண்டு செலவிடப்படும். குடிநீர் வசதிக்காக 1966–67-ல் சுமார் 3·5 கோடி ரூபாய் செலவிடப்பட்டதற்கு மாறாக, 1973–74-ல் மொத்தம் சுமார் 20 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்

சமுதாயத்தில் வாழ்க்கை வசதியற்றுத் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் அடித்தள மக்களின் நலனில் அக்கறைகொண்டுள்ள இந்த அரசு, 1973-74ஆம் ஆண்டில், அரிசன நலன் என்ற தலைப்பில் முன்பு இணைந்து ஒதுக்கப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கான தொகை 88 இலட்சம் ரூபாய் நீங்கலாக, 8.16 கோடி ரூபாயும், பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கென 5.56 கோடி ரூபாயும் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதில் மாநிலத் திட்ட இனங்களும் மத்திய அரசு பொறுப்பேற்கும் இனங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்.)

| | மொத்தம். | திட்டத்திற்கு அப்பாற்பட்ட மாநிலச் செலவு. | மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். |
|---|---|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர் நலன் (1973-74) | 8.16 | 5.52 | 2.05 | 0.59 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் (1973-74) | 5.56 | 1.76 | 3.50 | 0.30 |

தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகும் செலவில் மிகப் பெரும் பகுதியை மாநில அரசே தன் வசதிகளிலிருந்து செய்து வருகிறது என்பது மேலே கொடுத்துள்ள புள்ளி விவரத்திலிருந்து தெரியும்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரில் திறமையுள்ள கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றையும் தோற்றுவித்துள்ளோம். இவர்களில் திறமையுள்ளவர்கள் மற்றெந்த வகுப்பினருக்கும் படிப்பிலும் பணியிலும் தாங்கள் சளைத்தவர்களல்லர் என்பதை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் தன்னம்பிக்கையும் தக்க எழுச்சியும் பெறுவதற்காகவே இத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டு உள்ளது.

வங்கிகளிடம் இருந்து இரண்டு கோடி ரூபாய் பெற்று, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, வரும் ஆண்டில் விடுதிகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. இதனையும் சேர்த்துத் தாழ்த்தப்பட்டவர் நலனுக்கென 9.16 கோடி ரூபாயும், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென 6.56 கோடி ரூபாயும் வரும் ஆண்டில் செலவிடப்படும் என்பது தெளிவாகும்.

## தொழிலாளர் நலன்

தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, கைத்தறித் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை ஆராயக் குழு அமைத்திருப்பது போல், விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தையும் ஆராய்ந்து பரிந்துரையளிக்கக் குழு ஒன்றை அமைத்துள்ளது. மேலும், சிறு தொழிற்சங்கங்கள் உயர் நீதி மன்றத்தின் முன் 'ரிட்' மனுக்கள் செய்வதற்கோ, '' ரிட் அப்பீல் '' செய்வதற்கோ ஆகும் செலவில் ஒரு பகுதியை ஏற்கும் பொருட்டுத் தக்க - வசதியற்ற தொழிற்சங்கம் ஒன்றுக்கு 150 ரூபாய் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. தொழிலாளர் நல நிதி ஒன்றையும் நாம் அமைத்துள்ளோம். இதற்கு அரசு ஐந்து இலட்சம் ரூபாய் முதற் கட்டமாக மானியமாக அளித்துள்ளது.

## குடியிருப்பு மனைச்சட்டம்

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள



(உடைமை உரிமை உறுதி செய்தல்) சட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் 1,57,000 பேருக்குக் குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 1,00,000 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்; 47,000 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து குடியிருப்பு மனையின் விலையை வசூலிக்க வேண்டாமென்றும், குடியிருப்பு உரிமையாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை மாநில நிதியிலிருந்தே கொடுத்து விடுவதென்றும் மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சட்டம் மலைப் பகுதிகள் நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. மேலும், பல்லாயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தால் பயனடைவார்கள்.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் விரைந்த முன்னேற்றத்திற்காக நமது அரசு, பணிகளைத் தொடர்ந்து ஆற்றுகிறது எனினும்,—அந்தத் துறைகளில், பெரும்பாலானவை மத்திய அரசின் உதவிகளுக்காகவும், அனுமதிகளுக்காகவும் காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலையிருப்பதை, இந்த நிதி நிலை அறிக்கையை ஊன்றிக் கவனித்தால் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய இடர்பாடுகளைக் களைந்து தயக்கமின்றித் தகைசால் திட்டங்களை நிறைவேற்றத்தான் மாநில அரசுகள் முழுமையாகச் சுயாட்சித் தன்மையுடன் விளங்க வேண்டுமென்ற இந்த அரசின் கொள்கையை வலியுறுத்தி வருகிறோம். மத்தியிலும்—மாநிலங்களிலும் ஆளுகிறவர்களைப் பொறுத்து இல்லாமல், மத்திய மாநில உறவுகள் அரசமைப்புச் சட்ட அடிப்படையிலே நிலை பெறவும் வலுப்பெறவும் வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும். இந்தக் கருத்து வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு மாநில அளவில் தன்னாலியன்ற சோஷலிசத் திட்டங்களைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருவதையும், அண்மையில் பேருந்துகள் தேசிய உடைமையாக்கப்படும் சட்டம் நிறைவேற்றப் பட்டதையும், நாட்டு மக்கள் நன்கு அறிவர். தமிழ்ச் சமுதாயம் மகிழத்தக்க வேறு சில அறிவிப்புகளையும் இந்த நிதி நிலை அறிக்கை வாயிலாக நான் நாட்டுக்கு வழங்குகிறேன்.

# அறிவிப்புகள்

## (1) உணவு தானிய மொத்த வாணிபம்

உணவு தானிய மொத்த வாணிபம் பற்றிக் குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். அதன் தொடர்பாக பிப்ரவரி 24-ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் வருவாய்த் துறை அமைச்சர் கலந்து கொண்டுள்ளார். அதில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், நமது மாநிலச் சூழ்நிலைக்கேற்ப, இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசு நடத்துவது பற்றி ஆய்ந்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## (2) தொழிற் சட்ட ஆலோசனைப் பிரிவு

தொழிற் சட்டங்கள் குறித்த பல்வேறு பிரச்சினைகளில் அறிவுரை தேவையாயிருந்து, அதற்கான செலவு செய்யத் தனிப்பட்ட தொழிலாளர் பலருக்கும் சிறு தொழிற் சங்கங்களுக்கும் இயலாத நிலை உள்ளது. இவர்களது பிரச்சினைகளை ஆய்ந்து பார்த்து, என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, என்னென்ன ஆதாரங்களுடன் எந்த அமைப்பினை அணுக வேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்கு வழி காட்ட வேண்டியிருக்கிறது. எனவே, தொழிலாளர்களுக்கு அவர்களது பிரச்சினைகளில் சட்ட ஆலோசனை கூறுவதற்காகத் தொழில் சட்ட ஆலோசனைப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும்.

## (3) அரசு அலுவலர்கள்

மத்தியிலும் மாநிலங்களிலும் உள்ள அரசு அலுவலர்களின் ஊதியம் குறித்து ஒருமித்த கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குக் கூறியுள்ள கருத்து முக்கியமானது ஆகும். மத்திய அரசு தனது அலுவலர்களது ஊதிய வீதங்களை மாற்றும்போது மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கூறியுள்ளோம். மாநில அரசுகள் தத்தம் அலுவலர்களது ஊதிய வீதங்களை மத்திய அரசின் ஊதிய வீதங்களுக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கத் தேவையான நிதி உதவி அளிக்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

நடப்பாண்டில் மாநில அரசு ஊழியர்களுக்கு நன்மைகள் பலவற்றை நாம் செய்துள்ளோம். அகவிலைப் படியை உயர்த்துவதற்கு மட்டும் நமக்கு நடப்பாண்டில் 5·5 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. தனி நபர் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதாலும், தொடர்பான வேறு சில சலுகைகளை அளித்ததாலும் நமக்கு ஆண்டொன்றுக்கு 4 கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை செலவாகிறது. இவ்வாண்டு வீட்டு வாடகைப்படி சென்னை மாநகரப் பகுதியில் ஊதியத்தில் 12 சத விகித அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டுள்ளது. சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்ற வகையில், 1973–74-ல் சென்னைப் பகுதிக்கு 15 சத விகிதம் வரையும், மற்றப் பகுதிகட்குத் தக்கவாறும், வீட்டு வாடகைப்படி உயர்த்தப்படும். இதற்கென 1·5 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். தங்கள் ஊதியங்களை மேலும் உயர்த்தும்படி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுக்கும்போது, மாநில அரசின் நிதி நிலைமையைக் கருதிப் பார்க்கும்படி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இருப்பினும், அகவிலைப்படி உயர்வு தேவை என்ற அரசு அலுவலர்களின் முறையீட்டை ஏற்று, அகவிலைப்படியை 1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் அலுவலர் அனைவர்க்கும் 10 ரூபாய் அதிகப்படுத்த அரசு முன்வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர்வு ஏப்ரல் மாதத்திற்கான ஊதியத்திலிருந்து தொடங்கப்பெறும். இதற்கு மட்டும் ஆகும் ஆண்டுச் செலவு 6 கோடி ரூபாயாகும். அரசின் நெருக்கடியான நிதிநிலையை முன்னிட்டு இந்த அகவிலைப்படி உயர்வு, ஓராண்டுக் காலத்திற்கு அலுவலர்களின் வருங்கால வைப்பு நிதியில் (Provident Fund) சேர்க்கப்படும். வழக்கம்போல் இந்த உயர்வு, ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி நிறுவன அலுவலர்களுக்கும் இதே முறையில் வழங்கப்படும்.

கூவத்தில் உல்லாசப் படகு





பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைக்கப்படும் . . . .

## (4) தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டுவசதிக் கழகம்

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இதுவரை அரசு வழங்கியுள்ள வீட்டு மனைகளில், சுமார் 80,000 மனைகளில் வீடுகள் கட்டப்படாமல் உள்ளன. இவற்றில் விரைந்து வீடுகள் கட்டுதற்கு உதவும் வகையில் தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டு வசதிக் கழகம் ஒன்றை அரசு அலுவலர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. வங்கிகளிலிருந்தும், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும், நிதி உதவி பெற்றுப் பத்தாண்டுக் காலத்தில் இம் மனைகளில் வீடுகள் கட்டி முடிக்க அரசு திட்டமொன்றைத் தீட்டியுள்ளது. முதற்கட்டமாக 1973–74-ல் 10,000 வீடுகள் கட்டப்படும் என்பதைத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

## (5) புதுக்கோட்டை

நீண்ட நெடுங்காலமாக புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்ற முறையீட்டை ஏற்றுத் தனி மாவட்டம் அமைக்கப்படும் என்பதை அந்த வட்டாரத்து மக்களுக்குப் பேருவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உருவாக வேண்டிய அந்த மாவட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய பகுதிகள் பற்றியும், அதன் காரணமாக எழும் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்து பரிந்துரை செய்யும் அறிக்கையினைத் தயாரித்து அரசுக்கு அளிக்க வருவாய்த் துறை வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## (6) பக்கிங்ஹாம் கால்வாய்ச் சீரமைப்பு

கூவம் சீரமைப்புத் திட்டப் பணி நிறைவெய்தியதை அனைவரும் அறிவர். அடுத்து, நமது மாநிலத்தில் 100 மைல் நீளம் அமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாயினை 33 அடி அகலமுள்ளதாகவும், 6 அடி ஆழமுள்ளதாகவும் ஆக்கி, அந்த நீண்ட கால்வாயைப் போக்குவரத்துக்கேற்ற வகையில் எழிலுற மாற்றிட வேண்டுமெனவும் நாம் திட்டமிட்டுள்ளோம். இத் திட்டத்தினை 1973–74 ஆம் ஆண்டிலேயே தொடங்கி விடுகிறோம். இதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 50 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்துள்ளோம்.

## (7) தனியார் மின் நிறுவனங்கள்

தனியார் துறையில் மின் வழங்கும் நிறுவனங்களில் 1967ல் அரசு எடுத்துக் கொண்டது போக, எஞ்சியுள்ள ஏழு தனியார் மின் வழங்கு நிறுவனங்களான (1) கும்பகோணம் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (2) நாகப்பட்டினம் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (3) வேலூர் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (4) சவுத் மெட்ராஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (5) திருநெல்வேலி-தூத்துக்குடி எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (6) சேலம்-ஈரோடு எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்; (7) செங்கோட்டை எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் ஆகியவற்றை நாட்டுடைமையாக்கும் சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (8) அலுமினியத் தொழிற்சாலை

அலுமினியக் கனிப்பொருள் தமிழகத்தில் கிடைக்கிறது. அதைக் கொண்டு மேட்டூரில் நடைபெறும் அலுமினியத்



தொழிற்சாலைக்கு ( MALCO ) அரசுப் பொறுப்பில் உள்ள தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ( TIICO ) நிறுவனத்தின் மூலம் 115 இலட்சம் ரூபாய் மூலதனம் போடப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் அலுமினியம் ஏராளமான சிறிய, பெரிய தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாகப் பயன்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கும் கனிப் பொருளைப் பொதுமக்களுடைய நன்மைக்காக முறைப்படி பயன்படுத்தவும், உற்பத்திப் பொருளைச் சீராகத் தொழில் வளர்ச்சிக்கு வழங்கிடவும், அலுமினியத் தொழில் நாட்டு மக்களுக்கு அதிகப் பயன் கிடைக்க வழி செய்யவும், மேட்டூரில் உள்ள அலுமினியத் தொழிற்சாலையை நாட்டுடைமையாக்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக இதன் நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்வதற்கான சட்டம் மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று, இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

### (9) நிலச் சீர்திருத்தம்

உழுபவர்களுக்கு நிலம் உரிமையாக்கப்பட வேண்டும் என்பது நமது கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையில் பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நில உடைமையாளர்களின் கீழ் பன்னெடுங் காலமாக உழுது பயிரிட்டுவரும் குத்தகைக்காரர்களின் பாதுகாப்புக்காகப் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குத்தகைக்கு உழுது பாடுபட்டுவரும் உழவர்களுக்கு, தாங்கள் உழும் நிலங்களை நில உடைமையாளர்களிடமிருந்து விலைக்கு வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்ள உரிமை தரும் சட்டம் கொண்டு வருவது என்று அரசு முடிவு செய்துள்ளது. ஏழை சிறு நில உடைமையாளர்களுக்குப் பாதகம் ஏற்படாதவண்ணம்



இதற்கால சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்பதைப் பூரிப்புப் பொங்கிட அறிவிக்கிறேன். இதற்காக ஏழை விவசாயக் குத்தகைதாரர்களுக்குத் தேவைப்படும் நிதி உதவி அளிக்க, குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் ஒன்று அமைக்கப்படும்.

"சொல்லுதல் யார்க்கும்
எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்பதை நாம் மறவாது இந்த ஆறு ஆண்டுகளில் சொல்லிய வண்ணம் பல சாதனைகளைப் புரிந்து சமதர்ம ஒளி பரவிடும் புத்தம் புதிய சமுதாயத்தைப் படைத்திடச் சூளுரை மேற்கொண்டுள்ளோம். அதற்குச் சான்று பகருகின்ற அறிவிப்புக்களைத்தான் இன்று இந்த அவையின் கண் வழங்கியிருக்கிறேன். இதுபோன்ற எண்ணங்களுக்கு, ஆண்டு அனுபவித்த ஆதிக்க புரியினரிடமிருந்து வரும் கடுமையான எதிர்ப்புக்களை இன்முகத்தோடு புறங்கண்டு, இத்திட்டங்களையும் சட்டங்களையும் ஆதரிப்பர் என எதிர்பார்க்கும் இடங்களிலிருந்தும் நாம் வியப்படையும் வண்ணம் விரோதக் கணைகள் கிளம்புவதையும் வேதனையுடன் சமாளித்தவாறு, நமது இலட்சியப் பயணம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆயினும், நமக்கு நம்பிக்கையும் ஆறுதலும் வழங்குகின்ற வகையில்

"செயற்கரிய சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்ற பொய்யாமொழி அமைந்துள்ளதை மட்டும் சுட்டிக் காட்டி, இந்த நிதிநிலை அறிக்கையை மன்றத்தின் முன்வைத்து என் கடமையை நிறைவேற்றுகிறேன்.

வணக்கம்.
மு. கருணாநிதி,
முதலமைச்சர்.

சென்னை,
1973 பிப்ரவரித் திங்கள்
26-ம் நாள்.



# பார்த்தோம் படித்தோம்






**அட்டைச் சிறப்பு.**

பிப்ரவரி 16-ஆம் நாள் 'தமிழரசு' இதழின் அட்டைப் படம் வெகு அருமை. அரசு ஏடு என்று சொல்ல முடியவில்லை; வெள்ளி விழாக் கொண்டாடி விட்ட பல தமிழ் ஏடுகளை விட மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது.

—எம். கணபதி, திருச்செந்தூர்.

**எதிரொலிக் கவிதை !**

படைப்புக்கு வேண்டுகோள்விடும் கவிஞர் கா. வேழவேந்தனின் கவிதை, உள்ளத்தைத் தொட்டு விட்டது. "பறவைகளாய் எமையெல்லாம் படைத்திருந்தால் பார்முழுதும் சுற்றிவர வேலியுண்டா" என்று கேட்கும் கவிஞரின் குரலில் மனிதப் பிறவிகளின் ஏக்கம் எதிரொலிக்கிறது.

—செல்வி கோமதி, தூத்துக்குடி.

**கேள்வி தந்த பதுமைகள்.**

லண்டனிலுள்ள மெழுகுப் பதுமைகளைப் பற்றிய கட்டுரையைப் படித்தேன். நமது நாட்டிலும் அவற்றைப் போன்ற பொம்மைகள் எப்போது உருவாகும் என்ற கேள்வி என் இதயத்தைத் துளைக்கத் தொடங்கி விட்டது !

—எஸ். எஸ். சோமு, திருச்சி.

**3,07,000 புத்தகங்களா ?**

சென்னைப் பல்கலைக் கழக நூலகத்துக்கு நான் அடிக்கடி சென்றிருக்கிறேன். அங்கே எத்தனை நூல்கள் இடம் பெற்றுள்ளன என்பது எனக்கு இதுவரை தெரியாது. 'தமிழரசு' பிப்ரவரி 16 இதழைப் படித்த பின்னர்தான் தெரிந்து கொண்டேன் ! அடேயப்பா.. 3,07,000 புத்தகங்களா ?

—அ. பவானி, சென்னை-8.

**திறமை மிக்க தமிழ்நாடு**

திருப்பதி—திருமலை தேவஸ்தானத்திற்குத் தேவைப்படும் மரச் சாமான்களைத் திருவொற்றியூரில் உள்ள அனுப்பி ரீட் கூட்டுறவு மர வேலைத் தொழிற்சாலை வருகிறது என்ற செய்தி—தமிழகத்தின் தொழில் திறமையைப் பறை சாற்றுகிறது.

—பி. ஆர். சந்திரன், நெல்லை.

**தங்கக் கரும்பு**

நல்ல திரைப் படத்தை எடுத்தால்தான் தங்கப் பதக்கம் கிடைக்கும் என நினைத்திருந்தேன். நல்ல கரும்பை விளைச்சல் செய்தாலும் தங்கப் பதக்கம் பரிசு கிடைக்கும் என்பது இப்போதுதான் தெரிகிறது.... !

—கே. வி. சிவராஜ், கோவை.



### கோவை மாவட்டத்தில்

நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் நம்பியூரில் கட்டப்பட்டுள்ள தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் நினைவு திறந்தவெளிக் கலையரங்கம் பெரியார் ஈ.வே.ரா. அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கலையரங்கின் மதிப்பு ரூ. 7,500.

• • •

### இராமநாதபுர மாவட்டத்தில்

இராமநாதபுர மாவட்டம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம் வலசப்பட்டு கிராமத்தில் ரூ. 18 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குடும்ப நலத்துறை நிலையக் கட்டடமொன்றைத் தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்கள் திறந்து வைத்தார்.

• • •

### சேலம் மாவட்டத்தில்

பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தீவிர வேலை வாய்ப்புத்

## மாவட்டங்களிலிருந்து....

திட்டம் கடந்த ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் செயல்பட ஆண்டொன்றுக்கு ரூ. 1,25,000 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கான மானியம் இவ்வொன்றியத்திற்கு வழங்கப்பெற்றுள்ளது.

இத்திட்டத்தினால் கடந்த ஆண்டில் 280 பேர்களுக்கு நான்கு மாத காலம் தொடர்ச்சியாக வேலை அளிக்கப்பட்டுப் பாதையில்லா 23 குக்கிராமங்களுக்குச் செல்லும் பாதை போடும் வேலையும், 40 பாதைகளுக்குக் கப்பிப் போட்டுப் பராமரித்தல் வேலையும், 31 சிறு பாலங்கள் கட்டும் வேலையும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இவைகளில் 5 பாதைகளுக்குக் கப்பி போடும் வேலையைத் தவிர மற்ற வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன. மேற்கண்ட வேலைகளினால் இவ்வாண்டில் 250 பேர்களுக்குத் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வேலை வாய்ப்புத் திட்டத்தினால் இதுவரை பாதை வசதியில்லாத 40 கிராமங்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளதுடன், இதனால் இப்பகுதியில் வாழும் சுமார் 8,760 மக்கள் பயனடைந்துள்ளார்கள்.

• • •

### திருச்சி மாவட்டத்தில்

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 265 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. 14 புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. அதன் மூலம் சிறிய கிராமங்களை நெடுஞ்சாலையுடன் இணைத்துக் கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளுக்கு விவசாயப் பொருட்களைக் கொண்டுவர வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 9 பழைய சாலைகளை மராமத்துச் செய்து, வண்டிகள் போக்கு வரத்துக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. புதிதாகப் போடப்பட்ட சாலைகளின் நீளம்: 44 கி.மீ. சீர் செய்யப்பட்ட சாலைகளின் நீளம் 22 கி.மீ.


**தமிழரசு**

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 10.00 |
| அரையாண்டு | ரூ. 5.00 |
| தனி இதழ் | 0·40 காசு |








# கண்களைக் காப்போம்

கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகிறோம். அதன் பயனாகத் தமிழ்நாட்டின் மக்களுக்கு என்னென்ன கண் நோய்கள் உண்டாகின்றன. எவ்வளவு பேர்களுக்கு நோய் உண்டாகிறது என்று அறிந்திருக்கிறோம். கண் நோய்களை முக்கியமாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### சுற்றுப்புறச் சூழ்நிலையால் உண்டாகும் கண் நோய்கள்

சுற்றுப்புறம் அசுத்தமாக இருந்தால் அதனால் கிருமிகள் கண்களில் சேர்ந்து கண்நோய்களை உண்டாக்குகின்றன. சாதாரணமாகக் கண்கள் சிவந்து, பீளை வடியும். கண்வலி என்ற நோய் இந்த மாதிரிக் கிருமிகளால் உண்டாகிறது. குளறவு: சுத்தம் குறைவதால் கண்ணில் உள்ள நீர்ப்பையில் கிருமிகள் சேர்ந்து நீர்ப்பையை அடைத்துக் கொள்ளும். இதுவும் நம் நாட்டில் சாதாரணமாகக் காணப்படுகிறது. நீர்ப்பையில் உண்டாகும் சீழ் கண் விழியில் சேர்வதால் பல கெடுதல்கள் ஏற்படும். கருவிழியில் சிறிய தாசிபட்டாலும் கூட, கிருமிகள் சேர்ந்து, பெரிய புண்ணாகிப் பார்வை இழக்கிறார்கள். இக்கிருமிகளால் ஏற்படும் நோய்களை எல்லாம், நமது உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுவதாலும், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதாலும் தடுக்கலாம்.

### சத்துக் குறைவான உணவினால் ஏற்படும் கண் நோய்கள்:

உணவில் போதிய சத்து இல்லாவிடில் உடல் வளர்ச்சி குறைவதுடன், பல்வேறு கண் நோய்களும் ஏற்படுகின்றன. மாலைக்கண் இதற்கு ஓர் சிறந்த உதாரணம். கீரை, பால், கேரட் ஆகியவற்றில் இருக்கும் வைட்டமின் 'எ' போதிய அளவு உணவில் இல்லாவிடில் மாலைக்கண் ஏற்படும். தமிழ்நாட்டில், குழந்தைகளுக்கு மாலைக்கண் சகஜமாகக் காணப்படுகிறது. இன்னும் உணவில் அதிக சத்துக் குறையுமானால் கருவிழி கெட்டுப் பார்வை போய்விடும். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தமிழ்நாட்டில் இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் பார்வை இழக்கிறார்கள். பெரும்பாலும் இரண்டு முதல் நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளே இவற்றால் பாதிக்கப்படுகின்றனர். இக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு இந்நோயின் காரணம் தெரிவதில்லை. குழந்தைகளுக்குக் காய்ச்சல் அல்லது வயிற்றுப் போக்கு ஏற்பட்டவுடன், கொடுக்க வேண்டிய சிறிய அளவு ஆகாரத்தையும் நிறுத்திப் பத்தியம் போட்டு விடுகிறார்கள். அப்பொழுது குழந்தை கண் திறக்காமல் கண்களை மூடிக் கொண்டேயிருக்கும்.

பின்னர் கண்களைத் திறந்து பார்க்கும் பொழுது கருவிழி கரைந்து கெட்டுப் போய் விடும். இந்நிலைமையைத் தாய்மார்கள் அறிந்தால் இவ் வியாதியை எளிதில் முழுவதும் தடுத்து விடலாம். வளரும் குழந்தைக்கு என்ன உணவு கொடுக்க வேண்டும்? சத்துக்குறைவான உணவு கொடுத்தால் குழந்தை எவ்வாறு இருக்கும்? என்பதை மக்களுக்குப் போதிக்க மதுரையில் சத்து உணவு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உணவில் வைட்டமின் 'பி' இல்லாவிடினும், இமைகளில் புண் உண்டாகிப் பார்வை குறையும். இதுவும் தமிழ்நாட்டில் சாதாரணமாகக் காணப்படுகிறது. பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் நூற்றுக்குப் பதினைந்து பேர் இந்த 'பி' வைட்டமின் குறைவால் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு கண் எரிச்சல், வாய்ப்புண், கூச்சம் முதலியன உண்டாகும். பார்வையும் குறையும். கைக்குத்தல் அரிசி, கீரை வகைகள், பால், மோர் முதலியன உட்கொண்டால், இந்த 'பி' வைட்டமின் குறைவால் உண்டாகும் கண் நோய்களைத் தடுக்கலாம்.

### கண் உறுப்புகளில் ஏற்படும் கோளாறு

50 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்குக் கண்ணினுள் இருக்கும் வில்லை கெட்டுப் புரை உண்டாகும். இது சாதாரணமாக வயதான யாவருக்கும் உண்டாகும் நோய். கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை குறைந்து, சில மாதங்களில் பார்வை முழுவதும் குறைந்து விடும். மக்களில் நூற்றுக்கு இரண்டு பேர் கண்ணில் புரை உண்டாகி, இதனால் பார்வையை இழக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் எட்டு இலட்சம் மக்கள் இதனால் பார்வையை இழக்கிறார்கள். இவர்கள் கண் மருத்துவமனைக்கோ அல்லது முகாமிற்கோ சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு, இழந்த பார்வையைத் திரும்பப் பெறலாம். எந்த வயதிலும் இந்தச் சிகிச்சையைச் செய்து கொள்ளுதல் நல்லது. குழந்தைகளுக்குக் கூடச் சிலருக்குக் கண்ணில் புரை உண்டாகலாம். இதையும் அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

### கண் அழுத்தம் அதிகமாதல்

கண்ணினுள் சுரக்கும் நீர் வெளிப்படுவது தடைப்பட்டால் கண்ணில் அழுத்தம் அதிகமாகும். ஆரம்பத்தில் இவ்வியாதிக்கு அறிகுறிகள் ஒன்றும் இருக்காது. கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை குறைந்து இந்நோய் முற்றும் போது முழுதுமாகப் பார்வை இழந்து விடுவார்கள். இவ்வாறு பார்வை போய்விட்டால் அதைத் திரும்பப் பெற இயலாது. தமிழ்நாட்டில் மட்டும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதனால் பார்வை இழந்திருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒவ்வொருவரும் தங்களின் கண் அழுத்தம் எவ்வாறு என்று சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### மாறு கண்

கண் விழி அசைவிற்கு ஒவ்வொரு விழியையும் சுற்றி ஆறு தசைகள் உள்ளன. இத்தசைகளில் ஏதாவது கோளாலாலும், இதரக் காரணங்களினாலும், உண்டாகின்றது. இதுவும் குணப்படுத்தக் கூடிய நோய். சிறு வயதிலேயே தகுந்த டாக்டரிடம் காட்டிச் சிகிச்சை செய்து வந்தால் மாறு கண்களை நேராக்கலாம். அவ்வாறு நேராக்காவிட்டால் கண்

ஜி. வெங்கடசாமி

ணில் பார்வை குறையும். இரண்டு கண்களும் சேர்ந்து இணைந்து பார்க்க முடியாது.

### உடல் வியாதியால் ஏற்படும் கண் நோய்கள்

கண்களும், உடலில் உள்ள உறுப்புகளில் ஒன்ருனதால், உடலில் ஏற்படும் நோய்கள், கண்களையும் பாதிக்கும். நீரிழிவு நோயினுல் ஆயிரக்கணக்கான மக்கள் பார்வை இழக்கிருர்கள். பல்லாண்டுகள் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருந்தால் கண்ணினுள் இருக்கும் விழித்திரையில் இரத்தக் கசிவு ஏற்படும். அது அதிகமாகிப் பார்வையைக் குறைத்து விடும். ஆதலால் நீரிழிவு உள்ளவர்கள் தங்களது கண்களை அடிக்கடி டாக்டரிடம் காட்டிப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

### இரத்தக் கொதிப்பு

உடலில் இரத்தக் கொதிப்பு உண்டானுலும், கண்ணில் உள்ள விழித் திரையில் இரத்தம் கசியும். இதனுல் பார்வை குன்றும்.

### மூளையில் உண்டாகும் கட்டிகள்

மண்டைக்குள், மூளையிலும் மூளையைச் சுற்றி உள்ள உறைகளிலும் நோய்கள் வந்தால், அவை கண் நரம்புகளைப் பாதிக்கும். இதனுல் பலருக்குப் பார்வை போய்விடுகிறது. ஆதலால், தலைவலி, மயக்கம், வலிப்பு முதலிய நோய்கள் ஏற்பட்டால் கண் டாக்டரிடம் காட்டி, கண் நரம்புகளில் ஏதாவது கோளாறு இருக்கிறதா என்று அறிந்து கொள்ள வேண்டும். இது தவிர, கிரந்தி போன்ற நோய்களாலும் கண்களில் நோய்கள் உண்டாகிப் பார்வையை இழக்கிருர்கள்.

நாம் பிறக்கும் போது நல்ல பார்வையைப் பெறும் கண்கள், நாம் சாகும் வரை நன்ருகப் பாதுகாக்கப்பட வேண்டும். இதில் சிறந்த கவனம் செலுத்துவதால், கண்களில் எந்த நோய்கள் உண்டாகும் என்று அறிந்து, அவற்றை வராமல் தவிர்க்கச் செய்ய வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களினுல் நோய்கள் உண்டானுலும், தகுந்த சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வோமானுல் கடைசிவரை நம் கண்கள் நமக்கு நல்ல பார்வையை அளித்து வாழ்வை ஒளிமயமாக்கும்.

---

## வெளிநாட்டவரின் பாராட்டு



திரு ஜான்வில்சன், எம்.ஏ., சி.பி.இ., கண்பார்வை வழங்கும் உலகப் பேரவையின் தலைவராகப் பணியாற்றுகிருர். டாக்டர் கலைஞர் கண் சிகிச்சை முகாம் பற்றியும், ஊட்டச் சத்துணவுத் திட்டம் பற்றியும் அவர் வழங்கிய பாராட்டுரை இங்கே தரப்படுகிறது.

“என் நெருங்கிய நண்பரான கண் சிகிச்சை நிபுணர் பேராசிரியர் டாக்டர் வெங்கடசாமி அவர்களை, பல சர்வதேச மருத்துவத்துறை மாநாடுகளில் நான் சந்தித்திருக்கிறேன்.

அண்மையில், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கண் சிகிச்சை முகாம் இரண்டினைக் காணும் நற்பேறு பெற்றேன். இம்முகாம்கள் முசிரியிலும், சங்கரன் கோவிலிலும் நடைபெற்றன. மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையிலுள்ள, கண் சிகிச்சைத் துறைக்கு நான் வந்திருந்து, அத்துறை மூலம், சிறப்பு அம்சமாக, ஊட்டச் சத்துணவின்மையால் குழந்தைகள் கண் பார்வையற்று வாழும் நிலையைப் போக்கும் நல்ல திட்டத்தைப் பார்வையிட்டேன். இது இந்த மாநிலத்தில்தான் முதல் முறையாகச் செயல்படுத்தப் படும் திட்டமாகும்.

“எண்ணற்றவர்கட்குக் கண்ணொளி வழங்கும் இந்த நல்ல திட்டம் நிறைவேற, அமைக்கப்பட்டிருந்த பகுதியும் அவற்றை நிருவகிக்கும் திறனும், பரிவுடனும்-பக்குவமாகவும் மருத்துவச் சிகிச்சை மூலம் பராமரிக்கும் தரமான பணியும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. பெரிய நாடுகள், சில இச் சிகிச்சை முறையைப் பெற்றிருந்தாலும், உலகத்தில் தமிழ் நாட்டைப்போல், எந்த மாநிலமும், ஒரே ஆண்டில் இலட்சம் பேருக்குக் கண் சிகிச்சை அளிக்கும் திட்டத்தைக் கையாளவில்லை. உங்களுடைய செயல் திட்டம், அனுபவம் ஆகியவை உலகில் வளரும் நாடுகள் அனைத்தும் இப்பணியில் ஈடுபட ஊக்கமும் உற்சாகமும் பெற உதவுவதாக அமையும், என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஊட்டச் சத்துணவு இன்மை, கண்ணில் சதை வளரும் தன்மை என்ற இரண்டு காரணங்கள் உலகத்திலுள்ள பாதிப்பேர்களைப் பயனில்லாக் கண்குருடர்களாகத் தோற்றுவிக்கின்றன. இங்கு தங்கட்குரிய எல்லா மருத்துவ வசதிச் சந்நிலையும் பயன்படுத்திப் பார்வையற்ற நிலையை அடியோடு ஒழித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதன் மூலம் உலக முழுவதும் எண்ணற்ற கண்ணற்ருேர் புத்தொளியும் புதுவாழ்வும் பெற முடிகிறது.”







# சென்னை மாவட்ட மத்திய நூலகம்

## அறிவாலயம்

‘புத்தகங்கள் தரும் உதவி பெரிது ! மிகப் பெரிது’ என்ருர் பாவேந்தர் பாரதிதாசன். ‘மக்களுக்கு, உணவு-உடைக்கு அடுத்த இடம் நூல்நிலையத்திற்குத் தரப்பட வேண்டும்’ என்பது பேரறிஞர் அண்ணு அவர்களின் மேலான கருத்து. மேலும், ‘வீட்டுக்கு ஒரு நூல் நிலையம் வேண்டும்’ என்றும் அவர்கள் வலியுறுத்திஞர்கள்.

பொதுவாக, வீடுகள் தோறும் நூல் நிலையங்கள் அமைதல் இன்றியமையாதது எனினும், பொது நூலகங்கள் மிகமிக இன்றியமையாதன என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் நாம் விரும்புகிற-நமக்குத் தேவையான எல்லா நூல்களையும்-பல்துறை நூல்களையும் பணம் கொடுத்து வாங்கும் சக்தி படைத்தவர்கள் நம்மில் எத்தனைபேர் இருக்கிருேம் ? எனவேதான், ஆங்காங்கு, பல பொது நூலகங்கள் (Public Libraries) இன்றியமையாதனவாகின்றன.

நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை - ஏன் இந்தியாவைப் பொறுத்த வரை கூட இந்த நாடு சுதந்தரம் அடைவதற்கு முன்பு - 1947-க்கு முன்பு-இங்கே எந்த மாநிலத்திலும் ‘நூலகச் சட்டம்’ கிடையாது. சுதந்தரத்திற்குப் பிறகு 1948-ல் முதல் முதலாக ‘நூலகச் சட்டம்’ இயற்றிய முதல் மாநிலம் நமது ‘தமிழ்நாடு’ தான். அதன் பிறகுதான், இந்தியாவின் பிற மாநிலங்கள் ‘நூலகச் சட்டம்’ இயற்றியன.

நமது தமிழ்நாட்டில் நூலகச் சட்டம் 1950-ல் அமலுக்கு வந்தது. சென்னை மாநகராட்சி, சொத்து வரியில், ரூபாய்க்கு 3 காசு விதம் நூலக வரி வசூலித்து வந்தது. 1954-ஆம் ஆண்டு நூலகத் திட்டம் பயன்படத் தொடங்கியது.

2—7—1954-ல் சென்னை மாநகரில் நகர நூலகம் பிறந்தது. இது, சென்னை அண்ணு சாலையில் ஒரு வாடகைக் கட்டடத்தில்தான் பிறந்தது. ஒரு நூலகர் -[இரண்டு] உதவியாளர்[ ஆகியோரே இந்நூலகத்தின் தொடக்கப் பணியாளர்கள். பின்னர்,

லம்புச் செல்வர் அவர்கள், மாநகராட்சிப் பொறுப்பிலிருந்து 73 படிப்பகங்களையும் மாநகர நூலக ஆணைக்குழுவின் கீழ்க் கொண்டு வந்து இணைத்து, நூலக இயக்கத்தின் வளர்ச்சிக்கு அடிகோலினார். இவரது பெருமுயற்சியினாலும், இடையரூத உழைப்பாலும், மாநகர நூலகம் மத்திய நூலகம் ஆயிற்று.

இன்று மத்திய நூலகம் அண்ணா சாலையில் 63 கிரவுண்டு நிலப்பரப்பில் வானுற ஓங்கி வளர்ந்த வனப்புமிகு நான்கு மாடிக் கட்டடத்தைச் சொந்தமாகப் பெற்றுப் பல்வேறு சிறப்புகளோடு விளங்குகிறது. இந்தக் கட்டடம் அமைந்துள்ள இடத்தினை 4½ இலட்சம் ரூபாய் விலை கொடுத்து மத்திய நூலகத்திற்கு வாங்கிச் சேர்த்தவர், அப்போது சென்னை மாநகராட்சி ஆணையராக இருந்த திரு வி. என். சுப்பராயன் அவர்கள். இவர் மாநகராட்சி ஆணையர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று 5—8—1957-ல் மாநகர நூலக ஆணைக்குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் காலத்தில்தான், 17—3—1960-ல் அன்றைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் இந்த நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு 10—11—1965-ல் தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்த மேதகு ஜய சாமராஜ வாடியார் பகதூர் (மைசூர் மன்னர்) இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்தக் கட்டடத்திற்கான மொத்தச் செலவு ஏறத்தாழ 24 இலட்சம் ரூபாய்.

மத்திய நூலகக் கட்டடம் உயர்ந்து கம்பீரமாக விளங்குவது போலவே, நூல் தொகுப்பைப் பொறுத்த வரையிலும் சிறப்பாக விளங்குகிறது. ஏனைய நூலகங்களில் கிடைக்காத



நூலகத்தில் படிப்போரில் ஒரு பகுதியினர்.

அருமையான - விலையுயர்ந்த நூல்கள் பல மத்திய நூலகத்தில் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. மக்களின் அன்றாடத் தேவைக்கும் எதிர் கால வாழ்வுக்கும் பல்வேறு தேர்வுகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் பயன்படக்கூடிய அருமையான நூல்கள் இங்கு உள்ளன. நூல்கள் வாங்குவதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகையும் 1958-ல் 8 ஆயிரம் ரூபாயாக இருந்தது பிறகு 5 இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

1969-ல் சிலம்புச் செல்வர் அவர்கள் மீண்டும் மத்திய நூலகத் தலைவராகப் பொறுப்பேற்றார். வளர்கின்ற பாத்தியில் நீர் பாய்ச்சியது போல, சிலம்புச் செல்வர் அவர்களின் ஆர்வமும் இடையறாத உழைப்பும் வளர்ந்து வரும் நூலக இயக்கத்தை மேலும் வளர்ப்பதாயின. நூலக இயக்கத்தில் புதிய தெம்பும், புத்துணர்வும் ஏற்பட்டன. துறைதோறும் செந்தமிழே செழிக்க வேண்டும் என்னும் பேரார்வத்தோடு பணிபுரியும் அவர், தமிழ் மக்களுக்கு இங்குக் கிடைக்காத நூல்களே இல்லை என்றாக வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டு வருகிறார்.

இன்று, இந்த மத்திய நூலகத்தில் மட்டும் 54 பேர் பணி புரிகின்றனர். நகர் முழுவதிலுமாக 120 பேர் நூலகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மத்திய நூலகத்தில் கருத்தரங்க அறைகள் உள்ளன. கருத்தரங்கங்கள் — சொற்பொழிவுகள் நடத்த இவை குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன.

அடுத்து, 20 ஆராய்ச்சியாளர்கள் — ஆராய்ச்சி வல்லுநர்கள் ஒரே நேரத்தில் தங்கி ஆய்வு நடத்தக் கூடிய ஆராய்ச்சி அறை ஒன்றும் உள்ளது. இதில், ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

சென்னை மாநகர் பல்வேறு மத, இன—மொழி மக்களைக் கொண்ட நகரமாக விளங்குவது போல, இந்த நூலகமும் பல்வேறு மத, இன, மொழி மக்களும் பயன்படுத்தத் தக்க வகையில் எல்லா மொழி நூல்களையும் மத நூல்களையும் கொண்டு விளங்குகின்றது. 54,000 தமிழ் நூல்களையும், 45,000 ஆங்கில நூல்களையும், 3,000 மலையாள நூல்களையும், 2,000 தெலுங்கு நூல்களையும் இவை தவிர சமஸ்கிருதம், கன்னடம், உருது, குஜராத்தி, இந்தி முதலிய பல்வேறு நூல்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. ஏறத்தாழ 1½ இலட்சம் நூல்கள் வைக்க வசதிகள் செய்யப் பட்டிருக்கும் இந்த நூலகத்தில் இப்போது ஏறத்தாழ 1 இலட்சத்து 4 ஆயிரம் நூல்கள் உள்ளன. சென்னை நகரம் முழுவதுமுள்ள கிளைகளில் வைக்கப்பட்டுள்ள





நூல்களின் மொத்த எண்ணிக்கை 7 இலட்சத்து 4 ஆயிரம்.

இந்த நூலகத்தின் இணைப்பாகச் சிறந்த முறையில் சிறுவர் நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது. சென்னை நகரிலே தனிச் சிறப்பு வாய்ந்த இந்தச் சிறுவர் நூலகத்தில் 8 ஆயிரம் நூல்கள் உள்ளன. பெற்றோர்கள் தங்கள் சின்னஞ் சிறு குழந்தைகளை இங்குக் கூட்டி வந்து விட்டு விட்டு, அவர்கள், தங்களுக்கென உள்ள நூலகத்திற்குள் நுழைந்து தாங்களும் படித்து முடித்துவிட்டுத் தங்கள் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு வீடு திரும்பலாம்.

இன்னொரு முக்கியமான சிறப்பு, இந்தச் சிறுவர் நூல



சிறுவர் நூலகத்தில்..........

கத்தில் பணி புரியும் உதவியாளர்களும் குழந்தைகளிடத்தில் மிகவும் அன்போடு பழகி இன்னின்ன நூல்களில் இன்னின்ன விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக் கூறித் தேவைப்பட்டால் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டியும் குழந்தைகளைப் படிக்க வைப்பது பெரிதும் பாராட்டத் தக்கது. இந்த நூலகமும், திங்கட் கிழமை தவிர ஏனைய நாட்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் குறைந்தது 60 குழந்தைகள் இந்த நூலகத்திற்கு வந்து பயன்பெறுகின்றனர்.

நூலக இயக்கம் வளர்ந்துள்ளது போலவே கடந்த ஆறு ஆண்டுகளில் மத்திய நூலக ஆணைக்குழுவும் அதன் நடவடிக்கையும் வெகுவாக வளர்ந்து விரிவடைந்திருக்கிறது.

இன்று இந்த மத்திய நூலகத்தின் பொறுப்பில் 120 கிளை நூலகங்களும், 3 புத்தகப் பட்டு வாடா நிலையங்களும், ஓர் இயங்கும் நூலகமும் உள்ளன.

நூலகத்தில் உறுப்பினராவதற்கு ரூ. 5 வைப்புத் தொகை ( Deposit ) கட்ட வேண்டும். தவிர, தங்கட்குத் தேவையான நூல்களைத் தங்கள் வீட்டிலிருந்தே பெறவிரும்புகிறவர்கள் திங்கள் தோறும் 25 காசு கட்டணம் செலுத்த வேண்டும். உறுப்பினர் கட்டிய வைப்புத் தொகையை அவர் உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் போது திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். உறுப்பினர் கட்டணம் கட்டிய உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்பும் நூல்கள் மிதிவண்டிகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. மெரினா, இராயப் சிந்தாதிரிப்பேட்டை, மந்தவெளி, புனித பேட்டை, கந்தப்ப முதலி சேவியர் தெரு, கோடம்பாக்கம் இரயில் தெரு, ஜார்ஜ் டவுன் நிலையச் சாலை, ஆகிய இடங்களில் உள்ள கிளை நூலகங்களில் இந்த முறை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அடுத்து, மக்கள் தொகைப் பெருக்கமும், இடநெருக்கடியும் மிகுந்துள்ள இச் சென்னை மாநகரத்தில் வாடகைக்கு இடம் கிடைப்பது எளிதன்று. அதுவும், நூலகம் போன்றவற்றிற்குக் கிடைப்பது மிகமிக அருமை. கிளை நூலகங்கள் அமைந்துள்ள இடத்தை விரிவுபடுத்த விரும்பினாலும், அந்த இடங்களின் சொந்தக்காரர்களிடமிருந்து அனுமதி பெறுவது மிகமிகக் கடினம். எனவேதான், மேலும் விரிவுபடுத்த முடியாத நிலையில் உள்ள கிளை நூலகங்களுக்கு வாரந்தோறும் நூல்கள் ஊர்திகள் மூலம் எடுத்துச்சென்று விநியோகிக்கப்படுகின்றன.

பள்ளிகள் நகரின் பல்வேறு பகுதிகளிலும்பரவலாக உள்ளன. அந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொது அறிவு பெற — அவர்களும் அவர்களுக்குத் தேவையான நல்ல புத்தகங்களைப் படிக்க வாய்ப்பளிக்க வேண்டாமா ? இத் துறையில் — இப்பணியில் முச்சக்கர வண்டிகள் (Tempo) நல்ல முறையில் செயலாற்றுகின்றன. இத்திட்டத்தில் 250 பள்ளிகளின் மாணவர்கள் பெரும் பயன் அடைகின்றனர்.

மருத்துவமனையில் நோய் வாய்ப்பட்டிருப்போர் தங்கள் நோயை மறந்திருக்கவும், பல் துறை அறிவைப் பெறவும் உதவும் வகையில், நோயாளிகளின் படுக்கைகளுக்கே நூல்கள் கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. ஸ்டான்லி மருத்துவமனை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, தொழிலாளர் சேமநல மருத்துவ மனை, தானே விரும்பியுதவும் நலக்குழு மருத்துவமனை ஆகியவற்றில் இப்பணி சிறப்பாக நடைபெறுகிறது.

அடுத்து, காவலர்கள் தங்கள் பணிநேரம் போக மற்ற நேரத்தில் பயனுள்ள நல்ல நூல்களைப் படித்துப் பயன்பெறத் தக்க வகையில் அவர்கள் குடியிருக்கும் இல்லங்கட்கு அருகிலேயே நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நூலகங்கள் ஆயுதப் படையினர் குடியிருக்கும் இடத்திலும், கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பு இடத்திலும், மேன்சன் சைட் என்னும் காவலர் குடியிருப்பு இடத்திலும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இன்னும் கிளை நூலகங்கள் திறப்பதற்கும் வாய்ப்பில்லாத பகுதிகள் சென்னையில் ஏராளமாக உள்ளன. அந்தப் பகுதிகளில் வாழ்வோர் நூல்களைப் படிக்கவும், பொது அறிவைப்

பெற்று வளர்த்துக் கொள்ளவும் ஏழத்தாழ 1 இலட்சம் ரூபாய் செலவில் 'இயங்கும் நூலகம்' ஒன்றை மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் 1968-ல் ஆரம்பித்து வைத்தார்கள். அது, நகரத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நூல் வழங்கி வருகிறது. இத்திட்டம் மிகவும் நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது. இதனை மேலும் விரிவு படுத்தத் தக்க வகையில் இன்னொரு இயங்கும் நூலகமும் (Mobile Library) விரைவில் இயங்க விருக்கிறது.

அடுத்து, குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிற புதிய குடியிருப்புப் பகுதிகளில் குடியேறுகிறவர்களுக்குப் புத்தகங்கள் படிக்கும் வாய்ப்பை உருவாக்கி அறிவு வளர்ச்சிப் பணி புரிவதற்காக,

1. நொச்சி நகர்
2. கோட்டூர்புரம்
3. வெங்கடாபுரம்
4. விசாலாட்சி எஸ்டேட்
5. தாண்டவராயன் சத்திரம்
6. கல்லறைச் சாலை

ஆகிய குடியிருப்புகளில் தற்போது நூலகக் கிளைகள் துவக்கப்பட்டு, அவையும் நல்ல முறையில் பயன்பட்டு வருகின்றன.

சொத்து வரியின் மீது ரூபாய்க்கு 3 காசாக விதிக்கப்பட்ட நூலக வரி 1—4—72-ல் ரூபாய்க்கு 5 காசாக உயர்த்தப்பட்டது. இவ்வாறு உயர்த்தப்பட்டதன் விளைவாகத் தமிழகத்தில்வளர்ச்சியின்றித் தேங்கிக் கிடந்த பல நூலகங்கள் நல்ல வாழ்வும் வளர்ச்சியும் பெற்றுள்ளன.

கடந்த ஐந்தாண்டுகளில் சென்னை நகர மத்திய நூலகத்தில் 25 இலட்சம் என்றிருந்த வருகையாளர் எண்ணிக்கை 40 இலட்சமாகவும், 80 இலட்சமாக இருந்த நூல்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 93 இலட்சமாகவும், 8,470 ஆக இருந்த உறுப்பினர் தொகை 31,603 ஆகவும் புத்தக இருப்பு 5·5 இலட்சமாகவும் வளர்ந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட மத்திய நூலகம், எதிர்காலத்தில் எந்தெந்த வகையில் வளர்ச்சி பெற இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது, நமது உள்ளம் பெரும் பூரிப்படைகிறது. இனி எதிர்காலத் திட்டம் என்ன ?

மாவட்ட மத்திய நூலகத்தில் உள்ள சான்றுதாரப் பிரிவு (Reference Section) தனியொரு இடத்தில் மாநிலத்திற்கே முன் மாதிரியாக அமையத் தக்க வகையில் விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

வாசகர்கள், அச்சிடப்பட்டவற்றில் தங்கட்குத் தேவையான செய்திகள் முதலியவற்றைப் படப் படிவமாக (Photo state copying) எடுத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, ஒரு பானு அச்சுப் படப்பிரதி எடுக்கும் இயந்திரம் (Pana print photo copy Machine) இங்கு நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

வாசகர்கள் தங்கட்குத் தேவையான நூல்களைப் பெறத் தேடிச் சிரமப்படாமல் விரைவாகவும், எளிதாகவும் எடுத்துக் கொள்ள வசதியாக எலக்ட்ரானிக் முறை வசதி இங்கு செய்யப்பட இருக்கிறது. இது எந்தப் போது நூலகத்திலும் இல்லாத புதுமுறை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போதுள்ள குழந்தைகள் நூலகப் பிரிவு மேலும் விரிவு படுத்தப்பட்டுக் குழந்தைகளை மேலும் ஈர்க்கத் தக்க வகையில் அவர்களுக்குத் தேவையான பல்வேறு விளையாட்டுப் பொருள்களோடு கூடிய 'தனிப்பிரிவு' ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மனநோய் மருத்துவ மனை உள்ளிட்ட அரசாங்க மருத்துவ மனைகள் எல்லாவற்றிலும் அங்குத் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள் பயன்பெறத்தக்க வகையில் செய்தித் தாள்கள், நூல்கள் அடங்கிய நூலகப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட இருக்கிறது.

திருவள்ளுவர், பாரதியார், அண்ணா ஆகியோரைப் பற்றி ஆராய்ச்சிப் பணிக்குப் பயன்படத்தக்க வகையில், தனிப் பிரிவு ஒன்று மாவட்ட மத்திய நூலக வட்டத்தில் நிறுவப்பட இருக்கிறது. இங்கு, ஆராய்ச்சிக்குரியவர்கள் எழுதியவையும், அவர்களைப் பற்றி எழுதப் பெற்றவையும் தொகுத்து வைக்கப்படும்.

சென்னை நகரிலுள்ள ஒவ்வொரு சட்ட மன்றத் தொகுதியிலும் ஒருவட்டார நூலகம் தொடங்கவும், தொழிற்சாலைப் பகுதிகள் எல்லாவற்றிலும் தொழிலாளர் நலனுக்காக—அவர்கள் பயன் பெறத் தக்க வகையில் கிளை நூலகங்கள் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன.

இவற்றிற்கெல்லாம் மேலாக, மாவட்ட மத்திய நூலகக் கட்டட வட்டத்துக்குள்ளேயே ஒரு நல்ல கலையரங்கம் கட்டத் திட்டமிட்டுப் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது. இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அது திறக்கப் பெறலாம். சமுதாயப் பண்பாட்டுக் கல்விவளர்ச்சிப் பணியினுக்கு இந்தக் கலையரங்கம் பெருந் துணையாக அமையும்.

இந்த எதிர்காலத் திட்டங்களை இனிதே நிறைவேற்றித் தமிழகத்திற்கு உலகப் புகழைச் சேர்த்துத் தரும் ஒரு மாபெரும் அறிவாலயமாக இச் சென்னை மாவட்ட மத்திய நூலகம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

—சாமி பழ.

சிறுவர் பகுதியில்

புதிய சித்திரத் தொடர்கதை

**சுற்றுலா சுந்தரம்**

எப்ரல் 1உ 'தமிழரசு' இதழில்

துவக்கம் ஆகிறது.




"எண்பத்து ஐந்து நாளில் எண்ணூற்று ஐம்பது ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது ! கம்பு விற்ற பணம் இந்தாங்க அப்பா!" என்று கூறித் தன் கையில் இருந்த பத்துரூபாய் நோட்டுகளை உடல் நலமின்றி மூன்று மாத காலமாகப் படுத்த படுக்கையாக இருந்து வரும் தன் தந்தையிடம் கொடுத்தான் தங்கம்.

"ஏலே, தங்கம் ! என்னடா உளர்றே ? நான் ஏழை தாண்டா ! படிக்காதவன் தாண்டா ! ஆனால், எண்ணூத்தைம்பது ரூபான்னு சொன்னா வாயைப் பிளந்துடவேன்னு நினைச்சியா?" என்று தங்கத்தின் அப்பா கோபமாகக் கேட்டார்.

" தவறாக நினைக்காதீர்கள் அப்பா ! உண்மையைத்தான் சொன்னேன்."

"ஒரு ஏக்கர் கம்பு விற்று எண்ணூத்தைம்பது ரூபாயா கெடச்சுது ? ஆச்சரியமாக இருக்கிறதே !"

"எண்ணூற்று ஐம்பது ரூபாய்க்கு விற்கவில்லை அப்பா ! ஒரு ஏக்கரில் விளைந்த கம்பு 1,200 ரூபாய்க்கு விற்றது. நாம் அதற்கு ரூ. 350 செலவு செய்துள்ளோம். செலவு போக நிகரஇலாபம்எண்ணூற்று ஐம்பது கிடைத்துள்ளது என்றல்லவா சொன்னேன் !"

"அப்படியா சேதி !" என்று கூறிக் கொண்டே கட்டிலில் படுத்து இருந்த தங்கத்தின் அப்பா வேகமாக எழுந்து உட்கார்ந்து பத்து ரூபாய் நோட்டுக் கத்தையை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்களில் கண்ணீர் கரைபுரண்டு ஓடியது.

"ஏனப்பா அழுகின்றீர்கள் ?"

"நான் அழவில்லையடா ? இது ஆனந்தக் கண்ணீர் !" என்று கூறிவிட்டு எழுந்து வேகமாக வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

" எங்கே அப்பா புறப்பட்டீர்கள் ?"

"எங்கே என்று கேட்கிறாய் ? 'சூடு சொரணை இருந்தால் 3 மாதத்தில் என் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடு, இல்லாவிட்டால் வீட்டை ஜப்தி செய்வேன்" என்று பண்ணையார் சொன்னாரே! 3 மாதக்கெடு நாளையோடு முடிகிறது. இன்றே கொடுத்து விட்டு வந்துடுறேன் "

" உங்களால்தான் நடக்க முடியாதே ! நான் கொண்டு போய்க் கொடுத்து விடுகிறேன் அப்பா !"

" வேண்டாம் ! 3 மாதத்தில் எப்படிக் கடனை அடைக்கப் போகிறோம் என்று எண்ணி, மானம் போய்விடுமே என்று பயந்தேன். எனக்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து படுத்த படுக்கையாகி விட்டேன். பணம் கிடைத்து விட்டதால், இனி என் மானம் போகாது என்று நினைக்கவுடனேயே, 'என்னைப் பிடிச்ச வியாதி ஓடி விட்டது !" என்று கூறிக் கொண்டே போய் விட்டார். அவர் ஆர்வத்தைக் கெடுக்க விரும்பாமல் தங்கமும் பேசாமல் இருந்து விட்டான்.

பண்ணையார் வீட்டை அடைந்தவுடன் " பண்ணையாரே என் பத்திரத்தை எடுத்து வாங்க ! பணம் கொண்டாந்துள்ளேன்!" என்று அதிகாரத் தோரணையில் தங்கத்தின் அப்பா குறிப்பிட்டார்.

தங்கவேலு கோபக்காரர் என்பதை அறிந்திருந்த பண்ணையார் வேறு ஒன்றும் பேசாமல், பத்திரத்தை எடுத்து வந்தார்.

"அசலும் வட்டியும் எவ்வளவு என்று சொல்லுங்கள் ."

" அசல் ஐந்நூறு, ஒரு வருடத்திற்கு வட்டி அறுபது ஆக மொத்தம் ஐந்நூற்று அறுபது ரூபாய். "

"இந்தாங்க ஐநூற்று அறுபது ரூபாய் என் பத்திரத்தை என்னிடம் கொடுங்க. "

பணத்தைப் பெற்றுக் கொண்டு, பண்ணையார் பத்திரத்தைக் கொடுத்தார். பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட தங்கவேல் அதைக் கிழித்துப் பண்ணையார் முன்னால் போட்டு விட்டு " வர்றேன் " என்று கூறிப் புறப்பட்டார்.

"தங்கவேலு உனக்குத்தான் உடம்பு சரியில்லையே ! பணம் ஏது ?" என்றார் பண்ணையார்.

351

அதைக் கேட்டு கோபத்துடன் திரும்பிய தங்கவேலு, "இம்! பணம் ஏதுன்னு கேக்குறீங்க! திருடியாந்தேன்! உங்களுக்கென்ன? உங்க கடன் தீந்துப் போச்சுலே! அப்புறம் என்ன பேச்சு வேண்டி இருக்கு?"

"கோவிச்சுக்காதே தங்கவேலு! உன் நன்மைக்காகத்தான் 'சூடுசொரணை இருந்தால், 3 மாதத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு, இல்லேன்னு வீட்டை ஜப்தி பண்ணிடுவேன்' என்று கூறினேன். அப்படிக் கூறவில்லையானால் உன் மகனுக்கு ரோஷம் பொறந்திருக்காது. அவன் ஒழுங்கா பொழப்பைப் பார்த்திருக்க மாட்டான். அவன் என்னமோ புதுக்கம்பு பயிரிட்டு நல்ல மகசூல் எடுத்ததாகக் கேள்விப் பட்டேன். அதில் எவ்வளவு கிடைச்சது என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். ஆனால், என்வார்த்தையால் நீ இப்படி உடல் நலம் இழப்பாய் என்று தெரிந்திருந்தால் நான் அன்று அப்படிச் சொல்லி இருக்க மாட்டேன். என்னை மன்னித்துக் கொள் தங்கவேலு! 'மன்னித்து விட்டேன்' என்று சொல் தங்கவேலு! அப்பத்தான் என் மனம் திருப்தி அடையும்" என்றார் பண்ணையார்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் மகுடி ஓசைக் கேட்ட பாம்பு போல், தங்கவேலு ஆடாமல் அசையாமல் நின்று விட்டார். பண்ணையார் சொல்வது உண்மைதான் என்று உணர்ந்ததால், அவருடைய சினம் தணிந்தது.

"நீங்க பணக்காரர்! பெரிய மனிதர்! நான் பரம ஏழை! நான் வந்து மன்னிப்பதாவது?"

"நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே வயதுதானே! அதனாலே நீ என்னை மன்னிப்பதில் தவறு இல்லை!"

"சரிங்க! எப்படியோ என் கடனும் அடைந்தது. என் பிள்ளையும் திருந்தினான்! நான் வர்றேனுங்க" என்று கூறிப்புறப்பட்டார்.



"உடம்பைப் பார்த்துக் கொள்! சாப்பிட்டு விட்டுப் போ தங்கவேலு".

"ஆயிரத்து இருநூறு ரூபாயை என் பிள்ளை கொண்டு வந்து கொடுத்ததுமே என் உடம்பு குணம் ஆயிட்டுதுங்க!"

"அப்படியா! மிகவும் மகிழ்ச்சி. இருந்தாலும் என் வார்த்தை உன்னை ரொம்பவும் புண்படுத்தி விட்டது என்பதை நினைக்கும் போது தான், எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. உன் பையனைக் கொஞ்சம் வரச் சொல்லேன். அவனிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளணும். அப்படியே அந்தக் கம்பு சாகுபடியைப் பற்றியும் தெரிந்து கொள்ளணும் என்று ஆசைப் படுகிறேன்."

"அவனிடமும் மன்னிப்புக் கேட்கப் போகிறீர்களா?"

"ஆமாம்!"

"எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது!"

"ஏன்?"

"ஏதேனும் காரியம் ஆகணும்னா, பணக்காரர்கள் சின்னப் பையன்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வார்கள் என்றும், 'பணக்காரர்கள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள்; மிஞ்சினால் கெஞ்சுவார்கள்' என்றும் சிலர் சொல்வது நினைப்புக்கு வருகிறது. அது உங்களைப்பொறுத்த வரையில் உண்மையாக இருக்கிறது. அதை நினைக்கையில் சிரிப்பு வருகிறது!"

"அப்படி என்னை நினைக்காதே! உன் மகன் யார்? என் தங்கச்சி பிள்ளைதானே! என் வருங்கால மாப்பிள்ளைதானே! அவன் நல்ல குணத்தோடும், புத்தி சாலித்தனத்தோடும் இருக்கணும் என்பதில் உன்னைவிட எனக்கல்லவா மிகுந்த அக்கறை உள்ளது. நீதான் குடித்தே சொத்தையெல்லாம் இழந்து விட்டாய். எஸ்.எஸ்.எல். சி படித்த உன் பிள்ளையாவது உருப்படட்டும் என்று எண்ணித்தான் அவனுக்குக் கோபம் வரும்படியா உன்னைத் திட்டினேன். அவனும் திருந்தி, நல்லபடியா இருக்கான் என்று ஊரில் பலர் சொல்கின்றார்கள். அதைக் கேட்கும் போது, அது உண்மையாக இருக்கணும். அவனுக்கே என் பெண்ணைத்



திருமணம் செய்து வைத்து விட்டு நான் நிம்மதியாக இருக்கணும் என்று ஆசைப்படுகின்றேன். எதிர்காலத்தில் என் சொத்துக்கு அவன்தானே சொந்தக்காரனாகப் போகிறான். அவனிடம் நான் மன்னிப்புக் கேட்பது தப்பா?"

"நான் போய் நடந்ததைச் சொல்லி வரச் சொல்றேன். அவன் வந்தால் பாருங்கள்! இல்லாவிட்டால் நீங்களே வந்து கேட்டுக் கொள்ளுங்கள். நீங்களாச்சு! உங்க மருமகனாச்சு! பார்த்துக் கொள்ளுங்கள். எப்படியோ போங்கள்!" என்று கூறிவிட்டுத் தங்கவேலு வெற்றிப் புன்னகையுடன் விடைபெற்றுக் கொண்டார்.

தங்கவேலு நடந்தவைகளை எல்லாம் தன் மகன் தங்கத்திடம் கூறினார். தங்கத்தின் மனம் பண்ணையார் கூறிய நொண்டிச் சமாதானங்களை ஏற்க மறுத்தது. ஆயினும், "நாடு செழிக்க உனக்குத் தெரிந்த முற்போக்குச் சாகுபடி முறைகளை மற்றவர்களுக்கும் கூற வேண்டும்" என்று வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அவனுக்குக் கூறியிருந்தது நினைவு வரவே, "எச்.பி. விரியக் கம்பு சாகுபடி முறையை அவருக்குத் தெரிவித்து விட்டு வந்து விடுகின்றேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

அவனுடைய தாய் இந்தக் கம்பினாலே பிரிந்த தங்கள் குடும்பம் ஒன்றுபடுகிறதே என்று மகிழ்ந்ததுடன், இதற்கு மூல காரணமாக இருக்கும் வேளாண்மை வளர்ச்சி அலுவலரை மனமார வாழ்த்திக் கொண்டிருந்தாள்.

தங்கம் வருவதைக் கண்டவுடன், பண்ணையார் வியப்புடன் சாய்வு நாற்காலியை விட்டு எழுந்து "வா மாப்பிள்ளே!" என்று வரவேற்றார்.



"கம்பு சாகுபடிபற்றி விவரம் கேட்கணும் என்று சொல்லி என்னை வரச் சொன்னீர்களாமே! கேளுங்கள்! சொல்கின்றேன்" என்றான்.

"உட்காரப்பா" என்று சோபாவைக் காட்டினார்.

"பரவாயில்லே" என்று கூறிவிட்டு அவருக்கு அருகில் தரையில் உட்கார்ந்தான் தங்கம்.

பண்ணையார் வற்புறுத்தவே தங்கம் சோபாவில் அமர்ந்தான்.

அதைக் கண்டதும் பண்ணையாருக்குப் பரமதிருப்தி. தன்னைக் கண்ட பிறகும் மதிக்காமல் பீடி குடித்துக் கொண்டும், சீட்டாடிக் கொண்டும் இருந்தவன் இன்று இப்படி மாறி விட்டான் என்று வியப்படைந்தார்.

"என்ன மாப்பிள்ளே! ஏதோ புதுசா கம்பு வாங்கி வந்து பயிரிட்டாயாமே! ஊரே உன்னைப் பற்றிப் பேசுது! என்ன கம்பு அது? எவ்வளவு மகசூல் கண்டது? என்ன விலைக்கு விற்றே? அதைப்பற்றிக்கொஞ்சம் சொல்லேன்".

"ஆமாங்க! எச்.பி. 1. கம்பு என்ற புதிய விரிய ஒட்டுக் கம்பு விதை ஒரு கிலோவை நம்ம வேளாண்மை வளர்ச்சி அலுவலர் கொடுத்தார். அதை 4 செண்ட் நிலத்திலே நாற்று விட்டு ஒரு ஏக்கரில் நட்டேன். எண்பத்து ஐந்து நாளில் ஏக்கருக்கு 2,250 கிலோ அதாவது 30 மூட்டை கம்பு விளைந்தது. அதிலே 250 கிலோவைச் சாப்பாட்டிற்கு வைத்துக் கொண்டு, மீதியிருந்த 2,000 கிலோவை குவிண்டால் ரூபாய் 60 வீதம் விற்று விட்டேன். அதனால் எங்களுக்கு ரூபாய் 1,200 கிடைத்தது. ஒரு ஏக்கர் கம்பு சாகுபடி செய்ய ரூபாய் 350 செலவாகியது. நிகர இலாபம் ஏக்கருக்கு 850 ரூபாய் கிடைத்தது".

"எண்பத்து ஐந்து நாளில் ஒரு ஏக்கரில் 850 ரூபாய் நிகர இலாபம் எடுத்துள்ளாயே! பரவாயில்லையே! ரொம்பக் கெட்டிக்காரன்தான்! அது சரி இதைப் பயிரிடணும் என்ற எண்ணம் எப்படி வந்தது?"

"நீங்கள் அப்பாவைத் திட்டியதனால் அப்பாவுக்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து விட்டார் என்று கேள்விப்பட்டவுடன், உங்கள் கடனை எப்படியாவது அடைப்பது என்ற முடிவுடன், ஏதேனும் வேலை தேட முயற்சிக்கலாம் என்று எண்ணி யோசனைகேட்க நம்ம ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கே "காசு பணம் சேர்த்திடக் கம்பு பயிரிடுவீர்!" என்ற ஒரு விளம்பரச் சுவரொட்டியை நான் கண்டேன். அது பற்றிய விவரத்தை நமது வேளாண்மை வளர்ச்சி அலுவலரிடம் கேட்டேன். பிறகு அப்பாவின் நிலைமையையும் அவரிடம் விளக்கினேன். என்மேல் இரக்கப்பட்டு அவர் எச்.பி. 1. கம்பு பற்றிய முழு விவரமும் கூறிவிட்டு, நமது கூட்டுறவு வளர்ச்சி அலுவலரிடம் அழைத்துச் சென்று விவரம் கூறி எனக்குக் கம்பு சாகுபடி செய்யக் கடன் கொடுத்து உதவும்படி கேட்டுக் கொண்டார். அவரும் மனமுவந்து என்னைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக ஆக்கிக் கடன்கொடுக்க ஆவன செய்தார். பிறகு எனக்குக் கடன் கிடைத்தது. விதை, உரம், மருந்து எல்லாம் கொடுத்தார்கள். அது தவிர நானும் கொஞ்சம் கடன் வாங்கிக் கம்பு பயிரிட்டேன். மொத்தம் ரூபாய் 350 செலவாகியது, நாளைக்குப் போய்க் கூட்டுறவுச் சங்கக் கடனையும், மற்றக் கடன்களையும் தீர்த்து விடப் போகிறேன்."

"எச்.பி. கம்பு சாகுபடி பற்றிக் கொஞ்சம் தெரிவித்தால் நானும் அதைப் போல் சாகுபடி செய்யலாம் என்று எண்ணுகிறேன். அது பற்றிக் கொஞ்சம் சொல்லு மாப்பிள்ளே!"

"எச்.பி. 1, எச்.பி. 3., எச்.பி. 4 என மூன்று வகை ஒட்டுவிரிய கம்பு ரகங்களையும், இறவையில் பயிரிடலாம். இவைகளை ஐப்பசி, மார்கழி ஆகிய மாதங்கள் நீங்கலாக, மற்றெல்லா மாதங்களிலும் சாகுபடி செய்யலாம். ஆனால், விளைச்சல் அதிகமாக இருக்காது. இந்த ரகங்களை மாசி, பங்குனி, மாதங்களில் விதைத்தால் அதிக மகசூல் எடுக்க முடியும். இந்த ரகங்கள் 80 முதல் 85 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும்".

"நாற்று விட்டுத்தான் நட வேண்டுமா?"

"ஆமாங்க, ஒரு ஏக்கர் கம்பு சாகுபடி செய்ய 1 கிலோ விதையை 4 செண்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும். 4 செண்ட் நிலத்திற்கு ஒரு வண்டி தொழு எரு போட்டு நன்கு உழுது பாத்திகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். பாத்திகளை 3 அல்லது 4 அங்குல மேடைப் பாத்திகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். வேளாண்மைத் துறையினர் வழங்கும் சான்றிதழ் பெற்ற தரமான விதைகளைப் பாத்திகளில், 4 அங்குல இடைவெளியில் வரிசை வரிசையாக விதைத்து மண்ணால் மூடி, தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 3-ஆம் நாள் மூளை நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 5 அல்லது 6 நாள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்".

"சரி நாற்று விட்டாச்சு! நடவு வயல் தயாரிப்பது எப்படி?"

''ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு விட்டு, நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழ வேண்டும். பிறகு வயலில் ஒன்றரை அடி இடைவெளிகளில் பார்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது 20 அடி நீளமும், 9 அடி அகலமும் உள்ள பாத்திகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்துக் கொடுக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 90 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட்ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். அடியுரமிடப் பார்களில் ஒரு பக்கச் சரிவின் அடியில் கூரிய குச்சியால் கோடு கிழித்துக் கொண்டு, அதில் உரங்களை இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். பாத்திகளில் நடுவதாக இருந்தால் உரங்களைக் கடைசி உழவில் அடியுரமாக இட்டு, பிறகு பாத்திகள் அமைத்துக் கொள்வது சிறந்தது.''

''எப்படி நடவு செய்வது?''

''நாற்று விட்ட 18-ஆம் நாள் நாற்றுகளைப் பிடுங்க வேண்டும். நடவு வயலுக்குத் தண்ணீர் விட்டு, பார்களின் சரிவில் உரமிட்ட வரிசைக்கு 3 அங்குலம் மேலே தள்ளி, 6 அங்குல இடைவெளிக்கு ஒரு பயிர் வீதம் வரிசையாக நடவு செய்ய வேண்டும். பாத்திகளில் $1\frac{1}{2}$ அடி இடைவெளியில் வரிசை வரிசையாகவும், வரிசையில் பயிருக்குப் பயிர் 6 அங்குல இடைவெளி விட்டும் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 3-ஆம் நாள் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டவும், தூர்கள் கிளைக்கும் காலத்திலும், கதிர்களில் உள்ள தானிய மணிகளில் பால் பிடிக்கும் சமயத்திலும் தட்டுப்பாடின்றித் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தைக் காய விடக் கூடாது.''

''களை எடுப்பது, மருந்து தெளிப்பது பற்றியும் சொல்லி விடு மாப்பிள்ளே!''

''நடவு செய்த 20-ஆம் நாள் களையைக் கொத்திவிட்டு, 200 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 200 கிராம் செவின் (கார்பரில் 50 சதம்) மருந்தை 100 லிட்டர்தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்கவும். நடவு செய்த 25-ஆம் நாள் ஏக்ருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவைப் பார் வரிசைகளுக்கு நடுவில் மேலுரமாக, இட்டு, இலேசாகக் கொத்திவிட்டு, உடனே தண்ணீர் பாய்ச்சவும். நடவு செய்த 35-ஆம் நாள் 400கிராம் செவின் அல்லது என்ட்ரின் 200 மில்லி லிட்டரை 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். நடவு செய்த 40 முதல் 42 நாட்களில் அதாவது கதிரில் பாலேறும் சமயத்தில் ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும் கலந்து கதிர்களில் தூவவும். இதனால் கதிர் நாவாய்ப் பூச்சி, கதிர்ப் புழு, மிட்ஜ் ஈ ஆகிய பூச்சிகளினால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்படும். நடவு செய்த 62 முதல் 67 நாட்களுக்குள் ஒரே சமயத்தில் எல்லாக் கதிர்களும் அறுவடைக்குத் தயாராகி விடும். வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் சாகுபடி முறைகளை எல்லாம் மேற்கொண்டு, சிலர், ஏக்கருக்கு 3,000 கிலோ வரை மகசூல் எடுத்துள்ளனர். நானும் அதே போல் வருகிறமாசி-பங்குனிப் பருவத்தில் ஏக்கரில் எச்.பி. கம்பு 2 பயிரிட்டுப் பெரும் மகசூல் எடுக்க முடிவு செய்துள்ளேன்.''

''அப்படியா! நானும் ஒரு 5 ஏக்கர் எச். பி. கம்பு சாகுபடி செய்கிறேன்; நீதான் அடிக்கடி விவரம் கூறி உதவ வேண்டும்.''

''சரி, நான் புறப்படுகிறேன்.''

''என்னங்க ஒரேயடியா பேசிட்டே இருந்துவிட்டு தம்பியைச் சும்மா அனுப்பி வைக்கிறீங்க! சாப்பிட்டுவிட்டுப் போகச் சொல்லுங்க!'' என்று குரல் கேட்டுத் தங்கம் நிமிர்ந்து பார்த்தான். தங்கத்தின் வருங்கால மாமியார் நின்றுகொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் தங்கத்தின் வருங்கால மனைவி பொன்னி மறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். தங்கம்-பொன்னி ஆகிய இருவரின் கண்களும் ஒன்றையொன்று நோக்கின. அந்த ஒரு நொடியில் அவன் உள்ளம் எங்கோ ஓர் இன்ப உலகில் சிறகடித்துப் பறந்தது. ஆனால், அதை மறக்க, அங்கிருந்து விடுவிடென்று நடந்தான் தங்கம். அவன் மனம் ''பணத்திற்கு அடிமையாகிவிடாதே! பணக்காரன் ஆன பிறகு திருமணம் செய்து கொள். அதுதான் உனக்கு மதிப்பு!'' என்று அவனுக்கு அறிவுரை கூறியது.

''ஏழையைப் பணக்காரனாக்கும் எச்.பி. கம்பு ரகம் பிரிந்த எங்கள் குடும்பம் ஒன்றுபட உறுதுணையாக இருந்ததால், அதை உருவாக்கியவர்களும், அதைப் பயிரிடத் தூண்டிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரும் வாழ்க'' என அவன் மனம் உள்ளூர வாழ்த்திக்கொண்டிருந்தது.

—ஆர். எம்.

## வெண்பாப் போட்டி-54

ஈற்றடி :

புகழன்றி உண்டோ பொருள்?

முடிவு நாள் : 15—3—1973

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
''தமிழரசு'' அலுவலகம்,
சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.





# வெண்பாப் போட்டி

## 51. கண்ணின் மணியனையான் காண்

பார்போற்றும் கல்விதனில் பட்டங்கள் பெற்றுலும்
சீர்போற்றும் நற்பணியே தேடாமல்—ஏர்போற்றி
மண்ணில் மணிநெல்லைக் காணும் இளைஞன்தான்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இரா. வரதராசன், திருவானைக்கா.

அன்புடையாள் கைகா லழுகித் தொழுநோயால்
துன்புற்ற போதும் துணையிருந்து—தன்வாழ்வில்
கண்போன் றிருந்தவளின், கண்ணீர் துடைப்பவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

தென்னாட்டுக் காந்தியவன், தேன்தமிழின் நாதமவன்
இந்நாட்டார் நெஞ்சத் திருந்திடுவான்—மண்ணாண்ட
அண்ணா, மணிமொழிகள் அத்தனையும் போற்றிடுவோன்
கண்ணின் மணியனையான் காண்.

—சுசீலா கிருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

நெஞ்சில் உதைத்தான்; நிமிர்ந்த முகத்துமிழ்ந்தான்;
அஞ்சாது கன்னத் தறைந்திட்டான்;—கொஞ்சுநகைப்
பண்ணால் மகிழ்வித்தான்; பாலரு வாய்ச்சேய்,எம்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

கேட்போர் வியந்தனரே கேளாரும் ஏங்கினரே
வாட்போரைச் சொற்போர்தான் வென்றிடுமே—மீட்போனாய்
மண்ணின் அணைப்பில் மகிழ்ந்துறங்கும் அண்ணனே
கண்ணின் மணியனையான் காண்.

—சைதை சுந்தரமூர்த்தி, பொன்மலை.

தண்டா மரைபாடத் தள்ளாடி வண்டலர
விண்டாழ மண்ணுயர வீழ்படு—மண்டலத்தில்
நண்ணலரைப் போர்க்களத்தில் நாணிடச் செய்தவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இர. கி. பூபதி, கொங்கணாபுரம்.

சொன்னயத்தால் மக்களைச் சொக்கவே செய்திட்ட
தென்னாட்டுக் காந்தியென்ற தீரனும்—மன்னியசீர்
அண்ணாத் துரையென்ற அற்புதப்பேர் பூண்டோனே
கண்ணின் மணியனையான் காண்.

—வெற்றிவேல் வேங்கடேசன், சேலம்-9.

ஏச்சுக்கும் பேச்சுக்கும் எள்ளளவு மஞ்சாது
மூச்சுள்ள காலமெலாம் மூடரின்—தீச்செயலை
நண்ணாம லோட்டியிந் நானிலங் காத்திடுவான்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

ஈர்த்தலிலே காந்தத்திற் கீடாவான் என்றென்றும்
கூர்த்தமெய்ஞ் ஞானத்தின் கோனவான்—காத்தலிலே
கண்ணின் இமையனையான் கண்ணோட்டம் கொள்வதிலே
கண்ணின் மணியனையான் காண்.

—கதிரவன், பிரம்மபுரம்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
புலவர் இரா. வரதராசன், தமிழாசிரியர்,
உயர்நிலைப்பள்ளி, திருவானைக்கா, திருச்சி-5.

# வெண்பாப் போட்டி

தத்தி நடந்து, தமிழ்மொழிந்து, தன்னழகால்
எத்துங் கவலை இளைதொழித்து—முத்துநிகர்
வெண்ணகையைக் காட்டும், மிளிர்புதல்வன் தன்தாய்க்குக்
கண்ணின் மணியனையான் காண்.

—சி. சரசுவதி, தேனி.

நெஞ்சில் கனவும், நினைவெல்லாம் காதலுமாய்
வஞ்சிமகள் நாளும் வளர்கின்றாள்—கொஞ்சுமொழிப்
பெண்ணின் மனக்கோட்டை பேணவரும் ஆண்மகனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

'தமிழரசை'க் கையில் தவழவிட்ட நாளை
இமையாமல் நின்றிருந்தேன் ஏன்காண்—சமைக்கின்ற
வெண்பாச் சமரிடை வென்ற மதலைஎன்
கண்ணின் மணியனையான் காண்.

—ம. திருமலைச்சாமி, பூலாம்பட்டி.

வெண்நகையால் முத்த,மிழைத் தேன்என்றன் ஊட்டிட்டேன்
ஒண்கண்ணால் முத்தமிழைத் தேனென்றன்—மண்டியிட்டேன்
விண்ணோர் புகழமுதே என்றன்நீ தோவென்றேன்
கண்ணின் மணியனையான் காண்.

—பா. சிவஞானம், வில்வாரணி.

எல்லையிலே ஈனப் பகையழித்துக் காப்பவனும்
சொல்லைச் செயலாக்கி ஆள்பவனும்—தொல்லையிடை
மண்ணை யுழுதுவள மாக்குமுயர் மண்மகனும்
கண்ணின் மணியனையான் காண்.

—கே. எஸ். பைரோசா, கம்பம்.

பெற்றார் மறுத்தார் ; பிறபேர் வெறுத்தார்கள் ;
உற்றார் செறுத்தார் ; உளம்நொந்தேன்!—சற்றேனும்
கண்டாரில் தாழ்வுயர்வு ; கைப்பிடித்தார் ; என்கொழுநன்
கண்ணின் மணியனையான் காண்.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

சாதி சமயமெனும் சாக்காட்டில் வீழ்ந்தவர்க்கு
நீதிதனைத் தானெடுத்து நித்தமிங்கு—ஓதிமக்கள்
நன்னிலையில் தான்வாழ நாளுமுழைப் போன்நமது
கண்ணின் மணியனையான் காண்.

—இ. கண்ணப்பன், சென்னை.

விண்ணில் பவனிவரும் வெண்ணிலவே என்னிலையை
எண்ணு தெனைப்பிரிந்த என்தலைவன்—உண்ணினைந்து
கண்ணீரால் நானெழுதும் காவியத்தைக் காண்பானோ?
கண்ணின் மணியனையான் காண்.

— பூங்குழலி, பொருளூர்.

நற்பணிகள் ஆற்றிநிதம் நாட்டை உயர்த்துகையில்
சொற்படியும், சோதனைக் குட்படினும்—சற்றுமே
எண்ணிக் கலங்காம லென்றும் பணிசெய்வோன்
கண்ணின் மணியனையான் காண்.

—அ. சாந்தி, தேவத்தூர்.

வாழ்வில் ஒழுங்கும் வருவாயிற் சேமிப்பும்
தாழ்விலாத் தொண்டும் தமிழ்ப்பற்றும்—சூழ்ந்துமேற்
கொண்ட சிறுகுடும்பக் கொள்கையும் கொள்வோனே
கண்ணின் மணியனையான் காண்.

— வித்துவான் வி. வி. நடராசன், சென்னை-34.

ஈன்றோர் மனங்குளிர ஈந்ததன் கைசிவக்கச்
சான்றோர் அவைநடுவே தானிருந்தே—ஆன்றோர்தம்
மண்ணின் புகழெல்லாம் மாண்படையச் செய்வோனே
கண்ணின் மணியனையான் காண்.

— மல்லை முத்தரசன், அமைந்தகரை.

அன்னை அடிபற்றி ஆள்வார் ; அரிசனத்துப்
பெண்ணை மகற்கெடுத்துப் பேணிடுவார் ;—தண்ணளியால்
கண்ணளிப்பார் ; தண்டமிழ் காப்பார் ; இவரேநம்
கண்ணின் மணியனையான் காண்.

— ச. விமலாமேரி, திண்டுக்கல்.

ஆற்றல் அணிவளமும் அன்பும் அரும்பண்பும்
போற்றும் பொதுத்தொண்டும் பூத்திலங்கி—ஏற்றமிகு
பண்ணின் இனிப்பூட்டும் பைந்தமிழின் பேச்சாளன்
கண்ணின் மணியனையான் காண்.

— எழிற்கோவன், ஒசூர்.

நெற்றி வியர்வை நிலத்திற் குரமாக,
இற்ற உடல்நோக என்றென்றும்—மற்றவரின்
நன்மைக்கே பாடுபடும் பாட்டாளி நாட்டிற்குக்
கண்ணின் மணியனையான் காண்.

— மீராதாசன், மதுரை-21.

கீற்றுக் குடிசை ; கிழிந்த பழம்பாய் ; கந்தல் ;
சேற்றுத் தரையில் சிணுங்குகின்றார்—மாற்றின்றி ;
அன்னார்க் கவர்தம் அழகில்லா ஆண்மகனே
கண்ணின் மணியனையான் காண்.

— வே. அரங்கராசன், தாராசுரம்.

கண்ணே ! மணியேயென் காதல் மனையாளே !
கண்கள் இரண்டே கருதிடுவாய்—பெண்ணே ! நீ
எண்ணுங் குழந்தை இரண்டே பெறுகவென்றான்
கண்ணின் மணியனையான் காண்.

— இராசேகரசிராசன், சென்னை-34.

# வெண்பாப் போட்டி

பெற்றோர் பணிந்து பெரியோரைப் போற்றியே
கற்றோர் நெறிநின்று கல்வியொடு—முற்றுந்தாம்
நண்ணிய நல்லொழுக்க நற்செயலை நாடிடுவோன்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

விண்ணிலுள வெண்ணிலவின் மண்ணினையும் கல்லினையும்
மண்ணிலுள மாந்தர் கொடுவந்தார்—மண்ணுலகீர்
விண்ணிற் கலமேவி வெற்றிகண்ட விஞ்ஞானி
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் சி. சுப்புராஜ், சிறுகுடி.

நெருப்புப் பொறிபறக்கும் நீளிட்டிப் பாட்டால்
பொறுப்புணர வைத்தான் புதுவைத்—திருப்புலவன் !
மண்ணில் மடமையெலாம் மாய்த்தே பகுத்தறிவுக்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

இல்லார்க்கு வாழ்வுதரும் எண்ணற்ற திட்டங்கள்
நல்விதமாய் ஓங்கிடவே நம்கலைஞர்—பல்வகையாய்
எண்ணியது திண்ணமாய் எண்ணியாங்குச் செய்திடுவோன்
கண்ணின் மணியனையான் காண்.

—ப. அ. இசுமாயில், மேலப்பாளையம்.

கண்ணில் ஒளியிழந்து கண்ணீரைத் தாம்தேக்கி
மண்ணில் துடிக்கின்ற மாந்தர்க்கே—எண்ணிலாக்
கண்சிகிச்சை நன்முகாம் கண்ட முதல்வரே
கண்ணின் மணியனையான் காண்.

—திருமதி மு. அன்னபூரணி, பசுமலை.

கண்ணுதல் ஈசற்கு மட்டுமே கண்தந்தான்
கண்ணப்பன் என்றகதை கண்டிட்டோம்—கண்ணில்லா
எண்ணிலார் கண்ணைத் திறந்தகரு ணைச்செல்வன்
கண்ணின் மணியனையான் காண்.

—சி. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

வண்ண இதழ்குவித்து வாயெல்லாம் தேன்வழியப்
பண்ணிசைத்த மென்மழலைப் பாங்குநடை—ஒண்டொடியே !
எண்ண இனிக்கும் எழிலார்ந்த என்செல்வன்
கண்ணின் மணியனையான் காண்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-3.

பெற்றதன் தாயின் பெரும்பசி போக்கற்கும்
கற்றோர் கடிந்தவை நீக்கியே—பற்றுடன்
உண்ண உடுக்கவும் உண்மையே நாடிடுவோன்
கண்ணின் மணியனையான் காண்.

—இ. இ. நாராயணன், கோவை.

சூழும் பொருள்நாடித் தோகையெனை நீங்கியவன்
ஆழி கடந்தே அலைந்திடினும்—தோழியே :
நண்ணி வெகுண்டிட நாணுகின்றேன் ; என்தலைவன்
கண்ணின் மணியனையான் காண்.

—சு. பொன்னுராஜ், சின்னவீரம்பட்டி.

இப்பாரில் எப்போதும் எங்குமே கண்டறியா
ஒப்பில் விடுதலைப்போர் உண்டாக்கிச்—செப்பரிய
விண்புகழ் பெற்றிட்ட வீரனும் காந்தியே
கண்ணின் மணியனையான் காண்.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

அன்னையின்றி யாருமில்லை ! அச்சின்றி வண்டியில்லை !
உன்னவழி செய்யும் உழவனின்றி—மண்ணுலகில்
எண்ணுங்கால் ஏதுமில்லை ; அன்னவனே இந்நாட்டின்
கண்ணின் மணியனையான் காண்.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21.

அள்ளும் சுவையால் அரியபல உண்மைகளைக்
கொள்ளும் படிசொன்னான் கூர்த்தமதி—வள்ளுவனே
எண்ணின் இவன்எம் இனிய தமிழ்மொழியாம்
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் மா. முத்துச்சாமி, சாத்தனூர்.

செந்நெல் கதிர்மணியும், சீர்மக்கா, கம்புதினை,
மின்னும் வரகுமணி, ராகி,சோளம்—எந்நாளும்
மண்ணில் உழுதுபணி யாற்றும் உழுபடைக்கே
கண்ணின் மணியனையான் காண்.

—ப. செல்லப்பாண்டியன், கிருட்டிணகிரி அணை.

முந்தும் பகைமுகப்பில் ; மோதும் பணிப்பரப்பில்
சிந்தை கலங்காது தீரமுடன்—எந்நாளும்
மண்ணகம் காக்கின்ற மாவீரன் அன்னவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் கா. நா. இலக்குவன், வால்பாறை.

சாவா இலக்கியங்கள் தந்தான் ; தமிழ்வளர்க்க
ஓவா துழைத்தான் ; புரட்சிசெய்தான்—பாவாலே
வண்ணத் தமிழ்த்தாய்க்குப் பாரதிதா சப்புலவன்
கண்ணின் மணியனையான் காண்.

—பா. கு. பொய்யாமொழி, சேர்ந்தநாடு.

நெற்றி வியர்வை நிலத்தினில் வித்தாக்கி
வெற்றிப் பயிரை விளைத்திட்ட—பெற்றியால்
மண்ணில் உயிர்க்குலம் வாழ்த்தும் உழவனே
கண்ணின் மணியனையான் காண்.

—புலவர் இலெ. சி. குப்புசாமி, கோவிந்தாபுரம்.

341

# மாணவர் அரங்கம்

## திசை காட்டும் கருவி

விலை மதிப்புள்ள பல கருவிகளைப் பயன்படுத்தி அறிவியல் புதுமைகள் கண்டுபிடிக்கும் இக்காலத்தில், கையில் எளிய ஒரு திசை காட்டுகின்ற கருவியை மட்டும் வைத்துக் கொண்டு அறிவியல் சாதனைகளைப் புரிவது விந்தையல்லவா !

இந்த அரிய சாதனையை நிகழ்த்துபவர் ஒரு புவி அமைப்பியலறிஞர் (Structural Geologist). குறிப்பிட்ட இடத்தில் ஆராய்ச்சியைத் தொடங்கக் கருதும் இந்த அறிஞர், அவ்விடத்தில் இதற்குமுன் நடந்துள்ள புவியியல் முன்னோட்ட நில ஆய்வுகளைப் (Preliminary Geological Survey) பற்றிய குறிப்புக்களைத் திரட்டி அப்பகுதியைப் பற்றிய பொதுவான புவியியலை அறிந்து கொள்வார். பிறகு தான் செய்ய வேண்டிய வேலைகளை வரையறுத்துக் கொள்வார்.

மதிய உணவுடன் காலை ஏழு மணிக்குத் தொடங்கும் வேலையை மாலை ஐந்து மணிக்குத்தான் முடிப்பார். கொளுத்தும் வெய்யில், கொட்டும் மழை, வீசும் அனல் காற்று ஆகிய வற்றைப் பொருட்படுத்தாமல், காடு மலை எல்லாம் நடந்து சென்று வேலை செய்வார். தான் நடந்து செல்லும் போது வழியில் கண்ட பாறைகளை ஆராய்ந்த வண்ணம் செல்லுவார். ஆங்காங்கே தம் கையில் உள்ள சுத்தியலால் காணும் பாறைகளை உடைத்து அவை இன்ன இன்ன பாறை வகையினைச் சார்ந்தன என்று குறித்துக் கொள்வார். தான் நடந்து போகும் திசையிலுள்ள பாறை வகைகளையெல்லாம் தமது புவியியல் நிலப்படத்தில் குறித்துச் செல்வார். பாறையில் கிடைக்கும் கனிமங்களையும் குறித்து வருவார். செல்லும் திசையில் பாறை கனிமங்கள் அளவில் குறைந்தோ அல்லது மிகுதியாகவோ மாறி வருவதையும், ஒரு கனிமம் மற்றொரு கனிமமாக மாறிக் கிடைத்து வருவதையும் புதிதாகக் கிடைக்கும் கனிமங்களையும் குறித்துக் கொள்வார். தான் செல்லும் வழியில் உலோகக் கனிமங்கள் எங்கெங்குக் கிடைத்தாலும் அவற்றைப் பற்றிய முழு இயல்புகளையும் அறிய முற்படுவார். பாறைகளின் இயல்வகை, கட்டுக்கோப்பு, புவியியலமைப்பு, ஒரு வகையான பாறைக்கும் அதனை அடுத்துள்ள மற்றொரு வகையான பாறைக்குமிடையேயுள்ள தொடர்பு ஆகியவற்றையெல்லாம் உற்றுக் கவனித்துக் குறிப்பு எழுதிக் கொள்வார். நிலப்பரப்பில் தான் கண்டறிந்தவற்றையெல்லாம் எழுதிக் கொண்டும், தேவையான புவியியல் அமைப்புக்களைத் தெளிவாக விளக்கும் படங்களை வரைந்து கொண்டும், குறிப்பிடத்தகும் அல்லது தமது கருத்திற்குச் சான்றான உண்மைகளை வெளிக் காட்டும் பாறை அமைப்புகளை ஒளிப்படம் எடுத்துக் கொண்டும் செல்வார்.



பாறைகளின் கிடை வரை (Strike), சாய்மானம் ( Dip ), கனிம நீட்சி (Mineral Lineation), கனிம இணையமைப்பு (Loliation), பாறைகளில் காணப்படும் சின்னஞ் சிறு மடிப்புக்களின் மைய அச்சுக்கள், பிளவுத் தளங்கள், பொருத்துக்கள் ஆகியவற்றைத் தமது கையிலுள்ள திசை காட்டும் கருவியின் மூலம் அளந்து கொள்வார். இத்திசை காட்டும் கருவியில் சாய்மானத்தை அளக்க ஓர் இரச மட்டமும் பொருத்தப்பட்டிருக்கும் (Climometer Compass). உடனுக்குடன் இந்த அளவுகளையெல்லாம் தனது நிலப்படத்தில் குறித்துச் செல்வார். இவ்வாறாக எப்பகுதி முழுவதும் எல்லா இடத்திற்கும் நடந்தே சென்று தமக்குத் தேவையான எல்லா ஆராய்ச்சிக் குறிப்புகளையும் அளவுகளையும் எடுத்துக் கொள்கிறார்.

இக்குறிப்புகளினால் ஓரிடத்தின் :

1. புவியியல் நிலப்படம் உருவாகிறது.

2. புவி அமைப்பியல் தெளிவாகிறது.

3. புவியியல் வரலாறு, பாறைகளின் ஒப்புமை வயது, மலைத் தோற்றவியக்க விசைகள் பற்றிய உண்மைகள் ஆகியவை கிடைக்கின்றன.

4. புதிய கனிமப் படிவுகள் கண்டுபிடிக்க வழி பிறக்கிறது.

எனவே தன்னுடைய குறிப்புகளைக் கொண்டு, தான் ஆராய்ச்சி செய்யும் பகுதியில் கிடைக்கும் பாறைகள் எந்தெந்தத் திசைகளிலிருந்து எந்தெந்த மலைத் தோற்ற விசைகளுடன், எவ்வக் காலங்களில் எல்லாம் அழுத்தப் பட்டிருக்கின்றன என்பன போன்ற விவரங்களைத் தருவார். மற்றும் பிளவுத் தளங்களில் பாறைகள் எவ்வளவு தூரம் எந்தத் திசையில் நகர்த்தப்பட்டுள்ளன. அல்லது உயர்த்தவோ, தாழ்த்தவோ பட்டுள்ளன என்றெல்லாம் கணித்துக் கூறுவார். பிளவுத் தளங்களில் மறைந்து விடும் கனிப் பொருள் படிவு மீண்டும் எந்த இடத்தில் கிடைக்கலாம் என்றும் கூறி விடுவார். மேலும் தான் காணும் பிளவுத் தளத்தில் கனிமப் பொருட்களின் தோற்றம் நிகழ்ந்திருக்கலாமா இல்லையா என்றும் கூறி விடுவார். அவருடைய ஆராய்ச்சி முடிவுகள் புவியியல் வரலாற்றினைத் தொகுக்கவும் கனிமத் தேட்டத்தைத் (Prospecting of mineral Deposits) தொடங்கவும் பெரிதும் பயன்படுகின்றன. மேற்கண்ட சாதனைக்குத் தேவையான குறிப்புகள் பலவும், புவி அமைப்பியலறிஞர் கொண்டு செல்லும் திசை காட்டும் கருவியின் மூலம் அளிக்கப் படுகின்றன. குறிப்பிட்ட ஆராய்ச்சிப் பகுதி முழுவதும் நடந்தே சென்று திசை காட்டும் கருவியின் மூலம் பாறைகளை அளந்து அறியும் புவி அமைப்பியலறிஞர் கருவிகளுமின்றிச் செலவுமின்றி அறிவியல் புரட்சி செய்கிறார்.

—இரா. இராமசாமி





# ரயிலே! ரயிலே!!

ஏறத்தாழ 120 ஆண்டுகளாக, இந்திய இரயில்வேக்கள் நாட்டு மக்களுக்குப் பணி புரிந்து வருகின்றன. ஆசியாவிலேயே மிகப் பெரிய முறையை உடைய இந்திய ரயில்வேக்கள், உலக ரயில்வேக்களில் நான்காவது இடத்தை வகிக்கிறது.

இருப்புப் பாதை வழித்தடங்களின் மொத்தத் தூரம் 60,000 கிலோ மீட்டரைத் தாண்டிவிட்டது. இதில் 29,700 கிலோ மீட்டர் அகல இருப்புப் பாதைத் தொடர்களாகவும், 25,865 கிலோ மீட்டர் தூரம் மீட்டர் கேஜ் இருப்புப் பாதைத் தொடர்களாகவும், 4,476 கிலோ மீட்டர் தூரம் குறுகிய இருப்புப் பாதைத் தொடர்களாகவும் இருக்கின்றன. ரயில் வண்டிகள் ஓடும் மொத்த இருப்புப் பாதையின் நீளம் 71,669 கிலோ மீட்டராகும்.

நாட்டின் மிகப் பெரிய அரசு நிறுவனமாகிய ரயில்வேக்களின் மொத்த மூலதனத் தொகை 4,335 கோடி ரூபாயை எட்டியுள்ளது. நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் நாள் தோறும் ஓடும் 10,800 ரயில் வண்டிகளில், சுமார் 68 இலட்சம் மக்கள் பயணம் செய்கின்றனர்.

நாட்டின் மக்கள் தொகையில் 1·25 சதவிகித மக்கள் நாள் தோறும் ரயில் வண்டிகளில் பயணம் செய்கின்றனர். ஆனால், ஆண்டு ஒன்றுக்கு, இந்தியா முழுவதும் மொத்தம் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்கள் டிக்கெட் இல்லாமல் ரயிலில் பயணம் செய்து வருகிறார்கள். இதனால் ஏறக்குறைய 20-லிருந்து 25 கோடி ரூபாய் வரை ஆண்டொன்றுக்கு ரயில்வே துறைக்கு நட்டம் ஏற்படுகிறதாம். ரயில் வண்டிகள் நாள்தோறும் சுமார் 6 இலட்சம் டன் சரக்கை ஏற்றிச் செல்கின்றன. இதற்காகவே 11,100-க்கும் மேற்பட்ட எஞ்ஜின்கள், 3,85,000 வாகின்கள், 35,000 ரயில் பெட்டிகள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. நம் நாடு முழுவதிலும் உள்ள மொத்த ரயில்வே நிலையங்கள் 7,065 ஆகும். இந்த மாபெரும் பணியின் மூலம் கிடைக்கும் மொத்த நாள் வருவாய் சுமார் 3 கோடி ரூபாய். மிகவும் விரிவடைந்து வரும் ரயில்வேக்களில், நாள் சம்பள ஊழியர்களையும் சேர்த்து 17·5 இலட்சம் பேர் தற்போது வேலை செய்கின்றனர்.

1960–61-ஆம் ஆண்டில் 15·62 கோடி டன் சரக்குகளை ஏற்றிச் சென்ற ரயில்கள், 1965-66-ஆம் ஆண்டில் 20·3 கோடி டன்கள் மதிப்புள்ள சரக்குகளை ஏற்றிச் சென்றன.

1950–51-ஆம் ஆண்டில்6,651 கோடியே 70 இலட்சமாக இருந்த பிரயாணிக் கிலோ மீட்டர் 1965–66 ஆம் ஆண்டில் 9,629 கோடியே 20 இலட்சமாக அதிகரித்தது. இது 1971–72-இல் 12,533 கோடிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. ஒரு பணியை ஒரு கிலோ மீட்டர் தூரம் ஏற்றிச்செல்வதே ஒரு பிரயாணிக் கிலோ மீட்டர் ஆகும்.

ரயில்வேக்கள் பாசஞ்சர் சர்வீசுகளின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் 61 கோடி ரூபாய் நட்டமடைந்து வருகிறது. இதில் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய நகரங்களில் செயல்பட்டு வரும் புறநகர் பாசஞ்சர் சர்வீசுகளின் மூலம் அடையும் நட்டம் 12 கோடி ரூபாய் ஆகும்.

மிக முக்கியமான வழித் தடங்களில் மின் ரயில்கள், மற்றும் டீசல் ரயில்கள் செல்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது சுமார் 3,706 கிலோமீட்டர் தூரத்தித்திற்குப் பல்வேறு வழித் தடங்களில் மின் ரயில்கள் ஓடுவதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் 24,250 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பல்வேறு வழித்தட டீசல் ரயில்கள் செல்வதற்கான பணிகள் முழுவதுமாக அல்லது ஓரளவு நடைபெற்றுள்ளன. மொத்தம் உள்ள பல்வேறு மார்க்கங்களின் தூரத்தில் 47 சதவிகிதத்தூரத்திற்கு டீசல் ரயில்களும் மின் ரயில்களும் ஓடுகின்றன. அது மட்டுமல்லாமல் மொத்தச் சரக்குப் போக்குவரத்தில் 70 சதவிகிதம் இவ்விரண்டு வகை ரயில்களின் மூலம் செல்கின்றன.



சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலை தற்போது மின்சார எஞ்சின்களை உற்பத்தி செய்கிறது. கடந்த ஆண்டில் நவம்பர் மாதம் வரை 269 மின்சார எஞ்சின்கள் உற்பத்தியாயின. இதே காலத்தில், வாரணாசியிலுள்ள டீசல் எஞ்சின் தொழிற்சாலை 556 மெயின் லைன் டீசல் எஞ்சின்களை உற்பத்தி செய்தது. ரயில்பெட்டித் தொழிற்சாலை, ஆண்டிற்கு 350 அகல ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கான குறியீட்டை எட்டியபின் தனது உற்பத்தித் திறனை மேலும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதக் கடைசிவரை, ரயில் பெட்டித் தொழிற்சாலை, உட்பகுதி முற்றிலும் கட்டி முடிக்கப்படாத 9,133 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது.

சரக்குப் போக்குவரத்தைச் சமாளிப்பதற்கு ரயில்வேக்

கள், கொள்கலன் சர்விசுகள், சரக்குகளைத் துரிதமாக அனுப்புதற்காக மிக விரைவு ரயில் வண்டிகளை விடுதல் ஆகிய பல புதிய முறைகளைக் கையாண்டு வருகின்றன. 1966-ஆம் ஆண்டு தொடங்கிய கொள்கலன் சர்விசு, மிகவும் பிரபலமடைந்துள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் மட்டும் 31,934 கொள்கலன்கள் உபயோகிக்கப்பட்டு ரயில்வேக்களுக்கு 1·43 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

ரயில்வேக்களின் சேமிப்பு இடங்களில் சுமார் 35,000 வகைப் பொருள்கள் உள்ளன. 1955–56-ஆம் ஆண்டு ரயில்வேக்கள் தங்கள் சேமிப்புப் பொருட்களுக்கெனச் செலவிடப்பட்ட 16 கோடியே 20 இலட்சம் ரூபாயில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மதிப்பு 25·8 சதவிகிதமாக இருந்தது. 1970-71 ஆம் ஆண்டில் இறக்கு மதிப் பொருள்களின் மதிப்பு 8·96 ஆகக் குறைந்தது. அப்போது சேமிப்புப் பொருட்கள் வாங்குவதற்கெனச் செலவிடப்பட்ட தொகை 363 கோடியே 70 இலட்ச ரூபாய்.

1956-ஆம் ஆண்டில் ரயில்வேக்களின் ஊழியர் எண்ணிக்கை 13 இலட்சமாக இருந்தது. 1972ஆம் ஆண்டில் 17·5 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதே போல் 1950–51 ஆம் ஆண்டில் ரயில்வே ஊழியர் ஒருவருக்குச் செலவிடப்படும் தொகை 1,263 ரூபாயாக இருந்தது. 1971–72 ஆம் ஆண்டில் 3,546 ரூபாயாக உயர்ந்துள்ளது.

ரயில்வே ஊழியர்களின் நலனுக்காக ரயில்வேக்கள் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளில், நோயுற்றவர்களுக்கு உதவுவது, ஊழியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டப் பள்ளிகள் அமைத்தல், மனமகிழ் மன்றங்கள் ஏற்படுத்துதல், விளையாட்டுத்திடல் வசதி அளித்தல் ஆகிய பல்வேறு செயல்களும் அடங்கும். மேலும் ரயில்வே ஊழியர்களின் பிள்ளைகளுக்காக 747 பள்ளிகளும், 3 கல்லூரிகளும் நடத்தப்பட்டுவருகின்றன.



ரயில்வே ஊழியர்களின் மருத்துவ, சுகாதார வசதிக்கென 10,430 படுக்கைகள் கொண்ட சுகாதாரப் பிரிவுகளும், 651 மருத்துவ மனைகளும் இயங்கி வருகின்றன. 1950–51 ஆம் ஆண்டில் ரயில் ஊழியர் ஒருவருக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதிக்கான செலவு 32·30 ரூபாயாக இருந்தது. 1970–71-ஆம் ஆண்டில் 197·70 ரூபாயாக அதிகரித்துள்ளது.

மத்தியத் தர நிர்ணய நிறுவனம் விரிவடையும் பொருட்டு 1952-ஆம் ஆண்டில், ரயில்வே பரிசோதனை ஆராய்ச்சி நிலையம் என்னும் தனி நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் ரயில்வேக்களின், ஆராய்ச்சிக்காகவும், புதிய வடிவமைப்புகளைத் தயார் செய்வதற்காகவும், தற்போது ரயில்வேக்களிடம் உள்ள கருவிகளை உபயோகிப்பதற்கான வழிகளை ஆராய்வதற்காகவும் முழுமையான தொடங்கப்பட்டது.

மிக எளிய முறையில் துவங்கிய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு தர நிர்ணய நிறுவனம் ரயில்வேக்களின் பலதரப்பட்ட நடவடிக்கைகளை அறிந்து அவற்றை ஆராயும் திறன் கொண்டதாகத் தற்போது விளங்குகிறது. உலகத்திலுள்ள ரயில்வே ஆராய்ச்சி நிறுவனங்களிலேயே இந்த நிறுவனம் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. இது ஆராய்ச்சி செய்தல், வடிவமைப்புகளை உருவாக்கல், தரங்களை நிர்ணயம் செய்தல், மேற்பார்வையிடுதல், பொறியியல் துறையில் ஆலோசனை வழங்குதல் போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

ரயில்வேக்கள் 1955–56-ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கிய மொத்தப் பண்டங்களின் மதிப்பில் 25·8 சதவிகித பொருட்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் 1970–71-ஆம் ஆண்டில் இது 8·96 சதவிகிதமாகக் குறைந்தது.

ரயில்வே தொழிற்சாலைகளில், மின்சக்தி உற்பத்திப் பிரிவு, ரயில்பெட்டிப் பிரிவு, சிக்னல், தொலைத் தொடர்புப் பிரிவு, மின்சாரப் பொறியியல் பிரிவு, ரயில்வண்டிகளின் கூரைகளில் பொருத்தப்படும் கருவிகள் பிரிவு ஆகிய பல்வேறு பிரிவுகள் உள்ளன.

கடந்த 15 ஆண்டுகளில் உள்நாட்டிலேயே டீசல் எஞ்சின்களையும் மின்சார எஞ்சின்களையும் வடிவமைத்து உற்பத்தி செய்யும் திறனை இந்திய ரயில்வேக்கள் பெற்றுள்ளன. முன்னதாக 1950-ஆம் ஆண்டு சனவரி மாதம் 26-ஆம்தேதி சித்தரஞ்சன் என்னுமிடத்தில் இந்தியாவின் முதல் எஞ்சின் உற்பத்தி தொழிற்சாலை துவங்கப் பெற்றது. இத்தொழிற்சாலை நீராவி எஞ்சின்களை உற்பத்தி செய்வதற்காகத் துவங்கப்பட்ட போதிலும், தற்போது டீசல் எஞ்சின்களையும், மின்சார எஞ்சின்களையும் உற்பத்தி செய்து வருகிறது. இத்தொழிற்சாலை, நீராவிஎஞ்சின்கள் உற்பத்தி செய்வதைக் கடந்த ஆண்டு சனவரி மாதத்திலேயே நிறுத்தி விட்டது. 1971–72-ஆம் ஆண்டு வரை சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலை 2,351 நீராவி எஞ்சின்களையும், 344 மின்சார எஞ்சின்களையும், 121 டீசல் எஞ்சின்களையும் உற்பத்தி செய்துள்ளது.

இத்தொழிற்சாலை 1974-75 ஆம் ஆண்டில் 84 மின்சார எஞ்சின்களை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1971–72-ஆம் ஆண்டில் இது 46 மின்சார எஞ்சின்களையே தயார் செய்தது. மின்சார எஞ்சின்களைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து 1964–65 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்த கருவிகளின் மதிப்பு 53 சதவிகிதமாக இருந்தது. 1971–72 இல் 21 சதவிகிதமாகக் குறைந்தது.

நம்நாடு விடுதலை பெறுவதற்கு முன் இந்திய ரயில்வேக்களிடம் டீசல்எஞ்சினே இல்லை. 1961-ஆம் ஆண்டில் துவங்கிய டீசல்எஞ்சின் தொழிற்சாலை, 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரையிலான 11 ஆண்டுக் காலத்தில் அகலப் பாதையில் ஓடக்கூடிய 427 டீசல் எஞ்சின்களையும், மீட்டர்கேஜில் ஓடக்கூடிய 80 டீசல் எஞ்சின்களையும் உற்பத்தி செய்துள்ளது.

பி. வி. ஜி.






# தமிழ்நாட்டில் கற்கால மனிதன்

கற்கால மனிதன் சென்னையைச் சுற்றிலுமுள்ள நிலப் பகுதியில் சுமார் 2,00,000 ஆண்டுகளுக்கு முன் வசித்து வந்தான் என்ற உண்மை 1863-ஆம் ஆண்டே வெளியிடப்பட்டது. சென்னையிலுள்ள பல்லாவரத்தில், ஆதிகால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளை இராபர்ட் புரூஸ் ஃபூட் ( Robert Broce Foote ) என்பவர் கண்டெடுத்தார். ஆனால், 1935-ஆம் ஆண்டு வி. டி. கிருஷ்ணசாமி என்னும் புவி இயல் நிபுணர், இவ்வுண்மையை மேலும் அவருடைய அரிய கண்டுபிடிப்புகளால் நிரூபித்தார். அதன் பயனாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பூண்டி நீர்த்தேக்கத்தின் அருகிலுள்ள வடமதுரை, அத்திரம்பாக்கம், நம்பாக்கம், குடியம் போன்ற இடங்களில் கற்கால மனிதன் பயன்படுத்திய கருவிகள் கண்டெடுக்கப்படுகின்றன.

மனித வளர்ச்சியில் கற்காலம் மிகப் பெரும் பகுதியை அடைத்துக் கொள்ளுகிறது. இட்டத்தட்ட கி. மு. 10,000 ஆண்டுகள் முன்வரை கற்கால நாகரிகம், மனிதனை மேற்கொண்டுவிட்டது. கற்காலத்தில் மனிதன் நாடோடியாகவே திரிந்து வந்தான். இயற்கையாகவே உண்டாக்கப்பட்ட குகைகளில் வசித்தும் அப்போதுக்கப்போது கற்களால் செய்யப்பட்ட கருவிகளின் உதவியால் வேட்டையாடிக் கிடைத்த உணவை உண்டும் வாழ்ந்து வந்தான். தமிழ் நாட்டில் கற்கால மனிதன் வாழ்ந்ததற்கு அடையாளம் அவன் விட்டுச் சென்ற கற்கருவிகளேயாகும். இவ்வாறு தமிழகத்தில் கிடைத்த கற்கால மனிதனின் கருவிகளையும் ஆப்பிரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் கிடைத்த கற்காலக் கருவிகளையும் ஒப்பிட்டே, தமிழகத்தில் வாழ்ந்த கற்கால மனிதனின் காலத்தை வரையறுக்கிறார்கள். ஒப்புமை ஆராய்ச்சியின் (Typology Research) பயனாகத் தமிழகத்தில் கற்கால மனிதன் சுமார் 2,00,000 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தான் என்று தெரியவருகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து சுமார் 12 மைல் சுற்றளவிலுள்ள பல இடங்களில் கற்கால மனிதனின் கைக் கோடரிகள் ( Hand Axes ) இறைச்சிகிறும் கத்திகள் ( Cleavers), போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன.

ஆதிகால மனிதன் பயன்படுத்திய இக் கற்கருவிகளின் பெரும்பாலானவை குவாட்லைட் (Quatlite) என்னும் கற்களில் செய்யப்பட்டவை. இக்கருவிகள் பல உபயோகங்களுக்கு ஏற்றது. உதாரணமாகக் கைக்கோடரி ( Hand Axes ) குத்தவும், வெட்டவும், துண்டு போடவும், பயன்படும்.

இயற்கையாகவே உண்டாக்கப்பட்ட கரடுமுரடான பெரிய கல்லால், மேலே சொல்லப்பட்ட குவாட்லைட்டைக் குறிபார்த்து அடிக்கும்போது அடி விழுந்த இடத்தில் செதில் பெயரும். செதில் பெயர்ந்த தால் கூருக்கப்பட்ட பகுதி, மீண்டும் மீண்டும் தேய்க்கப்பட்டுப் பளபளப்புடன், இப்போது நாம் பயன்படுத்தும் சவரக்கத்தியின் கூர்மையை அடைந்துவிடும். ஆதிகால மனிதன் கைக் கோடரியை இரண்டு வகைகளில் பயன்படுத்தினன். கைக் கோடரியின் கனத்தை அடிப்பாகத்தை உள்ளங்கையில் நேரிடையாக வைத்துக் கொண்டு சிறு மிருகங்களைத் தாக்கினன். ஆனால், யானை, காண்டா மிருகம், மிக வேகமாக ஓடும் மான் போன்றவைகளைக் கொல்ல, கைக் கோடரியை மீண்டும் கூராக்கி இதற்கு பாய்ன்ட் ( Point ) என்று பெயர். அதை நீண்ட மரக் குச்சிகளில் கட்டி, எதிரே உள்ள மிருகத்தை நோக்கி எய்தினன். இவ்வாறு கற்கால மனிதன் கற்கருவிகளைப் பயன்படுத்தினன்.

அத்திரம்பாக்கம் கற் கருவிகள்



பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து சுமார் 8 மைல் வட கிழக்கே குடியம் (Gudium) என்னும் இடத்தில் கற்கால மனிதன் தங்கிய குகை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், இக் குகையில் கற்கால மனிதனின் ஓவியங்களோ அல்லது அவன் இங்கு நீண்ட காலம் தங்கிய அடிச்சுவடோ காணப்படவில்லை.

ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் கற்கால மனிதனின் காலத்தை அறிய அகழ்வாராய்ச்சியின் (Archaeology) உதவியால் தோண்டி எடுக்கப்பட்ட கற்கால மனிதனின் எலும்புக் கூடு மிகவும் உதவுகிறது.

ஆகவேதான், தமிழ் நாட்டில் கண்டெடுத்தகற் கருவிகளை, ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும் எலும்புக் கூடுகளோடு கண்டெடுத்த கருவிகளோடு, ஒப்புமைசெய்து தமிழ்நாட்டுக் கற்கால மனிதனின் காலம் வரையறுக்கப்படுகிறது.

—த. இ. வரதராஜன்.


கதர் கைத்தொழில் அங்காடி
குறளகம்
சென்னை-1
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
வெளிநாட்டார் போற்றும்
பொருள்
கலைக்கூடம்
20461
20462 20463
20464 20465





பீங்கான் பொருள்களின் 8வது ஆண்டுக் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 9-2-73 அன்று ராஜாஜி மண்டபத்தில் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்களால் துவக்கி வைக்கப்பெற்றது.

ஒவ்வோர் ஆண்டிலும் நடைபெறும் இந்தப் பொருட்காட்சியில் புதிய புதிய மாதிரிகளை உருவாக்கி, அவற்றை இடம் பெறச் செய்வது தொழில் வணிகத் துறையின் சாதனையாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு கண்காட்சியில் 150 புதிய பீங்கான் கலைப் பொருள்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு போர்வீரன் சிலை மக்கள் மனங்களைக் கவர்ந்தது. இந்த ஆண்டு, விடுதலை அடைந்த வெள்ளி விழா ஆண்டாகையால் அதனை நினைத்துப் பார்க்கும் வகையில் கொடி காக்க உயிர்விடும் தியாகியின் உருவச் சிலையை இடம் பெறச் செய்து பெரும் புகழ் தேடிக் கொண்டுள்ளது தொழில்-வணிகத்துறை.

சென்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு விற்பனையில் சிறந்து விளங்கியிருக்கிறது. முதல் வாரத்திலேயே ஏறக்குறைய 65,000 ரூபாய்க்குரிய பீங்கான் பொருட்கள் விற்பனையாகியுள்ளன.

தினமும் காலையும் மாலையும் இந்தக் கண்காட்சியைப் பார்க்க வந்த மக்கள் தொகை ஏராளம், ஏராளம்.

இரவு 7 மணிக்கு மேல் வருகை புரிந்து, கண்காட்சிக் கூடத்திற்குள் செல்ல முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பும் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க இயலாது.

குறைந்த விலையில் நிறைந்த எழிலுடைய பீங்கான் பொருள்களை மக்கள் வாரிச் சென்ற காட்சி கண்களைவிட்டு அகலாத காட்சியாகும்.

அருமையும் பெருமையும் நிறைந்த இந்தக் கலைப் பொருட்கள், விரைவில் கடல் கடந்த நாடுகளையும் எட்டிப் பார்க்கவிருக்கின்றன என்ற செய்தி நம் செவிகளை எட்டுகிறது. ஒரு முறை இந்தப் பொருட்கள் வெளிநாட்டைத் தொட்டுவிட்டால் போதும் இவற்றிற்குத் தொடர்ந்து வரவேற்புக் கிடைக்கும் என்பது உறுதி! நமது ஏற்றுமதிச் சந்தையில் மிகுந்த முன்னேற்றம் ஏற்படும் என்பது திண்ணம்!





# மூதறிஞருக்கு நினைவாலயம்

மறைந்த மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு கிண்டி காந்தி மண்டபத்தின் அருகில் உருவாகும் நினைவாலயத்தின் அடிக்கல் நாட்டு விழா 15-2-73 அன்று மாலையில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களின் தலைமையில் முதலவர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

அனைவரையும் வரவேற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் ராஜாஜி அவர்களின் பெருமைக்குப் புகழ்மாலை சூட்டினார்கள். முதல்வர் குறிப்பிட்டதாவது :

"ராஜாஜி அவர்களுக்கு இந்த இடத்திலே நினைவாலயம் ஒன்றினை அமைக்க இருக்கிறோம். என்றாலும் அவரது நினைவாலயமாக நமது நெஞ்சமெல்லாம் அமைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ராஜாஜி அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த ராஜதந்திரியாகத் தமிழகத்தின் தவப்புதல்வராக- நாடுகளின் அனைத்துலக மேதைகளும் அரசியல் வித்தகராக விரும்பத்தக்க கலங்கரை விளங்கினார் — கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். இலக்கிய கர்த்தாவாக— தொன்மை எளிய நடையில் நூல்களைத் தந்த எழுத்தாளராக—எல்லாப் பதவிகளையும் வகித்த நேர்மையான பாத்திரராக — அன்புக்குப் பாத்திர மூதறிஞர் ராகத் திகழ்ந்த ராஜாஜி அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்றாலும் — அவரது தியாகம் — தொண்டு —எளிமை — இனிய சுபாவம் — ஆர்ப்பாட்டமில்லாத அரசியல் நடவடிக்கை ஆகியவை எல்லாம் நம்மை வழி நடத்திச் செல்லும் கொள்கை தீபங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

தவறுகள் என்று கருதமாட்டீர் கள் என்று கருதுகிறேன். தனிப்பட்ட முறையில், ராஜாஜி அவர்களின் மிகுந்த அன்புக்குப் பாத்திரமானவர்களில் நானும் ஒருவன்.

"இந்த நினைவாலயம் தமிழக அரசின் சார்பில் உருவாக விருப்பதால்-இதனைச் செய்து பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறேன். நான் ஆட்சிப் பொறுப்பில் இல்லாதிருந்தாலும்கூட, அவருக்கு இப்படி ஓர் ஆலயம் உருவாக்கவேண்டிய சூழ்நிலை எழுந்திருந்தால், நான் தனிப்பட்ட முறையிலே நினைவாலயத்தை உருவாக்கி இருப்பேன். ராஜாஜி அவர்களுடன் 10, 12 ஆண்டுகள்தான் நான் பழகியிருக்கிறேன் என்றாலும் என்னை மிக மிகக் கவர்ந்திருக்கிறார். என்னிடம் அதிக அன்பினைச் செலுத்தியிருக்கிறார். பேரறிஞர் அண்ணாவின் தொடர்பும் தமிழ் மூதறிஞர் தொடர்பும் மாறு நாட்டில் எத்தனையோ மாறுதல்களை உருவாக்கியுள்ளன என்பதை அனைவரும் அறிவீர்கள்.

"அவருக்கும் எனக்கும் இடையே இருந்த நட்புறவு சாதாரணமானதல்ல — பேரவையிலும், மேலவையிலும் நான் இரங்கல் தெரிவித்த போதும் குறிப்பிட்டேன், 'அவர் மரண முகப்பிலே இருந்த போதுகூட நம்முடைய நட்பு யாராலும் நீக்க முடியாதது என்று சொல்லிய வார்த்தைகள் என் நெஞ்சத்தின் ஆழத்தில் பதிந்திருக்கின்றன' என்று!

"40 கிரவுண்டு அளவுள்ள இந்த இடத்தில் நினைவாலயம் அமைய இருக்கிறது. இந்த நினைவு மண்டபம் ராஜாஜி அவர்களின் தியாக வரலாறுகளை உலகுக்கு எடுத்துச் சொல்லும் காவிய மண்டபமாகத் திகழும். முகப்பிலே அவரது முழு உருவச்சிலை ஒன்று அமைக்க விருக்கிறோம். ஆரம்ப மதிப்பீட்டுச் செலவு 5 இலட்சம் ரூபாயாக இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறோம்.

"இது தவிர, ராஜாஜி அவர்களின் சொந்த ஊரான தொரப்பள்ளியில் அவரது பிறந்த இல்லத்தைத் தமிழக அரசின் சார்பில் வாங்கி நினைவாலயமாக அமைக்க இருக்கின்றோம்.

"கட்டடங்கள் மாத்திரம் அவரது நினைவு இல்லமல்ல என்பதை நான் நன்கு அறிகிறேன். என்றென்றும் வாழ் நமது நெஞ்சங்களிலே வாழ்கின்ற பெரிய மனிதர்களில் அவர் ஒருவர்!"

–இவ்வாறு தமது வரவேற்புரையில் ராஜாஜி அவர்களுக்குப் பாமாலை சூட்டினார் முதல்வர் கலைஞர்.

அதன்பின் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் ராஜாஜியின் பெருமை பற்றி உரை நிகழ்த்தினார்.

மேதகு ஆளுநர் குறிப்பிட்டார் :

''என்னுடைய மனச்சாட்சியின் காவலர் என்று காந்தியடிகளினாலே போற்றப்பட்ட ராஜாஜி அவர்களுக்குக் காந்தி மண்டபத்திற்கு அருகிலேயே நினைவாலயம் ஏற்படுத்துவது மிகப் பொருத்தமானதே! தீர்க்கதரிசியாக விளங்கிய ராஜாஜியின் மறைவு, நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

''இந்தியர்களுக்கு ஆளத் தெரியுமா என்று பிரிட்டிஷ்காரர்கள் சந்தேகத்தோடு கேட்ட காலத்தில், சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக மிகத் திறமையுடனும் கீர்த்தியுடனும் ஆட்சி செய்து காட்டிய சிறந்த நிர்வாகி. அவருடைய வாழ்க்கையே அறிவுச் செம்மலின் தெய்வீக வாழ்க்கையாக விளங்கியது."

அதன்பின் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் அடிக்கல் நாட்டி உரையாற்றினார்கள் :

''மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களின் நினைவாக, தமிழக அரசு கட்டும் நினைவாலயத்துக்கு அடிக்கல் நாட்டுவதில் நான் பெருமை அடைகிறேன்.

''நம் நாட்டின் அரசியல், கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றுக்கு ராஜாஜி செய்த முக்கிய தொண்டை யாரும் மறக்க முடியாது இதன் காரணமாக நம் நாட்டு மக்கள் மட்டும் அல்ல, வெளிநாட்டினரும் அவரிடம் அன்பும், மதிப்பும் வைத்து இருந்தார்கள்.

''என் வாழ்நாளில் ராஜாஜி மறைந்த டிசம்பர் 25-ஆம் தேதியையும் அன்று அவருக்கு நான் எனது கடைசி மரியாதை செலுத்தியதையும் மறக்க முடியாது. ராஜாஜி மறைவினால், என்னுடைய நல்ல நண்பரையும், என் அரசியல் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்த தலைவரையும் இழந்துவிட்டேன்.

''50 ஆண்டுகளுக்கு முன், முதல் முதலாக நான் ராஜாஜியைச் சந்தித்தேன். காலம் செல்லச் செல்ல அவரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றதுடன் அவர் தலைமையின் கீழ் பணியாற்றும் சந்தர்ப்பமும் கிடைத்தது. பல பிரச்சினைகளில் அவரிடம் ஆலோசனை கேட்டு நான் நடந்திருக்கிறேன்.

''ராஜாஜி புகுத்திய விற்பனை வரி, மற்ற மாநிலங்களுக்கு வருவாயைப் பெருக்க வழிகாட்டியாக அமைந்தது. இந்த விஷயத்தில் பல எதிர்ப்புகளுக்கிடையே ராஜாஜி காட்டிய புத்திக் கூர்மை அனைவரையும் கவர்ந்தது.

''அத்துடன் மில் தொழிலாளர்களுக்குத் திருப்தி தரும் வகையில் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பு, மில்லைத் திறக்க அனுமதிக்கக் கூடாது. இதற்காக 144 தடை உத்தரவு போட வேண்டும் என்று கேட்டேன். இதைக் கேட்டு முதலில் ராஜாஜி வியப்புத் தெரிவித்தார். எப்படி இப்படிப்பட்ட தடை உத்தரவு போட முடியும் என்று அவர் கேட்டார். பிறகு இந்தத் தடை உத்தரவைப் போட அவர் சம்மதித்தார்.

''தன்னுடைய முடிவை அவர் ஊட்டியில் இருந்து கவர்னரிடம் தெரிவித்த போது கவர்னர் இதற்குச் சம்மதிக்கவில்லை. உடனே ராஜாஜி அரசின் முடிவை ஏற்காவிட்டால் நாங்கள் அனைவரும் ராஜினாமா செய்வோம் என்று கூறினார். இறுதியில் நாட்டின் வரலாற்றிலேயே முதல் தடவையாக முதலாளிகளுக்கு எதிராக 144 தடை உத்தரவு போடப்பட்டது. பிறகு முதலாளிகள் கீழே இறங்கி வந்து பிரச்னைக்குத் தீர்வு கண்டனர். ராஜாஜி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் விளைவுகளைப் பாராமல் செயலாற்றுவார் என்பதற்காக இதைச் சொன்னேன்.

''ராஜாஜி தனி நபராக மட்டும் இருக்கவில்லை. ஒரு நிறுவனமாகத் திகழ்ந்தார். அவர் மறைவில் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது. உலக ராஜ தந்திரியாகவும், அரசியல் அறிஞராகவும், தத்துவ வாதியாகவும், மேதையாகவும், எழுத்தாளராகவும், விடுதலைப் போராட்டவீரராகவும், சட்டமன்ற நிபுணராகவும், சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்த ராஜாஜி, நாட்டின் வரலாற்றில் அழியாத சின்னத்தை விட்டுச் சென்று இருக்கிறார்.

''ராஜாஜிக்கு நாம் செய்யும் அஞ்சலி மனித சுதந்திரம், பொது வாழ்வில் நேர்மை ஆகிய நன்னெறியைக் கடைப்பிடிப்பது தான்."

—இவ்வாறு குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தலைமைச் செயலர் திரு. சபாநாயகம் அவர்கள் நன்றி கூறிய பின், ராஜாஜி நினைவாலய அடிக்கல் நாட்டு விழா இனிது நிறைவேறியது.

351



# தஞ்சைத் திட்டம்

தமிழகத்தின் இயற்கை எழிலை அறியச் சங்கப் பாடல்களைப் படித்திட வேண்டும் என்பர். அவற்றைப் படித்துத்தான் உணர முடியும். இயற்கை யன்னையின் எழிலை—கோலத்தை—வண்ணத்தை — வகையைத் தஞ்சையை வளைய வளைய வந்தால் கண்டு, உய்த்து, உணர்ந்து மகிழலாம். இயற்கை யன்னையின் எழில் மாடமாக விளங்கும் தஞ்சை மாவட்டம் பற்றிப் '' பஞ்சத்தின் பரம வைரியே தஞ்சை மாவட்டம். வஞ்சிக் கொடி போல வளைந்தோடும் பொன்னியினால் ' வளம் ' என்னும் சொல்லுக்கே வளமான பொருள் வழங்கும் களமாகத் திகழ்வது தஞ்சை '' என்பர்

''நன்செய் கொழிக்கும் அது ' நெற்களஞ்சியம் ' மட்டுமல்ல; இலக்கியப் புலவர் பலரைப் பெற்றெடுத்த சொற்களஞ்சியம் மட்டுமல்ல ; ஆய கலைகள் அறுபத்து நான்கினுக்கும் தாயகமாகத் திகழும் கலைக் களஞ்சியமும் ஆகும்.'' எனத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமா ? சோழரின் வீரம் மணக்கும் தஞ்சையில் உள்ள பெரிய கோவில் தமிழினத்தின் நுண்ணறிவையும், கலைத் திறனையும் வெளிப்படுத்திப் பெரும் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறது. சரசுவதி மகால், கல்வி கரையற்றது என்பதைச் சொல்லிக்கொண்டிருக்கிறது. கல்லணை அன்றையப் பொறியியல் நிபுணத்துவத்துக்குச் சான்றாக நின்றுகொண்டிருக்கிறது. நீண்ட நெடு நாட்களாக இத்தனை பெருமைகளையும் கொண்டிலங்கும் தஞ்சை மாவட்டம் அண்மையில்—சென்ற ஆண்டில் அகில இந்திய அளவில் பெரும் புகழ் ஈட்டிப் பரிசு பெற்றுத் தமிழகத்திற்குச் சிறப்புச் சேர்த்துள்ளது.

வழக்கம் போல் உணவு உற்பத்தியில் வெற்றி பெற்றுப் பரிசு பெற்றதா ? விஞ்ஞானத் துணை கொண்டு விளைச்சலில் புதுமை ஏதேனும் ஏற்படுத்திப் பரிசு பெற்றதா? ஓவியம், காவியம், சிற்பம், கல்வி, இவைகளில் எதற்காகவாவது பரிசு பெற்றதா ? கலைகளிலே ஏதேனும் புதுமை காட்டிப் பரிசு பெற்றதா ? இல்லை.... இல்லை.... இத்தனைக்கும் அடிப்படையான—கொஞ்சம் சோர்ந்தால் துயரத்தின் எல்லைக்கே இட்டுச் சென்றுவிடக் கூடிய—நித்த நித்தம் கண்ணுக்குத் தெரிந்து உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அணு ஆயுதங்களை விடக் கொடியதாக—நஞ்சினும் கொடுமையானதாக இருக்கும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டிச் செயல்படுத்தப்பட்டு வரும் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தை நடத்துவதில் புதுமை காட்டிப் புகழ் சேர்த்துக் கொண்டது. ஆம்! நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, முனைப்பு இயக்கம் நடத்தும் முறையை —இன்றைக்கு இந்திய நாடே பின்பற்றும் முறையைச் செயல்படுத்தியதற்காக, இந்திய அரசிடமிருந்து பரிசு பெற்றுத் தனக்குத் தானே புகழ் சேர்த்துக் கொண்டதோடு தமிழ் நாட்டிற்கும் புகழ் சேர்த்துள்ளது தஞ்சை மாவட்டம்.

இந்த ஆண்டு (1972–73) தஞ்சை மாவட்டம் தகுந்த முன்னேற்பாடுகளுடன் முனைப்பு இயக்கத்தை நடத்தி முடித்துள்ளது. முனைப்பு இயக்கக் காலத்தில் தஞ்சை மாவட்டம் 30 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்திட வேண்டுமென இலக்கு நிர்ணயித்தது இந்திய அரசு. 15–1–1973-ஆம் ஆண்டு வரை முனைப்பு இயக்கத்தை நடத்தி 38,997 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து, இலக்கு மீறிய வெற்றியை ஈட்டிய மாவட்டம் என்ற நிலையை உருவாக்கிக்கொண்டதோடு, இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தில் தமிழ் நாட்டிலேயே மிக அதிகமான தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த மாவட்டம் என்ற புகழையும் பெற்றுள்ளது. சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தில், தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து அளப்பரிய சாதனையை ஏற்படுத்தி, அதற்கெனத் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடமிருந்து பரிசையும் பெற்ற திரு கே. ஏ. நம்பியார் அவர்கள் தான், பல் துறை அலுவலர்கள், அலுவல் சார்பற்றோர் ஆகியோரின் துணையோடு இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தின் மூலம் தஞ்சை மாவட்டத்தில் பெரும் வெற்றியை ஏற்படுத்தியுள்ளார்.

முனைப்பு இயக்கக் காலத்தில் தந்தைமார்களுக்கான அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ததோடு அமைந்துவிடவில்லை, மாவட்ட ஆட்சித்தலைவர். குழந்தைகளை நிறையப் பெற்றுக் கொண்டதால், அன்றாடத் தொல்லைகளுக்குள்ளாகின்றவர்கள் தாய்மார்கள் — அடிக்கடி குழந்தை பெறுவதால் உடல் நலக் கேட்டிற்குள்ளாகின்றவர்கள் தாய்மார்கள்— குழந்தைகளின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்து மகிழ இயலாத நிலையில் துடித்துக்கொண்டிருப்பவர்கள் தாய்மார்கள்— இப்படிப்பட்ட நெருக்கடிகளை உணர்ந்து குடும்ப நலத் திட்டம் ஏற்க முந்திக்கொண்டிருப்பவர்கள் தாய்மார்கள். அவர்களது நல்லுணர்வு வீணாகிவிடக்கூடாது, விழலுக்கு இரைத்த நீராகி விடக்கூடாது, அவர்களும் முனைப்பு இயக்கத்தின் போது அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள ஆவன செய்து தராவிட்டால், அவர்களது ஊக்கம் குன்றி, கருகிச் சருகாகி விடும். உணர்வுகள் மங்கிப் போகும். குடும்ப நலத் திட்டத்திற்கான ஆதரவு தாய்மார்களிடையே ஒருமுகப்பட்டு வரும் நேரத்தில் அந்த உணர்வைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறினால், வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதையாகிவிடும் எனக் கருதித் தஞ்சையிலுள்ள இராசா மிராசுதார் மருத்துவ மனையிலும், கும்பகோணம் அரசினர் மருத்துவ மனையிலும், நாகப்பட்டினத்திலுள்ள தஞ்சை மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலுமாக மாவட்டத்திலேயே மொத்தம் மூன்று இடங்களில் மட்டும் முனைப்பு இயக்கத்தின் போதே தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்தார் மாவட்ட ஆட்சித் தலைவர். வாய்ப்பு வசதிகள்தான் ஏற்படுத்தித் தரப்பட்டதே யொழிய, முனைப்பு இயக்கக் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தந்தைமார்களுக்குக் கொடுக்கப்பட்ட ஈட்டுத் தொகையளவுக்கு அல்லாது, சாதாரணக் காலங்களில் வழங்கப்பட்ட முப்பது ரூபாய் தான் முனைப்பு இயக்கக் காலத்திலும் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தாய்மார்களுக்கு வழங்கப்பட்டது.

357

மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த நல்வாழ்வு நிலையம் ஒவ்வொன்றிலும், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களின் எண்ணிக்கை நூறு ஆனதும், அவர்களுக்கெனப் பரிசுக் குலுக்கல் ஒன்று நடத்தி முதற் பரிசு பெற்றவருக்குச் சைக்கிளும், இரண்டாவது பரிசு பெற்றவருக்கு 'கை' வானொலிப் பெட்டியும் (Transistors Radio), மூன்றாவது பரிசு பெற்றவருக்குப் பாத்திரங்களும் பரிசாக வழங்கியது போல், அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தாய்மார்களுக்கெனப் பரிசுத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டது. இப் பரிசுத் திட்டத்தின் கீழ் முதற் பரிசு பெற்ற தாய்க்கு ஒரு பவுனும், இரண்டாவது பரிசு பெற்ற தாய்க்கு அரைப் பவுனும், மூன்றாவது பரிசு பெற்ற தாய்க்குப் பாத்திரங்களும் வழங்கித் தாய்மார்கள் உற்சாகப்படுத்தப்பட்டார்கள்— அவர்களுக்கு ஊக்கமூட்டப்பட்டது.

இத்தனைக்கும் மேலாக இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தின் போது தஞ்சை மாவட்டம் புதுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. நம் நாட்டுத் தாய்மார்கள் இல்லாமைக்கும், இயலாமைக்கும் ஆட்பட்டு, அவதிப்படுபவர்கள் ஆவார்கள். அதனாலேயே அருமையான தாய்மை உணர்வுகளை—தன்னைத் தானே உருக்கிக்கொண்டு ஒளியூட்டும் மெழுகு வர்த்தியின் நிலையை—புகைந்து சாம்பலாகித் தன்னைத் தானே அழித்துக்கொண்டு மற்றவர்களுக்கு மணம் சேர்க்கும் ஊதுவத்தியின் நிலையை—தியாக உள்ளத்தை இந்த நாட்டில் எந்தத் தாயும் இழக்கவில்லை. வறுமைத் தேள் கொட்டினாலும், — ஆண்டவன் செயலென்று ஆண்டு தோறும் பெற்று அவதிப்பட்டாலும் பந்த பாசம் விலக்கி, மேலை நாடுகள் போல் நீ யாரோ, நான் யாரோ என்று வாழ முற்படாத நாடு இந்த நாடு. அதனாலேதான் அரசு நடத்தும் சத்துணவுத் திட்டத்தின் கீழ், தன் குழந்தைகளுக்கு என்ன வாய்ப்பு—இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் தன் குழந்தைக்கு எது வரை கல்வி புகட்டலாம்—மதிய இலவச உணவுத் திட்டத்தின் கீழ் உணவு பெறத் தன் பிள்ளை தகுதி வாய்ந்தவனா—நிலப் பட்டா வழங்கும் திட்டத்தில் கொஞ்சம் நிலம் பெற்றுப் பிள்ளைக்கு உரியதாக்க முடியாதா—குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஒரு வீடு கிடைத்து அதைப் பிள்ளைக்கு உரியதாக்க மாட்டோமா—இல்லை வீட்டு மனைப் பட்டா கிடைக்கப் பெற்று ஓலைக் குடிசையாவது போட்டு 'கையகல மனையானாலும், அது நம் சொந்த மனை' என்ற நிலையை நம் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தித் தர மாட்டோமா''—என்று இப்படியெல்லாம் எண்ணிச் செயல்பட்டுத் தங்கள் குழந்தைச் செல்வங்களை முன்னேற்றத் துடிக்கும் தாய்மார்கள் நிறைந்த நாடாக இருக்கிறது தமிழ்நாடு.

இலவசக் கண் சிகிச்சை முகாம்களின் மூலம் ஏழைகளின் கண் திறந்து வரும் தமிழ்நாடு அரசு நல்வாழ்வு இல்லங்கள் அமைத்து முதல் கட்டமாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்து வரும் தமிழ்நாடு அரசு—நச்சு நாற்றம் நிறைந்த கூவத்தை மணமுடைய தாக்கிப் படகுகள் பழுதின்றிச் செல்லத் தக்கதாக்கி விட்டதைப் போல், தங்கள் வாழ்க்கைப் படகு அமைதியாகச் செல்ல ஆவன செய்யும் என்ற பெருத்த நம்பிக்கையில் இயங்கிக்கொண்டிருக்கும் தாய்மார்கள், அரசுக்குத் துணைபோகும் முகத்தான் கைக் குழந்தையோடு — ஒரு வயது அல்லது இரண்டு வயது நிரம்பிய குழந்தையோடு மருத்துவ மனை சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால், குழந்தையை யார் பார்த்துக் கொள்வது—அதன் தேவைகளை யார் நிறைவு செய்வது என்று நினைத்து ஒதுங்கிச் செல்ல நேரிடுகிறது. அவர்கள் அனைவரும் குடும்ப நலத் திட்டம் ஏற்க வேண்டும் என்ற உணர்வு பெற்றதும், அந்த உற்சாகம் மங்கி, மறைவதற்குள் அவர்களை அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்க—அவர்களது குழந்தைகளை எந்தக் குறையும் இல்லாது பராமரிக்க ஆவன செய்துவிட்டால், துயர் எதுமின்றித் தாய்மார்கள் அறுவைச் சிகிச்சைக்கு அதிக அளவில் வருவார்கள் எனக் கருதிய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவ மனையிலேயே 'குழந்தைகள் காப்பகம்' ஒன்றினை அமைத்து, அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்களின் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் முறையை—புதிய திட்டத்தை— இவ்வாண்டுத் தஞ்சை திட்டமாகத் தந்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் தாய்மார்களுக்கென அறுவைச் சிகிச்சை செய்த மூன்று மருத்துவ மனைகளில் ஒன்றான தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் தாய்மார்கள் தங்கி ஓய்வெடுத்த பகுதியை ஒட்டியே 'குழந்தைகள் காப்பகம்' ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது. இதில் குழந்தைகள் தூங்குவதற்கான தொட்டில் முதல், விளையாட்டுச் சாமான்கள் ஈறாகப்பல தேவையான பொருள்களும் இருந்தன. இங்கு வரும் குழந்தைகளை முறையாகக் கவனித்துக் கொள்வதற்கென்றே ஒருமுக்கியச் சேவிகாவும், நான்கு பால சேவிகாக்களும் இதில் பணியாற்றினர். அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தாய், தன் குழந்தையை இக் குழந்தைகள்

அறுவைச் சிகிச்சைக்குள்ளான தாய்மார்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான தஞ்சை இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் இயங்கிய குழந்தைகள் காப்பகக் காட்சி



காப்பகத்தில் விட்டு வைக்க அனுமதிக்கப்பட்டது. இங்குக் குழந்தைகளுக்கு நல்ல சத்துணவு வழங்கப்பட்டது. காலை, மாலை, இரவு நேரங்களில் நல்ல பாலும், முட்டை, ஆரஞ்சு, வாழைப்பழம் 'மாடர்ன் ரொட்டி' பிரிட்டானியா ரொட்டி ஆகியவை அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டன. அரசு மகளிர் நலத் துறையின் கீழ் இயங்கும் சேவை இல்லம் உணவு தயாரித்தளித்து உதவியது. காலையில் சிற்றுண்டியும், மதிய உணவும் கொடுக்கப்பட்டன. தாய்மார்கள் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் தங்கியிருந்த ஆறு நாட்களிலும் அவர்களது குழந்தைகள், இக் குழந்தைகள் காப்பகத்தில் வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டனர். தங்களது தாய்மார்கள் தங்களை ஒட்டிய பகுதியிலேயே இருந்தபோதிலும், அவர்களிடம் செல்லாது காப்பகத்தில்தான் குழந்தைகள் பெரும் பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்தன என்பது குறிப்பிடத் தக்கதாகும். அத்தனை கவர்ச்சி மிக்கதாக இக் குழந்தைகள் காப்பகம் இருந்தது. சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தின் போது தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நல்வாழ்வு நிலையங்களில் தங்கித் திரும்பிய தந்தைமார்கள் அங்கு வழங்கப்பட்ட நல்ல உணவின் காரணமாக உடல் எடை கூடிச் சென்றது போல், இவ்வாண்டு குழந்தைகள் காப்பகத்திலிருந்து குழந்தைகள் எடை கூடி, நல்ல உடல் நலத்தோடு தங்கள் தாய்மார்களுடன் திரும்பிச் சென்றனர்.

மேலும் இக் குழந்தைகள் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுக்குக் கக்குவான், இருமல் வராமல் தடுக்க ஊசி போடப்பட்டதா, தொண்டை அழற்சி நோயும், இசிவு நோயும் வராமல் தடுக்கத் தடுப்பு ஊசி அல்லது மருந்து கொடுக்கப்பட்டதா எனக் கேட்டறியப்பட்டு—போட்டுக்கொள்ளாத குழந்தைகளுக்குக் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அவை இலவசமாகப் போடப்பட்டன. சத்துணவுக் குறைவு காரணமாகத் துவண்டிருந்த குழந்தைகளுக்கு 'வைட்டமின்' மாத்திரைகள் வழங்கப்பட்டன.

இக் குழந்தைகள் காப்பகத்திற்குத் தேவையான தொட்டில்கள் மருத்துவ மனையிலிருந்தும் விளையாட்டுச் சாமான்கள், ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கும் குழந்தைகள் காப்பகங்களிலிருந்தும் பெறப்பட்டன. இக் காப்பகத்தில் தங்கிய குழந்தைகளுக்கு உணவு வகையில் ஆன செலவுக்காக மாவட்டப் பொது நல நிதியிலிருந்து ரூ. 6,000-ஐ ஒதுக்கி, வெள்ளோட்ட அளவில் 'குழந்தைகள் காப்பகம்' அமைத்துத் தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை நடத்தும் முறையை, வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது தஞ்சை மாவட்டம். தஞ்சை தந்த இப் புதுத் திட்டத்தின் பயனாக இராசா மிராசுதார் மருத்துவ மனையில் 933 தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். இத் திட்டம் செயல்படுத்தப்படாத கும்பகோணம் அரசினர் மருத்துவ மனையில் 519 தாய்மார்களும், நாகப்பட்டினத்திலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் 466 தாய்மார்களும் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளார்கள். நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து முனைப்பு இயக்கம் நடத்துவதால் ஏற்படும் வெற்றியைப் போல், இவ்வாண்டு தஞ்சை மாவட்டம் அறிமுகப்படுத்தியுள்ள, குழந்தைகள் காப்பகம் அமைத்துத் தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை நடத்தும் முறையைச் செயல்படுத்தினால் பெருவாரியான தாய்மார்கள் அறுவைச் சிகிச்சைக்குள்ளாகி, நிரந்தரக் கருத்தடை செய்துகொள்வதன் மூலம் 'சிறு குடும்ப நெறி' ஏற்பார்கள் என்பது உறுதி.

—எஸ். முத்துராமலிங்கம்

## மக்கள் குறை தீர்க்கும் மகத்தான பணி

மதுரை மாவட்டத்தின் ஐந்தாவது மனு நீதி நாள் விழா தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கு முன்பு ரெட்டியார் சத்திரம், கொட்டாம்பட்டி, வாடிப்பட்டி, சின்னமனூர் ஆகிய ஊர்களில் சிறப்பாக நடந்தது.

"ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களுக்குச் சாதகமான முறையில் குறைகள் நீக்கப்பட்டு வருகின்றன. அரசு அதிகாரிகளே கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று வரும் சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது. மக்களிடமிருந்து பெற்ற மனுக்களை மாதத்தில் ஒரு நாள் மாவட்ட ஆட்சித்தலைவர், தமது அலுவலகத்தில் மனுக்களுக்குரிய சுமுகமான பதில்கள் மூலம் குறைகள் போக்க உத்தரவிடுகின்றார். மக்களே அரசு அதிகாரிகளைக் காண நேரில் சென்று தங்கள் குறைகளைச் சொல்லிவந்த காலம் மாறி, இப்பொழுது அதிகாரிகளே மக்களை நேரில் சென்று மனுக்களைப் பெற்றுவரும் நிலையைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது'' என்று மனு நீதி பற்றி விளக்கிக் கூறும் மாவட்ட ஆட்சித் தலைவர், சில புள்ளி விவரங்களையும் குறிப்பிடுகிறார்.

"1973 சனவரித் திங்களில் 4,006 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இந்த மனுக்களில், வீட்டு மனைப் பட்டா, நிலப் பட்டா, முதியோர் உதவித் தொகை, இணைப்புச் சாலைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, பள்ளி வசதி போன்ற பல வகைப்பட்ட தேவைகளை மக்கள் கேட்டிருக்கிறார்கள். பெறப்பட்ட 4,006 மனுக்களில் 2,160 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு நல்ல முடிவு அறிவிக்கப்படுகிறது. 327 மனுக்கள் ஆய்வில் உள்ளன. மீதி 1,519 மனுக்கள் தீர்வு செய்யப்பட இயலாத நிலையில் உள்ளன.

"பட்டா செய்யப்பட வேண்டி 1,177 பேர்கள் மனுப் போட்டிருந்தார்கள். இவற்றில் ஒரு மனுவைத் தவிர 1,176 பேர்களுக்குப் பட்டா வழங்கப்படுகிறது. 101 பேர்கள் பட்டா மாற்றம் வேண்டி மனுச் செய்திருக்கிறார்கள். இவற்றில் 76 பேர்களுக்குப் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதி 35 பேர்களுக்குப் பட்டா மாற்றம் செய்ய இயலவில்லை. வீட்டுமனைப் பட்டா வேண்டி 600 மனுக்கள் வந்தன. 420 பேர்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்கப்பட்டது. 22 பேர்களுக்கு முதியோர் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 4 இலட்சத்து 72 ஆயிரம் செலவில் இப்பகுதியில் குட்டைகள் அமைக்கும் திட்டம் ஒன்று உள்ளது. மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டிற்கு இணைப்புச்சாலை அமைக்க ரூ. 50 இலட்சம் செலவிட அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இந்த ஆண்டு 1,500 மக்கள் உள்ள கிராமங்கள் அனைத்தும் இணைப்புச்சாலைகள் மூலம் இணைக்கப்படும். அடுத்த ஆண்டு 1,000 மக்கள் உள்ள கிராமப் பகுதிகளுக்குச் சாலைப் பகுதிகள் அமைக்கப்படும்."

நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!

எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
மாநிலத்திட்டக் குழுவின் பணிகள்

எல்லாச்
சிற்றூர்களுக்கும்
சாலை
இணைப்புகள்.

இவைதனால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!

திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

தமிழரசு

குடும்ப நலத்துறை தமிழ்நாடு அரசு


# குழந்தை வியப்பு!

நீலக் கடற்கன்னி நெஞ்சில் துயில் தோய்ந்த
காலை இளங்கதிரோன் கரும்போர்வை மேலகற்றி
செக்கச் செவேரென்னக் கண்தான் சிவந்திடவே
பக்க மலைகளெலாம் பவளத் திரளாக்கிக்
கீழ்த்திசையில் நாணிக் கிளர்ந்தெழுந்த போதினிலே
வாழ்த்திசைக்கப் புள்ளினங்கள் வானிற் சிறகடிக்கச்
சோலை மரங்களெலாம் சுந்தரப்புன் னகைஉதிர்க்க,
ஆலை விளிசங்கு அலறி எமைஅழைக்க
வேலைக்குச் செல்லும் விரைவாரும் சிந்தையுடன்
நாளிதழ் ஒன்றை நயமாகக் கைபுரட்ட
இத்தரையின் விந்தைகளை எளியேன் துருவிநின்றேன்.
அத்தருணம் கிண்கிணியின் அழகார் ஒலிகொஞ்சப்
பாதச் சதங்கை பல்வே றிசையொலிக்க
நாதத்திற் கேற்ப நடன நடை பயின்று
ஐந்துவய தின்னும் அரும்பாத என்பெயரன்
சிந்தூர வாயிதழில் தித்திக்கும் நீரூற
தாவி எனையடைந்து 'தாத்தா' எனக்கூவி
ஆவி உருக அன்போ டெனைத்தழுவி
'வாங்கோநீ' இங்கென்றே மலர்க்கரத்தால் என்கையைப்
பாங்குடனே பற்றிப் பரிவோ டெனையிழுத்து
வீட்டினது பின்புறத்தே விளங்கிப் பொலிகின்ற
தோட்டத்திற் கென்னைத் தொடர்ந்தே அழைத்திட்டான்!
காதலியைப் பின்தொடர்ந்து செல்லுமொரு காதலன்போல்
ஏது மறியாமல் என்பெயரன் பின்சென்றேன்
அன்பின்பின் செல்லார் அவனியிலு முண்டுகொலோ,
பச்சை உடையணிந்து பாவைநடம் செய்வதொப்பப்
பாகற் கொடியொன்று படர்ந்து தளிர்விட்டு
மென்காற்றில் ஆடி மேவிநின்ற அவ்விடத்தில்
என்பெயரன் சென்றான், எனை இழுத்துக் கொண்டாங்காண்
'பாருங்கோ தாத்தா பாருங்கோ' என்றிசைத்தே
சுட்டுவிர லாற்பாகல் சுருள்கொடியைக் காட்டிநின்றான்.
நேற்று வரைபூவா. நெடிய கொடியதுதான்
காற்றில் களித்துக் கன்னி நகைப்பதுபோல்,
பொன்னிறத்துப் பூவொன்றைப் பூத்துச் சிரிக்கின்ற
காட்சியதைக் கண்டேன்; கருவண் டனையவிழி
கொண்டஎன் பேரன் குதித்துக் களித்தாடி
அண்டத் ததிசயங்கள் அனைத்தும் அறிந்தான்போல்
'பூப்பூப்பூ' என்றே பொன்மொழிகள் தானுதிர்த்தான்
'அப்பப்பா' இந்த அறியாக் குழந்தையுளம்
எப்போ தெனக்கிங்(கு) இயற்கை அளிப்பாளோ,
ஏதேதோ தேடி இவ்வுலகில் நாமலைந்து
தீது பலவும் தினமும் இயற்றி மிகச்
சாதல் புரிகின்றோம் எனவென் மனச்சான்று
ஓதல் புரிவதனை உள்ளம் உணர்ந்ததுவால்!

— பா.சொ.லிங்கம்



# 'மினி' செய்திகள்!

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் எம்.சி.யு-7 என்னும் அதிகப் பருத்தியை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு புதிய உயர் ரகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது 135 நாட்களிலேயே பலன் கொடுக்க ஆரம்பிக்கிறது.

1972-73-ஆம் ஆண்டில் முதல் ஆறு திங்களில் 12,241 பேர்களுக்குக் கருத்தடைச் சாதனங்கள் பொருத்தப்பட்டன.



1971-72-ல் அரக்கு ஏற்றுமதியின் மூலம் இந்தியாவுக்கு 6 கோடியே 59 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கிறது. இந்தியாவிடமிருந்து சுமார் 100 நாடுகள் அரக்கு வாங்குகின்றன. அரக்கு வர்த்தகத்தில் இந்தியா முன்னணியில் நிற்கிறது.

இந்தியாவில் இன்று சராசரி நாளொன்றுக்கு ஒரு படம் வீதமும் இரண்டு நாட்களுக்கு ஒரு குறும்படம் வீதமும் தயாரிக்கப்படுகின்றன.




தமிழ்நாடு அரசு, மத்திய அரசுத் தானியக் களஞ்சியத்திற்குச் சுமார் 1 இலட்சம் டன் அரிசியை இலவசமாக வழங்க முன் வந்துள்ளது.

இந்தியாவில் தற்போது 4 கோடி டன் பாலைச் செலவிட வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 2 கோடி டன் பாலே உற்பத்தி செய்யப்படுகிறது. 1980-இல் 6 கோடி டன் பால் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



அஞ்சல்துறை தற்போது பல்வேறு விதமாக 2125 படிவங்களை உபயோகித்து வருகிறது. இவற்றின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.1 கோடி மீதமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்தடைச் சாதனம் பொருத்தும் பணியில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. — தொகுப்பு: கிரி

# தாடி வந்த கதை

பூந்தொடி

தம்பி, தங்கைகளே, நீங்கள் ஆபிரகாம் லிங்கனைப் பார்த்திருக்கிறீர்களா? இதோ, படத்தைப் பாருங்கள். இவர்தாம் ஆபிரகாம் லிங்கன். இவர் அமெரிக்கா என்ற நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்தவர்.

ஆரம்பத்தில் இவர் தாடியே வைத்துக் கொள்ளவில்லை. தாடி வைத்துக் கொள்ளவும் இவர் விரும்பவில்லை. ஆனால், இவர் அமெரிக்காவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் தாடி வளர்க்க ஆரம்பித்து விட்டார். ஏன் தெரியுமா? அது ஒரு கதை!

அமெரிக்காவில் ஒரு சிறுமி இருந்தாள். அவள் பெயர் கிரேசுமிடல். அவள் அழகானவள்; அறிவு மிக்கவள். ஒரு நாள் அந்தச் சிறுமி தன் தகப்பனாரிடம் பேசிக் கொண்டிருந்தாள். அப்போது அவரிடமுள்ள ஒரு படத்தை அவள் உற்றுப் பார்த்து அந்தப் படத்திலுள்ளவர் யார் என்று தெரிந்து கொண்டாள்.

சிறிதுநேரம் அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருந்த கிரேசு, "லிங்கனுக்குத் தாடி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று எண்ணினாள். லிங்கனுக்குக் கடிதம் எழுதி, தாடி வளர்த்துக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தாள்.

உடனே அந்தச் சிறுமி லிங்கனுக்குக் கடிதத்தை எழுதத் தொடங்கினாள். அந்தக் கடிதத்தில் அவள், "தங்கள் முகம் மிகவும் இளைத்துப் போயிருக்கிறது. அதை மறைத்துக் கொள்ள, தாடி வளர்த்துக்கொண்டால் முகம் அழகாக இருக்கும். நீங்கள் தாடி வளர்த்துக் கொண்டால் சுலபமாக அமெரிக்காவின் தலைவராகவும் ஆகிவிடலாம்! ஆமாம்! ஆமாம். தாடி வைத்துக்கொண்டால்தான் நான் உங்களுக்கு ஓட்டுப் போடும்படிச் சொல்வேன்" என்று எழுதி, லிங்கனுக்கு அனுப்பி விட்டாள். என்ன துணிச்சல் அவளுக்கு!

அந்தச் சமயம் அமெரிக்காவில் தேர்தல் காலமாக இருந்தது. அமெரிக்கத் தலைவர் பதவிக்குப் பலர் போட்டியிட்டார்கள். ஆபிரகாம் லிங்கனும் அந்தப் பதவிக்குப் போட்டியிட்டார். அதற்கான தேர்தல் வேலைகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். அவரது அலுவலகத்தில் தேர்தல் சம்பந்தமாகப் பலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது கிரேசுமிடல் எழுதிய கடிதம் அங்கு வந்தது.

ஆபிரகாம் லிங்கனுக்கு மிகவும் வேண்டிய ஒருவர் அக் கடிதத்தை பிரித்துப் படித்தார். ஒரு சிறுமி எழுதியிருப்பதைக் கண்டு அவர் சிரித்தார். மற்றொருவன், அக்கடிதத்தைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போடும்படி சொன்னான். அப்போது ஆபிரகாம் லிங்கன் அங்கு வந்தார். அவர்கள் பேசிக் கொண்டிருப்பது அவர் காதில் விழுந்தது. அவர் என்ன என்று விசாரித்து, அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டு படிக்க ஆரம்பித்தார். உடனே கடிதத்திற்குப் பதிலும் எழுதி அனுப்பினார்.

லிங்கன், அந்தக் கடிதத்தில், "அன்புள்ள கிரேசு! உன் கடிதம் கிடைத்தது. நீ என்னைத் தாடி வளர்க்கும்படி கூறியிருக்கிறாய்! நான் எப்போதுமே தாடி வளர்த்துக் கொண்டதில்லை. இப்போதும் நான் தாடி வளர்க்க விரும்பவில்லை. அப்படி வளர்த்துக் கொண்டால் என்னைப் பார்த்து பைத்தியக்காரன் என்றும் சொல்லுவார்கள்! இருந்தாலும் பரவாயில்லை!" என்று எழுதியிருந்தார்.

சில திங்கள் கழித்து ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் குடியரசுத் தலைவரானார். அப்போது ஒரு சமயம் அவர் இரயிலில் போய்க் கொண்டிருந்தார். ஒரு இரயில் நிலையத்தில் இரயில் நிற்க நேர்ந்தது. ஆபிரகாம் லிங்கன் வந்திருப்பதைக் கண்ட பொது மக்கள் திரளாகக் கூடிவிட்டார்கள். சிறுமி கிரேசும் அங்கு தன் பெற்றோர்களுடன் வந்திருந்தாள்.

இரயில் நிலையத்துக்கு அருகில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் ஆபிரகாம் லிங்கன் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசும்போது, "இந்த ஊரில் கிரேசுமிடல் என்ற ஒரு சிறுமி இருந்தாள். அவள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தில் என்னை தாடி வளர்த்துக்கொள்ளும்படி கூறியிருந்தாள். அவளால்தான் நான் தாடி வளர்த்துக் கொண்டேன். அவள் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறாளா?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் கிரேசு துள்ளிக் குதித்துக்கொண்டு மேடைக்கு ஓடி வந்தாள். உடனே ஆபிரகாம் லிங்கன் அவளை அப்படியே அணைத்துக் கொண்டார். "என்னைத் தாடி வளர்த்துக் கொள்ளும்படி வற்புறுத்தியவள் இந்தச் சிறுமி தான்!" என்று கூறி அவளைக் கூட்டத்தினருக்கு அறிமுகப் படுத்தினார்.





கிரேசுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

லிங்கனின் முகத்தை உற்றுப் பார்த்த கிரேசு, "இப்போது உங்கள் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா?'' என்றாள் மகிழ்ச்சியாக.

ஒரு சிறுமியின் வேண்டுகோளுக்கு மதிப்புக் கொடுத்து, ஒரு நாட்டின் தலைவர், ஒரு மாமேதை தாடி வளர்த்துக் கொண்டார்! இது விந்தையாக இல்லையா?

இப்போதும் கூட அந்தச் சிறுமி எழுதிய கடிதம் அமெரிக்காவில் உள்ள ஒரு மாளிகையில் வைக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிற்குச் செல்லும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அந்தச் சிறுமியின் கடிதத்தைப் படித்துப் பார்த்து ரசித்து மகிழ்கிறார்கள்.






ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்; தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.




Criterion CO 2883

பதிவு எண். M. 8676






அவனுக்காக
சேமித்து வைக்க
இன்றே வாங்குங்கள்

முதல் பரிசு. ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

12-3-1973

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.





நாடும் நாமும்.......
நம் நல்வாழ்வை நாடும் திட்டங்களுக்கே
நமது அரசு முதலிடம் தருகிறது !
பசுமைப்புரட்சி மூலம்
உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று
இந்தியாவில் முதலிடம் வகிக்கிறோம்.
சமதர்மத் திட்டங்களைச் செயல்படுத்துவதில்
நமது அரசு முன்னணியில் திகழ்கிறது!
பன்னிரண்டு ஆண்டுத் தொலை நோக்குத் திட்டத்தின் கீழ்
புதுவாழ்வு மலர அரும் பெரும் முயற்சிகள் !
இந்தப் பணிகளுக்கு
வலுமிக்க அடித்தளம் அமைய
நாம் செய்யும் கைம்மாறுதான்
அளவான குடும்பம்!
நாட்டின் முன்னேற்றத்தின் அடையாளம்
திட்டமிட்ட குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் !
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் !!
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு
தமிழரசு


தமிழரசு
16-3-73
கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு
கோவை மாவட்டம்
பேரூர் கோவிலில்...
ஏப்ரல் 1௨ இதழ்
ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழ்

# பால்வளம் பெருகிட...

## முதல்வர் டாக்டர் கலைஞர்

உலகில் பெரும்பான்மையான பகுதிகளிலே — பெரும்பாலான மொழிகளிலே ' பால் ' எனும் சொல் தூய்மை என்பதுடன் தொடர்பு கொண்டு விளங்குகிறது. இது அதன் வெண்ணிறத்தால் மட்டுமன்று ; அது குழந்தைகளுக்கும், மெலிந்தார்க்கும், முதியோர்க்கும் உரமூட்டும் உணவாய் அமைந்துள்ளது. தாயின்பால் தூயது ; நோயணுக்களால் பாதிக்கப்படாதது.

தமிழகத்திலே விழாக்களில் எல்லாம் பால் இடம்பெறுகிறது. திருமணம் முதலாகக் குழந்தைப் பேறு ஈருக எல்லா விதமான மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளில் எல்லாம் பாலும், பாலினின்று ஆக்கப்படும் பலவகைப் பொருள்களும் பயன்படுத்தப்படுகின்றன. புதிய இல்லத்திற்குக் குடிபோகும்போது பால் காய்ச்சு விழா எடுக்கிறோம். எனவே, அனைத்து மொழிகளிலும் பால் தூய்மைக்கும் இன்றியமையாமைக்கும்பயன்படுத்தும் ஒன்றாகப் பொலிகிறது.

பாலின் பெருமையையும், சிறப்பையும், புகழையும் பாதுகாப்பது எவ்வாறு என்பதே இன்றையப் பால் பண்ணையாளரின் பெரும்பணியாக விளங்குகிறது. அதை எவ்வாறு தூயதாகவும், கலப்படமின்றியும் வைத்துக் கொள்வது, மேலும் மேலும் பாலை எவ்வாறு பெருக்கலாம் ; அதை மேலும் பலர் பெறுமாறு செய்வது எங்ஙனம் ? இது சொல்வது எளிது ; ஆனால், செயலிற் கொண்டு வருவது அத்துணை எளிதன்று.

உழவன் தன் வருவாயைப் பெருக்கி வாழ்வை வளமாக்க விரும்பினால் உணவு தானியங்களைப் பயிரிடுதலை மட்டும் நம்பியிருந்தால் போதுமானதன்று ; வேளாண்மையுடன் பால்பண்ணை, கோழி வளர்த்தல் போன்ற தொழில்களையும் மேற்கொள்ள வேண்டும். இது அவர்கள்-வாழும் இடம், சூழ்நிலை, தட்பவெப்பநிலை, மண்ணியல்பு, விற்பனை வாய்ப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவற்றுள் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ளலாம். ஒருஏக்கர் நிலமுள்ள உழவன் கூட இரண்டொரு பால் மாடுகளைப் பேணிவரின் தனது வருவாயை அவன் பெருக்கிக் கொள்வான் ; ஆனால், அவற்றிற்குச் சிக்கனமான முறையில் தீனி இடவேண்டும். இதற்குத் தன்னிலத்திலேயே-இரண்டு மூன்று சென்டு நிலத்தை அவற்றின் தீனி பயிரிட ஒதுக்கினால் போதுமானது. இரண்டு மூன்று ஏக்கர் நிலமுடையார்க்கு இது மேலும் எளிதாகும்.

1970—71-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒவ்வொரு மனிதனுக்கும் நாள்தோறும் சராசரி 105 கிராம் பால் கிடைத்ததெனப் புள்ளிவிவரம் கூறுகிறது. சத்துணவு வல்லுநர்கள் ஒவ்வொருவரும் நாளொன்றுக்குக் குறைந்த அளவு 300 கிராம் பாலேனும் பருகவேண்டுமெனக் கூறுகின்றனர் ; தமிழகத்திலே ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் சராசரி கிடைக்கும் பால் 63 கிராம் அளவே ; இது தேசிய அளவுக்கு மிகவும் குறைவே.

உலகில் உள்ள ஏனைய நாடுகளைவிட நம் நாட்டிலே கால்நடைகளின் தொகை மிகுதியே; 229 இலட்சம் கால்நடைகள் இங்கு உள்ளன. இவற்றில் 80 இலட்சம் இனவிருத்திக் கேற்றவை. ஆனால், இந்தியக் கறவைகள் தரும்பால் உலகிலேயே மிகக் குறைவு. அதாவது பால் கறக்கும் பருவக் காலத்தில் அவை தரும் மொத்த அளவு 200 லிட்டரே. டேனிஷ்பசு 3,700 லிட்டரும், அமெரிக்கப் பசு 3,200 லிட்டரும் தருகின்றன. 1980-ஆம் ஆண்டில் 25 இலட்சம் கால்நடைகள் 2,500 லிட்டர் பால், கறவைக் காலத்தில் தருமானால் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும்.

இனக்கலப்பு முறையால் கால்நடைகளைப் பெருக்கலாம் ; இதற்குரிய வசதிகளை உழவர்களுக்கு வழங்கல் வேண்டும். தமிழ்நாட்டுப் பால்வள மேம்பாட்டுக் கழகம் இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது பாராட்டத்தக்கது.

கால்நடைத் தீனி மற்றொரு பிரச்சினையாகும் ; தீனி வகைகளின் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. இது கால்நடை வளர்ப்பாரைச் சிறப்பாக நகரத்திலே உள்ளவரை மிகவும் பாதித்திருக்கிறது. புல்போன்ற தீனி வகைகளின் நிலை அஞ்சத்தக்கதாயுள்ளது ; இந்த நெருக்கடி நிலத்தின் ஒரு பகுதியைக் கால்நடைத் தீனி பயிரிட ஒதுக்குவதாலேயே தீர்க்க முடியும் ; இது ஒரு சக்கரம் போன்று சுழன்று வரும் திட்டமாகும். நிலங்களைக் கால்நடை உணவு பயிரிட ஒதுக்கினால் பால் பெருகும் ; பால் பெருக உழவர்க்கும் மற்றையோர்க்கும் மிகுதியாகக் கிடைக்கும்: மிகுதியான உடல் நலமும் உழவரின் பொருளாதார நிலையும் ஓங்கும்,



‘‘வேளாண்மைத் துறையில் பலமுனையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால், நமது முயற்சிக்குப் பலமுனைகளிலும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன. ஆனால், கால்நடைப் பராமரிப்பின் நிலை மகிழ்ச்சியூட்டும் அளவுக்கு இல்லை.

தமிழ்நாட்டில் பல இலட்சம் பசுக்களும் எருமைகளும், உள்ளன. ஆனால், அவைகள் உற்பத்தி செய்யும் பாலின் அளவு மிகவும் குறைவு. மக்கள் நல்வாழ்வுத் துறை வல்லுநர்கள் வரையறுத்துக் கூறும் குறைந்த அளவு பால் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமானால், தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு பசுவும் தற்பொழுது கொடுத்துவரும் பாலின் அளவைவிட 5 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலாவது இந்த அளவுக்குப் பால்உற்பத்தி செய்ய இயலுமா ? இந்த இலக்கினை எய்திட என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?

நமது உள்ளூர்க் கால்நடைகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் ' முரா ' எருமைக் கடாக்களைக் கொண்டு எருமைகளையும், 'சிந்தி', 'தர்பார்க்கர்' பொலிகாளைகளைக்கொண்டு பசுக்களையும் மேம்படுத்தும் (grading up) முறையை, நாம் அண்மைக் காலம் வரை மேற்கொண்டு வந்துள்ளோம். இம்முறையினால் நமது தமிழ்நாட்டின் பால் உற்பத்தி 2 மடங்காகப் பெருகியுள்ளது. ஆனால், இவ்வாறு 2 மடங்கு பால் உற்பத்தி செய்யும் இலக்கினை எய்திட ஏறத்தாழ 70 ஆண்டுகள் அல்லது 16 தலைமுறைக் காலம் தேவைப்பட்டுள்ளது. எனவே, நமதுமுன்னேற்றத்தைத் தீவிரப்படுத்தி, தேவைக்கேற்பப் பால் உற்பத்தி செய்திட வேண்டிய இலக்கினை வெகுவிரைவில் அடைய வேண்டியுள்ளது.

பால் உற்பத்தியையே முக்கியத் தொழிலாகக் கொண்ட நாடுகளில் ஒவ்வொரு பசுவும் 305 நாட்களில் (பால் கொடுக்கும் காலம்) 3,000 லிட்டருக்குக் குறையாமல் பால் கொடுக்கின்றன. நமது நாட்டில் பால் தருவதற்கென்றே உள்ள தரமான பசுக்களில்கூட இந்த அளவு பால் உற்பத்தி செய்ய முடியவில்லை. 5,000 முதல் 6,000 லிட்டர் பால் கொடுக்கக் கூடிய பசுக்களை உற்பத்தி செய்யும் திறன் படைத்த காளை ரகங்கள் மேலை நாடுகளில் உள்ளன.

பால் உற்பத்தியைப் பெருக்கும் நிலையில் அதை விற்பனை செய்வதற்குரிய வசதிகளையும் பெருக்க வேண்டும் ; பாலைப் பாதுகாத்து வழங்கத் தக்க இயந்திரங்கள் அமைக்க வேண்டும். இது சிக்கனமும் சீரிய பயனும் தரும்வகையில் அமைய வேண்டும்.

கூட்டுறவு முறையில் பால் விற்பனை செய்வது சிறந்த பயன்தரும். இம் முறையினால் உழவர்களும் பெரிதும் பயன்பெறுவர்; இடைத்தரகர்கட்கு இதில் இடமில்லை. பொருளாதார வகையிலும் தொழில்நுட்பத் துறையிலும் கூட்டுறவு முறை கையாளப்படல் வேண்டும்.

இந்தியா முழுவதிலும் கூட்டுறவு முறை பால் உற்பத்தித் தொழிலில் மேற்கொள்ளப்படின் குடியானவர்க்கு ஊதியம் பெருகும் ; மக்களுக்கும் குறைந்த விலையில் கூடுதலான பால் கிடைக்கும்.

எல்லைக்குட்பட்ட இந்த உலகிலே மக்களுக்கும், விலங்குகளுக்கும் வருந்தத்தக்க போட்டி நிகழ்கிறது. நமது தமிழகத்தே இன்றைய மக்கள்தொகை 41 மில்லியனாகும். இது 1980-ல் 48 ஆக உயரும் ; நமது மொத்த நிலப்பரப்பு 13 மில்லியன் ஹெக்டேராகும் ; இதில் 13 மில்லியன் கால்நடைகள் பாதுக்காக்கப்படவேண்டும் ; விரும்பிய படி கால்நடைகள் வெளியே சென்று மேய்ந்து வரும் நிலங்கள், மக்கள் தொகைப் பெருக்கால் நாள்தோறும் குறைந்து வருகின்றன. இந்நிலையில் நாள்தோறும் 300 கிராம்பால் ஒவ்வொருவரும் பெறுமாறு செய்ய இயலுமா என்பது சிந்திக்கத்தக்கது.

**(8—3—1973 அன்று சென்னை இராஜாஜி அரங்கில் நடைபெற்ற அனைத்து இந்தியப் பால்பண்ணைத் தொழில் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையின் முக்கியப் பகுதிகள்)**

இந்த இதழுடன் இலவச இணைப்பு

இருளும் ஒளியும்

## புகழ் மணக்கும் கோவை !

கோவை மாவட்டத்தில் பல்வேறு நகரங்கள், ஓரோர் வகையில் தனிச்சிறப்பும் புகழும் பெற்றவை. உதாரணத்துக்குச் சில :

| | |
|---|---|
| பொள்ளாச்சி | — சந்தை |
| கோவை | — சிறுவாணி நீர் |
| மேட்டுப்பாளையம் | — ஒற்றைச் சாயப்பாக்கு |
| அந்தியூர் | — துளிர் வெற்றிலை |
| மாயாறு | — மீன் |
| பவானி | — ஜமுக்காளம் |
| சத்தியமங்கலம் | — சந்தன மரம் |
| ஈரோடு | — மொந்தன் பழம் |
| காங்கேயம் | — காளை |
| திருப்பூர் | — பனியன் |
| பேரூர் | — சிற்பம் |
| அவிநாசி | — தேர் |

பால் உற்பத்தி செய்யும் திறனில் 50 சத அளவைத் தன்னுல் பிறக்கவிருக்கும் கன்றுகளுக்கு அளித்திட வல்லவை பொலி காளைகள் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். நமக்குத் தேவையான அளவு பால் தரும் சக்தியை நமது பசுக்களுக்குப் பொலிகாளைகள் ஒரு தலைமுறைக்காலத்திலேயே அளித்துவிடும். குளிர்விக்கப்பட்ட விந்து பயன்படுத்தும் தொழில் நுட்பமுறை மேற்கொள்ளப்படுமானுல், செயற்கை இனவிருத்தி முறையினுல், ஒரு பொலி காளையைக் கொண்டு ஓர் ஆண்டில் 5,000 பசுக்களைக் கருவுறச் செய்ய முடியும். இத்தகைய 500 பொலி காளைகளைக் கொண்டு ஒரே ஆண்டில் 25 இலட்சம் பசுக்களைக் கருவுறச் செய்ய முடியும். இதனுல் பிறக்கவிருக்கும் கன்றுகளில் 50 சத அளவு காளையாக இருந்துவிடும் என்று எடுத்துக்கொண்டாலும், மேலும் ஓர் ஆண்டுக்காலத்திலேயே நமக்குத் தேவையான அளவு பால்உற்பத்தி செய்வதற்குத் தேவையான பசுக்களை உற்பத்தி செய்துவிடமுடியும். எனவே, நாம் திட்டமிட்டுள்ளபடி பால்உற்பத்தி இலக்கினை அடைய, குறைந்த அளவு 500 மேல் நாட்டுப் பொலி காளைகளை வாங்க வேண்டியுள்ளது.

மைசூர் மாநிலத்தில் ‘கசர் கட்டா’ என்ற இடத்தில் உள்ள ‘இந்திய-டேனிஸ்’ திட்டப் பண்ணையும் கேரள மாநிலத்தில் ‘மூன்ஞர்’ என்ற இடத்தில் உள்ள ‘இந்திய-ஸ்விஸ்’ திட்டப் பண்ணையும் தரமான காளைகளை உற்பத்தி செய்து வருகின்றன. நமது திட்டத்திற்கு அப்பண்ணைகளிலிருந்து முடிந்த அளவுக்குப் பொலிகாளைகளை வாங்க வேண்டும். மீதித் தேவைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும். இதற்கிடையில் இத்திட்டத்தை மேற்கொள்வதற்குத் தேவையான உள்ளமைப்புகளை (Infar Structure) மேம்படுத்த வேண்டும். இத்திட்டத்தின் பணிகள் உழவர்களின் வீட்டு வாசலிலேயே, தேவையான காலத்தில் கிடைக்கச் செய்வதற்குரிய வகையில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உள்ளமைப்புகள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்தால் தமிழ்நாட்டின் பால் உற்பத்தி வெகு விரைவில் பன் மடங்கு பெருகும் என்பது திண்ணம்.

**பேராசிரியர் க. அன்பழகன்,**

**மக்கள் நல்வாழ்வு, கால்நடைத் துறை அமைச்சர்.**

**(பத்தாவது அனைத்து இந்திய பால் பண்ணைத் தொழில் கருத்தரங்கிற்கு வருகை தந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய உரையில் ஒரு பகுதி)**

“இந்தியா ஒரு மிகப்பெரிய வேளாண்மை நாடு. இந்திய மக்களில் பெரும்பாலானவர்கள் வேளாண்மை மற்றும் அதன் தொடர்பான தொழில்களையே நம்பி வாழ்கின்றனர். அவர்களுக்கு, வேளாண்மை முழு நேர வேலை வாய்ப்பையும், போதிய வருவாயையும் அளிக்காததால், பெரும்பாலான உழவர் பெருமக்கள் பால்உற்பத்தி, கோழி வளர்த்தல் முதலிய பணிகளில் இன்று ஈடுபட்டுள்ளனர். உழவர்களால் உற்பத்தி செய்யப்படும் பால், அவர்களுடைய வருவாயைப் பெருக்குவதுடன், ஊட்டச்சத்து மிகுந்த உணவாகவும் மக்களுக்குப் பயன்படுகிறது. ஆனுல், சமுதாயத்தின் அடித்தளத்திலே வாழும் சாதாரணப் பொதுமக்கள் பாலின் சிறப்பையும், அதில்உள்ள ஊட்டச்சத்து மதிப்பையும் உணராமல் உள்ளனர். எனவே, இந்த நேரத்தில், ‘அன்றுட உணவில் பாலையும் பயன்படுத்த வேண்டும்’ என்ற எண்ணத்தை அவர்களுடைய மனத்திலே ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். ஆனுல், அதே நேரத்தில், குறைந்த விலையில் பால்வழங்க நாம் முயற்சி எடுக்காவிட்டால், நமது அறிவுரையைக் கேட்டு அன்றுட உணவில் பாலைப் பயன்படுத்த முன்வரமாட்டார்கள் என்பதையும் நாம் நினைவுகொள்ள வேண்டும். எனவே, பால் உற்பத்தியைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பால் உற்பத்தியைப் பெருக்கினுல் மட்டும் போதாது ; அதே நேரத்தில் சாதாரணப் பொது மக்களும் வாங்கும் நிலையில் பாலின் விலையைக் கட்டுப் படுத்த வேண்டும்.”

**திரு மு. கண்ணப்பன்,**

*அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர்.*

**(பத்தாவது அனைத்து இந்திய பால் பண்ணைத் தொழில் கருத்தரங்கில் சிறப்பு மலரை வெளியிட்டு உரையாற்றியதில் ஒரு பகுதி)**



# வீட்டு மனை அளித்து வாட்டம் போக்கினேம்!

ஏழையின் தோழனுக விளங்கும் இன்றையத் தமிழ்நாடு அரசு, கோவை மாவட்ட ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா அளிப்பதில் வியத்தகு சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

அன்றும் இன்றும்

வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் 1967-68-ஆம் ஆண்டு முதல் 15—1—1973 வரையான 5¼ ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டுள்ள சாதனையை, 1960-61 முதல் 1966-67 வரையான 7 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டுள்ள சாதனையுடன் ஒப்பு நோக்கின், இன்றைய அரசு செய்துள்ள சேவை வியப்பிற்குரியது மட்டுமல்ல, மனிதாபிமான அடிப்படையானது என்பதும் புலனுகும். இதைத் தெளிவுபடுத்தவே பின்கண்ட புள்ளி விவரங்களைக் கோவை மாவட்ட ஏழை எளிய மக்களின் முன் படைக்கின்றேம்.

வீட்டுமனை ஒப்படை விவரம்—அன்றும் இன்றும்

**அன்று**

| ஆண்டு. | வீட்டுமனை பெற்றவர் களின் எண்ணிக்கை. | வீட்டுமனைக் காக ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்). |
|---|---|---|
| 1960-61 | 1,240 | 41 |
| 1961-62 | 1,220 | 57 |
| 1962-63 | 1,275 | 143 |
| 1963-64 | 1,170 | 33 |
| 1964-65 | 1,270 | 40 |
| 1965-66 | 1,270 | 48 |
| 1966-67 | 1,223 | 49 |
| மொத்தம் | 8,578 | 411 |

**இன்று**

| ஆண்டு. | வீட்டுமனை பெற்றவர் களின் எண்ணிக்கை. | வீட்டுமனைக் காக ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்). |
|---|---|---|
| 1967-68 | 1,380 | 58 |
| 1968-69 | 2,031 | 88 |
| 1969-70 | 9,416 | 288 |
| 1970-71 | 24,147 | 708 |
| 1971-72 | 36,925 | 741 |
| 1972-73 (15—1—1973 வரை) | 14,642 | 290 |
| மொத்தம் | 88,547 | 2,173 |



அன்று 7 ஆண்டுகளில் 8,578 பேர்களுக்கு 411 ஏக்கர் நிலம் வீட்டு மனைக்காக ஒப்படை செய்யப்பட்டது.

இன்று 5 ஆண்டுகளில் 88,547 வீடற்ற ஏழைகளுக்கு 2,173 ஏக்கர் நிலம் வீட்டு மனைக்காக ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கையை, கடந்த 5 ஆண்டுகளில் வீட்டுமனைப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பு நோக்கினுல், இன்றைய 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள், அன்றைய 7 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களைப்போல் 10 மடங்காக இருப்பதும், அதுபோலவே, வீட்டுமனையாக வழங்கப்பட்ட நிலப்பரப்பும் 5 மடங்காகப் பெருகியுள்ளதும் வெள்ளிடைமலைபோல விளங்குகிறது.



எனவே, இன்றையத் தமிழ்நாடு அரசு கோவை மாவட்ட ஏழை, எளிய, பாமரப் பாட்டாளி, தொழிலாளிகளுக்கு, வீட்டு மனைப்பட்டா வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது என்பதை நடுநிலையாளர் எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.




உழைப்பையே மூலதனமாகக் கொண்டு, உழவிலும் தொழிலிலும் உயர்ந்துள்ளது கோவை மாவட்டம். ஆனால், இயற்கையோ கோவை மாவட்டத்தின் பெரும் பகுதிக்குப் போதிய மழையைக் கொடுப்பதில்லை. மேற்குத் தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ள கோவை மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், ஆகிய வட்டங்கள் போதிய மழை இன்றி வறண்டு, வளமற்ற நிலையில் அமைந்துள்ளது. பல்லாண்டுக் காலமாக வானத்தையே நம்பி, அப்பகுதி மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆயினும் உழைப்பால் உழவிலும், தொழிலிலும் உயர்ந்து வாழ்ந்தனர். அவர்களை மேலும் ஊக்கப்படுத்தவே பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது.

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டம் கோவை மாவட்டத்தின் வறண்ட பகுதிகளை வளப்படுத்துவதற்காகவே முக்கியமாக உருவாக்கப்பட்ட தென்றாலும், கோவை மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிற்கே பல்வேறு பயன்தரும் பலநோக்குத் திட்டமாகவும், பல்வேறு பள்ளத்தாக்குகளை இணைக்கும் திட்டமாகவும் ( Multi-purpose and Multi-valley Project ) விளங்குகிறது. இத்திட்டத்தினால் பின்கண்ட பயன்கள் ஏற்பட்டுள்ளன :—

1. வறண்ட நிலங்கள் வளம் பெற்று, பசுமைப் புரட்சி ஏற்பட்டு, வேளாண்மை உற்பத்தி பெருகி வருகிறது.

2. மின்சக்தி உற்பத்தி பெருகியது.

3. மீன் வளம் பெருகி வருகிறது.

4. சுற்றுலாவுக்கான இடங்கள் தோன்றி வருகின்றன.

5. கால்நடைகளின் தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்தது.

6. வனச்செல்வம் வளர்ந்து வருகிறது.

7. வேலைவாய்ப்புப் பெருகியது.

8. நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு வருகிறது.

'காட்டில் காய்ந்த நிலவுபோல்' யாருக்கும் பயனின்றி மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி, மேற்கு நோக்கி ஓடி அரபிக் கடலில் கலந்து வீணாகிக்கொண்டிருந்த ஆற்று நீரைத் திருப்பிக் கோவை மாவட்டத்தை வளம் கொழிக்கச் செய்யவும் அதன் பயனாய் மாவட்ட மக்களின் வாழ்வு வளம் பெறவும் வழி வகுத்தது பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம். இத்திட்டத்தின் கீழ் நீராறு பள்ளத்தாக்கும், சோலையாறு பள்ளத்தாக்கும் இணைக்கப்படுகிறது. அதன்பிறகு இவ்விரு பள்ளத்தாக்குகளும் பரம்பிக்குளம் பள்ளத்தாக்குடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. பரம்பிக்குளம் பள்ளத்தாக்கிலிருந்து, மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவில் அடிவாரத்தில் உள்ள ஆழியாறு நீர்த்தேக்கத்திற்கும், திருமூர்த்தி நீர்த் தேக்கத்திற்கும் தண்ணீர் திருப்பி விடப்பட்டு, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம், காங்கேயம் ஆகிய வட்டங்களுக்குப் பாசனவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம்— ஆழியாறு திட்டத்தில் 8 ஆறுகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆறு தூனக் கடவு, பெருவாரிப் பள்ளம் ஆகிய ஆறுகள் ஆனைமலைக் குன்றுகளிலும், ஆழியாறு பாலாறு ஆகியவை சமவெளியிலும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, ஒன்றில் தேங்கும் நீரை மற்றொன்றுக்குச் சுரங்கங்கள் மூலமாகக் கொண்டு சென்று கோவை மாவட்டத்தின் சமவெளிப் பகுதியிலும், கேரள மாநிலத்தின் சித்தூர் பகுதியிலும் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 9 அணைகள் இடம் பெறுகின்றன. அவ்வணைகளில் மேல்நீராறு சிற்றணையும் ( Upper Nirar weir ) கீழ் நீராறு அணையும் ( Lower Nirar Dam ) 'சின்கோனா' பகுதியில் அமையவிருக்கின்றன. சோலையாறு அணை, ஆனைமலைப் பகுதியில் அமைந்துள்ளது. பரம்பிக்குளம் அணை, தூனக் கடவு-பெருவாரிப்பள்ளம் அணைகள் கேரள மாநில எல்லையில் அமைந்துள்ளன ; ஆழியாறு, திருமூர்த்தி ஆகிய 2 அணைகள் சமவெளியில் அமைந்துள்ளன.



பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் பரம்பிக்குளமே மிகவும் பெரிய நீர்த்தேக்கமாகும். முழு நீர்த்தேக்க மட்டத்தில் இதன் கொள்ளளவு 17,820 மில்லியன் கன அடியாகும். இந்நீர்த்தேக்கத்திற்கு நீராற்றிலிருந்தும் மின் உற்பத்திக்குப் பிறகு சோலையாற்றிலிருந்தும் தண்ணீர் கிடைக்கிறது. சோலையாறு அணையே மிகவும் உயரமான அணையாகும் ; கடைக்காலில் இருந்து 300 அடி உயரம் உள்ளது.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் தமிழ்நாடு, கேரளா ஆகிய 2 மாநிலங்களுக்கும் தொடர்புடைய கூட்டு முயற்சியாகவும் விளங்குகிறது. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் அடங்கியுள்ள சில நீர்த் தேக்கங்களும், நீர்ப்பிடிப்பு நிலங்களும் (Catchment area) கேரள மாநில எல்லையில் இருப்பதால், இத்திட்டத்தின் கீழ் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதற்குத் தமிழ்நாடு அரசும், கேரள அரசும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இக்கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 28,000 மில்லியன் கன அடி தண்ணீரைத் தமிழ்நாடு பெறுகிறது. அதற்குப் பதிலாகக் கேரள மாநிலத்திற்குச் சோலையாறு பள்ளத்தாக்கிலிருந்து 12,300 மில்லியன் கன அடி தண்ணீரையும், ஆழியாறு திட்டத்திலிருந்து 7,250 மில்லியன் கன அடி தண்ணீரையும் சித்தூர் புழாப் பள்ளத்தாக்கின் பாசன வசதிக்காகத் தமிழ்நாடு வழங்குகிறது.

தமிழ்நாடு அரசின் பொதுப் பணித்துறை, மின்சார வாரியம் ஆகிய இரு துறைகளின் கூட்டு முயற்சியே பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் சோலையாறு-1, சோலையாறு-2, சர்க்கார் பதி, ஆழியாறு ஆகிய 4 மின் உற்பத்தி நிலையங்கள் மின் சக்தியை உற்பத்தி செய்கின்றன. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 4 மின் உற்பத்தி நிலையங்களும் மொத்தம் 185 'மில்லியன் வாட்' மின் சக்தியை உற்பத்தி செய்கின்றன.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் கீழ்க்கண்ட 9 அணைகளும், 19 மைல் நீளமுள்ள சுரங்கப்பாதைகளும், 4 மின் உற்பத்தி நிலையங்களும், 170 மைல் நீளமுள்ள முக்கியக் கால்வாய்களும் அடங்கியுள்ளன.

### அணைகள்

1. மேல் நீராறு சிற்றணை.
2. கீழ் நீராறு அணை.
3. சோலையாறு அணை.
4. பரம்பிக்குளம் அணை.
5. தூனக்கடவு அணை.
6. பெருவாரிப்பள்ளம் அணை.
7. மேல் ஆழியாறு அணை.
8. ஆழியாறு அணை.
9. திருமூர்த்தி அணை.

### சுரங்கப் பாதைகள்

1. நீராறு சுரங்கப்பாதை.
2. சோலை யாறு சுரங்கப் பாதை.
3. பரம்பிக் குளம் சுரங்கப் பாதை.
4. சர்க்கார் பதி சுரங்கப் பாதை.
5. சமநிலைக்கோட்டுக் கால் வாயிலுள்ள நவமலைச் சுரங்கப் பதை.
6. சிறு சுரங்கப்பாதைகள்.

### மின் உற்பத்தி நிலையங்கள்

1. சோலையாறு மின் உற்பத்தி நிலையம்-1.
2. சோலையாறு மின் உற்பத்தி நிலையம்-2.
3. சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம்.
4. ஆழியாறு மின் உற்பத்தி நிலையம்.

### கால்வாய்கள்

1. சமநிலைக்கோட்டுக் கால்வாய்.
2. வேட்டைக்காரன் புதூர்க் கால்வாய்.
3. பொள்ளாச்சிக் கால்வாய்.
4. ஆழியாறு நிரப்புக் கால்வாய்.
5. சேத்துமடைக் கால்வாய்.
6. பரம்பிக்குளம் மூலக் கால்வாய்.
7. உடுமலைப்பேட்டைக் கால்வாய்.




பரம்பிக்குளம்-ஆழியாறுதிட்ட வேலை 1958-ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது. ஆனால், பின்கண்ட வேலைகள் தவிர, மற்றெல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு, 1967–68-ஆம் ஆண்டில் தான் பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது.

1967–68 வரை முடிக்கப்படாதிருந்த பணிகள்.

1. சோலையாறு அணை, சுரங்கப் பாதை.

2. பெருவாரிப்பள்ளம் அணை.

3. பரம்பிக்குளம்நீர்த்தேக்கத் தொகுதியில் பெருவாரிப் பள்ளத்தையும், தூனக்கடவு அணையையும் இணைக்கும் கால்வாய்.

4. மேல் நீராறு சிற்றணை சுரங்கப்பாதை.

5. கீழ் நீராறு அணை, சுரங்கப் பாதை.

பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிற்கும், கேரள மாநிலத்திற்கும் இடையே ஒரு முடிவான ஒப்பந்தம் 1970-ஆம் ஆண்டு மே திங்கள் வரை ஏற்படாதிருந்த காரணத்தினால், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் 28,000 மில்லியன் கன அடி தண்ணீரில், 9,000 மில்லியன் கன அடி தண்ணீரைக் கொடுக்கும் மேல் நீராறு சிற்றணையைக் கட்ட முடியவில்லை.

இன்றையத் தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக— கேரள அரசுடன் மேற்கொண்டிருந்த நீண்ட நாளையக் கடிதத் தொடர்பிற்கும், பல்வேறு கட்டங்களில் நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுவார்த்தைக்கும் பிறகு 1970-ஆம் ஆண்டில் மே திங்கள் 29-ஆம் நாள் ஒரு முடிவான ஒப்பந்தம் ( Firm agreement) ஏற்பட்டது. அதன் பிறகே, பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தில் நின்றிருந்த பணிகள், மீண்டும் சுறுசுறுப்பாகத் துவங்கின. அதன் பயனாய், 1960-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு முடியாமல் இருந்த சோலையாறு அணையும், அதைச் சார்ந்த

சுரங்கப் பாதையும் உடனடியாக முடிக்கப்பட்டு, 1971-ஆம் ஆண்டில் திறந்துவிடப்பட்டது.

பெருவாரிப் பள்ளம் அணையைப் பொறுத்தவரையில் 45 சத வேலைகள் முடிந்துவிட்ட நிலையில், 1966-ஆம் ஆண்டில் கேரள அரசின் வனத்துறையினரால் தடுக்கப்பட்டது. இத்திட்டத்தை மீண்டும் தொடர, தமிழ்நாடு—கேரள மாநிலத் தொடர்புடைய ஒப்பந்தம் ( Inter - State Agreement) மே 1970ஆம்ஆண்டு கையெழுத்தான பிறகே கேரள அரசின் அனுமதி கிடைத்தது. அனுமதி கிடைத்த உடனேயே வேலைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு 1971-ஆம் ஆண்டின் நடுவில் முடிக்கப் பட்டன.

### இன்றைய நிலைமை

தற்பொழுது பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் மேல் நீராறு சிற்றணையும், அதிலிருந்து சோலையாறு பள்ளத்தாக்கிற்குத் தண்ணீர் கொண்டு வரக்கூடிய 15,000 அடி நீளமும் 22 அடி விட்டமும் உள்ள குடைவரை சுரங்கப் பாதையையும் (Tunnel) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் 1969-ஆம் ஆண்டு மே திங்களில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தமிழ்நாடு, கேரளம் ஆகிய 2 மாநிலங்களின் முதல் அமைச்சர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு துவக்கப்பட்டன. ஆனால், இவ்வேலைகள் தமிழ் நாட்டிற்கும் கேரளாவிற்கும் இடையே மாநிலத் தொடர்புடைய ஒப்பந்தம் 1970-ஆம் ஆண்டு மே திங்களில் கையெழுத்தான பிறகே தீவிரமடைந்தன.

### எதிர்காலத் திட்டம்

தமிழ்நாடு-கேரள மாநிலங்களுக்கிடையே 1970-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி கீழ் நீராறு நீர்த் தேக்கத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு 2,500 மில்லியன் கன அடி தண்ணீர் கிடைக்கும் கீழ் நீராறு நீர்த்தேக்கத்தையும், அதிலிருந்து சோலையாற்றுக்குத் தண்ணீரைத் திருப்பிவிடும் சுரங்கப் பாதையையும் அமைப்பதற்கு ஆகும் செலவில், கேரள அரசும் பங்கு பெறுவதால் திட்ட வரை படத்தையும் ( Plan ) மதிப்பீட்டையும் (Estimate) கேரள அரசு மேலொப்பம் செய்தபிறகு 'சின்கோனு' பகுதியில் தமிழ்நாடு அரசு கீழ்நீராறு நீர்த்தேக்கத்தை அமைக்கவிருக்கிறது. இத்திட்டம் பற்றிய விரிவான ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டன. கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

ஆனைமலையாற்றுத் தண்ணீரைக் கீழ் நீராற்றிற்கும், அங்கிருந்து சோலையாற்றுக்கும் திருப்பி விட்டுப் பாசனத்திற்குப் பயன் படுத்தும் திட்டம் பற்றிய ஒப்பந்தம் ஏற்படுவதற்குக்கடிதப் போக்குவரத்தும், பேச்சு வார்த்தைகளும் நடைபெறவிருக்கின்றன. இதுபற்றிய கலந்துரையாடல் (Negotiation) கீழ் நீராறு அணை பற்றிய பேச்சு வார்த்தை முடிவு பெற்ற பிறகு, மேற்கொள்ளப்படும்.

### எதிர்கால நன்மைகள்

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டத்தினால் தற்பொழுது ஆண்டு தோறும் ஏறத்தாழ 1·5 இலட்சம் ஏக்கர் மட்டுமே பாசன வசதி பெற்று வருகிறது. நீராறு பள்ளத்தாக்கில் கட்டப் படவிருக்கும், ஆண்டு தோறும் 9,000 மில்லியன் கன அடி நீர் கொடுக்கக் கூடிய மேல் நீராறு நீர்த்தேக்கமும், 2 500 மில்லியன் கனஅடி நீர் வழங்கக்கூடிய கீழ் நீராறு நீர்த்தேக்கமும் கட்டி முடிக்கப்படுமானால், பரம்பிக் குளம்—ஆழியாறு திட்டம் ஏறத்தாழ முழுமை நிலைமையை அடைந்துவிடும். இத்திட்டத்தின் கீழ் வெட்டப்பட்டுள்ள கால்வாய்கள் திட்டப்பகுதி முழுவதும் 'நரம்புகளைப் போல்' பரவியுள்ளன. இவ்வாய்க்கால்களின் அடிப்பகுதியிலும், பக்கங்களிலும் தண்ணீர் கசிந்து வடிவதைத் தடுக்க, சிமெண்டுப் பலகைகளைக் கொண்டு தளம் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்க்கால்கள் 2·54 இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் அளிக்கக் கூடும். பல்லடம், தாராபுரம் வட்டங்களைச் சார்ந்த 95,000 ஏக்கர் வறண்ட நிலமும், பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை வட்டங்களைச் சார்ந்த 1,56,000 ஏக்கர் வறண்ட நிலமும் பாசன வசதி பெற்று விரைவில் வளம் பெறும்.

### பசுமைப்புரட்சி பரவுகிறது

இத்திட்டப் பகுதியில் உள்ள உழவர்கள் முன்பெல்லாம் மழையைப் பயன்படுத்தி நிலக்கடலை, பருத்தி, மற்றும் சிறுதானியப் பயிர்களையும், கிணறு உள்ள பகுதிகளில் நெல், மிளகாய், கரும்பு ஆகியவற்றையும் பயிரிட்டு வந்தனர். நடப்பிலுள்ள வேளாண்மை முறையைக் கருத்திற் கொண்டும், பரம்பிக் குளம்-ஆழியாறு திட்டத்தின் பயன் பலருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகவும், இத்திட்டப்பகுதியில் முக்கியமாகப் புன்செய்ப்பயிர்களுக்கே நீர்ப்பாசன வசதியளிக்கும் திட்டமாக இது அமைந்துள்ளது. தாழ்வான நிலங்களிலும், புன்செய்ப்பயிர் சாகுபடிசெய்ய இயலாத பகுதிகளிலும் மட்டுமே நன்செய்ப் பயிர் சாகுபடி செய்ய அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் பயனடையும் மொத்த நிலங்களில் 15 சத அளவில் மட்டுமே நன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 85 சத அளவு நிலங்களில் புன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்யவே அனுமதிக்கப் படுகிறது.

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டம் நிறைவேற்றப்பட்டதனால், பல்லாண்டுக் காலமாகப் பருவமழை இல்லாததால், பயிர் விளைவிக்க முடியாமல் பரிதவித்து வந்த பல்லடம், தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை வட்டங்களைச் சேர்ந்த உழவர் பெருமக்கள் தங்கள் நிலங்களுக்கு உறுதியான பாசன வசதியைப் பெற்றுள்ளனர். அதைப் பயன்படுத்தி நிலக்கடலை, பருத்தி, சிறுதானியங்கள் முதலிய இறைவைப் புன்செய்ப் பயிர்களைப் பயிரிட்டு வருகின்றனர். பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டக் கால்வாயில் தண்ணீர் விடப்பட்ட பிறகு, இத்திட்டப்பகுதியில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் (Water table) உயர்ந்துள்ளதால், அதைக் கொண்டு நெல், மிளகாய், கரும்பு, தென்னை ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

வேளாண்மை மறுநிதி கழகத்தின் (Agricultural Re-finance Corporation) உதவியுடன் பரம்பிக் குளம்—ஆழியாறு திட்டப்பகுதியில் உள்ள உழவர்களுக்கு, நிலச் சீர்திருத்தம் செய்யவும், விதைகள், இரசாயன உரங்கள், முதலியன வாங்கவும் கடனுதவி செய்யும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டம் கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படுத்தப் படுகிறது.

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்ட ஆயக்கட்டுப்பகுதி முறையான மேம்பாடு எய்த வேண்டும் என்பதற்காக, வேளாண்மை வருவாய், பொதுப்பணி, கூட்டுறவு முதலிய துறையினர் ஒருங்கிணைந்து செயல்படுவதை ஊக்குவிப்பதற்கு மாநிலஅளவில் ஒரு 'ஒருமைப்படுத்தும் குழு' (Co-ordination Board) திட்டப் பகுதி அளவில் திட்டத்தைப் பயனுக்குக் கொண்டுவரும் 'பயன்படுத்துக் குழு' (Project Utilisation Team) ஆகியவற்றைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. திட்டத்தைப் பயனுக்குக் கொண்டுவரும் குழுவில் உள்ள வேளாண்மைத்துறையினர் தகுந்த பொறுக்கு விதைகளைப் பயன்படுத்திப் பயிரிடுவது, இறைவைப் புன்செய்ப் பயிர்களுக்கு ஏற்ற பயிர்வகைகள், இரசாயன உரமிடும் முறை ஆகியவற்றைப் பற்றி நல்ல ஆராய்ச்சி செய்து, அதன் அடிப் படையில் உழவர் பெருமக்களுக்கு நவீன சாகுபடி முறைகளைக் கற்றுக் கொடுத்து வருகின்றனர்.

எனவே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தால், பரம்பரையாகப் புன்செய்ப் பயிர்களே பயிரிட்டு வந்தால் பகுதிகளில் அப்படிப் பயிரிட்ட புன்செய்ப் பயிர்களின் மகசூலும் வழக்கமாகப் பருவ மழை பொய்த்து வந்ததால் பாதிக்கப்பட்டு வந்த பகுதிகளில் இலாபகரமாக இறைவைப் புன்செய்ப் பயிர்களையோ அல்லது பணப் பயிர்களையோ (Cash crops) பயிரிடவும், சில இடங்களில் நெல், கரும்பு ஆகியவைகளைச் சாகுபடி செய்யவும் வழி பிறந்துள்ளது.

இத்திட்டத்தினால் ஆண்டு தோறும் பின்கண்ட அளவு அதிக மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரிசி—25,000 டன்.

சிறுதானியங்கள்— 40,000 டன்

பருத்தி—7,700 டன்

நிலக்கடலை—10,000 டன்.

### வேலைவாய்ப்பும் தொழிலாளர் நலமும்

இத்திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் தமிழ் நாடு அரசு, தங்குவதற்கான இட வசதி, மருத்துவ வசதி, பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான போக்குவரத்து வசதி ஆகியவை செய்து கொடுத்துள்ளது. தற்பொழுது ஏறத்தாழ 2,000 முதல் 4,000 தொழிலாலர்கள் இத்திட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

> **சிறந்த குடிநீர்**
>
> சுவைமிகு சிறுவாணியாற்றுத் தண்ணீர் உலகில் இரண்டாவது சிறந்த குடிநீர் என்ற புகழ் பெற்றது. புகழ் பெற்ற இச் சிறுவாணியாற்றுத் தண்ணீரை நீண்ட நாட்களாகவே கோவை நகர மக்களுக்கு வழங்கி வருவது கோவை நகராட்சி.

### சுற்றுலா வளர்கிறது

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டம் சுற்றுலா வளர்க்கும் திட்டமாகவும் அமைந்துள்ளது. அணைகளையும், நீர்த்தேக்கப்பகுதிகளைச் சார்ந்த இயற்கைஎழில்களையும் காணவரும் சுற்றுலாப் பயணிகளின் வசதியைமுன்னிட்டு பொள்ளாச்சி, ஆழியாறு, பரம்பிக்குளம், சோலையாறு, நீராறு திருமூர்த்தி ஆகிய இடங்களில் எல்லா வசதிகளுடனும் கூடிய ஓய்வு இல்லங்கள் (Rest Houses) அமைக்கப்பட்டுள்ளன. திருமூர்த்தி மலையின் அடிவாரத்தில் ஒரு ஓய்வு இல்லம் கட்டப் பட்டுள்ளது. திருமூர்த்தி மலையிலுள்ள நீர்வீழ்ச்சியும், பஞ்சலிங்கம் பகுதியும் மேம்படுத்தப் பட்டுள்ளன. இவை, திருமூர்த்தி மலையின் இயற்கை எழிலையும் நீர் வீழ்ச்சியின் அழகையும் காணவரும் சுற்றுலாப் பயணிகளையும், திருமூர்த்தி கோயிலுக்கு வரும் பக்தர்களையும் கவருவதாக அமைந்துள்ளன.

கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு மகிழ்வையும் அளிக்கும் இடங்களை ( Picnic Spots ) பரம்பிக் குளம்—ஆழியாறு திட்ட நீர்த் தேக்கப் பகுதிகளில் அமைத்து, சுற்றுலாவரும் பொதுமக்கள் இனிதே பொழுது போக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நீர்த் தேக்கங்களில் படகு ஓட்டி மகிழ்வதற்க்குத் தேவையான படகுகளையும், படகுத் துறைகளையும் அமைத்திட தமிழ் நாடரசு ஆவன செய்து வருகிறது.

### மீன்வளம் பெருகுகிறது

பல்வேறு நீர்த்தேக்கங்கள் வெவ்வேறு மட்டத்தில், ஒன்றுக் கொன்று வேறுபட்ட கொள்ளளவில் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை வட்டங்களில் வெவ்வேறு பகுதிகளில் கட்டப்பட்டுள்ளதால், மீனளத் துறையினர் அந்த நீர்த்தேக்கங்களில் மீன் வளர்க்கும் பணியைத் துவக்கியுள்ளனர், இதனால் மாநிலத்தின் மீன் உற்பத்தி கணிசமாக உயர்ந்து வருகிறது. ஆழியாறு, திருமூர்த்தி நீர்த் தேக்கங்கள், முன்பே மீன் வளத்தைப் பெருமளவு பெருக்கியுள்ளனர். சோலையாறு நீர்த்தேக்கமும் கீழ்நீராறு நீர்த்தேக்கமும் மீன்வளத்தை மேலும் பெருக்கிட உதவும் இத் திட்டங்களினால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 140 டன் மீன்அதிகம் உற்பத்தியாகும்என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

### மாதிரிக் குடியிருப்புகள்

பொள்ளாச்சி, வேட்டைக் காரன் புதூர், 'டாப்சிலிப்' சோலையாறு, சிங்கோனு, திருமூர்த்தி, உடுமலைப்பேட்டை பொங்கலூர், பல்லடம் ஆகிய இடங்களில் நல்ல அமைப்புடன் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக்கள் மாநிலத்தின் பொருளாதார மதிப்பை கூட்டுவனவாக அமைந்துள்ளன. இக் குடியிருப்புக்களை மாதிரிகுடியிருப்புகளாகவைத்துப் பரம்பிக்குளம்—ஆழியாறுதிட்டப் பகுதிகளில் உள்ள கிராமங்களை முன்னேற்றலாம்.

### திட்டச் செலவு

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் முழு அளவில் முடிக்கப் படுவதற்கு இன்னும் வேலை துவக்கப்படாமல் உள்ள கீழ் நீராறு அணையின் செலவைச் சேர்க்காமல் ஏறத்தாழ 68 கோடி ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பெய்யெனப் பெய்யும் மழை

பொள்ளாச்சி, பல்லடம், தாராபுரம், உடுமலைப் பேட்டை ஆகிய வட்டங்கள் வறண்ட பாலைவனமாக மாறிவிடுமோ ? என்று பயந்து கொண்டிருந்த மக்களுக்கு, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் 'பெய்யெனப் பெய்யும் மழையாக' அமைந்துள்ளது என்றால் மிகையல்ல!

பல்வேறு வகையில் பயன் தரும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தை விரைந்து முடிக்க அயராது உழைத்துவரும் தமிழ் நாடு அரசும் அதற்குத் துணையாக இருந்து வரும் கேரள அரசும் கோவை மாவட்ட மக்களின் நினைவில் என்றும் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.

மாநிலங்களுக்கு இடையே தேசிய ஒருமைப் பாட்டை ( National Integration ) வளர்க்கும் திட்டமாகப் பரம்பிக் குளம்-ஆழியாறு திட்டம் திகழ்கிறது.



# கோவை மாவட்டத்தில் அறநிலையத்துறையின் ஆக்கப் பணிகள்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
**மு. கண்ணப்பன்**

அறநிலையத்துறை என்ருல் ''கடவுள் வழிபாடு'' மட்டுந்தான் என்ற நிலைமாற்றி, இத்துறையின் மூலம் இன்று நாம் பல்வேறு சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளை நிறைவேற்றி வருகின்ருேம்.

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினுயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள்யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்''

என்ருர் பாரதி. இந்த வகையில் தமிழகத்தில் இன்று ஆலயங்கள் மூலம் வரும் வருமானத்தில் பல முனைத் திட்டங்கள் பாங்குற நடைபெற்று வருகின்றன. கல்விப்பணி வளர்ச்சியில் அறநிலையத்துறை மூலம் இன்று தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் கல்விக் கூடங்கள் நிறுவி, ஏழைகள் இலவசமாகக் கண்ணெனும் கல்வி பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் அதிக வருமானம் வரும் பழனிக் கோயில் நிதியில் இருந்து ''பழனியாண்டவர் கலைக் கல்லூரி'' தொடங்கப்பட்டு ஏழை மாணவர்களுக்கு கல்வி வழங்கப்படுகிறது. பூம்புகாரில் 'கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரி'' ஒன்றும் செம்மையுற நடைபெற்று வருகின்றது. ஆரம்பப் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரை கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. அந்த வகையில் கோவை மாவட்டத்தில் மருதமலை முருகன் கோயில் நிதியிலிருந்து உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டுச் சிறப்புற நடைபெற்று வருகின்றது. அதே போன்று வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் நிதியிலிருந்தும் ஒரு உயர்நிலைப் பள்ளி நடைபெற்று வருகின்றது. இவ்விரு பள்ளிகளிலும் சுமார் 500 ஏழை மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களைப் பொறுத்த மட்டில் 'எழுத்தறிவித்தவன் இறைவனுகும்' என்பது எக்காலும் உண்மையாகும். வரும் 1973—74-ஆம் கல்வி ஆண்டில் 'பண்ணுரி' என்ற இடத்தில் (சத்திய மங்கலம் அருகில்) சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் உயர்நிலைப் பள்ளி அமைந்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலில், தாய்-தந்தையற்ற 30 திக்கற்ற மாணவர்களுக்கு கல்வி அளிக்கப்பட்டு வருவதுடன், உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. காரமடையில் கோயில் வருவாயிலிருந்து, 'சிசு பராமரிப்பு நிலையம்' ஒன்று தொடங்கப்பட்டு 40 இளஞ்சிருர்கள் இந்த அரசு பராமரிப்பில் வளர்ந்து வருகின்ருர்கள். அத்துடன், கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுத் தாய் தந்தையரை இழந்த 5 குழந்தைகளை அரசு தத்து எடுத்துக் கொள்ள, அறநிலையத் துறை அவர்களுக்குத் தாயாக நின்று தக்கன செய்து வருகின்றன.

திருமண முறைகளில் இருந்த சிக்கலை நீக்கிச் சட்டம் செய்த பின்னர், கோயில்களில் திருமணங்கள் நடப்பது மிகவும் உயர்ந்திருக்கின்றது. திருமணங்கள் செய்ய இடவசதி, பொருள் வசதியற்ருேர் குறைந்த செலவில் கோயில்களுக்குச் சென்று முடித்துக் கொள்வது பெரிய வழக்கமாக இருந்து வருகின்றது. இத்தகைய திருமணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைக் கணக்கில் கொண்டு, கோயில் நிதியிலிருந்து 'திருமண மண்டபங்கள்' கட்டப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், தற்பொழுது கீழ்க்கண்ட 5 கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

| | இலட்சம் ரூபாய். |
|---|---|
| 1. பண்ணுரி மாரியம்மன் கோயில். | 1·80 |
| 2. வெங்கம்பூர் வரதராசப் பெருமாள் கோயில். | 1·75 |
| 3. பெரிய களந்தை ஆதிகேஸ்வரர் திருக்கோயில். | 0·40 |
| 4. கிணத்துக் கடவு, பொன்மலை வேலாயுதசாமி கோயில். | 1·40 |
| 5. காட்டூர் விநாயகர் — சுப்ரமணியர் — மாரியம்மன் கோயில். | 0·60 |

வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் அருகே ரூபாய் 3·75 இலட்சத்தில் ஒரு திருமண மண்டபம் கட்டப்படும்.

கோயில் நிதியிலிருந்து, ஏழை மக்களுக்கு இலவசமாகத் திருமணங்கள் செய்து வைப்பது என்ற கொள்கைக்கு ஏற்ப, கோவை மாவட்டத்தில் 300 திருமணங்கள் நடந்தேற இருக்கின்றன.



சிறிய, பெரிய, நடுத்தரக் கோயில்கள் தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கில் இருக்க கோவை மாவட்டத்தில் 1967-ம் ஆண்டில் அறநிலையத் துறையின் கீழ் 921 கோயில்கள் இருந்தன. ஆனல், இன்று 1,293 கோயில்கள் அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளன. 1973—74-ஆம் ஆண்டு இறுதிக்குள் 1,528 கோயில்களை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வரப்படும். வருவாயைப் பொறுத்த அளவில் 1967-ல் ரூ. 18,67,450 என்றிருந்த வருவாய் 1972-ல் ரூ. 29,33,620 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 1,528 கோயில்களை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வருவதன் மூலம் கோவை மாவட்ட அறநிலைய வருமானம் மேலும் ரூபாய் 5 இலட்சம் அளவுக்கு உயரும்.

## தமிழில் அர்ச்சனை

கோயில்களில் தமிழிலேயே அர்ச்சனை செய்திட வழி வகுத்து, பலரும் போற்றும் வண்ணம் சிறப்புற நடந்தேறி வருகின்றது. மேலும், அர்ச்சகர்களாக யார் வேண்டுமானுலும் வரலாம் என்ற சமுதாயச் சீர்திருத்தச் சட்டம் கொணர்ந்ததால், கோயில்களில் சாதி பேதம் நீக்கி, சமதர்மச் சமுதாயம் உருவாக வழியேற்பட்டுள்ளது. ஆண்டவன் முன்னுல் அனைவரும் சமம் என்ற தத்துவம் உண்மையாகிறது. கோயில் நிருவாகக் குழுவில் ஒருவர் கட்டாயமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற புரட்சிகரமான மாற்றத்தைச் சட்டம் மூலம் நம்முடைய அரசு இந்தியாவிலேயே முதன் முதலில் ஏற்படுத்தியுள்ளது.

## வருமானம்

பண்ணுரி மாரியம்மன் திருக்கோயில்—

| ஆண்டில். | | ரூபாய். |
|---|---|---|
| 1967 | .. | 1,62,286·44 |
| 1972 | .. | 2,99,376·54 |

வாழைத் தோட்டத்து அய்யன் கோயில், அய்யம்பாளையம்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 1,47,922·57 |
| 1972 | .. | 1,92,812·35 |

வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், ஊஞ்சலூர், ஈரோடு

| | | |
|---|---|---|
| 1967 | .. | 47,171·00 |
| 1972 | .. | 1,87,549·00 |

அருள்மிகு தண்டுமாரியம்மன் கோயில், கோயம்புத்தூர்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 18,862·00 |
| 1972 | .. | 46,013·70 |

313

அருள்மிகு அவிஞசிலிங்கேஸ்வரர் கோவில், அவிஞசி.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 15,001·00 |
| 1972 | .. | 28,515·00 |

சுப்ரமணியசாமி தேவஸ்தானம், திருப்பூர்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 15,028·80 |
| 1972 | .. | 69,781·47 |

மகுடேஸ்வரர் வீர நாராயணப் பெருமாள் தேவஸ்தானம் கொடுமுடி, ஈரோடு.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 71,902·01 |
| 1972 | .. | 1,29,631·83 |

கோனியம்மன் தேவஸ்தானம், கோயம்புத்தூர்.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 54,080·44 |
| 1972 | .. | 61,580·15 |

சங்கமேஸ்வரர் ஸ்வாமி தேவஸ்தானம், பவானி.

| | | |
|---|---|---|
| 1967 | .. | 30,902·28 |
| 1972 | .. | 62,210·09 |

கோவை மாவட்டத்தில் ஆயிரக் கணக்கில் கோயில்கள் இருந்தாலும் பெருவாரியான மக்களின் எண்ணத்தில் இருப்பவைகளாகவும், பெரியவைகளாகவும் உள்ளவை (1) மருதமலை முருகன் கோயில், (2) பேரூர் கோயில் (3) சிவன்மலை சுப்ரமணியசுவாமிதேவஸ்தானம் (4) வாழைத் தோட்டத்து அய்யன் கோயில், (5) அவிஞசி அவிநாசிலிங்கேஸ்வரர் கோவில், (6) கோவை தண்டுமாரியம்மன் கோயில் (7) கோவை கோனியம்மன் கோயில், (8) பண்ணுரி மாரியம்மன் கோயில், (9) வெங்கம்பூர் வரதராஜ பெருமாள் கோயில், (10) பவானி சங்கமேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம் (11) கொடுமுடி வீரநாராயணப் பெருமாள் கோயில் ஆகிய கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவையாக விளங்குகின்றன. இக்கோயில்கள் வழிபட்டுத் தலங்களாக மட்டுமல்லாது, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகவும் திகழ்கின்றன. சுற்றுலாக் கண்ணேட்டத்தில், மருதமலை, பேரூர், கொடுமுடி கோயில்கள் பெருமை பெற்று விளங்குகின்றன. பேரூர் கோயிலில் உள்ள சிற்பங்கள் அயல்நாட்டினரைப் பெரிதும் கவருகின்றன.

**கோவை மாவட்டத்தில் முதல் நிலை நல்வாழ்வு நிலையங்கள் உள்ள ஊர்கள்.**

| | |
|---|---|
| அவிஞசி. | குன்னத்தூர். |
| பெரியநாயக்கன்பாளையம். | தாளவாடி. |
| பொன்னுபுரம். | சிறுவலூர். |
| தாயம்பாளையம். | புஞ்சை புளியம்பட்டி. |
| முத்தூர். | எரிசனம்பட்டி. |
| தூக்க நாயக்கன்பாளையம். | கணியூர். |
| உக்கரம். | குடிமங்கலம். |
| நல்லட்டிபாளையம். | மூலனூர். |
| சந்திராபுரம். | புலுவப்பட்டி. |
| எ. வடுக பாளையம். | நம்பியூர். |
| சோமனூர். | அத்தாணி. |
| காரமடை. | பெருமாநல்லூர். |
| அன்னூர். | சாவடிப்பாளையம். |
| கவுந்தப்பாடி. | நெகமம். |
| குருவரெட்டியூர். | கோலார்ப்பட்டி. |
| கண்டாக்காமுத்தூர். | செம்மிப்பாளையம். |
| சர்க்கார் சாமக்குளம். | பெரியபோது. |
| அரிசிப்பாளையம். | வால்பாறை. |
| சித்தோடு. | கணபதிப்பாளையம். |
| சிவகிரி. | காசிப்பாளையம். |
| மொடக்குறிச்சி. | கொளாநல்லி. |
| பெருந்துறை. | வெள்ளக்கோவில் |
| சென்னிமலை. | |

16—3—3எ

# பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

**பண்ணாரி அஞ்சல், சத்தியமங்கலம் வழி :**

**கோபி வட்டம், கோவை மாவட்டம்.**

(தொலைபேசி எண். சத்தி : 89)

---

பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் கோவை மாவட்டத்திலேயே புகழ்மிக்க திருத்தலங்களுள் ஒன்றாகும். இத் திருத்தலம் கோவை மாவட்டம் சத்திய மங்கலத்திலிருந்து மைசூர்-கொள்ளேகாலம் நெடுஞ்சாலையில் 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

தீராத நோய் தீர்த்தருளும் உமையம்மை, அன்னை, பராசக்தி மாரியம்மனாக இத் திருத்தலத்தில் சுயம்பு வடிவில் எழுந்தருளப் பெற்றுள்ளனள். அண்டினவருக்கும் அடியார்களுக்கும் அருளை அள்ளி அள்ளி வழங்குவதோடு எல்லைத் தெய்வமாக இருந்து இவ்வழியே செல்லும் பாதசாரிகளுக்கும், பேருந்துகள் மற்றும் இதர வாகனாதிகளுக்கும் பாதுகாப்பாக அமர்ந்துள்ளனள். மலைமீது போவோரும் அங்கிருந்து கீழே வருவோரும் இத் திருத்தலத்தில் தங்கள் வாகனாதிகளை நிறுத்திச் சாதி, மத வேறுபாடின்றி அம்மனைத் தரிசனம் செய்து காணிக்கை வகையறுக்களைச் செலுத்திய பின்னரே தங்கள் பிரயாணங்களைத் தொடர்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனித் திங்களில் நடைபெறும் குண்டம் பெருந் திருவிழா மிக்கச் சிறப்பானதாகும். குண்டம் திருவிழாவின் போது இத்தலத்தில் சுமார் 3 இலட்சம் பக்தர்கள் கூடுவார்கள். இத் திருக்கோயில் ஆதரவில் ஓர் இலவசச் சித்த மருந்தகம் துவக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தவிர, ஒரு திருக்கல்யாண மண்டபம் கட்டும்பணியும், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி ஒன்றும் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இத் திருத்தலத்திற்கு ஒருமுறை வருகைதந்து அம்மன் அருளுக்குப் பாத்திரர்களாகும்படி பக்தர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு :—இத் திருத்தல வரலாறு மற்றும் அம்மன் திருவுருவப் படங்கள் விலைக்குக் கிடைக்கும்.

சி. பி. வீரப்பகவுடர்,
தலைவர், அறங்காவலர் குழு.

சி. டி. வெங்கட்ராம நாயுடு,
என். பழனியப்ப கவுடர்,
ஊ. இராமசாமி கவுண்டர்,
வெ. வீரப்ப கவுடர்,
சி. ஆர். தங்கவேல்,
பரம்பரை அறங்காவலர்கள்.

எல். வெங்கட்ராமன், பி. ஏ.,
செயல் அலுவலர்.

# கால்நடைகளின் நலம் காத்தோம்!



எப்பொழுதும் சுறுசுறுப்பாக உழைத்து வரும் கோவை மாவட்ட மக்கள் வளமுடன் திகழ, நல்ல ஊட்டச் சத்துள்ள உணவு மிகவும் அவசியம். குறிப்பாகப் பாலூட்டும் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும், வளரும் இளவட்டங்களுக்கும் சத்துணவு மிகவும் அவசியம். பால், முட்டை, இறைச்சி போன்றவற்றில் ஊட்டச்சத்து அதிக மாக உள்ளதால் அவை தட்டுப்பாடின்றிக் கோவை மாவட்ட மக்களுக்குக் கிடைக்கத் தமிழ்நாடு அரசின் கால்நடைத்துறை பெரும் முயற்சி செய்து வருகிறது: கால்நடைகளின் நலம் காத்து, அதன் மூலம் மக்களின் நலம் பேணுவதற் காகத் தமிழ்நாடு அரசு, கோவை மாவட்டத் தில் இயங்கி வந்த கால்நடை பராமரிப்புத் துறை யினை 1—1—1970 அன்று சீரமைப்புச் செய்தது.

கால்நடைப் பராமரிப்புத்துறை சீரமைப்புச் செய்யப்படுவதற்கு முன்பு, கோவை மாவட்டத் தில் கோவை, ஈரோடு ஆகிய 2 இடங்களில் மாவட்டக் கால்நடைப் பராமரிப்பு அலுவலர்க ளாலும், ஈரோடு, காங்கேயம், தாராபுரம் முதலிய இடங்களில் கேந்திர கிராமத் திட்ட ஆய்வாளர் களாலும், கோவையில் தீவிரக் கால்நடைத் திட்டத்தின் கீழ்த் திட்ட அலுவலராலும், கோழி வளர்ப்பு தொடர்பாகக் கோவையில் மாவட்டக் கோழி வளர்ப்பு அலுவலராலும், மாவட்டக் கோழி விற்பனை அலுவலராலும், கால் நடைகளின் நலம் பேணும் பணிகள் தனித்தனி யாகச் செய்யப்பட்டு வந்தன.

தற்போது கால்நடைப் பராமரிப்புத் துறை யின் சீரமைப்புக் காரணமாக 1—1—1970 முதல் கோவை மண்டலப் பகுதி கோவை, சேலம், நீலகிரி ஆகிய 3 மாவட்டத்தையும் ஒருங்கே இணைத்து ஓர் மண்டலத் துணை இயக்குநரது நேரடிப் பார்வையின் கீழ், கால்நடைத்துறை செயலாற்றி வருகிறது.

மண்டலத் துணை இயக்குநரின் கீழ்த் தனி அலுவலர் (நோய் ஆராய்ச்சி), தனி அலுவலர் (கால்நடைப் பராமரிப்பு), தனி அலுவலர் (கோழி யின [illegible]), மற்றும் 13 உதவி இயக்குநர் களும், ஒரு கண்காணிப்பாளரும் கால்நடைப் பராமரிப்புத் துறையின் பணிகளில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள்.

கோவை மாவட்டத்தில் கோவை, பொள்ளாச்சி அரசூர், அவினாசி, கோபி, ஈரோடு, தாரா புரம், உடுமலைப்பேட்டை ஆகிய வட்டங்களில் ஒவ்வொரு உதவி இயக்குநர் நியமிக்கப்பட்டு வட்ட அளவில் கால்நடை பராமரிப்புக்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு உதவி இயக்குநர் கண்காணிப்பின் கீழும் கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகங்கள், கேந்திர கிராம நிலை யங்கள், செயற்கை முறை இனவிருத்தி நிலையங் கள், கிளை நிலையங்கள் ஆகியவை கால்நடைப் பராமரிப்புப் பணிகளைக் கவனித்து வருகின்றன. கோவை மாவட்டக் கிராமங்களில் உள்ள உழவர் பெருங்குடி மக்கள் கால்நடைப் பராமரிப்புத் தொடர்பான வசதிகளைத் தடையின்றி பெற்றுப் பயன்பெறத் தக்க வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடை உதவி மருத்துவர் களும், அவருக்கு உதவியாகக் கால்நடை விரி வாக்க அலுவலர்களும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

**கால்நடைகள்**

| | |
|---|---|
| கால்நடை இனம் | 4,78,262 |
| ஆட்டினம் | 3,71,630 |
| கோழியினம் | 7,99,970 |

கோவை மாவட்டத்தின் கால்நடை பராமரிப்புக் காகக் கீழ்க்கண்ட நிலையங்கள்பணியாற்றுகின்றன—

| | |
|---|---|
| கால்நடை மருத்துவமனை | 3 |
| கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 5 |
| கால்நடை மருத்துவமனைகள் | 23 |
| கால்நடை மருத்துவ மனைகள் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 35 |
| கால்நடை கிளை நிலையங்கள் | 201 |
| நகராட்சியில் உள்ள கிளை நிலையங்கள். | 10 |
| பசு வளர்ப்பு மடங்கள் (ஆநிரை காப்பகங்கள்). | 3 |
| ஆய்வுக் கூடம் | 1 |
| கோழி விரிவினை நிலையங்கள் | 5 |
| தீவிரக்கோழி 'வளர்ப்புச்' சங்கம் (ஈரோடு). | 1 |
| தீவனக் கலவை நிலையம் (அரசூர்). | 1 |

தற்பொழுது பின்கண்ட கால்நடை மேம் பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள்.

கேந்திர கிராமத் திட்டம், செயற்கைமுறை இனவிருத்தித் திட்டம்.

பசு மடங்கள் அபிவிருத்தித் திட்டங்கள்.

வெக்கை நோய்த் தடுப்புத் திட்டம்.

கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் மூலம் 1967–68 முதல் 31—12—1972 வரை செய்யப்பட்டபணிகள்கீழேகொடுக்கப்பட்டுள்ளன:

**சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகள்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 1,96,354 |
| 1968–69 .. .. | 2,14,381 |
| 1969–70 .. .. | 1,97,507 |
| 1970–71 .. .. | 3,17,589 |
| 1971–72 .. .. | 3,74,889 |
| 1972–73 .. .. | 3,07,372 |

**தடுப்பு ஊசி போடப்பட்ட விவரம்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 5,96,689 |
| 1968–69 .. .. | 9,01,753 |
| 1969–70 .. .. | 7,19,025 |
| 1970–71 .. .. | 12,64,549 |
| 1971–72 .. .. | 13,39,053 |
| 1972–73 .. .. | 13,81,768 |

கோவை மாவட்டத்தில் செயலாற்றி வரும் கேந்திர கிராம நிலையங்கள் ( Key Village Centres) மற்றும் செயற்கை முறை இன விருத்தி நிலையங்கள் (Artificial Insemination Centres) மூலம் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டுள்ளன.



**காயடிக்கப்பட்ட கால்நடைகள்**

| | |
|---|---|
| 1967–68 .. .. | 56,913 |
| 1968–69 .. .. | 53,917 |
| 1969–70 .. .. | 27,069 |
| 1970–71 .. .. | 30,586 |
| 1971–72 .. .. | 33,747 |
| 1972–73 .. .. | 31,077 |

கடந்த 5¾ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் உள்ள கால்நடைகள் தொண்டை அடைப்பான், சப்பை நோய், வெக்கை நோய், வெறிநாய்க்கடி, கோழிக் கழிச்சல், மற்றும் இதர நோய்களால் தாக்கப்படாமல் இருப்பதற்காகக் கீழ்க்கண்ட அளவு தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன.

**பராமரிக்கப்பட்ட பொலிகாளைகள்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 138 |
| 1968–69 .. .. | 134 |
| 1969–70 .. .. | 162 |
| 1970–71 .. .. | 163 |
| 1971–72 .. .. | 167 |
| 1972–73 .. .. | 155 |



**செயற்கை முறையில் சேகரிக்கப்பட்ட விந்தின் அளவு**

| ஆண்டு | அளவு (சி.சி.) |
|---|---|
| 1967–68 .. .. | 6,810 |
| 1968–69 .. .. | 7,032 |
| 1969–70 .. .. | 9,317 |
| 1970–71 .. .. | 10,854 |
| 1971–72 .. .. | 10,840 |
| 1972–73 .. .. | 9,107 |

**செயற்கை முறையில் கருவூட்டப்பெற்ற அளவு**

| | |
|---|---|
| 1967–68 .. .. | 1,33,176 |
| 1968–69 .. .. | 1,30,636 |
| 1969–70 .. .. | 2,23,262 |
| 1970–71 .. .. | 2,60,788 |
| 1971–72 .. .. | 2,28,994 |
| 1972–73 .. .. | 2,12,026 |

**செயற்கை முறையில் கருவூட்டப்பெற்றதால் பிறந்த கன்றுகள்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 30,295 |
| 1968–69 .. .. | 40,413 |
| 1969–70 .. .. | 62,801 |
| 1970–71 .. .. | 44,844 |
| 1971–72 .. .. | 48,023 |
| 1972–73 .. .. | 47,587 |

இனவிருத்தி செய்வதற்கு உயர் இனங்களான ஜெர்சி, சிந்திக் காளைகள் பயன்படுத்தப்படுகின்றன.

நோயினால் பாதிக்கப்படாத நல்ல ஆடுகளைத் தேர்ந்தெடுத்து அவைகளைத் தூய்மையான முறையில் அறுத்து, இறைச்சியை வழங்குவதற்காகக் கால்நடைப் பராமரிப்புதுறை பின்கண்ட அளவு ஆடு அறுப்பு நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**ஆடு அறுப்பு நிலையம்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 15 |
| 1968–69 .. .. | 19 |
| 1969–70 .. .. | 21 |
| 1970–71 .. .. | 26 |
| 1971–72 .. .. | 27 |
| 1972–73 .. .. | 27 |

ஆடு அறுப்பு நிலையங்கள் கால்நடை உதவி மருத்துவர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் கடந்த 5¾ ஆண்டுகளில் கீழ்க் கண்ட அளவு ஆடுகள் அறுக்கப்பட்டு, கோவை மாவட்ட மக்களுக்கு இறைச்சியாக வழங்கப்பட்டுள்ளது.

**அறுக்கப்பட்ட ஆடுகள்**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 97,013 |
| 1968–69 .. .. | 1,50,660 |
| 1969–70 .. .. | 2,86,939 |
| 1970–71 .. .. | 3,13,924 |
| 1971–72 .. .. | 3,70,342 |
| 1972–73 .. .. | 3,49,932 |

**ஆநிரை காப்பகங்கள்**

கோவை மாவட்டத்தின் கீழ்க்கண்ட 3 ஆநிரை காப்பகங்கள் உள்ளன.

1. இராமலிங்கம் காசநோய் நிலையம், பெருந்துறை.

2. கௌமார மடாலயம், பேரூர்.

3. சாந்தலிங்க சுவாமிகள் மடம், பேரூர்.

**வெக்கை நோய்**

வெக்கை நோய் என்ற கொடிய நோயினை அறவே தடுக்கும் பொருட்டுத் தமிழக—மைசூர் எல்லையில் வரக்கூடிய கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பு ஊசி போட ஏதுவாகத் திம்மத்தில் ஒரு கால்நடை வெக்கை நோய்த் தடுப்புச் சாவடியும், கோபிச் செட்டிப்பாளையத்தில் வெக்கை நோய்த் தடுப்பு விழிப்புக் குழுவினரும் சிறப்பாகப் பணியாற்றிக் கால்நடைச் செல்வங்களை வெக்கை நோயினின்றும் காப்பாற்றி வருகின்றனர். கடந்த 2 ஆண்டுகளில் இவ்வகையில் தடுப்பு ஊசி போடப்பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1970–71 | 1971–72 |
|---|---|---|
| கோபி வெக்கை நோய்த் தடுப்புக் குழுவினர் போட்ட வெக்கை நோய்த் தடுப்பூசியின் எண்ணிக்கை. | 54,314 | 1,67,857 |
| வெக்கை நோய்த் தடுப்புச் சாவடியில் போடப்பட்ட வெக்கை நோய்த் தடுப்பூசியின் எண்ணிக்கை. | 15,440 | 1,38,486 |





## கோழியின மேம்பாடு

கோவை மாவட்டத்தில் கோழியினங்களை மேம்படுத்துவதற்காகக் கீழ்க்கண்ட நிலையங்களும், திட்டங்களும், சங்கங்களும் பாடுபட்டு வருகின்றன.

1. கோழியின மேம்பாட்டு நிலையங்கள்.

2. தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டம்.

3. கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், மற்றும் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சம்மேளனம்.

4. சத்துணவுத் திட்டம் (கிராமப் புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம்).

5. உலக உணவுத் திட்டம் (சத்துள்ள கோழியின் உற்பத்தியும், விநியோகமும்).

கோழியின மேம்பாட்டு நிலையங்கள் மூலமாகவும், தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டப் பணிகள் மூலமாகவும், 31—12—1972 வரை கீழ்க்கண்ட முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

### உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 2,64,333 |
| 1968–69 | .. | .. | 2,55,185 |
| 1969–70 | .. | .. | 2,95,071 |
| 1970–71 | .. | .. | 2,91,601 |
| 1971–72 | .. | .. | 5,48,370 |
| 1972–73 | .. | .. | 4,99,546 |

### அடைக்கு விற்கப்பட்ட முட்டைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 8,088 |
| 1968–69 | .. | .. | 7,207 |
| 1969–70 | .. | .. | 4,117 |
| 1970–71 | .. | .. | 19,102 |
| 1971–72 | .. | .. | 23,053 |
| 1972–73 | .. | .. | 13,870 |

### உண்பதற்காக விற்கப்பட்ட முட்டைகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 2,08,548 |
| 1968–69 | .. | .. | 1,41,947 |
| 1969–70 | .. | .. | 23,898 |
| 1970–71 | .. | .. | 1,36,094 |
| 1971–72 | .. | .. | 1,75,852 |
| 1972–73 | .. | .. | 3,03,495 |

### வளர்ப்பதற்காக விற்கப்பட்ட கோழிகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 5,615 |
| 1968–69 | .. | .. | 7,401 |
| 1969–70 | .. | .. | 10,120 |
| 1970–71 | .. | .. | 14,189 |
| 1971–72 | .. | .. | 21,116 |
| 1972–73 | .. | .. | 13,925 |

தற்பொழுது கோவை மாவட்டத்தில் 404 தனியார் கோழிப் பண்ணைகள் உள்ளன. கால்நடைப் பராமரிப்புத்துறை உயர்ரக முட்டைகளை அடைக்காக விற்பதுடன், கோழிக் குஞ்சுகளை விற்பனை செய்வதிலும் கடந்த 3 ஆண்டுகளில் தீவிரக் கவனம் செலுத்தி வருவதால் பின் கண்டவாறு கோழிக் குஞ்சுகளின் விற்பனை பெருகியுள்ளது.

### விற்பனை செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள்

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1970–71 | .. | .. | 22,418 |
| 1971–72 | .. | .. | 1,19,243 |
| 1972–73 | (31-12-72) | | 83,324 |

கோவை மாவட்டத்தில் 19 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டுக் கூட்டுறவு முறையில் கோழிகளைச் சிறப்பாக உற்பத்தி செய்து பயன்பெற்று வருகின்றன.

உலக உணவுத் திட்டம் :—இத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பவர்களுக்குச் சரிவிகித கோழித் தீவனம் குறைந்த விலையில் வழங்கும் பொருட்டு, அரசூரில் ஓர் தீவனக் கலப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட சரிவிகிதக் கோழித் தீவனத்தின் அளவு பின்கண்ட அளவில் அமைந்துள்ளது.

| ஆண்டு | | | வழங்கப்பட்ட தீவன அளவு (கிலோ கிராம்) |
|---|---|---|---|
| 1968–69 | .. | .. | 6,211 |
| 1969–70 | .. | .. | 39,982 |
| 1970–71 | .. | .. | 93,321 |
| 1971–72 | .. | .. | 1,89,186 |
| 1972–73 | .. | .. | 1,96,125 |

கோவை மாவட்டத்தில் 2 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டுச் சிறப்பாகக் கூட்டுறவு முறையில் ஆட்டினத்தை உற்பத்தி செய்து பயன் பெற்று வருகின்றன.

தீவன அபிவிருத்தியை அதிகரிக்க ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடைத் திட்டத்தின்கீழ்த் தீவன விதைகள், தீவன நாற்றுகள் வழங்கப்பட்டு தீவனப் பயிர்ப் பாத்திகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளையினச் சீமைப் பன்றிகளைக் குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கி, பன்றி உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. பன்றி இறைச்சியை அதிகமாக உட்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதற்காக முக்கிய நகரங்களில் 'வெண்பன்றி இறைச்சிக் கழகம்' தோற்றுவிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

நவீன முறையில் கால்நடைகளைப் பேணுதல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் போன்றவை திரைப்படங்கள் வாயிலாகவும், துண்டு வெளியீடுகள் மூலமாகவும் விளக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கால்நடைப் பராமரிப்புத் துறை கோவை மாவட்ட உழவர் பெருங்குடி மக்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் சிறப்பாகச் செய்து வருகிறது.







# வரலாறு

நா. அமிர்தலிங்கம்

தங்கத் தமிழகத்தின் தொன்மையான பகுதிகளில் ஒன்று இன்றையக் கோவை மாவட்டத்தினை உள்ளடக்கிய கொங்கு நாடாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே அதாவது கற்காலம், உலோக காலம் ஆகிய காலங்களிலேயே இப்பகுதியில் ஆதிகுடிகள் பலர் வாழ்ந்ததற்கான தொல் பொருள் சாதனங்கள் பல கிடைத்துள்ளன. பழங்குடி மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள், உலோகக் கருவிகள், நடுகற்கள், கல்லறைக் கற்கள் மற்றும் உரோம, யவன நாட்டு நாணயங்கள் பலவும் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கிடைத்துள்ளன. அவைகளில் குறிப்பிடத் தகுந்த சில ஊர்கள் நல்லம்பட்டி, வெள்ளலூர், இருகூர், சாவடிப்பாளையம், நட்டுக்கல் பாளையம், பூண்டி, பொள்ளாச்சி ஆகியவையாகும்.

## சங்க காலம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்இப்பகுதியில் குரும்பர், எயினர், வேடர் போன்ற பழங்குடி மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. சங்க காலத்தில் மாலவர், கோசர், கொங்கர் எனப்படும் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய முடி மன்னர்களில் யாராவது ஒரு மன்னனின் ஆட்சியின் கீழ் இப்பகுதி உட்பட்டும், உட்படாமலும் அவ்வப் போது இருந்து வந்தது. இப்பகுதியில் பெரும்பாலும் வேளிர் எனப்படும் குறுநிலமன்னர்களே ஆட்சி புரிந்து வந்தனர். அதியமான், குமணன் போன்றோர் இவ்வகையினர்.

## சேரர் ஆட்சி

சேரப் பெருமன்னன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் கொங்கு நாடு அவனது ஆட்சிக்குட்பட்டிருந்ததாகத் தெரிகிறது. அவன் சோழ, பாண்டிய மன்னர்களையும், ஐந்துவேளிர் மன்னர்களையும் போரில் வென்றதாக இலக்கியக் குறிப்பு உள்ளது. சேரன் செங்குட்டுவன் காலத்தில் கொங்கு நாடு சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. கொங்குநாட்டை ஆண்ட சேரர்களுக்குக் கொங்குச் சேரர்கள் என்று பெயர். இவர்களில் புகழ் மிக்கவன் கருரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட யானைகண் சேய்மாந்தரம்சேரல் என்பான். தலையாலம் கானம் போரில் இவன் பாண்டியன் நெடுஞ்செழியனால் தோற்கடிக்கப்பட்டான். பின்னர் கொங்குப் பகுதி பல வேளிர் மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. அதில் குறிப்பிடத் தகுந்தவர்கள் பொதிகையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட வேள் ஆயும், அவன் மகன் திதியனும் ஆவர். அதியன் என்பான் இன்றையக் கோவைமாவட்டத்தின் தெற்குப் பகுதியை ஆட்சி செய்த வேளிர் மன்னன். ஆய்ஆந்திரன், பாலக்காட்டுக் கணவாய் முதல் குமரி வரை ஆண்டவன் வேள்பேகன். வேள் பாரி முதலானோர் இப்பகுதியில் ஆண்ட இதர வேளிர் மன்னர்களாவார்கள்.

## ராஷ்டிரகூடர் ஆட்சி

சேரர் ஆட்சி முடிவுக்கு வந்ததும் ராஷ்டிரகூடர்களில் ஒரு பகுதியினர் கொங்கு நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர். அவர்கள் கி.பி. மூன்று நான்காம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தனர். அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் கன்னர தேவா, திரு விக்கிரமதேவா ஆகியோராவர். இவர்கள் காலத்தில் சமண சமயம் கொங்கு நாட்டில் உயர்வு பெற்றிருந்தது.

## கங்கர் ஆட்சி

ராஷ்டிரகூடர் ஆட்சிக்குப் பிறகு கர்நாடகத்தைச் சேர்ந்த கங்க மன்னர்கள் வட கொங்கு நாட்டைக் கைப்பற்றினர். இவர்களில் புகழ்மிக்க மன்னவன் கொங்கணிவர்மன் என்பவன் ஆவான். இவன் ஸ்கந்தபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 405 முதல் 450 வரை ஆட்சி செய்தான். இந்தக் கங்க மன்னர்களின் ஆட்சியை வரிசைப்படுத்திக் 'கொங்குதேச ராசாக்கள்' என்ற பழைய நூல் விவரிக்கிறது.

துர்விநதன் என்ற கங்க பேரரசனின் காலத்தில் கங்கர்களின் ஆட்சி உச்ச நிலைக்கு வந்தது. அவன் மகனுக்குச் சோழ இளவரசியை மணம் முடித்ததாகச் சொல்லப்படுகிறது. கங்கப் பேரரசு எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் முடிவுக்கு வந்தது. பின்னர் கொங்கு நாட்டில் கங்க மன்னர்கள் சிற்றரசர்களாக ஆண்டார்கள். இவர்களுக்குக் கொங்குக் கங்கர்கள் என்று பெயர் ஏற்பட்டது. இவர்களது ஆட்சியும் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முடிவு பெற்றது.

## சோழப் பேரரசு

பிற்காலச் சோழப் பேரரசு எழுச்சிபெற்ற போது ஆதித்த சோழன் கொங்கு நாட்டை வென்று தன்னாட்சிக்குள் அதனைக் கொண்டு வந்தான். பின்னர் பராந்தகன், இராசராசன், இராசேந்திரன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு உச்சக் கட்டத்தை அடைந்தது. இராசேந்திரன் காலத்தில் தமிழகத்தின் எல்லைக்கு அப்பாலும் சோழப் பேரரசு பரந்து விரிந்து கிடந்தது. அக்காலத்தில் சோழப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப் பட்டது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டலாதிகாரியின் தலைமையில் இருந்தது. இன்றையச் சேலம், தருமபுரி, கோவை மாவட்டங்கள் அடங்கிய கொங்குநாடு அன்று அதிராசராச சோழமண்டலம் என்று வழங்கப்பட்டது. அதற்குச் சோழ கேரள மண்டலம் என்றும் வேறு ஒரு பெயர் உண்டு. அதனைப் பொதுவாகக் கொங்கு மண்டலம் என்றும் அழைத்து வந்தனர்.

இந்த அதிராசராச சோழமண்டலப்பகுதி மேற்குக் கடற்கரை வரை பரவி இருந்தது. அங்குள்ள துறைமுகங்களின் வழியே வெளிநாடுகளுக்கு வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. ரோம், கிரீஸ், எகிப்து, அரபு நாடுகளுடன் வாணிகம் நடந்தது. அகில், சந்தனம், யானைத்தந்தம், மயில்தோகை, மூங்கில் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. அக்கால வாணிபத்தில் பயன்படுத்தப்பட்ட ரோம, யவன நாணயங்கள் பல கோவை மாவட்டத்தில் கிடைத்துள்ளமையால் இவ்வணிகத் தொடர்பு மேலும் உறுதியாகிறது. கொங்குநாட்டில் சோழர் ஆட்சி நான்கு நூற்றாண்டுக் காலம் நீடித்தது. அவர்களது ஆட்சிக் காலத்தில் ஊராட்சி முறையும் இதர சோழ அரசியல் முறைகளும் கொங்கு நாட்டில் ஏற்படுத்தப்பட்டன. நிலவரி முறை ஒழுங்குப்படுத்தப்பட்டது. பாசன வசதிகளும், உழவுமுறைகளும் பெருகின. கல்வி, கலைத் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. கொங்கு நாட்டில் அக்காலத்தில் சிறந்த தமிழ் இலக்கியங்கள் பல இயற்றப்பட்டன. கொங்குவேளிர் என்னும் சமணப் புலவர் உதயணன் கதையை ஆக்கித்தந்தார். பவணந்தி முனிவர் என்னும் தமிழ்ப்புலவர் எழுத்திலக்கிணமும், சொல் இலக்கணமும் கூறும் நன்னூல் என்னும் இலக்கண நூலைச் செய்தார்.



சோழரது ஆட்சி குன்றி, பாண்டியர் பலம் ஓங்கியபோது ஜாதவர்மன் சுந்தரபாண்டியன் என்பான் கொங்குநாடு உட்படத் தமிழ்நாடு முழுவதும் வெற்றி கொண்டான். இது பதின் மூன்றாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் நடந்தது. கொங்கு நாட்டை வெற்றி கொண்ட பாண்டியர்கள் அதனைத் தாமே நேரடியாக ஆட்சி செய்ய வில்லை. ஆங்காங்கே குறுநில மன்னர்களை நியமித்துக் கப்பம் வசூலிப்பதோடு திருப்தி அடைந்தனர்.

## ஹொய்சாளர் ஆட்சி

ஹொய்சாளர் குலத்தில் வந்த விஷ்ணுவர்த்தனன் வடகொங்கு நாட்டைப் பிடித்துக் கொண்டான். பின்னர் இரண்டாம் நரசிம்மன் என்னும் ஹொய்சாள மன்னன் சோழ, பாண்டிய நாடுகளில் நடைபெற்ற உள்நாட்டு கலகங்களில் ஈடுபட்டான். சிறிது சிறிதாக இக்குழப்பத்தில் அவன் தனது ஆட்சியை விரிவு படுத்திக் கொண்டான். கொங்கு நாட்டில் கொள்ளேகாலம் வரை இவனது ஆட்சி பரவி நின்றது. பின்னர் ஹொய்சாள அரசு இரு பிரிவாக ஆனபோது கொங்கு நாட்டுப் பகுதிகள் வீரராமநாதர் என்னும் அரசர் வசம் வந்தது.

## மாலிக்கபூர் படையெடுப்பு

டெல்லியில் சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டதும், அவர்களது கவனம் தெற்கே திரும்பியது. அப்படி ஏற்பட்ட

படையெடுப்பில் ஹொய்சாள மன்னனான வீரபல்லாளனை, துவாரசமுத்திரத்தில் டெல்லி சுல்தானின் தளபதியான மாலிக்காபூர் தோற்கடித்தான். இதனால் தென்னாட்டில் டெல்லி சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டது.

## விசயநகர வல்லரசு

சுல்தானின் ஆட்சியை எதிர்த்து விசயநகர வல்லரசு எழுச்சிபெற்றதும் கொங்கு நாடும் நாயக்கர்களின் ஆட்சிக்குள் வந்தது. கொங்குநாட்டில் பல பாளையக்காரர்கள் இந்தக் காலத்தில் தோன்றினர். அவர்களில் பலர் மதுரை நாயக்க மன்னனுக்குக் கட்டுப்பட்டு இருந்தனர். மைசூரில் விசயநகரப் பிரதிநிதியாக இருந்தவர்களுக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் அடிக்கடி போர் ஏற்பட்டது. கொங்கு நாட்டைத் தங்கள், தங்கள் வசம் வைத்துக்கொள்ள இருவரும் சச்சரவிட்டனர்.



## மைசூர் ஆட்சி

மைசூரில் நாயக்கர் ஆட்சி வலுவிழந்ததும் அவர்களது பிரதிநிதியை நீக்கி விட்டு மைசூர் உம்மத்தூர் அரசர்களான உடையார் குலத்தவர்கள் அரசரானார்கள். அவர்கள் விசயநகரத்தின் மேலாதிக்கத்தை நீக்கிச் சுயேச்சை அரசர்கள் ஆனார்கள். அந்த உடையார்கள் சிறிது சிறிதாகக் கொங்குநாட்டின் பகுதிகளையும் கைப்பற்றினர். நாளடைவில் கோவைப் பகுதிகள் முழுதும் மைசூர் ஆட்சிக்குட்பட்டன. உடையார்களின் ஆட்சிக்காலத்தில் மைசூர்ப் பகுதிகளிலிருந்து கன்னடம் பேசும் மக்கள் இம்மாவட்டத்தில் பெருமளவில் குடியேறினர். அவர்களது ஆட்சிக் காலத்தில் பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. விவசாயம், பாசனம் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டது.

## ஐதரின் எழுச்சியும் திப்புவின் வீழ்ச்சியும்

மைசூரில் உடையார்கள் குல அரசர்களை நீக்கிவிட்டு ஐதர் அலி பதவிக்கு வந்தான். ஐதர் மைசூர் மன்னராக ஆனதும் தென்னாட்டு அரசியலில் தீவிரமாகத் தலையிட்டு ஒரு பெரிய வல்லரசை நிறுவத் திட்டமிட்டான். ஆனால், அதேசமயம் நம் நாட்டிற்கு வியாபாரம் செய்ய வந்திருந்த ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும்கூட நமது நாட்டு அரசியலில் தலையிட்டுப் போரிட ஆரம்பித்தார்கள்.

ஐதரின் திட்டத்திற்கு ஆங்கிலேயர்எதிர்ப்பாக இருந்தார்கள். அதனால் ஆங்கிலேயருக்கும் ஐதர் அலிக்கும் பல போர்கள் ஏற்பட்டன. ஐதருக்குப் பிறகு அவன் மகன் திப்பு சுல்தான் அந்தப் போர்களைத் தொடர்ந்து நடத்தினன். அந்தப் போர்கள் மைசூர்ப் போர்கள் என்றழைக்கப்பட்டன.

மைசூர்ப் போர்களின் ஆரம்பக் காலத்தில் கோவைப் பகுதிகள் மைசூர் அரசின் ஆட்சியின்கீழ்தான் இருந்தன. மூன்றுவது மைசூர்ப் போர் தொடங்கியதும் சேலம், கோவை மாவட்டங்களில் ஆங்கிலேயப் படையெடுப்பு ஏற்பட்டது. அதனால் கோவை மாவட்டத்தின் பல பகுதிகளில் கடுமையான சண்டைகள் ஏற்பட்டன. ஜெனரல் மாடோஸ் என்னும் ஆங்கிலக் கவர்னர் ஒரு படையுடன் வந்து திண்டுக்கல், பாலக்காடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைப் பிடித்துக்கொண்டான். பின்னர் நடந்த சமாதான உடன்பாட்டின் படி ஆங்கிலேயருக்கும் மலையாளம், திண்டுக்கல், பாரமகால் பிரதேசங்கள் கிடைத்தன. கோவை மாவட்டம் திப்புவின் வசமே விடப்பட்டது. இறுதியான நான்காவது மைசூர்ப் போரில் திப்புசுல்தான் தோற்றுப் போகவே கோவை மாவட்டம் ஆங்கிலேயர் ஆட்சிக்குள் வந்தது.

## பிரிட்டிஷ் ஆட்சி

கி. பி. 1799-ல் கோவை மாவட்டம் ஆங்கில ஆட்சியின் கீழ் வந்ததும் அது இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வடக்குப் பகுதி பவானியைத் தலைநகராகவும், தெற்குப் பகுதி தாராபுரத்தைத் தலைநகராகவும் கொண்டு அமைக்கப்பட்டது. சேலம் பகுதிகள் வடக்குக் கோவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. கி. பி. 1804-ல் கோயம்புத்தூரைத் தலைநகராகக் கொண்டு தனியான கோவை மாவட்டமும், சேலத்தைத் தலைநகராகக் கொண்ட தனிச் சேலம் மாவட்டமும் அமைக்கப்பட்டன.

ஆங்கிலேயரை எதிர்த்து நடந்த விடுதலைப் போராட்டத்தில் கோவை மாவட்டம் பெரும் பங்கு வகித்தது. ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்த்து உயிர் விட்டவருள் குறிப்பிடத்தக்கவர் தீரன் சின்னமலை என்னும் பாளையக்காரரும் திருப்பூர் குமரனும் ஆவர்.





# அரிசன நலனுக்கு ஆற்றியுள்ள பணிகள்!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்
பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற் கிணங்க, "அவரவர் செய்யும் தொழிலுக்கு ஏற்ப வேறுபாடு உள்ளதே தவிர, பிறப்பின் அடிப்படையில் வேற்றுமை இல்லை; அனைவரும் சமமே!" என்ற நிலை, பழந்தமிழகத்தில் நீண்ட காலம் நிலவி வந்துள்ளது. ஆனால், "ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!" என்ற பொது நோக்குடனும், "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்ற பரந்த நோக்குடனும், வாழ்ந்த தமிழர்களிடையே, காலப்போக்கில் ஆயிரம் சாதி பேதங்கள் வளர்ந்து விட்டன. அதன் காரணமாக அரிசனங்கள் சமுதாயத்தின் அடித்தளத்திற்குத் தள்ளப்பட்டு, உயர்குடி மக்களின் சமுதாயச் சட்டத்திட்டம் என்னும் கொடுங்கால்களின் அடியில் சிக்கித் தவித்தனர்.

அண்ணல் காந்தி அடிகள் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். அண்ணல் வழியில், பேரறிஞர் அண்ணா அவர்கள் அரிசனங்களின் முன்னேற்றத்தையே தன் இலட்சியமாகக் கொண்டு, அரிசனங்களின் நல்வாழ்விற்கு நல்ல பல திட்டங்களைச் செயல் படுத்தினார்.

"ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே; அப்படியிருக்க அரிசனங்கள் மட்டும் ஏன் தீண்டத்தகாதவர்களாக இருக்க வேண்டும்?" என்ற கேள்வியை இளமைக் காலம் முதலே எழுப்பி வந்துள்ள இன்றையத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அண்ணன் காட்டிய வழியில் அரிசனங்களின் முன்னேற்றத்திற்குத் தன்னையே ஒப்படைத்துக் கொண்டுள்ளார். அதன் பயனாய் அரிசன மக்கள் அரசியல், பொருளாதார, சமுதாய முன்னேற்றம் பெற்று வளமோடு வாழ்கின்றார்கள். இது உண்மை என்பதைக் கோவை மாவட்டத்தில் கடந்த 5½ ஆண்டுகளில் அரிசனங்களின் முன்னேற்றத்திற்காகச் செய்துள்ள பணிகள் மெய்ப்பிக்கின்றன.

கோவை மாவட்ட அரிசன மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தீண்டாமை என்னும் கொடுந்துன்பம் நீங்கவும், நமது தமிழ் நாடு அரசு அடியிற் குறுப்பிட்டுள்ள திட்டங்களைக் கோவை மாவட்டத்தில் செயல் படுத்தி வருகிறது.

நல்வாழ்வு :—

1. இலவச வீட்டுமனை வழங்குதல்.

2. குடி தண்ணீர் வசதி செய்தல்.

3. அரிசனக் குடியிருப்புகள் மற்றும் மயானங்களுக்கு இணைப்புப் பாதைகள் அமைத்தல்.

4. அரிசனங்களுக்காகத் தனி மயானம் அமைத்தல்.

5. அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளித்தல்.

கல்வி :—

6. கல்விக் கூடங்கள் அமைத்தல்.

7. மாணவ மாணவியர்க்கு இல்லங்கள் அமைத்தல்.

8. பள்ளிகளில் மதிய உணவு வழங்குதல்.

9. கற்பலகை, புத்தகங்கள் வழங்குதல்.

10. பள்ளிகள் மற்றும் இல்லங்களில் உள்ள மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்குதல்.

11. இல்லங்களை நன்முறையில் பராமரிக்கும் காப்பாளர்களுக்குப் பரிசு வழங்குதல்.

12. பள்ளிக்கு அதிக நாட்கள் வருகை தந்த மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்குதல்.

13. உபகாரச் சம்பளம் வழங்குதல்.

வேளாண்மை :—

14. வேளாண்மை வளர்ச்சிக்குப் புதிய பாசனக் கிணறு வெட்ட மானியம் வழங்குதல்.

15. உழவு மாடுகள், வேளாண்மைக் கருவிகள் வழங்குதல்.

தொழில் வளம் :—

16. இலவசத் தொழிற் கருவிகள் வழங்குதல்.

17. தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்குதல்.

தீண்டாமை ஒழிப்பு :—

18. சமுதாய நல மன்றங்கள் அமைத்தல்.

19. கலப்புத் திருமணத் தம்பதியர்க்குத் தங்கப் பதக்கம் வழங்குதல்.

20. தீண்டாமை ஒழிப்புப் பணியை மேற்கொள்வதில் சிறந்த கிராமங்களுக்குப் பரிசு வழங்குதல்.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் கோவை மாவட்டத்தில் கடந்த 5½ ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகளும், ஒதுக்கீடு-செலவு விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



## வீட்டு மனைக்கு நில ஆர்ஜிதம்

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் அரிசன மக்கள், சமுதாயத்தில் மேம்பாடடைய அவர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்கப்படல் மிகவும் இன்றியமையாததென்பதைக் கருதி, அதன் பொருட்டுக் கோவை மாவட்டத்தில், வீட்டு மனைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் மூன்று அரிசன நலத் தனி வட்டாட்சியாளர்கள் கோவை, பொள்ளாச்சி, ஈரோடு வட்டங்களில் இருந்து நில ஆர்ஜித வேலையைக் கவனித்து வருகின்றனர். 1967-68 முதல் 1972-73 (1972 டிசம்பர் திங்கள் முடிய) வீட்டு மனைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பரப்பும், செலவிடப்பட்ட தொகை விவரமும் கீழ் வருமாறு உள்ளன.

நில ஆர்ஜிதத்திற்கு அரசு செலவிட்ட தொகையும் பரப்பும்

| ஆண்டு | | செலவிட்ட தொகை (ரூபாய்) | பரப்பு. |
|---|---|---|---|
| 1967-68 | .. | 4,33,880 | 151·27 |
| 1968-69 | .. | 1,52,265 | 40·68 |
| 1969-70 | .. | 4,11,200 | 109·35 |
| 1970-71 | .. | 1,48,890 | 58·53 |
| 1971-72 | .. | 29,245 | 10·2 |
| 1972-73 (31 டிசம்பர் 1972 வரை). | .. | 1,33,840 | 44·37 |

நில ஆர்ஜிதம் செய்த வகையில் பயன் அடைந்தவர்கள் விவரம்

| ஆண்டு | | | பயனடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 1967-68 | .. | .. | 3,305 |
| 1968-69 | .. | .. | 817 |
| 1969-70 | .. | .. | 1,137 |
| 1970-71 | .. | .. | 697 |
| 1971-72 | .. | .. | 172 |
| 1972-73 (31 டிசம்பர் 1972 வரை) | .. | .. | 842 |
| மொத்தம் | | .. | 6,970 |

நிலப்பட்டா வழங்கப்பட்ட விவரம்

| ஆண்டு | | | பட்டாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967-68 | .. | .. | 886 |
| 1968-69 | .. | .. | 700 |
| 1969-70 | .. | .. | 860 |
| 1970-71 | .. | .. | 1,302 |
| 1971-72 | .. | .. | 172 |
| மொத்தம் | | .. | 3,920 |

### வீடுகள் கட்டிக்கொள்ளக் கடன்

கோவை மாவட்டத்தில் அரிசனங்கள் வீடுகள் கட்டிக் கொள்ளக் கடன் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு அரிசனக் குடும்பத்திற்கும் ரூபாய் 940 மதிப்பில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தது. 1972-73—ஆம் ஆண்டிலிருந்து இத் தொகையை ஒவ்வொரு அரிசன வீட்டிற்கும் ரூபாய் 1,600 எனத் தமிழ் நாடு அரசு உயர்த்தியுள்ளது. கடந்த நான்காண்டுகளில் கட்டிக் கொடுக்கப்பட்ட இல்லங்களும், அதற்கான செலவு விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | | செலவு. (ரூபாய்) | வீடுகள் |
|---|---|---|---|
| 1969-70 | .. | 31,300 | 34 |
| 1970-71 | .. | 22,100 | 30 |
| 1971-72 | .. | 20,700 | 30 |
| 1972-73 | .. | 12,465 | 30 |

(31 டிசம்பர் 1972 முடிய)

கல்வி:—இம்மாவட்டத்தில் அரிசன நலத் துறையின் கீழ் 17 துவக்கப் பள்ளிகளும், 3 உயர் துவக்கப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் 2,457 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்கு இலவசக் கரும் பலகைகள், புத்தகங்கள், நோட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10,000 செலவு செய்யப்படுகிறது.

நலப் பள்ளிகளில் பயிலும் எல்லா அரிசன மாணவ மாணவியர்களுக்கும் ஆண்டொன்றுக்கு இரு முறை இலவசச் சீருடைகள் தீபாவளி, பொங்கல் திருநாட்களில் வழங்கப்படுகின்றன. தவிர, அரிசன மாணவ, மாணவியர்க்குப் படிப்பில் ஊக்கம் ஏற்படுத்தும் வகையில் பள்ளிக்கு அதிக நாட்கள் வருகை தரும் நலப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும், அதனை ஊக்குவித்த தலைமை ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும் திட்டமும் செயலாக்கப்படுகிறது. ஒவ்வொரு நலப் பள்ளியிலும் அதிக நாட்கள் வருகை தந்த மூன்று மாணவர்களுக்குப் பரிசுத் தொகைகள் முறையே ரூபாய் 20, 15, 10 மதிப்புள்ள துணிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு நலப் பள்ளிகளுக்கு அதிக நாட்கள் வருகை தரும்படி மாணவர்களை ஊக்குவிக்கும் ஆசிரியர்களுக்கும் 25 ரூபாய் மதிப்புள்ள வெள்ளிப் பதக்கம் வழங்கப்படுகின்றது.



இல்லங்கள் :—தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்காக இந்த மாவட்டத்தில் 19 மாணவர் இல்லங்களும், 10 மாணவியர் இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் 1,637 மாணவ மாணவியர்கள் தங்கிக் கல்வி பயிலுகின்றனர். இதில் கல்லூரி மாணவர்களுக்காக 2 இல்லங்களும், தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்காக ஒரு இல்லமும் இயங்கி வருகின்றன. இந்த இல்லங்களின் பராமரிப்புக்காக ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 4,50,000 செலவிடப்படுகிறது.

### மதிய உணவு

" செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் "

என்ற பெரு நோக்கத்துடன் 20 நலப் பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. தவிர தனியார், மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வரும் 12 பள்ளிகளில் பயிலும் அரிசன மாணவ மாணவியர்களுக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு வரம்பிற்குட்பட்டு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் மொத்தம் பயனடையும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 3,150. கடந்த ஆண்டுகளில் மதிய உணவு அளிப்பதற்காகப் பின் கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1968-69 | .. | .. | .. | 88,496 |
| 1969-70 | .. | .. | .. | 88,352 |
| 1970-71 | .. | .. | .. | 87,697 |
| 1971-72 | .. | .. | .. | 1,01,901 |
| 1972-73 | .. | .. | .. | 69,310 |

(31 டிசம்பர் 1972 முடிய)

படிப்பு உதவித் தொகை :—ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் எல்லா அரிசன மாணவ மாணவியர்களுக்கும் கல்வி உதவித் தொகை (Scholarship) வழங்கப்படுகின்றன.

கடந்த ஐந்தாண்டுகளில் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்ட தொகையும், பயன்பெற்ற மாணவர்கள் எண்ணிக்கையும் வருமாறு :

பயன்பெற்ற பள்ளிப்படிப்பு மாணவர்கள்

| ஆண்டு | | பயன் பெற்றவர் எண்ணிக்கை | வழங்கப் பட்டஉதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 13,817 | 3,36,980 |
| 1968-69 | .. | 21,639 | 3,85,640 |
| 1969-70 | .. | 26,387 | 4,36,480 |
| 1970-71 | .. | 23,327 | 4,53,690 |
| 1971-72 | .. | 26,518 | 4,54,616 |
| 1972-73 (31 டிசம்பர் 1972 வரை) | .. | 33,592 | 4,33,904 |

உதவித் தொகை பெற்ற கல்லூரி மாணவர்கள்

| ஆண்டு | | மாணவர்கள் (எண்ணிக்கை) | வழங்கப் பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 80 | 33,857 |
| 1968-69 | .. | 90 | 37,534 |
| 1969-70 | .. | 141 | 58,761 |
| 1970-71 | .. | 143 | 65,189 |
| 1971-72 | .. | 164 | 94,720 |
| 1972-73 (31 டிசம்பர் 1972 வரை) | .. | 249 | 80,498 |

கடந்த 5¾ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் படிப்பு உதவித் தொகை பெற்ற அரிசன மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும், வழங்கப்பட்ட உதவித் தொகையும் ஆண்டிற்காண்டு கூடி வருவதை மேற்கண்ட புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

## அரிசனங்களின் பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டங்கள்.

வேளாண்மை :—

" உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் "

என்ற வள்ளுவரின் பொய்யா மொழிக்கிணங்க வேளாண்மைத் தொழிலே மேன்மை உடையது என்பதனை உணர்த்தி, அரிசன மக்கள் வேளாண்மைத் தொழிலில் முன்னேற்றம் பெறவும், வேளாண்மை வளர்ச்சியில் பெரும் பங்கு பெறவும் வேண்டி அவர்கள் புதிய பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒவ்வொரு புதிய கிணற்றுக்கும் ரூபாய் 2,000 மானியமாகவும், உழவு மாடுகளும் விதைப் பொருள்களும் வாங்க ரூபாய் 500 மானியமாகவும் வழங்கப்பட்ட வகையில் கீழே விவரித்துள்ளபடி செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | | பாசனக் கிணறு வெட்ட வழங்கிய மானியம் (ரூபாய்) | உழவு மாடுகள் வழங்கிய மானியம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 57,060 | 33,340 |
| 1968-69 | .. | 75,170 | 11,375 |
| 1969-70 | .. | 1,28,075 | 38,685 |
| 1970-71 | .. | 1,00,810 | 14,000 |
| 1971-72 | .. | 1,12,250 | 15,600 |
| 1972-73 (31 டிசம்பர் 1972 வரை) | .. | 1,10,000 | 15,500 |

முன்பு பாசனக் கிணறு ஒவ்வொன்றுக்கும், ரூபாய் 1,500 மட்டுமே வழங்கப்பட்டது. இன்



றைய அரசு அதை 6—6—1970 தேதிய அரசு ஆணை 54-ன்படி ரூபாய் 2,000 ஆக உயர்த்தியுள்ளது.

### இணைப்புச் சாலைகள்

அரிசன மற்றும் மலைசாதியினர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைப்பதில் கடந்த 5¾ ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | | செலவிட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1967-68 | .. | 9,925 |
| 1968-69 | .. | 2,000 |
| 1969-70 | .. | 4,500 |
| 1970-71 | .. | 9,920 |
| 1971-72 | .. | 6,200 |
| 1972-73 | .. | 2,396 |

(31 டிசம்பர் 1972 முடிய)

## குடி தண்ணீர்க் கிணறுகள்

அரிசனக் குடியிருப்புகளுக்கு குடி நீர் வசதி செய்யும் பொருட்டு பழைய கிணறுகளை ஆழப்படுத்தியதுடன், புதிய கிணறுகளும் வெட்டப்படுகின்றன. இவ்வகையில் கடந்த 5¾ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழ்க் கண்டவாறு உள்ளது.

### ஆழப்படுத்தப்பட்ட பழைய கிணறுகள்

| ஆண்டு. | | ஆழப்படுத் தப்பட்ட கிணறுகள் | செலவிட்ட தொகை. (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967-68 | .. | 14 | 23,000 |
| 1968-69 | .. | 64 | 3,50,580 |
| 1969-70 | .. | 35 | 1,14,835 |
| 1970-71 | .. | 56 | 1,61,500 |
| 1971-72 | .. | 22 | 1,21,710 |
| 1972-73 | .. | 85 | 1,30,000 |

(31 டிசம்பர் 1972 முடிய)

### புதிதாக வெட்டப்பட்ட கிணறுகள்

| ஆண்டு. | | வெட்டப்பட்ட புதிய கிணறுகள் | செலவிடப் பட்ட தொகை (ரூபாய்). |
|---|---|---|---|
| 1967–68 | .. | 6 | 61,620 |
| 1968–69 | .. | 12 | 80,980 |
| 1969–70 | .. | 8 | 66,245 |
| 1970–71 | .. | 9 | 70,280 |
| 1971–72 | .. | 30 | 1,25,685 |
| 1972–73 | .. | 34 | 97,461 |

(31, டிசம்பர் 1972 வரை)

### ஊராட்சி ஒன்றிய வேலைக்குப் பங்குத் தொகை

அரிசன நலத்துறையில் இல்லாமல் ஊராட்சி ஒன்றியங்களாலும் அரிசனங்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய குடிநீர்க் கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், இணைப்புச் சாலை வேலைகள் ஆகியவை கிராம வேலைத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படுகின்றன. இதன்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளில் 20 சதவிகிதம் அரிசனங்களுக்கான வேலைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால், அவ்வாறு ஒதுக்கப்படும்பொழுது அவ்வேலைகளினால் பயன் பெறுவோரான அரிசன மக்கள் பங்குத் தொகையாக ஒரு குறிப்பிட்ட அளவு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை எழுகிறது. பொருளாதார வசதியற்ற அரிசனங்களால் இந்தப் பங்குத் தொகையைச் செலுத்த இயலுவதில்லை. ஆகவே, அரிசனங்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையையும்



அரசே, அரிசன நலத்துறை மூலம் கொடுக்க ஆணையிட்டுள்ளது. அதன்படி செலவிடப்பட்ட தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1968–69 | .. | 52,310 |
| 1969–70 | .. | 28,482 |
| 1970–71 | .. | 35,487 |
| 1971–72 | .. | 50,568 |
| 1972–73 | .. | 36,056 |

(31–12–1972 முடிய)

### மின்வசதி

அனைத்துக் கிராமங்களும் மின் இணைப்புப் பெற்று ஒளிமயமாகத் திகழ வேண்டுமென்பதனைக் கருத்தில் கொண்டு கோவை மாவட்டத்தில் உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின் இணைப்புக் கொடுத்து ஒளி மயமாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு. அரிசனக் குடியிருப்புகளின் தெருக்களில் மின்குழல் விளக்குகள் போடப்பட்டு வருகின்றன. 1–1–1973 வரை 2,783 அரிசனக் காலனிகளுக்கு மின்வசதி செய்யப்பட்டுள்ளது.

### தொழில் வளம்

" கைத்தொழில் ஒன்றினைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் "

என்ற புதுமொழிக்கிணங்க அரிசன மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடடையவும், அவர்களிடையே தொழில் திறமையை ஊக்குவிக்கவும், தொழில் திறன்படைத்த அரிசனங்களுக்கு ரூபாய் 100 முதல் ரூபாய் 2,000வரை பெறுமானமுள்ள கீழ்க்குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற் கருவிகள் அரிசன நலத்துறை மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன.

1. தையல் வேலை, 2. தோல் தைத்தல், 3. கருவிகள் தொழில், 4. கொல்லர் தொழில், 5. கல் உடைத்தல், 6. புத்தகம் பைண்டு செய்தல் 7. கேஸ் வெல்டிங், 8. மின் ஒயரிங், 9. சலவைத் தொழில், 10. முடிதிருத்தும் தொழில், 11. காலணி செய்தல், 12. இலாடம் கட்டுதல்.

மேற்கண்ட திட்டத்திற்கு கடந்த 5¾ ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையும், பயன்பெற்றோர் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| ஆண்டு | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய்) | பயன் பெற்றோர் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1967–68 | .. | 23,000 | 137 |
| 1968–69 | .. | 23,000 | 143 |
| 1969–70 | .. | 23,014 | 125 |
| 1970–71 | .. | 23,036 | 117 |
| 1971–72 | .. | 17,592 | 51 |

(31-12-1972 முடிய)

### வட்டியில்லாக் கடன்

தமிழ்நாடு அரசு சிறு வியாபாரம் செய்துவரும் அரிசனங்களை ஊக்குவிக்கவும், அவர்களைப் புதிய வியாபாரங்களில் ஈடுபடச் செய்யவும் வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்தினை உருவாக்கி, அத் திட்டத்தை 1968–69 நிதியாண்டிலிருந்து கோவை மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது.



21 வகைத் தொழில்களுக்குத் தொழில் தன்மைக்கு ஏற்றவாறு ரூபாய் 250 முதல் ரூபாய் 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தக் கடனை, கடன் பெற்ற ஓராண்டுக் காலத்திற்குப் பின் 100 சமமான, சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்துவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றோர் விவரமும், செலவினமும் பின் வருமாறு உள்ளது :—

| ஆண்டு | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய்) | பயன் பெற்றோர் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1968–69 | .. | 9,250 | 16 |
| 1969–70 | .. | 24,000 | 61 |
| 1970–71 | .. | 36,500 | 103 |
| 1971–72 | .. | 29,150 | 54 |
| 1972–73 | .. | 11,750 | 22 |

### தட்டெழுத்துப் பயிற்சி

கோவை மாவட்டத்தில் ஆண்டுதோறும் 50 அரிசன மாணவர்கள் தட்டெழுத்துப் பயிற்சி பெற 10 திங்கள் காலத்திற்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### வேலை வாய்ப்பு

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உள்ள பதவிகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதியினருக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஒதுக்கீடு சரிவரக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தமிழ்நாடு அரசு அவ்வப்போது கண்காணித்து வருகிறது. படித்த அரிசன இளைஞர்கள் தமிழ்நாடு பொதுத் தேர்வு எழுதத் தனிப் பயிற்சிக்கு மனுச் செய்யும் வழிவகைகளை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் அவ்வப்போது எடுத்துரைத்து, நிரந்தரப் பதவிகளுக்கு நியமனமாகத் தேவையான வழிவகைகளையும் அவ்வப்போது செய்து வருகின்றது. கோவை மாவட்டத்தில் வேலை தேடித் தரும் அலுவலகத்தின் மூலம் வேலையில் நியமனம் செய்யப்பட்ட அரிசன இளைஞர்களின் விவரம் வருமாறு :—

| ஆண்டு | | | வேலையில் நியமனம் செய்யப்பட்ட அரிசன இளைஞர்கள் |
|---|---|---|---|
| 1967 | .. | .. | 394 |
| 1968 | .. | .. | 544 |
| 1969 | .. | .. | 436 |
| 1970 | .. | .. | 617 |
| 1971 | .. | .. | 709 |

### கூட்டுறவுச் சங்கங்கள்

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற கொள்கைக்கேற்ப இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட கூட்டுறவுச் சங்கங்கள் அரிசனத் தொழிலாளர் நலனுக்காகச் செயல்பட்டு வருகின்றன.

1. பவானி அரிசனத் தச்சுத் தொழிற்சாலைக் கூட்டுறவுச் சங்கம்.

2. ஈரோடு அரிசனத் தச்சுத் தொழிற்சாலைக் கூட்டுறவுச் சங்கம்.

3. ஜம்பை கிராமம் அரிசன ஜமக்காளத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

4. பெரிய அக்கிரகாரம் அரிசனத் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம்.

இவைகளைத் தவிர இம் மாவட்டத்தில் ஈரோட்டில் அரிசனங்களின் நலனுக்காக மோட்டார் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இயங்கி வருகிறது.

### அரிசன மக்கள் நலனுக்கு அரசு செலவிட்ட தொகை

| ஆண்டு | | மொத்தச் செலவு |
|---|---|---|
| 1967–68 | .. | 29,44,641 |
| 1968–69 | .. | 31,15,612 |
| 1969–70 | .. | 38,37,034 |
| 1970–71 | .. | 48,33,705 |
| 1971–72 | .. | 52,99,324 |
| 1972–73 | .. | 51,97,818 |

(31–12–72 வரை)

கோவை மாவட்ட அரிசன மக்கள் கடந்த 5¾ ஆண்டுகளில் பெரும் முன்னேற்றம் பெற்றுள்ளார்கள் என்பது வெள்ளிடை மலையாக விளங்குகிறது.

கோவை மாவட்டத்தைச் சார்ந்த அரிசன, மலைச்சாதி, விமுக்த பரம்பரை, பிற்பட்ட வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு 5¾ ஆண்டுகளில் அரிசன நலத்துறை மூலம் இலட்சம் இலட்சமாகப் படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | உதவித் தொகை (ரூபாய்) | மாணவர் (எண்ணிக்கை) |
|---|---|---|
| 1967–68 | 9,66,061 | 15,919 |
| 1968–69 | 11,18,001 | 24,829 |
| 1969-70 | 16,58,670 | 32,7[illegible] |
| 1970-71 | 24,73,532 | 3[illegible] |
| 1971-72 | 35,19,4[illegible] | [illegible]0,482 |
| 1972-73 | 34,21,[illegible]3 | 48,509 |

கோவை மாவட்[illegible] 1967-68-ஆம் ஆண்[illegible] வழங்கப்பட்டுள்ள மொத்த [illegible]வித் தொகையுடன், நடப்பாண்டி[illegible] 31—12—1972 வரை வழங்கப்பட்டுள்ள உதவித் தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால், [illegible]டந்த 5 ஆண்டில் கோவை [illegible] மாவட்டத்தில் வழங்கப்பட்[illegible] படிப்பு உதவித் [illegible] ஏறத்தாழ 4 மடங்காக[illegible] பெருகியுள்ளது. படிப்பு உத[illegible]த் தொகை பெற்ற [illegible]ர்களின் எண்ணிக்கை [illegible]ந்த 5 ஆண்டு[illegible]ளில் 3 [illegible]டங்கிற்கும் மேல் உய[illegible]ளது.



16-3—7

ஸ்ரீ மகுடேஸ்வரசுவாமி, ஸ்ரீ வீரநாராயணப் பெருமாள் தேவஸ்தானம்

கொடுமுடி (அஞ்சல்)

ஈரோடு வட்டம். கோயம்புத்தூர் மாவட்டம்.

கோயில் விளக்கம்

கோயில்: திருப்பாண்டிக் கொடுமுடி
இடம்: கொடிமுடி
மூலவர் : ஸ்ரீ மகுட லிங்கர்
தேவியார் : ஸ்ரீ வடிவுடை நாயகி
திருமால்: ஸ்ரீ வீரநாராயணப் பெருமாள்
தேவியார்: திருநங்கை நாச்சியார்-மகாலட்சுமி
தீர்த்தம்: காவிரி
மரம் : வன்னி மரம்
முக்கிய ஸ்தலச் சிறப்பு: மும்மூர்த்தி ஸ்தலக் கோவில்

மேற்படி கோவில் காவிரிக் கரையில் அமைந்துள்ளது.

தற்பொழுது திருப்பணிகள் நடந்து வருவதால் பொது மக்கள் நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அறங்காவலர்கள்:

கே. ஆர். பாலசுப்ரமண்யம் கே. பி. தன்னுசி
கே. எம். சண்முகம் கே. எஸ். பழனியப்பன்

எம். ராமசாமி,
செயல் அலுவலர்.


## காலக் கண்ணாடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்




# நில ஒப்படைத் திட்டத்தில் நிகரற்ற சாதனைகள்!

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற இலட்சியத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பேரறிஞர் அண்ணா வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கலைஞர் அவர்கள் ஏழை, எளிய பாமரப் பாட்டாளி, சாமான்ய மக்களின் தேவையை நாளும் ஆராய்ந்து, அத்தேவைகளைக் காலங்கடத்தாது உடனுக்குடன் அவர்களுக்கு அளித்திடுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளார். ஏழை, எளிய பாமர, பாட்டாளி சாமான்ய மக்கள் எல்லா வசதிகளையும் பெற்று, குறையில்லாது மனநிறைவோடு வாழ்ந்து இன்புற்றிருக்கத் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவைகளை வேகமாகவும், திறமையாகவும் செயலாற்றி வருகிறது. ஏழைகளை வாழவைக்கும் அத் திட்டங்களில் ஒன்றே 'தீவிர நில ஒப்படைத் திட்டம்'.

கூட கோபுரங்களில், மாடமாளிகைகளில் வாழும் சீமான்களுக்கும், நிலக்கிழார்களுக்கும், காலமெல்லாம் மாடாக உழைத்துத் தங்கள் எசமானர்களின் வாழ்வை வளமாக்கிய கோவை மாவட்ட ஏழை மக்களின் மனத்திலே நிம்மதி இல்லை. "காலமெல்லாம் கூலியாளாகவே பிழைப்பதா? நமக்கென்று கால் ஏக்கர் பூமி இருந்தால் கூட உழைத்துப் பிழைத்து உயர்வடையலாமே! நமக்குப் பூமி கிடைக்[illegible] வாழ்வில் நிம்மதி பிறக்கா[illegible]" என்று ஏங்கிய சாமான்ய மக்[illegible]ளின் மனநிலை அறிந்து, அவர்கள் கேட்பதற்கு முன்னதாகவே நிலம் கொடுத்திட வேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளில் பெரு முயற்சி செய்து கோவை மாவட்டத்தில் 24,627 ஏக்கர்

கோவை மாவட்டத்தில் ஆண்டு வாரியாக நில ஒப்படை செய்த விவரம்

அன்று

| ஆண்டு | நில ஒப்படை பெற்றவர்கள் (எண்ணிக்கை) | நில ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| 1960–61 .. .. .. | 82 | 321·00 |
| 1961–62 .. .. .. | 32 | 112·00 |
| 1962–63 .. .. .. | 387 | 1,148·00 |
| 1963–64 .. .. .. | 499 | 1,300·00 |
| 1964–65 .. .. .. | 823 | 3,101·00 |
| 1965–66 .. .. .. | 620 | 2,100·00 |
| 1966–67 .. .. .. | 674 | 1,899·00 |
| மொத்தம் .. | 3,117 | 9,981·00 |

இன்று

| ஆண்டு | நில ஒப்படை பெற்றவர்கள் (எண்ணிக்கை) | நில ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| 1967–68 .. .. .. | 374 | 855·00 |
| 1968–69 .. .. .. | 231 | 704·00 |
| 1969–70 .. .. .. | 3,407 | 10,394·00 |
| 1970–71 .. .. .. | 3,873 | 9,695·00 |
| 1971–72 .. .. .. | 1,073 | 2,113·15 |
| 1972–73 (15–1–1973 வரை) | 509 | 866·83 |
| | 9,467 | 24,627·98 |



98 சென்ட் நிலத்தை 9,467 நிலமற்ற ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுத்து அவர்களின் மனத்திலே மகிழ்ச்சியும், நிம்மதியும் நிறைந்திடச் செய்துள்ளது.

1967–68-ஆம் ஆண்டிற்கு முன்பு கோவை மாவட்டத்தில், வேளாண்மைக்குத் தகுதியான மலைப்பகுதித் தரிசு நிலங்களை ஒப்படை செய்யப் பெரும் வாய்ப்பிருந்தும், நில ஒப்படை செய்யப்பட்ட அளவு மிகவும் குறைவாகவே இருந்துள்ளது. இதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, கோபிச்செட்டிப்பாளையம், பவானி வட்டங்களில் குத்தியாலத்தூர், பருகூர், தாளவாடி மலைப்பகுதிகளில் மொத்தம் 7,446 ஏக்கர் நிலத்தை 2,252 நிலமற்ற ஏழைகளுக்கும், அரிசன மக்களுக்கும், மலைச்சாதியினர்க்கும் 1969–70-ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. அதற்குப் பிறகு, மீதியிருந்த நிலங்களையும் நில ஒப்படை செய்யத் தனி நில அளவர்களைக் கொண்டு துரிதமாக உட்பிரிவு நிலப்பதிவேடுகள் தயார் செய்து நில ஒப்படை செய்துள்ளது.

நில ஒப்படையைப் பொறுத்த வரையில் கோவை மாவட்டத்தில் 1969–70-ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள சாதனை போற்றுதற்குரியதாக விளங்குகிறது. 1969–70-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் 3,500 ஏக்கர் நிலங்களை ஏழை எளியவர்களுக்கு நில ஒப்படை செய்து கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு முதலில் இலக்கு நிர்ணயித்திருந்தது. ஆனால், அதன் பிறகு "செய்வதைச் செம்மையாகச் செய்ய வேண்டும்; அதையும் சீக்கிரமாகச் செய்ய வேண்டும்" என்று விரும்பும் தமிழ்நாடு அரசு, கோவை மாவட்ட ஏழை எளிய மக்களுக்கு விரைந்து நிலம் கொடுத்து உதவ வேண்டும் என்ற இலட்சியத்துடன் 1969–70-ஆம் ஆண்டின் நில ஒப்படை இலக்கை 3,000 ஏக்கரிலிருந்து 10,000 ஏக்கராக உயர்த்தியது. கோவை மாவட்டத்தில் நில ஒப்படை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த அலுவலர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக 1969–70-ஆம் ஆண்டில் (1—4—1969 முதல் 31—3—70 வரை) கோவை மாவட்டத்தில் 10,394 ஏக்கர் நிலத்தை 3,407 நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு ஒப்படை செய்து கொடுத்தது ஏற்றமிகு சாதனையாக விளங்குகிறது.

சட்டத்தின் துணையோடு நில ஒப்படை செய்வதில் இன்றையத் தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக, கோவை மாவட்டத்தில் 1960–61-ஆம் ஆண்டு முதல் 1966–67-ஆம் ஆண்டு வரையான 7 ஆண்டுக் காலத்தில் நிலப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கையைப் போல் 3 மடங்கு ஏழை, எளியவர்கள், 1967–68 முதல் 15—1—1973 வரையான 5 ஆண்டுக் காலத்தில் நிலப்பட்டா பெற்றுள்ளார்கள். அதுபோலவே, 'அன்று' 7 ஆண்டுக் காலத்தில் நில ஒப்படை செய்த பரப்பைப் போல், 'இன்று' 5 ஆண்டில் ஏறத்தாழ 2½ மடங்குப் பரப்பு ஒப்படை செய்யப்பட்டுள்ளது என்பதும் இங்கேயுள்ள அட்டவணையிலிருந்து வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது.

**கோவை மாவட்டத்தில் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்ட நிலப்பட்டா**
**அன்றும்—இன்றும்**

| | நிலப்பட்டா பெற்றவர்கள் (எண்ணிக்கை). | ஒப்படை செய்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| **அன்று** | | |
| 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) | 3,117 | 9,981·00 |
| **இன்று** | | |
| கடந்த 5 ஆண்டுகளில் (1—4—67 முதல் 15—1—73 வரை). | 9,467 | 24,627·98 |

அன்று 7 ஆண்டுகளில் 3,117 பேர்களுக்கு 9,981 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

இன்று 5 ஆண்டுகளில் 9,467 நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு 24,627·98 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நில ஒப்படை பெற்றவர்களில் அதிக அளவில் பயனடைந்தவர்கள் அரிசன மக்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நிலப்பட்டா வழங்குவதில் கோவை மாவட்டம் தீவிரமாகச் செயலாற்றி வருவதால் நில ஒப்படை செய்வதற்குக் கிடைக்கும் நிலம் குறைந்துவிட்டதால் 1969–70-ஆம் ஆண்டிற்குப் பிறகு, நில ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் பரப்பும் குறைந்துகொண்டே வருகிறது. இந்த ஆண்டு (1972–73) முடிவிற்குள் நில ஒப்படை செய்வதற்குக் கிடைக்கும் நிலங்கள் முழுவதும் ஒப்படை செய்யப்பட்டு, ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்டுவிடும். பெரும்பாலும் அடுத்த ஆண்டில் (1973–74) நில ஒப்படை செய்யக் கோவை மாவட்டத்தில் நிலமே இல்லை என்று கூறும் நிலை ஏற்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.





# விளையாட்டு அரங்கம்





நல்லதோர் விளையாட்டு அரங்கம் (Stadium) கோவை நகரில் இல்லையே என்ற குறை நெடு நாட்களாகக் கோவை மக்களின் மனத்திலே இருந்து வந்தது. அந்தக் குறையை அகற்றிட மாவட்ட விளையாட்டுக் குழு (District Sports Committee) முயன்று, அம்முயற்சியில் வெற்றியும் பெறும் நிலையில் உள்ளது.

30,000 பேர் நன்கு வசதியுடன் அமர்ந்து விளையாட்டுகளைக் கண்டு களிப்பதற்கு ஏற்ற அரங்கைக் கட்டி முடிக்கும் பணி, முக்கால் பகுதிக்குமேல் முடிந்த நிலையில் உள்ளது. அதன் ஒரு பகுதியையே இங்கு காணுகின்றீர்கள்.

விரைவில் கட்டிமுடிக்கப்பட்டுத் திறக்கப்படவிருக்கும் இவ்விளையாட்டு அரங்கிற்கு ஏறத்தாழ 30 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கின்றார்கள். இந்த விளையாட்டு அரங்கம் சிதம்பரம் பூங்காவின் அருகில் அமைந்துள்ளது.

ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இடத்தைக் கோவை நகராட்சி, இவ்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்காக வழங்கியுள்ளதுடன், விளையாட்டு அரங்கக் கட்டடம் கட்டுவதற்கு 5 இலட்சம் ரூபாயையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொடை கொடுக்கும் பண்பு கொண்ட கோவை மாவட்ட மக்களின் நன்கொடையைக் கொண்டு கட்டப்பட்டுவரும் இவ்விளையாட்டு அரங்கம் கோவையின் சிறப்பை மேலும் மிகுவிக்கும்!

## புகழ்பெற்ற பொள்ளாச்சிச் சந்தை



தமிழ்நாட்டில் பொள்ளா[illegible] சந்தையே மிகவும் புகழ்பெற்று [illegible]கிறது. இங்கு தமிழ்நாட்டுப் பொரு[illegible]களும், கேரளப் பொருட்களும், [illegible]களும், மலைநாட்டுப் பொருட்களும் [illegible] விற்கப்படுகின்றன. வாரம் [illegible] முறை கூடும் இந்தச் சந்தையில் [illegible] படாத பொருட்களே இல்லை [illegible] கூறலாம். இந்தச் சந்தை மூலம் 1971-72-ஆம் ஆண்டில் பொள்ளாச்சி நகராட்சிக்கு ரூ. 4,92,000 வருவாய் கிடைத்துள்ளது.




# வேளாண்மைத் துறையில் வியத்தகு சாதனைகள்



கோவை மாவட்ட உழவர் பெருமக்கள் மிகவும் முற்போக்கானவர்களாகவும், உழைப்பால் உயர்ந்தவர்களாகவும் விளங்குகின்றார்கள். கோவை மாவட்டத்தில் மழையளவு மிகவும் குறைவாக இருந்தாலும், கோவை மாவட்ட மக்களில் 53 சத அளவினர் வேளாண்மையில் ஈடுபட்டுத் தங்களது சலியாத உழைப்பினால், பெய்யும் மழையைக் கொண்டு பெரும் பரப் பில் மானாவாரியாகப் பயிரிட்டுப் பெரு மகசூல் எடுத்து வந்துள்ளார்கள். சில முற்போக்கு உழ வர் பெருமக்கள் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டு, மிகவும் ஆழமான கிணறுகளை வெட்டி, அதில் 2 அல்லது 3 நிலைகளில் பம்பு செட்டுகளை அமைத்து, தண்ணீரை மேலே கொண்டு வந்து சாகுபடி செய்வதைப் பார்த்த எவரும் கோவை மாவட்ட உழவர் பெருமக்க ளின் உழைப்பைப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். கோவை மாவட்டத்தில் பயிரி டப்படாத பயிர்களே கிடையாது எனலாம். இந்த அளவிற்குக் கோவை மாவட்டம் உயர்ந் துள்ளதற்கு வேளாண்மைத் துறையினரின் தீவிர நடவடிக்கைகளே மூல காரணம் என்று பல முற்போக்கு உழவர் பெருமக்கள் கூறுகின்றார்கள்.

கோவை மாவட்ட உழவர் பெருமக்களுக்கு உதவி செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கோவை மாவட்டம் கோவை, கோபி, பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய 4 வேளாண்மை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ் வொரு பிரிவும் ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலரின் கீழ் இயங்கி வருகிறது. கோவை யில் ஒரு துணை வேளாண்மை இயக்குநர் அலு வலகம் உள்ளது. கோவை மாவட்டத்தில் 41 துணை வேளாண்மை அலுவலர்கள் வளர்ச்சி, மற் றும் பல வேளாண்மைத்துறை அலுவலர்கள், ஊர்நல ஊழியர்கள் ஆகியோர் உழவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, உழவர் களின் உயர்வுக்கும், வேளாண்மைப் பொருள் களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உதவி வரு கின்றார்கள். இவர்களது சலியாத உழைப்பினால் கோவை மாவட்டத்தில், கடந்த 5 ஆண்டுகளில் குறிப்பிடத் தகுந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், பல சாதனைகளும் ஏற்பட்டுள்ளன. அவைகளில் ஒரு சிலவற்றைக் கோவை மாவட்ட உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகக் கீழே படைத் துள்ளோம்.

### தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம்

உணவு தானியப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய சிறந்த முறைகள் என்று பல்வேறு சோதனைகளுக்குப் பிறகு மெய்ப்பிக்கப் பட்ட எல்லாவிதமான நவீன சாகுபடி முறை களையும் ஒருங்கே பயன்படுத்துவதையே நோக்க மாகக் கொண்டு ' தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம் ' (Intensive Agricultural Area Programme) கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. குறிப்பிடத்தகுந்த முறையில் உற்பத்தித் திறனைப் பெருக்குவதன் மூலமாக, இத்திட்டம் நாளடைவில், கிராமியப் பொருளாதாரத்தை வளப்படுத்தவும் பெருக்கிடவும், பெருந்துணை புரியும்.

இத்திட்டத்தின் கீழ், இறைவை நெல், இறைவைச் சோளம், இறைவை ராகி, இறைவைப் பருத்தி, இறைவை நிலக்கடலை ஆகிய பயிர் கள் பயிரிடப்படுகின்றன. கோவை மாவட்டத் தில் ஏனைய மாவட்டங்களை விட அதிகமான பரப்பளவு உறுதியான பாசன வசதி உள்ள தாலும், முற்போக்கு உழவர் பெருமக்கள் நிறைந்துள்ளதாலும், வேளாண்மைத் துறை யினரின் இடைவிடா முயற்சிகளாலும் கடந்த 5 ஆண்டுகளில் தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் கீழ், பின் கண்ட பரப்பளவில் சாகு படி செய்யப்பட்டுள்ளது.

| ஆண்டு | | | | சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | .. | 3,80,633 |
| 1968–69 | .. | .. | .. | 4,62,373 |
| 1969–70 | .. | .. | .. | 5,13,200 |
| 1970–71 | .. | .. | .. | 5,15,000 |
| 1971–72 | .. | .. | .. | 4,71,827 |

## உயர் விளைச்சல் தரும் வகைகள் திட்டம்

வளர்ந்து வரும் மக்கள் தொகையின் உணவுத் தேவையை ஈடுசெய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் உயர் விளைச்சல் தரும் வகைகள் திட்டம் கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறுகிய காலத்தில் பெரும் மகசூல் தரக்கூடிய உயர் விளைச்சல் தரும் வகைகள் இத்திட்டத்தின் கீழ், சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் 1966–67-ஆம் ஆண்டில் உயர் விளைச்சல் வகைகள் திட்டத்தின் கீழ் 47,822 ஏக்கரில் மட்டுமே உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிரிடப்பட்டிருந்தன. இன்றையத் தமிழ்நாடு அரசு உயர் விளைச்சல் வகைகள் திட்டத்தில் பேரார்வம் காட்டியதால், வேளாண்மைத் துறையினர் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக, கோவை மாவட்டத்தில் உயர் விளைச்சல் நெல் ரகங்களின் சாகுபடிப் பரப்பு பின் கண்டவாறு ஆண்டிற்காண்டு அதிகமாகி வருகிறது.

### உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிராகிய பரப்பு

| ஆண்டு | பரப்பு (ஏக்கர்) |
|---|---|
| 1967–68 | 52,491 |
| 1968–69 | 1,12,260 |
| 1969–70 | 1,67,051 |
| 1970–71 | 1,60,607 |
| 1971–72 | 2,02,561 |

உயர் விளச்சல் நெல் ரகங்களின் பரப்பு கடந்த 5 ஆண்டுகளில் சற்றேறக் குறைய 4 மடங்கு அதிகமாகியுள்ளது. அது போலவே ஒட்டு வீரியக் கம்பு சாகுபடி பரப்பும் ஆண்டிற்காண்டு கூடி வருவதுடன் கடந்த 5 ஆண்டுகளில் 9 மடங்காகப் பெருகியுள்ளது என்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்கள் தெளிவாக்குகின்றன.

### ஒட்டு வீரியக் கம்பு பயிராகிய பரப்பு

| ஆண்டு | ஏக்கர் |
|---|---|
| 1966–67 | 5,837 |
| 1967–68 | 17,858 |
| 1968–69 | 21,668 |
| 1969–70 | 36,021 |
| 1970–71 | 48,356 |
| 1971–72 | 53,864 |

ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடியில் தமிழ் நாட்டில் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் கோவை மாவட்டம் ஒரு மாபெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

1966–67-ஆம் ஆண்டில் 30 ஏக்கராக இருந்த ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடிப் பரப்பு ஆண்டுதோறும் பல மடங்காகப் பெருகி, 1971–72 ஆம் ஆண்டில் 23,106 ஏக்கராக உயர்ந்துள்ளது. ஒட்டு வீரிய மக்காச் சோளப் பரப்பு 1966–67 ஆம் ஆண்டினைக் காட்டிலும் கடந்த 5 ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் 770 மடங்கிற்கும் மேல் பெருகியுள்ளது என்பது பின் கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

### ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடி பரப்பு

| ஆண்டு | ஏக்கர் |
|---|---|
| 1966–67 | 30 |
| 1967–68 | 640 |
| 1968–69 | 13,680 |
| 1969–70 | 19,296 |
| 1970–71 | 20,820 |
| 1971–72 | 23,106 |

ஊட்டச் சத்து மிகுந்த உணவை மக்களுக்கும், சத்துள்ள தீவனத்தைக் கால் நடைகளுக்கும் அளிக்கவல்ல ஒட்டு வீரிய மக்காச் சோளச் சாகுபடியில் கோவை மாவட்ட உழவர் பெருமக்கள் பேரார்வம் காட்டியதற்கு வேளாண்மைத் துறையினரின் இடைவிடா முயற்சியே காரணம் என்றால் மிகையல்ல!

### தரமான விதைகளை வழங்கியது

கோவை மாவட்டத்தில் கண்ணம்பாளையம், பாப்பான்குளம், பெங்களூர், பவானி, பவானிசாகர், சத்தியமங்கம் ஆகிய 6 இடங்களில் உள்ள மாநில விதைப் பண்ணைகளில் முதல் நிலை நெல், சிறு தானிய விதைகளை உற்பத்தி செய்து, உழவர் பெருமக்களுக்கு வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு கீழ்க்கண்ட அளவு முதல் நிலை விதைகளை வேளாண்மைத் துறை கோவை மாவட்டத்தில் வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| முதல் நிலை நெல் விதைகள் .. | 213 மெட்ரிக் டன். |
| முதல் நிலை சிறு தானிய விதைகள் | 49 மெட்ரிக் டன். |

### பயிர்களைக் காத்துப் பசிப்பிணி அகற்றியது

வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காக உழவர் பெருமக்களும், வேளாண்மைத் துறையினரும் உழைத்து வருகின்றனர். ஆனால் அவர்களின் உழைப்பையும் உழைப்பின் பலனையும் கெடுக்கப் பொல்லாத பூச்சிகளும், நோய்களும் தோன்றிப் பயிர்களைத் தாக்கிச் சேதம் விளைவிக்கின்றன. அவைகளைக் கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெருவதற்காகத் தகுந்த பூச்சிப் பூஞ்சாள மருந்துகளையும், தெளிப்பான்களையும், தூவான்களையும் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது.

கோவை மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்புக்காக வேளாண்மைத் துறை கீழ்க் கண்ட அளவு ரூபாய்க்கான மருந்துகளையும், கையால் இயக்கும் தெளிப்பான்களையும், தூவான்களையும் வேளாண்மைத் துறை மூலம் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

### வழங்கப்பட்ட மருந்தின் மதிப்பு

| ஆண்டு | இலட்சம் (ரூபாய்) |
|---|---|
| 1967–68 | 75.17 |
| 1968–69 | 43.29 |
| 1969–70 | 63.79 |
| 1970–71 | 80.83 |
| 1971–72 | 115.77 |



### சலுகை விலையில் வழங்கப்பட்ட தெளிப்பான்கள்

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 | 1,620 |
| 1968–69 | 1,449 |
| 1969–70 | 1,650 |
| 1970–71 | 1,457 |
| 1971–72 | 1,209 |

### சலுகை விலையில் வழங்கப்பட்ட தெளிப்பான்கள்

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 | 537 |
| 1968–69 | 203 |
| 1969–70 | 376 |
| 1970–71 | 282 |
| 1971–72 | 254 |

### காய்கறிகள் அபிவிருத்தித் திட்டம்

கோவை மாவட்ட மக்களுக்குச் சத்துள்ள காய்கறிகள் கிடைத்திடச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன், காய்கறிகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், வேளாண்மைத் துறை காய்கறிச் சாகுபடிக்காக ஏக்கருக்கு ரூபாய் 120 வீதம் கடன் கொடுத்து உதவுவதுடன், தரமான காய்கறி விதைகளையும் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு அமைந்துள்ளது.

## 9 திங்களில் 11 இலட்சம்

சேரன் போக்குவரத்துக் கழகம் 1—3—1972 அன்று 80 வழித்தடப் பேருந்துகளையும், 29 உதவி பேருந்துகளையும் சேர்த்து மொத்தம் 109 பேருந்துகளுடன் துவங்கியது. இப்போக்குவரத்துக் கழகம் 1—3—1972 முதல் 31—3—1972 வரையான காலத்தில் 55 வழித்தடங்கள் பேருந்துகளை விட்டு, பொது மக்களுக்குச் சேவை செய்துள்ளதுடன், அந்த ஒரு திங்களில் மட்டும் 1·29 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

தற்பொழுது சேரன் போக்குவரத்துக் கழகம் 104 வழித்தடப் பேருந்துகளைக் கொண்டுள்ளது. இக்கழகத்தின் பேருந்துகள் நாளொன்றுக்கு சராசரியாக 22,000 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்து வருகின்றன. சில நாட்களில் இதன் வருவாய் 27,000 ரூபாய்க்கு மேலும் அதிகமாகிறது.

நடப்பாண்டில் முதல் ஒன்பது மாதங்களில் சேரன் போக்குவரத்துக் கழகம் 11 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. தமிழ்நாடு அரசின் நாட்டுடைமையாக்கும் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன என்பதற்குச் சேரன் போக்குவரத்துக் கழகம் ஈட்டியுள்ள இலாபமே நல்லதோர் சான்றாக விளங்குகிறது.

அண்மையில் இக்கழகம் மாணவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் பயணம் செய்யும் சலுகையை வழங்கியுள்ளது.



### காய்கறிச் சாகுபடிக்குக் கொடுத்த கடன் தொகை

| ஆண்டு | இலட்சம் (ரூபாய்) |
|---|---|
| 1967–68 | 1.82 |
| 1968–69 | 1.79 |
| 1969–70 | 1.80 |
| 1970–71 | 1.80 |
| 1971–72 | 1.74 |

### வழங்கப்பட்ட காய்கறி விதைகள்

| ஆண்டு | கிலோ கிராம் |
|---|---|
| 1967–68 | 4,883 |
| 1968–69 | 4,509 |
| 1969–70 | 6,496 |
| 1970–71 | 5,848 |
| 1971–72 | 5,051 |

### பழ அபிவிருத்தித் திட்டம்

கோவை மாவட்டத்தில் பழங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பெரும் வாய்ப்புள்ளதால், பழ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், திராட்சைப் பழத்தோட்டம் ஏற்படுத்த ஏக்கருக்கு ரூபாய் 1,500 வீதமும், மா, எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற இதர பழத் தோட்டம் அமைக்க ஏக்கருக்கு ரூபாய் 300 வீதமும் வேளாண்மைத் துறை நீண்ட காலக்கடன் கொடுத்து வருகிறது. இவ்வகையில் கீழ்க்கண்டவாறு கோவை மாவட்டத்தில் கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

### திராட்சைப் பழத் தோட்டம் அமைக்கக் கொடுத்துள்ள கடன்

| ஆண்டு | ரூபாய் |
|---|---|
| 1968–69 | 57,600 |
| 1969–70 | 52,500 |
| 1970–71 | 27,000 |
| 1971–72 | 42,750 |

### இதர பழத்தோட்டம் அமைக்கக் கொடுத்துள்ள கடன்

| ஆண்டு | ரூபாய் |
|---|---|
| 1968–69 | 21,300 |
| 1969–70 | 15,000 |
| 1970–71 | 18,000 |
| 1971–72 | 21,000 |

இவ்வாறு பல்வேறு வகையில், கோவை மாவட்ட உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்தவும், வேளாண்மை உற்பத்தியை விரைவாகப் பெருக்கிடவும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை பாடுபட்டு வருவதுடன் உழவர் பெருமக்களின் உற்ற துணையாகவும் விளங்கி வருகிறது.

# அருள்மிகு பட்டிப்பெருமான் திருக்கோயில்

## பேரூர்—கோவை-10

இது தொன்மையும் பழமையும் வாய்ந்த சிவாலயம். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் சுயம்பு மூர்த்தி. இவ்வாலயத்திலுள்ள கனகசபையில் கோமுனி, பட்டிமுனி இருவருக்காக ஆடிய பாதத்தோடு விளங்கும் நடராஜர் வடிவம் மிக மிக அழகானது. நடராஜப் பெருமானை வலம் வரும் வண்ணம் அமையப் பெற்றுள்ள தலம் இது ஒன்றே என்று சொல்லலாம். இத் தலம் மேலைச் சிதம்பரம் எனவும் வழங்கப்படுகிறது. கனகசபை, மதுரை திருமலை நாயக்கர் சகோதரரான அளகாத்திரி நாயக்கரால் (1625—1659) கட்டப்பட்டது. இக்கனகசபையில் சிற்பக்கலை வேலைப்பாடுகள் மிளிர்கின்றன.

புராதனமான பட்டிப்பெருமான் கோவிலின் கர்பக்கிருகத்தைக் கரிகால் சோழன் அமைத்ததாகச் சொல்லப்படுகிறது என்றும் அழிவற்ற இறவாப்பனையும், பிறப்பே இல்லாத பிற வாப்புளியும், பைத்தியத்தை நீக்கும் புண்ணிய தீர்த்தம் சுரக்கும் பிரம்ம தீர்த்தக் கிணறும் இத் தலத்தின் புனிதத்தை இன்றும் எடுத்துக் கூறுபவை. அப்பரும் சுந்தரரும் இத் தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இங்குள்ள முருகப்பெருமான் தண்டாயுதபாணி என அழைக்கப்படுகிறார். மேற்கு நோக்கி நின்று அருள் புரிகின்றார். அருணகிரிநாதர் இத் தண்டாயுதபாணிப் பெருமானை இரு திருப்புகழ் பாடல்களால் பாடியுள்ளார். கடந்த 5 வருடங்களாக இச் சன்னதி திருப்பணி செய்யப்பெற்று கடந்த (12—7—1971) அன்று குடமுழுக்கு விழா சிறப்புற நடைபெற்றது.

ஆரூ ரத்தா ! ஐயாற் றமுதே ! அளப்பூர் அம்மானே !
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே !
பேரூர் உறைவாய்ப் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே !
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாரூர் அம்மானே!

(சுந்தர மூர்த்திகள் தேவாரம்— ஊர்த்தொகை.)

தீராப் பிணிதீர சீவாத்துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக் கிரிராச
பேராற் பெரியோனே பேரூர் பெருமானே

(திருப்புகழ்.)

ஆலயத்திற்கு வரும் சேவார்த்திகளின் சௌகரியத்தை முன்னிட்டு ஆற்றங்கரையில் மேல்நிலைத் தொட்டிகட்டுதல், அதன் பக்கத்தில் குளியல் அறைகள் பத்து கட்டுதல், திருக்குளம் பழுதுபார்த்தல், ஆலயப் பிரகாரத்தில் கருங்கல் தளவரிசை அமைத்தல், ஆகிய திருப்பணிகள் சுமார் 1½ இலட்ச ரூபாய் செலவில் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

அன்பர்கள் வந்து தரிசித்து வணங்கிப் பச்சைநாயகி சமேதப் பட்டிப்பெருமான் தண்டாயுதபாணிப் பெருமானின் திருவருளைப் பெறுமாறு வேண்டுவதுடன் ஆலயத்திருப்பணிக்குத் தாராளமாக நிதியளிக்குமாறும் வேண்டுகிறோம்.

என். ஆர். லிங்கமராஜா எம்.ஏ.,
செயல் அலுவலர்.

எம். ஆர். சிவசாமி,
தலைவர் (அறங்காவல்குழு).

கெ. சிவசாமி
ஆர். கருப்புசாமி
கெ. பி. ஜெகன்னாதன்
ந. இராசு
(அறங்காவலர்கள்)

கொங்கு நாட்டின் குக்கிராமங்களுக்கும் சாலை அமைத்துப் போக்குவரத்துக்கு உதவி செய்து, உழவிலும் தொழிலிலும் உயர்ந்து விளங்கும் கோவை மாவட்டத்தில் வாணிகம் பெருகக் கடந்த 5½ ஆண்டுகளில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை பெரிதும் உதவியுள்ளது. கோவை மாவட்டத்தில் சாலைகள் அமைக்கவும், பாலங்கள் கட்டவும், அவைகளை நன்கு பராமரித்து வரவும் வேண்டி, கோவை மாவட்டம் கோயம் புத்தூர் கோட்டம், ஈரோடு கோட்டம் என 2 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்டப் பொறியாளர் தலைமையில் நடைபெறும். பணிகளை மேற்பார்வையிடக்கோவையில் ஒரு மேற்பார்வைப் பொறியாளரும் உள்ளார்.

கோவை மாவட்டத்தில் கடந்த 5½ ஆண்டுகளில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொதுப்பணித்துறையின்கீழ், பின் கண்டவாறு 5,31,91,000 ரூபாய் மதிப்புள்ள வேலைகள் நடைபெற்றுள்ளன.

### 1967 முதல் 1972 வரை நடைபெற்றுள்ள பணிகளின் செலவு

| | ரூபாய் |
|---|---|
| மூலதன முதலீட்டுப் பணிகள் .. | 1,48,40,000 |
| பராமரிப்புப் பணிகள் .. .. | 3,83,50,000 |
| மொத்தம் .. | 5,31,90,000 |

### கோவை மாவட்டத்தில் 1967 முதல் 1972 வரை முடிக்கப்பட்டுள்ள முக்கிய வேலைகள்

| | மதிப்பீடு (இலவசம் ரூபாய்) |
|---|---|
| உடுமலைப் பேட்டை—திருப்பூர் சாலையில் மைல் 38/4-ல் நொய்யல் பாலத்தை அகலப்படுத்துதல். | 5·75 |
| உடுமலைப் பேட்டை— குமாரலிங்கம் சாலையில் மைல் 9/8-ல் அமராவதியின் குறுக்கே கட்டப் பட்ட கொழுமம் பாலம். | 6·25 |
| கோவை காந்திபுரத்தில் சங்கனூர் பள்ளத்தில் அமைக்கப்பட்டுள்ள பாலம். | 1·92 |
| கோவை — பொள்ளாச்சி சாலையில் மைல் 17/4-ல் உள்ள பாலம். | 2·09 |
| தாராபுரம்—அலங்கியம் சாலையில் அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம். | 4·10 |
| ஈரோடு — சத்தி சாலையில் 18/1 — 36/5-ல் உள்ள பாலங்கள். | 1·65 |
| உடுமலைப் பேட்டை — திருப்பூர் சாலையை அகலப் படுத்துதல். | 2·54 |
| அந்தியூர் — அம்மாப் பேட்டைச் சாலையில் மைல் 5/6-ல் உள்ள பாலம். | 2·60 |
| இதரப் பால வேலைகள் (12). | 25·83 |
| ஒன்றியக் கட்டடங்கள் (2) | 1·90 |
| அனுப்பர் பாளையம்—ஆத்துப் பாளையம் சாலையில் மைல் 0/7-ல் நல்லாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தாம் போகி (தரைப்பாலம்). | 1·37 |
| சேலம் — கோவை சாலையில் கல் 308/1-ல் தெக்கலூர் அருகே பாலம் கட்டுதல். | 2·40 |
| மொத்தம் .. | 58·40 |

கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட 29 முக்கியப் பணிகள் ரூபாய் 288·91 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## சாலைகள் அமைத்தோம் பாலங்கள் கட்டினோம்

### தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்ட வேலைகள்

| | மதிப்பீடு (இலட்சம் ரூபாய்) |
|---|---|
| சேலம் — கோவை சாலையை (தேசிய நெடுஞ்சாலை 47) மேம்படுத்துதல். | 144·00 |
| கோவையில் அவினாசி ரோடு மேம்பாலம். | 44·00 |
| கோவை நகரிலிருந்து விமான நிலையம் வரை சாலையை அகலப்படுத்துதல். | 5·00 |
| கோவை — திருச்சி சாலையை ஒண்டிப்புதூர் வரை அகலப் படுத்துதல். | 5·00 |
| தாளவாடி — எரகனஹள்ளி சாலை மைல் 0/1 முதல் 8/0 வரை மேம்படுத்துதல். | 10·50 |
| கொள்ளேகால் — செல்லம் பாளையம் மலைச்சாலையை அபிவிருத்தி செய்து தார் சாலையாக்குதல். | 11·00 |
| கணியூர் — கடத்தூர் சாலை மைல் 1/1-ல் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 9·90 |
| வால்பாறையில் வாராந்திரச் சந்தையைப் புதுப்பித்தல். | 18·00 |

| | |
|---|---|
| திம்பம் — தலமலைச் சாலையை அபிவிருத்தி செய்தல். | 8·50 |
| அவல்பூந்துறை — பண்ணைக் கிணறு சாலையில் பாலம் அமைத்தல். | 4·20 |
| ஆனைமலை உப்பாறின் குறுக்கே இரண்டு பாலங்கள். | 3·32 |
| கோவை புறச்சாலை அமைக்க நில உரிமை பெறல். | 50·00 |
| திருப்பூர் ஜம்மனை காந்தி பாலம் அகலப்படுத்துதல். | 3·30 |
| திருச்சி — கோயம்புத்தூர் சாலையில் கி.மீ. 285·60 முதல் 305·8 வரை அகலப்படுத்துதல். | 7·70 |
| திருச்சி — கோயம்புத்தூர் சாலையில் கி.மீ. 252·4 முதல் 285·0 வரை அலகப்படுத்துதல். | 4·40 |
| சத்தி — கொத்தமங்கலம் சாலையில் மைல் 1/5, 6/1-ல் பாலங்கள் கட்டுதல். | 3·30 |
| ஈரோடு — கோயம்புத்தூர் சாலை, ஈரோடு — காங்கேயம் சாலைகளை இணைக்கும் மாற்றுப் பாதை அமைத்தல். | 3·00 |
| கோவை நகர்ப்புற மாற்றுச் சாலையை வாலாங்குளம் ஏரிக்கரை வழியாக அமைத்தல். | 2·00 |
| பட்டணம் புதூர் சாலையும் பாலங்களும். | 1·75 |
| கரட்டடிப் பாளையம் — பங்களாப்புதூர் சாலையை மேம்படுத்துதல். | 1·54 |
| அந்தியூர் — அத்தாணிச் சாலை மைல் 0/3-ல் உள்ள தவிட்டுப் பள்ளம் குறுக்கே பாலம் அமைத்தல். | 1·75 |
| சென்னிமலை — ஊத்துக்குளி சாலையிலிருந்து பொன்னமா குட்டை செல்லும்பாதையை மேம்படுத்துதல். | 2·00 |
| இதரப் பால வேலைகள் (1) .. | 0·74 |
| ஊராட்சி ஒன்றியக் கட்டடங்கள் (2) | 2·20 |
| சாவடிப்புதூர் சாலையில் மைல் 0/2-ல் பாலம் கட்டுதல். | 1·29 |
| மதுக்கரை—செட்டிப்பாளையம் சாலையில் மைல் 7/2-ல் ஒரு பாலம் கட்டுதல். | 1·02 |
| மதுக்கரை—செட்டிப்பாளையம் சாலையில் மைல் 5/1-ல் பாலம் கட்டுதல். | 1·57 |
| எட்டிமடை ரயில்வே பீடர் சாலையில் மைல் 0/2-ல் பாலம் கட்டுதல். | 1·83 |
| தாளவாடி — ஏரகனஹள்ளி சாலையில் மைல் 0/1-ல் மேம்பாலம் அமைத்தல். | 4·00 |
| மொத்தம் | 288·91 |

## செய்துள்ள சாதனை

கோவைக் கோட்டத்தில் கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் நடைபெற்றுள்ள வேலைகள் திட்டவாரியாவும், ஆண்டு வாரியாகவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சிறு பாலங்களை அகலப்படுத்தியும், புதுப்பித்தும் கட்டிய விவரம்.

### 1967-68-ஆம் ஆண்டு

| வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|
| திருப்பூர்—மேட்டுப் பாளையம் சாலையில் மைல் 32/5-ல் கண்வாயுடன் கூடிய தரைப் பாலம் (Cuseway) கட்டியது. | 11,500 |
| மேற்கூறிய சாலையில் மைல் 15/3-ல் மேற்கண்ட வாறு தரைப்பாலம் கட்டியது. | 9,500 |
| சென்னை — கள்ளிக் கோட்டைச்சாலையில் மைல் 296/3-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்துக் கட்டியது. | 13,700 |
| சென்னை — கள்ளிக்கோட்டை சாலையில் மைல் 33/1-ல் உள்ள சிறு பாலத்தை அகலப்படுத்தியது. | 16,000 |

### 1968–69-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| சென்னை — கள்ளிக்கோட்டை சாலையில் மைல் 298/4-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்துக் கட்டியது. | 11,000 |
| சென்னை — கள்ளிக்கோட்டை சாலையில் 16 சிறு பாலங்களை அகலப்படுத்திக் கட்டியது. | 1,43,000 |

### 1969-70-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| சென்னை—கள்ளிக்கோட்டைச் சாலையில் 3 சிறு பாலங்களை அகலப்படுத்திக் கட்டியது | 40,000 |
| கோயம்புத்தூர் — திண்டுக்கல் சாலையில் மைல் 5/6, மைல் 32/3-ல் உள்ள 2 சிறு பாலங்களையும் முறையே அகலப்படுத்தியும், வலு ஊட்டியும் கட்டியது. | 27,000 |

## புதிதாகத் தார் போடப்பட்ட சாலைகள்!

### 1969–70-ஆம் ஆண்டு

| | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|
| செல்லக்கரச்சல்-சுல்தான் பேட்டை தண்ணீர்ப்பந்தல் சாலை. | 10,500 |
| நெகமம்-எரிசனம் பட்டி சாலை மூன்று பகுதிகள் | 40,800 |
| அன்னூர்-உதிமலைச்சாலையில் 2 பகுதிகள். | 36,000 |
| அன்னூர்-சிறுமுகைச்சாலையில் 2 பகுதிகள். | 27,500 |
| செய்யூர்-குன்னத்தூர் சாலையில் 5 பகுதிகள். | 63,800 |
| காமநாய்க்கன்பாளையம்-அன்னூர் சாலையில் 6 பகுதிகள். | 1,28,000 |
| பாப்பம்பட்டி சாலை .. | 51,000 |
| சூலூர்-சோமனூர் சாலை .. | 23,500 |
| பல்லடம்-மங்கலம் சாலை .. | 42,700 |

### 1970–71-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| உடுமலைப்பேட்டை-இணையாமுத்தூர் சாலையில் 2 பகுதிகள். | 46,300 |
| கோமங்கலம்-எரிசனம்பட்டி சாலை. | 34,000 |
| உடுமலைப்பேட்டை-செஞ்சேரி மலைச்சாலையில் 5 பகுதிகள். | 1,41,500 |
| பெரியப்பட்டி-நெகமம் சாலையில் 6 பகுதிகள். | 90,200 |
| துங்கவி-புலவடிச்சாலையில் 5 பகுதிகள். | 1,19,000 |
| உடுமலைப் பேட்டை-திருப்பூர் சாலையில் இருந்து புலவடிக்குச் செல்லும் சாலையில் 2 பகுதிகள். | 36,500 |
| பொள்ளாச்சி-பல்லடம் சாலையில் இருந்து மலையாண்டிப் பாளையம் செல்லும் சாலையில் 3 பகுதிகள். | 40,200 |
| பெரியப்பட்டி-நெகமம் சாலையில் 3 பகுதிகள். | 43,900 |
| கட்டாம்பட்டி-கொடுவை சாலையில் 2 பகுதிகள். | 28,600 |
| நெகமம்-எரிசனப்பட்டி சாலையில் 4 பகுதிகள். | 60,100 |
| திப்பம்பட்டி-செல்லம்பாளையம் சாலையில் 4 பகுதிகள். | 73,100 |
| சமத்துார்-தேவனூர் புதூர் சாலை. | 15,000 |

## கருங்கல் ஜல்லி பரப்பி மேம்படுத்திய சாலைகள்

இத்திட்டத்தின் [illegible] கடந்த $5\frac{3}{4}$ ஆண்டுகளில் பின்கண்டவாறு 162 பணிகள் மேற்கொளளப் பட்டுள்ளன.

| ஆண்டு | பணிகள் |
|---|---|
| 1967–68 .. .. .. | 7 |
| 1968–69 .. .. .. | 26 |
| 1969–70 .. .. .. | 55 |
| 1970–71 .. .. .. | 51 |
| 1971-62 .. .. | 23 |
| மொத்தம் .. | 162 |

## கட்டப்பட்டுள்ள முக்கியக் கட்டடங்கள்

### 1967–68-ஆம் ஆண்டு

| | செலவு (ரூபாய்) |
|---|---|
| சுல்தான்பேட்டை ஊராட்சி அலுவலகம். | 70,000 |
| ஜல்லிப்பட்டியில் பள்ளிக்கூடம் | 26,254 |
| உடுமலைப்பேட்டையில் பள்ளிக் கூடம். | 20,000 |
| மடத்துக்குளம் உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டடம். | 22,5000 |

### 1968–69-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| கோவை இராமநாதபுரத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் இடவசதிக்கான கட்டடம். | 20,400 |

### 1969–70-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம். | 80,000 |

### 1970–71-ஆம் ஆண்டு

| | |
|---|---|
| பேரூர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம். | 1,10,000 |

இவ்வாறு கோவைக் கோட்டத்தில் நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறை சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.





# கோக்காத கோவை

உதடு திறக்கின்ற ஒளிவட்ட மலர்களிலே
மதுவசூல் நடத்துகின்ற வண்டுகளின் பாடலைக்
காற்று ரதமேற்றிக் கண்ணியப் படுத்தியே
போற்றும் ' குறிஞ்சிப் புடைப்புப் ' புடைசூழும்
கொங்குமண் டலத்தின் குளிர்நெற்றிக் குங்குமமாய்த்
தங்குமெங்கள் இாகல் வெயில்நகரம் தான்கோவை !
'பாடாத தேவாரம், படுப்பதற கெடுத்தெவரும்
போடாத திண்டுக்கல் . . . புகுந்து திருடர்கள்
தட்டிக்கொண் டோடாத பொன்மலை தன்கொடுக்கால்
கொட்டாத தேனீப் போலெவரும் கோக்காத
கோவை ! கொடியிலே பழுக்காத கோவை ! எங்
கோவை ! என் றெண்ணி இருக்காமல் ' எங்கோவை !
கோ'வை ' என்றிதயத் தேற்றிவைக்கும் இன்கோவை
எங்கோவை ! 'ஏழையரின் ஊட்டி'யெனும் நற்கோவை
செங்கோவை ! 'ஏனுங்க! ஆமாங்க' எனும்கொங்கு வார்த்தைகளைத்
தேனுங்க என்போமா திதிப்புங்க என்போமா ?
சுடும்போது சூரியர்கள் நெஞ்சம் குளிர்ந்து
விடும்போது வெண்ணிலவு விழுதுகளே மக்கள் !
எதார்த்தத்தால் தூய்மையுள்ள இதயங்கள் வஞ்சகப்
பதார்த்தத்தால் கெட்டுப் பழுதடையாப் பளிங்குகள் !
தென்றல் வரும்தெருவில் தீபமலர்க் கூட்டங்கள்
நின்று தலையசைக்கும் நேர்த்தியுள்ள மதுரையிலே
பாடுதுறை அறிந்தகடைச் சங்கப் பழந்தோப்பை
வாடுதுறை யாக்கவந்த களப்பிர வம்பரால்
சிறகசைப்பில் தேம்பல் ததும்பப் புலமைப்
பறவைகள் கோவைப் பழம்பதியம் விசயமங்
கலச்சங்கத் தையடைந்த கதை, சரிதப் பொன்தேர்
வலத்தை அறிபவர்கள் மறப்பதற்கு முடியாது !
மகரந்த வார்த்தைச்சங் கிலியால் பெருங்கதையாம்
நிகரற்ற ஊஞ்சலிலே நெஞ்சேற்றி அசைத்துவிட்ட
கொங்குவே ளிர்தமிழ் வளர்த்திட்ட கோவையினச்
சங்கவேள் ! சங்காத அகவல் அரசவேள் !
வாக்கியத்தைப் புல்லரிக்க வைப்பதற்குத் தேன்கவிதைத்
தேக்கத்தால் தீர்மானம் செய்வோர்க்குப், பிறதானம்
வெட்க விதானத்துள் குறுகச் சிரதானம்
தட்டாமல் தந்திட்ட குமணனன்றோ கொடைவள்ளல் !

படுமலைச் சந்தனப் பைந்தமிழ்க்குத் தலைகொடுத்தான்
உடுமலை வாசியே ! உலகத்து நீர்க்குடும்பம்
இனிப்புக் கனவுகளை எழுதிவைத்த வரியொன்று
நனவாகி நடப்பதுதான் சிறுவாணி நதியாகும் ;
பத்திரிகை யில்மஞ்சள் வளர்க்காமல் பாத்திகளாம்
சித்திர வரப்புகளில் செழிக்கவைக்கும் கோவையிலே
புகையிலை தரையிலே ! புதுப்புது ஆலைகளால்
புகையுண்டு வானத்தில் ! புன்செய் நிலங்களிலே
சூரியப் பகலுக்குத் துண்டுதுண்டு விமர்சனங்கள்
ஏற்பாடு செய்ததுபோல் எங்கெங்கும் வெண்பருத்தி !
நூலைப் பதம்பார்க்கும் நுண்ணிய அறிவோடே
தோலைப் பதம்பார்க்கும் தொழில்வல்ல ஈரோடே
ஆளைப் பதம்பார்க்கும் அரசியற்கும் பட்டறை !
காலப் பதம்பார்த்துக் கண்மூடி வழக்கங்கள்
மண்மூடிப் போக மதகளிருய்ப் புறப்பட்ட
வெண்தாடிப் பெரியார் ! விடுதலை வேள்வியிலே
திருப்பூரில் உயிர்கொடுத்த தியாகி குமரனைக்
கருத்தாங்கிப் பெற்றசென்னி மலையதுதான் கற்பனையை
நூலிலே நெய்கின்ற நுணுக்கத்தை யெலாம்போர்வை
வேலையிலே காட்டும் விதமறிந்த குறுந்தொகையூர் !
புதுமை வெளிச்சத்தில் புன்னகைக்கும் கோவையிலே
அதிசய மனிதர் அறிஞர் ஜி. டி. நாயுடு
ஆச்சரியக் குறிகளின் அணிவகுப்பை ஏற்கின்ற
மூச்சுள்ள சிந்தனையால் முழுப்பெருமை சேர்க்கின்றார் !
இராகங்கள் கதவுதட்டி எழுந்திருங்கள் என்றபின்னும்
வராமல் மறுதலிக்கும் பாடல்கள் கேட்டதுண்டா ?
அன்பவா நீ ! என் அழகைச் சுவைவாநீ
என்றும்என் பவானிசா ' கர்மலம்புழா ' எழிலணைக்
கட்டுக்கள் ! பயணப் பதிகத்தைக் கற்கின்ற
சிட்டுகட்குத் திறந்துவைத்த ஓவியப் புத்தகங்கள் !
ஊர்ப்பட்டி யல்தர முற்பட்டால், பா, சுமையால்
வேர்த்துவிடும் இந்நூல் இத்தோடு விடுக்கின்றேன் !
தேனூறு தமிழில் திருமுன்று கோவைக்கோ
நானூறு துறையுண்டு ! நாகரிகம் கொப்புளிக்கும்
எங்களின் கோவைக்கோ எண்ணத் துறைகளுண்டு !
தங்கத் தரைமார்பை அழகுபடுத்தும் அதன்பெருமை
அத்தனையும் பாட அவாமிக இருந்தாலும்
இத்தனைக்கே இங்கே இடம் !

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

# தென்னிந்தியாவின் மான்செஸ்டர்



கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகள் உயரிய ஆடைகளை உற்பத்தி செய்து, அயல் நாடுகளுக்கும் அனுப்பி, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன.

தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள 203 பஞ்சாலைகளில் 100 பஞ்சாலைகள் கோவை மாவட்டத்தில் உள்ளன. கோவை நகரிலும், அதைச் சுற்றிலும் 70 பஞ்சாலைகளுக்கு மேல் இருப்பதால், கோவை நகரைத் தென் இந்தியாவின் 'மான்செஸ்டர்' என்று கூறப்படுவதுண்டு.

இந்தியாவில் பஞ்சாலைகள் துவக்கப்பட்டு ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. கோவை மாவட்டத்தில் 1888-ஆம் ஆண்டில் முதன் முதலாகப் பஞ்சாலை துவக்கப்பட்டது. கோவை மாவட்டத்திற்கு 1930-ஆம் ஆண்டில் 'பைக்காரா' மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மின்சக்தி வரத் தொடங்கியதிலிருந்து கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகள் வெகு வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன.

கோவை மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்வதற்கான நல்ல மண் வளமும், நூல் நூற்பதற்கான நல்ல தட்ப-வெப்ப நிலையும் (climate) அமைந்துள்ளதுடன், பஞ்சாலைத் தொழிலில் மிகுந்த துணிவுடன் இறங்கும் ஆற்றல் கோவை மாவட்டத்தினருக்கு இருப்பதாலும், கோவை மாவட்டத்தில் பஞ்சாலைத் தொழில் விரைவாக வளர்ச்சி அடைந்து வருகிறது.







வெளி நாடுகளில் உற்பத்தியாகும் உயர்ரகப் பஞ்சு வகைகளை, இந்தியாவிலேயே முதன் முதலில் பஞ்சாலையில் உபயோகப்படுத்திய பெருமை, கோவை பயனீர் பஞ்சாலைக்கே (Pioneer mills) உரியது. அவ்வகைப் பஞ்சு ரகங்களைக் கொண்டு வெகு நயமான நூல் உற்பத்தி செய்த பெருமையும் பயனீர் பஞ்சாலையையே சாரும்.

கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகளில் ஏறத்தாழ 75,000 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகள் ஆண்டுதோறும் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் மதிப்புள்ள நூல் பேல்களையும், ஏறத்தாழ 10 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளையும் உற்பத்தி செய்து வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டப் பஞ்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நூல்களுக்கும், துணிகளுக்கும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் நல்ல மதிப்பு உள்ளது.

அண்மையில் கண்டுபிடித்து வெளியிடப்பட்டுள்ள 'சுஜாதா' பருத்தியிலிருந்து தயாரிக்கப்பட்ட 'தமிழ்நாட்டுத் தங்கம்' என்ற துணியையும், மற்றும் பல் வேறு பெயரில் வெளியிடப்பட்டுள்ள உயர்ரகத் துணிகளையும் வெளிநாட்டினர் விரும்பி வாங்குகின்றனர். கோவை மாவட்டப் பஞ்சாலைத் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியவர்களின் அயராத உழைப்பும், தொழில் நுட்பச் செறிவுமே தென் இந்தியாவின் 'மான்செஸ்டர்' எனப்படும் கோவையின் புகழ் அவனியெங்கும் பரவுவதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது!




# மீன்வளம் பெருக்கினோம்

உணவுப் பற்றுக்குறை பறந்தோடத் தமிழ்நாடு
அரசு தீட்டிய திட்டங்கள் பலப் பல! சத்துள்ள
மீன் அனைவருக்கும் எளிதில் கிடைக்கச் செய்ய
வேண்டுமென்பதற்காக, மேற்கொள்ளப்பட்ட
மீன்வளப் பெருக்கப் பணிகளாலே கோவை மாவட்
டம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில்
உள்ள ஏனைய மாவட்டங்களுக்கும் முன்னோடி
யாகத் திகழ்கின்றது. வீணாகும் ஆற்று நீரை
வேளாண்மைக்குப் பயன்படுத்தவும், மின்சாரம்
உற்பத்தி செய்யவும் கட்டப்பட்ட நீர்த்தேக்கங்
களில் மீன் உற்பத்தியைப் பெருக்கி, சென்னைக்
கும், வங்கத்திற்கும் தேவையான மீனை அனுப்
பும் பணியில் முதலிடம் பெறுகிறது.

இம்மாவட்ட மீன் வளப் பெருக்கத் திட்டங்
களைச் செவ்வனே செயல் படுத்தும் பணிகளில்
கோவையில் உள்ள மண்டல மீன்துறை துணை
இயக்குநரும், பொள்ளாச்சியில் உள்ள மீன் துறை
உதவி இயக்குநரும், பவானி சாகரில் நன்னீருயி
ரியல் ஆராய்ச்சி மீன்துறை உதவி இயக்குநரும் ஈடு
பட்டுள்ளனர். மீன்துறையினரால் கீழ்க்கண்ட
திட்டங்கள் கோவை மாவட்டத்தில் செயல்
படுத்தப்படுகின்றன.

உள்நாட்டு மீன்வளப் பெருக்கம்.

நீர்த்தேக்க மீன்வளப் பெருக்கம்.

தீவிர மீன்குஞ்சு உற்பத்தி.

மீனவர் நலம் காத்தல்.

### உள்நாட்டு மீன்வளம்

கோவை மாவட்டத்திலுள்ள ஆறுகள், குளங்
கள் ஆகிய நீர்நிலைகளில் மீன்வளம் பெருக்குவ
துடன் மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட
மீனவர்களுக்கு மீன்பிடி உரிமைச் சீட்டு ...ங்கல்,
மற்றும் மீன்பிடி உரிமைதனை அளித்... ஆகிய
பணிகள் மீனளத் துறையினரால் ...டுத்
தப்படுகின்றன.

காவிரி ஆற்றிலே மேட்டூர் அணைக்குக் கீழும்,
சேடர்பாளையம் அணைக்கு மேலுமுள்ள பகுதியில்
மீன்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்க வாய்ப்
பிருந்தது. ஆனால் அங்கு மீனினங்கள் முட்டை
யிட்டுக் குஞ்சு பொறித்து மீனிவளத்தைப் பெருக்
கிட முடியாமல், அம்மீனினங்களைச் சிலர் நாட்டு
வெடிகள் பயன்படுத்தி ஒழித்து வந்தனர். அதைத்
தடுத்திட 1968-ஆம் ஆண்டு முதல், ஆண்டில் 6
மாத காலத்திற்கு ஒரு முறை மீன்துறை ஆய்வாளர்
மற்றும் 6 மீனவப் பாதுகாவலர்களைக் கொண்ட
'ரோந்துக்குழு' ஏற்படுத்தி மீன்வளம் பெருகப்
பாதுகாப்பளிக்கப்பட்டு வந்தது. பவானியினைத்
தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட அக்
குழு, 1972-ஆம் ஆண்டு முதல் ஆண்டு முழுவதும்
செயல்படத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்
துள்ளது.

### நீர்த்தேக்க மீன்வளப் பெருக்கம்

தமிழ்நாட்டிலேயே அதிகமான நீர்த்தேக்கங்
களைப் பெற்றுள்ளது கோவை மாவட்டம். இம்
மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட 7 நீர்த் தேக்கங்
களில் மீனளத்துறையின் மூலம் மீன்வளம் பெருக்
கப்படுகிறது.

பவானிசாகர் நீர்த்தேக்கம்.

அமராவதி நீர்த்தேக்கம்.

ஆழியார் நீர்த்தேக்கம்.

திருமூர்த்தி நீர்த்தேக்கம்.

உப்பாறு நீர்த்தேக்கம்.

சோலையாறு நீர்த்தேக்கம்.

பில்லூர் நீர்த்தேக்கம்.

இந் நீர்த்தேக்கங்களிலே விரைவில் வளர்ந்து
பயன்தரும் மீன்வகைகளை இருப்பு செய்து,
வளர்த்து, மக்களுக்கு மீனுணவு அளிக்கப்படு
கிறது.

### மீன் வளர்ப்புக்கு எடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1967-க்கு முன் | .. | 3 நீர்த்தேக்கங்கள்—8,865 எக்டேர் நீர்ப் பரப்பு. |
| 1972-ல் உள்ளவை. | | 7 நீர்த்தேக்கங்கள்—10,562 எக்டேர் நீர்ப் பரப்பு. |

### இருப்புச் செய்யப்பட்ட மீன் குஞ்சுகள்

| | | |
|---|---|---|
| 1967-க்கு முன் | .. | 5,00,000 |
| 1972-ல் | .. | 20,00,000 |

பிடிக்கப்பட்ட மீன்கள்—

| | | |
|---|---|---|
| 1967-க்கு முன் | | 75,000 கிலோ. |
| 1972-ல் | .. | 2,06,193 கிலோ. |

கோவை மாவட்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்
களில் 1967–68 முதல் 1972–73 (31—1—1973)
முடியவுள்ள காலத்தில் பிடிக்கப்பட்ட மீன்களின்
எடை பின் வருமாறு உள்ளது.

| ஆண்டு | | | மீன்களின் எடை (கிலோகிராம்) |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 1,77,415 |
| 1968–69 | .. | .. | 2,17,876 |
| 1969–70 | .. | .. | 2,08,431 |
| 1970–71 | .. | .. | 2,52,167 |
| 1971–72 | .. | .. | 2,61,158 |
| 1972–73 (31—1—73 முடிய). | | | 1,81,407 |

# திரு வரதராஜப் பெருமாள் வகையரு திருக்கோவில்கள்

## வெங்கம்பூர்

ஈரோடு வட்டம்

கோவை மாவட்டம்

வெங்கம்பூர் கிராமத்தில் கரூர்—ஈரோடு செல்லும் நெடுஞ்சாலைக்குக் கிழக்குப் பக்கத்தில் திரு வரதராஜப் பெருமாள் கோயில் திரு சோளீஸ்வர ஸ்வாமி கோயில், திரு அங்காளம்மன் கோயில், திரு மாரியம்மன் கோயில் ஆகிய கோவில்கள் பிரசித்தி பெற்ற கிராமத்துக் கோவில்களாகும். அவைகளைத் தவிர திரு பொங்காளி யம்மன் கோவிலும் ஒரு முக்கியமான கோவிலாகும். அநேக பக்தர்கள் கோவில்களுக்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்து வருகிறார்கள்.

இத் திருக்கோவில்களில் ஏழு விமானங்களில் சுமார் ரூ. 27,500 செலவில் சுதைகள் அமைத்தும், பழுதான சுதைகளைப் புதுப்பித்தும், வர்ணம் பூசியும் நல்ல கவர்ச்சியான முறையில் வேலை செய்யப்பட்டிருக்கிறது. திரு வரதராஜப்பெருமாள் கோவிலில் ரூ. 15,500 செலவில் ஆர். சி. சி. மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகளைத் தவிர சனீஸ்வரர் கோவில், நவக்கிரகக் கோவில் கட்டப்பட்டு இருக்கிறது. சூரியன், சந்திரன் கோவில்கள் கட்டப்பட இருக்கிறது. திரு அங்காளம்மன் கோவில் முன் முகப்பில் ரூ. 4,000 செலவில் சாலஹார விமானம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்திருக்கோவில் நிதியிலிருந்து வெங்கம்பூர் கிராமத்தில் சுமார் 1½ லட்சம் ரூபாய் செலவில் ஒரு கல்யாண மண்டபம் கட்டும் வேலைக்கு தமிழ்நாடு அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்றது. மேற்படி வேலை விரைவில் ஆரம்பமாக இருக்கிறது.

திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பரிதாபி ஆண்டு ஐப்பசி திங்கள் 9 ஆம் நாள் (25—10—72) திருக்குட முழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கோவை மண்டல அறநிலைய ஆட்சித் துறை துணை ஆணையர் உயர் திரு எம். சூரியராஜ், பி.ஏ., பி.எல்., அவர்கள் வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள். சுமார் 3,000 பக்தர்களுக்குக் குட முழுக்குப் பெருவிழாவின்போது அன்னதானம் செய்யப்பட்டது. செவல்குளம் சி. தங்கையா அவர்கள் வில்லிசைக் கச்சேரியும், மதுரை சோமு அவர்கள் இன்னிசைக் கச்சேரியும், நா. கிரிதாரி பிரசாத் அவர்கள் சொற்பொழிவும், பவானி மு. கண்ணப்பன் அவர்கள் இன்னிசைச் சொற்பொழிவும், மு. குமாரசாமி தேசிகர் திருமுறைக் கச்சேரியும் நடைபெற்றன. வடக்குப் புதுப்பாளையம் மணியக்காரார் உயர்திரு சி. பெரியசாமி கவுண்டர், திரு வி. பி. கணபதி, வி. எஸ். ராமலிங்க கவுண்டர், கே. துரைசாமி, கே. எஸ். பழனிசாமி, ஏ. கொமரராயர் ஆகிய தர்மகர்த்தர்களும், மற்றும் பிரமுகர்களும் குட முழுக்குப் பெருவிழா சிறப்புற நடைபெற ஏற்பாடு செய்தார்கள்.

பக்தர்கள் கோவில்களுக்கு வருகை தந்து இறைவன் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகிறது.

த. முனியப்பன், பி.ஏ.,
செயல் அலுவலர்.



### தீவிர மீன்குஞ்சு உற்பத்தி

தரமான மீன்குஞ்சுகள் கிடைப்பதற்குப் பல்லாண்டு ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட 'தூண்டுதல் முறை' மீனினப் பெருக்க முறை தீவிரமாகச் செயல் படுத்தப்படுகிறது. முன்பு இயற்கையிலே சேகரித்த மீன்குஞ்சுகளில் பயன் தரும் மீனினங்கள் மிகக் குறைவாக இருந்தும் இதனைச் சேகரம் செய்திட அதிகமான மனித சக்தியும் பொருளும் விரயமாகி வந்தது. "தூண்டுதல் முறை" கண்டு பிடிக்கப்பட்டபின், கோவை மாவட்டம் மீன்குஞ்சு தேவையில் தன்னிறைவு பெற அமராவதிநகர், பவானிசாகர் நிலையங்களுக்கு அதிக வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், ஆழியாரில் புதிய நிலையமொன்று 1972-ஆம் ஆண்டில் செயல்படச் செய்து மீன்குஞ்சு உற்பத்திப் பெருக்கம் தீவிரமாக நடைபெறுகிறது.

உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகளை 60 நாட்கள் வளர்த்து, நீர்த்தேக்கத்தில் இருப்பு செய்திடத் தேவையான மீன் வளர்ப்பிடங்களைக் காட்டும் பணியில் முன்னேற்றம் காண்பதிலும் கோவை மாவட்டம் முன்னோடியாகத் திகழ்கிறது.

### மீன் வளர்ப்பிடங்கள்

| | |
|---|---|
| 1967-க்கு முன் .. .. | 22 |
| 1973-இல் .. .. .. | 104 |

இம்மாவட்டத்தில் ஆண்டொன்றுக்குத் தற்போது உற்பத்தியாகும் 300 மெட்ரிக் டன்கள் மீன்களை 900 மெட்ரிக் டன்னுகப் பெருக்கிட ஏறத்தாழ ரூபாய் 15,00,000 செலவாகக் கூடிய திட்டம் தீட்டப் பெற்று, பரிசிலனையில் உள்ளது.

### மீன்குஞ்சு உற்பத்தி

| | |
|---|---|
| 1967-க்கு முன் .. | 57,00,000 |
| 1972-ல் .. .. | 2,22,50,000 |

### மீனவர் நலம்

மீன்பிடிப்பதையே தொழிலாகக் கொண்டு பல்லாண்டுக் காலம் மீன் பிடித்தும் முன்னேற்றத்தைக் காணுமல் வறுமையில் வாடும் மீனவச் சமுதாயத்தினரை முன்னேற்ற "மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்" அமைத்து அச்சங்கங்களுக்குச் செயல் மூலதனக் கடன் அளித்தல், மீனவர்களுக்கு நடுத்தரக்காலக் கடன் வழங்கல், மானியத் திட்டத்தில் நூல் வழங்கல், மானியக் கடன், வட்டியில்லாக் கடன் அளித்து வீட்டு வசதி அளித்தல், புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்கல் ஆகிய திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அவைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது :—

| | 1967-க்கு முன் இருந்தவை | 1972-ல் இருப்பவை |
|---|---|---|
| மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள். | 8 | 16 |
| வீட்டு மனைப்பட்டா | கொடுக்கப் படவில்லை. | 45 |
| வீட்டு வசதி .. .. | 10 | 44 |
| மானியத் திட்டத்தில் நைலான் நூல் வழங்குதல். | வழங்கப் படவில்லை. | ரூ.10,000 |

கோவை மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு கடந்த 5½ ஆண்டில் ரூபாய் 65,400 கடனுகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனுல் 394 மீனவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

கோவை மாவட்ட மீனவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்குக் கடன் வழங்கும் திட்டம் 1969—70-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த ஆண்டில் மீனவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்காக ரூபாய் 8,500 கடனுகவும், ரூபாய் 25,500 மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதனுல் 34 மீனவர்கள் பயன் அடைந்துள்ளனர். அதுபோலவே, கோவை மாவட்ட மீனவர்களுக்குச் செயற்கை நூல் வழங்கும் திட்டத்தின் கீழ், 1969—70 முதல் துவக்கப்பட்ட திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் ரூபாய் 4,321·38 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனுல் 237 மீனவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

### மீன்துறைப் பணிகளின் சிறப்பு அம்சங்கள்

வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த "புல் கெண்டை" என்னும் புது ரக மீன்களைத் தூண்டுதல் முறையில் அமராவதி மீன் பண்ணையில் முட்டையிடச் செய்து, இம்முயற்சியில் வெற்றி கண்டது, இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு மீன் துறைதான் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

இந்தியாவில் ஒரு ஹெக்டேர் நீர்ப்பரப்பில் ஆண்டுக்கு மிகஅதிகமான அளவு மீன்களை உற்பத்தி செய்வது 'அமராவதி நீர்த்தேக்கம்' தான் என்பதும் பெருமைக்குரிய செய்தியாகும்.

இவ்விரு சாதனைகளும் கோவை மாவட்ட மீன்வளத் துறையின் செயல் திறமையை எடுத்துக் காட்டுகின்றன.

### கோவை மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

கோவை மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கோவையிலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள காரமடைப்பகுதியில் நிறுவப்பெறும். இதற்காக 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சர்க்கரை ஆலையை அமைக்க ரூ. 2 கோடி சிலவாகும்; இங்கு நாளொன்றுக்கு, 1250 டன் கரும்பு பிழியப் படும்.

தந்தி : " காட்டன் "

போன் : ஆபீஸ் : 216 & 321
வீடு : 310 & 311
" பவானி "

# சுந்தரம் நூற்பு ஆலை

தபால் பெட்டி எண் : 25

கொமாரபாளையம் அஞ்சல், (வழி) ஈரோடு

நிறுவப்பட்ட கதிர்கள் : 25,228 முறுக்குக் கதிர்கள் : 1,200

டெக்ஸ் மார்க் நெ. 2950
16 நிர் முதல் 100 வரை

கைத்தறி, விசைத்தறி, பனியன், உற்பத்திக்குத் தேவையான
முதல் தர கோன்—கட்டு நூல்—முறுக்கு நூல் தயாரிப்பாளர்கள்.

குறிப்பு :—எமது மேற்கண்ட ஆலைகளில் தயாராகும் நூல்கள், பல வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உரிமையாளர்கள் :

ஜே. கே. கே. அங்கப்பன், ஜே. கே. கே. சுந்திரம்,
ஜே. கே. கே. நடராஜா, ஜே. கே. கே. முனிராஜா.




தொழிற்சாலைகள் நிறைந்த கோவை மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களும் நிறைந்துள்ளன. கோவை மாவட்டம் வால்பாறை நகரிய எல்லையில் மட்டும் 47,038,88 ஏக்கரில் தேயிலை பயிரிடப்படுகிறது. அப்பகுதியில் 56 தேயிலைத் தோட்டங்கள் (Tea Estates) உள்ளன. அவைகள் 18 தொகுதிகளாக (Groups) இணைந்து இயங்குகின்றன.

வால்பாறை நகரிய எல்லையில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் ஏறத்தாழ 30,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஏறத்தாழ 3,000 தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். பெரும்பாலான தொழிலாளர்கள் நாள்தோறும் சராசரி ரூபாய் 3 முதல் 4 வரை கூலியாகப் பெறுகின்றனர்.

தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே எழுந்த கூலிப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில், தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக அண்மையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தேயிலை பறிக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் குறைந்த அளவுக் கூலி ரூபாய் 2·95 ஆகவும், ஆணுக்குக் குறைந்த அளவு கூலி ரூபாய் 3·50 ஆகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. •இந்த அளவு கூலி பெற ஒவ்வொரு பெண்ணும் ஆணும் முறையே 10 கிலோ, 12 கிலோ தேயிலைக் கொழுந்துகளைப் பறிக்க வேண்டும். அதற்கு மேல் பறிக்கும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் 6½ காசு கூலியாக வழங்கப்படுகிறது.

தேயிலையைப் பதப்படுத்துவதற்காக வால்பாறை நகரியப் பகுதியில் மட்டும் 26 தேயிலை பதப்படுத்தும் தொழிற்சாலைகள் (Tea Factories) உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூள் உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் பெரும் புகழ் பெற்றுள்ளது.

# நலம் பயக்கும் நல்வாழ்வுப் பணிகள்

நாட்டுமக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டுள்ள தமிழ் நாடு அரசு, கோவை மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் வெப்பமும், வறட்சியும் நிலவுவதால், காலரா, பெரியம்மை, மலேரியா, 'பிளேக்' முதலிய நோய்கள் தோன்றக் கூடும் என்பதைக் கவனத்தில் கொண்டு கோவை மாவட்ட மக்கள் நல்வாழ்விற்கான பணிகளைச்செய்வதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கும் எளிதில் மருத்துவ வசதிகள் கிடைத்திட வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு முதல் நிலை நல்வாழ்வு நிலையத்தைத் துவக்கிவரும் தமிழ் நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு 18 முதல் நிலை நல்வாழ்வு நிலையங்களைப் ( Primary Health Centres ) புதிதாகத் திறந்துள்ளது.

புதிதாகத் திறக்கப்பட்ட முதல்நிலை நல்வாழ்வு நிலையங்கள்

| ஆண்டு | திறக்கப்பட்ட நல்வாழ்வு நிலையங்கள் |
|---|---|
| 1967 .. .. | 1 |
| 1968 .. .. | 8 |
| 1969 .. | 2 |
| 1970 .. .. | 4 |
| 1971 .. .. | 3 |
| மொத்தம் | 18 |

கோவை மாவட்டத்தில் தற்பொழுது 45 முதல் நிலை நல்வாழ்வு நிலையங்கள் செயல்படுகின்றன. கோவை மாவட்டத்தில் 41 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 41 முதல்நிலை நல்வாழ்வு நிலையங்கள் என்ற அளவுக்கும் மேலே, மேலும் 4 நிலையங்கள் செயல்படுவதால் கோவை மாவட்டக் கிராமப்புற மக்களுக்கு எளிதில் மருத்துவ வசதிகள் கிடைக்கின்றன. அதன் பயனுக் காலரா, பெரியம்மை, மலேரியா, பிளேக் ஆகிய நோய்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு விட்டன.

பெண்களை இந்த நாட்டின் கண்களாகவும், குழந்தைகளை எதிர்காலத்தின் தூண்களாகவும் கருதும் தமிழ்நாடு அரசு, கடந்த 5¼ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் 60 தாய் சேய் நல விடுதிகளைத் ( Maternity and child welfare centres ) திறந்துள்ளது. அவைகளின் விவரம் பின்வருமாறும் அமைந்துள்ளன.

புதிதாகத் திறக்கப்பட்ட தாய்சேய் நல விடுதிகள்

| ஆண்டு | திறக்கப்பட்ட தாய்சேய் நல விடுதிகள் |
|---|---|
| 1968 .. .. | 28 |
| 1969 .. .. | 18 |
| 1970 .. .. | 9 |
| 1972 .. .. | 5 |
| மொத்தம் | 60 |

தற்பொழுது கோவை மாவட்டத்தில் மொத்தம் 322 தாய்சேய் நலவிடுதிகள் பணியாற்றுகின்றன.

"டிரிபில் ஆண்டிஜென்" ( Triple Antigen ) எனப்படும் மூன்று நோய்த் தடுப்பு ஊசி போட்டதால் கோவை மாவட்டத்தில் பின்கண்டவாறு 66, 619 குழந்தைகள் கக்குவான், காசநோய், தொண்டை அடைப்பான் ஆகிய மூன்று கொடிய நோய்களால் தாக்கப்படாத தன்மையைப் பெற்றுள்ளனர்.

| ஆண்டு | மூன்று நோய் தடுப்பு ஊசி போடப் பெற்ற குழந்தைகள் |
|---|---|
| 1967 .. .. | 5,963 |
| 1968 .. .. | 4,520 |
| 1969 .. .. | 5,065 |
| 1970 .. .. | 6,864 |
| 1971 .. .. | 31,687 |
| 1972 (31–12–72 வரை) | 12,520 |
| மொத்தம் .. | 66,619 |

மகப்பேறு எய்தும் நிலையில் உள்ள பெண்களுக்கும், மகவுக்குப் பாலூட்டும் நிலையில் உள்ள தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு அளிக்கும் திட்டத்தின் கீழ், "யூனிசெப்" உதவியின் மூலம் கிடைக்கப்பெறும் பால்பவுடரையும், 'கேர்' உதவியின் மூலம் கிடைக்கப்பெறும் மக்காச் சோள-சோயாப் பாலும் (Corn Soya Milk), "சாலட் எண்ணெய்யும் (Salad oil) கோவை மாவட்டத்தில் வழங்கப்பெற்ற வகையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு அமைந்துள்ளது.

வழங்கப்பட்ட பால் பவுடர்

| ஆண்டு | வழங்கப்பட்ட அளவு (பௌண்ட்) |
|---|---|
| 1967 .. . | 67,000 |
| 1968 .. .. | 12,469 |
| 1969 .. .. | 56,926 |

வழங்கப்பட்ட சோயாப் பால்

| ஆண்டு | அளவு (கிலோ) |
|---|---|
| 1971 .. .. | 43,523 |
| 1972 .. .. | 86,978 |

வழங்கப்பட்ட சாலட் 'எண்ணெய்'

| ஆண்டு | அளவு (கிலோ) |
|---|---|
| 1971 .. .. | 4,506 |
| 1972 .. .. | 7,506 |

பயன்பெற்ற குழந்தைகள்

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1971 .. .. | 14,508 |
| 1972 .. .. | 28,999 |

மேலும்'யூனிசெப்' நிறுவனத்திலிருந்து கிடைத்த மருந்து மற்றும் துணை உணவுப் பொருள்கள் முதல் நிலை நல்வாழ்வு நிலையம், நகராட்சி மன்றங்கள் மூலம் வழங்கப்பெற்றுள்ளன.

பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் ஏராளமான பேர்களுக்கு அம்மைத் தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது. கடந்த 5¼ ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட அளவில் அம்மைத் தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது.

| ஆண்டு | அம்மைத் தடுப்பு ஊசி குத்தப்பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 80,051 |
| 1968–69 .. .. | 2,27,486 |
| 1967–70 .. .. | 2,12,878 |
| 1970 .. .. | 1,30,290 |
| 1971 .. .. | 1,33,834 |
| 1972 .. .. | 1,34,740 |




சிட்கோவின் சிறப்பான பணி

தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் மேம்பாட்டிற்காகச் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தை (SIDCO) இன்றையத் தமிழ்நாடு அரசு 1970-ஆம் ஆண்டில் துவக்கியது. சிறு தொழில்கள் சிறப்பாக நடைபெற்று வரும் கோவை மாவட்டத்தில் மேலும் சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக 24–4–1971 அன்று கோயம்புத்தூரில் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கிளை அலுவலகம் திறக்கப்பட்டது. அக் கிளை அலுவலகம் 12–5–1971 முதல் கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் சிறு தொழில்கள் மேம்பாட்டைப் பணியாற்றி வருகிறது.

'சிட்கோ'வின் கோயம்புத்தூர் கிளை அலுவலகம் கோவை மாவட்டத்தில் உள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு இயந்திரம் வாங்குவதற்கும், பணிக் கொட்டகைகள் அமைக்கவும், வாடகைக் கொள் முதல் திட்டத்தின் ( Hire Purchase Scheme ) கீழும், கடன் திட்டத்தின் ( Loan Scheme ) கீழும், பின்கண்டவாறு உதவி செய்துள்ளது.

இயந்திரம் வாங்க உதவும் திட்டம்

| 'சிட்கோவின்' உதவி பெற்ற யூனிட்டுகள். | அனுமதிக்கப் பெற்ற உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|
| 41 .. .. | 14,55,089 |

பணிக் கொட்டகை கட்ட உதவும் திட்டம்

| பயன்பெற்ற யூனிட்டுகள். | அனுமதிக்கப் பெற்ற உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|
| 5 .. .. | 1,87, 500 |

கடன் உதவித் திட்டம்

| உதவி பெற்ற யூனிட்டுகள். | கடனுக்க கொடுத்த தொகை (ரூபாய்) |
|---|---|
| 9 | 28,500 |

'சிட்கோ'வின் கோயம்புத்தூர் கிளை இதுவரை கோவை, சேலம், நீலகிரி, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் உள்ள 100 சிறு தொழில் யூனிட்டுகளுக்கு ரூபாய் 32,36,002 உதவியுள்ளது. அவ்வாறு உதவி பெற்றுள்ள தொழிற்சாலைகள் தொழில் வாரியாகக் கீழ்க் கண்ட அளவில் அமைந்துள்ளன.

'சிட்கோ' மூலம் உதவிபெற்ற தொழிற்சாலைகள்

| தொழிற்சாலையின் வகை | உதவி பெற்ற எண்ணிக்கை |
|---|---|
| பொறியியல் தொழிற்சாலை .. | 57 |
| அச்சகத் தொழிற்சாலை .. | 10 |
| பிளாஸ்டிக் தொழிற்சாலை .. | 7 |
| இரசாயனத் தொழிற்சாலை .. | 6 |
| உணவுப் பொருள் தொழிற்சாலை. | 7 |
| மர அடிப்படையான தொழிற்சாலை | 5 |
| மின்சாரப் பொருள் தொழிற்சாலை | 1 |
| காகிதப் பொருள் தொழிற்சாலை | 2 |
| 'மொசைக்' கல் தொழிற்சாலை. | 1 |
| கண்ணாடித் தொழிற்சாலை .. | 1 |
| 'டயர்' ரீட்ரடிங் தொழிற்சாலை | 2 |
| துணிகளில் அச்சிடுதல், மற்றும் சாயம் ஏற்றும் தொழிற்சாலை. | 1 |
| மொத்தம் | 100 |

இக் கிளை நிறுவனம், 'சிட்கோ'வின் மூலம் சிறு தொழில் யூனிட்டுகள் உதவி பெறுவதற்காக இதுவரை 2,180 மனுக்களைத் தொழில் அதிபர்களுக்கும், புதிய தொழில்களைத் துவக்கவிருக்கும் தொழில் முனைவோருக்கும் வழங்கியுள்ளது.

குறிச்சியில் ஒரு தொழிற்பேட்டை விரைந்து வளர்கிறது

கோவை நகருக்கு அருகில் உள்ள 'குறிச்சி' என்ற இடத்தில் நெசவாளர்களுக்குத் தேவையான துணைக் கருவிகளைத் தயாரிப்பதற்காக ஒரு தொழிற் பேட்டையை 'சிட்கோ' அமைத்து வருகிறது. இத் தொழிற்பேட்டையில் பணிக் கொட்டகை ஒதுக்கீடு செய்து கொடுக்கும்படி இது வரை 47 மனுக்கள் 'சிட்கோவின்' கோவை அலுவலகத்திற்கு வந்துள்ளன. இன்னும் சில மனுக்கள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிச்சி தொழிற்பேட்டையில் 50 பணிக் கொட்டகைகள் கட்டி முடிக்கப்பட்டுத் தொழில் முனைவோருக்கு (Enterpreneurs) ஒதுக்கீடு செய்யப்படும்.

கோவை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான தாராபுரம் வட்டத்தில் 'ஜனதா தொழிற்பேட்டை' துவங்குவதற்கான சாத்தியக் கூறுகளை 'சிட்கோ' ஆராய்ந்து வருகிறது.




தமிழ் நாட்டில் கோவை மாவட்டம் ஆனைமலைப் பகுதியில் உள்ள காடம்பாறையில் 400 மெகவாட் உற்பத்தித் திறன் கொண்ட குழாய் நீர்த் தேக்கத் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் திட்டத்திற்குத் தேசியத் திட்டக் குழு தன்னுடைய ஒப்புதலை அண்மையில் அளித்துள்ளது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தைச் சேர்ந்த ஆனைமலைப் பகுதியில் இந்தத் திட்டம் நிறுவப்படும். காடம்பாறையில் அமையும் அணை, பொள்ளாச்சியிலிருந்து 72 கிலோ மீட்டர் தூரத்திலும், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வால்பாறை நகரத்திலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவிலும் அமையும். மேல் ஆழியாறு "கேம்ப்" இடத்திலிருந்து இங்கு நிறுவப்படும் மின் நிலையம் 7 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும்.

இந்தத் திட்டத்தின் மூலதனச் செலவு மதிப்பீடு ஏறத்தாழ ரூபாய் 35 கோடியாக இருக்கும். காடம்பாறையில் ஒரு நீர்த் தேக்க அணை, 1·25 கிலோ மீட்டர் நீளத்தில் ஒரு மின் குடைவறை (Tunnel) நிலத்திற்கடியில் ஒரு மின் நிலையம், இப்பொழுதுள்ள மேல் ஆழியாறு அணையுடன் தொடர்புபடுத்த ஒரு கிலோ மீட்டர் நீளத்தில் மின்சாரம் தயாரிக்க உபயோகித்த தண்ணீரைக் கொண்டு செல்லும் குடைவறை (Tail Race Tunnel) ஒன்று ஆகியவை இத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.

இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கினால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இதுதான் இந்த மாதிரி மின் நிலையங்களில் இரண்டாவதாக அமையும். இதே மாதிரி ஒரு நீர் மின் திட்டம் ஆந்திர மாநிலத்தில். உள்ள நாகார்ஜுன சாகர் குழாய் நீர்த் தேக்கத்திட்டத்தின் கீழ்ச் செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழ் நாட்டில் நிலத்திற்கடியில் அமையப் பெறும் முதல் மின் உற்பத்தி நிலையமாகக் காடம்பாறை குழாய் நீர் மின் நிலையம் அமையும். ஒரு மின் நிலையத்திற்குப் பெரிய அளவில் யூனிட் அமைப்பினைப் பெற்றுள்ள, மாநிலத்திலேயே மிகப் பெரிய, நீர் மின் நிலையமாகவும் இது அமையும்.

நான்கு 100 மெகவாட் திறனுள்ள இயக்கத் திசை மாற்றக் கூடிய பம்பு டர்பைன் பிரிவுகள் (Reversible pump Turbine units) காடம் பாறை குழாய் நீர்த் தேக்கத் திட்டத்தின் இறுதியில் அமையும். உச்ச மின் சுமைக் காலங்களில், காடம் பாறை அணையில் தேக்கப்பட்டுள்ள நீரினைப் பயன்படுத்துவதன் மூலம், இந்த நான்கு பிரிவுகளும் மின் உற்பத்திக் கருவிகளாக இருக்கும்.

கல்பாக்கம் அணு மின் நிலையம் நெய்வேலி, எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்களிலிருந்து உச்ச நேரமில்லாத காலங்களில் கிடைக்கப் பெறும் உபரியாக உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பெற்று, மேல் ஆழியாறு அணையிலிருந்து காடம் பாறை அணைக்குத் தண்ணீரை மேல் நோக்கிக் கொண்டு செல்லும் குழாய்களாக இக் கருவிகள் இயங்கும்.

இத் திட்டத்தின் கீழ் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டுப் பிறகு விழுகிற நீரானது, கீழ் மட்டத்தில் உள்ள ஒரு நீர்த் தேக்கத்தில் அடைக்கப்பட்டு, மேலும் அதிக மின்சார உற்பத்திக்காக மேலே உள்ள நீர்த் தேக்கத்திற்குக் குழாய் மூலம் கொண்டு செல்லப்படுவதால், வழக்கமாக உள்ள நீர் மின் திட்டங்களுக்கு வேண்டியதைப்போல் அல்லாமல் இத் திட்டத்திற்குச் சிறிதளவு நீர்த் தேக்கமே போதுமானது. குறிப்பாக, இயற்கையான நீர் மின் ஆதாரங்கள் மிகவும் குறைவான நிலையில் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு இப்படிப்பட்ட திட்டம் மிகுந்த பயன் அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

இந்தத் திட்டத்தில் மொத்தம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியானது இரண்டு ஒற்றைச் சர்க்யூட் 230 கே.வி. கம்பித் தொடர்களின் மூலம், உடுமலைப் பேட்டையில், தமிழக மின் இணைப்புடன் (Grid) இணைக்கப்படும்.

கடந்த சில ஆண்டுகளாக கிராம மின் வசதித் திட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவத்தை நாம் அளித்து வந்துள்ளோம். வேளாண்மை விசையேற்றங்கள் மின்சாரத்தினால் இயக்கப்படுவதால் பகல் நேரங்களில் மிக உச்ச அளவில் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு இரவில் குறைந்த அளவு மின் சுமை உள்ள நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளைச் சமாளிக்க, குழாய் நீர்த் தேக்க அமைப்புகள் மிகவும் பொருத்தமானவையாகும். ஏனெனில், மின் இணைப்பில் மின் உற்பத்தித் திறனை நிரப்பும் வகையில் உச்ச மின் சுமை நேரத்தில் அவை மின்சாரத்தை உற்பத்தி செய்வதுடன், மின் சுமை குறைவாக உள்ள நேரத்தில் அவை குழாய்களாகப் பயன்படுத்தப்பட்டு, அனல் நீர் மின் நிலையங்களிலிருந்து வெளியாகும் மின் சக்தியைச் சேமிக்கவும் செய்கின்றன. இப்படி இல்லையென்றால், இந்த நிலையங்கள் இரவு நேரங்களில் முழுச் சுமையுடன் இயங்காமல் போய்விடலாம்.

ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், இத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் தமிழ்நாடு மின் வாரியம் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.

காடம்பாறை நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் இவ்வாண்டு துவங்கப்படும். இதன் முதல் 100 மெகவாட் பிரிவானது 1977–78-ல் செயல்படத் துவங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்பட விருக்கும் காடம்பாறை குழாய் நீர் மின் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டான 1978–79-ல் நிறைவேற்றப்பட்டுச் செயல்படத் துவங்கும்.





# கோயம்புத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடம் லிமிடெட்

திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-18.

தபால் பை நெ. 1522. தொலைபேசி: 22889.

தலைவர்:

திரு. A. M. இராசா, எம். ஏ., எம். எல். ஏ.,

உபதலைவர்:

திரு. T. S. இராமலிங்கம், பி. எஸ்ஸி.,

மாநிலத்திலுள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவையான புத்தகங்கள், பாரங்கள் முதலியனவும், அச்சியற்றல் தொடர்பான அனைத்து வேலைகளும், அலுவலகங்களுக்குத் தேவையான எல்லாவிதமான எழுதுபொருள்களும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

* மாநிலம் முழுவதிலும் உள்ள அச்சுக்கூடங்களிலும் சிறந்த அச்சுக்கூடம் எனப் புகழ் பெற்றது.

* எல்லாவிதமான ரப்பர் ஸ்டாம்புகளும் தயார்செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

K. மாரப்பன், எம். ஏ.,
செயலாளர்.



With the best compliments from

## UNITED COTTON TRADERS

45, Dr. Nanjappa Road,
COIMBATORE-60018

Tel.: SAGAYAM

Phone { Office : 35850
Res. : 34550

Grams: CONVEYANCE Phone: 30355

LGB

## L. G. BALAKRISHNAN & BROS. PRIVATE LTD

India House, Trichy Road, Coimbatore-641018.

MOTOR SALES & SERVICE DEPT

Overhauling Perkins & Tata Diesel Engines
Specialised Servicing of Fuel Injection Equipments;
by qualified & trained staff on most modern & highly precisioned machines.
Metalspraying of Crankshafts & Camshafts by latest scientific method
with latest machineries imported from Europe.

*Authorised Distributors for*

BOSCH SERVICE — MICO & BOSCH — MICO SERVICE

Products for Coimbatore & Nilgiris Districts

Fuel Injection Service Station branch at "Appachi Buildings", Ettines Road, Ootacamund-643001
Phone: 2730
Grams: CONVEYANCE

# பரிசு பெற்ற உழவர் பெருமக்கள்

பல்வேறு வகையில் கோவை மாவட்டத்தின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்து வரும் வேளாண்மைத் துறை, உழவர் பெருமக்களிடையே 'வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டும்', என்ற விரும்பத்தக்க போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தவும், அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் முறைகளை உழவர்களிடையே பரப்பவும் வேண்டி, ஆண்டு தோறும் மகசூல் போட்டி நடத்தி வருகிறது. மகசூல் போட்டி கிராம, வட்டார, மாவட்ட, மாநில நிலைகளில் நடத்தப்பட்டு அதில் உயர்ந்த அளவு மகசூல் பெற்ற உழவர் பெருமக்களுக்குப் பரிசுகள், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட உழவர் பெருமக்கள் மகசூல் போட்டியில் பரிசு பெற்றுள்ளனர்.

## மாவட்டப் பரிசு பெற்றவர்கள்

| பயிர் வகை | பரிசு பெற்ற உழவர் பெருமகனின் பெயரும், ஊரும். | பரிசின் வகை. | ஏக்கர் மகசூல் (கிலோ கிராம்.) |
|---|---|---|---|
| | **1967-68-ஆம் ஆண்டு** | | |
| நெல் | திரு ஜி. ராமச்சந்திரன், பொள்ளாச்சி | முதற் பரிசு. | 3,431 (ஆடுதுறை-27) |
| நெல் | திரு அர்ஜுன உடையார், பேரூர் | இரண்டாம் பரிசு. | 2,470 (ஆடுதுறை-27) |
| | **1968-69-ஆம் ஆண்டு** | | |
| நெல் | திரு ம. என். இரங்க செட்டியார், பெரியநாயக்கன் பாளையம். | முதற் பரிசு. | 3,833 (ஐ. ஆர். 8) |
| நெல் | திரு என். ரெங்கசாமி, பெரியநாயக்கன் பாளையம் | இரண்டாம் பரிசு. | 3,145 (ஐ. ஆர். 8) |
| சோளம் | திரு என். கே. கோபால், கணபதி | முதற் பரிசு. | 2,550 (சி. எஸ். எச். 1) |
| | **1969-70-ஆம் ஆண்டு** | | |
| சோளம் | திரு கே. துரைசாமி நாயுடு, பெரியநாயக்கன்பாளையம் | முதற் பரிசு. | 2,279 (சி. எஸ். எச். 1) |
| | **1970-71-ஆம் ஆண்டு** | | |
| நெல் | திரு கே. எம். மாணிக்கம், குகளூர், கோபி | முதற் பரிசு. | 3,471 (ஐ. ஆர். 8) |

## மாநிலப் பரிசு பெற்றவர்

1969-70-ஆம் ஆண்டில் கொடுமுடியைச் சார்ந்த திரு கே. பி. துரைசாமி அவர்கள், ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு, ஏக்கருக்கு 4,847 கிலோ நெல் விளைவித்து மாநில முதற் பரிசு பெற்றுள்ளார்.

1970-71-ஆம் ஆண்டிலும் திரு கே. பி. துரைசாமி அவர்களே ஐ. ஆர். 8 பயிரிட்டு ஏக்கருக்கு 4,618 கிலோ நெல் விளைவித்து இரண்டாம் முறையாக மாநில முதற் பரிசு பெற்றுள்ளார்.



# வெண்பாப் போட்டி

## 52. மிகைநாடி மிக்ககொளல் மேல்

நகைநாடி உன்னருகே நான்வந்தால் தங்க
நகைகேட் டழுவதுமேன் நங்காய் ?—பகையைப்
புகைக்கும் நகைபெரிதா ? புன்னகையா ? தேர்ந்து
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சி. செள. கருப்பன், திருச்சி-15.

இங்கட் கறையுண்டு தேமாவில் நாருண்டு
பொங்கும் புனற்கும் நுரையுண்டு—எங்கும்
பகுத்துணர்ந்து நன்றுகும் பண்பேகாண் என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
எல்லையில் பல்பிறவி ஏற்றுப்பின்—நல்ல
வகையறியும் மானிடராய் வாழ அறத்தின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—அ. குமாரசாமி, தூத்துக்காடு கிராமம்.

காலமெலாம் மேனுட்டுக் கைநாடி நில்லாது
மூலப் பொருள்விளைத்து முன்னேற—நீலப்
புகைவான்கீழ்ப் பாடுபடின் பொன்கொழிக்கும் ''தாய்ப்பூ
மி'' கைநாடி மிக்ககொளல் மேல்.

—எழில்வேந்தன், சென்னை-28.

பல்விளித்தே நாளும் பகைமுடிக்கும் பொல்லாரின்
கொல்நட்பை இன்றே குழிபுதைத்தே—நல்லோய்
நகையின்றி தன்மைதரும் நல்லோர்தம் நட்பின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—நூருன்னிசா, பத்ராவதி.

கற்றூர் உரைத்தாலும் கல்லாதார் சொன்னாலும்
சற்றும் வெறுப்புதனைச் சாராது—முற்றும்
வகையறிந்தே நாமும் வளமாய் அவற்றில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—ப. குப்புசாமி, திருச்சி-4.

நகையாடல் என்றும் நலம்பயக்கும் ; நாளும்
பகையாடல் வாழ்வைப் பறிக்கும் ;—சகியே !
புகையாடல் பண்புதனில், பூஆடல் பண்பில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் கோமளச்சிரான், கோவை.

'உள்ளத் தனைய துயர்வாகும் என்றதமிழ்
வள்ளுவனார் சொன்ன வழிநிற்போம்—சொல்லில்
பகைநாடிப் பண்பை இழக்காமல் என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை

இப்பாவுக்(கு) எப்பாதான் இப்பாரில் ஒப்பாமோ ?
செப்பியசெந் நாப்போதர் சீர்குறளாம்—முப்பால்
வகையறிந்து வாழும் முறைதெரிந்து நாளும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—க.ச. இசைகொண்டான், சம்புகுட்டப்பட்டி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
இரு சி. செள. கருப்பன், கணிதத்துறை,
மண்டலப் பொறியியல் கல்லூரி,
திருச்சி—15.

# வெண்பாப் போட்டி

நாட்டில் அமைதியொடு நாம்வாழ வேண்டுமென
ஏட்டில் எழுதிவிட்டால் என்னபயன் ?—போட்டி
பகையாவும் நெஞ்சகற்றிப் பார்மக்கள் அன்பை
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சி.மு. சிவலிங்கம், மதுரை-21.

வற்ருக் குறளோன் வகுத்த வழியதனை
முற்ருய்ந்து நம்கலைஞர் முன்செல்வார்—சற்றும்
பகையாது மின்றிப் பகுத்தறிவா லாய்ந்து
மிகைநாடி மிக்கொளல் மேல்.

—எஸ். திருநாவுக்கரசு, தூத்துக்குடி

கற்கின்ற நூற்ரெகையில், காணும் திரைப்படத்தில்,
சொற்பெருக்கில் தீங்கருத்தைத் துய்க்காமல்—உற்ற
நிகழ்நற் கருத்தேற்றுத் தேர்ந்தாய்ந்து பார்த்து
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

சிந்திக்கக் கற்றுக்கொள் ; சீர்தூக்கி நல்லனசொல் ;
நந்தா அறிவொளியை நாடிநில்—மைந்தா !
தகைசான்ற கொள்கைத் தகவுடையோ ஞக
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

புகைகின்ற தீப்போலும் புன்செயலும் தீய
பகையை மறக்கும்நற் பண்பும்—தொகையாய்
வகைபிரித்து மாந்தரின்நல் வாழ்விற்கு வல்ல
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—மு. அழகிரிசாமி, உதகை.

இரவுபகல் மாறுதல்போல் ஈண்டுமக்கள் வாழ்வில்
உறவுபகை உண்டிங்கே உண்மை—இரவில்
தகைகாட்டும் விண்மீன்போல் நன்மைதிமை ஆய்ந்து
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—இரா. தியாகராசன், கத்திரிப்புலம்.

குறையொன்றைக் கூறுவதே கொள்கையாக் கொண்டு
நிறைபலவும் சொல்லாத நெஞ்சே !—அறிவாய்
" குணம்நாடி குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்ககொளல் " மேல்.

—புலவர் வெ.வா. நடராசன், சென்னை-5.

நல்லழகுள் நாமுணரா நச்சரவம் வாழ்ந்தாலும்
வெல்லத்துள் வெவ்விடமும் தோய்ந்தாலும்—சொல்லில்
பகைதேடித் தொல்அன்பு பாய்ந்தாலும் என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் நா. மலையமான், பட்டுக்கோட்டை.

பகைவனையும் அன்போடு பார்த்திருக்க, ஆங்கே
நகைமுகமும் கொண்டிடுநீ நன்கு !—தகைசால்
வகையாலே நல்லார்மற் றல்லாரின் பண்பில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

நல்லறிஞர் நட்புறவு, நங்கையரின் கற்புறவு,
வல்லோர்தம் வீர வரிவுணர்வு—நல்லோர்
தகைசான்ற வாழ்வியலின் தன்மை, இவற்றின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—பி.சி. அசனல்லி, அரக்கோணம்.

ஏராள நற்பணிகள் எம்மரசு செய்துளதில்
ஓரோர் சிறுகுறைகள் உண்டென்ருல்—சீரார்
முகைநாடித் தேனருந்தி முள்மறக்கும் வண்டாய்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—த.ச. தவமணி, அருப்புக்கோட்டை.

திட்டமுய ரைந்தாண்டுத் திட்டமும், வங்கி-உந்தை
நாட்டுடைமை யாக்குதலும் நன்மைக்கே !—வாட்டும்
பகையொழிக்கப் பாடுபடும் பாராள்வோர் போக்கில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—சண்முக. நாடிமானவன், பொன்மலை.

ஆயிரவர் ஆள நினைந்தெழினும், வென்றிடினும்
தூயசன நாயகத்தின் தோன்றல்காள் !—ஆய்ந்து
தகைநாடிச் சால்பின்மை நாடி இரண்டுள்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—க. பொன்னுராசு, சின்னிவிரம்பட்டி.

ஓங்குசிற்றூரார்கள்முன் னேறிடவே பாடுபடும்
ஆங்கா இளைஞரணித் தொண்டரெலாம்—வாங்கும்
தொகைநாடிச் சோராமல் மேலாம் அத்தொண்டின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—இராச. ஆனந்தன், பூதலூர்.

# வெண்பாப் போட்டி

நஞ்சால் பிழைத்திடலாம் ; நல்லமுதால் செத்திடலாம் ;
வஞ்சமனம் கூட வரம்தரலாம் ;—நெஞ்சே !
வகையாக ஆய்ந்து வளம்பெறவே என்றும்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—அரிமதி, தென்னகன், புதுச்சேரி.

பாணர் கவிபதனில் பல்வேறு பேதங்கள்
காணல் உலகினிலே கண்கூடு !—வீணே
பகைநாடி வாழாது பண்பொன்றே மேலாய்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

— தமிழ்க்கனல், கோவை-25.

கொஞ்சம் இளமைநலம் குன்றினளே என்றேதன்
வஞ்சி துணைவெறுக்கும் வன்நெஞ்சீர்—பஞ்சின்
நகைதோன்றின் உம்நிலையே நாடீரோ ? கற்பின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—ப. வேங்கடாசலன், கருக்காடிப்பட்டி.

வாழ்ந்தாலும் ஏசும், வலியிழந்து தாழ்ந்துநாம்
வீழ்ந்தாலும் ஏசும் வியனுலகம்—ஆழ்ந்து
தகைசான்ற மேலோர்தாம் தந்த வழியில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—கோ. பாலசுப்பிரமணியன், கும்பகோணம்.

இக்காலத் தேயெழும் எண்ணிலா நூல்களைத்
தக்கார் மதிக்குந் தரத்திலே—மிக்க
நகையும் உவகையும் நற்கருத்துங் கண்டே
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—டி.யு. சுப்பையா, புயங்களூர்.

நன்றே முடிப்பாரில் ; நாடின்பல் தீமைகளே
என்றும் இழைப்பாரில் ; ரெண்டும்செய்—தின்றூர்
வகைநாடிக் கண்டறிய வள்ளுவர்செய் தீர்வாம்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—அரு. காந்தி, கள்ளிக்குடி.

நல்லனவுந் தீயனவும், நாட்டில் நிலவிடினுங்
கல்வியொடு செல்வங் கதித்தோங்க—ஒல்லும்
வகையால் அரசினர்செய் வாகார் பணியில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—வித்துவான் நா. சிவராமமுத்துக்குமரவேல், தேனி.

நாடி மிகவருந்தி நாடெங்கும் தேடினுமே
கோடியில் யாருமிலர் குற்றமிலார்—தேடித்
தகைசால் குணமொடு குற்றம்தான் ஆய்ந்தே
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

நாட்டு நலன்கருதும் நல்லபல திட்டத்தால்
கேட்டைச் சிலரடைதல் கூடுங்காண் !—கேட்டைப்
பகைக்கண்ணுல் பார்த்துப் பழிதூற்றிப் பேசேல்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் வெ. இரா. இராசகோபாலன், ஆலங்குடி.

துரும்பும் எரிபொருளாம் தொண்டுள்ளுந் தானென்
றரும்பும் அவாவுண்டா மாக—விரும்பும்
வகையோடு வாழ்வில் வளமூட்டும் பண்பில்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் அ. ஆறுமுகம், திருச்சி-20.

சாதனையைக் காட்டும் தகுந்த விளம்பரத்தைக்
பேதமையால் தூற்றுதல் பெட்பாமோ ?—மோதும்
புகையால் நெருப்பறிந்து போற்ருதார் உண்டோ ?
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

சந்தைக்கு வந்தவற்றைச் சல்லடைக்கண் கொண்டாய்ந்து
சிந்தைக் குகந்தவற்றைத் தேர்ந்திடுக—செந்தேன்
வகையுணரும் வைத்தியர்போல் வாங்குபொருட் பண்பின்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—புலவர் அ.வே. காசிநாதன், கோடாலிக்கருப்பூர்.

யார்உலகில் மாசற்ருேர் ? யானைக்கும் கால்சறுக்கும்
பார்உலகின் பண்பிதுவே ! யார்மறுப்பர் ?—சீர்தல்
வகைதேடி வாழநனி நல்லறிஞர் போல்நாம்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—ஆ. பீளாரன்ஸ் புஷ்பத்தாய், தளவாய்புரம்.

தன்னலம் பேணுன் ; தரணிக்குத் தாமென்பான் ;
சொன்னசொல் காக்கின்ற சோர்விலான்—மின்னும்
பகைசாடி நாட்டின் பயனெண்ணும் மிக்கோன்
மிகைநாடி மிக்ககொளல் மேல்.

—வீர புருகேசன், தருமபுரி.




ஆதாயம் இல்லாமல் பேசுவோர், ஆதாரம் இல்லாமல் பேசுவோர் என்று இரண்டு வகை உண்டு.

மணிவாசகன்—நர்மதா இவர்களை நோக்கி ஓடிவந்த கூட்டத்தினரின் பேச்சிலே ஆதாயமும் இல்லை, ஆதாரமும் இல்லை; இவை இரண்டும் இல்லையே என்ற கவலையும் அவர்கள் மனத்துள் இருப்பதாகத் தெரியவில்லை....

ஒரு ஆண், ஒரு பெண், ஒரு குழந்தை என்ற கோணத்தில் பார்த்தால் அவர்கள் கணவனும் மனைவியுமாக இருந்து, கையிலிருப்பது அவர்களின் குழந்தையுமாகத்தான் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் தமக்குள் ஏதோ முடிவுகட்டியபடி அவர்களை நெருங்கி வந்தது அந்தக் கூட்டம்.

ஓர் அரை நரைக் கிழவர் வலிய வந்து சமாதானம் பேசத் தொடங்குகிறார்: ' தம்பி.. 'என் குழந்தைதான்', 'இல்லையில்லை என் குழந்தைதான் ' என்று நீங்கள் சண்டை போடுவது தவறு.. வயதிலே பெரியவன், நான் சொல்வதைக் கேளுங்கள்!'



வந்து நிற்கும் கூட்டத்திற்குப் பெரும் வியப்பு. பரபரப்பான குடும்பச் சண்டை ஏதோ நிகழப் போகின்றதே, அதைத் புரிந்து கொண்டு விலகட்டும் என்று நயமாக நம்மை விரட்டுகிறார்.. வா.. வா'' என்றபடியே அவசரமாகப் புறப்படுகிறார்.

## 5. உதகையில் ஓர் எரிமலை

''புருஷன் பெண்சாதிக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் குழந்தை பொதுச் சொத்து. குடும்பப் பூசல் குழந்தையைப் பாதிக்கக் கூடாது; இரண்டாவது கருத்துக்கு இதில் இடமேயில்லை!'' என்கிறார் ஒரு அம்மணி—அரை நரைக்கிழவரின் இல்லத்தரசி.

உதகைக்குச் சுற்றுலா வந்திருக்கும் இடத்தில், நடக்காத கல்யாணத்திற்குப் பிறகு, பிறக்காத தம் குழந்தைக்காகப் பரிந்து பேச வந்திருக்கும் அந்தப் பெரியவர்களைக் கண்டு மணிவாசகனுக்குச் சிரிப்புப் பிறக்கிறது.

அலையலையாகச் சிரிப்பு. ஆனந்த வெள்ளமாகச் சிரிப்பு; அவனுடைய சிரிப்பிலே நர்மதையின் இதயம் ஒன்றிக் கலக்கிறது. சூழ்நிலையை மறந்து அவளும் சிரிக்கத் தொடங்குகிறாள். அலைகளுக்கு நிழல் இருக்குமானால் எப்படியிருக்கும்? 'மணிவாசகனின் சிரிப்புக்கு மறுமொழி போல் சிரிக்கிறாளே நர்மதா, அதைப் போல இருக்கும்.

தீர்த்து வைக்கும் புண்ணியம் என்ற தம்மைச் சேரட்டுமே வந்தவர்கள் அக்கறையுடன் பெண்ணும் ஆணும், அனைவரும், அலையலையாகச் சிரிப்பதைப் பார்த்ததும் திகைத்து நிற்கிறார்கள்.....

''ஐயா.... நாங்கள் இரு...'' என்று நர்மதா ஆரம்பிப்பதற்குள், ''அவர்கள் தீர்ப்பைச் சொல்லட்டும், பேசாமலிருங்கள் மிஸ் நர்மதா'' என்று குறுக்கிட்டுக் கூறுகிறான் மணிவாசகன்.

''புறப்படு ரஞ்சிதம் .... போகலாம்....'' என்று தம் மனைவியை அழைக்கிறார் அரை நரைக் கிழவர்.

''என்னங்க இது..?'' என்று தயங்குகிறாள் அந்த அம்மணி.

''அவர்தான் 'மிஸ் நர்மதா' என்று சொல்லி விட்டாரே.. அவர்கள் கணவன்-மனைவி அல்ல! அதற்கும் மேலே.... புத்தியுள்ளவன் புரிந்துகொள்ளட்டும்,

அவ்வளவு விரைவாக அவர் அந்த இடத்தை விட்டுப் புறப்படுவதற்கு வேறொரு காரணமும் உண்டு.. அருகில் வந்து பார்த்த பிறகுதான் மணிவாசகனை இதற்கு முன் எங்கோ பார்த்திருப்பதாக நினைவு வந்தது. அவன் யாராக இருக்கக் கூடும் என்பதைச் சிந்தித்தறிய அவருக்குச் சிறிது தனிமை தேவைப்படுகிறது. அதனாலேயே அவர் விரைவாக விலகிச் செல்கிறார்.

அவல் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் வெறும் வாயை வேகமாக மென்றபடி மற்றவர்களும் பிரிந்து செல்கிறார்கள்.

பத்திருபது அடி தள்ளிச் சென்றதும் அந்தப் பெரியவர் திரும்பிப் பார்க்கிறார். மணிவாசகன் யார் என்பதை இனங்கண்டுவிட்டதற்கான அறிகுறிதான் அந்தப் பார்வை!

அமைதியைக் கலைக்க வேண்டுமென்ற உணர்வில், ''அந்தப் பெரியவரை எனக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது!'' என்கிறான் மணிவாசகன்.

''அவர் இங்கிதம் தெரிந்தவர், அதனுல்தானே?''

''ஆமாம்... இனிமையான சூழ்நிலையில் நம் இல்லறச் சண்டையைத் தொடர அனுமதித்து விட்டுப் போய் விட்டார் அல்லவா?''

''இந்தத் தனிமை, சண்டை போடுவதற்காகத்தான் இருக்க வேண்டுமா?''

''இதயங்கள் ஒன்றிக் கலக்கவும் இந்த இனிமையும் தனிமையும் உதவட்டுமே..''

'' ஓ ! ''

'' நர்மதா.. ''

'' ...... ''

உதகையின் குளுமை அவர்கள் உள்ளங்களுக்கு இடம்பெயருகின்றது. எல்லைக்கோடு தெரியாமல் தழுவுகின்ற மாநிலங்களைப் போல் இதயங்கள் இரண்டும் இயல்பாக ஒன்றி இணைகின்றன.

இருவர் பிடிக்குள்ளும் சிக்கியிருக்கும் குழந்தை சிணுங்குகிறது.... '' என்னை மறந்து விடாதீர்கள்'' என்ற எச்சரிக்கையோ?

''நர்மதா. இந்தக் குழந்தை யாருடையது என்று தெரியவில்லையே...''

'' எங்கிருந்து வந்திருக்கும் என்பதும் புரியவில்லையே!''

'' எவ்வளவு அழகான குழந்தை !''

'' குழந்தை என்றால் உங்களுக்குக் கொள்ளை ஆசையா? ''

'' பாசம் பெண்களின் தனிச் சொத்து என்பதாக நினைப்போ? என் நெஞ்சிலும் இரக்கம் ... பாசம் எல்லாம் இருக்கிறது..''

'' குழந்தையை நாமே எடுத்துக்கொண்டு போய் விடலாமா?''

'' நான் சட்டம் படிப்பவன் அம்மணி.. ஊரார் பொருளை அனுமதியின்றி எடுப்பது சட்டப் படி தவறு..''

'' உடைமைக்காரர் யாரென்பதுதான் தெரியவில்லையே ! ''

'' தெரியாத வரையில் இது சட்டத்தின் குழந்தை. அரசினரின் குழந்தை....' காவல் நிலையத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதுதான் நம் கடமை .. வா....போகலாம்..''

'' குதிரைச் சவாரிக்குத்தான் என் துணை வேண்டும். குழந்தையை ஒப்படைக்கப் போகும் போது கூட என் துணை வேண்டுமாக்கும்....அதுவும் காவல் நிலையத்திற்கு ! ''

'' காவல் நிலையம் என்ன, நீதிமன்றத்திற்குக் கூட என்னோடு உன்னை அழைத்துப் போக நான் தயாராகத்தான் இருக்கிறேன்''

'' ஒரு டாக்டர், நீதிமன்றத்தில் வந்து நிற்பதா..வேடிக்கைதான் ''

'' வேடிக்கையோ.. விளையாட்டோ..அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.... முதலில் புறப்படு காவல் நிலையத்திற்கு........''

'' குதிரைகளை எப்படித் திருப்பி அனுப்புவதாம் ?''

'' மனிதர்களுக்குத்தான் பாதை மறந்து போகும் ; மாறியும் போகும் ; குதிரைகளுக்கு அந்தத் திண்டாட்டம் இல்லை. நேரான இடத்தில் தானாகப் போய்ச் சேர்ந்து விடும் !''

நர்மதாவுக்கு மறுமொழி கூறியபடியே எதிர்த்திசையில் ஒற்றையடிப் பாதையில் ஏறிச் செல்கிறான் மணிவாசகன். குழந்தை எந்தப் பாதை வழியே வந்திருக்கக் கூடும் என்பதை அறிய முயற்சி. சுனையை அடுத்து மேல் நோக்கிப் போகும் ஒற்றையடிப் பாதையில் நாலடி நடந்த பிறகு மேட்டுக்கு அப்பால் சமவெளி. அதன் முடிவில் சிறு சிறு கட்டடங்கள். ஏதேனும் வீடுகள்....கடைகள் இருக்கலாம்... அல்லது காவல் நிலையமாகக் கூட இருக்கலாம்.

'' போக்கிரிப் பயலே.''

—என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்புகிறான் மணிவாசகன். அவனுடைய அதிர்ச்சியைக் கண்டதும் நர்மதா கலகலவெனச் சிரிக்கத் தொடங்குகிறாள்..

'' என்ன சிரிப்பு? எனக்கு அதிர்ச்சியோ, அவமானமோ ஏற்பட்டால் உனக்குச் சிரிப்பு வருகிறதோ?''

'' கூப்பிட்டது யார், கூப்பிட்டது யாரை என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் உங்களுக்கு அதிர்ச்சி வருவானேன்? இங்கே பாருங்கள். குழந்தையைத் தேடிக் காவலர்களே வந்து விட்டார்கள் '' என்கிறாள் நர்மதா.

ஏரிக்கரையைச் சுற்றிச் சுற்றித் தேடி வந்த காவலர்கள் 505-ம், 606-ம் தான், நர்மதாவின் கையில் குழந்தையைப் பார்த்ததும் உற்சாக மிகுதியால் ''போக்கிரிப் பயலே'' என்று கூவியிருக்கிறார்கள்.

அவர்களின் பின்னால் கற்பகம் பரபரப்பாக வந்து நிற்பதைப் பார்த்ததும் நர்மதாவுக்கு மன ஆறுதல்........ 'கற்பகமே குழந்தையின் தாய்' என்ற நம்பிக்கை நர்மதாவுக்கு.... 'குழந்தையின் தாயைக் கண்டு பிடித்து விட்டோம்' என்ற நிம்மதி கற்பகத்துக்கு.

முந்தைய இரவு தன் பொறுப்பில் விடப்பட்டிருந்த குழந்தை காணப்படவில்லையே என்ற வேதனையில் துடித்துக்கொண்டிருந்த கற்பகத்திற்கு, குழந்தை கிடைத்த மகிழ்ச்சியுடன் குழந்தைக்குப் பெற்றோர்களும் கிடைத்துவிட்ட நிம்மதியும் சேரவே நெஞ்சுக்கு இதமாகத் தோன்றுகிறது.

'' ஏட்டய்யா.. குழந்தை தன்னோட அப்பா அம்மாவைக் கண்டுபிடிச்சுட்டுது '' என்று மகிழ்ச்சி மேலிடக் கூறுகிறாள் கற்பகம்.

'' அப்பாவா ? ''

'' அம்மாவா ? ''

—மணிவாசகனும் நர்மதாவும் ஏக காலத்தில் கூவுகிறார்கள்.



'' சார், இது எங்கள் குழந்தையில்லே ''

''நாங்கள் கணவன்—மனைவியுமில்லே.''

கற்பகத்திற்கும் காவலர்களுக்கும் இது பெரும் அதிர்ச்சி .... இவர்கள் யாராக இருந்தால் இனிமேல் அவர்களுக்கென்ன? குழந்தையின் பெற்றோரைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு இன்னும் தீரவில்லையே!

'' நீங்க ரெண்டு பேரும் — '' என்று சந்தேகத்துடன் மீண்டும் கேட்கிறார் ஏட்டய்யா..

'' சத்தியமாக நாங்கள் இந்தக் குழந்தையின் தாய் தகப்பன் இல்லே.. அவர் யாரோ.. நான் யாரோ'' என்கிறாள் நர்மதா. அவளை இடைமறித்து, ''அவங்க யாரோ, நான் யாரோவாகத்தான் இருந்தோம் போன நிமிஷம் வரை.... இந்தக் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக ஓடிவந்த ஒரு விநாடியில், ஒரே நோக்கத்தோடு செயல்பட்ட அந்த ஒரு நிமிடத்தில் நாங்கள் யார் யாரோ என்ற நினைவு மறந்து விட்டது.... எங்களுக்குள் நெருக்கடி பிறந்து விட்டது..'' என்கிறான் மணிவாசகன்.

அறிமுகமில்லாத காவலர்களிடம் அவன் அவ்வாறு கூற வேண்டியதன் நோக்கம்? தன்னை நர்மதைக்கு முழுமையாக உணர்த்துவதற்கு இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டதுதான் காரணம்..... வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் வல்லவனாயிற்றே மணிவாசகன் !

ஏட்டய்யாவின் முகத்தில் இளஞ்சிரிப்பு. '' பரவாயில்லே ! பெற்றவர்களைப் பிரிஞ்சு வந்த குழந்தை இங்கே இரண்டு பேர்களைச் சேர்த்து வைக்கும் பாலமாகவும் இருந்திருக்கிறதே'' என்று பாராட்டுகிறார். சிரித்துப் பேசிய நேரத்திலும் அவர் மனத்துள் கவலை.. இந்தக் குழந்தை அனாதையாகி விடக்கூடாதே என்ற பெருங்கவலை..

அதே நேரத்தில்—

''கற்பகத்தக்கா— கற்பகத்தக்கா..'' என்று கூக்குரலிட்டபடி குதிரைக்காரக் கோவிந்தன் ஓடிவருகிறான்.

'' என்ன கோவிந்தா?'' என்று பதறுகிறாள் கற்பகம்.

'' ஒன்னை எங்கெல்லாம் தேடறது ? உம் புருசனை வீட்டுக்குள்ளே பூட்டிப் போட்டுட்டே.. புள்ளையைத் திண்ணையிலே தூங்க வச்சிட்டு வந்துட்டே.. உம் புருசனுக்கு காக்கா வலிப்பு.. புள்ளைக்குப் பசிமயக்கம்..''

''அடிப் பாவி!'' என்று கதறியபடி புறப்படுகிறாள் கற்பகம். புறப்பட்டவள், '' போகலாமுங்களா ஏட்டய்யா?'' என்று அனுமதி கேட்டுத் தயங்கி நிற்கிறாள்.

'' போம்மா—போ..போ..'' என்று தலையசைக்கிறார் ஏட்டய்யா....புயலாகப் புறப்பட்டுப் போகிறாள் கற்பகம்.

மணிவாசகன், ''இந்தப் பெண் உங்கள் காவலில் இருப்பவளா?'' எனக் கேட்கிறான்.

'' ஆமா சார்.. முன்னெல்லாம் ஒரு மாதிரி.. இப்ப பாவம், நல்ல பெண்ணாகத்தான் நடந்துக்கிறா....'' என்கிறார் ஏட்டய்யா. கோவிந்தன் குறுக்கிட்டு, 'கற்பகத்தக்கா புருசனுக்கு காக்கா வலிப்பு....தேரு திருவிழா, கூட்டம், கொண்டாட்டம்னு வெளியிலே வந்தாருன்னு சந்தோஷமும் ஆகாது..சந்தடியும் ஒத்துக்காது.....அதுக்காக வீட்டுக்குள்ளாற பூட்டிப் போட்டுட்டுக் கற்பகம் வெளித் திண்ணையிலே படுத்திருக்குது..அதனாலே சந்தேகப்பட்டு............'' என்று விவரம் கூறுகிறான்.

'' ஒரு தடவை தவறு செய்திருந்தால் அதையே தொடர்ந்து செய்வார்கள் என்று தீர்மானமா? திருந்தியிருக்கலாமே என்ற நம்பிக்கை ஏன் உங்களுக்கு வருவதில்லே?'' என்று சீறுகிறாள் நர்மதா.

ஏட்டய்யா பதில் கூறுவதற்குள், ''சாதாரண மனிதர்களுக்கும், சட்டத்தின் கண்களுக்கும் இதுதான் வேறுபாடு நர்மதா'' என்கிறான் மணிவாசகன்.

நர்மதாவின் இதயம் முழுவதும் இரக்கம். அவள் பார்வையில் அந்தப் பரிவு தெரிகின்றது.

'' நர்மதா! ஒரு டாக்டரின் இரக்கம் கற்பகத்தின் கணவனுடைய நோயைத் தீர்க்கலாமே...'' என்கிறான் மணிவாசகன்.

'' ஒரு வக்கீலின் திறமை அவள் மேலுள்ள கறையைப் போக்கலாமே'' என்கிறாள் நர்மதா.

'' நீ டாக்டர் !''

'' நீங்கள் வக்கீல் !''

'' நாம் இருவருமே சமுதாயத்துக்கு நன்மை தர வேண்டியவர்கள்.''

'' போகலாமா !''

'' புறப்படு.... ''

'' குழந்தை ?''

'' போலீசாரிடம் ஒப்படைத்து விட்டோமா..... பெற்றவர்கள் தேடி வருவார்கள் காவல் நிலையத்திற்கு'' என்று மணிவாசகன் கூறியதும் ஏட்டய்யா, ''ஆமாம் ..அட்ரஸைக் கண்டுபிடிக்க போஸ்டாபீஸ்.. ஆளைக் கண்டுபிடிக்க போலீஸ் ஸ்டேஷன்!'' என்கிறார்.

மகனைப் பிரியும் தாயைப் போல் குழந்தையின் நெற்றியில் முத்தம் கொடுத்து விட்டுப் புறப்படுகிறாள் நர்மதா.


தமிழரசு

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 10-00 |
| அரையாண்டு | ரூ. 5-00 |
| தனி இதழ் | 40 காசு. |


'' ஏட்டய்யா, குழந்தையின் பெற்றோர் தேடிவரவில்லையானால்..'' என்று மணிவாசகன் கேட்கவும், '' இரண்டு நாட்கள் எங்கள் பொறுப்பில் வைத்திருந்து பார்ப்போம். யாருமே தேடி வரவில்லை என்றால் மேலிடத்துக்குத் தகவல் அனுப்புவோம்; அனுப்பி விட்டு, இரண்டு மைல் தள்ளி ஒரு பாதிரியார் இருக்கிறாரே, அவரிடம் ஒப்படைத்து விடுவோம்.. அவர் நடத்தும் அனாதை இல்லத்திலே இவனுக்கு அடைக்கலம் கிடைக்கும் !'' என்று மறுமொழி கூறுகிறார் ஏட்டய்யா.

பால்வடியும் முகத்தோடும் பசுமைச் சிரிப்போடும் மலர்ந்து நிற்கும் இந்தக் குழந்தை அனாதையா ? இருபத்தி நாலு மணி நேரத்திற்குள் இருபெண்களின் தாயன்பைப்பெற்ற இந்தக் குழந்தை அனாதையா ....?

ஆண்டவனே, இந்தக் குழந்தை அனாதையாகிவிடக் கூடாதே என்ற பிரார்த்தனை அனைவரின் நெஞ்சிலும் குடிகொண்டிருக்கிறது..

கோவிந்தன் வழிகாட்ட, மணிவாசகனும் நர்மதாவும் கற்பகத்தின் குடிசை நோக்கிப் போகிறார்கள்.

கையில் குழந்தையுடன் நிற்கும் காவலர் 505-ஐப் பார்த்து, ''ஏனையா நின்னுகிட்டிருக்கே ? நட போலீஸ் ஸ்டேஷனுக்கு !'' என்கிறார் ஏட்டய்யா.

'' சார்....குற்றவாளி நான் இல்லே !''

'' சொல்றதை ஸ்டேஷன்லே வந்து சொல்லும்.... நட... நட'' என்று மிரட்டியபடி முன்னால் நடக்கிறார் ஏட்டய்யா.

காவலர் மனத்துள் நிறைந்திருக்கும் நகைச்சுவை உணர்வை ரசித்துச் சிரிக்கிறான் ரோமியோ நண்பனைத்தேடிக்கொண்டு ஏரிக்கரைப் பக்கமாக வந்து நின்றவனுக்குக் காவலர்களின் நகைச்சுவை கருத்துக்கு விருந்து.

கண்ணுக்கு விருந்து தேடிப் பார்வையைச் செலுத்தியவன், மணிவாசகனும் நர்மதாவும் சேர்ந்து போகின்ற காட்சியைக் காண நேருகின்றது.

உதகையில் ஓர் எரிமலை—

உற்ற நண்பனின் போக்கைக் கண்டு ரோமியோவின் உள்ளத்தில் வெடித்த எரிமலை . . . !

எரிமலையின் தீச்சிதறல் ஒன்று சென்னையை நோக்கிப் புறப்படுகிறது . . .

# 6. பெண்ணுருவில் வந்த பெருந்தெய்வம்

நல்ல மருமகன் கிடைக்கப் பெற்றவன் ஒரு மகனை அடைந்தவன். தீய மருமகன் கிடைக்கப் பெற்றவன் தன்மகளை இழந்தவன். மகளுக்கு மாப்பிள்ளை தேடும் எந்தத் தந்தையின் மனத்திலும் இந்தக் கருத்துத்தான் அலை மோதிக் கொண்டிருக்கும்.

பாண்டித்துரையின் நெஞ்சம் அலைமோதாமல் அமைதியாக இருப்பதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று, அவர்நெஞ்சம் ஆழ்கடல்; மற்றொன்று, மணிவாசகன் மேல் அவர் வைத்துள்ள நம்பிக்கை. மகளின் திருமணம் பற்றித் தகப்பன் கொள்ள வேண்டிய பரபரப்போ கவலையோ இன்றி அவர் மிகவும் தெளிவாகவே இருக்கிறார்.

'' அப்பா . . ஊட்டியிலிருந்து ட்ரங்கால்......—உங்களுக்குத்தான் !'' என்று ராதை அழைத்ததும் '' மன்னிக்க வேண்டும் முத்தையா . . ஒரு விநாடியில் வருகிறேன் '' என எழுந்து போகிறார்.

' சாப்பாட்டைச் சீக்கிரம் முடிக்க முடியாமல் இதென்ன குறுக்கீடு ' என்று மனத்திற்குள் சிணுங்குகிறாள் முத்தையாவின் மகள் செண்பகம்.

அவள் பசியை உணர்ந்த ராதை ஒரு தட்டு நிறைய வறுவலும் பிஸ்கெட்டும் எடுத்துக் கொடுக்கிறாள்.

அடுத்த அறையில்—

'' ஹலோ . . நான் பாண்டித்துரை பேசுகிறேன் . . ஆமாம். . வணக்கம் . . . வடிவேலுவா? ஊட்டியிலிருந்தா ...... என்று கேட்ட பாண்டித்துரை, ஊட்டியிலிருந்து பேசும் வடிவேலு யாராக இருக்கலாம் என ஒரு விநாடி நிதானிக்கிறார்.

> தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டம் 1961-ன் படி கோவை மாவட்டத்தில் கோயம்புத்தூர், அவினாசி, பல்லடம், உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி ஆகிய 5 வட்டங்களில் இருந்தும், டிசம்பர் 1972 முடிய 999·02 ஏக்கர் உபரிநிலம் இடைத்துள்ளது. உபரியாகக் கிடைத்த 999.02 ஏக்கரில், 878·28 ஏக்கரை 311 நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்து தரப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்படை செய்து கொடுத்த பரப்பில், 253·32 ஏக்கர் இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 339·55 ஏக்கர் வேளாண்மைக் கூலி வேலை செய்பவர்களும், 105·60 ஏக்கர் குத்தகையாகச் சாகுபடி செய்துவரும் நிலமற்றவர்களும் 119·52 ஏக்கர் அரிசனங்களும் பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

நெற்றிப் பொட்டை விரலால் அழுத்திச் சிந்தனை செய்தவர், நினைவுக்கு வந்தவராக, ''ஓகோ ! கோயம்புத்தூர் வடிவேலுவா... வணக்கம் . . வணக்கம் . . '' என்று பேச்சைத் தொடர்கிறார்.

'' திருமண விஷயம்தானே.. அதைத்தான் முன்னமே சொல்லியிருக்கிறேன் . . என் மருமகன் படிப்பு முடிந்ததும்— ''

'' உங்கள் மருமகன் படிப்புக்கும், உங்கள் மகள் திருமணத்திற்கும் இனிமேல் முடிச்சுப் போட வேண்டாம் . . '' என்று குரல் மறுமுனையிலிருந்து வருகிறது.

'' என்னது ?'' என்று பாண்டித்துரை சிரிக்கிறார்.

'' ஆமாம் !..சிரித்து மழுப்ப வேண்டாம். ஆறுமாதத்திற்கு முன்னால் நீங்கள் சொன்ன முடிவை நானும் ஏற்றுக்கொண்டேன். உங்கள் மகள் ராதையை என் மகனுக்காகக் கேட்ட விவரத்தை மறந்து விட்டேன். ஆனால் இப்போது நானே மீண்டும் கேட்கிறேன் என்றால் . . . ''

'' எனக்குத் தெளிவுபடவில்லை. விவரமாகச் சொன்னால் நல்லது.

'' கொஞ்ச நேரத்துக்கு முன்னர் தான் நானும் என் மனைவி ரஞ்சிதமும் உங்கள் மருமகனையும் அவன் மணந்து கொள்ளப் போகும். . . . . . ''

'' மணிவாசகனைப் பற்றியா பேசுகிறீர்கள் ?''

ஆமாம். சட்டக் கல்லூரி மாணவர்களுடன் உதகைக்குச் சுற்றுலா வந்திருக்கும் திருவாளர் மணிவாசகனைப் பற்றித் தான் நான் பேசுகிறேன். ''

அதன்பின்னர் பாண்டித்துரை அதிகம் பேசவில்லை. 'ஆமாம்' 'இல்லை' 'இருக்காது' என்பது போல் நறுக்குத்தெறித்து நாலே வார்த்தைகள் . . . .

தொலைபேசியில் பேசுபவர் வடிவேலு. கோயம்புத்தூரில் பெரிய புள்ளி. பாண்டித்துரையின் சம்பந்தியாக வரவேண்டுமென்று ஆசைப்பட்டு இன்னும் அதற்காக முனைந்து நிற்பவர். 'ராதை, என் தங்கை மகள் மணிவாசகனுக்குத்தான் !' என்று பாண்டித்துரை தீர்மானமாகச் சொல்லி விட்டபடியால் ஒதுங்கிச் சென்றவர், மணிவாசகனை மற்றோர் பெண்ணுடன் உதகையில் ஏரிக்கரையை அடுத்த சுனையருகில் இணையாகப் பார்த்தவுடன் பரபரப்பாகத் தொலைபேசியின் எண்களைச் சுழற்றி விட்டிருக்கிறார் ! இந்தச் சேதி தெரிந்தால் இங்கே எத்தனை இதயங்கள் சுழன்று துடிக்கும் என்பதை எண்ணிப் பார்க்க அவருக்கு அக்கறையுமில்லை, அவகாசமும் இல்லை !

மணிவாசகன் ராதையை மணக்கப் போவதில்லை. ராதை கன்னிப் பெண்ணாகவே வாழ்ந்து விடவும் முடியாது. வேறு எவரேனும் ராதையை மனைவியாக்கிக் கொள்வதற்குள் தம் மகனுக்கு மணமுடித்துவிட வேண்டுமென்ற வேகம் அவருக்கு. . . .

பாண்டித்துரை தம் மகனின் போக்கை எண்ணிக் கூட வருந்தவில்லை ; அவன் போக்கைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவசரமாகச் சம்பந்தம் பேசும் வடிவேலுவின் மன விசாரத்தை எண்ணியே வருந்துகிறார். . . . .

அடுத்தவரின் இழப்புகளைக் கணக்கிட்டுத் தமக்கு நன்மை தேடும் அளவுக்கு அவ்வளவு விரைவாகவா இந்த அவசர யுகம் இயங்கிக்கொண்டிருக்கிறது?

அட ஆண்டவனே !

'' வடிவேலு . . நீங்கள் உங்கள் சுற்றுலாவை முடித்துக்கொண்டு கோயம்புத்தூர் வரும் தேதியைத் தெரிவியுங்கள். நானே தொடர்பு கொள்கிறேன் . . . . நன்றி . . . . . . வணக்கம் . . . . ''

மற்றவர்களாக இருந்தால், தன் மருமகனைச் சுற்றி வரும் மங்கை யார், எவர் என்ற செய்திகளைச் சேகரிப்பதில் பரபரப்புக் காட்டுவார்கள். இந்தப் பாண்டித்துரைக்கு அதில் பாதி—பாதி என்ன—துளிக்கூட அக்கறை இல்லையே என்ற ஆதங்கத்துடன் பேச்சை முடித்துக் கொள்கிறார் வடிவேலு.

உதகையிலிருந்து வந்த பேச்சும் குழப்பத்தைத் தர வேண்டும் என்ற நியதி உண்டா என்ன ? பாண்டித்துரையின் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தை ஒரு நொடியில் கவனித்து விடுகிறாள் ராதை . . . . தந்தைக்கு மன வருத்தம் தரக்கூடிய செயலை எவர் செய்திருந்தாலும், அந்தச் செய்தியை எவர் அறிவித்திருந்தாலும் அவர்களை ராதை மன்னிக்கத் தயாராக இல்லை.

கலகலப்பும் சிரிப்புமாகச் சாப்பிட அமர்ந்தவர்களுக்கு மத்தியில் கலக்கம் தோய்ந்த விழிகளும், கனத்துக் கிடக்கும் இதயமுமாக வந்து அமருகிறார் பாண்டித்துரை.

'' பாண்டித்துரை. உன் மருமகன் வந்ததும் நம் ஆலையின் வேலை விஷயமாக '' என்று ஆரம்பித்த முத்தையாவிடம், '' கட்டாயம் நான் கேட்டுச் சொல்கிறேன் மாமா '' என்று மறுமொழி கூறுகிறாள் ராதை.

முத்தையாவும், செண்பகமும் விடைபெற்றுப் போன பின்னரும் துயர் சுமந்த நெஞ்சத்துடன் பாண்டித்துரை குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருக்கிறார்.

'மணிவாசகனும் அவன் மணந்து கொள்ளப் போகும் பெண்ணும்' என்றாரே வடிவேலு; 'பார்த்த மாத்திரத்தில், அவனை மணக்கவிருப்பவள்' என்ற உறவும், உரிமையும் தெரிய வேண்டியதானால் மணிவாசகன் எங்கே . . . எந்த இடத்தில் . . . . . எந்தச் சூழ்நிலையில் . . ஐயோ . . நினைத்துப் பார்க்கவே அவர் நெஞ்சு கூசுகிறது.

மணிவாசகனைக் கட்டுப்படுத்தவோ, கட்டாயப் படுத்தவோ தமக்கு உரிமையில்லை என்று உணர்ந்தவர்தான் பாண்டித்துரை. ஆனால், ஆசைகளைச் சுமந்தபடி ஆவலோடு காத்திருக்கும் தம் மகளின் மெல்லிதயம் இந்த அதிர்ச்சியை எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறது . . . ?

'' என்னப்பா யோசனை ?'' என்று இதமாகக் கேட்கிறாள் ராதை.

'' நான் சொல்லப் போகும் அதிர்ச்சியை உன் இதயம் தாங்குமா ?''

'' அதிர்ச்சி தரக்கூடிய எந்தச் செய்தியும் உங்களிடமிருந்து எனக்கு வராது. நீங்கள் தாங்கிக்

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி, முதல்வர் கலைஞர் "காந்தி நினைவு" படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தினார். அதற்கேற்ப அரசு ஆணை 11866, சமூகநலம், 28-11-1970-ன் படி அது செயல்படுத்தப்படுகிறது. கோவை மாவட்டத்தில் 1970-71-ஆம் ஆண்டில் இரு மாணவர்களும், ஒரு மாணவியும் பயனடைந்துள்ளனர். 1971-72-ம் ஆண்டுக்கு ஒரு மாணவரையும் ஒரு மாணவியையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

1970-71-ல் பரிசு பெற்றவர்கள்.

1. திரு என். மாடசாமி, பி. இ., அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.

2. திரு டி. எஸ். சிவராஜ், பி. டெக்., கோவை தொழிற் கல்லூரி.

3. செல்வி பொற்செல்வி, எம்.பி.பி.எஸ்., மருத்துவக் கல்லூரி, கோவை.



கொண்டிருக்கும் எந்த அதிர்ச்சியையும் என்னால் நிச்சயமாகத் தாங்கிக் கொள்ள முடியும். ஏனென்றால், உங்களைவிட நான் இதயபலம் உள்ளவள் ! சொல்லுங்கள். '' . . . .

'' ஆறுதலாகப் பேச நினைத்தால்கூட வார்த்தைகளுக்குப் பற்றாக்குறை. அதிர்ச்சி தரும் சேதிதான் முந்திக் கொண்டு வந்து நிற்கிறது. . .''

ஆறுதலுக்கு இப்போது என்னப்பா அவசரம் ? அகராதியில் கூட அதிர்ச்சிக்குப் பிறகு தானே ஆறுதல் வருகிறது. அதிர்ச்சி தரும் செய்தியையே முதலில் சொல்லுங்கள் ; ஆறுதலுக்கு அவசியமா இல்லையா என்பதை நான் கூறுகிறேன்.'' '' இப்போது சொல்ல வேண்டுமா என்றுதான் தயங்குகிறேன் ராதா. உன் அத்தான் வந்த பிறகே, . .''

'' நல்லது. நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள் . . . . .'' என்று அவரை அமைதிப் படுத்திவிட்டு ராதை அப்பால் போகிறாள்.

புயலையும், புழுக்கத்தையும் சுமந்தபடி நாலைந்து நாட்கள் நகருகின்றன.

பந்தயக் குதிரையின் வேகமும், பட்டத்து யானையின் கம்பீரமுமாக மணிவாசகன் சுற்றுலா முடிந்து திரும்புகிறான்.

அவன் வந்து இருபத்து நாலு மணி நேரமும் ஓடி விட்டது.

வசந்தத்தை எதிர்பார்த்துக் காத்து நிற்கும் ராதையின் முன்னால், வாடிய முகத்தோடு ரோமியோ வந்து நிற்கிறான் . . .

'' மணிவாசகன் இல்லையே ?''

'' இல்லை ''

'' இருக்கக்கூடாதே என்று தான் எதிர் பார்த்தேன். அவன் முகத்தில் விழிக்கவே எனக்குப் பிடிக்கவில்லை . . .''

'' அப்படியானால் என்முகத்தில் நீங்கள் விழிக்க முடியாது மிஸ்டர் ரோமியோ .''

'' ராதா ?''

'' ஆமாம். என் அத்தானின் நண்பர்கள்தான் எனக்கும்

**நவ இந்தியாவின் சின்னம் !**

**நவ இந்தியாவின் நல்லதொரு சின்னமாக கோவை மாவட்டம் விளங்குகிறது.**

**—ஜவகர்லால் நேரு.**

நண்பர்கள். என் அத்தானின் விரோதிகள் ''

'' நான் இன்னும் விரோதியாகவில்லை. ''

'' அவருடைய விருப்பத்தின் விரோதிகள்எனக்கும் விரோதிகள் தாம்.—நீங்கள் வந்த விஷயம்? ''

'' ஊட்டியிலிருந்து கடிதம் எழுதினேனே, நாய்க்கு உள்ள நன்றி கூட என் நண்பனுக்கு இல்லை என்று !''

'' அப்படிக் கடிதம் எழுத வேண்டிய காரணம் ? நேரிலேயே வந்து சொல்லலாமே . . . !

'' நேரில் சொல்லும் வரை எனக்குப் பொறுமையில்லை ''

'' தவறு. நேரிலே சொல்லுகிற நெஞ்சுரம் உங்களுக்கில்லை !'

'' ராதா ? ''

'' பதட்டம் வேண்டாம். எனக்கிருக்கும் மன அமைதி ஏழு ஜென்மங்கள் வரை நிலைக்கும். நீங்கள் சொல்ல விரும்பும் சேதியை—புதிய செய்திகள் ஏதேனும் இருக்குமானால் சுருக்கமாகச் சொல்லலாம் ! ''

'' உதகைக்குச் சுற்றுலா புறப்பட்ட நான்—சென்ட்ரல் ரயில் நிலையத்திலேயே மருத்துவக் கல்லூரி மாணவியிடம் ''

'' இது பழைய கதையாயிற்றே. மருத்துவக் கல்லூரி மாணவி நர்மதாவின் அலட்சியப் பேச்சு. குதிரைக் ஆணவப் போக்கு. குதிரைக் காரக் கோவிந்தனிடம் சவாரிக் குதிரைக்காகப் போட்ட சண்டை ஏரிக்கரை ஓரமாக உல்லாசமான குதிரைச் சவாரி. கால் இடறி விழ இருந்த குழந்தையைக் காப்பாற்றிய கருணை. அதன் காரணமாக இணைந்த இதயங்கள். அந்த இதயங்கள் பரிமாறிக் கொண்ட ரகசியத் தொடர் கதைதான், தொடமுடியாத உயரத்திலிருக்கும் தொட்ட பெட்டாவுக்குச் சென்ற தனிமைப் பயணம். இரண்டு இதயங்களும் ஈரேழு பிறவிகளாகத் தொடர்ந்து வருவதைப்போன்ற அன்பின் பிணைப்பு. 'நீயின்றி நானில்லை' என்ற நினைவின் முனைப்பு . . . ''

ராதை தொடர்ந்து பேசப்பேச அவனுக்குத் தெரியாத பல விவரங்களைத் தெரிந்து கொண்ட அதிர்ச்சியையும், அதிர்ச்சியைக் கூட அழகான கவிதையாக வடிக்கின்ற ராதையின் நெஞ்சு உறுதியும் ரோமியோவை வியப்பில் ஆழ்த்துகிறது.

'' ராதா இதெல்லாம் உங்களுக்கு . . .''

'' அத்தான் சொன்னார். ''

'' அவனே சொன்னானா? அவன் இரக்கமற்றவன். இதயமே இல்லாதவன். ''

'' அவர் இதயமுள்ளவர் '' அதனால்தான் என்னிடமே எதையும் ஒளிக்காமல் சொன்னார்.

'' ராதா ! உங்களால் எப்படி இதை ''

'' இரைந்து பேசாதீர்கள். அப்பா காதில் விழுந்துவிடும் ' அப்பாவுக்கு இந்த விவரம் எதுவும் தெரியாது. பாவம். அவரிடம் பக்குவமாகச் சொல்லுவதும் இந்தத் திருமணத்திற்கு அவரிடம் அனுமதி பெற்றுத் தருவதும் என் பொறுப்பு. ''

'' இதையும் மணிவாசகனே உங்களைக் கேட்கச் சொன்னானா?''

'' அவர் சார்பாக நான் கேட்கப் போகிறேன். அத்தான் படுகிற வேதனை எனக்குப் புரிகிறது. அதனால்தான் பொறுப்பை நானே ஏற்றுக் கொண்டேன். நேரம் வரும்போது தான் அப்பாவிடம் பேச வேண்டும். நீங்கள் அவசரப்பட்டு விடாதீர்கள்.. ''

இவள் பெண்ணா ? பேதையா? பெண்ணுருவில் வந்து நிற்கும் பெருந்தவமா ?

ரோமியோ செயலிழந்து நிற்கிறான்.

அழைப்பு மணி கிணுகிணுக்கிறது.

வாசலில் வந்து நிற்பவள்—நர்மதா !

(வளரும்)

# கோயம்புத்தூர் மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

**கோயமுத்தூர் – 18**

அஞ்சல் பெட்டி எண் : 1398

தந்தி : "கோடிஸ்ட்பேங்க்"

தொலைபேசி எண் : வங்கி : 33447
33448
33449
பெருந்தலைவர் : 31304

**எங்களது வங்கியில் பிக்சட் டிபாசிட்டுகளுக்கு கீழ்க்கண்ட விகிதப்படி வட்டி அளிக்கப்படும்**

ரூ. 1.000மும் அதற்கு மேலும் :

| | வருடத்திற்கு சதவீதம். |
|---|---|
| 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்கள் முடிய | 2·25 |
| 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்கள் முடிய | 3·25 |

ரூ. 100-ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும்

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் 6 மாதங்களுக்குள்ளும் .. | 5.00 |
| 6 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்குள்ளும் .. | 5.50 |
| 12 மாதங்களுக்கும் 24 மாதங்களுக்குள்ளும் .. | 6·50 |
| 24 மாதங்களுக்கும் 36 மாதங்களுக்குள்ளும் .. | 7·00 |
| 36 மாதங்களுக்கும் 60 மாதங்களுக்குள்ளும் .. | 7·50 |
| 60 மாதங்களுக்கும் அதற்கு மேலும் .. | 7.75 |

குறிப்பு :—தர்ம ஸ்தாபனங்கள் அல்லது மத ஸ்தாபனங்கள் (Charitable or Religious Institutions) கல்வி நிறுவனங்கள் பிக்சட் டிபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதத்திற்கு மேல் ½ சதவீதம் கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

36 மாதங்களுக்கும், அதற்கு மேலும் உள்ள பிக்சட் டிபாசிட்டுகளின் அசலுக்கும், வட்டிகளுக்கும் (கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தவிர) அரசாங்க உத்தரவாதம் உண்டு.

சேவிங்ஸ் டிபாசிட்டுகள் :

1—7—1972 முதல் சேவிங்ஸ் டிபாசிட்டுகளின்மீதுள்ள அன்றுட நிலுவைகளின்மீது 4½ சதவீதம் வட்டி வழங்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராசா, எம்.ஏ., எம். எல். ஏ.
பெருந்தலைவர்.

எம். பழனிசாமி, பி. காம்., எச். டி. சி.
செயலாளர்.

| கிளைகள் : | தொலைபேசி எண் : | கிளைகள் : | தொலைபேசி எண் : |
|---|---|---|---|
| 1. ஈரோடு | 506 | 11. அவிநாசி | 34 |
| 2. உடுமலை | 202 | 12. கிணத்துக்கடவு | |
| 3. தாராபுரம் | 315 | 13. மேட்டுப்பாளையம் | |
| 4. கோபி | 195 | 14. பெருந்துறை | |
| 5. திருப்பூர் | 848 | 15. சூலூர் | |
| 6. வெள்ளக்கோவில் | 89 | 16. காங்கயம் | |
| 7. பொள்ளாச்சி | 984 | 17. தாளவாடி | |
| 8. ஆர். எஸ். புரம் (கூட்டுறவு சிறப்பு அங்காடி) | | 18. அந்தியூர் | |
| 9. கிருஷ்ணாபுரம் (கூட்டுறவு சர்க்கரை ஆலை) | | 19. அன்னூர் | |
| 19. பவானி | 528 | 20. கவுந்[illegible]டி | |
| | | 21. நம்பியூர் | |

# மின்னல் வேகத்தில் மின்னிணைப்பு அளித்துள்ளோம்

கோவை மாவட்டம் உழவிலும், தொழிலிலும் உயர்ந்து விளங்க வேண்டுமென்பதற்காகக் கோவைக் மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் (Hamlets) மின்சார வசதி அளிக்கும் பணியைத் தமிழ்நாடு அரசு விரைவுபடுத்தியது. 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கிராமங்கள், குக்கிராமங்கள் அனைத்திற்கும் 1972-ஆம் ஆண்டிற்குள் மின் வசதி அளிக்கப்பட வேண்டும் என்ற ஒரு சிறப்புத் திட்டத்தினை அறிவித்து அதற்கான வேலைகளைத் துரிதப்படுத்தினர். அதன் அடிப்படையில் கோவை மாவட்டத்தில் மின்வசதி அளிக்கும் வேலைகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றன. அதன் பயனாய் இன்று கோவை மாவட்டத்தில் மின் வசதி பெறாத கிராமங்களில்லை, குக்கிராமங்களில்லை என்ற அரிய சாதனையைப் பைக்காரா மின் அமைப்பும், ஈரோடு மின் அமைப்பும் ஏற்படுத்தியுள்ளன.

கோவை மாவட்டத்தில் உள்ள அவிநாசி, கோவை, பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை ஆகிய 5 வட்டங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணியைப் பைக்காரா மின் அமைப்பும், ஈரோடு, தாராபுரம், பவானி, கோபிச்செட்டி பாளையம் ஆகிய 4 வட்டங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணியை ஈரோடு மின் அமைப்பும் மேற்கொண்டு வருகின்றன.

கோவை மாவட்டத்தில் உள்ள 9 வட்டங்களில் பல்லடம் வட்டமே முதன் முதலாக மின் வசதி முழுமை பெற்றது. 1966–67-ஆம் ஆண்டு வரை பல்லடம் வட்டத்தில் 204 கிராமங்களும், சிற்றூர்களுமே மின்வசதியைப் பெற்றிருந்தது. 1—4—1967 முதல் 31—8—19 31—8—1971 வரையான காலத்தில் மேற்கொள்ளப் பெற்ற தீவிர நடவடிக்கைகளின் காரணமாகப் பல்லடம் வட்டத்தில் மேலும் புதிதாக 452 கிராமங்களும், சிற்றூர்களும், 55,67 மின்விசை ஏற்றங்களும் மின்வசதி பெற்றன. பல்லடம் வட்டம் ஏறத்தாழ 4½ ஆண்டுக் காலத்தில் 69 சத மின் வசதியைப் பெற்று, 27—9—1971-இல் மின்வசதி முழுமை விழாக் கொண்டாடியது. அதை அடுத்துப் படிப் படியாக, ஒவ்வொரு வட்டமும் மின்வசதி முழுமை பெற்று, இன்று கோவை மாவட்டம் முழுமையாக மின்வசதி பெற்றுள்ளது.

கோவை மாவட்டத்தில் 1—1—1973 தேதிய புள்ளி விவரப்படி 942 கிராமங்களும், 5,981 குக்கிராமங்களும், 2,783 அரிசனக் குடியிருப்புகளும் மின் வசதி பெற்றுள்ளன. அவை களின் விவரங்கள் வட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

மேற்கண்ட அரிசனக் குடியிருப்புகளும், மலைச்சாதியினர் குடியிருப்புகளும் மின்வசதி பெற்று முழுமை அடைந்த போதிலும், அண்மையில் புதிதாக 6 அரிசனக் குடியிருப்புகளும், 17 மலைச்சாதியினர் குடியிருப்புகளும் தோன்றியுள்ளன. அப்புதிய குடியிருப்புகளுக்கும் மின் வசதியை அளிக்கும் பணியைப் பைக்காரா மின் அமைப்பு துரிதமாகச் செயல் படுத்தி வருகிறது. ஆனைமலையில் உள்ள தேயிலைத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தையும் பைக்காரா மின் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலையாய நோக்கம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மின் வசதி அளிப்பதாகும். அதைச் செயலாக்கும் நோக்குடன், பைக்காரா மின் அமைப்பும் ஈரோடு மின் அமைப்பும் கிணறுகளில் அமைக்கப் பட்டுள்ள மின்விசை ஏற்றங்

**கோவை மாவட்டத்தில் மின்வசதி பெற்றுள்ள கிராமங்கள்—குக்கிராமங்கள்**

| வட்டத்தின் பெயர் | கிராமங்கள் | குக்கிராமங்கள் |
|---|---|---|
| அவிநாசி .. .. .. | 84 | 510 |
| கோயம்புத்தூர் .. .. | 90 | 278 |
| பல்லடம் .. .. .. | 106 | 549 |
| பொள்ளாச்சி .. .. | 133 | 209 |
| உடுமலைப்பேட்டை .. .. | 91 | 190 |
| ஈரோடு .. .. .. | 187 | 1,685 |
| தாராபுரம் .. .. | 83 | 1,030 |
| பவானி .. .. .. | 55 | 719 |
| கோபிச்செட்டிபாளையம் .. | 113 | 811 |
| மொத்தம் .. | 942 | 5,981 |

**கோவை மாவட்டத்தில் மின்வசதி பெற்றுள்ள அரிசன, மலைச்சாதி மக்கள் குடியிருப்புகள்**

| வட்டத்தின் பெயர் | அரிசனக் குடியிருப்புகள் | மலைசாதியினர் குடியிருப்புகள் |
|---|---|---|
| அவிநாசி .. .. .. | 291 | 1 |
| கோயம்புத்தூர் .. | 197 | 5 |
| பல்லடம் .. .. .. | 362 | .. |
| பொள்ளாச்சி .. .. | 237 | 4 |
| உடுமலைப்பேட்டை .. | 181 | .. |
| ஈரோடு .. .. .. | 606 | .. |
| பவானி .. .. .. | 259 | .. |
| கோபிச்செட்டிப்பாளையம் .. | 260 | .. |
| மொத்தம் | 2,783 | 10 |






வளமான வளர்ச்சிக்கும்
அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

# ரோவிமிக்ஸ்

மற்றும்

# ரோவிஸால் ஓரல்

ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு.

ரோவிஸால் ஓரல்—அதிகப்படியான விடமின்களுக்கு.

ரோச் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்






களுக்கு விரைவாக மின் இணைப்பு வழங்கி வருகின்றன.

பைக்காரா மின் அமைப்பு இந்த ஆண்டில் 3,500 கிணறு களுக்கு மின்வசதி அளிக்கத் திட்டமிட்டுள்ளது. அதில் 31—1—1973 வரை 2,871 கிணறுகள் மின்வசதி பெற்று விட்டன.

இறுதியாகக் கிடைத்த புள்ளி விவரப்படிக் கோவை மாவட்டத்தில் (1—1—1973 தேதி வரை) 1,11,883 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. வட்ட வாரியாக மின் இணைப்புப் பெற்றுள்ள மின்விசை ஏற்றங்களின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது அட்டவணையில் காணலாம்.

**கோவை மாவட்டத்தில் மின் இணைப்புப் பெற்றுள்ள மின்விசை ஏற்றங்கள்**

| வட்டத்தின் பெயர். | மின் இணைப்பு பெற்றுள்ள பம்புசெட்டுகள். |
|---|---|
| அவிநாசி | 14,747 |
| கோயம்புத்தூர் | 14,621 |
| பல்லடம் | 15,480 |
| பொள்ளாச்சி | 12,720 |
| உடுமலைப்பேட்டை | 10,623 |
| ஈரோடு | 11,684 |
| தாராபுரம் | 13,848 |
| பவானி | 7,235 |
| கோபிச்செட்டிபாளையம் | 10,925 |
| மொத்தம் | 1,11,883 |

கோவை மாவட்டத்தில் உள்ள மொத்தக் கிராமங்கள், குக்கிராமங்களில் 80 சத அளவுக்கு மேல் கடந்த 5¾ ஆண்டுகளில்தான் மின் வசதி பெற்றுள்ளன. அது போலவே கடந்த 5¾ ஆண்டுகளில் தான், 1—4—1967-க்கு முந்திய எந்த ஆண்டுகளிலும் இல்லாத அளவிற்கு, ஆண்டு தோறும் அதிகமான மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப் பெற்றுள்ளன.

கோவை மாவட்டத்தில் 31—3—1970 நிலவரப்படி 87,301 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1—4—1970 முதல் 1—1—73 வரையான 2¾ ஆண்டுக் காலத்தில் மட்டும் 24,582 மின்விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் தற்பொழுது 6,39,821 மின்சார பம்பு செட்டுகள் மின் இணைப்புப் பெற்றுள்ளன. அதில் 1,11,883 பம்பு செட்டுகள் கோவை மாவட்டத்தில் உள்ளன. அதாவது தமிழ் நாட்டில் உள்ள மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகளில் 17 சத அளவு கோவை மாவட்டத்தில் தான் உள்ளது.

ஆழமான கிணறுகளில் 2 அல்லது 3 நிலைகளில் பம்பு செட் அமைத்துத் தண்ணீர் இறைக்க வேண்டிய இக் கட்டான நிலையில் இருக்கும் கோவை மாவட்ட உழவர் பெருமக்களுக்கு உதவி செய்யவே, வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு —வரலாறு காணாத அளவுக்கு —அதிகமான பம்பு செட்டுகளுக்கு மின்இணைப்பு கொடுத்து வருகிறது இன்றையத் தமிழ்நாடு அரசு.

கோவை மாவட்டத்தில் ஊரெங்கும் ஒளி மயமாக்கியதாலும், ஏராளமான பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்ததாலும், புத்தம் புது தொழிற்சாலைகளை நித்த நித்தம் துவங்கியதாலும், மின்சாரத் தேவை பெருகி விட்டது. அத்துடன் பருவமழை பொய்த்ததன் காரணமாக மின்சக்தி உற்பத்தி செய்யும் நீர்த் தேக்கங்களில் உள்ள தண்ணீர் குறைந்ததால் தற்பொழுது மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆயினும் உழவர்களுக்கு உதவிடும் இன்றைய அரசு கேரள மாநிலத்திலிருந்து மின்சக்தி பெற ஆவன செய்துள்ளதுடன், மின்சக்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளிலும், தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

ஊரெங்கும் ஒளிமயமாக்கும் பணியிலும், மின்விசை ஏற்றங்களுக்கு மின்இணைப்புத் தருவதிலும் பைக்காரா மின் அமைப்பும், ஈரோடு மின் அமைப்பும் மின்னல் வேகத்தில் பணியாற்றியுள்ளன என்றால் மிகையல்ல.



## கோயம்புத்தூர் கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியம் லிமிடெட்

நிறுவனம் 1937

| | |
|---|---|
| தலைவர் | ஆர். எஸ். புரம் அஞ்சல், |
| திரு எம். எஸ். பழனியப்ப முதலியார், பி.ஏ., | கோயம்புத்தூர்-2. |
| துணைத் தலைவர் | தொலைபேசி 22389 & 32389. |
| திரு சி. என். நாகப்ப கவுண்டர், பி.ஏ., பி.எல். | |

35 ஆண்டுகளுக்கு மேலாகக் கோவையும், கோவையையடுத்த சுற்றுப்புற மக்களுக்குச் சுத்தமான பாலையும் பால் பொருள்களையும் நியாயமான விலையில் வழங்கி வரும் ஓர் உன்னதக் கூட்டுறவு நிறுவனம்.

| | | |
|---|---|---|
| இணைக்கப்பட்ட பால் சங்கங்கள் | .. | 63 |
| 1971-72-ம் ஆண்டில் வழங்கிய பால் | .. | 66,30,690 லிட்டர் |
| 1971-72-ம் ஆண்டில் பால், பால் பொருள்கள் விற்பனை. | | ரூ. 73,90,542 |
| செலுத்தப்பட்ட பங்குத் தொகை | .. | ரூ. 1,12,720 |
| நல நிதி .. .. | .. | ரூ. 2,03,750 |
| இதர ஒதுக்குத் தொகைகள் .. | .. | ரூ. 16,63,080 |
| தமிழ்நாடு மாதவரம் பால்பண்ணைக்கு 1-7-71 முதல் 30-6-72 முடிய வழங்கிய பால் அளவு. | | 6,95,000 லிட்டர். |
| | மதிப்பு | ரூ. 6,86,675 |

நவீன இயந்திரங்களைக் கொண்டு சுகாதார முறைப்படி பக்குவம் செய்யப்பட்ட பால், தினசரி வாடிக்கையாளர்களுக்கு அவர்தம் இல்லங்களில் குறித்த நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அரசாங்க நகராட்சி மருத்துவமனைகளுக்கும், மகப்பேறு இல்லங்களுக்கும், மத்திய சிறை, கல்லூரி விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகிய நிறுவனங்களுக்கும் நியாயமான விலையில் பல்லாண்டுகளாகப் பால் வழங்கப்பட்டு வருகிறது.

பால் பண்ணையைப் புதுப்பிக்கும் திட்டத்தைச் சுமார் ரூ. 10·50 லட்சம் செலவில் மேற்கொண்டு வருங்காலப் பால் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான திட்டங்களை ஒன்றியம் உருவாக்கி அதைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது.

சுவைமிக்க பால் கோவா, ஐஸ்கிரீம் "அக்மார்க்" நெய் ஆகிய பொருள்கள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

பி. நடராசன்,
விற்பனை மேலாளர்.




# தீண்டாமையை ஒழிக்க செய்துவரும் பணிகள்!

கோவை மாவட்டக் கிராமப்புறங்களில் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்யவும், அரிசனக் குழந்தைகளின் நலம் பேணவும் சூலூர், பாலத்துறை, தளவாய்ப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில் சமுதாய நல மன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்த மன்றங்கள் ஒவ்வொன்றிலும் 50 இளம் சிறுவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

தீண்டாமை என்னும் தீயப் பழக்கம் மக்களிடையே இருந்து அறவே அகல, இம்மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு பல்வேறு வகைகளில் பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் சனவரி 24-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் முடிய தீண்டாமை ஒழிப்பு வாரமாகக் கொண்டாடப்பட்டு




வருகிறது. இவ்விழாவின் போது அரிசனக் குடியிருப்புகளைச் சுத்தம் செய்தல், அரிசனக் குழந்தைகளைக் குளிப்பாட்டுதல், அரசினரால் அளிக்கப்படும் சலுகைகளை விவரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விழாச் செலவிற்காகக் கோவை மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு ரூபாய் 2,000 வரை செலவிடப்படுகிறது.

தீண்டாமை ஒழிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தில் சிறந்து விளங்கும் இரு கிராமங்கள் மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டு முதற் பரிசு ரூபாய்



1,000-மும், இரண்டாவது பரிசு ரூபாய் 500-ம் வழங்கப்பட்டு வருகிறது. பரிசுகள் பரிசுப் பத்திரங்களாக வழங்கப்படுகின்றன. 1967-68-ஆம் ஆண்டிலிருந்து கோவை மாவட்டத்தில் பரிசு பெற்ற கிராமங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | வட்டத்தின் பெயர். | பரிசு பெற்ற கிராமத்தின் பெயர். |
|---|---|---|
| 1967–68 | பொள்ளாச்சி. | ஏரிப்பட்டி (முதற் பரிசு) |
| | பல்லடம். | கேத்தனூர் (2-வது பரிசு) |
| 1968–69 | தாராபுரம், | வீராச்சிமங்கலம் (முதற் பரிசு) |
| | ஈரோடு. | நாட்டார்மங்கலம் (2-வது பரிசு) |
| 1969–70 | தாராபுரம். | நஞ்சியம்பாளையம் (முதற் பரிசு) |
| | கோவை. | விராலியூர் (2-வது பரிசு) |
| 1970–71 | தாராபுரம், | தளவாய்ப்பட்டினம் (முதற்பரிசு) |
| | பவானி. | தவிட்டுப்பாளையம் (2-வது பரிசு) |
| 1971–72 | கோவை. | பன்னிமடை (முதற் பரிசு) |
| | பொள்ளாச்சி. | ரொட்டிக்கடை (2-வது பரிசு) |
| 1972–73 | கோபிசெட்டி பாளையம். | பொலவக்காளிபாளையம் (முதற் பரிசு) |
| | ஈரோடு. | இரத்தினபுரி (2-வது பரிசு) |

அரிசனங்கள் தங்கள் குடியிருப்புக்களைத் தூய்மையாக வைக்க ஊக்குவிக்கும் பொருட்டு, தூய்மையாக வைத்திருப்பதில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும் வகையிலும் கோவை மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு சிறந்த அரிசனக் குடியிருப்பும் தேர்வு செய்யப்பட்டு, அந்த அரிசனக் குடியிருப்புக்கு ஒரு வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் பின்கண்ட அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.



| வட்டம் | | |
|---|---|---|
| அவிநாசி | .. | .. |
| பவானி | .. | .. |
| தாராபுரம் | .. | .. |
| கோவை .. | .. | .. |
| ஈரோடு .. | .. | .. |
| கோபி .. | .. | .. |
| பொள்ளாச்சி | .. | .. |
| பல்லடம் | .. | .. |
| உடுமலை .. | .. | .. |





பரிசு பெற்ற அரிசனக் குடியிருப்பு

வெங்கக்கல்பாளையம்
கருக்குப்பாளையம்
முள்ளிபுரம்
காந்திநகர் காலனி
காமராஜ் அரிசனக் காலனி
ஏழூர் காலனி
வஞ்சிப்பாளையம்
கரவளிமாதப்பூர்
குப்பம்பாளையம்

இன்றையத் தமிழ்நாடு அரசு சாதி வேறுபாட்டைக் களைந்தெறியும் வகையில் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர்க்குப் பரிசளிக்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்தது.

இத்திட்டம் தீண்டாமை என்னும் இருளை அகற்றுவதில் ஓர் ஒளி விளக்காய் அமைந்துள்ளது. கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் மணமக்களில் யாராவது ஒருவர் அரிசனக் குடியைச் சார்ந்தவராக இருப்பின் கலப்பு மணம் செய்துகொண்ட தம்பதியர்க்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை கோவை மாவட்டத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட 21 தம்பதியர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | பரிசு பெற்ற தம்பதியர்கள் (எண்ணிக்கை). |
|---|---|---|
| 1968–69 | .. | 7 |
| 1969–70 | .. | 3 |
| 1970–71 | .. | .. |
| 1971–72 | .. | 5 |
| 1972–73 | .. | 6 |
| | | 21 |

தற்பொழுது இத்திட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் வகையில் கலப்புத் திருமணம் செய்து




கொண்ட தம்பதியர்களுக்குத் தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்கவும், வீட்டு மனைக்கு நிலம் வழங்கவும் தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

இவ்வாறு பல்வேறு வகையில் கோவை மாவட்டத்தில் தீண்டாமையை அறவே ஒழிக்கச் சீரிய முறையில் செயலாற்றப்படுகிறது.

## விவசாய முன்னணியில் நிகரற்ற சேவை

1. மானோபிளாக் செட்
2. கப்ளிங் பம்பு
3. கரும்பு ஆலை
4. மின்சாரச் சங்கு
5. மின்சார மோட்டார்
6. பெல்ட் பம்பு
7. மோட்டாருடன் பம்பு
8. மல்டிஸ்டேஜ் பம்பு
9. டொமஸ்டிக் பம்பு




தயாரிப்பாளர்கள் :

போன் : 22935.

தந்தி : " பவுண்டரி."

சுப்பையா பவுண்டரி

அவினாசி ரோடு, P. N. பாளையம், கோயம்புத்தூர்-18.



# மூடிய மில்களைத் திறந்தோம்!

இந்தியாவெங்கும் உள்ள பஞ்சாலைகளில் அண்மைக் காலத்தில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. அதனால் கோவை மாவட்டத்தில் பல பஞ்சாலைகள் மூடப்பட்டன; பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி வாடினர்.

தொழிலாளர்களின் துயரைத் துடைத்து அவர்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு



நலிவுற்ற பஞ்சாலைகளை ஏற்று நடத்திட ரூபாய் 5 கோடி அனுமதி பெற்ற மூலதனத்துடன் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை அமைத்தது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் தமிழ்நாடு அரசுக்கு முற்றிலும் சொந்தமானது. இது ஒரு தனி நிறுவனமாக 24—4—1969-ல் பதிவு செய்யப்பட்டது. பஞ்சாலைத் தொழில் குறித்துத் தமிழ்நாடு அரசுக்கு ஆலோசனை கூறும் அமைப்பாகவும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் பணியாற்றி வருகிறது.

கோவை மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த 13 பஞ்சாலைகளை (Sick Mills) தமிழ்நாடு அரசு ஏற்று நடத்த முடிவெடுத்தது. கீழ்க்கண்ட பஞ்சாலைகளை இது வரை அரசு ஏற்றுள்ளது.

ஓம் பராசக்தி ஆலை.

முருகன் ஆலை.

சோம சுந்தரா ஆலை.

கோவை ஸ்பின்னிங் அண்டு வீவிங் ஆலை.

கிருஷ்ணவேணி ஆலை.

ரெங்க விலாஸ் ஆலை.

கம்போடியா ஆலை.

பங்கஜா ஆலை.

சாரதா ஆலை.

பயனீர் ஆலை.

பாலராம வர்மா ஆலை.

மேற்கண்ட பஞ்சாலைகளை நடத்துவதற்கு நிதி உதவியை மாநில அரசு 49 சதமும் இந்திய அரசு 51 சதமும் தருவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பின்கண்டவாறு உள்ளது.

| | ரூபாய் |
|---|---|
| இந்திய அரசு உதவி. | 1,64,83,000 |
| தமிழ்நாடு அரசு உதவி. | 1,44,66,000 |

இதில் 11—12—1972 வரை இந்திய அரசு 92 இலட்சம் ரூபாயையும், தமிழ்நாடு அரசு 117 இலட்சம் ரூபாயையும் கொடுத்துள்ளது. அரசு ஏற்று நடத்தும் பஞ்சாலைகள் அனைத்தும் இன்று இலாபத்தில் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

மூடிய பஞ்சாலைகளைத் தமிழ்நாடு அரசு ஏற்று மீண்டும் திறந்ததால் 13 பஞ்சாலைகளைச் சேர்ந்த 11,900 தொழிலாளர்கள் பயன் பெற்றனர். இது தமிழ்நாடு அரசு 'தொழிலாளர்களின் துயர் துடைக்கும் அரசு' என்பதற்கோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.




இந்தியாவிலே எந்த மாநிலத்திலும், பஞ்சாலைகள் மூடப்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு — வேலையிழந்து வேதனையிலே மூழ்கித் தவித்த தொழிலாளர்களுக்கு— நிவாரணத் தொகை அளிக்கப்பட்டதற்கு இதுவரை சான்றில்லை. ஆனால், கோவை மாவட்டத்திலே பஞ்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் நிதியிலிருந்து இதுவரை 6 இலட்சம் ரூபாய் நிவாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றம் கண்டோம்!

# ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோயில்,

அய்யம்பாளையர்—மங்கலம் அஞ்சல்,

பல்லடம் வட்டம், கோவை மாவட்டம்.

—:O:—

''தொல்லுலகில் பல் வினையும் இரவிகண்ட பனியது போல்
வல்லமையா லகற்றும் வாழைவனத் தய்யாவினை
நல்லோர்கள் புகழ்ந்திடுவர் : நஞ்சகற்றும் நாதனென்பர்
பல்லோர்கள் தொழுதுய்யப் பாடுவது முன்புகழே.''

—:O:—

அஞ்செழுத்து மந்திரத்தால் நஞ்சகற்றும் நாதன் ஆகிய ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் பல மகிமைகளுடன் தீராத பிணிகளையும், ஆறாத புண்களையும், சகல விஷக்கடிகளையும் போக்கி அருளும் திருத்தலமாகவும் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக விளங்கி வருகிறது. இத்திருத்தலத்தை சோமனூரிலிருந்தும், திருப்பூரிலிருந்தும் வரும் டவுன் பஸ்கள், இதர பஸ்கள் மூலமாகவும் அடையலாம். இத்திருக் கோவிலில் தற்சமயம் கர்ப்பகிரஹ அர்த்த மண்டப கருங்கல் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. மேலும் இத்திருக் கோவிலின் சார்பில் அனாதை மாணவர் இல்லம் ஒன்றும், சாமளாபுரத்தில் உயர் நிலைப்பள்ளி ஒன்றும் துவக்கப் பெற்று செயல்பட்டு வருகிறது. பக்தர்கள் தங்க விடுதிகளும் மின்சாரம் குடிநீர், முதலான வசதிகளும் உண்டு. எனவே பக்தர்கள் அனைவரும் இத்திருத்தலத்திற்கு வருகை தந்து அருட் செல்வமும், பொருட் செல்வமும் பெற்று விளங்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

P. R. கோவிந்தராஜலு, B.A., B.Com.,
செயல் அலுவலர்.

சோ. கு. பழனிசாமி,
தலைவர், அறங்காவலர் குழு.

S. A. P. சுந்தரம்,
M. சின்னமாரப்ப கவுண்டர்,
M. பழனிசாமி,
M. சுப்பையன்.
—அறங்காவலர்கள்





''பட்டினில் ஆடையும்,
பஞ்சில் உடையும்,
பன்னிமலைகளென
வீதி குவிப்போம்''.

என்று பாடினார், பாரதி. இப்பாட்டிற்கு உயிரூட்டம் கொடுத்துப் பஞ்சில் உடை செய்யும் தொழில் பரவிக் கிடப்பதே கோவை மாவட்டத்தில்தான் எனலாம். அந்த அளவிற்கு இங்குப் பஞ்சு உற்பத்தியாகின்றது. அவ்வாறு கிடைக்கும் பஞ்சைக் கொண்டு கதர்-கிராமக் கைத்தொழில் மூலமாகக் கோவை மாவட்டத்தில் ஆயிரக் கணக்கானவர்களுக்குக் கதர் நெசவுத் தொழிலில் வேலை தரப்பட்டுள்ளது.

கதர்-கிராமக் கைத்தொழில் மூலம் கோவை மாவட்டத்தில் வேலை வாய்ப்புப் பெற்றிருப்போர் அதிகமாகும். இம் மாவட்டத்தில் இந்தத் திட்டம் சீரிய முறையில் செயல்படுவது பெருமாநல்லூர் நெசவிய மையம் ( Fabric Centre ) ஆகும். இங்குதான் 'முகில்' என்னும் துணி கதர்-கிராமத் தொழில் மூலம் தயாரிக்கப்படுகிறது.

''முகில்'' ஒரு கண்ணோட்டம்

குறைந்த முதலீட்டில் கிராமப் புறங்களில் நிறைந்த வேலை வாய்ப்புப் பெறத் துவங்கப்பட்டதே கிராமிய நெசவியல் மையம். ரூபாய் 1·82 இலட்ச முதலீட்டில் கிராமப் புறத்தில் 68 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. கையால் இயக்கும் 6 கதிர் அம்பர் ராட்டைகளுக்குப் பதிலாக, மின் சக்தியின் உதவி கொண்டு, 48 கதிர்களைக் கொண்ட இராட்டையாக்கி, அம்மாதிரி இராட்டைகளை கொண்டு இயக்கப்படுகிறது. இத்துடன் பஞ்சு உடைத்தல், நெகிழ்த்துதல், பட்டை போடுதல், முறுக்குதல், பாவு தயாரித்தல், நெசவு ஆகிய அனைத்தும் மின் சத்தியின் உதவியால் இயக்கப்படுகிறது. இம்

முறையில் பெருமாநல்லூர் கிரா
மிய நெசவியல் மையம்
(Rural Fabric Centre) கடந்த
இரண்டாண்டுகளாக இயங்கி
வருகிறது. இந்த நிலையத்தில்
பணியாற்றும் ஒவ்வொரு நபருக்
கும் நாள் ஒன்றுக்கு ரூ. 3 கூலி
கிடைக்கிறது. இதே போன்று
கோவைக்கு அருகே
16 கிலோ மீட்டர் தொலைவில்
உள்ள சூலூரில் கிராமிய
நெசவு மையம் ஆரம்பிக்கப்பட்டு
உற்பத்தியும் துவக்க நிலையில்
உள்ளது.

மேலும், மதுரை மாவட்டத்
தில் இடையன்வலசு, நெல்லை
மாவட்டத்தில் வள்ளியூர்,
குமரி மாவட்டத்தில் மயிலாடி
ஆகிய மூன்று இடங்களில் இம்
மாதிரியான நெசவு மையங்கள்
துவங்க முடிவு செய்யப்பட்
டுள்ளது. இம்மாதிரி நெசவு
மையத்தில் தயாரிக்கப்படுகின்ற
துணி, இந்தியத்தர நிர்ணயக்
கழகத்தின் (ஐ.எஸ்.ஐ.) தரத்
துக்கு ஏற்றதாக உள்ளது. வட
மாநிலங்களில் ''லோக்வஸ்திரா'
என்றழைக்கப்படும் இந்தத்
துணிக்கு கடந்த 13—2—1973-
ஆம் நாளன்று சென்னை அரசினர்
தோட்டத்தில் கதர் பொன்விழா
கண்காட்சியைத் திறந்து வைத்த
மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்களால்
''முகில்'' என்று பெயர் சூட்டப்
பெற்றுள்ளது.

## ம. நடராசன், எம்.ஏ.

இம்மாதிரி ஒரு நெசவு
மையத் திட்டம் இந்தியாவிலேயே
முதன் முதலாகத் தமிழ்நாட்டில்
தான் செயல்படுத்தப்படுகிறது.
எனவே இவ்வகையிலும், தமிழ்
நாடு மற்ற மாநிலங்களுக்கு வழி
காட்டியாகத் திகழ்கிறது என்
றால் அது மிகையாகாது.
இம்மாதிரி நெசவு மையத்தில்
ஆண்டு ஒன்றுக்கு 18,000 கிலோ
நூல் உற்பத்தி செய்து, அதனைக்
கொண்டு 76,500 மீட்டர் துணி
உற்பத்தி செய்ய முடியும்.

இதுபோன்ற கிராமிய நெச
வியல் நிலையங்களின் மூலம்
முரட்டு ரகத் (Cose Variety)
துணி உற்பத்தி செய்வதனால்,
மக்களின் இந்த ரகத் துணித்
தேவையைப் பூர்த்திச் செய்வ
தோடு, கிராமப் புறங்களில்
குறைந்த மூலதனத்தில்
நிறைந்த வேலை வாய்ப்பினை
நல்கும் ஒரு சிறந்த திட்டமாக
வும் செயல்படுகின்றது.

அனைவரும் விரும்பும்
அவினாசி 'ஜக்கார்டு'

தமிழகக் கதர் கிராமத்
தொழில் துறையின் கீழ் ஜக்
கார்டு துணி உற்பத்தி நிலையம்
ஒன்று கோவை மாவட்டத்தி
லுள்ள அவினாசியில் இயங்கி
வருகிறது. இங்கே பலவிதமான
வண்ணங்களில் பூ வேலைப்பாடு
கள், மற்றும் உருவங்களுடன்
கூடிய ஜக்கார்டு துணி தயார்
செய்யப்படுகிறது. இது விரிப்
புத் துணியாகவும், திரைச்
சீலையாகவும், போர்வையாகவும்
பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையம் 16—7—1960
முதல் இயங்கி வருகிறது.
ஆரம்பத்தில் வாடகைக் கட்
டத்திலும், ஜூலை 1972 திங்கள்
முதல் வாரியத்தின் சொந்தக்
கட்டடத்திலும் இயங்கி வரு
கிறது. இங்கு நிறுவப்பட்டிருக்
கும் 9 தறிகளும் கதர் கிராமத்
தொழில் துறைக்குச் சொந்த
மானவை. நெசவாளர்கள் இந்
நிலையத்திற்கு வந்து நெசவு
செய்து, அதற்குரிய கூலியை
வாரம் ஒரு முறை பெற்றுக்
கொள்கிறார்கள். மீட்டர்
ஒன்றுக்கு நெசவுக் கூலி ரூபாய்
2·25. ஒரு நெசவாளருக்கு
வாரம் ஒன்றுக்கு ரூபாய் 45
முதல் ரூபாய் 50 வரை கூலி
கிடைக்கிறது.

அவினாசியில் உற்பத்தி செய்யப்படும் ஜக்கார்டு துணி பொது மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது.



# பசுமைப் புரட்சிக்குத் துணையாகும் பல்கலைக் கழகம்

"பழைய முறைமாற்றிப்
பயிர் செய்தால்,

நிறையப் பலன்
இடைக்க வழியுண்டு ;

உழக்குத்தான் மிச்சமென்னும்
இருட்டு நிலை,

கிழக்கு வெளுத்ததுபோல்
மறைந்து விடும்."

(முதல்வர் கலைஞர்)

என்பதை நன்கு உணர்ந்த இன்றையத் தமிழ்நாடு அரசு, குறைந்த காலத்தில் நிறைந்த மகசூல் கொடுக்கக்கூடிய பயிர் வகைகளையும், செலவைக் குறைக்கும் கருவிகளையும், உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும் சாகுபடி முறைகளையும் கண்டுபிடித்து அவைகளை உழவர்களிடையே பரப்பி, பசுமைப் புரட்சிக்கு மேலும் வலிவூட்டி, தமிழ்நாடு உழவர் பெருமக்களின் வாழ்வு உயரவும், தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும் வழிவகுக்கக்கூடிய வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றினை ஏற்படுத்த, 1971-ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தை நிறைவேற்றியது. இதனால், இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைத் தமிழ் நாட்டில் ஏற்படுத்திட வேண்டுமென்று 1958-ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப் பெற்று, பல்வேறு காரணங்களால் தடைபட்டு நின்றிருந்த முயற்சி, இன்றைய அரசினால் வெற்றி பெற்றதுடன்—'தமிழ் நாட்டில் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இல்லை' என்ற குறை நீங்கியதுடன்—தமிழ் நாட்டின் நீண்ட காலத்தேவை நிறைவு பெற்றது.

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டப்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல்நாள் முதல், கோவை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆண்டு தோறும் மொத்தம் 242 மாணவர்களை முதலாண்டு பி.எஸ்சி., (வேளாண்மை) வகுப்பில் சேர்த்துக் கொள்கிறது. அதுபோலவே முதலாண்டு எம். எஸ்சி., (வேளாண்மை) வகுப்பிற்கு 94 மாணவர்களைச் சேர்த்துக் கொள்கிறது. கோவை வேளாண்மைக் கல்லூரியில் மட்டும் ஆண்டு தோறும் முதலாண்டு பிஎச்.டி., (Ph. D.) படிப்பிற்கு 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.

பி.எஸ்சி., (தோட்டக்கலை) என்ற பட்டம் பெறுவதற்குரிய நான்கு ஆண்டுக் கால புதிய பட்டப்படிப்புப் பிரிவு, 20 மாணவர்களைக் கொண்டு 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

பி.இ. (வேளாண்மை) என்ற பட்டம் பெறுவதற்குரிய 5 ஆண்டுக் காலப் புதிய பட்டப் படிப்புப் பிரிவு 40 மாணவர்களைக் கொண்டு 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் துவக்கப்பட்டு, அதற்கான கல்வியும், பயிற்சியும் அளிக்கப்பெற்று வருகிறது.



## பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆராய்ச்சி

"உழவர் பெருமக்களுக்கு ஏற்பட்டு வரும் களப்பிரச்சினைகளைத் (Field Problem) தீர்த்து வைத்து, உழவர் சமுதாயத்திற்கு உதவ வேண்டும்.' என்ற குறிக்கோளுடன் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. உழவர் பெருமக்களுக்குள்ள களப் பிரச்சினைகளைத் தொகுத்து, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையைச் சார்ந்த முதுநிலை அலுவலர்களும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பணியாளர்களும் அடங்கிய கூட்டத்தில் விவாதித்து, அப்பிரச்சினைகளுக்குரிய முக்கிய இடமளித்து, அதற்கேற்ப ஆராய்ச்சித் திட்டங்கள் தீட்டப்படுவதால், விரைவில் உழவர் பெருமக்களின் களப் பிரச்சினைகள் தீரும் என்பது உறுதியாகின்றன. மொத்தம் 343 களப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஆராய்ச்சித் திட்டங்களையும் 47 அடிப்படை ஆராய்ச்சித் திட்டங்களையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. அவ்வாராய்ச்சிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தனது இடைவிடா ஆராய்ச்சி மூலம் இரண்டே ஆண்டுக் காலத்தில் பல புதிய பயிர் ரகங்களை உருவாக்கி உழவர் பெருமக்களுக்கு வழங்கியுள்ளதுடன், பசுமைப் புரட்சிக்கு வலுவூட்டியுள்ளது. அவைகளில் மிகவும் முக்கியமான ரகங்கள் பின் கண்டவைகளாகும்.

1. கோ. 1 ஒட்டு வீரிய சப்போட்டா

2. கோ. 8 மொச்சை—அவரை.

3. கோ. 2 சாமை

4. பி.ஓ.எல். 2. நிலக்கடலை (பொள்ளாச்சி-2)

5. எம்.சி.யூ. 7 பருத்தி

6. 'பவானி' நெல்.

7. கோ. 10 கேழ்வரகு.

கோவை மாவட்டத்தில், அண்மைக் காலத்தில், திராட்சைச் சாகுபடி விரைவாகப் பரவி வருவதற்கு, கோவை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த தோட்டக்கலைப் பிரிவே மூல காரணமாக விளங்குகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டு வரும் பயன்மிகு பணிகளைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க, விரிவினைக் கல்வித் துறை ( Department of Extension ) பின்கண்ட பணிகளை வெகு மும்முரமாகச் செய்து வருகின்றன.

1. 'செய்திக் கதிர்' ( News Letter ) என்னும் திங்களிதழைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டு வருகிறது.

2. ஆராய்ச்சியின் முடிவுகளைப் பற்றிய கட்டுரைகளை நாளிதழ்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் வழங்கி, வெளியிட விரிவினைத் துறை ஆவன செய்து வருகிறது.

3. 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் துவக்கப்பட்ட தகவல் தொடர்பு நிலையம் ( Communication Centre ) வேளாண்மைத் தொடர்புடைய எல்லா அறிவியல் நுட்பங்களையும், பல்வேறு பயிர்களின் சாகுபடி முறைகளையும் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு, அவைகளை உழவர் பெருமக்களுக்கும், வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கும் வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

4. ஆராய்ச்சி மூலம் உருவாக்கப்பட்ட புத்தம் புதிய, ரகங்களின் விதைகளையும், பூச்சி-பூஞ்சாள மருந்துகளையும், தகவல் தொடர்பு நிலையத்தின் கீழ் இயங்கும் விற்பனைக்கிடங்கு நேரடியாக உழவர்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

இவ்வாறு பல்வேறு வகையில் உழவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இடையில் உள்ள ஒரு பாலமாகவும், புத்தம் புதிய ரகங்களையும் சாகுபடி முறைகளையும் உருவாக்கும் ஆராய்ச்சி நிலையமாகவும், பசுமைப் புரட்சிக்கு உதவும் பல்கலைக் கழகமாகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் திகழ்கிறது.






Criterion CO

பதிவு எண். M. 8676








## சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் கவலை மனதில் கொண்டு லார்சன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் சர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்.
லார்சன் அண்ட் டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.





தமிழ்நாட்டில் ஊராட்சி நிருவாக அமைப்பு சென்னை மாநகரமில்லாது ஏனைய 13 மாவட்டங்களில் இயங்கி வருகிறது.

இந்த 13 மாவட்டங்களும் 23 வளர்ச்சி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 23 வளர்ச்சி மாவட்டங்களும் 48 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.. 48 கோட்டங்களில் மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன, இதில் மொத்தம் 12,628 ஊராட்சிகளும் 598 பேரூராட்சிகளும் 12 நகரியங்களும் உள்ளன.

நமது அரசின் திட்டங்களை அந்த உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றி வருவதால் ஊர்கள் வளர்ச்சி அடைகின்றன. நாள் தோறும் வளர்ச்சி அடைந்து வரும் அந்தச் செய்திகளை தொகுத்து வெளியிடும் முயற்சியின் விளைவே இந்த இதழ் தமிழரசு ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழாக வெளி வருவதாகும்.

எல்லாச் செய்திகளையும் ஒரே இதழில் வெளியிடுவது எளிதான செயலல்ல எனவே, ஊராட்சி வளர்ச்சிப்பணிகளை ஒரு சோறு பதம் என்பது போல இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். தொடர்ந்து வளர்ச்சிப் பணிகளைப் பற்றிய செய்திகள் வெளியிடப்படும்.

1966—67 ஆம் ஆண்டில் ஊராட்சி வளர்ச்சித் திட்ட நிதிநிருவாகச் செலவு ஏறத்தாழ ரூபாய் 47 கோடியே 47 இலட்சம் ஆகும். இத்தொகை ஆண்டு தோறும் படிப்படியாக வளர்ந்து 1973—74-ஆம் ஆண்டில் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 94 கோடியே 69 இலட்சத்துக்கு அதிகமாகும்.

ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் ரூ. 94 கோடியே 69 இலட்சம் மட்டும் உள்ளாட்சி மன்றங்களுக்காகவும் ஊர்வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் செலவிடப்படும் தொகை அல்ல. நமது அரசின் பல்வேறு துறைகளும் ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளன. அந்தந்தத் துறைகளின் சார்பில் செய்யப்படும் செலவுகளும் ஊர்வளர்ச்சிக்குப் பயன்படுகின்றன.




449



# பணி தருவது போதாது பகுத்தறிவும் தரவேண்டும்!

கல்வித்துறையில் ஒரு நாடு பெற்றிருக்கின்ற முன்னேற்றத்தைப் பொறுத்தே அதன் பொருளாதார வளம் இருக்கிறது. இதில் நாம் பெற்றிருக்கிற வளர்ச்சி, எத்தனை பேர் படித்தார்கள் என்பதில் இல்லை. எத்தனை கல்லூரிகள் திறக்கப்பட்டது என்பதில் இல்லை. எத்தனை கட்டடங்களில் அதற்கான வசதிகளைச் செய்து தந்தோம் என்பதில் இல்லை. எத்தனை ஆசிரியர்கள், ஆசிரியைகள் இருக்கிருர்கள் என்பதில் இல்லை. இவைகளுடன் தரமான கல்வியை, தகுதியான கல்வியை, விஞ்ஞான பூர்வமான கல்வியை—பகுத்தறிவூட்டும் கல்வியை எந்த அளவுக்குப் பெறுகிருேம் என்பதில்தான் இருக்கிறது.

கல்வியை நாம் தேர்வுக்காகவோ — உத்தியோகத்திற்காகவோ குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவோ — பெறுவதில் அர்த்தமில்லை. நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தையும் எண்ணிப் படிக்க வேண்டும். அந்த எண்ணம் மாணவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டாக வேண்டும்.

பொதுவாக மாணவர்களிடத்தில் அமைதியின்மை அண்மைக் காலமாக ஏற்பட்டுவருவதை அறிவீர்கள். இதற்கு என்ன காரணம் என்பதைப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கூறுகையில், "சமுதாய சுயநலமிகள் இளம் உள்ளங்களில் இயற்கையாகக் கொதித்தெழுகின்ற உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அமைதியின்மையை ஏற்படுத்துகிருர்கள்" என்ருர்கள்.

இந்த நிலைமையை நாடு முழுவதும் காண்கிருேம். வேறு மற்ற பிற நாடுகளை, இடங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் அதிகமில்லை என்றே கூறவேண்டும்.

இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சில நேரங்களில் இத்தகைய நிலை ஏற்பட்டாலும் இவை மற்ற இடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிகமாக இல்லையென்றே கூறவேண்டும்.

இந்தத் தொல்லையும் இல்லாமல் இருந்தால் அதனுல் ஏற்படுகின்ற நிம்மதியான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டத்தைச் செலுத்தி—கல்வி வளர்ச்சிக்காகவும், மற்றவைகளுக்காகவும் நல்ல பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முடியும்.

இதற்கு மாணவிகள் உதவி செய்ய முடியும். அவர்கள் தங்கள் இல்லத்தில் அவர்களுடன் இருக்கும் சகோதரர்களிடத்தில் இதுபற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அக்கம் பக்கத்தில் உள்ள தாய்மார்களுடன் தொடர்பு கொண்டு அந்தந்தக் குடும்பத்தில் உள்ள மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதை ஒரு பிரச்சாரமாகவே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, மாணவர்களிடையே கோபம் ஏற்பட்டால் அதற்கு முதல் இலக்காவது பொதுமக்கள் சொத்தான பஸ், அரசு அலுவலகங்களாகத்தான் இருக்கின்றன. இதனுல் அரசுக்கு மட்டும் நட்டமல்ல, எதிர்காலச் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டிய பொருளாதார முன்னேற்றமே தடைப்படுகின்றது. இதைத் தாய்மார்களாகிய நீங்கள்தான் உணர்த்தவேண்டும்.

ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க—தாய்மார்கள் அந்த வகையில் உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

—சென்னை இராணிமேரிக் கல்லூரியில் 19—3—73 அன்று ஆற்றிய உரை.)

முதல்வர்

## பார்த்தோம்!



**முத்திரைத் தொடர்கதை**

தமிழரசில் வெளிவரும் ''உலகில் இரண்டு கிளிகள்'' தொடர்கதை ஆரம்ப முதல் விறுவிறுப்புடன் செல்கிறது. ஆழமான உவமைகள்— அழகிய கருத்துக்கள்— எழில்மிகு வருணனைகள் கொண்டு சிறகடித்துப் பறக்கின்றது. ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஆசிரியரின் முத்திரை பிரதிபலிக்கிறது.

—எச். சேக்அப்துல்லா,
திருப்பாச்சேத்தி.

**அட்டையின் பெருமை**

தமிழரசு இதழின் அட்டைப் படங்களைப் பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்கும் வண்ணம் ஆங்கிலப் பத்திரிகை போல அருமையாக உள்ளது.

—எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.

**பாராட்டுக்குரிய இதழ்**

கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு இதழ் எங்கள் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்டு விட்டது. அரசு ஆற்றியுள்ள சாதனைகள் ஏராளம் என்பதை எங்களுக்கு எடுத்துரைத்த கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு இதழுக்கு எங்கள் பாராட்டு.

—எஸ். ஆர். சந்திரன்,
கோவை.

**தேன் விருந்து**

தொழில் வளம், விளையாட்டு அரங்கம் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய செய்தித் தொகுப்புகளுடன் வெளியாகியுள்ள கோவை மாவட்டச் சிறப்பிதழ் ... ளுக்கும், கருத்து... விருந்தளித்தது. மொத்... தில் மார்ச் 16 இதழ் தெ... டாத தேன் விருந்து.

—என். எஸ். மணி...
குமராட்...

**கற்கண்டுக் கோவை**

கவிஞர் ஈரோடு ... முன்பன் தீட்டிய 'கோக்கா... கோவை'யைப் படித்து இ... புற்றேன். வளமான செ... லாட்சி நிறைந்த கற்கண்... கவிதை.

—எல். கணப...
பல்லட...

இந்த இதழுடன்
இலவச இணைப்பு

முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை

# ஊர் வளர்ச்சிப் பணிகளில் உயர்ந்து நிற்பது தமிழகமே!

சமூகநலன் கருதியும், வட்டார வளர்ச்சி நலன் கருதியும் இந்த மானியக் கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டு, அதற்காக ரூ. 30,65,87,200 இரண்டு வகைகளிலும் கோரப்பட்டிருக்கின்றன. சமூக வளர்ச்சி கருதியும், வட்டார வளர்ச்சி கருதியும் பலரும் பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆக, இதில் இரண்டு பெரும் பணிகள் அடங்கியிருக்கின்ற காரணத்தால், பொது மக்களுடைய நேரடித் தொடர்பு, பொது மக்களுடைய ஊக்கமும், ஆர்வமும், அக்கறையும் இந்தத் துறையிலே வேறு எந்தத் துறையையும் விட மிகப் படிந்து இருக்கிறது, என்பது இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறிய கூற்றுக்களிலிருந்து மிகத் தெளிவாகிறது.

இங்கே ரூ. 30,65,87,220-க்கு மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டாலும், இந்தத் துறையின் மூலமாக இந்த ஆண்டு மட்டும் நிறைவேற்றப் படுகின்ற பணிகள் ரூ. 9,469 லட்சமாக அமைகிறது. பல்வேறு துறைகள் தனித்தனியாக இருந்தாலும் கூட, அவற்றின் நன்மைகளை மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கின்ற இந்த ஊராட்சித் துறையும், ஊராட்சி ஒன்றியத் துறையும், வேறு துணைத் துறைகளாக இருந்து பாடுபடும் துறைகளும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்திருக்கின்ற பாங்கினையும் நன்முகக் காண்கிறோம். 1961–62-ல் 1,575 இலட்ச ரூபாய் அளவுக்கு இந்தத் துறைகளின் மூலமாகப் பணிகள் ஆற்றப்பட்டு, 1966–67-ல் ரூ. 4,748 இலட்சமாக வளர்ந்து, இப்போது 9,469 லட்சமாக வளர்ந்தோங்கி நிற்கிறது. 1961-67-ஆண்டுகளுக்கு இடையேஇருக்கிற 6 ஆண்டுக் காலத்தில் மாத்திரம் ரூ. 198 கோடி 83 இலட்சம் அளவுக்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்று கணக்கிட்டால், 1967-லிருந்து 1972–73 வரையில் 6 ஆண்டுக் காலத்தில் ரூ. 378 கோடி 95 இலட்சம் அளவுக்குச் சமுதாய, வட்டார வளர்ச்சிப் பணிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் காணலாம். 1973–74-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 473 கோடியே 64 இலட்சம் ரூபாயாகும். 6 ஆண்டுக் காலத்திற்கு முன்பு இருந்ததை விட இப்போது எவ்வளவு செலவழிக்கிறோம் என்று பார்த்தால் 99 சதவிகிதம் அதிகமாக — கிட்டத் தட்ட 'சென்ட் பர்ஸன்ட்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகமாகச் செலவழிக்கிற ஒரு துறையாக இந்தத் துறையைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆக இந்தத் துறை மிகப் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொல்வதில் நான் பெருமைப் படுகிறேன்.

வேறு பல மாநிலங்களிலே இருக்கின்ற அமைப்புகளோடு நமது தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்த்தோமானல் நிலைமை இன்னும் தெளிவாகப் புரியும். வேறு பல மாநிலங்களிலே 'ஜில்லா பரிஷத்' என்ற அமைப்புக்களை ஏற்படுத்தி, சமுதாய வளர்ச்சிப் பணி, வட்டார வளர்ச்சிப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவைகளிலே சிறப்பாகச் சொல்லப்பட்டது மகாராஷ்டிர மாநிலம். ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்துச் செயல்படுகின்ற சில மாநிலங்களை விட மகாராஷ்டிர மாநிலத்தில் 'ஜில்லா பரிஷத்' அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப் பணிகளைச் சிறப்பாக நடத்துவதாகச் சொல்லப்பட்டது. அதனல், அவர்கள் எப்படிச் செயல்படுத்துகிறார்கள், எந்தெந்த முறைகளில் பணிகளை நிறைவேற்றுகிறார்கள் என்பதை ஆராய்ந்து அறிந்து வருவதற்காக நமது மாநில அதிகாரிகள் குழு ஒன்றை அங்கே அனுப்பி வைத்தோம். நமது மாநிலத்தைவிட எந்த வகையிலே சிறந்திருக்கிறது என்பதை அறிந்து, நமக்கு ஏற்றதாக இருந்தால் அதைச் செயல்படுத்தலாம் என்பதற்காக அதிகாரிகள் குழுவை அனுப்பி வைத்தோம். அவர்கள்அங்கே போய்ப் பார்த்துவிட்டு, அங்கே திட்டங்களைச் செயல் படுத்துவதிலே உள்ள கஷ்டங்களையும் சங்கடங்களையும் மற்றக் காரியங்களையும் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுத்தார்கள். அவர்கள் அறிக்கையிலே '374 ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் நமது முறைதான் மகாராஷ்டிரத்தை விடச் சிறந்ததாக இருக்கிறது' என்று தெரிவித்திருக்கிறார்கள்.



கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்
நாவலர். நெடுஞ்செழியன்

ஆக, கடந்த 12, 13 ஆண்டுக் காலமாக வேறு பல மாநிலங்களை விட நமது மாநிலத்தில் இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப் பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் தெள்ளத் தெளியப் புரிந்து கொள்கிறோம்.

மொத்தத்தில் இந்த 12, 13 ஆண்டுக் காலத்தில் ஊராட்சித் துறை ஒப்புக்கொண்டிருக்கின்ற பணிகள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்திருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். இப்படிப் பொறுப்புக்கள் அதிகரித்திருப்பதனுல் ஒன்றியங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்காக ஊராட்சித் துறையை வருவாய்த் துறையிலிருந்து தனியாகப் பிரிக்க வேண்டுமென்று பலர் சொன்னார்கள். மாவட்ட அளவிலே இப்படி நிருவாகத்தை இரண்டாகப் பிரித்தாலும் இரண்டு துறைகளுக்கும் மாவட்ட–

ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருக்க முடியும். அந்த அடிப்படையில்தான் இந்தத் துறையை முழுக்கவனம் செலுத்திப் பார்ப்பதற்காகத் தனி அதிகாரிகள் இருந்தாலும் — ஆர். டி. ஓ. அதிகாரம் பெற்றவர்கள் இந்த வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக அல்லது கோட்டாட்சித் தலைவர்களாக இருந்தாலும்— மேலதிகாரம் படைத்தவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பதால் கோட்டாட்சித் தலைவர்களுக்கு அதிக வாய்ப்பும், வசதியும் ஏற்படாமல் போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படலாம். இருப்பினும் சிறந்த நிருவாகத்தை முன்னிட்டு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்தைக் கொள்கை அடிப்படையில் ஏற்கெனவே நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த வகையிலே அதைச் செய்யலாம் என்பதற்கு நிருவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கருத்துரை கேட்டிருக்கிறோம். அவர்கள் அறிக்கை வந்த பின்னால் அதிலே நல்ல முடிவுகள் ஏற்படும் என்று கருதுகிறேன்.

பொதுவாக நமது நாட்டில் ஊராட்சி வளர்ச்சித் துறைகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக '' நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்யூனிட்டி டெவலப்மென்ட் '' என்ற அமைப்பிலிருந்து யுனைட்டெட் கிங்டம், பிரிட்டனைச் சேர்ந்த வல்லுநர் குழு ஒன்று வந்தது. அவர்கள் தமிழ்நாடு, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய நான்கு மாநிலங்களையும் பார்வையிட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையிலே தமிழகத்தில் ஊராட்சி வளர்ச்சித் துறை செயல்படும் முறை சிறப்பானது என்று பாராட்டியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றிய அமைப்பு வேளாண்மைத் துறை வளர்ச்சியில், தமிழ்நாடு 68 சதவிகித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், மத்தியப் பிரதேசம் 5 சதவிகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், குஜராத் 34 சதவிகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும் அவர்கள் மேலும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களை அணுகி, உழவர் பெருங்குடி மக்கள் பெறுகின்ற நிதிவசதிகளைப் பற்றியும் கணித்திருக்கிறார்கள். தமிழகத்தில் 71 சதவிகிதம் வேளாண்மைப் பெருங்குடி மக்கள் நிதி வசதியைப் பெறுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களை அணுகியிருக்கிறார்கள் என்றும், ஆந்திரப் பிரதேசத்தில் 39 சதவிகிதம் என்றும், குஜராத்தில் 19 சதவிகிதம் என்றும், மத்தியப் பிரதேசத்தில் ஒரே ஒரு சதவிகிதம் என்றும் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகம் இந்தத் துறையிலே முன்னேறியிருக்கிறது என்பது நன்கு தெளிவாகிறது.

பொதுவாக, தமிழகம் நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் வளர்ச்சி பெற்று வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நமது தமிழகத்தில் மேலும் இந்தத் துறை வளர்ச்சிபெற நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன.




1971-ஆம் ஆண்டு சென்சஸ் கணக்குப்படிப் பார்த்தால் நகரங்களைப் பிரிப்பதற்காக வகுக்கப்பட்ட இலக்கணப்படி இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா மாநிலங்களிலும் கணக்கிட்டு ஒவ்வொரு மாநிலத்தையும் எத்தனை நகரங்களாகப் பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்ப்போமானால் உத்தரப் பிரதேசத்தில் 294 நகரங்கள் என்றும், மகாராஷ்டிரத்தில் 289 நகரங்கள் என்றும், குஜராத்தில் 217 நகரங்கள் என்றும், அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் 443 நகரங்கள் என்றும் சென்சஸ் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். 8 கோடி மக்கள் வாழ்கின்ற உத்தரப்பிரதேசத்தில் நகரங்களைப் பிரிக்கின்ற இலக்கணப்படி 294 நகரங்கள் தான் வருகின்றன என்று அந்த ரிப்போர்ட்டிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நமது தமிழகத்தில் 443 நகரங்கள் வருகின்றன என்றால் அது எவ்வளவு பெருமைக்குரியது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்படித் தமிழகத்தில் பல கிராமங்கள் சிற்றூர்கள் பேரூர்களாகவும், பேரூர்கள் நகரங்களாகவும், நகரங்கள் பெருநகரங்களாகவும் மாற்றமடைந்து வரும் அளவிற்குப் பல்வேறு கிராமங்கள் வளர்ச்சி பெற்று இருக்கின்றன என்பதை அறியலாம். மற்ற மாநிலங்களிலுள்ள நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது தமிழகத்தில் வளர்ச்சி பரவலாக அமைந்திருப்பதையும் அறியலாம். வங்காளத்தை எடுத்துக்கொண்டால் கல்கத்தா போன்ற இரண்டொரு நகரங்களைத்தவிர மற்றப் பகுதிகளெல்லாம் மிகச் சாதாரணமாகத்தான் இருக்கின்றன. மராட்டியத்தை எடுத்துக்கொண்டால் ·பம்பாய் வளர்ந்த நகர்; பூனா வளர்ந்த நகர்; அது போன்று மைசூரை எடுத்துக் கொண்டால் மைசூர் வளர்ந்த நகர், பெங்களூர் வளர்ந்த நகர். ஆனால், மற்றப் பகுதிகளெல்லாம் மிக மிகச் சாதாரணமாகவே இருக்கின்றன. ஆனால், தமிழகத்தை எடுத்துக்கொண்டால் வளர்ச்சியுற்ற நகரைப் பார்க்க வேண்டுமானால் 300 அல்லது 400 மைல்களைக் கடந்து வந்தால் தான் பார்க்க முடியும் என்ற நிலையில்லாமல் சென்னையும், சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையும், கோவையும், திருச்சியும், திருநெல்வேலியும், சேலமும், வேலூரும்இப்படி மாவட்டத்திற்கு மாவட்டம் பெரும் நகரங்கள் வளர்ச்சியுற்று இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வளர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டது என்று சொல்லவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்தில் சென்னை வளர்ச்சி அடைந்தது என்று சொன்னாலும், சேர சோழ பாண்டியன் காலத்திலிருந்தே இப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறேனே தவிர இதற்குக் காரணம் வெள்ளைக்காரன் மட்டுமில்லை.

நான் குறிப்பிட்டதைப்போலச் சென்னைக்கு மட்டும்தான் வெள்ளைக்காரன் காரணமாக இருக்கலாம். காஞ்சி, மதுரை, உறையூர் மற்றவையெல்லாம் நீண்ட நெடுங்காலமாக வளர்ந்துவரும் நகரங்களாகும். அத்துடன் நமது அரசு எடுத்துவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகக் கிராமங்களும், நகரங்களும் மேலும் விரிவடைந்து வருகின்றன என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்தது 300 மக்கள் தொகையுள்ள பகுதிகளுக்கு ஒரு துவக்கப் பள்ளியும், 2½ மைல் வட்டாரத்திற்கு ஓர் உயர் துவக்கப்பள்ளியும், ஐந்து மைல்வட்டாரத்திற்கு ஓர் உயர்நிலைப் பள்ளியும் நிறுவவேண்டும் என்பது நமது திட்டம். நிதிநிலையினையொட்டி மேலும் மேலும் வளர்ந்துவரும் இந்தப் பகுதிகளின் தேவைகளையும் முடிந்த அளவிற்கு நிறைவேற்றி வருகின்றோம். கல்வியினைப் பொறுத்த மட்டில் அது மேலும் மேலும் பரவலாக்கப்பட்டு வருகின்றதைப் பார்க்கலாம். 1966–67-ல் ஆரம்பக் கட்டத்தில் கற்பவர்களுக்கு ரூ. 17·90 கோடி செலவழித்தோம் என்றால் 1973–74-ல் இது ரூ. 34·32 கோடிக்கு வளர்ந்துள்ள நிலைக்குக் கல்வி பரவலாக்கப்பட்டிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இதை நான் குறிப்பிடுகின்றேன். இன்னும் இத்துறையில் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. கல்வியினைப் பொறுத்த மட்டில் ஊராட்சி ஒன்றியங்கள்தான் இப் பணியினைப் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஆறு வயதிலிருந்து பதினொரு வயது வரையிலுள்ள சிறுவர்கள், சிறுமிகள் நூற்றுக்குத் தொண்ணூற்று நான்கு பேரைப் பள்ளிக்குக் கொண்டு வந்தோம் என்றாலும் இன்னும் ஆறு பேர் பெற்றோர்கள் கைக்கும் அகப்படாமல், ஆசிரியர்களுடைய கண்களுக்கும் அகப்படாமல் அங்கங்கே சுற்றிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களையும் பள்ளிகளில் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கின்றன. அவற்றை அவை திறம்பட மேற்கொண்டும் இருக்கின்றன.

சிற்றூர் வளர்ச்சி வாரியம் என்று அழைக்கப்படும் 'ரூரல் டெவலப்மென்டு போர்டு' ஒன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் கடன் வசதிகளைப் பெற்றுப் பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டுதல், இணைப்புச்சாலைகளை அமைத்தல், மார்க்கெட்டுக்கான கட்டடங்களைக் கட்டுதல் போன்றவற்றுக்கான நிதி உதவியைக் கடனாகக் கொடுக்க ஏற்பாட்டினைச் செய்யக் கருதிக்கொண்டிருக்கிறோம். அரசாங்கத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாகவாவது அல்லது தேசிய பாங்குகளிலிருந்தாவது கடன் உதவி பெற்று 'ரூரல் டெவலப்மென்டு போர்டு' என்ற ஒன்றினை அமைத்து உதவ வேண்டும் என்று முதலில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினை அணுகினோம். அன்றிருந்த தலைவர் ஒப்புதல் தந்தார். ஆனால், அதை முறையாகப் பெறுவதற்கு முன்னம் அவர் மாறிவிட்டார். இப்போது அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் தலைவராக வந்திருக்கின்றார். வந்துள்ள இவரிடம் நமது கோரிக்கை போயிருக்கின்றது. இவர் ஒப்புதல் அளித்தபிறகு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதியினைப் பெற்று, நாம் இப்போது யோசித்துக் கொண்டிருக்கும் சிற்றூர் வளர்ச்சி வாரியத்தினை அமைப்பதன் மூலம், கிட்டத்தட்ட எண்ணாயிரம் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டிக்கொடுக்க முடியும். இரண்டு ஆண்டுக் காலத்தில் எல்லாக் கட்டடங்களையும் கட்டி முடித்துவிட்டுப் பின்னர் இந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அதற்கான செலவுகளைத் திரும்பப் பெறலாம். ஒருக்கால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்த உதவியினைச் செய்ய முன் வராவிட்டாலும் தேசிய பாங்குகளோடு தொடர்பு கொண்டு இந்த வாரியத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கின்றது.

> ## முகப்பில்
>
> முகப்பில் காணப்படும் மலையும் மலையைச் சார்ந்த இடமும் மதுரை மாவட்டத்திலுள்ளவை. ஆத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்துக்கு அருகிலுள்ளது. எங்குப் பார்த்தாலும் பசுமையான தென்னந் தோப்புகள் நிறைந்துள்ள இப் பகுதியில் மருதாநதி நீர்த் தேக்கம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பொழுது அங்கு அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

அடுத்து, சாலைவசதிகள் பற்றி இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கிராமச்சாலைகள் அபிவிருத்தித் திட்டம் என்ற அடிப்படையில் 'ரூரல் ரோட்ஸ் ப்ரோக்ராம்' என்ற வகையில் நாம் ரூ. 230 இலட்சம் சென்ற ஆண்டு நிதி ஒதுக்கிச் செலவழித்திருக்கிறோம். தவிர வேலைவாய்ப்பினை அளித்திடும் திட்டத்தின் கீழும் 6,032 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அதற்காக ரூபாய் 240 இலட்சம் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இதுபோன்று, காவேரி ஆற்றுப் பகுதியில் 'காவேரி கமேண்டு ஏரியா'வில் 'லிங்க் ரோட்ஸ்' போடுவதில் 38·72 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதேபோலப் போக்குவரத்து மற்றும் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ் என்ற அளவில் 13·82 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வறட்சிப் பகுதிகளில் பணிகளுக்கு என ட்ரௌட் ப்ரோன் ஏரியா என்ற அளவில் ரூபாய் 16·49 இலட்சம் செலவழிக்கப்பட்டுச் சாலை வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி நான் அடிக்கடி சட்ட மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறேன். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இல்லாதவர்களில், குறைந்தது ஆயிரம் பேர்களுக்காவது தொடர்ச்சியாகப் பத்துத் திங்களுக்கு வேலையளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்திய அரசு உருவாக்கியுள்ள திட்டம் இது. இத்திட்டம் 1971-72-ல் 230 ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 2·93 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 84·04 இலட்சம் மனித நாட்கள் பயன்பட்டிருக்கின்றன. அதேபோல் 1972–73-ல் ரூ. 2·40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. நம்முடைய இலக்கு 53·20 இலட்சம் மனித நாட்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது ஆகும். அதற்காகவே நாம் 1973–74-ல் ரூ. 3·02 கோடி செலவிடத் திட்டமிட்டிருக்கிறோம்.

முனிசிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில், மிச்சப்படும் தொகையில் ஒரு பங்கைக் கல்விக்காகச் செலவிட வேண்டுமென்ற தன்மையிலே, இப்பொழுது பொதுவாக ஆராய்ந்து அங்கே துண்டு விழுகிற நிலைமையிலே, 75 சதவிகிதத்திற்காகவாவது அவர்கள் கட்டாயம் வரியை வசூலிக்க வேண்டும். வசூலித்து, அதை மிச்சப்படுத்துகிற தொகையிலே ஓரளவுக்குக் கல்விக்கு ஒதுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கும் பிறகு துண்டு விழுமானால் அரசாங்கம் ஏற்றுக் கொள்வது என்று முடிவெடுத்து அந்த உத்தரவு, இப்பொழுது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 75 சதவிகிதத்திற்குக் குறைந்த வரியை வசூலித்து, அந்தத் துண்டு விழுந்து, அதை அரசாங்கத்தினர் செலுத்தவார்களானால், 75

சதவிகிதத்திலிருந்துதான் துண்டு விழுகின்ற தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமே தவிர, மற்றத் தொகையைக் கடனாகத்தான் தரும், அதை அவர்கள் எப்படியாவது தர வேண்டுமென்று இப்பொழுது தெரிவித்திருக்கிறோம். கல்வித் துறையிலே, நகராட்சி மன்றங்களிலே எந்த இடுக்கண்ணும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இது செய்யப்படுகிறது. இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு ரூ. 78 இலட்சம் செலவாகிறது என்றாலும்கூட, நகராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை நீக்க இந்த முயற்சியினை அரசு மேற்கொண்டிருக்கிறது.

1—4—1973 முதல் எல்லா நகராட்சி மன்றங்களிலும் சைக்கிள் வரி நீக்கப்படுவதை அரசாங்கம் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இப்போழுது ஒருசில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படுகிறது. ஒரு சில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படவில்லை. எல்லா நகராட்சிகளும் 1—4—1973-லிருந்து சைக்கிள் வரி போட வேண்டாமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா நகராட்சி மன்றங்களுமே அந்தப் பணியிலே ஈடுபடும்.

'நகராட்சி நிதி ஆய்வுக்குழு' ஒன்றை நியமிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நகராட்சியினுடைய நிதிநிலைமைகளைக் கண்டு ஆராய்ந்து, அவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வது எப்படி என்பதையும், தங்களுடைய செலவினத்தை எப்படிச் சீரமைக்கலாம் என்று அறியவும் ஓர் ஆய்வுக் குழு அமைத்து, அவர்கள் அளிக்கின்ற அறிக்கையை ஆராய்ந்து, எந்த எந்த இனங்களில் வரி விதிக்கலாம், எந்த எந்த இடங்களுக்கு நான்-டாக்ஸ் ரெவின்யூ பெறலாம் என்ற யோசனையை அவர்களிடத்திலே பெற்று, அதன் மூலம் நகராட்சி மன்றங்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கு வழிவகை பெறலாம் என்ற அளவிலே ஒரு நகராட்சி நிதி ஆய்வுக்குழு, 'முனிசிபல் பினன்ஸ் என்குயரி கமிட்டி' அமைக்கலாம் என்றும், அதன் மூலம் அறிக்கை பெறவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

நகராட்சிகள் 40 ஆக இருந்தது, இப்பொழுது 90-க்கு



மேல் உயர்ந்து விட்ட காரணத்தால், பணிகள் அதிகம் ஆகியுள்ளன. ஆகவே, இரண்டு வட்டார இயக்குநர்கள் (தனிநிலை-செலக்‌ஷன் கிரேட் என்ற அளவுக்கு, ஆணையர் ஒப்பான நிலையில்) நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே, இரண்டு ரீஜினல் டைரக்டர்களை நியமிப்பதன் மூலமாக இந்த நகராட்சிப் பணிகள் இனிச் செம்மையாக இருக்கும். 4 பேர் வேண்டுமென்று கேட்டாலும் இப்பொழுது இருக்கிற சூழ்நிலையில் 2 ரீஜினல் டைரக்டர்கள் செலக்‌ஷன் கிரேட் ஆணையர்க்கு ஈடான வகையில் நியமிக்கப்பட்டு, அந்தப் பணிகளைச் செம்மைப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக வளர்ச்சி, வட்டார வளர்ச்சியைப் பொறுத்தவரையிலே, செய்யவேண்டிய பல பணிகள் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். எல்லா ஊர்களும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். 5, 6 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட அதிகமாக 2 மடங்கு அளவுக்கு மேம்பாடு செய்தாலும்கூட, செய்யவேண்டிய பணிகள் இன்னும் ஏறித்தான் இருக்கின்றன. அவைகள் எல்லோருடைய ஒத்துழைப்பினுடைய அடிப்படையிலே நிறைவேற்றுகின்ற அளவுக்கு இருக்கின்றன. பொதுமக்களும் இதிலே ஒத்துழைக்கவேண்டும். இதிலே பாரபட்சம் காட்டுகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். 1 இலட்சத்து 25 ஆயிரம் ஊராட்சிகள் இருக்கும் போது, ஓரிடத்தில் மட்டும் பாரபட்சம் காட்டுவேனா என்பதை மாண்பு



மிகு உறுப்பினர்கள் உணர வேண்டும். யார் எங்கே தவறு செய்தாலும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கிற முறையிலே, காரியங்களைச் செய்கிறோம். நகராட்சி மன்றத்திற்குப் புறம்பான ஒரு தீர்மானம் போடுகிற பொழுது அந்தத் தீர்மானத்தை ஏன் ரத்துச் செய்யக்கூடாது என்று கேட்கிற அந்தப் பழக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது. நகராட்சி மன்றங்கள் அவைகளுக்கு உரிய அளவிலேதான் இருக்கவேண்டும். தீர்மானங்கள் போடவேண்டும். ஓரிடத்தில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்தான் என்று குறிப்பிட்டார்கள். ஆக, அவர் கொண்டு வந்தாலும் சட்டம் சட்டம்தான் என்பதை நிரூபிப்பதற்காக அதை நிராகரித்தோம். அதுவே சிறந்த எடுத்துக்காட்டு. விதிமுறைகளுக்குப் புறம்பான தீர்மானங்கள் கொண்டு வந்தால் ரத்துச் செய்வோம். காங்கிரஸ் உறுப்பினர் கொண்டு வந்தால்தான் ரத்துச் செய்வோம், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கொண்டு வந்தால் ரத்துச் செய்யமாட்டோம் என்று சொல்கிறவர்களுக்குத்தான் இது பயன்படும் என்ற பாளையங்கோட்டை நகராட்சி மன்றம் போட்ட தீர்மானத்தை ரத்துச் செய்தோம். மேலும் மேலும் பணி ஆற்றுவதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு பொதுமக்களுக்குடைய ஆதரவு இதற்கு நிரம்ப இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு இந்தக் காரியங்கள் நல்ல முறையிலே நடைபெறும். மற்ற மாநிலங்களை விட எல்லாத் துறையிலேயும் முன்னே நிற்கிறோம் என்றாலும், இந்தத்துறை எல்லாருடைய ஒத்துழைப்புடன் மேலும் முன்னேறமுடியும். அதற்கு உறுதுணையாக இருந்து யோசனைகளைக் கூறிய மன்ற உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறையிலே பணியாற்றிய, பணியாற்றுகின்ற அதிகாரிகள், அலுவலாளர்கள், இயக்குநர்கள், அத்தனை பேருக்கும் அவர்களுடைய பணிகளுக்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதங்களுக்குக் கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் அவர்கள் தந்த பதிலுரை).



# கிராமங்களில் கல்வி வளர்ச்சி

தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஒன்றியங்கள் அதனதன் நிதி வசதிக்கேற்றவாறு ஒரு நியாயமான நிதியை ஒதுக்கி, தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி, தொடக்கக் கல்வியின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்துவதும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதும் 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (ஈ) பிரிவின்படி ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கடமையாகும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 27,830 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் சுமார் 22,140 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. எஞ்சியவை உதவி பெறும் பள்ளிகளாக உள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் 1,24,100 ஆசிரியர்கள் பணியாற்றி 42,00,000 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

அரசின் செலவும், ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு விவரமும் வருமாறு :—

| ஆண்டு | | அரசின் செலவு | ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1966–67 | .. | 1,190·00 | 314·00 |
| 1967–68 | .. | 1,621·00 | 347·00 |
| 1968–69 | .. | 1,916·00 | 358·00 |
| 1969–70 | .. | 2,147·00 | 373·00 |
| 1970–71 | .. | 2,350·00 | 392·00 |
| 1971–72 | .. | 2,839·00 | 414·00 |
| 1972–73 | .. | 3,200·00 | 570·00 |
| 1973–74 | .. | 3,432·41 | 372·00 |

முன்னுள்ள மூன்றும் பிரிவில் கூறியுள்ளவாறு, ஊராட்சிக் கல்வி நிதிநிலை ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு, தொடக்கக் கல்விக்கென ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் மானியங்களை மாற்றியமைத்துள்ளது. இதன் விளைவாக, முன்னர்க் கிடைத்த ஒதுக்கீட்டிற்கும் மேலாக, 1972–73-ஆம் ஆண்டு தொடக்கம் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாக ரூ. 7 கோடி கிடைக்கும்.

### பள்ளிக் கட்டடங்கள்

ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் மானியங்களை அரசு உயர்த்தியுள்ளது. தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-லிருந்து ரூ. 8,000-க்கும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 7,000 முதல் ரூ. 13,000 வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-ம் உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 6,000-ம் குறைந்த அளவில் நன்கொடையாகத் திரட்டப்படவேண்டும்.

அரசு முயற்சி செய்த போதிலும், தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய இயலவில்லை. 22,140 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 16,213 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களிலேயே செயற்படுகின்றன. 1,160 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன, இம்மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகளுக்குப் பள்ளிக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்டி முடிப்பதற்கென, ஒரு விரிவான திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்திற்கும் நிதி உதவி பெற, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அணுகுவதே இந்தத் திட்டமாகும். மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 13·83 கோடி செலவில், 7,377 தொடக்கப் பள்ளிக்கட்டடங்கள் 1,112 உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனுதவியைப் பெற, சட்ட அடிப்படையில் ஊரக வளர்ச்சி வாரியம் ஒன்றினை அமைக்க அரசு ஆலோசனை செய்து வருகிறது. அவ்வாறு அமைப்பதன் மூலம், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன்களைப் பெற்று, உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுத்து, பின்னர் அவற்றிடமிருந்து திரட்டி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் திருப்பியளித்து விடலாம். இது தவிர, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற, தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்தும் பள்ளிக் கட்டடங்கள் அமைக்க அரசு உதவி செய்கிறது. " மாநிலப் பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைத்த உதவியினால், சிறப்பு நல நிதியைக் கொண்டு, இப்பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டது " என்ற சொற்கள் கொண்ட ஒரு கல், அக்கட்டடத்தில் பொருத்தப்பட வேண்டும்.

பள்ளிக் கட்டடங்களுக்கென, இதுவரை ரூ. 52·60 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டது. ஆனால், பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டிய திட்டத்தின் முதன்மையைக்கருதி 1973—74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 92·27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியைக் குடியிருப்புகள்:**—ஊர்ப்பகுதியில் பணியாற்றும் ஆசிரியைகளுக்குத் தகுந்த போதுமான இருப்பிட வசதி அளிக்கவேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே இதற்கென 1973—74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரை 1,485 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

**புதிய உணவுத் திட்டம்:**—ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனால் அவற்றின் துணைகொண்டு, நாட்டை உருவாக்கும் இம்மதிய உணவுத் திட்டத்தைச் சீராகச் செயற்படுத்த முடிகிறது. இம்மாநிலத்திலுள்ள எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயற்பட்டு வருகிறது.



தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்களால் அண்மையில் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிந்துப்பட்டியில் திறந்துவைக்கப்பட்ட பள்ளி

அரிசன நலப்பள்ளிகளில் கற்கும் மாணவர்கள் உட்பட, இம்மாநிலத்தில் 19 இலட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மதிய உணவுக் குழு உள்ளது. அதற்கு ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமையாசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார். 1973—74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 218·34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### நலவாழ்வுப் பணிகள்

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள் :**—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல் நிலையாக நிறுவப்பட்ட பல நோக்கப் பிரிவாகும். சமுதாயத்திற்குத் தடுப்புச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு, மக்களின் உடல்நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். இரண்டு வட்டாரங்கள் தவிர, ஏனைய எல்லா வட்டாரங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆத்தூர், துரிஞ்சாபுரம், கீழ்ப்பெண்ணாத்தூர், முடக்குறிச்சி, கொடுமுடி, வெள்ளக்கோயில், தூக்கநாயக்கன் பாளையம் ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டாவதாக இன்னொரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது நிலையத்திற்காக 5 ஏக்கர் நிலத்தையும் 10,000-ரூபாயையும் மக்கள் நன்கொடையாகத் தரவேண்டும்.

**தாய்—சேய் நலநிலையங்கள் :**—தாய்—சேய் நலப் பணிகளைத் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியம் சமாளிக்கும் வகையில், மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை, அரசு உதவி மானியமாகத் தருகிறது. இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களில் 10-க்கும் மேற்பட்ட தாய், சேய் நல நிலையங்களைப்படிப்படியாகத் தொடங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய், சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,880 -ஆகும்.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :**—மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. இம்மாநிலத்தில் 19[illegible] ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, ஊரக மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மாநிலத்தில் 260 ஊரக மருந்தகங்கள் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்கும் மொத்தச் செலவில் 50 சதவீதம், அது ஆண்டொன்றிற்கு ரூ. 5,400-க்கும் மேற்படாமல் நிதியுதவியைப் பெற, ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது.

**குடும்ப நலத்திட்டம் :**—குடும்ப நலத்திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன. 1974-ஆம் ஆண்டில், பிறப்புத் தொகை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதை 25 எனக் குறைப்பதே அரசின் குறிக்கோளாக இருக்கிறது. வெவ்வேறு மாநிலங்களில் உள்ள மக்கள் தொகை, பிறப்பு விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே, பல்வேறு நலத்திட்ட முறைகளிலும் திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. குடும்ப நலத்திட்டத்தின் கீழ் ஊராட்சிகளால் ஊக்குவிக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் அறுவைச் சிகிச்சைக்கும் 10-ரூபாயை ஈட்டு மானியமாகப் பெற ஊராட்சிகள் தகுதியுடையன. அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் செல்பவரின் போக்குவரத்துச் செலவுக்கும், ஒன்றியப் பகுதிகளில், குடும்ப நலத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஏற்படும் செலவிற்கும் இத்தொகை அளிக்கப்படுகிறது.

ஒவ்வோராண்டும் மறு பயிற்சி முகாம் ஒன்றினை ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்றன. இவற்றில் ஊர்த்தலைவர்கள் பங்கு பெறுகின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊர் வளர்ச்சித் திட்டங்கள் சில தகவல்கள்

ஊர்ப்பணிகளில் மானியங்களில் கிடைக்கும் நிதிகளைக் குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகளை அமைத்தல், பள்ளிக் கட்டடங்களை அமைத்தல் ஆகியவற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடுகின்றன. 31—12—1972 ஆம் நாளைய நிலவரப்படி, செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரங்கள் வருமாறு :—

1. மேல்நிலை நீர்த் தொட்டிகள்—5,699.

2. கிணறுகள்—72,567.

3. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் (கி.மீ.)—36,644.

4. பள்ளிக் கட்டடங்கள் (கட்டப்பட்டவை)—16,123

1973—74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப் பணிகள் திட்டத்திற்கென 7384·2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முதன்மையான இடம் அளித்துள்ள போதிலும் கூட, பிரச்சினையில் ஒரு சிறிய பகுதியினைத்தான் இதுவரை அணுக முடிந்துள்ளது. விரிவான அடிப்படையில், பெருந்திட்டமிட்டு, இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊர்ப்புறங்களில், குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொண்டு செயற்படுவதற்கெனத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை அரசு 1969-ஆம் ஆண்டில் உருவாக்கியது.

சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து, 5,551 ஊர்கள், சிற்றூர்களில் நிலையான குடிநீர் ஆதாரங்களே இல்லையென்றும், 12,858 ஊர்கள், சிற்றூர்களில் தற்போதுள்ள குடிநீர் ஆதாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டுமென்றும் நோய் பரவக் கூடிய 2,059 ஊர்கள், சிற்றூர்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டுமென்றும் அறியப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மூன்றினங்களுக்கும் ரூ. 40 கோடி தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பற்றுக்குறை, " காலரா " தொற்றும் ஊர்கள் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊரகப்பணிகள்) கண்டறிந்துள்ளார். அவ்வூர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் அவர் உருவாக்கியுள்ளார். அத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் பாறைகள், படிந்துள்ள எல்லா இடங்களிலுமுள்ள பற்றுக்குறை, 'காலரா' தொற்றும் ஊர்களில் " யூனிசெப் "பின் உதவியைக் கொண்டு ஐந்தாண்டுகளுக்குள்ளாக 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவ, இத்திட்டம் வகை செய்கிறது. இத்துளைக்கருவிகளையும், இதர அவசியமான சாதனங்களையும் " யூனிசெப் " உதவியாக அளிக்கும். 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவ, அவற்றினைப் பராமரிக்கும் செலவு ரூ. 271 கோடியாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்படுகிறது.

100 சதவீத மைய உதவியுடன் கூடிய ரூ. 20 கோடி திட்டமொன்றினை 1972—73-ஆம் ஆண்டிற்கு, நாடு முழுவதற்குமாக, இந்திய அரசு உருவாக்கியுள்ளது. 1973—74-ஆம் ஆண்டிற்கு ரூ. 40 கோடி கொண்ட ஒரு திட்டமும் மைய அரசிடம் உள்ளது. நிலையான, பாதுகாப்பான குடிநீர் அவசரமாகத் தேவைப்படும் மண்டலங்கள் அல்லது பகுதிகளுக்கு, குடிநீர் வழங்குவன செய்வதே இந்த மைய அரசுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். ஊர்ப்புறங்களின் குடிநீர் வழங்கும் இவ்விரைவுத் திட்டத்தினைச் செயற்படுத்தும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் விடப்பட்டது. அந்த வாரியமும், ரூ. 252·13 இலட்சத்திற்குத் திட்டத்தை உருவாக்கி, இந்திய அரசிற்கு அனுப்பியுள்ளது. இதனால் 41 திட்டங்கள் தருமபுரி மாவட்டத்திலும், 295 இராமநாதபுரம் மாவட்டத்திலும் நிறைவேற்றப்பட வகை செய்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுப்பிய திட்டத்திற்கு ஒப்புதல் தந்த மைய அரசு, இம்மாநிலத்திற்கென, 1972—73-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 1 கோடி மதிப்புள்ள திட்டம் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறியுள்ளது. ஆனால், இந்த ரூ. 1 கோடிக்குள்ளே நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் தீர்ப்புரிமை மாநில அரசிடம் விடப்பட்டுள்ளது. 1973—74-ஆம் நிதியாண்டில், இம் மாநிலத்திற்குக் கிடைக்கக் கூடிய ஒதுக்கீடு ரூ. 2 கோடியாக இருக்கலாம்.

### எல்லைகளைப் பராமரித்தல்

தங்களுடைய பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென ஊராட்சி ஒன்றியங்களுக்கு ' உள்ளூர்ச் சாலைகள் மானியம் ' என்ற மானியம் அளிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலுமுள்ள மக்கள் தொகையில் தலைக்கு 18 காசுகள் வீதம் என்ற வீதத்திலும், ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிக்கும் சாலைகள் சாதாரணமானவையா, அல்லது கடற்கரைப் பகுதியா மற்றும் கழிமுகப் பகுதியா அல்லது மலைப்பாங்கான பகுதியா என்ற அடிப்படையில் மைல் ஒன்றிற்கு முறையே, ரூ. 600, 800, 1,500 என்ற வீதத்திலும் வழங்கப்படுகிறது. 1973—74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 119·31 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எல்லா ஊர்களையும் முக்கியமான சாலைகளுடன் இணைக்கும் வகையில் தரமான சாலைகளை அமைப்பதே, அரசின் தற்போதைய கொள்கையாகும். சாலைகளை அமைக்கும் பணிகளால், ஊர்ப்புறங்களிலுள்ள மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு, 1,500-க்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட குடியிருப்புகள் எல்லாவற்றையும் முக்கியச் சாலைகளுடன் இணைக்கும் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினை அரசு தீட்டியுள்ளது.

இத் திட்டத்தினை நிறைவேற்ற, ஊர்திகளின் பேரில் 10 சதவீத மேல் வரி விதித்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, ஊர்ப்புறச்சாலைகள் வளர்ச்சி நிதியை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. இந்த ஊர்ப்புறச் சாலைகள் வளர்ச்சி நிதியினை, இந்திய அரசின் நன்கொடைத் தொகையுடன் இணைத்து, சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டச் செலவில் இந்திய அரசும், மாநில அரசும் 50:50 சதவீதம் பகிர்ந்து கொள்ளும்.

281 கிலோமீட்டர் நீளத்திற்கு, எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற இணைப்புச் சாலைகளை அமைக்கவும், தற்போதுள்ள 4,280 கிலோமீட்டர் ''கச்சா''ச் சாலைகளை மேம்படுத்தி, எல்லாப் பருவங்களுக்கு மேற்ற சாலைகளாக அமைக்கவும் ரூ. 19 கோடி மதிப்புள்ள ஒரு கோரிக்கையை ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊரகப் பணிகள்) அனுப்பினார். அக்கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தலைமைப் பொறியாளரின் (நெடுஞ்சாலை, ஊரகப் பணிகள்) முதல் நிலைத் திட்டம் ரூ. 6 கோடி மதிப்புள்ளதாகும். அதில் அடங்கியுள்ளவை வருமாறு :—

(அ) குறுக்கே செல்லும் வடிகால் பணிகளையும் உள்ளடக்கி, 200 ஊர்களை இணைத்து 281 கிலோமீட்டர் நீளமுள்ள எல்லாப் பருவத்திற்குமேற்ற இணைப்புச் சாலைகள்—இதற்கு ரூ. 1·50 கோடி செலவாகும்.

(ஆ) ஊர்ப்புறச் சாலைகளுக்குக் குறுக்கே வடிகால்களை அமைப்பதில் தற்போது எல்லாப் பருவத்திற்கு மேற்றவாறில்லாத '' கச்சா '' சாலைகளில் 1,427 கிலோமீட்டர் சாலைகளின் தரத்தை உயர்த்தி, எல்லாப் பருவத்திற்கும் ஏற்ற சாலைகளாக அமைத்தல்—இதற்கு ரூ. 4·50 கோடி.

குறைந்த நிதி வசதியின் காரணமாக, இத்திட்டம் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தினால் பெருவாரியான மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. மறைமுகமாகக் கிடைக்கும் வேலைகளைத் தவிர, நேரடியாகவே 15,000 சாதாரண மானவர்களுக்கும், 500 விற்பன்னர்களுக்கும் வேலை கிடைக்கும்.

1972–73-ஆம் ஆண்டுக்குரிய திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 300 இலட்சமும், 1973–74-ஆம் ஆண்டிற்கு ரூ. 300 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளில் புழுதிபடியாச் சாலைகளை அமைப்பதில் பேரூராட்சிகளுக்கு அரசு பாதி மானியத் திட்டம் ஒன்றினை நிறைவேற்றி வருகிறது. 1973–74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் இதற்கென ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறிய நீர்ப்பாசனம்

தமிழ்நாட்டில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஊராட்சி ஒன்றியங்களிடம் பேணுதற்காக சுமார் 24,000 ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப்படையில், பேணுதல் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

சிறிய நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒவ்வோராண்டும் அவ்வாண்டுத் தேவையினையொட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1973–74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 90·44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகள்

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் தொழில் நுட்ப உதவி, ஆலோசனைகளை ஏற்று, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில்திட்ட வேலைகள், ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படுகின்றன.

இதுவரை ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்ட கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைப் பிரிவினைகள் அனைத்தையும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மாற்றும் பிரச்சினை அரசின் ஆய்வில் உள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு இவை தொடர்பாகவுள்ள சொத்துக்கள், கடன்கள், மற்றும் இப்பிரிவுகளைச் செயற்படுத்துதற்குரிய விதி வரம்புகள் ஆகியவை உருவாக்கப்பட்டு வருகின்றன.

கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில்கள் திட்டத்திற்கு 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்குளம் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்தின் கிணறு வெட்டப்படுகிறது





# மாலைக்கு ஏங்கினள் ஒரு மங்கை

'' மாலையாவது வாங்கிக்கலாமா ?''

—அமுதாவின் குரலில் ஏக்கம் இழையோடிற்று; விரக்தியின் விளிம்பும் அதில் நிழலாடிற்று.

அவளோடு நெருங்கி அமர்ந்து அவளது தோள்பட்டை மீது கையை வைத்திருந்த கதிரவன், அவளது நிலா முகத்தைத் தன் விழிகளுக்கு நேராகத் திருப்பினான்.

'' என்ன அமுதா இது ? உன் கேள்வி ஒரு மாதிரியாக இருக்கிறதே !''—வறட்டுச் சிரிப்பினூடே வருத்தத்தையும் குழைத்துக் கேட்டான் அவன்.

'' அதற்கில்லை ; நம்முடைய திருமணத்திற்கு எந்த மங்கலப் பொருளையும் வாங்கவில்லையே ! அதைப் போல மாலையும் தேவையில்லைதானே என்று நினைத்தேன்.''

''பகுத்தறிவுத் திருமணத்திலே மாலை மாற்றிக்கொள்வது தானே முக்கியமான நிகழ்ச்சி !''

'' ஆனால், நாம் செய்துகொள்ளப்போவது பதிவுத் திருமணம் தானே! அதற்குக் கையெழுத்து மட்டும் போதாதா ?''—வழக்கமான கேலிச் சிரிப்பு அமுதாவின் பவள வாயிலிருந்து வழிந்தது ; ' குத்தலும் ' அதில் கொடி கட்டிப் பறந்தது.

கதிரவன் அவளுடைய குத்தல் சிரிப்பைக் கண்டு கோபங் கொள்ளவில்லை ; அந்த மணிச் சிரிப்புத்தானே அவனை மயக்கிச் சேர்த்த மதுக் கிண்ணம் !

அவன் விளக்கம் அளித்தான்.

'' நாம் செய்துகொள்ளப் போவது பதிவுத் திருமணந்தான் என்றாலும், எல்லா வகையிலும் பகுத்தறிவோடு இசைந்த திருமணந்தான். இதிலே மாலை மாற்றிக்கொள்வதை மட்டும் முக்கியமானதாக வைத்திருப்பது ஏன் தெரியுமா ?''

'' ஏனாம் ?''

'' நாம் செய்துகொள்ளப் போகிற வாழ்க்கை ஒப்பந்தத்தைக் குறிக்கும் அருமையான சொல் ' மணம் ' என்பது அல்லவா ? அந்த மணத்தையே பிரதிபலிக்கின்ற ஒரு காட்சிப் பொருள்—ஒரு பருவப் பொருளும்—இந்த வாழ்க்கைத் திருப்பத்தில் இடம் பெற்றுக் கண்ணுக்கு அழகையும், நெஞ்சுக்குள் மணத்தையும், நினைவெல்லாம் இனிப்பையும் தவழவிட வேண்டும் என்பதற்காகத் தான் மாலையை முக்கியமாக மாற்றிக் கொள்கிறோம்.''

''உங்கள் விளக்கம் பிரமாதம். எங்கே நீங்கள் மாலையையும் வேண்டாம் என்று சொல்லிவிடுவீர்களோ என்று நான் எவ்வளவு பயந்தேன் தெரியுமா ?''

—மகிழ்ச்சிப் பெருக்கோடு அமுதா எதிரே தெரியும் சிறு கண்ணாடி மூலம் தங்களைக் காரோட்டி கவனிப்பாரே என்கிற கூச்சங்கூட இல்லாமல் அவனுடைய கழுத்திலே தன் முகத்தையும் பதித்தாள்.

'' டிரைவர் ! அந்தப் பூக்கடைப் பக்கம் வந்ததும் மறக்காமல் நிறுத்துங்கள்''—என்றான் கதிரவன்.

* * * *

அந்த வாடகைக் கார் விரைந்து பறந்தது ; அதை விட வேகமாகப் பறந்தன அமுதாவின் நினைவுகள்.

சு. மறைமலையான்

பலத்த எதிர்ப்புகளுக்கிடையே தான் கதிரவனின் கரத்தினைப் பற்றத் துணிந்தாள் அமுதா.

உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்த அந்தச் சின்ன வயதிலிருந்தே அவளது உள்ளத்தினுள்ளே பெரிய ஆசையொன்று நெட்டிலிங்க மரம்போல நெடிதாக வளர்ந்து கொண்டிருந்தது.

காந்தியடிகளை — லெனினை — சர்ச்சிலை — ரூஸ்வெல்ட்டை — மணந்துகொண்ட அந்தந்த மனைவியர்கள் தத்தம் கணவர்களுக்கு வந்து சேரும் புகழ்மாலைகளைக் கண்டுகண்டு எத்தகைய பூரிப்பு வெள்ளத்திலே மிதந்து மிதந்து திளைத்திருப்பார்கள் ! அத்தகைய பெருமித நிலையைப் பெறுகின்ற வகையில்—பொதுவாழ்வில் ஈடுபட்டுப் புகழொளியை வீசுகின்றவரே தனக்கும் கணவராக வாய்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதே அமுதாவின் ஆசை.

ஆனால், அது அவ்வளவு எளிதில் நிறைவேறக்கூடியதாக இல்லை.

ஏழ்மையின் தீ நாக்குகள் இடையறாது அவளது குடும்பத்தைச் சுட்டுப் பொசுக்கிய வண்ணமே இருந்தன. எட்டுப்பேர்களுக்கு நிம்மதியான முறையில் இரைபோட முடியாமல், அவளுடைய அப்பா பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல ; கடன் சுமைகள் அவரது கழுத்தை நெரித்த வண்ணமே இருந்தன. அந்த வறுமைச் சிறையிலிருந்து ஓரளவாவது விடுதலை பெறுவதற்காகவேனும், குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்து தொலைத்துவிட்ட அமுதா ஏதாவது அலுவல் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்கிற கட்டாய நிலைக்கு ஆளானாள்.

அலுவலகத்திலோ எத்தனை எத்தனையோ கழுகுக் கண்கள் அவளை விழுங்கிவிடுவதற்குச் சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தன. எனினும், காற்றடித்த பக்கமெல்லாம் தலை சாயும் நாணலைப் போல நாணிக் கோணாமல், நெருப்புப் பிழம்பாகவே நிமிர்ந்த நடை போட்டுக் கொண்டிருந்தாள் அவள். தம்பி–தங்கைகளைக் கரையேற்ற வேண்டுமே என்கிற கவலையே, அவளது பருவக் கிளர்ச்சிகளை, கரை தொட்ட அலைகளாகக் கரைய வைத்துவிட்டது.

அலுவலகத்தை அடைக்கலம் அடைந்த பின்னர் பத்தாண்டுகள் இப்படியே பாலைவனமாக மரத்துக்கொண்டிருந்தது அவளது இளமை.

ஒருமுறை அமுதா பணிபுரிகின்ற அலுவலக மனமகிழ் மன்றத்தின் சார்பில் இலக்கியக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. அதிலே சொற்பொழிவு ஆற்றுவதற்கு வந்திருந்தான் கதிரவன்.

அதுதான் அவர்களுடைய முதல் சந்திப்பு.

அதற்குப் பிறகு கதிரவன் கலந்துகொள்ளும் இலக்கியக் கூட்டம் எங்கே நடைபெற்றாலும் அவனுடைய சொற்பொழிவுக் கற்கண்டைச் சுவைத்துத் திளைப்பதற்குத் தவறாமல் சென்று விடுவாள் அமுதா.

ஒருநாள் கூட்டம் முடிவதற்கு நெடுநேரம் ஆயிற்று. இரவு பதினொரு மணிக்கு மேல் இருக்கும். தன் வீட்டிற்குச் செல்லப் பேருந்து கிடைக்காதே, ஆட்டோ — ரிக்ஷாக்காரர்களும், டாக்சிக்காரர்களும் தன்னால் தாங்க முடியாத அதிகக் கட்டணம் கேட்பார்களே என்று அமுதா குழம்பிக் கொண்டிருந்த போது—

தான் ஏறிய வாடகைக்காரை அவள் அருகே கொண்டுபோய் நிறுத்துமாறு கூறினான் கதிரவன். அவளை ஏறிக்கொள்ளுமாறு வற்புறுத்தினான். அவள் முதலில் மறுத்துவிட்டாள். ஆனால், அவன் பின்னிருக்கையிலிருந்து வெளியே வந்து முன்னிருக்கையில் தான் அமர்ந்துகொள்ளும் எண்ணத்துடன், அவளுக்குப் பின்னிருக்கைக் கதவைத் திறந்துவிட்ட 'கண்ணியம்' அமுதாவின் இதயத்தைக் கவர்ந்தது. அவளுடைய கால்கள் தாமாகக் காரை நோக்கி நடந்தன.

வழியில் சிறிது நேரம் சென்று கதிரவன் இப்படிக் கேட்டான்.

"நீங்கள் பத்து மணிக்கே வீட்டிற்குக் கிளம்பியிருக்கலாமே! ஏன், இவ்வளவு நேரம் காத்திருந்தீர்கள்?"

"உங்கள் பேச்சு பத்து மணிக்குள் முடியவில்லையே!"

"அப்போ 'வளவள'வென்று நீண்டநேரம் பேசி உங்களுடைய பொறுமையை எல்லாம் அறுஅறு என்று அறுத்துவிட்டேன் என்று சொல்லுங்கள்?"

—கதிரவன் சிரித்தவாறே கூறினான்.

"அய்யய்யோ? இன்றைக்கு உங்கள் சொற்பொழிவு மிகவும் அற்புதமாக இருந்தது; எனக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது"

—உற்சாகத்துடன் மொழிந்தாள் அமுதா.

"உங்களைப் போன்ற ஒரு பெண் என்னுடைய பேச்சைக் கேட்பதற்காக இவ்வளவு நேரம்வரை காத்திருந்ததை நினைத்துப் பார்க்கும்பொழுது என் நெஞ்சுக்கு எவ்வளவு பெருமிதமாக இருக்கிறது தெரியுமா?"

கதிரவனின் இந்தச் சொற்களுக்கு ஏதோ மறுமொழி கூற வேண்டும் என்றுதான் அமுதா நினைத்தாள்.

வார்த்தைகளே வரவில்லை.

வீடு வந்துவிட்டது.

காரைவிட்டு அமுதா கீழே இறங்கினாள். "மிகுந்த நன்றி"—என்று கரங்குவித்தாள்.

கதிரவன், கூட்டத்தில் தன் கழுத்துக்குப் போடப்பட்ட மாலையைக் காரில் இருந்தவாறே அவளை நோக்கி நீட்டினான்.

"வேண்டாங்க; உங்கள் வீட்டிலே உள்ளவர்கள் நாளைக்குத் தலையிலே வைத்துக் கொள்ளலாமே."

—என்றாள் அமுதா.

"என் வீட்டிலே யார் இருக்காங்க? உங்களுக்காவது இந்த ரோஜாப்பூக்கள் பயன்படட்டும். பிடியுங்கள்"

—சொல்லிக்கொண்டே மாலையைத் தூக்கி மெள்ள வீசினான்.

அவள் தாவிப்பிடிப்பதற்குள் அந்த மாலையோ மண்ணில் விழுந்துவிட்டது.

"அய்யய்யோ"

— என்றான் கதிரவன்.

"பரவாயில்லை"



—என்றவாறே கீழே குனிந்து மாலையை எடுத்துக் கொண்டாள் அமுதா.

• • •

பூக்கடை வந்துவிட்டது.

கதிரவன் இறங்கிப் போய் இரண்டு ரோஜாப்பூ மாலைகளை வாங்கி வந்தான்; அவற்றை முன்னிருக்கையில் போட்டான்.

வாடகைக்கார் மீண்டும் பறக்கத் தொடங்கியது.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டு கொண்டிருந்த அமுதா தனக்குத் தானே சிரித்த வண்ணம் இருந்தாள்.

"என்ன அமுதா, நீயாகச் சிரித்துக் கொள்கிறாய்? அதை எனக்கும் கொஞ்சம் சொல்லக் கூடாதா?

—என்று கேட்டான் கதிரவன்.

"ஒன்றுமில்லை; அன்றைக்கு ஒருநாள் நீங்கள் மாலையைத் தூக்கிப் போட்டபோது அதைச் சரியாக நான் தாவிப் பிடிக்காததாலே அது கீழே விழுந்து விட்டது இல்லையா?"

"ஆமாம்"

"இன்றைக்கும் நீங்கள் மாலையைத் தூக்கிப் போட்டால் என்ன செய்கிறது? அது கீழே விழுந்துவிடாதபடி ஒட்டகம் மாதிரி கழுத்தை நீட்ட வேண்டுமே என்று நினைத்தேன்; என்னை அறியாமல் சிரிப்பு வந்து விட்டது."

"ஓ! இதற்குத்தானா? ஆனால், அன்றைக்குத் தூரத்தில் இருந்தேன்; தூக்கிப் போட்டேன். இன்றைக்குப் பக்கத்தில் நெருங்கிவந்து பக்குவமாகப் போட மாட்டேனா?"

"ரொம்பப் பக்கத்தில் வந்துவிடாதீர்கள்; பார்க்கிறவர்கள் சிரிக்கப் போகிறார்கள்!"

— கேலியாகச் சிரிப்பலைகளை எழுப்பினாள் அமுதா; தானும் சிரித்தான் கதிரவன்.

ஒரு தேநீர்க் கடைப்பக்கம் வந்ததும்—

வாடகைக் கார் 'சரக்'..... என்று ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது.

"சார், கொஞ்சம் மன்னிச்சுக்குங்க; ஒரு டீ குடிச்சுட்டு வந்துடறேன்."

—என்று காரோட்டி கீழே இறங்கிப் போனார்.

அமுதா, என்னென்னவோ இன்ப நினைவுகளில் மிதந்தவளாகக் கதிரவனையே கண்கொட்டாமல் பார்த்தாள்; ஆசை பொங்கப் பார்த்தாள்.

"ஆமாம், இன்றைக்கு நம் திருமணத்திற்கு உன்னுடைய தோழி உமாவும் வருவாள் இல்லையா?"

— கதிரவன் கேட்டான்.

"ஊகூம்; வரமாட்டாள்; நான் அவளுக்குச் சொல்லவில்லை"

"ஏன்?"

"அவள் உங்களைப் பற்றி ஒரு மாதிரியாகப் பேசினாள்; அதனால்தான்."

"என்ன பேசினாள்?"

"வேண்டாங்க"

"சும்மா சொல்; நான் ஒன்றும் தொட்டாற் சுருங்கி இல்லே; வார்த்தையாலே எவ்வளவு சுட்டாலும் தாங்கிக் கொள்வேன்"

"நீங்கள் இவ்வளவு வற்புறுத்துகிறதாலே சொல்கிறேன்; அதாவது.......... மேடைப் பேச்சாளிகளையெல்லாம் நம்பவே கூடாதாம்; நாணயம் இல்லாதவர்களாம்; நடத்தையும் கெட்டவர்களாம்...... இன்னும் அப்படி இப்படியென்று என்னென்னவோ அவிழ்த்துவிட்டாள். ஆனால் நான், அவளுக்கு எப்படிச் சாட்டையடி கொடுத்தேன் தெரியுமா?"

"..............."

"குறை இல்லாத மனிதப் பிறவியே கிடையாது. அந்தக் குறை என்பது குறைவாக உள்ளவர்களைத்தான் நாம் நல்லவர்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். அசிங்கத்தையே பார்த்துப் பழகியவர்களுக்கு அழகான பூக்களை ரசிக்க முடியாதுதான். கண்ணுக்கு அருவருப்பான தரையிலிருந்துதான் கவர்ச்சி மிகுந்த மலர்கள் சிரிக்கின்றன. வாதத்திற்காக நீ சொல்வது உண்மையென்றே நான் எடுத்துக் கொண்டாலும்—நான் பலாப்பழத்தின் முள்ளைப் பார்த்துப் பயந்து விட்டால் அதன் உள்ளே இருக்கும் சுளை இனிக்குமா? மனிதர்களிடம் நீ முள்ளை மட்டுமே பார்க்கிறாய்; நான் சுளையைப் பார்க்கிறேன். பலாப்பழத்திலே முள்ளைமட்டும் பார்த்தால் சுளை இனிக்காது; சுளையை மட்டும் பார்த்தால் முள் உறுத்தாது!" என்றேன். அவ்வளவுதான்; அந்த உமாவுக்கு முகமே செத்துப் போய் விட்டது."

"நல்ல வேளையாக நான் பிழைத்துக்கொண்டு விட்டேன். நீ மட்டும் ஒரு சில பெண்களைப்போல ஆழ்ந்து சிந்திக்காத அரை வேக்காட்டுக்காரியாக இருந்திருந்தால் என் நிலைமை என்ன ஆகியிருக்கும்? ஆமா, உமாவுக்கு என்மேலே ஏன் அவ்வளவு கோபம்?"

"எல்லாம் பொறுமைதான்; அழுக்குத்தான். உங்களைப் போலப் புகழுள்ள ஒருத்தர் தனக்குக் கிடைக்கவில்லையே என்கிற வயிற்றெரிச்சல்தான்"

—அமுதா இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே காரோட்டி தேநீர்க் கடையிலிருந்து திரும்பி வந்து விட்டார்.

முன்னிருக்கையில் அமரப் போனவர்—

"என்னங்க இது! ஒரு மாலையைக் காணோம்"

—என்று திகைப்புடன் கேட்டார்.

"என்ன! ஒரு மாலையைக் காணோமா?"

—பதறிப் போனாள் அமுதா.

கதிரவனுக்கு வியப்பாக இருந்தது.

"எப்படிக் காணாமல் போகும்? கீழே விழுந்து கிடக்கிறதா பாருங்கள்"

"இல்லைங்க; நல்லாப் பார்த்திட்டேன்"

—என்றவாறே காரோட்டி கீழே இறங்கினார்.



ஏதோ ஒரு சந்தேகத்துடன் சுற்று முற்றும் தன் பார்வையைப் பறக்கவிட்டார்.

வெகு தொலைவிற்கு அப்பால் ஒரு பையன் மாலையைத் தூக்கிக் கொண்டு ஓடுவது தெரிந்தது.

காரோட்டி அவனை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

கதிரவன்—அமுதா இருவருக்கும் இருப்புக் கொள்ளவில்லை. அவர்களும் அந்தத் திசையை நோக்கி ஓடத் தொடங்கினார்கள்.

பையனோ ஒரு குடிசைப் பக்கம் திரும்பி மறைந்துவிட்டான்.

காரோட்டியோ தளரவில்லை. அவரும் குடிசைப் பக்கம் நுழைந்தார். எப்படியோ பையனைப் பிடித்துத் தெருப்பக்கம் இழுத்துக் கொண்டு வந்துவிட்டார்.

அவன் கையிலோ மாலை இல்லை.

"மாலையை ஏன்டா திருடிக்கிட்டு ஓடி வந்தே? இப்போ உன்னை நான் சும்மா விடப் போறதில்லை!"

—ஆத்திரமாகக் கூறிக் கொண்டே பையனின் கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறைந்தார் காரோட்டி.

"அய்யா! என்னை விட்டு விடுங்கய்யா! என்னை விட்டு விடுங்கய்யா!"

—கதறித் துடித்தான் பையன்.

இதற்குள் மணமக்கள் இருவரும் அங்கே வந்துவிட்டார்கள், கும்பலும் கூடிவிட்டது.

பையனை நையப் புடைத்த காரோட்டியின் கையைப் பிடித்துக்கொண்டான் கதிரவன்.

"சரி, ஏம்பா தம்பி மாலையைத் திருடிக்கொண்டு ஓடி வந்தே?"

—என்று நயமாகக் கேட்டான்.

சிறுவன் அடக்கமுடியாத அழுகையுடன் கண்ணீர் மழையைப் பொழியவிட்டுத் தேம்பித் தேம்பிக் கொண்டே இப்படிச் சொன்னான்.

"என் அம்மாவுக்குப் பூமேலே உசிரு. அதுக்கு எப்பவுமே தாங்கமுடியாத வவுத்து வலி. அதனாலே 'சீக்கிரம் செத்திடுவேன் — செத்திடுவேன்'னு சொல்லிக்கிட்டே இருந்துச்சு. ஒரு நாள் என்னைப் பக்கத்தில் அழைச்சு அணைச்சுக்கிட்டு 'நான் செத்திட்டா என் கழுத்துக்கு எப்படியாச்சும் ஒரு மாலையைக் கொண்டாந்து போடுவியாடா கண்ணு'ன்னு கேட்டுச்சு. 'கண்டிப்பா போடுவேம்மா'ன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்தேன். இன்னைக்கு எங்க அம்மா செத்துப் போயிடுச்சு. எப்படியாச்சும் மாலை பிச்சை எடுத்தாச்சும் வாங்கணும்னு நெனச்சுக்கிட்டு போனேன். சாலைப் பக்கம் உங்க கார் நின்னுக்கிட்டு இருந்துச்சு. சும்மா எட்டிப் பார்த்தேன். நீங்களும் அம்மாவும் வெளியே பாக்காமே பேசிக்கிட்டு இருந்தீங்க. முன்னாலே பளபளன்னு மாலை தெரிஞ்சுது. அம்மாவோட ஆசையை நிறைவேத்தணுமேன்னு தூக்கிக்கிட்டு ஓடி வந்துட்டேன்"

—பையன் சொன்னதைக் கேட்டதும் எல்லோருடைய கண்களிலிருந்தும் நீர் வழியலாயிற்று.

அமுதாவோ குமுறிக் குமுறி அழத் தொடங்கிவிட்டாள்.

கதிரவன் அந்தப் பையனைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். அவனாலும் கண்ணீரை ஒளிக்க முடியவில்லை.

சில விநாடிகளில் அனைவரும் குடிசைக்குச் சென்றார்கள். அங்கே......மரணச் சிரிப்பை மலரவிட்டு மாலையும் கழுத்துமாகக் கிடந்தாள் அந்த ஏழைத் தாய்.

மணமாலை பிணமாலையாக மாறிக்கிடந்தது. ஓர் ஏழைத் தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றி முடித்த பெருமிதத்தோடு அது கிடந்தது.

அமுதா கீழே குனிந்து சவமாகிவிட்டவளின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டான். அவள் விழியிலிருந்து கண்ணீர் வெள்ளம் பெருகி அந்தத் திருவடிகளை நனைத்தன.

அவள் முகமோ.......?

'பதிவுத் திருமணத்திற்குப் பயன்படாவிட்டாலும் பரவாயில்லை. புதை குழிக்குப் போகிற ஏழை அன்னைக்குப் பயன்பட்டதே இந்த மாலை!' என்கிற தெளிவை ஒளியாக வீசியது

## இலங்கை அகதிகளுக்குத் தமிழக அரசின் உதவி

தமிழ்நாடு அரசு இலங்கையிலிருந்து வெளியேறி, இந்தியா வந்த, இந்தியக் குடும்பங்களின் மறுவாழ்விற்காக இதுவரை 2 கோடியே 15 இலட்சம் ரூபாயைக் கடனாகவும் 52 இலட்சம் ரூபாயை மானியமாகவும் அளித்துள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, இலங்கை யிலிருந்து மொத்தம் 85 ஆயிரத்து 627 பேர் வெளியேறி இந்தியாவில் குடி புகுந்தனர். இவர்கள், மொத்தம் 20 ஆயிரத்து 609 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவற்றில், 5,113 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு, மைசூர், கேரளா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் தீவுகளிலும் குடிபுகுவதற்காக அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலிருந்து எடுத்து வந்த சொத்துக்களைக் கொண்டோ அல்லது இந்தியாவில் அவர்கள் முன்பு விட்டுச் சென்ற சொத்துக்களை வைத்துக் கொண்டோ தாங்களாகவே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர். இவர்களில் சிலர் மறுவாழ்விப்புக்கான நிதி உதவியைப்பெற விண்ணப்பித்துக் கொள்ளவில்லை.

(9-3-73-ல் மக்கள் அவையில், மத்திய தொழிலாளர் நல மறுவாழ்விப்பு அமைச்சர் திரு கே. வி. இரகுநாத ரெட்டி)



# ஆத்தூர் ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் 22 ஊராட்சி மன்றங்களையும், 3 பேரூராட்சி மன்றங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏறத்தாழ 87·89 சதுர மைல் பரப்புடையது. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் படி 65,930 ஆண்களும், 53,812 பெண்களும் வாழும் இந்த ஒன்றியம் விரிந்து பரந்து கிடக்கின்றது. இதன் அரணாக அமைந்துள்ள மலைகளும் அதிலிருந்து உற்பத்தியாகும் குடவனாறு, மருதாநதி, ஆகிய இரண்டு ஆறுகளும் மேலும் அழகு படுத்துகின்றன. குடிநீர் வசதிக்குக் குடவனாற்றின் குறுக்கே எழுப்பப்பட்டுள்ள நீர்த்தேக்கம் இந்த ஒன்றியத்தின் பெரும்பான்மை மக்களுக்கும் அருகிலுள்ள திண்டுக்கல் நகர மக்களுக்கும் தாகத்தைத் தணிக்கும் அருங்கொடையாக அமைந்துள்ளது.

### பாசனம்

இப்பகுதியில் மக்களின் அயராத உழைப்பினாலும் ஊக்க சக்தியினாலும், அரசு உதவியினாலும், ஆயிரக் கணக்கான கிணறுகள் தோண்டப்பட்டு இறைவைச் சாதனங்கள் பொருத்தப்பட்ட கிணறுகளும் மற்றும் 234 மின், எண்ணெய் இயந்திர சாதனைகள் உள்ள கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. 6 பொதுப் பணித் துறைக் கண்மாய்களும் மற்றும் 23 பாசன வசதிகள் பெற்ற கண்மாய்களும் உள்ளன. அவ்வப்பொழுது அரசுச் செலவில் அந்தக் கண்மாய்கள் மராமத்து செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம் 5,095 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது.

### விவசாயம்

இவ்வொன்றியத்தின் 80 சத விகிதத்தினர் வேளாண்மைத் தொழிலையே மேற்கொண்டுள்ளனர். விவசாயத்திலோ மறுமலர்ச்சி காணவும், உணவு உற்பத்தியைப் பன் மடங்கு பெருக்கவும், இந்த ஒன்றிய விவசாயிகளுக்குப் பலவகைகளிலும் உதவி செய்யப்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், மருந்துகள், மற்றும் இதரக் கருவிகள் வழங்குவதற்காக அவர்களின் வசதிக்கேற்ப ஆத்தூரிலும், அய்யம்பாளையத்திலும் விவசாயப் பண்டகசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. நல்ல விவசாயக் கருவிகள் உயர் ரக வித்துக்கள் அவ்வப்பொழுது வழங்கப்படுகின்றன. இயந்திரக் கலப்பை கொண்டு வேளாண்மை செய்ய விவசாய மக்களிடையே ஆர்வம் எழுப்பப்பட்டு அது வளர்ச்சி பெற்று வருகிறது.

வறுமையையும் வாட்டத்தையும் போக்க வந்த மிகு விளைச்சல், ரகமான ஐ.ஆர். 8, ஜெயா, பத்மா, கருணா போன்ற நெல் வித்துக்களையும் வீரிய ஒட்டுக் கம்பு, சோளம், சிறுதானிய வகைகளையும் இந்த ஒன்றிய விவசாயிகள் பயிர் செய்வதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. மேலும் இவ்வட்டாரத்தில் உள்ள மலைகளில் காப்பி, மிளகு, வாழை, பலா, ஆரஞ்சு, போன்றவைகள் அதிக அளவில் விளைவதற்குப் போதிய உதவிகளும் அறிவுரைகளும் கொடுக்கப்பட்டு வீரியக் கன்றுகள் பாதி விலையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் நெல், கரும்பு, வாழை, போன்ற நன்செய்ப் பயிர்களும், பருத்தி, கடலை சிறு தானியங்கள் போன்ற புன்செய்ப் பயிர்களும் பெரும் அளவில் சாகுபடி செய்வதற்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. நன்செய் நிலங்கள் 7,157 ஏக்கரும் புன்செய் நிலங்கள் 41,851 ஏக்கரும் தீவிரச் சாகுபடிக்கு ஏற்றவையாக அமைக்கப்பட்டுள்ளன.

### கால்நடை

ஆத்தூர் ஒன்றியப் பகுதிகளில் கால்நடைகள் நிறைய உள்ளன. உயர் இனப் பசுமாடுகள், எருமை மாடுகள், ஆடுகள், கோழிகள் வளர்ப்பதற்கு வழி வகைகள் செய்யப் பட்டுள்ளன. காந்தி கிராமத்தில் பெரிய கோழிப் பண்ணையும், ஆத்தூரில் 1,000 கோழிகள் கொண்ட ஒரு பெரிய பண்ணையும் மற்றும் கிராமப் புறங்களில் 40 தனியார் கோழிப் பண்ணைகளும் உள்ளன. கால்நடைகளையும் பேணிப் பாதுகாக்க ஆத்தூர்,

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகள் விளையாடுதல்.



அம்பாந்துரை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவ நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. மற்றும் 6 கேந்திர கிராமக் கால்நடை விளை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இங்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறை கையாளப்பட்டு மாடுகளின் இன விருத்திக்கு வழிவகுக்கப்பட்டு வருகிறது. கோழிப் பண்ணைகளிலிருந்து கிடைக்கக் கூடிய முட்டைகள் பாலவாடிப் பிள்ளைகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

## குடிநீர்த் திட்டம்

கடந்த ஐந்தாண்டுகளில் 25 பாதுகாக்கப்பட்ட மேல் நிலைக் குடிநீர்த் தொட்டிகளும் 5 தரை மட்டத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. மேலும் அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர்க் கிணறுகள் போதிய அளவில் வெட்டப்பட்டும், அபிவிருத்தி செய்யப்பட்டும் உள்ளன. இதற்காக மொத்தம் சுமார் 2,40,000 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளன.

## கிராம இணைப்புச் சாலைகள்

மிக அதிகப்பரப்பளவுள்ள இவ்வட்டாரத்தில் போக்கு வரத்துக்காகப் போதிய சாலை வசதிகள் இல்லாமல் இருந்தது. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் சுமார் 1,80,000 ரூபாய் செலவில் 10 பாலங்களும் 17 சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சீரிய போக்கு வரத்துக்கான வகைகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆத்தூர் ஒன்றியத்தில் 6 உயர் நிலைப் பள்ளிகளும், 15 உயர் தொடக்கப்பள்ளிகளும், 69 தொடக்கப் பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. காந்தி கிராமத்தின் கிராமியக் கல்லூரியும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் மக்கள் நல் வாழ்வுக் கல்வி மற்றும் குழந்தைகள் நலத்திட்டப் பயிற்சி நிலையமும் உள்ளன.

குழந்தைகளுக்கான 16 பாலர் பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 22 பாலவாடிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலவாடிகளில் 2 முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் இலவச உணவுடன் கல்வியும் தரப்படுகின்றன.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஆத்தூர் ஒன்றியம் பெருமளவில் கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளது பெருமைக்குரிய சாதனையாகும். 22 பள்ளிக் கட்டடங்கள் புதியதாகக் கட்டப்பட்டும், 37 பழைய பள்ளிக் கட்டடங்கள் சீர் செய்யப்பட்டும் மற்றும் 13 குழந்தைகள் காப்பகக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்பட்டும் உள்ளன. மேலும் பெண் ஆசிரியக் குடியிருப்பு மனை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தில் 76 நிலையங்கள் திறக்கப்பட்டு இலவசமாக ஏழைக் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

## மருத்துவ வசதி

இவ்வட்டாரத்தில் இரண்டு முதல் நிலை நல்வாழ்வு நிலையங்களும் இரண்டு கிராமிய சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தாய்சேய் நலன்களைப் பாதுகாக்க 21 தாய்சேய்நல விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் பெற்றோர்கள் வளமான வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ப அறிவுரைகள் வழங்கப்பட்டும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

## சமூகக் கல்வி

அயராது உழைத்துப் பாடுபடும் இவ்வட்டார மக்கள் சற்று ஆறுதல் பெறவும் அவர்களின் அறிவை வளர்ப்பதற்கும் அன்றாட அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்கும் அமைக்கப்பட்ட சமூகக் கல்வி மன்றங்கள் 22 உள்ளன. பொழுது போக்கிற்காகவும் புதிய செய்திகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் 8 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு ஏரணி அறிவகங்கள், இரண்டு செய்தி நிலையங்கள், இரண்டு இளைஞர் மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## மகளிர் நலம்

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு மகளிர் மன்றம் அமைக்கப்பட்டுக் குழந்தைகள் நலம், சிறு மக்கள் நல்வாழ்வு, ஆற்று சேமிப்பு, பொதுப்பணி



← ஆத்தூர் ஒன்றியத்தில் சின்னாளப்பட்டி அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தொட்டி.

ஆத்தூர் ஒன்றியப் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய குடியிருப்புகள்.





தல், தையல் கலை போன்றவை கற்றுத்தரப்படுகின்றன. இவை தவிர 3 தையல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு மகளிருக்குத் தையல் மற்றும் ஆதாயம் தரக்கூடிய பூவேலைகள் கற்றுத் தரப்படுகின்றன.

## கூட்டுறவு

இந்த ஒன்றியத்தில் 19 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், 1 அர்பன் வங்கி, 11 பால் விநியோகச் சங்கங்கள், 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 2 பண்டகசாலைகள், 2 கிராம தானங்கள் மற்றும் 19 இதர கூட்டுறவுச் சங்கங்களும் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதிகள், உர விநியோகம் போன்றவற்றைப் போதிய அளவில் பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் அய்யம்பாளையத்தில் ஸ்டேட் பாங்க் கிளை ஒன்று திறக்கப்பட்டுப் பொது மக்களுக்குத் தொழில் செய்வதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## வறட்சி நிலை துயர்துடைப்புப் பணிகள்

இந்த ஒன்றியத்தில் வறட்சிப் பணியின் கீழ் 3 குளங்கள் தூர் எடுக்கப்பட்டன. 65 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 15 குடிநீர்க் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 1,25,000.

## சீரணித் திட்டம்

சீரணித் திட்டத்தின் கீழ் ரூ. 14,200 செலவில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 10,000 செலவில் 1 பள்ளிக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளது.

## கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 76 வீடுகள் கொண்ட நெசவாளர் காலனி ரூ. 2,28,000 செலவில் சின்னாளப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.

## குழந்தைகள் நலத் திட்டம்

14—11—1969-ல் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் குடும்பக் குழந்தைகள் நலத் திட்டம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன், அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இது 5 ஆண்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 7 பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில் தலைமை நிலையம் ( Main Centre ) ஒன்றும், உப நிலையங்கள் ( Sub-Centres ) 5-ம், துணை நிலையம் (Aided Centre) ஒன்றும் உள்ளன.

மேட்டுப்பட்டி—தலைமை நிலையம்.

பித்தளைப்பட்டி உப நிலையங்கள்.

ஆலமரத்துப்பட்டி. ,,

பாளையங்கோட்டை ,,

சித்தரேவு ,,

அய்யம்பாளையம் ,,

கே. சிங்காரக்கோட்டை— துணை நிலையம்.

மேலும் சமூகப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் சித்தரேவில் தொழிற்கூடம் ஒன்று 24—8—1972-ல் திறந்து வைக்கப்பட்டது.

## பாலர் பள்ளிகள்

இவ்வொன்றியத்தில் 16 பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 14 பாலர் பள்ளிகள் 'கேர்' நிறுவன ஆதரவுடன் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 1 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு மற்றும் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

பிள்ளையார்நத்தம்.

செட்டியபட்டி.

அம்பாத்துரை.

பெருமாள்கோவில்பட்டி

தெற்குமேட்டுப்பட்டி.

வக்கம்பட்டி.

ஜே. புதுக்கோட்டை.

சித்தையன்கோட்டை.

அக்கரைப்பட்டி.

நரசிங்கபுரம்.

சித்தையன்கோட்டை.

தேவரப்பன்பட்டி.

மஞ்சள் பரப்பு.

இந்திராபுரம்.

கேர் ஆதரவு இல்லாமல் நடைபெற்றுவரும் பள்ளிகள்

ஆத்தூர்.

சீழக்கோட்டை.

குழந்தைகள் காப்பகங்களில் மதிய உணவு அளிக்கப்படுகிறது.



மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலைவாய்ப் பற்றுள்ளோரில் குறைந்தது 1,000 பேர்களுக்குத் தொடர்ச்சியாக 10 திங்களுக்கு வேலையளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்படுத்தப் படுகிறது. உழைப்பையும், உற்பத்தியையும், மையமாகக் கொண்டு, பல்வேறு ஊர்ப்புறத் திட்டங்களை இணைத்துக் கூடுதலான வேலைவாய்ப்புகளை உண்டாக்கும் விதத்தில் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளாவன :—

(அ) பெருந்திட்ட அடிப்படையில் சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்ளமைப்பு வேலைகள்.

(ஆ) தரிசுகளை விளை நிலங்களாக்குதல், ஊராட்சி நிலங்களைச் சீராக்குதல் போன்றவை.

(இ) கழிவுநீர்வசதி, கரைகள் அமைத்தல் போன்றவை.

(ஈ) நீரைப் பாதுகாத்து, நில அடி நீரைப் பயன்படுத்துதல் போன்றவை.

(உ) பாசனத் தேக்கங்களை அமைத்தல், சீராக்குதல் போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

(ஊ) மண்வளப் பாதுகாப்பு, அல்லது மனித உழைப்புத் தேவைப்படும் காடு வளர்ப்புத் திட்டங்கள்.

(எ) தொடக்கப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்டுதல்.

இது நூற்றுக்கு நூறு மைய அரசுத் திட்டமாகும். நான்காம் திட்டத்தில் எஞ்சிநிற்கும் ஆண்டுகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி, தருமபுரி, திருநெல்வேலி மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 20 வட்டாரங்கள் வீதம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. நீலகிரி, கன்னியாகுமரி, தருமபுரி மாவட்டங்களில் முறையே 4, 9, 16 வட்டாரங்களே உள்ளமையால், இத்திட்டம் இம் மாவட்டங்களிலுள்ள வட்டாரங்கள் அனைத்திலுமே செயற்படுத்தப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டம் 21 வட்டாரங்களில் நிறைவேற்றப்படுகிறது. இவ்வாறாக இம்



செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியக் கட்டடம்.

மாநிலத்திலுள்ள 374 மொத்த வட்டாரங்களில், 230 வட்டாரங்களில் இத்திட்டம் தற்போது செயற்படுகிறது.

கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து, ஏனைய மாவட்டங்கள் அனைத்திற்கும் வட்டாரங்கள் ஒன்றிற்கு ரூ. 1·25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் வட்டாரங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாது, ஒரு மாவட்டத்திற்கு ரூ. 12·50 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளிலுள்ள நிலவரப்படி ஊதியம் அளிக்கப்படுகிறது.

1971–72-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினுல் அடைந்த சாதனைகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | இணைப்புச் சாலைகள் (கி.மீ.). | 6,031·85 |
| 2. | கட்டப்பட்ட பாசன வேலைகள் (எண்ணிக்கை) | 288 |
| 3. | பாசனம் செய்யப்பட்ட மொத்தப் பரப்பு(ஹெக்டேர்) | 6,475·29 |
| 4. | கட்டப்பட்ட மதகுகள் (எண்ணிக்கை) | 310 |
| 5. | கழிவுநீர், நீர் தேங்காமைக்கு வழிவகுத்தல் (ஹெக்டேர்) | 4,973 |
| 6. | தூரெடுக்கப்பட்ட, ஆழப்படுத்திய குடிநீர்க் குளங்கள் (எண்ணிக்கை). | 51 |




1971–72-ஆம் ஆண்டில், 293·05 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 84·04 இலட்ச வேலை வாய்ப்பு நாட்கள் இத்திட்டத்தினுல் உண்டாக்கப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டுக்குரிய திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ரூ. 302 இலட்சமும், 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் அதே தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளன.



அன்பால் நிறைந்த நெஞ்சம் அலைகடல்போல் விசாலமானது. ஆழ்கடல்போல் அமைதியானது. பாறையைப்போல் உறுதியானது. பனிமலரைப் போல் குளுமையானது.

ராதையின் நெஞ்சம் இத்தனை இலக்கணங்களும் நிறைந்த நெஞ்சம். அதனுல்தான், வாசலில் வந்து நிற்கும் நர்மதாவைக் கண்டவுடன் ''வாருங்கள் நர்மதா!'' என்று அகமும் முகமும் அழகாய் மலர வரவேற்க முடிந்தது.

நர்மதா திகைத்துப்போகிறுள்.

தான் யார் என்ற விவரத்தை எப்படிக் கூறுவது, தான் வந்திருக்கும் நோக்கத்தை எப்படி உணர்த்துவது என்றெல்லாம் தன்னை முகம் கோணுமல் வரவேற்க முடிகின்றது?—நர்மதாவின் வியப்புத் தீரவில்லை....

''ராதை....நான் வந்த-''

''காரணம் எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் காணத் துடிக்கிற அத்தானை இன்னும் பத்து நிமிடங்கள் கழித்துத்தான் பார்க்க முடியும். அது வரையில் நான் கூறும் விவரங்களைச் சகித்துக்கொண்டுதான் தீரவேண்டும்..ம்....உட்காருங்கள்..காபி கொண்டு வருகிறேன்..''என்று கூறியபடி உள்ளே செல்லத் திரும்பியவள், ''மிஸ்டர் ரோமியோ..இவர்களை நான் அறிமுகம் செய்யத் தேவையில்லை என நினைக்கிறேன்'' என்று தயங்குகிறுள்.

அன்பைச் சுமந்த இதயத்தோடு அவளும், அன்பைச் சுமந்த விழிகளோடு அவனுமாக எதிரெதிராக உட்கார்ந்திருக்கிறுர்கள். ஏறிட்டு நோக்கிய அவன் பார்வையில் எச்சரிக்கைகள் ஓராயிரம். ''ராதையின் முல்லைப்பூ இதயத்தை முள்ளைக்கொண்டு கீறி நாசப்படுத்திவிடாதே!'' என்ற கோரிக்கை..கருணைமனு எல்லாம் ரோமியோவின் ஒரு நிமிடப் பார்வையில் அலைமோதுகின்றன.

நர்மதாவின் விழிகளில் இருந்த தயக்கம் எப்போதோ விடைபெற்றுப் போய் விட்டிருந்தது. ராதையின் இதயம் எப்படிப்பட்டதென்று மணிவாசகன் கூறியது நூறு பங்கென்றுல், நேருக்குநேர் ராதை

## 7. ஒவ்வொரு ரோஜாவுக்கும் ஒரு முள் நண்பனுக இருக்கும்

தவித்துப் போய் வந்தவள், தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதற்கு முன்னுல் அறிந்து கொண்டதற்கான அடையாளமும் இத்தனை அன்பான வரவேற்பும் கிடைக்கும் என்பதை எதிர்பார்க்கவில்லை.

''வாருங்கள் நர்மதா!'' என்று இரண்டாம் முறையாக ராதை அழைத்த பிறகுதான் நர்மதா சுய உணர்வு பெறுகிறுள்.

''அத்தான் வீட்டு வாசலை மிதித்ததுமே உங்களுக்கு இந்த உலகம் மறந்து, இன்ப உலகத்தில் பறக்கத் தொடங்கிவிட்டீர்களா?'' என்று உரிமையோடு கேலி செய்தபடியே நர்மதாவின் கைகளைப் பிடித்து உள்ளே அழைத்து வருகிறுள் ராதை.

''நீங்கள்தானே ராதை....'' என்று நர்மதா ஒரு நிமிடத் தயக்கத்திற்குப் பின்னர் கேட்கிறுள்.

''பின்னே? என்னைத் தவிர வேறு எவருக்கு இந்த உரிமை இருக்க முடியும்?''

வாசலைத் தாண்டி வரவேற்பறைக்குள் நின்றதும் ரோமியோவைக் கண்டு ஒரு கணம் திகைக்கிறுள் நர்மதா. உதகைப் பயணத்தில் நர்மதா-மணிவாசகன் இருவரையும் இணையாகப் பார்க்கும்போதெல்லாம் எரிமலையின் தீக்கனல்களை இருவிழிகளிலும் தேக்கியபடி சீறிச்சீறி வந்தாரே அந்த உற்ற நண்பர் ராதையிடம் என்னென்ன போதனைகளைச் செய்திருப்பாரோ...? அவரிடம் பேசிக்கொண்டிருந்த பிறகும், இந்த ராதையால் எப்படித்

''ஓ....இவர்களை நன்முகத் தெரியுமே!'' என்று சிரித்துச் சமாளிக்கிறுன் ரோமியோ.

''பின்னே அந்நியரைப் போல் உம்மென்று உட்கார்ந்திருப்பானேன்..? பேசிக் கொண்டிருங்கள்..இதோ வருகிறேன்..''

ராதை அந்தப் பக்கமாக நகர்ந்ததும் ரோமியோ நர்மதாவை நிமிர்ந்து நோக்குகிறுன்.

யைச் சந்தித்தபோது அது ஆயிரம் மடங்காக உயர்ந்தது! இருந்தாலும் அவளுக்கென்று ஓர் இதயம் இருக்குமே......!

—அத்தான் என்ற உறவுக்காரனைத் திருமணம் செய்து கொள்ளத் துடிக்கும் உரிமை மனம்-தன்னை எப்படி வரவேற்குமோ என்ற தயக்கத்தில் வந்தவளுக்கு, ராதையின் வரவேற்பு, திகைப்பையும் வியப்



பையும் மதிப்பையும் தந்திருக்கின்றது. ஆனால் ரோமியோவின் பார்வை அச்சத்தையும் அதிர்ச்சியையுமே அதிகப்படுத்துவதாக அமைந்திருக்கிறதே....!

'என் வாழ்வை நீ கெடுத்து நாசம் பண்ணிவிடாதே!' என்று நர்மதாவும் பார்வையாலேயே எதிர் மனு கொடுத்துக் கொண்டிருக்கிறாள்!

காபியும் பிஸ்கெட்டும் எடுத்துக் கொண்டு — வழக்கமான கலகலப்புச் சற்றும் குறையாமல் வந்து நிற்கிறாள் ராதை.

''சாப்பிடுங்கள்.........''
—அமைதியைக் கலைக்கின்றவள் ராதைதான்!

நர்மதா மௌனமாகப் பார்க்கிறாள்..........

''ஏதாவது பேசுங்களேன் நர்மதா......!'' என்று ராதை மீண்டும் கூறுகிறாள்.

நர்மதா, அப்போதும் அமைதியாகவே இருக்கிறாள். உணர்ச்சிப்பெருக்கில் அவள் உள்ளம் நனைந்து உதடுகள் துடிதுடிக்கின்றன. பேச்சுவரவில்லை.

''பேசுங்களேன்...... என்னிடம் பேசப் பிடிக்கவில்லையா என்ன?''

''பேச முடியவில்லை ராதா.. என் நெஞ்சு விம்மி உடைந்து விடும் போல் கனமாக இருக்கிறது............''

''சுமையோடு இந்த வீட்டுக்குள் நீங்கள் வந்திருக்கக் கூடாது நர்மதா........அல்லது வந்த பின்னராவது சுமைகளைத் தூக்கி எறிந்துவிடும் மனபலம் வந்திருக்க வேண்டும்........''

''நான் சுமப்பது உங்கள் அன்பைத்தான்!''

''அன்பு காற்றைப் போல் இலேசானது, தாயைப் போல் உண்மையானது. அன்பைச் சுமப்பதானால் உங்கள் இதயம் உடைந்து விடும் என்றால், என் அன்பிலே உண்மையில்லை என்றுதான் அர்த்தம்!''

''ராதா......!'' என்று மேலே பேசச் சக்தியற்று அவள் இருகரங்களையும் பற்றித் தன்னோடு அணைத்துக் கொள்கிறாள் நர்மதா........ எதிரே ஒரு ஆடவன் இருப்பதையும் மறந்து சிறு குழந்தைபோல் கண்ணீர் சிந்துகிறாள்.



''நர்மதா....இந்த வீட்டுக்குள் வந்த பிறகு யாரும் எதற்காகவும் அழக்கூடாது....ஒரு சொட்டுக் கண்ணீர்கூட நீங்கள் சிந்தக்கூடாது. சிந்தவிடமாட்டேன்!''

ரோமியோ இடைமறிந்து,

'அவர்கள் பங்கையும் சேர்த்து அழுது தீர்க்கத்தான் நீங்கள் உங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களே, இல்லையா ராதா?'' என்று கேட்கிறான்.

''மிஸ்டர் ரோமியோ.... இது பெண்கள் விஷயம் அதுவும் குடும்ப விஷயம். நீங்கள் குறுக்கிடுவது எனக்குப் பிடிக்கவில்லை!''

''நான் உங்கள் குடும்ப நண்பனில்லையா ராதா?''

''அந்த கௌரவத்தை நீங்கள் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் பரிவுடன் கூறுகிறேன்.''

நர்மதாவின் விழிகளில் பெருகிய கண்ணீரில் இருசொட்டுக்கள் ராதையின் கரங்களைச் சூடாக்குகின்றன.

''நர்மதா!''

''ராதா....உங்கள் பெருந்[illegible]க்கு என்னால் தலைவணங்காமல் இருக்க முடியவில்லை..உங்கள் தியாகத்தின் முன்னால் நான் ஒரு துரும்புக்குச் சமம்.''

''தியாகம் பெருந்தன்மையெல்லாம் கிடக்கட்டும். நீங்கள் இனிமேல் அழக்கூடாது..ம்.. கண்ணீர் கோழைகளின் ஆயுதம்!''

''ராதா! நல்லவர்களுக்கும் கண்ணீரே நன்றியின் அடையாளம்!''

''நீயா நல்லவள்?'' என்ற ஆவேசக் கேள்வி ரோமியோவின் இதயத்தில் பிறந்தது; 'நீ நல்லவள்தான்' என்ற நம்பிக்கை ராதையின் இதயத்தில் வளர்ந்தது.

''ராதா....என்னைப் பற்றி ஏதாவது —''

''எதுவுமே புதிதாக நீங்கள் சொல்லிவிட முடியாது......எல்லாவற்றையும் ——''

''மிஸ்டர் ரோமியோ சொன்னாரோ?'''

''மிஸ்டர் ரோமியோ சொல்லவில்லை; உங்கள் ரோமியோ மணிவாசகன்தான் ஒன்றுவிடாமல் சொன்னார்; தேனைக் கண்ட வண்டாக, வானம், வையம், பூச்செடி பொன்மலர் யாவற்றையும் மறந்த கதையைக் கலகலப்பாகச் சொன்னார்.''



''என்னை மன்னித்து விடுங்கள் ராதா!''

''எதற்காக மன்னிக்க வேண்டும்?''

''உங்களுக்குச் சொந்தமாக வேண்டிய இதயத்தைக் கவர்ந்தது எனது தவறுதானே?''

''தெரியாமல் எடுப்பதற்குப் பெயர்தான் திருட்டு........ தெரிந்தே கொடுப்பதற்குப் பெயர் பரிசு..........''

''சகோதரி.....' நீ எவ்வளவு உயர்ந்தவள்.......'' என்று பெருமிதத்தால் விம்மியபடி ராதையை அணைத்துக் கொள்கிறாள் நர்மதா.

அந்தக் காட்சி ரோமியோவுக்குத் தன்னை யாரோ சவுக்கால் அடிப்பது போல் இருக்கிறது. பெண் மனத்து ஆவல், ஆதங்கம், ஏக்கம், இதயக் குமுறல் எதையுமே உணராமல் இதென்ன போலியான பூச்சு வேலைகள்..

''ராதா....நான் குறுக்கிடுவது உனக்குப் பிடிக்காதுதான்! இருந்தாலும் என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை. ..உன்னை மணக்கவேண்டிய மணிவாசகன் இவர்களை மணக்கப் போகிறான்....இது உன் அன்புக்குச் செய்த துரோகம்! உன் உதவிகளுக்குச் செய்த துரோகம். உன் அப்பா தரும் பணத்தில் படித்தவன்—அவன் படிப்புக்காகச் செலவழித்த பணத்துக்காவது அவன் துரோகம் பண்ணாமல் இருப்பானா?''

''மிஸ்டர் ரோமியோ...... வாழ்க்கையை வட்டிக்கடையாக்கி[illegible]

[illegible]திற்கும் கணக்கு வழக்கிற்கும் அப்பாற்பட்ட புனிதங்கள்! என் அப்பா சம்பாதித்த பணத்தை என் அத்தானின் படிப்புக்காகத் தான் பூட்டிவைத்திருந்தார்!''

''பூட்டி வைத்த பணத்தை யாருக்கும் வழங்கலாம் மிஸ் ராதா''

ரோமியோ குறுக்கிட்டான். ராதா தொடர்ந்து சொன்னாள்.

''பூட்டி வைத்த பணத்தை யாருக்கும் வழங்க என் அப்பாவுக்கு உரிமையுண்டு. இதே போன்று பூட்டி வைத்த என் பாசத்தையும் என் அன்பையும் டாக்டர் நர்மதாவுக்குக் கொடுக்க நான் பூட்டி வைத்திருந்தேன், மிஸ்டர் ரோமியோ''

''இந்தச் சமாதானம் போலி



''போலியல்ல, பொருத்த மானது! நான் பித்தளை, என் அத்தான் வெள்ளி. வெள்ளிக் காகப் பித்தளையை இழந்தேன். தங்கத்துக்காக வெள்ளியைத் தானம் கொடுக்கத் தயா ராக இருக்கிறேன். டாக்டர் நர்மதா தங்கம். மாற்றுக்குறை யாத சொக்கத் தங்கம்'' என்று ராதை சொல்லச் சொல்ல நர்ம தாவின் உள்ளம் உருகிக் கரை கிறது!

''ராதா....என்னைப் பற்றி உன் மனத்தில் எவ்வளவு உயர் வாக மதிப்பு வைத்திருக்கிறாய்!''

''அத்தானையும் என் அத்தான் என்னுள்ளே ஏற்படுத்திய மதிப்பு....அவர் மனம் எதை விரும்புகிறதோ அது உயர்வான தாகத்தான் இருக்கும்.... அதைத்தான் என் மனமும் விரும் பும்; என்மதியும் மதிக்கும்!''

''ராதா....என்னால் உனக்கு எத்தனையெத்தனை—''

''இனிமைகள் வருகின்றன தெரியுமா? இன்பங்கள் பிறக் கின்றன தெரியுமா? ஒப்பற்ற உங்கள் அழகால் அவர் இதயத் தைக் கவர்ந்ததைப் போல் உயர்வான உங்கள் குணத் தால், உங்கள் அன்பால் அவர் வாழ்வை என்றென்றும் வள மாக்குங்கள்........ இதுதான் உங்களிடம் நான் கேட்கும் வரம்.''

''பக்தையிடம் வரம் கேட் கும் தெய்வத்தை இப்போது தான் நான் பார்க்கிறேன்.'' என்கிறாள் நர்மதா.

ஒன்றிக் கலந்த உள்ளங்க ளுக்கு மத்தியில் ரோமியோ ஒரு துரும்பாகத் தவிக்கிறான். ஐயோ, இந்த அப்பாவிப் பெண் ராதை தெரிந்தே தன்னைப் பலிகொடுக்கிறாளே என்ற நியா யமான அனுதாபத்தில் அவன் நெஞ்சு துடிக்கிறது.

குளியலறைக் கதவைத் திறந்து வெளியே வருகிறான் மணி வாசகன். நர்மதாவைக் கண் டதும் அவன் இதயம் மலர் கின்றது. இதயத்தின் மலர்ச்சி இரு விழிகளிலும் பிரதிபலிக்கி றது. ''ஹலோ....!'' என்ற படி பரபரப்பாக அறையினுள் வருபவனைத் தடுக்கிறாள் ராதை.

''உடை மாற்றிக் கொண்டு வருவதற்குள், உங்கள் நர்ம தாவை நாங்கள் விழுங்கிவிட மாட்டோம் ....ம்.... போங் கள்'' என்று திருப்பி அனுப்பு கிறாள்.

அவள் அவசரமாக அவனை விரட்டுவதற்குக் காரணம்— ரோமியோ அங்கே இருப்பது தான். தன்னை முன்னிட்டு நண்பர்கள் இருவரும் வாதம் புரியத் தொடங்கினால் அது நர்மதாவுக்கு வருத்தத்தைத் தந்துவிடுமே என்ற பயத்தால் மணிவாசகனை அடுத்த அறைக் குள் தள்ளுகிறாள். அதே வேகத்தில் ரோமியோவை வெளி யேற்றவும் திட்டம்.

''மிஸ்டர் ரோமியோ.... அத்தானும் நர்மதாவும் பேசும் போது நாம் இருவருமே இங்கே இருப்பது அவ்வளவு நாகரிக மாகப் படவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்......! வக்கீல் சார்!''

''சொல்ல என்ன பாக்கி வைத்திருக்கிறீர்கள்? எல்லா வற்றையும் சுலபமாக முடித்து வைத்துவிட்டீர்கள், நூற்றுக் கிழவி மாதிரி. இனிமேல் எனக் கென்ன வேலை....!''

''கல்யாணத்துக்கு வரவேண் டியதுதான் உங்கள் வேலை!'' என்று கூறிக் கலகலப்பாகச் சிரிக்கிறாள் ராதை.

''கல்யாணமா! ரோமியோ வுக்குக் கல்யாணமா?'' என்று கேட்டபடி அறையினுள் வந்து நிற்கிறான் அழகுடையணிந்த மணிவாசகன்.

''என் கல்யாணமில்லேடா முட்டாள்! உன் கல்யாணத்தை எப்படிக் கோலாகலமாகக் கொண்டாடலாம் என்றுதான் நாங்கள் ரொம்பவும் தீவிரமாக யோசனை பண்ணிக் கொண் டிருக்கிறோம்''

''இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது.....ராதை எப்படித் தீர்மானம் பண்ணுகிறாளோ அப் படியெல்லாம்தான் நடக்கும். அவள் விருப்பத்திற்கு விரோத

மதுரை மாவட்டத்தில்— மதுரை நகருக்கருகில் பர்மா அகதிகளுக்கு 400 இலவச வீடுகள் கட்டப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 4,000 செல விடப்படும். மொத்தம் இந்த வீடுகளுக்கு 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(9–3–1973-ல் தமிழக சட்ட மன்றத்தில் வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு கே. இராசாராம்)

மாக எதுவுமே நடக்காது.... இல்லையா ராதா!''

''ஆமாம்....ஆமாம்....'' என்று சேர்ந்து சிரித்துச் சமா ளிக்கிறாள் ராதை. இந்தவரைக் கும், மணிவாசகனும் ரோமி யோவும் சிங்கமும் புலியுமாகச் சீறிப்பாயாமல், சிரித்தாவது பேசுகிறார்களே என்று ராதைக்கு நிம்மதி......

''கல்யாணம் ஆபட்ஸ்பரியில் தானே ராதா?'' என்கிறான் ரோமியோ. அவன் பேச்சிலே உள்ள குத்தலைக் காணாதவளைப் போல் சமாளித்து, ''ஆமாம்.. அதைவிடப் பெரிய இடம் கிடைக்கவில்லையே....'' என்று கூறிவைக்கிறாள்.

''கல்யாணத்திற்குக் கச்சேரி ஏதாவது உண்டா? சொல்லுங் கள் தெரிந்து கொள்கிறேன்!'' என்று மேலும் சீண்டுகிறான் மணி வாசகன். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொள்ளாமல் விளை யாட்டுப் பேச்சிலே பொழு தைக் கழிக்கிறார்களே என்ற தவிப்பு நர்மதாவுக்கு.

''கச்சேரி உண்டு........ ஆனால் சங்கீதக் கச்சேரி இல்லை ........காற்றாடிக் கச்சேரி.. பம்பரக் கச்சேரி......பட்டம் விடும் கச்சேரி......''

''பட்டம் விடும் கச் சேரியா?'' என்று கேட்டுக் கலகலவெனச் சிரிக்கிறான் மணி வாசகன்.

''ஆமாம். மாப்பிள்ளையும் பெண்ணும் பட்டதாரிகள் இல் லையா? மணிவாசகன், எம்.ஏ., பி.எல்., டாக்டர் நர்மதா எம்.பி.பி.எஸ்., இரண்டு பெரும் தொழில் முறையில், யாருடைய பட்டம் உயர உயரப் பறக்கப் போகிறது........யாரை விட யார் அதிகமாகப் புகழ்க் கொடி கட்டப் போகிறார்கள் என் பதை வெள்ளோட்டம் விட் டுப் பார்க்க விளையாட்டாகப் பட்டம் விட்டுப் பார்க்கலாம்.. யாருடைய வாழ்க்கைப் பம் பரத்தை யார் ஒரே வீச்சில் சாய்க்கிறார்கள் என்ற வலுவைச் சோதிக்கப் பம்பரம் விட்டுப் பார்க்கலாம்....'' என்று ஒரே மூச்சாகப் படபட வென்று ரோமியோ பொரிந்து தள்ள, ''ஏன் சடுகுடுப் போட்டிகூட வைக்கலாமே...... யார் காலை யார் அழகாக வாரி விடுகிறார்கள் என்ற பலப் பரீட்சையையும் பார்த்துவிடலாமே........'' என்று இடைமறிக்கிறான் மணி வாசகன்.



''நல்ல சொல்லே வராதா உங்கள் நாக்கில்.... அத்தான்! நர்மதா முதன்முதலாக நம் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள்.... அதற் குள் பலப்பரீட்சையாம்...... பட்டம் அறுக்கும் போட்டியாம் ....இந்த ஆண்களுக்குக் கொஞ் சம்கூட நயத்தக்க நாகரிகப் பேச்சே வாயில் வருவது கிடை யாது!'' என்று கண்டித்து விட்டு நர்மதாவை வீட்டினுள் அழைத்துப் போகிறாள் ராதை.

''அப்பா....!'' என்று அங்கு நின்றபடியே குரல் கொடுக் கிறாள் ராதை.

''என்னம்மா....'' என்ற படியே மாடியிலிருந்து இறங்கி வருகிறார் பாண்டித்துரை.

அவர் கண்களில் கலக்கம்.

கையில், அச்சிடப்பட்ட வெள் ளைத்தாள்.

''அப்பா! இவர்கள்தான்....''

''டாக்டர் நர்மதாவா?'' என்கிறார் பாண்டித்துரை.

''ஆமாம்.... உங்கள் மூத்த மகள்'' என்று ராதை, அறி முகத்தை அழுத்தமாக்குகிறாள்.

''வணக்கம்'' என்று கரம் குவிக்கிறாள் நர்மதா.

''வணக்கம்....வா.... அம்மா......'' என்று மறு மொழி கூறிவிட்டு, பாண்டித் துரை தம் கையிலிருக்கும் தாளை ராதையிடம் கொடுக் கிறார்.

''என்னப்பா இது?''

''சட்டக் கல்லூரியில் சேரு வதற்கான நுழைவுத் தாள்.''

''அப்பா....!'' என்று திகைக்கிறாள் ராதை.

''உனக்குத்தானம்மா...... பூர்த்தி செய்து கொடு........ இந்த ஆண்டு உன்னைச் சட்டக் கல்லூரியில் சேர்த்துவிட முடிவு செய்துவிட்டேன்'' என்று அமைதியாக— அழுத்தமாகக் கூறுகிறார் பாண்டித்துரை.

''என் படிப்புக்கு இப்போது என்னப்பா அவசரம்?''

''இப்போது என்னப்பா அவசி யம் என்று வெளிப்படையாகவே கேட்டிருக்கலாம் ராதா.. உன் எதிர்காலம் பற்றி நான் எடுத் திருக்கும் முடிவு......''

## நிலமற்ற உழவர்கட்குப் பட்டா

கடந்த ஆறு ஆண்டுக் காலத் தில் 2 இலட்சத்து 65 ஆயிரம் நிலமில்லா விவசாயி களுக்கு 5 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1972–73-ல் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கு வதில் இத்துறையினர் போற்றத் தகுந்த முன்னேற்றம் கண் டுள்ளனர்.

ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 745 ஏக்கர் நிலம் மிச்ச மிருப்பதாகக் கணக்கிடப் பட்டதில் 1972–73-ஆம் ஆண் டில் 75 ஆயிரம் ஏக்கர் அளவுக்குப் பட்டா செய்யப்பட வேண்டும் என்று அரசு இலக்கு நிர்ணயித்தது. இதில் 1972 டிசம்பர் முடிய 63 ஆயிரத்து 700 ஏக்கர் நிலம் பட்டா செய்யப்பட்டு உள்ளது.

(10–3–1973-ல் தமிழகச் சட்டப்பேரவை முன் வைக்கப்பட்ட நிலவரி வருவாய்த் துறையின் பணிகள் பற்றிய குறிப் பிலிருந்து.)

''என் எதிர்காலம் பற்றி நீங் கள் கொண்டிருக்கும் அக்க றைக்கு என் நன்றி என்றென்றும் உண்டு அப்பா....ஆனால் அதைச் செயல்படுத்தும் நேரம், செயல் படுத்தும் வேகம் இருக்கிறதே அதுதான் அவ்வளவு நல்லதாக எனக்குப் படவில்லை. என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கூறியபடியே சட்டப் படிப்புக் கான விண்ணப்பத்தாளைக் கிழித்து எறிகிறாள் ராதை.

சட்டப் படிப்புக்கு வழி காட் டும் விண்ணப்பத்தைப் பழைய பேப்பர் போன்று கிழித்துவிட் டாள். மாஜி பேப்பர் வியாபாரி பாண்டித்துரையின் கண்கள் கலங்குகின்றன. அதைப் பார்த்த நர்மதாவின் இதயம் நடுங்கு கிறது.

''ராதா'' இந்த வீட்டுக்குள் நான் வந்தபோது, 'யாரும் எதற்காகவும் அழக் கூடாது. ஒரு சொட்டுக் கண்ணீர் கூடச் சிந்தக் கூடாது. சிந்தவிட மாட்டேன்' என்றாயல்லவா?''

''உம்'' என்றாள் சிலைபோல அசையாமல்.

''இப்போது உன் அப்பாவைக் கண்கலங்க வைத்து விட்டாயே!

தந்தையைப் பார்க்கிறான் மகள். மகள் மனம் மாறி பி.எல். படிக்க ஒப்புக்கொள்ளு வாள் என்ற ஆசையில் தந்தை மகிழ்கின்றார்.

''அக்கா நான் படிப்பிலே மக்கு''

''ராதை மிகப் பெரிய மனி தர்களிடம் ஒரு குணம் உண் டென்று படித்திருக்கிறேன். அவர் கள் அறிவுக்கும், அன்புக்கும் அடி யிலே பச்சைக் குழந்தையின் இத யம் அமைந்திருக்கும். அதனை உன்னிடம் பார்க்கிறேன்.''

''நீங்கள் டாக்டர்''.

''நீ வக்கீலுக்குப் படிக்க வேண்டும் ராதை......''

தந்தை கண்குளிர மகளைப் பார்த்தார்; காது குளிர மகள் சொல்லும் சம்மதத்தை எதிர் பார்க்கிறார்.

நர்மதா ''நீ வக்கீலுக்குப் படிக்க வேண்டும். இந்த முடி வைச் சொல்லத்தான் வீடு தேடி வந்தேன். பி.எல். படிக்க நீயும், உன் அப்பாவும் சம்மதம் தந்தால்தான்....'' என்று நிறுத்தினாள்.

''தந்தால்தான்?..'' என்று எதிரொலி செய்தாள் ராதை.

''உன் அத்தானுக்கும் எனக் கும் திருமணம் நடக்கும். உதகை யில் எங்களுக்குள் ஏற்பட்ட ஒப் பந்தங்களில் இதுவும் ஒன்று.''

''இது பெரிய விதி. கடுமை யான விதி.''

''கடமைதான் விதியை நிர்ண யம் செய்கிறது. ; எங்கள் திரு மணம் உன் சட்டக் கல்லூரிப் படிப்பைப் பொறுத்திருக்கிறது. நீ படிக்கச் சம்மதம் தெரிவிக்காத வரை.......''

ராதை விரைந்து நர்மதாவின் வாயைப் பொத்தினாள். அப சகுனமாக எதையும் சொல்லி விடக் கூடாதே!

''ஒவ்வொரு ரோஜாவுக்கும் ஒருமுள் நண்பனாக இருக்கும். உங்கள் திருமணத்திற்கு நான் முள்ளாக இருக்க மாட்டேன்.''

''படித்து வக்கீலாக வரப் போகிறாய்!''

ராதை பேச முடியாமல் நின் றாள்.

(வளரும்)




ஊராட்சி ஒன்றியங்கள் அடைந்துவரும் வளர்ச்சிக்கு நாள்தோறும் புதிய பணிகள் மூலம் வளர்ந்து வருவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது மதுரை மாவட்டத்திலுள்ள ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம்.

வேளாண்மைத் துறையில் கடந்த ஐந்தாண்டுகளில் மகத்தான வளர்ச்சிஅடைந்திருக்கிறது ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம்.

பொறுக்கு விதைகள் விநியோகத்தின் கீழ் நெல் விதைகள் கடந்த ஐந்தாண்டுகளில் 50 டன்கள் வழங்கப்பட்டன. சுமார் 2,545 ஏக்கர் நிலம் பயிர்செய்யப்பட்டும் ஏறத்தாழ 7,440 டன் நெல் விளைவிக்கப்பட்டுள்ளது.

பருத்தி விதைகள் 41 டன் வழங்கியும் 5,000 ஏக்கர் பயிரிட்டும் சுமார் 6,500 டன் பருத்தி விளைவிக்கப்பட்டுள்ளது. மிகு விளைச்சல் தானிய வகைகள் வேளாண் பெருங்குடியினருக்கு 15 டன் வழங்கப்பட்டும், 2,000 ஏக்கர் நிலம் பயிரிட்டும் 3,550 டன் தானியங்கள் விளைவிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் 26 டன் வழங்கி 2,600 ஏக்கர் பயிரிடப்பட்டு, சுமார் 1,00,000 டன் விளைவிக்கப் பட்டது. மேலும் தென்னங்கன்றுகள் விவசாயிகட்குச் சலுகை விலையில் 15,000 வழங்கப்பட்டு, 12,000 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிட்டுச் சுமார் ஒரு இலட்சம் டன் தேங்காய்கள் விளைவிக்கப்பட்டுள்ளன.

பயிர்ப் பாதுகாப்பின் கீழ் 18 விதைத் தெளிப்பான்களும் 87 மருந்துத் தெளிப்பான்களும், 42 மருந்து தூவும் கருவிகளும் விவசாயிகளின் நலன் கருதிக் கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரசாயன உரங்கள் சுமார் 3,000 டன் வழங்கப்பட்டுள்ளன.

### வேளாண்மைக் கூடங்கள்

கடந்தஐந்தாண்டுகளில்இரண்டு வேளாண்மைக் கிடங்குகளும், ஒரு தொழில் கருவிக் கூடமும் கட்டப் பெற்றுள்ளன. மேலும் பல துணைக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஒன்றிய விவசாயிகளின் நலன் கருதி உழுவடை இயந்திரம், எண்ணெய்யால் இயங்கும் நீரேற்றுப் பம்பு, ஓர் தானியக் கதிரடிக்கும் இயந்திரம் ஆகியவை இந்த ஐந்தாண்டுகளில் பெறப்பட்டு விவசாயிகட்குக் குறைந்த வாடகையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சிறு விவசாயிகளின் மேம்பாடு குறித்து, இவ்வொன்றிப்பில் ஓர் நிலவள வங்கி நிறுவி, விவசாயிகளுக்குப் போதிய கடனுதவி செய்து வருகிறது.

### கூட்டுறவு வளர்ச்சி

ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் கடந்த ஐந்தாண்டுகளில், 3 கிராம நாணயச் சங்கங்களையும், 7 பால் விநியோகச் சங்கங்களையும், இரண்டு கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களையும், ஓர் நிலவள வங்கியையும், இரண்டு கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களையும், இரண்டு கூட்டுறவு வேளாண்மைப் பொறியியல் சங்கங்களையும் இரு கூட்டுறவுக் கிடங்குகளையும் நமது அரசு அமைந்துள்ளது.

இவ்வொன்றிப்பைச் சார்ந்த கிராம விவசாயிகளின் நலனுக்குப் பாடுபட்டுள்ளது. இதற்காகச் சுமார் 12 இலட்சம் மூலதனமாகச் செலவிட்டுள்ளது.

### கல்வி வளர்ச்சி

கடந்த ஐந்தாண்டுகளில் இவ்வொன்றியத்தில் ஓர் உயர் நிலைப்பள்ளி நிறுவப்பட்டுச் செயல்படுகிறது. தனியார் பள்ளிகள் இரண்டு, ஒன்றியத் தரப்பிற்குக்கொண்டுவரப்பட்டுள்ளன ஒன்றிய உயர் தொடக்கப் பள்ளிகளில் பட்டப்படிப்பு ஆசிரியர்கள் நியமனத்திற்கு மூன்று பள்ளிகட்குச் சுமார் ரூ. 4,03,000 செலவில் புதிய பள்ளிக்கட்டடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

கிராம வானொலி மன்றங்கள் கூடுதலாக 24 நிறுவப்பட்டதுடன், ஊராட்சிக்குச் சுமார் 54 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

### குடும்ப நலம்

நாட்டின் இன்றைய மிக முக்கியமான பிரச்சினையான, குடும்ப நலத் திட்டத்தின் கீழ், 1,907 ஆண்களுக்கும், 1,270 பெண்களுக்கும் அறுவைச் சிகிச்சையும், 453 பெண்களுக்குக் கருத்தடை வளையங்களும், பொருத்தப்பட்டுள்ளன. குடும்ப நல முனைப்பியக்கம் 1972 மற்றும் 1973-ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுக் கிராம மக்கட்குக் குடும்ப நலத்தின் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது.

மகளிரின் நலன்கருதிப் பல மகளிர் மன்றங்கள் நிறுவப்பட்டும், மகளிர்கட்குத் தையல் கலைப் பயிற்சி கற்றுக் கொடுக்கப்பட்டும் வருகிறது. குடும்பத் தலைவிகளான 10,000 பெண்களுக்குத் திட்டமிட்ட குடும்பம், சிக்கனமான வாழ்வு ஆகியன போதிக்கப்படுகிறது. இவர்கள் பிறருக்கு வழிகாட்டிகளாகவுமுள்ளனர்.

### மக்கள் நல்வாழ்வு

இவ்வொன்றிப்பிலுள்ள அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் பல துணைக் கட்டடங்கள் கட்டப்பட்டுக் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி பெருகியுள்ளது. மருத்துவம் மற்றும் குழந்தை நல நிலையங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுத் தாய்மார்களின் மகப்பேறுகளையும், குழந்தைகளின் நல்வாழ்வுகளையும், செவ்வனே கவனித்து வரப்படுகிறது. அவற்றிற்கு இந்த ஐந்தாண்டுகளில் சுமார் ரூபாய் 15,000-க்கு மருந்துகள் பெற்று விநியோகிக்கப்பட்டுள்ளன. மருத்துவ உதவியாளர்கள் மகப்பேறு, குழந்தைநலம் பேணல் போன்ற பணிகளுடன் தீவிரக் குடும்ப நலத் திட்ட உதவியாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

### கால்நடை வளர்ச்சி

கடந்த ஐந்தாண்டுகளில் ஓர் கால்நடை மைய நிலையக் கட்டடமும், 2 துணைநிலையக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளன. இதற்கெனச் சுமார் ஓர் இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. செம்மறி ஆடுகளின் வளர்ச்சிக்குச் சுமார் 572 கடாக்களும், கோழிகளின் அபிவிருத்திக்கு 470 சேவல்களும் வழங்கப்பட்டன. மேலும் மீன் குஞ்சுகள் 80,000 வழங்கப்பட்டுள்ளன. 24 மாட்டுத் தொழுவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## கிராம வளர்ச்சிப் பணிகள்

### குடிநீர் வசதி

67 புதிய குடிநீர்க் கிணறுகள் வெட்டுவதற்குச் சுமார் ரூபாய் 2,21,000 செலவிடப்பட்டு அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது குடிநீர்க் கிணறுகள் இல்லாத கிராமங்கள் இவ்வொன்றியத்திலில்லை. அத்துடன் பழைய குடிநீர்க்கிணறுகளை ஆழப் படுத்த ரூபாய் 3,00,000 செலவிடப்பட்டுள்ளது. மேலும் முக்கியக் கிராமங்கட்கு-மூன்று, தரை மட்டக் குடிநீர்த் தொட்டிகள் ரூபாய் 50,000 செலவிலும், 17 நீர்மட்டக்குடிநீர்த் தொட்டிகள் சுமார் ரூ. 2.5 இலட்சம் செலவிலும் அமைத்து இந்த ஐந்தாண்டுக் காலத்தில் இருபது கிராமங்கட்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் 5 குடிநீர்த் தொட்டிகள் அமைக்க வேலை செய்யப்பட்டு வருகிறது.




### போக்குவரத்து

இவ்வொன்றிப்பின் கண்ணுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்துச் சாலைகளற்ற கிராமங்களில்லை எனலாம். கடந்த ஐந்தாண்டுகளில் 64 புதிய இணைப்புச் சாலைகள் ரூபாய் 6 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 117 கி. மீ. நீளமுடைய 20 சாலைகள் ரூபாய் 4.80 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டன. மேலும் இவ்வொன்றியப் பகுதியின் முக்கிய கிராமங்களுக்குப் பேருந்து வசதிகளும் நகர்ப் பேருந்து வசதிகளும் செய்யப்பட்டு, மக்களின் போக்குவரத்து வசதியில் மிக அக்கறை காட்டப்பட்டது.

திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குச் செல்லும் சாலையில் உள்ளது ரெட்டியார் சத்திரம் என்ற ஊர். இந்த ஊருக்கு ரெட்டியார் சத்திரம் என்று பெயர் எப்படி வந்தது?

அந்தக் காலத்தில் பழனி முருகன் கோவிலுக்குச் செல்பவர்கள் நடந்தே செல்வார்கள். அவர்கள் வழியில் இளைப்பாறுவதற்கு ரெட்டியார் ஒருவர் சத்திரம் ஒன்று கட்டி வைத்திருந்தார். அந்த இடம் ரெட்டியார் சத்திரம் என்று அழைக்கப்பட்டு, நாளடையில் ஊரின் பெயரே ரெட்டியார் சத்திரம் என்று மாறிவிட்டது.

### வறட்சி நிவாரணப் பணி மூலம் சாலை வசதிகள்

நமது தமிழ்நாடு அரசு இதற்கு முன்பைவிட, இந்த ஐந்தாண்டுகளில், இவ்வொன்றியத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் தொகை வழங்கி அதன் மூலம் இவ்வொன்றியத்தில், சீர்கெட்ட நிலையிலிருந்த கிராமங்கட்குக்-குடிநீர் வழங்குதல், கண்மாய் மராமத்துப் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இது நாள் வரை போக்குவரத்து வசதியற்றிருந்த இவ்வொன்றியத்தைச் சார்ந்த ஆடலூர், பன்றிமலை ஆகிய மலைப் பகுதி ஊராட்சிகட்கு ரூபாய் 50,000 செலவில் வறட்சி நிவாரணத்தின் கீழ் மலைச்சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.




தண்ணீர் பற்றுக்குறையாகவுள்ள பலக்கனூத்து, கம்பளி நாயக்கன்பட்டி, போத்திநாயக்கன்பட்டி, குரும்பப்பட்டி, கரட்டுப்பட்டி, சந்தம நாயக்கன் பட்டி ஆகிய கிராமங்கட்குக் குழாய் கிணறுகள் நிறுவப்பட்டு இப்பகுதி வாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையில் தன்னிறைவு கண்டுள்ளது.

### புதிய பாசனத் திட்டங்கள்

கடந்த ஐந்தாண்டுகளில், இவ்வொன்றிப்பிற்குச் சுமார் ரூபாய் 4.14 இலட்சம் ஒதுக்கீடு செய்து, 71 கண்மாய்கள் மராமத்துச் செய்யப்பட்டுள்ளது. தற்போது பொதுப் பணித்துறை மூலமாக மிக முக்கியமான பெரிய கோம்பையாறு அணைத்திட்டம், சின்னக் கோம்பையாறு அணைத் திட்டம், நாயோடை அணைத் திட்டம், சங்கன்குளம் சீரமைப்பு, கதிரயன்குளம் சீரமைப்பு, புதுக்குளம் கோம்பையாறு போன்ற பல பெரிய அணைத்திட்டங்கட்கு அடிகோலி அத்திட்டங்களனைத்தும் அரசின் செயல் முறையிலுள்ளது. இவைகளனைத்தும் இவ்வாண்டில் விரைந்து செயல்படுத்தப்படும் என்று தெரிகிறது. இதன் மூலம் இவ்வொன்றிப்புக்குச் சுமார் ரூபாய் 25 இலட்சம், அரசுநிதி ஒதுக்கீடு செய்யுமென எதிர் பார்க்கப்படுகிறது.

### மின்சார இணைப்பு

கடந்த ஐந்தாண்டுகளில் இவ்வொன்றிப்பிலுள்ள 208 சின்னஞ்சிறிய கிராமங்கட்கும் மின் வசதி செய்யப்பட்டு, அனைத்துக் கிராமங்கட்கும், மின்சாரக்குழல் தெருவிளக்குகள் போடப்பட்டுள்ளன. இவ்வொன்றியம் மின்சார இணைப்புப் பணியிலும் தன்னிறைவு பெற்றுள்ளது என்பதனைச் சிறப்பாகக் கொள்ளலாம்.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

**19/20, லிங்கி செட்டித் தெரு, அஞ்சல் பெட்டி எண் 226,**
**சென்னை—600001.**

தந்தி : " அர்பாங்க் " தொலை பேசி எண் : 20367, 28068.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

---

| வட்டி விகிதங்கள். | | (வருடத்திற்கு%) |
|---|---|---|
| நடப்புக் கணக்கு | .. | வட்டி இல்லை |
| சேமிப்புக் கணக்கு | .. .. | 4.00 |
| (குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது) | | |
| காலாந்திரக் கணக்கு—ரூ. 1000-ம் அதற்கு மேலும். | | |
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை | .. .. | 2·00 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை | .. .. | 3·00 |
| நிரந்தரக் கணக்கு— | | |
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக | .. .. | 4·25 |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்குக் குறைவாக | .. .. | 4·75 |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்குக் குறைவாக | .. .. | 5·25 |
| 1 வருடத்திலிருந்து 2 வருடங்களுக்குக் குறைவாக | .. .. | 6·00 |
| 2 வருடங்களிலிருந்து 3 வருடங்கள் வரை | .. .. | 6·50 |
| 3 வருடங்களுக்கு மேல் 5 வருடங்கள் வரை | .. .. | 7·00 |
| 5 வருடங்களுக்கு மேல் | .. ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்தர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

| தொடர் கணக்கு | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

---

ஆர். கனகசபை, தலைவர்.

குடவாசல் கி. கிருட்டிணமூர்த்தி, துணைத்தலைவர்.

டி. வர்த்தமானன், செயலர்.


# சுருளி மின் திட்டம்

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிக உயரமான இடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரப்பட்டு மின்விசை உற்பத்தியாவது, கோதையாறு நீர் மின் திட்டம் ஆகும். அதைவிட உயரமான நீர் மின் திட்டம் ஒன்று அமைக்கப்படும் பணிகள் மதுரை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

அந்தத் திட்டம்தான் சுருளியாறு மின் திட்டம். சுருளியாறு நீர் மின் திட்டத்தினுல் இன்னொரு நன்மையும் உண்டு. சுருளித் தீர்த்தம் என்று அழைக்கப்படும் சுருளி அருவியில் எப்பொழுதுமே தண்ணீர் வந்து கொண்டிருக்கும். ஆனுல் மழைக் காலத்தில் மிக அதிகமாகவும், சில நேரங்களில் குறைவாகவும் தண்ணீர் வரும். ஆனுல் சுருளி நீர் மின் திட்டம் அமைவதால் சுருளி அருவியில் எப்பொழுதும் ஒரே சீராகத் தண்ணீர் வரும். இதனுல் சுற்றுலாப் பயணிகள் மேலும் கவரப்படுவார்கள்.

சுருளியாறு நீர் மின் திட்டத்தின் கீழ் 35 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

இந்த மின் நிலையமானது, மதுரை மாவட்டத்தில் கம்பம் அருகே, பெரியாறு மின் உற்பத்தி நிலையத்திலிருந்து ஏறத்தாழ 5 மைல் தொலைவில் அமையும்.

சுருளியாறு வைகை ஆற்றின் கிளை ஆறாகும். சுருளியாறு, மற்றும் அந்த ஆற்றின் முக்கிய கிளை ஆறுகளான மணலாறு, வெண்ணீர் ஆறு, எரவங்கலாறு ஆகிய ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்தி, ஒரு மின் உற்பத்தி நிலையத்தினை அமைக்கச் சுருளியாறு நீர் மின் திட்டம் வகை செய்கிறது. சுருளியாறு, பச்சைக் குமாச்சி என்ற மலைத் தொடரிலிருந்து பிறக்கிறது. மதுரை குமுளி சாலையின் மூலமாக இந்த மின் நிலையம் அமையும் இடத்தை அடையலாம். மதுரை மாவட்டம் கம்பம் நகரிலிருந்து மூன்று அல்லது நான்கு மைல் தொலைவில் உள்ளது மின் நிலையம் அமைக்கப்படும் இடம்.

இந்த மின் நிலையத்தின் உயரம் (Maximum Gross Head) 1030 மீட்டர்களாகும். தென்கிழக்கு ஆசியாவில் உள்ள எல்லா மின் நிலையங்களைக் காட்டிலும் இதுவே மிக உயரமானதாக இருக்கும். இந்த மின் நிலையத்தின் மூலமாகச் சுமார் 114 மிலியன் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்படலாம்.

இந்த மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சக்தி, தமிழ்நாடு மின் இணைப்புடன் (Grid) பெரியாறு மின் நிலையத்தில் தொடர்பு படுத்தப்படும்.

35 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட சுருளியாறு நீர் மின் திட்டம் குறித்த திட்ட அறிக்கை (Project Report) தமிழக அரசினுல் 1970 மே திங்களில் மத்திய அரசின் திட்டக் குழுவுக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான அனுமதி ஆகஸ்ட் '72-ல் கிடைக்கப் பெற்றது. இலக்குகளின் படி, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மின் நிலையத்திற்குத் தேவையான டர்பைன்கள், மற்றும் இயந்திரப் பொறிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது குறித்து, இந்திய அரசு முடிவு எடுக்க இன்னும் வேண்டியுள்ளது.

இந்த மின் நிலையம் 1977-78ல் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புது வாழ்வு தரும் புதிய திட்டங்கள்

திருமங்கலம் வட்டம் பெரிய உலகாணி கிராமம் கல்லணை, மேலப்புலிக் குண்டு ஆகிய கண்மாய் களுக்கு முறையான பாசன வசதியைச் சீர்திருத்தும் திட்டம் ரூ. 1·33 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 272·67 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உறுதியாகும். விட்டுப்போன 31·55 ஏக்கர் ஆயக்கட்டு நிலம் புதிதாகச் சாகுபடிக்கு வரும் வாய்ப்புள்ளது.

செட்டியார் சத்திரம் பகுதியில் ஏறத்தாழ 20 ஆண்டுக் காலமாகப் பொது மக்களின் வேண்டுகோளில் இருந்து வந்த சின்னக் கோம்பையாறுத் திட்டம் அரசினர் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிலக்கோட்டை வட்டம் கச்சைக்கட்டி கிராமப் பகுதியைச் சார்ந்த அழகு நாச்சியம்மன் ஓடைப்பகுதில் சிறிய நீர்த்தேக்கம் ஒன்று ஏற்படுத்த அரசு 7,08,000 ரூபாய் அனுமதித்துள்ளது. இத் தேக்கத்தின் பயனாக 191 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைப்பதோடு 128 டன்கள் அதிக உற்பத்தி கிடைக்கும்.

நிலக்கோட்டை வட்டம்- தெத்தூர் கிராமத்தில் ச. எண். 78-ல் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் ரூ. 74,000 மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 84·81 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கவும் 16·55 ஏக்கர் விட்டுப்போன ஆயக் கட்டு சாகுபடிக்கு கொண்டு வரப்படவும் ஏதுவுண்டு.

நிலக்கோட்டை வட்டம் தாதக்கவுண்டன் பட்டியில் ஒரு சிறிய நீர்த்தேக்கம் நிர்மாணிக்க அரசு ரூ. 4,50,000 அனுமதித்துள்ளது. இந்தச் சிறிய நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டதும், 75 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைப்பதால், உற்பத்தி 54·74 டன்கள் அதிகரிக்கும்.

திண்டுக்கல் வட்டம் தர்மத்துப்பட்டியில் குளம் கோம்பையாற்றில் புதுக் சிறிய அணை ஒன்று கட்ட அரசு ரூ. 9,40,000 அனுமதித்துள்ளது. இந்த அணையின் பயனாக 246 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைப்பதோடு, 182·23 டன்கள் உற்பத்தி அதிகரிக்கும்.

நிலக்கோட்டை வட்டம்- சரந்தலங்கி கிராமத்தினருகில் சரந்தாங்கி ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்டி, அதன் மூலம் சம்பக்குளம் கண்மாய்க்குத் தண்ணீர் வசதி செய்யும் திட்டம் ரூ. 85,000 மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 32·73 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உறுதியாகும். விட்டுப்போன ஆயக்கட்டு 5·92 ஏக்கர் நிலம் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட வாய்ப்பு உள்ளது.



# என் பேர் முல்லை



வாய்மூடிக் கொண்டிருப்பேன் பகலில்; அந்தி
வந்தால்நான் சிரித்திடுவேன்; கணிகை அல்ல;
பாய்மீதும் படுக்கைதலை யணைகள் மீதும்
பக்குவமாய் உதிர்வேன்; பெண் முடியா? அல்ல;
தேய்வில்லாப் புகழ்பெற்ற பாரி வள்ளல்
தேர்பெற்றேன்; கபிலனைப்போல் புலவன் அல்ல;
ஓய்வின்றி அசைந்திடுவேன்; யானை அல்ல;
உயர்வெள்ளை நிறம்எனக்கு; பாலா? அல்ல;

நான்முல்லை; இருப்பிடம்பூக் கொல்லை; என்றன்
நல்லிதழ்கள் முழுவெள்ளை; பலர்மு கத்தில்
ஏன்இல்லை சிரிப்பென்போல்? குடும்பத் தொல்லை;
என்னைப்போல் நீர்சிரித்தால் கவலை இல்லை;
தேன்முல்லை என்பீர்நீர் பெண்கள் பல்லை;
தேய்க்காமல் நாலைந்து நாட்கள் விட்டால்
நான்அள்ளித் தரும்மணமா பல்கொ டுக்கும்?
நாறுதா? எதற்குப்பொய் பேசு கின்றீர்?

கிள்ளுகின்றீர் குறும்புசெயும் குழந்தை தன்னை;
கிள்ளுங்கள்; என்னைஎதற்குக் கிள்ளு கின்றீர்?
துள்ளுகின்ற பசுங்கன்றைக் கட்டிப் போட்டுத்
துடுக்கடக்கத் தான்வேண்டும்; என்னைப்ப றித்தே
அள்ளுகின்றீர்; எதற்காகக் கட்டு கின்றீர்?
அடிமடியில் நான்கிடந்து குதித்த துண்டே?
தள்ளுகின்றீர் குப்பையில்நான் காய்ந்து போனால்;
தள்ளாத வயதில்இதற் கனுப விப்பீர்;

கடல்நெய்தல் மணல்பாலை மலைகு றிஞ்சி
கவின்வயல்கள் மருதமெனச் சொன்ன முன்னோர்
அடர்த்திமிகும் காடுதனை முல்லை என்றார்;
ஆயிழையார் கற்புக்கோர் எடுத்துக் காட்டாய்ச்
சுடர்முல்லைப் பூஎன்னைச் சூடச் சொன்னார்;
சூட்டிவந்தார் மன்னர்களும் முல்லை மாலை;
குடலுக்கு நீர்அனுப்பும் வெள்ளைச் சோற்றைக்
கொஞ்சம்உற்றுப் பாருங்கள்; எனைநி னைப்பீர்

சாத்தனெனும் வேல்வேந்தன் செத்தான்; அந்தி
சாய்கையிலே வழக்கம்போல் நானும் பூத்தேன்;
பூத்தஎனை ஒருபுலவன் பார்த்து "முல்லைப்
பூவே; நீ ஏன்பூத்தாய்?" என்றே கேட்டான்;
நீர்த்திவலை விழிப்புலவன் அன்றென் மீது
நிலைத்தபனிக் கண்ணீரைக் காண வில்லை;
கீர்த்திமிகும் மணம்தருவேன்; சிரிப்பேன்; வண்டு
கிட்டவந்து கொஞ்சுகையில் தேன்கொ டுப்பேன்;

பூத்தால்தான் நீர்கட்டிக் கொடுப்பீர் பெண்ணை;
பூக்காமல் அரும்பாய்நான் இருக்கும் போதே
சேர்த்தென்னை ஏன்கட்டிக் கொடுக்கின் றீர்கள்?
சிரிக்கிறதே ஒளிவிண்மீன் கார்மே கத்தில்;
பார்த்திருப்பீர்; அதைப்போல்நான் கறுப்புக் கூந்தல்
பாங்குபெற மிளிர்கின்றேன்; கசக்கி மோந்து
பார்த்திடுதல் சரியல்ல; என்பேர் முல்லை;
பயன்படுத்திக் கொள்ளுங்கள்; இல்லை தொல்லை;



பூக்கள் பயிரிடுவதில் மதுரை மாவட்டத்துக்கு எப்பொழுதும் புகழ்மிக்க பெயர் உண்டு. மல்லிகைப் பூவானாலும், கனகாம்பரப் பூவானாலும், செவ்வந்திப் பூவானாலும் தோட்டங்களில் கண்ணுக்கு எட்டிய வரை பூவாகவே பயிரிடுவார்கள்.

இப்பொழுது நமது நாட்டில் மிக வேகமாகப் பரவிவரும் புதிய எண்ணெய் வித்தான சூரியகாந்தி விதைகளுக்காகச் சூரியகாந்தியை ஏராளமாக மதுரை மாவட்டத்தின் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள் பயிரிட்டிருக்கின்றன.

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ரங்கபாளையம் கிராமத்தில் சூரியகாந்தி ஏராளமாகப் பயிரிடப்பட்டிருக்கிறது.

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த ஆண்டில் 321 ஏக்கர் சூரியகாந்தி பயிரிடப்பட்டது.

சூரியகாந்திச் செடி எல்லா நிலங்களுக்கும் ஏற்றது. நோய்கள் வருவதில்லை! பூச்சிகள் அணுகுவதில்லை. சாகுபடிச் செலவும் குறைவு.

ஒரு ஏக்கர் நிலத்தில் தனிப்பயிராகப் பயிரிட 4 கிலோ விதை போதுமானது; மானுவாரி நிலத்திற்கும் விதை அளவு இதே போன்று இருந்தால் போதுமானது.

ஆடி, புரட்டாசி, மாசி மாதங்களில் சூரியகாந்தியை விதைக்கலாம்.

சூரியகாந்தி பூத்து இலைகள் காய்ந்துப் பூவின் பின்புறம் வெள்ளை நிறம் அடைந்ததும் சூரியகாந்தியை அறுவடை செய்யலாம்.

சூரிய காந்திப் பயிரின் வயது 90 நாட்கள்தான். சூரிய காந்திப் பூ மூலம் ஏக்கருக்கு 800 முதல் 1,000 கிலோ வரை எண்ணெய் வித்துக் கிடைக்கிறது.

ஓர் ஏக்கருக்கு எல்லாச் செலவும் போக நிகர இலாபம் ரூ. 1,200 கிடைக்கும்.





ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்திலிருந்து மருதாநதி அணைக் கட்டுத் திட்டத்துக்குப் புதிதாகச் சாலை போடப்படுகிறது.



ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் குடகனாற்றில் அனுமந்தராயன் கோட்டையில் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்ட பாலம்

வன்முறை !
ரயில் பெட்டிக்குத் தீ !
ரயிலைக் கவிழ்க்கச் சதி !
கல்லெறி !
கண்ணாடிகள் நொறுங்கின !
பயணிகள் பலருக்குப் படுகாயம் !

இப்படிப் பரபரப்பான செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கிறோம் ; நெஞ்சம் துடிக்கிறோம். அதே சமயத்தில் நெஞ்சம் இப்படியெல்லாம் எண்ணுகிறது;

"ரயிலைச் சேதப்படுத்த நினைப்பவனும் ஒரு பயணி தானே ? இதனால் யாருக்கு நட்டம் ? நம்மை நாமே தாக்கிக் கொள்வதற்குச் சமமல்லவா இந்த வன்முறைகளெல்லாம் ?"

இத்தகைய வன்முறையாளர்களின் வறண்ட நெஞ்சம் மாறிட வழியே இல்லையா ?

வேர்வைத் துளிகள் நிலத்தில் சிந்திட ஒவ்வொரு மணித் துளியையும் வீணாக்காமல் அங்கே தொழிலாளர்கள் உழைக்கும் உழைப்பைப் பார்த்தால், "இவ்வளவு பாடுபட்டுத் தயாரிக்கும் ரயில் பெட்டியையா நாம் ஒரு நொடிக்குள் நொறுக்கிவிடுகிறோம் ? இவ்வளவு பண மதிப்புள்ள ரயிலையா கவிழ்த்து, விலை மதிப்பற்ற உயிர்களைக் கொல்ல வழி கோலுகிறோம் ?" என்ற நினைப்பு நிச்சயம் வரும். அந்த நினைப்பே அவர்களை நன்முறையாளர்களாக ஆக்கிவிடும் !

உலக நாடுகளில் பெருமதிப்பையும், நல்ல வரவேற்பையும் பெற்றுத் திகழ்ந்து வருகின்ற ஐ.சி.எஃப். என்னும் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory) உழைப்பின் வெற்றியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

அன்றாட வாழ்க்கையில் போக்குவரத்துக்கு மிக இன்றியமையாத சாதனங்களாகத் திகழ்பவை பல. அவற்றுள் ரயிலும் ஒன்று என்று நமக்குத் தெரியும். மாட்டு வண்டி, சைக்கிள், கார், பேருந்து போன்ற சாதனங்கள் போக்குவரத்துக்கு உதவுவன போன்று, விமானமும், கப்பலும் உதவுகின்றன. ஆனால், இவற்றில் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் போய்வர முடியுமா ? ஆகவே தான் ஏழை, எளியவர்களின் மிகச்சிறந்த போக்குவரத்துச் சாதனமாக ரயில் இன்று உலகமெங்கணும் ஓடிக் கொண்டிருக்கிறது.






ஓடும் ரயிலிலே ஒரு நாளென்ன, பல நாட்கள் கூடச் சென்றுவர இன்று பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பயணிகள் சுகமாகப் பயணம் செய்வதற்கான எல்லா வசதிகளும் கொண்ட நவீன ரயில் பெட்டிகள் இன்று தயாரிக்கப்படுகின்றன.

சென்னைப் பெரம்பூரிலுள்ள ஐ.சி.எஃப். முதலில், அகலப் பாதைக்கான (பிராட் கேஜ்) கூண்டுப் பகுதிகளை மட்டுமே தயாரிப்பதென்ற முடிவுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1955-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாளில் துவக்கப் பெற்ற இத்தொழிற்சாலை, இன்று ஆண்டிற்கு 650 முழுதும் முடிக்கப்பட்ட பெட்டிகளைத் தயாரி செய்கிறது.

பெட்டிகளில்தான் எத்தனை வகை ! எத்தனை வண்ணம் இதுவரை நாற்பதுக்கு மேற்பட்ட ரகங்கள் தயாராகியுள்ளன. சென்னையில் உருவாகும் இந்தப் பெட்டிகள் இன்று இந்தியா முழுவதும், ஏன் உலக நாடுகளிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றால் நமக்கெல்லாம் பெருமையாக இல்லையா ?

ரயில் வண்டிகளில் பயணிப் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டுத் தொடங்கப்பெற்ற இத்தொழிற்சாலை, உலகிலேயே ரயில் பெட்டிகள் தயாரிக்கும் மிகப்பெரிய தொழிற்சாலையாக விளங்குகிறது.

1973 மார்ச் இறுதி வரை ரயில் பெட்டியின் உட்பகுதி முற்றிலும் கட்டி முடிக்கப்படாத 8,703 ரயில் பெட்டிகளையும், கட்டி முடிக்கப்பட்ட 6,688 ரயில் பெட்டிகளையும், ஐ.சி.எஃப். தயாரித்துள்ளது. 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் ஆண்டிற்கு 750 முற்றிலும் கட்டி முடிக்கப்பட்ட ரயில்பெட்டிகளை இது தயாரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கே, அகலப்பாதை, மீட்டர் கேஜ் போன்ற ரயில்பெட்டிகள்

உட்படப் பல்வேறு வகையான முதல் வகுப்பு, மூன்றும் வகுப் புப் பெட்டிகளும், குளிர் சாத னப் பெட்டிகளும் தயாரிக்கப் படுகின்றன. நாட்டின் புற நகர் ரயில் போக்குவரத்துக் காக விடப்படும் மின்சார ரயில் வண்டிகளுக்குத் தேவையான மின்மோட்டார் ரயில் பெட்டி களையும் இது தயாரிக்கிறது. எஃகுப் பாகத்தைத் தவிர இங் குத் தயாரிக்கப்படும் அகலப் பாதைக்கான ரயில் பெட்டிகளில் உபயோகப்படுத்தப்படும் கருவி களில், உள்ளூரிலேயே செய்யப் பட்ட கருவிகள் 97·5 சத விகிதம். மீட்டர் கேஜ் இருப் புப் பாதைக்காகத் தயாரிக்கப் படும் ரயில் பெட்டியில் உள்ளூ ரிலேயே செய்யப்பட்ட கரு விகள் 92·8 சதவிகிதம் ஆகும்.

12,500 தொழிலாளர்களைக் கொண்டுள்ள இந்த மிகப் பெரிய தொழிற்சாலை, உறுதி யான, பாதுகாப்பான, நவீன மான, சுகமான, விலைமலிவான ரயில்பெட்டிகளைக் கண்ணைக் கவ ரும் வகையில் தயாரிப்பதால், இந்தப் பெட்டிகளுக்கு உலக நாடுகளில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

காரணம், தரமும், குறைந்த விலையுமேயாகும்!

இதற்கு முன் பர்மா, தாய் லாந்து ஆகிய நாடுகளுக்கும், தாய்வானுக்கும் " போகிகள் " எனப்படும் ரயில் பெட்டிகளின் சக்கர அமைப்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1968- ஐக்கிய பர்மா நிறுவனத்திற்கு 66 போகிகள் செய்து கொடுக் கப்பட்டன. இதுவே ஐ.சி. எஃப்.இன் முதல் ஏற்றுமதிக்கான வாய்ப்பாகும். பிறகு 100 போகிகள் தாய்வான் ரயில் நிறுவனத்திற்கும், 45 போகி கள் தாய்லாந்து நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இரண்டடுக்கு மாடிப் பேருந் துகளைப் போல, இரண்டடுக்கு ரயில் பெட்டியும் இங்குத் தயாரிக்கப்பட இருக்கிறது. அகலப் பாதையில் செல்லக் கூடிய மூன்று, மூன்றும் வகுப்பு இரண்டடுக்கு ரயில் பெட்டிகள் இங்கு உருவாகும். குறைந்த தூரம் ஓடுபவையும், அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்பவையுமான ' டெக்கான் குயின் ', ' தாஜ் எக்ஸ்பிரஸ் ' போன்ற ரயில் வண்டியுடன்



சரக்கு ரயில் பெட்டி அதிகப் பளுவை ஏற்றிச் செல்லும் சக்தி வாய்ந்தது.

இந்தப் பெட்டியை அரசுத் துறையிலும், தனியார் துறை யிலுமுள்ள பல தொழிற் சாலைகள் இப்போது உற்பத்தி செய்யத் துவங்கியிருக்கின்றன. முதலாவதாகத் தயாரிக்கப் பட்ட சில ரயில்பெட்டிகள் இப்போது சரக்கேற்றிச் செல்ல ஆரம்பித்திருக்கின்றன.

பெரிய சரக்கு ரயில் பெட்டிகளைச் சரியாகப் பயன் படுத்திக் கொள்ள இயலாத சிறிய வியாபாரிகளின் தேவை களை நிறைவேற்றுவதற்காக சி.ஆர்.டி. ரயில் பெட்டி உருவாக்கப்பட்டிருக்கிறது. இந் தப் புதிய ரயில் சரக்குப் பெட்டி யில் பழைய நான்கு சக்கரச் சரக்கு ரயில் பெட்டிகளில்



அண்மையில் ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட 113 பெட் டிகள் தாய்வான் நாட்டுக்காக ஆகும். சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த ரயில் பெட்டி கள் கடந்த ஆண்டு அக்டோபர்த் திங்களில் செய்து முடிக்கப்பட் டன. இந்தப் பெட்டிகள் முற் றிலும் புதிய அமைப்புகள் கொண்டவையாகும்.

தென்கிழக்கு ஆசியாவில் ஏற்றுமதிச் சந்தையை வெகு வாகக் கவர்ந்துள்ள நாடு ஜப் பான் என்று அனைவரும் அறி வர். தாய்வான் நாட்டிற்கும் இதுவரை ஜப்பானே ரயில் பெட் டிகள் செய்து கொடுத்து வந் தது. ஆனால், இப்பொழுது ஜப்பானுக்கும், இந்தியாவுக்கும் கடும் போட்டி! இதில் வெற்றி பெற்றது இந்தியாவே! இதற்குக்



இப்பெட்டிகள் இணைக்கப்படும். இப்பெட்டிகள் செயற்படும் விதம், இவைகள்பற்றிப் பயணி களின் கருத்து ஆகியவற்றை ஆராய்ந்த பிறகு இரண்ட டுக்குப் பெட்டிகளை மேலும் அதிகரிக்கவும் திட்டமிடப்பட் டிருக்கிறது.

ஐ.சி.எஃப்-இல் கம்ப்யூட் டர் ஒன்றும் அமைக்கப்பட விருக்கிறது. இதே போலச் சித்தரஞ்சன் ரயில் என்சின் தொழிற்சாலையிலும், வாரணசி டீசல் என்சின் தொழிற்சாலை யிலும் அமைக்கப்படும். சேமிப்பு நிலையம், கட்டுப் பாட்டுப் பட்டியல், ஊதியப் பட்டியல், செலவுக் கணக்கு விவரம் முதலியவற்றைத் தயா ரிப்பதோடு, உற்பத்தி பற்றிய செயல்திட்டத்தை வரைவதற் கும் இந்தக் கம்ப்யூட்டர் பயன் படும்.

இரயில்வேத் துறை இன் னொரு புதிய சரக்கு ரயில் பெட்டியையும் அறிமுகப்படுத்து கிறது. சி.ஆர்.டி. என்று அழைக்கப்படும் இந்தப் புதிய

இல்லாத நன்மைகள் பல உள்ளன.

புதிய வண்டி 27·54 டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றிச் செல்லக்கூடியது. பழைய வண் டியில் 21·73 டன் எடை மட்டுமே ஏற்ற இயலும். ரயில் வண்டி ஓடும்போது தண்டவாளத்திலிருந்து தடம் புரளாமல் இருப்பதற்கும், ரயில் பெட்டியிலுள்ள சரக்கு களைச் சமூக விரோதிகள் எளிதில் களவாடாமல் இருப்ப தற்கும் இந்தப் பெட்டியில் விசேட ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. மொத்தம் 14 ஆயிரம், சி.ஆர்.டி. சரக்கு ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்ய இரயில்வேத் துறை தீர்மானித்திருக்கிறது.

இவைமட்டுமா? பயணிகள் சுகமான பயணத்துக்காக ரயில் பெட்டிகளில் எத்தனையோ வசதி கள் செய்யப்பட்டு வருகின்றன. இப்போது புதிதாக ஒரு விரைவு வண்டி வந்துள்ளது. அதன் பெயர் ஜெயந்தி. இதுவும் இங்கே தயாரிக்கப்



பெற்ற பெட்டிதான். இந்தப் பெட்டியில் இன்று எத்தனை எத்தனை வசதிகள் செய்தி ருக்கிறார்கள் தெரியுமா?

இந்த ரயில் வண்டியிலுள்ள பயணிகள் ரயில் ஓடிக் கொண்டிருக்கும் போதே ஒரு பெட்டியிலிருந்து மற்றொரு பெட்டிக்குச் செல்லலாம். இதில் ஒரு நூல்நிலையமும், புத்தகக் கடையும் இருக்கும். புத்தகங்கள் இங்கு விற்கப்படு வதுடன், இதழ்கள், புத்த கங்கள் ஆகியவற்றை இரவல் பெற்றும் செல்லலாம்.

புது தில்லியிலிருந்து மங்க ளூர் வரையிலான 3,020 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கும் இந்த ரயில்வண்டி இந்தியாவிலேயே அதிக தூரம், செல்லக்கூடிய ரயில் வண்டியாகத் திகழும். ஒரு ரயில் கண்காணிப் பாளரின்கீழ் இந்த ரயில் வண்டி ஒழுங்காக ஓடும்.



பயணிகள் உட்கார்ந்து கொள்ள வும் முடியும்.

இந்த ரயில் வண்டியில் ஆறு பெட்டிகளில், சோதித் துப் பார்ப்பதற்காகவே பொது அறிவிப்புச் சாதனங் கள் பொருத்தப்பட்டிருக்கும். டேப் ரெக்கார்டர் மூலம் மெல்லிசை, பயணிகளின் ஆர் வத்தை கவரக் கூடிய விஷயங் கள், செய்தி ஆகியவை இந்த அறிவிப்புச் சாதனங்கள் மூலம் ஒலிபரப்பப்படும். குளிர் சாதனவசதி அல்லாத ரயில்

யார்தான் பயணம் செய்ய முன்வரமாட்டார்கள் ?

பொதுவாக, ரயில் வண்டி களில் பயணிகள் போக்குவரத்து கடந்த ஆண்டு நவம்பர்த் திங்க ளில் அதிகரித்துள்ளது. இது முந் தைய ஆண்டின் இதே திங்க ளோடு ஒப்பிடுகையில் 7·8 சதவிகிதம் அதிகமாகும். கடந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நவம்பர்த் திங்கள் வரை யிலான எட்டுத் திங்களில் ரயில் வண்டிகளில் பயணம் செய்தவர்களின் எண்ணிக் கையை 1971-ஆம் ஆண்டின் மேற்கூறிய கால வரையறை யோடு ஒப்பிடுகையில் 7·70 சத விகிதம் அதிகமாக உள்ளது.

இவ்வாறு பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்க ரயில் பெட்டி களின் தேவையும் அதிகரிக்கின் றன. ஐ.சி.எஃப். தொடர்ந்து



இந்த ரயில் வண்டியின் பெட்டிகள் சிவப்பு இள மஞ்சள் நிறத்தில் கண்ணுக் கினியதாகக் காட்சி அளிக்கும். இந்த ரயிலுடன் உணவு வழங்கப்படும் ரயில் பெட்டி ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும். கோடைக் காலங்களில் குளிர்ந்த நீர் கிடைப்பதற்கான வசதி யும் செய்யப்பட்டிருக்கும்.

இந்த ரயில் வண்டியில் நெடுந்தொலைவு பயணம் செய்வோருக்கு ஓர் இரவுக்கு 1·25 ரூபாய் செலவில் படுக்கை வசதி அளிக்கப்படும். அல்லது அவர்கள் பயணம் செய்யும் மொத்தத் தூரத்திற்கு 2 ரூபாய் செலவில் படுக்கை வசதி கிடைக்கும். படுக்கை வசதி வேண்டுவோர்க்கு ஒரு கம்பளம், இரண்டு போர்வை கள், ரப்பர் தலையணை ஆகி யவை வழங்கப்படும். இந்த ரயில் வண்டியில் இரவில் 487 பேர் தூங்கவும், பகலில் 320

வண்டியில் பொது அறிவிப்புச் சாதனம் பொருத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்.

இந்த ரயில் வண்டியில் கண்காணிப்பாளர் மட்டுமல் லாது பயணச் சீட்டுப் பரி சோதகர்கள், துப்புரவாளர்கள், இயந்திரம் மற்றும் மின்சா ரத்தைப் பழுது பார்ப்பவர்கள் ஆகியோரும் பயணம் செய் வார்கள்.

இத்தனை வசதியும் வாய்ப்பு முள்ள ரயில் வண்டிகளில்



ஏற்றுமதிக்கான ஏற்றமிகு பணி யில் இறங்கியிருக்கிறது.

இப்போது ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள 'ஜாம்பியா' நாட்டிற்கும் நான்கு ஆய்வு ரயில் பெட்டிகள் இங்குத் தயாராகின்றன.

மற்றும் இந்திய இரயில்வேத் துறைக்குப் போலந்து, சூடான் ஈரான், கிழக்கு ஆப்பிரிக்கா, யூகோஸ்லாவியா நாடுகட்கும் ரயில் பெட்டிகள் தயாரித்து அளிப்பதற்கான ' ஆர்டர்கள் ' வந்துள்ளதையும் இங்குக் குறிப் பிட வேண்டும்.

பயணிகளின் வசதிக்காக மூன்றும் வகுப்பு ரயில் பெட்டி களில் இன்னும் பல வசதிகள் செய்யப்படவிருக்கின்றன. ட்யூப் விளக்குகள், அதிகத் திறமையுடன் இயங்கும் மின் விசிறிகள், தூசி உட்புகாத சன்னல் அமைப்புகள் குளிர்

சாதன வசதி, பெட்டிக்குள்ளேயே குளிர்நீர் வசதி, நன்கு வசதியாக உட்காரப்



படுக்க வசதிகள், ஆகியவை செய்வதற்கான ஏற்பாடுகளை இத்தொழிற்சாலை பரிசீலித்து வருகிறது.

ரயில் வண்டிகள் மேலும் விரைந்து செல்வதற்கான புது வகை 'போகிகள்' பலவும் இங்குத் தயாரிக்கப்படவிருக்கின்றன. ஏற்கெனவே தயாராகியுள்ள இத்தகைய 'போகி' ஒன்று இப்பொழுது சோதனை ஓட்டத்தில் உள்ளது. மணிக்கு 160 கிலோ மீட்டருக்கு அதிகமான வேகத்தில் செல்லக் கூடிய ரயில் பெட்டிகளையும் இந்தத் தொழிற்சாலை தயாரித்திருக்கிறது.

இப்படி உழைப்பிலே உருவாகின்ற ரயில் வண்டிகள், 'மக்கள் சொத்து' என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டாமா? ரயில் பெட்டிகளிலுள்ள மின் விளக்குகள், மின் விசிறி போன்ற பொருள்களைக் களவாடுதலும், இருக்கைகளைக் கிழித்தலும், சேதப்படுத்தலும் ஒவ்வாத செயல்கள் அல்லவா?

'இந்தியச் சாரண-சாரணியர் சங்கம்' இந்த இழிசெயல்களை எடுத்துக் காட்டி, ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டுகிறது. இவர்கள் ரயில் நிலையங்களில் பயணிகளை ஒழுங்குபடுத்தி டிக்கெட்டுகள் பெற்றுக் கொள்ளச் செய்கின்றனர். ரயில் நிலைய நடை



பாதையிலும், அங்கே உள்ள சிற்றுண்டிச் சாலைகளிலும் துப்புரவின் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றனர். காரணமின்றி அபாயச் சங்கிலியை இழுப்பது, டிக்கெட்டின்றிப் பயணம் செய்வதைத் தவிர்ப்பது, ரயில் பெட்டிகளைச் சுத்தமாக வைத்

திருப்பது போன்ற துண்டு வெளியீடுகளையும் இவர்கள் அவ்வப் போது பயணிகளுக்கு வழங்கி அவர்கள் திருந்திட வழி கோலுகின்றனர்.

எனவே, உலக அரங்கில் ஓர் உன்னத இடத்தை வகித்து, தரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழுகின்ற ஐ.சி.எஃப். இந்திய நாட்டின் பெருமையை மேலும் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

நமது வீட்டுச் சொத்தைப் போல, நாட்டுச் சொத்தாம் ரயில் வண்டிகளையும் இரு கண்களைப் போலக் காப்போம். ஒழுங்காக, ஒரே சீராகத் தொடர்ந்து போகும் தொடர் வண்டியிடம் நாமும் ஒழுங்கைக் கற்றுக் கொள்வோம்.

—பி.வி.ஜி.


## சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியையும், விநியோகத்தையும் பாதித்துள்ளது. இதனால் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும். முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறார்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெறாத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனால் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன். கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்.

உங்கள் நலனை முன்னிட்டு. எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம். தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்டு சர்டிபிகேட்டும் விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு. விலை இவை குறித்துள்ள காஷ் மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.

உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிடுவோர்:

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,**
175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.

சங்கர் சிமெண்ட்







கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் மதுரை மாவட்டம் திருமங்கலம்வட்டத்தில் திருமங்கலத்திலிருந்து தெற்கே 14 கிலோ மீட்டர் தூரத்தில் திருமங்கலம்-விருதுநகர்ச் சாலையில் அமைந்துள்ளது. இவ்வொன்றியத்தின் பரப்பளவு 98·55சதுர மைல்கள். மக்கள் தொகை 58,700. ஆண்கள் 28,345, பெண்கள் 29,725. இவ்வொன்றியம் கள்ளிக்குடி வட்டாரம் முழுவதும், கல்லுப்பட்டி, திருமங்கலம் வட்டாரங்களில் சிறிய பகுதிகளைக் கொண்டது.

இவ்வொன்றியத்தில் 36 ஊராட்சிகள் உள்ளன. 42 ரெவின்யூ கிராமங்களும், 34 உட்கடைக் கிராமங்களும் இவ்வொன்றியத்தில் உள்ளன. பெரும்பாலும் கரிசல் மண் பிரதேசமாகும். மானாவாரி விவசாயமே அதிகம். மக்கள் தொகையில் படித்த ஆண்கள் 15,058, பெண்கள் 6,444 ஆவார்கள்.

### கல்வி வளர்ச்சி

இவ்வொன்றியத்தில் 13 ஒன்றிய உயர் துவக்கப் பள்ளிகளும், 42 ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. தனியார் துறையில் ஓர் உயர் தொடக்கப்பள்ளியும், 8 தொடக்கப்பள்ளிகளும் உள்ளன. ஒன்றியத்தில் ஓர் ஆசிரியரைக் கொண்ட பள்ளிகள் 5 உள்ளன. ஒன்றியத்தில் மொத்தம் 217 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இவர்களில் 95 ஆசிரியர்கள் உயர் துவக்கப்பள்ளியிலும், 122 ஆசிரியர்கள் துவக்கப்பள்ளியிலும் பணிபுரிகின்றனர். 6,486 பிள்ளைகள் பள்ளியில் பயில்கின்றனர். 96 சதவிகிதப் பிள்ளைகள் இவ்வட்டாரத்தில் கல்வி பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளிக்கு 46 கட்டடங்கள் உள்ளன. மீதப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 5 ஆசிரிய மையங்கள் செயல்படுகின்றன. 10 பள்ளிகளில் பகுதிநேர ஆசிரியர்களும், 7 கடைநிலை ஊழியர்களும் பணிபுரிகின்றனர். தேவையான தளவாடங்கள் ரூ.6,000க்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ்வட்டாரத்தில் 65 மதிய உணவு மையங்கள் உள்ளன. மொத்தம் 3,769 மாணவர்கள் மதிய உணவு உட்கொள்கின்றனர். மதிய உணவு உட்கொள்ளும் மாணவர்கட்கு நமது அரசு இலவசமாக பாடப் புத்தகங்கள், சிலேட்டுகள் வழங்கியுள்ளது.

### சீரணித் திட்டம்

இத்திட்டத்தில் மைட்டாம்பட்டி, மருதங்குடி, குராயூர், கிராமங்களில் ஊராட்சி மன்றக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் வடக்கன் பட்டி, கள்ளிக்குடி கிராம ஊரணிகள் தூர் எடுக்கப்பட்டுக் கரைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மருதங்குடி என்னும் கிராமத்தில் சீரணி அறிவகம் செயல்படுகிறது. 30 உறுப்பினர்கள் உள்ளனர். குளத்துள்வாய்ப்பட்டி கிராமத்துக்குச் சாலை அமைக்கும் வேலை 1972—73-ல் செயல்பட்டுள்ளது. இத்திட்டத்தில் எல்லாப் பள்ளிகளிலும் சீரணிப் படையினர் வெள்ளை அடித்துத் திருக்குறள்களை எழுதியுள்ளனர்.



### சிறு சேமிப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வளரும் மாதாந்திரச் சேமிப்புத் திட்டத்தில் 259 நபர்கள்சேர்க்கப்பட்டுள்ளனர். சென்ற 5 ஆண்டுக்காலமாக ரூ. 7,00,000 வசூல் மேற்கொள்ளப்பட்டது. 30 மகளிர் மன்ற கன்வீனர்கள், இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர். ஒன்றிய ஊழியர்கள்அனைவரும் ஓராண்டுக் காலச் சேமிப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

### வேளாண்மைப் பணிகள்

கள்ளிக்குடி ஒன்றியத்தில் பொது மராமத்துத் துறைக் கண்மாய்கள் 67. கண்மாய்கள் சிறிய நீர்ப்பாசன வசதி படைத்தனவாக உள்ளன.

இந்தக் கண்மாய்கள் மூலம் மொத்தம் 6,000 ஏக்கர் முதல் 7,000 ஏக்கர் வரை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதரப் பகுதிகளில், புளி, பருத்தி, தோட்டங்களில் மிளகாய், கம்பு முதலிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த ஒன்றியத்தில் பொறுக்கு விதை நெல் 15 டன், இதர சிறு தானியங்கள் 20 டன் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் அமோக விளைச்சல் தரும், ஐ.ஆர். 8, ஐ.ஆர் 22, ஐ.ஆர். 20 கருணை, அன்னபூர்ணா, கே. 29, போன்ற நெல் வகைகளும் ஒட்டுக் கம்பு எச். பி. 1, எச்.பி. 3, எச். பி. 4, சி. எச். எஸ். 3, சொரணை சோளம் போன்ற சிறு தானிய விதைகளும் விநியோகம் செய்து 4,000 ஏக்கர் பரப்புக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

பசுந்தாள் உர விநியோகத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மான்ய விலையில் 4 டன் விதைகள் விநியோகிக்கப்பட்டு, உரமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ரசாயன உர விநியோகத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அவ்வப்பொழுது தேவையான உரங்கள் 8 கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விவசாய சங்கங்கள் மூலமாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

காய் கறி விதை விநியோகத் திட்டத்தின்கீழ் 50 சதவீதம் மான்ய விலையில் 75 கிலோ விதைகள்ஒவ்வொரு ஆண்டும்விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எச். ஏ. 1 இதுவரை பைசாகி பாசிப் பயிறு, டி.டி.என் துவரை போன்ற உயர்ரக விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒன்றியப் பகுதிகளில் நவீன கருவிகள் விநியோகத்தின் கீழ் இதுவரை சுமார் 150 நவீன இரும்புக் கலப்பைகளும், 40 தழை மிதிக்கும் கருவிகள், 200 திருந்திய கமலைச் சக்கரங்கள், 40 மருந்து தூவும் கருவிகள், 150 மருந்து தெளிப்பான்கள் 10 விசைத் தெளிப்பான்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தலைமை இடத்தில் 10 விசை தெளிப்பான்களும் கையினுல் இயக்கும் 22 தெளிப்பான்களும், 5 தூவான்களும் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு நிமித்தம் வழங்கப்படுகின்றன. மேலும் ஓர் இயந்திரக் கலப்பையும், ஆயில் எஞ்சினும் விவசாய வேலைகளுக்கு குறைந்த வாடகையில் கொடுக்கப்பட்டு வருகின்றன.



தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 1,500 கன்றுகள் மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

செயல் விளக்கப் பாத்திகள் ஆண்டுதோறும் பலதரப்பட்ட பல பயிர் செயல் விளக்கமும் செய்து காட்டப்பட அதற்குண்டான விதை உரம் இலவசமாகவே வழங்கப்பட்டு வருகிறது.

இவ் வட்டாரத்தில் உள்ள களர் நிலச் சீர்திருத்தத்தின் கீழ் 100 ஏக்கரில் (குறித்த பகுதியில்) இலவசமாக சிப்சம் வழங்கிச் செயல் விளக்கம்செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வட்டாரத்தின் சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்குக் குறுகிய கால, நீண்ட காலக் கடன் வசதிகள் ஏராளமாகச் செய்து தரப்பட்டுள்ளன.

### கால்நடை

கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியில் மொத்தம் 51,375 கால்நடைகள் இருக்கின்றன. இவற்றில் பால் உற்பத்திக்காக 3,972 கால்நடைகளும்வேலைகளுக்குப்பயன்படுத்துவதற்காக 6,805 கால் நடைகளும், 11,970 செம்மறியாடுகளும் ஒன்றியம் முழுவதிலும் பரவலாக உள்ளன. 4,685 பசுக்கள், எருமைகளுக்குச் செயற்கை முறை இன விருத்தி செய்து முறையே 521 உயர் இனக்கன்றுகள் பிறந்துள்ளன. இவ்வொன்றியத்தின் தலைமை இடத்தில் ஒரு கால்நடை மருத்துவ மனையும், உள் கிராமங்களில் 5 கால்நடை இன விருத்தி கிளை நிலையங்களும் அமைந்துள்ளன. இக் கிளை நிலையங்கள் கால்நடை மருத்துவ மனையின் மூலமாக 2,639 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கி 6,391 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்குப் பருவ காலங்களில் வரும் தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் முகத்தான் 3,831 கால்நடைகளுக்குச் சப்பை நோய் தடுப்பூசியும், 4,159 கால்நடைகளுக்குத்தொண்டையடைப்பான் நோய்த் தடுப்பூசியும் 10,166 கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பூசியும் 11,762 கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய்த் தடுப்பூசியும் போட்டுக் கால்நடைகளுக்கு அவ்வப்போது நோய்கள் பிடிக்காத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்றியத்தில் உயர் இனக் கோழிகள் உற்பத்தி செய்வதற்காக 406 உயர் இனக்கோழி முட்டைகளும் 702 உயர் இனக்கோழிகளும் வாங்கி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இது தவிர 1970–71 ஆம் ஆண்டில் ஒன்றியத்தின் மூலம் 3 கோழி பண்ணைகளுக்கு மொத்தம் 600 ரூபாய் செலவிடப்பட்டது. தனி நபர்கள் மூன்று பேர் அமைத்த ஆழ்கூழ் கோழிப் பண்ணைகளை ஊக்குவிக்கும் முகத்தான் அவர்களுக்குத் தலா ரூபாய் 100 வீதம் ரூ. 800 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தீவனப் புல் சாகுபடி திட்டத்தின் கீழ் ரூ. 278 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. கிளை நிலையங்களுக்கு வேண்டிய பொருள்கள் வாங்கி விநியோகித்த வகையில் ரூ.332 செலவிடப்பட்டுள்ளது. 1971–72 ஆம் ஆண்டில் 82 நபர்களுக்கு வீட்டுப்புறக் கோழிப் பண்ணை தருக்கால உயர் இனச் சேவல் கோழிகளும், களும் வாங்கி ஒன்றியம் முழுவதிலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ரூ. 125 தீவனப்புல் சாகுபடித் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிதி ஆண்டிலும் ரூ. 400 பெறுமானமுள்ள விரலளவு மீன் குஞ்சுகள் வாங்கிக் கிராமப்புறங்களில் உள்ள மீன் குளங்களில் வளர்த்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் அரசினரால் இலாகா சம்பந்தப்பட்ட செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2,200-ல் ரூ. 2000, இருபது நபர்களைக் கொண்டு தனியார் வங்கியின் மூலம் கடன் பெற்று விரிய இனக்கோழிகளைக் கொண்டு அமைக்கவிருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊக்குவிக்கப்பட்ட கோழிப்பண்ணை அமைப்பாளர்களுக்குத் தலா ரூ. 100 வீதம் ரூ. 2,000 மானியமாக வழங்கப்படுகிறது.

ஒன்றியப் பகுதியில் கால்நடைகள் காட்சிகளும், நீர்க் கால் நடைப் பராமரிப்பு இயக்கங்களும், பால் கறக்கும் போட்டிகளும் நடத்தி மக்களை உயர் இனக் கால்நடைகளைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக அவ்வப்போது இலாகா சம்பந்தப்பட்ட திரைப்படக் காட்சிகளும், கிராமங்கள் தோறும் ஏற்பாடுசெய்து மக்களை ஊக்குவித்துக் கால் நடை இலாகாவின் வளர்ச்சி, விவசாயப் பெருங்குடி மக்களின் வளர்ச்சி என்ற அடிப்படைப் பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

### செய்யப்பட்ட பணிகள்

மேல்நிலைத் தொட்டிகள் 4 கட்டப்பட்டுள்ளன. இதில் தரை நீர்மட்டத் தொட்டி 1, குடி நீர்க் கிணறுகள் 24 ஆகும்.

புதிதாகக் கட்டப்பட்ட பள்ளி கட்டடங்கள் 12 ஆகும்.

புதிதாகப் போடப்பட்ட சாலையின் தொலைவு 15 கிலோமீட்டர் ஆகும்.

புதிதாக 3 குடியிருப்புகள் ஆசிரியர்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.

40 கிலோ மீட்டர் முக்கியச் சாலைகள் இவ் வொன்றியத்தினுல் பராமரிக்கப்படுகிறது.

25 கண்மாய்கள் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகிறது.






ரஷ்ய நாட்டில் ஒரு மன்னர் இருந்தார். அவருக்குக் கதைகள் கேட்பது என்ருல் கொள்ளை ஆசை. ஒவ்வொரு நாளும் அவருக்குக் கதைகள் கேட்காமல் பொழுது போகாது.

நாள்தோறும் புதிய புதிய கதைகள் கேட்டு மகிழ்வதில் அவர் மிக்க ஆவலாக இருந்தார். புதிய கதைகளுக்கு எங்கே போவது?

அதற்காகத் தமது வேலையாட்களை நாட்டின் நாலா பக்கங்களுக்கும் அனுப்பினுர். புதிய கதைகள் சொல்வதற்கு ஆட்கள் யாராவது இருக்கிருர்களா என்று கண்டுபிடித்து, அவர்களை அழைத்து வரச் சொன்னுர்.

வேலையாட்களும் தேடித்தேடி அலைந்து கதை சொல்பவர்களை அரண்மனைக்கு அழைத்து வருவார்கள். அவர்கள் நல்ல சுவையான கதைகள் சொல்வார்கள். கதைப் பிரியரான அந்த மன்னர் அவற்றைக் கேட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைவார்.

ஒரு சமயம் ஒருவர் கதை சொல்வதற்கு மிக்க ஆவலாக வந்தார். ஒரு நாட்டு மன்னருக்கே கதை சொல்லப்போகிருேம் என்ற பெரும் மகிழ்ச்சியில் அந்த மனிதர் அரண்மனைக்கு வந்திருந்தார். மன்னர் கதை கேட்கத் தயாரானுர். வந்தவர் கதைசொல்ல ஆரம்பித்தார்.

கதையைக் கேட்டுக் கொண்டே வந்த மன்னருக்குக் கோபம் கோபமாக வந்தது. உடனே அவர் கதை சொல்பவரைப் பார்த்து, 'வேண்டாம் உம்முடைய பழைய கதை' இந்தக் கதையை நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன்'' என்று உரக்கக் கத்தினுர். அத்துடன் சும்மா இருந்தாலும் பரவாயில்லையே. உடனே தமது வீரர்களை அழைத்தார். வீரர்கள் ஓடோடி வந்தனர்.

''இவன் தலையை வெட்டி விடுங்கள்!'' என்று கட்டளையிட்டார். சொல்ல வந்தவர் திடுக்கிட்டார். வீரர்கள் கூட இதைக் கேட்டு வியந்தனர். ஆனுல், மன்னர் இட்ட கட்டளையாயிற்றே! உடனே கதை சொல்ல வந்தவரைக் கொல்வதற்காக இழுத்துச் சென்றனர். பாவம்! ஏற்கெனவே சொன்ன கதையைச் சொன்னதற்காக அவர் தலையைத் துண்டித்து விட்டனர்!

இந்தச் சம்பவத்திலிருந்து கதை சொல்ல வந்தவர்கள் கதி கலங்கினுர்கள். தம்முடைய தலையும் துண்டிக்கப்படுமோ என்று அஞ்சினுர்கள். மன்னர் முன்னே கதை சொல்ல ஒருவருக்கும் துணிவு இல்லை. சிலர் கதை சொல்லவே நா எழாமல் ஏதேதோ உளறினுர்கள்!

மன்னருக்குப் புதிய கதை எது, பழைய கதை எது என்று தெரியும். ஆனுல், அது மற்றவர்களுக்குத் தெரியுமா? முதலிலேயே இது பற்றி மன்னர் அறிவித்திருந்தால், கதை சொல்பவர்களுக்குப் புதிதாகக் கதை சொல்ல முடிந்திருக்கும்; ஆனுல், அவ்வாறு அறிவிக்காததால் அப்பாவிகளின் தலைகள் பல உருண்டன!

இப்படி இருந்தால் யார்தான் கதை சொல்ல முன் வருவார்கள்? ஆகவே, கதை சொல்பவர்கள் எங்குமே கிடைக்கவில்லை. வீரர்கள் தேடித் தேடி அலுத்துப்போய் வந்தனர். மன்னர் அவர்களைப் பார்த்து, ''கதை சொல்பவரை ஏன் அழைத்து வரவில்லை? மறுபடியும் போய்த் தேடிப் பார்த்து அழைத்து வாருங்கள். இல்லையென்ருல் உங்கள் தலைக்கும் ஆபத்து!'' என்று மிரட்டினுர்.

அந்தச் சமயம் ஒரு இளைஞன், ''கதை சொல்ல வந்திருக்கிறேன்!'' என்று துணிச்சலுடன் வீரர்கள் முன்னே வந்து நின்ருன். வீரர்களோ தம் தலை தப்பியது என்று மகிழ்ந்து அந்த இளைஞனை மிகுந்த வரவேற்போடு மன்னரிடம் அழைத்துச் சென்றனர்.

மன்னர் மகிழ்ச்சியுடன் கதை சொல்லவந்திருக்கும் இளைஞனை வரவேற்று உட்கார இடம் தந்தார். ''தம்பி! கதையை ஆரம்பிக்கலாமே!'' என்ருர் ஆர்வமாக. இளைஞனே எதற்கும் பயப்படாமல் கதைசொல்ல ஆரம்பித்தான்.



"நெடுங்காலத்திற்கு முன் உங்கள் தாத்தாவும், என்னுடைய தாத்தாவும், ஒன்று சேர்ந்து ஒரு நெற்களஞ்சியத்தை கட்டினார்கள். அது எவ்வளவு பெரியது தெரியுமா? அந்தக் களஞ்சியத்தின் ஓர் மூலையிலிருந்து ஓர் அணில் மற்றொரு மூலைக்கு ஓட ஒரு நாள் பிடிக்கும். அவ்வளவு பெரியது அந்தக் களஞ்சியம்! அதைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா, அரசே?" என்று இளைஞன் கேட்டான். அதற்கு மன்னர் "இல்லை, நான் கேள்விப்பட்டதில்லை" என்றார்.

"அப்படியானால் இன்றைக்கு இவ்வளவு போதும். மீதிக் கதையை நாளை வந்து சொல்கிறேன்!" என்று சொல்லி விட்டுச் சென்றான் அந்த இளைஞன்.

மறுநாள், மன்னர் மீதிக் கதையைக் கேட்க இளைஞனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். இளைஞனும் வந்தான். மேற்கொண்டு கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

"நேற்று எதுவரை கதை சொன்னேன்?" என்று மன்னனைப் பார்த்துக் கேட்டான் இளைஞன்.

"உங்கள் தாத்தாவும், என் தாத்தாவும் நெற்களஞ்சியம் கட்டியது வரை சொன்னாய்...." என்றார் மன்னர்.

உடனே இளைஞன், "மேற்கொண்டு கேளுங்கள். அந்த நெற்களஞ்சியத்தில் அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு பெரிய காளையை வளர்த்தார்கள். அதன் கொம்புகள் மிக அகலமாக இருந்தன. எவ்வளவு அகலம் தெரியுமா? ஒரு குருவி ஒரு கொம்பிலிருந்து மற்றொரு கொம்பிற்குப் பறந்து செல்ல ஒரு நாள் ஆகும்! அவ்வளவு அகலம் அந்தக் கொம்புகள். அதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா அரசே" என்று கேட்டான்.

அதற்கு மன்னர் "இல்லை! என்று தலையாட்டினார். அப்படியானால் இன்றைக்கு இது போதும்! நான் நாளைக்கு வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே சென்றான் இளைஞன்.

இதைக் கேட்ட மன்னருக்குக் கோபம் பொத்துக் காண்டு வந்தது. "டேய் பயலே! நீ என்னையா ஏமாற்றப்பார்க்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன்பார்!" என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டார்.

மறுநாள் காலை!

மன்னர் அவசரம் அவசரமாகத் தம் அவையைக் கூட்டினார். அவையிலிருந்த அனைவரிடமும், "இன்று அந்த இளைஞன் கதை சொல்ல வருவான். அவன் கதை சொல்லும்போது, நான் அதை ஏற்கெனவே கேட்டிருப்பதாகக் கூறுவேன். அப்போது நீங்களும், 'நாங்களும் அதை மன்னருடன் சேர்ந்து கேட்டிருக்கிறோம்' என்று சொல்ல வேண்டும்!" என்று உத்தரவிட்டார்.

மூன்றாவது நாளாக இளைஞன் கதை சொல்ல அரண்மனைக்கு வந்தான். மன்னர் கேலிச் சிரிப்புடன் அவனை வரவேற்றார். இளைஞனோ அதைப் பொருட்படுத்தாமல் கதை சொல்ல ஆரம்பித்தான்.

"பிறகு என்ன நடந்தது தெரியுமா? உங்கள் தந்தையும் என் தந்தையும் அண்டை நாட்டு மன்னர்களாக இருந்த போது, உங்கள் தந்தையார், என் தந்தையாரிடமிருந்து 40 மூட்டைத் தங்கத்தைக் கடனாக வாங்கி, அதை நாற்பது குதிரைகளில் ஏற்றிச் சென்றார். அதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?" என்று மன்னரைப் பார்த்துக் கேட்டான் இளைஞன்.

அவையில் இருந்தவர்களுக்கு மன்னன் ஏற்கெனவே உத்தரவிட்டது நினைவில் இருந்தது. உடனே அவர்கள் அனைவரும், 'ஆமாம், ஆமாம். நாங்கள் அதைக் கேட்டிருக்கிறோம்!" என்றார்கள்.

"அப்படியானால், நீங்கள் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அரசே" என்றான் இளைஞன்.

மன்னர் திடுக்கிட்டு ஒன்றும் புரியாமல் விழித்தார். அவையில் இருந்தவர்களோ மன்னர் கடனாளிதான் என்று உறுதிப்படுத்தினர். வேறு வழி இல்லாமல் மன்னர், தம் கருவூலத்திலிருந்து தங்கம் முழுவதையும் சுரண்டி எடுத்தார். அப்படி எடுத்தும் ஒரு மூட்டை தங்கமே கிடைத்தது!

இளைஞனோ அந்த ஒரு மூட்டைத் தங்கத்தை எடுத்துக் கொண்டு, மீதியைப் பிறகு வந்து வாங்கிக் கொள்வதாகச் சொல்லி ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு மன்னருக்குக் கதை கேட்கும் ஆசையே போய்விட்டது.

(ஒரு ரஷ்யக் கதையைத் தழுவி எழுதியது.)

**பின்தங்கிய வட்டங்களுக்கு**
**அரசு தரும் உதவி**

புதிதாகத் தொழில்கள் துவங்குவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மதுரை மாவட்டத்தில் பின்வரும் வட்டங்களை தொழில்களில் பின்தங்கிய வட்டங்களாகத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது:—

| | |
|---|---|
| மேலூர் | திருமங்கலம் |
| உசிலம்பட்டி | நிலக்கோட்டை |
| திண்டுக்கல் | வேடசந்தூர் |

இந்த வட்டங்களில் தொழில் துவங்குபவர்களுக்கு அவர்களது முதலீட்டில் 10ல் 1 பாகம், அரசு நிதி உதவியாக அல்லது மானியமாக வழங்கப்படும். இந் நிதி உதவி, உயர்ந்த அளவு ரூ. 50,000 வரை வழங்கப்படும்.



# திருமங்கலத்தில் அரிய வளர்ச்சி

உசிலம்பட்டிக் கோட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பளவு சுமார் 339.32 சதுர கிலோ மீட்டர். இந்த ஒன்றியப் பகுதியில் சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். மொத்தம் 39 ஊராட்சிகளைக் கொண்டது இந்த ஒன்றியம். இதில் திருமங்கலம் பேரூராட்சி உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அரசு இவ் வட்டாரப் பகுதியில் பல்வேறு துறைகளில் ஏராளமான பொருட் செலவில், பல சாதனைகளைச் செய்துள்ளது.

## இணைப்புச் சாலைகள்

இவ்வட்டாரப் பகுதியில் உள்ள சாலைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிதாகப் போடப்பட்ட இணைப்புச்சாலைகளின் விவரமும் அதற்கெனத் தமிழக அரசு செலவிட்ட தொகையும், வருமாறு :—

| ஆண்டு | புதிய சாலைகளின் அளவு (கி. மீ.) | அரசு மானியம் மட்டும். (ரூபாய்) | இணைக்கப்படும் கிராமங்கள் |
|---|---|---|---|
| 1967—68 | 3·4 | 26,210 | 3 |
| 1968—69 | 2·0 | 20,841 | 2 |
| 1969—70 | 11·6 | 21,500 | 3 |
| 1970—71 | 11·6 | 29,333 | 4 |
| 1971—72 | 3·80 | 30,086 | 4 |

## சாலைப் பராமரிப்பு

திருமங்கலம் ஒன்றியப் பகுதியில் ஒன்றியப் பராமரிப்பின் கீழ் உள்ள சாலையின் நீளம் 16·60 கி.மீ. அதைப் பராமரிக்கத் தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கிய மானியம் வருமாறு :—

| ஆண்டு | தொகை (ரூபாய்) |
|---|---|
| 1967—68 | 30,129 |
| 1968—69 | 31,291 |
| 1969—70 | 38,714 |
| 1970—71 | 19,708 |
| 1971—72 | 29,568 |

## குடிநீர் விநியோகம்

குடிநீர் வசதிக்காகக் கிணற்று நீர்த்திட்டம், குழாய்த் தண்ணீர்த் திட்டம் ஆகிய இரு வகையாகப் பிரித்து வேலையை மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளன. இதில் 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வழங்கிய நிதி மட்டும் வருமாறு.

| ஆண்டு | தொகை (ரூபாய்) |
|---|---|
| 1967—68 | 23,363 |
| 1968—69 | 19,159 |
| 1969—70 | 31,035 |
| 1970—71 | 34,586 |
| 1971—72 | 38,624 |

## கல்வி

கல்வி வளர்ச்சி சம்பந்தமாக இவ்வொன்றியப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மதிய உணவிற்காக அரசு வழங்கிய மானியம் வருமாறு :—

| ஆண்டு | மதிய உணவு வழங்கிய பள்ளிகளின் எண்ணிக்கை | அரசு மானியம் (ரூபாய்) |
|---|---|---|
| 1967—68 | 72 | 50,567·52 |
| 1968—69 | 72 | 49,200·00 |
| 1969—70 | 72 | 12,300·00 |
| 1970—71 | 74 | 51,512·00 |
| 1971—72 | 74 | 51,098·47 |

ஒவ்வொரு ஆண்டும் புதிதாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகத் தமிழ்நாடு அரசு மானியம்





செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மிகு விளைச்சல் தா நெல் பயிரிடப்பெற்று அறுவடை நடை பெறுகிறது.

கொடுத்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் மேற்கண்ட வேலைகளுக்காக வழங்கப்பட்ட தொகை ரூபாய் 72,000 ஆகும்.

இது தவிரப் பள்ளிகளில் சுகாதாரப்பராமரிப்புக் காகவும் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு வழங்கப் பட்டு வருகின்றது. இவ்வொன்றியத்தில் உள்ள பள்ளிகளில் வேலை பார்த்து வரும் ஆசிரியைகளுக் குக் குடியிருக்க வால்நாயக்கன்பட்டி கிராமத்தில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருமங்கலம் ஒன்றியப் பள்ளிகளில் (1 முதல் 8 வகுப்பு வரை) மாணவ மாணவிகளுக்கு விஞ்ஞான விளக்க மாதிரிப் பொருள்கள் ஒவ்வொரு ஆண்டும் வாங்கி விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நிதியைத் தமிழக அரசே வழங்கி வருகிறது.

### விவசாயம்

விவசாயத் துறையில் தமிழ்நாடு அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் கீழ்க் கண்ட பல்வேறு இனங்களுக்கு நிதி வழங்கிச் சாதனைகள் புரிந் துள்ளது.

| | 67—68 | 68—69 | 69—70 | 70—71 | 71—72 |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய்) | | (ரூபாய்) | |
| 1. பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்தல். | 150 | 150 | 179 | .. | 600 |
| 2. தலியாருக்கு விவசாயக் கருவிகள் வழங்கியது | 1,500 | 1,000 | 1,498 | 1,500 | 990·75 |
| 3. பழக்கன்றுகள் விநியோகம். | 900 | 9,000 | 899 | .. | 487 |
| 4. செயல் விளக்கப் பாத்திகள் அமைக்க | 3,000 | 3,000 | 3,000 | 1,500 | 2,400 |
| 5. ஒன்றியங்களுக்கு விவசாய விசைக் கருவிகள் | 6,000 | .. | 500 | 2,500 | 298·70 |
| 6. விவசாயக் கால்நடைக் கண்காட்சிக்கு | 250 | 250 | 250 | 260 | 750 |
| 7. சிறுதானிய வீரிய வித்துக்கள் விநியோகம். | .. | .. | .. | 1,500 | 1,500 |

இவ்வொன்றியத்தில் கூடுதல் விவசாயக் கிடங்கு ஒன்று கட்டி முக்கப்பட்டுள்ளது. அதன் மதிப்பீடு ரூபாய் 25,000. மேற்கண்ட தொகை 1969-70-லிருந்து தமிழக அரசால் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வொன்றியத்திலுள்ள பாசனக் கண்மாய் களைப் பராமரிக்கக் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசு ரூபாய் 1,30,000 வரை வழங்கி உள்ளது.

1969-70 வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூபாய் 2½ இலட்சம் நிதி வழங்கப்பட்டு 13 சமுதாயக் கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்படித் திட்டத்தின் கீழ் 27 கால்வாய் மராமத்து வேலையும், 7 கண்மாய் மராமத்து வேலை யும் மேற்கொள்ளப்பட்டன. மேற்படித் திட்டத் தில் 280 குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்திக் குடி நீர்ப் பற்றுக்குறையைப் போக்கத் தீவிர நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டன. அதோடு திரு சங்குளம் என்னும் கிராமத்திற்கு ஒரு புதிய சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டது.

### கால்நடைப் பராமரிப்பு

கால் நடைப் பராமரிப்புத் திட்டத்தில் திரு மங்கலத்தில் உள்ள கால் நடை மருத்துவ மனை யைச் சுற்றி வேலி அமைத்தும், புதிதாகக் கிணறு ஒன்று வெட்டியும், வேலைகள் மேற்கொள்ளப் பட்டன.

கிராமந்தோறும் பள்ளிக் கட்டடம்.



மீன் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் மீன் குஞ்சுகளை வாங்கிக் குளங்களில் விடப்பட்டது. மேலும் எஸ். வலைய பட்டி, டி. புதுப்பட்டி, மேலக்கோட்டை, கரடிக்கல் ஆகிய கிராமங்களில் மீன் பண்ணை களைப் புதுப்பிக்கும் வேலைகள் மேற்கொண்டு முடிக் கப்பட்டன.

| ஆண்டு | | | வழங்கப்பட்ட மீன் குஞ்சுகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | | .. | 8,000 |
| 1968–69 | .. | .. | 15,500 |
| 1969–70 | .. | .. | 10,000 |
| 1970–71 | .. | .. | 18,000 |
| 1971–72 | .. | .. | 33,500 |

### வேலை வாய்ப்புத் திட்டம்

தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2,50,000 கடந்த இரு ஆண்டுகளில் நிதி ஒதுக் கீடு வழங்கப்பட்டுள்ளது.

புதிய சாலை போடுதல், சாலைகளை அகலப்படுத் தும் வேலைகள், கால்வாய் மராமத்து வேலைகள், குளம் மராமத்து வேலைகள் முதலியன மேற்கொள் ளப்பட்டு, அதன் மூலம் 850 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

### சீரணி வேலைகள்

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுத் திட்டத்தின் கீழ் 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 8,000 அரசு மானியம் வழங்கப்பட்டு, அதைக் கொண்டு புதுமங்கலம் என் னும் கிராமத்தில் ஒரு புதிய பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சீரணித்திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 12,000 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அச்சம்பட்டி, அழகுசிறை ஆகிய இரு கிராமங்களில் பள்ளிக் கட்டடம் கட்டும் வேலைகளும் செங்குளம் கிராமத்தில் ஒரு கலையரங் கம் கட்டும் வேலையும், மேற்கொள்ளப்பட்டன.

வாடிப்பட்டியில் ஊராட்சி ஒன்றியம்.



> **முருங்கைக்கு ஓர் ஊர்.**
>
> முருங்கை மரங்களைத் தோப்பாகப் பார்ப்பதே அரிது. ஆனால், கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை ஊர் முழுவதும் எந்தப் பக்கம் பார்த்தா லும் - எல்லா நிலங்களிலும் முருங்கை மரமாக உள்ள ஓர் ஊர் தமிழ் நாட்டிலுள்ளது.
>
> மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பரலமேடு என்ற ஊர் தான் அந்தப் பெருமைக்குரியது.
>
> முருங்கைக்குப் பெயர் பெற்ற இந்த ஊரி லிருந்து குடுமியாமலை அண்ணா பண்ணைக்கு ஆயிரம் முருங்கைப் பதிகங்கள் அனுப்பவிருக் கிறார்கள்.

### மகளிர் நலம்

மாதர் நலம், குழந்தைகள் நலம் என்ற திட்டத் தின்கீழ், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பல்வேறு இனங்களுக்கு நிதி அளித்து வருகிறது.

இவ்வொன்றியப் பகுதியில் 30 மகளிர் மன்றங் கள் நடத்தி வரப்படுகின்றன. கிராமப் புறப் பெண்களுக்கு, குழந்தைகள் வளர்ப்பு, குடும்பக் கட்டுப்பாடு, சமையல் செய்முறை விளக்கங்கள், காய்கறித் தோட்டங்கள் போடுதல், தையல் பயிற்சி அளித்தல், சிறு சேமிப்பு அறிவுரைகள், கோழி ஆடு மாடுகளை நல்ல முறையில் வளர்த்தல், சமூகக் கல்வி கற்பித்தல் போன்ற வேலைகளுக்கு மகளிர் மன்றங்களுக்கான மானியம் செல விடப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் செலவிட்ட தொகை களின் விவரம் வருமாறு:—

| ஆண்டு | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 3,020·00 |
| 1968–69 | .. | .... | 1,649·85 |
| 1969–70 | .. | .. | 4,200·00 |
| 1970–71 | .. | .. | 4,000·00 |
| 1971–72 | | .. | 4,055·00 |

இவைபோக 1969–70 முதல் 1971–72 ஆம் ஆண்டு முடிய இவ்வொன்றியப் பகுதியில் 6 பாலர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இவற்றில் 2½ வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி வழங்கப்பட்டு வருகின் றது. மேற்கண்ட பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருள்கள், பாலர் சேவிகாக்களுக்கு ஊதியம் ஆகியவைகளுக்கு அரசு நிதி தந்துள்ளது. அவை பின் வருமாறு:—

| ஆண்டு | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1969–70 | .. | .. | 400 |
| 1970–71 | .. | .. | 384 |
| 1971–72 | .. | .. | 1,119 |

இவ்வாறு இவ்வொன்றியப் பகுதிகளில் பல்வேறு இனங்களுக்கென்று தனித்தனியே நிதி வழங்கியதன் மூலம் பற்பல பணிகள் நிறைவேறியுள்ளன.




தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்டங்களில், ஒருங்கிணைந்த பகுதிகளில் சில முன்னேடித் திட்டங்களை மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி அப் பகுதியிலுள்ள பொருளாதார வாழ்க்கை அமைத்தையும் தழுவிய திட்டங்களை மேற்கொண்டால், அங்குள்ள 15 முதல் 59 வயது வரையிலான மக்கள், வேலை செய்ய முன்வரின், அவர்களுக்கு வேலையளிக்க வசதி ஏற்படுமென்பது இதன் உள்நோக்கமாகும். அதற்கேற்ப, இம் மாநிலத்திற்கென, ஒரு திட்டத்தை இந்திய அரசு அளித்துள்ளது. அத்திட்டம் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மங்களூர் வட்டாரத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத் திட்டத்திற்கு, இந்திய அரசு மூன்றாண்டுக் காலத்திற்கு ஒதுக்கியுள்ள நிதி விவரம் வருமாறு :-

1972–73—ரூ. 10 இலட்சம்.

1973–74—ரூ. 15·79 இலட்சம்.

1974–75—ரூ. 20·57 இலட்சம்.

இத்திட்டத்திற்காகும் முழுச் செலவும் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். அலுவலர்களின் செலவிற்கென 5 சதவிகிதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம வேலைவாய்ப்பு முன்னேடித் தீவிரத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கும் நிதியினைப் பயன்படுத்தி, இதர துறைகளின் திட்டங்களையும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும் ஒன்றிணைத்து, மங்களூர் வட்டாரப் பகுதிக்குரிய வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கி, இவ்வட்டாரத்தை ஒரு முன் மாதிரி வட்டாரமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்திலும் பல்வேறு துறைகளின் திட்டத்திலும் கிடைக்கக் கூடிய நிதிகளை இணைத்து, 'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா', வீட்டு வசதி வாரியம், ஆகியவற்றிலிருந்து பெறவேண்டிய கடன்களையும் கூட்டி இந்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்குக் கிடைக்கும் நிதியையும் உள்ளடக்கி, ஒரு திட்ட அறிக்கையைத் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் உருவாக்கியுள்ளார். இவற்றையெல்லாம் கொண்டு மங்களூர் வட்டாரத்தை, ஒரு முன்மாதிரி வட்டாரமாகச் செய்து காட்ட இயலும். மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின்படி, இத்திட்டத்திற்கு மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 175·54 இலட்சம் முதலீடு செய்யப்படும். இத்தொகை கீழ்க்கண்டவை மூலம் திரட்டப்படும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| (அ) கிராம வேலை வாய்ப்பு முன்னேடித் தீவிரத் திட்ட நிதி. | 44·21 |
| (ஆ) மங்களூர் ஊராட்சிஒன்றியத்திற்கு அரசு அளிக்கும்மானியமும், பொது நிதிகளிலிருந்து ஊராட்சி ஒன்றியம் அளிக்கும் நன்கொடையும். | 30·84 |
| (இ) கடன்களையும் சேர்த்து அரசின் இதரத் துறைகளில் நிதிகள். | 24·60 |
| (ஈ) 'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா' போன்ற வெளியாரிடமிருந்து கிடைக்கும் கடன் | 75·89 |
| | 175·54 |

1972–73-ஆம் ஆண்டு தொடக்கம் மூன்றாண்டுகளுக்கு மொத்தம் ரூ. 175·54 இலட்ச செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற, திட்ட அறிக்கைக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வட்டாரத்தில், இத்திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கு தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்புள்ளவராக்கப்பட்டுள்ளார். இத்திட்டத்தின் வெற்றியில் ஊர்ப்புறங்களின் புதிய தோற்றமே உருவாக இருக்கிறது. வருங்காலத்தில் ஊர்ப்புறங்களை வளர்ச்சியடையச் செய்தற்கு இஃதொரு முன் மாதிரியாகவும் விளங்கும். இங்கு நடைபெறும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இத்திட்டம் இதர பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். இப்பகுதியின் தேவைகளை முதன் முதலாக நிறைவேற்றுவதில் இவ்வரசு பேரவாக் கொண்டுள்ளது. தென்பதையும், அதே தருணத்தில் ஊர்ப்புறங்களில் மலிந்துள்ள வேலையில்லா நிலைமைக்குத் தீர்வு காண மண்டல வளர்ச்சியின் வாயிலாக நிலையானதொரு திட்டத்தை உருவாக்கவும் முனைந்துள்ளது தெரியவரும்.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இறைவைப் பாசனக் கிணற்றுக்காகத் துளை போடுகிறார்கள்.








## 53. வாய்மை வழுவாமை மாண்பு

ஈன்றாள் பசித்தாள் ; இனியமகன் பித்தனுனன் ;
ஊன்கொடுத்த உன்மனைவி ஒய்ந்துவிட்டாள்—வான்குறளின்
வாய்ப்பொருளாய் வந்தவனே ! வாழ்வே முடிந்தாலும்,
வாய்மை வழுவாமை மாண்பு.

—ஐ. திருவருட்பாவை, பி. கே. புரம்.

மண்அடுப்பில் பூனை வசித்தாலும், கைப்பிடித்த
பெண்மணியே நெஞ்சைப் பிழிந்தாலும் ;—கண்கண்ட
தாய்வெறுத்துத் தூற்றினும் ; தன்நெஞ்சின் பொன்முடியாம்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

பொய்யே முதலாப் புறங்கூறும் புல்லர்கள்
உய்யும் பொழுதோ ஒருசிறிதாம்—தையலே !
தேயத்தே எஞ்ஞான்றும் தீதில்லா வாழ்வளிக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—சி. மு. அரசு, களக்காடு.

என்னாமை, நன்மைகளைத் தள்ளாமை, இன்பத்தில்
துள்ளாமை, என்றுந் துவளாமை—கள்ளாமை
தூய்மை தவறாமை, துன்பில் நெகிழாமை,
வாய்மை வழுவாமை மாண்பு.

—வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

நிலவுக் கழகு நெகிழ்ந்திடும் தன்மை
மலருக் கழகு மணமே—நிலவுலகில்
வாய்மலர் செப்பும் மனிதர் அனைவருக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ச. அருணன், புதுவை–3.

தாயார் இரந்துண்ணத் தாரம் சினந்துரைக்கக்
காய்பசியால் பிள்ளை கதறியழ—ஆயினுமென் ?
தூய்மை தவறுமல் தொண்டுசெயும் நல்லார்க்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் க. முனிசாமி, விழுப்புரம்.

மக்கள் அரசாட்சி மாண்பாய் இயங்கிவரத்
தக்கதுணை செய்யும் தனிக்கடமை—மிக்கதனுல்
சேய்மை நிலைகூறும் செய்தித்தாள் நல்குவோர்
வாய்மை வழுவாமை மாண்பு.

—இளங்கோ, ஆலங்குளம்.

சொன்னதை யெந்நாளும் சோர்வின்றிச் செய்திடும்
தன்னலம் பாராத் தமிழரசை—என்னெஞ்சே !
தாய்போன்று காப்போம் தருணத்தில் என்கின்ற
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கப்பு.

தெள்ளிய நீர்கொண்டு தேக மதைக்கழுவின்
கொள்ளரிய இன்பநலம் கூடுதல்போல்—உள்ளமதும்
தூய்மை பெறவேண்டின் தொல்லுலகீர் என்றென்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், குமாரபாளையம்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
செல்வி. ஐ. திருவருட்பாவை,
மே/பா ஐசக் (ஆசிரியர்)
பி. கே. புரம், கீ. வ. குப்பம் (அஞ்சல்)
குடியேற்றம் (வ. ஆ. மாவட்டம்).

# வெண்பாப் போட்டி

சோதனைகள் வாழ்வில் தொடர்ச்சியாய் வந்திடினும்
வேதனையால் உள்ளம் மெலிந்தாலும்—மேதினியில்
தூய்மையாய் வாழுதற்குத் தொல்லைகள் ஏற்படினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—விமலாசெல்வன், தஞ்சை.

எம்மாப் பணியேனும் எந்தமிழர் நாட்டிற்கு
நம்மால் இயன்றவரை நன்றாற்றிச்—செம்மைசேர்
தாய்மொழியைப் பேணித் தலைமகனும் வள்ளுவர்சொல்
வாய்மை வழுவாமை மாண்பு.

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

இரந்துண்டு வாழும் இழிநிலையால், யாக்கை
உரங்காணு நாற்றுய் உருவில்—நரம்பாகிக்
காய்ந்தே உயிர்பிரியும் காலத்தும், நெஞ்சேநீ
வாய்மை வழுவாமை மாண்பு.

—எழில்வேந்தன், சென்னை 2-8.

கொய்யும் மலரனைத்தும் கூந்தல் மணப்பதில்லை,
செய்யும் செயலனைத்தும் சீர்மல்கி—உய்வதில்லை
தூய்மை தலங்காத்துத் துன்பம் மிகவரினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ஆர். கலைச்செல்வி, அம்மனூர்.

மொட்டைப் பனைமரமாய் மொய்க்கின்ற துன்பமெனும்
குட்டையிலே வீழ்ந்து குலைந்தாலும்—எட்டியாம்
காய்போல என்றும் கசப்பாகும் பொய்மறந்து
வாய்மை வழுவாமை மாண்பு.

—கா. வாலிதாசன், பச்சையப்பன் கல்லூரி.

வாட்டும் துயர்பலவும் வந்தாலும் வாழ்நாளில்
ஈட்டும் பொருளை இழந்தாலும்—ஊட்டுகின்ற
தாய்பசிக்கக் கண்டாலும் தன்னுடலைத் தீய்த்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—சி. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

அன்பே விளக்காய் அறமே திரியாக
இன்பமெனும் நெய்யால் எரியவிட்டு—மன்பதையில்
தூய்மை நெறிநின்று தொண்டாற்றி இல்லறத்தில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அரங்க. முத்துமணி, கீழப்பழூர்.

நாளும் நலம்பெருக, நல்லார் இசைபெருக,
கேளும் பெருகக் கிளிமொழியே !—நீளுலகில்
தாய்மை நிறையுடனே தாளாற்றி எக்காலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—எஸ். பானுமதி, வேப்பூர்.

மின்னலது மின்னுவது மேதினியில் சின்னேரம்
இன்னலுறு பொய்மை இனிதாகும்—புன்னகையாய் !
நேர்மையில் லாமலே நூறாண்டு வாழ்வளிக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ந. புலியரசு, கள்ளக்குறிச்சி.

உள்ளம் துளராமை ஊக்கம் ; உலைவிடத்தும்
கள்ளம் கலவாமை கற்பொழுக்கம் ;—எள்ளளவும்
தூய்மை குறையாமை நுப்புரவு ; தொல்லுலகில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—செ. ஜெய்லானி, நாகர்கோவில்.

நன்றியைக் கொல்லாமை நல்லோரை நீங்காமை
கொண்டநற் கொள்கையிலே கோடாமை—என்றென்றும்
ஆய்வளையாய் ! இந்த அவனியே தான்பெறினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

பட்டா ! பகைமைப் புரட்சி ! தொழுநோயர்
சட்டடங் கள்! கடன் ! கண்ஞெளி !—விட்டவை
ஆயிரம் இந்த அரசுமேல் பொய்கோடி !
வாய்மை வழுவாமை மாண்பு.

—மலைமா. ஆறுமுகம், மணிமங்கலம்.

கற்றோர், அறிவதனைக் கற்பிப்போர், நல்வழியில்
நிற்போர், குடிநாடி நின்றுள்வோர் ;—நற்பெண்மை
வாய்மணக்கக் காதலித்து வாக்களித்தோர், என்றென்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—இலக்கியன், ஆலங்காயம்.

பாதைமாற வேண்டாம் பசிவறுமை வாட்டிடினும் !
தீதைத் துணிந்தெதிர் ! தூளாக்கு—வேதனையை !
ஏய்த்துப் பிழைக்காதே ! ஏற்றம் பெறுதற்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

கொஞ்சி மகிழ்ந்த குடும்பம் நிலைகுலைந்தே
எஞ்சும் வறுமை எக்களிக்க—மஞ்சுசூழ்
தேய்பிறையும் ஓர்நாள் திரண்டநிலா ஆகுமென
வாய்மை வழுவாமை மாண்பு.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

சாதிக் கொடுமையால் சாகும் புழுவான
நாதியற்ற ஏழைமக்கள் நன்மைபெற—மேதினியில்
தூய்மை வழிநின்ற தூமணியாம் அண்ணலவர்
வாய்மை வழுவாமை மாண்பு.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதி நகர்.

# வெண்பாப் போட்டி

சுற்ற மழிந்தாலும் இல்லாமை சூழ்ந்தாலும்
தூற்று மிழிச்சொல் தொடர்ந்தாலும்—கூற்றென
மாய்க்கின்ற துன்பம் மழையாய்ப் பொழிந்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் க. முத்துக்கருப்பன், பேரையூர்.

இன்றோ ? பிறகோ ? இனிச்சிறிது நாள்கழித்தோ ?
என்றோ ? ஒருநாள் இறப்பதுயிர்—நன்றாக
ஆய்மின் புகழோ அழியா துயிரறினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அரு. கிருட்டிணன், கணியூர்.

ஊரார் மறந்தாலும் உற்றார் துறந்தாலும்
சீரான வாழ்வு சிதைந்தாலும்—சேராது
தூய்மை குலையாமல் தொல்லுலகில் வாழ்வோர்க்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—பெ. தியாகராசன், குன்னம்.

உண்மையே தெய்வமென்ற ஒப்பில்லா வாழ்க்கையில்
நன்மையே நாளும்செய் திட்டநல்—அண்ணலின்
தூய்மை நெறிநின்று தொண்டாற் றிடும்போது ;
வாய்மை வழுவாமை மாண்பு.

—கவிதைப்பித்தன், உளுந்தூர்ப்பேட்டை.

ஆய்மயிலும் தோற்குமெழில் ஆரணங்கே புன்னழகு
போய்மறையும் ஓர்காலம் ! போற்றிடுக—வாய்மொழியில்
தாய்மை வளர்ப்பில் தன்னலமில் நல்லறத்தில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர்.

எச்செயலைச் செய்திடினும் எத்துணை மேம்படினும்
பச்சைக் கிளியே ! பதறாமல் — அச்செயலில்
தூய்மைக் குணம்நாடித் தொல்லுலகில் எஞ்ஞான்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

தாயை வணங்கவேண்டும் தண்டமிழைப் போற்றவேண்டும்
நோயை ஒடுக்கவேண்டும் நொந்தோரைச்—சேயைப்போல்
தாய்மை உணர்வுடனே தாம்காத்துச் செல்லுகின்ற
வாய்மை வழுவாமை மாண்பு.

—குமாரி கோ. தேன்மொழி, இராயபுரம்.

பதவியுயர் காலத்தில் பட்டமுறு நாளில்
உதவிபிறர்க் காற்றும் பொழுதில்—மதிஒளியே !
காய்தல் உவத்தல் அகற்றிக் கணிப்பதில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—வை. வைரவன், சிறுகூடல்பட்டி.

நெஞ்சிற் பிழையின்றி நேர்மையுடன் வாழுங்கால்
அஞ்சி இருத்தல் அழகாமோ ?—கொஞ்சமும்
தூய்மை அறியாமல் தூற்றுவரே யாறாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அ. காந்தி, தேவத்தூர்.

ஏழ்மை அடைந்தாலும் ஏற்றத்தைப் பெற்றாலும்
வாழ்விலே என்றும் வழுவாது—தாழ்வில்லா
தூய்நெறி பின்பற்றித் தொல்லுலகில் வாழுங்கால்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ப. குப்புசாமி, பொன்மலை.

பெற்றெடுத்துத் தான்வளர்த்துப் பேராற்றல் ஈந்துநிதம்
உற்றதுணை யாகி உயர்ந்திருக்கும்—நற்கருணைத்
தாய்மைக்கே இன்னல் தருமென்ற போதினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—கண்ணுகாந்தி, தாராபுரம்.

கோடிப்பொன் அள்ளிக் கொடுத்தாலும், தம்நண்பர்
ஊடிக் கொடுநஞ்சை யூட்டிடினும்—ஈடில்லாத்
தாய்தந்தை நல்லுயிரைத் தாம்காக்க நேர்ந்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

காட்டிப் பிழையாமை கண்ணியத்தைக் கொல்லாமை
ஏட்டைப் புரட்டாமை ஏசாமை—கூட்டுறவு
தேய்வடையச் செய்யாமை தீவைக்கத் தூண்டாமை
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

நெஞ்சே உடைந்து நிலைதளர்ந்து போனாலும்
வஞ்சகரே வாழ்விழக்கச் செய்தாலும்—வஞ்சியே !
தாய்நாடு போற்றும் தலையாய நற்பண்பாம்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் இரெ. சுப்பையன், கள்ளிமந்தயம்.

பேசநா வாராத பித்தமனங் கொண்டோரின்
நாசத்தால் அல்லலுறும் நல்லோரின்—மாசற்ற
தூய்மை நிறைவாழ்வில் துன்பமே வந்திடினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—கே. முருகாண்டி, அனுப்பாண்டி.

மாற்றானைக் கண்டால் மதிக்கின்ற நெஞ்சோடு
தூற்றாத கொள்கைத் துணிவோடும்—போற்றுகின்ற
தூய்மை அறம்மூன்றும் சொல்லிவைத்த வள்ளுவரின்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் க. கோபண்ணன், வரதனேரி.




எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

**• சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்**

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

தமிழரசு


# சிற்றூரிலும் சிறந்து வரும் வீட்டு வசதித் திட்டம்

அன்றாட வாழ்க்கையில் வீட்டுப் பிரச்சினை மிக இன்றியமையாத ஒன்று என்பதை நாமறிவோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அரும்பாடுபட்டு வருவதைத் தமிழகம் நன்கறியும்.

வீட்டு வசதி என்றதும், அது நகரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுந்தான் என்ற எண்ணத்தை அறவே போக்கி, இன்று கிராமங்களிலும், கிராமப்புறங்களிலும்கூட வீட்டு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான 'கிராம வீட்டு வசதித் திட்டம்' 'கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்' ஆகியவை செயற்கரிய செயல்களைச் செய்து வருகின்றன.

## கிராம வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சிப் பகுதியிலும், தேசிய வளர்ச்சிப் பணிப் பகுதியிலும் உள்ள தெரிந்தெடுத்த கிராமங்களின் வளர்ச்சிக்கான இத்திட்டம் மாநில அரசின் வேலைத் திட்டமாகும் ''தன்னுதவி'' அடிப்படையில், தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கிராமவாசிகளை ஊக்குவிப்பதற்கு ரூ. 3,000-க்கு மிகாமல் தற்போது ரூ. 4,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது, மூன்று தவணைகளில் கடன் வழங்கப்படுகிறது.

அவ்வாறு கடன் வழங்கப்படும் நபர்கள் சொந்த நிலம் வைத்திருப்பதோடு, கடன் தொகையை வட்டியுடன் இருபது சம ஆண்டுத் தவணைகளில் திருப்பித்தரும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். வீட்டிற்கு ரூ. 4,000 கடன் தொகையானது கட்டடத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவில், 80 சத வீதமாகும். எஞ்சிய 20 சதவீதம் பயன் துய்ப்பவர்களால் உழைப்பு, உள்ளூரில் கிடைக்கும் பொருள்கள், பணியின்போது ஏற்படும் சேமிப்பு ஆகியவற்றின் மூலம் கொடுக்கப்பட வேண்டும். ''தன்னுதவி'' அடிப்படையில் உதவி பெற்றுக் கட்டப்பட்ட வீடு, இருபது ஆண்டுகளில் அவருக்குத் தங்குமிடமாகவும், சொத்தாகவும் ஆகின்றது.

தமிழ்நாட்டில் 15,000 கிராமங்களுக்கு மேல் உள்ளன. 223 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1,640 கிராமங்களுக்குத் தனிச்சிறப்பு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தை மேலும் பல கிராமங்களில் நிறைவேற்ற வேண்டும் எனக் கிராம மக்களிடமிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.

கிராம வீட்டு வசதித் திட்டத்திற்காக, அரசு, தமிழ் நாடு சிறப்பு நல நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்தொகை, 1972–73-லும், 1973–74-லும் செலவிடப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளிலும் எதிர்பார்க்கப்படும் செலவினம் முறையே ரூ. 2 இலட்சமும் ரூ. 48 இலட்சமும் ஆகும். இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு 1,100 வீடுகள் கட்டப்படும்.

வீடு கட்டப்படும் கிராமங்களில் கிராம வாசிகளுக்குத் தெருக்கள், சாக்கடை முதலிய வசதிகளுக்கும் இத் திட்டம் வகை செய்கின்றது. இதற்கான கிராமம் ஒன்றுக்கு ரூ. 10,000க்கு மிகாமல் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தெருக்கள், சாக்கடைகள், இவற்றையமைக்க 1973–74-க்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0·50 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

### விடுதலைப்போர் வீரர்கள் ஓய்வூதியம்

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1966-ல் கொண்டுவரப் பட்டது; 1966-ஆம் ஆண்டு 5 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அதன்பிறகு, 1-1-1967 முதல் 21-3-1973 வரையில் உள்ள காலத்தில் ஓய்வூதியம் பெறும் விடுதலை வீரர்களின் எண்ணிக்கை 7,673 ஆக உயர்ந்திருக்கிறது.

## கிராம வீட்டு வசதித் திட்டச் சாதனைகள்

இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 2,053. இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 34·91 இலட்சம். 1966–67-லிருந்து 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 472. 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை ரூ.29·73 இலட்சம். நான்காவது திட்டத்துக்கான நிதி ஒதுக்கம் ரூ. 50 இலட்சம். நான்காவது திட்ட இலக்கு (வீடுகள்) 1,500. 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகள் 218. 1969–70-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 7·75 இலட்சம். 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் 240. 1970–71-ல் செலவிடப் பட்ட தொகை ரூ. 10·93 இலட்சம். 1971–72-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 15·38 இலட்சம். 1971–72-ல் கட்டப்பட்டவீடுகள் 309. 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 16·50 இலட்சம். 1972–73-ல் (1972 டிசம்பர் வரை) செலவிடப்பட்ட தொகை ரூ. 10·05 இலட்சம். 1972–73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு வீடுகள் 350. 1972–73-ல் (1972 டிசம்பர் வரை) கட்டப் பட்ட வீடுகள் 257. 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 28·99 இலட்சம். 1973–74-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு (வீடுகள்) 600.

## கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம் 1950-ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்றப்படுகிறது. கிராமப்புறச் சூழல் நிலவுகிற பெரிய, சிறிய ஊராட்சிகளில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவின் மூலம் இந்தத் திட்டம் நிறை

வேற்றப்படுகிறது. திட்டத்தின் கீழ் வராத மாநில நிதிகளிலிருந்து இத் திட்டத்திற்கான நிதி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், கட்டுமானச் செலவில் 80 சதவிகிதம் வரையில் (செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைப் போல் நான்கு மடங்குத் தொகைக்கு இது மேற்படக் கூடாது) ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன. வீட்டிற்கான செலவு மதிப்பீடு ரூ. 15,000-க்கு மேற்படக் கூடாது. ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு கடனைப் போல் இரு மடங்கு மதிப்புடைய வில்லங்கமற்ற நிலங்களைச் சொந்தமாகக் கொடுக்கும் நேர்வுகளில், பங்கு மூலதனத்தைப் போல் ஏழு மடங்குத் தொகை கடனுதவியாக அளிக்கப்பட்டுள்ளது. அதற்காகத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற வீட்டு வசதித் திட்டச் சாதனைகள்

முதல் மூன்று திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 906. முதல் மூன்று திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 56·87 இலட்சம். 1966–67-லிருந்து 1968–69 வரை கட்டப்பட்ட வீடுகள் 324. 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 26·16 இலட்சம். 1969–70-இல் கட்டப்பட்ட வீடுகள் 153. 1969–70-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10·41 இலட்சம். 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் 140. 1970–71-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10·27 இலட்சம். 1971–72-இல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10 இலட்சம். 1971-72-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 150. 1972–73-ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 10 இலட்சம். 1972–73-ல் செலவிடப்பட்ட தொகை (1972 டிசம்பர் முடிய) ரூபாய் 4·05 இலட்சம். 1972–73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு 120 வீடுகள். 1972–73-ல் கட்டப்பட்ட வீடுகள் (1972 டிசம்பர் வரை) 80. 1973–74-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 10 இலட்சம். 1973–74-க்கான குறிக்கோள் அளவு 120 வீடுகள்.

---

## வெள்ளிவிழாச் சீரூர்
## தமிழ்நாட்டில் திட்டம்

இந்தியா முழுவதிலும் 15—3—1972 முதல் 14—3—1973 வரையிலான ஓராண்டுக் காலத்திற்கு, இந்திய நாட்டின் விடுதலை வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது. இவ் வெள்ளி விழாவிற்கு ஏற்றவாறு நிலையான சாதனைகளை உருவாக்குவதற்கு, ஒவ்வொரு வட்டத்திலும் ஓர் ஊர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று மாநில அரசுகளை, இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. 'வெள்ளி விழாச் சீரூர்' எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஊர்களில் நிறைவேற்றப் படுவதற்குரிய திட்டங்களுக்குத் தேவையான நிதிகளை, மாநிலத் துறைகளைச் சார்ந்த திட்ட, திட்டத்திலடங்காத வேலைத் திட்டங்கள், மைய அரசுத் திட்டங்கள், மைய அரசால் ஊக்குவிக்கப்படும் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் நிதிகளைத் திரட்டிப் பயன்படுத்த வேண்டுமென இந்திய அரசு கூறியுள்ளது. மேற்கண்ட முறையில் திரட்டப்படும் நிதிகளைக் குடிநீர் வழங்கல் திட்டங்கள், நலிவுற்ற மக்களுக்குச் சிறந்த வீட்டு வசதி, பள்ளிக் கூடங்கள், கிணறுகள் போன்றவற்றிற்கு ஒதுக்கலாமென்றும் மைய அரசு கூறியுள்ளது. அதற்கேற்ப, ஒவ்வொரு வட்டாரத்திலும், ஓர் ஊரைத் தேர்ந்தெடுத்து, அவ்வூர்களில் நிலையான நன்மைகளை உருவாக்க வேண்டுமென்றும், அவற்றிற்கென மாநில, மைய அரசுத் திட்டங்கள் மூலம் கிடைக்கும் நிதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் ஊர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவேயுள்ள திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதிகள் அத்திட்டங்களுக்கென்றே செலவழிக்கப்பட்டுவிட்டதென்றும் தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஊர்களில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்கு மேலும் நிதிகள் தேவைப்படுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசின் கவனத்திற்குக் கொணர்ந்துள்ளனர். இதற்கெனத் தேவைப்படும் நிதியளவைப் பற்றியும் அவர்கள் கூறியுள்ளனர். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊர்களில் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய நிதிகளை அளிக்கும்படி, இந்திய அரசை, இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திட்டம் முன்னேற்றமடையாத காரணத்தால், இந்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி ஒதுக்கீட்டை, எதிர்நோக்கி நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளில் எஞ்சியுள்ள நிதிகளையும், 1973–74-ஆம் ஆண்டிற்கு நிதிநிலை மதிப்பீட்டில் கிடைக்கக்கூடிய ஒதுக்கீட்டையும் பயன்படுத்தி, வெள்ளிவிழாச் சீரூர்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை முடிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

ரூபாய் 3 இலட்சத்திற்கு மேலும், மிகுதியான நிதிகளைப் பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், அந்நிதிகளைப் பயன்படுத்தி, வெள்ளிவிழா சீரூர்களில் பள்ளிக் கட்டடங்கள், சாலைகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இச் செலவு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 50,000-க்கு மேற்படக் கூடாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள முன்னுரையை ஒரு நினைவுக் கல்லில் செதுக்கி ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள ஒரு பள்ளியில் அமைக்க வேண்டுமென்றும் இந்திய அரசு கூறியுள்ளது. ஒவ்வொரு நினைவுக் கல்லிற்கும் ரூபாய் 15,000க்கு மேற்படாது ஏற்படும் செலவை ஏற்றுக் கொள்ளவும் இந்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளிகளில் இந்நினைவுக் கற்கள் பொருத்தப்படும்.

14—8—1973 அன்று 374 நினைவுக்கற்கள் நிறுவப்பட்டுவிடும்.



## மதுரை மாவட்டத்தில் மறுவாழ்வு இல்லம்



மதுரை மாவட்டத்தில் புதுப்பட்டியில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இந்த இல்லம் கட்டுவதற்காக அரசு அளித்துள்ள மொத்தத் தொகை ரூ. 10.20 இலட்சம்.

இத்திட்டத்தின் கீழ் 4 தனிக் கட்டடங்கள் கட்டப்படும். ஓர் மாடியோடு இந்த நான்கு கட்டடங்களும் கட்டப்படும். இதில் கீழ்த்தளத்தில், ஒரு அறைக்கு இரண்டுபேர் வீதம் 32 அறைகளில் 64 பேர்களாக, நான்கு கட்டடங்களிலும் 256 பேர் தங்கலாம். மாடியில் ஒரு கட்டடத்தில் 62 பேர் வீதம் 4 மாடிகளிலும் 248 பேர் தங்கலாம். ஆக, இந்த இல்லத்தில் 504 தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்கப்படும். இந்த நான்கு கட்டடங்களில் உள்ளவர்களுக்கும் பொதுவாகக் குளியல் அறைகளையும், கழிப்பறைகளையும் கொண்ட தனிக் கட்டடம் ஒன்றும் கட்டப்படவிருக்கிறது.

இதைத் தவிர, நிருவாகத்திற்கும், மருத்துவத்திற்கும் சேர்த்து ஒரு தனிக் கட்டடம் கட்டப்படும். சமையலுக்குத் தனி இடமும், வேலை செய்வதற்கு இரண்டு தொழிற்கூடங்களும் கட்டப்படும். மேலும், இல்லக் கண்காணிப்பாளருக்கும், இல்ல மருத்துவ அதிகாரிகளுக்கும், மருத்துவ உதவியாளர்கள் இருவருக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் தங்கும் இல்லங்களும் கட்டப்படும். கட்டட வேலைகள் துவக்கப்பட்டுத் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## இந்தியாவில் சுற்றுலா

1972-ஆம் ஆண்டில் இந்தியாவைச் சுற்றிப்பார்க்கப் பல்வேறு நாடுகளிலிருந்து மொத்தம் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கு வந்தனர். இதற்கு முந்தைய ஆண்டைவிட இந்த எண்ணிக்கை 14 சத விகிதம் அதிகம் ஆகும்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இதேபோன்று அதிகரித்து வந்தால், 1978-ஆம் ஆண்டில் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 8 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தைத் தூண்டவல்ல இந்தியாவிலுள்ள பல முக்கியமான இடங்களைப் பற்றி எடுத்துக் கூறும் விளக்கப்படம் ஒன்று தற்போது வெளிநாடுகளில் திரையிடப்படுகிறது. இதனால் இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

நடுத்தர வருவாய் குறைவான வருவாய் உடைய சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்க இடவசதி அளிக்கும் பொருட்டு, வனவிலங்குப் புகலிடங்களில் ஓய்வு விடுதிகளும், சுற்றுலா மாளிகைகளும், இளைஞர் விடுதிகளும் பல்வேறு மாநிலங்களில் இருக்கின்றன.




# முன்னோடி நல்வாழ்வு நிலைய அறிமுகமும் முனைப்பு இயக்க நிறைவும்

சக. முத்துராமலிங்கம்

தமிழ் வளர்த்த முச்சங்கங்களின் நினைவு—இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரம் பற்றிய எண்ணம் — பாண்டியன் நெடுஞ்செழியனின் கோல்கோணு ஆட்சிமுறை — அன்னை அங்கயற்கண்ணி ஆலயத்தின் தோற்றம்- தமிழ் வளர்த்த வெளிநாட்டுப் பெரியார்களான இராபர்ட் நொபிலி, வீரமா முனிவர் என்று அழைக்கப்பட்ட ஆல்ரேர் பெஸ்கி ஆகியோரின் நினைவு. என்ற இன்னோரன்ன காட்சிகள் மதுரை பற்றிய எண்ணம் ஏற்பட்டவுடன் உள்ளத்தில் நிழலாடுகின்ற காட்சிகளாகும். இவற்றுடன் இன்னும் எத்தனையோ சிறப்புக்களுக் குரிய மதுரை, மாநகராட்சியாய் இருப்பதோடு, மாவட்டத்தின் தலைநகராய் விளங்குகிறது. இராமநாதபுர மாவட்டத்தின் தலைநகரும் மதுரைதான் என்று சொல்லத்தக்க அளவுக்கு அம்மாவட்டத்தின் தலைமை அலுவலகங்கள் பல, மதுரையிலே இயங்கி வருகின்றன. அண்மைக்காலத்தில் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டப்பணிகளால் மதுரை மாவட்டம் முன்னேறியுள்ளது.

வீரிய விதைகள் வழங்குதல், உரவிநியோகம் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தில் புரட்சி உண்டாகியிருக்கிறது. மதுரையிலே உள்ள அரசு பால் பண்ணை, மக்களுக்குத் தட்டுப்பாடு ஏதுமின்றிப் பால் கிடைக்க வழிவகை செய்து வருகிறது. குடிசை மாற்று வாரியப் பணிகள், குடிநீர் வடிகால் திட்டப் பணிகள், இலவசக் கண்சிகிச்சை முகாம், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் தோற்றுவித்தல் போன்ற தமிழக அரசின் சமுதாய மேம்பாட்டுப் பணிகளால் மதுரை மாவட்டம் நற்பலன் அடைந்து வருகிறது. தொழில் துறையிலும் உரிய வளர்ச்சியடைந்து வருகிறது இந்த மாவட்டம் என்பதற்குக் கப்பலூருக்கும் திருமங்கலத்திற்கும் இடையில், வெட்டவெளியாய்க் கிடந்த இடங்களில் ஏற்பட்டுள்ள தொழிற்பேட்டைகளும், நூற்பாலைகளுமே சான்றுகளாகும். அதேபோல மதுரை மாநகரை, மாநகராட்சியாக்கியது காரணமாக நகராட்சியாக இருந்த மதுரை மாநகராட்சியாகிற அளவுக்கு மக்கள் தொகைப் பெருக்கம் அங்கு ஏற்பட்டிருக்கிறது என்ற குறிப்புக் கிடைத்த போதிலும், மதுரை மாநகரில் வாழும் மக்கள் நல்ல பல வசதிகளைப் பெற்று வருகின்றனர். அரசின் மேம்பாடு திட்டப்பணிகளால் அடைந்துள்ள — அடைந்துவருகிற மதுரை மாவட்டம் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுக்குள் நிலைநிறுத்தி, அரசுக்குக் 'கை கொடுக்க', சென்ற பல ஆண்டுகளில் உதவியது போல் 1972–73-ஆம் ஆண்டில் குடும்ப நல முனைப்பு இயக்கத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. எதிர் காலத்தில் தொடர்ந்து இப்படிப் பட்ட வெற்றிகளை நல்கி, அரசுப் பணிக்குக் 'கை கொடுக்கும்' துரை மாவட்டம் என்பதில் ஐயப்பாடு இல்லை.

## இலக்கு

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில், மாவட்டக் குடும்ப நலத் துறையின் துணையோடு, 1972–73-ஆம் ஆண்டு இறுதியில் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கம் செயல் படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தை இறுதியாகச் செயல் படுத்திய மாவட்டம் மதுரை மாவட்டமாகும். உள்வருவாய்த் துறையினரும், உள்ளாட்சித் துறையினரும், குடும்ப நலத் துறையினரோடு இணைந்து செயல்பட்டு முனைப்பு இயக்க வெற்றியை உருவாக்கியுள்ளனர். உள்ளாட்சித் துறையின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் மக்களிடையே நெருங்கிய தொடர்பும் பிடிப்பும் கொண்டு செயல்படுவதால், குடும்ப நலத்துறை ஊழியர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் முனைப்பு இயக்கம் காலம் முழுவதும் இயங்கி இயக்க வெற்றிக்கு உழைத்தனர். குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தை யொட்டிய சேவை இயக்கம் 16-1-1973 முதல் 28-2-1973 வரை இம் மாவட்டத்தில் செயல்படுத்தப் பட்டது. அதற்கு முன் ஒரு மாத காலம்வரை குடும்ப நலத் திட்ட விளம்பர இயக்கம் முனைப்போடு செயல் படுத்தப் பட்டது. முனைப்பு இயக்கக் காலத்தில் மதுரை மாவட்டம் 20 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயித்தது.

## பரிசுத் திட்டம்

குடும்ப நல முனைப்பு இயக்கத்தை ஒட்டி மக்களிடையே ஆர்வத்தை உண்டாக்க வேண்டுமெனக் கருதிய மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்ட அளவில் பரிசுத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினர். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களுக்கான இப்பரிசுத் திட்டத்தில் முதற் பரிசுபெறும் ஒரு தந்தைக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசாகவும், இரண்டாவது பரிசு பெறும் இரு தந்தைகளுக்கு ரூ. 500 விதம், ரூ. 1,000 ரொக்கப் பரிசாகவும், மூன்றாவது பரிசு பெறும் நான்கு தந்தைமார்களுக்கு ரூ. 250 விதம் ரூ. 1,000 ரொக்கப் பரிசும், நான்காவது பரிசு பெறும் பத்துத் தந்தைமார்களுக்கு ரூ. 100 விதம் ரூ. 1,000 ரொக்கப் பரிசும் ஆக மொத்தம் ஒரு கோட்டத்தில் ரூ. 4,000 அளவிலான ரொக்கப் பரிசுகள் தந்தைமார்களுக்கு வழங்கப்படும் என அறிவித்திருந்தார். மதுரை

மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கோட்டத்திலும் இப் பரிசுத் திட்டம் செயல்படுத்தப் பட்டது. நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, ஈட்டுத் தொகை வழங்கி, முனைப்பு இயக்கம் செயல்படுத்தப் பட்டதோடு ஏறத்தாழ அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் வேட்டி துண்டு வழங்கின. கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மலைவாழ் மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு கம்பளி வழங்கியது.

### பரிசுத் திட்டம்

மாவட்டம் முழுமைக்குமான இப்பொதுப் பரிசுத் திட்டம் தவிர, ஊராட்சி ஒன்றியங்களும் பரிசுத் திட்டங்களை அறிவித்து, தம் வட்டாரத்துத் தந்தைமார்களிடையே ஊக்க மூட்டி அறுவைச் சிகிச்சை ஏற்கச் செய்துள்ளன. சிறப்பாகச் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தந்தைமார்களிடையே பரிசுக் குலுக்கல் நடத்திப் பரிசு பெறும் ஒரு தந்தைக்கு ரூ. 1,500 மதிப்புடைய கட்டை வண்டியும், இரு மாடுகளும் பரிசாக வழங்கப்படும் என அறிவித்திருந்தது. மேலும் இந்த ஊராட்சி ஒன்றியம், சிறு குடும்ப நெறிக்கு ஏற்பத் தன் குடும்பத்தை அளவானதாக அமைத்து ஆனந்தமான குடும்பமாக விளங்கும் —முப்புரம் எரித்த விரிசடைக் கடவுள்— முழு முதற்கடவுள் எனச் சொல்லப்படும், சிவபெருமானின் குடும்பத்தை விளக்கும் சித்திரத்தோடு, 1973-ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியை அச்சிட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் வழங்கியுள்ளது. திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் ரூ. 1,500 பெறுமானமுள்ள கறவை மாடு, பரிசுக் குலுக்கலின் மூலம் பரிசு பெறும் ஒரு தந்தைக்கு வழங்கப்படும் என அறிவித்திருந்தது. அதேபோல் சேடப்பட்டியில் ஆடுகள் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டிருந்தது. பரிசு பெறும் தந்தைமார்களுக்குக் கோழிப் பண்ணை வைத்துக் கொடுப்பதாகவும் சில ஒன்றியங்கள் அறிவித்திருந்தன.

### முன்னோடி நல்வாழ்வு நிலையம்

திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்கான நல்வாழ்வு நிலையம் செக்கானூரணி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அமைக்கப் பட்டிருந்தது. தஞ்சை மாவட்டப் பாணியில் நல்வாழ்வு நிலையம் ஒன்று செயல் பட்டதோடு, 'முன்னோடி நல்வாழ்வு நிலையம்' (Pre-Health Centre) ஒன்றும் இங்குச் செயல்படுத்தப்பட்டது. செய்தியாளர்கள் உட்பட அனைவரின் கவனத்தையும் ஈர்த்து விட்ட 'முன்னோடி நல்வாழ்வு நிலைய' முறை சென்ற ஆண்டு பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் பிறந்த ஒன்றாகும். 1971–72-ஆம் ஆண்டு நடந்த முனைப்பு இயக்கத்தின் போது மிகுந்த பிற்பட்ட சமுதாயமான 'பிரமலைக் கள்ளர்' இனத்தைச் சார்ந்த மக்கள் வாழும் இப்பகுதியில் 94 தந்தைமார்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது. மிகுதியான முயற்சிக்குப் பின் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கென ஒப்புதல் அளித்து வந்திருந்த 14 தந்தைமார்கள், கடைசி நேர மனமாற்றத்தால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாமலே திரும்பி விட்டனர். இதைத் தடுத்திட வழி என்ன என்ற சிந்தனையிலேயிருந்து உதித்ததுதான் 'முன்னோடி நல்வாழ்வு நிலை முறை' யாகும்.

### சாதனை ஏற்படுத்திய ஒன்றியங்கள்

மதுரை மாவட்ட முனைப்பு இயக்கத்தில் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் 1,209 தந்தைமார்களுக்கும், கன்னிவாடி ஊராட்சி ஒன்றியம் 1,209 தந்தைமார்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்து மாவட்டத்திலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளன. பெரிய குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 'அம்மாவரம்' என்ற கிராமம் 25—2—1973-ஆம் நாள் வரையிலான புள்ளி விவரப்படி, தகுதி வாய்ந்த தம்பதியர்களில் 95 சதவீதம் பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்துள்ளது. அதையொட்டிக் கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வில்பட்டி என்ற கிராமமும், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தங்களாச்சேரி என்ற கிராமமும், தங்கள் தங்கள் ஊரில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவருக்கும்—நூறு சதவிகிதத்தினருக்கும் அறுவைச் சிகிச்சை செய்து முடிக்கப் பாராட்டத் தக்க வகையில் முனைந்து முயற்சித்துக் கொண்டிருந்தன.

### பரிசளிப்பும் பாராட்டும்

மதுரை மாவட்டத்தில் குடும்பநல முனைப்பு இயக்கம் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாமும் நடந்தது. திண்டுக்கல் 'அங்கு நகரில்' நடைபெற்ற கண் சிகிச்சை முகாமின் நிறைவு விழா 16—2—1973-ஆம் நாள் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, சிகிச்சை பெற்றவர்களுக்குக் கண்ணாடி வழங்கினார்கள். மேலும் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தையொட்டி ஊராட்சி ஒன்றியங்கள் அறிவித்திருந்த பரிசுப் பொருள்களை வெற்றி பெற்ற தந்தைமார்களுக்கு வழங்கினார். செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் அறிவித்திருந்த ரூ. 1,500 பெறுமான கட்டை வண்டி, இரு மாடுகள் ஆகியவற்றை வழங்கியதன் அடையாளமாகச் சதங்கையும், சாட்டையும் கொண்ட 'பிளாஸ்டிக்' பையைப் பரிசு பெற்ற தந்தைக்கு வழங்கினார். திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அறிவித்திருந்த ரூ. 1,500 பெறுமான கறவை மாட்டை வழங்கியதன் அடையாளமாகப் 'பால்கறக்கும் பாத்திரம்' கொண்ட பிளாஸ்டிக் பையைப் பரிசு பெற்ற தந்தைக்கு வழங்கினார். திண்டுக்கல் கோட்டத்திலேயே முனைப்பு இயக்கத்தில் முதலிடம் பெற்றுள்ள பழனி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. வேலப்ப நாயுடு அவர்களுக்கும், ஆயிரத்துக்கும் அதிகமான தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்த மதுரை மாநகராட்சி மேயர் திரு. முத்து அவர்களுக்கும் பொன்னாடை போர்த்திப் பாராட்டிப் பேசினார்கள்.

### மாவட்டத்தின் சாதனை

மதுரை மாவட்டம் 16—1—1973-ஆம் நாள் முதல் 28—2—1973-ஆம் நாள்வரை நடத்தி முடித்த குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தில் 22,504 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்து, 20 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்திட வேண்டுமென்ற இந்திய அரசு கொடுத்த இலக்கையும் மீறிப் பெருஞ் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. 'முன்னோடி நல்வாழ்வு நிலைய' முறையை அறிமுகப்படுத்தியுள்ள மதுரை மாவட்டம், 1972–73-ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலேயே முனைப்பு இயக்கத்தை இறுதியாக நடத்தி இலக்குமீறிய வெற்றியை ஈட்டி நிறைவு செய்து வைத்துள்ளது!



# கண் சிகிச்சை முகாம் நிதி



| | |
|---|---|
| முந்திய இதழின்படி ரூ. | 43,48,084·00 |
| **30–12–1972** | |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 688·00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 2,400·00 |
| **2–1–1973** | |
| பத்திரப் பதிவுத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், சென்னை. | 250·00 |
| திரு. கே. நடேசன், கூட்டுறவு வட்டார வளர்ச்சி அலுவலர், மாயூரம். | 25·00 |
| **5–1–1973** | |
| திரு. கே. பி. பாண்டியன், செயலாளர். | 5·00 |
| **8–1–1973** | |
| டாக்டர் எப். டி. வில்சன், ஜி.எம்.விவி. பி. வி. எஸ்சி. மண்டலக் கால் நடை வளர்ப்புத் துணை இயக்குநர். | 8·00 |
| **9–1–1973** | |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம். | 3,525·00 |
| தமிழ்நாடு மின்வாரியக் கணக்காளர்கள் சங்கம் 8–1–73 அன்று மாநில முதல் மாநாட்டின் போது முதலமைச்சரிடம் வழங்கியது. | 2,501·00 |
| திரு. எஸ். பாண்டுரங்கம், தலைவர், அனைத்துலக சைக்கிள் ரிக்ஷா முன்னேற்றக் கழகமும், ரிக்ஷா தொழிலாளர் சங்கத் தலைவர், திரு. எஸ். கணேசன் அவர்களும், சென்னை. | 5·00 |
| **10–1–1973** | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலகம், சேலம்-1. | 100·00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 310·00 |
| வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளர், வேலூர். | 353·00 |
| **11–1–1973** | |
| மெஸர்ஸ் முத்துஓயின்ஸ், அரக்கோணம். | 101·00 |
| **17–1–1973** | |
| இராமநாதபுர மாவட்ட ஆட்சியாளர், மதுரை. | 522·00 |
| மீன்வளத் துறை இயக்குநரின் நேர்முக உதவியாளர், சென்னை-6. | 120·00 |
| பத்திரப் பதிவுத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், சென்னை-1. | 355·00 |
| அசோக் நகர் சேரிவாழ்வோர் சங்கம், சென்னை-29. | 51·00 |
| திரு. கே. கல்யாணசுந்தரம், 38, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1. | 65·00 |
| திரு. துரைவேல், முதல்டிவிஷன் .. | 1·00 |
| **19–1–1973** | |
| மண்டலக் கால்நடை வளர்ப்புத் துணை இயக்குநர், சென்னை | 10·00 |
| ஷை | 25·00 |
| சேலம் மாவட்ட திருச்செங்கோடு கூட்டப் பள்ளி, கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர். | 60·00 |
| உதகை அரசினர் கலைக் கல்லூரி முதல்வர். | 1,000·00 |
| **20–1–1973** | |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சை. | 1,000·00 |
| **22–1–1973** | |
| உதவி வேளாண்மைப் பொறியாளர் (பிரைவேட் டியூப் வெல்ஸ் திட்டம்), விழுப்புரம். | 27·25 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளர், கடலூர். | 4,204·00 |
| **23–1–1973** | |
| திரு. மாரியப்பன், தி.மு.க. வட்டச் செயலாளர், கள்ளக்குறிச்சி, தென்னார்க்காடு. | 100·00 |
| திரு. சுப்பிரமணியம், மே/பா. நாச்சியப்பன், எம். எல். ஏ., சங்கராபுரம், தென்னார்க்காடு. | 5·00 |
| **24—1—1973** | |
| பத்திரப்பதிவுத்துறைத் தலைமை ஆய்வாளர், சென்னை-1. | 155 00 |
| **27—1—1973** | |
| திரு. ஓடியன் மணி, சென்னை-2. | 1,001 00 |
| இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 32 80 |
| திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. | 75,601 00 |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், கோயம்புத்தூர் .. .. | 266 00 |
| ஷை | 52 00 |
| **29—1—1973** | |
| திரு. கே. வி. கே. சாமி படிப்பகம், சென்னை, (நல்வாழ்வு அமைச்சர் மூலமாக) .. | 27 00 |
| வேளச்சேரிப் பொது மக்கள், (நல்வாழ்வு அமைச்சர் மூலமாக) .. .. .. | 5 00 |
| தமிழ்நாடு அரசு மருந்தாளுநர் கழகம், சென்னை .. .. | 303 00 |
| சென்னை நகரசபைச் சுகாதார அலுவலர்கள் .. .. | 555 00 |
| வேலூர், மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர். | 45 00 |

# வழங்கியோர் பட்டியல்

| | | |
|---|---|---|
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், தஞ்சாவூர் .. | 115 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் .. | 1,650 | 00 |
| துணைப் பதிவாளர், மேட்டூர், இருப்பு, சேலம் .. | 30 | 00 |
| அரிசன நல இயக்குநர், சென்னை-5 .. | 71 | 00 |
| 30—1—1973 | | |
| வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் .. | 10,222 | 00 |
| 2—2—1973 | | |
| நகரசபை திருவாக இயக்குநர், சென்னை-1 .. | 69 | 00 |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் .. | 2,856 | 74 |
| 5—2—1973 | | |
| 4—2—1973 அன்று புதுவையில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் உண்டி மூலமாக | | |
| புலவர் பிச்சை குழந்தைசாமி. | 10 | 00 |
| கவிஞர் புதுவை மறவன் .. | 2 | 00 |
| புலவர் அரிமதி தென்னகன் .. | 2 | 00 |
| மார்டின் இராயன், பி.ஏ., பி.டி. | 2 | 00 |
| 6—2—1973 | | |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் .. | 515 | 00 |
| சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் .. | 4,146 | 00 |
| முதல்வர், இராசேசுவரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரி, செங்கற்பட்டு .. | 189 | 00 |
| தென்காசித் துணைப்பதிவாளர். | 850 | 00 |
| 6—2—1973 | | |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், தஞ்சை .. | 260 | 00 |
| 7—2—1973 | | |
| திருமதி இராசேசுவரிநடராஜன், சென்னை-20 .. | 101 | 00 |
| 9—2—1973 | | |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், சேதுபாவாச்சத்திரம், தஞ்சை | 475 | 00 |
| 10—2—1973 | | |
| திரு. டி. கிருஷ்ணமூர்த்தி, விசுவநாத் டிரேடிங் கம்பெனி, புதுப்பேட்டை, சென்னை .. | 2 | 01 |
| 12—2—1973 | | |
| இயக்குநர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை .. | 13 | 00 |
| திரு. கெ. அப்துல் ரகிம், சென்னை-3 .. | 250 | 00 |
| கிருஷ்ணாபுரம் கூட்டுறவு வேளாண்மை வங்கி லிட்., கிருஷ்ணாபுரம் .. | 50 | 00 |
| 13—2—1973 | | |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணைஇயக்குநர், தஞ்சை .. | 242 | 00 |
| 15—2—1973 | | |
| மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை .. | 1,199 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் .. | 380 | 15 |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், திருநெல்வேலி .. | 101 | 00 |
| திரு. கிட்டப்பா, எம்.எல்.ஏ. .. | 42 | 00 |
| 16—2—1973 | | |
| சென்னை கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர் .. | 10 | 00 |
| உதவிப் பதிவாளர், மயிலம் .. | 60 | 7[illegible] |
| 17—2—1973 | | |
| திரு. எஸ். சி. கிருஷ்ணன், செயலர், தமிழ்நாடு சென்னை, அண்ணாசாலை மின்தொழிலாளர் சம்மேளனத் தொழிலாளர் சார்பில் .. | 1,001 | 00 |
| 19—2—1973 | | |
| திரு. சோ, துக்ளக் ஆசிரியர், சென்னை-2. .. | 5 | 00 |
| செயலாளர், தமிழ்நாடு பதிவு பெறு அலுவலர் சங்கம், செங்கற்பட்டு .. | 101 | 00 |
| துணைப் பதிவாளர், மேட்டூர் இருப்பு, சேலம் .. | 290 | 00 |
| 20—2—1973 | | |
| கோட்டப் பொறியாளர், புதுக்கோட்டை .. | 11 | 00 |
| இயக்குநர், நகர அமைப்புத் திட்டம், சென்னை .. | 37 | 00 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் .. | 23,436 | 00 |
| 21—2—1973 | | |
| தமிழ்நாடு மின்வாரியம் கிடங்குப் பணியாளர் .. | 20 | 00 |
| இராயபுரம் பொதுக்கூட்டத்தில் தியாகராயக்கல்லூரி தி.மு.க. மாணவர்கள் முதல்வரிடம் கொடுத்தது. | | |
| சின்னமணி .. | 2 | 00 |
| 64 ரிக்ஷாத் தொழிலாளர்கள் | 15 | 00 |
| இராஜேந்திரன். | 1 | 00 |
| கேசவன் .. | 2 | 20 |
| இராமகிருஷ்ணப் பள்ளி மாணவன். | 2 | 00 |
| திரு. இராசுச் செட்டியார் | 10 | 00 |
| 4-ஆம் வட்ட அவைத் தலைவர் .. | 30 | 00 |
| திரு. இராசு .. | 1 | 00 |
| திரு. சுந்தரம் .. | 1 | 00 |
| கிருஷ்ணன் .. | 1 | 00 |
| 21—2—1973 | | |
| பொறிப்படகுத் தொழிலாளர் சங்கம் | 10 | 00 |
| செல்வி குமாரி .. | 1 | 05 |
| திரு. இராசு .. | 1 | 00 |
| திரு. கே. பானு—8-வது வட்டம் | 5 | 00 |
| பட்டுக்கோட்டைப் பொதுக் கூட்டத்தில் முதல்வரிடம் கொடுத்தது. | | |
| திரு. கோவிந்தராஜு, பட்டுக்கோட்டை .. | 101 | 00 |
| பட்டுக்கோட்டைப் பொதுக் கூட்டத்தில் உண்டியல் வாயிலாக .. | 7 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பணியாளர், கும்பகோணம் .. | 101 | 00 |
| மின்வாரிய அலுவலர் மாநாட்டில் வழங்கியது .. | 29 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியத் தலைமைச் செயலக அலுவலர் சங்கம் .. | 1,001 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர்கள் சங்கம் .. | 101 | 00 |
| மொத்தம் .. | 44,04,183 | 34 |

# உசிலம்பட்டியில் ஒப்பற்ற பணிகள்

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 17 ஊராட்சி மன்றங்களும், ஒரு பேரூராட்சி மன்றமும் இயங்கி வருகின்றன. 1971-ஆம் ஆண்டு மக்கள் கணிப்பின்படி மக்கள் தொகை 79,337 ஆகும். 18 உறுப்பினர்களும் அறுவர் நியமன உறுப்பினர்களாகவும் உள்ளனர். அறுவரில் மூவர் பெண்கள். மற்ற மூவரும் அரிசன உறுப்பினராவர். இந்த ஊராட்சி ஒன்றியக் குழுவில் எவ்வித இடர்ப்பாடுமின்றிச் சிறப்பாக இயங்கி வருகின்றது.

ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உசிலம்பட்டி (திம்மநத்தம்) உத்தப்பநாயக்கனூர்—பேரணைச் சாலையும் சீரிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டுப் பேருந்துப் போக்குவரத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. 18 பள்ளிக்கட்டடங்களும், 30 இணைப்புச்சாலைகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இணைப்புச்சாலை இல்லாததாய்க் கிராமம் எதுவுமில்லை. சொந்தமாகப் பள்ளிக் கட்டடம் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளியும் எதுவுமில்லை.

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய வறட்சியான பகுதியாகும். பாசனக் கிணறுகள் மூலம் பெரும்பாலும் வேளாண்மைப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மானாவாரி—பயிர்கள்தான் பெருமளவு பயிரிடப்படுகின்றன. 1967 முதல் 1971 முடிய 2,66,500 செலவு செய்யப்பட்டுள்ளது. 1967 முதல் 1971 முடிய விவசாயிகளுக்கு ரூ. 1,53,000 மதிப்புள்ள விதைகள் வழங்கப்பட்டுள்ளன. எழுபது விவசாயிகளுக்கு ரூ. 22,500 மதிப்புள்ள நவீன மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கப்பட்டன. ரூ. 51,000 மதிப்புள்ள நவீன விவசாயக் கருவிகள் 350 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு புதிய உழவு இயந்திரம் வாங்கப்பட்டு ஆயிரக் கணக்கான ஏக்கரில் உழவுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தழை உரக் குச்சிகள் பெருமளவு பயிரிடப்பட்டு வருகின்றன. உரப் பெருக்குத் திட்டம் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஊர்நல உதவியாளர்களுக்கு நவீன வேளாண்மைக் கருவிகள் பல வழங்கப்பட்டுள்ளன.

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளி வயதடைந்த பள்ளிப் பிள்ளைகள் அனைவரும் கடந்த ஐந்தாண்டுகளில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். 35 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 128 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 13 ஆசிரியைகளுக்கான குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இரண்டு சிரணி அறிவகங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. சிரணிப் படையில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் 3 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டவும், 4 சாலைகளைச் செப்பனிடவும், 4 புதிய சாலைகள் அமைக்கவும் உதவி செய்துள்ளனர்.

மகளிர் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் உசிலம்பட்டியில் குழந்தைகள் காப்பகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. இந்த ஒன்றியத்தில் 30 மகளிர் மன்றங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

1967 முதல் 1971-ஆம் ஆண்டுவரை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நீண்ட காலக் கடன் வழங்கியது ரூ. 5,82,435. குறுகியக் காலக் கடன் வழங்கியது ரூ. 22,77,740.

**கூட்டுறவு இயக்கச் சாதனைகள்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் செயல்பட்டு வந்த கள்ளர் கூட்டுறவுச் சங்கங்களின் 32 சங்கங்கள் இணைக்கப்பட்டு 12 பெரிய விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களாக இயங்கி வருவதைச் சேர்த்து இவ்வட்டாரத்தில் 18 தனித்து இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஒரு கூட்டுறவு விவசாய வங்கி செயல் புரிந்து வருகிறது. ஒரு வீடு கட்டும் சங்கம் உசிலம்பட்டியில் பணியாற்றி வருகிறது. 4 சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ஆகியோருக்கு முறையே ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் செயலாற்றி வருகிறது. அரசுப் பணியாளர்களுக்கு என்றே ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை உசிலம்பட்டியில் இயங்கி வருகிறது.

மானாவாரி நிலங்களில் புதிய கிணறுகள் வெட்டித் தோட்ட நிலங்களாக மாற்றி, விவசாய விளைபொருள்களைப் பெருக்கவும், கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும் நீண்ட காலக்கடன் வழங்குவதற்கு இங்கு ஒரு நிலவள வங்கி 5—7—1968 முதல் செயலாற்றி வருகிறது. இது வரை உசிலம்பட்டி நிலவள வங்கி மூலம் உசிலம்பட்டி வட்ட விவசாய மக்களுக்கு நீண்ட காலக்கடன் 57,88,000 வழங்கப்பட்டுள்ளது.

மக்களிடையே சமுதாய ஒத்துழைப்புப் பெருகிடவும், கூட்டுப் பொறுப்பு வளர்ந்திடவும், முக்கியமாகச் சிறு விவசாயிகள் பெரிதும் பயனடையவும், தரிசு நிலங்களைத் தோட்ட நிலங்களாக மாற்றுவதென்ற அடிப்படையில் இங்கு 6 கூட்டுறவு இறைவைப்பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. எம். பாரைப்பட்டி கிராமத்தில் 9 புதிய கிணறுகள் வெட்டி, கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்க அங்கத்தினர்கள் பயனடைய நீண்ட காலக்கடன் வழங்கிட,



உசிலம்பட்டியிலுள்ள பிரமலைக் கள்ளர் சீரமைப்பு பெண்கள் தையற்பள்ளி.

ரூ. 3,25,100க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது போன்று திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு இங்கு ஒரு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையம் துவக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள் வருமானத்தைப் பெருக்கிட ஆடு வாங்குவதற்கு 40 கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு ரூ. 80,000 1971–72-ஆம் ஆண்டில் மத்திய காலக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேளாண்மைக் காலத்தில் பயிருக்குத் தக்கவாறு குறுகிய காலக்கடன் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. 1971-72-ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் குறுகிய காலக்கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

### கிராமத் தொழில்கள்

கிராமக்கலை கைவினைத் தொழில் திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் உசிலம்பட்டியில் 1—4—1965 முதல் 23—10—1965 முடிய தச்சுத் தொழில் பயிற்சி நிலையமாகவும், 24—10—1965 முதல் தொடர்ந்து இவ்வூராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ்த் தச்சுத் தொழில் உற்பத்தி நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது.

அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளுக்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள் மற்றும் அலமாரிகள் போன்ற மரத்தளவாடச் சாமான்கள் தச்சு உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. கடந்த 1968 முதல் 1972 முடிய ரூ. 1,15,000 மதிப்புள்ள மரத்தளவாடச் சாமான்கள் தயாரிக்கப்பட்டுப் பல்வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மற்றும் இவ்வூராட்சி ஒன்றியத்தின் சார்பில் விவசாய அடிப்படையில் ரூ. 1,00,000 மதிப்பீட்டில் ஒரு சேம்பர்-செங்கல் சூளைத் தொழில் தொடங்கும் திட்டமும் உள்ளது.



ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சு நாட்டுச் சர்வாதிகாரி நெப்போலியனுக்கும் தீவிரமான முறையில் போர் நடந்து கொண்டிருந்தது. இரு திறத்திலும் கணக்கற்ற வீரர்கள் மடிந்தார்கள். எப்படியோ, சில நாட்களுக்குள் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டுப் போர் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனாலும் பிரான்சில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளை நெப்போலியன் விடுதலை செய்யவில்லை. " எங்களைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புங்கள்", என்று அந்தக் கைதிகள் நாள்தோறும் எழுப்பிய வேண்டுகோள்களை எல்லாம் நெப்போலியன் மறுத்து வந்தான்.

ஒரு நாள்..........

" ஆங்கிலக் கைதிகளை எல்லாம் அருள் கூர்ந்து விடுதலை செய்யுங்கள் " என்று ஒரு தனி நபர் வேண்டி எழுதியிருந்த கடிதத்தை, நெப்போலியனிடம் வாசித்தாள் அவனது மனைவி ஜோஸப்பைன். எழுதியவரின் பெயரை அவள் வாசித்தவுடன் நெப்போலியனின் மனம் நெகிழத் தொடங்கிவிட்டது.

" இந்தப் பெயருடைய மனிதரின் வேண்டுகோளை நாம் எந்த வகையிலும் புறக்கணிக்க முடியாது"..........—என்று வாய் விட்டுக் கூறினான் நெப்போலியன்.

பயங்கர சர்வாதிகாரியென்று கூறப்பட்ட நெப்போலியனே, மனப்பூர்வமாய் மதித்துப் போற்றும் அளவுக்குப் புகழ் பெற்றிருந்த அந்த மனிதர் யார் தெரியுமா !

அவர்தான்....

அம்மை நோய்க்கு மருத்துவம் கண்டு பிடித்த டாக்டர் எட்வர்டு ஜென்னர் !





# வால்பாறை நகரியமே ஊராட்சி ஒன்றியம்!

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள வால்பாறை நகரியம் மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இங்குக் காஃபி, தேயிலைத் தோட்டங்களும், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான கொயினாத் தோட்டமும் உள்ளன. தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான விளைநிலங்கள் இங்குக்கிடையாது. இந்த நகரியத்தின் பரப்பளவு 152 சதுர மைல் ஆகும். இதன் மக்கள் தொகை 92,609. வால்பாறை ஒரு துணை வட்டமாகவும் ( Sub-Taluk ) இயங்கி வருகிறது. அரசு அலுவலர்களையும், வியாபாரிகளையும் தவிர ஏனையவர் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களே. இவர்களில் பெரும்பாலோர் கோவை, திருச்சி, மதுரை, இராமநாதபுர மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களாவர்.

வால்பாறை நகரியமாகவும், ஊராட்சி ஒன்றியமாகவும், இயங்கி வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு ஊர் மட்டுமே உள்ளது. அது வால்பாறையே! அதுவும் நகரியமாக உள்ளது. வால்பாறை ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே பொறுப்பு ஏற்று நடத்தி வருகிறார். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த வால்பாறை பகுதி விரைந்து வளர்ந்து வருகிறது.

வால்பாறை மலைப்பகுதியில் வால்பாறை நகரமே வியாபாரச் சிறப்பு மிக்கதோர் நகரமாகும். தொழிலாளர்கள் தங்கள் விடுமுறை நாட்களாகிய ஞாயிறு தோறும் வால்பாறைக்கு வந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்கின்றனர். வால்பாறையில் ஒரு நாளங்காடியை (Market) ரூபாய் 17·5 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டும் வேலைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 30—4—1972 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார்கள். வெள்ளிவிழாச் சுதந்தர நாள் வேலையாக இந்த வேலை மேற்கொள்ளப்பட்டு வெகுவிரைவாக நடைபெற்று வருகின்றது. பழைய நாளங்காடியில் வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் தம் சொந்தச் செலவில் கடைகளைக் கட்டி வியாபாரம் தொடங்கிவிட்டனர். நாளங்காடியிலேயே குடியிருந்து வந்த சுமார் 70 வியாபாரிகளுக்குப் புதிய வீடுகள் கட்ட வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

வால்பாறையில் ஏராளமான அரசு அலுவலகங்கள் உள்ளன. இங்குள்ள அரசு அலுவலர்களுக்கும், அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கட்கும் வசிக்க வீடில்லாத காரணத்தால், அவர்கள் மனைவி மக்களைப் பிரிந்து தனித்து வாழும் நிலையைப் போக்குவதற்காக வாடகை வீடுகள் கட்டுவதற்கு அண்மையில் 3 ஏக்கர் நிலம் வீட்டு வசதி வாரியத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. வாடகை வீடுகள் கட்டித்தரும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டு வருகிறது.

வால்பாறை மலைப்பகுதியில் 6 மாதம் மழை பெய்யும். கொட்டும் மழையில் சின்னஞ்சிறு குழந்தைகள் அன்றாடம் நெடுந்தூரம் நடந்து சென்று படித்துவிட்டு, மீண்டும் வீடு திரும்பும் பரிதாப நிலை இருந்து வந்தது! இந்நிலையைப் போக்கச் சென்ற ஆண்டில் நகரியப் பொது நிதியிலிருந்து 20,000-ரூபாயைக் கல்வித் துறையினருக்குச் செலுத்திச் சோலையார் நகர், சின்கோனு ஆகிய இடங்களில் இரு புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இட நெருக்கடி காரணமாக வால்பாறை உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் ' ஷிப்டு ' முறையில் அரைநேரப் படிப்புப் படித்து வந்தனர். சென்ற ஆண்டில் இரு புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறந்த காரணத்தாலும், நடப்பு ஆண்டில் இரு நடுநிலைப் பள்ளிகள் திறக்கப்பட்ட காரணத்தாலும், ' ஷிப்டு ' முறை மாறி, முழு நேரம் படிக்க வசதி ஏற்பட்டுள்ளது.

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தவறிய மாணவர்கள் இதுவரை 64 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பொள்ளாச்சிக்குச் சென்று தேர்வு எழுதி வந்தனர். அடுத்த ஆண்டு முதல் இவர்கள் வால்பாறையிலேயே தேர்வு எழுத வகை செய்யப்பட்டுள்ளது.

வால்பாறையில் ஒரு கலைக் கல்லூரி துவக்குவதற்குத் தேவையான 5 இலட்சம் ரூபாயை நன்கொடையாக வசூல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பன்னெடுங் காலமாக இத்தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றிய தொழிலாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், இவர்கள் வால்பாறையைத்

தங்கள் சொந்த ஊராகவே கருதி வருகின்றனர். இவர்கள் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிடவும், வீடுகள் கட்டிக் கொள்ளவும், வால்பாறை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையினரிடமிருந்து வீட்டு மனைகளைப் பெற்றுச் சங்கத்தைப் பதிவு செய்து வீடு கட்டும் வேலையைத் துவக்கத் தீவிரமாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

வால்பாறை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வீட்டுக் காய்கறி மற்றும் பழத்தோட்டங்கள் அமைத்திட மானிய விலையில் காய்கறி விதைகளும், பழச்செடிகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கோழி வளர்ப்பதற்காக மானிய விலையில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படுகின்றன. இங்கு

---

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 4,11,03,125. ஆகும். ஆண்கள் 2,07,72,549; பெண்கள் 2,01,30,576 பேர். படித்தவர் தொகை 1,61,89,712 பேர். இவர்களில் ஆண்கள் 1,07,34,758 பேர் ; பெண்கள் 54,44,954 பேர். மொத்தம் படித்தவர்கள் தொகை 39.39 சதவீதம். இவற்றில் ஆண்கள் 51.68 சதவீதம்; பெண்கள் 26.83 சதவீதம்.

---

' சிந்தி ' இன மாடுகள் வளர்க்கப்படுகின்றன. சென்ற ஆண்டில் 13 ' சிந்தி ' பொலி காளைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப் பட்டுள்ளன. சென்ற ஆண்டில் வால்பாறை நகரிலுள்ள சாலைகளுக்குத் தார் போடப்பட்டது. ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு நடப்பு ஆண்டிலும் தார் போடப்பட்டு வருகிறது.

வால்பாறையில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வால்பாறை நகரிய நிதியிலிருந்து ஒரு திரையரங்கம் கட்டும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

நகரியத்தாலும், ஊராட்சி ஒன்றியத்தாலும் இம்மலைப் பகுதியின் வளர்ச்சிக்கு இன்னும் பல வழிகளில் ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

# கிராமங்களில் டெலிவிஷன்



டில்லியிலுள்ள தொலைக் காட்சி வசதிகளை வலுப்படுத்தவும், ஐந்து புதிய இடங்களில்—குறிப்பாக, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற இடங்களில்—தொலைக் காட்சி வசதிகளை விரிவாக்கவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது. 1973—74-ஆம் ஆண்டில், இந்தியா முழுவதும் துணைக் கோள் மூலம் தொலைக்காட்சி ஆய்வு (Satellite Instructional Television Experiment) மேற்கொள்ள அணுசக்தி ஆணைக் குழு ஏற்பாடு செய்துள்ளது. இதனால், அமெரிக்க நாட்டிலுள்ள ' நாசா ' ( NASA ) விலிருந்து வான துணைக்கோள் ( Sky Satellite ) ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டு நாகபுரியில் நிறுவப்படும். இதனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளும் நன்றாகக் கண்டு களிக்க முடியும்.

நாட்டின் பல்வேறு ஒருங்கிணைந்த பகுதிகளில், குறிப்பாக, ஊர்ப்புறங்களில் சுமார் 5,000 தொலைக்காட்சிக் கருவிகளை அணுசக்தி ஆணைக்குழு நிறுவும். தொலைக்காட்சி மூலம் விளைந்துள்ள நன்மைகளை வருங்காலத்தில் கண்டறிவது ஒருபுறமிருக்க, மக்களின் அன்றாட நிலையையும் மக்களின் வாழ்க்கையையும் உயர்த்தத் தொலைக்காட்சி பெரிதும் பயன்படும்.

தொடக்கமாகச் சென்னை மாநகரிலும், அதனைச் சார்ந்துள்ள அண்மை மாவட்டங்களிலும், வருங்காலத்தில் மாநில முழுவதிலும் தொலைக் காட்சிக் கருவிகளை நிறுவுவதற்கான திட்டப்பணிகள் பலவற்றைச் சேர்த்து, ஒருங்கிணைக்கும் வழி முறைகளைக் கூறுதற்கென " ஊரக தொலைக் காட்சிக் குழு " ஒன்றை அரசு அமைத்துள்ளது. அக்குழுவில் கீழ்க்காணும் எண்மர் உறுப்பினராவர்.

தலைவர் :—

1. அரசுத் தலைமைச் செயலாளர்.

உறுப்பினர்கள் :—

2. அரசுச் செயலாளர், [illegible] வளர்ச்சி—உள்ளாட்சித் துறை.

3. அரசுச் செயலாளர், [illegible] துறை.

4. அரசுச் செயலாளர், [illegible] துறை.

5. செய்தி, மக்கள் தொட[illegible] இயக்குநர், பொதுத் (செய்[illegible] மக்கள் தொடர்பு) துறை.

6. ஊரக வளர்ச்சி இயக்கு[illegible]

7. வானொலி தலைமை [illegible] வலர்-ஊராட்சி வானொலிப் பராமரிப்பு நிறுவனம்.

8 மக்கள் தொடர்பு அலுவலர், ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித்துறை—அமைப்பாளர்.

" ஊரகத் தொலைக் காட்சிக் குழு " தேவையெழும் போதெல்லாம் கூட்டப்படும். துவக்கக் கட்டமாகச் சென்னை மாநகரிலும் அதனைச் சார்ந்துள்ள அண்மை மாவட்டங்களான வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், வருங்காலத்தில் மாநில முழுவதிலும் தொலைக் காட்சிக் கருவிகளை நிறுவுவதற்குத் தேவையான வழி முறைகளை இக்குழு ஆய்ந்து கருத்துக்களை வழங்கும்.









குழந்தையும் அறியுமே!
தமிழ்நாடு பரிசுச் சீட்டு
தன்மையில் சிறந்தது!

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

54-வது குலுக்கல் நாள்

10-4-1973

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.


பதிவு எண். M. 8676




## வானவில்லைக் காணவேண்டுமா ?

சென்னையில் கூவம் ஆற்றில் வைக்கப்பட்டுள்ள புதிய நீரூற்று ஆசியாவிலேயே மிக உயரமான நீரூற்று ஆகும்.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஆலே நகரத்து மேயர் அன்பளிப்பாக அளித்த இந்த நீரூற்று 174 குதிரைச் சக்தி கொண்ட மோட்டாரினுல் இயங்குகிறது. அண்மையில் சோதனைக்காக இந்த நீரூற்றை இயக்கிப் பார்த்தபொழுது ஏறத்தாழ 240 அடி உயரம் வரை தண்ணீர் மேலே சென்றது. நீரூற்றின் அடிப்புறத்திலுள்ள தொட்டியின் உள்ளே 16 விளக்குகள் பொருத்தப்படும்.

கூவம் கரையில் மூன்று புறங்களிலிருந்து 120 டிகிரியில் நீரூற்றை நோக்கி 2,000 வாட் விளக்குகள் பன்னிரண்டு பொருத்தப்படும்.

படகுகளில் கூவத்தைச் சுற்றிவரும் போது பகலில் இந்த நீரூற்று இயங்கினுல், மேலிருந்து கீழே சிதறி விழும் நீர்த்திவலைகளின் மீது, கதிரவனின் ஒளிக் கதிர்கள் ஊடுருவுவதால் வானவில்லைக் காணலாம் பலவித அளவுகளில் !


தமிழரசு

மலர் 3 16-4-1973 இதழ்-20






# தமிழுக்கு

'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றார் பாவேந்தர் பாரதிதாசன்; அந்தத் தமிழ் அமுதின் தன்னேரிலாத இன்சுவையைத் துய்த்துணர்ந்தவர்கள் சாகாநிலை பெற்றவர்கள் என்றார் பாரதியார். தமிழாய்ந்த தமிழறிஞர்கள் — தமிழ்ப் பணி செய்த சான்றோர்கள் ஆகியோர் இதற்குத் தக்க சான்றுவர். இத்தகைய சான்றோருள் குறிப்பிடத்தக்க ஒருவர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள். பெயருக்கு முன்னுள்ள 'த' தஞ்சைத் தரணியைக் குறிக்கும்; தமிழைக் குறிக்கும் என்றாலும் தவறில்லை. அடுத்துள்ள 'வே' என்பது, தஞ்சை மாவட்டத்தில் தாசில்தாராகப் பணிபுரிந்த 'வேம்பப் பிள்ளை' அவர்களைக் குறிக்கும். தஞ்சைத் தரணியில் வாழ்ந்த வேம்பப் பிள்ளை அவர்களின் திருமகனாரே த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்.

உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், வழக்கறிஞர் பட்டம் பெற்று, வழக்கறிஞராகப் பணி புரிந்தார். அவ்வாறு, வழக்கறிஞர் பணிபுரிந்த போதும், வாய்மையே கடைப்பிடித்தார் அவர். வாய்மையினின்றும் தவறியதே இல்லை; ஆம், நாம் இன்று பாராட்டுகிற உலக உத்தமர் காந்தியார் போலவே, இவரும் வாய்மை தவறாத வழக்கறிஞராக விளங்கினார்.

உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், தமிழ்ப் பற்றுடைய தகையாளராக விளங்கினார்; தமிழ் நூற்கள் பலவற்றையும் நுணுகிக் கற்று, ஆழ்ந்தகன்ற நுண்ணிய தமிழ்ப் புலமையுடையவராகத் திகழ்ந்தார். அதிலும், அவர், வேற்றுமொழி கலவாத-தனித்தமிழ்ப் பற்றுடையவராக மிளிர்ந்தார். தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் தக்க வகையில் ஆதரித்துப் பேணிப் பெருமை செய்தார். இவரது தன்னேரிலாத தமிழ்ப் புலமையும், தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் புரக்கும் புரவலர் பண்பினையும் தெள்ளிதின் உணர்ந்தோர் இவரைத் 'தமிழவேள்' என்றும், 'செந்தமிழ்ப் புரவலர்' என்றும் சிறப்புறப் பாராட்டி மகிழ்ந்தனர். முதன்முதலாகத் 'தமிழவேள்' என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற தமிழ்ப்பெருந்தகை உமா மகேசுவரம் பிள்ளை அவர்களே என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழவேள் அவர்கள் தஞ்சைத் தாலுகாபோர்டின் தலைவராகவும், தஞ்சை மாவட்டக் கழகத்தின் உறுப்பினராகவும், இடைக்காலத் தலைவராகவும் இருந்து ஆற்றிய பணிகள் அளப்பில. திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ்வித்துவான் வகுப்பு அமைப்பதில், தமிழவேள் பெரும்பங்கு கொண்டிருந்தார்.

தஞ்சைத் தரணியில் தமிழ்ப் புலவர்கள் பலரை உருவாக்கித் தந்து, தமிழ்வளர்க்கும் அரும் பணியைச் செவ்வனே ஆற்றி வருகிற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க நாள் தொட்டு, ஏறத்தாழ 30 ஆண்டுகள் வரை, தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் அச்சங்கத்தின் நிரந்தரத் தலைவராக இருந்து நிறை தமிழுக்கு நிகரற்ற பணியாற்றினார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், தமிழ்க் கல்லூரியொன்றை நிறுவிய பெருமை தமிழவேள் அவர்களையே சாரும். அவரது தன்னலமற்ற தமிழ்ப் பணியால் கரந்தைத் தமிழ்ச்சங்கம் பல்வகையாலும் கிளைத்துச் செழித்துச் வளர்ந்தது.

தமிழவேள் அவர்களின் அரவணைப்பில், கண்காணிப்பில் வளர்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்கம், இன்று 500-க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளியையும், 230 மாணவர்களுடன் இயங்கிவரும் புலவர் கல்லூரியையும், தமிழவேள் அவர்களின் பெயரால் நிறுவப்பெற்ற 1,100 மாணவர்களைக் கொண்ட உமா மகேசுவர உயர்நிலைப் பள்ளியையும், புதிய முறைப்படி, 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடையேயுள்ள சிறுவர்களுக்குப் பயிற்சியளிக்கும் குழந்தைகள் இல்லத்தையும் ஏறத்தாழ 10,300 நூற்களைக் கொண்ட ஒரு நல்ல நூலகத்தையும், 50 மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து ஒழுக்கமும் கல்வியும் பயிற்றிக் காத்துவருகிற நிக்கற்ற மாணவரில்லத்தையும் மிகநல்ல முறையில் பேணிக் காத்து வருகிறது.



அடுத்து, தமிழ்மொழியின் வளமும் நலமும் கருதி, இற்றைக்கு 46 ஆண்டுகளுக்கு முன்பு 'தமிழவேள்' அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தொடங்கி வைத்த 'தமிழ்ப் பொழில்' தமிழ்மணம் கமழும் பூம்பொழிலாகச் சிறப்புற வெளிவந்து கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

இத்துணைச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அறுபதாண்டுப் பணிகளையும் எண்ணி வியந்து இன்புற்றுப் பாராட்டும் வகையில் 'மணிவிழா' நடைபெற இருப்பதும் அவ்விழாவின் போது, நன்றி பாராட்டும் வகையில் 'தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் விழா' நடைபெற இருப்பதும் அவ்விழாவின் போது, தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் திருவுருவத்தைத் திறந்து வைப்பதும் பெரிதும் மகிழ்ச்சிக்குரியது.

தமிழவேள் அவர்களின் பல்வேறு சொற்பொழிவுகளும் ஆய்வுக் கட்டுரைகளும் முழுதும் நமக்கும் கிடைக்கவில்லையாயினும், 'தமிழ்ப் பொழில்' இதழில் அவ்வப்போது வெளிவந்துள்ளவற்றையாவது நூலாகத் தொகுத்துத் தமிழுலகத்திற்குத் தருவது இன்றியமையாதது. இப்பணியைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம், மேற்கொண்டு செய்யுமாயின், சங்கத்தின் பணி மேலும் சிறக்கவும், தமிழவேளின் அரிய கருத்துக்கள் இன்றையத் தலைமுறையினர்க்கும், எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தினருக்கும் இனிய விருந்தாவதற்கு ஏதுவாகும்!

மணிவிழாக் காணும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் அணிசேர் புகழாடு நெடிது வாழ்க! தமிழவேள் அவர்களின் தன்னேரிலாப் புகழ் இத்தரணியில் என்றும் நின்று நிலவுக!

## முதல்வர் டாக்டர் கலைஞர்

மாநிலத்தில் தென்னை நார்த்தொழில் வளர்ச்சிக்காக அரசு, தென்னை நார்த் தொழிலாளர்களுக்கு இதுவரை சுமார் 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியுள்ளது; மெத்தை விரிப்புகள், பன்றி மயிர் தயாரிக்கும் முன்னோடி நிலையம் ஒன்று 1968 ஜூன் திங்களில் தென்காசியில் ஏற்படுத்தப்பட்டது. இத்தொழிற்சாலை 1968 ஜூன் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது. இத் தொழிற்சாலை, மருத்துவ மனைகளில் உள்ள தரை விரிப்புகளில் நிரப்புவதற்காகவும், ரப்பர் சேர்ந்த கயிற்றுப் பிரிவுகளுக்காகவும் கலப்புத் தென்னை நார்களை உற்பத்தி செய்து வருகிறது. இப்பிரிவு 1971-72-இல் 150 டன் தென்னை நார்களை உற்பத்தி செய்தது. 124 டன் தென்னை நாரினை விற்பனை செய்தது.

மாமல்லபுரத்தில் உள்ள சிற்பப் பயிற்சி நிலையம் வெங்கடேசுவரா பல்கலைக் கழக வளாவில் ரோடைன் சிந்தனையாளர் ( Rodine Thinker ) உருவச் சிலை நிறுவுவதற்கான பணியை அந்தப் பல்கலைக் கழகத்திடமிருந்து ஏற்றுக் கொண்டுள்ளது. பூம்புகார் கலைக் கூடத்தில் அமைக்கும் பொருட்டுச் சிலப்பதிகாரத்திலிருந்து சில காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் கற்சிற்பங்கள் குறித்த பணியினையும் இந்நிலையம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு கைவினைப் பணிகளுக்குப் பரவலான விளம்பரம் அளிக்கும் பொருட்டுத் தொழில்துறை 1972 பிப்ரவரியில் புதுடில்லியிலும், 1972 மே திங்களில் பம்பாயிலும் நடத்தப்பட்ட அனைத்திந்தியக் கைவினைப் பணிப் பொருட்காட்சிகளில் பங்கு பெற்றுள்ளது. பொருட்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்கள் வருகை தந்த பலரது நாட்டத்தை வெகுவாகக் கவர்ந்து அவர்கள் பாராட்டைப் பெற்றன. பொருள்களின் மொத்த விற்பனை டில்லியில் ரூ. 2,25,125·19. பம்பாயில் ரூ. 80,000 ஆகும்.

சென்னை அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள இல்லங்கள், குடியிருப்புக்கள், மாளிகைகள், அனைத்துக்கும் வழங்கி வந்த பழைய பெயர்கள் மாற்றப்பட்டுத் தமிழ்ப் பெயர்கள் வைக்கப் பட்டுள்ளன. இதற்கு உரிய ஆணையைத் தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை வெளியிட்டுள்ளது. பொதுப்பணித் துறை வெளியிட்ட ஆணையில் அரசினர் தோட்டத்திலுள்ள கட்டடங்கள் அனைத்தும் புதிய பெயராலேயே குறிப்பிடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட பெயர் விவரங்கள் வருமாறு :—

| பழைய பெயர். | புதிய பெயர். |
|---|---|
| Milk Men's Quarters .. | வேங்கை. |
| Bombay Model House .. | பாவை. |
| Ferrier's Quarters .. .. | மாரிவேல். |
| Public Works Stores I .. | பொதுப்பணிக்கிடங்கு 1 |
| Public Works Stores II .. | பொதுப்பணிக்கிடங்கு 2 |
| Goschen Block 1 to 13 .. | சேரன் அணி. |
| Assistant Surgeon's Quarters | சித்தர். |
| Manager's Quarters .. | நிலவு. |
| Band Master's Quarters .. | வேலன். |
| Old ADC Block I Floor Quarters 17. | மேய்க்காப்பு. |
| C.I.D.'s Quarters R1 .. | சீயம். |
| Stable Superintendent Quarters North R2. | செந்தமிழ். |
| Stable Superintendent Quarters South R3. | செந்தாமரை. |
| Guests Servants line West 1 to 6 R4 to R9. | கங்கைகொண்டான் அணி |
| Stable converted as quarters R-10. | சேரமான். |
| Garden Fisheries Stores R11 | கரிகாலன். |
| Narrow room attached to Stables R 12. | நேரு இல்லம். |
| Guests Servants Line last 1 to 5. | கடாரங்கொண்டான் அணி. |
| Garden Overseer's Quarters R 18. | காந்தி மனை. |
| Kitchen near Guest Servant Line East 1 to 5 R 19. | [illegible] |
| Bandlines 1 to 14 S1—S 14. | பாண்டியன் அணி. |
| Band School S 15 .. .. | பண்பகம். |
| Drill Practising Shed S 16 | பணியகம். |
| Laundery Superintendent Quarters S17 | இளங்கோ. |
| Lower Secondary School S18 | ஔவை. |
| New Nurses Quarters S19. | புதுமனை. |
| Chepauk House T1 | செம்பியன். |
| Old Sub-Divisional Officer's Quarters. | ஒளியகம். |
| Residential Block I R3 1 to 6. | அண்ணா அணி. |
| Resdiential Block II T 9 T14 1 to 12. | அன்பு அணி. |
| Quarters behind State Guest House T22—T23. | கடமை-கண்ணியம். |
| Garden Superintendent's Quarters T15 | வாடா மல்லிகை. |
| Police Seat House U1 .. | பொலிவகம். |
| Lodge U2 .. .. | அருளகம். |
| Guard Room U3 .. .. | காவிரி. |
| Visitors Book Room U4 .. | வில்லவன்கோதை. |
| Cooum House U5 .. .. | கூவம். |
| Garden Tool Shed U6 .. | கனிமொழி. |
| Kitchen Block West V1 .. | கிளிமொழி. |
| Kitchen Block East V2 .. | கலையகம். |
| Stewards Quarters (G.F.) .. | சுவைத் தமிழ். |
| Steward First Floor V4 .. | சூரியகாந்தி. |
| Triplicane Urban Co-operative Society V247 | தேனகம். |

இன்று பிறக்கும்
"பிரமாதீச" புத்தாண்டு உங்களுக்கு
எல்லா நலன்களையும் தர
தாயின் நல்வாழ்த்துக்கள் !




Criterion TAI 2876TM

11—4—8

# கல்வித் துறையில் புதிய சலுகைகள்

குமார்

இந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கு எல்லாக் கட்டடங்களுக்கும் சேர்த்து ரூ. 3,32,000.00 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்ருல், எந்த வகையிலிருந்து பிரித்து எடுக்க வேண்டும் என்ற பிரச்சினை வரும்போது, பொது மக்களுடைய ஒத்துழைப்பு, அவரவர்கள் கொடுக்கிற நன்கொடையுடன் ஈட்டுறுதி மான்யத்தின் மூலமாக ஈட்டுத்தொகை தந்து, அந்த அடிப்படையில் ஆங்காங்குக் கட்டடங்கள் எழுப்புகிற முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

துவக்கப்பள்ளியைப் பொறுத்த வரையிலும் கட்டடங்களை விரிவு படுத்த வேண்டுமென்பதற்காகத் தனி வாரியம் அமைத்து, ஆயுள் காப்புக் கழகத்திடம் நிதி வசதி பெற்று, ஒரே தடவையில் 7,000-த்துச் சில்லறைக் கட்டடங்களுக்குக் கட்டடம் இல்லாமல் இருக்கிறது—அந்தக் கட்டடங்களைக் கட்டிவிட்டு இந்தத் தொகையைத் திருப்பித் தரலாம் என்றிருக்கிறது. எல். ஐ. சி. ஒப்புதல் கிடைத்த பிறகு நல்ல சூழ்நிலைகள் ஏற்படும் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு வந்த பிறகு அந்தக் கட்டடங்கள் கட்டுவதை நாம் எடுத்துக் கொண்டால், துவக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் 7,000 பள்ளிகளுக்கும் ஓரிரண்டு ஆண்டுகளில் கட்டடங்களைக் கட்டி முடித்து விடலாம்.

நீண்ட நெடுங்காலமாக, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அந்தப் பதவிக்கான இடம் காலி இல்லாததால் அவர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர் பதவியிடங்களில் நியமிக்கப்பட்டார்கள். ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குக்கான சம்பளந்தான் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பதவிகளை, செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்துப் படிப்படியாக நிறைவேற்றி வருகிறது. மொத்தமாக 33,000 பேர் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகளில் இருந்தார்கள். நிதி நிலைமைக்கு ஏற்றபடி ஆண்டுக்காண்டு ஒரு குறிப்பிட்ட தொகையினரை, செகண்டரி கிரேடு பதவிக்கு அரசு மாற்றி வந்துள்ளது. 4,000 பேர் 3,500 பேர், 5,000 பேர் என்று அவர்கள் ஹையர் கிரேடு பதவிகளில் இருந்தாலும் அவர்களை, செகண்டரி கிரேடு பதவிகளில் இருப்பதாக மாற்றி, அதற்கான சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் 3,500 பேர்கள் அப்படி மாற்றப்படாமல் இருக்கிருர்கள். அவர்களின் பதவிகளும் விரைவில் மாற்றப்படும்.

சரிய முறையில் ஆராய்ந்து பார்த்துத்தான் பெண்களுக்குத் தனியாகப் படிக்க வசதி இருந்தால் ஆண்கள் பள்ளியில் பெண்களைச் சேர்க்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது நாங்கள் வந்த பிறகு புதிதாகப் பிறப்பித்த உத்தரவு அல்ல. இந்த உத்தரவு முன்னுலேயே இருக்கிறது. அதை நினைவுபடுத்துகிற வகையில்தான் இப்போது ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலும் ஒரு விதிவிலக்கு இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பள்ளியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினுல், அதுபற்றி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்து, அவர்கள் அனுமதியோடு சேர்த்துக் கொள்ளலாம் என்ற ஒரு விதிவிலக்கு இருக்கிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல முறையில் பாடங்களை வெளியிட வேண்டும் என்பதற்காகவும், குறைந்த விலையில் புத்தகங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும் எல்லா மாநிலங்களிலும் தேசிய பாடப் புத்தகங்களைத் தேசிய மயமாக்க வேண்டும் என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டு அதன்படி பல மாநிலங்களில் பாடப் புத்தகங்களை அரசாங்கமே வெளியிட்டு வருகின்றார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டிலும் கிட்டத்தட்ட தனிச் சிறப்புப் பாடங்களைத் தவிர மற்றப் பாடங்களையெல்லாம் வெளியிடும் அளவிற்கு இரண்டு கோடிக்கு மேலே வெளியிட்டிருக்கிறோம். முன்பெல்லாம் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களையெல்லாம் பார்த்தால் அவை மிகமிகச் சாதாரணமாக இருந்திருப்பதைப் பார்த்திருக்கலாம். அட்டையும் மிகமிகச் சாதாரணமாக இருந்திருப்பதைப் பார்த்திருக்கலாம்—அவைகளெல்லாம் தனியார் அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டு இருந்தபோது விலையும் ஒண்ணரை ரூபாய் இரண்டு ரூபாய் என்ற அளவிற்கு இருந்து வந்தது.

ஆனல், அரசு அவற்றை மேற்கொண்ட பின்னர், அட்டையும் மிகவும் அழகாக நான்கு, ஐந்து வண்ணங்களில் போட்டு, உள்ளிருக்கும் பாடங்களில் வரும் படங்களையும் நான்கைந்து வண்ணங்களில் தீட்டி, எழுத்துக்களை குழந்தைகளின் உள்ளத்தைக் கவரத் தக்க விதத்தில் பெரிதாகவும் தெளிவாகவும் அச்சிட்டிருப்பதைப் பார்க்கலாம். அத்துடன் விலையும் மிகவும் குறைவாகவே வைத்திருக்கிருர்கள். இப்படி வைத்தும் அதிலும் 20, 25 இலட்ச ரூபாய் இலாபம் கிடைத்திருக்கின்றது. இப்படிக் கிடைத்த இலாபத்தையும் மிக ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாக, புத்தகங்கள், சிலேட்டுகள் போன்றவற்றை வழங்குவதற்கே பயன்படுத்தப்பட்டது. இப்படிக் கிடைக்கும் இலாபத்தை வேறு எந்தத் துறைக்கும் பயன்படுத்தாமல் இப்படி ஏழை எளியவர்களுக்கே செலவிடத்தக்க நோக்கத்தோடு தான் அதை இந்த அரசு செலவிட்டு வருகிறது.

பள்ளி இறுதி வகுப்புப் படித்து விட்டு, பாலி டெக்னிகில் சேர்கிருர்கள். ஆனுல், இன்ஜினியரிங் காலேஜில் சேர்கிறவர்கள் புதுமுக வகுப்புப் படிப்புப் படித்து, போட்டா போட்டி அடிப்படையில் சேர்கிருர்கள். ஏ, ஏ, ஏ,—டி. டி. டி. வாங்கியவர்கள் தான் சேரக் கூடிய அளவுக்குப் பொறியியல் கல்லூரியில் போட்டா போட்டி இருக்கிறது.

ஆனுல், பாலி டெக்னிகில் 100 மார்க் வாங்க வேண்டும் என்று இருந்தது. பிறகு 90 வாங்கினுல் போதும் என்று வைத்து, பல பேரைச் சேர்த்திருக்கிருர்கள். பிறி டெக்னிகல் படித்து விட்டு பி.ஈ.-க்குப் போகிருர்கள். பி.ஈ.-க்குப் போகாவிட்டால் மூன்ருண்டுக் காலம் பாலிடெக்னிக் படித்து விட்டு டிப்ளமோ வாங்கலாம் என்ற வாய்ப்பை அறிவித்திருக்கிறோம். அதற்கு முன்பு அந்த வாய்ப்பு இல்லை. அது மட்டுமல்ல, 2, 3 ஆண்டுகள் பல்வேறு துறைகளில் பணியாற்றியவர்கள் 'பார்ட் டைம் கோர்ஸ்' படிக்கப் பல்கலைக் கழகத்திடம் அனுமதி பெற்று அப்படி மூன்ருண்டுக் காலம் படித்தால் பி.ஈ.-க்கு ஈக்வலாக வர வாய்ப்பு இருக்கிறது.

'பி.ஈ. படிப்பவர்கள், நாங்கள் $6\frac{1}{2}$ ஆண்டுக் காலம் படித்து விட்டுத்தான் பி.ஈ. பட்டம் பெறுகிறோம். பாலிடெக்னிக் படிக்கிறவர்கள் மூன்று ஆண்டுகள் படித்து விட்டு பி.ஈ.-க்கு ஈக்வலாக வருகிருர்களே' என்ற கோரிக்கை தரப்பட்டிருக்கிறது. அகில இந்திய எ.எம்.ஐ.ஈ. எல்லாருக்கும் வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. அதை ஒரு சங்கம் நடத்துகிறது. ஏ.எம். ஐ.ஈ. பட்டம் பெற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பி.ஈ.-க்குச் சரிசமமாகக் கருதப்படுகிருர்கள். அப்படி மதிக்கப்படவில்லை என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது. ஏ.எம்.ஐ.ஈ. பட்டம் பெற்றவர்கள் பி.ஈ. ஆக வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, பி.ஈ.-க்கு ஈக்வலாக மதிக்கப்படுவதில்லை என்பது சரியல்ல.

இப்படி பாலிடெக்னிக் மாணவர்கள், பட்டதாரிகள், பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிருர்கள். இதிலே முக்கியமானது என்னவென்ருல், $4\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள் அந்த பி.ஈ. பட்டத்தைத் தந்து விடுங்கள் என்கிருர்கள்.

இதில் பி.ஈ. பட்டதாரிகள், நாங்கள் $6\frac{1}{2}$ ஆண்டுகள் படித்து விட்டுத்தான் பி.ஈ. பட்டம் பெறுகிறோம். இவர்கள் $4\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள் பி.ஈ. பட்டம் பெறுவதா என்று எதிர்க்கிருர்கள். அதே மாதிரி பார்ட் டைம் கோர்சில், வருடத்திற்கு இரண்டு தடவை பயிற்சி தரலாம் என்று வைத்தோம். அதை எதிர்த்து பி.ஈ. பட்டதாரிகள் வேலை நிறுத்தம் செய்து, இந்த வாய்ப்புத் தரக் கூடாது என்று சொன்னதற்குப் பிறகு அவர்கள் ஒரு சமாதான முறைக்கு வருகின்ற முறையில் குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் வேலை பார்த்தவர்கள் என்பதை 5 ஆண்டுகள் என்றும், வருடத்திற்கு ஒரு முறை பயிற்சி என்று இருந்ததை 2 வருடத்திற்கு ஒரு முறை பயிற்சி என்ற நிலை வந்தது.

அந்த 5 ஆண்டுகள் என்பதில் கூட, மொபசலில், போதிய அளவு மாணவர்களின் எண்ணிக்கை இல்லை என்ற காரணத்தால், 5 ஆண்டுகள் தேவை இல்லை, 3 ஆண்டுகள் போதும் என்ற அளவுக்கு முடிவெடுத்து அந்த முடிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இப்படி இவர்கள் ஏற்றுக் கொண்டால் அவர்கள் மறுக்கிருர்கள். பி.ஈ. ஏற்றுக் கொண்டால் பாலி டெக்னிக் டிப்ளமோதாரர்கள் மறுக்கிருர்கள். பாலிடெக்னிக் டிப்ளமோதாரர்கள் ஏற்றுக் கொண்டால் பி.ஈ. பட்டதாரிகள் மறுக்கிருர்கள். ஆகவே, போதிய அவகாசம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிருர்கள். இதில், தொழில் நுட்பக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு எழுதியிருக்கிருர்கள்.

பி. ஈ., பட்டதாரிகளுக்கு எத்தனை ஆண்டு, டிப்ளமா, பாலிடெக்னிக்கு எத்தனை ஆண்டு, என்னென்ன நடைமுறை என்று பல்கலைக் கழகம் ஒரு முறையை நிர்ணயித்து விட்டால் அந்த முறையை நாங்கள் அமல் படுத்த ஆயத்தமாக இருக்கிறோம். இந்த இண்டர்னல் அசெஸ்மெண்ட் பற்றி இந்திய அரசு அறிக்கை வைத்திருக்கிருர்கள். இதில், மாணவர்கள் நெட்டுரு—பாடத்தை மனப்பாடம் பண்ணிப் பரீட்சையில் பாஸ் பண்ணுகிற நிலை—பரீட்சைக்கு முன்னுல் ஒருவாரத்திற்கு முன்னுல் உட்கார்ந்து பாடங்களை மனப்பாடம் செய்து பரீட்சை எழுதுவதால், மாணவர்களுக்கு ஆழ்ந்த அறிவு இல்லை என்ற குறை கூறப்பட்ட காரணத்தால் எப்படியாவது வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணத்தைப் போக்கி அவர்கள் உண்மையிலேயே ஆழ்ந்த அறிவினை அடைய முடியுமா என்று யோசித்து ஒரு முறையைத் தந்திருக்கிருர்கள்.

தற்போதுள்ள முறையினுல் மாணவர்களுக்கு ஒரு 'ஷாலோ நாலெட்ஜ்' தான் ஏற்படுகிறது. பரீட்சைக்கு முன்னுல் உட்கார்ந்து, 'பிராபபிள் கொஸ்சன்'கள் எவையெவை வரும் என்று பார்த்து, சென்ற ஆண்டு இந்தக் கேள்விகளைக் கேட்டு விட்டார்கள்—செப்டம்பரில் இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டார்கள். எனவே, மார்ச்சில் இவை வராது, என்று ஒரு 'எலிமினேஷன் பிராசஸ்' செய்து 'பிராபபிள் கொஸ்சன்'களை மனப்பாடம் செய்து பரீட்சைக்கு வருகிருர்கள். அதிலும் அவர்களுக்குச் சாயஸ் கொடுக்கப்படுகிற தன்மை இருக்கிற காரணத்தால், 12—இல் 6 எழுதினுல் போதும்—அந்த ஆறில் 75 மார்க் வாங்கினுல் போதும்—இரண்டு சப்ஜெக்ட்களில் 45 வாங்கினுல் போதும் என்றெல்லாம் இருக்கிற காரணத்தால், ஆழ்ந்த அறிவை அவர்களுக்குத் தரவும், அவர்களுடைய உண்மையான அறிவைக் கணக்கிடவும் முடியவில்லை.

இப்போது புகுத்தப்படவிருக்கிற இண்டர்னல் அசெஸ்மெண்ட்படி மாணவர்கள் வகுப்பறைக்கு வந்த எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு கடைசியாக ஒரு எண்ணிக்கை தருவது என்று இருக்கிறது. இது முதலில் பொறிஇயற் கல்லூரியில் புகுத்தப்பட்டு முதலில் வரவேற்கக் கூடிய அளவில் இருக்கிறது என்ற காரணத்தால் மற்றக் கல்லூரிகளிலும் கூட இந்த முறை கொண்டு வரப்பட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

கல்வி அமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன்

பல்கலைக் கழகத்தால் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சாதகமாக இருக்கின்றன. 'செமிஸ்டர்' முறை வருவதற்கு முன்னுல் 'இண்டர்னல் அசெஸ்மெண்ட்' வருவதற்கு முன்னுல் 470 பேரில் 106 பேர்கள்—

அதாவது 22.55% தான் சிவில் இன்ஜினியரிங்கில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இப்போது 758-இல் 247 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்— அதாவது, 32.15%. தொழில் நுட்பக் கல்லூரியில் 555 பேர்களில் 193 பேர்கள்—அதாவது 34.7% தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள். 1972-ல் செமிஸ்டர் முறை புகுத்தப்பட்ட பிறகு 710 பேர்களில் 297 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் — அதாவது 41.8%. முன்பு 22.55%. எனவே, இந்தத் திட்டத்தின் மூலம் நல்ல பலன் இருக்கிறதே தவிர வேறல்ல. இந்த முறை புகுத்தப்பட்ட பிறகு 41.8% வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மெக்கானிகல் இன்ஜினியரிங் துறையை எடுத்துக் கொண்டால் ஏற்கெனவே 32.99 சதவிகிதத்தினர் தேறினார்கள் என்றால் இப்போது 39.1% தேறியிருக்கிறார்கள். அதேபோல எலக்ட்ரிகல் துறையை எடுத்துக்கொண்டால் முன்பு 34.77% தேறியிருக்கிறார்கள் என்றால் இப்போது 43.31% தேறியிருக்கிறார்கள்.

பைனல் பரீட்சையில் வெற்றி பெறாத மாணவர்கள் இதில் ஒரு கேஸ் கூட இல்லை. ஆக இந்தச் செமிஸ்டர் முறைதான் மாணவர்களுக்கு நல்லது. ஆயினும் ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போலச் சிலபல குறைபாடுகள் இருந்தால் ஆசிரியர்கள் வேண்டுமென்றே மாணவர்களைப் பழிவாங்க இதில் சந்தர்ப்பம் இருக்கிறது என்றால் அவற்றை எல்லாம் போக்க என்ன பரிகாரம் காணலாம் என்பதை இந்தத்துறை தொடர்ந்து ஆராயும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த முறைதான் எல்லா நாடுகளிலும் பின் பற்றப்பட்டு வருகிறது.

பட்டதாரி ஆசிரியர்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டே இது போன்ற கிளர்ச்சியை நடத்தினார்கள். சட்டத்தை மீறி, 'கோட் ஆப் கான்டெக்டை' மீறிச் செயல்பட்டார்கள். சென்ற ஆண்டும் நான்கைந்து நாட்கள் சிறையில் இருந்தார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டவுடன் அவர்கள் மீது அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. யாரும் பழிவாங்கப்படவில்லை. ஏற்கெனவே அவரவர்கள் இருந்த பதவியில் அவரவர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

அதேபோல இந்த ஆண்டும் 6 கோரிக்கைகளை முன் வைத்தார்கள். அவற்றில் 2 கோரிக்கைகளை உடனடியாக ஆராய்ந்து கல்வி மானியம் வரும்போது தக்க நடவடிக்கையை எடுத்துக் கொண்டு அறிவிப்புச் செய்வேன் என்பதாக நான் அவர்களுக்கு வாக்குறுதி அளித்தேன். பேச்சு வார்த்தைகளின்போது மேலவை உறுப்பினர் திரு இராஜா ஐயர், கணபதி, சந்தோசம், சாமிநாதன் ஆகியவர்கள் இருந்தார்கள். அவர்கள் கூட இந்த இரண்டு கோரிக்கைகள் பற்றியும் நீங்கள் இப்போதே அறிவித்துவிடுங்கள், அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிடுவார்கள் என்று தெரிவித்தார். நிதித்துறையினர் ஒத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தும் முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியின் பேரில் நான் அந்த இரண்டு கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இந்த அவையிலும், மேலவையிலும் அறிவித்திருக்கிறேன். இருந்தும் அவர்களது தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களது பேச்சையே கேட்காமல் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கினார்கள்.

> நமது தொழில் வணிகத் துறை, துறைப் பிரிவுகளாலும் கூட்டுறவுகளாலும், தனியார் கைவினைப் பணியாளர்களாலும் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்காகத் திருச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயமுத்தூர், சேலம், தஞ்சாவூர், மாமல்லபுரம், நெய்வேலி, சென்னை ஆகிய இடங்களில் விற்பனைப் பெரு நிலையங்களை நடத்தி வருகிறது. 1971-72-ஆம் ஆண்டில் இந்த விற்பனைப் பெரு நிலையங்களின் விற்பனை ரூ. 40·18 இலட்சமாகும்.

மற்றொன்று, ஜில்லா போர்டு பள்ளிகள் எல்லாம் 66-லேயே ஜில்லாபோர்டுகள் எடுக்கப்பட்டவுடன் அவை தனித்து இயங்கி வந்தன. என்றாலும் அந்த ஜில்லா போர்டு பள்ளிகளை 1—4—1970 இல் அரசாங்கப் பள்ளிகளாக எடுத்துக் கொண்டு அறிவித்ததும் அரசாங்கப் பள்ளிகளில் இருந்த ஆசிரியர்கள் 'எ' விங் என்பதாகவும், ஜில்லா போர்டு பள்ளிகளில் இருந்த ஆசிரியர்கள் 'பி விங்' என்பதாகவும் தனியாகத்தான் இருந்தார்கள். இப்படி 'ஏ விங்', 'பி விங்' என்று இருப்பது அரசாங்கத்திற்குச் சில சங்கடங்களைக் கொடுத்துக் கொண்டு வந்தது. என்றாலும், அந்த இரண்டு சாரார்களும் விரும்புமட்டும் அவை தனியாகவே இருக்கட்டும் என்றுதான் நாங்கள் நினைத்தோம். ஜில்லா போர்டுகளில் இருந்தவர்கள் நான்கைந்து ஆண்டிற்குள்ளாகவே தலைமை ஆசிரியர்களாக வந்திருந்தார்கள். அரசாங்கப்பள்ளியில் இருந்தவர்கள் பத்துப் பதினைந்து ஆண்டு சர்வீஸ் ஆன பிறகும் கூடத் தலைமையாசிரியர்களாக வர முடியாத நிலைமை இருந்தது. இன்றைக்கு இந்த இரண்டு பேர்களையும் ஒன்றாக இணைத்துப்பத்து ஆண்டு சர்வீஸ் உடையவர்களைத் தலைமையாசிரியர்களாகப் போடுவது என்றால் 'ஏ விங்'கில் இருந்தவர்களைத்தான் பெரும்பாலும் போடவேண்டியதாக இருக்கும். ஜில்லா போர்டு பள்ளிகளில் ஏற்கெனவே தலைமையாசிரியர்களாக இருந்தவர்கள் கீழே இறங்கவேண்டியதாக இருக்கும் என்கிற காரணத்தினால்தான் அவர்கள் இரண்டு பேர்களுமே ஒத்துப்பேசி நாங்கள் இன்ன முடிவுக்கு வந்துவிட்டோம் என்று அறிவித்தால் மறுநாளே அரசு அதனை ஏற்றுக்கொள்ள தயாராய் இருப்பதாகத் தெரிவித்தோம். நீங்கள் கலந்து பேசுங்கள். உங்களிடையே வேண்டுமென்றால் திரு இராஜா ஐயர் இருக்கட்டும். இல்லையென்றால் கல்வி இயக்குநர் இருக்கட்டும். நானே இருக்க வேண்டுமென்றாலும் இருக்கத் தயார் என்று தெரிவித்திருக்கிறேன்.

தலைமையாசிரியர்களாகத் தமிழாசிரியர்களைப் போடக் கூடாது என்று கிளர்ச்சி செய்தார்கள். அதுபற்றியுங்கூடத் தெரிவித்தேன். தலைமையாசிரியர்களாக வருவதற்கு இன்ன இன்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்துக் கொள்வோம். அந்தத் தகுதி அவர்களிடம் இருந்தால் அவர்கள் வரட்டும். உங்களிடம் இருந்தால் நீங்கள் வாருங்கள். அது[illegible] பற்றி முடிவு செய்யும் என்று சொன்னேன்.

அவர்களது மற்றொரு கோரிக்கை 375 ஆக சம்பளத்தை மாற்றவேண்டும், 50 ரூபாய் ஸ்பெஷல் அலவன்ஸ் தரப்பட வேண்டும் என்பதாகும். இந்த ஒரு இனத்திற்கு நாம் சம்பளத்தை உயர்த்தினால் இது போல் உள்ள 8 காட்டகரிக்கு உயர்த்தியாகவேண்டும். அதோடு இவர்களுக்கு மேலே உள்ளவர்களது சம்பள விகிதத்தையும் உயர்த்தியாக வேண்டும். இதில் எந்த அளவுக்குப்பொருளாதாரப் பிரச்சினை எழுகிறது என்பதை உறுப்



பினர்கள் அறிவார்கள். இவர்களுக்கு உயர்த்தியுடன் மற்றவர்களும் கிளர்ச்சி செய்ய ஆரம்பிக்கலாம். இதுபற்றி நிதித்துறையும், மற்றவர்களும் நன்கு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இது நன்கு பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று எனத் தெளிவாகச் சொன்னோம். அவர்களும் தங்கள் உறுப்பினர்களிடம் சொல்வதாகவும், கிளர்ச்சியைக் கைவிடுவதாகவும் சொன்னார்கள். முடிவில் ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொண்டோம். ஆனால், பட்டதாரி ஆசிரியர்கள் இவர்களது பேச்சைக் கேட்காது போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள்.

பள்ளி இறுதிப் பரீட்சை நடக்கிற சமயம் மாணவர்கள் சரியான முறையில் பாடம் படிக்கச் சூழ்நிலை இருக்கவேண்டும், இந்த நேரம் வேண்டாம், அதோடு மறியல் செய்வது, உண்ணாநோன்பு இருப்பது எல்லாம் சட்டப்படி, கோட் ஆப் காண்டெக்ட் படி குற்றமாகும் என்றெல்லாம் அறிவித்தோம். அவர்களிடம் கெஞ்சிக் கேட்டோம். அதற்கெல்லாம்தான் இதனைத் துச்சமென்று மதிப்போம் என்பதாக எல்லாம் அறிக்கை விட்டார்கள். அதை இந்த அவையிலேயே நான் படித்துக் காட்டியிருக்கிறேன்.

மொத்தமுள்ள 25 ஆயிரம் ஆசிரியர்களில் ஏழாயிரம், எட்டாயிரம் பேர்கள் உண்ணாநோன்புப் போராட்டம் நடத்தியும், மற்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டும் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களில் பலபேர் இன்றைக்குத்தங்கள் செய்கைக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். சட்டத்திற்குப் புறம்பாக, ஒழுக்க விதிகளுக்குப் புறம்பாக நடந்து கொண்டதற்காக வருத்தம் தெரிவிக்கிறார்கள். அதுபோல வருத்தம் தெரிவித்த 1732 பட்டதாரி ஆசிரியர்கள் மறுபடியும் வேலையில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்கள். இப்படிச் சட்டத்தை மீறி, ஒழுங்கை மீறிக் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக டிபார்ட்மெண்டல் ஆக்சன் எடுத்து, சிறை சென்றார்கள் என்பதை வைத்து ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்து அவர்களை வேலையில் இருந்தே நீக்கிவிட முடியும். சட்டவிதிகள் அப்படி இருக்கின்றன. அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்று கூட அரசு கருதவில்லை. தங்களுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்து எழுதித்தர வேண்டும் என்று கேட்கிறோம். அதுகூடக் கூடாது என்றால் ஏற்கெனவே வருத்தம் தெரிவித்து எழுதிக்கொடுத்தவர்கள் பைத்தியக்காரர்கள், முட்டாள்கள், வருத்தம் தெரிவிக்காது வீரர்களாக இருந்து வந்து நாங்கள் சேர்ந்தோம் என்கிற கட்டுப்பாட்டைக் குலைக்க கூடியதாக, ஒழுங்கைச்சிதைக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதாகத்தான் அமையும்.

அந்தக் கருத்துக்களை இந்த அரசு கவனிக்கும். இந்தக் கல்வித் துறைப் பணியை நான் நிறைவேற்றுகிறேன் என்று சொன்னால் இதிலே வல்லுநன் என்ற காரணத்தால் அல்ல. கல்வித் துறையில் உங்களைப் போல, நானும் ஆர்வம் கொண்டவன் என்ற அளவில்தான் இவைகளை நிறைவேற்றுகிறேன். இதற்கு அத்தனை பேருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால்தான் இந்தத் துறை வளரும்.

> நம்நாட்டுக்கு அடுத்த ஆண்டில் 4,16,000 பயணிகளும், 1980-ஆம் ஆண்டு வாக்கில் பத்து இலட்சம் பயணிகளும் சுற்றுலாவின் பொருட்டு இந்தியாவிற்கு வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் தங்கும் வசதிக்காக 40,000 அறைகள் தேவைப்படுகிறது. ஆனால் இந்தியாவில் தற்போது இருப்பது 10,000 அறைகளாகும். அதாவது இனி ஆண்டுக்கு 4,000 அறைகள் வீதம் கட்டப்பட்டால்தான் 1980-இல் வரும் பயணிகளுக்குத் தங்க வசதி கிடைக்கும்.

மொத்தம் இருக்கிற 27 ஆயிரத்துச் சொச்சம் உயர்நிலைப் பள்ளிகளில், அமைதியின்மை என்று சொன்னால் 100-க்குக் குறைவான பள்ளிகளில்தான் அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்திருக்கும். 176 கல்லூரிகளில், 30, 40 கல்லூரிகளில்தான் இம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். ஆக, இந்த நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, நல்ல சூழ்நிலையைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் நான் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்கிறேன். இறுதியில் ஒன்றே ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். பல கல்லூரிகளில் இருக்கிற உதவிப் பேராசிரியர்கள் எல்லாம் தங்களை அரசிதழ்ப் பதிவுபெற்ற ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நெடுங்காலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, அசிஸ்டண்ட் புரபசர்ஸ், தகுதி உடையவர்கள் அத்தனை பேரும் அரசிதழ்ப் பதிவுபெற்றவர்களாக ஆக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 1,800பேர்கள் இன்று அரசாங்கத்தில் பணி புரிபவர்கள் பயன் பெறுவார்கள்.

இந்த ஆண்டு 5,000 செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பதவி ஏற்கப்பட்டு அந்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படும் என்று குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆக, இந்த ஆண்டு 5,000 பேருக்கு, செகண்டரி கிரேட் பதவிகள் அளிக்கப்படும்.

அடுத்து, தேக்கப்படி ஊதியத்தின் உச்சக்கட்டத்தை அடைந்து, பதவி உயர்வு பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கும் அரசு ஊழியர்களுக்குத் தேக்கப்படி, ஸ்டாக்னேஷன் அலவன்ஸ் வழங்கப்பட வேண்டுமென்று இரண்டாவது ஊதியக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. அந்தத் தேக்கப்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படலாமென்றும், 5 முறைகளுக்கு மேற்படாமலும் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ. 1,000-க்கு மேற்படாமலும் இருக்கும்வரை கொடுக்கப்படலாமென்றும் அது அறிவுரை கூறியிருந்தது. அரசுப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகையை அளித்து ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளது. இப்போது தனியார் பள்ளிக்கூடங்களிலும், ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும், பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இந்தத் தேக்கப் படியை அளிக்க, அரசு முடிவு செய்திருக்கிறது. அரசுப்பள்ளிகளுக்கு மட்டும்தரப்பட்ட சலுகை இன்றையத் தினம் தனியார் பள்ளிகளுக்கும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் தரப்பட்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேல்பட்டப்படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் முதல்வர்களுக்கு அரசுக் கல்லூரிகளைப் பொறுத்த வரையிலும் 1000—50—1,400 என்று சம்பள விகிதம் இருந்தது; பேராசிரியர்களுக்கு 800—40—1,000—50 1,250 என்று சம்பள விகிதம் இருந்தது. ஆனால், தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற முதல்வர்களுக்குச் சம்பள விகிதம் 700—50—1,300 என்ற அளவிலும், பேராசிரியர்களுக்குச் சம்பள விகிதம் 600—40—1000 என்ற அளவிலும் இருந்தது. அரசினர் மேல்பட்டப்படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற முதல்வர்களுக்கும், பேராசிரியர்

களுக்கும் ஒரே விதமான சம்பளம் இருக்கவேண்டுமென்ற கோரிக்கையைத் தந்தார்கள். எனவே, அந்த அடிப்படையில் அரசினர் மேல் பட்டப் படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற முதல்வர்கள், பேராசிரியர்களுக்கு உள்ளது போல் தனியார் மேல் பட்டப்படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற முதல்வர்களுக்கும் 1,000—50—1,400 என்ற அளவிலேயும் பேராசிரியர்களுக்கும் 800—40—1,000—50—1,250 என்ற அளவிலேயும் சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு மாணவருக்கு இப்பொழுது ரேட் ஆப் காம்பென்சேஷன் ரூ. 50 அல்லது 60 என்ற அளவிற்குத்தான் கொடுக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. இப்பொழுது எல்லாக் கல்லூரிகளுக்கும் புதிய கல்லூரிகளாக இருந்தாலும்சரி, பழைய கல்லூரிகளாக இருந்தாலும் சரி எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரு மாணவருக்கு 80 ரூபாய் என்ற அளவிலோ அல்லது 1971-72-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டு வந்த விகிதம் இந்த இரண்டு வகைகளில் எது குறைவோ அதைத் தருவதற்கு—80 ரூபாய் குறைவாக இருந்தால் 80 ரூபாய் அளவிலேயும் அல்லது 1971–72-ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்ட விகிதம் குறைந்திருந்தால் இது இரண்டிலே எது குறைவோ அதைக் கொடுப்பதற்கு—அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

டீச்சிங் கிராண்ட் அவர்களுடைய மொத்த டெபிஸிட்டில் மூன்றில் இரண்டு பங்கு என்ற அளவிற்குக் கொடுக்கப் பட்டு வந்தது. ஆனால், வருமானக் கணக்கைப் பொறுத்தவரையில் நேஷனல் இன்கம் தான் எடுத்துக் கொள்ளப்பட்டது. கற்பனைக் கணக்காகத்தான் இதுவரையில் என்ன காரணமோ வைத்திருந்தார்கள். நன்கொடைகள் மூலமாக வருகின்ற வருமானத்தை யெல்லாம் வருமானக் கணக்கிலே சேர்க்காமல் இருந்தார்கள். ஆக்சுவல் இன்கம் எடுத்துக் கொள்ளப்படாமல் இருந்தது. கற்பனையாக வரவு 40 என்றும் செலவு 80 என்றும் கணக்கு வைத்திருந்தார்கள். இது எந்தக் காலத்திற்கும் பொருந்தி வராத கணக்கு. இந்த முறையை நீக்கி விட்டு எல்லா வரவினங்களையும் சேர்த்துக் கணக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் செலவினம் அதற்கு மேலே வருகின்ற நிலையில் மீதியிருக்கும் தொகையில் 80 சதவீதம் அரசு தருவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. மீதம் உள்ள 20 சதவீதம் அந்தத் தனியார் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது 1972–73-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எண்டோமெண்ட் கணக்கு என்று வைத்திருந்து அதிலே இலாபம் வந்தால் அந்த இலாபத்தையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், நன்கொடை போன்றவற்றை வாங்கினால் அதற்குக் கணக்குக்காட்டி அதையும் வரவு இனத்தில் காட்டியாக வேண்டும், நன்கொடை இரண்டாயிரம் மூவாயிரம் என்று வந்தால் அவையும் கணக்குக்கு வந்துவிட வேண்டும்.

[illegible] அவர்களுக்கு [illegible] 80 [illegible] கொடுக்கிறோம். [illegible] அவர்கள்தான் தேடிக் [illegible]. ஆகவே, [illegible] ஒரு நல்ல [illegible] ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

[illegible] பெற்ற [illegible] இப் [illegible] முறை [illegible] பெற்று [illegible] பி. ஹெச். டி. [illegible] ஆராய்ச்சி செய்து [illegible] பணி [illegible] அவர்கள் தங்களுடைய [illegible] தகுதியையும் [illegible] கல்லூரி [illegible] முறையில் தொண்டாற்ற [illegible]. அந்த முறையில் [illegible] பட்டவர் [illegible] முறையில் [illegible] பேராசிரியர்களையும் [illegible] பேராசிரியர் [illegible] அவர் செய்து [illegible] பி. ஹெச். டி. பட்டம் [illegible] முறையில் ஏற் [illegible] பி. ஹெச் [illegible] வர்களுக்கு [illegible] வழங்கினால் [illegible] எம். ஏ. எம். [illegible] க்ளாஸில் [illegible] இரண்டு [illegible] கப்பட்டு [illegible] அவர்களுக்கு [illegible] வழங்கினால் [illegible] கருத்துத் [illegible]. அதை [illegible] கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இதைத் தவிர உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்காகத் [illegible] கட்டு [illegible] 5.25 இலட்சம் ரூபாய் [illegible] என்ற [illegible] இந்த [illegible] நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் [illegible] கள். அவற்றை யெல்லாம் நம்முடைய [illegible] வாய்ப்பு [illegible] ஆராய்ந்து [illegible] வேண்டிய [illegible] மேற்கொள்ளப் [illegible] தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[தமிழ்நாடு [illegible] பேரவையில் கல்வித்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், 1956-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதில், சுரங்கப் பிரிவு, அனல் மின் உற்பத்திப் பிரிவு, உர உற்பத்தித் தொழிற்சாலை, சுட்ட அச்சுக் கரித் தொழிற் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகள் உள்ளன. 1972-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாளன்றுள்ளவாறு இதன் மூலதன முதலீடு சுமார் ரூ. 184 கோடியாகும். 18,115 பேருக்கு வேலையளிக்கிறது. இங்கே இரண்டாவது சுரங்கப் பிரிவு ஒன்றை வெட்டுமாறும், நெய்வேலியில் மின் உற்பத்தியை அதிகப்படுத்துமாறும் கேட்டு இந்திய அரசை, நமது தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.




# நிலக்கடலை விளை-விக்கும் விவசாயிகளே

பூச்சிகளாலான நஷ்டத்தை தவிர்க்கவும். சார் உறுஞ்சும் அசுவுணியினால் பயிர் வலு விழக்கிறது. நெடுங்காலம் பாதுகாப்பளிக்கும் முழுமை யான ஊடுருவிப்பாயும்

**மெட்டாஸிஸ்டாக்ஸ்** தெளிக்கவும். புழுக்கள், அசுவுணி, இதர பூச்சிகளை அழிக்க

**ஃபாலிடால் E 605 திரவமும்**

தெளிக்க தண்ணீர் வசதியில்லையெனில்

**ஃபாலிடால் தூளும்** உபயோகிக்கவும்.

அடைப்புகளுடன் இணைக்கப் பட்டிருக்கும் உபயோகிக்கும் முறைகளின்படியே மெட்டாஸிஸ்டாக்ஸ், ஃபாலிடால் திரவம் அல்லது தூளையே உபயோகப்படுத்தவும்.

**நிலக்கடலை விளைவிக்கும் விவசாயிகள்**

பயிர் விளைச்சலில் நஷ்டத்தை தவிர்க்க பேயரின் தரமான பூச்சி மருந்துகள் உபயோகிக்கிறார்கள்.

BAYER பாயரின் தரமான பூச்சி மருந்துகள்

5-A/2C2 (760)

# மக்கள் நல்வாழ்வுக்கு நமது பணிகள்

நலத்துறை என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது. கட்சி மனப்பான்மைக்கு இடம் இருக்கத் தேவையில்லாதது. ஆனால் குறைகள் சொல்கின்றவர்கள் அவற்றை நல்லெண்ணத்திலேதான் சொல்கிறார்கள். அவற்றை அரசு எப்பொழுதும் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

குறைகள் இல்லையென்று சொன்னால் நான் தவறு செய்தவன் ஆவேன். ஆனால், குறைகள் இருப்பதை எப்படிக் குறைப்பது என்பதுதான் இன்றைக்குள்ள மிக முக்கியமான கேள்வியாகும். இங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் சிலர் பேசுகிறபொழுது காச நோயினால் அவதிப்படுகிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஏறத்தாழ 3,400 படுக்கைகள்தான் அதற்கென்று இன்றைக்கு இருக்கின்றன. எனவே, படுக்கை வசதி இல்லாமல் காச நோயாளிகளை எல்லாம் எப்படி நீங்கள் கரை ஏற்றமுடியும் அல்லது அவர்களுக்குச் சிகிச்சை வழங்க முடியும் என்ற கேள்விகளை எழுப்பினார்கள். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 7 இலட்சத்து 50 ஆயிரம் பேர், ஏறத்தாழ, ஏதாவது ஓர் அளவில் முழு அளவில் இல்லையென்று சொன்னாலும், இந்தக் காச நோயினால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த 7 இலட்சத்து 50 ஆயிரம் பேரில், குறைந்தது 1 இலட்சம் பேராவது ஒரு கட்டத்தில் படுக்கையில் இருக்க வேண்டும். 3,400 படுக்கை இருக்குமானால் ஏறத்தாழ 50,000 பேருக்கு அந்தச் சிகிச்சை வழங்க முடியும். இன்னும் 3,400 படுக்கைகளை ஏற்படுத்துவது என்று சொன்னால் ஏறத்தாழ ரூ. 3 கோடி தேவை. எனவே, ஒவ்வொரு துறையிலும், காசநோய்ச் சிகிச்சை செய்வதாக இருந்தாலும், தொழு நோய்ச் சிகிச்சையைப் பரவலாக வழங்குவதற்காக இருந்தாலும், படுக்கை அமைப்பு, படுக்கை அமைப்பின் கீழ் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பது என்று சொல்லும்போது பெரும் முதலீடு தேவை.

படுக்கை வசதி அளிப்பதற்கு, அதற்குப் பிறகு சிகிச்சைக்காகவும் முதலீடு தேவை. அதற்குப் பிறகு உணவுக்காகவும் தேவை. இவற்றையெல்லாம் சேர்த்து ஒரே நேரத்தில் எல்லாருக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய காரணத்தால்தான் இன்றைக்குச் சிகிச்சையின் மூலம் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சியின் காரணமாக ஓரளவு ஈடு செய்ய முடிகிறது.

ஒரு காலத்தில் காசநோய்க்கு, சல்போ மெடிசின் கண்டுபிடிக்க முடியாத காலத்தில் உடலில் ஏற்படுகிற தாங்குகிற சக்தியை வைத்துத்தான் நோயைத் தீர்க்க வேண்டுமென்ற நிலை இருந்தது. ஆனால், நல்லவேளை 25 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுப் புற நோயாளிகளுக்கு அல்லது அவர்கள் இல்லத்தில் இருந்து சாப்பிடுகிற நேரத்தில் இந்த மருந்துகளை வழங்கத் தக்க வாய்ப்புகள் ஏற்பட்ட காரணத்தால், படுக்கை ஒன்றின் மூலம்தான் சிகிச்சை அளிக்க வாய்ப்பு ஏற்படும் என்று இல்லாமல், இன்று ஏறத்தாழ 7½ இலட்சம் மக்களில் 5 இலட்சம் மக்களுக்கு மேல்—புள்ளி விவரத்தில் சிறிது வேற்றுமை இருக்கும்—காச நோய்க்கான சிகிச்சையை நம்முடைய நாட்டில் பெற்று வருகிறார்கள்.

கூடுமான வரையில் படுக்கை வசதியை விரிவுபடுத்துவதற்கும், வழங்குவதற்கும் முறைப்படி பல ஏற்பாடுகள் இருக்கின்றன. அதில் மேலும் சீர்திருத்தம் இருக்குமானால் அவை சீர்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைவிட முக்கியமானது, காசநோயினால் பிடிக்கப்பட்டவர்கள் 7½ இலட்சம் 8½ இலட்சம் பேர், தொழுநோயினால் பீடிக்கப்பட்டவர்கள் ஏறத்தாழ 8 இலட்சம் 10 இலட்சம் பேர், இரண்டு கண்ணோ ஒரு கண்ணோ இழந்தவர்கள் ஏறத்தாழ 6 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் பேர்; கான்சர் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 4 இலட்சம் பேர்; 5 இலட்சம் பேர். இன்னும் சில கொடுமையான நரம்புச் சிலந்தி போன்ற நோய்களுக்கு 'யாஸ்' போன்ற நோய்களுக்கு இங்கே மக்கள் திட்டுத் திட்டாக ஆளாகி இருக்கிற நிலையில், இன்னொரு பக்கம் மலேரியாக் காய்ச்சல் இருக்கிற நிலையில்—அது ஏறத்தாழ ஒழிக்கப்பட்டு விட்டது என்றாலும் அது இன்னும் மிச்சம் இருக்கிறது என்ற நிலையில்—அதனால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் இருக்கிற நிலையில் இப்படிப்பட்ட மக்களுடைய எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் ஏறத்தாழ 415 இலட்சம் மக்களில் 40 இலட்சம் பேர் இந்த நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏதாவது ஒரு வகையில், ஏதாவது ஒரு நோயினால் எப்படியோ பிறருடைய உதவியினாலோ மருத்துவச் சிகிச்சை பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், அந்த 40 இலட்சம் பேர்களுக்குப் படிப்படியாக, முறையாகச் சிகிச்சை வழங்க வேண்டிய நிலையில்தான் இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும், இந்தக் குறைகளையெல்லாம் ஒரே ஆண்டில் போக்க முடியாது என்பதையும், பல ஆண்டுகள் தொடர்ந்து செய்ய வேண்டிய முயற்சி இது என்பதையும், இந்த முயற்சியை அரசாங்கம் மட்டும் செய்தால் போதாது என்பதையும், வெறும் மருத்துவமனை கட்டினால் மட்டும் போதாது என்பதையும் மக்களும் இந்த நோய்களைப் போக்குவதற்கு வழிவகைகளையும் முறைகளையும் உணர்ந்து தங்களைப் பாதுகாப்பதில் அவர்களுக்கு ஓரளவு அக்கறை ஏற்பட்டு, அவர்கள் பாதுகாத்துக் கொள்வதைப் பொறுத்துத்தான் இதிலே இந்த அரசு வெற்றிபெற முடியும் என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான், அனைத்துத் துறைகளில், மருத்துவத்தைப் பொறுத்தவரையில் பல இடங்களில் அப்படி மருத்துவ வசதியில்லையென்று ஒத்துக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரே ஒத்துக்கொள்கிறாரா என்று கேட்கலாம். ஆமாம், ஒத்துக்கொள்கிறேன். ஆனால், தமிழ்நாடு அரசாங்கம் எந்த அளவு இந்த நலத்துறையில் செலவிட்டு வருகிறது அல்லது எந்த அளவு அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள், உணரவேண்டுமென்ற அர்த்தத்தில் நான் சில சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டில் ஏறத்தாழ ரூ. 41 கோடி மருத்துவ நலத்துறைக்குச் செலவிடுகிற பொழுது இதைவிட அதிகம் செலவிடுகிற ஒரே ஒரு மாநிலம் மகாராஷ்டிரா மாநிலம், மட்டும் தான். அந்த மகாராஷ்டிரா மாநில அரசின் வரவு செலவு அளவு, வருவாய் வசதிகள் எல்லாருக்கும் தெரியும். வேறு எந்த மாநிலத்திலும் நம்மைவிட ஏறக்குறைய ¾ பங்கும் பாதியும்தான் செலவிடுகிறார்கள். (குறுக்கீடு) உ.பி. யிலே கூடக் குறைவுதான்.

இந்த விகிதாச்சாரத்தைப் பார்த்தால், சில மாநிலங்கள் 7 சத விகிதம் அவர்களுடைய வருமான வரவு செலவில் ஒதுக்கியிருக்கின்றன. சில மாநிலங்களில் 7 சத விகிதம் சில மாநிலங்களில் 6 சத விகிதம். இப்படி 5 சத விகிதம் கூடி இருக்கிற அளவுக்குக் குறைவாக இருக்கிறது. தமிழ்நாட்டில் நாம் செலவழிப்பது இன்றையத்தினம் கணக்கெடுத்துப் பார்த்தால், ஏறத்தாழ 9·1 சத விகிதம் அல்லது 9·2 சத விகிதம் என்ற அளவுக்கு இந்த விகிதாச்சாரத்தில் வருமானத்திலிருந்து ஒதுக்குகிறோம். ஆனால், 4 கோடியே 15 இலட்சம் மக்கள் இருக்கிற ஒரு மாநிலத்தில் ரூ. 41½ கோடி செலவழிக்கிறோம் என்று சொன்னால், பர் காபிட்டா எக்ஸ்பென்டிச்சர் என்ற அளவோடு பார்க்கிற பொழுது ஓர் ஆளுக்கு ரூ. 10 வருகிறது. ஆள் ஒன்றுக்கு ரூ.10 செலவிடக் கூடிய வாய்ப்பு நமக்குக் கிடைக்கிற அளவில் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், அது போதாது. உண்மையாக இந்தக் குறைகள் இல்லாமல் 5 ஆண்டுக் காலத்தில் இவைகளைச் சீரமைக்க, வசதி அளிக்க, ஆள் ஒன்றுக்கு ரூ. 20 செலவிட வேண்டும். அதற்கு நமக்கு நிதி நிலை வேண்டும். அப்படியென்றால் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 85 கோடி செலவிடவேண்டும். அதை எட்டிப் பிடிக்க, இன்னும் 4 ஆண்டுக் காலம், 5 ஆண்டுக்காலம் ஆகும்.

ஆனால், இன்றைக்கு அந்தத் தேவையிருக்கிறது. ஆக தேவையிருக்கிற மக்களுக்குப் பல்வேறு குறைகள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு எடுத்துக் கொள்கின்ற முயற்சியில் தமிழ்நாடு அரசாங்கம் வேறு எந்த மாநில அரசாங்கத்தையும் விட மிகச் சிறப்பாகப் பணியாற்றினாலும் கூட, இன்றைக்கு இருக்கிற பொருளாதார வசதியால் நிறைவேற்ற முடியவில்லை. இதை நிறைவேற்றுவதற்கு ஒரு வகையில் நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களானால் நமது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஒவ்வொருகிராமத்திலும்இருக்கிற மக்கள்கூடத் தங்கள் சக்திக்கேற்ப வரி செலுத்த வேண்டுமென்று ஓர் ஆலோசனை சொன்னார்கள்.

'செஸ் ஆன் தர் லேண்ட் ரெவின்யூ ஆர் செஸ் ஆன் தர் புராப்பர்டி இன் தி வில்லேஜஸ்' என்ற முறையில் கிராமங்களில் உள்ளவர்கள் 10 ரூபாய் வரி செலுத்துவார்களானால், அதிலே ஒரு ரூபாயாவது சுகாதாரத்திற்காகக் கொடுக்க வேண்டுமென்று முறை செய்தால் ஒரு வேலை நிதி கிடைக்கக் கூடும். அல்லது திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னதைப்போன்று நிதி திரட்டினால், உண்டியில் வைத்து நிதி திரட்டினால் கூட, 1 சத விகிதம் நிதி சேர்க்கமுடியுமா என்பது கஷ்டம். அண்மையில் தமிழக அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது, தமிழகத்தில் பரிசுச் சீட்டுத் திட்டமொன்றை ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்வதா, அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அம்மையாரைப் போன்றவர்கள் ஒத்துழைப்புத் தருவார்களானால், அந்த நிதியைச் சேர்க்க முடியுமானால் அந்த ஐந்து கோடி ரூபாயை வைத்துப் பல்வேறு மருத்துவ மனைகளுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டுவதற்கும் பல அமைப்புகளை ஏற்படுத்துவதற்கும். . . . .

**திருமதி. த. ந. அனந்தநாயகி:** அப்படியானால் நீங்கள் மாதா மாதம் பரிசுச் சீட்டுக் குலுக்குகிறீர்களே அதை நிறுத்திவிட்டு இப்படிக் குறிப்பிட்ட நல்ல காரியங்களுக்கு அந்த முறையைக் கொண்டு வரலாமே?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நாங்கள் மாதா மாதம் குலுக்குகிறோம். ஆனால், நாங்கள் மாதாமாதம் குலுக்குவது இந்த நாட்டில் இருக்கின்ற நிலைமையையொட்டி ஏறத்தாழ 50 இலட்சம் அல்லது 60 இலட்சம்ரூபாய்அளவிற்குச் சுகாதாரத் துறைக்காகவும், ஏறத் தாழ 50 அல்லது 60 இலட்சம் ரூபாய் வரையில் பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுவதற்காகவும் இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காகத்தான் ஒதுக்கப்படுகின்றன. ஆகவே, குலுக்குகிற காரியம் கெட்டுப்போகவில்லை. தினந்தோறும் குலுக்கவில்லை என்ற வருத்தம் எங்களுக்கு இருக்கிறதே தவிர, நிரம்பக் குலுக்குவதற்கு அம்மையாருடைய ஆதரவை நான் கேட்கிறேன். இன்றைக்கு அம்மையார் அவர்கள், அவர்கள் வழக்கறிஞருக்குப் படித்தவர்கள், இங்கே சொல்லும் பொழுது ஏதோ புள்ளி விவரத்தில் குறை இருப்பதாகச் சொன்னார்கள். நான்கூட இப்படி ஏதாவது கிடைக்கக் கூடிய தொகையை நம் முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெறாமல் விட்டுவிட்ட குறை இருப்பதாக எண்ணி வருத்தப்பட்டேன். ஆனால், உண்மை அதுவல்ல. 1972—73-ஆம் ஆண்டிற்குச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் குடும்ப நலத் திட்டத் துறையையும் சேர்த்து 12 கோடியே 4 இலட்சம் என்று ஒதுக்கப்பட்டிருந்தது. மத்திய அரசு உதவி நான்கில் மூன்று பங்கு வருகிற காரணத்தினால், அந்தத் தொகையை அதிலே வைத்து விடாமல், டிமாண்ட் 18-லே, 30-ஏ என்று இன்னொரு பிரிவாக ஆக்கி, 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது. இங்கே குறைந்த அளவிற்கு ஏறத்தாழ 2 கோடியே 41 இலட்சம் ரூபாய்க்குக் கணக்குக் காட்டப்பட்டு இருக்கிறது. இரண்டையும் கூட்டிப் பார்த்தால் 4 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமாக ஒதுக்கியிருப்

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
பேராசிரியர் அன்பழகன்

பது தெரியவரும். அந்த நிதியம் போதாதா என்பது வேறு பிரச்சினை. இன்றைக்கு 6 கோடியே 51 இலட்சம் ரூபாய் அளவிற்குச் செலவழிப்பதற்குத் திட்டம் இருக்கிறது. ஆகவே, அம்மையார் அவர்கள் பணம் சேர்த்து வைத்திருந்து அதைக் கொடுத்தால் கூடச் செலவழிப்போமே தவிர, மிச்சம் வைக்க மாட்டோம்.

சில திட்டங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்த வரையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவற்றை நிறைவேற்றுவதில் எவ்வளவு செலவானாலும் நிறைவேற்றுங்கள் என்கிற முறையில் அனுமதி வழங்கி இருக்கிறார்கள். ஆனால், நிதி இலாகாவில் நாம் கேட்கிறபொழுது இப்பொழுது 3 இலட்சம் ரூபாய்தான் தரமுடியும், பின்னால் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்களே தவிர, ஒதுக்கப்பட்ட பணத்தை தாங்கள் செலவழிக்காமல் மிச்சம் வைப்பதில்லை.

மக்கள் நலத் துறையைப் பொறுத்த வரையில் இரண்டு வகையான வளர்ச்சி வேகமாகத் தேவைப்படுகிறது. ஒன்று வெர்டிக்கல் குரோத், மற்றொன்று ஹாரிசாண்டல் டெவலப்மெண்ட் அல்லது குரோத். பரவலாக மருத்துவ வசதிகளைச் செய்து தரவேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அதே நேரத்தில் சில துறைகளில் மிகச் சிறப்பான நுண்ணறிவு பெற்றால்தான், பெற்றிருந்தவர்கள் இருந்தால்தான், மக்களுக்குப் பயன்படும். இல்லாவிட்டால் மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்கு அது ஊக்கம் தராது, மருத்துவ வசதி தேவைப்படுகிறவர்களுக்குப் பயன் தராது. அந்த வகையில் ஆராய்ச்சித் துறையிலேயும் வளர்ச்சி பெற வேண்டும். நுண்ணறிவு பெறக் கூடிய முறையில், மேல்நாட்டில் சென்று சில துறைகளில் பயிற்சிபெற்ற இளைஞர்கள் தேவை என்பதோடு மட்டுமல்ல, கிராமங்களுக்கெல்லாம் மருத்துவ வசதிகள் பரவலாகச் செய்யப்பட வேண்டும். சென்னைப் பொது மருத்துவ மனையில் வளர்ச்சி தேவைப்படுகிறது. ஆனால், மருத்துவ வசதியே இல்லாத கிராமங்களுக்கும் மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்றன என்பதையும் மறந்துவிடக் கூடாது. இரண்டு இடங்களிலேயும் வளர்ச்சியை ஏற்படுத்தினால்தான்—நல்ல பரிசிலனைக்குப் பின்னர்—அந்த வளர்ச்சி எல்லாருக்கும் ஏற்றதாகப் பயன்தரத் தக்கதாக அமையும் என்பதை உணர்ந்துதான் அரசு செயல்பட்டு வருகிறது.

சென்னைப் பொது மருத்துவ மனையைப் போன்று தென் சென்னையில் ஒரு மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். சென்னையில் தற்போது இருக்கிற பொது மருத்துவ மனையின் மதிப்பு என்ன என்று பார்க்கிறபோது 20 கோடி ரூபாயிலிருந்து 25 கோடி ரூபாய் வரையில் அதனுடைய மதிப்பு வருகிறது. ஏறத்தாழ இருபத்தைந்து கோடி ரூபாய் செலவழிக்கப்பட வேண்டுமானால் தமிழ்நாட்டில் முழுவதும் உள்ள இடங்களுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம், ஒன்றல்ல, இரண்டு ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். இருக்கின்ற மருத்துவ மனைகளைச் சீர்படுத்தி, ஒழுங்குபடுத்தி, சிறிய சிறிய தொகைகளைச் செலவழித்து அவற்றை முறைப்படுத்துவதில்தான் இந்த அரசு அக்கறை காட்டுமேயல்லாமல் 25 கோடி ரூபாயையும் மொத்தமாக ஒரே இடத்தில் கொட்டுவதற்கு இந்த அரசு தயாராக இல்லை. . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்னை நகரத்தில் இருக்கிற மக்கள் தொகையை நீங்கள் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் திரு. க. அன்பழகன் : அம்மையார் அவர்கள் சென்னையில் இருக்கிற காரணத்தினால் வெளியூர் தொகுதியில் நிற்போம் என்ற நம்பிக்கை இல்லைபோல் இருக்கிறது. சென்னையைப் பொறுத்த வரையில், சென்னைப் பொது மருத்துவ மனை, ஸ்டான்லி மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவ மனை, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, சென்னை பேரறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனை, சென்னை மகளிர்—குழந்தைகள் மருத்துவ மனை, கண் சிகிச்சை மருத்துவ மனை, சென்னை குழந்தைகள் நலப் பாதுகாப்பு மருத்துவ மனை, சென்னை ஆர். எஸ். ஆர். எம். மருத்துவ மனை, இ. எஸ். ஐ. மருத்துவ மனை, சென்னையில் உள்ள வாலண்டரி ஹெல்த் சர்விஸ் மருத்துவ மனை, ஆந்திர மகிள சபை மருத்துவ மனை, சென்னை கார்ப்பரேஷன் மருத்துவ மனைகள் இவற்றிலேயுள்ள நோயைப் போக்குவதற்கு நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு மருத்துவ மனைகளையும் வைத்துக் கொண்டு செம்மையாகச் சிகிச்சையளிப்பதற்கு நோயாளிகளும், பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாமே தவிர, தமிழ்நாட்டு மக்களுக்கு இரண்டு ஆண்டுக் காலத்தில் பல வகையில் நிவர்த்திகளைச் செய்ய வேண்டும். ஆனால் அதே நேரத்தில் சிறப்புப் பிரிவுகள் போன்றவற்றை ஏற்படுத்துவதிலேயும் அரசாங்கம் தயக்கம் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் செங்கைப் பொது மருத்துவ மனையில் ஒரு கோடி

## வெண்பாப் போட்டி-55

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டியாக இருப்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழரசு மூலமும் பிற ஏடுகளின் மூலமும் குடிசை மாற்று வாரியத்தின் பணிகளை அறிந்த நீங்கள், உங்கள் கருத்தை நேரிசை வெண்பாவாக எழுதி அனுப்புங்கள்.

முடிவு நாள் : 2—5—73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.



ரூபாய் செலவில் கட்டடம் எழுப்பப்பட்டிருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே எழுப்பப்பட்ட கட்டடங்கள் இருக்கின்றன. சிறிய சிறிய கட்டடங்கள் கட்டுவதில் பயன் இல்லை என்பதால் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டடம் கட்ட வேண்டுமென்ற ஆலோசனையும் இருக்கிறது. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலேயும் கட்டடங்கள் 4 அல்லது 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இங்கே மட்டுமல்ல, மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தஞ்சை மருத்துவமனையிலேயும் திருநெல்வேலி மருத்துவ மனையிலேயும் போதுமான படுக்கை வசதிகள் இல்லை என்று நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த மாமன்றத்தில் 1972–73-ஆம் ஆண்டில் டி.பி. படுக்கைகள் 20 கொண்ட ஓர் அமைப்பு ஏற்படுத்தவும், டி.பி. அவுட் பேஷண்ட்ஸ் கிளினிக் பகுதி ஏற்படுத்தவும் ஏறத்தாழ 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக இப்படிப் பரவலாகச் செய்யப்படுவதை இந்த அறிக்கையைப் படித்துப் பார்க்கிற எந்த உறுப்பினரும் ஒப்புக் கொள்வார்கள். பரவலாகச் செய்கிறோம். இடையிடையே சில இடங்களில் நிதிநிலை இடம் தராத காரணத்தினால் விடப்படுகின்றது. நிதிநிலை சரியான பிறகு அவை முறைப்படி கவனிக்கப்படும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையில் அகில இந்திய அளவில் ஒரு விதிமுறை தரப்பட்டது. ஓர் ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையமும், அதோடு இணைந்த குடும்ப நலத்திட்ட நிலையமும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முறையில் விதிமுறை தெரிவிக்கப்பட்டு, ஏறத்தாழ 375 இடங்களில் கட்டுவதற்குப் பரிசீலிக்கப்பட்டு அதிலே 50 இடங்களில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், அலோபதி மருத்துவத்தில் வளர்ச்சிகளை உண்டாக்கிக் கொண்டு, அதற்கடுத்தபடியாக, 'பேரா மெடிகல் பர்சன்ஸ்' என்ற வகையில் இன்னின்ன நோய்களுக்கு இந்த மருந்துகளை இந்த மக்களுக்கு வழங்க வேண்டும், இந்த விதமான சிகிச்சை அளிக்க வேண்டும் என்று, தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதற்குப் பயிற்சி பெற்றவர்களைப் போல், தனித்தனியாகப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு எல்லாக் கிராமங்களுக்கும் சிகிச்சை வழங்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

### நமது நாடும் நூலகமும்

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இன்று பத்துச் சதவிகிதம் பேருக்கு நூலக வசதி கிடைக்கிறது. நூலக வசதிக்காக நமது நாட்டில் சராசரியாக நபர் ஒருவருக்கு 5 காசு விதம் செலவிடப்படுகிறது. இந்தியாவில் கல்வித்துறைக்கென்று செலவிடப்படும் மொத்தப் பணத்தில் 0·3 சதவிகிதம் மட்டுமே பொது நூலகங்களுக்கென்று செலவிடப்படுகிறது. ஆனால் பிரிட்டனில் 3·3 சதவிகிதம் தொகை இதற்கென்று செலவிடப்படுகிறது.

ஹோமியோபதி சம்பந்தமாகக் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படியும், விதிமுறைகளின்படியும், அமைந்திருக்கிற ஹோமியோபதி கவுன்சிலின் மூலமாகவும் 8 ஆண்டு, 10 ஆண்டுக் காலமாக அந்தத் துறையில் அனுபவம் பெற்றிருந்தால், அதற்கான சான்றிதழ்களை வைத்திருந்தால் அவர்களைப் பதிவு செய்து கொள்ளவும், 4 ஆண்டுக் காலம் மட்டும் அனுபவம் இருந்து, 10 ஆண்டுக்காலப் பயிற்சி இல்லை என்றால் தேர்வு எழுதி அவர்களைப் பதிவு செய்து கொள்ளவும் முறைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். இதை மட்டும் இந்த ஆண்டில் நிறைவேற்றினால் 3,000, 10,000 ஹோமியோபதி மருத்துவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மருத்துவப் பணி ஆற்றுவார்கள். சிக்கனமாகவும் இருக்கும். ஹோமியோபதி மருத்துவத்தில் சில நன்மைகள் இருப்பதாக உணருகிறார்கள்.

சித்த மருத்துவ முறைகளை வளர்க்க வேண்டுமென்று நம்முடைய மணலி கந்தசாமி அவர்களும், மற்றும் திருமதி ஜோதி அம்மையார் அவர்களும் சித்த மருத்துவ வளர்ச்சியை ஆர்வத்தோடு சொன்னார்கள். உள்ளபடியே மேல்நாட்டு மருத்துவ வல்லுநர்கள் கூடச் சித்த மருத்துவத்தின் அருமையை ஏற்பதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள். ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்ட சில மருந்துகளைப் பெரிய நிபுணர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பிற துறை மருத்துவர்களும் ஏற்றுக் கொள்ளத் தக்க சிறந்த மருந்துகள் இருக்கும் அந்தத் துறையைத் தமிழகத்திலுள்ள மக்களுக்கு, நம்முடைய நிதிநிலை வசதிக்கேற்பப் பரவலாக்க வேண்டுமென்ற நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. இன்றைக்குச் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு அந்தத் துறையில் ஏற்கெனவே உள்ள எத்தனையோ ஏடுகள் வெளி வராமல் இருக்கின்றன. அவை அச்சேற்றப்பட வேண்டுமென்பதற்காகக் குழு நியமித்திருக்கிறோம். சில மூலிகைகளைப் பற்றி ஆராயப் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சி ஓரளவு நடைபெற்று வருகிறது. சித்த வைத்தியத்தில் 'முப்பூ' என்ற மருந்தைத் தயாரிப்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது என்பதற்காக அதைப் பற்றி ஆராய்ந்து சொல்ல ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் ஆராய்ச்சிக்காக மேலும் படுக்கைகளை அதிகப்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மத்திய அரசு தருகிற உதவியோடு ஆராய்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற ஐந்து இலட்சம் ரூபாயில் ஒரு கட்டடம் தேவை என்பதற்காக-பட்ஜெட் முடிந்து விட்டாலும், முதலமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு வகையில் நிதி ஒதுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அவர் ஒப்புதலுக்கு வைத்திருக்கிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் பாளையங்கோட்டை மருத்துவ மனையில் யூனானி மருத்துவ முறைக்குப் போதுமான வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். சித்தம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்றுக்கும் சேர்த்துத் தொடங்கப்பட்ட நிலையில், முன்னால் திட்டமிட்ட போது யுனானி முறைக்குப் போதுமான விண்ணப்பங்கள் வரவில்லை. விண்ணப்பங்கள் அதிக அளவுக்கு வந்திருக்குமானால் ஆசிரியர்களை வெளியிலிருந்தாவது கொண்டுவர முயற்சி எடுத்திருக்கலாம்.

உண்மை நிலையைச் சொல்ல வேண்டுமென்றால் சித்த வைத்தியத்தில் கூடத் தேர்ச்சி பெற்றவர்கள் இல்லை. எல்லாத் தகுதியும் பெற்ற சித்த வைத்திய வல்லுநர்கள் கிடைக்கவில்லை. யுனானி மருத்துவ முறையிலும் அந்த நிலை இருக்கிறது.

இந்த மருத்துவ முறைக்கு வசதிகள் அளிப்பது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் ஆயுர்வேத மருத்துவ மனைகள், சித்த யுனானி மருத்துவ மனைகள் தொடங்க வேண்டுமென்று எந்த ஒன்றியத்தில் இருந்து நகராட்சியிலிருந்து கேட்டாலும் அரசு அதற்கு அனுமதி அளிக்கிறது.

ஆயுர்வேதப்பகுதி இருக்கிறது. ஆயுர்வேதப் பகுதியைச் சேர்ந்த மருத்துவர்தான் அந்த மருத்துவ மனையின் சூப்பரின்டென்டென்டாகப் பணியாற்றுகிறார்கள். இதிலே எல்லாம் வேற்றுமை காட்டப்படவில்லை.

அரசாங்கம் அடிப்படையான, அவசியமான கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் சித்த மருத்துவம் ஐந்தாண்டுக் காலத்தில் முறைப்படி வளர்க்கப்பட்டு, நிலை நாட்டத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்யாவிட்டால் அகில இந்தியாவில் சித்த வைத்தியம் இருப்பதே தெரியாமல் போய்விடும். திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் இந்தத் துறையில் அமைச்சராக இருந்தவர்கள். அவர்கள் சொன்னார்கள், 'அன்பழகன் அதிர்ஷ்டக்காரர், சித்த வைத்தியத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது' என்று. நாடாளுமன்றத்தில் நான் உறுப்பினராக இருந்தபோதே அகில இந்திய மருத்துவ ஆலோசனைக் குழுவில் நான் இடம் பெற்றிருந்த காரணத்தால் அப்போதே இது பற்றிச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு ஆளுநராக இருக்கிற திரு கே. கே. ஷா அவர்கள் அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்தார். அவர் சொன்னார்—மருத்துவ முறையில் சித்த மருத்துவத்திற்கு எந்த அளவுக்குத் தகுதியுள்ளவர்களைத் தருகிறார்களோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்க ஆவன செய்வோம் என்று அன்றைக்கே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் சித்த வைத்திய வளர்ச்சிக்கு உதவிகள் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அதை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளத் தமிழகத்தில் எல்லா ஏற்பாடுகளும் தொடங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் நோய்த் தடுப்பில், தொழு நோய் தடுப்பதில் 100-க்கு 70 பங்கு மக்களுக்குத் தொழு நோய்த் தடுப்பு முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுத் தடுக்கப்பட்டிருக்கின்றன. 30 பங்கு மக்கள் அளவுக்குத் தான் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுவும் வருகிற ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாக முழு அளவுக்கு நிறைவேற்ற வேண்டுமென்று முயன்று கொண்டிருக்கிறார்கள். காச நோய்த் தடுப்பை நூற்றுக்கு 60 பங்கு, 70 பங்கு மக்களுக்குத் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஸ்மால் பாக்ஸ்—பெரியம்மை நோய் தமிழ் நாட்டில் அடியோடு ஓடிப் போகச் செய்கிற அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறோம். பக்கத்து நாட்டிலிருந்து வருகின்றவர்கள் அல்லது வெளியூர் சென்று வருகின்றவர்களால் ஒன்றிரண்டு இடங்களில் ஏற்படுகிறதே தவிர, பெரும்பாலும் பெரியம்மை நோயைத் தடுத்திருக்கிறோம். காலரா நோயையும் பெரும்பாலும் தடுத்திருக்கிறோம். நேற்று முன் தினம் செஞ்சிக்குப் பக்கத்தில் கலவைப் பகுதியில் இரண்டு மூன்று இடங்களில் காலரா ஏற்பட்டிருப்பதாகச் செய்தி வந்தவுடன் அரசு நலத் துறை அலுவலர்கள் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்றார்கள்.

1951-ஆம் ஆண்டில் நம் நாட்டில் மொத்தம் 30 மருத்துவக் கல்லூரிகளே இருந்தன. ஆனால், தற்போது மொத்தம் 99 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. நம் நாட்டின் 56 கோடி மக்கள் தொகையில் 12 ஆயிரத்து 300 மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருக்கிறார்கள். அதாவது, 45,000 பேரில், ஒருவர், மருத்துவப் படிப்புப் படிக்கிறார்.

போதுமான அளவுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு நோயையும் தீர்க்க மக்களுக்கு மருத்துவ மனைவசதி என்பது ஒரு நோக்கம். அதோடு நோய்த் தடுப்புக்காகத் தனித் தனி நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தர்மபுரி மாவட்ட மருத்துவ மனை, அதே போல் வேறு சில மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனைகள் இவற்றிலுள்ளகுறைகளை நீக்கப் படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். அடுத்து, நகர்ப்புற வளர்ச்சியில், சென்னை மாநகரத்திற்கான விரிவான வளர்ச்சித் திட்டங்களை, முன் கூட்டியே செய்யப்பட வேண்டிய காரியங்களை, வட்டார வளர்ச்சிக்கு அடிகோல வேண்டிய காரியங்களைக் கவனித்துக் காரியங்கள் செயலாற்றப்பட்டு வருகின்றன. சென்னையில் இருந்து செங்கற்பட்டு செல்கிற வழியில் நான்கு மைல்களுக்கு இப்பால் ஒருபெரிய வட்டாரம் ஒரு புதியநகர் வளர்ச்சிக்கு உரியதாகக் கருதப்பட்டு அந்தப் புது நகரத்திற்குத் தேவையான அடிப்படையான பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு அதற்காக ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மெட்ரோ பாலிட்டன் அதாரிட்டி என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் செலவழிக்கவும், நகர வளர்ச்சிக்காக, அதன் பெயர் தமிழகத்தில் தமிழக மக்கள் என்றைக்கும் பெருமையோடு எண்ணிக்கொண்டிருக்கிற மறைமலை அடிகளின் பெயரால் 'மறைமலை நகர்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு பணிகளில் உள்ளபடியே அரசுக்கு அக்கறை இருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு பேசிய உறுப்பினர்கள் பலரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஜோதி அம்மையார் அவர்களும், மற்றவர்களும் இந்த அரசு செய்து வருகிற நல்ல காரியங்களை வரவேற்பதாகவும் தெரிவித்துக் குறைகளையும் சுட்டிக் காட்டி, ஒத்துழைப்போடு கூடிய ஆலோசனைகளை வழங்கியதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(சட்டப் பேரவையில் மக்கள் நல் வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்கும் பதிலளித்து ஆற்றிய உரையின் சில பகுதிகள்)





அறிவு பூர்வமாகச் சிந்தித்ததை இதய பூர்வமாகச் செயல்படுத்தும் நேர்மை, நெஞ்சுரம் எல்லாருக்கும் எளிதில் வந்து விடுவதில்லை.

ராதை இதற்கு விதிவிலக்கு.

'நர்மதா, மணிவாசகனை மணக்க வேண்டும்'—ராதையின் அறிவும் ராதையின் இதயமும் விரும்பிய முடிவு இது ஒன்றுதான். தான் சட்டப் படிப்பை மேற்கொள்ள மறுத்தால் நர்மதா-மணிவாசகம் திருமணம் தடைப்பட்டுப் போய் விடுமோ என்று கலங்கினாள். அதன் காரணமாகத்தான் தொடர்ந்து வக்கீலுக்குப் படிப்பதாக வாக்குறுதி கொடுத்தாள், ராதை.

திருமணத்தின் அடிப்படைக் காரணங்கள் வெவ்வேறாக இருந்தாலும், 'ராதை சட்டப் படிப்புப் படிக்க வேண்டும்' என்ற புதிய நோக்கம் பாண்டித்துரையின் மனத்துள் நர்மதா

'' போய் வருகிறேன்.... வணக்கம் '' என்று புறப்பட்ட நர்மதாவை, '' அம்மா...... ஒரு விநாடி உட்கார்ந்துவிட்டுப் போ........ உன்னிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்க வேண்டும் '' என்று கூறி அருகிலுள்ள சோபாவில் உட்காரும்படி கைகாட்டுகிறார் பாண்டித்துரை.

ராதையின் இதயம் 'திக்' கென்றது.

அப்பா என்ன கேட்கப் போகிறார்........ ?

அவை எதுபற்றிய கேள்விகள்?

மருத்துவக் கல்லூரி மாணவியான நர்மதாவின் எதிர்காலத் திட்டம் பற்றியா ? அல்லது தனது எதிர்காலத்தைப் பற்றியா ? வேதனை மிகுந்த நெஞ்சோடு தந்தை பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் ஓராயிரம் விபரீதங்கள்



## 8. ஆசை நெஞ்சங்களுக்குள் வீசும் புயல்

வைப் பற்றிய நல்லெண்ணங்களாய் வலுப்பெற்றுவிடுகின்றன.

பாண்டித்துரையை நன்றியுடன் கைதொழுது புறப்படுகிறாள் நர்மதா. தந்தையும், மகளும் தியாகத்திலும் அமைதியிலும் ஒருவரை ஒருவர் மிஞ்சி நிற்கிறார்களே என்னும் வியப்பு நர்மதாவுக்கு ; ஆனால், ஏமாளித்தனத்தின் எல்லைக்கே போய் நிற்கிறார்களே என்னும் வேதனை ரோமியோவுக்கு.

தோன்றலாமே ! தானாகத் தோன்றாவிட்டாலும் தவறான பாதைக்குத் திசை மாற்றிவிடும் ஆற்றல்மிக்க ரோமியோ அருகிலேயே நிற்கிறாரே......

'' அப்பா........ அக்காவும் அத்தானும் ஏதோ அவசரமாக ...... '' என்று குறுக்கிட்டு, தந்தையின் பேச்சைக் கத்தரிக்க முயலுகிறாள் ராதை.

'' கல்யாணத்துக்கு முன்னால் எந்தத் திசையிலும் அவசரம்

கூடாது ராதா......'' என்று மகளிடம் கூறிவிட்டு, நர்மதா விடம், '' அம்மா......இன்று முதல் நீயும் என் மகள். என் மருமகனை மணக்கப் போகிற உனக்கு எங்கள் குடும்பத்தைப் பற்றி எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றிக் கூறியாக வேண் டும். அதற்கு முன்னால் உன் னைப் பற்றிய விவரங்களை நீ கூறவேண்டும்........சொல்லு வாய் அல்லவா ? '' என்று கேட்கிறார்.

'' நல்லவர்கள் ஒப்புக் கொள் ளக் கூடிய உண்மையைச் சொல் வதற்கு மிகப் பெரிய அறிவு வேண்டும்.''

நர்மதா மேலும் பேசமுயன் றாள்.

ராதை குறுக்கிட்டு, '' நானே சொல்கிறேன் அப்பா........ நர்மதா அக்காவின் தந்தைக் குச் சிங்கப்பூரில் வியாபாரம். சொந்த ஊர் இங்கேதான். மதுரைக்குப் பக்கத்தில். நர் மதாவின் பெற்றோர் வரு டத்திற்கு ஒரு தடவை வந்து போவார்கள். அக்கா சென்னை மருத்துவக் கல்லூரி விடுதியில் தங்கிப் படித்து வருகிறார்கள். படிப்பு முடிந்து ஹவுஸ்-சர்ஜனாக இப்போது வேலை பார்க் கிறார்கள்........ இந்த வரு டம் முதல் தனியாகவே 'டாக்டர் நர்மதா, எம்.பி. பி.எஸ்.,' என்று போர்டு போட்டுக் கொண்டு தொழில் நடத்தப் போகிறார்கள்....... நர்சிங் ஹோம் அமைப்பதற்கு இடம் கூடப் பார்த்திருக்கிறார் கள்............கௌரவமான வேலை, கைநிறையச் செல்வம். கண் நிறைந்த கணவன். இவர் களின் எதிர்காலம் எத்தனை ஒளி மயமாக இருக்கப் போகிறது தெரியுமா........?'' என்று படபடவெனப் பொரிந்து தள்ளு கிறாள் ராதை.

'' நேற்று-இன்று-நாளை என் னும் முக்காலத்தையும் சுருக்க மாகவும், சுவையாகவும் சொல்லி விட்டாயே ராதா......நான் கேட்க வந்த விவரங்கள் இவை பற்றியதல்ல-நர்மதாவின் குடும் பத்தைப் பற்றித்தான், கேட்க விரும்புகிறேன் ''

பாண்டித்துரை அழுத்தமாகக் கேட்கிறார். அமைதியாகப் புரிந்து கொண்டு இருக்கிறார்.

'' என் குடும்பத்தைப் பற்றி நீங்கள் என்ன கேட்கப் போகி றீர்கள் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது சார்...... குடும்ப கௌரவம் என்பது பங்களா, கார், பட்டம், பத விக்குள் இல்லை. அது மனத் துள் மறைந்து கிடக்கும் வேர். ராதைக்குத் தெரியாத அந்த விவரத்தைப்பற்றி உங்களுக்கு..''

'' எப்படித் தெரியும் என் றா, ஏன் தெரிந்து கொண் டேன் என்றா நீ மண்டையை உடைத்துக் கொள்ள வேண் டாம். திருமணச் சம்பந்தம் என்று பேச்சு வருகிற போது இருவீட்டார் குடும்ப நிலைமை களையும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதால்தான் முன் கூட்டியே அதைத் தெரிந்து கொண்டேன் நான்.''

ராதை திகைப்புடன் தந்தை யைப் பார்க்கிறாள்.

## மருத்துவர்களுக்கு வீடுகள்

ஆயுள் சட்டுறுதிக் கழகத் தலைவரின் ஆலோசனையின் பேரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கிராமப் புறங்களில் மருத்துவர்களுக்கு வீடுகள்— மருந்தகங்கள் சிலவற்றைக் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டுள் ளது. இதற்கு ரூபாய் 15,000 முதல் ரூபாய் 20,000 வரை செலவாகும். தொடக்கத்தில் 20 சதவிகிதத் தொகை செலுத்த வேண்டும். எஞ்சிய தொகை மாதத் தவணைகளில் வசூலிக்கப்படும். இத் திட்டத் திற்கு 5 மருத்துவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

'' நர்மதாவின் பிறப்பில் ஏதே னும் களங்கம் இருக்குமோ.. அல்லது களங்கம் இருப்பதாகக் கற்பித்துக் கொண்டு தந்தை ஏதேனும் விபரீதம் விளைவித்து விடுவாரோ....? இத்தனை சேதிகளையும் ரோமியோ அருகி லிருக்கும் போது பேசத் தொடங்கிவிட்டார்களே...... குடும்பம் என்னும் பூர்வாங்க அஸ்திவாரம் அமைவதற்குள் குழப்பங்கள் ஏதேனும் பிறந்து மனமாளிகைகள் இடிந்துவிட் டால்..........''

இவ்வாறெல்லாம் கவலைப் படுகிறது ராதையின் நெஞ்சம்.

மணிவாசகன் குறுக்கிட்டு மன்னிக்க வேண்டும் மாமா.. நான் ரோமியோவை அவன் வீட்டுக்கு வழியனுப்பிவிட்டு வரு கிறேன் '' என்று புறப்படுகிறான்.

'' ரோமியோ அந்நியனல்லன் மணிவாசகம் ! உனது பள்ளித் தோழன் ; உனக்குச் சம்பந்தம் பேசுகிறோம், சாட்சிக்கு அவன் தான் இருக்கட்டுமே '' என்று கூறிவிட்டு, ரோமியோவைத் தன் அருகில் இழுத்து உட்கார வைத்துக் கொள்கிறார் பாண் டித்துரை.

காதலர்களுக்குள் நடக்கும் 'பூசல்' என்றால் ரோமியோ வைப் போன்ற இளவட்டங் களுக்குக் கொண்டாட்டந் தான். திருமணத்திற்குச் சம் பந்தம் பேசுகின்ற நேரத்தில் அவன் எப்படிப் பொறுப்பான சாட்சியாக இருந்துவிட முடியும்?

ரோமியோ தர்மசங்கட மான நிலையில் எழுந்து நின்று, '' நான் உங்கள் வீட்டில் இருப் பது நல்லதாகப் படவில்லை சார்......உங்கள் குடும்ப விஷயத்தைப் பற்றி நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.. ......'' என்று நழுவப் பார்க் கிறான்.

'' இது எங்கள் குடும்ப விஷ யம் இல்லையப்பா ரோமியோ.. நர்மதாவின் குடும்ப விஷயம் ; அதாவது 'குடும்ப ரகசியம்' போல் நீ கூறினாயே அந்த ரகசியந்தான் பேசப்பட வேண் டும் '' என்று ஒரே போடாகப் போடுகிறார் பாண்டித்துரை.

இதனால்—

ராதைக்கு வியப்பு.

நர்மதைக்குத் திகைப்பு.

மணிவாசகனுக்கு ஆத்திரம்.

ரோமியோவுக்குத் தர்ம சங்கடம் !

ரகசியம் ரணகளமாக மாறி விட்டால் ?

அமைதியின் கனம் தாங்கா மல் கனத்துக் கிடந்த சில நிமிடங்களுக்குப் பிறகு நர்ம தாவே பேசத் தொடங்குகிறாள்.

'' சார்........சிங்கப்பூரில் குடியேறிய பிறகு என் தந்தை பெண் ஒருத்தியை மணந்து கொண்டு....'' என்று பேசு வதற்குள் பாண்டித்துரை குறுக் கிட்டு, -' மணந்து கொண்டு தானே ? '' என்று அழுத்த மாகக் கேட்கவும் நர்மதாவின் முகம் கோபத்தால் சிவக்கிறது. நமக்குப் பிரியமானவர்கள் எதைச் சொன்னாலும் நாம் ஏற்போம், நமக்கு பிரியமில்லாத வர்கள் எதைச் சந்தேகித்தாலும் நாம் மறுப்போம். இதுவே மனித நிலைமை. இருந்தா லும், கோபத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல், '' சட் டப்படி மணந்துகொண்டு தான் '' என்று அழுத்தமாகச் சொல்கிறாள் நர்மதை.

'' வக்கீல் சார் திருப்தியடை யும் சட்டம் வேறு, நர்மதா ''

'' வாழ்க்கை நடத்துபவர் கள் திருப்திப்படும் சட்டப்படி மணந்து கொண்டுதான்......'' என்று நிறுத்தினாள்.

'' இதுபோதும்...... எனக் கிருந்த சந்தேகம் தீர்ந்துவிட் டது '' என்கிறார் பாண்டித் துரை.

'' மாமா எனக்கு இன்னும் தீரவில்லை '' என்று புதிராகத் தொடங்குகிறான் மணிவாசகன்.

'' இது என்ன திருப்பம் ? '' என்ற அதிர்ச்சி ராதைக்கு.

நர்மதாவின் பெற்றோரை அவர்கள் திருமணச் சேதியைச் சதுரங்கக் காய்களாக்கி மாம னும், மருமகனும் விளையாடத் தொடங்கி விட்டார்களே என்ற வேதனை அவள் நெஞ்சில் அதி கரிக்கிறது.

'' மருமகனே ! உனக் கென்னப்பா சந்தேகம் ? '' என் கிறார் பாண்டித்துரை.

'' நர்மதாவின் தகப்பனார் யாரோ ஒரு பெண்ணை மணந்து கொண்ட ரகசியத்திற்கும் நர் மதாவின் இன்றையத் திருமண விஷயத்திற்கும் என்ன சம் பந்தம் ? நர்மதாவைப் பெண் கேட்கும் நேரத்தில் அவள் தந்தையின் அந்தரங்கத்தை அலச வேண்டிய அவசியமோ, அதிகாரமோ யாருக்கும் இல்லை. இந்தத் துணிச்சல் யாருக்கு வந்திருக்க முடியும் ? ''

—மணிவாசகத்தின் குரலில் கொஞ்சம் கொஞ்சமாகச் சூடேறி வருவதை, தீக் கொழுந்து சுடர் விடுவதை ராதையும் உணருகிறாள் ; நர்மதாவும் உணர்ந்து உடல் பதறுகிறாள்.

'' அப்படியானால், திருமணம் என்ற உறவு வலுப்படுவதற்கும், நிறைவு பெறுவதற்கும் இரண்டு பக்கத்துக் குடும்ப கௌரவங் களைப் பற்றிப் பேசித் தெரிந்து கொள்வது, தெளிவு படுத்துவது அவசியமில்லை என்பதுதான் வக்கீலின் முடிவா ? '' என்கிறார் பாண்டித்துரை.

'' சற்று முன் மருமகன் என்றீர்கள். இப்போது வக்கீல் என்று விளக்கம் தருகிறீர்கள் .''

'' ஆமாம்.... ''

'' திருமணம் என்பது தனிப் பட்ட நபர்களைப் பொறுத்த விஷயம். இதில் மற்றவர் களின் தலையீடோ, மாற்றார் களின் கிலேசங்களோ, ஒன்று பட்ட இதயங்களுக்குப் பாதிப் புத் தருவது அனாவசியம்....''



"ஓகோ....இந்தப் பதிலை வக்கீலின் பதிலாக ஒப்புக் கொள்வதா? அல்லது என் மருமகனின் பதிலாக ஒப்புக் கொள்வதா?"

"நர்மதா களங்கத்தில் பிறந்தவள் என்னும் காரணத்தைக் கற்பித்து, எங்கள் திருமணத்தை வெட்டி எறிவது உங்கள் திட்டமாக இருக்கலாம்...."

வக்கீல் மணிவாசகன் வீசிய சொல்லம்பில், நான்கு இதயங்கள் ரத்தம் சிந்துகின்றன.

மணிவாசகன் தொடர்ந்து, "நீங்கள் போடுகிற தடைகளினுல் நான் தளர்ந்துவிடப் போவதில்லை, மாமா. நர்மதா களங்கத்தில் பிறந்தவளாக இருந்தால் என்ன, களங்கப் பட்டவளாகவே இருந்தாலும் என்ன! அவளைத்தான் மணிவாசகன் மணந்து கொள்ளப் போகிறன். இது சத்தியம்!" என்கிறன் ஆவேசமாக!

தன் பாசத்தைக் கொண்டு வளர்த்துத் தன் பணத்தைக் கொடுத்துப் படிக்க வைத்துத் தன் ரத்தத்தைக்கொண்டு பாடு பட்டாரே, அந்தப் பாண்டித்துரைக்குக் கிடைத்த பரிசு? சுடு சொற்கள், வடுப் பதிக்கும் வார்த்தைகள்.

எரிமலையாக அவன் எதிரில் வந்து நிற்கிருள் ராதை.

"நிறுத்துங்கள், அத்தான்.... உணர்ச்சி வேகத்தில் உங்கள் மனம் போனபடி பேசிக் கொண்டு போகவேண்டாம். அப்பா என்ன காரணத்திற்காகப் பேசத் தொடங்கிஞர்கள் என்ற அடிப்படையை..நீங்கள் மறந்து விட்டீர்கள்.......அந்த அடிப்படையை நீங்கள் மதிக்கத் தவறிவிட்டீர்கள். நீங்களாகவே ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டு அதற்குச் சமாதானம் பேசி நர்மதாவின் பிறப்பிலும், நர்மதாவின் நடத்தையிலும் களங்கத்தை நீங்களே ஏற்படுத்தி வைத்து விட்டீர்கள்.... அப்பாவைப் புண் படுத்துவது உங்கள் நோக்கமாக இருக்கலாம். ஆனல், அவமானத்தால் புண்பட்டு இரத்தம் பீரிட்டு நிற்பது என் அப்பாவின் இதயமல்ல;, உங்கள் அருமைக் காதலியின் இதயந்தான் ரத்தக்களறி ஆகிறது!"

மணிவாசகன் முறைத்துப் பார்த்தான்.

"அத்தான்! அறிவைக் கொண்டு வாழ்வதைவிட உணர்ச்சியை அறிந்து வாழுங்கள்; பிறர் உணர்ச்சியை அறிந்து வாழுங்கள்"

ராதையின் ஆ[illegible] கண்டு மணிவாசகன் [illegible] சிழந்து, செயலிழந்து பிரமை பிடித்தவன் போல் நிற்கிறன். ராதையின் பேச்சைத்தொடர்ந்து பேசுவதற்கான திறமையோ தெம்போ, பெற்ற தந்தைக்கும் [illegible] உறவினன் மணி [illegible] இல்லை. [illegible] எழுந்து தம் [illegible] புறப்படுகிறர் பாண்டித்துரை.

தன் மகளுக்குக் கிடைக்க வேண்டிய உரிமை கிடைக்கவில்லை. இந்த ஏக்கத்தோடு, நர்மதாவின் பிறப்பு ரகசியத்தால் ஏற்பட்ட தெளிவு, இதற்கும் மேலாகத் தாம் பெற்றுக் கொண்ட மணிவாசகனின் சுடு சொற்கள் யாவும் கலந்து அவர் மூளையைக் குழப்பின.

ராதையின் முகத்தில் இருந்த கடுமை மறைந்து கனிவு பிறக்கிறது. எதுவுமே நடவாதவள் போல் இன்முகத்துடன் நர்மதாவின் கைகளைப் பற்றி, "இந்த வீட்டுக்குள் வந்த பிறகு எவரும் கண்கலங்கக் கூடாது என்றேன் ......இந்த வீட்டிலிருந்து புறப்படும் போது உன்னைக் கண் கலங்க வைத்து விட்டார் உன் அருமையான காதலர்....அவர் சார்பாக உன் தங்கை மன்னிப்புக் கேட்கிறேன். உன் அத்தான் ஒரு குழந்தை. அது அழும்; அது அடம் செய்யும்; அதற்காக மட்டும் மன்னிப்புக் கேட்கத் தெரியாது முரட்டுக் குழந்தை. [illegible] சார்பில் [illegible] நர்மதா [illegible] களாக இ[illegible] வேண்டும். [illegible] கூறி [illegible] கண்ணீ[illegible] கிருள்.

பணத்தையும் ரத்த சம்பந்தமான உறவையும் விட மனிதத் தன்மை மிக மேன்மையானது என்பதை டாக்டர் நர்மதை அறிந்து கொண்டாள்.

"ராதா! தாயன்பை அறி[illegible] நான்......[illegible] வந்த பிறகு, [illegible] விழுந்து [illegible] குடும்பத்தில்... [illegible] [illegible] தியில் [illegible] [illegible] தேன்... [illegible] யிலிருந்து அன்பையும் [illegible] இல்லை. கொடுமை [illegible] வித்ததில்லை... [illegible] உடைய அன்[illegible] இதயத்தைத்தான் காண்கிறேன் ..." என்கிருள் பரவசத்[illegible]

"சிறன்னையின் கொடுமை என்னிடம் இருக்கிறது என்று கூறுகிறயா?" என்று சிரித்தான் மணிவாசகன்.






## வீட்டு வசதி பெற்றிட...

ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் பணி ஓய்வு பெறவிருக்கும் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை வகுக்கத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ்ப் பணியாளர்கள் தங்கள் பெயரைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பதிவு செய்து கொண்டு, அவர்கள் பணி ஓய்வு பெற வேண்டிய நாள் வரையில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 முதல் 100 வரையில் ஒரு தொகை கட்டி வருமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் தமிழ்நாட்டில் ஏதாவது ஓர் இடத்தில் வீடு அல்லது மனை அவர்களுக்கு நிச்சயம் உண்டு என்று அவர்கள் உறுதியாகக் கொள்ளலாம். ஐந்து ஆண்டுகளில் அவர்கள் செலுத்தும் தொகையைக் கையடைத் தொகையில் கால் பாகமாக எடுத்துக் கொண்டு பாக்கித் தொகை அவர்களது ஓய்வு காலத் தொகையிலிருந்து வசூலிக்கப்படும். இத் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

"நல்ல காலம்! என்னையே உன்தாய் என்று ஏற்றுக் கொள்ளாமல் போனுயே.... உறவுப்படி பார்த்தால் உன் மகனுக்கு நான் பாட்டியாக வேண்டும் கன்னிப் பாட்டி!" என்று கூறிக் கலகலவெனச் சிரிக்கிருள் ராதை. .... அவள்இதயம் சுமக்கும் வேதனைகள் எத்தனை யெத்தனை யெத்தனையோ..யாருக்குத் தெரியும்? அவளைப் போல் ஆனந்தப் படக்கூடிய நபர் உலகத்தில் யாருமே இருக்க முடியாது என்பதை நம்பவைப்பதற்காக அலை அலையாக ஆனந்த கங்கையாகச் சிரித்து மகிழ்கிருள்.....ராதை. துயரத்தை மறப்பதற்கான சிரிப்பா.... அல்லது துயரத்தைத் தூசாக உதறித் தள்ளுவதற்கான சிரிப்பா......?

ராதையின் பரவசத்தைப் பார்த்துச் செயலிழந்து நிற்கிருள் நர்மதா

"ராதா நீ தெய்வம்!" என்கிருள் உணர்ச்சி பொங்க.

"நூற்றுக்கு நூறு உண்மைதான்.... தெய்வத்திற்கு வரங் கொடுக்கத்தான் தெரியும்; தெய்வத்திற்கு வாழ்க்கை நடத்தத் தெரியாது!"

"போகலாமா நர்மதா?" என்று மணிவாசகன் கேட்கிருன்.

"எங்கே புறப்படுகிறீர்கள் இரண்டு பேருமாக? அத்தான், உங்களுக்குப் பிடித்தமான உருளைக்கிழங்கு பால் கறியும், அக்கா உங்களுக்குப் பிடித்தமான பால் பாயசமும் தயார் பண்ணி வைத்திருக்கிறேன்.... உங்கள் இருவரையும் வெளியே அனுப்பி விட்டுப் பால்கறியையும் பாயசத்தையும், அருகருகாக எடுத்து வைத்து நான் கண்குளிரப் பார்த்துக் கொண்டிருக்கவா?.. இருவரும் அமர்ந்து சாப்பிட வாருங்கள்.... மிஸ்டர் ரோமியோ நீங்களும் தான் சாப்பிட வர வேண்டும்."

"மன்னிக்க வேண்டும் ராதா..

இனிமேல் உன் அப்பாவின் வீட்டில் நான் சாப்பிடப் போவதில்லை...."

—குரல் வந்த திசை நோக்கித் திரும்பும் ராதை அதிர்ந்து போகிருள். "சாப்பிட வர மாட்டேன்" என்று மணிவாசகன் அல்லவா கூறுகிருன்!

"அத்தான் நீங்கள் ஒரு குழந்தை என்று சொன்னதை நிரூபிக்கத் தகுந்த நேரம் பார்த்தீர்களா....அடம் பிடித்து அழுதது போதும்—அப்பாவை அழவைத்ததும் போதும்— நல்ல பிள்ளையாக மாடிக்குப் போங்கள். அப்பாவையும் உடன் அழைத்துக் கொண்டு கீழே சமையலறைக்கு உடன் வந்து சேருங்கள்" என்றபடியே நர்மதாவை வலுக்கட்டாயமாக அழைத்துக் கொண்டு தன்னறைக்குள் போகிருள் ராதை.

மந்திரச் சக்திக்குக் கட்டுப் பட்டவன் போல் மணிவாசகன் மாடிக்கு ஏறிப் போகிருன்.

"நல்ல அத்தான்! சமர்த்துக் குழந்தை!" என்று அறை வாசலில் நின்றபடியே பாராட்டுத் தெரிவிக்கிருள் ராதை.

"ராதா உன்னல் எப்படித்தான் அவனேடு இன்னும் கலகலப்பாகப் பேச முடிகிறதோ! இதில் காருண்யமாகப் பாராட்ட முடிகிறதோ! பால்கறி வேறு பால்பாயசம் வேறு" என்று சிடுசிடுக்கிருன் ரோமியோ.

"மிஸ்டர் ரோமியோ! எனக்குப் பிறரைப் புகழத்தான் தெரியும்....பிறரைக் கண்டு புழுங்கத் தெரியாது!"

"அது மட்டுமல்ல மிஸ்டர் ரோமியோ, பிறர் மனத்துப் புழுக்கத்தைப் போக்கவும் இவளுக்குத் தெரியும்!" என்று தன் பாராட்டையும் வாரி வழங்கித் தெரிவிக்கிருள் நர்மதா. ராதையின் உற்சாகத்தாலும் மன அமைதியாலும் தன் மனம் கூடத் தென்றல் காற்றைப் போல் இலேசாகி விட்டிருந்ததை உணர்ந்தாள் நர்மதா.

"ராதா.... நீ நர்மதாவின் வார்த்தைகளில் ஏமாந்து போய் விடாதே...." என்று எச்சரிக்கிருன் ரோமியோ.

"யாரையும் ஏமாற்றிவிட்டு நான் இங்கே வரவில்லை.... ஏமாற்றவும் வரவில்லை?" என்கிருள் நர்மதா.

"நர்மதா......என் உணர்ச்சிகளை, மிஸ்டர் ரோமியோ முறுக்கிவிடப் பார்க்கிருர்.... என் உணர்ச்சி நரம்புகள் வீணையைப் போன்றவை. இது அபஸ்வரம் பேசாது. நான் ஏமாந்து போகவில்லை...... ஏமாந்தும் போகமாட்டேன், மிஸ்டர் ரோமியோ....! என் அத்தானைப் படிக்க வைத்ததில் ஆனந்தம் அடைந்தவள் நான். டாக்டருக்குப் படித்த பெண்ணை அவர் மணக்கப் போவதில், பேரானந்தம் அடைகிறவள் நான். இதில் "ஏமாற்றம்" என்ன வந்து விட்டது எனக்கு? வேண்டுமானல் 'A' மாற்றம் வந்திருக்கிறதென்று மகிழ்ச்சியடையுங்கள்.

கோபமும் கொதிப்பும் கொள்வார்; நஞ்சுமிழும் நயவஞ்சகப் பேச்சுக் கொப்புளிக்கும் என எதிர்பார்த்த ரோமியோ ஏமாந்தான்.

"இன்னெரு பெண்ணக இருந்தால் இதயம் வெடித்து வேதனைப் படுவாள்........நீ வெகுளி.... ராதா உன் நிலையில் டாக்டர் நர்மதா இருந்தால் அவர்களால் கூட இத்தனை இடர்ப்பாடுகளையும் இடிபாடுகளையும் தாங்கிக் கொள்ள முடியாது........"

## 'சிப்காட்' சலுகைகளில் சில....

தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைக் கொள்முதல் செய்யும் போது அரசு வேறு மாநிலப் பொருட்களின் விலையைவிட 10 சத விகித விலைச் சலுகைத் தரும்.

தொழில்கள் துவங்கும் போது தக்க இடங்கள் கிடைப்பது ஒரு பெரிய தடங்கலாக உள்ளது. அப்படி இடங்கள் கிடைப்பினும் தனியார் வணிகம் மூலம் வாங்குவதில் விலை அதிகமாகிறது. இதைக் கருத்தில் கொண்டு நமது அரசு அம்பத்தூர், கிண்டி, மதுரை, மேட்டூர், இராணிப் பேட்டை, திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர் ஆகிய இடங்களில் பெரிய அளவில் நிலத்தைக் கையகம் செய்து தொழில்கள் துவக்குவதற்கான மின்சாரம், சாலைகள், தண்ணீர் போன்ற வசதிகளைச் செய்து, தொழில் நிறுவனங்களுக்கான இடங்களைச் சுலபத் தவணை முறையில் அளிக்கிறது. இந்த இடங்களைப் பெறத் தமிழ்நாடு தொழில் வாணிப இயக்குநரை அணுக வேண்டும்.

'சிப்காட்' மேலும் வாய்ப்பான இடங்களைத் தேர்ந்தெடுத்து நிலங்களை வாங்கித் தொழில்கள் துவக்குவதற்கான எல்லா உள் வசதிகளும் நிறைந்ததாக அவற்றைச் சீரமைக்கும்.

''நர்மதாவுக்கு ஏன் இந்த வேதனைகள் வரவேண்டும்...... வராது........ வரக்கூடாது.... நான் வரவிட மாட்டேன்!'' என்று ராதை பேசப் பேச, நர்மதாவின் இதயம் அந்த நம்பிக்கையைக் கேட்டு மகிழவில்லை.

'நர்மதாவுக்கு ஏன் இந்த வேதனை வரவேண்டும்?' என்று கூறும் போதே-தன் இதயம் படும் வேதனை என்ன என்பதைக் கோடி காட்டி விட்டாளல்லவா ராதை....? எவருக்கும் தெரியக்கூடாது என்று சாமர்த்தியமாக, மனச்சிமிழை மூடி மூடி மறைத்து உதடு சிரித்து நாடகமாடினாலும் அவளையும் மீறிக் கொண்டு அவள் இதயம் தன் வேதனை முனகலை வெளிப்படுத்தி விட்டதே....! புண்ணின் மீது பூக்கள் விழுந்தாலும் வேதனை தானே.

கடவுளே.......... இதென்ன சோதனை........ராதையின் இதயத்துள்-அடி ஆழத்துள்.... புதைந்துள்ள ஏக்கம்.......... ஏமாற்றம்......வேதனை இன்னதென்று நர்மதாவுக்கு இப்போது புரிந்து விட்டது.... ஆனால்........அதைத் தீர்க்க அவள் என்ன கைம்மாறு செய்து விட முடியும்? வந்த சுவடு தெரியாமல் மணிவாசகனின் வாழ்விலிருந்து அவள் விலகிக் கொள்ளத்தான் வேண்டுமா.......... விட்டுக் கொடுக்க ராதை தயாராக இருந்தாலும் விலக்கிக் கொள்ளவே நர்மதா தயாராகத்தான் இருக்கிறாள். ஆனால் மணிவாசகன் இதற்கு என்ன தீர்ப்புச் சொல்லப் போகிறானோ?

செயலிழந்து நின்ற ஓரிரு கணங்களில் நர்மதா சிக்கலைத் தீர்க்கச் சிந்தனை செய்தாள். அவள் சிந்தனை மட்டும் தறிகெட்டுப் பறக்கத் தொடங்கியது.

''அடாடா சாப்பாடு ஆறிப் போகிறது. அப்பாவையும் காணோம்... ....கூப்பிடப்போன அத்தானையும் காணோம்....'' என்று செல்லமாகச் சிணுங்கியபடியே மாடிக்குப் புறப்படுகிறாள் ராதை.

கவலையும் கலவரமுமாகப் படிகளில் தடதடவென இறங்கி வருகிறான் மணிவாசகன்.

''மாமா பேச்சு மூச்சில்லாமல் மயங்கிக் கிடக்கிறார்கள், டாக்டருக்குப் போன் பண்ணு ராதா'' என்கிறான் பரபரப்பாக.

''அப்பா!'' என அதிர்ச்சியால் கத்துகிறாள் ராதை.

ரோமியோ தொலைபேசியின் அருகாகப் போய் குடும்ப டாக்டரின் தொலைபேசி எண்ணைத் தேடுகிறான்.

''இந்த வீட்டிலுள்ள எல்லாரும் என்னை மணப்பெண்ணாக நினைத்தது போதும்; நான் ஒரு டாக்டர் என்பதை எல்லாருமே மறந்து விட்டீர்களே!'' என்று அமைதியாகக் கூறியபடியே மாடியை நோக்கி நடக்கிறாள் நர்மதா.

அவளது உணர்ச்சியும், உருக்கமும் நிரம்பிய சொற்கள் மணிவாசகன் உள்ளத்தைத் துளைக்கின்றன.

''ஓ......இத்தனை படபடப்பில் நீ டாக்டர் என்பதை....''

என்று தயங்குகிறான் மணிவாசகன்.

''என்றென்றும் டாக்டர் என்பதை மறந்து விட வேண்டாம் மிஸ்டர் மணிவாசகன்'' இந்தச் சொல் குறும்பு நிரம்பிய சொல்லா? குழந்தைத் தனம் நிரம்பிய மழலையா?

''மறக்க மாட்டேன் அக்கா. ......இந்த நிமிடம் முதல் நீ தான் எங்கள் குடும்ப டாக்டர்!'' என்கிறாள் ராதை.

''குடும்ப டாக்டர் என்ற அந்தஸ்து மட்டும் எனக்குப் போதும். வேறு அந்தஸ்துகள் எனக்கு வேண்டாம்'' என்று அமைதியாக அழுத்தமாகக் கூறிவிட்டு மாடிக்கு விரைந்து போகிறாள் டாக்டர் நர்மதா!

நிலத்தில் இன்னது போட்டால் இன்னது விளையும் என்று சொல்லி விடலாம். மனித நெஞ்சத்துள் எது போட்டால் எது விளையும் என்று சொல்ல முடிவதில்லை.

மாமாவின் மயக்கத்தைத் தீர்க்க, தன் மூர்க்கத்தை மறந்து தன் சுபாவத்தை மறந்து இறங்கி வருகிறான் மணிவாசகன்.

பாண்டித்துரையின் மயக்கத்தை மாற்றுவதற்கு டாக்டர் என்ற எண்ணத்தில் மாடிக்கு ஏறிப் போகிறாள் நர்மதை!

அலைகடலில் வீசும் புயலை விட ஆசை நெஞ்சங்களுக்குள் வீசும் புயல் சமாளிக்க முடியாத வேதனை.

பாண்டித்துரையின் முனகல் கேட்டுப் பரப்பாக மாடிக்கு ஓடுகிறார்கள்........

''நீ என்னை விட்டுப் போய் விடாதே......''

பாண்டித்துரையின் சுட்டு விரல், மணிவாசகன் நெஞ்சுக்கு நேராக இருந்தது.

டாக்டர் நர்மதாவின் பத்து விரலும் அவர்தம் இதயத் துடிப்பில் துளாவிக் கொண்டிருக்கின்றன.

(வளரும்)



இதயம்.

எண்ணங்களின் பிறப்பிடம்;
உணர்ச்சிகளின் உறைவிடம்;
இத்தகைய இனிய இதயம் எத்தனை பாடுபடுகிறது!

எத்தனை எத்தனை இன்னல்களுக்கும், இழப்புகளுக்கும் ஈடு கொடுக்கிறது.

சில சமயம் சிரிக்கிறது.

சில சமயம் அழுகிறது.

சில சமயங்களிலோ சிரிக்கவும் முடியாமல், அழவும் முடியாமல் தவிக்கிறது.

இதயத்திலே உதயமாகும் எண்ணங்கள், அந்த எண்ணங்களுக்குப் பூசப்படும் வண்ணங்கள் எல்லாம் இதயம் இருக்கிற வரைதானே.

ஆனால், நல்லதுக்கும் கெட்டதுக்கும் மூலகாரணமான அந்தக் கைப்பிடிக்குள் அடங்கும் இதயம் ஒரே வினாடியில் அடங்கி விடுகிறதே! மண்ணுக்குள் 'அடக்கமாகி' விடுகிறதே.

இதற்குக் காரணமென்ன?
பெரும்பாலும் நோய்தானே?

'நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்' என்றெல்லாம் சொல்கிறோம். ஆனால், அதனைக் கடைப்பிடிக்கிறோமா? கட்டுப்பாடு இல்லாமல் நடக்கிறோம். காலம் நம்மைக் கடிதில் அழைத்துக் கொள்கிறது!

இந்த இறுதி அழைப்புக்கு இதய நோயும் ஒரு காரணம்.

ஆம். உயிர்த்துடிப்புள்ள இதயம், உணர்விழந்து விடுவதற்குக் காரணங்கள் எத்தனையோ உண்டு.

இப்படி உணர்விழந்து, உருவிழந்து இதய நோய்வாய்ப் பட்டவர்களில் 11.20 சதவிகிதத்தினர், இதயச் சுவர்களுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய்களில் ஏற்படும் கோளாறுகளினால் அவதிப்படுகின்றனர்.

11 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதத்தினர் உயர் இரத்த அழுத்தத்தினால் துன்பப்படுகிறார்கள்.

22 முதல் 40 சதவிகிதத்தினர் வாதத்தினால் உண்டாகும் இதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 13 முதல் 18 சதவிகிதத்தினருக்கு, 'கோர் பல்மனேல்' என்னும் இதய நோய் பீடித்திருக்கிறது. 1 அல்லது 2 சதவிகிதத்தினர் பிறவியிலேயே இதய நோய் உள்ளவர்களாக இருக்கின்றனர்.




ஒரு இலட்சம் மக்கள் தொகையில் 137.3 பேர் இந்தியாவில் இதய நாள நோயினால் இறக்கின்றனரே, என்ன பரிதாபம்! நாடு விடுதலையடைந்ததிலிருந்து இந்தியாவில் இறப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வந்த போதிலும், தற்போது நாட்டில், மொத்தம் இறப்பவர்களின் எண்ணிக்கையில், 220 சதவிகிதத்தினர் இதய நோயினால் இறக்கின்றனர்.

இரத்தக் குழாயில் ஏற்படும் கோளாறுகள் எப்படியெல்லாம் வருகின்றன தெரியுமா?

நீங்கள் மிகச் சிடுசிடுப்புக் குணம் உடையவராகவும், எளிதாகக் கோபம் வரக்கூடியவராகவும், உயர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தாலோ அல்லது, நகத்தில் மண்படாமல் காலை முதல் மாலை வரை பேனா பிடித்து வேலை செய்பவராகவும், புகை பிடிக்கும் பழக்கம் உடையவராகவும் இருந்தாலோ, உங்கள் இதயச் சுவர்களுக்கு எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய்களில் கோளாறு ஏற்படுவது திண்ணம்.

இதயத்தின் சுவர்களுக்குச் செல்லும் முக்கியமான சிரைகள் கொழுப்புப் பொருளினால் தடிப்பாகின்றன. இதனால் இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இத்தகைய நிலையை உடைய இதயத்தை 'இஸ்கேமிக் இதயம்' என்று அழைக்கின்றனர். இறுதியில் இதன் விளைவு? இதயத்தின் இரத்த ஓட்டமே நின்றுவிடுகிறது.

உடற்பயிற்சி செய்தல், ஒரே சீராக உடலின் எடையை வைத்திருத்தல், புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கைவிடுதல் ஆகியவற்றின் மூலம் இத்தகைய அவல நிலை ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

உங்களுடைய பெற்றோர்களோ அல்லது பாட்டனார்களோ, இதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால், நீங்கள் மற்றவர்களைவிட மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில், இந்நோய் தலைமுறைத் தலைமுறையாக வரக் கூடியதாகும்.

இரத்த அழுத்தம், அதிலும் உயர் இரத்த அழுத்தம், எப்படி ஏற்படுகிறது?

இதயத்திலிருந்து இரத்தத்தை எடுத்துச் செல்லும் சிரைகள் குறுகிப் போவதன் காரணமாக, இரத்த அழுத்தம், அசாதாரணமாக அதிகரித்து உயர் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

சாதாரண மனிதனை, உணர்ச்சி வசப்பட்டாலோ அல்லது அதிகமாக உடற்பயிற்சி செய்தாலோ அவனுடைய இரத்த அழுத்தம் அதிகரிப்பது இயற்கையே. இந்த உயர் இரத்த அழுத்தம் தொடர்ந்து நீடித்தால், அதுவே இதய நோயாக உருவெடுக்கும்.

அதிகமாக உடம்பு பெருத்து இருத்தல், உழைக்காமல் உட்கார்ந்துகொண்டு வேலை செய்தல் இயந்திரமயமான நவீன உலகத்தில் உணர்ச்சி வசப்படுதல் ஆகியயாவும் உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு உதவும் சாதனங்களாகும். சிறுநீரக நோயினால்கூடச் சிலசமயம் உயர் இரத்த அழுத்தம் உண்டாவது உண்டு.

உங்களுக்குத் தலை சுற்றல், மார்புப் படபடப்பு, மாடிப்படி ஏறும் போதோ அல்லது உடற்பயிற்சி செய்யும் போதோ, அசதி, சோர்வு ஆகியவை ஏற்பட்டால், உடனே நீங்கள் இரத்த அழுத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இந்த உயர்இரத்த அழுத்தத்தை புதிய மருந்துகளின் மூலம் குறைத்துக் கொள்ளலாம்.

சிலர் இந்தியக் காடுகளில் காணப்படும் 'சர்ப்பகந்தி' என்னும் செடியை உபயோகிப்பதன் மூலம், உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். இத்தகையோர் தங்கள் உணவில் உப்பு, கொழுப்புப் பொருட்கள், கார்போ-ஹைடிரேட்டுகள் போன்றவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும். நோய், ஏழையென்றும் செல்வனென்றும் பார்த்தா வருகிறது? அதற்கு எல்லாரும் சரி சமம்!

பணக்காரர்களுக்கு மட்டுமின்றிப் பாமரர்களுக்கும் வருவது வாதத்தினால் உண்டாகும் இதய நோய், இது குறைந்த சத்துக்களைக் கொண்ட உணவை உண்டு குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருபவர்களை, எந்நேரமும் பிடிக்கலாம். மிகக் கொடுமையான வாதக் காய்ச்சலினால் இதயத்தின் சதைகள் பாதிக்கப்படுகின்றன. வாதத்தினால் ஏற்படும் இதய நோய் குழந்தைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும் உருவெடுக்க ஆரம்பிக்கிறது. ஒரு முறை வாதக் காய்ச்சல் வந்தால் இதயம் பாதிக்காது; ஆனால் பல முறை இக்காய்ச்சல் வந்தால் ஒருவருடைய இதயத்தின் வால்வுகள் பாதிக்கப்படும். குறிப்பாக இதயத்தின் இடப்பக்கம் பாதிக்கப்பட்டு, அவர் வாழ்க்கை முழுவதும் எந்த வேலையும் செய்ய முடியாத அளவு ஊனமடையச் செய்துவிடும். சில சமயம் இறப்பும் நேர்வதுண்டு.

## விரைந்து செயலாற்றும் விசைச் செங்கற் சூளை.

பூவிருந்தவல்லிக்கு அருகே திருமழிசையில் உள்ள அரசு விசைச் செங்கற் சூளை தரை அளவு செங்கற்களோடு, மெட்ரிக் அளவு செங்கற்கள், துளையிடப்பட்ட செங்கற்கள், மேற்கூரை ஓடுகள், தடுப்புச் சுவர் செங்கற்கள் போன்ற சிறப்பு வகைச் செங்கற்களையும் தயாரிக்கிறது. ஆந்திரப் பிரதேசம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள அணுசக்திக் குழுவின் ஷார் திட்டத்திற்குத் ( Shar Project ) தேவையான 1,45,000 மேற்கூரை ஓடுகளை இப்பிரிவு வழங்குகிறது. தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், மின்சார வாரியம், அரக்கோணம் தொடர் வார்ப்புத் தொழிற்சாலை, ஆவடியில் உள்ள கனரக வண்டிகள் தொழிற்சாலை முதலியவற்றிற்கான செங்கற்களையும் இச்சூளை வழங்குகிறது.

இந்த குழந்தை, தொண்டைக் கரகரப்பினால் அடிக்கடி அவதிப்பட்டால் அக்குழந்தையை உடனே மருத்துவச் சோதனைக்கு உட்படுத்த வேண்டும். 'ஆன்டிபயாடிக்ஸ்' மருந்துகளை இக்குழந்தைக்குப் பல நாட்களுக்கு அளித்து வரவேண்டும். இத்தகைய நோயினால் பாதிக்கப்பட்ட இதய வால்வுகளை அறுவைச் சிகிச்சை மூலம் சரி செய்து விடலாம்.

நுரையீரலில் ஏற்படும் நோய் காரணமாக இதயத்தின் 'வலது வெண்டிரிக்கிள்' விரிவடைந்து தனது செயல்படும் சக்தியை இழந்து விடுகிறது. இத்தகைய இதயத்துக்கு 'கோர் பல்மனேல்' என்று பெயர்.

கடுமையான ஆஸ்துமாநோய் ஒருவரை நெடுங்காலமாகப் பிடித்திருந்தால் இதயம் பலவீனமாகி விடுகிறது. வட இந்தியாவின் குளிர்காலப் புகை மூட்டத்தினாலும், மாட்டுச் சாணத்தில் தயாரிக்கப்படும் வறட்டிப் புகையினாலும் மக்களுக்கு ஆஸ்துமா நோய் உண்டாகிறது.

இத்தகைய மார்புக் கூடு நோயைக் கூடிய விரைவில் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தியாவில் 30 இலட்சத்துக்கு மேல் ஆஸ்துமா நோயாளிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சூழ்நிலைப் பாதுகாப்பு, புகைப் போக்கிகள் மூலம் வெளிவரும் புகையைக் குறைத்தல், இயந்திர வாகனங்களில் உள்ள எரிபொருட்களின் மூலம் உண்டாகும் புகையைத் தடுத்தல் ஆகியவற்றின் மூலம் இத்தகைய இதய நோய் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

பிறவி இதய நோய் எப்படி வருகிறது?

தாயின் வயிற்றில் இருக்கும் போது கருவின் இதயம் தோன்றுவதில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாகப் பிறவி இதயநோய் சிலருக்குப் பிடிக்கிறது. ஒரு சில குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டுச் சாதாரண வாழ்க்கையைக்கூட நடத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

கிராமப் புறங்களில் வசிக்கும் இதய நோயாளிகளைக் குடிப்பெயர்ச்சி செய்வது மிகப் பெரிய பிரச்சினையாகும். இருந்தபோதிலும் தற்பொழுது இந்தியாவிலுள்ள முக்கியமான நகர்ப் புறங்களில் பல்வேறு இதய நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப் போதுமான வசதிகளைக்கொண்ட மருத்துவ நிலையங்கள் பல இருக்கின்றன. நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்த மருத்துவமனைகளில், இதய நோய்ப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. வரும் ஆண்டுகளில் நடமாடும் மருத்துவமனைகளின் மூலம் கிராமங்களிலுள்ளவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படும். ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து ஒரு நடமாடும் மருத்துவ மனையும் செயல்படவிருக்கிறது.



537

# சிந்தாமணியின் பணி



"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற இலட்சியத்துடன் ஏறத்தாழ 4 இலட்சம் மக்கள்தொகை கொண்ட தொழில் நகரமான கோவையில், 30 ஆண்டுகளுக்கு மேல் கூட்டுறவு வாணிக முறையில் முழு அனுபவம் உடைய கோவை மாவட்ட மையக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தின் ஓர் நிறுவனமாக, நவீன அமைப்போடும், புதிய படைப்போடும் புதுமைகள் பலப்பல மணக்க "சிந்தாமணி" கூட்டுறவுச் சிறப்பு அங்காடி 12—11—1966 முதல் செயல்படத் தொடங்கியது.

1,800 பங்குதாரர்களோடு துவங்கிய சிந்தாமணியில் இன்று 36,000-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் அங்கத்தினர்களாகி உள்ளனர். இவர்களால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 3·7 இலட்சம். ஒரு பங்கின் மதிப்பு ரூபாய் 10 மட்டுமே!

தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவெங்கும் புகழ் பெற்றுள்ள சிந்தாமணி சிறப்பு அங்காடி பற்றிய விவரங்கள் இதோ.....

### விற்பனை நிலையங்கள்

தலைமையகம் (வட கோவை)
கிளை (காந்திபுரம்)
கிளை (கடைவீதி)
கிளை (உடுமலைப்பேட்டை)
கிளை (காரமடை)
கிளை (பெரியநாயக்கன்பாளையம்)

### விற்பனைப் பிரிவுகள்

மளிகை.
அரிசி.
பழங்கள்—காய்கறிகள்.
மீன் மற்றும் முட்டை.
காஃபி பார், பேக்கரி.
பட்டு மற்றும் இதரத் துணிரகங்கள்.
எழுது பொருட்கள் மற்றும்
விளையாட்டுச் சாமான்கள்.
ரெடிமேடு ஆடைகள்.
மருந்துகள்.
அறை அணிகலன்கள்.
தானுவிதப் பொருட்கள்.
வீட்டுச் சாமான்கள்.
மின்சாரம் மற்றும் சைக்கிள் சாமான்கள்.
'இன்டேன்' எரிபொருள் மற்றும் அடுப்புகள்.
கால் அணிகள் மற்றும் தோல் பெட்டிகள், பைகள்.
விவசாயச் சேவை நிலையம்.
மோட்டார் வாகன உறுப்புகள்.
விலைக்குறைப்பு விற்பனை.
மது பானங்கள்.
'பெட்ரோல் பங்க்'.

### பணி மையங்கள்

தையல் நிலையம்.
கைக்கெடிகாரம் பழுது பார்த்தல்.
கார் பாட்டரி சர்வீஸ்.
விவசாய விசைத் தெளிப்பான்களுக்குப் பணிமையம்.
'பிரசர் குக்கர் சர்வீஸ்'.
மின்விசிறிகளுக்குப் பணிமையம்.

### சிந்தாமணியின் விற்பனை வளர்ச்சி

| ஆண்டு | | | ரூபாய் |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 76,77,663 |
| 1968–69 | .. | .. | 1,74,90,343 |
| 1969–70 | .. | .. | 3,17,54,862 |
| 1970–71 | .. | .. | 4,70,78,854 |
| 1971–72 | .. | .. | 5,60,37,162 |

### 1972–1973-ம் ஆண்டில் விற்பனைச் சாதனை

| | ரூபாய் இலட்சம். |
|---|---|
| ஒரு நாள் சராசரி விற்பனை .. | 2·25 |
| ஒரு மாதத்தின் சராசரி விற்பனை (25 வேலை நாட்கள்) | 60 |
| இதுவரை ஒருநாளில் உயர்ந்த அளவு விற்பனை. | 3·95 |
| இதுவரை ஒரு மாதத்தின் உயர்ந்த அளவு விற்பனை. | 76 |
| | கோடி ரூபாய் |
| இதுவரை ஓர் ஆண்டில் உயர்ந்த அளவு விற்பனை. | 5·6 |
| சென்ற ஆண்டில் (1972–73) எதிர்பார்க்கும் விற்பனை. | 7 |

சென்ற ஆண்டில் (1972-73) ஜூலை முதல் சனவரி முடிய 7 மாதங்களில் ரூபாய் 4·3 கோடிக்கு வாணிகம் நடைபெற்றுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். கடந்த தீபாவளி மாதத்தில் 19 இலட்சம் ரூபாய்க்கு மளிகைச் சாமான்களும், 18 இலட்சம் ரூபாய்க்குத் துணிகளும், 3 இலட்சம் ரூபாய்க்குப் பட்டாசுகளும் விற்பனையாகியுள்ளது.

### சிந்தாமணியின் சொந்தத் தயாரிப்புப் பொருட்கள்

தேங்காய் எண்ணெய்.
சம்பா ரவை.
நல்லெண்ணெய்.
காப்பித்தூள்.
சிகைக்காய்த்தூள்.
மிளகாய்த்தூள்.
மஞ்சள் தூள்.
துவரம் பருப்பு.
உளுத்தம் பருப்பு.
ஐஸ்கிரீம்.
பாப்கார்ன்.
பஞ்சு மெத்தைகள்.

### விற்பனை முறை

பொருள்கள் அனைத்தும் தூய்மை செய்யப்பட்டு முன்கூட்டியே கொள்கலனில் அடைக்கப்பட்டு விலைக்குறியிட்டு, தனித்தனி விற்பனைப் பிரிவுகள் மூலம் விற்பனையாளர்களால் காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை—11 மணி நேரம் தொடர்ந்து—விற்பனை செய்யப்படுகிறது. கல்வி நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், அரசுத் துறை நிறுவனங்களுக்கு மட்டும் ஒரு மாதத் தவணைக்குக் கடனுகப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தமாகப் பொருள்கள் வாங்குவோருக்குப் போக்கு-வரத்து வாகன வசதியும் செய்யப்படுகிறது.

### விற்பனைத் தள்ளுபடி

வழக்கமாக உறுப்பினர்களுக்கு 2 முதல் 3 சதம் வரை விற்பனைத் தள்ளுபடி வழங்கப்படுவதோடு, விழாக் காலங்களில் சிறப்புத் தள்ளுபடிகளும் வழங்கி ஊக்கம் அளிக்கப்படுகிறது.

### விளம்பரம் மற்றும் மக்கள் தொடர்புப் பணிகள்

விளம்பரம் செய்யவும், வாடிக்கையாளர்களோடு நேரிடைத் தொடர்பு கொள்ளவும், பார்வையாளர்களையும், பயிற்சி பெற வருவோர்களையும் வரவேற்று ஆவன செய்யவும் சிந்தாமணியில் முழுநேர மக்கள் தொடர்பு அலுவலர் ஒருவர் பணிபுரிகிறர். வாடிக்கையாளர்களின் குறைகளும், புதிய கருத்துக்களும் மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களால் தனிப்பட்ட முறையில் உடனுக்கு உடன் கவனிக்கப்பட்டு ஆவன செய்யப்படுகின்றன.

### சிந்தாமணியின் சிறப்புத் தன்மைகள்

* விவசாய உற்பத்திக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களை வழங்கும் விவசாய நிலையம்.

* புறநகர்ப் பகுதி அங்கத்தினர்களுக்கு இலவசப் பேருந்து வசதி.

* காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை தொடர்ச்சியாக 11 மணித்தொண்டு.

* காந்திபுரம் கிளையில் இரவு பகல் எந்த நேரத்திலும் மருந்து விற்பனை.

* வாடிக்கையாளர்கள் தாங்கள் சிந்தாமணியில் வாங்கிய பொருள்களில் ஏதேனும் குறைகள் இருப்பின் திருப்பிக் கொடுப்பதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் முழு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

* ஊழியர்களுக்குப் பணிச்சார்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

* ஊழியர்களுக்கு 'கிராஜுடி இன்சூரன்ஸ்' திட்டம்.

### வாடிக்கையாளர்க்கு வசதிகள்

குடிநீர் வசதி.

குறைந்த கட்டணத்தில் தொலைபேசி வசதி (20 காசு)

## குடும்ப நலம் காப்போம்

இது வரையில் குடும்ப நலத் திட்டம் சாதித்தது என்ன ?

இந்தியாவில் குடும்ப நலத்திட்டம் முழுமனதாகச் செயல்படத் துவங்கி ஏழு ஆண்டுகளே ஆகின்றன. இதுவரையில் ஒரு கோடியே 20 இலட்சம் குழந்தைகள் பிறக்காமல் தடுக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைப் பெறக்கூடிய வயது வரம்பில் உள்ள தம்பதியர் சுமார் ஒரு கோடியே 35 இலட்சம் பேர் ஏதாவது ஒருவகைக் குடும்பநல முறையை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானல், இந்த வயது வரம்பில் உள்ள சுமார் 10 கோடி தம்பதிகளில் 1·33 சதவிகிதம் பேர் குடும்பநல முறைகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு கோடியே 20 இலட்சம் பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் (ஆண்களும் பெண்களும் சேர்த்து) செய்துகொண்டிருக்கின்றனர். 47 இலட்சம் பெண்களுக்கு ஏரப் பொருத்தப்பட்டிருக்கிறது. 20 இலட்சம் ஆண்கள் நிரோத் உபயோகிக்கிறர்கள். 1951-ல் ஆயிரத்துக்கு 41·7 என்ற நிலையிலிருந்த குழந்தைப் பிறப்பு விகிதத்தை 37·1 ஆகக் குறைப்பதற்கு இவையெல்லாம் உதவியிருக்கின்றன.

வங்கி வசதி.

அஞ்சல் பெட்டி-அஞ்சல்தலைகள், கார்டுகள் விற்பனை.

வாகனங்கள் நிறுத்த வசதி.

ரயில், விமான அட்டவணைகள்.

மெல்லிசை—(அவ்வப்பொழுது முக்கிய அறிவிப்புகளுடன் தொடர்ந்து) ஒலிபரப்பப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் சிந்தாமணியில் வாங்கும் பொருள்களின் எடையைச் சரிபார்க்க வரவேற்புப் பகுதியில் சோதனைத் தராசு.

புகார்களையும், புதிய கருத்துக்களையும் நிருவாகத்திற்குப் அறிவிக்க ஆலோசனைப் பெட்டி.

கழிவறை வசதி.



### கொள்முதல்

மருந்துப் பொருட்கள், காய்கறிகள் மட்டும் சிந்தாமணியால் நேரிடையாகக் கொள்முதல் செய்யப்படுகின்றன. இதரப் பொருட்கள் அனைத்தும் மையச் சங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்டுச் சிந்தாமணிக்கு வழங்கப்படுகிறது. கொள்முதல்கள் யாவும் தனித்தனி நிருவாகப் பிரிவுகள் மூலம், அனுபவமுடைய கொள்முதல் அலுவலர்களால்—கொள்முதல் குழுவின் ஒப்புதலின் பேரில் ஆலைகளிலும், உற்பத்தியாளர்களிடமிருந்தும் நேரடியாகப் பருவக் காலத்தில் மொத்தமாகக் கொள்முதல் செய்யப்படுகின்றன.

### நிதி

சிந்தாமணிக்குத் தேவையான நிதியைத் தாய் நிறுவனமே வழங்குகிறது. தலைமைச் சங்கத்திற்குப் பங்கு மூலதனம், இதரச் சேமிப்புகள், உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள வைப்புத் தொகைகள், அரசாங்க உத்தரவாதத்துடனும், நிதி உதவி வங்கியில் உள்ள கடன் வசதி மூலமும் ஏறத்தாழ ரூபாய் 2 கோடிக்கு மேல் நடப்பு மூலதன வசதியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

## இரட்டை வீடுகள்

பர்மா அகதிகளுக்காகத் தமிழ்நாடு அரசு பலவகைகளில் உதவிகள் செய்து வருகிறது.

மதுரை, மதுரை தென் வட்டம், தனக்கன்குளம் கிராமத்தில் ரூபாய் 16·28 இலட்சம் செலவில், 407 இரட்டை வீடுகளைக் (Catenary type twin houses) கட்டும் பணி அரசின் வருவாய்த் துறையால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த 407 வீடுகளில் 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

வியாசர்பாடி ஏரிக்கரையில், ரூபாய் 1·13,16 கோடி செலவில் பர்மா அகதிகளுக்காக 2,760 வீடுகள் கட்டும் பணி குறித்த மற்றொரு திட்டத்திற்கு அரசு ஒப்பளித்து, அப்பணியைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது. சற்று அகலமான வீடு வேண்டும் என்று அகதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வீட்டின் வடிவமைப்பு மாற்றப்பட்டு ரூபாய் 2·33 கோடி செலவில் 2,760 வீடுகள் கட்டுவதற்கான திருத்தப்பட்ட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

### நிருவாகம்

தலைமைச் சங்கத்தின் நிருவாகக் குழுவே, சிந்தாமணியின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்கிறது. சங்கத்தின் நிருவாகக் குழுவில் 25 இயக்குநர்கள் உள்ளார்கள். இவர்களில் 19 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நிதி உதவி வங்கியின் பிரதிநிதி ஒருவர்; மாநில அரசால் நியமனம் செய்யப்பட்டவர்கள் 5 பேர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களிலிருந்து தலைவர், துணைத் தலைவர், பொருளாளர், போன்றவர்கள் தேர்தெடுக்கப் படுகிறர்கள். கொள்முதல் மற்றும் விற்பனைக்குழு ஊழியர் பராமரிப்புக் குழு, செயற்குழு, போன்ற துணைக்குழுக்களும் உள்ளன.



### ஊழியர் நலன்கள்

சிந்தாமணியில் 1,000-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பல்வேறு தகுதியில் பணிபுரிகின்றார்கள். ஊழியர்களின் நிருவாகம் தலைமைச் சங்கத்திஞல் பராமரிக்கப்படுகின்றது. சங்கத்தின் தலைமை நிருவாக அதிகாரியாகச் செயலாளரும், சிந்தாமணியின் பொது மேலாளராகத் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை துணைப்பதிவாளர் ஒருவரும் பணி புரிகின்றார்கள். ஊழியர்களுக்குப் போதிய ஊதியமும், ஊக்கப்படிகளும் வழங்கப்படுகின்றன. ஊழியர்கள் மன்றத்தின் மூலம் நல்ல காரியங்களுக்குக் கடன் வசதி, சுற்றுலாச் செல்ல வாகன வசதிகள் போன்றவை வழங்கப்படுகின்றன. பணிச்சார்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீருடை, மருத்துவச் செலவுக்கான படி, போனஸ், 'பிராவிடன்ட் பண்ட்' போன்றவைகளும், 'கிராஜுடி இன்ஷூரன்ஸ்' திட்டமும் சிந்தாமணியில் உண்டு.

### வெற்றியின் காரணங்கள்

* தொழில் அனுபவம் மிக்க ஊழியர்கள், போதிய மூலதனம், கட்டடம், கிடங்கு, போக்கு-வரத்து வாகன வசதிகளைக்கொண்ட தாய் நிறுவனத்திஞல் சிந்தாமணி நிருவகிக்கப்படுகிறது.

* திறனும், பெருந்தன்மையும், செல்வாக்கும் உடைய அங்கத்தினர்களைக் கொண்ட நிருவாகக் குழுவால் நிருவகிக்கப்படுகிறது.

* முறையான மொத்தக் கொள்முதல் செய்யப்படுகிறது.

* விரிவான விளம்பரம், நெருக்கமான மக்கள் தொடர்பு முறை.

* சரியான கணக்கு வைப்பு முறை.

* சிறந்த சரக்கு, நிருவாகம் மற்றும் கட்டுப்பாடு முறை.

* வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளும், வழங்கப்பட்டுள்ள வசதிகளும்.

* கட்டுப்பாடான பாதுகாப்பு ஏற்பாடுகள்.

* ஒழுக்கமுடனும், ஊக்கமுடனும் உழைக்கும் ஊழியர்கள்.

* கலப்பட மற்ற சொந்தத் தயாரிப்புப் பொருள்கள்.

### இதர அங்காடிகள்

தமிழக அரசின் விருப்பத்திற்கும், ஆணைக்கும் இணங்கத் திருச்சி, ஈரோடு ஆகிய கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளின் நிருவாகப் பொறுப்பை 'சிந்தாமணி' சிறப்பு அங்காடி ஏற்று, அவைகளையும் 'சிந்தாமணி' என்ற பெயராலேயே நல்ல முறையில் நடத்தி வருகின்றது. சிந்தாமணி நிருவாகத்தின் கீழ், இவ்வங்காடிகள் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

### எதிர்காலத் திட்டம்

'சிந்தாமணி', மேலும் கோவை நகரில் பழைய சுங்கம் பகுதியில் தனது மற்றொரு கிளையை விரைவில் துவங்கவுள்ளது. பல்லடம், தாராபுரம் ஆகிய வட்டத் தலைமை நகரங்களில் கிளைகளைத் துவக்கவும், சிந்தாமணி

ஆவன செய்துவருகின்றது. பொள்ளாச்சியில் செயல்பட்டு வந்த 'சூடாமணி' கூட்டுறவுச் சிறப்பு அங்காடியின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுப் புதியமுறையில் செயல்படுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சொந்தமான முறையில் பனியன் தொழிற்சாலை, நவீன அரிசி ஆலை ஆகியவை அமைக்கவும் 'சிந்தாமணி' நிருவாகம் முயற்சி செய்துவருகிறது.

'சிந்தாமணி', நுகர்வோர் ஆய்வரங்கம் ஒன்றை நிறுவி, அதன்மூலம் உறுப்பினர்களை அங்காடியின் நடவடிக்கைகளில் பெருமளவில் பங்குகொள்ளப் பெரு முயற்சி செய்துவருகின்றது. சிந்தாமணியின் செயல்முறைகளை விளக்கும் வண்ண விளம்பரத் திரைப்படம் ஒன்று எடுத்துத் திரையிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சிறப்பு அங்காடியில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் 'தொழில் சார்புப் பயிற்சி' அளிக்கும் ஒரு பயிற்சி நிலையத்தை நிறுவ முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

### சாதனைக்குச் சான்றுகள்

சீரான வாணிகம், குறைந்த அளவு இலாபக் கொள்கை, நுகர்வோர் நலங்காக்கும் வாணிக முறை ஆகியவைக்குச் 'சிந்தாமணி' ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகிறது. இதற்குச் சான்றுகளாகத் தனியார் கடைகளிலும், சிந்தாமணி வாணிக முறை பின்பற்றப்படுவதையும் சிந்தாமணியின் விலையை அவர்கள் ஆதாரமாகக் கொண்டு விளம்பரப் படுத்துவதையும் கூறலாம்.

உற்பத்தியாளர்களும், விநியோகிப்பவர்களும், சிந்தாமணிக்குப் பொருள்கள் வழங்குகிறோம் என்று கூறிக்கொள்வதையும், அவர்கள் விளம்பரங்களில் இதனைக் குறிப்பிடுவதையும் சிறப்பாகக் கருதுகிறார்கள். 'சிந்தாமணி' என்ற சொல் எல்லா இல்லங்களிலும், அனைவராலும் தவறாது மொழியப்பட்டு நிலையான இடம் பெற்றுள்ளது. சிந்தாமணியின் செயல் முறைகளை நேரில் கண்டறிவதற்காகவும், பயிற்சி பெறுவதற்காகவும் நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து பார்வையாளர்களும், பயிற்சியாளர்களும் பெருமளவில் வந்த வண்ணம் உள்ளார்கள். கூட்டுறவுச்சம்பந்தப் பட்ட எல்லாக் கருத்தரங்கங்களிலும் 'சிந்தாமணி' மேற்கோளாகக் கூறப்படுகிறது. அம்மேற்கோள்கள் சிந்தாமணியின் சாதனைகளுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

### அனைத்து இந்தியப் புகழ்

ஆறாண்டுக் காலத்தில் 'சிந்தாமணியின்' வாடிக்கையும், வாணிகமும், பெயரும், புகழும் பன்மடங்காகி, இன்று நாட்டின் முதன்மையான அங்காடியாகவும், கூட்டுறவு முயற்சியின் வெற்றிச் சின்னமாகவும், சிறப்புடன் விளங்கி, இன்று இந்தியாவே போற்றும் வண்ணம் தனது பங்கீட்டுத் தொழிலைப் பாங்காகச் செய்துவருகிறது.

ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாயை வருமான வரியாகவும், 12 இலட்சம் ரூபாயை விற்பனை வரியாகவும் செலுத்தி வரும் 'சிந்தாமணி' கூட்டுறவுச் சிறப்பங்காடி இந்தியாவில் நடைபெறும் எல்லாச் சிறப்பங்காடிகளிலும் (Super Markets) விற்பனையில் முதலிடம் வகிக்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


## காலக் கண்ணாடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்






# சீக்கிரம் போகும் சிதம்பரம்



'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனார் நினைவாகச் 'சிதம்பரம்' எனப் பெயரிட்டுள்ள கப்பலொன்று மார்ச் 21-ம் நாளன்று சென்னைத் துறைமுகம் வந்தது. அலைகடலைக் கிழித்துக்கொண்டு அதிவேகமாகச் செல்லும் இந்தக் கப்பலின் மதிப்பு ரூ. 4 கோடியே 75 இலட்சம்.

'சிதம்பரம்' என்ற இந்தச் சொகுசுக் கப்பல், சென்னை-நாகப்பட்டினம், பினாங்கு—சிங்கப்பூர் ஆகிய ஊர்களுக்கிடையே போய்வரும். இதற்கு முன்பு இவ்வழியாகப் போய் வந்த கப்பலின் பெயர் : 'ஸ்டேட் ஆப் மெட்ராஸ்'.

முழுவதும் குளிர்சாதன வசதி படைத்த 'சிதம்பரம்' 1678 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடியதாகும். இந்தக் கப்பலில் டெலிவிஷன், திரையரங்கம், நீச்சல் குளம், நூலகம், விளையாட்டுத் திடல், மருத்துவ மனை, அங்காடி இல்லாத கடை ஆகியவை உள்ளன. இத்துடன் எல்லாவித உணவுக்கும் இங்கே வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்குமுன் சென்னையிலிருந்து சிங்கப்பூர் போக 9 நாட்கள் பிடிக்கும்; ஆனால், இப்போது வந்துள்ள சிதம்பரமோ 5½ நாட்களில் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்துவிடுகிறது!

இந்தக் கப்பலில் மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணம் வழங்கப்படுவதைக் குறிப்பிட வேண்டும்.

கடந்த மூன்றாண்டுகளில், பல வெளி நாடுகளிலிருந்து 1,200 குடும்பங்களைத் தவிர, 64,483 இந்தியர்கள் வெளியேற்றப் பட்டுள்ளனர். இவர்களில் அதிகமாக வெளியேறியவர்கள் உகாண்டாவிலிருந்துதான். வெளியேற்றப் பட்டவர்களின் தொகை 45,700.

சேலம் இரும்பு ஆலை கட்டும் வேலை 1977-ஆம் ஆண்டில் முடிவடையும். இதில் ஆண்டொன்றுக்கு 1 இலட்சத்து 95 ஆயிரம் டன் கலப்பு உருக்கும் விசேட உருக்கும் தயாரிக்கப் படும்.

கைரேகைகளைக் கொண்டு உடனுக்குடன் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வித்தை இயந்திரம் ஒன்றைத் தமிழகக் காவல்துறை தயாரித்திருக்கிறது. இது இந்தியாவுக்கே வழிகாட்டியாக அமையும்.

இந்தியா முழுவதிலும், கல்வி கற்ற 62,15,511 பேர் வேலையின்றி இருக்கின்றனர். மேற்கு வங்காளத்தில்தான் கற்றவர்களில் வேலையற்றவர்கள் அதிகம். அவர்கள் தொகை 11,50,000.



# கல் சொன்ன கதை



நரையினில் மலையாய் நிற்பேன்
நதிதனில் சிலையாய் நிற்பேன்
பொறைமிகு தூணும் ஆவேன்
பொடிபடும் பரலும் ஆவேன்
அரைபடும் அம்மி யாவேன்
ஆடிடும் குழவி யாவேன்
நெறியினை ஒழுங்கு செய்ய
நிரப்பிடுங் கல்லும் ஆவேன்!

விலையிலா மணிகள் ஆவேன்
வெறும்பரல் கல்லும் ஆவேன்
மலையெனப் பெரியோன் ஆவேன்
மணலெனச் சிறுவன் ஆவேன்
விலைமிகு மாளி கைக்குள்
விந்தைசேர் வடிவில் நிற்பேன்
குலைவுறும் கூரை வேய்ந்த
குடிலுக்குத் துணையாய் நிற்பேன்!

ஆடையை வெளுப்பார் என்மேல்
அடிப்பினும் உதவி நிற்பேன்
ஆடுமென் தலையைப் பற்றி
ஆட்டினும் அரைப்பேன் மாவை
பாடுகள் படுத்தும் அந்தப்
பாவையர் என்னை அம்மி
மேடையில் உருட்டும் போழ்தும்
மிளகுகாய் அரைத்தே நிற்பேன்!







இவ்வணம் உதவல் கண்டும்
இளகிடா மனத்துக் கென்னை
எவ்வணம் உவமை சொல்ல
இசைந்ததோ உலகம்? பாடம்
செவ்வணம் பயிலாப் பள்ளிச்
சிறுவர்தம் கையிற் சிக்கின்
அவ்வவர் விருப்பம் போல
அழிவுகள் பலவுஞ் செய்வேன்!

சிற்றுளி கொண்டே என்னைச்
சிதறிட உடைப்பர் மாந்தர்;
மற்றவர் உண்ணும் போது
மறைந்திருந் துடைப்பேன் பல்லை;
கொற்றவர் போலே எண்ணிக்
குனிந்திட வின்றிச் சென்றால்
உற்றவர் அறியும் வண்ணம்
ஒருசிறி திடறி வைப்பேன்!

படியெனக் கிடப்பேன்; வீட்டில்
பாதமென் தலைமேல் வைப்பார்;
வடிசிலை யாவேன்; தாளில்
வருபவர் தலையை வைப்பார்;
படிசிற நிலையைக் காணில்
பண்பிலார் மிதிப்பர் ஏறி;
முடியினை நிமிர்த்து நின்றால்
முடங்குவர்; என்னே மாந்தர்!

கருவழி கடப்பார் நெஞ்சில்
கடவுளென் றென்னை வைப்பார்;
அருவழி கடப்பார் சாலை
அருகினில் நிறுத்தி வைப்பார்;
இருவரும் எனையே எண்ணி
ஏகுவர் மேலும் மேலும்;
பெருமைகள் அனைத்தும் நானே
பேசுதல் முறைமை யாமோ?







கவியரசு முடியரசன்

கோ...

'சபேரிச் எம்போரியம்' என்ற ஊரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

தமிழகத்தில் பழங்காலத்தில் புகழ்வாய்ந்த பெருநகராயிருந்த காவிரிப் பூம் பட்டினத்தைத் தான் 'தாலமி' என்ற அலெக்ஜாந்திரா வான நூல் வல்லுநர் தமது கிரேக்க மொழி நூலில் 'சபேரிச் எம்போரியம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'சபேரிச் எம்போரியம்' கிரேக்கச் சொல் என்று சிலர் சொல்லுகின்றனர்; இலத்தீன் சொல் என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். இந்தக் காவிரிப்பூம்பட்டினத்துக்கு வேறு பெயர்களும் உண்டு; மன்னகத்து வான்பதி, பலர் புகழ் மூதூர், காகந்தி, சம்பாபதி, கோல பட்டினம் (சோழப்பட்டினம்), பூம்புகார் என்பவை அவை.

சோழ மன்னர்களின் தலைநகரமாகவும் விளங்கியது இந்தக் காவிரிப்பூம்பட்டினம்.

காவிரிப்பூம்பட்டினம் பற்றித் தாலமி மட்டுமா எழுதினார்? பெரிப்ளஸ், ப்ளினி முதலிய அயல் நாட்டினர் பலரும் தங்கள் நூல்களில் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிராகிருத நூல்களான மிலிந்தபண, ஜாதகக் கதைகள், அபிதம் மாவதாரம், புத்தவம் சாத்த கதா முதலியவற்றிலும் இந்தப் பட்டினத்தைப் பற்றிய விவரங்களைக் காணலாம்.

பட்டினப்பாலை, அகநானூறு, புறநானூறு, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர் புராணம் முதலிய தமிழ் நூல்களில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

பார்ஹூத் கல்வெட்டு, சாயாவனம் கல்வெட்டு இவை மூலமாகவும் பூம்புகாரைப் பற்றி அறிகிறோம். வட இந்தியாவில் பார்ஹூத் என்ற இடத்தில் பௌத்த ஸ்தூபம் ஒன்றில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. அந்தக் கல்லைக் காகந்தி நகரைச் சேர்ந்த சோமா என்ற பிக்குணி, தானமாகக் கொடுத்ததாக அந்தக் கல்வெட்டுக் குறிக்கிறது. காகந்தி என்பது காவிரிப்பூம்பட்டினத்துக்கு வழங்கிய பல பெயர்களில் ஒன்று தானே! பார்ஹூத் கல்வெட்டு கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது, கிறிஸ்துவுக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே காவிரிப் பூம்பட்டினம் சிறப்புடன்விளங்கிற்று என்பதற்கு இது ஒரு சான்று.

இவ்வளவு பெருமையுடன் விளங்கிய பூம்புகாரை மனுநீதி கண்ட சோழன், நீரோடும் ஒரே துறையில் புலியும் மானும் நீருந்தச் செய்த கொற்றவன், இந்திர விமானம் ஊர்ந்த சோழன், முசுகுந்த சோழன், கூற்றுக்கு வழக்குரைத்த செம்பியன், முதுமட்காடி வகுத்த தராபதி, தூங்கு எயில் எறிந்த தொடித்தோள் செம்பியன், மேல் கடல் நீர் கீழ்க் கடற்கு விட்டோன், சிவச் சோழன் காந்தமன், பொன்னிக் கரைகண்ட கரிகாலன், கிள்ளி வளவன், மாவண்கிள்ளி, நலங்கிள்ளி ஆகிய சோழ மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள்.

பூம்புகார் அடைந்திருந்த செல்வச் செழிப்புக்கு எத்தனையோ ஆதாரங்கள் கூறுகிறார்கள். நகர அமைப்பு, ஏற்றுமதி—இறக்குமதி, வெளிநாட்டினர் வாழ்ந்த பகுதிகள் என்றெல்லாம் பல அமைப்புகளிலும் பூம்புகார் சிறப்புற்றோங்கியிருந்திருக்கிறது.

பயிர்களை மேயும் கன்றுகளை விரட்ட நேர்ந்தால், தங்கள் காதுப் பொற்குழைகளை எடுத்து வீசி எறிந்தார்களாம், புகார் நகர மக்கள் என்பது கவிஞர்களின் வர்ணனை. இது கற்பனை நயத்துடன் மிகைப் படுத்தியதாக இருக்கலாம். ஆயினும், 'சபேரிச் எம்போரியத்'தின் செல்வப் பெருமையை இந்த வர்ணனை சுட்டுகிறது என்பதை யார் மறுக்க முடியும்!

இந்த நகரில் அந்த நாளைய ஆடல் மகளொருத்தி அணிந்திருந்த அணிகலன்களை மட்டும் பாருங்களேன்; தலையில் தலைக் கோலம், சீதேவி, வலம்புரிச் சங்கு, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி, காதுகளில் நீலக் குதம்பை, பின்புறம் தூக்கம், கழுத்தில் சவடி, சரப் பள்ளி, முத்தாரம், மார்பில் வீரச் சங்கிலி, நேர்ச் சங்கிலி, ஞாண்; தோளில் தோள் வளை, சூடகம்; கைவிரல்களில் வாளைப் பகுவாய் மோதிரம்; மணி மோதிரம், மரகதத்தாள் செறி; கைகளில் செம்பொன் வளை, நவரத்தின வளை, சங்க வளை, பவழ வளை, இடுப்பில் முப்பத்திரண்டு முத்து வடங்களினாலான வரிசிகை என்ற மேகலை; தொடையில் குறங்குச் செறி; காலில் பாத சலாம், சிலம்பு, பாடகம், சதங்கை, கால் சரி; கால்விரலில் மகரவாய் மோதிரம்.

ஆடற்கலை அணங்கு ஒருத்தி அணிந்திருந்த அணிகலன்களே இவ்வளவு என்றால், அரசமகளிர் அணிந்திருந்தவை எவ்வளவு இருக்கும்!

இன்று, நமக்குப் பூம்புகாரைப் பற்றிக் கிடைக்கும் விவரங்கள் எல்லாம், பெரும்பாலும் இலக்கியங்களில் கண்டவையே. இதோடு, அரசினரின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரும், தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களைக் கட்டுரைகளின் மூலமும் பொருட்காட்சிகள் மூலமும் மக்களுக்குத் தெரியப்படுத்தி வருகிறார்கள். ஆனால் பூம்புகாரின் புதை பொருள் ஆராய்ச்சி இதுவரையில் முழுமையாக நடைபெறவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழி வட்டத்தில் கிழக்கில் உள்ள கீழையூர், வாணகிரி; மேற்கில் உள்ள மணிகிராம், மேலப் பெரும்பள்ளம், கீழப் பெரும்பள்ளம், மற்றும் மேலையூர்ப் பகுதி—இந்த இடங்களை உள்ளடக்கியும் காவிரிப் பூம்பட்டினம் இருந்திருக்கலாம் என்று நம்புகிறார்கள். எனவே, இந்தப் பகுதிகள் அனைத்தும் புதை பொருள் ஆராய்ச்சிக்கு உட்பட வேண்டும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இது வரை ஆராய்ச்சி நடந்திருக்கும் இடங்களுள் பௌத்தப் பள்ளி ஒன்றின் கட்டட அமைப்பு ஓரிடத்தில் கிடைத்திருக்கிறது. மற்றும் பல இடங்களில் நாணயங்கள், பாண்டங்கள் முதலியவை கிடைத்திருக்கின்றன. அவற்றுள் A.E. (ஏ.இ.) என்ற எழுத்துக்களைக் கொண்ட ரோமானியக் காசுகள், கரிகாலன் காலத்துக் காசுகள், ராஜராஜ சோழன் காலத்துக் காசுகள் ஆகியவை இருக்கின்றன. வேறு பல நாணயங்கள் கி.மு. ஐந்நூற்றுக்கு முந்தியவை என்று கூறுகிறார்கள். இவை அனைத்தும் செப்புக் காசுகள், மிகப் பழமையான நாணயங்கள் என்று தோன்றுகின்றவை சதுர வடிவில் இருக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினத்து அகழ்வாராய்ச்சியில் கிடைத்திருக்கும் ஒரே ஒரு செங்கல்லை மட்டுமாவது பார்த்தவர்கள், அங்கே அகழ்வாராய்ச்சி எவ்வளவு அவசியம் என்பதை உணர்வார்கள். அந்த ஒரு செங்கல் எவ்வளவு பெரிதாக இருக்கிறது, உறுதியாக விளங்குகிறது தெரியுமா? இப்போது நவீன முறையில் இயந்திரத்தால் செங்கற்களை உருவாக்குவோரும் அப்படிப்பட்ட கல்லை உற்பத்தி செய்ய முடியாது என்று துணிந்து கூறலாம்.

இப்பொழுது பூம்புகார் புதிய பொலிவு பெறவும் அதன் இலக்கியப் பெருமையை மீண்டும் உயிர்ப்பிக்கவும் ஆன பணிகளில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அரும்பெரும் முயற்சியால் சிலப்பதிகாரக் கலைக்கூடம் பூம்புகாரில் உருவாக்கப்பட்டுள்ளது. மாண்ட பெருமையை மீண்டும் கண்டிடத் தமிழக அரசு புதிய பல திட்டங்களை வகுத்துள்ளது. இந்த அரும்பணிகளால் பண்டையப் பூம்புகாரின் வடிவைக் காணும் நல் வாய்ப்பு நமக்கு உருவாகியுள்ளது.



# கல்லூரிகளில் ராணி!

அலைகடலோரத்தில் அழகாய் வீற்றிருக்கிறது அந்தக் கல்லூரி!

வண்ணத்துப் பூச்சிகளைப்போல் வகுப்பறைகளுக்கு விரைகின்றனர் மாணவிகள்!

அந்த விரைவு, அவர்களின் கடமையுணர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

கலகலவெனச் சிரிப்பொலி அலை அலையாக எங்கும் தவழ்கிறது!

அது, வாழ்க்கையிலும் கலகலப்பாய் இருக்க வேண்டும் என்பதை நினைவுப்படுத்துகிறது.

இயற்கை எழில் கொஞ்சும் இனிய சூழலிலே அமைந்துள்ள இப்பழம்பெரும் கல்லூரியின் மரத்தடியிலேயுங்கூட மாணவிகள் அமர்ந்து கல்வி பயில்கின்றனர்.

அது, அன்றையக் 'குருகுலவாச'த்தை நினைவுக்குக் கொண்டு வருகிறது!

பறந்து திரியும் வண்ணப் பறவைகள் போல, இங்கும் அங்கும் புத்தகமும் கையுமாகக் காட்சியளிக்கும் மாணவியரையும், அவர்களது அறிவுக் கண்களைத் திறந்திட அரும்பணி புரியும் பேராசிரியைகளையும் பார்க்கும்போது, 'படிக்கும் பருவம்' மீண்டும் வருமா? என்ற ஏக்கப் பெருமூச்சே எழுகிறது.

இந்தக் கல்லூரி எந்தக் கல்லூரி?

அதுதான் கல்லூரிகளில் ராணியாகத் திகழும் ராணிமேரிக் கல்லூரி!

இதன் துவக்கம் இன்று நேற்றல்ல; இன்று ஐம்பத்தெட்டு ஆண்டுகளைப் பெற்றுத் திகழும் இது, மகளிர் கல்லூரிகளுக்கெல்லாம் ஏன், மற்ற கல்லூரிகளுக்கெல்லாம் முன்னோடியாக-தாயாக-ராணியாக விளங்குகிறது!





1964-இல் கல்லூரியின் பொன்விழாவினைக் கொண்டாடி, இன்று வைர விழாக் காண விழையும் இந்தக் கல்லூரி 1914-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றதாகும். அப்போது இங்கே படித்த மாணவியர் எத்தனைபேர் தெரியுமா? முப்பதே பேர்தான்! ஆனால், இன்று எத்தனை வளர்ச்சி! இரண்டாயிரத்து எண்ணூறு மாணவிகள் பயிலும் அறிவாலயமாக அல்லவா இது திகழ்கின்றது?

இதன் தோற்றத்திலே அக்கறையும் ஆர்வமும் காட்டி, இக்கல்லூரியின் முதல் முதல்வராகத் திகழ்ந்த மிஸ். டி. லா. ஹே என்பவர், இதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

இக்கல்லூரியின் முன்னாள் மாணவிதான் இந்நாள் முதல்வர்! அதுமட்டுமல்ல. இங்கே பயின்று புகழுடன் விளங்குபவர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் கணித மேதை திருமதி சகுந்தலா, தமிழ் நாட்டில் முதல் இந்தியப் பட்டயக் கணக்கர் திருமதி சிவயோகம், தமிழ்நாட்டில் விமானம் ஓட்டப் பயின்ற முதல் பெண்மணி திருமதி வி. சி. அங்குலி, ஆகியோராவர். இவர் மட்டுமா?



சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதுகலைத் தேர்வில் கணிதத்தில் முதல் வகுப்பில் தேறிய முதல் பெண்மணியும் இக்கல்லூரி மாணவியே! கடந்த ஆண்டில் இக்கல்லூரியில் பல்கலைக் கழகத் தேர்வுகளில் இம்மாணவியர் நல்ல முறையில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 17 பாடங்களில் நூற்றுக்கு நூறு விழுக்காடு தேர்ச்சியும், 18 பாடங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றுக்கு மேல் விழுக்காடு தேர்ச்சியும் பெற்றுள்ளனர். அனைத்துக் கல்லூரிப் போட்டிகளில் பங்கு கொண்டால் இம்மாணவியர் வெறுங் கையோடு திரும்ப மாட்டார்! இத்தகைய போட்டிகளில் இக்கல்லூரி இவ்வாண்டு பெற்றுள்ள கோப்பைகள், கேடயங்கள்: 42.





'காலையெழுந்தவுடன் படிப்பு—பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு—மாலை முழுதும் விளையாட்டு' என்பதற்கிணங்கப் படிப்பிலும், பாட்டிலும், விளையாட்டிலும் இம்மாணவியர் சிறந்து விளங்குகின்றனர். தமிழ்நாட்டின் சார்பில் அனைத்திந்திய விளையாட்டுப் போட்டிகளில் மும்முறை பங்கு கொண்ட மாணவிக்குப் பாராட்டுதலாக ரூ. 300 பரிசு கிடைத்திருக்கிறது. ஆண்டுதோறும் இக்கல்லூரியில் 300 பரிசுகள் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு 51 மாணவிகளுக்கு உதவிச் சம்பளம், கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கத்திலிருந்தும், பிற நிதிகளிலிருந்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

இன்று இக்கல்லூரியில் புகுமுக வகுப்பில் பத்துப் பிரிவுகளும், பட்டப் படிப்பு வகுப்புகளில் பதினாறு பாடங்களும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் மூன்று பாடங்களும் கற்றுத் தரப்படுகின்றன. மேலும் ஆங்கிலம், வரலாறு ஆகிய இரு பாடங்களிலும் அடுத்த ஆண்டு முதுகலை வகுப்புகள் தொடங்கப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். நாளடைவில் புகுமுக வகுப்புகள் இல்லாமல், பட்டப் படிப்பு வகுப்புகளும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் மட்டுமே கொண்ட உயர் கலைக்கூடமாக இக்கல்லூரி விளங்கப்போகிறது.

கல்லூரி தொடங்கப் பெற்ற காலத்திலிருந்தே இங்கு மிகச் சிறந்த ஒரு நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைகளைப் பற்றிய 30,000-க்கு மேற்பட்ட நூல்கள் இங்கே உள்ளன. இவை தவிர பத்திரிகைகளும், இதழ்களும் வரவழைக்கப்படுகின்றன. படிக்கும் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் இந்த நூலகம் மாணவியருக்குப் பயன்பட்டு வருகிறது.

இருநூற்றுக்கு மேற்பட்ட பேராசிரியைகளைக் கொண்ட ராணி மேரிக் கல்லூரி, இவ்வாண்டு மார்ச் 19-ஆம் நாள் பொன் விழாக் கட்டடத் திறப்பு விழாவினைக் கண்டு மகிழ்ந்தது. இந்தக் கட்டடம் ரூ. 8 இலட்சம் செலவில் அழகுற அமைந்திருக்கிறது. நீண்டு பரந்த கலை அரங்கம் கட்டடத்தை மேலும் அணி செய்கின்றது.

தமிழ்நாடு அரசு இக்கல்லூரிக்கு உணவு விடுதி கட்ட ரூ. 6 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது என்றும், இந்தக் கல்லூரியின் வைர விழாவின்போது அரசின் உதவியுடன் மேலும் ஒரு கட்டடம் திறந்து வைக்கப்படும் அல்லது கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுவிடும் என்றும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொன் விழாக் கட்டடத் திறப்பு விழாவில் அறிவித்தது, இக்கல்லூரியின் ஒளிமயமான எதிர் காலத்திற்கு ஓர் நல்ல அறிகுறியாகும்.

முதல்வர் அவர்கள் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சில பொன்னான கருத்துக்களையும் கூறத் தவறவில்லை.




"கல்வியின் பலனை நாம் அடைய வேண்டுமானால், மாணவிகள் பெற்றோர்களைக் காப்பாற்ற வேலைக்குச் செல்கிறோம் என்ற நிலை மாறி, நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்காகப் படிக்கிறோம் என்ற உணர்வு வளர வேண்டும்" என்று குறிப்பிட்டது மாணவிகளின் வருங்கால வாழ்க்கைக்கு வளமூட்டுவதாக இருந்தது.

தலைமை வகித்து விரிவுரையாற்றிய கல்வித் துறை அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார் :

"வளர்கின்ற சமுதாயத்தில் மகளிர் கல்வி இன்றியமையாததாக இருக்கின்றது. மக்கள் தொகையில் நூற்றுக்கு 40 சதவிகிதம் பேர் பெண்களாக இருக்கையில் அவர்கள் அறிவு பெற்றவர்களாக இல்லாதிருந்தால் நாடு எத்தகைய வளம் பெற்றிருந்தாலும் பயன் பெறாது.

"அது கருதியே இக்கல்வித் துறைக்கு 1939-இல் இரண்டரைக் கோடி ரூபாய் செலவழித்த நாம், இன்றைக்கு 98 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். கடந்த ஆண்டு இதற்கு 90 கோடி ரூபாய் அரசு செலவிட்டது. கல்வி பெறும் மாணவ, மாணவிகள் தாங்கள் பெற்ற கல்வியை நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்படும்படிச் செய்ய வேண்டும்", என்று கல்வித் துறைக்கு அரசு காட்டி வரும் அக்கறையினைப் புள்ளி விவரங்களோடு எடுத்துரைத்தது எல்லார் உள்ளங்களிலும் பதியத் தக்கனவாய் அமைந்திருந்தன.



"சமுதாயத்தை முன்னேற்றும் பொறுப்பு தாய்க்குலத்திடம்தான் உள்ளது. ஜப்பான் நாடு முன்னேறக் காரணமானவர்கள் பெண்கள் என்று அறிய முடிகிறது. தமிழகத்தில் சங்க இலக்கியங்களில் வீரத் தாய்மார்களின் ஆற்றலை - அறிவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட பெண்களை மாணவிகள் உருவாக்கிட வேண்டும்.

நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவ, மாணவியரைக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களிலும், கடமை, பொறுப்புணர்ச்சியிலும் சிறந்தவர்களாக்கி, வருங்காலச் சமுதாயம் வளமாகத் திகழ்வதற்கு வழிகோலுவது பள்ளி—கல்லூரிகளே அல்லவா ?

அந்த வகையில் இராணிமேரிக் கல்லூரியும் அறிவு வளர்ச்சிக்கு அரும்பணியாற்றுகிறது; பெண் கல்விக்குப் பெரிதும் துணை செய்கிறது; தாய்க்குலம் தழைத்திடத் தொண்டாற்றுகிறது. அதன் பணியை வரவேற்போம் ! போற்றிப் புகழ்ந்திடுவோம் !

மு. வி. ஜி



# வெண்பாப் போட்டி

முத்து

## 54. புகழன்றி உண்டோ பொருள்

கல்லடிக்குக் காயமுற்றுக் கண்ணிவெடிக் காவிதந்து
சொல்லடிக்குஞ் சோர்வுறாத் தொண்டர்க்கு-நல்ல
மகிழ்வென்றும் வாழ்விலுண்டோ ? குன்றேறி நின்ற
புகழன்றி உண்டோ பொருள் ?

—கே. எஸ். பைரோசா, கம்பம்.

நந்தம் உயிர்வளர்க்கும் நல்உழவன் தான்துய்க்கச்
சொந்தமெனச் சேர்த்துவைத்த சொத்தென்ன ?— 'இந்த
அகிலமெனும் தேருக்கே அச்சாணி' என்னும்
புகழன்றி உண்டோ பொருள் ?

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21.

என்கடன் தொண்டன்றி எந்நாளும் வேறில்லை
நன்றே உழைப்பது நாட்டிற்கே—யென்று
திகழுந் தியாகியர் தம்வாழ்வில் ஈங்குப்
புகழன்றி உண்டோ பொருள் ?

—இராசேசுவரிராசன், சென்னை-34.

பொன்னே ! மலரே ! புதுநிலவே ! பூவிழியே !
மின்னே ! அழகே! என் மேனகையே !—என்றே
அகங்குளிர வர்ணிக்கும் அன்பரே உம் பேச்சில்
புகழன்றி உண்டோ பொருள் ?

—ச. சந்திரோதயன், அருப்புக்கோட்டை.

வெள்ளங்கொண் டேகாதும் வெந்தழலால் வேகாதும்
கள்வர் கவராதும் காப்பாற்றிக்—கொள்ள
நிகழ்கின்ற வாழ்வில் நிலவுல கின்மீது
புகழன்றி உண்டோ பொருள் ?

—வி. எஸ். வீரநாதன், சிறுவாலை.

என்றோ ஒருநாளில் இவ்வுடம்பு வீழ்ந்தவுடன்
பொன்துஞ்சும் மார்பைப் புழுவரிக்கும்—இன்றே
திகழ்கின்ற செந்தமிழ்க்காய்ச் செத்தேன்யான் என்னும்
புகழன்றி உண்டோ பொருள் ?

—புலவர் செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை.

நில்லா உலகில் நிலைத்த இடம்பெற
எல்லா உயிரும் இரங்கிடப்—பொல்லாப்
பகைவென்று போரில் பிணமானான் என்னும்
புகழன்றி உண்டோ பொருள் ?

—து. கு. மாரிமுத்து, கிருட்டிணகிரி.

பிறந்தான் : வளர்ந்தான் ; பெருமையனைத்தும்
மறந்தான்;என் றில்லாமல் மாண்பு—சிறக்கத்
தகவுடைய தானைத் தலைவனிவன் என்னும்
புகழன்றி உண்டோ பொருள் ?

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

'சான்றோன் இவன்' என்றே சாற்றும் புகழ்பெறவே
ஆன்றகுணம் கொண்டவனாய் ஆகிவிடு !—ஈன்றாள்
அகமெல்லாம் பேருவகை ஆக்குதற்கே அந்தப்
புகழன்றி உண்டோ பொருள் ?

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
கே. எஸ். பைரோசா,
ஆசிரியை கம்பம்,
மதுரை மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

வெண்பா பலபாடி விட்டாலும் போட்டியிலே
ஒண்பாவே வென்றுபுகழ் உள்ளதுபோல்—எண்ணில்
திகழ்பொருளால் யார்க்குமில்லை தேடுபுகழ், அஃதால்
புகழன்றி உண்டோ பொருள்?

—த. சாந்தகுமாரி, சிந்தலக்கரை.

கண்ணொளி தந்துவழி காட்டும் தமிழரசை
விண்ணோரும் போற்றின் வியப்பேது—மண்ணில்
இகழ்வகலச் செய்திடும் ஈடிலாத் தொண்டின்
புகழன்றி உண்டோ பொருள்?

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

அன்னைத் தமிழ்மொழிக்கே ஆக்கம் பலதேடி
என்றும் பொருள்சேர்க்கும் எண்ணங்கள்—இன்றிப்
பகலும் இரவுமாய் பாடுபட்டுக் கிட்டும்
புகழன்றி உண்டோ பொருள் ?

—துரையன், இருட்டிணபுரம்.

கண்ணின்றி உண்டாமோ காட்சி? இனிக்கும்
பெண்ணின்றி உண்டோ பெருக்கந்தான்? —மண்ணில்
வகையின்றி வாழ்வதுவோ வாழ்க்கை ? நவில்வீர்
புகழன்றி உண்டோ பொருள்?

—இராம. மறைமுதல்வன், வடமாதிமங்கலம்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல, நெஞ்சம்
இகழ்வாரைத் தாங்கல் இனிதே!—தகையீர்!
மிகப்பொருள் சேர்க்காமல் மேவுபுகழ் சேர்ப்பீர்!
புகழன்றி உண்டோ பொருள்?

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

மொழியின்றி மூண்டெழுமோ நல்லினம்; நல்ல
விழியின்றி வாய்த்திடுமோ பார்வை;—பழிசூழ்
அகமின்றி அன்போ டியைந்தான்றோர் வாழ்த்தும்
புகழன்றி உண்டோ பொருள்!

—கு. சாமி மோகனு, சென்னை-11.

செல்வமும் நற்புகழும் சிந்தித்துச் சீர்தூக்கின்
செல்வத்தின் மேலாம் உயர்புகழே—சொல்வீர்!
புகலும் பெருமையாற் பொன்றுத பான்மைப்
புகழன்றி உண்டோ பொருள்.

—புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

உள்ளுவ தெல்லாம் உயர்வாகத் தானமைந்து
தள்ளாமல் தன்கடமை யென்றெண்ணி—உள்ளம்
இகழாமல் மற்றவர்க் கின்புறவே யீயும்
புகழன்றி உண்டோ பொருள் ?

—இ. முத்துசாமி, சிவராமபுரம்.

அண்ணாவைக் காந்தியினை அன்புடைய நெஞ்சங்கள்
எண்ணாத நாளில்லை ஏனென்றால்—பின்னால்
இகழ்வோர்க்கு வாய்ப்பொன்றை ஈயாமற் சென்றார்
புகழன்றி உண்டோ பொருள் ?

—அ. காந்தி, தேவத்தூர்.

புத்தரும் வள்ளுவரும் போதனைசெய் ஏசுநபிச்
சித்தரும் சீர்திருத்தச் சான்றோரும்—நித்தம்
திகழும்நம் காந்தி, யண்ணா தேடிவைத்த வீயாப்
புகழன்றி உண்டோ பொருள் ?

—பூங்குழலி, பொருளூர்.

செங்கருப்பஞ் சாறுகத் தேனின் கலவையாகத்
சங்கத் தமிழ்நூல்கள் சாற்றுவதென் ?—''மங்கும்
இகவாழ்வில், காலம் இறந்தாலும் நிற்கும்
புகழன்றி உண்டோ பொருள் ?''

—ச. சுப்பிரமணியன், தும்மனட்டி.

வெள்ளி முளைக்குமுன்னே கண்மலர்ந்து வீட்டிலுள்ள
கள்ளி விறகினது சூழ்புகையில்—அள்ளி
அமுதாக்கி அன்பாய் அளிக்கின்ற அம்மா
புகழன்றி உண்டோ பொருள் ?

—ஜெயாதங்கமுத்து, வி. கள்ளிப்பாளையம்.

என்னைக் கரம்பிடித்து ஈராண்டு வாழவில்லை!
தன்னைத் தரைப்படைக்குத் தந்துவிட்டார்—மண்ணில்
தருமதியாய்த் தேய்ந்துவிட்ட நான்வணங்கும் அத்தான்
புகழன்றி உண்டோ பொருள்?

—பு. புனிதா, ஓலைப்பாடி.

கொண்ட கொழுநனும் கூடப் பிறந்தோரும்
திண்டிறல் மைந்தனும் தீர்ந்ததில்லை—கண்டே
பகைகலங்க வாளேந்திப் பாய்ந்திட்டாள் என்னும்
புகழன்றி புண்டோ பொருள்?

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

# தளர்ந்த தொழில்கள் வளர்ந்தது காணீர்

எத்தனையோ தொழில்கள் முதலில் ஆர்வமுடன் ஆரம்பிக்கப்படுகின்றன; ஆக்கமும், ஊக்கமும், கொண்டு துவக்கப்படுகின்றன. ஆனால், அவை போகப்போகத் தளர்ந்த நிலையில், நொடித்துப் போய் விடுகின்றனவே·

இதற்குக் காரணம் என்ன?

தொழிற் பிரிவுகள்;

திறமையான நிர்வாகமின்மை;
நிதி இடர்ப்பாடுகள்.

தொழில்நுட்பப் பிரச்சினைகள். இவைபோன்ற மந்த நிலையைப் போக்கிட, இயன்ற போதெல்லாம் அவற்றிற்கு உதவுவது தமிழ்நாடு அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது.

இந்த மாநிலத்தில், 1967—68-ஆம் ஆண்டில் தொழிலில் மந்தநிலை ஏற்பட்டதன் காரணமாகப் பெரிய பொறியியல் தொழிற்சாலைகள் சில அறவே மூடப்பட்டன. தொழில் உற்பத்தி விரயமாவதையும், தொழிலாளர்களுக்கு இடர்ப்பாடு ஏற்படுவதையும் தவிர்க்கும் பொருட்டு, இந்தத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை மேற்கொண்டு அவற்றிற்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்று அரசு கருதியது.

அதற்கிணங்க, கோயம்புத்தூர், திருவாளர்கள் டெக்ஸ்டூல்ஸ் கம்பெனி லிமிடெட்; திருவாளர்கள் சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் லிமிடெட், சென்னை • தருமபுரி மாவட்டம், தொடம்பட்டி, திருவாளர்கள் லாஸ்க்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட். திருவாளர்கள் சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை ஆகிய நிறுவனங்களை அவற்றின் முந்தைய நிர்வாகத்தினரின் சம்மதத்துடன அரசு மேற்கொண்டது.

இந்த நிறுவனங்களில், புதிய இயக்குநர்கள் குழு ஒன்றை அமைத்து, அவற்றை மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான போதிய நிதிகிடைக்கச் செய்தது. இந்த நிறுவனங்கள், முந்திய கடன் தொகைகளைச் செலுத்த வேண்டிய தொந்தரவு இன்றிச் செயல்பட இயலும் பொருட்டு, தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு துயர் தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறை) சட்டத்தின் கீழ் ''துயர் தணிப்பு நிறுவனங்களாக'' மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருவாளர்கள் டெக்ஸ்டூல்ஸ் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர் ; இந்த நிறுவனம் துணி ஆலை இயந்திரங்கள், டீசல் இயந்திரங்கள் முதலியவற்றைத் தயாரிப்பதற்காக மூன்று கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்டது. அரசு, 14—8—1970-இல் இந்த நிறுவனத்தின் நிருவாகத்தை மேற்கொண்டு நிருவாக இயக்குநர் ஒருவரை நியமித்தது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், மாநில அரசின் உத்தரவாதத்தின் பேரில், அந்த நிறுவனத்தின் உடனடி நிதித் தொகைத் தேவைக்காக ரூ. 10 இலட்சம் கடன் வழங்கியது. டெக்ஸ்டூல்ஸ் கம்பெனி லிமிடெட் மேற்கொள்ளப்பட்ட போது அந்த நிறுவனத்திற்கு ரூ. 210 இலட்சம் விரயம் சேர்ந்திருந்தது.

இந்த நிறுவனத்தில் சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலையில் இருந்தனர் அவர்கள் வேலையிழந்து நின்றனர். ஆனால் புது நிருவாகத்தின் கீழ் நெசவாலை இயந்திரங்களை எஃகு, டீசல் இயந்திரங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் இந்த நிறுவனம் முன்னேற்றம் எய்தியது ; முந்தைய நிருவாகத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகள் அனைத்திலிருந்தும் இந்நிறுவனம் விடுபட்டுவிட்டது.

1970—71-ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் ரூபாய் 160 இலட்சத்திற்கு உற்பத்தி செய்தது. ரூ. 153 இலட்சத்திற்கு விற்பனை செய்தது. 1971—72 ஆம் ஆண்டில் ரூ. 231 இலட்சத்திற்கு உற்பத்தி செய்தது. ரூ. 222 இலட்சத்திற்கு விற்பனை செய்தது. 1972—73-ஆம் ஆண்டிலும், இந்த அதிக அளவு உற்பத்தி நிலையே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்திற்கு 1970—71-ஆம் ஆண்டில் ரூ. 31 இலட்சமும், 1971—72-ஆம் ஆண்டில் ரூ. 42 இலட்சமும் நிகர ஆதாயம் கிடைத்தது. 31—10—1972 அன்று முடிவடையும் அரையாண்டில் இந்நிறுவனத்திற்கு ரூ. 18 இலட்சம் நிகர ஆதாயம் கிடைத்துள்ளது.

முந்திய நிருவாகத்தின் கீழ் இந்நிறுவனத்திற்குப் பெருகி வந்த விரயம் ரூ. 210 இலட்சமாக இருந்தது. ஆனால், புதிய நிருவாகத்தின் கீழ் 1—4—1972 நாளில் இந்த விரயத் தொகை ரூ. 125 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் முடிவில் இந்த விரயம் இன்னும் பெரிதும் குறைக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா முழுவதற்கும் நல்ல தரமான நெசவாலை இயந்திரங்களை இந்த நிறுவனம் வழங்க முடிந்தது. பெருகிவரும் தேவையை நிறைவு செய்ய டீசல் இயந்திரங்களின் உற்பத்தி, விற்பனை ஆகியவையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், சென்னை: ரயில் வேய்க்கு வேண்டிய சரக்குப் பெட்டிகளைத் தயாரிப்பதில் இம்மாநிலத்தில் ஈடுபட்டுள்ள ஒரே நிறுவனம் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் நிறுவனமாகும். 1967-68-இல் ரயில்வே சரக்குப் பெட்டிகள் தொடர்பான தேவைக் குறிப்பாணைகள் வராத காரணமாக, 1969 டிசம்பரில் இந்தக் கம்பெனி மூடப்பட்டது. இதனால் சுமார் 1,200 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். இந்தக் கம்பெனி நிருவாகத்தை மாநில அரசு ஏற்றுக்கொண்டு, ஒரு பகுதி பணியாளரைக் கொண்டு 1971 சனவரியில் இந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறந்தது.

இந்தக் கம்பெனியின் அலுவல்களைக் கவனிக்க அரசு புதிய இயக்குநர் குழு ஒன்றை அமைத்தது. இந்தத் தொழில் பிரிவு பற்பல பிரச்சினைகளை எதிர் நோக்கியதால், இந்தக் கம்பெனி வெகு நாளாகவே முழு உற்பத்தியை அடைய முடியவில்லை. ஆயினும், இந்தக் கம்பெனி 1972




அக்டோபருக்குள் எல்லாத் தொழிலாளர்களையும் வேலையில் சேர்த்துக்கொள்ள முடிந்தது.

மாநில அரசு இதுவரை இந்தக் கம்பெனிக்குக் கடனாக ரூ. 71·50 இலட்சம் வழங்கியுள்ளது. ரூ. 150 இலட்சத்துக்கு இதன் சார்பில் வங்கிகளுக்கு உத்தரவாதமும் அளித்துள்ளது. ரூ. 7 கோடி மதிப்புடைய ரயில்வே சரக்குப் பெட்டிகளுக்குரிய தேவை ஆணைகளை இந்தக் கம்பெனி பெற முடிந்தது. எஃகுகளையும், இணைப்புப் பாகங்களையும் வாங்குவதில் இடர்ப்பாடுகள் ஏற்பட்ட போதிலும், திங்கள் தோறும் ரூ. 6·5 இலட்சம் மதிப்புடைய பொருள்களை இந்தக் கம்பெனியால் உற்பத்தி செய்ய முடிந்தது. இந்தக் கம்பெனி பல திறப்பட்ட பொருள்களின் உற்பத்தியில் இறங்கிப் பாரந் தூக்கிகள் முதலியவற்றிற்கான தேவை ஆணைகளைப் பெறவும் முடிந்தது. இவற்றில் சில புதுமை வாய்ந்த கப்பல் துறைகளில் பயன்படுத்தும் பாரந்தூக்கி இயந்திரங்களாகும்.

திருவாளர்கள் லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் : இது தருமபுரி மாவட்டம், தொடம்பட்டி கிராமத்தில் 1964-இல் தனியார்த் துறையின்கீழ் அமைக்கப்பட்ட நிறுவனமாகும். உயர் தரக் கலப்பு உலோக உருக்குக் கருவிகள் பலதிறப் பட்டவைகளைத் தாயரிப்பதற்காக அமெரிக்காவில் உள்ள மெஸ்ஸர்ஸ் லாட்ரோப் ஸ்டீல் கம்பெனி தொழில் நுட்ப உடனுழைப்புடன் இது அமைக்கப்பட்டது. கடுமையான நிதி இடர்ப்பாடுகளை எதிர்நோக்கி இருந்ததால், முந்திய நிருவாகத்தின் கீழ் இந்தக் கம்பெனி சரிவர இயங்கவில்லை. மாநில அரசு இந்தக் கம்பெனியின் நிருவாகத்தை ஏற்றுக்கொண்டு, இயக்குநர் குழு ஒன்றை மீண்டும் அமைத்தது.

இந்தத் தொழிற்சாலை 1971 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கியது. இந்தக் கம்பெனிக்கு ரூ. 23 இலட்சம் வரை மொத்த நிதிஉதவி கிடைக்கச் செய்வது என்று தமிழ்நாடு. தொழில் வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. இதில் ரூ. 1 இலட்சம் கம்பெனியின் நிலையான வட்டியில்லாப் பங்கு மூலதனத்தில் ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ. 14·82 இலட்சம் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொகை

> தமிழ்நாட்டில் இந்த ஆண்டில் 13 இடங்களில் புதிதாகத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. தற்பொழுது தமிழ்நாட்டில் 62 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. கடந்த ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 5,400-க்கு மேற்பட்ட தீவிபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. தீயணைப்புப் படையினரால் 2 கோடியே 37 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்களும், 254 மனித உயிர்களும், 51 கால்நடைகளும் தீயினால் நாசமடையாமல் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. தமிழகம் முழுவதும் தீயணைப்புப் படையினரின் எண்ணிக்கை 3,081. தமிழகத்தில் மொத்தம் 300 தீயணைப்பு வண்டிகள் உள்ளன.

கழக விருப்பத்தின் பேரில் 5 ஆண்டுக் காலத்திற்குள் வட்டியில்லாப் பங்கு மூலதனமாக மாற்றப்படும்.

இந்த நிறுவனத்தில் வரையறுக்கப்பட்ட அளவுக்கே உற்பத்தி செய்ய இயன்றது. அதாவது, எஃகு வார்ப்படங்களும், கரியம் குறைவாகவுள்ள எஃகு மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவசியமான சாதனங்களுக்கான தேவை ஆணைகள் இன்னும் பெறப்படவில்லை. இந்தச் சாதனங்கள் 1973-ஆம் ஆண்டின் மத்தியில்தான் பெறப்படுமென்றும், இதற்குப் பின்னர் முறையான அளவின் அடிப்படையில் முழு அளவில் உற்பத்தி தொடங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் நிருவாகம் மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் இந்த நிறுவனம் ரூ. 35 இலட்சம் மொத்த விரயத்தில் இயங்கி வந்தது. இந்த நிறுவனம் 1970–71-இல் செயல்பட்டதில் ரூ. 6·9 இலட்சம் விரயம் ஏற்பட்டது. இந்த விரயம் 1971–72-இல் ரூ. 15 இலட்சத்திற்கு—குறைக்கப்பட்டுள்ளது. 1971–72 ஆம் ஆண்டில் நல்ல முறையில் நடத்தப்பட்டுள்ள இந்த நிறுவனம் 1972–73-ஆம் ஆண்டில் (நடப்பாண்டில்) நிகர ஆதாயத்தைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திருவாளர்கள் சக்தி பைப்ஸ் லிமிடெட் : நலிவடைந்து, அதன் விளைவாக மூடப்பட்ட மற்றொரு பெருந் தொழிற்சாலை சென்னை, சக்தி பைப்ஸ் லிமிடெட், நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் தொழிற்சாலை செங்கற்பட்டு மாவட்டம், எளாவூரில் அமைந்துள்ளது. இந்தத் தொழிற்சாலை ரூ. 297 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. இந்த தொழிற்சாலை 1966-ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது.

இத் தொழிற்சாலை தயாரிக்கும் பொருட்களுக்கான தேவை ஆணைகள் குறைவாக வரப் பெற்றதாலும், மூலப் பொருட்கள் வாங்குவதற்கு நிதி குறைவாக இருந்ததாலும், இத் தொழிற்சாலையை 1968, மே திங்களில் மூடவேண்டியதாயிற்று. 30,000 டன் குழாய்களுக்குத் தேவைக் குறிப்பு ஆணைகள் அனுப்புவதன் மூலமும், தொடக்க ஆணைக்குமாறாக 20 சதவீத முன்பணம் வழங்குவதன் மூலமும், அரசு, இந்தத் தொழிற்சாலைக்கு உதவியது. முன்பணமாக வழங்கப்பட்ட தொகை ரூ. 25 இலட்சமாகும். ரூ. 40 இலட்சத்திற்கு மூலப் பொருட்களை வாங்கி வழங்கியதன் மூலமும் இந்தத் தொழிற்சாலைக்கு அரசு உதவியது.

1970, சனவரியில் இந்த நிறுவனம் மீண்டும் தொடங்கப்பட்டபோதிலும், இந்த நடவடிக்கைகள் மூலம், இந்நிறுவனம் தன் இடர்ப்பாடுகளிலிருந்து மீள முடியவில்லை. 1972 மே திங்களில் மீண்டும் இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது. சுமார் 450 தொழிலாளர்கள் வேலையிழந்ததாலும், முக்கியமாக உற்பத்தி ஒரு நிலையில் வந்து நின்றுவிட்டமையாலும், 1972 அக்டோபரில், இந்தநிறுவனத்தின் நிருவாகத்தை மேற்கொள்ள அரசு முடிவுசெய்தது. மேலும்நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்கள் அடங்கிய இயக்குநர் குழு ஒன்றை அரசு மீண்டும் அமைத்தது. அதற்கிணங்க நிருவாகத்தை அரசு 1972 டிசம்பரில் மேற்கொண்டது.

அரசு இந்த நிறுவனத்திற்கு இதுவரை ரூ. 28 இலட்சம் கிடைக்கச் செய்துள்ளது. இந்தப் புதிய நிருவாகம், மூலப் பொருட்களுக்கான ஏற்பாடுகளைச் செய்து, வங்கிகளிலிருந்து நிதி பெற்று, இந்தத் தொழிற்சாலையை விரைவில் மீண்டும் தொடங்குமென்று நம்பப்படுகிறது.

# தொழில் துவக்க ஆய்வுக்கும் உதவித் தொகை

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு தொழில் துவக்க ஆய்வுக்கு உதவித் தொகையை மேலும் தாராளப்படுத்தியிருக்கிறது. இதன்படி ரூபாய் 10,000 செலவுக்கு உட்பட்ட ஆய்வுகளைத் தொழில் துவக்குவோருக்கு இலவசமாகவும், ரூபாய் 10,000 செலவுக்கு மேற்பட்ட தொழில் துவக்குவோருக்குக் கொடுக்கிறது. 'சிப்காட்' இத்திட்டத்தை மத்திய பெரிய தொழில்களின் நலன்களுக்காகச் செயல்படுத்தும்.

'சிப்காட்' தானாகவோ அல்லது தொழில் துவக்க விரும்புவோரின் கோரிக்கையின் பேரிலோ நிதி ஆய்வுகளை நடத்தும். தொழில் துவக்க விரும்புவோரின் கோரிக்கையின் பேரில் இவ்வாய்வு கள் 'சிப்காட்' டால் நடத்தப்பட்டால் இவ்வாய்வுகளுக்கான செலவு ரூபாய் 10,000-க்கு உட்பட்டு இருந்தால் முழுத்தொகையையும் 'சிப்காட்'டே ஏற்கும்.

இத்தகைய ஆய்வுகளுக்கான செலவு ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால், அதற்காக 'சிப்காட்' உதவித் தொகை அளிக்கும் ! விவரம் வருமாறு:—

ஆய்வுக்கான செலவு ரூபாய் 20,000 வரை ஆனால் 'சிப்காட்' அளிக்கும் உதவித் தொகை 90 சத விகிதம்.

ஆய்வுக்கான செலவு ரூபாய் 30,000 வரை ஆனால் 'சிப்காட்' அளிக்கும் உதவித் தொகை 80 சத விகிதம்.

ஆய்வுக்கான செலவு ரூபாய் 30,000-க்கு மேல் ஆனால் 'சிப்காட்' அளிக்கும் தொகை 75 சத விகிதம்.

தொழில் துவக்குவோர் ஆய்வுச் செலவில் மீதம் உள்ள பகுதியை மட்டுமே ஏற்கவேண்டும்.

'சிப்காட்'டால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட தொழில் துவக்க ஆய்வுகளுக்கும், மேற்குறிப்பிட்ட விகித உதவித் தொகை பொருந்தும்.

இந்தச் சலுகை கீழே குறிப்பிட்ட பின் தங்கிய மாவட்டங்களில் நிறுவப்படும். நடுத்தர அல்லது பெரிய தொழில் அமைப்புகளுக்கு (Medium & Major Industries ) மட்டுமே கிடைக்கும்.

1. தென் ஆர்க்காடு.
2. திருச்சிராப்பள்ளி.
3. மதுரை.
4. இராமநாதபுரம்.
5. கன்னியாகுமரி.
6. வட ஆர்க்காடு.
7. தஞ்சாவூர்.
8. தர்மபுரி.

இந்தச் சலுகை இரு பிரிவுகளுடையது. முதற்பிரிவின் கீழ் தற்போதுள்ள தொழில்களை விரிவு படுத்தும் வகையில் மேற்கண்ட எட்டு மாவட்டங்களில் ஏதேனும் ஒன்றில் புதிதாக நடுத்தர மற்றும் பெரிய தொழில்களைத் துவக்கினால் வட்டி இல்லாத விற்பனை வரிக்கடன்கள் கிடைக்கும். புதிதாக அமைக்கப்படும் தொழிலின் நிலையான சொத்து மதிப்பில் (Fixed assets) 25 சதவிகிதத் திற்குச் சமமானதாகவும், தற்போதுள்ள தொழிலுக்காக 3 ஆண்டுகளில் செலுத்தப்பட்ட விற்பனை வரிக்கு மேற்படாமலும் வட்டி இல்லாத விற்பனை வரிக்கடன் அளிக்கப்படும். இரண்டா வது பிரிவின் கீழ் புதிதாகத் தொடங்கப்படும் நடுத்தர அல்லது பெரிய தொழில்களை மேலே குறிப் பிட்ட பின் தங்கிய மாவட்டங்களுள் ஒன்றில் துவக்கினால், உற்பத்தி ஆரம்பித்து ஆறு ஆண் டுகளுக்கு இந்தச் சலுகை கிடைக்கும். ஒவ்வோர் ஆண்டும் புதிய தொழில் நிறுவனத்தின் நிலையான சொத்தின் மதிப்பில் 8 சதவிகிதத்திற்குச் சமமான தாகவும் அந்த ஆண்டில் செலுத்தப்பட்ட விற்பனை வரிக்கு மேற்படாமலும், வட்டி இல்லாக் கடன் கிடைக்கும்.

கை !

இந்தக் கை செய்யும் பணிகளின் எண்ணிக்கை சொல்லி முடியுமா?

வண்ணத்தைக் குழைந்து வகை வகையான ஓவியம் தீட்டுகிறது.

எண்ணத்தை வடித்து ஏற்றமிகு காவியம் படைக்கிறது.

கண்ணையும், கருத்தையும் கவரும் கவின்மிகு கலைத்திறனையும் காட்டுகிறது.

## வருங்காலச் சிற்பிகளை உருவாக்கும் நிலையம்

மேலை நாட்டினரே வியந்து போற்றும் வகையில் எத்தனை சிற்பங்கள், சித்திரங்கள் இன்று தமிழகத்தில் சிறந்து விளங்குகின்றன!

சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாய்த் திகழும் மாமல்லபுரம், மதுரை போன்ற கோயில்களெல்லாம், தமிழனின் கைத்திறமையை, நுண்ணிய வேலைப்பாட்டினை, சீரிய சிந்தனையைக் காட்டும் சின்னங்களாக அமைந்திருக்கின்றன என்று உலகமே சான்றிதழ் தருகின்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சியில், சிற்பக் கலையினைப் பயிற்றுவிக்க ஒரு ''சிற்ப உலோக வெண்கல வார்ப்புப் பயிற்சி நிலையம்'' (Art and Bell metal Training Centre) அமைந்திருப்பது மிகப் பொருத்தமானதாகும். ஏனென்றால், சிற்பக் கலையின் சிறப்பை எடுத்துக் காட்டும் கைலாசநாதர் ஆலயம், வரதராசப் பெருமாள் கோயில் போன்றவை அமைந்த நகரமன்றோ காஞ்சி !

இதோ, பயிற்சி நிலையம் !

உள்ளே நுழைகிறோம் ; மாணவர்களின் சின்னஞ் சிறிய கைகள் உருவாக்கும் உருவச் சிலைகள், வகை வகையான விளக்குகள் முதலானவற்றைப் பார்க்கிறோம் ; மாணவரின் கலை அறிவை வளர்க்கும் சிற்பக் கலை ஆசிரியர் ஒருவர், அருகே இருந்து அவர்களைப் பயிற்றுவிக்கும் பாங்கையும் காண்கிறோம்.

மாணவர்கள் கண்ணும் கருத்துமாகத் தம் பணியில் ஈடுபடுவதையும், முதலில் அச்சிலிருந்து வெளிப்படும் சொரசொரப்பான உலோக உருவம், அவர்களின் கைப் பட்டதும் முழு உருப்பெற்று, ஒளிவீசுவதையும் கண்டு சிந்தை மகிழ்கிறோம்.

வருங்காலச் சிற்பிகளை உருவாக்கும் இந்தப் பயிற்சி நிலையத்தில் யார் வேண்டுமானாலும் சேர முடியுமா ?

சிற்பக்கலை பயில வரும் மாணவர், எட்டாவது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்.



பொற்கொல்லர், சிற்பி பரம்பரையில் வந்தவர்களுக்கும், இக்கலை பயில மிகுந்த ஆர்வம் உள்ளவர்களுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. பயிற்சி இரண்டாண்டுகள். பயிலும் போது எல்லா மாணவருக்கும் உதவித் தொகையாக ரூ. 50 வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவாகப் பயிற்சி அளிக்கப்பட்டு, பிறகு தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். தேறிய மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

சிற்பப் பயிற்சியில் செய்முறையோடு, சிற்பச் சாத்திரங்களையும் பயில வேண்டும்; வரை படங்களையும் நன்கு வரையக் கற்றுக் கொள்ள வேண்டும். இவற்றுக்கான வகுப்புகள் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

இங்குப் பயின்றவர்கள் இன்று கோயில்களில் சிற்பிகளாகப் பணியாற்றி வருகின்றனர். மற்றும் கலைப்பொருட்கள் தொழிலகங்களிலும், தனியாகத் தொழில் செய்வதற்கும் இவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இதுவரை இந்த நிலையத்தில் முப்பது பேர் பயிற்சி பெற்றுத் தேறிப் பல்வேறு இடங்களில் பணியாற்றி வருகின்றனர்.

மதுரை, சேலம், திருவிடைமருதூர், அரக்கோணம், மற்றும் காஞ்சியிலுள்ள மாணவர்கள் இங்குச் சிற்பங்கள் சமைப்பதில் பயிற்சி பெற்று வருகின்றனர். சிற்ப அச்சு, உலோக வார்ப்படம், செதுக்குதல், மெருகேற்றுதல், நகாசு வேலை செய்தல், போன்ற பலவேலைகளில் அவர்கள் ஆர்வமுடன் ஈடுபடுவதையும், விதவிதமான விக்கிரகங்களைச் சித்திரங்களாக வரைவதையும் பார்த்தால், இளநெஞ்சங்களின் கலையார்வத்தை நன்கு உணர முடிகிறது.

தமிழகத்தில் பரவலாகச் சிற்பக் கலைஞர்களை உருவாக்கும் நோக்குடன் இதே போன்ற பயிற்சி நிலையங்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலையிலும், மற்றும் சேலத்திலும் இருக்கின்றன.

ஏழாண்டுகளாக மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வரும் இந்தக் காஞ்சி நிலையம், எழில் மிக்க உலோகச் சிற்பங்களை உருவாக்கிப் பல பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. இங்கு உருவான சிற்பங்கள் தமிழகத்தின் கோயில்கள் சிலவற்றில் வைக்கப்பெற்றுள்ளன. கண்ணைக் கவரும் அழகான நடராசர் சிலை மாணவர்களின் கைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றது.

அண்மையில் புது தில்லியில் நடந்த 'ஆசியா 72' பொருட்காட்சியில், இம்மாணவர்களின் கை வண்ணத்தினால் உருவான பல்வேறு உலோகச் சிலைகள், அழகிய பூவேலைப்பாடுள்ள பல வகையான தட்டுகள், சிறிய பெரிய மணிகள், வகைவகையான குத்துவிளக்குகள், 24 மணி நேரமும் எரியும் நவீனத் தூண்டா மணிவிளக்குகள் முதலியன பிற மாநிலத்தவரும் போற்றும் வண்ணம் அமைந்திருந்தன. சுமார் இருபதாயிரம் ரூபாய் மதிப்புள்ள கலைப் பொருட்கள் இந்தப் பொருட்காட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறையின் சார்பில் சிறப்பாக இயங்கி வரும் இந்தப் பயிற்சி நிலையம், சிற்பக் கலைஞர்களை உருவாக்குகின்ற பாசறையாக-பள்ளியாக விளங்கி வருவதை நாம் பாராட்ட வேண்டும்.-இ.

## பூம்புகாரில் அகழ்வாராய்ச்சி

பூம்புகாரப் பகுதியில் மேலையூரில் அகழ்வாராய்ச்சியின் போது ஒரு கல், மரத்துண்டு ஆகியவை கிடைத்தன. டாடா ஆராய்ச்சி நிலையத்திற்கு அவை ஆய்வுக்கு அனுப்பப்பட்டன. மரத்துண்டு கி.மு. 300-ஆம் ஆண்டைச் சேர்ந்த தென்றும் கல் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும் தெரிய வருகிறது.



## மலைக்குடிசை

உதகை, கொடைக்கானல், ஏற்காடு, ஜவ்வாது மலைகள் ஆகிய இடங்களில் உள்ள மலைப்பகுதிகளில் சிறு குடிசைகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை வீட்டு வசதி வாரியம் தீட்டியுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறுகின்ற நன்கொடைகளிலிருந்து இந்தச் சிறு குடிசைகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தில் 10 குடிசைகளும், கொடைக்கானலில் 10 குடிசைகளும் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடிசையின் கட்டடப் பரப்பு 1,100 ச. அடியாகும். குடிசை ஒன்றுக்கு ரூபாய் 30,000 செலவாகும். தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இக்குடிசைகளை விற்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# 'சிப்காட்' என்றால் என்ன?

'சிப்காட்' 'சிப்காட்' (SIPCOT) என்கிறார்களே அப்படி என்றால் என்ன?

தமிழ்நாட்டில் புதியதொழில் நிறுவனங்கள் பெருகுவதற்கு வாய்ப்பளிக்கும் புதிய அமைப்பே 'சிப்காட்'.

State Industries Promotion Corporation of Tamil Nadu Limited என்பதன் சுருக்கமே (SIPCOT)

இந்தியாவின் தொழில் அமைப்பில் நமது தமிழ்நாடு ஒரு முக்கியமான இடம் வகிக்கிறது. துணிச்சலும், முன்னேற்ற நோக்கமும் கொண்ட தமிழ்நாட்டு மக்களின் முயற்சிப் பயனாகவும் தமிழ்நாடு அரசின் ஊக்கமளித்து உதவி புரியும் கொள்கையினாலும் இஃது உருவாயிற்று. மேலும், தமிழ் நாட்டிலுள்ள நிலையான அரசியல் சூழ்நிலை, சாதகமான பொருளாதார நிலை, திறமைவாய்ந்த நிருவாகம், நிதிஉதவி அளிக்கும் நிறுவனங்கள், தொழில் வளர்ச்சிக்கான உள்ளமைப்பு வசதிகள், பயிற்சியும் திறமையும் பெற்ற தொழில் நிர்வாக வல்லுநர்கள் முதலியன இவ்வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணங்கள்.

தமிழ்நாட்டின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி-தொழில் துறையை ஊக்குவித்து வளர்ப்பதிலும் மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதிலும் மட்டுமின்றிப் பின்தங்கிய பகுதிகளைத் தொழில் மயமாக்குவதிலும் தான் உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை விரைவு படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அவற்றுள் மிக முக்கியமான முயற்சிதான் தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்றக் கழகம் ( SIPCOT ) அமைக்கப்பட்டதாகும். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகவும் பயன் தரத்தக்க முறையில் செயல்படவும், தமிழகத்தில் தொழிலில் பின்தங்கிய பகுதிகளைத் தொழில் முன்னேற்றக் கழகம் அறிமுகப் படுத்தி, சலுகைகளையும், நிதி உதவியையும் அளிக்கிறது.

புதிய தொழில்கள் தொடங்குவதற்குத் தனியார் நிதி நிறுவனங்களும், அரசு நிதி நிறுவனங்களும் பல இருந்தாலும் நிதி உதவி அளிப்பதோடு மட்டுமல்லாமல், குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றும் வகையில் பிற உதவிப் பணிகளை நல்கவும், அதன் மூலம் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு ஒரு பங்குதாரர் போல் செயல்படவுமான அவசிய நிலை அதிக அளவுஉணரப் பட்டது. இந்தத் தேவையை நிரப்புவதற் கெனவே இந்த அமைப்புத் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு பொது வரையறுக்கப்பட்ட அமைப்பு ஆகும். இதன் அதிகாரப் பூர்வமான மூலதனம் 5 கோடி ரூபாய்.

இது தமிழ்நாடு அரசு உயர் நிலை அலுவலர்கள், தமிழகத்தில் சிறந்த தொழில் அதிபர்கள் ஆகியோரை இயக்குநர்களாகக் கொண்ட ஒரு குழுவால் நிருவகிக்கப்படுகிறது.

நாளடைவில் இந்த அமைப்பு தனது நடவடிக்கைகளைத் திறமையான முறையில் செயல்படுத்திப் பணி புரியத் தகுதி வாய்ந்த நிபுணர்களைப் பெற்றுத் தொழில் வளர்ச்சிப் பணியைச் சீராகச் செய்யும்.

தமிழ்நாட்டில்— குறிப்பாகத் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் முற் போக்கு முயற்சியுடைய தொழில் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் செயல் பட்டுத் தொழில் துறையின் விரைவு முன்னேற்றத்தை 'சிப்காட்'டின் குறிக் படுத்துவதே கோள். இந்தக் குறிக்கோளைச் செயலாக்க 'சிப்காட்' அளிக்கும் வசதிகளாவன :—

1. தாராள நிதிஉதவி.

2. புதிய தொழில் நிறுவ உரிய இடங்களைத் தேர்ந்தெடுக்க வழி காட்டுவது.

3. தொழில் துவக்க வாப்புகள் பற்றிக் கண்டறிந்து (Feasibility Studies) அறிக்கைகள் தயாரித்து, இலாபகரமான திட்டங்களை நிர்ணயித்து, அந்த அறிக்கைகளைத்—தொழில் துவக்க விரும்புகளைத் தொழில் துவக்க விரும்புவோருக்கு வழங்குவது.

4. தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட பகுதிகளில் தொழில்கள் துவங்குவதற்கு அனுசரணையான உள்ளமைப்பு வசதிகளை (Studies infra-structural facilities) வளர்ப்பது.

5. தமிழ்நாடு அரசு புதிய தொழில்களுக்கு அளித்திருக்கும் ஊக்கத் திட்டங்களைச் செயல் படுத்துவது.

இவற்றையெல்லாம் எங்கள் உதவி வேண்டி வருவோரின் தேவைகளை உணர்ந்து தடங்கல் தாமதமின்றி நிறைவேற்றுவதே சிப்காட்டின் பணியாகும்.

நடுத்தர (Medium) அல்லது பெரிய ( Major ) தொழில்கள் தொடங்கும் நோக்கம் உங்களுக்கு இருப்பின், கீழ்க்கண்ட முறைகளில் 'சிப்காட்' உங்களுக்கு உதவிட முடியும்.

1. நீண்ட காலக் கடன்கள் :

தொழில் நிலையாக அமைவதற்கான நீண்ட காலக் கடன்கள் வழங்குவோம். பின் தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் தொழில்கள் முதல் 4 ஆண்டு

களுக்கு ஒரு தவணையும் கட்ட வேண்டியதில்லை. வளர்ச்சி பெற்ற பகுதிகளில் துவங்கப்படும் தொழில்கள் முதல் 2 ஆண்டு களுக்குத் தவணை ஏதும் கட்ட வேண்டியதில்லை. மேற்குறிப் பிட்ட சலுகைக் காலத்திற்கு பிறகு ஆறு அல்லது எட்டு ஆண்டு களில் கடன் தொகை திருப்பித் தரப்பட வேண்டும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் துடன் ( T.I.I.C. ) கூட்டாக வும் 'சிப்காட்' தொழில்களுக்கு நிதிஉதவி அளிக்கும்.

பங்குகள் சேர்ப்பதில் உத்தர வாதம் ( Underwriting).

தகுதியான தொழில்களுக்குப் பங்குகளைச் சேர்ப்பதற்கு உத்தர வாதம் அளிக்கிறது 'சிப்காட்'.

சமநிலைப் பங்கு ஏற்பது ( Equality Participation)

தகுதியான தொழில்களானல் சமநிலைப் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்து தொழிலில் பங்குதாரர்களாகவும் ஆவோம்.

எனினும், இம்மாதிரிப் பங்கு களுக்கு உத்தரவாதமளிப்பது. பங்குதாரர் ஆவது ஆகிய சலுகைகள், பின் தங்கிய எட்டு மாவட்டங்களில் துவக்கப்படும் தொழில்களுக்கு மட்டுமே அளிக் கப்படும்.

தமிழ்நாடு அரசு புதிய தொழில்களுக்கு அளித்துள்ள கீழ்க் குறிப்பிட்ட ஊக்குவிப்புச் சலுகைகள் ( Incentives ) பலவற்றையும் நீங்கள் பெறு வதற்கு சிப்காட் உறுதுணை யாகும்.

1. தொழில் நடைமுறை வாய்ப்புச் சம்பந்தமான ஆய்வு ( Feasibility Studies ) செல வுக்கு நிதி உதவி.

2. நீங்கள் செலுத்தும் விற்பனைவரிக்குச் சமமான, வட்டி யில்லாக் கடன்கள்.

3. தொழிலில் பின் தங்கிய வட்டங்களில் தொடங்கப் பெறும் தொழில்களுக்கு மானி யத் தொகை.

4. புதிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகை.

5. அரசாங்கக் கொள் முதலில் முன்னுரிமைச் சலுகை.

6. கூலபத் தவணை முறையில், தொழில்களுக்குத் தகுதியான விருத்தி செய்யப்பட்ட இடங்கள்

> மத்திய அரசிடம் தொழில் உரிமம் (Industrial Licence) பெற மனுச் செய்வோருக்கு, உரிமம் பெறுவதற்கான உதவி, மாநில அரசினர் துணையுடன் 'சிப்காட்' அளிக்கும்.
>
> வர்த்தக வங்கிகள் மூலம் நடுத்தரத் தொழிற்சாலைகள் பெறும் கடனுக்கான உத் திரவாதம் வழங்கும் திட்டத்தை சிப்காட் தீவிரமாகப் பரி சீலித்து வருகிறது.

7. தொழில் உரிமம் ( Industrial Licence ) பெறு வதில் தமிழ்நாடு அரசின் ஆதரவு.

8. வங்கிகளிலிருந்து பெறும் கடன்களுக்கு உத்தரவாதம்.

நீங்கள் பெரிய ( Major ) அல்லது நடுத்தர ( Medium ) தொழிற்சாலை தொடங்க யோசிப் பீர்களானல் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைந்து சிப்காட்டின் தொடர்பு கொள் ளுங்கள். சில ரகத் தொழில் களுக்கு (Small Scale Industries) உதவி செய்ய மற்ற நிறுவனங் கள் உள்ளன.

தொழிலில் பின் தங்கிய பகுதி களில் எதிலேனும் தாங்கள் தொழில் தொடங்கும் நோக் கம் கொண்டிருப்பின், தங்க ளுக்கு நிதிஉதவி அளிப்பதோடு இதரப் பல்வேறு உதவிகளும் சலுகைகளும் கிடைக்கச் செய் கிறது. சிப்காட், தனியாரின் வரையறுக்கப்பட்ட நிறுவனங் கள் ( Private Limited Companies ) பொதுவரை யறுக்கப்பட்ட நிறுவனங்கள் ( Public Limited Companies) ஆகியவற்றுக்கு மட்டுமின்றிக் கூட்டுறவுச் சங்கங்கள், தனி உரிமையாளர்கள், கூட்டமைப்பு நிறுவனங்கள் ( Partner Ship Firms) ஆகியவற்றுக்கும் உதவி அளிக்கும்.

தற்போதுள்ள நிதி நிறுவனங் கள் மூலமாகத் தங்கள் தேவை களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை உடைய தொழில் களுக்கு சிப்காட் சாதாரண மாக நிதியளிப்பது இல்லை. எனினும், குறிப்பிட்ட தொழில் களின் தகுதி நிலைமைக்கேற்ப மற்ற நிதி நிறுவனங்களுடன் கூட்டுத் துணையாக உங்களுக்கு உதவி செய்யும். தற்போதுள்ள நிதி நிலைமையில் உள்ள நல்ல முறையில் நடைபெறக் கூடிய தொழில்களுக்கு 'சிப்காட்' உதவி செய்யும்.

சிப்காட் கடன்கள் அளிக்கும் போது திட்டவட்டமான ஈட்டு உறுதி பெற்றே அளிக்கிறது. கடன் பெறும் நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் (fixed assests) மற்றும் நிறுவனத்தின் மீதான 'முதற் பொறுப்பு' ( first charge ) சிப்காட்டின் வழக்கமான தேவை.

ஒவ்வொரு இனத்தின் சம்பந் தப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்பக் கடன்களைத் திருப்பிக் கொடுப் பது ; அவை பற்றிய இதர நிபந் தனைகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்யப்படும். பின் தங்கிய பகுதிகளில் தொழில்களுக்கு நிபந்தனைகள்கவர்ச்சிகரமானவை. கடன்கள் முழு அளவில் திருப்பிக் கொடுக்கப்படும் வரையில் 'சிப் காட்' தொடர்ந்து அந்த அமைப் பின் இயக்குநர் குழுவில் பிரதி நிதித்துவம் பெறும். அவ்வப் போது தொழில் நிலையத்தை ஆய்வு செய்யவும், அறிக்கை தரவும் சிப்காட்டிற்கு வசதி செய்து தரப்பட வேண்டும். கடன் பெறுவதற்கு முன்னர் குறி பிட்ட திட்டம் சம்பந்தமான உரிமங்கள், அரசு அனுமதி இவைகளைப் பெற வேண்டும். மதிப்பீட்டுக்கும் பிற ஆய்வு களுக்கும் ஆகும் செலவுகளை நீங்கள் ஏற்க வேண்டும். கடன் பெறுவது சம்பந்தமான சட்டப் பூர்வமான மற்றும் இதர நடை முறைகளுக்கு இணங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தொழில் துவக்குவதற்குக் கிடைக்கும் சலுகைகளும், நன்மைகளும் ஏராளம். அவற்றுள் சிலவே மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. தொழில் துறையில் முதலீடு செய்வதற்கு ஏற்றதான சிறந்த சூழ்நிலையின் மற்ற வாய்ப்புகளும் தமிழ்நாட்டில் உள்ளன. உங்க ளுடைய தொழில் இலாபமுடன் வளர்வதற்குரிய வசதிகள் பல உள்ளன. உங்கள் கனவு நன வாக ஏன் இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது ?

தொழில் துறையில் முதலீடு செய்து நீங்கள் பயன் பெறுவ துடன் மற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கவும் உதவ லாம். மேலும், விவரங்கள் அறியக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுது எழுதுங்கள்.

—வளர்ச்சி அலுவலர்,
மாநிலத் தொழில்
முன்னேற்றக் கழகம்
லிமிடெட் (SIPCOT),
அஞ்சல்பெட்டி எண் : 3735
சென்னை-600002.



# பள்ளிச் சிறுவர் நலப் பாதுகாப்பு

டாக்டர் திருமதி தாரா நடராசன்

'பால ஜோதிடம் விருத்தாப் பிய வைத்தியம்' என்பது ஒரு பழமொழி. குறைந்த வயதான வர்கள் சொல்லுகிற ஜோசியம் பலிக்குமென்றும், அனுபவசாலி யான வயோதிக டாக்டர் கொடுக் கிற மருந்து பலிக்குமென்றும் சொல்வது அந்த நாளில் வழக்க மாக இருந்தது. காலம் மாற மாற 'வயது' ஒன்றினாலேயே எதையும் தகுதியுடையதாக நிர்ணயிக்கிற இயல்பு இப்போது போய் விட்டது.

மருத்துவப் படிப்பில் கூடக் குழந்தைகள் நோய் பற்றிய பிரிவுதான் இப்பொழுது எங்கும் பெரிதாகப் பேசப்பெற்று வரு கிறது. குழந்தைகளுக்கு நோய் வருவது இயல்பு. தனக்கு எது வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எவ்வாறு தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும், எந்த வகையில் சிலவற்றிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்ள வேண்டும் என்பன வற்றை யெல்லாம் அவர்கள் அறியார் கள். ஆகவே சிறுவர்களே நோயின் கொடுமைக்கு மிகவும் ஆட்பட்டு வருந்துகிறார்கள்.

அண்மைக் காலமாகத்தான் குழந்தைகள் நோயைப் பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சிகளை விரிவாகச் செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள். இப்பொழுது சென்னை மாநகரில் பெண்கள் மருத்துவ இல்லங்கள், மகப்பேறு மருத்துவ மனைகள் இருப்பதைப் போலத் தனியாகக் குழந்தைகள் மருத்துவக் கூடங்கள் இருப்பதை யும் பார்க்கலாம்.

குழந்தைகளின் உடல் நலம் தான் ஒரு நாட்டின் செல்வ மாகும். எதிர்காலக் குடிமக்கள் ஒரு நாட்டில் எப்படி இருப்பார் கள் என்பதைப் படம் போலக் காட்டுபவர்கள் அந்நாட்டுச் சிறுவர்கள்தான். ஒட்டிய வயிறு ஒடுங்கிய கண்கள், வற்றிய கன்னம், பழுதான பற்கள், வாய்ப் புண்களோடு எலும்பும் தோலுமாகப் பலரும், உப்பிய வயிறும், ஊதிய முகமும், வீங்கிய கால்களுமாகப் பலரும் பள்ளிக் கூடங்களில் காட்சியளிப்பதைக் காணலாம். இந்த நிலையில்தான் இந்நாட்டில் குழந்தைக் கண்ண னுக்கு ஜெயந்தியும், குழந்தை முருகனுக்குத் திருவிழாவும் நடந்து கொண்டு வருகின்றன.

குழந்தைகள் பெறுவது வேறு, வளர்ப்பது வேறு ! குழந்தை பெறுவதை விட வளர்ப்பதுதான் ஓர் அருங்கலையாகும். வளர்ப் பதைப் பற்றிச் சிந்தனை செய் யாமல் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாக நம் மக்கள் பல ஆண்டுகளாக இருந்து வந்திருக் கின்றனர். வளர்ப்பது ஒரு பெரிய பொறுப்பாகும்.

நாலைந்து பெரியவர்களைக் கூட ஒரு குடும்பத்தில் வைத்துக் கொண்டு வாழ்ந்து விடலாம். ஆனால் இரண்டு மூன்று குழந் தைகளை வளர்ப்பது என்பது மிகப்பெரிய கடினமான கலை யாகும்.

பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால்தான் சத்து நிறைந்த உணவாகும். ஏழை எளிய வர்கள் இயல்பாகவே, மெலிந்த உடலும், வலிவிழந்த நிலையும் உடையவர்களாக இருப்பதால் அவர்களுக்குத் தாய்ப்பால் சுரப் பது மிகக் கொஞ்சமாக இருக் கிறது. நடுத்தரக் குடும்பத்தில் இன்னுமொரு சிக்கல் ஏற்பட்டு விடுகிறது. கல்லூரிக்குப் போய்ப் பெண்கள் படிப்பதும், அலுவலகங்களில் வேலை பார்த்து வருவதும் இப்போதைய நடை முறை நிகழ்ச்சிகளாகும். கல்வி கற்பதும், அலுவலகங்களில் பணி யாற்றுவதும் ஆகிய மூளை உழைப்புக்கள் பெண்கள் உடல் நலத்தைப் பாதிக்கச் செய் கின்றன. இளம் வயதிலேயே கண்ணாடி அணிந்து கொள்வதும் முதுகு வளைந்து முன்னே குனிந்து கூனல் தோன்றுவதும், தளர்ச்சியும், சோர்வும் அதிக அளவில் ஏற்படுவதும் இன்றைய அலுவலகப் பெண்கள் பெரும் பாலோரிடம் காணப்படுவதா கும்.

ஆகவே, நடுத்தரக் குடும்ப மகளிர் தாய்மார்களாக மாறி யதும், தாய்ப்பால் குறையுந் தன்மையும் நேர்கின்றது. பிறந்த 10, 12 நாட்களிலேயே குழந்தைகள் எண்ணற்ற 'ஒளாக்சோ' முதலிய புட்டிப் பால்களை நம்பி வாழ வேண்டி யிருக்கின்றது. தாயின் பால், ஆவின் பால், மாவின் பால் என்று இக்கால மாற்றங்களை அறிஞர் கள் வேடிக்கையாகக் குறிப் பிடுவதுண்டு. செல்வச் செழிப் பான குடும்பங்களிலும் கூட மகளிர்க்கு வேண்டிய உடலு ழைப்பு, போதுமானதாக இல் லாததால் இந்தக் குறை ஏற் பட்டு விடுகிறது. தாய்ப்பால் தருவதால் அழகு அழிந்து விடும் என்று சில தாய்மார்கள் தவருகக் கருதுவதுண்டு. நல்ல காலமாக அப்படிப்பட்ட மனே நிலை நம் நாட்டில் வளரவில்லை.

நூற்றுக்கு எண்பது பேருக்கு மேற்பட்ட தாய்மார்கள் எளிய நிலையில் வாழ்கிறார்கள். அவர்களுக்குக் குழந்தைகளின் உணவு ஊட்ட முறைகள் தெரிவதற்கு வழியில்லை. எஞ்சிய சிலரோ அரைகுறையாய்த் தெரிந்து கொண்டு துன்பப்படுகின்றனர்.

பிள்ளைப் பேறடைந்த பெண் தன் கணவனுடன் எட்டாவது மாதத்திலிருந்து மாலை நேரங்களில் 1 மணி நேரமாவது அருகிலுள்ள ஒரு மருத்துவ நிலையத்துக்குச் சென்று குழந்தை தாய் வயிற்றில் உருவாகும் முறை, அதைப் பாதுகாக்கும் நெறி, அதற்கான வழிவகைகள் முதலியவற்றைப் பாடமாகக் கேட்கும் வாய்ப்புகளை நம் நாட்டில் உண்டாக்குவது நல்லது.

ஏணை கட்டுவது முதல் தொடங்கி, காற்சட்டையை முக்கோணமாக மடித்துப் பின்னுதல் முதலிய பல செய்திகளையும் பெற்றோர்களுக்கு அறிவித்தாக வேண்டும். குழந்தைகளுடைய வளர்ச்சி மிக வேகமானதாகும். ஒரு குழந்தை பால் குடிக்கிற நிலையில் அடைகிற வளர்ச்சி இன்னும் வியப்பைத் தருவதாகும். சில நேரங்களில் தாய்மார்கள் குழந்தை அதிகமாகப் பால் குடிக்கக் கூடாது என்று நினைத்து அளவைக் குறைத்து விடுகிறார்கள். பால் கொஞ்சம் தண்ணீராக இருந்தால்தான் செரிக்கும் என்று நம்பி அதிகத் தண்ணீரைக் கலந்து சத்தைக் குறைத்து விடுகிறார்கள்.

காது குத்துதல், முடி இறக்குதல் போன்றவை எப்படித் தெய்வ காரியங்கள் என்று கருதுகிறார்களோ அப்படியே குழந்தைகளுக்கு அம்மை குத்துதல் தடுப்பு ஊசி போடுதல் முதலியவற்றையும் செய்தாக வேண்டும். இவை எல்லாம் எல்லா மருத்துவ நிலையங்களும் வற்புறுத்துகின்றன.

ஒரே ஆசிரியரிடத்தில் தொடர்ந்து படிப்பவர்கள் எவ்வாறு நன்மைகளை அடைந்து வருகிறார்களோ அவ்வாறே ஒரே டாக்டரைத் தொடர்ந்து அணுகி ஆலோசனை பெறுபவர்களும் நன்மை அடைந்து வருகிறார்கள்.

பல தொல்லைகளுக்கிடையில் பிள்ளைகள் 4, 5, வயதை அடைந்து விடுகிறார்கள். பிள்ளை வளர்ப்பது போலப் பள்ளிக்கூடங்களில் கொண்டுபோய் அவர்களைச் சேர்ப்பதும் பெரிய வேலையாகி விடுகிறது. எனக்குத்தெரிந்த ஒரு பெண் திருமணமான அடுத்த மாதமே, நான்கு ஆண்டுகளுக்குப் பின் பிறக்கப் போகிற தன் பிள்ளையை மனத்தில் நினைத்துக் கொண்டு ஒரு மலைப்பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் இட ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டிருந்தாள். எப்படியோ பிறகு ஒரு பள்ளிக்கூடத்தில் குழந்தையைப் பெற்றோர்கள் சேர்த்து விடுகிறார்கள்.

யாரோ எனக்கு ஒருமுறை சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு கிறித்தவக் கல்லூரியைக் கட்டுவதற்கு முன்னால் அந்தக் கல்லூரிக்கான விளையாட்டு மைதானத்தையும், விடுதிகளையும் முதலில் கட்டி முடித்த பிறகே கல்லூரி வகுப்பறைகளையும், அலுவலகங்களையும் கட்ட ஆரம்பித்தார்களாம். அது தான் முறை. இப்போது வீதிக்கு இரண்டு மூன்று பள்ளிக்கூடங்கள் என்று பெருகி வருகின்றன. ஒண்டு வீடுகளில், ஓலைக் குடிசைகளில், மாட்டுத் தொழுவங்களில், சினிமாக் கொட்டகைக்கு எதிரில், கழிவறைகளின் அருகில் என்றெல்லாம் பள்ளிக்கூடங்கள் நடத்தி வருவது பெருந் தவறாகும். இவைகள் பிள்ளைகளின் உடல் நலத்தைக் கெடுத்து வருகின்றன.

இவைகளை அறிந்து நமது தமிழக அரசு பள்ளிகள் தோறும் மருத்துவர்களை அனுப்பிச் சிறுவர்களின் உடல்நலக் கேடுகளை ஆராய்ந்து அறிந்து அவற்றுக்குப் பரிகாரங்களைக்காணும் ஒரு தனித் துறையைப் பள்ளிச் சிறுவர் நலப்பணி மாடம் என்ற பெயரில் மருத்துவ மனைகளில் நிறுவியிருப்பதுமகிழ்ச்சிக்குரியது. இதற்காகத் தமிழக மக்கள் இன்றைய அரசுக்கு நன்றிசெலுத்தியாக வேண்டும்.

### துப்புத் துலக்கிட....

துப்பு துலக்கும் பணியில் காவல் துறையினருக்குத் துணையாக விளங்குவதில் நாய்ப்படையும் ஒன்று. தமிழ் நாட்டில் இப்பொழுது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாகத் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் மூன்று உள்ளன. இவை சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளியிலும் இதுபோன்ற படை ஒன்றினை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நாய்ப் பட்டி ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. இந்தத் துப்பறியும் நாய்ப்படை 1971-ல் 315 வழக்குகளில் பயன்படுத்தப் பட்டது. 1972-ல் 359 வழக்குகளில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.



# பார்த்தோம் படித்தோம்

**முடியாதா? கூடாதா?**

அண்மையில் வந்த தமிழரசு இதழ்களுடன் இலவச இணைப்புகள் வந்தன. வேறு எந்தப் பத்திரிகையும் இதுபோன்று பயனுள்ள இலவச இணைப்புகளை இணைத்து அளிக்க முடியாது. ஆனால், குறிப்பிட்ட நாளிலேயே எங்களுக்குத் தமிழரசு கிடைக்கச் செய்யக் கூடாதா? தமிழரசைக் காண்பதில் உள்ள தாமதத்தைத் தவிர்க்க முடியாதா? கூடாதா?

—எம். காதர்சா,
திருநெல்வேலி.

**எங்கே? எங்கே?**

தமிழரசு தமிழ் வளர்ப்பதற்கு மட்டுமல்ல; நாட்டில் வளர்ந்துள்ள தமிழ் வளர்ச்சிக்கு அடையாளமாகவும் திகழ்ந்து வந்தது வெண்பாப் போட்டி! இதழ் தோறும் எத்தனை தமிழ்ப் புலவர்கள் பங்கேற்று வந்தனர். அந்தப் பகுதியைத் திடீரென ஏன் நிறுத்திவிட்டீர்கள்? வெண்பாப் போட்டி மாணவரும் ஆசிரியர்களும் விரும்பிய பகுதி. ஒவ்வொரு இதழைப் பார்க்கும் போதும் அந்தப் பகுதி எங்கே? எங்கே? என்று கண்கள் தேடுகின்றன.

—புலவர் செந்தில்வேலன்,
மதுரை.

**வளர்ச்சியால் மகிழ்ச்சி**

ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழ் வளர்ச்சி பெற்றுவரும் சிற்றூர்களைப் பற்றித் தெளிவாக எடுத்துக்காட்டியது. ஊர்வளர்ச்சிப் பணிகளிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. வளர்ச்சிப் பணிகளுக்கு வழிகாட்டி நமது தமிழ்நாடு என்பதை அறிந்து அகமகிழ்கிறோம்.

—தேவ. சண்முகம்,
இராம. நடராசன்,
கோவை.

**நல்ல சொல்லன்றோ?**

Rural என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இராமப்புறம் என்ற சொல்லைத்தான் நான் இதுவரை அறிந்திருந்தேன். இப்பொழுது ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழில் இராமப்புறம் என்பற்குப் பதிலாக 'ஊரகம்' என்ற சொல்லைப் படித்தேன்? அருமையான அழகான சொல்லன்றோ அது!

—சிவ. சிதம்பரம்,
காரைக்குடி.

**வண்ணப் பக்கம்**
**கண்ணுக்கு விருந்து!**

வெளி மாநிலத்திலிருந்து வந்திருந்த என் நண்பர் ஷிண்டே தமிழரசு இதழில் வெளியாகியிருந்த வண்ணப் பக்கங்களைக் கண்டு மலைத்துப் போனார். தமிழரசு பயனுள்ள செய்திகளை மட்டும் தரவில்லை. பார்வைக்கும் விருந்து படைக்கிறது வண்ணப் பக்கங்களில்.

—ஹென்றி டேனியல்,
பெங்களூர்.

**கறுப்பு மீது வெறுப்பா?**

தமிழரசு இதழில் சில பக்கங்கள் வெள்ளையாகவே அச்சாகியுள்ளன. கறுப்பு மீது வெறுப்பா? பட்டும் படாமலும் ஏன் இப்படி அச்சிடுகின்றனர்? பொறுப்பானவர்கள் கவனிக்கக் கூடாதா?

—டி. ஆர். சுரேந்திரன்,
சேலம்.

**முல்லைப்பா....**

முல்லைக்குத் தேர்தந்தான்,
முடிமன்னன் வேள்பாரி;
முல்லைக்குப் பாதந்தார்
முத்தமிழ்க் கொத்தாக;
பொன்னி வளவனார்
புனைந்த வரிகளில்
என்னைப் பறிகொடுத்தேன்
எண்ணம் பறித்தெடுத்தேன்.

—நா. அன்பழகன்,
மயிலாடுதுறை.

**கரும்பை ஏடு**
**விளங்கிய உரை**

'நமது காவலர்' இலவச இணைப்பில் அரசு—மக்கள்-காவலர்க்கிடையேயுள்ள இணைப்பை தெள்ளிதின் விரித்துள்ளார் முதல்வர் அவர்கள். பல அத்தியாயங்களைப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டியவற்றைப் பல பக்கங்களுக்குள் திரப்பி விட்டார்கள். இதுபோன்ற இணைப்புகள் எங்களை என்றும் இணைத்திருக்கட்டும்.

—கு. காளியப்பன்,
மணியக்காரன்பட்டி.

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

## கோரட்டூர் புறநகர்த் திட்டம்

வீட்டுவசதி மற்றும் நிதி வசதி அளிப்போர் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், புது டில்லி.

குறைந்த வருவாயும் நடுத்தர வருவாயும் உள்ளவர்களுக்கு ஏற்ற இணைந்த வீடுகள், மேற்கண்ட திட்டத்தின் கீழ் 1973ம் ஆண்டு ஏப்ரல் மாதக் கடைசியில் குடிபுக வாய்ப்பளிக்கப்படும்.



நடுத்தர வருவாயினருக்கு ஏற்ற இணைந்த வீடு.



குறைந்த வருவாயினருக்கு ஏற்ற இணைந்த வீடு.



நடுத்தர அமைப்பு வீடுகள்

# இன்றே செயல்படுவீர் உங்கள் நீண்ட ஆசைக் கனவை பூர்த்தி செய்ய இதோ

# நாளைய இணைந்த வீடுகள்

இடம்:

அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கு கிழக்கிலும், ஜாகாஸ் டி.வி.எஸ் தொழிற்சாலைக்கு மேற்கிலும், கொரட்டூர் புகைவண்டி நிலையத்திற்கு தெற்கிலும், சென்னை- திருவள்ளூர் நெடுஞ்சாலைக்கு வடக்கிலும் அமைந்துள்ளது.

அமைப்பு:

வசதியை அடிப்படையாகக் கொண்ட உயர்தர அமைப்பு. அழகிய வீடு.

<u>நடுத்தர வருவாயினருக்கு ஏற்ற இணைந்த வீடு.</u>

840 ச.அடி பரப்பு. உத்தேச மதிப்பு முழுத்தொகை கொடுப்போர்க்கு ரூ. 33,000/- சுலபத் தவணை முறையிலும் வாங்கலாம். நவீன அமைப்புகள் கொண்டது. இரண்டு படுக்கையறைகள், வரவேற்பு அறை, உண்ணும் அறை, உப்பரிகை (Balcony), குளியல் அறை, சமையல் அறை வசதிகள் கொண்டது.

சமையல் அறை தவிர மற்றவை 'மொசைக்' தரையுடன் கூடியது. முதல் மாடியில் உள்ளவர்களுக்கு மேல் மாடியில் துணி துவைக்கவும், உலர்த்தவும் வசதியுள்ளது.

<u>குறைந்த வருவாயினருக்கு ஏற்ற இணைந்த வீடு.</u>

440 ச.அடி பரப்பு. உத்தேச மதிப்பு முழுத்தொகை கொடுப்போர்க்கு ரூ. 19,000/-. சுலபத் தவணை முறையிலும் வாங்கலாம். நவீன அமைப்புகள் கொண்டது. ஒரு படுக்கை அறை, வரவேற்பு உண்ணும் அறை, உப்பரிகை (Balcony), குளியல் அறை, சமையல் அறை வசதிகள் கொண்டது. சமையல் அறை தவிர மற்றவை 'மொசைக்' தரையுடன் கூடியது. முதல் மாடியில் உள்ளவர்களுக்கு மேல் மாடியில் துணி துவைக்கவும், உலர்த்தவும் வசதியுள்ளது.

உடனே முந்துங்கள்.

255 மனைக்கட்டுகளும், 44 நடுத்தர வருவாய்க்கான வீடுகளும், 70 குறைந்த வருவாய்க்கான வீடுகளும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் வருகிற சித்திரை மாதத்தில் குடிபுக தயாராகும். தேவையுள்ளவர்கள் வீட்டுவசதி வாரிய அலுவலகத்திற்கு நேரில் வந்து விண்ணப்பத்தாளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நடுத்தர வருவாயினருக்கான வீடுகளுக்கு ரூ. 10/-
குறைந்த வருவாயினருக்கான வீடுகளுக்கு ரூ. 5/-

அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் கூடுதலாக ரூ. 3/- அனுப்ப வேண்டும். மேற்கொண்டு விவரமறிய விரும்புவோர் வீட்டு வசதி வாரிய உதவிச் செயலரிடம் நேரிலோ அல்லது உங்கள் முகவரியுடன் கூடிய 25 பைசா அஞ்சல் உறையை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பம் செய்து கொள்ள கடைசி நாள் 30-4-73**

தமிழ்நாடு
வீட்டு வசதி வாரியம்
36, அண்ணா சாலை,
சென்னை-600035

ஆர். பத்மநாபன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர்,



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்

## புதிய கண்டுபிடிப்புகள்!

# புதிய நெல் ரகம் பவானி

'அதிசய நெல்' ஐ.ஆர். 8, 'டைய்ச்சுங் நேடிங்-1' ஆகிய இரு குட்டை ரகங்களை நாட்டு ரகங்களுடன் ஒட்டுச் சேர்த்து, ஆராய்ச்சிகள் நடத்தியதன் விளைவாகக் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கருணை, காஞ்சி, காவேரி, பெண்ணை ஆகிய புகழ் பெற்ற நெல் ரகங்களை வெளியிட்டிருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகம் அதிக விளைச்சல் தரக் கூடிய 'பவானி' என்னும் ஒரு புது நெல் ரகத்தைத் தற்சமயம் உழவர்களுக்கு அளிக்க முன் வந்துள்ளது. இப் புதிய ரகத்தைக் கோவை, சேலம், வட ஆர்க்காடு, திருச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆற்றுப் பாசனப் பயிராகப் பயிரிடலாம். கோவை நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் 'பவானி' ரகத்தை ஆறு பருவங்களில் பயிரிட்டதில், ஹெக்டேருக்கு சராசரி 6,895 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. பல உழவர் பெருமக்களின் நிலங்களில் பயிர் செய்து பார்த்ததிலும் இது ஹெக்டேருக்கு 6,117 கிலோ சராசரி மகசூல் கொடுத்துள்ளது.

பிலிப்பைன்சு நாட்டு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 'பீட்டா' என்ற உயரமாக வளரும் இந்தோனேசிய ரகத்தையும், 'பி.பி.ஐ. 76' என்ற சாயாத் தன்மை கொண்ட பிலிப்பைன்சு ரகத்தையும் இனக்கலப்புச் செய்து சி4-63 ('64-63) என்ற ரகம் உருவாக்கப்பட்டது. இந்த ரகத்தையே, பல்வேறு சோதனைகளுக்குப் பிறகு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 'பவானி' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது. 'பவானி' என்ற இப் புதிய நெல் ரகம் 120—130 செ.மீ. உயரம் வளருகிறது. இது, சாதாரணமாக கோ. 32 நெல் ரகத்தைப் போல் சாய்ந்து விடுவதில்லை. மேலும், பருவ வரம்பிற்கு உட்பட்ட கோ. 32, 'கிச்சிலி' (ஜி.ஈ.பி. 24) ரகங்களைப் போல் அல்லாமல், இப் புதிய ரகத்தை நீர் வசதி இருப்பின், எந்தப் பருவத்திலும் பயிரிடலாம். விதைத்து 130—135 நாட்களில் அறுவடைக்கு வரும். ஒரே அளவு உரம் இட்டபோது, உள்ளூர் ரகங்களை விட இப் புதிய ரகம் அதிக மகசூலைத் தருகிறது. நட்டவுடன் வீரியமாக வளர்கிறது. மாரிக் காலத்திலும், கோடைக் காலத்திலும், சீராக வளர்ந்து, நல்ல பலன் தருகிறது. இது குலை நோயையும் 'பிளாட்' நோயையும் சமாளிக்க வல்லது. இதன் அரிசி தரம் சிறந்ததாகவும், சுவை மிக்கதாகவும் உள்ளது. மேலும், அறுவடைக்குப் பின் மூன்று-நான்கு வாரங்கள் வரை இந்த ரக நெல்லுக்கு முளைக்கும் தன்மை இல்லாததால், அறுவடையின் போது மழை பெய்தாலும், நெல் முளைத்துவிடுவதால் ஏற்படும் நட்டம் தவிர்க்கப்படுகிறது. இந்த ரகத்தை அறுவடைக்கு 30 நாட்கள் பின்னர் விதைத்தால்தான் முளைக்கும்.




அதிக விளைச்சல், வீரிய வளர்ச்சி, பல்வேறு சூழ்நிலையிலும் நல்ல மகசூல் கொடுக்கும் திறன், குறைந்த உரமிட்ட போதிலும் அதிக மகசூல் கொடுக்கும் தன்மை, தரமிக்க அரிசி ஆகிய சிறப்பியல்புகள் இப்புதிய ரகத்தில் இருப்பதால், கோவை, சேலம், வட ஆர்க்காடு, திருச்சி, மதுரை மாவட்டங்களில் சுமார் ஐந்து இலட்சம் ஹெக்டேரில் 'பவானி' ரகத்தைப் பயிரிட்டுப் பயனடையலாம். இதனால் உழவர் பெருமக்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 1.5 டன் நெல் அதிக மகசூல் கிடைப்பதன் மூலம் எக்டேருக்குச் சுமார் ரூபாய் 900 வரை அதிக லாபம் கிடைக்கக் கூடும்.

### புது ரக நெல்—'பவானி' சாகுபடிக் குறிப்புகள்

**வயது :—**

130—135 நாட்கள்

பருவம் :—

கார்ப்பட்டம் : ஏப்ரல்-மே முதல் ஆகஸ்ட் செப்டம்பர் வரை

சம்பா பட்டம் : ஜூலை-ஆகஸ்ட் முதல் நவம்பர்-டிசம்பர் வரை.

நவரைப் பட்டம் : ஜனவரி-பிப்ரவரி முதல் மே-ஜூன் வரை.

விதை அளவு :— ஏக்கருக்கு 18 கிலோ விதையை 12 சென்ட் நாற்றங்காலில் நாற்று விடவும்.

விதை நேர்த்தி : விதைக்கும் முன்பு ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' போன்ற கரிம பாதரச மருந்துகளையோ அல்லது டீ.எம்.டி., மருந்தையோ கலந்து விதைக்கவும்.

நாற்றங்கால் தயாரித்தல் :— இரும்புக் கலப்பையால் நிலத்தை நன்கு உழுது, தொழுஎரு அல்லது கம்போஸ்ட் ஏக்கருக்கு 10 டன் வீதம் போட்டு, நன்கு சேறுக்கி, சென்ட் நாற்றங்கால் (54 அடி நீளம் 8 அடி அகலம்) அமைத்தல் சிறந்தது.

நாற்றின் வயது :—25—28 நாட்கள்.

நடவு வயல் தயாரித்தல் :— இரும்புக் கலப்பையால் நிலத்தை நன்கு உழுது பண்படுத்தவும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது 2,300 கிலோ பசுந்தாள் உரமிடவும்.

அடியுரம் :—கடைசி உழவின் போது 25 கிலோ மணிச் சத்து (160 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 25 கிலோ சாம்பல் சத்து (40 கிலோ மியூரியேட் ஆப்பொட்டாசு) போடவும். நடும்போது 25 கிலோ தழைச் சத்து (125 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 55 கிலோ யூரியா) போடவும்.

மேலுரம் :—நட்ட 21-வது நாளில் 15 கிலோ தழைத் சத்தும் (75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியா), நட்ட 45-வது நாளில் 10 கிலோ தழைச் சத்து (50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியா) மேலுரமாக இடப்பட வேண்டும்.

### பயிர்ப் பாதுகாப்பு

நாற்றங்கால் : — நாற்றுகள் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு 0.05 சத பாரதியான், 0.04 சத என்ட்ரின், 0.05 சத பெனிட்ரோதியான், 0.05 சத பெந்பாஸ்பாமிடான், 0.05 சத பெந்தியான் ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றை முதல் தடவையாகத் தெளிக்கவும்.

நடவு வயல் :

1. நாற்று நட்ட 2 வாரங்களுக்குப் பிறகு, நடவு வயலில் மேற்கூறியவாறு முதல் முறை தெளிக்கவும்.

2. நடவு வயலில் முதல் முறை மருந்து தெளித்த பிறகு 3 வாரத்திற்கு ஒரு முறை வீதம், 2-வது 3வதுமுறை மருந்து தெளிக்கவும்.

3. தத்துப் பூச்சிகளும், இலையைத் தின்னும் புழுக்களும் காணப்படின் பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி.டி.டீ. 5 சதத் தூளையும் சம அளவில் கலந்து (ஏக்கருக்கு 10 கிலோ வீதம்) தூவவும்.

4. கதிர்களில் உள்ள மணிகளில் பால் பிடிக்கும் தருணத்தில் கதிர் நாவாய்ப் பூச்சிகள், புகையான் பூச்சிகள் (பல்காரிட்) தோன்றுவதைத் தடுக்க ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. சதத் தூளைத் தூவவும்.

மகசூல் :—ஏக்கருக்கு 2,500 கிலோ முதல் 3,500 கிலோ வரை

* * * *




தமிழ் நாட்டில், சுமார் 8 இலட்சம் ஏக்கரில் கேழ்வரகு பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களில் கேழ்வரகு அதிகம் பயிரிடப்படுகிறது. தற்சமயம் சாகுபடியிலிருக்கும் கோ. 8, கோ. 9, போன்ற ரகங்களைக் காட்டிலும் சிறந்த ஒரு புது ரகம் வெளியிட எடுத்துக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக, கோ. 10 என்ற ஒரு புது கேழ்வரகு ரகம் உருவாகி உள்ளது. உழவர்களின் தோட்டங்களில் பயிரிட்டுப் பார்த்ததில், இப் புது ரகம், கோ. 8 கேழ்வரகு ரகத்தை விட 25 சத விகிதம் அதிக மகசூல் கொடுக்கும் திறனுள்ளதெனத் தெரிய வந்தது.

### கோ-10 கேழ்வரகின் சிறப்புக் குணங்கள்

குறைந்த வயது.
அதிக மகசூல்.

தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றது.

இந்தியாவில் கேழ்வரகு பயிரிடும் மற்ற மாநிலங்களிலும் பயிரிட உகந்த ரகமாகும்.

### சாகுபடிக் குறிப்புகள்

வயது :—85—95 நாட்கள்.

பருவம் :—தை முதல்—பங்குனி வரை, ஆனி முதல் புரட்டாசி வரை.

விதையளவு :—ஏக்கருக்கு 2 கிலோ.

விதைப்பு :—நாற்றுப் பாவி நடவு செய்தல் அல்லது நேரடி விதைப்பு.

நாற்றின் வயது :—18—20 நாட்கள்.

உரமிடுதல்

அடியுரம் (ஏக்கருக்கு).

தொழு உரம் :—10 டன்.

தழைச் சத்து :—18 கிலோ.

தானியச் சத்து :—18 கிலோ.

சாம்பல் சத்து :—9 கிலோ.

மேல் உரம் (ஏக்கருக்கு)

தழைச்சத்து—18 கிலோ. இடைவெளி : வரிசைக்கு வரிசை 15 செ. மீ. (6 அங்குலம்) இடைவெளியும், நாற்றுக்கு நாற்று 15 செ. மீ. (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு நடவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு : கொள்ளை நோயைத் தடுக்க 1 சத போர்டோ கலவையைத் தெளிக்கவும் 1 சத போர்டோ கலவை தயாரிக்க 1 கிலோ மயில் துத்தத்தையும், 1 கிலோ சுண்ணாம்பையும், 100 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும்.

அல்லது

'பைட்டலான்' அல்லது பிளை, டாக்ஸ்' போன்ற தாமிரக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை 1 கிலோ எடுத்து, 400 லிட்டர் தண்ணீரில் கலந்து, கதிர் பூட்டையிலிருந்து வெளிவருவதற்கு முன் ஒரு முறையும், கதிர் வெளிவந்த 15 நாட்களுக்குப் பின் மற்றொரு முறையும் தெளிக்கவும்.

அல்லது

'கிரசான்—சுண்ணாம்புத் தூள்' ஏக்கருக்கு 8—10 கிலோ தூவவும்.

மகசூல்

தானியம் : ஏக்கருக்கு 1600—1800 கிலோ.
தாள் : ஏக்கருக்கு 3200—4000 கிலோ.

3. சமவெளிக் கேற்ற மலைப் பகுதிப் பிரதேசக் காய்கறிகள்.

தற்சமயம் மலைப்பிரதேசக் காய்கறிகளுக்கு மிகுந்த தேவை ஏற்பட்டுள்ளது. இவைகளின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. இந்த விலையுயர்விற்கு மூலகாரணம், இந்தக் காய்கறிகள் மலைப் பகுதிகளிலிருந்து சமவெளிகளுக்குக் கொண்டு வருவதற்கு ஆகும் போக்குவரத்துச் செலவுதான். இந்த மலைப் பிரதேசக் காய்கறிகளைச் சமவெளியில் உற்பத்தி செய்தால், இதன் உற்பத்தி செலவு குறைவதுடன், எல்லாத் தரப்பட்ட மக்களும் எளிதில் வாங்க ஏதுவாகவிருக்கும். எனவே, தமிழகத்தின் சமவெளிக்கேற்ற மலைப்பிரதேசக் காய்கறிகளைக் கண்டறியும் பணியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தோட்ட இயல்துறையின் காய்கறிப் பிரிவு முனைந்துள்ளது.

'காலி பிளவர்', 'பீன்ஸ்', முள்ளங்கி போன்ற ரகங்கள் கோவையில் சோதித்துப் பார்க்கப்பட்டன.

காலிபிளவர்:—இதை ஜூலை முதல் மார்ச்சு வரை வெற்றிகரமாகப் பயிரிடலாம். இந்தியன் 'ஸ்னோ பால்', 'எர்லிபாட்னு' என்ற ரகங்கள் சமவெளியில் நல்ல மகசூலைக் கொடுத்துள்ளன. இவற்றின் ஒவ்வொரு பூவும் சுமார் 1 முதல் $1\frac{1}{2}$ கிலோ வரை எடையுள்ளதாகவும் தயிரைப் போன்ற சிறந்த தன்மையுள்ளதாகவும் உள்ளன.

பீன்ஸ்:—பல சிறந்த ரகங்கள்சோதித்துப்பார்க்கப்பட்டன. இவற்றில் 'பான்ச்சு எல்லோ', 'கன்டெண்டர்', 'கனடியன் வொண்டர்' போன்ற ரகங்கள் குளிர்காலம் தவிர கோடைக்கும் ஏற்ற ரகங்களாக உள்ளன. இவைகள் வீட்டுத் தோட்டத்தில் ஆண்டு முழுவதும் பயிரிட ஏற்றவை.

முள்ளங்கி:—இது குளிர் காலத்தில்நல்லமகசூலைக்கொடுப்பினும், மிகவும் வெப்பமான ஏப்ரல் மே மாதங்களைத் தவிர ஆண்டு முழுவதும், பயிரிட ஏற்றது. விதைத்த 30-வது நாளில் அறுவடை செய்யக் கூடிய இரு ரகங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்க கழகத்தினர் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த ரகங்கள், உருண்டையாகவும், அதிக காரமில்லாமலும், நடுவில் தக்கை போல் இல்லாமலும், நல்ல நிறத்துடனும் உள்ளன. இவை மிகக் குறைந்த ஆணிவேர் விகித முடையதாதலால், அதிகமான செடிகள் நடுவதற்கு ஏதுவாகிறது. இவற்றைப் பச்சையாக 'கேரட்' போன்று உண்ணலாம். பெல்லாரி வெங்காயம், கத்தரி போன்ற அதிக வயதுள்ள காய்கறிப் பயிர்களுடன் இவைகளை ஊடுபயிராகப் பயிரிடலாம். ஒரு ஏக்கருக்கு 4,000முதல் 8,000கிலோ வரை 30 நாட்களில் விளைச்சல் கொடுக்கவல்லது.

சமவெளிக்கேற்ற முட்டைக் கோஸ் ரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தோட்ட இயல் துறை சமவெளிக்கேற்ற முட்டைக்கோஸ் ரகத்தைத்தேர்ந்தெடுக்கும் பணியில் பல ரகங்களைப் பரிசோதித்துப் பார்த்தது.

தமிழகத்தின் சமவெளியில் பொதுவாக ஜூலை முதல் பிப்ரவரி வரை பெருமளவு முட்டைகோஸ் பயிரிடப்படுகிறது. இந்தச் சோதனையில் பல வெப்பமான—குளிர்கால ரகங்கள் புகுத்தப்பட்டு, இதன் தன்மைகள் ஆராயப்பட்டன. இவற்றில் 'பிரைட் ஆப் இந்தியா' 'கோல்டன் ஏக்கர்' ஆகிய ரகங்கள் நடவு செய்யப்பட்ட 80 முதல் 90 நாட்களில் ஒவ்வொரு கோசும், 2·0 கிலோ எடை உள்ளதாக ஏக்கருக்கு 15,000 கிலோ முதல் 20,000 கிலோ வரை விளைச்சல் கொடுத்துள்ளன. இந்த விளைச்சலானது மலைப்பிரதேசங்களின் விளைச்சலுக்கு ஒப்பாகும். ஓ.எஸ். கிராஸ் என்ற ரகம், ஒவ்வொரு கோசும் 2·00 கிலோவிற்குக்குறையாமல் கொடுக்கிறது. இந்த ரகத்தில் சர்வ சாதாரணமாக 4·0 கிலோ எடையுள்ள கோசுகள் உருவாவதால் ஏக்கருக்கு 25,000 கிலோ முதல் 30,000 வரை மகசூல் கிடைக்கிறது.

சில சிறந்த சீன ரக முட்டைக் கோசுகளும் நல்ல விளைச்சல் கொடுத்துள்ளன. இவற்றின் ஒவ்வொரு கோசின் எடை 3·00 கிலோ வரையுள்ளது. இந்த ரகங்கள் காய்கறியாகவும், 'லெட்டுஸ்' போன்று பச்சையாக உட்கொள்ளவும் ஏற்றது. கோடைக் காலத்திலும், சம வெளியில் பயிரிட உகந்த முட்டைகோஸ் ரகங்களைக் கண்டறிய, 'திடீர் மாற்றம்' முறையில் இனக்கலப்பு அபிவிருத்தி வேலைகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

(தகவல் : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.)

கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் இந்திய மொழி நூல்களின் ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகள் அளிக்க மைய அரசு முன் வந்துள்ளது. அனைத்துலகப்புத்தக ஆண்டின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்படி, ஆண்டொன்றுக்கு 100 பரிசுகள் அளிக்கப்படும். ஒவ்வொரு பரிசின் மதிப்பும் ரூ. 10,000. இத்திட்டத்தை பல்கலைக்கழக நிதியுதவிக் குழு செயற்படுத்தும். 1972 டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் வெளியான இந்திய மொழி நூல்கள், 1973–74-ஆம் ஆண்டுக்கான பரிசுகளுக்குப் போட்டியிடலாம்.



# நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்துக்கு நிலையான கலைக்கூடம்

சாமி...



ஒரே கல்லாலான சிலம்பு தனியாகத் தொங்குவதை முதல்வர் அவர்களும் கல்வியமைச்சர் அவர்களும் பார்வையிடுகிறார்கள்.

" அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்'' என்று ஏங்கினார் பாவேந்தர் பாரதிதாசன். அன்னாரது ஏக்கம் தீருகின்ற விதத்தில் தமிழக அரசு நடைபோட்டு வருகிறது—நல்ல பணிகளைச் செய்து வருகிறது.

அன்னைத் தமிழுக்கு அரியாசனத்தில் இடம் கொடுத்தது தமிழக அரசு.

ஏழை மக்களுக்கு ஈடில்லா நன்மைகளை உருவாக்கிக் கொடுக்கிறது தமிழக அரசு.

அந்த நாள் மூவேந்தர் ஆண்டிருந்த வரலாற்றை நினைவு கூர்ந்திடும் வகையில்—கலைகளுக்குப் பெருமை சேர்த்து—கலைக் கோயில்களை உருவாக்கும் பெரும்பணியையும் களிப்புடன் ஏற்றுச் செயலாற்றி வருகிறது தமிழக அரசு.

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று புகழ்ந்து பாடினார் பாரதியார். அந்தச் சிலப்பதிகாரக் கதையின் நிகழ்ச்சிகளை—கண்ணகி வாழ்ந்த பூம்புகாரில் சிற்ப வடிவங்களில் வடித்து—அந்தச் சிற்பங்களை எழிலான மண்டபத்தில் அமைத்து, எழுநிலை மாடமாக உருவாக்கி எழில் கொஞ்சும் இடமாக்கியிருக்கிறார் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்.

கலையுள்ளம் படைத்தவர்களே கலையின் பெருமையை உணர முடியும். நமது முதல்வர் அவர்கள், கலைகள் பலவற்றில் சிறந்து, காவியப் பனுவல்களை எல்லாம் நாட்டுக்குத் தருகின்ற கலைஞர் என்பதால் கண்ணகிக்கு அவர் எடுத்திருக்கின்ற எழுநிலை மாடம் காலமெல்லாம் வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

அன்று சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கற்கோயில் கண்டான். அவன் தம்பி இளங்கோ கண்ணகிக்குக் காவியக் கோயில் கட்டினான். இன்று நமது முதல்வர் கலைஞர் அவர்கள் கண்ணகிக்குச் சொற்கோயில் கட்டியதோடு எழுநிலை மாடம் என்னும் கலைக் கோயிலையும் உருவாக்கியிருக்கிறார்.



தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்திலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் காவிரிப்பூம்பட்டினம் என்று சொல்லப்படும் பூம்புகார் இருக்கிறது. இங்கே, கடற்கரைக்கு அருகில் 2·16 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் 5,100 ச. அடி அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது எழுநிலை மாடம் என்னும் எழில் நிலவும் கலைக்கூடம்.

1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் துவக்கப்பெற்ற இந்தக் கலைக் கோயிற் பணி அண்மையில் நிறைவு பெற்றிருக்கிறது. 17—4—1973 அன்று தமிழக முதல்வர்

கலைஞர் அவர்களால் இந்தச் சிலப்பதிகாரக் கலைக் கூடம் திறக்கப்படவிருக்கிறது.

பண்டைய நாள் பூம்புகார் விழாவை நினைவு கூரும் வகையில் இங்கே ஏப்ரல் 17, 18 இரண்டு நாட்களிலும் மாபெரும் விழா கொண்டாடப்படவிருக்கிறது. கருத்தரங்கம், கவியரங்கம், நடன நாட்டியம், நாடகம், இசைவிருந்து கிராமியக்கலைகள் அனைத்தும் இந்த இரண்டு நாட்களில் பூம்புகாரை மகிழ்ச்சி மழையில் நனைக்கும் என்பது திண்ணம்.

பூம்புகார்க் கலைக் கூடத்தின் பணி எந்த அளவு முடிவுற்றிருக்கிறது என்பதைக் காண்பதற்காகக் கடந்த 1—4—73 அன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், கல்வியமைச்சர் நாவலர் அவர்களும், சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களும், பூம்புகாருக்கு வருகை தந்திருந்தார்கள். மூன்று அமைச்சர்களும் வருகை புரிந்திருந்தது—சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் வருகை புரிந்தது போல் தோன்றியது.

மாமல்லபுரத்தில் சிலப்பதிகாரச் சிற்பங்கள் உருவான போது முதல்வர் அவர்கள் ஒவ்வொரு சிற்பமாகத் தாமே நேரில் பார்த்துத் திருத்தங் கூறி ஆர்வத்துடன் அமைக்கப்பட்டவையாகும் இவை.

ஏறக்குறைய 4·50 இலட்ச ரூபாய் செலவில் உருவாகியுள்ள இந்த எழுநிலை மாடத்தில் மொத்தம் 49 சுவர்ச் சிற்பங்கள் உள்ளன. இவை யாவும் மாமல்ல புரத்திலுள்ள சிற்பக் கலைப் பயிற்சிக் கல்லூரியில் உருவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த எழுநிலை மாடம் என்னும் கட்டட அமைப்பு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. சிலப்பதிகாரத்தில் கூறப் பட்டுள்ள செய்திகளை அடிப்படையாக வைத்துத்தான் இந்த அழகு மாடம் உருவாக்கப் பெற்றிருக்கிறது.

மொத்தம் ஏழு மாடங்கள் கொண்ட இந்தக் கட்டடத்தின்—முதன் நிலை மாடத்தின் உயரம் 12 அடி. அதன் மேலுள்ள மற்ற ஆறு மாடங்கள் ஒவ்வொன்றும் 5 அடி உயரம் உள்ளவை. ஏழாவது மாடத்துக்கு மேல் கலசப் பகுதியுள்ளது. ஆக மொத்தத்தில் 50 அடி உயரம் உள்ளது இந்த எழுநிலை மாடம்.

மாடத்தின் வெளிப்புறம் சாம்பல் நிறம், வெண்மை நிறம், இளஞ்சிவப்பு நிறம், ஆகியமூன்று வண்ணங்களால் தீட்டப் பெற்றுள்ளன. இவை, கண்களுக்குக் குளுமையைத் தருகிறது.

கலைக்கூடத்திற்குள் நுழைவதற்கு முன்பு மிகப் பெரிய அளவில் — சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தோரண வாயிலை நாம் சந்திக்கிறோம். 22.5 அடி உயரமுள்ள இந்த வாயில், சுருளி மலையில் சிதைந்து காணப்படும் மங்கல தேவிக் கோயிலில் உள்ள தோரண வாயிலின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. மாபெரும் எழுநிலை மாடத்தின் சிறப்புக்குக் கட்டியங் கூறும் காவலாளாகத் திகழ்கிறது இந்தத் தோரண வாயில்.

கலைக்கூடத்தின் உள்ளே.... நுழைந்தவுடன், கோவலன் கண்ணகி இருவரையும் மண மக்களாகச் சந்திக்கிறோம், சிலை வடிவில்! அதன் பின் இடப்புறம் திரும்பினால் சுவரில் முதலில் காணப்படும் சிற்பம் ஒற்றைச் சிலம்பு என்பது குறிப்பிடத் தக்கது. சிலப்பதிகாரக் காவியத்துக்குச் சிலம்பு தானே அடிப்படை! எனவே, அதற்கு முதலிடம் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

'' இந்த ஒற்றைச் சில்ம்பு தனியாகத் தொங்கிக்கொண்டிருப்பதால், பார்வையாளர்கள் இதனைக் கரந்தொட்டு அசைக்க வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே சிலம்பைச் சுற்றிக் கண்ணாடியால் அடைப்பு ஒன்று உருவாக்க வேண்டும் '' என்ற கருத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள்.

சிலம்பை அடுத்துக் காணப்படுவது இளங்கோ அடிகளாரின் சிற்பம். ஈடிணையற்ற காப்பியத்தை உருவாக்கிய மாபெரும் கவிஞர்க்கு நினைவு மாலை சூட்டுவது போல் உள்ளது அவருக்குச் சிற்பம் அமைத்துள்ள பாங்கு..

அதனையடுத்து .... கண்ணகி கோவலன் திருமண அறிவிப்பு முதல், கண்ணகி கோவில் உருவாகும் நிகழ்ச்சி வரை சுவரிலே இடம் பெற்றுள்ள சிற்பங்கள் சிந்தையைக் கவர்கின்றன.

பார்வையாளர்களுக்குப் பயன் தரும் வகையில், ஒவ்வொரு காட்சியின் கீழும் அந்தக் காட்சிக்குரிய சிலப்பதிகார வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இது தவிர மற்றொரு ஏற்பாடும் விரைவில் செய்யப்படவிருக்கிறது. அதாவது சிற்பங்களுக்குரிய விளக்கங்களை — ஆங்கிலத்திலும், தமிழிலும் ஒரு குரலின் வாயிலாகத் தெரிவிப்பதுதான் இந்த ஏற்பாடு. இத்தகைய அமைப்பு ஆஸ்திரேலியாவில் உள்ளது.

நாட்டிய அணிகலன்களுடன் உள்ள மாதவி சிலையும், கலைக்கூடத்தின் உட்புறத் தோற்றமும்.





கண்ணகி—கோவலன் மணவிழாத் தோற்றம்

கண்ணகி, பாண்டியன் முன்னர் வந்து நின்று, தனது காற்சிலம்பினை உடைக்கும் காட்சியைக் கண்ணுறும் போது—அது சிற்பமாகத் தெரியவில்லை—அந்த நிகழ்ச்சியை நாமே நேரில் காண்கின்ற உணர்வு நமக்குத் தோன்றுகிறது. அந்த அளவுக்குச் சிற்பத்தின் வேலைப்பாடு சிறப்பாக அமைந்திருக்கிறது.

அதற்கு நேரே உட்புறத்தில் மாதவியின் 8 அடி உயரச் சிலை காட்சி தருகிறது. நம் கண்ணையும் கருத்தையும் கவர்வதோடு நம்மைத் திகைக்க வைத்துவிடுகிருள் மாதவி. மாதவியின் முன்னே சிலம்பு வடிவத்தில் ஒரு குளம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குளத்தைச் சுற்றிலும், ஆடல் வகைகளைப் பற்றித் தெரிவிக்கும் வகையில் 11 சிலைகள் இடம் பெறப் போகின்றன.

தோரண வாயிலுக்கும் எழுநிலை மாடத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் 4 மண்டபங்கள் உள்ளன. இவற்றில் இளங்கோவடிகள் சிலை, கரிகாலன் சிலை ஆகியவை இடம் பெறப்போகின்றன.

இந்த எழுநிலை மாடத்தின் முதல் மாடத்தில் உள்ள தளத்தின் உட்புறத்தில் தாமரை மலர்ச் சக்கரங்கள் நிறைந்துள்ளன. இந்தத் தாமரைகள் சிற்பக் கலையின் பெருமைக்கும், சிற்பிகளின் திறமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மொத்தம் 20 தாமரைச் சக்கரங்கள் இந்த மாடத்தில் இடம் பெற்றுள்ளன. மிகச் சிறிய அளவுள்ள தாமரைச் சக்கரத்தை உருவாக்க 5 நாட்களும் மிகப் பெரிய அளவுள்ள தாமரைச் சக்கரத்தை உருவாக்க 13 நாட்களும் ஆகியுள்ளன.

அந்த நாள் பூம்புகாரை நினைவுறுத்தும் வகையில், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பௌத்தப்பள்ளி, அருகன் கோட்டம், முருகன் கோட்டம், பாவை மன்றம், கொற்றப் பந்தர், திருமால் கோட்டம் ஆகிய கட்டடங்களும் விரைவில் உருவாகவிருக்கின்றன. பூம்புகார்ப் பகுதியில் தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டெடுக்கப்பட்ட கிரேக்க ரோமானிய நாணயங்கள் எல்லாம் இடம் பெறும் தொல் பொருட் காட்சியகம் ஒன்றும் நிலையாக இங்கே அமைக்கப்படவிருக்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்காக அறிஞர் அண்ணா விருந்தினர் மாளிகை ஒன்றும் இங்கே உருவாக விருக்கிறது.

இனிமேல் சென்னைக்கு வருகின்ற வெளிநாட்டுப் பயணிகள்—வெளி மாவட்டப் பயணிகள்—வெளி மாநிலப் பயணிகள் அனைவரும் மாமல்லபுரத்தைப் பார்ப்பதோடு நில்லாமல், பூம்புகாரையும் பார்க்காமல் செல்ல முடியாது என்ற நிலையைச் சிலப்பதிகாரக் கலைக்கூடம் உருவாக்கியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

—த. பி.

நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள சொத்துக்கள் கொஞ்சமல்ல; வரலாற்றுப் பெருமைமிக்க அந்தச் செய்திகளால் எதிர்காலத்தில் நமது சந்ததியினர் புதிய எழுச்சியும் உணர்வும் பெற நாம் பயனுள்ள பணிகளில் ஈடுபட வேண்டும். அந்தப் பணிகளால் மறைந்து போன—நாம் மறந்து போன செய்திகளை நாட்டுக்குக் காட்டிட வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

# மாவட்டங்களிலிருந்து....

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரின் கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டத்தில் 6-வது கட்டமாக 4-2-1973 முதல் 5-3-1973 வரை மணப்பாறை அரசு உயர்நிலைப்பள்ளியில் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 149 பேர்கள் கண் அறுவைச் சிகிச்சையால் கண்ணொளி பெற்றுள்ளனர். இதுவரை இம்மாவட்டத்தில் 4,441 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் கண்ணொளி வழங்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் குழந்தைகள் பகுதியில் தொற்றுநோய்ப்பிரிவுக் கட்டடம் கட்ட ரூ. 11,000 அரசு அனுமதித்துள்ளது. இங்கே ஒரு 100 எம்.ஏ. நுண்கதிர் பொறி வாங்க ரூ. 54,000-மும், எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய 30 எம். ஏ. நுண்கதிர் பொறி வாங்க ரூ. 15,000-மும் அரசு அனுமதித்துள்ளது. கரூர் மருத்துவ மனையிலும் ஒரு 100 எம்.ஏ. நுண்கதிர் பொறி வாங்க அரசு திட்டமிட்டுள்ளது. சில வகை மருந்துகள் செய்யத் தக்கத் தொழிற்கூடம் ஒன்றை ஏற்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மார்ச்சு 73-ல் இம் மாவட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை 21,178. தேர்வு மையங்கள் 87. சென்ற ஆண்டு 85 தேர்வு மையங்களில் 17,831 மாணவர்கள் எஸ்.எஸ்எல்.சி தேர்வு எழுதினர்கள்.

இதுவரை இம்மாவட்டத்தில் அவசரக்கால ராபி பருவ உற்பத்தித் திட்டத்தின் கீழ் 18,000 ஏக்கர் நிலத்தில் கேழ்வரகு, சோளம் முதலிய புன்செய்ப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டு உய்ய கொண்டான் வாய்க்கால் கடைமடைப் பகுதிகளிலும், கட்டளை மேட்டுக் கால்வாய்ப் பாசனப் பகுதிகளிலும், கோடையிலும் தண்ணீர் விடப்படுவதால் விவசாயிகள், கோடை நெல் சாகுபடி செய்ய முன்வந்துள்ளார்கள். முக்கியமாக கோ. 29 என்ற குறுகிய கால நெல் ரகத்தைப் பயிரிட ஏற்பாடு செய்துள்ளார்கள். மொத்தமாக இந்த மாவட்டத்தில் கோடை நெல் சுமார் 40,000 ஏக்கரில் பயிரிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுசேமிப்புத் தீவிர இயக்கத் திட்டத்தின்கீழ் பிப்ரவரி மாதத்தில் ரூ. 12,54,830 வசூலாகியுள்ளது. சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு பிப்ரவரி முடிய வசூலான மொத்தத் தொகை ரூ. 76,77,867. இந்த மாவட்டத்துக்கு இவ்வாண்டு இலக்கு ரூ. 80 இலட்சம் ஆகும்.

குடிசை வாழ் மக்களுக்கு திருச்சியை அடுத்த மிளகுப் பாறையில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தர திருச்சி வீட்டு வசதி வாரியத்தாரால் திட்டமிடப்பட்டுள்ளது. திருச்சியில் தமிழ்நாடு அரசு கடைநிலை ஊழியர்களுக்கு மாதத் தவணை முறையில் 130 சொந்த வீடுகள் கட்டித் தரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் நலனுக்காக திருச்சி பிளாசா திரையரங்கம் அருகில் ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் கடைகள் கட்டி வாடகைக்கு கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டு, அத் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 16 கடைகள், 14 தனி அறைகள் ஒரு 'ரெஸ்டாரெண்ட்' ஆகியவை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் கிடைக்கும் மாத வாடகை, இராணுவத்தினர் மறு வாழ்விற்குப் பயன்படுத்தப்படும்.

குறைந்த விலையில் மாதத் தவணை முறையில் வீட்டு வசதித் திட்டம் ஒன்று நிறைவேற்றப்படுகிறது. மாவட்டத் தலைமையிடம், வட்டத் தலைமையிடம், பேரூராட்சித் தலைமையிடங்கள் ரூ. 10,000-க்கு மேற்படாமல் தவணை முறையில் திருச்சி வீட்டு வசதி வாரியத்தாரால் வீடுகள் கட்டித் தர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5,738 குடும்பங்களுக்கு ரூ. 3,87,147 நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குடும்பங்களுக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் உணவு வழங்கிய வகையில் ரூ. 13,005 செலவு செய்யப்பட்டது.

குளித்தலை, முசிரி, துறையூர், மணப்பாறை, கரூர் வட்டங்களில் செயற்படுத்தப்படும் விவசாய மறுநிதி நிறுவனத் திட்டங்களில் 28-2-73 இறுதி வரை 2,012 புதிய கிணறுகள் வெட்டவும், 1,255 கிணறுகள் ஆழப்படுத்தி பம்ப் செட் வைக்கவும் ரூ. 150.00 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 1972-73-ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 26,232 அறுவைச் சிகிச்சைகள் (25,901 ஆண்கள், 331 பெண்கள்) நடைபெற்றுள்ளன.

இம் மாவட்டத்தில் ஊர்க்கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளில், பிற்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் சாதியினைச் சேர்ந்த 72,084 பேர்கள் உதவிச் சம்பளத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 57,289 பேர்களுக்கு 53·31 இலட்சம் ரூபாய் உதவிச் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், 1972-73-ஆம் ஆண்டுக்கான தீவிர வேலை வாய்ப்புத் திட்டம் சிறப்பாக நடந்து வருகிறது. தற்போது, சின்னாறு நீர்த்தேக்கம்-பெருமத்தூர் சாலை சீர்திருத்தம் செய்யப்படுகிறது. இப்பணியில் 130 பேர் பணியாற்றுகிறார்கள். சாலையின் மொத்த நீளம் 4.0 கிலோ மீட்டர். மதிப்பீடு ரூ. 18,000.

இந்தச் சாலை அமைவதால் பெருமத்தூர் கிராமம் மாவட்ட அளவில் 'மாதிரி கிராம' மாக மாறி விடும்; போக்குவரத்துக்கும் நல்ல வசதி ஏற்படும்.



# பழமா ?

ஒரு கையிலே பழுத்த இனிய மாம்பழம் இருக்கிறது; இன்னொரு கையிலே புளிக்கும் புளியங்காய் ஒன்று இருக்கிறது. இவையிரண்டில் எது தேவை என்றால் பழம்தான் வேண்டும் என்பீர்கள்? கனியிருக்கக் காயை விரும்பமாட்டீர்கள் இல்லையா?

அதுபோல, நாம் பேசும் சொற்கள் இனிமையாக இருக்க வேண்டும். நம் உள்ளத்தில் நல்ல சொல் இருக்கும் போது தீய சொற்களை ஏன் பேச வேண்டும்? கனியிருக்கக் காயைத் தின்பானேன்? இன்சொல் இருக்க வன்சொல் எதற்கு?

இப்படி உங்களையெல்லாம் சிந்திக்கத் தூண்டுகிறது திருக்குறள்.

இனிய உளவாக
இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்
தற்று.

அன்று பள்ளியில் திருக்குறள் வகுப்பு நடந்துகொண்டிருந்தது. ஆசிரியர் மாணவர்களைப் பார்த்துப் 'பெரியவர் யார்? சிறியவர் யார்?' என்று கேட்டார். அதற்குப் பதில் தெரியாமல் எல்லாரும் விழித்தனர். பிறகு அவரே அமைதியாகச் சொல்ல ஆரம்பித்தார்.

'' உயரத்திலும் உருவத்திலும் பெரியவர்கள் பெரியவர்களல்ல; நல்ல செயல்களைச் செய்பவர்களே பெரியவர்கள், அப்படி நல்ல செயல்களைச் செய்ய முடியாதவர்கள் சிறியவர்கள்!''

இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? பனைமரம் போல் உயர்ந்தவனோ, யானையைப் போல் இருப்பவனோ பெரியவனல்ல என்று. இதைத் திருவள்ளுவர் தம் திருக்குறளில் அழகாக விளக்கிக் கூறுகிறார்.

செயற்கரிய செய்வார்
பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

கோபத்தினால் இனிய சொற்கள்கூடத் தீய சொற்களாக வெளிவருகின்றன. அந்தச்சொற்கள் தீயைப் போலச் சுடவும் செய்கின்றன.

நல்ல சொல், நல்ல நடத்தை இவை ஒருவனை நல்லவனாக்குகிறது; தீய சொல், தீய நடத்தை ஒருவனைக் கெட்டவனாக்குகிறது. வன்சொல் ஒருவனை வெறுக்கச் செய்யும்; இன்சொல் ஒருவனை விரும்பச் செய்யும்.

தீயினால் சுட்ட புண் பிறகு ஆறிவிடும். ஆனால், நாவினால் சுட்ட சொல் ஆறவே' ஆறாது என்கிறார் வள்ளுவர். ஔவையார் கூட '' ஆறுவது சினம் '' என்று சொல்லியிருக்கிறார் அல்லவா?.

'' நீ எதைக் காவா விட்டாலும் கூடப் பரவாயில்லை. ஆனால் இந்த நாக்கை—நெருப்பைப் போலச் சுடுகின்ற சொல்லால் பிறர் மனத்தைப்புண்ணாக்குகின்ற இந்த நாக்கை மட்டும் காத்துக்கொள்!'' என்று எச்சரிக்கிறார் வள்ளுவர். இதோ அந்தக் குறள்.

யாகாவா ராயினும்
நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

அன்பு இல்லாதவர்கள் காட்டு விலங்குகளுக்கு ஒப்பானவர்கள். அவர்களால் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்ய முடியாது. உயிர்களிடத்தில் அன்பாய் இருப்பவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள். ஏன்? உண்மையில் அவர்கள் தான் மனிதர்களாகவும் மதிக்கப்படுவார்கள்.

மாணவர்கள் இளமை முதலே அன்பு உடையவர்களாகத் திகழ்ந்தால், முதுமையிலும் அது நல்ல பலனைக் கொடுக்கும்'' '' இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை' என்ற பழமொழியை நன்குணரவேண்டும்.

உயிருள்ள உடல் எது?

அது அன்பு உள்ள உடல்தான் என்கிறார் திருவள்ளுவர். அவர் திருக்குறளில், '' அன்பு வழி நின்ற உடம்பே உயிர் நின்ற உடம்பாகும், அன்பு இல்லாத உடம்போ, வெறும் எலும்பும் தோலும் போர்த்தப்பட்ட உடம்பு '' என்று குறிப்பிடுகிறார்.

அன்பின் வழியது
உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

நாம் வாழ்க்கையில் எடுத்துக் கொள்ள வேண்டிய குணங்கள் என்னென்ன? வேண்டாமென்று கீழே தள்ள வேண்டிய குணங்கள் என்னென்ன?

அன்பு, பண்பு, அடக்கம், அறிவு, இன்சொல், பொறுமை, ஒழுக்கம் இவை போன்ற குணங்களையெல்லாம் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆணவம், அடங்காமை, வன்சொல், பொய், பொறாமை, கோபம், சிறுமை இவைபோன்றவற்றையெல்லாம் நாம் கீழே தள்ள வேண்டும்.



இப்படிச் சிறுவர், சிறுமிகளுக்கும், பெரியவர்களுக்கும் பல அரிய கருத்துக்களை வழங்குகிறது திருக்குறள். இரண்டே அடி உள்ள திருக்குறளை, நாளுக்கு ஒன்றாக மனப்பாடம் செய்வோம் · நல்வழிப் பாதையிலே நடை போடுவோம்.



கதை: இளவல்
சித்திரம்: முத்து
டேய் சுந்தரம்.... ஏண்டா மரத்தி
இப்படி தொங்குறே...? மரத்தி
உன்னுட்டம் என்ன தொங்கும்
தெரியுமா?
என்னடா கவலை...? அப்பா சினிமாவுக்கு காசுதரலியா?
அருள், நம்முன்னேர்கள் மறக்காதவன் நான் என்பது உனக்குத் தெரியாதா? உம்... போடா... என் கவலை எனக்கு
அந்தக்கவலை என்றல் தாங்கிக்கொள்வேன்
எங்கப்பா உல்லாசப் பயணம் போக வேண்டாம்
என்று சொல்லிவிட்டார்!
அந்தக் கவலையை மறக்கவே மரத்திலே
தொங்கினேன்.
நீ இல்லாமெ உல்லாசப்பயணமா? எதனல் உங்கப்பா உன்னை எக்ஸ்கர்ஷன் போக வேண்டாம்னு சொல்லிவிட்டார்?
அதோ உட்கார்ந்திருக்கும் என்னுடைய எதிரியினல்!
மாலா அக்காவா வேண்டாம்னு சொல்லிட்டாங்க? நான் அக்காவிடம் சொல்லி அப்பாவிடம் அனுமதி வாங்கிவிடுகிறேன் பார்! டேய் அசடு, கவலையை விடு!
அருள்! வம்பை விலைக்கு வாங்காதே! என் அக்காவைப் போல எனக்கு எதிரியாருமே கிடையாது!
நான் நினைக்கிறபடியே நடக்கும் பார்! இதோ நானே போய் அக்காவிடம் கேட்கிறேன்! நீயும் வா!




நான் வரலே: நீயே...போ! எங்க அக்கா எல்லோருக்கும் பெப்பப்பெ சொல்லும்... போ! போ!
வா அருள்! உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்!
என்ன அக்கா விசேஷம்?
உன் சின்ன அத்தை மீரா சொன்னுள் நீ வீட்டில் ஒழுங்காகப் படிக்கிறதே இல்லியாமே...?
அக்கா... வந்து.... நான்
பரீட்சை முடியும்வரை நீ சுந்தரத்தைத்தேடி இங்கே வரவேண்டாம்! வீட்டிலே நல்லாப்படி! பாடத்திலே சந்தேகம் ஏற்பட்டால் என்னிடம் எடுத்துவா.! எங்கே சுந்தரம்? வாசல்லே நிற்கிறனு...? இதோ நானே வர்றேன்
இங்கே இருந்தவன் எங்கே ஓடிட்டான்.... படிக்கச் சொல்வேன்னு பயந்திட்டானு?
இப்ப இருந்தான்! எங்கே போனுன்? அதோ சுந்தரம் குரல் மாதிரி இருக்கே....

# விரைந்து பணியாற்றும் விசைச்செக்கு



கதர், கிராமத் தொழில் வாரியம, எண்ணெய் பிழிவதற்காக அண்மையில் ஒரு புதிய வகை விசைச் செக்கை அறிமுகப் படுத்தியிருக்கிறது.

ஆமதாபாத்தில் தயாராகும் இந்த விசைச்செக்கு, தற்போது கூட்டுறவுத் துறையைச் சார்ந்த நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. தற்போது கன்னியாகுமரி, மதுரை, காஞ்சிபுரம் ஆகிய மூன்று நகரங்களில் மட்டுமே உள்ளன. விரைவில் மேலும் 50 இடங்களில் இதனை நிறுவுவதற்கு ஏற்பாடு ஆகியுள்ளது.

இரண்டு குதிரைச் சக்தி கொண்ட மோட்டாரின் உதவியால் இந்த விசைச்செக்கு இயக்கப்படுகிறது. குறைந்த மூலதனம் போதும்; ரூ. 3,000 இருந்தால் போதுமானது. அதிகமான பரப்பளவு கூடத் தேவையில்லை. 12 அடி நீளமும் 12 அடி அகலமுள்ள இடம் இருந்தாலே போதும், இந்தச் செக்கை நிறுவிவிடலாம்.

நாட்டுச் செக்கை விட இரண்டு மடங்கு பிழியும் திறன் இதற்கு உண்டு. அதனை இயக்குவதற்கு இருவர் வேண்டும்; இரண்டு மாடுகள் வேண்டும்; இந்த விசைச் செக்கை இயக்குவதற்கு ஒருவரே போதும். பன்னிரண்டு வயதுப் பையன் கூட இதனை எளிதில் இயக்க முடியும்.

நாட்டுச் செக்கை விடப் பராமரிப்புச் செலவும் குறைவு. மாடு பராமரிக்க வேண்டிய அவசியமே இல்லை. அது மட்டுமல்ல, விசைச் செக்குகள் இரண்டினை, ஒருவரே இயக்க முடியும். இவ்வாறு இயக்குபவருக்கு, நாட்டுச் செக்கில் கிடைக்கின்ற வருமானத்தைவிட விசைச் செக்கினால் வருகின்ற வருவாய் அதிகம்.

சுமாரான ரக எள்ளைக் கொண்டு, தரமான ரக எண்ணெய்யை இந்த விசைச் செக்கினால் அடைய முடிகிறது. நாட்டுச் செக்கை விட 2 அல்லது 3 சதவிகிதம் எண்ணெய்யும் அதிகமாகக் கிடைக்கிறது.

அது மட்டுமல்ல, நேரமும் மிச்சமாகிறது. நாட்டுச் செக்கில் இரண்டு மாடுகளின் துணையுடன் ஒரு மூட்டை எள்ளை ஆட்டி முடிப்பதற்கு 10 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரம் வரை ஆகிறது. ஆனால் விசைச் செக்கின் உதவியால் 1 மூட்டை எள்ளை 6 அல்லது 7 மணி நேரத்தில் ஆட்ட முடிகிறது.

ஒரு காணம் எண்ணெய்யை 55 நிமிடத்தில் பிழிந்து எடுத்துவிடலாம். ஒரு காணத்திற்குச் செலவாகும் மின் ஆற்றல் 0·9 யூனிட்டுதான். இரண்டு மூட்டை எள்ளைப் பிழிவதற்குச் செலவாகும் மின் சக்தி 13·5 யூனிட்டுகள். அதற்குச் செலவாகும் தொகை ரூபாய் 2·50 என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமங்கள் தோறும் இந்த விசைச் செக்குகள் நிறுவப்பட்டு எண்ணெய் உற்பத்திப் பெருகும் என்பது திண்ணம்.

— த.பி.

**வரலாறும் மனிதர்களும்**

வரலாற்றை உருவாக்க யாராலும் முடியும். ஆனால் ஒரு சிலர்தான் வரலாற்றை எழுத முடியும். சேரன் செங்குட்டுவனை வரலாற்று மனிதனாகக் கொண்டு வரும் சிறப்பு இளங்கோவடிகளுக்குத் தான் இருந்தது.

—நாவலர்

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்; தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



பதிவு எண். M. 8676


உங்களுக்குத் தெரியுமா?
தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.
ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.
இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.


தமிழரசு
TAMIL NADU
SIDCO
TIDCO



# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

· பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

· சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ▢ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ▢ Post Bag 5247, சென்னை 2.

LT. 3806


ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே—உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ ?—நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பினில்
உதித்தது மெய்யல்லவோ ?

என்று தொழிலாளர்களுக்குப் புகழ்மாலை சூட்டுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். அவர்தம் செஞ்சொற் கவிதை வரிகளை முகப்பில் காட்சியாக்கியிருக்கும் "தமிழரசு" மே நாளைக் கொண்டாடுவதுடன் பாவேந்தரின் எண்பத்திரண்டாவது பிறந்த நாளையும் நினைவு கூர்கிறது. இந்த ஆண்டு ஏற்கெனவே பாவேந்தரின் புகைப்படத்தை நாட்குறிப்பில் வெளியிட்டுச் சிறப்புச் செய்திருக்கிறது தமிழக அரசு.



# தமிழரசு


மலர்.3 இதழ்.21
1-5-1973


தந்தை...




உங்களுடைய சங்கத்தின் கோரிக்கைகள் சுமையானவை என்பதற்கு அடையாளமாக எங்களுக்கு அணிவிக்கப்பட்ட மாலைகள் இருந்தன. அந்தச் சுமையை நீண்ட நேரம் எங்களுடைய தோள்கள் தாங்கிக் கொள்ள முடியாமல் எப்படித் தவித்ததோ, அதைப்போலத் தான் உங்களுடைய கோரிக்கைகளின் சுமையைத் தாங்கிக் கொள்வதும் சிரமமாக இருக்கிறது. அது யாருக்குச் சிரமம் என்பது கேள்விக்குரிய பிரச்சினை. ஏனென்றால் உங்கள் சங்கம் 1970-ல் தொடங்கப்பட்டு, கிட்டத்தட்ட மூன்றாண்டுகள்தான் உங்கள் சங்கம் என்ற குழந்தைக்கு வயது ஆகிறது.

பாலும், குழைந்த அன்னமும் மாத்திரம் உண்ண வேண்டிய குழந்தைப் பருவத்தில், பிரியாணியும், கோழிக் குருமாவும், கேட்கிற குழந்தையைப் போலப் பதினான்கு கோரிக்கைகளை வைத்து, அதற்கு ஆதரவாகச் சட்டமன்ற உறுப்பினர்களைப் பிடித்து, மிக அதிகமாக என்னைப் புகழச் செய்திருக்கிறீர்கள்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் யார் யாருடைய கைகளுக்கெல்லாம் மாறி, இன்று எப்படிப்பட்டவர்களுடைய திருவாகத்தின் கீழ் அமைந்து, யார் யாருடைய வாழ்வில் ஒளியேற்றி வைக்கிற வகையில் அமைந்திருக்கிறது என்பதைப் புதிதாக நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஒரு நிறுவனத்தின்—அமைப்பின்—இயக்கத்தின் வெற்றிக்கு ஒருவர், இருவர் மாத்திரம் காரணமாக இருக்க முடியாது. அந்த இயக்கத்திலே இருக்கிற ஒன்றிரண்டு அமைப்புகள் மாத்திரம் அந்த வெற்றிக்குக் காரணமாக இருந்திட முடியாது. எல்லா அமைப்புகளும், எல்லா நிறுவனங்களும் ஒன்றுபட்டு ஒரே உள்ளத்தோடு ஒத்துழைத்தால் தாங்கள் எண்ணுகிற நல்ல காரியங்களை யாருக்காக எண்ணுகிறோமோ அதிலே இலட்சிய வெற்றியை நாம் பெறமுடியும்.

10 கோடி ரூபாய் கூட்டுறவுச் சார்பில் விவசாயிகளுக்குத் தந்ததை 20 கோடி ரூபாயாக உயர்த்துகிறோம் ; எல்லா விவசாயிகளுக்கும் கடன் கொடுக்கிறோம். கூட்டுறவுத் துறை மூலம் வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சியை உருவாக்கியிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிற நேரத்தில் அந்த வெற்றிக்கு உழவர்களும், அரசும், அதிகாரிகளும், கூட்டுறவு இயக்கமும், கூட்டுறவுத் துறையிலே இருக்கிற அதிகாரிகளும், வேளாண்மைத் துறை அமைச்சர் எப்படிக் காரணமோ அதைப் போலவே கூட்டுறவுத்துறை அமைச்சரும் காரணம். கூட்டுறவுத் துறை ஊழியர்களாகிய நீங்களும் அதற்குக் காரணமாக இருந்திருக்கிறீர்கள். ஆகவே, எந்த ஓர் இயக்கமானாலும், அமைப்பானாலும், அதில் பல பேருடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் அது ஒழுங்குறச் செம்மையாக நடைபெற முடியும்.

வளம் வங்கியாக இருக்கிறது ; நில வள வங்கியாக இருக்கிறது; வளம் வங்கியோடு சேர்ந்திருப்பது, ஊழியர்களாகிய எங்களோடும் சேர்ந்து இல்லை என்பதுதான் உங்களுடைய கோரிக்கை. அதற்காக வளத்தை அங்கேயிருந்து எடுத்து உங்களுக்கு முன்னால் எழுதி விடவும் முடியாது. அதனால் நீங்கள் மனநிறைவு கொள்ளவும் மாட்டீர்கள். அப்படிச் செயல்பட்டால், வளம் உங்களுக்கு வந்து, நிலத்திலே குறைந்து, வங்கியிலேயும் குறைந்துவிடும். ஆகவே அங்கே இருக்கிற வளத்தை அதற்கேற்ப உங்களுடைய வாழ்விலும் சேர்க்க வேண்டும் என்ற தூய நோக்கத்தோடுதான் நீங்கள் வைத்திருக்கிற 14 முறையீடுகளையும் கவனிக்கிறோம்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் என்னிடம் கருணை நிறைய இருக்கிறது என்று சொன்னாரே தவிர, நிதி எவ்வளவு இருக்கிறது என்பதைச் சொல்லவில்லை.

கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதில்லை ; அதைப் புறக்கணிக்க வேண்டும். நீங்கள் கேட்பதை உடனடியாக ஒத்துக் கொள்வது ஓர் அமைச்சருடைய தரத்திற்கு அழகல்ல, கௌரவத்திற்கு இலக்கணமல்ல என்று கருதுகிற அரசு இன்றில்லை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதைத்தான் திரு இட்டப்பாவும், திரு கோதண்டமும் இங்கே சொன்னார்கள்.

14 கோரிக்கைகளை நீங்கள் இங்கே வைத்திருக்கிறீர்கள். கோபால் ஒன்றைச் சொன்னார். ''நிறையச் சிக்கல் இருக்கிறது. அதைத் தீர்க்கக் கூடிய ஆற்றல் கொண்டவர் முதலமைச்சர்—'' என்று சொன்னார். நான் கேட்பதெல்லாம் சிக்கலை அறுக்க வேண்டுமா ? சிக்கலை எடுக்க வேண்டுமா ? என்பதுதான்.

சிக்கலை எடுக்க வேண்டுமென்றால் அவசரப்படாமல் மெதுவாகப் பார்த்து எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால்தான் முழு நூலும் கிடைக்கும். அறுத்துச் சிக்கலை எடுப்பதென்றால், அந்தப் பக்கம் கொஞ்சம், இந்தப் பக்கம் கொஞ்சம் என்று அறுத்தெறிந்துவிட்டுச் செய்வதென்றால் நூலின் நீளம் குறைந்துவிடும்.

சிறு வயதில் காற்றாடி-பட்டம் விடுகிற நேரத்தில் நூல் விடுகிற நேரத்தில் நூல் திடீரென்று சிக்கி விடும். அதை அவசரப்பட்டு, அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் காற்றாடியை அறுத்து, முடிச்சுப் போட்டால் நூலின் நீளம் குறைந்து காற்றாடி பறக்கிற நீளமும் குறைந்துவிடும். ஆகவே, சிக்கலை எடுப்பதில் நான் சாமர்த்தியசாலி என்று கோபால் கூறியதை நீங்கள் நம்புவதானால், எனக்குக் கொஞ்ச நேரம் கொடுங்கள் ; அதிகமான உயரத்தில் காற்றாடி பறக்கிற அளவிற்கு நானும், கூட்டுறவுத் துறை அமைச்சரும் கலந்து பேசி முடிவெடுக்க உதவியாக இருக்கும்.

சிக்கலை அறுத்து எடுப்பதென்றால் இப்போதே அறுத்து எடுத்து விடலாம். இதற்காக நான் ஆண்டுக் கணக்கில் நேரம் கேட்கவில்லை ; மாதக் கணக்கில் தான் கேட்கிறேன். அதுவும் இரண்டொரு மாதங்கள்தான்.

மிக முக்கியமாக நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கைகளில் ஒன்று, உபரியாக ஆகி விடுகிற காரணத்தால் சிலர் விடுக்கப்பட்டு விடுகிறார்கள், விலகியவர்கள் எல்லாரும் இருந்தால்தான், ஆட்குறைப்பு இல்லாமல் இருந்தால் தான் அவர்களுக்கும் சேர்த்துக் கோரிக்கைகளை வைக்க முடியும் என்பதாகும்.

உபரியாக ஆட்கள் இருந்தார்கள் என்பதால் எங்கேயாவது ஆட்குறைப்பு அப்படிச் செய்யப்பட்டிருந்தால், உடனடியாக நிருவாகிகள், அமைப்புகள் ஆகியவற்றிற்குத் தெரிவியுங்கள். பதிவாளருக்குச் சொல்லுங்கள். அமைச்சரிடம் தெரிவியுங்கள், அப்படி ஆட் குறைப்புச் செய்யப்பட்டிருக்குமானால் உடனடியாக அது கவனிக்கப்பட்டு மீண்டும் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டூர் கோபால் இன்னொன்றும் சொன்னார். ஒரே பொதுப் பணியாளர் தொகுதியை மாநில நிலவள வங்கி சட்டரீதியான அடிப்படையில் ஏற்படுத்த வேண்டும் என்பது கோரிக்கை. நான் மகிழ்ச்சியோடு சொல்கிறேன். இந்தக் கோரிக்கையைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு, விரைவில் அதுபற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

அடுத்து, ஊதியத்தில் சீரமைப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதற்குக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் தலைமையில் ஊழியர்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு அமைத்து, அந்தச் சீரமைப்புப் பற்றி ஆலோசித்து விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதையும், அதற்கான நடைமுறைகளை—செயல் முறைகளை எல்லாம் துறையின் அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் முன்னின்று விரைவில் நடத்தி வைப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி ஊழியர் சங்க இரண்டாவது மாநில மாநாட்டில் ஆற்றிய உரை]

### நமது பெருமை

பல கவிஞர்கள் நாட்டையும் அரசனையும் பாடியிருக்கிறார்கள். ஆனால் உலக சமுதாயத்திற்கே பாடியவர் திருவள்ளுவர்தான். அதனால்தான் பாரதியார் ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாராட்டினார்.

உலக நாடுகளோடு நாம் அறிவியல் துறையிலோ பொறியியல் துறையிலோ—வேறு துறைகளிலோ போட்டி போட முடியாதென்றாலும் திருக்குறளுக்கு ஈடான பொதுவான நீதி நூல் உண்டா என்று கேட்கத்தக்க விதத்தில் இலக்கியத்தில் நமக்குப் பெருமையுண்டு.

—கல்வியமைச்சர் நாவலர்

(திருவள்ளுவர் நினைவாலய அடிக்கல் நாட்டு விழாவில்)

முதல்வர்



## சட்டமன்றத்தில் திரட்டிய செய்திகள்

**காவலர் நலம் பெற....!**

காவல் துறையில் பணி புரியும் அரசிதழ் பதிவு பெருத பணியாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப் பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி' நிதியுதவி, படிப்பதவி, நல உதவி, பொழுது போக்கு வசதி ஆகிய வற்றை அளிக்கிறது. காவல் துறையில் பணி புரியும் அரசிதழ் பதிவு பெருத அதிகாரிகள் மனமுவந்து கொடுக்கும் தொகைகள் மூலமும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடை மூலமும் இந்நிதிக்குத் தொகை சேர்க்கப்படுகிறது. ஒவ்வொரு நிதியாண்டும் அரசு ரூ. 1½ இலட்சம் மொத்த மானியம் வழங்குகிறது.

மேற்கூறிய நிதியைத் தவிர, தமிழ்நாட்டுக் காவல் துறை நூற்றாண்டு விழாப் படிப்பு உதவித் தொகை நிதி ஒன்றும் உள்ளது. அந்நிதியிலிருந்து, காவல் துறை அரசிதழ பதிவு பெருத நிர்வாக அதிகாரிகளின் தகுதியுள்ள மகன்கள், மகள்களுக்கும் கல்லூரிகளில் உயர் படிப்புக்கும், தொழில் நுட்பப் படிப்புக்கும் படிப்புதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. தனியாரிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்நிதி நிர்வகிக்கப்படுகிறது. 1972-73-ஆம் ஆண்டில் படிப்புதவித் தொகை வழங்கப்படுவதற்காக இந்நிதியிலிருந்து ரூ. 20,000 செலவிடப்பட்டது.

**காவல்துறை வானொலி!**

தமிழ்நாடு காவல்துறை வானொலித் தொகுதியில் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னையுடன் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் மத்தியச் சரகம், தெற்குச் சரகம், மேற்குச் சரகம், வடக்குச் சரகம் எனப்படும் நான்கு செய்தித் தொடர்பு நிலையங்கள் உள்ளன.

இவை தவிர சென்னை மாநகர காவற்படை வானொலித் தொடர் அமைப்பு, தமிழ்நாடு சிறப்புக்காவற் படை வானொலித் தொடர் அமைப்பு ஆகியவை உள்ளன. சென்னை மாநகரம், கீழ் அணை, கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி, மேட்டூர் மேல் அணை, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன

இவை பருவ மழையின் போதும் நீர்த்தேக்கம் முதலியவற்றிலிருந்து நீரை விடுவதைக் குறித்த செய்தித் தொடர்பிலும் பயன்படுத்தப்படுகின்றன. முக்கியமான எல்லா விழாக்கள், வேலை நிறுத்தங்கள், பெருமக்களின் வருகை மற்ற நெருக்கடிக் காலங்கள் எல்லாவற்றிலும் 43 உட்கோட்ட நிலையங்கள் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாண்டில் ஆவடி, செய்யாறு, நிலக்கோட்டை, விருதுநகர் உட்கோட்டங்களில் செய்தித் தொடர்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது காவல் செய்தித் தொடர்பு அறைகள் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பரங்கிமலை (செங்கற்பட்டு கிழக்கு), சென்னை மாநகரம், திருநெல்வேலி, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சென்னை, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர், ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலைய காலநிலை எச்சரிக்கை அறிவிப்பு நிலையங்கள் நான்கும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

**வ நக்கு உதவ—**
**ஊர்க்காவல் படை!**

1963-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஊர்க் காவல் படை, தமிழ்நாடு முழுவதிலும் பாதுகாப்புப் பணிகள், இரவுக் காவல் பணிகள், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணிகள் முதலியவற்றில் காவலர்களுக்குத் தொடர்ந்து உதவி வருகிறது.

ஊர்க்காவல் படையில் தற்போது 113 அணிகள் உள்ளன. அவற்றுள் 38 அணிகள் சென்னை மாநகரிலும், 75 அணிகள் மாவட்டங்களிலும் செயல் புரிந்து வருகின்றன. இதில் மகளிர் ஊர்க்காவல் படை அணிகள் 6 அடங்கும். இவற்றுள் 4 அணிகள் சென்னை மாநகரிலும், 3 அணிகள் மாவட்டங்களிலும் உள்ளன. ஊர்க் காவல் படை, தொண்டுப் பணி அமைப்பாகவும், காவல் படைக்கு உதவியாகவும் இருந்து மிகப் பயனுள்ள பணியைச் செய்துவருகிறது.

இவ்வாண்டில், சட்டம்-ஒழுங்கு பேணி வருதல்-போக்குவரத்தை முறைப்படுத்தல் போன்ற பணிகளில் காவல் படையினருக்குக் கூடுதலாக ஊர்க்காவல் படையினரது பணிகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. அவர்களுக்குக் குறிப்பாக முதலுதவி, தீ அணைப்புப் பணி, சிவில் பாதுகாப்பு ஆகிய பணிகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டது. பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள ஊர்க் காவல் படையைச் சேர்ந்த 400 பேருக்கு இலேசான மோட்டார் வண்டிகளை ஓட்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

---

அரிசன மானியக் கோரிக்கையின் மீது பல நண்பர்கள் சில குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவை பற்றிய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக அனைவருமே ஒன்றைச் சொன்னார்கள். 'கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி குறைந்துவிட்டது' என்று. இங்கே கொடுத்துள்ள விளக்க உரையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது குறைந்துவிட்டதாகக் காணப்படலாம். கடந்த ஆண்டு ரூ. 841.23 இலட்சம் செலவழிக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 816.35 இலட்சம் என்று இருக்கும் போது ஏதோ சென்ற ஆண்டைவிட இப்போது குறைந்துவிட்டது என்று எண்ணுகின்றார்கள்.

ஆனால், கடந்த ஆண்டில் இந்த ரூ. 841.23 இலட்சத்தில் பார்த்தால் கடந்த ஆண்டு அரிசன நலத்துறைக்கு என ஒதுக்கப்பட்டது ரூ. 753.23 இலட்சம் தான். ஆனால் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது 816.35 இலட்சம் என்றால் கடந்த ஆண்டைவிட இப்போது ரூ. 63 இலட்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளுவார்கள் என்று எண்ணுகிறேன்.

அதோடு, மாண்புமிகு உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள், மொத்தத்தில் வருவாய்க் கணக்கில் ரூ. 816.35 இலட்சம், மூலதனக் கணக்கில் ரூ. 14.53 இலட்சம், கடன் கணக்கில் ரூ. 17.65 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 848.53 இலட்சம் என்று இருக்கின்றது என்று குறிப்பிட்டு இந்த மூலதனமும் கடனும் ஏன் இதில் சேர்க்கப்படவில்லை என்று கேட்டார்கள். இது கடன், பல்வேறு திட்டங்

பொருளாதாரம், வீட்டுவசதி இவற்றுக்காக ஒதுக்கியிருக்கிறீர்கள், ஏன் கல்விக்கான செலவினை முழுவதுமாகக் கல்வித் துறையே ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கேட்டார்கள். கல்வித் துறை ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு இது பெரியதொரு தொகையில்லை. ஆனால், இந்தத் துறைக்கு என்று தனியாக ஒரு தொகையை ஒதுக்கித் தனியாக பொறுப்புடன் அந்தத் தொகையைச் செலவழித்து அரிசனக் குழந்தைகள், மாணவர்கள்-மாணவிகள் போதுமான எண்ணிக்கையில் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் தனியாக இதை ஒதுக்கி வைத்திருக்கிறோம்.

இந்தத் துறையில் இதற்காகவே தனியாகப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஒதுக்கீடு தனியாக இருக்கிறது. கல்வித்

# அரிசனங்கள் நல்வாழ்வுக்கு அரும்பெரும் பணிகள்!



ரூ. 88 இலட்சம் சத்துணவுத் திட்டத்திற்காக நாம் செலவழித்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின்படி நகர்ப்புறங்களில் உள்ள மூன்று வயதிலிருந்து ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டு ரூ.88 இலட்சம் செலவழித்தோம். அந்தத் தொகை அரிசன நலத் துறை மானியத்தில் கடந்த ஆண்டு சேர்க்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அந்தத் தொகை சமூக நலத்துறை, அதாவது மகளிர் நலத் துறையில் சேர்க்கப்பட்டு, இதிலிருந்து அந்தத் தொகை எடுக்கப்பட்டு விட்டதால் அது குறைந்து காணப்படுகிறது. எனவே, ரூ. 841.23 இலட்சத்தில் ரூ. 88 இலட்சம் சத்துணவுத் திட்டத்திற்காக உள்ளதைக் கழித்துப்

களை நாம் கடனாகக் கேட்கிறோம். இந்தக் கடன்தொகைகளை நாம் வருவாய் என்று வைத்துக் கொண்டு கணக்கில் காண்பிக்க முடியாது. அரசாங்கம் செலவழிக்கும் கணக்கைத்தான் வரவு-செலவுத் திட்டத்தில் காண்பிக்க முடியுமே தவிர, கடன்களையெல்லாம் இதில் காண்பிக்க முடியாது.

எட்டுக் கோடி ரூபாய் திட்டத்தில் ரூ. 596 இலட்சத்தைக் கல்விக்காக என்ற செலவினை ஒதுக்கிவிட்டு, மிச்சம் கிட்டத்தட்ட ரூ. 2.5 கோடியைத்தான்

துறையில்கூட அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். 'பதினெட்டுச் சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்றால் இன்னும் கொடுக்க வில்லையே' என்று. இன்று அரிசன துறையின் மூலம் இப்படிக் கல்விக்கென நிதி ஒதுக்கீடு செய்கின்றதைக் கல்வித் துறையிலேயே சேர்த்து விட்டுச் செய்தாலும் இப்படிப்பட்ட குறைகள் இருக்க ஏற்படக்கூடும். எனவே தான் அந்த வகையில் அவர்களைச் சேர்த்து விடக்கூடாது என்று கல்வியினைப் பொறுத்த மட்டில் தனிச் சலுகை, தனியான கணக்கு, தனியான மேற்பார்வை என்று கவனம் செலுத்தி வருகின்றோம். கல்வித் துறைப் பணமானாலும், அரிசன நலத் துறைப் பணமானாலும் எல்லாம் தமிழக அரசுப் பணம் தான்

அரிசன நலத்துறை அமைச்சர்
**திருமதி சத்தியவாணிமுத்து**

என்பதை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எனவே, நம்முடைய பணம் இருந்தால் பராமரிக்கும் பொறுப்பில் தனி அக்கறை ஏற்படும் என்ற நோக்கத்தில் இந்தத் துறையின் மூலமாக இந்தப் பணத்தைச் செலவழித்துக் கொண்டு வருகின்றோம்.

அடுத்து, பொதுவாக மதம் மாறியவர்களுக்கு எந்தவிதமான முன்னேற்றமும் தரப்படவில்லையே, செக்யூலர் ஸ்டேட் என்று சொல்லப்படுகிறதே என்று ஜேம்ஸ் கேட்டார்கள். இந்தக் கேள்வி எங்களைக் கேட்கத்தேவையில்லை. மதம் மாறிய புத்த மதத்தினருக்கு, மதம் மாறியவர்களுக்குக் கொடுக்கின்ற அத்தனை சலுகைகளும் கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. ஆனால், மாநில அரசு, மதம் மாறிய கிறித்தவர்களுக்குச்



சலுகைகளைத் தரக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவை-ஆணையை — மத்திய அரசு கொடுத்திருக்கிறது. அதே அரசு, புத்த மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கு எல்லாச் சலுகைகளையும் மாநில அரசு தரலாம் என்ற உத்தரவையும் போட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசில் இருக்கின்றவர்கள் 'மதம் மாறிய கிறித்தவர்களுக்கும் மாநில அரசு சலுகைகள் கொடுக்கலாம்' என்று மாற்றித் தந்தால் கிறித்தவர்கள் அனைவருக்கும் நன்மை செய்தவர்களாக ஆவார்கள். அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு உறுதியாக நமது டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கிற இந்த அரசு, மதம் மாறிய கிறித்தவ அரிசனங்களுக்கு, அரிசனங்களுக்குக் கொடுக்கின்ற அத்தனை சலுகைகளையும் இன்றைக்கும் தந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் கூட, மதம் மாறிய கிறித்த அரிசனங்களுக்கு ஒரு தலைமுறைக்குச் சலுகைகள்—இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர்களுக்குக் கிடையாது என்று சட்டம் போட்டிருந்தார்கள். ஆனால், நாங்கள் அந்தப் பாகுபாட்டைக்கூடப் பார்க்கவில்லை. ஒரு தலைமுறையினராக இருந்தால் என்ன, இரண்டு தலைமுறையினராக இருந்தால் என்ன, எல்லாம் ஒரே தாழ்த்தப்பட்டவர்கள்தான். பழைய கந்தன் பழைய கந்தன்தான் என்ற முறையில், அத்தனை சலுகைகளும் மதம் மாறிய கிறித்தவர்களுக்கு உண்டு என்று சட்டம் இயற்றினோம். மத்திய அரசுச் சலுகையானாலும், மாநில அரசுச் சலுகையானாலும், மதம் மாறிய கிறித்தவர்களுக்கும் அவை கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அரிசனங்களுக்கு உயர்ந்த சாதிக்காரர்கள் வாழ்கின்ற பகுதியில் வீடுகள் கட்ட வேண்டும் என்று எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சொன்னார்கள். இது கொள்கை அளவில் உயர்ந்த ஒன்றாகும். உயர்ந்த நோக்கமாகும் என்பது எல்லாரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால், யாரும் புதிய நகரம் எதனையும் உண்டாக்கவில்லை. ஒரு புதிய குடியிருப்பை உண்டாக்கவில்லை. வீடுகளைக் கட்டுவது, அவர்கள் குடிசையில் வாழ்கிறார்கள், சொந்தமாக இடமில்லாமல் வாழ்கிறார்கள், எனவே, நல்ல வீடுகள் அவர்களுக்குக் கட்டித் தர வேண்டுமென்பதற்காகவே தவிர, தமிழகத்திலே ஒரு புதிய குடியிருப்பை உண்டாக்கவில்லை. அப்படி உருவாக்கக்கூடிய வீட்டு வசதி வாரியம் இருக்கிறது—அப்படிப்பட்ட குடியிருப்புகளில் 10 விழுக்காடு அரிசன மக்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம்.

இன்றைக்கு வீடுகள் கட்டுவதற்காக ஏற்கெனவே நிலம் வைத்திருக்கிறோம். சொந்தமாக நிலமற்ற அரிசனங்களுக்கு நிலம் தரவேண்டும் என்று 1960க்கு முன்னாலேயே அரசுக்குத் தேவையற்ற நிலத்தில் அரிசன மக்கள் குடியிருந்தால் அந்த இடத்தை அவர்களுக்கே சொந்தமாக்கித் தர வேண்டுமென்று சட்டம் போட்டு அதன் மூலம் நிலம் தரப்படுறது. இப்போது தஞ்சாவூர் குடியிருப்புச் சட்டம் இருக்கிறது. அது இன்றைக்குப் பல மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. விவசாயக் கூலிகள் சொந்தமாக நிலமில்லாமல் வீடுகள் வைத்திருந்தவர்களுக்கு அந்த நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்று சட்டம் போட்டியிருக்கிறோம். அப்படி இருக்கும் போது, வீடுகட்டும் போது அதைச் சாதி இந்துக்கள் இருக்கின்ற இடத்தில் சேர்க்க வேண்டுமென்று சொன்னால் அது ஆகக் கூடிய காரியம் அல்ல. புதிதாகக் குடியிருப்புகள் அமைக்கப்படும்போது வேண்டுமானால் ஐம்பதுக்கு ஐம்பது, அறுபதுக்கு நாற்பது என்ற அடிப்படையில் செய்யலாம். கேரளத்தைப்பற்றி மதிப்பிற்குரிய தலைவர் கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். கேரளத்தில், தனித் தனியாக அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படவில்லை என்று. நான் அண்மையில் கேரளாவிற்குச் சென்றிருந்தேன்—அந்த




மாநிலத்தின் அழைப்பின்பேரில் போய், 100 வீடுகளுக்கான சாவி கொடுத்துவிட்டு வந்தேன். அதற்காக அந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அங்கே ஏதும் தாழ்த்தப்பட்ட மக்களும், சாதி இந்துக்களும் ஒன்றாக இருக்கவில்லை. அங்கே அந்தப் பாகுபாடு இருக்கத்தான் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் தனியாகவும், வேற்றுச் சாதிக்காரர்கள் தனியாகவும்தான் வசிக்கிறார்கள். வீடுகள் கட்டும் போது 80 சதவீதம் சாதி இந்துக்கள், 20 சதவீதம் அரிசனங்கள் என்று அங்கே அவரவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்களே தவிர, இரண்டு பேர்களுக்கும் வீடுகளை ஒன்றாகக் கட்டவில்லை.

ஆனால், அப்படி இருவரும் சேர்ந்து வாழ்கின்ற வகையில் வீடுகள் கட்டப்பட வேண்டுமானால், பெரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும். இப்போது அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டுமென்ற அடிப்படையில் தான் வீடுகள் கட்டப்படுகின்றன. இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல ஒரு வீட்டு வசதிக் கழகத்தை உருவாக்கியிருக்கிறோம். ஏறத்தாழ 80 ஆயிரம் பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை — திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டது போல ஒரு இலட்சமல்ல, 2,07,987 வீட்டு மனைகள் கொடுத்திருக்கிறோம். இதில் 77,219—கிட்டத்தட்ட 80 ஆயிரம் பேர்கள் இன்னும் அவற்றில் வீடு கட்டிக் கொள்ளவில்லை. அந்த 80 ஆயிரம் பேர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அது தவிர, இன்னும் பலர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள். ஏன், இந்த வீட்டு வசதிக் கழகத்திற்கு கூடச் சாதி இருக்க வேண்டுமா என்று மாண்புமிகு அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

இந்தச் சமுதாயம் உயர்வடைகிற வரை, அதற்குத் தனிப் பார்வை-இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அம்மையார் அவர்கள், இதை 'வெஹமெண்டாக' எதிர்க்கிறேன் என்று கூடச் சொன்னார்கள். இன்றைக்கு, எல்லாத் துறைகளிலும், எல்லா முன்னேற்றங்களிலும், எல்லாத் திட்டங்களிலேயும், அரிசனங்களுக்குச் சட்டப்படி அடிப்படையில் ஓர் உரிமை இருக்கிறது. அகில இந்திய முறையிலும் இருக்கிறது. ஒவ்வொரு நடவடிக்கையிலும், ஒவ்வொரு அரசும் செய்கின்ற நன்மையிலேயும் அவர்கள் சமப்பங்கு பெற வேண்டிய தகுதி, உரிமை இருக்கிறது என்றாலும், அவர்களுக்குத் தரப்படவில்லை.

இதுவரையிலும், ஆண்டாண்டுக் காலமாக எத்தனையோ இயக்கங்கள் மூலமாகவும், எத்தனையோ திட்டங்கள் மூலமாகவும், வலுவான காந்தியார் தலைமையிலே இருக்கிற கட்சி ஆட்சிக்கு வந்திருந்தாலும், இப்படித் தனி அக்கறை செலுத்தினார்கள் என்றாலும், சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளானாலும் அந்த மக்கள் முன்னேற்றம் அடையவில்லை. அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அவர்கள் வாழ வீடு இல்லை. உண்ண உணவு இல்லை; என்ற நிலைமையைப் பார்க்கிறோம். எனவே தான் தனி அக்கறை காட்ட வேண்டுமென்ற நோக்கத்தில் பல சலுகைகள் தனியாக இவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதை அறிந்தும், அம்மையார் ஏனோ 'கண்டிக்கிறேன்' என்று கூறுகிறார்கள். இப்படித் தனி அக்கறை எடுக்கப்




படவில்லை என்றால் எப்படித் தான் அந்த மக்களுக்கு இந்தச் சலுகைகளையெல்லாம் கொடுப்பது? என்றைக்குத்தான் அவர்களுடைய வாழ்விலே முன்னேற்றத்தைக் காண்பது? அப்படியில்லாமல், பொத்தாம் பொதுவாகப் பல்லாயிரக் கணக்கானவர்களோடு நீங்களும் என்று சொன்னால் அவர்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகளைத் தட்டிப் பறிக்கிறவர்கள் ஏராளமாக எதிரிலேயே இருக்கிறார்கள்... அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்டாக்கக் கூடாது என்ற நோக்கத்திலே தான் தனிப்




பார்வை வேண்டும் என்ற கொள்கையில் இருக்கிறோம்.

அந்த நோக்கத்தின் அடிப்படையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் 'தனி வீட்டு வசதி கழகத்'-தை உருவாக்கி இருக்கிறார்கள். அதன் மூலமாக இன்றைக்கு ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவிருக்கிறோம். அதிகப்படியான மக்களுக்கு கடன் தருகின்ற திட்டங்களைச் செயலாற்றவிருக்கிறோம். அதுமட்டுமல்ல. இன்னொரு புதிய திட்டத்தையும் இந்த ஆண்டு இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமை




பட்டிருக்கிறேன். எப்படி வீட்டு வசதிக் கழகம் அரிசன மக்களுக்கு நன்மை செய்யவிருக்கிறதோ, அதே போல ஒரு திட்டம்—சிறு தொழில்கள் தொடங்கத் தேவையான கடன்களைத் தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரிசன மக்கள் நேரடியாகப் பெற்றுப் பயனடைய வசதியான திட்டம்—"பைனான்சிங் கார்ப்பரேசன்". அது இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதிலே முதல் கட்டமாக, சென்னை போன்ற நகரங்களில் இருக்கின்ற ரிக்சா இழுப்பவர்களுக்கு உதவியளிக்கவிருக்கிறது. சென்னை நகரில் கை ரிக்சா இழுக்கிறார்கள். இந்த இயக்கம் ஆரம்ப நாளிலிருந்தே கை ரிக்சாவை எடுத்துவிட வேண்டும்—அது எங்கள் கொள்கைக்கு உகந்ததல்ல என்று சொல்லி வந்தோம். நாங்கள் கை ரிக்சாவில் ஏறியது கிடையாது. ஏறக்கூடாது என்று கட்சி தீர்மானம் போட்டிருக்கிறது.

அந்த அடிப்படையில் கையால் இழுக்கப்படுகிற ரிக்சாக்கள் இனி இருக்கக்கூடாது. இன்றைக்குக் கை ரிக்சா இழுக்கிறவர்களுக்குச் சைக்கிள் ரிக்சா வாங்கிக் கொள்ள நாசனலைஸ்டு பாங்கு, கமர்சியல் பாங்க் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்வது என்பதுதான் இந்தத் திட்டம். இதற்குப் பிறகு இது போன்ற பல திட்டங்களை எல்லாம் அரிசன மக்களுடைய நலனுக்காக இந்த அரசு வகுக்க இருக்கிறது என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். வீடுகட்டிக் கொடுக்கவும், அவர்கள் பல தொழில்களைச் சொந்தமாகச் செய்யவும் வேண்டிய வழிவகைகளைச் செய்து அந்த மக்களது வாழ்வில் ஒரு பெரிய மாறுதலைச் செய்யவேண்டுமென்றே இந்த அரசு பல காரியங்களையும் செய்து வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

மதிய உணவு குறைந்துவிட்டதே, மாணவர்கள் வரவில்லையா, மனம் இரங்கவில்லையா என்பதாக எல்லாம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு ஊராட்சிகள் நடத்துகிற பள்ளிகளில் இந்த மதிய உணவுத் திட்டத்தை நலத்துறையின் சார்பில் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருகிறார்கள். ஊராட்சிகள் நடத்துகின்றபள்ளிகளில் மதிய உணவை அவர்கள் செலவில் தருகிறார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 'நாங்கள் கொடுக்க மாட்டோம் நீங்கள் தான் கொடுக்க வேண்டும்

என்கிருர்கள். ஊராட்சிகளே இந்த அநீதியைச் செய்வதா ? இது நியாயமா ? ஆகவேதான் நாங்கள் இப்போது ஒரு ரிவைஸ்டு ஸ்கீம்—அதாவது நூற்றுக்கு 75 பேர்களுக்கு மேல் அரிசன மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிகளில் உள்ள அத்தனை பேர்களுக்குமே அரிசன நலத்துறை மூலமாக மதிய உணவு அளிப்பது என்பதுதான் அந்தத் திட்டம். இப்படி அந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டிருப்பதனுல் தான் தொகை குறைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விடுதிகளைப் பற்றிச் சொன்ஞர்கள். அரசும் அதனை உணர்ந்து தான் வங்கிகளின் மூலம் ஒரு கோடியைக் கடனுகப் பெற்றுத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நல்ல விடுதிகளைக் கட்டித்தர வேண்டுமென்ற திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். அந்தத் திட்டத்தின்படி நிறைய விடுதிகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வந்திருக்கிறது என்பதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் மலைவாசிக் குழந்தைகளுக்கு நலத்துறை மூலம் பள்ளிகள் நடத்தப்படவில்லை என்று சொன்ஞர்கள். அங்கே ஒரு பள்ளியைத்தான் நலத்துறை நடத்திக் கொண்டிருக்கிறது. ஏனைய 12 பள்ளிகள் வனத்துறையினுல் நடத்தப்படுகிறது. வேண்டுமென்ருல் அதனையும் பரிசீலனை செய்து அந்தப் பள்ளிகளையும் கூட நலத்துறை மூலமாகவே நடத்த ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்பதனைப் பரிசீலிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுரேந்திரன் அவர்கள் நங்கப்பள்ளி பாதையைப்பற்றிச் சொன்ஞர்கள். செட்டியார் செட்டியாருக்கு உதவி செய்வதாகச் சொன்ஞர்கள். எந்தச் செட்டியாரும், எந்தச் செட்டியாருக்கும் உதவி செய்யவில்லை. நிலம் வாங்கியாகி விட்டது. இந்த ஆண்டு அதிலே பருத்தி போட்டிருப்பதனுல் பருத்தியை வெட்டியவுடன் பாதை உடனடியாகப் போட்டுக் கொடுக்க இந்த அரசு ஒருபோதும் தயங்காது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குச் சமுதாயமே ஒரு மறுமலர்ச்சியைக் கண்டாக வேண்டும். திரு. முத்து அவர்கள் குறிப்பிட்டார்களே, சட்டமன்ற அங்கத்தினரைப்போன்ற எங்களுக்கே வணக்கத்தைத் தெரிவிக்காது, அப்புறம் இன்ஞர் என்று தெரிந்தவுடன் வணக்கத்தைத் தெரிவிக்கிருர்கள் என்பதாக—இவை எல்லாம் நாளடைவில்தான் போக வேண்டும். மனிதனை மனிதனுக நடத்துகின்ற மனிதப் பாங்கு எல்லாரிடத்தும் ஏற்பட, எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒத்துழைத்தால்தான் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்த மக்களது வாழ்விலே ஒரு புது மலர்ச்சியை உண்டாக்க முடியும் என்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் அரிசன நலத்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி]

# கண்ணகியும் கரிகாலனும்!

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1972-ஆம் ஆண்டின் குறுவைப் பட்டத்தில் நடத்தப்பெற்ற அனுசரணை ஆராய்ச்சிகளிலிருந்து, இந்த மாவட்டத்தில் குறுவைப் பட்டத்தில் பயிரிட, 'கண்ணகி', 'கரிகாலன்' ஆகிய இரு ரகங்களும் மிகவும் சிறந்தவை என்பது தெளிவாகிறது.

கடந்த ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குறுவைப் பட்டத்தில் நடத்தப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சியில் 'கண்ணகி' நெல் ரகம் ஏக்கருக்குச் சராசரியாக 1,946 கிலோ மகசூல் அளித்து மிகு பயன் தருவதில் முதலிடம் பெற்றுள்ளது. மகசூல் அளிப்பதில் ஈடு இணையற்று விளங்கும் 'அதிசய நெல்' ஐ.ஆர். 8 என்னும் வெளிநாட்டு ரகத்துடன், சன்ன அரிசி கொடுக்கும் 'டி. கே. எம். 6' என்னும் தமிழ் நாட்டு ரகத்தை கரு ஒட்டு செய்து உருவாக்கப் பட்டதே 'கண்ணகி'! ''கண்ணகி'' நெல் ரகத்தின் வயது 110 நாட்களே! அதன் அரிசி நயமானது.

'கண்ணகி' குறுவைப் பட்டத்திற்கு ஏற்ற மிகுவிளைச்சல் தரும் சன்னரக நெல்லாக விளங்குவதுடன், நவரைப் பருவத்திலும் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது.

'கரிகாலன்' நெல் ரகம், ''கண்ணகி'' ரகத்திற்கு அடுத்தபடியாக குறுவைப் பட்டத்திற்கு ஏற்ற சிறந்த ரகமாகக் விளங்குகிறது. அனுசரணை ஆராய்ச்சிகளில் ஏக்கருக்குச் சராசரியாக 1,898 கிலோ மகசூல் அளித்து மிகு பயன் தருவதில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 'டி என். 1' என்னும் மிகு பயன் தரும் வெளிநாட்டு ரகத்தையும், 'ஆடுதுறை-27' என்னும் மிகுபயன் தரும் தமிழ் நாட்டு ரகத்தையும் கரு இணைப்புச் செய்து உருவாக்கப் பட்டதே 'கரிகாலன்'! இந்த நெல் ரகத்தின் வயது 115 நாட்கள்.

பொதுவாகக்குறுவைப் பட்டத்தில் சூலை மாத விதைப்பு பெரும் மகசூல் கொடுத்துள்ளது. குறுவை விதைப்பு தாமதமானுல், மகசூலில் 250 முதல் 300 கிலோ வரை குறையக் கூடும்.

எனவே, வரும் குறுவைப் பட்டத்தில் 'கண்ணகி', 'கரிகாலன்' ஆகிய நெல் ரகங்களை சூலை மாதத்தில் விதைத்து, பெரும் மகசூல் பெற்று வருவாயைப் பெருக்கிக் கொள்ளுமாறு உழவர்பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்ருேம்.

**தகவல் : திரு. ஏ. வெங்கட்டராமன்,**
**இணை வேளாண்மை இயக்குநர்**
**(ஆராய்ச்சி),**
**திருச்சிராப்பள்ளி-18.**



# தொழிலாளர் நலம்பெற நமது பணி

**தொழிலாளர் நல அமைச்சர் என்.வி.நடராசன்.**



தொழிலாளர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்ற கேள்வியையும், தொழிலாளர்களால் அரசியல் கட்சிக்கு இலாபமா என்ற கேள்வியையும் எழுப்பினுல், தொழிலாளர்களுக்கு அரசு செய்ய வேண்டிய கடமைதான் அவர்களுக்குக் கேள்விக்குறியாக இருக்க வேண்டுமே தவிர, அவர்கள் கட்சிக்கு இலாபமாக இருக்கக் கூடாது என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர்கள். இங்கேயுள்ள உறுப்பினர்களுள் சிலர் தொழிற் சங்கத் தலைவர்களாக இருக்கிருர்கள். அவர்களுடைய மனச்சாட்சிப்படி, அவர்கள் என்னிடத்திலே சொல்லாவிட்டாலும், மனமார அவர்களே யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த அரசு தன் ஆதிக்கத்தைப் பயன்படுத்தித் தொழிற் சங்கங்களை நடத்தி வருகிறது என்று சொல்கிருர்களே, அது சரியானதுதானு என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

பி. அண்ட் சி. தொழிலாளர்களுக்கிடையே, தொழிற் சங்கத் தலைவர்களிடத்தில் போட்டி வந்தது. அந்தத் தொழிற் சங்கத்தில் ஒரு பிரிவு திராவிட முன்னேற்றக் கழகம், மற்ருெரு பிரிவு என்னுடைய அருமை நண்பர் திரு. அந்தோணிப் பிள்ளை அவர்களுடைய பிரிவு. இந்த விவகாரம் எங்களுக்குத் தெரிந்த பொழுது, திராவிட முன்னேற்றக் கழக அரசிலே நான் அமைச்சராக இருக்கிறேன் என்று எண்ணுமல், தொழிற் சங்க வாதியாக இறங்கிவந்து, முதலமைச்சரவர்களுடைய யோசனையையும் கேட்டு, அதற்காக லேபர் ஆபீசர் அவர்களை அனுப்பி, 'வெரிஃபை' செய்யப் பட்டது. திரு. அந்தோணிப் பிள்ளை யூனியனுக்குச் சில ஓட்டுகள் தான் அதிகம் வந்தன.

நாங்கள் ஆதிக்கம் செலுத்துவதாக இருந்தால் அதை மறுத்து விட்டுத் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கந்தான் இயங்க வேண்டுமென்று சொல்லியிருக்கலாம். ஆனுல், திரு. அந்தோணிப் பிள்ளை சங்கந்தான் இயங்க வேண்டுமென்று கூறி, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களிடம், ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று அறிவுரை கூறியிருக்கிறேன். விவரம் தெரிந்த தொழிற் சங்கத் தலைவர்கள் அதைப்பற்றி இங்கு எடுத்துக் கூருவிட்டாலும் எங்களைப்பற்றிக் குறை கூறுவது தவறு என்று மனத்தில் எண்ணிஞலே போதுமானது.

அதேபோன்று பிரிட்டானியா பாக்டரியில் திராவிட முன்னேற்றக் கழகச் சங்கத்திற்கும் ஐ. என். டி. யு. சி-க்கும் இடையே தகராறு வந்தது. என்னிடம் வந்தபோது, 'இங்கு வந்தால் அரசாங்கத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமே தவிர, கட்சிகளைப் பற்றிப் பேசுதல் கூடாது, என்று சொல்லிச் சில ஓட்டுகளே அதிகமாக இருந்தாலும் ஐ. என். டி. யு. சி.யே ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தத் தீர்ப்பையும் அளித்திருக்கிருேம். இவற்றையெல்லாம் பாராட்டாவிட்டாலும் மனத்தில் எண்ணி எங்களை வேலை வாங்கப் பயன்படுத்திக் கொண்டால் நலமாக இருக்கும்.

இந்தியாவில் முதல் முதலாகத் தொழிற்சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? முதல் முதலாக, சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் ஒரே ஒரு சங்கந்தான் இயங்கியது. அன்று இருந்த தொழிற் சங்கம் ஏ. ஐ. டி. யு. சி. என்று எண்ணுகிறேன். இப்படி ஒரே ஒரு சங்கமாக இருந்தது எப்படி நான்கு சங்கங்களாக ஆயின? அன்று திராவிட முன்னேற்றக் கழகம் இருந்ததா ? திராவிடர் கழகம் இருந்ததா ? யாரால் தொழிற்சங்கம் பிளவு பட்டது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏ.ஐ.டி.யு.சி. ஐ.என்.டி.யு.சி., எச். எம். எஸ். என்று இப்படிப் பல பிளவுகள் ஏன் ஏற்பட்டன ?

இதுவரை நாங்கள் ஆரம்பித்த தொழிற் சங்கங்களுக்கு அவற்றை ஆதரித்து அதற்காக ஏதாகிலும் பண உதவி செய்தோமா? தொழிற்சங்கவாதிகள் கழகத்தின் முக்கியமான பொறுப்புகளில் கூட இருப்பதில்லை. தவறு இருந்தால் சுட்டிக் காட்டவேண்டியதுதான்; வரவேற்கிறேன். ஆனுல், பழி கூறுவது நாங்கள் செய்யும் சிறந்த பணிக்கு உற்சாகத்தை அளிப்பதாகாது. தொழிற் சங்கத்தை இந்தியாவில் பிளவு படுத்தியவர்கள் இதற்கு முன்னுல் இருந்தவர்கள்தானே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அரசின் சார்பில், முதல்வர் சார்பில் தெரிவித்துக் கொள்வேன்—நாளையத் தினமே எல்லாத் தொழிற்சங்கத்தையும் கலைத்து விடலாம் ; நாடெங்கிலும் உள்ள தொழிற்சாலைகளில் இரகசிய ஓட்டு முறையில் தேர்தலை நடத்தி, யார் அதிக ஓட்டுகளைப் பெறுகிருர்களோ அவர்கள்தான் தலைவராக, துணைத் தலைவராக, நிருவாகிகளாக இருந்து தொழிற்சங்கத்தை நடத்த வேண்டுமென்ற முடிவுக்கு வரட்டும். ஒரு மாதம் தவணை தருகிறேன். இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர்களும், வெளியே உள்ள தொழிற்சங்கத் தலைவர்களும் யோசித்துச் சொல்லட்டும் என்பதைத் தூய்மையான எண்ணத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்தப் பிரச்சினை குறித்துச் சவால் விடத் தயாராக இல்லை. இது சவால் இல்லை. இது ஒரு முக்கியமான பிரச்சினை. நாட்டிலே இன்றையத் தினம் தொழில் அமைதி ஏற்படவில்லையென்ருல் அது போட்டிச் சங்கங்களால் தான் என்று குறிப்பிடுவேன். அதை மாண்புமிகு அங்கத்தினர்கள் அனந்தநாயகி அவர்களும், மற்ற அவர்களும் அறிவார்கள்.

1—5—3

சிம்சன் கம்பெனியில் நாம் போட்ட குழு எப்படி வேலை செய்தது, ஏன் செய்ய முடிய வில்லை என்று அவர்களுக்குத் தெரியும். நான் யாரையும் சவாலுக்கு அழைக்கத் தயாராக இல்லை. ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்ற பிரச்சினை குறித்து இங்கே இருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டுமோ அல்லது நாம் மட்டுமோ கருத்துத் தெரிவிப்பது அல்ல. வெளியே உள்ள தலைவர் கள் கூடிப் பேசி முடிவு எடுக்க வேண்டும். இதற்குச் சட்டத் தைக் கொண்டு வருவதற்கு, தற்போதுள்ள சட்டத்தைத் திருத்துவதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்ற ஒரு சட்டப் பிரச்சினையையும் நாம் அணுக வேண்டும். அப்படி நமக்கு அதிகாரம் இல்லையென் ருல் மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும் என்று இருப்ப தால் இது ஒரு நாளில் தீர்ந்து விடக்கூடிய பிரச்சினை இல்லை. அடிக்கடிக் கூடிப்பேசி ஒருமுடிவு ஏற்பட நாம் ஒன்றுபட வேண்டு மென்பது என்னுடைய எண்ண மாகும்.

தொழிலாளர்கள் எல்லாம் இந்த அரசை எதிர்க்கிருர்கள் என்று சொல்கிருர்கள். நான் போன இடத்தில் யாரும் என்னை எதிர்க்கவில்லை. எல்லாத் தொழிலாளர்களும் வரவேற் கிருர்களே தவிர எங்களை யாரும் எதிர்க்கவில்லை. இதுவரையில் நடைபெற்ற வேறுபாடுகள்-தகராறுகள் காரணமாக—நான் அரசின் சார்பில் சொல்லிக் கொள்வேன்—தொழில் அதிபர் கள்தான் எங்களை எதிர்த்து முணு முணுக்கிருர்களே தவிர, தொழி லாளர்கள் அல்ல. ஒரு தொழில் அதிபர்கூட-நான் அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—தொழிற்சங்கத்தில் தலைவராக இருப்பவர்கள், இருந்தவர்கள் அமைச்சராக வந்தால் இப்படித் தான் இருக்கும் என்று சொல்லி விட்டுப் போனுர். நான் அதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தொழில் தகராறுகளில் எந்த அளவுக்குத் தொழிலாளர்களுக்கு நியாயமான சலுகைகளைப்பெற் றுத் தர முடியுமோ அதற்கு ஏற்றவகையில் நாங்கள் பணி யாற்றி வருகிருேம் என்பதை நீங்கள் அருள்கூர்ந்து உணர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது போதுமா என்ருல், போதாது. அதிலே இப்படிச் செய்யவேண்டுமென்று சொன்னுல் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக் கிருேம்.




இங்கே சிம்சன் கம்பெனி விவகாரங்களைப் பற்றியெல்லாம் டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னுர்கள். 181 வழக்குகள்-அதில் ஏன் காலதாமதம் என் ருல், நானே தொழில் அதிபர் களையும், தொழிலாளர்களையும் சந்தித்து விசாரித்தேன். தொழிற் சங்கத் தலைவர்கள் சொல்கிருர் கள். கொஞ்சம் நிதானமாக நடந்தால் பரவாயில்லை. 10 பேர் சாட்சியம் சொல்லவேண்டு மென்ருல், 8 பேர்தான் வருகி கிருர்கள். இன்னும் இரண்டு பேர் வரவேண்டியிருக்கிறது. அதனுல்தான் தாமதமாகச் செய்கிருேம். இரண்டு பேரும் ஒருமித்துச் சொல்லியிருக்கிருர் கள். இதுதான் நிலைமை. அது மட்டுமல்ல, இப்போதுள்ள 181 வழக்குகளில் 3 கொலை வழக்குச் சம்பந்தப்பட்டவை. இன்னும் விசாரணை செய்யப்பட வேண்டி யவை 31—32 இருக்கின்றன. அதை விரைவில் விசாரித்து அந்தஅறிக்கையை முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவிடுவதாகச் சொல்லியிருக்கிருர்கள். எந்த அளவுக்கு விரைவாகச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு விரைவு படுத்தத் தயாராக இருக்கிருேம் என்று சொல்கிருர் கள்.

விம்கோ பற்றிச் சொன்னுர் கள். கொஞ்சமும் அக்கறை செலுத்தவில்லை என்று. நாம் அக்கறை செலுத்திஞலும் அது வும் தவருக இருக்கிறது. ஒன்றைச் சொல்வேன், எந்த அரசு வந்தாலும் சரி, நாட்டிலே அமைதியும் சட்டமும் சீர் குலையும் போது அதை வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்க முடியாது. அரசு இருப்



பது உடனே அதைத் தீர்த்து நியாயமாகச் செய்ய வேண்டிய வைகளைச் செய்வதற்குத்தான். அதைப்போல் நாங்களும் வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கவில்லை. விம்கோவில் பேச்சுவார்த்தை ஒரு மாதிரியாக முடிந்து விட்டது. பம்பாய்த் தலைமை அலுவலகத்திலிருந்து அந்த விவரம் கேட்கப்பட்டிருக் கிறது. பதில் வந்த உடனே முடிந்துவிடும் என்று கருது கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கிராஜு விடிக்கு வருமான வரியிலிருந்து விதிவிலக்குத் தர வேண்டும் என்று சொன்னுர்கள். ஏற் கெனவே வருமான வரிச்சட்டம் பிரிவு 10-ன்படி 15 மாதச் சம்பளம், அல்லது ரூ. 24,000 இதில் எது குறைவோ அந்த அளவுக்குக் கிராஜுவிடிக்கு விதி விலக்கு இருக்கிறது. இப் பொழுது இயற்றப்பட்டுள்ள கிராஜுவிடிச் சட்டப்படி கிராஜுவிடித் தொகை பஞ்சப் படி உட்பட 20 மாதச் சம்பளம் அதிகப்படியாக நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. இந்தத் தொகை அதிகப்படுத்தப்பட்டிருப்பதனுல், ஏற்கெனவே வரையறுக்கப்பட் டிருக்கிற தொகையைவிட இது அதிகமாக இருக்கக் கூடும். இதனுல் அதிகமான தொகைக்கு வருமான வரி கட்டவேண்டிய நியதி ஏற்படும் என்பதை அறிந்து, இப்பொழுது விதி விலக்கை மாற்றி அமைக்க, 'சென்டிரல் போர்டு ஆஃப் டாக்ஸஸ்' பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினை சட்டப் பிரச் சினையாக இருப்பதனுல், சந்தர்ப் பம் வரும்பொழுது மாநில அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





விவசாயிகளுக்கு ஊதிய நிர்ணயம் ஏற்கெனவே செய் யப்பட்டிருக்கிறது. அதை மாற்றி அமைக்க ஓர் ஆலோ சனைக் குழு அமைக்கப் பட்டி ருக்கிறது. மாண்புமிகு என். கே. பழனிச்சாமி அவர் கள் சொன்ன கருத்தை நினைவில் கொண்டு வீட்டு வசதி, கல்வி வசதி, மருத் துவ வசதி ஆகிய வசதிகள் குறித்துப் பரிந்துரை செய்ய ஒரு குழு அமைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் அதிலே உறுப்பினர் களாக இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை வந்தவுடன் ஆவன செய்யப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில்கள் விவசாயம், தீப் பெட்டி, பீடி, புகையிலை, தோல் பதனிடும் தொழிலாளர்கள், பணியன் தொழில், அரிசி மாவு மில், நகராட்சி, ஊராட்சித் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கட்டட வேலைத் தொழிலாளர்கள், சாலை போடும் வேலை செய்யும் தொழிலாளர்கள், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் கள், ஜவ்வரிசித் தொழில் ,பருத்தி விதை எடுக்கும் தொழில் முதலிய தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட் டிருக்கிறது என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பதிவுத் துறையை 40 மாவட் டங்களாகப் பிரிக்க வேண்டு மென்று நமது நண்பர் திரு. வேழ வேந்தன் அவர்கள் சொன்னுர் கள். ஏற்கெனவே, 21 இருக் கிறது. இப்போது 5சேர்த்தோம். இன்னும் இதை அதிகரிக்கவேண் டும் என்று திரு. லத்தீப் அவர்கள் தெரிவித்திருக்கிருர்கள். திரு. வகாப் அவர்களும், திரு. செளடி சுந்தரபாரதி அவர்களும் அதே கருத்தைத் தெரிவித்திருக்கிருர் கள். இப்பொழுது 5 மாவட் டங்கள் சேர்த்த போதிலும், எதிர்காலத்தில் இன்னும் அதிக மாகச் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்ற உறுதியை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். இப்பொழுது 5 சேர்த்து, 26 ஆகியிருக்கிறது.

மற்ருென்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு வந்த பிறகுதான் — தொழிற்சங்கத் தலைவர்கள் உணர்வார்கள் என்று கருது கிறேன்— மானேஜ்மெண்ட் ஒரு நடவடிக்கை எடுத்த பிறகு, டிசிப்ளனரி ஆக்சன் எடுத்த பிறகு, தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தரவேண்டும் என்று வற்புறுத்தும் பொழுது முன்பெல்லாம் தருவதில்லை. ஆனுல், இந்த அரசு அமைந்த பிறகுதான் அப்படிச் செய்யப் பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, எழுது பொருள் அச்சுத் துறை சம்பந்தமாக நண்பர் செல்வராஜ் அவர்கள் இங்கே அதைப் பாராட்டிச் சில யோசனைகளையும் தெரிவித்திருக் கிருர்கள். மதுரையில், மாவட்ட அளவில் ஒரு அச்சுக்கூடம் அமைக்க மதுரை மாநகரத்தில் இடமெல்லாம் பார்த்தாகிவிட் டது. விரைவில் கட்டடம் கட்டுவதற்கு அங்கே ஆவன செய்யப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். அதைப் போலவே ஒவ்வொரு மாவட் டத்திலும் அரசுத் துறை அச்சகம் இருக்க வேண்டும் என்பது அரசு ஏற்றுக்கொண்ட கொள்கையாகும். நிதிநிலை வசதிப் படாததால் இந்த ஆண்டு மதுரைக்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது. தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அரசு அச்சகம் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

விருத்தாசலத்தில் இருக்கிற அச்சுக்கூடத்தில் போதுமான இடவசதி இல்லை என்றும், விரி வான முறையில் அதற்குச் சொந்தக் கட்டடம் வேண்டும் என்றும் சொன்னுர்கள். அந்த அச்சகத்திற்குச் சொந்தக் கட்ட டம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது சென்னையிலே செயல்படுகிற அச்சகம் தங்கச்சாலையில் இருக்கிறது. இன்னும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்று அரசு கருதி யிருக்கிறது. விரிவுபடுத்து வதற்காகச் சூளைப்பக்கத்தில் இடம் பார்த்து ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஒன்றரை மாத முடிவுக்குள் எல்லா வேலை களும் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அங்கே வேலை தொடங்கி விட்டால் ஏறத்தாழ 800 தொழிலாளர்களுக்குப் புதிதாக வேலை கிடைக்கும்.

இந்த அச்சுத் துறையிலே, சென்ற ஆண்டு வரவு- செலவுத் திட்டக் கூட்டத்தில், ஒவ்வொரு துறைத் தலைவர்களாலும் அச்சிடுவதற்காக அனுப்பப் பட்ட அமைச்சர்களுடைய விளக் கங்கள் அடங்கிய புத்தகங்கள் அச்சிட்டுத் தாமதமாகக் கிடைத் தன என்று சொல்லப்பட்டது. அதைக் கவனத்தில் கொண்டு துரிதமாக வேலைகள் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. சட்டசபை நடவடிக் கைகள் கூட —ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகள் அடுத்த கூட் டம் வருவதற்குள் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுவிட வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டது. அதன்படி எல்லாக் குறிப்புகளை யும் இப்போது உடனுக்குடன் அச்சிட்டுக் கொடுக்கிருர்கள். அந்த அளவுக்கு இப்போது அச்சுத் துறை பணியாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதேபோன்று பத்திரப் பதிவுத் துறையும் இப்போது பணியாற்றி வருகிறது. ஆக, இப்போது பத்திரப் பதிவுத் துறை, அச்சுத் துறை, தொழி லாளர் துறை ஆகிய இந்தத் துறைகளில் மாண்புமிகு உறுப் பினர்கள் அதிகமான கருத்துக் களையும், நல்ல ஆலோசனைகளை யும் தெரிவித்திருக்கிருர்கள். அவைகளை எல்லாம் அரசு கவனத் தில் கொண்டு, ஆவன செய்யும் என்று, தெரிவித்துக்கொண்டு, இந்தத் துறைகளில் பணியாற்றி வருகின்ற அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் மற்றவர்களுக் கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் தொழிலாளர் நலத் துறை மானி யக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]




# ஊர் வளர்ச்சிப் பணியில் ஒப்பற்ற ஒன்றியம்

சுந்தர் —

ஊர் வளர்ச்சிப் பணிகளில் தமிழக அரசு முன்னணியில் திகழ்கிறது என்பதற்கு ஒவ்வொரு நாளும் வளர்ந்து வரும் சிற்றூர்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

### ஊர்ச்சாலைகள்

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் கடந்த ஐந்தாண்டுகளில் இணைப்புச் சாலைகள் பயனுள்ள வகையில் போடப்பட்டுள்ளன.

இணைப்புச் சாலைகள் போடும் இத் திட்டத்தின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 206 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் ரூ. 1,55,874 அரசு மானியத்தில் போடப்பட்டன. இத் திட்டத்தினால் 18,040 மக்கள் போக்குவரத்து வசதி பெற்று பயன் அடைந்துள்ளனர். புதிதாகப் போடப்பட்ட சாலைகளின் மூலமாக 26 கிராமங்கள் இணைக்கப்பட்டு, போக்குவரத்து வசதிக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. புதியதாகப் போடப்பட்ட சாலைகள் நீங்கலாக 10 பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

குடிதண்ணீர்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இவ்வூராட்சி ஒன்றியத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்கெனவே உள்ள மற்ற கிணறுகள் நீங்கலாக 26 கிணறுகள் புதிதாக வெட்டப் பட்டன. அத்துடன் 26 பழைய கிணறுகளும் ஆழப்படுத்தப்பட்டன. மேற்கண்ட வேலைகளுக்காக ரூ.82,147 அரசாங்கமானியமாகச் செலவழிக்கப்பட்டன. இதனால் பயனடைந்துள்ள மக்கள் எண்ணிக்கை 22,050 ஆகும். பயன் அடைந்துள்ள கிராமங்கள் 42 ஆகும்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து மேல்நிலை நீர்த்தொட்டிகளும், ஒரு கீழ்நிலை நீர்த்தொட்டியும் ஆறு பிரஸ்ஸர் டேங்குகளும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இதன் மூலமாகப் புதிதாகத் தெருக் குழாய்கள் போடப்பட்டன. இத் திட்டத்தினால் ஏற்பட்ட செலவு ரூ. 1,10,902 ஆகும். இதன் மூலம் பயன் அடைந்துள்ள பொதுமக்களின் எண்ணிக்கை 12,111 ஆகும். பயன் அடைந்துள்ள கிராமங்கள் 13 ஆகும்.

### பள்ளிக்கூடங்கள்

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 45 பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளும், 31 தனியார் பள்ளிகளும் இயங்கி வந்தன. கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிதாக ஒரு பஞ்சாயத்து யூனியன் பள்ளி திறக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் புதிதாக 24 ஆசிரியர்களும், தனியார் பள்ளிகளில் 19 ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். புதிதாகப்பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் 863 மாணவர்களும், மாணவிகளும், தனியார் பள்ளிகளில் 713 மாணவ மாணவிகளும் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே உள்ள பள்ளிகள் நீங்கலாக 21 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 1,80,368 ஆகும். இதன் மூலமாக 63 கிராமங்களுக்குக் கல்வி வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு பரிசுத்திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் 4 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டன. இதற்கு ஏற்பட்ட செலவு ரூ. 39,000 ஆகும். இதன் மூலமாகப் பள்ளிக் குழந்தைகளுக்குப் போதுமான இடவசதி செய்து தரப்பட்டுள்ளது. ஏற்கெனவே இவ்வூராட்சி ஒன்றியத்தின் கீழ் 16 பாலர் பள்ளிகள் நடைபெற்று வந்தன. இவைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 4 பாலர் பள்ளிகள் டெமான்ஸ்டரேஷன் பீடிங் சென்டர்களாக மாற்றப்பட்டு நல்ல முறையில் நடைபெற்றுவருகின்றன. இந்தப்பாலர் பள்ளிகளின் மூலம் 480 குழந்தைகளும், டிமான்ஸ்டிரேஷன் பீடிங் சென்டர் மூலம் 160 குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட தொகை சுமார் ரூ. 50,000 ஆகும். இப் பாலர் பள்ளிகளில் 16 ஆசிரியர்களும், 16 ஆயாக்களும் புதிதாக நியமனம் செய்யப்பட்டுப் பணியாற்றி வருகிறார்கள்.

### வறட்சி நிவாரணம்

வறட்சி நிவாரணம் துயர் துடைப்புப்பணிகளின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் 4 கிணறுகள் புதிதாகத்தோண்டப்பட்டுள்ளன. 89 பழைய கிணறுகள் ஆழப் படுத்தப்பட்டன. இதற்கு ஏற்பட்ட செலவு ரூ. 63,456 ஆகும். பயன் அடைந்துள்ள கிராமங்களின் எண்ணிக்கை 80 ஆகும்.

### நீர்ப்பாசனம்

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் உள்ள 172 குளங்களில் கடந்த 5 ஆண்டுகளில் 40 குளங்களில் ஆழப்படுத்தல் வேலையும், கரை அமைத்தல் வேலையும் செய்து சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இதற்கு ஏற்பட்ட செலவு ரூ. 71,147 ஆகும். இதன் மூலமாக 1,050·13 ஏக்கர்களுக்குப் பாசன வசதி ஏற்பட வழிவகை செய்யப்பட்டது. இது தவிர, கால்

வாய்களில் உள்ள வண்டல் மண்ணை எடுத்துக் கால்வாய்கள் சீர்திருத்தம் செய்யப்பட்டன.

### விவசாயம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் விவசாயத் திட்டத்தின் கீழ் நெல், சிறுதானியப்பயிர், பணப் பயிர் மற்றும் பழவகைகளின் பயிர்ப்பாதுகாப்புக்காக 1,48,676 கிலோ தூசி மருந்தும், 8250 லிட்டர் தண்ணீர் மருந்தும், பூச்சி பூஞ்சாளங்களைக் கட்டுப் படுத்துவதற்கு 15 சதவிகித சகாய விலையில் விநியோகிக்கப் பட்டு 37,079 ஏக்கரில் பயிர்ப் பாதுகாப்புச் செய்யப்பட்டது. இதில் 1971—72-ம் ஆண்டில் மாத்திரம் 4,000 ஏக்கர் மானாவாரிக் கடலைப் பயிரில் ஹெலிகாப்டர் மூலமாக மருந்து அடித்துச் சிவப்புக் கம்பளிப் பூச்சிகளை கட்டுப்படுத்தியது சிறந்த சாதனையாகும். இதே காலக் கட்டத்தில் 50 சதவிகித சகாய விலையில் 562 கிலோ காய்கறி விதைகள் விநியோகம் செய்து 4,510 ஏக்கரில் காய்கறி உற்பத்தி செய்யப்பட்டு, குறிப்பாகத் திண்டுக்கல் நகரத்தில் மிகப் பெருத்த தேவையைப் பூர்த்தி செய்யப் பட்டது. இக்காலத்தில் 10,500 தென்னங்கன்றுகள் 25 சதவிகித சகாயவிலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுப் புதிதாகச் சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் தோப்பாகவும், வாய்க்கால் கரைகளிலும் பயிர்ப் பாதுகாப்புச் செய்யப்பட்டது. அத்துடன் 1575 பழநாற்றுக்கள் 25 சதவிகித சகாய விலையில் விநியோகிக்கப்பட்டு, புதிதாகச் சுமார் 39 ஏக்கரில் பழத்தோட்டம் உண்டாக்கப் பட்டது.

இவ்வாண்டுகளில் நிலம் சமப் படுத்தும் கருவி 15-ம், தழை மிதிக்கும் கருவி 75-ம், போலி கலப்பைகள் 180-ம், மண்வெட்டி 412-ம், பூ வாளி 131ம், களைக்கொத்து 297-ம் மருந்து தெளிக்கும் கருவிகள் 138-ம், மருந்து தூவும் கருவிகள் 23-ம், இதர கருவிகள் 11-ம், ஆக 1282 கருவிகள் 985 விவசாயிகளுக்கு 25 சதவிகித சகாய விலையில் விநியோகிக் கப்பட்டுள்ளது. அத்துடன் 5 கிராமப் பஞ்சாயத்துக்களுக்குச் சலுகை விலையில் 5 விசைத் தெளிப்பான்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

விதைகள் விநியோகத் திட்டத்தின் கீழ் பசுந்தாழ் உர விதைகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் 42,000 கிலோ விதைகள் 15 சதவிகித சகாய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. திண்டுக்கல் வட்டாரம் மிகவும் வறட்சிப் பகுதியாக இருந்த போதிலும், கடந்த மூன்று ஆண்டுகளில் அமோக விளைச்சல் திட்டத்தின் கீழ் 41,515 கிலோ நெல், சிறுதானிய வித்துக்கள் ஆகியவை விநியோகம் செய்யப்பட்டு, 5,696 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டது.

இதைத் தவிர்த்து பொறுக்கு நெல் வித்துக்கள் 58,033 கிலோவும், சிறுதானிய வித்துக்கள் 6,860 கிலோ விதைகளும் விநியோகம் செய்யப்பட்டு 7,962 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டது.

ஊராட்சி ஒன்றியத்திற்கென்று இந்தக் காலத்தில் ஒரு விவசாயக் கிடங்கும், கருவிகள் வைப்பறை ஒன்றும், டிராக்டர் நிறுத்தும் கூடம் ஒன்றும் அரசு மானியத்துடன் கட்டி முடிக்கப் பட்டது. மேற்கண்ட திட்டங்களுக்காக ரூ. 1,22,000 அரசு மானியமாகப் பெற்று விவசாயிகளின் நலனுக்காகச் செலவிடப்பட்டது.

### மகளிர் மன்றம்

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 16 ஊராட்சி மன்றங்களில் இயங்கி வரும் 30 மகளிர் மன்றங்களின் மூலம் கிராமப் பெண்களுக்கு ஓய்வு நேரத்தில் வருவாய் கொடுக்கும் வேலைகளான வீட்டுத் தோட்டங்கள் அமைத்தல், தேனீ வளர்ப்பு, கோழி வளர்த்தல், தையல்-பின்னல் வேலைகளும் செயல் படுத்துவதுடன் சத்துணவுத் திட்ட சமையல் முறைகள், குழந்தை வளர்ப்பு குடும்பநலத் திட்டம், சிறு சேமிப்பு முதலிய திட்டங்களிலும் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறது. 30 மன்றங்களில்23 தையல் மிசின்கள் சப்ளை செய்யப்பட்டுள்ளன. மகளிர் மன்றங்களின் நடைமுறைகளைக் கிராமிய அளவில் செயல்படுத்திவரும் அமைப்பாளர்களுக்குக்கௌரவ ஊதியம், சமையல் முறை, செயல்முறை, விளக்கங்கள் செய்து காட்டுவது குழந்தைகள் கண்காட்சி நடத்தி வளமான குழந்தைகளுக்குப் பரிசு வழங்குவது, அமைப்பாளர் மூலமாகக் கிராமப் பெண்களுக்கு கல்வி வளரச் செய்வதற்கான புத்தகங்கள் வழங்குதல் ஆகிய பணிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,000 வீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

### குழந்தைகள் காப்பகம்

16 ஊராட்சி மன்றங்களிலும், 16 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. குழந்தைகள் காப்பகங்களில் 12 கேர் உணவுத் திட்டத்தின் கீழும், 4 சிறப்பு ஊட்ட உணவுத் திட்டத்தின் கீழும் இயங்கி வருகின்றன. கேர் உணவுத் திட்டத்தில் உள்ள குழந்தைகள் காப்பகம் நடத்தப் பாலசேவிகாவும், ஆயாவும் நியமிக்கப்பட்டு உள்ளனர். பாலசேவிகா 2 முதல் 5 வயது வரை உள்ள 40 குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கிறார்.

மதிய வேளைகளில் ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும் 2 முதல் 5 வயது வரையுள்ள 40 குழந்தைகளுக்கும் 10 மாதம் முதல் 2 வயதுவரை உள்ள குழந்தைகள் 40 பேருக்கும், கர்ப்பிணிகள்பாலூட்டும்தாய்மார்கள் 40 பேருக்கும் ஆக மொத்தம் 120 பேருக்கு கேர் உணவு அளிக்கப்படுகிறது. இந்தக் குழந்தைகள் காப்பகங்களில் பணிபுரியும் பாலசேவிகாக்களுக்கு மாத ஊதியம் ரூ. 50-ம் ஆயாவிற்கு மாதம் ரூ. 10-ம் உணவளிக்கும் திட்டத்திற்குக் காய்கறி, பழங்கள் ஆகிய செலவுகளுக்கு ரூ. 90-ம் சாதல்வார் செலவு ரூ. 5, அமைப்பு செலவு ரூ. 7-ம் ஆக மொத்தம் ஒரு குழந்தைகள் காப்பகத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 162 அரசு மானியம் வழங்கப்படுகிறது. ஆண்டுக்கு ரூ. 18,820 இத் திட்டத்திற்கு அரசு மானியம் செலவு செய்யப்படுகிறது.

சிறப்பு ஊட்ட உணவுத்திட்ட குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பாலசேவிகாவும், ஒரு உதவி பாலசேவிகாவும் நியமனம் செய்யப்பட்டுள்ளன. 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்குப் பாலசேவிகாவால் கல்வி போதிக்கப்படுகிறது. 2 முதல் 5 வயது வரையுள்ள 30 குழந்தைகளுக்கும், 2 வயதிற்குட்பட்ட 20 குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆக 30 பேர்களுக்கு மாக மொத்தம் 80 பேர்களுக்கு மதியம் சத்துணவு அளிக்கப்படுகிறது. பாலசேவிகாக்களுக்கு மாத ஊதியம் ரூ. 40-ம் உதவி பாலசேவிகாவிற்கு மாத ஊதியம் ரூ. 30-ம் உணவுச் செலவு ரூபாய் 375-ம், சாதல்வார் செலவு ரூ. 10-ம் ஆக ஆண்டுக்குச் சிறப்பு ஊட்ட உணவுத் திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 22,260 அரசு மானியமாகச் செலவு செய்யப்படுகிறது. இவை தவிர அவ்வப்போது நடைபெறும் தீவிர சிறுசேமிப்பு, தீவிர குடும்பநலத் திட்டம் முதலிய இயக்கங்களிலும் முக்கியப் பணி புரியப்படுகிறது.

### சமூகக் கல்வித் திட்டம்

இத் திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 11,173 செலவிடப்பட்டுள்ளன. இதன் மூலமாகச் சமூகக் கல்வி நிலையங்களுக்குஅறிவூட்டும் முன்னேற்றப் பத்திரிகைகள் சமூகக் கல்வி நிலையங்களுக்கு வாங்கி வழங்கப்பட்டன. இது நீங்கலாக, விளையாட்டுப் போட்டிகள் 5 மேற் கொள்ளப்பட்டன. சமூகக் கல்வி நிலையங்களினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் கல்வி அறிவு பெற்று உள்ளனர்.

### கடன்-மாதர்-குழந்தைகள் நலத்திட்டம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் புதுக்கிணறு மானியத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ. 3,50,000 கடன் வழங்கப் பட்டுள்ளது. இதன் மூலம் பயன் அடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 247, பாசன வசதி 1,235 ஏக்கருக்குச் செய்யப் பட்டுள்ளது. இந்த ஆண்டுகளில் சப்சிடியாக மட்டும் ரூ. 92,500 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எல்.ஐ.எல் அண்டு எ.எல். சட்டப்படி 242 விவசாயிகளுக்கு ரூ. 2,42,000 வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனால் 1,047 ஏக்கர்களுக்குப் பாசன வசதி செய்து அதிக அளவில் மகசூல் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தீவிர உரக் கடன் திட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டுகளில் பயிர்களுக்கு உரங்கள் இடுவதற்காக விவசாயிகளுக்கு உரக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக அதிக மகசூல் ஏக்கர்களில் விளைவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சிரணித் தொண்டர்களின் மூலம் 5 பள்ளிகளும் இரண்டு வானொலி அறைகளும், ரூ. 24,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. 5 பள்ளிகள் மூலம் 100 மாணவர்கள் கூடுதலாகப் படிப்பதற்கு இட வசதிக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இரண்டு கிராம மக்கள் வானொலி கேட்கும் வசதிகளும் பெற்றுள்ளனர். இது நீங்கலாக ஒரு சிரணி அறிவகமும் நடைபெற்று வருகின்றது. அங்கு அறிவூட்டும் பல்வகை முன்னேற்ற இதழ்கள் வரவழைக்கப்பட்டு அதன் பயனைப் பொது மக்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

> **தமிழ் நாட்டில் இரசாயனத் தொழிற்சாலை**
>
> தமிழ்நாட்டில் 'காஸ்டிக் சோடா' என்னும் இரசாயனப் பொருள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைத்திட மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

### சமுதாயக் கிணறு

கடந்த ஐந்து ஆண்டுகளில் வெட்டப்பட்ட சமுதாயக் கிணறுகளின் எண்ணிக்கை 3 ஆகும். இதற்கென ரூ. 35,000 செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 11 ஏக்கர்கள் பாசன வசதி பெற்றுள்ளது. இந்தச் சமுதாயக் கிணறுகளின் மூலமாக விவசாயிகள் நாற்றங்கால்கள் போட வசதி செய்து தரப்பட்டுள்ளது.

### கால்நடைத் திட்டம்

### புல் வளர்க்கும் திட்டம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 15 ஏக்கர் பரப்பளவில் கினியா போன்ற புல் பயிர் செய்யப்பட்டது. இதனால் மாட்டுத் தீவனத்தின் பற்றாக்குறை ஒருவாறு நீக்கப் பட்டது. இத் திட்டத்தின் மூலம் ரூ. 27,000 உற்பத்தி பெருக்கப்பட்டதோடு 12,000, மாடுகளுக்குத் தீவனங்களும் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

### கொல்லைப்புறக் கோழிகள் வளர்க்கும் திட்டம்

இத் திட்டத்தில் 1,100 கோழிகள் வாங்கி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. இதனால் 7,500 கோழிகள் உற்பத்தி பெருக்கப்பட்டன. அத்துடன் 18,000 முட்டைகள்பெற வழிவகை செய்யப்பட்டது. இத் திட்டத்தின் மூலம் ஏற்பட்ட செலவு ரூ. 2,500, பொதுமக்கள் அடைந்த ஆதாயம் ரூ. 20,000 ஆகும்.

### கால்நடைக் கண்காட்சி

1,000 ரூபாய் செலவு செய்யப் பட்டது. தரமான கால்நடை வளர்ப்பது, கோழிகள் உற்பத்தி பெருக்குவது ஆடுகள் வளர்ப்பது பற்றி விளம்பரம் செய்யப்பட்டது. இதனால் மக்கள் தரமான கால்நடை வளர்ப்பது பற்றி கற்றுக்கொடுக்கப்பட்டன.

### தீவிரக் கால்நடை வாரவிழா

இதன் மூலம் ரூ. 300 செலவு செய்யப்பட்டது. ஒவ்வொரு கிராமங்களிலும் காலையிலிருந்து இரவு வரையில் தடுப்பு ஊசி போடுதல், சிகிச்சை அளித்தல் முதலிய வேலைகள் கால்நடைகளுக்குச் செய்யப்பட்டது. ஆடுகளுக்கு ஊசி போடுதல் குடல் பூச்சி மருந்து கொடுத்தல் வேலைகளும் செய்யப்பட்டன. இதனால் கால்நடைகளுக்கு நோய்கள் வராமல் தடுக்கப்பட்டன.

### உயர்ரகச் சேவல் விநியோகம் செய்யும் திட்டம்

இத் திட்டத்தின் கீழ் ரூ. 900 செலவு செய்யப்பட்டது. 175 வெள்ளை லெக்கான் சேவல்கள் குறைந்த விலையில் வாங்கி இனவிருத்தி செய்வதற்கு விநியோகம் செய்யப்பட்டன. இதனால் தரமான குஞ்சுகளை உற்பத்திப் பெருக்கப்பட்டதோடு 15,000 கோழிகளையும் இனவிருத்தி செய்யப்பட்டது.

### செம்மறி ஆட்டுக் கடாக்கள் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ரூ. 2,300 செலவில் உயர்தரமான மேச்சேரி போன்ற ஆடுகளை வாங்கிக் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு இனவிருத்தி செய்து வழங்கப்பட்டன. இதன்மூலம் பொது மக்கள் அடைந்த ஆதாயம் ரூ. 24,000.

### பன்றிகள் வளர்த்தல்

இத் திட்டத்தின் மூலமாக 38 பன்றிகளை ரூ. 1,500-க்கு வாங்கி விநியோகம் செய்யப் பட்டது. இது தரமான பன்றிகளை உற்பத்தி செய்வதற்கு உதவி செய்துள்ளது. தவிர தரமான பன்றிகள் இனவிருத்தி வழங்கப்பட்டன. இதன் மூலம் 40,000 பொது மக்கள் பயன் அடைந்துள்ளனர்.

### மீன் குஞ்சுகள் வழங்கும் திட்டம்

இத் திட்டத்தின் மூலம் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 10,000 ஆகும். இந்தத் தொகையைக் கொண்டு ஒரு இலட்சம் மீன் குஞ்சுகள் வாங்கிப் பொது மக்களுக்கு விநியோகம் செய்ததோடு குளங்களிலும் விடப்பட்டன. இது பொது மக்களின் உணவுப் பற்றாக் குறையை நீக்க ஒருவாறு உதவி செய்துள்ளது.

# சிறுசேமிப்பிலும் சிறந்து விளங்கும் தஞ்சை மாவட்டம்

குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் அனைத்து இந்தியாவிலும் முதலிடம் பெற்றுள்ள தஞ்சை மாவட்டம், சிறு சேமிப்பிலும் தமிழ்நாட்டில் முதலிடம் வகிக்கும் மாவட்டமாகத் திகழ்கிறது.

தஞ்சை மாவட்டத்தில், அரசின் ஆணைக்கிணங்க, கடந்த பத்து ஆண்டுகளாகச் சிறு சேமிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் அதிக அளவு அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டதால் பெருவாரியான தொகை எடுக்கப்பட்டு நிகர முதலீடு கணிசமான அளவில் கிடைக்க இயலாத நிலையே 1971-72 வரை இருந்து வந்துள்ளது.

கடந்த நிதி ஆண்டில் அதாவது 1972–73 தொடக்கத்தில் 35·27 இலட்சம் ரூபாய் முதலீட்டுக்கு மேலாக எடுக்கப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் முந்திய ஆண்டில் பெருவாரியான அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கில் முதலீடு செய்யப்பட்ட தொகை எடுக்கப்பட்டதே. இதை ஈடு செய்து ஆண்டு இலக்கினை அடைய பல சிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து சிறு சேமிப்புத் திட்டத்தில் முதலீடு பெற ஊழியப் பட்டியல் மூலம் சேமிப்பை அதிகரிக்க 15–4–1972 முதல் 30–6–1972 முடிய முனைப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டதில் தமிழக அரசினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 10,000 கணக்குகளுக்கு 14,488 புதிய கணக்குகள் துவக்கி 144·88 விழுக்காடு காட்டப்பட்டது. சென்ற ஆண்டுத் தொடக்கத்தில் இம் மாவட்டத்தில் உள்ள 8,440 கிராம அதிகாரிகளில் 1,435 கிராம அதிகாரிகளே இத்திட்டத்தில் சேர்ந்திருந்தனர். இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட தீவிர முயற்சியின் காரணமாகப் புதிதாக 4,771 கிராம அதிகாரிகள் சேர்க்கப்பட்டு 73·53 விழுக்காடு சாதனை காட்டப்பட்டது.

1-10-1972 முதல் 31-10-72 முடிய சிறு சேமிப்புக்காகத் தஞ்சை மாவட்டத்தில் ஒரு முனைப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து அரசுத் துறை அலுவலர்கள், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஒத்துழைப்புடன் முனைப்பு இயக்கக் காலத்தில் 313·33 இலட்சம் மொத்த முதலீடும் ரூ. 228·22 இலட்சம் நிகர முதலீடும் செய்யப்பட்டது.

இதில் ரூபாய் 24·12 இலட்சம் மட்டுமே அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது. மீதித் தொகையான ரூபாய் 204·1 இலட்சமும் 1 முதல்15 ஆண்டுச் சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1972–73 ஆண்டு முழுவதும் 5 முதல் 15 ஆண்டு வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்திலும் 3 ஆண்டு தொடர்பு வைப்புத் தொகைத் திட்டத்திலும் 22,755 புதிய கணக்குகள் துவக்கப்பட்டன.

நமது அரசு 1972–73-ஆம் நிதி ஆண்டு தஞ்சை மாவட்டத்திற்குச் சிறு சேமிப்புத் திட்டத்தில் கொடுத்த இலக்கு ரூபாய் 80 இலட்சம். ஆனால், 180·43 இலட்சம் நிகர முதலீடு செய்து 225·54 விழுக்காடு அடைந்து தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் தஞ்சை முதலிடம் வகிக்கிறது.

கடைசியாக வந்த அரசினர் ஆய்வுரையின்படி தஞ்சை மாவட்டம் சிறுசேமிப்பு முதலீடு செய்வதில் முதலிடமும், கோவை மாவட்டம் முதலீடு செய்வதில் இரண்டாவது இடமும் பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

1968–69 முதல் 1971–72 முடிய 4 ஆண்டுகளின் தஞ்சை மாவட்டத்தில் நிகர சேமிப்பு ரூபாய் 95·04 இலட்சம்தான். ஆனால் 1972–73 ஒரு ஆண்டில் மட்டும் தஞ்சை மாவட்டத்தில் நிகர சேமிப்பு ரூ. 289·43 இலட்சம் ஆகும்.

**பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.**

பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 14,500 இலட்சமாகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 16,798 இலட்சமாகும்.





# மனைவளம் ஓங்கிட

வளர்ச்சி குன்றிய எந்த நாடும் உணவு, உடை, உறையுள் பற்றிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருப்பது இயற்கையே. நமது நாட்டில் வீட்டுவசதிப் பற்றாக்குறை கடுமையாக இருப்பதை வலியுறுத்த வேண்டிய தேவையில்லை.

கிராம வீட்டு வசதித் திட்டங்களை விழிப்புடன் நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், அத்துறையில்தான் தேவைகள் மிகுந்து காணப்படுகின்றன.

நகர்ப்புறப்பகுதிகளில் தொழில்கள் வளர்ந்து வருவதால் நாட்டுப்புறங்களிலிருந்து பெரும்பாலான மக்கள் நகரங்களுக்கு வந்து குடியேறுகின்றனர். அதனால் நகர்ப்புறப் பகுதிகளில் வீடுகள் பற்றாக்குறை மிகக் கடுமையாக உள்ளது.

நமது அரசு, பாமர மக்களுக்குப் பெரும்பாலும் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கும் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், நல்ல சுற்றுப்புறச் சூழல்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி எண்ணத் தொடங்கியது. முக்கியமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வீடுகள் கட்டுவதற்குத் தமிழ்நாடு அரசு முதற்கண் நிதி வழங்கத் தொடங்கியது.

1945-ஆம் ஆண்டில் மாநகர வளர்ச்சிப் பொறுப்புக் கழகம் அமைக்கப்பட்டது. இந்தக் கழகம் அரசு தந்த நிதி உதவியால் வீட்டுத் தேவையைப் பெருமளவில் நிறைவு செய்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் போன்ற ஓரிரண்டு திட்டங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டாலும், இப்பணித் திட்டங்கள் இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில்தான் முனைப்போடு மேற்கொள்ளப்பட்டன.

இக்கால அளவுகளில் குடிசைப் பகுதி ஒழிப்புத் திட்டம், மலைத்தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், கிராம வீட்டு வசதித் திட்டம் போன்ற பல வீட்டு வசதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வீட்டு வசதித் திட்டம் சென்னை மாநகரில் மட்டுமன்றி மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதப்பட்டு, சென்னையில் ஒரு பிரிவும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ஆக மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளுடன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்கள் மீது அதிகார வரம்பு உடையதாகும். பல துறைகளின் உறுப்பினர்கள் அடங்கிய இந்த வாரியம் சட்டப்படி அமைந்ததாகும். எனவே, இந்த வாரியம், இம்மாநிலத்தின் வீட்டு வசதித் திட்டங்களை வகுத்து ஒருங்கிணைத்து வேலைத் திட்டங்களை விரைவாகவும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுகிறது.

முன்பு கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த கூட்டுறவு வீட்டு வசதிப் பிரிவு, இப்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டங்களைத் தவிர நடுத்தர வருமானம் உள்ளோர் வீட்டு வசதித் திட்டம், நிலத்தைக் கையகப்படுத்தி மேம்படுத்தும் திட்டம், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம் போன்ற பல திட்டங்கள், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கு மலிவான வீட்டு வசதித் திட்டம்:— ஐந்தாண்டுத் திட்டங்களை மேற்கொண்ட பிறகு தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் விளைவாகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களுள் பெரும்பாலோருக்கு வீடுகட்டிக் கொள்ள இயலாது. அதனால் வேலை செய்யும் இடத்திற்கு அப்பால் மிகத் தொலைவிலுள்ள இடங்களில் அவர்கள் வசிக்க நேரிடுகிறது. சில தொழிற்சாலை நிருவாகத்தினர் தங்களது தொழிலாளர்கட்கும் பணியாளர்கட்கும் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கின்றனர். ஆனால், இதனாலேயே சிக்கல் தீர்ந்துவிடாது. எனவே, வேலை செய்யும் இடங்களுக்கு அருகிலேயே நல்ல சூழலில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதற்கு இத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் சட்டம் பொருந்துகிற தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்குப் பொதுத்துறை, கூட்டுறவுத்துறை, தனியார் துறை ஆகிய மூன்றுக்கும் உதவி அளிக்கப்படுகிறது. ஒற்றை மாடிக் கட்டடங்களில் இரண்டு அறைகள் கொண்ட சிறிய குடியிருப்புகளுக்கு, ரூ. 4,850 விலையும், இரண்டு அறைகள் கொண்ட முறையான குடியிருப்புகளுக்கு ரூ. 5,600 விலையும் உச்சவரம்பாக வரையறுத்துள்ளது. மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்







# வீட்டு வசதித் திட்டம்

தொகையுள்ள இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 1,100 கூடுதல் விலை அனுமதிக்கப்படுகிறது. ஒரு இலட்சம் முதல் மூன்று இலட்சம் வரை மக்கள் தொகையுள்ள இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூ 450 கூடுதல் விலை அனுமதிக்கப்படுகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் தொழிலாளர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை—பொதுத் துறையில் 2,998; கூட்டுறவுத் துறையில் 2,055; தனியார் துறையில் 278.

குறைந்த வருமானத் தொகையினர்க்கான வீட்டு வசதித் திட்டம்:—இந்தத் திட்டம் 1955—56-இல் வகுக்கப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாகவும், அதன் கூட்டுறவுப் பிரிவின் வாயிலாகவும் மாநில அரசு தற்போது இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7,200-க்கு மேற்படாத வருவாய் உள்ளவர்கள் இத்திட்டத்தால் பயனடைவர். வீடு ஒன்றுக்கு அதன் கட்டுமான பணிக்காகும் செலவில் (நிலம் வாங்குவதற்காகும் செலவு நீங்கலாக) 80 சதவிகிதத்திற்கு மேற்படாதிருந்தால் ரூ. 12,500 (இது இப்போது 14,500-க்கு உயர்த்தப்பட்டுள்ளது) என்ற பேரளவுக்குட் பட்டுக் கடன் வழங்கப்படுகிறது.

ஆண்டுக்கு ரூ. 7,200-க்கு மேற்படாத ஆண்டு வருமானம் உள்ளவரின் நன்மைக்காகவும் வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்டுகிறது. இந்த வீடுகளை வாடகை அடிப்படையிலும், தவணைக் கொள் முதல் அடிப்படையிலும் ஒதுக்குகிறது. வீடு ஒன்றுக்கு ரூ. 12,500 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டுக் கட்டுமான செலவின் 80 சதவிகிதம் வீடு ஒதுக்கப் பெற்றவர்களால் 20 ஆண்டுகளில் தவணை முறையில் செலுத்தப் படக்கூடும். எஞ்சிய தொகை மொத்தமாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 1973—74-இல் 150 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டத்தில் ரூ. 80 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் வரை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 3,223. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 2,142.

நடுத்தர வருமானத் தொகுதியினர்க்கான வீட்டு வசதித் திட்டம்:—இத்திட்டம் 1959-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வகுக்கப்பட்டது. வீடுகள் கட்டுவதற்காக ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கு மேற்பட்டு ரூ. 18,000-க்கு மேற்படாத வருமான முடையோருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம், கூட்டுறவுப் பிரிவு ஆகியவற்றுல் நிறைவேற்றப் படுகிறது. நிலம் உட்படக் கட்டுமான செலவு 80 சதவிகிதத்திற்கு மேற்படாமல் வீடு ஒன்றுக்கு ரூ. 25,000 (இப்போது ரூ. 27,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது) என்ற உயரளவு வரையறைக்குட்பட்டுக் கடன்கள் வழங்கப்படுகின்றன. நிலத்தின் விலை நீங்கலாக, கட்டுமான செலவு ரூ. 35,000-க்கு மேற்படக் கூடாது. தகுதியானவர்களுக்கு விற்பனை செய்வதற்காக அல்லது தகுதியானர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக வீடுகள் கட்ட இந்தக் கடன்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வீடுகள் கட்டுவதற்காகத் தனியார்களுக்கும் கூட்டுறவுப் பிரிவு கடன்கள் கொடுக்கிறது.

இரண்டாவது, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை—கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்: 838; தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம்: 776.

நிலம் கையகப்படுத்துதல்—மேம்படுத்துதல் திட்டம்:—நிலத்தின் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்காக முன்னதாக நிலத்தைக் கையகப் படுத்துவதும், வீடு கட்டும் காரியங்களுக்கு நியாய விலையில் நிலம் கிடைக்கச் செய்வதும், வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் இட நெருக்கடியைக் குறைப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

இத்திட்டம் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஆதாய — விரயமற்ற அடிப்படையில் நடத்தப் படுகிறது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், நகரிலும், நகரைச் சுற்றிலும், பெரிய நிலப் பகுதிகளைக் கையகப்படுத்தி, அவற்றை எல்லா வசதிகளும் நிரம்பிய சிறு சிறு நகர்களாக உருவாக்குகின்றது. பொது வசதிகளாகிய பள்ளிகள், மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள் முதலியவற்றுடன் சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்குதல், கழிவு நீரகற்றும் வசதி, பூங்கா ஆகியவை இந்த நகர்களில் ஏற்படுத்தப்படும்.

இத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பொதுமக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு வீடுகள் கட்டும் மனைகள் ஒதுக்கப்படுகின்றன. வீடுகளும் குடியிருப்புகளும், அங்கணங்களும் முழு உரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவர்கள் முதலீட்டை 15 முதல் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துகின்றனர். ஒதுக்கப்பட்ட அல்லது பொது ஏலத்தில் விற்கப்பட்ட மனைகளை ஐந்து ஆண்டுக்காலத்திற்குள் வேறு எவரிடமும் திரும்ப விற்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அவை கொடுக்கப்படுகின்றன. அதாவது, அக்கால அளவிற்குள் அவர்கள் அங்கு வீடு கட்டிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்களுக்கு உரிமை ஏற்படுவதனால் நிலத்தையோ, வீட்டையோ அவர்கள் விற்க விரும்ப மாட்டார்கள். இதனால் நிலங்களின் விலை அதிகரிப்பது தடுக்கப்படுகிறது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், மேம்பாடு செய்யப்பட்ட மனை ஒவ்வொன்றையும் ரூ. 7,000 முதல் ரூ. 8,000 வரை விற்கின்றது. இத்துடன் கூட மூலை மனைகள் பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதி ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தால் வழங்கப்பட்ட நிதிகளிலிருந்தும் விற்பனைத் தொகையை மீண்டும் பயன்படுத்துவதன் மூலமும் பெறப்படுகின்றது.

☞ இவ்வாறு மனை வளம் ஓங்கிட அரசு ஆற்றும் முயற்சிகளுக்கு உறுதுணையாய் இருப்போம்.



# அலர்ஜி என்றால் என்ன?

“நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் பிணி இன்னதென்று கண்டுபிடிக்க முடியாவிட்டால், அவருக்கு ஏதோ ஒன்று ஒத்துக்கொள்ளவில்லை, அதனுல் தான் நோய் ஏற்பட்டிருக்கின்றது என்று மருத்துவர்கள் சொல்லி விடுவார்கள்” என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட நிலைமையுடன் கொஞ்சம்கூடப் பொருந்தாமல் முற்றிலும் மாறுபட்ட செயல் அல்லது விளைவு ஏற்படுவதையே ‘ஆகாது’ என்று சொல்லுகிறோம். இதைத்தான் ‘அலர்ஜி’ என்கிறோம்.



சாதாரணமாகத் தீங்கு விளைவிக்காத ஒரு பொருள் சில பேருக்கு ஒத்துக் கொள்ளாமல் போவதைக் காண்கிறோம். நாளடைவில் இவை அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கத் துவங்குகின்றன. இத்தகைய உடல் நோய்களுக்குக் காரணமான பொருட்களுக்கு ‘அலர்ஜென்’ என்று பெயர்.

ஆகாத அல்லது ஒத்துக் கொள்ளாத பொருட்களை உட்கொள்ளும்போது அல்லது அவற்றுடன் தொடர்பு கொள்ளும்போது உடலில் தீவிர இயக்க விளைவுகள் ஏற்படுகின்றன. இந்த அலர்ஜென்களால் எந்த அளவுக்குத் தீங்கு விளையுமென்பது, அவற்றை உட்கொள்ளும் அல்லது அவற்றுடன் தொடர்பு கொள்ளும் மனிதரின் உடல் எந்த அளவுக்கு அவற்றை எதிர்க்கிறது என்பதையும், எவ்வளவு அதிகமாக அவற்றை உட்கொள்ளுகிறுர் என்பதையும் பொறுத்ததாகும்.

நுரையீரலுக்கு ஏதேனும் ஒத்துக்கொள்ளாவிட்டால், ஆஸ்த்துமாவும், நாசிக்கு ஒத்துக் கொள்ளாவிட்டால், நீர்ப் பிடித்தலும் ஏற்படுகின்றன. அதேபோன்று உடலுக்கு ஏதேனும் ஒத்துக் கொள்ளாவிட்டால் ‘எக்சிமா’ சொறியும், பிறதோல் நோய்களும் ஏற்படுகின்றன

சிலருக்கு ஆகாதவையும், அவர்கள் உடலில் மேற்கூறிய நோய் அறிகுறிகள், அல்லது இயக்க விளைவுகள் ஏற்படுத்துகின்ற பொருட்களுக்கு அலர்ஜென் என்று பெயர். பெரும்பாலானவர்களுக்கு இவை தீங்கு விளைவிப்பதில்லை. தூசி, பூக்களின் மகரந்தத்தூள், காளான்களின் இனப் பெருக்கத் துகள் (ஸ்போர்), பூச்சிகளின் எச்சம், பறவையின் இறகு, குதிரை, நாய், பூனை, ஆடு, பசு போன்ற விலங்குகளின் தோலிலிருந்து விழும் பொடுகுகள், இரசாயனங்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவை சாதாரணமாகக் காணப்படும் அலர்ஜென்கள். மீன், முட்டை, பால், பழக்கொட்டைகள், வெங்காயம் போன்ற உணவுப் பொருட்களும் சிலருக்கு ஒத்துக் கொள்ளாமல் போகலாம்.

உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத பொருட்கள், ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. பாதிக்கப்பட்டவருக்கு எந்தப் பொருள் ஒத்துக்கொள்ளவில்லை என்பதை தீவிரப் பரிசோதனைகளின் மூலம் கண்டுபிடிக்கவேண்டும். அந்த வட்டாரத்தில் மனிதர்களுக்கு ஆகாத பொருட்களின் சாற்றை எடுத்து, ஒவ்வொன்றையும் பாதிக்கப்பட்டவரின் தோலில் செலுத்திப் பரிசோதனை செய்ய வேண்டும். ஒவ்வொரு மருத்துவரும் தமது நகரம் அல்லது மாவட்டம்— சொல்லப்போனல் மாநில முழுவதிலும் காற்றிலும், சுற்றுப் புறத்திலும், இருக்கக்கூடிய ‘அலர்ஜென்கள்’ பற்றிய எல்லாச் செய்திகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

வெவ்வேறு பருவங்களிலும், மாதங்களிலும் எந்த வகையைச் சேர்ந்த மகரந்தத் துகள்களும் காளான் இனப்பெருக்கத் துகள்களும் காற்றுமண்டலத்தில் காணப்படுகின்றன என்று கண்டுபிடிப்பதற்காகப் பல கள ஆராய்ச்சிகள் நடந்தன. பின்னர் இந்தத் துகள்கள் தேவையான அளவில் சேமித்து வைக்கப்பட்டன. இவற்றின் சாறுகளும், உடலுக்கு ஒத்துக் கொள்ளாதவை என்று கருதப்படும் தூசிகள். பூச்சிகள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் சாறுகளும் தயாரித்து வைக்கப்பட்டன.

இதையடுத்து, யார் யாருக்கு எந்தெந்தப் பொருள் ஒத்துக் கொள்ளவில்லை என்று கண்டறிவதற்காக இந்தப் பொருட்களைக் கொண்டு நூற்றுக் கணக்கான நோயாளிகளின் தோலில் சுமார் 50,000 பரிசோதனைகள் செய்யப்பட்டன. தில்லியிலுள்ள பட்டேல் மார்பு நோய் ஆராய்ச்சிக் கழகம் பல்லாண்டுகள் இது பற்றித் தொடர்ச்சியாக ஆராய்ச்சி நடத்தியது. இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக மருத்துவர்களுக்கு அலர்ஜென்கள் பற்றிப் பல அரிய செய்திகள் கிடைத்திருக்கின்றன. இப்போது ஆன்டிஜென்களைப் பெருமளவில் தயாரித்து, நாடெங்கிலுமுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கும், மருத்துவக் கழகங்



களுக்கும் கொடுத்து வருகிறது. இவற்றை அண்டை நாடுகளுக்கும், தெற்காசிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மர்மமாக இருந்த ‘அலர்ஜி’ இன்று மருத்துவ முன்னேற்றத்திற் கெதிர் நிற்க முடியாமல் அலறுகிறது!

# நமது நண்பன்!

காவல் துறையும் அதன் ஓர் அங்கமாகத் திகழும் தீயணைப்புப்படையும் நமக்கு நண்பர்களாக இருந்து உதவிகள் பல புரிந்து வருகின்றன. தீயிலிருந்து உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றி வரும் தீயணைப்புப் படை பற்றிய சில விவரங்களைத் தெரிந்து கொள்வோம் !

தீயணைப்புப் படை, 1967 அக்டோபரிலிருந்து தீயணைப்புத் துறை இயக்குநரின் நிருவாகத்தின்கீழ் ஒரு தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த மாநிலத்தில் 61 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், ஸ்ரீரங்கம், பரமக்குடி, இராயபுரம் ஆகிய இடங்களில் மூன்று தீயணைப்பு நிலையங்கள் அமைக்



கப்பட்டுள்ளன. உத்தமபாளையம், கோவில் பட்டி, மேட்டூர் ஆகிய மூன்று நகரங்களிலும் தீயணைப்பு நிலையங்களை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1972 டிசம்பர்த் திங்கள் இறுதிவரை, தீயணைப்பு நிலையங்கள், 4,640 அழைப்புகளைப் பெற்றுச் செயல்பட்டன. இவற்றில் 49 தீ விபத்துக்கள், உயிர் இழப்பு அல்லது ரூ. 50,000-க்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் சம்பந்தப்பட்ட, கடுந் தீ விபத்துக்களாகும். தீயினால் அழிக்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 123·1 இலட்சமாகும். அழிவினின்று மீட்கப்பட்ட உடைமையின் மதிப்பு ரூ. 825·7 இலட்சமாகும்.

தீயணைப்புப் படை 1972 டிசம்பர் இறுதி வரையில் 14,020 ஆம்புலன்ஸ் வண்டிக்கான அழைப்புக்களைப் பெற்றது.

1972-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 6-ஆம் நாள் ஏற்பட்ட புயலின் காரணமாக வரலாறு காணாத அளவு வெள்ளம் ஏற்பட்டதால் பாதிக்கப்பட்ட தென் ஆர்க்காடு மாவட்டத்தில், 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ஆம் நாள் முதல் 12-ஆம் நாள் வரையில் மிகக் கடுமையான சூழ்நிலைகளில் தீயணைப்புப் படையினர் அயராது உழைத்து, வெள்ளத்தால் சூழப்பட்ட கிராமங்களிலிருந்து 3,065 பேர்களையும், 105 கால்நடைகளையும் காப்பாற்றினர்.

1972-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 8-ஆம் நாளில் சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டணத்தில் வெள்ளத்திலிருந்து 23 பேர்களைத் தீயணைப்புப் படையினர் காப்பாற்றினர். 1972-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 9-ஆம் நாளன்றும், சேலம் மாவட்டத்தில், விக்டோரியா தியேட்டர், ராயல் டாக்கீஸ், குகைப் பாலம் ஆகியவற்றுக்குப் பின்புறத்தில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளிலிருந்தும், மணி முத்தாற்றின் தெற்குக் கரையில் அமைந்துள்ளபல பகுதிகளிலிருந்தும் 64 பேர்களைக் காப்பாற்றினர். அது



போன்று 1972-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 9-ஆம் நாளில் பவானி வட்டத்தில் எலவமலை கிராமத்தில் வெள்ளத்திலிருந்து 200 பேர்களைத் தீயணைப்புப் படையினர் காப்பாற்றினர்.

## பெரிய அச்சகம்

மூன்று வட்டார அச்சகங்களையும், கிளை அச்சகங்களையும் கொண்டுள்ள எழுதுபொருள் அச்சுத்
துறையில் ஏறத்தாழ 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில், 2,800 தொழிலாளர்கள்
வள்ளலார் நகரிலுள்ள தலைமை அச்சகத்தில் பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு அரசு அச்சகம்
இந்நாட்டில் உள்ள மிகப் பெரிய அச்சகங்களில் ஒன்றாகும். எழுதுபொருள் - அச்சுத்துறையை 'வணிக
முறையில்' நடத்தும் கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த அச்சகத்தை மேம்படுத்துவதற்காக அரசு சென்னை, சூளையில் ஆனைக்காரன் தோட்டத்தில் கிளை
அச்சகம் ஒன்றை அமைப்பது பற்றி எடுத்துள்ள நடவடிக்கை முக்கியமானதாகும். இதற்காகக் கட்டடம்
ஒன்று குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும். இதனால் 800 பேர்களுக்கு
வேலைவாய்ப்புக் கிட்டும்.

அரசின் நிதி நிலையைப் பொறுத்து, எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும் வட்டார அச்சகங்களை
அமைக்க அரசு யோசித்து வருகிறது. முதலில் மதுரையில் அச்சகம் ஒன்றைத் திறப்பதற்கு தீர்மானித்
திருக்கிறது. இதற்காகத் தேவைப்படும் 3 ஏக்கர் பரப்பளவுள்ள மனை ஒன்றையும் தன் வயப்படுத்தியுள்ளது.
கட்டடப் பணிகளைத் தொடங்குவதற்கும் நிருவாக அனுமதி வழங்கியுள்ளது.



# தமிழ்ச் சமுதாயத்தின் புதிய வரலாற்றுத் தொடக்கம்

# பூம்புகார் விழா

"காணாத கண் என்ன கண்ணே ?" என்பதற்குச் சரியான விளக்கம் என்ன தெரியுமா?

பூம்புகார் விழாவைச்-சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழாவை-ஏப்ரல் திங்கள் 17, 18 நாட்களில்—தஞ்சை மாவட்டம் பூம்புகாரில் நடைபெற்ற இலக்கிய விழாக்களைக் "காணாத கண் என்ன கண்ணே?" என்பது தான்.

தமிழ்ச் சமுதாயத்தின் புதிய வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த காட்சிகள் கொஞ்சமா?

மாயூரத்திலிருந்து பூம்புகார் நோக்கிப் போகும் பாதை ; அன்று கரிகாற் பெருவளத்தான் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கல்லணைக்குச் சென்ற சாலை வழியெல்லாம் வளைவுகள் . . தோரணங்கள் . . விழாக் கோலம்! மகிழ்ச்சி பொங்கிடும் எழுச்சி நிலை!

இந்தச் சாலையில் மட்டுமா?

கொள்ளிடத்திலிருந்து சீர்காழி வழியாகப் பூம்புகார் வரும் சாலையிலும் சரி . . தரங்கம்பாடி, ஆக்கூர் வழியாக வரும் சாலையாக இருந்தாலும் சரி—எங்கும் விழாக் கோலம்! மகிழ்ச்சி வெள்ளம்!

வருகின்ற இந்தச் சாலைகள் அனைத்தும் இணைந்து பூம்புகார் நோக்கிச் செல்லும் சாலையில் . .

புதிதாக . .

ஏழு தோரணவாயில்கள்! பூம்புகார் விழாவுக்காக இரவு பகலாகக் கட்டி முடிக்கப்பட்டவை; கண் கொள்ளா அழகுடன் காட்சி அளித்தன.

### முதல் நாள் நிகழ்ச்சி

பூம்புகார் புதுவாழ்வு பெறும் பொன்னாள் பிறந்துவிட்டது.

அணிதேர் புரவி ஆட்பெரும் படையோடு ஆண்டிருந்த சோழ மன்னர்கள் காலத்தில் பெற்றிருந்த பெருமையை மீண்டும் பூம்புகார் பெற்றிட–நமது அரசு புத்துயிர் ஊட்டிடும் பொன்னான நிகழ்ச்சி கண்டிட-எங்கும் மக்கள் வெள்ளம், சாலைகளின் இருமருங்கிலும் அடர்ந்திருந்த மரங்கள் எல்லாம் மக்களாய்க் காய்த்தன போலும். எங்கும் மக்கள் திரள்.

இமயத்தில் புலி பொறித்த சோழ மன்னர்களின் வழித் தோன்றல்.

கங்கைகொண்ட காவிரி மன்னன்

கரிகாற் பெருவளத்தான் பவனி வரும் உலா தொடங்குகிறது.

முதலில் .........

வளம் கொழிக்கும் நிலத்தால்
வாகை கொஞ்சும் வீரத்தால்
வரலாற்றுப் புகழ்க்கொடியை-
வானளாவிப் பறக்கவிட்ட
புலிக்கொடியைக் கையிலேந்திச் சோழநாட்டு வீரன் குதிரையிலே வர..

அவனைத் தொடர்ந்து நாயன இசை, பஞ்சமுக வாத்தியங்கள், தாரை, துந்துபி, எக்காள முழக்கம்.....

சோணாட்டு மாமன்னன் கரிகாற் பெருவளத்தான் யானையில் அமர்ந்து வருகிறான்.

மாமன்னனைத் தொடர்ந்து மத்தகங்களின் அணிவகுப்பு.

காவிரி மண்ணில் களிறுகள் கூட்டமோ என்று எண்ணும் படி யானைகள் பின்தொடர்ந்தன.

''சூழ்வினைச் சிலம்பு
காரண மாகச்
சிலப்பதிகாரம்
என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர்
பாட்டுடைச் செய்யுள்''

என்ற இளங்கோவடிகள், செந்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரத்தை எழுதிடும் காட்சி, அலங்கார ஊர்தியில் அமைக்கப்பட்டு இலக்கியத் தேர்கள் வரிசையில் முன்னோடியாக வந்தது.

இதனைத் தொடர்ந்து சிலம்பின் காட்சிகளை விளக்கிடும் இலக்கியத் தேர்கள், பதினொன்று.

இடை இடையே தமிழ்நாட்டின் பண்டைய இசைக் கருவிகளின் முழக்கம்.

கரக ஆட்டம், நாட்டிய நிகழ்ச்சி, மயிலாட்டம், நாட்டிய மாடும் குதிரை, பொய்க்கால் குதிரை ஆட்டமெனப் பல கலை ஆட்டங்கள்! வீர விளையாட்டுகள்!

புரவிகள் அணிவகுப்பு
வீரர்கள் அணிவகுப்பு
மக்கள் அணிவகுப்பு

எனப் பல்வேறு அணிவகுப்புகள்.

கரிகாலன் காலத்து உலாவைக் காணாதவர்கள் நாம் என்றாலும், அதைக் கற்பனைசெய்து பார்க்கக்கூட வேண்டாம். இந்த ஊர்வலத்தைப் பார்த்தாலேபோதும்!

திருவெண்காட்டுச் சாலையிலிருந்து தொடங்கிய இந்த ஊர்வலம் செல்லும் வழி முழுதும் மக்கட் கடல்தான்.

ஆமாம், அன்று பூம்புகாரின் ஒரு பகுதியைக் கீழ்த்திசைக் கடல் மூழ்கடித்தது. ஆனால் இன்று, பூம்புகார் பரந்து விரிந்து கிடந்த எல்லா ஊர்களையும் மக்கட் கடல் மூழ்கடித்தது!

* * *

அன்றையப் பூம்புகாரை, மீண்டும் கண்டிடப் புதிய பூம்புகார் அமைத்திடும் அரும்பணிகளின் தொடக்கமான கால்கோள் விழாக்கள்.

பூம்புகாரில் அமைக்கப்பட்டுள்ள முத்துப் பந்தரில் நிகழ்ச்சி தொடங்குகிறது.

தமிழக முதல்வர் கலைஞரே குழுமியுள்ள மக்களை வரவேற்கிறார்.

''தமிழ்ச் சமுதாயத்தின் புதிய வரலாற்றை எழுதப் புகுந்தவர்களே!''—என்று அவர் விளிக்கத் தொடங்கியவுடன் எழுந்த கையொலி அவர் வரவேற்புரை முடியும் வரை கேட்கிறது. அந்த அளவுக்குக் கூடியிருந்த மக்களிடம் உணர்ச்சிப் பெருக்கம், மகிழ்ச்சி முழக்கம்!

மாண்புமிகு தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள், தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இலஞ்சி மன்றத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

மாண்புமிகு உணவமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் அருகன் கோட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரிசன நல அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் பாவை மன்றத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் பௌத்தப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தொழிலமைச்சர்
திரு. செ. மாதவன்

உணவமைச்சர்
திரு. மன்னை
நாராயணசாமி

போக்குவரத்துத் துறை
அமைச்சர்
திரு. எஸ். இராமச்சந்திரன்

வேளாண்மை அமைச்சர்
திரு. அன்பில்
தருமலிங்கம்



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் நெடுங்கல் மன்றத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் திருமால் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் கொற்றப் பந்தருக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் முருகக் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு பிற்பட்டோர்நலத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிஞர் அண்ணா சுற்றுலா மாளிகைக்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது தான் முதல்வர் கலைஞர் அவர்கள் பூம்புகார் புத்துருவம் பெறுவதற்கான திட்டங்களை வெளியிட்டார்கள். முதல்வர் கலைஞர் அவர்கள் தமது உரையில் :

''இந்தப் பூம்புகாரில்-அழகிய கட்டடங்கள், எழிலான மாடங்கள் அமைப்பது மாத்திரம் தான் அரசின் திட்டமல்ல. இப்பகுதியில் வாழும் ஏழை—எளிய மீனவர்களுக்காகத் தமிழக அரசு இப்போது தீட்டியிருக்கிற ஒரு திட்டத்தை இங்கே நான் வெளியிடுவது நலம் என்று கருதுகிறேன்.

''இந்தப் பூம்புகார்க் கடற்கரை ஓரத்தில் கிட்டத்தட்ட எழுநூறு மீனவர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 400 பேர் கட்டு மரத்தை வைத்துக்கொண்டு தொழில் நடத்துபவர்களாகவும், 15 பேர் படகுகளை வைத்துக்கொண்டு தொழில் நடத்துபவர்களாகவும் 3 குழுவினர் விசைப்படகுகள் வைத்துக்கொண்டு தொழில் நடத்துபவர்களாகவும் இருக்கிறார்கள்.

''கடற்கரையிலிருந்து பத்துக் கல் தொலைவு சென்றால் இன்னும் அதிகமான மீன் வளத்தைப் பெற முடியும் என்றும், அப்படி அங்கே கிடைக்கிற அந்த மீன் வளம் வேறு பகுதியிலே கிடைக்கிற மீன் வளத்தைவிட உயர்ந்ததென்றும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

''அந்த மீன் வளத்தையெல்லாம் இந்தப் பகுதியிலே வாழ்கிற மீனவ மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் அவர்களுக்கு ஒரு சிறப்பான திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

''700 மீனவர்களில் பெரும்பாலோர் பயன்படுத்தும் வலைகளெல்லாம் நூல் வலைகளாக இருக்கிறதென்றும், குறைவானவர்களுக்குத்தான் நைலான் வலை தரப்படுகிறது என்றும் அறிந்தேன்.

''இங்கே மீனவர்கள் பலர், கடற்கரை ஓரத்தில் குடிசைகளில் வாழ்ந்துகொண்டுள்ளனர். அவர்களெல்லாம், இங்கே பாவத்தைத் தீர்க்க இலஞ்சி மன்றமும், பாவை கண்ணீர் வடிக்க ஒரு மன்றமும், சுற்றுலா விடுதியும் கட்டுகிற நேரத்தில் குடிசையிலே இருக்கிற எங்கள் கண்ணீரைத் தீர்க்க நீங்கள் எண்ணமாட்டீர்களா என்று அவர்கள் நினைப்பதற்கு முன் அதைச் செய்து முடிக்க வேண்டும் என்று கருதும் இந்த அரசு, வீட்டு வசதித்துறை வாயிலாகவும், சென்னையில் உள்ள குடிசை மாற்று வாரியம் தரும் அனுபவத்தின் அடிப்படையிலும், இங்குள்ள மீனவ மக்களுக்கெல்லாம் விரைவில் அவர்களது குடிசைகளை மாற்றி நல்ல வீடுகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இங்குள்ள 700 மீனவப் பெருங்குடி மக்களுக்கு—பெரும்பாலோர்க்குக் கிடைக்காத நைலான் வலைகளை வழங்கவும் அவர்களுக்குப் படகுகளை அளிக்கவும் இந்த ஆண்டிலேயே ஒரு திட்டத்தை அடுத்த திங்களிலே இதன் தொடர்பாகத் தொடங்குவது என்றும், இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படுகிற அந்தத் திட்டத்துக்கு 40 இலட்சரூபாய் மீனவர்களுக்காகச் செலவிடுவது என்றும் அரசின் சார்

சட்டமன்றத்
துணைத் தலைவர்
திரு. பெ. சீனிவாசன்

மீன் துறை
அமைச்சர்
திரு. ஓ. பி. ராமன்

கூட்டுறவுத் துறை
அமைச்சர்
திரு. சி. பா. ஆதித்தனார்

சுற்றுலாத் துறை
அமைச்சர்
திரு. க. இராசாராம்



பில் தீர்மானித்துள்ளோம் என்பதை என் சார்பிலே அல்ல—எங்களுக்கெல்லாம் வழிகாட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் சார்பில் இங்கே தெரிவித்து அவர் பெயரால் அமைகிற இந்தச் சுற்றுலா விடுதிக்கு அடிக்கல் நாட்டுவதில் பெருமை அடைகிறேன்''—என்றார்கள்.

முதல்நாள் காலை நிகழ்ச்சி, முதல்வர் கலைஞர் உரையுடன் முடிந்தது.

பிற்பகல், முத்துப் பந்தரில் வரலாற்றுக் கருத்தரங்கம் தொடங்கியது.

தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இந்தக் கருத்தரங்கத்திற்குத் தலைமை ஏற்றார்கள்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட மாண்புமிகு புதுவை மாநில முதல்வர் எம். ஓ. எச். பாரூக், திரு. கே. இராஜாராம் நாயுடு, எம். எல். சி., திரு. சா. கணேசன், எம். எல். சி., திரு. எம். எம். பக்கர், எம். எல். சி., திரு. இராம.அரங்கண்ணல்,எம்.எல்.ஏ., திரு செ. கந்தப்பன்,எம்.எல்.ஏ., கவிஞர் சுரதா, இந்தியத்தொல்பொருள் ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த திரு. கே. வி. சௌந்தரராஜன், தமிழக தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி, கரந்தைப் பேராசிரியர் கோவிந்தராசனார் ஆகியோர் பண்டைய வரலாற்றுக் காலத்துக்கு நம்மை அழைத்துச் சென்றார்கள்.

மாண்ட பெருமையை மீண்டும் கண்டிட, முதல்வர் கலைஞர் எடுத்துள்ள முயற்சியை அனைவரும் பாராட்டினார்கள்.

சட்ட மன்ற மேலவையின் நிறுவனக் காங்கிரஸ் தலைவரான திரு. கே. இராஜாராம் நாயுடு அவர்கள், "முதல்வர் எந்தச் செயலையும் எண்ணித்தான் துணிவார்கள். துணிந்தபின் அவர்கள் செயல்படும் வேகத்தை எந்த இடையூறும் தடுத்து நிறுத்திவிட முடியாது" என்பதை அழகாக விளக்கினார்.

அடுத்த நிகழ்ச்சி, சிலப்பதிகாரக் கலைக் கூடத் திறப்புவிழா; நிலா முற்றத்தில் நாயன வேந்தர் திருவெண்காடு டி. பி. சுப்பிரமணியம் அவர்களின் நாயன இசையுடன் தொடங்கியது.

கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் கலைக்கூடத்தைத் திறந்து வைத்தார்கள்.

மேற்கு ஜெர்மன் அலுவலர் திரு. சிருஸ், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். அத்தனையும் தமிழ் விருந்து !. இலக்கிய விருந்து ! !!.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது தலைமை உரையிலே குறிப்பிட்டார்கள்.

''இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு முழு நிலாவில் இப்படி ஒரு விழாவைக் கொண்டாடுகிறோம்.

'' பூம்புகார் நகரம் மருவூர்ப்பாக்கம் என்றும், அதற்கடுத்துப் பட்டினப்பாக்கம் என்றும்—ஒரு பெரும் நகராக விரிவடைந்து நின்று, இமயத்தை ஒத்து— பொதிகை மலையை ஒத்து




பழைய பூம்புகார் நகரத்தில் அமைந்திருந்த ஊர்கள்



நிலை குலையாமல்—நடுக்குறாமல்— வளையாமல்—நெளியாமல் ஆடாமல்—அசையாமல் — பணியாமல்—இந்தப் பூம்புகார் நகர் விளங்கிற்று என்று புலவர் பெருமக்கள் சொல்லத்தக்க அளவுக்கு—மிகச் சிறப்பாகத் திகழ்ந்து வந்த பாங்கினை நாம் காணுகிறோம்.

'' ஆகவே, மருவூர்ப்பாக்கத்தில் கடல் பெரிய வணிகச் சிறப்பும் — அதனையொட்டி எவ்வளவு சிறப்புகள் எல்லாம் அடங்கியிருந்தன என்பதும்—வணிகத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் குடியிருப்புகள் இங்கே இருந்த தன்மையையும், வணிகத்தில் யவனர்களும், சீனர்களும், சாவகத்தாரும், ஈழத்தாரும் இன்னும் வேறு பல நாட்டினரும் தங்கள் தங்களுடைய அரும் பெரும் பொருட்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து வைத்து, இந்த நாட்டைச் சேர்ந்த சந்தனத்தையும் அகிலையும், தேக்கையும் இங்கே இருக்கின்ற மயில் தோகையையும்—அரிசியையும் பட்டுத் துணியையும், பருத்தி ஆடையையும், பெற பொன்னையும், மணியையும் இங்கே கொடுத்துவிட்டு மீண்டும் எடுத்துச் செல்வதற்காகப் பொதி மூட்டைகளில் வைத்தார்கள் என்றும் அதிலே ஆடுகள் எல்லாம் ஏறி ஏறித் துள்ளி விழுந்தன என்றும் அவற்றுக்கு எல்லாம் அடையாளம் தரத் தக்க அளவுக்குச் சோழன் தன்னுடைய புலி முத்திரையைப் பொறித்துப் பொதி மூட்டைகளை ஏற்றினான் என்றும் — இந்தக் காலத்தில் எப்படி '' கஸ்டம்ஸ் ஹவுசில்' எல்லாம் முத்திரையிடுகிறார்களோ — இலச்சினை பொறிக்கிறார்களோ அப்படிப் பொறித்துப் புறம் போக்கி என்று புலி இலச்சினையைப் பொறித்து, அந்தப் பொதி மூட்டைகளை எல்லாம் வெளி நாடுகளுக்கு அனுப்பினார்கள் என்றும் — அங்கு இருந்தவைகள் இங்கே இறக்கப்பட்டன என்றும் அவ்வளவு சிறந்த செல்வம் கொழித்த இடமாக அது விளங்கிற்று என்றும் — வரலாற்றிலே நாம் காணுகிறோம்.

''சிறந்து விளங்கிய புகார் கடல் கொண்டதன் காரணமாகவும் — சோழமன்னர்களுடைய ஆட்சி வலிவு இழந்ததன் காரணமாகவும் — மக்கள் இந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்ததன் காரணமாகவும்—இந்த இடத்தினுடைய சிறப்புக் குன்றியதன் காரணமாகவும், நகர்,



மாதவி சிலை

நாளுக்கு நாள் கடல் கொண்டு பாதி கடல் கொண்டது மட்டுமல்லாமல் மண்ணால் மூடப்பட்டு எந்த அளவுக்கு ஆயிற்று என்பதை நாம் நன்றாகக் காணலாம். இன்றைக்குத் தோண்டி எடுக்கப்பட்ட புத்தப் பள்ளி இங்கிருந்து கிட்டத்தட்ட இரண்டரை மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கிறது என்று சொன்னால்—பூம்புகார் நகரத்திற்குள்ளே இருந்த புத்தப் பள்ளி இன்றைக்கு நான் நிற்கிற இடத்திலிருந்து இரண்டரை மைல் தூரத்திற்கப்பால் நகர்ந்து காணப்பட்டது என்றால், அதுவரையில் கட்டடங்கள் இருந்திருக்கின்றன ; இன்றைக்குக் காணமல் போயிருக்கின்றன. மாட மாளிகைகள் இருந்திருக்கின்றன; அவைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கின்றன.

'' ஆகவே, கடலுக்குள் நெடுந்தொலைவுக்குச் சென்று இருக்கிற கப்பல் ஓட்டுபவர்களும்—படகு ஓட்டிகளும்—கதிரவன் விழ்ந்து, இரவு வந்ததற்குப் பிறகு, மறுபடி இங்கே வந்து சேருவதற்காகக் கலங்கரை விளக்கங்கள், பிற நாட்டாருடைய கப்பல்களை எல்லாம் ஈர்ப்பதற்கும் கலங்கரை விளக்கம் விளங்கிற்று என்பது மட்டுமல்லாமல், சிறு தொலைவுக்குச் சென்ற படகுகள் எல்லாம் இரவு வந்ததற்குப் பிறகு இங்கே வெளி நாட்டிலிருந்து வந்த யவனர்கள் மாடி வீட்டிலே இருக்க அந்த மாடிக் கட்டடங்களில் அவர்கள் விளக்கேற்றி வைக்க—அந்த விளக்கு கடலிலே தெரிய—அதை அடையாளம் வைத்துக் கொண்டு கடலிலே இரவு ஆனதற்குப் பிறகு பூம்புகார் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு யவனர்கள் தங்கியிருந்தமாளிகையில் இருந்த விளக்குகள் வழிகாட்ட, அதை வைத்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

''வெள்ளையர்கள் அப்போது வெள்ளையர்களாகவே இருந்தார்கள். ஆகவே, யவனர்கள் தங்கியிருந்த இடங்களையெல்லாம் ' வெள்ளையர் இருப்பு' என்று அழைத்தார்கள். அது இப்பொழுதும் ''வெள்ளையன் இருப்பு'' என்ற சொல்லில்தான் இருந்து கொண்டு வருகிறது.

''2000 ஆண்டுக் காலத்திற்குப் பிறகும், இங்கிருந்துதான் 'அகஸ்டஸ்' காலத்தினுடைய நாணயங்களைத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் எடுத்திருக்கிறார்கள்.

''யவன நாட்டைச் சேர்ந்தவர்கள்—கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் கொண்டு வந்த ஜாடிகள் எல்லாம்— ரோம் நாட்டைச் சேர்ந்தவர்கள் கொண்டு வந்த மது அருந்தக் கூடிய மது ஜாடிகள் எல்லாம் அவற்றின் சிதைந்த ஓடுகளை எல்லாம் அழகு பொருந்திய வேலைப்பாடுகள் நிறைந்த பாத்திரங்களை எல்லாம்—மட்பாண்டங்களை எல்லாம் இங்கிருந்துதான் எடுத்திருக்கிறார்கள்.

''படகு வந்து நின்ற துறையையும் அங்கே சரக்குகள் ஏற்றி இறக்குவதற்காகக் கட்டைகள் கட்டி விடப்பட்ட நிலைமையையும் அலைகடலிலே கப்பலை அடித்துச் செல்லாத அளவுக்கு இழுத்துக் கட்டப்பட்ட அதனுடைய கற்கள் எல்லாம் 18 அங்குல நீளம் 12 அங்குல அகலம், 6 அங்குல கனம் கொண்டவைகளாக அமைந்திருக்கின்ற நிலையையும் நீங்கள் அறிவீர்கள். அவைகளை எல்லாம் சிறப்பாகக் காட்டியிருக்கிறார்கள்.

அந்த மரத்தூணை எல்லாம் எடுத்து ஆராய்ச்சியாளர்கள் இடத்திலே அனுப்பிய போது, அந்த மரத்தூண்கள் கிட்டத்தட்ட 2,300 ஆண்டுகள் பழமையான மரங்கள் என்று கொள்ளத்தக்க அளவுக்கு வரலாற்றோடு கூடிய இலக்கியக் கருத்துக்கள் சேருகிற அளவுக்குச் சிறப்பாக இருந்திருக்கின்றன.

அந்தச் சரக்குகள் கொண்டு வந்து இறக்குமதி செய்யப்படுகிற இடங்களில் அலைகளினால் படகுகள் அசைந்து அசைந்து நிற்பது எப்படி இருக்கிறது என்று பட்டினப்பாலையில் வருணிக்கப்பட்டிருக்கிற தென்றல், தொழுவத்தில் கட்டியிருக்கிற யானை எப்படி நின்ற நிலையில் நிலைக்காமல், அசைந்து அசைந்து கொண்டிருக்குமோ, அதே போன்று, காவிரிப்பூம்பட்டினத்



பூம்புகார் நகரின் சிற்றுரு

தின் கடற்கரையிலே கொண்டு வந்து வைக்கப் பட்ட யவன நாட்டினுடைய கப்பல்கள் அலையிலே அசைந்து கொண்டிருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள்.

"பல்வேறுசிறப்புக்குரியதொன்ருக இணைந்து—நாடெல்லாம் திரண்டிருக்கிற அளவுக்குச் சிறப்புற்ற பூம்புகாரை நாம் காணுகிறோம்."

நாவலர் அவர்களின் உரைக்குப் பின்னர் கலைஞர் அவர்கள் சிலப்பதிகாரக் கலைக் கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்கள்.

முதன் முதலில் பூம்புகாரைப் பார்த்த பொழுது ஏற்பட்ட உணர்வை விளக்கிய கலைஞர் அவர்கள், இன்று இத்தகைய கலைக்கூடம் அமையக்காரணமானவர்களைப் பாராட்டினார்கள். நன்றி தெரிவித்தார்கள்.

அடுத்த நிகழ்ச்சியாகக் கவிஞர் கண்ணதாசன் அமைத்துத் திருமதி கமலா குழுவினர் ஆடிய சிலப்பதிகார நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. அடுத்து, முதல்நாள் விழாவின் இறுதி நிகழ்ச்சியாகக் கலைஞர் மு. கருணாநிதி எழுதிய சிலப்பதிகார நாட்டிய நாடகத்தைச் சென்னை, கரிகாலன் நாடக மன்றத்தார் நடித்தனர்.

முதல்நாள் நிகழ்ச்சி முடிந்த பின்னர் சாலை வழியே மக்கள் கலைந்து சென்ற காட்சி.....

அதுவும் நிலாவொளியில்...

மக்கள் வெள்ளம் சாலையில் நிரம்பி வழிந்ததைப் பார்க்கக் கண்கோடி வேண்டும்.

இரவு முழுவதும் சோழன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகள் ஓடிக் கொண்டே இருந்தன.

மறுநாள் விழாவின் முதல் நிகழ்ச்சியாக முத்துப் பந்தரில், மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் தலைமையில் பட்டிமண்டபம், 'சிலப்பதிகாரத்திற்குப் பெருஞ் சிறப்பளிப்பது........' என்ற தலைப்பில் நடைபெற்றது. இந்தப் பட்டி மண்டபத்தில் மூன்று அணிகள் பங்கேற்றன.

புகார்க் காண்டமே என்ற அணியில் ஔவை துரை நடராசன், புலவர் அறிவுடை நம்பி, கவிஞர் கோவை இளஞ்சேரன் ஆகியோரும்,

மதுரைக்காண்டமே என்ற அணியில் சிலம்பொலி செல்லப்பன், மா. கி. தசரதன், புலவர் பொன்னிவளவன் ஆகியோரும்,

வஞ்சிக் காண்டமே என்ற அணியில் கவிஞர் கா. வேழவேந்தன், பேராசிரியர் நன்னன், பேராசிரியர் காந்திமதிநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொருவரும் தங்கள் அணிதான் சிறந்தது என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்களைக் காட்டி இலக்கிய மழை பொழிந்தனர்.

புலவர்கள் இலக்கிய மழை பொழியும்போது பூம்புகார் விழாக் குழுவினரோ முத்துப் பந்தலில் பன்னீர் மழை பொழிந்தனர்.

'ஸ்ப்ரேயர்' களில் பன்னீரை நிரப்பி நாலா பக்கமும் நின்று கொண்டு பந்தலில் பன்னீர் தெளித்தது கண்கொள்ளாக் காட்சி!

எங்கும் பன்னீர் மழை பொழிந்து முத்துப் பந்தர் முழுவதும் மணம் கமழ்ந்தது.

மாலை நிகழ்ச்சியாக முத்துப் பந்தரில் கவியரங்கம்.

உவமைக் கவிஞர் சுரதா கவியரங்கத்துக்குத் தலைமை ஏற்றார்.

சிலப்பதிகாரப் பாத்திரப் படைப்புகள் என்ற தலைப்பில் கவிஞர் மு. சிக்கந்தர், பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றியும், கவிஞர் தி.கு. நடராசன், சேரன் செங்குட்டுவன் பற்றியும், கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு, கவுந்தியடிகள் பற்றியும், கவிஞர் முருகு சுந்தரம் கண்ணகி பற்றியும், கவிஞர் ஈரோடு தமிழன்பன் மாதவி பற்றியும், இளங் கவிஞர் சுகிசிவன், கோவலன் பற்றியும் கவிதைகளை அரங்கேற்றினார்கள்; கவிதையால் சிலப்பதிகாரப் பாத்திரங்களைச் சிறப்புச் செய்தார்கள்.

இதனைத் தொடர்ந்து கடற்கரை நிலாமுற்றத்தில் தமிழ் இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் குழுவினரின் இசை நிகழ்ச்சி.

"மயக்கம், மயக்கம்" என்று இசைச் சித்தர் பாடியபோது கூடியிருந்த ஐந்து இலட்ச மக்களும் தமிழ் மயக்கத்திலே இருந்தார்கள்.

"மாறி, மாறி வரும் வெகு ராகங்களிலே"—என்று அவர்



பாடியபாடல் கூடியிருந்த மக்களை மயங்கவைத்த நிகழ்ச்சியை மறக்க முடியாது.

இதனைத் தொடர்ந்து பாராட்டுரையும் நன்றியுரையும் நிகழ்த்தினார், நமது முதல்வர் டாக்டர் கலைஞர்.

முதல்வர் கலைஞர் பேசியதாவது :

"இது நேரம் வரை இசைத் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் "மயக்கம்........ மயக்கம்" என்று பாடியது போல்—இந்த இரண்டு நாளும் நாமனைவரும் தமிழ் மயக்கத்தால் மெய்மறந்து இருந்தோம்.

"இந்த விழா முடியப் போகிறதே ! இந்தக் கடற்கரையை விட்டுப் பிரியப் போகிறோமே—என்ற கவலை உள்ளத்தில் எழத்தான் செய்கிறது.

"இந்தக் கடற்கரை பிரிவின் சோகத்தை அதிகமாக உணர்ந்த கடற்கரை. இந்தக் கடற்கரையில் இரண்டு நாட்கள் தமிழ்ச் சமுதாயமும் தமிழினமும் வீறு கொள்ளத் தக்கவகையில் அமைச்சர்களும் தமிழ்ச் சான்றோர்களும் — புலவர்களும் — கவிஞர்களும்— கலைஞர்களும் உரை நிகழ்த்தினார்கள். தமிழ் கூறும் நல்லுலகத்தை எப்படி முன்னேற்றுவது என்பதைப் பற்றியும் ஆய்ந்துரைத்தார்கள்.

"கடல்கொண்ட காவிரிப்பூம் பட்டினம் புதிய பூம்புகாராக உருவாகிக் காட்சி அளிக்கிறது.

"இந்தக் காட்சி—இன்றைக்கு ஆட்சியிலிருக்கிற நாம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எதிர் காலத்தில் தமிழ் உள்ள வரை— தமிழுணர்வு உள்ளவர்கள் உள்ளவரை நிலைபெற வேண்டும் என்று நெஞ்சார எண்ணுகிறோம் நாம்.

"நீலத்திரை கடல் தாலாட்டும் இந்தப் பூமி—இந்தியப் பூபாகத்தில் பல்வேறு மாநில மக்களுக்கும்—வெளி நாட்டினருக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ வேண்டும்.

இரண்டு நாட்களாகச் சொற்பொழிவு ஆற்றியவர்களும் கவிதை மழை பொழிந்தோரும் சிலப்பதிகாரத்தின் எழிலைச் சித்திரித்தார்கள்,

"இங்கே சிலப்பதிகாரக் கலைக் கூடம் அமைய வேண்டும் ; பழைய பூம்புகாரை அமைக்க வேண்டும், பழைய பூம்புகாரிலுள்ளவை அனைத்தையும் பல்வேறு இடங்களில் அமைக்க வேண்டும் என்று எண்ணிய போது, இது முடியுமா ? காலம் போதுமா? என்று எண்ணினோம்.

"1970-ல் இந்தப் பணி தொடங்கியது. பணி—பாதியளவில் நின்றபோது—விழாக் கோலம் காண்போமா ? அந்த விழாவை நாம் நடத்துவோமா? —என்று எண்ணுகிற நிலையில் 1971ஆம் ஆண்டு வந்தது.

"அந்த 1971-ஆம் ஆண்டையும் வெற்றிகரமாகத் தாண்டி



கலைக்கூடத்தைக் காண்பதற்கு அணிவகுத்துச் செல்லும் மக்கள் கூட்டம்.

னோம் இப்போது 1973ஆம் ஆண்டு, புதிய பூம்புகாரை முழுமையாக அமைத்து இங்கே 'நிறை நிலா' விழாவை—சிலப்பதிகாரக் கலைக்கூட விழாவை நடத்துகிறோம்.

"1974-லும் நாமே அந்த விழாவை நடத்துவோம் ; 1975-லும் நாமே அந்த விழாவை நடத்துவோம். 1976-லும் நாமே அந்த விழாவைத் நடத்துவோம். இந்த விழாவை தொடர்ந்து—தமிழர் ஆட்சியான இந்த ஆட்சியே இந்தக் கடற்கரைப் பெருவெளியில்

இந்தப் பெருவிழாவை நிச்சயமாக நடத்தும்.

"எத்தனையோ விழாக்கள் நாட்டில் நடைபெறுகின்றன. ஆனால் இந்த விழாவைத்தான் அனைவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

"சில ஏடுகளில் கூட எத்தனையோ பிரச்சினைகள் நாட்டில் இருக்கும்போது, 'இந்திர விழா என்ற பெயரில் பூம்புகார் விழா நடை பெறுவதா"— என்று அரசியல் ரீதியில் கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

"தமிழுணர்வுள்ள நம்மைப் பொறுத்த வரை—தமிழ்ச் சமுதாயத்தின் கீர்த்தியை—கடலால் அழிக்கப்பட்ட பூம்புகாரை மீண்டும் உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு—மன்னிக்க வேண்டும்—வெறியோடு—தமிழ் வெறியோடு—ஈடுபட்டு வெற்றியும் பெற்றிருக்கிறோம்.

"மயிலாப்பூரில் அறுபத்து மூவர் திருவிழா நடக்கிறது, அரசியல்வாதிகளுக்கு அக்கறை இல்லை. ஆனால் இந்த விழாவில் அரசியல் வாதிகளுக்கு அக்கறை பிறக்கக் காரணம்—இது நாம் எடுக்கிற விழா ; தமிழர்கள் எடுக்கும் விழா !

''இந்தப் பூம்புகார்த் திரு விழா—புராணத்திருவிழா அல்ல பக்தித் திருவிழா அல்ல ! ஆண்டவர்களுக்கு எடுக்கும் விழா.

''ஆம் ; பழந்தமிழகத்தை ஆண்டவர்களுக்கு எடுக்கும் விழா!

''கரிகால் பெருவளத்தா னுக்கு—சோழமன்னர்களுக்கு — வடபுலம் சென்ற பாண்டிய நெடுஞ்செழியனுக்கு — சேரன் செங்குட்டுவனுக்கு எடுக்கும் விழா.

''இவ்வளவு பெருமையுடை யவர்களுக்கும் இங்கே விழா எடுக்கிறோம்.

முதலில் நாம் யார் என்பதை அறிந்து கொள்வதற்காகவே விழா எடுக்கிறோம்!

''காலையில் கருத்தரங்கில் ஒரு புலவர் குறிப்பிட்டார். பழந்தமிழகத்தில் எந்தப் புல வர் காவியம் பாடினாலும்—காப் பியம் தீட்டினாலும்—இலக்கியம் செய்தாலும்—அது மன்னர் களைப்பற்றி—அவர்களது பரம் பரையைப் பற்றிப் பாடி யதாகவே இருக்கும். ஆனால், இளங்கோவடிகள் தான் சாதாரண— சாமான் யக் குடும்பத்தைச் சார்ந்த— நடுத்தர வாணிகக் குடும்



மேலவைத் தலைவர்
திரு சி. பி. சிற்றரசு.

பத்தைச் சார்ந்த கோவலனைக் காவிய நாயகனாக்கி—கண்ண கியை நாயகியாக்கிக் காவியம் தீட்டினார்.

''சாதாரண—சாமான்ய மக்க ளுக்காக நடத்தப் படும் இந்த ஆட்சி அவர்களுக்காக விழா எடுப்பது வியப்புக்கு உரி யதல்ல!

''நேற்றுக் காலை நடந்த ஊர் வலத்தின் வெற்றிக்குக் காரண மானவர்கள் — பாராட்டுக்குரிய வர்கள்.

''இந்த இரண்டு நாள் நிகழ்ச்சி களிலும் கலந்து கொண்ட அனை வருக்கும் எனது நன்றி ; பாராட்டு!''

முதல்வரின் உரைக்குப் பின் இறுதி நிகழ்ச்சியாக ஆவடித் தனிக் காவல் துறையினரின் கரக ஆட்டமும் காவடி ஆட்ட மும் நடைபெற்றது.

அவர்கள் ஆடிய அந்த ஆட்டம்....

சுழன்முடிய வேகம்—பார்ப் போருக்குப் புத்துணர்வையும் மகிழ்ச்சியையும் அளித்ததில் வியப்பில்லை.

இரண்டு நாட்களாக இலக்கிய மழையில் நனைந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தவர்களை இது மேலும் புத்துணர்வில் ஆழ்த்தியது.

மாண்ட பெருமைகள் மீண் டும் தலைதூக்கத் தொடங்கி விட்டன.

ஆம் ! தமிழ்ச் சமுதாயத் தின் புதிய வரலாற்றுத் தொடக் கம் பூம்புகார் விழா!



கரிகால் மன்னன் சிலையின் அருகில் முதல்வர் கலைஞர், கல்வியமைச்சர் நாவலர், நல் வாழ்வுத்துறை அமைச்சர் பேரா சிரியர், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., தவத் திரு குன்றக்குடி அடிகளார், மேலவை உறுப்பினர் கே. ராஜாராம் நாயுடு, மற்றும் பலர்.....




கரிகால் மன்னர் உலாவருகிறார்


விழாக்கள்



சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை முதல்வர் கலைஞர் திறந்து வைக்கிறர்



முதல்வர் கலைஞரின் சிலப்பதிகார நாடகம்



கலைஞரின் சிலப்பதிகார நாட்டிய நாடகம்



கவிஞர் சுரதா தலைமையில் கவியரங்கம்



பொறியாளர் வெங்கடாசலபதி பாராட்டுப் பெறுகிறார்



திரு கி.வா. ஜெகந்நாதன் தலைமையில் கருத்தரங்கம்



டாக்டர் மு.வ. தலைமையில் பட்டிமன்றம்



சிற்பி கணபதி பாராட்டுப் பெறுகிறார்



இசைச் சித்தர் ஜெயராமன் அவர்களின் இசை விருந்து



நாயன வேந்தர் டி.பி. சுப்பிரமணியம் அவர்களின் நாயன விருந்து



ஆவடித் தனிக் காவல் படையினரின் கரகம்



# சிலப்பதிகாரமும் மூன்றும்

எல்லாவற்றையும் துறந்து தமிழை மட்டுமே துறக்காத இளங்கோவடிகள் இறவாத சிலப்பதிகாரத்தை அளித்தார்.

**சிலப்பதிகாரத்திற்கு ஒரு பெருஞ்சிறப்பு**

சிலப்பதிகாரத்தை அச்சிட்டவர் மூவர்—

சி. வை. தாமோதரம்பிள்ளை,
உ. வே. சாமிநாதய்யர்,
காசி விசுவநாதஞ் செட்டியார்.

சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் மூவர்—

அரும்பத உரையாசிரியர்,
அடியார்க்கு நல்லார்,
நாவலர் நாட்டார் ஐயா.

சிலப்பதிகாரத்துக்குக் காண்டம் மூன்று—

புகார்க் காண்டம்,
வஞ்சிக் காண்டம்,
மதுரைக் காண்டம்.

சிலப்பதிகாரத்தில் வணக்கம் மூன்று—

ஞாயிறு போற்றுதும்
திங்களைப் போற்றுதும்
மாமழை போற்றுதும்

வணக்கம் மட்டுமல்ல தொடக்கமும் மூன்று—

பொதியிலாயினும்
இமயமாயினும்
புகாரேயாயினும்

அதனுள் அடக்கம் மூன்று—

(1) அரசியல் பிழைத்தார்க்கு அறங்கூற்றாகும்
(2) உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
(3) ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்

சிலப்பதிகாரத்தில் வரும் நாடும் மூன்று—

சோழ நாடு
பாண்டிய நாடு
சேர நாடு

தலைநகரங்கள் மூன்று—
புகார், மதுரை, வஞ்சி

பு-கா-ர்—மூன்றெழுத்து
ம-து-ரை—மூன்றெழுத்து
வ-ஞ்-சி—மூன்றெழுத்து

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் சேர்ந்த முத்தமிழ்க்காப்பியம் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்திலுள்ள இயற்பா வகை மூன்று—

ஆசிரியப்பா
அகவற்பா
வெண்பா

இசைப்பா வகை மூன்று—

வஞ்சிப்பா
கலிப்பா
விருத்தப்பா

நாடகப்பா வகை மூன்று—

கானல் வரி
வேட்டுவ வரி
ஊர்சூழ் வரி

—இவ்வாறு, எப்படிப் பார்த்தாலும் மூன்று என்ற பெருமையைப் பெற்றுத் திகழ்கிறது சிலப்பதிகாரம்.

—முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்— (பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழாவில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவில்)

சென்னை மத்திய சிறைச்சாலை ஏப்ரல் 20-ஆம் நாளன்று விழாக் கோலம் பூண்டுள்ளது.

ஆயிரக் கணக்கான கைதிகள் விழா மேடை நோக்கிய வண்ணம் அமர்ந்திருக்கின்றனர். சொற்பொழிவு, இன்னிசை விருந்து ஆகியவற்றைக் கேட்டுச் சுவைத்திட அவர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

விழா மேடை நோக்கி வருகிறார் திரு. கிருபானந்தவாரியார். பல்வேறு குற்றங்களில் தண்டனை அடைந்த கைதிகளின் மனம் திருந்திட-அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி பெற்றிட-அவரது சிறப்புச் சொற்பொழிவு கைதிகளை யெல்லாம் ஈர்க்கிறது. விடுதலையடைந்த பின் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என்ற உறுதி, அவர்கள் நெஞ்சங்களில் பிறப்பதை அவர்களது முகம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

வாய்மையின் வலிமையை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருந்த இந்தச் சொற்பொழிவினை ஒரு மணிநேரம் கைதிகள் கேட்டு வெகுவாக வரவேற்றனர்.

சென்னை வானொலி வழங்கிய இந்த நிகழ்ச்சியில் திரு. டி. ஆர். பாப்பாவின் இன்னிசை விருந்தும் அனைவரையும் கவர்ந்தது.

கைதிகளை நல்வழிப்படுத்தும் நோக்கோடு அரசின் ஆதரவில் பலர் பல்வேறு நிகழ்ச்சிகளை அவ்வப்போது இங்கு நடத்தி வருகின்றனர். அவற்றுள் சென்னை வானொலி நிலையம், சிறையில் கைதிகளுக்காக நடத்தும் நிகழ்ச்சி இதுவே முதல் தடவையாகும்.

ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்ற சிறைக் கண்காணிப்பாளர் தமது வரவேற்புரையில் கூறியதாவது :




''வெளியில் நல்வாழ்க்கை நடத்துவதற்குத் தகுந்த அளவிற்குச் சிறையில் கைதிகள் பக்குவப்படுத்தப்பட்டு வெளியில் போகும்போது களங்கமில்லா உள்ளத்துடன் திருப்பி அனுப்பப்படுகின்றனர்; சிறையில் அவர்கள் பெற்ற அனுபவமும் நல்ல பயிற்சியும் பயன் அளிக்கும் வகையில், வெளியில் இருக்கின்ற சமுதாயப் பெருமக்கள் அவர்களின் பழைய நிலைகளையும், களங்கங்களையும் மறந்து அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதற்கு நல்லாதரவு தரவேண்டும்''.

கைதியாக இருக்கும்போதோ அல்லது விடுதலையான பிறகோ மனம் திருந்தி மனிதனாக வாழ்வது தான் மாண்புடைய செயலாகும்.

இங்கே ஆயுள் தண்டனைக் கைதியாக இருப்பவர் திரு. காளியப்பன். இவரது நன்னடத்தையையும், சிறையிலேயே நன்கு படித்துப் புலவர் தேர்வு எழுதி வெற்றி பெற்றதையும் கண்டு இவரைப் பாராட்டாதவர்களே இங்கு இல்லை. இவர் சிறையிலிருந்த போது நடந்து கொண்ட நன்முறை, விடா முயற்சி இவையெல்லாம் இவருக்கு விரைவில் விடுதலையை வழங்கப் போகின்றனவாம் !

இவர், விழா இறுதியில் நன்றி கூறி அனைவரின் நன்மதிப்பையும் பெற்றதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

### கைதிகளுக்குச் சலுகைகள்

சிறைப்பட்டுள்ள கைதிகளுக்குத் தமிழக அரசு பல சலுகைகளைச் செய்து வருகின்றது.

கைதிகள் ஓய்வு நேரங்களில் கேரம், செஸ், விளையாட அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பெண் கைதிகளின் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக வேலூரில் குழந்தை வளர்க்கும் இடம் ஒன்றும், குழந்தைக் காப்பகம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.

அரசின் செலவிலேயே அரசாங்கத் தேர்வுகளுக்குச் செல்வதற்குக் கைதிகள் அனுமதிக்கப் படுகின்றனர்.



61

## கோழி வளர்ப்பால் 3 மடங்கு இலாபம்...

தஞ்சை மாவட்டத்தில் ஊட்டச்சத்து அளிக்கும் முட்டை உற்பத்தியில் தன்நிறைவு எய்தவும், வேலையற்ற ஏழை எளிய மக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு ஊதியம் பெறவும், மிகவும் தாழ்த்தப்பட்ட அரிசன மக்களும் பின் தங்கிய வகுப்பாரும் தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளவும், மக்கள் அதிக எண்ணிக்கையில் சத்துள்ள உணவு உண்ணவும் தஞ்சை மாவட்டத்தில் மாநில வங்கி (State Bank of India) உதவியுடன் தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### திட்டத்தின் செயல்முறை

தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் 26 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 100 நபர்களுக்குக் கோழி வளர்ப்பதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு நபருக்கும் 100 கோழிகள் வளர்ப்பதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. எனவே, 26 நிலையங்களிலும் 26×100×100= 2,60,000 கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இதனால் ஆண்டொன்றுக்கு முட்டை உற்பத்தி கோழி ஒன்றுக்குக் குறைந்தது சராசரி 200 முட்டைகள் வீதம் 5,20,000 முட்டைகள் உற்பத்தியாக வாய்ப்பு ஏற்படுவதனால், முட்டை ஒன்றின் விலை 25 காசுகள் வீதம் ரூபாய் 1,30,000 நாட்டின் வருமானம் பெருக வாய்ப்பு உள்ளது.

ஓர் ஆண்டுக்குப் பிறகு இக்கோழிகளை உணவுக்காகப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு கோழியின் விலை சராசரி ரூபாய் 5 ஆக, 2,60,000 கோழிகளுக்கும் 13,00,000 ரூபாய் நிகர இலாபம் அடையும் நிலை உள்ளது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 58·5 இலட்சம். ஓர் ஆண்டு முடிவில் எதிர் பார்க்கப்படும் நிகர மதிப்பீடு 175·5 இலட்சம் (முதலீட்டைப் போல் 3 மடங்கு) மாதம் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்குத் தனி நபர் வருமானம் ரூ. 100 முதல் ரூபாய் 150 வரை.

தஞ்சை மாவட்டத்தில் முதற்படியாக 690 நபர்களுக்கு நிதிஉதவி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் 67 பேர் ஆண்டொன்றுக்கு ரூ. 1,200-க்குக் கீழ் வருமானம் பெறுபவர்கள். நிதி உதவி பெற்ற மேலே கண்ட 690 நபர்களில் 175 பேர் அரிசன மக்கள்.

சாதாரணமாக வாணிக நிமித்தம் வழங்கப்படும் கடன்களுக்கெல்லாம் வங்கிகளிலிருந்து 9 முதல் 10 சதவீதம் வரை வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆயினும் இத்திட்டத்தின் மூலம் பின் தங்கிய வகுப்பினர்களுக்கும், அரிசனங்களுக்கும் 4½ சதவீதம் வட்டிக்குக் கடன் வழங்கப்படுகிறது.

முதற்படியாகத் தற்பொழுது ரூபாய் 15,32,250 அனுமதிக்கப்பட்டதில் ரூபாய் 5,27,564 இதுவரை பொதுமக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.




குறைந்த வருமானமுள்ள மாநில அரசுப் பணியாளர்களுக்கு முற்றிலும் வாடகை அடிப்படையில் வீட்டு வசதி அளிப்பதை முதன்மையாகக் கருதி இத் திட்டம் வகுக்கப் பட்டது.

வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிடமிருந்து, ஈடுசெய்ய வாடகையாக, சம்பளத்தில் 10 சத விகிதத்தை அவர்களின் ஊதியத்திலிருந்து பிடித்துக் கொள்கின்றது. அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்படுவதில்லை. இந்த அடிப்படையில் பிடிக்கப்படுகின்ற வாடகை கட்டுபடியாகும் வாடகையை விடக்குறைவு. தொகை வேறுபாடு, மாநில அரசால் ஈடு செய்யப்படுவதால், அரசு ஊழியர்கள் அரசின் ஈட்டுத் தொகையின் பலனை அனுபவிக்கின்றனர்.

திட்டத்தைச் செயல்படுத்தும் முகவர் அமைப்பாகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உள்ளது. அதுவே செயல்படுத்தப் பட்டபின், சொத்தினைப் பேணுகின்றது. கட்டடங்களின் சொத்துரிமை மாநில அரசினிடம் நிலைபெறுகிறது. பொதுவாக, இத் திட்டத்தின் கீழ் வீடுகள், அரசு நிலங்களில் கட்டப் படுகின்றன.

இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை:-- 2,228. இத்திட்டக் காலங்களில் பயன்படுத் தப் பட்ட தொகை: ரூ. 187·15 இலட்சம்.



## பல்சுவைச் செய்திகள்

இந்தியாவில் தற்போது 17 கோடியே 60 இலட்சம் கால்நடைகளும், 5 கோடியே 30 இலட்சம் எருமைகளும் இருக்கின்றன. இந்த எண்ணிக்கை உலகத்திலேயே மிக அதிகமானவையாகும்.

* * *

இந்தியாவின் மொத்த மக்கள் தொகை ஏறத்தாழ 55 கோடி. இதில் 38 கோடியே 74 இலட்சம் பேருக்கு எழுதப்படிக்கத் தெரியாது :

* * *

கருத்தடைத் திட்டம் தொடங்கப்பட்டதன் விளைவாக, இந்தியா முழுவதிலும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை 1 கோடியே 19 இலட்சத்து 88 ஆயிரத்து 548 பேருக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

* * *

1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த போரில், சரணடைந்த 90 ஆயிரம் பாக்கிஸ்தான் போர்க் கைதிகளுக்காக, 1972-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 12 கோடியே 50 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இதில் உணவுக்காக மட்டும் ரூ. 5 கோடி செலவிடப்பட்டுள்ளது.

* * *

நம் நாட்டில் 2,900 ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு உணவு வசதி செய்யப்பட்டிருக்கிறது. 50 ரயில் வண்டிகளில் இந்த வசதி இருக்கிறது. 65 நிலையங்களிலும், 26 ரயில் வண்டிகளிலும் ரயில்வே இலாகாவே இந்தப் பொறுப்பை ஏற்று நடத்துகிறது.

* * *

திரைப்படக் காட்சிகள் முடிந்த பின் தேசிய கீதம் இசைத்தபோது எழுந்து நிற்கவில்லை என்பதற்காக 1972-ல் 1952 பேர் மீது மராட்டிய அரசு வழக்குத் தொடர்ந்திருக்கிறது. இதன் விளைவாகப் படிப்படியாக இத்தகைய குற்றங்கள் குறைந்து வருகின்றனவாம்.

# கேளுங்கள் கொடுக்கப்படும்

வினா : கோ. 7 ராகியைக் குலைநோய் தாக்கக் கூடுமா ? குலைநோய் தாக்கிய ராகிப் பயிருக்கு என்ன மருந்து தெளித்தல் வேண்டும்? குலைநோய் வராமல் தடுக்க முன்கூட்டியே என்ன செய்ய வேண்டும்?

—செல்வி கே. ஞானம்பிகை,
அமைப்பாளர், மகளிர் வானொலி விவசாய விவாதக் குழு, சென்னுக்கல் பாளையம்,
தளவாய்ப்பட்டணம்(அஞ்சல்),
கோவை மாவட்டம்.

விடை : கோ. 7, கேழ்வரகு (ராகி) ரகத்தைக் குலைநோய் தாக்கும். குலைநோய் தாக்கிய கேழ்வரகுப் பயிருக்கு ஏக்கருக்கு 300 மில்லி லிட்டர் 'கைனோசான்' ( Hinosan ) மருந்து அல்லது 400 கிராம் 'டைத்தேன்' ( Dithane ) மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 10 கிலோ 'செரசான் - சுண்ணம்புத்தூள்' ( Cerasan-Lime Dust) தூவியும் குலைநோயைக் கட்டுப்படுத்தலாம்.

கேழ்வரகில் குலைநோய் தாக்காமல் இருக்க முன்கூட்டியே மருந்து தெளிக்க வேண்டும். கேழ்வரகு நாற்றுப் பறிப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு ஒரு தடவையும், கேழ்வரகு நாற்று நட்ட 25-வது நாளில் ஒரு தடவையும், பூட்டைப் பிடிக்கும் சமயம் (கதிர் உருவாகும் தருணம்) ஒரு தடவையும் ஆக மூன்று முறை முன்கூட்டியே மேற்கூறிய மருந்துகளில் ஒன்றைத் தெளிப்பது சிறந்தது. இதுவே கேழ்வரகில் குலைநோய் தாக்காமல் இருப்பதற்குச் சிறந்த தடுப்பு முறையாகும்.

* * *

வினா : எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு பலாமரம் இருக்கிறது. எட்டு அல்லது 9 ஆண்டு மரம். சென்ற இரண்டு ஆண்டுகளாகப் பிஞ்சுகள் நிறைய விடுகின்றன. கொட்டைப் பாக்களவு ஆனவுடன் கருகிப்போய் விழுந்து விடுகின்றன. பெரிதாக ஆவதில்லை. இதற்கு என்ன செய்தால் பிஞ்சுகள் கருகிப் போகாமல் பெரிய காயாகும் என்பதைத் தெரிவிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—செல்வி ப. நவரத்தினம்,
11, கிருஷ்ணப்ப நாயக்கன் கீழத்தெரு, கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

விடை : பொதுவாகப் பலாக் கொட்டையிலிருந்து தோன்றிய பலாக் கன்று 10 ஆண்டுக்களுக்குப் பிறகே நன்கு காய்க்கத் தொடங்கும். வேர்ப்பதியம் மூலம் தோற்றுவிக்கப்பட்ட பலாக் கன்று 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும். சிங்கப்பூர் ரகப் பலாக்கன்று எனில், 3 ஆண்டுக் காலத்திலேயே காய்க்கத் தொடங்கும். தங்கள் வீட்டுத் தோட்டத்தில் உள்ள பலாமரம் அநேகமாகப் பலாக் கொட்டையிலிருந்து முளைத்ததாக இருக்கக் கூடும். அதனால் தங்கள் பலாமரம் நன்கு காய்க்க இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் ஆகக் கூடும்.

மேலும், தங்கள் பலாமரம் வளர்ந்துள்ள இடத்தில் மண் நன்கு தண்ணீர் வடியக் கூடியதாக இல்லாவிட்டாலும், பலா மரத்தைச் சுற்றி எப்பொழுதும் புழக்கடை நீர் நின்று ஈரமாக இருந்தாலும், பலாமரத்திற்குப் போதிய சத்துக் கிடைக்காவிட்டாலும், சாம்பல் நோய் தாக்கினாலும் பிஞ்சுகள் பெருக்காமல் உதிர்ந்து விடக்கூடும். எனவே, இவ்வாறு பிஞ்சு உதிர்வதைத் தடுக்கக் கூடுமான வரை தங்கள் பலாமரத்தைச் சுற்றி ஈரமாக இருக்காமல் காயவிட்டுத் தேவையான போது மட்டும் தண்ணீர் விட்டால் போதும்.

அடுத்து 10 கிலோ தொழுஎரு, 2½ கிலோ அமோனியம் சல்பேட், 5 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகிய உரங்களை வருகிற சூலைத் திங்களில் அல்லது தங்களுடைய மரத்திற்கு உரவைக்கவேண்டும். இவ்வாறு உரமிடத் தங்கள் மரத்தைச்சுற்றிக் கிளைகள் படர்ந்துள்ள அளவு வரை இடம் விட்டு வட்ட வடிவமாக 6 அங்குல அகலமும், 6 அங்குல ஆழமும் உள்ள குழி தோண்டி, அதில் உரங்களை நிரப்பி, மண்ணால் மூடி, பிறகு தண்ணீர் விடவேண்டும். (குழிதோண்டும்போது வேர்களை வெட்டி விடாமல் கவனமாகத் தோண்ட வேண்டும்) இவ்வாறு ஆண்டு தோறும் உரமிட்டால் பலா மரம் நன்கு காய்க்கும்.

சாம்பல் நோய் தாக்கினாலும், பலாப்பிஞ்சுகள் முதிராமல் வாடி உதிர்ந்துவிடக் கூடும். தங்கள் பலா மரத்தில் கொழுந்து விடும் சமயம் ஒரு முறையும், பூக்கள் தோன்றும் சமயம் ஒரு முறையும் ஆக 2 முறை 1 கிலோ கந்தகத் தூளைத் தூவிப் பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கலாம்.

இந்த முறைகளை மேற்கொண்டால் இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் தங்கள் பலாமரம் நன்கு காய்க்கும்.

* * *

வினா : சில தென்னந்தோப்புகளிலும், அரசினர் தென்னை வளர்ப்பு நிலையங்களிலும் 'தென்னை அனுகூலப் பூச்சி விடப்பட்டது' என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது. தென்னை அனுகூலப் பூச்சி என்றால் என்ன? அதை எப்படி மரங்களில் விடுவது. அதனால் விளையும் பயன் என்ன ? அது எங்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—எம். நேசராஜ், செல்வம்,
13-சி, புதிய காலனி,
கிருட்டிணகிரி, தருமபுரி மாவட்டம்.

விடை : தென்னை அனுகூலப் பூச்சி என்பது ஒருவகை ஒட்டுண்ணிப் பூச்சியைக் குறிக்கும். தானே உழைக்காமல் பிறர் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்து, வாழ்வளித்த உயிரின் வாழ்வையே முடித்துக் கொழுத்து வாழும் பூச்சிகள் 'ஒட்டுண்ணி' எனப்படுகிறது. இவ்வகைப் பூச்சிகளை ஆங்கிலத்தில் 'பாரசைட்' ( Parasite ) என்கிறோம். தென்னை மரத்தின் ஓலைகளைச் சுரண்டித் தின்று பெருஞ் சேதம் விளைவிக்கும் கருந்தலைப் புழுவை ஒழிக்க ஒருவகை ஒட்டுண்ணி மிகவும் பயனுடையதாக விளங்குகிறது. இவ்வகை ஒட்டுண்ணியையே 'தென்னை அனுகூலப் பூச்சி' என்று கூறப்படுகிறது.

தென்னை அனுகூலப் பூச்சியை வளர்த்துக் கண்ணாடிக் குழாய் களில் அடைத்து, எடுத்து வந்து, கருந்தலைப் புழுவினால் தாக்கப் பட்டுள்ள தென்னந் தோப்பு களில் திறந்து விடப் படுகிறது. இவை பறந்து செல்லக் கூடியவையாதலால், கண்ணாடிக் குழாய் திறந்த வுடன் பறந்து சென்று தென்னை மரத்தின் ஓலைகளில் தங்கி விடும். இந்த ஒட்டுண்ணிப் பூச்சி கள் தென்னைக் கருந்தலைப் புழு வின் மார்புப் பாகத்தில் 8 முதல் 10 முட்டைகளை இடும். அம் முட்டைகளிலிருந்து உற்பத்தி யாகும் புழுக்கள், தென்னைக் கருந்தலைப்புழுவுடன் ஒட்டிக் கொண்டு, கருந்தலைப் புழுவைத் தின்கின்றன. இதனால் கருந்த லைப் புழு இறந்துவிடுகின்றது. எனவே, தென்னைக் கருந்தலைப் புழுவின் தாக்குதலைத் தடுக்க இவ்வகை ஒட்டுண்ணிகள் பயன் படுகின்றன. ஓங்கி வளர்த்த தென்னைகளில் மருந்து தெளிப் பது எளிதாக இல்லாததால், ஒட்டுண்ணிப்பூச்சிகளைக் கொண்டு தென்னைக் கருந்தலைப் புழுக் களைக் கட்டுப்படுத்துவதே சிறந் ததும், சிக்கனமானதுமான பாதுகாப்பு முறையாகும்.

தமிழ்நாடு அரசின் வேளாண் மைத் துறை இவ்வகை ஒட்டுண் ணிப் பூச்சிகளை வளர்த்து, தென்னை வளர்ப்பவர்களுக்கு இலவசமாக வழங்குகிறது. தற் பொழுது தமிழ்நாட்டில் 11 தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் உள்ளன. அவை காஞ்சிபுரம், குடியாத்தம், இராம நாதபுரம், உடன்குடி, நாகர் கோயில், சேலம், கோயம்புத் தூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தருமபுரி ஆகிய இடங் களில் உள்ளன. மேலும் சில இடங்களில் நடப்பாண்டில் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலை யம் அமைக்கத் தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

தென்னை அனுகூலப்பூச்சி என் னும் ஒட்டுண்ணிகளை இலவச மாகப் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர் களையோ அல்லது உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவ லர் அவர்களையோ தொடர்பு கொள்ளவும்.

* * *

வினா: நீர் வசதி நிறைந்த எங்கள் ஊரில் உள்ள திருமலைச் சாமி முதலியார் அவர்களின் நிலத்தில் ஒவ்வொரு முறையும் நாற்று நட்ட பின்பு ஒரு வகை வேலம்பாசி மிகவும் அடர்த்தியாக வளர்ந்து விடுகிறது. இதனை அகற்ற எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. நாளுக்குநாள் அதிக மாகிக் கொண்டே வருகின்றது. இதனைப் போக்க என்ன வழி?

—இளைஞர் அணித் தொண்டர் கள் மாவல்வாடி கிராமம் (அஞ் சல்), வட ஆர்க்காடுமாவட்டம்.

விடை: நன்செய் நிலத்தில் உள்ள வேலம்பாசியை ஒழிக்க 'மயில் துத்தம்' (Copper sulphate) என் னும் இரசாயனக் கலவையைப் பயன்படுத்த வேண்டும். மயில் துத்தத்தைப் பயன்படுத்தி வேலம் பாசியை அழிக்கப் பின் கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

நன்செய் நிலத்தில் ஒருசில இடத்தில், ஓரளவுக்கு மட்டும் வேலம்பாசி வளர்ந்திருந்தால் வயலில் உள்ள தண்ணீரை வடித்துவிட்டு, பாசிவளர்ந்துள்ள இடங்களில் மயில் துத்தப் பொடி களைத் தூவி விட வேண்டும். அல்லது தண்ணீர் பாய்ச்சும் போது மடையில் ஒரு மெல்லிய துணியில் மயில் துத்தத்தைக் கட்டி வைத்துவிட வேண்டும். மயில் துத்தம் தண்ணீரில் கலந்து வயலெங்கும் பரவி, வளர்ந்துள்ள வேலம்பாசியை அழித்துவிடும். இவ்வாறு செய்ய ஏக்கருக்கு ஒரு கிலோ மயில் துத்தம் தேவைப்படும்.

வயலில் வேலம்பாசி மிகவும் அதிகமாகக் காணப்பட்டால், முதலில் வயலில் உள்ள தண் ணீரை நன்கு வடித்துவிட்டு, ஏக்கருக்கு ஒரு கிலோ சுட்ட சுண்ணாம்பையும், ஒரு கிலோ மயில் துத்தத்தையும் கலந்து வயல் முழுவதும் சீராகத் தூவி விட வேண்டும். (சுண்ணாம்பு—மயில்துத்தக் கலவையைத் தூவும் போது, நெற் பயிர்களின் மேல் படாமல் கவனமாகத் தூவ வேண்டும். ஏனெனில் சுண்ணாம்பு—மயில்துத்தக் கலவை நெற் பயிர்களின் மேல் பட்டால், நெற் பயிர் கருகிவிடக்கூடும்.) பிறகு வயலெங்கும் ஓரளவுக்கு நிற்கு மாறு தண்ணீர் விட வேண்டும். இரண்டு நாட்களுக்குப் பிறகு, வயலில் உள்ள தண்ணீரை நன்கு வடித்துவிட வேண்டும். இவ்வாறு செய்த பின்பும் வேலம்பாசி காணப்படுமானால், 10—வது நாள் இரண்டாம் முறையாக சுண்ணாம்பு-மயில் துத்தக் கலவை யைத் தூவி விட்டு முன்பு செய் தது போலவே சிறிதளவு தண் ணீர் விட்டு 2-ஆம் நாள் வடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் வேலம்பாசியை அறவே ஒழித்து விடலாம்.

மயில் துத்தம் மளிகைக் கடை களில் கிடைக்கும். அவ்வாறு கிடைக்காவிட்டல் உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலம் வரவழைத்துக் கொள்ளலாம்.

—ஆர்.மா.

### ஒரு வேண்டுகோள்!

'தமிழரசு' இதழுக்குக் கவிதை; கதை, கட்டுரை எழுதுவோர் அருள்கூர்ந்து படி எடுத்துக் கொண்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். பிரசுரம் ஆகாதவற்றை எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

# அலங்காநல்லூர் ஒன்றியம் ஆற்றியுள்ள அரும் பணிகள்

இமா—

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 5 ஆண்டு களில் நடைபெற்றுள்ள வேலைகள் குறிப்பிடத் தகுந்தவையாகும் ; ஊர் வளர்ச்சிக்கு மகத்தான அடையாளமாகும்.

### சாலைகள்

இடையபட்டி, வைகாசிப் பட்டி, மெய்யப்பன்பட்டி, ஆத னூர், பள்ளிப்பட்டி, உசிலம் பட்டி, அங்கப்பன் கோட்டம், குமரிக் குடியிருப்பு, கொட்டக் கோயில், பச்சம்பட்டி, முத்தாலம்மன் கோயில், புழார் ஆகிய ஊர்களுக்குப் புதிதாகச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மூடுவார்பட்டியிலிருந்து சத்திர வெள்ளாளப்பட்டி வரை வெள்ளை யம்பட்டி, பாறைப்பட்டி, கோடாங்கிபட்டி, சேந்தமங் கலம், மேட்டுப்பட்டி வழி யாகச் செல்லும் சாலை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது

அழகாபுரி, — குட்டிமேக்கி பட்டிச் சாலை, வெள்ளையம் பட்டி—சரந்தாங்கிச் சாலை, மாணிக்கம்பட்டி, — உசிலம் பட்டிச் சாலை ஆகியவை அபி விருத்தி செய்யப்பட்டுள்ளன.

புதுப்பட்டி, அழகாபுரிச்சாலை, கல்லணை, கோட்டமேடுசாலை, வலசைச் சாலை, பாலமேடு, ஆண்டிப்பட்டிச்சாலை ஆகியவை களுக்கு மெட்டல் பரப்பப்பட் டுள்ளது.

### பாலங்கள்

ஆதனூர், ஊர்சேரி, கச்சைக் கட்டி, சால்வார்பட்டி, தாத கவுண்டன்பட்டி, குட்லாடம் பட்டி.

### குடிநீர்க் கிணறுகள்

செம்மினிப்பட்டி, மெய்யப் பன்பட்டி, நெடுங்குளம், இராசக் காள்பட்டி, கொண்டையம்பட்டி, பி. மேட்டுப்பட்டி, வாவிட மருதூர், ஊர்சேரி, சின்ன ஊர்சேரி, தேவசேரி ஆகிய ஊர்களில் புதிய குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்க் கிணறுகள்

ஐயங்கோட்டை, வலசை, தண்டலை, வலையபட்டி, கச்சைக் கட்டி, வெள்ளியம்பட்டி, எர்ரம் பட்டி, பண்ணக்குடி, கல்லணை ஆகிய ஊர்களில் பாதுகாக்கப் பட்ட குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

### செலவினங்கள்

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| இணைப்புச் சாலைகள் .. | 1·50. |
| கிணறுகள் .. .. .. | 0·75. |
| பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்க் கிணறுகள். .. | 1·00. |
| வேலை வாய்ப்புத் திட்டம் .. | 2·50. |
| பள்ளிக் கூடங்கள் .. .. | 2·00. |
| சமுதாயக் கிணறுகள் .. | 1·00. |
| (ரூபாய் ஆயிரத்தில்.) | |
| குளங்கள் .. .. .. | 0·75. |
| விவசாயக் கிடங்குகள் .. | 0·50. |
| மனமகிழ் மன்றம் .. .. | 0·50. |

### பள்ளிக்கூடங்கள்

ஐயங்கோட்டை, வடுக பட்டி, புதுப்பட்டி, கோயில் பட்டி, மூடுவார்பட்டி, வெள்ளை யம்பட்டி, பொந்துகம்பட்டி, வலையபட்டி, சத்திரவெள்ளாளப் பட்டி, மேட்டுப்பட்டி ஆகிய ஊர்களில் புதிய பள்ளிக்கூடங் கள் கட்டப்பட்டுள்ளன.

### சமுதாயக் கிணறுகள்

வெள்ளையம்பட்டி, குட்லாடம் பட்டி, வாவிடமருதூர் ஆகிய ஊர்களில் புதிய சமுதாய நலக் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

### குளங்கள்

'சைக்கிள் சிஸ்டம்'படி 108 குளங்கள் மராமத்துச் செய்யப் பட்டுள்ளன.

### இதர இனங்கள்

விவசாயக் கிடங்குகள் இரண்டு கட்டப்பட்டுள்ளன. ஐயங் கோட்டையில் நெல் உலர்த்தும் களம் கட்டப்பட்டுள்ளது.

கச்சைக்கட்டி, சின்ன இலந்தைக்குளம், பி. மேட்டுப் பட்டி, அச்சம்பட்டி, கோடாங்கி பட்டி, வலையபட்டி ஆகிய ஊர் களில் பஞ்சாயத்து அலுவலகங் கள் கட்டப்பட்டுள்ளன.

வெள்ளையம்பட்டியில் ஆசிரி யைகளுக்குக் குடியிருப்பு கட்டப் பட்டுள்ளது.

### மனமகிழ் மன்றம்

வாவிடமருதூர், மேலச் சின்னனம்பட்டி, வடுகபட்டி, பொந்துகம்பட்டி, தேவசேரி, ஆதனூர் ஆகிய ஊர்களில் மனமகிழ் மன்றம் கட்டப் பட்டுள்ளது.

புதூர், மீனாட்சிபுரம், மாய வரம், நடுவம்பட்டி, எர்ரம்பட்டி ஆகிய ஊர்களில் வானொலி நிலையங்கள் அமைக்கப்பட்டுள் ளன.

### கல்வி—சமூகக் கல்வி

கடந்த ஐந்து ஆண்டுகளில் எல்லா ஊராட்சி மன்றங்களி லும் உள்ள அனைத்துக் கிராமங் களுக்கும் வானொலிப் பெட்டி கள் வழங்கப் பட்டுள்ளன.

அதிகப்படியாக வழங்கப்பட்ட வானெலிப் பெட்டிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

இவ்வூராட்சி ஒன்றியத்தில் உள்ள 43 ஊராட்சி மன்றங்களில் 43 சமூகக் கல்வி நிலையங்களும் 43 வானொலி மன்றங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இளைஞர் அணியினரால் தெத்தூர், கச்சைக்கட்டி, ஆதனூர், ஐயங்கோட்டை, வடுகபட்டி ஆகிய கிராமங்களில் விளையாட்டுத் திடல்களும் கிராமப் பள்ளிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வாவிட மருதூர், மேலச் சின்னனம்பட்டி, வடுகபட்டி பொந்துகம்பட்டி கல்லணை, தேவசேரி, ஆதனூர், மரியம் மாள்குளம் ஆகிய கிராமங்களில் மனமகிழ் மன்றங்கள் கட்டப்பட்டுள்ளன.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 17 கூட்டுறவு நாணயச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் விவசாயக் கடனுதவி வழங்குவது, ஐந்து வருடங்களுக்கு முன்பு ரூ. 20 இலட்சமாக இருந்தது. தற்போது ரூ. 40 இலட்சமாக உயர்ந்துள்ளது.

இந்த 17 சங்கங்களில் 13 சங்கங்கள் உர விநியோகம் செய்யும் சேவைகளையும் மேற்கொண்டுள்ளன. 17 சங்கங்களும் அத்தியாவசியப் பொருளான, சீனி விற்பனை உரிமையையும் பெற்றுள்ளன.

கீழ்க்கண்ட கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்கு, அந்தப் பகுதி விவசாயிகளின் நன்மையைக் கருதி, அவர்களது விளைபொருட்களைச் சேமித்து வைத்து உரிய காலங்களில் நல்ல விலைக்கு விற்கக் கிட்டங்கி கட்டுவதற்குத் தமிழக அரசு கடனும் உதவித் தொகையும் வழங்கி, கிட்டங்கிகள் கட்டப்பட்டுள்ளன.

அலங்காநல்லூர் கூட்டுறவு விவசாய வங்கி—2

கொண்டயம்பட்டி கூட்டுறவு விவசாய வங்கி—2

அழகாபுரி கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம்—1

குமாரம் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம்—1

கச்சைக்கட்டி—1

மூடுவார்பட்டி—1

இவை தவிர, சிறு விவசாயிகளின் நன்மையைக் கருதி அலங்காநல்லூர் வட்டாரத்தில் சிறு விவசாயிகள் இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்கள், வட்டாரம் முழுதுக்கும் பயன்படும் விதம் 9 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதில் ரூ. 3,004 எர்ரம்பட்டி இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்திற்கு ரூ. 2,01,500 கடன் வழங்கப்பட்டு 6 கிணறுகள் தோண்டப்படும் வேலை நடைபெற்று வருகிறது. இது கண்டு, அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியுறுகின்றனர். அது தவிர, ரூ. 12,500 கடனாகவும் ரூ. 12,500 உதவித் தொகையாகவும் அரசினரால் வழங்கப்பட்டு அழகானதொரு கிட்டங்கியும் அச்சங்கத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், தனிச்சியம் இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்திற்கு ரூ. 3,50,000 மதிப்பீட்டில் 6 கிணறுகள் வெட்டித் திட்டம் தீட்டி, கடன் மனுவும் கொடுக்கப்பட்டுள்ளது.

அதுபோன்று, குட்லாடம்பட்டி இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்திற்கு ரூ. 2½ இலட்சம் மதிப்பீட்டில் 5 கிணறுகள் வெட்டுதற்குத்திட்டம் தீட்டி அனுப்பப்பட்டுள்ளது. மற்ற இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களும் இதுபோன்று தீவிரமாகச் செயல்படும் முயற்சியை மேற்கொண்டு சிறு விவசாயிகள் பெருவாரியாக நன்மை அடையும் வாய்ப்பிற்குக் கவனம் செலுத்தி வருகிறது.

### மகளிர் குழந்தைகள் நலம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் 30 மகளிர் மன்றங்களுக்கும், தையற் கருவிகள் வாங்கி அளிக்கப்பட்டுள்ளன. 10 மகளிர் மன்றங்களில் சத்துணவுச் செயல்முறை விளக்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

மகளிர் மன்ற அமைப்பாளர்கள் அனைவரும் சிறு சேமிப்புக் கணக்கு ஆரம்பித்துள்ளனர். கச்சைகட்டி, வாவிடமருதூர், வடுகபட்டி ஆகிய இடங்களில் பாலர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. பாலமேடு மகளிர் மன்றம் சிறந்த மகளிர் மன்றமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 3-வது பரிசு ரூ. 400 அடைந்துள்ளது. அதற்குச் சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

சென்னை நகரில் கடந்த ஆண்டில் களவுபோன ரூ. 18 இலட்சத்தில் ரூ. 13 இலட்சத்தினைத் தமிழ்நாடு காவல் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

சென்னை நகரில் 1971-ஆம் ஆண்டு 210 கலவரங்கள் நடந்தன. கடந்த ஆண்டு இது 209 ஆகக் குறைந்தது.

| | 1971 ஆம் ஆண்டு. | 1972-ஆம் ஆண்டு. |
|---|---|---|
| கொலை | 20 | 27 |
| ரூபாய் நோட்டு சம்பந்தப்பட்ட குற்றம். | 38 | 40 |
| ஆள் கடத்தல் | 18 | 15 |
| வழிப்பறி | 17 | 13 |
| கொள்ளை | — | 3 |
| வீட்டை உடைத்துத் திருட்டு | 125 | 466 |
| ஆடு-மாடு திருட்டு | 50 | 62 |
| சைக்கிள் திருட்டு | 407 | 600 |
| ஜேப்படி | 120 | 175 |
| மற்ற வகையான திருட்டுகள் | 3,815 | 4,003 |

1971-ஆம் ஆண்டில் 4,534 குற்றங்கள் நடந்தன. இவற்றில் 3,788 குற்றங்கள் துப்புத் துலக்கப்பட்டன.

1972-ஆம் ஆண்டில் 5,322 குற்றங்கள் நடந்தன. இவற்றில் 3,894 குற்றங்கள் துப்புத் துலக்கப்பட்டன.

1971-ஆம் ஆண்டு திருட்டு, கொள்ளை போன்ற குற்றங்களில் ரூ. 19,36,096 மதிப்புள்ள பொருட்கள் திருட்டுப்போயின. இவற்றில் ரூ. 15,77,721 மதிப்புள்ள பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

1972-ஆம் ஆண்டு ரூ. 18,25.205 மதிப்புள்ள பொருட்கள் காணமல் போயின. இதில் ரூ. 13,09,141 பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.





## 9. சத்திய சோதனை

டி.என். சுகி சுப்பிரமணியன்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பார்கள். ஒரு சில திருமணங்கள், மற்றவரின் மரணப்படுக்கையிலும் நிச்சயிக்கப்படலாம் என்பதற்கு மணிவாசகனின் திருமணமே சான்று.

' நீ என்னைவிட்டுப் போகக் கூடாது!' என்று மணிவாசகனை ஆணையிட்டுத் தடுத்த பாண்டித்துரை, எவருமே தன்னைத் தடுத்து நிறுத்த இயலாத இடத்திற்குப் பயணம் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

வாழ்ந்து காட்டிய அவர், பிறர் பின்பற்ற முடியாத வழிப் பயணத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்.

டாக்டர் நர்மதா அவரது இருதய நோயின் தீவிரத்தை அறிந்தவள். உடனடியாக ஆம்புலன்சுக்குத் தகவல் அனுப்பி அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கிறாள்.

'எத்தனை பெரிய புயலையும் பூகம்பத்தையும் எதிர்த்துச் சமாளித்து' இரும்பாக நின்ற இருதயம் அது! தன் குடும்பத்துள் ஏற்பட்டிருக்கும் சிறு அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் இப்படித் திடீரென இற்றுப்போய் விழுந்துவிட்டதே......! என்ற வியப்பும் வேதனையுமாக மணிவாசகன் திகைத்து நிற்கிறான்.

'இனிமேல் என்ன?' என்பதைப் பற்றி ராதை சிந்திக்கத் தொடங்கவில்லை. அமைதியாகவும்—அதே சமயம் மிகுந்த கவனத்துடனும் மருத்துவ மனைக்குப் புறப்படும் தந்தைக்கு வேண்டிய பொருட்களை எடுத்துவைக்கத் தொடங்குகிறாள்.

பாண்டித்துரையின் மூக்குக் கண்ணாடி, பேனா, பென்சில், குறிப்பேடு, ஓரிரு பக்திப் பாடல்கள், புத்தகங்கள், ஒரு பிளாஸ்கில் வெந்நீர், மற்றொன்றில் ஹார்லிக்ஸ்...... கூடையில் ஆறேழு ஆரஞ்சுப்பழங்கள்.... கம்பளிப் போர்வை..

பரபரவென இத்தனையும் எடுத்து வைப்பதில் முனைந்து நிற்கிறாள் ராதை. ஆம்புலன்ஸ் வண்டி வருவதற்குள் தயாராக இருக்க வேண்டும் என்ற அக்கறை ஒரு காரணம். தன்னை முன்னிட்டுத் தந்தை வேதனை படப் போகிறாரே என்பதால் அவர் பார்வையிலிருந்து சிறிது நேரம் விலகி நிற்க வேண்டும் என்ற விவேகம் மற்றுமொரு காரணம்.

''மணிவாசகன்!''

''என்ன மாமா....?''

''நீ இந்த வீட்டை விட்டுப் போகக் கூடாது''

''போக மாட்டேன். இது உறுதி''

''இன்னொரு சத்தியம் செய்து தர வேண்டும்''

''சொல்லுங்கள்''

''என் மகளை நீ மணந்து கொள்ள வேண்டும்''

''ஆகட்டும் மாமா....!''

பாண்டித்துரையின் வேண்டுகோளை விட, மணிவாசகனின் சம்மதம் ராதையின் இதயத்தில் ஆயிரமாயிரம் ஈட்டிகளைப் பாய்ச்சி வேதனையைத் தருகின்றது. நர்மதாவின் இதயத்திலோ நிம்மதியைத் தருகின்றது.

''நர்மதா......'' என்று பரிவுடன் அழைக்கிறார் பாண்டித்துரை.... இருதயம் பலவீனப்பட்டும் அவர் பரிவு பலவீனமடையவில்லை.

''என்ன சார்....?'' என்று அமைதியாக அவர் அருகே வந்து நிற்கிறாள் நர்மதா.

''இன்னும் சார்'' என்றே கூப்பிட வேண்டுமா? அப்பா என்றோ, சித்தப்பா என்றோ வாய் நிறையக் கூப்பிடலாமே அம்மா......!''

''சரி அப்பா....?''

''நர்மதா, நீ என் மூத்த மகள் அல்லவா?''

''ஆமாம்''

''உன் தங்கை ராதையின் வாழ்வு உன் கையில் தான்.... இருக்கிறது''

''நான் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட மாட்டேன் அப்பா!''

''அந்த நம்பிக்கையோடு தான் நான் உலகத்தை விட்டுப் போகிறேன்....''

''அந்த நம்பிக்கையோடு நீங்கள் போகக்கூடாது, உலகத்தில் வாழ வேண்டும்!''

''இல்லையம்மா.... நம்பிக்கை உயிரோடு இருக்க வேண்டுமானால், நான் இறந்தே ஆக வேண்டும்.... மணிவாசகனிடம் நான் வாங்கிக் கொண்ட சத்தியம்....''

''எனக்கு நன்றாகத் தெரியும் ....உங்கள் மகளை அவர் மணந்து கொள்ள வேண்டும் என்பதுதானே சத்திய சோதனை?''

''ஆமாம்.. என் மகளை.. என் மூத்த மகளை....அதாவது உன்னை....!''

''அப்பா....!'' என்று அலறுகிறாள் நர்மதா. அவள் இதயத்துள் ஆயிரமாயிரம் ஈட்டிகள் பாய்ந்த வேதனை; ராதையின் இதயத்திலோ நிம்மதிபிறக்கிறது! நோயாளி உண்மையை உணர்த்தினார்; டாக்டர் உண்மையை உணர்ந்தார்.

பாண்டித்துரை மேலும் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் மணிவாசகன் குறுக்கிட்டு. ''அதெல்லாம் இப்போது பேச வேண்டாமே மாமா.... நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்...... எதையும் பிறகு பேசிக் கொள்ளலாம்'' என்கிறான்.

''பிறகு பேசுவதற்கு இந்தக் கட்டை இருக்க மாட்டேனே மணிவாசகன்! நான் பேச வேண்டிய நேரம் இதுதான், இப்போது நான் பேசாமல் போய்விட்டால் பிறகு 'கன்னா பின்னா'வென்று ஊர் பேச ஆரம்பித்து விடும்,...! என்னைப் பேச விடுங்கள்....''

மணிவாசகன் மறுமொழி கூற இயலவில்லை. பலவீனமடைந்த குரலில் பேசுகிறார் பாண்டித்துரை.

''மணிவாசகனை மணந்து கொள்ளமாட்டேன்; இனி இந்தக் குடும்பத்துக்கு வெறும் டாக்டர் மட்டும் தான் என்று நர்மதா கூறியது, என் காதிலும் விழுந்தது. மணிவாசகனை வெறுத்து அவள் கூறவில்லை. தன் காதலை விட ராதையின் நலனில், நல்வாழ்வில் அவள் கொண்ட அக்கறைதான் அவளை அப்படிப் பேசவைத்தது என்பதை உணர்ந்து என் இதயம் புல்லரித்தது. அவள்தான் இறுதி வரை ராதையின் நல்வாழ்வுக்காகப் பாடு படக்கூடியவள் என்ற நம்பிக்கையும் சுடர் விட்டது. ஒரு நெல்லுக்குள் ஓராயிரம் நெல் மணிகளைப் பயிராக்கித்தரும் மண்மாதாவைப் போன்ற பசுமையான இதயம் நர்மதாவுக்கு உண்டு என்பதை உணர்ந்து கொண்டேன்...... ராதையின் தியாகத்தை அவள் போற்றுவாள்.... அதற்கு நன்றிக் காணிக்கையாக என்றென்றும் ராதையைக் கண் கலங்காமல் காப்பாற்றுவாள் என்கின்ற நம்பிக்கை என் மனத்துள் உரம்பிடித்த பிறகுதான் இந்த முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்...... ராதைக்குச் சொத்துக்களை உயில் எழுதி வைக்க வில்லை.... இந்தச் சுகங்களைத்தான் உயிலாக எழுதி உன் கையில் ஒப்படைத்து விட்டுப் போகிறேன் ....நர்மதா!''



## 'அலர்ஜி நோயாளிகள்'

இந்தியாவில் சுமார் 82 இலட்சத்து 50 ஆயிரம் பேர் ஆஸ்துமா நோயினால் அவதிப்படுகிறார்கள். சுமார் 2·5 கோடி பேர் நீர்ப்பிடித்தல், அடிக்கடி தும்முதல் போன்ற உடற்கோளாறுகளால் பாதிக்கப் பட்டிருக்கின்றனர். உடம்புக்கு ஒத்துக் கொள்ளாததால் ஏற்படும் மற்ற நோய்களையும் கணக்கில் கொண்டால், இந்தியாவில் 5 கோடியே 50 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் 'அலர்ஜி' நோய்களால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறது.



''அப்பா....'' என்று விம்முகிறாள் டாக்டர் நர்மதா. ஆறுதலாக அவளை அணைத்தபடி அப்பால் அழைத்துப் போக வருகிறாள் ராதை.... பாண்டித்துரை அவளைச் சைகை காட்டி நிறுத்துகிறார்!

''சட்டப்படி எழுதப்படும் உயில்களுக்குத்தான் வக்கீலின் உதவி தேவை.... இங்கே சத்தியத்தால் எழுதப்பட்டிருக்கும் இந்த உயிலுக்கு—பக்கத்திலேயே வக்கீல் மணிவாசகன் இருந்தும்—டாக்டர் நர்மதாவைத்தான் காப்பாளராக வைத்துவிட்டுப் போகிறேன்.... எழுத்துக்களை நம்புவதைவிட இதயத்தின் மீது வைக்கும் நம்பிக்கை நிலையானது....! நித்தியமானது-இது என் முடிவு....'' என்கிறார் பாண்டித்துரை.

வாசலில் ஆம்புலன்ஸ் வண்டி வந்துநிற்கும் ஒலி கேட்கிறது.

''அப்பா.... ஆம்புலன்சு வந்துவிட்டது....'' என்கிறாள் ராதை.

''வாழத் துடிக்கிறவர்களை அழைத்துப் போகத்தானே ஆம்புலன்சு வண்டி தேவை? எனக்கு அந்த வண்டி பயன் படாது....அம்மா நர்மதா.... ராதையின் எதிர்காலம்?''

''என் பொறுப்பு!''

அத்தகைய சூழ்நிலையிலும் இதனையே சுகநிலையாக எண்ணினார் பாண்டித்துரை.......... நர்மதா கொடுத்த நம்பிக்கைதான் பாண்டித்துரை தம் வாழ்வின் இறுதி நேரத்தில் அனுபவித்த இன்பம். சொல் முயற்சிக்குள் செயல் முயற்சியும் இருக்குமென்று நம்பினார்.

# 10. உள் மனத்தின் உறுத்தல்

மேல் நாட்டு வசதிகளுடன் தமிழ்நாட்டுச் சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கும் 'ஹோட்டல் நவீனா'வின் மூன்றாவது மாடி.

சிங்கப்பூரிலிருந்து தம் இரண்டாவது மனைவி சகிதம் புறப்பட்டு வந்திருக்கும் பசுபதி, மகள் நர்மதாவின் வரவுக்காக அமைதியின்றிக் காத்திருக்கிறார்.

குளிர்வசதி செய்யப்பட்டிருக்கும் இருட்டறை.... கண்ணுக்கு இதமான வெளிச்சம்.. கண்ணாடி அடைப்புக்கு அப்பால் தெரியும் கலகலப்பான சென்னைப் பட்டினம்.... இத்தனை இருந்தும் பசுபதியின் இதயத்தில் அமைதியில்லை.... மருத்துவக் கல்லூரி மாணவியாக ஆறரை ஆண்டுகள் தனியே விடுதியில் தங்கிப் படித்து வந்த இத்தனை நாட்களில் ஒருமுறை கூட 'அவசரம்-சொந்தப் பிரச்சினை— உடனே வரவும்' என்று தம் மகளிடமிருந்து தந்தி வந்ததில்லையே.. படிப்பை முடித்துப் பணியை மேற்கொள்ளவிருக்கும் இந்த நேரத்தில் மகள் தம்மை அவசரமாக வர வழைத்திருக்கும் காரணம் என்னவாக இருக்கும்?

அழைப்புமணி ஒலிக்கிறது.

ஓட்டல் நவீனாவின் பணியாள் வாசலில் வந்து நின்றபடியே, ''மன்னிக்கவும்....டாக்டர் நர்மதா என்பவர் உங்களைக் காண வந்திருக்கிறார்'' என அறிவிக்கிறார்.



''வரச் சொல்'' என்று கூறி அனுப்பிவிட்டுத் தம் குழப்பத்தை மறைத்து எப்போதும் போல் இயல்பாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள முயல்கிறார் பசுபதி.

நர்மதா உள்ளே வருவதற்குள் தொலைபேசி மணி ஒலிக்கவே எழுந்துவந்து பேசுகிறார் பசுபதி. இரத்தினச் சுருக்கமான பேச்சு.... தொலைபேசியின் மறுமுனையில் பேசியவர் யாரோ எவரோ....? ஆனால் அந்தப் பேச்சிற்கும் நர்மதாவின் வருகைக்கும் உள்ள தொடர்பை பசுபதியால் உடனே புரிந்து கொள்ள முடிகிறது.

மறுமொழி ஏதும் கூறாமல் இடையே குறுக்கிட்டுப் பேசாமல் பசுபதி தொலைபேசியில் கவனமாகப் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் நர்மதா அமைதியாக உள்ளே வந்து நிற்கிறாள். அவளுடன் வந்த மணிவாசகன் பசுபதியை நோக்கிக் கரங்குவிக்கிறான். நர்மதாவின் பார்வை, அறையின் ஓரத்தில் அலங்கார மேசையின் முன்னால் நின்று கொண்டிருக்கும் இளம் பெண்ணின் மீது பதிகிறது.

விரைந்து சென்று அந்தப் பெண்ணின் தோளில் கைவைத்து ''நான்தான் நர்மதா......'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள் நர்மதா.

பின்னர் மணிவாசகனிடம் ''இவர்கள் என் சித்தி'' என அறிமுகம் செய்து வைக்கிறாள்.

வெட்கம் பாதி, பயம் பாதியாக மிரள மிரள விழித்துக் கொண்டிருக்கும் சியாமளா—நர்மதாவின் சித்தி மணிவாசகனைப் பார்த்து வணக்கம் தெரிவித்து விட்டு அப்பால் போய் நிற்கிறாள்.

இதற்குள் தொலைபேசியில் பேசி முடித்துவிட்டுப் பசுபதி அவர்கள் இருக்கும் இடம் நோக்கி வருகிறார்.

''வா அம்மா..'' என்று மகளை வாஞ்சையுடன் அரவணைத்துக் கொள்கிறார் பசுபதி. ஐந்தாண்டுகளாக மகளைப் பிரிந்திருந்த ஏக்கம், பாசம் எல்லாமாகச் சேர்ந்து ஓரிரு வினாடிகள் அவரை உணர்விழக்கச் செய்து விட்டன போலும்.



''அப்பா.. இவர்—'' என நர்மதா ஆரம்பிப்பதற்குள், ''மிஸ்டர் மணிவாசகம், எம்.ஏ.பி.எல். உன் வருங்காலக் கணவர்'' என்று கூறி முடிக்கிறார் பசுபதி.

நர்மதா—மணிவாசகன் இருவருக்குமே வியப்பும் திகைப்பும்!

''அப்பா.... உங்களுக்கு எப்படி?'' என்று கேட்கத் தடுமாறுகிறாள் நர்மதா.

''எப்போதோ தெரிந்திருக்க வேண்டிய விஷயம்.... நல்லவேளை இப்போதாவதுதெரிந்ததே என்று மகிழ்ச்சியடைகிறேன்.... மிஸ்டர் மணிவாசகம் ...... உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி....'' என்று கூறியபடியே மணிவாசகனுடன் கரங்குலுக்குகிறார் பசுபதி.

இன்பம் பகிர்ந்து கொள்வதற்காகப் பிறந்த பொருள் என்பதை அறிந்தவர் பசுபதி.

''சுற்றி வளைக்காமல் நேரடியாகவே கேட்டு விடுகிறேன் நர்மதா.... உங்கள் திருமணத்தை உடனடியாக நடத்த வேண்டுவதன் அவசியம் என்ன?''

தந்தையிடமிருந்து இப்படித் திடீரென ஒரு வெடிகுண்டு வந்து விழும் என்று நர்மதா எதிர்பார்க்கவில்லை. முதலில் அறிமுகப் படலம்; பின்னர் மணிவாசகன் மீது ஆசைகொண்ட படலம்; அதற்குப் பின்னர் திருமணப் படலம் என்று கோவையாக எடுத்துச் சொல்லித் தந்தையின் சம்மதத்தையும் வாழ்த்துக்களையும் பெற வேண்டும்; தன் காதலை ஒரு தொடர்கதை போல் மனத்திற்குள் சொல்லிச் சொல்லி ஒத்திகை பார்த்து வந்திருப்பவள் நர்மதா....பசுபதியோ படீரென்று பாதியிலிருந்து விஷயத்தை ஆரம்பித்து வைத்து அதற்கு விளக்கமும் கேட்கிறார்! என்ன பதிலைச் சொல்ல?

''மிஸ்டர் மணிவாசகனின் தாய்மாமன் பாண்டித்துரை இறந்துபோய் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லையே.....''

''அதுவும் தெரியுமா அப்பா உங்களுக்கு?''

சிங்கப்பூரிலேயே இருந்து விட்டதால் சென்னையில் என்ன நடக்கிறதென்பது தெரியாமலா போய்விடும்? நீ சம்பந்தப்பட்டுள்ள விஷயங்களைக் கூடத் தெரிந்து வைத்துக் கொள்ளாமல் இருந்து விடுவதற்கு நான் அந்நியனல்லன் மகளே, உன்னைப் பெற்றவன்''.

''இதெல்லாம் உங்களுக்கு..?''

''என்மகள் ராதை சொன்னாள்!''

''அப்பா....''

''ஆம் நர்மதா....பாண்டித்துரைக்கு என் மகள் மூத்த மகளாகச் சுவீகாரம் போகலாம் என்றால், அவர் மகளை எனது இளைய மகளாக நான் ஏற்றுக் கொள்ள முடியாதா என்ன..? நீ கூறவந்த விவரங்கள் அனைத்தையும் ஏற்கெனவே என்மகள் ராதை என்னிடம் கூறி முடித்து விட்டாள். புதிய சேதிகள் ஏதேனும் இருந்தால் சொல்லம்மா!'' என்று அமைதியாகக் கூறுகிறார் பசுபதி.

மனோ தைரியம் இல்லாமல் எதையும் சாதிக்க முடியாது என விளங்கிய பாண்டித்துரைதான் அழுத்தமானவர் என்பதாக மணிவாசகன் எண்ணிக் கொண்டிருந்தான். பசுபதி அவரைக் காட்டிலும் மகா அழுத்தக்காரர் என்று முடிவு கட்டியது அவனது சட்ட ஞானம்.

காதலித்தவனைக் கைப்பிடிப்பதற்குள் இத்தனை மனமுறிவுகளையும், சிதைவுகளையும் நியாய வாதங்களையும் சந்திக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை நர்மதா எதிர்பார்க்கவில்லை.... அன்புப் பெருவெள்ளத்தை எதிர்பார்த்தவள் முரட்டு முடிவைச் சந்திக்கும் நிலையில் இருந்தாள்.. அதிர்ச்சியால் மௌனமுற்று உட்கார்ந்திருந்த அவளைச் சியாமளாவின் உபசரிப்புதான் உணர்வுக்குக் கொண்டுவருகின்றது..!

ஒரு தட்டு நிறையப் பழங்கள், பிஸ்கட்டுகள், இரண்டு கோப்பைகளில் காஃபி எல்லாவற்றையும் எடுத்துவந்து டீப்பாயின் மேல் வைக்கிறாள் சியாமளா.

'' சாப்பிடுங்கள்.... பிறகு அமைதியாகப் பேசலாம்'' என்கிறாள் சியாமளா. உணவைக் கண்டால் உள்ளம் அமைதியடையும் என்பதை அறிந்த பெண்மணி.

'' சியாமளா....உன் மகள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளாம்!'' என்கிறார் பசுபதி.

''உங்களோடு சேர்ந்து நானும் வாழ்த்துகிறேன்!''

''அதுவும், காதல் திருமணம் ''

''அப்படியானால் மறுபேச்சுக்கு இங்கே இடமில்லை...... அவர்களின் காதலுக்குக் குறுக்கே நிற்கும் அருகதை நம் இருவருக்கும் இல்லை!'' என்று தெளிவாகவும் அழுத்தமாகக் கூறுகிறாள் சியாமளா. அவள் உறுதிச் சொல் மணிவாசகனுக்கே வியப்பைத் தருகின்றது.

''நான் திருமணத்திற்குத் தடைபோடவில்லை; திருமணத்தைத் தள்ளிப் போடத்தான் சொல்லுகிறேன் ....அதுவும்.. தந்தையை இழந்து தனித்திருக்கும் ராதையின் இதய சாந்திக்காகத்தான் சொல்கிறேன் ...''

''ராதையின் ஆறுதலுக்காகத்தான் நான் என் திருமணத்திற்கு அவசரப் படுத்துகிறேன் அப்பா....'' என்று குறுக்கிடுகிறாள் நர்மதா.

''எனக்குப் புரியவில்லையே''

''நான் புரிய வைக்கிறேன் சார்....'' என்று ஆரம்பிக்கிறான் மணிவாசகன்.

''சொல்லுங்கள் மிஸ்டர் மணிவாசகன்''

''இத்தனை நாட்களாய் என் மாமா பாண்டித்துரை வீட்டோடு இருந்தார். நானும் ராதையும் இனிமேலும் ஒரே வீட்டில் தன்னந்தனியாக இருப்பது....'' என்று மணிவாசகன் கூறி முடிப்பதற்குள் ....பசுபதி குறுக்கிட்டார்.

''அதாவது உங்கள்ஒழுக்கத்தின் மேல் உங்கள் வருங்கால மனைவி நர்மதா வைத்திருக்கும் நம்பிக்கை அவ்வளவுதான்'' என்று இடக்காகப் பேசுகிறார்.

''சார்....'' என்று பதறுகிறான் மணிவாசகன்.

நர்மதா அவனைக் கையமர்த்தி ''நீங்கள் அமைதியாக இருங்கள் மணிவாசகன்....'' என்று கூறிவிட்டு, தந்தையிடம், ''அப்பா......எனக்கு ஒரு விஷயத்தை மட்டும் தெளிவுபடுத்துங்கள் ........ நாங்கள் உள்ளே வரும்போது உங்களுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த நபர் யார்? பெயரைச் சொல்லுங்கள்'' என்று கேட்கிறாள். கெஞ்சுகிறாள்.

''ராதை!''

''பொய்! உங்களுடன் பேசியது ராதை இல்லை'' என மூர்க்கமாக மறுக்கிறாள் நர்மதா.

''ஏன்....? உன் நலனில் அக்கறை கொண்ட ராதைக்கு, உன் தந்தை வந்து தங்கியிருக்கும் ஓட்டலைத் தெரியாதா....? தொலைபேசி எண் தெரியாதா? அவளாகவே என்னை அழைத்துப் பேசியிருக்கக் கூடாதா?'' என்று படபடவெனப் பொரிகிறார் பசுபதி.

''அப்பா ...ராதை உங்களி
டம் பேசியிருந்தால் உங்கள்
பேச்சில் இவ்வளவு சூடு இருந்
திருக்க நியாயமில்லை....அத
னால்தான் சொல்கிறேன், உங்க
ளுடன் பேசியது ராதையன்று,
மிஸ்டர் ரோமியோதான்!''

எதிரே இருப்பவரின் உணர்ச்சி மாற்றங்களை வைத்து அவர் மனத்தைக் கலைத்தவர் யாராக இருக்கும் என்பதைச் சரியாகக் கண்டு பிடித்துவிட்ட நர்மதாவின் புத்திக் கூர்மையை மணிவாசகன் மனத்திற்குள் பாராட்டிக் கொள்கிறான். இருந்தாலும், எப்போது முதல் என்ன காரணத்தால் தனக்கு வைரியாகப் பகைவனாகத் தன் நண்பன் ரோமியோ மாறினான் என்பது புரியாத புதிராக இருக்கின்றது....

நர்மதா அழுத்தமாகத் தந்தையை ஏறிட்டு நோக்கியபடி ''அப்பா....ராதைக்கு உள்ள தியாக நெஞ்சமோ, அவள் தந்தைக்கிருந்த பெருந்தன்மையோ, என் சித்திக்கு உள்ள திடசித்தமோ, எதுவுமோ உங்கள் கண்ணுக்குப் பெரியதாகப் படவில்லை. அறிமுகம் இல்லாத மூன்றாவது நபர் ரோமியோவின் வார்த்தைகளுக்கு நீங்கள் கொடுக்கின்ற மதிப்பும், முக்கியத்துவமும்தான் இவை எல்லாவற்றையும் விட உயரமாகப் போய்விட்டது!'' என்கிறாள்.

''நான் வியாபாரியம்மா....! எந்த வழியே வந்தாலும் எனக்குச் சாதகமானவற்றைச் சட்டென்று பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன்....அதுவும் ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழடித்துவிட்டு என் மகள் வாழ நினைக்கிறாளே என்றுதான் ....'' எனப் பசுபதி முடிப்பதற்குள் குமுறி அழத் தொடங்குகிறாள் நர்மதா.

''என்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்மேல் இருக்கிற அன்பிலே, அனுதாபத்திலே ஆயிரத்தில் ஒரு பங்கு கூட என் தந்தைக்கு இல்லையே என்று தான் எனக்கு வேதனையாக இருக்கிறது'' என்கிறாள் அழுகையினூடே.

'' ஊரார் அனுதாபத்திலும், தியாகத்திலும்தான் என் மகளுக்கு வாழ்வு கிடைத்திருக்கிறது என்பதை எண்ணும்போது தந்தையின் மனம் படுகிற துயரத்தை அந்த மகளே புரிந்து கொள்ளவில்லையே என்று தான் எனக்கு வேதனையாக இருக்கிறது....'' என்கிறார் பசுபதி.

''மகள் திருமணத்தை நினைத்துப் பூரிக்க வேண்டிய நெஞ்சிலே இந்த வேதனையெல்லாம் அனாவசியம்........ அநாகரிகமானது....'' என்று சமாதானப் படுத்துகிறாள் சியாமளா.

''சியாமளா....இது.. என்'' என்று பசுபதி பேச ஆரம்பிப்பதற்குள், சியாமளாவே குறுக்கிட்டு ''என் மகள் சம்பந்தப்பட்ட விஷயம் என்றுதானே சொல்லப் போகிறீர்கள்; அவள் எனக்கும் மகள்தான் என்று நான் வாதம் செய்யத் தயாராக இல்லை.....அவள் என்னைப்போல் இளம் பெண்.... அவள் மனத்திலிருக்கும் ஆசாபாசங்கள், ஆவலின் அலைமோதல்கள் எல்லாம் என் இதயத்திலும் இருந்தவைதான். அதனால் அவள் படுகிற வேதனையை என்னால்தான் முழுமையாக உணரமுடியும். நம் காதலுக்கு வயது வித்தியாசத்தை ஒரு தடையாக நாம் உணர்ந்ததில்லை அல்லவா....அதே போல் அவள் காதலுக்கு மற்றவர்களின் குறுக்கீட்டை—காதலனுக்காக அவன் முறைப்பெண் காத்திருப்பாளே என்ற உணர்வின் முனைப்பை-ஒரு தடையாக உணரவேண்டிய அவசியமில்லை..

> ### ஆய்வுக் கூடத்தின் அரிய பணி!
>
> புலன் விசாரணை நடைபெறும்போது காவல் துறையினருக்கு உறுதுணையாய் இருப்பது தமிழ்நாடு சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடமாகும். இது 1. படைக்கலன் பிரிவு, 2. உயிரியல் பிரிவு, 3. இரசாயனப் பிரிவு, 4. ஆவணங்கள் பிரிவு, 5. பௌதிகப் பிரிவு ஆகிய ஐந்து பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. குற்ற நிகழ்வுகள் குறித்துப் பல்வேறு நிலைகளில் புலனாய்வு செய்யும்போது காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவியல் முறையில் தேவையான எல்லா உதவியையும் இந்த ஆய்வுக்கூடம் அளித்து வருகிறது. காவல்துறை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், நீதிமன்றத்தினர் இந்த ஆய்வுக்கூடத்திற்குக் கொடுக்கின்ற சாட்சியப் பொருள்களை (தடங்களை) ஆய்வு செய்து அவைபற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதில் இந்த ஆய்வுக் கூடத்தின் ஐந்து பிரிவுகளும் முக்கியமாக ஈடுபட்டுள்ளன.

> ### அரசு ஊழியர்க்குத் திருமணக் கடன்
>
> அரசு ஊழியர்களுக்குத் திருமணக்கடன்கள் வழங்குவதற்காக 1973-74 ஆம் ஆண்டுக்குத் தமிழ்நாடு அரசு ரூ. 40 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.
>
> இதில் ரூ. 7·5 இலட்சம் வைப்பில் வைக்கப்படும். சென்னை நகருக்கு ரூ. 5 இலட்சமும், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 3 இலட்சமும், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2 இலட்சமும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ. 1·5 இலட்சமும் தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் இலட்சமும் ஒதுக்கப்படும்.

அவர்களை வாழ வழிவிடுங்கள். வாழ்த்துங்கள்....'' என்று ஆவேசமாகக் கூறி முழக்குகிருள்.

''சித்தி....'' என நன்றிப் பெருக்குடன் சியாமளாவை அணைத்துக் கொள்கிருள் நர்மதா.

* * *

மணமகன் : மணிவாசகன், எம்.ஏ., பி.எல்.

மணமகள் : டாக்டர் நர்மதா, எம்.பி.பி.எஸ்.

என்ற திருமண அழைப்பிதழ் ராதையின் கைகளில் படபடத்துக் கொண்டிருக்கிறது. தந்தை பாண்டித்துரையின் உருவப் படத்திற்குக் கீழே முதல் அழைப்பிதழை வைத்து வணங்கிய ராதையின் இதயம் பெருமிதத்தால் விம்மியது. தந்தையின் அனுமதியோடும், ஆசியோடும் நடைபெறும் இத்திருமணத்தைக் காண அவர் உயிரோடு இல்லையே என்ற வேதனை மட்டும் இதயத்தின் ஒரு மூலையில் முனகிக் கொண்டிருக்கிறது..

திருமணத்திற்கான புதிய உடைகள், புடைவை, துணிமணிகள் இவற்றை வாங்கிப்பீரோவில் அடுக்கிக் கொண்டிருக்கிருள் ராதை.

ராதைக்கென்று தேர்ந்தெடுத்து ஆசையும் அன்புமாக வாங்கியுள்ள புடைவையுடன் வருகிருள் நர்மதா.

''என்னுல் முடிந்த பரிசு ராதா!'' என்று அவளிடம் கொடுக்கும்போது மணிவாசகன் வந்து நிற்கிருன்....அவன் கலகலப்பும் காளைபோன்ற ஒட்டமும் இப்போது குதிபோட்டுக் கொண்டிருக்கிறது.

''ராதைக்கு உன்னுடைய பரிசா ...பேஷ்!.... பேஷ்! ஆமாம்....உன் திருமணத்திற்கு ராதையின் பரிசு என்னவோ?'' என்று சீண்டுகிருன் மணிவாசகன்.

''பரிசு என்னவோ என்று பரிசுப் பொருளே கேட்பது வேடிக்கைதான்!'' எனக் கூறிவிட்டுச் சரேலென அங்கிருந்து நழுவி விடுகிருள் ராதை...

மணிவாசகன் சிரிப்பொலி எங்கும் எதிரொலி செய்கிறது.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு ஓரிரு விநாடிகள் தேவைப்படுகிறது நர்மதாவுக்கு..

''ராதா....'' என்று அழைத்தபடி ராதையின் அறைக்குள் நுழைகிருள் நர்மதா.

''வந்துவிட்டேன் அக்கா.... அச்சடித்த திருமண அழைப்பிதழ்க்கட்டு அச்சகத்திலிருந்து இப்போதுதான் வந்தது'' என்று ஓர் அழைப்பிதழை அவளிடம் கொடுக்கிருள் ராதை.

''அழைப்பிதழை நான்வாங்கிக் கொள்வதற்கு முன்னுல் இந்தப் படிவத்தில் நீ கையெழுத்துப் போடவேண்டும்.''

''சட்டக் கல்லூரியில் சேருவதற்கான விண்ணப்பம்தானே அக்கா....?''

''ஆமாம்...இதில் கையெழுத்திட்ட பிறகுதான் எனது திருமண அழைப்பிதழையே தொடுவேன்..''

''சரி....கையெழுத்துப் போடுகிறேன் ...ஆனுல், இந்த ஆண்டிலேயே சட்டம் படிக்கப் போக வேண்டுமா....?''

''ஏன்....என்ன தயக்கம் உனக்கு?''

''செண்பகா மில்லில் அத்தானைச் சட்ட ஆலோசகராக எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் நான் மேலே படிக்கச் சம்மதித்தேன்..''

> **ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு.**
>
> தமிழ்நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் மேலும் 375 பி.டி. பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அனுமதி வழங்கித் தமிழக அரசு உத்திரவிட்டுள்ளது.
>
> இதுதவிர மேலும் 1,100 செகண்டரி கிரேட் ஆசிரியர்களை நியமித்திடவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.
>
> பள்ளிக் கல்வி இயக்குநர், புதிய ஆசிரியர்கள் நியமனம் எங்கெந்தப் பகுதிகளில் எங்கெந்தப் பள்ளிகளில் செய்யப்படலாம் என்பது பற்றிய விரிவான திட்டத்தை வகுத்தளிப்பார்:

''அந்த நம்பிக்கைக்கு என்ன பங்கம் வந்துவிட்டது?''

''ஆலை முதலாளி முத்தையா, பின்னுல் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறிவிட்டார். அத்தானுக்கே இந்த விவரம் தெரியாது;' மகிழ்ச்சி நிறைந்த கல்யாண நேரத்தில் இந்த அதிர்ச்சியைச் சொல்ல வேண்டாமே என்றுதான் நான் அத்தானிடம் இதைக் கூறவில்லை...''

''பரவாயில்லை ராதா, உன் படிப்புக்கும் உனது அத்தானின் உத்தியோகத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமோ, எந்தவிதப் பாதிப்போ இருக்கப் போவதில்லை.. இருக்கும் படியாக நான் விடப்போவதில்லை. உன்னைப் படிக்க வைக்கப் போவது உன் அத்தானில்லை.. நான்!'' என்று உறுதியாகக் கூறுகிருள் நர்மதா.

''அக்கா !'' என்று திகைக்கிருள் ராதை.

''ஆம் ராதா ! அதே செண்பகா மில்லின் கம்பெனி டாக்டராக வேலை பார்க்கப் போகிறேன் நான்! மாதம் அறுநூறு ரூபாய் சம்பளம்!''

''அக்கா நீ சொந்தத்தில் நர்சிங்ஹோம் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னதெல்லாம்?''

''நினைத்திருந்தது உண்மைதான். ஆனுல், நிரந்தர வருமானத்திற்கு வழி செய்யவேண்டிய நிலைமை இப்போது வந்து விட்டதல்லவா ? அதனுல் என் முடிவை நான் மாற்றிக் கொண்டு விட்டேன். உம் சீக்கிரம், சட்டக் கல்லூரி பாரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடு '' என்று அவசரப் படுத்துகிருள் நர்மதா.

டாக்டர் நர்மதாவின் பேச்சில் தொனிக்கும் அழுத்தம், அதற்கு அடிபணிந்துவிட்ட ராதையின் நிலைமை இரண்டையும் ஒருசேரப் பார்த்துக் கொண்டிருக்கும் வக்கீல் மணிவாசகனின் இதயத்தில் எரிசரம் பாய்கின்றது!

ராதையின் கண்ணில்
மானின் மருட்சி

மணிவாசகன் மனத்துள்
புலியின் உறுமல்!

(வளரும்)







எழில்'' பரா சக்தி ''தந்த நல்லார் ஆட்சி
இனிதுநடை பெறுகின்ற இந்த நாட்டில்
உழுநிலங்கள் உழுவோர்க்குச் சொந்தம் என்னும்
ஒப்பற்ற சட்டம்உரு வாகக் கண்டோம் !
உழுவோர்கள் பலகாணி நிலங்க ளுக்கே
உரிமைபெறு கின்றார்கள் ; வாழ்வி டங்கள்
உழவோர்க்கு நல்லுரிமை யாகக் கண்டோம் ;
உழைப்போர்க்குத் தொழில்களிலே பங்கு கண்டோம்.

உழவர்களின் உளவாட்டம் போக்கி ஞலே
உழவுதொழில் வையகத்தில் சிறக்கும் என்னும்
விழுமியதோர் கருத்துடைய ஆட்சி இங்கே
விரிதவிசில் வீற்றிருக்கும் கார ணத்தால்
உழவர்களின் விழிநீரைத் துடைத்து வாழ்வில்
ஒளியேற்றப் பன்னிரண் டாண்டுத் திட்டம்
பழுதறவே நாம்கண்டோம் ; உழவர் வாழ்வு
பலமடங்கு சிறந்தோங்கும் நிலைமை காண்போம் !

13-4-'73ல் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில்,
சென்னை வானொலியில் அரங்கேறிய கவிதை.



உயர்விளைச்சல் தருகின்ற கருணை, காஞ்சி
ஒப்பற்ற கரிகாலன், பொன்னி, மற்றும்
வியப்பூட்டும் காவேரி, பவானி, பெண்ணை
விரும்புமொரு கண்ணகிஎன் றிவ்வா ருக
உயர்விளைச்சல் தருகின்ற நெல்ர கங்கள்
ஒன்றுக்குப் பலவாகப் பெருகிற் றிங்கே !
உயர்விதைகள் தரும்பண்ணை பலவும் இங்கே
உருவாகி வளர்கின்ற நிலையும கண்டோம் !

கழனிகளில் கிணறுவெட்ட—பம்ப மைககக்
கடன்வகைகள பலகண்டோம் ; கடனக ளாலே
உழவரினம் சாகாமல் நலன்கள் காண
உதவுகிற வளவங்கி முறையைக கண்டோம் !
உழவோர்க்கும் குத்தகைதா தமககும் நல்ல
உறவிருக்க வாரததில் நியாயம் கண்டோம் !
உழவுதொழில் புரிவோர்தம் கூலி தன்னை
ஒழுங்குறவே செய்கின்ற சட்டம் கண்டோம் !

உற்பத்தி பெருகிடவே உரங்கள் தந்தும்
ஊறுசெய்யும் புழுபூச்சி கொல்ம ருந்து
பற்பலவும் தந்திங்கே நோய்த டுததுப்
பயன்கூட்டும் நன்மருந்து தந்தும் மற்றும்
பொற்புறவே தூவான்கள் தெளிப்பான் ஈந்தும்
புன்னகையை நல்லுழவர் வாழ்வில் தேக்கி
நற்பணிகள் நாள்தோறும் நடப்ப தாலே
நல்லுழவர் நலமெய்தி வாழ்த்து கின்றார்



உலகத்தில் பலதொழில்கள் இயங்கு மேனும்
உலகத்தை இயக்குவது உழவே யன்றோ?
உலகத்தில் வாழவழி காணும் என்றே
உழல்வோரை நிலமடந்தை நகைசெய் கின்றாள் !
பலகற்றும் வாழவழி காண திங்கே
பரிதவித்தல் இனிவேண்டாம் ! உழவால் வையம்
நலங்கண்டு தழைத்திடவே வாழ்த்தி இங்கே
நன்றியொடு கரங்கூப்பி வணங்கு கின்றேன் !







# என்றுமே குழந்தைகள்!

டாக்டர். ஓ. சோமசுந்தரம்

பாரி வேகமாகத் தேரில் போய்க் கொண்டிருக்கிருன். கொழு கொம்பு இன்றி முல்லைக் கொடி துவண்டு கிடக்கிறது. இதைக் கண நேரத்தில் கவனிக்கிருன். அதன் துயர் தீர்க்கத் தனது தேரையே அதன் பக்கத்தில் நிறுத்தி விடுகிருன். தேர் ஒரு பெருமை கொண்ட பொருள் என்றே அல்லது கொடி ஒரு தாழ்ந்த உயிரினம் என்றே கருதவில்லை அவன். இதன் விளைவு — இலக்கியம் ஏத்தும் மங்காப் புகழ் பெறுகிருன்.

பிம்பிசாரன் வேள்வியில் பலி கொடுக்க எண்ணற்ற ஆடுகளை நடத்திச் செல்லுகின்றனர் ஆயர்கள். காலில் அடிபட்டு வழியும் இரத்தத்தோடு நடக்க முடியாமல் ஒரு சிறிய ஆடு தன் தாயைப் பின் தொடர்கின்றது. தாயாட்டின் முகத்தில் சொல்லொணுத் துயரம் பிரதிபலிக்கின்றது. கருணைக் கடலாம் புத்தர் பெருமான் இதைப் பார்க்கின்றார். துயர் எந்த இடத்தில் இருந்தாலும் அதை நீக்கும் புத்தர், பரிவோடு அந்தக் குட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு தாயாட்டின் பின் நடக்கிருர். இந்தக் காட்சியைக் கவிமணி தன் 'ஆசிய ஜோதி'யில் காண்கிருர் :—

இத்தனையும் கண்டுமனம்
இரங்கி நொண்டும்
இளமறியை இருகரத்தில்
எடுத்து வையம்
அத்தனையும் தாங்குபுயம்
அணிய ஏந்தி
அருளுருவாம் அண்ணலும் அத்
தாயை நோக்கி :
அல்லலுற வேண்டாம்; இனித்
துயர்ஆறி வருவாயம்மா
செல்லுமிடத்தில் உன்றன்
மதலையைச் சேர்ப்பித்து
விடுவேன்னம்மா
மீளாத் துயர்க் கடலில் உயி
ரெலாம் வீழ்ந்து முழுகையில்
பாழும் குகைதேடிச் செயும் தலம்
பாவம் ஆகுமம்மா.

மேலே காட்டப்பட்ட நிகழ்ச்சிகள் மனிதனினும் தாழ்ந்த உயிர் வகையிடத்தும் பெரியவர்கள் அன்பும் ஆதரவும் காட்டிய நிகழ்ச்சிகளைக் குறிப்பனவாகும். நம் மனித இனத்திலேயே தோன்றி (நடமாட முடிந்தால்) நடமாடும் 'பின் தங்கிய குழந்தைகள்' (Mentally Retarded and Backward Children) ஆயிரக் கணக்கில் உள்ளனர். 'வல்லவனுக்கு மட்டும் தான் வாழ்க்கை' என்ற தத்துவம் மறைந்து எளியோரும் வாழ எல்லாச் சந்தர்ப்பங்களும் உண்டு என்ற பரந்த மனப்பான்மையோடு சட்டம் வகுக்கப்பட்டு மக்களாட்சி நடந்துவரும் இந்நாளில், இவர்களைப் பற்றிச் சில தகவல்களைத் தெரிந்து கொள்வது, சமுதாயத்துக்கு நலம் பயப்பதாகும் ?

இக்குழந்தைகளின் பாதுகாப்பிலும், மேற்பார்வையிலும், மருத்துவ ஆராய்ச்சியிலும் மேல் நாடுகளில் அரசாங்கம் மட்டுமின்றிச் சமூக நலன் பேணும் தனிப்பட்ட குழுக்களும் பெரும் பொருள் செலவிடுகின்றன. இவ்வழியில் குறிப்பிடத் தக்க முயற்சிகள் இந்தியா முழுவதிலும் மிகக் குறைவு. தமிழ்நாடும் இதற்கு விலக்கல்ல.

இக்குழந்தைகள் எப்படி மருத்துவர்களின் பார்வைக்கு வருகின்றனர் என்று நோக்குவோம்.

பிறக்கும் போதும் அதற்குச் சிலகாலம் பிறகும் பெரும்பாலான குழந்தைகள் மற்ற மாறுபாடுகளற்றவை போலவே இருக்கும். ஆனுல், ஒரு சிறிய பகுதியில் முகத்தோற்றத்திலும், உறுப்புக்கள் அமைப்பிலும் வேறுபாடுகள் தெள்ளத் தெளிவாகத் தெரியும். மங்கோலிசம் (Mongolism) எனப்படும் தொகுதியில் (Clinical Variety) கண்கள் சிறுதும் சாய்வாகவும் இருக்கும். தலை பின்புறத்தில் அழுங்கி இருக்கும். நாக்கு பெரிதாகவும் சொரசொரப்பாகவும் இருக்கும். கைவிரல்கள், கால் விரல்களில் மாறுதல்கள் இருக்லாம். குழந்தை பிறக்கத் தடைகள் இருந்து, ஆயுதம் போட்டு எடுக்கப்பட்டிருந்தாலும், சில குழந்தைகள் மூளைச் சேதம் அடைந்து பிறகு அறிவுத் திறன் அதிகமில்லாது போகலாம். இம்மாதிரிப் பிறந்த குழந்தைகள் நீல நிறமாகவோ —வெள்ளைநிறமாகவோ இருந்து நீண்ட நேரம் அழாமல் தாய்ப் பால் குடிக்கச் சக்தியில்லாமலும் இருக்கலாம்.

வளரும் பருவத்தில் எல்லாப் பின் தங்கிய குழந்தைகளும் மாற்றங்கள் காட்டுகின்றன. இவற்றை இரண்டு—மூன்று சாதாரணக் குழந்தைகள் உள்ள தாயாவது, குழந்தை வளர்ப்பில் தேர்ச்சி உள்ள பாட்டியாவது தெரிந்து கொள்ளுவாள். தாய் முகத்தைக் கண்டு புன்முறுவல்செய்தல், பசித்து அழும் போது பால் புட்டியைக்கண்டு அழுகை நிறுத்துதல், ஓசை வந்த திக்கை நோக்கித் தலையைத் திருப்புதல், விளையாட்டுச் சாமான்களை விரல்களால் பிடிப்பது போன்ற செய்கைகள், முதல் ஆறு மாதத்தில் சாதாரணக் குழந்தைகளிடம் காணலாம். ஆனுல், பின்தங்கிய குழந்தைகளிடம் அதிக மாதங்கள் சென்ற பிறகே தென்படும். குழந்தை கவிழ்ந்து கொள்ளுதல், தவழ்ந்து போகுதல், நடத்தல், கண்ட இடங்களை அசுத்தப் படுத்தாமல் குறிப்பிட்ட இடங்களில் சிறுநீர், மலம் கழித்தல், போன்ற செய்கைகள் (Motor activities) ஒன்றிலிருந்து இரண்டு ஆண்டுகளில் நடப்பவை : இவைகளும் பின்தங்கிய குழந்தைகளில் தள்ளிக் காணப்படும். குழந்தையின் வளர்ச்சியில் மிகவும் அதிசயத் தக்க பேச்சு உணர்தல், அப்பா, அம்மா என்று ஓரிரு வார்த்தை பேசும் ஓர் ஆண்டுக் குழந்தை, இரண்டு—மூன்று ஆண்டுகளில் எவ்வளவு அழகாகப் பேசுகிறது ? பெரும்பாலான பின் தங்கிய குழந்தைகள் அதிகம் பேசக் கற்றுக் கொள்ளுவதே இல்லை. மிகவும் தரம் குறைந்த குழந்தைகள், ஊமை போன்ற பேச்சற்ற நிலையிலே நின்று விடலாம்.

மற்றும் சில தங்களுக்கு வேண்டிய தேவைகளை உணர்த்தக் கூடிய அளவுக்குப் பேச்சுத் திறன் பெறலாம். உச்சரிப்புத் தெளிவில்லாமலும் போகலாம். விதிவிலக்காகச் சில பின் தங்கிய குழந்தைகள் நன்றுகவே பேச

லாம். இவ்வயதில் தான் குழந்தைகள் உணவு உண்டு கை அலம்பவும், உடை உடுத்தவும் கற்றுக் கொள்ளும். அதுவுமின்றி வயதிற் கேற்ற குழந்தைகளோடு விளையாடவும், தன் பொருள்—பிறர் பொருள் என்று அறியும் திறனும் இப்போது உண்டாகின்றன. நெருப்பு, சுடும் பொருள்களைத் தவிர்த்தல், வீதியில் வாகனங்களைக் கண்டு ஒதுங்குதல் போன்ற தற்காப்பு உணர்ச்சியும் உண்டாகின்றன. பின் தங்கிய குழந்தைகளில் இவை தோன்றாமலும் இருக்கலாம். காலம் தாழ்த்தியும் தோன்றலாம்.

பிறக்கும் போது சரியாகத் தெரியாமல் இருந்த உறுப்புக் கோளாறுகள் பின்பு நன்கு தென்படும். மூளை வளராததால் சிறிய தலை (Microcephaly) தண்ணீர்ச் சேர்க்கையால் உண்டான பெரிய தலை (Hydrocephalus) மூளைச் சேதத்தால் பலமற்ற கைகள், கால்கள் கொண்ட சிறுவர்கள் (Spastic Children) இவ்வயதில் பொறுக்கப்படலாம். அடிக்கடி வலிப்பு நோய் (Epilepsy) வந்து அறிவுத் திறன் குறையும் குழந்தைகளும் இங்குக் காணப்படும் (வலிப்பு நோய் வருபவர்களுக்கு ஒரு பகுதியினரே தரம் குறைந்தவர் ஆவர். பெரும்பாலோர் மற்றத் தொந்தரவுகள் இன்றி வாழ்கின்றனர் என்பது இவ்விடம் குறிப்பிடத் தக்கது.)

தொடக்கக் கல்வி கட்டாயமாக உள்ள இந்த நாட்களில் பெரும் பாலான பின்தங்கிய குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் கண்டு பிடிக்கப்படுவர். (இவர்களை அறிந்து கொள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.) மிகவும், பின் தங்கிய சிறுவர்களை, உறுப்பு மாற்றங்களாலும், பேச்சு உடலசைவுகளில் உள்ள கோளாறுகளாலும் சுலபமாகக் கண்டு கொள்ளலாம். இவர்கள் எழுத்துக்கள், எண்களை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள். இவர்களுக்கு வற்புறுத்தி வலுக்கட்டாயமாகப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்தாலும் பயனில்லை. அடித்துத் துன்புறுத்தப்பட்ட குழந்தைகள் மேலும் குழப்பமடைந்து பள்ளிக்குப் போக மறுத்தும், அனுப்பினல் அங்கிருந்து ஓடிவிட முயற்சி செய்வதும் சாதாரண நிகழ்ச்சிகள். இன்னும் கொஞ்சம் அறிவுத் திறனுடைய குழந்தைகள் சிறிது படிக்கக் கற்றுக் கொண்டாலும் கணக்குப் புரியாமல் விழிக்கலாம் : தொடக்கக் கல்வியைத் துன்பப்பட்டு முடித்தாலும் நடுத்தர வகுப்புக்களில் பெரும்பாலான குழந்தைகள் தங்கி விடுகின்றனர். இவர்கள் நிலை அறியாது இவர்களின் மேல் படிப்பைத் திணிக்கப் பார்ப்பது கால—பணவிரய மட்டுமல்லாது கொடுமையுமாகும்.

இன்னும் சில குழந்தைகள் முன் நோக்கும் அறிவு (Fore-thought) இல்லாததாலும், தீய வழிகளில் மற்றவர்களால் சுலபமாகப் பழக்கப்படுத்தி விடப்படுவதாலும் இளங் குற்றவாளிக்கான தண்டனை பெறுகிறார்கள். சிலர், தண்டனைக்கே பயப்படாத குற்றவாளிகளாகவும் மாறுகின்றனர்.



இதுவரையில் பின்தங்கிய குழந்தை வளரும் போது உள்ள மாறுதல்களைக் கண்டோம். இனி ஏன் இம்மாதிரி ஆகின்றது என்று பார்ப்போம். பெரும்பாலான குழந்தைகளிடத்தில் இதற்கான காரணம் தெரிவதில்லை. பிறக்கப் போகும் குழந்தையின் அறிவு முதிர்ச்சியை கருத்தரிக்கும் போதே இயற்கை தீர்மானித்து விடுகிறது. சிலர் குள்ளமாகவும், சிலர் மிகுந்தும் மேதைகளாகவும், பலர் சராசரி அறிவுத் திறனுடனும் விளங்குகின்றனர். (ஆகையால் குழந்தையின் அறிவீனத் தன்மை குறித்துத் தாய்—தந்தையர் தங்களை நொந்து கொள்வதில் பயனில்லை).

வளரும் மூளை பலதரப்பட்ட கோளாறுகளாலும் சேதப்படுத்தப்படலாம். முன்பு குறிப்பிட்டபடி பிறக்கும் போது குழந்தை மூளை சேதப்பட்டால், கைகால் பலமிழப்பதோடு, அறிவு முதிர்ச்சியும் தடைப்படும். மூளையைப் பற்றும் காய்ச்சல் (Encephalitis) சில சமயங்களில் அறிவு வளர்ச்சியைத் தடுத்து விடுகின்றது. நன்றாக வளர்ந்து கொண்டிருக்கும் குழந்தை அதிகக் காய்ச்சலோடு ஓரிரண்டு நாட்கள் நினைவற்று இருந்ததாக விவரம் கிடைக்கும். காய்ச்சலோடு வலிப்பும் வந்திருக்கலாம். நினைவு திரும்பும் போது குழந்தை (முன்பு பேசிக்கொண்டிருந்தால்) பேச்சற்றுப் போகிறது. வீட்டில் உள்ளோரைக் கண்டு கொள்ளும் சக்தியை இழக்கிறது ; சிறுநீர்—மலம் கழித்ததில் ஓராண்டுக் குழந்தை மாதிரி ஆகிவிடுகிறது. இம்மாதிரி விவரங்கள் சில சமயங்களில் கக்குவான் இருமல், அம்மை போன்ற நோய்கள் பின்னும் வந்ததாகத் தெரியலாம். காச நோய் மூளையைப் பற்றினாலும் இக்கேடு நேரலாம். தலையில் அடி பலமாகப் பட்டாலும் இந்நிலையே ஏற்படும். வழக்கமாக விளையாடிக் குழந்தைகள் பெறும் அடிகளைப் பெற்றோர்கள் சுட்டிக் காட்டினாலும் இவை உண்மைக் காரணங்களாக இருப்பதில்லை. வலிப்பு நோய் அடிக்கடி வந்து கொண்டிருந்தால் அறிவு வளர்ச்சியும் தடைப்படும்.

இப்போது இது போன்ற குழந்தைகளைச் சமாளிக்கும் முறைகள் பற்றிப் பார்க்கலாம். முதலில் தீர்மானிக்க வேண்டியது. குழந்தை உண்மையாகவே பின் தங்கியதுதானா, அப்படி இருந்தால் ஏன், எவ்வளவு காலம் — தூரம் பின்னுள்ளது என்பதை அறிய வேண்டும். இதற்குச் சென்னை போன்ற நகரங்களில் உள்ள குழந்தைகள் வழிகாட்டி நிலையங்களின் (Child Guidance Centres.) உதவியை நாடலாம். இங்கு மனநோய் மருத்துவர் (Psychiatrist) குழந்தை நோய் வல்லுநர். உளவியல் வல்லுநர் ( Psychologist ) சமூக ஊழியர்கள் ( Social Worker ) ஆகியோர் கூட்டாக வேலை செய்கின்றனர். இவர்களின் தனிப்பட்ட பயிற்சிகள் இக்கேள்விகளுக்கு விடை கூறப் பயன்படும்.

உளவியல் வல்லுநர் ஒரு பின்தங்கிய சாதாரண அறிவுள்ள குழந்தையோடு ஒப்பிடும் போது எவ்வளவு தூரம் பின் தங்கி உள்ளது என்று கூற முடியும். பதினன்கு ஆண்டு வயதுள்ள குழந்தையின் அறிவு முதிர்ச்சியும், பத்தாண்டு வய



துள்ளது என்று கொள்ளப்பட்டு அறிவுத் திறன் நூறு என்று கணக்கிடப்படுகிறது.

அடிக்குறிப்பு :

அறிவுத் திறன் :— அறிவு முதிர்ச்சி (ஆண்டுகள்) / வயது (ஆண்டுகள்). 100

Intellgence Quotient :— $\frac{\text{Mental Age}}{\text{Chronological Age}} \times 100$

ஓர் எடுத்துக் காட்டு :

ஒரு குழந்தையின் வயது—12 ஆண்டுகள்.

அறிவு முதிர்ச்சி—8 ஆண்டுகள்.

அறிவுத் திறன்—8/12 100 67.

பின்தங்கிய குழந்தைகளின் அறிவுத் திறன் 70-க்குக் குறைவாகவும், மந்தமானவர்க்கு 70—90 ஆகவும், சாதாரணமான குழந்தைகளுக்கு 90—110 ஆகவும் இருக்கும். கெட்டிக்காரக் குழந்தைகளுக்கு 100—140 ஆகவும், மேதைகளுக்கு 140-க்கு மேலும் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அறிவு முதிர்ச்சியை அளக்கப் பலவிதச் சோதனைகள் (Intelligence Tests) உள்ளன.

இது தெரிந்தால் குழந்தைகளுக்குத் தகுந்த பயிற்சி பற்றி, முடிவு செய்யலாம். குழந்தை மருத்துவர் வேறு ஏதாவது உடற்கேடுகள், வலிப்பு நோய், ஊட்டக் குறைவு இருந்தாலும் தகுந்த சிகிச்சை கூறுவர்.

பின் தங்கிய குழந்தை பிறந்து வளரும் குடும்பத்திலே பலவிதச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து அறியவும், சிக்கல் நீக்கும் வழி வகுக்கவும் மனநோய் மருத்துவரும் சமூக ஊழியர்களும் பயன் படுகின்றனர். பெற்றோரின் மனநிலை அறிந்து ஆறுதல் சொல்லப் பரிவும் அன்பும் மிகமிகத் தேவை. மனக்கவலை ஒரு பங்கு வெளிப்பட்டால், பல பங்கு உள்ளடங்கிக் கிடக்கும். இக்குழந்தைகளின் படைப்புக்குத் தாங்கள்தான் காரணம் என்று தகப்பனும், தகப்பன் காரணம் என்று தாயும் எண்ணிக் கொண்டு, குடும்பப் பூசல்கள் நேர்ந்திருந்தால், இவற்றைப் போக்க முயல வேண்டும். இம்மாதிரியான குழந்தையை மற்றவர்களுக்குக் காட்டக் கூடாதே மற்றப் பெண்களுக்கு மணம் ஆகாதே என்ற எண்ணத்தில், இவைகள் மறைத்து வைத்துப் புறக்கணிக்கப்படலாம் ; குழந்தை அறிந்து கொள்ள ஆற்றலில்லாத போது அறிவைத் திணிக்க முயற்சிகள் நடந்து குழந்தை கொடுமைப் படுத்தப்படலாம். இக்குழந்தையின் பராமரிப்பில் பெற்றோர்கள் பெருங்கவலை மேற்கொண்டு பொருளையும் காலத்தையும் விரயமாக்கி மற்றக் குழந்தைகள் அசட்டை செய்யப்படலாம். இவைகளைப் பற்றி விளக்கம் கூறலாம். மற்றொன்று, குமுறும் உள்ளத்தோடு தாய் கேட்கும் கேள்வி : ''டாக்டர் ! கடவுளைத் தனிப் பெருங் கருணை, அருட் பெரும் ஜோதி என்கிறார்களே! ஏன் எனக்கு இந்தக் குழந்தையைக் கொடுத்தார் ?

இதற்கு நான் அறிந்து கொண்ட நல்ல விடை :

''இம்மாதிரிச் சிக்கலான கேள்விக்குப் பதில் கூற எனக்கு ஆற்றலும் இல்லை ; பயிற்சி பெற்றதும் இல்லை. ஆனல், இது மட்டும் உறுதி. இக் குழந்தைகளை வளர்க்க, சாதாரண மானவர்களை விட அதிக பரிவும், கருணையும்



தேவை. அதற்காகக் கடவுள் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்.''

இவர்கள் பெற வேண்டிய பயிற்சி முறைகள் பற்றிப் பெற்றோர்கள் அறிய வேண்டியது மிகவும் அவசியம். நம்மிடையே வாழும் குழந்தைகள் பல்லாயிரம் (பல இலட்சங்களும் இருக்கலாம்). மேலை நாடுகளைப் போல் பிரம்மாண்டமான மருத்துவச் சாலைகள் கட்டி, அங்கு இவர்களைப் பராமரிக்க நம்மிடம் பொருள் வசதியில்லை. குழந்தைகளைப் பிரிந்து வாழ நம்மவர்கள் அவ்வளவு விரும்பவும் மாட்டார்கள். இவர்கள் சுத்தமாக இருக்கவும், ஆடைகள் அணிந்து கொள்ளவும் பழக்கப்பட வேண்டும். ஒரு தாய் இவர்களுக்கு உணவு ஊட்டிக் கைவாய் கழுவி விடுவது—இவற்றைச் சொல்லிக் கொடுத்ததைவிடக் குறைந்த நேரத்தில் முடிந்து விடும். என்றாலும், திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுப்பது நன்று. தலை சீவுதல், பல் விளக்குதல், போன்றவையும் இம்மாதிரியே. இவர்கள் மற்றொருவர் உதவியின்றித் தானே வாழும் நிலை பெறச் செய்வதே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

மற்றவர்களோடு கூட வாழும் வகையும் இவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். மற்றக் குழந்தைகளோடு இருக்கும்போது எப்படி இருக்க வேண்டும், பிறர் உடைமை அறிதல், மரியாதை பரோபகாரம் முதலியவை பற்றிச் சொல்லிக் காட்ட வேண்டும். அதோடு நின்று விடாமல் தாயே நடந்தும் காட்ட வேண்டும். பொருள் மதிப்பு, ரூபாய் மாற்றிச் சாமான்கள் வாங்குவது பொது இடங்களில் நடந்து கொள்ளும் முறைகள் ஆகியவைகளையும் உணர்த்தப்படவேண்டும். வயதுப் பெண்கள் தங்கள் கடமைகளைப் பற்றி அறிவுறுத்தப்பட வேண்டும். பயிற்சியின் போது அன்புடன் கலந்த கண்டிப்பு நல்ல பயன் தரும்.

இவர்களுக்கு ஏதாவது கல்வி கற்பிக்க முடியுமா என்பதை நாம் அடுத்துக் கவனிக்க வேண்டும். மிகவும் திறம் குறைந்த குழந்தைகள் எண், எழுத்துத் தெரிவது அவர்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. ஆகவே, இவர்கள் அறிவுக்கேற்ற தொழில்கள் கற்பிக்கப்படவேண்டும். உடலுழைப்பைக் கீழ்த்தரம் என்று கருதும் போலிப் பெருமை நாமனைவர் எல்லோரிடமும் காணப்படும் குறைபாடு. இக்குழந்தைகளுக்கு முதலில் சிறிய வேலைகளை நாம் கற்பிக்க வேண்டும். பண்ணைகளில் மேற்பார்வையில் இவர்களை வேலை செய்யுமாறு செய்யலாம். சென்னை போன்ற நகரங்களில் சாலையுணர்ச்சியோடு நடமாடும் முறையும் தெரிவிக்கப்பட வேண்டும். மற்றும், தோட்ட வேலை, பிரம்பு சீவுதல், கூட்டுதல், கூடை முடைதல் போன்றவை இவர்களுக்குத் தகுந்தவை. குறிப்புச் சீட்டு ஒட்டுதல், புட்டிகளை நிரப்புதல் போன்ற திரும்பத் திரும்பச் செய்யும்



வேலைகளில் மன நிறைவோடு ஈடுபாடு கொள்ளுவர். பெண்களுக்குக் குடும்ப வாழ்க்கைக்குகந்த பணிகளில் கவனத்தைத் திருப்ப வேண்டும் ; சமையற் கலை, பாத்திரங்கள் அறைகள் முதலியவற்றைச் சுத்தமாக வைப்பது போன்றவற்றை அறிவுறுத்த வேண்டும்.

அறிவுத் திறன் சுமாராக இருக்கும் குழந்தைகளுக்குரிய கல்விப் பயிற்சி ஒரு தனிப்பட்ட கலை எனலாம். இதில் பயிற்சி பெற்றவர்களேயோ அல்லது இம்முறைக்கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகளோ நம் நாட்டில் காண இயலாது எனச்சொல்லும் நிலையில் நாம் இருக்கிறோம் என்றாலும், இச்சிறுவர்கள் கல்வியில் நம் முயற்சியை ஓரளவு பயனுள்ளதாகச் செய்யலாம். 8—10 குழந்தைகள் கொண்ட வகுப்பில் ஓர் ஆசிரியர் தனித்தனியே கவனம் செலுத்தினால் வெற்றி பெற முடியும். கருத்துக்களைச் சொல்லுவதைவிடக் காணும் பொருள்களால் அவற்றை அறிவுறுத்தினால், இவர்கள் கல்வி முன்னேறும். $2 \times 3 = 6$ என்பதைக் கரும்பலகையில் எழுதுவதை விட ஆளுக்கு இரண்டு பழம் கொடுத்தால், மூவருக்கு என்ன கிடைக்கும் என்பதைக் காட்டக் கற்கள், புளியங்கொட்டைகள் முதலியவற்றை உபயோகப்படுத்துவது நல்லது. இக் குழந்தைகளின் கவனம் ஒரு நிலையில் அதிக நேரம் நில்லாதாகையால், கொஞ்ச நேரமே கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

பின் தங்கிய குழந்தைகளின் துயர் தீர்க்க முதற் படியாக அவர்களைப் பற்றிச் சிறிது தெரிந்து கொண்டோம். அறிவு வளர்ச்சி தடைப்படுவதால் இவர்கள் என்றுமே குழந்தைகளாகி விடுகிறார்கள். சமூகத்தின் ஆதரவையும், ஆக்கப் பூர்வமான அனுதாபத்தையும் எதிர் நோக்குகிறார்கள். இக் குழந்தைகளின் நிலை உயர, அரசினரோடு தனிப்பட்ட பெருந்தகைகள் போட்டியிட வேண்டும்.

## இனிப்பான செய்தி !

நமது தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் அண்மைக் காலத்தில் கணிசமான அளவுக்கு வளர்ந்துள்ளதோடு மாநிலப் பொருளாதாரத்தில் முக்கிய அங்கமும் வகிக்கிறது.

1953—54-ஆம் ஆண்டில் 36,422 ஹெக்டேர் பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டது. ஆனால் தற்போது 1,48,522 ஹெக்டர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. 1953—54 முதல் 1971—72 வரையிலான கால அளவில், கரும்பு உற்பத்தி ஏறக்குறைய 4 மடங்காகப் பெருகியுள்ளது.

1972—73 பருவத்தில் தமிழ்நாட்டில் சர்க்கரை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டமொன்று உள்ளது. இந்நிலையத்தை ஏற்படுத்தும் வகையில் அரசுக்கு ரூ. 5 இலட்சம் வருவாய்க் கணக்கில் செலவாகும். ஆலைகள் ரூ. 5 இலட்சம் அளிக்க முன்வந்துள்ளன. இந்நிலையத்தில் ஆராய்ச்சி வளர்ச்சி 'ஆலோசனை விரிவுப் பணிகளுக்கான பிரிவுகள் இருக்கும். நீண்டநாளைய சர்க்கரைத் தேவையை இது நிறைவேற்றும்.


## சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியையும், விநியோகத்தையும் பாதித்துள்ளது. இதனால் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும், முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறார்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெறாத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனால் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன், கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்.

உங்கள் நலனை முன்னிட்டு, எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம், தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்டு சர்டிபிகேட்டும் விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு. விலை இவை குறித்துள்ள காஷ் மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.

உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிட்டோர் :

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,
175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.

சங்கர் சிமெண்ட்




# அந்நியச் செலாவணி தரும் அருமருந்து!



சின்கோனாத் துறையாவது விலை மதிப்பு வாய்ந்த மருந்துகளையும் நறுமணத் தைலங்களையும் உற்பத்தி செய்கிறது. இத்துறையினால் தயாரிக்கப்படும் கொய்னாப் பொருள்கள் உயர்ந்த தரத்தினால் அந்நியச் சந்தைகளில் நற்பெயர் ஈட்டியுள்ளன. இவை மேற்கு ஜெர்மனி, சோவியத் யூனியன் போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகி வருவதன் காரணமாக, இத்துறை அந்நியச் செலாவணியைக் கணிசமான அளவில் ஈட்டுகிறது.

1971—72-ஆம் ஆண்டில் இத்துறை ஈட்டிய அந்நியச் செலாவணியின் தொகை ரூ. 20·06 இலட்சமாகும். 1972—73, 1973—74 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குமாகச் சேர்த்து ரூ. 84·99 இலட்சம் அந்நியச் செலாவணி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் (1968—72) இத்துறை ஈட்டிய அந்நியச் செலாவணியின் மொத்த மதிப்பு ரூ. 105·79 இலட்சமாகும்.

இந்நாட்டிலும் வெளி நாடுகளிலும் மிகப் பெரும் அளவில் தேவையாய் உள்ள பல்வேறு மருந்துகள், மற்றும் நறுமணப் பொருட்களை மேம்படுத்துவதில் இத்துறை பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

வால்பாறைக்கு அருகில் சின்கோனாவில் உள்ள அரசினர் கொய்னாத் தொழிற்சாலை:—இத்தொழிற்சாலை இத்துறையைச் சேர்ந்த தோட்டங்களில் சேகரிக்கப்படும் சின்கோனாப் பட்டையைத் பதப்படுத்திக் கொய்னாப் பொருட்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

நீலகிரியில் நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை:—இத் தொழிற்சாலை பல்வேறு மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைப் பரிசோதித்துத் தூய்மைப்படுத்தித் தரம் பிரித்துச் சிப்பம் கட்டி விற்பனைக்கனுப்புவதில் ஈடுபட்டுள்ளது. இது மணந்தரும் தைலங்களை உற்பத்தி செய்வதற்கும் அவற்றின் தரத்தை மேம் படுத்துவதற்குமான ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளது.

1964-ஆம் ஆண்டு தொட்டு, அந்நியச் சந்தைகளில் கொய்னாப் பொருட்களுக்கான தேவை சீராக அதிகமாகிக் கொண்டே வருகிறது. இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களிடையே உள்ள போட்டிகளின் காரணமாக ஏற்றுமதி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிட்டுப் பதப்படுத்துவதைத் தவிர, பல்வேறு மருந்து மற்றும் நறுமணப்பயிர்களைப் பயிரிடும் முறையை மேம்படுத்துதல், உயர்ந்த விளைச்சலையும் ஆதாயத்தையும் தரும் செடிவகைகளை வளர்த்தல், அவற்றைப் பதப்படுத்துதல் ஆகியவற்றுக்கான ஆராய்ச்சியையும் இத்துறை செய்து வருகிறது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள்.

1. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் பெரும் அளவில் சாகுபடி செய்வதை விரிவு படுத்துதல். 2. மருந்து மற்றும் நறுமணச் செடி பொருட்களை முன்னோடி அளவில் பதப்படுத்துதல். 3. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றி மும்முரமான ஆராய்ச்சியும் வளர்ச்சி மேம்பாடும். 4. அதிக அளவில் கொய்னாவையும் குவினிடினையும் தரவல்ல மேம்பாடான சின்கோனாச் செடி வகைகளை முளைக்க வைத்து இனம் பெருக்கும் முறைகளைக் கொண்டு பெருக்கும் திட்டம். 5. இத்துறையின் அதிகாரிகள், பணியாளர்கள், தொழிலாளர் ஆகியோர்க்குக் கட்டிட வசதிகள், சாலை வசதிகள் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்தல். 6. இத்துறையில் இரு தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குதல். 7. நீலகிரித் தோட்டங்களில் உள் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்துதல். இப்பணிகளோடு, கீழ்க்காணும் பணிகள் 1973—74 ஆம் ஆண்டில், மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

1. இஞ்சிப் பசை (Olo-resin of ginger) தயாரித்தல். 2. உழவர்கள் நிலங்களில் பயிராகும் ... ரியத்தைப் பதப்படுத்துதல். 3. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களுக்கு மும்முரா நீர்ப் பாசன வசதி ஏற்படுத்துதல்.

அனைத்துலகச் சந்தைகளில் இப்போது நிலவிவரும் போக்கு கொய்னாப் பொருட்களின் தேவை. அவற்றுக்கான பயன் தரும் விலைகள் ஆகியவை மேலும் சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீடிக்கும் என்பதனை உறுதி கூறும் வகையில் உள்ளது.

சின்கோனா பயிரிடப்படும் பரப்பளவு 2,630 ஹெக்டேராக இருக்கவேண்டும் என்று மாநில அரசு ஆணையிட்டுள்ளது. 30—9—1972-ஆம் நாளன்றுள்ளபடி சின்கோனா பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு 2,358 ஹெக்டேராகும். இதை 2,630 ஹெக்டேருக்குக் கொண்டுவருவதற்காகப் புதிய இடங்களில் சின்கோனா பயிரிடப்பட்டு வருகிறது.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்களை நல்கும் பயிர்களைச் சாகுபடி செய்வதும் அவற்றைப் பதப்படுத்துவதும் அந்நியச் செலாவணியை ஈட்டும் வாய்ப்புள்ள, ஆதாயம் தரத்தக்க பணிகளாகும். இப்பயிர்கள் சாகுபடி செய்யப்படும் பரப்பளவு தொடர்ந்து அதிகரித்து வரப்படுவதுடன், உற்பத்தி முறைகளை மேம்படுத்துவதற்கும், சிக்கனப் படுத்துவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிர்கள் மீதான மும்முரமான ஆராய்ச்சித் திட்டம் இந்நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இஞ்சிப் பசை தயாரிக்கும் திட்டமானது, மாநிலத் திட்டப் பணிகளில் ஒன்றாக முடிவு செய்யப் பட்டுள்ளது. இதன் நோக்கம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள இத்துறையைச் சேர்ந்த தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பொருளுடன் இம்மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் உற்பத்தி செய்யப்




படும் இஞ்சியில் ஒரு பகுதியையும் பயன்படுத்தி அதன் மூலம் சந்தையில் அடிக்கடி ஏற்படும் தேக்கத்தை ஓரளவு குறைப்பதும் அந்நியச் செலாவணியுடன், கணிசமான அளவு வருமானத்தையும் ஆதாயத்தையும் ஈட்டுவதுமாகும்.

திட்டப் பணிகளில் ஒன்றுக முடிவு செய்யப் பட்டுள்ள சாகுபடியாளர்களின் நிலங்களில் பயிராகும் ஜிரேனியத்தைப் பதப்படுத்தும் திட்டமானது நுன்புழுக்களின் ( Nematodes ) பெருக்கத்தால் விரயம் ஏற்படுகின்ற உருளைக் கிழங்குச் சாகுபடியைத் தவிர்த்து, ஜிரேனியம் சாகுபடியை மேற்கொண்டுள்ள தனியார் நிலங்களிலிருந்து கச்சாப் பொருளை வாங்கி அவற்றைப் பதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

பொதுவான வேலைத் திட்டங்களின் கீழும், திட்டப் பணிகளின் கீழும் இத்துறை எய்திய முக்கியச் சாதனைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன :

1. சின்கோனு ஃபெப்ரிஃப்யூஜிலிருந்து குவினைன் சல்பேட்டையும் குவினிடின் சல்பேட்டையும் தயாரித்தல். 2. பயன்படுத்திய பின் சக்கையான சின்கோனுப் பட்டையிலிருந்து வீரிய கரியம் (Activated carbon) முன்னோடித் திட்ட அளவில் தயாரித்தல். 3. சின்கோனைன், சின்கோனைடைன் அல்கலாய்டுகளை முன்னோடித் திட்ட அளவில் பிரித்தெடுத்தல். 4. மேலும் திறன்மிக்க முறை கொண்டு பி.பி. (B. P.) ஐ.பி (I. P.) தர யூகலிப்டஸ் தைலங்களைத் தயாரித்தல். 5. சிம்போபோகன் விண்டெரியானஸ் புல், பைரத்ரம், டயஸ்கோரியாப் பயிர் வகைகள் ஆகியவற்றில் உயர்தரச் செடிவகைகளைப் பிரித்தெடுத்தல்.

இத்துறை ஆற்றவிருக்கும் அரும்பணிகள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்வோம்!

(1) 190.25 ஹெக்டேரில் மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் புதிதாகப் பயிரிடுதலும், ஏற்கெனவே, அவை பயிரிடப்பட்டுள்ள 74.67 ஹெக்டேரில் நிலைப்படுத்ததுலும். (2) 60 ஹெக்டேரில் சின்கோனு புதிதாகப் பயிரிடுதலும், ஏற்கெனவே அது பயிரிடப்பட்டுள்ள 859.75 ஹெக்டேரில் நிலைப்படுத்துதலும், மாற்றுச் செடி நடுதலும். (3) முளைக்க வைத்து இனம் பெருக்கும் முறை கொண்டு ஆறு இலட்சம் சின்

# தமிழரசு

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 10-00 |
| அரையாண்டு | ரூ. 5-00 |
| தனி இதழ் | 40 காசு. |

கோனுச் செடிகளை உற்பத்தி செய்தல் 12·77 இலட்சம் மதிப்புள்ள 5,500 கிலோ யூகலிப்டஸ் தைலம், 1,500 கிலோ ஜிரேனியத் தைலம், 2,700 கிலோ யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம், 4,100 கிலோ ஜாவா சிட்ரோநெல்லா தைலம், 50 கிலோ கற்பூரத் தைலம், 160 கிலோ லெமன் கிராஸ் தைலம், 25 கிலோ விண்டர்கிரீன் தைலம், 5 கிலோ பச்சோலி தைலம், 300,000 கற்பூர வில்லைகள் ஆகியவற்றைத் தயாரித்தல். (5) சுமார் ரூ. 42 இலட்சம் மதிப்புள்ள 11,500 கிலோ குவினைன் சல்பேட், 9,000 கிலோ சின்கோனு ஃபெப்ரிப்ஃயூஜ், 500 கிலோ குவினைடைன் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல். (6) சுமார் 250 கிலோ இஞ்சிப் பசை தயாரித்தல்.

1972–73-ஆம் ஆண்டில் இத்துறையின் இதர சாதனைகள்:— 1. நறுமண ஜிரேனியப் பயிரில் நோய் எதிர்ப்புச் செடி வகையைப் பிரித்தெடுத்தது. 2. இஞ்சிப் பசை தயாரிப்பில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுணுக்க முறையை உருவாக்கிக் கணிசமான அளவு இஞ்சிப் பசையை விற்பனைக்கு அனுப்பியது. 3. அதிக அளவில் எண்ணெய் தருவனவும், உயர்ந்த சதவீதம் ஆல்டிஹைடைக் கொண்டுள்ளவையுமான யூகலிப்டஸ், சிட்ரியோடோரா மர வகைகள் பல, இனம் பெருக்குவதற்காகப் பிரித்தெடுக்கப்பட்டன. 4. யூகலிப்டஸ் தைலம்- இதனைக் கொண்டு கிருமி நாசினித் தன்மை கொண்ட, நாற்றம் போக்கும் சோப்புத் தயாரிப்பதற்கான தொழில் நுணுக்கம் உருவாக்கப்பட்டு, பெருமளவு உற்பத்திக்கான முன்னோடியாக, விற்பனைக்குத் தகுதியாக ஓரளவு தயாரிக்கப்பட்டது.



தமிழ்நாடு அரசுக்குப் பெரும் வருவாயையும் நாட்டுக்கு அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருவதுடன் சின்கோனுத் துறையானது பயிற்சி பெற்றோர், ஓரளவே பயிற்சி பெற்றோர், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோர் பலருக்கு எல்லா நிலைகளிலும் பெருமளவு வேலை வாய்ப்பும் வழங்குகிறது. செயல்படுத்தப்பட்டு வரும் பல வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டு, இது நம் மாநிலத்திற்கு, மேலும் பெரும் அளவில் பணியாற்ற முடியும்.

தமிழக அரசு, தற்போதுள்ள சின்கோனுத் துறையை ஒரு கழகமாக மாற்ற முடிவு செய்துள்ளது, இதன் விவரங்கள் கணிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசின் மிகப் பழமையான வணிக நிறுவனங்களில் ஒன்றுன சின்கோனுத் துறை வெற்றிகரமாகப் பணியாற்றி 1971—72-ஆம் ஆண்டில் மூலதன வட்டிக்காக ரூ. 16.44 இலட்சம் ஒதுக்கி வைத்தது போக, ரூ. 4.76 இலட்சம் நிகர இலாபத்தை ஈட்டியுள்ளது. 1972—73, 1973—74-ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ 1971—72-இல் கிடைத்த அதே நிகர இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

நெ. 19/20, லிங்கி செட்டித் தெரு, தபால் பெட்டி எண். 226,
சென்னை-600001.

தந்தி : "கூட்பாங்" தொலைபேசி எண் : 20367, 28068.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும் விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

வட்டி விகிதங்கள்

| | (வருடத்திற்கு %) |
|---|---|
| நடப்புக் கணக்கு .. .. .. | வட்டி இல்லை. |
| சேமிப்புக் கணக்கு .. .. .. | 4 00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திரக் கணக்கு :

ரூ. 1,000-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை .. | 2·75 |
| 46 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை .. | 3·25 |

நிரந்தரக் கணக்கு :

ரூ. 100-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக | 6·00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய .. | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் .. .. | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு ;

தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128-50 | 201 | 278 | 362-50 | 452 | 548-50 |

ஆர். கனகசபை, தலைவர். குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, துணைத் தலைவர். டி. வர்த்தமானன், செயலர்.


# படித்தோமா

### சிறுவர் நலம்பெறச் சிறந்த கட்டுரை

"பள்ளிச் சிறுவர் நலப் பாதுகாப்பு" என்ற தலைப்பில் டாக்டர் திருமதி தாரா நடராசன் அவர்கள் பள்ளி செல்லும் சிறுவர்களின் நலத்தில் ஒவ்வொரு தாயும் கவனம் செலுத்த வேண்டியவைதைப் பற்றி மிகவும் சிறப்பாகத் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். அவர்களுக்கும் அவர்களது கட்டுரையை வெளியிட்ட தமிழரசு ஏட்டுக்கும் எங்கள் நன்றி.

—அ. முகமத்கௌஸ்,
யா. ரோஷன், சென்னை-35.

### பூம்புகார் போற்றுதும்

தமிழரசு இதழின் அட்டைப் படத்தில் உள்ள பூம்புகார்த் தோரண வாயிலின் அழகு, தொன்மைமிகு பூம்புகாரையே நம் கண் முன் கொண்டுவருகின்றது.

—என். எஸ். மணி,
குமராட்சி.

### வாழ்க பவானி

வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சி செய்து வெளிவந்துள்ள புதிய ரக நெல் "பவானி"யைப் பற்றித் தமிழரசு வாயிலாக அறிந்தோம். இந்த நெல் ஆறு பட்டங்களில் பயிர்செய்யப் படும் என்பது விவசாயிகளுக்கு வரப்பிரசாதமான செய்தி ஆகும்.

—இராம. சுப்பிரமணியம்,
மேல்பள்ளிப்பட்டு.

### தமிழவேளைப்பற்றித் தமிழவேள்

தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையின் அரும் பெரும் தமிழ்ப்பணியைத் தமிழவேள் கலைஞர் அவர்கள் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்கள். தமிழவேள் கலைஞருக்கு நன்றி.

—கே. சிதம்பரம்,
தில்லை.

### இராணிக் கல்லூரி

மலர்களில் இராணி, ரோஜா! வண்ணங்களில் இராணி பச்சை! ராகங்களில் இராணி கல்யாணி! என்பதுபோல, கல்லூரிகளில் இராணி மேரிக் கல்லூரி என்பதைத் தெரிந்துகொண்டோம். வைரவிழாக் காணும் கல்லூரி இந்த மகளிர் கல்லூரி என்பதை எண்ணும் போது எங்கள் ஆண் இனத்திற்குக் கோபம் வருகிறது.

—எல். மீனாட்சிசுந்தரம்,
காரைக்குடி.

### 'சபேரிச்' வாழ்க!

"சபேரிச் எம்போரியம்" என்றால் என்ன என்று என் நண்பர்கள் பலரைக் கேட்டேன். பாவம்! அவர்களெல்லாம் ஒன்றும் தெரியாமல் விழிக்கத் தொடங்கினார்கள். தமிழரசு இதழைக் காண்பித்த பிறகு தான், காவிரிப் பூம்பட்டினத்தான் சபேரிச் எம்போரியம் என்று புரிந்து கொண்டார்கள். வாழ்க சபேரிச்!

—இரா. கந்தசாமி,
மதுரை.


சுற்றுலா
சுந்தரம்
கார் டயர் வெடிச்சதில் நான் பயந்துட்டேன்!
வீட்டுக்கு வெளியே வேடிக்கை பார்த்தது போதும். எக்ஸாமினேஷன் நெருங்கிடுச்சு... போய் படியுங்க...!
அக்கா ஒரு முக்கியமான விஷயம்... நாங்க நல்லா படிக்கிறேம் வந்து....
யானை தன் தலையிலே மண்ணை அள்ளிப் போட்டுக்கும் என்று சொல்லுவாங்களே அது மாதிரி உன் தலையிலே மண்ணைப் போட்டுக்கிட்டே!
என்னடா தாத்தா மாதிரித் தத்துவம் பேசுறே!

மீரா அத்தையும் மாலா அக்காவும் எங்கே.... ஊட்டிக்கா போறாங்க..? அங்கே யாரு இருக் காங்க....!
மாலா அக்கா மீரா அக்காவின்
டேய் அருள் நீதான்டா.... இப்புத் தாத்தா மாதிரிப் பேசுறே.... விதியையும் மதியால் வெல்லலாம்... இந்தச் சுந்தரம் செய்து காட்டுகிறேன் பார்!
உனக்கு நான் படிக்கிற போதே குழப்பமா இருக்கு மாலா அக்காவும் மீரா அக்காவும் பேசுறதை ஒட்டுக் கேட்டுக் குறித்துக் கிட்ட எனக்கு எப்படிக் குழப்பமா இருக்கும்...?
சார்.... எப்ப சார் உங்க சுற்றுலா... புறப்படுது...?
போடா அசடு! விதியை வெல்லுறவன்தான் மரத்திலே தொங்கினேயாக்கும்...?
அருள் புத்திசாலித்தனம் வந்திடாது... உடனே வந்திடாது... நேரம், காலம் வர்றப்ப தானாகவே வரும், ஐயா வேலையை நீதான் பார்க்கப் போறியே!



# அமைதி எங்கே?

பூங்கொடி

மனத்திலே தெம்பு இல்லை! துன்பமும் துயரமும் நிறைந்திருக்கிறது!

இப்போது தேவை, அமைதியான ஓர் இடம்!

அந்த இடத்துக்கு எங்கே போவது? அழகிய பூங்காவுக்குப் போகலாமா? இல்லை, ஆள் நடமாட்டமில்லாத மலையடிவாரத்தில் இருக்கலாமா?

அமைதி அங்கே கூட இல்லையாம்! பிறகு அதைத் தேடி எங்கே போவது? இதற்கு இந்தக் கதையில் வரும் அந்த மன்னரே பதில் சொல்வார்.

பண்டைக் காலத்தில் ஒரு பேரரசர் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு மகன். அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வருபவன் இளவரசன். மன்னருக்கோ வயதாகிவிட்டது. இன்றோ நாளையோ தாம் இறந்துவிடக் கூடும் என்பதை உணர்ந்த அவர், உடனே தம் மகனை அருகில் அழைத்தார்.

"மகனே! என் இறுதிக் காலம் நெருங்கி விட்டது. நான் இன்றோ நாளையோ சாகக் கூடும். அதற்குப் பிறகு இந்த நாடு உனக்குத்தான் சொந்தம். ஆகவே, நாடு முழுவதும் சுற்றிப் பார்! உனக்கு எந்தெந்த இடம் தேவையோ அந்தந்த இடத்தில் எல்லாம் ஒரு நம்பகமான இல்லத்தைக் கட்டிக் கொள்! உனக்குத் துன்பமோ அல்லது தேவையோ ஏற்பட்டால், அந்த இல்லத்தில் தங்கி அமைதி பெறலாம்!" என்றார்.

தந்தை சொல் கேட்ட இளவரசன், கையில் நிறையப் பணத்தை எடுத்துக் கொண்டு நாடு முழுவதும் சுற்றினான். தான் விரும்பிய மலை, பள்ளத்தாக்கு, கிராமம், காடு ஆகிய இடங்களிலெல்லாம் அழகிய மாளிகைகளைக் கட்டினான்.

இளவரசன் விரும்பியபடி எல்லா மாளிகைகளும் கட்டி முடிக்கப் பெற்றன. அவன் மிகுந்த மகிழ்ச்சியுடன் அரண்மனைக்குத் திரும்பினான்.

மன்னர் அவனை அன்புடன் அழைத்தார். "மகனே! இப்போது உனக்கு எத்தனை இல்லங்கள் இருக்கின்றன? ஆபத்து வேளையில் தங்குவதற்கு உனக்கு ஓர் இடம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

அதற்கு இளவரசன், "ஆம் அப்பா! மலைகளிலும், சமவெளிகளிலும், நான் விரும்பிய இடங்களிலும் பல மாளிகைகளைக் கட்டியுள்ளேன்!" என்றான் பெருமையாக.

இதைக் கேட்ட மன்னனின் முகத்தில் மகிழ்ச்சியில்லை. அவர் தம் மகனைப் பரிதாபமாகப் பார்த்தார். "மகனே நான் உனக்காக வருந்துகிறேன். உன்னிடம் பேசும்போது அந்த இல்லங்களைப்பற்றி நான் எண்ணவில்லை. துயரம் வரும்போது இந்த வெற்று மாளிகைகளா உனக்கு உதவப் போகின்றன? துரதிருஷ்ட வேளையில் அவை உனக்குப் புகலிடம் அளிக்காது... ......" என்று தந்தை கூறி முடிப்பதற்குள் மகன் ஏமாற்றத்துடன், "அப்படியானால் நீங்கள் சொன்ன அந்த இல்லம் எது, அப்பா?" என்று கேட்டான் அதற்குத் தந்தை அமைதியாகப் பதில் சொன்னார்.

> சின்னச் சின்னப்
> பிள்ளைகாள்
>
> சிரித்து நாளும்
> வாழுங்கள்!
>
> அன்னை தந்தை
> போற்றவே
>
> அறிவுப் பாதை
> நாடுங்கள்
>
> —வடிவு

"நாடு முழுவதுமுள்ள நேர்மையான, விசுவாசமுள்ள மனிதர்களை நீயே கண்டுபிடிக்க வேண்டும் — அவர்களைப் புரிந்து கொள்ளவும், நேசிக்கவும் நீ பழகிக் கொள்ள வேண்டும் என்பதே என் எண்ணம். அவர்கள்தாம் தேவையான வேளையில் உனக்குப் புகலிடம் அளிப்பார்கள். ஓர் உண்மையான, நேர்மையான நண்பன் வீட்டில் தான், ஒருவன் தங்கியிருக்கவும், அமைதி காணவும் முடியும் என்பதை நீ நினைவில் வைத்துக் கொள்!" என்றார் மன்னர்.

இளவரசனுக்கு இப்போதுதான் எது அமைதி என்று புரிந்தது.




ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்; தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




Criterion CO 2883


நிச்சயம் வெற்றி பெறுவீர்!
இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டு
முதல் பரிசு:
ரூ. 1,00,000
55-வது குலுக்கல் நாள்
10-5-1973
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்


தமிழரசு
சேரன் போக்குவரத்துக் கழகம்
CHERAN TRANSPORT CORPORATION
TA

1221


# உங்களுக்கு தெரியுமா?

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.




தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2


# தமிழரசு




"இன்று எனக்கு ஒரு மகிழ்ச்சிகரமான நாள். இங்கிருந்து முதல் கணை கிளம்புகிறது. இந்தக்கணை பிற்போக்கு வாதிகளுக்கு அக்கினிக் கணையாகத் தோன்றலாம். முற்போக்கு வாதிகளுக்கு மலர்க் கணையாகத் தோன்றலாம்.

"கண்ணகிக்கு யார் யாரோ சிலை எழுப்பியிருந்தாலும், முதன் முதலாகச் சிலை எழுப்பியவன் சேரன் செங்குட்டுவன்தான்.

அதேபோலத் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு என்கின்ற திட்டம் முதன் முதலாகத் தொடங்கிவைக்கப் பெறுவது இந்தச் சேரன் போக்குவரத்துக் கழகத்தில்தான்!

''இந்தியப் பூபாகத்திற்குள்ளே ஏற்கெனவே இருந்த, இந்தியாவில்–இன்றைக்குப் பங்களா தேசமாக ஆகியிருக்கிற அந்தப் பகுதியில், அது பங்களா தேசமாக மாறுவதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் முஜிபுர் ரகிமான் அவர்கள் ஒரு தேர்தல் பிரகடனத்தை வைத்தார்கள்.

''அதிலே இந்தத் திட்டத்தையும் அறிவித்தார்கள். அதற்குப் பின் தேர்தல் முடிந்து அதிலே முஜிபுர் ரகிமான் வெற்றி பெற்று அதன்பின் அந்த நாட்டிலே பெரும் புரட்சி கிளம்பிப் பின் அமைதி அடைந்து, இன்றைக்கு வேறு ஒரு நாடாக அமைந்திருக்கிறது. அதற்குப் பின்னும் ஒரு பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது! அந்தத் தேர்தல் பிரகடனத்தையும் நான் படித்துப் பார்த்தேன்! அவர்களும் செய்யாத அந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு இங்கு முதன் முதலாகத் தொடங்கி வைக்கிறோம்!

பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ஒரு முறை நிருபர்கள் கேட்டார்கள். 'நீங்களும் சோஷலிஷம் கேட்கிறீர்கள்; இந்தியாவில் இருக்கிற பல்வேறு கட்சிகளும் சோஷலிஷம் கேட்கிறார்கள்! இப்படி எல்லாரும் கேட்கும் போது உங்களுக்கு மட்டும் ஏன் தனியாக ஒரு கட்சி?' என்று கேட்டார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள் ''அவர்கள் எல்லாம் சோஷலிசத்தை வாயளவில் பேசுவதற்காகவே கட்சி வைத்திருக்கிறார்கள். நான் அதனைச் செயல்படுத்துவதற்காகக் கட்சி வைத்திருக்கிறேன்'' என்று பதில் கூறினார்கள்.

அண்ணா வழியில் நடைபெறுகின்ற இந்த அரசு அண்ணா சொன்ன அந்த மொழியை இதயத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டு சமதர்மத் திட்டங்களை உதட்டளவு உச்சரிப்பாக ஆக்கிவிடாமல், அதை உருவாக்கிடச் - செயல்படுத்திட அவைகளை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்திட ஆர்வத்துடன் பல்வேறு கட்டங்களில் தன் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்திருக்கிறது; சமதர்மப் பயணத்தை எத்தனையோ இடையூறுகளுக் கிடையேயும் நடத்தி வருகிறது.

தொழிலாளர்கள் என்பவர்கள் போக்குவரத்துத் துறையில் மாத்திரமல்ல; ஆலைகளில் பணியாற்றுகிறவர்கள் மாத்திரமல்ல –தொழிலாளர்; ரிக்ஷா இழுப்பவர்களும் தொழிலாளர்கள்தான்; காலையிலிருந்து மாலைவரை கழனி திருத்துபவனும் தொழிலாளிதான்; மூட்டை தூக்குபவனும் தொழிலாளிதான்; சலவை செய்கிறானே அவனும் தொழிலாளிதான்—சிகை அலங்காரம் செய்கிறானே அவனும் தொழிலாளிதான். ஆகவே, காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையும், பூணத் தகுந்தது பொறுமையும் என்ற நிலை இருக்கலாமா?

''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்—அவன் காணத் தகுந்தது வறுமையாம்!





பூணத் தகுந்தது பொறுமையாம்!''

என்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கேட்டார்.

அவன் காணத் தகுந்தது வறுமை அல்ல; அவன் பூணத் தகுந்தது பொறுமை அல்ல. அந்த வறுமையை விரட்டுவோம்! கொடுமைக்கும் ஓர் எல்லை உண்டு அதனை அந்தக் கொடுமை மீறிப் போகாமல்-அவன் பொங்குமாங் கடலாக மாறாமல் அதனை அடக்குகின்ற ஒரே ஆயுதம் அடக்குமுறை அல்ல; அதை அடக்குகின்ற ஒரே ஒரு ஆயுதம் துப்பாக்கிவேட்டுச் சத்தமல்ல;அதனை அடக்குகின்ற ஆயுதம் சமதர்மத் திட்டங்கள்தான் என்பதை உணர்ந்த அரசு இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

என்னை இங்குப் பலமாகப் பாராட்டினார்கள். மாலைகள் எல்லாம் மலைபோல் குவிந்தன. நான்தான் உரியவன் இவ்வளவு பாராட்டுகளுக்கும் என்று எண்ணிக் கொண்டால் என்னைப் போன்ற பைத்தியக்காரன் வேறு யாருமல்ல!

ஏனென்றால்,இதுபோன்ற காரியங்களில் நான் ஒருவன் தனியாயாக நின்றல்ல; நம் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அமைச்சரவையிலே வீற்றிருப்பவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுவுடைமைத் தத்துவத்திலே மனம் கொண்ட தோழர்கள், அத்தனை பேரும் என்னை இயக்கி வைக்கிறார்கள்·எனக்குக் கட்டளை இடுகிறார்கள்; அவர்கள் வில்லாக இருக்கிறார்கள்; நான் அம்பாக இருக்கிறேன் என்பதை மாத்திரம் யாரும் மறந்து விடக்கூடாது! அப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த வகையிலே தான், நான் இப்படிப் பட்ட காரியங்கள் நடைபெறுகிற நேரத்திலே பெருமையும் உற்சாகமும் கொள்கிறேனே அல்லாமல், என்னால் அல்லவா இது நடக்கிறது-நானல்லவா இதற்குக் காரணம் என்று இதற்கெல்லாம் 'நானே தான் காரணம்' என்று எல்லாம் நானேதான் என்று கூறிக்கொள்கிற 'ஆணவம்' என் தலையிலே என்றைக்கும் ஏறாது என்பதைக் கூறிக் கொள்கிறேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து செய்கிற காரியம் என்றுதான் இங்குக் குறிப்பிடுகிறேன்.

அதன் வெற்றியைத்தான் இங்கே பார்க்கிறீர்கள்! இன்றைக்குச் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே கிட்டத்தட்ட 1,500 பேர் நிர்வாகத்திலே பொறுப்பேற்க முன் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பங்குதாரர்களாகும் உரிமை இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. முதலீட்டில் பங்கு பெறுகின்ற உரிமையை இன்று அவர்கள் பெற்றிருக்கிறார்கள்!



இவை சாதாரணமான விஷயங்கள் அல்ல. ஒரு வங்கி விழாவில் பேசும் போது நண்பர் இராஜாவினிடத்தில் கூறினேன். ஒரு காரியம் நடைபெறும் வரை பெரிதாகத் தோன்றும். நடைபெற்று முடிந்த பிறகு 'என்ன பிரமாதம்?—இது சாதாரணம் இது நம்மால் முடியாதா?' என்று கூடப் பலருக்கு எண்ணத் தோன்றும்!

ஆனால், நடை பெறுகிற வரையில் அதை யார் நினைத்தார்கள்? யார் செயல் படுத்தினார்கள்? எந்த உள்ளத்திலே இது தோன்றியது? அல்லது யார்—எந்த அரசு—எந்த இயக்கம்—எந்த ஆட்சி நடத்துபவர்கள் செய்தார்கள்? என்பதுதான் முக்கியம்.

எங்களுக்கு இருப்பதெல்லாம் இதைச் செய்து எங்களைச் சாதாரணமானவர்கள் என்று பிறர் கருதினால் அதை நாங்கள் மிகப் பெருமையாகக் கருதுவோம்!

ஆகவேதான், இது மாதிரியான மிகச் சாதாரணமான காரியங்களைச் சாதாரணமான நாங்கள் சாதாரணமாகவே செய்திருக்கிறோம். பெரியவர்களுக்கு அது சாதாரணமாகத் தெரியும். ஏனென்றால் கருணாநிதியின் உள்ளத்திலே இருந்து கிளம்பியதால் மிகச் சாதாரணமாகத் தான் தெரியும்.

எங்களைப் பொறுத்தவரையிலே இந்தக் காரியங்களை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டு மக்களுக்காக—தொழிலாளி சமுதாயத்துக்காக—பாட்டாளி வர்க்கத்துக்காக—இன்றைக்கு நாம் ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்த அன்று எவை எவை செய்திட வேண்டும் என்று அன்று இருந்த ஆளுங் கட்சியைப் பார்த்துச் சொன்னோமோ, அவைகளை எல்லாம் நடத்திக் காட்ட வேண்டிய பொறுப்பிலே நாம் இருக்கின்ற காரணத்தால், அதைச் செய்தே தீர வேண்டும்.

இன்றைக்கு இந்தப் போக்குவரத்துக் கழகத்திலே இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோமென்றால், நான் கூடச் சற்று எண்ணிப் பார்த்தேன். இதிலே 1,500 பேர் சேர்கிறார்கள் என்றால் எங்கே இதில் தொழிலாளர்கள் சேர்வார்களோ முன் வருவார்களோ என்று அச்சப்பட்டேன்.

ஏனென்றால், இந்த அச்சத்தை உருவாக்கிடுவதற்குத் தான் நிறைய 'நல்லவர்கள்' இருக்கிறார்களே என்பதால் சந்தேகப்பட்டோம்.

ஆனால், இவை அனைத்தையும் மீறி 1,500 பேர் இந்தத் திட்டத்திலே சேர்ந்து அரசாங்கத்தின் திட்டத்துக்கு அனுகூலமாக இருக்கிறார்கள் என்றால், மிச்சமுள்ளவர்களும் இன்னும் ஒரு வாரம், இருவார காலத்திற்குள் சேர்ந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு!

குறைந்த பட்சம் 500 ரூபாய் செலுத்தி அவர்கள் இந்தத் திட்டத்திலே பங்குதாரராகச் சேருவார்கள் என்றால் அவர்கட்குக் குறைந்த பட்சம் 8 சதவிகிதமாவது அந்த 500 முதலீடு செய்வதற்காக, அவர்களுக்குக் கிடைத்திட வேண்டும். இலாப நட்டக் கணக்குப் பார்க்கின்ற காலத்தில், எழுதுவதைவிடச் செலவினக் கணக்குகள் எழுதப்படுகிற நேரத்திலேயே அந்த 8 சதவிகிதக் கணக்கும் தொழிலாளர் கணக்காக எழுதப்பட்டாக வேண்டும், அதற்கு வருமான வரி விலக்கு வேண்டும். அதற்குச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய கடிதத்தில் மிக உற்சாகமான திட்டமிது. அனைவரையும் கவரக் கூடிய திட்டமிது; இதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். என்று எழுதியிருக்கிறார்கள். உள்ளபடியே அதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆகவே, விரைவில் நமக்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கும்.

இதிலே 500 ரூபாய் பங்கு போட்டவர்கள், எங்கே நமக்கு அந்த 500 ரூபாயாவது கிடைக்குமா என்று கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால் சோஷலிசத்தின் மாதா இன்று இந்தியாவின் பிரதமராக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்!

ஆகவே, அந்த அனுமதி நிச்சயம் நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு. அந்த நம்பிக்கையோடு இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் நாம் இந்தத் திட்டத்தைத் தொடங்குவதாக இருக்கிறோம்!

முதலிலே சேரன் போக்குவரத்து; அடுத்ததாகப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் ஜூன் திங்கள் பத்தாம் தேதி இந்தத் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. இதைப் பாண்டியனின் சார்பாகச் சேரனுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

அம்பு வேகமாகப் போகக் கூடியது. ஆகவே, முதலில் ஆரம்பித்திருக்கிறோம். மீனும் அம்புக்குச் சளைத்ததல்ல—அது நீந்திப் போகக்கூடியது. ஆகவே நீந்திச் செல்கின்ற பாண்டியன் போக்குவரத்தில் அடுத்தபடியாக செயல்படுத்தப்படுகிறது, வில்லுக்கு அடுத்து மீனுக்குத் தந்திருக்கிறோமே! சோழனுக்குத் தரவில்லையே என்று தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் கேட்டால் புலி எப்போதும் சற்றுப் பதுங்கித்தான் பாயும் என்பதால் அதில் அடுத்துத் துவங்கும்!

பல்லவன் போக்குவரத்துக் கழகம் சிங்கச் சின்னம்! என்றைக்கும் சிங்கம் அவசரப்படாது. சிங்கம் என்றும் திரும்பிப் பார்த்துத்தான் முன்னேறும்! அடுத்து அண்ணா போக்குவரத்துக் கழகத்திலும், படிப்படியாக இந்த ஆண்டுக்குள்ளாக எல்லாப் போக்குவரத்திலும் இந்தத் திட்டம் அமலுக்கு வரும்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்திருக்கிற இந்த நேரத்தில் இதைவிடத் தொழிலாளர்கட்கு நன்மை செய்கிற சர்க்கார் எது இருக்க முடியும் என்று செழியன் அவர்கள் கேட்டார்கள். தொழிலாளர் சமுதாயத்திற்குச் சங்கடங்கள் இல்லாமலில்லை. இன்றைக்கு மின்வெட்டின் காரணமாகத் தொழிலாளர்கள் சமுதாயத்திலே பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவற்றைக் களைவதற்காக நாம் முயற்சித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டு வருகிறோம்! இங்கு என்னைச் சந்தித்த நிருபர்களெல்லாம் அதைப்பற்றிப் பல விளக்கங்களைக் கேட்டார்கள்.

நூல் பற்றாக் குறையின் காரணமாகக் கைத்தறித் தொழிலாளர்கள் மிகுந்த இடருக்கு ஆளாகியிருக்கிறார்கள். மூன்று இலட்சம் பேர் இன்று அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

தமிழக அரசின் சார்பாக நமது அமைச்சர் மாதவன் எவ்வளவு தீவிரமாகத் திட்டங்கள் தீட்டிப் பற்றாக் குறையைத் தீர்த்திட முயன்றார்கள்!

நூல் பற்றாக்குறையின் காரணமாக நூல்களை அளிக்கின்ற அந்த முழு உரிமையை நாம் இன்னும் பெற்றாகவில்லை! அந்தப்பெரும் பொறுப்பு மத்திய அரசிடத்தில் இருக்கிறது. நான் மத்திய அரசையும் குறைகூறவில்லை. அவர்களுக்கும் சில சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவேதான் நூல் பற்றாக்குறை காரணமாகக் கைத்தறித் தொழிலாளர்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். இங்கு கூட அவர்களைச் சார்ந்தவர்கள் சிலர் என்னைச் சந்தித்துப் பேசினார்கள்; மோட்டா நூல் கிடைக்கவில்லை என்றார்கள்!

கடைசியாக அவர்கள் என்னிடத்தில் கேட்டார்கள்! இந்த மின்வெட்டுத் தீர்கிற வரையாவது எங்களுக்கு ஏதாவது கடன் உதவியாவது செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நானும் அதைப்பற்றி யோசித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து பேசினேன். இது கோவை மாவட்டத்துப் பிரச்சினை மாத்திரம் அல்ல. தமிழ்நாடு முழுவதும் உயர்ந்த ரக நூல் கிடைக்காத காரணத்தினால் கைத்தறியாளர்கள் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவேதான் சென்னையிலிருக்கின்ற நிதித் துறைச்செயலாளரோடுதொடர்பு கொண்டு பேசினேன்.

பேசியதற்குப் பின்னர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். தொழிலாளருக்காக நடைபெறுகிற இந்தக் கூட்டத்தில் கைத்தறித் தொழிலாளருக்காக ஓர் அறிவிப்பினைத் தருவது முறை என்று கருதுகிறேன். ஏன் அவர்களுக்குக் கடன் நிவாரணம் தரக்கூடாது என்று காலையிலே பேசிய நிருபர்கள் கேட்டார்கள்.

இப்படி ஒரு நிலைமை வந்து எந்த மாநிலத்திலாவது செய்திருக்கிறார்களா என்று கேட்டேன்.

அவர்களிலே ஒரு நிருபர் "ஆலைகள் மூடப்பட்ட நேரத்தில் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 6 இலட்சம் அளித்தீர்களே! எந்த மாநிலத்திலாவது கொடுத்தார்களா"! என்று என்னையே திருப்பிக் கேட்டார்.

'இல்லை' என்று சொன்னேன்!

'அதுபோல் இப்போதும் இவர்களுக்கு உதவி செய்து மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாக இருக்கக் கூடாதா?' என்று கேட்டார்

அவர் கேட்டதை மனத்திலே வைத்துக்கொண்டு பல்லாயிரக் கணக்கில் அவதிப்படுகின்ற உயர் ரக நூல் கிடைக்காமல் அவதிப்படுகின்ற கைத்தறியாளருக்குக் கடனாக ஒரு கோடி ரூபாய் தமிழ்நாடு அரசாங்கம் தருகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த ஒரு கோடி ரூபாயில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் பயன் பெறுகிற அளவுக்கு, இந்த மாதம் 15ஆம் தேதியிலிருந்து தலைக்கு ரூபாய் நூறு கடனாகத் தரப்படும். அதனை அவர்கள் ஆகஸ்டு மாதத்திலிருந்து மாதம் பத்து ரூபாய் வீதம் கட்டினால் போதுமானது என்ற அறிவிப்பினையும் தருகின்றேன்!

### ஏர் இந்தியா

வருகின்ற ஜூன் திங்களில் ஏர் இந்தியாவின் பணி தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவேறுகின்றன. அகில உலக நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது சாதாரணமானதுதான். உலகத்தில் 18வது இடத்தைப் பெறுகிறது.

ஏர் இந்தியா, ஆடவர், பெண்டிர் உட்பட ஏறக்குறைய 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிறது. 1971-72-ல் 79·92 கோடி ரூபாய் தேடியுள்ள இந்த நிறுவனம், 81·58 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது.

### தீத் தடுப்பு

நல்ல நாகரிக வாழ்வில், தீத்தடுப்புப் படையினரின் தொண்டு மிக மிகத் தேவைப்படுகிறது. தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், அரியானா, மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் மாநில அரசினரின் பொறுப்பில் உள்ள இந்தப் படை மராட்டியம், குசராத், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் நகராட்சியின் நிருவாகத்திலுள்ளது.

சென்னையில் மட்டும் 13 தீத்தடுப்பு நிலையங்களும் பல்வேறு சிறிய நகரங்களிலெல்லாம் சேர்த்து 47 நிலையங்களும், மதுரையில் 2 நிலையங்களும் ஆகத் தமிழ் நாட்டில் மொத்தம் 62 தீத்தடுப்பு நிலையங்கள் உள்ளன.

# வருவாய்த்துறையில்...

விவாதத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் வருவாய்த் துறையைக் குறை சொல்லாமல் பேசினார்கள். நிரம்பவும் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். அதிலே அலட்சியம் காட்டினார்கள் என்று நான் கருதவில்லை. அதிகம் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனென்றால், வருவாய்த்துறை அவ்வளவு சிறப்போடு நடக்கிறது என்று எல்லாரும் ஒத்துக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசும் பொழுது, உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும் போது உழுபவன் நிலத்தை வாங்கிக் கொள்கிற அளவிலே சட்டம் வர இருக்கிறது என்று சொன்னார்கள். சட்டம் வர இருக்கிறது. அதைப்பார்க்கப் போகிறீர்கள். அந்தச் சட்டம் வரும்போது அதுபற்றி விரிவாகப் பேசலாம்.

நிலம் வழங்குவதிலே குறைபாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை. சாதாரணமாக, புறம்போக்கு நிலத்தைக் கொடுக்கும்போது தவறு நடக்கிறது என்று சொல்கிறார்களா, அல்லது 1 இலட்சத்து 57 ஆயிரம் பேருக்குக் குடியிருப்பு மனை கொடுத்ததில் தவறு ஏற்பட்டது என்று கருதுகிறார்களா என்று தெரியவில்லை. 1 இலட்சத்து 57 ஆயிரம் பேருக்கு மனை கொடுத்தும்கூட, சில பேருக்கு வழங்கியதில் தகராறு இருக்கிறது.

பேசிய அத்தனை பேரும் குடியிருப்பு மனைக்கு 5 சென்ட் வேண்டுமென்று கேட்டார்கள். 3 சென்டுக்கு மேல் குடியிருப்பு மனை தேவையில்லையென்று அரசு கருதுகிறது. இப்பொழுதே ஏராளமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்வதால், குடியிருப்புச் சட்டத்தின் கீழ் எவ்வளவு நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்களோ, அது முழுவதுமே பட்டா செய்து கொடுக்கப்படும். அது 10 சென்டாக இருந்தாலும், 5 சென்டாக இருந்தாலும், 3 சென்டாக இருந்தாலும், 2 சென்டாக இருந்தாலும், 1 சென்டாக இருந்தாலும் முழுவதும் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். ஆனால், புறம்போக்கு நிலத்திலே 3 சென்ட் கொடுத்தால் போதும் என்று விதிவைத்து அதற்கேற்றவாறு பிரித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பொதுவாக, பீனல் வாட்டர் ரேட் கூடாது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா கூட பேசினார்கள். தண்டத் தீர்வை இருக்கக் கூடாது என்று பேசினார்கள். அதை விதிக்காமல் இருக்க முடியாது. அது தேவையில்லையென்றுசொன்னால்கீழ் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் பாயாது. ஒரு அணை கட்டும் பொழுது, மேல் ஆயக் கட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், கீழ் ஆயக்கட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று திட்டம் போட்டுக் கட்டுகிறோம். தண்டத் தீர்வை விதிப்பதில்லையென்றால், கீழ் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் போகாமல், மேல் ஆயக் கட்டில் வைத்திருப்பவர்களுக்கே தண்ணீர் போகும். ஆகவே, கீழ் ஆயக் கட்டிலிருப்பவர்கள் பயன்படுத்தாமல் மேல் ஆயக் கட்டிலிருப்பவர்களே பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்வது நியாயம் அல்ல. இது நீதி மன்றத்திற்குச் சென்றால் கீழ் ஆயக்கட்டை வைத்திருப்பவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகும். ஆகவே, தண்டத் தீர்வையை எடுக்க வேண்டுமென்று சொல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். தவறாகத் தண்ணீரை யார் எடுத்தாலும் நிச்சயமாகத் தண்டத் தீர்வை விதிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதில் யாருக்கும் ஆட்சேபனை தேவையில்லையென்றும் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் இராதாபுரம் பகுதியில் பெரும் பகுதி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் வரியையெல்லாம் நீக்கவேண்டும், ரத்துச் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். பொதுவாக, தமிழ்நாட்டிலே இப்படி இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறோம். எந்த எந்தப் பகுதியிலே வறட்சி நிலைமையிலாயினும் சரி, மின்சார வெட்டினாலாயினும் சரி, பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள், பஞ்சமோ, வெள்ளமோ வந்தால் எப்படிவிவசாயிகளுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட சலுகைகள் மின்சார வெட்டினால் பாதிக்கப் பட்டவர்களுக்கும் அளிக்கப்படும் என்று.

கடன் ஒத்திவைப்புப் பற்றி வலியுறுத்திச் சொல்கிறார்கள். கடனைத் திருப்பிச் செலுத்திட வசதியிருந்தாலும் அவர்களுக்கும் கடன் வசூலை ஒத்திவைக்கவேண்டுமென்றுசொல்வது சரியல்ல. ஆனால், கெடுபிடி செய்து வசூலிப்பதாக இல்லை. கெடுபிடி செய்வதாக இல்லையென்ற காரணத்திற்காகக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம், கொடுக்கத் தேவையில்லையென்ற அளவுக்கு வந்துவிடக் கூடாது.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசும் பொழுது, 5 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்து, வசூலிக்க முடியாமல் இருக்கிற வரிகள் அத்தனையும் ரத்துச் செய்ய வேண்டுமென்று சொன்னார்களென்று கருதுகிறேன். அப்படிச் சொல்வது சரியல்ல; அவர்கள் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். 5 பசலி, 6 பசலி செலுத்த வேண்டியிருக்குமானால், பாக்கி இருக்குமானால், இப்பொழுது நடைமுறைக்கான வரியையும், பழைய பாக்கியில் ஒரு பசலிக்கான வரியையும் சேர்த்து வசூலிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.



முதலிலே இருக்கிற பாக்கியில் ஒரு பசலி வரி, கரன்ட் பசலிக்கான வரி, இரண்டையும் சேர்த்துத் தொகை வசூலித்தால் போதும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றையும் சேர்த்து வசூலிக்க வேண்டாமென்று சொல்லியிருக்கிறேன். இது விவசாயிகளுக்குச் சலுகையாக இருக்கும். ஆகவே, அவர் அதை வற்புறுத்தத் தேவையில்லையென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடனுக்கு, வட்டிக்கு வட்டி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது எனக்குப் புரியவில்லை. இதை, திரு பொம்மன் அவர்கள் தெரிவித்தார்கள். வட்டிக்கு வட்டி கேட்பதில்லை. ஐ.எம்.எஸ் லோனோ, தக்காவி லோனோ வாங்கி இருப்பார்களானால், அந்தக் குறிப்பிட்ட தேதியன்று அதைக் கட்டியாக வேண்டும். அடுத்த நாள் கட்டினால் கூட, ஒரு வருடத்திற்கான வட்டியையும் சேர்த்துக் கட்டவேண்டுமென்று முன்பு ஏற்கெனவே உத்தரவு இருந்தது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதனால், அதை மாற்றி எத்தனை மாதம் பொறுத்துக் கட்டுகிறார்களோ அத்தனை மாதத்து வட்டியை வாங்கினால் போதும், ஒரு நாளைக்காக ஒரு வருடத்து வட்டியை வாங்க வேண்டாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அது விவசாயிகளுக்குச் சலுகையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய வருமான வரியை ரூ. 5,000 ஆக இருப்பதை மேலும் அதிகமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையை ஒத்துக் கொண்டு ஒன்று சொல்கிறேன். ஏற்கெனவே இருந்த அரசு விவசாய வருமானத்தின்மூலமாக எவ்வளவு வரும் என்று எதிர்பார்த்தார்களோ, அதைவிடக் குறைவாகத் தான் இப்பொழுது வருமானம் வருகிறது. அவ்வளவு சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம். நாம் கொடுத்திருப்பது ஏராளம். பொம்மன் அவர்களும் மற்ற நண்பர்களும் பேசும் பொழுது மத்திய அரசினுடைய விவசாய வருமான வரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த விவசாய வருமானத்தை, இன்கம் டாக்சுக்கு, ஸ்லாப் ரேட்டுக்குக் கணக்கில் சேர்க்கப் போகிறோம் என்று அவர்கள் சொன்னால், மறைமுகமாக விவசாய வருமானத்திற்கு வரிபோல் ஆகும் என்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பெரும்பாலும் இன்கம்-டாக்ஸ் கொடுப்பவர்களைத்தான் பாதிக்கும்.

ஆனால், அவர்கள் கணக்கு வைக்கவேண்டும். கணக்கை வைக்கவேண்டாம் என்று தமிழக அரசு சொல்லிற்று. ஆனால், மத்திய அரசு உத்தரவுப்படி கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு வருமானம் என்பதற்குத் தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையில் கணக்கு வைக்கவேண்டியதில்லை. என்ன பயிர் வைக்கிறார்களோ, அதற்கு ஏற்றவாறு, ஸ்டாண்டர்டு ஏக்கர்களாக மாற்றி அதன் மீது வரி கட்டினால் போதும் என்று சொன்னோம். ஆனால், மத்திய அரசு போட்டிருப்பதில் கணக்கு வைக்கவேண்டுமென்பது இப்பொழுதிருக்கிறது. முன்பு விவசாயிகள் போராட்டத்தின்போது, தமிழக அரசு கணக்கு கேட்கலாமா, இதைச் செய்யலாமா, என்று சொன்னவர்கள் இப்பொழுது என்ன பேசுகிறார்களோ எனக்குத் தெரியாது.

நிரந்தரமாகப் பட்டா வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது புரவிசனல் பட்டா அளித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். விரைவிலே நிரந்தரமான பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இராமநாதபுர மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற கோரிக்கை. இதிலே அரசியல் புகுந்து விடுகின்ற காரணத்தினால் யார் ஆட்சியிலே இருந்தாலும் பிரிப்பது கஷ்டமாகப் போய்விடுகிறது. எல்லாக் கட்சியினரும் ஒத்துக்கொண்டால்




செய்வதிலே கஷ்டம் இருக்காது. இராமநாதபுரத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் சிலர் விருது நகர்தான் இருக்கவேண்டுமென்று சொல்வார்கள், சிலர் சிவகங்கை தான் இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். இப்படிச் சில அரசியல் ஆகிவிடும்.

பப்ளிக் டிரஸ்டுகளின் கீழ் 20 ஸ்டான்டர்டு ஏக்கருக்குமேல் பயிர்செய்யக்கூடாது என்று இருந்தாலும் சிலர் அதற்கு மேல் பயிர் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு நிலம் பயிர் செய்யலாம் என்று ஏற்கெனவே உத்தரவு இருக்கிறது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு புதிதாக எதையும் அனுமதிக்கவில்லை. பழைய அரசு இருந்த பொழுது இரண்டு பேர்களுக்கு அனுமதி கொடுத்திருந்தார்கள். அவர்கள் அதிகமாக உழுது கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் கூட அரசு இப்பொழுது ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பப்ளிக் டிரஸ்டுகளின் கீழ் 20 ஸ்டான்டர்டு ஏக்கருக்கு மேல் இருந்தாலும் அதை ஆதரைஸ்டு ஆபிசர்ஸ் எடுத்துக் கொடுப்பதற்குச் சட்டத்தின் மூலமாக வழி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீபாதம் பற்றிச் சொன்னார்கள். அதிலே சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது புறம்போக்கு நிலமில்லை. ஸ்ரீபாதம் நிலம் யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்கே அடமானம் செய்து கொடுக்கிறோம். அடுத்த நாளே நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். அதனால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். புறம்போக்கு நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதைப் பொறுத்த வரையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே எந்த விதத் தகராறும் இல்லாமல் பிரித்துக் கொடுத்திருக்கிறோம். எங்காவது தகராறு இருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அதிக நேரம் பதில் சொல்ல விரும்பவில்லை. எல்லா உறுப்பினர்களும் பாராட்டியிருக்கிறார்கள். எனவே வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன்; நன்றி!

(தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1—4—1973-ல் வருவாய்த் துறை பற்றிய விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து.)

# தமிழகத் தொழில் வளம்

தமிழகத்திலே என்ன என்ன முறையிலே தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற முறையிலே இந்த ஆண்டு ஏராளமான விவரங்களை, ஒவ்வொரு துறையும் எப்படி எப்படிச் செயல்படுகின்றது என்ற விவரங்களையெல்லாம் கொடுத்திருக்கின்றோம்.

இந்தத் தொழில் துறை, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காகவும் தொடர்ந்து நம்முடைய கொள்கையைச் சரிவர நிறைவேற்றுகின்ற முயற்சிகளிலே ஈடுபட்டு இருக்கின்ற முயற்சிகளுக்காகவும் இந்தத் தொழில் துறையைச் சேர்ந்த அரசு அலுவலாளர்களுக்கெல்லாம் நம்முடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் வளர்ச்சியைக் காட்டுகின்ற சில புள்ளி விவரங்கள், தமிழகம் கொஞ்சம் கூடப் பின் தங்கவில்லையென்பதைக் காட்டுகிறது. திரு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல மின்சாரம் எந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சிக்கு அதிகமாகப் பயன்படுகிறது என்று நமக்குத் தெரியும். 1966—67-லே, 1,273 மில்லியன் யூனிட் மின்சாரம் தொழில்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. 1971—72-லே, 2,852 மில்லியன் யூனிட் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல், இன்டஸ்டிரியல் புரடக்சன் இன்டெக்ஸ் என்ற முறையிலே கணக்கெடுத்துப் பார்த்தாலும் 1967—67-ல் 148·1; 1972-ல் 192·5; அதேபோல் மொத்தம் தொழில் வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டிலே, தொழில் துறைக்குக் கொடுத்திருக்கக் கூடிய பங்கு 1966—67-லே 275.18; 1971—72-லே 379.15.

அதேபோல் நம்பர் ஆப் யூனிட்ஸ், 1971-ல் 19 ஆக இருந்தது 1972-ல் 50 ஆக ஆகியிருக்கிறது. அதேபோல் லெட்டர் ஆப் இன்டன்ட் 67-ல் 15 என்று தொடங்கி, சென்ற ஆண்டில் 71 என்ற அளவுக்கு வந்திருக்கிறது. அதைப்போலவே வங்கிகளிலே 277·97 இலட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டிருந்தன. 71-லே 467.5 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பெருகி இருக்கிறது.

ஐ. டி. பி. ஐ. அது பைனான்சியல் கார்ப்பரேஷன்—அவர்களுடைய உதவியும் இந்திய நாட்டிலேயே இரண்டாவதாக நம்முடைய மாநிலம் இருக்கக் கூடிய முறையிலே 3 042 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பெறப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேசன் மூலமாக ஏராளமான கடன் உதவிகளைச் செய்கிறோம். கூட்டுறவுத்துறையின் மூலமாக, கோவாப்ரேடிவ் இன்டஸ்ட்ரியல் பேங்க்ஸ் மூலமாக 67-லே 17 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு 41 இலட்சமாக ஆகி இருந்தது. இந்த ஆண்டு 39 இலட்சமாக ஆகியிருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட நாம் கூட்டுறவுத் துறையிலே 133.59 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்கிறோம். இன்னும் 201.91 கோடி ரூபாய்க்கான திட்டங்களை நாம் மத்திய அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நாம் தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிவிட்டோம் என்பது சரியான ஒரு வாதம் இல்லை. சிறிய சிறிய தொழில்களைப் பொறுத்தவரையிலே 66-லே 10,431 ஆக இருந்தது. 72-லே 28,990 என்ற அளவிற்கு இரண்டு மடங்குக்கு மேலாக வளர்ந்திருக்கிறது. தொழில் வளர்ச்சி என்பதையும் மறுக்க முடியாது என்று கருதுகிறேன்.

கைத்தறிக்கு இயற்கையாகப் பல சங்கடங்கள் இருந்தாலும், மின் வெட்டின் காரணமாக அதிகமான தொல்லைகள் சேர்ந்திருக்கின்றன. நூல் பிரச்சினையைப் பற்றி இங்கே எல்லாரும் கவலை தெரிவித்தார்கள். இந்த அரசாங்கத்தின் சார்பிலே எல்லாரும் சேர்ந்து ஒரு தீர்மானம் போட்டு அனுப்பினோம். அதன் அடிப்படையிலே ஸ்டேச்சுட்டரி கன்ட்ரோல் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்தது. அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த முறையை உடனடியாக நிறைவேற்றக் கூடிய முறையில் வேகம் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மத்திய அமைச்சரிடத்திலே நேரடியாகச் சந்திக்கும்பொழுது சொன்னேன். டெல்லிக்குத் தொலைபேசி மூலம் பேசும் பொழுதும் குறிப்பிட்டேன். அதைப்பற்றி உடனடியாக முடிவு செய்ய வேண்டும். என்ன கொள்கையின் அடிப்படையில் முடிவு எடுக்க வேண்டுமென்பதுதான் முக்கியம்.

மத்திய அரசு கொடுத்தது, மாநில அரசு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதைத்தான் நாங்கள் தெளிவாகச் சொன்னோம். மத்திய அரசாங்கத்திற்கும் அந்த அதிகாரம் கிடையாது; டெக்ஸ்டைல் கமிஷனருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. இரண்டுமே தவறு. அவர்கள் வாலண்டரியாகக் கொடுக்கிறார்கள். அது நம்முடைய தேவையில் பத்தில் ஒரு பங்குக்குக் கூடப் போதாது. நம்முடைய மாநில அரசு, கொள்கையிலே எவ்வளவு தெளிவாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஹாங்க் யார்ன் 20,000 பேல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. இதுதான் நாங்கள் மத்திய அரசிலே கொடுத்திருப்பது. அகில இந்திய அளவிலே எவ்வளவு குறைவு என்று எடுத்துக் கொண்டாலும் அந்த அளவிற்கு மாநில அரசும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. மொத்தப் பற்றாக்குறையை நீக்கிவிட்டு எங்கள் தேவைக்கு ஏற்ப, புரப்போர்ஷனேட் ஆகக் கொடுத்து விடுங்கள் என்றுதான் சொல்கிறோம். வாலண்டரி ஸ்கீமாக வைத்தால் டெக்ஸ்டைல் கமிஷனர் ஏதாவது சொல்வார், கொடுத்தாலும் கொடுக்கலாம், கொடுக்காமலும் இருக்கலாம். அதை மாற்றியமைத்து மாநில அரசின் இடத்திலேயே பொறுப்பைக் கொடுங்கள், இங்கே நாமே நம்முடைய அலுவலர்களைப் போட்டுக் கணக்கு எடுக்கிறோம். உங்கள் மாநிலத்திற்கு எவ்வளவு தேவை என்பதைக் கண்டறிந்து எவ்வளவு புரப்போர்ஷனேட்டாக வருகிறதோ அதைக் கொடுங்கள் என்று கேட்கிறோம். அதை நாங்கள் வாங்கி, தாலுகா வாரியாக, ஒவ்வொரு முக்கியமான கைத்தறி சென்டரிலும் கொடுக்கிறோம் என்று சொன்னோம்.

தொழிற்சாலைகள் பெருக வேண்டுமென்ற கருத்தை எல்லாரும் ஆதரிக்கிறோம். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அருமையான கருத்தைச் சொன்னார்கள். கடந்த சில, ஆண்டுகளாக மத்திய சர்க்கார் ஒரு புதுத் தொழிலைக் கூட, மத்திய சர்க்கார்த் துறையிலே தமிழ்நாட்டிற்குத் தரவில்லை என்பது வருந்துவதற்குரிய செய்தியாகும். அதை நாம் எல்லாரும் மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும். எப்படியாவது இந்த நான்கைந்து ஆண்டுக் காலத்திலே செய்ய முடியாத திட்டங்களையெல்லாம் இனிமேலாவது, வருகின்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது பல தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வர வேண்டும். இதிலே கட்சி வேறுபாடு இருக்க முடியாது. தமிழகத்திற்கு வந்தால் பலன் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி நடத்தும் மத்திய சர்க்காரினுடைய தொழிற்சாலைகளிலே அந்தந்த மாநிலத்திலே உள்ளவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்ற கருத்தை, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வலியுறுத்தினார்கள். அது மிகவும் வரவேற்கத் தக்கது. இதற்காக, மற்ற மாநிலத்திற்குக் கொடுக்கவே கூடாது என்று சொல்லவில்லை. தமிழகத்திலுள்ளவர்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்லக்கூடாதுஎன்பதும் கருத்து அல்ல. அவர்களும் அப்படிக் கருதியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், எந்த மாநிலத்திலே மத்திய சர்க்காரின் தொழிற்சாலைகள் நடக்கின்றதோ அவைகளில் அந்த மாநிலத்திலுள்ளவர்களுக்கு அதிக வாய்ப்பைத் தர வேண்டுமென்பது நியாயம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு ஒரேயொரு பரிகாரம்தான் இருக்கிறது. அவர்கள் சில புள்ளி விவரங்களைக் கொடுத்தார்கள். நான் அந்தப் புள்ளி விவரங்களுக்குள் போக ஆசைப்படவில்லை. முற்றிலும் அவர்கள் சொன்னது உண்மை. இருந்தாலும் இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றால், ஒவ்வொரு மாநிலத்திலேயும் உள்ள மத்திய சர்க்காரின் தொழிற்சாலைகளில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்—அரசைச் சேர்ந்தவர்கள் அல்ல—மாநிலத்தைச் சேர்ந்தவர்களை மத்திய சர்க்காரின் அலுவலர்களாகத், தலைமைப் பொறுப்பிலே போட்டால்தான் இதற்கு விடிவு ஏற்படும். பரிகாரம் ஏற்படும். இல்லாவிட்டால் இதுவரையிலும் இருக்கும் சிக்கல்கள் தொடர்ந்திருந்து கொண்டேதான் இருக்கும் என்று கருதுகிறேன். இதை மத்திய சர்க்கார் கருத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முந்திரித் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். சிக்கலானதுதான். முந்திரித் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் முந்திரிக் கொட்டையை வெளி மாநிலத்திலிருந்து, வெளி நாட்டிலிருந்து பெற்றுத் தர வேண்டும். நாம் நமது கொள்கையைத் தெளிவாக்கியிருக்கிறோம். ஒன்று மத்திய சர்க்காரின் தொழில் துறையிலே கொடுத்து இதைக் கொடுத்து விடுங்கள் என்று சொல்வது, அல்லது மாநிலத்திலும் மத்திய அரசின் அலுவலகத்தை அமைத்து அதன் மூலம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மாநிலத்தின் குறை மத்திய அரசுக்குத் தெரிய வாய்ப்பு இருக்கும். மூலப் பொருள்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதைத் தொடர்ந்து வலியுறுத்த விரும்புகிறேன். இப்பொழுது சொன்னதைப் போல, முந்திரித் தேவை 1,23,750 டன். சுமார் 120 தொழிற்சாலைகள் குமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலும் இருக்கின்றன. ஆனால், 29,000 டன்கள் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது எந்த அளவிற்கு உற்பத்தியைப் பாதிக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. என்ன வளர்ச்சி வேண்டுமென்றாலும் மூலப் பொருள்கள் கிடைக்காவிட்டால் அந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சி வளராது என்பதற்காக இந்த ஒரு உதாரணத்தைச் சொன்னேன்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். நம்முடைய தமிழகத்தில் 'அயர்ன் அண்ட் ஸ்டீல்' அடிப்படையில் ஏராளமான தொழிற்சாலைகள் வளர்ந்திருக்கின்றன. இன்சினியரிங் இன்டஸ்ட்ரீஸ், ஆடோமொபைல் இன்டஸ்ட்ரீஸ்-ல் இந்தியாவிலேயே நாம் முதலிடம் வகிக்கிறோம். நமக்குத் தேவையான அயர்ன் அண்ட் ஸ்டீல் 1971—72-க்கு 1,49,984 டன். ஆனால், கொடுத்தது



39,433 டன். 1972–73-க்கு 1,58,285 டன் தேவை. ஆனால் கொடுத்தது 32,459 டன். அடுத்து, 'மட்டன் டேலோ'. 1972-ஆம் ஆண்டுக்கு நமக்குத் தேவை 6,000 டன். ஆனால் கிடைத்தது 1,284 டன். அடுத்தபடியாக, 'பாரபின் வேக்ஸ்' 1972-ஆம் ஆண்டுக்குத் தேவை 8,000 இன். ஆனால் கொடுத்தது 3,500 டன். 'காஸ்டிக் சோடா' 1972-ஆம் வருடத் தேவை 12,000 டன். ஆனால் கொடுத்தது 389 டன் ஆகவே, மூலப்பொருள் கொடுப்பதிலே மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்று கூடச் சொல்ல மாட்டேன். கொள்கையை எடுத்து, ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களைக் கொடுப்பதற்கு முன்வந்தாலொழிய தொழில் வளர்ச்சி குன்றும் நிலை தொடர்ந்து நீடிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் திவிரமான முயற்சிகளை எடுத்திருக்கிறோம். பின் தங்கிய மாவட்டங்களாகப் பல மாவட்டங்களை அறிவித்திருக்கிறோம். இவைகளில் சில பகுதிகளை எடுத்து, தனிச் சலுகை 10 சதவிகிதம் இனாமாக, 'கிராண்ட்டாகத்' தொழில் துவங்குவதற்குத் கொடுத்து முயற்சியெடுக்கிறோம். ஆகவே தொழில் வளர்ச்சியிலே மாநில அரசைப் பொறுத்தவரையில் சுற்றுச் சூழ்நிலை, 'இன்ப்ரா-ஸ்ட்ரக்சர் பெசிலிடீஸ்' இவைகளைத் தான் உருவாக்க வேண்டும். உருவாக்குகிறோம்.

எந்தெந்தத் துறையிலே தொழில் வளரவேண்டும். இது வாதப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை. நான் தனியார் துறை வேண்டுமென்றும் சொல்ல விரும்பவில்லை, எல்லாம் பொதுத்துறையிலேயே இருக்க வேண்டுமென்றும் சொல்லவில்லை என்னைப் பொறுத்தவரையில், நமது அரசைப் பொறுத்தவரையில், எப்படியாவது தொழில் வரவேண்டும் இந்தத் தமிழ்நாட்டிற்கு. எங்களுடைய 'ப்ரேக்மாடிக் பாலிசி'யைக் சிலரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை; முதலாளிகளின் கையாட்கள், முதலாளிகள் கொழுப்பதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போல் பேசுவது சுலபம். ஆனால் உண்மையில் அகில இந்திய அளவிலே



### அணுயுகம் எப்போதிலிருந்து . . .

இந்தக் காலத்தை அணுயுகம், அணுயுகம் என்கிறார்கள். அணுசக்தியைப் பற்றித் திட்டவட்டமான முடிவு-அதாவது அணுசக்தியைக் கட்டுக்குள் அடக்கி முறையாக வெளிப்படுத்த முடியும் என்பது 1942-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் நாள் தான் உறுதியாயிற்று. இந்த நாளிலிருந்து தான் அணுயுகம் தொடங்கியது.

எந்தத் தொழில்கள் எந்தெந்தத் துறையிலே வளர வேண்டுமென்று திட்டமிட்டு முடிவெடுத்தாலொழிய இதற்குப் பரிகாரம் இல்லை. என்னுடைய கவலையைப் பகிரங்கமாக அங்கத்தினர்களுக்குச் சொல்வதைப் பற்றிக் கவலையில்லை. இந்திய அரசாங்கத்தின் சார்பில், எந்தத் துறையானாலும் பொதுத்துறை தான் என்று தெரிவித்தால் மறுநாளே தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் தொழிற்சாலைகள் பல நிறுத்தப்படும். நாம் கேட்பதெல்லாம், அகில இந்திய அளவிலே தொழிற் கொள்கையைத் தெளிவாகச் சொன்னாலொழிய நாம் மட்டும் முட்டிக் கொள்வதால் தொழில் வளர்ச்சி குன்றும்.

உ.பி.யைப் பற்றிச் சொன்னார்கள். அதைத் கூடத்தெரிந்து கொண்டு பேசலாம். அல்லது கேள்வியாகக் கேட்கலாம். உடனே இந்த அமைச்சருக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிடுகிறார்கள். உ.பி.யில் அனுமதி கொடுத்திருப்பது எல்லாம் சில மில்களை, சரியாக இயக்கமுடியாமல் மோசமான நிலையில் இருக்கும் சர்க்கரை ஆலைகளை எடுப்பதற்கு அனுமதி கொடுத்தார்கள். அனுமதி கொடுக்கவேண்டுமென்பதுகூட அல்ல. அதை ஒரு கொள்கையாக, இனிமேல் தனியார் துறையில் சர்க்கரை ஆலைகள் இல்லையென்று தெரிவித்தால் நாம் அதை ஏற்றுக் கொள்ள முடியும். இதிலே நாம் மட்டும் முடிவு செய்துவிட்டால் பிறகு சர்க்கரை ஆலைகள் பிற மாநிலங்களுக்குக் போகக் கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டுவிடும்.

மால்கோ தொழிற்சாலையைப் பொறுத்தவரை திரு சுரேந்திரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தொழிற்சாலையை ஏன் எடுக்க வேண்டும். மூல காரணங்கள் என்ன, பின்னணி என்ன, இந்த அரசைப் பொறுத்தவரை தமிழகத்து மக்களைப் பொறுத்தவரை அது எவ்வளவு தேவையானது என்கிற புள்ளி விவரங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் அவர்கள் சொல்லமாட்டேன் என்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை அலுமினியத் தொழிற்சாலை அத்தியாவசியமான தொழிற்சாலை, பல தொழிற் சாலைகளுக்கு மூலப் பொருள்களைத் தரும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு நாம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட தொழிற்சாலை மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்றால் அது பொதுத் துறையில்தான் இருக்க வேண்டுமென்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. இதை மாண்புமிகு அங்கத்தினர்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பின்தங்கிய பகுதியில் தொழில் வளர வேண்டுமென்ற முறையிலே முதன் முதலிலே மத்திய அரசாங்கம், ஒரு மாவட்டத்தை மட்டும் எடுத்து 10 பர்சன்ட் சப்சிடி கொடுக்க முன்வந்தது. நாம் கேட்டுக் கொண்டதன் மூலம் இரண்டு மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு மூன்று மாவட்டங்களைச் சேர்த்து இணைத்திருக்கிறது. அவர்கள் இரண்டு மாவட்டங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இரண்டு மாவட்டங்களையும் நான்கு மாவட்டங்களுக்கு இணைத்து ஒரு தொடராக எங்கெங்குப் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்று அனுப்பியிருக்கிறோம். அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் விரைவாகத் தொழில் வளர வாய்ப்பு இருக்கிறது.

தொழிலுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படக் கூடாது. ஹண்டே அவர்கள் ரீஜினல் ஆபீஸ் வேண்டுமென்று கேட்டார்கள். நானும் வரவேற்கிறேன். ஆனால், அதனால் பயன் கிடைக்குமென்று நம்பத் தயாராக இல்லை. மனுக்களை டெல்லிக்கு அனுப்புவதற்குப் பதிலாக இங்கேயே கொடுத்து விடலாம். ஆனால், இதிலே முடிவு எடுப்பதிலே ஏற்படும் காலதாமதம் தான்பயங்கர மானது.

டயர் பாக்டரி வேண்டுமென்று ஓராண்டுக்கு முன்னால் அனுமதி கேட்கப்பட்டது. நேற்றுத்தான் அமெரிக்காவில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு அனுமதி கிடைத்துவிட்டாலும் உற்பத்தி செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு ஆகியவை கிடைக்க முடிவு எடுப்பதில் கால தாமதமாகிறது. ஓராண்டுக்கு முன்னால் முயற்சித்து நேற்றுத்தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 'எந்தெந்தத் துறையில் தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லிவிடுங்கள். ஒரு பக்கம் மொனாபலி கூடாது என்று சொல்லுகின்றீர்கள். அதே சமயத்தில் தொழிற்சாலைக்கு அனுமதி கொடுப்பதில் தெளிவான கொள்கை இல்லாமல் இருக்கிறீர்கள். மொனாபலி ஹவுஸஸ் முழுவதும் அவர்களிடம் இருப்பதன் காரணமாக, அந்த ஆற்றல் காரணமாகத் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அவர்களுக்குத் தடைபோட வேண்டுமென்ற கொள்கையை எடுத்தால், அவற்றை நாமே நடத்தினால் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புக் கிடைக்கும்' என்ற கருத்தைச் சொன்னார்கள்.

அடுத்து, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு பெறுவதில், காலத்தை விரயமாக்காமல் இந்திய நாடு முழுவதற்கும் எந்தத் தொழில் நுட்ப அறிவு டெக்னிகல் நோஹௌ எந்தத் தொழிலுக்குத் தேவைப்பட்டாலும் அதை மத்திய அரசாங்கமே முடிவு செய்து, ஜப்பானைப் போல் உலகத்தில் எந்த நாட்டிலே—முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே தொழில் நுட்ப அறிவு இருக்கிறதோ அதை இந்திய அரசே பெற்றுத் தருவதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும்' என்று முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றியும் மத்திய அரசு திட்டவட்டமாக முடிவு எடுக்கவில்லை என்றால், தொழில் நுட்ப அறிவில் நாம் பின்தங்கித்தான் இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இந்தத் தொழில்களைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமென்ற முறையில் பல்வேறு நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னொரு நிறுவனத்தை நம்முடைய அரசின் சார்பில் ஏற்படுத்தவும் திட்டம் இருக்கிறது. மத்திய அரசின் நேஷனல் இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் போல் தொழில் தொடங்குபவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காகத் தனி நிறுவனம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது வருமானால் இன்னும் அதிக அளவில் பயன்படும்.

தொழில் வளர்ச்சியோடு வேலையில்லாத்திண்டாட்டம் பற்றியும், எந்த அளவுக்குச் சேர்த்துப் பரிசீலிக்க வேண்டுமென்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தமிழக அரசின் சார்பில் 1971–72-ல் 48 இலட்சம் ரூபாய்க்குச் சிறு தொழில்களைத் தொடங்கி வேலை இல்லாதவர்களுக்குப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றினோம். 1972–73-ல் 70 இலட்சம் ரூபாய் அளவுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவருகிறோம். புதிதாக வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுப்பதற்காக, புதிதாக வேலை கொடுக்க 14 கோடி ரூபாய்க்குத் திட்டங்களை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அதெல்லாம் வருமானால் பெரும்பாலும் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று நம்புகிறேன்.

தருமபுரி மாவட்டத்திலே சில்க் உற்பத்திக்காக 25,000 ஏக்கரில் மல்பரி உற்பத்தி செய்ய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 387 இலட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்காகத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகப் போடப்பட்டுள்ள ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டத்திலே இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

### வாழ்க்கையில் வெற்றி

தனக்குள்ள திறமையை மனிதன் பயன்படுத்தாவிட்டால் வாழ்க்கையில் தோல்வி அடைகிறான். தன் திறமையில் பாதியை மட்டும் அவன் பயன்படுத்தினால் வாழ்க்கையில் ஓரளவு தோல்வி அடைகிறான். தன் திறமையை முழுதும் அவன் பயன்படுத்தினால் வாழ்க்கையில் பெரும் வெற்றி அடைகிறான். பலருக்கும் கிடைக்காத திருப்தியும், வெற்றிப் பெருமிதமும் சிலருக்குக் கிடைப்பதன் இரகசியம் இதுதான்.

—தாமஸ் உல்ஃப

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆங்காங்குக் கிராமங்களில் தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு — வியாபரத்திற்குக்கூடப் புதிய திட்டத்தை உருவாக்கித் தருமபுரி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் அரசாங்கக் காரண்டியுடன் ஸ்டேட் பாங்கியில் 5,000 ரூபாய் கடன் பெற்றுச் சிறிய தொழில்கள் செய்ய முன்வருகின்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் புதிய முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தொழில்களுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுத்துவதைத் தவிர்க்கப் புதிய முயற்சி ஒன்றை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரியைப் போட்டு எல்லா இலாகாவிலிருந்தும் அனுமதி பெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அவரே மேற்கொண்டு அந்த அனுமதியைப் பெற்றுத் தரும் வண்ணம், ஹெல்த் டிப்பார்ட்மெண்ட்டானாலும், டவுன் பிளானிங் இலாகாவானாலும் எல்லாவற்றையும் அவரே அணுகி அனுமதியை விரைவில் பெற்றுத் தரும் முயற்சிக்காகப் புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அதிலே வெற்றி அடைய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கைத்தறித் துறைக்கு எதுவுமே செய்யவில்லை என்ற வாதம் ஓரளவு தொனித்தது. நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசு இந்தத் துறைக்காக 1967–68-ல் கொடுத்தது 118 இலட்சம் ரூபாய். 1973–74-ல் 249·82 இலட்சம் ரூபாய் இதற்காக நாம் செலவழிக்க முன் வந்திருக்கிறோம். என்ரோல்மென்ட் ஆப் அடிஷனல் லூம்ஸ் 1967–68-ல் 3,522 ; 1973–74-ல் 5,000 ; பங்குத் தொகை உதவி 1967–68-ல் 2·16 இலட்சம் ரூபாய். 1973–74-ல் 6 இலட்சம்

ரூபாய் ; கூட்டுறவுத் துறை மூலம் கைத்தறித் துறைக்குக் கொடுக்கப்பட்ட உதவி வங்கிகளின் கடன் (பாங்க் க்ரெடிட்) 1967—68ல் ஸ்டேட் சொசைடிகளுக்கு மட்டும் 100 இலட்சம் ரூபாய் ; 1973—74-ல் 375 இலட்சம் ரூபாய் ; பிரைமரி சொசைடிகளுக்கு 1967—68-ல் கொடுக்கப்பட்டது 286 இலட்சம் ரூபாய் ; 1973—74-ல் 525 இலட்சம் ரூபாய். கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு சப்சிடி இன்டிரஸ்ட் 1967—68-ல் 10 இலட்சம் ரூபாய் ; 1973—74-ல் 13 இலட்சம் ரூபாய். ரிபேட் உதவித்தொகை 1967—68ல் 84 இலட்சம் ரூபாய். 1973-74-ல் 150 இலட்சம் ரூபாய். எப்படிக் குறைவு என்று தெரியவில்லை. இரண்டு மடங்குகளுக்கு மேலாக உதவி செய்கின்ற வாய்ப்பு உருவாக்கி இருக்கிறோம்.

இவற்றையெல்லாம் செய்ததோடு தொழில் வளர்ச்சி பெற வேண்டுமென்றமுறையில்சென்ட்ரல் ப்ராஜக்ட்ஸ் ஏராளமாக வரவேண்டும். பினன்சியல் இன்ஸ்டிடியூசன்கள், நிதி உதவி செய்யக்கூடிய நிறுவனங்கள் தென்பகுதியை நோக்கி வந்தால்தான் ஏராளமான தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். தமிழகம் தென் மாநிலங்களுக்குத் தலைநகரமாக விளங்குகிறது என்று மத்திய அரசாங்கத்திடம் தொடர்ந்து எடுத்துக் கூறி வருகிறோம். ஐ.டி.பி.ஐ., ஐ.எப்.சி. ஐ.எஸ்.சி. போன்ற நிறுவனங்கள் தமிழகத்திற்கு வரவேண்டும் ; சென்னையில் அமைக்கப்பட வேண்டும் ; அப்போதுதான் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும்.

ஒரு கோடி ரூபாய்க்குள் உள்ள தொழில்களை நாமே தொடங்கி விடலாம். மத்திய அரசாங்கத்தை என்ன கேட்பது என்று திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கேட்டார்கள். அவர்களை ஏன் கேட்கிறீர்கள், நீங்களே ஆரம்பித்து விட்டு, பிறகு ராடிபை செய்து கொள்ளட்டுமே என்று கூறி அந்த அளவுக்கு மாநில சுயாட்சிக் கருத்துக்கு ஆதரவு காட்டியதற்காக நன்றி. அனுமதி பெறுவது என்பது ஒரு கட்டந்தான். அதற்குப் பின்னால் வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுச் தொழில் நுட்ப உதவி ஆகியவற்றைப் பெறுவதிலே தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கொள்கை அளவில் இந்திய அரசு எந்தெந்தத் தொழில்கள் எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்தத் துறையில் ஆரம்பிக்க வேண்டும், என்று முடிவு செய்து அதற்கு வெளிநாட்டுச் செலாவணியை ஒதுக்கினால்தான் ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும்.

இந்த அரசாங்கம் தொழில் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதையும், எந்த அளவிற்குப் பணத்தை ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும் தெளிவாக அறிவித்திருக்கிறேன். 1966—67-ல் இந்த அரசு தொழில் துறையில் போட்ட முதலீடு 126 இலட்சம் ரூபாய். சென்ற ஆண்டு 236 இலட்ச ரூபாய். இந்த ஆண்டு 203 இலட்சம் இதுபோன்று இரண்டு மடங்காக ஒதுக்கியிருக்கிறோம். இந்த அரசு பொதுத் துறையிலும் சரி, கூட்டுறவுத் துறையிலும் சரி நாம் வைத்திருக்கிற கொள்கை தனியாருக்கு இலாபம் செல்லாமல் பொதுமக்களுக்கு இலாபம் வரவேண்டும். இதுதான் கொள்கை.

> தன்மானம் பிக்கைதான் வாழ்க்கையின் அடிப்படை. ஆனால் நடைப்பிணமாக வாழும் அவல நிலையும் கூடாது. தன்னைப் பற்றிப் பெரிதாக நினைத்துக் கொண்டு அளவற்ற தற்பெருமையோடும் வாழக் கூடாது. இரண்டுமே கெடுதல்.
>
> —ஜான்பிரெய்ன்

இதுவரையில் தனியாருக்கு இலாபம் சென்று கொண்டிருந்தது. அதைக் தடுக்க முதலில் நாம் கூட்டுறவுத் துறைக்கு வந்தோம். அதன் விளைவு பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் சென்ற 1967 முதல் 72 வரை 1,639 இலட்ச ரூபாய் நாம் முதலீடு செய்திருக்கிறோம். ஆகவே, இந்த அளவுக்கு நம்முடைய முயற்சிகள் இந்த நாட்டு மக்களுக்கு இலாபம் தரக் கூடிய அளவிற்குச் செயல்படுகிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இதை எண்ணிப் பார்க்கவேண்டும். 67 வரை இதில் போட்ட முதலீடு 78 இலட்ச ரூபாய்தான். ஆகவே, இந்த அரசாங்கம் கொள்கை ரீதியாக எந்த அளவுக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

அதுபோல, கூட்டுறவுத் துறை. இதில் ஈடுபட வேண்டாம் என்று பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கு இதில் ஈடுபட வேண்டுமென்று அக்கறையில்லை. ஆனால், இவ்வளவு முன்னேற்றம் கூட்டுறவுத் துறையில் வருவதற்குக் காரணம் நாம் எடுத்துக் கொண்ட கொள்கையாகும். இதை நாம் மட்டுமல்ல மத்திய அரசாங்கமும் இதைக் கொள்கை அளவிலே எடுத்துக் கொண்டு இந்தக் கூட்டுறவுத் துறையில் 26 சதவிகிதம் அரசுக்கும், 25 சதவிகிதம் தனியாருக்கும், அதற்கு மேலே உள்ளதெல்லாம் பொது மக்களுக்கும் அரசு நிறுவனங்களுக்கும்தான் கொடுக்க வேண்டுமே தவிர எந்தத் தனியாருக்கும் கொடுக்கக் கூடாது என்ற ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்கள். அதை தான் நாமும் செயல்படுத்திவருகிறோம். இதை நாம் ஊக்கிவிப்பதற்கு காரணம், நாம் நடத்துகின்ற பொதுத் துறையில் மற்றும் கூட்டுறவுத் துறையில் இலாபம் வருகிறது. இதுவரையில் நாம் தனியார்க்குக் கடன்களாகக் கொடுத்தோம். இன்றைக்கு அதற்குப் பதிலாக முதலீடு செய்து இலாபம் பெறுகிறோம். அதைவிட முக்கிமானது ஒன்று. நாம் இந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறோம். அதோடு அவைகளில் உற்பத்தி செய்கிற மூலப் பொருட்களைத் தமிழகத்தில் எல்லாருக்கும் சரியாக விநியோகிக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்கும் நமக்கு வசதி இருக்கிறது. மேலும், எப்படிக்கொடுப்பது என்பதற்கு ஒரு குழு போடவும் யார் தேர்ச்சிப் பெற்றவர்கள், ஆற்றல் பெற்றவர்கள் என்று பார்த்து வேலை வாய்ப்புக் கொடுக்கவும் இதனால் நமக்கு அதிகாரம் இருக்கிறது. இப்படிப்பட்ட வசதிகள் நமக்குக் கூட்டுறவுத் துறையில் இருக்கிறது. இவ்வளவும் செய்து அந்தக் கூட்டுறவுத் துறை தவறு செய்தால் சட்டப்படி அதை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே, இதில் எந்தத் தவறுமில்லை. ஆகவே, இந்தத் துறையில் தொழில் வளர்ச்சி பெருகி வருவதற்கு எல்லாரும் ஊக்கம் தருவதற்கு நன்றி கூறி இந்த மசோதாவை ஏகமனதாக ஆதரிக்க வேண்டுமென்றும், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[தமிழகச் சட்டப் பேரவையில் 12—3—1973-ல், தொழில் துறை பற்றிய விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து]



# அறியாமை அகன்றிட



# அரசின் அரும்பணிகள்

அறியாமைஇருளிலிருந்து மக்கள் விடுபடவும், அவர்கள் எழுத்தறிவு பெற்று ஏற்றம் பெற்றிடவும் தமிழக அரசு கல்வித் துறையில் அதிக அக்கறை காட்டி, ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகிய 1973—74-ஆம் ஆண்டில் கல்விக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 99 கோடியாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்ற எல்லாத் துறைகளையும் விடக் கல்வித் துறைக்கே அதிகத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

கல்வித் துறையில் அரசு ஆற்றும் பணிகள் பலப்பல; அவற்றுள் ஒரு சிலவற்றைத் தெரிந்து கொள்வோம்.

இந்த நாட்டில், எழுத்தறிவை ஊட்டுவதிலும் கல்விக்காகச் செலவு செய்வதிலும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களுள் நமது தமிழகமும் ஒன்றாகும். 14 வயது வரை சிறார் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறிமுறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதில், தமிழகம் முன்னணியில் நின்று தலை சிறந்த பணியாற்றி வருகிறது. நாடு அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், தொடக்க நிலைக் கல்வி, உயர் நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகிய பிரிவுகளில் கல்வித்துறை, அனைவரும் வியக்கத் தக்க அளவுக்குப் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

இம்மாநிலத்தில் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1956—57-ஆம் ஆண்டில் 32·91 இலட்சமாக இருந்தது. 1972—73-ஆம் ஆண்டில் 74·36 இலட்சமாக உயர்ந்தது. அது போலவே, 1956—57-ஆம் ஆண்டில் 1·08 இலட்சமாக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1972—73-ஆம் ஆண்டில் 2·34 இலட்சமாக உயர்ந்தது. 1956—57-ஆம் ஆண்டில் 894 உயர்நிலைப் பள்ளிகளே இருந்தன. இந்த எண்ணிக்கை 1972—73-ஆம் ஆண்டில் 2,763 ஆக உயர்ந்துள்ளது.

• • •

கல்லூரிக் கல்வியில், மாணவர்களின் எண்ணிக்கையும் கல்லூரிகளின் எண்ணிக்கையும் வெகுவாக உயர்ந்துள்ளன. 1961—62-ஆம் ஆண்டில் கல்லூரிகளின் எண்ணிக்கை 59. அது 1972—73-ஆம் ஆண்டில் 176 ஆக உயர்ந்துள்ளது. அதே போல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் 1961—62-ஆம் ஆண்டில் சுமார் 45,000 ஆக இருந்தது. 1972—73-ஆம் ஆண்டில் சுமார் 2 இலட்சமாக உயர்ந்துள்ளது.

மொத்தத்தில் வரவு-செலவுத் திட்டத்தில் கல்விச் செலவு 1956—57-இல் ரூ. 15 கோடியாக இருந்தது. ஆண்டொன்றுக்கு 45 விழுக்காடு விதத்தில் படிப்படியாகப் பெருகி 1973—74-ஆம் ஆண்டில் சுமார் ரூ. 100 கோடியாக உயர்ந்துள்ளது.

• • •

தமிழகத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களில், ஏழைக் குழந்தைகளான, சுமார் மூன்றில் ஒரு பங்கினருக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டம் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டப் பெரிதும் உதவியுள்ளது. அரிசன நலத் துறையினால் அரிசன நலப்பள்ளிகளில் நண்பகல் உணவு வழங்கப்படும் மாணவர்கள் நீங்கலாக, தற்பொழுது ஆண்டு தோறும் 17 இலட்சம் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 1973—74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 218 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துடன், 'கேர்' நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி மதிப்புள்ள உணவுப் பொருள்களை இலவசமாக வழங்குகிறது.

தமிழகத்தில் மூன்று மாவட்டங்களில் மையச் சமையற்கூடத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மைய மானதோர் இடத்தில் உணவு சமைக்கப்பட்டுப் பள்ளிகளுக்குக் கொண்டு செல்லப் படுகின்றது. 44 மையச் சமையற் கூடங்கள் செயல்படுகின்றன. மேலும் 21 கூடங்கள் விரைவில்தொடங்கும்; 26 கட்டப்பட இருக்கின்றன.

முதல் மூன்று வகுப்புகளில் பயில்வோரும் நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்; 1973—74-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

• • •

ஊராட்சி ஒன்றியங்களைச் சேராத பகுதிகளில் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்டும் வகையில் நகராட்சிகளுக்கும், தனியார் பள்ளி நிறுவனங்களுக்கும் மானியம் வழங்குவதற்காக ரூ. 3·45 இலட்சமும், அரசினர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டும் செலவுக்காகச் சுமார் ரூ. 8 இலட்சமும் 1973—74-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. 1973-74-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகச் சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 92·27 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இத்துடன் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் வழங்கப்படும்.

16—5—4

தமிழ் நாட்டில் மொத்தம் சுமார் 32,000 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இவற்றுள் சுமார் 22,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன.

இந்த மாநிலத்தில் உள்ள சுமார் 2,700 உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கு 1973–74-ஆம் ஆண்டில் ஆகும் மொத்தச் செலவு ரூ. 29 கோடியாகும்.

1973–74-ல், 14–17 வயதுப் பிரிவைச் சேர்ந்த 40,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும், கூடுதலாக 375 ஆசிரியர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

• • •

அறிவியல் சாதனங்களை வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்காகவும் (கருவிகள் வாங்க ரூ. 15,000, ஆய்வுக்கூடக் கட்டடங்களுக்கு ரூ. 25,000) உயர்நிலைப் பள்ளிகளுக்கு உதவி மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயற்படுத்துகிறது. இந்தத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 800 உயர்நிலைப் பள்ளிகள் பயனடைந்துள்ளன. இத்திட்டம் 1973–74-லும் தொடரும். இதற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 40 உயர்நிலைப் பள்ளிகள் பயனடையும்.

தற்போது உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியற் கருவிகளும் கொண்டுள்ள இரு ஆய்வுக்கூட இயல்ஊர்திகள் இயங்குகின்றன. ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒன்று என்னும் விதத்தில் மேலும் 12 ஆய்வுக்கூட இயல்ஊர்திகள் வாங்கப்படும்.

• • •

1973–74-ல், 'அறிவியல் பொருட்காட்சி' என்ற புதியதொரு திட்டம் கொண்டுவரப்படும். இத்திட்டத்தின் கீழ் உயர்நிலைப் பள்ளிகள் சிறப்பான அறிவியற் கல்வியை விளக்கக் கூடிய அறிவியல் சங்கங்களையும், பொருட்காட்சிகளையும் அமைக்கும். இத்திட்டம் 1973–74-ல் இரண்டு மாவட்டங்களில் தொடங்கப்படும். பின்னர் அது ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும். இந்தப் பொருட்காட்சிகளில் கலந்துகொள்ளும் பள்ளிகள், அவற்றிற்காகும் செலவைப் பகிர்ந்து கொள்ளும். அரசு இணை மானியம் வழங்கும்.

• • •

எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் நல்ல நூலகங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் இதுவரையில் 1,388 பள்ளிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1973–74-ல் மேலும் 200 உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் அமைக்க, பள்ளிக்கு ரூ. 500 விதம் மானியம் வழங்கப்படும்.

• • •

கல்வி விளக்கப்படங்கள் ( Audio-visual Education ) மூலம் கல்வி கற்பிக்கப்படுவதற்காக 180 படச்சுருள்களும் 500 துண்டுப் படச்சுருள்களும் ( Film Strips ) வாங்கும் பொருட்டு 1973–74-ல் ரூ. 1 இலட்சம் செலவிடப்படும். இதனால் கல்வி விளக்கத் திரைப்படச் சுருள் தொகுப்பில் பழையனவற்றுக்குப் பதிலாகப் புதியவை இடம் பெறும்.

### கடைநிலை ஊழியர்க்கு வீட்டு வசதித் திட்டம்

மாதம் ரூ. 200-க்குக் குறைவாக ஊதியம் பெறுகின்ற கடைநிலை ஊழியர்களுக்கு வாடகை முறையில் விடளிக்கும் திட்டத்தை விரிவாக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அரசு ஊழியர் வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியில் 10 சதவீதம் கடைநிலை ஊழியர் வீட்டு வசதிக்கென ஒதுக்கப்படும்.

சென்னை மாநகரிலுள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள சுமார் 5,000 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. மற்றும் வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் மருத்துவர்கள், இயல் ஊர்திகளில் சென்று, பள்ளி மாணவர்களின் உடல்நலனை ஆய்வு செய்கிறார்கள்.

• • •

குழந்தைகளுக்கான நூல்களைத் தமிழில் எழுதுவோருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ், ஒவ்வோர் ஆண்டும், ரூ. 500-க்கு மேற்படாமல், பத்துப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவளிக்கிறது. குழந்தைகளுக்கான சிறந்த நூல்களைத் தமிழில் படைப்போருக்கு 1,000 ரூபாய் மொத்தப் பரிசு வழங்கப்படுகிறது.

• • •

உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்போது இம்மாநிலத்தில் 28 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 8 பள்ளிகளும், காது கேட்காத ஊமைச் சிறுவர்களுக்காக 10 பள்ளிகளும், கண், காது, வாய் ஊனமுள்ள சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும், தொழுநோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 2,700 மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர்.

• • • •

அனாதைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யும் அனாதை இல்லங்களுக்கு, அரசு நிதி உதவி அளிக்கிறது. தற்பொழுது 380 அனாதை இல்லங்கள் அரசு நிதி உதவி பெறுகின்றன. அவற்றுள் 7 இல்லங்கள் 1972–73 முதல் நிதி உதவி பெறுகின்றன. இவற்றின் வாயிலாகக் கிட்டத்தட்ட 63,000 அனாதைச் சிறுவர்கள் பயன் பெறுகின்றனர்.

• • • •

1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 31.4 சதவீதம் ஆகும். 1971–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இது 39.39 சதவீதமாக உயர்ந்தது. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆண்களில் 51.68 சதவீதத்தினரும், பெண்களில் 26.83 சதவீதத்தினரும் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர். எழுத்தறிவின்மையைப் போக்குவதற்காக 22 முதியோர் கல்வி நிலையங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.



குடியானவர் கல்வி–தொழில் எழுத்தறிவுத் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை வட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும் நடத்தப்பட்டது. இத்திட்டம், 1972–73-ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் கொண்டுவரப்பட்டது.

• • • •

நூலகச் சட்டம்இயற்றி, நூலக இயக்கத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் ஒரு சில மாநில அரசுகளுள் தமிழ்நாடு அரசும் ஒன்றாகும். தற்போது இம்மாநிலத்தில் மாவட்டமத்திய நூலகங்கள் 13-ம், கிளை நூலகங்கள் 1,437-ம், புத்தகம் வழங்கும் நிலையங்கள் 1,882-ம் உள்ளன. இயங்கும் நூலகப் பணி, புத்தகங்களை இல்லங்களில் கொண்டு தரும் பணி, சிறுவர்கள், மகளிர் ஆகியோருக்கான நூலகப் பணி, சுற்றுலாப் பயணிகளுக்கான நூலகப்பணி, கைதிகளுக்கான நூலகப் பணி, காவல் துறைப் பணியாளர்களுக்கான நூலகப் பணி, மருத்துவ மனை நூலகப் பணி ஆகிய பணிகளை மாவட்ட நூலக மன்றங்கள் செயல் படுத்துகின்றன.

• • • •

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், கல்லூரி மாணவர்களுக்காக இது வரையில் 457 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. தற்போது 50 நூல்கள் அச்சில் உள்ளன. நாடு முழுவதும் இந்தி உட்பட எல்லா வட்டார மொழிகளிலும் 1971 டிசம்பர் 31 முடிய வெளியிடப்பட்ட கல்லூரிப் பாட நூல்கள் 652 தான். இதனோடு ஒப்பிட்டால் தமிழ்நாட்டுச் சாதனை குறிப்பிடத் தக்கதாகும். மேலும் 546 புத்தகங்களை எழுத, பாடநூல் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை வெளியிட்டுள்ள நூல்களுள் 328 மூல நூல்களாகும். 129 மொழி பெயர்ப்புக்களாகும்.

• • • •

சட்டக் கல்லூரி மாணவரின் எண்ணிக்கை 1966–67-ல் 1,045 ஆக இருந்தது. 1972–73-ல் சுமார் 2,500 ஆக உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர்வதற்கான ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் 1966–67-ல் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1972–73-ல் மாலை நேர வகுப்பு மாணவரது எண்ணிக்கை 660 ஆகும். பட்ட (மேற்படிப்பு எம்.எல்) வகுப்புகள் 1969–70-ல் தொடங்கப்பட்டன. தற்போது இந்த வகுப்புகளில் சுமார் 40 மாணவர் உள்ளனர்.

• • • •

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 10 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (3,368 மாணவர்கள்) செயல்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை 30 ஆக (9,59 மாணவர்கள்) உயர்ந்தது. தற்போது 31 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (13,112 மாணவர்கள்) உள்ளனர்.

கல்வித் தர உயர்வு நடவடிக்கை மையமாகச் செயல்படவும் மாவட்டத் தலைமை இடத்துக்கு வரும் ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கு என்று 1970–71-ல் வேலூரில் ஆசிரியர் இல்லம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்கள் தாமாகவே திரட்டிய வசூலோடு மாநில அரசு ரூ. 50,000 மானியம் வழங்கியது. உதகமண்டலத்தில் ஆசிரியர் இல்லம் ஒன்று கட்டுவதற்கு ரூ. 1 இலட்சம் மானியம் தரப்பட்டுள்ளது. கோடைக் கானலிலும் ஆசிரியர் இல்லத்திற்கு மானியம் அளிப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## வளரும் சுற்றுலா!

1972-ஆம் ஆண்டின் இறுதி ஆறுமாத காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த பயணிகளின் எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டில் இதே காலத்தில் வந்த வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையை விட 25·5 சதவிகிதம் அதிகமாகும். 1971–ஆம் ஆண்டில் மொத்தம் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவுக்கு வந்தனர். இதற்கு முந்திய ஆண்டில் இந்தியாவுக்கு வந்த வெளி நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து 995.

ஒருங்கிணைந்த முறையில் சுற்றுலாவுக்கான இடங்களை வளரச் செய்வதற்கான திட்டம் தற்போது அமல் நடத்தப்பட்டு வருகின்றன. கோவளம் கடற்கரை, அனைத்துலகத் தரத்தின்படி ஓர் உல்லாசக் கடற்கரைப் பகுதியாக அமைக்கப்பட்டு வருகிறது.

ஐ. நா. வளர்ச்சித் திட்டத்தின் கடற்கரைப் பகுதி வளர்ச்சி ஆய்வுக் குழு, கோவளம், மாமல்லபுரம், கோவா ஆகிய இடங்களிலுள்ள கடற்கரைப் பகுதிகளை எவ்வாறு மேலும் வளரச் செய்வது என்பது பற்றி ஆராய்ந்து வருகிறது.

1972-ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்தும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பரிசிலனை ஆண்டில் இந்திய விமானங்கள் 31 இலட்சத்து 59 ஆயிரத்து 245 பயணிகளைப் பல்வேறு இடங்களுக்கு ஏற்றிச் சென்றுள்ளன. கடந்த ஆண்டைவிட இந்த எண்ணிக்கை 24 சத விகிதம் அதிகமாகும். இதே காலத்தில் பல்வேறு விமானங்கள் பறந்த மொத்தத் தூரம் கடந்த ஆண்டை விட 7·3 சதவிகிதம் அதிகமாகும்.

# 10,000 குடும்பங்கள் பயன்பெறும் பட்டுத் தொழில்

பட்டு என்றதும் நமக்குப் 'பட்'டென்று நினைவுக்கு வருவது பளபளக்கும் பாங்கான பட்டாடைகளே!

இந்த ஆடைகளை அணிவதற்கு அடிப்படையாக விளங்குவது பட்டுதொழில். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் தமிழக அரசின் செயற் திட்டங்களைத் தெரிந்து கொள்வோம்.

பட்டுத் தொழில் ஒரு வேளாண்மைத் தொழிலாகும். தருமபுரி மாவட்டத்தில் ஒசூர், தேன்கனிக்கோட்டை வட்டங்கள், கோயம்புத்தூர் மாவட்டம், கோபி வட்டத்தில் தாளவாடி பிர்க்கா, சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களின் சிறு பகுதிகள் ஆகிய இடங்களில் உழவர்கள் இத்தொழிலை ஒரு துணைத் தொழிலாகவே செய்து வருகின்றனர்.

பட்டுப் புழுக்களுக்குத் தேவையான முசுக்கொட்டை மரங்களைப் பயிரிடுதல், பட்டுப்புழு உற்பத்தி, பட்டுப்புழு வளர்ப்பு பட்டுப்புழுக் கூடு உற்பத்தி, முடிவாகப் பட்டுப்புழுக் கூட்டினின்று கச்சாப் பட்டுப் பிரித்தெடுத்தல் போன்றவை இத்தொழிலில் அடங்கும். தற்பொழுது 3,501·48 ஹெக்டேர் நிலத்தில் முசுக்கொட்டை மரங்கள் பயிராகின்றன. 10,000 குடும்பங்கள் இத்தொழிலைச் செய்து வருகின்றன.

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை அளிக்கும் இத்தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், முசுக்கொட்டை மரம் நடுவதற்கான பதியன்களைப் பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு இலவசமாக வழங்குதல், பெயரளவு விலைகளில் சிறு புழுக்களை வழங்குதல், கிணறுகள், வெட்டுவதற்காகக் கடன் வழங்குதல், உதவித் தொகை வழங்குதல், பட்டுப் புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்டுதல், ஈடுசெய் விலைகளில் பட்டுப் புழு வளர்ப்பதற்கான கருவிகளை வழங்குதல் போன்ற பல திட்டங்களைத் தொழில் — வணிக இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இத்துடன், பட்டுப் புழுக்களை வளர்த்தல் குறித்துப் புதிய தொழில் முனைவோர்களுக்கும், மக்களுக்கும் கற்றுக் கொடுப்பதற்காக இம்மாநிலத்தில் 10 செய்முறை விளக்கப் பண்ணைகள் உள்ளன. பட்டுப் புழு வளர்ப்போர் பெருமளவில் பயனடைவதற்காக அவர்களுக்குச் சிறு பட்டுப் புழுக்களை வழங்குவதற்காக 7 பட்டுப் புழுப் பண்ணைகள் உள்ளன. இவை தவிர இம்மாநிலத்தில் உள்ளூர் இனப் புழுக்கூடுகளை உற்பத்தி செய்வதற்காக அண்மையில் 4 ஆரம்ப விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் பட்டுப் புழு வளர்ப்போரின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஓசூரில் ஒன்றும், தாளவாடியில் மற்றொன்றுமாக இரண்டு பட்டுப்புழுக் களஞ்சியங்கள் (முட்டை உற்பத்தி செய்யப்படும் நிலையங்கள்) உள்ளன. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப் புழுக் கூடுகளை வாங்குவதற்காக 5 பட்டுப்புழுச் சந்தைகள் உள்ளன. ஓசூரில் உள்ள அரசு பட்டு வளர்ப்புப் பிரிவிலும் தாளவாடியிலுள்ள கூட்டுறவுப் பட்டு வளர்ப்புச் சங்கத்திலும், இக்கூட்டுகளிலிருந்து நூல் பிரித்தெடுக்கப்பட்டு பட்டாக மாற்றப்படுகிறது. முசுக்கொட்டை மரம் பயிரிடுவது ஆதாயமான தொழிலாக உள்ள வட ஆர்க்காடு, கடலூர், சேலம், தென் ஆர்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக உயரமில்லாத பகுதிகளில் வாழும் விவசாயிகள் அண்மையில் இத்தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

இத் தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காகத் தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசு தரிசு நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான திட்டம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை குத்தகைக்கு வழங்குவதற்காக 6,000 ஏக்கர் நிலம் சமப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 1,000 ஏக்கர் நிலத்தில் முசுக் கொட்டை மரம் பயிரிடப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முடிவில் சுமார் 10,000 ஏக்கர் அளவுக்கு முசுக்கொட்டை மரங்களைப் பயிரிடுவது என்ற இலக்கை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

1971 மார்ச்சுத் திங்களில் குன்னூரில் ஆராய்ச்சி வளர்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்நிலையம் பட்டுப் புழு இனப் பெருக்கச் சோதனைகளை ஏற்கெனவே நடத்தத் தொடங்கிவிட்டது. சுமார் 8 சிறந்த சேர்க்கை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; அண்மையில் இவை, களச் சோதனைகளில் பயன்படுத்தப் பட்டன. இவை, அதிக அளவு பட்டுப் புழு உற்பத்தி செய்வதற்கும், தரமான பட்டுப்புழு வளர்ப்புக்கும் ஏற்றவையாகும்; கோயம்புத்தூர் மாவட்டத்தின் அதிக உயரமல்லாத பகுதிகள், வெப்ப மண்டலங்கள் ஆகியவற்றுக்கு இவை ஏற்றதாகும்.

புதிய முசுக்கொட்டை மர வளர்ப்புப் பண்ணைகளைத் தொடங்குதல், தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் முன்னோடி வளர்ச்சி நிலையங்களை ஏற்படுத்துதல், ஓசூரில் உள்ள கலப்பினப் பட்டுப் புழுக்களஞ்சியத்தை விரிவு படுத்துதல், பேரிகை, தளி, வாணியம்பாடி ஆகிய இடங்களில் புழுக் கூடு சந்தைகளைத் தொடங்குதல், ஓசூரில் பட்டுத் தொழில் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் தொடங்குதல், பத்தூபுரத்தில் பட்டுப் புழு இன வளர்ச்சி இல்லம் ஒன்று ஏற்படுத்துதல், ஆசனூரில் உள்ள பட்டு வளர்ப்பு இல்லத்தை மேம்படுத்துதல் ஆகிய வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றை 1973—74-ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.





வாழ்க்கை வாழ்வதற்காகவும் இருக்கலாம், பிறரை வாழ்விப்பதற்காகவும் இருக்கலாம் என்பதற்கு ராதை—நர்மதா இருவரின் வாழ்க்கையுமே சான்று.

ராதையின் தியாகம் நர்மதாவின் மணவாழ்வுக்கு வழி செய்துள்ளது. நர்மதாவின் நன்றியுள்ள நெஞ்சம் ராதையின் சட்டப் படிப்புக்கு வழி செய்துள்ளது. ஒருவருக்கொருவர் செய்து கொண்டிருக்கும் உதவிக்கும் சேவைக்குமிடையே மணிவாசகன் சாட்சிப் பொருளாக மட்டுமே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறுன்; அவனைச் சம்பந்தப் படுத்தியோ அவன் சம்மதம் பெற்றோ இரண்டு பெண்களும் செயல்படவில்லை.

இது, அவன் ஆற்றலுக்கும், அறிவுச் செருக்குக்கும் விழுந்திருக்கும் அடியல்லவா?

'செண்பகா மில்ஸ்' முதலாளி அவனுக்கு வேலை தரத் தயங்குகிறுர்; அதே ஆலையில் நர்மதா —டாக்டர் நர்மதா, எம்.பி.பி.எஸ்., கம்பெனி டாக்டராக வேலை பார்க்கப் போகிறுள்; அவள் பெறும் மாதச் சம்பளத்தில் இவனுடைய மாமன் மகளைப் படிக்கவைக்கப் போகிறுளாம்!

எத்தனை பெரிய அவமானம் இது .. அவன் சம்பாத்திய சக்திக்கு விழுந்துவிட்ட சுருக்குக் கயிறு.

## 11. குமாரி ராதா

'' ராதா! ''

—புலியின் உறுமல் வந்த திசை நோக்கித் திரும்பிப் பார்க்கிறுள் ராதை. பொங்கி வரும் ஆவேசம் அலைமோதும் அனல் விழிகளோடு நிற்பவன் மணிவாசகன்.

எந்தவிதப் பெரிய பிரச்சினைகளுமே பிறந்துவிடவில்லை என்பதைப்போல் முகத்தை மலராக மாற்றிக் கொண்டு, புன்முறுவல் பூத்து வரவேற்க முனைகிறுள் ராதை.

ஒளி படைத்த கண்களும் உறுதிகொண்ட நெஞ்சமுமாக நிமிர்ந்து நிற்கிறுள் நர்மதா. மணிவாசகனின் குரலில் ஏற்பட்டிருக்கும் கோபத்தை அவள் பொருட்படுத்தவில்லை.

மீண்டும், '' ராதா !'' என்று அழைக்கிறுன் மணிவாசகன்.

'' என்னத்தான்?''

'' ஆலை முதலாளி முத்தையா, எனக்கு வேலை தர முடியாது என்பதை எப்போது சொன்னுர்? ''

'' தரமுடியாது என்று சொல்லவில்லை அத்தான். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் சொல்லியிருக்கிறுர் ''

'' அவர் அப்படித் தயங்குவதற்கு என்ன அர்த்தம்? என்ன அவசியம் ஏற்பட்டது? ''

'' என்னைக் கேட்டால்? ''

'' நானே சொல்கிறேன் ... பாண்டித்துரையின் மருமகன்—ராதையின் வருங்காலக் கணவன் என்ற முறையில் தான் அவர் எனக்கு வேலை தரும் எண்ணத்தோடு இருந்திருக்கிறுர் '' என்று மணிவாசகன் கூறியதும் ராதை கலகலவெனச் சிரிக்கிறுள்.

'' சிரிக்காதே! '' என்று சீறுகிறுன் மணிவாசகன்.

'' என்னுல் சிரிக்காமல் இருக்க முடியவில்லை அத்தான். ஒரு ஆலையின் சட்ட ஆலோசகனுக நியமிக்கப் படுவதற்கு ராதையின் கணவன் என்ற ஒரு தகுதி மட்டும் போதுமா? ஒரு பெண்ணின் தயவினுல் தான் உத்தியோகம் கிடைக்க முடியுமென்னும் தலையெழுத்து, என் அத்தானுக்கு என்றும் கிடையாது. இது எனக்கு நன்ருகத் தெரியும்! நீங்கள் அனுவசியமாகக் குழம்ப வேண்டாம்....'' முத்தையா மாமாவிடம் நான் பிறகு பேசிப் பார்க்கிறேன். முதலில் உங்கள் திருமணக் காரியங்களைக் கவனியுங்கள்'' என்று துரிதப்படுத்துகிறுள் ராதை.

'' ராதா இது என்னுடைய கௌரவப் பிரச்சினை.. ..! வேலையா? விவாகமா? இந்த முடிவு தெரியாமல் கல்யாணத்தைப் பற்றிப் பேசுவதில் கூட எனக்கு விருப்பமில்லை '' என்கிறுன் மணிவாசகன்.

'' உங்கள் திருமணத்தைப் பற்றி, இன்னும் பேசித் தீர்த்துக் கொள்ள, என்னதான் பெரிய பெரிய பிரச்சினைகள் வந்து விடப் போகிறதோ! '' என்று அங்கலாய்க்கிறுள் ராதை.

அவளுக்கு மறுமொழி கூருமல் நர்மதாவையே ஆழ்ந்து நோக்குகிறுன் மணிவாசகன். என்ன அலட்சியம் அவளுக்கு! செண்

பகா மில்லில் மணிவாசகனுக்கு வேலை தரத் தயங்குகிறார்கள் என்பதைக் கேட்டதும், அதிர்ச்சியடையவில்லை, ஒரு கணம் கூட அவனுக்காக அனுதாபப்படவில்லை; கொஞ்சங்கூடத் தயங்காமல் " அதே ஆலையில் 'கம்பெனி டாக்டராக' நான் பணி புரியப் போகிறேன் " என்று கூறும் அளவுக்கு என்ன திமிர் இருக்க வேண்டும் இவளுக்கு.... தன் கணவனின் கஷ்ட நஷ்டங்களுக்காகக் கலங்காமல், அவனுக்கு வரவிருக்கும் இழப்புகளுக்காக வருந்தாமல், அவனுடைய இழப்புகளைத் தன் உயர்வுக்கான ஏணிப்படிகளாக்கிக்கொள்ள நினைக்கும் இதயம்— ஒரு பெண்ணுக்கு இருக்கலாமா? ராதைக்கு, இந்த நர்மதையைப் போல் சுயகாரியப்புலியாக இருக்கத் தெரியுமா? என்ற கோபம் மணிவாசகனின் இதயத்துள் குடிக்கொள்ளத் தொடங்குகிறது.

இந்த நிலைமையை நீடிக்க வைப்பது பெரிய ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும் என்று ராதையின் உள்ளம் உணர்த்துகிறது....மணிவாசகனை எப்படியேனும் அங்கிருந்து அமைதியாக அனுப்பி வைத்தால் போதும் என்று கவலைப்படுகிறாள். அவளுக்கு உதவி செய்வது போல் வாசலில் அழைப்பு மணி ஒலிக்கிறது.

" அத்தான் யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே"

" இதோ போகிறேன்.... " என்று முணுமுணுத்த படியே வாசலுக்குப் போகிறான் மணிவாசகன்.

வாசலில் ஒருவன் நிற்கிறான். அவன் கையில் இரண்டு பெயர்ப் பலகைகள்!

" ராதா! " என்று வாசலிலிருந்தபடியே கூச்சல் போடுகிறான் மணிவாசகன்.

அலைகள் ஓய்வதில்லையோ!

"இப்போது என்ன புது ஆபத்து? " என்று பயந்தபடியே வாசலுக்கு வருகிறாள் ராதை, அவளைத் தொடர்ந்து நர்மதாவும் வந்து சேருகிறாள்.

" ராதா! உன் வேலைதானா இது?"

"எது" என்று அப்பாவித்தனமாகக் கேட்கிறாள் ராதை. வாசலில் வந்து நிற்கும் பையனையும் அவன் கையிலிருக்கும் பெயர்ப் பலகைகள் இரண்டையும் பார்த்தவுடன் அவளுக்கு

**சேதங்கள் எத்தனை! எத்தனை!**

கடந்த ஆறு மாதக் காலத்தில் இரயில்வே சொத்துக்களுக்கு ஏராளமான சேதங்கள் ஏற்பட்டன. ரயில் பெட்டிகள்; ரூ. 42,18,144. மின்சாரச் சாதனங்கள்; ரூ. 85,945. சிக்னல், தகவல் தொடர்புக் கருவிகள்: ரூபாய் 13,99,949. ரயில் நிலையக் கட்டடங்கள், ரயில் பாதைச் சாதனங்கள்: ரூ. 8,51,142. ரயில் நிலைய மேசை, நாற்காலிகள், ரொக்கம், டிக்கெட்டுகள் மற்றும் பிற பொருள்கள்: ரூ. 5,81,500. சரக்குகள்: ரூ. 1,92,000.

ஒரு கணம் 'திக்'கென்றது. அவன் வந்த நேரம் புயல் வீசும் நேரம்.

மணிவாசகனின் அனுமதியில்லாமல் பெயர்ப் பலகை தயாரிக்க ' ஆர்டர் ' கொடுத்திருந்தாள் ராதை. கடைச் சிப்பந்தியோ நேராக மணிவாசகனிடமே கொண்டு வந்து பலகைகளை நீட்டுகிறான்!

' மணிவாசகன் எம். ஏ., பி.எல்.—வழக்குரைஞர் ' என்ற பலகை ஒன்றும்,

' டாக்டர் (மிஸஸ்) நர்மதா மணிவாசகன், எம்.பி.பி.எஸ். ' என்ற பலகை ஒன்றும் அவர்களைப் பார்த்துச் சிரிக்கின்றன.

" உனக்கு இவ்வளவு அவசரம் கூடாது ராதா! " என்று உரிமையுடன் கடிந்து கொள்கிறாள் நர்மதா—மிஸ் நர்மதா!

"இதிலே அவசரம் ஒன்றுமில்லை அக்கா. கல்யாணப் பரபரப்பில் உங்கள்தொழிற்பெயர்ப் பலகைகளைக் கவனிக்க மறந்து விடுவேன்.... கல்யாண தினத்தன்று இந்தப் பலகைகளை மறவாமல் நம்வீட்டு வாசலில் மாட்டி வைக்க வேண்டும் என்றுதான் முன்னேற்பாடாக.... " அவளால் சொல்லைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

"கல்யாணப் பரிசாகவா?" என்று இடைமறிக்கிறான் மணிவாசகன்.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!" என்று கூறிவிட்டுப் பெயர்ப் பலகைகளை வெடுக்கென்று பறித்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடி மறைகிறாள் ராதை.

"இன்னொரு பெயர்ப் பலகைக்கும் ஆர்டர் கொடுக்கப் போகிறேன் ராதா!" என்கிறாள் நர்மதா.

"யாருக்காக?" எனக் கேட்கிறான் மணிவாசகன்.

"ராதாவுக்காக!"

"ஓ. .. அவள் சட்டப் படிப்புத் தொடங்குவதற்கு முன்னால் பெயர்ப்பலகையைத் தயாரிக்கப் போகிறாயோ....! தாராளமாகச் செய்......." என்று இடக்காகக் கூறிய மணிவாசகன், பெயர்ப் பலகைக் கடைச் சிப்பந்தியை நோக்கி, 'தம்பீ! குமாரி ராதா, பி.ஏ., பி.எல்.,! என்ற பலகை ஒன்றும் எழுதிக் கொண்டுவா !" என்கிறான்.

"என்ன பெயரைச் சொன்னீர்கள்?" என்று நர்மதா குறுக்கிட்டுக் கேட்கிறாள்.

"குமாரி ராதா, பி.ஏ.பி.எல்."

"காலமெல்லாம் அவளைக் கன்னியாகவே விட்டு வைத்து விடத் தீர்மானித்து விட்டீர்களா?"

நர்மதாவின் குரலில் கொஞ்சங் கொஞ்சமாகச் சூடு பிறக்கிறது. முதலில் ராதையின் மேல் படிப்புப் பற்றித் தயக்கம்; இப்போது அவள் திருமணம் பற்றிய தர்க்கம்.... ஆண்டவனே.... புதுமணத் தம்பதிகளின் பூசலுக்கு ராதை ஒருத்தியே காரணப் பொருளாக இருந்துவிடுவாளோ....?

எதிரும் புதிருமாய் நின்றபடி ஒருவரை ஒருவர் அழுத்தமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கையில் பணத்துடன் வாசல் அறைக்குள் வந்த ராதை இருவரும் நிற்கும் நிலையைப் பார்த்ததும் தொண்டையை இலேசாகச் செருமிக் கொண்டு, "என்னத்தான்...... வாய்ச் சொற்கள் என்ன பயனுமிலாமல்.. " என்று குறும்பாகச் சிரித்தபடி அவர்களைக் கடந்து சென்று கடைச் சிப்பந்தியிடம் பணத்தைக் கொடுக்கிறாள்.

"ஆமாம்.... இனிமேல் வாய்ச் சொற்களுக்கு அவசியமில்லை.... காரியத்தில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கப் போகிறேன்." என்று அழுத்தமாகக் கூறுகிறான் மணிவாசகன்.



"ராதைக்குச் சட்டப் படிப்புக்கு என் பொறுப்பு" என்கிறாள் நர்மதா.

"ராதைக்குத் திருமணம் செய்வது என் பொறுப்பு!" என்று கூறியபடி வெளியேறுகிறான் மணிவாசகன். அவன் மனத்துள் ராதை மணமகள்; மணமகன் யார்? மணமக்கள் கோலத்தில் ராதையும், ரோமியோவும் மகிழ்வுடன் காட்சி தருகிறார்கள்! மணிவாசகன் மனத்துள் இப்படி ஒரு இன்பக் காட்சி அலைமோதுகிறது!

## 12. மனச்சாட்சியின் மறுபிறவி

**ஆ**லை முதலாளி முத்தையா, சென்னையிலுள்ள தமது பங்களாவில் வந்து தங்குவது வழக்கமான காரியம். அதிலும் தமது ஆருயிர் நண்பரின் மகள் திருமணம் நடக்குமென்று எதிர் பார்த்தார்; நண்பரின் மருமகன் மணிவாசகன் திருமணம் நடக்க இருக்கிறது! எனவே, திருமணம் முடியும் வரை சென்னையில் தங்கியிருந்தார்.

அவரது அறையின் சுவரில் ஏழ்மைக் கோலத்தில் என்றோ தாமும் தம் நண்பருமாக எடுத்த போட்டோ அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

" பாண்டித்துரை, நீ ஏமாந்துவிட்டாய்! உன்னுடைய மகள் ஏமாந்துவிட்டாள் " என்று சொல்லிக் கொண்டிருந்தபோது,

" மாமா "! என்ற குரல் கேட்டது.

கூப்பிடும் குரலில் பாசம் இல்லை; ரோசம் இருந்தது.




வந்து நின்றவள் ராதை, ஏனோ பாண்டியன் சபைக்குள் கண்ணகி வந்து நிற்பதுபோல் உணர்ந்தார் முத்தையா....

" ஏன் மாமா—ஆறு மாதங்களுக்கு முன் இறந்து போனது உங்கள் நண்பர் பாண்டித்துரையா? அல்லது அவர் உங்கள் மேல் வைத்திருந்த நம்பிக்கையா? "

அவள் பேசியது சொல் அன்று; கூரிய அம்பு!

ராதையின் கேள்வி அவரைச் சிந்திக்க வைக்கிறது. இத்தனை வேகத்துடன் ராதை தன் பங்களாவைத் தேடி வருவாள் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. மணிவாசகனைத் தம்முடைய ஆலையின் சட்ட ஆலோசகனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் அவர் தயக்கம் காட்டியிருந்திருக்க வேண்டாம்.......இந்தப்பெண் ராதை இவ்வளவு பெரிய வார்த்தைகளால் தம்மைச் சாடும் நிலை— ஏன், சுட்டுப் பொசுக்கும் நிலை——வந்திருக்கவும் வேண்டாம்....

" என்னை மன்னித்துவிடு ராதா......என் ஆலையின் சட்ட ஆலோசகன் பதவிக்கு [illegible]ணிவாசகனையே நியமித்து[illegible]கிறேன்.......... இது[illegible] " என்கிறார்

"ஒரே காரியத்திற்கு எத்தனை முறை எத்தனை பேர்களிடம் உறுதிமொழி கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறீர்கள் மாமா!" என்கிறாள் ராதை. ஏளனம் அவள் குரலில் விம்மி வெடிக்கிறது.

"ராதா...... என் நண்பன் பாண்டித்துரையிடம் நான் வாக்குக் கொடுத்தது உண்மைதான். மணிவாசகன் இந்த வேலைக்கு வருவானோ என்று நான் தயங்கியதும் உண்மைதான்......ஆனால், இப்போது நானே கொஞ்சம் தயங்கிவிட்டேன் என்றால் அதற்கான காரணம் உனக்குப் புரிய வேண்டுந்தானே!"

"நானே புரிந்துகொண்டு விட்டேன் மாமா. உங்கள் நண்பரின் மருமகன்—அதாவது உங்கள் நண்பர் மகளை மணந்தவன்—உங்கள் ஆலையின் நிருவாகத்துள் சட்ட ஆலோசகனாக இடம் பெற வேண்டும். இதனை நீங்கள் விரும்பினீர்கள். ஒரு திறமைசாலி தேவை என்பதை நீங்கள் உணரவில்லை. அத்தான் மணிவாசகன் என்னை மணக்கவில்லை என்றதும், உங்கள் ஆலையின் உயர் பதவியை அவருக்குக் கொடுக்க உங்களுக்கு மனம் இல்லை. இதுதானே உங்கள் அன்பின் எதிரொலி"

"உன் திருமணத்தை மையமாக வைத்துத்தான் வக்கீல் மணிவாசகனின் எதிர்காலம் மலரவேண்டும் என்று நாங்கள் முடிவுசெய்தது உண்மைதான் ராதா. ஆனால்...."

"என்னை முன்னிட்டுத்தான் என் அத்தானின் எதிர்காலம் உயர்வாக அமைய வேண்டும் என்ற கட்டாயமில்லை மாமா.. என் அத்தானின் திறமையில் எனக்கிருப்பது அசைக்க முடியாத நம்பிக்கை. என் நம்பிக்கையின் உயரத்தைவிட அவரது சுய கௌரவம் இன்னும் சிகரம் போன்றது. உங்கள் உதவிகள், உத்தரவாதங்கள் அனைத்திற்கும் என் அத்தானின் சார்பில் நன்றி. வருகிறேன். வணக்கம்...." என்று முழங்கிவிட்டுப் புயலைப் போல் அறையை விட்டுப் புறப்படுகிறாள் ராதை.

திரும்பினால் வாசல் நிலையில் தென்றல் நிற்கிறது.

அவளை இருகை நீட்டி எதிர்கொண்டழைக்கிறது, இத்தனையும் செண்பகத்தின் உருவத்தில்! முத்தையாவின் மகள் செண்பகம்.

காலம்

காலத்திற்காகத்
தான் கருத்துக்கள்;
கருத்துக்களுக்
காகக் காலமல்ல!
காலத்திற்கேற்பக்
கருத்துக்களை மாற்ற
வேண்டும்; காலத்
திற்கு ஒவ்வாத
கருத்துக்களை ஒதுக்
கித் தள்ளவேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

"ஹலோ ராதா......! எப்போது வந்தாய்........? வந்தவள் என்னைப் பார்க்காமல் நேராக அப்பாவிடம் சண்டை போடுவதற்குப் போய் விட்டாயே......"

"ஆமாம்....எந்த விஷயத்தைப் பற்றி யாரிடம் சண்டை போட வேண்டுமோ அவர்களிடம் போட வேண்டும்; உன் அப்பாவிடம்தான், உரிமையுடன் சண்டை போட முடியும்...."

"சண்டையில் வென்றது யார்? நீ தானே?" குறும்பாகக் குமிழ்விழும்படி சிரித்தாள் ஆலை முதலாளி மகள்.

"நேர்மைக்கு இங்கு வெற்றியில்லை. நியாயத்துக்கு வெற்றி இங்கு இல்லை. சமயோசிதமும், சந்தர்ப்பவாதமும்தான் வெற்றி பெற்றுள்ளது. பணத்துக்குக் கிடைத்த வெற்றி, பாண்டித்துரையின் மகளுக்குக் கிடைக்கவா போகிறது?" என்று படபடவெனப் பொரிகிறாள் ராதை.

செண்பகத்துக்குத் திகைப்பு. இமைமூட மறந்தவள் போன்று திகைப்பு.

அவள் தன் தோழியிடம் எதிர்பார்க்கும் மறுமொழியே வேறு. ஆனால், ராதை பேசிவிட்டுப் போகும் வேகமே வேறு மாதிரியாக இருக்கிறதே!

"என்னவோ ராதா...... என் அப்பா மேல் கோபம் என்றாலும், என் கல்யாணத்திற்கு மட்டும் வராமல் இருந்துவிடாதே!" என்று சிறு குழந்தையைப் போல் பரிதாபமாகக் கூறுகிறாள் செண்பகம்.

"உன் கல்யாணமா?" என்று திகைக்கிறாள் ராதை திருமணச் சேதி கேட்டதும் அவள் கோபம் குறைந்தது. மிகவும் வாஞ்சையுடன் செண்பகத்தின் கரங்களைப் பற்றியபடி, "என் வாழ்த்துகள் செண்பகம்" யாரடி உன் ரோமியோ?" என்று கேட்கிறாள்.

"மிஸ்டர் ரோமியோதான் என் ரோமியோ!" என்று நாணத்துடன் தலை குனிகிறாள் செண்பகம். பெண்மையின் அத்தனை நாணமும் அவள் முகத்தில் குடியாட்சி செய்து கொண்டிருந்தது.

"கடல் ஆழத்தைக் காணலாம்; கன்னியரின் மன ஆழத்தைக் காண முடியாது என்பார்கள். கன்னியரின் மன ஆழத்தைக் காணலாம். அவர்கள் யாரைக் காதலிப்பார்கள் என்பதைத்தான் அறியமுடிவதில்லை இக்காலத்தில். உங்கள் திருமணம் எப்போது செண்பகம்?"

"அப்பா உன்னிடம் சொல்லவில்லையா? பின்னே இவ்வளவு நேரம் அப்பாவிடம் எதைப் பற்றிச் சண்டைபோட்டாய்?"

"அது வேறு விஷயம்"

"உன்னிடம்கூடச் சொல்லாமல், என் திருமணத்தை முடிவு செய்து விட்டதற்காகத்தான் நீ சண்டை போட வந்திருக்கிறாய் என்றல்லவா நான் தப்பாக நினைத்து விட்டேன்!" என்கிறாள் செண்பகம்.

மீண்டும் தென்றலாகத் திரும்புகிறாள். கண்ணகியாகக் கண்ட உருவம் சகுந்தலை போலத் தெரிகிறது.

முத்தையாவை நோக்கித் திரும்புகிறாள் ராதை. தன் மகளும், தன் நண்பர் மகளும் மனம் விட்டுப் பேசுவதை அமைதியாக ரசித்துக்கொண்டிருந்த முத்தையா தன் மனமும் காற்றைப் போல இலேசாகியிருப்பதாக உணர்[illegible] அவர் மனத்துள் பஞ்[illegible]களாக ஆனந்தக் [illegible]கள் மிதந்தன.

அமைதியின் உருவத்திற்கு உள்ளமாகி நின்றான் ராதை.

"மாமா....! உங்கள் ஆலையின் உயர்பதவி என் அத்தானுக்குத் தேவையில்லை என்று கோபமாகச் சொன்னேன். திட்டினேன். இதற்காக என்னை மன்னியுங்கள்"

"மன்னிப்பதா? நான் உன் கடுஞ்சொற்களை மறந்துவிட்டேன் ராதா.......... நீ என்னிடம் கோபம் கொண்டு புறப்பட்டுப் போனாலும் அந்த உயர்பதவியினை உன் அத்தான் ஒருவனுக்குத்தான் தருவது—இதுவே என் தீர்மானம்.

"என் தீர்மானத்தை நான் கூறுகிறேன் மாமா....உங்கள் ஆலையின் உயர்பதவி என் அத்தானுக்குத் தேவையில்லை. இதை மிகவும் அமைதியாகவும், உறுதியாகவும் கூறுகிறேன். ஆத்திரத்தோடு பேசவில்லை. அன்புடன் வேண்டுதல் செய்கிறேன்."

"ராதா?" எனத் திடுக்கிடுகிறார்.

"ஆம். மாமா....நீங்கள் முடிவு செய்தபடி உங்கள் சொந்த மருமகன் ரோமியோவுக்கே அந்தப் பதவியைக் கொடுங்கள். உங்கள் திட்டம்—தீர்மானம் பற்றி எதுவுமே தெரிந்துகொள்ளாமல் பெரிய வரும் நல்லவருமான உங்களை என் சுயநலத்துச் சொல்லால் சுட்டுவிட்டேன்"

"சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"

"உங்களிடம் மன்னிப்புத்தான் கேட்கிறேன்". ராதை அழுது அவர் பார்த்ததில்லை. முத்தையா அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டார். தன் ஆலையின் உயர் பதவியும் அதிகார பலமும் தன் மருமகனுக்குக் கிடைக்க வேண்டுமென்று அவர் உள் மனம் கொண்டிருந்த ஆசையை—நியாயமான உணர்வுகளை இந்தப் பெண் இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு துல்லியமாகப் புரிந்து கொண்டிருக்கிறாளே! பணம் பணத்தோடு சேரும்; இனம் இனத்தோடுதான் சேரும் என்பதை உணர்ந்திருப்பாளோ!"

"ஆலையின் உரிமை உங்கள் மகளுக்கும், சட்டத்தின் அதிகார பலம் உங்கள் மருமகனுக்கும் கிடைக்கவேண்டும். இது நியாயமான முடிவு. நான் மனப்பூர்வமாக இவற்றை ஏற்றுக் கொள்ளுகிறேன், மாமா ........உங்கள் நண்பர் பாண்டித்துரை உயிரோடு இருந்தாலும் உங்களுடைய முடிவைக் கட்டாயமாக வரவேற்பார். வாழ்த்தியிருப்பார். நான் அவர் மகள்! உங்கள் முடிவை எதிர்க்கவில்லை. ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் போய் வருகிறேன்......"

ஆலையின் சட்ட ஆலோசகர் பதவியைச் சண்டையிட்டு வாங்க வந்த அவள் சரணடைந்து திரும்புகிறாள்.

"நில் ராதா!"

"ஓ, நீங்கள்! மிஸ்டர் ரோமியோ! இந்த வீட்டின் மாப்பிள்ளை. செண்பகா மில்லின் வருங்காலச் சட்ட ஆலோசகர். இரண்டுக்கும் என் வாழ்த்துகள். செண்பகம் மலர் போன்றவள்; அந்த மலருக்குத் தேன் மலராக இருங்கள்...!"

"உன் வாழ்த்தும் தேவை; உன் சான்றிதழும் தேவை. ஆனால், நீ சற்றுமுன் சரண் அடைந்து நின்ற காட்சி என் மனத்தைத் தீய்த்தது"

"நான் குமாரி ராதா.... என்று அனுதாபப்படுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை"

பங்களாவின் நடைபாதையைக் கடந்து பதுமைபோல் போய்க் கொண்டிருந்தாள். மனச்சாட்சியாக வந்தாள்; அதன் மறுபிறவிபோலத் திரும்புகிறாள்.

ரோமியோ அவளது தோல்வியைக் கண்டு சிரித்தபடியே நின்றான்.

செண்பகம் நமது திருமணம் நடக்க வேண்டுமானால், ஒரு நிபந்தனை விதிக்கிறேன்."

செண்பகம் 'என்ன?' என்று கேட்டாள்.

"ஒருவருக்கு அதிர்ஷ்டமாக இருக்கும் தாய்; மற்றவருக்கு அதே அதிர்ஷ்டம் மாற்றான் தாயாக இருக்கும்!"

செண்பகத்திற்கு இதனைப் புரியும் திறமை இல்லை.

"எப்போதும் நன்மையே செய், சில சந்தர்ப்பங்களில் அதைச் செய்யாமல் இரு என்பதனை ராதை கற்றுக்கொண்டிருக்கிறாள்!"

ரோமியோவின் சொற்கள் புதிராக இருந்தன. மில் முதலாளி, "செண்பகம், என் மகளே! ரோமியோவின் சொற்களை நான் விளக்குகிறேன். அவர் உன் செல்வங்கள் அத்தனையும் விரும்புகிறார்; உன் அப்பாவுக்குச் சொந்தமான மில்லின் சட்ட ஆலோசகனாக இருக்கவும் ஆசைப்படுகிறார். இதுதானே உண்மை!"

இதைக் கேட்டு ரோமியோ சிரித்தான்.

(வளரும்)


# தமிழரசு

சந்தா விளம்பரம்

ஓராண்டு ரூ. 10-00

அரையாண்டு ரூ. 5-00

தனி இதழ் 40 காசு

# கன்று வளர்த்திட...

டாக்டர் பா. சின்னதுரை



இன்றையக்கன்று நாளையப் பசுவாகும், அல்லது காளையாகும். கன்று வளர்ப்பானது ஒரு சினை மாட்டைப் பராமரிப்பதிலிருந்து தொடங்குகிறது என்று கூறலாம். அதாவது நல்ல திடமான கன்றைப் பெற அதன் தாய்ப்பசு கருவான காலத்திலிருந்தே நன்கு கவனிக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி ஆரம்ப காலத்தில் கவனிப்பின்றி, பின்னர் கன்று, பசுப் பருவத்தை அடைந்தபின் எவ்வளவு தான் செலவு செய்து ஊட்டச் சத்து வழங்கினாலும் அது முழுப்பயனைத் தர முடியாது. ஆகவே ஒரு கன்றின் தோற்றத்திலிருந்து அது பருவமடைந்து கன்று ஈனும் வரை கவனிக்க வேண்டிய வழி முறைகளைக் கவனிப்போம்.

### சினைப்பசுவின் பராமரிப்பு

சினைப்பசுவானது கன்று ஈனுவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பே நன்கு பராமரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் பசுவின் கருப் பையிலிருந்து கன்று கருவுற்ற காலத்தில் கடைசி 2 மாதத்திலிருந்து வேகமாக வளர்கிறது. ஆகவே பிறக்கும் கன்று திடமாக இருக்கவும், பின்னால் கன்றுக்கு வேண்டிய பால் சுரப்பதற்கும் போதிய அளவு சத்தான தீனி கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தீனியில் (போதுமான அளவு) தாது உப்புக்களும், உயிர்ச் சத்துக்களும் போதிய அளவில் இருக்க வேண்டும். போதுமான அளவு பசும்புல் கொடுக்க வேண்டும். பசும்புல் மலச்சிக்கலைத் தவிர்ப்பதோடு கருவிலிருக்கும் கன்றுக்குப் போதிய அளவு உயிர்ச்சத்து 'ஏ' யும் தாது உப்புக்களும் பெற வழி செய்கிறது.

இப்பருவத்தில் தனது உடம்பைப் பேணவும், கருவிலிருக்கும் கன்று வளரவும் கூடுதல் அளவு கலப்பு உணவைச் சினைப் பசுக்களுக்குக் கொடுக்க வேண்டும். தினசரி 15 முதல் 20 கிலோ பச்சைத் தீவனம் போதுமானது. நார்ப் பொருள் அதிகமான வைக்கோல், கம்பந் தட்டை முதலியவற்றின் அளவைக் கணிசமாகக் குறைத்து விடலாம். சினைப் பசுவிற்குக் கீழ்க்கண்ட கலப்பு உணவில் தினசரி 3 கிலோ வரை கொடுக்கலாம். இந்தத் தீனியைக் காலையில் பாதியும், மாலையில் பாதியுமாகக் கொடுக்கலாம்.

1. கடலைப் பிண்ணாக்கு—35 பாகம்.

2. பருத்திக் கொட்டை—33 பாகம்.

3. கோதுமைத் தவிடு—30 பாகம்.

4. உப்புக் கலவை—1 பாகம்.

5. சாதாரண உப்பு—1 பாகம்.

மொத்தம்—100 பாகம்.

நிறை சினைப்பசுக்களை மற்ற மாடுகளுடன் மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. வேகமாகவோ, அதிகத் தொலைவாகவோ, நடத்துதல் கூடாது. அடிக்கவோ, துன்புறுத்தவோ கூடாது. அன்பாக நடத்த வேண்டும்.

ஈனுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்னதாகவே சினைப் பசுவைத் தனியான இடத்தில் ( Calving Pon ) கட்ட வேண்டும். தனியாக இடம் இல்லாவிடில் தொழுவத்தில் ஓரமாகத் தனியாகக் கட்டலாம். தொழுவம் சுத்தமாகவும் காற்றோட்டமுள்ளதாகவும் இருக்க வேண்டும். தரை சிமெண்டினால் பூசப்பட்டுச் சொரசொரப்பாக இருத்தல் அவசியம். இதனால் வழுக்கு நிலை ஏற்படாது. தரையில் வைக்கோலைப் பரப்பிச் சினைப் பசு நன்கு படுப்பதற்கு வசதி செய்து தர வேண்டும். இது குளிர் காலத்தில் பசுவிற்கு மிகவும் இதமாயிருக்கும். கிடேரிகள் முதல் தடவையாகக் கன்று ஈனுவதால் அவற்றைச் சில வழிகளில் பழக்க வேண்டும். அவற்றின் மடியைக் கன்று ஈனுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே தடவிக் கொடுக்கவேண்டும். இதனால் பால் மடியில் இரத்த ஓட்டம் அதிகரித்து மடி நன்கு வளர்ச்சியுறும். கிடேரிக்கும் கூச்சம் நீங்கிப் பின்பு பால் கறப்பதற்கு வசதி ஏற்படும். கன்று போடும் நாள் நெருங்க நாம் பசுவை மிகவும் கவனமுடன் கவனிக்க 280 நாட்களாகும். பசுவைக் காளைக்குச் சேர்த்த தேதியை நாம் குறித்து வைத்திருந்தால் கன்று போடும் நாளை உத்தேசமாகத் தெரிந்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு வசதியாக இருக்கும். எருமையின் கருக் காலம் சராசரி 305 நாட்கள். கன்று ஈனும் நாளைக் கீழ்க்கண்ட அறிகுறிகளால் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

1. பசியின்மை.

2. பெண் உறுப்பு வீங்குதல்—பெண்ணுறுப்பிலிருந்து மஞ்சள் நிறமான, பிசு பிசுப்பான திரவம் வடிதல்.

3. அடிக்கடி சிறு அளவில் சிறுநீர் கழித்தல்.

4. மடியும் மடிக் காம்புகளும் பெரிதாகுதல்.

5. பிட்டியில் பள்ளம் விழுதல்.

6. மாடு தனிமையை விரும்புதல்.

7. அமைதியின்மை — வாலை அடிக்கடி ஆட்டுதல்.

8. அடிக்கடி படுத்து எழுந்திருத்தல்.



குறிப்பு : கன்று ஈனும் தறுவாயில் நாம் குறுக்கிடுதல் கூடாது. தேவை ஏற்படின் கால்நடை மருத்துவரின் உதவியை உடன் நாட வேண்டும்.

### கன்று பிறந்தவுடன்......

ஈரம் போக்கி, நாசி சுத்தம் செய்தல்.

கன்று பிறந்ததும் அதன் மேல் ஒட்டியிருக்கும் பிசு பிசுப்பான திரவத்தையும், நாசித் துவாரங்களை அடைத்துக் கொண்டிருக்கும் பொருள்களையும் தூய்மையான துணியால் துடைக்க வேண்டும்.

தொப்புள் கொடியைச் சுமார் மூன்று செண்டி மீட்டர் விட்டு முடிச்சுப் போட்டு முடிச்சிற்குக் கீழே சுத்தமான கத்தரிக் கோலினால் கத்தரித்து விடவும். உடனே, டிஞ்சர் அயோடினால் தொப்புள் கொடியில் நன்றாகத் தடவ வேண்டும். டிஞ்சர் அயோடின் இரண்டு மூன்று நாட்கள் தடவ வேண்டும். இதனால் தொப்புள் வீக்கமும், தொப்புள் கட்டியும் ஏனைய வியாதிகளும் ஏற்படாமல் தடுக்கலாம்.

கன்று பிறந்தவுடன் மூச்சு விடத் திணறினால் விலாப் புறத்தை அழுத்தி விடவும். அல்லது குளிர்ந்த தண்ணீரைக் கன்றின் மேல் ஊற்றலாம். பின்பு நாசித் துவாரங்களின் வழியாக நமது வாயினால் காற்றை ஊதலாம். இவ்விதம் செய்யக் கன்று நன்றாக மூச்சு விடும்.

பிறந்தவுடன் கன்றைத் தாய் பசுவைக் கொண்டு நக்க விட வேண்டும். தாய்ப்பசுவிற்குக் கன்றை நக்கும் உணர்ச்சி இல்லாவிடில், சிறிதளவு உப்புத் தண்ணீரைக் கொண்டு கன்றின் மேல் தெளிக்கவும், பின்பு தாய்ப் பசுவை நக்க விடலாம்.

நல்ல திடமுள்ள கன்று பிறந்த அரை மணியளவில் எழுந்து நிற்கும். எழுந்து நிற்கக் கஷ்டப்பட்டால் குளம்பின் நுனியில் உள்ள சவ்வுப் பாகத்தை அகற்றி விட்டால் கன்று சிரமமில்லாமல் நிற்கும்.

கன்று பிறந்த பின் பசுவின் பால் மடி, தொடை, வால் புட்டம், பெண்ணுறுப்பு முதலிய பாகங்களைக் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் கழுவ வேண்டும்.

### நஞ்சுக் கொடி (PLACENTA)

பசுவின் கருப்பையில் இருக்கும்போது கன்று நஞ்சுக் கொடி என்ற பையில் வளர்கிறது. இக்கொடியின் வெளிப்புறத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பித்தான் போன்ற கோளங்கள்(Cotyledons) உள்ளன. இவை போன்ற கோளங்கள் கருப்பையிலும் உள்ளன. நஞ்சுக் கொடியில் உள்ள கோளங்களும், கருப்பையில் உள்ள கோளங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து உள்ளன. இக்கொடியின் மூலம் தான், தாயிடமிருந்து வளரும் கருவிற்கு உணவுச் சத்துகள் அனுப்பப் படுகின்றன.

பொதுவாக, நல்ல உடல் நிலை உள்ள பசுவுக்கு, கன்று ஈன்ற 3 முதல் 8 மணி நேரத்திற்குள் இக்கொடி வெளியே விழுந்து விடும். அப்படி விழாவிட்டால் பின் வேறு ஏதாவது ஒரு கோளாறுக்கு வழி காட்டியாக அமைய வாய்ப்பு உள்ளது.

> **வங்கி தரும் கடனுதவி**
>
> பிற்பட்ட வகுப்பினர், சிறு தொழில்கள் தொடங்குவதற்கு, ஸ்டேட் பாங்க் மூலம் ஐயாயிரம் ரூபாய் வரை கடனுதவி பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

நஞ்சுக் கொடி தானாக விழாமல் இருப்பதற்கு உண்டான காரணங்கள் :

1. கருப்பையின் கோளாறுகள்.

2. முதுமை.

3. கருவுற்றிருக்கும் போது ஊட்டக் குறைவு.

மறுபடியும் பசு தாய்மை அடையும் போது நஞ்சுக்கொடி தங்கிவிடுவதால் மிகவும் பாதிக்கப்படலாம். நஞ்சுக்கொடி தங்கிவிடுவதால், கருப்பை அழற்சி, மலட்டுத் தன்மை முதலிய நோய்கள் உண்டாகின்றன. ஆகையால், நஞ்சுக் கொடி தங்கிவிட்டால் அருகாமையில் இருக்கும் கால் நடை மருத்துவரின் உதவியை உடனே நாடுதல் மிகவும் அவசியம். மருத்துவரின் உதவியோடு வெளியேற்றப்பட்ட கொடியை ஆழமான பள்ளத்தில் இட்டுப் புதைக்க வேண்டும்.

பின்னர் கன்று ஈன்ற இடத்தைக் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். பசுவின் பிறப்பு உறுப்பு, தொடை போன்ற பகுதிகளையும் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்.

பிறந்த கன்றுகளைக் கீழ்க் கண்ட முறைகளில் வளர்க்கலாம் :

1. பிறந்தவுடன் கன்றுகளைத் தாய்ப் பசுக்களிடமிருந்து பிரித்துப் புட்டிகளின் மூலம் ஊட்டி வளர்ப்பது.

2. தாய்ப் பசுவோடு கன்றை விட்டு வளர்ப்பது. இம்முறையில் கன்றுகள் தன்னிஷ்டப்படி பாலைக் குடித்து வளரும்.

3. கன்றுகளை முதலில் தாய்ப் பசுவிடம் பாலைக் குடிக்க விட்டுப் பாலைக் கறந்து வளர்ப்பது.

இம்முறைகளில் கன்று பிறந்தவுடன் பசுவிடமிருந்து பிரித்து வளர்ப்பதுதான் சாலச் சிறந்ததாகும். இம் முறையினால் ஏற்படும் நன்மைகள் :—

1. பசுவின் பால் உற்பத்தியைக் கணக்கிட முடியும்.

2. பிறந்தவுடன் கன்று இறந்து விட்டால் பசுவின் பால் உற்பத்தித்திறன் குறையாது.

3. சுத்தமான பாலைப் பெறலாம்.

4. துரிதமாகப் பாலைக் கறக்கலாம்.

5. கன்றுகளுக்குத் தேவையான அளவு பால் கிடைக்கும்.

குறைபாடுகள் :

1. கன்றுகளுக்குத் தனியாக பால் ஊட்ட வேண்டியதிருக்கும்.

2. அதிக நேரமாகும்.

3. கன்றுகளுக்குப் பால் ஊட்டத் தனியாக வேலையாள் நியமிக்க வேண்டும்; இதனால் செலவு அதிகம்.

4. பால் புட்டிகள், இதர பால் பாத்திரங்களின் மூலம் கன்றுகளுக்கு நோய் பரவலாம்.

மற்ற இருமுறைகளில் பசுவின் பால் உற்பத்தித் திறன் அளவிடல் சிரமம். பால் சுத்தமாயிராது. சில கன்றுகள் பாலை அதிகமாகக் குடித்துவிடலாம். வயிற்றுக் கோளாறுகள் ஏற்படும். கன்றுகள் இறந்துவிடின் பசுவின் பால் சுரப்பு பாதிக்கப்படும். தாய்ப்பசு இறந்தவுடன் கன்றை வளர்ப்பது சிரமம்.

பிறந்த கன்றுக்கு முதல் ஆகாரம் சீம்பாலே. கன்றைத் தாய்ப் பசுவிடமிருந்து பிரித்து வளர்த்தாலும் முதல் ஆகாரம் சீம்பால்தான் கொடுக்க வேண்டும். சீம்பாலில் கன்று வளர்ச்சிக்கு வேண்டிய புரதச் சத்தும்—உயிர்ச் சத்து—'ஏ'யும் (வைட்டமின்—'ஏ') நோயை எதிர்க்கும் சக்தி அணுக்களும் இருக்கின்றன. சீம்பாலைக் குடிப்பதனால் கன்றுகளுக்கு நோய்களை எதிர்க்கும் சக்தி ஏற்படுகிறது. சீம்பால் ஒரு மல மிளக்கியாவதால் பிறந்த கன்றின் குடலிலுள்ள ஒருவித நச்சுப் பொருள் வெளியே வந்து விடுகிறது.

பிறந்த கன்றைத் தாயிடமிருந்து பிரித்து வளர்க்க—கன்று பிறந்தவுடன் பிரித்து விடவும். அடுத்த ஈற்றுகளிலும் இம் முறையைப் பின்பற்ற வேண்டும். உடனே சீம்பால் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்திய நாட்டுப் பசுக்களுக்குத் தாய்மை உணர்ச்சி அதிகம். உடனே கன்றைப் பிரிக்காவிடில் பின்பு கன்றுகளைப் பிரித்து வளர்ப்பது சிரமம். பசுவின் பால் சுரப்பும் குறையும்.

அடுத்தபடியாகக் கன்று எந்த முறையில் வளர்க்கப்பட்டாலும் பாலைத் தேவையான அளவில் குறிப்பிட்ட நேரங்களில் கொடுப்பது உசிதம். ஏனெனில் ஆவினங்களின் வயிற்றில் நான்கு அறைகள் உண்டு. பிறந்த கன்றுக்கும், பெரிய மாட்டிற்கும் வயிற்றைப் பொறுத்த மட்டில் வித்தியாசம் உண்டு. பிறந்த கன்றின் அபமேசம் என்று சொல்லப்படும் பாகம் 70 சதவீதம்; ரூமன் என்று சொல்லப்படும் பாகம் மிகவும் சிறிதே. இதனால் பிறந்த கன்றுகள் தங்கள் வயிற்றில் உணவுப் பொருள்களை நிரப்பிக்கொள்ள முடியாது. இதனால் பிறந்த கன்றுகள் பாலைக் குடிக்கும் பொழுது பாலானது நேராக அபமேசம் என்ற அறைக்குச் செல்கிறது. கன்றுகள் அதிகமாகப் பாலை குடிக்கும் போது பால் ரூமன் என்ற வயிற்றுக்குச் செல்கிறது. இதனால் பால் திரிந்து விடுகிறது. இந்த வயிற்று அறையானது இளங் கன்றுகளில் முழு வளர்ச்சி அடைந்திராது. இதனால் இது நன்கு செயல்பட முடியாது. ஆகவே, இவ்வறைக்குச் சென்ற பாலானது அங்கே தங்கித் திரிந்து, புளித்து, வயிற்றுக் கோளாறுகளை உண்டாக்கும். இதனால் இளங் கன்றுகளுக்குக் குறைந்த அளவில் குறிப்பிட்ட நேரங்களில் பாலைக் கொடுப்பது நல்லது.

### பால் குடிக்கப் பழக்குதல்

கன்றுகளைத் தனியாகப் பிரித்து வளர்க்கும் பொழுது அவைகளை அதற்கென உண்டான பாத்திரத்திலிருந்து குடிக்கப் பழக்க வேண்டும். முதலில் நமது கைகளின் விரலைப் பாலில் நனைத்துக் கொள்ள வேண்டும். இக்கைகளை முதலில் கன்றை நக்குவதற்குப் பழக்க வேண்டும். பின்பு பாத்திரத்தில் பாலை ஊற்றிக் கையின் விரலைப் பாலில் அமிழ்த்திக் கன்றை, பாலை கையின் விரல்களின் வழியாக உறிஞ்சப் பழக்க வேண்டும். ஒருவர் இரு கைகளையும் உபயோகித்து ஒரே சமயத்தில் இரு கன்றுகளுக்குப் பால் ஊட்டலாம். நன்கு பழக்கப்பட்ட கன்றுகள் சில நிமிடங்களில் பாலை உறிஞ்சிக் குடித்து விடும். இம் முறையில் பாலின் உஷ்ண நிலை 40 டிகிரி சி.-க்கு இருக்க வேண்டும். குளிர்ந்த பால் கழிச்சலை ஏற்படுத்தும்.

> **கோடைக்கானலில் சுற்றுலாக் குடில்கள்**
>
> கோடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளுக்காகப் பத்துக் குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இது போன்ற குடில்களைக் கன்னியாகுமரி மற்றும் குற்றாலத்தில் கட்டவும் அரசு தீர்மானித்துள்ளது. மதுரைக்கருகே பர்மா அகதிகளுக்காக ரூ. 16 இலட்சத்து இருபத்து மூவாயிரம் செலவில் வீடுகள் கட்டித் தரவும் திட்டமிட்டுள்ளது.

### பாலின் அளவு

ஒரு கன்றின் எடையில் 10 சதவிகிதம் பால் கொடுக்க வேண்டும். வயிற்றுக் கோளாறு, கழிச்சலோ ஏற்பட்டால் பாலின் அளவைக் கணிசமாகக் குறைக்கவும். ஆரோபாக் அல்லது டெராமைசீன் போன்ற மருந்துகளைப் பாலுடன் கொடுத்தால் கழிச்சல் போன்ற வியாதிகள் ஏற்படாது.

கன்றுகளை மற்ற முறைகளில் அதாவது பசுவுடன் விட்டு வளர்க்கும் பொழுது கன்றுகளுக்கு விடப்படும் பாலின் அளவை எப்படி நிர்ணயப்படுத்துவது? வாரத்தில் ஒரு நாள் கன்றுகளுக்குப் பாலை ஊட்ட விடாமல் பாலை முழுவதும் கறந்து விட வேண்டும். இதனால் பசுவின் பால் உற்பத்தியின் அளவு தெரியும். இந்த அளவிலிருந்து இதற்கு முதல் நாள் கறந்த பாலின் அளவைக் கழிக்கக் கன்று குடித்த பாலின் அளவு தெரிய வரும். இதைக் கண்டு பிடித்த பின் கன்றுக்கு வேண்டிய அளவு பால் கிடைக்கிறதா—இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு பால் கறப்பவர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கலாம்.

கன்று பால் குடித்தவுடன் அதன் நாக்கில் சிறிதளவு உப்பைத் தடவவேண்டும். இளங் கன்றுகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுவது நல்லது. இதனால் கன்றுகள் ஒன்றையொன்று நக்கும் பழக்கம் நின்றுவிடும். கன்றுகள் ஒன்றையொன்று நக்குவதால் உரோமம் வயிற்றுக்குள் சென்று உருண்டைகளாகத் திரண்டு குடலில் ஆகாரம் செல்வது தடுக்கப்படலாம். இதனால் கன்றுகள் இறக்க நேரிடும். கன்றுகள் வளர வளர பாலின் அளவைக் குறைக்க வேண்டும். கலப்பு உணவு கொடுக்க வேண்டும். ஆறு மாத வயதானவுடன் பால் ஊட்டுவதை அறவே நிறுத்தி விடலாம்.

### கன்றுகளுக்குக் கலப்பு உணவு (Calf starter)

கன்றுகளுக்கு வேண்டிய கலப்பு உணவில் கன்றுகளுக்கு வேண்டிய புரதம், மாவுப் பொருள், தாதுஉப்புக்கள், உயிர்ச் சத்துக்கள் அடங்கியுள்ளன. கன்றுகளின் கலப்பு உணவைக் கீழ்க்கண்ட உணவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. கடலைப் பிண்ணாக்கு | 38 | பாகம் |
| 2. கேழ்வரகு மாவு | 30 | ,, |
| 3. கோதுமைத் தவிடு | 20 | ,, |
| 4. ஆளி விதை | 10 | ,, |
| 5. தாது உப்பு | 1 | ,, |
| 6. உப்பு .. | 1 | ,, |
| மொத்தம் | 100 | ,, |

கன்று பிறந்த 15 நாட்களிலிருந்து சிறிது பசும் புல்லைக் கொடுக்கலாம். அருகம்புல் சிறந்தது. வயது செல்லச் செல்ல பசும்புற்களின் அளவை அதிகரிக்கலாம். 2-வது மாதத்திலிருந்து வைக்கோல் கொடுக்கலாம்.

[தஞ்சாவூர் மாவட்டம் வடசேரி கால்நடை வளர்ச்சி முகாம் சிறப்பு மலரில் வெளியாகிய கட்டுரை]





# கேளுங்கள் ??? கொடுக்கப்படும்

கரிகாலன் என்ற நெல் ரகத்திற்கு எவ்வளவு உரமிட வேண்டும்? அடியுரம் எவ்வளவு இட வேண்டும்? மேல் உரம் எந்தெந்த நேரத்தில் எவ்வளவு இடவேண்டும்? என்ன மகசூல் காணும்?

—எ. எம். அகமது மொகிதீன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
ஆழ்வார் திருநகரி,
திருச்செந்தூர் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

'கரிகாலன்' (வளர்ப்பு எண். 5652) என்ற நெல் ரகத்திற்கு ஏக்கருக்கு 55கிலோ தழைச்சத்து 25கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இடவேண்டும். இதில் 33 கிலோ தழைச்சத்தையும், 25 கிலோ மணிச்சத்தையும், 25 கிலோ சாம்பல் சத்தையும் அடியுரமாகக் கடைசி உழவில் இடவேண்டும். நடவு செய்த




25 முதல் 30 நாட்களுக்குள் மீதமுள்ள 22 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும்.

மேற்கூறிய அளவில் அடியுரமிட 165 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 73 கிலோ யூரியா, 157 கிலோ சூப்பர் பாஸ்பேட், 42 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளைக் கடைசி உழவில் இடலாம். அல்லது 147 கிலோ 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தையும் 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18கிலோ யூரியாவையும் அடியுரமாக இடலாம்.

மேலுரமிட 110 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 49 கிலோ யூரியாவைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு கரிகாலன் நெல் ரகத்திற்கு உரமிட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 2,500 கிலோவுக்குக் குறையாமல் மகசூல் பெற முடியும்.

'கரிகாலன்' நெல் ரகம் சூலை மாத விதைப்பில் பெரும் மகசூல் கொடுத்துள்ளதால், நீங்களும் சூலை மாதத்தில் நாற்றுவிட்டு, நடவு செய்து பெரும் மகசூல் எடுக்கலாம்.

கடந்த 4-3-1973 தேதி தினமணி ஞாயிறு சுடரில் கண்ணகி நெல் பற்றி சுமாரான விவரங்கள் வெளியாகியுள்ளது. கண்ணகி எப்பட்டத்திற்கு ஏற்றது? என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் 17:17:17 கூட்டு உரம் ஏக்கருக்கு எத்தனை கிலோ? நாற்றைச் சேர்த்து எத்தனை நாட்களில் அறுவடையாகிறது? இக் கேள்விகளுக்கு விடையளிக்குமாறும், இன்னும் சில விவரங்களையும் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

—மு. சுப்பரமணியன்,
ப.யூ.உ.ஆ. பள்ளி,
மெய்யூர் (அஞ்சல்),
திருவண்ணாமலை வட்டம்,
வடஆர்க்காடு மாவட்டம்.

கற்புக்கரசி கண்ணகியின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள 'கண்ணகி' நெல் ரகம் தமிழ் நாடெங்கும் குறுவைப் பட்டத்திலும், நவரைப் பட்டத்திலும் பயிரிடுவதற்கு ஏற்றது. இந்த ரகம் சன்ன அரிசி கொடுக்க வல்லது. பூசா 2-21 (ஐ.இ.டி. 1983) என்ற நெல் ரகத்திற்கே 'கண்ணகி' என்று பெயரிடப்பட்டுள்ளது. அதிக மகசூல் அளிக்கும் 'ஐ.ஆர். 8' நெல் ரகத்தையும், சன்ன அரிசி அளிக்கும் 'டி.கே.எம். 6' என்னும் 'ஒட்டுக் கிச்சிலி' ரகத்தையும் கரு இணைப்பு செய்த வகையில் 'கண்ணகி' நெல் ரகம் உருவாகியதால், 'கண்ணகி' நெல் ரகம் அதிக மகசூலையும், சன்ன அரிசியையும் அளிக்கும் ஆற்றல் கொண்டதாக உள்ளது.




கண்ணகி நெல் பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 33 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இடவேண்டும். இந்த அளவில் அடியுரமிட 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 147 கிலோவையும், 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18 கிலோ யூரியாவையும் கடைசி உழவில் இடவேண்டும். நாற்றையும் சேர்த்து இந்த ரகத்தின் வயது 110 நாட்களாகும். நாற்றுவிட்ட 25 நாளில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 25 நாளில் ஏக்கருக்கு 49 கிலோ யூரியா அல்லது 110 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவேண்டும். 'கண்ணகி' ரகம் ஏக்கருக்கு 2 முதல் 2½ டன் மகசூல் அளிக்கவல்லது.

கடந்த 22-2-1973 அன்று இரவு திருச்சி வானொலியில் ஒலிபரப்பான விவசாய நிகழ்ச்சியில் பண்ணைச் செய்தி என்ற தலைப்பில் பானி என்ற புதிய உயர் விளைச்சல் ரகம் பற்றிச் சொன்னார்கள். அந்த விதை எங்குக் கிடைக்கும்? அதற்கான சாகுபடி குறிப்புகளையும், அதனுடைய உச்ச மகசூல் எவ்வளவு கிடைக்கும் என்பதனையும், தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதா என்பதையும் தயவு கூர்ந்து தெரிவிக்கவும்.

—எஸ். வெங்கடேசன்,
மெயின்ரோடு,
எ. இளியனூர் அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்.

'பவானி' என்ற நெல் ரகத்தை, அண்மையில்




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது. இதன் சாகுபடி குறிப்புகளையும், மகசூல் அளிக்கும் திறனையும் பற்றிய கட்டுரை 16-4-73

தேதி 'தமிழரசு' இதழில் பக்கம் 54, 55-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதை மீண்டும் வெளியிட இயலாததாலின் அதைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'பவானி' நெல் பற்றிய சோதனைகள் பல்வேறு நிலையில் இருப்பதால், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, இந்த விதையை இன்னும் பெருமளவில் வழங்கவில்லை. பரிசோதனைகள் முடிந்த பிறகு, பயனுடையதாக இருக்குமானால், 'பவானி' நெல் விதைகளை உழவர்களுக்கு வழங்கத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை ஆவன செய்யும். தற்பொழுது 'பவானி' நெல் விதை வேண்டுமெனில், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொடர்பு நிலையத்தைச் சார்ந்த விதை விற்பனை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

'பவானி' நெல் தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதாக இருக்குமா என்பதை, இன்றைய நிலையில் கூறமுடியாத நிலையில் இருக்கின்றோம். ஏனெனில், 1970, 71-ஆம் ஆண்டுகளின் தாளடிப் பட்டங்களில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து ஐ.ஆர் 20, பொன்னி ஆகிய இரண்டு ரகங்களும் பவானியைவிடச் சிறந்தவை என்பது தெளிவாகின்றன. ஆனால், பேராவூரணியைச் சார்ந்த உவர்நிலப் பகுதியில் நடைபெற்ற பரிசோதனைகளில் இருந்து, 'பவானி' நெல் ரகம் உவர் நிலங்களில் மற்ற ரகங்களை விட அதிக மகசூல் கொடுக்க வல்லது என்று தெரிய வருகிறது.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர்த்திங்களில் பெய்த பெருமழையில், மற்றெல்லா ரகங்களும் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தும், 'பவானி' நெல் ரகம் மட்டும் தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்படவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

எனவே, 'பவானி', நெல் ரகம் தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதா என்பது இந்த ஆண்டின் சோதனைகளுக்குப் பிறகே நன்கு தெளிவாகத் தெரிய வரும். எனினும், நீங்களும் பரிசோதனையாக 'பவானி' நெல் ரகத்தைச் சிறு அளவில் பயிரிட்டுப் பார்க்கலாம்! உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையும் இது பற்றிக் கலந்தாலோசிப்பது நல்லது.

நெல்லை மாவட்டத்தில் உள்ள என் நிலத்தில் கோடைப் பயிராக அவுரிப் பயிர் செய்ய விரும்புகின்றேன். இதன் பொறுக்கு விதைகள் எங்குக் கிடைக்கும்? அவுரி எத்தனை மாதப்பயிர்? இதன் இலை அல்லது காய் எது சாயத்திற்குப் பயன்படுகிறது? இது இலாபகரமான பயிரா? அவுரி பற்றித் தயவுசெய்து பதில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

—பி. ஜமீல் அகமது,
கைலாசபுரம்,
திருநெல்வேலி.

டிசம்பர்—சனவரி முதல் சூன்-சூலை வரை அவுரியைப் பயிரிடலாம். அவுரி விதை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கக் கூடும். அங்குக் கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றியத்துணைவேளாண்மைஅலுவலர் (வளர்ச்சி) அவர்களைச் சந்தித்து, அவுரி விதை வரவழைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். அவுரியின் வயது 150 முதல் 200 நாட்களாகும். அவுரியின் தழையில் இருந்து முன்பெல்லாம் சாயம் எடுக்கப்பட்டது. தற்பொழுது அவுரியிலிருந்து சாயம் எடுக்கும் தொழில் மறைந்துவிட்டது. அவுரி களிமண் நிலங்களில் நன்கு வளரும். நல்ல மழைக்குப் பிறகு ஏக்கருக்கு 7 முதல் 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். வேறு பயிர் இட முடியாத நிலத்தில் தழைஉரப் பயிராக அவுரியை விதைக்கலாம். அவுரி சிறந்த தழை உரமாகப் பயன்படும். ஒரு ஏக்கரில் இருந்து 5,000 கிலோ தழை கிடைக்கும். ஒன்று அல்லது இரண்டு முறை பாசனம் அளித்தால், ஓ ஏக்கரிலிருந்து 7,500 கிலோ தழை பெற முடியும். நிலம் பயிரிடப்படாமல் வெறுமனே கிடக்கும் காலத்தில் அவுரியைப் பயிரிடுவதால், தழை உரம் பெற முடிவதுடன், நிலவளத்தை மேம்படுத்த இயலும்!

தற்பொழுது நான் ஐ.ஆர். 20 நெல் பயிரிட்டுள்ளேன். அறுவடைக்குப் பின் மே மாதத்தில் அந்நிலத்தில் கோ. 7 கேழ்வரகை இறவைப் பயிராகப் பயிரிடலாமா? உர அளவையும் பயிரிடும் முறையையும் அறிவிக்கவும். நிலம் களிமண் தன்மையுடையது. கேழ்வரகு நன்கு வளருமா?

—இர. நடராசன்,
76, சி. எஸ். செட்டித்தெரு,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

தங்களுடைய ஐ.ஆர் 20 நெல் அறுவடைக்குப் பிறகு தங்கள் நிலத்தில் மே, சூன் மாதங்களில் கோ. 7 கேழ்வரகு பயிரிடலாம். வேறு எப்பயிருக்கும் ஏற்றதாக இல்லாத நிலங்களிலும் கேழ்வரகு பயிரிடலாம். தங்கள் நிலம் களிமண் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அந்நிலத்தில் கேழ்வரகு நன்கு மகசூல் தரும். கோ. 7 கேழ்வரகு ரகத்தை இறைவையாகச் சாகுபடி செய்யப் பின்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

கோ. 7. கேழ்வரகின் வயது 100 முதல் 102 நாட்களாகும். ஒரு ஏக்கர் கேழ்வரகு பயிரிட 1½ கிலோ கோ. 7 கேழ்வரகு விதைகளை 3 சென்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும். நாற்றுவிட்ட 21-ஆம் நாள் நடவு செய்ய வேண்டும்.




கேழ்வரகு நடும் வயலுக்கு ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு இட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 18 கிலோ மணிச் சத்து, 18 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இந்த அளவு உரமிட 125 கிலோ 14:14:14 அல்லது 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரம் அல்லது 105 கிலோ 17:17:17 காம்ப்ளெக்ஸ் உரமிடவேண்டும்.

நடவு வயலில் 6×6 அங்குலம் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 4-வது நாள் உயிர்த்தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். பிறகு வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. நடவு செய்த 3 வாரம் கழித்துக் களை எடுக்க வேண்டும்.

நடவு செய்த 30-ஆம் நாள் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்தை (40 கிலோ யூரியா அல்லது 90 கிலோ அமோனியம் சல்பேட்) மேலுரமாக இடவேண்டும்.

பூச்சி, நோய்கள் தாக்கினால் உங்கள் ஊராட்சிஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைக் கலந்து கொண்டு, அவர் கூறும் முறையில் மருந்து தெளிக்கவேண்டும்.



மேற்கூறிய முறைகளில் கோ. 7 கேழ்வரகு பயிரிட்டால் ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 கிலோ வரை மகசூல் பெறலாம்.

**வினா :** **'ஒயிட் லெக்கார்ன்' கோழிக்குஞ்சுகள் 50 வேண்டும். சிறு கோழிப்பண்ணை அமைக்கத் தென்னார்க்காடு, சென்னை ஆகிய மாவட்டங்களில் எங்கு 'ஒயிட் லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகள் கிடைக்கும்? முகவரி தெரிவிக்கவும்.**

—ப. ஜெயராஜ்,
ரயிலடி,
சீர்காழி (அஞ்சல்),
தஞ்சாவூர் மாவட்டம்.

'ஒயிட் லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகள் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை விரிவாக்க அலுவலர் (Extension Officer for Animal Husbandry) அவர்களின் உதவியை நாடினால், அவர் உங்கள் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு கோழிப் பண்ணையில் இருந்து, கோழிக் குஞ்சுகளை வரவழைத்துக் கொடுக்கக்கூடும். அல்லது உங்கள் ஊருக்கு மிக அருகாமையில் உள்ள கோழிப்பண்ணைகளிலிருந்தும் கோழிக்குஞ்சுகளை வரவழைத்துக் கொடுக்கக் கூடும். எனவே, தாங்கள் அந்த அலுவலரை நாடுவதே சிறந்தது. இருப்பினும் தங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, பின்கண்ட முகவரிகளைத் தெரிவித்துள்ளோம்.

1. சிக்ஸ் இந்தியா கோழிப் பண்ணை அலுவலகம்,
   10, பீச் ரோடு,
   கடலூர்-1.

2. கண்காணிப்பாளர்,
   அரசினர் கோழிப்பண்ணை,
   காட்டுப்பாக்கம் (அஞ்சல்),
   செங்கற்பட்டு மாவட்டம்.

3. செட்டி கோழிப்பண்ணை,
   16, சாட்டையப்பர்
   தெற்குத் தெரு,
   நாகப்பட்டினம்.

4. ஹை-சிக்ஸ் கோழிப்பண்ணை,
   42, பாஷ்யம் ரெட்டியார்
   தெரு,
   கடலூர்-1.

5. அக்ரோ சப்ளிமெண்டல்
   இண்டஸ்ட்ரீஸ் அண்ட்
   லேபரட்டரீஸ்,
   13, ஹண்டர்ஸ் ரோடு,
   வேப்பேரி,
   சென்னை-7.

**என்னுடைய தந்தை 'பொரி வறுக்கும்' தொழிலில் சுமார் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். தினமும் கூலிவேலை தான் செய்கிறார். அவர் சொந்தமாக அந்தத்தொழிலைச் செய்ய விரும்புகிறார். ஆனால் அதற்குப் பொருளாதார வசதி இல்லை. சுமார் ரூபாய் 1,000 தேவைப்படுகிறது. அதற்கு அரசு நடத்திவரும் சிறு தொழில் நிறுவனம் கடன் கொடுக்குமா ? அப்படிக் கொடுப்பதாய் இருந்தால் எப்படிக் கடன் பெற வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன். அல்லது பேங்க் கடன் கொடுக்குமா ? என்பதையும் தெரிவிக்கவும். அதனால் தினந் தோறும் சுமார் 10 பேர் பயன் பெறுவார்கள். தயவுசெய்து விளக்கமான பதில் தருமாறு வேண்டுகின்றேன்.**

—அ. குமார், பி.எஸ்சி.,
இளைஞர் அணி,
மெதூர் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

தங்கள் தந்தையார் சொந்தமாகப் 'பொரி வறுக்கும்' தொழிற்கூடம் துவங்கத் தமிழ்நாடு தொழில் வணிகத் துறை அல்லது தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் ('சிட்கோ') கடன் உதவி பெறலாம். 'ஸ்டேட் பேங் ஆப் இந்தியா' அல்லது 'பேங் ஆப் பரோடா', 'இந்தியன் ஓவர்சீஸ் பேங்', 'இண்டியன் பேங்' போன்ற நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் மூலமும் சிறு தொழில் தொடங்கக் கடன்பெற முடியும்!

தமிழ்நாடு தொழில் வணிகத் துறை மூலம் அல்லது தமிழ்நாடு சிறு தொழில் ( சிட்கோ ) வளர்ச்சிக் கழகம் மூலம் கடன் பெறுவதற்குரிய விவரங்களைத் தங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் விரிவாக்க அலுவலர் (Extension Officer for Industries) ) அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம். பொன்னேரியில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கியிலும் இது பற்றி நேரில் விசாரித்து விவரம் தெரிந்து கொள்ளலாம். தங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் விரிவாக்க அலுவலரிடமிருந்தும் இது பற்றி ஆலோசனையைப் பெறலாம்.



**எங்கள் நிறுவனத்தில் [illegible] மான மண்ணெண்ணெய் விளக்கு (லேட்) பல ரகம் தயாரிக்கின்றோம். எனக்கு இப்பொழுது கண்ணாடிக் குடுவை கிடைக்கவில்லை. அதன் கம்பெனி முகவரி (கண்ணாடிக் குடுவை விற்பனையாளர் முகவரி) தெரியவில்லை. எங்கள் கம்பெனியை நல்ல முறையில் நடத்திவருவதற்கு ஆலோசனை வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.**

—சாலி லாம் இண்டஸ்டிரீஸ்
22, பள்ளி வாசல் மூப்பன் தெரு
திருநெல்வேலி-5.

தங்களுக்கு ஒரு தனிப்பட்ட கம்பெனியின் முக




வரியைத் தெரிவிப்பது தவறாகும். எனவே, தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத் துறையைச் சார்ந்த நிறுவனத்தின் முகவரியை மட்டுமே 'தமிழரசு' இதழ் மூலம் தெரிவிக்க முடியும். மதுரையில் உள்ள அரசினர் கண்ணாடிச் சாமான்கள் தயாரிப்புப்பயிற்சி நிலையத்தில் ஓரளவிற்குச் சிமினி விளக்குக் கண்ணாடிகள் தயாரிக்கப்படுகின்றன அங்கிருந்து தாங்கள் கண்ணாடிக் குடுவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். இதுபற்றித் தாங்கள் திருநெல்வேலியில் உள்ள "உதவி இயக்குநர், தொழில் வணிகத் துறை" அவர்களிடம் ஆலோசனை பெறுவதே நல்லது!

**சிறுதொழில் செய்ய நிலம், வீடு இல்லாத ஏழைகளுக்கு அரசாங்கம் கடன் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். இக்கடன் ஜாமீன் பேரில் தருகிறார்களா ? அல்லது எந்த முறையில் கொடுக்கிறார்கள் ? என்னென்ன தொழிலுக்கு எவ்வளவு கடன் ? எத்தனை ஆண்டு தவணை ? இது சம்பந்தமாக நான் யாருக்கு மனுக் கொடுப்பது ?**

—பொன்முடி,
தலைவி,
உழவர் விவாதக்குழு,
சின்ன மாம்பட்டு,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

வீடற்றோர்க்கு வீட்டு மனையும், நிலமற்றோர்க்கு நிலமும் கொடுத்து வரும் தமிழ்நாடு அரசு, சிறுவியாபாரம்




செய்துவரும் அரிசன மக்களை ஊக்குவிக்க வட்டியில்லாக் கடன் கொடுத்து உதவுகிறது. இக்கடன் நபர் ஜாமீனிலும், சொந்தப் பொறுப்பிலும் கொடுக்கப்படுகிறது. வெற்றிலை பாக்குக் கடை அமைத்தல், வாடகை சைக்கிள் கடை வைத்தல், உணவு விடுதி நடத்தல், தையல் கடை வைத்தல், தோல் பதனிடுதல், தச்சுவேலை முதலிய 21 வகைத் தொழில்களுக்கு, தொழிலுக்கு ஏற்றவாறு ரூபாய் 250 முதல் ரூபாய் 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இக்கடனைக் கடன்பெற்ற ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு ஆரம்பித்து 100 சமமான, சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் பெற உங்கள் மாவட்ட நல அலுவலர் அவர்களுக்கு மனு அனுப்ப வேண்டும்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண முயலும் தமிழ்நாடு அரசு, வீடும் நிலமும் இல்லாமல் உள்ள எல்லா இனத்தைச் சார்ந்த ஏழைகளுக்கும் கடன் கொடுத்து உதவும் காலம் விரைவில்வரும் என்று நம்பலாம்.

நான் 1968—69-ல் எஸ்.எஸ்.எல்.சி பாஸ் செய்தேன். அதன்பின் 1970-ல் நடந்த லாரி விபத்தில் எனது வலது காலை எடுக்க வேண்டியதாகிவிட்டது. என் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. நான் என் பெற்றோருக்கு ஒரே மகன். என் தந்தை வயோதிகர். என் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு என்னைச் சார்ந்த போது, எனக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டது. நானும் பலதுறைகளுக்கு வேலைக்காக மனுச் செய்தேன். இதுவரை எனக்கு எந்த வித வேலையும் கிடைக்கவில்லை. வாழ்விழந்த நான் மறுவாழ்வு பெற வேலை கிடைக்க வேண்டும். ஆகையால் நான் எவ்வாறு வேலையில் அமர்வது எனவும், என் போன்ற ஊனமுற்றோர்க்குத் தமிழ்நாடு அரசு அளிக்கும் சலுகைகளையும் உதவிகளையும் தெரிவிக்கவும். நான் மறுவாழ்வு பெற வழிவகைகளையும் தெரிவிக்கும்படி சிரம் தாழ்த்தி வேண்டுகின்றேன்.

மா. சுப்பிரமணியன்,
சாந்தனுபுரம் 4-ஆம் வீதி,
புதுக்கோட்டை அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தங்கள் கடிதம் கண்டு மிகவும் வருத்தப்படுகிறோம். முயற்சி செய்தால் தங்களுக்கு வேலையும் கிடைக்கும்; மறுவாழ்வும் கிடைக்கும். கீழ்க் கண்ட வகையில் முயற்சி செய்யுங்கள்.

உடல் ஊனமுற்றோர்களுக்குத் தொழிற் பயிற்சி அளித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக, தமிழ்நாடு அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் திட்டப்படி கிண்டியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் 22,300 ரூபாய் செலவில் புத்தகம் 'பைண்ட்' செய்யும் நிலையம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு துவங்கியுள்ளது. அந்நிலையத்தில் முதற் கட்டமாக 16 பேர்களுக்குப் (உடல் ஊன முற்றவர்கள்) புத்தகங்களைப் 'பைண்ட்' செய்வது பற்றிய பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சிக் காலம் 6 மாதமாகும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதம்தோறும் ரூபாய் 25 உதவித்தொகை வழங்கப்படும். 6 மாதப் பயிற்சிக்குப் பிறகு தேர்வு நடத்தப்படும். தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசினர் அச்சுக் கூடத்தில் வேலை அளிக்கப்படும்.




தாங்கள் இப்பயிற்சி பெற்றுத் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டால், புதுக்கோட்டையில் உள்ள அரசினர் அச்சுக் கூடத்திலேயே தங்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது! இதனால் தங்களுக்கு மறுவாழ்வும் கிடைக்கும்; தங்கள் பெற்றோர்களையும் காப்பாற்ற முடியும்!

எனவே, உடனடியாகத் தாங்கள் ஊனமுற்றுள்ளதைக் குறிப்பிட்டுப் புத்தகம் 'பைண்ட்' செய்யும் பயிற்சிக்குத் தங்களையும் தேர்ந்தெடுக்கும்படி வேண்டுகோள் மனு ஒன்றை எழுதிப் பின்கண்ட முகவரிக்கு அனுப்ப முயலுங்கள்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும்
பயிற்சித்துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

இது தொடர்பாகப் புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் உதவியையும் நாடலாம். தாங்கள் சிரமம் பாராமல் நேரில் சென்றால், வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடும். யாரும் மனமிரங்கித் தங்களுக்கு உதவ முன் வருவார்கள்.

—ஆர். எம்.

### விண்வெளியில் வலம் வரும் ஒரு வீடு

விண்வெளியில் பறக்கும் ஆய்வுக்கூடமான அமெரிக்காவின் விண்வெளி மேடை 'ஸ்கைலாப்' மே திங்கள் பதினான்காம் நாள் முதல், 1974 சனவரித் திங்கள் நான்காம் நாள்வரை ஏறத்தாழ எட்டு மாதங்கள் விண்வெளியில் வலம் வரும்.

ஒன்பது விண்வெளி வீரர்கள் மூவர் மூவராக மூன்று முறை சென்று இந்த ஆய்வு நடத்துவார்கள். அதன் உட்புற வசதி 322 கன மீட்டர் ஆகும். 'ஸ்கைலாப்' கலத்தில் 58 ஆராய்ச்சிக் கருவிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு விண்வெளி வீரர்கள் 270 தனி ஆய்வுகள் நடத்துவர்.






மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்தில் கிராம மின்வசதித் திட்டத்திற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. 1973 இறுதிக்குள்ளாகத் தமிழகத்தில் மின்வசதி பெறாத கிராமமோ, சிற்றூரோ இருக்காது என்ற நிலையினை உருவாக்கத் தமிழ்நாடு மின் வாரியம் முழு மூச்சுடன் பாடுபட்டு வருகிறது. அந்த இலட்சியப் பணியில் மேலும் ஒரு படி மேலே போய் தெரு விளக்குகள் மூலமாக மின்வசதி அளிப்பது என்பது மட்டுமல்லாமல்—மேலும் பல வகைகளிலும் மின்வசதியை நீட்டிப்பது என்ற நிலையினை உருவாக்குவது நிலக்கோட்டை மின்வசதிச் சிறப்புத் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் வாடிப்பட்டி,அலங்காநல்லூர் வட்டாரங்களில்—இந்த வட்டாரத்தில் உள்ள நான்கு பேரூராட்சிகள் தவிர—மற்ற 52 மக்கள் கணக்கெடுப்புக்குட்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதியை மேலும் பல்வேறு வகையிலும் நீட்டிப்பதே இந்தச் சிறப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் இவ்விரு வட்டாரங்களில் உள்ள 52 மக்கள் கணக்கெடுப்புக்குட்பட்ட கிராமங்களில் மேலும் பல்வேறு துறைகளிலும் மின் இணைப்பு அளிக்கப்படும்.

இந்த இரு வட்டாரங்களில் உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குட்பட்ட எல்லாக் கிராமங்களும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

மதுரை மாவட்டத்திலுள்ள நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள், அரிசனக் குடியிருப்புகள் அனைத்துக்கும் மின்வசதியளிக்கும் பணி முழுமை பெற்றுவிட்டது.

> பலர் புகழ வாழ்வது, நம் மீது பிறர் பொறாமைப்பட இடம் தராத தூய நெறி. பிறருடைய தீய குணங்களை மனத்தில் கொள்ளாமல் அவர்களிடமும் அன்பு கொள்வது, அன்பில்லாதவரையும் அரவணைப்பது—இந்த உன்னதப் பண்புகளைப் பணத்தால் வாங்க முடியாது. இந்தப் பண்புகள் இல்லாமல் பணத்தால் மட்டும் எந்த இன்பத்தையும் பெற முடியாது.
>
> —ராபர்ட் லூயிஸ்ஸ்டீவன்சன்.

மதுரை மாவட்டத்தில் [illegible] கோட்டை வட்டத்தில் [illegible] வாடிப்பட்டி (2) அல[illegible] (3) வத்தலகுண்டு (4) நிலக்கோட்டை ஆகிய நான்கு வட்டாரங்கள் உள்ளன.

இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் வாடிப்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய இரு வட்டாரங்களில் மேலும் பல்வேறு வகைகளில் மின் இணைப்பு நீட்டிக்கப்படும். இந்த வட்டாரத்தில் 52 மக்கள்தொகை கணக்கெடுப்புக்குட்பட்ட கிராமங்களில் உள்ளன.

இந்த இரு வட்டாரங்களில் இப்பொழுது 1,059 வேளாண்மை விசையேற்றங்கள், 3,975 வீடுகள் 644 வணிகக் காரியங்கள், 110 தொழில் குறைவழுத்த சர்வீசுகள், 2,031 தெருவிளக்குகள் ஆகியவற்றிற்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

வாடிப்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய இரு வட்டாரங்களில், இச்சிறப்புத் திட்டத்தின்கீழ், இப்பொழுதுள்ளதற்கு மேல் மேலும் 360 வேளாண்மை விசையேற்றங்கள், 150 குறைவழுத்த மின் சக்தி பயன்படுத்தும் தொழில்கள் 2,470 வீடுகள், 290 வணிகக் காரியங்கள், 1,130 தெருவிளக்குகள், ஆகியவற்றிற்கு ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக மின்வசதி நீட்டிக்கப்படும்.

இந்த இரு வட்டாரங்களில் 460 கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படக்கூடிய வகையில் போதிய நிலநீர் இருப்பதாக நிலநீர் ஆய்வு இயக்குநர் சான்றளித்துள்ளார். ஆகவே, திட்டமிடப்பட்டுள்ள 360 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பது, இந்த எண்ணிக்கை அளவுக்குள்ளாகவே உள்ளது.

இந்தத் திட்டத்திற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 37.735 இலட்சமாகும். இந்த 37.735 இலட்சம் ரூபாயினைப் புது டில்லியில் உள்ள கிராம மின் வசதி இணையம் கடனாக வழங்க அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழகத்தின் கிராமங்கள்—சிற்றூர்கள் அனைத்திலும், தெருவிளக்குகள் மூலமாக மின்வசதி அளித்தல் என்பது மட்டுமல்லாமல், மேலும் பல்வேறு வகைகளிலும் மின்வசதி நீட்டிக்கப்பட வேண்டும் என்ற புனிதமான பணியில் இந்த வாடிப்பட்டி—அலங்காநல்லூர் சிறப்புத் திட்டம், அந்தப் பகுதி வாழ் மக்களின் முன்னேற்றத்திற்கு அடிகோலும் ஒரு சீரிய அங்கமாகும்.




# மாவட்டங்களிலிருந்து...

### சேலம் பவானிசாகரில் இளைஞர் அணி

எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவைப் புகட்டுவதும், நல்வாழ்வியலைக் கிராம மக்களிடையே பரப்புவதும், சமூகத் தீமைகளை நீக்கிட உதவுவதும் இளைஞர் அணித் திட்டத்தின் நோக்கம் என்பதை நாமறிவோம். குறிப்பாகப் படித்த இளைஞர்களின் மனத்தில் தொண்டு செய்யும் எண்ணத்தை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம் எனலாம்.

கோவை மாவட்டத்திலுள்ள பவானி சாகரில் தேர்ந்தெடுக்கப் பட்ட இளைஞர்களுக்கு இளைஞர் அணியில் இரண்டு திங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் போது அனுபவம் மிக்க ஆசிரியப் பெரு மக்களால் இந்தியச் சமுதாய நிலை, முதியோர் கல்வி, நல்வாழ்வியல், வேளாண்மை, சமுதாய இயலாமைகளைக் களைதல், கிராம மக்களை அணுகும் முறைகள், குடும்ப நலத்திட்டம், விளையாட்டுகள் முதலியன பற்றிப் போதிக்கப்படுகின்றன. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோழிப்பண்ணை, மீன்துறை ஆகியவற்றை நேரில் கண்டு நிலையறியும் வாய்ப்புகள் அளிக்கப் படுவதுடன், பத்து நாட்கள் கிராம நிலைப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் பதினெட்டு இளைஞர் அணியினர் பணியாற்றி வருகிறார்கள். பள்ளிப்பாளையம் ஊராட்சி மன்றப் பகுதியில் உள்ள வெடியரசம்பாளையம் என்னும் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மூவர் பணியாற்றி வருகின்றனர்.

வெடியரசன் பாளையம் ஒரு சிறிய கிராமம். இக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஒன்றும், தானியங்கித் தண்ணீர்ப் பொறிகள் இரண்டும், வானொலிப் பெட்டி ஒன்றும் உள்ளன. இடையறாது இயங்கிக்கொண்டிருக்கும் விசைத்தறிகளும் பல உண்டு. இவ்விசைத்தறிகள் பலருக்கு வாழ்வளித்து வருகின்றன.

முதியோர்களுக்கு எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொடுப்பதோடல்லாமல், அவ்வப்போது சுற்றுப்புறச் சுகாதாரத்தையும் நல்வாழ்வையும் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது. அன்றாட நிகழ்ச்சிகளைச் செய்தித்தாள்கள் மூலம் படித்து அறிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு வரும் கடிதங்களைப் படித்துக் காட்டியும், அவர்கள் கூறுகிற செய்திகளை எழுதிக்கொடுத்தும் உதவி புரிகின்றனர், இளைஞர் அணியினர். முதியோர் கல்வி தவிர, மாலை நேரங்களில் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கல்வியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

பொதுச் சுகாதாரம் பேண வேண்டிய அவசியத்தையும், பேணுவதால் ஏற்படும் நன்மைகளையும், கழிவுப்பொருள்களை அப்புறப்படுத்தும் முறைகளையும் வீட்டுத் தோட்டம் போடுவதால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கமாக எடுத்துக் கூறப்படுகின்றன. சிறுசேமிப்புத் திட்ட இயக்கம், குழந்தைகள் காப்பகம் வைத்து நடத்துதல் போன்றவற்றில் ஒன்றிய ஊழியருக்கு ஒத்துழைப்பும் தருகிறது, இளைஞர் அணி.

### மதுரை மாவட்டத்தில் மகளிர் நலம்

குடும்பநலனைப் பேணவும், மகளிர்க்குப் பல வகையிலும் கல்வி புகட்டவும், சமுதாய நலனில் முன்னேற்றம் காண அவர்கள் சமுதாயத்தில் பங்கேற்றுப் பணியாற்றவும், வருங்காலச் செல்வங்களான குழந்தைகளை நன்முறையில் வளர்க்கவும், மதுரை மாவட்டத்தில் மகளிர் மன்றங்களும், குழந்தைகள் காப்பகங்களும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இம்மாவட்டத்தில் 34 வட்டாரங்களில் ஒவ்வொன்றிலும் 30 மகளிர் மன்றங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு மன்றமும் அவ்வூரிலேயே சமூக நலனில் ஈடுபாடுடைய பெண்மணியால் சிறப்பாக நடத்தப்படுகின்றது. இந்த மகளிர் மன்றங்களில் குழந்தை வளர்ப்பு, சுகாதாரம், சமூக நலம், முதியோர் கல்வி ஆகியவை பற்றிய விளக்கக் கூட்டங்களை நடத்தவும், சத்துணவு பற்றிப் பேசவும், செயல்படவும், நலிவு, எருக்குழி, வீட்டுத் தோட்டம் போடுதல் முதலியவற்றைச் செய்முறையில் காட்டவும், குடும்பநலக் கொள்கை விளக்கம் செய்யவும் அதனைச் செயலாற்றவும் வழி காண்கின்றனர்.

இவை மட்டுமா? சிறு சேமிப்பிலும் தீவிர அக்கறை காட்டுகின்றனர். தையல், கூடை பின்னுதல், கோழி வளர்த்தல், ஆடுமாடு வளர்த்தல் முதலியன பற்றி அறிதலும், செயலாற்றுதலும் வருவாயைப் பெருக்க வழியேற்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொன்றாக மொத்தம் 34 வானொலி மன்றங்கள் மகளிருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கோடைக்கானல் வட்டாரத்தில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 10 சிறுவர் பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் உள்ளன. கோவில்பட்டி மகளிர் மன்ற அங்கத்தினர் 5 பேருக்கும், குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கும் பாலளிக்க 5 பால் மாடுகள் வாங்கியளிக்கப்பட்டுள்ளன. 10 வானொலிப் பெட்டிகள் 10 மகளிர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்ட வட்டாரங்களில் மொத்தம் 127 குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திற்கும் பயிற்சி பெற்ற பால சேவிகா நியமிக்கப் பட்டுள்ளார். 2 முதல் 5 வயதுவரையுள்ள 40 குழந்தைகள்வரை ஒரு காப்பகத்தில் உள்ளனர்.

குழந்தைகள் அறிவு வளர்ச்சி உடல் வளர்ச்சி பெறவும், வாய்மொழிக் கல்வி, பெரியோர்களிடம் பணிவு, ஒற்றுமை, அன்போடு இணைந்து பழகிப் பகிர்ந்துண்ணல், நற்பழக்கம் பெறுதல் ஆகியவற்றைக் கற்றுத்தரவும், கதைகள், பாடல்கள், பேச்சுப் போட்டிகள், உடற்பயிற்சி, பார்த்தறிதல், செய்து காட்டல் முதலானவைகளில் பயிற்சி அளித்தல் பால சேவிகாவின் பணியாகும்.


செய்தியே
ரூ.1 கோடி
கைத்தறி நெசவாளர்
துயர் தவிர்த்திட
ஒரு கோடி ரூபாய் கடனுதவி
தமிழக அரசு வழங்கும்.
தமிழ்நாட்டில் 1973-
74-ஆம் ஆண்டில்
சூரியகாந்தி 2.5 லட்சம்
ஏக்கரில் பயிரிடப்படும்.
தமிழ்நாடு அரசு
போக்குவரத்துக் கழகங்களில்
பணியாற்றும் தொழிலாளர்களுக்கு
முதலீட்டில் பங்கும்
நிருவாகத்தில் பொறுப்பும்
அளிப்பதை மத்திய அமைச்சர்
டி.ஏ.பாய்' சோசலிசத்தை
நோக்கி எடுக்கப்பட்டுள்ள
மிகவும் துணிச்சலான திட்டம்
என்று பாராட்டியுள்ளார்.
சித்திரமே!


தமிழ்நாட்டு உயர்நிலைப்
பள்ளிகளில் மேலும் 375
பி.டி. பட்டதாரி ஆசிரியர்
களையும், 1100 செகண்டரி
கிரேட் ஆசிரியர்களையும்
நியமித்திட தமிழக அரசு
அனுமதி வழங்கியுள்ளது.
கோவை வேளாண்மைப்
பல்கலைக் கழகத்தில் புதிதாக
விதை நுட்பத் துறை ஆராய்ச்சிக் கூடம்
தொடங்கப்பட்டுள்ளது.
விதை நுட்பத் துறை
ஆராய்ச்சிக் கூடம்
எட்டயாபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டை
வாங்கித் தமிழக அரசு தொல்பொருள் துறை
நினைவுச் சின்னமாக்கியுள்ளது.
எட்டயாபுரம்
தமிழக அரசு
தொல்பொருள்
துறை.
சாமி...

# தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி இந்த ஆண்டுத் திட்டங்கள்

"பழைய முறை மாற்றிப் பயிர் செய்தால்
நிறையப் பலன் கிடைக்க வழியுண்டு;
உழக்குத்தான் மிச்சமென்னும் இருட்டு நிலை
கிழக்கு வெளுத்தது போல் மறைந்து விடும்!"

என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்ட தற்கிணங்க, பழைய சாகுபடி முறைகளைக் கைவிட்டு, புத்தம் புதிய உயர் விளைச்சல் தரும் ரகங்களையும், சாகுபடி முறைகளையும், நவீனக் கருவிகளையும் பயன்படுத்தி—இயற்கை அடுத் தடுத்துப்பல இன்னல்களை ஏற்படுத்திய போதிலும், மனந் தளராமல்—காலமெல்லாம் கடுமையாகப் பாடுபட்டுப் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியை விரைந்து பெருக்கி வரும் தமிழக உழவர் பெருமக்களே!

புத்தம் புது ரகங்களையும், சாகுபடி முறைகளையும், நவீன உழவுக் கருவிகளையும் கண்டுபிடித்துக் கொடுக்கும் வேளாண்மை விஞ்ஞானிகளே!

உழவுத் தொழிலை உழவர்கள் விழுமிய முறையில் செய்ய உதவும் வேளாண்மை, கூட்டுறவு, பொதுப்பணி, வருவாய், மின்சாரம், ஊரக வளர்ச்சி, அனைத்து இந்திய வானொலி ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களே! ஊழியர்களே!

தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவும் தனியார் துறையினரே!

உழவர் சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்களே! தம்பிகளே! தங்கைகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து சென்ற ஆண்டில் அதாவது 1972—73-ஆம் ஆண்டில் வறட்சி வாட்டிய போதிலும், வெள்ளமும் புயலும் வெகுவாகச் சேதப்படுத்திய போதிலும், ஏறத்தாழ 72.02 இலட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்துகொடுத்துத் தமிழ்நாடு அரசின் இலட்சியம் நிறைவேற ஒத்துழைப்புக் கொடுத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்த ஒரு நாட்டில் உணவுப் பிரச்சினை இல்லையோ, அந்த நாட்டில்தான் அந்த நாட்டு மக்களிடத்தில்தான் அறிவு வளர்கிறது; அன்பு தழைக்கிறது; வீரம் செறிந்து காணப்படுகிறது; கலை மிளிர்கிறது; மொழி வளர்கிறது; எல்லாவற்றிற்கும் மேலாக அமைதியும், சமத்துவமும் நிலவுகிறது என்பது வரலாறு காட்டும் சான்றுகளாக உள்ளன.

பாரதப்போர் நடந்த காலத்தில் பாண்டவர்களின் படைகளுக்குத் தமிழகந்தான் உண்டி கொடுத்து உதவியதென்று பழந்தமிழ் இலக்கியங்கள் பகர்கின்றன!

காவிரிப் பூம்பட்டினத்துக் கடற்கரையிலே, பிற நாடுகளுக்கு மரக்கலங்களின் மூலம் அனுப்புவதற்காகச் செந்நெல் மணிகள் குன்றுகளெனக் குவியல் குவியல்களாக குவித்து வைக்கப் பட்டிருந்ததாக ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான 'சிலப்பதிகாரம்' செப்புகிறது.

கரிகாற் சோழன் காலத்திலே ஒரு வேலி நிலத்தில், 1,000 கலம் நெல் விளைந்தது எனப் 'பொருநர் ஆற்றுப்படை' என்ற பழந் தமிழ் நூல் பறைசாற்றுகின்றது.

இவ்வாறு பழங்காலத்தில், தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி பெருகியிருந்த காரணங்களால் தான், அன்று தமிழரின் அறிவும் ஆற்றலும், அன்பும், வீரமும், கலையும், நாகரிகமும் வளர்ந்து பிற நாட்டினரும் புகழும் வண்ணம் தனித்துவம் பெற்று விளங்கியுள்ளன. அத்துடன் தமிழ் வளர்ந்தது! தமிழர் வாணிபம் சிறந்திருந்தது! தமிழ்நாட்டின் புகழ் தரணி எங்கும் பரவியிருந்தது! இவைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, 'டாலமி', 'யுவான் சுவாங்' போன்ற பிறநாட்டு வரலாற்று அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

எனவே, வேளாண்மையே ஒரு நாட்டின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும், முக்கியமானது என்பது தெளிவாகிறது. வேளாண்மையின் முக்கியத்துவத்தை விளக்க,

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை!"

என்ற குறள் ஒன்றே போதும்! உலகுக்கெல்லாம், உழவுத் தொழிலின் இன்றியமையாமையை இத் திருக்குறள் எடுத்தியம்பி வருகிறது! இத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ள உழவுத் தொழிலே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் மூலாதாரமானது என்றால் மிகையல்ல!

## வேளாண்மையின் மேன்மை

தமிழ்நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 41 சத அளவைக் கொடுத்து வருவதுடன், தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 60 சத அளவினருக்கு வேலைவாய்ப்பை அளித்து வருவது வேளாண்மையும், அதன் அடிப்படையான தொழில்களுமே என்பதை நன்கு உணர்ந்துள்ளதாலேயே இன்றையத் தமிழ்நாடு அரசு வேளாண்மை வளர்ச்சிக்கு—பசுமைப் புரட்சிக்கு—முதலிடம் கொடுத்து வருகிறது.

## பசுமைப் புரட்சி!

காலமெல்லாம் உழைத்து ஓடாகி, கூனிக் குறுகிப்போன ஏழை உழவர்கள் நிமிர்ந்து நடக்க வேண்டும்! குழிவிழுந்து ஒளியிழந்துபோன ஏழை உழவர்களின் கண்களிலே ஒளி பிறக்க வேண்டும்! வயிற்றுக்கும், வாய்க்கும் பற்றாத நிலையிலே வாழ்ந்து வரும் எண்ணற்ற புன்செய் நில உழவர்களின் வாழ்விலே வளம் சேர்க்க வேண்டும்! என்ற இலட்சியங்களை மனத்திற்கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்துப் பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்தார்! பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, அவர் வழியில் ஏழை உழவர்களின் வாழ்வை வளமாக்க முயன்றுவரும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் அளித்து, அண்ணாவால் தோற்றுவிக்கப் பட்ட பசுமைப் புரட்சியைப் பரவச் செய்து, 'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர் விட்டு' நீண்ட காலத்திற்கு நிறைவான பயன்தர, ஆவன செய்து வருகின்றார்!

இதன் பயனாய்த் தமிழ்நாட்டின் வேளாண்மை, பிற மாநிலத்தவரும், பிற நாட்டினரும் பார்த்துப் பாராட்டும் அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது! 1967-68-ஆம் ஆண்டு வரை உணவுப் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழ்நாடு, இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளதோடு பிற மாநிலங்களின் பசிப்பிணி தீர்க்கும் மாநிலமாகவும் வளர்ந்துள்ளது!

## வறட்சியும் வெள்ளமும்

சென்ற ஆண்டில், மே மாதம் முடிவதற்குள் தென் மேற்குப் பருவ மழை பொழிய ஆரம்பித்தது! ஆனால், தென் மேற்குப் பருவ மழை போதிய அளவுக்குப் பெய்யாததாலும், பெய்த மழையும் பரவலாகப் பெய்யாததாலும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பல பகுதிகளில் வறட்சி நிலை நிலவியது. இதனால் சென்ற ஆண்டின் குறுவைப்பட்ட காலத்தில் உணவு தானிய விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக உணவு தானிய உற்பத்தியில் 1 இலட்சம் டன் அரிசி, 0.86 இலட்சம் டன் சோளம், 0.58 இலட்சம் டன் கம்பு, 0.10 இலட்சம் டன் பருப்பு வகைகள் ஆக மொத்தம் 2.54 இலட்சம் டன் அளவுக்கு உணவு தானியங்களில் உற்பத்திக் குறைவு ஏற்பட்டது.

சென்றஆண்டில் அக்டோபர்த் திங்களில் துவங்கிய வடகிழக்குப் பருவ மழையும், அக்டோபர் இடைப்பகுதி வரை தீவிரமாகப் பெய்யவில்லை; பிறகு நல்ல மழையைக் கொடுத்தது. நவம்பர் முடிவதற்குள்ளாகவே, வடகிழக்குப் பருவ மழையால் பயன் பெறும் நீர்த்தேக்கங்களெல்லாம் நிரம்பி வழிந்தன! அதைப்பயன்படுத்தி, நவரைப் பருவத்தில் உற்பத்தியைப் பெருக்கிடலாம்; அதன்மூலம் தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட உற்பத்திக் குறைவை ஈடுகட்டிடலாம் என்ற எண்ணத்துடன் உழவர் பெருமக்கள் ஆற்றுப்பாசனங்களின் கீழும், ஏரிப் பாசனங்களின்கீழும் சாகுபடிவேலைகளைத் தீவிரப்படுத்தினர்! ஆனால் டிசம்பர்த் திங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத்தால் தமிழகமெங்கும் கனத்த அடைமழை பெய்தது; புயல் தோன்றியது! டிசம்பர் முற்பாதியில் தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, வடஆர்க்காடு சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் புயற்காற்றின் கொடுமைகளுக்கும் வெள்ளத்தின் தாக்குதலுக்கும் உள்ளாயின.

வெள்ளத்தினால் தமிழ்நாட்டில் 2.20 இலட்சம் ஏக்கர் நெற்பயிரும், 50,000 ஏக்கர் பருத்திப் பயிரும், 12,000 ஏக்கர் கரும்பும், 22,000 ஏக்கர் இதர பயிர்களும் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தின் காரணமாக 13,500 ஏக்கர் விளைநிலங்கள் மணலால் மூடப்பெற்று, மணலை அகற்றினாலன்றிச் சாகுபடி செய்ய முடியாது என்ற நிலையை அடைந்தன. எனவே, வெள்ளத்தினாலும் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது.



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம்

வேளாண்மை உற்பத்தியைச் சீர்குலைக்கும் இரட்டைப் பிறவிகள் என்று சொல்லப்படும் வறட்சியும், வெள்ளமும் சென்ற ஆண்டில்அடுத்தடுத்து தோன்றித் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியை வெகுவாகச் சீர்குலைத்துவிட்ட போதிலும், தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாகச் சென்ற ஆண்டில் தமிழ்நாட்டில் 55.00 இலட்சம் டன் அரிசியும், 15.10 இலட்சம் டன் சிறு தானியங்களும், 1.92 இலட்சம் டன் பருப்பு வகைகளும் ஆக மொத்தம் 72.02 இலட்சம் டன்கள் உணவு தானியங்கள் உற்பத்தியாகி உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ள மகிழ்ச்சியான நிலை மலர்ந்துள்ளது.

## ஆறாண்டுச் சாதனை

தமிழ்நாட்டில், 1965-66-ஆம் ஆண்டில் 35.24 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, 1972-73-ஆம் ஆண்டில் 55 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.!

தமிழ்நாட்டில், 1966-67-ஆம் ஆண்டில் 54.58 இலட்சம் டன்களாக இருந்த தானிய உற்பத்தி 1972-73-ஆம் ஆண்டில் 72.02 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது!

எனவே, கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி விரைந்து பெருகி வருகிறது என்பதும், இதற்குக் காரணம் இன்றைய அரசு மேற்கொண்டுவரும் திட்டங்களே என்பதும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாத உண்மைகளாகும்! 1966-67-ஆம் ஆண்டில் 5.27 இலட்சம் ஏக்கரில் மட்டுமே உயர் விளைச்சல் ரகங்கள் சாகுபடி செய்யப் பட்டிருந்தன. ஆனால், தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாகவும், உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடமுன் வரும் உழவர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு கொடுத்துவரும் ஊக்கத்தின் காரணமாகவும், உயர் விளைச்சல் ரகங்களின் சாகுபடிபரப்பு, ஆண்டிற்காண்டு பன்மடங்காகப் பெருகி, 1971—72-ஆம் ஆண்டில் 64.14 இலட்சம் ஏக்கர் என்ற நிலையை அடைந்தது. 1972-73-ஆம் ஆண்டில், 55 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல்

தரும் நெல் வகைகளும், 4.15 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறுதானிய வகைகளும், 11 இலட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பும் பயிரிடத்திட்டமிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில், இலக்கினை மிஞ்சும் அளவுக்கு உயர்விளைச்சல் ரகங்கள் பயிரிடப் பெற்றுள்ளன.

### முனைப்பான முயற்சிகள் !

சென்ற ஆண்டில் வறட்சியினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட உற்பத்திக் குறைவை ஈடு செய்யத் தமிழ்நாடு அரசு அவசரக்காலப் பின் பருவத் திட்டத்தைத் (Emergency Rabi Programme) திட்டிச்செயல்படுத்தியது இத்திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு நவரைப் பருவத்தில் தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, வடஆர்க்காடுஆகிய 3மாவட்டங்களிலும்4.82 இலட்சம் ஏக்கரில் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிடத் திட்டமிட்டு, திட்டமிட்டபடி பயிரிடப்பட்டுள்ளது. அது போலவே கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 4.13 இலட்சம் ஏக்கரில் சிறு தானிய வகைகளை இறைவையாகப் பயிரிடவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5.5 இலட்சம் ஏக்கரிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்தில் 60,000 ஏக்கரிலும் பருப்புவகைப் பயிர்களைப் பயிரிடவும் முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன.

அவசரக் காலப் பின்பருவத் திட்டத்தின்கீழ் நெல், சிறுதானியங்கள், பருப்பு ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப் பெற்ற முயற்சிகள் பெரும் வெற்றியடைந்துள்ளன. இத் திட்டத்தின் கீழ் பயிரிடப் பெற்ற பயிர்கள் தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு இடைவிடா முயற்சியுடன் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயன்று வந்துள்ள தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் அதாவது 1973—74-ஆம் ஆண்டில் பல முனைப்பானத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

### தேவைக்கு ஏற்ற உற்பத்தி !

விரைந்து பெருகிவரும் தமிழ் நாட்டு மக்களின் தேவைக்கேற்ப உணவு, உடை முதலிய இன்றியமையாப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதும், வேளாண்மையே தங்களின் பிழைப்புக்கு வழியாகக் கொண்டுள்ள உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்துவதும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கி அவர்களின் அன்றாட வருவாய்க்கு உறுதி ஏற்படுத்துவதும் தன் கடமையே எனக் கருதி, அந்நிலையை உருவாக்கத் தமிழ்நாடு அரசு முழுமூச்சுடன் உழைத்து வருகிறது.

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், ஆக்கப் பணிகளுக்கும் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட ஓரளவுக்கேனும் தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது.

தமிழ் நாட்டில் ஏதேனும் ஒரு ஆண்டில் பருவ நிலை பாதித்து விடுமானால், அந்த ஆண்டில் ஏறத்தாழ 10 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி குறைந்துவிடும் என்பது காலம் நமக்குக் கற்றுத் தந்த பாடமாகும் ! எனவே, தமிழ்நாட்டில் எப்பொழுதும், 10 இலட்சம் டன் உணவு தானியங்களை இருப்பு வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

இக்காரணங்களின் அடிப்படையிலேயே, வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 18 அவுன்சு உணவு தானியம் வழங்குவதற்காக 64·50 இலட்சம் டன்கள், ஏற்றுமதி செய்வதற்காக 3 இலட்சம் டன்கள், இருப்பு வைப்பதற்காக 10 இலட்சம் டன்கள், விதைக்காக 1.50 இலட்சம் டன்கள், ஆக மொத்தம் 79 இலட்சம் டன்கள் உணவு தானியங்களைத் தமிழ் நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்திற்கேற்ப, இந்த ஆண்டில் 79 இலட்சம் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல ; சத்துணவு ஆராய்ச்சியின்படி தமிழ்நாட்டிலுள்ள வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 10 அவுன்சு காய்கறிகளும், 3 அவுன்சுப் பழங்களும், 3 அவுன்சு பருப்பு வகைகளும் கிடைத்திடச் செய்வதற்காகவும் தமிழ்நாடு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.



### மிகுபயன்தரும் தானிய வகைத் திட்டம் !

ஒரு மணி தானியம் விளைந்த இடத்தில் இரு மணி தானியமும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரு கதிர்களும், ஒரு போகம் விளைந்த நிலத்தில் இரு போகமும் இரு போகம் விளைந்த நிலத்தில் முப்போகமும், முப்போகம் விளைந்த நிலத்தில் நான்கு போகமும் விளைவிப்பதையே இலட்சியமாகக் கொண்டு இயங்கிவரும் இன்றையத் தமிழ்நாடு அரசு, உயர் விளைச்சல் தரும் தானிய வகைத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 55 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் நெல்வகைகளையும் 4·15 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறு தானியங்களையும், 11 இலட்சம் ஏக்கரில் எச். பி. 3. கம்பு ரகத்தையும் பயிரிடத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.



மேலும், சென்ற ஆண்டில் ஏற்பட்ட உணவு உற்பத்திக் குறைவை இந்த ஆண்டின் துவக்கத்திலேயே ஈடு செய்யத் தற்பொழுது நீர் நிலைகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தி அவசரக்காலக் கோடைப் பருவப் திட்டத்தைச் (Emergency Summer Programme) செயல்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் ஐ. ஆர். 8. மற்றும் இதர உயர் விளைச்சல் தரும் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு ரகங்களை 2.75 இலட்சம் ஏக்கரில் பயிரிட முனைப்பான முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

### பருப்பு உற்பத்தி

வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்குக் குறைந்தது 56 கிராம் பருப்பு வகைத் தேவைப்படுகிறது ! ஆனால், நமக்குத் தற்பொழுது நாளொன்றுக்கு 8 கிராம் பருப்பு வகைகளே சராசரியாகக் கிடைக்கிறது. எனவே, பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பருப்பு வகை விரைவுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் தனிப் பயிராகவும், ஊடு பயிராகவும் மொத்தம் 23.5 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைப்பயிர்களைப் பயிரிடத் திட்டமிட்டுள்ளோம் !

### எண்ணெய்ப் பற்றுக்குறை நீங்கிவிடும் !

நம் ஒவ்வொருவருக்கும் உணவுக்காக நாளொன்றுக்கு 57 கிராம் எண்ணெய் தேவைப்படுகிறது ! இந்த அளவு எண்ணெய் கிடைக்கத் தமிழ் நாட்டில் 31 இலட்சம் டன் எண்ணெய் வித்துகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆனால், தற்பொழுது தமிழ்நாட்டில் 11 இலட்சம் டன் எண்ணெய் வித்துகள்மட்டுமே உற்பத்தியாகி வருகிறது. எனவே, உணவுக்காகத் தேவைப்படும் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த ஆண்டில் 3.75 இலட்சம் ஏக்கரில் சூரியகாந்தியைப் பயிரிடவும், 500 சூரியகாந்திச் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆண்டில் எண்ணெய் வித்துகள்மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் 13 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்வதற்காக, நிலக்கடலை முனைப்புத் திட்டத்தின் கீழ் 3·65 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடவும், 240 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும், நிலக்கடலை ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 8.58 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடவும், 1,540 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும், ஆமணக்கு செய்முறை விளக்கத் திட்டத்தின் கீழ் 200 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டின் முடிவில் எண்ணெய் உற்பத்தி பெருகி, எண்ணெய்ப் பற்றுக்குறை நீங்குவதுடன், எண்ணெய் விலையும் கணிசமாகக் குறைந்துவிடும் என நம்பலாம்.

பல பயிர் முன்னோடித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் முசிறி வேளாண்மைக் கோட்டத்தில் 14,375 ஏக்கரிலும், கடலூர் வேளாண்மைக் கோட்டத்தில் 13,160 ஏக்கரிலும் பட்டுக்கோட்டை வேளாண்மைக் கோட்டத்தில் 12,675 ஏக்கரிலும் கூடுதலாகப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### உலகம் வியக்கும் அமைதிப் புரட்சி !

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை மாவட்டத்தில் 1966—67-ஆம் ஆண்டில் 8.77 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, 1971—72-ஆம் ஆண்டில் 13·59 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. இதற்கு மூலகாரணம் இன்றையத் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த இருபோகச் சாகுபடித் திட்டமே! பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த தஞ்சை மாவட்டத்தில், இரு போகச் சாகுபடி முறையைக் கொண்டு வந்து உலகம் வியக்கும் அமைதிப் புரட்சியை (Silent Revolution) ஏற்படுத்தியவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களுமே என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். Intensive Agricultural District Programme எனப்படும் தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் தஞ்சை மாவட்டத்தின் உணவு உற்பத்தியை, இந்த ஆண்டில் மேலும் கணிசமான அளவிற்கு உயர்த்திட எல்லா வகையான முயற்சிகளையும், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

"Intensive Agricultural Area Programme" எனப்படும் மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களிலும் இந்த ஆண்டில் 1,405 ஒருங்கிணைந்த செய்முறை விளக்கப் பாத்திகளும், தண்ணீரை விவேகமுடன் பயன்படுத்திச் குறைந்த அளவு நீரைக்கொண்டு நிறைந்த பயனைப் பெறுவது பற்றி 76 செய்முறை விளக்கப் பாத்திகளும் அமைக்கப்படவிருக்கின்றன.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப்பகுதியில் நடப்பாண்டில் 103 பயிர்முறை விளக்கப் பண்ணைகள் அமைக்க ரூபாய் 49,500 ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தாறு—



பட்டணங்கால் திட்டப் பகுதியில் 46 பயிர் முறை விளக்கப் பண்ணைகள் அமைக்க ரூபாய் 8,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

### நீலமலை மேம்பாடு

நீலகிரி மாவட்டத்தினை வளப்படுத்தும் நோக்குடன் துவக்கப்பட்ட, இந்திய–ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தை இந்த ஆண்டில் மேலும் தீவிரமாகச் செயல்படுத்திட ஆவன செய்து வருகிறோம். உருளைக் கிழங்கு உற்பத்தியைக்குறைக்கும் பொன்னிற நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு '' தாசனிட் '' என்ற மருந்து இறக்குமதி செய்யப்பட்டு, குறைந்த விலையில் உருளைக் கிழங்குச் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இம் மருந்தை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்படும் சுங்கவரிக்கு விலக்கு அளிக்குமாறு இந்திய அரசைத் தொடர்ந்து கேட்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பழத்தோட்டம் அமைப்போம்

தமிழ் நாட்டின் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்காக, புதிதாகப் பழத் தோட்டம் அமைக்க முன்வரும் ஒவ்வொருவருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,500 வீதமும், உயர்ந்த அளவாகத் தனிப்பட்ட ஒருவருக்கு ரூ. 6,000 வீதமும், மா, கொய்யா போன்ற இதர பழத் தோட்டம்அமைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 300 வீதமும், உயர்ந்த அளவாகத் தனிப்பட்ட ஒருவருக்கு ரூபாய் 2,000 வீதமும் இன்றைய அரசு நீண்ட காலக் கடன் வழங்கி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில்1,800ஏக்கரில் புதிதாகப் பழத்தோட்டம் அமைக்க நீண்ட காலக் கடன் வழங்கப்படும்.

வாழை பயிரிடுவது குறித்த முனைப்புத் திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,000 முதல் 1,500 வரை கூட்டுறவு, வணிக வங்கி ஆகியவைகளின் மூலம் குறுகிய காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 25,000 ஏக்கரில் வாழை பயிரிடப்படும். காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஏற்றுமதி செய்யத்தக்க வாழை வகைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 7,500 ஏக்கர் பரப்பில் வாழை பயிரிடப்படும்.

கோடைக்கானல், கல்ராயன், ஜவ்வாது, கொல்லிமலை, பச்சைமலை ஆகிய 5 மலைப் பகுதிகளில் இந்த ஆண்டில் 1,160 ஏக்கரில் தோட்டப் பயிர்கள், காய்கறிகள் முதலியன பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தென்னை வளர்ப்போம் !

புதிதாகத் தென்னந்தோப்பு ஏற்படுத்த முன்வரும் உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் 300 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு உயர்ந்த அளவாக ரூபாய் 3,000 வீதமும், நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 2,000 ஏக்கர் பரப்பில் தென்னை பயிரிடப்படும். நிலமற்ற ஏழைக் குடும்பங்களையும், இலங்கை அகதிகளையும் குடியமர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் கிழக்கு இராமநாதபுரம் தென்னை வளர்ப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் தென்னை, முந்திரி வளர்க்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 750 ஏக்கரில் தென்னை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தென்னை நாற்றுப் பண்ணைகளிலிருந்து 8. 10 இலட்சம் தரமான தென்னங் கன்றுகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து உயரமான, குட்டையான கலப்பினத் தென்னங்கன்றுகள் 5,000 வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

### 'டாலர்' தரும் முந்திரி!

தமிழ் நாட்டிற்கு ' டாலர் ' சம்பாதித்துக் கொடுப்பதில் முக்கியமானது முந்திரி ! புதிதாக முந்திரி பயிரிட ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 150 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு உயர்ந்த அளவாக ரூபாய் 3,000 வீதமும் நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் புதிதாக 5,000 ஏக்கரில் முந்திரிப் சாகுபடி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. முந்திரிப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 7,900 ஏக்கர் முந்திரிக்கு மருந்து தெளிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் முந்திரி உற்பத்தி 20 சத அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பருத்தி உற்பத்தியைப் பெருக்குவோம் !

தமிழ் நாட்டின் வாணிகப் பயிர்களில் முக்கியமானது பருத்தி. தமிழ் நாட்டிலுள்ள ஆலைகளுக்கு 7 இலட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் உற்பத்தியாவதோ 4 இலட்சம் பேல். இதனால் தமிழ்நாட்டில் பஞ்சு பற்றாக் குறை உள்ளது ! எனவே பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பருத்தி பயிரிடும் முழுப் பரப்பையும்,



திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டிப் பகுதியைச் சார்ந்த மானாவாரி பருத்திப் பரப்பு முழுவதையும் மும்முரப்படுத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து பஞ்சு உற்பத்தியை 8 இலட்சம் பேல்களாக உயர்த்த இன்றைய அரசு பெரு முயற்சி செய்து வருகிறது. பருத்தி கட்டுப்கோப்புச் சாகுபடித் திட்டப் பகுதிகளில் 2·05 இலட்சம் ஏக்கரில் பல்வேறு அறிவியல் நுட்பங்களை மேற்கொண்டு பருத்திச் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் 5·35 இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

புகையிலைக் கட்டுக்கோப்புச் சாகுபடித் திட்டத்தின்கீழ் 8,090 ஏக்கரிலும், எல்லா வளர்ச்சியும், அடங்கிய புகையிலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 12,000 ஏக்கரிலும் புகையிலை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது

### கரும்பு உறபத்தியை உயர்த்துவோம் !

நடப்பாண்டில் தமிழ் நாட்டில் 3·20 இலட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிட்டுப் பல்வேறு திருந்திய முறைகளையும் மேற்கொண்டு கரும்பு உற்பத்தியை 112 இலட்சம் டன்களாகவும், வெல்ல உற்பத்தியை 11 இலட்சம் டன்களாகவும்உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

தமிழ் நாடெங்கும் 3,200 ஏக்கரில் காய்கறி பயிரிட, ஏக்கருக்கு ரூபாய் 120 வீதம் கடன் கொடுக்கவும், தருமபுரி மாவட்டம் ஒசூர் பகுதியிலும் கோடைக்கானலிலும் 5,200 ஏக்கரில் உருளைக் கிழங்கு பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தரமான விதை வழங்கிடுவோம்

உயர்ந்த மகசூலுக்கு விதைகளே மூலாதாரமாக உள்ளதால், சான்றளிக்கப்பட்ட தரமான விதைகளை உழவர் பெருமக்களுக்கு வழங்குவதை முக்கியக் கடமையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, இந்த ஆண்டில் 2,780 டன் முதல் நிலை நெல் விதைகளையும், 41,700 டன் இரண்டாம் நிலை நெல் விதைகளையும், 60 டன் முதல் நிலை சிறுதானிய விதைகளையும், 1,528 டன் இரண்டாம் நிலை சிறுதானிய விதைகளையும் வழங்கிடவிருக்கிறது.

### இரசாயன உரங்கள்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதவற்கு விதைகளுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றது இரசாயன உரங்கள் ! தேவையான உரங்களைத் தேவையான அளவில், தேவையான காலத்தில் வழங்கிடுவதற்குத் தமிழ்நாடு அரசு மிகுந்த முயற்சி எடுத்துவருகிறது ! இந்த ஆண்டின் முன்பருவ காலத்திற்கு மட்டும் 1·20 இலட்சம் டன் தழைச்சத்துத் தேவைப்படும் என்று முன்கூட்டியே மதிப்பிட்டு, அந்த அளவு உரங்களை வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

### பயிர்ப் பாதுகாப்பு

உழுது பரம்படித்து, உரமிட்டு விதைத்துவிட்டால் மட்டும் விளைந்துவிடுமா ? விளையாது! பயிர்ப்பாதுகாப்புச் செய்தால்தான் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்கும் ! எனவே தான், திருவள்ளுவர்.

'' ஏரினும் நன்றும்
எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு !''

என்று குறிப்பிட்டுள்ளார். பயிர்ப் பாதுகாப்பின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தே, இன்றையத் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் ரூபாய் 570 இலட்சம் மதிப்புள்ள பூச்சி-பூஞ்சாள மருந்துகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது. கைகளால் இயக்கப்படும் தெளிப்பான்களையும், தூவான்களையும் உழவர் பெருமக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கவும், தேவையான விசைத் தெளிப்பான்களை வாங்கி உழவர்களுக்கு வேளாண்மைத் துறையில் வைத்திருந்து, வாடகைக்குக் கொடுத்து உதவவும் திட்டமிடப்பட்டுள்ளது. பூச்சி-பூஞ்சாள மருந்துகளை ஆய்வு செய்து தரமான மருந்துகளை வழங்கவும் பழுதடைந்த தெளிப்பான்களையும், தூவான்களையும் உடனுக்குடன் பழுது பார்த்து உழவர்களுக்கு வழங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

பயிர்களுக்குப் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும்போது உயிர் இழப்பவர்களின் குடும்பத்திற்கு இந்த ஆண்டுமுதல் ரூபாய் 1,000 உதவித் தொகை வழங்கவும் இன்றையத் தமிழ்நாடு அரசு முடிவு எடுத்துள்ளது.



களைகள் விளைச்சலை வெகுவாகப் பாதித்து விடுவதால் களைக் கொல்லிகளைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கிட இன்றையத் தமிழ்நாடு அரசு ஆர்வம் காட்டி வருகிறது. களைக் கொல்லிகளின் விலை அதிகமாக இருப்பதால், உழவர்கள் களைக் கொல்லிகளைப் பயன்படுத்த முன்வருவதில்லை! எனவே இந்த ஆண்டில் இரசாயனக் களைக்கொல்லிகளை 75 சத விலையில் வழங்கி 25,000 ஏக்கர் பரப்பில் களைக் கொல்லிகளைப் பயன்படுத்தும் திட்டதிற்காக ரூபாய் 3·75 இலட்சம் செலவு செய்யத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### காஃபி–தேயிலை

வேளாண்மை மறுநிதிக் கழக உதவியுடன், இந்தஆண்டில்ஏரிக்காடு, பழநி மலைப்பகுதிகளில் 1,300 ஏக்கரில் காஃபி பயிரிடவும், தீவிரத் தேயிலைச் சாகுபடித் திட்

டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 1,000 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடவும், தேயிலை சாகுபடியாகும் பரப்பை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ், 3,000 ஏக்கரில் புதிதாகத் தேயிலை பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு நிலக்கிழார் மேம்பாட்டிற்கு உதவும் சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டமும், குறு நிலக்கிழார் மற்றும் பண்ணைத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கு உதவும் குறு நிலக்கிழார் — பண்ணைத் தொழிலாளர் மேம்பாட்டுத் திட்டமும் இந்த ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் கோவில்பட்டி பகுதியில் 8,000 ஏக்கரும், புதுக்கோட்டைப் பகுதியில் 6,000 ஏக்கரும பயன்பெறும்.

### இயந்திர மயமாக்குவோம் !

மாடுகளோடு பிணைந்த தொழிலை இயந்திரமயமாக்கி, உற்பத்தியை பெருக்கிடுவதற்காக அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் மூலம் 3·75 கோடி ரூபாய் மதிப்புள்ள 1,500 டிராக்டர்களையும், உதிரிப் பாகங்களையும், 2·025 கோடி ரூபாய் மதிப்புள்ள துளைக்கிணறு அமைக்கும் இயந்திரங்களையும், மண்வாரி இயந்திரங்களையும் இறக்குமதி செய்யத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நடப்பாண்டில் 12,000 ஏக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும், 54,000 ஏக்கரில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் இதுவரை 2,145 இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விற்றுள்ளது. இக்கழகம், வேளாண்மைக் கருவிகளைத் தயாரிப்பதற்காகக் கிண்டி தொழிற்பேட்டைக்கு அருகில், ரூபாய் 5.82 இலட்சம் செலவில் அமைத்து வரும் நவீனப் பணிக்களரி இந்த ஆண்டில் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டில் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 2,750 தனியார் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 900 கிணறுகளில் துளையிடவும், 3,300 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தவும், 900 கிணறுகளை ஆழப்படுத்தவும், 10 சமுதாயக் கிணறுகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1.20 இலட்சம் ஏக்கரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### புதிய ரகங்கள் !

பசுமைப் புரட்சிக்கு உதவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டில் 'பவானி' நெல், 'கோ. 10' கேழ்வரகு, 'கோ. 1' சப்போட்டா, 'எம். சி. யு. 7' பருத்தி ஆகிய முக்கிய ரகங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது. மேலும் பல புதிய, பயன் தரும் ரகங்களை இந்த ஆண்டில் வெளியிட முயன்று வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் கீழ் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் நடப்பாண்டில் குறுகிய கால ரகங்கள், வறட்சி தாங்கும் ரகங்கள் ஆகியவைகளைக் கண்டுபிடித்து வெளியிடவும், குறிப்பாகப் புன்செய் நிலச் சாகுபடியை இலாபகரமானதாக ஆக்குவதற்கான முறைகளைக் கண்டறிந்து தெரிவிக்கவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு இந்த ஆண்டில் தமிழ் நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுள்ள தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டின் விளைபொருள்களின் உற்பத்திச் செலவை ஆராயவும், அவைகளுக் கேற்பக் கட்டுப்படியாகக் கூடிய விலைகளை நிர்ணயம் செய்து பரிந்துரை வழங்கவும் ஒரு குழுவை அமைக்க முடிவு செய்துள்ளது என்பதைத் தமிழ் நாட்டின் உழவர் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### ஒத்துழைப்பு நல்குவீர்!

பசிப்பிணி தீர்க்கும் மருத்துவர்களாகவும், நாட்டின் முதுகெலும்புகளாகவும் விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்கிட முயன்று வரும் இன்றையத் தமிழ்நாடு அரசுக்கு உங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்று தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கின்றேன்.

(12—4—1973 அன்று மாலை 7-03 மணிக்கு திருச்சி வானொலியில் ஒலிபரப்பப் பெற்ற சொற்பொழிவு)

### இனிய கனி கிடைத்திட...!

பழத் தோட்டங்களை வளர்ப்பவர்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்குவதன் மூலமும், பழ உற்பத்தி குறித்து இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதன் மூலமும் பழத் தோட்டங்கள் உள்ள பகுதியை அதிகப்படுத்தவும் தமிழ் நாட்டின் பழ வளர்ச்சித் திட்டம் உதவுகிறது. ஒவ்வொரு தனியாருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக நபர் ஒருவருக்கு ரூ. 6,000 என்கிற உயர்ந்த அளவுத் தொகைக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும், ஏனைய பழ மரங்களை வளர்ப்பதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 2,000 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதமும் நீண்ட காலக் கடன்கள் வழங்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1973—74-ஆம் ஆண்டில் 1,800 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர முடிவுசெய்யப்பட்டுள்ளது.

பழத் தோட்டங்களை அறிவியல் முறையில் வளர்ப்பதற்கும், பழ உற்பத்தியாளர்களுக்குத் தேவைப்படும் நாற்றுகளை வழங்குவதற்கும், தரமான பயிரிடு பொருட்களை வழங்குவதற்கும் விளக்கப்'பாத்திகளாகப் பணிபுரியும் பழத் தோட்டங்களை நிறுவுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். தற்போது தமிழகத்தில் 9 பழத் தோட்ட நாற்றுப் பண்ணைகள் உள்ளன. ஒவ்வொரு பழத் தோட்டத்திலும் வழங்கப்படும் பயிரிடு பொருட்கள் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.





# குட்டுவன் எடுத்த கோட்டம்

கோவை இளஞ்சேரன்

கண்ணகிக்கு ஆர் விகுதி கொடுத்தவர் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். '' கண்ணகியார் மதுரை மூதூர் யாதென வினவின் திறத்தையுடைய'' என்பது அவர் தொடர். சேரன் செங்குட்டுவன், கண்ணகியார்க்குச் சிலை வடித்துக் கோட்டம் எடுத்த நிகழ்ச்சி,

தமிழக வரலாற்றில் ஒரு புகழ்முடி ;
உலக வரலாற்றில் ஒரு புதுமை ஏடு ;
தமிழர் மறக்கமுடியாத பெருமைச் சின்னம்.
அது,
மறுக்க முடியாத வைரத் தூணாகவும்
திகழ வேண்டும்.
அதற்கு,
ஓர் ஆராய்ச்சி முத்திரை குத்தியாகவேண்டும்.

கண்ணகியார் தம் இறுதிக் காலத்தில் ஏறி நின்ற நெடுவேள் குன்றம் எது ? அக்குன்றில் 14 நாட்கள் நின்று இயற்கையெய்திய வேங்கைக் கானலின் தடம் காண இயலுமா ? சேர மன்னன் எடுத்த கோட்டம் எங்கே ? வடித்த சிலையைக் காணக் கூடுமா ?

—இவ்வினாக்கள் நிறைவாக விடுக்கப்படாத புதிர்களாகவே நின்றன. அவிழ்க்க முடியாத முடிச்சுகளாகவும் இறுகியிருந்தன.

புதிர்கள் சிறிது, அதிரக் கேட்கின்றோம்;
இறுகிய முடிச்சுகள், நெகிழக் காண்கின்றோம்.

அதிர்வுக்கும் நெகிழ்வுக்கும் காரணமாகக் கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் சி. கோவிந்தராசனாரும், கேரள ஆராய்ச்சியாளர்களும் தம் தம் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் கோவிந்தராசனார் சிலப்பதிகாரத்தை அடியொற்றிய ஆராய்ச்சிப் பணியைப் பத்தாண்டுகள் மேற்கொண்டார். வேங்கைக் கானலின் தடங் கண்டேன் என்கிறார். அக் கானல் சுருளிமலை மீது உள்ளது என்கின்றார். அங்குதான் குட்டுவன் எடுத்த கோட்டம் உள்ளது என்கின்றார். அவன் வடித்த இமயக் கற்சிலை 'இதோ' என்று படமெடுத்துக் காட்டியுள்ளார். தாம் கண்டுபிடித்ததை இதழ்களில் எழுதினார் ; வாய்ப்பு நேரின் பேசினார். நாகைத் தமிழ்ச் சங்கத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பேசச் செய்தோம். ஆறு ஆண்டுகளுக்கு முன் யான் மலைநாடு சென்றபோது அந்நாட்டுக் கீழைக் கடற்கரையிலுள்ள மாச்சாங் என்னும் ஊரில் வாழும் தமிழன்பர் டாக்டர் துரைசாமி அவர்கள் இதனைக் கேட்டு உணர்ச்சி வயப்பட்டார். ஒரு நூறு உருவா இப் பேராசிரியர்க்கு வழங்குமாறு என்னிடம் அளித்தார்.

இருப்பினும். இக்கண்டுபிடிப்பு குடத்திலிட்ட விளக்காகவே இருந்தது. ஒளிக்கும் ஒளியூட்டும் நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் பறம்புமலைப் பாரி விழாவின் போது இக்கண்டுபிடிப்பைக் கூறினேன். பேரார்வமுடன் கேட்ட கலைஞர் அவர்கள் பேராசிரியரை அழைத்து வருமாறு பணித்தார். அழைத்துச் சென்றக்கால் விவரமாக உசாவி அறிந்தார். செயற்படும் செம்மலாம் அவர் கேரள அரசுடன் தொடர்பு கொண்டார். கேரள அரசினர் தம் ஆராய்ச்சியாளர் இது பற்றி ஆராய்ந்து வருவதாக விடை வந்தது. அவர்களது ஆராய்ச்சி முடிபையும் அறிவித்துள்ளனர்.

'' கேரள நாட்டிலுள்ள கிரங்கனூர்—பகவதிக் கோவிலே குட்டுவன் எடுத்த கண்ணகிக்கோட்டம்'' —இதுதான் கேரள ஆராய்ச்சியாளரின்—கேரள அரசின் அறிவிப்பாயிற்று.

இந்த அறிவிப்பிற்குப் பின்னர் '' தமிழரசு '' மூன்று இதழ்களில் தொடர் கட்டுரையாகக் கண்ணகிக் கோட்டம் பற்றிப் பேராசிரியர் சி. கோவிந்தராசனார் எழுதியுள்ளார்.

கேரள ஆராய்ச்சியாளர் முடிபும் , தமிழ்ப் பேராசிரியர் முடிபும் மாறுபடுகின்றன. இவ்விரண்டையும் ஒருங்கு நினைந்து, மேலும் ஆராய்ச்சிகள் தொடர்தல் வேண்டும். இரு முனைகளிலும் இவ்வாராய்ச்சி நிகழ வேண்டும். இருவகைக் கருத்துக்களையும் அவ்வப்படியே தாங்கவிட்டுவிட்டால் உண்மை வெளிப்படாது. மேலும், ஒரு வரலாற்று உண்மையை நிலைநாட்ட முடியாத எளியவர்கள் என்னும் பழிச்சொல் தென்னக ஆராய்ச்சியாளர்களைச் சாரும்.

எனவே, ஆராய்ச்சி தொடர வேண்டும். ஆராய்ச்சிகளின் ஒருமித்த முடிபு ஒரு கருத்திற்கு அரண்கட்ட வேண்டும். உண்மை ஒன்றாகத்தானே இருக்கும். அவ்வுண்மையை ஏற்றுப் போற்றி மதிப்பது ஆராய்ச்சியாளரின் இயல்பு என்பதும் உண்மையாக வேண்டும்.

இந்நோக்கில் இக்கட்டுரை எழுகின்றது.

நம்முன் எழுந்துள்ள இவ்வாராய்ச்சிக்குக் களமாக அமைந்த கருத்துக்கள் இரண்டு.



ஒன்று, கண்ணகி ஏறி நின்ற வேங்கைக் கானல். இரண்டு, செங்குட்டுவன் இமயக் கல்லில் சிலை வடித்து எடுத்த கண்ணகிக் கோட்டம்.

முதற் கருத்தாகிய சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றம் திருச்செங்கோடு என்றும், திருச்செங்குன்று என்றும் தமிழகத்து இலக்கிய அறிஞர்களால் கருதப்பட்டது. இந்த அடிப்படையில் ஆங்காங்கு விழாக்களும் நிகழ்த்தப்பட்டன.

இதுபோது கம்பம் பள்ளத்தாக்கை அடுத்துள்ள சுருளிமலைதான் நெடுவேள் குன்றம் என்னும் கருத்து வெளிப்பட்டுள்ளது.

இவ்வேங்கைக்கானல் நெடுவேள்குன்றம் பற்றிய கருத்தைக் கேரள ஆராய்ச்சியாளர்கள் அணுகியதாகத் தெரியவில்லை. நெடுவேள் குன்றம் சுருளிமலை அன்று என்பதை மறுத்தும் கருத்து அறிவிக்கப்படவில்லை. எனவே, அன்னார் இதில்—கண்ணகி நின்று மறைந்த வேங்கைக் கானல் கருத்தில் —கருத்தைச் செலுத்த வேண்டியதில்லை என்று கருதியிருக்கலாம் ; அன்றி, உடன்பாடாகவும் அமையலாம்.

ஆனால், இந்த முதற் கருத்து இரண்டாவது கருத்திற்குத் துணை நிற்பது மட்டுமன்றி அரண் கோலுவதும் ஆகும்.

எவ்வாறு ?

எந்த ஆராய்ச்சிக்கும் அகச்சான்றுகள், புறச்சான்றுகள், தடயங்கள், சின்னங்கள் முதலியவற்றை நாடவேண்டும். இந்த ஆராய்ச்சிக்கும் அவையே கைகொடுப்பன. அவற்றுள், மூலச்சான்றாகத் தலைநிமிர்ந்து நிற்பது சிலப்பதிகாரம் என்பது முடிந்த முடிபு. இது மறுக்கப்பட்டால் ஆராய்ச்சிக்கு அடித்தளமே இல்லாமற் போகும். எனவே, சிலம்பைத் தட்டிக் காண்போம் :

மதுரை தீக்கிரையாயிற்று ; கண்ணகியார் மதுரை நகரின் மேற்குத் திசை வாயில் வழியாக மதுரை நகரைவிட்டு வெளியேறினார். இரவும் பகலும் மயங்கிய நிலையில்,

"உரவுநீர் வையை ஒருகரை கொண்டு"—மேற்கு நோக்கி நடந்தார். மேடு, பள்ளம், மலை–பள்ளத்தாக்கு எங்கும் ஏறி இறங்கி நடந்தார். பாண்டி நாட்டு எல்லையை நீங்கிச் சேர நாட்டு அக எல்லையில்,

"நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப்

பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ்" பதினான்கு நாட்கள் நின்றார். பின் இயற்கை எய்தினார்.

இந்த அகச்சான்றை அடியொற்றிச் சென்றால் கம்பம் பள்ளத்தாக்கை அடைந்து, சிறு மடிப்பு மலைகளில் ஏறி இறங்கிச் சுருளிமலையை அடையலாம். இம்மலையே முருகனுக்குரியதாகச் சிலப்பதிகாரம் குறிக்கும் நெடுவேள் குன்றமாகின்றது. சுருளிமலை முருகன் இடங்கொண்ட மலை என்பதை.

" சுருளிமலை மீதில் மேவும் சிலா—உன்னைத்

தோத்தரித்தேன் சுப்பிரமணிய வேலா "—

எனும் பிற்காலப் பாடலும் கூறுகிறது.

எனவே, சிலம்பின் கருத்துப்படி நடந்து சென்ற தமிழ்ப் பேராசிரியர் கண்டுள்ள சுருளிமலையே நெடுவேள் குன்றம் என்பது பொருத்தமாகவும் உண்மையாகவும் அமைகின்றது.

தொடர்ந்து சிலம்பு ஒலிபரப்பும் கருத்து இதனை உறுதிப்படுத்துகின்றது.

மலைவளங் காண வந்த செங்குட்டுவனிடம் மலைவாழ் குறவர் தாம் வேங்கைக் கானலில் கண்ட கண்ணகியார் பற்றி அறிவித்தனர். செங்குட்டுவன் கண்ணகியார்க்குச் சிலை வடித்துக் கோட்டம் அமைக்க முனைந்தான். வடநாடு சென்று இமயத்தில் கல்லெடுத்துக் கனக விசயர் தலைமேலேற்றிக் கங்கைக்கரை வரை தூக்கிவரச் செய்து நீராட்டிச் சேரநாடு மீண்டு சிலைவடித்துக் கோட்டம் எடுத்தான்.

கண்ணகியார் இயற்கையெய்திய சில திங்களுக்குப் பின்னரே குன்றக் குறவர் சேரனிடம் அறிவித்தனர். இமயக் கல்லெடுக்கச் சேரன் வஞ்சி நகரிலிருந்து நீங்கிக் கல்லெடுத்துக் கங்கையாற்றில் நீராட்டிக் கரையில் தங்கியிருந்த நாளில் காலத்தைக் கணித்துரைக்கும் கணி எழுந்து,

" எண்ணுக்கு மதியம் வஞ்சி நீங்கியது " என்றான். எனவே, இந்த இடைக்காலம் 32 திங்களாகின்றது. பின்னர் வடநாட்டினின்றும் வஞ்சி நகர் மீண்டு சிலை வடித்துக் கோட்டம் அமைக்க 30 திங்களேனும் ஆகியிருக்கும். எனவே, கண்ணகி மறைவிற்குப் பின்னர் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் கழிந்த பின்னரே கண்ணகியார் கோட்டம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாகிறது.

கோட்டம் அமைந்த செய்தி சோழநாட்டிலும் பரவியது. கண்ணகியாரின் வளர்ப்புத் தாயாகிய காவற்பெண்டு தோழி தேவந்தி முதலியோர் கண்ணகிக் கோட்டம் கண்டு கண்ணகிச் சிலையைக் காணும் ஆர்வத்தில் புறப்பட்டனர். இச்செய்தியைச் சிலப்பதிகாரத்து வாழ்த்துரை காதையின் முன்னுரையாக அமைந்த உரைப் பாட்டுமடை பின்வருமாறு அறிவிக்கின்றது :

"......................காவற்பெண்டும் அடித்தோழியும் கடவுட் சாத்தனுடன் உறைந்த தேவந்தியும் உடன்கூடிச் சேயிழையைக் (கண்ணகியைக்) காண்டும் என்று மதுரை மாநகர் புகுந்து, முலைப்பூசல் கேட்டாங்கு அடைக்கலம் இழந்து உயிர் இழந்த இடைக்குல மகள் இடம் எய்தி, ஐயை அவள் (மாதரி) மகளோடும் வையையொரு வழிக்கொண்டு, மாமலை மீமிசை யேறிக் கோமகள் தன் கோயில் புக்கு, நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன் திறம் உரைப்பர்மன் "

இப்பகுதியில் தடித்த எழுத்தில் உள்ளவை கவனத்திற் கொள்ளத் தக்கவை. காவற்பெண்டு முதலியோர் கண்ணகிப் படிமத்தைக் காணப் புறப்பட்டனர்; மாதரி மகள் ஐயையை (வழிகாட்டுதற்காகவும்) உடன் கூட்டிக் கொண்டனர் ;—கண்ணகியார் சென்ற வழியாம் வையைக் கரையை வழியாகக் கொண்டனர் ; மலையின் உச்சியில் ஏறினர்; (அங்கிருந்த) கண்ணகிக் கோட்டத்துள் புகுந்தனர்—என்னும் இவை கண்ணகியார் வையை வழியே சென்றேறிய இடம் சுருளிமலை வேங்கைக்கானல் என்பதை உறுதிசெய்கின்றன. மேலும், அங்குதான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதை இறுதித் தொடர் சுட்டுகின்றது. இக்கோட்டமே மங்கல தேவிக்கோட்டம் என்னும் பெயரால் பிற்கால மக்களால் வழங்கப்பட்டுள்ளது. மங்கலதேவி என்பது கண்ணகியாரைக் குறிக்கும் என்பது தமிழ் ஆராய்ச்சியாளர் கட்டுரையில் அகச்சான்றுடனும் புறச்சான்றுடனும் நிறுவப்பட்டுள்ளது. கண்ணகிக் கோட்டம் மங்கலதேவிக்கோட்டம்என்றபெயரால், வரந்தருகாதையில்,

" மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட் டுயர்வரை சேணுயர் சிலம்பில்"
-எனவும்,

" மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
அங்குறை மறையோ னாகத் தோன்றி "

எனவும் இரண்டு இடங்களில் குறிக்கப்படுவதும் நினைக்கத் தக்கது. இம்மங்கல தேவிக் கோட்டமாம் கண்ணகிக் கோட்டமே இதுபோது இடிபாடுகளோடு காணப்படும் சின்னங்கள் கல்வெட்டுகள் எல்லாம் இதுதான் சேரன் அமைத்த இமயக் கற்சிலைக் கோட்டம் என்பதற்குச் சான்றுகளாக நிற்பதைப் பேராசிரியர் விளக்கியுள்ளார்.

மேலும் இக்கண்ணகிக் கோட்டம் காலப் போக்கில் விரிவடைந்துள்ளது. இக்கோட்டம் அமைந்த பரப்பில் மேலும் கோட்டங்கள் பக்கத்தில் எடுக்கப்பட்டுள்ளன. கண்ணகிக் கோட்டத்தின் பக்கத்தில் சமாதி அமைப்பான சிறு கோட்டம் இடிபாடுகளுடன் தென்படுகின்றது. இது கோவலனுக்கு அமைக்கப்பட்டதாகலாம். இதற்கு இயைபான கருத்து மணிமேகலைக் காப்பியத்தில் உளது.

கண்ணகிக் கோட்டத்திற்கு மணிமேகலை வந்தாள். இதனை அறிவிக்கும் மணிமேகலை காப்பிய அடிகள் ஒரு புதுச் செய்தியையும் தருகின்றன. அது கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டது என்பதாம். அக்காப்பியத்து வஞ்சிமாநகர் புக்க காதையின் தொடக்கத்தில் மணிமேகலை,

" தணியாக் காதல் தாய் கண் ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம்பல ஏத்தி" னாள்.

இதுகொண்டு கண்ணகிக் கோட்டம் எடுக்கப்பட்டதற்குப் பின்னர் சேரன் செங்குட்டுவனாலோ, பிறர் எவராலோ அக்கோட்டத்திலேயே கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு பல்வகைப் பொருத்தங்களும், சான்றுகளும் கூடிநிற்கும் சுருளிமலை மங்கலதேவிக் கோட்டமே நெடுவேள் குன்றத்துக் கண்ணகிக் கோட்டம் எனக் கொள்ளவைக்கிறது.



கேரள ஆராய்ச்சியாளர் காட்டும் கிரங்கனூர்ப் பகவதி கோவில் எவ்வகைச் சான்றுகளுடன் கண்ணகிக் கோட்டமாகக் (இமயக்கல்லில் சிலையமைந்த கோட்டமாக) கொள்ளப்பட்டது என்பதற்கு விளக்கம் வெளிவரவில்லை. பெரும்பாலும் செவிவழிச் செய்திகளாலும் அப்பக்கத்துக் கதை வழக்காலும் கொள்ளப்பட்டுள்ளது.

கேரள ஆராய்ச்சியாளர் கருத்திற்கும், தமிழக ஆராய்ச்சியாளர் கருத்திற்கும் ஒரு பெரிய முரண்பாடு உள்ளது. அது மலைக்கும் மடுவுக்கும் உள்ள முரண்பாடாகும். ஆம், கேரளத்தார் அறிவிக்கும் பகவதிக்கோவில் உள்ள கிரங்கனூர் நிலமட்டத்தில் உள்ளது. தமிழறிஞர் அறிவிக்கும் மங்கலதேவிக் கோட்டம் மலையுச்சியில் உள்ளது. இது மலைக்கும் மடுவுக்கும் உள்ள முரண்பாடு அன்றோ? இம்முரண்பாட்டின் முடிபு காண இரண்டு வினாக்கள் எழுதல் இயல்பு. கண்ணகிக் கோட்டம் அமைந்த இடம்,

நிலமட்டமா ?
மலை உச்சியா ?

இவ்விரு வினாக்களுக்குக் கிடைக்கும் ஒரு விடை ஆராய்ச்சியின் முடிவிற்கு உறுதி கட்டும்.

சிலப்பதிகாரம் விடை கூறுகின்றது. காவற்பெண்டு, தேவந்தி முதலியோர் கண்ணகிக் கோட்டம் காணவந்த செய்தியை அறிவிக்கும் உரைப் பாட்டுமடையில் விடை துவங்குகின்றது.

"வையையொரு வழிக்கொண்டு மாமலை மீமிசை யேறிக் கோமகள்தன் கோயில் புக்கு"—இத்தொடர் குறிக்கும் கருத்து மலைமீது கண்ணகியார்க்குக் கோயில் இருந்தது ; அதிற் புகுந்தனர் என்பதன்றோ? இந்த "மாமலை மீமிசை கோமகள்தன் கோயில்" என்பது மலைமேல்தான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதற்கு முதற்சான்று.

இத்தொடரைத் தொடர்ந்து வரும்,
" நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன்

திறம் உரைப்பர்மன்"

—என்னும் தொடர் அவர்கள் வந்த போது அம்மலைமேல் கோட்டத்தில் சேரன் செங்குட்டுவன் இருந்தான் என அறிவிக்கின்றது. பின்னரும், வரந்தருகாதையில்,

"தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர் குறிஞ்சிக் கோமான் தன்முன்
கடவுள் மங்கலம் காணிய வந்த
மடமொழி நல்லார் "—எனத் தேவந்தி

கூறுவதாக உளது.

குறிஞ்சிக் கோமான் (மலையரசன் செங்குட்டுவன்) முன் கடவுள் மங்கலம் என இங்கே குறிக்கப்படுவதும் சேரன் மலைமீது கண்ணகிக் கோட்டத்தில் இருந்தான் என்பதைக் காட்டுகின்றது. இம்மலைமேல் கண்ணகிக் கோட்டத்தில் நிற்கும் செங்குட்டுவன் கண்ணகியாரின் மின்னொளிக் காட்சியைக் காணுகின்றான். கண்டு வியந்து பேசுகின்றான் :

"பொன்னஞ் சிலம்பில் புனைமே கலைவளைக்கை
மின்னுங் கொடியொன்று மீவிசும்பில்
தோன்றுமால் "

—என்னும் அடிகள் பொன் போன்ற அழகிய மலையில் கண்ணகியின் காட்சியைக் கண்டதாகக் குறிக்கிறது. மலைமேல் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதற்கு இஃது இரண்டாவது சான்று.

இதைத் தொடர்ந்து கண்ணகியாரின் வான் நிழல் ஒலியாக, ''வென்வேலான் குன்றில் விளை யாட்டு யான் அகலேன் ''

—என்று குறிக்கப்படுகின்றது. இங்கும் நெடு வேள் (வென்வேலான்) குன்றின்மேல் (கோட்டத் தில்) எனப்படுவது,

மூன்ருவது சான்று.

வரந்தரு காதையில் தேவந்தி தெய்வமுற்றுப் பேசுகின்ருள் ;

''மங்கல மடந்தை கோட்டத்து ஆங்கண்
செங்கோட்டு உயர்வரை சேணுயர் சிலம்பில்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய
அணிகயம் பலவுள ''

—என்னும் இவ்வடிகளில் கண்ணகியார்க்குக் கோட்டம் அமைந்த மலை நேராக உயர்ந்த உச்சியை உடைய உயர்ந்த மலை என்று குறிக்கப் படுகின்றது. இது,

நான்காவது சான்று.

இம்மலைப் பகுதியில் பல அழகிய சிறு நீர்ப் பள்ளங்கள் இருந்தன எனப்படுகின்றது. இதற்கேற்ப நீர்ப்பள்ளங்கள் சுருளிமலைப் பகுதி யில் காணப்படுவன,

ஐந்தாவது சான்று.

சிலப்பதிகாரம் நிறைவேற்றும் இறுதிப் பகுதி யில் மலைமேல் நிற்கும் சேரன் செங்குட்டுவன்,

'' பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து

தேவந் திகையைச் (பூசை) செய்கென் றேவி

வலமுற மும்முறை வந்தனன் வணங்கி ''

நின்ருன் எனப்படுகிறது.

ஆருவது சான்று.

இவ் ஆறு அகச்சான்றுகளையும் தொடர்புடன் நோக்குங்கால் கண்ணகிக் கோட்டம் மலைமேல் எடுக்கப்பட்டதே என்பது உறுதியாகின்றது.

கேரளத்தார் கூறும் கிரங்கனூர் மலைப்பகுதி யன்று ; 20 கல் தொலைவிலேயே மலை உள்ளது. அம்மலை மேலும் குறிக்கப்படும் பகவதி கோவில் இல்லை. எனவே, எவ்வகையிலும் கிரங்கனூர் ஈடுகொடுக்க இயலாததாகின்றது.

மற்ருென்று இங்கே நோக்கத்தக்கது. சேரன் செங்குட்டுவன் முன்னர் மலைவளம் காணச்சென்ற செய்தி அது. அவன் வஞ்சிமாநகரிலிருந்து புறப் பட்டுக் கிழக்கே செல்பவன், யானை முதலிய கூட்டத்துடன் சென்றதால் மடிப்பு மலைகளை ஏறிக் கடக்காமல் பள்ளத்தாக்குகளின் வழியாக வளைந்து வளைந்து நெடுந்தொலைவு கடந்து மலை மேல் ஏறினுன். அவன் சென்றதை,

'' பைந்தொடி ஆயமொடு பரந்தொருங்கு——
ஈண்டி——
வஞ்சி முற்றம் நீங்கிச் செல்வோன் ''

—என இளங்கோவடிகள் அறிவிக்கின்ருர். '' நீங்கிச் செல் வோன் '' என்பது கொண்டு இதனை ஒரு பயண மாகவே கொள்ளலாம். இதனை (செல்வோன் என்பதை) மனத்தில் கொண்டு பின்னர் வரும் கண்ணகிக் கோட்டத்தில் கண்ணகிச் சிலையினைக் கடவுள் மங்கலம் செய்ய முனைந்த நிகழ்ச்சியோடு காணவேண்டும்.

இமயக் கல்லில் கண்ணகியார் வடிவம் வடித் தாகி விட்டது. அதற்கெனக் கோட்டமும் எடுத்தாகிவிட்டது. அதிற் சிலையை நாட்டிக் கடவுள் மங்கலம் செய்ய வேண்டும். அதற்கு முனைந்தான் செங்குட்டுவன். இதைக் குறிக்கும் சிலப்பதிகாரம், வஞ்சிமாநகரிலிருந்து '' சென்று'' அப்பணியை நிறைவேற்றிய குறிப்பைக் காட்டு கின்றது. செங்குட்டுவன், அந்தணன், ஆசான், பெருங்கணி,

'' சிறப்புடைக் கம்மியர் தம்முடன் சென்று

பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து ''—
கடவுள் மங்கலம்

செய்ததாகப் பேசுகின்றது. இங்கு, ''சென்று'' என்று குறித்திருப்பதையும் முன்னர் '' நீங்கிச் செல்வோன் '' என்றதோடு இணைத்து நோக்கி ஞல் சிலையை நாட்டவும் வஞ்சியிலிருந்து ஒரு பயணம் சென்றதாகவே கொள்ள நேரும். அப் பயணம் எவ்விடம் கருதியது ? அண்மையில் உள்ள கிரங்கனூர்க்கு எனக் கொள்ள இயலாது. கண்ணகி மறைந்த இடத்தில் கோட்டம் எடுப்பது பொருத்தமானது என்னும் கருத்தோடு இயைவ தால் அம்மலை நோக்கிய பயணமாகக் கொள்ள லாம். இதற்கு முன்னர் கண்டுள்ள கருத்துக்க ளோடு பொருத்திப் பார்த்தால் இக்கருத்து



வலிந்து கொள்வதாகாது. எனவே, '' சென்று'' என்னும் சொற்குறிப்பு, பக்கத்துணையாய் நின்று கண்ணகிக் கோட்டம் அமைந்தது வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றமாம் சுருளி—மலையே என்பதைக் குறிக்கிறது.

இறுதியாகக் கண்ணகியார் சிலையை ஆராய வேண்டும்.

இதுபோது காணப்பட்டுள்ள சிலை (சுருளிமலை மீது காணப் பட்டுள்ளது) அமர்ந்த தோற்ற முடையது. அடிப்பீடமும் சேர்ந்து இரண்டு அடிக் கும் குறைவான உயரமும், ஓர் அடி அகலமும், முக்கால் அடி பருமனும் கொண்ட தாம். இஃது ஓர் அம்மி அளவினதேயாகிறது. இந்த அளவுக் கல்லை இருவர் தூக்கலாம். நின்ற கோலத்தில் உள்ள கிரங்கனூர் பகவதிச் சிலைக் கல் இருவர் எந்நிலையிலும் தூக்கவோ, தாங்கவோ இயலாத தாகும்.

மேலும் சுருளிமலைச் சிலையின் அடிப்பகுதியில் ஒரு மூளி உண்டாகி வேறு வகையான கல் பொருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஓர ளவு கவனத்தோடு நோக்கினுலும் இதனைக் காண முடிகிறது. இவ்வாறு நேர்வதற்குக் காரணம் உண்டு.

கனக விசயர் தலையில் கல்லை ஏற்றினுன் என் பது அவர்களைத் தூக்கச் செய்ய வேண்டும் என்பதன் அறிகுறிச் செயலே அன்றி, இமயத் தில் ஏற்றி வஞ்சியில் இறக்கினுன் என்பதன்று. ஆயிரம் கல் தொலைவு தூக்கிவரச் செய்தல் இய லாத ஒன்று. சிலப்பதிகாரப்படி நோக்கினும் கல்லை எடுத்த இடத்திலிருந்து நீராட்ட வேண் டிய கங்கைக் கரை வரைதான் கனக விசயர் தலை யில் கல் கொணரப் பட்டது என்பதை உணரலாம். அவ்வாறு கங்கைக் கரைவரை வந்த கல் அல்லது சிலை பின்னர் வஞ்சிமாநகர் வரையும், மேலும் கோட்டம் அமைந்த இடம் வரையும் கொண்டு வரப்பட்ட போக்குவரத்து வகையால் விழுந்தோ, மோதியோ மூளி உண்டாக்க வழி உண்டு. எனவே இந்த மூளியும் ஒரு சான்ருகின்றது.

மேலும்,

(1) சுருளிமலையில் காணப்பட்ட கண்ணகிச் சிலைக்கல் 1,800 ஆண்டுகள் பழமையைக் காட்டும் தேய்மானத்துடன் உள்ளது.

(2) அந்தத் தேய்மானத்திலும்,

'' கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தகர் இயற்றிய விளங்கிய கோலம் ''

—எனச் சிலப்பதிகாரம் குறிப்பதற் கேற்பக் கலைத்திறம் விளங்குகின்றது. அதில் மேலோட்ட வரிகளாக அணிகலன் அமைப்பும் தெரிகின்றது.

(3) சிலையில் இடப்புற மார்பின் காப்புப் பகுதி சிதைந்து தோற்றமளிக்கிறது. (கண்ணகியார் திருகி எறிந்தது முலைக்காம்பு என்பதைத் '' தமிழரசு '' இதழில் '' முடிச்சவிழ்க்கும் சொல் '' என்னும் எனது கட்டுரையில் தெளி வாக்கப்பட்டுள்ளது).

(4) சிலையமைப்பு தெய்வப் படிவமேயாயினும் தெய்வ வடிவக் குறிகளுடன் மாந்தர் வடிவக் குறிகள் தென்படுகின்றன.

(5) கல்லின் நிறம் வெளிரிய மஞ்சள் நிறமாகத் தோற்றமளிப்பது, கந்தகக் கலப்புடைய இமயக் கல்லின் தன்மையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

இவ்வைந்து சான்றுகளோடு முன்னர் [illegible] பட்ட ஆறு சான்றுகளையும், பிற [illegible] யும் தடயங்களையும் இணைத்து நோக்குகையில் சுருளிமலை மங்கல தேவிக் கோட்டத்தில் [illegible] பட்டுள்ள கண்ணகிச் சிலையே சேரன் செங்குட்டு வன் வடித்த சிலை என்று கொள்ளும் உறுதி [illegible] கிறது. இதன் இடையில் குட்டுவன் எடுத்த கோட் டம் சுருளிமலை என்று இதுபோது வழங்கப்படும் நெடுவேள் குன்றத்தின் மீது உள்ளதுதான் என்ற உறுதியும் நிலைக்கின்றது.

இவ்வுறுதிக்கும் ஒரு முத்திரை குத்த இயலு யானதும், வேறு எவ்வகை மறுப்பும் கூற இயலா மற் போவதுமான ஆராய்ச்சி ஒன்று உண்டு. கருத்து மாறுபாடு எழுந்துள்ள இரு சிலைக் கற் களின் சிலை ஒவ்வொன்றை எடுத்து ஆராய்வது அது. இக்கால அறிவியல் துணை கொண்டு [illegible] இமயக் கல்லின் தன்மை கொண்டது [illegible] விடலாம். அவ்வாறு காண்பது முடிந்த முடிவான முத்திரையாகும்.

இம்முத்திரையையும் நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே குத்த மனம் பற்றியுள்ளார்கள்.

மேலும் இருமுனையிலும் ஆராய்ச்சிகள் தொடர் தல் பல உண்மைகள் வெளிப்பட வாயிலாகும். கேரளப்பகுதியினரும், தமிழக ஆராய்ச்சியாள ரும், குறிப்பாக மதுரைப் பகுதிப் புலவர்களும் அறிஞர்களும் இது குறித்த தம் கருத்துக்களையும் தாம் தாம் அவ்வப்பகுதிகளில் காணும் சின்னங்கள் தடயங்களையும் வெளிப்படுத்தி உண்மை நிலைக்கத் துணைபுரியுமாறு வேண்டுகின்றேன்.

## சூரியகாந்தி எண்ணெய் உடல் நலத்திற்கு உகந்ததே!

சூரியகாந்தி எண்ணெய்யின் பயன், அதிலுள்ள சத்துணவு பற்றித் தமிழக அரசு ஏற்கெனவே ஆராய்ந்து, அது உணவுடன் உட்கொள்ள உகந்தது என்றும் எவ்விதத் தீமையையும் பயப்பதில்லை என் றும் அறிவித்துள்ளது. சென்னையிலுள்ள, தமிழக அரசின் நல்வாழ்வு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு திட்ட உதவி இயக்குநர் அவர்கள் சூரிய காந்தி எண்ணெயையும், அதன் பிண்ணுக்கையும் ஆராய்ந்து விஞ்ஞான ரீதியான தன் கருத்தைப் பின்வருமாறு தெரிவிக்கிருர்.

வளர்ந்து வரும் நாடுகளில் சூரிய காந்தியின் உபயோகம் பலப் பல ! அதிலும் சத்துணவில் அது முக்கிய இடம் பெற்றுள்ளது. சூரிய காந்தி எண்ணெய் சமையலுக்கு ஏற்றது. அதிலுள்ள '' லினேலிக் அமிலம் '' மனித உணவில் நாள் தோறும் இடம்பெற வேண்டிய கொழுப்புச் சத்தின் ஒரு பகுதியாகும். இரத்தக் குழாய்கள் கடினமாகி இரத்தக் கொதிப்பு உண்டாகும் நிலை யைத் தவிர்த்து '' Artherosclerolosis '' என்னும் வியாதி வராமல் தடுக்கிறது. இந்த லினேலிக் அமிலம் நீரிழிவு நோயாளிகளுக்கும் பயன்தர வல்லது.

சூரிய காந்திப் பிண்ணுக்கு புரதம் நிறைந்ததாகும். இதை ரொட்டி முதலிய தின்பண்டங்களில் இருபது சதம் வரை கலந்து உபயோகிக்கலாம்.

இவ்வாறு ஒரு நல்ல எண்ணெயையும், புரதம் நிறைந்த பிண்ணுக்கையும் கொண்ட இந்தச் சூரிய காந்தி அதிக அளவில் பயிரிடப்பட்டு, குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும் சத்தும், [illegible] மும் உள்ள பொருளாக விளங்க வேண்டும்.

மேற்கண்ட மருத்துவ நிபுணரின் கருத்துப்படி சூரியகாந்தி எண்ணெய் உடல் நலனுக்கு உகந்தது. பொதுமக்கள் இதுபற்றி எவ்வித ஐயப்பாடும் கொள்ளத் தேவையில்லை.

[தகவல் : கூடுதல் வேளாண்மை இயக்குநர், (ஆராய்ச்சி), திருச்சிராப்பள்ளி—18.]

(கும்பகோணத்தைச் சேர்ந்த திரு. சேஷகிரி என்பவர் 14—3—1973 நாளிட்ட '' இந்தியன் எக்ஸ்பிரஸ் '' இதழில் சூரியகாந்தி எண்ணெயைச் சமையலில் சேர்ப்பதால் சில தீமைகள் வரலாம் என்று ஐயப்பாடு தெரிவித்துள்ளார். இதனுல் சிலருக்குச் சூரிய காந்தி எண்ணெய் பற்றிய ஐயம் ஏற்பட்டுள்ளது. அவர்களது ஐயத்தைப் போக்கிட மேற்கண்ட விளக்கம் உதவிடும்.)



தமிழ்நாட்டின் அழகெல்லாம் தழுவிமிகச் சுவைப்பதற்குக்
குமிழ்போன்ற வாய்வொன்று குறைவாகும் மிகக்குறைவாம் !
பிறவியின் பின் பிறவியெனப் பிறங்குகிற தமிழினத்தில்
திறமாகப் பிறந்தால்தான் சிறிதேனும் நுகர்ந்திடலாம் !
நலத்திட்டம் பற்பலவும் நடக்கின்ற தன்மையினைப்
புலத்தினிலே பூரிக்க அறிந்துவரப் போய்வந்தேன் !

குமரியிலே குலவுகிற சுழல்விளக்குச் சுடர்உமிழ
அமருகிற தென்முனையின் அழகொழுக ஆர்த்துயரும்!
அதனடியில் தமிழ்நாட்டின் சுற்றுலவின் அகமோங்கி
இதமூட்டும் இல்லம்போல் வசதியெலாம் பொதிந்தினிக்கும் !
அமைதிக்கே இடமாக ஆழ்கடலில் நிமிர்ந்திருக்கும்
சிலையத்தே அமர்ந்தங்கே சிந்தித்த நரேந்திரனின்
நினைவாக நிலவுகிற மண்டபத்தை நெருங்கிடவே
முனைநாடிப் பாரதத்தோர் மொய்ப்பதனால் மெய்சிலிர்த்தேன் !

நெல்லையிலே இயற்கையெழில் நிலவுகிற குற்றாலம்
அல்லென்றும் பகலென்றும் அறியொண்ணா விழியிழந்தோர்
பல்லாண்டும் தொல்லையுற்ற பாமரரும் கலைஞர்தம்
நல்லரிய திட்டத்தால் நாடுவதைக் கண்ணுற்றேன்!
சத்துணவை உண்ணாமல், தவறான பச்சிலைகள்
மெத்தவுமே விட்டதனால் விழியிழந்த கதையெல்லாம்
தொண்டாற்றும் மருத்துவர்கள் தொகுத்துரைக்கத் துணுக்குற்றேன் !
மண்டுகிற அறியாமை வறுமையினால் விழியிழந்த
பலநூறும் ஆயிரத்துப் பாமரரை அரவணைத்தே
நலவழியில் விழியளிக்கும் நலத்திட்டம் போற்றிட்டேன் !

எளியவரை வண்டிகளில் ஏற்றிவந்தே இருப்பித்தார் !
ஒளிமீட்டுத் திருமணத்தின் விருந்தைப்போல் உபசரித்துக்
கண்ணீரைத் துடைத்தெறிந்து கண்ணளிக்கும் திட்டமதன்
நன்மையினை எடுத்துரைக்க நாவுக்குத் திறனில்லை !

தஞ்சையிலே தாய்மார்கள் மகப்பேற்றைத் தடுத்திடவே
அஞ்சாமல் அணியணியாய் அறுவையினைச் செய்தேற்க
மருத்துவநன் மனைகளிலே மஞ்சத்தே வீற்றிருக்கக்
குருத்துகளாம் குழந்தைகட்குக் காப்பகத்தை அணித்தேயே
நிறுவியங்கு விளையாட நிறைச்சத்தின் உணவூட்டி,
வறுமையினால் வரும்நலிவைத் தடுப்பூசி போட்டு,
நல்லாடை அணிவித்து நற்றுயிலும் படுத்திருந்தே
புல்லரிக்கப் பார்த்துவக்கும் ஈடில்லாப் பொற்பணிகள்
கண்டுவந்தேன் ; தாய்சேயின் நலப்பணிகள் கருத்தாகத்
தொண்டர்தம் செயல்திறனால் துலங்குவதால் துள்ளுகிறேன் !
மக்கள்தம் மனவெழுச்சி தூண்டிவிடும் கவியுலகின்
பக்குவத்துப் பாட்டியவர் ஔவைக்குக் கனிதந்த
அதிகனது பதியான தருமபுரி மாவட்டம்
புதிதான விழாக்கோலம் பூண்டிடுதல் பார்த்துவந்தேன் !
விடுதலையின் வெள்ளிவிழா கொண்டாடும் முகத்தானே
நெடுகபல ஊர்களிலும் நெடிதோங்கும் மாவட்ட
அதிகாரி அனைவருமே ஒவ்வொருநாள் ஓரூரில்
பதியெழுந்து செல்வதுபோல் பணிமனையே நகர்ந்ததுபோல்
திரண்டொருங்கு மக்களது சிக்கலெல்லாம் செவியுற்றே
இரண்டொன்றே மணித்துளியில் இடுக்கண்கள் களைந்தகற்றி,
இனிநடக்க வேண்டியதை எழிலாகத் தெரிவித்து,
நனிநடந்த விழாவதனைக் கனிவாக மாவட்ட
ஆட்சியதன் தலைவருமே அலுவல்செய் பாங்கான
காட்சியினைக் கண்டுவந்தேன் ! கண்ணான குடியரசின்
தத்துவமே செயற்படுத்தும் தருமபுரி தகவுணர்ந்தேன் !
மெத்தவுயர் தமிழகத்தின் மேன்மையெல்லாம் காணவல்லேன் !
நலத்திட்டம் பற்பலவும் நாட்டகத்தின் மக்களினை
இலக்காக அடைதலால் இறும்பூதே எய்துகிறேன் !
தமிழாளும் தரணியிலே வாழ்வதற்கே தலைநிமிர்வேன் !
அமிழ்தான செயற்திறனை அகமார வாழ்த்துவனே !



தமிழகத்தில் இன்றுள்ள 81,80,930 குடும்பங்களின் வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவது கடினமான பணியாகும். பத்தாண்டிற்கு 22.01 விழுக்காடு மக்கள் தொகை பெருகி வருவதால் இப் பிரச்சினை தீர்க்க முடியாத அளவிற்கு வளர்ந்துவிடக் கூடும்.

இப்பிரச்சினையை ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அதனை மிகக் குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சென்ற பத்தாண்டுகளில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சுமார் 4,178 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திச் சுமார் 30,000 வீடுகளை எல்லா வருமான வகுப்பினருக்கும் கிடைக்க வகை செய்துள்ளது.

செங்கற்பட்டு. மதுரை, சேலம், திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மக்களின் வருவாய்க்குத் தகுந்த நவீன வசதிகள் கொண்ட எழில்மிகு வீடுகள் கட்டுவதற்கான முன்னேடித் திட்டங்கள் உருவாகி வருகின்றன.

வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 8·63 கோடி செலவில் கொரட்டூர் கலைஞர் கருணநிதி நகர், அறிஞர் அண்ணு நகர், கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளில் கவர்ச்சிகரமான குடியிருப்புகள் உருவாகி வருகின்றன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தன் திட்டங்களுக்கான கட்டடப் பொருள்களை உருவாக்கும் பணியினையும் மேற்கொண்டுள்ளது. இதன்

## வீடு பெற...

அரசு ஊழியர்களுக்காக, சுமார் 4,925 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

நீதித்துறை, வருவாய்த் துறையைச் சார்ந்த அலுவலகங்களுக்காகக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தையும். இவ்வாரியம் செயலாற்றிக் கொண்டு வருகிறது.

தொழிலாளர்களுக்காகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டிவருகின்றது. தமிழக அரசின் சாதனைகளில் ஒன்ருக குடிசைவாழ் மக்களுக்காகவும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இப்பணியை, கோவை, தஞ்சை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் மேற்கொண்டுள்ளது.

வாயிலாகத் தொழிலாளர்களுக்கான வேலே வாய்ப்புகள் பெருகி வருகின்றன.

இயந்திர உதவியுடன் கூடிய செங்கல் சூளை, மொசைக் ஓடுகள், சுகாதாரத் துப்புரவுச் சாதனங்கள், குழாய்கள், கதவுகள், சன்னல்கள் தயாரிக்கும் துணைத் தொழில் முயற்சிகளை விரைவில் வாரியம் மேற்கொள்ள இருக்கிறது.

ஆசியாவிலேயே முதன் முதலாகத் தக்கைக்கல் (செல்-கிரீடு) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று 1972-ஆம் ஆண்டு எண்ணூரில் தொடங்கப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், அவரவர் வசதிக்கும் ஏற்ப நவீன வீடுகள் கட்டித் தருவது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் குறிக்கோளாகும்.



# காடு வளமே நாட்டு வளம்!

நாட்டின் இயற்கை வளத்தையும், தொழில்களுக்கான மூலப் பொருள்களையும் வழங்குவது காடுகளேயாகும். காட்டு வளமே நாட்டு வளம் என்பதனை உணர்ந்த தமிழக அரசு காடுகளைப் பாதுகாத்து வளர்ப்பதில் தீவிர அக்கறை காட்டி வருகிறது.

காட்டு வளத்தினைப் பெருமளவில் பெருக்க அரிய திட்டங்கள் பலவற்றைத் தீட்டி வரும் வனத் துறையின் அரும்பணிகள் என்னென்ன என்பதனை அறிந்து கொள்வோம்!

வனத் துறையின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,400 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,228 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கக் காடுகளும், 3,812 சதுர கிலோ மீட்டர் ஒதுக்க நிலங்களும் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் காடுகள் 16 சதவிகிதமேயுள்ளது. ஏற்றத் தாழ்வில்லாத பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் அனைந்திந்தியக் காடுகள் உள்ளனவாய் இருத்தல் வேண்டும்.

வேளாண்மைக்கு அடுத்தபடி, காடுகளே நிலப்பயன் பாட்டில் முக்கிய இடம் பெறுவதாகும். விவசாயமும், காடுகளும், மக்களுக்குப் பலவகையில் பயனளிப்பவையாகும். விவசாயம் மக்களுக்கு உணவு அளிப்பதோடு விலங்குகளுக்குத் தீவனங்களையும் அளிக்கிறது. அதே போலக் காடுகளும், வெட்டு மரங்கள், விறகு, தொழிற் கூடங்களுக்குத் தேவையான மரங்கள், உரம் ஆகியவற்றை அளிக்கின்றன. இது தவிர முக்கியமாக, நிலவளப் பாதுகாப்பிற்கும், நிலத்தில் ஈரப் பசையைக் காப்பதற்கும், சுற்றுப் புறக் காற்று பாழ்படுதலைத் தடுக்கவும் காடுகள் பணிபுரிகின்றன.

1971–72-ஆம் ஆண்டில் 35,241 ச.கி.மீ. பரப்பு காடுகளல்லாப் பிற காரியங்களுக்காகவும், நிலமில்லாத ஏழைகளுக்கு நிலங்கள் ஒதுக்கவும், வழங்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

தொழில் வளப்பெருக்கம், நகர்ப் புறங்கள் விரிவடைதல் ஆகிய காரணங்களால் சுற்றுப் புறக் காற்றின் தூய்மையைக் காத்தல், காடுவாழ் விலங்குகளை அழிவின்றிக் காத்தல் ஆகியவைகளுக்காகக் காடுகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்.

பல தொழிற் கூடங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைக் காடுகள் வழங்குகின்றன. முக்கியமாகக் காகிதம், ரேயான், தோல் பதனிடல், பெட்டிக்குரிய அட்டை தயாரித்தல் ஆகியவைகளுக்குக் காடுபடு பொருள்கள் பயன்படுகின்றன. இவைகளுக்காகவும், காடுகளைப் பேணுதல் அவசியமாகும்.

1971–72-ஆம் ஆண்டில் வனத் துறையின் வருவாய் ரூ. 456 இலட்சம். 1972–73-ஆம் ஆண்டில், ரூ. 357 இலட்சம் எதிர்பார்க்கப்படுகின்றன. சந்தன மரங்கள் மூலமாகக் கிடைக்கும் தொகை, இத்துறையின் வருவாயில் கணிசமான பங்காகும். அதாவது, ஏறக்குறைய ரூ. 124 இலட்சம் கிடைத்து உள்ளது. மரங்களிலிருந்து வருவாய் ரூ. 85 இலட்சமும், விறகுகளால் வருமானம் ரூ. 99 இலட்சமும் 1971–72-ல் கிடைத்திருக்கின்றது.



காடுவளர்ப்பு நீண்டகாலத் திட்டமாகும். இவைகளின் வளர்ப்புக்கு முதலீடு செய்து பயன்பெறுவதற்கு நீண்ட காலம் ஆகும். இருந்தும், முந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்களின் வாயிலாக நமது மாநில வருவாயும், தொழில் வளர்ச்சியும் பெரிதும் மேம்பாடு அடைய அவை வழிகோலியுள்ளன. 1972-ல், முந்திரித் தோட்டங்கள் மூலம் சுமார் ரூ. 18 இலட்சம் கிடைத்துள்ளது. கன்னியாகுமரியிலுள்ள அரசினர் ரப்பர் தோட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கியதோடு, இந்த ரப்பரை விற்றதன் மூலம் 1971–72-ல் ரூ. 7·81 இலட்சம் கிடைத்துள்ளது. ரப்பர் தோட்டங்களில் பால் எடுக்கும் மரங்களின் தொகை மேலும் அதிகமாகி, வருவாயும் பெருக நல்ல வாய்ப்புகள் காணப்படுகின்றன.

காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளாகிய காகித ஆலை, ரேயான் தொழிற்சாலை போன்ற தொழிற் கூடங்களுக்குப் பயன்படும் மூலப் பொருள்களை நீலகிரித் தைல மரங்களும், கற்பூர மரங்களும், மூங்கில் காடுகளும் தொடர்ந்து வழங்கி வருகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொடங்கிய வனப்பண்ணைக் காடுகளும் தற்போது பயன் தரும் நிலையை அடைந்து வருகின்றன. கிராம மக்களுக்கு வேண்டிய விறகு வெட்டுமரம் போன்ற தேவைகளை அவை பெரிதும் நிறைவு செய்து வருகின்றன.

1971–72-ல் வனத் துறையின் மொத்தச் செலவு ரூ. 365 இலட்சமாகும். 1972–73-ல் ரூ. 442 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1971–72-ல் வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 101·78 இலட்சம் செலவிடப்பட்டது. இத்தொகையில் ரூ. 80 இலட்சம் ஆதாயம் தருகின்ற தொழில்களுக்குத் தேவைப்படுகின்ற தோட்டங்களை வளர்த்தல், பண்ணைக் காடு வளர்ப்புத் திட்டம், காடுகள், குறித்த ஆய்வு, செயல் திட்டங்கள், வன விலங்கு வாழ் இடங்களைப் பேணிப் பராமரித்தல், வைகை மேட்டூர் நீர் கோள் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்குச் செலவாயின.

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில், வறட்சித் துயர் தணிப்புப் பருதித் திட்டத்தின்கீழ் 1971–72-ல் ரூ. 4·89 இலட்சம் செலவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் பொருட்டுக் காடுகள் துறை, நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டம், கன்னியா குமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் வைத்துப் பயிரிட முற்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசு நீண்ட காலக் கடனுதவி வழங்குகிறது. 1971–72-ல், ரூ. 53·44 இலட்சம் இத்திட்டங்களுக்காகச் செலவிடப் பட்டுள்ளது.

முக்கியமான காடுபடு மூலப் பொருள்களை வழங்குவதன் வாயிலாக, வனத்துறை மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் சிலவற்றின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக இருந்து வந்துள்ளது.



1971–72-ல் சேலம் மாவட்டத்தில் உள்ள சேஷசாயி காகிதத் தொழிற்சாலைக்கு 55,047 டன் உலர்ந்த மூங்கில் வழங்கப் பட்டது. காகிதம் தயாரிப்பதற்குக் கற்பூர மரங்கள் போன்ற கடின மரங்களையும் இத் தொழிற்சாலை பயன்படுத்துகிறது. நடப்பாண்டில் இவ்வாலைக்கு 3,766 டன் கற்பூர மரங்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சன் காகித ஆலை, பாபநாசம் மலைகளிலிருந்து 'ஈட்டா' புல் எடுத்துக் கொள்வது தொடர்பாக வனத்துறையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. 1971–72-ல் இந்த ஆலை சுமார் 4,212 டன் 'ஈட்டா' வகைப் புல்லைக் கொண்டுவந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், சிறுமுகை என்னும் இடத்தில் உள்ள சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தார், ரேயான் கூழ் தயாரிக்க, கற்பூர மரக் கட்டைகளையும், மிலாறு மரக் கட்டைகளையும் பயன்படுத்துகின்றனர். 1971–72-ல் நீலகிரி, கோடைக் கானல் குன்றுகளில் 1,007 ஏக்கர் கற்பூர மரத் தோட்டங்களும், 3,267 ஏக்கர் மிலாறுத் தோட்டங்களும் இத் தொழிற்சாலையின் மூலப் பொருள்களுக்காக ஒதுக்கப் பட்டன.

இத்துறை, மிலாறுப் பட்டைகளை மேட்டுப் பாளையத்தி லுள்ள டான் இந்தியா நிறுவனத்திற்குத் தோல் பதனிட உதவும் மிலாறுச் சாரம் எடுக்க வழங்கின. 1971–72-ல் 6,647 டன்கள் மிலாறுப் பட்டைகள் வழங்கப்பட்டன.

இத்துடன் இராச பாளையத்திலுள்ள மதருஸ் சிப் போர்ட்ஸ், ஆலைக்கு 685 கன மீட்டர் மென்மரங்கள் வழங்கப்பட்டன. 1,352 டன் உலர்ந்த புல், பவானிசாகரிலுள்ள தமிழ் நாடு கார்டு போர்டு மற்றும் காகித ஆலைக்கு அளிக்கப்பட்டது.

வைகை அணையிலுள்ள காடு வளர்ப்புப் பயிற்சிக்கூடம், இத் துறையைச் சேர்ந்த வனப் பணியாளர்களுக்கும், வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது. 1971–72-ல் 60 வனப்பணியாளர்களுக்கும் 47 வனக்காப்பாளர்களுக்கும் பயிற்சி அளித்தது.

வனத்துறையில் நல்ல முன்னேற்றம் காண்பதற்கு அடிப்படையாக, நன்கு அமைக்கப்



பட்ட சிறந்த ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று அவசியமாகும். வன ஆராய்ச்சிக்குப் பொறுப்பு வகிக்கும் மாநில வனவியல் பிரிவு, மரவளர்ப்புப் பற்றியும் சில முக்கியமான மரவகைகள் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறது. காடுபடு பொருள்களை மூலமாகக் கொண்டு செயல்படும் தொழில்களின் தேவையை நிறைவு செய்ய, வெளிநாட்டு மர இனங்களைப் பயிரிடல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வினங்களை அதிக அளவில் காடுகளில் உண்டாக்குவதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம். காடு வளர்ப்புத் தொடர்பாகவும், முக்கியமான இனங்களில் பிற கூறுகள் தொடர்பாகவும், மண்வளம் பற்றிய பகுப்பாய்வு, வனப் பயிர்களின் நோய் பற்றிய ஆய்வு முதலிய பிரிவுகள், மாநில வனவியல் ஆராய்ச்சி அலுவலரின் கீழ் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் பலவித வன விலங்கினங்களும், பறவைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. கீழ்க்கண்ட வனவிலங்கு உய்விடங்கள் நமது மாநிலத்தில் உள்ளன.

1. முதுமலை வனவிலங்கு உய்விடம். 2. முண்டந்துறை புலிகல் உய்விடம். 3. கோடியக்கரை வனவிலங்குய்விடம். 4. கிண்டி மான் பூங்கா. 5. வேடந்தாங்கள் நீர்ப்பறவைகள் உய்விடம். 6. ஆனைமலை வனவிலங்குய்விடம்

சென்னைக்கருகாமையில், கிண்டிப் பூங்கா ஒதுக்கக் காட்டில், ஒரு தனிநபர், பாம்புப் பண்ணை நடத்தி வருகிறார். இப் பண்ணை, மக்களை வெகுவாகக் கவர்கிறது. இந்தப் பாம்புப் பண்ணையை அமைப்பதற்காக, அரசு குத்தகை அடிப்படையில் ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கிளிக்கூடு என்ற கிராமத்தில் ஒரு முதலைப் பண்ணையும் உள்ளது.



இவ்வுய்விடங்கள் சரியானபடி பராமரிக்கப் பட்டால் பெரிய அளவில் சுற்றுலாப் பயணிகளை நிச்சயம் ஈர்க்கும் ஆகவே, பல வசதிகளை, முக்கியமாகத் தங்கும் விடுதிகள், சாலைகள், போக்குவரத்து வசதிகள் போன்றவைகளை இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு அதிக அளவில் செய்துகொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

காடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு, சந்தனமர விற்பனையின் மூலம் கிடைக்கிறது. சந்தன மர வளர்ப்பைப் பெருக்கும் நோக்குடன், செயற்கை முறையில் வளர்க்கும் பணி, தகுந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நான்காவது திட்டக் கால அளவில், 1,000 ஹெக்டேர் பரப்பளவில், ரூ. 10 இலட்சம் செலவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972–73-ல் ரூ. 2·87 இலட்சம் செலவில், 113 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கக் கருதப் பட்டுள்ளது.

1973–74-இல் 200 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரப்பர் தொழில், மோட்டார் தொழில் போன்றவற்றின் பெருக்கத்தால் ரப்பரின் தேவையும் விரைவாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டம்தான் ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,000 ஹெக்டேரில், ரூ. 100 இலட்சம் செலவில் ரப்பர் பயிரிடப்படும்.

1972–73-ல் 174 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்படும். இதற்காக ரூ. 15·06 இலட்சம் செலவிடப்படும்.

1973–74-ல் 200 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடக் கருதப் பட்டுள்ளது. இதற்கு ரூ. 18·86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.



ஏறத்தாழ, 3,800 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முன்னாள் ஜமீன் காடுகளை வனத் துறை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது. சிறந்த பாதுகாப்பிற்காக, இக்காடுகள் நில அளவை செய்யப்பட்டு, முறையாக எல்லை வகுக்கப்பட்டு, தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் இவை ஒதுக்கக் காடுகளாக அமைக்கபடவிருக்கின்றன. இத்திட்டத்திற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்திலுள்ள காடுகளில் பலவகையான விலங்குகளும், பறவைகளும் உள்ளன. எனினும், விலங்குகளைக் கண் மூடித் தனமாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் சுடுதல், பொறி வைத்துப் பிடித்தல், நஞ்சிட்டுக் கொல்லுதல் காரணமாகவும், வேளாண்மை, நீர் மின்சாரத் திட்டங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்காக வனப் பகுதிகளை அழித்து வருவதன் காரணமாகவும், விலங்குகளின் எண்ணிக்கைவெகு வேகமாகக் குறைந்து வருகிறது. வன விலங்குகளைப் பாதுகாப்பதில், வன விலங்கு உய்விடங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதாகவும் உள்ளன. ஆகவே, மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டத்தில், வன விலங்கு உய்விடங்களுக்கு உரிய சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாட்டில், வன விலங்கு உய்விடங்களின் மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1972–73-இல் ஓய்வு விடுதிகள் கட்டுதல், சாலைகளை அமைத்தல், அதிக அளவில் போக்குவரத்து வசதி செய்தல், தேவையான இடங்களில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் ஆகிய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். வன விலங்குகளைப் பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வன விலங்குகள் கணக்கெடுப்பு, மற்றப் பணிகள் முதலியன திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 1972–73-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஆனைமலை வன விலங்கு உய்விடம் என்ற புதிய உய்விடம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1972–73-ல் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 4·08 இலட்சம் ஆகும்.

1973–74-ல் சாலைகளை மேம்படுத்துதல், ஆனைமலை வன விலங்கு உய்விடத்தில் ஓய்வு இல்லம் ஒன்று கட்டுதல் மற்றும் தேவையான வசதிகள் செய்தல் ஆகிய பணிகள் ரூ. 5·25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

புளி, கோக்கோ, இலவங்கம், குங்கிலியம், கற்பூரத் தைல மரம், எலுமிச்சை வகைச் செடிகள், கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களைச் செறிவாக நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதன் மூலம், விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதன் மூலம், விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள்களிலிருந்து வருவாய் அதிகரிக்கச் சாத்தியக் கூறுகள் உள்ளதால், இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.



நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 1,500 ஹெக்டேரில் காடுபடு சிறு பொருள்கள் பயிரிடப்படும். 1972–73-இல் ரூ. 2·28 இலட்சம் செலவில் 431 ஹெக்டேரில் காடுபடு பொருள்கள் நல்கும் மரங்கள் வளர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கைத்தறி.... கைத்தறி.... கைத்தறி!

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான பெரிய குடிசைத் தொழிலாகும். இங்கு முறையே சுமார் 5.50 இலட்சம் கைத் தறிகள் உள்ளன. ஏறத் தாழ 20 இலட்சம் மக்கள் இத் தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றுக்கு ரு. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி கெஜம் கைத்தறித் துணி கள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப் புள்ள இத் தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

* * *

தமிழ்நாட்டிலுள்ள 2,000 பட்டுத் தறிகளில், 1972–73-ல் இராசிபுரத் தில் புதிதாகத் தொடங்கப்பட்ட பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுடன் 14 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ், 3,352 தறிகள் கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்றன

பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சராசரி ஆண்டுதோறும் உற் பத்தி செய்யும் சரக்கின் மதிப்பு ரு. 1,45·00 இலட்சமாகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரு. 1,67·98 இலட்சமாகும்.

* * *

கைத்தறித் துணிகளின் ரகங்களை வண்ணங்களை மேம்படுத்தும், நோக்கத்தோடு, நெசவாளர் சங் கங்களின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நீலகிரி, சென்னை நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒரு பயிற்சி நிலையமாக 12 இடங்களில் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. அந்தந்த மாவட் டத்திலுள்ள நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கம் இத்திட் டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கும். தகுதி வாய்ந்த கைத்தறித் தொழில் நுட்ப ஆசிரியர்களின் பணி, அரசுச் செலவில் இச்சங்கத்திற்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நிலை யத்திலும் ஓராண்டில் 30 நெச வாளர்களுக்கு ஒவ்வொரு பாட முறையிலும் பயிற்சி அளிக்க, 5 பாட முறைகள் இருக்கும். அந்தத் திட்டத்தை நடத்தும், சங்க உறுப் பினர்களிலிருந்தும், அப்பகுதி யில் உள்ள பிற சங்கங்களிலிருந்தும் நெசவாளர்கள் இப்பயிற்சிக்குத் தெரிந்தெடுக்கப்படுவர்.

* * *

கைத்தறித் துணிகளில் புதிய கவர்ச்சிகரமான துணி வகைகளைத் தயாரிப்பதற்குக் கூட்டுறவு அமைப் பில் சேர்ந்துள்ள நெசவாளர் களுக்கும், கூட்டுறவு அமைப்பில், சேராத நெசவாளர்களுக்கும், மற்றும் தறி முதலாளிகள், நெசவுத் தொழிற்சாலை முதலாளிகள், துணி வடிவமைப்பாளர்கள் ஆகியவர் களுக்கும் நேரடியான ஊக்க மளிப்பதன் மூலம், கைத்தறித் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பச் செய்யும் நோக்கத்துடன், இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் போட்டி நடத்தி ஒவ் வொரு வகையிலும் சிறந்த ரகத் துணிக்குப் பரிசளிக்கும் திட்டம் அரசினால் ஆண்டு தோறும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பரிசுகள் வழங்கப்படுவதற்காக மொத்தம் 10,000 ரூபாய் அரசால் செலவிடப்படுகிறது.

* * *

இம்மாநிலத்தில் 42 இலட்சம் கதிர்கள், 9,124 தறிகள் நிறுவப் பட்ட திறனுடன் 208 பஞ்சாலைகள் (184 நூற்பு, 24 நூற்பு நெசவு) உள்ளன. இம்மாநிலத்திலுள்ள கைத்தறித் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் திங்க ளொன்றுக்கு ஏறத்தாழ 20,000 பேல்களாகும். விசைத்தறிகள், உள்ளாடைத் தயாரிப்பு நிறுவனங் கள், பிற துணைத் தொழிற்சாலை களுக்குத் திங்களொன்றுக்கு 9,000 தேவைப் படுகின்றன. எல்லா ஆலை களின் மொத்த உற்பத்தியைக் கருதிப் பார்க்குமிடத்து, பருத்தி நூலுற்பத்தி யைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு எப்பொழுதும் உயரி நிலையிலேயே உள்ளது.

சரிகையுடன் கூடிய பட்டு நெசவுத் தொழிலில் ஏறத் தாழ 20,000 விசைத் தறிகள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் திங்களொன்றுக்கு 10,000 மார்க்குகள் (Mares) பொன் சரிகைப் பட்டு, நெசவில் கலந்து நெய்யப்படுகிறது. தமிழ் நாட்டுச் சரிகை நெசவுத் தொழில் தனது பொன் சரிகைத் தேவைக்குச் சூரத்தையே பெரிதும் சார்ந்துள்ளது.

சரிகைக்காகச் சூரத்தைச் சார்ந் திருக்க வேண்டிய நிலையைத் தவிர்க்கும் பொருட்டுக், காஞ்சி புரத்தில் சரிகை உற்பத்தி செய்யும் பிரிவு ஒன்றைத் தொடங்க அரசு முனைந்துள்ளது.

சரிகைத் தொழிற்சாலைக் கட்டடம் கட்டுவதற்காக, 4.05 ஏக்கர் நிலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பிரிவு 1973 ஏப்ரல் மத்தியில் உற் பத்தியைத்தொடங்குமென எதிர்பார்க் கப்படுகிறது. ரு. 25 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட் டிருக்கிறது. இப்பிரிவின் பங்கு மூலதனத்திற்கு 1971–72-ல் ரு. 2.00 இலட்சமும், 1972–73-ல் ரு. 5.00 இலட்சமும் அரசு முதலீடு செய்துள்ளது.

* * *

தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற் பாலைகள் 12 உள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலை யில் நூல்களை வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நூற்பு ஆலைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆலை கள் 20-ம் எண் நூலிலிருந்து 100-ம் எண் நூல் வரை, பல்வேறு எண்களில் நூல்களை உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவுத் துறை யில் மொத்தம் நிறுவப்பட்ட திறனை 1.98 இலட்சம் கதிர்களைக் கொண்டு 12 ஆலைகள் ஏற்படுத்தப்பட்டதால், இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கு நியாயமான விலையில் நல்ல தரமான நூல் கிடைக்கிறது.

**கைத்தறியாளர் துயர் நீங்கிட....**

கைத்தறி நெசவுத் தொழிலாளருக்கு ஏற்பட் டுள்ள இன்னலை ஓரளவு தணித்திட, தமிழ்நாடு அரசு அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடனாகத் தருகிறது. ஏறக் குறைய ஓர் இலட்சம் பேர் இதனால் பயனடைவர். ஆளுக்கு 100 ரூபாய் வீதம் கடனாகத் தரப்படும். இதைப் பெறு வோர் ஆகஸ்டு மாதத்தி லிருந்து பத்துப் பத்து ரூபாயாகத் திருப்பிச் செலுத்தலாம்.



# வெண்பாப் போட்டி

## 55. குடிசை மாற்று வாரியப் பணி

குப்பாயி தன்குடிசை காணேமே ! சப்பைக்கால்
கப்பன் குடித்தனமும் போயிற்றே !—நம்சென்னைச்
சேரியெல்லாம் செத்து மடிகின்ற தையையோ !
வாரியத்தால் வந்த வினை.

—நா. வைகுந்தன், சின்னச்செங்காடு.

கொட்டும் மழைக்காகக் கும்பாவை வைக்கவிழும்
சொட்டைப்போல் கண்ணீர் சொரிபவளே—கட்டிவிட்டார்
வானுயர்ந்த மாளிகைகள் வாவா குடியிருப்போம்
தேனுமிழும் வாயே சிரி !

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

செங்கதிரும் சில்மழையும் தேன்நிலவும் என்னிருப்பில்
தங்க இடங்கேட்ட தோர்நாளில்—எங்கலைஞர்
வேறின்றிக் கீழ்மேலை வென்றார் குடில்மாற்று
வாரியமே கூட்டும் வளம்.

—கவி. ஆறுமுகம், நாச்சியாபுரம்.

குப்பையினில் வாழ்ந்தோர் குடிசைமாற்று வாரியத்தால்
உப்பரிகை தன்னில் உலவுவதால்,—இப்புவியில்
செம்மைக் குணங்கொண்ட சீரான ரெல்லாரும்
நம்மரசை வாழ்த்துகின்றார் நன்கு.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

வானமே கூரை, வளர்புழுதி மெத்தையெனும்
ஈன நிலைபோக்கி, இங்குழைப்போர்—மானமுடன்
வாழக் குடிசைமாற்று வாரியத்தைக் கண்டவர்சீர்
வேழநடைப் பெண்ணே விளம்பு !

—புலவர் . [illegible] நிதி, வேங்கனூர்.

சின்னக் குடிசையெலாம் சிங்கார மாளிகையாய்
மண்ணிலே மாற்றி மகிழ்வீந்தார் — வண்ணத்
தமிழரசார் செய்கின்ற தக்கபணி யாவும்
சமதர்மத் தத்துவந்தான் சாற்று.

—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

குடிசைமாற்று வாரியமேற் கொண்ட பணிகள்
எடுத்துரைக்கப் போதுமா இந்நான்(கு)—அடிகளும் ?
எல்லார்க்கும் வீடுகள் ! எல்லாமே கட்டடங்கள் !
இல்லை குடிசை இனி.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
*திரு வைகுந்தன், ஆசிரியர்,
சின்னச்செங்காடு, செங்காடு அஞ்சல்,
வடஆர்க்காடு மாவட்டம்.

694

# வெண்பாப் போட்டி

முன்னால் இருந்தகொடை வள்ளல்கள் செய்தவற்றை
என்னால் இயலுமென்(று) ஏற்றனையே !—சொன்னலே,
பாரிநள்ளி ஓரிகாரி அதியனுய் பேகனென
வாரியமாய் வந்தாய் வழங்கு.

—கவித, வே. கள்ளிப்பாளையம்.

வீடின்றி வாழ்வோர்க்கு வீடளிக்கும் நல்லரசு
நாடின்றி நற்குடிசை மாற்றளிக்கும்—கோடிபெறும்
இட்டத்தால் நற்பயனும் சீர்பெறுவர்—ஏழையரே
இட்டமுடன் வாழ்வோம் இனிது.

—கே. மு. கருணுகரன், கேட்டலரம்பாளையம்.

'கிரிகோரி வோட்டா' பெருவியப்பில் சொன்னுர் ;
''அரிதாம் செயலொன்றை ஆற்றித் — திருநாட்டை
முன்னேடி யாக்கி முழுப்பெருமை நீர்பெற்றீர் ;
பின்னேடு சேர்வார் பிறர்''

— சிவ. கிருட்டிணன், கணியூர்.

எத்தனையோ நன்மைகள் ஏழைகட்குச் செய்யினும்
அத்தனைக்கும் வித்தாகும் ஆய்ந்திடில்—இத்தரையில்
நில்லாக் குடிசைகளை நீக்கி நிலைவீடு
நல்லரசு தந்ததே நன்கு.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

ஓட்டைக் குடிசையெலாம் ஓடிப் பறந்தனகாண் ;
நாட்டில் விரைந்தோங்கும் நான்மாடக் — கூடம்காண்!
நாட்டம் மிகக்கொண்டே நற்றூதர் பற்பலரும்,
நோட்டம் விடுகின்றார் நோக்கு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பண்டைத் தமிழகம்போல் பற்பலநல் வாரியங்கள்
தொண்டாற்றும் மேம்பாட்டைச் சொல்லிடுங்கால்-கண்ணே!
விடிவுபெற ஏழைகட்கு வீடளித்துப் போற்றும்
குடிசைமாற்று வாரியத்தைக் கூறு.

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

ஓலைக் குடிசைகள் உள்ள இடமெல்லாம்
வேலைப்பா டுள்ளநல்ல வீடுகளாய்க் — கோலஎழில்
காட்டிநிற்க ஏழைகட்குக் கட்டுவித்த வாரியத்தின்
மாட்சிக் கிணையில்லை மற்று.

—உ. தாமோதரன், கூனே, சென்னை 7.

வெள்ளமே வந்தாலும் வெய்யிலே காய்ந்தாலும்
உள்ளம் கலங்காமல் உய்வதற்கு ; — வெள்ளடுக்கு
மாடிகட்டி வேய்குடிசை மாற்றும் தமிழரசை
நாடிப் புகழ்ந்திடுவோம் நாம்.

—அ. இராமச்சந்திரன், அம்மனூர்.

கள்ளி செழுங்கரும்பாய் ஆனதுபோல் காணுதடா
குள்ளக் குடில்மாற்றிக் கோலமனை — விள்ளரிய
காரியத்தை மெத்தக் கவனமொடு செய்துவரும்
வாரியத்தை நெஞ்சார வாழ்த்து.

— த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

ஈசலின் புற்றாய் இருந்த குடிசையெலாம்
வாசமலர்த் தேன்கூடாய், வான்முட்டும் — பாசறையாய்
மாறியதைக் கண்டோம் ; மனத்தாலே அக்குடிசை
வாரியத்தைப் போற்றுவோம் வா.

—அரங்க. முத்துமணி, கீழப்பழுவூர்.

வறுமை யொழித்து வளத்தைப் பெருக்கிச்
சிறுகுடிசை மாளிகையாய்ச் செய்யப் — பெறுகின்ற
நல்லபல திட்டத்தை நங்கலைஞர் ஆற்றுவதால்
எல்லாரும் வாழ்வோம் இனிது!

—இரத்தின கோபால கிருட்டிணன், அலைச்நடி.

கூடிக் குடிசையிலே கொந்தளிப்போர் மாடிபெற
நாடி நலம்புரியும் நம்மரசைச் — சேடியே!
''கோடியி லொன்றேநம் கொற்ற''மென் றேபாடு!
வீடுபே றிவார்க்கே திடு!

—புலவர் பூங்குழலி, பொருநூர்.

நாற்புறமும் சாக்கடைநீர் நாற்றமிகு குப்பைமணம்
காற்றுவர அஞ்சும் கழிவிடத்தில் — நேற்றுவரை
நின்றிருந்த மண்குடிசை நீடுயர்ந்த மாடிகளாய்
இன்றைக்குச் செய்தார் இசைந்து.

—கண்ணுகாந்தி, தாராபுரம்.

ஓலைக் குடிசைகளில் ஒட்டுத் துணியுடனே
நாளைக் கழித்தே நலிவுற்ற — ஏழைகள்தாம்
வாழக் குடிசைமாற்று வாரியத்தார் கட்டியவை
போலப் பிறிதுண்டோ புகல்!

— நெல்லை ஆ. கணபதி, சைதை.

# வெண்பாப் போட்டி

பாடுபட்டு வாழ்கின்ற மக்கள் பறவைபோல்
கூடுகட்டி வாழ்வார் குடிசையிலே — கேடுகெட்ட
இந்நிலையை நீக்க இசைவுடனே முன்வருவார்
தந்நிலையைப் போற்றிடுவோம் சார்ந்து.

— புலவர் செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை.

மலடியெனும் பேர்போய் மகவடைந்தேன், வீடாம்
கலைஞர் குடில்மாற்றில் கண்டேன் — நிலைவாழ்வே
இல்லார் இருப்பாரென் றில்லா நிலைவந்தே
எல்லாம் பெறுவோம் இனி.

—எஸ். சூசையம்மாள், நாச்சியாபுரம்.

எட்டடுக்கு மாளிகையில் ஏழையரை வாழ்விக்கத்
திட்டமிட்டுச் செய்யும் திருத்தொண்டால் — பட்டாங்கில்
மக்கள் நலங்காக்கும் மாண்புடைய வாரியத்தை
நெக்குருகி வாழ்த்துமென் நெஞ்சு!

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

தலைநிமிர்ந்து வாழும் தமிழன்றன் வீட்டில்
தலைகுனிந்து செல்லும் தகாத —நிலைஉணர்ந்து
வாரியத்தால் சேரிவாழ் மக்களுக்கு வீடளிக்கும்
காரியத்தை ஆற்றினரே காண்.

—கே. ஏ. அர்ஜுனன், உத்தமபாளையம்.

குடியரசு நாட்டில் குடிசைவாழ் மக்கள்
படுகின்ற துன்பத்தைப் பார்த்து ; — அடியேகேள்!
வாடி இருந்தோர்க்கு வாகாய்த் 'தமிழரசு'ம்
மாடிகட்டித் தந்தார் மகிழ்ந்து.

—ப. குப்புசாமி, பொன்மலை.

நேற்றிங்கே கண்டதென்ன? கீற்றுக் குடிசைகளே!
மாற்றினர் ஓர்நொடிக்குள் மாளிகையாய்!—ஆற்றல்பார்!
அண்ணாவின் தம்பியர்கள் ஆட்சியிலே ஏழைமக்கள்
எந்நாளும் வாழ்வா ரினிது.

— மெய். சிவநேசன், கலையனூர்.

ஓட்டைக் குடிசையிலே ஒன்றிவாழ் ஏழையர்க்கு
வீட்டை வழங்கியவர் வேதனையை — ஓட்டியே
நாட்டைத் திருத்துகின்ற நற்பணியைக் கூட்டுபவர்
கோட்டையிலே வாழ்கவெனக் கூப்பு.

—புலவர் கி. துரைசாமி, தேவத்தூர்.

பொத்தலுள இக்குடிசை பொன்வேய்ந்த மாளிகையாய்
இத்தரையில் மாறுவதும் எந்நாளோ? — அத்தானே!
என்றவளே! என்னவளே! இன்றைக்கே மாறியது
மன்றிலுயர் வாரியத்தி னல்.

—வி. சேசாசலம், அரடாப்பட்டு கிராமம்.

இல்லார் எனும்நிலையை இல்லாது போக்கிடவே,
இல்லம் பலகட்டி ஈந்துவரும் — நல்லரசார்
சொல்லால் கவிதைச் சுவையூட்டச் செய்திடுவார்
செல்லாப் புகழைநிதம் சேர்த்து!

—வசந்தராசன், வெள்ளக்குட்டை.

வேற்றூரும் கண்டு வியக்கும் வகையினிலே
மாற்றினர் மண்குடிசை மாளிகையாய் — கீற்றோலை
வீடெல்லாம் மாற்றும் விளங்குபுகழ் நம்மரசின்
பீடெல்லாம் வாயாரப் பேசு.

— புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

மாடியிலே வாழ்கின்ற மாச்செல்வர்க் கீடாகக்
கூடிக் குடியிருக்கச் செய்திடவே — தேடிக்
குடிசைமாற்று வாரியத்தைக் கோலமுடன் தந்தார் ;
விடிவுண்டோ மக்கட்கு வேறு.

—கவிப்பித்தன், ஆர்ப்பாக்கம்.

நாளும் உழைத்துவந்து நன்றாகத் தூங்கவரின்
தேளும் கரப்பானும் தீண்டுதற்குச் —சூளுரைக்கும்
பாழும் குடிசைகள் பற்பலவும் மாற்றியருள்
வாழும் அரசுக்கென் வாழ்த்து.

—இல. ஆலையழகன், வல்லம்.

கனவும் கற்பனையும் கைக்குவர இங்குத்
தினமும் புதுத்திட்டம் தேர்ந்து — மனமகிழ்வாய்
எல்லாரும் வாழ்ந்திடவே இல்லம் எளிதாக
நல்குமோர் வாரியத்தை நம்பு.

—அ. அகத்தியன், தவசி.

சாலையின் ஓரத்தில் சாக்குத் திரைக்குள்ளும்
ஓலைக் குடிசையிலும் ஒன்றியோர்—காலைக்
கதிரின் முகத்தில் விழிக்கின்றார் கட்டடத்துள்
கதியாம் தமிழரசால் காண்.

—அன்பழகன், மயிலாடுதுறை.

## திருச்சி மாவட்டத்தில் சீரிய பணிகள்

**சிறு சேமிப்பு.**—1972–73–ஆம் ஆண்டிற்கு இம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கீடு ரூபாய் 80 இலட்சம் மட்டுமே. ஆனல், இம்மாவட்டத்தில் 31—3—1973வரை ரூ. 90,43,996 வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் மற்ருெரு சிறப்பான அம்சம் ரூ. 53 இலட்சம் வரை குறிப்பிட்ட கால டிபாசிட்டில் பெறப்பட்டுள்ளது.

* * * *

**வறட்சித் துயர் தணிப்புப் பணி.**—இம் மாவட்டத்திற்கு 1972–73-ல் வறட்சி நிவாரணத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 4 இலட்சமும் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகள் அமைக்கவும், தாத்தையங்கார் பேட்டை, ஆண்டிமடம், தா.பழூர் ஆகிய வட்டாரங்களில் 10 குடிநீர்க் குழாய்க் கிணறுகள் அமைக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

* * * *

### வெள்ள நிவாரண வேலை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5,738 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ. 4,08,212 நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்களுக்குப் பாதிக்கப்பட்ட நேரத்தில் உணவு வழங்க ரூ. 13,005 செலவு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புதுப்பிக்க வீடு ஒன்றுக்கு ரூ. 250 வீதம் கடனுகக் கொடுக்க ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பெற்று, அவை வேப்பந்தட்டை, வேப்பூர், திருமானூர், முசிறி, செந்துறை ஆகிய ஒன்றியங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

சாலைகள் பழுது பார்க்க ரூ. 11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்று அதன் மூலம் 211 சாலைகள் பழுது பார்க்கப்பட்டு ரூ. 10·88 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அதே போல் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிமன்றச் சாலைகளைப் பழுது பார்க்க ரூ. 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் 187 சாலைகள் பழுது பார்க்கப்பட்டு ரூ. 7·58 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசனக் குளங்களைப் பழுது பார்க்க ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்மூலம் 136 வேலைகள் நடைபெற்று வருகின்றன. ரூ. 1·63 இலட்சம் செலவாகியுள்ளது. அதேபோன்று பொதுப் பணித்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பாசனக் குளங்களைப் பழுது பார்க்க ரூ. 2·47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 36 வேலைகள் நடைபெற்று வருகின்றன. ரூ. 1·80 இலட்சம் செலவாகியுள்ளது.


உங்கள் பணத்தை சுலபமாகப் பெருக்க கார்பொரேஷன் பாங்கின் சீரிய திட்டங்கள்!

எங்களது மாதவருவாய்த் திட்டங்களில் சேர்ந்திருக்கிறீர்களா?

நிரந்தர டெபாசிட்டுகள், தொடர் டெபாசிட்டுகள் மற்றும் ஜனதா டெபாசிட்டுகளுக்கும் கார்பொரேஷன் பாங்க் கூடுதலாகவே வட்டி கொடுக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் உங்களை மகிழ்ச்சியிலாழ்த்தும் வகையில் பணம் சேர்ந்திருக்கும். இன்றே உங்கள் அருகாமையிலுள்ள கார்பொரேஷன் பாங்க் அதிகாரிகளை அணுகுங்கள்.

சில சமயம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே உங்களுக்குப் பணம் தேவைப்பட்டால் இந்த டெபாசிட்டுகளிலிருந்து வட்டியுடன் பணத்தைப் பெற யாதொரு தடையும் இருக்காது. ஆனல் பணமுடையிருக்கும் காலங்களிலும் கூட எடுக்காமல் பேணி காத்து வந்தால் குறிப்பிட்ட காலத்தில் முழுமையான பலனை அடைவீர்கள்.

—சிநேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி

கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

(கனரா பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட் என்று முன்னுளில் அழைக்கப்பட்டது)

ESTD. 1906

பதிவு அலுவலகம்: உடுப்பி நிர்வாக அலுவலகம்: மங்களூர்

mca/CBL/346 Tam






# ஒப்பற்ற ஓமியோபதி

நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பம் வளர்ந்து வரும் இக் காலத்தில் ஓமியோபதி போன்ற மருத்துவ முறைகள், ஆங்கில மருத்துவ முறைக்கு அடுத்ததாகவே இருக்கின்றன. இவ்வாறு இருந்த போதிலும் இந்த மருத்துவ முறை மனிதனின் உடல் நோயைப் போக்கும் பணியில் தனது பங்கை ஆற்றி வருகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எந்த ஒரு மருத்துவ முறையும் சிறந்ததெனக் கூறமுடியாது; ஒரு மருத்துவ முறையின் மூலம் பெற முடியாத சிகிச்சையை மற்ருெரு மருத்துவ முறையின் மூலம் பெறலாம். ஆஸ்துமா நோய், நோயாளிகளைத் துன்புறுத்தி வருகிறது. இதனல் இவர்களுக்குச் சில நோய்கள் தோன்றுகின்றன. ஆனல், நவீன மருத்துவர்களால் இத்தகைய நோய்களை விரட்டியடிக்க முடியவில்லை. இத்தகைய நோய்கள் அவர்களைத் திணறடித்து வருகின்றன. நவீன மருத்துவ விஞ்ஞானத்திற்கு ஊறு செய்யும் பொருட்டே இத்தகைய நோய்கள் இருந்து வருகின்றன என்று பிரபல மருத்துவர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். ஆனல், ஓமியோபதி மருத்துவர்கள் இந் நோய்களை ஓட ஓட விரட்டியடித்துள்ளதாகக் கூறுகின்ருர்கள். எந்த அளவுக்கு இத்தகைய நோயாளிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சைகள் அளிக்க முடியும் என்பது பற்றிப் பிரபல ஓமியோபதி மருத்துவர் மிகவும் அழகாகத் தமது கருத்துகளை இங்குக் கூறியுள்ளார்.

தொற்று நோய்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும், அவற்றை விரட்டியடிப்பதற்காகவும் மனித உடலில் சில எதிர்ப்புப் பொருட்கள் உள்ளன. இவை, நோய்க் கிருமிகள் உடலில் எந்தவிதத் தீங்கையும் ஏற்படுத்தா வண்ணம் கவனித்துக் கொள்கின்றன. இவை, பாக்டீரியா போன்ற தொற்று நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடுவதோடு மட்டுமல்லாமல், சில சமயங்களில் உயிரற்ற சில அங்ககப் பொருட்களை எதிர்க்கும் திறன் வாய்ந்ததாகவும் விளங்குகின்றன. ஆகையால் உயிரற்ற பொருட்களை எதிர்ப்பதைத் தான் நாம் 'அலர்ஜி' என்று கூறுகிருேம். இந்த 'எதிர்ப்புப் பொருட்கள்' மிகவும் துடிப்பு மிக்கதாக உள்ளன. இத்தகைய எதிர்க்கப்படும் உயிரற்ற பொருட்களை மருத்துவர்கள் 'அலெர்ஜன்' அல்லது 'ஆன்டிஜென்' என்று கூறுகிருர்கள்.

மனித உடலில் இந்த அலெர்ஜெனை எதிர்த்து 'எதிர்ப்புப் பொருட்கள்' போராடுகின்றன. இந்த எதிர்ப்புப் பொருட்கள் எவ்வாறு, எதற்காக ஏற்படுகின்றன என்பது மிகவும் சிக்கலான விஷயமாகும். இவை பல பேருக்குப் பரம்பரையாக இருந்து வருகின்றன. உங்கள் தகப்பனுரோ அல்லது முப்பாட்டனுரோ ஆஸ்துமா அல்லது 'அலெர்ஜி' நோய்களால் அவதிப்பட்டிருந்தால், உங்களுக்கு இத்தகைய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

அன்றாட வாழ்க்கையில் நாம் உபயோகிக்கும் பொருட்களில் நமது உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பொருட்கள் பல இருந்த போதிலும், மருந்துப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழ்நிலை, அசுத்தம் ஆகியவை நமக்கு அதிகமாக ஒத்துக் கொள்வதில்லை. 30, 40 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களைவிடத் தற்போது வாழும் மக்களில் அதிக எண்ணிக்கையினருக்குப் பல பொருட்கள் ஒத்துக் கொள்வதில்லை. துரதிஷ்ட வசமாக நவீன மருத்துவ முறையின் மூலம் இத்தகைய நோய்களைப் போக்க முடியாது. அதிக அளவு இத்தகைய நோய்களினுல் ஏற்படும் உடல் துன்பத்தைக் குறைக்கலாம்.

நோயாளியின் உடல் பாகங்களை மரத்துப் போகச் செய்து பின்னர் மேல்தோல் பரிசோதனைகள் பல செய்து நோயாளிக்கு எந்தப் பொருள் ஒத்துக் கொள்ளவில்லை என்று கண்டுபிடிபதற்கும், நவீன மருத்துவ முறை பயன்படுகிறது. இதைக் கண்டுபிடித்த பின்னர், அலெர்ஜி நோயை உண்டு பண்ணக்கூடிய பொருளினுல் தயாரிக்கப்பட்ட திரவத்தை ஊசி மூலம் சிறிது சிறிதாக நோயாளியின் உடலில் செலுத்திக் குணப்படுத்தலாம். இத்தகைய நோய்களைச் சிறந்த முறையில் ஓமியோபதி மருத்துவ முறையின் மூலம் குணப்படுத்தலாம்.

ஓமியோபதி மருத்துவத்தின் மூலம், சதச் சவ்வு அழற்சி, தோல் சம்பந்தப்பட்ட சொறி, சிரங்கு, ஆஸ்துமா போன்ற நோய்களைக்கூட குணப்படுத்த முடியும். நவீன மருத்துவப் பொருட்களை முதலில் உபயோகிக்காமல் இருந்தால் ஓமியோபதி மருத்துவத்தின் மூலம் குணப்படுத்துவது மிகவும் எளிதாகும். நவீன மருந்துகளை உபயோகித்த நோயாளிகளுக்கு ஓமியோபதி மருத்துவச் சிகிச்சை பலன் அளிக்காது.

உதாரணமாக, குழந்தைகளுக்கு வரும் ஆஸ்துமா நோய், அவர்கள் பருவம் அடைந்தவுடன் குணமாகிவிடும். இருந்தபோதிலும் ஓமியோபதி சிகிச்சை மூலம் இந்நோயிலிருந்து விரைவாக முழுவதும் விடுபடலாம். ஆஸ்துமா நோய் கிட்டத்தட்ட 10-வது வயதில் ஒரு சிறுவனைப் பிடிக்கிறது. சிறுமிகளைவிடச் சிறுவர்கள்தான் இந்நோயினால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

பரம்பரையாக ''அலெர்ஜி' ஏற்படக் கூடிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தொண்டைச் சதை வளர்ச்சியைத் தடுக்க நவீன மருந்துகளைக் கொடுத்தாலோ அல்லது அறுவைச் சிகிச்சை செய்தாலோ சாதாரணமாக அவர்களது சுவாசப் பைகளில் சில விளைவுகள் ஏற்படுகின்றன. ஆகையால், இத்தகைய குழந்தைகளுக்கு ஓமியோபதி மருத்துவம்தான் சிறந்ததாகும். சரியான ஓமியோபதி மருந்துப் பொருட்கள் கிடைக்கவில்லை என்றால்தான் இத்தகைய குழந்தைகளுக்கு நவீன மருந்துப் பொருட்களைக் கொடுக்க வேண்டும். இத்தகைய குழந்தைகளுக்கு அடிக்கடி தொண்டையில் சதை வளர்ச்சி ஏற்பட்டுத் துன்பப்படுகிறார்கள். மேலும், நவீன மருந்துப்பொருட்களால் இது குணமடைவதில்லை. 40 வயதுக்கு மேல் ஒருவருக்கு ஆஸ்துமா நோய் பிடித்தால் அவர் மிகவும் துன்பப்படுவார். ஆனால் இத்தகைய நோயாளிகளையும் ஓமியோபதி மருத்துவ முறை மூலம் பூரணமாகக் குணப்படுத்த முடியும் என்று ஓமியோபதி மருத்துவர்கள் கூறுகின்றனர். இந்நோயை ஓரளவு குணப்படுத்திவிட்டு, பிறகு சிகிச்சையை நிறுத்திக் கொள்ளக் கூடாது. இந்நோயை மறைத்து வைக்கவும் கூடாது. இவ்வாறு செய்யாமல் இருந்தால் செலவும் மிச்சப்படும். நோயும் கணிசமான அளவுக்குக் குறையும்.

தற்போதுள்ள நவீன மருந்துப் பொருட்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால், உடலில் ஏற்படும் விளைவுகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. தொடர்ந்து பல புதிய மருந்துப் பொருட்கள் புகுத்தப்பட்டு வருவது, நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. இம்மருந்துகள் தனி மனிதனின் உடல்நிலையில் பல்வேறு மாறுதல்களை விளைவிக்கின்றன. இதனால் சில பொருட்கள் சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. ஆனால், இதற்காக நாம் நவீன மருந்துகளை உபயோகிக்காமல் இருக்க முடியாது. ஏனெனில், அவை ஓரளவிற்கு நோய்களைக் குறைக்கின்றன. மூச்சுக் குழல், மூக்கு போன்ற சுவாசஉறுப்புகளில்நீர்ப்பிடித்தல் தொண்டையில் சதை வளர்ச்சி, போன்றவை ஏற்பட்டால், மிகப் பிரமாதமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால் இத்தகைய நோய்களை ஓமியோபதி மருத்துவத்தின் மூலம் மிகச் சிறந்த முறையில், எளிதில் குணப்படுத்தலாம்.

ஓமியோபதி மருந்துப் பொருட்கள் எவ்வித அலர்ஜியையும் ஏற்படுத்துவதில்லை. மேலும், உடலில் நச்சுப் பொருட்களினால் ஏற்படும் விளைவுகளையும் ஓமியோபதி மருந்துகள் தடுக்கின்றன.

தற்போதுள்ள எல்லா மருத்துவமனைகளிலும் நவீன மருத்துவர்களுடன், திறன் மிக்க ஓமியோபதி மருத்துவர்களும் பணிபுரிய வேண்டும் என்று ஓமியோபதி மருத்துவ முறையை ஆதரிப்பவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

சாதாரணமாக ஏற்படக்கூடிய அலெர்ஜியை மிக எளிய முறையில் ஓமியோபதி மருந்துகள் மூலம் குணப்படுத்துவது பற்றிய தீவிரப் பயிற்சி வகுப்புகள், நவீன மருத்துவர்களுக்காக நடைபெற வேண்டும்.

சிக்கன வழியில், சிறந்த முறையில் உடல் நோயை அதிக அளவுக்குக் குறைக்க ஓமியோபதி மருத்துவ முறை மிகவும் அவசியமாகும்.

## வெண்பாப் போட்டி - 56

அரசு போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கும் நிருவாகத்தில் பொறுப்பும் அளிக்கும் தமிழக அரசின் சமதர்மச் சாதனையைப் பற்றி வெண்பா எழுதுக.

முடிவு நாள்: 2—6—1973.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.









ஆட்டுக்கடா யாருக்குச் சொந்தம்!

இதைப் பற்றி இரண்டு பெண்களுக்கிடையே தகராறு வந்தது.

முதல் பெண் ''இது என் ஆடுதான். நான்தான் இதை வளர்த்து வருகிறேன்!'' என்று சொந்தம் கொண்டாடினாள்.

இரண்டாமவளோ ''இல்லை, இல்லை. இந்த ஆடு எனக்குத்தான் சொந்தம். இல்லாவிட்டால் இதற்குப் பணத்தைச் செலவழித்துத் தீனி போட்டு வளர்ப்பேனா?'' என்று உரக்கக் கத்தினாள்.

இப்படி இருவருமே ஆடு எனக்குச் சொந்தம் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தால் யாருக்குப் பயன் கிடைக்கப் போகிறது? பிறகு இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி நேரே காவல் நிலையம் சென்று புகார் செய்தார்கள்.

இருவரும் ஆடு என்னுடையதுதான் என்று பிடிவாதம் பிடித்ததைக் கண்ட காவல் நிலைய அதிகாரிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆடோ, அனைவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தது!

காவல் நிலைய அதிகாரிக்குத் திடீரென ஒரு யோசனை வந்தது. உடனே அவர் இருவரையும் பார்த்து. ''இந்த ஆட்டை இங்கே விட்டு விட்டு நீங்கள் வீட்டுக்குப் போங்கள். இங்கிருந்து ஆடு யார் வீட்டுக்குப் போகிறதோ அந்தப் பெண்ணுக்குத்தான் அது சொந்தமாகும்'' என்று தீர்ப்புக் கூறினார்.

அதற்கு இருவரும் சரியென ஒப்புக் கொண்டு தத்தம் வீட்டுக்கு விரைந்து சென்றார்கள். 'ஆடு நம்ம வீட்டுக்குத்தான் வரப் போகிறது!'' என்று அதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் ஒருத்தி. 'நிச்சயம் அந்த ஆடு என்னைத் தேடித்தான் வரும்!' என்று ஆவலுடன் காத்திருந்தாள் மற்றொருத்தி.

இரண்டு பேரும் வீட்டை அடைந்ததும் காவல் நிலைய அதிகாரி ஆட்டை அவிழ்த்து விட்டார். ஆடு யார் வீட்டுக்குப் போகிறது என்பதைப் பார்க்கப் பலர் அதன் பின்னாலேயே சென்றனர். ஆடு நேரே தன் வீட்டுக்குச் சென்றது. அதாவது இதுவரை தான் யாரிடம் இருந்து வந்ததோ, அந்தப் பெண்ணிடமே வந்து சேர்ந்தது. அவள் அன்புடன் அதைத் தடவிக் கொடுத்துப் பெரிதும் மகிழ்ந்தாள். ஆடும் துள்ளிக் குதித்தது. இதைப் பார்த்தவர்கள் 'இவள் தான் ஆட்டுக்குச் சொந்தக்காரி!'' என்று பேசிக் கொண்டார்கள்.

ஆடு தனக்குத் தான் சொந்தம் என்று வீண் பிடிவாதம் பிடித்த மற்றவளோ, வெகு நேரமாகியும் ஆடு வராததைக் கண்டு ஏமாற்றமடைந்தாள்.

பொய்பேசி ஆட்டைத் தனதாக்கிக் கொள்ள நினைத்தவளுக்கு என்ன கிடைத்தது? அவமானமும், ஏமாற்றமும் ஏற்பட்டது!

பிறர் பொருளின் மேல் ஆசை வைப்பதும், அதைக் கவர நினைப்பதும் மனிதனுக்கு அழகில்லை என்பது இந்த உண்மைச் சம்பவத்திலிருந்து தெரிகிறதல்லவா?

அண்மையில், உண்மையில் நடந்த இந்த ஆட்டுக்கடா வழக்கைப் போல, அந்தக் காலத்திலும் ஒரு குதிரை வழக்கு நடந்தது.

ஒருவர் குதிரையிலேறிக் கொண்டு கடைத்தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு முடவன் போவோர் வருவோரிடம் தனக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொண்டிருந்தான். குதிரையில் வந்தவர், முடவன் மீது இரக்கப்பட்டுப் பணம் கொடுத்து உதவினார். பணத்தைப் பெற்றுக் கொண்ட முடவன், ''ஐயா! என் வீடு இங்கிருந்து ஒரு கல் தொலைவில் இருக்கிறது. எனக்கோ கால்கள் இல்லை. ஆகவே, தயவு செய்து என்னை அங்கே கொண்டு போய் விட்டுவிட்டால் மிகவும் நன்றியுடையவனாயிருப்பேன்!'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

குதிரையில் வந்தவரும் சரியென அவனைத் தம் குதிரையில் ஏற்றிக் கொண்டார். குதிரை




விரைந்து சென்றது. முடவனின் வீடும் வந்தது.

" தம்பி ! இதோ உன் வீடு. இறங்கிக் கொள். நான் சீக்கிரம் போக வேண்டும். எனக்கு நிறைய வேலை இருக்கிறது... " என்றார் குதிரையில் வந்தவர்.

" என்ன ? என் குதிரையில் ஏறிக்கொண்டு என்னையே இறங்கச் சொல்கிறீரா ? அதெல்லாம் நடக்காது. பேசாமல் குதிரையைவிட்டு இறங்கி, வந்த வழியே போங்கள் ! " என்றான் முடவன்.

குதிரைக்குச் சொந்தக்காரரோ இதைக் கேட்டுத் திடுக்கிட்டார். உதவி செய்யப் போய் உபத்திரவம் வந்ததே என்று மிகவும் மனம் வருந்தினார். இருவரும் 'இது என் குதிரை' என்று தகராறு செய்து கொண்டிருந்தனர். இதைக் கண்ட வழிப்போக்கர்கள் கூட்டங் கூடிவிட்டனர் 'ஐயோ பாவம் ! முடவனுடைய குதிரையில் ஏறிக் கொண்டு, இந்தஆள் பிடிவாதம் பிடிக்கிறானே !" என்று முடவனுக்கு ஆதரவாகப் பேசினர். ஆனால், குதிரைக்குச் சொந்தக்காரன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்பதாயில்லை !

இறுதியில் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து அவ்வூர் நீதிபதியான மரியாதை இராமனிடம் சென்று முறையிட்டனர். நீதிபதி இருவரையும் விசாரித்தார். இருவரும் 'குதிரை என்னுடையது' என்றனர். நீதிபதி சிறிது நேரம் யோசித்து விட்டு, " சரி, குதிரையை இங்கே விட்டுவிட்டுப் போங்கள். நாளை காலை இருவரும் இங்கே வாருங்கள் !" என்று அவர்களை அனுப்பிவிட்டுக் குதிரையை ஒரு குதிரைக் கொட்டிலில் கட்டி வைக்கச் சொன்னார்.

மறுநாள் காலை !

இருவரும் நீதிபதியிடம் வந்தனர். நீதிபதி அவர்கள் இருவரையும் தனித் தனியாகக் குதிரைக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே நிறையக் குதிரைகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்தன.

நீதிபதி குதிரைக் காரரைப் பார்த்து " எங்கே உங்கள் குதிரையை அடையாளம் காட்டுங்கள் பார்க்கலாம் ? " என்று கேட்டார். அவர் உடனே தன் குதிரையைத் தொட்டுக் காட்டினார். அவர் போன பிறகு முடவனை அடையாளம் காட்டச் சொன்னார். உடனே அவனும் அதே குதிரையைத் தொட்டுக் காட்டினான் !

ஆனால், குதிரைக்குச் சொந்தக்காரர் தொட்டதும் அது அன்பு காட்டி அவரை நெருங்கி வந்தது; முடவன் தொட்டதும் அது கனைத்துக் கொண்டு அவனை உதைக்கத் தொடங்கியது. இந்தக் குறிப்பிலிருந்து குதிரை முடவனுடையது அல்ல என்றும் அவன் வேண்டுமென்றே குதிரையைத் தனதாக்கிக் கொள்ளப் பேராசை கொண்டான் என்பதையும் அறிந்து அவனைத் தண்டித்துக் குதிரையை உரியவரிடம் சேர்ப்பித்தார் நீதிபதி.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வதென்ன?

உழைத்துச் சம்பாதித்தால் நாம் விரும்பியதை வாங்கிக் கொள்ளலாம். உழைப்பதற்கு அஞ்சிப் பிறர் பொருளை எளிதில் களவாடவும் தனதாக்கிக் கொள்ளவும் எண்ணினால் அது அவனுக்கே தீங்காய் முடியும். அத்தகையவர்களால் வாழ்க்கையில் கொஞ்சங் கூட முன்னேற முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### சுருக்கெழுத்தின் சரித்திரம்

இப்பொழுதுள்ள சுருக்கெழுத்து முறை இருபதாம் நூற்றாண்டின் தேவைக்காக ஏற்பட்டதல்ல. சுருக்கெழுத்துக்கு நீண்ட சரித்திரம் உண்டு.

இந் நூற்றாண்டில் சுருக்கெழுத்து நல்ல வளர்ச்சி பெற்றிருக்கலாம். ஆனால் கி. மு. முதலாம் நூற்றாண்டில் ரோமாபுரியில் சுருக்கெழுத்து புழக்கத்தில் இருந்ததாம். சிசிரோ என்ற சொற்பொழிவாளர் தனது பேச்சுக்களை எடுக்கத் திரான் என்ற சுருக்கெழுத்தாளரை வைத்திருந்தாராம்.



# தேனுனை தேனல்லவோ!

பொதுவாக மருந்தென்றால் கசக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், இனிக்கும் மருந்தொன்று இருக்கிறது. அதுதான் தேன் ! இந்தத் தித்திக்கும் தேன் ஊட்டந்தரும் உணவாகவும், உடற்பிணிகளைப் போக்கும் அரு மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது.

பேரீச்சம்பழத்திற்கு அடுத்தாற் போல அதிக ஊட்டம் தருவது எது ?

கிலோவுக்கு 3,200 கலோரி ஊட்டம் தந்து உடலுக்கு உரம் கொடுப்பது எது ?

பாலைவிட 6 மடங்கு அதிகமாகப் பயன் தருவது எது ?

எல்லாம் இந்த இனிக்கும் இன்னமுதான தேன்தான் !

தேனீக்கள் ஒன்று சேர்ந்து வாழும் இயல்புள்ளவை. அவை, கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. ஒரு கூட்டத்தில் பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி அலுவல்கள் உள்ளன. ஒரு தேனீக் கூட்டத்தில் ஒரு இராணி ஈ இருக்கும். அதுதான் அந்தக் கூட்டத்திற்கே தலைவி. ஆண் ஈக்களும் உள்ளன. இவற்றின் பணி இனவிருத்திக்கு உதவுவது மட்டும்தான். அடுத்தாற்போல் பணி ஈக்கள் உள்ளன. தேனீக் கூட்டத்தில் மிக அதிக எண்ணிக்கையில் இருப்பவை பணி ஈக்களே; தேனீக் கூட்டத்தின் நலனைப்பேணுவது இவற்றின் அலுவலாகும்.

தேனீக்கள் புழு அறைகளையும் தேன் அறைகளையும் பூசும் வேலைகளையும், கொண்டு வரும் உணவுப் பொருள்களைச் சேமித்துப் பாதுகாக்கும் வேலையையும் கவனித்துக் கொள்கின்றன. ஆண் ஈக்கள், குஞ்சுகள் ஆகியவற்றின் தேவைகளைக் கவனித்துக் கொள்வது, ஈ மெழுகை உற்பத்தி செய்வது, தேன் கூட்டைச் சுத்தி செய்வது ஆகியவையெல்லாம் கூட்டுக்குள் இருக்கும் இளம் ஈக்களின் பணிகளாகும். 20, 25 நாட்கள் இத்தகைய வேலை செய்த பிறகு தான் அவை வெளியே பறக்கத் துவங்குகின்றன. வெளியே சென்று பூந்தேனைச் சேகரிக்கின்றன.

ஒரு சாதாரண தேனீக் கூட்டத்தில் 20,000 லிருந்து 30,000 வரை பணி ஈக்கள் இருக்கும். ஒவ்வொரு ஈயும் பலதடவை வெளியே பறந்து சென்று வரும். ஒவ்வொரு தடவையும் கிட்டத்தட்ட இரண்டு கிலோமீட்டர் வரை பறக்கும். ஒரு பணி ஈ தனது வாழ்நாளில் இலட்சக்கணக்கான மலர்களுக்குச் சென்று வரும்.

ஒரு ஈ ஒரு கிலோ தேனுக்குத் தேவையான பூந்தேனைச் சேகரிப்பதற்குப் பூமியை நான்கு தடவை சுற்றி வருவதற்குத் தேவையான தூரம் பறந்து செல்ல வேண்டியிருக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள் !

பூந்தேனை மலரிலிருந்து உறிஞ்சிய பிறகு, உமிழ்நீருடன் தேன் பையில் விழுங்குகிறது. தேன் பையில் பல வால்வுகள் உள்ளன. தேன் பையிலிருந்து தேனை மறுபடியும் வாய்க்குக் கொண்டுவர முடியும். பணித் தேனீயின் முன் பக்கத்து கால் ஒவ்வொன்றிலும் மயிர் வரிசைகள் உள்ளன. இதைச் சீப்பு என்று சொல்வார்கள். வயிற்றிலிருந்து வாய்க்குக் கொண்டுவரும் தேனை இந்தச் சீப்புக்களுக்கிடையேயுள்ள இடைவெளியில் வைத்திருக்கும். அந்த இடைவெளியில் தேன் நிறைந்ததும், அதன் மேல் மெழுகினால் பூசி விடுகிறது. ஒரு தேனீக் கூட்டம் நாலு கிலோ தேன் வரை சேகரிக்கும்.

தேனுக்குப் பல சுவைகளும், பலவிதமான நறுமணமும், வண்ணமும் உள்ளன. வெள்ளைத் தேனும் இருக்கிறது. மஞ்சள் தேனும் இருக்கிறது.

டெக்ஸ்ட்ரோஸ், [illegible] எனும் இரு[illegible] பொருள்கள் [illegible] உடயிருக்கின்றன. [illegible]லுக்குத் தேவைப்படும் தாதுப் பொருள்களும், விட்டமின் சத்துக்களும் தேனில் அடங்கியுள்ளன.

200 கிராம், அதாவது 10 மேசைக் கரண்டி தேனை அருந்தினால் ஒரு லிட்டர் பாலையோ, 330 கிராம் இறைச்சியையோ, 8 ஆரஞ்சுப் பழங்களையோ, 10 முட்டைகளையோ [illegible]தால் கிடைக்கும் சத்துப் பொருளை விட அதிகச் சத்துப்பொருள் கிடைக்கிறது என்று மதிப்பிட்டிருக்கிறார்கள் !

21 கிராம் [illegible]யுள்ள ஒரு மேசைக்கரண்டி தேன் [illegible] கலோரி ஊட்டம் தருகிறது. 1938-லேயே ஒரு அமெரிக்க விஞ்ஞானி தேனின் சத்துணவுச் சிறப்பை மெய்ப்படுத்திக் காட்டினார். அவர் பாலையும் தேனையும் மட்டுமே அருந்தி 12 வாரங்கள் அவரது வழக்கமான அலுவல்களை எந்தவிதச் சிரமமுமின்றிக் கவனித்து வந்தார்.

அதிகமாக வேலை செய்து களைப்புற்றிருக்கும் எந்த மனிதனும் 1 மேசைக் கரண்டி தேனை ஒரு சொம்புத் தண்ணீரில் கலந்து அருந்தினால் உற்சாகமும் சுறுசுறுப்பும் பெற முடியும்.

கண்நோய், தொண்டைப்புண், இருமல், நீர்ப்பிடித்தல், மலச்சிக்கல், காய்ச்சல் ஆகியவற்றைத் தடுப்பதற்குத் தேனைப் பயன்படுத்துகிறார்கள். ஆயுர்வேத, சித்த மருத்துவ முறைகளில் தேனை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

இரத்தத்தைச் சுத்த[illegible]வதற்கும், நெருப்புப் புண்களுக்கும் இதைப் பயன்படுத்துவது உண்டு. டைபாயிட் அணுக்களைத் தேன் இரண்டே நாட்களிலும், நிமோனியா அணுக்களை நன்கே நாட்களிலும் வயிற்றுப் போக்குக் காரணமாக உள்ள அணுக்களை 10 நாட்களிலும் கொன்று விடுவதாக மதிப்பிட்டிருக்கிறார்கள்.

தேயிலை, காப்பி, பால் அல்லது எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து தேனை அருந்தலாம். ரொட்டி, கேக், பிஸ்கட்டுகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் போது தேனைப் பயன்படுத்தினால் அவை நல்ல தரமுள்ளவையாகக் கிடைக்கின்றன.

தோல் பராமரிப்பு, அழகுப் பராமரிப்பு ஆகியவற்றுக்கான திரவங்களை உற்பத்தி செய்வதற்குத் தேனைப் பயன்படுத்துகிறார்கள். கறவைப் பசுக்களுக்குத் தேன் கொடுத்தால் அதிகப் பால் கிடைக்கிறது. பந்தயக் குதிரைகளுக்குத் தேன் கொடுத்தால் அவை மேலும் வேகமாக ஓட முடிகிறது.



கதை: இளவல்... சித்திரம்:
நீதானே தம்பி டூர் கிளம்புறே! நான் அழைச்சிட்டு போறேன்!
தம்பி, இந்தக் கார்மேகம் எதை நினைச்சாலும் அதை செய்து முடிப்பான்! நீயும் அடிக்கடி வா! உன்னிடம் நிறையப் பேசணும்...
வா மீரா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன்
செல்வமணி கடிதம் எழுதியிருக்கிறள்; அதைச் சொல்லத்தான் ஓடி வந்தேன்!
ஊட்டிக்கு எப்ப போகலாம்னு எழுதியிருக்கா...?
இப்ப வேண்டாம்னு எழுதியிருக்கா! அங்கே யாரோ இறந்துட்டாங்களாம்! என்ன செய்றதுன்னு எனக்குத் தெரியலே
சுந்தரமும் அருளும் சும்மா விட மாட்டாங்களே! சுற்றுலா போகவேண்டாம் தேர்வு முடிந்த பிறகு நானே அழைச்சிட்டுப் போறேன்னு சொன்னேன்! இப்ப என்ன செய்றது? செல்வமணி நம்மை இப்படி வம்பிலே மாட்டி விட்டுட்டானே....!
மீரா அத்தை ஆறு மணிக்கெல்லாம் வரச்சொன்னுங்க... நம்ம டூரைப்பத்தி முடிவு செய்யுறுங்களாம். மாலா அக்காவும் எங்க வீட்டுக்கு வர்றுங்க வா... போவோம்
டேய் அருள், இதிலிருந்து எப்படியாவது தப்பிக்கணும்..




சுந்தரம் நீதாண்டா அது இதுன்னு சொல்றே.... நானும் சரின்னு சொல்லி வர்றேன்...எனக்கு ஒண்ணுமே புரியலே... அவுங்களோடசேர்ந்து போனலும் போவோம்! நாம கோட்டை விடவேண்டாண்டா
போடா மண்டு! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு பெரிய திட்டம் போட்டிருக்கேன். நான் கவனிச்சுக்கிறேன், நீ நான் சொல்றதுக்கு ஆமாம் போடுடா போதும்!
அக்கா ஒரு நல்ல சேதி! அப்பாவும் ஒத்துக்கொண்டாங்க நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து சொன்னல் அருளோட அப்பா-ராஜா மாமாவும் சரி என்பாங்க...
பீடிகை பிரமாதமா இருக்கே! விஷயம் என்ன?
எங்கள் ஓவிய ஆசிரியர், கன்னியாகுமரிக்கு உல்லாசப் பயணம் போகிறர். எங்கள் இரண்டு பேரையும் அழைத்துச் செல்கிறேன் என்றர். ராஜா மாமாவிடம் சொல்லுங்க.....
உம்... எங்களுடன் வர முடிக்கலே...! மீரா.. ராஜா அண்ணாவிடம் சொல்லி அனுமதி வாங்கிக் கொடு... சரி நீங்க போங்க....
மறு நாள் சுந்தரமும் அருளும் சுற்றுலாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்....
நம்ப வேலை சுலபமா முடிஞ்சிருச்சு நம்ப நாடகத்துக்கே வேலை இல்லாமல் ஆக்கிட்டானே, சுந்தரம்!
செல்வமணி ஏமாற்றியதால் நம்ப டூரும் கான்சலாகிவிட்டது!
சார் தந்தி!
தொடரும்





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



**தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்**
**தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது**

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமான கட்டமைப்புகளுக்கும், கருவி மற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி''

விவரங்களுக்கு அணுகவும்: தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
26, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-14.
தொலைபேசி எண்: 83061.
Telegraphic Address—"STATE INDCO"



ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்.
அச்சிட்டவர் தமிழ் நாடு அரசு அச்சு எழுது பொருள் இயக்குநர்,
தமிழ் நாடு அரசினர் அச்சகம், சென்னை-1.



# வண்ணத்துப் பூச்சியின் வண்ணமிகு கோலங்கள்!

- அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
- பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
- வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
- பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ஆடைகள்

கைத்தறியே
வண்ணத்துப்-
பூச்சி!

Criterion CO 2882

பதிவு எண். M. 8676






**தமிழகம் ஒரு பொற்காலத்தை உருவாக்கிவருகிறது!**

உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!

● ● ● ● ● ●

இரத்தப்புரட்சி இல்லாமல் இனிய வாழ்வு உருவாக்கும்

இந்தத் திட்டங்கள்
இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க
நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட
தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட
நாம் ஆற்றவேண்டிய பேருதவி

**அளவான குடும்பம்**

**சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல**
**சிறு குடும்பம்—**
**செழித்திடும் நன்மைகளை-நாட்டில்**
**நிலைத்திடச் செய்ய**
**அமையட்டுமே அளவான குடும்பம்!**

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்பநலத்துறை
தமிழ்நாடு அரசு




R. R. NO. 1234/73



# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மா அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.






பாஞ்சாலங் குறிச்சி! இந்திய நாட்டு விடுதலைக்காகச் சுதந்தரப் போராட்டத்தில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதலில் முழக்கம் இட்ட வீரத் தலம் இந்தத் திருத்தலம்.

மண்மேடு இடுகிற அளவு வெள்ளையர்கள் செய்த நிலை மாறி, அது களையப்படும் நிலை இன்று ஏற்பட்டு இருக்கிறது.

பாஞ்சாலங் குறிச்சி எப்படி இருக்கும்? அப்படி ஒரு இடம் இருக்கிறதா? அதனுடைய சிறப்பு எத்தகையது? என்று ஏங்கிக் கிடந்த தமிழ் மக்களுக்கு விடை கிடைத்து விட்டது.

பாஞ்சாலங் குறிச்சியின் பெயர் மறைக்கப்பட்டு விட்டது. அதன் புகழ் மங்கிவிட்டது. மங்கிவிட்ட பழம் புகழை — மறைக்கப்பட்டுவிட்ட பெயரை — அந்தப் பெருமையினை — மீண்டும் தமிழகத்தில் — இந்தியப் பெரு நாட்டில் அகில உலகத்துக்கும் கொண்டு வர வேண்டிய நாளாக இந்த நாளைக் கருதுவோம். அதற்கான உறுதியை எடுத்துக் கொள்ளுவோம்.

இந்த மேடையில் சிறிய அளவில் கட்டபொம்மன் சிலை இருக்கிறது. அவருடைய பரம்பரையைச் சேர்ந்த மக்கள் எதிரே உட்கார்ந்து இருக்கிறார்கள். சிலையிலே உள்ள மீசைக்கும் அவர்கள் வைத்துள்ள மீசைக்கும் உறவு படுத்திப் பார்த்து, மறவர் குல வீரத்தை உணர்கிறோம்.

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்" என்று தூக்குக் கயிற்றை முத்தமிட்ட கட்டபொம்மனையும், அவன் தம்பி ஊமைத்துரையையும், வீரத் தளபதிகளையும் எண்ணிப்பார்க்கிறோம். வெள்ளையர்கள் கட்டபொம்மன் கோட்டையைத் தகர்த்து, இந்த இடத்தை உழுது, ஆமணக்கு விதைத்ததாக வரலாறு கூறுகிறது.

அகழ்வாராய்ச்சித் துறையினர் 1967-ஆம் ஆண்டு அந்த இடத்தை ஆராய்ந்து, கோட்டையின் அடித்தளத்தைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

அதை நாங்கள் இங்கே வந்து பார்த்தபோது மெய் சிலிர்த்தது. உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. இங்கே பேசிய சுப்பு அவர்கள் கூறியது போல் கட்டபொம்மன் காலத்து வீர நினைவுகள் தோன்றின.

வீர பாண்டியக் கட்டபொம்மன் தீரத்துடன் — அஞ்சா நெஞ்சுடன் — புற முதுகு காட்டாமல் கடைசி வரை போராடி இன்னுயிரைத் தந்தான். வெள்ளையருக்கு எதிராக முதல் முழக்கம் செய்த பெருமை தமிழ் நாட்டுக்கு இருந்திட வேண்டும் என்று கூறிய கட்டபொம்மனையும் அவருடைய வாரிசுகளையும் தமிழ் நாடும் — தமிழ்ச் சமுதாயமும் என்றும் மறவாமல் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. கட்டமொம்மன் காலத்தில் பெற்றிருந்த வீரத்தை மீண்டும் பெற வேண்டிய காலம் வந்துவிட்டது.

வெற்றிகளைக் கண்ட சமுதாயம் — தியாகங்களைப் புரிந்த சமுதாயம் — மாற்றார்களுக்கு உரிய இடம் அளித்துத் தலைமையை இழக்காத சமுதாயம் கட்டபொம்மனுக்கு விழா எடுக்கும் நாளில் அந்தக் குணுரையை எடுத்துக் கொள்ள வேண்டும்.



பூம்புகார் விழா எடுத்த போது அந்தப் பகுதியில் வாழும் மீனவர்களுக்காகக் குடியிருப்பு — படகு — வலை இவைகளை வழங்க 40 இலட்சம் ரூபாயில் திட்டத்தை அறிவித்தோம்.

எனவே அதைப் போல இங்குள்ள பிற்படுத்தப் பட்ட மக்களுக்காக — கட்டபொம்மனின் வாரிசுகளுக்காக மறுவாழ்வு அளிக்கும் — மறுமலர்ச்சி ஏற்படுத்தும் திட்டங்களை, அதிகாரிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் கலந்து கொண்டு அறிவிக்கிறேன். புதிய கட்டபொம்மன் கோட்டைக்கான அடிக்கல் நாட்டு விழா விரைவில் நடைபெறும். இப்போதுள்ள அடித்தளம் அப்படியே பழைமை கெடாமல் இருக்கும். புதிதாகக் கட்டப்படும் கோட்டை, கட்டபொம்மன் கோட்டை எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து அதற்கு ஏற்பக் கட்டப்படும்.

இரண்டு நாளைக்கு முன்பு போக்குவரத்துத் துறை அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் என்னிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, நெல்லை மாவட்டத்தில் பஸ்களுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டார். வீர பாண்டியக் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்கும்படிக் கூறினேன்.

கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை 50 ரூபாயிலிருந்து 75 ரூபாயாக உயர்த்தி, அதற்கான அரசு உத்தரவில் கையெழுத்துப் போட்டு விட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன். அதன்படி தற்போது உதவி பெறும் பத்துப் பேர்களும் தொடர்ந்து பெறுவார்கள்.

கட்டபொம்மன் பிறந்த நாள் 1760-ஆம் ஆண்டு ஜனவரி 3-ஆம் தேதி என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி வருகிற ஆண்டு முதல், ஆண்டு தோறும் சனவரி 3-ஆம் தேதி முதல், இரண்டு நாள் கட்டபொம்மன் நினைவு விழா இங்கே அரசின் சார்பில் நடத்தப்படும்.

அரசின் ஆவணப் பதிவேடுகளில் பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயர் இடம் பெறும்.

இந்த அரசு செய்திருக்கும் நல்ல காரியங்களை மணலியும், சுப்புவும் பாராட்டினார்கள். உங்கள் காலம் பொற்காலம் என்று மணலி கூறினார்.

இப்படிச் சொன்னதன் மூலம் அவருக்கும், எனக்கும் உள்ள தொலைவு குறைவு என்பது தெரிகிறது. உள்ளத்தில் உள்ள கொள்கையில் இரண்டு பேருக்கும் உள்ள தொலைவு மிகவும் குறைவு என்பதை அவர்கள் பேசியதில் இருந்து தெரிந்து கொண்டிருப்பீர்கள். என்னுடைய ஆட்சிக் காலம் பொற்காலமாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்தினார்.

அவர் என்னைவிட வயதில் — அறிவில் — தியாகத்தில் பெரியவர். அவர் இங்கே கூறியதை வேண்டுகோளாக அல்ல, கட்டளையாகவே ஏற்றுக் கொள்கிறேன். அதைப் போலச் சுப்பு அவர்கள் கூறிய வேண்டுகோளையும் நான் அன்புக் கட்டளையாக ஏற்றுக் கொள்கிறேன்.



—பாஞ்சாலங் குறிச்சியில் 12-5-73 அன்று நடைபெற்ற கட்டபொம்மன் விழாவில் ஆற்றிய உரை.

# பார்த்தோம் படித்தோம்





### சுருக்கெழுத்துக்கு விரிவான கட்டுரை

பெட்டிச் செய்தி என்றாலும் சுருக்கெழுத்தின் சரித்திரம் எனது இதயத்தைத் தொட்டுவிட்டது. சுருக்கெழுத்து, கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உருவாகியது என்பதை நான் இப்போதுதான் தெரிந்து கொண்டேன். சுருக்கெழுத்துப் படிக்கின்ற எனக்கே இந்த வரலாறு இப்போதுதான் தெரிகிறது. சுருக்கெழுத்து பற்றி நீண்ட கட்டுரை ஒன்று வெளியிடுங்கள். பலருக்கும் பயன் தரும்!

—எம். மீனாட்சிசுந்தரம், மதுரை.

### தேன்! தேன்!! தேன்!!!

தேனை தேனல்லவோ பார்த்தேன்; படித்தேன்; ரசித்தேன்; ஒரு 'படித்தேன்' குடித்தேன் என மகிழ்ந்தேன்; உமக்கு நன்றி தெரிவித்தேன்!

—செல்வி குமுதா, காரைக்குடி.

### பிராணிகள் தருக!

கன்று வளர்ச்சி பயனுள்ள கட்டுரை. கன்று வளர்ப்பதற்குரிய கருத்துக்களை வழங்கிய டாக்டர் பா. சின்னதுரை அவர்களுக்குப் பாராட்டுக் கூறுகின்றேன். இதுபோன்று ஒவ்வொரு பிராணியையும் பற்றித் 'தமிழரசு' இதழில் எடுத்துக் கூறுதல் பயனுடைய பணி! செய்வீர்களா?

—இரா. பரமசிவன், நெல்லை.

### ஆராய்ச்சிக் கோட்டம்

குட்டுவன் எடுத்த கோட்டம்—கட்டுரை சுவையாக இருந்தது. பொதுவாக, ஆய்வுக் கட்டுரை என்றால் அறுவைக் கட்டுரையாக இருக்கும்; ஆனால் குட்டுவன் எடுத்த கோட்டம்—சுவையாக இருந்தது; கட்டுரை தந்த கோவை இளஞ்சேரன் தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவர்.

— எஸ். ஆர். சந்திரன், கோவை 1.

### கல்விப் பெருமை

எழுத்தறிவிக்கும் பணியில் தமிழக அரசு 99 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது என்பதைத் தெளிவாக்கியுள்ளது, அறியாமை அகன்றிட அரசின் அரும்பணிகள் என்னும் கட்டுரை. கல்விப் பணி அறிவுக்கண் கொடுக்கும் பணி என்பதை விளக்கியுள்ள கட்டுரைக்குப் பாராட்டு!

—சுப. மணிவண்ணன், முகவை.





# வெளிமாநிலங்கள் போற்றும் நமது கூட்டுறவுத் துறை

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களது கருத்துரைகளை நயமான முறையிலே தெரிவித்ததற்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சொசைட்டி, சூபர்சீட் செய்யப்பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாகக் கூறியது, இது கட்சி அடிப்படையிலே செயல்படுகிறது என்று சொன்னார்கள். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்னால் நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு நண்பர் மணலி அவர்கள் ரொம்ப நாசூக்காகச் சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களும் சொன்னார்கள், கொஞ்சம் சூடாகச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், நாமினேஷன், நியமனங்கள் செய்கிற பொழுது, அதற்கு விதிகள் இருக்கின்றன. கட்சிக்காரர்களையே நியமிக்கலாம் என்று அப்படி விதி ஒன்றுமில்லை.

விதி எப்படி இருக்கிறது? தாழ்த்தப்பட்டோர்களை நியமிக்க வேண்டும், அதுதான் விதி. பரம்பரை பரம்பரையாக எத்தனையோ மத்திய வங்கிகள் இருக்கின்றன. 15, 16 வங்கிகள், முக்கியமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகின்றன. நீங்கள் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கேள்விப்பட்டிருக்க முடியாது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், இரண்டு மத்திய வங்கிகள் இருக்கின்றன. ஒன்று தஞ்சாவூரில், மற்றொன்று கும்பகோணத்தில்; எப்பொழுதாவது தாழ்த்தப்பட்ட மகன் ஒருவன் இயக்குநராக இருந்திருக்கிறாரா? அங்கு இருந்ததில்லை. அந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டபொழுது கூட நண்பர்கள் சொன்னார்கள். ! தாழ்த்தப்பட்டோர்களை உயர்த்துவதற்கு அவர்களை இயக்குநர்களாக ஆக்கித்தான் உயர்த்த வேண்டுமா? பணம் கொடுத்து உதவினால் போதாதா? என்று கேட்டபொழுது நான் சொன்னேன், அவர்களுக்குப் பணம் வாங்கத்தான் உரிமை இருக்கிறதா? நாற்காலியில் உட்காருவதற்கு உரிமை இல்லையா என்று கூட நான் கேட்டேன். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு—முதன் முறையாக இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் பெரிய வங்கிகளில் அல்லது பெரிய கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு தாழ்த்தப்பட்டமகன் நிச்சயமாக இயக்குநராக நாற்காலியில் உட்கார்ந்தே ஆக வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். பெண்களுக்கும் இடம் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். அதே மாதிரி, சிறு விவசாயிகளுக்கும் கட்டாயமாக இடம் கொடுத்திருக்கிறோம்.

நீங்கள் கேட்கலாம்; இதையெல்லாம் 'நாமினேஷன்' முறையின் மூலம்தான் செய்ய வேண்டுமா, ஏதேனும் தேர்தல் முறை கொண்டுவரப்படாதா என்று கேட்கலாம். தேர்தல் முறையில் வருவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால், அவர்களை நியமனம் செய்கிறோம். இதைக் கோர்ட்டுக்கு இழுப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். எந்தக் காரியமாக இருந்தாலும் கோர்ட்டுக்குக் கொண்டு போகிறார்கள். எத்தனையோ காரியங்களைக் கோர்ட்டுக்குக் கொண்டு போய்த்தான் முடிவு செய்கிறார்கள். நன்றாகத் தெரியும். எப்படியிருந்தாலும் கோர்ட்டுக்குப் போகும். இதையும் கோர்ட்டுக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். ஒரு வழக்கு இரண்டு வழக்கு இல்லை. பல வழக்குகள், ஏறத்தாழ 100-க்கு மேற்பட்ட வழக்குகள் . . .



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
சி. பா. ஆதித்தனர்

கோர்ட்டுக்குப் போய் நடந்ததைச் சொல்கிறேன். கோர்ட்டில் வழக்காடப்பட்டது. கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. நியமிக்கப் படுகிறவர்களெல்லாம் தி. மு. க. வைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. அதோடு கூட, இவர்களை நியமனம்தான் செய்யவேண்டுமா, அது கூட்டுறவுத் துறையின் அடிப்படைக்கே தவறாக இருக்கிறதே என்றெல்லாம் பேசப்பட்டது. சொல்லப்பட்டது. ஆர்குமெண்டு நடந்தது. அதற்குப் பிறகு ஒரு தீர்ப்பு அல்ல. இது சரியான முறைதான் என்று இரண்டு தீர்ப்புகள் இருக்கின்றன. அழகிரிசாமி அவர்கள் ஜட்ஜ் என்று நினைக்கிறேன். இன்னொருஜட்ஜ் இராமப்பிரசாத் ராவ் அவர்கள் என்று நினைக்கிறேன். இரண்டு தீர்ப்புகள் இருக்கின்றன. இந்தச் சட்டம் நாம் இயற்றியபடி சரியானது—செல்லுபடியாகக்கூடியது என்று தீர்ப்பு இருக்கிறது. ஆகவே, இனிமேல் மீண்டும் மீண்டும் அதைப்பற்றிப் பேச வேண்டியதில்லை.

நில அடமான வங்கிகளைப் பற்றிக் குறிப்பாகச் சொல்கிறார்கள். அது எனக்குத் தெரியாது. ஆனால், நியமிக்கப்படுபவர்கள் இன்னபடிதான் இருக்கவேண்டும், இத்தனை சதவிகிதத்திற்கு மேல், ஐந்தில் ஒன்றுக்கு மேல், அதிகமாக இருக்கக் கூடாது என்பதெல்லாம் கூடச் சட்டத்திலே போடப்பட்டிருக்கிறது. நியமனம் செய்து அதிகமானபேர்களைச் சேர்த்துவிட முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தில் ஒன்றுக்குமேல் அதிகமான பேர்களைப் போட முடியாது. இது சம்பந்தமாகக் கோர்ட்டில் வழக்காடப்பட்டுத் தீர்ப்பாகியிருக்கிறது.

சென்டிரல் பாங்க் பற்றியெல்லாம் சொன்னார்கள். 'ஸ்டிஃபெனிங் ஆஃப் தி ரூல்ஸ்.

இன்றைக்கு எலெக்ஷன் — தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெற்றி பெற்று வருகிறது என்று சொன்னார்கள். அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இந்தச் சபையிலே கூட முன்பு 160 பேர்களாக இருந்த காங்கிரஸ்காரர்கள் — இப்போது பழைய காங்கிரஸ்— இப்போது 13 பேர்களாக — அப்படி நினைக்கிறேன்— இருக்கிறார்கள். ஆக, தேர்தலிலே— பொதுத் தேர்தலானாலும் சரி, கூட்டுறவுத் துறைத் தேர்தலானாலும் சரி— திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுகிறது என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அந்த அளவுக்கு மக்கள் மனப்பான்மை மாறி இருக்கிறது. 160 பேராக இருந்தவர்கள் 13 பேராக குறைந்திருப்பதற்கு ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்றது தான் காரணம். ஜனநாயகம் எங்கும் போய்விடவில்லை. இங்கேதான் இருக்கிறது.

ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்றால் திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் வெற்றி பெறுகிறது. மற்றக் கட்சிக்காரர்கள் இல்லையா என்றால், இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறைத் தேர்தலில் மற்றக் கட்சிக்காரர்கள் வெற்றி பெற்றிருப்பதாக — குறிப்பாக காங்கிரஸ் — நவசக்தி பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அது ஸ்தாபன காங்கிரஸ் பத்திரிகை என்று நினைக்கிறேன். அந்தப் பத்திரிகையில் 3—1—73 ஆம் தேதியில் வெளியிட்டிருக்கிறார்கள். கூட்டுறவு வங்கித் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி என்று பெரிய எழுத்தில் — கொட்டை எழுத்தில் போட்டிருக்கிறார்கள். செய்தி என்னவென்றால், ' புதுக்கோட்டை நகரக் கூட்டுறவுவங்கி டைரக்டர் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டக்காங்கிரஸ் செயலாளர் கே. வாசுதேவன் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட புதுக்கோட்டை நகர தி. மு. க. செயலாளரும், நகரமன்ற தி. மு. க. உறுப்பினருமான அப்துல்மஜீத் படுதோல்வி அடைந்தார்'' என்பது.

இன்னும் போட்டிருக்கிறார்கள் புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி டைரக்டர் தேர்தலில் புதுக்கோட்டை நகரமன்ற முன்னாள் தலைவர் கே. தர்மராஜா பிள்ளை (காங்கிரஸ்) போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். தர்மராஜா பிள்ளை போட்டியில்லாமலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது செய்தி.

அடுத்து இன்னொரு செய்தி 3—1—1973-ஆம் தேதியே போட்டிருக்கிறார்கள், தென்னகத்தில், கூட்டுறவுச் சங்கத் தேர்தலில், கருணாநிதிக் கட்சிக்கு இமாலயத் தோல்வி, அண்ணா தி. மு. க. 158 வாக்கு, கருணாநிதி கட்சி 2 வாக்கு. அறந்தாங்கி வட்டத்தில் நடந்த கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத் தேர்தலில் கருணாநிதி கட்சியும் சிண்டிகேட் கட்சியும். கவனித்துக் கொள்ளுங்கள், சிண்டிகேட் கட்சி— சேர்ந்து நிறுத்திய வேட்பாளர் பாவம் படுதோல்வி அடைந்தார். அண்ணா தி. மு. கழக வேட்பாளர் பெருவாரியான வாக்குகளைப் பெற்று வெற்றிவாகைசூடினார். அண்ணா தி.மு.க.வேட்பாளருக்கு 168 வாக்குகளும் கருணாநிதி கட்சி ஆதரவு வேட்பாளருக்கு 2 வாக்குகளும் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. சுயேட்சையாக நின்ற வேட்பாளரை விட இந்தக் கூட்டுக் கட்சி வேட்பாளர் 7 வாக்குகள் குறைவாகப் பெற்றிருக்கிறார். அறந்தாங்கி வட்டம் செங்கமாரி கூட்டுறவு விவசாயக் கடன் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்தல், சென்ற 31—12—72 அன்று நடந்தது. இதில் அண்ணா தி. மு. க. வேட்பாளராக ஆ. கருப்பையா நின்றார். சிண்டிகேட் வேட்பாளராக நின்ற சா. கருப்பையா சேர்வை என்பவரைக் கருணாநிதிக் கட்சி ஆதரித்துக் கடும் தேர்தல் பிரச்சாரமும் செய்தது. இந்தத் தேர்தலில் அண்ணா தி.மு. கழக வேட்பாளர் ஆ. கருப்பையா 158 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். கருணாநிதிக் கட்சி ஆதரவு பெற்ற சிண்டிகேட் வேட்பாளருக்கு 2 வாக்குகள்தான் கிடைத்தன. சுயேச்சை வேட்பாளருக்கு 9 வாக்குகள் கிடைத்தன. இதிலே முக்கிய விஷயம் என்னவென்றால் கருணாநிதிக் கட்சி ஆதரவு பெற்ற சிண்டிகேட் வேட்பாளர் சுயேச்சை வேட்பாளரை விட 7 வாக்குகள் குறைவாகப் பெற்றார்.

இன்னும் இதுபோன்ற விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அவை எல்லாம் இங்கே சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன். இப்படித் தேர்தல் நடக்கும் போது பொது மக்கள் கருத்துப்படி அவர்களுக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்தலில் எந்தக் கட்சிக்கும் வெற்றியும் இருக்கும்— தோல்வியும் இருக்கும்.

அடுத்து, கிணறு தோண்டுவதற்காக வழங்கப்படும் கடன் வழங்கு முறையைச் சுலபமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரிசர்வ் வங்கியிடம் அதுபற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது கடன் வழங்கு முறையும் முன்னைவிடச் சுலபமாக்கப்பட்டிருக்கிறது. முன்னால் இரண்டு கிணறுகளுக்கு இடையே உள்ள தூரம் இந்தனை அடி இருக்க வேண்டுமென்று இருந்தது. அதை மாற்றி இப்போது நமது அரசாங்கம் நியமித்திருக்கிற ' கிரவுண்ட் வாட்டர் எஞ்சினியர் ' போதுமான தண்ணீர் வசதி இருக்கிறது, கடன் கொடுக்கலாம் என்று சொன்னால் போதும் என்று மாற்றியிருக்கிறோம். ரிசர்வ் வங்கியும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறது.

### பாரிஸில் காந்தியடிகள்

பாரிஸ் நகரத்தின் 16-வது மாவட்டத்தில் ஒரு தெருவுக்குக் காந்தியடிகளின் பெயரைச் சூட்டப்போகிறார்கள். பாரிஸ் நகரவை இந்த அருந்தொண்டில் இறங்கியிருக்கிறது.

கடன் வழங்கு முறையைச் சுலபமாக்கியிருக்கின்ற போது இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பக்கத்தில் பக்கத்தில் இரண்டு கிணறுகளை வெட்டுவதற்குப் பணம் கொடுப்பதாக இருந்தால் அதனால் நஷ்டம் விவசாயிக்குத்தான். கிணறு வெட்டி முடிந்த பின்னால், ஒரு கிணற்றுக்காரர் ' கிணற்றில் தண்ணீர் இல்லை ; ஆகவே, ஆழப்படுத்துவதற்கு 10,000 ரூபாய் கடன் கொடு என்று கேட்டால் கொடுத்து விடுகிறோம். இப்போது அந்தக் கிணற்றில் தண்ணீர் அதிகமாகும். அடுத்த கிணற்றில் வற்றிப்போகும். உடனே அந்தக் கிணற்றுக்காரர் கிணற்றை ஆழப்படுத்துவதற்கு 10,000 ரூபாய் கடன் கேட்பார். கொடுத்துவிடுகிறோம். இப்போது இந்தக் கிணறு அதிக ஆழமாக இருப்பதால், முதல் கிணற்றிலுள்ள தண்ணீர் இந்தக் கிணற்றுக்கு வந்துவிடும் ; அந்தக் கிணற்றில் தண்ணீர் வற்றி விடும். திருப்பி அவர் கடன் கேட்பார். இப்படியே போய்க் கொண்டிருந்தால் இருவருக்கும் நஷ்டமே தவிர, இலாபம் இல்லை. ஆகவே, கடன் வாங்கும்போதும் கொடுக்கும் போதும் அதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். கடன் வழங்கும் முறையை,



இப்போது, ' கிரவுண்ட் வாட்டர் எஞ்சினீயர் ' கொடுக்கலாம் என்று சொன்னால் கொடுத்து விடக்கூடிய அளவுக்குச் சுலபமாக்கியிருக்கிறோம். திரு. நாச்சிமுத்து அவர்கள் இதைப்பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இப்போது இலகுவாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று நன்றாகச் சொன்னார்கள்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசியது பற்றி இன்னொரு முறை குறிப்பிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஏன், ஒருவரே பல குழுக்களிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள், அது தவறல்லவா, என்று நன்றாகச் சொன்னார்கள். அவர் பேசியது எனக்குக் கூடச் சுருக்கென்று தாக்கியது. ஆனால் நான் புத்தகத்தைப் பார்க்கிற போது ' மெட்ராஸ் கோவாபரேடிவ் சொசைடி ஆக்ட்—61-ல்' என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் :—

செக்ஷன் 28 ;—
No Person shall at the same time be a member of the committee of more than five societies

என்று 1961-ல் சட்டம் செய்தார்கள். அதை மாற்றவில்லை. இந்தச் சட்டம் செய்தது யார் என்று கவனிக்கிறபோது அப்போது ஆட்சியில் இருந்தவர்கள்தான் செய்திருக்கிறார்கள். அசெம்பிளியிலிருந்தவர்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். திருமதி அனந்தநாயகி அவர்களே, அப்போது இப்படிக் கூறிவிட்டு, ஓட்டுப்போட்டுவிட்டு, இப்போது மாற்ற வேண்டுமென்று கேட்டால் நான் கேட்கிறேன், என்ன அடிப்படை ?

அடுத்து, திரு அண்ணாமலை அவர்கள் செண்டிரல் பேங்கில் தலைவராக இருக்கிறார்கள். மத்திய கூட்டுறவு வங்கிகள் முன்பு இருந்த நிலைமையையும் இப்போது இருக்கிற நிலைமையையும் நன்றாக ஒப்பிட்டுக் காட்டினார். புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி ' சி ' நிர்வாகம் என்று வைக்கப்பட்டிருந்தது—ரிசர்வ் பேங்கினால் இப்போது அது ' பி ' ஆகி, ' ஏ ' ஆகிவிட்டிருக்கிறது. அதே போல சி.வி. ராஜகோபால் தலைவராக இருக்கிற மத்திய கூட்டுறவு வங்கி ' பி ' கிளாசாக இருந்தது ; இப்போது ' ஏ ' கிளாசாக ஆயிருக்கிறது என்று நான் சொல்லவில்லை—ரிசர்வ் பாங்கி சொல்கிறது. இப்படி முன்னால் இருந்த வங்கிகள் அத்தனையும் இத்தரத்தில் உயர்ந்திருக்கின்றன என்று ரிசர்வ் வங்கியினர் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். எனவே, அவை முன்பு இருந்ததைவிட நன்றாக இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

திரு மணலி கந்தசாமி அவர்கள் முக்கியமான கருத்துக்களைச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையிலே கல்வி இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். வரவேற்கிறேன். சென்னையில் ஒரு கல்லூரி இருக்கிறது. ஏழு இன்ஸ்டிட்யூட்டுகள் இருக்கின்றன. இன்ஸ்டிட்யூட்டுக்கும் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றுத்தான் வர வேண்டும். இவ்வளவு இருந்தும் கூட— அனுபவத்தின் காரணமாகச் சொல்கின்றேன்—போதிய அளவுக்கு நுணுக்கமான கல்வி அளிக்கப்படவில்லை என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். கல்வி அப்படி நுணுக்கமான அளிக்கப்பட வேண்டுமென்று— நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறோம். கூட்டுறவுத் துறையில்— குறிப்பாக — வங்கிகளைப் பொறுத்தவரையில் இப்போது நுணுக்கமாக ஆகிவிட்டன. நுணுக்கமான அறிவு தேவைப்படுகிறது. அண்மையில் ரிசர்வ் வங்கி புது உத்தரவு போட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு விவசாயத்திற்குப் பணம் கொடுக்க வேண்டுமானாலும், மற்ற காரியங்களுக்கும், டெபாசிட்டுக்கு அதிகமாக வசூல் செய்ய வேண்டுமென்ற விதியை ரிசர்வ் பாங்கி ஜூன் மாதத்திலிருந்து நடைமுறையில் உருவாக்கி விட்டார்கள். ரிசர்வ் பாங்கிலிருந்து போட்டிருக்கின்ற இப்படிப்பட்ட விதி, கூட்டுறவு வங்கிகளுக்கு எதிராகவும், மத்திய வணிக வங்கிகளுக்கும், மத்திய அரசு வங்கிகளுக்கும் ஆதரவாகவும் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். நான் எதையும் ஒளித்து மறைத்துச் சொல்லவில்லை. கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் தெளிவாகச் சொன்னேன். டெபாசிட் அதிகமாக வசூல் செய்தால்தான் அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்று சட்டம் போடுவதாக இருந்தால் இன்றைக்கு ஆறாயிரம் கோடி அளவுக்கு வணிக வங்கிகளிடம் டெபாசிட் இருக்கிறது. 7-8 ஆயிரம் கோடி என்று கூடச் சொன்னார்கள். இந்தியா முழுமையுமுள்ள கூட்டுறவு வங்கிகளை எடுத்துக் கொண்டாலும் கூட டெபாசிட் தொகை 600 கோடிதான் என்று சொல்கிறார்கள். நமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 67 கோடி ரூபாய் அளவுக்குத்தான் டெபாசிட் இருக்கிறது. அந்த அளவுக்கு மேலே வசூல் செய்ய வேண்டுமென்றெல்லாம் சட்டம் வருகிறபோது சட்ட நுணுக்கங்களை நன்றாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியமிருக்கிற காரணத்தால் இன்ஸ்டிட்யூஷன் கல்வியில் பாங்கியைப் பற்றியும் நிலவள வங்கியைப் பற்றியும் மத்திய வங்கிகளைப் பற்றியும் அர்பன் பாங்கு பற்றியும் அதிகமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது.

அடுத்து, சண்முகம் எம். எல். ஏ. அவர்கள் சொன்னார்கள். ஒருவரே, ஒரே கூட்டுறவு வங்கியில் லாங் டேர்ம், ஷார்ட் டேம், மீடியம் டேர்ம் ஆகிய எல்லா லோன்களையும் ஒரே சமயத்தில் வாங்கி விடுகிறார்கள் என்று. உள்ளபடியே, இதில் விதிமுறைகள் ஏதுமில்லாத காரணத்தால், ஷார்ட் டேம், லாங் டேம், கடன்கள், மூன்று வருடக் கடன், ஐந்து வருடக் கடன், 7 வருடக் கடன் அதற்கு மேலும் 15 வருடக் கடன் இப்படி எல்லாவற்றையும் ஒரே வருடத்தில் வாங்கிவிடலாம். இதைத் திரு சண்முகம் அவர்கள் தன்னுடைய நீண்டகால அனுபவத்திலிருந்து சொன்னார்கள். அவர்கள் சொல்வது நிச்சயமாகக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். அவர் இப்போது 134 இலட்சமல்ல 134 கோடி வரை நிர்வாகம் செய்து கொண்டு வருகிறார்கள். இப்போது கொடுக்கப்பட்டிருப்பது ஆர்டினரி டிபஞ்சர் — சாதாரணக் கடன்—அது 92·40 கோடி ; ரூரல் டிபஞ்சர் 2.2 கோடி ஏ. ஆர். சி. டிபஞ்சர் 14.52 கோடி ; ஆக மொத்தம் 151·24 கோடி—சட்டமன்றம் அனுமதித்துக் கொடுத்திருப்பது—விவசாயிகளுக்குக் கடனைக் கொடுப்பதற்காக. சிங்கிங் ஃபண்டு ரூ. 25 கோடி. ஆக மொத்தம் 134 கோடிக்கு நிர்வாகம் செய்து கொண்டு வருகிறார்கள் என்று நான் சொல்வதைவிட மற்றவர்கள் சொல்வதைக் கேட்பதற்குக் குளிர்ச்சியாக — சந்தோஷமாக இருக்கிறது. பாங்கியிலிருந்து வருகிறவர்கள் மாநில, நிலவள வங்கிகளைப் பற்றிச் சொல்லி விட்டுப் போவது சிந்திக்கத் தக்கது. சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..

திரு கே.எம். சுப்பிரமணியம் சொன்னார்கள். சூப்பர்மார்க்கெட், மினி மார்க்கெட், பண்டகசாலைகள் எல்லாம் விலைகளைக் குறைக்கத் தக்க வகையில் செயல்பட வேண்டாமா என்றார். முதலமைச்சர் அவர்கள் பேசிய போது—அவர் இங்கே இல்லை என்று நினைக்கிறேன். விலை என்பது பணி சப்ளையைப் பொறுத்தது. நேற்று நமது மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள்.

In Today's Hindu at page 4 you will see expansion of currency of Rs. 1 crore.

என்பதாக காகிதப் பணத்தை அச்சிட்டுக்கொண்டே இருக்கிறபோது விலை ஏறாமல் எப்படி இருக்கும் ?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள். நூறு கோடிக்குக் காகிதப் பணத்தை உற்பத்தி செய்துவிட்டால் விலை ஏறத்தான் செய்யும். ஆயினும் இந்தக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறைந்த விலையில் பண்டங்களை விற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. திருச்சி மார்க்கெட்டை, சிந்தாமணி மார்கெட்டுக்குக் கொடுத்த பிறகு அங்கே போய் மக்கள் மொய்த்துக் கொண்டு வாங்குகிறார்கள் என்றால் வெளியில் உள்ள விலையைவிட அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையில் விலை குறைவாக இருப்பதனால் தானே !

ஆயிரம் கோடிக்குக் காகிதப் பணம் உற்பத்தி செய்தபோது காப்பிக்கொட்டைவிலை 2 ரூபாய். நாலாயிரம் கோடிக்குக் காகிதப் பணம் உற்பத்தி செய்தபோது 4 ரூபாய். இப்படி நாட்டில் காகிதப் பணத்தை உற்பத்தி செய்துகொண்டே இருந்தால் விலை ஏறிக்கொண்டேதான் போகும். திரு கே. எம். சுப்பிரமணியத்திற்கு மத்திய சர்க்காரில் எவ்வளவு செல்வாக்கு என்பது எனக்குத் தெரியாது. இப்படிக் காகிதப் பணத்தை உற்பத்தி செய்துகொண்டே போனால் விலை வீக்கம்தான் ஏற்படும் என்பதை மத்தியசர்க்காரிடத்திலேசொல்ல வேண்டாமா ? அவர்களது கட்சி எம். பிக்கள் அங்கே இதை வற்புறுத்திப் பேச வேண்டாமா?

உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள்முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். சிறிய கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றாகச் சேர்த்து விடலாம் என்று. அது நாம் செய்யக்கூடிய கைங்கரியம் அல்ல. முன்பே இருந்தவர்கள் செய்தார்கள். 12 ஆயிரம் கூட்டுறவு க்ரெடிட் சொசைடிகளை 5 ஆயிரம் அளவிற்குக் குறைத்தார்கள். மத்திய சர்க்காரில் உதவி கிடைக்கிறது என்ற காரணத்தினால் வேறு சில மாநிலங்களிலும்கூட இப்படிச் செய்தார்கள். ஆனால் நாம் இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. கட்டாயமாக ஒரு சொசைடியை இன்னொன்றோடு இணைப்பதுஎன்பதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மராட்டிய மாநிலத்தவர்களும் இதே கொள்கையில் இருக்கிறார்கள். இன்றைக்கும் கூட 2 இலட்சத்திற்கு வரவு செலவு செய்யக்கூடிய நிலையில் தாங்கள் தம் காலிலேயே நிற்க முடியும் என்று சொன்னார்கள் என்றால் எந்த ரூரர் க்ரெடிட் சொசைட்டியையும் தனியாக இயங்கவைக்க நாங்கள் தயார்,

அடுத்து கூட்டுறவுத்துறையில் உள்ள தவறுகளை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் வேண்டுமென்றே மறைமுகமாகக்கூட அவற்றை ஆதரிக்கவில்லை. இருக்கிற தவறுகளைக் களைந்தாக வேண்டும் என்றே முயற்சிக்கிறோம். கொஞ்சம் தாமதமாகலாம். அரசன் நின்று கொல்லும் என்கிறபடி எப்படியும் தவறு செய்கிறவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டோம். பெரியவர்கள் என்ற அளவில்அவர்களைப் போட்டிருக்கும்போது அவர்கள் தவறு செய்வார்கள் என்றால் அவர்களைப் பெரியவர்கள் என்றே நான் கருதவில்லை. நிச்சயமாக நடவடிக்கை எடுக்க முடியும்.



**இந்தியாவுக்கு வரும் அபாலோ 17 வீரர்கள்**

அமெரிக்க அபாலோ 17 வீரர்களான யூகின் ஏ. செர்ன், ரொனால்டு இ. ஈவன்ஸ், ஹாரிசன் ஸ்கிமிட் மூவரும் ஜூன் திங்கள் 19-ஆம் நாளன்று இந்தியத் தலைநகரான டெல்லிக்கு வருவார்கள் என்று தெரிகிறது.



இறுதியாக நான் கேட்டுக் கொள்வது—திரு ஹாண்டே அவர்களும், மற்றவர்களும் மற்ற மாநிலங்களுக்குப் போனால்தான் தமிழகத்திலே கூட்டுறவு இயக்கம் எவ்வளவு சிறப்பாக நடைபெற்றுவருகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இன்றைக்கு அஸ்ஸாம் மாநிலத்திற்குப் போங்கள். சென்டிரல் பாங்க் அங்கே செத்துப்போய் விட்டது. பாங்க் கதவுகளை எல்லாம்இழுத்துப்பூட்டிவிட்டார்கள். வெஸ்ட் பெங்காலுக்குப் போங்கள்—பாங்க் கதவுகளை இழுத்து மூடிவிட்டார்கள்.

மராட்டிய மாநிலத்தில் கூட 27 மாவட்டங்களில் மூடி விட்டார்கள். டெல்லியிலே மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு நடக்கிறபோது மத்தியக் கூட்டுறவு அமைச்சர், தமிழகத்தில்தான் 'ஏ க்ளாசாக நடக்கிறது' என்கிறபோது நமக்கு உள்ளபடியே மனநிறைவாக இருக்கிறது.

திறமையான புலமை எனில் பிறநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும் என்பதுபோல மற்ற மாநிலத்தவர்கள் நம்முடைய மாநிலத்திலே கூட்டுறவு இயக்கம் செயல்படுகிற முறையினைப் பாராட்டுகிறபோதுதான் நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. தமிழகத்திற்குக் கிடைத்துள்ள இந்தப் பெயரைக் காப்பாற்ற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அமைச்சரவையை விட்டுவிடுங்கள். கூட்டுறவு இயக்கத்திற்கு நீங்கள் எல்லோரும் கொடுக்கிற ஆதரவு— அமைச்சருக்குக் கொடுத்த ஆதரவாக இருக்காது —தமிழ்நாட்டு மக்களுக்கே கொடுக்கிற ஆதரவாகத்தான் இருக்கும். அதற்காக உங்களுக்கு எல்லாம் நன்றியைத் தெரிவித்து, வெட்டுப் பிரேரணைகளுக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்து அமர்கிறேன்.

(சட்டப் பேரவையில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து)





# கொய்தவை

இந்தியாவில் இப்போது 18 பத்திரிகைகள் 100 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. லக்னோவிலிருந்து வெளிவரும் இந்தியன் விட்னஸ் (ஆங்கிலம்) என்ற பத்திரிகையும், ரத்னகிரியிலிருந்து வெளிவரும் 'சத்ய சோதக்' என்ற மராத்தியப் பத்திரிகையும் 1971-ஆம் ஆண்டில் நூற்றுண்டு விழாக் கொண்டாடின.

'பம்பாய் சமாச்சார்' என்ற குசராத்தி மொழிப் பத்திரிகை 1822-ஆம் ஆண்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. 'ஜம்-ஏ-ஜம்ஷட்' என்ற மற்றொரு குசராத்திப் பத்திரிகை 1832-ஆம் ஆண்டிலிருந்து பம்பாய் நகரத்தில் வெளியிடப்படுகிறது. 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கிலப் பத்திரிகை 1838-ஆம் ஆண்டிலிருந்தும் 'கல்கத்தா ரிவ்யூ' என்ற ஆங்கிலப் பத்திரிகை 1844-ல் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. சென்னையிலிருந்து வெளிவரும் திருநெல்வேலி டயோசிஷன் மாகஸீன் என்ற தமிழ்ப் பத்திரிகை 1849-ஆம் ஆண்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் வெளியிடப்படும் பத்திரிகைகளில் 92·5 சதவிகிதம் 25 ஆண்டுகளுக்குக் குறைவாகவே வெளிவந்து கொண்டிருக்கின்றன. சுமார் 24 சதவிகிதப் பத்திரிகைகள் கடந்த இரண்டாண்டுகளாகவே வெளியிடப்படுகின்றன.

யுனெஸ்கோ நிறுவனம் கடைசியாக வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, 1971-ஆம் ஆண்டு இறுதியில், நாளிதழ் வெளியீட்டில் இந்தியா தொடர்ந்து இரண்டாவது இடத்தில் இருந்து வருகிறது. இந்நாட்டில் 821 தினசரிப் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. 68 பத்திரிகைகள் வாரத்துக்கு மூன்று முறையும் இரண்டு முறையும் வெளிவருகின்றன. 1971-ஆம் ஆண்டு இறுதியில் நாளிதழ்களின் மொத்த விற்பனை 30 இலட்சத்து 96 ஆயிரமாக இருந்தது. 303 நாளிதழ்களிலிருந்து கிடைத்திருக்கும் தகவலின்படி 25 நாளிதழ்கள் தங்கள் மொத்த வருமானத்தில் 75 சதவிகிதத்துக்கும் அதிகமான தொகையை விளம்பரங்களின் மூலம் ஈட்டின. ஒரு பெரிய பத்திரிகையும், ஒரு நடுத்தரப் பத்திரிகையும் 23 சிறிய பத்திரிகைகளும் இதில் அடங்கும்.

1971-ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி, இந்தியாவிலுள்ள 316 தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் 2,665 பேர் பணிபுரிந்து கொண்டிருந்தனர். 1970-ல் 2,253 பேர் பணிபுரிந்து கொண்டிருந்தனர். அப்போது 272 தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

180 பத்திரிகைகளுக்கு 2,986 தனிப்பட்ட நிருபர்கள் இருந்தனர். 62 நிருபர்கள் வெளிநாடுகளில் பணி புரிந்து கொண்டிருந்தனர்.

பெரும்பாலான பத்திரிகைகள், அதாவது 7,559 பத்திரிகைகள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருந்தன. 2,262 பத்திரிகைகள் சங்கங்களுக்கும், 732 பத்திரிகைகள் பங்குதாரர் அடிப்படையிலும், 537 பத்திரிகைகள் கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்கும் உடைமையாக இருந்தன. இருப்பினும், கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்குச் சொந்தமான பத்திரிகைகள்தாம் மிக அதிகமான (மொத்தத்தில் 38·4 சதவிகிதம்) பிரதிகள் விற்றன. தனியார் உடைமைப் பத்திரிகைகளின் விற்பனை மொத்தப் பத்திரிகை விற்பனையில் 30·4 சதவிகிதம்.

முந்தைய ஆண்டுகளைவிட 1971-ஆம் ஆண்டில் அதிகப் பத்திரிகைகள் வெளிவந்தன. 1971-ஆம் ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணக்கின்படி, அந்த ஆண்டில் 12,218 பத்திரிகைகள் நம் நாட்டில் வெளியிடப்பட்டன. 1970-ஆம் ஆண்டில் வெளிவந்த பத்திரிகைகளின் எண்ணிக்கையை விட 10·7 சதவிகிதம் அதிகம் ஆகும். பரிசிலனை ஆண்டில் புதிதாக வெளிவந்த 126 தினசரிப் பத்திரிகைகளின் மூலம் நமது நாட்டில் வெளிவரும் தினசரிகளின் மொத்த எண்ணிக்கை 821 ஆக உயர்ந்துள்ளது. இது குறிப்பிடத்தக்கதாகும். 1971-ஆம் ஆண்டில் பத்திரிகை விற்பனை 3·4 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் மொத்தப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 3,578-ஆக அதாவது 41·4 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

1970-ஆம் ஆண்டில் நாட்டில் 6,483 பத்திரிகைகள் வெளியாயின. விற்பனையான மொத்தப் பத்திரிகைப் பிரதிகளின் எண்ணிக்கை 2 கோடியே 93 இலட்சத்து 3 ஆயிரம் ஆகும். 1971-ஆம் ஆண்டில் 6,633 பத்திரிகைகள் நாட்டில் வெளிவந்தன. விற்பனையான மொத்தப் பத்திரிகைப் பிரதிகளின் எண்ணிக்கை 2 கோடியே 96 இலட்சத்து 19 ஆயிரம் ஆகும்.

தில்லி, பம்பாய், கல்கத்தா சென்னை ஆகிய பெரிய நகரங்களிலிருந்து மொத்தம் 3,964 பத்திரிகைகள் ஆய்வாண்டில் வெளிவந்தன. இந்த எண்ணிக்கை, வெளியான மொத்தப் பத்திரிகைகளின் எண்ணிக்கையில் 32.4 சதவிகிதம் ஆகும். ஆய்வு ஆண்டில் பெரு நகர்ப்புறங்களிலிருந்து மொத்தம் 199 தினசரிப் பத்திரிகைகள் வெளி வந்தன. ஒரு லட்சத்துக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்களிலிருந்து மொத்தம் 183 தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்தன. சிறிய நகரங்களிலிருந்து 1,312 வாரப் பத்திரிகைகள் வெளிவந்தன.

நம் நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளில் 100 பத்திரிகைகளின் ஒவ்வொன்றின் விற்பனையும் 50 ஆயிரம் பிரதிகளாகும். இவற்றில் 44 பத்திரிகைகள் ஒவ்வொன்றின் விற்பனையும் 1 இலட்சம் பிரதிகளுக்கும் அதிகமாகும்.

1971-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பத்திரிகைகளின் விற்பனை 70.03 இலட்சம் பிரதிகளாகக் குறைந்துவிட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் 71 இலட்சத்து 73 ஆயிரம் ஆங்கிலப் பத்திரிகைப் பிரதிகள் விற்பனையாயின. தமிழ், மலையாளம், மராத்தி, வங்காளம் போன்றமொழிப் பத்திரிகைகளின் விற்பனை அதிகரித்தது.

# பிற்பட்டோர் நலன்கள் பெருகிடுதல் காணீர்!

1971-ஆம் ஆண்டு எடுத்த கணக்குப்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 40,034,200 ஆகும். இதில் மொத்தம் பிற்பட்ட வகுப்பினர் 20,467,928. அதாவது, 51.13 விழுக்காடு ஆகும். பிற்பட்ட வகுப்பினர் 11,514,597 ஆகும். அதாவது 28.76 விழுக்காடு ஆகும். மிகப் பிற்படுத்தப்பட்டோர் 8,953331. அதாவது 22.37 விழுக்காடு ஆகிறது.

பிற்பட்ட நலத்துறை என்பதாக ஏற்பட்ட பிறகு இவர்களை ஆண்டுக்கு ஆண்டு பரிசீலனை செய்து — உண்மையிலேயே மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொண்டு வருகிறோம். இந்த அடிப்படையில் சென்ற ஆண்டு 14 சாதிகளை இதில் சேர்த்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டு கூட இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்குப் பல்வேறுபட்ட விண்ணப்பங்கள் வந்தன. நான்கு சாதிகளை இந்த ஆண்டு பிற்பட்டோர்நலப் பட்டியலில் சேர்க்க அரசு முடிவு செய்திருக்கிறது. பன்னிரண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார் என்கிற சமூகம் ஒன்று சேலம் மாவட்டத்தில் நூறு குடும்பங்களுக்குமேல் கூலி வேலை, தொடக்கப்பள்ளி ஆசிரியர் வேலை செய்து வருகிறவர்கள்; வல்லம்பர் என்பதாகக் காரைக்குடி, தஞ்சாவூர்ப் பகுதிகளில் இருக்கக் கூடிய சுமார் ஒரு இலட்சம் பேர்கள். நகரத்தார் வீடுகளில் சமயல்வேலை, வீட்டு வேலை செய்து வந்தவர்கள் இரண்டாவது. யவனர் என்பதாக ஏறக்குறைய குறவர்களைப் போன்றவர்கள், தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம், சிதம்பரம், காட்பாடிப் பகுதிகளில் உள்ளவர்கள். இந்தச் சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளே இல்லை. இவர்கள் மூன்று. சாலிவாகனன் என்பதாகச் சேலம் மாவட்டத்தில் கலாலராகப் பணியாற்றி வரக்கூடியவர்கள். இந்த உத்தம செட்டியார், வல்லம்பர், யவனர், சாலிவாகனன் என்ற நான்கு பிற்பட்ட சமூகத்தவர்களையும், இந்த ஆண்டு பிற்பட்ட சமூகத்தவர் பட்டியலில் சேர்க்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். இப்படி ஓர் துறை இருக்கிற காரணத்தினால்தான் ஆண்டுக்கு ஆண்டு நல்லமுறையில் இதைப் பரிசீலிக்க முடிகிறது. கல்வியிலும், சமூகத்திலும் இருக்கிற பிற்பட்ட நிலையைத்தான் கணக்கில் எடுக்கிறோமே தவிர மற்ற எதையும் கணக்கில் வைப்பதில்லை.

15(4) அரசியல் அமைப்பின்படி, கொடுக்கிற உதவி கொஞ்சமாகத்தான் இருக்கிறது. இதை எவ்வளவு அதிகமான பேர்கள் பங்கிட்டுக் கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு ஒவ்வொன்றிலும் பயன் அடைகிறவர்கள் தொகை குறைவாகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் — பெரியார் அரசியலுக்கு வருவதற்கு முன்னால்—சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்னால் பல சாதிக்காரரர்களும் தங்களைப் பிராமணர்கள் என்றே அழைத்துக்கொண்டு முன்னேறும் சமூகமாக இருந்த நிலையை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். வைசியர்கள் கூட வைசிய பிராமணாள் என்றேதான் தங்களை அழைத்துக் கொள்வார்கள். அப்படி ஒவ்வொரு சாதியும் முன்னேறிக் கொண்டிருந்தது. ஆனால் பிற்பட்ட இனத்தவர்களுக்கு அரசியல் அமைப்புப்படி தனிச்சலுகைகள் அளிக்கத் தொடங்கியவுடன் முற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூடத் தங்களைப் பிற்பட்ட சமூகத்தவர்களாகச் சொல்லிக் கொண்டு, பிற்பட்ட சமூகத்தவர்களது பட்டியலில் தங்களையும் சேர்க்க வேண்டும் என்பதாகப் போட்டி போட்டுக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். இதைத் தவிர்க்க வேண்டும்.

இதுபற்றி ஆராய்வதற்காகவே நாம் போட்டிருந்த சட்டநாதன் குழுவினர் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

''பிற்பட்ட வகுப்பினர்களுக்கென்று உதவி முறைகளை அரசு உருவாக்கும் போது அத்தகைய உதவிகள் பிற்பட்ட நிலையில் இருப்பவர்களுக்குக் கிடைப்பதற்கான பாதுகாப்புகளையும் உருவாக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் பெயரை வைத்துக் கொண்டு அரசு அளிக்கும் உதவிகளை பிற்பட்ட வகுப்பினர்கள் என்ற ஒவ்வொரு சாதியினருக்கும் உயர் நிலையில் உள்ளவர்கள் மட்டுமே பயன் அடையும் நிலை உண்டாகும்'' என்பதாகச் சட்டநாதன் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவேதான் தவறாக ஒருவர், பிற்பட்ட இனத்தவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சலுகையைப் பறித்துக்கொண்டு போவதை இந்த அரசு அனுமதிக்காது.

எல்லாச் சாதிகளும் பெரும்பாலும் செய்கிற தொழிலை அடிப்படையாக வைத்துத்தான் வந்திருக்கின்றன. கல் தச்சர்கள், கற்களிலே வேலை செய்பவர்கள் இழிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இன்னும் பொற்கொல்லர்கள், ஆசாரிகள் என்பதெல்லாம் அந்த அந்தத் தொழிலை அடிப்படையாக வைத்துத்தான் வந்திருக்கின்றன. எல்லாரையும் பிற்பட்ட சமூகத்தவர்களின் பட்டியலில் சேர்ப்பது என்றால் 15(4) அரசியல் அமைப்புச் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.

முஸ்லீம் சமுதாயம் நல்ல அளவுக்கு இன்றைக்கு முன்னுக்கு வருகிறது. பிற்படுத்தப்பட்டோம் என்று சொல்வது, கல்வித் துறையிலும், சமுதாயத்திலும், இதைத்தான் நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். கல்வித் துறையிலே இன்றைக்கு நல்ல பல காரியங்களை முஸ்லீம் சமுதாயம் செய்து கொண்டு வருகிறது என்பதைப் பெரும் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையிலே இல்லாத அளவுக்கு 60 உயர்நிலைப் பள்ளிகள் அந்தச் சமுதாயத்தினரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. 11 கல்லூரிகளும் அந்தச் சமுதாயத்தினரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது அவர்கள் வளர்ந்து வருகிற நிலைமையைக் காட்டுகிறது. அந்தச் சமுதாயத்தில் உயர்ந்து கொண்டிருப்பவர்கள் பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டுமே தவிர, உயர்ந்தவர்களை மேலும் மேலும் உயர்த்த அந்தத் துறை இல்லை என்பதையும், அப்படிப்பட்ட எண்ணத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளக் கூடாது என்பதோடு அவர்கள் அரசோடு துணையாக இருக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மத்திய அரசு வெளியிட்ட 'வெல்பேர் ஆப் பாக்வார்ட் கிளாஸஸ்' என்ற பதிப்பில் 1963-ல் ஒரு மக்கள் தொகைக் கணக்கு வெளியாகியிருக்கிறது. அதன்படி, இந்தியாவிலே குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 40 இலட்சம். அதே ஆண்டு 1963ல் தமிழ்நாட்டிலுள்ள குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் எண்ணிக்கை 13 இலட்சம். இந்தியாவிலே இருக்கிற குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் எண்ணிக்கையில் 33 சதவிகிதம் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு, இதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 450 இலட்சம். அதில் தமிழ்நாட்டிற்குக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 90 இலட்சம்தான். இது எவ்வளவு சதவிகிதம் என்றால் 20 சதவிகிதம்தான். தமிழ்நாட்டிலுள்ள சமூகத்தினருடைய தொகை அளவுக்கு ஒதுக்கி இருக்கவேண்டியது ரூ. 148·50 இலட்சமாகும். அவ்வளவு தொகை ஒதுக்குவதற்குப் பதிலாக ரூ. 90 இலட்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக, மத்திய அரசு செய்துள்ள இந்தக் கொடுமையினையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

1969—70-ல் மாநில அரசு இந்தத் துறைக்குச் செலவிடத் திட்டமிட்ட தொகை ரூ. 18.30 இலட்சம். மத்திய அரசு வழங்கிய மானியம் ரூ. 16 இலட்சம்தான். மாநில அரசாங்கம் செலவழித்த தொகை ரூ. 17·83 இலட்சம். 1970—71-ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 21·91 இலட்சம். மத்திய அரசு மானியம் ரூ. 18·50 இலட்சம். செலவழிக்கப்பட்ட தொகை, நாம் திட்டமிட்ட தொகையைவிட ரூ. 3 இலட்சம் அதிகமாக 24·08 இலட்சம் செலவழித்திருக்கிறோம். 1971—72-ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 53·19 இலட்சம். மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ. 18·50 இலட்சம். ஆனால், மாநில அரசு செலவு செய்த தொகை ரூ. 45·7 இலட்சம். 1972—73ல் மாநில அரசு திட்டமிட்ட தொகை ரூ. 58·14 இலட்சம். மத்திய அரசு மானியம் ரூ. 18·50 இலட்சம்தான். இந்த ஆண்டு என்ன சாதனை என்று திரு தங்கமணி அவர்கள் கேட்டார்கள். இந்த ஆண்டு திட்டமிட்ட தொகை ரூ. 72·69 இலட்சம் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காக மட்டும். இப்பொழுதும் மத்திய அரசு ரூ. 18·50 இலட்சம்தான் ஒதுக்கியிருக்கிறது. மாநில அரசு செலவு செய்து கொண்டு வருவது ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஆனால், மத்திய அரசு அளிக்கும் தொகையில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. இது பற்றி மத்திய அரசோடு பலமுறை வாதாடியிருக்கிறோம். பலமுறை கடிதம் மூலமாகவும் எழுதியிருக்கிறோம்.

ஆனால் மத்திய அரசு செவிசாய்க்கவே இல்லை. மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிய விவரம் எல்லாம் வைத்திருக்கிறேன். அதை வைத்துக்கொண்டுதான் தெரிவிக்கிறேன். ஒரு செய்தியை முதலிலே கூற வேண்டுமென்று கருதினேன். திடீரென்று எதிர்க்கட்சிகள் போலீஸ் மானியத்தைத் தள்ளி வைக்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில் பிற்பட்டவர் நலத்துறையை முன்னாலே எடுத்துக் கொண்டதால், 2 நாளிலேயே இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டது. ஆகவே, அச்சுப் பிழைகளைப் பொறுத்தருள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



## பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம்

உதவித் தொகையால் பயன் பெற்றவர்களுடையஎண்ணிக்கை எவ்வளவு என்பதை நம்முடைய உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாலே 50 சதவிகிதம் மார்க்குகள் வாங்கினால் போதும் என்றிருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு 40 சதவிகிதம் மார்க்குகள் வாங்கினால் போதும் என்று தெரிவிக்கப்பட்டு, அதிலே குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், வெறும் தேர்வு பெற்றிருந்தால் போதும், அவர்களுக்கு மார்க்கே தேவையில்லையென்ற வகையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1969—70-ஆம் ஆண்டில் செலவு செய்த தொகை ரூ. 160·99 இலட்சம். பலன் அடைந்தவர்கள் எண்ணிக்கை 90,565. 1970—71-ல் செலவு செய்தது ரூ. 201·20 இலட்சம். பலனடைந்தவர் எண்ணிக்கை 1,34,249. 1971—72ல் ரூ. 290·50 இலட்சம். பலனடைந்தவர்கள் எண்ணிக்கை 1,68,975. 1972—73ல் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக உதவித் தொகையாகக் கொடுத்தது ரூ.309·38 இலட்சம் பலனடைந்தவர்கள் 1,89,466. இப்பொழுது ஒதுக்கப்பட்ட ரூ. 5½ கோடியில் எவ்வளவு பேர் பலன் அடைய இருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். நான் திரு. தங்கமணி அவர்களுக்குச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ரூபாய் மதிப்பு மட்டும் கூடிவிடவில்லை. பலனடைவோர்களுடைய எண்ணிக்கையும் தொடர்ந்து கூடிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு என்ன என்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதைப் பார்ப்போமானால், ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்கும் ரூ. 6,000க்கும் இடைப்

பட்ட பெற்றோர்களுடைய பிள்ளைகளுக்கு, இதுவரையிலே எல்லாரும் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் பயன்படுகிற வகையிலே, ரூ. 2,000 க்கும் ரூ. 6,000 க்கும் இடையில் வருமானம் பெறுவோரின் பிள்ளைகள் தொழிற் கல்வி பயில வருடத்திற்கு ரூ. 500 கடன் உதவ ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப் பிற்பட்டவர்களாகக் கருதப்படுகிற— மொழிகூடத் தங்களுக்குச் சொந்தம் என்று அறியாத, லம்பாடிக் கூட்டம் தர்மபுரியிலே இருக்கிறது. மேலும் ஒரு பள்ளிக்கூடத்தை அவர்களுக்கு உருவாக்கலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

1973–74-ஆம் ஆண்டில் மேலும் 20 பின்தங்கிய வகுப்பினர் இல்லங்களும், 8 குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர் இல்லங்களும் திறக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 5½ கோடி ரூபாய்க்கு மானியம் கோரியிருக்கிறோம். அதோடு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக 1 கோடி ரூபாயைப் பெற்று அதிலிருந்து பின்தங்கிய வகுப்பினர் மாணவர்களுக்கான கட்டடங்களைக் கட்ட இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த மானியக் கோரிக்கை 5½ கோடி ரூபாய் அளவிற்குமட்டுமல்ல, 6½ கோடி ரூபாய் அளவுக்கு வந்து, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்,— மக்கள் அந்த அளவிற்குப் பயன்பெற இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அதன் மூலமாக நல்ல நல்ல கட்டடங்கள், நல்ல நல்ல விடுதிகள் உருவாக இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினரை - குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களைச் சேர்ந்த மாணவர்களிலே சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்ஸ் யாருமே இல்லை என்ற குறைபாடு கன்னியாகுமரியிலே நடைபெற்ற அந்தக் குழுவின் கூட்டத்திலே எடுத்து வாதாடப்பட்டது. அவர்களுக்கும் அந்தப் பயிற்சி தரப்பட்ட வேண்டுமென்பதை அரசு ஏற்றுக்கொண்டு ஏறக்குறைய ரூ. 30 ஆயிரம் ஒதுக்கி 5 மாணவர்களுக்கு அந்தப் பயிற்சி அளிப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **குரோட்டன்சும் குப்பை மேனியும்**
>
> பளபளப்பான குரோட்டன்சுகள் மருந்துக்குப் பயன்படுவதில்லை ; குப்பை மேனிக் கீரைதான் மருந்துக்குப் பயன்படும்.
>
> —முதல்வர் கலைஞர்

இந்த ஆண்டு நான்கு புதிய சமூகத்தைச் சேர்ந்தவர்களை இந்தப் பிற்படுத்தப்பட்டவர்களின் பட்டியலிலே சேர்த்த காரணத்தினாலே சுமார் 34 ஆயிரம் ரூபாய் வரையிலே அதிகமாகச் செலவாகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறக்குறைய இலட்ச ரூபாய் செலவிலே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மற்றவர்களில் 10 சதவிகிதம் பேர்கள் ஆகியவர்களை புற நகர்களிலிருந்து சென்னை நகரத்திற்கு அழைத்து வந்து காட்டுகின்ற திட்டம் போட்டிருக்கின்றோம். அந்த மாணவர்களையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும், அந்த மாணவர்களுக்கும் தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்கிற முறையிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 300 பேர்களையும், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 300 பேர்களையும் உயர்வகுப்புமாணவர்களிலே 10 சதவிகிதம் பேர்களையும் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும், மூன்றாம் பாரம் முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படிக்கின்ற மாணவர்களிலே தேர்ந்தெடுத்து அவர்களைச் சென்னைக்குஅழைத்து வந்து- மாநிலக் கல்லூரிக்கு அழைத்து வந்து விஞ்ஞான வளர்ச்சியைக் காட்டி, பெரிய பெரிய நூல்நிலையங்களைக் காட்டி - நாங்கள் பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் உள்ள பேராசிரியரோடு தொடர்புகொண்டு அவர்களிடம் கேட்டுக் கொண்டோம் - பிற்பட்ட மாணவர்கள் ஆங்கிலத்திலே லாவகமாகப் பேசுவதற்குப் பயிற்சி தந்தார்கள். அந்த முறையிலே அவர்கள் விஞ்ஞானப் பாடத்திலேயும் நல்ல தேர்ச்சி பெற்றார்கள். எதிர்காலத்திலே அவர்களை நல்ல மாணவர்களாக உருவாக்குவதற்கான திட்டத்திற்காக 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 300 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த ஆண்டும் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

66 நகராட்சிகளிலே உள்ள ரிக்ஷாக்காரர்கள் - அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும்தான் இருக்கிறார்கள்- பயன்பெறத்தக்க முறையில் டான்வலியின் மூலம் 1,000 சைக்கிள் ரிக்ஷாக்கள், ஒன்று 875 ரூபாய் வீதம் செய்யச் சொல்லி சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகராட்சிகளைத் தவிர மற்ற நகராட்சிகளைப் பொறுத்தவரையில் - அங்கே உள்ளவர்கள் பயன்பெறக்கூடிய முறையில், மதுரை பாங்கு மூலம் ஏற்பாடு செய்து அவர்கள் முன்வந்து அதற்கான ஏற்பாடுகளை இந்த இலாகா செய்ய முன்வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு 1973–74 ஆம் ஆண்டில் ரூ. 14.14 இலட்சம் ஒதுக்கப்பட்டு இதனால் ஏறக்குறைய 47 ஆயிரம் பிள்ளைகள் பயன்பெறுவர்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகள், மாணவர்கள் இல்லங்களில் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 1969–70-ல் 2·07 இலட்சமும், 1970–71-ல் 2·08 இலட்சமும், 1971–72-ல் 9·83 இலட்சமும், திடீரென உயர்வதை நீங்கள் பார்க்கவேண்டும். 1972–73-ல் 2.44 இலட்சமாக இருந்தது, 1973–74-ல் 4.74 இலட்சமாக உயர்த்தப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்ன என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள் அதற்குப் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்வுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுச் சென்ற ஆண்டு பங்குகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 8. அதிலே நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றவர்கள் 3 பேர்கள். வாய்மூலமான தேர்விலே கலந்து கொள்ள அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த ஆண்டு ஒரு புதிய நிலைமை உருவாகியிருக்கிறது. 64 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அதில் 57 பேர்கள் முழு நேரப் பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள். 7 பேர்கள் பகுதி நேரப் பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள். இன்னும் ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் இவர்களிலே, இந்த 64 பேர்களிலே 7 பேர்கள் பெண்கள்என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு மணலி அவர்கள் பேசும் பொழுது தொட்டி நாயக்கரைப் பிற்படுத்தபட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டார்கள். தொட்டி நாயகர் என்பது சேர்க்கப்பட்டு அவர்கள் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். கணபதி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சிற்பிகளைப் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்திலே உள்ள சிற்பிகள் மிகச் சிறப்பான முறையிலே பணியாற்றினார்கள். பணியாற்றுகிறார்கள் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சிற்பிகளுக்கு நல்ல வேலை தருகின்ற முறையிலே சிலப்பதிகாரக் காவியத்தை எதிர்காலத் தமிழகம் நல்ல முறையிலே உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காக மாமல்லபுரத்திலே சிற்பிகள் சிலப்பதிகாரக் காவியத்தைக் கல்லிலே வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது என்னுடைய இலாகா இல்லையென்றாலும், சுற்றுலா சம்பந்தப்பட்ட முறையிலே நான் அந்தக் கருத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அரசு, ஆஸ்தானச் சிற்பியொருவரை நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆந்திராவிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை அரசு கவனித்து விரைவிலே முடிவை அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்பொழுது முத்துராஜா, வல்லம்பர் ஆகியோரை விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டுச் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் நடத்துகின்ற விடுதிகளைப் பற்றிப் பல பேர்கள் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பின்தங்கியவரின் வாழ்க்கையே பின்தங்கிக் கிடக்கிற நேரத்திலே, யாரோ சில பேர்கள் வந்து விடுதிகள் நடத்துவதற்கு விரும்புகிறார்கள் என்றால் அதை அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்பற்றி விரைவிலே முடிவெடுக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள மீனவ கிறித்தவர்களைப் பொறுத்த வரையிலே அவர்களைப் பிற்பட்டவர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தனிப்பட்ட நிலைமை இருக்கிறது. திருவாங்கூர் சமஸ்தானத்தோடு சேர்ந்திருந்து அவர்கள் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்த பொழுது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பாவன். லேட்டின் [illegible]த்தோலிக், எஸ்.ஐ.யு.சி. [illegible] பிற்பட்டவர்களாகக் கருதி கல்லூரிகளிலே சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களிலே அந்த நிலைமையைச் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **மூதன் முதலாக !**
>
> குருவாயூரிலுள்ள இருஞ்ஞார் ஆலயத் திருப்பணிக்காகத் தமிழ்நாட்டு ஆலயங்களின் நிதியிலிருந்து ரூ. 12,501 அளிக்கப்பட்டுள்ளது. வெளி மாநில ஆலயம் ஒன்றுக்கு, தமிழ்நாட்டு ஆலய நிதி அளிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.
>
> குருவாயூர் ஆலயத்துக்குத் தமிழ்நாட்டு ஆலயங்கள் அளிக்கும் நிதியின் விவரம் வருமாறு : பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானம் ரூ. 5,001; இராமேசுவரம் இராமநாத சுவாமி தேவஸ்தானம் ரூ. 5,000; திருத்தணி சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் ரூ. 2,000, சென்னை பார்த்த சாரதி கோவில் ரூ. 500.

திரு துரைசாமி அவர்கள் வேளாளக் கவுண்டரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றார்கள். அவர்கள் எல்லாம் கல்விச் சலுகையில் முன்னேறி இருக்கிறார்கள். அப்படி முன்னேறி இருப்பவர்களுக்கு மற்ற பல காரியங்களைச் செய்வது என்பது முடியாத காரியம்.

கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து என்னிடம் கேட்கிறார். அவர் வேறு சலுகைகள் எதுவும் கேட்கவில்லை. அவர்கள் பொருளாதாரத்தில் நன்றாக இருக்கிறார்கள். மெடிகல் காலேஜுகளில் எஞ்சினியரிங் காலேஜுகளில் இடம் கேட்கிறார்கள். அதற்காகத்தான் பின்தங்கியவர்கள் சமுதாயத்தில் சேர்க்கவேண்டுமென்று பலரும் கோருகிறார்கள். இப்போது பி.யு.சி. வரை எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இலவசக் கல்வி கொடுத்து வருகிறோம். ஆகவே, இதிலே வேறு பெரிய பிரச்சினை இல்லை. எல்லோரையும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்துக் கொள்வது என்பது இயலாத காரியம்.

எவ்வளவு காரியங்கள் அக்கறையோடு, பொறுப்போடு அடித்தளத்தில் இருக்கிற மக்களை மேலே கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த நல்ல நோக்கம் நையாண்டி செய்யப்படுமானால் உண்மையிலேயே பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிலையை உணராமல் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள். எனவே பொறுப்பான முறையில் எவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் உணரவேண்டும்.

(தமிழ்நாடு சட்டப் பேரவையில் பிற்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து)

# போக்குவரத்துத் துறை புதுப்பொலிவு பெற்றிட...



1971-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாள் வரையில் சென்னை நகரம் முழுதிலும் அரசினர் பேருந்துகளை விடும் பொறுப்பைத் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை பெற்றிருந்தது.

போருக்குப் பிற்பட்ட மறுவாழ்வுக்கான மத்தியக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க இந்தப் போக்குவரத்துத் துறை அமைக்கப்பட்டது.

1947-ஆம் ஆண்டில் நகரில் பேருந்துப் போக்குவரத்தைத் தேசியமயமாக்கும்பணி தொடங்கியது. 1948-ஆம் ஆண்டுக்குள், நகரின் பேருந்துப் போக்குவரத்து தேசிய மயமாக்கப்படுவது முழுமை பெற்றது. தேசிய மயமாக்கப்படுவதன் அடுத்த கட்டம், 120 மைல்களுக்கு அதிகமான எல்லா வழித் தடங்களிலும் முற்ற முழுக்க அரசே பேருந்துகளை விட வேண்டும் என்ற கொள்கை முடிவை அடிப்படையாகக் கொண்டு, 1959-ஆம் ஆண்டில்]] மேற்கொள்ளப்பட்டது. தேசியமயமாக்குதலின் மூன்றாவது கட்டம் 1967-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது; (அ) 75 மைல்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தூரமுள்ள வழித்தடங்கள், மற்றும் (ஆ) சென்னை நகரில் தொடங்கிச் சென்னை நகரிலேயே வந்து முடியும் வழித் தடங்கள் ஆகியவற்றைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று முடிவெடுத்தது.

இந்தக் கொள்கைக்கு இணங்கச் சென்னையிலும், மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் தொடங்கி ஓடும் நகரம் மற்றும் மாவட்டப் போக்குவரத்துக்களையுங்கூட இந்தப் போக்குவரத்துத் துறை தேசிய மயமாக்கத் தொடங்கியது. இந்தத் துறை எளிதில் கையாள முடியாததொரு நிறுவனமாக வளர்ச்சி பெற்றிடவே, சென்னை நகரிலும் மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ள வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்தை இயக்கிடும் பொருட்டுத் தனியானதொரு கழகம் (கார்ப்பரேஷன்) ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்தது.

இவ்வாறாக, சென்னை நகருக்குள்ளும், புற நகர்களிலும் மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்துக்குள்ளும் உள்ள பேருந்து வழித்தடங்கள் அனைத்தையும் இயக்கும் பொறுப்பை ஏற்பதற்கு 1—1—1972 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டது.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிடமிருந்து கீழ்க் குறித்த வழித்தடங்களையும் அவற்றுக்காகப் போக்குவரத்துப் பணிகளையும் மேற்கொண்டது.

| வகையினம் | | வழித் தடங்கள் | பேருந்துகள் |
| --- | --- | --- | --- |
| மாநகர் | — | 116 | 646 |
| நகர் | — | 60 | 246 |
| மாவட்டம், | | 118 | 244 |
| மொத்தம். | | 294 | 1,136 |

அது முதற் கொண்டு, பல்லவன் போக்குவரத்துக் கழகம் எல்லாத் துறைகளிலும் கீழ்க் குறித்துள்ளவாறு மிக விரைவுடன் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

1972 சனவரித் திங்களில் 1,310 ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை, 1973 மார்ச்சு திங்களில் 1,371 ஆக வளர்ச்சி பெற்றிருக்கிறது. இவ்வாறாக, பேருந்துகளின் எண்ணிக்கையில் 61 பேருந்துகள் கூடுதலாகியிருக்கின்றன.

1972 சனவரித் திங்க 1,136 பேருந்துகள் இய வந்தன. அவை 1973 மா சுத் திங்களில் 1,182-ஆக அ கரிக்கப் பட்டிருக்கின்ற இவ்வாறாகப் பயணம் செ யும் பொது மக்களின் வச காக, வழித்தடங்களில் பேருந்துகள் கூடியிருக்கின்றன.

46 பேருந்துகள் கூடுதலா யிருந்த போதிலும் நாள்தோறும் ஒவ்வொரு பே தும் ஓடும் கிலோ மீட் பயண தூரம் அதிகரிக்கப் வில்லை. உச்ச அளவுப் போ வரத்து இல்லாத நே களில் தேவைக்கு அதிகமா பேருந்துகள் ஓடுவதைச் செய்யும் கொள்கையைக் கடை பிடிக்கும் வகையிலேயே வாறு பயணத் தொலைவு கரிக்கப்படவில்லை.

நகரப் போக்கு வரத் நாளொன்றுக்கு ஒரு பேரு ஓடும் சராசரியான பயண தொலைவு 207 கிலோ மீ டராகும்; இது, இந்தி விலுள்ள மற்றத் தலை நகர களில் பேருந்து ஓடும் சராச பயணத் தொலைவைக் காட் லும் அதிகமானதாகும்.

நாள்தோறும் வசூலாகும் பேருந்துப் பயணக் கட்டணம் 1972 சனவரித் திங்களில் 2.[illegible] இலட்சமாக இருந்தது. அ[illegible] படிப்படியாக உயர்ந்து 19[illegible] மார்ச்சுத் திங்களில் 2.[illegible] இலட்சத்தை எட்டியிருக்கிற[illegible]

டயர்கள் மற்றும் உ[illegible] உறுப்புகளின் தட்டுப்பா போன்ற சில இக்கட்டுகள் இருந்த போதிலும் கூ பொறியியல்அமைப்பைச் சீரா யிருப்பதன் காரணமாக, 1[illegible] சனவரித் திங்களில் நாளொ றுக்குச் சராசரி 8,900 இருந்த பயணப் போக்குவரத்துக்கள் (ட்ரிப்புகள்). இழப்பு, 1973 மார்ச்சுத் திங்களில் 2,566 ஆகக் குறைந்திருக்கிறது.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மேம்படுத்தும் பொருட்டு 1973—74-ஆம் ஆண்டில் 108 பழைய பேருந்துகளைப் புதிதாகமாற்ற முடிவு செய்துள்ளது. 90 பேருந்துகளை அதிகரித்துப் போக்குவரத்து இயக்க ஆற்றலைப் பெருக்கிடவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சிறப்பான முறையில் நிர்வகித்தல், பராமரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் இயக்குதலுக்கு இயைந்த வகையில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஒவ்வொரு பணிமனையையும் ஒரு தனிப் பிரிவாகக் கொண்டு மறு சீரமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பணி மனையும் ஒரு கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவருக்குப் போக்குவரத்து விஷயத்தில் இரண்டு உதவிக் கிளை மேலாளர்களும் (போக்குவரத்து), பொறியியல் விஷயத்தில் இரண்டு உதவிக் கிளை மேலாளர்களும், (தொழில் நுட்பத் துறை), மற்றும் கணக்குகள் வைப்பு விஷயத்தில் ஓர் உதவிக் கிளை மேலாளர் (கணக்குகள் மற்றும் நிர்வாகம்) உதவி புரிகின்றனர். 1—4—1973 முதற்கொண்டு இம்முறை செயல்பட்டு வருகிறது.

வசூலாகும் பணத்தில், போனஸ் வழங்கும் திட்டம் ஒன்று தமிழ்ப்புத்தாண்டு நாளில் (13—4—1973) இரண்டு பணிமனைகளில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. சென்னை நகரப் பணிமனையான வட பழனி பணிமனையும், வெளியூர்ப் பணிமனையான வியாசர் பாடிப் பணிமனையும் ஆகிய இரண்டே அவை.

இந்தத் திட்டம் ஒரு சில இடங்களுக்கு மட்டும் செயல்படுத்தப்பட்ட ஓர் ஆய்வு நடவடிக்கையாகும்.

இவ்வகையில் சென்னை நகரப் பணிமனை ஒன்றில் வசூலாகும் ஒரு மொத்தத் தொகையில் 5 சத வீதமும், வெளியூர்ப் பணிமனை ஒன்றில் வசூலாகும் மொத்தத் தொகையில் 3 சத வீதமுமாகப் பேருந்து, ஊழியர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. வசூல் குறைந்தாலுங் கூட, ஏற்கெனவே அமலில் உள்ள படியான 'பாட்டா' தொகைக்கு ஈடான குறைந்த பட்ச போனஸ் அளிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. பராமரிப்புச் சிப்பந்திகளுங் கூட அவர்களால் இயக்கப்படும் வழித்தடங்களில் கிடைக்கும் வசூலுக்கு ஏற்றபடி, ஊக்கத் தொகை போனசில் ஒரு பங்கைப் பெறுகிறார்கள்.

ஏப்ரல் மாதம் முதல் 12 நாட்களில் 92 பேருந்துகளையும், 16 வழித் தடங்களையும் கொண்ட வட பழனி பணிமனைக்கு ஏற்பட்ட நட்டம் ரூ. 22,120. ஏப்ரல் 13 லிருந்து 24 வரை வசூல் போனஸ் திட்டம் அமலாக்கப்பட்ட பின்னர் அதே பணிமனைக்குக் கிடைத்த இலாபம் ரூ. 13,650. பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் 5 சதவிகிதம் போனஸ் கொடுத்தபின் இந்த இலாபம் கிடைத்திருக்கின்றது. ஒரு வழித்தடத்தில் வசூல் 9 மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த அரிய திட்டத்தினால் கிடைத்த பலன்கள் என்னென்ன தெரியுமா? (1) பேருந்து ஒன்றுக்கு வருமானம் ரூ. 260 லிருந்து ரூ. 300 ஆக உயர்ந்துள்ளது. (2) பேருந்து நிற்குமிடங்களில் காத்திருக்கும் பயணிகள் மிகவும் குறைவு. (3) காத்திருக்கும் பயணிகளை நடத்துநர் பேருந்தில் ஏறுமாறு அழைப்பதாகத் தெரிந்த பயணிகள் கூறியுள்ளனர். (4) பயணிகள் காத்திருக்கும் போது கூட, ஒரு சில பயணிகளுடன் பேருந்துகளை நிறுத்தாமல் விரைவாக ஓட்டிச் செல்வது பழங்கதையாகிவிட்டது. (5) பணிமனையில் வருகை 73 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது. (6) பணி மனைப் பகுதியில் ஏப்ரல் 12-ல் 20 பேருந்துகள் 'பிரேக் டவுன்'. ஆனால், அடுத்த நாள் 10 'பிரேக் டவுன்'. (7) சில நாட்களில் ஒரு நடத்துநர் அல்லது ஓட்டுநருக்கு ரூ. 6 போனசாகக் கிடைத்திருக்கிறது. வழக்கமாக நடத்துநர் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் மாத ஊதியம் ரூ. 250. அவர் தற்போது போனசாக ரூ. 60 லிருந்து 70 வரை பெற முடிகிறது. (8) பராமரிப்பு ஊழியர்களுக்கும், போனஸ் கிடைக்கிறது. இதற்காக அவர்கள் பேருந்துகளுக்காகப் பணிமனை வாயிலில் காத்திருக்கிறார்கள். (9) பேருந்துகளைப் பயன்படுத்துவது 88 சத விகிதமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. 100-க்கு 100 'டிரிப்கள்' செயற்படுத்தப் படுகின்றன. ஏனெனில் ஓட்டுநர் அவருக்குரிய 'டிரிப்கள்' அனைத்தையும் இயக்கினால் சிறிதளவு போனஸ் கிடைக்கிறது. (10) பணிமனையின் 16 வழித் தடங்களில் 6 இன்னமும் நஷ்டத்தில் இயங்குகிறது. ஆனால், இந்த வழித்தடங்களில் ஏப்ரல் 13-க்குப் பின் நல்ல வசூல் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

சென்னை நகரில் பேருந்துப் போக்குவரத்து வசதிகளின் தரத்தை உயர்த்தவும், பொதுவாகக் குறித்த நேரத்தில், பேருந்துகள் வருமாறு செய்யவும், பேருந்துப் போக்குவரத்தைச் சிக்கனமாகவும் திறம்படவும் நடத்த வேண்டி நகரின் பேருந்துப் போக்குவரத்தின் ஏற்பாடுகளை விரிவாக ஆராய்வதற்காக திரு. ஜி. அய்யாசாமி அவர்களைச் சிறப்பு அலுவலராகத் தமிழக அரசு நியமித்தது. அவர் கொடுத்த அறிக்கையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது!

சென்னை நகரில் பயணிகள் பயணம் செய்யும் மொத்தத் தொலைவில், பெரும் பகுதி

### பூம்புகாரின் வேறு பெயர்கள்

மூதூர், பேரூர், பெருநகர்
காகந்தி, சம்பாபதி
காவிரிப்பட்டினம்
காவிரிப்படப்பைப் பட்டினம்
காவிரிப்படப்பை நன்னகர்
காவிரிப் பூம்பட்டினம்

வேலைகளுக்குப் போய் வருபவர்கள் மேற்கொள்ளுவதுதான், இதில் பேருந்துப் பயணம் சுமார் 83 சதவிகிதம்; எஞ்சியிருப்பது தான் ரயில் மூலம் செய்யப்படும் பயணம்.

பேருந்துப் போக்குவரத்துச் செயல் பாட்டைப் பரிசீலித்துப் பார்த்த போது, சில பிரச்சினைகள் காணப்பட்டன. அவை இவை :

1. நிறையப் பேரை ஏற்றிச் செல்லக் கூடிய பெரிய பேருந்துகள் போதுமான அளவு கிடைக்கவில்லை.

2. ஏராளமான பேருந்துகள் கட்டுபடியாகக் கூடிய விதத்தில் விடப்படவில்லை. சுற்றி வளைத்துக் கொண்டு போகும் தடங்கள் பல இருந்து வருகின்றன.

3. பேருந்துகளின் சராசரி வேகம் குறைவாயிருக்கிறது.

4. அடிக்கடி பேருந்துகளை நிறுத்துவதாலோ வண்டிகளை மெதுவாக விடுவதாலோ அதிகத் தாமதம் ஏற்படுகிறது.

5. பேருந்துகளின் மூலம் கிடைக்கும் வருமானத்துக்கும், நடைமுதல் செலவுக்குமிடையில் ஏற்றத் தாழ்வு அதிகமாயிருக்கிறது.

6. நிதித் தட்டுப்பாட்டின் காரணமாகப் பேருந்துப் போக்குவரத்து அதிகரிப்பை மேற்கொள்ள முடியவில்லை. பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகளை வாங்க முடிவதில்லை.

7. பேருந்துகள் புறப்படும் இடங்களிலும், போய்ச் சேரும் இடங்களிலும் போதிய வசதிகள் இல்லை.

நெரிசல் நேரத் தேவையைச் சமாளிப்பதற்காக, யாரும் சுலபமாகச் சொல்லி விடக் கூடிய பரிகாரம் ஒன்று உண்டு. பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்பதே அது. ஆனால், அதற்கு ஆகும் செலவை நோக்கினால், அது மிகவும் அருஞ்செயல் என்பது விளங்கும். தவிர, நகரில் தற்போதுள்ள சாலை வசதிகள் பேருந்து எண்ணிக்கையை மிகப் பேரளவில் அதிகரிப்பதற்கு இடம் தராது.

எனவே, பயண நேரத்தைக் குறைக்கும் வகையிலும், வேகத்தினை அதிகரிக்கும் வகையிலும் தடங்களைச் சீரமைப்பது ஒன்று தான் சரியான பரிகாரம் என்ற முடிவுக்குத்தான் வந்தாக வேண்டியிருக்கிறது.

> வகுப்பு அறையில் கிடைக்கின்ற அறிவோடு வெளியில் கிடைக்கிற பொது அறிவை பெற்று முழு மாணவர்களாக ஒவ்வொருவரும் வெளியேற வேண்டும்.
>
> —பேரறிஞர் அண்ணா

பெரிய பேருந்துகளை விடுவது, மாடிப் பேருந்துகள் விடுவது இணைப்பு வண்டிகளுடன் கூடிய பேருந்துகளை விடுவது போன்றவையும் ஒரு பரிகாரமே. ஆனால் அதற்குச் சாலையிலுள்ள மரங்களையும், நீட்டிக் கொண்டுள்ள கட்டடக் கூரைகளையும் அகற்றியாக வேண்டியிருக்கும். தவிர, நிறையப் பேரை ஏற்றிச் செல்லும் பேருந்துகளை நாள் முழுவதும் விடுவதும் என்றால், அது வசதிகளை வீணடிப்பதாக ஆகும்.

எனவே, ஒரே வழியில் பல்வேறு தடங்களைச் சேர்ந்த பேருந்துகள் ஓடுவதைத் தவிர்த்துக் குறுக்குத் தடங்களையும் (ரேடியல் ரூட்), வட்டத் தடங்களையும் (சர்கம்பெரன் ஷியல் ரூட்) அமைக்க வேண்டுமென்பதே இந்த அறிக்கை கூறும் யோசனையாகும். தற்போது நகர எல்லைக்குள்ளும், சென்னை மாநகரப் பகுதியிலும் மொத்தம் 181 தடங்கள் உள்ளன. 946 பேருந்துகள் ஓடுகின்றன.

நியூயார்க் நகரத்தில் உள்ளது போலக் குறுக்குத் தடங்களும், வட்டத் தடங்களும் கொண்ட இணக்கமான தட அமைப்பு முறை ஒன்றை இங்கேயும் அமைக்கலாம் என்ற கருத்துக் கூறப்படுகிறது. ஒவ்வொரு வட்டத் தடங்களைச் சந்திக்கும் இடங்களில் பேருந்து நிற்குமிடங்கள் இருக்க வேண்டும். இவற்றைத் தவிர குறுக்குத் தடங்களிலும், வட்டத் தடங்களிலும் மேலும் பல இடங்களிலும் பேருந்து நிற்குமிடங்கள் இருக்க வேண்டும். ஒரு குறுக்குத் தடத்தில் வரும் பயணி, தாம் விரும்பும் இடத்தில் இறங்கி வட்டத் தடத்துக்கு மாறி (அல்லது வட்டத் தடத்திலிருந்து குறுக்குத் தடத்துக்கு மாறி) தாம் போக விரும்பும் இடத்துக்குப் போய்ச் சேர இது வசதியாக இருக்கும்.

அதாவது, ஒருவர் மூன்றுக்கு மேற்பட்ட பேருந்துகளில் போக வேண்டியிருக்கும். ஆனால் எந்த பேருந்து நிற்குமிடத்திலும் அதிக நேரம் காத்திருக்க வேண்டியிராது. அவ்வாறு செய்யும் போது ஒரு பேருந்தில் வாங்கும் டிக்கட், அதன் தொடர்பான மற்றொரு அல்லது பல பேருந்துகளில் பயணம் செய்வதற்குக் கூடுதல் கட்டணமின்றிச் செல்லத் தக்கதாயிருக்க வேண்டும்.

இதில் பல அனுகூலங்கள் உண்டு. ஒரே வழியில் பல தடங்களைச் சேர்ந்த பேருந்துகள் ஓடுவதைத் தவிர்க்கலாம். இதனால் நெரிசலும், தாமதமும் குறையும். தேவைப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையும் குறைவாயிருக்கும். பேருந்துத் தடங்களின் எண்ணிக்கை குறைவதால், ஒரு தடத்தில் அதிகப் பேருந்துகளை விட முடியும்! அடிக்கடியும் பேருந்துகள் வரும்.

பல்வேறு பிரச்சினைகளையும் பரிசீலித்துப் பார்த்த பிறகு, நகரில் தற்போதுள்ள எல்லாத் தடங்களையும் உள்ளடக்கக் கூடிய வகையில், 24 குறுக்குத் தடங்களையும், 16 வட்டத் தடங்களையும் ஏற்படுத்தலாமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. அய்யாசாமி அவர்களின் பல்வேறு பரிந்துரைகளைப் பரிசீலித்துப் பார்த்த பிறகு, சோதனையாக ஒரு குறுக்குத் தடத்தில் பேருந்து விட்டுப் பார்ப்பது என்று பல்லவன் போக்குவரத்துக் கழகம் தீர்மானித்திருக்கிறது. தெற்குப் பெரு வழிச் சாலை வழியாகப் பாரி முனைக்கும் சைதாப்பேட்டைக்குமிடையில் 22 பேருந்துகளை விடுவதே இந்தத் திட்டம். இதன் கீழ் சைதாப்பேட்டைக்கும் கோட்டூர்புரத்துக்கும் இடையில் 2 இணைப்புப் பேருந்துகளும், சைதாப்பேட்டைக்கும் ஈக்காட்டுத் தாங்கலுக்கும் இடையில் ஓர் இணைப்புப் பேருந்தும், சைதாப்பேட்டைக்கும் நங்கநல்லூருக்கு மிடையில் 5 இணைப்புப் பேருந்துகளும், நங்கநல்லூருக்கும் கிழக்குத் தாம்பரத்துக்கு மிடையில் ஒரு குறுகிய தூரப் பேருந்தும் விடப்படும். இந்த ஆய்வு ஏற்பாடு 1973 மே 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

பாரிமுனைக்கும், சைதாப்பேட்டைக்கும் இடையில் நெரிசல் நேரங்களில் 3 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் போகும். சாதாரண நேரங்களில் இந்த இடைவெளி அதிகப் பட்சம் 15 நிமிடமாய் இருக்கும்.

சாதாரணமாக ஒரு பயணி நடுவழியில் பேருந்து மாற்றினால், கூடுதலாக 5 காசு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் அல்லவா? ஆனால், சைதாப்பேட்டையிலிருந்தோ, சைதாப்பேட்டைக்கோ இணைப்புத் தடங்கள் வழியாகப் பயணம் செய்ய விரும்புகிறவர்களுக்கு இந்தக் கூடுதல் செலவு வைக்கக் கூடாது என்பதற்காக, இணைப்புத் தடத்தின் முதல் 'ஸ்டேஜ்' கட்டணத்தை 5 காசாகத் தமிழக அரசு குறைத்துள்ளது. இணைப்புத் தடங்களில், கிளம்பும் இடத்திலிருந்து, போய்ச் சேரும் இடம் வரை எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்பவர்களுக்கும் இது பொருந்தும்.

ஓட்டுநர்கள் உட்காருமிடத்திலிருந்து தனியாகப் பிரித்து வைக்கும் வகையில் பேருந்துகள் அமைக்கப்பட வேண்டும். பயணிகள் இறங்குவதை ஓட்டுநர்கள் நன்றாகப் பார்ப்பதற்கு வசதியாக இருக்க வேண்டும்.

இறங்கவிருக்கும் பயணிகள் ஒரு பிடியைப் பிடித்து இழுத்து அறிவிப்புச் செய்வதற்கு ஏற்பாடு இருக்க வேண்டும். தற்போதுள்ள மணி அடிக்கும் முறை சரிவரச் செயல்படவில்லை.

மழை காலத்தில் பயன்படுத்துவதற்காகத் தற்போதுள்ள சன்னல் திரை ஏற்பாடு சரிவரச் செயல்படவில்லை. துரிதமாகச் சன்னல்களை மூடுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

எட்டு கிலோ மீட்டருக்கு அதிகமாயுள்ள தடங்களில், நிற்கும் பயணிகளுக்கான பேருந்துகள் (ஸ்டாண்டி பஸ்கள்) பயன்படுத்தப்படக் கூடாது.

குறுக்குத் தடப் பேருந்துகளுக்குத் தனி வண்ணம், வட்டத் தடப் பேருந்துகளுக்குத் தனி வண்ணம், இணைப்புத் தடப் பேருந்துகளுக்குத் தனி வண்ணம் என்று, தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்கு ஏற்ற ஒரு முறையைக் கையாள வேண்டும்.

திருவிழா, விடுமுறை நாட்களிலும் குறிப்பிட்ட இடங்களிலிருந்து குறிப்பிட்ட இடங்களுக்கும் பேருந்துகள் விடலாம்.

சீசன் டிக்கட் ஏற்பாட்டை அதிகமாக ஊக்குவிக்க வேண்டும். இரு 'டெர்மினல்'களுக்கு இடையில்தான் சீசன் டிக்கட் என்பதற்குப் பதிலாக [illegible] வழியில் எந்த இரு இடங்களுக்குமிடையில் வேண்டுமானாலும் சீசன் டிக்கட்டுகளைத் தரலாம்.

சில நடத்துநர் எச்சில் தொட்டு டிக்கட் கிழிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்காக, நடத்துநர்களுக்கு 'ஸ்பாஞ்ச்' வில்லைகளைத் தரலாம்.

பரிந்துரை செய்யப்பட்டுள்ள குறுக்குத் தடங்களையும், வட்டத் தடங்களையும் குறிக்கும் வரைபடம், பொது மக்கள் தகவலுக்காக இங்கே வெளியிடப் பட்டுள்ளன.

தனி நபர்கள், பயணிகள் சங்கங்கள், மற்றும் பல்வேறு நிறுவனங்கள், பொது மக்கள் முதலியோர் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம். அவற்றிற்குப் [பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகம் உரிய பரிசிலனை [அளிக்கும்.



# ரிக்ஷாக்காரரின் வாழ்த்து

-மஞ்சக்கொல்லை-வள்ளுவதாசன்-

ஏழையின் சிரிப்பில் இறைவனையே—மெத்த
ஏர்மிகக் காணும் செயல்பலவே
வாழையின் வாழை வளர்ந்தாற்போல்—நல்ல
வாரியங்கள் நாட்டில் ஓங்குதய்யா !

ஊர்பவர் ஈர்ப்பவர், இருவரையும்—ஒத்த
ஊக்கம் பெற்றிடச் செய்தாற்போல்
கார்மழை போன்றே கருதாமல்—நல்ல
கால்வண்டி வழங்கிக் களிக்கின்றார் !

மதியை மிதிக்கும் இந்நாளில்—அந்தோ !
மரமாய் மாடாய்த் தேய்ந்திட்டோம் !
விதியை நொந்து இளைத்திருந்தோம்—புதிய
விண்மீன் தெரியக் களிப்புற்றோம் !

பொற்கொடி ஒருத்தியைக் காத்திடவே—கதவைப்
பொல்லாத வேளையில் தட்டியதால்
பொற்கைப் பாண்டியன் விறுற்றான்—இந்தப்
பொல்லாங்கை நம்மவர் நன்கறிவார்!

வண்டி இழுப்பவர் உய்ந்திடவே—நல்ல
வண்ணம் ஓங்குது பாங்குறவே
மண்டி எழுகின்ற அழுக்காற்றால்—எங்கள்
மன்னர் கலைஞர் உயர்ந்திடுவார்!

கலைஞர் மலரடி வாழிநன்றே !—எங்கள்
கண்கண்ட தெய்வம் வாழிநன்றே !
அலைகடல் சூழ்ந்த தமிழகத்தை என்றும்
அறிஞர் மனம்போல் ஆண்டுவாழி !



# ஊழ்வினை மாற்றும் உத்தமர் வாழ்க

புலவர் தமிழ்ப்பித்தன்



பிறப்பினுல் வருவ தில்லை
பிரிவுகள் : அவைதான் மாந்தர்
சிறப்பினுல், தொழிலால், செய்யும்
செயல்களால் வினையும் என்றே
பொறுப்போடு மொழிந்தார் நீதிப்
புலவராம் குறளார் : யாரும்
மறுத்திட முடியா வண்ணம்
வளம்நிறை பனுவல் தந்தார்!

பன்னெடும் ஆண்டின் முன்னே
பாலகர் தோன்றல் எல்லாம்
தொன்மையே மிக்க நாட்டில்
தோன்றிய வியப்புச் சேதி!
இன்றைய நாளில் நாட்டில்
எங்கணும் காண்ப தென்ன?
கன்றுகள் தோன்ரு வீடு
கற்பனைச் சேதி யாகும்!

நம்மரும் தமிழர் நாட்டில்
நண்ணியே பிறப்பார் கோடி!
தம்மரும் செயலால், பண்பால்
தண்டமிழ் இனத்தைக் காக்கும்
செம்மலர் சிலர்தான் உண்டு!
சிந்தையை, உடலை, மற்றும்
செம்மையாம் செயலை, நாட்டின்
தொண்டினில் சிலரே சேர்ப்பர்!

மனிதராய்ப் பிறப்ப தொன்றே
மதிப்பினில் நிறைந்த தென்னும்
இனியதோர் கருத்துச் செய்யுள்
இயம்பினன் தமிழ்மு தாட்டி
மனிதராய்ப் பிறப்ப தோடும்
மனிதராய் வதிந்தா லன்றோ
மனிதரென் றுரைக்கக் கூடும்?
மனத்தினில் நிலைக்கக் கூடும்?

தண்டமிழ்ப் புவியை யாளும்
தாய்க்குணக் கலைஞர் எங்கள்
வண்டமிழ் முதல்வர் : தூயர் :
வாய்த்திடும் பிறந்த நாளைக்
கண்டெனை இனிக்கச் செய்தார்,
கடமையை நினைக்கச் செய்தார்!
மண்டலம் புகழும் வண்ணம்,
மானுடம் தழைக்கச் செய்தார்!

நாற்பதும் அதனோ டெட்டும்,
நண்ணிய பொழுதில்-தேன்போல்
தூற்கனை வடித்த எங்கள்
நண்ணிய முதல்வர்-பிச்சை
ஏற்றிடும் தொழுநோ யாளர்
இன்னலைக் கனிவ தற்கு
மாற்றமே அமைத்தார் : அன்பாய்
மறுவாழ்வு இல்லந் தந்தார்!

நாற்பதோ டொன்பான் ஆண்டில்
நாயகர் செய்த தொண்டு
போற்றுதல் சேர்த்த தொண்டு!
புலன்மகிழ் தொண்டு : பார்வை
ஊற்றெனச் சொல்லும் கண்ணின்
ஒளியினைக் காணுர் இன்னல்
மாற்றிடக் கண்ணுக்(கு) : ஆடி
மகிழ்வுடன் ஈந்த தொண்டு!

பொன்விழா ஆண்டில்-நித்தம்
புதுமையே சேர்க்கும் எங்கள்
மன்னவர் தீட்டும் திட்டம்
மானுடம் காக்கும் திட்டம்
சின்னவர், மூத்தோர், மற்றும்
சித்திரப் பெண்டிர் தம்மை
அன்புடன் கைரிக் ஷாவில்
அனுதினம் இழுக்கும் ஏழை,

உய்ந்திடச் செய்ல தற்கே
உதவிடும் திட்ட மாகும்
தொய்ந்திடும் கைரிக் ஷாவால்
தோய்ந்திடும் துன்பம் எல்லாம்
கொய்திட சைக்கிள் ரிக்ஷா
கொடுத்திடும் தூய திட்டம்!
நைந்திடும் ஏழை வாழ்வில்
நன்மையே பாயும் திட்டம்!

வாழ்ந்திடும் வைய மாந்தர்
வாழ்வினில் இன்ப துன்பம்
ஊழ்வினை ஆக்கும் என்னல்
உதவிடாப் பேச்சாம்! அஃதை
ஆள்வினை கொண்ட எங்கள்
ஆரூரர் ஏற்ப தில்லை!
ஊழ்வினை மாற்றும் இந்த
உத்தமர் நீடு வாழ்க!

பெரும்பாலான பூக்கள் பகல் வேளையில்தான் மலர்கின்றன. ஆனால், முல்லை போன்ற சில மலர்கள் இரவில் மொட்டவிழ்கின்றன.

இரவில் மலர்வதற்கு ஏற்பப் பூக்களில் விதவிதமான அமைப்புகள் காணப்படுகின்றன. சில சமயங்களில், ஒரே இனத்தைச் சேர்ந்த பூக்களில் சில பகலிலும், சில இரவிலும் மலர்கின்றன. சான்று மல்லிகை, வில்லி.

இரவில் மலரும் பூக்களில் பெரும்பாலானவை தூய வெண்மை நிறம் கொண்டவை. இத்தகைய மலர்கள் நீண்டு குழல்போலக் காட்சியளிக்கின்றன. இந்த மலர்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவி புரியும் வண்டுகள், அந்துப் பூச்சிகள், கொசு போன்றவையும் நீண்ட தேன் உறிஞ்சும் குழல் கொண்டவை. இரவில் வெண்மையான மலர்களைக் கண்டதும், வண்டுகள் அவற்றை நோக்கி ஆவலுடன் ஓடி வருகின்றன. இரவுப் பூக்கள் இனிய நறுமணத்தைச் சிந்தி, வண்டுகளை 'வா வா' என அழைக்கின்றன; இரவுப் பூக்கள் பல வண்ண நிறங்களில் காட்சியளிக்காமல், நறுமண விருந்து படைப்பதன் காரணம் இப்போது புரிகிறதல்லவா?

சில மலர்கள் மட்டும் இரவில் மலர்வதேன்?

ஏராளமான மலர்கள் பகலில் மலர்வதால், அவற்றோடு போட்டிபோட இயலாமல் சில இனப்பூக்கள் இரவில் மலர்கின்றன என்று சிலர் விளக்கம் சொல்கின்றனர். பரிணாமத்தின் போது, சில பூக்கள் இரவுச் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொண்டு இரவுப் பூக்களாகி விட்டன. அதே சமயத்தில் சிலவகை வண்டுகள், அந்துப் பூச்சிகள், வெளவால் போன்றவையும் இரவு வாழ்க்கைக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டன!

உலகில் எல்லாப் பூக்களும் பகல் வேளையிலே மலர்ந்துகொண்டிருந்தால், அவை அனைத்தும் மகரந்தச் சேர்க்கை பெறமுடியாது. அந்த நிலைமை இருந்தால், ஏராளமான தாவர இனங்கள் எப்போதோ அழிந்து போயிருக்கும். தாவரங்களுக்கும் அவற்றின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணிகளுக்கும் சமவாழ்வு அளிப்பதற்காகவே இயற்கை யன்னை சில மலர்களைப் பகலிலும், சிலவற்றை இரவிலும் மலர விடுகிறாள்.

பூக்கும் தாவரங்களில் உள்ள ஏதோஒரு விந்தையான அமைப்பு, அவற்றின் பூக்கள் எப்போது மலர வேண்டும் என்பதை முடிவுசெய்வதுபோல் தெரிகிறது. மலர்களின் உள்ளுணர்வு, அந்துப்பூச்சிகள், வெளவால், சில பறவைகள், வண்டுகள், கொசு போன்ற இரவுப் பிராணிகளின் நடவடிக்கைகளோடு இசைவாக உள்ளது. இந்த இசைவு இத்தாவரங்களுக்கும் மேற்குறிப்பிட்ட பிராணிகளுக்கும் உதவுகிறது. இந்த இரவு நடவடிக்கைகளால் விவசாயியின் மலர்களுக்கு மகரந்தச் சேர்க்கை கிடைக்கிறது. மகரந்தச் சேர்க்கைக்குத் துணைபுரியும் பிராணிகளுக்குத் தேனும், மகரந்தத் தூளும் உணவாகக் கிடைக்கின்றன.

சில இரவுப் பூக்கள், விடிந்து நெடுநேரமானாலும் மூடாமல் இதழ் விரிந்து காணப்படுகின்றன. இரவில் மகரந்தச் சேர்க்கை நடைபெறாவிட்டால், அல்லது முற்றுப் பெறாவிட்டால், பகல் வேளைகளில் தேனீக்கள் மூலம் மகரந்தச் சேர்க்கை பெறுவதற்காகவே இந்த ஏற்பாடு. இரவில் மலரும் சில பூக்கள் இருட்டில் வெண்மையாக இருந்தாலும், விடிந்தவுடன் இளஞ் சிவப்பு நிறத்தில் மாறிவிடுகின்றன. இரவில் மலரும் சிலவகைப் பூக்களுக்கு உரிய சிறப்பான குணம் இது!



# வீட்டுக்கு ஒரு சப்போட்டா

சப்போட்டாப் பழம் சத்தும், சுவையும் மிகுந்த ஒரு வகைப் பழமாகும். சப்போட்டாப் பழத்தில் கீழ்க்கண்ட அளவில் சத்துக்கள் உள்ளன.

| சத்துக்களின் பெயர். | சதவிகிதம். |
|---|---|
| புரதச் சத்து | 1.09 |
| மொத்தச் சர்க்கரையும் மாவுப் பொருள்களும். | 30.99 |
| சுண்ணாம்புச் சத்து | 1.38 |
| பாஸ்பரஸ் சத்து | 6.56 |

சப்போட்டாப் பழம் உருண்டையாகவோ, முட்டை வடிவிலோ, கூம்பு வடிவிலோ இருக்கும். சப்போட்டாப் பழத்தின் குறுக்களவு ஏறத்தாழ 3 அங்குலம் வரை இருக்கும். சப்போட்டாப் பழத்தின் மேல் தோல், சிவந்த பழுப்பு நிறத்தில் இருக்கும். மேல் தோலின் கீழ் சதைப்பிடிப்பான—மென்மையான, மஞ்சள் கலந்த பழுப்பு நிறப்பகுதி உள்ளது. இப்பழப் பகுதி சற்றேறக் குறையப் பேரிக்காயின் சுவையுள்ளதாக இருப்பதுடன், பூக்களைப்போல் மணம் வீசக் கூடியதாகவும் இருக்கும். சப்போட்டாப் பழத்தின் விதைகள் கறுப்பாக இருக்கும்.

சத்தும் ருசியும் மிகுந்த சப்போட்டாப் பழம் 'சப்போட்டா' (Sapota) என்றும், 'சப்போடில்லா' (Sapodilla) என்றும் கூறப்படும் ஒரு வகை மரத்தில் இருந்து கிடைக்கின்றது. சப்போட்டா மரத்தின் பிறப்பிடம் அமெரிக்க நாட்டில் உள்ள 'மெக்சிகோ' என்று கருதப்படுகிறது. அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட சப்போட்டா தற்பொழுது வெப்ப மண்டல நாடுகளில் எல்லாம் பரவியுள்ளது. இதற்குக் காரணம் சப்போட்டாப் பழத்தின் ருசியே என்றால் மிகையல்ல!

சப்போட்டா மரம் எப்பொழுதும் பசுமையாக இருக்கக் கூடியது! இது 50 முதல் 60 அடி உயரம் வரை வளரக்கூடியது. இம்மரத்தின் இலைகள் நமது நாட்டு இலுப்பை மரத்தின் இலைகளைப் போல் இருக்கும். சப்போட்டா மரத்தின் பட்டையில்-இலுப்பை மரப் பட்டையில் உள்ளதுபோல்-ஆனால், அதிக அளவில் பால் இருக்கும்.

## 'சிக்லெட் மரம்'

சப்போட்டா மரப் பட்டையிலிருந்து பால் எடுத்து, அதிலிருந்து 'சிக்லெட்' என்றும் 'சிக்கிள்' (Chicle) என்றும் கூறப்படும் சுவை மிகுந்த ஜவ்வு மிட்டாய் (Chewing gum) தயாரிக்கப்படுவதால், சப்போட்டா மரம் 'சிக்லெட்' மரம் என்றும் கூறப்படுகிறது.

இன்றைய நிலையில், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 100 ஏக்கர் அளவில்தான் சப்போட்டா சாகுபடி செய்யப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வீட்டுத் தோட்டங்களிலும் சில தனியார் பழத் தோட்டங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே தற்பொழுது சப்போட்டா வளர்க்கப்பட்டுவருகிறது. தனி சப்போட்டாத் தோப்புகள் இன்னும் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை.

சப்போட்டா வெப்ப மண்டலத்தில் நன்கு வளரக் கூடியதாகையால் தமிழ்நாட்டிற்கு மிகவும் ஏற்றது. கடல் மட்டத்திலிருந்து தமிழ்நாட்டில் 4,000 அடி உயரம்வரை சப்போட்டா நன்கு வளரக்கூடியது. ஆனால் கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரம் வரையான பகுதிகளில் சப்போட்டா சாகுபடி செய்வதே சிறந்தது. மலைப் பகுதிகளில் கூட சப்போட்டா நன்கு காய்த்துப் பழம்கொடுக்குமெனினும், அப்பழங்கள் நல்ல சுவையாக இருக்காது, எனவே, தமிழ்நாட்டின் சமவெளிப்பகுதிகளில் சப்போட்டா பயிரிடுவதே நல்லது.

சப்போட்டா எல்லா வகையான மண்வகைகளிலும் நன்கு வளரக் கூடியது. ஆனால், ஈரக் கசிவான பகுதிகளுக்கும், களர் நிலங்களுக்கும் ஏற்றதல்ல!

சப்போட்டாச் சாகுபடி மிக மிக எளிதானது. அதிகம் கவனிப்புத் தேவையில்லை. சப்போட்டா மரங்களைப் பூச்சிகளும் நோய்களும் அதிகம் தாக்கிச் சேதம் விளைவிப்பதில்லை. தமிழ்நாட்டின் மண் வளத்திற்கும், தட்ப-வெப்ப நிலைக்கும் சப்போட்டா மிகவும் ஏற்றது. சப்போட்டா வெகு விரைவாக நன்கு வளர்ந்து பெரும் பலன் கொடுக்கக் கூடியதாக உள்ளது.

சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை நட்டு வளர்த்தால், நட்ட 4-வது அல்லது 5-வது ஆண்டிலேயே நல்ல மகசூல் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் சப்போட்டாச் சாகுபடி செய்ய முதல் 5 ஆண்டு வரை ரூபாய் 3,500 செலவுஆகக் கூடும். இச் செலவைச் சப்போட்டாக்கன்றுகளுக்கு இடையே ஊடு பயிர் செய்வதன் மூலமாகவும், 4-வது, 5-வது ஆண்டுகளில் கிடைக்கும் பழங்களை விற்பனை செய்வதன்மூலமும் ஈடுகட்டி விட முடியும்.

சப்போட்டா நட்ட 6-வது ஆண்டிலிருந்து ஒரு ஏக்கர் சப்போட்டாச் சாகுபடிக்கு ஆண்டு தோறும் ரூபாய் 600 செலவு ஆகும். ஆறுவது ஆண்டிலிருந்து நிகர இலாபமும் கூடிக் கொண்டே வரும். ஆனால் சப்போட்டா நட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு ஏக்கர் சப்போட்டாத் தோட்டத்திலிருந்து ஆண்டுதோறும் நிலையாக 6,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர இலாபம் கிடைக்கக்கூடும்.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள சாகுபடிக் குறிப்புகளை மேற்கொண்டு சப்போட்டா பயிரிட்டுப் பயன்பெறுமாறு 'தமிழரசு' இதழின் சார்பில் தமிழ்நாட்டு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## சப்போட்டா—சாகுபடிக் குறிப்புகள்.

### மண்வளம்

எல்லா வகை மண்ணிலும் சப்போட்டா பயிரிடலாம். ஈரக் கசிவான மண்ணும், தண்ணீர் நன்கு வடியாத மண்ணும், களர் மண்ணும் சப்போட்டாவிற்கு ஏற்றதல்ல. வண்டல் மண்ணும், மணலும் கலந்த நிலம் சப்போட்டாவிற்கு மிகவும் ஏற்றது.

### வகைகள்

சப்போட்டாச் சாகுபடி செய்யக் கீழ்க்கண்ட வகைகளைப் பயன்படுத்தலாம்.

1. கோ. 1. சப்போட்டா
2. 'கிரிக்கெட்' பந்து
3. 'ஓவல்'
4. கௌரய்யா
5. பாதாமி
6. குத்தி
7. கிர்த்தி பர்த்தி

இவைகளில் கோ. 1 சப்போட்டாவே மிகவும் சிறந்தது.

'கிரிக்கெட்' பந்து என்ற வகையின் பழங்கள் மிகவும் பெரியதாக இருக்கும். ஆனால், அதிகம் காய்க்காது. இதன் சுவை 'ஓவல்' வகையின் சுவையை விடக் குறைந்ததே! 'ஓவல்' வகையின் பழங்கள் 'கிரிக்கெட்' பந்து வகையின் பழங்களை விடச் சிறியவை. ஆனால், நிறையக் காய்க்கும். சுவையில் 'ஓவல்' வகை, 'கிரிக்கெட்' பந்து வகையை விடச் சிறந்தது.

'கிரிக்கெட்' பந்து வகையின் பருமனும், 'ஓவல்' வகையின் சுவையும் கொண்ட ஒரு புதிய வகையை உருவாக்கக் 'கிரிக்கெட்' பந்து என்ற வகையும், 'ஓவல்' என்ற வகையும் ஒட்டுச் சேர்க்கப்பட்டன. இம்முயற்சி 1953-ஆம் ஆண்டு முதலே கோவை வேளாண்மைக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வாராய்ச்சியின் பயனாய்க் கிடைத்ததே கோ.1 சப்போட்டா.

கோ. 1 சப்போட்டாப் பழங்கள் 'கிரிக்கெட்' பந்து வகையைவிடச் சுவையாகவும், 'ஓவல்' வகையை விடப் பருமனாகவும் உள்ளன. இப்புதிய வகை அதிக மகசூலும் கொடுக்கக் கூடியது. இந்த ரகத்தின் பழங்கள் நடுத்தரப் பருமனாகவும், நீண்ட முட்டை வடிவமுள்ளதாகவும் கவர்ச்சியான செம்பழுப்புநிறச் சதையுடையதாகவும் இருக்கின்றன. எனவே, கோ-1 சப்போட்டா வகையை நடுவதே சிறந்தது.

### இனப்பெருக்கம்

சப்போட்டாவை இனப்பெருக்கம் செய்ய ஒட்டுக் கன்றுகளைப் பயன்படுத்துவதே சிறந்த முறையாகும். சப்போட்டாவின் பழத்தில் உள்ள விதைகளை எடுத்து நட்டுக் கன்று வளர்த்துச் சாகுபடி செய்வது வீண் முயற்சியும், விரும்பத்தகாத விளைவினைத் தரக்கூடியதுமாகும். ஒட்டுக் கன்றுகள் தயாரிக்க 'மணில்காரா கெக்சாண்டரா' (Manilkara Hexandra) என்னும் பாலசப்போட்டாவிதைகளை நட்டு, கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. இந்தக் கன்றுகளைத் தனித்தனித் தொட்டிகளில் நட்டு வளர்த்துக் கொண்டு பிறகு இக் கன்றுகளை வேர்க் கன்றுகளாகப் (Rootstock) பயன்படுத்தி, நல்ல சுவையான பழங்களையும், நிறைந்த மகசூலையும் கொடுக்கக்கூடிய சிறந்த தாய் சப்போட்டா மரத்தின் (Mother tree) கிளைகளில் ஒட்டுக்கட்டப்படுகிறது. இவ்வாறு ஒட்டுக் கட்டுவதற்கு நெருக்கு ஒட்டு (Inarching) முறை பயன்படுத்தப்படுகிறது. நெருக்கு ஒட்டு முறையே சப்போட்டாவின் இனப்பெருக்கத்திற்கான சிறந்த முறையாகும். ஒட்டு நன்கு ஒட்டிக்கொண்ட பிறகு வேர்ச் செடியின் நுனிப்பாகமும், தாய் மரக்கிளையின் அடிப்பாகமும் முறைப்படி துண்டிக்கப்பட்டு ஒட்டுக் கன்று தனியே எடுக்கப்படுகிறது. இவ்வாறு எடுக்கப்பட்ட ஒட்டுக் கன்றுகள் நிழற்பாங்கான இடத்தில் வைத்து ஓராண்டுக் காலம் வரை பாதுகாக்கப்படுகிறது.

ஓராண்டுக்காலம் வயதுடைய ஒட்டுக் கன்றுகளை நடுவதே சிறந்தது.

சில தனிப்பட்ட வியாபாரிகள் இலுப்பைக் கன்றுகளை வேர்க் கன்றுகளாகப் பயன்படுத்தி அதன் மேல் தரங்குறைந்த சப்போட்டா மரங்களின் கிளைகளை ஒட்டுக் கட்டி விற்பனை செய்து விடுகிறார்கள். ஒட்டுக் கட்டுவதும் சரியான முறையில் கட்டப்படாததால் கன்றுகளை நட்டபிறகு, ஒட்டுக் கட்டிய பாகத்தில் முறிந்து விடுகிறது. அதனால் அடிப்பகுதி மட்டுமே வளரும். அதனால் சப்போட்டா மரத்திற்குப் பதில் இலுப்பை மரமே வளரும். எனவே சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை வாங்க விரும்புகிறவர்கள், அரசினர் மாதிரிப் பழப்பண்ணை நாற்றங்கால்களிலிருந்தோ, தனியார் நாற்றங்காலிலிருந்தோ, வேளாண்மைப் பல்கலைக் கழகப் பண்ணையிலிருந்தோ வாங்குவதே நல்லது.





### குழி தோண்டுதல்

சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை நடுவதற்கு ஒவ்வொரு குழியும் 3 அடி நீளமும், 3 அடி அகலமும், 3 அடி ஆழமும் இருக்குமாறு தோண்டவேண்டும்.

வளமற்ற மண்ணில், மானாவாரியாகச் சப்போட்டா பயிரிடுவதென்றால், ஒவ்வொரு குழிக்கும் இடையில் 20 முதல் 25 அடி இடைவெளி விட்டுக் குழிகளைத் தோண்ட வேண்டும்.

வளம் மிகுந்த மண்ணில் தண்ணீர் பாய்ச்சி, சப்போட்டா சாகுபடி செய்ய ஒவ்வொரு குழிக்கும் இடையில் 30 அடி முதல் 40 அடி இடைவெளி விட்டுக் குழிகளைத் தோண்டுதல் அவசியமாகும்.

குழி தோண்ட ஜூன் (வைகாசி-ஆனி) மாதம் ஏற்றதாகும். தோண்டிய குழிகளை ஒரு மாத காலம் வரை ஆறப் போட வேண்டும்.

ஒவ்வொரு குழிக்கும் இடையில் 20 அடி இடைவெளி விட்டால், ஒரு ஏக்கரில் 108 குழிகள் தோண்ட வேண்டும்; 25 அடி இடைவெளி விட்டால் ஒரு ஏக்கரில் 68 குழிகள் தோண்ட வேண்டும்; 30 அடி இடைவெளி விட்டால் ஒரு ஏக்கரில் 48 குழிகள் வெட்ட வேண்டும்; 40 அடி இடைவெளி விட்டால் ஒரு ஏக்கரில் 27 குழிகள் தோண்ட வேண்டும்.

### நடுவதற்கு ஏற்ற பட்டம்

சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடுவதே சிறந்தது.

### நடும் முறை

ஒருமாத காலம்வரை ஆறிய குழிகளில் மண்ணும், மணலும், மக்கிய தொழு எருவும் கலந்து போட்டு நிரப்ப வேண்டும். பிறகு குழிகளில் ஒரிரு முறை சதும்பத் தண்ணீர் விட வேண்டும். இதனால் குழிகளில் மண் நன்கு படியும். அதன் பின் குழிகளின் நடுவில் மண்ணைத் தோண்டி அதில் ஒட்டுக் கன்றுகளை நட வேண்டும். சப்போட்டா ஒட்டுக் கன்றின் வேரும் மண்ணும் கலந்த மண் உருண்டை (Ball of earth) உடையாமல், இலேசாக ஒட்டுக்கன்று இருக்கும் தொட்டியை அகற்றி விட்டு, அப்படியே ஒட்டுக் கன்றை எடுத்துக் குழியில் நட வேண்டும்.

நடும்பொழுது ஒட்டுக் கட்டிய பாகம் தரை மட்டத்திற்கு மேல் 9 அங்குல உயரத்தில் இருக்குமாறு — அதாவது தொட்டியில் இருந்த நிலையிலேயே — நட வேண்டும். ஒட்டுக் கன்றை நட்ட பிறகு கன்றைச் சுற்றிலும் நன்கு மண்ணை அழுத்திவிட்டுக், கன்று சாய்ந்து விடாமல் நிற்கச் செய்து தண்ணீர் விடவேண்டும்.

### துவரை தரும் இலாபம்

எஸ்.ஏ-1துவரையை ஜூன், ஜூலை மாதங்களில் பயிரிடலாம். இதன் வயது 180 நாட்கள். இதனைத் தனிப் பயிராகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 4 கிலோ விதை தேவை. நிலக் கடலையுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 1 கிலோ விதை போதும். 3 ரூபாய் செலவிட்டு, 1 ஏக்கரில் நிலக்கடலையுடன் துவரையைக் கலப்புப் பயிராகப் பயிரிட்டு ரூ. 300 வருவாய் பெறலாம். பருவ மழைக் குறைவால் நிலக் கடலை மகசூல் குறைந்தாலும் துவரை மூலம் வருவாய் பெற முடியும்.

ஒட்டுக் கன்றுகளை நட்ட பிறகு, ஒவ்வொரு கன்றின் இரு பக்கத்திலும் அரை அடி தொலைவில் 2 மூங்கில் குச்சிகளை நட வேண்டும். இவ்விரு குச்சிகளையும் பயன்படுத்தி, ஒட்டுக் கன்றின் ஒட்டுப் போட்ட பாகத்தின் மேலும் கீழும் 'எட்டு' வடிவில் சணலால் முடிச்சுப் போட வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுக் கன்றுகள் காற்றினால், சேதமடையாதிருப்பதுடன், நேராக வளர்கின்றன.

### பின் செய் நேர்த்தி

சப்போட்டாக் கன்று நன்கு வேரூன்றிய பிறகு, ஒட்டுக் கட்டிய பாகத்தின் மேல், இரு பக்கங்களிலும் கத்தியினால் இலேசாகக் கீறிவிட வேண்டும். இதனால் ஒட்டுக்கட்டிய பாகத்தின்மேல் உள்ள கட்டுகள் (வாழை நார் அல்லது சணலால் போடப்பட்டவை) வெட்டுப்பட்டு, கன்று வளர வளர நாளடைவில் கீழே விழுந்து விடும். இவ்வாறு செய்யாவிட்டால், கன்று வளர வளர, ஒட்டுக் கட்டிய பாகத்தில் இறுக்கம் ஏற்பட்டு கோடு கோடாகத் தடிப்பு ஏற்பட்டுக் கன்றின் வளர்ச்சி குன்றி, ஒடிந்துவிடக் கூடும்.

வேர்க் கன்றில் துளிர்கள் தோன்றினால் அவைகளை உடனுக்குடன் கிள்ளி எறிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் வேர்க் கன்றிலிருந்து கிளைகள் தோன்றி ஒட்டுக் கன்றின்மேற் பகுதியின் வளர்ச்சி தடைபட்டு விடும். (வேர்க்கன்றுப் பகுதியில் இருந்து தோன்றிய கிளைகள் சப்போட்டாவாக இரா! அத்துடன் அவைகளில் சப்போட்டாக் காய்களும், காய்க்கா!).

சப்போட்டாக் கன்றுகள் வளர்ந்து, மரமாகிக் காய்க்கும் வரை, காய்கறிப் பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்ய வேண்டும். சப்போட்டா மரங்கள் காய்க்கத் தொடங்கிய பிறகு காய்கறிப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்வது நல்லதல்ல!

காய்ப்புக்கு வந்த பிறகு, மே, ஜூன் மாதங்களில் அல்லது தென் மேற்குப் பருவ மழைக்குப் பிறகு ஒரிரு முறை சப்போட்டா தோப்பை உழுது விட்டு சணப்பு, பில்லிபசரா போன்ற பசுந்தாளுரப் பயிர்களை விதைக்க வேண்டும். அப்பசுந்தாளுரப் பயிர்கள் நன்கு வளர்ந்த பின்—ஆனால் பூப்பதற்கு முன்பு—அவைகளை அப்படியே சப்போட்டாத் தோப்பில் மடக்கி உழுது விடுதல் வேண்டும். இதனால் சப்போட்டாத் தோப்பின் மண் வளம் பெருகும்.

### பாசனம்

சப்போட்டாக் கன்றுகள் நட்டு இரண்டு ஆண்டுகள் வரை, வாரம் ஒருமுறை வீதம் தண்ணீர் விடவேண்டும். பிறகு தண்ணீர் பாய்ச்சாவிட்டாலும் பரவாயில்லை! ஆனால் சப்போட்டாவில் பெரும் மகசூல் பெற வேண்டுமானால், கோடைப்பருவத்திலும், வறட்சி நிலவும் இதர காலத்திலும் சப்போட்டா மரங்களின் தேவைக் கேற்பத் தண்ணீர்

பாய்ச்சுதல் மிகமிக அவசியமாகும்.

## உரமிடுதல்

சப்போட்டாக் கன்று நட்ட ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு கீழ்க்கண்டவாறு உரமிட வேண்டும்.

| | | |
|---|---|---|
| மக்கிய தொழுஎரு. | 25 | கிலோ |
| ஆமணக்குப் பிண்ணுக்கு | 3 | ,, |
| எலும்புத்தூள் | 1 | ,, |

பின்பு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகக் கீழ்க்கண்ட அளவு உரங்களை இட்டுவரவேண்டும்.

| உரத்தின் பெயர். | அளவு (கிலோ). |
|---|---|
| மக்கிய தொழுஎரு. | 5 |
| ஆமணக்குப் பிண்ணுக்கு | 1 |
| எலும்புத்தூள் | ½ |

காய்க்கத் தொடங்கிய சப்போட்டா மரம் ஒவ்வொன்றுக்கும்—அதாவது 5 ஆண்டு வயதிற்கு மேற்பட்ட மரங்களுக்கு —ஆண்டு தோறும் கீழ்க்கண்ட அளவில் உரமிட வேண்டும்.

| | |
|---|---|
| மக்கிய தொழு எரு. | 50 கிலோ |
| ஆமணக்குப் பிண்ணுக்கு. | 8 கிலோ |
| எலும்புத்தூள். | 2 கிலோ |

நன்கு காய்த்துப் பலனளித்துக் கொண்டிருக்கும் சப்போட்டா மரம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டு தோறும் கீழ்க்கண்ட அளவில் உரமிடுதல் நல்லது.

| | |
|---|---|
| மக்கிய தொழுஎரு | 100 கிலோ |
| அமோனியம் சல்பேட். | 5 கிலோ |
| சூப்பர் பாஸ்பேட். | 6 கிலோ |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ். | 2 கிலோ |

மேற்கூறப்பட்ட உரங்களில் பாதியை ஜூலை மாதத்திலும், மீதிப் பாதியை நவம்பர் மாதத்திலும் இடவேண்டும்.

சப்போட்டா மரங்களைச் சுற்றிக் கிளைகள் படர்ந்துள்ள இடம் வரை வட்டவடிவமாக மேல் மண்ணை இலேசாக அகற்றிவிட்டு, அதில் உரங்களைத் தூவி விட்டு, மண்ணுல் மூடித் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

## பயிர்ப் பாதுகாப்பு

பொதுவாக சப்போட்டாவைப் பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்குவதில்லை. ஆனுல், நவம்பர், டிசம்பர் மாதங்களில் சப்போட்டாவின் இலைகளிலும், இளந் தண்டுகளிலும் 'சூட்டி மௌல்டு (Sooty Mould) என்னும் இலைக்கருகல் நோய் தோன்றக் கூடும். இந்த நோய் தோன்றினுல், கறும் புகை படிந்தது போல் காணப்படும். இதைத் தடுக்க மீன் எண்ணெய், சோப்பு ஆகியவைகளைக் கலந்து தெளிக்க வேண்டும்.

சப்போட்டா இலைகளை இலைப் புள்ளி நோயும் தாக்கக்கூடும்.




இந்நோயைத் தடுக்க போர்டோ கலவையை அல்லது ஏதேனும் ஒரு தாமிரப்பூசணக் கொல்லியைத் தெளிக்கலாம்.

## அறுவடை

ஒட்டுச் சப்போட்டாக் கன்றுகளிலிருந்து வளர்ந்த சப்போட்டா மரங்கள் நட்ட 4-வது ஆண்டிலேயே நன்கு காய்க்கின்றன. பொதுவாகச் சப்போட்டா மரம் ஆண்டு முழுவதும் பழங்களைத் தரக் கூடியது. ஆனுல், பிப்ரவரி முதல் ஜூன் வரையான காலத்தில் முக்கிய மகசூலும், செப்டம்பர் முதல் அக்டோபர் வரையான காலத்தில் இரண்டாவது மகசூலும் அறுவடையாகின்றன.

ஒவ்வொரு சப்போட்டா மரமும், ஆண்டு தோறும் 400 முதல் 500 பவுண்டு எடையுள்ள பழங்களைக் கொடுக்கும். 'கிரிக்கெட் பந்து' என்ற வகை மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆண்டும் 500 பழங்களுக்குக் குறையாமல் கொடுக்கும். ஆனுல், 'ஓவல்' வகை மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆண்டும் 1,000 முதல் 2,000 பழங்கள் கொடுக்க வல்லவை.

கோ-1 சப்போட்டா மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆண்டும் 1,500 முதல் 2,000 பழங்கள் வரை கொடுக்கும் திறன் வாய்ந்தவை.

சப்போட்டாக் காய்கள் மரத்திலேயே பழுப்பதில்லை. நன்கு முதிர்ந்த காய்களைப் பறித்து வைத்திருந்தால், சில நாட்களில் நன்கு பழுத்துவிடும். புகை ஊதியும் விரைவில் பழுக்க வைக்கலாம்.

சப்போட்டாக் காய்கள் முற்றி விட்டனவா என்று தெரிந்து கொண்டு அறுவடை செய்ய வேண்டும். அவ்வாறு தெரிந்து கொள்ளக் கீழ்க்கண்ட 3 அறிகுறிகள் பயன்படும்.

1. சப்போட்டாக் காய்கள் நன்கு முற்றியிருந்தால், காயின் மேல் தோலைச் சற்று நகத்தால் கீறினுல், உள்ளுக்குள் இருக்கும் பழப் பகுதியின் தோற்றம் பசுமையாக இல்லாமல் பழுப்பு நிறத்துடன் காணப்படும்.

2. சப்போட்டாக் காய்கள் நன்கு முற்றி இருக்குமானுல் காய்களை மரத்திலிருந்து பறிக்கும் பொழுது, பால் வடியாது.

3. சப்போட்டாக் காய்கள் முற்றி விட்டால் காயின் மேலுள்ள செதில்கள் மறைந்து போகும்.

## வேண்டுகோள்

குறைந்த செலவில், மிகுந்த சிரமமின்றிச் சப்போட்டாவைப் பயிரிட்டுச் சத்தும், சுவையும் உள்ள சப்போட்டாப் பழங்களைப் பெறுவதுடன் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஏக்கருக்கு 6,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர இலாபம் எடுக்க முடியுமாதலால், சப்போட்டா பயிரிட்டு மிகுபயன் பெறுமாறு தமிழ் நாட்டு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்ருேம்.

—ஆர். எம்.






இன்று உலகமெங்கும் புகழ் பெற்று விளங்கும் 'டென்னிஸ்' விளையாட்டு, பண்டைய கிரேக்க நாட்டில் விளையாடப் பெற்ற ஒரு வகைக் கைப்பந்து விளையாட்டிலிருந்து உருவானதே என்று வரலாறு கூறுகிறது. தற்பொழுது வழக்கத்திலுள்ள 'டென்னிஸ்' விளையாட்டைப் போன்ற ஒருவகை விளையாட்டு, கி.பி. 1400-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் தோன்றி வளர்ந்ததாகவும் தெரிய வருகிறது.

ஆனுல், டென்னிஸ் விளையாட்டின் வளர்ச்சிக்கு இந்தியாவே மூலகாரணமாக உள்ளது என்பது பலருக்குத் தெரியாது. இந்தியாவில் தோன்றிப் புகழுடன் விளங்கிவரும் பூப்பந்தாட்டமே 'டென்னிஸ்' விளையாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது என்ருல் மிகையல்ல, பூப்பந்தாட்டம் சங்க இலக்கியக் காலத்திலேயே தமிழ்நாட்டில் விளையாடப் பெற்றுள்ளது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அந்தப் பூப்பந்தாட்டமே பல்வேறு வளர்ச்சி பெற்று 'பேட்மிட்டன்' என்ற நிலையை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அடைந்தது! இந்தியாவில் பிறந்த பூப்பந்தாட்டமே, ஆங்கிலேய இராணுவ அலுவலர்கள் மூலம் இங்கிலாந்து சென்று, அங்கும் பரவிப் புகழ்பெற்றது. பூப்பந்தாட்டத்தின் விதிமுறைகளே 'டென்னிஸ்' ஆட்டத்திலும் புகுத்தப்பட்டுள்ளன.

துவக்கக் காலத்தில் டென்னிஸ் விளையாட்டில் மட்டைக்குப் பதிலாகக் கையையே பயன்படுத்தியும், பந்திற்குப் பதிலாகத் துணிகளைச் சுருட்டித் தைத்துப் பந்தாகப் பயன்படுத்தியும் விளையாடியுள்ளனர். பிறகு ஒரு காலத்தில், வயலில்உள்ள வரப்புப் போன்ற கரையைப் பயன்படுத்திப் பந்தை அடித்து விளையாடும் ஆட்டமாகவும் டென்னிஸ் இருந்துள்ளது. காலப் போக்கில் கரைக்குப் பதிலாகக் கயிற்றினுல் செய்யப்பட்ட வலை டென்னிஸ் ஆட்டத்தில் புகுத்தப்பட்டது.

பந்தை அடிக்க 'ராக்கெட்' என்னும் டென்னிஸ் மட்டை கண்டு பிடிக்கப்பட்ட பிறகே டென்னிஸ் விளையாட்டு புகழ் பெறத் தொடங்கியது. அதன் பிறகே, வெளியிடங்களில் விளையாடப்பெற்ற 'டென்னிஸ்', வீட்டில் விளையாடும் விளையாட்டாகவும் வளர்ச்சி பெற்றது!

தற்பொழுது 'லான் டென்னிஸ்' (Lawn Tennis) என்று கூறப்படும் விளையாட்டைக் கண்டு பிடித்த பெருமை, பிரிட்டனைச் சார்ந்த மேஜர் வால்டர் சி. விங்பீல்டு அவர்களையே சாரும்! அவர் 'டென்னிஸ் விளையாட்டின் தந்தை' என்று கூறப்படுகிருர்! அவர் 1873-ஆம் ஆண்டில், நடுவிலே வலையைக் கட்டிக் கொண்டு இரண்டு பக்கமும் நின்றுகொண்டு மாறி மாறி அடிக்கின்ற 'லான் டென்னிஸ்' விளையாட்டைத் தோற்றுவித்தார். அந்த விளையாட்டை 1873-ம் ஆண்டில் 'கிறிஸ்துமஸ்' விழாவன்று தன் நண்பர்களுக்கு ஆடிக்காட்டினுர். அவருடைய நண்பர்கள் அந்த விளையாட்டைப் பார்த்து வியந்து பாராட்டினர்! ஆனுல் அந்த விளையாட்டிற்கு அப்பொழுது இடப்பெற்றிருந்த 'ஸ்பெய்ரிஸ்டைக்' என்ற பெயர் இரேக்கச் சொல் என்பதால் அப்பெயரை ஏற்க மறுத்தனர், அவருடைய நண்பர்கள்! அவ்விளையாட்டிற்கே பிற்காலத்தில் 'டென்னிஸ்' என்ற பெயர் சூட்டப் பெற்றுள்ளது!

இவ்வாறு தோன்றிய டென்னிஸ் குறுகிய காலத்திலேயே பிரிட்டனில் பெரும்புகழ் பெற்றது. ஆண்களுடன்; பெண்களும் இவ் விளையாட்டில் கலந்து கொண்டு ஆடி மகிழ்ந்தனர். குறிப்பாகப் பணக்காரர் வீடுகளில் 'டென்னிஸ்' விளையாட்டு பிரபலமாக விளங்கியது. 'டென்னிஸ்' விளையாட்டுத் தோன்றியதால் முன்பிருந்த பல விளையாட்டுக்கள் மறைந்தன!

அடுத்த ஆண்டிலேயே 'டென்னிஸ்' விளையாட்டு ஒரு பெண்ணின் மூலம் அமெரிக்காவில் அறிமுகமாகியது. அப்பெண்ணின் பெயர் 'செல்வி அவுட்டர் பிரிட்ஜ்' என்பதாகும். நியூயார்க் நகரைச் சார்ந்த அப்பெண் தனது விடுமுறையை கழிக்க இங்கிலாந்து நாட்டுக்கு வந்த பொழுது, டென்னிஸ் விளையாட்டில் மனத்தைப் பறிகொடுத்து, குறுகிய காலத்திலேயே அவ்விளையாட்டைக் கற்றுக் கொண்டு ஸ்பெய்ரிஸ்டைக் என்ற அவ் விளையாட்டிற்குரிய வலை, மட்டை, பந்து, அணிகள் ஆகியவற்றுடன் அமெரிக்காவிற்குத் திரும்பினுர். அப்பெண் கொண்டுவந்த விளையாட்டுப் பொருள்களை என்னவோ ஏதோவென்று எண்ணிய அமெரிக்கச் சுங்க அலுவலர்கள் அவைகளை எடுத்துச் செல்ல அனுமதி அளிக்கவில்லை. விளையாட்டுப் பொருள்களே அவைகள் என்று அப்பெண் எடுத்துக் கூறியும், ஒரு வார காலம் கழித்தே, அப்பொருள்களை எடுத்துச் செல்ல அப்பெண்ணிற்கு அனுமதி கிடைத்ததாகக் கூறப்படுகிறது. அப்பெண்ணினுல் 1874-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் அறிமுகமாகிய டென்னிஸ், குறுகிய காலத்திலேயே அமெரிக்காவிலும் புகழ்பெறத் துவங்கியது.




முதல் டென்னிஸ் விளையாட்டுப் போட்டி 1877-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள ''விம்பிள்டன்'' ( wimbledon ) என்ற இடத்தில் நடைபெற்றது. 1881-ஆம் ஆண்டில் அமெரிக்க டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் ஐக்கிய நாடுகள் லான் டென்னிஸ் குழுவை அமைத்து, முதல் அமெரிக்க நாட்டு ''டென்னிஸ்'' போட்டியை, 'நியூபோர்ட்' என்ற இடத்தில் நடத்தினர்.

மேஜர் வால்டர் சி. விங்பீல்டு அவர்களால்தோற்றுவிக்கப்பட்ட 'லான் டென்னிஸ்' இங்கிலாந்தில் வெகு விரைவாகப் பரவி வந்தாலும், அவரால் கூறப்பட்ட விதி முறைகள் முழு அளவில் கடைபிடிக்கப் படாமல் ஊருக்கு ஒருவிதமாக அமைந்திருந்தது. திட்டவட்டமான விதிமுறைகளை வகுத்து, இந்த ஆட்டத்தைச்



செம்மைப் படுத்தியது 'மேர்லி போன்' சங்கமேயாகும்.

இன்று உலகில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் 'டென்னிஸ்' சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய, 'அனைத்துலக லான் டென்னிஸ் பேரவையே (International Lawn Tennis Association), 'டென்னிஸ்' ஆட்டத்தின் விதி முறைகளை வகுப்பது, டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது போன்ற பொறுப்புகளை ஏற்று வருகிறது. அனைத்துலக லான் டென்னிஸ் பேரவையின் தலைமை நிலயம் பாரிஸ் நகரில் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் லான் டென்னிஸ் சங்கம் நியூயார்க் நகரில் உள்ளது.

### 'விம்பிள்டன்' போட்டி

'டென்னிஸ்' விளையாட்டுப் போட்டிகளில் பிரிட்டன் நாட்டு 'டென்னிஸ்' விளையாட்டுப் போட்டியே உலகில் மிகவும் புகழ் பெற்ற 'டென்னிஸ்' போட்டியாகும். இதையே 'விம்பிள்டன்' விளையாட்டுப் போட்டி என்று கூறப்படுகிறது. விம்பிள்டன் விளையாட்டுப் போட்டியில் ஆண்கள் ஒற்றையர், இரட்டையர் டென்னிஸ் போட்டியும், பெண்கள் ஒற்றையர், இரட்டையர் போட்டியும், ஆண்களும் பெண்களும் கலந்து விளையாடும் இரட்டையர்போட்டியும் நடைபெறுகிறது.

### 'டேவிஸ்' கோப்பைப் போட்டி

'டேவிஸ்' கோப்பைப் (Davis Cup) போட்டி என்பது ஆண்டு தோறும் நடைபெற்று வரும் அனைத்துலக ஆண்கள் 'டென்னிஸ்' போட்டியாகும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் நாட்டின் 'டென்னிஸ்' குழுவில் 5 டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் இருப்பர். 'டேவிஸ்' கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டி முந்திய ஆண்டுப் போட்டியில் வெற்றி பெற்ற நாட்டில் நடைபெற்று வருகிறது.

'டேவிஸ்' கோப்பை என்பது ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்று வரும் அனைத்துலக ஆண்கள் 'டென்னிஸ்' போட்டியில் வெற்றி பெறும் நாட்டிற்கு வழங்கப்படும் வெற்றிச் சின்னமாகும். இக்கோப்பை வெள்ளியால் செய்யப்பட்டதாகும்.

அமெரிக்க அரசியல் ஞானியாகவும், டென்னிஸ் விளையாட்டில் பேரார்வம் கொண்டவராகவும் விளங்கிய 'ட்வைட் பில்லி டேவிஸ்' (Dwight Filley Davis —1879—1945) என்பவர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்களிடையே, வெற்றி பெற வேண்டும் என்ற விரும்பத்தக்க போட்டி மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, அனைத்துலக 'டென்னிஸ்போட்டி ஒன்று நடத்துவதற்கு கி.பி. 1900-ஆண்டில் நன்கொடையாக ஒரு கோப்பையை வழங்கினார். அந்தக் கோப்பையே 'டேவிஸ்' கோப்பை எனப்படுகிறது. "டேவிஸ்" கோப்பை 'டென்னிஸ்' போட்டி அதே ஆண்டில் தொடங்கியது. அந்தக் கோப்



பையை வழங்கிய பொழுதுஅவர் பிற்காலத்தில் அக்கோப்பையைப் பெறுவதற்கான போட்டியில் ஏறத்தாழ எல்லா நாடுகளும் போட்டியிடக் கூடும் என்றோ அல்லது 'டென்னிஸ்' வரலாற்றில் தன்பெயர் நிலையான இடம் பெறும் என்றோ கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லை! ஆனால் இன்றோ'டேவிஸ்' கோப்பையைப் பெறுவதற்கு எல்லா நாடுகளும் போட்டி போடுகின்றன! 'டென்னிஸ்' வரலாற்றில் 'டேவிஸ்' அவர்களின் பெயர் நிலையான இடத்தைப் பெற்று விட்டது!

தற்பொழுது டேவிஸ் கோப்பைப் போட்டியில் பல நாடுகள் கலந்து கொள்கின்றன; பல தொடர் போட்டிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு தொடர் போட்டியிலும் இரண்டு நாடுகள் போட்டியிடுகின்றன இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் ஒவ்வொரு போட்டியிலும் 4 ஒற்றையர் ஆட்டமும், ஒரு இரட்டையர் ஆட்டமும் இடம் பெறுகிறது.

போட்டியாளர் இல்லாததனால் 1901, 1910 ஆகிய இரு ஆண்டுகளிலும், முதல் உலகப் போரின் காரணமாக 1915 முதல் 1918 வரையான ஆண்டுகளிலும், இரண்டாவது உலகப் போரின் காரணமாக 1940 முதல் 1945 வரையான ஆண்டுகளிலும் தவிர, மற்றெல்லா ஆண்டுகளிலும் தொடர்ந்து 'டேவிஸ்' கோப்பை 'டென்னிஸ்' போட்டி நடைபெற்று வந்துள்ளது.

'டேவிஸ்'கோப்பைப் பந்தயத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஆகிய 2 நாடுகள் மட்டுமே கலந்து கொண்டன. 1904-ஆம் ஆண்டில் அப்போட்டியில் பெல்ஜியம் நாடு கலந்து கொண்டது. அதன் பிறகு அப்போட்டியில் பல நாடுகளும் பங்கு கொள்ள முன் வந்தன. 1905-ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா நாடும் பங்கு கொண்டது. 1913-ஆம் ஆண்டில் 7 நாடுகள் அப்போட்டியில் கலந்து கொண்டன. 1921-ஆம் ஆண்டில் மேலும் பல நாடுகள் புதிதாக அப்போட்டியில் பங்கு கொண்டு தங்கள் வலிமையைக் காட்ட முன் வந்தன. அவைகளில் இந்தியாவும், ஜப்பானும் குறிப்பிடத் தக்கவையாகும்.

மேலும் பல நாடுகள் டேவிஸ் கோப்பைப் போட்டியில் பங்கு கொள்ள முன் வந்ததால், 1923-ஆம் ஆண்டில் அப்போட்டியை அமெரிக்க மண்டல நாடுகளுக்கான போட்டி, ஐரோப்பிய மண்டல நாடுகளுக்கான போட்டி என இரு பிரிவாகப் பிரிக்கப் பட்டது. 1931-ஆம் ஆண்டில் டேவிஸ் கோப்பைப் போட்டியில் மேலும் ஒரு முன்னேற்றம்ஏற்பட்டது. அந்த ஆண்டில் அமெரிக்க மண்டல நாடுகளுக்கான போட்டி தெற்கு, வடக்கு என மேலும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1933-ஆம் ஆண்டில் அப்போட்டி உச்சக் கட்டத்தை அடைந்தது. அந்த ஆண்டில் அப் போட்டியில் 33 நாடுகள் கலந்து கொண்டன.



1934-ஆம் ஆண்டில் அப் போட்டியில் மேலும் ஒருசோதனை நடத்திப் பார்க்கப்பட்டது. ஐரோப்பிய மண்டல நாடுகளிலிருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள் 'டேவிஸ்' கோப்பைக்கான போட்டியில் பங்கு கொள்ள முன் வந்ததால், 'டேவிஸ்' கோப்பைப் போட்டிக்கான தகுந்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் முகத்தான்—விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக—ஆரம்பநிலைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் இம்முறை 1936-ல் கைவிடப் பட்டது.

இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு மீண்டும் தொடங்கப் பெற்ற' டேவிஸ்' கோப்பைப் போட்டி மேலும் ஒரு புதுமையைக் கண்டது! அமெரிக்க மண்டல நாடுகளுக்கான போட்டியில் 'பசிபிக்' நாடுகளுக்கான பிரிவு புகுத்தப்பட்டது. ஆனால் 'பசிபிக்' பிரிவில் நியூசிலாந்து என்ற ஒரே ஒரு நாடு மட்டுமே கலந்து கொண்டது. அதுவும், அமெரிக்க, பசிபிக் மண்டல நாடுகளுக்கிடையே நடை பெற்ற போட்டியில் வெற்றி பெறும் தகுதியை இழந்து விட்டது.

இதுவரை நடைபெற்றுள்ள டேவிஸ்கோப்பைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களில் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள் டைடென், லாகோஷ்ட், காக்செட், ப்ருக்ஞன், ஜான் பரோட்டரா, ப்ரெட் பெரி, ஹென்ரி ஆஸ்டின், டோனல்ட் பட்ஜ், பட்ஜ பாட்டே, வியூ கூட், ராட் லேவர், ஜான் நியூகோம் ஆகியோர்களாவர்.

இதுவரை நடைபெற்றுள்ள 'டேவிஸ்' கோப்பைப் பந்தயங்களிலிருந்து பின்கண்ட உண்மைகள் புலப்படுகின்றன.

'டேவிஸ்' கோப்பைப் போட்டியில் அமெரிக்கா முதலிரண்டு ஆண்டுகளில் வெற்றி பெற்று டேவிஸ் கோப்பையைப்பெற்றது. அதன் பின் பிரிட்டன் வெற்றி பெற்றுத் தொடர்ந்து டேவிஸ் கோப்பையை நான்காண்டுக் காலம் வைத்திருந்தது. பிறகு ஆஸ்திரேலியா 'டேவிஸ்' கோப்பையைத் தன்னுடையதாக்கிக் கொண்டது. 1907 முதல் 1911-ஆம் ஆண்டு வரை ஆஸ்திரேலியாவிடம் இருந்த 'டேவிஸ்' கோப்பையை 1912-ஆம் ஆண்டில் பிரிட்டனும், 1913-ஆம் ஆண்டில் அமெரிக்காவும் பெற்றன. 1914 முதல் 1919 வரை ஆஸ்திரேலியர்களே 'டேவிஸ்' கோப்பையின் சொந்தக்காரர்களாக விளங்கினார்கள். பிறகு 'டேவிஸ்' கோப்பையை அமெரிக்கா ஏழாண்டுக் காலம் வைத்திருந்தது.

அதன்பின் பிரான்சு நாட்டின் '4 வீரர்கள்' ( Four Masketeers of France ) எனப்படும் லாகோஷ்ட், காக்செட், ப்ருக்ஞன், ஜான் பரோட்டரா ஆகிய 4 விளையாட்டு வீரர்கள் அமெரிக்காவை வென்று, டேவிஸ் கோப்பையைப் பிரான்சு நாட்டிற்கு உரியதாக ஆக்கினார்கள். பிரான்சு நாடு டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் தொடர்ந்து வென்று, ஆறாண்டுக் காலம் டேவிஸ் கோப்பையைத் தன்னுடையதாக்கிக் கொண்டது.



எந்த அணி எந்த அணியுடன் விளையாடுவது என்பதை முடிவு செய்வதற்கான குலுக்குச் சீட்டை 3-5-73-ல் இராஜாஜி மண்டபத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் எடுக்கிறார்கள்.

1933-ல் பிரிட்டன் மீண்டும் டேவிஸ் கோப்பையைப்பெற்றது. 1936-வரை தொடர்ந்து வெற்றி பெற்று டேவிஸ் கோப்பையைப் பெற்று வந்தது. 1937-ஆம் ஆண்டில் டேவிஸ் கோப்பையை மீண்டும் அமெரிக்கா பெற்றது. இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு டேவிஸ் கோப்பை அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே கைமாறிக் கொண்டிருக்கிறது. உலகப் போர் நடந்த காலங்களில் எல்லாம் டேவிஸ் கோப்பை ஆஸ்திரேலியாவிடமே இருந்துள்ளது. டேவிஸ் கோப்பையின் வரலாற்றில் இது விந்தையான நிகழ்ச்சியாக உள்ளது! அத்துடன் ஒவ்வொரு முறையும் உலகப் போர் துவங்குவதற்கு முன்பு, அமெரிக்காவிடம் இருந்தே டேவிஸ் கோப்பையை ஆஸ்திரேலியா தட்டிப் பறித்துக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு டேவிஸ் கோப்பைப் பந்தயத்தை நடத்தி வரும் அனைத்துலக 'லான் டென்னிஸ்' பேரவைக்கு ஒரு பெரும் பிரச்சினை தோன்றியது. டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் தென்னாப்பிரிக்கா பங்கு கொள்ள முன் வந்ததாலேயே அப் பிரச்சினை தோன்றியது. பெரும்பாலான நாடுகள் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் தென் ஆப்பிரிக்கா கலந்து கொள்வதை ஆதரிக்கவில்லையாதலின், இப்போட்டியில் கலந்து கொள்ள தென் ஆப்பிரிக்கா அனுமதிக்கப்படவில்லை.

தற்பொழுது டேவிஸ்கோப்பை அமெரிக்காவிடம் உள்ளது.

தற்பொழுது, டென்னிசையே தொழிலாகக் கொண்டு பெருந்தொகை ஈட்டுகின்றவர்கள்டென்னிஸ் உலகை ஆக்ரமித்துக் கொண்டு வருவதால், 'டேவிஸ்' கோப்பைப் போட்டிக்குரிய மௌசு (மதிப்பு) குறைந்து வருகிறது. டென்னிஸ் விளையாட்டில் திறமையும், ஆர்வமும் உள்ள இளைஞர்கள் பல போட்டிகளில் வென்று மேலே வந்தவுடன் டென்னிசையே தொழிலாகக் கொண்டவர்களுடன் சேர்ந்து விடுகிறார்கள். இதனால் அவர்கள் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் பங்குபெற முடியாமல் தடை செய்யப் படுகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும்

உள்ள சிறந்த டென்னிஸ் வீரர்களை அனைத்துலகத் தொழிலடைப் படையான டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் கவர்ந்து, இழுப்பதால், டேவிஸ் கோப்பைப் பந்தயங்களில் கலந்து கொள்ள விளையாட்டு மன்றங்களைச் சார்ந்த டென்னிஸ் வீரர்களே கலந்து கொள்கின்றனர். இதனால் தற்பொழுது டேவிஸ் கோப்பைப் போட்டி ரசிகர்களின் ஆதரவை இழந்து வருகிறது.

அனைத்துலக 'லான் டென்னிஸ்' பேரவையில் இருந்து, டென்னிசைத் தொழிலாக கருதி ஆடும் வீரர்கள் பிரிந்து விட்டார்கள். எனவே யார் வேண்டுமானாலும், கலந்து கொள்ளக்கூடிய டேவிஸ் கோப்பைப் போட்டி நடத்த வேண்டுமென்று இன்று வலியுறுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, அனைத்துலக லான் டென்னிஸ் பேரவை, டென்னிசையே தொழிலாகக் கொண்டு விளையாடும் வீரர்களையும் டேவிஸ் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிப்பது என்று முடிவு செய்தது. 1973-ஆம் ஆண்டு எல்லாரும் கலந்து கொள்ளக் கூடிய டேவிஸ் கோப்பைப் பந்தயத்தின் தொடக்க ஆண்டாக அமையும்!

1973, மே திங்கள் 4, 5, 6 நாட்களில் சென்னையில் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிக்கான கிழக்கு மண்டல இறுதிப் போட்டி இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே நடைபெற்றது. இப்போட்டியில் 'இந்தியாவின் நெம்பர் ஒன்று' என்று கூறப்படும் இந்திய டென்னிஸ் கேப்டன் திரு. கிருஷ்ணன் தலைமையில், திரு. ஆனந்த் அமிர்தராஜ், திரு. விஜய் அமிர்தராஜ், திரு. பிரேம்ஜித் லால், திரு. ஜிராதீப் முகர்ஜியா ஆகியோரும், ஆஸ்திரேலிய கேப்டன் திரு. நியேல் பிரேசர் தலைமையில் திரு நியுகோம், ஜியோப் மாஸ்டர், திரு. கூப்பர், திரு. ஜில்டினன் ஆகியோரும் பங்கு கொண்டனர். இவ்விளையாட்டுப் போட்டியை மேதகு தமிழ் நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், மாண்புமிகு இந்திய அரசின் உணவு வேளாண்மை அமைச்சர் திரு. பக்ருதீன் அலி அகமத் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## ஏற்றுமதியாகும் இந்தியப் பொருள்கள்

அமெரிக்காவுக்கு இந்தியக் கைவினைப் பொருள்களின் ஏற்றுமதி கடந்த 10 ஆண்டுகளில் 4½ மடங்கு பெருகியுள்ளது; 1961–62-ல் 19 கோடி பெறுமானமாக இருந்த ஏற்றுமதி 1971–72-ல் 90 கோடியாக உயர்ந்துள்ளது. அயல் நாடுகளில் இந்தியக் கைவினைப் பொருள்களுக்குரிய வரவேற்பு விரைந்து பெருகி வளர்வதை இந்தப் புள்ளி விவரம் காட்டும்; நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கைவினைப் பொருள்களின் பங்கு, 2·8 சதவிகிதம். 1971–72-ல் இது 5·6 சதவிகிதமாக உயர்ந்தது.

இந்தியக் கைவினைப் பொருள்களை மிகக் கூடுதலாக இறக்குமதி செய்யும் பெரிய நாடு அமெரிக்காதான். மொத்த ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 19 சதவிகிதம் (5-ல் ஒரு பங்கு) அமெரிக்காவுக்குப் போகிறது.

மணிக் கற்கள், உலோகப் பொருள்கள், இரத்தினக் கம்பளங்கள், மரப் பொருள்கள், கை அச்சுத் துணிகள், தோல் பொருள்கள், இசைக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், பொம்மைகள், காகிதப் பொம்மைகள், கொம்பினால் ஆன பொருள்கள் ஆகியவை அமெரிக்கச் சந்தையில் விற்பனை ஆகும் இந்திய நாட்டுக் கைவினைப் பொருள்களில் குறிப்பிடத்தகுந்தவை.

எதிர்பாராத விதமாகச் சென்னையில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று விட்டது. ஆனால், இந்திய டென்னிஸ் வீரர்கள் விஜய் அமிர்தராஜும், பிரேம்ஜித் லாலும் கடைசிநாள் போட்டியில் வெகுத் திறமையாக விளையாடிப் பலரது பாராட்டைப் பெற்றார்கள்.

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இதுவரை ஒரு தடவை கூட இந்தியா வெற்றி பெறாதது மிகவும் வருந்தத்தக்கது!

"டென்னிசைப் பொறுத்த வரையில் இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?" என்று இந்திய கேப்டன் திரு. கிருஷ்ணன் அவர்களைக் கேட்டதற்கு அவர் பின் கண்டவாறு குறிப்பிட்டார்.

"நல்ல டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்குத் தேவைப் படுகிறார்கள். தற்பொழுது ஒரே ஒரு டென்னிஸ் விளையாட்டு வீரர் தான் உள்ளார். அவர் விஜய் அமிர்தராஜே! அவருக்கு நல்ல எதிர்காலம் உள்ளது! வருங்காலத்தில் விஜய் தன்னை எப்படி அமைத்துக் கொள்கிறாரோ, அதன் அடிப்படையிலேயே இந்திய டென்னிஸ் விளையாட்டு வாழும் அல்லது தாழும்!".

திரு. கிருஷ்ணன் அவர்களின் கருத்து முற்றிலும் உண்மை என்பதைப் பலர் ஒப்புக் கொள்கின்றனர். எனவே, திரு. விஜய் அமிர்தராஜ் அவர்கள் மனந் தளராமல் மேலும் நன்கு பயிற்சி செய்து கொண்டு, வருங்காலத்திலாவது டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்தியா வெற்றி பெறத் தன் முழுத் திறமையையும் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

'இந்தியாவிற்கு டேவிஸ் கோப்பையை முதன் முதலில் ஒரு தமிழ்நாட்டு டென்னிஸ் வீரனே பெற்றுக் கொடுத்தான்!' என்ற பெரும்புகழைத் திரு. விஜய் அமிர்தராஜ் அவர்கள் பெற வேண்டும் என்று தமிழகம் விரும்புகிறது! அவ்விருப்பத்தைத் திரு. விஜய் அமிர்தராஜ் அவர்கள் நிறைவேற்றித் தமிழனின் புகழை—இந்தியாவின் புகழை—தரணியெங்கும் பரப்பிடுவார் என்று நம்புவோம்!

—ஆர். எம்.






"தமிழ் இலக்கியங்களை முறைப்படுத்தி வகைப்படுத்தித் தர வேண்டிய பொறுப்பு தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கிறது. அதற்கு இதுவே தக்க காலம்; ஏனென்றால் இப்போது அதற்கான விழிப்பு உணர்ச்சியும் ஆற்றலும் நிரம்ப இருக்கின்றன.

"அந்தக் காரியம் நடைபெற்றால்தான் தமிழின் தொன்மையும் தமிழின் இனிமையும் பெருமையும் தமிழர்களால் சரிவர உணரப்படமுடியும்; தமிழ் இனம், தமிழ்ப் பண்பு, தமிழ் அரசு தழைக்க முடியும்."

—என்று மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழாவில் தம் பொன்னான கருத்துக்களை வெளியிட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், "இந்தக் கருத்துக்களுக்கு இணங்க மறைமலையடிகள் நூல்நிலையம் பயன்படவேண்டும்" என்ற தம் விருப்பத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

அறிஞர் பெருமக்களையும், ஆராய்ச்சி மாணவர்களையும் ஒருங்கே கவர்ந்திடும் இந்நூல் நிலையம், சென்னை லிங்கி செட்டி தெருவில் கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் பெயரில் விளங்கும் இந்நூலகத்தினைத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

மறைமலையடிகள் தம் வாழ்நாள் இறுதியில் எழுதிவைத்த விருப்ப ஆவணத்தில் தாம் தம் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்து வைத்த அரிய நூல்கள் அனைத்தும் கழகத்திடம் ஒப்படைக்கப் பெற்று, தம் பெயரால் ஒரு பொது நூலகம் நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். அதற்கிணங்க அடிகளார் தொகுத்த நாலாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களுடன் கழகம் தொகுத்து வைத்திருந்த ஐயாயிரம் நூல்களையும் சேர்த்து இந் நூலகத்தை 1958-ல் நிறுவப் பெற்றது.

நூலகம் அமைந்துள்ள கட்டடம் சமய வரலாற்றுச் சிறப்புடையதாகும். 1832-ஆம் ஆண்டில் அருட்பா வள்ளல் இராமலிங்க அடிகளார் முதன் முதலாக 'உலகெலாம்' என்ற பாடலுக்கு நீண்ட விரிவுரையொன்றை நிகழ்த்திய இடம் இந்நூல் நிலையமேயாகும்.

மறைமலையடிகளார் தொகுத்த 4,500 நூல்கள் தனி அறையில் அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 500 தமிழ் நூல்கள், மற்றவை ஆங்கிலம். இலக்கண, இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், பயணம், பொருளாதாரம், வாழ்க்கை வரலாறு, நாடகம், மருத்துவம், வானியல், சமயம், தத்துவம், நீதி நூல்களுள் சங்க இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவையும் இங்கே உள்ளன.

அடிகளார் பயன்படுத்திய பல்வேறு அகராதிகளும் இத்தொகுப்பில் இருக்கின்றன. தொகை அகராதி, வட, சமஸ்கிருத, முஸ்லீம் அகராதிகளும், விலையுயர்ந்த கலை (ஆர்ட்) சம்பந்தப்பட்ட நூல்களும் நம்மைக் கவர்ந்திழுக்கின்றன.

மறைமலையடிகளார் தாம் தொகுத்து வைத்திருந்த ஒவ்வொரு நூலுக்கும் அழகாக அட்டை போட்டு உள்ளே எண், தேதியிட்டுத் தம் பெயரையும் குறித்துள்ளது, நாம் அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய நல்ல பழக்கமாகும். அவரது கையெழுத்து மணிமணியாக இருப்பதையும், நூல்களில் தம் கருத்துகளைக் குறித்து வைத்திருப்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

தித்திக்கும் தேனமுதாம் திருக்குறள் பற்றித்தான் எத்தனை வகையான நூல்கள் இங்கே இருக்கின்றன! ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு, செர்மன், சீனம், உருசியம், பிஜி, மலேயா, சமஸ்கிருதம், மராத்தி, பர்மியன், சிங்களம், இந்தி, வங்காளி, உருது குசராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், போலந்து ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள குறள் நூல்களும், திருக்குறள் பற்றித் தமிழில்

வெளிவந்துள்ள ஆராய்ச்சிகள், தெளிவுரைகள் முதலான 600 நூல்களும் இங்கு உள்ளன. இது போன்ற தொகுப்புகள் வேறு எந்த நூலகத்திலும் இல்லை எனக் கூறப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கிலப் பெருமகன் ஜி. யு. போப் அவர்கள் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை மொழிபெயர்க்கப் பயன்படுத்திய தமிழ் மூல நூல்களும் இங்கு உள்ளன! இந்த நூல்களின் ஒவ்வொரு பக்க ஓரத்திலும் தம் கைப்பட எழுதிய குறிப்புகளும் உள்ளன. அத்தோடு மொழிபெயர்க்கப் பெற்ற ஆண்டும் (1894) குறிக்கப்பட்டுள்ளது. ஓர் அறையில் பழங்கால நூல்கள், இதழ்கள் முதலியவை வைக்கப் பெற்றிருக்கின்றன. அவையெல்லாம் கிடைத்தற்கரிய நூல்களாகும்.

இந்தப் பத்திரிகைகளையெல்லாம் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

பிழைக்கும் வழி (1913), விவேக சிந்தாமணி (1898), கிராமதூதன் (1942), சக்கரவர்த்தினி-மகளிர் இதழ் (1905), தமிழர்போதினி (1923), உதயதாரகை (1841), யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த, 'மார்னிங் ஸ்டார்' என்ற மாதமிருமுறை போன்ற 400-க்கு மேற்பட்ட இதழ்கள் இங்கே உள்ளன.



நிறைதமிழாய்ந்த மறைமலையடிகள்

1867-லேயே தமிழில் வெளிவந்துள்ள 'இரண வைத்தியம்' (Surgery) என்னும் நூல் 504 பக்கங்களில், படங்களோடு அச்சிடப்பட்டிருக்கிறது. 1872-இல் வெளிவந்துள்ள 'மனுஷ அங்காதி பாதம்' (Human Anatomy) என்னும் நூல் பக்கத்துக்குப் பக்கம் படங்களோடு காட்சியளிக்கிறது. இந்நூலின் பக்கங்கள் 838 : சாமுவேல் கிரீன் என்பவர் எழுதிய 'வைத்தியாகரம்' என்னும் நூல் 1872ல் வெளிவந்துள்ளது. அந்தக் காலத்திலேயே தமிழில் மருத்துவ நூல்கள், பட விளக்கங்களோடு வெளிவந்திருக்கின்றன என்றால் அது விந்தையாகவும், 'தமிழில் முடியும்' என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் இருக்கிறது.

மருத்துவ நூல்கள் தவிர, தமிழில் வெளிவந்துள்ள 'தத்துவ சாஸ்திரம்' (1871), 'சோதிட சாஸ்திரம்' (1848) 'கெமிஸ்தம்' போன்ற நூல்களும், 1779-ல் வெளிவந்த 'தமிழும் இங்கிலீசுமாயிருக்கிற அகராதி, என்னும் நூலும், வீரமா முனிவரின் 'சதுரகராதியும்' பட்டினத்தார், தாயுமானவர் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களும் இந்நூலகத்தை அணி செய்கின்றன.

தமிழைப்பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள கலை, இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம், வரலாறு போன்ற 1,500 நூல்கள் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

இவைதவிர தற்போதைய நாளிதழ்கள், வார, திங்களிதழ்கள் முதலியன வரவழைக்கப்படுகின்றன. பழைய இதழ்கள் நன்கு கட்டடம் (பைண்டிங்) செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

இந்நூலகத்தைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், ஆராய்ச்சித் துறை மாணவர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், பிற ஆராய்ச்சி வல்லுநர்களும், மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்காக ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிஞர்கள் இந்நூலகத்தைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

அமெரிக்காவிலுள்ள நூலகத்தைச் சேர்ந்த திருமதி செசிலியா எப். ஜான்சன், திருமதி காதரின் டீல், பிரிட்டன் நூலகர் திரு. பிராங் எம். கார்ட்னர், பிஜி தீவைச் சேர்ந்த திரு. சாமுவேல் எல். பெர்லிக், பின்லாந்தைச் சார்ந்த டாக்டர் அஸ்கோ பர்போலோ, மலேயா பல்கலைக்கழக நூலகர் திரு. நடராசன் ஆகியோர் இந்நூலகத்தின் அருமை பெருமைகளைப் பற்றித் தம் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.





அமெரிக்காவைச் சார்ந்த திருமதி காதரின் டீல்

தனித் தமிழ்த் தந்தையின் திருப்பெயரைத் தாங்கிய இந் நூலகத்தில் உறுப்பினராகச் சேர முடியுமா? முடியும். ரூ. 10-ஐக் கட்டணமாகச் செலுத்தி யாரும் உறுப்பினராகலாம். நூல்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப் படுகிறது. இதுவரை 500 உறுப்பினர்கள் இந்நூலகத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர். உறுப்பினரல்லாதார் நாள் தோறும் இங்கே பெருமளவில் வந்து படித்துப் பயன்பெறுகின்றனர்.

என்றென்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கும் வண்ணம், இங்கே ஒரு நிலையான கண்காட்சியும் இருக்கிறது. நூலகத்தோடு இணைந்த இக் கண்காட்சி, அறிவுக்கு விருந்தூட்டும் அரிய காட்சியாகத் திகழ்கிறது.

பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்களின் திருவுருவங்களைப் பார்க்க வேண்டுமா? தமிழ் அறிஞர்கள் தாம் கைப்பட எழுதிய கடிதங்களைப் பார்த்து மகிழ வேண்டுமா? அதற்கும் இந்தத் தமிழ்க் கண்காட்சி வகை செய்கிறது. தமிழைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதிய அறிஞர்களான கால்டுவெல், பெஸ்கி, போப், ஈராஸ், லாசரஸ், பெர்சிவல் ஆகியோரின் படங்களுடன் அவர்கள் எழுதிய நூல்களும், 1904-ல் வெளிவந்துள்ள தீப்பெட்டியை விட மிகச் சிறிய ஷேக்ஸ்பியர் நாடக நூலும், தீப்பெட்டி அளவில் அச்சான திருக்குறளும், கண்காட்சியை அழகுபடுத்துகின்றன.

புத்தகக் கட்டடங்கள் (பைண்டிங்ஸ்) தாம் எத்தனை வகையாகக் காட்சியளிக்கின்றன! தங்கம், வெள்ளி, தந்தம், கதர்ப்பட்டு ஆகியவற்றாலான புத்தகக் கட்டடங்கள் கண்ணைக் கவர்கின்றன; கைத்திறமையை எடுத்துக் காட்டுவனவாக இருந்து பரிசுகளும் பெற்றிருக்கின்றன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார், ஞானியாரடிகள், வேங்கடசாமி நாட்டார், சதாசிவப் பண்டாரத்தார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, உமா மகேசுவரம் பிள்ளை, அ. மு. சரவண முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், ஆறுமுக நாவலர் ஆகியோர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாம் கைப்பட எழுதிய கடிதங்களை இங்கே காணலாம். இவை தவிர, மேலைநாட்டு அறிஞர்களான போப், லாசரஸ், ஈராஸ் போன்றவர்களின் கடிதங்களும் நமக்குக் கடந்த காலச் சம்பவத்தைக் காட்டுகின்றன.

நூலகத்தின் இரண்டாம் மாடியில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காக மிக அழகிய முறையில் 'சொற்பொழிவுக் கூடம்' ஒன்று காட்சியளிக்கிறது. 'வள்ளலார் திருவருள் மண்டபம்' எனும் பெயருடைய இம்மண்டபம் கடந்த ஆண்டு மார்ச்சுத் திங்களில் திறந்து வைக்கப்பெற்றது.

வெண்பாப் போட்டி—57

தமிழ்நாடு அரசு அமைத்துள்ள குடிநீர் வடிகால் வாரியத்தின் சாதனைகளைப் பற்றி நேரிசை வெண்பா எழுதுக.

முடிவு நாள் : 16—6—73.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

சென்னை மறைமலையடிகள் நூல்நிலையம்பழமரம்போல்நின்று அறிவுப் பசியைத் தணிக்க உதவுகின்றது. பழமரம் நாடும் பன்னிறப் பறவைகள் போலப் பல துறையைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்த வண்ணமுள்ளனர். அவர்களுக்கெல்லாம் உறுதுணையாய் நின்று தமிழ்ப் பணியாற்றும் இந்நூலகம், மேலும் வளர்ந்திட வாழ்த்துவோம் !

—பி. வி. ஜி.

# காகிதத்தில்

பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழா !

யானைகளின் அணிவகுப்புப் பின்தொடர, முன்னே முக படாம் அணிந்த ஒரு யானையின் மீது அம்பாரியில் அமர்ந்தபடி ஒய்யாரமாக உலா வந்து கொண்டிருக்கிருன் கரிகால் வளவன்.

திருவெண்காட்டுச் சாலையிலிருந்து பூம்புகார் கலைக்கூடம் வரை, கரிகால் வளவனின் உலா தொடர்கிறது.

தெருவின் இரு பக்கத்திலும் நிற்கின்ற ஏராளமான பொது மக்கள் வியப்பில் ஆழ்ந்து நிற்கின்ருர்கள்.



''கரிகால் வளவனுக உலா வரும் மனிதர் யார் ? ''

''அந்தநாள் சோழ மன்னர்களை நினைவுபடுத்தும் அழகான மீசையும், அருள் வடிவும் கொண்டு காணப்படும் இந்த மனிதர் யார் ?''

மக்களின் நெஞ்சங்களில் இந்த விஞக்கள் எழுந்து எதிரொலிக்கின்றன.

இந்த விஞக்களுக்கு உரிய விடை, பலருக்கு வியப்பைத் தரும் என்பது உறுதி.

கரிகால் மன்னராக உலா வந்தவர் வேடமணிந்த மனிதர் அல்ல—ஆனால், மனிதரின் படைப்பு! அதாவது மோகனும்பாள் மோல்டிங் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. லெட்சுமிகாந்தம் என்பவரால் காகிதத்தில் உருவாக்கப்பட்டவர் கரிகாலன். உலா வந்த கரிகாலன் ஆள் அல்ல—காகிதப் பொம்மை!

காண்பவர் கண்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் காகிதத்தால் பொம்மை செய்யும் கோடம்பாக்கம் மோகனும்பாள் மோல்டிங் நிறுவனம் துவக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் தான் ஆகின்றன. என்ருலும் அதன் பணி பாராட்டத்தக்க அளவில் வளர்ந்து வருகின்றது.

இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவின் போது இந்தியத் தலைநகரான டெல்லியில் நடைபெற்ற ஊர்வல ஊர்தியில் மோகனும்பாள் மோல்டிங் நிறுவனத்தார் செய்த எட்டடி உயரமுள்ள பால கங்காதர திலகர், ஆறரை அடி உயரம் கொண்ட அன்னிபெசண்டு உருவங்கள் இடம் பெற்று, மாபெரும் பாராட்டை வாங்கித் தந்திருக்கின்றன. அந்தச் சமயத்தில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து டெல்லிக்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் எல்லாம் அந்தப் பொம்மைகளைப் பார்த்து வியந்த வண்ணமாகவே இருந்தார்களாம். காகிதத்தால் ஆன பொம்மை என்பதை அவர்கள் முதலில் ஒப்புக் கொள்ளவே இல்லையாம். தட்டிப் பார்த்த பின்புதான் ஒப்புக் கொண்டார்களாம். அதன் பின் 'மளமள' வென்று அந்தப் பொம்மைகளைப் பலர் புகைப்படம் எடுத்துக் குவித்துவிட்டார்களாம்.

# ஒரு கலைத்தொழில்

சென்னையில் 1968-ல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தில் உலா வந்த ஊர்திகள் சிலவற்றில் மோகனும்பாள் மோல்டிங் நிறுவன உரிமையாளரின் தொண்டும் சேர்ந்திருக்கிறது.

திருப்பாவை பாடிய ஆண்டாள், அறுபடை வீடு, ஆராய்ச்சி மணி, மறைமலை அடிகளார் இடம்பெற்ற ஊர்திகள் இவரது கை வண்ணத்திலும், இவரது நண்பர்களின் ஒத்துழைப்பினுலும் உருவானவை.

அண்மையில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கதர் இயக்கப் பொன்விழாக் கண்காட்சியில் இவரது கைவண்ணச் சிற்பங்களான காகிதப் பொம்மைகள் இடம் பெற்றிருந்தன என்பது மட்டுமல்ல—காண்போர் அனைவரையும் கவர்ந்திழுத்தன ! காகிதப் பொம்மையா—கல்லாலான பொம்மையா என்பதைப் பார்வையினுல் எளிதில் தெளிவு படுத்திக் கொள்ள முடியாது ! அந்த அளவுக்குக் கற்சிலை போல் காட்சி தந்தன இந்தப் பொம்மைகள்!

தாயும் குழந்தையும் உள்ள சுவர்ச் சிற்பம் ஒன்றினைப் பார்த்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், உற்று நோக்கியதுடன் இந்தப் பொம்மையைத் தட்டிப் பார்த்திருக்கிருர்கள். மேதகு ஆளுநர் கே. கே. ஷா, அவர்கள் தமது கரங்களினுல் ஒரு பொம்மையைப் பிய்த்துப் பார்த்திருக் கிருர்கள். பலவகைக் கலைப்பொருட்களை வெளி நாட்டிலும், வெளி மாநிலத்திலும் பார்த்து ரசித்துள்ள நமது ஆளுநரும், முதல்வரும் இந்தக் காகிதப் பொம்மைகளைக் கண்டு வியப்படைந்திருக்கிருர்கள் என்ருல், இவை வேலைப்பாடமைந்தவை என்பதை எடுத்துச் சொல்லவா வேண்டும் ?

அதே கண்காட்சியில் நடைபெற்ற மற்ருெரு நிகழ்ச்சி :

ஒரு பார்வையாளர் இவரது கடைக்கு வந்தார். கடையில் இடம் பெற்றுள்ள புத்தர், வள்ளுவர், பொம்மைகளைப் பார்த்து வியப்படைந்தார். பிறகு, அவரது கண்கள் இங்கே எதையோ தேடுவது போல் காணப்பட்டன. எல்லாப் பொம்மைகளையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு,

''அண்ணு பொம்மை இருக்கிறதா''—என்று கேட்டார்.

''பக்கத்துக் கடையில் இருக்கிறது''—இது பொம்மை செய்பவர் சொன்ன பதில்.

''உங்களிடம் இருக்கிறதா என்று கேட்டால் பக்கத்தில் இருக்கிறது என்று கூறுகிறீர்களே! உங்கள் வேலைப்பாட்டைப் போல் பக்கத்தில் இல்லையே!'' என்று ஏக்கத்துடன் தெரிவித்தார் அந்தப் பார்வையாளர்.

தரமான பொம்மைகளைத் தயாரிக்கும் நிறுவனம் இது என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் கூறுகிறது.

ஏறக்குறைய 100 வகைப் பொம்மைகளை இந்த நிறுவனம் தயாரித்துள்ளது. விநாயகர், சிவன், பார்வதி, போன்ற பொம்மைகளும் வள்ளுவர், புத்தர் போன்ற தத்துவ மேதைகளின் சிலைகளும், தாயும்—குழந்தையும் போன்ற சமூக இயல் சிலைகளும், சுவரிலே மாட்டக் கூடிய வகையில் 11 வகை நடனப் பெண் பொம்மைகளும் தயாரிப்பில் உள்ளன.

சுவரிலே மாட்டக் கூடிய இந்த நடனப் பெண் பொம்மைகள் 2 அடிக்கு மேல் உயரம் கொண்டவை. 1·25 கிலோ எடை உள்ளவை. இவற்றிற்குத் தமிழ்நாட்டில் நல்ல வரவேற்பு இருக்கின்றது. இந்த வகைப் பொம்மைகள் மாதம் 200 விற்பனை யாகின்றனவாம். தரையில் பீடத்துடன் வைக்கப்படும் பொம்மைகளைவிடச் சுவரில் மாட்டும் பொம்மைகள்தான் அதிகமாக விற்பனை ஆகின்றன.





இந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் சென்னை எஸ்பிளனேட் பகுதியில், குறளகத்தில் இருக்கும் கதர்-கிராமக் கைத்தொழில் அங்காடியிலும், அண்ணா சாலையில் உள்ள தொழில் துறையைச் சார்ந்த விற்பனை நிலையத்திலும் கிடைக்கின்றன.

பம்பாயிலிருந்து வேண்டுகோள் வந்திருப்பதாகவும் தெரிகிறது. உத்தரப் பிரதேசத்திலிருந்தும் தேவையைத் தெரிவித்திருக்கிறார்களாம்.

இங்குச் செய்யப்படும் பொம்மைகளில் மிகக் குறைந்த விலை உள்ளது, பாவை விளக்கு : மிகுந்த விலையுள்ளது நடராசர் சிலை. முன்னதன் விலை ரூ. 9 பின்னதன் விலை ரூ. 300.

தற்போது இவை சென்னை நகரில் மட்டும்தான் விற்பனைக்குக் கிடைக்கின்றன. வெளி மாவட்டங்களுக்கும் அனுப்புவதற்குரிய விரிவான திட்டங்கள் கைக் கொள்ளப்பட்டு வருகின்றன.

கருத்தைக் கவரும் இந்தக் காகிதப் பொம்மைகள் உருவாவதற்குத் தேவையான மூலப் பொருள்கள் எவை என்று கருதுகிறீர்களா ? பம்பாய்ச் சுண்ணாம்புத்தூள், சுக்காங்கல், மைதா, மயில் துத்தம், கழிவுக் காகிதம் ஆகியவைதான்.

சரி, இவற்றைக் கொண்டு பொம்மையை எப்படித் தயாரிக்கலாம் ? காகிதத்தை நன்கு மாவாக்கிக் கொள்ள வேண்டும். சுக்காங்கல்லையும் தூளாக்கிக் கொள்ள வேண்டும். மைதா, பம்பாய்ச் சுண்ணாம்பு ஆகியவற்றுடன் இவற்றைச் சேர்த்து, சிறிது மயில் துத்தத்தையும் கலந்து மாவாக்கப்பட்ட காகிதத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்தக் கலவை பூரி மாவைப்போல் இருக்கும். இதனைப் பூரிக்கட்டையால் உருட்ட வேண்டும். எந்த உருவம் வேண்டுமோ அதற்குரிய அச்சில் (MOULD) சிறிது பிரெஞ்சுச் சுண்ணாம்புத் தூளை ஒருநூல் கனத்துக்குத்தூவி, இந்தக் கலவையை இட்டு, அதனை ஒரு தேய்ந்த தூரிகையினால் நன்கு குத்த வேண்டும். அதன்பிறகு பசையை நன்றாகத் தடவி, 4 காகிதங்களை வைக்க வேண்டும். அச்சிலேயே வைக்கப்பட்டு இரண்டு மணி நேரம் வெய்யிலிலே இருக்கவேண்டும். அதன் பிறகு அச்சை விட்டுத் தனியே எடுத்து, எட்டு மணி நேரம் வெய்யிலில் வைக்க வேண்டும். அதன் பிறகு உருவாகியுள்ள பொம்மையின்-ஒழுங்கற்ற பகுதிகளை நன்றாகத் தேய்க்க வேண்டும். இது திறமையுள்ள ஒருவரால்தான் முடியும் ! கற்றுக்குட்டிகளினால் முடியாது. அதன் பிறகு தேவையான வண்ணத்தைப் பூச வேண்டும். அதன் பின் ஒளி வீசும் அழகுப் பதுமை நமக்குக் கிடைத்து விடும்.

பொம்மைகள் செய்வதற்குத் தேவைப்படுவது (Mould) அல்லது (dye) என்று சொல்லப்படும் அச்சுகள் தான். ஒவ்வொரு பொம்மைக்கும் ஒவ்வொரு வகையான அச்சு தேவைப்படுகின்றது. அது மட்டுமல்ல. ஒரு பொம்மைக்கு இரண்டு அச்சுக்கள் தேவைப்படலாம். தலைப்பகுதிக்கு ஓர் அச்சும், ஏனைய பாகங்களுக்கு ஓர் அச்சும் தேவைப்படும். அநேக அச்சுக்களினால் உருவாகும் சிற்பமும் உண்டு ; இங்கே, மிகக் குறைந்தது 2 அச்சுக்கள் பயன்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட சிற்பம்தான். மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது 125 அச்சுக்கள். இங்கே உருவான நடராசர் சிலை 125 அச்சுக்கள் கொண்டு உருவாக்கப் பெற்றது. இந்தப் பொம்மையின் விலை ரூ. 300 ஆகிறது. இதை உருவாக்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட அச்சின் அடக்கவிலை ரூ. 2,000 ஆகியுள்ளது. அது மட்டுமல்ல இரு திறமையாளர்களின் 15 நாட் பணியையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.


நடனப்பெண்

அதெல்லாம் சரிதான் ! இந்த அச்சைத் தயாரிப்பது எப்படி ? அதுவே ஒரு தனிக் கலை ஆகும்.

எந்த உருவத்திற்கு அச்சு வேண்டுமோ அந்த உருவத்தின் புகைப்படத்தை—அல்லது அந்த மனிதரைப் பார்த்துக் களிமண்ணில் வடிவம் செய்து கொள்ள வேண்டும். அந்தக் களிமண் உருவத்தில் தேங்காய் எண்ணெய் தடவவேண்டும். கையினால் தடவக் கூடாது. தூரிகையினால் தடவவேண்டும். முன் பகுதி, பின்பகுதி என்று இரு பகுதிகள் வரும் வகையில் நடுவில் அணை போலக் களிமண்ணினால் அமைக்க வேண்டும். அதன்பிறகு பிளாஸ்டர் ஆப் பாரிஸ் என்னும் ஒருவகைச் சுண்ணாம்பு போட்டுத் தண்ணீர் ஊற்ற வேண்டும். 5 நிமிடத்தில் ஆவி பறக்கும் ; அதாவது பிளாஸ்டர் ஆப் பாரிஸ் கலவையினால் சூடு ஏறுகிறது என்றும், அச்சு உருவாகிக் கொண்டிருக்கிறது என்றும் பொருள். அவ்வாறு சூடாகாவிட்டால், பயன்படுத்தப்பட்ட 'பிளாஸ்டர் ஆப் பாரிஸ்' மாவு தரமானதல்ல என்றும், கெட்டுப் போனது என்றும் பொருள். இங்கே தோன்றும் சூடு தொட்டுப் பார்க்கக்கூடிய அளவு சூடுதான்.

சுமார் அரைமணி நேரம் கழித்துப் பிரித்துக் களிமண் உருவத்தை எடுத்துவிட வேண்டும். இரு பகுதிகள் கொண்ட அச்சுக் கிடைத்துவிடும். களிமண்ணினால் செய்யப்பட்டிருந்த உருவத்தை அப்படியே அந்த அச்சு உரித்து வைத்திருக்கும்—வார்த்து வைத்திருக்கும்.

இந்த அச்சு, மூன்று நாள் வெய்யிலில் வைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் ஈரம் இருந்து கொண்டே இருக்கும். எளிதில் உலராது. அவ்வாறு ஈரம் அச்சின் உள்ளே இருந்து கொண்டிருந்தால்— அதனால் செய்யப்படும் வடிவங்கள் ஒழுங்குற அமையா ! மூக்கு, கண், வாய் போன்ற நுட்பமான



பகுதிகள் சிதைவுக்குட்பட நேரலாம்.

இந்த அச்சின் துணை கொண்டு ஆயிரக் கணக்கான வடிவங்கள் செய்யலாம்.

தமிழ்நாட்டில்—ஏன் இந்தியாவிலேயே எவரும் செய்யாத வகையில் ஓர் அதிசயத்தை இந்த நிறுவனத்தின் உரிமையாளர் செய்திருக்கிறார். அது என்ன தெரியுமா ?

திரைப்படம் ஒன்றின் தந்திரக் காட்சிக்காக—அந்தக் காட்சியில் நடிக்கும் வில்லன் நடிகர் ஒருவரின் முகத்திற்குரிய அச்சை உருவாக்கித் தந்திருக்கிறார். இதில் என்ன அதிசயம் இருக்கிறது என்று தானே கருதுகிறீர்கள். . . . . . . . . . . . . ? அச்சுத் தயாரித்த விதம் அதிசயத்துக்குரியதான் ! எப்படித் தெரியுமா ? பொதுவாகக் களி மண்ணினால் உருவஞ் செய்து அச்சுத் தயாரிப்பது வழக்கம் என்று குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? இந்த நிகழ்ச்சியில் அப்படி நடைபெறவில்லை. நடிகரின் முகத்திற்கும் அச்சினால் தயாரிக்கப் பெறும் உருவத்துக்கும் வேற்றுமை வந்து விட்டால் திரைக் கலை நுணுக்கம் பாழ்பட்டதாகி விடும். அதனால் அந்தக் காட்சியில் நடித்த நடிகரின் முகத்திலேயே பிளாஸ்டர் ஆப் பாரிஸ் போடப்பட்டது. நடிகரின் கண்களும் வாயும் மூடப் பட்டுவிட்டன. மூக்கின் துவாரங்களிலே இரண்டு அடி நீளமுள்ள இரண்டு பிளாஸ்டிக் குழாய்கள் பொருத்தப்பட்டன. அவற்றின் வழியாக மூச்சு மட்டும் விடலாம். ஆனால் கண்களையோ, வாயையோ திறக்க முடியாது—திறக்கக் கூடாது. குழாய்க்கு மட்டும் இடம் விடப்பட்டு மாவு பூசப்பட்டது. அதன்பின் சிறிது உப்புக் கலந்த தண்ணீர் விடப்பட்டது. உப்புக் கலந்தால் சீக்கிரம் இறுகி, அச்சு உருவாகும்! மேலும் உயிருள்ள உருவத்தால்—பிளாஸ்டர் ஆப் பாரிஸ் கலவையால் ஏற்படும் வெப்பத்தைத் தாங்க முடியாதல்லவா! அதற்காகத்தான் உப்புப் பயன்படுத்தப்படுகிறது. சுமார் 2½ நிமிடங்களில் ஆவி வந்து பறந்தது. உடனே அச்சைக் கழற்றும்படி அந்த நடிகரின் காதில் சொன்னதும், அந்த நடிகர் எழுந்து, தானே கழற்றி விட்டார். அவரைப் போலவே அந்த அச்சு இருந்தது. அவரே வியந்துவிட்டார். அந்த அச்சைக் கொண்டு அவரது முகத்தைப் போலவே செய்து—படத்தில் பயன்படுத்தினார்களாம். ஏறக்குறைய இந்த அச்சுத் தயாரிப்பது ஓர் அறுவைச் சிகிச்சைக்கு இணையானதுதான்.


உலாவந்த கரிகால் வளவன்

இவ்வாறு, அயராத உழைப்பும், வியப்பான சாதனைகளும் புரிந்து, காகிதத்தில் ஒரு கலைத் தொழிலைச் செய்துவரும் மோகனாம்பாள் மோல்டிங் நிறுவன உரிமையாளர் திரு. லெட்சுமி காந்தம், பள்ளிக் கல்வி அதிகம் படித்தவரல்ல; என்றாலும் அவரது தொழிலுக்குத் தேவையான கலைப் பயிற்சியைப் பல கலைஞர்களிடமும், பண்ணுருட்டியில் இருந்த அரசினர் காகிதப் பொம்மைப் பயிற்சி நிலையத்திலும் பெற்றிருக்கிறார்.

ஏறக்குறைய 14 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்திருக்கும் இந்தக் காகிதப் பொம்மைக் கலைஞர் நிறையப் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற அளவுக்குத் தனது தொழில் வளம் பெற வேண்டும் என்று விரும்புகிறார்.

பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக் கூடத் திறப்பு விழாவின் போது—கரிகால் வளவன் சிலையை உருவாக்கித் தந்ததற்காகச் 'சிலம்பு' அமைப்புக்கொண்டமோதிரத்தை முதல்வர் கலைஞர் அவர்கள், இவருக்குப் பரிசு தந்ததைத் தனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி என்று குறிப்பிடும் இந்தக் காகிதப்பொம்மைக் கலைஞர், தான் இந்தியாவிலேயே சிறந்த காகிதப் பொம்மைத் தயாரிப்பாளர் என்ற புகழை அடைய வேண்டும் என்ற இலட்சியத்தை கொண்டிருக்கிறார். காகிதத்தில் ஒரு கலைத் தொழிலைச் செய்து வரும் இவரது இலட்சியம்வெற்றி பெறும் என்று நம்புகிறோம்.

—த.பி.




எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

**சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்**

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337. 50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த சட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.


வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும், கவின் மிகு திருக்கோயில்களும் நாளும் நற்றமிழ் வளர்த்திடும் நன் மடங்களும் நிறைந்து விளங்குவது தமிழ்நாடு!

முடியுடை மூவேந்தர் காலம் தொடங்கி இன்றளவும் முறைமையான ஓர்வரலாறு கிடைத்திடத் தமிழர்க்கு உறுதுணை பயப்பவை தமிழகத் திருக்கோயில்கள்தாம். வரலாற்றுச் சான்றுகளாகவும், வழிபடுவோர் தம் குறைநீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாத்து, இனிவரும் சந்ததியினருக்கு அளிக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்றிடும் வழியில், இந்து சமய அறக் கட்டளைகள் துறை செயல்பட்டு வருகிறது என்பதை நாடறியும்.

திருக்கோயில்கள் தமிழ் நாட்டில் எழுந்த முறைகளையும், அவைகளை எழுப்பிய மன்னர் தம் மன நிலைகளையும், அத்திருக் கோயில்களும் அறநிறுவனங்களும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நின்று பயன் அளித்திட அவர்கள் ஏற்படுத்திய '' நிவந்தங்களையும் '' அவைகளை இன்றளவும் பறை சாற்றிக் கொண்டிருக்கும் கல் வெட்டுச் சான்றுகளையும் விரிவாக உணர்ந்ததன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இத் துறையில் பெரும் கவனம்செலுத்திக் கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு அனைத்துமாக இவ்வாண்டுத் தொடக்கம் வரை இத்துறை 157 திருமடங்களும், 12,038 திருக்கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் ஆக 13,027 அற நிலையங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுள்ளது; இவ்வனைத்து அறநிலையங்களின் மொத்தவருவாய் ரூ.6,75,00,000 என்று மதிப்பிடப்படுகிறது. இதில் திருக்கோயில் நிலங்களைக் கண்டறிந்து இத்துறையோடு இணைக்குமாறு நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் காரணமாக இவ்வாண்டில் 2,162 திருக்கோயில்கள் இத்துறையின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ள எண்ணிக்கையும் அடங்கும்.




1973-ஆம் ஆண்டில் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15,000-க்கு மேலாக உயரும் என்றும், அவைகளின் மொத்த வருமானம் சுமார் ரூ.7,50,00,000 உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வருவாய் வாயில்கள் பெருகியதன் காரணமாக மிகை நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து வானுற எழுந்து நிற்கும் இந்த திருக்கோயில்களில் காலத்தால் பழுதுபட்டும், கலைமாட்சியுறுதோர் கைபட்டும் சிதைவுற்றதுமான பலவற்றைத் திருத்தியமைத்து அவை அழகு கெடாமல் பாதுகாக்கப் படுகின்றன.

குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்துச் சிற்பங்களின் கை வண்ணத்தையெல்லாம் தம் மெய் வண்ணத்தாலே பறைசாற்றி வரும் அரிய சிற்பங்கள், காலத்தால் அழியா வண்ணம் காப்பாற்றப்படுவதோடு, திருமதில்கள் ஓரங்களிலும், கருவறை பெற்ற சுற்றுச் சுவர்களிலும் கணக்கின்றி இருக்கும் கல் வெட்டுகளையும், பல்வேறு இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கல்வெட்டுகளையும், செப்புப் பட்டயங்களையும், பிற சான்றுகளையும், முறைமையாகப் பாதுகாக்கத்தக்க வகையிலும், காப்போரின்றிச் சிறு கிராமங்களில் கிடக்கும் அழகுச் சிற்பங்களையும் பாதுகாப்பதற்கான வகையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுத் தமிழ் மண்ணுக்குரிய சிற்பங்களும், சிலைகளும், அயலார் கரத்தைச் சென்றடையா வண்ணம் காக்கப் படுகின்றன.

பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட செம்பு, ஐம்பொன் சிலைகளும், கற்சிலைகளும் காண்போர் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அழகுற அமைக்கப்பட்டுப் பாதுக்காக்கப் படுகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட கலைக்கூடங்கள் கீழ்க்

காணும் இரண்டு இடங்களில் செயல்பட்டு வருகின்றன:—

(1) அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

(2) அருள்மிகு ஜம்பு கேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

தஞ்சை மாவட்டம் திருவாரூரில் உள்ள அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலில் அந்த மாவட்டத்தில் அண்மையில் கிடைக்கப்பெற்ற பல்வேறு சிலைகள் திருக்கோயிலுக்கு வருவோரின் பார்வைக்காக வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் மற்ற திருக்கோயில்களில் காணப்படும் கவின்மிகு சிலைகளையும், சிற்பங்களையும் பாதுகாத்திடும் வகையில் அவைகளின் அழகு குன்றுமலும், காண்போருக்குத் தடையில்லா வகையிலும் இரும்புக் கம்பிகளால் காப்புச் செய்யப்பட்டுள்ளன. விலைமதிக்கொணாத் தமிழ்நாட்டுச் சிற்பங்களையும் சிலைகளையும் காப்புச் செய்வதில் இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

1973-ஆம் ஆண்டில் இன்னும் அதிகப்படியான திருக்கோயில்களைத் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. முக்கியமாக, கிராமப் பகுதிகளில் உள்ள சுமார் 1,500 திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதே போல 1967–68-ஆம் ஆண்டு தொடங்கி திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசின் உதவித் தொகை ரூ. 3 இலட்சம் என்று இருந்த நிலையை மாற்றி 1968–69 முதல் ரூ. 4 இலட்சமாகவும், 1972–73-ல் ரூ. 5 இலட்சமாகவும் தற்போது ரூ. 6 இலட்சமாகவும் உயர்த்தி இருப்பது எண்ணிப்பார்க்கத் தக்கது.

1967-ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் கட்டப்பட்டுள்ள மொத்தத் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 14 ஆகும். ஆனால், 1967-க்குப் பிறகு 1972 டிசம்பர்த் திங்கள் வரை தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் துவக்கப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 169 ஆகும். இவற்றில் 41 திருமண மண்டபங்கள் முழுமையாக முடிவுற்றுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றவற்றை முடிக்கும் வகையில் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமணம் நடத்த வசதியான இடமின்றித் தவிக்கின்றவர்களின் துயரம் இதன் மூலம் பெருமளவில் களையப் பட்டு வருகிறது.

திருக்கோயில்கள் மிகை (உபரி) நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் சமுதாயப் பணிகள்: தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் தோற்றுவாயை உணர்ந்தால் அவைகள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல் சமுதாயப் பணிகளை நிறைவேற்றிடும் அமைப்புகளாகவும் சிற்பம், கலை, கல்வி, மருத்துவம், ஓவியம், நாட்டியம் போன்ற கலைகளை வளர்க்கும் அறநிலையங்களாகவும், காப்பகங்களாகவும், அமைந்தன என்பது தெளிவாகும். எனவே, இவற்றின் அடிப்படையிலேயே பின் வரும் சமுதாயப் பணிகளை இத் திருக்கோயில்களின் மூலம் இத் துறையினர் நிறைவேற்றி வருகின்றனர்.





கேடில் விழுச் செல்வமாம் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் தமிழ் நாட்டில் பெருவருவாய் உள்ள திருக்கோயில்களின் சார்பில் தற்போது 6 கல்லூரிகள் தமிழகத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் அமைந்து செயல் பட்டு வருகின்றன.

(1) அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி, பழனி.

(2) அருள்மிகு பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி.

(3) அருள்மிகு பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி.

(4) அருள்மிகு தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை(கன்னியாகுமரி மாவட்டம் தேவஸ்தானம் வாரியத்தினரால் நடத்தப்படுவது).

(5) அருள்மிகு பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம்.

(6) அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் கல்லூரி, இராமேஸ்வரம்.

அண்மையில் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திருநெல்வேலி அருள்மிகு காந்திமதி அம்பாள் திருக்கோயில் சார்பில் மகளிர் கல்லூரி ஒன்றும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் சார்பில் ஒரு மகளிர் கல்லூரியும் தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்குத், தொடங்கப்பட்டிருக்கும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலைக்கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன்கொடை வழங்கவும் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.



இவைகளன்றி மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டபாணிசுவாமி திருக்கோயில் சார்பில்திருபழனியாண்டவர்இந்தியப் பண்பாட்டுக்கல்லூரியும், தஞ்சை மாவட்டம் திருவெண்காட்டினை அடுத்த மேலையூரில் பூம்புகார் பேரவைக் கல்லூரியும் செயல் பட்டு வருகின்றன.

இந்திய மெய்விளக்கத் துறை மற்றும் பண்பாடுகளில் பட்டப் படிப்பிற்கும் மேலான படிப்பிற்குக் கல்லூரி ஒன்று 1972-ஆம் ஆண்டில் பூம்புகாரில் தொடங்கப்பட்டது என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

உயர்நிலை ஆரம்பப் பள்ளிகள்: தற்போது தமிழ்நாட்டில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து 13 ஆண்கள் மற்றும் மகளிர்க்கான உயர்நிலைப் பள்ளிகள் நடத்தப் படுகின்றன. இவற்றில் மூன்று பள்ளிகள் 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. மேலும் 1973–74-ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் திருக்கடையூர் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும், முகவை மாவட்டம் பள்ளத்தூரில் அறக் கட்டளையொன்றின் சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும்தொடங்கப்பட இருக்கின்றன.

நாதசுரப் பள்ளிகள்: மங்கல ஒலிகூட்டி மக்களுக்கு இன்பம் சேர்க்கும் நாதசுரக் கலையைப் பேணி வளர்க்கும் வகையில்திருக்கோயில்களின் நிதியிலிருந்து கீழ்க் காணும் இரு இடங்களில் நாதசுரப் பள்ளிகள் உருவாக்கப் பட்டுத் தக்க வித்பன்னர்களைக் கொண்டு மாணவர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நாதசுரப் பள்ளி.

2. தஞ்சை மாவட்டம் வலிவலம் அருள்மிகு இதயக்கமல நாதசுவாமி திருக்கோயில் நாதசுரப்பள்ளி.

இவற்றில் பழனியில் 20 மாணவர்கள் நாதசுர இசையிலும், 10 மாணவர்கள் தவில் இசையிலும், தஞ்சை வலிவலத்தில் 15 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஊமையர் மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள்:—இயற்கையின் படைப்பில் ஊமைகளாய்ச் செவிடர்களாய்ப் பிறந்துவிட்டோர்க்குப் பயிற்சி அளித்துப் பேசவும், எழுதவும், இரு பயிற்சிப் பள்ளிகள் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத




சுவாமி திருக்கோயில் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் ஆகியவற்றின் சார்பில் தற்போது செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன.

அன்பு இல்லங்கள்;— பேணுவோர் இன்மையால் பெருந் தொல்லைக்குட்பட்டு இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படும் அனாதைகளைக் காப்பதற்கு அன்பு இல்லங்கள் கீழ்க்காணும் 10 திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன.

1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி.

2. அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோயில், சிக்கல். நாகப்பட்டினம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

3. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீசுவரன் கோயில், சீர்காழி வட்டம், தஞ்சை மாவட்டம்.

4. அருள்மிகு சீனுவாசப் பெருமாள் திருக்கோயில், நாச்சியார் கோயில், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

5. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.



6. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

7. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

8. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

9. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில் அய்யன்பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

10. அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழில், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

சிறுர் காப்பகங்கள்:—பள்ளிப் பருவத்தை அடைவதற்கு முன்பே தாய் தந்தையரை இழந்து வாடும் சிறுர்களுக்கும், காலையிலேயே தொழிலுக்குச் செல்லும் தாய் தந்தையரால் கவனிக்க முடியாத சிறுர்களுக்கும் கீழ்க்காணும் 5 இடங்களில் சிறுர் காப்பகங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. இங்கெல்லாம் சிறுர்களுக்கு இந்து சமய நெறிமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

1. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குமாரவயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், காரமடை, அவிநாசி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

5. அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், பழனி.

முதியோர் இல்லம்: சென்ற ஆண்டில் திருக்கோயில்களின் மிகை நிதியிலிருந்து முதியோருக்காக இல்லம் நடத்தும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதனடிப்படையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் 30 முதியோர்களைச் சேர்த்துக்கொள்ள வழி வகை மேற்கொள்ளப்பட்டு, இவ்வில்லம் 15—2—1973-லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போது மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிர

மணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களின் சார்பில் 20 பேர்களைப் பேணிக் காக்கும் இரண்டு இல்லங்கள் 15—3—1973 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

**மருத்துவ மனைகள் :** வழி பாட்டுக்காக வரும் பயணிகள் உட்படப் பொது மக்களின் நல னுக்காக மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் தொடங்க வேண்டியதன் அவசியம் கருதி 23 சித்த வைத்திய மருத்துவ மனைகளும், ஆங்கில முறை மருத்துவ மனை ஒன்றும் திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படுகின்றன. சித்த வைத்திய மருத்துவ மனைகளின் அவசியம் காரணமாக இன்னும் அதிகமான அளவில் இவைகளைத் துவக்க வேண்டுமென்று திருக் கோயில் அறங்காவலர்களுக்கும், திருவாக அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள் ளன.

**நூலகங்கள்**—பொது அறி வினை வளர்ப்பதோடன்றி இந்து சமய நெறியினை நன்குணர்ந்து பயன்பெறும் வகையில் 204 திருக்கோயில்களில் நூலகங்கள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் நூலகங்களைத் தொடங்கத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள் ளன.

**வழிபடுவோருக்கான வசதிகள்:** அருள் தலங்கள் என்று போற்றப்பட்டு நாடோறும் பெருகிவரும் வழிபாட்டுப் பய ணிகள் கூடுகின்ற திருக்கோயில் களின் சார்பில் வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடு வோர்களின் நலனுக்காக ஓய்வு விடுதிகளையும், பயணிகள் விடுதி களையும் கட்டும் திட்டம் ஒன்று இருந்து வருகிறது. இத் திட் டத்தின் கீழ்ப் பல்வேறு திருக் கோயில்களின் சார்பில் வேலை கள் மேற்கொள்வதற்கான வகை யில் மதிப்பீடுகள் அனுமதிக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டுத் திருக்கோயில் களின் மிகை நிதியிலிருந்து சென்ற ஆண்டில் இரு பெரும் சமுதாய நற்பணிகளுக்காக ஒரு பெருந்தொகை செலவிடப்பட் டது. அவற்றில் ஒன்று பிச்சைக் காரர்கள் மறுவாழ்வு நிதிக்காகத் திருக்கோயில்கள் திருவாகிகள் தாங்களே முன்வந்து ரூ. 3,49,616,00 அளித்துத் தம் பங்கினையாற்றியுள்ளனர்.

விழியற்றோருக்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ்ப் பல வேறு இடங்களில் திருக்கோயில் களின் சார்பில் ரூ. 2,27,551.00 கொடுக்கப்பட்டதுடன் திருக் கோயில்களுக்குச் சொந்தமான இடத்திலும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில் களில் மிகைநிதி மிகுந்த திருக் கோயில்களின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கப்படும் திட்டம் சென்ற ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில், திருக் கோயில்களின் வருவாய்க்குத் தக்க வகையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாமல் இலவசத் திருமணங்களைச் செய் விக்கவும், ஒரு திருமணத்திற்கு ரூ. 150-க்கு மிகாமல் செல வழிக்கவும் திட்டமிடப்பட் டுள்ளது. மணமக்களுக்கு இத் தொகையிலிருந்து, வேட்டி, புடைவை, தாலி முதலியவை இலவசமாக அளிப்பதுடன் திரு மணமும் திருக்கோயிலிலேயே நடத்தி வைக்கப்படுகிறது. ஏழை எளியோருக்கு உதவும் இந்தத் திட்டம் பொது மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்று வருகிறது.


## சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியை யும், விநியோகத்தையும் பாதித்துள்ளது. இதனுல் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும், முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிருர்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெருத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனுல் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன், கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்.

உங்கள் நலனை முன்னிட்டு, எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிட மிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக்கொள்கிருேம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம், தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்டு சர்டிபிகேட்டும் விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு, விலை இவை குறித்துள்ள காஷ் மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.

உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியா விட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிட்டோர் :

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,**

175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.

SANKAR CEMENT

சங்கர் சிமெண்ட்




# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வினு.**— 'கனகாம்பரம்' மலர்ச் செடியை எப்பொழுது பயிரிட லாம்? பயிரிடும்முறை, பலன்தரும் வயது, ஒரு ஏக்கர் நடவு செய் தால் பலன் கிட்டும் வரை ஆகும் செலவு, அதனுல் கிட்டும் இலாபம் எவ்வளவு என்பவைகளைத் தெளிவு படுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன். கனகாம்பரம் விதையை எங்குப் பெறலாம் என்பதையும் தெளிவு படுத்திடுங் கள்.

—முல்லை வேந்தன்,
அண்ணு இல்லம்,
பயர்நத்தம்,
நத்தம் (அஞ்சல்),
தருமபுரி மாவட்டம்.

**விடை :** ' ஆரஞ்சு நிறக் கனகாம் பரத்தை ஆடிப் பட்டத்தில் நடுவதே சிறந்தது. ஆனுல் புரட்டாசி, ஐப்பசி மாதங்களி லும் நடவு செய்யலாம்.

மஞ்சள் அல்லது சிவப்பு நிற முள்ள ' டில்லி ' கனகாம்பரத் தைச் சூன் முதல் டிசம்பர் வரை நடவு செய்யலாம்.

கனகாம்பரம் பயிரிட நல்ல வடிகால் வசதியுடைய செம்மண் பூமி அல்லது மணல் கலந்த செம்மண் பூமி மிகவும் ஏற்றது. களிமண் பூமிக்குக் கனகாம்பரம் ஏற்றதல்ல!

' ஆரஞ்சு ' நிறக் கனகாம் பரம், விதைகள் மூலம் பயிரிடப் படுகின்றன. ஒருஏக்கர் 'ஆரஞ்சு நிறக் கனகாம்பரம் பயிரிட 2 கிலோ விதையை 1½ சென்ட் நிலத்தில், உயரமான பாத்திகள் அமைத்து விதைக்க வேண்டும். நாற்றுகளை 60 நாட்களில் பறித்து நடவு செய்யவேண்டும்.

ஆரஞ்சு நிறக் கனகாம்பரம் பயிரிட ஏக்கருக்கு 50 வண்டி தொழு எரு இட்டு, நிலத்தை 4 அல்லது 5 தடவை நன்கு உழுது மண்ணுடன் நன்கு கலக்கச் செய்து, 2 அடிக்கு ஒரு பார் வீதம் பிடிக்க வேண்டும். நீர் பாய்ச்சிய பிறகு 1 அடிக்கு ஒரு நாற்று வீதம் நடவேண்டும். ஒரு ஏக்கருக்கு 22,000 நாற்றுகள் தேவைப்படும்.

' டில்லி 'க் கனகாம்பரத்தைக் குச்சிப் பதியங்கள் மூலமா கவே பயிரிட வேண்டும். வரிசைக்கு வரிசையும், செடிக்குச் செடியும் 3 அடி இடைவெளிவிட்டு, குழிகளில் டில்லிக் கனகாம்பரத்தின் பதியத்தை நடவேண்டுமாத லின், இதற்குத் தகுந்தவாறு குழிகள் தோண்ட வேண்டும். குழிகள் 1½ அடி நீளமும், அகலமும், ஆழமும் உள்ளவை களாக இருக்க வேண்டும். தோண்டிய 10 குழிகள் நாட்களுக்குப் பிறகு, ஒவ் வொரு குழியிலும் 10 கிலோ தொழு எருவையும், மேல் மண்ணையும் கலந்து நிரப்பித் தண்ணீர் விடவேண்டும். நிரம் பிய குழிகளில் தண்ணீர் பாய்ச்சுவதால் சற்றுப் பள்ளம் ஏற்படும். மேலும் மண்ணைப் போட்டுக் குழிகளை நன்கு நிரப்ப வேண்டும். 3 அல்லது 4 நாட்களுக்குப் பிறகு குழிக ளில் பதியங்களை நட்டுத் தண்ணீர் விட வேண்டும்.

நட்ட மூன்று நாட்கள் கழித்துத் தவருமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இதனுல் வேர்கள் வளரும். பிறகு வாரா வாரம் ஒருமுறை நீர்பாய்ச்சி ஞல் போதுமானது. பூப்பூக்கும் காலங்களில் 5 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல் அவசியம். தேவைப்படும் பொழுது களை எடுக்க வேண்டும்

கனகாம்பரம் நடவு செய்த 3 மாதங்களுக்குப் பிறகு, ஏக்கருக்குப் பின்கண்ட அளவு உரமிட வேண்டும்.

அமோனியம் சல்பேட்— 125 கிலோ.

சூப்பர் பாஸ்பேட்—120 கிலோ.

மியூரியேட் ஆப் பொட் டாஷ்—75 கிலோ.

இவ்வுரங்களைக் கனகாம்பரச் செடிகளைச் சுற்றிலும் போட்டு, நிலத்தைக் கொத்திவிட்டு, செடிகளைச் சுற்றி மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 6 மாதங் களுக்கு ஒருமுறை மேற்கூறிய அளவில் உரமிட்டு வரவேண் டும்.

வேர் அழுகல் நோய் கனகாம்பரத்தைத் தாக்கும் இந்நோய் தாக்கினுல், கன காம்பர செடிகளைச் சுற்றி லும் செரசான் மருந்து கலந்த நீரை (1 கிராம் நனையும் செரசான் மருந்துக்கு 1 லிட்டர் தண்ணீர் வீதம் எடுத்துக் கொண்டு நன்கு கலக்கி) ஊற்றி மண்ணை நனைக்க வேண்டும். இலை களைத் துளைக்கும் புழுக்களும், சாம்பல் நிற வண்டுகளும் தாக்கினுல் 100 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 3 மாதங் களுக்குப் பிறகு கனகாம்பரம் பூக்க ஆரம்பிக்கும். பூக்களை ஒருநாள் விட்டு ஒருநாள் அதி காலையில் பறிக்க வேண்டும். காய்ந்த பூங்கொத்துகளை அவ் வப் பொழுது அகற்றிவிட வேண்டும்.

' ஆரஞ்சு 'க் கனகாம்பரச் செடிகள் 2 ஆண்டுகள் வரை தொடர்ந்து நல்ல மகசூல் கொடுக்கும். அதன்பிறகு மக சூல் குறைவதால், செடிகளை அகற்றிவிட வேண்டும்.

' டில்லி 'க் கனகாம்பரம் பல ஆண்டுகள் வரைத் தொடர்ந்து பூத்துப் பலனளித்துக் கொண்டி ருக்கும்.

' ஆரஞ்சு'க் கனகாம்பரம் பயிரிட ஒரு ஏக்கருக்கு, 2 ஆண்டுகளுக்கு ருபாய் 3,000 செலவாகும். ஒரு ஏக்கரிலிருந்து 2 ஆண்டுக் காலத் தில் 4,000 கிலோ பூக்கள் கிடைக்கும். அவைகளை விற்ப தனுல் 9,000 முதல் 12,000 ருபாய் வரை வருவாய்கிடைக்கக் கூடும். எனவே, ' ஆரஞ்சு 'க் கனகாம்பரம் பயிரிடுவதால் 2 ஆண்டுக் காலத்தில் ஒரு ஏக்கரிலிருந்து 6,000 முதல் 9,000 ருபாய் வரை நிகர இலாபம் பெறலாம்.

டி.சி.4 கனகாம்பரப் பயிரிட முதலாண்டில் ஏக்கருக்கு ரூபாய் 3,000 செலவாகும். பிறகு ஆண்டிற்கு ரூபாய் 2,000 செலவாகும். இந்த ரகம் ஏக்கருக்கு ஆண்டு தோறும் 2,500 கிலோ பூக்கள் கொடுக்க வல்லது. டில்லிக் கனகாம்பரப் பூக்கள் அதிக விலைக்கு விற்பனையாவதால், ஆண்டு தோறும் ஒரு ஏக்கர் டில்லிக் கனகாம்பரத்திலிருந்து 7,000 முதல் 8,000 ரூபாய் வரை நிச்சயமாக நிகர இலாபம் பெறமுடியும்.

ஆரஞ்சுக் கனகாம்பரத்தின் விதைகள் அல்லது டில்லிக் கனகாம்பரத்தின் குச்சிப்பதியங்களைக் கோயம்புத்தூர், துடியலூர், மதுரை, பூந்தமல்லி, தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள நம்பிக்கையான கனகாம்பரச் சாகுபடியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதே சிறந்தது.

* * *

**வினா**—நான் ஒரு ஏக்கர் நிலத்தில் வாழை பயிரிட்டுள்ளேன். வாழை பயிர் செய்து, ஒரு மாதம் ஆகிறது. சாதி—மோரிஸ் வாழை. நிலத்தின் தன்மை—கரிசலுடன் கூடிய வண்டல் மண். தாங்கள் இதற்கு எந்தெந்த முறைகளில் உரம்போட வேண்டும் என்பதையும், எந்தச் சமயத்தில் என்னென்ன உரம் வைக்க வேண்டும் என்பதையும், தண்ணீர் பாய்ச்ச வேண்டிய முறையையும் தெரிவிக்க வேண்டுகிறேன். இறைவை மூலம்தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதனால் மேற்படி விவரங்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன். கடன் வழங்கப்படுமா என்பதையும் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

—த. பாண்டியன்,
திருச்சிற்றம்பலம்,
சுந்தரபாண்டியபுரம்,
தென்காசி.

**விடை**—தாங்கள் பயிர் செய்துள்ள 'மோரிஸ்' வாழைக்குக் கன்று நட்ட 3-வது மாதத்தில் ஒருமுறையும், 5-வது மாதத்தில் மறுமுறையுமாக இரண்டு முறை உரமிட வேண்டும். வாழைக்கன்று நட்டு 5 மாதம் முடிந்த பிறகு உரமிடுவது நிறைந்த பலன் தராது.

கன்று நட்ட 3-வது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் கீழ்க்கண்ட அளவு உரமிட வேண்டும்.

தொழுஎரு—12 கிலோ.
அமோனியம் சல்பேட்—300 கிராம்.

சூப்பர் பாஸ்பேட்—250 கிராம்.

மியூரியேட் ஆப் பொட்டாஷ்—310 கிராம்.

கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

மேற்கூறிய இரசாயன உரங்கள் கிடைக்காவிட்டால், 8-ஆம் எண் கலப்பு உரத்தில் (6:6:18), ஒவ்வொரு வாழைக்கன்றுக்கும் 415 கிராம் வீதம் (ஏக்கருக்கு 1,440 கன்றுகள் நட்டிருந்தால்) வைக்க வேண்டும். இந்த அளவில் உரமிட ஏக்கருக்கு 600 கிலோ கலப்பு உரம் (6:6:18) தேவைப்படும்.

கன்று நட்ட 5-வது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் கீழ்க்கண்ட அளவு உரமிட வேண்டும்;—

தொழு எரு—12 கிலோ.
அமோனியம் சல்பேட்—150 கிராம்.
மியூரியேட் ஆப்பொட்டாஷ் 310 கிராம்.
கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

மேற்கூறப்பட்ட தனி இரசாயன உரங்கள் கிடைக்கா.

மேற்கூறப்பட்ட தனி இரசாயன உரங்கள் கிடைக்காவிட்டால், 9-ஆம் எண் கலப்பு உரத்தில் (10:0:30), ஒவ்வொரு வாழைக்கன்றுக்கும் 520 கிராம் வீதம் வைக்க வேண்டும். இந்த அளவில் உரமிட ஏக்கருக்கு 750 கிலோ கலப்பு உரம் (10:0:30) தேவைப்படும்.

உரமிடுவதற்கு வாழைக் கன்றுகளைச் சுற்றிலும் 2 முதல் 3 அடி சுற்றளவிற்கு, 4 அங்குல ஆழமுள்ள பள்ளம் தோண்டி அதில் உரங்களை இட்டு, மண்ணால் மூடித் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். உரமிட்டவுடன் கண்டிப்பாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தாங்கள் மோரிஸ் வாழைக்கு 4 நாட்களுக்கு ஒருமுறையோ அல்லது வாரம் ஒருமுறையோ—மண்ணில் உள்ள ஈரத்திற்குத் தகுந்தவாறு—தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும். மோரிஸ் வாழை 11 முதல் 12 மாதப் பயிராகையால், இந்த ரகத்திற்கு 50 முதல் 90 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மழையின் அளவுக்கும் மண்ணின் தரத்திற்கும் ஏற்ப தண்ணீர் கட்ட வேண்டிய முறைகள் குறையும். மழைக் காலங்களில் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை. மோரிஸ் வாழை பயிரிட்டுள்ள நிலத்தில் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது! தண்ணீர் தேங்கி நிற்குமானால் வாழைக்குத் தீங்கு ஏற்பட்டு மகசூல் குறையும்! வடிகால் வசதிகளை ஏற்படுத்தி, தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

மோரிஸ் வாழை சாகுபடி செய்யும் உழவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏக்கருக்கு ரூபாய் 1,000 வரை கடன் கொடுத்து உதவுகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகளும் கடன் கொடுத்து உதவுகின்றன. கடன் உதவி பெற உங்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் அவர்களையும், துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையும் கலந்தாலோசியுங்கள்.

## கோ—1 பப்பாளி

கோ—1 பப்பாளிப் பழங்கள், பூப்பூத்த 130 முதல் 132 நாட்களில் அறுவடைக்கு வரும். அறுவடை செய்த பிறகு, 4 நாட்கள் வரை பப்பாளிப் பழங்களை வீட்டின் வெப்ப நிலையிலேயே கெடாமல் வைத்திருக்கலாம்.

* * *

**வினா**—ஐ.ஆர். 24 நெல் ரகத்தின் மொத்த வயதென்ன? அதற்கு இடவேண்டிய, அடியுர, மேல்உர அளவுகளைக் கூறவும். இந்த ரகத்திற்கு நோய்களைத் தாங்கும் சக்தி உண்டா? இது சன்ன ரகமா? மோட்டா ரகமா? இந்த ரகம் எந்தெந்த இனங்களைச் சேர்த்துக் கண்டு பிடிக்கப்பட்டது?

—கே. ஆர். இலக்குமிநாராயணன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
கடையம் (அஞ்சல்),
நெல்லை மாவட்டம்.



**விடை**—ஐ. ஆர். 24 ரக நெல்லின் மொத்த வயது 120 நாட்கள். இந்த ரகத்திற்கு ஐ.ஆர். 8 நெல் ரகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் அளவிலேயே அடியுரமும், மேலுரமும் இடலாம். அதாவது 45 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாகவும், 30 கிலோ தழைச் சத்தை மேலுரமாகவும் இடலாம். இந்த ரகம் கொலை நோய், இலைக்கருகல் நோய் ஆகியவைகளைச் சுமாரான அளவிற்குத் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. பச்சைத் தத்துப் பூச்சிகளின் தாக்குதலை ஐ.ஆர். 24 நன்கு தாங்கிக் கொள்ளும்! குருத்துப் பூச்சியின் தாக்குதலையும் ஐ.ஆர். 24 ஓரளவிற்குத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது!

இதன் அரிசி நீண்டதாகவும், சன்னமாகவும், படிகம் போன்றும் இருக்கும். 'அமைலோஸ்' என்னும் ஒருவகை மாவுப் பொருள் இந்த ரகத்தில் குறைவாக உள்ளது. இதனால் ஐ.ஆர். 24 அரிசியின் சோறு சிறந்த தரம் உள்ளதாகக் கருதப்படுகிறது. ஐ.ஆர். 8. அரிசியின் சோறு பிசுபிசுப்பாகவும், மொத்தமாகவும், பழைய சோற்றுக்கு ஏற்றதல்லாததாகவும் உள்ளது. ஆனால், ஐ.ஆர். 24 அரிசியின் சோறு பிசுபிசுப்பின்றியும், சன்னமானதாகவும், நீண்ட நேரம் கெடாமல் இருந்து பழைய சோறாக வைத்துக் கொள்வதற்கு ஏற்றதாகவும், இருக்கிறது. எனவே இந்த ரகம் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பெரும்புகழ் பெற்றுள்ளதுடன், அதிக விலைக்கும், விற்கப்படுகிறது. நம் நாட்டிற்கு இந்த ரகம் ஏற்றதாக இருக்கக்கூடும். இந்த ரகம் பற்றிய சோதனைகள் இன்னும் நம்நாட்டில் முற்றுப் பெறவில்லையாதலின், ஐ.ஆர். 24 நெல் ரகம் இன்னும் நம் நாட்டில் பெருமளவில் உழவர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஐ.ஆர். 8. என்ற ரகத்தையும், ஐ.ஆர். 127-2-2 என்ற சோதனை ரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதே ஐ.ஆர். 24. நெல் ரகம். (ஐ.ஆர். 127-2-2- என்ற ரகம் 'சென்சுரி பாட்னா 231 எஸ்.எல்.ஓ. 17' என்ற ரகத்தையும், 'சிகாடிஸ்' என்ற ரகத்தையும் ஒட்டுச் சேர்த்தால் கிடைத்ததாகும்).

ஐ.ஆர். 24. நெல் ரகம் பரிசோதனைகளில் எக்டேருக்கு 7·5 மெட்ரிக் டன்வரை மகசூல் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. தமிழ்நாட்டில் இந்த ரகம் இன்னும் பரிசோதனை நிலையிலேயே உள்ளது.

* * *

**வினா**—ஒரு ஏக்கர் கே.1 மிளகாய் நட எவ்வளவு உரம் இடவேண்டும்?

வி. ராமசாமி,
அத்தியூர்,
திருச்சி மாவட்டம்.

**விடை**—ஒரு ஏக்கர் கே.1 மிளகாய் நடவு செய்ய 150 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும், 40 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷையும் அடியுரமாக இடவேண்டும். மேலுரமாக மிளகாய்க் கன்றுகள் நட்ட 30-வது, 60-வது, 90-வது நாட்களில் ஒவ்வொரு முறையும் 80 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 35 கிலோ யூரியாவை இடவேண்டும்.

—ஆர். எம்.

## முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் பரிசுகள்!

முதல்வர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்த நாளான 3-6-1971 அன்று கொண்டுவரப் பட்டது பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம். அத்திட்டத்தின் கீழ் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்.

| | |
|---|---|
| திறக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் ... | 6 |
| திறக்கப்பட இருக்கும் மறுவாழ்வு இல்லம் ... | 1 |
| கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ள மறுவாழ்வு இல்லங்கள் ... ... | 3 |
| தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செலவு | 96 இலட்ச ரூபாய் |
| பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகச் சேர்ந்துள்ள நிதி ... ... | 1·6 கோடி ரூபாய் |

நாற்பத்தொன்பதாவது பிறந்த நாளான 3-6-1972 அன்று உருவாகிய திட்டம் இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டம். அத்திட்டத்தின் கீழ் இதுவரை (26-5-73) ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.

| | | |
|---|---|---|
| 1 | நடத்தப்பெற்ற இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் ... ... | 89 |
| 2 | புற நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றவர்கள் ... ... | 2,87,666 |
| 3 | கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் ... | 43,260 |
| 4 | இலவசமாக மூக்குக் கண்ணாடி பெற்றவர்கள் ... ... | 43,260 |
| 5 | சிறு அறுவைச் சிகிச்சை பெற்றவர்கள் ... | 761 |
| 6 | இலவசக் கண் சிகிச்சை முகாம்களுக்கு செலவிடப்பட்டுள்ள முன்பணம் ... ... | ரூ. 28,82,916 |
| 7 | கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு 11-5-1973 வரை சேர்ந்துள்ள நிதி. | ரூ. 46,91,497·51 |

ஐம்பதாவது பிறந்த நாளான 3-6-1973 அன்று முதல்வர் அவர்கள், மனிதனை மனிதன் இழுத்துப் பிழைக்கும் இழிநிலை இருக்கக் கூடாது என்பதற்காக, கை ரிக்ஷாவுக்குப் பதிலாக இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தைத் துவக்கிவைக்கிறார். இத்திட்டத்தின் முதற் கட்டமாக 845 கை ரிக்ஷாக்காரர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படும்.

இத்திட்டங்களுக்கெல்லாம் நிதி வழங்குவதே, ஆதரவற்றவர்களையும், அனாதைகளையும் வாழ வைக்கும் அருந்திட்டங்களை ஊக்குவிக்கும் தொண்டாகும்.

# வேளாண்மை வெண்பா



இலமென்று சோம்பி இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகுமாம்—நலமெல்லாம்
பார்த்திடவே வள்ளுவனின் பாதையிலே சென்றென்றும்
ஏர்த்தொழிலைச் செய்வோம் இனிது.

அகல உழுவதிலும் ஆழவுழு என்றே
புகலும் பழமொழியைப் போற்றி—மிகமுறையாய்
ஓராறு சால்கள் உழுது நடும்பயிர்கள்
வேரோடி ஓங்கும் விரைந்து.

நாற்றை அடித்து நடுவில் ஒடிக்காமல்
சேற்றை அலசுதல் செம்மையாம்—ஏற்றவிதம்
பட்டம் பிடித்தழகாய்ப் பக்குவமாய் நாற்றுதனை
நட்டால் பயிர்செழிக்கும் நன்கு.

நட்டபின்னே போய்வயலை நாடோறும் பாராமல்
விட்டுவிட்டால் எல்லாமும் வீணாகும்—மட்டில்லாத்
தாளாண்மை யோடு தகுந்ததிறம் உள்ளாரே
வேளாண்மை செய்வது மேல்.

புதிய உரவகையைப் போட்டாலே நல்ல
விதமாக யாவும் விளையும்—இதுநாள்
அறிவியலைக் கொண்டிங்கே ஆக்கம் திரட்டும்
நெறிநின்றால் சேரும் நிறைவு.

குறைந்த வயது குறையா மகசூல்
நிறைந்த பயன்தரும் நெல்லாம்—சிறந்திருக்கும்
ஐ.ஆர் இருபதை ஆர்வமுடன் போட்டாலே
பொய்யில்லை நம்மிடர்கள் போம்.

பொன்னியைத் தாளடியில் போட்டுப் பெருமகசூல்
தன்னையே காணல் தகுந்ததாம்—பின்னை
பருத்தி பயிர்செய்தால் பற்றாக் குறையைத்
துரத்தி விடலாம் தொடர்ந்து.

சிறந்த வருவாய் செலவின்றிக் கோடை
பிறந்தால் பயற்றால் பெறலாம்—எறிந்தால்
அழுந்து விதத்தில் அறுவடைக்கு முன்னே
உழுந்து விதைத்தல் உயர்வு.

மாவுக் கிரண்டுபடி விதம் பயறுதனை
மேவும் விதத்தில் விதைத்தாலோ—பூவுடன்
பிஞ்சுவைக்கும்; காய்க்கும்; பெருவருவாய் கிட்டும்நம்
நெஞ்சுவக்கும் இன்பம் நிறைந்து.

பொன்செய்யும் சோளம் புதுக்கம்பு கேழ்வரகு
புன்செய் நிலமெல்லாம் போட்டிடுவோம்—நன்செய்
நிலத்தில் பலவகை நெல்விளைப்போம்; நாட்டின்
நலத்தைப் பெருக்கிடுவோம் நாம்.

ஏர்ப்படைகள் கொண்டுநாம் எந்நாளும் போராடி
ஆர்ப்பரிப்போம் நெற்குன்றில் ஆங்காங்கு—போர்க்களத்தில்
பற்றாக் குறையாம் பகையொழிப்போம் வேளாண்மை
வெற்றி பெறுவோம் மிகுந்து.

மருதங்குடி வெங்கடேசன்



# உலகில் இரண்டு திசைகள்

டி.என்.சுப்பிரமணியன்

'கையளவு இதயத்தில் கடலளவு ஆசைகள், ஆவல்கள், ஆசாபாசங்களின் அலைவீச்சுகள், இமயம் போல் உயர்ந்திருக்க வேண்டிய இதயத்துள் ஏற்றத் தாழ்வுகள், மான அவமானக் குறுக்கீடுகள் எப்படி வந்திருக்க முடியும்? ஏன் வர வேண்டும்?' என்றெல்லாம் சிந்தித்தபடி வீடு நோக்கிப் புறப்படுகிறாள் ராதை.

செண்பகா மில்லின் சட்ட ஆலோசகன் பதவி மணிவாசகத்திற்குக் கிடைக்கப் போவதில்லை. மணிவாசகன் மேல் பிறந்த வெறுப்போ அல்லது தன் மருமகன் ரோமியோவின் மேல் எழுந்த அக்கறையோ—முத்தையாவின் மனப்போக்கிற்கு எது காரணமாக இருந்தாலும் முடிவு ஒன்றுதான்.

மணிவாசகனுக்குச் சட்ட ஆலோசகன் பதவி இல்லை. இனிமேலும் வரப்போவதில்லை. இது பெரிய அதிர்ச்சி; அருவியைப் போல ஓடும் தன்மை கொண்டது. இதன் அடிப்படையில் பிறக்கும் அவமானம் கடல் போன்றது. மணிவாசகன் எவ்வாறு இக் கடலினைத் தாங்கிக் கொள்ளப் போகிறான்? அதுவும், அதே ஆலையில் நர்மதா டாக்டராகத் தொழில்புரியப்போகிறாள்? அந்தப் பணத்தில் ராதையைச் சட்டப் படிப்பும் படிக்க வைக்கப் போகிறாள்? அடிபட்ட ஆண் மனத்துள் எழும் புயலின் உறுமலை, போராட்டத்தின் உச்சத்தை அமைதிப்படுத்தும் வழிதான் எது?

அன்பு மனம் படைத்த ராதைக்கு ஏதும் விளங்கவில்லை.

மணிவாசகனின் கல்விக்குத் தோள் கொடுத்தாள்; திருமணம்? இதற்கும் தன்னையே தத்தம் செய்து ராதையால் வெற்றிபெற முடிந்தது! உயர்பதவியை வாங்கித் தரும் சிறு முயற்சியில் அவளால் வெல்ல முடியும். ஆனால் அதுவரை மணிவாசகன் அமைதியாக இருப்பானா? ஆண் வர்க்கத்திற்கே விழுந்த அவமானத்தின் பேரிடியாகக் குமுறுவானே ....! கொந்தளிப்பானே ....!

"அப்பா இல்லையே!" என்று வேதனையோடு எண்ணிப் பார்க்கிறாள் ராதை. எத்தனை பெரிய சிக்கலையும் சிரமம் ஏதுமின்றிச் சிரித்த முகத்தோடு தீர்த்து வைக்கும் அனுபவசாலியான அப்பா இன்று இருந்திருந்தால் இந்தப் பிரச்சினையையும் எளிதில் தீர்த்திருப்பாரே என்று எண்ணுகிறாள். பாவம், பாண்டித்துரை உயிரோடு இருந்திருந்தால் மணிவாசகனின் வேலைவாய்ப்புப் பற்றிய பிரச்சினையே எழுந்திருக்காது என்பதை உணர அவளது பேதை மனத்துக்குத் தோன்றவில்லை.

## 13. வழியில் வந்த டாக்சி

முத்தையாவின் அடையாற்றுப் பங்களாவிலிருந்து புறப்பட்ட ராதை, நெடுஞ்சாலைக்கு வந்து நீண்ட நேரம் வாடகைக் காருக்காகக் காத்து நிற்க வேண்டியதாயிற்று. வெய்யிலின் கொடுமை வேதனையின் தீவிரம் எல்லாமாகச் சேர்ந்து அவள் அறிவே மயங்கி விழக்கூடிய நிலைதான். தொலைவிலிருந்து வந்து கொண்டிருக்கும் வாடகைக் கார் ஒன்றைக் கை தட்டி நிறுத்த முனைகிறாள் ராதை. ஆனால் வண்டி அவளருகே வந்த பிறகுதான் ஆணும் பெண்ணுமாக இருவர் வண்டிக்குள் அமர்ந்திருப்பதைக் காண முடிகின்றது. '....'மன்னிக்கவும் .... நீங்கள் போகலாம்' என்று கூறிவிட்டு மீண்டும் நடைபாதைக்கு வந்து நிற்கிறாள் ராதை.

பதைபதைக்கும் வெய்யில் வேளையில் பரபரப்பாகப் புறப்பட்டு வந்திருக்கும் இந்தப்பெண் யாரோ எவரோ.... இவளுக்கு என்ன அவசரமோ என்று ராதைக்காக இரக்கப்படுகிறாள், வண்டிக்குள் இருக்கும் பெண்மணி.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் எங்களுடன் வரலாம் .. நீங்கள் எங்கே போக வேண்டுமோ அங்கே இறக்கி விட்டு நாங்கள் போகிறோம்" என்கிறாள் அந்தப் பெண்.

"மிக்க நன்றி .. உங்களுக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டாம் என்று பார்க்கிறேன் .... நான் வேறு டாக்சி வைத்துக் கொண்டு போய்விடுகிறேன்" என்கிறாள் ராதை.

"பரவாயில்லை, வண்டியில் ஏறிக் கொள்ளம்மா—உன் வீடு எங்கே?" என்கிறார் பசுபதி.

காந்தி மண்டபம் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் டாக்டர் நர்மதாவின் தந்தை பசுபதியும், சிற்றன்னை சியாமளாவும். அவர்கள் யார் என்பதை ராதை அறிந்திருக்க நியாயமில்லை. ராதை யார் என்பதை அவர்களும் தெரிந்திருக்க, வழியில்லை ... அறிமுகம் ஆவதற்கு முன்னாலேயே ராதையின்மேல் சியாமளாவுக்கு அன்பு; பரிவு.

"ராஜா அண்ணாமலைபுரம் போகவேண்டும்" என்று மறுமொழி கூறிய ராதை வண்டியின் முன்கதவைத் திறந்து டிரைவரின் பக்கத்தில் உட்காரப் போகும் சமயம், பசுபதிவண்டியை விட்டிறங்கி "நீ பின்னால் உட்கார்ந்து கொள்ளம்மா" என்று கூறிவிட்டுத் தானே முன்னால் வந்து உட்காருகிறார்.

வண்டிக்குள் உட்கார்ந்ததும், 'டிரைவர்! புதிய நபர் நான் வந்ததில் ஆட்சேபனை இல்லையே' என்று தயக்கத்துடன் கேட்கிறாள் ராதை.

"அரை ரூபாய் கூடுதலாகப் போட்டுக் கொடுத்துவிடுங்கள் அம்மா"

என்னும் வாடிக்கைப் பதில் அவனிடமிருந்து வருகிறது ..!

வண்டி அடையாற்றுப் பாலத்தில் அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. சில்லென்ற ஆற்று நீரில் அலைமோதிச் சிலுசிலுத்துக் கொண்டுவரும் காற்று, ராதையின் உடலுக்கும் உள்ளத்துக்கும் சற்றே இதமளிக்கின்றது.

"அதுவரை கலகலப்பாகப் பேசிச் சிரித்தபடி வந்த தம்பதிகள், இப்போது இன்னொருபெண்

வந்து உட்கார்ந்ததும் இவ்வளவு அமைதியாக வரத் தொடங்குகிறார்களே! தன்னை ஒரு பொருட்டாக எண்ணவில்லையே'' என்ற வியப்பு டிரைவருக்கு!

ஓடுகிறது வண்டி. ஓடுகின்றன மனங்கள். ஆனால் ஓசை மட்டும் இல்லை. எங்கும் அமைதி. அந்த அமைதியான பயணம் ராதைக்குப் பிடிக்கவில்லை. எதையாவது பேசி, எதையாவது கேட்டு அமைதியைக் கலைத்தால்தான், மனச் சுமையின்றிப் பயணம் செய்ய முடியும். இல்லாவிட்டால் அவள் இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகளின் சுமை தாங்காமல் அவள் மிகவும் திணறிப் போய்விடுவாள்.

நல்ல வேளையாகப் பசுபதி பேச்சைத் தொடங்குகிறார்.

'சியாமளா ..நாளைக்கு நாம் பார்க்க வேண்டிய இடம் ..?'' என்று ஏதோ ஆரம்பிப்பதற்குள் சியாமளா குறுக்கிட்டு,

''போதும் உங்கள் பரபரப்பு நம் திருமணம் முடிந்து தேனிலவுக்கா வந்திருக்கிறோம்? நீங்கள் வந்திருப்பது உங்கள் மகளின் கல்யாண விஷயமாக!'' என்று செல்லமாகக் கண்டிக்கிறாள்.

'சியாமளா' என்ற பெயர் ராதையின் இதயத்துள் சிலிர்ப்பைத் தருகிறது. மகளின் திருமணம் சம்பந்தமாக வந்திருக்கும் தந்தை—அவருடைய இளம் மனைவி சியாமளா ..

ஒரு கணம் தயங்கியபின் தன் ஆவலையும் மகிழ்ச்சியையும் கட்டுப்படுத்த முடியாமல் 'மன்னிக்கவும். நீங்கள் சிங்கப்பூர் பசுபதியா?' என்று கேட்டு விடுகிறாள் ராதை.

''ஆமாம் ..அறிமுகம் ஆவதற்கு முன்னாலேயே எப்படியம்மா அடையாளம் கண்டு கொண்டாய்?'' என வியப்புடன் வினவுகிறார் பசுபதி.

''அறிமுகம் ஆனால்தான் அடையாளங் காண முடியுமா? ஆளைப் பார்ப்பதற்கு முன்னாலே என்னை உங்கள் மகளாக ஏற்றுக் கொள்ளவில்லையா நீங்கள்?''

### கோவில் நிலம் மீட்பு

தமிழகத்தில் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள கோவில் நிலங்களை மீட்பதற்கு நியமிக்கப்பட்ட தனி அலுவலரின் முயற்சியால் இதுவரை 28 இலட்சம் ஏக்கர் நிலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுக் கோவில்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது.

என்று கூறி மகிழ்ச்சியுடன் சிரிக்கிறாள் ராதை.

''நீ ராதையா ..?'' என உற்சாகத்துடன் கேட்கிறார் பசுபதி.

''ஆம் ..உங்கள் இளையமகள் ராதை!''

''என் மகள் நர்மதா மிகவும் அதிருஷ்டக்காரி''

''திறமைசாலிகள் அதிருஷ்டசாலிகளாக இருப்பார்கள். நர்மதா அக்கா திறமைசாலி என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்களுக்கு வந்திருக்கும் வாழ்வும் வளமும் அவர்களின் திறமையால் வந்தவைதாம்!''

''அவள் படிப்பு, அவள் பட்டம் ..அவள் பார்க்கப் போகும் வேலை இவற்றுக்கெல்லாம் அவளுடைய திறமை காரணமாக இருக்கலாம். ஆனால் அவளுக்கு அமையப் போகும் மணவாழ்வு அதைத் தேடித் தந்திருக்கும் ராதையின் மலர்ச்சி நிறைந்த இதயம்-இவற்றை அடைந்திருப்பதற்கு நர்மதாவின் அதிருஷ்டந்தான் காரணம் ..'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் பசுபதி.

''இந்த வெய்யிலில் எங்கே போய் வருகிறாய் ராதா?'' என்று மிகுந்த அன்போடு வினவுகிறாள் சியாமளா.

''அத்தானின் வேலை விஷயமாக'' என்று மறுமொழி கூறிய ராதை, மறுவிநாடி தன் படபடப்பை எண்ணித் தன்னையே நொந்து கொள்கிறாள்.

மகளின் அதிருஷ்டம், மருமகனின் எதிர்காலம் பற்றி மிகுந்த நம்பிக்கையோடு வந்திருக்கும் பசுபதியிடம், மணிவாசகனுக்குக் கிடைக்கவிருந்த உயர்பதவி தட்டிப் போய்விட்டது என்பதை வாய்தவறிச் சொல்லிவிட்டால் ..?.ஒரு விநாடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, அத்தானின் வேலை விஷயமாக முடிவு சொல்ல வந்தேன்'' என்கிறாள்.

''முடிவு சொல்லிவிட்டுப் போகிறாயா? அல்லது முடிவைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வந்தாயா?'' என்று வினவுகிறார் பசுபதி.

''முடிவினைத் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன் ..'' என்று கூறிமுடிப்பதற்கும், டாக்சி ராஜா அண்ணாமலைபுரத்தின் நெடுஞ்சாலைக்குள் வருவதற்கும் சரியாக இருக்கின்றது.

''எந்தத் தெரு?'' என்கிறார் வண்டியோட்டி.

''மூன்றாவது தெரு ..''

ராதையின் வீட்டின் முன்னால் வண்டி வந்து நிற்கிறது.

''நீங்களும் இங்கேதான் இறங்குகிறீர்கள்'' என்கிறாள் ராதை.

''நாங்கள் இன்னொரு சமயம் ....'' என்று தயங்குகிறார் பசுபதி.

''உங்களை எங்கள் வீட்டுச் சம்பந்தியாக நினைத்து அழைக்கவில்லை. மகள் வீட்டுக்கு அப்பாவும் அம்மாவும் வருவதாக நினைத்து இறங்கி வாருங்கள்'' என இன்முகத்துடன் அழைக்கிறாள் ராதை.

பசுபதியும் சியாமளாவும் வண்டியை விட்டு இறங்கி வருகிறார்கள். ராதையின் அழைப்பிலே இருக்கும் அன்பும், அன்பைச் சுமந்து நிற்கும் இதயமும் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்கின்றது!

மயிலொன்று வண்ணத்தோகை விரித்தாடுவது போலவும் கோலக் குயில் ஒன்று கூவி அழைப்பது போலவும் உணர்கிறான்.

## 14. நண்பன் தரும் பரிசு

அண்ணாமலைபுரம்! மூன்றாம் தெருவின் 19-ஆம் எண். பாண்டியன் மாளிகைக்குள் அமர்ந்திருந்த டாக்டர் நர்மதாவும் வக்கீல் மணிவாசகனும் ராதையைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

''என் வாழ்க்கைக்கு அவள் பாலம் அமைக்கிறாள்! நீ பாலமாக நினைப்பதை நான் பயங்கர வெடிகுண்டாக நினைக்கிறேன்.'' இவ்வாறுமணிவாசகன் புயலாகச் சீறி அமைதியடைந்த மயம்.

டாக்டர் நர்மதா பூப்போலச் சிரிக்கலாமா,சிந்திக்கலாமா எனக் கண்ணை மூடி இருக்கும் சமயம், டாக்சி வந்தது. அவள் போன காரியம் காயா?பழமா? இருவருக்கும் இதுவே கவலை. ராதைக்கும் ஒரு கவலை தற்காலிகமாக விலகி நின்றது.



துடிக்கின்ற இரண்டு இதயங்கள் மத்தியில், தான் வாளாகப் போய் நிற்க விரும்பவில்லை. தன்னுடன் வந்த சியாமளா-பசுபதி இருவரும் இந்தச் சூழ்நிலைக்கு மாற்றம் தந்தார்கள்!

தன் பெற்றோரை முன்னறிவிப்பு ஏதுமின்றி மணிவாசகன் இல்லத்தில் நர்மதா எதிர்பார்க்கவில்லை. எனவே அவள் கொண்ட வியப்பும் திகைப்பும் நீங்குவதற்கு ஓரிரு விநாடிகள் தேவைப்பட்டன.

''நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். ஒரு விநாடியில் சாப்பிடலாம் ..ஏற்பாடுகளைக் கவனித்துவிட்டு வருகிறேன்,'' என்று பரபரப்பாகச் சமையலறைக்குள் நுழைகிறாள் ராதை.

மணிவாசகன் குழப்பமும் கவலையுமாக உட்கார்ந்திருப்பதன் காரணத்தை ராதை ஒருவாறு ஊகித்துக் கொள்கிறாள். 'செண்பகா மில்லி'ன் சட்ட ஆலோசகன் வேலை தனக்கு நிச்சயமாகக் கிடைக்கப் போவதில்லை என்பதை அவன் அறிந்து கொண்டிருப்பானோ ..? அதற்குள்ளாக அவனுக்கு யார் அறிவித்திருக்கக் கூடும்?'' என்ற சிந்தனைகளோடு சமயலறைக்குள் வருகிறாள் ராதை.

''நானும் உனக்கு உதவியாக இருக்கிறேனே ராதா ..?'' என்றபடியே நர்மதா அவளைப் பின் தொடர்ந்து வந்து நிற்கிறாள்.

''வேண்டாம் அக்கா ..உங்கள் அப்பாவும் சித்தியும் வந்திருக்கிறார்களே..அவர்களுடன் பேசிக் கொண்டிருங்கள் .. சமையலை நானே முடித்து விடுவேன் ..''

நர்மதா நகருவதாகத் தோன்றவில்லை!

பேச்சை மாற்ற எண்ணிய ராதை, ''அத்தான் எப்போது வந்தார் அக்கா?'' எனக் கேட்கிறாள்.

''கொஞ்ச நேரம் முன்னர் தான் வந்தார் ......''

சமையலறையில் மூடிவைத்த பாத்திரங்களைத் திறந்து பார்க்கும் ராதை அதிசயித்து இடுப்பில் ஒரு கையும் முகவாயில் ஒரு கையுமாக வைத்து 'இதெல்லாம் யார் வேலை?' என்று கேட்கிறாள். 'கமகம'வென்ற மணத்துடன் கச்சிதமாகச் சமையல் முடிந்து போயிருந்தது!

''இனிமேல் யார் இதைச் செய்யத் தொடங்க வேண்டுமோ அவருடைய வேலைதான்! '' என்று சிரித்துக் கொண்டே கூறுகிறாள் நர்மதா.

''நீங்கள் இந்த வீட்டுக்குச் சர்வாதிகாரி! சமையல்காரி இல்லை ......! நான் திரும்பி வருவதற்குள் என்ன அவசரம் என்று சமையலை முடித்தீர்கள் அக்கா ........?''

''என்னைத் தனியாக வீட்டில் விட்டுவிட்டு உன் அத்தானும் நீயும் ஆளுக்கொரு பக்கமாகப் பிய்த்துக் கொண்டு போய்விட்டீர்கள் .........''

''நான் அத்தானின் வேலை விஷயமாகப் போனேன் ....''

''உன் அத்தான் உன் திருமண விஷயமாகப் போனார்.''

''திருமண விஷயமாகவா? '' என்று திகைத்த ராதை மறுகணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''எங்கள் இரண்டு பேருக்கும் இருந்த அக்கறையில் உங்களைக் கவனிக்கவில்லை. ... நீங்களே எங்களுக்கும் சேர்த்து வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு இனிமையாகச் சமைத்து வைத்திருக்கிறீர்கள். . . . . '' என்று சமாதானம் கூறுகிறாள்.



''ஆலை முதலாளி முத்தையாவைப் பார்த்தாயா ராதா . . . . அவர் என்ன முடிவு சொன்னார்?'' எனத் தணிந்த குரலில்பேசுகிறாள் நர்மதா.

முத்தையா கூறிய முடிவை ராதையின் இதயம் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் ராதைக்கு இருக்கும் இருதய பலம் டாக்டர் நர்மதாவுக்கும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா . . . . .?

முல்லை போன்ற இதயத்தை இப்போது முள்ளைக் கொண்டு குத்துவானேன்?

ராதை 'பதில் கூறுவதற்குத் தயங்கி நிற்கும் ஓரிரு விநாடிகளுக்குள் சியாமளா சமையலறைக்கு வந்து நிற்கிறாள்.

''வரிந்து கட்டிக்கொண்டு விருந்து சமைக்கப் புறப்பட்டு விட்டீர்களா அக்காவும் தங்கையும்? . . .நாங்கள் அந்நியர்களா என்ன? உங்கள் அன்பால் எங்கள் இதயம் நிரம்பியிருக்கின்றது . . . இருப்பதைச் சாப்பிடுவோம் . . . . . .அன்பே உணவாகி விட்டால் இஞ்சியும் இனிப்பாய்த் தோன்றும்'' என்கிறாள் சியாமளா.

''விருந்துக்கு இப்போதென்ன அவசரம்?'' என்றபடியே பசுபதி அடுத்த அறைக்குள் வருகிறார். அவரைத் தொடர்ந்து வரும் மணிவாசகன் சாப்பாட்டு மேசைக் கருகே நாற்காலிகளைச் சரியாகப் போடுவதில் முனைகிறான்.

''கை கழுவிக்கொண்டு வாருங்கள் . . . . . . . .சாப்பாடு தயார்!'' என்று அறிவிப்புச் செய்தபடியே ராதை பாத்திரங்களை எடுத்து வருகிறாள்.

மேசையின் முன் அமர்ந்தார், பசுபதி. ''ராதைக் கேற்ற மணமகனைப் பார்க்கப் போனதாகச் சற்றுமுன் சொன்னீர்களே மணிவாசகம், அந்த மணமகன், மன்மதனா?'' என்று கூறிச் சிரிக்கின்றார். ராதையைத் தம் மகளைவிட அன்பு கொண்டவளாக அருமை மிக்கவளாக எண்ணியவராயிற்றே பசுபதி!

''பார்த்து முடிவு செய்யத்தான் போயிருந்தேன். என் நண்பனுக்கு அதிருஷ்டமில்லை. . . .'' என்று மறுமொழி கூறுகிறான் மணிவாசகன்.

''யார் அந்த நண்பன்? நான் தங்கிய ஓட்டலுக்குப் போன் செய்து உங்கள் திருமணம் கைகூடாதபடி குட்டையைக் குழப்பினவரே, அந்த நண்பரா?'' எனக் கேட்கிறார் பசுபதி.

''அவனேதான் . . . . . . . ! ரோமியோ . . . . . ! அவனுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரலாம் என்றுதான் நான் சம்பந்தம் பேசப் போனேன்!''

ராதையின் இதயம் திக்கென்றது—! அவள் பேசவில்லை நினைக்கிறாள் ''அட அத்தான்! . . . . உங்கள் எதிர்காலத்தின் வளத்திற்கு வெடி வைத்திருப்பதும் ரோமியோவின் அதிருஷ்டந்தான்!'' என்று மனத்துக்குள் அனுதாபப்படுகிறாள்.

''ராதையின் நல்ல இதயத்துக்கு ரோமியோவைவிட நல்ல மணமகன் வருவான். அதிருக்கட்டும் மாப்பிள்ளை, நீங்கள் எப்போது முதல் 'செண்பகா மில்'லின் சட்ட ஆலோசகராகப் பொறுப்பேற்கப் போகிறீர்கள்?'' என மிகுந்த ஆவலுடன் பசுபதி கேட்கிறார். அவர் குரலில் பலூனை மேன்மேலும் ஊத ஆசைப்படும் குழந்தையின் ஆர்வம் தொனித்தது.

தன் மருமகனின் உயர் பதவி பற்றியும், மகளின் வளமான வாழ்வு பற்றியும் அவருக்கு ஏற்பட்டிருக்கும் ஆவலும் அக்கறையும் அவரை அப்படிக் கேட்க வைத்தன!

''செண்பகா மில்லின் சட்ட ஆலோசகனாகவா? நானா?'' என்று திகைப்புடன் கேட்கிறான் மணிவாசகன். இனிமேல் அந்தப் பதவி தனக்குக் கிடைக்கப் போவதில்லை என்றுதான் முடிவு கட்டியிருந்தானே . . . . . !

''ஆமாம் மாப்பிள்ளை. . . உங்கள் முடிவைத் தெரிவித்து விட்டு வரத்தான் இந்த வேகாத வெய்யிலில் என் மகள் ராதை போய் வந்திருக்கிறாள் . . . . !'' என்கிறார் பசுபதி.

''ஆமாம் அத்தான். பசி மயக்கத்தில் உங்களுக்குப் பாதி விஷயங்கள் மறந்துவிடும்! நீங்கள் அனுப்பித் தானே நான் போனேன். முத்தையா மாமாவிடம், நீங்கள் ஆலையின் ஆலோசகனாக வர ஒப்புக் கொண்டுவிட்டீர்கள் என்ற முடிவைச் சொன்னதும் அவர் எவ்வளவு சந்தோசப்பட்டார் தெரியுமா?'' என்று குரலில் அழுத்தம் தந்தாள். குரலை எப்படி எப்படி அழுத்தம் தந்தால் அதற்குத் தகுந்தபடி பாசம் மாறுபடும். பரபரப்பாக ராதை கூறும்வேகத்தில், ' புரிகிறதோ இல்லையோ. . . . . புரிந்ததாகத் தலையை ஆட்டித் தொலையுங்கள் அத்தான்' என்று எச்சரிக்கையும் கலந்திருந்தது.

தன் மகளை மணக்கவிருப்பவன் ஆலையின் உயர்பதவியையும்,உயர் பதவிக்கான கௌரவங்களையும் அடைந்து பெருமைக்குரிய நிலையில் அமரப் போகிறான் என்ற பெருமிதத்தில் இருக்கும் பசுபதியின் முன்னால் 'மணிவாசகனுக்கு அந்த வேலை கிடைக்கவில்லை, கிடைக்கப் போவதுமில்லை' என்ற உண்மையைப் போட்டு உடைப்பானேன்?

உணவுப் படையலில் கதம்ப மணங்கள் அங்கு எழுந்தன.

சாப்பிட்டு முடிந்ததும்,

''உங்கள் வளமான எதிர்காலத்திற்கு எங்கள் வாழ்த்துக்கள்' என்று வாழ்த்திவிட்டுப் புறப்படுகின்றனர் பசுபதியும், சியாமளாவும்.

உண்ட விருந்தினர் [illegible] பிடித்து 19-ஆம் எண் [illegible] விட்டுக் கிளம்புகிறார்கள்.

மீண்டும் உள்ளக் குமு[illegible] விதவிதமாக அலைபாய்[illegible]

'ராதையை மணக்க [illegible] விட்டானே' என்பதால் [illegible] ரோமியோவின் மீது ம[illegible] னுக்குக் கோபம்.

''தன் நண்பனுக்கு வர[illegible] உயர்பதவியைத் தட்டிப்[illegible] துக்கொண்டாரே' என்பதால் ரோமியோ மேல் வருத்தம் ராதைக்கு.

'தங்கள் திருமண[illegible] என்னென்ன இடை[illegible] செய்ய முடியுமோ அ[illegible] செய்து தோல்விகண்ட ரோமி[illegible] யோ தங்கள் எதிர் கால[illegible] பெரிய வெடிகுண்டினைப் போட முனைந்து விட்டாரே!' என்ற வேதனை நர்மதாவுக்கு . . . . !






மணிவாசகன்

நர்மதா

ராதை

—மூவரின் இதயக் குமுறல்களுக்கும் காரணப் பொருளாக இருப்பவன் ரோமியோ. அவன் மணமகன்; அவன் சட்ட ஆலோசகன்; குடும்பத்திற்கும் நண்பன்!

''ரோமியோ. . . . . . . ஒரு நச்சுப் பாம்பு'' என்கிறாள் நர்மதா.

''ரோமியோ . . . நன்றிகெட்டவன்'' என்று சீறுகிறான் மணிவாசகன்.

''அவரைச் சபிக்க வேண்டாம் அத்தான். ரோமியோ— என் தோழியின் கணவர்!'' என்று ராதை திருத்துகிறாள்.

''உள்ளே வரலாமா?'' என்று கேட்டபடியே கூடத்திற்குள் வருகிறான் ரோமியோ.

வருவது நச்சுப் பாம்பாகத் தெரிகிறது நர்மதாவிற்கு.

நன்றிகொன்ற நயவஞ்சகனாகத் தெரிகிறது மணிவாசகனுக்கு.

''வாருங்கள்! ஆலை முதலாளியின் மருமகனாரே!'' என்று குத்தலாக வரவேற்கிறான் மணிவாசகன்.

இதனைப் பொருட் படுத்தவில்லை ரோமியோ.

''நான், நில்லுங்கள், நில்லுங்கள் என்று பலமுறை கூறியும் நீங்கள் முத்தையாவின் வீட்டிலிருந்து நிற்காமல் வந்துவிட்டீர்களே ராதா . . '' எனக் கேட்கிறான் ரோமியோ.

''என்னால் நிற்க முடியவில்லை மிஸ்டர் ரோமியோ'' என்று ராதை கூறினாள். உடனே, ''அந்த வீட்டில் நிற்கப் பிடிக்கவில்லை என்றே கூறிவிடலாம் ராதா!'' என இடைமறித்துப் பேசுகிறாள் நர்மதா.

''நீங்கள் என்ன காரணத்திற்காக ஆலை முதலாளியின் வீட்டிற்கு வந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும் ராதா!'' என்று ரோமியோ அமைதியாகக் கூறுகிறான்.

''நிச்சயமாக உங்கள் திருமணத்தைக் கலக்கவோ உங்களுக்குக் கிடைக்கப் போகும் உயர்பதவியைத் தட்டிப் பறிக்கவோ ராதையைத் தூதாக அனுப்பவில்லை. . . . அந்த மேலான குணங்கள் உங்கள் ஒருவருக்குத்தான் சொந்தம்'' என்று சொல்லிலே ஊசி மருந்தைச் செருகுகிறாள் டாக்டர் நர்மதா.

''பேசி முடித்துவிட்டீர்களா? இனிமேல் நான் பேச ஆரம்பிக்கலாமா?'' என்று மீண்டும் அமைதியாகக் கேட்கிறான் ரோமியோ.

''ஆகா . . . தாராளமாகப் பேசுங்களேன்!'' என்று கூறி அட்டகாசமாகக் கைதட்டி உற்சாகப் படுத்துவதுபோல் நடக்கிறான் மணிவாசகன்.

''மணிவாசகன்! நீ ராதையை மறந்தாய். நர்மதாவைக் காதலித்தாய். கல்யாணம் செய்து கொள்ள முடிவெடுத்தாய். அப்போது நான் ஆத்திரப்பட்டேன். ராதையின் வாழ்வை வஞ்சித்துவிட்டாயே என்று வெகுண்டேன். . . . . வேதனைப் பட்டேன்''

''அது பழையகதை! தேவையில்லாத கதை'' என்று இடைமறிக்கிறாள் நர்மதா.

''அந்தப் பழைய கோபத்தை வைத்துத்தானே என்னை எதிரியாக—பரம வைரியாக எடைபோடுகிறீர்கள் இருவரும்? ராதையின் சார்பாக நான் மணிவாசகனிடம் கோபப் பட்டது உண்மை. ஆத்திரப்பட்டதும் உண்மை. வேதனைப்பட்டதும் உண்மை. ஏன் தெரியுமா? ராதையை என் தங்கையாக எண்ணி மதித்ததால்தான்! அந்த எண்ணத்துடன் நான் பழகிய ஒரு பெண்ணை என் மனைவியாக்க எண்ணி, சற்றுமுன் மணிவாசகனே சம்பந்தம் பேச வந்த போது மறுத்துவிட்டேன் நான் மறுத்தேன். இப்போது புரிகிறதா செண்பகத்தின் மேல் கொண்ட காதல் காரணமல்ல; ராதையின் மேல் கொண்ட சகோதரிப் பாசம்தான் காரணம் என்று?'' என்று வினவுகிறான்.

''இந்தச் சமாதானத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். முத்தையா மாமாவின் ஆலைக்குச் சட்ட ஆலோசகராகப் பொறுப்பேற்க முன் வந்திருக்கிறீர்களே அதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்களோ?'' என்று இடக்காகக் கேட்கிறாள் ராதை.

இத்தனை வேதனைக்குள் மூழ்கிக் கிடந்த மணிவாசகம், ''ராதை இவ்வக்கீலுக்கு படிக்க அருகதை இல்லாதவன் என்று நினைத்தேன். அவன் வக்கீலுக்குப் படிக்க வேண்டியவன்'' என்று சிரித்தான்.

''முத்தையாவின் மருமகனாக மட்டும்தான் நான் இருக்கப் போகிறேன். அவர் ஆலையின் சட்ட ஆலோசகன் பதவியில் என்னைவிடத் திறமையும் என்னை விடத் தகுதியும் வாய்ந்த நபர் அமரப் போகிறான்! அதாவது எனது அருமை நண்பன் மணி வாசகன்'' என்று நிதானமாகப் பேசுகிறான் ரோமியோ.

உள்ளூர மகிழ்ச்சி. உதட்டளவில் தன் திறமையை ஆரம்பிக்கிறான். ''அடடா, தம் மருமகனின் எதிர்காலத்தைப் பற்றி ஆலை முதலாளி கொண்டிருந்த நம்பிக்கை என்ன ஆவது அப்பனே?'' என்று [illegible] மணி வாசகன்.

பிறர் மனத்தை ஆழம் பார்ப்பது கை வந்த கலையாயிற்றே மணிவாசகனுக்கு:

"ஆலை முதலாளி முத்தையா வுக்குத் தம் மருமகனின் எதிர் காலத்தைப் பற்றித்தான் கவலைப்படத் தெரிந்திருந்தது. மருமகனின் இதயத்தைப்பற்றி அவர் எண்ணிப் பார்க்கவில்லை; நண்பனின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அன்புள்ளம் பேசுகிறதடா. நட்புக்குத் துரோகம் செய்யத் துணியாத தூய்மையான இதயம்டா என் இதயம். இச்சின்னஞ் சிறு விஷயத்தை சொல்லிப் போகத்தான் நான் வந்தேன். " என்று கூறியபடி ரோமியோ தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கவரை வெளியே எடுக்கிறான்.

"செண்பகா மில்லின் சட்ட ஆலோசகனாக மணிவாசகனை நியமித்திருப்பதற்கான அதிகார பூர்வமான நியமனக் கடிதம் இது. உன்னுடைய எளிய நண்பனின் அன்பு நிறைந்த திருமணப் பரிசு இது " என்று வேலைக்கான உத்தரவை மணிவாசகனின் கரங்களில் கொடுக்கிறான் ரோமியோ.

அன்பு தரும் அதிர்ச்சியால் மூவரது இதயங்களும் பிரமித்து நிற்கின்றன.

" மிஸ்டர் மணிவாசகன் ! மற்றவர்கள் விட்டுக் கொடுப்பதால் உங்களுக்கு எத்தனை பெரிய மேன்மைகள் வந்து சேருகின்றன! "என்று மனத்தில் பட்டதைப் படீரென்று சொல்லி விடுகிறாள் நர்மதா.

மணிவாசகனின் இதயத்துள் 'சுரீர்' என்று தைக்கிறது. இது பெரிய சொல்லம்பு. அதைக் கவனிக்காமல் நர்மதா தொடர்ந்து "ராதை தன்காதலை விட்டுக்கொடுத்தாள். உங்கள் கல்யாணம் இனிது நடக்கின்றது. உங்கள் நண்பர் ரோமியோ தனக்கு வரவிருந்த பெரும் பதவியை விட்டுக் கொடுத்திருக்கிறார். உங்கள் வாழ்வு வளமாகத் தொடங்க விருக்கின்றது ! " என்று விளக்கமும் தருகிறாள்.

" இந்த வாழ்வுக்கும் வசதிகளுக்கும் எங்களைவிட நீங்கள் இருவரும்தான் இன்னும் தகுதியானவர்கள் என்று நாங்கள் தீர்மானித்தோம். அதனால்தான் நாங்கள் விலகிக் கொள்கிறோம்... என்று சமாதானமாகக் கூறி நர்மதாவின் பேச்சிலுள்ள கடுமையைக் குறைமையாக்க முற்படுகிறாள் ராதை !

அடுத்த வாரம் திருமணம். அதற்குள் அவர்களுக்குள் பிணக்கோ பிளவோ வந்து விட்டால் ...! என்ற பயம் ராதையின் இதயத்தைப் பற்றிக் கொள்கிறது.

தொலைவுபேசி மணி ஒலிக்கிறது.

மணிவாசகன் எடுக்கிறான்;

" மணிவாசகன் பேசுகிறேன்"

" நான் கோயம்புத்தூர் வடிவேலு பேசுகிறேன். உங்கள் திருமண அழைப்பிதழ் கிடைத்தது. அவசியம் வருகிறோம்."

" மிக்க மகிழ்ச்சி "

" ஒரு திருமணம் நடந்து முடியும் நேரத்தில் மற்றொரு திருமணம் உறுதியாகும் என் பார்களே "

" ஆமாம் "

" உங்கள் திருமண நாளில் ராதையின் திருமணமும் முடிவாக வேண்டும்" என்கிறார் வடிவேலு.

" முடித்துவிடுவோம் ' என்கிறான் மணிவாசகன்.

ராதையின் இதயம் எடுத்திருக்கும் முடிவை அவர்கள் இருவருமே அறிந்திருக்க நியாயமில்லையே!

(வளரும்)

## இந்தியாவில்...

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய விஞ்ஞான வரலாறு, இலக்கிய, கலை முக்கியத்துவம் வாய்ந்த கையெழுத்துப் பிரதிகள், ஆவணங்கள் முதலியவற்றைப் பலவந்தமாகப் பெறலாம் என்று மைய அரசு சட்டம் பிறப்பித்துள்ளது.

• • •

1971–72 ஆம் ஆண்டில் மொத்தம் 32,676 டன் எடையுள்ள மீன் உணவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 41 கோடியே 39 இலட்சம் ரூபாய்.

• • •

இந்தியப் பாதுகாப்பிலுள்ள பாகிஸ்தானிய போர்க்கைதிகள், பாகிஸ்தான் சிவிலியன்கள் ஆகியோர் எழுதிய கடிதங்கள், அவர்களுக்கு வந்த கடிதங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை ஒரு கோடியாகும்.

இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் மொத்தம் 146 கோடி ரூபாய் மதிப்புக்குள்ள இந்தியப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப் பட்டன. இது, 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் ஏற்றுமதியைக் காட்டிலும் 17 கோடி ரூபாய் கூடுதல்.

• • •

சென்ற சனவரி மாதத்தில் சுங்க அதிகாரிகள் சுமார் 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கள்ளக் கடத்தல் பொருட்களைப் பறிமுதல் செய்தனர். இதில் கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப் பட்ட பொருட்களின் மதிப்பு 2 கோடியே 11 இலட்சம் ரூபாய்.

1972 ஏப்ரல் முதல் 1973 பிப்ரவரி வரையில் ஏற்றுமதி செய்யப்பட்ட முந்திரிப் பருப்பின் அளவு, 1971–72 ஆம் ஆண்டு முழுவதிலும் ஏற்றுமதி செய்யப்பட்டதை விட 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

• • •

இந்தியக் காடுகளிலுள்ள புலிகளைப் பாதுகாக்க வருகிற ஆறுஆண்டுக் காலத்திற்கு ரூ. 4 கோடி செலவிடப்படும். புலிகளைச் சுடுவதும் தடை செய்யப்படும்.

• • •

இந்தியாவிலிருந்து மனித எலும்புக்கூடுகள் அமெரிக்கா, மேற்கு ஜெர்மன், பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஒரு எலும்புக்கூடு ஏறத்தாழ ரூ. 89 க்கு விற்கப்படுகிறது. கடந்த 1969–70 ஆம் ஆண்டில் மட்டும் எலும்புக்கூட்டின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 1 கோடி.



# கண்ணுக்குப் பாதுகாப்பு

ஐம்புலன்களில் மிக முக்கிய உறுப்பான கண்கள் ஒளியிழக்காத வண்ணம் காப்பது நம் கடமையல்லவா ? நம்முடைய கவனமின்மையே கண்கள் ஒளியிழக்கக் காரணமாகின்றன. இந்த அவலநிலை பெரியவர்களுக்கு மட்டுமல்ல, பிறக்கின்ற குழந்தைகளுக்கும் கூட ஏற்பட்டு விடுகிறது.

வாழ்நாள் முழுவதும் கண்களைப் பாதுகாப்பது அவசியமாகும். கருவுற்றிருக்கும் தாய்க்குத் தனியான பராமரிப்பு அளிப்பதும் மிக முக்கியமாகும். பிறந்த குழந்தைகளிடையே குருட்டுத் தன்மையைத் தடுப்பதில், அதிகக்கவனம் செலுத்தப் பட வேண்டும் மகப்பேற்றுக்கு முன்னும் பின்னும் மிகுந்த கவனம் தேவை. அதற்குப் பிறகும் கூடக் குழந்தையின் கண்களைக் கிருமிகள், அதிக வெளிச்சம் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பது அவசியம்.

சூலுற்றிருக்கும் காலத்தில் முதல் இரண்டு மாதங்களில் சின்னம்மை போன்ற தொத்து நோய்கள் வராமல், தாயைப் பாதுகாக்க வேண்டும். இல்லையென்றால் பிறக்கும் குழந்தையின் கண்ணில் சதை வளரும்; அல்லது சரியான வளர்ச்சி இல்லாமல் போய்விடும். தாய்க்குக் கனோரியா, சிபிலிஸ் போன்ற பெண் நோய்கள் ஏதும் இருந்தால் குழந்தை பிறப்பதற்கு முன்பே மருத்துவம் செய்துகொள்ள வேண்டும்.

சூலுற்றிருக்கும் போதே குழந்தைக்கு சிபிலிஸ் நோய் தொற்ற முடியும். சூலுற்றிருக்கையில் தாய்க்குத் தகுந்த மருத்துவம் அளிக்கப்படாவிட்டால் குழந்தை பிறக்கும் போதே சிபிலிஸ் நோயுடன் பிறக்க நேரும். ஆனால், கனோரியா கருவிலுள்ள குழந்தைக்குத் தொற்றுவதில்லை. இதனால் கனோரியாவினால் எந்தக் கெடுதலும் ஏற்படுவதில்லை என்ற எண்ணத்திற்கு இடமளிக்க வேண்டாம்.

சூலுற்றவரின் உணவில் தேவையான அளவு வைட்டமின்களும், மற்ற சத்துக்களும் சேர்ந்திருக்க வேண்டும். சில வைட்டமின்களின் குறைவினாலும், சரியான சத்துணவில்லாததாலும் குழந்தையின் உடல் நலம் பாதிக்கப்படுவதுடன், அதன் கண்களும் பாதிக்கப்படுகின்றன.

மகப்பேறு பார்க்கும் போது சரியான கவனம் செலுத்தாவிட்டாலும் குழந்தையின் கண் பார்வை பாதிக்கப்படும். மகப்பேற்றின் போது நன்கு பயிற்சி பெற்ற மருத்துவமாது, மருத்துவர் முதலியோரின் உதவி தேவைப்படும். 'சிசேரியன்' போன்ற கஷ்டமான மகப்பேறுகளின் போது ஆயுதங்கள் குழந்தையின் கண்ணைச் சேதப் படுத்திவிடாமல் இருக்கத் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

குழந்தை பிறந்தவுடன் அது கண்களைத் திறப்பதற்கு முன்னால், மூக்கிலிருந்து மேற்புறமாகக் கண்களைத் துடைக்கவேண்டும். பேசினில் குழந்தையைக் குளிப்பாட்டும் போது தண்ணீர், குழந்தையின் கண்களில் படாமல் காக்க வேண்டும். கிருமிகள் தொற்றுவதைத் தவிர்க்க 'பெனிசிலின்' மருந்தைக் கண்ணில் விடவேண்டும்.

ஆண்ட்டிபயாடிக்குகள் உபயோகத்துக்கு வருவதற்கு முன்பு ஒரு சதவிகிதம் சில்வர் நைட்ரேட் குழம்பைக் குழந்தையின் கண்களில் விடுவது வழக்கமாக இருந்தது. பிறந்த குழந்தையின் கண்களில் ஏதேனும் ஒழுக்குக் காணப்பட்டால் உடனடியாகச் சிகிச்சை அளிக்கவேண்டும். குழந்தையின் கண்களில் ஏற்படும் சீழ் போன்ற ஒழுக்குகள்தான் குழந்தைகளின் குருட்டுத் தன்மைக்குப் பெரும்பாலும் காரணமாக உள்ளன.

சூரிய வெளிச்சம் நேரடியாகப் படுவதனால் குழந்தையின் கண்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் எக்காரணம் கொண்டும் குழந்தையின் கண்கள் மீது சூரிய வெளிச்சம் படுவதை அனுமதிக்கக் கூடாது. சூரிய வெளிச்சம் படுமாறு குழந்தைகள் தொட்டிலில் விடப்படுகின்றன. சுக்களிடமிருந்தும் குழந்தைக்குப் பாதுகாப்பு அளிப்பது அவசியமாகும்.



குழந்தையின் கண்களில் சூரிய வெளிச்சம் நேரடியாகப் படக்கூடாது

குழந்தையின் தாய், மருத்துவமாது ஆகியோரும் தங்கள் சொந்த முறையில் சுத்தமாக இருக்க வேண்டும். அழுக்குத் துணிகளைக் கொண்டோ, வீட்டில் மற்றவர்கள் பயன்படுத்தும் துவாலைகளாலோ குழந்தையின் கண்களைத் துடைப்பது கூடாது.

குழந்தையின் கண்களில் மை இடக்கூடாது. முக்கியமாக, ட்ரகோமா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கும் வீடுகளில் குழந்தையின் கண்களில் மையிடுவது கண் நோய்க்குக் காரணமாகிறது.

மகப்பேற்றின் போதும், அதற்குப் பிறகும் குழந்தையைப் பாதுகாக்க வேண்டிய முறைகள் :—

1. சூலுற்றவருக்கு வைட்டமின்கள் நிறைந்த சத்துணவு அளிக்கப்பட வேண்டும். 2. தேர்ச்சி பெற்ற மருத்துவர் அல்லது மருத்துவ மாதுதான் மகப்பேறு பார்க்க வேண்டும். 3. தாய்க்குப் பெண்நோய் இருந்தால் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். 4. குழந்தையை முதன் முறையாகக் குளிப்பாட்டும் போது அத் தண்ணீர் குழந்தையின் கண்களில் படாமல் பாதுகாக்க வேண்டும். 5. குழந்தையின் கண்களில் ஏதேனும் ஒழுக்குக் காணப்பட்டால் மருத்துவரைக் கலந்தாலோசிக்க வேண்டும். 6. குழந்தையின் மீது சூரிய வெளிச்சம் நேரடியாகப் படக்கூடாது. 7. ஈக்கள் குழந்தையின் கண்களைத் தீண்டாவண்ணம் குழந்தையின் தொட்டியின் மீது கொசுவலை கட்ட வேண்டும். 8. குழந்தையின் கண்களில் மையிடக் கூடாது.

[இந்த விதிகளை தவறாது கடைப்பிடித்துக் குழந்தைகளின் கண்ணுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்.]

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

ம.நு. 19/20, லிங்கி செட்டித் தெரு, தபால் பெட்டி எண். 226.
சென்னை-600001.

தந்தி : அர்பாங் ''     தொலைபேசி எண் : 20367, 28068.

**எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும் விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.**

**வட்டி விகிதங்கள்**

| | (வருடத்திற்கு %) |
|---|---|
| நடப்புக் கணக்கு .. .. .. | வட்டி இல்லை. |
| சேமிப்புக் கணக்கு .. .. .. | 4 00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திரக் கணக்கு :

ரூ. 1,000-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை .. | 2·75 |
| 46 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை — | 3·25 |

நிரந்தரக் கணக்கு :

ரூ. 100-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக | 6·00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய .. | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் — .. | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு :

தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128-50 | 201 | 278 | 362-50 | 452 | 548-50 |

ஆர். கனகசபை, தலைவர்.     குடவாசல் சி. இருட்டிணமூர்த்தி, துணைத் தலைவர்.     டி. வர்த்தமானன், செயலர்.


# அனல் மின்நிலையங்கள்



**கே.ஆர். இராதா கிருஷ்ணன்**
(தமிழ்நாடு மின்வாரிய முன்னாள் தலைவர்)

நமது நாட்டில் இயற்கை வசதிகள் ஒரு சீரான முறையில் அமையவில்லை. சில இடங்களில் வசதிகள் அதிகம். சில இடங்களில் வசதிகள் குறைவு. மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்ற இடங்கள் எங்கிருந்தாலும், மின்சக்தியைக் கொண்டு செல்ல ஒரு மின் இணைப்பினை ( GRID ) நிறுவும் பொழுது, இந்த ஏற்றத் தாழ்வான நிலையினைக் கருத்தில் கொண்டுதான் செய்யப்படும்.

பெரிய அளவில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்ததினால், குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்ய முடியும் என்பது உலகறிந்த உண்மை. இந்தக் கருத்தாவது, பிரதேச மின் இணைப்பு ( REGIONAL GRIDS ) களினால் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், செயல் முறையில் ஊக்குவிக்கப்படவேண்டிய ஒன்றுமாகும். ஆகவே, இன்றுள்ள மின்சாரத் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கச் சிறிய அளவிலான மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதனால், பிரச்சினையைத் தற்காலிகமாகச் சமாளிக்க முடியுமே தவிர, மின் பற்றாக்குறை தொடர்ந்து இருந்துகொண்டேதான் இருக்கும். அது நிரந்தரமாகத் தீர்ந்துவிடாது. மின் உற்பத்தி நிறுவனத்திறன் இப்பொழுது இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவை இயங்கக் கூடிய நிலையில் இல்லை. அந்தத் திறனையே, இப்பொழுதுள்ளதற்கு மேல் சிறிய அளவிலான மின்உற்பத்திச் சாதனங்களின் உதவியினால், மேலும் அதிகப்படுத்த முயற்சிப்பதில் பொருளேயில்லை. இப்பொழுது உடனடியாக வேண்டுவது எல்லாம் எரிபொருள்கள், மற்றும் பொருத்தியிருக்கும் சாதனங்களைச் சரிவர இயக்குவித்தல் இவைதான்: இவற்றை மனத்தில் கொள்ள வேண்டும், மாநிலம் முழுதுக்குமாக மின் அனுப்புதல், பங்கீட்டுக் கம்பிகளை நாம் அமைத்துள்ளோம். இந்த நிலையில், தடங்கலின்றி மின்சக்தி வழங்கப்பட வேண்டியது மின் வழங்கு அமைப்பின் கடமையாகும். வேண்டுமானால், தற்காலிகமாகத் தொழிலதிபர்கள் தங்களுக்கெனச் சிறிய மின் உற்பத்திச் சாதனங்களை அமைத்துக் கொள்ளட்டும், ஆனால், அதுவே பிரச்சினையைத் தீர்த்துவிடாது!

நமது நாட்டில் மண்டல மின் இணைப்புகள் முன்பே செயலில் உள்ளன. மின் அமைப்புகளுடே தொடர்பு செய்யப்பட்டு, அதனால் சிறிதளவு பயன் பெறப்பட்டும் வருகிறது. தென்னக மின் இணைப்பில் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்கள் கவியப்பட்டுள்ளன. இந்த மாநிலங்களின் மின்சார வாரியங்களின் ஒத்துழைப்போடு. இந்த இணைப்பு இப்பொழுது இயக்கப்பட்டு வருகிறது.

மின் உற்பத்திச் சாதனங்கள், சீரான முறையில் அல்லாமல், ஏற்றத் தாழ்வான நிலையில் இந்த நான்கு மாநிலங்களில் அமைந்துள்ளன. கோதாவரி, கிருஷ்ணா ஆகிய இரு பெரிய ஆறுகள் ஆந்திரப் பிரதேசத்தில் பாய்கின்றன. இருந்தும், நீர்மின்சக்தி ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளன. இத்துடன் உயர்வான நிலையில் பிரம்மாண்டமான அனல் மின் நிலையங்கள் அமைக்கத் தேவையான நிலக்கரி பெருமளவில் அந்த மாநிலத்தில் கிடைக்கிறது. கொத்தகூடம், இராமகூடம் ஆகிய இடங்களில் இந்த வேலைகள் முன்பே ஆரம்பமாகி அங்கு அனல் மின் நிலையங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன. ஆக, தென்னகப் பகுதியில், நீண்ட நெடுங்காலத்திற்கு. இந்த ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

கிருஷ்ணா, துங்கபத்திரை, காவேரி போன்ற பெரிய ஆறுகள் கர்நாடக மாநிலத்தில் உள்ளன. நீர் மின்சக்தி உற்பத்திக்கு இந்த ஆறுகளை வெகுவாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

கேரளத்தில் ஓடுகின்ற ஆறுகள், பல ஆண்டுகளுக்குக் குறைந்த செலவில் நீர் மின் சக்தியை உற்பத்தி செய்ய வாய்ப்பாக உள்ளன. ஆனால், தமிழ்நாட்டிலோ நிலை வேறு. நீர் மின் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகளைத் தமிழகத்தில் முழுமையாகப் பயன்படுத்தியாகிவிட்டது. அதுவும் ஏமாற்றத்திற்கு உட்பட்ட நிலையில் உள்ளது. முன்பே உள்ள முதல் சுரங்கத்தோடு, மேலும் ஒரு சுரங்கம் வெட்டப்படுமேயானால் நெய்வேலியில் இன்னும் ஒரு மில்லியன் கிலோவாட் மின் உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையத்தினை உண்டாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின் உற்பத்திசெய்ய நமக்குள்ள ஒரே மாற்றுவழி அணுசக்தியைப் பயன்படுத்துவதன்மூலம் செயல்படுவதுதான். இதற்கு வேண்டிய எரிபொருள் இந்தியாவிலேயே கிடைக்கிறது. ஒவ்வொன்றும் 200 மெகவாட் திறனுடைய இரண்டு யூனிட்டுகள் கொண்ட கல்பாக்கம் அணுமின்நிலையம் இந்தத் துறையில் ஒரு முன்னோடி வேலையாக அமைந்த ஒன்றாகும்.

ஆக, வருகின்ற பல்லாண்டுகளில், மண்டலத்தைப் பொறுத்தவரையில், மின்உற்பத்தி, கீழ்க்கண்ட அமைப்பு முறையிலேதான் இருக்க முடியும். அதாவது, (1) நீர் மின்

நிலையங்கள், வழக்கமான அனல் மின்நிலையங்கள் மூலமாக, ஆந்திரப் பிரதேசத்திலும், மைசூர், கேரள மாநிலங்களில் நீர் மின் நிலையங்கள் மூலமாகவும், தமிழ்நாட்டில் அனல் மற்றும் அணு மின் நிலையங்கள் மூலமாகவும், மின் உற்பத்தி அமைய வேண்டும். அதன்படி செய்து இந்த நான்கு மாநிலங்களின் மின் உற்பத்தி அமைப்புகளை இணைத்து இயங்குவதால் பருவமழை எப்படியிருந்த போதிலும், இந்தப் பிரதேசத்தின் எந்தப் பகுதிக்கும் ஆண்டு முழுமைக்கும் மின்சாரம் கிடைக்கவும், அத்துடன் மின் உற்பத்திக்கு ஆகும் மொத்தச் செலவு குறைவாகவும் ஏற்படுகின்ற நிலை, நிச்சயமாக உருவாகும். அத்துடன் இந்தப் பகுதிகளில் ஒரே சீரான மின் கட்டணங்களை அமைக்கவும், இது வழிகோலும். இந்த முறையில், நீர் மின்சக்தி, அனல் மின்சக்தி ஆகிய இரண்டு வகைகளையும் ஒன்றோடொன்று தொடர்பாக இணைத்துச் செயல்படுத்துவதனால், இவ்வாறு ஒரே மின் இணைப்புடன் தொடர்பு செய்யப்பட்டுள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள நீர் மின் உற்பத்தி நிலையங்களின் பாசன நீரையும், வெள்ளப் பெருக்கெடுத்தோடும் நீரினையும் பயன்படுத்துவதன் மூலம், அனல் மின் உற்பத்திக்குப் பயன்படுத்துகின்ற நிலக்கரி அல்லது மற்ற எரிபொருள்களைச் சேமித்து வைக்கவும் முடியும். தென் மண்டல மின் இணைப்பு அமைப்பானது. பல்வேறு மாநிலங்களிடையே ஒரு தொடர்பு அமைப்பாக இயங்குகிறது. துரதிருஷ்டவசமாக, இன்றைய நிலையில் இந்த அமைப்பு, பல்வேறு மின்சார வாரியங்களின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுக்கின்ற நிலையில் இல்லை. மாநிலங்களூடே ஓடி விழும் நீரினைக் கட்டுப்படுத்துகின்ற நிலையிலும் இல்லை. இதனால் தென்மண்டல மின்இணைப்பு, அதனால் இயங்கக் கூடிய அளவுக்கு இயங்க முடியாமல், குறைந்த அளவிலேயே இயங்கக் கூடிய சூழ்நிலை உள்ளது. மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதைக் குறைந்த விலையில் விற்பது என்பது, பல்வேறு மின்சார வாரியங்களும் மண்டல மின் இணைப்புடன் இணைக்கப்பட்டு ஒரே மின் உற்பத்தி அமைப்பினால், ( Power Generation Pool ) தான் செய்ய முடியும். அத்துடன், இதனால் கூடுதலாக ஒரு பெரிய நன்மையும் உண்டு. பல்வேறு மாநிலங்களிடையே ஒரே சீரான, ஏற்றத் தாழ்வில்லாத தொழில் வளர்ச்சிக்கும் இது வழி வகுக்கும். மின் இணைப்பில் உள்ள பல்வேறு மின்சார வாரியங்களையும் அந்தந்த வாரியங்கள் தங்கள் தங்களுடைய தனித்தன்மையை இழக்காத வகையில் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக்குவதன் மூலம், இந்தப் பொது மின் உற்பத்தி அமைப்பினை உருவாக்கலாம்.

இன்னொரு வழியும் உண்டு. அது என்னவென்றால், கூட்டுறவு அடிப்படையில் இந்தப் பகுதியில் பிரதேச மின் உற்பத்தி ஏஜென்சி ஒன்றை அமைப்பதாகும். இந்தப் பகுதியில் உள்ள எல்லாப் பெரிய மின் உற்பத்தி நிலையங்களையும் இந்த ஏஜென்சிக்குச் சொந்தமாக்கி, மாநில மின்சார வாரியங்களினால் முன்பே நிறுவப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் இந்த மத்திய மின் உற்பத்தி ஏஜென்சியினால் எடுத்துக்

> 1973–74-ஆம் ஆண்டில் தமிழக வேளாண்மைக்கு உதவ, குறுகிய காலக் கடனாக ரூ. 75 கோடி வழங்கப்படும்; இது, கடந்த ஆண்டு வழங்கப்பட்டதை விட ரூ. 15 கோடி அதிகமாகும்.

கொள்ளப்படலாம். தேவையானால், நாடாளுமன்றத்தில் முடிவு எடுத்து, வேண்டுமானால், ஆணை பிறப்பித்து, இதை அமல் செய்யலாம். உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியானது, மின் நிலையங்களின் முனைகளிலோ (Points) அல்லது மாநில மின் இணைப்பின் (State Grids) எல்லையிலோ, மொத்தமாக அந்தந்த மின்வாரியங்களுக்கு விற்கப்படலாம். இதனால் அடையும் பயனை இந்த மண்டலத்தில் இணைந்துள்ள எல்லா மாநிலங்களும் அடைய வாய்ப்பிருக்கிறது.

எந்த ஓர் அணு மின் நிலையத்தையும் முடிவு எடுத்து நிறுவிச் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படுகின்ற கால அளவு சகிக்க முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது. இதை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்தாக வேண்டும். விஞ்ஞானம் வெகு வேகமாக வளர்ந்து வருகின்ற இந்தக் காலத்தில், அணு மின்உற்பத்தியில் வேகமான வளர்ச்சி காண்கின்ற இந்த வேகமான விஞ்ஞான வளர்ச்சி யுகத்தில், அந்த நிலைக்கு நாம் நம்மைத் தயார் படுத்திக் கொள்ளவில்லையென்றால், நாம் இந்தத் துறையில் வெகுவாகப் பின்தங்கி விடுவோம். இப்பொழுது மின்சாரத் தட்டுப்பாடு மிகக் கடுமையாக உள்ள காலம். இந்த நிலையில் நமது அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் மின் உற்பத்தித் திறன் இலக்கில் பாதி அளவுக்காவது தேவையான நவீன மின் உற்பத்திச் சாதனங்களை வெளிநாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும். துரிதமாகப் பயன் பெற இதுஒரு வழியாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தூத்துக்குடி, சேலம் மதுரை போன்ற இடங்களில் குறைந்தது ஒவ்வொன்றும் 400 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடிய 200 மெகாவாட் பிரிவு இரண்டு கொண்ட அனல் மின் நிலையங்களை எவ்வளவு விரைவாக அமைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அமைக்க வேண்டும். அதே சமயத்தில், சுருளியாறு போன்ற சிறு சிறு ஆறுகளிலிருந்து மின் உற்பத்தி செய்கின்ற நீர் மின் நிலையங்களை உருவாக்கும் திட்டங்களை நாம் அறவே கைவிட்டுவிட வேண்டும். நம்முடைய மின் தேவைகளைக் கணிசமான அளவுக்கு இந்தச் சிறு அளவிலான நீர் மின் திட்டங்கள் நிறைவு செய்வதில்லை. அத்துடன் எப்பொழுது தேவையாக உள்ளதோ அந்தக் காலங்களில் உள்ள மிச்ச மின்தேவைகளுக்கு இவைகளால் ஈடு கொடுக்கவும் முடிவதில்லை.

ஆகையால் செலாவணிகளை இவ்விதமான மின் நிலையங்களுக்கு விரயம் செய்வது மிகவும் தவறு என்பதை உணர வேண்டும். இந்தச் சமயத்தில், தமிழகத்தைப் பொறுத்த வரையில் மின்சக்தி உற்பத்திக்கான எதிர்காலத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமுடைய ஒன்றாகும்.

தமிழ்நாட்டின் மின் இணைப்பின் தற்போதைய நீர் மின் உற்பத்தி 1220 மெகாவாட்டுகளாகும். இதில் 537 மெகாவாட்டுகள் நிறுவனத் திறனானது பாசனங்களுக்கு நீர் விடுவதைச் சார்ந்தே உள்ளன. அதாவது, இவை குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே இயங்கக் கூடிய நிலையங்களாக உள்ளன. மிச்சம் 690 மெகாவாட்டுகள் நிறுவனத் திறன் உடைய, மற்ற நீர் மின் நிலையங்களோ ஆண்டு தோறும் மழை அளவு, நிலையாக இல்லாமல், மாறுகின்ற நிலையில் அதாவது, மழையை நம்பியே உள்ளன.

தமிழ்நாட்டில் மின் உற்பத்திக்கான திட்டங்கள் பொதுவாக இது வரையில் நீர் மின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே உள்ளன. இதனால், கடந்த காலங்களில் பல ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு மின் வெட்டுகளை நாம் கண்டு வந்துள்ளோம். இது வரையில் நீர் மின் உற்பத்தித் திட்டத்திற்கான செலவு சுமார் 200 கோடி ரூபாயாகும். இதில் 100 கோடி ரூபாய் அளவுக்குக் கூட நாம் அவைகளிலிருந்து பயன் பெற்றதாகத் தெரியவில்லை. குறித்த எதிர்காலத் திட்டங்கள் தீட்டப்படும் பொழுது, இந்த அனுபவத்தை ஏனோ நாம் புறக்கணித்து விட்டோம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் அண்மையில் எடுத்துள்ள முடிவுகளின் படி, இன்னும் நீர் மின் நிலையங்கள் அதிக அளவில் அமைக்கப்பட உள்ளன எனத் தெரிகிறது. திட்டங்கள் தீட்டுவோருக்கு இது சரியான பாதையைக் காட்டவில்லை, என்பது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இனிமேல் நீர் மின் நிலையங்களை நிறுவுவதற்காக ஒரு காசு செலவழிப்பது கூட எந்த வகையிலும் ஆதாயம் தரத்தக்க ஒன்றல்ல என்பதை உணர்த்த விரும்புகிறேன். மின் சுமையை மேம்படுத்த நீர் இறைப்பு நீர் மின் திட்டம் பற்றி வேண்டுமானால் யோசிக்கலாம். அதாவது காடம்பாறை போன்ற திட்டங்கள் தமிழகத்தில் உடனடியாகப் பெரிய அளவில் அனல் மின் நிலையங்களை நிறுவுவதன் மூலம் நாம் பெறக்கூடிய உறுதியான நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் இந்தநீர் இறைப்பு மின்திட்டங்கள் கூட இரண்டாந்தரம் மூன்றாந்தரத்தின் பாற்பட்டவைகளேயாகும்.

எந்த ஒரு மின் திட்டத்தையும் உருவாக்கிச் செயல்படுத்துவதற்கு எடுத்துக் கொள்கின்ற கால அளவு மிகவும் நீண்டுள்ளதாகையால், அனல் மின் நிலையங்கள் நிறுவ வேண்டும் என்று எடுக்கும் முடிவுகளை எடுப்பதற்குக்கூட வீண்கால தாமதம் செய்யக்கூடாது. மின் உற்பத்தி

> தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சைத் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை நடைபெற்ற 7 முகாம்களில் 2,728 பேர்கள் அறுவைச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நிலையங்களை உருவாக்குவதை ஒரு போர்க்கால நடவடிக்கையாகக் கருதிச் செயல்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளது நமக்கெல்லாம் மிகுந்த மனத்திருப்தியை அளிக்கிறது. தமிழகத்தில் இப்படிப்பட்ட மின்வெட்டு எதிர் காலத்தில் ஏற்படாத வண்ணம் தடுக்க அப்படிப்பட்ட முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். இதற்காக நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது ஒன்று உண்டு. எந்த நாடு வெகு விரைவாக நமக்கு அதற்கான இயந்திரங்களை வழங்குகின்ற நிலையில் உள்ளதோ, அந்த நாடுகளிலிருந்து முக்கியமான இயந்திரங்களைப் போர்க்காலத்தில் கடைப்பிடிக்கின்ற முறையில் இறக்குமதி செய்து கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த மிக முக்கியமான பணியினை மிக மிக விரைவாகக் கவனிக்கும் பொருட்டு, அனல் மின் பொறியியலில் தொழில் நுட்பம் வாய்ந்த வல்லுநர்களை அரசு ஒன்று சேர்த்து அரசின் சார்பில் கூட்டிணைப்புக் குழு (Consortium) ஒன்றினை உடனடியாக அமைத்தல் வேண்டும், என்ற கருத்தினை முன்னாள் திட்டக்குழு உறுப்பினர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அண்மையில் வெளியிட்டிருந்தார். அவருடைய கருத்துப்படி செயல்படுவது தமிழ்நாட்டுக்கு மிகவும் பயன் தரும் வகையில் அமையும் என்று கருதுகிறேன்.

ஒரு சுவையான செய்தியினை இங்குக் குறிப்பிட வேண்டும். வாஷிங்டனில் பிப்ரவரி 15-ல் வெளிவந்தசெய்திஒன்றில் ஜனாதிபதி நிக்சன் நிகழ்த்திய வானொலிப் பேச்சில் "அமெரிக்கா இப்பொழுது தன்னிடம் உள்ள மின்சாரத்தின் அளவுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது" என்ற உண்மையை எடுத்துக் கூறி அமெரிக்க மக்களை அவர் எச்சரித்துள்ளார். "மின்சாரப் பிரச்சினை தொடர்ந்து மிக முதன்மையான இடத்தில் வைத்து எண்ணப்படும்" என்றும் அவர் கூறியுள்ளார். "மக்களுக்குத் தாங்கக் கூடிய குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவதற்காக வேண்டி, அதற்கான பரவலான நடவடிக்கைகள் அடங்கிய சட்டங்களை அமெரிக்கக் காங்கிரசுக்கு விரைவில் தாம் அனுப்ப உள்ளதாகவும்" அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தியாவைவிட 30-லிருந்து 40 மடங்கு தனிநபர் மின் உபயோகிப்பு அதிகம் உள்ள நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. அந்த நாட்டிலேயே உள்ள மேற்கண்ட நிலையை நம் கண் முன்நிறுத்திப் பார்ப்போமானால் நம் நாட்டில் மின் உற்பத்தி பற்றித் திட்டங்கள் தீட்டுவோர் எவ்வளவு அக்கறையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் வேகமாகவும், நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கவே தேவையில்லை. இன்னும் 3 அல்லது 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாகத் தமிழ்நாட்டில் குறைந்தது ஒரு மிலியன் கிலோவாட்டுக்கள் மின் உற்பத்தி செய்கின்ற அளவுக்காவது அனல் மின் நிலையங்களை நாம் உருவாக்கத் தவறிவிட்டோமானால் தமிழ்நாட்டிற்குக் கதி மோட்சமே கிடையாது என்பதை ஒவ்வொருவரும் நெஞ்சத்திலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

நமது நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் உள்ள அனல் மின் நிலையங்களில் கையாளும் செயல் முறைகளைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்த பொழுது ஓர் உண்மை தெளிவாகப் புலனாகியது. நமது நாட்டில் சீரான வளர்ச்சி அடைய வேண்டுமெனில், ஒழுங்கான முறையில் திட்டமிடுதல்; அனல் மின் நிலையங்களைச் சீரான முறையில் செயல்படுத்துதல் ஆகியவை மிகமிக முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாகும்.

கடந்த ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளாக, நமது நாட்டின் அனல் மின் நிலையங்களிலிருந்து ஓராண்டுக்கு 6000 மணி நேரங்களுக்குக் கிடைக்கக்கூடிய மின் சக்தி கிடைக்கப் பெறுவதில்லை. கீழ்க்கண்டவைகளே இதற்குக் காரணங்கள் எனக் கூறலாம்.

(1) அனல் மின் நிலையங்களை நிறுவ, இயக்க, பராமரிப்புச் செய்ய, பழுது பார்க்க ஆகிய இந்தப் பணிகளுக்குத் தேவையான அனுபவம் உடைய பயிற்சி பெற்றவர்கள் போதிய அளவில் நம் நாட்டில் இல்லை.

(2) அனல் மின் நிலைய இயந்திரங்களுக்கு மிகவும் அவசியம் தேவைப்படுகிற உதிரிக் கருவிகள், நீண்ட காலத்திற்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாவதற்குக் காத்துக் கொண்டிராமல், உள் நாட்டிலேயே அவை உடனடியாகக் கிடைக்க முடியாத நிலை உள்ளது. இதற்கான தொழில் நுட்பத் திறனும் கிடைப்பதில்லை. அத்துடன் இயந்திரங்களைப் பெற்ற பிறகு அவைகளைச் சர்வீஸ் செய்வதற்கு வேண்டிய கருவிகள் உள்நாட்டில் தயாராவதில்லை.

(3) அனல் மின் நிலையங்களுக்குத் தகுந்த எரி பொருள்களைப் போதிய அளவுக்கு 'சப்ளை' செய்வதை ஒரு முகப்படுத்திச் செய்கின்ற அமைப்பு முறை இல்லாதது.

(4) அனல் மின் பொறியாளர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும் ஊக்குவிக்கும் முறையில் அவர்கள் பணியில் ஆர்வம் குன்றி விடாமல் பார்த்துக் கொள்ளக் கூடிய முறையில் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்தக் குறைகள் முக்கியமாகக் களையப்பட வேண்டியவையாகும். இந்தக் குறைகளினால் பொறிகளையும் கருவிகளையும், பழுது பார்ப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் குறைகள் நீக்கப்பட்டாலொழிய அனல் மின் நிலையங்களிலிருந்து முழுமையான அளவு மின்சாரத்தினை நாம் பெற முடியாது. இவை போக்கப்படா விட்டால் அனல் மின் நிலையங்களின் நிறுவனத் திறனை நாம் எவ்வளவுதான் அதிகரித்தாலும் தொடர்ந்து மின் பற்றுக்குறை நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கும்.

அனல் மின் நிலையங்களைப் பராமரிப்பதில் உள்ள சிக்கல்கள் மிகப் பெரிய அளவிலானவை. போதிய தொழில் நுட்பத் திறனும், பயிற்சியும், உள்ள அனல் மின் இயந்திரப் பொறியியலில் தனி அனுபவம் பெற்றுள்ள பொறியாளர்களால் தான் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியும்.

அனல் மின் நிலையங்களை இயக்குவது என்பதும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இந்த வேலையை அந்தப் பணியில் கற்றுக் குட்டிகளாக இருப்பவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது. அனல் மின் இயந்திரங்களை இயக்குபவர்கள் அல்லது பராமரிப்பவர்கள் செய்யும் தவறுகளினால் ஏற்படக் கூடிய சேதம் பிரம்மாண்டமானதாக இருக்கும். நாட்டு நலனில் அக்கறை கொண்டு பார்த்தால், அனல் மின் உற்பத்தியில் இப்பொழுதுதான் ஈடுபட்டுச் செயல்படுத்தி வரும் அதுவும் குறிப்பாக நமது நாட்டில் அனல் மின் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள விலையுயர்ந்த இயந்திரங்களுக்குச் சேதம் ஏற்படுவதை நாம் தாங்க முடியாது. முன்னேற்றம் கண்டுள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அனல் மின் இயந்திரச் சாதனங்களில் நமக்குள்ள அனுபவமும், தொழில் நுட்பத் திறனும் மிகவும் குறைந்த அளவினதாக உள்ளதால், இந்தத் துறையில் போதிய அனுபவத்தையும் தொழில் நுட்பத் திறனையும், அதுவும் குறிப்பாக நமது நாட்டில் அனல் மின் உற்பத்தியை அதிகமாக்கிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், வெகுவாகப் பெருக்க வேண்டியது, இன்றியமையாத ஒன்றாகும்.

ஆகவே, நம்முடைய அனல் மின் பொறியாளர்களுக்கு வெகு வேகமாகவும், பெரிய அளவிலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது. மிகுந்த நன்மை பயப்பதாக அமையும். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது மட்டுமல்ல; தொடர்ந்து அவர்கள் அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற விதத்திலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படிச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட பொறியாளர்களை மற்றப் பொறியாளர்களுடன் ஒப்பிடாமல், சிறப்பாக நடத்துவதற்கான முடிவுகளை நாம் தைரியமாக எடுத்தால், இப்படிப்பட்ட சூழ்நிலையை நம்மால் உருவாக்க முடியும். நமது நாட்டில் இன்று உருவாகியுள்ள பொறியாளர்களின் இன்றுள்ள நிலை, அவர்களுடைய நோக்கம் ஆகியவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, எப்படி இதை நடைமுறையில் செயல்படுத்துவது என்பது பற்றி முடிவு செய்யலாம்.

> தமிழகத்தில் 1967-ஆம் ஆண்டுத் தொடக்கப் பகுதியில் 11 ஆயிரமாக இருந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை, கடந்த 7 ஆண்டுகளில் 29 ஆயிரமாக அதிகரித்திருக்கிறது.

அனல் மின் நிலையங்களை இயக்குதல், மற்றும் பராமரித்தல் சம்பந்தமான பொறியாளர்கள் போதிய அளவுக்கு இல்லாத ஒரு நிலை இருக்கிறபடியால், இந்தத் துறையில் அனுபவம் மிக்க வெளிநாட்டு வல்லுநர்களை நமது நாட்டிற்குக் கொண்டு வந்து, நம்முடைய பொறியாளர்கட்கு அவர்களைக் கொண்டு அனல் மின் நிலையக் கருவிகளைப் பழுதுபார்த்தல், பராமரித்தல், இயக்குதல் சம்பந்தமான பயிற்சிகளை வெகுவாக அளிக்கச் செய்யலாம்.

அனல் மின் நிலையங்களில் இது வரையில் நிறுவப்பட்டுள்ள கருவிகளையும் இயந்திரங்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அல்லது நமது நாட்டிலேயே தயார் செய்யப்பட்டவற்றைக் கீழ்க் கண்ட முறையில் வகைப்படுத்தலாம் —

(1) இங்கிலாந்திலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(2) அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(3) போலந்து, செக்கோசுலோவேகியா, யூகோஸ்லோவியா, ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(4) ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

(5) ஜப்பானிலிருந்து பெறப்பட்ட கருவிகள்.

பல்வேறு நாடுகளிலிருந்து பெறப்பட்ட மேற்சொன்ன கருவிகளை நிறுவுதல், பராமரித்தல், பழுதுபார்த்தல், இயக்குதல், இவ்விதப் பணிகளுக்குக் கீழ்க் கண்ட முறையில் பிரிவுகளாக வகைப்படுத்தலாம் :—

(1) இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா.

(2) போலந்து, செக்கோசுலோவேகியா, யூகோஸ்லோவியா, ஜெர்மனி, ரஷ்யா.

(3) ஜப்பான்.

மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு குழு என்ற அளவில், நாம் வெளிநாடுகளிலிருந்து தொழில் நுட்ப வல்லுநர்களைப் பெறலாம். சான்றாக

(1) இங்கிலாந்திலிருந்து ஒரு குழு.

(2) செக்கோசுலோவேகியா அல்லது ரஷ்யாவிலிருந்து ஒரு குழு.



(3) ஜப்பானிலிருந்து ஒரு குழு.

நமது நாட்டில் நிறுவப்படும் பல்வேறு மின் உற்பத்தி நிலையங்களிலும் உள்ள இயந்திரங்களை வெளிநாட்டு வல்லுநர்களைக் கொண்டு நம்முடைய பொறியாளர்கட்குப் பயிற்சி அளிக்க வேண்டும். கீழ்க்கண்ட வல்லுநர்களைக் கொண்டதாக இக்குழுக்கள் இருக்க வேண்டும்.

(1) கொதிகலன்களுக்கான மேலாளர்கள் (Foreman)

(2) டர்பைன்களுக்கான மேலாளர்கள்.

(3) கொதிகலன் துணைக் கருவிகள், டர்பைன் துணைக் கருவிகளுக்கான மேலாளர்கள்.

(4) மின் உற்பத்தி இயந்திரங்கள், ஸ்விட்ச் கியர்களுக்கான மேலாளர்கள்.

மேற்சொன்ன நாடுகளுடன் நமக்குத் தொடர்ந்து நல்ல தொடர்பு இருந்து வருகிறபடியால், அந்த நாடுகளிலிருந்து தகுந்த வல்லுநர்களைப் பெறுவது சுலபமாகவே இருக்கும்.

மேற்சொன்ன துறைகளில் அனுபவம் பெற்றுள்ள நமது நாட்டுப் பொறியாளர்கள் இந்த வெளிநாட்டு வல்லுநர்களுக்குத் துணையாக இருப்பர். இந்த வல்லுநர் குழுவினரை ஒரு குறிப்பிட்ட மின் உற்பத்தி நிலையத்தில் தங்க வைத்து, ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குப் பழுது பார்த்தல், பராமரித்தல், எப்படி இயந்திரங்களைக் கையாள வேண்டும் என்பது பற்றி யோசனை கூறி வழிகாட்டுதல் ஆகிய பணிகளை அவர்களே செய்கின்ற முறையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். செய்ய வேண்டிய பணிகளுக்கு உள்ளூர்ப் பகுதிகளிலிருந்து வேண்டிய பொறியியல் வல்லுநர்களை, தொழில் நுட்பம் பெற்றவர்களை தொழில் நுட்பம் இல்லாதவர்களையும் அவர்கள் சேகரித்துக் கொண்டு செயல்பட வேண்டும். செய்யப்பட வேண்டிய வேலைகளைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் மேலும் சில மாதங்கள் தங்கியிருக்க வேண்டும் என்று அக்குழுவினர் கருதினால் அவ்வாறே இருக்க அவர்கள் அனுமதிக்கப்படலாம். அதே மாதிரி இக்குழுவினரை மற்ற நிலையங்களுக்கு மாற்றி மாற்றி அனுப்பலாம். நம்முடைய அனுபவத்திலிருந்து இந்த மூன்று குழுவினர்களையுமே ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாகவே வரவழைத்து இந்தியாவிலுள்ள பல அனல் மின் நிலையங்களில் வேலைகளைத் துவக்க ஏற்பாடுகள் செய்தால், பயிற்சி அளிக்கும் பணி பெரிய அளவில் நடைபெற்று எவ்வளவு குறுகிய காலத்தில் பயன் பெற முடியுமோ, அவ்வளவு குறுகிய காலத்தில் அதனாலான பயனையும் நாம் பெற முடியும் எனத் தெரிகிறது. அனல் மின் நிலையங்களில் உள்ள விலையுயர்ந்த பொறிகளையும், இயந்திரங்களையும் நிறைவான முறையில் பராமரிக்கவும், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தித் திறன் குறைந்து விடாமல் செய்து, அதனால் நாட்டிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படக்கூடிய இழப்புகளைத் தவிர்க்கவும் இந்த ஏற்பாடுகளின் மூலம் செய்யலாம் என்பதனால், இதற்காகச்

> **கல்பாக்கம் செல்லும் கொதிகலன்கள்**
>
> கல்பாக்கம் அணு மின் திட்டத்தின் முதல் பிரிவுக்குத் தேவையான மிகப்பெரும் நீராவிக் கொதிகலன்கள் இரண்டு அண்மையில் சென்னைத் துறைமுகத்தில் வந்து இறங்கின. முதல் பிரிவு அமைப்பதற்கு இதுபோன்று இன்னும் ஆறு கொதிகலன்கள் தேவைப்படுகின்றன. எட்டுக் கொதிகலன்களையும் தயாரிப்பதற்கு ஏறக்குறைய 1 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவாகும்என்றுதெரிகிறது.

செய்யப்படும் செலவு வீணுகாது. மிகுந்த பயன் அளிக்கக் கூடியதேயாகும். துவக்க நிலையில் இதற்காகும் செலவுகள் மின் சக்தி அமைச்சரகத்தில் நிதி ஒதுக்கிலிருந்து செய்யப்பட்டு, இறுதியில் அதனால் பயன் அடைகின்ற மாநில அரசுகள், மாநில மின்சார வாரியங்களிடமிருந்து சரிக்கட்டிக் கொள்ளலாம்.

ஒரு கருத்தினை இந்தத் தருணத்தில் குறிப்பிட வேண்டும். அனல் மின் நிலையங்களுக்கான கருவிகளைத் தயாரிக்கும் நம் நாட்டுத் தயாரிப்பாளர்கள், கருவிகளைத் தயார் செய்வதில் நல்ல தரத்தினையும், தொழில் நுட்பத் திறனையும் கையாள்வதோடு, அவைகளைத் திருப்திகரமான முறையில் நிறுவுதல், பராமரித்தல், சோதனையிடல், இயக்குதல் ஆகிய துறைகளிலும் தகுந்த அனுபவம் பெற்றவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். இது மிக மிக முக்கியம். இதனால், இந்தியாவில் தயாரிக்கப்படும் கருவிகளை வாங்குபவருக்கு நல்ல ஒரு நம்பிக்கை உருவாக இது வழி கோலும்.

இப்பொழுது இயங்கி வரும் மத்திய நீர்-மின்சக்தி ஆணைக் குழுவினரால் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் நிலைய சம்பந்தமான பயிற்சி நிலையங்கள் இரண்டும் தீவிரப்படுத்தப்பட்டு, மேலும் பயன் அளிக்கக் கூடியதாக இயங்குகின்ற வகையில் அவை திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

இந்த இரண்டு பயிற்சி நிலையங்களிலும் போதிய அளவுக்கு Stimulator களை நிறுவுவதுடன் போதிய நடைமுறை அனுபவம் பெற்றுள்ள தகுந்த தரமான பயிற்சி அளிப்போர்களைப் பயிற்சி பெறுபவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அமர்த்த வேண்டும். வேண்டிய அளவுக்குத் தங்கும் விடுதி வசதிகள், இந்தப் பயிற்சி நிலையங்களில் இருக்க வேண்டும். பயிற்சி பெறுபவர்களுக்கு ஓர் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் உண்டாக்குகின்ற முறையில் இவ்விடுதிகள் தரமான முறையில் நடத்தப்பெறல் வேண்டும். அனல் மின் நிலையம் குறித்து அனுபவம் பெற்ற திறமைசாலிகளாக உள்ள விரிவுரையாளர்களை இந்தப் பயிற்சி நிலையங்களுக்கு அழைத்து அவர்களுடைய உரைகளிலிருந்து அனுபவத்தினைப் பெற்றுப் பயிற்சியாளர்கள் பயன் அடையும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

இப்படித் தகுந்த முறையில் பயிற்சி பெற்ற பிறகு, பல்வேறு பயிற்சி நிலையங்களும் மிகக் கடுமையான ஒரு தேர்வினை நடத்த வேண்டும். அந்தத் தேர்வினை ஒட்டிப் பயிற்சியாளர்களுக்கு அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பெறல் வேண்டும். எந்த விதத் தடங்கலோ தடுமாற்றமோ இன்றி எந்த இயந்திரத்தில் பயிற்சி பெற்றிருக்கிறோமோ, அந்த இயந்திரத்தைக் கையாள அவருக்கு ஓர் உரிமை அளிக்கின்ற முறையில் இந்தச் சான்றிதழ் இருக்கும்.

இப்பொழுது நமது நாட்டில் பயிற்சி பெற்ற நபர்கள் மிகக் குறைவாக உள்ளனர். அனல் மின் நிலையங்களை அதிகமாக நிறுவ நாம் உத்தேசித்துள்ள நிலையில், அனல் மின் நிலையங்களில் உள்ள விலையுயர்ந்த கருவிகளை, அக் கருவிகளைக் கெடுத்து விடாமல், நல்ல முறையில் கையாளக் கூடிய பயிற்சி பெற்றவர்கள் இல்லாமல் நாம் வருங்காலத்

தில் திண்டாட வேண்டிவரும். ஆகவே, இந்தப் பயிற்சி அளிக்கும் பணி பெரிய அளவில் செய்யப்பட்டாக வேண்டும். இப்படிப் பயிற்சி அளிப்பதில் நாம் கால தாமதம் செய்வோமேயானால் மின் நிலையங்கள் மேலும் மேலும் நிறுவிவிட்டாலும் கூட அனல் மின் நிலையங்களைப் பராமரிக்கும் திறனை அது வெகுவாகப் பாதிக்கும். அத்துடன் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சக்தியும் மிகவும் குறைந்துவிடும்.

நாட்டில் உள்ள பெரிய பெரிய அனல் மின் நிலையங்கள் அதிகப் புழக்கமில்லாத எங்கோ மூலை முடுக்கான இடங்களில் கட்டப்பட வேண்டியிருக்கிறது. இந்த நிலையங்களைப் பராமரிக்கின்ற இயக்குகின்ற நபர்களுக்கு, அவர்கள் அப்படிப்பட்ட பணிகளில் ஒரு தொய்வு ஏற்பட்டு மற்ற வேலைகளுக்குப் போய் விடாமல் இருக்க, அவர்களுக்குப் போதிய ஊக்குதல் அளிக்கப்பட்டு, அப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் பணியாற்ற அவர்களுக்கு ஒரு கவர்ச்சி, ஓர் ஈடுபாடு உண்டாகும் வகையில் சூழ்நிலை இருத்தல் வேண்டும். அனல் மின் நிலையங்களில் சிறப்புப் பணியாற்றுபவர்கள் அவசரமான நெருக்கடியான காலக் கட்டத்தில் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. மற்ற மின் பொறியாளர்களின் பணித் திறமைக்கும் அனல் மின் பொறியாளர்களின் பணித் திறமைக்கும் அதிக வேறுபாடு உண்டு. ஆகவே, இந்தப் பிரிவினர் ஒரு சிறப்பான முறையில் தனிச் சலுகைகளுடன் அளிக்கப்பட்டு நடத்தப் பெறல் வேண்டும். இந்தத் தனிச் சிறப்புப் பணியில் வெறுப்புத் தட்டாமல் அவர்கள் தொடர்ந்து திருப்தியுடன் பணியாற்ற இது ஒன்றுதான் வழி. அதனால் அனல் மின் நிலையங்களைப் பராமரிக்க அனுபவமிக்கவர்கள், போதிய அளவு இல்லையே என்ற குறை நீங்கும். அப்படி இல்லையென்றால் இந்த அனல் மின் நிலையங்களை ஒழுங்காகச் சீராகப் பராமரிப்பது என்பதே பாதிக்கப்பட்டு விடும்.

இறுதியாக, பொதுவாக நமது நாட்டின், குறிப்பாக நமது தமிழகத்தின் எதிர் கால மின் சாரத் தேவையைச் சமாளிக்கக் கீழ்க்கண்ட மூன்று வழிகளைக் கையாளலாம்:—

(1) உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை.

(2) குறுகிய கால நடவடிக்கைகள்.

(3) நீண்ட கால நடவடிக்கைகள்.

உடனடி ஏற்பாடாக மின் பொறியியல் அலுவலரிடையே முழுமையான அளவில் ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலவும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இதனால் நாம் எதிர் காலத்தில் ஏற்றுச் செய்கின்ற, எந்தக் குறுகிய காலப் பணிகள் அல்லது நீண்ட காலப் பணிகள் அவை எதுவாக இருந்தாலும் அவற்றை ஏற்றுச் செயல்படுத்திக் காட்டுகின்ற ஒரு நிறைவான சூழ்நிலை நிச்சயம் உருவாகும்.

குறுகிய கால ஏற்பாடாக மின் உற்பத்திக்கு வேண்டிய முக்கியப் பொறிகளையும், கருவிகளையும், மின் நிலையம் நிறுவுவதற்குத் தேவையான அளவில், குறைந்த பட்சம் பாதி அளவுக்கான கருவிகளையாவது உடனடியாக வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாக வேண்டும். அத்துடன், அனல் மின் நிலையம் பற்றி முடிவு செய்து அதை அமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் நீண்ட கால இடைவெளியைத் தவிர்க்க அனல் மின் நிலையங்கள் நிறுவுதல் பற்றி விரைவாகவும் தாமதமின்றியும் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

தூத்துக்குடி, நெய்வேலி ஆகிய இடங்களில் அனல் மின் நிலையங்களை நிறுவுவது எந்தவிதத் தாமதமுமின்றி எந்த வெளி நாட்டிலிருந்து அதற்கான கருவிகள் உடனடியாகக் கிடைக்கிறதோ அந்தந்த நாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்து உடனே பணியைத் துவக்கிடல் வேண்டும். நிலக்கரியைக் கொண்டுவர முழுமையான ரயில் வசதிகளும், அத்துடன் கடல் மூலமாகவும் நிலக்கரியைக் கொண்டுவர உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நீண்டகால ஏற்பாடாக, நவீன அணு மின் நிலையங்களைத் தோற்றுவிக்க வேண்டும். நமது நாட்டில் கிடைக்கும் அணு எரி பொருள்களை அதற்குப் பயன்படுத்த வேண்டும். நாடாளுமன்றத்தில் முடிவு எடுத்து, அதற்கான சட்டத்தினைப் பிறப்பித்து, ஆரம்பத்தில் சொல்லியுள்ள மாதிரி, மண்டல அளவில் மின் உற்பத்தி அமைப்பினை (Region Wise Power Pool Arrangements) உருவாக்க வேண்டும்! அல்லது மண்டல அளவில் கூட்டுறவு முறையில் மின் உற்பத்தி ஏஜென்சி ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

### குறைந்துவரும் புலி இனம்

இந்தியாவில் கி.பி. 1900-ஆம் ஆண்டில் 40 ஆயிரம் புலிகள் இருந்தன. 1973-ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்கள்களில் எடுத்த கணக்குப்படிப் பார்த்தால் அவற்றின் எண்ணிக்கை 1827. புலிகள் இவ்வாறு குறைந்ததற்குக் காரணம் என்ன? வேட்டைக்காரர்கள்தான் காரணம்! புலி, விலங்குகளில் எல்லாம் அழகாகக் காணப்படுவதாலும், வேட்டைக்காரர்கள் அவற்றின் தலைகளையும் தோலையும் விரும்புகிறார்கள். அதனால் புலிகளை வேட்டையாடி வருகிறார்கள். இந்த நிலை இப்படியே நீடித்தால்—மனித இனம் புலிகளை இப்படியே தொடர்ந்து வேட்டையாடி வந்தால்—பிறகு புலி என்னும் விலங்கினமே நமது நாட்டில் நினைவுப் பொருளாக மாறிவிடும்!



தமிழ்நாடு எல்லா வகையிலும் வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறது. குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் போன்ற புதிய வாரியங்களை இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாடுதான் உருவாக்கியுள்ளது. சீரணி என்னும் தொண்டர் படையையும் தமிழ்நாடுதான் உருவாக்கியுள்ளது. துவக்கத்தில் சீரணியைப் பற்றித் தவறான பல கருத்துக்களைச் சொல்லி வந்தவர்கள் கூடத் தற்போது தெளிவு பெற்றுச் சீரணியைப் போற்றுகிறார்கள். இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் இந்தச் சீரணி இடம் பெற வேண்டும் என்ற கருத்து மற்ற மாநிலத்தவர்களிடம் தற்போது காணப்படுகிறது.

சைதாப்பேட்டையில் நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதியொன்றை உருவாக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணியைச் சீரணியினர் செய்யவிருக்கின்றனர்.

மே திங்கள் 8-ஆம் நாளன்று சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் திரு. நீல. நாராயணன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் அடிக்கல் நாட்டுவித்தார். அமைச்சர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள் :—

" மிக மிக அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நரிக்குறவர் மாணவர்கட்கு இந்த விடுதி கட்டித்தரப்படுகிறது. இந்தியாவிலேயே ஒவ்வொன்றுக்கும் நாம்தான் வழிகாட்டியாக இருக்கிறோம். அதுபோலவே இந்த விடுதி கட்டித்தருவதிலும், தமிழகம்தான் வழி காட்டியிருக்கிறது.

" தமிழ்நாட்டில் சீரணியின் பணிகளை டெல்லியில் உள்ள அமைச்சர்களும் அதிகாரிகளும் பாராட்டி வருகின்றனர். இந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது என்பதையும், நேரில் கண்டு சென்றிருக்கின்றனர்.

" ஓர் இயக்கத்தைப் பெரிதாக நடத்தி விட்டால் மட்டும் போதாது. அந்த இயக்கத்தில் உள்ள முன்னோடிகள் தீட்டித் தருகின்ற திட்டத்தை நிறைவேற்றுவதில்தான் பெருமையே இருக்கிறது. அண்ணாவால் உருவாக்கப்பட்ட சீரணி, கலைஞர் தலைமையில் மிகச்சிறந்த பணிகளைச் செய்து வருகிறது என்பதற்கு இந்த விடுதியே ஒரு சான்றாகும்.




**பிறந்தநாள் பரிசு**

தலைமை வகித்த சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் நீல நாராயணன் பேசியதாவது:

சென்னைச் சீரணியினர் நாட்டிற்காகப் பல்வேறு பணிகளைச் செய்து வருவதை நாமெல்லாம் அறிவோம். சீரணியினர் உடலுழைப்பைத் தந்து சீரணி அரங்கத்தைக்கட்டித்தந்தார்கள். அண்ணாவின் பிறந்த நாள் பரிசாக அடையாற்றில் பத்தே நாளில் பள்ளிக் கட்டடத்தைக் கட்டித் தந்தார்கள். வியாசர் பாடியில் 40 நாளில் கால்வாயை அகலப்படுத்தித் தந்தார்கள். அதேபோல் இந்த விடுதியை இருபதே நாட்களில் கட்டி முடித்து, முதல்வர் கலைஞருக்குப் பொன்விழாப் பரிசாக அளிக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

" சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் கண்ணீரைத் துடைப்பதுதான் கலைஞரின் கொள்கையாகும். அதனால் அவருக்கு இந்த விடுதியைப் பரிசாக அளிப்பதில்தான் பெருமையே இருக்கிறது".

இந்த விடுதியை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் நாள் அமைச்சர் நாவலர் தலைமையில் கலைஞர் திறந்து வைப்பார்.

சீரணி தனி அலுவலர் திரு. அப்துல் ரகீம் அவர்கள் நன்றி தெரிவிக்கும் போது குறிப்பிட்டார் :—

" நாற்பதாண்டுக் காலம் தமிழகத்தின் காடு மேடுகளிலெல்லாம் சுற்றித் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிய இதய தெய்வம் அண்ணாவின் சிந்தனையில் தோன்றிய சீரணித் திட்டத்தைச் செயல் படுத்துவதில் சீரணித் தொண்டர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள்"

நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் இந்த விழாவில் மிக உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். தங்களது சமூகத்துக்குப் பயன்படும் இந்த அருந்தொண்டினை எண்ணும் போது அவர்களுக்கு மகிழ்ச்சி உருவாவது நியாயம் தானே !


நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!
இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!
எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
மாநிலத் திட்டக் குழுவின் பணிகள்
எல்லாச்
சிற்றூர்களுக்கும்
சாலை
இணைப்புகள்!
இவைகளால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!
திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!
குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு
தமிழரசு


என்னடா வேதாந்தம் பேசுறே..?
சரி சரி பேசு! எல்லாம் கேட்டுக்கிறேன்
நீ சொல்றது தானே நடக்குது!
நம்ப வெற்றி, சாதாரண வெற்றியில்லே! மாபெரும் வெற்றி! நாளைக்கு இந்நேரம் சோமு சுற்றுலாக் கம்பெனி காரிலே, ஜாம் ஜாம்னு போவோம்!!
நீங்கள் இருவரும்....
ஒரு டாக்ஸியைக் கூடக் காணோம்! இன்னும் ஒரு மணி நேரம் இருக்கு....







சோழ நாட்டில் மலரி என்னும் ஓர் ஊர் இருந்தது. அந்த ஊரில் ஒட்டக்கூத்தர் என்னும் ஒரு புலவர் இருந்தார். இவர் கவி இயற்றுவதில் வல்லவர். தனக்கு நிகர் யாரும் இல்லை என்று வாழ்ந்து வந்தார். சொன்ன உடனே மிக வேக மாகப் பாட்டு எழுதும் திறமை படைத்தவர். ஆதலால் இவ ரைக் 'கவி அரக்கன்' என்று எல்லாரும் அழைத்தனர்.

சோழ நாட்டை விக்கிரம சோழன் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் குமார குலோத்துங்கன். விக்கிரம சோழன், ஒட்டக் கூத்தரின் புலமையை அறிந்து, தன் அவையிலேயே அவரைப் புலவராக அமர்த்திக் கொண் டார்.

விக்கிரம சோழனுக்குப் பிறகு, அவரது மகன் குமார குலோத்துங்கன் ஆட்சிக்கு வந் தான். குமார குலோத்துங்க னுக்குத் தமிழில் நீங்காத பற்று இருந்தது. புலவரின் இனிய பாடல்களைக் கேட்டு இன்புற் ருன். இதனுல் புலவருக்கும், குமார குலோத்துங்கனுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட் டது. புலவரையே தன் பெற் ருேராக எண்ணி அன்பு செலுத்தி வந்தான்.

குமார குலோத்துங்கனுக்குத் திருமணம் செய்து வைப்பது தமது கடமை என்று உணர்ந்த புலவருக்கு, இறந்துவிட்ட மன் னர் விக்கிரம சோழன் சொன்னது நினைவுக்கு வந்தது. "ஆம். அப்படித்தான் செய்ய வேண்டும். பாண்டியன் மக ளைத்தான் குமார குலோத்துங்க னுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும்" என்று ஒரு முடி வுக்கு வந்து பாண்டியனுக்குத் தாம் பெண் பார்க்க வருவதாக ஓலை அனுப்பினுர்.

ஒருநாள் புலவர் பாண்டிய நாட்டுக்குச் சென்ருர். முகம் மலரப் புலவரை வரவேற்ருன் பாண்டியன். புலவர் தாம் வந்த காரியத்தைக் கூறினுர். உடனே அரசர், "என்னுடைய மகளைச் சோழர் கேட் கிருரே, அவருக்குரிய சிறப்பு கள் என்னென்ன?" என்று விளையாட்டாகக் கேட்டார். அதற்கு உடனே புலவர், சோழ நாட்டின் வளத்தையும், சிறப் பையும் புகழையும் விளங்கக் கூறினுர். உடனே, பாண்டியன் அவைப் புலவராகிய புகழேந்திப் புலவர், ஒட்டக் கூத்தருக்கு எதி ராகப் போட்டி போட்டுக் கொண்டு பாண்டிய நாட்டின் வளத்தையும், சிறப்பையும், புகழையும் எடுத்துக் கூறினுர். இதனுல் ஒட்டக் கூத்தருக்குப் புகழேந்திப் புலவர் மீது ஆத் திரமும், பொருமையும் ஏற்பட் டது. அவரது செருக்கை அடக்க வேண்டும் என்று ஒட்டக்கூத்தர் எண்ணிக் கொண் டார்.

பின்னர் பாண்டியன், திரு மணச் செய்தியை அரண்மனையி லுள்ள பெரியவர்களுக்குச் சொன்ஞன். அவர்களும் சோழ இளவரசனுக்குப் பெண்ணைக் கொடுக்க விருப்பம் தெரி வித்தார்கள். திருமணத்துக் கான ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடந்தன.

அன்று திருமணம்!

குமார குலோத்துங்கனுக்கும், பாண்டியன் மகளுக்கும் மிகச் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தது. மணமக்களுக்குப் பரிசுகளும், புலவர் பெருமக்க ளின் நல்வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. பாண்டியனுக்கோ தன் மகளை விட்டுப் பிரியப் போகிறோமே என்ற ஏக்கம் சூழ்ந்து கொண்டது. மகளைச் சோழ நாட்டுக்கு அனுப்பும் போது, தமது அவை [illegible] கும், தன் அருமை மகளின் [illegible] யருமாகிய புகழேந்திப் [illegible] யும் துணைக்கு அனுப்பினுர்.

சோழ நாட்டு அரண்ம[illegible] புகழேந்தியாருக்கும் தக்க [illegible] தரப்பட்டது. 'தனக்கு [illegible] யாருமே இல்லை!' [illegible] இத்தனை நாளும் இருந்த [illegible] ஒட்டக்கூத்தருக்குப் [illegible] யார் தம்முடன் [illegible] இருப்பது கொஞ்சமும் [illegible] வில்லை. மேலும், [illegible] அரசிக்கு வேண்டியவராய் [illegible] பதால், தமது செல்வா[illegible] இங்கே குறைந்துவிடுமோ [illegible] றும் அஞ்சினுர். இத[illegible] புகழேந்தியாரை எப்படியா[illegible] அவையிலிருந்து நீக்[illegible] ஒட்டக்கூத்தர் சமயம் பா[illegible] இருந்தார்.

குலோத்துங்கனுக்கோ ஒட்[illegible] கூத்தரைத்தான் பிடிக்[illegible] புகழேந்தியாரைப் பிடிக்[illegible] ஆகையால், ஒட்டக்[illegible] சொல்லுக்கெல்லாம் [illegible] சாய்த்து வந்தான். [illegible] புகழேந்தியார் [illegible] வில் அடைக்கப்பட்டார்! [illegible] தச் செய்தி இளவரசி[illegible] தெரியாது.

புகழேந்தியார் தம் பார்வையிலிருந்து ஒழிந்தது, ஒட்டக் கூத்தருக்கு நிம்மதியாக இருந்தது! பரிசு பெறலாம் என்று அரசனை நாடி வரும் புலவர்களை ஒட்டக் கூத்தர் அழைப்பார். கடுமையான கேள்விகளைக் கேட்பார். அவர்கள் அதற்குப் பதில் தர முடியாமல் விழிப்பார்கள். உடனே அவர்களை எல்லாம் சிறையில் தள்ளும்படி கட்டளை இடுவார்!

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், விழாக்காலங்களின் போது, சிறையில் உள்ள புலவர்களை எல்லாம் ஒட்டக் கூத்தர் அழைப்பார். மீண்டும் அவர்களைக் கேள்விகள் கேட்பார். அதற்கும் அவர்கள் பதில் தரவில்லையானால், இரண்டு பேரின் குடுமிகளை ஒன்றாக முடித்து, பிறகு நாவிதனால் அந்தக் குடுமிகளை எடுக்கச் சொல்வார். இவ்வாறு ஒட்டக் கூத்தர் புலவர்களை அவமானப் படுத்தி வந்தார். இவற்றையெல்லாம் கேட்டறிந்த புகழேந்தியார் மிகவும் மனம் வருந்தினார்.

புகழேந்திப் புலவர் சிறையில் இருப்பது இளவரசிக்குத் தெரியாது அல்லவா? சிறையிலிருந்து விடுதலையான புலவர் ஒருவர், புகழேந்தியார் சிறையில் இருப்பதைத் தோழிகள் மூலம் அரசிக்குச் சொல்லி அனுப்பினார். இதைக் கேட்ட இளவரசி மிக்க கோபமடைந்தாள். "நமது ஆசிரியரையா சிறையிலிட்டார் மன்னர்?" என்று வேதனைப்பட்டாள். அப்போது குமார குலோத்துங்கன் அரசியைக் காண அவள் இருக்கும் அறைப்பக்கம் வந்தான். ஆனால் அறைக்கதவு பூட்டப் பட்டிருந்தது. கதவைப்பலமுறை தட்டினான். கதவு திறக்கவே இல்லை. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மீண்டும் மீண்டும் கதவைத் தட்டினான். ஆனால், அரசி உள்ளே இருந்து கொண்டு கதவைத் திறக்காமலேயே இருந்தாள்.

மனம் வருந்தித் திரும்பிய அரசனை, அப்பக்கமாக வந்த ஒட்டக்கூத்தர் பார்த்தார். விவரம் அறிந்தார். உடனே அந்தப்புரம் சென்று அறைக் கதவைத் தட்டினார். அரசியாரின் கோபத்தைப் போக்க, அழகிய பாட்டு ஒன்றைப் பாடினார். அப்போது அறைக்குள் இருந்த, அரசி, தன் தோழியைப் பார்த்து, "இது யாருடைய குரல்?" என்று கேட்டாள். "இதுவா, இது ஒட்டக் கூத்தரின் குரல்" என்றாள். "அப்படியா? ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடு!" என்றாள் அரசி. அவளும் இரண்டு தாழ்ப்பாளை இறுகப் போட்டாள். அரசி கூறியதைக் கேட்ட ஒட்டக்கூத்தர் மனம் வருந்தி நடந்ததை மன்னரிடம் கூறினார்.

புலவர் சொன்னதைக் கேட்ட குலோத்துங்கன் நீண்ட நேரம் சிந்தனை செய்தான். "ஒட்டக் கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதன் பொருளை உணர்ந்து கொண்டான். புகழேந்திப் புலவர் சிறையில் இருப்பதையே இரட்டைத் தாழ்ப்பாள் என்று அரசி கூறியிருக்கிறாள் என்றெண்ணிப் புகழேந்தியாரைச் சிறையிலிருந்து விடுதலை செய்யும்படி கட்டளையிட்டான். விடுதலை அடைந்த புலவர் அரசனைக் கண்டார். அரசன் பெருமகிழ்ச்சி கொண்டான்; தாம் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டான். அரசி




தன்னிடம் பேசாமல் இருப்பதையும் தெரிவித்தான்.

இதைக் கேட்ட புகழேந்திப் புலவர் விரைவாக அந்தப்புரம் சென்றார். அறைக் கதவைத் தட்டி, பாடல் ஒன்றைப் பாடினார். வந்திருப்பவர் புகழேந்திப் புலவர் என்பதை அறிந்த இளவரசி கதவைத் திறந்தாள். தெரியாமல் செய்த பிழைக்கு மன்னிக்கும் படியும் கேட்டுக் கொண்டாள். அப்போதுதான் அரசியின் கோபம் தணிந்தது.

ஆனால், ஒட்டக்கூத்தருக்கோ புகழேந்திப் புலவர் மீதிருந்த பொறாமை இன்னும் போனபாடில்லை!

ஒரு நாள் புகழேந்திப் புலவர் எழுதிய 'நளவெண்பா' என்னும் நூலின் அரங்கேற்றம் சோழ அரண்மனையில் நடந்தது. அதைக் கண்ட ஒட்டக் கூத்தருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவர் எழுதிய 'நளவெண்பா' தனக்குப் பிடித்தமாக இருந்தும், வேண்டுமென்றே 'அது தவறு, இது தவறு' என்று குறைகூறினார். இதையறிந்த புகழேந்தியார் அதற்குத் தக்க பதிலைக் கூறி ஒட்டக்கூத்தரின் வாயை அடக்கினார்.

ஒட்டக்கூத்தர் மனக்கவலையுடன் தம் வீட்டுக்கு வந்தார். வந்தவர் சாப்பிடாமல் வெகு நேரம் படுத்துப் புரண்டு கொண்டே இருந்தார். இதைக்கண்ட அவரது மனைவி சாப்பிடும்படி வேண்டினாள். அதற்குப் புலவர் "புகழேந்திப் புலவர் பாடிய நளவெண்பாவின் ரசத்தைக் கொடுத்தால் கூடக் குடிக்க மாட்டேன்!" என்றார் பிடிவாதமாக. "அப்படியென்றால் அவரது பாட்டில் அவ்வளவு சுவையா இருக்கிறது?" என்று கேட்டு அந்தப் பாட்டைப்பற்றி ஒட்டக் கூத்தரையே கேட்டாள் அவரது மனைவி. அவரும் நளவெண்பாவின் அழகிய பாடல்கள் சிலவற்றைத் தன்னையே மறந்து பாடினார். இதைக் கேட்ட அவர் மனைவி, தம் கணவரைப் பற்றி ஊரார் பேசிக் கொள்வதெல்லாம் சுத்தப்பொய் என்பதை எடுத்துச் சொல்ல அரண்மனை நோக்கி ஓடினாள். அங்கு மன்னனைக் கண்டாள். தம் கணவர் 'நளவெண்பா' பற்றிக் கூறியதை விளக்கமாகக் கூறினாள். அவள் சொன்னதைக் கேட்ட மன்னனும், அருகே இருந்த புகழேந்திப் புலவரும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தனர்.

அன்றுமுதல் புகழேந்தியாரும், ஒட்டக்கூத்தரும் இனிய நண்பர்களாகப் பழகினர். இனிய நட்புக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ வேண்டியவர்களுக்கு இடையே இருந்து தடை போடுவது எது? பொறாமையே அன்றோ?

திருவள்ளுவர்கூடப் பொறாமையின் தீமையைக் கூறும்போது,

"அழுக்காறு உடையார்க்கு
அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது"

என்கிறார். "பொறாமையுடையவர்க்குக் கேடு சூழ வேறு பகைமை வேண்டியதில்லை, அவரது பொறாமையே அவர்க்குப் பகைமையைவிடக் கேடு தரும்" என்கிறார் அவர். எனவே, 'அழுக்காறு வேண்டா' என அறைகூவல் விடுக்கும் வள்ளுவர் வழி நடப்போம் வாழ்க்கையை வளமாக்கி மகிழ்வோம்?

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்; தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

பதிவு எண். M. 8676


இல்லத்தரசியின் நல்ல தேர்வ
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
முதல் பரிசு: ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)
முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.
56-வது குலுக்கல் நாள்
12-6-73
பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.








« அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது!''. என்று ஔவையார் குறிப்பிட்டிருக்கிறார். இன்றைய நவீன உலகம்—நாகரிக உலகம் இந்த முதுமொழியில் மாறுபாடு கொண்டிருக்கிறது! 'மானிடராய்ப் பிறப்பது அரிதல்ல—பிறந்த பின்னும் மானிடராய் வாழ்தல் அரிது' என்ற புதுக் கருத்தைக் கொண்டிருக்கிறது—இன்றையப் பண்பாட்டு உலகம்.

மனிதனை மனிதன் மதிக்க வேண்டும் என்ற கொள்கை—மனிதாபிமானம் உள்ளவர்களின் உள்ளங்களில்தான் கொலுவீற்றிருக்க முடியும்! தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்



[redacted]

தமது பிறந்தநாளை—மனிதாபிமானச் செயல்களுக்காக ஒதுக்கி வருவதைத் தமிழ் கூறும் நல் உலகம் சந்தித்து வருகிறது.

நமது முதல்வர் அவர்கள், தமது 48-வது பிறந்த நாளில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு தரும் திட்டத்தை மேற்கொண்டார்.

49-வது பிறந்த நாளில் கண்பார்வை இழந்த எண்ணற்றோருக்குப் பார்வையும்—கண்ணாடியும் தரும் அருந்தொண்டில் ஈடுபட்டார்.

50-வது பிறந்த நாளில்—பொன்விழா நாளில்—மனிதனை மனிதன் இழுத்துச் செல்லும் மனிதாபிமானமற்ற செயலை நீக்குகின்ற விதத்தில் கைரிக்ஷாக்களுக்குப் பதிலாக, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த முனைந்துள்ளார்.

அந்தத் திட்டத்தின் துவக்கம் —6—1973 அன்று இரவு 7 மணியளவில் ஒருபெரும் விழாவாக மலர்ந்து, ராஜாஜி மண்டபத்தையொட்டியுள்ள திடலில், நாவலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். வரவேற்புரையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் குறிப்பிட்டதாவது :

"இந்தத் திட்டம் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"இந்தியாவிலேயே தமிழகத்தில்தான், தமிழக அரசுதான், கலைஞர் பிறந்த நாளில் கைரிக்ஷாவை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பதில் நாம் பெருமைப்பட வேண்டும்.

"மாடுகளும்—குதிரைகளும் வண்டிகளை இழுப்பதுபோல மக்களும் இழுத்துக் கொண்டிருந்த கொடுமை இந்நாட்டில் நீண்டநாள் நிலவி வந்தது. மக்களிடையே அவர்கள் மாக்களாக உலவி வந்தார்கள். அந்தக் கொடுமையை மாற்றி நல்ல சூழ்நிலையை உருவாக்கி—மக்களிடையே அவர்கள் மாக்களாக வாழும் நிலையை மாற்ற—எழுந்துள்ளது இந்த அருமையான திட்டம் ; ஆகவேதான் இது அமைதியான புரட்சியாகும் !

"பொதுவாக ஏழைகளைப் பிடித்திருப்பது இரண்டு ! ஒன்று மடமை ; மற்றொன்று வறுமை ! மடமையை நீக்கக் கல்வி தேவை ! வறுமையை நீக்க மறுவாழ்வு தேவை !

"ஆகவே, மடமையை நீக்கும் கல்வியமைச்சர் அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை ஏற்பதும், மறு வாழ்வளிக்கும் முதல்வர் அவர்கள் சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவதும் மகிழ்ச்சிக்குரியதாகும் — பொருத்தமானதாகும்"

போக்குவரத்துத் துறை அமைச்சரின் வரவேற்புக்குப் பின்னர், தலைமை ஏற்ற கல்வியமைச்சர் நாவலர் குறிப்பிட்டார்.

"முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை அடிப்படையாகக் கொண்டு—பற்றுக்கோடாகக் கொண்டு—தாழ்ந்து கிடக்கும் மக்களை முன்னேற்றிடும் பணியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

"பன்னெடுங் காலமாகவே நமது நாட்டில், பிறந்த நாள் விழாக் கொண்டாடி வருகிறோம். மொழிக்கு நன்மை செய்தவர்களை—நாட்டுக்கு நன்மை செய்தவர்களை—பிறந்தநாள் விழாக்களின் போது பாராட்டுகிறோம்.

"அக்காலத்தில் மன்னர்கள் 'நாள் மங்கல விழா' கொண்டாடி வந்தார்கள். பிறந்த நாள் விழாதான் அது ! பிறந்தநாள் விழாவின் போது, கொடுமைகள் நீக்கப்படும்—கஷ்டங்கள் தவிர்க்கப்படும்—கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

"காந்தியடிகளின் நூறாவது பிறந்த நாளின் போது கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

"அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்த நாளின் போது கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

"அதுபோல, கலைஞர் அவர்களின் பிறந்தநாளின்போது சமுதாயம்—நன்மை பெறத்தக்க அளவுக்கு நாம் பணிகளை ஆற்றி வருகிறோம்.

"கைரிக்ஷாவைப் பொறுத்த வரை, அது, மனிதனை மனிதன் வதைத்த போக்கு ! சமுதாய வாழ்வை வதைத்து வந்த இந்தப் போக்கினை எண்ணிப் பலரும் கண்ணீர் வடித்தார்கள்—பலர் உருகி உருகி எழுதினார்கள்.

"மனிதனை மனிதன் இழுத்துச் செல்லலாமா ?

"மனிதனை மாட்டுக்கு இணையாக நடத்தலாமா?

"இப்படியெல்லாம் கேட்டார்களே தவிர, எவரும் விடை காண முன்வரவில்லை.

"இந்தத் துன்பம் துடைக்கப்படவேண்டும். மாற்றப்படவேண்டும் என்று கூறினார்களே தவிர—எவரும் அந்தப் பணியில் ஈடுபடவில்லை.

"ஆனால் நமது கலைஞர் அவர்கள்தான், கைரிக்ஷா இனிமேல் ஓடாது—ஓடக்கூடாது என்று × (இன்ட்டுக்) குறியிட்டுக் காண்பித்திருக்கிறார்கள்.

"இந்த உள்ளம் சாதாரணமாக, எவருக்கும் எளிதில் வராது.

"இந்த அரும்பணி, நாட்டு வரலாற்றில் ஏறத்தக்க அளவுக்கு—அகராதியில் ஏறத்தக்க அளவுக்கு — கலைக்களஞ்சியத்தில் ஏறத்தக்க அளவுக்கு மலர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இப்படிப்பட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று, அவற்றால் தமிழகம் ஏற்றம் பெறுக"

நாவலரது உரைக்குப் பின்னர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாலைகளும் வாழ்த்து மடல்களும் குவிந்தன. ஏழை எளிய மக்கள்—தங்களது உண்மைத் தொண்டரான முதல்வரிடம் ரிக்ஷாத் தொழிலாளர் மறுவாழ்வுத் திட்டத்திற்காக நிதி கொடுத்தனர். ஒருவர், இரண்டு ரூபாய் நிதியாகக் கொடுத்தார் ; பணத்தால் அவர் ஏழை ; ஆனால் பண்பட்ட உள்ளத்தால் அவர் ஒரு செல்வர் என்பதை அவரது வள்ளண்மை எடுத்துக் காட்டியது.

தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பில் இந்த நிதிக்கு 1,201 ரூபாய் கொடுக்கப்பட்டது.

ரிக்ஷாத் தொழிலாளர் சங்கங்களும், ரிக்ஷா உரிமையாளர் சங்கங்களும் முதல்வர் கலைஞருக்குப் பாராட்டு மடலும், நிதித் தொகையும் கொடுத்தார்கள். பண்ணுருட்டியைச் சேர்ந்த ஒரு ரிக்ஷாத் தொழிலாளர், தலையிலே ஒரு பலாப் பழத்தைச் சுமந்துவந்து, கற்பூரத்தை ஏற்றி ஆரத்தி எடுத்த நிகழ்ச்சி உள்ளத்தை உருக்குவதாக—உண்மை அன்புக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. அதன்பின் முதல்வர் கலைஞர் உரையாற்றினார் :

"இன்று மிகப் புதுமையான—எல்லா வகையிலும் புதுமையான ஒரு விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை நீங்களும் உணர்கிறீர்கள். நானும் உணர்கிறேன்.

"இந்த விழாவை இங்கே நாம் ஏன் நடத்துகிறோம் என்பதற்கான காரணத்தை முன்னால் பேசியவர்கள் விளக்கினார்கள்.

"கழக அரசு அண்ணா அவர்களின் தலைமையில் 1967-ல் உருவான போது, சட்டப் பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த அரசின் சட்டங்களாயினும், திட்டங்களாயினும், தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கிற ஏழை எளிய, பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட நடுத்தர மக்களுடைய வாழ்க்கையை மையமாக வைத்துத்தான் வகுக்கப்படும் என்று சொன்னார்.

"அவருடைய வழி நின்று நடைபெறுகிற இந்த அரசு எந்தெந்த அளவுக்கு ஏழை மக்களுக்குத் தன்னுடைய கடமையைப், பொறுப்புணர்ந்து ஆற்ற முடியுமோ அந்த வகையில் எல்லாம் ஆற்றி வருகிறது என்பதற்குள்ள எத்தனையோ சான்றுகளில் ஒன்றைத்தான் இன்றைக்கு நீங்கள் உள்ளபடியே காண்கிறீர்கள்.

"வாழ்த்திதழ் படித்த ஏழைகளுடைய குரல் எந்த அளவிற்குக் கள்ளம் கபடம் இல்லாமல் என்னை—இந்த அரசை வாழ்த்தியது என்பதை நீங்கள் உணர்ந்தீர்கள்.

"கண் கலங்க—உள்ளம் நெகிழ—குரல் தழுதழுக்க-நாத் தடுமாற அந்த நண்பன் வாழ்த்திதழைப் படித்தபோது என்னுடைய நெஞ்சமெல்லாம் குலுங்கியது ; இப்படிப்பட்ட ஏழையெளியவர்கள் இந்த அரசை நம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் இந்த அரசு இன்னும் அவர்களுக்கு எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது என்பதை எண்ணித்தான் நான் இந்த மேடையில் தவித்துக் கொண்டிருந்தேன் ; பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தேன்.

"என்னுடைய பிறந்த நாள் விழாவைச் சமுதாயத்தின் அடித்தளத்து மக்களில் ஒரு பிரிவினருக்குப் பயன் படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு, அந்த அடிப்படையில் கடந்த இரண்டு-மூன்று ஆண்டுகளாக நான் கொண்டாடி வருகிறேன் என்பதையும், அதற்குத் தமிழ் நாட்டில் உள்ள நல்ல எண்ணம் படைத்தவர்கள், வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள் வாரி வாரி வழங்குகிறார்கள் என்பதையும், தருகிறேன் என்று சொல்லி நிச்சயமாகத் தருகிறார்கள் என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். கடந்த மூன்றாண்டுக் காலமாகப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை அமைப்பதானாலும், கண்ணொளி வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுவதானாலும், கைரிக்ஷாக்களை அகற்றி அதற்குப் பதிலாக இலவசமாக, சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குகிற திட்டமானாலும், பொது மக்களிடத்தில், வள்ளல் தன்மை வாய்ந்த வசதி படைத்த சிலரிடத்தில் நாம் கையேந்துகிறோம்.

இந்தக் கையில் நன்கொடை அளித்தால் அது ஏழை, எளிய மக்களுக்குந் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிச்சயமாகப் பயன்படும் என்ற நம்பிக்கையோடு அவர்களும் நிறைய அள்ளித் தந்தார்கள்.

"அந்த வகையில்தான் கடந்த ஆண்டுக்கு முதல் ஆண்டு தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கான மறு வாழ்வு இல்லங்கள் அமைக்கும் பணியில் நாம் ஈடுபட்டோம். அது, அகற்றுகிற பணிதான். அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற வறுமையை அகற்றுவது மாத்திரமல்ல அவர்களுடைய உடலில் ஏற்பட்டிருக்கிற அந்தப் பயங்கரமான நோயை அகற்றுகிற அந்தப் பணியை நாம் முதலில் மேற்கொண்டோம்.

அடுத்த படியாக, கண்ணொளி வழங்குகிற திட்டமானாலும் அதில் வழங்குவது என்ற வார்த்தை இருந்தாலும், கண்ணில் வளர்ந்துவிட்ட சதையை—ஏற்பட்டுவிட்ட நோயை அகற்றுகிற அந்தக் காரியத்தைத்தான் அந்தத் திட்டத்திலும் செய்தோம்.

இந்த சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்திலும் வழங்குகும் திட்டம் என்று நாம் இதற்குப் பெயர் வைத்து அழைத்தாலும், மனிதனை மனிதன் இழுக்கின்ற கொடுமை நிறைந்த காரியமாக விளங்குகிற அந்தக் கை ரிக்ஷாக் கருவிகளை எல்லாம் அகற்றுகிற திட்டத்தைத்தான் இங்கே நாம் நிறைவேற்றவிருக்கிறோம்,

"ஆகவே, அகற்ற வேண்டியவற்றை அகற்ற வேண்டிய தருணத்தில் அகற்றினால்தான் அரசு நிலையானதாக இருக்கும் ; அரசு ஒழுங்கானதாக இருக்கும் என்பதை நான் இன்றைக்கு ஒரு சூளுரையாக எடுத்துக் கொள்கிறேன்.

"அந்த வகையில்தான் நம்முடைய நாவலர் பேசுகிற நேரத்தில், ஏசுநாதரிடத்தில் இருந்த 12 மாணவர்களில் ஒருவன்—காட்டிக் கொடுப்பவனாக இருந்தான் என்று குறிப்பிட்டார். ஏசுநாதர் தாமதமாகக் கண்டு பிடித்தார். ஆகவே கஷ்டத்திற்கு ஆளானார்.

"என்னைப் பொறுத்தவரையில் எவ்வெப்போது அப்படிப்பட்ட மாணவர்கள் எங்கெங்கே தோன்றுவார்கள் என்பதை நான் நன்றாகக் கண்டறிவேன்.

[redacted]

"ஆகவே, அகற்ற வேண்டியவற்றை ஒழுங்காக அகற்றுவேன் என்ற உறுதியை—கை ரிக்ஷாக்களை அகற்றுகிற இந்த நேரத்தில் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்கிறோமே அதற்கும் சிலர் பொறுமை கொள்கிறார்களே என்று நாவலர் இங்கே கேட்டார்

"இந்த விழாவிற்கு முன்பு சைதாப்பேட்டையில் நடைபெற்ற நரிக்குறவர் வீட்டுப் பிள்ளைகள்—அந்த மாணவர்களுக்கான ஒரு விடுதி திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியில் பேசிய என். வி. என். அவர்களும், சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களும் மிகுந்த உருக்கத்தோடு, இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்கிறோமே, அதைக் கேலி செய்கிறார்களே, நன்றி கிடையாதா? என்றெல்லாம் கேட்டார்கள். நான் அங்கேயே சொன்னேன்.

"இந்தக் காரியங்களை எல்லாம் கைம்மாறு கருதி நாம் செய்ய



வில்லை. நம்முடைய காரியங்களை நாம் செய்து கொண்டே போவோம். நம்முடைய பாதை நீளமானது; நம்முடைய பயணம் வெகு தொலைவில் உள்ளது. அப் பயணத்தை நடத்துகிற நேரத்தில், பாதையில் கற்கள் இடரலாம்; முட்கள் குத்தலாம்; காட்டாறுகள் குறுக்கிடலாம்; கடும் புலிகள் சீறலாம்; சிறுத்தைகள் வரலாம், சிம்மங்கள் கர்ஜிக்கலாம்; ஆனால் இவற்றை எல்லாம் எதிர்த்துத் தான் நம்முடைய இலட்சியப் பயணம் நிறைவேற வேண்டும் என்ற உறுதியோடு இந்தப் பயணத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

"நன்றி இல்லையா? பொறுமைப் படலாமா? கிண்டல் செய்யலாமா? கேலி செய்யலாமா? என்றெல்லாம் அந்த விழாவில் அம்மையார் கேட்ட போது நான் சொன்னேன்.

" இங்கே நரிக்குறவர்களுடைய மாணவர்களுக்கான இல்லத்தைத் திறந்து வைக்கிறோம் இன்றும் பத்து

நாட்களுக்குப் பிறகு இங்கேயுள்ள சில மாணவர்களே கூட இதே இல்லத்தின் சுவரில் " கருணாநிதி ஒழிக " என்று எழுதக் கூடும். அப்படி எழுதினால் அதற்காக ஆத்திரப்பட மாட்டேன்; ஆச்சரியப்பட மாட்டேன்.

"குழந்தையைத் தூக்கி மார்புறத் தழுவுகிற நேரத்தில் அந்தக் குழந்தை தாயின்மேல் மலஜலம் கழித்து விடலாம். மார்புறத் தழுவினேமே குழந்தை மலஜலம் கழித்து விட்டதே என்று குழந்தையைத் தூக்கி எறிந்து விடமாட்டாள் தாய். அந்த மலத்தை எப்படிச் சந்தனம் போல் கருதி, எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் தாய் அதை வழித்து எறிவாளோ, அதைப் போலத் தான் இந்த அரசு அவர்களைப் பற்றியெல்லாம் எண்ணும் என்பதை நரிக்குறவர் மாணவர்களிடம் சொன்னேன்.

"அவர்களிடம் சொன்னதைத் தான் கைரிக்ஷாக்களை மாற்றி இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களைப் பெறுகிற அருமைத் தோழர்களே, உங்களுக்கும் சொல்லி, ' வாழ்க நீங்கள் ' என்று கூறி விடை பெறுகிறேன்."

—முதல்வர் கலைஞர் தமது உரையை முடித்து விட்டு கைரிக்ஷா வழங்கும் பணியை மேற்கொண்டார்.

திடலில் அணி அணியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன சைக்கிள் ரிக்ஷாக்கள். என்றாலும், அனைத்தையும் மேடையின் அருகில் கொண்டு வந்து, அவற்றை முதல்வர் வழங்குவது என்பது சிரமமான செயல் என்பதால், மூன்றே மூன்று சைக்கிள் ரிக்ஷாக்கள் மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

மூன்று சைக்கிள் ரிக்ஷாக்களையும், மூன்று தொழிலாளருக்கு முதல்வர் வழங்கிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது.

முதலில் தருமலிங்கம் என்பவருக்கு, சைக்கிள் ரிக்ஷாவை வழங்கினார்; அவரது கழுத்

திலே மாலை அணிவித்து, அவரை சைக்கிள் ரிக்ஷாவிலே அமர வைத்து முதுகைத் தட்டிக் கொடுத்தனுப்பிய முதல்வர் கலைஞர் அவர்களின் செயல், மகனுக்கு வெற்றிப் பாதையைக் காட்டி அனுப்புகின்ற கடமை மிகு தந்தை ஒருவரின் அன்புத் தொண்டினை நினைவுறுத்தியது.

அதன்பின், சொக்குவேல், தனபால் என்னும் இருவருக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை முதல்வர் வழங்கினார். அவர்களுக்கும் மாலை அணிவித்து அவர்களைத் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார் முதல்வர்.

அப்போது எழுந்த 'முதல்வர் கலைஞர் வாழ்க' என்னும் மகிழ்ச்சி ஒலி, அரசினர் தோட்டம் முழுவதும் எதிரொலித்தது.

தமிழ்நாடு அரசு உள்துறைச் செயலாளர் திரு. எஸ். பி. அம்புரோஸ் நன்றியுரை கூறிய போது குறிப்பிட்டார்.

" இந்த நாளை ரிக்ஷாத் தொழிலாளர்களின் மறுவாழ்வு தினம் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. புரட்சிகரமான திட்டம், அமைதியான முறையில் இங்கே நடைபெறுகிறது. விழாவிலே மூன்று ரிக்ஷாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விழா முடிவுற்றதும் முந்நூறு ரிக்ஷாக்கள் கொடுக்கப்படும். இந்த மாத இறுதிக்குள் இன்னும் 500 ரிக்ஷாக்கள் வழங்கப்படும்' என்று குறிப்பிட்டார்.

அவரது நன்றியுரைக்குப் பின்னர், விழா முடிந்தது; என்றாலும் மக்கள் கூட்டம் திடலை விட்டு நகர்ந்து செல்லவில்லை. முந்நூறு ரிக்ஷாக்களைத் தொழிலாளர்கள் எடுத்துச் செல்லும் காட்சியைக் காண்பதற்காக எல்லோரும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

விழாவுக்கு வந்திருந்த பெருமக்கள் எல்லாம் மனிதாபிமானத்தைக் காட்டுகின்ற இந்த மாபெரும் தொண்டுக்கு வாழ்த்துக் கூறியபடியே கலைந்து சென்றார்கள்.

சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி




# சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி

ஒரு காலத்தில் தமிழ் நாட்டின் வீட்டுத் தோட்டங்களிலும், பூங்காக்களிலும் அழகுக்காகப் பயிரிடப் பட்டு வந்த சூரிய காந்தி, தற்பொழுது தமிழ் நாட்டிற்கு ஏற்ற ஒரு சிறந்த எண்ணெய் வித்துப் பயிராக விளங்குகிறது. சோவியத் யூனியன், பல்கேரியா, ருமேனியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், அர்ஜெண்டைனா, உருகுவே, கனடா, யூகோஸ்லேவியா, ஹங்கேரி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் சூரிய காந்தி முக்கியமான எண்ணெய் வித்துப் பயிராகவே சாகுபடி செய்யப்படுகிறது. அந்நாடுகளில் தாவரக் கொழுப்பு ( Vegetable Fat ) தயாரிக்கச் சூரிய காந்தியே முக்கிய ஆதாரமாக விளங்கி வருகிறது.

வளர்ந்து வரும் நாடுகளுக்கும், மக்கள் தொகைப் பெருக்கத்தால் வறுமை நிலவும் நாடுகளுக்கும் வாழ்வளிக்கும் பயிராகச் சூரியகாந்தி உதவுகிறது. எனவே, வளர்ந்து வரும் இந்தியாவின் மறு மலர்ச்சிக்குச் சூரிய காந்தி பெருந்துணை புரியும் என்பது திண்ணம்! இந்திய நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை (Foreign Exchange) ஈட்டுவதற்கும், இந்திய மக்களின் உடல் நலத்தை மேம்படுத்தவும், இந்தியாவில் மேலும் பல புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கவும் சூரிய காந்தி வழிவகுக்கும் என்றால் மிகையன்று!

## சூரியகாந்தியின் பயன்கள்.

சூரிய காந்திச் செடியின் விதை, உமி, பூக்கொண்டை, பூவிதழ், இலை, தண்டு முதலிய எல்லாப் பாகங்களும் சூரியகாந்தி எண்ணெயும், பிண்ணாக்கும் பின்கண்டவாறு பல்வேறு வகைகளில் பயன்படுகின்றன.

### விதை

1. சூரிய காந்தி விதைகளில் 45 முதல் 47 சதம் வரை எண்ணெய் இருப்பதால், எண்ணெய் எடுக்கப் பயன்படுகின்றன.

2. சூரியகாந்தி விதைகளில் 19·1 சதம் வரை புரதச்சத்து இருப்பதால், விதைகளின் மேல் தோலை (உமி) அகற்றிவிட்டு நேரடியாக உண்பதற்கு ஏற்றதாக உள்ளது.

3. சூரிய காந்தி விதைகளின் பருப்பை நன்கு வறுத்து, மசாலாப்பொடி கலந்து உண்ணலாம்.

4. சூரியகாந்தி விதைகளின் பருப்பை மாவாக்கி "அல்வா" போன்ற இனிப்புகளும் செய்யலாம்.

5. பதப்படுத்தப்பட்ட காய்கறிகள், மீன் ஆகியவைகள் தயாரிக்க, சூரிய காந்தி விதையின் பருப்புகள் பயன்படுகின்றன.

6. சூரியகாந்தி விதைகளை நன்கு அரைத்துச் சலித்து எடுக்கப்படும் மாவில் 50 சதம் வரை புரதச் சத்து அடங்கியுள்ளதால், சூரியகாந்தி மாவு கால் நடைகளுக்கும், கோழிகளுக்கும் சிறந்த தீனியாகப் பயன்படுகின்றது.

அட்டை சொல்லும் கட்டுரை

### உமி

'ஹெக்சோஸ்' (Hexose) 'பென்டோஸ்' (Pentose) ஆகிய பொருள்கள் தயாரிக்கச் சூரிய காந்தி விதையின் உமி (எடையில் 25 முதல் 29 சதம்) பயன்படுகிறது. ஈதைல் ஆல்கஹால், சத்துள்ள ஈஸ்ட் ஆகியவை தயாரிக்க 'ஹெக்சோஸ்' பயன்படுகிறது. பிளாஸ்டிக், செயற்கை நார், உடையாத கண்ணாடி, மற்றும் இதர இரசாயனப் பொருள்கள் செய்ய உதவிடும் 'பர்பரால்' (Eurfural) என்னும் பொருள் தயாரிக்க 'பென்டோஸ்' உதவுகிறது.

### பூக்கொண்டை

1. விதைகளை அகற்றிய பிறகு பூக்கொண்டைகளைப் பசுமையாகவோ அல்லது காய வைத்தோ மாடுகளுக்குச் சிறந்த தீனியாக அளிக்கலாம்.

2. விதைகளை எடுத்த பிறகு பூக்கொண்டைகளில் 7 சதம் புரதச் சத்தும் 57 சதம் வரையான தழைச்சத்து அல்லாத பொருள்களும் உள்ளதால், 'பெக்டின்' என்னும் ஒரு வகை உணவுப் பொருள் தயாரிக்கப் பூக்கொண்டைகள் பயன்படுகின்றன. ஜெல்லி, ஜாம், கற்கண்டு, பழ ஜெல்லி போன்றவை தயாரிக்க 'பெக்டின்' உதவும்.

### பூவிதழ்

சூரியகாந்திப் பூவின் மஞ்சள் நிறப் பூவிதழ்களிலிருந்து மஞ்சள் நிறச் சாயம் (Dye) தயாரிக்கலாம்.

## இலை

1. சூரியகாந்தி இலைகளில் 14 முதல் 16 சதம் புரதச் சத்தும், 95 சதம் வரை 'க்ரோட்டின்' (Carotene) என்ற பொருளும் அடங்கியுள்ளதால் சூரிய காந்திச் செடியின் இலைகளைக் கால்நடைகளுக்குத் தீவனமாக அளிக்கலாம். பூப்பூக்கும் சமயத்தில் சூரியகாந்திச் செடிகளை வெட்டி, கால் நடைத் தீவனமாகப் பயன்படுத்துவது சிறந்தது. அவைகளை 'சைலேஜ்' முறையில் பதப்படுத்தி வைத்துக் கொண்டு, கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுக்கலாம்.

2. சூரியகாந்தி இலைகளைப் பசுந்தழையாகவும் பயன்படுத்தலாம்.

## தண்டு

1. அறுவடைக்குப் பிறகு சூரியகாந்திச் செடியின் தண்டுகளைக் காயவைத்து விறகாகப் பயன்படுத்தலாம்.

2. 'பொட்டாசியம் கார்பனேட்' தயாரிக்கச் சூரிய காந்தியின் தண்டுகள் உபயோகமாகின்றன.

3. சூரியகாந்தியின் தண்டுகளை நறுக்கி, ஊறவைத்து, அரைத்துக் கூழ் போலாக்கி, நல்ல தரமான காகிதம் செய்யலாம்.

4. சூரிய காந்தியின் தண்டுகளைப் (இலைகளுடன்) பசுந்தாளுரமாகவும் பயன்படுத்தலாம்.

5. சூரிய காந்திச் செடிகளின் தண்டுகளைத் தண்ணீரில் ஊறவைத்து நார் எடுக்கலாம்.

## சூரியகாந்தி எண்ணெய்

சூரியகாந்தி விதைகளிலிருந்து எடுக்கப்படும் சூரியகாந்தி எண்ணெய் பாதியளவு உலரும் தன்மை (Semi-drying in nature) வாய்ந்தது. சூரியகாந்தி எண்ணெய் பின்கண்ட வகைகளில் பயன்படுகிறது :—

1. சமையலுக்கு மிகவும் உகந்த, மிகவும் உயர்ந்த தரமுள்ள எண்ணெய்யாக உள்ளது.

2. சூரியகாந்தி எண்ணெய்யில் கொழுப்பில் கரையக்கூடிய உயிர்ச்சத்து ஏ, டி, இ, கே, (Fat soluble Vitamins A, D, E and K) ஆகியவை உள்ளதால் மனித இனத்தின் உடல் நலத்திற்கு உதவுகிறது.

3. சூரிய காந்தி எண்ணெய்யில் 52 முதல் 62 சதம் வரை 'லினோலிக்' அமிலமும் (Linolic acid), 32 முதல் 47 சதம் வரை 'ஓலிக்' அமிலமும் (Oleic acid) உள்ளதால், இருதய நோய் உள்ளவர்களுக்குச் சூரியகாந்தி எண்ணெய் ஓர் வரப்பிரசாதமாகும்.

4. சூரியகாந்தி ணெய்யை அன்றாடம் படுத்தி வந்தால், ஓட்டத்தைத் தடைப்படுத் 'ஆர்த்ரோஸ் கிளிரோசி (Artherosclerosis) என்னும் ம இனத்தின் கொடிய நோயை கட்டுப்படுத்தி நல்வாழ்வு லாம்.

5. நீரிழிவு ( Diabete நோயைக் கட்டுப்படுத்தவு சூரியகாந்தி எண்ணெய் வுகிறது.

6. சூரியகாந்தி எண்ணெய் யில் நுண்ணுயிர் இயக்கமும் உள்ளதால், அது நோய் பரப்பும் நுண்ணுயிர்களை அழிக்க வல்லதாக உள்ளது.

7. சூரியகாந்தி எண்ணெய் சிறுநீர்க் கழிவினைத் தூண்டு கிறது.

8. மூச்சுக் குழாய், குரல் வளை, நுரையீரல் ஆகியவை களில் உள்ள கபத்தை (சளி) வெளிக் கொணரும் மருந்தாகச் ( Expectorant ) சூரியகாந்தி எண்ணெய் பயன்படுகிறது. இருமல், சுவாசக் கோளாறு, வயிற்றுக் கடுப்பு போன்ற நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

9. சூரியகாந்தி எண்ணெய் யில் உள்ள கொழுப்புச் சத்து உடல் நலத்திற்கு மிகவும் ஏற்ற தாக உள்ளது.

10. சிறந்த வகை 'மார்கரின்' (Margarin) என்னும் வெண்ணெய் தயாரிக்கச் சூரிய காந்தி எண்ணெய் பயன்படுகிறது.

11. சூரியகாந்தி எண்ணெய் விரைவில் உலர்ந்து விடக் கூடியதாகையால் 'வார்னிஷ்', 'பெயிண்டு', சோப்பு ஆகியவை தயாரிக்க உதவுகிறது.

12. கம்பளித் தொழிலுக்குப் பயன்படும் 'ஓலிக்' அமிலம் தயாரிக்கவும் சூரிய காந்தி எண்ணெய் உதவுகிறது.

## சூரியகாந்திப் பிண்ணாக்கு

1. சூரிய காந்திப் பிண்ணாக்கில் 26·3 சதம் புரதச் சத்தும் 3·1 சதம் கொழுப்புச் சத்தும், 1·5 சதம் சுண்ணாம்புச் சத்தும் உள்ளதால், சூரிய காந்தி பிண்ணாக்கு கால்நடைகளுக்குச் சிறந்த உணவாகப் பயன்படுகிறது.

2. சூரிய காந்தி பிண்ணாக்கில் 4·2 சதம் தழைச் சத்தும், 2·3 சதம் மணிச் சத்தும், 1·4 சதம் சாம்பல் சத்தும் இருப்பதால், சூரிய காந்தி பிண்ணாக்கைப் பயிர்களுக்கு எருவாகவும் பயன்படுத்தலாம்.

3. கோழித் தீனி தயாரிக்கச் சூரிய காந்தி பிண்ணாக்கு உதவுகிறது.

## சூரியகாந்தியின் அறிமுகம்

இந்தியாவில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற பயிராகச் சூரியகாந்தி கருதப்பட்டு, முதன் முதலாக 1916-ஆம் ஆண்டில் மகாராட்டிர மாநிலத்திலும், பிறகு 1924-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலும் சூரியகாந்தி அறிமுகப்படுத்தப் பட்டது. அப்பொழுது சூரியகாந்திப் பயிர் மூலம் எக்டேருக்கு ஒரு டன்னுக்கும் அதிகமான அளவு விதைகளும், 10 முதல் 20 டன் வரை பசுந்தாள்களும் கிடைத்தபோதிலும், சூரியகாந்தியைப் பயிரிடும் ஆர்வம் நாளடைவில் குறைந்து விட்டது. இதற்குக் காரணம் அப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்ட 'ரஷ்யன் மம்மத்' (Russian Mammoth) 'சூரிய உதயம்' (Sun rise) போன்ற ரகங்களின் எண்ணெய் கொடுக்கும் திறன் மிகமிகக் குறைந்த அளவில் இருந்ததேயாகும்.

அண்மையில் மீண்டும் இந்தியாவில் சூரியகாந்தியைப் பயிரிடும் ஆர்வம் தோன்றியதற்கு இந்திய அரசின் வேளாண்மை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. ஏ.பி. ஷிண்டே அவர்களே மூலகாரணமாவார்! அவருடைய தூண்டுதலினாலேயே 1969-ஆம் ஆண்டு அதிக அளவு எண்ணெய் தரும் சக்தி கொண்ட சூரியகாந்தி ரகங்கள் ரஷியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிதி உதவியுடன், அனைத்து இந்திய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மற்றும் மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் இந்தியாவிற்குச் சூரியகாந்தி ஏற்றதா என்பதை ஆராய்வதற்காக நடத்தப் பெற்ற ஏராளமான பரிசோதனைகளே இந்தியாவில் சூரிய காந்தி பரவுவதற்கு வழிகோலியுள்ளன.





## இதர பயன்கள்

1. குறைந்த வயதுடையதாகவும், அதிக மகசூல் அளிக்க வல்லதாகவும் இருப்பதால் சூரிய காந்தி பன் முறைச் சாகுபடிக்கு (Multiple cropping) ஏற்றதாக உள்ளது.

2. சூரியகாந்தி சாகுபடி செய்வதால், நாட்டில் தேன் உற்பத்தி பெருகும்.

## எண்ணெய்ப் பற்றுக் குறையைத் தீர்த்திடலாம் !

இந்தியாவில் நிலவும் தாவர எண்ணெய்யின் பற்றுக்குறையைத் தவிர்ப்பதற்கும், தொழிற்சாலைகளின் தேவையை ஈடு செய்வதற்கும் ரஷியா போன்ற வெளி நாடுகளிலிருந்து 1966-67 முதல் 1970—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை 59·54 கோடி ரூபாய் மதிப்புள்ள சூரிய காந்தி எண்ணெய், சோயா மொச்சை எண்ணெய் ஆகியவைகளை இறக்குமதி செய்துள்ளோம். இவ்வாறு இறக்குமதி செய்வதனால் பல கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை நாம் இழந்து விடுகின்றோம். எனவே, இறக்குமதியை நிறுத்தவும், அந்நியச் செலாவணி இழப்பைத் தவிர்க்கவும் நமது நாட்டின் எண்ணெய் உற்பத்தியை விரைந்து பெருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நம்நாட்டின் எண்ணெய் உற்பத்தியை விரைந்து பெருக்குவதற்குக் குறுகிய காலத்தில் நிறைந்த மகசூல் அளித்து அதிக அளவு எண்ணெய் தரும் சூரிய காந்தியைப் பெரும் பரப்பளவில் விரைந்து பயிரிடுவதே சிறந்த வழியாகும்.

## தமிழ் நாட்டிற்கு ஏற்றதா ?

தமிழ் நாட்டின் மண்வளத்திற்கும், கால நிலைமைகளுக்கும் மிகவும் ஏற்றதாக சூரிய காந்தி விளங்குகிறது. சூரிய காந்திக்கு உள்ள பின்கண்ட குணநலன்கள், தமிழ் நாட்டில் சூரியகாந்தியைப் பயிரிடுவதற்கு பேராதரவாக இருக்கின்றன.

1. குறைந்த வயது (85 நாள்).

2. சூரிய வெளிச்சத்தினால் எந்தவித மாற்றமும் பெறாது (Photoinsensitivity). இதனால் சூரிய காந்தியை ஆண்டு முழுவதும், எப்பொழுது வேண்டுமானாலும் பயிரிடலாம்.

3. குறிப்பிட்ட பரப்பில், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட அளவு தண்ணீரைக் கொண்டு அதிக அளவு எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும்.

4. வறட்சியைத் தாங்கிக் கொள்ளும் தன்மை.

5. சூரிய காந்தியின் விதைகளிலிருந்து எளிதில் எண்ணெய் எடுக்க முடிகிறது. நாட்டுச் செக்கிலிட்டும் எண்ணெய் எடுக்கலாம்.

6. உண்பதற்குகந்த உயரிய தரம் கொண்ட எண்ணெய் தரும் குணம்.

மேற்கூறிய குணங்களைக் கொண்டுள்ளதால் தமிழ் நாட்டின் வேளாண்மையில் பின்கண்ட காரணங்களால் சூரிய காந்தி முக்கிய அங்கம் வகிக்க வல்லது என்பது தெளிவாகிறது.

1. மானாவாரி நிலைமையில் இந்தியாவில் சூரிய காந்தியின் எண்ணெய் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 377 கிலோவாக உள்ளது. ஆனால், இந்தியாவில் நிலக் கடலையின் எண்ணெய் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 226 கிலோவாகவே உள்ளது. ஆகவே சூரிய காந்தி, குறிப்பிட்ட பரப்பிலிருந்து நிலக் கடலையை விட 66 சதம் அதிக எண்ணெய் கொடுக்க வல்லதாக இருப்பதுடன், சாகுபடி செய்யும் நிலத்தை 10 முதல் 15 நாட்கள் முன்னதாகவே அறுவடைக்குக் கொண்டு வந்து, அடுத்த பயிரிடுவதற்கு நிலத்தைச் சீக்கிரமாகக் கிடைக்கச் செய்கிறது.

2. சூரிய காந்தி குறைந்த வயதுடையதாக இருப்பதாலும், சூரிய வெளிச்சத்தினால் மாற்றம் பெறாது இருப்பதாலும் தற்பொழுதுள்ள பயிர் மாற்ற முறையில் ( Crop Rotation ) இரு முக்கியப் பயிர்களுக்கு இடையில் உள்ள காலத்தில் இறைவைத் துணைப்பயிராகச் (Catch crop ) சூரிய காந்தியைச் சாகுபடி செய்யலாம்.

3. சூரிய காந்தி விரைந்து வளரும் பயிராக இருப்பதால், ஆரம்பக் காலத்தில் மெதுவாக வளரும் நீண்ட காலப் பயிருடன் சூரிய காந்தியைத் தோழமைப் பயிராகச் (Companion crop) சாகுபடி செய்யலாம். புதுடில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலும், லக்னோவில் உள்ள மைய கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலும் மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளின்படி கரும்புடன், சூரிய காந்தியைத் தோழமைப் பயிராகப் பயிரிட்டுப் பயன் பெறலாம். அது போலவே, மரவள்ளிக் கிழங்குப் பயிருடனும், தென்னையுடனும் சூரிய காந்தியைத் தோழமைப் பயிராகச் சாகுபடி செய்யலாம்.

4. சூரிய காந்தியின் வேர்கள் ஆழமாகச் செல்வதால், வறட்சியைத் தாங்கிக் கொள்ளும். ஆகவே, மானாவாரி நிலங்களுக்கு நிலக் கடலையைவிடச் சூரிய காந்தி மிகவும் ஏற்றதாக உள்ளது. மழை குறைவாகப் பெய்தால், நிலக் கடலையின் மகசூல் பெருமளவில் குறைந்து விடக் கூடும். ஆனால் சூரிய காந்தி குறைந்த மழையிலும் நன்கு வளர்ந்து, நிலக்கடலையைவிட அதிகப் பயன் தரவல்லது. மழை பெய்வதில் தாமதம் ஏற்பட்டு, நிலக்கடலைப் பட்டம் தவறிவிட்டாலும், பிறகு பெய்யும் மழையைக் கொண்டு சூரியகாந்தியைச் சாகுபடிசெய்து நல்ல மகசூல் பெற்றுப் பயனடையலாம். எக்டேருக்கு 200 கிலோ நிலக்கடலைக் கூட விளையாத நிலங்களில், சூரிய காந்தி எக்டேருக்கு 400 கிலோ விளைந்துள்ளது.

5. மானாவாரியிலும் சூரிய காந்தி எக்டேருக்கு 1 டன் மகசூலுக்குக் குறையாமல் பல இடங்களில் கொடுத்துள்ளது. தகுந்த ஈர நிலையில் சூரிய காந்தி மானாவாரியிலேயே எக்டேருக்கு 1,300 முதல் 1,400 கிலோ வரை மகசூல் அளித்துள்ளது. ஒருமித்த செய் நேர்த்தி முறைகளை மேற்கொண்டு இறைவையாகப் பயிரிடும் போது சூரிய காந்தி எக்டேருக்கு 3,600 கிலோ முதல் 3,800 கிலோ வரையிலும் மகசூல் கொடுத்துள்ளது.

6. குறுகிய காலத்தில் மிகுந்த இலாபம் கொடுக்கும் பயிராக இருப்பதால், பல பயிர் சாகுபடிக்குச் சூரிய காந்தி மிகவும் ஏற்றதாக இருக்கிறது.

ஆகவே, தமிழ் நாட்டிற்குச் சூரிய காந்தி மிகவும் ஏற்ற பயிராக உள்ளது என்பது வெள்ளிடை மலையாகும்!

**நிலக்கடலை, எள் ஆகியவற்றைவிடச் சூரியகாந்தியே சிறந்தது!**

அண்மைக் காலத்தில் அயல் நாட்டுச் சூரிய காந்தி ரகங்களைக் கொண்டுவந்து இந்தியாவில் சாகுபடி செய்து பார்த்ததில், மாபெரும் வெற்றி கிட்டியுள்ளது. பல்வேறு மண் வகைகளில் குறைந்த அளவு மழையைக் கொண்டு மானாவாரியாகவும், நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் இறைவையாகவும் பயிரிட்டதில் சூரிய காந்தி நல்ல மகசூல் அளித்துள்ளது என்பதை நாளேடுகளும், திங்கள் ஏடுகளும், வார ஏடுகளும், வானொலியும் அடிக்கடி அறிவித்து வருகின்றன.

புதிதாகப் புகுத்தப்பட்டுள்ள ஒரு பயிராகச் சூரிய காந்தி இருப்பதால், எல்லா உழவர் பெருமக்களும் தற்பொழுது புகழ் பெற்ற எண்ணெய் வித்துப் பயிர்களாக விளங்கும் நிலக் கடலை, எள் ஆகியவற்றுடன் சூரிய காந்தியின் மகசூல் திறன், எண்ணெய் தரும் சக்தி ஆகியவைகளை ஒப்பிட்டறிய விரும்புகின்றார்கள். இதைக் குறிக்கோளாகக் கொண்டு கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1972-ஆம் ஆண்டின் கோடைப்பட்டத்தில் நிலக்கடலை, எள் ஆகியவற்றுடன் சூரிய காந்தியை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதுபோன்ற பரிசோதனைகள், அனைத்து இந்திய ஒருங்கிணைந்த மானாவாரிப் பண்ணைத் திட்டத்தின் கீழ், இந்தியாவின் பல்வேறு இடங்களில் மானாவாரி நிலைமையில் நடத்தப் பெற்றன.

இப்பரிசோதனைகளில், நிலக் கடலையையும், எள்ளையும் விட மகசூல் அளிப்பதில் சூரிய காந்தி மிஞ்சிவிட்டது. அப்பரிசோதனைகளில் கீழ்க்கண்டவாறு மகசூல் கிடைத்துள்ளது.

| பயிரின் பெயர். | சராசரி எக்டேர் மகசூல். (கிலோ) |
|---|---|
| சூரிய காந்தி | 820 |
| நிலக்கடலை | 400 |
| எள் | 270 |

சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் மகசூல் திறனை ஒப்பிட்டறிய, கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1972-ஆம் ஆண்டு கோடைப்பட்டத்தில் (ஏப்ரல் முதல் ஜுன் வரை) ஒவ்வொன்றும் 200 சதுர மீட்டர் பரப்புள்ள 3 தனிகளில் முறையே கோவில்பட்டி—1 சூரிய காந்தி (இ. சி. 68414 என்ற ரஷிய ரகம்), பொள்ளாச்சி—1 நிலக்கடலை, திண்டிவனம்—3 எள் ஆகியவைகள் இறைவையாகப் பயிரிடப்பட்டன. அம்மூன்று எண்ணெய் வித்துப் பயிர்களும் ஒரே நாளில் அதாவது 3–4–1972 அன்று விதைக்கப்பட்டன. ஆனால் சூரிய காந்தி 15–6–1792 அன்றும், எள் 27–6–1972 அன்றும், நிலக்கடலை 19–7–1972 அன்றும் அறுவடைக்கு வந்துள்ளன.

அப்பரிசோதனையில் கீழ்க் கண்டவாறு மகசூல் கிடைத்துள்ளன.

| பயிரின் பெயர் | எக்டேர் மகசூல். (கிலோ) |
|---|---|
| கோவில்பட்டி—1 சூரியகாந்தி .. | 2,665 |
| பொள்ளாச்சி—1 நிலக்கடலை .. | 1,390 |
| திண்டிவனம்—3 எள் .. .. | 350 |

அப்பரிசோதனையின் முடிவுகள் கீழே அட்டவணை–1-ல் விளக்கப்பட்டுள்ளன.

அட்டவணை—1.

சூரியகாந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் ஒப்பியல் பரிசோதனை முடிவுகள்

| பயிரின் பெயர் (1) | வயது (நாட்கள்) (2) | கணக்கிடப்பட்ட எக்டேர் மகசூல் (கிலோ) (3) | எக்டேர் மகசூலிலிருந்து கிடைக்கக்கூடிய எண்ணெய் அளவு (கிலோ) (4) | ஒரு எக்டேரிலிருந்து ஒரு நாளைக்கு உற்பத்தியாகக் கூடிய எண்ணெய் அளவு (கிலோ) (5) | எக்டேருக்கு சாகுபடிச் செலவு (ரூபாய்) (6) | எக்டேருக்கு மொத்த வருவாய் (ரூபாய்) (7) | எக்டேருக்கு நிகர வருவாய் (ரூபாய்) (8) |
|---|---|---|---|---|---|---|---|
| கோவில்பட்டி—1 சூரிய காந்தி .. .. | 73 | 2,665 | 1,252 | 17.2 | 925 | 3,998 | 3,073 |
| பொள்ளாச்சி—1 நிலக்கடலை .. .. | 107 | 1,390 | 528 | 4.9 | 1,178 | 2,800 | 1,622 |
| திண்டிவனம்—3 எள் .. .. | 85 | 350 | 182 | 2.1 | 655 | 1,050 | 395 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விவரங்களிலிருந்து சூரிய காந்தியே நிலக்கடலை, எள் ஆகியவற்றை விட அதிக மகசூலும், அதிக இலாபமும் அளிக்கக் கூடியது என்பது புலனாகின்றது.

சூரிய காந்தி விதைகளிலிருந்து 47 சதமும், நிலக்கடலையிலிருந்து (மேல் தோலுடன்) 50.6 சதமும், எள்ளிலிருந்து 52 சதமும் எண்ணெய் கிடைக்கும் என்ற மதிப்பில் கணக்கிட்டால் ஒரு எக்டேர் நிலத்திலிருந்து ஒரு நாளில் சூரியகாந்தி, நிலக் கடலை, எள் ஆகியவற்றின் மூலம் முறையே 17.2 கிலோ, 4.9 கிலோ, 2.1 கிலோ எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும் என்பது புலனாகியுள்ளது.

கோவில்பட்டி—1 சூரியகாந்தி 73 நாட்களிலும், பொள்ளாச்சி—1 நிலக்கடலை 107 நாட்களிலும், திண்டிவனம்—3 எள் 85 நாட்களிலும் அறுவடைக்கு வந்துள்ளதால், சூரிய காந்தியே மிகவும் குறுகிய காலப் பயிர் என்பதும் தெளிவாகியுள்ளது.

அப்பரிசோதனையிலிருந்து சூரிய காந்தியே இறைவையில் குறிப்பிட்ட பரப்பில், குறிப்பிட்ட காலத்தில் அதிக மகசூல் அளிக்க வல்லது என்பதும், சூரிய காந்தியை வெகுவிரைவாகப் பெரும்பரப்பில் சாகுபடிக்குக் கொண்டு வருவதே தமிழ் நாட்டின் எண்ணெய் உற்பத்தியை விரைந்து பெருக்கிட உதவும் என்பதும் நன்கு தெளிவாகியுள்ளன.

**எண்ணெய் தரும் திறன்!**

சூரிய காந்தி விதைகளின் எண்ணெய் தரும் திறனை ஆராய்வதற்கான பரிசோதனையும் கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற் கொள்ளப்பெற்றன. ஒரே அளவு எடையுள்ள சூரிய காந்தி விதைகள், நிலக்கடலை விதைகள், எள் விதைகள் ஆகியவைகளைத் தனித்தனியே 'ரோட்டரி' இயந்திரத்தில் (Rotary oil crushing unit) இட்டு எண்ணெய் எடுத்து அவைகளின் எண்ணெய் தரும் திறன் ஆராயப்பட்டது. ஒரே அளவு எடையின் அடிப்படையில் 'ரோட்டரி' இயந்திரத்தில் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவை முறையே 33 சதம், 40 சதம், 36 சதம்என்றஅளவில் எண்ணெய் கொடுத்துள்ளன. இந்த அடிப்படையில் ஒரு எக்டேர் பரப்பிலிருந்து கிடைக்கும் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் மகசூல்களிலிருந்து கிடைக்கும் எண்ணெய் பின்கண்ட அளவில் இருக்கின்றன.

| எண்ணெய் வித்தின் பெயர் | ஒரு எக்டேர் மகசூலில் இருந்து கிடைக்கும் எண்ணெய் (கிலோ) |
|---|---|
| சூரிய காந்தி .. | 879 |
| நிலக்கடலை .. | 417 |
| எள் .. .. | 126 |

'ரோட்டரி' இயந்திரத்தில் சூரிய காந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறன் நிலக்கடலையைவிட 7 சதம் குறை

**சூரியகாந்தி விதையின் அளவைகள்**

| | |
|---|---|
| 1 கிலோ விதைகள் .. .. | 2·22 லிட்டர். |
| 1 கிலோ விதைகள் .. .. | 1·22 பட்டணம்படி. |
| 1 லிட்டர் விதைகள் .. .. | 0·450 கிலோ. |
| 1 லிட்டர் விதைகள் .. .. | 0·54 பட்டணம்படி. |
| 1 பட்டணம்படி விதைகள் .. | 0·820 கிலோ. |
| 1 பட்டணம்படி விதைகள் .. | 1·82 லிட்டர். |

**சூரியகாந்தி எண்ணெய் அளவைகள்**

| | |
|---|---|
| 1 கிலோ எண்ணெய் .. .. | 1·12 லிட்டர். |
| 1 லிட்டர் எண்ணெய் .. .. | 0·890 கிலோ. |
| 1 லிட்டர் எண்ணெய் .. .. | 0·57 பட்டணம்படி. |
| 1 பட்டணம்படி எண்ணெய் .. | 1·75 லிட்டர். |

**சூரியகாந்தி பற்றிய அளவையை மாற்றும் முறைகள்**

| | |
|---|---|
| ஒரு பட்டணம்படி விதைகளை கிலோவாக மாற்ற .. | 0·82-ஆல் பெருக்கவும். |
| ஒரு லிட்டர் விதைகளை கிலோவாக மாற்ற .. | 0·45-ல்ஆல் பெருக்கவும். |
| ஒரு பட்டணம்படி எண்ணெய்யைக் கிலோவாக மாற்ற .. .. .. | 1·557-ஆல் பெருக்கவும். |
| ஒரு லிட்டர் எண்ணெய்யைக் கிலோவாக மாற்ற .. | 0·89-ஆல் பெருக்கவும். |
| ஒரு கிலோ எண்ணெய்யை லிட்டராக மாற்ற .. | 1·12-ஆல் பெருக்கவும். |
| ஒரு கிலோ எண்ணெய்யை பட்டணம்படியாக மாற்ற.. | 0·64-ஆல் பெருக்கவும். |

வாகவும், எள்ளை விட 3 சதம் குறைவாகவும் இருந்தபோதிலும், அதிக மகசூல் கொடுப்பதால், எக்டேர் மகசூலில்இருந்து கிடைக்கும் எண்ணெய் யின் அளவு சூரியகாந்தி யிலேயே அதிகமாக உள்ளது.

இப்பரிசோதனையில் நிலக் கடலை பருப்புகளாகவும், (மேல்தோல் நீக்கியது), சூரிய காந்தி விதைகளா கவும் (மேல் தோல் நீக்கப் படாதது) எண்ணெய் எடுக்கப் பயன் படுத்தப் பட்டுள்ளதால் சூரிய காந்தியும், நிலக்கடலை யும் சமமான அடிப் படையில் ஒப்பிடப்பட வில்லை என்பது குறிப் பிடத் தக்கதாகும். சூரிய காந்தி விதைகளில் உள்ள மேல் தோலை (உமி) நீக்கினால் 75 சதம் பருப்புகள் கிடைக்கக் கூடும். எனவே, சூரிய காந்தி எண்ணெய் எடுக்க, சூரிய காந்தி விதைகளுக்குப் பதிலாக, மேல் தோல் நீக்கப்பட்ட சூரிய காந் திப் பருப்புகளைப் பயன்படுத்தி ஞல் சூரிய காந்தியின் எண் ணெய் கொடுக்கும் திறன் நிலக் கடலையைவிட நிச்சயமாக அதிக மாக இருக்கும் என்பதுதிண்ணம்!

சூரிய காந்தி விதைகளின் மேல் தோலை அகற்ருமல் அப் படியே எண்ணெய் எடுக்கப் பயன்படுத்திஞலும் நிலக்கடலை, எள் ஆகியவற்றைவிட குறுகிய காலத்தில் அதிக மகசூல் அளிக் கும் திறன் பெற்றிருப்பதால்— குறிப்பிட்ட பரப்பில், குறிப் பிட்ட காலத்தில் சூரிய காந் தியே அதிக எண்ணெய் கொடுக் கிறது என்பதும் நன்கு தெளி வாகிறது.

ஆனல் நமது உழவர் பெரு மக்கள் நிலக்கடலை அல்லது எள் அல்லது சூரிய காந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறனை கொள்ளளவு அடிப்படையி லேயே ( Volume Basis ) ஒப் பிட்டு, சிறந்தது எது என முடிவு செய்யும் பழக்கம் உடையவர்கள்! கொள்ளளவு அடிப்படையில் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் எண்ணெய் கொடுக்கும் திறன் முறையே 17 சதம், 28 சதம், 25 சதம் அளவில் உள்ளன.



அதாவது 100 படி சூரிய காந்தி விதையிலிருந்து 17 படி எண் ணெய், 100 படி நிலக்கடலைப் பருப்பிலிருந்து 28படி எண்ணெய், 100 படி எள்ளிலிருந்து 25 படி எண்ணெய் கிடைக்கக்கூடும். இந்த அடிப்படையில் கணக்கிட் டால், ஒரு எக்டேர் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றி லிருந்து பின்கண்ட அளவு எண் ணெய் கிடைக்கும்.

| | | படி |
|---|---|---|
| சூரியகாந்தி | .. | 562.5 |
| நிலக்கடலை | .. | 266.8 |
| எள் .. | .. | 80.6 |

ஆகவே கொள்ளளவு அடிப் படையிலும் சூரிய காந்தியே ஒரு எக்டேர் பரப்பில் அதிக எண்ணெய் கொடுக்க வல்லது என்பது தெளிவாகிறது.

சூரிய காந்தி விதைகளின் மேல் தோலை (உமி) நீக்கிவிட்டு பருப்புகளை மட்டும் 'ரோட்டரி' ஆலையில் இட்டு எண்ணெய் எடுத்தால், சூரிய காந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறன் மேலும் அதிகமாக இருக்கும். சில வியாபாரிகள் நெல் அரைக் கும் இயந்திரத்திலேயே சூரிய காந்தி விதைகளை இட்டுத் தகுந்த வாறு சரி கட்டி இயந்திரத்தை இயக்கி, சூரிய காந்தி விதை களின் மேல் தோலை நீக்கி விட்டுப் பிறகு ரோட்டரி ஆலை யில் இட்டு எண்ணெய் எடுத் துள்ளதாகவும் தெரியவரு கிறது. நாடெங்கிலும் ஏராள மான நெல் அரைக்கும் இயந் திரங்கள் உள்ளதால் நெல் அரைக்கும் இயந் திரத்திலேயே சூரிய காந்தி விதைகளின் மேல் தோலை அகற்றும் பணி வெற்றிகரமாக முடியு மாஞல், அது உழவர் பெருமக்களுக்குப் பேரு தவியாக இருக்கும். எனவே, இவ்வகையிலும் ஆராய்ச்சிகள் நடை பெற்று வருகின்றன.

## சூரிய காந்தி சாகுபடி குறிப்புகள்

ரகம்: தமிழ்நாட்டில் சாகு செய்வதற்கு 'கோவில் பட்டி-1' ( K.1 ) எனப்படும் இ. சி. 68414 ( E.C. 68414 ) என்ற ரஷ்ய நாட்டு ரகமே சிறந்தது. இதன் வயது இறைவையில் 75 முதல் 85 நாட் களாகவும், மாஞவாரியில் 80 முதல் 90 நாட்களாகவும் உள்ளன. கோவை மாவட்டத்தில் இ.சி. 68415 என்ற ரஷ்ய ரகம் நல்ல பலன் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

மண் : கெட்டியான 'கரிசல் (களி) மண்ணிலிருந்து, மிருது வான மண் வரை எந்த மண்ணி லும் சூரியகாந்தி நன்கு பயிராகி நல்ல மகசூல் தரும். தண்ணீர் வடியாமல் தேங்கி நிற்கக் கூடிய நிலங்களும், பி எச். 8.5க்கு மேற்பட்ட களர் நிலங் களும், அமில நிலங்களும் சூரிய காந்தி பயிரிடுவதற்கு ஏற்ற தல்ல! ஈரம் காக்கும் கரிசல் நிலங்கள் (தென் மாவட்ட நிலங் கள்) மழை குறைவாக இருந் தாலும் சூரிய காந்தி பயிரிட ஏற்றதாக உள்ளன.

பருவம் : இறைவைப் பயி ராகச் சூரிய காந்தியை ஆண்டு முழுவதும் எப்பொழுது வேண்டு மாஞலும் பயிரிடலாம். இறை வையில் அதிக மகசூல் பெற கீழ்க் கண்ட இரு பட்டங்களும் சிறந்தவை.

1. ஆனி, ஆடிப்பட்டம், (ஜூன்-ஜூலை முதல் ஆகஸ்டு-செப் டம்பர் வரை).

2. மாசிப்பட்டம் (பிப்ரவரி மார்ச்சு முதல் மே-ஜூன் வரை) நெல் அறுவடைக்குப் பிறகு விதைக்க ஏற்றது. சித்திரைப் பட்டத்திலும் (ஏப்ரல், மே) இறைவையில் பயிரிடலாம்.



மாஞவாரியாகச் செம்மண் நிலத்தில் ஆடிப் பட்டத்திலும் (ஜூலை, ஆகஸ்ட்), கரிசல் நிலத்தில் புரட்டாசிப் பட்டத்திலும் (செப் டம்பர்-அக்டோபர்) புன்செய் நிலங்களில் பயிரிடலாம்.

பூப் பூக்கும் காலத்திலும், மக ரந்தச் சேர்க்கை நடைபெறும் காலத்திலும் சூரியகாந்தி மழை யிஞல் பாதிக்கப்படாமல் இருக்கு மாறு திட்டமிட்டுச் சூரிய காந்தியை விதைக்க வேண்டும். ஏனெனில், மழையில் மகரந்தப் பொடிகள் கொட்டி விடுவது டன், மகரந்தச் சேர்க்கையும் நடைபெருது. அதஞல் சூரிய காந்திப் பூவில் எதிர்பார்க்கும் அளவில் விதைகள் உருவாகாமல், வெற்றிடமாக இருந்துவிடும்.

நிலக்கடலை, பருத்தி, கரும்பு, மரவள்ளி, மஞ்சள் ஆகியவை பயிரிடும் காலங்களில் ஊடு பயிராகவும் சூரிய காந்தியைப் பயிரிடலாம்.

நிலம் தயாரித்தல்:—ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு உர மிட்டு, நிலத்தை 3 அல்லது 4 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். இறைவைப் பயி ருக்கு 30 சென்டி மீட்டர் ( 1 அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் நிலத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இரசாயன உரமிடுதல் : மாஞ வாரிப் பயிருக்கு ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்து அளிக்க 40 கிலோ அமோ னியம் சல்பேட் அல்லது 18.0 கிலோ யூரியா, 100 கிலோ சூப்பர் பாஸ்பேட் 26 கிலோ மியூரியேட் ஆப்பொட்டாஷ் ஆகியஉரங்களைக் கடைசி உழவில் அல்லது விதைப்பதற்கு முன் தூவி விடவேண்டும்.

இறைவைப் பயிருக்கு ஏக்க ருக்கு 16 கிலோ தழைச்சத்து 32 கிலோ மணிச்சத்து, 32 கிலோ சாம்பல் சத்து அளிக்க 80 கிலோ அம்மோனியம் சல் பேட் அல்லது 36 கிலோ யூரியா 200 கிலோ சூப்பர் பாஸ்பேட் 52 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களைக் கலந்து கொண்டு அதைப் பாரின் சரிவில் விதை ஊன்றும் இடத்திற்கு 2 அங்குலம் கீழாக, 2 அங்குல ஆழத்தில் (கூரிய குச்சியால் கீறிக்கொண்டு ) வரி சையாக இட்டு மண்ணல் மூட வேண்டும். அல்லது இவ் வுரங்களைக் கடைசி உழவில் இட்டுப் பிறகு பார் பிடித்துக் கொள்ளலாம்.

மேற்கூறிய உர அளவில் தழைச் சத்தில் பாதியை அடி உரமாகவும், பாதியை மேல் உர மாகவும் இட்டு நடத்தப் பெற்ற பரிசோதனைகளில் மேலுரமிடு வதால் குறிப்பிடத் தகுந்த அள வுக்கு மகசூல் அதிகம் கிடைக்க வில்லை. எனவே முழு அளவு தழைச் சத்தையும் அடியுர மாகவே போடுமாறு பரிந் துரைக்கப் பட்டுள்ளது. ஆயி னும் ஆர்வமுள்ள உழவர் பெரு மக்கள் பாதி தழைச் சத்தைக் களையெடுக்கும் போது மேலுர மாக இட்டுச் சாகுபடி செய்து பார்க்கலாம்.

விதை அளவு : ஏக்கருக்கு 4 கிலோ விதைகளை விதைக்க வேண்டும்.

விதையுடன் மருந்து கலத்தல் : ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'பிராசிகால்' அல்லது 'கேப் டான்' மருந்து கலந்து 3 மணி



நேரம் அப்படியே வைத்திருந்து பிறகு விதைத்தால், சிறு செடி கள் 'தண்டு அழுகல்' நோயி ஞல் அழுகிப் போவதைத் தடுக் கலாம்.

விதைப்பும் இடை வெளியும் : புன்செய் நிலங்களில் விதைகளைத் தூவி விட்டு, ஏர் ஓட்டி விடு வதும், ஏர் ஓட்டிச் சால்களில் விதைப்பதும் தவறு. வரிசை வரிசையாக விதைகளை ஊன்று வதே சிறந்த முறையாகும், மழைக்குப் பின் தகுந்த ஈரம் இருக்கும் போது உரமிட்டு உழுத பிறகு, வரிசைக்கு வரிசை 30 சென்டி மீட்டரும் (1 அடி), வரிசையில் குழிக்குக் குழி 15 சென்டிமீட்டரும் (6 அங்குலம்) இடைவெளிவிட்டு, குழிக்கு ஒரு விதை வீதம் ஊன்ற வேண்டும். விதைகளை 2.5 சென்டி மீட்டர் (1 அங்குலம்) ஆழத்தில் ஊன்ற வேண்டும். எக்காரணம் கொண் டும் 5 சென்டி மீட்டர் ( 2 அங்குலம்) ஆழத்திற்கு மேல் ஊன்றக் கூடாது. மண்ணில் ஈரம் குறைவாக இருந்தால் முதல் நாள் இரவில் விதைகளை ஈர மண்ணுல் மூடி வைத்து, மறு நாள் விதைக்க வேண்டும்.

இறைவையாக விதைக்கும் பொழுது ஒரு அடிக்கு ஒரு பார் வீதம் அமைக்கப்பட்டுள்ள பார் களில் ஒரு பக்கச்சரிவில் குழிக் குக்குழி 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடை வெளி விட்டு, குழிக்கு ஒரு விதை வீதம், ஒரு அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். விதைகளை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண் டும். விதைத்த 4-ஆம் நாள் இரண்டாம் முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

களை எடுத்தல் : விதைத்த 15 முதல் 20 நாட்களில் முதல் களை யும், 30 முதல் 40 நாட்களில் இரண்டாவது களையும் எடுக்க வேண்டும். பார்களில் விதைத் திருந்தால் இரண்டாவது களை எடுக்கும் பொழுது பார்களைக் கொத்தி விட்டு மண் அணைக்க வேண்டும். சூரிய காந்தி சாகு படி செய்துள்ள நிலத்தில் களை களை அழிக்க களைக்கொல்லிகளைக் உபயோகிக்க வேண்டாம்.

நீர்ப்பாசனம் :— இறைவைச் சாகுபடிக்கு விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்சவும். பிறகு 4-ம் நாள் இரண்டாம் முறைத் தண்ணீர் பாய்ச்சவும். அதன் பின் நிலத்தின் தன்மைக் கேற்ப 12 முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சவும். பூப்பூக்கும் பொழுது நன்ருகத் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம். அதன்பின் அதிகத் தண்ணீர் தேவையில்லை.

பயிர்ப் பாதுகாப்பு : இது வரை சூரிய காந்தியைப் பூச்சி களும், நோய்களும் அதிகம் தாக்கியதாகத் தெரியவில்லை. பல உழவர் பெருமக்கள் பூச்சி களும், நோய்களும் சூரிய காந்தியை அறவே தாக்கவில்லை என்றும் கூறுகிருர்கள். ஆயி னும், கம்பளிப் பூச்சி, புகை யிலை வெட்டுப் புழு, காவடிப் புழு, அசுவணி, பச்சைத்தத்துப் பூச்சி, பச்சை வண்டு முதலிய பூச்சிகளும், 'தண்டு அழுகல்' நோய், 'சொரி' நோய் ஆகிய நோய்களும் சூரிய காந்தியைத் தாக்கக் கூடும்.

மாஞவாரியாகப் பயிரிடும் சூரியகாந்திக்கு விதைத்த 15-வது 30-வது நாட்களில் ஏக்க ருக்கு 8 கிலோ வீதம் 'செவின்' அல்லது தயோடின் மருந்துத் தூளைத் தூவான் மூலம் தூவிஞல் பூச்சிகளைக் கட்டுப் படுத்தும். பூப் பூக்கும் சமயத்தில் பூச்சி கள் காணப்பட்டால் மேற் கூறிய அளவில் மருந்து தூவுதல் சிறந்தது.

இறைவையாகப் பயிரிடப்படும் சூரிய காந்தியில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த விதைத்த 15-வது 30-வது நாட்களில் ஏக்கருக்குக் கீழ்க்கண்ட மருந்தில் ஏதேனும் ஒன்றைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

1. தையோடான் 35 சதம் இ.சி. மருந்தில் 0.70 சதம்—200 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும், அல்லது

2. செவின் 50 சதம் மருந்தில் 0.1 சதம்—200 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும், அல்லது

3. பாரத்தியான் 50 இ.சி. மருந்தில் 0.025 சதம்— 50 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பூப் பூக்கும் பொழுது பூச்சிகள் காணப்படின் 'தயோடின்' 0.70 சத மருந்தைத் தெளிக்கலாம் அல்லது 'டிப்டிரெக்ஸ்' 95 சதம் எஸ்.பி. மருந்தில் 0.1 சதம் (100 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கலாம்.

'சொறி நோய் தாக்கினுல், ஏக்கருக்கு 8 முதல் 10 கிலோ கந்தகத் தூளைத் தூவ வேண்டும்.

'தண்டு அழுகல்' நோய் தோன்றினுல் ஏக்கருக்கு ஒரு கிலோ நனையும் செரசான் மருந்தை 1,000 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளைச் சுற்றிலும் ஊற்றி மண்ணை நனைத்தல் நல்லது.

வேறு ஏதேனும் பூச்சிகளோ நோய்களோ தோன்றினுல் வேளாண்மைத் துறை அலுவலர்களின் உதவியை நாடி, அவர்களின் பரிந்துரைக்கு ஏற்ப மருந்து தெளியுங்கள்.

(முக்கியக் குறிப்பு : மாலை வேளைகளிலேயே மருந்து தெளிக்க வேண்டும். ஏனெனில் காலை வேளைகளில் தேனீக்கள் சுறுசுறுப்பாக இயங்கி, மகரந்தச் சேர்க்கை ஏற்பட உதவிக் கொண்டிருக்கும். காலை வேளையில் மருந்து தெளித்தால், தேனீக்களின் இயக்கம் கட்டுப் படுத்தப்பட்டுவிடும். அதனுல் மகரந்தச் சேர்க்கை பூக்களில் ஏற்படாது ; விதைகள் அதிகம் தோன்ருது).

அறுவடை : சூரியகாந்தி பூக்களின் புறவிதழ்கள் காய்ந்த பிறகு, பூக்கொண்டைகளை மட்டும் அறுத்து வெய்யிலில் காய வைத்து, மணிகளைத் தட்டி எடுக்கலாம்.

மகசூல் : மேற்கூறிய முறைகளில் சாகுபடி செய்தால் மானுவாரியில் ஏக்கருக்கு 400 கிலோவுக்கும், இறைவையில் ஏக்கருக்கு 1,000 கிலோவுக்கும் குறையாமல் மகசூல் எடுக்கலாம். உயர்ந்த அளவாக மானுவாரியில் ஏக்கருக்கு 1·4 டன் வரையிலும், இறைவையில் ஏக்கருக்கு 3.5 டன் வரையிலும் மகசூல் எடுக்கலாம்.

சூரியகாந்தி விதைகளை நன்கு காய வைத்தால் அவைகளின் மேலுள்ள கறுப்புத்தோல் (உமி) விரிந்து உள்ளிருக்கும் வெண்ணிறப் பருப்பு தெரியும். வெண்ணிறப் பருப்புகளைச் செக்கிலிட்டு அல்லது 'ரோட்டரி' அல்லது 'எக்ஸ்பெல்லர்' எண்ணெய் இயந்திரங்களில் இட்டு எண்ணெய் எடுக்கலாம். சூரிய காந்தி விதைகளின் மேலுள்ள தோலை அரிசி அறைக்கும் இயந்திரம் மூலமாகவும் அகற்றலாம்.

சூரியகாந்தி விதைகளின் மேல் தோலை அகற்ருமலும் அப்படியே எண்ணெய் எடுக்கலாம். 20 கிலோ சூரிய காந்தி விதைக்கு 1 கிலோ வெல்லம் வீதம் கலந்து நாட்டுச் செக்கிலிட்டு வெகுச் சுலபமாக எண்ணெய் எடுக்கலாம்.

நிகர இலாபம் :— மானுவாரியாக சாகுபடி செய்ய ஏக்கருக்கு 190 ரூபாயும், இறைவையாகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 410 ரூபாயும் செலவு ஆகும். மானுவாரியில் குறைந்த அளவு 300 கிலோவும், இறைவையில் குறைந்த அளவு 600 கிலோவுக்கு மகசூல் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும், அவ்விதைகளைக் கிலோ 1 ரூபாய் 50 காசு வீதம் விற்பதால் மானுவாரியில் ஏக்கருக்கு 450 ரூபாயும், இறைவையில் ஏக்கருக்கு 900 ரூபாயும் மொத்த வருவாய் கிடைக்கிறது. ஆகவே, சாகுபடிச் செலவு போக மானுவாரியில் ஏக்கருக்கு 260 ரூபாயும், இறைவையில் ஏக்கருக்கு 490 ரூபாயும் நிகர இலாபம் கிடைக்கும். எண்ணெய் எடுத்து விற்ருல் இன்னும் அதிக இலாபம் பெறலாம்.

எனவே, சூரிய காந்தி பயிரிட்டுப் மிகு பயன் பெருமாறு தமிழ்நாட்டு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிருேம்.

—ஆர். எம்.

### சூரியகாந்தியின் வயதும் வளர்ச்சியும்.

| வயது நாட்கள். | வளர்ச்சிப் பருவம். | புற அமைப்பின் விவரம். |
|---|---|---|
| 1 முதல் 5 .. .. .. | முளைக்கும் பருவம் .. | 5 நாட்களுக்குள் முளைத்துவிடும். |
| 5 முதல் 20 .. .. .. | முன் வளர்ச்சிப் பருவம். | மெதுவாக வளரும். 20 நாளில் 10 அங்குல உயரம் வளர்ந்திருக்கும். 8 முதல் 10 இலைகள் இருக்கும். |
| 20 முதல் 35 .. .. .. | பின் வளர்ச்சிப் பருவம். | மிகவும் விரைவாக வளரும். இலைகள் இருதய வடிவில் அமையும். 3 அடி உயரம் வளர்ந்து விடும். 24 முதல் 30 இலைகள் இருக்கும். |
| 35 முதல் 40 .. .. .. | மொட்டுப் பருவம் .. | பூக்கொண்டைகள் தோன்றும். |
| 40 முதல் 50 .. .. | பூக்கும் பருவம் .. | பூக்கள் மலரும். |
| 50 முதல் 60 .. .. .. | மகரந்தச் சேர்க்கைப் பருவம். | மகரந்தச் சேர்க்கை நடைபெற்று முடிந்துவிடும். |
| 60 முதல் 70 .. .. | விதை உருவாகும் பருவம். | விதைகள் உருவாகி, பூக்கொண்டை நிறையும். |
| 70 முதல் 90 .. .. .. | முதிர்ச்சிப் பருவம் .. | எல்லாவிதைகளும் முதிர்ச்சி அடைந்துவிடும். இறைவையில் 75 முதல் 85 நாட்களிலும், மானுவாரியில் 80 முதல் 90 நாட்களிலும் அறுவடைக்கு வந்துவிடும். |

மேற்கூறிய பருவங்களில் மொட்டுப் பருவம் முதல் பூக்கும் பருவம் வரை சூரியகாந்திக்கு நல்ல ஈரம் தேவைப்படுகிறது. எனவே மொட்டுப் பருவத்தில் நன்கு தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம்.



795

# பெருந் தொழில்கள் மூலம் தமிழகத்தின் வளர்ச்சி வேகம்

தமிழ் நிலத்தின் தொழிற் செழுமை மேலும் வளர, நாளும் பெருக :—

*தமிழகத்தில் புதிய தொழிலாகச் சணல் ஆலைகள் அமைத்தல், தஞ்சைத் தரணியில் சணல் பயிரிடுதல் ;

*காவிரி தீரத்திலும், கடலோரப் பகுதிகளிலும் எண்ணெய் வளங்களை ஆராய முனைப்பான முயற்சிகள் ;

*தொழிற்சாலைகள் தங்களுக்கெனச் சொந்தமான மின் சார உற்பத்திச் சாலைகளை அமைத்துக்கொள்ள அனுமதித்தல் ; அனல் மின்சார—அணு மின்சார வசதிகளைப் பெருக்குதல் ;

*கரும்புச் சக்கையிலிருந்து பெரும் அளவில் காகித உற்பத்தி ;

*தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்குப் பகுதிகளில் கூட்டுத் தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் ; இந்த வகையில் பூர்வாங்க வேலைகளில் மாநில அரசினரின் தனி உதவிக்கு இடமளிக்கச் செய்தல் ;

*தொழில் ஆராய்ச்சி வசதிகளை ஊக்குவித்தல்.

என்ற வகையில் பரிந்துரைகளையும், கருத்துக்களையும் தந்திருக்கிறது. மாநிலத் திட்டக் குழு. தொழில்கள் மூலம், மாநிலத்தில் பொருளாதார மேம்பாடு காண்பதற்கு மாநிலத் திட்டக் குழுவின் செயல் அணி 12 ஆண்டுத் தொலை நோக்குத் திட்ட (1972—1984) அறிக்கையை வெளியிட்டுள்ளது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சி நிலைமை, வருங்காலத்தில் தொழிலைப் பெருக்க வாய்ப்பு வசதிகள் ஆகியன அறிக்கையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## ஒரே ஒரு தொழில்

அண்மைக் காலம் வரை பஞ்சு, நூற்பு ஆலைத் தொழில்தான் தமிழகத்தின் முக்கியமான பெருந்தொழிலாக இருந்து வந்தது. கோவையின் சுற்றுப்புறப் பகுதியில் பெருமளவிலும், சென்னை, மதுரை நகரப் பகுதிகளில் ஓரளவுக்கும் இத்தொழில் இயங்கி வந்தது. கடந்த பதினைந்து ஆண்டுகளில் பலதரப்பட்ட பெருந் தொழில்கள் வளர்ந்து, விரிவடைந்து, மேம்பட்டதன் காரணமாகத் தமிழகம் இன்று இந்தியாவில் பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிடும் போது மூன்ருவது இடத்தை வகிக்கின்றது.

உலோகம், உலோகவியல்—தொழில்கள், இரசாயனங்கள் வேளாண்மைக் கருவிகள், பண்ணை இயந்திரங்கள், இயந்திரப் பொறியியல், மின் பொறியியல் தொழில்கள், மோட்டார், ரயில் பெட்டித் தயாரிப்பு முதலிய தொழில்களில் தமிழகம் கண்டுள்ள வளர்ச்சி அற்புதம் என்று சொல்லத் தக்கதாகும்.

எடுத்துக் காட்டாகச் சொல்வதென்ருல் 1970 டிசம்பர் வரை பெருந்தொழில்கள் தொடங்குவதற்காகத் தரப்பட்டுள்ள உரிமங்களைக் குறிப்பிடலாம். நூல்-நெசவாலைகள் தவிர்த்து மற்ற தொழில்கள் தொடங்க, முதல் திட்டக் காலத்திலிருந்து 1970 டிசம்பர் வரை மொத்தம் 787 உரிமங்களே வழங்கப்பட்டன. இவற்றின் வகை பின்வருமாறு : இயந்திரப் பொறியியல் தொழில்கள் 232 ; உலோகவியல் தொழில்கள் 121 ; இரசாயனங்கள், உரத் தொழில்கள் 106 ; வேளாண்மைச் சார்பு இயந்திரத் தொழில்கள் 100 ; மற்றும் காகிதம், சோப்பு, சிமிட்டி, கட்டட மரம் போன்றவற்றில் 228


அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்புத் தொழிற்சாலை

தொழில்கள். மாநிலத்தின் தொழில் வளப்பெருக்கத்துக்குத் தனியார் துறை, பொதுத் துறை, இரண்டுமே நல்ல முறையில் உதவியிருக்கின்றன.

### சர்க்கரை நாலரை மடங்கு

1956-க்கும் 1961-க்கும் இடைப்பட்ட காலத்தில் சிறப்பான வளர்ச்சியைக் காட்டியுள்ள சில முக்கியத் தொழில்கள் பின்வருமாறு :—

**சிமிட்டி**:—இதன் உற்பத்தி 6.93 இலட்சம் டன்னிலிருந்து 27.99 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது.

**சர்க்கரை**:—உற்பத்தி 64,000 டன்னிலிருந்து 2.99 இலட்சம் டன்னுக அதிகரித்துள்ளது.

**மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர்**:—உற்பத்தி 1,130 என்ற அளவிலிருந்து 5,000 என்ற அளவைக் கடந்துள்ளது.

**சைக்கிள்**:—1.30 இலட்சத்திலிருந்து 4.5 இலட்சமாக உயர்ந்தது.

**மோட்டார் டயர்கள்**:—1.04 இலட்சம் டயர்களிலிருந்து 9 இலட்சம் டயர்கள் என்ற அளவுக்கு உயர்ந்தது.

அண்மைக் காலத் தொழில் அரங்கில் புதிய உற்பத்திப் பொருள் வகையில் குறிப்பிடத் தக்கவை: டிராக்டர்கள், காகிதம், உருக்கு இரும்பு வார்ப்புகள், குழாய்கள், பிளாஸ்டிக் பொருட்கள், மோட்டார் சைக்கிள் டயர்கள், டியூப்கள், மின்சாரக் கருவிகள், மின் பொருட்கள் முதலியன. அண்மைக் காலத்தின் புதிய தொழில்களில் மேட்டூர் இரசாயன, அலுமினியத் தொழில்கள் ; சென்னையிலும் சுற்றுப் புறப் பகுதிகளிலும், மோட்டார், மோட்டார் உறுப்புத் தொழில்கள் ; வார்ப்படங்கள், கோவை பகுதியின் மின்சார மோட்டார்த் தொழில் முதலியவை குறிப்பிடத் தக்கவையாகும்.

### அரசின் முதலீடுகள்

மாநில அரசுத் துறையில் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நான்காம் திட்டக் காலத்தில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மூன்றும் திட்டக் காலத்தில் இவ்வகையில் மொத்தச் செலவு ரூ. 1.60 கோடிதான். ஆனல், நான்காம் திட்டக் காலத்தில் இவ்வகையில் செலவு சுமார் ரூ. 17.45 கோடியாகும். பெருந் தொழில்களை அரசாங்கமே மேற்கொண்டு நடத்த முற்பட்டதே இதற்குக் காரணம் என்பது குறிப்பிடத் தக்கது. அரக்கோணத்தில் தொடர் வார்ப்பு உருக்குத் தொழிற்சாலையின் முதல் கட்ட வேலை முடிவுற்றுள்ளது. இதற்குச் செலவு ரூ. 8 கோடியாகும். இதன் உற்பத்தி அளவினை இரட்டிப்பாக்க—ஒரு இலட்சம்டன் அளவுக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆலங்குளம் சிமிட்டித் தொழிற்சாலை இப்போது ஒரு இலட்சம் டன் உற்பத்தித் திறனுடன் செயல்பட்டு வருகின்றது. இதற்கு முதலீட்டுச் செலவு இது வரை 4 கோடி ரூபாய். இந்தத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 2 இலட்சம் டன்னுகவும் பின்னர் 4 இலட்சம் டன்னுகவும் உயர்த்தப்படும்.

நலிவுற்ற ஆலைகளை மேற்கொண்டு அவற்றைச் சீரமைத்து வரும் நிறுவனம் தனது பணியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. திட்ட ஒதுக்கீடான ரூ. 2 கோடி போதுமானதாக இல்லை என்று தெரிய வந்துள்ளது. நடைமுறையில் செலவு ரூ. 2.15 கோடி ஆகலாம். உப்பு சார்ந்த தொழில்கள், ஸ்பாஞ்ச் இரும்புத் தொழிற்சாலை, எந்திரக் கருவிகள் தொழிற்சாலை முதலியன அமைப்பதில் பெரும் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றாலும் கணிசமான அளவில் ஆரம்ப வேலைகள் நடந்துள்ளன.

தூத்துக்குடியில் பெட்ரோ-கெமிக்கல் தொழில் மையம் ஓர் அரும்பெரும் முயற்சியாகும். இதில் பிரம்மாண்டமான இரசாயன உரத் தொழிற்சாலை தொடக்கமாகிறது. அரசினர்-தனியார் கூட்டு முயற்சியான இத்திட்டத்தில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ( TIDCO ) பெரும்பங்கு கொண்டுள்ளது. மொத்தம் ரூ. 73·5 கோடி செலவு ஆகும். இத்தொழில் மையம் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இயங்கத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சேலம் உருக்காலை நிலை

சேலம் உருக்காலைத் திட்டத்துக்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மத்திய அரசு, மத்திய அரசின் தொழில் துறையின் கீழ் இதனை மேற்கொண்டிருப்பதால், ஒதுக்கப்பட்ட பணத்தில் மிகப் பெரும் பாகம் செலவிடப்படாமலேயே இருக்கிறது. குறிப்பாகச் சொல்லுமிடத்து, நான்காம் திட்டக் காலத்தில் அரசினர் – தனியார் கூட்டுத் தொழில் முயற்சிகள் நல்ல முறையில் தொடங்கியுள்ளன. மாநில அரசு, சொந்தமாகத் தொழில்களைத் தொடங்கியிருப்பதன் மூலம், தொழில் வளர்ச்சிப் பணியில் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அரசினர் தொழில் ஊக்குவிப்பு நிறுவனம் (State Industries Production Corporation) ஆகியவை பல்வேறு தொழில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்து வைத்துள்ளன. வரும் ஆண்டுகளில் அவை செயல்படுத்தப்படும். மாநிலத்தில் பின்னடைந்த பகுதிகளில் புதுத் தொழில்கள் தொடங்க அரசினர் தொழில்

## அடுத்த இதழில்

* புதிய தலைமுறை உருவாகிறது !
  —நரிக்குறவர்கள் சிறப்புப் பேட்டி
* பென்சில் வரலாறு
* குருதிக் கொதிப்பு
* அலைகள் (கவிதை)



ஊக்குவிப்பு நிறுவனம் சிறப்பான முறையில் உதவி வருகின்றது.

### மத்திய அரசுத் துறைத் தொழில்கள்

தமிழகத்தில் மத்திய அரசுத் தொழில் நிறுவனங்களில் முதலீடு 1969–70-ல் ரூ. 377 கோடி ஆகும். இந்தத் தொழில்களில் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி அளவு சுமார் 90 கோடி ரூபாய். சுமார் 50,000 பேர்கள் இவற்றில் வேலை செய்கிறார்கள். இந்தத் தொழில் நிறுவனங்கள் வருமாறு :—

1. நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்ட நிறுவனம் ;

2. சென்னை, பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலை ;

3. சென்னை, நந்தம்பாக்கம் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை ;

4. சென்னை, கிண்டி இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை ;

5. உதகையில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி நிறுவனம் ;

6. திருச்சி, திருவெறும்பூர் உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை ;

7. மணலியில் உள்ள இரசாயன உரத் தொழிற்சாலை ;

8. மணலியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை (Madras Refinors)

9. சென்னை, ஆவடியில் உள்ள டாங்கித் தொழிற்சாலை (Heavy Vehicle Factory)

10. திருச்சியில் உள்ள துப்பாக்கிக் கருவிகள் தொழிற்சாலை;

11. சென்னை, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்.

மத்திய அரசுத் துறைத் தொழில்கள், வட்டாரப் பொருளாதார வளத்தை வலுப்படுத்துவதில் உதவியாக இருக்கின்றன. சில நிறுவனங்கள் தங்கள் பணிகளை நல்ல முறையில் விரிவுபடுத்தியுள்ளன. திருச்சி உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை தனது உற்பத்தியைச் சிறப்பான முறையில் பெருக்கியுள்ளது. புதிய தேவைகளுக்கேற்பப் பெரிய அளவிலான கொதிகலன்களைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை

### இடையூறுகள் நீங்குகின்றன!

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டம், தொழில் நுட்பச் சிக்கல் மற்றும் பல இடையூறுகள் காரணமாக, அனல் மின்சார அமைப்பையும், இரசாயன உர உற்பத்தி வசதிகளையும், முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றாலும், மின்சார உற்பத்தியில் இத்திட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. அதிக அளவில் மின்விசை, இரசாயன உரங்கள், பழுப்பு நிலக்கரிக் கட்டிகள் உற்பத்திக்காகப் பழுப்பு நிலக்கரி எடுக்கும் அளவை அதிகரிப்பது மிகஅவசியமாக இருக்கிறது. அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை, போட்டோ பிலிம் தொழிற்சாலை ஆகிய இரண்டும் தத்தம் முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்தியாகவில்லை. இவ்வகையில் இருந்த தொழில் நுட்பச் சங்கடங்கள் படிப்படியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன.

### ரயில்பெட்டி ஏற்றுமதி

ரயில்பெட்டித் தொழிற்சாலை சிறந்த பணியாற்றுகின்றது. பல்வேறு வகை ரயில் பெட்டிகளின் தேவை அதிகரித்து வருவதையொட்டியும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியின் காரணமாகவும், உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகின்றது. மணலி பெட்ரோ கெமிகல் தொழில் மையப் பணிகளில் அண்மைக் காலத்தில் சீரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திறம்படச் செயல்பட்டு வருகின்றது. இடையூறுகளைக் களையவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பல விரிவினை வேலைகளை மேற்கொண்டுள்ளது. மணலி தொழில் மையத்தில் இரசாயன உர உற்பத்தி 1971 நவம்பரில் தொடங்கியது. இதன் உற்பத்தி அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

ஆவடி டாங்கித் தொழிற்சாலை இலக்கு விகிதப்படியாக டாங்கிகளைத் தயாரித்து வருகின்றது. வேறு வகைக் கருவிகளை இதில் தயாரிக்கவும் திட்டம் உள்ளது. திருச்சி துப்பாக்கிக் கருவிகள் தொழிற்சாலை நாட்டுப் பாதுகாப்புக்குத் தேவையான கருவிகளைத் தயாரித்து வழங்கி வருகின்றது.

பல்வேறு முனைகளிலும் வளர்ச்சிப் பணிகளின் விளைவாக, அனைத்திந்தியப் பொருள் உற்பத்தி அளவில் தமிழகத்தின் பங்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இருக்கின்றது. தமிழகத்தில் சில தொழில்கள், நல்ல வலிமையும், வளர்ச்சியும் பெற்று வருங் காலத்தில் வேகமான வளர்ச்சிக்கு வழி வகுத்திருக்கின்றன.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் இந்த வேகத்தை நிலை நிறுத்திக் கொள்ளுமானல், இதனுடைய உற்பத்திச் சக்திகள் வளர்ந்து, வட்டாரங்களுக்கிடையே மட்டுமின்றித் தேசிய அளவிலும் தமிழகத்தின் சாதனைகள் எடுத்துக்காட்டாக விளங்கும்.

### வருங்காலத் திட்டங்கள்

வருங்காலத்தில் தொழில் வளத்தை மேலும் பெருக்குவதற்குப் பொறுத்தவரை, விவசாயச் சார்பான தொழில்களின் விரிவினையிலும் பொருள் பதனத் தொழில்களிலும் முக்கியக் கவனம் செலுத்துவதன் அவசியத்தைத் தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்ட அறிக்கை

வலியுறுத்துகிறது. கன இரசாயனங்கள், பெட்ரோ கெமிகல், பொறியியல், மின் பொறியியல், உலோகவியல் தொழில்கள், நமது முன்னேற்றத்துக்குத் தவிர்க்க இயலாத தேவைகளாகும். சர்க்கரை, நூற்பு நெசவு ஆலைகள், காகிதம், கனிப்பொருட்களைச் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றிலும் வளர்ச்சி வேகம் அதிகரிக்க வேண்டும்.

மாநிலத்தில் பாசன வளங்களை மிகப் பெருமளவுக்குப் பயன்படுத்தியாகிவிட்டது. அவ்வகையில் விரிவிளைப் பணிகளுக்கு அதிகமான இடம் இல்லை. பாசன வசதியைப் பெருக்க மாநிலங்களுக்கிடையேயான முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டு, பலன் காண்பதற்குச் சிறிது காலமாகலாம். நமது விவசாய உற்பத்தி முறையையே கூட மாற்றி அமைத்துக்கொள்ளும்படி நேரலாம். வாணிபப் பயிர்கள் உற்பத்தியை அதிகரிக்கும் வழியிலும் விவசாயச் சார்புத் தொழில்களை மேலும் பெருக்கும் முறையிலும் மாற்றங்கள் தேவைப்படும். உப்பு, மாக்னசைட், இரும்புக் கனிப் பொருட்கள் ஆகியவைகளை வெற்றிகரமாகப் பயன்படுத்துவது அவசியமாகும். காவிரி தீரத்திலும் கரையோரப் பகுதிகளிலும் எண்ணெய் வளங்களைக் கண்டறியவும், பாக்சைட் மற்றும் இரும்பு அல்லாத உலோகப் படிவங்களைக் கண்டு பிடிக்கவும், முனைப்பான முயற்சிகள் அவசியம் என்றும், தொலை நோக்குத் திட்ட அறிக்கை எடுத்துரைத்திருக்கிறது. கரும்புச் சக்கை போன்ற கச்சாப் பொருட்களை இன்னும் பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளும் அவசியமாகின்றன. கரும்புச் சக்கை மூலம் காகித உற்பத்திக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது.

### ஊக்கமும் உதவியும்

தொழில் முனைவர்களின் ஆர்வம், தொழில் நுட்பத்திறன், நன்கு ஆய்ந்து முடிவு செய்யப்பட்ட கூட்டுத் தொழில் திட்டங்கள் இவற்றின் மூலம் மாநில அளவிலும் வட்டார அளவிலும் தென்கிழக்குஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளின் பகுதிகளிலும் சிறந்த முன்னேற்றம் எய்த இயலும் என்றும், செயலணியின் அறிக்கை குறிப்பிடுகிறது.

பன்னிரண்டு ஆண்டுக் காலத்துக்குத் தொழில் வளர்ச்சிக்கான திட்டமிடும் போது, மாநிலத்தின் பொருளாதாரத் தேவைகள் அதிகரிப்பதை மட்டும் கணக்கில் கொள்ளாமல், கிடைக்கக் கூடிய வாய்ப்புகளையும் மனத்தில் இருத்தவேண்டும். சர்க்கரை, சிமிட்டி, வனஸ்பதி, இரசாயன உரங்கள்போன்றவற்றின் தேவை வருங்காலத்தில் மிகவும் அதிகரிக்கும். இந்தத் தேவை எந்த அளவுக்கு வளரும் என்பதை இப்போதுள்ள நிலையில் மதிப்பிட்டுச் சொல்வது கூட எளிதல்ல. இந்தத் தொழில் வசதிகளைப் படைத்துள்ள மாநிலங்கள் உபரியான பொருட்களை மற்ற மாநிலங்களுக்குத் தந்துதவலாம். வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம். இந்தக் கண்ணோட்டத்தில் தான் சர்க்கரை ஆலைத் தொழிலை மிகப் பெருமளவில் மேம்படுத்துவது அவசியமாகின்றது. நெசவாலைத் தொழில்கள் முன்னணி இடத்தைத் தொடர்ந்து வகித்து வருவதும் இக் கண்ணோட்டத்தில் இன்றியமையாததாகும். மோட்டார்த் தொழிலிலும் இதே வகையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

திட்டக் குழுவின் செயல் அணி தனது தனிப் பரிந்துரைகளில் மேலும் குறிப்பிட்டிருப்பது பின்வருமாறு.—

நெசவாலைகள் சீரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்த தனி வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

மின்சார வெட்டு முதலியவைகளால் பொருள் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தொழிற்சாலைகள், சொந்தமாக மின்சார உற்பத்தி அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். நாட்டில் அனல் மின்சாரம்—அணுமின்சார வசதிகளைப் பெருக்கவேண்டும்.

தமிழகத்தில் சணல் ஆலைகளை ஏற்படுத்துவதற்கு உள்ள வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியம். தஞ்சை மாவட்டத்திலும் மற்றப் பகுதிகளிலும் சணல் பயிரிட வகை செய்வது பற்றி ஆராய்தல் வேண்டும்.

உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிக்கும் வகையிலும், தொழிற் பணிகளில் அனாவசியத் தலையீடுகளைத் தடுக்கும் வண்ணமும் தொழிலாளர் நலக் கொள்கை அமைத்தல் அவசியமாகும். முடியுமான இடங்களில் பல ஷிப்டுகள் ஏற்படுத்திப் பணியாற்றலாம். இதன் மூலம் உற்பத்தியும் பெருகும்; வேலை வாய்ப்பும் அதிகரிக்கும்.

கடந்த 15 ஆண்டுகளில் சிறப்பான முன்னேற்றம் காரணமாகவும், தொழில் பெருக்கத்துக்கான அடித்தளம் வலுவாக அமைந்திருப்பதன் விளைவாகவும், தொலை நோக்குத் திட்டக் காலத்தில் தொழில் உற்பத்தி 10-லிருந்து 12 சத விகிதம் வரை அதிகமாவது எளிது. 12 ஆண்டுக் காலத்தில் மக்களின் சராசரி நபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதும் எளிதாக இருக்கும் என்று திட்டக் குழுவின் செயல் அணி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

### தொழில் வளர . . .

நமது நாட்டில் தொழில்கள் வளர இயற்கையோடு ஒட்டி வாழுவது குறைக்கப் பட்டுள்ளது. காலையில் எழுந்தவுடன் பச்சை பசேலென்ற காட்சியும், பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழுதலே நலன் பயக்கும் என்று உடற்கூறு நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கான கட்டடங்களாக மாறி வருகின்றதைப் பார்க்கிறோம். தொழில்கள் அதிகமாகி வரும்போது புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்தக் காரணங்களால் நாம் தொழில் வளர்ச்சியை விட்டுவிட முடியாது. தொழில் வளர்ந்தால்தான் பொதுச் செல்வம் ஏற்படும். அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளம் உண்டாகும்.

—பேரறிஞர் அண்ணா



799



# வேளாண்மைத் துறையில் நமது சாதனைகள்!

இன்றைக்கு உணவு உற்பத்தித் துறையில் நாம் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம் என்பதை நான் கொடுத்த குறிப்புக்களில் இருந்து பல அங்கத்தினர்களும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிறப்பாக வேளாண்மைத் துறையைப் பற்றி, நான் அதிகமாகச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த மன்றத்தில் இருக்கிற பெரும்பாலோர் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள். பரம்பரையாக விவசாயம் செய்து கொண்டிருப்பவர்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற பெருமக்கள் மிகுந்த கேவலமாக நடத்தப்பட்ட ஒரு காலம் உண்டு என்பதை மணலி அவர்கள் அறிவார்கள். விவசாயி என்றால் தீண்டப்படாதவராக— தொடக் கூடாதவராக இருந்த காலம் மாறிவிட்டது. உழுது உலகுக்குச் சோறு அளிக்கின்றவனுக்கு இருக்க இடம் இல்லை என்று சொல்லக் கூடிய நிலைமையை இந்த அரசு வந்து மாற்றி விட்டது. விவசாயத் துறைக்கு இந்த அரசு வந்த பிறகு முக்கியத்துவம் பல வகையிலும் அளித்திருப்பது, போல உழவர் பெருங்குடி மக்களது அந்தஸ்தும் கௌரவமும் பலவகையிலும் உயர்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

இன்றையத் தினம் உணவுத் தட்டுப்பாடு இல்லையென்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறோம் 38 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது அன்றையத் தினம். இன்றையத் தினம் 55 இலட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம், இது மிகச் சாதாரண காரியம் அல்ல. எப்படி உற்பத்தி பெருகிற்று என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது. அதற்கு உழவர் பெருமக்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், அதற்கு உறுதுணையாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் தமிழக அரசு அவர்களுக்குச்செய்திருக்கிற உதவிகளையும் ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் விவசாயிகள் எவ்வளவு துன்பப்பட்டார்கள் என்பது இங்கிருக்கிற அனைவருக்கும் தெரியும். அவர்கள் கடனுக்காக எவ்வளவு துயரப்பட்டார்கள் என்பதும் நன்றாகத் தெரியும். ஆனால், கூட்டுறவுத் துறை இன்றையத்தினம் நீண்டகாலக் கடன், குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன் என்ற அளவில் ரூ. 100 கோடியை விவசாயிகளுக்குக் கடனாக வழங்கி வருகிறது. அது மாத்திரமல்ல. அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அவ்வப் போது செய்து வருகிறது, அரசு என்பதை விவசாயிகள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் துறையைப் பலரும் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் துறை ஆற்றி வருகிற பணிகளை மதிப்பிற்குரிய மணலி போன்றவர்களும், பொன்னப்ப நாடார் போன்றவர்களும் பாராட்டி இருக்கிறார்கள். அதைப்போல் மதியழகன் போன்றவர்கள்கூடப் பாராட்டி இருக்கிறார்கள். உண்மையில் இந்தத் துறையில் இன்றையத்தினம் ஓர் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமே, உண்மையில் நான் புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான்! அவர்கள் வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் மாத்திரமல்ல, அவர் அமைச்சராக வருவோம் என்று நினைத்துப் பார்க்காத நேரத்திலே, உங்களிலே பலருக்கு நன்றாகத் தெரியும் நங்கவரத்திலே ஒரு விவசாயப் போராட்டத்திற்குத் தலைமையேற்று, அவர்களுடைய வாழ்விலே ஒளி ஏற்றியவர். அப்படி விவசாயம் தெரிந்த ஒருவர், முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் செய்ய வேண்டிய நேரத்தில், செய்யவேண்டியதைச் செய்து வந்திருக்கிற காரணத்தால், உரிய காலத்தில் விவசாயிகளுக்குப் பலன் கிடைத்து வருகிறது.

பூச்சி மருந்துகளை ஆராய்ச்சி செய்ய 7 நிலையங்கள்: மருந்துகள் தரமானவைதானா என்று கண்டுபிடிக்க அந்நிலையங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

மண் வள ஆய்வுக் கூடம் இப்பொழுதே தமிழ்நாட்டில் 12 இடங்களில் இருக்கின்றன. தென் மாவட்டங்களில் இல்லையென்று குறிப்பிட்டார்கள். தென் மாவட்டங்களில், மதுரையிலும், கோவில்பட்டியிலும், பரமக்குடியிலும் இருக்கின்றன. கன்னியா குமரியிலே இல்லையென்று அவர்கள் கவலைப்பட்டார்கள். கன்னியாகுமரியிலே 1973—74-ஆம் ஆண்டில் மண்வள ஆராய்ச்சிப் பரிசோதனைக்கூடம் திறப்பதற்கு அரசாங்கம் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறது. நிச்சயமாக அடுத்த ஆண்டு திறக்கப்படும்.

அதுமாத்திரமல்ல, தென்னையிலே விழுந்திருக்கின்ற பூச்சிகளைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிய ஆராய்ச்சி முத்துப்



மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர்.
**அன்பில் தர்மலிங்கம்**

பேட்டையிலே துவக்கப்பட்டிருக்கிறது. கேரளத்திலிருந்து இந்த வ நவனதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் இந்த விதைகளைப் பற்றிச் சொன்னார்கள். தரமான விதைகள் கொடுக்க வேண்டுமென்பதற்காக இன்றையத்தினம், அரசாங்கத்தின் மூலமாக ஏறத்தாழ 55 பண்ணைகளிலே உற்பத்தி செய்யப்பட்டு, அந்த விதைகள் கொடுக்கப்பட்டாலும் உற்பத்தி செய்கிற விதைகளை வேறு விவசாயிகளிடத்திலே கொடுத்து அவர்கள் உற்பத்தியைப் பெருக்கிய பிறகுதான் மூன்றாவதாக விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற திட்டம் இருக்கின்றது. அதன் பயனாகத் தரமான விதைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமல்ல; சரியான விதைகள்தாம் என்பதற்காக அத்தாட்சி பெற வேண்டும். இதற்காக டெஸ்டிங் லேபரட்டரீஸ் ஏற்படுத்தி, சர்ட்டிபைட் சீட்ஸ் என்று சர்டிபிகேட் கொடுத்ததற்குப் பிறகுதான் விதை கொடுக்கப்படவேண்டுமென்று சட்டம் இயற்றி இன்றையத்தினம் செயல்பட்டு வருகிறோம்.

முன்பு பூச்சி மருந்தை ஆகாய விமானத்திலிருந்து தெளித்து வந்தோம். அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால் அதற்குப் பதிலாக, தமிழக அரசின் 5,700 விசைத் தெளிப்பான்கள் மூலமாகத் தெளிக்கப்பட்டு வருகிறது. அது போதாது என்று சொல்லி, ஏறத்தாழ, 2,400 தெளிப்பான்கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. இவற்றை உடனடியாக எல்லாப் பகுதிகளுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். இது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க உதவும் என்று யோசனை சொன்னார்கள். உழவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவற்றைத் தெளிப்பதற்கு அவர்களுக்கு உதவிசெய்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்று சொன்னார்கள். இந்த நல்ல யோசனையை நான் வரவேற்று, அவர்கள் சொல்வதற்கு முன்னாலேயே ஆங்காங்கே இதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று அனுமதியும் வழங்கியிருக்கிறோம். ஒவ்வொரு பிளாக்கிலேயும்,




ஒவ்வொரு வளர்ச்சி அலுவலகத்திலேயும் உழவர்களை அழைத்து, வேலையில்லாதவர்களை அழைத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் அன்றையத்தினம் ஒன்று குறிப்பிட்டார்கள். பூச்சி மருந்து தெளித்து யாராவது உயிரிழந்தால் அவர்களுக்கும் ரூ. 1,000 வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். தமிழ்நாட்டிலே, உங்களுக்குத் தெரியும், பூச்சி மருந்தைச்சாப்பிட்டாலும், செத்துப்போனாலும் போகலாம். அதனாலும் தீங்கு வந்துவிடும் என்ற அளவில் இலாகாவின் மூலமாக உடனே அந்தப் பரிசோதனை செய்து, அங்கங்கே, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலேயும் 10 பேர், 20 பேர் அல்லது 50 பேர் என்று தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1973-74-ல் அந்தத் திட்டம் செயல்படவும் இருக்கிறது.

பல ஊராட்சி ஒன்றியங்களில் ஸ்ப்ரேயர்ஸ் பழுதடைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முத்துச்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒவ்வொருவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு அந்தப் பயிற்சியின் மூலமாகப் பலருக்குப் பயிற்சி அளிக்கிற திட்டத்தை நிறைவேற்றி, 374 ஊராட்சி ஒன்றியத்திலே 374 பேர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அத்தோடு சாமான்கள் வாங்கி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு யூனியனிலும்




ரூ. 500-க்கு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கிவைக்க வேண்டுமென்று ஆங்காங்கு இருக்கின்ற ஆலையர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள் (கூடங்கள்) நம்முடைய மாநிலத்தில் 6 இடங்களில் வைக்க அனுமதி வழங்கப்பட்டு, அவை இன்று செயல்பட்டு வருகின்றன. மண்வளப் பரிசோதனைக்கும் 3 கூடங்கள், நடமாடும் ஊர்திகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அதைப்போல் பழுதடைந்த சைக்கிள், பெட்ரோமாக்ஸ் இவைகளை ரிப்பேர் செய்வதைப் போல, ஆங்காங்கே ரிப்பேர் செய்ய முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம்.

குறுகிய காலப் பயிர்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக ஆய்வு செய்து கண்ணகி என்ற நெல் அவருடைய மாவட்டத்தில் பயிரிடப்பட்டு வருகிறது. 95 நாள் பயிர்தான். 85-90 நாட்களில் வருகிற முறையில் கோடையிலே சாகுபடி செய்ய ஏற்ற பயிர்களை இப்போது ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவற்றை விரைவில் வெளியிட இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சுப்பையா முதலியார் அவர்கள் ட்ரைலாண்ட் சீட்ஸ் பற்றிச் சொன்னார்கள். வறட்சிப் பகுதிகளுக்கு ஏற்ற விதைகளை எப்படி விவசாயம் செய்வது என்பது பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிலுள்ள குடுமியான்மலை ஆராய்ச்சிப் பண்ணையில், கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையத்தில் இவை பற்றி ஆராய்ச்சி நடந்து வருகிறது.

சேலத்தில் எப்படிப் பயிர் வளர்ப்பது என்ற முறையில் அதற்கேற்றவாறு ரிசர்வ் ஸ்டேஷன் அமைக்க 1972-73-ல் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. திரு. வெங்கடசாமி அவர்கள் நிச்சயமாகக் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களுடைய பகுதிக்கு வேண்டிய எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வந்திருக்கிறோம்.

உரத்திற்குக் கார்டு முறை கொண்டு வரவேண்டுமென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதற்கு முன்னாலேயே



வட ஆர்க்காடு மாவட்டத்திலே [illegible]மாக இர[illegible] [illegible]

இந்த முறையைச் செயல்படுத்தி வருகிறோம். தீவிரச் சாகுபடி செய்கின்றவர்களுக்கு மட்டும் இன்ன உரம்தேவை என்று அதிகாரிகள் பார்த்துக் கார்டு மூலம் கொடுக்கிறார்கள். இப்போது உரத் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால் எல்லாருக்கும் கொடுக்க முடியுமா என்று சந்தேகம் இருக்கிறது. உரத் தட்டுப்பாடு இல்லையென்றால் நிச்சயமாகத் தமிழ்நாடு முழுவதும் கார்டு கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இரண்டாயிரம் டீசல் எஞ்சின்கள் வாங்கியிருக்கிறோம். விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கின்றோம். அண்மையில் மத்திய அமைச்சர் சிண்டே அவர்களைச் சந்தித்த போது கூட இதற்கு உடனடியாக வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லி அவர்களும் உடனே செய்வதாக ஏற்றுக் கொண்டார்கள்.

பருத்திக்கு நல்ல விலை இல்லை என்று சொன்னார்கள். பருத்திக்காகக் கார்ப்பரேஷன் திட்டத்தில் உடனடி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறோம். அவர்களும் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் மில்களை எடுத்துக் கொள்ள வசதி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தொழிலமைச்சரிடத்தில் கேட்டு அவர்களும் ஓரளவு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எல்லாம் செய்து கொண்டுதான் வருகிறோம்.

பருப்புப் பற்றாக்குறை பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு 7 இலட்சம், 8 இலட்சம் டன் பருப்பு தேவைப்படுகிறது. இன்று வெளியிலிருந்து வரவழைத்துக் கொண்டிருக்கிறோம் நாம். 23 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கரில் பருப்புப் பயிரிடத் திட்டமிட்டு முன் மாதிரியாகத் தஞ்சையிலும் தென்னார்க்காடு மாவட்டத்திலும், சிதம்பரத்திலும் 6 இலட்சம் ஏக்கராவில் இந்தக் கோடையில் இந்தப் பயிரைச் செய்து வருகிறோம்.

டன்னுக்கு மேல் கிடைக்குமென்று நம்புகிறோம்.

சூரியகாந்தி ஒரு தனித் திட்டம். சென்ற ஆண்டு 2 இலட்சம் ஏக்கராவில் பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு 3 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மலைத் தோட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய அரசு 10 கோடி ரூபாய்க்குத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.

மலைவாழ் மக்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மதுரை, திருச்சி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் பயிற்சித் திட்டம் ஏற்படுத்த இருக்கிறோம். சேர்வராயன் மலை, ஜவ்வாது மலை, பச்சை மலை, கொல்லி மலை, கோடை மலை ஆகிய ஐந்து இடங்களில் வேலை நடைபெற்று வருகிறது. வேறு பல திட்டங்களையும் செய்வதற்கு




ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, உருளைக் கிழங்கைப் பற்றித் திரு. வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். உருளைக் கிழங்குத் திட்டம் இந்தோ—ஜெர்மன் நீலகிரித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருவது உங்களுக்குத் தெரியும். ஆனால், கோல்டன் நெமட்டோடு என்ற வியாதி காரணமாக உருளைக் கிழங்கு, பயிர்க் கிழங்கு வருகின்ற சமயத்தில் பாதிக்கப்பட்டு விடுகிறது. இதனால் விவசாயிகள் பெருத்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால், ஜெர்மனியில் இருந்து டாஸ்நைட் என்ற மருந்தை இலவசமாக அனுப்பினார்கள். 75 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மருந்தை அவர்கள் இலவசமாக அனுப்பினார்கள். அந்த மருந்தைத் தெளிப்பதால் நல்ல பலன் ஏற்பட்டது. அவர்கள் அந்த மருந்தைத் தமிழ்நாட்டுக்குக் குறிப்பாக நீலகிரி மலையில் விவ[illegible]

[illegible] பார்த்து [illegible]தார்கள்.

ஆனால், மத்திய அரசு அதன் மீது போட்ட வரி ரூ. 53,25,439. எங்கள் கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு. பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்த மாதிரி என்று. 75 இலட்சம் பெறுமானமுள்ள அந்த மருந்துக்கு ரூ. 53,25,439 இந்த ஆண்டு வரையில் இந்த அரசு மத்திய அரசுக்குச் சுங்க வரியாகச் செலுத்தியிருக்கிறது. அண்மையில் மாண்புமிகு அமைச்சர் சிண்டே அவர்களிடம் இதைப் பற்றிச் சொன்னேன். இந்தப் பழமொழியையும் கூறினேன். அவர்கள் இலவசமாகக் கொடுக்கிறார்கள். அதற்கு நீங்கள் இவ்வளவு வரி போடுகிறீர்கள். அதை விவசாயிகளிடம் எப்படி வசூல் செய்வது என்று வாதாடிய நேரத்தில் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்தப் பகுதி மக்கள் பல ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். சென்ற ஆண்டு நான் அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டேன். பார்வையிட்டு வந்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னேன், இதன் செலவு 'பூராவையும்' மின்சாரத் துறை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று. அங்குள்ள விவசாயிகள் அவர்கள் படும் கஷ்டங்களை நோய் காரணமாகப் படும் கஷ்டங்களை, எல்லாவற்றையும் எடுத்துரைத்தார்கள். நான் இதுபற்றி முதல்வர் அவர்களிடம் சொன்னேன். இந்த ஆண்டு நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருப்பிப்பெறவேண்டிய தொகை முழுவதையும் ரூ. 27 சொச்சம் இலட்சம் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இதை நினைத்துப் பார்த்தால் எந்த அளவுக்கு விவசாயிகளிடம் நம் முதல்வர் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து, கரும்பு விவசாயிகள் தங்கள் ஆலைப் பகுதிகளுக்குச் சாலைகள் அமைப்பது பற்றி இது நாள் வரையில் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கரும்பு செஸ் நிதி என்று வசூலிக்கப்பட்டாலும், அந்த செஸ் நிதிவசூலிக்கப்பட்ட பகுதிகளில் அந்தத் தொகை செலவழிக்கப்படுகிறதா என்றால் பெரும்பாலும் அப்படி இல்லாதிருந்த நிலைதான் இருந்துவந்தது. ஆனால், இப்போது நம் முத

எவ்வளவு எவ்வளவு வரு வாகிறதோ அதை அந்தந்தப் பகுதிகளிலேயே, கரும்பு அபிவிருத்திக்காகவும், சாலை அபிவிருத்திக்காகவும் செலவு செய்யப்படும்—ஏற்கெனவே இருந்தபடி பொதுநிதியில் அது சேர்க்கப்பட வேண்டியதில்லை என்று அதற்காக ஒரு தனி சர்க்கிள், ஒரு சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் தலைமையில் அவர்கள் கீழ் நான்கு டிவிஷனல் என்ஜினியர்களையும் நியமித்துக் கரும்பு விளைவிக்கும் பகுதிகளில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இன்றையத் தினம் அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.



பிறகு, இங்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பற்றிச் சொன்னார்கள். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு நிச்சயமாக நல்ல விலை கிடைக்க வேண்டியதுதான். அதற்காக இந்த அரசு ஆங்காங்கு மொத்தம் 120 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறது. மத்திய அரசின் உதவியோடு உலக வங்கிக்கு ஒரு திட்டம் தயார் செய்து தந்திருக்கிறோம். வருகிற ஆண்டுக்கு 150 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறக்கவும், அந்தக் கூடங்களுக்கு விவசாயிகள் தங்களுடைய பொருள்களைக் கொண்டு சென்று சேர்ப்பதற்கும், நல்ல சாலைகள் அமைக்கவும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு ரூ. 10 கோடிக்குத் திட்டமிட்டு ரூ. 4 கோடியில் நிறைவேற்றுவதற்கு உடனடியாக ரூ. ஒன்றரைக் கோடியில் கவேரி காம்ப்ளக்ஸ்-ஐ நிறைவேற்ற தஞ்சை, தென் ஆர்க்காடு, திருச்சி மாவட்டங்களில் ஆறு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டியிருக்கிறோம். விரைவில் பட்டுக்கோட்டையில் ஒன்று திறக்க இருக்கின்றோம். 45 சாலைகள் எடுக்கப்பட்டு இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் அதற்காகச் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

இப்போது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கொண்டு வந்து, கூடத்தில் வந்து வைத்துச் சரியான விலைக்குப் போகாமல் இருந்தால் பத்து நாட்கள் வரை வைத்திருக்கலாம். மூன்று நாட்களுக்கு இலவசம் என்றிருக்கிறது. கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களிடம் பேசி, இந்த விளைபொருட்களுக்கு நல்லவிலை கிடைக்க, சென்ட்ரல் பாங்கியிலிருந்து 75-ல் இருந்து 80 வரை கடன் கொடுத்து அங்கு வைக்கப்படுமானால் நல்ல விலை வரும்போது அதை விற்றுக் கொள்ளலாம் என்பதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நல்லவிலை வருகிற வரையில் பாதுகாப்பு அளிக்கக் கூடிய திட்டம் இன்றையத் தினம் இருந்து வருகிறது.

சில திட்டங்கள் இன்று வேளாண்மை மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன. பூச்சி மருந்து பற்றிச் சொன்னார்கள். வெளியிடங்களிலிருந்து பூச்சி மருந்துகளை வாங்குவதை விட, அதை நாமே தயாரிப்பது என்ற முறையில் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் சார்பாக முதன்முதலில் தேவையான என்ட்ரின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பி.எஸ்.ஜி. உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகத் தரமான பூச்சி மருந்துக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நமக்குத் தேவையான அளவிற்குத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே வெளியிடங்களிலிருந்தும் தரத்தைப் பரிசீலனை செய்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்தத் தொழில் கழகத்தின் மூலமாக ஆங்காங்கு கிராமங்களுக்குப் பயிற்சி பெற்றவர்களை அனுப்பி ஆங்காங்கு டிராக்டர் பழுது பார்த்தல் போன்ற காரியங்களைச் செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 250 வீதம் 4 மாதத்திற்கு அவர்களுக்கு உதவித்தொகை கொடுக்கப்பட்டு 89 பேர் தேர்வு பெற்று ஆங்காங்கு இப்போது பணியாற்றி வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏராளமான முறை வெள்ளம் வந்திருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பண உதவி செய்யும், வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு மானியமாகப் பணம் தரும். ஆனால், விவசாயிகளுக்கு நிலத்தில் படிந்த மண்ணை அகற்றுவதற்கு இதுவரையில் எந்த அரசும் மானியமோ அல்லது வேறு உதவியோ செய்ததில்லை. இதுவரையில் பணமும் கொடுத்ததில்லை. என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேன். எங்களுடைய நிலத்தில் படிந்து விட்ட மண்ணை எடுப்பதற்காக என்னுடைய தகப்பனார் கடன் வாங்கி, அதைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் கடைசியில் அந்தக்கடனை அடைப்பதற்காக அந்த நிலத்தையே விற்று விட்டார்கள். அந்தக் கொடுமையை என்னுடைய கண்ணாலேயே கண்டேன். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேளாண்மை செய்பவர்களின் கஷ்டத்தை நன்கு புரிந்து கொண்டிருக்கிற காரணத்தால், தஞ்சை, திருச்சி, சேலம், தென்னார்க்காடு, கோவை மாவட்டங்களில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 13,500 ஏக்கரில் படிந்துவிட்ட மண்ணை எடுப்பதற்காக, புல்டோசர்கள் மூலம் சீர்செய்ய உத்தரவிட்டார்கள். முதலில் அதைச் செய்வதற்கு அரசு 25 சதவிகிதம் மானியம் கொடுக்கும் என்றும் அறிவித்தார்கள்.

ஆனால், அந்த வெள்ளப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தவுடன் அங்கேயுள்ள விவசாயிகள் படும் கஷ்டத்தைப் பார்த்து விட்டு எல்லாவற்றையுமே மானியமாக, எவ்வளவு செலவானாலும் அதைத் செய்து தருவது என்று உத்தரவிட்டார்கள். அதன் பயனாக இன்றையத் தினம் 16,000 ஏக்கரில் மணல் எடுக்கப்பட்டுத் தூர் வாரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஒரு போர் முறைத் திட்டமாகக் கருதிச் செயல்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் அது செய்யப்பட்டு, இன்றையத்தினம் கடலூர்ப் பகுதியில் 4,700 ஏக்கர் சரி செய்யப்பட்டு, அங்கே கடலை பயிரிடப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தீவிரத் திட்டத்தை இன்றையத் தினம் உழுவர்களுக்குப் பயன் அளிக்கும் திட்டத்தைச் செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உழவர்களின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

**(தமிழ்நாடு சட்டப் பேரவையில் 16—3—73-ல் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வழங்கிய பதிலுரையிலிருந்து)**



# இந்தியாவிலேயே மிகப் பெரிய பரிசோதனைத் திட்டம்





"நீங்கள் வெற்றிலை பாக்குப் போடுவீர்களா ?"

"ஆம். போடுவேன் !"

"அதோடு புகையிலையும் போடு வீர்களா ?"

"அது இல்லாமலா ?"

"வெற்றிலை, பாக்கு, புகையிலை இம்மூன்றையும் போட்டுச் சிறிது நேரத்தில் துப்பிவிடுவீர்களா ?"

"இல்லை. வாயில் அவற்றை அடக்கி வைத்துக்கொள்வேன் !"

"அப்படியா ? அதனால்தான் உங்களுக்குப் புற்றுநோய் வந்திருக்கிறது......!"

"என்ன ? புற்றுநோயா ! எனக்கா ? உண்மையா டாக்டர் ?"

"ஆமாம். நீங்கள் மணிக்கணக் காக வாயில் வெற்றிலை பாக்கோடு புகையிலையையும் சேர்த்து அடக்கி வைத்துக் கொண்டதால், வாய்த் தாடை யின் உட்புறத்தில் புற்றுநோய் கண்டிருக்கிறது"

"ஐயோ ! அது மிகக் கொடிய நோய் என்று சொல்வார்களே! இதைக் குணப்படுத்தவே முடியாதா டாக்டர் ?"

"பயப்படவேண்டாம்! உங்களுக்கு இந்நோய் இப்போதுதான் ஆரம்பித் திருக்கிறது. ஆகையால் அதைக் குணப்படுத்திவிடலாம் !"

டாக்டர் நம்பிக்கையுடன் இப்படிச் சொன்னதும், நோயாளி ஆறுதலடைகிறார்; அவர் முகத் திலே சூழ்ந்திருந்த பீதி மறைந்து, மகிழ்ச்சி காணப்படுகிறது.

இப்படிப் புற்று நோயை ஆரம்பத் திலேயே கண்டுபிடித்து, நோயாளி களுக்குப் புத்துயிர் அளிக்க அரும் பணியாற்றி வருகிறது காஞ்சிமா நகரிலுள்ள "அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம்".

அறிஞர் அண்ணா அவர்கள், புற்றுநோயால் அவதிப்படும் மக்கள் நிலை கண்டு பெரிதும் வருந்தினார். அவர் விடா முயற்சி யுடன் உலக சுகாதார நிறுவனத் தோடு (World Health Organisation) தொடர்பு கொண்டு, புற்று நோய் பற்றி ஆராய்ச்சி நடத்தச் செயற்கூடம் ஒன்று அமைந்திட வழி வகுத்தார். அதன் விளைவாக அவர் மறைவுக்குப் பின்னே எழுந் தது தான் 'அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம்'.

இந்நிலையம் 1969-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள், தமிழ் நாடு அரசினரால் தொடங்கி வைக்கப்பெற்றது. இந்தச் செயற் கூடம் உலக சுகாதார நிறுவனத் தோடும், மைய அரசோடும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு செயல் படத் தொடங்கியது. தமிழ்நாடு அரசு இதற்கு எல்லா வசதிகளை யும் கொடுத்துதவி வருகிறது.

புற்றுநோய் பற்றிய விவரங்களை மக்களுக்குத் தெரிவிப்பது, இதனை மேலும் வரவிடாமல் தடுப்பது, வந் ததைத் தடுத்து அறவே ஒழிப்பது ஆகியவையே இந்நிலையத்தின் முக் கிய நோக்கமாகும்.

காஞ்சியில் கவின்மிகு தோற்றத் தோடு விளங்கும் இந்த ஆராய்ச் சிக்கூடம் இந்தியாவில் மட்டுமின்றி கிழக்காசியாவிலேயே ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்நிலையம் இரு திட்டங்களை வைத்துச் செயல்பட்டு வருகிறது. அவை 1. குறுகிய காலத்திட்டம். 2. நெடுங்காலத் திட்டம். காஞ்சி புரம் நகர எல்லைக்குட்பட்ட பகுதி மக்களுடைய உடல்நிலையைச் சோதித்து அவர்களுக்குப் புற்று நோய் இருக்கிறதா என்ற விவரங் களை அறியவும், வாய், தொண்டை. கருப்பைப்பகுதிகளை மட்டும் கவ னித்தலும், விரைந்து அந்நோயைக் குணமாக்குவதும் குறுகிய காலத்





திட்டமாகும்; புற்றுநோய்த் தடுப்புப் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தல், எந்தப் பகுதியில் புற்றுநோய் இருப்பதாகத் தெரிகிறதோ அப் பகுதி நோயாளிகளைக் கவனித்து ஆவன செய்தல், இந்நோயைத் தடுக்கும் வழி வகைகள் பற்றி ஆராய்ந்து அதனை மக்களிடம் பரப்புதல், தகுந்த முறையில் பயிற்சியளித்து மருத்துவ வல்லுநர்களையும், உதவியாளர்களையும் இத் துறையில் பணியாற்றத் தயார்ப் படுத்துதல் ஆகியவை நெடுங் காலத் திட்டமாகும்.

முதலில் வாய்ப்புற புற்றுநோய் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

புற்றுநோய் என்பது உடலில் உள்ள உயிர் அணுக்களில் ஒழுங்கற்ற விபரீதமான வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சி மற்ற சாதாரண உயிரணுக்களின் வளர்ச்சியைவிட மிக அதிகமாக இருப்பதால், பக்கத்தில் உள்ள மற்றைய உயிரணுக்களையும் பாதித்து உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவும் தன்மையுடையது.

நமது நாட்டில் உயிர்களைக் கொல்லக்கூடிய கொடிய நோய்களில் புற்றுநோய் நான்காவது இடத்தைப் பெறுகிறது.

நம் நாட்டில் காணப்படுகின்ற புற்றுநோய் வகைகளில் வாய்ப்புற புற்றுநோய் முதலிடம் பெறுகிறது. இது கிட்டத்தட்ட 40 சதவிகிதமாக உள்ளது. உலகத்திலேயே இந்தியாவில்தான் வாய்ப்புற புற்றுநோய் மிக அதிகமாக இருக்கிறது எனத் தெரிகிறது. இப்புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை செய்தால் பெரும்பாலும் கட்டுப்படுத்தி விடலாம். ஏன், குணமாக்கியும் விடலாமே!

இந்நோய் வருவதற்கான காரணங்கள் சில: 1. இது பெரும்பாலும் வெற்றிலை, பாக்கு, புகையிலை ஆகிய வகைகளை வாயில் நீண்ட நேரம் அடக்கி வைப்பதாலும், 2. உடைந்த கூரான பற்களினால் உண்டாகும் புண்ணாலும் 3. மது பானங்களை அதிகமாக அருந்துவதினாலும் உண்டாகிறது எனத் தெரிகிறது.

நோயின் ஆரம்ப அறிகுறிகள் இப்படி இருக்கலாம்:

அ. நாக்கிலோ அல்லது வாயில் ஏதாவது ஒரு பாகத்திலோ ஒரு புண் மூன்று வாரங்களுக்குப் பிறகும் ஆறாமல் பெரிதாகிக் கொண்டே இருத்தல்;

ஆ. வாயில் தடிப்பான அல்லது வெள்ளை நிறப் படை போன்ற பாகம் இருத்தல்;

இ. உதட்டில் வெடிப்பு ஏற்பட்டு விரைவில் ஆறாமல் இருத்தல்;

ஈ. வலியற்ற ஒரு கட்டி நாக்கிலோ அல்லது ஏதாவது ஒரு பகுதியிலோ பெரிதாகிக்கொண்டே இருத்தல்.

இவ்வறிகுறிகள் யாவும் புற்றுநோயாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் மருத்துவர் பரிசோதனை செய்து பார்த்தபின்தான் இது புற்றுநோயா? இல்லையா? என்று தெளிவாகச் சொல்ல முடியும்.

இந்நோய் பெரும்பாலும் வயது வந்த எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் வரலாம்.

புற்றுநோய் வராமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் கீழ்க்காணும் சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:

1. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை வாயில் நீண்ட நேரம் ஒதுக்கி வைக்கும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

2. வெறும் பாக்கை மட்டும் வாயில் போட்டுக் கொள்ளும் பழக்கத்தையும் கைவிட வேண்டும்.

3. அதிகமாக பீடி, சிகரெட் குடிப்பதையும், புகையிலையை வாயில் நீண்டநேரம் அடக்கி வைக்கும் பழக்கத்தையும் தடுக்க வேண்டும்.

4. அதிக காரமான உணவை உட்கொள்ளுவதையும், லவங்கப் பொருள்களை உணவுடன் அதிகம் சேர்த்து உட்கொள்ளும் பழக்கத்தையும் தடுக்கவேண்டும்.

5. மதுபானங்களை அடிக்கடி உட்கொள்ளும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

6. சாதாரண பல்லோ அல்லது செயற்கைப் பல்லோ வாயில் புண்ணை உண்டாக்கினால், உடனே மருத்துவரிடம் காண்பித்து ஆலோசனை பெறவேண்டும்.

7. உதடு, வாயின் உட்புறம் தொண்டை ஆகிய பாகங்களில் ஒரு கட்டி அல்லது வெள்ளைப் படை போன்ற பாகம் அல்லது ஆறாத புண் மூன்று வாரங்களுக்கு மேல் நீடித்தால் உடனே மருத்துவரிடம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

நம் நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய எவ்விதமான விவரங்களும் இல்லை. இத்தகைய புள்ளி விவரங்களெல்லாம், அவர்கள் மருத்துவ மனைக்கு வந்தபின் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டுதான் கவனிகக வேண்டியுள்ளது. பம்பாய் நகரில் 1963-ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ள புள்ளி விவரங்களே நமக்கிருக்கும் ஒரே குறிப்பு!

அந்தக் குறிப்பு என்ன சொல்கிறது? புதிதாகப் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள் ஒரு இலட்சம் மக்களுக்கு ஏறக்குறைய 85 பேர்கள் என்றும், இந்த அடிப்படையில் தமிழகத்தின் மக்கள் தொகையான 4·1 கோடியில், புதிதாக இந்நோயால் பாதிக்கப்படுபவர்கள் சுமார் 35,000 பேர்கள் எனவும் அந்தக் குறிப்பு கூறுகிறது. மேலும் இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 5,00,000 மக்கள் புற்றுநோயால இறந்துவிடுவதாகவும் இந்தப் புள்ளி விவரம் எச்சரிக்கை செய்கிறது.

பொதுவாக 45 முதல் 50 சத விகிதம் வரை புற்றுநோய் பெண களுக்குக் கருப்பை பாகத்திலேயே பீடிப்பதாக அறிய முடிகிறது. ஆண், பெண் இருவருக்குமே வாய், தொண்டை, உணவுக் குழாய் ஆகிய இடங்களில் இந் நோய் தோன்ற வாயப்பிருக்கிறது. ஆனால் மேற்கண்ட புள்ளி விவரம் ஒரு பொதுவான கருத்தையும் கூறுகிறது. தொண்டையில ஆண் களுக்கும், கருப்பையில் பெண் களுக்கும் புற்றுநோய் தோன்று கிறது என்பதுதான் அது.

குறிப்பாகக் கருப்பையின் வாய்ப் புற புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துச் சிகிச்சை செய்தால் பாதிக்கப்படுவோரில் பெரும்பாலும் நூற்றுக்கு நூறு சதவிகிதத்தினரையும் குணப்படுத்த முடியும்.

நமது நாட்டில் பெண்களிடையே காணப்படும் புற்றுநோய் வகைகளில் கருப்பையின் வாய்ப்புறத்தில தோன்றும புற்றுநோய், எண்ணிக் கையில் முதலிடம் பெறுகிறது.

கருப்பையின் வாய்ப்புற புற்றுநோய் கருபையின் வாய்ப்புறத்தில் ஏற்படும் ஒருவித வளர்ச்சி அல்லது ரணமாகும். அது மிக வேகமாகப் பரவி வளரும்போது பக்கத்திலுள்ள நல்ல திசுக்களையும் அழிக்கிறது. முடிவாக முற்றிய நிலையில் இந்நோய் இரத்தக் குழாயின் மூலமாகவும், நிணநீர்க் குழாயின் மூலமாகவும் உடலின் மற்ற அங்கங்களுக்கும் பரவி அவற்றையும் பாதிக்கிறது. இதனால் உயிரிழப்பும் ஏற்படும்.

இந்நோய் வருவதற்கான காரணங்கள் என்ன?

பல் குழந்தைகள் பெறும் பெண்களிடையேயும், இருபது வயதுக்கு முன்னரே திருமணம் செய்து கொள்ளும் பெண்களிடையேயும் இந்நோய் வரும் வாய்ப்பு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்நோயின் அறிகுறிகளாய் இருக்கக்கூடியவை:

1. மாதவிடாயின்போது இரத்தப் போக்கு அதிகமாக இருத்தல் அல்லது நீடித்தல்; 2. ஒரு மாதவிடாய்க்கும் இன்னொரு மாதவிடாய்க்கும் இடையில் இரத்தப்போக்கு ஏற்படுதல்; 3. வயதான காலத்தில் மாதவிடாய் முழுவதும் நின்ற பின் இரத்தப்போக்கு ஏற்படுதல் அல்லது வெள்ளை படுதல் அல்லது இரண்டும் சேர்ந்திருத்தல்; 4. உடலுறவின்போது இரத்தக் கசிவு ஏற்படுதல்; 5. இயற்கைக்கு மாறாக பிறப்புப் பாதையில் வெள்ளை படுதல் அதிகம் இருத்தல்.

இந்த அறிகுறிகள் கருப்பையின் வாய்ப்புறத்தில் தோன்றும் புற்றுநோயின் அறிகுறிகளாகவும் இருக்கலாம். ஆனால், மருத்துவரால்தான் இவ்வறிகுறிகளுடன் ஒரு பெண்ணுக்குப் புற்றுநோய் இருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசோதித்துப் பார்த்த பின் சொல்ல முடியும்.

கருப்பையின் வாய்ப்புறத்துப் புற்றுநோய் பெரும்பாலும் வயது வந்த எந்தப் பெண்ணுக்கும் வரலாம். எனவே, இருபது வயது முதல் அறுபது வயது வரையில் உள்ள எல்லாப் பெண்களும், மற்றும் திருமணமான எல்லாப் பெண்களும் தாங்கள் உடல் நலமாயிருக்கிறோம் என்று எண்ணும் போதே, பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இப்பரிசோதனை இலவசமானது. எளிதானது, வலியற்றது. இரண்டே நிமிடத்தில் முடியக் கூடியது. ஆண்டுக்கொரு முறை செய்யப்பட வேண்டியது.

இப்பரிசோதனையில், அறிகுறிகள், வலியேதும் தோன்றுவதற்கு முன்பே நோயின் ஆரம்ப நிலையைக் கண்டுபிடித்து விடலாம். இந்த நிலையில் சிகிச்சை செய்தால் பாதிக்கப்படுவோரில் பெரும்பாலும் எல்லோரையும் குணப்படுத்த முடியும்.

அறிகுறிகள் தோன்றி, வலி ஏற்பட்ட நிலையில் மருத்துவ மனைக்கு வருவது தாமதித்த நிலையாகும். இந்த நிலையில் நோயைக் குணப்படுத்துவது மிகவும் கடினமாவதுடன், முடியாததுமாகும். எனவே இந்நோயை முற்ற விடாமல் ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்துவது மிகவும் நன்மை பயப்பதாகும்.

இந்நோய்க்கு மூன்று வகைச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.



1. அறுவைச் சிகிச்சை.
2. கதிரியக்கச் சிகிச்சை (ரேடியம் போன்றது).
3. அறுவைச் சிகிச்சையும் கதிரியக்கச் சிகிச்சையும் சேர்ந்தது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்களுக்குக் கதிரியககச் சிகிச்சைதான் செய்யப்படுகிறது.

மற்ற நாடுகளுடன் நமது நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது புற்றுநோய்க் கட்டுப்பாடு நமக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும்.

இங்கிலாந்தில் 12·5 சதவீதம்; அமெரிக்காவில் 13·6 சதவிகிதம்; ஆனால் இந்தியாவிலோ 24·7 சதவிகிதம் கருப்பையில் புற்றுநோய் உள்ள பெண்கள் இருப்பதாக நாம் அறிகிறோம். மேலும் தொண்டை, உணவுக் குழாய்களில் இந்நோய் உள்ளவர்கள் இந்தியாவில் 37·5 சதவிகிதம் ஆண்களும், 15 சதவிகிதம் பெண்களும் இருக்கிறார்கள். அமெரிக்காவில் 4·5 சதவிகிதமும், இங்கிலாந்தில் 7 சதவிகிதமும் தான் தொண்டை, உணவுக் குழாய் புற்றுநோய் உள்ள ஆண்கள் இருப்பதாக அறிகிறோம். ஆனால், பெண்கள் சதவிகிதமோ அங்கே மிகக் குறைவு!

காஞ்சியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 55,000 பேர்கள் புற்றுநோய் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வீடுவீடாகச் சென்று இந்நிலைய மருத்துவர்களும், உதவியாளர்களும் மக்களை விசாரிக்கின்றனர். பிறகு பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு வரவழைக்கின்றனர். விரைந்து செயலாற்றுவதற்கு வசதியாக இந்நிலைய ஊர்திகள் நாள்தோறும் இயங்குகின்றன. இவ்வூர்திகளில் பெண் மருத்துவர்கள், உதவியாளர்கள் செல்கின்றனர். ஆண், பெண் அனைவரையும் விசாரித்துப் புற்றுநோய் அறிகுறிகள் இருக்கின்றனவா என அறிகின்றனர். வெற்றிலை பாக்கு, புகையிலை போடுதல், பீடி சிகரெட் குடித்தல், குடிப்பழக்கம் போன்ற பழக்க வழக்கங்களை விசாரணையின் மூலம் அறிந்து பதிவு செய்து கொள்கின்றனர். நோய்க்கான அறிகுறி தென்பட்டால் உடனே அவர்கள் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு தக்க சிகிச்சைக்காகச் சென்னை மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இந்தியாவிலேயே முதன் முதலாக அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையத்தில்தான் பெரிய அளவு பரிசோதனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்குச் சுமார் 100 பேர்கள் இவ்வாறு விசாரிக்கப்படுகின்றனர். இது வரை 25,000 பேர்களுக்குப் பரிசோதனை நடந்திருக்கிறது. நகராட்சி மருந்தகங்கள், தாய்சேய் நல விடுதிகள் ஆகியவற்றிலும் இந்நோய் பற்றிய பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

இந்நிலையத்திற்கு உலகச் சுகாதார நிறுவனமும், தமிழ்நாடு அரசும் இணைந்து மருத்துவ வசதிகளைச் செய்து வருகின்றன. தமிழ்நாடு அரசு இதுவரை 6·5 இலட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது. மருத்துவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி இத்துறையில் பயிற்சி பெற வகையும் செய்துள்ளது. புற்றுநோய் சம்பந்தமான எல்லா விவரங்களும் தேவைப்படுவதால், புள்ளி விவரங்களை முறைப்படி சேகரிக்கவும், அதனைக் காக்கவும், வேண்டியபோது மக்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் தெரிவிக்கவும், தகுதி வாய்ந்த புள்ளி விவர நிபுணர் ஒருவர் இங்கே இருக்கிறார். இவர் வெளிநாடு சென்று பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத் தகுந்தது.

மருத்துவ நிபுணர்களாலும், உயிர் அணு ஆய்வாளர்களாலும், புள்ளி விவர வல்லுநர்களாலும், சுகாதாரக் கல்விப் பயிற்சியாளர்களாலும் ஓர் ஆராய்ச்சிக் கழகமாகப் பணியாற்றி வரும் இந்நிலையத்தில் பரிசோதனைக்காகவும், குறுகிய காலச் சிகிச்சைக்காகவும் தங்கும் நோயாளிகளுக்குப் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நவீன வசதிகளுடன் கூடிய பரிசோதனைக்கூடம் இவற்றுக்குப் பெரிதும் துணை புரிகின்றது.

இந்நிலையத்தின் குறிக்கோள்களில் சமூக நல ஆராய்ச்சி நடத்துவதும் ஒன்றாகும். இதன்படி மக்களின் விருப்பு வெறுப்பு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து புள்ளிவிவரங்கள் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. வீடு வீடாகச் சமூக நல ஊழியர்களோடு மருத்துவப் பணியாளர்களும் சென்று மக்களிடமுள்ள அறியாமையைப் போக்கிப் புற்று நோய் பற்றி அறிய வாய்ப்பு அளிக்கிறார்கள். குடும்ப வாரியாக 20 வயதிற்கு மேற்பட்டவர்களுடைய வாழ்க்கை நிலை, உடல் நிலை ஆகியவற்றைத் திரட்டித் தனித்தனி அட்டையில் பதிவு செய்து பாதுகாத்தும் வருகின்றனர். புள்ளிவிவர நிபுணர் இதற்குப் பெருந்துணை புரிகிறார்.

இவ்வாறு இந்நிலையம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதைப் பிற மாநிலத்தவரும் அறிந்துள்ளனர். ஆந்திரம், கேரள மாவட்டங்களிலிருந்து புற்றுநோய் உள்ள சுமார் 140 பேர்கள் இங்கு வந்து சிகிச்சை பெற்று நலமடைந்து சென்றுள்ளனர் என்றால் இதன் பணியினை நெஞ்சாரப் பாராட்ட வேண்டுமல்லவா?




இந்த நற்பணி, பயனுள்ள சமூக நலப் பணியாதலால், இதன் இன்றியமையாமையைத் தமிழக அரசு நன்குணர்ந்து, இங்குள்ளது போன்ற வசதிகள் மற்ற மாவட்டங்களிலும் கிடைக்க முயற்சி எடுத்து வருகிறது. முறையாக, ஒவ்வொரு கட்டமாக இந்தத் திட்டம் விரிவாக்கப்படும்.

புற்றுநோய் ஒழிப்பில் முதல் கட்ட (1972—73) நடவடிக்கையாகக் காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனை மையத்தில், புற்றுநோய்ச் சிகிச்சைக்காக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்படவிருக்கிறது. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையத்துடன் இது இணைக்கப் பெறும். இந்த மருத்துவமனை, தமிழ்நாடு வட்டாரப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமாக நாளடைவில் மேம்படுத்தப்படும். இதற்காகப் பக்தவத்சலம் தொழில் நுணுக்கப் பள்ளி அருகே 20 ஏக்கர் நிலம் வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கட்டடச் செலவுக்கு ரூ. 21·35 இலட்சமும், இக்காலக் கட்டத்தில் அலுவலர் வகையில் ரூ. 5 இலட்சமும், கதிரியக்கக் கருவிகள் வாங்க மூன்று இலட்சம் டாலரும் செலவாகும், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்டத்தில் (1974—76) அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையமும் மருத்துவமனையும் 200 படுக்கை வசதியுள்ள வட்டாரப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமாக மேம்படுத்தப் படும். இதற்கு முதலீட்டுச் செலவு ரூ. 12 இலட்சமும், அந்நியச் செலாவணி 1·5 இலட்சம் டாலரும், நடைமுறைச் செலவு ரூ. 4 இலட்சமும் ஆகும்.

மூன்றாவது வளர்ச்சிக் கட்டத்தில் (1977–79) இந்த நிலையம் 300 படுக்கை வசதிகள் கொண்டதாகவும், ஆராய்ச்சி வசதிகள் நிறைந்ததாகவும் ஆகும்.

நான்காவது கட்டத்தில் (1980–81) மாநிலத்தில் புற்றுநோய் ஒழிப்புச் செயல் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும். இவ்வகையில் ரூ. 20 இலட்சம் மூலதனச் செலவு ஆகும்.

ஐந்தாவது கட்டத்தில் (1982–83) அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் உயர்தர ஆராய்ச்சி வசதிகளும், 500 படுக்கை வசதிகளும் உள்ளதாக அமையும். ரூ. 30 இலட்சம் முதலீட்டுச் செலவும், ரூ. 10 இலட்சம் நடைமுறைச் செலவும் ஆகும்.

ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவ மாணவர்கள் புற்றுநோய் பற்றி அறிந்துகொள்வதற்காக ஒரு சிறு புற்றுநோய்ப்



கிறப்புப் பாதையிலிருந்து பரிசோதனைக்கு எடுக்கப்பட்ட திரவத்தை கண்ணாடித் துண்டில் பாதுகாக்கப் படுகிறது.

பிரிவு இருக்கவேண்டும் என்று பேராசிரியர் பி. என். வாகி தலைமையில் டிசம்பர் 1971-ல் அமைக்கப்பட்ட புற்றுநோய் மதிப்பீட்டுக் குழு கூறியுள்ளது. தற்போதுள்ள பதினொரு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையங்களையும் முழு வசதியுள்ள நிலையங்களாக உயர்த்தவும், வட்டார ஆராய்ச்சி நிலையங்களாக மாற்றுவது பற்றி ஆலோசனை கூறவும் இக்குழு அமைக்கப்பட்டது. இந்தப் பதினொரு நிலையங்களாவன: 1. சித்தரஞ்சன் தேசீய புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம், கல்கத்தா; 2. புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம், பம்பாய்; 3. எம்.பி. ஷா புற்றுநோய் மருத்துவ மனை, அகமதாபாத்; 4. புற்றுநோய்க் கழகம், சென்னை; 5. ரேடியம் கழகப் புற்றுநோய் மருத்துவ மனை, ஐதராபாத்; 6. சப்தர்ஜங் மருத்துவ மனை, புதுதில்லி; 7. ஜே. கே. ரேடியாலஜி புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம், கான்பூர்; 8. அரசாங்க மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கட்டாக்; 9. சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம், நெய்யூர்; 10. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம், காஞ்சிபுரம்; 11. ரேடியம் கழகம் மருத்துவக் கல்லூரி, திருவனந்தபுரம்.

வட்டார நிலையங்கள் புற்று நோய்க்கு நவீன முறைகளில் சிகிச்சை அளிக்கும் வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அதே சமயத்தில் மருத்துவ பட்டப்படிப்பு, மேற்படிப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வசதிகளும் இந் நிலையங்களில் இருக்க வேண்டும் என்று இக்குழு கூறியுள்ளது.

ஒவ்வொரு நிலையத்திலும் 250 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்றும், சோதனைக்கூட வசதிகளும் தேவையான அளவுக்கு ஊழியர்களும் இருக்கவேண்டும் என்றும், புற்றுநோய்ப் பதிவு நிலையம் ஒன்று ஒவ்வொரு நிலையத்திலும் வைக்கப்பட வேண்டும் என்றும் இதற்கு முதற்படியாக் தேசியப் புற்றுநோய்ப் பதிவு நிலையம் ஒன்றை அமைக்கலாம் என்றும் இக்குழு கருத்துரை கூறியுள்ளது.



புற்று நோயால் பாதிக்கப்பட்டவருக்கு கதிரியக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நோயற்ற வாழ்வு வாழவும், புற்றுநோய்களிலிருந்து முற்றிலும் விடுபடவும், அதனை வராமல் தடுக்கவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அரும்பணிகள் ஆற்றி வருகிறது அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம். இந்தியாவிலுள்ள வட்டார ஆராய்ச்சி நிலையங்களில், ஒன்றாக இந்நிலையமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது தமிழ்நாட்டுக்குப் பெருமை தரும் செயலே அல்லவா?

—பி.வி.ஜி.

# அறிவாலயங்கள் நிறைந்த கோவை மாவட்டம்



கோவை மாவட்டத்தில் ஆலயங்கள் குறைவாக இருந்தாலும், அறிவாலயங்கள் நிறைந்துள்ளன. செல்வங்களுக்கெல்லாம் பெருஞ் செல்வமாகிய கல்விச் செல்வத்தை வளர்க்கக் கோவை மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட அறிவாலயங்கள் அரும்பணியாற்றுகின்றன.

| | | |
|---|---|---|
| துவக்கப்பள்ளிகள் | | 2,602 |
| உயர் துவக்கப் பள்ளிகள் | | 460 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 5 |
| உயர் நிலைப் பள்ளிகள் | .. | 260 |
| மொத்தம் | .. | 3,327 |

கோவை மாவட்டத்தில் 4 பயிற்சிப் பள்ளிகளும் உள்ளன.

கோவை மாவட்டத்தில் 29 கல்லூரிகள் கலை, அறிவியல், தொழில் நுட்பக் கல்விகளை அளித்துத் தமிழ்நாட்டில் அறிவொளி பரப்பும் அரிய பணியினைச் செய்து வருகின்றன. அவைகளுள் 19 கல்லூரிகள் கோவை நகரில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டின் மற்ற நகரங்களுக்கு இல்லாத சிறப்பு கோவைக்கு உண்டு. ஏனெனில், கோவை நகரில்தான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், தென் இந்திய வனச் சரக அலுவலர்கள் பயிற்சிக் கல்லூரியும், விமானப் படை நிருவாகக் கல்லூரியும், அவிநாசிலிங்கம் மனை இயல் கல்லூரியும், ஜி.சி.டி. ( G.C.T ) சி.ஐ.டி. ( C.I.T ) பி.எஸ்.ஜி. (P.S.G.) ஆகிய 3 பொறியியற் கல்லூரிகளும் அமைந்துள்ளன. எல்லா வகையான கல்லூரிகளும் கோவை மாவட்டத்தில் உள்ளன. சட்டக் கல்லூரியும், இசைக் கல்லூரியும் இல்லாததே கோவைக்குக் குறையாகவுள்ளது.

கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட கல்லூரிகள் உள்ளன.

1. அரசினர் கலைக் கல்லூரி.
2. பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரி.
3. நிர்மலா மகளிர் கல்லூரி.
4. பி.எல்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி.
5. அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி ( G.C.T ).
6. கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனக் கல்லூரி (C.I.T.).
7. பி. எஸ். ஜி. தொழில் நுட்பக் கல்லூரி.
8. அவிநாசிலிங்கம் மனையியற் கல்லூரி.
9. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் கூடம்.
10. அரசினர் பன்னுட்பக் (பாலிடெக்னிக்) கல்லூரி.
11. அரசினர் மகளிர் பன்னுட்பக் கல்லூரி.
12. அரசினர் மருத்துவக் கல்லூரி.
13. ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி.
14. செந்தமிழ்க் கல்லூரி, பேரூர்.
15. மாருதி, உடற்பயிற்சிக் கல்லூரி, பெரியநாயக்கன் பாளையம்.
16. இராமகிருஷ்ண வித்யாலய பயிற்சிக் கல்லூரி, பெரியநாயக்கன் பாளையம்.
17. இராமலிங்கம் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம்.
18. தென்னிந்திய வனச்சரகர் கல்லூரி.
19. விமானப்படை நிருவாகக் கல்லூரி.

ஈரோடு

20. வாசவி கல்லூரி.
21. சிக்கய்ய நாயக்கர் கல்லூரி.
22. அரசினர் கலைக் கல்லூரி. கோபிச்செட்டிபாளையம்
23. அரசினர் கலைக் கல்லூரி.

பொள்ளாச்சி

24. நாச்சிமுத்து மகாலிங்கம் கலைக்கல்லூரி.
25. நாச்சிமுத்து மகாலிங்கம் பன்னுட்பக் கல்லூரி, மக்கினம்பட்டி.

திருப்பூர்

26. சிக்கண்ண அரசினர் கலைக் கல்லூரி.
27. எல். ஆர். ஜி. கலைக் கல்லூரி.

உடுமலைப்பேட்டை

28. அரசினர் கலைக் கல்லூரி.
29. விசாலாட்சி மகளிர் கல்லூரி.

கோவை மாவட்டக் கல்லூரிகளை இணைத்துக் கோவையில் ஒரு பல்கலைக் கழகம் துவங்குவது பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் உள்ள சில கல்லூரிகள் தமிழகத்தின் மாணவர்களுக்கு மட்டுமன்றி, பிற மாநிலங்கள், பிற நாடுகளின் மாணவர்களுக்கும் கல்விக்கண் கொடுத்து வருகின்றன. கோவை மாவட்டத்தில் ஏராளமான அறிவாலயங்கள் அறிவொளி பரப்புவதால், 1961-ஆம் ஆண்டில் 30.20 சதமாக இருந்த கோவை மாவட்டப் படித்தவர்களின் தொகை, 1971-ஆம் ஆண்டில் 38.81 சதமாக உயர்ந்துள்ளது.



நம் நாட்டில் ஆண்டொன்
றுக்கு 5 கோடி ரூபாய்க்கும்
அதிக மதிப்புள்ள கண் சிகிச்சைக்
கருவிகள் உற்பத்தியாகின்றன.
தற்போது இரண்டாயிரத்து ஐந்
நூறுக்கும் அதிகமான சிறு
தொழில் பிரிவுகளில் மூக்குக்
கண்ணாடி லென்சுகளும், ஃப்ரேம்
களும், மற்ற கண் சிகிச்சைக்
கருவிகளும் உற்பத்தியாகின்றன.

1972-73-ஆம் ஆண்
டின் முதல் ஆறு திங்களில்
1,783 டன் மாம்பழங்கள்
வெளிநாடுகளுக்கு ஏற்று
மதி செய்யப்பட்டிருக்கின்
றன. இதன் மதிப்பு 48
இலட்சத்து 59 ஆயிரம்
ரூபாய். 1971-72-ஆம்
ஆண்டில் 26 இலட்சத்து
9 ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு
1325 டன் மாம்பழங்கள்
ஏற்றுமதி செய்யப்பட்டன.
பிரிட்டன், பஹ்ரீன், துபாய்,
குவைத், மஸ்கட், கொதார்
ஆகிய நாடுகள் இந்திய
மாம்பழங்களை அதிகமாக
வாங்குகின்றன. மாம்பழங்
களை ஏற்றுமதி செய்வதற்கு
உரிமக் கட்டுப்பாடு கிடை
யாது.

"இந்தியப் பயண வழிகாட்டி நூல்"
ஒன்றைத் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தைச்
சேர்ந்த வெளியீடுகள் பிரிவு வெளியிட்டிருக்
கிறது. இந்தப் பழம்பெரும் நாட்டின் முக்கிய
இடங்கள் பற்றிய எல்லா விவரங்களையும்
இந்நூல் வழங்குகிறது. வெளிநாட்டிலிருந்து
வந்து சாவதானமாக, அல்லது அவசரமாக
இந்தியாவைச் சுற்றிப் பார்க்க நினைக்கும்
சுற்றுலாப் பயணிகளுக்கு இப்புத்தகம் மிகுந்த
உதவியாக இருக்கும்.

நாட்டிலுள்ள சுற்றுலா மையங்களைக் கண்டு
களிக்கும் விருப்பமுடையவர்களுக்கும், அவ்
விடங்களுக்குக் கல்வி முறையில் பயணம்
மேற்கொள்ள நினைப்பவர்களுக்கும் இந்த நூல்
வழிகாட்டி உதவும். பயணத்தின் ஒவ்வொரு
கட்டத்தையும் எளிதாக்கும் பொருட்டு விமான,
கடல் வழிகள், உள் நாட்டுப் போக்கு
வரத்து, அரசு விதிமுறைகள் முதலியவை
பற்றிய தகவல்களும் இந்நூலில் கொடுக்கப்
பட்டுள்ளன.

இந்தியாவில் வைரம், தங்கம், வெள்ளி
ஆகியவற்றின் உற்பத்தி கடந்த பிப்ரவரித்
திங்கள், அதற்கு முந்தைய திங்களைவிட அதிக
மாய் இருந்தது.
கடந்த பிப்ரவரித் திங்களில் 282 கிலோ
கிராம் தங்கமும், 448 கிலோ கிராம் வெள்ளி
யும் உற்பத்தியாயின. சனவரித் திங்களைவிட
பிப்ரவரியில் தங்கத்தின் உற்பத்தி 6 சத
விதமும், வெள்ளி உற்பத்தி 37 சதவிதமும்
கூடியது. ஆய்வு மாதத்தில் 2,172 காரட்
வைரம் உற்பத்தி செய்யப்பட்டது. சனவரியில்
உற்பத்தியான வைரம் 2,099 காரட்கள்
ஆகும். இதே மாதத்தில் 2,053 டன் துத்த
நாகமும், 663 டன் ஈயமும் திரட்டப்பட்டன.

பஞ்சம் ஒழிக்கும் இளைஞர் இயக்கத்
தைச் சேர்ந்த மாணவத் தொண்டர்கள்
கோளத்திலுள்ள ஃபருக்கில் குளம் ஒன்றை
அகழ்ந்துகொண்டு இருந்தனர். அப்போது
கிழக்கிந்தியக் கம்பெனி வெளியிட்ட
மூன்று பழைய நாணயங்களைக் கண்டு
பிடித்தனர். அவற்றில் ஒன்றில் 1744-ஆம்
ஆண்டு முத்திரையும், மற்றொன்றில் 1786-
ஆம் ஆண்டு முத்திரையும் உள்ளன.
மூன்றாவதில் முத்திரைகள் மழுங்கி
விட்டன.




முதல்வர் கலைஞர் அவர்களின்
ஐம்பதாவது பிறந்த நாளான ஜூன்
3உ அன்று கைரிக்ஷாவுக்குப்
பதிலாக இலவச சைக்கிள்
ரிக்ஷா வழங்கும் நிதிக்கு ரூபாய்
21,18,484 சேர்ந்தது.. இதில்
உண்டியல் மூலமாக மட்டும்
சேர்ந்த ரூபாய் 1,35,698 ஆகும்



தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக மனிதனை வைத்து மனிதன் இழுத்துவந்த கொடுஞ் செயலுக்குத் துணைபுரிந்த கைரிக்ஷாக்களின் சரித்திரம் முற்றுப்பெற்று, அவை போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தைத் தஞ்சம் அடைந்த காட்சி.



கைரிக்ஷாத் தொழிலாளர்கள் இலவசமாகப் பெறுவதற்காக, அரசினர் தோட்டத்தில் அணிவகுத்து வைக்கப்பெற்ற சைக்கிள் ரிக்ஷாக்கள்.



சென்னையில் நடைபெற்ற சைக்கிள் ரிக்ஷா வழங்கு விழாவில் பங்கேற்றுக்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களும் ஏனைய அமைச்சர் பெருமக்களும்.



முதல்வர் கலைஞர் அவர்களின் 50-வது பிறந்த நாள் நினைவாகச்சென்னை மாவட்டச் சீரணியினர், சைதாப்பேட்டையில் கட்டி முடித்த நரிக்குறவர் மாணவர் இல்லத்தைக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் நாவலர் 5-6-73 அன்று திறந்து வைத்தார்.



கன்னிமாரா பொது நூலகத்தின் புதுக்கட்டடத்தை 4-6-73ல் கல்வியமைச்சர் நாவலர் திறந்துவைத்தார்



எழில்மிகு ஏர்க்காட்டில் மலர்க்கண் காட்சியினை சுற்றுலா அமைச்சர் திரு. க. இராசாராம் 27-5-73ல் திறந்துவைத்தார்



நாகர்கோவிலில் 27-5-73
அன்று முதல்வர் கலைஞர்
அவர்கள், விளையாட்டு அரங்
கினைத் திறந்துவைத்தார்கள்.



நாகர்கோவிலில் 27-5-73
அன்று தொழிலாளர் நல
அமைச்சர் திரு. என். வி.
நடராசன் அவர்க[ளா]ல்
திறந்துவைக்கப்ப[ட்ட]
'கலைஞர் கருணாநிதி அரங்
கம்'.



# உலகப் புகழ் பெற்ற பயிர்வகைகளை உருவாக்கியது கோவை

உலகப் புகழ்பெற்ற 'ஜி. இ.
பி. 24' என்னும் கிச்சலி சம்பா
வை உருவாக்கியது கோவையி-
லுள்ள தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகத்தைச் சார்ந்த
வேளாண்மைக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சிக் கூடமே யாகும்.
இந்தக் கிச்சலி சம்பாவிற்கு இணை
யான ரகம் இதுவரை உலகில்
வேறு எங்குமே கண்டுபிடிக்கப்பட
வில்லை என்பது பெருமைக்குரிய
தாகும். இவ்வாராய்ச்சி நிலை
யத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்
வேறு ரகங்கள் உலகமெங்கிலும்
பரவியுள்ளன.

கோவைக்கருகில் உள்ள மைய
கரும்பு உருவாக்கும் நிறுவனம்
(Central Sugarcane Breeding Insti-
tute) வெளியிட்டுள்ள கோயம்புத்
தூர் கரும்பு வகைகள் (Co-cane
Varieties ) இந்தியாவின் சர்க்
கரை உற்பத்தியைப் பன்மடங்
காகப் பெருக்க உதவியதுடன்,
உலகெங்கணும் உள்ள 26 நாடு
களில் வாணிக அடிப்படையில்,
பயிரிடப்படுகின்றன. இதனால்
இந்நிலையம் உலகப் புகழ்பெற்று
விளங்குகிறது. இந் நிலையத்தில்
நாணலையும், கரும்பையும்
இணைத்து உருவாக்கிய கரும்புகள்
உலகின் கவனத்தையும், பாராட்
டுதலையும் பெற்றுள்ளன.

நாலும் என் நூலினை நூற்
பதற்கு ஏற்ற 'சுஜாதா' என்ற
ரகமும், எகிப்து நாட்டிலிருந்து
தற்பொழுது இறக்குமதி செய்
யப்பட்டு வரும் 'கிஸா' பருத்தி
ரகத்திற்கு இணையான 'சுவின்'
என்ற ரகமும் கோவையில்
உள்ள இந்திய வேளாண்மை
ஆராய்ச்சிக் கழகத்தின் மண்
டல நிலையத்திலேயே கண்டு
பிடிக்கப்பட்டன. இந்த
ரகங்கள் நாடெங்கிலும் முழு
அளவில் பரவுமானால், நீண்ட
இழைப் பருத்தியை வெளிநாடு
களிலிருந்து இறக்குமதி செய்யும்
வகையில் இந்தியா ஆண்டு
தோறும் இழந்து வரும் 85
கோடி ரூபாய் அந்நியச் செலா
வணியை மீதப்படுத்த முடியும்.
எனவே, இவ்விரு ரகங்களும்
உலகப் புகழ் பெற்று விளங்கு
கின்றன.

இத்தகைய உலகப் புகழ்
பெற்ற பயிர் ரகங்களை உரு
வாக்கிய கோவை, நாட்டிற்கும்
நானிலத்திற்கும் நல்ல சேவை
செய்து வருகிறது.






கெசட்டியர் (Gazetteer) என்ற சொல்லுக்கு ஆக்ஸ்போர்டு அகராதி தரும் பொருள் 'நிலநூல் விவரங்கள்' என்பதாகும். ஆனால் கெசட்டியர் நூல்கள் உண்மையில் வெறும் நிலநூல் விவரங்கள் மட்டும் கொண்டதல்ல; வரலாறு, அரசியல், பொருளாதாரம், போக்குவரத்து, மக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள் முதலிய பல்வேறு தகவல்களையும் திரட்டி ஒரு தொகுப்பு வடிவிலே தருவனவாகும். ஒருநாடு, நாட்டின் பகுதி, அல்லது மாநிலம் அல்லது மாவட்டம் இவைகளின் விரிவான சிறப்பு வரலாறு, மற்றும் ஏனைய செய்திகளைத் திரட்டித் தனித்தனிப் புத்தக வடிவில் வெளியிடப்படுவது கெசட்டியர் எனப்படும். ஆகையால் கெசட்டியர் என்ற சொல் இன்று மிக விரிவான பொருளை உள்ளடக்கி நிற்கிறது எனச் சொல்லலாம். தமிழில் இதனை விவரச்சுவடிகள் என்று அழைக்கிறோம்.

முந்தைய காலத்தில் விவரச் சுவடி என்பது பெரும்பாலும் பயணக் குறிப்புகளைத் தொகுத்துச் சொல்வதாகவே இருந்தது. நம்நாட்டைப் பொறுத்தவரை மெகஸ்தனீஸ், பாஹியான், யுவான்சுவாங், அல்புராணி, இபுஸ்பட்டூடா ஆகியோரின் பயணக் குறிப்புகள் இவ்வகையைச் சாரும். சாணக்கியனின் அர்த்தசாஸ்திரம் அக்கால இந்தியாவின் அமைப்பு முறைகளையும் பல்வேறு செய்திகளையும் தருவதாக உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை விவரச்சுவடி என்று சொல்லுகிற அளவு விவரங்களைத் தொகுத்துச் சொன்ன பெருமை அக்பரின் அவைப் புலவரான அபுல்பாசலைச் சாரும். அவர் எழுதிய 'அயினி அக்பரி' இந்திய விவரச் சுவடிகளின் முன்னூல். அதுபோலத் தமிழகத்தில் ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பு, குருகுகதாசப் பிள்ளையின் திருநெல்வேலிச் சீமை சரித்திரம் ஆகியவற்றை இவ்வகையில் சேர்க்கலாம். நம் நாட்டில் வந்து தங்கித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டு செய்த கால்டுவெல், வீரமாமுனிவர், போப் ஆகியோர் திரட்டிய வட்டார விவரங்களும் பயனுள்ளவைகளாக அமைந்துள்ளன.

**பழைய கெசட்டியர்கள்**

உலகெங்கும் முறையான கெசட்டியர் பதினேழாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் எழுதித் தொகுக்கப்பட்டது. இந்தியாவில் கெசட்டியர் வெளியீடு ஆங்கிலேயரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தங்கள் ஆட்சியைச் செவ்வனே நடத்திச் செல்ல மாவட்டக் கலெக்டர்கள், உயர்தர சிவில் அதிகாரிகள் ஆகியோருக்கு அவர்கள் நிருவாகம் செய்யும் பகுதியின் விரிவான எல்லா விவரங்களும் தெரிந்திருக்க வேண்டியது மிக அவசியம் என்று உணரப்பட்டது. இந்தியாவில் ஊக்கமிக்க சில அதிகாரிகளும் வேறு சிலரும் வட்டார விவரங்கள் அடங்கிய சில புத்தகங்களை எழுதி வெளியிட்டிருந்த போதிலும், முதன்முதலாக சர் வில்லியம் ஹண்டர் என்பவர்தான் 1815-ல் முறையான வகையில் அவரின் "ஈஸ்ட் இண்டியா கெசட்டியரை" வெளியிட்டார். எட்வர்டு தார்ன்டன் என்பவர் ஒரு கெசட்டியரை 1844-ல் எழுதி வெளியிட்டார். ஹண்டர் மீண்டும் 1869-ல் தொடங்கி 1881 வரை 'இம்பீரியல் கெசட்டியர்' என்ற பெயரில் ஒன்பது தொகுதிகளை வெளியிட்டார். இந்தக் கெசட்டியர்களின் உபயோகத்தை நன்கு உணர்ந்த வைஸ்ராய் லார்டு கர்ஸான் மேலும் இருபத்தாறு தொகுதிகளை இம்பீரியல் கெசட்டியர் வரிசையில் 1907—1909-ல் வெளியிட ஏற்பாடு செய்தார்.

இதனைத் தொடர்ந்து மற்ற மாநிலப் பகுதிகளிலும் கெசட்டியர் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தென்னாட்டில் அன்றைய 'மதராஸ் பிரசிடென்சியின்' இருபத்தொரு 'ஜில்லாக்'களைப் பற்றியும் 1815-ல் விவரச் சுவடிகள் தயாரிக்க முற்பட்டனர். அனுபவமும் ஆர்வமும் கொண்ட சில மாவட்ட சிவில் அதிகாரிகள் தகவல்களைத் திரட்டி "டிஸ்ட்ரிக்ட் மானுவல்" அல்லது "டிஸ்ட்ரிக்ட் கெசட்டியர்" என்ற பெயரால் பல்வேறு மாவட்டங்களுக்கு விவரச் சுவடிகளை எழுதி வெளியிட்டார்கள். அவ்வாறே தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களைப் பற்றியும் ஆந்திர, கன்னட, கேரள மாவட்டங்களைப் பற்றியும் விவரச்சுவடிகள் எழுதப்பட்டன. அப்படி எழுதப்பட்ட கெசட்டியர்கள், சென்ற நூற்றாண்டின் முடிவிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பக் காலத்திலும் சுமார் 70, 80 ஆண்டுகளுக்கு முன்பு எழுதி வெளியிடப்பட்டவையாகும். அப்புத்தகங்கள் அப்போதைய அரசியல், சமுதாயச் சூழ்நிலையில் எழுதப்பட்டிருந்தாலும் அவை ஆட்சியாளர்களுக்கான வெறும் "கையேடு" புத்தகமாக மட்டும் அமையாமல் பல்வேறு உபயோகமான ஆராய்ச்சிக் குறிப்புகளையும் உள்ளடக்கியுள்ளன. தென்னகத்தில் எழுதி வெளியிடப்பட்ட சில மாவட்ட விவரச் சுவடிகள் ஈடு இணையற்றவை என்று கருதப்படுகின்றன. அவற்றின் ஆசிரியர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் நெல்சன், பிரான்சிஸ், ரிச்சர்ட்ஸ், ஹெமிங்வே முதலானோர். இப்புத்தகங்கள் யாவும் இப்போது நடைமுறையிலில்லை. ஒருசில புத்தகங்களே முக்கியமான நூலகங்களில் பார்வைக்குரியனவாக மட்டும் இருக்கின்றன. மேலும் அப்போது எல்லா மாவட்டங்களுக்கும் விவரச் சுவடிகள் தயாரிக்கப்படவில்லை.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்புவரை நிருவாகம் புரியும் அதிகாரிகளின் பணி என்பது முக்கியமாக வரிவசூல் செய்வதும், பொதுவாகச் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துவதும் தான் என்று கருதப்பட்டது. ஆனால், இன்று மக்கள் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அரசும் நிருவாகமும் துணை நிற்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஏற்பட்டுள்ளது ஒரு பெரும் மாற்றமாகும்.

**புதுக் கெசட்டியர்கள்**

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மாவட்ட விவரச் சுவடிகளைத் திருத்திய முறையில் எல்லா மாநிலங்களிலும் தயாரித்து வெளியிடுவது என்ற திட்டத்தை மத்திய அரசின் கல்வி— விஞ்ஞான — கலாச்சார அமைச்சரகம் கொண்டு வந்தது. இந்தியாவெங்கும் மொத்தம் சுமார் 300 மாவட்ட விவரச் சுவடிகள் வெளியிடத் திட்டமிடப்பட்டது.

அவ்வேற்பாட்டின்படி அகில இந்திய விவரச் சுவடிகளை டெல்லியிலுள்ள மத்திய பதிப்பாசிரியர் தயாரித்து வெளியிடுகிறார். நமது மாநிலத்தில் 1961-ல் அந்தப் பணிக்கான மாநிலப் பதிப்பாசிரியர் அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டுப் பணி தொடங்கப்பட்டது எனினும், இதற்கு முன்பாகவே ஆவணக் காப்பகத்தின் முன்னாள் காப்பாளர் காலஞ் சென்ற டாக்டர் பி.எஸ். பாலிகா அவர்களின் முயற்சியால் சில மாவட்டங்களின் விவரச் சுவடிகள் தயாரிக்கப்பட்டன. புது அமைப்பு ஏற்பட்டதும், அப்பணி தொடர்ந்து, திருந்திய அமைப்பில் விவரச் சுவடிகளுக்கான விவரங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டது.

**கெசட்டியரின் பயன்**

இப்புதிய விவரச் சுவடிகள் அரசு அலுவலர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டி ஏடு என்பது உண்மை. ஆனால், அவை அலுவலர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், அறிவியல் வல்லுநர்கள், அரசியல்—சமூக ஊழியர்கள், மற்றும் வட்டார விவரம் அறிய விரும்பும் அனைவருக்கும் ஒரு நல்ல கருவூலமாக அமையக் கூடிய வகையில் இந்தத் திருந்திய புது விவரச் சுவடிகள் அமைக்கப்படுகின்றன. அந்நிய ஆட்சியாளர்களின் கண்ணோட்டத்தில் வரையப்பட்ட பல பகுதிகள் புதிய திருந்திய சூழ்நிலைக்கேற்ப அமைக்கப்படுகின்றன. நமது இந்தியா வெங்கும் மாவட்ட விவரச் சுவடிகளைத் தயாரிக்கும் பணியிலீடுபட்டிருக்கும் அந்தந்த மாநிலப் பதிப்பாசிரியர்களும் ஒரே சீரான அமைப்பு முறையைப் பின்பற்றும் வகையில் சுவடிகளின் கட்டுக்கோப்பு, அதிகாரத் தலைப்பு ஆகியவற்றை மத்திய அமைச்சரகம் நிர்ணயம் செய்துள்ளது.

அவற்றில் மாவட்ட நிலநூல், தாவர உயிரினங்களின் விவரம், தட்ப வெப்பநிலை, தொன்மை. அண்மைக்கால வரலாறு, மக்களின் மொழி, சமுதாயப் பழக்க வழக்கங்கள், விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைச் செல்வம் தொழிற்சாலைகள், வங்கி, வணிகம், போக்குவரத்து வசதிகள், பொருளாதார முன்னேற்றம், பொதுநிருவாகம், ரெவினியூ அமைப்பு, சட்டம், ஒழுங்கு, நீதி பரிபாலனம், மற்ற அரசுத் துறை நடவடிக்கைகள், உள்ளாட்சித் துறை, கல்வி, கலாச்சார வளர்ச்சி, நல்வாழ்வுத்துறை, தொழிலாளர் நலம், பிற்பட்டோர் நலம், அரிசன நலம்,



பொதுவாழ்க்கை, சமூகசேவை சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்கள், இன்ன பிற விவரங்கள் தொகுத்துத் தரப்படுகின்றன.

**தமிழ்நாடு மாநில கெசட்டியர் பிரிவு**

நமது மாநிலத்தில் திருந்திய முறையில் இதுவரை வெளியிடப்பட்ட மாவட்ட கெசட்டியர்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். அவை முறையே, தஞ்சை, மதுரை, தென் ஆர்க்காடு, கோவை, சேலம் மற்றும் இராமநாதபுர மாவட்டங்களாகும். அவற்றில் இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் அண்மையில் வெளியிடப்பட்டதாகும். நீலகிரி மாவட்ட கெசட்டியர் அச்சில் உள்ளது. ஏனைய மாவட்ட கெசட்டியர்களுக்கான பணி பல்வேறு கட்டங்களில் உள்ளது. அப்படி ஆய்வில் உள்ளவை திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, சென்னை, வடஆர்க்காடு, திருநெல்வேலி, கன்னியாகுமரிமாவட்ட கெசட்டியர்களாகும். தருமபுரி மாவட்ட கெசட்டியரும், மாநில கெசட்டியரும் இனித் தொகுக்கப்பட இருக்கின்றன. இது தவிர ஏற்கனவேவெளியிடப்பட்டு எல்லாப் பிரதிகளும் விற்பனையாகிவிட்ட மாவட்டகெசட்டியர்களும் புதுப்பித்து அண்மைக்கால விவரங்களுடன் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் உள்ள சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பெரிய நகரங்களுக்கு 'சிட்டி கெசட்டியர்' என்ற பெயரில் தனிக் கையேடும் தயாரித்து வெளியிடத் திட்டமுள்ளது. அந்நகரங்களின் சிறப்பு அம்சங்கள் தொகுக்கப்பட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் இவை வெளியிடப்படவிருக்கின்றன.

மத்திய கல்வி—கலாச்சார அமைச்சரகம் தேசிய கெசட்டியர் வரிசை, கலாச்சாரத் தொகுதி வரிசை என்ற இரு புதுத் திட்டங்களையும், ஐந்தாவது திட்டத்தில் உருவாக்கி, உள்ளது. இந்த வரிசையில் ஓவியம், சிற்பம், நாட்டியம் கிராமிய நடனம், இசை போன்ற பல்வேறு தலைப்புகளில் விவரங்களைத் தொகுத்துத் தனி நூல்கள் வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தின் தனிச்சிறப்பை எடுத்துச் சொல்லும் வகையில் இந் நூல்கள் அமைக்கப்படும்.

**இராமநாதபுரம் கெசட்டியர் வெளியீடு**

நமது மாநிலத்தில் 1961-க்குப் பிறகு திருந்திய முறையில் வெளியிடப்பட்ட மாவட்ட கெசட்டியர்களில் இராமநாதபுரம் கெசட்டியர் ஆறாவதாகும்.



இராமநாதபுர மாவட்டம் பழம் பெருமை கொண்ட பாண்டிய நாட்டின் தொன்மையான பகுதிகளில் ஒன்றாகும். இம்மாவட்டம் 1910-ல் தான் தனியான ஒரு மாவட்டமாக உருப்பெற்றது. முன்னாள் இராமநாதபுரம் சேதுபதியின் ஜமீன் பகுதிகளையும், சிவகங்கை ஜமீன் பகுதிகளையும் இணைத்து அத்துடன் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து சில பகுதிகளையும் பிரித்துஎடுத்து ஒரு தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டது. இந்த மாவட்ட கெசட்டியரைத் தொகுக்கப் பல்வேறு நூல்கள் பயனுள்ளதாக அமைந்தபோதிலும் அதில் குறிப்பிடத் தகுந்தவைகள் சில உண்டு.

ஏ.ஜே. ஸ்டுவார்ட் எழுதிய "மானுவல் ஆப் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் (1879)", டாக்டர் கால்டுவெல் எழுதிய "எ பொலிடிகல் அண்டு ஜெனரல் ஹிஸ்டரி ஆப் திருநெல்வேலி (1881)", எச்.ஆர். பேட் எழுதிய "திருநெல்வேலி கெசட்டியர் (1917)", ஜே.எச். நெல்சன் எழுதிய "மதுரா டிஸ்டிரிக்ட் மானுவல்—5 பாகம் (1868)", டபிள்யூ பிரான்சிஸ் எழுதிய "மதுரை டிஸ்டிரிக்ட் கெசட்டியர் (1905)" ஆகியவையாகும். இவை தவிர ராஜாராமாராவ் என்பவர் எழுதிய "ராம்நாட் டிஸ்டிரிக்ட் மானுவல்" என்ற புத்தகமும் இந்தக்கெசட்டியரை உருவாக்கப் பயன்பட்டது.

இப்பொது வெளியிடப்பட்டுள்ள இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் 1061 பக்கங்களைக் கொண்டது. நல்ல ரெக்சின் அட்டையுடன் பைண்டு செய்யப்பட்டுள்ளது. பலபுகைப் படங்கள், மாவட்ட நிலப் படம், மற்றும் அட்டவணைக் குறிப்பு ஆகியவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூபாய் பதினைந்து. பிரதிகள் வேண்டுவோர், மேலாளர், அரசு விற்பனை நிலையம், 166, அண்ணாசாலை, சென்னை-2, என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

**இராமநாதபுரம் கெசட்டியர் வெளியீட்டு விழாவில் முதல்வர்**

இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் சென்ற மார்ச்சுத் திங்கள் 17-ஆம் நாளில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தின் முதல் பிரதியைச் சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்களிடம் முதல்வர் வழங்கி இந்த வெளியீட்டினைத் தொடங்கி வைத்தார்கள். வருவாய்த்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இந்த விழாவில் பங்கேற்றார்கள். தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்களது அறையில் இந்த விழா நடந்தது. இந்த விழாவில் கெசட்டியரை வெளியிட்டபிறகு அங்குக்குழுமியிருந்த பத்திரிகை நிருபர்களிடம் முதல்வர் அவர்கள் கூறியதாவது :

"இதுவரை ஆறு மாவட்ட கெசட்டியர்கள் வெளியிடப்பட்டுள்ளன. தஞ்சை, மதுரை, தென் ஆர்க்காடு, கோவை, சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களைக் குறித்த கெசட்டியர்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டாலும் தற்போது வெளியாகியிருக்கும் இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் போன்று விரிவான அளவில் அவை வெளியிடப்படவில்லை. அவைகளையும் இனி வெளியாகவிருக்கும் மற்ற மாவட்ட கெசட்டியர்களும் இதே அளவு விரிவான முறையில் வெளியிட அரசு உத்தேசித்துள்ளது. நீலகிரி மாவட்ட கெசட்டியர் தற்போது அச்சில் உள்ளது. இந்தக் கெசட்டியர்களைத் தமிழில் வெளியிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மாவட்டத்தின் தொன்மை, அண்மைக் கால வரலாற்றுச் சிறப்புகள், நில அமைப்பு, தொழில்வளம், சமுதாயப் பழக்க வழக்கங்கள், முதலிய பல்வேறு விவரங்களைக் கொண்டதாக இந்தக் கெசட்டியர் அமைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் கெசட்டியர் நூலின் விலை ரூபாய் 15 தான். எனினும், இதனை அச்சிடவும் இவ்விவரங்களைச் சேகரிக்கவும் ஆகியுள்ள செலவைக் கணக்கிட்டால் பிரதிக்கு ரூபாய் 150-க்கு மேல் ஆகின்றது. ஆனால் அனைவரும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டுமென்ற அளவில் இந்நூலின் விலை ரூபாய் 15 என்று போடப்பட்டுள்ளது."

# உலகில் இரண்டு கிளிகள்

**டி.என். சுகி சுப்பிரமணியன்**

## 15 "கனவுகள் வாழ்வதில்லை" "நினைவுகள் சாவதில்லை"

'திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர்' ஆசைகளை ஒருத்தி விதைத்து வைப்பான்; அறுவடையை இன்னொருத்தி கொண்டு போவதா?" என்று இன்னும் குமுறிக்கொண்டுதானிருக்கிறது ரோமியோவின் இதயம்.

அவன் ஒருவன் இதயம் கொதித்தால் என்ன? குமுறினால் என்ன? மணிவாசகன்—நர்மதா இவர்களின் திருமணத்திற்கு வந்திருக்கும் ஓராயிரம் இதயங்களும் அவர்கள் இருவரின் வளமான வாழ்வுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த வண்ணம் மகிழ்ந்திருக்கின்றன. வாழ்த்துகின்ற இதயங்களின் தலைவாசலில் நின்று என்றுமுள்ள பெருமகிழ்ச்சியோடும் எல்லையிலாப் பெருமிதத்தோடும் அனைவரையும் வரவேற்பதும் அவர்களுடன் சேர்ந்து வாழ்த்துடிக்கின்ற மணமக்களை வாழ்த்துவதுமாக இருக்கிறாள் ராதை.

இந்த வைபவத்தைக் கண்டு களிக்க பாண்டித்துரை உயிருடன் இல்லையே என்ற உணர்வின் நெருடல், உற்ற நண்பர்களின் இதயத்துள் இருந்தது. பாண்டித்துரை உயிரோடு இல்லாவிட்டால் என்ன? அவர்தம் இதயம், அவர்தம் ஆசிகள் அனைத்தும் ராதையின் வடிவத்தில் ஜீவனோடு வாழ்ந்த வண்ணம் இருக்கின்றனவே என்ற பெருமிதம் ஒரு சிலரின் உள்ளங்களில்....

சம்பந்தியைப் போன்ற பொறுப்பும் நர்மதாவுக்குச் சகோதரியைப் போன்ற வாஞ்சையும் கொண்டு திருமண நிகழ்ச்சிகளைச் சீரும் சிறப்பும் குன்றாமல் நடத்தி முடித்த ராதையை எல்லோரும் ஏகமனதாகப் பாராட்டிச் செல்கின்றனர்.

செண்பகா மில்லின் சட்ட ஆலோசகன் பதவிக்கான நியமனப் பத்திரத்தை ரோமியோ தன் அன்புப் பரிசாக மணிவாசகனிடம் கொடுத்த அதே நேரத்தில்—

சட்டக் கல்லூரியில் தான் சேருவதற்கான விண்ணப்பத் தாளில் கையெழுத்திட்டு நர்மதாவிடம் தன் சிறப்புப் பரிசாகக் கொடுக்கிறாள் ராதை!

எங்கும் திருமணத்தின் கோலங்கள்; கோலாகலங்கள். திருமண வீட்டின் சந்தடிகள்; சந்தன தாம்பூல நறுமணங்கள்.

மாலை வரவேற்பின்போது—

இசை வெள்ளம் ஒரு பக்கம் வழிந்தோடுகிறது. மற்றொரு பக்கம் இரைச்சல் வெள்ளம் குமிழ்கிறது.

கோயம்புத்தூர் வடிவேலு தாம் வந்திருக்கும் விஷயத்தைப் பற்றிச் சாடைமாடையாகப் பேச ஆரம்பிக்கிறார். அதுவும் யாரிடம்....பாண்டித்துரையின் உயிர்த் தோழர் ஆலை முதலாளி முத்தையாவிடம்!

வரவேற்பில் நடைபெறும் இசைக் கச்சேரியைத் தானும் [illegible] வதற்குள் அதே [illegible] ஒரு [illegible] என்று [illegible] இல் சொன்னது [illegible] விட்டது [illegible] முத்தையா!" என்று [illegible] போடுகிறார் வடிவேலு.

"உண்மை உண்மை.. [illegible] மணிவாசகனின் திருமணச் [illegible] களுக்கு மத்தியில் அவர்தம் [illegible] பர் ரோமியோவின் திருமணம் நிச்சயமாயிருப்பதும் [illegible] குரிய செய்திதான்!" என்கிறார் முத்தையா.

திருமண வீட்டிலும் சரி, இழப்பு வீட்டிலும் சரி அவரவர் அனுபவத்தை அவரவர் நினைத்துக் கொள்ளுவார்கள்.

அவரவர்க்குத் தத்தம் வீட்டுத் திருமணத்தைத் தவிர வேறெந்த நினைவுகளும் வராது போலும்!

"மிஸ்டர் ரோமியோவின் திருமணம் இடக்கட்டும்" என்று மேலே பேச ஆரம்பித்த வடிவேலுவைக் கையமர்த்திவிட்டார் முத்தையா. "கிடக்கட்டுமாவது! என் மகளின் திருமணம் உங்களுக்கு அவ்வளவு அலட்சியமாகப் போய்விட்டதோ. இனிமேல் [illegible] களுடன் எனக்கென்ன [illegible] என்று கூறியபடியே [illegible] இடத்தைவிட்டு எழுந்து [illegible] முத்தையா.

வடிவேலுவின்பாடு [illegible] டாட்டமாகிவிடுகிறது!

மணிவாசகனிடம்—[illegible] மாப்பிள்ளை—[illegible] வாசகனிடம் பக்குவமாக [illegible] விஷயத்தை எடுத்துச் [illegible] கூடிய நபராக முத்தையா [illegible] தேர்ந்தெடுத்து [illegible] செய்தியை ஆரம்பிக்கப்போ [illegible] முத்தையாவே முறுக்கிக்கொண்டு போகிறாரே என்று கவலைப் [illegible] கிறார் வடிவேலு. [illegible] பரபரப்புக்கு மத்தியில் [illegible] ராதையைப் பெண் கேட்டுப் [illegible] பேச்சைத் துவக்கும் புத்திசாலி [illegible] தனமோ திருமணத் தேதியை நிச்சயம் பண்ணக்கூடிய சாமர்த்தியமோ தம் மகிளவி ரஞ்சி [illegible] த்துக் கிடையாது என்பது [illegible] வே அவருக்குத் தெரிந்த விஷயம். ராதையின் திருமணம் பற்றி மணிவாசகனிடம் உரிமையுடன் பேசக்கூடிய ஒரே நபர் ஆலை முதலாளி முத்தையாதான்.....அவர் மனம் கோணும்படி தாம் தவறாகப் பேசியிருக்க வேண்டாமே என வடிவேலு காலங் கடந்து வருந்தப்பட்டுக் கொள்கிறார்.

சமய சஞ்சீவி போல் அவர் முன்னல் வந்து நிற்பவன் ரோமியோதான்!

''வாருங்கள் புது மாப்பிள்ளை.. அதிகமாக ஓடியாடி அலட்டிக் கொள்ளக் கூடாது..உங்கள் திருமணத்தின் போது சமயத்தில் கால் கடுக்க நிற்க வேண்டியதிருக்கும்..இப்போது கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்..'' என்று ரோமியோவின் மீது அன்பு வலையை விசிறி எறிகிறார் வடிவேலு.

# வேடிக்கை விளக்கங்கள்!

**அபத்தம்** :—நம்முடைய சொந்தக் கருத்துக்களுக்கு ஒத்து வராத, பிறரது எண்ணங்கள்.

**சந்நியாசி** :—சொகுசான வாழ்வை மறுத்துக் கொண்டிருக்கும் சொகுசு படைத்த ஒரு நபர்.

**ரசிகர்கள்** :—தங்களது சொந்த ஆவலுக்கு ஆளாகி அவதிப் படுபவர்கள்.

**குளிக்கும் தொட்டி** :—ஆர்கிமிடீஸின் பரிசோதனைக் கூடம். அவரது காலத்தில் இருந்தே விஞ்ஞானத்திற்கு எந்தவிதமான பலனும் இன்றி மனித குலம் பயன் படுத்தி வரும் சாதனம்.

**தாடி** :—கழுத்துப் பட்டிக்கும், 'டை'க்கும் பதிலாகப் பயன் படுத்தப்படுவது.

**குழந்தைப் பருவம்** :—சிறிய சம்பவங்களை மாபெரும் விபத்துக்களாகவும், மாபெரும் விபத்துக்களை சிறிய சம்பவங்களாகவும் மனிதன் கருதும் ஒரு காலம்.

**மகள்** :—அதிகச் செலவு வைக்கும் ஒரு குட்டைப் பாவாடை.

**நாய்** :—சிந்திக்கும் மனிதனின் நண்பன்; அது சிந்திப்பதை வெளியுலகிற்கு அறிவிக்காத பிராணி.

**தங்கம்** :—மக்களுடன் எளிதில் கலந்து, கலந்தபின் அவர்களைச் சிதைவடையச் செய்யும் ஓர் உலோகம்.

**வாழ்வின் அற்ப விஷயங்கள்** :—தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை நிகழ்பவை.

**வாழ்க்கை** :—வெளி மாணவனாக இருந்து பயில முடியாததொரு பள்ளிக்கூடம்.

**அண்டை வீட்டுக்காரன்** :—உங்களைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பதைவிட அதிகமாக அறிந்துள்ளவன்.

**உறவினர்கள்** :—உங்கள் இன்பத்தை நீங்கள் அனுபவிக்க அனுமதிக்காத கூட்டத்தினர்.

**வதந்தி** :—ஒலியின் வேகத்தில் செல்லும் செய்தி.

**மருமகன்** :—தனக்கு எவ்வளவு குறைபாடுகள் உள்ளன என்பதைத் திருமணம் முடியும்வரை அறிந்திராத ஒரு மனிதன்.

**புத்திக் கூர்மை** :—பிறர் அனைவருக்கும் இல்லாத, உங்களுக்கு மட்டுமே அபரிமிதமாக உள்ள ஒரு தன்மை.

(சோவியத் நாட்டிலிருந்து வெளிவரும் "குரோகடைல்" என்ற நகைச்சுவை இதழில் வெளிவந்த வேடிக்கை விளக்கங்கள்.)

அந்த வலையும் ரோமியோவின் மேல் விழாமல் கைஎட்டித் தடுக்கிறார் முத்தையா. ''நண்பனின் திருமணம் என்றால் நாலாவித வேலையும் இருக்கும்... நான் கணக்கில் தூக்கமும் கெடும்.... வயசுப் பிள்ளைகள் வருத்தப்பட்டு முடியுமா....? அல்லது வருத்தப் படத்தான் தோன்றுமா....? நீங்கள் போய் வருகின்ற விருந்தினரைக் கவனியுங்கள் மாப்பிள்ளை'' என்று கூறி ரோமியோவை அப்பால் நகர்த்துகிறார் ஆலை முதலாளி முத்தையா.

முத்தையாவின் அலட்சியத்திற்கும் காரணம் இருக்கிறது. உதகையில் மணிவாசகனை நர்மதாவுடன் சேர்ந்து பார்த்தவுடன் ஒரு கணமும் தாமதிக்காமல் மணிவாசகனின் முறைப்பெண் ராதையைத் தன் மகனுக்குப் பெண் கேட்ட காரியவாதியாயிற்றே இந்த வடிவேலு! மற்றவர்களின் மனத்துடிப்புகளையோ பாதிப்புகளையோ பற்றிச் சற்றும் கவலைப்படாமல் தன் காரியத்திலேயே குறியாக இருக்கும் வடிவேலுவின் வீட்டில் மருமகளாகப் போய் ராதை நிம்மதியாகக் குடும்பம் நடத்த இயலுமா? ராதையைப் போன்ற பரந்த மனம் கொண்ட பெண்ணுக்கு, ராதையைப் போன்ற பெருந்தன்மைமிக்க நல்லவனுக்கு வடிவேலுவைப் போன்ற சுயகாரியப் புலிகளுக்கு மத்தியில் எப்படி நிம்மதி கிடைக்க முடியும்? நிச்சயமாகக் கிடைக்காது என்பதைப் பாண்டித்துரையும் அறிந்து வைத்திருந்தார். அதைப்பற்றித் தம் அருமை நண்பர் முத்தையாவிடம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார். எனவே, பாண்டித்துரை உயிருடன் இருந்திருந்தால் வடிவேலுவை எப்படி ஒதுக்கி வைத்திருப்பாரோ அந்த அந்த எல்லையிலேயே இப்போதும் நிறுத்தி வைக்க வேண்டுவது தம் கடமை என்று முத்தையா முடிவு கட்டியிருந்தார்!

இரவு விருந்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் சாக்கில் பரபரப்பாக அங்கிருந்து நழுவிவிடுகிறார் முத்தையா. அடுத்து யாரைத் தூதாக அனுப்பலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடும் வடிவேலுவைப் பார்த்துப் பரிதாபப்படவும் அந்தக் கூட்டத்தில் ஆள் இருந்தது. வடிவேலுவின் மீது ஏற்படும் பரிதாபம் என்பதைவிட, ராதையின்மேல் ஏற்பட்டிருக்கும் பாசமே முதன்மையான காரணம் என்பதும் பொருந்தும். அவர்தான் பசுபதி—டாக்டர் நர்மதாவின் தந்தை—சிங்கப்பூர் செல்வர் பசுபதி!

''வணக்கம்....நான் பசுபதி.. சிங்கப்பூரில் வியாபாரம்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதற்குள் அவர் கரங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு நெடுநாள் பழகியவர்போல் வடிவேலு பேசத் தொடங்குகிறார். ''அடேடே.... சிங்கப்பூர் சீமான் மிஸ்டர் பசுபதி! நர்மதாவின் - மன்னிக்கவும் டாக்டர் நர்.மதாவின் தந்தை....உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்.... ஒரு விஷயம் தெரியுமோ உங்களுக்கு....?'' என்று அடிக்குரலில் கேட்டவர் பசுபதியைத் தனியே அழைத்துப் போகிறார். கச்சேரி மேடையின் பின்புறம் காற்றோட்டமாக வந்து நிற்கின்றனர் இருவரும்.

''உங்கள் மகளுக்கும் மணிவாசகனுக்கும் உள்ள காதலை உரிய நேரத்தில் பாண்டித்துரைக்குத் தெரிவித்ததே நீங்கள்தான் மிஸ்டர் வடிவேலு.... அதைத் தானே சொல்லப் போகிறீர்கள்?'' என எதிர்க் கேள்வி கேட்கிறார் பசுபதி.

''ஆமாம்....நல்ல காரியங்கள் தாமாகவே நடக்கும். அது நம்மால் கொஞ்சம் விரைவாக நடந்தால் அந்த விரைவில் நமக்குப் புண்ணியந்தானே?'' என்று சிரித்துப் பேசுகிறார் வடிவேலு. 'தம் மகளை மணந்தவன்' என்ற உரிமையுடன் பசுபதி - பணச் செழுமையுள்ள பசுபதி - மணிவாசகனிடம் என்ன வேண்டுமானாலும் பேசலாம் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற நினைவு வடிவேலுவின் நெஞ்சில் அதுவரையில் தோன்றாமல் இருந்தது ஆச்சரியந்தான்! கர்வம் பிடித்த முத்தையாவைத் தூது போகச் சொன்னதற்குப் பதில் கனியக் கனியப் பேசும் பசுபதியையே முதலில் பார்த்துத் தம் எண்ணத்தைத் தெரிவித்திருக்கலாமே என்று வடிவேலு வருந்துகிறார்!

''மிஸ்டர் வடிவேலு! மணிவாசகன் திருமணம் இவ்வளவு விரைவாக நடந்து முடிவதற்கு நீங்கள்தான் [illegible] தால்—'' என்று பசுபதி [illegible] வதற்குள் வடிவேலு குறுக்கிட்டு, ''நானும் ஒரு காரணம் என்பதால்'' எனத் திருத்துகிறார்.

பசுபதி மெல்லச் சிரித்துக் கொண்டே, ''சரி, நீங்களும் ஒரு காரணம் என்பதால், மணிவாசகனுக்கு உங்களிடம் தனி மதிப்பு ஏற்படும்'' என்கிறார். ''ஏற்பட்டிருக்கும்'' என்று அழுத்தமாகச் சிரிக்கிறார் வடிவேலு.

''ஏற்பட்டுவிட்டது என்றே முடிவு செய்துகொள்வோம். இதனால் உங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை—உங்கள் மகனின் திருமணம். அதுதானே?''

''அதேதான்...... அமைதியும் அடக்கமும் நிறைந்த ராதை என் மருமகளாக வரவேண்டும். அந்தப் பாக்கியம் என் குடும்பத்திற்குக் கிடைக்க வேண்டும்!'' என்று பசுபதியின் முன் கரங் குவித்து நிற்கிறார் வடிவேலு.

''கிடைக்கும்...! மணிவாசகன் மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் போல் பத்துமடங்கு என் இளைய மகள் ராதையின்மேல் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்''

''உங்கள் மேலும் நான் நம்பிக்கை வைத்துவிட்டேன். அதனால்தான் உங்களிடம் எல்லா விவரங்களையும் விரிவாகப் பேசத் தனிமையில் வந்திருக்கிறேன்!''

''மிஸ்டர் வடிவேலு.... கல்யாண காரியம் நாலுபேர் கூடிப்



பேச வேண்டிய விஷயம். காதலர் சந்திப்புக்குத்தான் தனிமை தேவை... புரிகிறதா?''

தனிமையில் இருவரும் சிரிக்கிறார்கள்.

''புரிகிறது...!''

மீண்டும் சிரிப்பு.

பசுபதி, என்ன கேட்டாலும் மறுபேச்சுக்கு இடமில்லாமல் பணிந்து பணிந்து தலையாட்டுகிற வடிவேலுவைப் பார்த்ததும் முத்தையாவுக்குச் சிரிப்புத்தான் வருகிறது... வடிவேலுவைச் சீண்டி மகிழ அவருக்கும் விருப்பந்தான். ஆனால் கல்யாணவீட்டில் அதற்கான நேரமில்லையே என்று அரை குறை மனத்துடன், ''சம்பந்தி...! சாப்பிட வரலாம்'' என்று பசுபதியை நோக்கிக் குரல் கொடுத்து விட்டு அப்பால் நகர்ந்து போகிறார்.

''சம்பந்தி... நாம் இருவரும் இன்றுசேர்ந்து சாப்பிடவேண்டும். நீங்கள் மறுக்கக் கூடாது'' என்று பிடிவாதம் செய்கிறார் வடிவேலு. அவருடைய பிடிவாதத்தினூடே பித்துக் குளித்தனமும் இழையோடுகிறது! பசுபதிக்கு அவரைப் பார்த்துப் பரிதாபம் அதிகரிக்கிறது!

''சாப்பிடுவோம் சம்பந்தி... சாப்பாட்டுக்குப் பிறகு ராதையின் சம்மதத்தையும் கேட்டுவிடுவோம்'' என்கிறார் பசுபதி.

''சம்மதம் தெரிந்ததுதானே... உங்கள் மகள் ராதையைக் கூப்பிடுங்கள். நானும் முறைப்படி கேட்டுவிடுகிறேன்!'' என்று அவசரப்பட்டவரைக் கையமர்த்தி, ''நேரங்காலம் வரட்டும். நானே கேட்கிறேன். முதலில் சாப்பாடு... அப்புறந்தான் சம்பந்தம்!'' என்று கூறிக் கல்யாண மண்டபத்திற்குள் அழைத்து வருகிறார் பசுபதி.

மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் குளிர்பானம் கொடுத்துவிட்டு அங்கிருந்த பரிசுப் பொருள் பொட்டலங்களை அப்புறப்படுத்தி எடுத்துச் செல்கிறாள் ராதை. மானின் துள்ளல், மயிலின் அழகு, மழை மேகத்தின் கருமை எல்லாம் ஓர் பெண்ணுருவாய் வந்ததைப் போன்றல்லவா இந்த ராதை கல்யாண மண்டபத்தையே கலகலப்பாக்கிக் கொண்டிருக்கிறாள்...!

வடிவேலுவும் பசுபதியும் நிற்குமிடத்தைத் தாண்டும்போது ராதை கனிவு நிறைந்த பார்வையுடன் பசுபதியிடம், ''இரவு நேரம் அரிசிச்சோறு உங்களுக்கு ஒத்துக் கொள்ளாது என்பது தெரியும் சித்தப்பா.... உங்களுக்காகக் கோதுமைச் சப்பாத்தி தயாராகியிருக்கிறது'' என்று கூறிவிட்டுப் புறப்படுகிறாள்.

வெளியூர் விருந்தினரெல்லாம் விடைபெற்றுப் போய்விட்டனர். பாண்டித்துரையின் இல்லத்தில் பழைய அமைதியும் புதிய பொலிவும் குடிகொள்ளத் தொடங்கிய நேரம். பசுபதிக்குத் தன் மகளின் திருமண வேலைகளை முடித்த அலுப்பு— முத்தையாவுக்கோ தன் மகளின் திருமண வேலைகளை முடிக்க வேண்டிய பரபரப்பு... இருவருக்குமிடையே, வடிவேலுவுக்குத் தம் மகனின் திருமணம் பற்றிய பேச்சை எடுக்கவில்லையே என்ற அங்கலாய்ப்பு.

பசுபதி, கோயம்புத்தூர் வடிவேலுவின் குடும்ப நிலையை எண்ணிப் பார்க்கிறார். ஒரே பிள்ளை. ஏகப்பட்ட சொத்துக்கள். தரமான படிப்பு. தகுதிக்கு ஏற்ற வேலை... கண்ணுக்கு அழகான பையன். கண்ணியம் நிறைந்த தோற்றம். ராதையின் நல்ல இதயத்திற்கு இது ஏற்ற இடந்தான் என அவர் முடிவு செய்து விட்டார். மணிவாசகனும் பசுபதியின் முடிவு சரியே என ஆமோதித்து விட்டார். நர்மதா மட்டும், ''எதற்கும் ராதையின் சம்மதத்தைக் கேட்டுவிடலாமே'' என்று தயங்குகிறார்.

பெண்ணின் மனத்தை மற்றொரு பெண்தானே அனுமானிக்க முடியும்? சியாமளாவும் ராதையின் சம்மதம் தெரிந்துகொள்வதே நியாயம் என வாதாடுகிறாள்.

பாண்டித்துரையின் வீட்டுக் கூடம்.

பாண்டித்துரையின் நெடிய கம்பீரமான உருவம். புகைப்படமாய் இலங்கி பொலிவு தந்து கொண்டிருக்கிறது.

ராதையின் சம்மதத்திற்காக அனைவரும் காத்துக்கொண்டிருக்கும் நேரம்.

குத்துவிளக்கின் முத்துச் சுடராக வந்து நிற்கிறாள் ராதை. அவள் நடையில் அமைதி; ஆனால் ஒவ்வொரு அடியையும் உறுதியுடன்தான் எடுத்து வைக்கிறாள் என்பதை மற்றவர்களின் உள்ளங்களில் பதிய வைப்பதைப் போன்ற அழுத்தம்.

ராதை பேசுகிறாள்.

''உள்ளத்தால் ஒரு வாழ்க்கை உலகத்துக்காக ஒரு வாழ்க்கை என்று என்றால் இரட்டை வேடம் போட முடியாது. என்னைப் பொறுத்தவரை என் உடல் இந்த வீட்டை விட்டு வெளியே போகாது. உள்ளம் இன்னொருவருடன் ஒன்ற முடியாது. என்றென்றும் நான் பாண்டித்துரையின் மகளாக, நர்மதாவின் தங்கையாக, மணிவாசகனின் மாமன் மகளாக—குமாரி ராதாவாகவே—வாழ்ந்து விடுவது என்று தீர்மானித்துவிட்டேன்.... என்னை என் விருப்பப்படியே வாழ விடுங்கள் என்று உங்களைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.... என்னை மன்னித்து விடுங்கள்!''

எரிமலையைக் கூட இரண்டு விரல்களால் அணைத்துவிடக் கூடிய சாந்தம் உள்ள ராதையின்



பேச்சில் இவ்வளவு வேகம் இதற்கு முன் வந்ததில்லை. அங்கிருந்த அனைவர் நெஞ்சிலும் ராதையின் வார்த்தைகள் எரியீட்டியாகப் பாய்ந்து தைக்கின்றன.

ராதைக்கு மறுமொழி கூறும் மன உறுதி மணிவாசகன் ஒருவனுக்குத்தான் இருக்கின்றது.

''ராதை... உன் உணர்ச்சிகள் உனக்குப் புரிகின்றன... உன் உணர்ச்சிகளை நான் மதிக்கிறேன். இங்கிருக்கும் மற்றவர்களைவிட நான்தான் உன்னை...'' விரக்திக்கு நேரடிப் பொறுப்பாளன் என்கிறான்.

''இது விரக்தியல்ல அத்தான். கன்னிப் பெண் ஒருத்தியின் வைராக்கியம்''

''கன்னிப் பருவத்துக் கனவுகள் காலவோட்டத்தில் நிலைக்க முடியாது ராதா...''

''என் வாழ்க்கை முழுவதுமே கன்னிப் பருவம்தான் என்று நான் தீர்மானித்துக் கொண்டு விட்டேன் அத்தான். என் காலம் முடியும்போதுகூட, கனவுகள் கலையாமல்தான் என் வாழ்வு முடியும்!''

''கனவுகள் வாழ்வதில்லை ராதா...''

''நினைவுகள் சாவதில்லை!''

இந்த வார்த்தைகளைக் கூறிய பிறகு ஒரு கணமும் நிற்காமல் அறையினுள் ஓடி மறைகிறாள் ராதை. ஒவ்வொருவர் இதயத்திலும் ஓராயிரம் மின்னல் கோலங்களை ஏற்படுத்திவிட்டன. 'நினைவுகள் சாவதில்லை!' என்று ராதை கூறிய சொற்கள்!

''ராதையின் எதிர்காலம்?'' என்று அக்கறையுடன் வினவுகிறாள் சியாமளா.

'அவள் சட்டம் படிக்கப் போகிறாள். என்னிடமே ஜூனியராக இருக்கப் போகிறாள்'' என்கிறான் மணிவாசகன்.

மணிவாசகனே இப்படிக் கூறியதும் நர்மதாவுக்குத் திகைப்பு. மனமாறத்தான் மணிவாசகன் இதைக் கூறுகிறானா அல்லது மற்றவர்களின் மன ஆறுதலுக்காகக் கூறுகிறானா என்பது நர்மதாவுக்குப் புரியவில்லை.

**முதல் பாகம் முடிவுற்றது.**

### குஞ்சுகளுக்கான பணம் வழங்குதல் :—

தண்ணீர், தீனிப் பாத்திரங்கள், 15 நாட்களுக்கான தீனி தயாரான பின் வங்கி மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குஞ்சு விற்பனை நிறுவனத்திற்குக் குஞ்சுகளுக்கு ஆணை நேரடியாக அனுப்பப்படும். 100 கோழிகளை வளர்க்கும் பண்ணையாளர்களுக்கு 110 குஞ்சுகளும், 200 கோழிகளை வளர்ப்பவர்களுக்கு 220 குஞ்சுகளும், 300 கோழிகளை வளர்ப்பவர்களுக்கு 330 கோழிக் குஞ்சுகளும் வழங்கப்படும்.

சாதாரணமாக நான்கு வாரக் குஞ்சுகளே வழங்கப்படும். குஞ்சுகள் வந்து சேர்ந்ததும் வங்கி அதற்கான தொகையை டிராப்ட் மூலம் குஞ்சு விற்பனை நிறுவனத்திற்கு அனுப்பிவிடும்.

### வட்டி விகிதம்

1. நகர்ப்புறங்களில் ஆண்டிற்கு 2,000 ரூபாய்க்கும், கிராமப் புறங்களில் 1,200 ரூபாய்க்கும் அதிகம் வருவாய் பெறுதவர்களுக்கு 4 சதவிகிதம் வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். ஏழை மக்களுக்கு இது ஓர் மகத்தான நல்ல வாய்ப்பு என்பதில் ஐயமில்லை. ஏழைகள் ஏற்றம் பெறச் செய்யும் வங்கி வாழ்த்துக்குரியது.

2. மேற் குறிப்பிட்ட வகையினர் தவிர, ஏனையோருக்கு 10 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படும்.

200 அல்லது 300 கோழிகள் வளர்க்கக் கடன் பெறுபவர்கள் அனைவருக்கும் 10 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படும்.

### பிணையம் (Security)

1. 3,000 ரூபாய்க்குக் குறைவாகக் கடன் பெறுபவர்கள், அதாவது 100 கோழிகள் வளர்ப்பவர்கள்.

அ. கோழி வீடும், கோழிகளும் வங்கி பெயரிலேயே இருக்க வேண்டும்.

ஆ. கடன் பெறுபவர்கள் மூவர் ஒருவருக் கொருவர் நபர் ஜாமீன் கொடுக்க வேண்டும்.

இ. 3,000 ரூபாய்க்கு மேல் கடன் வாங்குபவர்கள், நிலம் அல்லது வீடு அடமானம் எழுதிப் பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

### விஞ்ஞான முறையில் கோழி வளர்ப்பு :

மக்கள் உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும், புரதச்சத்து

### ஒரு வேண்டுகோள்!

'தமிழகம்' இதழுக்குக் கவிதை, கதை, கட்டுரை எழுதுவோர் அதனைத் தாளின் ஒரு பக்கத்தில் எழுதிக் கொண்டு அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறோம். பிரசுரம் ஆகாதவற்றை எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

வைட்டமின்கள், தாதுப் பொருள்கள் மிக அவசியம். இவை கோழி இறைச்சியிலும், முட்டையிலும் நிறைந்து காணப்படுகின்றன. கலப்படம் செய்ய முடியாத சிறந்த உணவுப்பொருளாகிய முட்டையை முழுமூரக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்தல் இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்.

இத்திட்டத்தில் வீரியக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த வீரியக் கோழிகள் வெள்ளை லெக்கார்ன், சுத்த இனத்தை விட அதிக முட்டைகள் இடுகின்றன.

சாதாரணமாகக் கோழிகள் வளர்க்க மூன்று முறைகள் கையாளப்படுகின்றன. 1. திறந்த வெளி வளர்ப்பு முறை. 2. தீவிர வளர்ப்பு ஆழ்கூள வீடு. 3. அடுக்குக் கூண்டுமுறை.

முழுமூரக் கோழி வளர்ப்புத் திட்டத்தில் ஆழ்கூள வீடு மூலம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த ஆழ்கூள வீடு கோழி வளர்ப்பு முறையில் ஏற்படும் நன்மைகள் வருமாறு:

1. சிறிய இடத்தில் நிறையக் கோழிகளை வளர்க்கலாம்.

2. தினசரி சுத்தம் செய்ய வேண்டியதில்லை.

3. குறைந்த ஆட்களை வைத்து அதிகமான கோழிகளை வளர்க்கலாம்.

4. தரை மெத்தென்று இருப்பதால் முட்டைகள் உடையாது.

5. வியாதிகளிலிருந்து கோழிகளுக்கு அதிகமான பாதுகாப்பு கிடைக்கிறது.

6. குளிர் காலத்திலும், வெயில் காலத்திலும் கூளத்தில் கோழிகள் சுகமாக இருக்கின்றன.

7. கோழிகள் வெளியே போகாததால் நோய் பரவிட அதிக வாய்ப்பு இல்லை.

8. கோழிகளுக்குத் தேவைப்படும் வைட்டமின் பி2, பி12 சத்துக்கள்.

9. கூளம் நாளடைவில் சிறந்த உரமாக மாறுகிறது.

மாதிரி வீடு (ஆழ்கூள வீடு) அமைத்தல் :

15' 20' அளவுள்ள ஆழ்கூள வீடு 100 கோழிகளுக்குப் போதுமானது. நான்கு பக்கங்களிலும் $1\frac{1}{2}$ முதல் 2 அடி உயரமுள்ள சுவர். அதன்மேல் 3 அடி உயரம், கம்பி வலைத் தட்டிகள் அமைத்துக்கீற்றுக் கூரையும், கம்பி வலைக் கதவும் போட்டு விட்டால் செங்கல்லினால் சுவர் கட்டுவது நல்லது. பூமிக்குள் $1\frac{1}{2}'$ முதல் 2' அடி கூரை கால் சுவரின் மேல் (20 கேஜ்) $\frac{1}{2}$ அங்குல வலைக்கம்பி 3 அடி உயரம் வரை இருக்க வேண்டும். மழைத் தண்ணீர் உள்ளே போகாதிருக்கக் கூரையானது $2\frac{1}{2}$ அடி வெளியே நீட்டி இருக்க வேண்டும். ஒரு பக்கத்தில் 5 அடி உயரம், 2 அடி அகலமுள்ள கம்பி வலைக் கதவு அமைக்க வேண்டும். கோழி வீட்டின் தரை சிமெண்ட் பூசப்பட்டிருந்தால் நலம். சுற்றுப்



புறத்தை விடக் கோழி வீட்டின் தரை அரைஅடி உயரமாக இருக்க வேண்டும். அதன் மீது உமி, மரத்தூள், கடலைத்தோல் மரச்சீவல், கரும்புச் சக்கை இவைகளில் ஏதாவது ஒன்றை 4 அங்குலம் முதல் 9 அங்குலம் வரை போட்டு அதில் கோழிகளை விட வேண்டும்.

தீனிக்குத் தானியங்கும் தீனித் தொட்டிகள் 20 கோழிகளுக்கு ஒன்று வீதம் வைக்க வேண்டும்.

### கோழிகளுக்குக் கலப்புத் தீனி

கோழிகள் நன்கு வளர்வதற்கும், அதிக முட்டையிடுவதற்கும் வியாதிகள் அதிகமாகாமல் இருப்பதற்கும், சத்துள்ள தீனி அவசியம். கோழி ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 100 முதல் 125 கிராம் தீனி போதுமானது. கோழிகளுக்குக் கொடுக்க வேண்டிய சமதீவனம் கோழிகளுக்கு முன்பாக எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். இத்துடன் ஒரு கோழிக்கு 45 முதல் 50 கிராம் வரை பச்சைத் தீவனம் மிகவும் அவசியம். வீடுகளில் காய்கறிகளை நறுக்கும் பொழுது வீணான பாகங்களைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கோழிகளுக்குப் போடலாம். பச்சைக் கீரை வகைகள், தண்டுகள், முள்ளங்கி, கோஸ் இலைகள் முதலியவைகளை நறுக்கிப் போடலாம். இதனால் தனிச்செலவு குறைவதுடன் கோழிகளுக்கு நல்ல உணவாகவும் இருக்கிறது. கோழிகளும், திடகாத்திரமாகஇருக்கும் வீட்டில் சாதம் வடித்த தண்ணீர் பருகவைப்பது நல்லது.

சுத்தமான தண்ணீர் எந்த நேரத்திலும் கோழிகளுக்குக் கிடைக்கும்படி செய்து தர வேண்டும். கிளிஞ்சல் பொடி கோழி வீட்டில் தனித் தட்டில் வைத்துக் கோழிகள் வேண்டும் போது சாப்பிடச் செய்ய வேண்டும். இதன் மூலம் முட்டையில் ஓடு நன்றாக இருக்கும். கோழிகள் நன்றாக வளரும். கோழிக்கு உகந்த பச்சைத் தீவனங்களை எளிதாகப் பயிரிட்டுக் கோழிகளுக்குக் கொடுத்தால் முட்டை உற்பத்தி பெருகும். பச்சைத் தீவனத்திற்காக நாம் அதிகமாகச் செலவு செய்தால், கோழிப் பண்ணை லாபகரமாக இருக்காது.

எனவே எளிதாகக் கிடைக்கக்கூடியதும், சிக்கனமாகப் பயிரிடக்கூடியதும் ஆன கீரை வகைகளாவன :— குதிரை மசால், சணப்பை, அகத்தி, சித்தகத்தி, கொடிப்பசலை, ஆகியவைகளைக் பயன்படுத்தலாம். இவை தவிர முள்ளங்கி இலை, முட்டைக்கோசு இலை ஆகியவைகளையும் பச்சை தீவனமாக வழங்கலாம்.

### கோழிகளை வியாதிகளிலிருந்து காக்க....

கோழிகளை வெகுவாகப் பாதிக்கும் தொத்து நோய்கள் ராணிக் கேட் (கழிச்சல் நோய்), கோழி அம்மை. இந்த வியாதிகளை வந்த பின் தடுக்க முடியாததால், தடுப்பு ஊசி போடுதல் அவசியம். தடுப்பு ஊசிகள் போட வேண்டிய பருவம்—

## கண்ட மட்டும் - கண்ட மட்டும்

சேது சமஸ்தானத்தை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் செந்தமிழில் மிகவும் ஈடுபட்டவர்கள்; பல புலவர்களைத் தம் அவைக்களத்தே வைத்து அவர்தம் அருந்தமிழ்க் கவிதைகளைச் சுவைத்து மகிழ்ந்தனர். பொன்னும் பொருளும் புலவர்களுக்கு வழங்கி அவர்களை ஆதரித்தனர்.

அங்கிருந்த புலவர்களில் இருவர் சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர் எனப் பெயர் பெற்றிருந்தனர். இவர்களிடையே சொற்போர் அடிக்கடி நிகழ்வதுண்டு; ஒருமுறை சர்க்கரைப் புலவர், "என் கவிதைகள் சர்க்கரை போல இனிப்பன; சவ்வாதோ கசப்பது" என்றார். இதுகேட்ட சவ்வாதுப் புலவர் ஒரு கணமும் தயங்காது "சர்க்கரை கண்ட மட்டும் சவ்வாது கண்ட மட்டும்" என்றார்; அவ்வுரையின் நுண் பொருளை உணர்ந்த சேதுபதி மன்னரும் மற்றையப் புலவர்களும் சவ்வாதுப் புலவரைப் பாராட்டினர்.

(கண்டம் மட்டும்—கழுத்து வரையிலும் தான்; கண்ட மட்டும்—மணம் பரவிய இடம் வரையிலும்.)

1. ராணிக்கேட் எப். 1 மருந்து, குஞ்சுகள் பிறந்த 48 மணி நேரத்திற்குள்.

2. புறு அம்மை— குஞ்சு பிறந்த 7-வது நாள்

3. கோழி அம்மை—6-வது வாரத்தில் அல்லது 7-வது வாரத்தில்.

4. ராணிக்கேட் கே. மருந்து—10 வாரத்தில் அல்லது 12-வது வாரத்தில் கோழிகள் முட்டையிட ஆரம்பித்த பின் தடுப்பு ஊசி போடுவது கூடாது.

### தடுப்பு மருந்துகள்

1. நாக்குப்பூச்சி— பிப்ரசின் அடிபேட் மாத்திரை — ஒரு கோழிக்கு ஒரு மாத்திரை (0.5 கிராம்).

2. நாடாப்புழு—பாக்குத்தூள் $\frac{1}{2}$ கிராம் அல்லது டைசெண்டால் $\frac{1}{2}$ மாத்திரை. ஒரு பெரிய கோழிக்கு.

3. பேன் உண்ணி: கோழிகள் குறைவாக இருந்தால், வசம்புத் தூளைத் தண்ணீரில் முக்கி எடுக்கலாம். கோழிகள் தங்கும் கட்டைகளில் 12' நீளத்திற்கு 1 அவுன்ஸ் என்ற விகிதத்தில் 40 சத விகிதம் நிக்கோடின் சல்பேட் தடவ வேண்டும். 10 நாட்கள் கழித்துப் பின்னர் மீண்டும் ஒரு முறை இதே போல் செய்ய வேண்டும்.

0.5 சதவிகிதம் மலதியான் கலவையில் கோழிகளைத் தலைப் பாகம் தவிர மூழ்கச் செய்தல் வேண்டும்.

1 சதவிகிதம் மலதியான் கோழி வீட்டில் தெளிப்பான் மூலம் தெளித்துக் கோழி வீடுகளிலுள்ள பேன்களைப் போக்கலாம்.

கூடுகளை 2 வாரங்கள் கோழிகள் இன்றிச் சுத்தமாக வைத்திருந்தால் பேன்கள் இறந்து விடுகின்றன.

4. இரத்தக் கழிச்சல் :—இவ்வியாதி குஞ்சுகளுக்கு ஏற்படக் கூடியது. சல்பாமிசதின் 16 சத விகிதம் உள்ள மருந்து 60 மில்லி லிட்டர் மருந்தை ஒரு காலன் குடி தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும். பைபுரான் $\frac{1}{2}$ மாத்திரையை ஒரு காலன் குடி தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

### கோழிகளின் மேல் அலகுகள் வெட்டுதல்

கோழிகள் ஒன்றை ஒன்று கொத்திச் சேதப் படுத்துவதைத் தவிர்க்கவும், தீனியை வீணாக்கா

திருக்கவும் அலகு வெட்டுதல் அவசியமாகிறது.

முதலாவது ஒரு நாள் வயதிருக்கும்பொழுது அல்லது 6 வார வயதிற்குள்ளும் இரண்டாவதாகக் குஞ்சுகள் 16 வார வயதிருக்கும்பொழுதும் அலகு வெட்டுதல் செய்யப்படுகிறது.

### களை நீக்குதல்

அதிக இலாபம் பெற வேண்டுமானால் வேண்டாத கோழிகளைக் களைந்து நீக்குதல் அவசியம். குஞ்சுகள் மெலிந்தவை, முடமானவை. பெட்டைகளில் வளர்ச்சி குறைந்த மெலிந்த கோழிகளை நீக்க வேண்டும்.

### சிறந்த முட்டையிடும் கோழி எது?

1. கொண்டையும், தாடையும் பிரகாசமாகவும், சிவந்தும் நன்கு வளர்ந்தும் இருக்கும்.

2. கண்கள் பிரகாசமாக இருக்கும்.

3. மூன்று விரல் அகல இடைவெளி உள்ள இடை.

4. ஆசனவாய் பருத்து ஈரமாக விரிந்து இருக்க வேண்டும்.

### கோழிகளிடையே காணப்படும் துர்ப்பழக்கங்கள்

1. இறகுகளைக் கொத்தித் தின்னும் பழக்கம் :—

இந்த பழக்கத்தைப் போதிய அளவு இடவசதி செய்து கொடுப்பதாலும், சரிவிகித உணவு கொடுப்பதாலும் தடுக்கலாம்.

2. முட்டைகளைக் கொத்தித் தின்னும் பழக்கம் :—

தீவனத்தில் சுண்ணாம்புச் சத்தோ, வைட்டமின் சத்தோ குறைவாக இருந்தால் இந்தப் பழக்கம் ஏற்படலாம். நெரிசலாகக் கோழிகளை வளர்க்கும் பொழுது போதிய அளவு முட்டைப் பெட்டிகள் வைக்கப் படாவிட்டாலும் இந்தப் பழக்கம் ஏற்படலாம். மேற்கூறிய குறைகள் தவிர்க்கப்பட வேண்டும். முட்டைக் கூட்டினுள் இருட்டாக இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

3. தன் இனம் தின்னும் துர்ப்பழக்கம் :—

சாதாரணமாக வெப்பக் காலங்களில் கோழிப் பண்ணையில் கோழிகள் அதிக நெருக்கமாக இருந்தாலும் பசுந் தீவனங்கள் இல்லாதிருந்தாலும் இத்துர்ப்பழக்கம் ஏற்படலாம். இத்தகைய பராமரிப்பு முறைகள் கையாளப்படும் பண்ணைகளில் இக்குறை ஏற்படுவதில்லை.

### சைவ முட்டை

சேவல் சேர்க்கப் படாத கோழிகள் இடும் முட்டைகளில் கரு இல்லை. அதனால் இதைச் சைவ உணவோடு சேர்த்துச் சைவர்களும் உண்ணலாம். மகாத்மா காந்தியடிகள் கூடப் பாலைச் சைவ உணவாகக் கருதுபவர்கள் இவ்வகை முட்டைகளையும் சைவ உணவாகச் சேர்த்துக் கொள்ளலாம் எனக் கூறியுள்ளார்.

இவ்விதச் சைவ முட்டைகள் தான் சுகாதார முறையில் இந்த நம்மாநிலக் கோழி வளர்ப்புத் திட்டத்தில் உற்பத்தியாகின்றன.

முட்டை உற்பத்தி 60 சதவிகிதம் அளவில் வைத்துக் கொண்டால் கூட இத்திட்டத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி முட்டைகளுக்கு மேல் உற்பத்தியாகும். இதைத் தவிர ஒவ்வோர் ஆண்டும் சற்றேறக்குறைய 375 டன் கோழி இறைச்சியும் கிடைக்கும்.

---

## வெண்பாப் போட்டி—58

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை குவித்துள்ள வெற்றிகள் பற்றி நேரிசை வெண்பா எழுதுக.

முடிவு நாள் : 2-7-1973.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

---


## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும் (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு திசை நோக்கியும் சென்று கொண்டு இருக்கும் எல்லா நீர் ஊற்றுக்களையும் விஞ்ஞான முறையில் கண்டு பிடித்து அவைகளிடையே மிக அதிகமாகத் தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டு பிடித்துக் குறித்துக் கொடுக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க்கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதப்படி 3 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு 20 காசு அஞ்சல் தலை அனுப்பவும்.

முகவரி : கே. கந்தசாமி,
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி (போஸ்ட்), கோயம்புத்தூர்-6.
தொலைபேசி எண் : 31912.


---

மாலைக்கண்.

சோகை.

வாய்ப்புண்.

குறைப்பிரசவம்.

குழந்தை மரணம்.

இவ்வளவும் 'பி' வைட்டமின் குறைவினால் ஏற்படுகின்றவையே ஆகும்! இத்தகைய நோய்வாய்ப்பட்டவர்கள், மருந்துக் கடைகளில் விற்கிற 'பி' வைட்டமின் மாத்திரைகளை வாங்கி விழுங்கியும், 'பி' வைட்டமின் கலந்த சில பிஸ்கோத்து ( Biscuit )-களை வாங்கிச் சாப்பிட்டும், 'பி' காம்ப்ளெக்ஸ் போன்ற ஊசி மருந்துகளை உடம்பிற் செலுத்தியும் பெரும்பொருள் செலவு செய்து வருகிற நாகரிகத்தை நாம் அன்றாடம் கண்டு வருந்துகிறோம். இது தவிர மருந்துக் கடைகளிலே புட்டிகளிலும், டப்பாக்களிலும் அடைத்து விற்கப்படுகிற 'பிரான்' ( ) என்பதையும் வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர்.

பொதுவாக, அரிசியையே முக்கிய உணவாக ஏற்றுப் பழகிவிட்டவர்கள் நாம் மேலே கூறிய பல்வேறு நோய்களுக்கும் கட்டுப்பட்டு, அந்நோய்களிலிருந்து விடுதலை பெற வைட்டமின் 'பி' கலந்துள்ள மருந்துகளை வாடிக்கையாகப் பயன்படுத்தி வருவதினின்றும் பெரும்பாலும் தப்புவதில்லை. இப்படிக் கூறுவதால், நாம் பன்னெடுங் காலமாகச் சாப்பிட்டுப் பழகிவிட்ட அரிசியில் 'பி' வைட்டமின் கிடையாது என்னும் முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

இன்றைய நாகரிக உலகில் வாழுகிற நாம், நெல்லை உமி போக அரைத்து அதன்பின் கிடைக்கும் சிவப்பு அரிசியை மீண்டும் ஆலையில் இட்டு நன்கு தீட்டி வெள்ளையாக்கி கண்ணுக்குப் பளிச்சென்று தெரியும் அந்த வெள்ளை அரிசியைச் சமைத்து, வடி நீரையும் வடித்துக் கொட்டிவிட்டுச் சத்தூட்டத்தை முழுக்க முழுக்க இழந்துவிட்ட உணவையே விரும்பிச் சாப்பிடுகிறோம். இன்னும் நாகரிக வளர்ச்சியடையாதவர்கள் என்று கருதப்படுகிற மக்கள் நம்மைப் போல ஆலையில் நன்கு தீட்டப்பட்ட அரிசியை உண்ணமல் பழுப்பு அரிசியை—சிவப்பு அரிசியையே உண்டுவருகிறார்கள்.




பொதுவாக, ஆலையில் நெல்லை இட்டுத் தீட்டினாலோ, கரடு முரடான உரல்களில் போட்டுக் குத்தினாலோ உலோக உப்புச் சத்து மிகுதியும் கொண்ட மேல் தவிடும், 'பி' வைட்டமினும் கொழுப்பும் புரதமும் அடங்கியிருக்கும் முனைப்பகுதியும் அரிசியிலிருந்து பிரிந்து, பயன்படாமல் போகின்றன. அரிசியின் வேறெந்தப் பகுதியையும்விட முனைப்பகுதிதான் முழு நிறைவான உணவுச் சத்தைக் கொண்டிருப்பது. தானியத்தின் கொழுப்புச் சத்து முழுவதும் கூட இந்த முனைப்பகுதியில்தான் உள்ளது. ஆலைகளில் தீட்டியோ, கரடுமுரடான உரல்களில் இட்டுக் குத்தியோ, நாம் வெள்ளை அரிசி பெறுவதன் மூலம், மேலே குறித்த வைட்டமினையும், கொழுப்புச் சத்தையும், புரதச் சத்தையும் இழந்துவிடுகிறோம்.

அரிசியை ஆலையில் இட்டுத் தீட்டுவதற்கு முன்பு நெல்லில் 'ஏ' வைட்டமின் இருக்கிறது என்பதை மெக்காரிசன் என்பார் ஆராய்ந்து கூறியிருக்கிறார். இந்த வைட்டமின், அரிசியின் மேற்புறத்தில் இருக்கிறது. பச்சை நெல்லை, ஆலையில் இட்டு அரைப்பதால் — (தீட்டுவதால் அல்ல) இச்சத்து முழுதும் போய் விடுவதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நன்கு தீட்டப்பட்ட அரிசியில் மாவுச் சத்து மட்டுமே உள்ளது. ஆனால், அவியலுக்கு ஆளாகாத, தீட்டாமல் அரைக்கப்பட்ட அரிசியில் ஏ., பி., சி., வைட்டமின்கள் மட்டுமின்றி, நாம் மேலே குறிப்பிட்டுள்ளது போல் புரதம், கொழுப்பு, உலோகச் சத்துக்கள் அனைத்தும் முழு அளவில் இருக்கின்றன. எனவே தீட்டப்படாத பழுப்பு அரிசியைச் சிவப்பு அரிசியைப் பயன் படுத்துவதன் மூலம் அந்தச் சத்துக்களை நாம் பெற முடியும். தீட்டப்படாத அரிசியைப் பயன்படுத்துகிறவர்களைப் பல்வேறு நோய்கள் தீண்டுவதில்லை. 'கிராமப் பொருளாதாரத் தந்தை' என்று பாராட்டுப் பெறுகிற டாக்டர் ஜே. சி. குமரப்பா அவர்கள், தமது உணவில் எப்போதும் சிறிதளவு தவிட்டைக் கலந்து சாப்பிடுவதைப் பழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார்.

தீட்டப்படாத தவிடு நீக்கப்படாத பழுப்பு அரிசியை,: சிவப்பு அரிசியைப் பயன்படுத்துவதன் மூலம் நாம் புரதச்சத்தையும் வைட்டமின் 'பி'யையும் குறைந்த செலவில் நிறைந்த அளவு பெறுகிறோம் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் சீரணக் குழாய்களில் கிருமிகளால் ஏற்படுகிற தீமையையும், பழுப்பு அரிசியை—சத்தூட்டமான தவிட்டை நாம் பயன்படுத்துவதன் மூலம்தவிர்க்கலாம். குறைப்பிரசவங்களையும், அகால மரணங்களையும் தடுக்கலாம்; 'பெரி பெரி', மாலைக் கண், ஆகிய நோய்கள் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். வாய்ப் புண்கள் வராமல் தடுக்கலாம். வேனற் கட்டிகளினின்றும் விடுதலை பெறலாம். உடல், ஊட்டமும் உறுதியும் பெறும்; எடை அதிகரிக்கும்; சுறுசுறுப்பு ஏற்படும்.

வைட்டமின்களும் வேறு பல சத்துக்களும் நிறைந்த சிவப்பு நிற—பழுப்புநிறக் கைக்குத்தல் அரிசியைச் சொந்தமாகத் தயாரித்துக் கொள்ளமுடியாதவர்கள், வசதியில்லாதவர்கள் கதர் கிராமக் கைத்தொழில் பிரிவுகளில் ஒன்றாக விளங்குகிற கைக்குத்தல் அரிசி கூட்டுறவுச் சங்கங்களில் இந்தச் சத்தூட்டமான அரிசியைப் பெற்றுப் பயன் அடையலாம். கைக்குத்தல் அரிசி, எளியவர்களின் சிறந்த சத்துணவாகும்.

—சாமி. பழ.

## விதை காக்கும் மருந்துப்பூச்சு; களைகளும் ஒழிந்து போச்சு, விளைச்சல் பன்மடங்காய் பருத்தி வளம் கொழிக்கலாச்சு.



நோயற்ற விதைகளிலிருந்துதான் நல்ல வளமுள்ள பயிர் விளையும். பல்வேறுன நோய்களிலிருந்து விதைகளைப்பாதுகாத்து விளைச்சலை அதிகரிப்பது இண்டோஃபில்

**டைத்தேன் M-45**




பருத்தி விதைகளுக்கு நோயற்ற வளமூட்டுவது இண்டோஃபில் டைத்தேன் M-45; களைகளை ஒழித்துக் கட்டுவது

**டோக் E-25**




பயிர்களுக்குத் தேவையான உணவு சத்துக்களுக்கு களைகளும் போட்டியிடுவதால், பயிர்களின் விளைச்சலும் தரமும் மிகவும் பாதிக்கப்படுகிறது. இண்டோஃபில்லின் டோக்-25 களைகளை ஒழிப்பதன்மூலம் பயிர்களுக்கு எல்லா உணவுச்சத்துகளும் கிடைக்க வழிசெய்து, விளைச்சலை அதிகரிக்கிறது. உங்கள் தேவைக்கு இண்டோஃபில் விற்பனையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்

இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிட்.

இண்டோஃபில் — பசுமைநிறைந்த எதிர்காலத்திற்கு





# நாளும் தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம்

தமிழ்ச் சங்கத்தில் தலைமைப் புலவராக இருந்து தமிழைப் பழித்தவர்களுக்குத் தக்க பாடம் கற்பித்து வந்தவர் நக்கீரர் என்பதை நாடறியும். அவர் தம் திருப்பெயரில், தமிழகத் தலைநகரிலே ஓர் கழகம் தமிழ்ப் பணி புரிந்து வருகிறது. அது தான் நாளும் தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம்!

தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களின் நல் வாழ்த்துக்களோடு 1941-ஆம் ஆண்டில், சென்னைப் பெத்து நாயக்கன் பேட்டை 'தமிழகம்' என்னும் சிறு குடிலில் இக்கழகம் தொடங்கப் பெற்றது.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றைப் பேணி வளர்த்தல்; இத்துறைகளில் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், கருத்தரங்குகள் நடத்துதல்; அறிஞர்களைக் கொண்டு அரிய ஆராய்ச்சி நூல்களை வெளியிடுதல்; தமிழ் வகுப்புகள், இரவுப்பள்ளி முதலியன நடத்துதல்; மாணவர்களைச் சொற்பொழிவாற்றவும், கட்டுரை, கவிதை எழுதவும் பழக்குதல் முதலியவை நக்கீரர் கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

ஆண்டு தோறும் தமிழுக்கு விழா எடுப்பதும், தமிழ்ச் சான்றோர்களைச் சிறப்பிப்பதும் இக்கழகம் தலையாய பணியாகக் கருதுகிறது.

'தமிழில் முடியுமா? முடியாதா?' என்ற பிரச்சினைக்குத் தெளிவாகத் 'தமிழில் முடியும்' என்பதைப் பறைசாற்றி வருகிறது இக்கழகம். 'தாய்மொழி வாயிலாக உயர் கல்வி' என்ற தலைப்பில் வரலாறு, பொருளாதாரம், அரசியல், மெய்ப்பொருள், உளவியல், விஞ்ஞானம் மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற பல்வேறு துறைகளைப் பற்றிய சொற்பொழிவுகள் அத்துறை வல்லுநர்களால் நிகழ்த்தப் பெறுவதைப் பார்க்கும்போது, தமிழின் வளமும், வளர்ச்சியும் இமயமென நிமிர்ந்து நிற்கிறது. நாமும் நிமிர்ந்து நிற்கிறோம்.

முத்தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம், நம் முன்னோர்களை நினைவு கூரும் வகையில் ஐந்து அமைப்புகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றது. அவை (1) பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு, (2) திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, (3) பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூல் நிலையம் (4) மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு, (5) டாக்டர் எஸ். தருமாம்பாள் மகளிர் இலக்கிய வட்டம்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு, தமிழ்ப் புலவர் பெருமக்களால் சிறப்புற நடத்தப்படுகின்றது. நன்னூல், பத்துப் பாட்டு, கம்பராமாயணம், யாப்பு, தண்டி முதலிய இலக்கண இலக்கிய வகுப்புகள் தமிழ்த் தாகத்தைத் தணிக்க உதவுகின்றன.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி 1944 முதல் சென்னைப் பவழக்காரத் தெரு, ஏ. ஆர். சி. மகளிர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்று வருகிறது. புலவர் புகுநிலை, புலவர் முதனிலை, புலவர், தமிழ் எம். ஏ., ஆகிய வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சுமார் 20 ஆசிரியர்கள் தமிழ்ப்பணி புரிந்து வரும் இக்கல்லூரியில், இதுவரை 180 பேர் தமிழ்ப்புலவர் பட்டம் பெற்றுள்ளனர். கல்லூரியில் சேரக் கட்டணமில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

கல்லூரியின் சார்பில் புலவர் நிறைநிலை, முதனிலை, தமிழ் எம். ஏ.. தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்கட்குரிய முக்கியப் பாடப் பகுதிகளுக்கு விளக்கம் தரும் வகையில் சொற்பொழிவுகளும் அவ்வப்போது நடத்தப் படுகின்றன. மேலும் சைவம், வைணவம் ஆகிய சமயத் தொடர் சொற்பொழிவுகளும், 'கல்வெட்டியல்' பற்றிய தொடர் சொற்பொழிவுகளும் திங்கள் தோறும் நடத்தப்படுகின்றன. இனிமேல் சமணம், பௌத்தம் பற்றிய தொடர் சொற்பொழிவுகள் நடக்கவிருக்கின்றன.

பல ஆண்டுகளாகத் தனிப்பட்ட முறையில் வித்துவான் முதனிலைத் தேர்வுக்குச் செல்லுபவர்கள் வயது 30 ஆக இருக்க வேண்டும் என்று இருந்த விதியைக் குறைத்திட, சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பல முறை தூதுக்குழுக்கள் மூலமும், வேண்டுகோள்கள் மூலமும் சென்னை நக்கீரர் கழகம் செய்த நன் முயற்சி வீண் போகவில்லை. 1970-ஆம் ஆண்டு முதல் வித்துவான் முதனிலைத் தேர்வுக்குரிய வயது 30 என்ற நிலை மாறி, வயது 25 எனக் குறைக்கப்பட்டது கழகத்தின் சாதனை என்றே கூற வேண்டும்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூலகத்தில் சுமார் 400-க்கு மேற்பட்ட பல்துறை நூல்கள் உள்ளன. நக்கீரர் கழக உறுப்பினர்களும், கல்லூரி மாணவர்களும், பொது மக்களும் இந்நூலகத்தால் பயன்பெற்று வருகின்றனர். பொது மக்கள் ஒவ்வொரு திங்கள் மாலை 6—30 மணி முதல் 8 மணிவரை இந்நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

1959-ல் தொடங்கப்பெற்ற மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு இன்றுவரை 48 ஆராய்ச்சிக்

கூட்டங்களை நடத்தியிருக்கின்றது. தமிழ் நூல்களின் காலம், புலவர் வரலாறுகள், புலவர்களின் காலம், கல்வெட்டுகளின் காலம், தமிழ்ச் சொற்களின் வரலாறு, இலக்கியத் திறனாய்வு முதலிய பொருள்கள் பற்றி ஆய்ந்து அரும்பணி யாற்றி வருகிறது, இக்குழு.

டாக்டர் தருமாம்பாள், இலக்கிய வட்டம் 1956 முதல் மகளிர் அமைப்பாக இயங்கி வருகிறது. ஆண்டு தோறும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்குக் கரும் பலகை, நோட்டுப் புத்தகம், எழுதுகோல் முதலியனவற்றை வழங்கி வருகின்றது. ஒவ்வொரு சனிக்கிழமையும் இலக்கியம் பண்பாடு, முதலிய வகுப்புகள் நடைபெறுகின்றன. டாக்டர் தருமாம்பாள் நினைவுக் கட்டுரைப் போட்டி மாணவ, மாணவிகளைப் பெரிதும் ஊக்குவிக்கின்றது. நக்கீரர் கழகம் 1960 முதல், தமிழக அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கும் கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்திப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்து வருகின்றது.

> சென்னை-கன்னிமாரா நூல் நிலையத்தில் 12 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இங்கு இரண்டரை இலட்சம் நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியாகும் 200க்கு மேற்பட்ட நாளிதழ்கள் இந்நூலகத்துக்கு வருகின்றன.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்' எனும் பேரவாவோடு செயலாற்றித் தமிழ் அன்னைக்கு ஓர் அணிகலனாய் விளங்கி வருவது நக்கீரர் கழகமென்றால், இக்கழகத்தின் அமைப்புக்கும், ஆக்கப் பணிகளுக்கும் துணையாய் நின்று தமிழ்த் தொண்டராய்த் திகழ்பவரோ திரு. சிறுவை மோகனசுந்தரம்.

அறிவியல் வளர்ச்சியில் தமிழகத்தின் பங்கு, தமிழ் கொடுத்ததும் கொண்டதும், தமிழ்க் கடலில் கண்ட ஒளி முத்துக்கள், தமிழ்த் தந்தை தாயர், மாலை மதியம், தொல்பொருள் ஆய்வும் தமிழ்நாடும், மனம் நல்ல மாணிக்கம் இப்படி எத்தனையோ தலைப்புகளில் கட்டுரைப் போட்டிகளும், சொற்பொழிவுகளும் நடத்தித் தமிழ் ஆராய்ச்சிக்குத் துணை புரிந்திருக்கிறது இந்த நக்கீரர் கழகம்.

கோயில்களில் கல்வெட்டுகளைப் பார்வையிடுதல் போன்ற பயனுள்ள சுற்றுலாக்களும், கருத்தரங்குகளும் கழகத்தின் சார்பில், அவ்வப்போது நடைபெறுகின்றன.

மேலை நாட்டு நாகரிகம் தலைவிரித்தாடும் இந்நாளில்—மக்களை வேறு வேறு வகைகளில் கவர்ந்திடும் சாதனங்கள் நிறைந்துள்ள இந்த நேரத்தில்— தொடர்ந்து தளராமல் தமிழ்ப்பணி புரிவது எத்துணை அரிய செயல் என்பதைத் தமிழ்த் தொண்டர்களால் மட்டுமே உணர முடியும்.

என்றும், எப்பொழுதும், எந்நாளும் 'தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்யலாம்?' என்ற பெரும் சிந்தனையோடு செயல்பட்டு வருவது தமிழர் தம் தலையாய கடமையாகும். இந்த வகையில் பணியாற்றும் நக்கீரர் கழகம், தமிழ்த் தொண்டில் பங்கேற்க நம்மை யெல்லாம் அழைக்கிறது.'

—பி.வி.ஜி.



நமது சரித்திரங்களும், இலக்கியங்களும், பழைமைச் சிறப்பும், மக்கள் உள்ளத்தில் பதிந்து என்றும் நிலைத்து நீடித்திருந்தால்தான் எதிர்காலச் சமுதாயம் நமது மூதாதைகளின் வழிநடக்க, அவர்களின் நல்ல அறிவுரைகளைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்திட, ஏதுவாக இருக்கும். நமது முன்னோர்களை நினைந்து போற்றுவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலச் சமுதாயத்தை நல் வழிப் படுத்தவும் பயன்பட வேண்டும் என்றுதான் நல்ல காரியங்களை நடத்தி வருகிறோம்.

யார் யார் இப்படிப்பட்ட பணிகளைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள் என்பது தெரியும்.

தமிழுள்ளம் படைத்தவர்களும்—தமிழ்ப் பற்று மிகுந்தவர்களும் இதுபோன்ற நினைவாலயங்களை எழுப்பும் போது—அழிந்து போனவற்றைப் புதுப்பிக்கும்போது பாழ்பட்டுப் போனவற்றைப் பண்படுத்தும்போது மகிழ்ச்சி அடைவார்கள்.

—மயிலையில் நடைபெற்ற திருவள்ளுவர் கோயில் அடிக்கல் நாட்டு விழாவில்





# கேளுங்கள்??? கொடுக்கப்படும்

எனக்கு 6 ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் இருக்கிறது. அதில் கிணறு வெட்டினால் தண்ணீர் கிடைக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது. ஆனால், எந்த இடத்தில் வெட்டுவது என்பதுதான் தெரியவில்லை. ''தமிழரசு'' இதழில் நிலத்தின் கீழேயுள்ள நீரைப் பற்றிய முழுவிவரமும் அறிந்து கொள்ள 'கம்ப்யூட்டர்' என்னும் கருவி பயன்படுத்தி எத்தனை அடி ஆழத்தில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று அறிய முடியும் என்று தெரிவித்துள்ளீர்கள்.

ஆனால், பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தினர் தனி ஒரு கிணற்றுக்கு அதைப்பயன்படுத்த முடியாது, பாறை நிலத்தில் கண்டு பிடிக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். வேறு எவரேனும் அறிவியல் அடிப்படையில் நீரோட்டம் கொண்ட கிணறு காட்டுவார்களா ? ஒரு கிணற்றுக்கு என்ன செலவாகும் ? தயவு செய்து விளக்கமான—காரிய சாத்தியமான—பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். பொன்னுசாமி,
தலைமை ஆசிரியர்,
ப. யூ. து. பள்ளி, கெடிகாவல்,
வைகுந்தம் (அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

(இதுபோன்ற கேள்விகள் பல வந்துள்ளன. எனவே எல்லாக் கேள்விகளுக்கும் சேர்ந்து விடையளிக்கப்பட்டுள்ளது)

''தமிழரசு'' இதழ், தமிழ் நாட்டில் அவ்வப்பொழுது கண்டு பிடிக்கப்படும் புதுமைகளையும், ஆங்காங்கே ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களையும் தமிழ் நாட்டு மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிப்பதையே கடமையாகக் கொண்டுள்ளது. அந்த வகையிலேயே, பூண்டி நீர்ப் பாசன ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட 'கம்ப்யூட்டர்' (Direct Simulation Anlog Computor) பற்றியும் ''தமிழரசு'' இதழில் வெளியிடப் பட்டிருந்தது. மேலும், விவரம் அறிய, பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், 'பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தினர் தனி ஒரு கிணற்றுக்கு அக்கம்ப்யூட்டரைப் பயன் படுத்தமுடியாது; பாறை நிலத்தில் கண்டு பிடிக்க முடியாது' என்று சொல்லி விட்டதாகத் தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். தங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தினால், விளக்கமான காரிய சாத்தியமான பதிலளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளீர்கள்.

பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தினரே அவ்வாறு கூறிவிட்ட பிறகு, நாங்கள் எவ்வாறு விளக்கமான, காரிய சாத்தியமான பதிலளிக்க முடியும் ?

'வேறு எவரேனும் அறிவியல் அடிப்படையில் நல்ல நீரோட்டம் கொண்ட கிணறு காட்டுவார்களா?' என்று கேட்டுள்ளீர்கள். இக்கேள்விக்கும் தற்பொழுது தகுந்த பதிலளிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது போன்ற கேள்விகளைப் பலர் நிலநீர்த்துறை இயக்குநர் அவர்களுக்கும் அனுப்பியுள்ளனர். நிலநீர்த்துறை இயக்குநர் அவர்கள், 'நல்ல நீரோட்டமுள்ள கிணறு வெட்டுவதற்குரிய இடத்தினைக் காண்பிப்பது சாத்தியமல்ல!' என்று கூறியுள்ளதாகவும் பலர் ''தமிழரசு'' இதழுக்கு எழுதியுள்ளனர். எனவே, நிலநீர்த் துறை இயக்குநர் அவர்கள் கொண்டுள்ளதற்கிணங்க, உழவர் பெருமக்களுக்குப் பின் கண்ட விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்'

''தனிப்பட்ட உழவர் பெருமக்களுக்குச் சிறந்த வகைக் கிணறு, கிணற்றின் ஆழம்போன்ற தொழில் வகைகளில் தகுந்த தொழில் நுட்ப அறிவுரை (Technical advice) வழங்குவதைத் தமிழ் நாடு நிலநீர்த்துறை இயக்குநர் அலுவலகம் ஒரு கடமையாகக் கொண்டுள்ளது. ஆனால் நிலநீர் பற்றி விரிவான ஆய்வு முடிந்துள்ள பகுதிகளில் மட்டுமே, இவ்வாறு அறிவுரை வழங்க முடியும். உதாரணத்திற்குத் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அறிவுரை வழங்க முடியும். மற்றப் பகுதிகளில் நில நீர் பற்றிய ஆய்வுகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. நில அமைப்பு, நீருற்றின் வகை, அதன் பருமன் மற்றும் ஆழம், வெளிப்படுத்தும் தன்மை இறைப்பதற்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு, இறைத்தபின் மீண்டும் ஊறும் தன்மை போன்றவைகளின் முழு விவரமும் தெரியாமல், எந்தத் தனிப்பட்ட உழவர் பெருமகனுக்கும் கிணறு வெட்டுவதற்கு எந்தத் தொழில் நுட்ப அறிவுரையும் வழங்க இயலாது. எனவே, நிலநீர் இயக்குநர் அலுவலகம், இத்தகைய வேண்டுகோள்களை ஏற்றுக் கொள்ள முடியாமலும், உழவர் பெருமக்களுக்கு உதவ முடியாமலும் உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்''.

எல்லா மாவட்டங்களிலும் நிலநீர் பற்றிய ஆய்வு முழு அளவில் முடிந்த பிறகே, நிலநீர் இயக்குநர் அலுவலகம் தனிப்பட்ட உழவர் பெருமக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்கி, தகுந்த அறிவுரை வழங்க முடியும். அதுவரை பொறுத்திருக்குமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

காஞ்சி, காவேரி ரகங்களுக்கு 14:14:14 என்ற உரங்களை அடி-மேல் உரமாகப் போடலாமா? ஒவ்வொன்றும் எவ்வளவு எப்பொழுது போட வேண்டும் ?

— வ. முத்தரசன்,
லால்குடி,
திருச்சி மாவட்டம்.

காஞ்சி, காவேரி ரகங்களுக்கு 14:14:14 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 175 கிலோவையும், யூரியா 11 கிலோவையும் சேர்த்துக் கடைசி உழவிலும் இட வேண்டும். நடவு செய்த 25 நாட்களுக்குப் பிறகு (அதாவது கர்ப்பத்தில் கதிர் தோன்றும் சமயம்) ஒரே முறையாக 100 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 44 கிலோ யூரியாவை மேல் உரமாகப் போட வேண்டும். மேல் உரமிட காம்ப்ளெக்ஸ் 14:14:14 உரத்தைப் பயன்படுத்தக்கூடாது.

மாறுவாரியாக கோ. 1 துவரை பயிரிட என்ன உரமிட வேண்டும் ? எப்பொழுது விதைக்க வேண்டும் ?

—த. முருகேசன்,
ஆத்தூர்,
சேலம் மாவட்டம்.

மானுவாரியாக கோ. 1 துவரை ஏக்கருக்குப்பயிரிட 20 வண்டி தொழு எரு போட்டு நன்கு உழுது விட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 கிலோ பணிச்சத்து கொடுக்க 63 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை இட வேண்டும். துவரை விதையை விதைக்கும் பொழுது ஏக்கருக்கு 5 கிலோ தழைச்சத்து கொடுக்க 25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியா இட வேண்டும்.

கோ. 1 துவரை விதைக்க ஜூன், ஜூலை மாதங்கள் ஏற்றவை.

நவீன முறையில் வேளாண்மை செய்ய விருப்பம் உள்ளவன் நான். எங்கள் கிணற்றில் போதிய அளவு தண்ணீர் உள்ளது. இதைக் கொண்டு 3 பயிர்கள் செய்ய விரும்புகின்றேன். சிரமம் இல்லாமல், அதே சமயம் அதிக இலாபம் தரும் பயிர்கள் என்னென்ன செய்யலாம். உத்தேசமாக இவற்றின் மூலம் ஒரு ஆண்டிற்கு எவ்வளவு நிகர இலாபம் கிடைக்கும்.

—எம். ஏ. முகம்மது,
களக்காடு,
நெல்லை மாவட்டம்.

தங்கள் கிணற்றில் போதிய தண்ணீர் உள்ளதால் தாராளமாக ஒரு ஆண்டில் 3 பயிர் செய்யலாம். சிரமம் இல்லாமல், அதே சமயம் அதிக இலாபம் தரும் பயிர்கள் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றீர்கள். பன்முறைச் சாகுபடி என்றாலே சிரமம் இருக்கும்! அதிக இலாபம் தரும் பயிர்களைச் சாகுபடி செய்ய, சிரமப்பட்டால்தான் முடியும்! இருப்பினும் பன்முறைச் சாகுபடி செய்யும் போது முன்கூட்டியே திட்டமிட்டு, வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறைகளைத் தவறாமல் மேற்கொண்டு சாகுபடி செய்தால் சிரமமின்றி, அதிக இலாபம் எடுக்கலாம்.

தங்கள் நிலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரே ஆண்டில் 3 பயிர் செய்யலாம்.

முதற்போகம்—ஐ. ஆர். 8 நெல்.

இரண்டாம் போகம்—டி.எம். வி. 7 நிலக்கடலை.

மூன்றும் போகம்—எச். பி. 3 கம்பு.

ஜூன், ஜூலை மாதங்களில் ஐ.ஆர். 8 நெல் நடவு செய்தால், அக்டோபர் - நவம்பர் மாதங்களில் அறுவடைக்கு வரும். நவம்பர்-டிசம்பரில் டி.எம்.வி. 7 மணிலா பயிரிட்டால், பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் அறுவடைக்கு வரும். மார்ச்சு மாதத்தில் கம்பு நடவு செய்தால் மே மாதத்தில் அறுவடைக்கு வரும்.

இம்முறையில் பயிரிட்டு, கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை மேற்கொண்டால், ஒரு ஏக்கரில் இருந்து ஒரே ஆண்டில் அதிக சிரமம் இன்றி ரூபாய் 3,000 முதல் 5,000 வரை நிகர இலாபம் எடுக்க முடியும். ஆனால் வெகு கவனமாகப் பயிரிட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 300 அங்கீகாரம் பெற்ற உழவர் விவாதக் குழுக்களும், 150 அங்கீகரிக்கப்படாத (ஆனால் செயல்படும்) குழுக்களும் உள்ளன. அமைப்பாளர்களுக்குத் தார்ப்பாய், கைத் தெளிப்பான் ஆகியவற்றை இனமாக அல்லது மிகக் குறைந்த விலையில் கொடுத்தால், அதனால் 10,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பயன் அடைவார்கள். இதற்கு அரசு உடன் ஆவன செய்யுமா? தயவு செய்து பதில் அளிக்கவும்.

—ஜெ. இராமநாதன், பி.ஏ.,
செயலாளர்,

தஞ்சைமாவட்ட உழவர்,
விவாதக்குழு சங்கம்,
கீழ்த்தஞ்சாவூர் அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா உழவர் விவாதக் குழுக்களின் அமைப்பாளர்களுக்கும் தார்ப்பாய், கைத்தெளிப்பான் ஆகியவற்றை இனமாகவோ அல்லது மிகக் குறைந்த விலையிலோ கொடுத்தால், 10,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பயன் அடைவார்கள் என்பது உண்மை. எனினும், நடைமுறையில் எதிர் பார்க்கும் பயன் கிட்டாது! அத்துடன் உறுப்பினர்களிடையே போட்டியும், பொறாமையும் ஏற்படுவதால் அமைப்பாளர்கள் உறுப்பினர்களின் குற்றச் சாட்டிற்கு ஆளாவார்கள். உழவர் விவாதக்குழுவிற்குக் கொடுக்கப் பட்டுள்ள வானொலிப் பெட்டிகளைக் கூட, சில அமைப்பாளர்கள் சொந்த உபயோகத்திற்கே பயன் படுத்துவதாகக் குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் தார்ப்பாய், கைத் தெளிப்பான் போன்ற பொருள்களை உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களிடம் ஒப்படைப்பது பொருத்தமல்ல!

உழவர் விவாதக் குழுக்களுக்கு இலவசமாகத் தார்ப்பாய், கைத் தெளிப்பான் ஆகியவைகளை வழங்குவது பற்றிய திட்டம் எதுவும் தமிழ்நாடு அரசின் பரிசிலனையில் இருப்பதாகத் தெரியவில்லை.

உறுப்பினர்கள் கொஞ்சமாவது பங்குத் தொகை செலுத்தி வாங்கினால் தான், எல்லாருக்கும் பொதுவான பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவர்களாக இருப்பார்கள். இல்லாவிட்டால், 'ஓசியில் வந்த பொருள் தானே' என்று கருதி, முறைதவறிப் பயன்படுத்திச் சீக்கிரம் கெடுத்து விடுகின்றனர். இந்நிலைமை நாடெங்கிலும் நிலவி வருகிறது. எனவே, அரசு இலவசமாக வழங்கும் பொருள்களைத் தங்கள் பொருள்களைப் போல் பாவித்து, வெகுப் பத்திரமாகப் பயன்படுத்திப், பாதுகாத்து வைத்திருக்கும் மனப்பக்குவம் ஏற்படும் வரை, இத்தகைய இலவசத் திட்டங்கள் எதிர்பார்க்கும் பயன்களைத்தரா!

## சுற்றுலாவுக்கு ஒரு திருச்சி

1972–ஆம் ஆண்டு இந்தியாவிலேயே திருச்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைதான் மிகவும் அதிகமாகி இருக்கிறது.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை திருச்சியில் 29 சதவீதம் அதிகமாகியது. சென்னையில் 10·4 சதவிகிதம் தான் அதிகமாகியது. கடந்த ஆண்டு மட்டும் இந்தியாவுக்கு வெளிநாடுகளில் இருந்து 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 பயணிகள் வந்திருக்கிறார்கள்.

உழவர் விவாதக் குழு உறுப்பினர்கள் குறிப்பிட்ட அளவு பங்குத் தொகை செலுத்தி, மீதியை ஊராட்சி ஒன்றியம் மூலமாக அரசு மானியம் பெற்றுத் தார்பாய், கைத்தெளிப்பான் ஆகியவைகள் வாங்கிக் கொள்வதே சிறந்த முறையாக இருக்கும். இத்திட்டமும், அரசின் பரிசீலனைக்கு இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. எனவே, இது பற்றித் தங்கள் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றி, வேளாண்மைத் துறை இயக்குநர் ஊர்வளர்ச்சித்துறை இயக்குநர் ஆகியவர்களின் மூலமாகத் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைக்கலாம். அல்லது உங்கள் மாவட்ட வேளாண்மைக் கருத்தரங்கு நடைபெறும் போது, இதுபற்றி விவாதித்துத் தீர்மானம் நிறைவேற்றித் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைக்கலாம். இத்திட்டம் பயன்தருமெனக் கருதினால், தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை ஏற்றுப் போதிய நிதி வழங்கிட ஆவன செய்யும்.

## ஏற்றுமதிப் பெருமை

இந்தியாவில் ஆயத்த ஆடைகளின் ஏற்றுமதி விரைவாக அதிகரித்து வருகிறது. 1968—69-ஆம் ஆண்டில் 5 கோடியே 65 இலட்ச ரூபாய் மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1971—72-ஆம் ஆண்டில் 15 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கும் 1972—1973-ஆம் ஆண்டில் 21 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

எங்களுக்குத் தற்போது உள்ள கிணற்றிலிருந்து 300 கெஜ தூரத்தில் 5 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. அதில் கிணறு வெட்ட முடியாது. பழைய கிணற்றிலிருந்து சிமெண்ட் குழாய் மூலம் நீர் கொண்டு செல்லலாம். குழாய்களைப் புதைக்க ரூபாய் 1,500 ஆகும். கடன் அளிக்கப்படுமா? யாரை அணுக வேண்டும்? எவ்வளவு காலக் கெடுவில் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும்? விளக்கமாகக் கூறவும்.

—பெ. இராமசாமி,

ஆர்ப்பாக்கம் (அஞ்சல்),
திருவண்ணாமலை வட்டம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

தங்கள் திட்டத்திற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுக்க முன்வரும். ஆனால் குழாய் புதைக்க வேண்டிய நிலம் (தாங்கள் குறிப்பிடும் 300 கெஜ தூரம்) உங்களுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் அல்லது அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தில்) சிமெண்ட் குழாய் புதைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டுக் கொடுக்க வேண்டி இருக்கும். தாங்கள் குறிப்பிடும் இத்திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும், இவ்வாறு செய்வதால் தங்கள் வருவாய் எவ்வளவு கூடும், எத்தனை ஆண்டில் திருப்பிக் கட்டலாம் என்பதற்கு விவரமான மதிப்பீடு ( Estimate ) தயாரித்துக் கொண்டு தங்கள் பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் முகவரைச் சந்தித்து விவரம் கூறி, கடன் கோரலாம். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலும் இத்திட்டத்திற்குக் கடன் பெறலாம். தாங்கள் ஏதேனும் ஒரு நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிக்குச் சென்று இது பற்றிய விவரங்களை நேரில் தெரிந்து கொண்டு, அவ்வங்கியின் முகவர் கூறும் முறைப்படி கடன் மனு அனுப்புங்கள்.

எங்கள் பகுதியில் ஐ. ஆர். 20 போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளை நடவு செய்துள்ளோம். மருந்துத் தெளிக்கத் தெளிப்பான் (ஸ்ப்ரேயர்) கிடைக்கவில்லை. தெளிப்பானைத் தவணை முறையில் பெற முடியுமா? அப்படித் தவணை முறையில் பெற யாருக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்? திராட்சைக் கொடியில் பூச்சி பிடிக்கிறது. அதற்கு என்ன மருந்து அடிக்க வேண்டும்?

—டி. இஸ்மாயில்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
கடலி,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

தவணை முறையில் தெளிப்பான் வழங்கப்படுவதில்லை. தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகச் சலுகை விலையில் தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. தங்களுக்குத் தேவையான தெளிப்பான் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் அவர்களின் உதவியை நாடுங்கள். அவர் மனுச் செய்ய வேண்டிய முறையையும், தாங்கள் கட்ட வேண்டிய முன் பணத்தையும் குறிப்பிடுவார். தாங்கள் முன் பணத்தைக் கட்டிவிட்டு, எந்த வகைத் தெளிப்பான் வேண்டும் என்று மனு எழுதிக் கொடுக்க வேண்டும். பிறகு அவர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் அனுமதியுடன், தாங்கள் கேட்கும் தெளிப்பானை வரவழைத்துச் சலுகை விலையில் வழங்குவார்.

திராட்சையில் பல்வேறு வகைப் பூச்சிகள் தாக்கக்கூடும். எனவே எந்தவகைப் பூச்சி தாக்கியுள்ளது என்று தெரிந்தாலன்றி, எவ்வாறு தகுந்த மருந்தைப் பரிந்துரைக்க முடியும்? தாங்கள் துணை வேளாண்மை அலுவலர் அவர்களை அழைத்துச் சென்று, தங்கள் திராட்சையைக் காட்டினால், அதற்கேற்ற மருந்தைக் கூறி, தெளிக்கும் முறையையும் விளக்குவார். எனவே, அவர் உதவியை நாடுங்கள்.

நான் கோழிப்பண்ணை ஒன்று வைக்க உத்தேசித்துள்ளேன். அதற்கு நான் எங்குக் கடன் வசதி பெற விண்ணப்பிக்க வேண்டும். வழி முறைகள் என்ன என்பதைத் தெரிவித்தால் பயனுடையதாய் இருக்கும்.

—கே.எல். இராதா,
23, சிங்கப் பெருமாள்கோவில்
சன்னதித் தெரு,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

கோழிப்பண்ணை அமைக்க தற்போது நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் கடன் கொடுத்து உதவுகின்றன. கோழிப் பண்ணை அமைப்பது பற்றி தெரிந்து கொள்ளக் காஞ்சிபுரத்திலுள்ள கால்நடை உதவி மருத்துவர் அவர்களின் ஆலோசனையைக் கேளுங்கள். கடன் பெறக் காஞ்சிபுரத்தில் உள்ள ஏதேனும் ஒரு நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள வங்கிக்குச் சென்று நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

— ஆர்.எம்.




# வெண்பாப் போட்டி

## 56 போக்குவரத்தில் பங்கும் பொறுப்பும்

தொழிலாளர் பட்ட துயர்யாவும் ஓட்டும்
அழியாத நன்மைகள் ஆக்கும்—வளையாத
போக்கு வரத்தில் பொறுப்பும் முதலீடும்
சேர்க்கும் புனிதச் செயல் !

—கவி, " கா. க. ", ஆனந்தூர்.

பேருந்து நாட்டுடைமை என்பதனுல், இந்நாளில்,
சேருந் தொழிலாளர் சீரடைந்தார் !—பாருவீர்,
கூறும் வகையாலே கொள்ளும் முதலீட்டில்
சேருமொரு பங்கே சிறப்பு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பணிமனையில் பாட்டாளி பங்குடனே ஆட்சி
அணிசெய்யத் தன்னுரிமை ஆக்கித்—துணிவுடனே
எல்லாரும் தோளுயர்த்தி இன்பத் தமிழ்நாட்டில்
வல்லாராய் வாழ்வோம் மகிழ்ந்து.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

சேரன் பெருஞ்சிறப்பைத் திக்கெட்டும் சாற்றுதற்குப்
பேரன் " கலைஞராம் பேர்" அன்நான்—கூறுவனே
கொண்டிட்ட பேருந்து கொண்டிட்ட சீரிங்கே
எண்டிக்கும் வாழியவே என்று.

—அ. பிரகாசம், கம்பளியம்பட்டி.

சாலையிலே ஓடிவரும் சக்கரத்தில் தர்மசமக்
காலே முரசதிரக் காண்கின்றோம்—வேலைக்கும்
மேதினியில் நல்லதொரு மேன்மை அளித்துயர்ந்தார் !
சாதனையே றெங்குண்டு சாற்று !

—சிவ. கிருட்டிணன், கனியூர்.

" ஊதியம் பெற்றிடவே ஓயாமல் போராடி
வேதனையில் வாழ்ந்த தொழிலாளர்—மேதினியில்
எங்குமே காணுமல் எந்தமிழர் நாட்டினிலே
பங்கடைந்தார் பேருந்தில் பார் "

—க. இலக்குமி, அருப்புக்கோட்டை.

கடையர்க்கும் ஈங்கே கடைத்தேற்றம் காணும்
நடைமுறையைச் செய்தொழிலில் நாடிப்—படைப்பார்க்கும்
பங்கும் பொறுப்பும் பணிஊக்கும் திட்டமெலாம்
இங்களித்த இவ்வரசை யேத்து.

—கலாவதி காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

---

பரிசுபெற்ற வெண்பா எழுதியவர் :—
கவி " கா. க. ",
ஆனந்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

போக்கு வரத்தில் பொதுமை பொழிந்திட
ஆக்கங்கான் ஊழியர் அண்டிடும்—ஊக்கமெலாம்
பங்கும் பொறுப்பும் பகிர்ந்தளிக்கும் நம்மரசை
இங்கிதமாய் ஏற்போம் இனித்து !

—ச. கலியனூர், பொன்மலை.

ஓடுகின்ற உந்தில் உழைக்கும் பணியாளர்,
வாடும் நிலையின் வகையறிந்து—தோடுடையோய் !
ஆக்கமவர் எய்திடவே அன்பாய்த் '' தமிழரசு ''ம்
ஊக்குதொகை தந்தார் உணர்ந்து.

—ப. குப்புசாமி, பொன்மலை.

வருவாயில் பங்குபெறும் வாய்ப்பால்பே ருந்து
நிருவாகப் பேர்பொறுப்பால் நீதி—உருவாகி
வாடுகின்ற மக்களை வாழ்த்தவைக்கும், யாவரும்
நாடுகின்ற திட்டமெனல் நன்று.

—கே. ஏ. அர்ஜுனன், டி.எம்.இ., உத்தமபாளையம்.

'' சமதர்மம் என்பதனைச் சந்திக்கின் றேரே,
எமதென்ற காலம்போய், எல்லாம்—நமதென்ற
பங்கீட்டுத் திட்டத்தைப் பாரீரோ ! இப்பாரில்
எங்குளதோ இவ்வேற்பா டின்று ? ''

—சாப்டூர் சதுரகிரியான், கருங்காலக்குடி.

என்னத்தான் கொண்டுவந்தீர்?இன்றெனக்குச் சொல்லுங்கள்:
சொன்னதுன் நெஞ்சத்தான் சொக்கிவிடும்—என்னவனே!
முன்னேறத் தந்தார் முதலீட்டில் பங்கதனுல்
வெண்பாவைத் தந்தேன் விழைந்து.

—மெய். அருண்மொழியன், கல்லணூர்.

பாட்டாளித் தோழரையும் பங்காளி பாக்கியதால்
நாட்டில் நலங்குவித்தார் நாடாள்வோர்—ஊட்டமிகு
சாதனைகள் செய்தார் சமதர்மக் கொள்கையினுல்
வேதனையை வேரறுத்தார் வென்று.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

சீரார் சமதர்மத் திட்டத்தைச் செவ்வரசு
பேரார்வ மிக்கூர்ந்து பெற்றளித்தார் !—பாராய் !
நிலையுயர வாய்ப்பாம் நிருவாக மேற்று
தலைஞ்கும் முதலீட்டை நாடு.

—மு. க. மூர்த்தி, மானம்புச்சாவடி.

சமதர்மச் சாதனைக்குச் சான்றாய் விளங்கும்
நமதரசு செய்வதே நன்மை—தமது
முதலீட்டில் பங்குதரும் முற்போக்கைக் கண்டு
மிதவாதம் பேசார் மிகுந்து.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

ஆர்வமுடன் பாட்டாளி அன்றுடம் தன்பணியை
நேர்மையுடன் செய்ய நெறிதந்தார்—யார்வந்தே
இவ்வாறு நன்மைகளை ஈட்டும் முறைகளினைப்
பவ்வியமாய்ச் செய்தார் பகர் ?

—கண்ணகாந்தி, தாராபுரம்.

பாட்டாளி பங்குபெற்றுப், பாங்குறவே நிர்வாகக்
கூட்டாளி யாய்நன்மை கோடிகண்டு—மாட்சியுறச்
செய்ததமிழ் நாட்டரசின் சேவைக் கிணையாக
வையமிசை உண்டோ வழுத்து.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

காரோட்டும் தோழர் கழகத்தில் பங்கெய்திப்
போராட்டம் நீங்கப் பொறுப்பெற்றூர்—பாராட்டிச்
செந்தமிழ் நாட்டைச் சிறப்புடன் ஆள்வோர்க்கு
வந்தனை செய்யலா ரீர் !

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், பி. ஏ., திருச்சி-2.

கனவிதுவோ! கற்பனையோ! காரோட்டும் தோழன்
நனவென்றே சொல்கின்றன் நாட்டில்—கனிவாய்
அரசுடைமை உந்தில் அவனுக்கும் பங்காம்!
கரங்குவிப்போம் நன்றியினுக் காய்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

முதலீட்டில் பங்காம் தொழிலாளர் கட்குப்
பொதுவுடைமைக் கொள்கை புகுத்தும்—முதல்வர்தம்
உள்ளத்தின் ஊற்றிலே பின்னே தனியுடைமைக்
கொள்கையா தோன்றிடும் ? கூறு.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

ஒன்றுவிட்ட நாள்வந்து நீகொடுத்த ஊதியத்தை
அன்றன்று சேர்த்துவைத்தேன்; ஐநூற்றை—இன்றேபோய்ச்
சேரன் கழகத்தில் சேர்த்திடுவாய் ; கண்ணுளா !
காரென்றும் ஓட்டுவார்க்குத் தான்.

—புலவர். இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

வெண்பாப் போட்டி

மார்க்சின் மணிக்கொள்கை மாமேதை நங்கலைஞர்
பேர்க்குள் மறைந்ததுவோ? பேசுமுயர்—போக்குவரத்(து)
என்னும் கழகத்தில் எல்லார்க்கும் பங்குண்டு
பொன்னும் பொறுப்புண்டு போற்று.

—சடையப்பன், திருவெண்ணெய்நல்லூர்.

பேருந்தில் பாடுபடும் எல்லார்க்கும் பங்களித்தல்
சீருந்தச் செய்யுமென்றூர் சேக்குடிபுர்—பாருலகில்
வங்கமிதைக் காணுமுன் நம்நாட்டார் நற்பொறுப்பும்
பங்குடனே பெற்றுவிட்டார் பார்.

—புலவர் இரா. வரதராசன், அகிலை.

தொழிலாண்டு சோர்வார் துயருடன் என்றும்
விழிநீரில் நீந்தாமல், வேனிற்—பொழிலாய்
முதலீடு பெற்று முதலாள்வா ராக்கும்
உதிக்கும் கதிரின் ஒளி !

—மா. அரிதாசு, ஓலப்பாடி.

சேரும் முதலீட்டில் தக்கதொரு பங்கீந்து
கூறும் பொறுப்பளித்துக் கூட்டுறவில்—சீராய்ச்
சமதர்மத் திட்டம் செயல்வடிவம் காணச்
தமிழரசைப் போற்றுவோம் சார்ந்து.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

வங்காள தேசம் வரைந்ததோர் திட்டத்தை
இங்காளும் எம்கலைஞர் ஏற்றுதொழிற்—செங்கரங்கள்
பங்கும், பொறுப்பும் பெறச்செய்யும் பண்பாட்டால்
பொங்கும் சமதர்மம் பூத்து.

—எழில்வேந்தன், சென்னை-28.

ஏட்டில் மணக்கும் எழிலார் 'சமதர்மம்'
நாட்டில் மலர்விக்கும் நல்லரசின்—நாட்டத்தால்
பேருந்தின் ஊழியர்கள் பேருதவி பெற்றனர்காண் !
சீர்மிக்க ஆட்சிச் சிறப்பு.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

ஊக்குவிக்கும் பங்கும், உழைப்புக்கே ஊதியமும்
காக்கும் பொறுப்போடு கண்ணளித்தும் —ஆக்கம்
வரக்கண்டு வாழும்இத்தமிழகத்துப் போக்கு
வரத்துக் கழகத்தை வாழ்த்து.

—தவமுத்து, அண்ணாமலை, பி.ஏ., பி.டி., தவசி.

திருவாகத் தில்பொறுப்பும், நல்லமுத லீட்டில்
வருந்தொகையில் பங்கும் வழங்க—விருக்கின்ற
நல்லரசைப் போக்குவரத் தூழியர்கள் எல்லாரும்
சொல்லடுக்கி வாழ்த்துகிறூர் சூழ்ந்து.

—இரா. வைத்தியநாதன், பொற்களக்குடி.

சாதிமதம் ஒய்ந்து சமதர்மம் நீடுயர்ந்து
நீதிநிலை பெற்று நிறைவுபெறும்—மேதினியில்
பங்கும் முதலீடும் ஈந்த சமதர்மத்
தங்கத் திருநாட்டைக் காண்.

—பொன். இளங்கோவன், நடுமலை வடக்கு.

செய்யும் தொழிலின் சிறப்பும் பெருக்கமும்
மெய்யுழைப் பாளர்தம் மேன்மையில்தான்—ஐயமெனில்
போக்கு வரத்துத் துறையிப் பொதுமையிலே
ஆக்கம் பெறுதலறி வாய்.

—புலவர் கோம்பைச் சீரான், கோம்பை.

'' உந்தூர்தி ஓட்டும் உழைப்பாளர் பங்குமுதல்
தந்தே உரிமைதனைத் தாம்பெற்றூர்—சிந்தையினில்
முந்துசம தர்மம் முகிழ்த்திடவே தொண்டாற்றும்
பைந்தமிழ்ப் பேரரசைப் பார். ''

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

பாட்டாளி மக்கள் பயனடையப் பேருந்தை
நாட்டுடைமை ஏன்ருக்கி, நாளுமவர்—ஈட்டுகின்ற
செல்வத்தில் ஓர்பங்கைச் சீரா யளித்துவரும்
நல்லரசே! வாழ்கநீ நன்று.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

போக்குவரத்தைப் பொதுவுடைமை ஆக்கியதன்
நோக்கம் அறிவாயா நுண்ணிடையே—ஆக்கத்
தொழிலாளி பங்காளும் தோழனும் ஆக
வழிகோலும் என்றறிந்து வாழ்த்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

பாட்டாளி மூலதனப் பங்காளி யாய்த்தொழிலில்
நாட்டமுடை நற்பொறுப் பாளியில்—நாட்டினிலே
இல்லையென்றும் வர்க்கப்போர் இன்பவளம் ஓங்கும்தம்
நல்லரசின் திட்டமதை நம்பு.

—ஜி.தி. அர்த்தநாரி, பி.ஏ., பி.டி., வேலூர்.




"மன்னிச்சுக்கங்க ...... ஒரு நாலு எழுத்து ஒழுங்காகப் படிக்காதவன் நான்......அதனுலே முறையா....படிச்சவுங்க மாதிரி மேல் பூச்சு பூசி எனக்குப் பேசத் தெரியாது. ஆனுல், மனசுக்குப் பட்டதை அப்படியே 'பளிச்' சுன்னு சொல்லிடுவேன்.

" இப்ப நானும் ஒரு மனிதன் . . . எனக்கு இப்ப அதிகமா துணிச்சல் வரக் கேட்பானேன்?"

" செய்யும் தொழிலே தெய்வம்னு பாடுவாங்க. . விளக்கம் சொல்லுவாங்க...... ஆனுல், தங்கள் மனசுக்குப் பிடிக்காத தொழிலே மற்றவன் செஞ்சா கேவலமா நினைப்பாங்க .. .... உண்மைதாங்க...அந்தக் கேவலமான வேலையை அவன் ஏன் செய்யருன்னு யாராவது நினைச்சுப் பார்த்தாங்களா ? நினைச்சாலும் நிவர்த்தி தேட யோசித்தாங்களா?

"அப்படி ஒருத்தர் மட்டும் யோசித்ததால் இப்ப நானும் ஒரு மனுஷனுகிட்டேங்க ...... ...

"என் தொழிலாலேயே என் மகனுக்கும் எனக்கும் பகை. அதனுலே வீட்டைவிட்டு வெளியே போயிட்டான் அவன். நானும், போருன் கழுதைன்னு விட்டு விட்டேன். பெத்தமனசு சில சமயம் பித்தாகி பாலனை நினைக்கும். அடுத்த நொடியிலேயே மனசை வைராக்கியம் திறைச்சிடும். ஆனுல், இன்னைக்கு அவனைப் பார்த்துட்டேன். தைரியமா நான் பார்த்தேன். பெருமையோடப் பார்த்தேன்! ஏன் தெரியுமா ?

"ஓ......இப்பத்தான் நானும் ஒரு மனிதனுகி விட்டேனு!"

• • • •

கபாலின்னு பேரைச் சொன்னுல் போதும், அந்தக் காலத்திலே கைரிக்ஷா இழுக்கிறவுங்க எல்லாருக்கும் நல்லா தெரியும்.

நாலு பேரு உட்கார்ந்தாலும் சுலபமாக இழுக்கிற உடற் கட்டு: வாத்தியாரு கபாலின்னு எங்க பேட்டையிலே பட்டம் வேறு.



# ஓ..... இப்ப நானும் ஒரு மனிதன்

—உழைப்பாளி—

திமிருக்குக் கேட்கணுமா? எங்கே தகராறுன்னாலும் அங்கேதான் இந்தக் கபாலி இருப்பான்.

எங்க அப்பனுக்கு நான் பெரியஉபத்திரவமாகிவிட்டேன். என்னை அடக்க அவருக்குத் தெரிஞ்ச வழி என் காலுக்குக் கட்டுப் போடணுங்கிறதுதான். ஆமாம். காளியம்மாளை எனக்குக் கல்யாணம் பண்ணிவைத்து விட்டார்.

அப்புறமென்ன?

அடுத்தடுத்துப் பிள்ளைங்கதான். ஒண்ணு, ரெண்டா, எட்டுப் பிள்ளைங்க.. நாலு பொண்ணுங்களுக்குப் பிறகு அஞ்சாவதா பையன் பிறந்தான். பின்னாலே மூணும் பொண்ணுங்க. ........

இப்ப செய்யுறாங்களே விளம்பரம் " அடுத்த குழந்தை இப்போது வேண்டாம், இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்ன்னு " அப்படி ஏதாவது அந்தக் காலத்திலே பண்ணியிருந்தால் என் எதிர்காலம் இப்படி இருள் சூழ்ந்துபோயிருக்காதுங்க!

' மரம் வைச்சவன் தண்ணி ஊத்தாமலா இருப்பான்னு ஏகதேசமா அறியாமையினாலே பேசுறாங்களே, அதுபோலவே நானும் நினைச்சேன்.

எங்க பேட்டையிலே நாலு இளம்பிள்ளைங்க சேர்ந்து.... மன்றம்னு வச்சதுங்க அங்கே வர்ற பேப்பருங்க பத்திரிகைகளைப் படிச்ச பிள்ளைங்களைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்லிக் கேட்பேன்... கொஞ்சம் கொஞ்சமாகவும் என் வாழ்க்கையிலே மாறுதல்ஏற்படத் தொடங்கியது.

கஷ்டத் தோட கஷ்டமா பையனைப் படிக்க வச்சேன். அவனுக்குக் கீழே இருந்த மூன்று பெண்களையும் படிக்க வச்சேன். வாழ்க்கை ரொம்ப துன்பமாகத்தான் இருந்தது. ஆரம்பத்திலே திட்டமிட்டு வாழத் தெரியாததனாலே வந்தவேதனை! பொறுத்துகிட்டேன்.

காலமும் மாறத்தொடங்குச்சு. வேதனையும் மறையத் தொடங்குச்சு.

காலேஜிலே முதல் வருஷம் வரைக்கும் இலவசப் படிப்பும், பின்னாலே அரசு உதவித்தொகை அளிச்சதாலும் பட்டப் படிப்பும் படிச்சான் என் மகன் பாலன்.

குடும்பக் கவலை தெரிஞ்சு படிச்சதாலே நல்ல மார்க் வாங்கிப் பாஸ் பண்ணினான். வேலையிலேயும் சேர்ந்துட்டான்.

இதற்கிடையிலே என் மூத்த மூணு பெண்ணுங்களுக்கும் கல்யாணம் பண்ணி வச்சுட்டேன். கொஞ்சம் கடன் ஏற்பட்டது. அதை வேலைக்குப் போன பாலன் கொஞ்சம் கொஞ்சமா அடைக்க ஆரம்பிச்சுட்டான்.

இந்த நேரத்திலே தான் எனக்குத் தமிழக அரசுப் பரிசுச் சீட்டிலே ஒரு ஆயிரம் ரூபாய் பரிசு கிடைச்சுது. எனக்கு ஆயிரம் ரூபாய் வந்ததோ இல்லையோ பாலன் மனசு மாறத் தொடங்குச்சு. "அப்பா அப்பா நீ செய்யுற வேலை ரொம்ப கேவலம், அதனாலே இனிமே நீ கைரிக்ஷா இழுக்கிறதை விட்டு விட்டுச் சின்ன கடை வச்சிக்கோ" என்றான்.

" என்னடா பாலா உளர்றே! இத்தனை நாளா என் தொழில் உனக்குக் கேவலமா தெரியலியா? நானே அழுது அழுதுகிட்டு இந்த வேலையைச் செஞ்ச நாளுமுண்டு. இப்ப நமக்கிருக்கிற கடன் ஐநூறு ரூபாயையும் கொடுத்துடப் போறேன். மீதி ஐநூறு ரூபாயைக் குடிசை மாற்று வாரியத்திலே கட்டித் தவணைமுறையிலே வீடு வாங்கிக் கொள்ளப் போறேன் " என்றேன்.

" வாடகைக்குத்தான் குடிசை மாற்று வாரியத்திலே வீடு தர்றாங்களே ". .

" தவணை முறையிலே வீடு வாங்கிட்டா நமக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கும். சொந்த வீடுங்கிற உணர்ச்சியிலே நல்லா வச்சிக்குவோம் "

பாலன் பதில் பேசவில்லை. மௌனமாக வெளியே சென்று விட்டான்.

மறுநாள் மாலை நேரம்.

ஒரு பெண்ணை ரிக்ஷா வண்டியில் வைத்துக் கொண்டு மயிலாப்பூர் குளக்கரையிலிருந்துஇழுத்துக் கொண்டு போனேன்.

எதிரே பாலன் வந்தான். குடிசை மாற்று 'வாரியத்திலே எனக்குப் பாரங்கள் கொடுத்திருந்தாங்க.... அதையெல்லாம் பாலனிடம் காட்டணுங்கிற ஆசையிலே 'பாலா' என்று கூப்பிட்டேன்.

என்னை முறைச்சுப் பார்த்துட்டு போய்விட்டான், அடையாளம் தெரியாத ஆளுபோல! மனசுக்குள் குமுறிக்கொண்டேன். வேறு என்ன செய்ய முடியும்?

அன்றிரவு வீட்டுக்கு வந்தவுடன் ஒரே குதியாக குதிச்சான் பாலன்.

என் கூட வேலை பார்க்கிற பெண் வசந்தா. அவளை ரிக்ஷாவில் வைத்து இழுத்துக் கொண்டு வரும்போது என்னைப் பாலன் என்று கூப்பிடறது கேவலமா இல்லையா? நீ ரிக்ஷா இழுக்கிறதை விட்டாத்தான் நான் இங்கே இருப்பேன்னு' சொன்னான்.

" [illegible] அழுவதன்னு " நானே [illegible].

உடனே புறப்பட்டு விட்டான். அவன் அம்மா காளியம்மாதான் ரொம்ப அழுதாள். எனக்குக் கொஞ்சம் கூட வருத்தமில்லை. ஏற்கனவே காளியம்மாவுக்குப் பார்வை கொஞ்சம் சரியாத் தெரியாது. அவன் போன பிறகு என்னைக் கரிச்சுக் கொட்ட ஆரம்பிச்சா. போன வருஷம் முதலமைச்சர் இலவசக் கண்சிகிச்சை முகாமிலே காளியம்மாவுக்கு ஆப்ரேஷன் செஞ்சு கண்ணாடி கொடுத்தாங்க. பார்வை தெரிய ஆரம்பிச்சது. குடிசை மாற்று வாரியத்திலே கோட்டூர்புரத்திலே வீடு கொடுத்தாங்க. இந்த மாற்றங்களே காளியம்மாவின் மனக்கவலையை மறக்க வச்சிடுச்சி ..இப்ப எல்லாம் நான் சொல்றது தான் அவளுக்குச் சரி... உம்... வசதிதான் மனிதர்களின் வாழ்க்கையையும், மனசையும் எப்படி எப்படி மாற்றி அமைக்கிறது?

ஆனால், எனக்கு மட்டும் விடிவு காலம் வரவில்லை.

எனக்கும் நல்ல காலம் வந்து விட்டது. நம்ம முதலமைச்சர் ஐம்பதாவது பிறந்த நாளில் என்னையும் மனிதனாக மாற்றிட்டாங்க...........!

இதுவரை நம்ப புண்ணிய பூமியிலே யாரும் நினைச்சுப் பார்க்காததை, ஒருத்தர் நினைச்சுப் பார்த்துட்டார். அவர் நம்ப முதலமைச்சர்தான். அதனாலே நான் மனிதனாகிவிட்டேன்.

என் கைரிக்ஷா போய் சைக்கிள் ரிக்ஷா வந்து விட்டது.

மறுநாள் ஆபீஸ் முடிஞ்சு போகும் நேரம் ஒரு புதிசா கல்யாணம் ஆனவங்க இரண்டு இளசுகள் அடையாறிலே ஏறுச்சுங்க. எலியட்சு பீச்சுப் பக்கம் போகணுமாம்.

ஏறும்போதே நான் கண்டு பிடிச்சுட்டேன்! பாலனும் அவன் ஆபீஸிலே வேலை செய்ற பொண்ணும்தான். அந்தப் பெண்ணை கைரிக்ஷாவிலே வச்சு இழுத்துக் கொண்டு போகும் போதுதான் அவனை கூப்பிட்டதற்காக கோபித்துக் கொண்டான்.

காதலியை ரிக்ஷாவில் வைத்து இழுக்கிறவன் காதலன் பேர் சொல்லி கூப்பிடலாமா?

இப்ப கலப்பு மணம் செய்திருப்பாங்க........

கடற்கரையில் இறங்கினார்கள் அவர்கள். எனக்குக் காசு கொடுக்க வரும்போது அப்பா என்று காலில் விழுந்தான் பாலன்.

இப்பொழுது கட்டிய மனைவியிருக்க என் காலில் விழலாமா! என்ன வெட்கம்? என்ன அவமானம்?

ஓ............இப்பதான் நான் மனிதனாக மாறிவிட்டேன்!

நான் பெறும்போது என் சைக்கிள் ரிக்ஷாவைப் பார்த்தேன்.

அதை எனக்குக் கொடுத்த 'பெருள்ளத்தை' நினைத்துக் கொண்டேன்.

அதுதானே என்னை மனிதனாக்கியது!


# காலக் கண்ணாடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா




# தமிழரசு

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ | 10-00 |
| அரையாண்டு | ரூ. | 5-00 |
| தனி இதழ் | | 40 காசு |

847







Criterion CO 2882

69588

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி மக்கள் தொடர்புத் ... இயக்குநர் ; தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

பதிவு எண். M. 8676


தமிழகம் ஒரு பொற்காலத்தை
உருவாக்கிவருகிறது!
உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!
இரத்தப்புரட்சி இல்லாமல் இனிய வாழ்வு உருவாக்கும்
இந்தத் திட்டங்கள்
இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க
நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட
தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட
நாம் ஆற்றவேண்டிய பேருதவி
அளவான குடும்பம்
சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல
சிறு குடும்பம்—
செழித்திடும் நன்மைகளை-நாட்டில்
நிலைத்திடச் செய்ய
அமையட்டுமே அளவான குடும்பம்!
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.
குடும்பநலத்துறை
தமிழ்நாடு அரசு